சங்கைமிக்க

# குர்ஆன்

மற்றும் தமிழ் மொழியில்
அதன் கருத்துக்களின்
மொழிபெயர்ப்பு

புனித ஹரமைனின் காப்பாளர் சஊது அரச
குடும்பத்து அப்துல் அஜீஸின் மகனார்
ஃபஹ்து அவர்களால்
அல்லாஹ்வுக்காக வக்ஃபு
செய்யப்பட்டது. இதை
விற்க அனுமதி
இல்லை

# القرآن الكريم

## وترجمة معانيه إلى اللغة التاميلية

وقف لله تعالى من خادم الحرمين الشريفين
الملك فهد بن عبد العزيز آل سعود
ولا يجوز بيعه

# القرآن الكريم

وترجمة معانيه إلى

اللغة التاميلية

مجمع الملك فهد لطباعة المصحف الشريف

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ

إِنَّهُ لَقُرْآنٌ كَرِيمٌ فِي كِتَابٍ مَكْنُونٍ لَا يَمَسُّهُ إِلَّا الْمُطَهَّرُونَ تَنْزِيلٌ مِنْ رَبِّ الْعَالَمِينَ

இந்த புனித முஸ்ஹஃபையும் இதன் கருத்து மொழி பெயர்ப்பையும் அச்சிட ஆணை பிறப்பித்தவர் சவூது அரச குடும்பத்து அப்துல் அஸீஸின் மகனாரும், புனித ஹரமைனின் பணியாளருமான மன்னர் ஃபஹ்து பின் அப்துல் அஸீஸ் ஆவார்கள். சவூதி அரேபியா மன்னர்.

تشرف بالأمر بطباعة هذا المصحف الشريف وترجمة معانيه

خادم الحرمين الشريفين الملك فهد بن عبد العزيز آل سعود

ملك المملكة العربية السعودية

புனித

# குர்ஆன்

மற்றும் அதன் கருத்து
மொழி பெயர்ப்பு
தமிழில்

மன்னர் ஃபஹ்து புனித முஸ்ஹஃப்
அச்சக வளாகம்

وَقْفٌ لِلّٰهِ تَعَالَى مِنْ خَادِمِ الْحَرَمَيْنِ الشَّرِيفَيْنِ
الْمَلِكِ فَهْدِ بْنِ عَبْدِ الْعَزِيزِ آلِ سُعُودٍ
وَلَا يَجُوزُ بَيْعُهُ

تُوَزَّعُ مَجَّانًا

இலவசமாக வழங்கப்படுகிறது.

புனித ஹறமைனின் காப்பாளர் சவூது அரச குடும்பத்து
அப்துல் அஜீஸின் மகனார் ஃபஹ்து அவர்களால் அல்லாஹ்வுக்காக
வக்ஃபு செய்யப்பட்டது.

இதை விற்க அனுமதி இல்லை.

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

## مقدمة

بقلم معالي الشيخ صالح بن عبدالعزيز بن محمد آل الشيخ
وزير الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد
المشرف العام على المجمع

الحمد لله رب العالمين ، القائل في كتابه الكريم :
﴿ . . . قَدۡ جَآءَكُم مِّنَ ٱللَّهِ نُورٞ وَكِتَٰبٞ مُّبِينٞ ﴾ .
والصلاة والسلام على أشرف الأنبياء والمرسلين ، نبينا محمد ، القائل :
«خيركم من تعلم القرآن وعلَّمه» .
أما بعد :

فإنفاذاً لتوجيهات خادم الحرمين الشريفين الملك فهد بن عبدالعزيز آل سعود ، حفظه الله بالعناية بكتاب الله ، والعمل على تيسير نشره ، وتوزيعه بين المسلمين ، في مشارق الأرض ومغاربها ، وتفسيره ، وترجمة معانيه إلى مختلف لغات العالم .

وإيماناً من وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد بالمملكة العربية السعودية ، بأهمية ترجمة معاني القرآن الكريم ، إلى جميع اللغات المهمة ، تسهيلاً لفهمه على المسلمين الناطقين بغير العربية ، وتحقيقاً للبلاغ المأمور به في قوله ﷺ : «بلِّغوا عني ولو آية» .

وخدمة لإخواننا الناطقين باللغة التاميلية يطيب لمجمع الملك فهد لطباعة المصحف الشريف بالمدينة المنورة ، أن يقدم للقارئ الكريم ترجمة معاني القرآن الكريم إلى اللغة التاميلية إحدى لغات الهند التي قام بترجمتها الشيخ عبدالحميد الباقوي ، وراجعها كل من : الشيخ محمد إقبال مدني ، والشيخ عبدالمجيد مبارك ، والشيخ مولوي محمد صالح سيد محمد .

ونحمد الله سبحانه وتعالى أن وفق لإنجاز هذا العمل العظيم الذي نرجو أن يكون خالصاً لوجهه الكريم ، وأن ينفع به الناس .

إننا لندرك أن ترجمة معاني القرآن الكريم -مهما بلغت دقتها- ستكون قاصرة عن أداء المعاني العظيمة التي يدل عليها النص القرآني المعجز ، وأن المعاني التي تؤديها الترجمة إنما هي حصيلة ما بلغه علم المترجم في فهم كتاب الله الكريم ، وأنه يعتريها ما يعتري عمل البشر كلّه من خطأ ونقص .

ومن ثم نرجو من كل قارئ لهذه الترجمة أن يوافي مجمع الملك فهد لطباعة المصحف الشريف بالمدينة النبوية بما قد يجده فيها من خطأ أو نقص أو زيادة ، للإفادة من هذه الاستدراكات في الطبعات القادمة إن شاء الله .

والله الموفق ، وهو الهادي إلى سواء السبيل ، اللهم تقبل منا إنك أنت السميع العليم .

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

**அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன்**

**அல்லாஹ்வின் திருப்பெயரால்**

## முன்னுரை

அவ்கா∴ப், த∴வா, இர்ஷாத் மற்றும் இஸ்லாமியத் துறைகளின் அமைச்சரும் , மன்னர் ∴பஹ்து குர்ஆன் அச்சக வளாக சிறப்புக் கண்காணிப்பாளருமான மாண்புமிகு ஸாலிஹ் பின் அப்துல் அஸீஸ் பின் முஹம்மது ஆலுஷ் ஷெய்கு அவர்களால் வழங்கப்பட்டது.

" அல்லாஹ்விடமிருந்து ஒளியும் தெளிவான வேதமும் உங்களுக்கு வந்துள்ளது " என்று தன் வேதத்தில் விளக்கிக்கூறிய அனைத்துலக இரட்சகனுக்கே எல்லாப்புகழும். திருமறை குர்ஆனை தானும் கற்று பிறருக்கும் கற்றுத் தருகிறவர் உங்களில் மிகச் சிறந்தவராவார் என்று கூறிய இறைத் தூதர் உத்தம நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது இறைவனுடைய அருளும் சாந்தியும் நிலவட்டுமாக!

திருக்குர்ஆனின் பக்கம் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அது எளிதில் அனைவருக்கும் கிடைத்திட, உலகெங்கிலும் அது பரவலாக்கப் படவேண்டும், விவரித்துக் கூறப்பட வேண்டும். கிழக்கிலும், மேற்கிலுமுள்ள முஸ்லிம் சமுதாய மக்களுக்கு அது வினியோகிக்கப் படவேண்டும், பற்பல மொழிகளில் அது மொழி பெயர்க்கப்பட உரிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்பன போன்ற உயரிய அறிவுரைகளை சவூது குடும்பத்து அப்துல் அஸீஸ் அவர்களின் மகனார், புனித ஹரமைனின் பணியாளர் மன்னர் ∴பஹ்து வழங்கியுள்ளார்கள். இவ்வறிவுரைகளை நடைமுறைப்படுத்தும் விதமாக,

அரபி மொழி பேசாத முஸ்லிம்கள் திருக்குர்ஆனை எளிதில் புரிந்திட வசதியாக சவூதி அரேபியாவின் அவ்கா∴ப், த∴வா, இர்ஷாத் மற்றும் இஸ்லாமியத் துறைகள் அமைச்சகம் இன்று உலகில் பேசப்படுகிற அனைத்துப் பிரதான மொழிகளிலும் திருக்குர்ஆன் கருத்துக்களை மொழி மாற்றம் செய்வதை முக்கியமாக கொண்டுள்ளது.

என்னிடமிருந்து ஒரு தகவலையாவது பிறரிடம் எடுத்துச் சொல்லுங்கள் என்ற இறைத்தூதரின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையிலும், தமிழ் பேசும் அன்புச் சகோதரர்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்பதற்காகவும் ,

மதீனா முனவ்வராவிலுள்ள மன்னர் ஃபஹ்து குர்ஆன் அச்சக வளாகம் இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் ஒன்றான தமிழில் குர்ஆனுடைய கருத்துக்களின் இம்மொழி பெயர்ப்பை அன்பு வாசகர்களுக்கு வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறது.

இதனை ஷெய்கு அப்துல் ஹமீது பாகவி அவர்கள் செய்துள்ளார்கள். ஷெய்கு முஹம்மது இக்பால் மதனியும், ஷெய்கு அப்துல் மஜீது முபாரக்கும், ஷெய்கு M.S. ஸெய்யிது முஹம்மது மதனியும் இதனை மேற்பார்வையிட்டார்கள்.

மகத்தான இப்பணி நிறைவடைவதற்கு நல்லருள் பாலித்த அல்லாஹ்வை போற்றுகிறோம். தூய எண்ணத்துடன் அவன் பொருத்தத்தை கருதிச் செய்தவாறு இப்பணியை ஆக்குமாறும் , மனிதர்களுக்கு இதனால் பயன் அளிக்குமாறும் அவனிடம் பிரார்த்திக்கிறோம்.

எத்தனை நுணுக்கத்துடன் திருக்குர்ஆனுடைய கருத்துக்களை மொழிமாற்றம் செய்தாலும் அது அற்புத குர்ஆனுடைய வசனங்களும் உரைகளும் உள்ளடக்கிய மகத்தான கருத்து நுட்பங்களை பிரதிபலிப்பதாக அமையாது. அத்துடன் மொழி பெயர்ப்பில் கொண்டு வரப்படும் கருத்துக்களை பொறுத்து மொழி பெயர்த்தவர் குர்ஆனிய வசனங்களை எவ்வளவு புரிந்து கொண்டிருப்பாரோ அவ்வளவுக்குத்தான் மொழி பெயர்த்திருப்பார்.

மனிதன் செய்யும் பணிகள் யாவற்றிலும் குறைகளும், பிழைகளும் இருப்பது சகஜம். அது மொழி பெயர்ப்பிலும் இடம் பெற வாய்ப்புண்டு.

ஆகவே, இதை படித்துணரும் அன்பர்கள் யாவரிடமும் நாம் எதிர்பார்ப்பது அவர்கள் இதில் காணும் குறைகளையும், பிழைகளையும், கூட்டல் சேர்த்தல் எதுவாயினும் அதுபற்றி மன்னர் ஃபஹ்து குர்ஆன் அச்சக வளாகத்துக்கு தெரிவிக்க வேண்டும் என்பதைத்தான். அடுத்த பதிப்பில் இன்ஷா அல்லாஹ் பிழை திருத்தங்கள் கவனிக்கப்படும்.

அல்லாஹ் நல்லருள் பாலிப்பவன். அவனே நேர்வழி காட்டுபவன். இறைவா! எங்களிடமிருந்து இந்தப் பணியை ஏற்றருள்வாயாக. நிச்சயமாக நீ கேட்பவனும் நன்கு அறிந்தவனுமாவாய்.

سُوْرَةُ الْفَاتِحَةِ مَكِّيَّةٌ وَّهِيَ سَبْعُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ الرَّحْمٰنِ
الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ اِيَّاكَ نَعْبُدُ
وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ
الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾ ع

المنزل ١

ع ١

அத்தியாயம் : 1

## அல்ஃபாத்திஹா _ தோற்றுவாய்

வசனங்கள் : 7 மக்கீ

1. அளவற்ற அருளாளன்,
நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

2. அனைத்துப் புகழும் அகிலத்தாரின்
இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியது.

3. (அவன்) அளவற்ற அருளாளன்; மிகக்
கிருபையுடையவன்.

4. (அவனே நியாயத்) தீர்ப்பு நாளின் அதிபதி.

5. (எங்கள் இரட்சகா!) உன்னையே நாங்கள்
வணங்குகிறோம்; உன்னிடமே நாங்கள் உதவியும்
தேடுகிறோம்.

6. நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக!

7. எவர்களின் மீது நீ அருள் புரிந்தாயோ
அத்தகையோரின் வழி(யில் நடத்துவாயாக).

(அவ்வழி உன்) கோபத்திற்கு
உள்ளானவர்களுடையதும் அல்ல.
வழி தவறியவர்களுடையதும் அல்ல.

## سورة البقرة مدنية وهي مائتان وست وثمانون آية وأربعون ركوعا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

الٓمّٓ ﴿١﴾ ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ ۛۚ فِيْهِ ۛۚ هُدًى

لِّلْمُتَّقِيْنَ ﴿٢﴾ الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ وَ

يُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ ﴿٣﴾

وَالَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِمَآ اُنْزِلَ اِلَيْكَ وَمَآ

اُنْزِلَ مِنْ قَبْلِكَ ۚ وَبِالْاٰخِرَةِ هُمْ يُوْقِنُوْنَ ﴿٤﴾

معانقة ١ عند المتاخرين

الجزء ١

அத்தியாயம் : 2

## அல்பகறா _ பசுமாடு

வசனங்கள் : 286 மதனீ ருகூஃகள் : 40

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. அலிஃப் லாம் மீம்

2. இது வேதமாகும் , இதில் எத்தகைய சந்தேகமுமில்லை. பயபக்தியுடையோருக்கு (இது) நேர் வழி காட்டியாகும்.

3. அவர்கள் எத்தகையோரென்றால்; மறைவானவற்றை நம்பிக்கை கொள்வார்கள். தொழுகையையும் நிறைவேற்றுவார்கள் ; நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவும் செய்வார்கள்.

4. (நபியே! ) இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், அவர்கள் உமக்கு இறக்கி வைக்கப்பட்ட (இவ் வேதத்)தையும், உமக்குமுன் (இருந்த நபிமார்களுக்கு) இறக்கி வைக்கப்பட்டவற்றையும் விசுவாசம் கொள்வார்கள்; (இறுதி நாளாகிய) மறுமையையும் அவர்கள் உறுதியாக நம்புவார்கள்.

أُولٰٓئِكَ عَلٰى هُدًى مِّنْ رَّبِّهِمْ ۗ وَأُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ۝٥
إِنَّ الَّذِيْنَ كَفَرُوْا سَوَآءٌ عَلَيْهِمْ ءَأَنْذَرْتَهُمْ أَمْ لَمْ تُنْذِرْهُمْ
لَا يُؤْمِنُوْنَ ۝٦ خَتَمَ اللّٰهُ عَلٰى قُلُوْبِهِمْ وَعَلٰى سَمْعِهِمْ ؕ وَعَلٰٓى
أَبْصَارِهِمْ غِشَاوَةٌ ۫ وَّلَهُمْ عَذَابٌ عَظِيْمٌ ۝٧ ع وَمِنَ النَّاسِ ع ١ / ٧ وقف لازم
مَنْ يَّقُوْلُ اٰمَنَّا بِاللّٰهِ وَبِالْيَوْمِ الْاٰخِرِ وَمَا هُمْ بِمُؤْمِنِيْنَ ۝٨
يُخٰدِعُوْنَ اللّٰهَ وَالَّذِيْنَ اٰمَنُوْا ۚ وَمَا يَخْدَعُوْنَ إِلَّآ أَنْفُسَهُمْ
وَمَا يَشْعُرُوْنَ ۝٩ ؕ فِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ ۙ فَزَادَهُمُ اللّٰهُ مَرَضًا ۚ
وَلَهُمْ عَذَابٌ أَلِيْمٌ ۙ بِمَا كَانُوْا يَكْذِبُوْنَ ۝١٠ وَإِذَا قِيْلَ
لَهُمْ لَا تُفْسِدُوْا فِي الْأَرْضِ ۙ قَالُوْٓا إِنَّمَا نَحْنُ مُصْلِحُوْنَ ۝١١
أَلَآ إِنَّهُمْ هُمُ الْمُفْسِدُوْنَ وَلٰكِنْ لَّا يَشْعُرُوْنَ ۝١٢ وَإِذَا
قِيْلَ لَهُمْ اٰمِنُوْا كَمَآ اٰمَنَ النَّاسُ قَالُوْٓا أَنُؤْمِنُ كَمَآ اٰمَنَ
السُّفَهَآءُ ؕ أَلَآ إِنَّهُمْ هُمُ السُّفَهَآءُ وَلٰكِنْ لَّا يَعْلَمُوْنَ ۝١٣
وَإِذَا لَقُوا الَّذِيْنَ اٰمَنُوْا قَالُوْٓا اٰمَنَّا ۚۖ وَإِذَا خَلَوْا إِلٰى
شَيٰطِيْنِهِمْ ۙ قَالُوْٓا إِنَّا مَعَكُمْ ۙ إِنَّمَا نَحْنُ مُسْتَهْزِءُوْنَ ۝١٤
اَللّٰهُ يَسْتَهْزِئُ بِهِمْ وَيَمُدُّهُمْ فِيْ طُغْيَانِهِمْ يَعْمَهُوْنَ ۝١٥

5. அவர்கள்தாம், தங்கள் இரட்சகனிடமிருந்துள்ள நேர் வழியின்மீது இருப்பவர்கள். மேலும் அவர்களே தாம் வெற்றி பெறக் கூடியவர்கள்

6. (நபியே!) நிச்சயமாக நிராகரிக்கிறார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு, நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதும், அவர்களுக்கு நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யாதிருப்பதும், அவர்களுக்குச் சமமே. அவர்கள் விசுவாசங் கொள்ள மாட்டார்கள்.

7. அவர்களுடைய இதயங்களின் மீதும், அவர்களுடைய செவிப் புலன்மீதும் அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான். இன்னும், அவர்களுடைய பார்வைகளின் மீது திரையிருக்கிறது; மேலும் அவர்களுக்கு மகத்தான வேதனை உண்டு.

8. இன்னும், "அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங்கொண்டிருக்கிறோம்" எனக் கூறுவோர் மனிதர்களில் (சிலர்) இருக்கின்றனர்; அவர்களோ விசுவாசங் கொண்டவர்களல்லர்.

9. அவர்கள் அல்லாஹ்வையும், விசுவாசங்கொண்டவர்களை யும் வஞ்சிக்கின்றனர். (இதனால்) அவர்கள் தங்களைத்தாமே தவிர (வேறெவரையும்) வஞ்சிக்கவில்லை; (இதை) அவர்கள் உணர்ந்து கொள்ளவு மாட்டார்கள்.

10. அவர்களுடைய இதயங்களில் (வஞ்சகம், சந்தேகம் ஆகிய) நோயுள்ளது. ஆகவே, (அந்)நோயை அவர்களுக்கு அல்லாஹ் அதிகப்படுத்திவிட்டான். மேலும், அவர்கள் பொய் சொல்லிக்கொண்டிருந்ததன் காரணமாக அவர்களுக்கு துன்புறுத்தும் வேதனை உண்டு.

11. மேலும், அவர்களிடம், "நீங்கள் பூமியில் குழப்பம் செய்யாதீர்கள்" என்று கூறப்பட்டால் அ(தற்க)வர்கள் "நிச்சயமாக நாங்கள் சீர்திருத்தம் செய்வோர்தாம் (குழப்பவாதிகளல்ல)," எனக் கூறுகிறார்கள்.

12. தெரிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அவர்கள்தாம் குழப்பம்செய்பவர்கள், எனினும் (இதை) அவர்கள் உணர மாட்டார்கள்.

13. மேலும், அவர்களிடம், "(குர்ஆனைச் செவியுற்று) மனிதர்கள் விசுவாசங்கொண்டது போன்று நீங்களும் விசுவாசங்கொள்ளுங்கள்" என்று கூறப்பட்டால், அ(தற்க)வர்கள் "மூடர்கள் விசுவாசங் கொண்டது போல், நாங்கள் விசுவாசங் கொள்வோமா?" என்று கூறுகிறார்கள். தெரிந்துகொள்ளுங்கள். நிச்சயமாக இவர்கள் தான் மூடர்கள்; எனினும், (அதைப்பற்றி) அவர்கள் அறிந்துகொள்ளமாட்டார்கள்.

14. இன்னும், அவர்கள் விசுவாசங்கொண்டோரை சந்தித்தால், "நாங்களும் (உங்களைப் போல்) விசுவாசங்கொண்டிருக்கிறோம்" எனக்கூறுகிறார்கள்; மேலும், அவர்கள் தங்களின் (இனத்தவர்களாகிய) ஷைத்தான்களுடன் தனித்து விட்டால், "நிச்சயமாக நாங்கள் உங்களுடன் இருக்கிறோம். நாங்கள் (விசுவாசிகளைப்) பரிகாசம் செய்யக்கூடியவர்கள்தாம்" எனக் கூறுகின்றனர்.

15. அல்லாஹ் அவர்களைப் பரிகசிக்கிறான். மேலும் அவர்களுடைய வழிகேட்டில் கபோதிகளாக அவர்களை(த் தட்டழியும்படி) விட்டு வைத்திருக்கிறான்.

أُولٰٓئِكَ الَّذِيْنَ اشْتَرَوُا الضَّلٰلَةَ بِالْهُدٰى فَمَا رَبِحَتْ تِّجَارَتُهُمْ
وَمَا كَانُوْا مُهْتَدِيْنَ ﴿١٦﴾ مَثَلُهُمْ كَمَثَلِ الَّذِى اسْتَوْقَدَ نَارًا ۚ
فَلَمَّآ اَضَآءَتْ مَا حَوْلَهٗ ذَهَبَ اللّٰهُ بِنُوْرِهِمْ وَتَرَكَهُمْ فِىْ
ظُلُمٰتٍ لَّا يُبْصِرُوْنَ ﴿١٧﴾ صُمٌّۢ بُكْمٌ عُمْىٌ فَهُمْ لَا يَرْجِعُوْنَ ﴿١٨﴾ اَوْ
كَصَيِّبٍ مِّنَ السَّمَآءِ فِيْهِ ظُلُمٰتٌ وَّرَعْدٌ وَّبَرْقٌ ۚ يَجْعَلُوْنَ
اَصَابِعَهُمْ فِىْٓ اٰذَانِهِمْ مِّنَ الصَّوَاعِقِ حَذَرَ الْمَوْتِ ؕ وَاللّٰهُ مُحِيْطٌۢ
بِالْكٰفِرِيْنَ ﴿١٩﴾ يَكَادُ الْبَرْقُ يَخْطَفُ اَبْصَارَهُمْ ؕ كُلَّمَآ اَضَآءَ لَهُمْ
مَّشَوْا فِيْهِ ۙ وَاِذَآ اَظْلَمَ عَلَيْهِمْ قَامُوْا ؕ وَلَوْ شَآءَ اللّٰهُ لَذَهَبَ
بِسَمْعِهِمْ وَاَبْصَارِهِمْ ؕ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ﴿٢٠﴾ يٰٓاَيُّهَا ع ٢
النَّاسُ اعْبُدُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ وَالَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ
لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿٢١﴾ الَّذِىْ جَعَلَ لَكُمُ الْاَرْضَ فِرَاشًا وَّالسَّمَآءَ بِنَآءً
وَّاَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَاَخْرَجَ بِهٖ مِنَ الثَّمَرٰتِ رِزْقًا لَّكُمْ ۚ
فَلَا تَجْعَلُوْا لِلّٰهِ اَنْدَادًا وَّاَنْتُمْ تَعْلَمُوْنَ ﴿٢٢﴾ وَاِنْ كُنْتُمْ فِىْ رَيْبٍ
مِّمَّا نَزَّلْنَا عَلٰى عَبْدِنَا فَاْتُوْا بِسُوْرَةٍ مِّنْ مِّثْلِهٖ ۠ وَادْعُوْا
شُهَدَآءَكُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿٢٣﴾

16. இத்தகையோர்தான் நேர்வழிக்குப்பதிலாகத் தவறான வழியை விலைக்கு வாங்கிக் கொண்டார்கள்; ஆகவே இவர்களுடைய (இந்த)வியாபாரம், இலாபமளிக்கவில்லை. மேலும், இவர்கள் நேர்வழி பெறுபவர்களாகவும் இலர்.

17. இவர்களுக்கு உதாரணம்: (இருள் நீக்க) நெருப்பை மூட்டிய ஒருவனின் உதாரணத்தைப் போன்றாகும். அந்நெருப்பு அவரைச்சூழ ஒளி வீசியபோது அல்லாஹ் அவர்களின் ஒளியை(அணைத்து)ப்போக்கிவிட்டான்; மேலும் அவர்கள் பார்க்கவும் முடியாத காரிருள்களில் அவர்களை விட்டுவிட்டான்.

18. (இவர்கள்) செவிடர்கள்(உண்மையைக் கேட்கவே மாட்டார்கள்); ஊமையர்கள் (உண்மையைப்பேசவே மாட்டார்கள்); குருடர்கள்(அவர்களுக்கு பலன் தரக் கூடியதைப் பார்க்கவே மாட்டார்கள்); ஆகவே, இவர்கள் (சத்தியத்தின்பால்) மீள மாட்டார்கள்.

19. அல்லது, (இவர்களுக்கு இன்னும் ஓர் உதாரணம்:) வானத்திலிருந்து பொழியும் மழையைப்போன்றாகும்; அதில் காரிருள்களும், இடியும் மின்னலும் (கலந்து)உள்ளது; (இவ்வகை மழையில் அகப்பட்டுக் கொண்டோர்) இடிமுழக்கங்களால் மரணத்திற்குப் பயந்து தங்களுடைய விரல்களைத் தம் காதுகளில் ஆக்கிக்கொள்கிறார்கள்; அல்லாஹ்வோ நிராகரிப்பவர்களைச் சூழ்ந்து கொள்கிறவன்.

20. அம்மின்னல் அவர்களின் பார்வைகளைப் பறிக்க நெருங்குகின்றது; அது அவர்களுக்கு ஒளி தரும்போதெல்லாம், அதில் நடக்கிறார்கள். மேலும் அது அவர்களுக்கு இருளாகிவிட்டால் நின்றுவிடுகிறார்கள். அல்லாஹ் நாடினால் அவர்களுடைய செவிப் புலனையும், அவர்களுடைய பார்வைகளையும் போக்கிவிடுவான்; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றல் உடையவன்.

21. மனிதர்களே! உங்களுடைய இரட்சகனை நீங்கள் வணங்குங்கள்; அவன் எத்தகையவனென்றால் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோர்களையும் படைத்தான்;(அதனால்) நீங்கள் பயபக்தியுடையோராகலாம்.

22. அவனே, உங்களுக்காக பூமியை விரிப்பாகவும், வானத்தை ஒரு முகடாகவும் அமைத்து, வானத்திலிருந்து (அவனே) மழையைப் பொழிவித்து, அதனைக்கொண்டு கனி வகைகளிலிருந்து உங்களுக்கு உணவை வெளிப்படுத்தினான். (இந்த உண்மைகளை யெல்லாம்) நீங்கள் (தெளிவாக) அறிந்துகொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஆக்காதீர்கள்.

23. மேலும், நாம் நமது அடியார் மீது இறக்கிவைத்த (இவ்வேதத்)தில் நீங்கள் சந்தேகப்பட்டால் இதுபோன்ற ஓர் அத்தியாயத்தையாவது நீங்கள் கொண்டு வாருங்கள். அல்லாஹ்வைத் தவிர உங்களுக்கு உதவி செய்பவர்களையெல்லாம் அழைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின் ,

فَإِن لَّمْ تَفْعَلُوا وَلَن تَفْعَلُوا فَاتَّقُوا النَّارَ الَّتِي وَقُودُهَا
النَّاسُ وَالْحِجَارَةُ ۖ أُعِدَّتْ لِلْكَافِرِينَ ﴿٢٤﴾ وَبَشِّرِ الَّذِينَ آمَنُوا وَ
عَمِلُوا الصَّالِحَاتِ أَنَّ لَهُمْ جَنَّاتٍ تَجْرِي مِن تَحْتِهَا الْأَنْهَارُ ۖ كُلَّمَا
رُزِقُوا مِنْهَا مِن ثَمَرَةٍ رِّزْقًا ۙ قَالُوا هَٰذَا الَّذِي رُزِقْنَا مِن قَبْلُ
وَأُتُوا بِهِ مُتَشَابِهًا ۖ وَلَهُمْ فِيهَا أَزْوَاجٌ مُّطَهَّرَةٌ ۖ وَهُمْ فِيهَا
خَالِدُونَ ﴿٢٥﴾ إِنَّ اللَّهَ لَا يَسْتَحْيِي أَن يَضْرِبَ مَثَلًا مَّا بَعُوضَةً فَمَا
فَوْقَهَا ۚ فَأَمَّا الَّذِينَ آمَنُوا فَيَعْلَمُونَ أَنَّهُ الْحَقُّ مِن رَّبِّهِمْ ۖ وَأَمَّا
وقف لازم الَّذِينَ كَفَرُوا فَيَقُولُونَ مَاذَا أَرَادَ اللَّهُ بِهَٰذَا مَثَلًا ۘ يُضِلُّ
بِهِ كَثِيرًا وَيَهْدِي بِهِ كَثِيرًا ۚ وَمَا يُضِلُّ بِهِ إِلَّا الْفَاسِقِينَ ﴿٢٦﴾
الَّذِينَ يَنقُضُونَ عَهْدَ اللَّهِ مِن بَعْدِ مِيثَاقِهِ وَيَقْطَعُونَ
مَا أَمَرَ اللَّهُ بِهِ أَن يُوصَلَ وَيُفْسِدُونَ فِي الْأَرْضِ ۚ أُولَٰئِكَ
هُمُ الْخَاسِرُونَ ﴿٢٧﴾ كَيْفَ تَكْفُرُونَ بِاللَّهِ وَكُنتُمْ أَمْوَاتًا
فَأَحْيَاكُمْ ۖ ثُمَّ يُمِيتُكُمْ ثُمَّ يُحْيِيكُمْ ثُمَّ إِلَيْهِ تُرْجَعُونَ ﴿٢٨﴾
هُوَ الَّذِي خَلَقَ لَكُم مَّا فِي الْأَرْضِ جَمِيعًا ثُمَّ اسْتَوَىٰ إِلَى
ع ٣ السَّمَاءِ فَسَوَّاهُنَّ سَبْعَ سَمَاوَاتٍ ۚ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ ﴿٢٩﴾ ع

24. நீங்கள் (அவ்வாறு) செய்யவில்லையாயின்_ நீங்கள் ஒருபோதும் (அவ்வாறு) செய்யவேமாட்டீர்கள்; ஆகவே மனிதர்களும், கல்லும் தனக்கு எரிபொருளாக்கப் படுகின்ற (நரக) நெருப்பைப் பயந்து கொள்ளுங்கள். (இந்த நெருப்பு) நிராகரித்துக்கொண்டிருப்போருக்காக தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.

25. (நபியே!) இன்னும் விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்தார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு நிச்சயமாக சுவனங்கள் உண்டு; அவைகளுக்குக் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும் என நன்மாராயங் கூறுவீராக. அவற்றிலிருந்து அவர்களுக்கு ஒரு கனி உணவாகக் கொடுக்கப்படும்போதெல்லாம், "முன்னர் இதைத்தான் நாங்கள் கொடுக்கப்பட்டோம்" எனக்கூறுவார்கள்.
அது (பார்வைக்கு) ஒரே விதமாகத் தோன்றக் கூடியதாகயிருக்க அவர்கள் கொடுக்கப்பட்டார்கள். (ஆனால் அவை ருசியில் மாறுபட்டவையாக இருக்கும்). மேலும், அவற்றில் பரிசுத்தமான மனைவியரும் அவர்களுக்குண்டு.
அவர்கள் அவற்றில் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்.

26. நிச்சயமாக அல்லாஹ் கொசுவை, அதைவிட (அற்பத்தில்) மேற்பட்டதை உதாரணமாகக் கூறுவதற்கு வெட்கமடையமாட்டான்; ஆகவே, விசுவாசங் கொண்டிருக்கிறார்களே அத்தகையோர் நிச்சயமாக அது தங்கள் இரட்சகனிடமிருந்து வந்துள்ள உண்மை என்பதை அறிவார்கள். எனவே, நிராகரித்து விட்டார்களே அத்தகையோர்_ இதை உதாரணமாக்குவதைக் கொண்டு, அல்லாஹ் என்னதான் நாடுகிறான்?" என்று (ஏளனமாகக்) கூறுகிறார்கள். இதைக் கொண்டு அவன் அநேகரை வழி தவறச்செய்கின்றான், இன்னும், இதைக்கொண்டு அநேகரை, நேர்வழி பெறச்செய்கிறான்; இன்னும், தீயவர்களைத் தவிர (மற்றெவரையும்) இதைக் கொண்டு அவன் வழிதவறச்செய்யமாட்டான்.

27. அ(த்தீய)வர்கள் எத்தகையோரென்றால், அல்லாஹ்விடம் செய்த ஒப்பந்தத்தை அது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் (அதை) முறித்து விடுகின்றனர். எ(ந்த இரத்த சொந்தத்)தை சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென அல்லாஹ் கட்டளையிட்டானோ அதை துண்டித்தும் விடுகின்றனர்; மேலும் (அதைத்துண்டிப்பதன் மூலம்) பூமியில் குழப்பம் செய்து கொண்டுமிருக்கின்றனர்; இவர்களேதாம் நஷ்டமடைந்தோராவர்.

28. (மனிதர்களே!) அல்லாஹ்வை எவ்வாறு நீங்கள் நிராகரிக்கிறீர்கள்? நீங்களோ உயிரற்றவர்களாக இருந்தீர்கள்; பின்னர் உங்களை அவன் உயிர்ப்பித்தான்; பின்னும் அவனே உங்களை மரணிக்கச் செய்வான்; பின்னும் அவனே உங்களை உயிர்ப்பிப்பான். (அதன்) பின்னும் நீங்கள் (உங்கள் வினையின் பலனை அடைவதற்காக) அவன்பக்கமே மீட்கப்படுவீர்கள்.

29. அவன் எத்தகையவனென்றால், பூமியிலுள்ள யாவற்றையும் உங்களுக்காக அவன் படைத்தான்; பின்னர் அவன் வானத்தை படைக்கக்கருதியபோது அவைகளை ஏழு வானங்களாக ஒழுங்கு படுத்தினான். மேலும் அவன் ஒவ்வொரு பொருளையும் நன்கறிகின்றவன்.

وَاِذْ قَالَ رَبُّكَ لِلْمَلٰٓئِكَةِ اِنِّیْ جَاعِلٌ فِی الْاَرْضِ خَلِیْفَةً ؕ قَالُوْٓا
اَتَجْعَلُ فِیْهَا مَنْ یُّفْسِدُ فِیْهَا وَیَسْفِكُ الدِّمَآءَ ۚ وَنَحْنُ نُسَبِّحُ
بِحَمْدِكَ وَنُقَدِّسُ لَكَ ؕ قَالَ اِنِّیْۤ اَعْلَمُ مَا لَا تَعْلَمُوْنَ ﴿٣٠﴾ وَعَلَّمَ
اٰدَمَ الْاَسْمَآءَ كُلَّهَا ثُمَّ عَرَضَهُمْ عَلَى الْمَلٰٓئِكَةِ فَقَالَ اَنْۢبِـُٔوْنِیْ
بِاَسْمَآءِ هٰۤؤُلَآءِ اِنْ كُنْتُمْ صٰدِقِیْنَ ﴿٣١﴾ قَالُوْا سُبْحٰنَكَ لَا عِلْمَ لَنَآ
اِلَّا مَا عَلَّمْتَنَا ؕ اِنَّكَ اَنْتَ الْعَلِیْمُ الْحَكِیْمُ ﴿٣٢﴾ قَالَ یٰۤاٰدَمُ اَنْۢبِئْهُمْ
بِاَسْمَآئِهِمْ ۚ فَلَمَّاۤ اَنْۢبَاَهُمْ بِاَسْمَآئِهِمْ ۙ قَالَ اَلَمْ اَقُلْ لَّكُمْ اِنِّیْۤ اَعْلَمُ
غَیْبَ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۙ وَاَعْلَمُ مَا تُبْدُوْنَ وَمَا كُنْتُمْ تَكْتُمُوْنَ ﴿٣٣﴾
وَاِذْ قُلْنَا لِلْمَلٰٓئِكَةِ اسْجُدُوْا لِاٰدَمَ فَسَجَدُوْۤا اِلَّاۤ اِبْلِیْسَ ؕ اَبٰی وَ
اسْتَكْبَرَ وَكَانَ مِنَ الْكٰفِرِیْنَ ﴿٣٤﴾ وَقُلْنَا یٰۤاٰدَمُ اسْكُنْ اَنْتَ
وَزَوْجُكَ الْجَنَّةَ وَكُلَا مِنْهَا رَغَدًا حَیْثُ شِئْتُمَا ۪ وَلَا تَقْرَبَا
هٰذِهِ الشَّجَرَةَ فَتَكُوْنَا مِنَ الظّٰلِمِیْنَ ﴿٣٥﴾ فَاَزَلَّهُمَا الشَّیْطٰنُ
عَنْهَا فَاَخْرَجَهُمَا مِمَّا كَانَا فِیْهِ ۪ وَقُلْنَا اهْبِطُوْا بَعْضُكُمْ
لِبَعْضٍ عَدُوٌّ ۚ وَلَكُمْ فِی الْاَرْضِ مُسْتَقَرٌّ وَّمَتَاعٌ اِلٰی حِیْنٍ ﴿٣٦﴾ فَتَلَقّٰۤی
اٰدَمُ مِنْ رَّبِّهٖ كَلِمٰتٍ فَتَابَ عَلَیْهِ ؕ اِنَّهٗ هُوَ التَّوَّابُ الرَّحِیْمُ ﴿٣٧﴾

30. (நபியே!) இன்னும் , உமதிரட்சகன் மலக்குகளிடம் , "நான் பூமியில் (என்னுடைய) பிரதிநிதியை (ஆதமை) நிச்சயமாக ஆக்கப் போகிறேன் " , எனக்கூறிய சமயத்தில் அ(தற்க)வர்கள் , " (இரட்சகா!) அதில் விஷமம் செய்து இரத்தம் சிந்தக் கூடியவரையா நீ அதில் ஆக்கப்போகிறாய் ? நாங்களோ உன்னுடைய புகழைக்கொண்டு உன்னைத் துதிக்கிறோம் ; உன்னுடைய பரிசுத்தத் தன்மையைப் போற்றுகிறோம் " என்று கூறினர் ; (அதற்கு) " நீங்கள் அறியாதவற்றை நிச்சயமாக நான் நன்கறிந்திருக்கிறேன் " என (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான் (என்பதை நினைவு கூர்வீராக !)

31. (ஆதமைப் படைத்து) ஆதமுக்கு (பொருட்களின்) பெயர்களை_ அவை அனைத்தையும் கற்றுக் கொடுத்து, பின்னர் அவற்றை (அந்த) மலக்குகளின் மீது எடுத்துக்காட்டினான்; அப்பால் "( மலக்குகளே! உங்களது கூற்றில் ) நீங்கள் உண்மையாளர்களாயிருப்பின், இவற்றின் பெயர்களை நீங்கள் எனக்குத் தெரிவியுங்கள்" எனக் கூறினான்.

32. அவர்கள் "நீ மிகத் தூய்மையானவன்; நீ எங்களுக்கு கற்பித்தவற்றைத் தவிர எதைப்பற்றியும் எங்களுக்கு அறிவு இல்லை; நிச்சயமாக நீயே நன்கறிந்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்" எனக் கூறினார்கள்.

33. "ஆதமே! நீர் அவற்றின் பெயர்களை அவர்களுக்குத் தெரிவிப்பீராக" எனக் கூறினான்; அவர் அவர்களுக்கு அவற்றின் பெயர்களைத் தெரிவித்தபோது, அவன் "வானங்கள், மற்றும் பூமியில் மறைந்திருப்பதை நிச்சயமாக நான் நன்கறிவேன்; நீங்கள் வெளிப்படுத்துவதையும், மறைத்துக் கொண்டிருந்தீர்களே அதையும் நான் நன்கறிவேன்" என்று நான் உங்களுக்குக் கூறவில்லையா? என்று (அல்லாஹ்வாகிய)அவன் கூறினான்.

34. மேலும், நாம் மலக்குகளிடம் , "ஆதமுக்கு நீங்கள் (பணிந்து) ஸுஜூது செய்யுங்கள் எனக்கூறிய போது இப்லீஸைத்தவிர அவர்கள் (அனைவரும்) ஸுஜூது செய்தார்கள், அவன் விலகிக் கொண்டான்; ஆணவமும் கொண்டான்; இன்னும் நிராகரிப்பவர்களில் அவன் ஆகிவிட்டான் (என்பதை நபியே! நீர் நினைவு கூர்வீராக!).

35. மேலும், நாம் "ஆதமே! நீரும், உம்முடைய மனைவியும் இச்சுவனத்தில் குடியிருங்கள்; இன்னும், நீங்கள் இருவரும் நாடியவாறு தாராளமாக இதிலிருந்து நீங்களிருவரும் புசியுங்கள்; (ஆனால்) இம்மரத்தை நீங்களிருவரும் நெருங்கவேண்டாம்;(அவ்வாறாயின்) நீங்களிருவரும் அநியாயக்காரர்களில் ஆகி விடுவீர்கள்" என்று கூறினோம்.

36. ஆகவே, ஷைத்தான், அவ்விருவரையும் அதைவிட்டும் சறுகச் செய்தான்; பின்னர், அவ்விருவரும் எதிலிருந்தார்களோ அதை விட்டும் அவ்விருவரையும் வெளியேற்றிவிட்டான்; மேலும் உங்களில் சிலர் சிலருக்கு பகைவர்களாக இருக்க " நீங்கள் இங்கிருந்து இறங்கிவிடுங்கள்; இன்னும் பூமியில் உங்களுக்குத் தங்குமிடமும், ஒருகுறிப்பிட்ட காலம் (மரணம் வரும்) வரை சுகம் அனுபவிப்பதும் உண்டு" என்று நாம் கூறினோம்.

37. (பின்னர்) ஆதம், சில வாக்கியங்களைத் தன் இரட்சகனிடமிருந்து பெற்றுக் கொண்டார்; (அவற்றைக்கொண்டு அவனிடம் மன்னிப்புக்கோரினார்.) அதனால் (அல்லாஹ்) அவரின் பாவமீட்சியை அங்கீகரித்தான்; நிச்சயமாக அவன் தவ்பாக்களை அதிகம் ஏற்பவன்; மிகக்கிருபையுடையவன்.

قُلْنَا اهْبِطُوْا مِنْهَا جَمِيْعًا ۚ فَاِمَّا يَاْتِيَنَّكُمْ مِّنِّىْ هُدًى فَمَنْ تَبِعَ
هُدَاىَ فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ﴿٣٨﴾ وَالَّذِيْنَ كَفَرُوْا وَ
كَذَّبُوْا بِاٰيٰتِنَآ اُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿٣٩﴾ ع — ٤ ع ٤
يٰبَنِىْٓ اِسْرَآءِيْلَ اذْكُرُوْا نِعْمَتِىَ الَّتِىْٓ اَنْعَمْتُ عَلَيْكُمْ وَاَوْفُوْا
بِعَهْدِىْٓ اُوْفِ بِعَهْدِكُمْ ۚ وَاِيَّاىَ فَارْهَبُوْنِ ﴿٤٠﴾ وَاٰمِنُوْا بِمَآ
اَنْزَلْتُ مُصَدِّقًا لِّمَا مَعَكُمْ وَلَا تَكُوْنُوْٓا اَوَّلَ كَافِرٍۢ بِهٖ ۖ وَلَا تَشْتَرُوْا
بِاٰيٰتِىْ ثَمَنًا قَلِيْلًا ۡ وَّاِيَّاىَ فَاتَّقُوْنِ ﴿٤١﴾ وَلَا تَلْبِسُوا الْحَقَّ بِالْبَاطِلِ
وَتَكْتُمُوا الْحَقَّ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ ﴿٤٢﴾ وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ
وَارْكَعُوْا مَعَ الرّٰكِعِيْنَ ﴿٤٣﴾ اَتَاْمُرُوْنَ النَّاسَ بِالْبِرِّ وَتَنْسَوْنَ
اَنْفُسَكُمْ وَاَنْتُمْ تَتْلُوْنَ الْكِتٰبَ ۭ اَفَلَا تَعْقِلُوْنَ ﴿٤٤﴾ وَاسْتَعِيْنُوْا بِالصَّبْرِ
وَالصَّلٰوةِ ۭ وَاِنَّهَا لَكَبِيْرَةٌ اِلَّا عَلَى الْخٰشِعِيْنَ ﴿٤٥﴾ الَّذِيْنَ يَظُنُّوْنَ
اَنَّهُمْ مُّلٰقُوْا رَبِّهِمْ وَاَنَّهُمْ اِلَيْهِ رٰجِعُوْنَ ﴿٤٦﴾ ع يٰبَنِىْٓ اِسْرَآءِيْلَ — ٥ ع ٥ ربع
اذْكُرُوْا نِعْمَتِىَ الَّتِىْٓ اَنْعَمْتُ عَلَيْكُمْ وَاَنِّىْ فَضَّلْتُكُمْ عَلَى الْعٰلَمِيْنَ ﴿٤٧﴾
وَاتَّقُوْا يَوْمًا لَّا تَجْزِىْ نَفْسٌ عَنْ نَّفْسٍ شَيْـًٔا وَّلَا يُقْبَلُ
مِنْهَا شَفَاعَةٌ وَّلَا يُؤْخَذُ مِنْهَا عَدْلٌ وَّلَا هُمْ يُنْصَرُوْنَ ﴿٤٨﴾

38. நாம் கூறினோம்:"நீங்கள் அனைவரும் இதிலிருந்து இறங்கிவிடுங்கள்; பின்னர், என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி நிச்சயமாக வரும்போது எவர் என்னுடைய (அந்)நேர்வழியைப் பின்பற்றுகிறாரோ, அவர்களுக்கு (மறுமையின் காரியங்களில்) யாதொருபயமுமில்லை; (மேலும் இவ்வுலகில் எதைவிட்டுச் செல்கிறார்களோ அதுபற்றி) அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள்."

39. இன்னும், நிராகரித்துவிட்டு, நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கிக் கொண்டுமிருக்கிறார்களே அத்தகையோர்_அவர்கள் நரகவாசிகள் ; அவர்கள் அதில் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்.

40. இஸ்ராயீலின் மக்களே! நான் உங்களுக்குஅளித்திருந்த என்னுடைய அருட் கொடையை நீங்கள் நினைவு கூருங்கள். என் வாக்குறுதியை நீங்கள் நிறைவேற்றுங்கள்; (அப்பொழுது) உங்களுடைய வாக்குறுதியை நான் நிறைவேற்றுவேன்; மேலும் என்னையே நீங்கள் அஞ்சுங்கள்.

41. மேலும், உங்களிடமுள்ள (தவ்றாத் என்னும் வேதத்)தை உண்மைப்படுத்தும் நிலையில் நான் இறக்கிவைத்த(இவ்வேதத்)தை நீங்கள் விசுவாசியுங்கள்; இன்னும் இதை நிராகரிப்போரில் முதன்மையானோராக நீங்கள் ஆகிவிடவேண்டாம். என்னுடைய வசனங்களைச் சொற்ப விலைக்கு(ப்பகரமாக) விற்றுவிடவும் வேண்டாம்; இன்னும் என்னையே நீங்கள் பயந்துகொள்ளுங்கள்.

42. நீங்கள் உண்மையைப்பொய்யுடன் கலக்காதீர்கள்; உண்மையை நீங்கள் நன்கறிந்துகொண்டே (அதை) மறைக்கவும் செய்யாதீர்கள்.

43. மேலும் , நீங்கள் தொழுகையை நிறைவேற்றுங்கள் ; ஜகாத்தையும் நீங்கள் கொடுங்கள் ; (ருகூஉ செய்து) குனிபவர்களுடன் நீங்களும்(ருகூஉ செய்து) குனியுங்கள்.

44. நீங்கள் வேதத்தை ஓதிக்கொண்டே உங்களை மறந்துவிட்டு, (மற்ற) மனிதர்களை நன்மை செய்யுமாறு நீங்கள் ஏவுகின்றீர்களா?(இதனை) நீங்கள் விளங்கிக்கொள்ள மாட்டீர்களா?

45. நீங்கள் பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் (இரட்சகனிடத்தில்) உதவி தேடுங்கள்; நிச்சயமாக அதுவோ உள்ளச்சம் கொண்டவர்களுக்கன்றி,(ஏனையோருக்கு) மிகப்பாரமானதா(க இருக்)கும்.

46. (உள்ளச்சம் கொண்ட) அவர்கள் எத்தகையோரென்றால் , தங்கள் இரட்சகனை நிச்சயமாக தாங்கள் சந்திக்கக் கூடியவர்களென்றும் , தாங்கள் அவன்பாலே திரும்பிச் செல்லக்கூடியவர்களென்றும் உறுதியாக நம்புகின்றனர்.

47. இஸ்ராயீலின் மக்களே! நான் உங்களுக்களித்திருந்த என்னுடைய அருட்கொடையையும், அகிலத்தாரைவிட உங்களை நிச்சயமாக நான் மேன்மையாக்கி வைத்திருந்ததையும் நினைவு கூருங்கள்.

48. மேலும் , நீங்கள் ஒரு நாளை பயந்து கொள்ளுங்கள் ,(அந்நாளில்) எந்த ஓர் ஆத்மாவும் மற்றோர் ஆத்மாவுக்கு எவ்விதப்பயனுமளிக்காது;அதனிடமிருந்து பரிந்துரையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது ; அதனிடமிருந்து யாதொரு ஈட்டையும் எடுத்துக் கொள்ளப்படவுமாட்டாது ; அவர்கள் (மற்றவர்களால்) உதவியும் செய்யப்படமாட்டார்கள்.

وَاِذْ نَجَّيْنٰكُمْ مِّنْ اٰلِ فِرْعَوْنَ يَسُوْمُوْنَكُمْ سُوْٓءَ الْعَذَابِ

يُذَبِّحُوْنَ اَبْنَآءَكُمْ وَيَسْتَحْيُوْنَ نِسَآءَكُمْ ؕ وَفِيْ ذٰلِكُمْ بَلَآءٌ مِّنْ

رَّبِّكُمْ عَظِيْمٌ ﴿۴۹﴾ وَاِذْ فَرَقْنَا بِكُمُ الْبَحْرَ فَاَنْجَيْنٰكُمْ وَاَغْرَقْنَآ اٰلَ

فِرْعَوْنَ وَاَنْتُمْ تَنْظُرُوْنَ ﴿۵۰﴾ وَاِذْ وٰعَدْنَا مُوْسٰٓى اَرْبَعِيْنَ لَيْلَةً

ثُمَّ اتَّخَذْتُمُ الْعِجْلَ مِنْۢ بَعْدِهٖ وَاَنْتُمْ ظٰلِمُوْنَ ﴿۵۱﴾ ثُمَّ عَفَوْنَا

عَنْكُمْ مِّنْۢ بَعْدِ ذٰلِكَ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿۵۲﴾ وَاِذْ اٰتَيْنَا مُوْسَى

الْكِتٰبَ وَالْفُرْقَانَ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ ﴿۵۳﴾ وَاِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهٖ

يٰقَوْمِ اِنَّكُمْ ظَلَمْتُمْ اَنْفُسَكُمْ بِاتِّخَاذِكُمُ الْعِجْلَ فَتُوْبُوْٓا

اِلٰى بَارِئِكُمْ فَاقْتُلُوْٓا اَنْفُسَكُمْ ؕ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ عِنْدَ

بَارِئِكُمْ ؕ فَتَابَ عَلَيْكُمْ ؕ اِنَّهٗ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ ﴿۵۴﴾ وَاِذْ

قُلْتُمْ يٰمُوْسٰى لَنْ نُّؤْمِنَ لَكَ حَتّٰى نَرَى اللّٰهَ جَهْرَةً فَاَخَذَتْكُمُ

الصّٰعِقَةُ وَاَنْتُمْ تَنْظُرُوْنَ ﴿۵۵﴾ ثُمَّ بَعَثْنٰكُمْ مِّنْۢ بَعْدِ مَوْتِكُمْ

لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿۵۶﴾ وَظَلَّلْنَا عَلَيْكُمُ الْغَمَامَ وَاَنْزَلْنَا

عَلَيْكُمُ الْمَنَّ وَالسَّلْوٰى ؕ كُلُوْا مِنْ طَيِّبٰتِ مَا رَزَقْنٰكُمْ ؕ

وَمَا ظَلَمُوْنَا وَلٰكِنْ كَانُوْٓا اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ ﴿۵۷﴾

49. இன்னும், ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரிலிருந்து நாம் உங்களை காப்பாற்றிய சமயத்தை_ (நினைவு கூருங்கள்); அவர்கள், தீய வேதனையை உங்களுக்குச் சுவைக்கச்செய்து கொண்டிருந்தார்கள்; (அதாவது) அவர்கள் உங்கள் ஆண்மக்களை அறுத்துக் கொன்றுவிட்டு , உங்கள் பெண்(மக்)களை உயிருடன் வாழவிட்டு வந்தார்கள்; அதில் உங்களுக்கு உங்கள் இரட்சகனுடைய மகத்தான சோதனையும் இருந்தது.

50. மேலும், நாம் உங்களுக்காகக் கடலைப் பிளந்து , பின்னர் நாம் உங்களைக் காப்பாற்றி , நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரை மூழ்கடித்தோம் என்பதையும் (நினைவு கூருங்கள்).

51. இன்னும் மூஸாவிற்கு நாம் நாற்பது இரவுகளை வாக்களித்திருந்தோம் ; பின்னர் (அவர் திரும்புமுன்) நீங்கள் அநியாயக்காரர்களாக இருந்துக்கொண்டு ஒரு காளைக் கன்றை (வணக்கத்திற்குரியதாக) நீங்கள் அவருக்குப்பின் எடுத்துக் கொண்டீர்கள் என்பதையும் (நினைவு கூருங்கள்).

52. பின்னர், நீங்கள் நன்றி செலுத்துவதற்காக அதற்குப் பின்னரும் நாம் உங்களை மன்னித்தோம்.

53. மேலும், நீங்கள் நேர்வழி பெறுவதற்காக மூஸாவுக்கு ஒரு வேதத்தையும், (நன்மை தீமைகளை) பிரித்தறிவிக்கக் கூடிய (சட்டத்)தையும் நாம் கொடுத்தோம் என்பதையும் (நினைவு கூருங்கள்.)

54. மேலும், மூஸா தன் சமூகத்தாரிடம், "என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் காளைக்கன்றை(வணக்கத்திற்குரியதாக) எடுத்துக்கொண்டதன் காரணமாக நிச்சயமாக உங்களுக்கு நீங்களே அநீதம் இழைத்துக் கொண்டீர்கள்; ஆகவே உங்களைப்படைத்தவனிடம் நீங்கள் (பாவ மன்னிப்புப்பெற) தவ்பாச்செய்யுங்கள்; ஆகவே உங்களை நீங்களே கொலைசெய்து கொள்ளுங்கள்; இதுதான் உங்களைப் படைத்தவனிடம் உங்களுக்கு மிகச்சிறந்ததாகும்" என்று கூறியதை_(நினைத்துப் பாருங்கள்.) ஆகவே, (அவ்வாறே நீங்கள் செய்ததனால்) அவன் (மன்னித்து) உங்கள் தவ்பாக்களை அங்கீகரித்தான்; நிச்சயமாக அவன்தான் தவ்பாவை மிகுதியாக ஏற்(று மன்னிப்)பவன்; மிகக்கிருபையுடையவன்.

55. "மூஸாவே ! நாங்கள் அல்லாஹ்வைக் கண்கூடாகக் காணும் வரை உம்மை நாம் விசுவாசிக்கவே மாட்டோம் " என்று நீங்கள் கூறியதையும் அப்பால் , நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே உங்களை இடி முழக்கம் பிடித்துக் கொண்டதையும் (நினைவு கூருங்கள்).

56. பின்னர், நீங்கள் நன்றி செலுத்துவதற்காக, நீங்கள் இறந்து விட்டதற்குப் பின்னர் உங்களை நாம் (உயிர்ப்பித்து)எழுப்பினோம்.

57. இன்னும் உங்கள் மீது மேகத்தை நிழலிடச்செய்தோம். மேலும் உங்களுக்காக "மன்னு,ஸல்வா"(எனும் மேலான உண)வை(வானத்திலிருந்து)இறக்கி வைத்தோம். நாம் அருளியுள்ள நல்லவற்றிலிருந்து புசியுங்கள் (என்றோம். அதல்லாத மற்ற உணவைக் கேட்டதனால்) நமக்கு அவர்கள் அநியாயம் செய்து விடவில்லை; எனினும் தமக்குத்தாமே அவர்கள் அநியாயம் செய்து கொண்டிருந்தனர்.(1)

وَاِذْ قُلْنَا ادْخُلُوْا هٰذِهِ الْقَرْيَةَ فَكُلُوْا مِنْهَا حَيْثُ شِئْتُمْ
رَغَدًا وَّادْخُلُوا الْبَابَ سُجَّدًا وَّقُوْلُوْا حِطَّةٌ نَّغْفِرْ لَكُمْ
خَطٰيٰكُمْ ۭ وَسَنَزِيْدُ الْمُحْسِنِيْنَ ۵۸ فَبَدَّلَ الَّذِيْنَ ظَلَمُوْا قَوْلًا
غَيْرَ الَّذِيْ قِيْلَ لَهُمْ فَاَنْزَلْنَا عَلَى الَّذِيْنَ ظَلَمُوْا رِجْزًا
مِّنَ السَّمَاۗءِ بِمَا كَانُوْا يَفْسُقُوْنَ ۵۹ ع وَاِذِ اسْتَسْقٰى مُوْسٰى لِقَوْمِهٖ ۶ ع ۳ ۶
فَقُلْنَا اضْرِبْ بِّعَصَاكَ الْحَجَرَ ۭ فَانْفَجَرَتْ مِنْهُ اثْنَتَا عَشْرَةَ
عَيْنًا ۭ قَدْ عَلِمَ كُلُّ اُنَاسٍ مَّشْرَبَهُمْ ۭ كُلُوْا وَاشْرَبُوْا مِنْ رِّزْقِ
اللّٰهِ وَلَا تَعْثَوْا فِى الْاَرْضِ مُفْسِدِيْنَ ۶۰ وَاِذْ قُلْتُمْ يٰمُوْسٰى
لَنْ نَّصْبِرَ عَلٰى طَعَامٍ وَّاحِدٍ فَادْعُ لَنَا رَبَّكَ يُخْرِجْ لَنَا مِمَّا
تُنْۢبِتُ الْاَرْضُ مِنْۢ بَقْلِهَا وَقِثَّاۗىِٕهَا وَفُوْمِهَا وَعَدَسِهَا وَ
بَصَلِهَا ۭ قَالَ اَتَسْتَبْدِلُوْنَ الَّذِيْ هُوَ اَدْنٰى بِالَّذِيْ هُوَ
خَيْرٌ ۭ اِهْبِطُوْا مِصْرًا فَاِنَّ لَكُمْ مَّا سَاَلْتُمْ ۭ وَضُرِبَتْ عَلَيْهِمُ
الذِّلَّةُ وَالْمَسْكَنَةُ وَبَاۗءُوْ بِغَضَبٍ مِّنَ اللّٰهِ ۭ ذٰلِكَ بِاَنَّهُمْ
كَانُوْا يَكْفُرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ وَيَقْتُلُوْنَ النَّبِيّٖنَ
بِغَيْرِ الْحَقِّ ۭ ذٰلِكَ بِمَا عَصَوْا وَّكَانُوْا يَعْتَدُوْنَ ۶۱ ع ۷ ع ۷

58. இன்னும் (நினைவு கூருங்கள்:) இந்த ஊருக்குள் நுழைந்து அதில் நீங்கள் விரும்பியவாறு தாராளமாகப் புசியுங்கள், தலை குனிந்தவர்களாக (அதன்) வாயிலில் நுழையுங்கள், (எங்கள் பாவச்சுமைகள் நீங்கட்டும் என்ற) 'ஹித்ததுன்' எனவும் கூறுங்கள். (அதன் நிமித்தம்) உங்களுடைய குற்றங்களை நாம் மன்னித்துவிடுவோம், மேலும், நன்மை செய்வோருக்கு (அதன் கூலியை) அதிகப்படுத்துவோம் என்றும் கூறினோம்.

59. ஆனால், (அவர்களில்) அநியாயம் செய்தார்களே அத்தகையோர்_ தமக்கு கூறப்பட்டதல்லாத(வேறு) வார்த்தையாக அதனை மாற்றி விட்டனர்; ஆகவே அநியாயம் செய்துவிட்டார்களே அத்தகையோர் மீது (இவ்வாறு அவர்கள்) வரம்பு மீறி பாவம் செய்து கொண்டிருந்த காரணத்தினால் வானத்திலிருந்து நாம் வேதனையை இறக்கி வைத்தோம்.

60. மூஸா தம் கூட்டத்தவருக்குத் தண்ணீர் புகட்டத் தேடியபோது நாம் (அவரிடம்,) "நீர் உம்முடைய (கைத்)தடியால் இக்கல்லை அடிப்பீராக!" எனக் கூறினோம்.(அவர் அடித்தார்) உடனே அதிலிருந்து பன்னிரண்டு நீர் ஊற்றுகள் பீரிட்டோடின; ஒவ்வொரு கூட்டத்தினரும் தாங்கள் அருந்தும்(தண்ணீர்த்) துறையைத் திட்டமாக அறிந்து கொண்டார்கள். (அப்பொழுது) "அல்லாஹ்வின் உணவிலிருந்து உண்ணுங்கள்; இன்னும் பருகுங்கள்;மேலும், பூமியில் குழப்பம் செய்கிறவர்களாக வரம்பு மீறி அலையாதீர்கள்" (என்று நாம் கூறினோம் என்பதையும் நினைவு கூருங்கள்).

61. இன்னும், "மூஸாவே! ஒரேவிதமான உணவின் மீது நாங்கள் பொறுத்துக் கொண்டிருக்கவே மாட்டோம்; ஆகவே, உம்முடைய இரட்சகனிடம் எங்களுக்காக பிரார்த்தி(த்துக்கேட்)ப்பீராக! (அவ்வாறு நீர் பிரார்த்தித்தால்)பூமி முளைப்பிக்கின்ற வற்றிலிருந்து அதன் கீரையையும், அதன் வெள்ளரிக்காயையும், அதன் கோதுமையையும், அதன் பருப்பையும், அதன் வெங்காயத்தையும் அவன் வெளிப்படுத்தித்தருவான் என்று நீங்கள் கூறினீர்கள். (என்பதையும் நினைவு கூருங்கள். அவ்வாறு நீங்கள் கூறியதைக்கேட்ட மூஸா)எது மேலானதாக இருக்கிறதோ அதற்குப் பதிலாக எது மிகத்தாழ்ந்ததாக இருக்கிறதோ அதை நீங்கள் மாற்றிக் கொள்(ள விரும்பு)கின்றீர்களா? (அவ்வாறாயின்) நீங்கள் ஏதேனும் ஒரு பட்டணத்தில் இறங்கிவிடுங்கள் ; அங்கு நீங்கள் கேட்டது உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்றுஅவர் கூறினார். இழிவும், வறுமையும் அவர்கள் மீது விதிக்கப்பட்டும் விட்டன; மேலும் அல்லாஹ்வின் கோபத்திற்குரியவர்களாக அவர்கள் திரும்பினார்கள்; இது (ஏனெனில்) நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்துக் கொண்டும், நியாயமின்றி நபிமார்களைக் கொலை செய்து கொண்டும் இருந்தார்கள் என்பதன் காரணத்தினால்தான்; இ(ந்நிலைக்கு அவர்கள் ஆளான)து அவர்கள் (அல்லாஹ்வின் கட்டளைகளுக்குப் பணியாது) மாறு செய்துகொண்டிருந்ததாலும், (அல்லாஹ் விதித்த) வரம்புகளை மீறிக் கொண்டேயிருந்தார்கள் என்ற காரணத்தினால்தான்.

إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَادُوا وَالنَّصَارَىٰ وَالصَّابِئِينَ
مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَعَمِلَ صَالِحًا فَلَهُمْ أَجْرُهُمْ
عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ﴿٦٢﴾ وَإِذْ أَخَذْنَا
مِيثَاقَكُمْ وَرَفَعْنَا فَوْقَكُمُ الطُّورَ خُذُوا مَا آتَيْنَاكُمْ بِقُوَّةٍ وَ
اذْكُرُوا مَا فِيهِ لَعَلَّكُمْ تَتَّقُونَ ﴿٦٣﴾ ثُمَّ تَوَلَّيْتُمْ مِنْ بَعْدِ ذَٰلِكَ
فَلَوْلَا فَضْلُ اللَّهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهُ لَكُنْتُمْ مِنَ الْخَاسِرِينَ ﴿٦٤﴾
وَلَقَدْ عَلِمْتُمُ الَّذِينَ اعْتَدَوْا مِنْكُمْ فِي السَّبْتِ فَقُلْنَا لَهُمْ
كُونُوا قِرَدَةً خَاسِئِينَ ﴿٦٥﴾ فَجَعَلْنَاهَا نَكَالًا لِمَا بَيْنَ يَدَيْهَا
وَمَا خَلْفَهَا وَمَوْعِظَةً لِلْمُتَّقِينَ ﴿٦٦﴾ وَإِذْ قَالَ مُوسَىٰ لِقَوْمِهِ
إِنَّ اللَّهَ يَأْمُرُكُمْ أَنْ تَذْبَحُوا بَقَرَةً ۖ قَالُوا أَتَتَّخِذُنَا هُزُوًا ۖ
قَالَ أَعُوذُ بِاللَّهِ أَنْ أَكُونَ مِنَ الْجَاهِلِينَ ﴿٦٧﴾ قَالُوا ادْعُ لَنَا
رَبَّكَ يُبَيِّنْ لَنَا مَا هِيَ ۚ قَالَ إِنَّهُ يَقُولُ إِنَّهَا بَقَرَةٌ لَا
فَارِضٌ وَلَا بِكْرٌ عَوَانٌ بَيْنَ ذَٰلِكَ ۖ فَافْعَلُوا مَا تُؤْمَرُونَ ﴿٦٨﴾
قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّنْ لَنَا مَا لَوْنُهَا ۚ قَالَ إِنَّهُ يَقُولُ
إِنَّهَا بَقَرَةٌ صَفْرَاءُ فَاقِعٌ لَوْنُهَا تَسُرُّ النَّاظِرِينَ ﴿٦٩﴾

62. நிச்சயமாக, விசுவாசங்கொண்டார்களே அவர்களும், யூதர்களாக இருந்தார்களே அவர்களும், கிறிஸ்தவர்களும், ஸாபியீன்களும்(அவர்களில்) _எவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசித்து, நற்கருமத்தையும் செய்தார்களோ அத்தகையவர்கள்_ அவர்களுக்கு அவர்களுடைய கூலி அவர்களுடைய இரட்சகனிடத்தில் உண்டு. மேலும், அவர்களுக்கு (மறுமையைப்பற்றி) எவ்விதப் பயமுமில்லை; (இன்னும் உலகில் எதை விட்டுச் செல்கிறார்களோ அதுபற்றி) அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள்.

63. மேலும், நாம் உங்களிடம் உறுதிமொழி வாங்கி, உங்களுக்கு மேலாக "தூரை" (சினாய் மலையை) உயர்த்தியவாறு, "நாம் உங்களுக்குக் கொடுத்த (தவ்றாத்)தை உறுதியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்; (எப்பொழுதும்) அதிலுள்ளவற்றை நினைவும் கூருங்கள். (அதனால்) நீங்கள் பயபக்தியுடையவர்களாவீர்கள்" (என்று நாம் கூறியதை நினைவு கூருங்கள்.)

64. பின்னர், நீங்கள் அதற்குப் பின்னும் (வாக்குறுதியைப்) புறக்கணித்து விட்டீர்கள். ஆகவே, உங்கள்மீது அல்லாஹ்வின் பேரருளும்,அவனின் கிருபையும் இல்லாதிருந்தால் நீங்கள் (முற்றிலும்) நஷ்டமடைந்தவர்களில் ஆகியிருப்பீர்கள்.

65. மேலும், உங்க(ள் முன்னோர்க)ளிலிருந்து சனி(க்கிழமை)யன்று வரம்பை மீறிவிட்டார்களே அத்தகையோரை உறுதியாக நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; (அதன் காரணமாக) நாம் அவர்களுக்கு "நீங்கள் சிறுமையடைந்தவர்களாக, குரங்குகளாகி விடுங்கள்" என்று கூறினோம்.

66. இதனை (அக்காலத்தில்) அவர்களின் எதிரிலிருப்பவர்களுக்கும்,அவர்களுக்குப்பின் (காலத்தில்)வருபவர்களுக்கும் ஒரு படிப்பினையாகவும்,பயபக்தியுடையோருக்கு ஒரு உபதேசமாகவும் நாம் ஆக்கினோம்.

67. இன்னும், (இதையும் நினைவு கூருங்கள்) "ஒரு பசு மாட்டை நீங்கள் அறுக்குமாறு அல்லாஹ் உங்களுக்கு நிச்சயமாகக் கட்டளையிடுகிறான்" என மூஸா தன் சமூகத்தாரிடம் கூறியபோது, எங்களைப் பரிகாசமாக எடுத்துக் கொள்கிறீரா? என்றனர். (அதற்கு) அவர் "நான் (பரிகாசம் செய்யும்) அறிவீனர்களில் ஆகிவிடுவதை விட்டு, அல்லாஹ்விடத்தில் பாதுகாப்புத் தேடுகிறேன்" என்றார்.

68. அவர்கள் (மூஸாவே!) "உமதிரட்சகனிடம் எங்களுக்காகப் பிரார்த்திப்பீராக! (அவ்வாறு பிரார்த்தித்தால்) அது எத்தகையது என்பதை எங்களுக்கு அவன் விளக்குவான்" என்று கூறினார்கள். அவர்,"நிச்சயமாக அது கிழடுமல்ல; இளங்கன்றுமல்ல; இதற்கிடையிலுள்ள மத்தியதரமான ஒரு பசு மாடாகும்" என நிச்சயமாக அவன் கூறுகிறான் எனக்கூறினார். ஆகவே, உங்களுக் கிடப்பட்ட கட்டளையை நிறைவேற்றுங்கள் என்று (மூஸாவாகிய) அவர் கூறினார்.

69. அவர்கள் (மூஸாவிடம்) "உமதிரட்சகனிடம் எங்களுக்காகப் பிரார்த்திப்பீராக! (அவ்வாறு பிரார்த்தித்தால்)" அதன் நிறம் என்ன", என்பதை எங்களுக்கு அவன் விளக்குவான் என்று கூறினார்கள்; (அதற்கு) நிச்சயமாக அது (கலப்பற்ற) மஞ்சள் நிறமான ஒரு பசுவாகும்; அதன் நிறம் கெட்டியானது; பார்ப்பவர்களை (க் கவர்ந்து) அது மகிழ்விக்கும்" என நிச்சயமாக அவன் கூறுகிறான் என (மூஸாவாகிய)அவர் கூறினார்.

قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّنْ لَّنَا مَا هِيَ ۙ إِنَّ الْبَقَرَ تَشٰبَهَ عَلَيْنَا ؕ
وَإِنَّآ إِنْ شَآءَ اللّٰهُ لَمُهْتَدُوْنَ ﴿٧٠﴾ قَالَ إِنَّهٗ يَقُوْلُ إِنَّهَا بَقَرَةٌ لَّا
ذَلُوْلٌ تُثِيْرُ الْأَرْضَ وَلَا تَسْقِي الْحَرْثَ ۚ مُسَلَّمَةٌ لَّا شِيَةَ فِيْهَا ؕ
قَالُوا الْـٰٔنَ جِئْتَ بِالْحَقِّ ؕ فَذَبَحُوْهَا وَمَا كَادُوْا يَفْعَلُوْنَ ﴿٧١﴾ ع وَ ع ٨ ١٠ ٨
إِذْ قَتَلْتُمْ نَفْسًا فَادّٰرَءْتُمْ فِيْهَا ؕ وَاللّٰهُ مُخْرِجٌ مَّا كُنْتُمْ
تَكْتُمُوْنَ ﴿٧٢﴾ ج فَقُلْنَا اضْرِبُوْهُ بِبَعْضِهَا ؕ كَذٰلِكَ يُحْيِ اللّٰهُ الْمَوْتٰى
وَيُرِيْكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ ﴿٧٣﴾ ثُمَّ قَسَتْ قُلُوْبُكُمْ مِّنْ
بَعْدِ ذٰلِكَ فَهِيَ كَالْحِجَارَةِ أَوْ أَشَدُّ قَسْوَةً ؕ وَإِنَّ مِنَ الْحِجَارَةِ
لَمَا يَتَفَجَّرُ مِنْهُ الْأَنْهٰرُ ؕ وَإِنَّ مِنْهَا لَمَا يَشَّقَّقُ فَيَخْرُجُ مِنْهُ
الْمَآءُ ؕ وَإِنَّ مِنْهَا لَمَا يَهْبِطُ مِنْ خَشْيَةِ اللّٰهِ ؕ وَمَا اللّٰهُ بِغَافِلٍ
عَمَّا تَعْمَلُوْنَ ﴿٧٤﴾ أَفَتَطْمَعُوْنَ أَنْ يُّؤْمِنُوْا لَكُمْ وَقَدْ كَانَ
فَرِيْقٌ مِّنْهُمْ يَسْمَعُوْنَ كَلٰمَ اللّٰهِ ثُمَّ يُحَرِّفُوْنَهٗ مِنْ بَعْدِ
مَا عَقَلُوْهُ وَهُمْ يَعْلَمُوْنَ ﴿٧٥﴾ وَإِذَا لَقُوا الَّذِيْنَ اٰمَنُوْا قَالُوْٓا
اٰمَنَّا ۚۖ وَإِذَا خَلَا بَعْضُهُمْ إِلٰى بَعْضٍ قَالُوْٓا أَتُحَدِّثُوْنَهُمْ بِمَا
فَتَحَ اللّٰهُ عَلَيْكُمْ لِيُحَآجُّوْكُمْ بِهٖ عِنْدَ رَبِّكُمْ ؕ أَفَلَا تَعْقِلُوْنَ ﴿٧٦﴾

70. அவர்கள் (மூஸாவே!)உமதிரட்சகனிடம் எங்களுக்காகப் பிரார்த்திப்பீராக! (அவ்வாறு நீர் பிரார்த்தித்தால் )அந்தப் பசு எந்தவகையைச் சேர்ந்தது என எங்களுக்கு அவன் தெளிவுபடுத்துவான் ; நிச்சயமாக எல்லாப்பசுக்களும் எங்களுக்கு ஒன்று போல் ஆகி (அவற்றில் அந்தப் பசு எது என்பது எங்களை சந்தேகத்துக்குள்ளாக்கி ) விட்டது; மேலும், அல்லாஹ் நாடினால் , இனி நிச்சயமாக நாங்கள் நேர்வழி பெறக் கூடியவர்கள் என்றும் கூறினார்கள்.

71. அவர் (மூஸா) "நிச்சயமாக அது ஒரு பசு, பூமியில் உழவடித்து வேலை செய்ததும் அல்ல! பயிருக்குத் தண்ணீர் (இறைத்துப்)பாய்ச்சியதும் அல்ல! குறையற்றது, அதில் வடுவில்லாதது என நிச்சயமாக (அல்லாஹ்வாகிய) அவன் கூறுகிறான்" என்றார். அத(ற்க)வர்கள், " இப்பொழுதுதான் நீர் சரியான (விபரத்)தைக் கொண்டுவந்தீர்" எனக்கூறி,பின்னர் அதை அவர்கள் அறுத்தார்கள். அன்றியும், அவர்கள்(மனமுவந்து) செய்வதற்கு நெருங்கவில்லை.

72. நீங்கள் ஓர் ஆத்மாவைக் கொலை செய்ததையும் பின்னர் அதில் ( ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி) நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருந்தீர்கள்(என்பதையும் நினைவுகூருங்கள்); அல்லாஹ்வோ நீங்கள் மறைத்துக்கொண்டிருந்ததை வெளியாக்குகிறவன் .

73. ஆகவே "(அறுக்கப்பட்ட பசுவாகிய) அதன் சில (பாகத்)தைக் கொண்டு (கொல்லப்பட்ட) அவனை அடியுங்கள்" என நாம் கூறினோம்; (அவன் உயிர் பெற்ற) அவ்வாறே,மரணித்தவர்களை அல்லாஹ் உயிர்ப்பிப்பான்;மேலும் நீங்கள் அறிந்துகொள்வதற்காக தன்னுடைய அத்தாட்சிகளை அவன் உங்களுக்குக் காண்பிக்கிறான்.

74. அப்பால் உங்களுடைய இதயங்கள் இதற்குப் பின்னும் (கல் நெஞ்சாகி) கடினமாகி விட்டன ; அவை, கற்பாறையைப் போல் அல்லது இறுக்கத்தால் (அதைவிட) மிகக் கடினமாக இருக்கின்றன. (ஏனென்றால்) கற்பாறையிலும் அதிலிருந்து தானாக ஆறுகள் வெடித்து பாய்ந்தோடிக் கொண்டிருப்பவைகளும் உண்டு ; நிச்சயமாக அதில் விரிசல் ஏற்பட்டுப் பின்னர் அதிலிருந்து தண்ணீர் வெளிப்படக் கூடியதும் உண்டு ; நிச்சயமாக அதில் அல்லாஹ்வின் பயத்தால் (உருண்டு) கீழே விழக் கூடியதும் உண்டு ; மேலும் அல்லாஹ் நீங்கள் செய்து வருவது பற்றி பராமுகமானவனல்லன்.

75. (விசுவாசங்கொண்டோரே !) உங்க(ள் வார்த்தைக)ளுக்காக இவர்கள் விசுவாசங் கொள்வார்கள் என்பதை நீங்கள் (எதிர்பார்த்து) ஆசை வைக்கின்றீர்களா? மேலும்,திட்டமாகஅவர்களில் ஒரு சாரார் அல்லாஹ்வுடைய வசனங்களைக் கேட்பவர்களாக இருந்தனர்; பின்னர், அதை விளங்கிய பிறகும் அவர்கள் அறிந்தவர்களாகவே அதை மாற்றிவிடுகின்றனர்.

76. மேலும், அவர்கள் விசுவாசங்கொண்டோரைச் சந்தித்தால் நாங்கள் (உங்கள் நபியை )விசுவாசிக்கிறோம்" எனக் கூறுகின்றார்கள். மேலும், அவர்களில் சிலர் சிலருடன் தனித்து விடும்போது உங்கள் இரட்சகனிடத்தில் அதைக் கொண்டு அவர்கள் உங்களுடன் தர்க்கிப்பதற்காக,"(உங்கள் வேதத்தில்) அல்லாஹ் உங்களுக்கு(தெரிவித்து) வெளிப்படுத்திக் காட்டியிருப்பதை அவர்களுக்கு நீங்கள் அறிவிக்கின்றீர்களா" ?என்று கூறுகின்றனர்.(இதனை) நீங்கள் விளங்கிக் கொள்ளமாட்டீர்களா?

اَوَلَا يَعۡلَمُوۡنَ اَنَّ اللّٰهَ يَعۡلَمُ مَا يُسِرُّوۡنَ وَمَا يُعۡلِنُوۡنَ ﴿۷۷﴾ وَ
مِنۡهُمۡ اُمِّيُّوۡنَ لَا يَعۡلَمُوۡنَ الۡكِتٰبَ اِلَّاۤ اَمَانِىَّ وَاِنۡ هُمۡ اِلَّا
يَظُنُّوۡنَ ﴿۷۸﴾ فَوَيۡلٌ لِّلَّذِيۡنَ يَكۡتُبُوۡنَ الۡكِتٰبَ بِاَيۡدِيۡهِمۡ ۖ ثُمَّ النصف
يَقُوۡلُوۡنَ هٰذَا مِنۡ عِنۡدِ اللّٰهِ لِيَشۡتَرُوۡا بِهٖ ثَمَنًا قَلِيۡلًا ؕ فَوَيۡلٌ
لَّهُمۡ مِّمَّا كَتَبَتۡ اَيۡدِيۡهِمۡ وَوَيۡلٌ لَّهُمۡ مِّمَّا يَكۡسِبُوۡنَ ﴿۷۹﴾ وَقَالُوۡا
لَنۡ تَمَسَّنَا النَّارُ اِلَّاۤ اَيَّامًا مَّعۡدُوۡدَةً ؕ قُلۡ اَتَّخَذۡتُمۡ عِنۡدَ
اللّٰهِ عَهۡدًا فَلَنۡ يُّخۡلِفَ اللّٰهُ عَهۡدَهٗۤ اَمۡ تَقُوۡلُوۡنَ عَلَى اللّٰهِ مَا
لَا تَعۡلَمُوۡنَ ﴿۸۰﴾ بَلٰى مَنۡ كَسَبَ سَيِّئَةً وَّاَحَاطَتۡ بِهٖ خَطِيۡٓـئَتُهٗ
فَاُولٰٓـئِكَ اَصۡحٰبُ النَّارِ ۚ هُمۡ فِيۡهَا خٰلِدُوۡنَ ﴿۸۱﴾ وَالَّذِيۡنَ
اٰمَنُوۡا وَعَمِلُوا الصّٰلِحٰتِ اُولٰٓـئِكَ اَصۡحٰبُ الۡجَـنَّةِ ۚ هُمۡ
فِيۡهَا خٰلِدُوۡنَ ﴿۸۲﴾ ع وَاِذۡ اَخَذۡنَا مِيۡثَاقَ بَنِىۡۤ اِسۡرَآءِيۡلَ ع ۹
لَا تَعۡبُدُوۡنَ اِلَّا اللّٰهَ وَبِالۡوَالِدَيۡنِ اِحۡسَانًا وَّذِى
الۡقُرۡبٰى وَالۡيَتٰمٰى وَالۡمَسٰكِيۡنِ وَقُوۡلُوۡا لِلنَّاسِ
حُسۡنًا وَّاَقِيۡمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ ؕ ثُمَّ
تَوَلَّيۡتُمۡ اِلَّا قَلِيۡلًا مِّنۡكُمۡ وَاَنۡتُمۡ مُّعۡرِضُوۡنَ ﴿۸۳﴾

77. நிச்சயமாக அல்லாஹ், அவர்கள் மறைத்துவைப்பதையும், அவர்கள் பகிரங்கமாக்குவதையும் நன்கறிவான் என்பதை அவர்கள் அறிய மாட்டார்களா?

78. மேலும் அவர்களில் எழுத்தறிவில்லாதோரும் இருக்கின்றனர்; வீண் நம்பிக்கைகளை (க்கொள்கையாகக் கொள்வதைத்) தவிர வேதத்தை அவர்கள் அறியமாட்டார்கள்; அன்றியும் அவர்கள் (வீண் கற்பனைகளை) எண்ணுவோர் தவிர வேறில்லை.

79. ஆகவே, தங்கள் கரங்களால் நூலை எழுதி, பின்னர் அதை அற்பக்கிரயத்திற்கு விற்பதற்காக "இது அல்லாஹ்விடமிருந்து வந்தது" என்றும் கூறுகிறார்களே அத்தகையோருக்குக் கேடுதான்; ஆகவே (அதை) அவர்களுடைய கரங்கள் எழுதியதனால் அவர்களுக்குக் கேடுதான்! மேலும், அவர்கள் (அதன் மூலம்) சம்பாதிப்பதனால் அவர்களுக்குக் கேடுதான்.

80. மேலும், "எண்ணப்பட்ட சில நாட்களைத் தவிர, (நரக) நெருப்பு எங்களைத் தீண்டவே மாட்டாது" என அவர்கள் கூறுகின்றார்கள்; (அதற்கு நபியே! அவர்களிடம்) நீர் கேளும்: அல்லாஹ்விடம் ஏதேனும் (அவ்வாறு) ஓர் வாக்குறுதியை நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? அவ்வாறாயின், நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய வாக்குறுதியில் மாற்றம் செய்யவே மாட்டான்; அல்லது நீங்கள் அறியாததை அல்லாஹ்வின் மீது (கற்பனை செய்து) கூறுகின்றீர்களா?"

81. ஆம்! எவர் தீமையைச் சம்பாதித்துக்கொண்டிருந்து, அவருடைய குற்றம் அவரைச் சூழ்ந்துகொண்டதோ அவர்கள் நரகவாசிகளே! அதில் அவர்கள் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்.

82. இன்னும் விசுவாசங்கொண்டு நற்காரியங்களையும் செய்கிறார்களே அத்தகையோர்_அவர்கள் சுவனவாசிகள்; அதில் அவர்கள் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்.

83. மேலும், இஸ்ராயீலின் மக்களிடம் "நீங்கள் அல்லாஹ்வைத் தவிர (வேறு எதனையும்) வணங்காதீர்கள்; பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும் உபகாரம் செய்யுங்கள்; இன்னும் மனிதர்களுக்கு அழகானதைச் சொல்லுங்கள்; தொழுகையையும் நிறைவேற்றுங்கள்; ஜகாத்தையும் கொடுங்கள்" என்று நாம் வாக்குறுதி வாங்கியதையும் (நினைத்துப்பாருங்கள்), பின்னர் உங்களில் சொற்ப மானவர்களைத் தவிர நீங்கள் புறக்கணித்தவர்களாக முகம் திருப்பி (மாறி) விட்டீர்கள்.

وَاِذۡ اَخَذۡنَا مِيۡثَاقَكُمۡ لَا تَسۡفِكُوۡنَ دِمَآءَكُمۡ وَلَا تُخۡرِجُوۡنَ
اَنۡفُسَكُمۡ مِّنۡ دِيَارِكُمۡ ثُمَّ اَقۡرَرۡتُمۡ وَاَنۡتُمۡ تَشۡهَدُوۡنَ ﴿٨٤﴾
ثُمَّ اَنۡتُمۡ هٰٓؤُلَآءِ تَقۡتُلُوۡنَ اَنۡفُسَكُمۡ وَتُخۡرِجُوۡنَ فَرِيۡقًا مِّنۡكُمۡ
مِّنۡ دِيَارِهِمۡ ز تَظٰهَرُوۡنَ عَلَيۡهِمۡ بِالۡاِثۡمِ وَالۡعُدۡوَانِ ؕ وَاِنۡ
يَّاۡتُوۡكُمۡ اُسٰرٰى تُفٰدُوۡهُمۡ وَهُوَ مُحَرَّمٌ عَلَيۡكُمۡ اِخۡرَاجُهُمۡ ؕ
اَفَتُؤۡمِنُوۡنَ بِبَعۡضِ الۡكِتٰبِ وَتَكۡفُرُوۡنَ بِبَعۡضٍ ۚ فَمَا جَزَآءُ
مَنۡ يَّفۡعَلُ ذٰلِكَ مِنۡكُمۡ اِلَّا خِزۡىٌ فِى الۡحَيٰوةِ الدُّنۡيَا ۚ وَيَوۡمَ
الۡقِيٰمَةِ يُرَدُّوۡنَ اِلٰٓى اَشَدِّ الۡعَذَابِ ؕ وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا
تَعۡمَلُوۡنَ ﴿٨٥﴾ اُولٰٓئِكَ الَّذِيۡنَ اشۡتَرَوُا الۡحَيٰوةَ الدُّنۡيَا بِالۡاٰخِرَةِ ز
فَلَا يُخَفَّفُ عَنۡهُمُ الۡعَذَابُ وَلَا هُمۡ يُنۡصَرُوۡنَ ﴿٨٦﴾ ع وَ ١٠
لَقَدۡ اٰتَيۡنَا مُوۡسَى الۡكِتٰبَ وَقَفَّيۡنَا مِنۡۢ بَعۡدِهٖ بِالرُّسُلِ ز
وَاٰتَيۡنَا عِيۡسَى ابۡنَ مَرۡيَمَ الۡبَيِّنٰتِ وَاَيَّدۡنٰهُ بِرُوۡحِ الۡقُدُسِ ؕ
اَفَكُلَّمَا جَآءَكُمۡ رَسُوۡلٌ ۢ بِمَا لَا تَهۡوٰٓى اَنۡفُسُكُمُ اسۡتَكۡبَرۡتُمۡ ۚ
فَفَرِيۡقًا كَذَّبۡتُمۡ ز وَفَرِيۡقًا تَقۡتُلُوۡنَ ﴿٨٧﴾ وَقَالُوۡا قُلُوۡبُنَا غُلۡفٌ ؕ
بَلۡ لَّعَنَهُمُ اللّٰهُ بِكُفۡرِهِمۡ فَقَلِيۡلًا مَّا يُؤۡمِنُوۡنَ ﴿٨٨﴾

84. இன்னும்; "நீங்கள் (உங்களுக்கு மத்தியில்) உங்களுடைய இரத்தங்களைச் சிந்தாதீர்கள்; உங்கள் இல்லங்களை விட்டு உங்(களைச் சேர்ந்தவர்)களை வெளியேற்றாதீர்கள்" என்றும் உங்களிடம் நாம் உறுதிமொழி வாங்கியதையும் (நினைவு கூருங்கள்), பின்னர் நீங்களோ சாட்சியம் கூறியவர்களாக இருக்க(அதை) நீங்கள் உறுதிப்படுத்தியிருக்கிறீர்கள்.

85. பின்னர் (இவ்வாறு உறுதிப் படுத்திய) நீங்கள்தான் அவர்கள்_ உங்களை(ச் சேர்ந்தவர்களை) நீங்கள் கொலை செய்கிறீர்கள். இன்னும் உங்களில் ஒரு சாராரை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றுகிறீர்கள். பாவத்தைக் கொண்டும், பகைமையைக் கொண்டும் அவர்களுக்குப் பாதகமாக (எதிரிகளுக்கு) உதவி செய்கிறீர்கள். மேலும்,(வெளியேற்றப்பட்டவர்கள்)சிறைப்பட்டவர்களாக உங்களிடம் வந்துவிட்டால் நஷ்டஈடுகொடுத்து(அவர்களை)விடுவிக்கின்றீர்கள். (அவ்வாறு) அவர்களை (அவர்களின் வீடுகளிலிருந்து) வெளியேற்றுவதே உங்களின்மீது தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் வேதத்தில் சிலவற்றை விசுவாசித்து (மற்றும்) சிலவற்றை நிராகரிக்கின்றீர்களா? உங்களில் இதைச் செய்கிறவருக்கு இவ்வுலக வாழ்வில் இழிவைத் தவிர வேறு கூலி இல்லை. இன்னும், மறுமை நாளில் அவர்கள் மிகக் கடுமையான வேதனையின்பால் திருப்பப்படுவார்கள். அன்றியும் நீங்கள் செய்பவற்றைப் பற்றி அல்லாஹ் பராமுகமானவனல்லன்.

86. அவர்கள் எத்தகையோரென்றால், மறுமை(யின் வாழ்க்கை)க்குப் பகரமாக, இவ்வுலக வாழ்க்கையை விலைக்கு வாங்கிக்கொண்டார்கள். ஆகவே, அவர்களை விட்டுவேதனைஇலேசாக்கப்படமாட்டாது. அவர்கள் (யாராலும்) உதவி செய்யப் படவுமாட்டார்கள்.

87. மேலும், நாம் மூஸாவிற்கு திட்டமாக வேதத்தைக் கொடுத்தோம்; அவருக்குப் பின் தூதர்களை தொடர்ச்சியாக நாம் அனுப்பியும் வைத்தோம்; மர்யமின் குமாரர் ஈஸாவுக்குத்தெளிவான அத்தாட்சிகளை வழங்கி, ரூஹுல் குதுஸ்(எனும் ஜிப்ரீலைக்) கொண்டு அவரை நாம் பலப்படுத்தியும் வைத்தோம். உங்கள் மனம் விரும்பாததை (நம்முடைய) எந்தத் தூதரும் உங்களிடம் கொண்டுவந்த போதெல்லாம் (அதை ஏற்காது, புறக்கணித்துப்) பெருமையடித்துக் கொள்கிறீர்களா? ஆகவே (அத்தூதர்களில்) ஒரு சாராரை நீங்கள் பொய்யாக்கினீர்கள்; ஒரு சாராரைக் கொலையும் செய்தீர்கள்.

88. இன்னும், "எங்கள் இதயங்கள் உறையிடப்பட்டிருக்கின்றன" என்று (யூதர்களான) அவர்கள் கூறுகின்றனர். அவ்வாறன்று, அவர்களுடைய நிராகரிப்பின் காரணமாக அவர்களை அல்லாஹ் சபித்துவிட்டான். ஆதலால் அவர்கள் விசுவாசம் கொள்வது வெகு சொற்பமே.

وَلَمَّا جَآءَهُمْ كِتٰبٌ مِّنْ عِنْدِ اللّٰهِ مُصَدِّقٌ لِّمَا مَعَهُمْ ۙ
وَكَانُوْا مِنْ قَبْلُ يَسْتَفْتِحُوْنَ عَلَى الَّذِيْنَ كَفَرُوْا ۚ فَلَمَّا
جَآءَهُمْ مَّا عَرَفُوْا كَفَرُوْا بِهٖ ۫ فَلَعْنَةُ اللّٰهِ عَلَى الْكٰفِرِيْنَ ﴿٨٩﴾
بِئْسَمَا اشْتَرَوْا بِهٖٓ اَنْفُسَهُمْ اَنْ يَّكْفُرُوْا بِمَآ اَنْزَلَ اللّٰهُ بَغْيًا
اَنْ يُّنَزِّلَ اللّٰهُ مِنْ فَضْلِهٖ عَلٰى مَنْ يَّشَآءُ مِنْ عِبَادِهٖ ۚ
فَبَآءُوْ بِغَضَبٍ عَلٰى غَضَبٍ ؕ وَلِلْكٰفِرِيْنَ عَذَابٌ
مُّهِيْنٌ ﴿٩٠﴾ وَاِذَا قِيْلَ لَهُمْ اٰمِنُوْا بِمَآ اَنْزَلَ اللّٰهُ قَالُوْا
نُؤْمِنُ بِمَآ اُنْزِلَ عَلَيْنَا وَيَكْفُرُوْنَ بِمَا وَرَآءَهٗ ۗ وَهُوَ
الْحَقُّ مُصَدِّقًا لِّمَا مَعَهُمْ ؕ قُلْ فَلِمَ تَقْتُلُوْنَ اَنْۢبِيَآءَ
اللّٰهِ مِنْ قَبْلُ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿٩١﴾ وَلَقَدْ جَآءَكُمْ
مُّوْسٰى بِالْبَيِّنٰتِ ثُمَّ اتَّخَذْتُمُ الْعِجْلَ مِنْۢ بَعْدِهٖ وَاَنْتُمْ
ظٰلِمُوْنَ ﴿٩٢﴾ وَاِذْ اَخَذْنَا مِيْثَاقَكُمْ وَرَفَعْنَا فَوْقَكُمُ
الطُّوْرَ ؕ خُذُوْا مَآ اٰتَيْنٰكُمْ بِقُوَّةٍ وَّاسْمَعُوْا ؕ قَالُوْا سَمِعْنَا
وَعَصَيْنَا ۗ وَاُشْرِبُوْا فِىْ قُلُوْبِهِمُ الْعِجْلَ بِكُفْرِهِمْ ؕ
قُلْ بِئْسَمَا يَاْمُرُكُمْ بِهٖٓ اِيْمَانُكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿٩٣﴾

89. மேலும் அவர்களிடமுள்ள (வேதத்)தை உண்மைப் படுத்தக்கூடிய (குர்ஆன் எனும்) வேதம் அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு வந்தபோது, இதற்குமுன் நிராகரிப்போருக்கு எதிராக(த் தங்களுக்கு)வெற்றியை(அல்லாஹ்விடம்) அவர்கள் தேடிக் கொண்டுமிருந்தனர். பின்னர் அவர்கள் நன்கறிந்திருந்த (இவ்வேதமான)து அவர்களிடம் வந்தபோது, அதை அவர்கள் நிராகரித்துவிட்டனர். ஆகவே நிராகரிப்போர் மீது அல்லாஹ்வின் சாபம் இருக்கிறது.

90. (இந்தக் குர்ஆனை தங்கள் மீது இறக்காமல்) அல்லாஹ் தன்னுடைய அடியார்களில் தான் நாடியவர் மீது தன்னுடைய பேரருளிலிருந்து இறக்கி வைத்ததற்காகப் பொறாமை கொண்டு அல்லாஹ் இறக்கிய (இ)தையே நிராகரிப்பதன் மூலம் எதற்குப்பகரமாக தங்களை விற்று விட்டார்களோ அது (மிகக்) கெட்டது. அதனால் அவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு மேல் கோபத்திற்குரியவர்களாகத்திரும்பினார்கள். நிராகரிப்போர்களுக்கு இழிவு தரும் வேதனையுமுண்டு.

91. மேலும், "அல்லாஹ் இறக்கிவைத்த(இவ்வேதத்)தை நீங்கள் விசுவாசங் கொள்ளுங்கள்" என அவர்களுக்குக் கூறப்பட்டால், "எங்கள் மீது இறக்கப் பட்ட(தவ்ராத்)தை விசுவாசிப்போம்" எனக்கூறுகிறார்கள். அதற்குப்பின்னால் உள்ள (குர்ஆன்வேதத்)தை நிராகரித்தும்விடுகின்றார்கள்.(ஆனால்) அவர்களிடம் இருப்பதை உண்மைப் படுத்தக்கூடியதாக இருக்கும் நிலையில் இதுவே சத்தியமானதாகும். (நபியே! அவர்களிடம்,) "நீங்கள் விசுவாசங்கொண்டோராக இருந்தால் அல்லாஹ்வின் நபிமார்களை இதற்குமுன் நீங்கள் ஏன் கொலை செய்தீர்கள்?" என்று நீர் கேட்பீராக!

92. மேலும், மூஸா உங்களிடம் தெளிவான அத்தாட்சிகளை நிச்சயமாக கொண்டுவந்தார். அப்பால், அவருக்குப் பின்னர் நீங்கள் காளைக் கன்றை (தெய்வமாக) எடுத்துக்கொண்டீர்கள்; அந்நிலையில் நீங்களோ அநியாயக் காரர்களாக இருக்கிறீர்கள்.

93. உங்களிடம் நாம் வாக்குறுதி வாங்கி, இன்னும் தூரை(சினாய் மலையை) உங்களுக்குமேல் உயர்த்தியபொழுது, "உங்களுக்கு நாம் கொடுத்த (தவ்றாத்)தை பலமாகப்பிடியுங்கள். இன்னும், (அதை செவிசாய்த்துக்) கேளுங்கள்" (என்று கூறியதையும் நினைவு கூருங்கள்). அ(தற்க)வர்கள், "நாங்கள் செவியேற்றோம்; இன்னும், (உம் கட்டளைக்கு) நாங்கள் மாறு செய்தோம்" என்று கூறினார்கள். மேலும் அவர்கள் நிராகரித்த தன் காரணமாக அவர்களுடைய இதயங்களில் ஒரு காளைக் கன்றி(ன்அன்பி)னை புகட்டப்பட்டுவிட்டார்கள். நீங்கள் விசுவாசங் கொண்டோராக இருந்தால் எதை(ச்செய்யுமாறு) உங்களுடைய விசுவாசம் தூண்டுகிறதோ அது (மிகக்)கெட்டது" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

قُلْ اِنْ كَانَتْ لَكُمُ الدَّارُ الْاٰخِرَةُ عِنْدَ اللّٰهِ خَالِصَةً مِّنْ
دُوْنِ النَّاسِ فَتَمَنَّوُا الْمَوْتَ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿٩٤﴾ وَ
لَنْ يَّتَمَنَّوْهُ اَبَدًاۢ بِمَا قَدَّمَتْ اَيْدِيْهِمْ ؕ وَاللّٰهُ عَلِيْمٌۢ
بِالظّٰلِمِيْنَ ﴿٩٥﴾ وَلَتَجِدَنَّهُمْ اَحْرَصَ النَّاسِ عَلٰى حَيٰوةٍ ۚۛ وَ
مِنَ الَّذِيْنَ اَشْرَكُوْا ۚۛ يَوَدُّ اَحَدُهُمْ لَوْ يُعَمَّرُ اَلْفَ سَنَةٍ ۚ وَ
مَا هُوَ بِمُزَحْزِحِهٖ مِنَ الْعَذَابِ اَنْ يُّعَمَّرَ ؕ وَاللّٰهُ بَصِيْرٌۢ بِمَا
يَعْمَلُوْنَ ﴿٩٦﴾ ع قُلْ مَنْ كَانَ عَدُوًّا لِّجِبْرِيْلَ فَاِنَّهٗ نَزَّلَهٗ
عَلٰى قَلْبِكَ بِاِذْنِ اللّٰهِ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَهُدًى
وَّبُشْرٰى لِلْمُؤْمِنِيْنَ ﴿٩٧﴾ مَنْ كَانَ عَدُوًّا لِّلّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَ
رُسُلِهٖ وَجِبْرِيْلَ وَمِيْكٰلَ فَاِنَّ اللّٰهَ عَدُوٌّ لِّلْكٰفِرِيْنَ ﴿٩٨﴾
وَلَقَدْ اَنْزَلْنَآ اِلَيْكَ اٰيٰتٍۢ بَيِّنٰتٍ ۚ وَمَا يَكْفُرُ بِهَآ اِلَّا
الْفٰسِقُوْنَ ﴿٩٩﴾ اَوَكُلَّمَا عٰهَدُوْا عَهْدًا نَّبَذَهٗ فَرِيْقٌ مِّنْهُمْ ؕ
بَلْ اَكْثَرُهُمْ لَا يُؤْمِنُوْنَ ﴿١٠٠﴾ وَلَمَّا جَآءَهُمْ رَسُوْلٌ مِّنْ عِنْدِ
اللّٰهِ مُصَدِّقٌ لِّمَا مَعَهُمْ نَبَذَ فَرِيْقٌ مِّنَ الَّذِيْنَ اُوْتُوا
الْكِتٰبَ ۙ كِتٰبَ اللّٰهِ وَرَآءَ ظُهُوْرِهِمْ كَاَنَّهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿١٠١﴾ ن

معانقة ٢ عند المتأخرين

ع ١١

94. அல்லாஹ்விடமிருக்கும் "மறுமைவீடானது (மற்ற) மனிதர்களுக்கன்றி உங்களுக்கே சொந்தமாக (இருந்து அதில் நீங்கள் உண்மையாளர்களாக) இருப்பின்,(அவ்வீட்டிற்குச் செல்வதற்காக) மரணத்தை நீங்கள் விரும்புங்கள்" என (நபியே!) நீர் கூறுவீராக!

95. (ஆனால்) அவர்கள் கரங்கள் முற்படுத்திவைத்தவற்றின் காரணத்தால் அதை அவர்கள் ஒருபோதும் விரும்பவேமாட்டார்கள்; மேலும், அநியாயக்காரர் களை அல்லாஹ் நன்கறிகின்றவன்.

96. மேலும், மற்றைய மனிதர்களையும் (குறிப்பாக) இணைவைத்துக் கொண்டிருந்தோரையும்விட (இவ்வுலக) வாழ்வின்மீது அதிக பேராசை கொண்டவர்களாக (நபியே!) அவர்களை நிச்சயமாக நீர் காண்பீர்; அவர்களில் ஒருவன், தான் ஆயிரம் வருடங்கள் வயதளிக்கப்பட வேண்டுமென விரும்புவான். (அவ்வாறு அதிகநாட்கள்) அவன் வயதளிக்கப்பட்டாலும் அது (நரக) வேதனையிலிருந்து ஒரு சிறிதும் அவனை தூரமாக்கி வைத்துவிடாது. இன்னும் அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை பார்க்கின்றவன்.

97. எவர் ஜிப்ரீலுக்கு விரோதியாக உள்ளாரோ அவருக்கு நீர்கூறுவீராக: நிச்சயமாக அவர்தாம் அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்கி உம் இதயத்தின் மீது (குர்ஆனாகிய) இதனை இறக்கிவைத்தார்; (இது) தனக்கு முன்னுள்ள ( வேதங்கள் அனைத்)தையும் உண்மைப்படுத்தக்கூடியதாகவும்,நேர்வழிகாட்டுகிறதாகவும், விசுவாசங்கொண்டோர்க்கு நன்மாராயமாகவும் இருக்கின்றது.

98. (உங்களில்) எவர் அல்லாஹ்வுக்கும், அவனுடைய மலக்குகளுக்கும், அவனுடைய தூதர்களுக்கும், ஜிப்ரீலுக்கும், மீக்காயிலுக்கும், பகைவராக இருக்கிறாரோ (அத்தகைய) நிராகரிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ் பகைவனாக இருக்கிறான்.

99. இன்னும், தெளிவான வசனங்களை நிச்சயமாக உம்மீது நாம் இறக்கியிருக்கிறோம் ; மேலும், (தீயசெயல்களையுடைய) பாவிகளைத்தவிர (வேறெவரும்) அவைகளை நிராகரிக்கமாட்டார்கள்.

100. அவர்கள் உடன்படிக்கையைச் செய்த போதெல்லாம், அவர்களில் ஒரு சாரார் அதனை (உடைத்து) எறிந்து விட்டனர் அல்லவா? மாறாக அவர்களில் பெரும்பாலோர் விசுவாசிக்கமாட்டார்கள்.

101. மேலும் , அவர்களுடன் இருப்ப(தான வேதத்)தை உண்மைப்படுத்தும் ஒரு தூதர் அல்லாஹ்விடமிருந்து அவர்களிடம் வந்தபோது , வேதங்கொடுக்கப்பட்டவர்களில் ஒரு கூட்டத்தினர் , ஏதும் அறியாதவர்களைப்போன்று அல்லாஹ்வின் வேதத்தை தங்கள் முதுகுகளுக்கப்பால் எறிந்துவிட்டனர்.

وَاتَّبَعُوْا مَا تَتْلُوا الشَّيٰطِيْنُ عَلٰى مُلْكِ سُلَيْمٰنَ ۚ وَمَا
كَفَرَ سُلَيْمٰنُ وَلٰكِنَّ الشَّيٰطِيْنَ كَفَرُوْا يُعَلِّمُوْنَ النَّاسَ
السِّحْرَ ۗ وَمَآ اُنْزِلَ عَلَى الْمَلَكَيْنِ بِبَابِلَ هَارُوْتَ وَمَارُوْتَ ؕ
وَمَا يُعَلِّمٰنِ مِنْ اَحَدٍ حَتّٰى يَقُوْلَآ اِنَّمَا نَحْنُ فِتْنَةٌ فَلَا
تَكْفُرْ ؕ فَيَتَعَلَّمُوْنَ مِنْهُمَا مَا يُفَرِّقُوْنَ بِهٖ بَيْنَ الْمَرْءِ وَ
زَوْجِهٖ ؕ وَمَا هُمْ بِضَآرِّيْنَ بِهٖ مِنْ اَحَدٍ اِلَّا بِاِذْنِ اللّٰهِ ؕ
وَيَتَعَلَّمُوْنَ مَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ ؕ وَلَقَدْ عَلِمُوْا
لَمَنِ اشْتَرٰىهُ مَا لَهٗ فِى الْاٰخِرَةِ مِنْ خَلَاقٍ ؕ ۛ وَلَبِئْسَ
مَا شَرَوْا بِهٖٓ اَنْفُسَهُمْ ؕ لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ ﴿١٠٢﴾ وَلَوْ اَنَّهُمْ
اٰمَنُوْا وَاتَّقَوْا لَمَثُوْبَةٌ مِّنْ عِنْدِ اللّٰهِ خَيْرٌ ؕ لَوْ كَانُوْا
يَعْلَمُوْنَ ﴿١٠٣﴾ ع يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَقُوْلُوْا رَاعِنَا وَ ١٢ ع ١٢
قُوْلُوا انْظُرْنَا وَاسْمَعُوْا ؕ وَلِلْكٰفِرِيْنَ عَذَابٌ اَلِيْمٌ ﴿١٠٤﴾
مَا يَوَدُّ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ وَلَا الْمُشْرِكِيْنَ
اَنْ يُّنَزَّلَ عَلَيْكُمْ مِّنْ خَيْرٍ مِّنْ رَّبِّكُمْ ؕ وَاللّٰهُ يَخْتَصُّ
بِرَحْمَتِهٖ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ﴿١٠٥﴾

102. மேலும், அவர்கள் ஸுலைமானின் ஆட்சிக்காலத்தில் ஷைத்தான்கள் (பொய்யாக) ஓதியவற்றைப் பின்பற்றினார்கள். இன்னும் ஸுலைமான், (சூனியம் செய்து அல்லாஹ்வை) நிராகரிக்கவில்லை; எனினும் ஷைத்தான்கள் நிராகரித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் சூனியத்தையும், பாபிலோ(ன் நகரி)னில் ஹாரூத், மாரூத் என்னும் இரு மலக்குகளுக்கு இறக்கப்பட்டிருந்த(தாகக் கூறி, பல)வற்றையும் மனிதர்களுக்குக் கற்றுக்கொடுத்து வந்தார்கள். மேலும், அவ்விருவரும் "நாங்கள் சோதனையாக இருக்கிறோம். ஆதலால்(இதைக் கற்று) நீ காபிராகி விடவேண்டாம்" என்று கூறும்வரை, அவர்கள் (அதனை) ஒருவருக்கும் கற்றுக் கொடுப்பதில்லை, ஆகவே கணவனுக்கும், மனைவிக்குமிடையில் எதைக்கொண்டு பிரிப்பார்களோ அதை அவ்விருவரிடமிருந்து கற்றுக் கொள்வார்கள். மேலும், அல்லாஹ்வின் கட்டளையின்றி, அதைக்கொண்டு அவர்கள், ஒருவருக்குமே தீங்கிழைக்கக் கூடியவர்களாக இல்லை. அன்றியும், அவர்களுக்கு இடரளிப்பதும், அவர்களுக்கு பயனளிக்காததுமானதை அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். இன்னும், அ(ச்சூனியத்)தை எவர் விலைக்கு வாங்கிக்கொண்டாரோ அவருக்கு, மறுமையில் எந்த பாக்கியமுமில்லை என்பதைத் திட்டமாக அவர்கள் அறிந்திருக்கின்றனர். மேலும், அவர்கள் அறிந்து கொள்ளக் கூடியவர்களானால் எதற்குப்பகரமாக தங்களையே அவர்கள் விற்று விட்டார்களோ அது மிகக் கெட்டது.

103. இன்னும், நிச்சயமாக அவர்கள் விசுவாசங்கொண்டு (அல்லாஹ்வினால் தடுக்கப்பட்டவற்றைத் தவிர்த்து)அஞ்சிக்கொண்டார்களானால்(அவர்களுக்குத்) திட்டமாக அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் நற்கூலி மிகச்சிறந்ததாக இருக்கும் (இதுபற்றி) அவர்கள் அறிந்து கொள்வார்களானால் (மிக்க நன்று)!

104. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் (நபியிடம் யூதர்கள் மொழியில் தவறான பொருள்களைக் கொண்டதான) "ராஇனா" எனக்(கூறப்படுவதைக்)கூறாதீர்கள்; (எங்களை கவனிப்பீராக! என்ற பொருள்கொண்ட) "உன்ளுர்னா" என்று கூறுங்கள்; இன்னும், (அவர் கூற்றுக்கு) நீங்கள் செவிசாயுங்கள். மேலும், நிராகரிப்போருக்கு மிகத் துன்புறுத்தும் வேதனையுண்டு.

105.(விசுவாசங்கொண்டோரே!) வேதத்தையுடையோரில் நிராகரிப்போரும் இணைவைத்துக்கொண்டிருப்போரும் எந்த நன்மையும் உங்கள் இரட்சகனிடமிருந்து உங்கள் மீது இறக்கி வைக்கப்படுவதை விரும்புவதில்லை. அல்லாஹ்வோ, தான் நாடியவருக்குத் தன் கிருபையை சொந்தமாக்கிக் கொள்கிறான். மேலும் அல்லாஹ், மகத்தான பேரருளுடையவன்.

مَا نَنۡسَخۡ مِنۡ اٰيَةٍ اَوۡ نُنۡسِهَا نَاۡتِ بِخَيۡرٍ مِّنۡهَاۤ اَوۡ مِثۡلِهَا ؕ اَلَمۡ
تَعۡلَمۡ اَنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىۡءٍ قَدِيۡرٌ ﴿۱۰۶﴾ اَلَمۡ تَعۡلَمۡ اَنَّ اللّٰهَ لَهٗ
مُلۡكُ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ ؕ وَمَا لَـكُمۡ مِّنۡ دُوۡنِ اللّٰهِ مِنۡ
وَّلِىٍّ وَّلَا نَصِيۡرٍ ﴿۱۰۷﴾ اَمۡ تُرِيۡدُوۡنَ اَنۡ تَسۡـَٔلُوۡا رَسُوۡلَـكُمۡ كَمَا
سُئِلَ مُوۡسٰى مِنۡ قَبۡلُ ؕ وَمَنۡ يَّتَبَدَّلِ الۡكُفۡرَ بِالۡاِيۡمَانِ
فَقَدۡ ضَلَّ سَوَآءَ السَّبِيۡلِ ﴿۱۰۸﴾ وَدَّ كَثِيۡرٌ مِّنۡ اَهۡلِ الۡكِتٰبِ
لَوۡ يَرُدُّوۡنَكُمۡ مِّنۡۢ بَعۡدِ اِيۡمَانِكُمۡ كُفَّارًا ۖۚ حَسَدًا مِّنۡ عِنۡدِ
اَنۡفُسِهِمۡ مِّنۡۢ بَعۡدِ مَا تَبَيَّنَ لَهُمُ الۡحَـقُّ ۚ فَاعۡفُوۡا
وَاصۡفَحُوۡا حَتّٰى يَاۡتِىَ اللّٰهُ بِاَمۡرِهٖ ؕ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىۡءٍ
قَدِيۡرٌ ﴿۱۰۹﴾ وَاَقِيۡمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ ؕ وَمَا تُقَدِّمُوۡا الثلثة
لِاَنۡفُسِكُمۡ مِّنۡ خَيۡرٍ تَجِدُوۡهُ عِنۡدَ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ بِمَا تَعۡمَلُوۡنَ
بَصِيۡرٌ ﴿۱۱۰﴾ وَقَالُوۡا لَنۡ يَّدۡخُلَ الۡجَـنَّةَ اِلَّا مَنۡ كَانَ هُوۡدًا
اَوۡ نَصٰرٰى ؕ تِلۡكَ اَمَانِيُّهُمۡ ؕ قُلۡ هَاتُوۡا بُرۡهَانَكُمۡ اِنۡ كُنۡتُمۡ
صٰدِقِيۡنَ ﴿۱۱۱﴾ بَلٰى ۚ مَنۡ اَسۡلَمَ وَجۡهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحۡسِنٌ فَلَهٗۤ
اَجۡرُهٗ عِنۡدَ رَبِّهٖ وَلَا خَوۡفٌ عَلَيۡهِمۡ وَلَا هُمۡ يَحۡزَنُوۡنَ ﴿۱۱۲﴾ ع ١٣ ٩ ١٣

106. ஏதேனும் ஒரு வசனத்தை நாம் மாற்றினால், அல்லது அதை மறக்கச் செய்துவிட்டால்; அதைவிடச்சிறந்ததை அல்லது அது போன்றதை நாம் கொண்டுவருவோம்; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையோன் என்பதை நீர் அறியவில்லையா?

107. நிச்சயமாக அல்லாஹ்_ அவனுக்கே வானங்கள், மற்றும் பூமியின் ஆட்சி உரியது என்பதை நீர் அறியவில்லையா? (விசுவாசங்கொண்டோரே!) அல்லாஹ்வைத் தவிர உங்களுக்கு எந்தப் பாதுகாவலரும், எவ்வித உதவியாளரும் இல்லை.

108. (விசுவாசங்கொண்டோரே!) இதற்கு முன்னர் மூஸா(விடம்) கேள்விகள் கேட்கப்பட்ட மாதிரி நீங்களும் உங்கள் தூதரிடம் (வீணான கேள்விகளைக்) கேட்க நாடுகிறீர்களா? எவர் (இவ்வாறு கேள்விகளைக் கேட்டுத்) தன்னுடைய ஈமானை நிராகரிப்பை (குப்ரை)க் கொண்டு மாற்றிக் கொள்கிறாரோ அவர் நேரான வழியை திட்டமாகத் தவறவிட்டுவிட்டார்.

109. வேதத்தையுடையோரில் அநேகர், உண்மை அவர்களுக்கு இன்னதெனத் தெளிவாகத் தெரிந்த பின்னும், அவர்களுக்கு (உங்கள் மீது)ள்ள பொறாமையின் காரணமாக நீங்கள் ஈமான் கொண்ட பிறகும் உங்களை நிராகரிப்போராக திருப்பிவிட வேண்டுமென்று ஆசைவைக்கிறார்கள்; ஆகவே, அல்லாஹ் தனது கட்டளையைக் கொண்டுவரும் வரை (அவர்களை) நீங்கள் மன்னித்து விடுங்கள்; பொருட்படுத்தாது விட்டும் விடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

110. நீங்கள் தொழுகையையும் நிறைவேற்றுங்கள்; 'ஜகாத்' தையும் கொடுங்கள். உங்களுக்காக நீங்கள் எந்த நன்மையை முற்படுத்திவைக்கின்றீர்களோ அதனை அல்லாஹ்விடத்தில் பெற்றுக்கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றைப் பார்க்கிறவன்.

111. (நபியே!) யூதராகவோ அல்லது கிறிஸ்தவராகவோ ஆகியவரைத் தவிர (வேறெவரும்) சுவர்க்கம் பிரவேசிக்கவேமாட்டார்கள் என அவர்கள் கூறுகிறார்கள்; இது அவர்களுடைய வீண் எண்ணமேயாகும்; (ஆகவே, உங்கள் கூற்றில்) "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் உங்களுடைய ஆதாரத்தைக் கொண்டுவாருங்கள்" என (நபியே!) நீர் கூறுவீராக:

112. ஆம்! எவர் தன் முகத்தை அவர் நன்மை செய்துகொண்டிருக்கிற நிலையில் அல்லாஹ்வுக்காக ஒப்படைக்கிறாரோ _ அவருடைய நற்கூலி அவருடைய இரட்சகனிடம் அவருக்குண்டு. (இத்தகையோர்)அவர்கள் மீது எத்தகைய பயமுமில்லை. அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள்.

وَقَالَتِ الْيَهُوْدُ لَيْسَتِ النَّصٰرٰى عَلٰى شَیْءٍ ۪ وَّقَالَتِ النَّصٰرٰى
لَيْسَتِ الْيَهُوْدُ عَلٰى شَیْءٍ ۙ وَّهُمْ يَتْلُوْنَ الْكِتٰبَ ؕ كَذٰلِكَ قَالَ
الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ مِثْلَ قَوْلِهِمْ ۚ فَاللّٰهُ يَحْكُمُ بَيْنَهُمْ يَوْمَ
الْقِيٰمَةِ فِيْمَا كَانُوْا فِيْهِ يَخْتَلِفُوْنَ ﴿١١٣﴾ وَمَنْ اَظْلَمُ مِمَّنْ
مَّنَعَ مَسٰجِدَ اللّٰهِ اَنْ يُّذْكَرَ فِيْهَا اسْمُهٗ وَسَعٰى فِیْ خَرَابِهَا ؕ
اُولٰٓئِكَ مَا كَانَ لَهُمْ اَنْ يَّدْخُلُوْهَآ اِلَّا خَآئِفِيْنَ ؕ۬ لَهُمْ فِی
الدُّنْيَا خِزْیٌ وَّلَهُمْ فِی الْاٰخِرَةِ عَذَابٌ عَظِيْمٌ ﴿١١٤﴾ وَلِلّٰهِ الْمَشْرِقُ
وَالْمَغْرِبُ ۗ فَاَيْنَمَا تُوَلُّوْا فَثَمَّ وَجْهُ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ وَاسِعٌ
عَلِيْمٌ ﴿١١٥﴾ وَقَالُوا اتَّخَذَ اللّٰهُ وَلَدًا ۙ سُبْحٰنَهٗ ؕ بَلْ لَّهٗ مَا فِی السَّمٰوٰتِ
وَالْاَرْضِ ؕ كُلٌّ لَّهٗ قٰنِتُوْنَ ﴿١١٦﴾ بَدِيْعُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَ
اِذَا قَضٰٓى اَمْرًا فَاِنَّمَا يَقُوْلُ لَهٗ كُنْ فَيَكُوْنُ ﴿١١٧﴾ وَقَالَ الَّذِيْنَ
لَا يَعْلَمُوْنَ لَوْلَا يُكَلِّمُنَا اللّٰهُ اَوْ تَاْتِيْنَآ اٰيَةٌ ؕ كَذٰلِكَ
قَالَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ مِّثْلَ قَوْلِهِمْ ؕ تَشَابَهَتْ قُلُوْبُهُمْ ؕ
قَدْ بَيَّنَّا الْاٰيٰتِ لِقَوْمٍ يُّوْقِنُوْنَ ﴿١١٨﴾ اِنَّآ اَرْسَلْنٰكَ بِالْحَقِّ
بَشِيْرًا وَّنَذِيْرًا ۙ وَّلَا تُسْـَٔلُ عَنْ اَصْحٰبِ الْجَحِيْمِ ﴿١١٩﴾

113. இன்னும் "கிறிஸ்தவர்கள் எ(ந்த மார்க்கத்)திலுமில்லை" என்று யூதர்கள் கூறுகின்றனர். "யூதர்கள் எ(ந்த மார்க்கத்)திலுமில்லை" என்று கிறிஸ்தவர்களும் கூறுகின்றனர். அவர்களோ வேதத்தை ஓதுகிறவர்களாக இருக்க (இவ்வாறு கூறுகிறார்கள்); இவ்வாறே அவர்கள் கூற்றைப் போன்றதை அறிந்து கொள்ளாதோர் கூறுகின்றனர். ஆகவே எதில் அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்களோ அதில் மறுமை நாளில் அல்லாஹ் அவர்களிடையே தீர்ப்பளிப்பான்.

114. அன்றியும், அல்லாஹ்வுடைய 'மஸ்ஜிது'களில் அவனுடைய (சங்கையான) பெயர் அவற்றில் கூறப்படுவதைத் தடுத்து அவைகளைப் பாழாக்க முயற்சிப்பவனைவிட, மகா அநியாயக்காரன் யார்? இத்தகையோர் அச்சமுடையவர்களாகவேயன்றி அவைகளில் நுழைய அவர்களுக்குத் தகுதியில்லை. (அவைகளில் அல்லாஹ்வின்பெயர் கூறப்படுவதைத் தடுத்து அவற்றைப் பாழாக்க முற்படும்) அவர்களுக்கு இம்மையில் இழிவுண்டு; மறுமையிலோ அவர்களுக்கு மகத்தான வேதனையுமுண்டு.

115. மேலும், கிழக்கும் மற்றும் மேற்கும் அல்லாஹ்வுக்கே உரியன. எனவே, நீங்கள் (தொழுகைக்காக) எங்கு திரும்பினும், அங்கே அல்லாஹ்வின் முகம் இருக்கிறது; நிச்சயமாக அல்லாஹ் விசாலமானவன்; மிக்க அறிந்தவன்.

116. இன்னும் "அல்லாஹ் (தனக்குப்) புதல்வனை எடுத்துக் கொண்டான்" (அவனுக்கு மகன் இருக்கிறான்) என்று அவர்கள் கூறுகின்றனர்; அவனோ மிகப் பரிசுத்தமானவன்; (அவர்கள் கூறுகிறவாறு) அல்ல! வானங்கள் மற்றும் பூமியில் உள்ளவை (அனைத்தும்) அவனுக்கே உரியவை; (இவை) ஒவ்வொன்றும் அவனுக்கேகீழ்ப்படிபவைகள்.

117. வானங்கள் மற்றும் பூமியை முன்மாதிரியின்றி அவன் படைக்கிறவன். இன்னும் அவன் ஒரு காரியத்தை முடிவு செய்தால், அவன் அதற்குக் கூறுவதெல்லாம் "ஆகுக!" என்பது தான்; அது ஆகிவிடும்.

118. மேலும், "(நபியே! உம்முடைய நபித்துவத்தைப்பற்றி) அல்லாஹ் எங்களுடன் பேசவேண்டாமா? அல்லது எங்களிடம் ஓர் அத்தாட்சி வர வேண்டாமா?" என அறியாதவர்கள் கூறுகின்றனர். இவ்வாறே இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் இவர்களின் கூற்றைப்போன்றே கூறினார்கள்; இவர்களுடைய இதயங்கள் (அவர்களின் இதயங்களுக்கு) ஒப்பாகிவிட்டன; உறுதி கொள்ளும் சமூகத்தார்க்கு, நம்முடைய அத்தாட்சிகளை திட்டமாக நாம் தெளிவாக்கியிருக்கிறோம்.

119. (நபியே!) "உம்மை உண்மையான (மார்க்கத்)தைக் கொண்டு, (நல்லவர்களுக்கு) நன்மாராயங்கூறக்கூடியவராக மற்றும் (தீயவர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியவராக நிச்சயமாக நாம் அனுப்பி வைத்தோம். மேலும், நரகவாசிகள் பற்றி நீர் கேட்கப்படமாட்டீர்.

وَلَنْ تَرْضٰى عَنْكَ الْیَهُوْدُ وَلَا النَّصٰرٰى حَتّٰى تَتَّبِعَ مِلَّتَهُمْؕ
قُلْ اِنَّ هُدَى اللّٰهِ هُوَ الْهُدٰىؕ وَلَئِنِ اتَّبَعْتَ اَهْوَآءَهُمْ بَعْدَ
الَّذِیْ جَآءَكَ مِنَ الْعِلْمِۙ مَا لَكَ مِنَ اللّٰهِ مِنْ وَّلِیٍّ وَّلَا نَصِیْرٍ ﴿۱۲۰﴾ وقف منزل
اَلَّذِیْنَ اٰتَیْنٰهُمُ الْكِتٰبَ یَتْلُوْنَهٗ حَقَّ تِلَاوَتِهٖؕ اُولٰٓىِٕكَ یُؤْمِنُوْنَ
بِهٖؕ وَمَنْ یَّكْفُرْ بِهٖ فَاُولٰٓىِٕكَ هُمُ الْخٰسِرُوْنَ ﴿۱۲۱﴾ یٰبَنِیْٓ اِسْرَآءِیْلَ ع ۱۴/۱۵ ۱۴
اذْكُرُوْا نِعْمَتِیَ الَّتِیْٓ اَنْعَمْتُ عَلَیْكُمْ وَاَنِّیْ فَضَّلْتُكُمْ عَلَى الْعٰلَمِیْنَ ﴿۱۲۲﴾
وَاتَّقُوْا یَوْمًا لَّا تَجْزِیْ نَفْسٌ عَنْ نَّفْسٍ شَیْــًٔا وَّلَا یُقْبَلُ مِنْهَا
عَدْلٌ وَّلَا تَنْفَعُهَا شَفَاعَةٌ وَّلَا هُمْ یُنْصَرُوْنَ ﴿۱۲۳﴾ وَاِذِ ابْتَلٰۤى
اِبْرٰهٖمَ رَبُّهٗ بِكَلِمٰتٍ فَاَتَمَّهُنَّؕ قَالَ اِنِّیْ جَاعِلُكَ لِلنَّاسِ اِمَامًاؕ
قَالَ وَمِنْ ذُرِّیَّتِیْؕ قَالَ لَا یَنَالُ عَهْدِی الظّٰلِمِیْنَ ﴿۱۲۴﴾ وَاِذْ جَعَلْنَا
الْبَیْتَ مَثَابَةً لِّلنَّاسِ وَاَمْنًاؕ وَاتَّخِذُوْا مِنْ مَّقَامِ اِبْرٰهٖمَ مُصَلًّىؕ وَعَهِدْنَاۤ
اِلٰۤى اِبْرٰهٖمَ وَاِسْمٰعِیْلَ اَنْ طَهِّرَا بَیْتِیَ لِلطَّآىِٕفِیْنَ وَالْعٰكِفِیْنَ وَالرُّكَّعِ
السُّجُوْدِ ﴿۱۲۵﴾ وَاِذْ قَالَ اِبْرٰهٖمُ رَبِّ اجْعَلْ هٰذَا بَلَدًا اٰمِنًا وَّارْزُقْ
اَهْلَهٗ مِنَ الثَّمَرٰتِ مَنْ اٰمَنَ مِنْهُمْ بِاللّٰهِ وَالْیَوْمِ الْاٰخِرِؕ قَالَ وَمَنْ
كَفَرَ فَاُمَتِّعُهٗ قَلِیْلًا ثُمَّ اَضْطَرُّهٗۤ اِلٰى عَذَابِ النَّارِؕ وَبِئْسَ الْمَصِیْرُ ﴿۱۲۶﴾

120. (நபியே!) யூதர்களும், கிறிஸ்தவர்களும், நீர் அவர்களுடைய மார்க்கத்தைப் பின்பற்றும் வரை, உம்மைப் பற்றி அவர்கள் திருப்தியடையவே மாட்டார்கள்; (ஆகவே, அவர்களிடம்,) "அல்லாஹ்வின் நேர்வழி(யாகிய இஸ்லாம்)தான் நிச்சயமாக நேர் வழி (அதனையே பின்பற்றுவேன்)" எனக் கூறிவிடுவீராக! அன்றியும் உமக்கு (உண்மையான) அறிவு வந்ததன் பின்னும் அவர்களுடைய மன இச்சைகளைப் பின்பற்றுவீரானால், அல்லாஹ்விடமிருந்து (உம்மைக் காப்பாற்றுகிற) எந்தப் பாதுகாவலனும், எவ்வித உதவி செய்பவனும் உமக்கில்லை.

121. நாம் யாருக்கு வேதத்தைக் கொடுத்தோமே அத்தகையோர்_அவர்கள், அதை ஓதவேண்டியமுறைப்படி ஓதிவருகிறார்கள். அவர்கள்தான் இதை (அல்லாஹ்வின் வேதமென) விசுவாசிப்பார்கள்; மேலும், (அவர்களில்) எவர் இதனை நிராகரிக்கின்றாரோ, அத்தகையோர் தாம் நஷ்டவாளர்கள்.

122. இஸ்ராயீலின் மக்களே! நான் உங்களுக்கு அளித்திருக்கும் என் அருட் கொடையையும், அகிலத்தாரை விட உங்களை நிச்சயமாக நான்மேன்மையாக்கி வைத்திருந்ததையும் நினைவு கூருங்கள்.

123. இன்னும் ஒருநாளை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்; (அந்நாளில்) எந்த ஓர் ஆத்மாவும் எந்த ஓர் ஆத்மாவிற்கும் எவ்விதப்பலனுமளிக்காது; (பாவங்களுக்குப் பரிகாரமாக எந்தவித) நஷ்டஈட்டையும் அதனிடமிருந்து அங்கீகரிக்கப்படவு மாட்டாது; (யாருடைய) பரிந்துரையும் அதற்குப் பலனளிக்காது; அவர்களோ (எவராலும்) உதவி செய்யப் படவுமாட்டார்கள்.

124. இன்னும், இப்றாஹீமை அவருடைய இரட்சகன் பல கட்டளைகளைக் கொண்டு சோதித்த சமயத்தில், அவற்றை அவர் நிறைவு செய்தார், (என்பதையும் நினைவு கூருங்கள்.) "நிச்சயமாக மனிதர்களுக்கு நான் உம்மை தலைவராக ஆக்குகிறேன்" என (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான். அதற்கு (இப்றாஹீம்) "என்னுடைய சந்ததியினரிலிருந்தும் (தலைவர்களை ஆக்குவாயா?") எனக் கேட்டார். (அதற்கு "அவர்களிலுள்ள) அநியாயக்காரர்களை என்னுடைய (இவ்) வாக்குறுதி சாராது" எனக்கூறினான்.

125. மேலும், ('கஃபா' என்னும்) அவ்வீட்டைமனிதர்களுக்கு (அவர்கள்) ஒன்று கூடுமிடமாகவும், (அவர்களுக்கு) அபயமளிக்கக் கூடியதாகவும் நாம் ஆக்கினோம் என்பதையும் (நினைவு கூர்வீராக! அதில்) இப்றாஹீம் நின்ற இடத்தை "(விசுவாசிகளே!) தொழுமிடமாக நீங்கள் ஆக்கிக் கொள்ளுங்கள்" (எனக் கட்டளையிட்டோம்). இன்னும், (அவ்வீட்டைச்) சுற்றி வருபவர்களுக்கும், (அதில்) தங்கியிருப்பவர்களுக்கும், (குனிந்து) ருகூஉ (சிரம்பணிந்து) ஸுஜூது செய்பவர்களுக்கும் என் வீட்டை நீங்களிருவரும் சுத்தமாக்கிவைப்பீர்களாக" என்று இப்றாஹீமிடமும், இஸ்மாயீலிடமும் நாம் வாக்குறுதி வாங்கினோம்.

126. இன்னும், இப்றாஹீம் "என் இரட்சகனே! (மக்காவாகிய) இதை, அபயமளிக்கும் நகரமாக ஆக்கிவைப்பாயாக! இன்னும், இதில் வசிப்பவர்களுக்கு _அவர்களில் எவர், அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசிக்கிறாரோ அவருக்கு _ பலவகைக் கனிவர்க்கங்களிலிருந்தும் உணவளிப்பாயாக!" என்று கூறியதை (நினைவு கூறுங்கள். அதற்கு அல்லாஹ்) "யார் நிராகரித்துவிட்டாரோ அவரை சிறிது காலம் சுகம் அனுபவிக்கச் செய்வேன்; பின்னர் நரக வேதனையின்பக்கம் (செல்லுமாறு)அவரை இழுத்துச் செல்வேன். மேலும், அவர் செல்லுமிடம் (மிகக்)கெட்டது" என்று கூறினான்.

وَاِذْ يَرْفَعُ اِبْرٰهٖمُ الْقَوَاعِدَ مِنَ الْبَيْتِ وَاِسْمٰعِيْلُ ؕ رَبَّنَا تَقَبَّلْ مِنَّا ؕ
اِنَّكَ اَنْتَ السَّمِيْعُ الْعَلِيْمُ ﴿۱۲۷﴾ رَبَّنَا وَاجْعَلْنَا مُسْلِمَيْنِ لَكَ وَ
مِنْ ذُرِّيَّتِنَآ اُمَّةً مُّسْلِمَةً لَّكَ ۪ وَاَرِنَا مَنَاسِكَنَا وَتُبْ عَلَيْنَا ۚ
اِنَّكَ اَنْتَ التَّوَّابُ الرَّحِيْمُ ﴿۱۲۸﴾ رَبَّنَا وَابْعَثْ فِيْهِمْ رَسُوْلًا
مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِكَ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَ
يُزَكِّيْهِمْ ؕ اِنَّكَ اَنْتَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۱۲۹﴾ ع وَمَنْ يَّرْغَبُ عَنْ مِّلَّةِ ۱۵ ع ۸ ۱۵
اِبْرٰهٖمَ اِلَّا مَنْ سَفِهَ نَفْسَهٗ ؕ وَلَقَدِ اصْطَفَيْنٰهُ فِى الدُّنْيَا ۚ
وَاِنَّهٗ فِى الْاٰخِرَةِ لَمِنَ الصّٰلِحِيْنَ ﴿۱۳۰﴾ اِذْ قَالَ لَهٗ رَبُّهٗۤ اَسْلِمْ ۙ
قَالَ اَسْلَمْتُ لِرَبِّ الْعٰلَمِيْنَ ﴿۱۳۱﴾ وَوَصّٰى بِهَآ اِبْرٰهٖمُ بَنِيْهِ وَ
يَعْقُوْبُ ؕ يٰبَنِىَّ اِنَّ اللّٰهَ اصْطَفٰى لَكُمُ الدِّيْنَ فَلَا تَمُوْتُنَّ اِلَّا
وَاَنْتُمْ مُّسْلِمُوْنَ ﴿۱۳۲﴾ ؕ اَمْ كُنْتُمْ شُهَدَآءَ اِذْ حَضَرَ يَعْقُوْبَ
الْمَوْتُ ۙ اِذْ قَالَ لِبَنِيْهِ مَا تَعْبُدُوْنَ مِنْ بَعْدِىْ ؕ قَالُوْا نَعْبُدُ
اِلٰهَكَ وَاِلٰهَ اٰبَآئِكَ اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ اِلٰهًا وَّاحِدًا ۚۖ
وَّنَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ ﴿۱۳۳﴾ تِلْكَ اُمَّةٌ قَدْ خَلَتْ ۚ لَهَا مَا كَسَبَتْ
وَلَكُمْ مَّا كَسَبْتُمْ ۚ وَلَا تُسْـَٔلُوْنَ عَمَّا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۳۴﴾

127. இன்னும்,(நினைவு கூருங்கள்) இப்றாஹீமும், இஸ்மாயீலும் அவ்வீட்டின் அடித்தளங்களை உயர்த்தியபொழுது "எங்களுடைய இரட்சகனே! (உனக்காக நாங்கள் செய்த இப்பணியை) எங்களிலிருந்து ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீயே (யாவற்றையும்) செவியேற்கிறவன்; நன்கறிகிறவன்" (என்றும்),

128. "எங்கள் இரட்சகனே! எங்களிருவரையும் உனக்கு (முற்றிலும்) கீழ்ப்படிகிற (முஸ்லிமான)வர்களாகவும், எங்களுடைய சந்ததியிலிருந்தும் ஒரு கூட்டத்தினரை உனக்குக் கீழ்ப்படிகிறவர்களாகவும் ஆக்கிவைப்பாயாக! ('ஹஜ்ஜு' க்குரிய) எங்களுடைய கிரியை( செய்யவேண்டிய இடங்)களையும் எங்களுக்குக் காண்பிப்பாயாக! (எங்கள் பிழைகளை மன்னித்து) எங்களின் தவ்பாவையும் ஏற்றருள்வாயாக! நிச்சயமாக நீயே தவ்பாக்களை மிக்க ஏற்பவன்; மிகக்கிருபையுடையவன்!" (என்றும்),

129. " எங்கள் இரட்சகனே! (எங்கள் சந்ததியினரான) அவர்களிலிருந்தே அவர்களில் ஒரு தூதரை அனுப்புவாயாக! அவர்களுக்கு அவர் உன்னுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து, வேதத்தையும் (குர்ஆனின் விளக்கமாகிய சுன்னத் எனும்) ஞானத்தையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து, அவர்களைப் பரிசுத்தமாக்கியும் வைப்பார் ; நிச்சயமாக நீயே, (யாவரையும்) மிகைத்தவன், தீர்க்கமான அறிவுடையவன் " (என்றும் பிரார்த்தித்தனர்).

130. மேலும், தன்னைத்தானே மடையனாக்கிக் கொண்டவனைத் தவிர இப்றாஹீமுடைய மார்க்கத்தைப் புறக்கணிப்பவன் யார்? நாம் நிச்சயமாக அவரை இவ்வுலகிலும் தெரிவுசெய்தோம்; நிச்சயமாக அவர் மறுமையிலும் நல்லவர்களில் உள்ளவராவார்.

131. அவருக்கு அவருடைய இரட்சகன், "நீர் (எனக்குக்) கீழ்ப்படியும்!" எனக் கூறிய போது அவர் "அகிலத்தாரின் இரட்சகனுக்கு நான் கீழ்ப்படிந்து விட்டேன்" எனக் கூறினார்.

132. இதையே இப்றாஹீம் தன் சந்ததிகளுக்கும் அறிவுறுத்தினார். யஃகூபும் (இவ்வாறே உபதேசம் செய்தார்.) என் மக்களே! நிச்சயமாக அல்லாஹ் இ(ஸ்லா)ம்மார்க்கத்தையே உங்களுக்காக தேர்ந்தெடுத்துள்ளான் ; ஆகவே, நீங்கள் முஸ்லிம்களாக (முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களாக) அன்றி நிச்சயமாக மரணிக்க வேண்டாம் (என அவர்கள் கூறினர்).

133. அல்லது யஃகூபுக்கு மரணம் வந்த சமயத்தில் (யூதர்களே! அவரருகில்) நீங்கள் பிரசன்னமாகியிருந்தீர்களா? அவர் தம் மைந்தர்களிடம், "எனக்குப் பின்னர் எதனை நீங்கள் வணங்குவீர்கள்?" எனக் கேட்டதற்கு, "உம்முடைய வணக்கத்திற்குரியவனும், உம்முடைய மூதாதையர்களான இப்றாஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியவர்களின் வணக்கத்திற்குரியவனுமாகிய ஒரே ஒரு வணக்கத்திற்குரியவனையே நாங்கள் வணங்குவோம்; அவனுக்கே முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களாக (முஸ்லிம்களாக)வும் இருப்போம்" என்று கூறினார்கள்.

134. அது (மேற்கூறப்பட்ட நபிமார்களையும் நல்லடியார்களையும் கொண்ட) ஒரு சமூகம். திட்டமாக அது சென்றுவிட்டது. அது சம்பாதித்தது அதற்கே (உரியது); இன்னும் நீங்கள் சம்பாதித்தவை (அதன் பலன்) உங்களுக்கே; மேலும், அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பது பற்றி நீங்கள் கேட்கப்படமாட்டீர்கள்.

وَقَالُوْا كُوْنُوْا هُوْدًا اَوْ نَصٰرٰى تَهْتَدُوْا ؕ قُلْ بَلْ مِلَّةَ اِبْرٰهٖمَ
حَنِيْفًا ؕ وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ ﴿۱۳۵﴾ قُوْلُوْۤا اٰمَنَّا بِاللّٰهِ وَمَاۤ اُنْزِلَ
اِلَيْنَا وَمَاۤ اُنْزِلَ اِلٰۤى اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ وَ
الْاَسْبَاطِ وَمَاۤ اُوْتِىَ مُوْسٰى وَعِيْسٰى وَمَاۤ اُوْتِىَ النَّبِيُّوْنَ مِنْ
رَّبِّهِمْ ۚ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ ۫ وَنَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ ﴿۱۳۶﴾ فَاِنْ
اٰمَنُوْا بِمِثْلِ مَاۤ اٰمَنْتُمْ بِهٖ فَقَدِ اهْتَدَوْا ۚ وَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا
هُمْ فِىْ شِقَاقٍ ۚ فَسَيَكْفِيْكَهُمُ اللّٰهُ ۚ وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ؕ ﴿۱۳۷﴾
صِبْغَةَ اللّٰهِ ۚ وَمَنْ اَحْسَنُ مِنَ اللّٰهِ صِبْغَةً ۫ وَّنَحْنُ لَهٗ
عٰبِدُوْنَ ﴿۱۳۸﴾ قُلْ اَتُحَآجُّوْنَنَا فِى اللّٰهِ وَهُوَ رَبُّنَا وَرَبُّكُمْ ۚ وَلَنَاۤ
اَعْمَالُنَا وَلَكُمْ اَعْمَالُكُمْ ۚ وَنَحْنُ لَهٗ مُخْلِصُوْنَ ﴿۱۳۹﴾ ۙ اَمْ تَقُوْلُوْنَ
اِنَّ اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ وَالْاَسْبَاطَ كَانُوْا
هُوْدًا اَوْ نَصٰرٰى ؕ قُلْ ءَاَنْتُمْ اَعْلَمُ اَمِ اللّٰهُ ؕ وَمَنْ اَظْلَمُ
مِمَّنْ كَتَمَ شَهَادَةً عِنْدَهٗ مِنَ اللّٰهِ ؕ وَمَا اللّٰهُ بِغَافِلٍ
عَمَّا تَعْمَلُوْنَ ﴿۱۴۰﴾ تِلْكَ اُمَّةٌ قَدْ خَلَتْ ۚ لَهَا مَا كَسَبَتْ وَلَكُمْ
مَّا كَسَبْتُمْ ۚ وَلَا تُسْـَٔلُوْنَ عَمَّا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۴۱﴾ ع ١٦ ١٦

135. (யூத,கிறிஸ்தவர்களாகிய) அவர்கள், (விசுவாசிகளிடம்) "நீங்கள் யூதர்களாக அல்லது கிறிஸ்தவர்களாக ஆகிவிடுங்கள்; நேர்வழி அடைவீர்கள்" எனக் கூறுகிறார்கள். (அதற்கு) "அவ்வாறன்று; இப்றாஹீமின் மார்க்கத்தையே (பின்பற்றுவோம்). நேரான வழியைச் சார்ந்தவரான அவர் (உங்களைப் போல்) இணைவைப்பவர்களில் இருந்தவரல்லர்" என்று (நபியே!) நீர் கூறுவீராக.

136. "அல்லாஹ்வையும், எங்கள்பால் இறக்கப்பட்ட (இவ்வேதத்)தையும், இப்றாஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப், இவர்களுடைய சந்ததிகள் ஆகியோரின்பால் இறக்கப்பட்டதையும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டிருந்ததையும், மற்றைய நபிமார்களுக்கு அவர்கள் இரட்சகனிடமிருந்து கொடுக்கப்பட்டிருந்ததையும் நாங்கள் விசுவாசிக்கிறோம்; அவர்களிலிருந்து எவருக்குமிடையில் நாம் (பிரித்து) வேறுபாடு காட்டமாட்டோம்; இன்னும், அவனுக்கே நாங்கள் முற்றிலும் கீழ்ப்படிகின்றவர்கள்" என (விசுவாசங்கொண்டோரே!) நீங்களும் கூறுங்கள்.

137. ஆகவே, (விசுவாசங்கொண்டோரே!) நீங்கள் எதை விசுவாசங் கொண்டீர்களோ, அது போன்றதை அவர்களும் விசுவாசங்கொண்டுவிட்டால் திட்டமாக அவர்கள் நேர் வழியை அடைந்து விடுவார்கள். இன்னும் அவர்கள் புறக்கணித்துவிட்டால், நிச்சயமாக அவர்கள் பிளவில்தான் இருக்கின்றனர். அவர்களைப் பற்றி உங்களுக்கு(ப் பயம் வேண்டாம்!) அல்லாஹ் போதுமானவன். மேலும், அவன் (அவர்களின் சூழ்ச்சியான சொற்களைச்) செவியேற்கிறவன்; (அவர்களின் வஞ்சகங்களை) மிக்க அறிகிறவன்.

138. "அல்லாஹ்வின் வர்ணத்தை (அவனின் மார்க்கத்தை நீங்கள் அவசியமாக கடைபிடியுங்கள்); வர்ணம் கொடுப்பதில் (இதயங்களை புனிதப்படுத்துவதில்) அல்லாஹ்வை விட மிக அழகானவன் யார்? அவனையே நாங்கள் வணங்கு கிறவர்கள்." (என்றும்)(2)

139. "நீங்கள் அல்லாஹ்வைப் பற்றி நம்மிடம் தர்க்கிக்கிறீர்களா? அவனே எங்களின் இரட்சகனும், உங்களின் இரட்சகனும் ஆவான்; எங்கள் செயல்கள் எங்களுக்கே; உங்கள் செயல்கள் உங்களுக்கே. நாங்கள் (இணைவைக்காது) முற்றிலும் அவனுக்கே கலப்பற்ற (செயல்புரிப)வர்கள்" என்றும் கூறுவீராக!

140. அல்லது, நிச்சயமாக "இப்றாஹீமும், இஸ்மாயீலும், இஸ்ஹாக்கும், யஃகூபும், இவர்களுடைய சந்ததிகளும், யூதர்களாக அல்லது கிறிஸ்தவர்களாக இருந்தார்களென நீங்கள் கூறுகிறீர்களா? (இதை) நன்கறிந்திருப்பது நீங்களா அல்லது அல்லாஹ்வா?" என்று (நபியே!) நீர் கேட்பீராக; அன்றியும் (இதைப் பற்றி) அல்லாஹ்விடமிருந்து(வந்துள்ள) தன்னிடமிருக்கும் சாட்சியத்தை மறைப்பவனைவிட மிகப் பெரிய அநியாயக்காரன் யார்? நீங்கள் செய்பவைகளைப்பற்றி அல்லாஹ் பராமுகமானவனல்லன்.

141. (மேற்கூறப்பட்ட நபிமார்களைக்கொண்ட) அது ஒரு சமூகம்; திட்டமாக அது சென்று விட்டது; அது சம்பாதித்தது அதற்கே; நீங்கள் சம்பாதித்தவை உங்களுக்கே; அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்களென்று நீங்கள் கேட்கப்படவுமாட்டீர்கள்.

سَيَقُوْلُ السُّفَهَآءُ مِنَ النَّاسِ مَا وَلّٰىهُمْ عَنْ قِبْلَتِهِمُ
الَّتِیْ كَانُوْا عَلَيْهَا ؕ قُلْ لِّلّٰهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ ؕ يَهْدِیْ مَنْ يَّشَآءُ
اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿۱۴۲﴾ وَكَذٰلِكَ جَعَلْنٰكُمْ اُمَّةً وَّسَطًا لِّتَكُوْنُوْا شُهَدَآءَ
عَلَى النَّاسِ وَيَكُوْنَ الرَّسُوْلُ عَلَيْكُمْ شَهِيْدًا ؕ وَمَا جَعَلْنَا الْقِبْلَةَ الَّتِیْ
كُنْتَ عَلَيْهَآ اِلَّا لِنَعْلَمَ مَنْ يَّتَّبِعُ الرَّسُوْلَ مِمَّنْ يَّنْقَلِبُ عَلٰى عَقِبَيْهِ ؕ
وَاِنْ كَانَتْ لَكَبِيْرَةً اِلَّا عَلَى الَّذِيْنَ هَدَى اللّٰهُ ؕ وَمَا كَانَ اللّٰهُ
لِيُضِيْعَ اِيْمَانَكُمْ ؕ اِنَّ اللّٰهَ بِالنَّاسِ لَرَءُوْفٌ رَّحِيْمٌ ﴿۱۴۳﴾ قَدْ نَرٰى تَقَلُّبَ
وَجْهِكَ فِى السَّمَآءِ ۚ فَلَنُوَلِّيَنَّكَ قِبْلَةً تَرْضٰىهَا ۪ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ
الْمَسْجِدِ الْحَرَامِ ؕ وَحَيْثُ مَا كُنْتُمْ فَوَلُّوْا وُجُوْهَكُمْ شَطْرَهٗ ؕ وَاِنَّ الَّذِيْنَ
اُوْتُوا الْكِتٰبَ لَيَعْلَمُوْنَ اَنَّهُ الْحَقُّ مِنْ رَّبِّهِمْ ؕ وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا
يَعْمَلُوْنَ ﴿۱۴۴﴾ وَلَئِنْ اَتَيْتَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ بِكُلِّ اٰيَةٍ مَّا تَبِعُوْا
قِبْلَتَكَ ۚ وَمَآ اَنْتَ بِتَابِعٍ قِبْلَتَهُمْ ۚ وَمَا بَعْضُهُمْ بِتَابِعٍ قِبْلَةَ بَعْضٍ ؕ
وَلَئِنِ اتَّبَعْتَ اَهْوَآءَهُمْ مِّنْۢ بَعْدِ مَا جَآءَكَ مِنَ الْعِلْمِ ۙ اِنَّكَ
اِذًا لَّمِنَ الظّٰلِمِيْنَ ﴿۱۴۵﴾ اَلَّذِيْنَ اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَعْرِفُوْنَهٗ كَمَا يَعْرِفُوْنَ
اَبْنَآءَهُمْ ؕ وَاِنَّ فَرِيْقًا مِّنْهُمْ لَيَكْتُمُوْنَ الْحَقَّ وَهُمْ يَعْلَمُوْنَ ﴿۱۴۶﴾

وقف منزل وقف لازم

142. (நபியே! "முஸ்லிம்களாகிய) அவர்கள் (முன்னர்) எதன் மீது இருந்தனரோ, அத்தகைய அவர்களது கிப்லாவை விட்டு அவர்களைத் திருப்பிவிட்டது எது?" என, மனிதர்களில் மடையர்கள் கூறுவர்; (அதற்கு) நீர் கூறும்: "கிழக்கும், மேற்கும் அல்லாஹ்விற்கே உரியன! அவன் நாடியவர்களை நேரான வழியில் செலுத்துவான்".

143. மேலும் (விசுவாசிகளே!) அவ்வாறே, நீங்கள் (மற்ற) மனிதர்களுக்கு சாட்சியாளர்களாக ஆகுவதற்காகவும், (நம் தூதர்) ரஸூல் உங்களுக்கு சாட்சியாளராக இருப்பதற்காகவும் நடு நிலையான சமுதாயத்தினராக நாம் உங்களை ஆக்கினோம். மேலும்,(தூதரைப்பின் பற்றாமல்) தன் இரு குதிங்கால் புறமாகவே திரும்பி(ச் சென்று) விடுகிறவரிலிருந்து (நம்) தூதரை பின்பற்றுகிறவர் யார் என்பதை நாம் பிரித்து அறி(வித்துவிடு)வதற்காகவேயன்றி, நீர் எ(ந்)த(திசையி)ன் மீது இருந்துவந்தீரோ அந்த கிப்லாவை நாம் (மாற்றி) அமைக்கவில்லை. இன்னும், அல்லாஹ் நேர்வழியில் நடத்துகின்றானே அத்தகையவர்களைத் தவிர, (மற்றவர்களுக்கு) அ(வ்வாறு 'கிப்லா'வை மாற்றுவ)து நிச்சயமாக மிகப் பளுவாக இருக்கிறது. உங்களுடைய விசுவாசத்தை ( நீங்கள் இதற்கு முன்பு பைத்துல் முகத்தஸை நோக்கித் தொழுது வந்த தொழுகையை) ஒருபோதும் அல்லாஹ் வீணாக்குபவனாக இல்லை. நிச்சயமாக அல்லாஹ், மனிதர்களிடத்தில் மிக இரக்கம் காட்டுபவன், மிகக் கிருபையுடையவன்.

144. (நபியே!) உம்முடைய முகம், (கிப்லாத்திசை மாற்றத்தை எதிர்ப்பார்த்து) வானத்தின் பால் திரும்புவதை நிச்சயமாக நாம் காண்கிறோம். ஆகவே, நீர் எதைப்பொருந்துகிறீரோ அந்த கிப்லா(வாகிய கஃபா)வின் பக்கமாக உம்மை நிச்சயமாக நாம் திருப்புவோம். எனவே, நீர் (தொழும்போது மக்காவிலுள்ள) 'மஸ்ஜிதுல் ஹறாமி'ன் பக்கமாக உம்முடைய முகத்தைத் திருப்புவீராக! (விசுவாசிகளே!) நீங்களும், எங்கிருப்பினும், (தொழுகைக்காக) அதன் பக்கமாக உங்களுடைய முகங்களைத் திருப்புவீர்களாக! நிச்சயமாக வேதங் கொடுக்கப்பட்டார்களே அத்தகையோர்_ நிச்சயமாக (கஃபாவின் பக்கம் திரும்பித் தொழவேண்டுமென்ற) இது, தங்கள் இரட்சகனிடமிருந்துள்ள உண்மைதான் என அவர்கள் அறிவார்கள். மேலும், அவர்கள் செய்வதைப் பற்றி அல்லாஹ் பராமுகமானவனல்லன்.

145. (ஆகவே, நபியே!) வேதங்கொடுக்கப்பட்டோர்க்கு ஒவ்வொரு(விதமான) சான்றையும் நீர் கொண்டுவந்தாலும், அவர்கள் உம்முடைய 'கிப்லா'வைப் பின்பற்றமாட்டார்கள் . நீரும் அவர்களுடைய 'கிப்லா'வைப் பின்பற்றுபவர் அல்லர். இன்னும், (வேதக்காரர்களாகிய) அவர்களில் சிலர் மற்ற சிலரின் 'கிப்லா'வைப் பின்பற்றுகிறவர் அல்லர். மேலும், உமக்கு ('வஹீ'யின் மூலம்) அறிவு வந்ததன்பின்னும், அவர்களுடைய மன இச்சைகளை நீர் பின்பற்றுவீரானால், நிச்சயமாக நீர் அப்போது அநியாயக்காரர்களில் உள்ளவராகிவிடுவீர்.

146. நாம் எவர்களுக்கு வேதத்தைக் கொடுத்திருக்கின்றோமோ அத்தகையோர் தங்கள் மக்களை(ச் சந்தேகமற) அறிவதைப்போல், அ(ந்த மக்காவின் திசையளவில் நீர் திரும்பித் தொழுவீரென்ப)தை அறிவார்கள். இன்னும் அவர்களிலொரு பிரிவினர், நிச்சயமாக நன்கறிந்துகொண்டே (இந்த) உண்மையை மறைக்கின்றனர்.(3)

الْحَقُّ مِنْ رَّبِّكَ فَلَا تَكُونَنَّ مِنَ الْمُمْتَرِينَ ﴿١٤٧﴾ وَلِكُلٍّ وِّجْهَةٌ هُوَ ع ۱۷ ۔ وقف النبی صلی اللہ علیہ وسلم
مُوَلِّيهَا فَاسْتَبِقُوا الْخَيْرَاتِ ۚ أَيْنَ مَا تَكُونُوا يَأْتِ بِكُمُ اللَّهُ جَمِيعًا ۚ
إِنَّ اللَّهَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ ﴿١٤٨﴾ وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ
شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ ۖ وَإِنَّهُ لَلْحَقُّ مِنْ رَّبِّكَ ۗ وَمَا اللَّهُ بِغَافِلٍ عَمَّا
تَعْمَلُونَ ﴿١٤٩﴾ وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ ۚ
وَحَيْثُ مَا كُنْتُمْ فَوَلُّوا وُجُوهَكُمْ شَطْرَهُ لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَيْكُمْ
حُجَّةٌ إِلَّا الَّذِينَ ظَلَمُوا مِنْهُمْ فَلَا تَخْشَوْهُمْ وَاخْشَوْنِي وَلِأُتِمَّ
نِعْمَتِي عَلَيْكُمْ وَلَعَلَّكُمْ تَهْتَدُونَ ﴿١٥٠﴾ كَمَا أَرْسَلْنَا فِيكُمْ رَسُولًا مِّنْكُمْ
يَتْلُو عَلَيْكُمْ آيَاتِنَا وَيُزَكِّيكُمْ وَيُعَلِّمُكُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَيُعَلِّمُكُمْ مَّا
لَمْ تَكُونُوا تَعْلَمُونَ ﴿١٥١﴾ فَاذْكُرُونِي أَذْكُرْكُمْ وَاشْكُرُوا لِي وَلَا تَكْفُرُونِ ﴿١٥٢﴾ ع ۱۸ / ۵ ۲ معانقة ۳ عند المتاخرین ۱۲
يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلَاةِ ۚ إِنَّ اللَّهَ مَعَ الصَّابِرِينَ ﴿١٥٣﴾
وَلَا تَقُولُوا لِمَنْ يُقْتَلُ فِي سَبِيلِ اللَّهِ أَمْوَاتٌ ۚ بَلْ أَحْيَاءٌ وَلَٰكِنْ لَّا
تَشْعُرُونَ ﴿١٥٤﴾ وَلَنَبْلُوَنَّكُمْ بِشَيْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوعِ وَنَقْصٍ مِّنَ
الْأَمْوَالِ وَالْأَنْفُسِ وَالثَّمَرَاتِ ۗ وَبَشِّرِ الصَّابِرِينَ ﴿١٥٥﴾ الَّذِينَ إِذَا
أَصَابَتْهُمْ مُّصِيبَةٌ قَالُوا إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ ﴿١٥٦﴾

147. (நபியே! 'கஃபா'வின் பக்கம் திரும்பித் தொழவேண்டும் என்பதுபற்றிய) இந்த உண்மை, உம் இரட்சகனிடமிருந்துள்ளதாகும். ஆகவே நிச்சயமாக சந்தேகிப்பவர்களில் உள்ளவராக நீர் ஆகிவிட வேண்டாம்.

148. (விசுவாசங்கொண்டோரே!) ஒவ்வொருவருக்கும் ஒரு திசையுண்டு. அ(வர)வர் அதன் பக்கம் திரும்புபவராக உள்ளார். ஆகவே, (அவைகளில்) நன்மையானவற்றிற்கு நீங்கள் முந்திக் கொள்ளுங்கள். நீங்கள் எங்கிருந்தபோதிலும், (இதன் மூலம்) உங்கள் யாவரையும் அல்லாஹ் கொண்டுவருவான். நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

149. ஆகவே, (நபியே!) எங்கிருந்து நீர் புறப்பட்டாலும் (தொழுகையின்போது புனிதப்பள்ளியாகிய) மஸ்ஜிதுல் ஹராமின் பக்கமே உம்முடைய முகத்தைத் திருப்புவீராக! இன்னும், நிச்சயமாக இதுதான் உம் இரட்சகனிடமிருந்துள்ள உண்மையாகும். மேலும், நீங்கள் செய்பவற்றைப் பற்றி அல்லாஹ் பராமுகமானவனல்லன்.

150. (நபியே!) நீர் எங்கிருந்து புறப்பட்டாலும்,(தொழுகையின் போது) மஸ்ஜிதுல் ஹராமின் பக்கமே உம்முடைய முகத்தைத் திருப்புவீராக! (விசுவாசிகளே!) அவர்களில் அநியாயக்காரர்களைத் தவிர, (மற்ற)மனிதர்களுக்கு உங்களிடம் எந்த தர்க்கமும் (உங்களுக்கு) எதிராக இல்லாதிருக்கும் பொருட்டு, நீங்களும் எங்கிருந்த போதிலும், அதன் பக்கமே உங்களுடைய முகங்களைத் திருப்பிக் கொள்ளுங்கள்; ஆகவே, அவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; மேலும் எனக்கே நீங்கள் பயப்படுங்கள்; என்னுடைய அருட்கொடையை நான் உங்கள் மீது பூரணமாக்கி வைப்பதற்காகவும், நீங்கள் நேர்வழியினைப் பெறுவதற்காகவும் (என்னையே பயப்படுங்கள்).

151. உங்களிலிருந்து உங்களின் மீது நம் வசனங்களை ஓதிக் காண்பித்து, உங்களைப் பரிசுத்தப்படுத்தி, உங்களுக்கு வேதத்தையும், (திருக்குர் ஆனின் விளக்கமான சுன்னத் எனும்) ஞானத்தையும் கற்றுக்கொடுத்து, மேலும், நீங்களறியாதவற்றை உங்களுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு தூதரை, உங்களிலிருந்தே உங்களுக்கிடையில் நாம் அனுப்பியதுபோன்றே (நம் அருட்கொடையை முழுமையாக்கிவைப்போம்).

152. ஆகவே நீங்கள் என்னை நினைவுகூருங்கள்; நானும் உங்களை (அருள் புரிந்து)நினைவு கூருவேன். நீங்கள் எனக்கு நன்றி செலுத்துங்கள்; இன்னும், எனக்கு மாறுசெய்யாதீர்கள்.

153. விசுவாசங்கொண்டோரே! பொறுமை மற்றும் தொழுகையைக்கொண்டு உதவி தேடுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.

154. இன்னும் அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்படுகிறவர்களை மரணித்தோர் என நீங்கள் கூறவேண்டாம்; மாறாக, (அவர்கள் "பர்ஜக்" எனும் மறைவான உலகில்) உயிரோடிருக்கிறார்கள்; எனினும் (அவர்கள் எவ்வாறு உயிரோடு உள்ளார்கள் என்பதை) நீங்கள் உணர்ந்துகொள்ளமாட்டீர்கள்.

155. (விசுவாசங்கொண்டோரே!) பயம் மற்றும் பசியிலிருந்து ஏதாவது ஒன்றைக் கொண்டும், செல்வங்கள், உயிர்கள், கனிக(ளின் விளைச்சல்க)ள் ஆகியவற்றில் குறைவைக்கொண்டும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம்; மேலும், (நபியே! இவற்றைப்)பொறுத்துக்கொள்பவர்களுக்கு நீர் நன்மாராயங்கூறுவீராக!

156. அவர்கள் எத்தகையோரென்றால், தங்களுக்கு ஏதேனும் ஒரு துன்பம் பிடித்தால், "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம்; நிச்சயமாக நாம் அவன்பக்கமே திரும்பிச் செல்பவர்களாக இருக்கிறோம்" என்று கூறுவார்கள்.

أُولٰٓئِكَ عَلَيْهِمْ صَلَوٰتٌ مِّنْ رَّبِّهِمْ وَرَحْمَةٌ ۗ وَأُولٰٓئِكَ هُمُ الْمُهْتَدُوْنَ ۱۵۷
إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَآئِرِ اللّٰهِ ۚ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ
فَلَا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَّطَّوَّفَ بِهِمَا ۗ وَمَنْ تَطَوَّعَ خَيْرًا ۙ فَإِنَّ اللّٰهَ
شَاكِرٌ عَلِيْمٌ ۱۵۸ إِنَّ الَّذِيْنَ يَكْتُمُوْنَ مَآ أَنْزَلْنَا مِنَ الْبَيِّنٰتِ وَالْهُدٰى
مِنْۢ بَعْدِ مَا بَيَّنّٰهُ لِلنَّاسِ فِي الْكِتٰبِ ۙ أُولٰٓئِكَ يَلْعَنُهُمُ اللّٰهُ وَ
يَلْعَنُهُمُ اللّٰعِنُوْنَ ۱۵۹ إِلَّا الَّذِيْنَ تَابُوْا وَأَصْلَحُوْا وَبَيَّنُوْا
فَأُولٰٓئِكَ أَتُوْبُ عَلَيْهِمْ ۚ وَأَنَا التَّوَّابُ الرَّحِيْمُ ۱۶۰ إِنَّ الَّذِيْنَ
كَفَرُوْا وَمَاتُوْا وَهُمْ كُفَّارٌ أُولٰٓئِكَ عَلَيْهِمْ لَعْنَةُ اللّٰهِ وَالْمَلٰٓئِكَةِ
وَالنَّاسِ أَجْمَعِيْنَ ۱۶۱ خٰلِدِيْنَ فِيْهَا ۚ لَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ
وَلَا هُمْ يُنْظَرُوْنَ ۱۶۲ وَإِلٰهُكُمْ إِلٰهٌ وَّاحِدٌ ۚ لَآ إِلٰهَ إِلَّا هُوَ الرَّحْمٰنُ
الرَّحِيْمُ ۱۶۳ إِنَّ فِيْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْأَرْضِ وَاخْتِلَافِ الَّيْلِ ع ۱۹ ۳
وَالنَّهَارِ وَالْفُلْكِ الَّتِيْ تَجْرِيْ فِي الْبَحْرِ بِمَا يَنْفَعُ النَّاسَ وَمَآ أَنْزَلَ
اللّٰهُ مِنَ السَّمَآءِ مِنْ مَّآءٍ فَأَحْيَا بِهِ الْأَرْضَ بَعْدَ مَوْتِهَا
وَبَثَّ فِيْهَا مِنْ كُلِّ دَآبَّةٍ ۪ وَّتَصْرِيْفِ الرِّيٰحِ وَالسَّحَابِ
الْمُسَخَّرِ بَيْنَ السَّمَآءِ وَالْأَرْضِ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ ۱۶۴

157. *அத்தகையோர்_அவர்கள் மீதுதான் அவர்களுடைய இரட்சகனிடமிருந்து நல்லாசிகளும், கிருபையும் ஏற்படுகின்றன. மேலும், அவர்கள் தாம் நேர் வழியையும் பெற்றவர்கள்.*

158. நிச்சயமாக “ ஸஃபா ” மற்றும் “ மர்வா ” (எனும் இரு மலைகள்) அல்லாஹ்வின் (மார்க்க) அடையாளங்களில் உள்ளவையாகும் ; ஆகவே , எவர் (கஅபா என்னும்) அவ்வீட்டை ஹஜ்ஜு அல்லது உம்ரா செய்கிறாரோ அவர் மீது , அவ்விரண்டையும் சுற்றி வருவது (அவ்விரண்டிற்குமிடையில் ஸயீ செய்வது) குற்றமல்ல ;இன்னும் எவர் தாமாக உபரியான நன்மையைச் செய்கிறாரோ நிச்சயமாக அல்லாஹ் நன்றி பாராட்டுபவன் , (அவர்களின் செயல்களை) நன்கறிகிறவன்.

159. *தெளிவான அத்தாட்சிகளிலிருந்தும், நேர்வழியிலிருந்தும் நாம் இறக்கிவைத்துள்ளதை_ அதனை நாம் மனிதர்களுக்காக வேதத்தில் விளக்கிய பின்னர், நிச்சயமாக மறைக்கின்றார்களே அத்தகையோர் _ அவர்களை அல்லாஹ் சபிக்கிறான். (மனித இனம், ஜின், மலக்குகள் ஆகியோரில்) சபிப்பவர்களும் அவர்களைச் சபிக்கின்றனர்.*

160. *(தாங்கள் மறைத்தவற்றிற்காக மன்னிப்புக்கோரி)தவ்பாச் செய்து,(தங்களைச்) சீர்த்திருத்திக் கொண்டு (அவற்றை) தெளிவாகவும் எடுத்துரைக்கின்றனரே அத்தகையோரைத் தவிர; அப்பொழுது அவர்களை நான் மன்னித்து விடுகிறேன். இன்னும் நான்தான் அதிகமாக தவ்பாவை ஏற்பவன், மிக்க கிருபையுடையவன்.*

161. *நிச்சயமாக நிராகரித்துவிட்டு, நிராகரித்தவர்களாகவே இறந்தும் விடுகின்றார்களே அத்தகையோர்_அவர்கள் மீது அல்லாஹ், மலக்குகள், மனிதர்கள் அனைவருடையவும் சாபம் உண்டு.*

162. *(மேலும் அவர்கள்,) அ(ச்சாபத்)தில், என்றென்றும் தங்கி இருப்பவர்கள் . (மறுமையில்) அவர்களை விட்டு வேதனை இலேசாக்கப்படமாட்டாது;* அவர்கள் கால அவகாசம் கொடுக்கப்படவுமாட்டார்கள்.

163. *(மனிதர்களே!)மேலும்,உங்கள்(வணக்கத்திற்குரிய) நாயன்ஒரே ஒரு (வணக்கத்திற்குரிய)நாயன்தான்;அளவற்றஅருளும்,நிகரற்ற அன்பும் உடைய அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் (வேறு) இல்லை.*

164. *நிச்சயமாக, வானங்களையும், பூமியையும் (அல்லாஹ்) படைத்திருப்பதிலும், இரவும் பகலும் மாறி மாறிக்கொண்டிருப்பதிலும், மனிதர்களுக்குப் பயன் தருவதைக் கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும், வானத்திலிருந்து அல்லாஹ் தண்ணீரை இறக்கிவைத்து, அதன்மூலம் பூமியை அது (வறண்டு) இறந்தபின் உயிராக்கிவைப்பதிலும், அதில் ஒவ்வொருவிதமான (ஊர்ந்து திரியும்) பிராணியை பரவ விட்டிருப்பதிலும், காற்றுகளை(ப் பலவாறாக)த் திருப்பிவிட்டுக் கொண்டிருப்பதிலும், வானத்திற்கும் பூமிக்கும் இடையில் கட்டுப்படுத்தப் பட்டிருக்கும் மேகத்திலும் சிந்திக்கும் சமூகத்தவர்க்குசான்றுகள் இருக்கின்றன.*

وَمِنَ النَّاسِ مَنْ يَّتَّخِذُ مِنْ دُوْنِ اللّٰهِ اَنْدَادًا يُّحِبُّوْنَهُمْ كَحُبِّ
اللّٰهِ ؕ وَالَّذِيْنَ اٰمَنُوْۤا اَشَدُّ حُبًّا لِّلّٰهِ ؕ وَلَوْ يَرَى الَّذِيْنَ ظَلَمُوْۤا اِذْ
يَرَوْنَ الْعَذَابَ ۙ اَنَّ الْقُوَّةَ لِلّٰهِ جَمِيْعًا ۙ وَّاَنَّ اللّٰهَ شَدِيْدُ الْعَذَابِ ﴿۱۶۵﴾
اِذْ تَبَرَّاَ الَّذِيْنَ اتُّبِعُوْا مِنَ الَّذِيْنَ اتَّبَعُوْا وَرَاَوُا الْعَذَابَ وَ
تَقَطَّعَتْ بِهِمُ الْاَسْبَابُ ﴿۱۶۶﴾ وَقَالَ الَّذِيْنَ اتَّبَعُوْا لَوْ اَنَّ لَنَا كَرَّةً
فَنَتَبَرَّاَ مِنْهُمْ كَمَا تَبَرَّءُوْا مِنَّا ؕ كَذٰلِكَ يُرِيْهِمُ اللّٰهُ اَعْمَالَهُمْ
حَسَرٰتٍ عَلَيْهِمْ ؕ وَمَا هُمْ بِخٰرِجِيْنَ مِنَ النَّارِ ﴿۱۶۷﴾ ع يٰۤاَيُّهَا النَّاسُ كُلُوْا ع ۲۰
مِمَّا فِي الْاَرْضِ حَلٰلًا طَيِّبًا ۖ وَّلَا تَتَّبِعُوْا خُطُوٰتِ الشَّيْطٰنِ ؕ
اِنَّهٗ لَكُمْ عَدُوٌّ مُّبِيْنٌ ﴿۱۶۸﴾ اِنَّمَا يَاْمُرُكُمْ بِالسُّوْٓءِ وَالْفَحْشَآءِ وَاَنْ
تَقُوْلُوْا عَلَى اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿۱۶۹﴾ وَاِذَا قِيْلَ لَهُمُ اتَّبِعُوْا مَاۤ
اَنْزَلَ اللّٰهُ قَالُوْا بَلْ نَتَّبِعُ مَاۤ اَلْفَيْنَا عَلَيْهِ اٰبَآءَنَا ؕ اَوَلَوْ كَانَ
اٰبَآؤُهُمْ لَا يَعْقِلُوْنَ شَيْئًا وَّلَا يَهْتَدُوْنَ ﴿۱۷۰﴾ وَمَثَلُ الَّذِيْنَ كَفَرُوْا
كَمَثَلِ الَّذِيْ يَنْعِقُ بِمَا لَا يَسْمَعُ اِلَّا دُعَآءً وَّنِدَآءً ؕ صُمٌّۢ بُكْمٌ
عُمْيٌ فَهُمْ لَا يَعْقِلُوْنَ ﴿۱۷۱﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُلُوْا مِنْ طَيِّبٰتِ
مَا رَزَقْنٰكُمْ وَاشْكُرُوْا لِلّٰهِ اِنْ كُنْتُمْ اِيَّاهُ تَعْبُدُوْنَ ﴿۱۷۲﴾

165. மனிதர்களில் அல்லாஹ்வையன்றி அவனுக்கு இணையாளர்களை (சமமானவர்களாக) ஆக்கிக் கொண்டு, அல்லாஹ்வை நேசிப்பது போன்று அவர்களை நேசிப்பவர்களும் இருக்கின்றனர்; (ஆனால்) விசுவாசிகளோ, அல்லாஹ்வை நேசிப்பதில் மிகக் கடினமானவர்கள்; இன்னும், (இணை வைப்பதன் மூலம்)அநியாயம்செய்து கொண்டிருந்தோர் வேதனையைக் (கண்ணால்) காணுகின்ற போது பார்ப்பார்களானால், நிச்சயமாகச் சக்தி அனைத்தும் (தாங்கள் பிரியம் வைத்தவர்களுக்கன்றி) அல்லாஹ்விற்கே இருக்கின்றது; இன்னும் வேதனை செய்வதில் நிச்சயமாக அல்லாஹ் கடுமையானவன்" (என்றும் தெரிந்து கொள்வார்கள்).

166. (இத்தவறான வழியைக்காட்டிய ) பின்பற்றப்பட்டவர்கள், பின்பற்றியவர்களிலிருந்து நீங்கிக் கொண்டு , வேதனையையும் இவர்கள் கண்டு, அவர்களுக்கு மத்தியிலிருந்த தொடர்புகளும் அறுபட்டுவிடும் சமயத்தில் (கடும் துன்பத்தை அடைவார்கள்).

167. மேலும் ,“ நிச்சயமாக ஒரு மீட்சி (உலகிற்குத் திரும்பிச் செல்லுதல்) நமக்கு இருக்குமானால் நம்மிலிருந்து அவர்கள் நீங்கிக்கொண்டது போன்று நாமும் அவர்களிலிருந்து நீங்கிக் கொள்வோம் ” என்று பின்பற்றியவர்கள் கூறுவார்கள் ; இவ்வாறே அல்லாஹ் , அவர்களின் (தீய) செயல்களை அவர்கள் மீது கைசேதப்பட்டு துக்கமளிப்பவையாக அவர்களுக்கு எடுத்துக் காட்டுவான். அவர்கள் நரக நெருப்பிலிருந்து வெளியேறுபவர்களும் அல்லர்.

168. மனிதர்களே! பூமியிலுள்ளவற்றிலிருந்து (உண்ண) அனுமதிக்கப்பட்ட நல்லவற்றை உண்ணுங்கள்; மேலும் ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன், உங்களுக்கு பகிரங்கமான விரோதியாவான்.

169. நிச்சயமாக, அவன் உங்களுக்கு ஏவுவதெல்லாம் தீயதையும், மானக்கேடானவற்றையும், நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவதையும்தாம்.

170. மேலும், (இவ்வேதமாகிய) அல்லாஹ் இறக்கிவைத்ததைப் பின்பற்றுங்கள்" என அவர்களுக்குக் கூறப்பட்டால், "இல்லை! நாங்கள் எங்களுடைய மூதாதையர்களை எதன்மீது கண்டோமோ, அதையே நாங்கள் பின்பற்றுவோம்" எனக் கூறுகின்றனர். அவர்களுடைய மூதாதையர்கள், எதையுமே விளங்காதவர்களாகவும், நேர்வழி பெறாதவர்களாகவும் இருந்தாலுமா? (அப்படியே பின்பற்றுவார்கள்?)

171. (மூதாதையர்களை கண் மூடித்தனமாகப் பின்பற்றும்) நிராகரிப்போருக்கு உதாரணம்: வெறும் கூப்பாட்டையும், அழைப்பொலியையும் தவிர வேறெதையும் கேட்காத (பிராணிகளைக்) கூவி அழைப்பவனின் உதாரணத்தைப் போன்றிருக்கிறது. (மேலும், அவர்கள்) செவிடர்கள் (உண்மையைக் கேட்கவே மாட்டார்கள்), ஊமையர்கள் (உண்மையைப் பேசவே மாட்டார்கள்), குருடர்கள் (அவர்களுக்கு பயன் தரக்கூடியவற்றைப் பார்க்கவே மாட்டார்கள்) ; ஆதலால், அவர்கள் எதையும் அறிந்துணரமாட்டார்கள்.

172. விசுவாசங்கொண்டோரே! நாம் உங்களுக்கு அளித்ததில் நல்லவற்றை உண்ணுங்கள்; மேலும் அல்லாஹ்வுக்கு_(வணக்கத்திற்குரிய) அவனையே நீங்கள் வணங்குபவர்களாக இருந்தால்_ நன்றி செலுத்துங்கள் ;.

اِنَّمَا حَرَّمَ عَلَیۡکُمُ الۡمَیۡتَۃَ وَ الدَّمَ وَ لَحۡمَ الۡخِنۡزِیۡرِ وَ مَاۤ اُہِلَّ بِہٖ
لِغَیۡرِ اللّٰہِ ۚ فَمَنِ اضۡطُرَّ غَیۡرَ بَاغٍ وَّ لَا عَادٍ فَلَاۤ اِثۡمَ عَلَیۡہِ ؕ اِنَّ اللّٰہَ
غَفُوۡرٌ رَّحِیۡمٌ ﴿۱۷۳﴾ اِنَّ الَّذِیۡنَ یَکۡتُمُوۡنَ مَاۤ اَنۡزَلَ اللّٰہُ مِنَ الۡکِتٰبِ وَ
یَشۡتَرُوۡنَ بِہٖ ثَمَنًا قَلِیۡلًا ۙ اُولٰٓئِکَ مَا یَاۡکُلُوۡنَ فِیۡ بُطُوۡنِہِمۡ اِلَّا
النَّارَ وَ لَا یُکَلِّمُہُمُ اللّٰہُ یَوۡمَ الۡقِیٰمَۃِ وَ لَا یُزَکِّیۡہِمۡ ۚۖ وَ لَہُمۡ عَذَابٌ
اَلِیۡمٌ ﴿۱۷۴﴾ اُولٰٓئِکَ الَّذِیۡنَ اشۡتَرَوُا الضَّلٰلَۃَ بِالۡہُدٰی وَ الۡعَذَابَ
بِالۡمَغۡفِرَۃِ ۚ فَمَاۤ اَصۡبَرَہُمۡ عَلَی النَّارِ ﴿۱۷۵﴾ ذٰلِکَ بِاَنَّ اللّٰہَ نَزَّلَ
الۡکِتٰبَ بِالۡحَقِّ ؕ وَ اِنَّ الَّذِیۡنَ اخۡتَلَفُوۡا فِی الۡکِتٰبِ لَفِیۡ شِقَاقٍۭ
بَعِیۡدٍ ﴿۱۷۶﴾ ع لَیۡسَ الۡبِرَّ اَنۡ تُوَلُّوۡا وُجُوۡہَکُمۡ قِبَلَ الۡمَشۡرِقِ وَ ع ۲۱ ۹ ۵
الۡمَغۡرِبِ وَ لٰکِنَّ الۡبِرَّ مَنۡ اٰمَنَ بِاللّٰہِ وَ الۡیَوۡمِ الۡاٰخِرِ وَ الۡمَلٰٓئِکَۃِ
وَ الۡکِتٰبِ وَ النَّبِیّٖنَ ۚ وَ اٰتَی الۡمَالَ عَلٰی حُبِّہٖ ذَوِی الۡقُرۡبٰی
وَ الۡیَتٰمٰی وَ الۡمَسٰکِیۡنَ وَ ابۡنَ السَّبِیۡلِ ۙ وَ السَّآئِلِیۡنَ وَ فِی
الرِّقَابِ ۚ وَ اَقَامَ الصَّلٰوۃَ وَ اٰتَی الزَّکٰوۃَ ۚ وَ الۡمُوۡفُوۡنَ بِعَہۡدِہِمۡ
اِذَا عٰہَدُوۡا ۚ وَ الصّٰبِرِیۡنَ فِی الۡبَاۡسَآءِ وَ الضَّرَّآءِ وَ حِیۡنَ
الۡبَاۡسِ ؕ اُولٰٓئِکَ الَّذِیۡنَ صَدَقُوۡا ؕ وَ اُولٰٓئِکَ ہُمُ الۡمُتَّقُوۡنَ ﴿۱۷۷﴾

173. உங்களின் மீது (அல்லாஹ்வாகிய) அவன் ஹராம்(என்று தடை) ஆக்கியிருப்பதெல்லாம் (தானாகச்) செத்ததையும், இரத்தத்தையும், பன்றியின் மாமிசத்தையும், அல்லாஹ் அல்லாதவருக்காக (அறுப்புப்பிராணிகளில்) எதற்கு பெயர் கூற(ப்பட்டு விட)ப் பட்டதோ அதையும்தான். ஆகவே எவரேனும் பாவம் செய்யும் நோக்கமில்லாமலும் வரம்பு மீறாமலும் இருந்து, (இவற்றைப் புசிக்க) நிர்ப்பந்திக்கப் பட்டுவிட்டால் அவர்மீது குற்றமாகாது. நிச்சயமாக அல்லாஹ், மிக்க மன்னிக்கிறவன், மிகக்கிருபையுடையவன்.(4)

174. நிச்சயமாக வேதத்தில் அல்லாஹ் இறக்கியவற்றை மறைத்துவிட்டு, அதற்குப்பகரமாக சொற்பக் கிரயத்தையும் வாங்குகின்றனரே அத்தகையோர்_ அவர்கள் தங்கள் வயிறுகளில் நெருப்பைத் தவிர (வேறு எதனையும்) உட்கொள்வதில்லை; மறுமை நாளில் அல்லாஹ் அவர்களுடன் பேசவுமாட்டான்; அவர்களைப் (பாவத்திலிருந்து) பரிசுத்தமாக்கவுமாட்டான்; அவர்களுக்கு துன்புறுத்தும் வேதனையுமுண்டு.

175. இத்தகையோர்தாம் நேர்வழிக்குப் பதிலாக வழிகேட்டையும், மன்னிப்புக்குப் பதிலாக வேதனையையும் விலைக்கு வாங்கிக் கொண்டவர்களாவர். ஆகவே (நரக) நெருப்பின் மீது, அவர்களை சகிக்கச் செய்தது எதுவோ?

176. இது(ஏனென்றால்), நிச்சயமாக அல்லாஹ், உண்மையைக் கொண்டு இவ்வேதத்தை இறக்கி வைத்துள்ளான் என்பதினாலாகும்; மேலும், நிச்சயமாக இவ்வேதத்தில் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் (உண்மையைவிட்டுத்) தூர மான பிளவிலேயே இருக்கிறார்கள்.

177. கிழக்கு, மேற்கு ஆகியவற்றின் பக்கமாக உங்கள் முகங்களை நீங்கள் திருப்புவது (மட்டும்), நன்மை (செய்ததாக ஆகிவிடுவது) இல்லை; எனினும் நன்மை உடையவர், (எவரெனில் உங்களில்) எவர் அல்லாஹ்வையும், இறுதி நாளையும், மலக்குகளையும், வேதத்தையும், நபிமார்களையும் விசுவாசித்து, மேலும், செல்வத்தை, தம் விருப்பத்தின் மீது பந்துக்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்கும், யாசிப்பவர்களுக்கும், அடிமைகளிலும் (அவர்களை விடுவிப்பதற்காக) கொடுத்தவரும், மேலும் தொழுகையை நிறைவேற்றி, ஜகாத்தையும் கொடுத்து, வாக்களித்தால் தங்களின் வாக்குறுதியை (ச்சரிவர) நிறைவேற்றக்கூடியவர்களும், (வறுமையின்போது) துன்பத்திலும், (நோய் நொடிகள் போன்ற) கஷ்டத்திலும், யுத்த நேரத்திலும் பொறுமையுடனிருந்தவர்களுமாவர். அத்தகையோர் தாம் உண்மை சொன்னார்களே அவர்கள்(ஆவர்); இன்னும் இவர்கள் தாம் பயபக்தியாளர்கள்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الْقِصَاصُ فِى الْقَتْلٰى ؕ اَلْحُرُّ
بِالْحُرِّ وَالْعَبْدُ بِالْعَبْدِ وَالْاُنْثٰى بِالْاُنْثٰى ؕ فَمَنْ عُفِىَ لَهٗ مِنْ اَخِيْهِ
شَىْءٌ فَاتِّبَاعٌۢ بِالْمَعْرُوْفِ وَاَدَآءٌ اِلَيْهِ بِاِحْسَانٍ ؕ ذٰلِكَ تَخْفِيْفٌ مِّنْ
رَّبِّكُمْ وَرَحْمَةٌ ؕ فَمَنِ اعْتَدٰى بَعْدَ ذٰلِكَ فَلَهٗ عَذَابٌ اَلِيْمٌ ﴿۱۷۸﴾ وَ
لَكُمْ فِى الْقِصَاصِ حَيٰوةٌ يّٰۤاُولِى الْاَلْبَابِ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿۱۷۹﴾
كُتِبَ عَلَيْكُمْ اِذَا حَضَرَ اَحَدَكُمُ الْمَوْتُ اِنْ تَرَكَ خَيْرَا ۖۚ ۨالْوَصِيَّةُ
لِلْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ بِالْمَعْرُوْفِ ۚ حَقًّا عَلَى الْمُتَّقِيْنَ ﴿۱۸۰﴾ ؕ فَمَنْۢ
بَدَّلَهٗ بَعْدَ مَا سَمِعَهٗ فَاِنَّمَآ اِثْمُهٗ عَلَى الَّذِيْنَ يُبَدِّلُوْنَهٗ ؕ
اِنَّ اللّٰهَ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿۱۸۱﴾ ؕ فَمَنْ خَافَ مِنْ مُّوْصٍ جَنَفًا اَوْ اِثْمًا
فَاَصْلَحَ بَيْنَهُمْ فَلَاۤ اِثْمَ عَلَيْهِ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۸۲﴾ ع يٰۤاَيُّهَا ع ۲۲
الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ
مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿۱۸۳﴾ ۙ اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ؕ فَمَنْ كَانَ
مِنْكُمْ مَّرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ وَعَلَى
الَّذِيْنَ يُطِيْقُوْنَهٗ فِدْيَةٌ طَعَامُ مِسْكِيْنٍ ؕ فَمَنْ تَطَوَّعَ خَيْرًا
فَهُوَ خَيْرٌ لَّهٗ ؕ وَاَنْ تَصُوْمُوْا خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۱۸۴﴾

178. விசுவாசங்கொண்டோரே! கொலையுண்டவர்கள் விஷயத்தில்(பகரமாக) பழி வாங்குவது உங்கள்மீது விதிக்கப்பட்டுள்ளது; (அதில் கூடுதல்குறைவின்றி) சுதந்திரமானவனுக்குப்பகரமாக சுதந்திரமானவனும், அடிமைக்குப் பகரமாக அடிமையும், பெண்ணுக்குப் பகரமாகப் பெண்ணும்(பழி வாங்கப்படுதல் வேண்டும்); அ(க்கொலையுண்ட)வனுடைய சகோதர (பாத்தியஸ்த)ரால் (கொலை செய்த)அவனுக்கு ஏதேனும் மன்னிக்கப்பட்டு விட்டால், அப்போது (கொலை செய்யப்பட்டவரின் உறவினர்கள் ) அறியப்பட்ட (வழக்கமான) முறையைப் பின் பற்றுதல் வேண்டும். (கொலை செய்தவரைச் சார்ந்தோர் நஷ்ட ஈட்டை) அவன்பால் பெருந்தன்மையுடன் நிறைவேற்றிவிடவும் வேண்டும். இது, உங்கள் இரட்சகனிடமிருந்துள்ள சலுகையும், கிருபையுமாகும். ஆகவே, இதன் பின்னர் யாராவது வரம்பு மீறினால், அப்போது அவருக்கு துன்புறுத்தும் வேதனையுண்டு.

179. நல்லறிவுடையோரே! (கொலையுண்டவர்கள் விஷயத்தில்) பழி வாங்குவதில் உங்களுக்கு வாழ்வும் உண்டு; (அதன் மூலம்) நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ளலாம்.

180. (விசுவாசிகளே!) உங்களில் ஒருவருக்கு மரணம் நெருங்கும்போது, அவர் பொருளை விட்டுச்செல்வாரானால், (அவர் தன்னுடைய) பெற்றோருக்கும், பந்துக்களுக்கும் முறைப்படி(மரண) சாசனம் செய்வது உங்கள்மீது விதிக்கப்பட்டுள்ளது;(இது) பயபக்தியுடையவர்கள் மீது கடமையாகும்.

181. எனவே, யார் அதனைக் கேட்டதற்குப் பின்னர் அதனை மாற்றிவிட்டாரோ, அதன் பாவமெல்லாம் அதனை மாற்றிவிடுகிறார்களே அத்தகையோர் மீதேயாகும்; நிச்சயமாக அல்லாஹ், (யாவற்றையும்) செவியேற்கிறவன்; நன்கறிகிறவன்.

182. ஆனால் (மரண) சாசனம் செய்தவரிலிருந்து வரம்பு மீறுதலையோ, அல்லது பாவத்தையோ யாராவது பயந்து, அவர்களுக்கிடையே (விவகாரத்தை) ஒழுங்குபடுத்திவிட்டால், அப்போது அவர்மீது குற்றமில்லை; நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன், மிகக் கிருபையுடையவன்.

183. விசுவாசங்கொண்டோரே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக்கப்பட்டிருக்கின்றது;(அதனால்) நீங்கள் (உள்ள சுத்தி பெற்று) பயபக்தியுடையவர்களாகலாம்.

184. எண்ணப்பட்ட சில நாட்களில் (நோன்பு நோற்பது கடமையாகும்.) ஆனால், (அந்நாட்களில் ) உங்களில் எவர் நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ இருந்தாரோ, (அவருக்கு நோன்பை விட்டுவிட அனுமதியுண்டு; விடுபட்ட நோன்புகளை ) மற்ற நாட்களில் எண்ணி (நோற்றுவி ) டவும். இன்னும், அதற்கு சக்தி பெற்றிருப்போர்மீது ஓர் ஏழைக்கு உணவளிப்பது பரிகாரமாகும்; ஆகவே, எவரேனும் உபரியாக நன்மை செய்தால், அது அவருக்கே நன்மையாகும். மேலும், நீங்கள் அறிந்திருப்போராயின் நீங்கள் நோன்பு நோற்பதே உங்களுக்கு மிகச் சிறந்ததாகும் (என்பதை தெரிந்து கொள்வீர்கள்).(5)

شَهْرُ رَمَضَانَ الَّذِیْٓ اُنْزِلَ فِیْهِ الْقُرْاٰنُ هُدًی لِّلنَّاسِ وَ
بَیِّنٰتٍ مِّنَ الْهُدٰی وَالْفُرْقَانِ ۚ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ
فَلْیَصُمْهُ ؕ وَمَنْ كَانَ مَرِیْضًا اَوْ عَلٰی سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَیَّامٍ اُخَرَ ؕ
یُرِیْدُ اللّٰهُ بِكُمُ الْیُسْرَ وَلَا یُرِیْدُ بِكُمُ الْعُسْرَ ۫ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ
وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰی مَا هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿١٨٥﴾ وَاِذَا
سَاَلَكَ عِبَادِیْ عَنِّیْ فَاِنِّیْ قَرِیْبٌ ؕ اُجِیْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا
دَعَانِ فَلْیَسْتَجِیْبُوْا لِیْ وَلْیُؤْمِنُوْا بِیْ لَعَلَّهُمْ یَرْشُدُوْنَ ﴿١٨٦﴾
اُحِلَّ لَكُمْ لَیْلَةَ الصِّیَامِ الرَّفَثُ اِلٰی نِسَآئِكُمْ ؕ هُنَّ
لِبَاسٌ لَّكُمْ وَاَنْتُمْ لِبَاسٌ لَّهُنَّ ؕ عَلِمَ اللّٰهُ اَنَّكُمْ كُنْتُمْ
تَخْتَانُوْنَ اَنْفُسَكُمْ فَتَابَ عَلَیْكُمْ وَعَفَا عَنْكُمْ ۚ فَالْـٰٔنَ
بَاشِرُوْهُنَّ وَابْتَغُوْا مَا كَتَبَ اللّٰهُ لَكُمْ ۪ وَكُلُوْا وَاشْرَبُوْا حَتّٰی
یَتَبَیَّنَ لَكُمُ الْخَیْطُ الْاَبْیَضُ مِنَ الْخَیْطِ الْاَسْوَدِ مِنَ الْفَجْرِ ۪
ثُمَّ اَتِمُّوا الصِّیَامَ اِلَی الَّیْلِ ۚ وَلَا تُبَاشِرُوْهُنَّ وَاَنْتُمْ
عٰكِفُوْنَ ۙ فِی الْمَسٰجِدِ ؕ تِلْكَ حُدُوْدُ اللّٰهِ فَلَا تَقْرَبُوْهَا ؕ
كَذٰلِكَ یُبَیِّنُ اللّٰهُ اٰیٰتِهٖ لِلنَّاسِ لَعَلَّهُمْ یَتَّقُوْنَ ﴿١٨٧﴾

185. ரமளான் மாதம் எத்தகையதென்றால், அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேர்வழியிலிருந்து(ள்ள) தெளிவுகளாகவும்,(சத்திய அசத்தியத்தைப்) பிரித்துக்காட்டக்கூடியதாகவும் உள்ள இந்தக்குர்ஆன் இறக்கியருளப்பட்டது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை பெறுகிறாரோ அவர், அதில் நோன்பு நோற்றுவிடவும்; எவரேனும் நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால், மற்ற நாட்களில் ( ஏற்கனவே விடுபட்ட நோன்பினை) எண்ணி (நோற்று) விடவும்; அல்லாஹ் உங்களுக்கு இலகுவை நாடுகிறான்; மேலும், அவன் உங்களுக்கு சிரமத்தை நாடவில்லை. மேலும், (நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ்வை_ உங்களுக்கு அவன் நேர்வழி காட்டியதற்காக நீங்கள் பெருமைப் படுத்துவதற்காகவும், நீங்கள் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துவதற்காகவுமே (இச்சலுகைகளை உங்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான்).

186. மேலும் (நபியே!) என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால், (அதற்கு நீர் கூறுவீராக:) "நிச்சயமாக நான், (அவர்களுக்கு) மிகச்சமீபமாகவே இருக்கின்றேன்; அழைப்பவரின் அழைப்புக்கு _அவர் என்னைஅழைத்தால் நான் பதிலளிப்பேன்;" ஆகவே, அவர்கள் நேரான வழியை அடைவதற்காக, அவர்கள் (என்னுடைய கட்டளைகளை ஏற்று) எனக்கு பதில் அளிக்கவும்; மேலும் , அவர்கள் என்னையே விசுவாசிக்கவும்.

187. (விசுவாசங்கொண்டோரே!) நோன்பின் இரவுகளில் நீங்கள் உங்கள் மனைவியருடன் தாம்பத்திய உறவு கொள்வது உங்களுக்கு ஆகுமாக்கப் பட்டுள்ளது. அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்;(இரவின் முன்னேரத்திலேயே உறங்கிவிட்டால் அதன் காரணமாக உண்ணாமலும், தாம்பத்திய உறவு கொள்ளாமலும் தடுத்துக் கொண்டு)நிச்சயமாக நீங்கள் உங்களையே வஞ்சித்துக் கொண்டிருந்ததை அல்லாஹ் நன்கறிந்து கொண்டான். ஆகவே உங்கள் தவ்பாவை ஏற்று உங்களைவிட்டும் உங்கள் பாவத்தை பொறுத்தருளினான். எனவே, இப்போது (நோன்பின் இரவு காலங்களில் உங்கள் மனைவியராகிய) அவர்களுடன் கூடிக்கொள்ளுங்கள்; அல்லாஹ் உங்களுக்கு(ச் சந்ததியாக) விதித்திருப்பதையும் தேடிக்கொள்ளுங்கள். இன்னும் ஃபஜ்ரு (அதிகாலை) நேரத்தில் (இரவு என்ற) கறுப்பு நூலிலிருந்து,(அதிகாலைஎன்ற)வெள்ளை நூல்உங்களுக்குத்தெளிவாகும் வரை உண்ணுங்கள், இன்னும், பருகுங்கள்; பின்னர் இரவு (ஆரம்பமாகும்) வரை (மேலே கூறியவைகளைத் தவிர்த்து) நோன்பை (நோற்றுப்) பூரணமாக்குங்கள். இன்னும், நீங்கள் பள்ளிகளில் தங்கியவர்களாக (இஃதிகாப்) இருக்கும்போது (உங்கள் மனைவியராகிய) அவர்களுடன் கூடாதீர்கள். இவை அல்லாஹ்வின் (சட்ட)வரம்புகளாகும். அதை(மீற) நெருங்காதீர்கள். இவ்வாறே (தங்களைக்காத்து) பயபக்தியுடையோர் ஆவதற்காக மனிதர்களுக்கு அல்லாஹ் தன்னுடைய வசனங்களைத் தெளிவு செய்கிறான்.

وَلَا تَاْكُلُوْٓا اَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ وَتُدْلُوْا بِهَآ
اِلَى الْحُكَّامِ لِتَاْكُلُوْا فَرِيْقًا مِّنْ اَمْوَالِ النَّاسِ
ع ۲۳ ۷ بِالْاِثْمِ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۱۸۸﴾ يَسْـَٔلُوْنَكَ عَنِ الْاَهِلَّةِ ؕ
قُلْ هِيَ مَوَاقِيْتُ لِلنَّاسِ وَالْحَجِّ ؕ وَلَيْسَ الْبِرُّ بِاَنْ
تَاْتُوا الْبُيُوْتَ مِنْ ظُهُوْرِهَا وَلٰكِنَّ الْبِرَّ مَنِ اتَّقٰى ۚ
وَاْتُوا الْبُيُوْتَ مِنْ اَبْوَابِهَا ۪ وَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ
تُفْلِحُوْنَ ﴿۱۸۹﴾ وَقَاتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ الَّذِيْنَ
يُقَاتِلُوْنَكُمْ وَلَا تَعْتَدُوْا ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ
الْمُعْتَدِيْنَ ﴿۱۹۰﴾ وَاقْتُلُوْهُمْ حَيْثُ ثَقِفْتُمُوْهُمْ وَاَخْرِجُوْهُمْ
مِّنْ حَيْثُ اَخْرَجُوْكُمْ وَالْفِتْنَةُ اَشَدُّ مِنَ الْقَتْلِ ۚ وَلَا
تُقٰتِلُوْهُمْ عِنْدَ الْمَسْجِدِ الْحَرَامِ حَتّٰى يُقٰتِلُوْكُمْ
فِيْهِ ۚ فَاِنْ قٰتَلُوْكُمْ فَاقْتُلُوْهُمْ ؕ كَذٰلِكَ جَزَآءُ
الْكٰفِرِيْنَ ﴿۱۹۱﴾ فَاِنِ انْتَهَوْا فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۹۲﴾
وَقٰتِلُوْهُمْ حَتّٰى لَا تَكُوْنَ فِتْنَةٌ وَّيَكُوْنَ الدِّيْنُ
لِلّٰهِ ؕ فَاِنِ انْتَهَوْا فَلَا عُدْوَانَ اِلَّا عَلَى الظّٰلِمِيْنَ ﴿۱۹۳﴾

188. மேலும், உங்களுடைய செல்வங்களை உங்களுக்கிடையில் உரிமையின்றி உண்ணாதீர்கள்;நீங்கள் அறிந்துகொண்டே(பிற)மனிதர்களின் செல்வங்களிலிருந்து ஒரு பகுதியை பாவமானமுறையில் நீங்கள் உண்ணுவதற்காக அவற்றை (இலஞ்சமாகக் கொடுக்க) அதிகாரிகளின்பால் கொண்டும் செல்லாதீர்கள்.

189. (நபியே!)பிறைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். (அதற்கு) "அவை மனிதர்களுக்கும், ஹஜ்ஜு (வணக்கத்து)க்கும் நேரங்களைக் குறிப்பிடுபவை" என நீர்கூறுவீராக! மேலும் (விசுவாசிகளே! இஹ்ராமிலிருக்கும் நிலையில்) நீங்கள் (உங்களுடைய) வீடுகளுக்கு அவற்றின் பின்புறங்களிலிருந்து வருவதில் (புண்ணியம்) நன்மை இல்லை. எனினும், எவர் (அல்லாஹ்வுக்குப்) பயந்து நடக்கின்றாரோ அவரே நன்மையுடையவராவார். நீங்கள் (உங்களுடைய) வீடுகளுக்கு அவற்றின்( தலை) வாசல்களின் வழியாகவே வாருங்கள்; மேலும், அல்லாஹ்வைப்பயந்து கொள்ளுங்கள்;(இதனால்) நீங்கள் வெற்றியடையலாம்.

190. உங்களுடன் போர் புரிபவர்களோடு அல்லாஹ்வுடைய பாதையில் நீங்களும் போரிடுங்கள். நீங்கள் வரம்பும் மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிக்கமாட்டான்.

191. மேலும், (உங்களுடன் எதிர்த்துப் போரிட்ட) அவர்களை நீங்கள் எங்கு கண்டாலும் கொல்லுங்கள். உங்களை (உங்கள் ஊரிலிருந்து) அவர்கள் வெளியேற்றியவாறே, நீங்களும் அவர்களை வெளியேற்றிவிடுங்கள். இன்னும், குழப்பம்(விளைவிப்பது) கொலையைவிட மிகக் கொடியதாகும் . இன்னும், மஸ்ஜிதுல் ஹராமில் _ அவர்கள் அதில் உங்களுடன் போர் புரியும் வரையில், நீங்கள் அவர்களோடு போர் புரியாதீர்கள். ஆனால் (அங்கு) அவர்கள் உங்களுடன் போரிட்டால், நீங்கள் அவர்களைக் கொல்லுங்கள். நிராகரிப்போருக்கு உரிய கூலி இவ்வாறுதான் (உண்டு).

192. எனவே, (உங்களுடன் போரிடாது) அவர்கள் விலகிக் கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிக்கின்றவன்; மிக்க கிருபையுடையவன்.

193. அன்றியும், குழப்பம் நீங்கி மார்க்கம் அல்லாஹ்விற்கே ஆகும் வரை அவர்களுடன் போர் புரியுங்கள். ஆனால், அவர்கள் (குழப்பம் செய்யாது) விலகிக்கொண்டால், அநியாயக்காரர்கள் மீதே தவிர, (மற்றவர்களைத் துன்புறுத்தி) பகைமை (கொண்டு போர் தொடுத்தல்) கூடாது.

اَلشَّهۡرُ الۡحَرَامُ بِالشَّهۡرِ الۡحَرَامِ وَالۡحُرُمٰتُ قِصَاصٌ ؕ فَمَنِ
اعۡتَدٰى عَلَيۡكُمۡ فَاعۡتَدُوۡا عَلَيۡهِ بِمِثۡلِ مَا اعۡتَدٰى عَلَيۡكُمۡ ۙ
وَاتَّقُوا اللّٰهَ وَاعۡلَمُوۡۤا اَنَّ اللّٰهَ مَعَ الۡمُتَّقِيۡنَ ﴿۱۹۴﴾ وَاَنۡفِقُوۡا فِىۡ
سَبِيۡلِ اللّٰهِ وَلَا تُلۡقُوۡا بِاَيۡدِيۡكُمۡ اِلَى التَّهۡلُكَةِ ۖ ۛ وَاَحۡسِنُوۡا ۛ اِنَّ
اللّٰهَ يُحِبُّ الۡمُحۡسِنِيۡنَ ﴿۱۹۵﴾ وَاَتِمُّوا الۡحَجَّ وَالۡعُمۡرَةَ لِلّٰهِ ؕ فَاِنۡ
اُحۡصِرۡتُمۡ فَمَا اسۡتَيۡسَرَ مِنَ الۡهَدۡىِ ۚ وَلَا تَحۡلِقُوۡا رُءُوۡسَكُمۡ حَتّٰى
يَبۡلُغَ الۡهَدۡىُ مَحِلَّهٗ ؕ فَمَنۡ كَانَ مِنۡكُمۡ مَّرِيۡضًا اَوۡ بِهٖۤ اَذًى مِّنۡ
رَّاۡسِهٖ فَفِدۡيَةٌ مِّنۡ صِيَامٍ اَوۡ صَدَقَةٍ اَوۡ نُسُكٍ ۚ فَاِذَآ اَمِنۡتُمۡ ۟
فَمَنۡ تَمَتَّعَ بِالۡعُمۡرَةِ اِلَى الۡحَجِّ فَمَا اسۡتَيۡسَرَ مِنَ الۡهَدۡىِ ۚ فَمَنۡ
لَّمۡ يَجِدۡ فَصِيَامُ ثَلٰثَةِ اَيَّامٍ فِى الۡحَجِّ وَسَبۡعَةٍ اِذَا رَجَعۡتُمۡ ؕ تِلۡكَ
عَشَرَةٌ كَامِلَةٌ ؕ ذٰلِكَ لِمَنۡ لَّمۡ يَكُنۡ اَهۡلُهٗ حَاضِرِى الۡمَسۡجِدِ
الۡحَرَامِ ؕ وَاتَّقُوا اللّٰهَ وَاعۡلَمُوۡۤا اَنَّ اللّٰهَ شَدِيۡدُ الۡعِقَابِ ﴿۱۹۶﴾ ع اَلۡحَجُّ
اَشۡهُرٌ مَّعۡلُوۡمٰتٌ ۚ فَمَنۡ فَرَضَ فِيۡهِنَّ الۡحَجَّ فَلَا رَفَثَ وَلَا فُسُوۡقَ
وَلَا جِدَالَ فِى الۡحَجِّ ؕ وَمَا تَفۡعَلُوۡا مِنۡ خَيۡرٍ يَّعۡلَمۡهُ اللّٰهُ ؔؕ وَتَزَوَّدُوۡا
فَاِنَّ خَيۡرَ الزَّادِ التَّقۡوٰى ۚ وَاتَّقُوۡنِ يٰۤاُولِى الۡاَلۡبَابِ ﴿۱۹۷﴾

مع — عند المتقدمین ۱۱

۲۴ ع ۸

وقف النبی ﷺ

194. (யுத்தம் செய்வது தடுக்கப்பட்டுள்ள ரஜப், துல் கஅதா, துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய) புனித மாதத்திற்கு புனித மாதமே ஈடாகும். புனிதப்படுத்தப்பட்டவை (அவற்றின் புனிதம் சீர் குலைக்கப்பட்டால்அவை)களுக்கும் பழிவாங்குதல் உண்டு. ஆதலால், எவரேனும் மீறி உங்கள்மீது (போர்புரிய) வந்தால், அவர் உங்கள்மீது மீறியதுபோன்று நீங்களும் அவர்மீது மீறி(போர்புரிய)ச் செல்லுங்கள். மேலும், நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ், பயபக்தியாளர்களுடன் இருக்கின்றான் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

195. இன்னும், நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுங்கள். (உங்களை நீங்களே ஆபத்திற்குள்ளாக்கிக் கொண்டு) உங்களது கரங்களை அழிவின்பக்கம் கொண்டும் செல்லாதீர்கள். (பிறருக்கு) நன்மையும் செய்யுங்கள். (பிறருக்கு) நன்மை செய்கிறவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கின்றான்.

196. மேலும், ஹஜ்ஜையும், உம்ராவையும் நீங்கள் அல்லாஹ்வுக்காக நிறைவு செய்யுங்கள். ஆனால், (இஹ்ராமுடைய நிலையில் வழியில்) நீங்கள் தடுக்கப்பட்டு (ஹஜ்ஜையும், உம்ராவையும் பூரணமாக்க முடியா)விட்டால், ஹத்யு (என்னும் ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவை)களில் சாத்தியமானது (உங்கள் மீது) உண்டு. மேலும், ஹத்யு(க்கள்) தாம் சென்றடைய வேண்டிய தலத்தை (அறுக்குமிடமான மினாவை) அடையும் வரை நீங்கள் உங்கள் தலைகளை (அவற்றின் முடியை)ச் சிரைத்துக் கொள்ளாதீர்கள். உங்களில் எவர் நோயாளியாகவோ அல்லது அவரது தலையில் (அவருக்கு) தொந்தரவளிக்கக்கூடியதோ இருந்தால் (அந்நிலையில் அவர் தலைரோமத்தைக் களைந்துவிடின்) அதற்கு (மூன்று) நோன்புகள் நோற்றல், அல்லது (ஆறு ஏழைகளுக்கு உணவு) தர்மம் செய்தல், அல்லது ஹத்யு (ஓர் ஆடு) கொடுத்தல் ஆகியவற்றிலிருந்து (ஏதாவது ஒன்று) பரிகாரமாக இருக்கும். (தடுக்கப்பட்ட நிலையின் மூலம் ஏற்பட்ட பயம் நீங்கி) அபயமுடையவர்களாக நீங்கள் ஆகிவிட்டால் எவரேனும் ஹஜ் வரை உம்ராச்செய்யும் சவுகரியத்தை பெற்றவ(ராகி உம்ராவை முடித்துக்கொண்டு ஹஜ்ஜின்பால் செல்வா)ரானால் ஹத்யுவிலிருந்து (நிறைவேற்ற) அவருக்கு எது இயலுமோ அது அவரின் மீ(து கடமையான)தாகும். ஆனால், (ஹத்யுவில் எதையுமே) பெற்றுக்கொள்ளாதவர், ஹஜ்ஜி(ன் காலத்தி)ல் மூன்று நாட்களும், நீங்கள் (இருப்பிடம்) திரும்பியபின் ஏழு (நாட்களு)ம் நோன்பு நோற்க வேண்டும். அவை பூரணமான பத்து (நாட்கள்) ஆகும். (நோன்பு நோற்பது கடமை என்பதான) அது எவருடைய குடும்பம் மஸ்ஜிதுல் ஹராமில் (மக்காவில் குடி) இருக்க வில்லையோ அவருக்குரியதாகும்.ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ், வேதனை செய்வதில் மிகக் கடுமையானவன் என்பதையும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். (6)

197. ஹஜ்ஜுக்குரிய காலம் (ஷவ்வால், துல்கஅதா, துல்ஹஜ் மாதத்தின் பத்தாம் நாள் அதிகாலை வரையுள்ள) அறியப்பட்ட மாதங்களாகும். ஆகவே, அவற்றில் எவரொருவர் (இஹ்ராம் கட்டுவதன் மூலம்) ஹஜ்ஜை (த்தன் மீது) கடமையாக்கிக்கொண்டால், தாம்பத்திய உறவு கொள்வதும், கெட்ட பேச்சுக்கள் பேசுவதும், வீண் தர்க்கம் செய்வதும் ஹஜ்ஜில் கூடாது. இன்னும் நன்மைகளால் நீங்கள் செய்யும் ஒவ்வொன்றையும், அல்லாஹ் அறிவான். ஆகவே (ஹஜ்ஜுடைய பிரயாணத்திற்கு வேண்டியவற்றை) தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக தயார் செய்யப்பட வேண்டியவற்றில் மிகச்சிறந்தது பயபக்தியே ஆகும். ஆகவே நல்லறிவுடையோர்களே ! என்னையே பயந்து (நடந்து) கொள்ளுங்கள்.

لَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ اَنْ تَبْتَغُوْا فَضْلًا مِّنْ رَّبِّكُمْ ؕ
فَاِذَآ اَفَضْتُمْ مِّنْ عَرَفٰتٍ فَاذْكُرُوا اللّٰهَ عِنْدَ
الْمَشْعَرِ الْحَرَامِ ۪ وَاذْكُرُوْهُ كَمَا هَدٰىكُمْ ۚ وَاِنْ
كُنْتُمْ مِّنْ قَبْلِهٖ لَمِنَ الضَّآلِّيْنَ ﴿۱۹۸﴾ ثُمَّ اَفِيْضُوْا مِنْ
حَيْثُ اَفَاضَ النَّاسُ وَاسْتَغْفِرُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ
غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۹۹﴾ فَاِذَا قَضَيْتُمْ مَّنَاسِكَكُمْ
فَاذْكُرُوا اللّٰهَ كَذِكْرِكُمْ اٰبَآءَكُمْ اَوْ اَشَدَّ ذِكْرًا ؕ فَمِنَ
النَّاسِ مَنْ يَّقُوْلُ رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنْيَا وَمَا
لَهٗ فِى الْاٰخِرَةِ مِنْ خَلَاقٍ ﴿۲۰۰﴾ وَمِنْهُمْ مَّنْ يَّقُوْلُ
رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَّفِى الْاٰخِرَةِ حَسَنَةً وَّ
قِنَا عَذَابَ النَّارِ ﴿۲۰۱﴾ اُولٰٓئِكَ لَهُمْ نَصِيْبٌ مِّمَّا كَسَبُوْا ؕ
وَاللّٰهُ سَرِيْعُ الْحِسَابِ ﴿۲۰۲﴾ وَاذْكُرُوا اللّٰهَ فِىْٓ النصف
اَيَّامٍ مَّعْدُوْدٰتٍ ؕ فَمَنْ تَعَجَّلَ فِىْ يَوْمَيْنِ فَلَآ اِثْمَ
عَلَيْهِ ۚ وَمَنْ تَاَخَّرَ فَلَآ اِثْمَ عَلَيْهِ ۙ لِمَنِ
اتَّقٰى ؕ وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْٓا اَنَّكُمْ اِلَيْهِ تُحْشَرُوْنَ ﴿۲۰۳﴾

198. (ஹஜ்ஜுப் பிரயாணத்தின் போது) நீங்கள் (வியாபாரம் செய்து அதன் மூலம்) உங்கள் இரட்சகனிடமிருந்து பேரருளைத் தேடிக்கொள்வது உங்கள் மீது குற்றமல்ல; பின்னர் நீங்கள், அரபாத்(என்னுமிடத்)திலிருந்து திரும்புவீர்களாயின் மஷ்அருல் ஹராம் (முஜ்தலிபா) என்னும் இடத்தில் அல்லாஹ்வை நினைவுகூருங்கள்; இன்னும் உங்களுக்கு அவன் நேர்வழி காட்டியதற்கொப்ப அவனை நனைவு கூருங்கள்; இன்னும், நிச்சயமாக இதற்கு முன் நீங்கள் வழிதவறியவர்களில் இருந்தீர்கள்.

199. பின்னர், மனிதர்கள் திரும்புகின்ற (முஜ்தலிபா என்னும்) இடத்திலிருந்து, நீங்களும் (மினாவுக்குத்) திரும்பிவிடுங்கள்; இன்னும் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ், மிக்க மன்னிக்கிறவன், மிகக்கிருபையுடையவன்.

200. உங்களுடைய (ஹஜ்ஜின்) கிரியைகளை நீங்கள் நிறைவேற்றிவிட்டால், (அறியாமை காலத்தில்) உங்கள் மூதாதையர்களை நீங்கள் நினைவு கூர்வது போல், அல்லது அதை விட அதிகமாக அல்லாஹ்வை நினைவு கூருங்கள்; ஆகவே, மனிதர்களில்(சிலர்) "எங்கள் இரட்சகனே! எங்களுக்கு (எல்லாவற்றையும்) இம்மையிலேயே அளித்து விடுவாயாக!" என்று கூறுவோரும் இருக்கின்றனர்; ஆனால்,இ(வ்வாறு கோருகின்ற)வருக்கு மறுமையில் யாதொரு பாக்கியமுமில்லை.

201. "எங்கள் இரட்சகனே! இம்மையில் நல்லதையும், மறுமையில் நல்லதையும் எங்களுக்குத் தந்தருள்வாயாக! இன்னும் நரக நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக" என்று கூறுவோரும் அவர்களில், இருக்கின்றனர்.

202 (இவ்வாறு இம்மை,மறுமை ஆகிய இரண்டின் நற்பேறுகளைக் கேட்கின்ற) அத்தகையோர்_ அவர்களுக்குத்தான் அவர்கள் சம்பாதித்தவற்றில் பங்குண்டு. இன்னும் அல்லாஹ் கணக்குத்தீர்ப்பதில் தீவிரமானவன்.

203. (மினாவில் தங்கியிருந்து) எண்ணிவிடப்பட்ட (மூன்று) நாட்களில் அல்லாஹ்வை நினைவு கூருங்கள். ஆகவே எவரொருவர் இரண்டு நாட்களில் அவசரப்பட்டு(ப் புறப்பட்டு) விட்டால் அவர் மீது குற்றமில்லை. எவரொருவர் (மூன்றாம் நாள் வரைப்) பிற்பட்(டுப் புறப்பட்)டால் அவர்மீதும் குற்றமில்லை. (இது) யார் (அல்லாஹ்வாகிய) அவனை பயந்து நடக்கிறார்களோ அவர்களுக்கு (உரியதாகும்.) இன்னும், (விசுவாசிகளே!) நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். அன்றியும், அல்லாஹ்வின் பக்கமே நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

وَمِنَ النَّاسِ مَنْ يُّعْجِبُكَ قَوْلُهٗ فِى الْحَيٰوةِ الدُّنْيَا وَيُشْهِدُ
اللّٰهَ عَلٰى مَا فِىْ قَلْبِهٖ ۙ وَهُوَ اَلَدُّ الْخِصَامِ ﴿۲۰۴﴾ وَاِذَا تَوَلّٰى سَعٰى
فِى الْاَرْضِ لِيُفْسِدَ فِيْهَا وَيُهْلِكَ الْحَرْثَ وَالنَّسْلَ ؕ وَاللّٰهُ
لَا يُحِبُّ الْفَسَادَ ﴿۲۰۵﴾ وَاِذَا قِيْلَ لَهُ اتَّقِ اللّٰهَ اَخَذَتْهُ
الْعِزَّةُ بِالْاِثْمِ فَحَسْبُهٗ جَهَنَّمُ ؕ وَلَبِئْسَ الْمِهَادُ ﴿۲۰۶﴾ وَمِنَ
النَّاسِ مَنْ يَّشْرِىْ نَفْسَهُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ ؕ وَ
اللّٰهُ رَءُوْفٌۢ بِالْعِبَادِ ﴿۲۰۷﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا
ادْخُلُوْا فِى السِّلْمِ كَآفَّةً ۠ وَلَا تَتَّبِعُوْا خُطُوٰتِ
الشَّيْطٰنِ ؕ اِنَّهٗ لَكُمْ عَدُوٌّ مُّبِيْنٌ ﴿۲۰۸﴾ فَاِنْ زَلَلْتُمْ مِّنْۢ
بَعْدِ مَا جَآءَتْكُمُ الْبَيِّنٰتُ فَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ عَزِيْزٌ
حَكِيْمٌ ﴿۲۰۹﴾ هَلْ يَنْظُرُوْنَ اِلَّآ اَنْ يَّاْتِيَهُمُ اللّٰهُ فِىْ
ظُلَلٍ مِّنَ الْغَمَامِ وَالْمَلٰٓئِكَةُ وَقُضِىَ الْاَمْرُ ؕ
۲۵ ع ۹ وَاِلَى اللّٰهِ تُرْجَعُ الْاُمُوْرُ ﴿۲۱۰﴾ ع سَلْ بَنِىْۤ اِسْرَآءِيْلَ كَمْ
اٰتَيْنٰهُمْ مِّنْ اٰيَةٍۭ بَيِّنَةٍ ؕ وَمَنْ يُّبَدِّلْ نِعْمَةَ اللّٰهِ
مِنْۢ بَعْدِ مَا جَآءَتْهُ فَاِنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ ﴿۲۱۱﴾

204. மேலும் , (நபியே ! அற்ப) இவ்வுலக வாழ்க்கையில் எவனுடைய கூற்று உம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துமோ அவனும் மனிதர்களில் இருக்கின்றான். அவன் (உம்மீது அன்பு கொண்டிருப்பதாகக் கூறி) தன் இதயத்திலுள்ளவற்றின் மீது அல்லாஹ்வைச் சாட்சியாக்குவான். (உண்மையில்) அவன்தான் (உண்மையை மறைக்க) கடும் தர்க்கம் செய்பவன் (உம்முடைய கொடிய விரோதியுமானவன்).

205. *அவன் (உங்களிலிருந்து) திரும்பிவிட்டால், பூமியில் குழப்பம் விளைவிக்கவும், விவசாயத்தையும், சந்ததியையும் (அழித்து)நாசமாக்கி விடவும்அதில் முயற்சி செய்கின்றான். இன்னும், அல்லாஹ் குழப்பத்தை விரும்பமாட்டான்.*

206. *இன்னும் "நீ அல்லாஹ்வுக்குப்பயந்துகொள்! " என அவனுக்குக் கூறப்பட்டால், (அவனுடைய) கௌரவம் பாவத்தை(ச் செய்வது)க் கொண்டே அவனை பிடித்(திழுத்)துக்கொள்கின்றது; ஆகவே, அவனுக்கு நரகமே போதுமானது; இன்னும், நிச்சயமாக தங்குமிடத்தில் அது மிகக் கெட்டது.*

207. *இன்னும் அல்லாஹ்வின் பொருத்தத்தைத் தேடிப் பெறுவதற்காகத் தன்னை விற்றுவிடக் கூடியவர்களும் மனிதர்களில் இருக்கிறார்கள்; மேலும், அல்லாஹ் (இத்தகைய) அடியார்கள் மீது மிகவும் இரக்கம் காட்டுபவன்.*

208. *விசுவாசங்கொண்டோரே! நீங்கள், இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்து விடுங்கள்;அன்றியும், ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின் பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான விரோதியாவான்.*

209. *எனவே, தெளிவான ஆதாரங்கள் உங்களிடம் வந்த பின்னும், நீங்கள் சறுகிவிடுவீர்களானால், (உங்களைத் தண்டிப்பதில்,) நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன்;தீர்க்கமான அறிவுடையவன் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.*

210. *அல்லாஹ்வும், மலக்குகளும் மேகத்தின் நிழல்களில் அவர்களிடம் வந்து, (அவர்களை அழித்து, அவர்களின்) காரியம் முடிக்கப்படுவதைத் தவிர, (மற்றெதையும்) அவர்கள் எதிர்பார்க்கின்றார்களா? (அவர்களுடைய) சகல காரியங்களும் அல்லாஹ்வின்பால் மீட்டப்படும்.*

211. *தெளிவான அத்தாட்சியிலிருந்து எத்தனையை நாம் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று (நபியே!) இஸ்ராயீலின் சந்ததிகளை நீர் கேட்பீராக! (அவ்வாறிருக்க அவர்களில்) எவர் அல்லாஹ்வுடைய அருட்கொடையை அது தம்மிடம் வந்ததன் பின் மாற்றிவிடுகிறாரோ அப்பொழுது,(அவரை) தண்டனைசெய்வதில் நிச்சயமாக அல்லாஹ் மிகக் கடுமையானவன்.*

زُيِّنَ لِلَّذِيْنَ كَفَرُوا الْحَيٰوةُ الدُّنْيَا وَيَسْخَرُوْنَ مِنَ الَّذِيْنَ
اٰمَنُوْا ۘ وَالَّذِيْنَ اتَّقَوْا فَوْقَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ ؕ وَاللّٰهُ يَرْزُقُ وقف لازم
مَنْ يَّشَآءُ بِغَيْرِ حِسَابٍ ﴿۲۱۲﴾ كَانَ النَّاسُ اُمَّةً وَّاحِدَةً ۫ قف
فَبَعَثَ اللّٰهُ النَّبِيّٖنَ مُبَشِّرِيْنَ وَمُنْذِرِيْنَ ۪ وَاَنْزَلَ مَعَهُمُ
الْكِتٰبَ بِالْحَقِّ لِيَحْكُمَ بَيْنَ النَّاسِ فِيْمَا اخْتَلَفُوْا
فِيْهِ ؕ وَمَا اخْتَلَفَ فِيْهِ اِلَّا الَّذِيْنَ اُوْتُوْهُ مِنْۢ بَعْدِ مَا
جَآءَتْهُمُ الْبَيِّنٰتُ بَغْيًۢا بَيْنَهُمْ ۚ فَهَدَى اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا
لِمَا اخْتَلَفُوْا فِيْهِ مِنَ الْحَقِّ بِاِذْنِهٖ ؕ وَاللّٰهُ يَهْدِيْ مَنْ يَّشَآءُ
اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿۲۱۳﴾ اَمْ حَسِبْتُمْ اَنْ تَدْخُلُوا الْجَنَّةَ وَ
لَمَّا يَاْتِكُمْ مَّثَلُ الَّذِيْنَ خَلَوْا مِنْ قَبْلِكُمْ ؕ مَسَّتْهُمُ
الْبَاْسَآءُ وَالضَّرَّآءُ وَزُلْزِلُوْا حَتّٰى يَقُوْلَ الرَّسُوْلُ
وَالَّذِيْنَ اٰمَنُوْا مَعَهٗ مَتٰى نَصْرُ اللّٰهِ ؕ اَلَاۤ اِنَّ نَصْرَ اللّٰهِ
قَرِيْبٌ ﴿۲۱۴﴾ يَسْـَٔلُوْنَكَ مَاذَا يُنْفِقُوْنَ ؕ قُلْ مَاۤ اَنْفَقْتُمْ مِّنْ
خَيْرٍ فَلِلْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنِ وَابْنِ
السَّبِيْلِ ؕ وَمَا تَفْعَلُوْا مِنْ خَيْرٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ ﴿۲۱۵﴾

212. நிராகரித்து விட்டார்களே அத்தகையவர்களுக்கு, இவ்வுலக வாழ்க்கை அலங்காரமாக்கப் பட்டிருக்கின்றது. (அதனால் மமதை கொண்டு) அவர்கள் விசுவாசங்கொண்டிருந்தோரை பரிகசிக்கவும் செய்கிறார்கள். (ஆனால் அல்லாஹ்வை) பயந்து நடந்தார்களே, அத்தகையவர்கள் மறுமை நாளில் இவர்களுக்கு மேலாகவும் இருப்பார்கள். மேலும், அல்லாஹ் தான் நாடியவருக்குக் கணக்கின்றியே அளிப்பான்.

213. (ஆரம்பத்தில்) மனிதர்கள் (யாவரும்) ஒரே கூட்டத்தவராகவே இருந்தனர். பிறகு (நன்மை செய்வோருக்கு), நன்மாராயங்கூறக்கூடியவர்களாகவும் , (தீமை செய்வோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியவர்களாகவும் அல்லாஹ், நபிமார்களை அனுப்பி வைத்தான். மேலும், அம்மனிதர்களிடையே எதில் அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்களோ அதில் அவன் தீர்ப்புச் செய்வதற்காக, அவர்களோடு சத்தியத்தைக் கொண்டுள்ள வேதத்தையும் இறக்கிவைத்தான். மேலும், அவர்களுக்குத் தெளிவான அத்தாட்சிகள் வந்ததன் பின்னர், தம்மிடையே உள்ள பொறாமையின் காரணமாக அதைக் கொடுக்கப் பட்டவர்கள் தவிர (மற்றெவரும்) அதில் மாறுபடவில்லை. ஆகவே, உண்மை யிலிருந்து எதில் அவர்கள் மாறுபட்டிருந்தார்களோ அதன்பக்கம் தன் அனுமதி கொண்டு அல்லாஹ் விசுவாசங்கொண்டோருக்கு ( நேர்) வழி காட்டினான். இன்னும், தான் நாடியவரை அல்லாஹ் நேரான வழியில் செலுத்துகிறான்.

214. (விசுவாசங்கொண்டோரே!) உங்களுக்கு முன் சென்று விட்டார்களே அத்தகையோரின் உதாரணம் (சோதனை நிறைந்த நிலைகள்)உங்களுக்கு வராத நிலையில் நீங்கள் சுவர்க்கத்தில் நுழைந்துவிடலாமென்று எண்ணிக் கொண்டீர்களா? அவர்களை வறுமையும்,பிணியும் பீடித்தன. தூதரும், அவருடன் விசுவாசங்கொண்டவர்களும், அல்லாஹ்வுடைய உதவி எப்பொழுது(வந்து சேரும்) என்று கூறும்வரை அவர்கள் (இன்னல்கள் பலவற்றால்) அலைக்கழிக்கப் பட்டு விட்டார்கள். "தெரிந்து கொள்ளுங்கள் அல்லாஹ்வுடைய உதவி நிச்சயமாக மிகச் சமீபத்திலிருக்கிறது" (என்று கூறப்பட்டது).

215. (நபியே !) "எதை(யாருக்கு)ச் செலவு செய்வது ? " என்று உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறுவீராக : "(நன்மையை நாடி) நீங்கள் பொருளிலிருந்து செலவு செய்வது பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்கும் உரியதாகும்; இன்னும் நன்மையையிலிருந்து(எதையும்)நீங்கள் செய்தால், நிச்சயமாக அல்லாஹ் அதனை நன்கறிகிறவன்."

كُتِبَ عَلَيْكُمُ الْقِتَالُ وَهُوَ كُرْهٌ لَّكُمْ ۚ وَعَسٰٓى اَنْ تَكْرَهُوْا شَيْئًا
وَّهُوَ خَيْرٌ لَّكُمْ ۚ وَعَسٰٓى اَنْ تُحِبُّوْا شَيْئًا وَّهُوَ شَرٌّ لَّكُمْ ؕ وَاللّٰهُ
يَعْلَمُ وَاَنْتُمْ لَا تَعْلَمُوْنَ ﴿۲۱۶﴾ يَسْـَٔلُوْنَكَ عَنِ الشَّهْرِ الْحَرَامِ ع ۲۶/۶/۱۰
قِتَالٍ فِيْهِ ؕ قُلْ قِتَالٌ فِيْهِ كَبِيْرٌ ؕ وَصَدٌّ عَنْ سَبِيْلِ اللّٰهِ وَ
كُفْرٌۢ بِهٖ وَالْمَسْجِدِ الْحَرَامِ ۗ وَاِخْرَاجُ اَهْلِهٖ مِنْهُ اَكْبَرُ عِنْدَ
اللّٰهِ ۚ وَالْفِتْنَةُ اَكْبَرُ مِنَ الْقَتْلِ ؕ وَلَا يَزَالُوْنَ يُقَاتِلُوْنَكُمْ
حَتّٰى يَرُدُّوْكُمْ عَنْ دِيْنِكُمْ اِنِ اسْتَطَاعُوْا ؕ وَمَنْ يَّرْتَدِدْ
مِنْكُمْ عَنْ دِيْنِهٖ فَيَمُتْ وَهُوَ كَافِرٌ فَاُولٰٓئِكَ حَبِطَتْ
اَعْمَالُهُمْ فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ ۚ وَاُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ
هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿۲۱۷﴾ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَالَّذِيْنَ هَاجَرُوْا
وَجٰهَدُوْا فِىْ سَبِيْلِ اللّٰهِ ۙ اُولٰٓئِكَ يَرْجُوْنَ رَحْمَتَ اللّٰهِ ؕ
وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۲۱۸﴾ يَسْـَٔلُوْنَكَ عَنِ الْخَمْرِ وَالْمَيْسِرِ ؕ
قُلْ فِيْهِمَآ اِثْمٌ كَبِيْرٌ وَّمَنَافِعُ لِلنَّاسِ ۟ وَاِثْمُهُمَآ اَكْبَرُ
مِنْ نَّفْعِهِمَا ؕ وَيَسْـَٔلُوْنَكَ مَاذَا يُنْفِقُوْنَ ۬ قُلِ الْعَفْوَ ؕ
كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمُ الْاٰيٰتِ لَعَلَّكُمْ تَتَفَكَّرُوْنَ ﴿۲۱۹﴾

216. (விசுவாசிகளே! இஸ்லாத்தைக் காக்கும் பொருட்டு) போர்செய்வது_ அதுவோ உங்களுக்கு வெறுப்பாக இருக்க, உங்கள் மீது கடமையாக்கப் பட்டுள்ளது; இன்னும், ஒரு பொருளை அது உங்களுக்கு நன்மையாக இருக்க (அதை) நீங்கள் வெறுக்கலாம், இன்னும், ஒரு பொருளை அது உங்களுக்குத் தீமை யாக இருக்க (அதை) நீங்கள் விரும்பலாம்; (அவற்றில் நண்மை உண்டா? இல்லையா? என்பதை) அல்லாஹ்வே அறிவான்; நீங்களோ அறியமாட்டீர்கள்.

217. (நபியே! துல்கஅதா, துல் ஹஜ், முஹர்ரம், ரஜப் ஆகிய போர் செய்யத் தடை செய்யப்பட்ட) புனிதமான மாதம் பற்றி_ அதில் யுத்தம் செய்வதைப் பற்றி, உம்மிடம் அ(ந் நிராகரிப்ப)வர்கள் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறுவீராக: "அ(ம் மாதத்)தில் போரிடுவது பெரிதா(ன குற்றமா)கும். ஆனால், அல்லாஹ்வுடைய பாதையை விட்டும் (மனிதர்களை நீங்கள்) தடுப்பதும், அவனை நிராகரிப்பதும், மஸ்ஜிதுல் ஹறாமை விட்டும் (ஜனங்களை வரவிடாது) தடுப்பதும், அதில் வசிப்போரை அதிலிருந்து வெளியேற்றுவதும், அல்லாஹ்விடத்தில் மிகப்பெரிதா(ன குற்றங்களா)கும். மேலும் குழப்பம் செய்வது, கொலையைவிட மிகப் பெரிதாகும்; மேலும், (காஃபிர்களாகிய) அவர்கள் சக்திபெறுவார்களாயின், உங்களை உங்களுடைய மார்க்கத்தை விட்டும் திருப்பிவிடும்வரை, உங்களுடன் ஓயாது போரிட்டுக் கொண்டே யிருப்பார்கள். ஆகவே, உங்களிலிருந்து எவரேனும் தம்மார்க்கத்தை விட்டு (மதம்) மாறி, நிராகரித்தவராகவே இறந்துவிட்டால், அத்தகையோர்_ அவர்களின் (நற்) செயல்கள், இம்மையிலும், மறுமையிலும் அழிந்துவிடும். மேலும், அத்தகையோர் நரகவாசிகளாவர்; அவர்கள் அதில் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்.

218. நிச்சயமாக விசுவாசங்கொண்டோரும், (அல்லாஹ்விற்காக) தம் நாட்டைத் துறந்து (ஹிஜ்ரத் செய்து) சென்றோரும், அல்லாஹ்வுடைய பாதையில் யுத்தம் (ஜிஹாத்) புரிகின்றோரும் _(ஆகிய) இத்தகையோர் அல்லாஹ்வின் கருணையை ஆதரவு வைக்கிறார்கள். மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மிகக் கிருபையுடையவன்.

219. (நபியே!) மதுவையும், சூதாட்டத்தையும்பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறுவீராக: "அவ்விரண்டிலும் பெரும் பாவமும், மனிதர்களுக்கு(ச் சில) பலன்களுமிருக்கின்றன. மேலும், அவ்விரண்டின் பாவம், அவ்விரண்டின் பலனை விட மிகப்பெரியதாகும்; (நபியே! "தர்மத்திற்காக) எதைச் செலவு செய்வது?" என்றும் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் ("தங்கள் தேவைக்குச் செலவு செய்தது போக) எஞ்சியிருப்பதை" எனக்கூறுவீராக! இவ்வாறே நீங்கள் சிந்தித்துணர்வதற்காக, உங்களுக்கு அல்லாஹ் (தனது வசனங்களை) தெளிவாக்குகிறான்.

فِي الدُّنْيَا وَالْاٰخِرَةِ ۭ وَيَسْـَٔلُوْنَكَ عَنِ الْيَتٰمٰى ۭ قُلْ اِصْلَاحٌ
لَّهُمْ خَيْرٌ ۭ وَاِنْ تُخَالِطُوْهُمْ فَاِخْوَانُكُمْ ۭ وَاللّٰهُ يَعْلَمُ الْمُفْسِدَ
مِنَ الْمُصْلِحِ ۭ وَلَوْ شَاۗءَ اللّٰهُ لَاَعْنَتَكُمْ ۭ اِنَّ اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿۲۲۰﴾
وَلَا تَنْكِحُوا الْمُشْرِكٰتِ حَتّٰى يُؤْمِنَّ ۭ وَلَاَمَةٌ مُّؤْمِنَةٌ خَيْرٌ مِّنْ
مُّشْرِكَةٍ وَّلَوْ اَعْجَبَتْكُمْ ۚ وَلَا تُنْكِحُوا الْمُشْرِكِيْنَ حَتّٰى يُؤْمِنُوْا ۭ
وَلَعَبْدٌ مُّؤْمِنٌ خَيْرٌ مِّنْ مُّشْرِكٍ وَّلَوْ اَعْجَبَكُمْ ۭ اُولٰۗىِٕكَ
يَدْعُوْنَ اِلَى النَّارِ ښ وَاللّٰهُ يَدْعُوْٓا اِلَى الْجَنَّةِ وَالْمَغْفِرَةِ
ع ۲۷ ۵ ۱۱ بِاِذْنِهٖ ۚ وَيُبَيِّنُ اٰيٰتِهٖ لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَذَكَّرُوْنَ ﴿۲۲۱﴾ ع وَ
يَسْـَٔلُوْنَكَ عَنِ الْمَحِيْضِ ۭ قُلْ هُوَ اَذًى ۙ فَاعْتَزِلُوا النِّسَاۗءَ فِي
الْمَحِيْضِ ۙ وَلَا تَقْرَبُوْهُنَّ حَتّٰى يَطْهُرْنَ ۚ فَاِذَا تَطَهَّرْنَ فَاْتُوْهُنَّ
مِنْ حَيْثُ اَمَرَكُمُ اللّٰهُ ۭ اِنَّ اللّٰهَ يُحِبُّ التَّوَّابِيْنَ وَيُحِبُّ
الْمُتَطَهِّرِيْنَ ﴿۲۲۲﴾ نِسَاۗؤُكُمْ حَرْثٌ لَّكُمْ ۠ فَاْتُوْا حَرْثَكُمْ اَنّٰى شِئْتُمْ ۡ
وَقَدِّمُوْا لِاَنْفُسِكُمْ ۭ وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْٓا اَنَّكُمْ مُّلٰقُوْهُ ۭ وَ
بَشِّرِ الْمُؤْمِنِيْنَ ﴿۲۲۳﴾ وَلَا تَجْعَلُوا اللّٰهَ عُرْضَةً لِّاَيْمَانِكُمْ اَنْ
تَبَرُّوْا وَتَتَّقُوْا وَتُصْلِحُوْا بَيْنَ النَّاسِ ۭ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿۲۲۴﴾

220.(அதனால்) இம்மையில், மற்றும் மறுமையில் (ஏற்படும் நன்மைகளை நீங்கள் சிந்திப்பதற்காக அல்லாஹ் தன் வசனங்களை இவ்வாறு தெளிவு செய்கிறான்). மேலும் அநாதைகளைப் பற்றி (நபியே!) அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். (அதற்கு) நீர் கூறுவீராக: அவர்களுக்குரிய சீர்திருத்தத்தைச் செய்தல் மிக்க நலமாகும்; மேலும் நீங்கள் அவர்களுடன் கலந்திருந்தால், அப்போது (அவர்கள்) உங்களுடைய சகோதரர்களாவர்; இன்னும் சீர்திருத்துபவனிலிருந்து குழப்பம் உண்டாக்குபவனை அல்லாஹ் நன்கறிவான்; மேலும், அல்லாஹ்நாடினால் உங்களை சிரமத்திற்குள்ளாக்கிவிடுவான். நிச்சயமாக அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

221. மேலும், (விசுவாசிகளே! அல்லாஹ்வுக்கு) இணைவைக்கும் பெண்களை_ அவர்கள் விசுவாசங்கொள்ளும் வரை நீங்கள் திருமணம் செய்யாதீர்கள். (ஏனென்றால்) இணைவைக்கும் ஒரு பெண்ணைவிட _ அவள் உங்களைக் கவரக்கூடியவளாக இருப்பினும்_ விசுவாசியான ஓர் அடிமைப் பெண் மிகச்சிறந்தவளாவாள்; மேலும், இணை வைக்கும் ஆண்கள், விசுவாசங்கொள்ளும் வரை(அவர்களுக்கு விசுவாசியான பெண்களை) நீங்கள் திருமணம் செய்து கொடுக்காதீர்கள்; இணைவைக்கும் ஒரு ஆணைவிட _ அவன் உங்களைக் கவரக் கூடியவனாக இருப்பினும்_ ஒரு விசுவாசியான அடிமை மிகச்சிறந்தவனாவான்; அவர்கள் நரகத்திற்கு அழைக்கிறார்கள். ஆனால் அல்லாஹ்வோ தன் உத்தரவு கொண்டு சொர்க்கத்தின்பாலும், (தன்னுடைய) மன்னிப்பின்பாலும் (உங்களை) அழைக்கின்றான். மேலும், மனிதர்களுக்கு, அவர்கள் நினைவில் கொள்வதற்காக தன்னுடைய வசனங்களை விளக்குகிறான்.

222. மேலும்,(நபியே!) மாதவிடாய் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறுவீராக: "அது ஓர் அசௌகரியமாகும்; எனவே, மாதவிடாய்க் காலத்தில் பெண்களை விட்டு விலகி இருங்கள்; மேலும், அவர்கள் (உதிரப் போக்கிலிருந்து)சுத்தமாகும் வரை அவர்களை அணுகாதீர்கள்; அவர்கள் சுத்தமாகி (குளித்து)விட்டால், அல்லாஹ் உங்களை ஏவிய முறைப்படி அவர்களிடம் வாருங்கள். நிச்சயமாக பச்சாதாபப்பட்டுமீளுகிறவர்களை அல்லாஹ்நேசிக்கிறான்; தூய்மையாக இருப்பவர்களையும் அவன் நேசிக்கிறான்."

223. உங்கள் மனைவியர் உங்களுக்குரிய விளைநிலங்கள். ஆகவே, உங்கள் விளைநிலங்களுக்கு நீங்கள் விரும்பியவாறு வாருங்கள். உங்களுக்காக (நன்மைகளை) முற்படுத்திக் கொள்ளுங்கள்; இன்னும், அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் அவனைச் சந்திக்கக் கூடியவர்கள் என்பதையும் உறுதியாக அறிந்துகொள்ளுங்கள். மேலும், (நபியே!) விசுவாசிகளுக்கு நன்மாராயங் கூறுவீராக!

224. இன்னும், நீங்கள் நன்மை செய்வதற்கும், பயபக்தியுடையவர்களாக நீங்கள் இருப்பதற்கும், மனிதர்களுக்கிடையில் நீங்கள் சமாதானம் செய்து வைப்பதற்கும் (அல்லாஹ்வைக் கொண்டு நீங்கள்செய்யும்) உங்களுடைய சத்தியங்களுக்காக அல்லாஹ்வைத் தடையாக ஆக்காதீர்கள். அல்லாஹ் (உங்கள் கூற்றை) செவியேற்கிறவன், (உங்கள் செயலை) நன்கறிகிறவன்.(7)

لَا يُؤَاخِذُكُمُ اللّٰهُ بِاللَّغْوِ فِيْٓ اَيْمَانِكُمْ وَلٰكِنْ يُّؤَاخِذُكُمْ
بِمَا كَسَبَتْ قُلُوْبُكُمْ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ حَلِيْمٌ ﴿۲۲۵﴾ لِلَّذِيْنَ يُؤْلُوْنَ
مِنْ نِّسَآئِهِمْ تَرَبُّصُ اَرْبَعَةِ اَشْهُرٍ ۚ فَاِنْ فَآءُوْ فَاِنَّ اللّٰهَ
غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۲۲۶﴾ وَاِنْ عَزَمُوا الطَّلَاقَ فَاِنَّ اللّٰهَ سَمِيْعٌ
عَلِيْمٌ ﴿۲۲۷﴾ وَالْمُطَلَّقٰتُ يَتَرَبَّصْنَ بِاَنْفُسِهِنَّ ثَلٰثَةَ قُرُوْٓءٍ ؕ وَلَا
يَحِلُّ لَهُنَّ اَنْ يَّكْتُمْنَ مَا خَلَقَ اللّٰهُ فِيْٓ اَرْحَامِهِنَّ اِنْ كُنَّ
يُؤْمِنَّ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ؕ وَبُعُوْلَتُهُنَّ اَحَقُّ بِرَدِّهِنَّ فِيْ
ذٰلِكَ اِنْ اَرَادُوْٓا اِصْلَاحًا ؕ وَلَهُنَّ مِثْلُ الَّذِيْ عَلَيْهِنَّ
بِالْمَعْرُوْفِ ۪ وَلِلرِّجَالِ عَلَيْهِنَّ دَرَجَةٌ ؕ وَاللّٰهُ عَزِيْزٌ
حَكِيْمٌ ﴿۲۲۸﴾ اَلطَّلَاقُ مَرَّتٰنِ ۪ فَاِمْسَاكٌۢ بِمَعْرُوْفٍ اَوْ ع ۲۸ ۷ ۱۲
تَسْرِيْحٌۢ بِاِحْسَانٍ ؕ وَلَا يَحِلُّ لَكُمْ اَنْ تَاْخُذُوْا مِمَّآ
اٰتَيْتُمُوْهُنَّ شَيْئًا اِلَّآ اَنْ يَّخَافَآ اَلَّا يُقِيْمَا حُدُوْدَ اللّٰهِ ؕ
فَاِنْ خِفْتُمْ اَلَّا يُقِيْمَا حُدُوْدَ اللّٰهِ ۙ فَلَا جُنَاحَ عَلَيْهِمَا
فِيْمَا افْتَدَتْ بِهٖ ؕ تِلْكَ حُدُوْدُ اللّٰهِ فَلَا تَعْتَدُوْهَا ۚ
وَمَنْ يَّتَعَدَّ حُدُوْدَ اللّٰهِ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ ﴿۲۲۹﴾

225. உங்களுடைய சத்தியங்களில் வீணானவற்றிற்காக அல்லாஹ் உங்களை(க் குற்றம் ) பிடிக்கமாட்டான்; எனினும், உங்களுடைய இதயங்கள்(நாடிச்செய்து) சம்பாதித்துக் கொண்டதைப்பற்றி உங்களை அவன் பிடிப்பான்; இன்னும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்; அதிக சகிப்புத்தன்மையுடையவன்.

226. தங்கள் மனைவியரிடம் (உடலுறவுக்காக) நெருங்குவதில்லையென்று சத்தியம் செய்து கொண்ட வர்களுக்கு, நான்கு மாதங்கள் எதிர்பார்த்தல் உண்டு. ஆகவே, (இத்தவணைக்குள்) அவர்கள் மீண்டும் சேர்ந்துகொண்டால், நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மிகக் கிருபையுடையவன்.

227. இன்னும், அவர்கள் (அவ்வாறு நெருங்காமல்) திருமணப் பிரிவினையை(விவாகரத்தை) உறுதிப்படுத்திக் கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் நன்கு செவியுறுகிறவன்; நன்கறிகின்றவன் .

228. மேலும், 'தலாக்' சொல்லப்பட்ட பெண்கள், தங்களுக்கு மூன்று மாதவிடாய்களை எதிர்பார்த்திருப்பர். அவர்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால், அவர்களுடைய கர்ப்பப் பைகளில் அல்லாஹ் படைத்திருப்பதை மறைப்பது அவர்களுக்கு ஆகுமானதல்ல. மேலும், (மீட்கக் கூடிய தலாக் சொல்லிய) அவர்களின் கணவர்கள இணக்கத்தை நாடினால், அ(தற்குரிய தவணை காலத்)தில் அவர்களை (மனைவிகளாக)த் திருப்பிக் கொள்ள மிகவும் உரிமையுடையவர்கள்; (மனைவியரான) அவர்களின் மீதுள்ள கடமைகள்போன்று அவர்களுக்கு முறைப்படி உரிமைகளும் உண்டு; ஆண்களுக்கு (பெண்களாகிய)அவர்கள்மீது ஓர் படித்தரமுமுண்டு; அல்லாஹ் (யாவற்றையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

229. (மீட்டுக் கொள்ள உரிமை பெற்ற) 'தலாக்' இரு தடவைகளாகும் ; பின்னர் முறைப்படி தடுத்து வைத்துக் கொள்ளலாம். அல்லது(மூன்றாவது முறையாக தலாக் கூறி) நன் முறையில் விட்டு விடலாம். இன்னும், நீங்கள் அவர்களுக்கு கொடுத்த(மஹர், உடை மற்றும் ஏனைய பொருட்கள் முதலியவ)வற்றிலிருந்து யாதொன்றையும் எடுத்துக் கொள்வது உங்களுக்கு ஆகுமானதல்ல. அல்லாஹ் ஏற்படுத்திய வரம்புகளை நிலைநிறுத்த முடியாதென்று அவர்கள் இருவருமே பயந்தாலே தவிர; ஆகவே, அவர்கள் இருவரும் அல்லாஹ் ஏற்படுத்திய வரம்புகளை நிலைநிறுத்த மாட்டார்கள் என (தீர்ப்பு வழங்குவோராகிய) நீங்கள் பயந்தால், அவள் எதை (தன்னைத் திருமண பந்தத்திலிருந்து நீக்கிவிடுவதற்கு) ஈடாகக் கொடுக்கின்றாளோ அதில் அவ்விருவர் மீதும் குற்றமில்லை; இவை, அல்லாஹ் ஏற்படுத்திய வரம்புகளாகும்; ஆதலால், நீங்கள் இவற்றை மீறாதீர்கள். மேலும், எவர் அல்லாஹ்வுடைய வரம்புகளை மீறுகிறாரோ அவர்கள் தாம் அநியாயக்காரர்கள்.

فَإِنْ طَلَّقَهَا فَلَا تَحِلُّ لَهٗ مِنْۢ بَعْدُ حَتّٰى تَنْكِحَ
زَوْجًا غَيْرَهٗ ط فَإِنْ طَلَّقَهَا فَلَا جُنَاحَ عَلَيْهِمَآ أَنْ
يَّتَرَاجَعَآ إِنْ ظَنَّآ أَنْ يُّقِيْمَا حُدُوْدَ اللّٰهِ ط وَتِلْكَ
حُدُوْدُ اللّٰهِ يُبَيِّنُهَا لِقَوْمٍ يَّعْلَمُوْنَ ﴿۲۳۰﴾ وَإِذَا طَلَّقْتُمُ
النِّسَآءَ فَبَلَغْنَ أَجَلَهُنَّ فَأَمْسِكُوْهُنَّ بِمَعْرُوْفٍ
أَوْ سَرِّحُوْهُنَّ بِمَعْرُوْفٍ ص وَلَا تُمْسِكُوْهُنَّ ضِرَارًا
لِّتَعْتَدُوْا ج وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ فَقَدْ ظَلَمَ نَفْسَهٗ ط
وَلَا تَتَّخِذُوْٓا آيٰتِ اللّٰهِ هُزُوًا ز وَّاذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ
عَلَيْكُمْ وَمَآ أَنْزَلَ عَلَيْكُمْ مِّنَ الْكِتٰبِ وَالْحِكْمَةِ
يَعِظُكُمْ بِهٖ ط وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْٓا أَنَّ اللّٰهَ بِكُلِّ شَيْءٍ
عَلِيْمٌ ﴿۲۳۱﴾ ع وَإِذَا طَلَّقْتُمُ النِّسَآءَ فَبَلَغْنَ أَجَلَهُنَّ ع ۲۹ ۳ ۱۳
فَلَا تَعْضُلُوْهُنَّ أَنْ يَّنْكِحْنَ أَزْوَاجَهُنَّ إِذَا تَرَاضَوْا
بَيْنَهُمْ بِالْمَعْرُوْفِ ط ذٰلِكَ يُوْعَظُ بِهٖ مَنْ كَانَ
مِنْكُمْ يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْآخِرِ ط ذٰلِكُمْ أَزْكٰى
لَكُمْ وَأَطْهَرُ ط وَاللّٰهُ يَعْلَمُ وَأَنْتُمْ لَا تَعْلَمُوْنَ ﴿۲۳۲﴾

230. பின்னர், (மூன்றாவதாகவும்) அவளை அவன் 'தலாக்' சொல்லிவிட்டால், அதன் பிறகு அவனல்லாத (வேறு) கணவனை அவள் திருமணம் செய்யும் வரை அவள் அவனுக்கு ஆகுமானவளாகமாட்டாள்; பின்னர் (அவளைத் திருமணம் செய்து கொண்ட இரண்டாம் கணவனாகிய) அவன் அவளை தலாக் கூறிவிட்டால், (முதற் கணவரும், தலாக் கூறப்பட்ட மனைவியும் ஆகிய) அவ்விருவரும் அல்லாஹ் ஏற்படுத்திய வரம்புகளை நிலைநிறுத்துவர் எனக் கருதினால் (புதிய திருமண ஒப்பந்தத்தின் மூலம் கணவன் மனைவியாக) மீண்டு கொள்வது அவ்விருவர் மீதும் குற்றமில்லை; இவையும் அல்லாஹ்வின் (சட்ட) வரம்புகளாகும். அறிந்து கொள்ளும் சமூகத்தார்க்கு இவற்றை அவன் தெளிவு செய்கின்றான்.

231. இன்னும், (உங்கள்) மனைவிகளை நீங்கள் (மீட்கக்கூடிய) தலாக் கூறி, அவர்கள் தங்கள் ( இத்தாவின்) தவணையை அடைந்து விட்டால், அவர்களை, முறைப்படி (மீட்டு மனைவியராக) தடுத்துவைத்துக் கொள்ளுங்கள்; அல்லது (இத்தாவின் தவணையை முடித்துக் கொண்டு) நன் முறையில் விட்டுவிடுங்கள். ஆனால், நீங்கள் வரம்புமீறி இடையூறு செய்வதற்காக, அவர்களைத் தடுத்து வைத்துக் கொள்ளாதீர்கள். இவ்விதம் எவரேனும் செய்தால், திட்டமாக அவர் தமக்குத்தாமே அநீதி இழைத்துக் கொண்டார். மேலும், நீங்கள் அல்லாஹ்வுடைய வசனங்களைப் பரிகாசமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். மேலும், உங்கள்மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருட்கொடையையும், வேதத்திலிருந்தும், ஞானத்திலிருந்தும் உங்கள்மீது அவன் இறக்கி அதனைக் கொண்டு உங்களுக்கு உபதேசிக்கின்றான் என்பதையும் நினைவு கூருங்கள். மேலும், அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிகிறவன் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

232. மேலும், (உங்கள் மனைவிகளான அப்)பெண்களை நீங்கள் தலாக் கூறி, அவர்கள் தங்களுடைய (இத்தாவின்) தவணையை அடைந்து (முடிந்து) விட்டால், அவர்களின் கணவர்களைத் திருமணம் செய்வதிலிருந்து_அவர்களுக்கிடையில் அவர்கள் நன் முறையில் திருப்தி கொண்டுவிட்டால்_அவர்களை நீங்கள் தடுக்காதீர்கள். உங்களில் எவர் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் விசுவாசம் கொண்டிருக்கிறாரோ அவர், இதனைக் கொண்டு உபதேசிக்கப் படுகிறார். இ(வ்வாறு நடந்து கொள்வ)து உங்களுக்கு மிகத் தூய்மையானதும், மிக்க பரிசுத்தமானதுமாகும். அல்லாஹ் அறிவான்; நீங்களோ அறியமாட்டீர்கள்.

وَالْوَالِدٰتُ يُرْضِعْنَ اَوْلَادَهُنَّ حَوْلَيْنِ كَامِلَيْنِ لِمَنْ اَرَادَ اَنْ
يُّتِمَّ الرَّضَاعَةَ ؕ وَعَلَى الْمَوْلُوْدِ لَهٗ رِزْقُهُنَّ وَكِسْوَتُهُنَّ بِالْمَعْرُوْفِ ؕ
لَا تُكَلَّفُ نَفْسٌ اِلَّا وُسْعَهَا ۚ لَا تُضَآرَّ وَالِدَةٌ ۢ بِوَلَدِهَا وَلَا مَوْلُوْدٌ
لَّهٗ بِوَلَدِهٖ ۗ وَعَلَى الْوَارِثِ مِثْلُ ذٰلِكَ ۚ فَاِنْ اَرَادَا فِصَالًا عَنْ
تَرَاضٍ مِّنْهُمَا وَتَشَاوُرٍ فَلَا جُنَاحَ عَلَيْهِمَا ؕ وَاِنْ اَرَدْتُّمْ اَنْ
تَسْتَرْضِعُوْٓا اَوْلَادَكُمْ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ اِذَا سَلَّمْتُمْ مَّآ اٰتَيْتُمْ
بِالْمَعْرُوْفِ ؕ وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿۲۳۳﴾
وَالَّذِيْنَ يُتَوَفَّوْنَ مِنْكُمْ وَيَذَرُوْنَ اَزْوَاجًا يَّتَرَبَّصْنَ بِاَنْفُسِهِنَّ
اَرْبَعَةَ اَشْهُرٍ وَّعَشْرًا ۚ فَاِذَا بَلَغْنَ اَجَلَهُنَّ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ
فِيْمَا فَعَلْنَ فِيْٓ اَنْفُسِهِنَّ بِالْمَعْرُوْفِ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ ﴿۲۳۴﴾
وَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيْمَا عَرَّضْتُمْ بِهٖ مِنْ خِطْبَةِ النِّسَآءِ اَوْ اَكْنَنْتُمْ
فِيْٓ اَنْفُسِكُمْ ؕ عَلِمَ اللّٰهُ اَنَّكُمْ سَتَذْكُرُوْنَهُنَّ وَلٰكِنْ لَّا تُوَاعِدُوْهُنَّ
سِرًّا اِلَّآ اَنْ تَقُوْلُوْا قَوْلًا مَّعْرُوْفًا ۬ وَلَا تَعْزِمُوْا عُقْدَةَ النِّكَاحِ
حَتّٰى يَبْلُغَ الْكِتٰبُ اَجَلَهٗ ؕ وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ يَعْلَمُ مَا فِيْٓ
اَنْفُسِكُمْ فَاحْذَرُوْهُ ۚ وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ غَفُوْرٌ حَلِيْمٌ ﴿۲۳۵﴾ ع ۳۰ ۱۴

233. ( தங்களுடைய குழந்தைகளுக்கு தம் மனைவிகளைக்கொண்டே) பால் ஊட்டுவதைப் பூர்த்தியாக்க விரும்புகிற வருக்காக, தாய்மார்கள், தங்களுடைய குழந்தைகளுக்கு (அவை பிறந்ததிலிருந்து) இரண்டு ஆண்டுகள் வரை பூரணமாகப் பாலூட்டுவார்கள். இன்னும், (பாலூட்டும் இக்காலங்களில்) அவர்களுக்கு உணவும்,அவர்களுக்கு உடையும் முறைப்படி(வழங்குவது) தகப்பன்மீது கடமையாகும். எந்த ஓர் ஆத்மாவும் அதன் சக்திக்கேற்றவாறல்லாது (செய்யும்படியாக) சிரமப்படுத்தப் படமாட்டாது. ஒரு தாய் தன் குழந்தையின் காரணமாக, இன்னும் ஒரு தந்தை தன் குழந்தையின் காரணமாக துன்புறுத்தப் படமாட்டார்; (குழந்தையின் தகப்பன் இறந்துவிட்டால், அதனைப் பரிபாலிப்பது) இவ்வாறே வாரிசின் மீது( கடமை) இருக்கிறது.(குழந்தையின் தாய், தகப்பன்) இருவரும் சம்மதித்து, ஆலோசனை செய்து, (குழந்தையின்) பால்குடியை (இரண்டு ஆண்டுகளுக்குள்) மறக்கடிக்க நாடினால், (அவ்வாறு செய்வது) அவ்விருவர்மீதும் குற்றமல்ல. நீங்கள் உங்களுடைய குழந்தைகளுக்கு, (செவிலித் தாயைக்கொண்டு) பாலூட்டவும் நாடினால், நீங்கள் கொடுக்க வேண்டியதை முறைப்படி ஒப்படைத்துவிட்டால், உங்கள்மீது குற்றமாகாது. நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்தும் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றைப் பார்க்கக்கூடியவன் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

234. உங்களிலிருந்து எவரேனும் மனைவிகளை விட்டுவிட்டு இறந்து விட்டால் (அம்மனைவியரான) அவர்கள் தமக்காக நான்கு மாதம் பத்து நாட்கள் எதிர்பார்த்திருப்பர். (இதற்கு மரண இத்தா என்று பெயர்.) ஆதலால், அவர்கள் தங்களுடைய ('இத்தா' வின்) தவணையை அடைந்து விட்டால், அப்பொழுது தங்களில் நியாயமான முறையில் (அலங்காரம்) ஏதும் செய்து கொள்கின்றவற்றில் உங்கள்மீது குற்றமில்லை. நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்குணர்கின்றவன் .

235. ('இத்தா'விலிருக்கும் யாதொரு பெண்ணை நீங்கள் திருமணம் செய்து கொள்ளும் நோக்கத்துடன் உங்களுக்குள்) பெண் பேசுவதை நீங்கள் (சைக்கினையாக) எடுத்துக்கூறுவதிலோ, அல்லது உங்கள் மனங்களில் நீங்கள் மறைவாக வைத்திருப்பதிலோ உங்கள்மீது குற்றமில்லை; (ஏனெனில், நீங்கள் இத்தா முடிந்தபின்) அவர்களை நிச்சயமாக நீங்கள் நினைவு கூர்வீர்களென்பதை அல்லாஹ் அறிந்திருக்கிறான்; எனினும், நீங்கள் கண்ணியமான முறையில் (சைக்கினையாக) கூறுவதைத் தவிர, ('இத்தா'வுடைய காலத்தில் திருமணத்தைப் பற்றி) அவர்களுடன் இரகசியமாகவும் வாக்குறுதி செய்யாதீர்கள். இன்னும், விதியாக்கப்பட்டது அதன் தவணையை அடையும் வரை ('இத்தா'வின் தவணை முடிவதற்குள், அவர்களைத்) திருமணம் செய்து கொள்ள உறுதியும் செய்துவிடாதீர்கள். உங்கள் மனங்களிலுள்ள வற்றை நிச்சயமாக அல்லாஹ் அறிவான் என்பதை நீங்கள் அறிந்து, அவன் விஷயத்தில் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். நிச்சயமாக, அல்லாஹ் மிக்க மன்னிக்கின்றவன், மிகுந்த சகிப்புத் தன்மையுடையவன் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள்.

لَا جُنَاحَ عَلَيْكُمْ إِنْ طَلَّقْتُمُ النِّسَآءَ مَا لَمْ تَمَسُّوْهُنَّ أَوْ
تَفْرِضُوْا لَهُنَّ فَرِيْضَةً ۚ وَّمَتِّعُوْهُنَّ ۚ عَلَى الْمُوْسِعِ قَدَرُهٗ وَ
عَلَى الْمُقْتِرِ قَدَرُهٗ ۚ مَتَاعًا بِالْمَعْرُوْفِ ۚ حَقًّا عَلَى الْمُحْسِنِيْنَ ﴿٢٣٦﴾
وَإِنْ طَلَّقْتُمُوْهُنَّ مِنْ قَبْلِ أَنْ تَمَسُّوْهُنَّ وَقَدْ فَرَضْتُمْ
لَهُنَّ فَرِيْضَةً فَنِصْفُ مَا فَرَضْتُمْ إِلَّآ أَنْ يَّعْفُوْنَ أَوْ يَعْفُوَا
الَّذِيْ بِيَدِهٖ عُقْدَةُ النِّكَاحِ ۚ وَأَنْ تَعْفُوْٓا أَقْرَبُ لِلتَّقْوٰى ۚ وَ
لَا تَنْسَوُا الْفَضْلَ بَيْنَكُمْ ۚ إِنَّ اللّٰهَ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿٢٣٧﴾
حَافِظُوْا عَلَى الصَّلَوٰتِ وَالصَّلٰوةِ الْوُسْطٰى ۚ وَقُوْمُوْا لِلّٰهِ
قٰنِتِيْنَ ﴿٢٣٨﴾ فَإِنْ خِفْتُمْ فَرِجَالًا أَوْ رُكْبَانًا ۚ فَإِذَآ أَمِنْتُمْ فَاذْكُرُوا
اللّٰهَ كَمَا عَلَّمَكُمْ مَّا لَمْ تَكُوْنُوْا تَعْلَمُوْنَ ﴿٢٣٩﴾ وَالَّذِيْنَ يُتَوَفَّوْنَ
مِنْكُمْ وَيَذَرُوْنَ أَزْوَاجًا ۚ وَّصِيَّةً لِّأَزْوَاجِهِمْ مَّتَاعًا إِلَى
الْحَوْلِ غَيْرَ إِخْرَاجٍ ۚ فَإِنْ خَرَجْنَ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيْ مَا
فَعَلْنَ فِيْٓ أَنْفُسِهِنَّ مِنْ مَّعْرُوْفٍ ۚ وَاللّٰهُ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿٢٤٠﴾
وَلِلْمُطَلَّقٰتِ مَتَاعٌ بِالْمَعْرُوْفِ ۚ حَقًّا عَلَى الْمُتَّقِيْنَ ﴿٢٤١﴾
كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ ﴿٢٤٢﴾ ع ٣١ ع ٧ ١٥

236. (திருமணம் செய்த) பெண்களை நீங்கள் தீண்டாமலும், அல்லது (திருமணத்தின்போது) அவர்களின் மஹரை நிர்ணயம் செய்யாமலும் (அவர்களை) நீங்கள் விவாகரத்துச் செய்து விட்டால், உங்கள்மீது (அது) குற்றமில்லை; இன்னும், அவர்களுக்கு ஏதும் கொடுத்துப் பயனடையச் செய்யுங்கள்; வசதியுள்ளவரின்மீது அவருக்குரிய அளவும், வசதியற்றவர் மீது அவருக்குரிய அளவும் நியாயமான முறையில் (அப்பெண்களுக்குக் கொடுத்துப்) பயனடையச் செய்ய வேண்டும்;(இது) நல்லோர் மீது கடமையாகும்.

237. மேலும்,(திருமணம் செய்த பெண்களான) அவர்களை நீங்கள் தீண்டுவதற்கு முன், அவர்களுடைய 'மஹரை' நீங்கள் குறிப்பிட்டு நிர்ணயம் செய்திருக்க, நீங்கள் அவர்களை விவாகரத்துச் செய்துவிட்டால், (அப்பெண்களாகிய) அவர்கள் (விட்டுக் கொடுத்து) மன்னித்துவிட்டாலோ, அல்லது யாருடைய கையில் திருமண பந்தமிருக்கின்றதோ, அவர் (விட்டுக் கொடுத்து) மன்னித்து விட்டாலோ அன்றி, நீங்கள் நிர்ணயம் செய்ததில் பாதி (அப்பெண்களுக்கு) உண்டு; மேலும், நீங்கள் மன்னித்து விடுவது (விட்டுக்கொடுப்பது) பயபக்திக்கு மிக நெருங்கியதாகும். ஆகவே, உங்களுக்கிடையில் (உபகாரம் செய்து கொள்வதில்) தயாளகுணத்துடன் நடப்பதை மறந்து விடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றைப் பார்க்கக்கூடியவன்.

238. ( ஐங்காலத் ) தொழுகைகளையும், ( குறிப்பாக அஸர் தொழுகையாகிய) நடுத் தொழுகையையும் (விடாமல் தொழுது) பேணிக்கொள்ளுங்கள். மேலும், (தொழுகையில்) அல்லாஹ்வுக்கு(ப் பயந்து)பணிந்தவர்களாக நில்லுங்கள்.

239. ஆனால், (எதிரிகளின் தாக்குதலினால் அமைதியாக தொழுகையை நிறைவேற்ற முடியாதென்பதை) நீங்கள் பயந்தால்,அப்பொழுது நடந்தவர்களாக அல்லது (வாகனத்தின்மீது) சவாரி செய்தவர்களாக (த்தொழுது கொள்ளுங்கள்.) பின்னர், நீங்கள் அச்சமற்றவர்களாக ஆகி விட்டால், நீங்கள் அறியாமலிருந்த வற்றை அவன் உங்களுக்குக் கற்றுக்கொடுத்த பிரகாரம் அல்லாஹ்வை நினைவு கூருங்கள்.

240. உங்களிலிருந்து எவரேனும் மனைவிகளை விட்டு இறப்பெய்து(ம் நிலையில் இருப்)பவர்கள் (விட்டுச்செல்லும்) தங்களது மனைவிகளுக்காக ஓராண்டுவரை (உணவு, உடை போன்றவைக்காக)செலவுக்குக் கொடுத்து (வீட்டை விட்டு) வெளியேற்றாது இருக்க(வாரிசுகளுக்கு மரண)சாசனம் கூறவும்;ஆனால்,அவர்கள் (ஓர் ஆண்டிற்குள் தாமாகவே) வெளியில்சென்று, தங்களில் முறைப்படி செய்து கொள்கின்ற (அலங்காரம், திருமணம் ஆகிய)வற்றில் உங்கள் மீது குற்றமில்லை; அல்லாஹ் (யாவற்றையும்) மிகைத்தவன், தீர்க்கமான அறிவுடையவன்.

241. மேலும், விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களுக்கு, (தங்கள் "இத்தா"க் காலங்களில்) முறைப்படி (கணவனுடைய சொத்திலிருந்தே உணவு, உடை போன்றவைக்காக) செலவினம் (பெறப் பாத்தியம்)உண்டு; (அவ்வாறு அவர்களுக்குச் செலவினம் கொடுப்பது) பயபக்தியுடையோர் மீது கடமையாகும்.

242. நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக, தன்னுடைய வசனங்களை அல்லாஹ், உங்களுக்கு இவ்வாறு விளக்குகிறான்.

أَلَمْ تَرَ إِلَى الَّذِينَ خَرَجُوا مِن دِيَارِهِمْ وَهُمْ أُلُوفٌ حَذَرَ الْمَوْتِ
فَقَالَ لَهُمُ اللَّهُ مُوتُوا ثُمَّ أَحْيَاهُمْ ۚ إِنَّ اللَّهَ لَذُو فَضْلٍ عَلَى
النَّاسِ وَلَٰكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يَشْكُرُونَ ﴿۲۴۳﴾ وَقَاتِلُوا فِي سَبِيلِ
اللَّهِ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ سَمِيعٌ عَلِيمٌ ﴿۲۴۴﴾ مَّن ذَا الَّذِي يُقْرِضُ اللَّهَ
قَرْضًا حَسَنًا فَيُضَاعِفَهُ لَهُ أَضْعَافًا كَثِيرَةً ۚ وَاللَّهُ يَقْبِضُ وَيَبْسُطُ وَ
إِلَيْهِ تُرْجَعُونَ ﴿۲۴۵﴾ أَلَمْ تَرَ إِلَى الْمَلَإِ مِن بَنِي إِسْرَائِيلَ مِن بَعْدِ
مُوسَىٰ إِذْ قَالُوا لِنَبِيٍّ لَّهُمُ ابْعَثْ لَنَا مَلِكًا نُّقَاتِلْ فِي سَبِيلِ وقف لازم
اللَّهِ ۖ قَالَ هَلْ عَسَيْتُمْ إِن كُتِبَ عَلَيْكُمُ الْقِتَالُ أَلَّا تُقَاتِلُوا ۖ
قَالُوا وَمَا لَنَا أَلَّا نُقَاتِلَ فِي سَبِيلِ اللَّهِ وَقَدْ أُخْرِجْنَا مِن
دِيَارِنَا وَأَبْنَائِنَا ۖ فَلَمَّا كُتِبَ عَلَيْهِمُ الْقِتَالُ تَوَلَّوْا إِلَّا قَلِيلًا
مِّنْهُمْ ۗ وَاللَّهُ عَلِيمٌ بِالظَّالِمِينَ ﴿۲۴۶﴾ وَقَالَ لَهُمْ نَبِيُّهُمْ إِنَّ اللَّهَ
قَدْ بَعَثَ لَكُمْ طَالُوتَ مَلِكًا ۚ قَالُوا أَنَّىٰ يَكُونُ لَهُ الْمُلْكُ
عَلَيْنَا وَنَحْنُ أَحَقُّ بِالْمُلْكِ مِنْهُ وَلَمْ يُؤْتَ سَعَةً مِّنَ الْمَالِ ۚ
قَالَ إِنَّ اللَّهَ اصْطَفَاهُ عَلَيْكُمْ وَزَادَهُ بَسْطَةً فِي الْعِلْمِ وَ
الْجِسْمِ ۖ وَاللَّهُ يُؤْتِي مُلْكَهُ مَن يَشَاءُ ۚ وَاللَّهُ وَاسِعٌ عَلِيمٌ ﴿۲۴۷﴾

243. (நபியே!) மரணத்திற்குப் பயந்து தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினார்களே அத்தகையோர்பால் நீர் பார்க்கவில்லையா? அவர்களோ ஆயிரக்கணக்கில் இருந்தனர்; அப்போது அல்லாஹ் அவர்களிடம் "நீங்கள் இறந்துவிடுங்கள்" எனக் கூறினான். (அவர்கள் இறப்பெய்திவிட்டனர்) பின்னர், அவர்களை உயிர்ப்பித்தான். நிச்சயமாக அல்லாஹ், மனிதர்கள்மீது பேரருளுடையவன்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் நன்றி செலுத்துவதில்லை.

244. (விசுவாசிகளே!) நீங்கள் அல்லாஹ்வுடைய பாதையில் போரிடுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் செவியுறுகிறவன்; நன்கறிகிறவன் என்பதையும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.

245. (கஷ்டத்திலிருப்பவர்களுக்காக) அழகிய கடனை, அல்லாஹ்வுக்காகக் கடன் கொடுப்பவர் யார்? அப்பொழுது அதை அவருக்கு அநேக மடங்குகளாக அவன் இரட்டிப்பாக்கித் தருவான்; அல்லாஹ், (பொருளாதாரத்தைச் சிலருக்குச்) சுருக்குகிறான்; (சிலருக்கு)அவன் விரிவாக்குகிறான்; அன்றியும் அவனின் பக்கமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்.

246. (நபியே) மூஸாவுக்குப் பின், இஸ்ராயீலின் மக்களில் இருந்த தலைவர்கள்பால் நீர் பார்க்கவில்லையா? அவர்கள், தங்கள் நபியிடம் "எங்களுக்கு(த் தலைமை வகிக்க) ஓர் அரசனை அனுப்பிவையும்! அல்லாஹ்வுடைய பாதையில் நாங்கள் போரிடுகிறோம்" என்று கூறியபொழுது, அவர், "போரிடுவது உங்கள் மீது விதிக்கப்பட்டுவிட்டால், நீங்கள் போரிடாமலே இருந்துவிடலாம் அல்லவா?" என்று கேட்டார். (அதற்கு) அவர்கள், "எங்கள் வீடுகளையும், எங்கள் மக்களையும் விட்டு திட்டமாக நாங்கள் வெளியேற்றப்பட்டிருக்க, அல்லாஹ்வுடைய பாதையில் நாங்கள் போரிடாமலிருக்க எங்களுக்கென்ன ?" என்று கூறினார்கள். பின்னர், அவர்கள் மீது போரிடுவது கடமையாக்கப்பட்டபோது, அவர்களில் சிலரைத் தவிர (மற்றவர்கள்) புறமுதுகிட்டு (த்திரும்பி)விட்டனர். இன்னும் அநியாயக்காரர்களை அல்லாஹ் நன்கறிந்தவன்.

247. மேலும், அவர்களுடைய நபி அவர்களிடம், "நிச்சயமாக அல்லாஹ் 'தாலூத்'தை உங்களுக்கு அரசராக அனுப்பியிருக்கின்றான்," என்று கூறினார். அ(தற்க)வர்கள், "நாங்களே அவரைவிட அரசாட்சிபுரிய மிகத் தகுதியுடையவர்களாக இருக்க, எங்கள்மீது அவருக்கு எவ்வாறு அரசுரிமை ஏற்படும்? (அரசுபுரியத் தேவையான) செல்வ வளத்தையும் அவர் கொடுக்கப்படவுமில்லை" என்று கூறினார்கள். (அதற்கு) "நிச்சயமாக அல்லாஹ், உங்கள்மீது (அரசாட்சி புரிய) அவரைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான்; (யுத்தக்) கல்வியிலும், தேகத்திலும் உங்களைவிட அவருக்கு விசாலத்தை அதிகப்படுத்தியுமிருக்கின்றான்; மேலும், அல்லாஹ், தான் நாடியவருக்குத் தன்னுடைய ஆட்சியை அளிப்பான். மேலும், அல்லாஹ் அதிக விசாலமானவன், நன்கறிந்தவன்" என்று (அவர்களுடைய நபியாகிய)அவர் கூறினார்.

وَقَالَ لَهُمْ نَبِيُّهُمْ اِنَّ اٰيَةَ مُلْكِهٖٓ اَنْ يَّاْتِيَكُمُ التَّابُوْتُ فِيْهِ
سَكِيْنَةٌ مِّنْ رَّبِّكُمْ وَبَقِيَّةٌ مِّمَّا تَرَكَ اٰلُ مُوْسٰى وَاٰلُ هٰرُوْنَ
تَحْمِلُهُ الْمَلٰٓئِكَةُ ؕ اِنَّ فِىْ ذٰلِكَ لَاٰيَةً لَّكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿۲۴۸﴾ ع ۳۲ ع ۶ ۱۶
فَلَمَّا فَصَلَ طَالُوْتُ بِالْجُنُوْدِ ۙ قَالَ اِنَّ اللّٰهَ مُبْتَلِيْكُمْ بِنَهَرٍ ۚ
فَمَنْ شَرِبَ مِنْهُ فَلَيْسَ مِنِّىْ ۚ وَمَنْ لَّمْ يَطْعَمْهُ فَاِنَّهٗ مِنِّىْٓ اِلَّا مَنِ
اغْتَرَفَ غُرْفَةً ۢ بِيَدِهٖ ۚ فَشَرِبُوْا مِنْهُ اِلَّا قَلِيْلًا مِّنْهُمْ ؕ فَلَمَّا جَاوَزَهٗ
هُوَ وَالَّذِيْنَ اٰمَنُوْا مَعَهٗ ۙ قَالُوْا لَا طَاقَةَ لَنَا الْيَوْمَ بِجَالُوْتَ وَجُنُوْدِهٖ ؕ
قَالَ الَّذِيْنَ يَظُنُّوْنَ اَنَّهُمْ مُّلٰقُوا اللّٰهِ ۙ كَمْ مِّنْ فِئَةٍ قَلِيْلَةٍ
غَلَبَتْ فِئَةً كَثِيْرَةً ۢ بِاِذْنِ اللّٰهِ ؕ وَاللّٰهُ مَعَ الصّٰبِرِيْنَ ﴿۲۴۹﴾ وَلَمَّا
بَرَزُوْا لِجَالُوْتَ وَجُنُوْدِهٖ قَالُوْا رَبَّنَآ اَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَّثَبِّتْ
اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ ﴿۲۵۰﴾ فَهَزَمُوْهُمْ بِاِذْنِ اللّٰهِ ۙ قلے
وَقَتَلَ دَاوٗدُ جَالُوْتَ وَاٰتٰىهُ اللّٰهُ الْمُلْكَ وَالْحِكْمَةَ وَعَلَّمَهٗ مِمَّا
يَشَآءُ ؕ وَلَوْلَا دَفْعُ اللّٰهِ النَّاسَ بَعْضَهُمْ بِبَعْضٍ لَّفَسَدَتِ
الْاَرْضُ وَلٰكِنَّ اللّٰهَ ذُوْ فَضْلٍ عَلَى الْعٰلَمِيْنَ ﴿۲۵۱﴾ تِلْكَ
اٰيٰتُ اللّٰهِ نَتْلُوْهَا عَلَيْكَ بِالْحَقِّ ؕ وَاِنَّكَ لَمِنَ الْمُرْسَلِيْنَ ﴿۲۵۲﴾

248. இன்னும், அவர்களுடைய நபி அவர்களிடம், "நிச்சயமாக அவருடைய அரசுரிமைக்கு அடையாளமாவது; ஒரு பேழை உங்களிடம் வருவதாகும்; அதில், உங்கள் இரட்சகனிடமிருந்து ஓர் அமைதியும், மூஸாவின் சந்ததியினரும், ஹாரூன் உடைய சந்ததியினரும் விட்டுச் சென்றதில் மீதமுள்ளதும் இருக்கும்; அதை மலக்குகள் சுமந்து வருவர்; நீங்கள் விசுவாசிகளாக இருந்தால், நிச்சயமாக உங்களுக்கு அதில் ஓர் அத்தாட்சி இருக்கின்றது" என்று கூறினார்.

249. பின்னர், தாலூத் படைகளுடன் புறப்பட்ட போது, அவர் (தன் படையினரிடம்,) "நிச்சயமாக (வழியில்) அல்லாஹ், ஓர் ஆற்றைக்கொண்டு உங்களைச் சோதிக்கக்கூடியவனாக இருக்கிறான்; ஆகவே (உங்களில்), எவர் அதிலிருந்து குடிக்கின்றாரோ அவர் என்னைச்சார்ந்தவரல்லர்; இன்னும் அதிலிருந்து தன் கரத்தினால் ஒரு சிறங்கை (நீரை) அள்ளியவரைத்தவிர எவர் அதை (விட அதிகமாக) சுவைக்கவில்லையோ நிச்சயமாக அவர் என்னைச் சார்ந்தவர் எனக்கூறினார்; ஆனால் அவர்களில் சொற்பமானவர்களைத் தவிர (மற்றவர்கள்), அதிலிருந்து (அதிகமாக) பருகிவிட்டனர். பின்னர், அவரும் அவருடன் இருந்த விசுவாசிகளும் அதனைக் கடந்தபொழுது, இன்று ஜாலூத்துடனும், அவனுடைய படைகளுடனும் (போரிட) எங்களுக்குச் சக்தி இல்லை என்று(அதிகமாக நீர் பருகினோர்) கூறி விட்டனர்; (அவர்களில்) நிச்சயமாக தாங்கள் அல்லாஹ்வைச் சந்திக்கக்கூடியவர்கள் என உறுதி கொண்டிருந்தார்களே அத்தகையவர்கள் (மற்றவர்களிடம்),"எத்தனையோ சிறு கூட்டத்தினர், பெருங்கூட்டத்தினரை அல்லாஹ்வின் அனுமதி கொண்டு வென்றிருக்கிறார்கள். மேலும், அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்" என்று கூறினார்கள்.

250. மேலும், அவர்கள் ஜாலூத்தையும் அவனுடைய படைகளையும் எதிர்க்க (நேருக்கு நேர் முன்னேறி)வெளிப்பட்ட பொழுது,"எங்கள் இரட்சகனே! நீ எங்கள் மீது பொறுமையைப் பொழிவாயாக! மேலும், எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! அன்றியும், நிராகரித்துக் கொண்டிருக்கிற இக்கூட்டத்தினர் மீது ( நாங்கள் வெற்றிபெற) எங்களுக்கு நீ உதவியும் புரிவாயாக!" என்று (பிரார்த்தனை செய்து) கூறினார்கள்.

251. ஆதலால் அவர்கள், அல்லாஹ்வின் அனுமதிகொண்டு அவர்களை தோல்வியுறச் செய்தனர்; 'ஜாலூத்'தை 'தாவூத்' கொன்று விட்டார். பின்னர் அவருக்கு அல்லாஹ், அரசுரிமையையும்,(போர்க் கவசம் செய்வது போன்ற) ஞானத்தையும் அளித்து, தான் நாடியவற்றை அவருக்குக் கற்பித்தும் கொடுத்தான். இன்னும், மனிதர்களில் சிலரை அவர்களில் சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காவிட்டால்,இப்பூமி சீர்கெட்டுவிடும். ஆயினும், அல்லாஹ் அகிலத்தார்மீது மிகக்கிருபையுடையவன்.

252. இவை அல்லாஹ்வுடைய வசனங்கள். நாம் இவற்றை (நபியே!)உம்மீது உண்மையாக ஓதிக் காண்பிக்கிறோம்; மேலும், நிச்சயமாக நீர், (நமது) தூதர்களில்(ஒருவராக)இருக்கிறீர்.

الجزء ۳ وقف لازم

تِلْكَ الرُّسُلُ فَضَّلْنَا بَعْضَهُمْ عَلٰى بَعْضٍ مِنْهُمْ
مَّنْ كَلَّمَ اللّٰهُ وَرَفَعَ بَعْضَهُمْ دَرَجٰتٍ ؕ وَاٰتَيْنَا عِيْسَى ابْنَ
مَرْيَمَ الْبَيِّنٰتِ وَاَيَّدْنٰهُ بِرُوْحِ الْقُدُسِ ؕ وَلَوْ شَآءَ اللّٰهُ مَا اقْتَتَلَ
الَّذِيْنَ مِنْ بَعْدِهِمْ مِّنْ بَعْدِ مَا جَآءَتْهُمُ الْبَيِّنٰتُ وَلٰكِنِ اخْتَلَفُوْا
فَمِنْهُمْ مَّنْ اٰمَنَ وَمِنْهُمْ مَّنْ كَفَرَ ؕ وَلَوْ شَآءَ اللّٰهُ مَا اقْتَتَلُوْا ۟ قف
وَلٰكِنَّ اللّٰهَ يَفْعَلُ مَا يُرِيْدُ ﴿۲۵۳﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَنْفِقُوْا ع ۳۳ ۱
مِمَّا رَزَقْنٰكُمْ مِّنْ قَبْلِ اَنْ يَّاْتِيَ يَوْمٌ لَّا بَيْعٌ فِيْهِ وَلَا خُلَّةٌ وَّلَا
شَفَاعَةٌ ؕ وَالْكٰفِرُوْنَ هُمُ الظّٰلِمُوْنَ ﴿۲۵۴﴾ اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَيُّ
الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ ؕ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي
الْاَرْضِ ؕ مَنْ ذَا الَّذِيْ يَشْفَعُ عِنْدَهٗۤ اِلَّا بِاِذْنِهٖ ؕ يَعْلَمُ مَا بَيْنَ
اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ وَلَا يُحِيْطُوْنَ بِشَيْءٍ مِّنْ عِلْمِهٖۤ اِلَّا بِمَا
شَآءَ ۚ وَسِعَ كُرْسِيُّهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ وَلَا يَئُوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَ
هُوَ الْعَلِيُّ الْعَظِيْمُ ﴿۲۵۵﴾ لَاۤ اِكْرَاهَ فِي الدِّيْنِ ۙ قَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ
الْغَيِّ ۚ فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْ بِاللّٰهِ فَقَدِ اسْتَمْسَكَ
بِالْعُرْوَةِ الْوُثْقٰى ۚ لَا انْفِصَامَ لَهَا ؕ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿۲۵۶﴾

253. அத்தூதுவர்கள்: அவர்களில் சிலரைச் சிலரைவிட நாம் மேன்மையாக்கி யிருக்கின்றோம். அவர்களில் அல்லாஹ் பேசியவருமிருக்கிறார். அவர்களில் சிலரை பதவிகளில்அவன் உயர்த்தியும் இருக்கின்றான். மேலும், மர்யமுடைய குமாரர் ஈஸாவுக்கு நாம் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்து, (ருஹுல் குதுஸ் என்னும்) பரிசுத்த ஆவியைக் கொண்டும் அவரை நாம் பலப்படுத்தினோம்.இன்னும், அல்லாஹ் நாடியிருந்தால், அவர்களுக்குப் பின்னருள்ளவர்கள், தங்களிடம் தெளிவான அத்தாட்சிகள் வந்த பின்னரும், சண்டையிட்டுக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள்; ஆயினும், அவர்களோ (தங்களுக்குள்) வேறுபாடு கொண்டனர். ஆகவே அவர்களில் விசுவாசங் கொண்டவரும் உள்ளனர். அவர்களில் நிராகரித்து விட்டவரும் உள்ளனர். மேலும், அல்லாஹ் நாடினால் அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள்.எனினும் அல்லாஹ், தான் நாடியதைச் செய்கிறான்.

254. விசுவாசங்கொண்டோரே! எந்த விதமான பேரமும், நட்பும், பரிந்துரையும் இல்லாத நாள் வருமுன் உங்களுக்கு நாம் அளித்தவற்றிலிருந்து செலவு செய்யுங்கள். இன்னும் நிராகரிக்கக் கூடியவர்கள்_ அவர்கள் தாம் அநியாயக்காரர்கள்.

255. அல்லாஹ் (எத்தகையவனென்றால்) அவனைத் தவிர( வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை; (அவன்) ஜீவனுள்ளவன்; (என்றென்றும்) நிலைத்திருப்பவன். அவனை சிறு துயிலும், உறக்கமும் பீடிக்காது. வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன; அவனுடைய அனுமதியின்றி அவனிடத்தில் பரிந்து பேசுபவர் யார்? அவர்களுக்கு முன்னால் இருப்பவற்றையும், பின்னால் இருப்பவற்றையும் அவன் நன்கறிவான்; அவன் நாடியவையன்றி அவனுக்குத் தெரிந்தவற்றிலிருந்து யாதொன்றையும் முற்றிலும்(மற்றெவரும்) அறிந்து கொள்ளமாட்டார்கள். அவனுடைய 'குர்ஸிய்யு' வானங்களிலும், பூமியிலும் விசாலமாக (பரவி) இருக்கின்றது. அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்காது. மேலும் அவன், மிக்க உயர்ந்தவன்,மகத்துவமிக்கவன்.(8)

256. (சத்திய இஸ்லாம்) மார்க்கத்தில் எத்தகைய நிர்ப்பந்தமுமில்லை. (ஏனெனில்) வழிகேட்டிலிருந்து நேர்வழி திட்டமாகத் தெளிவாகி விட்டது. ஆகவே, எவர் தாகூத்தை (ஷைத்தானை) நிராகரித்து விட்டு, அல்லாஹ்வை விசுவாசிக்கிறாரோ அவர், திட்டமாக அறுந்துபோகாத பலமான கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். மேலும் அல்லாஹ், செவியேற்கிறவன், நன்கறிகிறவன்.(9)

اَللّٰهُ وَلِیُّ الَّذِیْنَ اٰمَنُوْا یُخْرِجُهُمْ مِّنَ الظُّلُمٰتِ اِلَی النُّوْرِ ؕ
وَالَّذِیْنَ كَفَرُوْۤا اَوْلِیٰٓـُٔهُمُ الطَّاغُوْتُ یُخْرِجُوْنَهُمْ مِّنَ النُّوْرِ
اِلَی الظُّلُمٰتِ ؕ اُولٰٓىِٕكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِیْهَا خٰلِدُوْنَ ۠ ﴿٢٥٧﴾ ع ٣٤
اَلَمْ تَرَ اِلَی الَّذِیْ حَآجَّ اِبْرٰهٖمَ فِیْ رَبِّهٖۤ اَنْ اٰتٰىهُ اللّٰهُ
الْمُلْكَ ۘ اِذْ قَالَ اِبْرٰهٖمُ رَبِّیَ الَّذِیْ یُحْیٖ وَ یُمِیْتُ ۙ قَالَ اَنَا وقف لازم
اُحْیٖ وَ اُمِیْتُ ؕ قَالَ اِبْرٰهٖمُ فَاِنَّ اللّٰهَ یَاْتِیْ بِالشَّمْسِ مِنَ
الْمَشْرِقِ فَاْتِ بِهَا مِنَ الْمَغْرِبِ فَبُهِتَ الَّذِیْ كَفَرَ ؕ وَ اللّٰهُ
لَا یَهْدِی الْقَوْمَ الظّٰلِمِیْنَ ۚ ﴿٢٥٨﴾ اَوْ كَالَّذِیْ مَرَّ عَلٰی قَرْیَةٍ وَّ
هِیَ خَاوِیَةٌ عَلٰی عُرُوْشِهَا ۚ قَالَ اَنّٰی یُحْیٖ هٰذِهِ اللّٰهُ بَعْدَ
مَوْتِهَا ۚ فَاَمَاتَهُ اللّٰهُ مِائَةَ عَامٍ ثُمَّ بَعَثَهٗ ؕ قَالَ كَمْ لَبِثْتَ ؕ
قَالَ لَبِثْتُ یَوْمًا اَوْ بَعْضَ یَوْمٍ ؕ قَالَ بَلْ لَّبِثْتَ مِائَةَ
عَامٍ فَانْظُرْ اِلٰی طَعَامِكَ وَ شَرَابِكَ لَمْ یَتَسَنَّهْ ۚ وَ انْظُرْ
اِلٰی حِمَارِكَ قف وَ لِنَجْعَلَكَ اٰیَةً لِّلنَّاسِ وَ انْظُرْ اِلَی
الْعِظَامِ كَیْفَ نُنْشِزُهَا ثُمَّ نَكْسُوْهَا لَحْمًا ؕ فَلَمَّا تَبَیَّنَ
لَهٗ ۙ قَالَ اَعْلَمُ اَنَّ اللّٰهَ عَلٰی كُلِّ شَیْءٍ قَدِیْرٌ ﴿٢٥٩﴾

257. "அல்லாஹ் விசுவாசங்கொண்டோருக்குப்பாதுகாவலன்; அவர்களை இருள்களிலிருந்து பேரொளியின்பால் அவன் வெளிப்படுத்துகிறான். மேலும், (அல்லாஹ்வை) நிராகரித்தோர்_அவர்களின் பாதுகாவலர்கள் "தாகூத்" (என்ற ஷைத்தான்கள்) தான். அவர்கள், அவர்களைப் பேரொளியிலிருந்து இருள்களின்பால் வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் நரகவாசிகள்; அவர்கள் அதில் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்.

258. அல்லாஹ் தனக்கு ஆட்சியைக் கொடுத்ததற்காக அவன் (நன்றி கொன்றவனாக) இப்றாஹீமிடம் அவருடைய இரட்சகனைப்பற்றித் தர்க்கம் செய்தவனை (நபியே !) நீர் பார்க்கவில்லையா? அது சமயம் இப்றாஹீம், "எவன் உயிர் கொடுக்கவும், மரணத்தை அளிக்கவும் செய்கின்றானோ அவன்தான் என்னுடைய இரட்சகன்" என்று கூறினார்; (அப்போது) அவன், "நானும் உயிர்ப்பிக்கச் செய்வேன்; மரணிக்கவும் வைப்பேன்" என்று கூறினான். (அதற்கு) இப்றாஹீம், "அப்படியாயின், நிச்சயமாக அல்லாஹ் சூரியனைக் கிழக்கிலிருந்து (உதிக்கச் செய்து) கொண்டுவருகின்றான்; நீ அதை மேற்கிலிருந்து கொண்டுவா" எனக்கூறினார். ஆகவே, நிராகரித்த அவன், (பதில் கூற இயலாது) திகைப்பில் ஆழ்த்தப்பட்டான். மேலும் அல்லாஹ், அநியாயம் செய்து கொண்டிருக்கிற கூட்டத்தார்க்கு நேர்வழி காட்டமாட்டான்.

259. அல்லது, ஒரு கிராமத்தின் பக்கமாகச் சென்றவரைப் போல் (நபியே! நீர் பார்க்கவில்லையா? அவர்) அதிலுள்ள முகடுகளின்மீது அவை வீழ்ந்து கிடக்க(க் கண்டு),இதனை எவ்வாறு இது இறந்தபின், அல்லாஹ் உயிர்ப்பிப்பான்?" என்று கூறினார். ஆகவே அல்லாஹ், அவரை நூறு ஆண்டுகள் வரை மரணித்திருக்கச் செய்து,பின்னர் அவரை உயிர்ப்பித்து(அவரிடம்)" நீர் எவ்வளவு காலம் இருந்தீர்?" எனக்கேட்டான்; அ(தற்க)வர் "ஒரு நாள் அல்லது ஒரு நாளில் சில பாகம் இருந்தேன்" எனக்கூறினார். (அதற்கு அல்லாஹ்) "அன்று! நீர் நூறு வருடங்கள் (இந்நிலையில்) இருந்தீர் என்று கூறினான் . ஆகவே உம்முடைய உணவையும், உம்முடைய பானத்தையும்நீர் நோக்குவீராக! அவை எவ்வித மாறுதலும் அடையவில்லை. இன்னும், உம்முடைய கழுதையின்பால் நோக்குவீராக!மனிதர்களுக்கு உம்மை ஓர் அத்தாட்சியாக நாம் ஆக்குவதற்காகவும் (மரணிக்கச்செய்து உம்மை உயிர்கொடுத்து எழுப்பினோம்) இன்னும்,(அக்கழுதையின்)எலும்புகளின் பால், எவ்வாறு அவைகளைச் சேர்த்து பின்னர் அதன்மீது மாமிசத்தை அணிவிக்கின்றோம்" என்று நீர் நோக்குவீராக! பின்னர் அவருக்குத் தெளிவான போது அவர், "நிச்சயமாக அல்லாஹ்,ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன் என்று நான் அறிகிறேன் " என்று கூறினார்.

وَاِذۡ قَالَ اِبۡرٰهٖمُ رَبِّ اَرِنِىۡ كَيۡفَ تُحۡىِ الۡمَوۡتٰى ؕ قَالَ اَوَلَمۡ
تُؤۡمِنۡ ؕ قَالَ بَلٰى وَلٰـكِنۡ لِّيَطۡمَـئِنَّ قَلۡبِىۡ ؕ قَالَ فَخُذۡ اَرۡبَعَةً
مِّنَ الطَّيۡرِ فَصُرۡهُنَّ اِلَيۡكَ ثُمَّ اجۡعَلۡ عَلٰى كُلِّ جَبَلٍ مِّنۡهُنَّ
جُزۡءًا ثُمَّ ادۡعُهُنَّ يَاۡتِيۡنَكَ سَعۡيًا ؕ وَاعۡلَمۡ اَنَّ اللّٰهَ عَزِيۡزٌ
حَكِيۡمٌ ﴿٢٦٠﴾ مَثَلُ الَّذِيۡنَ يُنۡفِقُوۡنَ اَمۡوَالَهُمۡ فِىۡ سَبِيۡلِ اللّٰهِ ٣٥ ع ٣
كَمَثَلِ حَبَّةٍ اَنۡۢبَتَتۡ سَبۡعَ سَنَابِلَ فِىۡ كُلِّ سُنۡۢبُلَةٍ مِّائَةُ حَبَّةٍ ؕ
وَاللّٰهُ يُضٰعِفُ لِمَنۡ يَّشَآءُ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيۡمٌ ﴿٢٦١﴾ اَلَّذِيۡنَ
يُنۡفِقُوۡنَ اَمۡوَالَهُمۡ فِىۡ سَبِيۡلِ اللّٰهِ ثُمَّ لَا يُتۡبِعُوۡنَ مَآ اَنۡفَقُوۡا
مَنًّا وَّلَاۤ اَذًى ۙ لَّهُمۡ اَجۡرُهُمۡ عِنۡدَ رَبِّهِمۡ ۚ وَلَا خَوۡفٌ عَلَيۡهِمۡ
وَلَا هُمۡ يَحۡزَنُوۡنَ ﴿٢٦٢﴾ قَوۡلٌ مَّعۡرُوۡفٌ وَّمَغۡفِرَةٌ خَيۡرٌ مِّنۡ صَدَقَةٍ
يَّتۡبَعُهَاۤ اَذًى ؕ وَاللّٰهُ غَنِىٌّ حَلِيۡمٌ ﴿٢٦٣﴾ يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا لَا
تُبۡطِلُوۡا صَدَقٰتِكُمۡ بِالۡمَنِّ وَالۡاَذٰى ۙ كَالَّذِىۡ يُنۡفِقُ مَالَهٗ
رِئَآءَ النَّاسِ وَلَا يُؤۡمِنُ بِاللّٰهِ وَالۡيَوۡمِ الۡاٰخِرِ ؕ فَمَثَلُهٗ كَمَثَلِ
صَفۡوَانٍ عَلَيۡهِ تُرَابٌ فَاَصَابَهٗ وَابِلٌ فَتَرَكَهٗ صَلۡدًا ؕ لَا يَقۡدِرُوۡنَ
عَلٰى شَىۡءٍ مِّمَّا كَسَبُوۡا ؕ وَاللّٰهُ لَا يَهۡدِى الۡقَوۡمَ الۡكٰفِرِيۡنَ ﴿٢٦٤﴾

260. இன்னும் இப்றாஹீம் "என் இரட்சகனே! மரணித்தோரை நீ எவ்வாறு உயிர்ப்பிப்பாய்? என்பதை நீ எனக்குக் காண்பிப்பாயாக" எனக் கூறிய போது, அவன்," நீர் நம்பவில்லையா?" என்று கேட்டான். அ(தற்க)வர் "ஏன் இல்லை! (நம்பிக்கைக் கொண்டிருக்கிறேன்.) என்னுடைய இதயம் அமைதியடைவதற்காக" என அவர் கூறினார். (அதற்கு அல்லாஹ்) "பறவைகளிலிருந்து நான்கைப் பிடித்து, பின்னர் நீர் அவைகளைத் துண்டாக்கி அவற்றிலிருந்து ஒரு பகுதியை ஒவ்வொரு மலையின் மீதும் வைத்து விடுவீராக! பின்னர், அவைகளை நீர் அழைப்பீராக! அவை உம்மிடம் வேகமாய் வந்து சேரும்; மேலும் நிச்சயமாக அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன் என்பதை நீர் அறிந்து கொள்வீராக!" எனக் கூறினான்.

261. அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய செல்வங்களைச் செலவு செய்கின்றார்களே அத்தகையோரின் உதாரணம்: ஒரு வித்தின் உதாரணத்தை போன்றிருக்கின்றது; அது ஏழு கதிர்களை முளைப்பித்தது. ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்கள் உள்ளன; இன்னும் அல்லாஹ், தான் நாடியவர்களுக்கு (இதை மேலும்) இருமடங்காக்குகிறான்; அல்லாஹ் மிக்க விசாலமானவன்; யாவற்றையும் அறிகிறவன்.

262. தங்களுடைய செல்வங்களை அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்து (அப்பொருளைக்கொடுக்கப்பட்டவனுக்குத்) தாங்கள் செலவு செய்ததை அதன் பின்னர் சொல்லிக் காட்டுவதையோ (வேறு விதமாக) நோவினை செய்வதையோ தொடர மாட்டார்களே அத்தகையோர்_அவர்களுக்கு அவர்களுடைய கூலி, அவர்களுடைய இரட்சகனிடத்தில் உண்டு; அவர்களுக்கு யாதொரு பயமுமில்லை; அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள்.

263. எதனைத்துன்புறுத்தல் தொடர்கிறதோ அத்தகைய தர்மத்தை விட இன் சொல்லும், மன்னிப்பும் மிகச் சிறந்தவையாகும்; இன்னும் அல்லாஹ் (தன் படைப்புகளைவிட்டும்) தேவையற்றவன், மிகவும் சகித்துக் கொள்ளக் கூடியவன்.

264. விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங் கொள்ளாமலும், (முகஸ்துதிக்காக பிற) மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவும் தன் பொருளைச் செலவு செய்கிறவனைப் போல் நீங்கள் உங்களுடைய தர்மங்களைச் சொல்லிக் காண்பித்தும், நோவினை(கள்) செய்தும் (அதன் பலனை) வீணாக்கி விடாதீர்கள்; ஆகவே அவனுடைய உதாரணம், ஒரு வழுக்குப் பாறையைப் போன்றிருக்கின்றது; அதன்மீது மண் படிந்தது; அப்போது ஒரு பெரு மழை (பெய்து) அதைத் தொட்டது, அப்போது அதை வெறும் பாறையாக விட்டுவிட்டது. ஆகவே, அவர்கள் சம்பாதித்ததிலிருந்து எந்த ஒன்றின் மீதும் (அதன் பலனைப்பெற) சக்திபெறமாட்டார்கள். மேலும், அல்லாஹ் நிராகரிக்கும் சமூகத்தாரை நேரான வழியில் செலுத்தமாட்டான்.

وَمَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ وَ
تَثْبِيْتًا مِّنْ اَنْفُسِهِمْ كَمَثَلِ جَنَّةٍۭ بِرَبْوَةٍ اَصَابَهَا وَابِلٌ
فَاٰتَتْ اُكُلَهَا ضِعْفَيْنِ ۚ فَاِنْ لَّمْ يُصِبْهَا وَابِلٌ فَطَلٌّ ؕ وَاللّٰهُ
بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿٢٦٥﴾ اَيَوَدُّ اَحَدُكُمْ اَنْ تَكُوْنَ لَهٗ جَنَّةٌ مِّنْ
نَّخِيْلٍ وَّاَعْنَابٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۙ لَهٗ فِيْهَا مِنْ كُلِّ
الثَّمَرٰتِ ۙ وَاَصَابَهُ الْكِبَرُ وَلَهٗ ذُرِّيَّةٌ ضُعَفَآءُ ۖۚ فَاَصَابَهَآ
اِعْصَارٌ فِيْهِ نَارٌ فَاحْتَرَقَتْ ؕ كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمُ
الْاٰيٰتِ لَعَلَّكُمْ تَتَفَكَّرُوْنَ ﴿٢٦٦﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَنْفِقُوْا مِنْ ٣٦ ع ٤
طَيِّبٰتِ مَا كَسَبْتُمْ وَمِمَّاۤ اَخْرَجْنَا لَكُمْ مِّنَ الْاَرْضِ ۪ وَلَا
تَيَمَّمُوا الْخَبِيْثَ مِنْهُ تُنْفِقُوْنَ وَلَسْتُمْ بِاٰخِذِيْهِ اِلَّاۤ
اَنْ تُغْمِضُوْا فِيْهِ ؕ وَاعْلَمُوْۤا اَنَّ اللّٰهَ غَنِيٌّ حَمِيْدٌ ﴿٢٦٧﴾
اَلشَّيْطٰنُ يَعِدُكُمُ الْفَقْرَ وَيَاْمُرُكُمْ بِالْفَحْشَآءِ ۚ وَاللّٰهُ
يَعِدُكُمْ مَّغْفِرَةً مِّنْهُ وَفَضْلًا ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ ۚۖ ﴿٢٦٨﴾
يُّؤْتِي الْحِكْمَةَ مَنْ يَّشَآءُ ۚ وَمَنْ يُّؤْتَ الْحِكْمَةَ فَقَدْ
اُوْتِيَ خَيْرًا كَثِيْرًا ؕ وَمَا يَذَّكَّرُ اِلَّاۤ اُولُوا الْاَلْبَابِ ﴿٢٦٩﴾

265. மேலும், தங்களுடைய செல்வங்களை, அல்லாஹ்வுடைய பொருத்தத்தைத் தேடியும் தங்களுடைய மனங்களில்(தங்கள் செயல்களுக்கு அல்லாஹ் நற் கூலி நல்குவான் என்பதை) உறுதிப் படுத்திக் கொண்டும் செலவு செய்கின்றார்களே, அத்தகையோரு(டைய தர்மத்து)க்கு உதாரணம் ; உயர்ந்த பூமியின் மீதுள்ள ஒரு தோட்டத்தை ஒத்திருக்கின்றது. அதை ஒரு பெரு மழை தொட்டது. அப்போது அது இருமடங்கு பலனைத் தந்தது. பெரு மழை அதை தொடாவிடினும் சிறு தூறலே அதற்குப் போதுமானது. இன்னும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றைப் பார்க்கின்றவன்.

266. உங்களில் ஒருவர், அவருக்குப் பேரீச்சை மரங்களும், திராட்சைக் கொடிகளும் நிறைந்த ஒரு தோப்பு இருந்து, அதன் கீழ் நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன; அதில் அவருக்கு சகலவகைக் கனிகளும் உள்ளன; அந்நிலையில் அவரை வயோதிகம் பீடித்து விட்டது; (சம்பாதிக்க இயலாத)பலவீனமானவர்களான சந்ததிகளும் அவருக்கிருக்கின்றனர்; அப்போது நெருப்பை தன்னில் கொண்ட புயற்காற்று அதனைத் தொட்டது; பின்னர் அது கரிந்து விடுவதை அவர் விரும்புவாரா? நீங்கள் சிந்தித்துணருவதற்காக அல்லாஹ் தன்னுடைய வசனங்களை உங்களுக்கு இவ்வாறு விளக்குகிறான்.

267. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் சம்பாதித்தவற்றிலிருந்தும், உங்களுக்குப் பூமியிலிருந்து நாம் வெளிப்படுத்தியவற்றிலிருந்தும் நல்லவைகளை (தர்மமாகச்) செலவு செய்யுங்கள்; இன்னும், அதில் கெட்டதை செலவு செய்ய நீங்கள் நாடாதீர்கள்;(காரணம்: நல்லவையல்லாததை உங்களுக்குக் கொடுக்ககப்பட்டால் வெட்க மேலீட்டால்) அ(துவிஷயத்)தில் கண்மூடினவர்களாகவே தவிர, அதை நீங்கள் எடுக்கக் கூடியவர்களல்லர்; மேலும் நிச்சயமாக அல்லாஹ், தேவையற்றவன்; மிக்க புகழுக்குரியவன் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

268. (நீங்கள் தருமம்செய்வதால்,) ஷைத்தான் உங்களுக்கு ஏழ்மையை அச்சுறுத்தி, மானக்கேடானதைக் கொண்டு உங்களை அவன் ஏவுகிறான்; (ஆனால்) அல்லாஹ்வோ தன்னிடமிருந்து பாவ மன்னிப்பையும், பேரருளையும் உங்களுக்கு வாக்களிக்கின்றான். மேலும், அல்லாஹ் மிக்க விசாலமானவன்; (யாவையும்) நன்கறிகிறவன்.

269. (அல்லாஹ்) தான் நாடியவர்களுக்கு (கல்வி) ஞானத்தைக் கொடுக்கின்றான்; இன்னும், எவர் (கல்வி) ஞானம் கொடுக்கப்படுகின்றாரோ அவர், திட்டமாக அதிகமான நன்மைகளைக் கொடுக்கப் பட்டு விடுகிறார்; மேலும் அறிவாளிகளைத் தவிர (வேறெவரும்) உபதேசம் பெற மாட்டார்கள்.

وَمَآ اَنۡفَقۡتُمۡ مِّنۡ نَّفَقَةٍ اَوۡ نَذَرۡتُمۡ مِّنۡ نَّذۡرٍ
فَاِنَّ اللّٰهَ يَعۡلَمُهٗ ؕ وَمَا لِلظّٰلِمِيۡنَ مِنۡ اَنۡصَارٍ ﴿۲۷۰﴾
اِنۡ تُبۡدُوا الصَّدَقٰتِ فَنِعِمَّا هِىَ ۚ وَاِنۡ تُخۡفُوۡهَا وَ
تُؤۡتُوۡهَا الۡفُقَرَآءَ فَهُوَ خَيۡرٌ لَّـكُمۡ ؕ وَيُكَفِّرُ عَنۡكُمۡ
مِّنۡ سَيِّاٰتِكُمۡ ؕ وَاللّٰهُ بِمَا تَعۡمَلُوۡنَ خَبِيۡرٌ ﴿۲۷۱﴾ لَيۡسَ
عَلَيۡكَ هُدٰٮهُمۡ وَلٰـكِنَّ اللّٰهَ يَهۡدِىۡ مَنۡ يَّشَآءُ ؕ وَمَا
تُنۡفِقُوۡا مِنۡ خَيۡرٍ فَلِاَنۡفُسِكُمۡ ؕ وَمَا تُنۡفِقُوۡنَ اِلَّا
ابۡتِغَآءَ وَجۡهِ اللّٰهِ ؕ وَمَا تُنۡفِقُوۡا مِنۡ خَيۡرٍ يُّوَفَّ اِلَيۡكُمۡ
وَاَنۡتُمۡ لَا تُظۡلَمُوۡنَ ﴿۲۷۲﴾ لِلۡفُقَرَآءِ الَّذِيۡنَ اُحۡصِرُوۡا فِىۡ
سَبِيۡلِ اللّٰهِ لَا يَسۡتَطِيۡعُوۡنَ ضَرۡبًا فِى الۡاَرۡضِ يَحۡسَبُهُمُ
الۡجَاهِلُ اَغۡنِيَآءَ مِنَ التَّعَفُّفِ ۚ تَعۡرِفُهُمۡ بِسِيۡمٰهُمۡ ۚ
لَا يَسۡـئَلُوۡنَ النَّاسَ اِلۡحَافًا ؕ وَمَا تُنۡفِقُوۡا مِنۡ خَيۡرٍ
فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيۡمٌ ﴿۲۷۳﴾ اَلَّذِيۡنَ يُنۡفِقُوۡنَ اَمۡوَالَهُمۡ ع ۳۷ / ۵
بِالَّيۡلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمۡ اَجۡرُهُمۡ
عِنۡدَ رَبِّهِمۡ ۚ وَلَا خَوۡفٌ عَلَيۡهِمۡ وَلَا هُمۡ يَحۡزَنُوۡنَ ﴿۲۷۴﴾ وقف منزل

270. (நன்மைக்காக) செலவு வகையிலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்தபோதிலும், அல்லது நேர்ச்சையிலிருந்து நீங்கள் எதை நேர்ச்சை செய்தபோதிலும், அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கறிவான்; அன்றியும் அநியாயக்காரர்களுக்கு உதவி செய்வோர் இல்லை.

271. தர்மங்களை நீங்கள் வெளிப்படையாகச் செய்தால் அதுவும் நல்லதே; மேலும், அதனை நீங்கள் மறைத்து, ஏழைகளுக்கு நீங்கள் அதனைக் கொடுத்தால் அது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும்; மேலும், அது உங்களுடைய சில பாவச் செயல்(களின் விளைவு)களை உங்களை விட்டுப் போக்கிவிடும்; நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்குணர்பவன்.

272. (நபியே!) அவர்களை நேர்வழி நடத்தும் பொறுப்பு உம்மீதல்ல; எனினும், அல்லாஹ் தான் நாடியவர்களை நேர் வழியில் செலுத்துகின்றான். (விசுவாசிகளே!) நல்லதிலிருந்து எதனை நீங்கள் செலவு செய்த போதிலும், (அது) உங்களுக்கே (பயன் தரக்கூடியதாகும்); மேலும், அல்லாஹ்வின் திருமுகத்தைக் கருதியே அன்றி நீங்கள் செலவு செய்யமாட்டீர்கள்; நல்லதிலிருந்து எதனை நீங்கள் செலவு செய்த போதிலும், உங்களுக்குப் பூரணமாகத் (திருப்பித்) தரப்படும். மேலும், நீங்கள் அநியாயம் செய்யப்பட மாட்டீர்கள்.

273. (விசுவாசங்கொண்டோரே! தர்மமானது) அல்லாஹ்வுடைய பாதையில் (தங்களை முற்றிலும்போர் செய்வதற்கென அர்ப்பணஞ்செய்து) தடுத்துவைக்கப் பட்டுள்ளார்களே அத்தகைய ஏழைகளுக்குரியதாகும்; (தங்களின் சொந்த வாழ்க்கைத் தேவைக்கு) பூமியில் பிரயாணம் செய்ய அவர்கள் சக்தி பெறமாட்டார்கள்; (அன்றி, அவர்கள் பிறரிடம் யாசிக்காத அவர்களின்) பேணுதலினால் (அவர்களின் நிலையை) அறியாதவர், அவர்களைச் சீமான்களௌன எண்ணுவார்; அவர்களுடைய அடையாளங்களால் நீர் அவர்களை அறிந்துகொள்வீர்; அவர்கள் மனிதர்களிடத்தில் வருந்திக் கேட்கமாட்டார்கள்; நல்லதிலிருந்து எதனை நீங்கள் செலவு செய்தபோதிலும், நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிகிறவன்.

274. (விசுவாசங்கொண்டோரே!) தங்கள் செல்வங்களை (தர்மத்திற்காக) இரவிலும், பகலிலும், இரகசியமாகவும், வெளிப்படையாகவும் செலவு செய்கின்றார்களே அத்தகையோர் — அவர்களுக்கு அவர்களுடைய கூலி அவர்களுடைய இரட்சகனிடத்தில் உண்டு. அவர்களுக்கு (மறுமையில்) யாதொரு பயமுமில்லை. (இம்மையில் விட்டுச் சென்றதைப் பற்றி) அவர்கள் கவலையும் அடையமாட்டார்கள்.

الَّذِينَ يَأْكُلُونَ الرِّبٰوا لَا يَقُومُونَ إِلَّا كَمَا يَقُومُ الَّذِي
يَتَخَبَّطُهُ الشَّيْطٰنُ مِنَ الْمَسِّ ۚ ذٰلِكَ بِأَنَّهُمْ قَالُوٓا إِنَّمَا الْبَيْعُ
مِثْلُ الرِّبٰوا ۘ وَأَحَلَّ اللّٰهُ الْبَيْعَ وَحَرَّمَ الرِّبٰوا ۚ فَمَنْ جَآءَهٗ وقف لازم
مَوْعِظَةٌ مِّنْ رَّبِّهٖ فَانْتَهٰى فَلَهٗ مَا سَلَفَ ۚ وَأَمْرُهٗٓ إِلَى اللّٰهِ ۚ
وَمَنْ عَادَ فَأُولٰٓئِكَ أَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيهَا خٰلِدُونَ ﴿٢٧٥﴾
يَمْحَقُ اللّٰهُ الرِّبٰوا وَيُرْبِي الصَّدَقٰتِ ۗ وَاللّٰهُ لَا يُحِبُّ كُلَّ
كَفَّارٍ أَثِيمٍ ﴿٢٧٦﴾ إِنَّ الَّذِينَ اٰمَنُوا وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَأَقَامُوا
الصَّلٰوةَ وَاٰتَوُا الزَّكٰوةَ لَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ۚ وَلَا
خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ﴿٢٧٧﴾ يٰٓأَيُّهَا الَّذِينَ اٰمَنُوا اتَّقُوا
اللّٰهَ وَذَرُوا مَا بَقِيَ مِنَ الرِّبٰوٓا إِنْ كُنْتُمْ مُّؤْمِنِينَ ﴿٢٧٨﴾ فَإِنْ
لَّمْ تَفْعَلُوا فَأْذَنُوا بِحَرْبٍ مِّنَ اللّٰهِ وَرَسُولِهٖ ۚ وَإِنْ تُبْتُمْ
فَلَكُمْ رُءُوسُ أَمْوَالِكُمْ ۚ لَا تَظْلِمُونَ وَلَا تُظْلَمُونَ ﴿٢٧٩﴾ وَإِنْ
كَانَ ذُو عُسْرَةٍ فَنَظِرَةٌ إِلٰى مَيْسَرَةٍ ۚ وَأَنْ تَصَدَّقُوا خَيْرٌ
لَّكُمْ إِنْ كُنْتُمْ تَعْلَمُونَ ﴿٢٨٠﴾ وَاتَّقُوا يَوْمًا تُرْجَعُونَ فِيهِ
إِلَى اللّٰهِ ۗ ثُمَّ تُوَفّٰى كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُونَ ﴿٢٨١﴾ ع ٣٨

275. வட்டியை உண்பவர்கள், ஷைத்தான் தீண்டியதால் எவனை அவன் நினைவிழக்கச்செய்தானோ அத்தகையவன் எழும்புவது போலன்றி,(வேறு வகையாக மறுமைநாளில்)அவர்கள் எழமாட்டார்கள். அ(ந்த நிலைக்கு அவர்கள் ஆளான)து,நிச்சயமாக "வணிகமெல்லாம் வட்டியைப் போன்றதுதான்" என திட்டமாக அவர்கள் கூறியதால்தான். மேலும்,அல்லாஹ் வணிகத்தை ஆகுமாக்கி வைத்து, அவன் வட்டியை(ஹராமாக்கி)த் தடுத்துவிட்டான். ஆதலால்,(உங்களில்) யாருக்கு தன் இரட்சகனிடமிருந்து (வட்டியைப்பற்றிக் கண்டித்து ) உபதேசம் வந்து, பின்னர் (அதைவிட்டு) அவர் விலகிக் கொண்டாரோ ,(அவர் அதற்கு) முன் (வாங்கிச்) சென்றுபோனது அவருக்குரியதே; இன்னும், அவருடைய காரியம் அல்லாஹ்வின்பாலாகும்; மேலும், (இக்கட்டளை கிடைத்தபின்) எவர்கள் (வட்டியை எடுப்பதன்பால்) திரும்பி விடுகிறார்களோ, அவர்கள் நரகவாசிகள்; அதில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்.

276. அல்லாஹ், வட்டியை (அதில் எவ்வித அபிவிருத்தியுமில்லாது) அழித்து விடுவான்; மேலும் தர்மங்களை (அபிவிருத்தியைக்கொண்டு) வளரச் செய்கின்றான். மேலும், பாவியான நிராகரித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரையும் அல்லாஹ் நேசிக்கமாட்டான்.

277. விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்து, தொழுகையையும் நிறைவேற்றி, ஜகாத்தையும் கொடுத்தார்களே நிச்சயமாக அத்தகையோர்_ அவர்களுக்கு, அவர்களுடைய கூலி அவர்களின் இரட்சகனிடத்தில் உண்டு. மேலும் அவர்களுக்கு(மறுமையில்)எவ்விதப் பயமுமில்லை,அவர்கள் (இவ்வுலகில் விட்டுச் செல்கின்றவை பற்றி) கவலையும் அடைய மாட்டார்கள்.

278. விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்; மேலும், நீங்கள் (உண்மையாக) விசுவாசங்கொண்டவர்களாக இருப்பின், வட்டியில் (எடுத்தது போக) எஞ்சியிருப்பதை (எடுக்காமல்) விட்டுவிடுங்கள்.

279. ஆகவே (கட்டளையிடப்பட்டவாறு)நீங்கள் செய்யாவிடின் அல்லாஹ் விடமும், அவனுடைய தூதரிடமும் போரிடுவதாகப் பிரகடனம் செய்துவிடுங்கள்; மேலும், நீங்கள் (தவ்பாச்செய்து) மீண்டுவிட்டால் உங்கள் செல்வங்களின் அசல் தொகைகள் உங்களுக்குண்டு; நீங்கள் (அதிகமாக வாங்கி கடன் பட்டோருக்கு) அநியாயம் செய்யாதீர்கள்; (அவ்வாறே) நீங்களும் (மூலத்தொகையைப்) பெற்றுக்கொள்வதிலிருந்து அநியாயம் செய்யப் படமாட்டீர்கள்.

280. மேலும், (கடன் பட்டவர், அதனைக் குறிப்பிட்ட நேரத்தில் திருப்பித் தர முடியாதவாறு) அவர் கஷ்டத்தையுடையவராகயிருந்தால், (கடனைத் தீர்க்கும்) வசதி ஏற்படும் வரையில் எதிர்பார்த்திருத்தல் வேண்டும்; மேலும், (அதன் நன்மைபற்றி) நீங்கள் அறிகிறவர்களாகயிருப்பின், (அதை கடன்பட்டவருக்கே) நீங்கள் தார்மம் செய்து விடுவது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும்.

281. இன்னும் ஒரு நாளைப்பயந்து கொள்ளுங்கள். அதில், நீங்கள் அல்லாஹ்வின் பக்கம் மீட்டப்படுவீர்கள்; பின்னர் ஒவ்வோர் ஆத்மாவுக்கும், அது சம்பாதித்ததற்குரிய(கூலியான)தை பூரணமாகக் கொடுக்கப்படும்.(அதில்) அவர்களோ அநியாயம் செய்யப்படமாட்டார்கள்.

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡۤا اِذَا تَدَايَنۡتُمۡ بِدَيۡنٍ اِلٰۤى اَجَلٍ مُّسَمًّى
فَاكۡتُبُوۡهُ ؕ وَلۡيَكۡتُبْ بَّيۡنَكُمۡ كَاتِبٌ ۢ بِالۡعَدۡلِ ۪ وَلَا يَاۡبَ كَاتِبٌ اَنۡ
يَّكۡتُبَ كَمَا عَلَّمَهُ اللّٰهُ فَلۡيَكۡتُبۡ ۚ وَلۡيُمۡلِلِ الَّذِىۡ عَلَيۡهِ الۡحَقُّ
وَلۡيَتَّقِ اللّٰهَ رَبَّهٗ وَلَا يَبۡخَسۡ مِنۡهُ شَيۡـًٔا ؕ فَاِنۡ كَانَ الَّذِىۡ عَلَيۡهِ
الۡحَقُّ سَفِيۡهًا اَوۡ ضَعِيۡفًا اَوۡ لَا يَسۡتَطِيۡعُ اَنۡ يُّمِلَّ هُوَ فَلۡيُمۡلِلۡ
وَلِيُّهٗ بِالۡعَدۡلِ ؕ وَاسۡتَشۡهِدُوۡا شَهِيۡدَيۡنِ مِنۡ رِّجَالِكُمۡ ۚ فَاِنۡ
لَّمۡ يَكُوۡنَا رَجُلَيۡنِ فَرَجُلٌ وَّامۡرَاَتٰنِ مِمَّنۡ تَرۡضَوۡنَ مِنَ
الشُّهَدَآءِ اَنۡ تَضِلَّ اِحۡدٰٮهُمَا فَتُذَكِّرَ اِحۡدٰٮهُمَا الۡاُخۡرٰى ؕ وَ
لَا يَاۡبَ الشُّهَدَآءُ اِذَا مَا دُعُوۡا ؕ وَلَا تَسۡـَٔمُوۡۤا اَنۡ تَكۡتُبُوۡهُ
صَغِيۡرًا اَوۡ كَبِيۡرًا اِلٰۤى اَجَلِهٖ ؕ ذٰلِكُمۡ اَقۡسَطُ عِنۡدَ اللّٰهِ وَاَقۡوَمُ
لِلشَّهَادَةِ وَاَدۡنٰۤى اَلَّا تَرۡتَابُوۡۤا اِلَّاۤ اَنۡ تَكُوۡنَ تِجَارَةً حَاضِرَةً
تُدِيۡرُوۡنَهَا بَيۡنَكُمۡ فَلَيۡسَ عَلَيۡكُمۡ جُنَاحٌ اَلَّا
تَكۡتُبُوۡهَا ؕ وَاَشۡهِدُوۡۤا اِذَا تَبَايَعۡتُمۡ ۪ وَلَا يُضَآرَّ كَاتِبٌ
وَّلَا شَهِيۡدٌ ؕ وَاِنۡ تَفۡعَلُوۡا فَاِنَّهٗ فُسُوۡقٌ ۢ بِكُمۡ ؕ وَ
اتَّقُوا اللّٰهَ ؕ وَيُعَلِّمُكُمُ اللّٰهُ ؕ وَاللّٰهُ بِكُلِّ شَىۡءٍ عَلِيۡمٌ ﴿٢٨٢﴾

282. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் ஒரு குறிப்பிடப்பட்ட தவணைவரை நீங்கள் ஒருவருக்கொருவர் கடன் கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டால் அதை எழுதிக் கொள்ளுங்கள்; மேலும் உங்களிடையே (அதை) எழுதுபவர் நீதத்தைக் கொண்டு எழுதவும். (அவ்விருவரும் எழுத முடியாமல், எழுத்தாளரிடம் எழுதக் கோரினால்,) எழுத்தாளர், அல்லாஹ் அவருக்குக் கற்றுக்கொடுத்தது போன்று (நீதமாக) அவர் எழுதுவதற்கு மறுக்கவேண்டாம்; ஆகவே அவர் எழுதிக் கொடுக்கவும். இன்னும், எவர் மீது (கடன்) இருக்கிறதோ அவரே வாசகத்தைக் கூறவும். (வாசகம் கூறுவதிலும், அதை எழுதுவதிலும்) தன் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கு அவர் பயந்து கொள்ளவும். மேலும் அதில் யாதொன்றையும் அவர் குறைத்து விடவேண்டாம். எனவே எவர் மீது (கடன்) இருக்கின்றதோ அவர் அறிவற்றவராகவோ அல்லது (நோய், முதுமை, சிறு பிராயம் போன்றதால்) பலவீனமானவராகவோ அல்லது தானே வாசகஞ் சொல்லச் சக்தியற்றவராகவோ இருந்தால், அவருடைய பாதுகாவலன் நீதமாக வாசகங்கூறவும். மேலும், நீங்கள் உங்களுடைய ஆண்களிலிருந்து (நீதிவான்களான) இரு சாட்சிகளை சாட்சிகளாக்கிக் கொள்ளுங்கள்; அவ்வாறு இருவரும் ஆண்களாகயில்லாதிருந்தால், சாட்சியாளர்களில் நீங்கள் பொருந்தக் கூடியவர்களில் ஒரு ஆணும், இரு பெண்களும் (சாட்சியாக்கப் படவேண்டும்; இருபெண்கள் ஏனெனில்) அவ்விருவரில் ஒருவர் மறந்து விடலாம், அப்போது அவ்விருவரில் ஒருத்தி, மற்றொருத்திக்கு நினைவு படுத்துவாள்; மேலும் சாட்சிகள், (தாம் அறிந்ததைப் பற்றிக் கூற) அழைக்கப்படும் போது, (அறிந்ததைக் கூற) மறுக்க வேண்டாம். இன்னும் (கடன்) சிறிதாயினும் அல்லது பெரிதாயினும் அதன் தவணைவரையில், அதனை எழுதிக்கொள்வதில் சடைந்து விடாதீர்கள்; இது அல்லாஹ்விடத்தில் மிக்க நீதியானதும், சாட்சியத்தை மிக்க உறுதிப்படுத்தக்கூடியதும், நீங்கள் சந்தேகிக்காமலிருப்பதற்கு மிக்க நெருக்கமானதுமாகும்; நீங்கள் உங்களுக்கிடையில் உடனுக்குடன் செய்யும் ரொக்கமான வியாபாரமாக இருந்தாலே தவிர; அப்போது அதனை நீங்கள் எழுதிக்கொள்ளாமலிருப்பது உங்கள் மீது குற்றமல்ல; மேலும், ஒருவருக்கொருவர் (ரொக்கமாக) நீங்கள் வர்த்தகம் செய்து கொண்டால் சாட்சி வைத்துக் கொள்ளுங்கள்; மேலும், எழுதுகிறவனோ, சாட்சியோ (தமக்கு சாதகமாக நடந்து கொள்ள வேண்டுமென) துன்புறுத்தப்படக்கூடாது; இன்னும், நீங்கள் அவ்வாறு செய்தால், நிச்சயமாக அது உங்களுக்குப் பாவமாகும். இன்னும், அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள்; மேலும், அல்லாஹ் (இதுபற்றியவற்றை) உங்களுக்கு கற்றுக் கொடுக்கின்றான். இன்னும் அல்லாஹ்வோ ஒவ்வொரு பொருளைப்பற்றியும் நன்கறிகிறவன்.

وَإِنْ كُنْتُمْ عَلٰى سَفَرٍ وَّلَمْ تَجِدُوْا كَاتِبًا فَرِهٰنٌ مَّقْبُوْضَةٌ ؕ فَإِنْ
أَمِنَ بَعْضُكُمْ بَعْضًا فَلْيُؤَدِّ الَّذِى اؤْتُمِنَ أَمَانَتَهٗ وَلْيَتَّقِ اللّٰهَ
رَبَّهٗ ؕ وَلَا تَكْتُمُوا الشَّهَادَةَ ؕ وَمَنْ يَّكْتُمْهَا فَإِنَّهٗٓ اٰثِمٌ قَلْبُهٗ ؕ وَ
اللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ عَلِيْمٌ ﴿٢٨٣﴾ لِلّٰهِ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْأَرْضِ ؕ ٣٩ ع٢ ٧
وَإِنْ تُبْدُوْا مَا فِىٓ أَنْفُسِكُمْ أَوْ تُخْفُوْهُ يُحَاسِبْكُمْ بِهِ
اللّٰهُ ؕ فَيَغْفِرُ لِمَنْ يَّشَآءُ وَيُعَذِّبُ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ
شَىْءٍ قَدِيْرٌ ﴿٢٨٤﴾ اٰمَنَ الرَّسُوْلُ بِمَآ أُنْزِلَ إِلَيْهِ مِنْ رَّبِّهٖ وَ
الْمُؤْمِنُوْنَ ؕ كُلٌّ اٰمَنَ بِاللّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ ۣ قف
لَا نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِّنْ رُّسُلِهٖ ۣ قف وَقَالُوْا سَمِعْنَا وَأَطَعْنَا
غُفْرَانَكَ رَبَّنَا وَإِلَيْكَ الْمَصِيْرُ ﴿٢٨٥﴾ لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا إِلَّا
وُسْعَهَا ؕ لَهَا مَا كَسَبَتْ وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ ؕ رَبَّنَا لَا
تُؤَاخِذْنَآ إِنْ نَّسِيْنَآ أَوْ أَخْطَأْنَا ۚ رَبَّنَا وَلَا تَحْمِلْ عَلَيْنَآ
إِصْرًا كَمَا حَمَلْتَهٗ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِنَا ۚ رَبَّنَا وَلَا تُحَمِّلْنَا
مَا لَا طَاقَةَ لَنَا بِهٖ ۚ وَاعْفُ عَنَّا ۏ وَاغْفِرْ لَنَا ۏ وَارْحَمْنَا ۏ
أَنْتَ مَوْلٰنَا فَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ ﴿٢٨٦﴾ ع ٤٠ ع٣ ٨

283. இன்னும், நீங்கள் பிரயாணத்திலிருந்து, (கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டிய நிலையேற்பட்டு, அதனை எழுத) எழுத்தாளரையும் நீங்கள் பெறவில்லையென்றால், (கடன் பத்திரத்திற்குப் பதிலாக) கைப்பற்றப்படும் அடமானமாகும்; உங்களில் சிலரைச் சிலர் நம்பி (அடமானம் வைப்பாரா)னால், நம்பப்பட்டாரே அத்தகையவர் தன்னிடம் இருக்கும் அமானிதத்தை (ஒழுங்காக) நிறைவேற்றி விடவும்; மேலும், தன்னுடைய இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கு (மிகவும்) பயந்து (நீதமாக நடந்து) கொள்ளவும்; சாட்சியத்தை நீங்கள் மறைக்கவும்வேண்டாம்; எவரேனும் அதனை மறைத்தால் நிச்சயமாக அவருடைய இதயம் பாவத்திற்குள்ளாகி விடுகின்றது; மேலும், (மனிதர்களே!) நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிகிறவன்.

284. வானங்களிலுள்ளவையும், இன்னும்பூமியில் உள்ளவையும் அல்லாஹ்வுக்கே உரியவையாகும்; இன்னும், உங்களுடைய மனங்களிலுள்ளவற்றை நீங்கள் வெளிப்படுத்தினாலும் அல்லது அவற்றை நீங்கள் மறைத்துக் கொண்டாலும், அதைப் பற்றி அல்லாஹ் உங்களை (விசாரணை செய்து) கணக்குக் கேட்பான்; ஆகவே, அவன் நாடியவர்களுக்கு மன்னிப்பளிப்பான்; அவன் நாடியவர்களை வேதனையும் செய்வான்; அன்றியும், அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

285. (நம்முடைய) தூதர், தம் இரட்சகனிடமிருந்து தமக்கு இறக்கிவைக்கப்பட்ட (வேதத்)தை விசுவாசிக்கின்றார்; (அவ்வாறே மற்ற) விசுவாசிகளும் (விசுவாசிக்கின்றனர்; இவர்கள்) ஒவ்வொருவரும், அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் விசுவாசிக்கின்றனர்; "அவனுடைய தூதர்களில் எவருக்கிடையிலும் நாங்கள் வேற்றுமைப்படுத்திவிடமாட்டோம்" (என்றும்,) மேலும், (இரட்சகனே! உன் வேத வசனங்களை) "நாங்கள் செவியுற்றோம்; இன்னும் (உன் கட்டளைக்கு) நாங்கள் கீழ்ப்படிந்தோம்; எங்கள் இரட்சகனே! நாங்கள் உனது மன்னிப்பைக் கோருகின்றோம்; உன்பக்கமே (எங்களுடைய) மீட்சி உள்ளது" என்றும் கூறுகின்றார்கள்.

286. அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவிற்கும் அதன் சக்திக்கு மேல் சிரமப்படுத்த மாட்டான் ; அது சம்பாதித்துக் கொண்ட நன்மை அதற்கே (பயனளிக்கும் அவ்வாறே,) அது சம்பாதித்துக் கொண்ட தீமை அதற்கே கேடாக அமையும் ; எங்கள் இரட்சகனே! (உன் கடமைகளில் எதையும்) நாங்கள் மறந்து விட்டாலும், அல்லது (அதை நிறைவேற்றுவதில்) நாங்கள் தவறிழைத்து விட்டாலும் நீ எங்களை(க்குற்றம்) பிடிக்காதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! இன்னும் நீ எங்கள் மீது பளுவான சுமையை _ அதை எங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது நீ சுமத்தியவாறு _ சுமத்தாதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! இன்னும் எதை(ச்சுமக்க) எங்களுக்கு சக்தி இல்லையோ அதை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்களை விட்டும் (எங்கள் பாவங்களை) அழித்தும் விடுவாயாக! எங்களை மன்னித்தும் விடுவாயாக! எங்களுக்கு அருளும் புரிவாயாக! நீயே எங்கள் பாதுகாவலன் ; ஆகவே (உன்னை) நிராகரிக்கும் கூட்டத்தார் மீது (வெற்றி பெற) நீ எங்களுக்கு உதவி புரிவாயாக !

## سُوْرَةُ اٰلِ عِمْرٰنَ مَدَنِيَّةٌ وَّهِيَ مِائَتَا اٰيَةٍ وَّعِشْرُوْنَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

الٓمّٓ ﴿١﴾ اللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ ﴿٢﴾ نَزَّلَ عَلَيْكَ الْكِتٰبَ
بِالْحَقِّ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَاَنْزَلَ التَّوْرٰىةَ وَالْاِنْجِيْلَ ﴿٣﴾
مِنْ قَبْلُ هُدًى لِّلنَّاسِ وَاَنْزَلَ الْفُرْقَانَ ؕ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا
بِاٰيٰتِ اللّٰهِ لَهُمْ عَذَابٌ شَدِيْدٌ ؕ وَاللّٰهُ عَزِيْزٌ ذُو انْتِقَامٍ ﴿٤﴾
اِنَّ اللّٰهَ لَا يَخْفٰى عَلَيْهِ شَيْءٌ فِي الْاَرْضِ وَلَا فِي السَّمَآءِ ؕ ﴿٥﴾
هُوَ الَّذِيْ يُصَوِّرُكُمْ فِي الْاَرْحَامِ كَيْفَ يَشَآءُ ؕ لَآ اِلٰهَ اِلَّا
هُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿٦﴾ هُوَ الَّذِيْٓ اَنْزَلَ عَلَيْكَ الْكِتٰبَ مِنْهُ
اٰيٰتٌ مُّحْكَمٰتٌ هُنَّ اُمُّ الْكِتٰبِ وَاُخَرُ مُتَشٰبِهٰتٌ ؕ فَاَمَّا الَّذِيْنَ
فِيْ قُلُوْبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُوْنَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَآءَ
الْفِتْنَةِ وَابْتِغَآءَ تَاْوِيْلِهٖ ۚ وَمَا يَعْلَمُ تَاْوِيْلَهٗٓ اِلَّا اللّٰهُ ۘ م وَ
الرّٰسِخُوْنَ فِي الْعِلْمِ يَقُوْلُوْنَ اٰمَنَّا بِهٖ ۙ كُلٌّ مِّنْ عِنْدِ رَبِّنَا ۚ
وَمَا يَذَّكَّرُ اِلَّآ اُولُوا الْاَلْبَابِ ﴿٧﴾ رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ
هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ ﴿٨﴾

وقف النبی صلی اللہ علیہ وسلم
وقف لازم
وقف منزل

அத்தியாயம் : 3

## ஆலு இம்ரான் – இம்ரானின் குடும்பத்தினர்

வசனங்கள் : 200 மதனீ ருகூஃகள் : 20

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. அலிப் லாம் மீம்

2. அல்லாஹ் (அவன் எத்தகையவனென்றால்,) அவனைத் தவிர வணக்கத்திற்குரிய (வேறு) நாயன் இல்லை; (அவன்) நித்திய ஜீவன்; (என்றும்) நிலையானவன்.

3. (நபியே முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை – இதற்கு முன்னுள்ள (வேதங்கள் யா)வற்றையும் உண்மைப்படுத்தக்கூடியதாக (இது) இருக்க, உம்மீது அ(த்தகைய)வன்தான் இறக்கி வைத்தான்; தவ்றாத்தையும், இன்ஜீலையும் அவனே இறக்கி வைத்தான்.

4. முன்னர் மனிதர்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக (வேதங்களை அவனே இறக்கிவைத்தான்.) மேலும் (நன்மை தீமைகளைப்) பிரித்தறிவிக்கக் கூடிய புர்க்கா(ன் எனும் குர்ஆ)னையும் அவனே இறக்கிவைத்தான்; நிச்சயமாக, அல்லாஹ்வுடைய வசனங்களை நிராகரிக்கின்றார்களே அத்தகையோர் – அவர்களுக்குக் கடினமான வேதனையுண்டு ; இன்னும் அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவன்; (தீயவர்களை) தண்டித்தலையுடையவன்.

5. நிச்சயமாக அல்லாஹ் – அவனுக்கு பூமியில் மற்றும் வானத்தில் (உள்ள) எப்பொருளும் மறைந்ததன்று.

6. அவன் எத்தகையவனென்றால், கர்ப்பப்பைகளில் தான் எவ்வாறு நாடுகிறானோ, அவ்வாறு உங்களை அவன்வடிவமைக்கிறான்; அவனையன்றி (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை, அவன், (யாவரையும்) மிகைத்தோன், தீர்க்கமான அறிவுடையோன்.

7. அவன் எத்தகையவனென்றால், இவ்வேதத்தை உம்மீது அவன் இறக்கி வைத்தான்; இதில் தெளிவானகருத்துக்களுடைய வசனங்களும் இருக்கின்றன. அவைதான் இவ்வேதத்தின் அடிப்படையாகும்; மற்றவை, பலபொருள்களைக் கொண்டவையாகும் ; .ஆகவே, எவர்களுடைய இதயங்களில் சறுகுதல் இருக்கிறதோ அத்தகையோர், அதில் குழப்பத்தை உண்டு பண்ணக்கருதி – அதில் பல பொருள்கள் கொண்டவைகளையே தேடிப் பின்பற்றுவார்கள். மேலும், இதன் உண்மைக்கருத்தை அல்லாஹ்வையன்றி எவரும் அறியமாட்டார்கள். கல்வியறிவில் நிலை பெற்றவர்களோ (அதன் கருத்து, தங்களுக்குப் பூரணமாக விளங்காவிடினும்,) "இதனையும் நாங்கள் விசுவாசித்திருக்கிறோம்; (இவ்விருவகை வசனங்கள்) ஒவ்வொன்றும் எங்கள் இரட்சகனிடமிருந்து உள்ளவைதாம்" என்று கூறுவார்கள். அறிவுடையோர்களையன்றி மற்றெவரும் (இவைகளைக் கொண்டு) நல்லுபதேசமடையமாட்டார்கள்.

8. (அறிவுடைய அவர்கள்) "எங்கள் இரட்சகனே! நீ எங்களுக்கு நேர்வழி காட்டிய பின்னர், எங்களுடைய இதயங்களை (அதிலிருந்து) சறுகிவிடுமாறு செய்து விடாதிருப்பாயாக! மேலும், உன் புறத்திலிருந்து அருளையும் எங்களுக்கு அளிப்பாயாக! நிச்சயமாக நீயே பெரும்கொடையாளியாவாய் (என்றும்),

رَبَّنَآ اِنَّكَ جَامِعُ النَّاسِ لِيَوْمٍ لَّا رَيْبَ فِيْهِ ؕ اِنَّ اللّٰهَ لَا يُخْلِفُ
الْمِيْعَادَ ﴿۹﴾ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا لَنْ تُغْنِيَ عَنْهُمْ اَمْوَالُهُمْ وَلَآ ع ۱ ۹ ۹
اَوْلَادُهُمْ مِّنَ اللّٰهِ شَيْئًا ؕ وَاُولٰٓئِكَ هُمْ وَقُوْدُ النَّارِ ۙ﴿۱۰﴾ كَدَاْبِ
اٰلِ فِرْعَوْنَ ۙ وَالَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ؕ كَذَّبُوْا بِاٰيٰتِنَا ۚ فَاَخَذَهُمُ
اللّٰهُ بِذُنُوْبِهِمْ ؕ وَاللّٰهُ شَدِيْدُ الْعِقَابِ ﴿۱۱﴾ قُلْ لِّلَّذِيْنَ كَفَرُوْا
سَتُغْلَبُوْنَ وَتُحْشَرُوْنَ اِلٰى جَهَنَّمَ ؕ وَبِئْسَ الْمِهَادُ ﴿۱۲﴾ قَدْ كَانَ
لَكُمْ اٰيَةٌ فِيْ فِئَتَيْنِ الْتَقَتَا ؕ فِئَةٌ تُقَاتِلُ فِيْ سَبِيْلِ اللّٰهِ وَاُخْرٰى
كَافِرَةٌ يَّرَوْنَهُمْ مِّثْلَيْهِمْ رَاْيَ الْعَيْنِ ؕ وَاللّٰهُ يُؤَيِّدُ بِنَصْرِهٖ
مَنْ يَّشَآءُ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَعِبْرَةً لِّاُولِي الْاَبْصَارِ ﴿۱۳﴾ زُيِّنَ
لِلنَّاسِ حُبُّ الشَّهَوٰتِ مِنَ النِّسَآءِ وَالْبَنِيْنَ وَالْقَنَاطِيْرِ
الْمُقَنْطَرَةِ مِنَ الذَّهَبِ وَالْفِضَّةِ وَالْخَيْلِ الْمُسَوَّمَةِ وَالْاَنْعَامِ
وَالْحَرْثِ ؕ ذٰلِكَ مَتَاعُ الْحَيٰوةِ الدُّنْيَا ۚ وَاللّٰهُ عِنْدَهٗ حُسْنُ
الْمَاٰبِ ﴿۱۴﴾ قُلْ اَؤُنَبِّئُكُمْ بِخَيْرٍ مِّنْ ذٰلِكُمْ ؕ لِلَّذِيْنَ اتَّقَوْا عِنْدَ
رَبِّهِمْ جَنّٰتٌ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا وَاَزْوَاجٌ
مُّطَهَّرَةٌ وَّرِضْوَانٌ مِّنَ اللّٰهِ ؕ وَاللّٰهُ بَصِيْرٌۢ بِالْعِبَادِ ۚ﴿۱۵﴾

9. "எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ ஒரு நாளைக்காக மனிதர்கள் யாவரையும் ஒன்று சேர்ப்பவனாக இருக்கின்றாய்; அ(ந் நாள் வருவ)தில் சந்தேகமேயில்லை; (ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ், (தன்) வாக்குறுதியில் மாறு செய்யமாட்டான்" (என்றும் பிரார்த்திப்பார்கள்).

10. நிச்சயமாக (அந்நாளை) நிராகரிக்கின்றார்களே அத்தகையோர்_(அந்நாளில்) அவர்களுடைய செல்வங்களும், அவர்களுடைய பிள்ளைகளும், அல்லாஹ்வி(னுடைய வேதனையி)லிருந்து யாதொன்றையும் அவர்களை விட்டும் ஒரு போதும் தேவையறச் செய்து விடாது; இன்னும் இவர்கள் தாம் (உண்மையாகவே நரக) நெருப்பின் எரி பொருட்கள் ஆவர்.

11. (இவர்களின் நிலை, செயல் யாவும்) ஃபிர் அவ்னைச் சார்ந்தவர்கள், இன்னும் அவர்களுக்கு முன்னிருந்தவர்கள் நிலை போன்று இருக்கின்றது; அவர்கள் நம் வசனங்களைப் பொய்யாக்கினார்கள்; ஆதலால், அல்லாஹ் அவர்களுடைய பாவங்களின் காரணமாக அவர்களைப் பிடித்துக் கொண்டான்; இன்னும் அல்லாஹ் தண்டிப்பதில் மிகக் கடுமையானவன்.

12. இவ்வேதத்தை நிராகரிக்கின்றார்களே, அத்தகையோருக்கு (நபியே!) நீர் கூறுவீராக: "நீங்கள் (விசுவாசிகளால்) வெற்றி கொள்ளப்படுவீர்கள்; (மறுமையில்) நரகத்தின் பாலும் நீங்கள் (எழுப்பி) ஒன்று திரட்டப்படுவீர்கள்; இன்னும், தங்குமிடமான(அ)து மிகக் கெட்ட தாகும்.

13. (பத்ரு யுத்த களத்தில்) சந்தித்த இரு சேனைகளில், திட்டமாக உங்களுக்கோர் அத்தாட்சி இருந்தது; (அதில் ஒன்று) அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யும் சேனையாகும். மற்றொன்று (அல்லாஹ்வை) நிராகரிக்கக் கூடியது(மான சேனையு)மாகும். (நிராகரிப்போர்) தம்மை விட (முஸ்லிம்களான) அவர்களை இரு மடங்காகத் தங்கள் கண்களால் (நேரடியாகக்) கண்டனர். அல்லாஹ்வோ, தான் நாடியவர்களை தன் உதவியைக் கொண்டு பலப்படுத்துகிறான்; பார்வைகள் உடையோருக்கு நிச்சயமாக இதில் ஒரு (நல்ல) படிப்பினை இருக்கின்றது.(10)

14. பெண்கள், ஆண்மக்கள், பொன், வெள்ளிகளினால் சேர்த்துவைக்கப்பட்ட பெருங் குவியல்கள், அடையாளமிடப்பட்ட குதிரைகள், (ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) கால் நடைகள், வேளாண்மை ஆகிய (மனதுக்கு) ஆசையூட்டப் பட்டவற்றை நேசிப்பது மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது, இவை (யாவும் நிலையற்ற) இவ்வுலக வாழ்க்கையின் (அற்ப) இன்பங்களே; அல்லாஹ்வோ_ அவனிடத்தில் (நிலையான) அழகிய திரும்பிச் செல்லுமிடம் உண்டு.

15. (நபியே! மனிதர்களிடம்) நீர் கூறுவீராக: இவற்றைவிட மேலானதொன்றை நான் உங்களுக்கு அறிவிக்கவா? (அல்லாஹ்வுக்குப்) பயந்து நடக்கின்றார்களே அத்தகையவர்களுக்கு, அவர்களின் இரட்சகனிடத்தில் சுவனபதிகள் உண்டு; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அவற்றில் (அவர்கள்) நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்; (அங்கு அவர்களுக்குப்) பரிசுத்தமான மனைவியரும், (இவைகளன்றி, மகத்தான) அல்லாஹ் விடமிருந்து பொருத்தமும் உண்டு; மேலும், அல்லாஹ் தன் அடியார்களைப் பார்க்கிறவன்.

اَلَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَآ اِنَّنَآ اٰمَنَّا فَاغْفِرْلَنَا ذُنُوْبَنَا وَقِنَا
عَذَابَ النَّارِ ﴿۱۶﴾ اَلصّٰبِرِيْنَ وَالصّٰدِقِيْنَ وَالْقٰنِتِيْنَ
وَالْمُنْفِقِيْنَ وَالْمُسْتَغْفِرِيْنَ بِالْاَسْحَارِ ﴿۱۷﴾ شَهِدَ اللّٰهُ اَنَّهٗ
لَآ اِلٰهَ اِلَّا هُوَۙ وَالْمَلٰٓئِكَةُ وَاُولُوا الْعِلْمِ قَآئِمًاۢ بِالْقِسْطِؕ
لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۱۸﴾ؕ اِنَّ الدِّيْنَ عِنْدَ اللّٰهِ
الْاِسْلَامُ قفوَمَا اخْتَلَفَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ اِلَّا مِنْۢ بَعْدِ
مَا جَآءَهُمُ الْعِلْمُ بَغْيًاۢ بَيْنَهُمْؕ وَمَنْ يَّكْفُرْ بِاٰيٰتِ اللّٰهِ
فَاِنَّ اللّٰهَ سَرِيْعُ الْحِسَابِ ﴿۱۹﴾ فَاِنْ حَآجُّوْكَ فَقُلْ اَسْلَمْتُ
وَجْهِيَ لِلّٰهِ وَمَنِ اتَّبَعَنِؕ وَقُلْ لِّلَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ
وَالْاُمِّيّٖنَ ءَاَسْلَمْتُمْؕ فَاِنْ اَسْلَمُوْا فَقَدِ اهْتَدَوْاۚ وَاِنْ
تَوَلَّوْا فَاِنَّمَا عَلَيْكَ الْبَلٰغُؕ وَاللّٰهُ بَصِيْرٌۢ بِالْعِبَادِ ﴿۲۰﴾ۧ اِنَّ
الَّذِيْنَ يَكْفُرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ وَيَقْتُلُوْنَ النَّبِيّٖنَ بِغَيْرِ
حَقٍّۙ وَّيَقْتُلُوْنَ الَّذِيْنَ يَاْمُرُوْنَ بِالْقِسْطِ مِنَ النَّاسِۙ
فَبَشِّرْهُمْ بِعَذَابٍ اَلِيْمٍ ﴿۲۱﴾ اُولٰٓئِكَ الَّذِيْنَ حَبِطَتْ
اَعْمَالُهُمْ فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِؗ وَمَا لَهُمْ مِّنْ نّٰصِرِيْنَ ﴿۲۲﴾

16. இத்தகையோர் "எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நாங்கள் (உன்னை) விசுவாசிக்கின்றோம்; ஆதலால், நீ எங்களுக்கு எங்களுடைய பாவங்களை மன்னித்து (அருள் புரிந்து, நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் நீ எங்களை (ஈடேற்றம் பெற)க்காத்தருள்வாயாக" என்றும் (பிரார்த்தித்துக்) கூறுவார்கள்.

17. (இன்னும், அவர்கள்) பொறுமையாளர்களாகவும், உண்மையாளர்களாகவும், (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் வழிப்பட்டு நடப்பவர்களாகவும், தர்மம் செய்கின்றவர்களாகவும், "ஸஹர்" நேரங்களில் (அல்லாஹ்விடம் பாவ) மன்னிப்புக் கோருகின்றவர்களாகவும் இருப்பர்.

18.(நபியே!) அல்லாஹ் சாட்சிகூறுகின்றான்:" நிச்சயமாக அவன்_அவனைத்தவிர (வேறு) வணக்கத்திற்குரியவன் இல்லை." (அவ்வாறே) மலக்குகளும், (வேத ஞானம் பெற்ற) கல்வி மான்களும் (சாட்சி கூறுகின்றனர்) நீதத்தை நிலை நிறுத்தியவனாக (அல்லாஹ் சாட்சி கூறுகிறான்) "அவனைத் தவிர (வேறு) வணக்கத்திற்குரியவன் இல்லை;(அவனே யாவரையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்."

19.நிச்சயமாக, அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாமாகும்; மேலும், வேதம் கொடுக்கப்பட்டவர்கள் தங்களுக்கிடையே உள்ள (பிடிவாதம்,) பொறாமையால் (இதுதான் உண்மையான மார்க்கம் என்ற) அறிவு அவர்களுக்கு வந்ததன் பின்னரே தவிர மாறுபடவில்லை; இன்னும், எவர் அல்லாஹ்வுடைய வசனங்களை நிராகரிக்கின்றாரோ _( அவரைப் பற்றி) நிச்சயமாக, அல்லாஹ் கணக்கெடுப்பதில் துரிதமானவன்.

20. எனவே, (நபியே! இதற்குப்)பின்னும் அவர்கள் உம்முடன் தர்க்கித்தால், அப்போது (அவர்களிடம்,) "நான் என் முகத்தை(த்திருப்பி) அல்லாஹ்வு(டைய கட்டளைகளு)க்கு முற்றிலும் பணித்து விட்டேன்; (அவ்வாறே) என்னைப் பின்பற்றியவர்களும் (பணிந்து விட்டனர்)" என்று கூறுவீராக! மேலும் வேதமளிக்கப்பட்டவர்களிடமும், பாமரர்களிடமும் "நீங்களும் (அவ்வாறே) அல்லாஹ்வுக்குமுற்றிலும்பணிந்துவிட்டீர்களா?" என்றுகேட்பீராக;(அவ்வாறே) அவர்கள் பணிந்து விட்டால், திட்டமாக அவர்கள் நேரான வழியை அடைந்துவிட்டார்கள்; அன்றியும் அவர்கள் புறக்கணித்து விட்டால்_(அதற்காக நீர் கவலைப்படாதீர்); உம்மீதுள்ள கடமையெல்லாம் (நம்முடைய தூதை)எத்திவைப்பதுதான்; மேலும், அல்லாஹ் தன் அடியார்களைப் பார்க்கிறவன்.

21. நிச்சயமாக அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்து, உரிமையின்றி நபிமார்களையும் கொலை செய்து, மனிதர்களில் நீதத்தைக் கொண்டு ஏவுகின்றோர்களையும் கொலை செய்கிறார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு, துன்புறுத்தும் வேதனையைக் கொண்டு (நபியே!) நீர் நன்மாராயங்கூறுவீராக!

22. அவர்கள் எத்தகையோரென்றால், அவர்களுடைய செயல்கள் (யாவும்,) இம்மையிலும், மறுமையிலும் (எத்தகைய பலனுமின்றி, முற்றிலும்) அழிந்துவிட்டன; (மறுமையில்) அவர்களுக்கு உதவியாளர்கள் எவருமில்லை.

اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ اُوْتُوْا نَصِيْبًا مِّنَ الْكِتٰبِ يُدْعَوْنَ اِلٰى كِتٰبِ
اللّٰهِ لِيَحْكُمَ بَيْنَهُمْ ثُمَّ يَتَوَلّٰى فَرِيْقٌ مِّنْهُمْ وَهُمْ مُّعْرِضُوْنَ ﴿٢٣﴾
ذٰلِكَ بِاَنَّهُمْ قَالُوْا لَنْ تَمَسَّنَا النَّارُ اِلَّآ اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ۪ وَّغَرَّهُمْ
فِيْ دِيْنِهِمْ مَّا كَانُوْا يَفْتَرُوْنَ ﴿٢٤﴾ فَكَيْفَ اِذَا جَمَعْنٰهُمْ لِيَوْمٍ لَّا
رَيْبَ فِيْهِ ۫ وَوُفِّيَتْ كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿٢٥﴾
قُلِ اللّٰهُمَّ مٰلِكَ الْمُلْكِ تُؤْتِي الْمُلْكَ مَنْ تَشَآءُ وَتَنْزِعُ الْمُلْكَ
مِمَّنْ تَشَآءُ ۫ وَتُعِزُّ مَنْ تَشَآءُ وَتُذِلُّ مَنْ تَشَآءُ ؕ بِيَدِكَ الْخَيْرُ ؕ
اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿٢٦﴾ تُوْلِجُ الَّيْلَ فِي النَّهَارِ وَتُوْلِجُ النَّهَارَ
فِي الَّيْلِ ۫ وَتُخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَتُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَيِّ ۫
وَتَرْزُقُ مَنْ تَشَآءُ بِغَيْرِ حِسَابٍ ﴿٢٧﴾ لَا يَتَّخِذِ الْمُؤْمِنُوْنَ
الْكٰفِرِيْنَ اَوْلِيَآءَ مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ ۚ وَمَنْ يَّفْعَلْ
ذٰلِكَ فَلَيْسَ مِنَ اللّٰهِ فِيْ شَيْءٍ اِلَّآ اَنْ تَتَّقُوْا مِنْهُمْ تُقٰىةً ؕ
وَيُحَذِّرُكُمُ اللّٰهُ نَفْسَهٗ ؕ وَاِلَى اللّٰهِ الْمَصِيْرُ ﴿٢٨﴾ قُلْ اِنْ
تُخْفُوْا مَا فِيْ صُدُوْرِكُمْ اَوْ تُبْدُوْهُ يَعْلَمْهُ اللّٰهُ ؕ وَيَعْلَمُ مَا
فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿٢٩﴾

23 (நபியே!) வேதத்தில் ஒரு பாகம் கொடுக்கப்பட்ட (யூதர்களாகிய இ)வர்களை நீர் (கவனித்துப்) பார்க்கவில்லையா? (அவர்களுக்குள் ஏற்பட்ட விவகாரத்தில்) அவர்களுக்கிடையில் தீர்ப்பளிக்க அல்லாஹ்வின் வேதத்தின்பால் அவர்கள் அழைக்கப் படுகிறார்கள்; பின்னர் அவர்களில் ஒரு பிரிவினர் (இதனைப்) புறக்கணித்தவர்களாக திரும்பிச்செல்கின்றனர்.

24. இது "எண்ணிக்கணக்கிடப்பட்ட சில நாட்களைத் தவிர, (நரகத்தின்) நெருப்பு நிச்சயமாக ஒரு போதும் எங்களைத் தீண்டாது" என்று அவர்கள் கூறிக்கொண்டிருந்த காரணத்தினாலாகும். தங்கள் மார்க்க (விஷய)த்தில், அவர்கள் பொய்யாகக் கற்பனை செய்து( கூறி)வந்ததும், அவர்களை ஏமாற்றிவிட்டது.

25. (நபியே!) எ(து நடந்தேறுமென்ப)தில் சந்தேகமில்லையோ, அந்நாளைக்காக நாம் அவர்களை ஒன்று சேர்த்து, ஒவ்வோர் ஆத்மாவும், அது சம்பாதித்தவற்றை (அதன் பலனை)ப் பூரணமாக அளிக்கப்பட்டால், (அவர்களின் நிலைமை) எவ்வாறிருக்கும்? அவர்களும் (தங்கள் பிரதிபலனை அடைவதில் சிறிதும்) அநியாயம் செய்யப்படமாட்டார்கள்.

26. (நபியே! பிரார்த்தித்து) நீர் கூறுவீராக: " அல்லாஹ்வே! ( இம்மை, மறுமையின் சகல) ஆட்சிக்கும் அதிபதியே! நீ நாடியவருக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய்; நீ நாடியவரிடமிருந்து ஆட்சியைப் பறித்தும் விடுகின்றாய்; மேலும், நீ நாடியவரை கண்ணியப்படுத்துகின்றாய்; இன்னும் நீ நாடியவரை இழிவு படுத்துகின்றாய்.; நன்மை(யாவும்) உன் கைவசமே (இருக்கின்றது). நிச்சயமாக, நீ ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

27. "நீ இரவைப் பகலில் நுழையச் செய்கின்றாய்; இன்னும் நீ பகலை இரவில் நுழையச் செய்கின்றாய்; உயிரற்றதிலிருந்து உயிருள்ளதையும் நீயே வெளியாக்குகின்றாய்; உயிருள்ளதிலிருந்து உயிரற்றதையும் நீயே வெளியாக்குகின்றாய்; மேலும் நீ நாடியவர்களுக்குக் கணக்கின்றியே அளிக்கின்றாய்."

28. விசுவாசிகள் (தங்களைப்போன்ற) விசுவாசிகளையன்றி, நிராகரிப்போரை(த் தங்களுக்கு)ப் பாதுகாவலர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டாம்; அவர்களிலிருந்து (தங்களைக்) காப்பாற்றிக் கொள்வதை நீங்கள் பயந்தாலன்றி; எவரேனும் அவ்வாறு செய்தால், அவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் எத்தகைய சம்பந்தமுமில்லை; மேலும் அல்லாஹ், தன்னைப் பற்றி உங்களுக்கு (அச்சமூட்டி)எச்சரிக்கை செய்கின்றான்; அல்லாஹ்விடமே மீளுதலும் இருக்கின்றது.

29. "உங்கள் நெஞ்சங்களில் இருப்பதை நீங்கள் மறைத்தாலும் அல்லது அதை நீங்கள் வெளிப்படுத்தினாலும் அல்லாஹ் அதை அறிவான்; (என்றும்) வானங்களில் மற்றும், பூமியில் உள்ளவற்றை அவன் அறிவான்" என்றும் (நபியே!) நீர் கூறுவீராக! மேலும், அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

يَوْمَ تَجِدُ كُلُّ نَفْسٍ مَّا عَمِلَتْ مِنْ خَيْرٍ مُّحْضَرًا ۛۚ وَّمَا عَمِلَتْ مِنْ
سُوْٓءٍ ۚ تَوَدُّ لَوْ اَنَّ بَيْنَهَا وَبَيْنَهٗٓ اَمَدًاۢ بَعِيْدًا ؕ وَيُحَذِّرُكُمُ اللّٰهُ
نَفْسَهٗ ؕ وَاللّٰهُ رَءُوْفٌۢ بِالْعِبَادِ ﴿۳۰﴾ قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ
يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۳۱﴾ قُلْ
اَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ ۚ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْكٰفِرِيْنَ ﴿۳۲﴾
اِنَّ اللّٰهَ اصْطَفٰٓى اٰدَمَ وَنُوْحًا وَّاٰلَ اِبْرٰهِيْمَ وَاٰلَ عِمْرٰنَ عَلَى
الْعٰلَمِيْنَ ﴿۳۳﴾ ۙ ذُرِّيَّةًۢ بَعْضُهَا مِنْۢ بَعْضٍ ؕ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿۳۴﴾ ۚ
اِذْ قَالَتِ امْرَاَتُ عِمْرٰنَ رَبِّ اِنِّيْ نَذَرْتُ لَكَ مَا فِيْ بَطْنِيْ
مُحَرَّرًا فَتَقَبَّلْ مِنِّيْ ۚ اِنَّكَ اَنْتَ السَّمِيْعُ الْعَلِيْمُ ﴿۳۵﴾ فَلَمَّا وَضَعَتْهَا
قَالَتْ رَبِّ اِنِّيْ وَضَعْتُهَآ اُنْثٰى ؕ وَاللّٰهُ اَعْلَمُ بِمَا وَضَعَتْ ؕ وَ
لَيْسَ الذَّكَرُ كَالْاُنْثٰى ۚ وَاِنِّيْ سَمَّيْتُهَا مَرْيَمَ وَاِنِّيْٓ اُعِيْذُهَا
بِكَ وَذُرِّيَّتَهَا مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ﴿۳۶﴾ فَتَقَبَّلَهَا رَبُّهَا بِقَبُوْلٍ
حَسَنٍ وَّاَنْۢبَتَهَا نَبَاتًا حَسَنًا ۙ وَّكَفَّلَهَا زَكَرِيَّا ؕ كُلَّمَا دَخَلَ عَلَيْهَا
زَكَرِيَّا الْمِحْرَابَ ۙ وَجَدَ عِنْدَهَا رِزْقًا ۚ قَالَ يٰمَرْيَمُ اَنّٰى لَكِ هٰذَا ؕ
قَالَتْ هُوَ مِنْ عِنْدِ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ يَرْزُقُ مَنْ يَّشَآءُ بِغَيْرِ حِسَابٍ ﴿۳۷﴾

ع ۳ معانقة ۲ عند المتاخرين ۱۲

30. ஒவ்வோர் ஆத்மாவும் நன்மையில் தான் செய்தவற்றையும், தீமையில் தான் செய்தவற்றையும் தன் முன் ஆஜராக்கப்பட்டதாகப் பெறும் (அந்) நாளில், அது, தான் செய்தவைகளுக்கும், தனக்கும் மத்தியில் வெகுதூரம் இருந்திருக்க வேண்டுமே என விரும்பும். அன்றியும், அல்லாஹ் தன்னைப் பற்றி (அவனது தண்டனையை நினைவு கூருமாறு) உங்களை எச்சரிக்கை செய்கிறான்; இன்னும் அல்லாஹ் (தன்) அடியார்கள் மீது மிக்க இரக்கமுடையவன்.

31. (நபியே! மனிதர்களிடம்,) நீர் கூறுவீராக: "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால், என்னை நீங்கள் பின்பற்றுங்கள்;(அவ்வாறு நீங்கள் செய்தால்) உங்களை அல்லாஹ் நேசிப்பான்; உங்கள் பாவங்களையும் உங்களுக்காக அவன் மன்னித்து விடுவான்; அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்; மிகக் கிருபையுடையவன்.

32.(நபியே! மேலும்) நீர் கூறுவீராக: "அல்லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதருக்கும் நீங்கள் கீழ்ப்படிந்து நடங்கள்; பின்னர் அவர்கள் புறக்கணித்தால், நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்போரை நேசிக்கமாட்டான்."

33. நிச்சயமாக அல்லாஹ், ஆதமையும், நூஹையும், இப்ராஹீமுடைய குடும்பத்ினரையும், இம்ரானுடைய குடும்பத்தினரையும் அகிலத்தாரைவிட மேலாகத் தேர்ந்தெடுத்தான்.

34. அவற்றில் சில, சிலரிலுள்ள சந்ததிதான்; அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுகிறவன்; நன்கறிகிறவன்.

35. இம்ரானுடைய மனைவி(கர்ப்பமான பொழுது, ஆண் குழந்தை பெற விரும்பி இரட்சகனிடம்,) "என் இரட்சகனே! நிச்சயமாக நான் என் வயிற்றிலுள்ளதை உனக்காக உரிமை விடப்பட்டதாக நேர்ச்சை செய்து கொண்டேன்; ஆதலால், (அதனை) என்னிடமிருந்து நீ அங்கீகரித்துக் கொள்வாயாக! நிச்சயமாக நீயே (பிரார்த்தனைகளைச்) செவியுறுகிறவன்; (மனத்திலுள்ளவற்றை) நன்கறிகிறவன்" என்று (பிரார்த்தித்துக்) கூறியதை (நினைவு கூர்வீராக!)

36. பின்னர், அதனை அவள் (தன் விருப்பத்திற்கு மாறாக ஒரு பெண்குழந்தையாகப்) பெற்றபோது, "என் இரட்சகனே! நிச்சயமாகவே நான் (என் விருப்பத்திற்கு மாறாக) ஒரு பெண்ணையே பெற்றுள்ளேன்" என்று கூறினாள்; அவள் பெற்றெடுத்ததை அல்லாஹ்வே மிக்க அறிந்தவன்; ஆயினும், ஆண், (இந்தப்)பெண்ணைப் போன்றதல்ல; (பிறகு இம்ரானின் மனைவி,) "நிச்சயமாக நான் அதற்கு மர்யம் எனப் பெயரிட்டுள்ளேன்; அதனையும் அதன் சந்ததியையும், வெருட்டப் பட்ட ஷைத்தானி(ன் வஞ்சனைகளி) லிருந்து உன்னிடம் நிச்சயமாக நான் காக்கத் தேடுகிறேன்!" என்றாள்.

37. ஆகவே, அவளுடைய இரட்சகன், அவளை அழகான முறையில் அங்கீகரித்து, (பரிசுத்தமாகவும்) அழகான வளர்ச்சியாகவும் அவளை வளரச்செய்தான்; மேலும், அவளுக்கு (பாதுகாவலராக) ஜகரிய்யாவைப் பொறுப்பேற்கச் செய்தான்; ஜகரிய்யா, அவளிடம் மாடத்திற்குள் நுழையும் போதெல்லாம் அவளிடத்தில் (ஏதேனும்) உணவுப்பொருள் இருப்பதைக் கண்டு, "மர்யமே! இது உனக்கு எங்கிருந்து வந்தது?" என்றுகேட்டார். அ(தற்க)வள் "இது அல்லாஹ்விட மிருந்துதான் (வருகின்றது. ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ், தான் நாடியவர்களுக்குக் கணக்கின்றிக் கொடுக்கிறான்" என்று கூறினாள்.

هُنَالِكَ دَعَا زَكَرِيَّا رَبَّهٗ ۚ قَالَ رَبِّ هَبْ لِيْ مِنْ لَّدُنْكَ ذُرِّيَّةً
طَيِّبَةً ۚ اِنَّكَ سَمِيْعُ الدُّعَآءِ ﴿۳۸﴾ فَنَادَتْهُ الْمَلٰٓئِكَةُ وَهُوَ قَآئِمٌ
يُّصَلِّيْ فِي الْمِحْرَابِ ۙ اَنَّ اللّٰهَ يُبَشِّرُكَ بِيَحْيٰى مُصَدِّقًۢا بِكَلِمَةٍ
مِّنَ اللّٰهِ وَسَيِّدًا وَّحَصُوْرًا وَّنَبِيًّا مِّنَ الصّٰلِحِيْنَ ﴿۳۹﴾ قَالَ رَبِّ
اَنّٰى يَكُوْنُ لِيْ غُلٰمٌ وَّقَدْ بَلَغَنِيَ الْكِبَرُ وَامْرَاَتِيْ عَاقِرٌ ؕ قَالَ
كَذٰلِكَ اللّٰهُ يَفْعَلُ مَا يَشَآءُ ﴿۴۰﴾ قَالَ رَبِّ اجْعَلْ لِّيْٓ اٰيَةً ؕ قَالَ
اٰيَتُكَ اَلَّا تُكَلِّمَ النَّاسَ ثَلٰثَةَ اَيَّامٍ اِلَّا رَمْزًا ؕ وَاذْكُرْ رَّبَّكَ
كَثِيْرًا وَّسَبِّحْ بِالْعَشِيِّ وَالْاِبْكَارِ ﴿۴۱﴾ وَاِذْ قَالَتِ الْمَلٰٓئِكَةُ ع ۴ ۱۴
يٰمَرْيَمُ اِنَّ اللّٰهَ اصْطَفٰكِ وَطَهَّرَكِ وَاصْطَفٰكِ عَلٰى
نِسَآءِ الْعٰلَمِيْنَ ﴿۴۲﴾ يٰمَرْيَمُ اقْنُتِيْ لِرَبِّكِ وَاسْجُدِيْ وَارْكَعِيْ
مَعَ الرّٰكِعِيْنَ ﴿۴۳﴾ ذٰلِكَ مِنْ اَنْۢبَآءِ الْغَيْبِ نُوْحِيْهِ اِلَيْكَ ؕ وَمَا
كُنْتَ لَدَيْهِمْ اِذْ يُلْقُوْنَ اَقْلَامَهُمْ اَيُّهُمْ يَكْفُلُ مَرْيَمَ ۪ وَمَا
كُنْتَ لَدَيْهِمْ اِذْ يَخْتَصِمُوْنَ ﴿۴۴﴾ اِذْ قَالَتِ الْمَلٰٓئِكَةُ يٰمَرْيَمُ
اِنَّ اللّٰهَ يُبَشِّرُكِ بِكَلِمَةٍ مِّنْهُ ۖۗ اسْمُهُ الْمَسِيْحُ عِيْسَى ابْنُ مَرْيَمَ
وَجِيْهًا فِي الدُّنْيَا وَالْاٰخِرَةِ وَمِنَ الْمُقَرَّبِيْنَ ﴿۴۵﴾ ۙ

38. அந்த இடத்திலேயே ஜகரிய்யா, தன் இரட்சகனை(பிரார்த்தித்து) அழைத்தார்; "என் இரட்சகனே! உன்பாலிருந்து எனக்கொரு பரிசுத்தமான சந்ததியை அளிப்பாயாக! நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவியுறுகிறவன்" என்று கூறினார்.

39. பின்னர் மாடத்தில் நின்று அவர் தொழுது கொண்டிருந்த சமயத்தில், (அவரிடம்) மலக்குகள், "(ஜகரிய்யாவே!) நிச்சயமாக அல்லாஹ், யஹ்யா (என்ற ஒரு மக)வை உமக்கு (அளிப்பதாக) நன்மாராயங் கூறுகின்றான்; அவர் (தகப்பனின்றி) அல்லாஹ்விடமிருந்து(ள்ள) ஒரு வார்த்தையை (க் கொண்டு உண்டாகக் கூடிய ஈஸா நபியை _முன்னறிக்கையாக) உண்மைப் படுத்தக் கூடியவராகவும், (மனிதர்களுக்குத்) தலைவராகவும், (பெண் இன்பத்தைத்) துறந்தவராகவும், நல்லோர்களிலிருந்தே நபியாகவும் இருப்பார்" என்று (கூறி) அவரை சப்தமிட்டுஅழைத்தனர்.

40. (அதற்கு ஜகரிய்யாவாகிய) அவர், (அல்லாஹ்விடம்,) என் இரட்சகனே! எனக்கு எவ்வாறு மகன் உண்டாக முடியும்? நிச்சயமாக முதுமையும் என்னை அடைந்துவிட்டது; என் மனைவியோ மலடியாயிருக்கின்றாள்!" என்று கூறினார்; "அவ்வாறே (நடை பெறும்); அல்லாஹ் தான் நாடியதை (அவசியம்) செய்(தே தீரு)வான் என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

41. அ(தற்க)வர், "என் இரட்சகனே! (இதற்கு) எனக்கோர் அடையாளத்தை ஆக்குவாயாக!" என்று கேட்டார். (அதற்கு) அவன் "உமக்கு (அளிக்கப்படும்) அடையாளமாவது, மூன்று நாட்கள் வரையில் சைகை மூலமன்றி நீர் மனிதர்களுடன் பேசாமல் இருப்பதாகும். (அந்நாட்களில்) நீர் உமதிரட்சகனை அதிகமாக நினைவுகூர்வீராக! காலையிலும், மாலையிலும் (அவனைப்போற்றி) துதி செய்துகொண்டுமிருப்பீராக!" என்று கூறினான்.

42. இன்னும், மலக்குகள் (மர்யமிடம்) "மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான்; உன்னைப் பரிசுத்தமாகவும் ஆக்கியிருக்கின்றான். அகிலத்தாரிலுள்ள பெண்களை விட உன்னைத் தேர்ந்தெடுத்துமிருக்கின்றான்" என்று கூறிய சமயத்தில், (நடந்தவற்றை நபியே! நினைவு கூர்வீராக! அப்போது)

43. "மர்யமே! நீர் உன்னுடைய இரட்சகனுக்கு வழிபாடு செய்வீராக! சாஷ்டாங்கமும் செய்வீராக! குனிந்து (சிரம் பணிந்து) வணங்குபவர்களுடன் நீரும் குனிந்து (சிரம் பணிந்து) வணங்குவீராக!" (என்றும் கூறினார்கள்.)

44. (நபியே!) இவை (யாவும் நீர் அறியாத) மறைவான செய்திகளில் உள்ளவையாகும்; இவைகளை நாம் உமக்கு வஹீயின் மூலம் அறிவிக்கின்றோம்; இன்னும், மர்யமுக்கு (அவரை வளர்க்க) அவர்களில் எவர் பொறுப்பேற்றுக் கொள்வதென்று (முடிவுசெய்ய) அவர்கள் தங்கள் எழுதுகோல்களை (ஆற்றில்) எறிந்தபோதும் நீர் அவர்களிடத்தில் இருக்கவில்லை; (இதைப்பற்றி) அவர்கள் விவாதித்துக்கொண்டபோதும் அவர்களிடத்தில் நீர் இருக்கவில்லை.

45. (மேலும், மர்யமிடம்) மலக்குகள், "மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னிடமிருந்து (ஆகுக! என்ற) ஒரு வார்த்தையைக் கொண்டு உனக்கு (ஒரு மகவை அளிக்க) நன்மாராயங் கூறுகின்றான்; அவரின் பெயர் மஸீஹ்_ மர்யமுடைய மகன் ஈஸா என்பதாகும்; அவர் இம்மையிலும், மறுமையிலும் மிக்க அந்தஸ்தை யுடையவராகவும், (இரட்சகனுக்கு) மிக்க நெருங்கியவர்களில் ஒருவராகவும் இருப்பார்" என்று கூறியபோது_

وَيُكَلِّمُ النَّاسَ فِي الْمَهْدِ وَكَهْلًا وَّمِنَ الصّٰلِحِيْنَ ﴿٤٦﴾ قَالَتْ
رَبِّ اَنّٰى يَكُوْنُ لِيْ وَلَدٌ وَّلَمْ يَمْسَسْنِيْ بَشَرٌ ؕ قَالَ كَذٰلِكِ اللّٰهُ
يَخْلُقُ مَا يَشَآءُ ؕ اِذَا قَضٰٓى اَمْرًا فَاِنَّمَا يَقُوْلُ لَهٗ كُنْ فَيَكُوْنُ ﴿٤٧﴾
وَيُعَلِّمُهُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَالتَّوْرٰىةَ وَالْاِنْجِيْلَ ﴿٤٨﴾ وَرَسُوْلًا اِلٰى
بَنِيْٓ اِسْرَآءِيْلَ ۙ۬ اَنِّيْ قَدْ جِئْتُكُمْ بِاٰيَةٍ مِّنْ رَّبِّكُمْ ۙ اَنِّيْٓ اَخْلُقُ
لَكُمْ مِّنَ الطِّيْنِ كَهَيْـَٔةِ الطَّيْرِ فَاَنْفُخُ فِيْهِ فَيَكُوْنُ طَيْرًا بِاِذْنِ
اللّٰهِ ۚ وَاُبْرِئُ الْاَكْمَهَ وَالْاَبْرَصَ وَاُحْيِ الْمَوْتٰى بِاِذْنِ اللّٰهِ ۚ وَ
اُنَبِّئُكُمْ بِمَا تَاْكُلُوْنَ وَمَا تَدَّخِرُوْنَ ۙ فِيْ بُيُوْتِكُمْ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ
لَاٰيَةً لَّكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿٤٩﴾ وَمُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيَّ مِنَ
التَّوْرٰىةِ وَلِاُحِلَّ لَكُمْ بَعْضَ الَّذِيْ حُرِّمَ عَلَيْكُمْ وَجِئْتُكُمْ
بِاٰيَةٍ مِّنْ رَّبِّكُمْ ۟ فَاتَّقُوا اللّٰهَ وَاَطِيْعُوْنِ ﴿٥٠﴾ اِنَّ اللّٰهَ رَبِّيْ وَرَبُّكُمْ
فَاعْبُدُوْهُ ؕ هٰذَا صِرَاطٌ مُّسْتَقِيْمٌ ﴿٥١﴾ فَلَمَّآ اَحَسَّ عِيْسٰى مِنْهُمُ
الْكُفْرَ قَالَ مَنْ اَنْصَارِيْٓ اِلَى اللّٰهِ ؕ قَالَ الْحَوَارِيُّوْنَ نَحْنُ
اَنْصَارُ اللّٰهِ ۚ اٰمَنَّا بِاللّٰهِ ۚ وَاشْهَدْ بِاَنَّا مُسْلِمُوْنَ ﴿٥٢﴾ رَبَّنَآ اٰمَنَّا
بِمَآ اَنْزَلْتَ وَاتَّبَعْنَا الرَّسُوْلَ فَاكْتُبْنَا مَعَ الشّٰهِدِيْنَ ﴿٥٣﴾

46. "அவர் தொட்டிலில் (குழந்தையாக) இருக்கும் பொழுது (தன் தாயின் பரிசுத்தத் தன்மையைப்பற்றியு)ம், (தன் நபித்துவத்தைப்பற்றி) பருவ வயதிலும் மனிதர்களுடன் பேசுவார்; இன்னும் நல்லொழுக்கமுடையோரில் உள்ளவராகவுமிருப்பார்" (என்றும் கூறினார்கள்).

47. (அதற்கு மர்யம்) "என் இரட்சகனே! எந்த ஒரு மனிதருமே என்னைத் தீண்டாதிருக்க, எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாகமுடியும்?" என்று கூறினாள். (அதற்கு) "அவ்வாறே, அல்லாஹ் தான் நாடியதைப் படைக்கிறான், அவன் ஒரு காரியத்தை முடிவெடுத்தால் அவன் அதற்கு கூறுவதெல்லாம் "ஆகுக!" என்பதுதான்; அது ஆகிவிடும்" என்று கூறினான்.

48. மேலும், அவன் அவருக்கு வேதத்தையும், ஞானத்தையும், தவ்றாத்தையும், இன்ஜீலையும் கற்பிப்பான்.

49. இஸ்ராயீலின் மக்களுக்கு (அவரை) ஒரு தூதராகவும் (அனுப்புவான் என்றும் அல்லாஹ் கூறினான். பின்னர் ஈஸா பிறந்து தன் வாலிபத்தையடைந்து, இஸ்ராயீலின் மக்களிடம் சென்றபொழுது, அவர்களிடம் கூறியதாவது) "திட்டமாக நான் உங்கள் இரட்சகனிடமிருந்து (அனுப்பப்பட்ட ஒரு தூதன் என்பதற்குரிய) ஓர் அத்தாட்சியுடன் உங்களிடம் வந்திருக்கிறேன்; உங்களுக்காக களிமண்ணிலிருந்து பறவையின் கோலத்தைப்போல் செய்து, பின்னர் அதில் நான் ஊதுவேன்; அல்லாஹ்வின் அனுமதியைக்கொண்டு அது (உயிருள்ள) பறவையாகிவிடும். பிறவிக்குருடனையும், வெண்குஷ்டரோகியையும் நான் குணப்படுத்துவேன்; மேலும் அல்லாஹ்வின் அனுமதிகொண்டு இறந்தோரையும் நான் உயிர்ப்பிப்பேன்; மேலும் நீங்கள் புசிப்பவைகளையும் உங்கள் வீடுகளில் நீங்கள் சேகரித்து வைத்திருப்பவைகளையும் நான் உங்களுக்கு அறிவிப்பேன்; மெய்யாகவே நீங்கள் விசுவாசங்கொள்பவர்களாக இருந்தால், நிச்சயமாக இதில் உங்களுக்கு(த் திருப்தி அளிக்கக்கூடிய) ஓர் அத்தாட்சி இருக்கின்றது.

50. மேலும், "என் முன் இருக்கும் தவ்றாத்தை(யும் நான்) உண்மையாக்கி வைக்கிறவனாகவும், (முன்னர்) உங்களுக்கு விலக்கப்பட்டவைகளில் சிலவற்றை உங்களுக்கு நான் ஆகுமாக்கி வைப்பதற்காகவும், மேலும், உங்கள் இரட்சகனிடமிருந்து (இத்தகைய) ஓர் அத்தாட்சியைக்கொண்டு உங்களிடம் நான் வந்திருக்கின்றேன். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து, எனக்கும் கீழ்ப்படியுங்கள்" (என்றும்)

51. "நிச்சயமாக அல்லாஹ்தான் என் இரட்சகனும், உங்கள் இரட்சகனும் ஆவான்; ஆகவே, அவனையே நீங்கள் வணங்குங்கள்; இதுதான் நேரான வழி" (என்றும் கூறினார்).

52. அவர்களிலிருந்து (ஒரு சிலர் தம்மை) நிராகரிப்பதை ஈஸா உணர்ந்த பொழுது, (அவர்களை நோக்கி) "அல்லாஹ்வுக்காக எனக்கு உதவி செய்பவர்கள் யார்?" எனக் கேட்டார். (அதற்கு அவருடைய) சீடர்கள், "நாங்கள் அல்லாஹ்வுடைய உதவியாளர்கள்; அல்லாஹ்வை நாங்கள் விசுவாசிக்கின்றோம்; நிச்சயமாக நாங்கள் (முற்றிலும் அவனுக்குக் கீழ்ப்படிந்த) முஸ்லிம்கள் என்பதாகவும் நீர் சாட்சி கூறுவீராக!" என்று கூறினார்கள்.

53. "எங்கள் இரட்சகனே! நீ (இவருக்கு) இறக்கிவைத்த (வேதத்)தை நாங்கள் விசுவாசிக்கின்றோம்; (உன்னுடைய) இத்தூதரையும் நாங்கள் பின்பற்றி நடக்கின்றோம்; ஆதலால், (சத்தியத்திற்கு) சாட்சி கூறுபவர்களுடன் எங்களையும், நீ பதிவு செய்துகொள்வாயாக!" (என்றும் சீடர்கள் பிரார்த்தித்தனர்.)

وَ مَكَرُوْا وَ مَكَرَ اللّٰهُ ؕ وَ اللّٰهُ خَيْرُ الْمٰكِرِيْنَ ۠﴿۵۴﴾ اِذْ قَالَ اللّٰهُ ع ١٣/٥ ١٣
يٰعِيْسٰٓى اِنِّيْ مُتَوَفِّيْكَ وَ رَافِعُكَ اِلَيَّ وَ مُطَهِّرُكَ مِنَ الَّذِيْنَ
كَفَرُوْا وَ جَاعِلُ الَّذِيْنَ اتَّبَعُوْكَ فَوْقَ الَّذِيْنَ كَفَرُوْۤا اِلٰى
يَوْمِ الْقِيٰمَةِ ۚ ثُمَّ اِلَيَّ مَرْجِعُكُمْ فَاَحْكُمُ بَيْنَكُمْ فِيْمَا كُنْتُمْ
فِيْهِ تَخْتَلِفُوْنَ ﴿۵۵﴾ فَاَمَّا الَّذِيْنَ كَفَرُوْا فَاُعَذِّبُهُمْ عَذَابًا
شَدِيْدًا فِي الدُّنْيَا وَ الْاٰخِرَةِ ۫ وَ مَا لَهُمْ مِّنْ نّٰصِرِيْنَ ﴿۵۶﴾ وَ اَمَّا
الَّذِيْنَ اٰمَنُوْا وَ عَمِلُوا الصّٰلِحٰتِ فَيُوَفِّيْهِمْ اُجُوْرَهُمْ ؕ وَ
اللّٰهُ لَا يُحِبُّ الظّٰلِمِيْنَ ﴿۵۷﴾ ذٰلِكَ نَتْلُوْهُ عَلَيْكَ مِنَ الْاٰيٰتِ وَ
الذِّكْرِ الْحَكِيْمِ ﴿۵۸﴾ اِنَّ مَثَلَ عِيْسٰى عِنْدَ اللّٰهِ كَمَثَلِ اٰدَمَ ؕ خَلَقَهٗ
مِنْ تُرَابٍ ثُمَّ قَالَ لَهٗ كُنْ فَيَكُوْنُ ﴿۵۹﴾ اَلْحَقُّ مِنْ رَّبِّكَ فَلَا
تَكُنْ مِّنَ الْمُمْتَرِيْنَ ﴿۶۰﴾ فَمَنْ حَآجَّكَ فِيْهِ مِنْۢ بَعْدِ مَا جَآءَكَ
مِنَ الْعِلْمِ فَقُلْ تَعَالَوْا نَدْعُ اَبْنَآءَنَا وَ اَبْنَآءَكُمْ وَ نِسَآءَنَا وَ
نِسَآءَكُمْ وَ اَنْفُسَنَا وَ اَنْفُسَكُمْ ۟ ثُمَّ نَبْتَهِلْ فَنَجْعَلْ لَّعْنَتَ اللّٰهِ
عَلَى الْكٰذِبِيْنَ ﴿۶۱﴾ اِنَّ هٰذَا لَهُوَ الْقَصَصُ الْحَقُّ ۚ وَ مَا مِنْ
اِلٰهٍ اِلَّا اللّٰهُ ؕ وَ اِنَّ اللّٰهَ لَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۶۲﴾

54. மேலும், (ஈஸாவை நிராகரித்த) அவர்கள், (அவரைக் கொலை செய்யச்) சதிசெய்தார்கள்; (எனினும் அல்லாஹ் அவரை இரட்சித்துக்கொண்டு, தங்களில் ஒருவனையே அவர்கள் கொலை செய்துவிடும்படி) அல்லாஹ்வும், (அவர்களுக்குச்) சதி செய்துவிட்டான். இன்னும் அல்லாஹ், சதிசெய்பவர்களி(ன் சதியை முறியடித்துக் கூலி கொடுப்பவர்களி)ல் மிகச்சிறந்தவன்.

55. (ஈஸாவை நோக்கி) ஈஸாவே! நிச்சயமாக நான் உம்மைக் கைப்பற்றிக்கொள்பவனாகவும், உம்மை என்னிடம் உயர்த்திக் கொள்பவனாகவும் இருக்கிறேன் ; மேலும் நிராகரிப்போரி(ன் அவதூறி)லிருந்து உம்மைப் பரிசுத்தப்படுத்துகிறவனாகவும் ; மேலும், உம்மைப் பின்பற்றுவோரை, நிராகரிப்போரை விட மறுமை நாள் வரை மேலாக்கி வைப்பவனாகவும் இருக்கிறேன் ; " பின்னர், உங்களுடைய திரும்புதல் என்னிடமே இருக்கிறது. அப்போது எதில் நீங்கள் மாறுபட்டவர்களாக இருந்தீர்களோ அதில் நான் உங்களுக்கிடையில் தீர்ப்பளிப்பேன்" என்று அல்லாஹ் கூறியதை (நினைவு கூர்வீராக !)

56. ஆகவே, (உம்மை) நிராகரிக்கின்றார்களே அத்தகையோர்_அவர்களை நான் இம்மையிலும், மறுமையிலும் கடினமான வேதனையாக வேதனை செய்வேன்; அன்றியும், அவர்களுக்கு உதவி செய்வோர் (எவரும்) இல்லை.

57. மேலும், விசுவாசித்து, நற்கருமங்களையும் செய்கின்றார்களே அத்தகையோர் _அவர்களின் (நற்) கூலியை, அவர்களுக்குப் பூரணமாக (அல்லாஹ்) அளிப்பான்; மேலும், அல்லாஹ் அநியாயக்காரர்களை நேசிக்கமாட்டான்.

58. (நபியே! மேற்கூறப்பட்ட) அது (என்னுடைய) வசனங்களிலிருந்தும், தீர்க்கமான அறிவுகள் நிறைந்த உபதேசத்திலிருந்தும் (உள்ளவையாகும்) அதை நாம் உம்மீது ஓதிக்காட்டுகிறோம்.

59. நிச்சயமாக, அல்லாஹ்விடம் ஈஸாவுக்கு உதாரணம்: ஆதமுடைய உதாரணத்தைப் போன்றதே! அவன், அவரை மண்ணால் படைத்துப்பின் அதற்கு (மனிதனாக) "ஆகுக" என்று கூறினான்; அவர் (அவ்வாறு) ஆகிவிட்டார்.

60. (நபியே! ஈஸாவைப் பற்றிய இந்த) உண்மை உமதிரட்சகனிடமிருந்துள்ளதாகும்; ஆகவே, (இதைப் பற்றிச்) சந்தேகப் படுவோரில் உள்ளவராக நீர் ஆகிவிடவேண்டாம்.

61. (நபியே! இதுபற்றிய) உண்மையான அறிவு உமக்கு வந்த பின், இதைப் பற்றி உம்மிடம் எவரும் தர்க்கித்தால் நீர் கூறுவீராக: "வாருங்கள்; நாம் எங்களுடைய புதல்வர்களையும், உங்களுடைய புதல்வர்களையும், எங்களுடைய பெண்களையும், உங்களுடைய பெண்களையும், எங்களையும், உங்களையும் அழைத்து, பிறகு நாம் பிரார்த்திப்போம்; பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபத்தை நாம் ஆக்குவோம்" (என்று கூறும்படிக் கட்டளையிட்டான்).

62. நிச்சயமாக இதுவேதான் உண்மையான சரித்திரம்; அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த வணக்கத்துக்குரியவனுமில்லை; மேலும் நிச்சயமாக அல்லாஹ்_அவனே (யாவரையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்.

فَاِنۡ تَوَلَّوۡا فَاِنَّ اللّٰهَ عَلِيۡمٌۢ بِالۡمُفۡسِدِيۡنَ ﴿۶۳﴾ قُلۡ يٰۤاَهۡلَ ع ٦ ٩ ١٤
الۡكِتٰبِ تَعَالَوۡا اِلٰى كَلِمَةٍ سَوَآءٍۢ بَيۡنَنَا وَبَيۡنَكُمۡ اَلَّا نَعۡبُدَ اِلَّا
اللّٰهَ وَلَا نُشۡرِكَ بِهٖ شَيۡـًٔا وَّلَا يَتَّخِذَ بَعۡضُنَا بَعۡضًا اَرۡبَابًا
مِّنۡ دُوۡنِ اللّٰهِ ؕ فَاِنۡ تَوَلَّوۡا فَقُوۡلُوا اشۡهَدُوۡا بِاَنَّا مُسۡلِمُوۡنَ ﴿۶۴﴾
يٰۤاَهۡلَ الۡكِتٰبِ لِمَ تُحَآجُّوۡنَ فِىۡۤ اِبۡرٰهِيۡمَ وَمَاۤ اُنۡزِلَتِ التَّوۡرٰٮةُ
وَالۡاِنۡجِيۡلُ اِلَّا مِنۡۢ بَعۡدِهٖ ؕ اَفَلَا تَعۡقِلُوۡنَ ﴿۶۵﴾ هٰۤاَنۡتُمۡ
هٰٓؤُلَآءِ حَاجَجۡتُمۡ فِيۡمَا لَـكُمۡ بِهٖ عِلۡمٌ فَلِمَ
تُحَآجُّوۡنَ فِيۡمَا لَيۡسَ لَـكُمۡ بِهٖ عِلۡمٌ ؕ وَاللّٰهُ يَعۡلَمُ وَاَنۡتُمۡ
لَا تَعۡلَمُوۡنَ ﴿۶۶﴾ مَا كَانَ اِبۡرٰهِيۡمُ يَهُوۡدِيًّا وَّلَا نَصۡرَانِيًّا وَّ
لٰكِنۡ كَانَ حَنِيۡفًا مُّسۡلِمًا ؕ وَمَا كَانَ مِنَ الۡمُشۡرِكِيۡنَ ﴿۶۷﴾
اِنَّ اَوۡلَى النَّاسِ بِاِبۡرٰهِيۡمَ لَـلَّذِيۡنَ اتَّبَعُوۡهُ وَهٰذَا
النَّبِىُّ وَالَّذِيۡنَ اٰمَنُوۡا ؕ وَاللّٰهُ وَلِىُّ الۡمُؤۡمِنِيۡنَ ﴿۶۸﴾
وَدَّتۡ طَّآٮِٕفَةٌ مِّنۡ اَهۡلِ الۡكِتٰبِ لَوۡ يُضِلُّوۡنَكُمۡ ؕ
وَمَا يُضِلُّوۡنَ اِلَّاۤ اَنۡفُسَهُمۡ وَمَا يَشۡعُرُوۡنَ ﴿۶۹﴾ يٰۤاَهۡلَ
الۡكِتٰبِ لِمَ تَكۡفُرُوۡنَ بِاٰيٰتِ اللّٰهِ وَاَنۡتُمۡ تَشۡهَدُوۡنَ ﴿۷۰﴾

63. (நபியே! இதற்குப் பின்னரும் உம்மை விசுவாசிக்காது) அவர்கள் புறக்கணித்து விடுவார்களானால், நிச்சயமாக அல்லாஹ் (இவ்வாறு) குழப்பம் செய்பவர்களை மிக்க அறிந்தவன்.

64. (நபியே! பின்னும் அவர்களிடம்) நீர் கூறுவீராக! வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும், உங்களுக்கும் இடையே சமநிலையான ஒரு வார்த்தையின் பால் வாருங்கள். (அது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் வணங்கக்கூடாது ; நாம் அவனுக்கு யாதொன்றையும் இணையாக்கவும் கூடாது ; நம்மில் சிலர், சிலரை அல்லாஹ்வையன்றி தெய்வங்களாக எடுத்துக் கொள்ளவும் கூடாது. (இதை ஏற்காது) அவர்கள் புறக்கணித்தால், (அவர்களிடம்,) " நிச்சயமாக நாங்கள் (அவன் ஒருவனுக்கே முற்றிலும் கீழ்ப்படிந்த) முஸ்லிம்கள் என நீங்கள் சாட்சியம் கூறுவீர்களாக! " என்று நீங்கள் கூறிவிடுங்கள்.

65. வேதத்தையுடையவர்களே! இப்றாஹீமுடைய விஷயத்தில் (அவர் யூதராகவோ அல்லது கிறிஸ்தவராகவோதான் இருந்தாரென்று) ஏன் வீணே தர்க்கம் செய்துகொள்கின்றீர்கள்? (யூதர்களுடைய வேதமாகிய) தவ்றாத்தும், (கிறிஸ்தவர்களுடைய வேதமாகிய) இன்ஜீலும் அவருக்கு (வெகுகாலத்திற்குப்) பின்னரேயன்றி இறக்கிவைக்கப்படவில்லை; (இவ்வளவு கூட) நீங்கள் விளங்கிக் கொள்ள மாட்டீர்களா?

66. அறிந்துகொள்ளுங்கள்! நீங்கள்தான் அவர்கள்_ உங்களுக்கு எதில் அறிவு இருக்கிறதோ அதில் நீங்கள் தர்க்கித்துக்கொண்டிருந்தீர்கள்; இப்போது எதில் உங்களுக்கு அறிவு இல்லையோ அதில் நீங்கள் ஏன் தர்க்கிக்கிறீர்கள்? மேலும், அல்லாஹ்தான் (இவை யாவற்றையும்) நன்கறிவான்; நீங்களோ அறியமாட்டீர்கள்.

67. இப்றாஹீம் யூதராக இருக்கவில்லை; கிறிஸ்தவராகவும் இல்லை. எனினும்,அவர் ஹனீஃபாக(அசத்திய மார்க்கங்கள் அனைத்தை விட்டும் நீங்கி சத்திய மார்க்கத்தின்பால் சார்ந்தவராக), முஸ்லிமாக (அல்லாஹ்வுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தவராக ) இருந்தார்; மேலும், அவர் இணைவைப்போரில் (உள்ளவராகவும்) இருக்கவில்லை.

68. நிச்சயமாக மனிதர்களில் இப்றாஹீமுக்கு மிக்க நெருங்கியவர் (எவர் என்றால்) அவரைப்பின்பற்றியோரும், இந்த நபியும், (இவரை) விசுவாசங் கொண்டார்களே அவர்களும் ஆவர் ; இன்னும் அல்லாஹ் விசுவாசிகளின் பாதுகாவலன்.

69. வேதத்தையுடையோர்களில் ஒரு கூட்டத்தார் உங்களை வழி கெடுத்துவிடவேண்டுமே என்று விரும்புகின்றார்கள்; அவர்கள் தங்களையே தவிர (உங்களை) வழி கெடுத்துவிடவும் முடியாது; (இதனை) அவர்கள் உணர்ந்துகொள்வதுமில்லை.

70. "வேதத்தையுடையோர்களே! (பல அத்தாட்சிகளைக்) கண்கூடாகக் கண்டவர்களாக நீங்கள் இருக்கும் நிலையில் அல்லாஹ்வுடைய வசனங்களை ஏன் நிராகரிக்கின்றீர்கள்?"

يٰۤاَهْلَ الْكِتٰبِ لِمَ تَلْبِسُوْنَ الْحَقَّ بِالْبَاطِلِ وَتَكْتُمُوْنَ الْحَقَّ
وَاَنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۷۱﴾ وَقَالَتْ طَّآئِفَةٌ مِّنْ اَهْلِ الْكِتٰبِ اٰمِنُوْا بِالَّذِیْۤ ع ٨ ١٥
اُنْزِلَ عَلَى الَّذِیْنَ اٰمَنُوْا وَجْهَ النَّهَارِ وَاكْفُرُوْۤا اٰخِرَهٗ لَعَلَّهُمْ
یَرْجِعُوْنَ ﴿۷۲﴾ وَلَا تُؤْمِنُوْۤا اِلَّا لِمَنْ تَبِعَ دِیْنَكُمْ ط قُلْ اِنَّ الْهُدٰى
هُدَى اللّٰهِ لا اَنْ یُّؤْتٰۤى اَحَدٌ مِّثْلَ مَاۤ اُوْتِیْتُمْ اَوْ یُحَآجُّوْكُمْ
عِنْدَ رَبِّكُمْ ط قُلْ اِنَّ الْفَضْلَ بِیَدِ اللّٰهِ ج یُؤْتِیْهِ مَنْ یَّشَآءُ ط
وَاللّٰهُ وَاسِعٌ عَلِیْمٌ ﴿۷۳﴾ یَّخْتَصُّ بِرَحْمَتِهٖ مَنْ یَّشَآءُ ط وَاللّٰهُ
ذُو الْفَضْلِ الْعَظِیْمِ ﴿۷۴﴾ وَمِنْ اَهْلِ الْكِتٰبِ مَنْ اِنْ تَاْمَنْهُ
بِقِنْطَارٍ یُّؤَدِّهٖۤ اِلَیْكَ ج وَمِنْهُمْ مَّنْ اِنْ تَاْمَنْهُ بِدِیْنَارٍ لَّا
یُؤَدِّهٖۤ اِلَیْكَ اِلَّا مَا دُمْتَ عَلَیْهِ قَآئِمًا ط ذٰلِكَ بِاَنَّهُمْ قَالُوْا
لَیْسَ عَلَیْنَا فِی الْاُمِّیّٖنَ سَبِیْلٌ ج وَیَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ الْكَذِبَ وَ
هُمْ یَعْلَمُوْنَ ﴿۷۵﴾ بَلٰى مَنْ اَوْفٰى بِعَهْدِهٖ وَاتَّقٰى فَاِنَّ اللّٰهَ یُحِبُّ
الْمُتَّقِیْنَ ﴿۷۶﴾ اِنَّ الَّذِیْنَ یَشْتَرُوْنَ بِعَهْدِ اللّٰهِ وَاَیْمَانِهِمْ ثَمَنًا
قَلِیْلًا اُولٰٓئِكَ لَا خَلَاقَ لَهُمْ فِی الْاٰخِرَةِ وَلَا یُكَلِّمُهُمُ اللّٰهُ وَلَا
یَنْظُرُ اِلَیْهِمْ یَوْمَ الْقِیٰمَةِ وَلَا یُزَكِّیْهِمْ وَلَهُمْ عَذَابٌ اَلِیْمٌ ﴿۷۷﴾

71. "வேதத்தையுடையோர்களே! சத்தியத்தை அசத்தியத்துடன் ஏன் கலந்துவிடுகிறீர்கள்? இன்னும், நீங்கள் (நன்கு) அறிந்து கொண்டே மெய்யை (ஏன்) மறைக்கின்றீர்கள்?

72. வேதத்தையுடையவர்களில் ஒரு கூட்டத்தினர் (தங்கள் இனத்தாரை நோக்கி) "நீங்கள் விசுவாசங் கொண்டவர்களுக்கு இறக்கிவைக்கப்பட்ட (இவ்வேதத்)தை பகலின் துவக்கத்தில் (_காலையில்) விசுவாசித்து, அதன் முடிவில்(_மாலையில், அதனை) நிராகரித்து விடுங்கள்; (இதனால் விசுவாசங் கொண்ட) அவர்களும் (குழப்பமடைந்து தங்கள் விசுவாசத்திலிருந்து) திரும்பிவிடக் கூடும்" எனவும் கூறுகின்றனர்.

73. மேலும், "உங்கள் மார்க்கத்தைப் பின்பற்றியவர்களைத் தவிர (மற்றெவரையும்) நீங்கள் நம்பாதீர்கள்" (என்றும் கூறுகின்றனர்; இதற்கு நபியே!) நீர் கூறுவீராக: நிச்சயமாக நேர்வழி (யானது) அல்லாஹ்வின் நேர்வழி(யே) யாகும்; (அன்றி, அவர்கள் தங்கள் இனத்தாரை நோக்கி) "நீங்கள் கொடுக்கப்பட்ட (வேதத்)தைப் போன்று வேறொருவர் கொடுக்கப்படுவார் என்பதையோ அல்லது அவர்கள், உங்கள் இரட்சகன் முன்பாக வாதிப்பார்கள் (அல்லது உங்களை வெற்றி கொள்வார்கள்) என்பதையோ (நம்பாதீர்கள்!") என்றும் கூறுகின்றனர்; அதற்கு நபியே!) நீர் கூறுவீராக: (பெரும் பாக்கியமெனும்) பேரருள் நிச்சயமாக அல்லாஹ்வின் கையில்தான் இருக்கின்றது; அதனை அவன் நாடியவர்களுக்கே கொடுக்கின்றான்; இன்னும், அல்லாஹ் விசாலமானவன், (யாவற்றையும்) நன்கறிகிறவன்.

74. (அல்லாஹ்வாகிய) அவன், தான் நாடியவர்களைத் தன் அருளுக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறான்; இன்னும், அல்லாஹ் மகத்தான பேரருளுடையவன்.

75. (நபியே!) வேதத்தையுடையோரில் சிலர் இருக்கிறார்கள்; நீர் அவரிடம் ஒரு (பொற்)குவியலையே நம்பி ஒப்படைத்த போதிலும், (யாதொரு குறைவுமின்றி) அதை உம்மிடம் திரும்பச் செலுத்தி விடுவார்; இன்னும் அவர்களில் சிலர் இருக்கிறார்கள்; அவரிடம் ஒரு தங்க நாணயத்தை நம்பி ஒப்படைத்த போதிலும் நீர் அவரிடம் (வம்பு செய்து) தொடர்ந்து நின்றிருந்தாலே தவிர, அதை உமக்குத் திரும்பச் செலுத்த மாட்டார். இது, "பாமரர்கள் விஷயத்தில் (நாம் என்ன செய்தபோதிலும் அதற்காக) நம்மை(க் குற்றம்) பிடிக்க வழியில்லை" என்று, அவர்கள் (பகிரங்கமாகக்) கூறுகின்ற காரணத்தினாலாகும்; அவர்கள் அறிந்துகொண்டே (தங்களைக் குற்றம் பிடிக்கமாட்டான் என்று) அல்லாஹ்வின் மீது பொய்யையும் கூறுகின்றனர்.

76. ஏன் இல்லை! எவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றி, (அல்லாஹ்வுக்குப்) பயந்தும் நடக்கிறாரோ அப்போது (அவர்தான் குற்றம் பிடிக்கப் படமாட்டார்.) நிச்சயமாக, அல்லாஹ் (இத்தகைய) பயபக்தியுடையவர்களை நேசிக்கின்றான்.

77. நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் செய்த வாக்குறுதிக்கும், தங்கள் சத்தியங்களுக்கும் பகரமாக சொற்பக் கிரயத்தைவாங்குகின்றார்களே அத்தகையோர்_அவர்களுக்கு மறுமையில் நிச்சயமாக யாதொரு (நற்)பாக்கியமுமில்லை; அல்லாஹ் (மறுமை நாளில்) அவர்களுடன் (விரும்பிப்) பேசவுமாட்டான்; (அன்புடன்) அவர்களை மறுமை நாளில் பார்க்கவுமாட்டான்; அவர்களைத் தூய்மைப் படுத்தவுமாட்டான்; மேலும், அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு.

وَاِنَّ مِنْهُمْ لَفَرِيْقًا يَّلْوٗنَ اَلْسِنَتَهُمْ بِالْكِتٰبِ لِتَحْسَبُوْهُ
مِنَ الْكِتٰبِ وَمَا هُوَ مِنَ الْكِتٰبِ ۚ وَيَقُوْلُوْنَ هُوَ مِنْ عِنْدِ
اللّٰهِ وَمَا هُوَ مِنْ عِنْدِ اللّٰهِ ۚ وَيَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ الْكَذِبَ وَ
هُمْ يَعْلَمُوْنَ ﴿٧٨﴾ مَا كَانَ لِبَشَرٍ اَنْ يُّؤْتِيَهُ اللّٰهُ الْكِتٰبَ
وَالْحُكْمَ وَالنُّبُوَّةَ ثُمَّ يَقُوْلَ لِلنَّاسِ كُوْنُوْا عِبَادًا لِّيْ مِنْ
دُوْنِ اللّٰهِ وَلٰكِنْ كُوْنُوْا رَبّٰنِيّٖنَ بِمَا كُنْتُمْ تُعَلِّمُوْنَ الْكِتٰبَ
وَبِمَا كُنْتُمْ تَدْرُسُوْنَ ﴿٧٩﴾ لا وَلَا يَاْمُرَكُمْ اَنْ تَتَّخِذُوا
الْمَلٰٓئِكَةَ وَالنَّبِيّٖنَ اَرْبَابًا ؕ اَيَاْمُرُكُمْ بِالْكُفْرِ بَعْدَ اِذْ
اَنْتُمْ مُّسْلِمُوْنَ ﴿٨٠﴾ ع وَاِذْ اَخَذَ اللّٰهُ مِيْثَاقَ النَّبِيّٖنَ لَمَآ ع ٨ ٩ ١٦
اٰتَيْتُكُمْ مِّنْ كِتٰبٍ وَّحِكْمَةٍ ثُمَّ جَآءَكُمْ رَسُوْلٌ مُّصَدِّقٌ
لِّمَا مَعَكُمْ لَتُؤْمِنُنَّ بِهٖ وَلَتَنْصُرُنَّهٗ ؕ قَالَ ءَاَقْرَرْتُمْ وَاَخَذْتُمْ
عَلٰى ذٰلِكُمْ اِصْرِيْ ؕ قَالُوْٓا اَقْرَرْنَا ؕ قَالَ فَاشْهَدُوْا وَاَنَا مَعَكُمْ
مِّنَ الشّٰهِدِيْنَ ﴿٨١﴾ فَمَنْ تَوَلّٰى بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ
الْفٰسِقُوْنَ ﴿٨٢﴾ اَفَغَيْرَ دِيْنِ اللّٰهِ يَبْغُوْنَ وَلَهٗٓ اَسْلَمَ مَنْ فِي
السَّمٰوٰتِ وَالْاَرْضِ طَوْعًا وَّكَرْهًا وَّاِلَيْهِ يُرْجَعُوْنَ ﴿٨٣﴾

78. நிச்சயமாக அவர்களில் ஒரு பிரிவினர் _ அவர்கள் வேதத்தைக் கொண்டு _ (ஓதும்போது அத்துடன் பல வாக்கியங்களைக் கலந்து)அதுவும் வேதத்திலுள்ளதுதான் என நீங்கள் எண்ணிக் கொள்ளும் பொருட்டு தங்கள் நாவுகளைச்சாய்த்துக் கொள்கின்றனர்; அது வேதத்தில் உள்ளதும் அல்ல; அன்றியும் அவர்கள், "அது அல்லாஹ்விடமிருந்துள்ளது" என்றும் கூறுகின்றனர்; அது அல்லாஹ்விடமிருந்துள்ளதும் அல்ல; இன்னும் அவர்கள் நன்கறிந்தவர்களாக, அல்லாஹ்வின்மீது (இவ்வாறு) பொய்யைக் கூறுகின்றனர்.

79. எந்த ஒரு மனிதருக்கும், வேதத்தையும், ஞானத்தையும், நபித்துவத்தையும் அல்லாஹ் அவருக்குக்கொடுத்திருக்க, பின்னர் அவர், மனிதர்களிடம், "அல்லாஹ்வையன்றி எனக்கே அடியார்களாகி(என்னையே வணங்கி) விடுங்கள்" என்று கூற இயலாது; எனினும், (மனிதர்களிடம்) "நீங்கள் வேதத்தை (மற்றவர்களுக்கு)க் கற்றுக்கொடுத்துக் கொண்டும், கற்றுக்கொண்டும் இருப்பதன் காரணமாக, (அதிலுள்ளவாறு) இரட்சக(ன் ஒருவனையே வணங்கி அவ)னைச் சார்ந்த அடியார்களாக ஆகிவிடுங்கள்" (என்றுதான் கூறுவார்).

80. மேலும், "மலக்குகளையும், நபிமார்களையும் (வணக்கத்திற்குரிய தெய்வங்களான) ரப்புகளாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்றும், உங்களுக்கு அவர் கட்டளையிட மாட்டார்; (அல்லாஹ் ஒருவனுக்கே) நீங்கள் முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களாக (முஸ்லிம்களாக) ஆனதன் பின்னர் (அதனை) நிராகரிக்கும்படி உங்களுக்கு அவர் கட்டளையிடுவாரா?

81. மேலும், அல்லாஹ் நபிமார்களிடம்: வாக்குறுதி வாங்கிய சமயத்தில், (அவர்களிடம்,) "வேதத்தையும், ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுத்து, (இதற்குப்) பின்னர், உங்களிடமுள்ளதை உண்மைப் படுத்தும் ஒரு தூதர் உங்களிடம் வந்தால், அவரை நீங்கள் உண்மையாக விசுவாசித்து, நிச்சயமாக அவருக்கு உதவி செய்வீர்கள் (என்று கூறி, "இதனை) நீங்களும் உறுதிப் படுத்தினீர்களா? இதன்மீது என்னுடைய வாக்குறுதியை எடுத்துக் கொண்டீர்களா?" என்று கேட்டதற்கு, அவர்கள் "நாங்கள் (அதனை) உறுதிப் படுத்துகிறோம்" என்றே கூறினார்கள். ("இதற்கு) நீங்கள் சாட்சியாக இருங்கள்; நானும் உங்களுடன் சாட்சியாளர்களில் உள்ளவனாக இருக்கின்றேன்" என்று கூறினான்.

82. எனவே, இதற்குப் பின்னர் எவரேனும் புறக்கணித்தால், நிச்சயமாக அவர்கள்தாம் பாவிகள்.

83. அல்லாஹ்வுடைய மார்க்கமல்லாத (வேறு மார்க்கத்)தையா அவர்கள் தேடுகின்றார்கள்? வானங்கள், மற்றும் பூமியில் உள்ளவை, (அவை) விரும்பினாலும், வெறுத்தாலும் அவனுக்கே முழுமையாகக் கீழ்ப்படிந்து (தங்களை ஒப்படைத்து) விட்டன. மேலும், அவனளவிலேயே திரும்பக் கொண்டு வரப்படுவார்கள்.

قُلْ اٰمَنَّا بِاللّٰهِ وَمَآ اُنْزِلَ عَلَيْنَا وَمَآ اُنْزِلَ عَلٰٓى اِبْرٰهِيْمَ وَ
اِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ وَالْاَسْبَاطِ وَمَآ اُوْتِيَ مُوْسٰى وَ
عِيْسٰى وَالنَّبِيُّوْنَ مِنْ رَّبِّهِمْ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ وَنَحْنُ
لَهٗ مُسْلِمُوْنَ ﴿۸۴﴾ وَمَنْ يَّبْتَغِ غَيْرَ الْاِسْلَامِ دِيْنًا فَلَنْ يُّقْبَلَ مِنْهُ ۚ
وَهُوَ فِي الْاٰخِرَةِ مِنَ الْخٰسِرِيْنَ ﴿۸۵﴾ كَيْفَ يَهْدِي اللّٰهُ قَوْمًا
كَفَرُوْا بَعْدَ اِيْمَانِهِمْ وَشَهِدُوْٓا اَنَّ الرَّسُوْلَ حَقٌّ وَّجَآءَهُمُ
الْبَيِّنٰتُ ؕ وَاللّٰهُ لَا يَهْدِي الْقَوْمَ الظّٰلِمِيْنَ ﴿۸۶﴾ اُولٰٓئِكَ جَزَآؤُهُمْ
اَنَّ عَلَيْهِمْ لَعْنَةَ اللّٰهِ وَالْمَلٰٓئِكَةِ وَالنَّاسِ اَجْمَعِيْنَ ۙ ﴿۸۷﴾
خٰلِدِيْنَ فِيْهَا ۚ لَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْظَرُوْنَ ۙ ﴿۸۸﴾
اِلَّا الَّذِيْنَ تَابُوْا مِنْۢ بَعْدِ ذٰلِكَ وَاَصْلَحُوْا ۟ فَاِنَّ اللّٰهَ
غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۸۹﴾ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا بَعْدَ اِيْمَانِهِمْ ثُمَّ
ازْدَادُوْا كُفْرًا لَّنْ تُقْبَلَ تَوْبَتُهُمْ ۚ وَاُولٰٓئِكَ هُمُ الضَّآلُّوْنَ ﴿۹۰﴾
اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا وَمَاتُوْا وَهُمْ كُفَّارٌ فَلَنْ يُّقْبَلَ
مِنْ اَحَدِهِمْ مِّلْءُ الْاَرْضِ ذَهَبًا وَّلَوِ افْتَدٰى بِهٖ ؕ
اُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ۙ وَّمَا لَهُمْ مِّنْ نّٰصِرِيْنَ ﴿۹۱﴾ ع ۹ ع ۱۱ ۱۷

84. "அல்லாஹ்வையும், நம்மீது இறக்கி வைக்கப் பட்டதையும், இன்னும், இப்றாஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் ஆகியவர்கள்மீதும், அவர்கள் சந்ததிகள்மீதும் இறக்கி வைக்கப்பட்டவை களையும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும், நபிமார்களுக்கும் அவர்கள் இரட்சகனால் கொடுக்கப் பட்டவைகளையும் நாம் விசுவாசிக்கிறோம். அவர்களில் எவருக்குமிடையில் நாம் (பிரித்து) வேற்றுமை பாராட்ட மாட்டோம்; அல்லாஹ் ஒருவனுக்கே நாங்கள் (முற்றிலும் கீழ்ப் படிந்த) முஸ்லிம்கள்." என்று (நபியே!) நீர் கூறுவீராக!

85. " இன்னும் இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக எவராவது தேடினால், அப்பொழுது அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படவேமாட்டாது; மேலும் மறுமையில், அவர் நஷ்ட மடைந்தோரில் இருப்பார்."

86. தங்களுடைய விசுவாசத்திற்குப் பின்னர், நிராகரித்து விட்ட ஒரு சமூகத்தினருக்கு அல்லாஹ் எவ்வாறு நேர் வழிகாட்டுவான்? நிச்சயமாக (அல்லாஹ்வுடைய) தூதர் உண்மையானவர் என்றும் அவர்கள் சாட்சியமும் கூறினர்; அவர்களுக்குத் தெளிவான அத்தாட்சிகளும் வந்திருந்தன; அல்லாஹ் (இத்தகைய) அநியாயக்கார சமூகத்தாரை நேரான வழியில் செலுத்த மாட்டான்.

87. அத்தகையோர் _ அவர்களுக்குரிய கூலி, நிச்சயமாக அல்லாஹ், மலக்குகள், மனிதர்கள் (ஆகிய) யாவருடைய சாபம் அவர்கள் மீது உண்டு என்பதுதான்.

88. இ(ச்சாபத்)திலேயே அவர்கள் நிரந்தரமாக (நிலைத்து) இருப்பவர்கள்; அவர்களை விட்டும் வேதனை இலேசாக்கப் படவுமாட்டாது; (வேதனை செய்யப்படுவதிலிருந்து) அவர்கள் கால அவகாசம் கொடுக்கப்படவு மாட்டார்கள் _

89. அதன்பின்னர் பச்சாதாபப்பட்டு, (பாவங்களிலிருந்து விலகி) தங்களை சீர்திருத்திக் கொண்டார்களே அத்தகையோரைத் தவிர _ (அல்லாஹ் அவர்களை மன்னித்துவிடுவான். ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன்.

90. நிச்சயமாக, தங்களுடைய விசுவாசத்திற்குப்பின்னர் நிராகரித்து, மேலும் நிராகரிப்பை அதிகமாக்கிக் கொண்டார்களே அத்தகையோர் _ அவர்களுடைய தவ்பா (மன்னிப்புக்கோருதல்,) அங்கீகரிக்கப்படவேமாட்டாது; மேலும், அவர்கள் தாம் (முற்றிலும்) வழிகெட்டவர்கள்.

91 . நிச்சயமாக நிராகரித்து, (அந்நிராகரிப்பிலிருந்து மீளாது) நிராகரித்தவர்களாகவே இறந்தும்விடுகின்றனரே அத்தகையோர் _ பொன்னால் இப்பூமி நிறையஉள்ளதை _ அதனை (த்தன் குற்றம் மன்னிக்கப்படுவதற்கு) ஈடாக அவர் கொடுத்த போதிலும், (அது) அவர்களில் எவரிடமிருந்தும் அங்கீகரிக்கப்படவேமாட்டாது; அத்தகையோருக்கே துன்புறுத்தும் வேதனையுண்டு; அவர்களுக்கு உதவி செய்வோரும் (எவரும்) இல்லை.

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ ۬ؕ وَ مَا تُنْفِقُوْا الجزء ۴
مِنْ شَیْءٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِیْمٌ ﴿۹۲﴾ كُلُّ الطَّعَامِ كَانَ حِلًّا لِّبَنِیْۤ
اِسْرَآءِیْلَ اِلَّا مَا حَرَّمَ اِسْرَآءِیْلُ عَلٰی نَفْسِهٖ مِنْ قَبْلِ اَنْ
تُنَزَّلَ التَّوْرٰىةُ ؕ قُلْ فَاْتُوْا بِالتَّوْرٰىةِ فَاتْلُوْهَاۤ اِنْ كُنْتُمْ
صٰدِقِیْنَ ﴿۹۳﴾ فَمَنِ افْتَرٰی عَلَی اللّٰهِ الْكَذِبَ مِنْۢ بَعْدِ ذٰلِكَ
فَاُولٰٓىِٕكَ هُمُ الظّٰلِمُوْنَ ﴿۹۴﴾ قُلْ صَدَقَ اللّٰهُ ۙ قف فَاتَّبِعُوْا مِلَّةَ اِبْرٰهِیْمَ وقف جبریل علیہ السلام
حَنِیْفًا ؕ وَ مَا كَانَ مِنَ الْمُشْرِكِیْنَ ﴿۹۵﴾ اِنَّ اَوَّلَ بَیْتٍ وُّضِعَ لِلنَّاسِ
لَلَّذِیْ بِبَكَّةَ مُبٰرَكًا وَّ هُدًی لِّلْعٰلَمِیْنَ ﴿۹۶﴾ ۚ فِیْهِ اٰیٰتٌۢ بَیِّنٰتٌ مَّقَامُ
اِبْرٰهِیْمَ ۚ۬ وَ مَنْ دَخَلَهٗ كَانَ اٰمِنًا ؕ وَ لِلّٰهِ عَلَی النَّاسِ حِجُّ الْبَیْتِ
مَنِ اسْتَطَاعَ اِلَیْهِ سَبِیْلًا ؕ وَ مَنْ كَفَرَ فَاِنَّ اللّٰهَ غَنِیٌّ عَنِ
الْعٰلَمِیْنَ ﴿۹۷﴾ قُلْ یٰۤاَهْلَ الْكِتٰبِ لِمَ تَكْفُرُوْنَ بِاٰیٰتِ اللّٰهِ ۖۗ وَ اللّٰهُ
شَهِیْدٌ عَلٰی مَا تَعْمَلُوْنَ ﴿۹۸﴾ قُلْ یٰۤاَهْلَ الْكِتٰبِ لِمَ تَصُدُّوْنَ عَنْ
سَبِیْلِ اللّٰهِ مَنْ اٰمَنَ تَبْغُوْنَهَا عِوَجًا وَّ اَنْتُمْ شُهَدَآءُ ؕ وَ مَا اللّٰهُ
بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ﴿۹۹﴾ یٰۤاَیُّهَا الَّذِیْنَ اٰمَنُوْۤا اِنْ تُطِیْعُوْا فَرِیْقًا
مِّنَ الَّذِیْنَ اُوْتُوا الْكِتٰبَ یَرُدُّوْكُمْ بَعْدَ اِیْمَانِكُمْ كٰفِرِیْنَ ﴿۱۰۰﴾

92. (தர்மம் செய்தால்) நீங்கள் விரும்புகின்றவற்றிலிருந்து நீங்கள் செலவு செய்யாதவரையில், நீங்கள் நன்மையை அடையவே மாட்டீர்கள்; நீங்கள் எதைச் செலவு செய்த போதிலும் நிச்சயமாக அல்லாஹ், அதனை நன்கறிந்தவன்.

93. தவ்றாத் இறக்கப்படுவதற்கு முன்னர், இஸ்ராயீல் (எனும் யாஃகூப்) தன் மீது விலக்கிக் கொண்டதைத் தவிர, எல்லா உணவுகளும் இஸ்ராயீலின் மக்களுக்கு அனுமதிக்கப் பட்டதாக இருந்தது.(ஆகவே, இதற்கு மாறாகக் கூறும் யூதர்களிடம், நபியே!) நீர் கூறுவீராக : "நீங்கள் உண்மை சொல்பவர்களாக இருந்தால், தவ்றாத்தைக் கொண்டு வந்து அதனை ஓதுங்கள்" (அதன் மூலம் உண்மை தெளிவாகும்).

94. எனவே, இதற்குப் பின்னரும், எவரேனும் அல்லாஹ்வின்மீது பொய்யைக் கற்பனை செய்தால், அவர்கள்தாம் அநியாயக்காரர்களாவார்கள்.

95. (நபியே!) நீர் கூறுவீராக: (இவைகளைப் பற்றி) அல்லாஹ் உண்மையே கூறியுள்ளான்; ஆகவே, (விசுவாசிகளே! இவர்களைப் புறக்கணித்து விட்டு) சத்தியவழியைச் சார்ந்தவரான இப்றாஹீமுடைய மார்க்கத்தைப் பின்பற்றுங்கள்; அவர் இணைவைத்துக் கொண்டிருப்போரில் (ஒருவராக) இருக்கவில்லை.

96. (இவ்வுலகில், அல்லாஹ்வை வணங்குவதற்கென) மனிதர்களுக்கு வைக்கப்பட்ட முதல் வீடு நிச்சயமாக பக்கா (மக்கா)வில் இருப்பது தான்; பரக்கத்துச் செய்யப்பட்டதாக (அதில் நன்மைகள் பன்மடங்காக்கப்பட்ட தாக)வும், அகிலத்தார்க்கு நேர் வழியாகவும் இருக்கின்றது.

97. அதில் தெளிவான அத்தாட்சிகளும், இப்றாஹீம் (தொழுகைக்காக) நின்ற இட(மான 'மகாம இப்றாஹீ')மும் இருக்கின்றது; மேலும் எவர் அதில் நுழைகின்றாரோ அவர்,(அபயம் பெற்று) அச்சமற்றவராகி விடுகின்றார்; (ஆகவே) எவர்கள் அங்கு யாத்திரை செல்லச் சக்தியுடைவர்களாக இருக்கின்றார்களோ, அத்தகைய மனிதர்கள் மீது, அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று அவ்)வீட்டை ஹஜ்ஜுச் செய்வது கடமையாகும்; எவரேனும் (இதை) நிராகரித்தால்அப்போது, (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தா(ர் அனைவ)ரை விட்டும் தேவையற்றவன்.

98. (நபியே!) நீர் கூறுவீராக: "வேதத்தையுடையவர்களே! அல்லாஹ்வின் வசனங்களை நீங்கள் ஏன் நிராகரிக்கின்றீர்கள்? அல்லாஹ்வோ நீங்கள் செய்பவற்றிற்கு சாட்சியாக (நேருக்கு நேர் பார்ப்பவனாக) இருக்கின்றான்."

99. (நபியே !) நீர் கூறுவீராக : " வேதத்தையுடையவர்களே! அல்லாஹ்வின் பாதையிலிருந்து விசுவாசிகளை ஏன் தடை செய்கின்றீர்கள்? (அது உண்மைதான் என்று) நீங்கள் சாட்சியம் கூறிக்கொண்டே அதனைக் கோணலாக்கத் தேடுகின்றீர்கள்; இன்னும் நீங்கள் செய்பவைகளைப் பற்றி அல்லாஹ் பராமுகமானவனல்லன்"

100. விசுவாசங்கொண்டோரே! வேதங்கொடுக்கப்பட்டோரில் (உள்ள) ஒரு பிரிவினருக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடந்தால், உங்களுடைய விசுவாசத்திற்குப் பின்னரும் நிராகரிப்போராக உங்களை அவர்கள் திருப்பி விடுவார்கள்.

وَكَيْفَ تَكْفُرُوْنَ وَاَنْتُمْ تُتْلٰى عَلَيْكُمْ اٰيٰتُ اللّٰهِ وَفِيْكُمْ رَسُوْلُهٗ ؕ
وَمَنْ يَّعْتَصِمْ بِاللّٰهِ فَقَدْ هُدِىَ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿۱۰۱﴾ يٰۤاَيُّهَا ع ۱۰ ۱
الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ حَقَّ تُقٰتِهٖ وَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ
مُّسْلِمُوْنَ ﴿۱۰۲﴾ وَاعْتَصِمُوْا بِحَبْلِ اللّٰهِ جَمِيْعًا وَّلَا تَفَرَّقُوْا ۪ وَاذْكُرُوْا
نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ اِذْ كُنْتُمْ اَعْدَآءً فَاَلَّفَ بَيْنَ قُلُوْبِكُمْ فَاَصْبَحْتُمْ
بِنِعْمَتِهٖۤ اِخْوَانًا ۚ وَكُنْتُمْ عَلٰى شَفَا حُفْرَةٍ مِّنَ النَّارِ فَاَنْقَذَكُمْ
مِّنْهَا ؕ كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ ﴿۱۰۳﴾ وَلْتَكُنْ
مِّنْكُمْ اُمَّةٌ يَّدْعُوْنَ اِلَى الْخَيْرِ وَيَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَيَنْهَوْنَ
عَنِ الْمُنْكَرِ ؕ وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿۱۰۴﴾ وَلَا تَكُوْنُوْا كَالَّذِيْنَ
تَفَرَّقُوْا وَاخْتَلَفُوْا مِنْۢ بَعْدِ مَا جَآءَهُمُ الْبَيِّنٰتُ ؕ وَاُولٰٓئِكَ لَهُمْ
عَذَابٌ عَظِيْمٌ ﴿۱۰۵﴾ ۙ يَّوْمَ تَبْيَضُّ وُجُوْهٌ وَّتَسْوَدُّ وُجُوْهٌ ۚ فَاَمَّا
الَّذِيْنَ اسْوَدَّتْ وُجُوْهُهُمْ ۣ اَكَفَرْتُمْ بَعْدَ اِيْمَانِكُمْ فَذُوْقُوا
الْعَذَابَ بِمَا كُنْتُمْ تَكْفُرُوْنَ ﴿۱۰۶﴾ وَاَمَّا الَّذِيْنَ ابْيَضَّتْ وُجُوْهُهُمْ
فَفِيْ رَحْمَةِ اللّٰهِ ؕ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿۱۰۷﴾ تِلْكَ اٰيٰتُ اللّٰهِ
نَتْلُوْهَا عَلَيْكَ بِالْحَقِّ ؕ وَمَا اللّٰهُ يُرِيْدُ ظُلْمًا لِّلْعٰلَمِيْنَ ﴿۱۰۸﴾

101. இன்னும், நீங்கள் அல்லாஹ்வின் வசனங்கள் உங்களுக்கு ஓதிக்காண்பிக்கப் பட்டிருக்க; உங்களுக்கு மத்தியில் அவனுடைய தூதரும் இருக்க, நீங்கள் எவ்வாறு நிராகரிப்பீர்கள்? இன்னும், எவர் அல்லாஹ்வை (அவனது மார்க்கத்தை)ப் பலமாகப் பற்றிக் கொள்கின்றாரோ அப்போது அவர், திட்டமாக நேரான பாதையில் செலுத்தப்பட்டு விட்டார்.

102. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை_அவனைப் பயப்பட வேண்டிய முறைப்படி பயப்படுங்கள்; மேலும் நிச்சயமாக (முற்றிலும் அவனுக்குக் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம்.

103. மேலும், நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய (வேதமாகிய) கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்; (உங்களுக்குள் கருத்துவேறுபட்டு,) நீங்கள் பிரிந்துவிட வேண்டாம்; மேலும், உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருளை நினைத்துப்பாருங்கள்; நீங்கள் (ஒருவர் மற்றவருக்கு) விரோதிகளாக இருந்த சமயத்தில், அவன் உங்கள் இதயங்களுக்கிடையே அன்புப் பிணைப்பை உண்டாக்கினான்; ஆகவே, அவனுடைய பேரருளால் நீங்கள் சகோதரர்களாகிவிட்டீர்கள். (அதற்கு முன்னர்) நீங்கள் நரக நெருப்புக்குழியின் விளிம்பின் மீதிருந்தீர்கள் ; அதிலிருந்தும் அவன் உங்களை ஈடேறச்செய்தான். நீங்கள் நேர்வழி பெறுவதற்காக அல்லாஹ் தன் வசனங்களை உங்களுக்கு இவ்வாறு தெளிவுபடுத்துகின்றான்.

104. இன்னும், (விசுவாசங்கொண்டோரே !) உங்களில் ஒரு கூட்டத்தார்_ அவர்கள் (மனிதர்களை) நன்மையின்பால் அழைக்கின்றவர்களாகவும், நல்லதைக்கொண்டு (மக்களை) ஏவுகின்றவர்களாகவும், தீய செயல்களிலிருந்து (அவர்களை) விலக்குகின்றவர்களாகவும் இருக்கட்டும்; அவர்களே தாம் வெற்றிபெற்றோர்.

105. மேலும், தங்களிடம் தெளிவான சான்றுகள் வந்ததன் பின்னரும் தங்களுக்குள் பிரிவை உண்டாக்கிக்கொண்டு, (கருத்து) வேறுபட்டுப் போனார்களே அத்தகையோரைப்போல நீங்களும் ஆகிவிட வேண்டாம்; அத்தகையோருக்குத்தான் (மறுமையில்) மகத்தான வேதனையுமுண்டு.

106. சில முகங்கள் (மலர்ச்சியால் பிரகாசமுள்ள) வெண்மையாகவும், சில முகங்கள் (துக்கத்தால்) கறுத்து (வாடியு)மிருக்கும் நாளில் (அவர்களுக்கு மகத்தானவேதனை உண்டு) ஆகவே, எவர்களுடைய முகங்கள் கறுத்து, (வாடி) இருக்கின்றனவோ, (அவர்களிடம் ,) "நீங்கள் விசுவாசங்கொண்டபின் (அதனை) நிராகரித்து விட்டீர்களா? ஆகவே, நீங்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததன் காரணமாக (நரக) வேதனையைச் சுவையுங்கள்" (என்று கூறப்படும்).

107. இன்னும், எவர்களுடைய முகங்கள் (மலர்ச்சியால் பிரகாசமுள்ள) வெண்மையாக இருக்கின்றனவோ அவர்கள், அல்லாஹ்வின் அருளில் இருப்பார்கள்; அவர்கள் அதில் நிரந்தரமாக (த்தங்கி)இருப்பவர்கள்.

108. (நபியே!) இவை அல்லாஹ்வுடைய வசனங்களாகும்; உண்மையைக் கொண்டுள்ள அவற்றை நாம் உமக்கு ஓதிக்காண்பிக்கின்றோம். மேலும், அல்லாஹ் அகிலத்தார்க்கு அநீதியை (ச் செய்ய) நாட மாட்டான்.

وَلِلّٰهِ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ؕ وَاِلَى اللّٰهِ تُرْجَعُ
الْاُمُوْرُ ۟ ۱۰۹ كُنْتُمْ خَیْرَ اُمَّةٍ اُخْرِجَتْ لِلنَّاسِ تَاْمُرُوْنَ ع ۴
بِالْمَعْرُوْفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَتُؤْمِنُوْنَ بِاللّٰهِ ؕ وَلَوْ
اٰمَنَ اَهْلُ الْكِتٰبِ لَكَانَ خَیْرًا لَّهُمْ ؕ مِنْهُمُ الْمُؤْمِنُوْنَ وَاَكْثَرُهُمُ
الْفٰسِقُوْنَ ۟ ۱۱۰ لَنْ یَّضُرُّوْكُمْ اِلَّاۤ اَذًى ؕ وَاِنْ یُّقَاتِلُوْكُمْ یُوَلُّوْكُمُ
الْاَدْبَارَ ۫ ثُمَّ لَا یُنْصَرُوْنَ ۟ ۱۱۱ ضُرِبَتْ عَلَیْهِمُ الذِّلَّةُ اَیْنَ مَا
ثُقِفُوْۤا اِلَّا بِحَبْلٍ مِّنَ اللّٰهِ وَحَبْلٍ مِّنَ النَّاسِ وَبَآءُوْ بِغَضَبٍ
مِّنَ اللّٰهِ وَضُرِبَتْ عَلَیْهِمُ الْمَسْكَنَةُ ؕ ذٰلِكَ بِاَنَّهُمْ كَانُوْا
یَكْفُرُوْنَ بِاٰیٰتِ اللّٰهِ وَیَقْتُلُوْنَ الْاَنْۢبِیَآءَ بِغَیْرِ حَقٍّ ؕ ذٰلِكَ
بِمَا عَصَوْا وَّكَانُوْا یَعْتَدُوْنَ ۟ۗ ۱۱۲ لَیْسُوْا سَوَآءً ؕ مِنْ اَهْلِ
الْكِتٰبِ اُمَّةٌ قَآىِٕمَةٌ یَّتْلُوْنَ اٰیٰتِ اللّٰهِ اٰنَآءَ الَّیْلِ وَ
هُمْ یَسْجُدُوْنَ ۟ ۱۱۳ یُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْیَوْمِ الْاٰخِرِ وَ
یَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَیَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَیُسَارِعُوْنَ
فِی الْخَیْرٰتِ ؕ وَاُولٰٓىِٕكَ مِنَ الصّٰلِحِیْنَ ۟ ۱۱۴ وَمَا یَفْعَلُوْا
مِنْ خَیْرٍ فَلَنْ یُّكْفَرُوْهُ ؕ وَاللّٰهُ عَلِیْمٌۢ بِالْمُتَّقِیْنَ ۟ ۱۱۵

109. வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ளவையும், அல்லாஹ்வுக்கே உரியன; (இவை சம்பந்தமான) சகல காரியங்களும் அல்லாஹ்விடமே மீட்டுக் கொண்டுவரப்படும்.

110. (விசுவாசங்கொண்டோரே!) மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தார்களிலெல்லாம்) மிக்க மேன்மையான சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்; (ஏனெனில்) நன்மையான காரியங்களை நீங்கள் ஏவுகிறீர்கள்; தீமையை விட்டும் (அவர்களை) நீங்கள் விலக்குகிறீர்கள்; மேலும், நீங்கள் அல்லாஹ்வை விசுவாசிக்கின்றீர்கள். மேலும் (இவ்வாறே,) வேதத்தையுடையவர்களும் விசுவாசித்(து நடந்)தால், அது அவர்களுக்கு நன்மையாக இருந்திருக்கும்; விசுவாசிப்போரும் அவர்களில்(சிலர்) இருக்கின்றனர்; இன்னும், அவர்களில் அதிகமானவர்கள், (அல்லாஹ்வின் கட்டளையை மீறும்) பாவிகளாவர்.

111. (விசுவாசிகளே! இத்தகையோர்) உங்களுக்குச் சிறிது தொல்லையிழைப்பதைத் தவிர (அதிகமாக) உங்களுக்கு (ஏதும்) தீங்கு செய்துவிடவே முடியாது; மேலும், உங்களுடன் அவர்கள் யுத்தம் புரிய முற்பட்டாலோ, அவர்கள் உங்களுக்குப் புறங்காட்டியே ஓடுவார்கள்; பின்னர் அவர்கள் (எவராலும்) உதவி செய்யப்படமாட்டார்கள்.

112. அவர்கள் எங்கு காணப்பட்டபோதிலும் அவர்கள்மீது இழிவு விதிக்கப்பட்டுவிட்டது; (இவ்வேதமாகிய) அல்லாஹ்வின் உடன்படிக்கையைக் கொண்டும், (விசுவாசங் கொண்ட) மனிதர்கள் (அளிக்கும் அபயமென்னும்) உடன்படிக்கையைக் கொண்டுமேயன்றி (அவர்கள் தப்பித்துக்கொள்ள முடியாது); மேலும் அல்லாஹ்விடமிருந்துள்ள கோபத்தைக்கொண்டு அவர்கள் திரும்பிவிட்டார்கள்; ஏழ்மையும் அவர்கள் மீது விதிக்கப்பட்டுவிட்டது; இது(ஏனெனில்) நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை (எப்பொழுதுமே) நிராகரித்துக்கொண்டும், நியாயமின்றி நபிமார்களைக் கொலை செய்துகொண்டும் இருந்ததின் காரணத்தினாலாகும். (மேலும்) அது, அவர்கள் மாறு செய்துகொண்டும், வரம்பு மீறிக் கொண்டும் இருந்த காரணத்தினாலாகும்.

113. அவர்கள் (அனைவரும்) சமமானவர்களல்லர். வேதத்தையுடையவர்களில், (நேர்வழியில்) நிற்கும் ஒரு கூட்டத்தினர் இருக்கின்றனர்; அவர்கள் இரவுக் காலங்களில் சிரம் பணிந்தவர்களாக (தொழுபவர்களாக) அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதுகின்றனர்.

114. அல்லாஹ்வையும், இறுதி நாளையும் அவர்கள் விசுவாசிக்கின்றனர்; இன்னும் நன்மையைக் கொண்டும் (மனிதர்களை) ஏவுகின்றனர்; தீமையை விட்டும் தடுக்கின்றனர்; இன்னும், நன்மையானவற்றில் விரை(ந்தும் செல்)கின்றனர்; மேலும் இவர்கள் நல்லோர்களில் உள்ளோராவர்.

115. இவர்கள் எந்த நன்மையைச் செய்தபோதிலும், அ(தற்காக நற்கூலி பெறுவ)தை மறுக்கப்படமாட்டார்கள்; (இத்தகைய) பயபக்தியுடையோரை அல்லாஹ் நன்கறிகிறவன்.

اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا لَنْ تُغْنِيَ عَنْهُمْ اَمْوَالُهُمْ وَلَآ اَوْلَادُهُمْ
مِّنَ اللّٰهِ شَيْـًٔا ۭ وَاُولٰۗىِٕكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿۱۱۶﴾
مَثَلُ مَا يُنْفِقُوْنَ فِيْ هٰذِهِ الْحَيٰوةِ الدُّنْيَا كَمَثَلِ رِيْحٍ فِيْهَا
صِرٌّ اَصَابَتْ حَرْثَ قَوْمٍ ظَلَمُوْٓا اَنْفُسَهُمْ فَاَهْلَكَتْهُ ۭ وَمَا
ظَلَمَهُمُ اللّٰهُ وَلٰكِنْ اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ ﴿۱۱۷﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا
لَا تَتَّخِذُوْا بِطَانَةً مِّنْ دُوْنِكُمْ لَا يَاْلُوْنَكُمْ خَبَالًا ۭ وَدُّوْا مَا
عَنِتُّمْ ۚ قَدْ بَدَتِ الْبَغْضَاۗءُ مِنْ اَفْوَاهِهِمْ ښ وَمَا تُخْفِيْ صُدُوْرُھُمْ
اَكْبَرُ ۭ قَدْ بَيَّنَّا لَكُمُ الْاٰيٰتِ اِنْ كُنْتُمْ تَعْقِلُوْنَ ﴿۱۱۸﴾ هٰٓاَنْتُمْ اُولَاۗءِ
تُحِبُّوْنَھُمْ وَلَا يُحِبُّوْنَكُمْ وَتُؤْمِنُوْنَ بِالْكِتٰبِ كُلِّهٖ ۚ وَاِذَا لَقُوْكُمْ
قَالُوْٓا اٰمَنَّا ڰ وَاِذَا خَلَوْا عَضُّوْا عَلَيْكُمُ الْاَنَامِلَ مِنَ الْغَيْظِ ۭ
قُلْ مُوْتُوْا بِغَيْظِكُمْ ۭ اِنَّ اللّٰهَ عَلِيْمٌۢ بِذَاتِ الصُّدُوْرِ ﴿۱۱۹﴾ اِنْ
تَمْسَسْكُمْ حَسَنَةٌ تَسُؤْھُمْ ۡ وَاِنْ تُصِبْكُمْ سَيِّئَةٌ يَّفْرَحُوْا
بِهَا ۭ وَاِنْ تَصْبِرُوْا وَتَتَّقُوْا لَا يَضُرُّكُمْ كَيْدُھُمْ شَيْـــًٔا ۭ اِنَّ
اللّٰهَ بِمَا يَعْمَلُوْنَ مُحِيْطٌ ﴿۱۲۰﴾ ۧ وَاِذْ غَدَوْتَ مِنْ اَھْلِكَ ع ۱۲ ۴
تُبَوِّئُ الْمُؤْمِنِيْنَ مَقَاعِدَ لِلْقِتَالِ ۭ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿۱۲۱﴾ ۙ

116. நிச்சயமாக நிராகரிக்கின்றார்களே அத்தகையோர் _ அவர்களுடைய செல்வங்களும், அவர்களுடைய மக்களும், அல்லாஹ்வி(னுடைய வேதனையி)லிருந்து அவர்களை விட்டு எந்த ஒன்றையும் தேவையுறச் செய்யாது. மேலும், அவர்கள் நரகவாசிகள் தாம்; அதில் நிரந்தரமாக அவர்கள் (தங்கி)இருப்பவர்கள்.

117. இவ்வுலக வாழ்க்கையில் (இஸ்லாத்திற்கு விரோதமாக) அவர்கள் செலவு செய்யும் பொருளின் உதாரணம்: ஒரு காற்றைப் போல் இருக்கின்றது. அதில் கடுமையான குளிர் இருக்கிறது; தமக்குத் தாமே அநியாயமிழைத்துக்கொண்ட ஒரு கூட்டத்தாரின் பயிரில் பட்டு அப்போது அதனை அது அழித்துவிடுகிறது. அல்லாஹ்வோ அவர்களுக்கு அநியாயமிழைத்துவிடவில்லை; எனினும், இவர்கள் தமக்குத் தாமே அநியாயமிழைத்துக் கொள்கின்றனர்.

118. விசுவாசங்கொண்டோரே! உங்(கள் இனத்தவர்)களையன்றி (மற்றவர்களை) உங்களுடைய அந்தரங்கச்செய்திகளை அறிபவர்களாக நீங்கள் ஆக்கிக் கொள்ளாதீர்கள்; (ஏனென்றால்) அவர்கள் உங்களுக்குத் தீங்கிழைப்பதில் ஒரு சிறிதும் குறைவு செய்வதில்லை; மேலும், நீங்கள் துன்புறுவதை அவர்கள் விரும்புகிறார்கள்; அவர்களுடைய வாய்(ச் சொற்)களிலிருந்தே (அவர்களுடைய) கடுமையான வெறுப்பு திட்டமாக வெளிப்பட்டுவிட்டது; (உங்களைப்பற்றி) அவர்களுடைய நெஞ்சங்கள் மறைத்து வைத்திருப்பவையோ மிகப்பெரிதாகும். நீங்கள் விளங்கிக் கொள்பவர்களாக இருந்தால், நிச்சயமாக நாம், (அவர்களுடைய) அடையாளங்களை உங்களுக்குத் தெளிவாக்கி விட்டோம்;

119. (விசுவாசங்கொண்டோரே!) தெரிந்து கொள்ளுங்கள்! நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்கள்; அவர்களோ, உங்களை நேசிப்பதில்லை. நீங்கள் வேதங்கள் யாவற்றையும் விசுவாசிக்கிறீர்கள்; இன்னும், அவர்கள் உங்களைச் சந்தித்தால், "நாங்கள் விசுவாசிக்கிறோம்" என்று கூறுகின்றனர்; இன்னும் (உங்களிலிருந்து விலகி) அவர்கள் தனித்துவிட்டாலோ, (உங்கள் மீதுள்ள) ஆத்திரத்தினால் (தங்கள் கை) விரல்களின் நுனிகளை கடித்துக் கொள்கின்றனர்; ஆகவே, (நபியே! அவர்களிடம்,) நீர் கூறுவீராக: "உங்கள் ஆத்திரத்திலேயே நீங்கள் இறந்து விடுங்கள் ! நிச்சயமாக அல்லாஹ், (உங்கள்) நெஞ்சங்களில் உள்ளவற்றை நன்கறிகின்றவன்".

120. உங்களுக்கு யாதொரு நன்மை ஏற்படின், (அது) அவர்களை வருந்தச் செய்கின்றது; உங்களுக்கு யாதொரு தீங்கு ஏற்பட்டாலோ, அதற்காக அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்; ஆகவே, நீங்கள் பொறுமையுடனிருந்து, (அல்லாஹ்வை) பயந்தும் கொள்வீர்களாயின் அவர்களுடைய சூழ்ச்சி உங்களுக்கு யாதொரு தீங்கையும் விளைவித்துவிடாது. (ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ், அவர்கள் செய்பவற்றைச் சூழ்ந்து அறிகிறவன்.

121. (நபியே!) நீர் உம் குடும்பத்திலிருந்து அதிகாலையில் புறப்பட்டு(ச் சென்று) விசுவாசங்கொண்டவர்களை, (உஹுத் யுத்த களத்தில்) போருக்காக (அவரவருக்குரிய) இடங்களில் அமர்த்தி(ஒழுங்கு படுத்தி)க்கொண்டிருந்ததை (நினைத்துப் பார்ப்பீராக!. யாவற்றையும்) அல்லாஹ், செவியுறுகிறவன் ; (உங்கள் இதயங்களில் இருப்பவற்றை) நன்கறிகின்றவன்.

إِذْ هَمَّتْ طَّآئِفَتٰنِ مِنْكُمْ اَنْ تَفْشَلَا ۙ وَاللّٰهُ وَلِيُّهُمَا ؕ وَعَلَى
اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُوْنَ ﴿۱۲۲﴾ وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ
اَذِلَّةٌ ۚ فَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿۱۲۳﴾ اِذْ تَقُوْلُ لِلْمُؤْمِنِيْنَ
اَلَنْ يَّكْفِيَكُمْ اَنْ يُّمِدَّكُمْ رَبُّكُمْ بِثَلٰثَةِ اٰلٰفٍ مِّنَ الْمَلٰٓئِكَةِ
مُنْزَلِيْنَ ﴿۱۲۴﴾ بَلٰٓى ۙ اِنْ تَصْبِرُوْا وَتَتَّقُوْا وَيَاْتُوْكُمْ مِّنْ فَوْرِهِمْ
هٰذَا يُمْدِدْكُمْ رَبُّكُمْ بِخَمْسَةِ اٰلٰفٍ مِّنَ الْمَلٰٓئِكَةِ مُسَوِّمِيْنَ ﴿۱۲۵﴾ الربع
وَمَا جَعَلَهُ اللّٰهُ اِلَّا بُشْرٰى لَكُمْ وَلِتَطْمَئِنَّ قُلُوْبُكُمْ بِهٖ ؕ وَمَا
النَّصْرُ اِلَّا مِنْ عِنْدِ اللّٰهِ الْعَزِيْزِ الْحَكِيْمِ ﴿۱۲۶﴾ ۙ لِيَقْطَعَ طَرَفًا مِّنَ
الَّذِيْنَ كَفَرُوْٓا اَوْ يَكْبِتَهُمْ فَيَنْقَلِبُوْا خَآئِبِيْنَ ﴿۱۲۷﴾ لَيْسَ لَكَ
مِنَ الْاَمْرِ شَيْءٌ اَوْ يَتُوْبَ عَلَيْهِمْ اَوْ يُعَذِّبَهُمْ فَاِنَّهُمْ ظٰلِمُوْنَ ﴿۱۲۸﴾
وَلِلّٰهِ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ ؕ يَغْفِرُ لِمَنْ يَّشَآءُ وَ
يُعَذِّبُ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۲۹﴾ ع يٰٓاَيُّهَا الَّذِيْنَ ع ۱۳ ۹ ۴
اٰمَنُوْا لَا تَاْكُلُوا الرِّبٰٓوا اَضْعَافًا مُّضٰعَفَةً ۪ وَّاتَّقُوا
اللّٰهَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ﴿۱۳۰﴾ ۚ وَاتَّقُوا النَّارَ الَّتِىْٓ اُعِدَّتْ
لِلْكٰفِرِيْنَ ﴿۱۳۱﴾ ۚ وَاَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ﴿۱۳۲﴾ ۚ

122. (அந்த யுத்தத்தில்) உங்களிலிருந்து இரு பிரிவினர் தைரியம் இழந்து ("உஹுத்"என்னும் யுத்த களத்தை விட்டுச் சென்று) விட(லாமா என்று) நாடிய சமயத்தில்_( போர்க்களத்தில் அவர்களை அமர்த்திக் கொண்டிருந்தீர்) மேலும், அல்லாஹ் அவ்விருசாராருக்கும் உதவியாளன்; இன்னும், அல்லாஹ்வின் மீதே விசுவாசிகள் (தங்கள் காரியங்களை ஒப்படைத்துமுழுமையாக)நம்பிக்கை வைக்கவும்.

123. பத்ரில் (நடந்த யுத்தத்தில்) நீங்கள் (எண்ணிக்கையிலும் , ஆயுதபலத்திலும் மிகக்) குறைந்தவர்களாகயிருந்த சமயத்தில், நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உதவிசெய்தான்; ஆகவே, நீங்கள் நன்றி செலுத்துவதற்காக அல்லாஹ்வுக்கு பயந்து (நடந்து) கொள்ளுங்கள்.

124. (நபியே!) விசுவாசங்கொண்டோரிடம் , " (வானத்திலிருந்து) இறக்கி வைக்கப்பட்ட மூவாயிரம் மலக்குகளைக் கொண்டு, உங்கள் இரட்சகன் உங்களுக்கு உதவி செய்வது உங்களுக்குப் போதாதா?" என்று நீர் கூறியதை(யும் நினைவு கூர்வீராக!)

125. "ஆம்; நீங்கள் பொறுமையுடனிருந்து, (அல்லாஹ்வுக்கு) பயந்தும் கொள்வீர்களானால், அந்நேரத்திலேயே உங்களிடம் (உங்களைத்தாக்க) அவர்கள் வந்த போதிலும், (மூவாயிரமென்ன?)போர்க்குறிகள் கொண்டவர்களான மலக்குகளில் ஐயாயிரத்தைக் கொண்டு உங்கள் இரட்சகன் உங்களுக்கு உதவி செய்வான்."

126. உங்களுக்கு ஒரு நன்மாராயமாகவும், இதைக் கொண்டு உங்களுடைய இதயங்கள் திருப்தியடைவதற்காகவுமே தவிர அல்லாஹ் இதை ஆக்கவில்லை. இன்னும் மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன் ஆகிய அல்லாஹ்விடமிருந்தே தவிர, உதவி (உங்களுக்கு) இல்லை.

127. (அவன் உங்களுக்கு இவ்வுதவி புரிந்ததன் நோக்கம்) நிராகரிப்போரில் ஒரு பகுதியினரை அழித்துவிடுவதற்காக, அல்லது அவர்களைச் சிறுமை படுத்துவதற்காகவேயாகும்; அப்போது அவர்கள் நஷ்டமடைந்தவர்களாக, (ஏமாந்து) திரும்பிச் சென்று விடுவர்.

128. (நபியே!) இக்காரியத்தில்(நாம்கட்டளையிட்டதைத் தவிர) உமக்கு யாதோர் அதிகாரமுமில்லை; ஒன்று அவன் அவர்களின் தவ்பாவை ஏற்றுக் கொள்ளலாம்; அல்லது அவர்களை வேதனையும் செய்யலாம். அதன்காரணம், நிச்சயமாக அவர்கள் அநியாயக்காரர்களாவர்.

129. வானங்களிலுள்ளவை, மற்றும் பூமியிலுள்ளவை அல்லாஹ்வுக்கே உரியவை; அவன் நாடியவருக்கு மன்னிப்பளிப்பான் ; இன்னும் அவன் நாடியவரை வேதனை செய்வான்; அல்லாஹ்வோ மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன்.

130. விசுவாசங்கொண்டோரே!(அசலுக்கு அதிகமாகவும், வட்டிக்கு வட்டியாகவும்) இரட்டிப்பாக்கப்பட்டு பன்மடங்காக்கப் பட்ட நிலையில் வட்டியை உண்ணாதீர்கள்; இன்னும் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள்; (இதனைத் தவிர்த்துக்கொண்டால்) நீங்கள் வெற்றியடைவீர்கள்.

131. இன்னும் (நரக) நெருப்பிற்குப் பயந்து கொள்ளுங்கள்; அது எத்தகையதென்றால் நிராகரிப் போருக்காகத் தயார் படுத்தப்பட்டுள்ளது.

132. அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும் கீழ்ப்படியுங்கள் (அதனால்) நீங்கள் (அல்லாஹ்வின்) கிருபைக்குள்ளாக்கப்படுவீர்கள்.

وَسَارِعُوْٓا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا السَّمٰوٰتُ
وَالْاَرْضُ ۙ اُعِدَّتْ لِلْمُتَّقِيْنَ ۝۱۳۳ الَّذِيْنَ يُنْفِقُوْنَ فِي السَّرَّآءِ
وَالضَّرَّآءِ وَالْكٰظِمِيْنَ الْغَيْظَ وَالْعَافِيْنَ عَنِ النَّاسِ ؕ وَاللّٰهُ
يُحِبُّ الْمُحْسِنِيْنَ ۝۱۳۴ وَالَّذِيْنَ اِذَا فَعَلُوْا فَاحِشَةً اَوْ ظَلَمُوْٓا
اَنْفُسَهُمْ ذَكَرُوا اللّٰهَ فَاسْتَغْفَرُوْا لِذُنُوْبِهِمْ ۪ وَمَنْ يَّغْفِرُ
الذُّنُوْبَ اِلَّا اللّٰهُ ۪ۚ وَلَمْ يُصِرُّوْا عَلٰى مَا فَعَلُوْا وَهُمْ
يَعْلَمُوْنَ ۝۱۳۵ اُولٰٓئِكَ جَزَآؤُهُمْ مَّغْفِرَةٌ مِّنْ رَّبِّهِمْ وَ
جَنّٰتٌ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا ؕ وَنِعْمَ اَجْرُ
الْعٰمِلِيْنَ ۝۱۳۶ قَدْ خَلَتْ مِنْ قَبْلِكُمْ سُنَنٌ ۙ فَسِيْرُوْا فِي
الْاَرْضِ فَانْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُكَذِّبِيْنَ ۝۱۳۷ هٰذَا
بَيَانٌ لِّلنَّاسِ وَهُدًى وَّمَوْعِظَةٌ لِّلْمُتَّقِيْنَ ۝۱۳۸ وَلَا تَهِنُوْا وَ
لَا تَحْزَنُوْا وَاَنْتُمُ الْاَعْلَوْنَ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ۝۱۳۹ اِنْ
يَّمْسَسْكُمْ قَرْحٌ فَقَدْ مَسَّ الْقَوْمَ قَرْحٌ مِّثْلُهٗ ؕ وَتِلْكَ
الْاَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ ۚ وَلِيَعْلَمَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا
وَيَتَّخِذَ مِنْكُمْ شُهَدَآءَ ؕ وَاللّٰهُ لَا يُحِبُّ الظّٰلِمِيْنَ ۙ ۝۱۴۰

133. உங்கள் இரட்சகனின் மன்னிப்பின்பாலும், சுவனபதியின்பாலும் விரைந்து கொள்ளுங்கள்; அதன் அகலமாகிறது வானங்களும், பூமியுமாகும்; அது பயபக்தியுடையவர்களுக்காக (வே) தயார்செய்யப்பட்டுள்ளது.

134. அவர்கள் எத்தகையோரென்றால், செல்வ நிலையிலும், வறுமை நிலையிலும் செலவு செய்து கொண்டிருப்பார்கள்; கோபத்தையும் அடக்கிக்கொள்ளக் கூடியவர்கள்; மனிதர்(களின் குற்றங்)களையும் மன்னித்து விடக்கூடியவர்கள்; அல்லாஹ்வோ (இத்தகைய) நன்மைசெய்வோரை நேசிக்கின்றான்.

135. இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், யாதொரு மானக்கேடான காரியத்தை அவர்கள் செய்து விட்டால், அல்லது (ஏதும் பாவமிழைத்துத்) தங்களுக்குத் தாங்களே அநீதமிழைத்துக் கொண்டால், (உடனே) அல்லாஹ்வை நினைவுகூர்வார்கள். இன்னும் (அவனிடமே) தங்களுடைய பாவங்களுக்காக மன்னிக்கத்தேடுவார்கள்; (அல்லாஹ்வும் அவர்களை மன்னித்து விடுவான்.) அல்லாஹ்வைத் தவிர, (இத்தகையோரின்) குற்றங்களை மன்னிப்பவனும் யார்? அவர்கள் செய்த (தவறான) காரியத்தை (த் தவறென்று) அவர்கள் அறிந்து கொண்டே (அதில்) நிலைத்திருக்கவு மாட்டார்கள் (உடனே அதிலிருந்து விலகி விடுவார்கள்).

136. அத்தகையோர்_ அவர்களுடையகூலி அவர்களுடைய இரட்சகனிடமிருந்து மன்னிப்பு, மற்றும் சுவனபதிகளாகும்; இவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்; அவர்கள் அவற்றில் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்; (இத்தகு) காரியங்கள் செய்தோரின் கூலி அது மிக நல்லது.

137. திட்டமாக உங்களுக்கு முன்னரும் (இத்தகைய) பலவழிமுறைகள் சென்றிருக்கின்றன. ஆகவே, நீங்கள் பூமியில் சுற்றித்திரிந்து (அல்லாஹ்வுடைய வசனங்களைப்) பொய்யாக்கியோரின் முடிவு எப்படி இருந்தது என்பதைப் பாருங்கள்.

138. இது, (பொதுவாக) மனிதர்களுக்கு (உண்மை)விளக்கமாகவும், (குறிப்பாக) பயபக்தியுடையோர்களுக்கு நேர் வழிகாட்டியாகவும், நல்லுபதேசமாகவும் இருக்கிறது.

139. (விசுவாசங்கொண்டோரே!) நீங்கள் தைரியத்தை இழந்துவிட வேண்டாம்; கவலையும் பட வேண்டாம். (உண்மையாகவே) நீங்கள் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால், நீங்கள்தாம் மிக்க மேலானவர்கள்.

140. உங்களுக்கு (உஹதுப்போரில் தோல்வியுற்றுக்) காயம் ஏற்பட்டதென்றால் (அதைப் பற்றி அதைரியமடையாதீர்கள். ஏனென்றால்,) அந்த ஜனங்களுக்கும், இதைப் போன்றே (பத்ரில் தோல்வியுற்றுக்) காயம் ஏற்பட்டுள்ளது; அந்த (சோதனையான) நாட்களை மனிதர்களுக் கிடையில் மாறி மாறி வரும்படி நாம் செய்கின்றோம். ஏனென்றால், (உங்களில்) உண்மையாகவே விசுவாசங்கொண்டவர்கள் யாரென்று அல்லாஹ் அறி(வித்து விடு)வதற்காகவும், உங்களில் (மார்க்கத்திற்காக உயிரைத் தத்தம் செய்யும் மாபெரும்) தியாகிகளை அவன் எடு(த்தறிவி)ப்பதற்காகவுமே (இவ்வாறு செய்கின்றான்). இன்னும், அநியாயக்காரர்களை அல்லாஹ் நேசிக்கமாட்டான்.

وَلِيُمَحِّصَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا وَيَمْحَقَ الْكٰفِرِيْنَ ﴿۱۴۱﴾ اَمْ
حَسِبْتُمْ اَنْ تَدْخُلُوا الْجَنَّةَ وَلَمَّا يَعْلَمِ اللّٰهُ الَّذِيْنَ جٰهَدُوْا
مِنْكُمْ وَيَعْلَمَ الصّٰبِرِيْنَ ﴿۱۴۲﴾ وَلَقَدْ كُنْتُمْ تَمَنَّوْنَ الْمَوْتَ مِنْ
قَبْلِ اَنْ تَلْقَوْهُ ۠ فَقَدْ رَاَيْتُمُوْهُ وَاَنْتُمْ تَنْظُرُوْنَ ﴿۱۴۳﴾ ع وَمَا ۱۴ ع ۵
مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ اَفَا۟ىِٕنْ
مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰۤى اَعْقَابِكُمْ ؕ وَمَنْ يَّنْقَلِبْ عَلٰى
عَقِبَيْهِ فَلَنْ يَّضُرَّ اللّٰهَ شَيْـًٔا ؕ وَسَيَجْزِى اللّٰهُ الشّٰكِرِيْنَ ﴿۱۴۴﴾
وَمَا كَانَ لِنَفْسٍ اَنْ تَمُوْتَ اِلَّا بِاِذْنِ اللّٰهِ كِتٰبًا مُّؤَجَّلًا ؕ وَ
مَنْ يُّرِدْ ثَوَابَ الدُّنْيَا نُؤْتِهٖ مِنْهَا ۚ وَمَنْ يُّرِدْ ثَوَابَ
الْاٰخِرَةِ نُؤْتِهٖ مِنْهَا ؕ وَسَنَجْزِى الشّٰكِرِيْنَ ﴿۱۴۵﴾ وَكَاَيِّنْ
مِّنْ نَّبِىٍّ قٰتَلَ ۙ مَعَهٗ رِبِّيُّوْنَ كَثِيْرٌ ۚ فَمَا وَهَنُوْا
لِمَاۤ اَصَابَهُمْ فِىْ سَبِيْلِ اللّٰهِ وَمَا ضَعُفُوْا وَمَا اسْتَكَانُوْا ؕ
وَاللّٰهُ يُحِبُّ الصّٰبِرِيْنَ ﴿۱۴۶﴾ وَمَا كَانَ قَوْلَهُمْ اِلَّاۤ اَنْ
قَالُوْا رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَاِسْرَافَنَا فِىْۤ اَمْرِنَا
وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ ﴿۱۴۷﴾

141. விசுவாசங்கொண்டிருந்தார்களேஅவர்களை அல்லாஹ் பரிசுத்த மாக்குவதற்காகவும், நிராகரிப்போர்களை அழிப்பதற்காகவும் (இவ்வாறு செய்கின்றான்).

142. (விசுவாசங்கொண்டோரே!) உங்களில் (அல்லாஹ்வுக்காக) யுத்தம் செய்பவர்கள் யார் என்பதை அல்லாஹ் பரிசோதித்து அறியாமலும், இன்னும் (துன்பங்களைப் பொறுமையுடன்) சகித்துக் கொள்பவர்கள் யார், என்பதை அவன் அறியாமலும், நீங்கள் சுவனபதியில் நுழைந்து விடலாமென்று எண்ணிக் கொண்டிருக்கின்றீர்களா?

143. மேலும், நீங்கள் மரணத்தை _ அதை நீங்கள் சந்திப்பதற்கு முன்னதாக, திட்டமாக ஆசிக்கக் கூடியவர்களாக இருந்தீர்கள்; ஆகவே (கண்ணுக்கெதிரில்) நீங்கள் கண்டவர்களாக இருக்க, அதை திட்டமாக நீங்கள் பார்த்து விட்டீர்கள். (எனவே, இந்த யுத்தத்தில் ஏன் தயங்குகின்றீர்கள்?)

144. இன்னும், முஹம்மது ஒரு தூதரேயன்றி, (இறக்காமல் இருக்கக்கூடியவர்) இல்லை. அவருக்கு முன்னரும், (இவ்வாறே) தூதர்கள் பலர் திட்டமாகச் சென்றிருக்கின்றனர். அவர் இறந்துவிட்டால் அல்லது கொல்லப்பட்டுவிட்டால் நீங்கள் உங்கள் குதிங்கால்களின் மேல் (புறங்காட்டித்) திரும்பி(ச் சென்று) விடுவீர்களா? (அவ்வாறு) எவரேனும் தனது இரு குதிங்கால்களின் மீது (புறங்காட்டித்)திரும்பி(ச் சென்று)விட்டால், அதனால் அவர் அல்லாஹ்வுக்கு எந்த இடையூறும் செய்யவேமாட்டார். மேலும், நன்றிசெலுத்துவோருக்கு அல்லாஹ் (நற்)கூலியைத் தருவான்.

145. மேலும், எந்த ஆன்மாவுக்கும் ஏற்கனவே (அதற்கு) நேரம்குறிக்கப்பட்ட (அல்லாஹ்வின்) எழுத்துப்படி, அல்லாஹ்வின் கட்டளையைக் கொண்டே தவிர அது மரணிப்பதற்கில்லை. மேலும், எவர் (தன் செயலுக்கு) இவ்வுலகத்தின் நன்மையை நாடுகிறாரோ அவருக்கு, அதிலிருந்தே வழங்குவோம். இன்னும் எவர் மறுமையின் நன்மையை நாடுகிறாரோ அவருக்கு, அதிலிருந்தே வழங்குவோம். நன்றிசெலுத்துவோருக்கு நாம் நற்கூலியும் அளிப்போம்.

146. மேலும், எத்தனையோ நபிமார்கள், அவர்களுடன் அல்லாஹ்வின் நல்லடியார்கள் கொண்ட அநேகம்பேர் சேர்ந்து (அல்லாஹ்வின் பாதையில்) யுத்தம் செய்திருக்கின்றனர். ஆனால், அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் (யுத்தம் செய்ததனால்) தங்களுக்கு (துன்பங்கள்) ஏற்பட்டவற்றின் காரணமாக, அவர்கள் தைரியமிழந்துவிடவில்லை; பலவீனமடைந்து விடவுமில்லை; (எதிரிகளுக்கு) ஐக்கியப்பட்டுவிடவுமில்லை. மேலும், (இவ்வாறு துன்பங்களைச் சகித்துக் கொள்ளும்) பொறுமையாளர்களை அல்லாஹ் நேசிக்கின்றான்.

147. (இத்தகைய சந்தர்ப்பங்களில், அவர்கள் தங்கள் இரட்சனிடம்) "எங்கள் இரட்சகனே! எங்கள் பாவங்களையும், எங்கள் செயல்களில் நாங்கள் வரம்புமீறிய (குற்றத்)தையும் நீ எங்களுக்கு மன்னிப்பாயாக! எங்கள் பாதங்களை (யுத்தத்தில் நழுவாது) நீ உறுதிப்படுத்தியும் வைப்பாயாக! (உன்னை) நிராகரிக்கும் சமுதாயத்தினர்க்கு எதிராக (வெற்றி கொள்ள) நீ எங்களுக்கு உதவியும் புரிவாயாக!" என்று அவர்கள் (பிரார்த்தித்துக்) கூறியதைத் தவிர (வேறொன்றும்) அவர்களின் கூற்றாக இருக்கவில்லை.

فَاٰتٰىهُمُ اللّٰهُ ثَوَابَ الدُّنْيَا وَحُسْنَ ثَوَابِ الْاٰخِرَةِ ؕ
وَاللّٰهُ يُحِبُّ الْمُحْسِنِيْنَ ﴿۱۴۸﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِنْ ع ۱۵
تُطِيْعُوا الَّذِيْنَ كَفَرُوْا يَرُدُّوْكُمْ عَلٰۤى اَعْقَابِكُمْ فَتَنْقَلِبُوْا
خٰسِرِيْنَ ﴿۱۴۹﴾ بَلِ اللّٰهُ مَوْلٰىكُمْ ۚ وَهُوَ خَيْرُ النّٰصِرِيْنَ ﴿۱۵۰﴾
سَنُلْقِيْ فِيْ قُلُوْبِ الَّذِيْنَ كَفَرُوا الرُّعْبَ بِمَاۤ اَشْرَكُوْا
بِاللّٰهِ مَا لَمْ يُنَزِّلْ بِهٖ سُلْطٰنًا ۚ وَمَاْوٰىهُمُ النَّارُ ؕ وَ
بِئْسَ مَثْوَى الظّٰلِمِيْنَ ﴿۱۵۱﴾ وَلَقَدْ صَدَقَكُمُ اللّٰهُ وَعْدَهٗۤ
اِذْ تَحُسُّوْنَهُمْ بِاِذْنِهٖ ۚ حَتّٰۤى اِذَا فَشِلْتُمْ وَتَنَازَعْتُمْ
فِي الْاَمْرِ وَعَصَيْتُمْ مِّنْۢ بَعْدِ مَاۤ اَرٰىكُمْ مَّا تُحِبُّوْنَ ؕ
مِنْكُمْ مَّنْ يُّرِيْدُ الدُّنْيَا وَمِنْكُمْ مَّنْ يُّرِيْدُ الْاٰخِرَةَ ۚ
ثُمَّ صَرَفَكُمْ عَنْهُمْ لِيَبْتَلِيَكُمْ ۚ وَلَقَدْ عَفَا عَنْكُمْ ؕ وَ
اللّٰهُ ذُوْ فَضْلٍ عَلَى الْمُؤْمِنِيْنَ ﴿۱۵۲﴾ اِذْ تُصْعِدُوْنَ وَلَا
تَلْوٗنَ عَلٰۤى اَحَدٍ وَّ الرَّسُوْلُ يَدْعُوْكُمْ فِيْۤ اُخْرٰىكُمْ
فَاَثَابَكُمْ غَمًّاۢ بِغَمٍّ لِّكَيْلَا تَحْزَنُوْا عَلٰى مَا فَاتَكُمْ
وَلَا مَاۤ اَصَابَكُمْ ؕ وَاللّٰهُ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ ﴿۱۵۳﴾

148. ஆதலால், அல்லாஹ் அவர்களுக்கு இவ்வுலகத்தின் நன்மையையும், மறுமையின் நன்மையில் அழகானதையும் கொடுத்தான். இன்னும் அல்லாஹ் (இத்தகைய) நற்கருமங்கள் செய்வோரை நேசிக்கின்றான்.

149. விசுவாசங்கொண்டோரே! (அல்லாஹ்வை) நிராகரிப்போருக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடந்தால் அவர்கள் உங்களை (உங்கள் விசுவாசத்திலிருந்து நீங்கள் விலகி) குதிங்கால்களின் மீது (பின் செல்லும்படி) திருப்பிவிடுவார்கள்; அதனால் நீங்கள் நஷ்மடைந்தவர்களாகத் திரும்பிவிடுவீர்கள்.

150. (இவர்கள்) அல்ல. அல்லாஹ்(தான்) உங்கள் பாதுகாவலன். இன்னும், அவனே உதவி செய்வோரில் மிகச்சிறந்தவன்.

151. எதற்கு அவன் சான்றை இறக்கி வைக்கவில்லையோ, அதைஅவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைத்ததன் காரணமாக நிராகரித்து விட்டார்களே அவர்களுடைய இதயங்களில், நாம் திகிலைப் போடுவோம்; அன்றியும் அவர்கள் தங்குமிடம் நரகந்தான். மேலும், இந்த அநியாயக்காரர்களின் தங்குமிடம் (அது) மிகக்கெட்டது.

152. இன்னும், அவன் அனுமதிகொண்டு (எதிரிகளாகிய)அவர்களை நீங்கள் கொன்றழித்த சமயத்தில், அல்லாஹ் திட்டமாக தனது வாக்குறுதியை உங்களுக்கு உண்மையாக்கி வைத்தான். முடிவாக, நீங்கள் கோழைகளாகி உங்களுக்கிடப் பட்ட கட்டளையில் தர்க்கித்துக்கொண்டுமிருந்தீர்கள்; நீங்கள் எதை விரும்பினீர்களோ அதை, அவன் உங்களுக்குக் காட்டிய பிறகும் மாறு செய்யலானீர்கள். உங்களில் இம்மையை விரும்புவோரும் உண்டு; உங்களில் மறுமையை விரும்புவோரும் உண்டு; பின்னர் உங்களைச் சோதிப்பதற்காக அவ்வெதிரிகளை விட்டும் உங்களைத்திருப்பினான். மேலும், திட்டமாக அவன் உங்(களுடைய குற்றங்)களை மன்னித்துவிட்டான். அல்லாஹ்வோ விசுவாசிகள் மீது பேரருளுடையவன்.

153. (உஹுத் யுத்தத்தில், அல்லாஹ்வுடைய) தூதர் உங்கள் பின்னிருந்துகொண்டு, ("என்னிடம் வாருங்கள்" என்று) உங்களை அழைத்துக் கொண்டிருந்த சமயத்தில், நீங்கள் ஒருவரையுமே திரும்பிப் பாராது (வெருண்டோடி மலையில்) ஏறிக்கொண்டிருந்ததை (நினைத்துப் பாருங்கள். அல்லாஹ்வின் தூதருக்கு நீங்கள் உண்டுபண்ணிய இத்)துக்கத்தின் காரணமாக, உங்களுக்கும் (தோல்வியின்) துக்கத்தையே பிரதிபலனாகக் கொடுத்தான்; ஏனென்றால், (இனி) உங்களுக்கு எது தவறிவிட்டதோ, அதன் மீதும், உங்களுக்கு எது ஏற்பட்டுவிட்டதோ, அதன் மீதும் நீங்கள் கவலை கொள்ளாதிருப்பதற் காகவேயாகும். மேலும், நீங்கள் செய்பவற்றையெல்லாம், அல்லாஹ் நன்கு உணர்பவன்.

ثُمَّ اَنْزَلَ عَلَيْكُمْ مِّنْۢ بَعْدِ الْغَمِّ اَمَنَةً نُّعَاسًا يَّغْشٰى طَآىِٕفَةً
مِّنْكُمْ ۙ وَطَآىِٕفَةٌ قَدْ اَهَمَّتْهُمْ اَنْفُسُهُمْ يَظُنُّوْنَ بِاللّٰهِ غَيْرَ الْحَقِّ
ظَنَّ الْجَاهِلِيَّةِ ؕ يَقُوْلُوْنَ هَلْ لَّنَا مِنَ الْاَمْرِ مِنْ شَيْءٍ ؕ قُلْ اِنَّ
الْاَمْرَ كُلَّهٗ لِلّٰهِ ؕ يُخْفُوْنَ فِيْٓ اَنْفُسِهِمْ مَّا لَا يُبْدُوْنَ لَكَ ؕ يَقُوْلُوْنَ
لَوْ كَانَ لَنَا مِنَ الْاَمْرِ شَيْءٌ مَّا قُتِلْنَا هٰهُنَا ؕ قُلْ لَّوْ كُنْتُمْ فِيْ بُيُوْتِكُمْ
لَبَرَزَ الَّذِيْنَ كُتِبَ عَلَيْهِمُ الْقَتْلُ اِلٰى مَضَاجِعِهِمْ ۚ وَلِيَبْتَلِيَ
اللّٰهُ مَا فِيْ صُدُوْرِكُمْ وَلِيُمَحِّصَ مَا فِيْ قُلُوْبِكُمْ ؕ وَاللّٰهُ عَلِيْمٌۢ
بِذَاتِ الصُّدُوْرِ ﴿۱۵۴﴾ اِنَّ الَّذِيْنَ تَوَلَّوْا مِنْكُمْ يَوْمَ الْتَقَى الْجَمْعٰنِ ۙ
اِنَّمَا اسْتَزَلَّهُمُ الشَّيْطٰنُ بِبَعْضِ مَا كَسَبُوْا ۚ وَلَقَدْ عَفَا اللّٰهُ
عَنْهُمْ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ حَلِيْمٌ ﴿۱۵۵﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَكُوْنُوْا ع ۶ ۷
كَالَّذِيْنَ كَفَرُوْا وَقَالُوْا لِاِخْوَانِهِمْ اِذَا ضَرَبُوْا فِي الْاَرْضِ
اَوْ كَانُوْا غُزًّى لَّوْ كَانُوْا عِنْدَنَا مَا مَاتُوْا وَمَا قُتِلُوْا ۚ لِيَجْعَلَ
اللّٰهُ ذٰلِكَ حَسْرَةً فِيْ قُلُوْبِهِمْ ؕ وَاللّٰهُ يُحْيٖ وَيُمِيْتُ ؕ وَ
اللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿۱۵۶﴾ وَلَئِنْ قُتِلْتُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ
اَوْ مُتُّمْ لَمَغْفِرَةٌ مِّنَ اللّٰهِ وَرَحْمَةٌ خَيْرٌ مِّمَّا يَجْمَعُوْنَ ﴿۱۵۷﴾

154. பிறகு, (விசுவாசங்கொண்டோரே!) இத்துக்கத்திற்குப் பின்னர், (அல்லாஹ்வாகிய) அவன் உங்களுக்கு அமைதியை அளிக்கக் கூடிய சிறுதூக்கத்தை இறக்கி வைத்தான்; உங்களில் ஒரு கூட்டத்தினரை அது சூழ்ந்து கொண்டது; மற்றொரு கூட்டத்தினரோ,திட்டமாக அவர்களுடைய மனங்கள் அவர்களுக்கு கவலையை ஏற்படுத்தி விட்டன. அறியாமைக் காலத்தின் எண்ணம் போல, அல்லாஹ்வைப் பற்றி உண்மை அல்லாததை (தவறாக) எண்ண ஆரம்பித்து,"காரியத்தில் நமக்கேதும் உண்டா?" என்று அவர்கள் கூறினர். (அதற்கு) "நிச்சயமாக, காரியம்_ அது அனைத்தும் அல்லாஹ்வுக்குரியனவே!" என்று (நபியே!) நீர் கூறுவீராக! (இவையன்றி) அவர்கள் உமக்கு வெளியிடாததை தங்கள் மனங்களில் மறைத்திருக்கின்றனர். "நம்மிடம் ஏதும் அதிகாரம் இருந்திருந்தால் இங்கு வந்து (இவ்வாறு) நாம் கொல்லப்பட்டிருக்க மாட்டோம்" எனக் கூறுகின்றனர். (இதற்கு நபியே! அந்த முனாபிக்குகளிடம்,) நீர் கூறுவீராக: "நீங்கள் உங்கள் வீடுகளில் (தங்கி) இருந்திருந்த போதிலும், கொல்லப் பட்டே இறக்க வேண்டுமென்று எவர்கள்மீது விதிக்கப்பட்டுள்ளதோ அவர்கள், தாங்கள் (கொல்லப்பட்டு) விழ வேண்டிய இடங்களுக்குத் தாமாக) வந்தே இருப்பார்கள்". உங்கள் நெஞ்சங்களிலுள்ளவற்றை அல்லாஹ்பரிசோதனை செய்வதற்காகவும், உங்கள் இதயங்களில் உள்ளவற்றைச் சுத்தப் படுத்திவிடுவதற்காகவும் (இவ்வாறு சம்பவிக்கும்படி செய்தான்). மேலும், (உங்கள்) நெஞ்சங்களிலுள்ளவற்றை அல்லாஹ் நன்கறிகிறவன்.

155. (விசுவாசங்கொண்டோரே !) இரு கூட்டத்தாரும் (போர்முனையில் )சந்தித்த நாளில், உங்களில் (அதிலிருந்து) திரும்பிவிட்டார்களே அவர்கள்_ அவர்கள் சம்பாதித்துக்கொண்ட (தீவினைகள்) சிலவற்றின் காரணமாக_அவர்களை (அதிலிருந்து திரும்பி) ச் சறுகுமாறு செய்ததெல்லாம் ஷைத்தானே. திட்டமாக அல்லாஹ் அவர்(களின் குற்றங்)களை மன்னித்தும் விட்டான்; நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; சகிப்புத் தன்மையுடையவன்.

156. விசுவாசங்கொண்டோரே! நிராகரித்துக்கொண்டிருப்போரைப் போல் நீங்கள் ஆகிவிட வேண்டாம்; அவர்கள், பூமியில் பிரயாணம் செய்தோ, அல்லது யுத்தம் செய்வோராகவோ இருந்து (இறந்து) விட்ட தங்கள் சகோதரர்களைப் பற்றி, "அவர்கள் நம்மிடமே இருந்திருந்தால், அவர்கள் இறந்திருக்கவு மாட்டார்கள், கொல்லப் பட்டிருக்கவுமாட்டார்கள்" என்று கூறுகின்றனர். அவர்களுடைய இதயங்களில், (என்றென்றுமே) இதை ஒரு (கடும்) துக்கமாக்குவதற்காகவே இவ்வாறு (அவர்கள் நினைக்கும்படி) அல்லாஹ் செய்கிறான். அல்லாஹ்வே உயிர் கொடுக்கின்றான். அவனே மரணிக்கச் செய்கின்றான். மேலும், நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் பார்க்கிறவன்.

157. அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் கொல்லப்பட்டாலும், அல்லது இறந்துவிட்டாலும் (அதற்காக) நிச்சயமாக அல்லாஹ்விடம் கிடைக்கும் மன்னிப்பும், (அவனுடைய) அருளும், அவர்கள் சேகரித்து வைத்திருப்பவைகளை விட மிக மேலானதாகும்.

وَلَئِنْ مُّتُّمْ اَوْ قُتِلْتُمْ لَاِلَى اللّٰهِ تُحْشَرُوْنَ ﴿۱۵۸﴾ فَبِمَا رَحْمَةٍ مِّنَ
اللّٰهِ لِنْتَ لَهُمْ ۚ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيْظَ الْقَلْبِ لَانْفَضُّوْا مِنْ
حَوْلِكَ ۠ فَاعْفُ عَنْهُمْ وَاسْتَغْفِرْ لَهُمْ وَشَاوِرْهُمْ فِى الْاَمْرِ ۚ
فَاِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ۭ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُتَوَكِّلِيْنَ ﴿۱۵۹﴾
اِنْ يَّنْصُرْكُمُ اللّٰهُ فَلَا غَالِبَ لَكُمْ ۚ وَاِنْ يَّخْذُلْكُمْ فَمَنْ ذَا الَّذِىْ
يَنْصُرُكُمْ مِّنْۢ بَعْدِهٖ ۭ وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُوْنَ ﴿۱۶۰﴾ وَمَا
كَانَ لِنَبِىٍّ اَنْ يَّغُلَّ ۭ وَمَنْ يَّغْلُلْ يَاْتِ بِمَا غَلَّ يَوْمَ الْقِيٰمَةِ ۚ
ثُمَّ تُوَفّٰى كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿۱۶۱﴾ اَفَمَنِ اتَّبَعَ
رِضْوَانَ اللّٰهِ كَمَنْۢ بَآءَ بِسَخَطٍ مِّنَ اللّٰهِ وَمَاْوٰىهُ جَهَنَّمُ ۭ وَ
بِئْسَ الْمَصِيْرُ ﴿۱۶۲﴾ هُمْ دَرَجٰتٌ عِنْدَ اللّٰهِ ۭ وَاللّٰهُ بَصِيْرٌۢ بِمَا
يَعْمَلُوْنَ ﴿۱۶۳﴾ لَقَدْ مَنَّ اللّٰهُ عَلَى الْمُؤْمِنِيْنَ اِذْ بَعَثَ فِيْهِمْ رَسُوْلًا
مِّنْ اَنْفُسِهِمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ
وَالْحِكْمَةَ ۚ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِىْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۱۶۴﴾ اَوَلَمَّآ النصف
اَصَابَتْكُمْ مُّصِيْبَةٌ قَدْ اَصَبْتُمْ مِّثْلَيْهَا ۙ قُلْتُمْ اَنّٰى هٰذَا ۭ قُلْ
هُوَ مِنْ عِنْدِ اَنْفُسِكُمْ ۭ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ﴿۱۶۵﴾

158. நீங்கள் (அல்லாஹ்வுடைய பாதையில்) இறந்துவிட்டாலும் அல்லது கொல்லப் பட்டாலும்(கூட) நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்விடமே ஒன்றுதிரட்டப்படுவீர்கள்.

159. (நபியே!) அல்லாஹ்வுடைய அருளின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (இரக்கமுள்ளவராக) நடந்து கொள்கிறீர்; மேலும், சொல்லில் கடுகடுப்பானவராக, இரக்கமற்ற இதயமுள்ளவராக நீர் இருந்திருப்பீரானால், உம்மிடமிருந்து அவர்கள் பிரிந்து சென்றிருப்பார்கள். ஆகவே, அவர்(களின் பிழை)களை நீர் மன்னித்து, (அல்லாஹ்விடம்) அவர்களுக்காக மன்னிக்கக் கோருவீராக! மேலும் (யுத்தம், சமாதானம் முதலிய மற்ற) காரியத்தில் அவர்களுடன் கலந்தாலோசனைசெய்வீராக! (யாதொரு காரியத்தை) நீர் முடிவு செய்தால், அல்லாஹ்வின் மீதே நீர் (உம்முடைய காரியங்களை ஒப்படைத்து முழுமையாக)நம்பிக்கைவைப்பீராக! (ஏனென்றால்)நிச்சயமாக அல்லாஹ் (தம் காரியங்களை அவனிடம் ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைப்போரை நேசிக்கின்றான்.

160. (விசுவாசிகளே!) அல்லாஹ் உங்களுக்கு உதவிசெய்தால், உங்களை மிகைப்பவர் எவருமில்லை; உங்களை அவன் (உதவிசெய்யாது) விட்டுவிட்டாலோ, அதற்குப் பின்னர், உங்களுக்கு உதவி செய்பவர் யார்? இன்னும் அல்லாஹ்வின் மீதே விசுவாசிகள் (தங்களின் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைக்கவும்.

161. மேலும்,(போரில் கிடைத்த பொருட்களில்) மோசம் செய்வது எந்த நபிக்கும் தகுமானதன்று; எவரேனும் மோசம் செய்தால் அவர், அந்த மோசம் செய்ததுடன் மறுமை நாளில் வருவார்; பின்னர் ஒவ்வோர் ஆத்மாவுக்கும், அது சம்பாதித்த வினைக்கு(ரிய பயனை)ப் பூரணமாக அளிக்கப்படும். (அவை செய்த நன்மையைக் குறைத்தோ, தீமையை அதிகரித்தோ எவ்வகையிலும்) அவர்கள் அநீதி செய்யப் படவுமாட்டார்கள்.

162. அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பின்பற்றியவர் அல்லாஹ்வின் கோபத்தைக்கொண்டு மீண்டவரைப் போன்றவரா? (அன்று! கோபத்தில் சிக்கிய) அவருடைய ஒதுங்குமிடமோ நரகமாகும்; மேலும், சேருமிடத்தில் (அது) மிகக்கெட்டது.

163. (அல்லாஹ்வின் பொருத்தைப் பின்பற்றிய) அவர்கள் அல்லாஹ்விடத்தில் பல படித்தரங்களில் உள்ளனர்; இன்னும் அல்லாஹ் அவர்கள் செய்பவற்றைப் பார்க்கிறவன்.

164. அல்லாஹ் விசுவாசிகள் மீது_ அவர்களில் ஒரு தூதரை, (அதுவும்) அவர்களிலிருந்தே அவன் அனுப்பிவைத்த சமயத்தில் திட்டமாக பேரருள் செய்து விட்டான். அவர், அவர்களுக்கு அவனுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களைப் (பாவத்திலிருந்து) பரிசுத்தமாக்கியும் வைக்கின்றார்; அவர்களுக்கு வேதத்தையும், (குர்ஆனையும்) ஞானத்தையும் (ஸுன்னத்தையும்)கற்றுக் கொடுக்கின்றார். நிச்சயமாக அவர்கள் இதற்குமுன் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்.

165. இன்னும் உங்களுக்கு (உஹுதுப் போரில்) ஒரு துன்பம் ஏற்பட்டபோது, நிச்சயமாக நீங்கள் (பத்ருப்போரில்) இதுபோன்று இருமடங்குத் துன்பத்தை ஏற்படுத்தி விட்டிருந்தீர்கள். (இவ்வாறு செய்துவிட்டு) "இது எவ்வாறு (யாரால்) ஏற்பட்டது? "என நீங்கள் கேட்கிறீர்களா ? "(நீங்கள் நம் தூதருக்கு மாறு செய்ததால்) உங்களிடமிருந்தேதான் இது ஏற்பட்டது" என்று (நபியே!) நீர் கூறுவீராக! நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

وَمَآ اَصَابَكُمْ يَوْمَ الْتَقَى الْجَمْعٰنِ فَبِاِذْنِ اللّٰهِ وَلِيَعْلَمَ
الْمُؤْمِنِيْنَ ﴿۱۶۶﴾ وَلِيَعْلَمَ الَّذِيْنَ نَافَقُوْا ۚۖ وَقِيْلَ لَهُمْ تَعَالَوْا قَاتِلُوْا
فِيْ سَبِيْلِ اللّٰهِ اَوِ ادْفَعُوْا ۭ قَالُوْا لَوْ نَعْلَمُ قِتَالًا لَّا اتَّبَعْنٰكُمْ ۭ
هُمْ لِلْكُفْرِ يَوْمَىِٕذٍ اَقْرَبُ مِنْهُمْ لِلْاِيْمَانِ ۚ يَقُوْلُوْنَ بِاَفْوَاهِهِمْ
مَّا لَيْسَ فِيْ قُلُوْبِهِمْ ۭ وَاللّٰهُ اَعْلَمُ بِمَا يَكْتُمُوْنَ ﴿۱۶۷﴾ اَلَّذِيْنَ قَالُوْا
لِاِخْوَانِهِمْ وَقَعَدُوْا لَوْ اَطَاعُوْنَا مَا قُتِلُوْا ۭ قُلْ فَادْرَءُوْا عَنْ
اَنْفُسِكُمُ الْمَوْتَ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۱۶۸﴾ وَلَا تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا
فِيْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتًا ۭ بَلْ اَحْيَاۗءٌ عِنْدَ رَبِّهِمْ يُرْزَقُوْنَ ﴿۱۶۹﴾ لا
فَرِحِيْنَ بِمَآ اٰتٰىھُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ ۙ وَيَسْتَبْشِرُوْنَ بِالَّذِيْنَ لَمْ
يَلْحَقُوْا بِهِمْ مِّنْ خَلْفِهِمْ ۙ اَلَّا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ﴿۱۷۰﴾ م
يَسْتَبْشِرُوْنَ بِنِعْمَةٍ مِّنَ اللّٰهِ وَفَضْلٍ ۙ وَّاَنَّ اللّٰهَ لَا يُضِيْعُ اَجْرَ
الْمُؤْمِنِيْنَ ﴿۱۷۱﴾ اَلَّذِيْنَ اسْتَجَابُوْا لِلّٰهِ وَالرَّسُوْلِ مِنْ بَعْدِ مَآ
اَصَابَهُمُ الْقَرْحُ ۛ لِلَّذِيْنَ اَحْسَنُوْا مِنْهُمْ وَاتَّقَوْا اَجْرٌ عَظِيْمٌ ﴿۱۷۲﴾ ج
اَلَّذِيْنَ قَالَ لَهُمُ النَّاسُ اِنَّ النَّاسَ قَدْ جَمَعُوْا لَكُمْ فَاخْشَوْهُمْ
فَزَادَهُمْ اِيْمَانًا ڰ وَّقَالُوْا حَسْبُنَا اللّٰهُ وَنِعْمَ الْوَكِيْلُ ﴿۱۷۳﴾

وقف لازم

مع ٢ ع ١٧
عند المتقدمين ١٢

166. இன்னும் இரு படைகளும் சந்தித்த நாளன்று, உங்களுக்கு ஏற்பட்டவை(களான துன்பங்)கள் அல்லாஹ்வின் கட்டளைப்படியேதான் (ஏற்பட்டது). இன்னும், உண்மை விசுவாசிகளை(ப் பிரித்து) அறி(வித்து விடு)வதற்காகவே (இவ்வாறு செய்)தான்.

167. இன்னும் முனாஃபிக்குகளாக (வேஷதாரிகளாக) ஆகி விட்டார்களே அவர்களையும் (பிரித்து) அறி(வித்துவிடு)வதற்காகத்தான்(இவ்வாறுசெய்தான். விசுவாசிகளே! அந்த முனாஃபிக்குகளிடம், "நம்முடன் சேர்ந்து) அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிய வாருங்கள் அல்லது (அந்த நிராகரிப்பவர்களை) நீங்கள் தடுத்துக்கொள்ளுங்கள்" என்று அவர்களிடம் கூறப்பட்டதற்கு, "யுத்தம் பற்றி(யதுதான் என்று இதனை) நாங்கள் அறிந்திருந்தால் உங்களைத் தொடர்ந்(தே வந்)திருப்போம்"என்று அவர்கள் கூறினார்கள். அன்றையத்தினம், அவர்கள், விசுவாசத்தைவிட நிராகரிப்புக்கே மிகவும் சமீபத்திலிருந்தார்கள்; தங்கள் இதயங்களில் இல்லாதவைகளையே அவர்கள் தங்கள் வாய்களால் கூறுகிறார்கள்; மேலும், அவர்கள் (தங்கள் இதயங்களில்) மறைத்துக்கொண்டிருப்பதை அல்லாஹ் மிக அறிபவன்.

168. அத்தகையோர், (யுத்தத்திற்குச் செல்லாமல் தங்கள் வீட்டில்) இருந்து கொண்டே (யுத்தத்தில் இறந்துபோன) தங்கள் சகோதரர்களைப் பற்றி " அவர்களும் எங்களுக்கு கீழ்ப்படிந்திருந்தால் (யுத்தத்திற்குச் சென்று இவ்வாறு) கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்" என்றும் கூறினார்கள். (ஆகவே) "நீங்கள் (உங்கள் கூற்றில்) உண்மையாளர்களாயிருந்தால், (அவர்களை என்ன!) நீங்கள் உங்களுக்கே மரணம் அணுகாதவாறு தடுத்துவிடுங்கள் (பார்ப்போம்)என்று (நபியே நீர்) கூறுவீராக!

169. (விசுவாசங்கொண்டோரே!) அல்லாஹ்வின் பாதையில் (யுத்தம் செய்து) கொல்லப்பட்டோரை இறந்துவிட்டவர்களென நீங்கள் நிச்சயமாக எண்ண வேண்டாம்; மாறாக அவர்கள் தங்களின் இரட்சகனிடத்தில் உயிருள்ளோராக இருக்கிறார்கள்; அவனால் அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள்.

170. அல்லாஹ் தன் பேரருளால் அவர்களுக்கு அளித்தவற்றைக் கொண்டு ஆனந்தமடைந்தவர்களாக இருக்கின்றார்கள். (மேலும், யுத்தத்தில் இறக்காது) தங்களுடன் சேராமல் தங்களுக்குப் பின் (இவ்வுலகில் உயிரோடு) இருப்பவர்களைப் பற்றி, "அவர்களுக்கு எவ்விதப் பயமும் இல்லை; அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள்" என்றும் மகிழ்ச்சியடைந்து கொண்டிருப்பார்கள்.

171. அல்லாஹ்விடமிருந்துள்ள அருட் கொடையைக் கொண்டும், பேரருளைக் கொண்டும்; நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகளின் (நற்) கூலியை (ஒரு சிறிதும்) வீணாக்கவுமாட்டான் என்பதைப் பற்றியும் மகிழ்ச்சியடைந்து கொண்டிருப்பார்கள்.

172. அவர்கள் எத்தகையோரென்றால், தங்களுக்குக் காயம் ஏற்பட்ட பின்னரும் அல்லாஹ்வுடைய மற்றும் தூதருடைய அழைப்பை ஏற்றனர்; (ஆகவே யுத்தத்திற்குச் சென்றனர்.) அவர்களில் யார் அழகானவற்றைச்செய்து (அல்லாஹ்வுக்குப்) பயந்து (பாவத்திலிருந்து தங்களைக் காத்துக்) கொண்டார்களோ அத்தகையவர்களுக்கு மகத்தான (நற்) கூலியுண்டு.

173. அவர்கள் எத்தகையோரென்றால்,(ஒருசில) மனிதர்கள் அவர்களிடம் (வந்து) உங்களுக்கு விரோதமாக (யுத்தம் புரிய) நிச்சயமாக மனிதர்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றனர்; ஆதலால், அவர்களுக்குப்பயந்து கொள்ளுங்கள்" என்று கூறினர். அப்போது இ(க்கூற்றான)து அவர்களுக்குப் பயம் ஏற்படுத்துவதற்குப் பதிலாக) விசுவாசத்தை (ஈமானை) அதிகப்படுத்தியது; மேலும் "அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன்; பாதுகாவலரில் அவன் மிக்க நல்லவன்" என்றும் அவர்கள் கூறினார்கள்.

فَانْقَلَبُوْا بِنِعْمَةٍ مِّنَ اللّٰهِ وَفَضْلٍ لَّمْ يَمْسَسْهُمْ سُوْٓءٌ ۙ وَّاتَّبَعُوْا
رِضْوَانَ اللّٰهِ ؕ وَاللّٰهُ ذُوْ فَضْلٍ عَظِيْمٍ ﴿۱۷۴﴾ اِنَّمَا ذٰلِكُمُ الشَّيْطٰنُ
يُخَوِّفُ اَوْلِيَآءَهٗ ۪ فَلَا تَخَافُوْهُمْ وَخَافُوْنِ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿۱۷۵﴾
وَلَا يَحْزُنْكَ الَّذِيْنَ يُسَارِعُوْنَ فِي الْكُفْرِ ۚ اِنَّهُمْ لَنْ يَّضُرُّوا اللّٰهَ شَيْـًٔا ؕ
يُرِيْدُ اللّٰهُ اَلَّا يَجْعَلَ لَهُمْ حَظًّا فِي الْاٰخِرَةِ ۚ وَلَهُمْ عَذَابٌ عَظِيْمٌ ﴿۱۷۶﴾
اِنَّ الَّذِيْنَ اشْتَرَوُا الْكُفْرَ بِالْاِيْمَانِ لَنْ يَّضُرُّوا اللّٰهَ شَيْـًٔا ۚ وَلَهُمْ
عَذَابٌ اَلِيْمٌ ﴿۱۷۷﴾ وَلَا يَحْسَبَنَّ الَّذِيْنَ كَفَرُوْٓا اَنَّمَا نُمْلِيْ لَهُمْ خَيْرٌ
لِّاَنْفُسِهِمْ ؕ اِنَّمَا نُمْلِيْ لَهُمْ لِيَزْدَادُوْٓا اِثْمًا ۚ وَلَهُمْ عَذَابٌ مُّهِيْنٌ ﴿۱۷۸﴾
مَا كَانَ اللّٰهُ لِيَذَرَ الْمُؤْمِنِيْنَ عَلٰى مَآ اَنْتُمْ عَلَيْهِ حَتّٰى يَمِيْزَ
الْخَبِيْثَ مِنَ الطَّيِّبِ ؕ وَمَا كَانَ اللّٰهُ لِيُطْلِعَكُمْ عَلَى الْغَيْبِ وَ
لٰكِنَّ اللّٰهَ يَجْتَبِيْ مِنْ رُّسُلِهٖ مَنْ يَّشَآءُ ۪ فَاٰمِنُوْا بِاللّٰهِ وَرُسُلِهٖ ۚ
وَاِنْ تُؤْمِنُوْا وَتَتَّقُوْا فَلَكُمْ اَجْرٌ عَظِيْمٌ ﴿۱۷۹﴾ وَلَا يَحْسَبَنَّ
الَّذِيْنَ يَبْخَلُوْنَ بِمَآ اٰتٰىهُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ هُوَ خَيْرًا
لَّهُمْ ؕ بَلْ هُوَ شَرٌّ لَّهُمْ ؕ سَيُطَوَّقُوْنَ مَا بَخِلُوْا بِهٖ يَوْمَ الْقِيٰمَةِ ؕ وَ
لِلّٰهِ مِيْرَاثُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ ﴿۱۸۰﴾ ع ۱۸ ۹

174. ஆகவே, அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடையையும் பேரருளையும் பெற்றுத்திரும்பினார்கள்; அவர்களை எத்தகைய தீங்கும் அணுகவில்லை; இன்னும் அவர்கள், அல்லாஹ்வின் பொருத்தத்தைப்பின்பற்றிச் சென்றார்கள். அல்லாஹ்வோ மகத்தான பேரருளுடையோன்.

175. இது, ஒரு ஷைத்தான்தான்; அவன் தன் நண்பர்களைப்பற்றி (அவர்கள் பலசாலிகள், கடுமையானவர்கள் என உங்களைப்) பயமுறுத்துகிறான்; ஆகவே, நீங்கள் (உண்மை) விசுவாசிகளாக இருந்தால், அவர்களுக்குப்பயப்பட வேண்டாம்; எனக்கே பயப்படுங்கள்.

176. இன்னும், (நபியே!) நிராகரிப்பில் விரைந்து செல்கிறார்களே அத்தகையோர் உம்மைக் கவலைக்குள்ளாக்க வேண்டாம். (ஏனென்றால், அதனால்) நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வுக்கு யாதொரு இடரும் செய்து விடவே முடியாது; மறுமையில், அவர்களுக்கு எத்தகைய பாக்கியத்தையும் ஆக்காதிருப்பதை அல்லாஹ் நாடுகின்றான்; அவர்களுக்கு மகத்தான வேதனையுமுண்டு.

177. (தங்கள்) விசுவாசத்திற்கு பதிலாக நிராகரிப்பை நிச்சயமாக விலைக்கு வாங்கிக்கொண்டார்களே அத்தகையோர் — அவர்கள் அல்லாஹ்வுக்கு ஓர் அணுவளவும் தீங்கிழைத்துவிடவேமுடியாது. அவர்களுக்கு (அதனால்) துன்புறுத்தும் வேதனையுமுண்டு.

178. இன்னும் நிராகரித்து விட்டார்களே அத்தகையோர் — அவர்களை தாமதப்படுத்துவதெல்லாம் தங்களுக்கு நல்லதென்று நிச்சயமாக அவர்கள் எண்ணிவிட வேண்டாம். நாம் அவர்களுக்கு வேதனையைத் தாமதப் படுத்துவதெல்லாம், பாவத்தை (பின்னும்,) அவர்கள் அதிகப்படுத்துவதற்காகவே தான். (முடிவில்) அவர்களுக்கு இழிவு தரும் வேதனையுமுண்டு.

179. (நயவஞ்சகர்களே!) நல்லோரிலிருந்து தீயோரை பிரித்தறிவிக்கும்வரை நீங்கள் எதன்மீதிருக்கிறீர்களோ அதன்மீது, விசுவாசிகளை அல்லாஹ் விட்டு வைப்பவனாக இல்லை; மறைவானவற்றை அல்லாஹ் உங்களுக்கு அறிவித்துக் கொடுப்பவனாகவுமில்லை; எனினும், தன் தூதர்களில் தான் நாடியவர்களை (இதனை அறிவிக்க) அல்லாஹ் தேர்ந்தெடுக்கிறான். ஆகவே, அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் விசுவாசியுங்கள். நீங்கள் (உண்மையாகவே) விசுவாசித்தும், (அவனுக்குப்) பயந்தும் (நடந்து) கொண்டால் உங்களுக்கு மகத்தான (நற்)கூலியுண்டு.

180. மேலும், அல்லாஹ் தன் பேரருளால் அவர்களுக்குக் கொடுத்தவைகளில் உலோபித்தனம் செய்கின்றார்களே அத்தகையவர்கள், அது தங்களுக்கு நல்லதென்று நிச்சயமாக எண்ணிவிட வேண்டாம்; மாறாக, அது அவர்களுக்குத் தீங்காகும்; எதை அவர்கள் உலோபித்தனம் செய்தார்களோ அதைக் கொண்டு மறுமை நாளில் அவர்கள் கழுத்தில் மாலையாக மாட்டப்படுவார்கள். இன்னும் வானங்கள், மற்றும் பூமியின் அனந்தர உரிமை அல்லாஹ்வுக்கே உரியது; மேலும், அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு உணர்கிறவன்.

لَقَدْ سَمِعَ اللّٰهُ قَوْلَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّ اللّٰهَ فَقِيْرٌ وَّنَحْنُ

اَغْنِيَآءُ ۘ سَنَكْتُبُ مَا قَالُوْا وَقَتْلَهُمُ الْاَنْۢبِيَآءَ بِغَيْرِ حَقٍّ ۙ

وقف لازم

وَّنَقُوْلُ ذُوْقُوْا عَذَابَ الْحَرِيْقِ ﴿۱۸۱﴾ ذٰلِكَ بِمَا قَدَّمَتْ

اَيْدِيْكُمْ وَاَنَّ اللّٰهَ لَيْسَ بِظَلَّامٍ لِّلْعَبِيْدِ ۚ ﴿۱۸۲﴾ اَلَّذِيْنَ قَالُوْٓا

اِنَّ اللّٰهَ عَهِدَ اِلَيْنَآ اَلَّا نُؤْمِنَ لِرَسُوْلٍ حَتّٰى يَاْتِيَنَا

بِقُرْبَانٍ تَاْكُلُهُ النَّارُ ؕ قُلْ قَدْ جَآءَكُمْ رُسُلٌ مِّنْ قَبْلِىْ بِالْبَيِّنٰتِ

وَبِالَّذِىْ قُلْتُمْ فَلِمَ قَتَلْتُمُوْهُمْ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۱۸۳﴾

فَاِنْ كَذَّبُوْكَ فَقَدْ كُذِّبَ رُسُلٌ مِّنْ قَبْلِكَ جَآءُوْ

بِالْبَيِّنٰتِ وَالزُّبُرِ وَالْكِتٰبِ الْمُنِيْرِ ﴿۱۸۴﴾ كُلُّ نَفْسٍ ذَآئِقَةُ

الْمَوْتِ ؕ وَاِنَّمَا تُوَفَّوْنَ اُجُوْرَكُمْ يَوْمَ الْقِيٰمَةِ ؕ فَمَنْ

زُحْزِحَ عَنِ النَّارِ وَاُدْخِلَ الْجَنَّةَ فَقَدْ فَازَ ؕ وَمَا

الْحَيٰوةُ الدُّنْيَآ اِلَّا مَتَاعُ الْغُرُوْرِ ﴿۱۸۵﴾ لَتُبْلَوُنَّ فِىْٓ

اَمْوَالِكُمْ وَاَنْفُسِكُمْ ۫ وَلَتَسْمَعُنَّ مِنَ الَّذِيْنَ اُوْتُوا

الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ وَمِنَ الَّذِيْنَ اَشْرَكُوْٓا اَذًى كَثِيْرًا ؕ

وَاِنْ تَصْبِرُوْا وَتَتَّقُوْا فَاِنَّ ذٰلِكَ مِنْ عَزْمِ الْاُمُوْرِ ﴿۱۸۶﴾

181. "நிச்சயமாக அல்லாஹ் ஏழை; நாங்கள்தான் சீமான்கள்" என்று கூறினார்களே அத்தகையவர்களுடைய சொல்லைத்திட்டமாக அல்லாஹ் செவியேற்றுவிட்டான்; (இவ்வாறு) அவர்கள் கூறியதையும், நியாயமின்றி நபிமார்களை அவர்கள் கொலை செய்ததையும் நாம் பதிவு செய்து கொண்டிருக்கின்றோம்; மேலும், (மறுமையில் அவர்களிடம்,) "எரிக்கும் வேதனையை நீங்கள் சுவைத்துப் பாருங்கள்" என நாம் கூறுவோம்.

182.அது" உங்கள் கைகள் முற்படுத்தி வைத்த (செய்கைகளின்) காரணத்தினாலாகும்; நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களுக்கு எவ்வித அநியாயமும் செய்பவனல்ல."

183. (யூதர்களாகிய) அத்தகையோர் " எத்தூதராயினும், நம்மிடம் அவர் ஒரு "குர்பானி"யைக் கொண்டுவந்து அதை நெருப்பு உண்ணும்வரை, நாங்கள் விசுவாசம் (ஈமான்) கொள்ளவேண்டாம் என, நிச்சயமாக அல்லாஹ் எங்களிடம் உறுதிமொழி எடுத்துள்ளான்" என்று அவர்கள் கூறுகிறார்கள். (நபியே!)நீர் "எனக்கு முன்னர் வந்த தூதர்கள், தெளிவான அத்தாட்சிகளையும், இன்னும் நீங்கள் கேட்டதையும் உங்களுக்குத் திட்டமாகக் கொண்டுவந்தார்கள்; நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், அவர்களை ஏன் கொலைசெய்தீர்கள்?" என்று கேட்பீராக.

184. (நபியே! இதற்குப்) பின்னரும், அவர்கள் உம்மைப் பொய்யாக்கினால் (அதற்காகக் கவலைப்பட வேண்டாம். ஏனென்றால்) உமக்கு முன்னர் தெளிவான அத்தாட்சிகளையும், ஆகமங்களையும், பிரகாசமான வேதத்தையும் கொண்டுவந்த தூதர்கள் பலரும் (அவர்கள் கூட்டத்தினரால் இவ்வாறே) பொய்ப்பிக்கப் பட்டிருக்கின்றனர்.

185. ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைக்கக் கூடியதாகும் . இன்னும், உங்கள் (செயல்களுக்குரிய) கூலிகளை நீங்கள் பூரணமாக்கப்படுவதெல்லாம் மறுமை நாளில்தான். ஆகவே, (அந்நாளில்) எவர் (நரக) நெருப்பை விட்டும் தூரமாக்கப் பட்டு, சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்யப்படுகிறாரோ அவர், திட்டமாக வெற்றியடைந்துவிட்டார். மேலும், இவ்வுலகவாழ்க்கை ஏமாற்றக் கூடிய (அற்ப) இன்பத்தைத் தவிர வேறில்லை.

186. (விசுவாசங்கொண்டோரே!) உங்கள் செல்வங்களிலும், உங்கள் ஆத்மாக்களிலும் நிச்சயமாக நீங்கள் சோதிக்கப்படுவீர்கள்; உங்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களாலும், இணைவைப்பவர்களாலும் (வசைமொழி, நிந்தனைகளான) அதிகமானநோவினையை நிச்சயமாக நீங்கள் செவியேற்பீர்கள்; மேலும், (இத்தகைய கஷ்டங்களில்) நீங்கள் பொறுமையை மேற்கொண்டு, பயபக்தியோடும் இருந்தீர்களானால், நிச்சயமாக அதுதான் அனைத்துக் காரியங்களிலும் ஆக்கமான செயலாகும்.

وَاِذْ اَخَذَ اللّٰهُ مِيْثَاقَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ لَتُبَيِّنُنَّهٗ
لِلنَّاسِ وَلَا تَكْتُمُوْنَهٗ ۫ فَنَبَذُوْهُ وَرَآءَ ظُهُوْرِهِمْ وَ
اشْتَرَوْا بِهٖ ثَمَنًا قَلِيْلًا ؕ فَبِئْسَ مَا يَشْتَرُوْنَ ﴿۱۸۷﴾ لَا تَحْسَبَنَّ
الَّذِيْنَ يَفْرَحُوْنَ بِمَاۤ اَتَوْا وَّ يُحِبُّوْنَ اَنْ يُّحْمَدُوْا بِمَا لَمْ
يَفْعَلُوْا فَلَا تَحْسَبَنَّهُمْ بِمَفَازَةٍ مِّنَ الْعَذَابِ ۚ وَلَهُمْ
عَذَابٌ اَلِيْمٌ ﴿۱۸۸﴾ وَلِلّٰهِ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَاللّٰهُ
عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿۱۸۹﴾ اِنَّ فِيْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۱۹ ع ۱۰
وَاخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ لَاٰيٰتٍ لِّاُولِي الْاَلْبَابِ ﴿۱۹۰﴾ ۚ ۙ
الَّذِيْنَ يَذْكُرُوْنَ اللّٰهَ قِيٰمًا وَّ قُعُوْدًا وَّعَلٰى جُنُوْبِهِمْ
وَيَتَفَكَّرُوْنَ فِيْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ رَبَّنَا مَا
خَلَقْتَ هٰذَا بَاطِلًا ۚ سُبْحٰنَكَ فَقِنَا عَذَابَ النَّارِ ﴿۱۹۱﴾
رَبَّنَاۤ اِنَّكَ مَنْ تُدْخِلِ النَّارَ فَقَدْ اَخْزَيْتَهٗ ؕ وَمَا لِلظّٰلِمِيْنَ
مِنْ اَنْصَارٍ ﴿۱۹۲﴾ رَبَّنَاۤ اِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُّنَادِيْ
لِلْاِيْمَانِ اَنْ اٰمِنُوْا بِرَبِّكُمْ فَاٰمَنَّا ۖ رَبَّنَا فَاغْفِرْ لَنَا
ذُنُوْبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّاٰتِنَا وَتَوَفَّنَا مَعَ الْاَبْرَارِ ﴿۱۹۳﴾ ۚ

187. வேதம் கொடுக்கப்பட்டவர்களிடம், "(உங்களுக்குக் கொடுக்கப் பட்ட) வேதத்தை மறைத்துவிடாது ஜனங்களுக்குத் தெளிவாக நீங்கள் எடுத்துரைக்க வேண்டும்" என்று, அல்லாஹ் உறுதிமொழி வாங்கியதை (நபியே! நீர் அவர்களுக்கு நினைவுபடுத்துவீராக!) பின்னர் அவர்கள், (தங்களின்) இவ்வுறுதிமொழியைத் தங்கள் முதுகுகளுக்கு அப்பால் எறிந்துவிட்டு இதற்குப் பிரதியாகச் சொற்பக் கிரயத்தை வாங்கிக் கொண்டார்கள். அவர்கள் இவ்வாறு வாங்கிக் கொண்டது மிகக் கெட்டதாகும்.

188. (நபியே!) தாங்கள் செய்த (அற்பக்) காரியத்தைப் பற்றி மகிழ்ச்சியடைகிறார்களே அவர்களையும், தாம் செய்யாத (நன்மையான) காரியங்களைப் பற்றி புகழப்படுவதை விரும்புகின்றவர்களையும் பற்றி நீர் நிச்சயமாக எண்ண வேண்டாம், _ (அல்லாஹ்வின்) தண்டனையை விட்டும் (தப்பித்து_) வெற்றியில் இருக்கிறார்கள் என்று அவர்களை நீர் திண்ணமாக எண்ண வேண்டாம். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுமுண்டு.

189. வானங்கள், மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது; இன்னும் அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

190. நிச்சயமாக, வானங்கள், மற்றும் பூமியைப் படைத்திருப்பதிலும், இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும், அறிவுடையோர்க்குப்பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

191. (அறிவுடைய) அத்தகையோர், நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும், தங்கள் விலாப் புறங்களின் மீது (சாய்ந்து)ம் அல்லாஹ்வையே நினைத்து, வானங்கள் மற்றும் பூமியின் படைப்பைப் பற்றியும் சிந்தித்து, "எங்கள் இரட்சகனே! நீ இவற்றை வீணுக்காகப் படைத்துவிடவில்லை; நீ மிகத் தூயவன்; (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களை நீ காத்தருள்வாயாக!" (என்றும்);

192. "எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ எவரை (நரக) நெருப்பில் புகுத்தினாயோ, அவரை நிச்சயமாக நீ இழிவு படுத்திவிட்டாய். இன்னும், அநியாயக்காரர்களுக்கு உதவி செய்வோர் (ஒருவரும்) இல்லை" (என்றும்);

193. "எங்கள் இரட்சகனே! 'உங்கள் இரட்சகனை விசுவாசியுங்கள்' என்று (எங்களை) விசுவாசத்தின் பால் அழைத்தோரின் அழைப்பை, நிச்சயமாக நாங்கள் செவியேற்று, நாங்களும் (அவ்வாறே) விசுவாசங் கொண்டோம். எங்கள் இரட்சகனே! ஆதலால், நீ எங்கள் குற்றங்களை மன்னிப்பாயாக! எங்களுடைய தீமைகளை எங்களை விட்டு நீக்கியும் விடுவாயாக! மேலும், (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கச் செய்வாயாக!" (என்றும்),

رَبَّنَا وَاٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰى رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيٰمَةِ ؕ
اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ ﴿۱۹۴﴾ فَاسْتَجَابَ لَهُمْ رَبُّهُمْ اَنِّیْ لَاۤ اُضِيْعُ
عَمَلَ عَامِلٍ مِّنْكُمْ مِّنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى ۚ بَعْضُكُمْ مِّنْۢ بَعْضٍ ۚ
فَالَّذِيْنَ هَاجَرُوْا وَاُخْرِجُوْا مِنْ دِيَارِهِمْ وَاُوْذُوْا فِیْ سَبِيْلِیْ
وَقٰتَلُوْا وَقُتِلُوْا لَاُكَفِّرَنَّ عَنْهُمْ سَيِّاٰتِهِمْ وَلَاُدْخِلَنَّهُمْ
جَنّٰتٍ تَجْرِیْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۚ ثَوَابًا مِّنْ عِنْدِ اللّٰهِ ؕ وَ
اللّٰهُ عِنْدَهٗ حُسْنُ الثَّوَابِ ﴿۱۹۵﴾ لَا يَغُرَّنَّكَ تَقَلُّبُ الَّذِيْنَ
كَفَرُوْا فِی الْبِلَادِ ﴿۱۹۶﴾ مَتَاعٌ قَلِيْلٌ ۫ ثُمَّ مَاْوٰىهُمْ جَهَنَّمُ ؕ وَ
بِئْسَ الْمِهَادُ ﴿۱۹۷﴾ لٰكِنِ الَّذِيْنَ اتَّقَوْا رَبَّهُمْ لَهُمْ جَنّٰتٌ تَجْرِیْ
مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا نُزُلًا مِّنْ عِنْدِ اللّٰهِ ؕ وَمَا
عِنْدَ اللّٰهِ خَيْرٌ لِّلْاَبْرَارِ ﴿۱۹۸﴾ وَاِنَّ مِنْ اَهْلِ الْكِتٰبِ لَمَنْ
يُّؤْمِنُ بِاللّٰهِ وَمَاۤ اُنْزِلَ اِلَيْكُمْ وَمَاۤ اُنْزِلَ اِلَيْهِمْ خٰشِعِيْنَ
لِلّٰهِ ۙ لَا يَشْتَرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ ثَمَنًا قَلِيْلًا ؕ اُولٰٓئِكَ لَهُمْ اَجْرُهُمْ
عِنْدَ رَبِّهِمْ ؕ اِنَّ اللّٰهَ سَرِيْعُ الْحِسَابِ ﴿۱۹۹﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا
اصْبِرُوْا وَصَابِرُوْا وَرَابِطُوْا ۫ وَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ﴿۲۰۰﴾ ع

الثلثة
ع ۲۰ ۱۱

194. "எங்கள் இரட்சகனே! இன்னும் உன் தூதர்கள் மூலம் எங்களுக்கு நீ வாக்களித்ததை எங்களுக்குத் தந்தருள் (புரி)வாயாக! மறுமை நாளில் நீ எங்களை இழிவுபடுத்தாதிருப்பாயாக! நிச்சயமாக நீ வாக்குறுதியில் மாறு செய்யமாட்டாய்" (என்றும் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பார்கள்).

195. ஆதலால், அவர்களுடைய இரட்சகன், அவர்களுடைய (இந்தப்) பிரார்த்தனையை அங்கீகரித்துக் கொண்டான்;(காரணம்)"உங்களில் ஆண் பெண் (இரு பாலரிலும்) எவர் நன்மை செய்தபோதிலும், நிச்சயமாக நான் அதை வீணாக்கி விட மாட்டேன்; (ஏனென்றால்) உங்களில் (ஆணாகவோ, பெண்ணாகவோ இருந்தபோதிலும்) சிலர் மற்ற சிலரில் உள்ளவர்தான். (ஆகவே, கூலி கொடுப்பதில் ஆண், பெண் என்ற பாகுபாடில்லை. உங்களில்) (ஹிஜ்ரத்துச் செய்து) தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறியும்,(பிறரால்) வெளியேற்றப்பட்டும், என்னுடைய பாதையில் துன்புறுத்தப்பட்டும், யுத்தம் செய்தும், (அதில்) கொல்லப்பட்டும் விட்டனரே அத்தகையோர்_ அவர்களுடைய (பாவங்களான) தீயவைகளை நிச்சயமாக நான் அவர்களை விட்டும் நீக்கிவிடுவேன்; நிச்சயமாக அவர்களை நான் சுவனபதிகளிலும் பிரவேசிக்கச் செய்வேன்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்" (என்று கூறுவான். இது) அல்லாஹ் விடமிருந்துள்ள நற்கூலியாக (அவர்களுக்குக் கிடைக்கும்). அல்லாஹ்விடத்தில் இன்னும் (இதனைவிட) மிக்க அழகான வெகுமதியும் இருக்கின்றது.

196. (நபியே!) நிராகரிப்போர், (பெரும் வர்த்தகர்களாகவும், தனவந்தர்களாகவும் ஆடம்பரமாக) நகரங்களில் திரிந்து கொண்டிருப்பது உம்மை ஏமாற்றி விட வேண்டாம்.

197. (இது) குறைந்த சுகமாகும்; பின்னர், அவர்கள் ஒதுங்குமிடம் நரகம்தான்; அது தங்குமிடத்தில் மிகக் கெட்டது.

198. ஆயினும், தங்கள் இரட்சகனுக்குப் பயந்து (ஒழுங்காக நடந்து) கொள்கின்றார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு சுவனபதிகளுண்டு; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்; அவற்றில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள். (இது) அல்லாஹ்விடமிருந்து (கிடைக்கும்) விருந்தாகும்; இன்னும் அல்லாஹ்விடம் இருப்பது நல்லோர்க்கு மிகச் சிறந்ததாகும்.

199. (விசுவாசங்கொண்டோரே!) நிச்சயமாக வேதத்தையுடையோரில் அல்லாஹ்வையும், உங்களுக்கு இறக்கிவைக்கப்பட்ட (இவ்வேதத்)தையும், அவர்களுக்கு இறக்கிவைக்கப்பட்ட (மற்ற)வைகளையும் அல்லாஹ்வுக்கு பயந்தவர்களாக விசுவாசம் கொள்கின்றவரும் இருக்கின்றனர்; அவர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களை சொற்பக் கிரயத்திற்கு விற்றுவிடமாட்டார்கள். இத்தகையோருக்கு அவர்களுடைய கூலி, அவர்கள் இரட்சகனிடத்தில் (மகத்தானதாக) இருக்கின்றது. நிச்சயமாக, அல்லாஹ் கணக்கெடுப்பதில் மிகத் தீவிரமானவன்.

200. விசுவாசங்கொண்டோரே ! நீங்கள் பொறுமையைக் கடைப் பிடியுங்கள்; மேலும், (எதிரியை சந்திக்கும்போது) ஒருவருக்கொருவர் உறுதியாக இருந்து கொள்ளுங்கள்; மேலும், (எதிரியை எதிர்க்க) எந்நேரமும் சித்தமாயிருங்கள்; அல்லாஹ்வுக்குப் பயந்து(நடந்து)ம் கொள்ளுங்கள்; நீங்கள் (இம்மையிலும், மறுமையிலும்) வெற்றியடைவீர்கள்.

سُوْرَةُ النِّسَآءِ مَدَنِيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّسِتٌّ وَّسَبْعُوْنَ اٰيَةً وَّاَرْبَعٌ وَّعِشْرُوْنَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يٰٓاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمُ الَّذِيْ خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ
وَّاحِدَةٍ وَّخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيْرًا
وَّنِسَآءً ۚ وَاتَّقُوا اللّٰهَ الَّذِيْ تَسَآءَلُوْنَ بِهٖ وَالْاَرْحَامَ ؕ
اِنَّ اللّٰهَ كَانَ عَلَيْكُمْ رَقِيْبًا ﴿۱﴾ وَاٰتُوا الْيَتٰمٰٓى اَمْوَالَهُمْ
وَلَا تَتَبَدَّلُوا الْخَبِيْثَ بِالطَّيِّبِ ۪ وَلَا تَاْكُلُوْٓا اَمْوَالَهُمْ
اِلٰٓى اَمْوَالِكُمْ ؕ اِنَّهٗ كَانَ حُوْبًا كَبِيْرًا ﴿۲﴾ وَاِنْ خِفْتُمْ اَلَّا
تُقْسِطُوْا فِي الْيَتٰمٰى فَانْكِحُوْا مَا طَابَ لَكُمْ مِّنَ
النِّسَآءِ مَثْنٰى وَثُلٰثَ وَرُبٰعَ ۚ فَاِنْ خِفْتُمْ اَلَّا تَعْدِلُوْا
فَوَاحِدَةً اَوْ مَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ؕ ذٰلِكَ اَدْنٰٓى اَلَّا تَعُوْلُوْا ﴿۳﴾
وَاٰتُوا النِّسَآءَ صَدُقٰتِهِنَّ نِحْلَةً ؕ فَاِنْ طِبْنَ لَكُمْ
عَنْ شَيْءٍ مِّنْهُ نَفْسًا فَكُلُوْهُ هَنِيْٓئًا مَّرِيْٓئًا ﴿۴﴾ وَلَا تُؤْتُوا
السُّفَهَآءَ اَمْوَالَكُمُ الَّتِيْ جَعَلَ اللّٰهُ لَكُمْ قِيٰمًا وَّارْزُقُوْهُمْ
فِيْهَا وَاكْسُوْهُمْ وَقُوْلُوْا لَهُمْ قَوْلًا مَّعْرُوْفًا ﴿۵﴾

அத்தியாயம் : 4

## அன்னிஸா _ பெண்கள்

வசனங்கள் : 176 மதனீ ருகூஃகள் : 24

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. மனிதர்களே! நீங்கள் உங்கள் இரட்சகனுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவன்எத்தகையவனென்றால், உங்களை (யாவரையும்) ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான்; அதிலிருந்து அதற்குரிய ஜோடியையும் படைத்தான்; இன்னும் அவ்விருவரிலிருந்து அனேக ஆண்களையும், பெண்களையும் பரவச்செய்தான்; இன்னும், அல்லாஹ்வை_அவனை_க் கொண்டு (தமக்குரிய உரிமைகளை) நீங்கள் (ஒருவருக் கொருவர்) கேட்டுக்கொள்கிறீர்களே அத்தகையவனையும், மேலும் இரத்தக் கலப்பு சொந்தங்களை (த்துண்டித்து விடுவதை)யும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்.

2. மேலும், நீங்கள் அநாதைகளுக்கு அவர்களுடைய பொருட்களை (அவர்கள் பிராயமடைந்த பின், குறைவின்றி அவர்களுக்கு)க் கொடுத்து விடுங்கள்; (அதிலுள்ள) நல்லதுக்குப் பதிலாக கெட்டதை மாற்றியும் விடாதீர்கள்; அவர்களுடைய பொருட்களையும் உங்களுடைய பொருட்களுடன் சேர்த்து சாப்பிட்டும் விடாதீர்கள்; நிச்சயமாக அது பெரும் பாவமாக இருக்கிறது.

3. அநாதை(ப் பெண்களைத் திருமணம் செய்துகொண்டு, அவர்)கள் விஷயத்தில் நீதம் செய்யமுடியாது என நீங்கள் அஞ்சினால் (மற்றப்) பெண்களில் உங்களுக்கு விருப்ப மானவர்களை இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நன்னான் காகவோ நீங்கள் திருமணம் புரிந்து கொள்ளுங்கள்; அவர்களுக்கிடையில், நீங்கள் நீதமாக நடக்க முடியாதெனப் பயந்தால், ஒரு பெண்ணை (திருமணம் செய்து கொள்ளுங்கள்) அல்லது உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக்கொண்ட (அடிமைப் பெண்ணில் உள்ள) தை(க் கொண்டு போதுமாக்கிக்கொள்ளுங்கள்). நீங்கள் அநீதி செய்யாமலிருப்பதற்கு இதுவே சுலபமா(ன வழியா)கும்.

4. நீங்கள் (திருமணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய மஹர்களை (திருமணக் கொடைகளை) மகிழ்வோடு கொடுத்து விடுங்கள். அதிலிருந்து ஒரு சிறிதை, அவர்கள், (தங்கள்) மனமார உங்களுக்கு விட்டுக்கொடுத்தால் அதனை நீங்கள் தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள்.

5. (அநாதைகளின் பொருளுக்குக் காரியஸ்தராக ஏற்பட்ட நீங்கள், அவர்களின்) வாழ்க்கைக்கே ஆதாரமாக அல்லாஹ் அமைத்திருக்கும் உங்களிடமிருக்கும் (அவர்களுடைய) பொருட்களை, புத்திக் குறைவானவர்க(ளாக அவர்கள் இருந்தால் அவர்க)ளிடம் கொடுத்துவிட வேண்டாம்; இன்னும் அவர்களுக்கு அதிலிருந்து உணவளியுங்கள், அவர்களுக்கு ஆடை(களை)யும் அணிவியுங்கள்; அவர்களுக்கு நல்ல வார்த்தைகளையே கூறுங்கள்.

وَابۡتَلُوا الۡيَتٰمٰى حَتّٰۤى اِذَا بَلَغُوا النِّكَاحَ ۚ فَاِنۡ اٰنَسۡتُمۡ
مِّنۡهُمۡ رُشۡدًا فَادۡفَعُوۡۤا اِلَيۡهِمۡ اَمۡوَالَهُمۡ ۚ وَلَا تَاۡكُلُوۡهَاۤ
اِسۡرَافًا وَّبِدَارًا اَنۡ يَّكۡبَرُوۡا ؕ وَمَنۡ كَانَ غَنِيًّا
فَلۡيَسۡتَعۡفِفۡ ۚ وَمَنۡ كَانَ فَقِيۡرًا فَلۡيَاۡكُلۡ بِالۡمَعۡرُوۡفِ ؕ
فَاِذَا دَفَعۡتُمۡ اِلَيۡهِمۡ اَمۡوَالَهُمۡ فَاَشۡهِدُوۡا عَلَيۡهِمۡ ؕ
وَكَفٰى بِاللّٰهِ حَسِيۡبًا ﴿۶﴾ لِلرِّجَالِ نَصِيۡبٌ مِّمَّا تَرَكَ
الۡوَالِدٰنِ وَالۡاَقۡرَبُوۡنَ ۖ وَلِلنِّسَآءِ نَصِيۡبٌ مِّمَّا
تَرَكَ الۡوَالِدٰنِ وَالۡاَقۡرَبُوۡنَ مِمَّا قَلَّ مِنۡهُ اَوۡ كَثُرَ ؕ
نَصِيۡبًا مَّفۡرُوۡضًا ﴿۷﴾ وَاِذَا حَضَرَ الۡقِسۡمَةَ اُولُوا
الۡقُرۡبٰى وَالۡيَتٰمٰى وَالۡمَسٰكِيۡنُ فَارۡزُقُوۡهُمۡ مِّنۡهُ
وَقُوۡلُوۡا لَهُمۡ قَوۡلًا مَّعۡرُوۡفًا ﴿۸﴾ وَلۡيَخۡشَ الَّذِيۡنَ
لَوۡ تَرَكُوۡا مِنۡ خَلۡفِهِمۡ ذُرِّيَّةً ضِعٰفًا خَافُوۡا
عَلَيۡهِمۡ ۖ فَلۡيَتَّقُوا اللّٰهَ وَلۡيَقُوۡلُوۡا قَوۡلًا سَدِيۡدًا ﴿۹﴾
اِنَّ الَّذِيۡنَ يَاۡكُلُوۡنَ اَمۡوَالَ الۡيَتٰمٰى ظُلۡمًا اِنَّمَا
يَاۡكُلُوۡنَ فِىۡ بُطُوۡنِهِمۡ نَارًا ؕ وَسَيَصۡلَوۡنَ سَعِيۡرًا ﴿۱۰﴾ ع ۱۲

6. இன்னும், அநாதை(ச் சிறுவர்)களை அவர்கள் திருமண வயதையடையும் வரை (தொழில் முதலியவற்றில் ஈடுபடுத்தி, பழக்கி, கல்வியும் கற்பித்துச்) சோதித்து வாருங்கள். (தங்கள் சொத்தை நிர்வகிக்கக் கூடிய) பகுத்தறிவை அவர்களிடம் நீங்கள் கண்டால், அவர்களுடைய பொருட்களை அவர்களிடம் ஒப்படைத்துவிடுங்கள்; அவர்கள் பெரியவர்களாகி(த் தங்கள் பொருட்களைப் பெற்றுக் கொண்டு) விடுவார்கள் என்று (எண்ணி), அவர்களுடைய பொருட்களை அவசர அவசரமாகவும், அளவு கடந்தும் நீங்கள் தின்றுவிடாதீர்கள். இன்னும் (அநாதையின் பொருட்களையுடைய காரியஸ்தனாகிய) அவர் செல்வந்தனாக இருந்தால் (அதை நிர்வகிப்பதற்காக எதையும் தனக்காக எடுத்துக் கொள்ளாது) தவிர்த்துக் கொள்ளவும்; அவர் ஏழையாக இருந்தாலோ நியாயமான அளவு (அதிலிருந்து) அவரும் புசிக்கவும். மேலும், அவர்களுடைய பொருட்களை, நீங்கள் அவர்களிடம் ஒப்படைக்கும்போது, அவர்களுக்காகச் சாட்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கணக்கெடுப்பதில் அல்லாஹ் போதுமானவன். (ஆகவே, அவர்களுடைய கணக்கில் ஏதும் மோசம் செய்யாதீர்கள்).

7. (இறந்துபோன) பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்றவை(களான பொருட்)களிலிருந்து ஆண்களுக்குப் பாகமுண்டு. (அவ்வாறே) பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்றவை(களான பொருட்)களிலிருந்து பெண்களுக்கும் பாகமுண்டு; (அவர்கள் விட்டுச் சென்ற சொத்து) குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ இருப்பினும் சரியே; (இது அல்லாஹ்வால்) விதிக்கப் பட்ட பாகமாகும்.

8. மேலும், (பாகப்) பிரிவினை செய்துகொள்ளும் இடத்திற்கு( சொத்துக்கு உரிமையற்ற) உறவினரோ, அநாதைகளோ, ஏழைகளோ வந்துவிட்டால் அவர்களுக்கும் அதிலிருந்து (ஏதும்) கொடுத்து, அவர்களுக்கு அன்பான வார்த்தைகளையும் (கொண்டு ஆறுதல்) கூறுங்கள்.

9. தங்களுக்குப் பின், (தங்கள் காரியத்தை நிர்வகிக்கச் )சக்தியற்ற சந்ததிகளைவிட்டுச்சென்றால் அவர்களை(க் குறித்து) பயப்படுகிறார்களே அத்தகையோர்_( அனாதைகள், சிறுவர்கள் சொத்துப் பங்கீடு விஷயத்தில், ) பயந்து கொள்ளவும்; ஆகவே அவர்கள் அல்லாஹ்வை அஞ்சி (அவர்களுக்கு) நேர்மையான வார்த்தையே கூறவும்.

10. நிச்சயமாக, அநாதைகளின் பொருட்களை அநியாயமாக தின்கின்றார்களே அத்தகையோர்_அவர்கள் தங்கள் வயிறுகளில் (நிரப்பித்) தின்னுவதெல்லாம் நெருப்பையேதான். இன்னும், அவர்கள் (மறுமையில்) கொழுந்துவிட்டெரியும் நெருப்பினுள் நுழைவார்கள்.

يُوْصِيْكُمُ اللّٰهُ فِيْٓ اَوْلَادِكُمْ لِلذَّكَرِ مِثْلُ حَظِّ الْاُنْثَيَيْنِ فَاِنْ كُنَّ
نِسَآءً فَوْقَ اثْنَتَيْنِ فَلَهُنَّ ثُلُثَا مَا تَرَكَ وَاِنْ كَانَتْ وَاحِدَةً فَلَهَا
النِّصْفُ وَلِاَبَوَيْهِ لِكُلِّ وَاحِدٍ مِّنْهُمَا السُّدُسُ مِمَّا تَرَكَ اِنْ
كَانَ لَهٗ وَلَدٌ فَاِنْ لَّمْ يَكُنْ لَّهٗ وَلَدٌ وَّوَرِثَهٗٓ اَبَوٰهُ فَلِاُمِّهِ الثُّلُثُ
فَاِنْ كَانَ لَهٗٓ اِخْوَةٌ فَلِاُمِّهِ السُّدُسُ مِنْ بَعْدِ وَصِيَّةٍ يُّوْصِيْ
بِهَآ اَوْ دَيْنٍ اٰبَآؤُكُمْ وَاَبْنَآؤُكُمْ لَا تَدْرُوْنَ اَيُّهُمْ اَقْرَبُ لَكُمْ
نَفْعًا فَرِيْضَةً مِّنَ اللّٰهِ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا حَكِيْمًا ﴿١١﴾ وَلَكُمْ
نِصْفُ مَا تَرَكَ اَزْوَاجُكُمْ اِنْ لَّمْ يَكُنْ لَّهُنَّ وَلَدٌ فَاِنْ كَانَ
لَهُنَّ وَلَدٌ فَلَكُمُ الرُّبُعُ مِمَّا تَرَكْنَ مِنْ بَعْدِ وَصِيَّةٍ يُّوْصِيْنَ بِهَآ
اَوْ دَيْنٍ وَلَهُنَّ الرُّبُعُ مِمَّا تَرَكْتُمْ اِنْ لَّمْ يَكُنْ لَّكُمْ وَلَدٌ فَاِنْ
كَانَ لَكُمْ وَلَدٌ فَلَهُنَّ الثُّمُنُ مِمَّا تَرَكْتُمْ مِّنْ بَعْدِ وَصِيَّةٍ
تُوْصُوْنَ بِهَآ اَوْ دَيْنٍ وَاِنْ كَانَ رَجُلٌ يُّوْرَثُ كَلٰلَةً اَوِ امْرَاَةٌ
وَّلَهٗٓ اَخٌ اَوْ اُخْتٌ فَلِكُلِّ وَاحِدٍ مِّنْهُمَا السُّدُسُ فَاِنْ كَانُوْٓا اَكْثَرَ
مِنْ ذٰلِكَ فَهُمْ شُرَكَآءُ فِي الثُّلُثِ مِنْ بَعْدِ وَصِيَّةٍ يُّوْصٰى بِهَآ
اَوْ دَيْنٍ غَيْرَ مُضَآرٍّ وَصِيَّةً مِّنَ اللّٰهِ وَاللّٰهُ عَلِيْمٌ حَلِيْمٌ ﴿١٢﴾

11. உங்கள் மக்கள் விஷயத்தில், ( சொத்துப்பங்கீட்டில் , ஓர்) ஆணுக்கு, இரு பெண்களுக்குரியது போன்ற பாகம் உண்டென்று அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகிறான் ; ஆகவே, அவர்கள், (ஆணின்றி) இருவருக்கும் அதிகமாக பெண்களாக இருந்தால், அவர் (இறந்தவர்) விட்டுச் சென்ற(சொத்)தில் மூன்றில் இரண்டு பாகம் (அப்பெண்களாகிய) அவர்களுக்குண்டு. மேலும், ஒருத்தியாக அவள் இருந்தால், அவளுக்கு பாதி உண்டு. இன்னும், (உங்களில் இறந்த) அவருக்குப்பிள்ளை இருந்தால், அவருடைய தாய், தந்தை ஒவ்வொருவருக்கும் (இறந்தவர்) விட்டுச் சென்ற(சொத்)தில் ஆறிலொன்று உண்டு. (இறந்த) அவருக்குப்பிள்ளை இல்லாமலிருந்தால், பெற்றோர் (மட்டும்) அவருக்கு அனந்தரக் காரர்களானால், அப்பொழுது அவருடைய தாய்க்கு மூன்றிலொன்று உண்டு. (மற்ற இரு பாகமும் தகப்பனுக்குரியதாகும்; இறந்த) அவருக்கு(ப் பல) சகோதரர்கள் இருந்தால், அப்பொழுது எதனை அவர் (மரண) சாசனம் செய்தாரோ அ(தை நிறைவேற்றப்பட்ட) தற்கு அல்லது கடனுக்கு (அதை கொடுக்கப்பட்டதற்கு)ப் பின்னர் அவரின் தாய்க்கு ஆறில் ஒன்று உண்டு; உங்கள் தந்தைகளோ இன்னும் உங்கள் ஆண் மக்களோ இவர்களில் உங்களுக்குப் பயனளிப்பதில் மிக நெருங்கியவர்கள் யாரென்பதை நீங்கள் அறியமாட்டீர்கள்; (ஆகவே, இவை) அல்லாஹ்வினால் (உங்கள் மீது) விதிக்கப் பட்டுள்ள கட்டளையாகும்; நிச்சயமாக அல்லாஹ் மிக்க அறிந்தவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான்.

12. இன்னும், உங்கள் மனைவிகள் விட்டுச் சென்ற (சொத்)தில் அவர்களுக்குப் பிள்ளை இல்லாவிட்டால், உங்களுக்குப் பாதி(பாகம்) உண்டு. ஆனால் அவர்களுக்குப் பிள்ளை இருந்தாலோ, எதனை அவர்கள் (மரண) சாசனம் செய்தார்களோ அ(தை நிறைவேற்றப்பட்ட)தற்கு , அல்லது கடனுக்கு (அதை கொடுக்கப்பட்டதற்கு)ம் பின்னர், அவர்கள் விட்டுச் சென்ற( சொத்)தில் உங்களுக்குக் நான்கில் ஒன்று உண்டு. ; மேலும் உங்களுக்குப் பிள்ளை இல்லாவிட்டால், (உங்கள் மனைவிகளாகிய) அவர்களுக்கு நீங்கள் விட்டுச்சென்ற (சொத்)தில் நான்கில் ஒன்று உண்டு; உங்களுக்குப் பிள்ளை இருந்தாலோ எதனை நீங்கள் (மரண) சாசனம் செய்தீர்களோ அ(தை நிறைவேற்றப்பட்ட)தற்கு, அல்லது கடனுக்கு (அதைக் கொடுக்கப்பட்டதற்கு)ம் பின்னர் , நீங்கள் விட்டுச் சென்றதில் எட்டில் ஒன்று அவர்களுக்குண்டு; அனந்தரங்கொள்ளப்படுகின்ற வாரிசுகள் இல்லாத ஓர் ஆணோ அல்லது ஒரு பெண்ணோ இறந்து, அவருக்கு ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி இருந்தால், அவ்விருவரில் ஒவ்வொருவருக்கும், (இறந்தவர் விட்டுச் சென்றதில்) ஆறில் ஒன்றுஉண்டு. பின்னர், அவர்கள் அதைவிட அதிகமாக இருந்தால், (சொத்தில்) எதனைக்கொண்டு மரணசாசனம் செய்யப்பட்டதோ அ(தை நிறைவேற்றப்பட்ட)தற்கு , அல்லது கடனுக்கு (அதை கொடுக்கப்பட்டதற்கு) ம் பின்னர், மூன்றிலொன்றில் அவர்கள் (யாவரும்) கூட்டானவர்களாவார்கள். எனினும், (மரண சாசனத்தைக் கொண்டு, வாரிசுகளில் எவருக்கும்) கஷ்டத்தை உண்டு பண்ணாதவராக இருக்க வேண்டும். (இது) அல்லாஹ்வுடைய கட்டளையாகும்; இன்னும், அல்லாஹ் நன்கறிகிறவன், சகிப்புத் தன்மையுடையவன்.

تِلْكَ حُدُوْدُ اللّٰهِ ؕ وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَرَسُوْلَهٗ يُدْخِلْهُ جَنّٰتٍ
تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا ؕ وَذٰلِكَ الْفَوْزُ
الْعَظِيْمُ ﴿۱۳﴾ وَمَنْ يَّعْصِ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَيَتَعَدَّ حُدُوْدَهٗ
يُدْخِلْهُ نَارًا خَالِدًا فِيْهَا ۪ وَلَهٗ عَذَابٌ مُّهِيْنٌ ﴿۱۴﴾ وَالّٰتِيْ ع ۲ ۱۳
يَاْتِيْنَ الْفَاحِشَةَ مِنْ نِّسَآئِكُمْ فَاسْتَشْهِدُوْا
عَلَيْهِنَّ اَرْبَعَةً مِّنْكُمْ ۚ فَاِنْ شَهِدُوْا فَاَمْسِكُوْهُنَّ فِي
الْبُيُوْتِ حَتّٰى يَتَوَفّٰىهُنَّ الْمَوْتُ اَوْ يَجْعَلَ اللّٰهُ لَهُنَّ
سَبِيْلًا ﴿۱۵﴾ وَالَّذٰنِ يَاْتِيٰنِهَا مِنْكُمْ فَاٰذُوْهُمَا ۚ فَاِنْ تَابَا
وَاَصْلَحَا فَاَعْرِضُوْا عَنْهُمَا ؕ اِنَّ اللّٰهَ كَانَ تَوَّابًا رَّحِيْمًا ﴿۱۶﴾
اِنَّمَا التَّوْبَةُ عَلَى اللّٰهِ لِلَّذِيْنَ يَعْمَلُوْنَ السُّوْٓءَ بِجَهَالَةٍ
ثُمَّ يَتُوْبُوْنَ مِنْ قَرِيْبٍ فَاُولٰٓئِكَ يَتُوْبُ اللّٰهُ
عَلَيْهِمْ ؕ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا ﴿۱۷﴾ وَلَيْسَتِ التَّوْبَةُ
لِلَّذِيْنَ يَعْمَلُوْنَ السَّيِّاٰتِ ۚ حَتّٰٓى اِذَا حَضَرَ اَحَدَهُمُ
الْمَوْتُ قَالَ اِنِّيْ تُبْتُ الْـٰٔنَ وَلَا الَّذِيْنَ يَمُوْتُوْنَ
وَهُمْ كُفَّارٌ ؕ اُولٰٓئِكَ اَعْتَدْنَا لَهُمْ عَذَابًا اَلِيْمًا ﴿۱۸﴾

13. இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும்; எவர் (இவ் விஷயங்களில்) அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்கின்றாரோ அவரை சுவனபதிகளில் அவன் பிரவேசிக்கச் செய்வான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அவற்றிலேயே அவர்கள் நிரந்தரமாக(த் தங்கி) இருப்பவர்கள். மேலும், இது மகத்தான வெற்றியாகும்.

14. இன்னும் எவர், (இவ்விஷயங்களில்) அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் மாறு செய்து, (அல்லாஹ்வாகிய) அவன் (ஏற்படுத்திய) வரம்புகளை மீறி விடுகின்றாரோ அவரை (அல்லாஹ்வாகிய) அவன் நரகத்தில் புகுத்தி விடுவான். அதில் அவர் நிரந்தரமாக (த்தங்கி)இருப்பவர். இன்னும் அவருக்கு இழிவுபடுத்தும் வேதனையும் (அதில்) உண்டு.

15. மேலும் உங்கள் பெண்களில் மானக்கேடான செயலைச் செய்தோர் _ அவர்கள்மீது (அதை நிரூபிக்க) உங்களிலிருந்து நான்குநபரை சாட்சிகளாகக் கொண்டுவாருங்கள்; அவர்கள் (அதற்கு) சாட்சியம் கூறினால் அப்பொழுது அவர்களை மரணம் கைப்பற்றிவிடும் வரையில் அல்லது அல்லாஹ் அவர்களுக்கு ஒரு வழியை ஏற்படுத்தும் வரையில் அவர்களை வீடுகளில் தடுத்து வையுங்கள்.

16. உங்களில் இருவர், அ(ம்மானக்கேடான)தைச் செய்துவிட்டால், அவ்விருவரையும் துன்புறுத்துங்கள்; அவ்விருவரும் பச்சாதாபப்பட்டு, (அதிலிருந்து விலகி) இருவரும் ஒழுங்காக நடந்து கொண்டால் அவர்களை விட்டுவிடுங்கள். நிச்சயமாக அல்லாஹ், மிக்க மன்னிக்கிறவனாக, மிகக் கிருபையுடையவனாக இருக்கின்றான்.

17. அல்லாஹ்விடம் தவ்பா அங்கீகாரமாவதெல்லாம், அறியாமையினால் தீமை செய்துவிட்டுப் பின்னர், (அதிலிருந்து) சமீபத்தில் (பாவமன்னிப்புத் தேடி)தவ்பாச் செய்கிறார்களே அத்தகையவர்களுக்குத்தான்; ஆகவே, அத்தகையோர் _ அவர்களின் தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான்; மேலும் அல்லாஹ் அறிந்தவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கிறான்.

18. மேலும், தீயவற்றைச் செய்து கொண்டேயிருப்போருக்கு, _ முடிவில் அவர்களில் ஒருவருக்கு மரணம் (சம்பவிக்க) ஆஜரானபோது, "இப்போது நான் (என் பாவங்களுக்குப்) பச்சாதாபப் படுகிறேன்" என்று கூறுகின்ற(ாரே) அவருக்கு_ மற்றும் (விசுவாசம் கொள்ளாது நிராகரித்து விட்டு) நிராகரித்த வண்ணமே இறந்தும் விடுகிறார்களே, அவர்களுக்கும் தவ்பா (பாவமன்னிப்பு) அங்கீகாரமில்லை. அத்தகையோர் _ (மன்னிக்கப்படுவதில்லை) அவர்களுக்காகத் துன்புறுத்தும் வேதனையை நாம் தயார் செய்து வைத்திருக்கின்றோம்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا يَحِلُّ لَكُمْ اَنْ تَرِثُوا النِّسَآءَ كَرْهًا ؕ وَلَا
تَعْضُلُوْهُنَّ لِتَذْهَبُوْا بِبَعْضِ مَآ اٰتَيْتُمُوْهُنَّ اِلَّآ اَنْ يَّاْتِيْنَ
بِفَاحِشَةٍ مُّبَيِّنَةٍ ۚ وَعَاشِرُوْهُنَّ بِالْمَعْرُوْفِ ۚ فَاِنْ كَرِهْتُمُوْهُنَّ
فَعَسٰۤى اَنْ تَكْرَهُوْا شَيْــًٔا وَّيَجْعَلَ اللّٰهُ فِيْهِ خَيْرًا كَثِيْرًا ﴿۱۹﴾ وَاِنْ
اَرَدْتُّمُ اسْتِبْدَالَ زَوْجٍ مَّكَانَ زَوْجٍ ۙ وَّاٰتَيْتُمْ اِحْدٰىهُنَّ قِنْطَارًا
فَلَا تَاْخُذُوْا مِنْهُ شَيْــًٔا ؕ اَتَاْخُذُوْنَهٗ بُهْتَانًا وَّاِثْمًا مُّبِيْنًا ﴿۲۰﴾ وَ
كَيْفَ تَاْخُذُوْنَهٗ وَقَدْ اَفْضٰى بَعْضُكُمْ اِلٰى بَعْضٍ وَّاَخَذْنَ مِنْكُمْ
مِّيْثَاقًا غَلِيْظًا ﴿۲۱﴾ وَلَا تَنْكِحُوْا مَا نَكَحَ اٰبَآؤُكُمْ مِّنَ النِّسَآءِ اِلَّا مَا قَدْ
سَلَفَ ؕ اِنَّهٗ كَانَ فَاحِشَةً وَّمَقْتًا ؕ وَسَآءَ سَبِيْلًا ﴿۲۲﴾ ع حُرِّمَتْ عَلَيْكُمْ ع ۳ ۸ ۱۴
اُمَّهٰتُكُمْ وَبَنٰتُكُمْ وَاَخَوٰتُكُمْ وَعَمّٰتُكُمْ وَخٰلٰتُكُمْ وَبَنٰتُ الْاَخِ وَبَنٰتُ
الْاُخْتِ وَاُمَّهٰتُكُمُ الّٰتِىْۤ اَرْضَعْنَكُمْ وَاَخَوٰتُكُمْ مِّنَ الرَّضَاعَةِ وَ
اُمَّهٰتُ نِسَآئِكُمْ وَرَبَآئِبُكُمُ الّٰتِىْ فِىْ حُجُوْرِكُمْ مِّنْ نِّسَآئِكُمُ الّٰتِىْ
دَخَلْتُمْ بِهِنَّ ۫ فَاِنْ لَّمْ تَكُوْنُوْا دَخَلْتُمْ بِهِنَّ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ ۫
وَحَلَآئِلُ اَبْنَآئِكُمُ الَّذِيْنَ مِنْ اَصْلَابِكُمْ ۙ وَاَنْ تَجْمَعُوْا بَيْنَ
الْاُخْتَيْنِ اِلَّا مَا قَدْ سَلَفَ ؕ اِنَّ اللّٰهَ كَانَ غَفُوْرًا رَّحِيْمًا ﴿۲۳﴾ ۙ

19. விசுவாசங்கொண்டோரே! பெண்களை (இறந்தவருடைய சொத்தாக மதித்து அவர்களை)ப் பலவந்தமாக நீங்கள் அனந்தரம் கொள்வது உங்களுக்கு ஆகுமானதல்ல; இன்னும், பகிரங்கமாக யாதொரு மானக்கேடான காரியத்தை அவர்கள் செய்தாலன்றி, (உங்கள்) பெண்களுக்கு நீங்கள் கொடுத்ததில் சிலவற்றை (எடுத்துக்) கொண்டுபோவதற்காக அவர்களை நீங்கள் தடுத்தும் வைக்காதீர்கள். மேலும், அவர்களுடன் அழகான முறையிலும் நடந்து கொள்ளுங்கள்; அவர்களை நீங்கள் வெறுத்துவிடுவீர்களானால், நீங்கள் ஒன்றை வெறுக்கக் கூடும்; (அவ்வாறு வெறுக்கக் கூடிய) அதில் அல்லாஹ் அநேக நன்மைகளை ஆக்கக் கூடும்.

20. மேலும், ஒரு மனைவி(யை நீக்கிவிட்டு அவள்)இடத்தில் மற்றொரு மனைவியை மாற்றி(மணந்து)க்கொள்ள நீங்கள் நாடினால் (நீக்கிவிட விரும்பும்) அவர்களில் ஒருத்திக்கு நீங்கள் ஒரு (பொற்)குவியலைக் கொடுத்திருந்த போதிலும், அதிலிருந்து எதனையும் நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள்; அபாண்டமாகவும், பகிரங்கப் பாவமாகவும் அ(வளுக்கு நீங்கள் கொடுத்த)தை நீங்கள் (திருப்பி) எடுக்கிறீர்களா?

21. மேலும், உங்களில் சிலர் மற்ற சிலருடன் திட்டமாக (சேர்ந்து) கலந்து விட்டீர்கள்; உங்களிடமிருந்து உறுதியான வாக்குறுதியை (அப்பெண்களாகிய) அவர்கள் எடுத்தும் இருக்கிறார்கள்; (இந்நிலையில்) அதனை நீங்கள் எவ்வாறு எடுத்துக் கொள்வீர்கள்?

22. நிச்சயமாக, முன்னர் (அறியாமைக்காலத்தில்) நடந்துவிட்டதைத் தவிர, உங்கள் தந்தைகள் (இறப்பிற்குப்பின் அவர்கள்) மணம் செய்துகொண்ட பெண்களில் எவரையும், நீங்கள் மணம் செய்து கொள்ளாதீர்கள்; நிச்சயமாக இது மானக்கேடானதாகவும் (அல்லாஹ்வின்) கோபத்திற்குரியதாகவும் இருக்கிறது; இன்னும் வழியால் அது மிகக்கெட்டதுமாகும்.

23. உங்கள் தாய்மார்களும், உங்கள் புதல்வியரும், உங்கள் சகோதரிகளும், உங்கள் தந்தையின் சகோதரிகளும், உங்கள் தாயின் சகோதரிகளும், (உங்கள்) சகோதரனுடைய புதல்விகளும், (உங்கள்) சகோதரியுடைய புதல்விகளும், உங்களுக்குப் பாலூட்டிய உங்கள் (செவிலித்)தாய்மார்களும், உங்கள் பால்குடிச் சகோதரிகளும், உங்கள் மனைவியரின் தாய்மார்களும் உங்கள் மீது (அவர்களைத் திருமணம் செய்வது) விலக்கப்பட்டுள்ளது; இன்னும் நீங்கள் உடலுறவு கொண்டு விட்டீர்களே அத்தகைய உங்கள் மனைவியரிலிருந்து (முந்திய கணவனிடத்துப் பிறந்து,) உங்கள் மடிகளில் வளர்ந்து வரும் பெண் மக்களையும் (நீங்கள் திருமணம் செய்வது விலக்கப்பட்டிருக்கிறது). ஆனால், (நீங்கள் மணம் செய்து,) அவர்களுடன் உடலுறவு கொள்ளவில்லையானால், (அவளை விலக்கி விட்டு அவளுடைய மகளை மணம் செய்து கொள்வதில்,) உங்கள் மீது குற்றமில்லை. இன்னும், உங்களுடைய முதுகந்தண்டுகளிலிருந்து உண்டான உங்கள் புதல்வர்களின் மனைவியர்களையும் (நீங்கள் மணம் செய்து கொள்வது விலக்கப்பட்டிருக்கிறது). இரு சகோதரிகளை (ஒரே காலத்தில் மனைவியராக) ஒன்று சேர்த்துக்கொள்வதும் (விலக்கப்பட்டிருக்கிறது.) இதற்கு முன்னர் நடந்துவிட்டவைகளைத் தவிர, (அவற்றை) நிச்சயமாக அல்லாஹ், மிக்க மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையவனாக இருக்கின்றான்.

وَّالْمُحْصَنٰتُ مِنَ النِّسَآءِ اِلَّا مَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ۚ كِتٰبَ الجزء ٥
اللّٰهِ عَلَيْكُمْ ۚ وَاُحِلَّ لَكُمْ مَّا وَرَآءَ ذٰلِكُمْ اَنْ تَبْتَغُوْا بِاَمْوَالِكُمْ
مُّحْصِنِيْنَ غَيْرَ مُسٰفِحِيْنَ ؕ فَمَا اسْتَمْتَعْتُمْ بِهٖ مِنْهُنَّ فَاٰتُوْهُنَّ
اُجُوْرَهُنَّ فَرِيْضَةً ؕ وَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيْمَا تَرٰضَيْتُمْ بِهٖ مِنْۢ بَعْدِ
الْفَرِيْضَةِ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا حَكِيْمًا ﴿۲۴﴾ وَمَنْ لَّمْ يَسْتَطِعْ مِنْكُمْ
طَوْلًا اَنْ يَّنْكِحَ الْمُحْصَنٰتِ الْمُؤْمِنٰتِ فَمِنْ مَّا مَلَكَتْ اَيْمَانُكُمْ مِّنْ
فَتَيٰتِكُمُ الْمُؤْمِنٰتِ ؕ وَاللّٰهُ اَعْلَمُ بِاِيْمَانِكُمْ ؕ بَعْضُكُمْ مِّنْۢ بَعْضٍ ۚ
فَانْكِحُوْهُنَّ بِاِذْنِ اَهْلِهِنَّ وَاٰتُوْهُنَّ اُجُوْرَهُنَّ بِالْمَعْرُوْفِ مُحْصَنٰتٍ
غَيْرَ مُسٰفِحٰتٍ وَّلَا مُتَّخِذٰتِ اَخْدَانٍ ۚ فَاِذَآ اُحْصِنَّ فَاِنْ اَتَيْنَ
بِفَاحِشَةٍ فَعَلَيْهِنَّ نِصْفُ مَا عَلَى الْمُحْصَنٰتِ مِنَ الْعَذَابِ ؕ ذٰلِكَ
لِمَنْ خَشِيَ الْعَنَتَ مِنْكُمْ ؕ وَاَنْ تَصْبِرُوْا خَيْرٌ لَّكُمْ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ
رَّحِيْمٌ ﴿۲۵﴾ يُرِيْدُ اللّٰهُ لِيُبَيِّنَ لَكُمْ وَيَهْدِيَكُمْ سُنَنَ الَّذِيْنَ مِنْ ع ۴ ۳ ۱
قَبْلِكُمْ وَيَتُوْبَ عَلَيْكُمْ ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿۲۶﴾ وَاللّٰهُ يُرِيْدُ اَنْ يَّتُوْبَ
عَلَيْكُمْ قف وَيُرِيْدُ الَّذِيْنَ يَتَّبِعُوْنَ الشَّهَوٰتِ اَنْ تَمِيْلُوْا مَيْلًا عَظِيْمًا ﴿۲۷﴾
يُرِيْدُ اللّٰهُ اَنْ يُّخَفِّفَ عَنْكُمْ ۚ وَخُلِقَ الْاِنْسَانُ ضَعِيْفًا ﴿۲۸﴾

24. பெண்களில் கணவனுள்ளவர்களும் (திருமணம் செய்து கொள்ளப்படுவதற்கு, விலக்கப்பட்டுள்ளனர். நிராகரிப்போருடன் நிகழ்ந்த யுத்தத்தில் பிடிக்கப்பட்டு) உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக்கொண்ட (அடிமைப்) பெண்களைத் தவிர; (இவ்வாறு) உங்கள் மீது அல்லாஹ்வின் கட்டளையாக ( இது விதியாக்கப் பட்டுள்ளது). இவர்களைத் தவிர மற்ற பெண்களைத் திருமணம் செய்பவர்களாக, விபச்சாரம் செய்யாதவர்களாக (திருமண அன்பளிப்பாக) உங்கள் செல்வங்களைக்கொண்டு (மஹரைக்குறிப்பிட்டு சட்டரீதியாக திருமணத்தின் மூலம்) தேடிக்கொள்வது உங்களுக்கு அனுமதிக்கப்பட்டும் உள்ளது; ஆகவே, (இவ்வாறு மணமுடித்த பெண்களாகிய) அவர்களிடமிருந்து எதை நீங்கள் சுகமனுபவித்தீர்களோ, (அதற்காக) அவர்களுக்குக் குறிப்பிட்ட மஹரைக் கட்டாயக்கடமையாக அவர்களுக்கு (க்குறைவின்றி) நீங்கள் கொடுத்து விடுங்கள்; மேலும் மஹரைக் குறிப்பிட்டதன் பின்னர், (அதனைக் குறைக்கவோ, கூட்டவோ) நீங்கள் ஒருவருக்கொருவர் பொருந்திக்கொள்வதில் உங்கள் மீது யாதொரு குற்றமுமில்லை. நிச்சயமாக அல்லாஹ், (உங்கள் செயலை) நன்கறிந்தவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான்.

25. மேலும், உங்களில் எவர் சுதந்திரமுள்ள விசுவாசியான பெண்களைத் திருமணம் செய்து கொள்ள (பொருளாதார)வசதியால் சக்தி பெறவில்லையோ, அவர், விசுவாசமுள்ள உங்களுடைய அடிமைப் பெண்களில், உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டதிலிருந்து (திருமணம் செய்து கொள்ளலாம்). இன்னும் அல்லாஹ் உங்களுடைய விசுவாசத்தை நன்கு அறிந்து இருக்கின்றான்; உங்களில் சிலர், சிலரைச் சேர்ந்தவர்களாவர்; ஆகவே (அப்பெண்கள், பத்தினித்தனமான) பரிசுத்தமானவர்களாக, விபச்சாரம் செய்யாதவர்களாக, மேலும், கள்ள நட்புக் கொள்ளாதவர்களாக இருக்கும் நிலையில் _ அவர்களுடைய எஜமானனின் அனுமதி பெற்று மணம் முடித்துக் கொள்ளுங்கள்; அவர்களுக்குரிய மஹரையும் அறியப்பட்ட (நியாயமான) முறையில் அவர்களுக்கு கொடுத்து விடுங்கள்; ஆகவே, (இவ்வாறு) திருமணம் செய்யப்பட்டால் (அதற்குப்)பின் (அடிமைப்பெண்களான ) அவர்கள் விபச்சாரம் செய்துவிட்டால், ( அடிமையல்லாத) திருமணமான உரிமைப் பெண்களுக்கு விதிக்கப்படும் தண்டனையில் பாதியே அவர்கள்மீது உண்டு ; (அடிமைப் பெண்ணை திருமணம் செய்யும்) இது, உங்களில் எவர், (மனைவியின்றி இருந்து) விபச்சாரத்தை பயந்தாரோ அவருக்குத்தான் . இன்னும், நீங்கள் பொறுத்திருப்பது உங்களுக்கு நன்று; மேலும் அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன், மிகக் கிருபையுடையவன்.

26. அல்லாஹ், (தன்னுடைய சட்டங்களை) உங்களுக்குத் தெளிவாக விளக்கவும், உங்களுக்கு முன்னிருந்த (நல்ல)வர்கள் சென்ற நேரான வழிகளில் உங்களையும் செலுத்தி உங்களது தவ்பாக்களை (பாவமன்னிப்பை) அங்கீகரித்து விடவும் நாடுகிறான்; மேலும் அல்லாஹ் நன்கறிகிறவன், தீர்க்கமான அறிவுடையவன்.

27. மேலும், அல்லாஹ் உங்களது தவ்பாவை (பாவமன்னிப்பை) நாடுகின்றான்; இன்னும், (முற்றிலும்) மன இச்சைகளைப் பின்பற்றி நடப்பவர்களோ, நீங்கள் (நேர்வழியிலிருந்து) முற்றிலும் சாய்ந்து விடுவதையே நாடுகின்றனர்.

28. அல்லாஹ் (தன் சட்டங்களை) உங்களுக்கு இலேசாக்கிவைக்க நாடுகின்றான்; மேலும் மனிதன் பலவீனமானவனாக படைக்கப்பட்டுள்ளான்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَاْكُلُوْۤا اَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ
اِلَّاۤ اَنْ تَكُوْنَ تِجَارَةً عَنْ تَرَاضٍ مِّنْكُمْ ۫ وَلَا تَقْتُلُوْۤا اَنْفُسَكُمْ ؕ
اِنَّ اللّٰهَ كَانَ بِكُمْ رَحِيْمًا ﴿٢٩﴾ وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ عُدْوَانًا وَّظُلْمًا
فَسَوْفَ نُصْلِيْهِ نَارًا ؕ وَكَانَ ذٰلِكَ عَلَى اللّٰهِ يَسِيْرًا ﴿٣٠﴾ اِنْ
تَجْتَنِبُوْا كَبَآئِرَ مَا تُنْهَوْنَ عَنْهُ نُكَفِّرْ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ وَنُدْخِلْكُمْ
مُّدْخَلًا كَرِيْمًا ﴿٣١﴾ وَلَا تَتَمَنَّوْا مَا فَضَّلَ اللّٰهُ بِهٖ بَعْضَكُمْ عَلٰى بَعْضٍ ؕ
لِلرِّجَالِ نَصِيْبٌ مِّمَّا اكْتَسَبُوْا ؕ وَلِلنِّسَآءِ نَصِيْبٌ مِّمَّا اكْتَسَبْنَ ؕ
وَسْئَلُوا اللّٰهَ مِنْ فَضْلِهٖ ؕ اِنَّ اللّٰهَ كَانَ بِكُلِّ شَیْءٍ عَلِيْمًا ﴿٣٢﴾ وَلِكُلٍّ
جَعَلْنَا مَوَالِیَ مِمَّا تَرَكَ الْوَالِدٰنِ وَالْاَقْرَبُوْنَ ؕ وَالَّذِيْنَ عَقَدَتْ
اَيْمَانُكُمْ فَاٰتُوْهُمْ نَصِيْبَهُمْ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلٰى كُلِّ شَیْءٍ شَهِيْدًا ﴿٣٣﴾ ع ٥ ع ٨ ٢
اَلرِّجَالُ قَوّٰمُوْنَ عَلَى النِّسَآءِ بِمَا فَضَّلَ اللّٰهُ بَعْضَهُمْ عَلٰى
بَعْضٍ وَّبِمَاۤ اَنْفَقُوْا مِنْ اَمْوَالِهِمْ ؕ فَالصّٰلِحٰتُ قٰنِتٰتٌ حٰفِظٰتٌ
لِّلْغَيْبِ بِمَا حَفِظَ اللّٰهُ ؕ وَالّٰتِیْ تَخَافُوْنَ نُشُوْزَهُنَّ فَعِظُوْهُنَّ
وَاهْجُرُوْهُنَّ فِی الْمَضَاجِعِ وَاضْرِبُوْهُنَّ ۚ فَاِنْ اَطَعْنَكُمْ
فَلَا تَبْغُوْا عَلَيْهِنَّ سَبِيْلًا ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيًّا كَبِيْرًا ﴿٣٤﴾

29. விசுவாசங்கொண்டோரே! உங்களிடையே இரு சாராரின் சம்மதத்தின் பேரில் நடைபெறும் வர்த்தக மூலமாகவன்றி, (உங்களுடைய) பொருள்களைத் தவறான முறையில் நீங்கள் உண்ணாதீர்கள்; அன்றியும், (இதற்காக) உங்களையே நீங்கள் கொலை செய்து கொள்ளாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ், உங்களிடம் மிக்க கிருபையுடையோனாக இருக்கின்றான்.

30. மேலும், எவரேனும், வரம்பு மீறி, அக்கிரமமாக இவ்வாறு செய்தால், நாம் அவரை(விரைவில்) நரகத்தில் நுழையச் செய்து விடுவோம்; இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிக்க இலகுவானதாகவே இருக்கிறது.

31. எதை விட்டும் நீங்கள் விலக்கப்பட்டிருக்கிறீர்களோ அத்தகைய பெரும் பாவ(மான காரிய)ங்களிலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால், உங்களுடைய (மற்ற சிறிய) தீயவைகளை உங்களை விட்டும் நாம் போக்கிவிடுவோம்; இன்னும், சங்கையான நுழைவிடத்தில் உங்களை நாம் நுழைவிப்போம்.

32. இன்னும் உங்களில் சிலரைக்காண சிலரை, அல்லாஹ் மேன்மையாக்கி இருப்பதைப் பற்றி நீங்கள் பேராசை கொள்ளாதீர்கள்; ஆண்களுக்கு, அவர்கள் சம்பாதித்தவற்றில் உரியபங்குண்டு; (அவ்வாறே) பெண்களுக்கும், அவர்கள் சம்பாதித்தவற்றில் (உரிய) பங்குண்டு. மேலும், (நற்செயல்களின் மூலம்) அல்லாஹ்விடத்தில் அவனின் பேரருளைக் கேளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

33. இன்னும், ஒவ்வொருவருக்கும் (அவருடைய) பெற்றோர், நெருங்கிய சுற்றத்தார் (ஆகியோர்) விட்டுச் சென்ற(சொத்)திலிருந்து (அதை அடையக்கூடிய ) வாரிஸுகளை நாம் ஏற்படுத்தியிருக் கின்றோம்; இன்னும், உங்களுடைய வலக்கரங்கள் (எவர்களுடன்)உடன்படிக்கை செய்து கொண்டனவோ அத்தகையோர்_ அவர்களுக்கு அவர்களுக்குரிய பங்கைக் கொடுத்து விடுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் சாட்சியாளனாக இருக்கின்றான்.

34. ஆண்கள்,பெண்களை நிர்வகிக்கக்கூடியவர்களாவர்; ஏனெனில், அவர்களில் சிலரைக்காண (மற்ற)சிலரை அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருப்பதாலும், (ஆண்களாகிய) அவர்கள், தங்கள் செல்வங்களிலிருந்து (பெண்களுக்காக)ச் செலவு செய்வதாலுமாகும். ஆகவே, நல்லொழுக்கமுள்ள பெண்கள், (என்போர் அல்லாஹ்வுக்குப்பயந்து, தங்கள் கணவனுக்கு) பணிந்து நடப்பவர்கள்; ( கற்பு, மற்றும் தங்கள் கணவனது உடைமைகள் ஆகிய) மறைவானதை, அல்லாஹ் பாதுகாக்கின்ற காரணத்தால் பேணிக்காத்துக் கொள்பவர்கள்; இன்னும், (அப்பெண்களாகிய) அவர்களில் ( தம் கணவனுக்கு) எவர்களின் மாறுபாட்டை அஞ்சுகிறீர்களோ, அப்போது அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள்; (அவர்கள் திருந்தாவிடில்) படுக்கைகளிலும் அவர்களை வெறுத்து (ஒதுக்கி) விடுங்கள்; (அதிலும் அவர்கள் சீர்திருந்தாவிடில்) அவர்களை (காயமேற்படாது) அடியுங்கள். அதனால் அவர்கள் உங்களுக்குக்கீழ்ப்பட்டுவிட்டால், அவர்கள் மீது ( இதர குற்றங்களைச் சுமத்த) யாதொரு வழியையும் தேடாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் மிக உயர்வானவனாக, மிகப் பெரியவனாக இருக்கின்றான்.

وَاِنْ خِفْتُمْ شِقَاقَ بَيْنِهِمَا فَابْعَثُوْا حَكَمًا مِّنْ اَهْلِهٖ
وَحَكَمًا مِّنْ اَهْلِهَا ۚ اِنْ يُّرِيْدَآ اِصْلَاحًا يُّوَفِّقِ اللّٰهُ بَيْنَهُمَا ؕ
اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا خَبِيْرًا ﴿٣٥﴾ وَاعْبُدُوا اللّٰهَ وَلَا تُشْرِكُوْا
بِهٖ شَيْـًٔا وَّبِالْوَالِدَيْنِ اِحْسَانًا وَّبِذِی الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَ
الْمَسٰكِيْنِ وَالْجَارِ ذِی الْقُرْبٰى وَالْجَارِ الْجُنُبِ وَالصَّاحِبِ
بِالْجَنْۢبِ وَابْنِ السَّبِيْلِ ۙ وَمَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ؕ اِنَّ اللّٰهَ لَا
يُحِبُّ مَنْ كَانَ مُخْتَالًا فَخُوْرَا ۙ ﴿٣٦﴾ الَّذِيْنَ يَبْخَلُوْنَ وَيَاْمُرُوْنَ
النَّاسَ بِالْبُخْلِ وَيَكْتُمُوْنَ مَآ اٰتٰىهُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ ؕ وَ
اَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ عَذَابًا مُّهِيْنًا ۚ ﴿٣٧﴾ وَالَّذِيْنَ يُنْفِقُوْنَ
اَمْوَالَهُمْ رِئَآءَ النَّاسِ وَلَا يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَلَا بِالْيَوْمِ الْاٰخِرِ ؕ
وَمَنْ يَّكُنِ الشَّيْطٰنُ لَهٗ قَرِيْنًا فَسَآءَ قَرِيْنًا ﴿٣٨﴾ وَمَاذَا
عَلَيْهِمْ لَوْ اٰمَنُوْا بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَاَنْفَقُوْا مِمَّا رَزَقَهُمُ اللّٰهُ ؕ
وَكَانَ اللّٰهُ بِهِمْ عَلِيْمًا ﴿٣٩﴾ اِنَّ اللّٰهَ لَا يَظْلِمُ مِثْقَالَ ذَرَّةٍ ۚ وَاِنْ تَكُ
حَسَنَةً يُّضٰعِفْهَا وَيُؤْتِ مِنْ لَّدُنْهُ اَجْرًا عَظِيْمًا ﴿٤٠﴾ فَكَيْفَ
اِذَا جِئْنَا مِنْ كُلِّ اُمَّةٍ بِشَهِيْدٍ وَّجِئْنَا بِكَ عَلٰى هٰٓؤُلَآءِ شَهِيْدًا ﴿٤١﴾

وقف النبي عليه السلام

35. இன்னும்,(கணவன் மனைவியாகிய) இருவருக்குள்,(பிணக்குண்டாகி) பிளவை நீங்கள் அஞ்சினால், அப்போது அவன் குடும்பத்தாரில் ஒரு மத்தியஸ்தரையும், அவள் குடும்பத்தாரில் ஒரு மத்தியஸ்தரையும் நீங்கள் (ஏற்படுத்தி) அனுப்புங்கள்; அவ்விருவரும் (இவர்களுக்குள்) சமாதானத்தை உண்டுபண்ணநாடினால், அல்லாஹ் இவ்விருவரையும் ஒற்றுமையாக்கி விடுவான். நிச்சயமாக அல்லாஹ், (யாவையும்)தெரிந்தவனாக, நன்கு உணர்கிறவனாக, இருக்கின்றான்.

36. மேலும், அல்லாஹ்வையே வணங்குங்கள்; அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள்; பெற்றோர்க்கு உபகாரம் செய்யுங்கள்; (அவ்வாறே) உறவினருக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், உறவினரான அண்டைவீட்டினருக்கும்,அந்நியரான அண்டை வீட்டினருக்கும்(எப்பொழுதும்) உங்களுடன் இருக்கக்கூடிய நண்பர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களுக்கும் (அன்புடன் உபகாரம் செய்யுங்கள்.) கர்வங்கொண்டவனாக, பெருமையாளனாக இருப்பவரை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கமாட்டான்.

37. அத்தகைய (பெருமை குடி கொண்ட)வர்கள் உலோபித்தனம் செய்வார்கள்; (மற்ற) மனிதர்களை உலோபித்தனம் செய்யும்படியும் தூண்டுவார்கள்; அல்லாஹ் தன் பேரருளிலிருந்து தங்களுக்குக் கொடுத்ததை (பிறருக்குக் கொடுக்காமல்) மறைத்தும் கொள்வார்கள். இன்னும் (நன்றி செய்யாத) நிராகரிப்போருக்கு இழிவுபடுத்தும் வேதனையையே நாம் தயார் செய்து வைத்திருக்கின்றோம்.

38. இன்னும், அத்தகைய(பெருமை குடி கொண்ட)வர்கள் (பெருமையைநாடி) மனிதர்களுக்குக் காண்பிப்பதற்காகத் தங்கள் செல்வங்களைச் செலவு செய்வார்கள்; அல்லாஹ்வையும், இறுதிநாளையும் விசுவாசங்கொள்ளவு மாட்டார்கள். மேலும், எவனுக்கு ஷைத்தான் தோழனாக இருக்கின்றானோ, அவன் தோழனால் மிகக்கெட்டவன்.

39. மேலும், அவர்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங்கொண்டு , அல்லாஹ் அவர்களுக்களித்தவற்றிலிருந்து (தர்மமாக) செலவும் செய்து வந்தால், அதனால் அவர்களுக்கு என்ன(தான் நஷ்டம்)ஏற்பட்டுவிடப்போகிறது? இன்னும் அல்லாஹ் இவர்களை நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

40. நிச்சயமாக அல்லாஹ், (யாருக்கும்) ஓர் அணுவளவும் அநியாயம் செய்யமாட்டான்; இன்னும், (ஓர் அணுவளவுள்ள) அது நன்மையாக இருந்தால் அதனை இரட்டிப்பாக்கி தன்னிடத்திலிருந்து மகத்தான நற்கூலியைக் கொடுக்கின்றான்.

41. (நபியே!) ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் ஒரு சாட்சியை நாம் கொண்டுவரும்போது இவர்களுக்கு (விரோதமான) சாட்சியாக உம்மை நாம் கொண்டும் வந்தால்,(நிராகரித்த இவர்களுடைய நிலைமை) எவ்வாறிருக்கும்?

يَوْمَئِذٍ يَّوَدُّ الَّذِيْنَ كَفَرُوْا وَعَصَوُا الرَّسُوْلَ لَوْ تُسَوّٰى
بِهِمُ الْاَرْضُ ؕ وَلَا يَكْتُمُوْنَ اللّٰهَ حَدِيْثًا ﴿٤٢﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ ۶ ع ۹ ۳
اٰمَنُوْا لَا تَقْرَبُوا الصَّلٰوةَ وَاَنْتُمْ سُكٰرٰى حَتّٰى تَعْلَمُوْا
مَا تَقُوْلُوْنَ وَلَا جُنُبًا اِلَّا عَابِرِيْ سَبِيْلٍ حَتّٰى تَغْتَسِلُوْا ؕ
وَاِنْ كُنْتُمْ مَّرْضٰۤى اَوْ عَلٰى سَفَرٍ اَوْ جَآءَ اَحَدٌ مِّنْكُمْ مِّنَ
الْغَآئِطِ اَوْ لٰمَسْتُمُ النِّسَآءَ فَلَمْ تَجِدُوْا مَآءً فَتَيَمَّمُوْا
صَعِيْدًا طَيِّبًا فَامْسَحُوْا بِوُجُوْهِكُمْ وَاَيْدِيْكُمْ ؕ اِنَّ اللّٰهَ كَانَ
عَفُوًّا غَفُوْرًا ﴿٤٣﴾ اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ اُوْتُوْا نَصِيْبًا مِّنَ الْكِتٰبِ
يَشْتَرُوْنَ الضَّلٰلَةَ وَيُرِيْدُوْنَ اَنْ تَضِلُّوا السَّبِيْلَ ﴿٤٤﴾ ؕ وَاللّٰهُ
اَعْلَمُ بِاَعْدَآئِكُمْ ؕ وَكَفٰى بِاللّٰهِ وَلِيًّا ۙ وَّكَفٰى بِاللّٰهِ نَصِيْرًا ﴿٤٥﴾
مِنَ الَّذِيْنَ هَادُوْا يُحَرِّفُوْنَ الْكَلِمَ عَنْ مَّوَاضِعِهٖ وَ
يَقُوْلُوْنَ سَمِعْنَا وَعَصَيْنَا وَاسْمَعْ غَيْرَ مُسْمَعٍ وَّرَاعِنَا
لَيًّا بِاَلْسِنَتِهِمْ وَطَعْنًا فِي الدِّيْنِ ؕ وَلَوْ اَنَّهُمْ قَالُوْا سَمِعْنَا
وَاَطَعْنَا وَاسْمَعْ وَانْظُرْنَا لَكَانَ خَيْرًا لَّهُمْ وَاَقْوَمَ ۙ وَ
لٰكِنْ لَّعَنَهُمُ اللّٰهُ بِكُفْرِهِمْ فَلَا يُؤْمِنُوْنَ اِلَّا قَلِيْلًا ﴿٤٦﴾

42 நிராகரித்து, (அல்லாஹ்வுடைய) தூதருக்கும் மாறு செய்தோர், (அவ்வாறு நாம் கொண்டுவரும்) அந்நாளில் பூமி அவர்கள் மீது(தங்களை விழுங்கி தன்னுள்) சமமாக்கப்பட்டிருக்க வேண்டுமே, என்று விரும்புவார்கள். மேலும், இவர்கள் அல்லாஹ்விடத்தில் எவ்விஷயத்தையும் மறைத்து விட முடியாது.

43. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் போதையுடையோராகயிருக்கும் நிலையில், நீங்கள் கூறுவது இன்னதென்று நீங்கள் அறிந்து கொள்ளும் வரை, தொழுகைக்கு நெருங்காதீர்கள். அன்றியும், நீங்கள் (முழுக்காளி) குளிப்பு கடமையானவராயிருந்தால், குளிக்கும் வரையிலும் (தொழுகைக்கு நெருங்காதீர்கள். ஆனால்) பள்ளியைக் கடந்து செல்பவர்களாகவே தவிர; இன்னும் நீங்கள் நோயாளிகளாகவோ, அல்லது பிரயாணத்திலோ, அல்லது மலஜலம் கழித்தோ, அல்லது பெண்ணைத்தீண்டி(தாம்பத்திய உறவு கொண்டு) இருந்தோ, (சுத்தம் செய்து கொள்ள) நீங்கள் தண்ணீரைப் பெற்றுக் கொள்ளாவிடில், பரிசுத்தமான மண்ணை நாடுங்கள்; (அதைத்தொட்டு,) உங்களுடைய முகங்களையும், கைகளையும் (தயம்மும் செய்து) தடவிக் கொள்ளுங்கள், (பிறகு தொழுங்கள்.) நிச்சயமாக அல்லாஹ் (பிழைகளை) மிகப் பொறுப்பவனாக, (குற்றங்களை) மிக்க மன்னிப்பவனாக இருக்கிறான்.

44. (நபியே!) வேதத்திலொரு பாகம் கொடுக்கப்பட்டவர்களை நீர் கவனிக்கவில்லையா? அவர்கள் (தாம்) வழிகேட்டை விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர்; நீங்களும் வழி கெட்டு விடவேண்டுமென்றே அவர்கள் நாடுகின்றனர்.

45. மேலும், அல்லாஹ் உங்களுடைய (இவ்) விரோதிகளை மிக்க அறிகிறவன்; (உங்களுக்குப்) பாதுகாவலனாக இருக்கவும் அல்லாஹ் போதுமானவன்; (உங்களுக்கு) உதவியாளனாக இருக்கவும் அல்லாஹ் போதுமானவன்.

46. யூதர்களில் சிலர், (வேத) வசனங்களை அதற்குரிய இடங்களிலிருந்து (அவற்றின் கருத்து வேறுபடும்படியான விதத்தில்) புரட்டுகின்றனர்; (நபியே! உம்மை நோக்கி, "நீர் சொன்னதை) நாம் செவியுற்றோம்; இன்னும் நாம் (அதற்கு) மாறு செய்வோம், " (என்றுகூறி உம்) மார்க்கத்தில் குற்றம் சொல்ல (" நபியே! இதுவரை) நீர் கேட்க முடியாததை நீர் கேளும்" என்றும், 'ராயினா' என்று தங்கள் நாவுகளைக் கோணிக்கொண்டும் சன்மார்க்கத்தைப் பழித்தும் கூறுகின்றனர். "(நபியே! நீர் சொன்னதற்கு)" நாம் செவிசாய்த்தோம்; இன்னும் (உமக்கு) நாம் கீழ்ப்படிந்தோம்; (நாம் சொல்வதை) நீர் கேளும்" (என்று கூறி, ராயினா என்னும் பதத்திற்குப் பதிலாக) 'உன்ளுர்னா' (எங்களை அன்பாக நோக்குவீராக!") என்றும் கூறியிருந்தால் அது, அவர்களுக்கே மிக நன்மையானதாகவும், மிக நேர்மையானதாகவும் இருந்திருக்கும். எனினும் அவர்களுடைய நிராகரிப்பின் காரணமாக, அல்லாஹ் அவர்களைச் சபித்துவிட்டான்; ஆதலால், (அவர்கள்) குறைவாகவேயன்றி விசுவாசங் கொள்ள மாட்டார்கள்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ اٰمِنُوْا بِمَا نَزَّلْنَا مُصَدِّقًا لِّمَا
مَعَكُمْ مِّنْ قَبْلِ اَنْ نَّطْمِسَ وُجُوْهًا فَنَرُدَّهَا عَلٰٓى اَدْبَارِهَآ
اَوْ نَلْعَنَهُمْ كَمَا لَعَنَّآ اَصْحٰبَ السَّبْتِ ؕ وَكَانَ اَمْرُ اللّٰهِ مَفْعُوْلًا ﴿٤٧﴾
اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ لِمَنْ
يَّشَآءُ ۚ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدِ افْتَرٰٓى اِثْمًا عَظِيْمًا ﴿٤٨﴾
اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ يُزَكُّوْنَ اَنْفُسَهُمْ ؕ بَلِ اللّٰهُ يُزَكِّيْ مَنْ
يَّشَآءُ وَلَا يُظْلَمُوْنَ فَتِيْلًا ﴿٤٩﴾ اُنْظُرْ كَيْفَ يَفْتَرُوْنَ عَلَى
اللّٰهِ الْكَذِبَ ؕ وَكَفٰى بِهٖٓ اِثْمًا مُّبِيْنًا ﴿٥٠﴾ ع اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ ٧ ع ٨ ۴
اُوْتُوْا نَصِيْبًا مِّنَ الْكِتٰبِ يُؤْمِنُوْنَ بِالْجِبْتِ وَالطَّاغُوْتِ
وَيَقُوْلُوْنَ لِلَّذِيْنَ كَفَرُوْا هٰٓؤُلَآءِ اَهْدٰى مِنَ الَّذِيْنَ
اٰمَنُوْا سَبِيْلًا ﴿٥١﴾ اُولٰٓئِكَ الَّذِيْنَ لَعَنَهُمُ اللّٰهُ ؕ وَمَنْ يَّلْعَنِ
اللّٰهُ فَلَنْ تَجِدَ لَهٗ نَصِيْرًا ﴿٥٢﴾ ؕ اَمْ لَهُمْ نَصِيْبٌ مِّنَ الْمُلْكِ
فَاِذًا لَّا يُؤْتُوْنَ النَّاسَ نَقِيْرًا ﴿٥٣﴾ لا اَمْ يَحْسُدُوْنَ النَّاسَ
عَلٰى مَآ اٰتٰىهُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ ۚ فَقَدْ اٰتَيْنَآ اٰلَ
اِبْرٰهِيْمَ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَاٰتَيْنٰهُمْ مُّلْكًا عَظِيْمًا ﴿٥٤﴾

47. வேதம் கொடுக்கப்பட்டோரே! உங்கள் முகங்களை மாற்றி,பின்னர் அவைகளை அவைகளின் பின்புறமாக நாம் திருப்பிவிடுவதற்குமுன்பே உங்களிடமுள்ள (வேதத்)தை உண்மைப் படுத்துகின்ற நாம் இறக்கிவைத்த இ(வ்வேதத்)தை விசுவாசங்கொள்ளுங்கள்; அல்லது (சனிக்கிழமையில் வரம்பு மீறியோரான) அஸ்ஹாபுஸ்ஸப்தினரை நாம் சபித்த பிரகாரம், அவர்களையும் நாம் சபித்துவிடுவோம். மேலும், அல்லாஹ்வுடைய கட்டளை நிறைவேற்றப்பட்டதாக ஆகிவிடும்.

48. நிச்சயமாக அல்லாஹ், தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்க(வே) மாட்டான்; இதனைத் தவிர (மற்ற) எதனையும், தான் நாடியோருக்கு மன்னிப்பான்; எவர் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றாரோ அவர், திட்டமாக மகத்தான பாவத்தை பொய்யாகக் கற்பனை செய்துவிட்டார்.

49. (நபியே!) தமக்குத் தாமே பரிசுத்தத்தைக் கற்பிப்போரை நீர் காணவில்லையா? (அவர்கள் கூறுவது சரி) அல்ல; அல்லாஹ், தான் நாடிய (நல்ல)வர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கிறான். (இவ்விஷயத்தில்) ஓர் அணுவளவும் அவர்கள் அநீதி செய்யப் படமாட்டார்கள்.

50. (நபியே!) அல்லாஹ்வின் மீது அவர்கள் (அபாண்டமான) பொய்யை எவ்வாறு கற்பனை செய்கின்றனர் என்பதை நீர் கவனிப்பீராக! பகிரங்கமான பாவத்திற்கு இதுவே போதுமானதாக இருக்கின்றது.

51. (நபியே!) வேதத்தில் ஒரு பாகம் கொடுக்கப் பட்டவர்களை நீர் பார்க்கவில்லையா? அவர்கள் விக்கிரகங்களையும்,தாகூத்தை (_ஷைத்தானை)யும் விசுவாசிக்கின்றனர்; மேலும் (இணை வைப்போராகிய குறைஷியர்களைச் சுட்டிக் காண்பித்து),"இவர்கள் தாம், உண்மை விசுவாசிகளைவிட மிகவும் நேரான பாதையில் இருக்கின்றனர்" என்று காஃபிர்களுக்குக் கூறுகின்றனர்.

52. அவர்கள் எத்தகையோரென்றால்_ அவர்களை அல்லாஹ் சபித்துவிட்டான். எவரை அல்லாஹ் சபித்துவிட்டானோ அவருக்கு உதவி செய்பவரை நீர் காணவேமாட்டீர்.

53. (இவ்வுலக) ஆட்சியில் ஏதேனும் ஒரு பங்கு (பாத்தியதை) அவர்களுக்கு சொற்ப பாகமாவது இருக்கின்றதா? (இல்லை!)அவ்வாறிருந்தால், அவர்கள் (அதிலிருந்து மற்ற) மனிதர்களுக்கு இம்மியேனும் கொடுக்கமாட்டார்கள்.

54. அல்லது,(நல்லடியார்களான) மனிதர்களை(ப் பற்றி)அவர்களுக்கு அல்லாஹ் தன் பேரருளால் கொடுத்தவற்றின்மீது (யூதர்களாகிய) அவர்கள் பொறாமைப்படுகிறார்களா? அவ்வாறாயின், இப்றாஹீமுடைய குடும்பத்தினருக்கு வேதத்தையும், ஞானத்தையும் கொடுத்திருந்தோம்; (அத்துடன்) மகத்தான அரசாங்கத்தையும் அவர்களுக்கு நாம் கொடுத்திருந்தோம்..

فَمِنْهُمْ مَّنْ اٰمَنَ بِهٖ وَمِنْهُمْ مَّنْ صَدَّ عَنْهُ ؕ وَكَفٰى بِجَهَنَّمَ
سَعِيْرًا ﴿٥٥﴾ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا بِاٰيٰتِنَا سَوْفَ نُصْلِيْهِمْ نَارًا ؕ كُلَّمَا
نَضِجَتْ جُلُوْدُهُمْ بَدَّلْنٰهُمْ جُلُوْدًا غَيْرَهَا لِيَذُوْقُوا الْعَذَابَ ؕ
اِنَّ اللّٰهَ كَانَ عَزِيْزًا حَكِيْمًا ﴿٥٦﴾ وَالَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ الربع
سَنُدْخِلُهُمْ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَاۤ اَبَدًا ؕ
لَهُمْ فِيْهَاۤ اَزْوَاجٌ مُّطَهَّرَةٌ ۫ وَّنُدْخِلُهُمْ ظِلًّا ظَلِيْلًا ﴿٥٧﴾ اِنَّ اللّٰهَ
يَاْمُرُكُمْ اَنْ تُؤَدُّوا الْاَمٰنٰتِ اِلٰۤى اَهْلِهَا ۙ وَاِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ
اَنْ تَحْكُمُوْا بِالْعَدْلِ ؕ اِنَّ اللّٰهَ نِعِمَّا يَعِظُكُمْ بِهٖ ؕ اِنَّ اللّٰهَ كَانَ
سَمِيْعًا بَصِيْرًا ﴿٥٨﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا
الرَّسُوْلَ وَاُولِى الْاَمْرِ مِنْكُمْ ۚ فَاِنْ تَنَازَعْتُمْ فِيْ شَيْءٍ فَرُدُّوْهُ
اِلَى اللّٰهِ وَالرَّسُوْلِ اِنْ كُنْتُمْ تُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ؕ
ذٰلِكَ خَيْرٌ وَّاَحْسَنُ تَاْوِيْلًا ﴿٥٩﴾ ع اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ يَزْعُمُوْنَ ع ٨ ٩ ٥
اَنَّهُمْ اٰمَنُوْا بِمَاۤ اُنْزِلَ اِلَيْكَ وَمَاۤ اُنْزِلَ مِنْ قَبْلِكَ يُرِيْدُوْنَ
اَنْ يَّتَحَاكَمُوْۤا اِلَى الطَّاغُوْتِ وَقَدْ اُمِرُوْۤا اَنْ يَّكْفُرُوْا
بِهٖ ؕ وَيُرِيْدُ الشَّيْطٰنُ اَنْ يُّضِلَّهُمْ ضَلٰلًاۢ بَعِيْدًا ﴿٦٠﴾

55. (அவ்வாறிருந்தும்) அவர்களிலிருந்து அதை விசுவாசித்தவரும் உண்டு; இன்னும் அவர்களிலிருந்து அதை விட்டும் விலகிக்கொண்டவரும் உண்டு. (நிராகரித்த அவர்களுக்குக்) கொழுந்து விட்டெரியும் நரகமே போதுமாகிவிட்டது.

56. நிச்சயமாக நம்முடைய (இவ்வேத) வசனங்களை நிராகரிக்கின்றார்களே அத்தகையோர்_ அவர்களை, (விரைவில்) நாம் நரகத்தில் புகுத்தி விடுவோம்; (அதில்)அவர்கள், வேதனையைச் (சதா) அனுபவிப்பதற்காக அவர்களுடைய தோல்கள் கருகி விடும்போதெல்லாம், அவையல்லாத (வேறு புதிய)தோல்களை நாம் மாற்றிக் கொண்டே இருப்போம். நிச்சயமாக அல்லாஹ், யாவரையும் மிகைத்தவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கிறான்.

57. இன்னும் (அவர்களில்) விசுவாசங்கொண்டு, நற்செயல்களையும் செய்கின்றார்களே அத்தகையோர்_ அவர்களைச் சுவனபதிகளில் நாம் பிரவேசிக்கச்செய்வோம்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்; அவர்கள் அவற்றில் நிரந்தரமாக(த் தங்கி)இருப்பவர்கள்; பரிசுத்தமான துணைவியரும் அங்கு அவர்களுக்குண்டு; இன்னும் அவர்களை அடர்ந்த(நீங்காத) நிழலிலும் நாம் பிரவேசிக்கச்செய்வோம்.

58. (விசுவாசிகளே ! உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட) அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடுமாறும், மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால், (பாரபட்சமின்றி) நீதமாகவே தீர்ப்பளிக்குமாறும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான்; நிச்சயமாக அல்லாஹ்எதனை உங்களுக்கு உபதேசிக்கிறானோ அது மிக்க நல்லதாகும்; நிச்சயமாக அல்லாஹ் செவியேற்கிறவனாக, பார்க்கிறவனாக இருக்கின்றான்.

59. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள்; (அவனது) தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். இன்னும் உங்களில் (அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்கும்) அதிகாரம் உடைய (தலை)வர்களுக்கும் கீழ்ப்படியுங்கள்; ஆனால், யாதொரு விஷயத்தில்நீங்கள் பிணங்கிக்கொண்டால், அதனை அல்லாஹ்விடமும், (அவனுடைய) தூதரிடமும் திருப்பி(ஒப்படைத்து)விடுங்கள்.(அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் திருப்தியாகவே ஏற்றுக் கொள்ளுங்கள்.) மெய்யாகவே நீங்கள், அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங்கொண்டவர்களாக இருந்தால்; இதுதான் நன்மையாகவும், மிக அழகான முடிவாகவும் இருக்கும்.

60. (நபியே!) உம்மீது இறக்கப்பட்ட (இவ்வேதத்)தையும், உமக்கு முன்னர் இறக்கிவைக்கப்பட்டுள்ள (வேதங்களா)வற்றையும் மெய்யாகவே தாங்கள் விசுவாசிப்பதாக எண்ணிக் கொண்டிருப்போர் பால் நீர் பார்க்கவில்லையா? அவர்கள் தாகூத்தை (ஷைத்தானை) தீர்ப்புக்கூறுபவனாக ஆக்க நாடுகிறார்கள். (ஆனால்) அவர்களோ, அவனை நிராகரித்து விடவேண்டுமெனத் திட்டமாகக் கட்டளையிடப்பட்டுள்ளார்கள் . அந்த ஷைத்தானோ, அவர்களை வெகு தூர மான வழிகேட்டில் வழிகெடுத்துவிடவே நாடுகின்றான்.

وَاِذَا قِيْلَ لَهُمْ تَعَالَوْا اِلٰى مَآ اَنْزَلَ اللّٰهُ وَاِلَى الرَّسُوْلِ
رَاَيْتَ الْمُنٰفِقِيْنَ يَصُدُّوْنَ عَنْكَ صُدُوْدًا ﴿٦١﴾ فَكَيْفَ اِذَآ
اَصَابَتْهُمْ مُّصِيْبَةٌ بِمَا قَدَّمَتْ اَيْدِيْهِمْ ثُمَّ جَآءُوْكَ
يَحْلِفُوْنَ ۖ بِاللّٰهِ اِنْ اَرَدْنَآ اِلَّآ اِحْسَانًا وَّتَوْفِيْقًا ﴿٦٢﴾ اُولٰٓئِكَ
الَّذِيْنَ يَعْلَمُ اللّٰهُ مَا فِيْ قُلُوْبِهِمْ ۗ فَاَعْرِضْ عَنْهُمْ وَعِظْهُمْ
وَقُلْ لَّهُمْ فِيْٓ اَنْفُسِهِمْ قَوْلًا بَلِيْغًا ﴿٦٣﴾ وَمَآ اَرْسَلْنَا مِنْ
رَّسُوْلٍ اِلَّا لِيُطَاعَ بِاِذْنِ اللّٰهِ ۭ وَلَوْ اَنَّهُمْ اِذْ ظَّلَمُوْٓا اَنْفُسَهُمْ
جَآءُوْكَ فَاسْتَغْفَرُوا اللّٰهَ وَاسْتَغْفَرَ لَهُمُ الرَّسُوْلُ
لَوَجَدُوا اللّٰهَ تَوَّابًا رَّحِيْمًا ﴿٦٤﴾ فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُوْنَ
حَتّٰى يُحَكِّمُوْكَ فِيْمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوْا فِيْٓ اَنْفُسِهِمْ
حَرَجًا مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوْا تَسْلِيْمًا ﴿٦٥﴾ وَلَوْ اَنَّا كَتَبْنَا
عَلَيْهِمْ اَنِ اقْتُلُوْٓا اَنْفُسَكُمْ اَوِ اخْرُجُوْا مِنْ دِيَارِكُمْ مَّا
فَعَلُوْهُ اِلَّا قَلِيْلٌ مِّنْهُمْ ۭ وَلَوْ اَنَّهُمْ فَعَلُوْا مَا يُوْعَظُوْنَ
بِهٖ لَكَانَ خَيْرًا لَّهُمْ وَاَشَدَّ تَثْبِيْتًا ﴿٦٦﴾ ۙ وَّاِذًا لَّاٰتَيْنٰهُمْ مِّنْ
لَّدُنَّآ اَجْرًا عَظِيْمًا ﴿٦٧﴾ ۙ وَّلَهَدَيْنٰهُمْ صِرَاطًا مُّسْتَقِيْمًا ﴿٦٨﴾

61. மேலும், (நியாயம் பெற,) "அல்லாஹ் இறக்கருளிய (வேதத்)தின் பாலும், (அவனது) தூதரின் பாலும் நீங்கள் வாருங்கள்" (அந்த ஷைத்தானிடம் செல்லாதீர்கள்) என்று அவர்களுக்குக் கூறப்பட்டால், அந்த முனாஃபிக்குகளை (வேஷதாரிகளை)_அவர்கள் உம்மைவிட்டு முற்றிலும் புறக்கணித்து விடுவதையே நீர் காண்பீர்.

62. (நபியே!) அவர்களின் கரங்கள் முற்படுத்திய (பாவத்)தின் காரணமாக, அவர்களுக்கு ஒரு துன்பம் ஏற்பட்டு, (அதற்குப் பரிகாரம் தேடிக் கொள்ள முடியாமலாகிவிட்ட) பின்னர், அவர்கள், நன்மையையும், ஒற்றுமையையும் தவிர, (வேறெதையும்) நாங்கள் நாடவில்லை என்று அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்பவர்களாக உம்மிடம் வருகின்ற நேரம் எவ்வாறு இருக்கும் ?

63.அவர்கள் எத்தகையோரென்றால்_அவர்களின் இதயங்களில் இருப்பவைகளை அல்லாஹ் அறிவான்; ஆகவே, (நபியே!) நீர் அவர்களைப் புறக்கணித்து விடுவீராக! மேலும், அவர்களுக்கு நல்லுபதேசம் செய்வீராக! மேலும் (அவர்களில் உள்ள கெடுதல்களை) அவர்களுக்கு, அவர்களது மனங்களில் படும்படித் தெளிவாக எடுத்துக் கூறுவீராக!

64. இன்னும்,அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப கீழ்ப்படிதல்களுக்கு உரித்தாக்கப்பட்டவராகவே தவிர நாம் யாதொரு தூதரையும் (மனிதர்களிடம்) அனுப்பவில்லை ; இன்னும், நிச்சயமாக அவர்கள் தமக்குத் தாமே அநீதமிழைத்துக் கொண்ட நேரம், உம்மிடம் வந்து, பின்னர், அல்லாஹ்விடம் அவர்கள் பாவமன்னிப்புக் கோரி, அவர்களுக்காக (அல்லாஹ்வுடைய) தூத(ராகிய நீ)ரும் பாவமன்னிப்புக் கோரியிருந்தால், தவ்பாவை ஏற்(று மன்னிப்)பவனாக, மிகக் கிருபையுடையோனாக அல்லாஹ்வை அவர்கள் கண்டிருப்பார்கள்.

65. ஆனால், உமதிரட்சகன்மீது சத்தியமாக, அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில் உம்மை நீதிபதியாக ஆக்கி, நீர் செய்யும் தீர்ப்பைத் தங்கள் மனங்களில் எத்தகைய அதிருப்தியையும் பெறாமல் முற்றிலும் ஏற்றுக்கொள்ளாத வரையில், அவர்கள் விசுவாசிகளாக மாட்டார்கள்.

66. இன்னும்," உங்களையே நீங்கள் கொலை செய்து கொள்ளுங்கள்; அல்லது நீங்கள் உங்களுடைய வீடுகளிலிருந்து வெளியேறி விடுங்கள்" என்று நிச்சயமாக நாம் அவர்களின்மீது விதித்திருந்தால், அவர்களில் சிலரைத் தவிர (பெரும்பாலானவர்கள்) இதனைச் செய்திருக்கவே மாட்டார்கள்; மேலும், அவர்கள் எதை உபதேசிக்கப்பட்டார்களோ, அதை அவர்கள் செய்திருப்பார்களேயானால், அது, அவர்களுக்கு மிக்க நன்மையாகவும், (விசுவாசத்தில் அவர்களை) உறுதிப் படுத்துவதால் மிக்க வலுவாகவும் இருந்திருக்கும்.

67. மேலும், அது சமயம் அவர்களுக்கு, நம்மிடமிருந்து (மேற்கொண்டும்) மகத்தான ஒரு கூலியை நாம் கொடுத்திருப்போம்.

68. மேலும்,அவர்களுக்கு நேரான வழியை நாம் காட்டி இருப்போம்.

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ
اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ ۚ
وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا ﴿۶۹﴾ ذٰلِكَ الْفَضْلُ مِنَ اللّٰهِ ؕ وَكَفٰى
بِاللّٰهِ عَلِيْمًا ﴿۷۰﴾ ع يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا خُذُوْا حِذْرَكُمْ فَانْفِرُوْا ع ۹ ۱۱ ۶
ثُبَاتٍ اَوِ انْفِرُوْا جَمِيْعًا ﴿۷۱﴾ وَاِنَّ مِنْكُمْ لَمَنْ لَّيُبَطِّئَنَّ ۚ فَاِنْ
اَصَابَتْكُمْ مُّصِيْبَةٌ قَالَ قَدْ اَنْعَمَ اللّٰهُ عَلَيَّ اِذْ لَمْ اَكُنْ مَّعَهُمْ
شَهِيْدًا ﴿۷۲﴾ وَلَئِنْ اَصَابَكُمْ فَضْلٌ مِّنَ اللّٰهِ لَيَقُوْلَنَّ كَاَنْ لَّمْ
تَكُنْ بَيْنَكُمْ وَبَيْنَهٗ مَوَدَّةٌ يّٰلَيْتَنِيْ كُنْتُ مَعَهُمْ فَاَفُوْزَ
فَوْزًا عَظِيْمًا ﴿۷۳﴾ فَلْيُقَاتِلْ فِيْ سَبِيْلِ اللّٰهِ الَّذِيْنَ يَشْرُوْنَ
الْحَيٰوةَ الدُّنْيَا بِالْاٰخِرَةِ ؕ وَمَنْ يُّقَاتِلْ فِيْ سَبِيْلِ اللّٰهِ
فَيُقْتَلْ اَوْ يَغْلِبْ فَسَوْفَ نُؤْتِيْهِ اَجْرًا عَظِيْمًا ﴿۷۴﴾ وَمَا لَكُمْ
لَا تُقَاتِلُوْنَ فِيْ سَبِيْلِ اللّٰهِ وَالْمُسْتَضْعَفِيْنَ مِنَ الرِّجَالِ
وَالنِّسَآءِ وَالْوِلْدَانِ الَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَآ اَخْرِجْنَا
مِنْ هٰذِهِ الْقَرْيَةِ الظَّالِمِ اَهْلُهَا ۚ وَاجْعَلْ لَّنَا مِنْ
لَّدُنْكَ وَلِيًّا ۚۙ وَّاجْعَلْ لَّنَا مِنْ لَّدُنْكَ نَصِيْرًا ﴿۷۵﴾ ؕ

69. மேலும், எவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்கின்றார்களோ அவர்கள் நபிமார்கள், சத்தியவான்கள், (அல்லாஹ்வின் பாதையில் உயிர் நீத்த) ஷஹீதுகள், நல்லடியார்கள் ஆகியோர்களிலிருந்து எவர்கள் மீது அல்லாஹ் அருள் செய்திருக்கிறானோ அத்தகையோருடன் (சுவனத்தில்) இருப்பார்கள். தோழமைக்கு, இவர்கள் அழகானவர்கள்.

70. இப்பேரருள் அல்லாஹ்விடமிருந்துள்ளதாகும்; இன்னும், (இவர்கள் செயலை) நன்கறிகிறவனாகஇருக்க அல்லாஹ் போதுமானவனாக இருக்கின்றான்.

71. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் (யுத்தத்திற்குச் சென்றால்,) உங்கள் எச்சரிக்கையை (முதல் ஆயுதமாக) எடுத்துக் கொள்ளுங்கள்; பிறகு, அணி அணியாகவோ செல்லுங்கள். அல்லது அனைவரும் (கூட்டாக) இணைந்தோ செல்லுங்கள்.

72. மேலும், (யுத்தத்திற்கு வராது) பின் தங்கியவர்களும் நிச்சயமாக உங்களில் (சிலர்) இருக்கின்றனர்; (அவர்கள் முனாஃபிக்குகளே! ஏனெனில், யுத்தத்திற்குச் சென்ற) உங்களுக்கு யாதொரு கஷ்டமேற்பட்டாலோ, அ(வர்களில் ஒரு)வன் "நான் அவர்களுடன் (அங்கு) பிரசன்னமாகி இல்லாதிருந்தபோது நிச்சயமாக அல்லாஹ் என்மீது அருள் புரிந்து விட்டான்" என்று கூறுகின்றான்.

73. இன்னும், அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு ஒரு பாக்கியம் கிடைத்தால், "நானும் அவர்களுடன் இருந்திருக்க வேண்டுமே? அவ்வாறிருந்தால், பெரும் பாக்கியத்தை நானும் அடைந்திருப்பேனே!" என்று, உங்களுக்கும் அவனுக்கும் இடையில் எத்தகைய நட்பும் இல்லாமலிருந்ததைப் போல் நிச்சயமாக அவன் கூறுகிறான்.

74. மறுமை (வாழ்க்கை)க்காக இவ்வுலக வாழ்க்கையை விற்றுவிடுபவர்கள் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்யவும்; இன்னும் எவர், அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிந்து (அதில்) அவர் கொல்லப்பட்டாலும் அல்லது வெற்றி பெற்றாலும், நாம் அவருக்கு மகத்தான கூலியைக் கொடுப்போம்.

75. இன்னும், அல்லாஹ்வுடைய பாதையில், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரில் பலவீனமானவர்களின் (பாதுகாப்பு) விஷயத்திலும், நீங்கள் யுத்தம் செய்யாதிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்களோ, "எங்கள் இரட்சகனே! இவ்வூரிலிருந்து எங்களை வெளியேற்றி விடுவாயாக! அதை (அவ்வூரை) யுடையவர்கள் அநியாயக்காரர்களாக இருக்கின்றனர். நீ எங்களுக்கு உன் புறத்திலிருந்து ஒரு பாதுகாவலரை ஆக்குவாயாக! நீ எங்களுக்கு உன் புறத்தால் ஓர் உதவியாளரையும் அளித்தருள்வாயாக!" என்று (பிரார்த்தனை செய்து) கூறுகின்றனர்.

الَّذِيْنَ اٰمَنُوْا يُقَاتِلُوْنَ فِيْ سَبِيْلِ اللّٰهِ ۚ وَالَّذِيْنَ كَفَرُوْا
يُقَاتِلُوْنَ فِيْ سَبِيْلِ الطَّاغُوْتِ فَقَاتِلُوْٓا اَوْلِيَآءَ الشَّيْطٰنِ ۚ
ع ١٠ اِنَّ كَيْدَ الشَّيْطٰنِ كَانَ ضَعِيْفًا ﴿٧٦﴾ اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ قِيْلَ
لَهُمْ كُفُّوْٓا اَيْدِيَكُمْ وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ ۚ فَلَمَّا كُتِبَ
عَلَيْهِمُ الْقِتَالُ اِذَا فَرِيْقٌ مِّنْهُمْ يَخْشَوْنَ النَّاسَ كَخَشْيَةِ
اللّٰهِ اَوْ اَشَدَّ خَشْيَةً ۚ وَقَالُوْا رَبَّنَا لِمَ كَتَبْتَ عَلَيْنَا الْقِتَالَ ۚ لَوْ
لَآ اَخَّرْتَنَآ اِلٰٓى اَجَلٍ قَرِيْبٍ ؕ قُلْ مَتَاعُ الدُّنْيَا قَلِيْلٌ ۚ وَالْاٰخِرَةُ
خَيْرٌ لِّمَنِ اتَّقٰى ۣ وَلَا تُظْلَمُوْنَ فَتِيْلًا ﴿٧٧﴾ اَيْنَ مَا تَكُوْنُوْا
يُدْرِكْكُّمُ الْمَوْتُ وَلَوْ كُنْتُمْ فِيْ بُرُوْجٍ مُّشَيَّدَةٍ ؕ وَاِنْ تُصِبْهُمْ
حَسَنَةٌ يَّقُوْلُوْا هٰذِهٖ مِنْ عِنْدِ اللّٰهِ ۚ وَاِنْ تُصِبْهُمْ سَيِّئَةٌ
يَّقُوْلُوْا هٰذِهٖ مِنْ عِنْدِكَ ؕ قُلْ كُلٌّ مِّنْ عِنْدِ اللّٰهِ ؕ فَمَالِ
هٰٓؤُلَآءِ الْقَوْمِ لَا يَكَادُوْنَ يَفْقَهُوْنَ حَدِيْثًا ﴿٧٨﴾ مَآ اَصَابَكَ مِنْ
حَسَنَةٍ فَمِنَ اللّٰهِ ۫ وَمَآ اَصَابَكَ مِنْ سَيِّئَةٍ فَمِنْ نَّفْسِكَ ؕ وَاَرْسَلْنٰكَ
لِلنَّاسِ رَسُوْلًا ؕ وَكَفٰى بِاللّٰهِ شَهِيْدًا ﴿٧٩﴾ مَنْ يُّطِعِ الرَّسُوْلَ
فَقَدْ اَطَاعَ اللّٰهَ ۚ وَمَنْ تَوَلّٰى فَمَآ اَرْسَلْنٰكَ عَلَيْهِمْ حَفِيْظًا ؕ ﴿٨٠﴾

76. (ஆகவே, இது போன்ற சமயத்தில்,) விசுவாசங்கொண்டார்களே அத்தகையோர்_ அவர்கள், அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்வார்கள். இன்னும், நிராகரித்தார்களே அத்தகையோர்_ அவர்கள் (இவர்களுக்கு எதிராக) தாகூத்துடைய (ஷைத்தானுடைய) பாதையில் யுத்தம்செய்வார்கள்; ஆகவே, ஷைத்தானின் நண்பர்களுக்கு எதிராக போர் செய்யுங்கள். நிச்சயமாக ஷைத்தானுடைய சூழ்ச்சி மிகவும் பலவீனமானதாக இருக்கின்றது.

77. "உங்களுடைய கைகளைத் (தற்சமயம் யுத்தம் செய்யாது) தடுத்துக் கொள்ளுங்கள்; தொழுகையையும் (உறுதியாக) நிறைவேற்றுங்கள்; ஜகாத்தும் கொடுத்துவாருங்கள்" என்று எவர்களுக்குக் கூறப்பட்டதோ அத்தகையோர் பால் (நபியே!) நீர் பார்க்கவில்லையா? (பின்னர்) யுத்தம் செய்வது அவர்கள் மீது விதியாக்கப்பட்ட பொழுது, அவர்களில் ஒரு பிரிவினரோ, அல்லாஹ்வுக்குப் பயப்படுவதைப் போல் அல்லது பயத்தால் அதைவிட கடினமாக (எதிரிகளான) மனிதர்களுக்குப் பயந்தார்கள்; மேலும், எங்கள் இரட்சகனே! ஏன் எங்கள் மீது யுத்தத்தை விதியாக்கினாய்? இன்னும் சிறிது காலம் எங்களுக்காக (இதனை)ப் பிற்படுத்தி இருக்க வேண்டாமா?" என்றும் கூறினார்கள். (இதற்கு, நபியே!) நீர் கூறுவீராக: இவ்வுலக சுகம் அற்பமானதே; (அல்லாஹ்வை) பயந்து நடப்பவருக்கு மறுமை( யின் வாழ்க்கை ) தான் மிக்க மேலானது. (உங்களுடைய நன்மையைக் குறைத்தோ, பாவத்தைக் கூட்டியோ) நீங்கள் ஒரு நூல் அளவும் அநீதம் செய்யப்படமாட்டீர்கள்.

78. நீங்கள் எங்கிருந்த போதிலும் மரணம் உங்களை அடைந்தே தீரும்; மிகப் பலமாகக்கட்டப் பட்ட கோட்டை (கொத்தளங்)களில் நீங்கள் இருந்தபோதிலும் சரியே! மேலும், (நபியே! உம்முடைய கட்டளைப்படி யுத்தத்திற்குச் சென்ற) அவர்களுக்கு யாதொரு நன்மையும் ஏற்பட்டால், இது அல்லாஹ்விடமிருந்து (எங்களுக்குக்) கிடைத்தது எனக் கூறுகின்றனர்; (ஆனால்) அவர்களுக்கு யாதொரு தீங்கு ஏற்பட்டுவிட்டாலோ, (நபியே!) இது உம்மால்தான் (எங்களுக்கு ஏற்பட்டது) எனக் கூறுகின்றனர்; (ஆகவே,) நீர் கூறுவீராக: (இவை) ஒவ்வொன்றும் அல்லாஹ்விடமிருந்தே உள்ளது. இந்த சமூகத்தவர்க்கு என்ன நேர்ந்துவிட்டது? எவ்விஷயத்தையுமே இவர்கள் விளங்கிக்கொள்ள நெருங்க மாட்டார்கள்.

79. (அன்றி, இவ்வாறு கூறுகின்றவனுக்கு,) "உமக்கு யாதொரு நன்மை ஏற்பட்டால் (அது) அல்லாஹ்வினால் ஏற்பட்டது" என்றும், உமக்கு யாதொரு தீங்கு ஏற்பட்டால், (அது நீ இழைத்த குற்றத்தின் காரணமாக) உன்னால்தான் (வந்தது)" என்றும் (கூறுவீராக). இன்னும், (நபியே!) நாம் உம்மை, ஒரு தூதராகவே மனிதர்களிடம் அனுப்பியிருக்கின்றோம். இன்னும் (இதற்கு) சாட்சியாளனாக இருக்க அல்லாஹ் போதுமானவன்.

80. எவர் (அல்லாஹ்வுடைய) தூதருக்கு (முற்றிலும்) கீழ்ப்படிந்து நடக்கின்றாரோ அவர், நிச்சயமாக அல்லாஹ்வுக்கே கீழ்ப்படிந்து விட்டார்; இவ்வாறு கீழ்ப்படிவதை எவரும் புறக்கணித்தால், (அதற்காக நீர் கவலைப்பட வேண்டாம். ஏனெனில்) உம்மை அவர்கள் மீது கண்காணிப்பவராக நாம் அனுப்பவில்லை.

وَيَقُوْلُوْنَ طَاعَةٌ فَاِذَا بَرَزُوْا مِنْ عِنْدِكَ بَيَّتَ طَآئِفَةٌ
مِّنْهُمْ غَيْرَ الَّذِیْ تَقُوْلُ ؕ وَاللّٰهُ يَكْتُبُ مَا يُبَيِّتُوْنَ ۚ فَاَعْرِضْ
عَنْهُمْ وَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ؕ وَكَفٰى بِاللّٰهِ وَكِيْلًا ﴿٨١﴾ اَفَلَا يَتَدَبَّرُوْنَ
الْقُرْاٰنَ ؕ وَلَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ اللّٰهِ لَوَجَدُوْا فِيْهِ اخْتِلَافًا
كَثِيْرًا ﴿٨٢﴾ وَاِذَا جَآءَهُمْ اَمْرٌ مِّنَ الْاَمْنِ اَوِ الْخَوْفِ اَذَاعُوْا بِهٖ ؕ
وَلَوْ رَدُّوْهُ اِلَى الرَّسُوْلِ وَاِلٰۤى اُولِى الْاَمْرِ مِنْهُمْ لَعَلِمَهُ الَّذِيْنَ
يَسْتَنْۢبِطُوْنَهٗ مِنْهُمْ ؕ وَلَوْلَا فَضْلُ اللّٰهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهٗ لَاتَّبَعْتُمُ
الشَّيْطٰنَ اِلَّا قَلِيْلًا ﴿٨٣﴾ فَقَاتِلْ فِیْ سَبِيْلِ اللّٰهِ ۚ لَا تُكَلَّفُ اِلَّا
نَفْسَكَ وَحَرِّضِ الْمُؤْمِنِيْنَ ۚ عَسَى اللّٰهُ اَنْ يَّكُفَّ بَاْسَ الَّذِيْنَ
كَفَرُوْا ؕ وَاللّٰهُ اَشَدُّ بَاْسًا وَّاَشَدُّ تَنْكِيْلًا ﴿٨٤﴾ مَنْ يَّشْفَعْ شَفَاعَةً
حَسَنَةً يَّكُنْ لَّهٗ نَصِيْبٌ مِّنْهَا ۚ وَمَنْ يَّشْفَعْ شَفَاعَةً سَيِّئَةً يَّكُنْ
لَّهٗ كِفْلٌ مِّنْهَا ؕ وَكَانَ اللّٰهُ عَلٰى كُلِّ شَیْءٍ مُّقِيْتًا ﴿٨٥﴾ وَاِذَا حُيِّيْتُمْ
بِتَحِيَّةٍ فَحَيُّوْا بِاَحْسَنَ مِنْهَاۤ اَوْ رُدُّوْهَا ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلٰى
كُلِّ شَیْءٍ حَسِيْبًا ﴿٨٦﴾ اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ؕ لَيَجْمَعَنَّكُمْ اِلٰى يَوْمِ النصف
الْقِيٰمَةِ لَا رَيْبَ فِيْهِ ؕ وَمَنْ اَصْدَقُ مِنَ اللّٰهِ حَدِيْثًا ﴿٨٧﴾ ع ١١ ٨

81. (நபியே! "உம்மிடமிருக்கும்போது உமக்கு முற்றிலும்) கீழ்ப்படிதலாகும்" என அவர்கள் (தங்கள் வாயால்) கூறுகின்றனர்; பிறகு, அவர்கள் உம்மிடத்திலிருந்து வெளியேறிவிட்டாலோ, அவர்களில் ஒரு கூட்டத்தினர் (உம்மிடம்) தாம் கூறியதற்கு மாறாக இரவெல்லாம் (சதி) ஆலோசனை செய்து கொண்டே இருக்கின்றனர்; அவர்கள் இரவெல்லாம் (சதி) ஆலோசனை செய்பவற்றை அல்லாஹ் பதிவு செய்து கொள்கின்றான்; ஆதலால், நீர் அவர்களைப் புறக்கணித்து விடுவீராக! (சகல காரியங்களையும் ஒப்படைத்து முழுமையாக) அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைப்பீராக! (உம்மைப் பாதுகாப்பதற்கு) பொறுப்பேற்பவனாக இருக்க அல்லாஹ் போதுமானவன்.

82. இந்தக் குர்ஆனை அவர்கள் ஆய்ந்துணர வேண்டாமா? அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து உள்ளதாக இது இருந்தால் இதில் அநேக முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்.

83. மேலும், (யுத்த) அமைதியோ, அல்லது பீதியோ பற்றிய யாதொரு செய்தி அவர்களுக்கு வந்துவிட்டால், (உடனே) அவர்கள் அதனை (வெளியில் மக்களிடையே) பரப்பி விடுகின்றனர் . (அவ்வாறு செய்யாது) அதனை (அல்லாஹ்வுடைய ) தூதரிடமும், அவர்களில் (மார்க்க ஞானமுள்ள ) அதிகாரமுடையவர்களிடமும் தெரிவித்திருந்தால், அவர்களிலிருந்து அதனை ஆய்ந்து எடுப்பவர்கள் அதனை (நன்கு) அறிந்து கொள்வார்கள். மேலும், (விசுவாசிகளே!) அல்லாஹ்வுடைய பேரருளும், அவனுடைய கிருபையும் உங்கள் மீது இல்லாதிருந்தால், (உங்களில்) குறைவானவர்களைத் தவிர நீங்கள் யாவரும் ஷைத்தானையே பின்பற்றியிருப்பீர்கள்.

84. எனவே (நபியே!) நீர் அல்லாஹ்வுடைய பாதையில் போர் செய்வீராக! நீர் உம்மைத் தவிர (வேறெவரும்) கட்டாயப்படுத்தப்படுவதற்கில்லை. இன்னும் விசுவாசிகளை (போர் செய்ய)த் தூண்டுவீராக! நிராகரிப்போரின் யுத்தத்தை உங்களை விட்டும் அல்லாஹ் தடுத்து விடக்கூடும் ; (ஏனென்றால்)அல்லாஹ் , யுத்தம் செய்வதில் மிக வல்லவன் ;தண்டிப்பதிலும் மிகக் கடுமையானவன்.

85. எவரேனும் (யாதொரு) நன்மையான காரியத்திற்கு பரிந்துரை செய்தால், அதில் அவருக்கும் ஒரு பங்கு இருக்கும்; (அவ்வாறே) யாதொரு தீய விஷயத்திற்கு எவரேனும் பரிந்துரை செய்தால், அதிலிருந்து அவருக்கும் ஒரு பங்கு இருக்கும்; மேலும், அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுள்ளவனாக இருக்கின்றான்.

86. (எவராலும்) உங்களுக்கு முகமன் ('ஸலாம்') கூறப்பட்டால் (அதற்குப் பிரதியாக) அதைவிட அழகான (வாக்கியத்)தைக் கொண்டு நீங்கள் முகமன் கூறுங்கள்; அல்லது அதனையே திருப்பிக் கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ், ஒவ்வொரு பொருளைப்பற்றியும் கணக்குப் பார்க்கிறவனாக இருக்கின்றான்.

87. அல்லாஹ் _ அவனைத் தவிர (வேறு) வணங்கப்படுபவன் இல்லை; அவன், நிச்சயமாக உங்களை மறுமை நாளில் ஒன்று சேர்ப்பான்; இதில் சந்தேகமேயில்லை. இன்னும், வார்த்தையால் (அதை அறிவிப்பதில்) அல்லாஹ்வை விட மிக உண்மையாளன் யார்?

فَمَا لَكُمْ فِي الْمُنٰفِقِيْنَ فِئَتَيْنِ وَاللّٰهُ اَرْكَسَهُمْ بِمَا كَسَبُوْاؕ
اَتُرِيْدُوْنَ اَنْ تَهْدُوْا مَنْ اَضَلَّ اللّٰهُؕ وَمَنْ يُّضْلِلِ اللّٰهُ
فَلَنْ تَجِدَ لَهٗ سَبِيْلًا ﴿٨٨﴾ وَدُّوْا لَوْ تَكْفُرُوْنَ كَمَا كَفَرُوْا
فَتَكُوْنُوْنَ سَوَآءً فَلَا تَتَّخِذُوْا مِنْهُمْ اَوْلِيَآءَ حَتّٰى يُهَاجِرُوْا
فِيْ سَبِيْلِ اللّٰهِؕ فَاِنْ تَوَلَّوْا فَخُذُوْهُمْ وَاقْتُلُوْهُمْ حَيْثُ
وَجَدْتُّمُوْهُمْ۪ وَلَا تَتَّخِذُوْا مِنْهُمْ وَلِيًّا وَّلَا نَصِيْرًا ﴿٨٩﴾ اِلَّا
الَّذِيْنَ يَصِلُوْنَ اِلٰى قَوْمٍۭ بَيْنَكُمْ وَبَيْنَهُمْ مِّيْثَاقٌ اَوْ
جَآءُوْكُمْ حَصِرَتْ صُدُوْرُهُمْ اَنْ يُّقَاتِلُوْكُمْ اَوْ يُقَاتِلُوْا
قَوْمَهُمْؕ وَلَوْ شَآءَ اللّٰهُ لَسَلَّطَهُمْ عَلَيْكُمْ فَلَقٰتَلُوْكُمْۚ فَاِنِ
اعْتَزَلُوْكُمْ فَلَمْ يُقَاتِلُوْكُمْ وَاَلْقَوْا اِلَيْكُمُ السَّلَمَ ۙ فَمَا
جَعَلَ اللّٰهُ لَكُمْ عَلَيْهِمْ سَبِيْلًا ﴿٩٠﴾ سَتَجِدُوْنَ اٰخَرِيْنَ
يُرِيْدُوْنَ اَنْ يَّاْمَنُوْكُمْ وَيَاْمَنُوْا قَوْمَهُمْؕ كُلَّمَا رُدُّوْٓا اِلَى
الْفِتْنَةِ اُرْكِسُوْا فِيْهَاۚ فَاِنْ لَّمْ يَعْتَزِلُوْكُمْ وَيُلْقُوْٓا اِلَيْكُمُ
السَّلَمَ وَيَكُفُّوْٓا اَيْدِيَهُمْ فَخُذُوْهُمْ وَاقْتُلُوْهُمْ حَيْثُ
ثَقِفْتُمُوْهُمْؕ وَاُولٰٓئِكُمْ جَعَلْنَا لَكُمْ عَلَيْهِمْ سُلْطٰنًا مُّبِيْنًا ﴿٩١﴾ ع ١٢ ع ٩

88. (விசுவாசிகளே! வேஷதாரிகளான) முனாபிக்குகளைப் பற்றி நீங்கள் இருவகை (அபிப்பிராயங் கொண்ட) பிரிவினர்களாக இருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்கள் செய்த (தீ)வினையின் காரணமாக, அல்லாஹ் அவர்களைத் தலை கீழாக்கி விட்டான்; எவரை அல்லாஹ் தவறான பாதையில் செல்ல விட்டு விட்டானோ அவரை , நீங்கள் நேரான வழியில் செலுத்த நாடுகின்றீர்களா? எவரை அல்லாஹ் தவறான வழியில் செல்ல விட்டானோ அவருக்கு, யாதொரு வழியையும் நீர் காணவே மாட்டீர்!

89. (விசுவாசிகளே!) அவர்கள் நிராகரிப்போராகிவிட்டதைப் போல் நீங்கள் நிராகரிப்போராகி, பின்னர் நீங்கள்(அவர்களுக்குச்) சமமாகி விடுவதை அவர்கள் நாடுகிறார்கள். ஆகவே, அவர்கள் (தங்கள்) இல்லங்களை விட்டு அல்லாஹ்வுடைய பாதையில்(ஹிஜ்ரத்துச்செய்து) புறப்படும் வரையில், நீங்கள் அவர்களிலிருந்து எவர்களையும் நண்பர்களாக எடுத்துக் கொள்ள வேண்டாம்;(ஹிஜ்ரத்துச்செய்து புறப்பட வேண்டுமென்ற கட்டளையை) அவர்கள் புறக்கணித்து விட்டால், அவர்களை (க் கைதியாக)ப் பிடித்துக் கொள்ளுங்கள்; (எதிர்த்துப் போரிடும்) அவர்களைக் கண்டவிடமெல்லாம் கொன்று விடுங்கள்; தவிரவும், அவர்களிலிருந்து (யாரையும்) நண்பராகவும், உதவியாளராகவும் எடுத்துக் கொள்ளாதீர்கள்_

90. எவர்களுக்கும் உங்களுக்குமிடையே (சமாதான) உடன்படிக்கை இருக்கிறதோ அந்த சமூகத்தவர் பால் சென்று சேர்ந்து விட்டவர்களையும், அல்லது உங்களை எதிர்த்து யுத்தம் புரியவோ, தங்கள் இனத்தாரை எதிர்த்து யுத்தம் புரியவோ, அவர்களின் மனங்கள் நெருக்கடிக்குள்ளான நிலையில் உங்களிடம் வந்து சேர்ந்தவர்களையும் தவிர_(இத்தகையோரைக் கொல்லாதீர்கள்; சிறையும் பிடிக்காதீர்கள். ஏனென்றால்,) மேலும், அல்லாஹ் நாடியிருந்தால், அவர்களை உங்கள் மீது சாட்டியிருப்பான்; அப்போது உங்களை எதிர்த்து அவர்கள் போர் செய்திருப்பார்கள். ஆகவே, அவர்கள் உங்களை விட்டு விலகி இருந்து உங்களிடம் யுத்தம் புரியாமல், உங்களிடம் சமாதானத்தைக் கோரினால் (அதனை அங்கீகரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில்) அவர்களுக்கெதிராக (யுத்தம் புரிய) அல்லாஹ் உங்களுக்கு யாதொரு வழியையும் ஆக்கவில்லை.

91 (விசுவாசிகளே!) வேறு சிலரையும் நீங்கள் காண்பீர்கள்; அவர்கள் உங்களிடம் அபயம் பெற்றுக் கொள்வதுடன், (உங்களுடைய விரோதிகளாகிய) தங்கள் இனத்தாரிடமும் அபயம் பெற்றுக்கொள்ளவும் நாடுகிறார்கள்; குழப்பம் செய்வதின் பக்கம் இவர்கள் திருப்பப்படும் போதெல்லாம் , அதில் (கண் மூடி முகங்)குப்புற விழுந்து விடுவார்கள். ஆகவே அவர்கள் உங்கள் விரோதத்திலிருந்து விலகாமலும், உங்களிடம் சமாதானத்தைக் கோராமலும், தங்கள் கைகளை (உங்களுக்குத் தீங்கிழைப்பதிலிருந்து) தடுத்துக் கொள்ளாமலும் இருந்தால், அவர்களை நீங்கள் பிடித்துக் கொள்ளுங்கள்; (பிடித்த அவர்களைச் சிறையாக்குங்கள்; எதிர்த்துப் போரிடும்)அவர்களைக் கண்டவிடமெல்லாம் அவர்களைக் கொன்றுவிடுங்கள். இன்னும் அத்தகையோர் _ அவர்களுக்கு எதிராக (யுத்தம் புரிய,) உங்களுக்குத் தெளிவான அதிகாரத்தை நாம் ஆக்கிவிட்டோம்.

وَمَا كَانَ لِمُؤْمِنٍ اَنْ يَّقْتُلَ مُؤْمِنًا اِلَّا خَطَـًٔا ۚ وَمَنْ قَتَلَ مُؤْمِنًا خَطَـًٔا
فَتَحْرِيْرُ رَقَبَةٍ مُّؤْمِنَةٍ وَّدِيَةٌ مُّسَلَّمَةٌ اِلٰٓى اَهْلِهٖٓ اِلَّآ اَنْ يَّصَّدَّقُوْا ؕ فَاِنْ
كَانَ مِنْ قَوْمٍ عَدُوٍّ لَّكُمْ وَهُوَ مُؤْمِنٌ فَتَحْرِيْرُ رَقَبَةٍ مُّؤْمِنَةٍ ؕ وَاِنْ
كَانَ مِنْ قَوْمٍۢ بَيْنَكُمْ وَبَيْنَهُمْ مِّيْثَاقٌ فَدِيَةٌ مُّسَلَّمَةٌ اِلٰٓى اَهْلِهٖ وَ
تَحْرِيْرُ رَقَبَةٍ مُّؤْمِنَةٍ ۚ فَمَنْ لَّمْ يَجِدْ فَصِيَامُ شَهْرَيْنِ مُتَتَابِعَيْنِ ز
تَوْبَةً مِّنَ اللّٰهِ ؕ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا ﴿۹۲﴾ وَمَنْ يَّقْتُلْ مُؤْمِنًا مُّتَعَمِّدًا
فَجَزَآؤُهٗ جَهَنَّمُ خٰلِدًا فِيْهَا وَغَضِبَ اللّٰهُ عَلَيْهِ وَلَعَنَهٗ وَاَعَدَّ لَهٗ
عَذَابًا عَظِيْمًا ﴿۹۳﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا ضَرَبْتُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ
فَتَبَيَّنُوْا وَلَا تَقُوْلُوْا لِمَنْ اَلْقٰٓى اِلَيْكُمُ السَّلٰمَ لَسْتَ مُؤْمِنًا ۚ تَبْتَغُوْنَ
عَرَضَ الْحَيٰوةِ الدُّنْيَا ۫ فَعِنْدَ اللّٰهِ مَغَانِمُ كَثِيْرَةٌ ؕ كَذٰلِكَ كُنْتُمْ مِّنْ
قَبْلُ فَمَنَّ اللّٰهُ عَلَيْكُمْ فَتَبَيَّنُوْا ؕ اِنَّ اللّٰهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا ﴿۹۴﴾
لَا يَسْتَوِى الْقٰعِدُوْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ غَيْرُ اُولِى الضَّرَرِ وَالْمُجٰهِدُوْنَ
فِيْ سَبِيْلِ اللّٰهِ بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ ؕ فَضَّلَ اللّٰهُ الْمُجٰهِدِيْنَ
بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ عَلَى الْقٰعِدِيْنَ دَرَجَةً ؕ وَكُلًّا وَّعَدَ اللّٰهُ
الْحُسْنٰى ؕ وَفَضَّلَ اللّٰهُ الْمُجٰهِدِيْنَ عَلَى الْقٰعِدِيْنَ اَجْرًا عَظِيْمًا ﴿۹۵﴾ ۙ

92. மேலும் , தவறுதலாகஅன்றி ஒரு விசுவாசிக்கு மற்றொரு விசுவாசியைக் கொலை செய்வது, ஆகுமானதல்ல ; இன்னும் (உங்களில்) எவர் யாதொரு விசுவாசியைத் தவறுதலாகக் கொலை செய்து விட்டால், (அதற்கு நஷ்ட ஈடாக) விசுவாசியாகிய ஓர் அடிமையை விடுதலை செய்தலாகும்; இன்னும் அவர் குடும்பத்தார்பால் ஒப்படைக்கப்படும் நஷ்டஈடுமாகும். அ(க்குடும்பத்த)வர்கள் (மன்னித்துஅதை) தர்மமாக விட்டுவிட்டாலன்றி; ஆகவே (இறந்த) அவர், உங்களுக்குவிரோதமுள்ள சமூகத்தாரில் உள்ளவராக இருந்து,விசுவாசியாகவும் அவர் இருந்தால் அப்போது , விசுவாசியாகிய ஓர் அடிமையை விடுதலை செய்தலாகும்.இன்னும் உங்களுக்கும், எவர்களுக்கும் மத்தியில் உடன்படிக்கை இருக்கிறதோ அந்த சமூகத்தாரில் உள்ளவராக அவர் இருந்தால், அவருடைய குடும்பத்தார் பால் ஒப்படைக்கப்படும் நஷ்டஈடும் , விசுவாசியான ஓர் அடிமையை விடுதலை செய்தலுமாகும்.(இவ்வாறு செய்யும் வசதியை ) யார் பெறவில்லையோ அவர் அல்லாஹ்விடம் பாவ மீட்சிபெறுவதற்காக (மன்னிக்கக் கோரி) இரண்டு மாதம் தொடராக நோன்பு நோற்க வேண்டும். மேலும், அல்லாஹ் நன்கறிந்தவனாக ; தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான்.

93. மேலும் எவர், விசுவாசியை, வேண்டுமென்றே கொலை செய்தால், அவருக்குரிய கூலி நரகமாகும்.. அதில் அவர் நிரந்தரமாக(த்தங்கி)இருப்பவர்; இன்னும் அல்லாஹ் அவர் மீது கோபங்கொண்டு, அவரைச் சபித்தும் விடுவான். மகத்தான வேதனையையும் அவன் அவருக்குத் தயாராக்கி வைத்திருக்கின்றான்.

94. விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ்வுடைய பாதையில் (போருக்காக) நீங்கள் சென்றால்,(வழியில் எதிர்ப்படுவோர் யார் என்பதைத்) தெளிவு படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஸலாம் கூறியவரை இவ்வுலக வாழ்க்கைக்குரிய (அற்பப்) பொருளை நீங்கள் தேடியவர்களாக, ' நீ விசுவாசியல்ல ' என்று கூறி (அவரைக் கொன்று ) விடாதீர்கள். அல்லாஹ்விடத்தில் ஏராளமான போர்ப்பரிசுகள் இருக்கின்றன; இதற்கு முன்னர், நீங்களும் இவ்வாறே (பயந்து கொண்டு) இருந்தீர்கள்; அப்போதுஅல்லாஹ் உங்கள் மீது பேருபகாரம் செய்தான்; ஆகவே, ( உங்கள் முன் இருப்பவர்கள், விசுவாசிகளா அல்லவா என்பதைத்) தெளிவு படுத்திக்கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் , நீங்கள் செய்பவற்றை நன்கு உணர்பவனாக இருக்கின்றான்.

95. விசுவாசிகளில், தங்கடம் உடையவர்களைத் தவிர (வீட்டில்) உட்கார்ந்து கொண்டவர்கள், ( யுத்தத்திற்குச் சென்று) தங்களுடைய செல்வங்களாலும், உயிர்களாலும் அல்லாஹ்வுடைய பாதையில் அறப்போர் செய்வோருக்குச் சமமாக மாட்டார்கள். (ஏனென்றால்) தங்கள் செல்வங்களாலும், தங்கள் உயிர்களாலும் அறப்போர் புரிந்தோரை படித்தரத்தால் (வீட்டில்) உட்கார்ந்து விட்டவர்களைவிட அல்லாஹ் சிறப்பாக்கி வைத்திருக்கின்றான். இன்னும் (இவ்விரு பிரிவினரும் விசுவாசிகளாகவே இருப்பதனால்) இவர்கள் யாவருக்கும், நன்மையையே அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்; இன்னும், அறப்போர் செய்வோரை (அதில்கலந்து கொள்ளாது) உட்கார்ந்திருப்போரைவிட மகத்தான நற்கூலியால் அல்லாஹ் சிறப்பாக்கியிருக்கிறான்.

دَرَجٰتٍ مِّنْهُ وَمَغْفِرَةً وَّرَحْمَةً ؕ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا
رَّحِيْمًا ﴿٩٦﴾ اِنَّ الَّذِيْنَ تَوَفّٰىهُمُ الْمَلٰٓئِكَةُ ظَالِمِىْٓ ع ١٣ ٥ ١٠
اَنْفُسِهِمْ قَالُوْا فِيْمَ كُنْتُمْ ؕ قَالُوْا كُنَّا مُسْتَضْعَفِيْنَ
فِى الْاَرْضِ ؕ قَالُوْٓا اَلَمْ تَكُنْ اَرْضُ اللّٰهِ وَاسِعَةً فَتُهَاجِرُوْا
فِيْهَا ؕ فَاُولٰٓئِكَ مَاْوٰىهُمْ جَهَنَّمُ ؕ وَسَآءَتْ مَصِيْرًا ﴿٩٧﴾ۙ
اِلَّا الْمُسْتَضْعَفِيْنَ مِنَ الرِّجَالِ وَالنِّسَآءِ وَالْوِلْدَانِ
لَا يَسْتَطِيْعُوْنَ حِيْلَةً وَّلَا يَهْتَدُوْنَ سَبِيْلًا ﴿٩٨﴾ۙ
فَاُولٰٓئِكَ عَسَى اللّٰهُ اَنْ يَّعْفُوَ عَنْهُمْ ؕ وَكَانَ اللّٰهُ
عَفُوًّا غَفُوْرًا ﴿٩٩﴾ وَمَنْ يُّهَاجِرْ فِىْ سَبِيْلِ اللّٰهِ يَجِدْ
فِى الْاَرْضِ مُرٰغَمًا كَثِيْرًا وَّسَعَةً ؕ وَمَنْ يَّخْرُجْ
مِنْۢ بَيْتِهٖ مُهَاجِرًا اِلَى اللّٰهِ وَرَسُوْلِهٖ ثُمَّ يُدْرِكْهُ
الْمَوْتُ فَقَدْ وَقَعَ اَجْرُهٗ عَلَى اللّٰهِ ؕ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا
رَّحِيْمًا ﴿١٠٠﴾ وَاِذَا ضَرَبْتُمْ فِى الْاَرْضِ فَلَيْسَ عَلَيْكُمْ ع ١٤ ٤ ١١
جُنَاحٌ اَنْ تَقْصُرُوْا مِنَ الصَّلٰوةِ ۖ اِنْ خِفْتُمْ اَنْ يَّفْتِنَكُمُ
الَّذِيْنَ كَفَرُوْا ؕ اِنَّ الْكٰفِرِيْنَ كَانُوْا لَكُمْ عَدُوًّا مُّبِيْنًا ﴿١٠١﴾

96. (அல்லாஹ்) தன்னிடமிருந்து பதவிகளையும், மன்னிப்பையும், அருளையும் (அவர்களுக்குஅளிக்கிறான்.) இன்னும் அல்லாஹ், மிக்க மன்னிப்பவனாக, (இத்தகையோர் மீது) மிகக் கிருபையுடையவனாக இருக்கின்றான்.

97. தமக்குத்தாமே அநீதமிழைத்துக் கொண்டவர்களாக இருக்க அவர்களின் உயிரை மலக்குகள் கைப்பற்றும் பொழுது (அவர்களிடம்) "நீங்கள் எதில் இருந்தீர்கள்?" என்று கேட்பார்கள். அ(தற்க)வர்கள், " இப்பூமியில் நாங்கள் பலவீனமாக்கப்பட்டவர்களாக இருந்தோம்" என்று (பதில்) கூறுவார்கள்;(அதற்கு மலக்குகள்,)" அல்லாஹ்வுடைய பூமி விசாலமானதாக இல்லையா? நீங்கள் (இருந்த) இ(வ்விடத்)தை விட்டு (ஹிஜ்ரத்துச்செய்து) புறப்பட்டிருக்க வேண்டாமா?" என்று கேட்பார்கள்; இத்தகையோர், அவர்கள் தங்குமிடம் நரகந்தான்; செல்லுமிடத்தால் அது மிகக் கெட்டது.

98. (ஆனால்)ஆண்களிலும்,பெண்களிலும் சிறுவர்களிலும் பலவீனமாக்கப் பட்டவர்களைத் தவிர, (இவர்கள்) யாதொரு உபாயம் செய்துகொள்ள சக்திபெறமாட்டார்கள்; (அதை விட்டு வெளியேற) எந்த வழியையும் அறியமாட்டார்கள்.

99. ஆகவே அத்தகையோர்_ அவர்களை அல்லாஹ் மன்னித்துவிடக் கூடும்; இன்னும்,அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக,(பிழைகளை)மிகப் பொறுப்பவனாக இருக்கிறான்

100. மேலும் (இத்தகைய நிலைமையில்) அல்லாஹ்வுடைய பாதையில் எவர், (ஹிஜ்ரத்துச்செய்து)வெளியேறிவிடுகின்றாரோ அவர்,பூமியில் வசதியான அநேக புகலிடங்களையும், (பொருளாதார)வசதியையும் அடைவார். இன்னும், எவர் அல்லாஹ்வின்பாலும், அவனுடைய தூதரின்பாலும் ஹிஜ்ரத்துச் செய்தவராக தன் இல்லத்திலிருந்துபுறப்பட்டுப்பின்னர் (வழியிலேயே,) அவரை மரணம் வந்தடைந்து விட்டால் அப்போது அவருடைய (நற்)கூலி திட்டமாக அல்லாஹ்வின்மீது கடமையாக ஆகிவிடுகின்றது. மேலும் ( இத்தகையோருக்கு) அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையவனாக இருக்கின்றான்.

101. (விசுவாசங் கொண்டோரே!) நீங்கள் பூமியில் பிரயாணம் செய்தால், நிராகரிப்போர் உங்களைத் துன்புறுத்துவர் எனப் பயந்தால் நீங்கள் ( கஸர் தொழுவது, அதாவது உங்கள்) தொழுகையைச் சுருக்கிக் கொள்வது உங்களின் மீது குற்றமாகாது; (ஏனென்றால்) நிச்சயமாக நிராகரிப்போர் உங்களுக்குப் பகிரங்கமான விரோதிகளாகவே இருக்கின்றனர்.

وَاِذَا كُنْتَ فِيْهِمْ فَاَقَمْتَ لَهُمُ الصَّلٰوةَ فَلْتَقُمْ طَآئِفَةٌ
مِّنْهُمْ مَّعَكَ وَلْيَاْخُذُوْٓا اَسْلِحَتَهُمْ قف فَاِذَا سَجَدُوْا فَلْيَكُوْنُوْا
مِنْ وَّرَآئِكُمْ وَلْتَاْتِ طَآئِفَةٌ اُخْرٰى لَمْ يُصَلُّوْا فَلْيُصَلُّوْا
مَعَكَ وَلْيَاْخُذُوْا حِذْرَهُمْ وَاَسْلِحَتَهُمْ ۚ وَدَّ الَّذِيْنَ
كَفَرُوْا لَوْ تَغْفُلُوْنَ عَنْ اَسْلِحَتِكُمْ وَاَمْتِعَتِكُمْ فَيَمِيْلُوْنَ
عَلَيْكُمْ مَّيْلَةً وَّاحِدَةً ؕ وَلَا جُنَاحَ عَلَيْكُمْ اِنْ كَانَ بِكُمْ
اَذًى مِّنْ مَّطَرٍ اَوْ كُنْتُمْ مَّرْضٰٓى اَنْ تَضَعُوْٓا اَسْلِحَتَكُمْ ۚ وَ
خُذُوْا حِذْرَكُمْ ؕ اِنَّ اللّٰهَ اَعَدَّ لِلْكٰفِرِيْنَ عَذَابًا مُّهِيْنًا ﴿١٠٢﴾
فَاِذَا قَضَيْتُمُ الصَّلٰوةَ فَاذْكُرُوا اللّٰهَ قِيٰمًا وَّقُعُوْدًا
وَّعَلٰى جُنُوْبِكُمْ ۚ فَاِذَا اطْمَاْنَنْتُمْ فَاَقِيْمُوا الصَّلٰوةَ ۚ اِنَّ
الصَّلٰوةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِيْنَ كِتٰبًا مَّوْقُوْتًا ﴿١٠٣﴾ وَلَا
تَهِنُوْا فِى ابْتِغَآءِ الْقَوْمِ ؕ اِنْ تَكُوْنُوْا تَاْلَمُوْنَ فَاِنَّهُمْ
يَاْلَمُوْنَ كَمَا تَاْلَمُوْنَ ۚ وَتَرْجُوْنَ مِنَ اللّٰهِ مَا لَا يَرْجُوْنَ ؕ وَ
كَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا ﴿١٠٤﴾ ع اِنَّآ اَنْزَلْنَآ اِلَيْكَ الْكِتٰبَ بِالْحَقِّ لِتَحْكُمَ ع ١٥ ١٢
بَيْنَ النَّاسِ بِمَآ اَرٰىكَ اللّٰهُ ؕ وَلَا تَكُنْ لِّلْخَآئِنِيْنَ خَصِيْمًا ﴿١٠٥﴾ لا

102. (நபியே! யுத்த முனையில் ) நீரும் அவர்களுடன் இருந்து அவர்களுக்கு நீர் தொழவைக்க(இமாமாக முன்)நின்றால், அவர்களில் ஒரு பிரிவினர் (தொழ) நிற்கட்டும் ; மேலும், தங்களுடைய ஆயுதங்களை அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும். உம்முடன் இவர்கள் ஸஜ்தா செய்து முடித்துவிட்டால் அவர்கள் (அணியிலிருந்து விலகி) உங்கள் பின்புறம் (உங்களைக் காத்து) நிற்கவும்; (அது சமயம்) தொழாமலிருந்த மற்றொரு கூட்டத்தினர் வந்து உம்முடன் (சேர்ந்து) தொழவும்; அவர்கள் தம் எச்சரிக்கையையும் தம் ஆயுதங்களையும் எடுத்துக்கொள்ளவும்.. (ஏனென்றால்,) நீங்கள் உங்கள் பொருட்களிலிருந்தும், உங்கள் ஆயுதங்களிலிருந்தும் கவனக்குறைவாக இருந்துவிட்டால், உங்கள் மீது ஒரேயடியாகச்சாய்ந்து தாக்க வேண்டுமென்று அந்நிராகரிப்போர் விரும்புகின்றனர். இந்நிலைமையில், மழையின் காரணமாக உங்களுக்கு சங்கடமிருந்தாலோ, அல்லது நீங்கள் நோயாளிகளாக இருந்தாலோ, உங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்து விடுவதில் உங்கள் மீது குற்றமில்லை; இன்னும் நீங்கள் எச்சரிக்கையாகவே இருங்கள். நிச்சயமாக அல்லாஹ், நிராகரிப்போருக்கு இழிவு தரும் வேதனையைத் தயாராக்கி வைத்திருக்கின்றான்.

103. (விசுவாசங் கொண்டோரே! இவ்வாறு) நீங்கள் தொழுகையை முடித்துக்கொண்டால், பின்னர் நின்ற நிலையிலும், இருப்பிலும், உங்களுடைய விலாப்புறங்களின் மீது (படுத்திருக்கும் நிலையிலு)ம் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள். (விரோதிகளின் எதிர்ப்பிலிருந்து) நீங்கள் அச்சமற்றவர்களாகி விட்டால், அப்பொழுது (முறைப்படி) தொழுங்கள். ஏனென்றால், நிச்சயமாக தொழுகை விசுவாசிகளின் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கிறது.

104. மேலும் (பகைவரின்) கூட்டத்தைத் தேடிச் செல்வதில் நீங்கள் (சிறிதும்) சோர்வடையாதீர்கள்; நீங்கள் (போரில் காயமடைந்து ) துன்பமடைந்திருப்பீர்களானால், நீங்கள் துன்பம் அடைந்தது போன்று நிச்சயமாக அவர்களும் துன்பம் அடைவர்; மேலும் அவர்கள் ஆதரவுவைக்காததை (நற்கூலியை) அல்லாஹ்விடமிருந்து நீங்கள் ஆதரவுவைக்கிறீர்கள். மேலும் அல்லாஹ் நன்கறிகிறவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான்.

105. அல்லாஹ் உமக்கு அறிவித்ததைக் கொண்டு, மனிதர்களுக்கிடையில் நீர் தீர்ப்பளிப்பதற்காக, நிச்சயமாக (நபியே!)முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாமே உம்மீது இறக்கி வைத்திருக்கின்றோம். மேலும் சதிகாரர்களுக்கு (ச் சார்பாக) வாதாடுபவராக நீர் ஆகிவிட வேண்டாம்.

وَّاسْتَغْفِرِ اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ كَانَ غَفُوْرًا رَّحِيْمًا ۚ﴿۱۰۶﴾ وَلَا تُجَادِلْ
عَنِ الَّذِيْنَ يَخْتَانُوْنَ اَنْفُسَهُمْ ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ مَنْ
كَانَ خَوَّانًا اَثِيْمًا ۚ﴿۱۰۷﴾ ۙلا يَّسْتَخْفُوْنَ مِنَ النَّاسِ وَلَا
يَسْتَخْفُوْنَ مِنَ اللّٰهِ وَهُوَ مَعَهُمْ اِذْ يُبَيِّتُوْنَ مَا لَا يَرْضٰى
مِنَ الْقَوْلِ ؕ وَكَانَ اللّٰهُ بِمَا يَعْمَلُوْنَ مُحِيْطًا ﴿۱۰۸﴾ هٰۤاَنْتُمْ
هٰۤؤُلَاۤءِ جٰدَلْتُمْ عَنْهُمْ فِى الْحَيٰوةِ الدُّنْيَا ۫ فَمَنْ يُّجَادِلُ
اللّٰهَ عَنْهُمْ يَوْمَ الْقِيٰمَةِ اَمْ مَّنْ يَّكُوْنُ عَلَيْهِمْ وَكِيْلًا ﴿۱۰۹﴾ وَ
مَنْ يَّعْمَلْ سُوْۤءًا اَوْ يَظْلِمْ نَفْسَهٗ ثُمَّ يَسْتَغْفِرِ اللّٰهَ يَجِدِ
اللّٰهَ غَفُوْرًا رَّحِيْمًا ﴿۱۱۰﴾ وَمَنْ يَّكْسِبْ اِثْمًا فَاِنَّمَا يَكْسِبُهٗ عَلٰى
نَفْسِهٖ ؕ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا ﴿۱۱۱﴾ وَمَنْ يَّكْسِبْ خَطِيْۤـَٔةً
اَوْ اِثْمًا ثُمَّ يَرْمِ بِهٖ بَرِيْۤـًٔا فَقَدِ احْتَمَلَ بُهْتَانًا وَّاِثْمًا مُّبِيْنًا ﴿۱۱۲﴾ ع ۱۶ ۱۳
وَلَوْلَا فَضْلُ اللّٰهِ عَلَيْكَ وَرَحْمَتُهٗ لَهَمَّتْ طَّاۤئِفَةٌ مِّنْهُمْ
اَنْ يُّضِلُّوْكَ ؕ وَمَا يُضِلُّوْنَ اِلَّاۤ اَنْفُسَهُمْ وَمَا يَضُرُّوْنَكَ مِنْ
شَيْءٍ ؕ وَاَنْزَلَ اللّٰهُ عَلَيْكَ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَعَلَّمَكَ
مَا لَمْ تَكُنْ تَعْلَمُ ؕ وَكَانَ فَضْلُ اللّٰهِ عَلَيْكَ عَظِيْمًا ﴿۱۱۳﴾ الثلٰثة

106. இன்னும் நீர் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத்தேடுவீராக! நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையவனாக இருக்கின்றான்.

107. (நபியே! பிறருக்குத் தீங்கிழைத்து) தமக்குத்தாமே மோசடி செய்து கொண்டார்களே அத்தகையவர்களுக்காக, நீர் வாதாட வேண்டாம்; (ஏனென்றால்,) கொடிய பாவியான, மிக மோசக்காரனாக இருக்கிறவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கமாட்டான்.

108. இவர்கள், (தங்கள் மோசடிகளை) மனிதர்களிடமிருந்து மறைக்கின்றார்கள்; அவர்கள் (அதனை) அல்லாஹ்விடமிருந்து மறைத்துவிடவே முடியாது. (ஏனெனில்) அவன் பேச்சால் பொருந்திக்கொள்ளாததைக் கொண்டு, இவர்கள் இரவெல்லாம் (சதிசெய்ய) ஆலோசனை செய்யும் போது அவன் அவர்களுடன்தான் இருக்கின்றான். மேலும், அல்லாஹ் அவர்கள் செய்து கொண்டிருப்பவற்றை (தன் அறிவால்) சூழ்ந்து கொண்டவனாக இருக்கின்றான்.

109. அறிந்து கொள்ளுங்கள்! நீங்கள்தானே அவர்கள்; அவர்களுக்காக உலகவாழ்வில் நீங்கள் வாதாடுகிறீர்கள் ; கியாமத்து நாளில் அவர்களுக்காக அல்லாஹ்விடம் வாதாடுபவர் யார் ? அல்லது எவர் இவர்களுக்கு பொறுப்பேற்பவராக இருப்பார்?

110. மேலும், எவர் ஒரு தீமையைச் செய்துவிட்டு, அல்லது தனக்குத் தானே அநீதமிழைத்துவிட்டு, பின்னர் ( பச்சாதாபப்பட்டு) அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரினால் அல்லாஹ்வை மிக்க மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையவனாக அவர் காண்பார்.

111. இன்னும், எவர் பாவத்தைச் சம்பாதிக்கின்றாரோ ,அவர் அதனைச் சம்பாதிப்பதெல்லாம் நிச்சயமாகத் தனக்குக் கேடாகவே (தான்). இன்னும், அல்லாஹ், (யாவற்றையும்) நன்கறிகிறவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான்.

112. அன்றியும் எவர், யாதொரு தவறையோ அல்லது பாவத்தையோ சம்பாதித்து, பின்னர் நிரபராதியான (மற்றொரு)வர்மீது அதனைச் சுமத்தினால், அப்போது நிச்சயமாக அவர் அவதூரையும், பகிரங்கமான பாவத்தையுமே சுமந்து கொண்டவராவார்.

113. இன்னும், (நபியே!) உம்மீது அல்லாஹ்வின் பேரருளும், அவனது கிருபையும் இல்லாதிருந்தால், அவர்களில் ஒரு கூட்டத்தினர் உம்மை வழி தவறச் செய்ய முயன்றிருப்பர். இன்னும், அவர்கள் தங்களையே தவிர, (உம்மை) வழி கெடுக்க முடியாது, அவர்கள் உமக்கு யாதொரு தீங்கிழைத்துவிடவும் முடியாது; மேலும், அல்லாஹ் இவ்வேதத்தையும், ஞானத்தையும் உம்மீது இறக்கி வைத்தான்; இன்னும், நீர் அறியாதிருந்தவற்றையும் அவன் உமக்குக் கற்றுக் கொடுத்தான்; மேலும், உம்மீது அல்லாஹ்வுடைய பேரருள் மகத்தானதாகவே இருக்கின்றது.

لَا خَيْرَ فِيْ كَثِيْرٍ مِّنْ نَّجْوٰىهُمْ اِلَّا مَنْ اَمَرَ بِصَدَقَةٍ اَوْ
مَعْرُوْفٍ اَوْ اِصْلَاحٍۭ بَيْنَ النَّاسِ ؕ وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ
ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ فَسَوْفَ نُؤْتِيْهِ اَجْرًا عَظِيْمًا ﴿١١٤﴾ وَمَنْ
يُّشَاقِقِ الرَّسُوْلَ مِنْۢ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدٰى وَ
يَتَّبِعْ غَيْرَ سَبِيْلِ الْمُؤْمِنِيْنَ نُوَلِّهٖ مَا تَوَلّٰى وَنُصْلِهٖ
جَهَنَّمَ ؕ وَسَآءَتْ مَصِيْرًا ﴿١١٥﴾ؑ اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ ع ١٧ ١٤
بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ ؕ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ
فَقَدْ ضَلَّ ضَلٰلًاۢ بَعِيْدًا ﴿١١٦﴾ اِنْ يَّدْعُوْنَ مِنْ دُوْنِهٖۤ اِلَّآ
اِنٰثًا ۚ وَاِنْ يَّدْعُوْنَ اِلَّا شَيْطٰنًا مَّرِيْدًا ﴿١١٧﴾ لا لَّعَنَهُ اللّٰهُ ۘ وقف لازم
وَقَالَ لَاَتَّخِذَنَّ مِنْ عِبَادِكَ نَصِيْبًا مَّفْرُوْضًا ﴿١١٨﴾ لا
وَّلَاُضِلَّنَّهُمْ وَلَاُمَنِّيَنَّهُمْ وَلَاٰمُرَنَّهُمْ فَلَيُبَتِّكُنَّ اٰذَانَ
الْاَنْعَامِ وَلَاٰمُرَنَّهُمْ فَلَيُغَيِّرُنَّ خَلْقَ اللّٰهِ ؕ وَمَنْ يَّتَّخِذِ
الشَّيْطٰنَ وَلِيًّا مِّنْ دُوْنِ اللّٰهِ فَقَدْ خَسِرَ خُسْرَانًا مُّبِيْنًا ﴿١١٩﴾ ؕ
يَعِدُهُمْ وَيُمَنِّيْهِمْ ؕ وَمَا يَعِدُهُمُ الشَّيْطٰنُ اِلَّا غُرُوْرًا ﴿١٢٠﴾
اُولٰٓئِكَ مَاْوٰىهُمْ جَهَنَّمُ ۫ وَلَا يَجِدُوْنَ عَنْهَا مَحِيْصًا ﴿١٢١﴾

114. தர்மத்தைப்பற்றி, அல்லது நன்மையானவற்றைப்பற்றி, அல்லது மனிதர்களுக் கிடையில் சமாதானம் ஏற்படுத்துவதைப்பற்றி ஏவியவரைத் தவிர, அவர்கள் பேசும் இரகசியங்களில் பெரும்பாலானவற்றில் யாதொரு நன்மையுமில்லை. மேலும், எவர் அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி, அதைச் செய்தால் நாம் அவர்களுக்கு மகத்தான (நற்)கூலியைத் தருவோம்.

115. இன்னும், நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவானதன்பின்னர் எவர், (நம்முடைய) இத்தூதருக்கு மாறு செய்து, விசுவாசிகளின் வழியல்லாத(வேறுவழியான)தைப் பின்பற்றுகிறாரோ அவரை நாம், அவர் திரும்பிய (தவறான) வழியிலேயே திருப்பிவிடுவோம்; (பின்னர்) அவரை நரகத்தில் புகுத்திவிடுவோம். அது சென்றடையுமிடத்தில் மிகக் கெட்டது.

116. நிச்சயமாக அல்லாஹ், தனக்கு இணைவைக்கப் படுவதை மன்னிக்கமாட்டான்; மேலும், இதல்லாத (குற்றத்)தை தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான்; இன்னும் யார் அல்லாஹ்வுக்கு இணைவைப்பாரோ, அவர் திட்டமாக வெகு தூரமான வழி கேடாக வழி கெட்டுவிட்டார்.

117. அவனைத்தவிர்த்து, அவர்கள் பெண் (தெய்வங்)களைத்தவிர (வணக்கத்தில்) (வேறெதனையும்) அழைக்கவில்லை; மூர்க்கத்தனம் கொண்டவனான ஷைத்தானைத் தவிர (வேறு யாரையும்) அவர்கள் அழைக்கவுமில்லை.

118. (தீய வழி நடத்தும் ஷைத்தானாகிய) அவனை அல்லாஹ் சபித்தான்; அ(தற்க)வன், "உன் அடியார்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியை நிச்சயமாக நான் எடுத்துக் கொள்வேன்" என்று கூறினான்.

119. "இன்னும் நிச்சயமாக நான் அவர்களை வழிகெடுப்பேன்; அவர்களுக்கு வீணான ஆசைகளையும் உண்டாக்குவேன்; நிச்சயமாக அவர்களுக்கு நான் கட்டளையும் இடுவேன்; அப்போது (அல்லாஹ் அல்லாதவருக்காக நேர்ச்சை செய்து விடப்பட்ட ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) கால்நடைகளின் காதுகளை அவர்கள் அறுத்து விடுவர்; இன்னும், அவர்களை நிச்சயமாக நான் ஏவுவேன்; அப்போது அல்லாஹ்வின் சிருஷ்டி(களுடைய கோலங்)களை நிச்சயமாக அவர்கள் மாற்றிவிடுவர் (என்றும் ஷைத்தான் கூறினான்). மேலும் எவர் அல்லாஹ்வையன்றி, (இத்தகைய) ஷைத்தானை (தனக்குப்) பாதுகாவலனாக எடுத்துக் கொள்கின்றாரோ, நிச்சயமாக அவர் தெளிவான நஷ்டத்தையே அடைந்துவிடுவார்.

120. (ஷைத்தானாகிய) அவன் அவர்களுக்கு வாக்களிக்கின்றான்; அவர்களுக்கு வீணான ஆசைகளையும் ஊட்டுகின்றான்; மேலும், ஏமாற்றத்தைத் தவிர (வேறு எதையும்) ஷைத்தான் அவர்களுக்கு வாக்களிப்பதில்லை.

121. இத்தகையோர்_அவர்கள் தங்குமிடம் நரகம்தான்; அவர்கள் அதைவிட்டும் தப்பி ஓடும் இடத்தையும் காண மாட்டார்கள்.

وَالَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ سَنُدْخِلُهُمْ جَنّٰتٍ
تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَآ اَبَدًا ؕ وَعْدَ اللّٰهِ
حَقًّا ؕ وَمَنْ اَصْدَقُ مِنَ اللّٰهِ قِيْلًا ﴿١٢٢﴾ لَيْسَ بِاَمَانِيِّكُمْ
وَلَآ اَمَانِيِّ اَهْلِ الْكِتٰبِ ؕ مَنْ يَّعْمَلْ سُوْٓءًا يُّجْزَ بِهٖ ۙ وَ
لَا يَجِدْ لَهٗ مِنْ دُوْنِ اللّٰهِ وَلِيًّا وَّلَا نَصِيْرًا ﴿١٢٣﴾ وَمَنْ يَّعْمَلْ
مِنَ الصّٰلِحٰتِ مِنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى وَهُوَ مُؤْمِنٌ فَاُولٰٓئِكَ
يَدْخُلُوْنَ الْجَنَّةَ وَلَا يُظْلَمُوْنَ نَقِيْرًا ﴿١٢٤﴾ وَمَنْ اَحْسَنُ
دِيْنًا مِّمَّنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ وَّاتَّبَعَ مِلَّةَ
اِبْرٰهِيْمَ حَنِيْفًا ؕ وَاتَّخَذَ اللّٰهُ اِبْرٰهِيْمَ خَلِيْلًا ﴿١٢٥﴾ وَلِلّٰهِ مَا فِي
السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ؕ وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيْطًا ﴿١٢٦﴾ ع ١٨ ١١ ١٥
وَيَسْتَفْتُوْنَكَ فِي النِّسَآءِ ؕ قُلِ اللّٰهُ يُفْتِيْكُمْ فِيْهِنَّ ۙ وَمَا
يُتْلٰى عَلَيْكُمْ فِي الْكِتٰبِ فِيْ يَتٰمَى النِّسَآءِ الّٰتِيْ لَا
تُؤْتُوْنَهُنَّ مَا كُتِبَ لَهُنَّ وَتَرْغَبُوْنَ اَنْ تَنْكِحُوْهُنَّ
وَالْمُسْتَضْعَفِيْنَ مِنَ الْوِلْدَانِ ۙ وَاَنْ تَقُوْمُوْا لِلْيَتٰمٰى
بِالْقِسْطِ ؕ وَمَا تَفْعَلُوْا مِنْ خَيْرٍ فَاِنَّ اللّٰهَ كَانَ بِهٖ عَلِيْمًا ﴿١٢٧﴾

122. மேலும், விசுவாசங்கொண்டு, நற்கருமங்களும் செய்கின்றார்களே அத்தகையோர் _ அவர்களை நாம் (மறுமையில்) சுவனபதிகளில் பிரவேசிக்கச்செய்வோம் ; அவற்றின்கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்; அவர்கள் அவற்றில் நிரந்தரமாக என்றென்றுமே (தங்கி)இருப்பவர்கள்; அல்லாஹ்வுடைய (இவ்)வாக்குறுதி (முற்றிலும்) உண்மையானதே;மேலும்,அல்லாஹ்வைவிட சொல்லால் மிக்க உண்மையாளன் யார்?

123. (விசுவாசிகளே! மறுமையில்) உங்கள் வீண் ஆசைப் படியோ, வேதத்தையுடையோர் வீண் ஆசைப் படியோ (சுவனம் பிரவேசிப்பதென்பது) இல்லை; எவர் தீமை செய்கின்றாரோ அவர், அதற்குரிய தண்டனையைக் கொடுக்கப்படுவார்; அவர் அல்லாஹ்வையன்றித் தனக்குப்பாது காவலனையோ அல்லது உதவி புரிவோரையோ (அங்கு) காணமாட்டார்.

124. இன்னும், ஆணாயினும்,அல்லது பெண்ணாயினும், எவர் உண்மையாகவே விசுவாசங்கொண்டவராக இருக்க , நற்கருமங்களைச் செய்வாராயின் _ அத்தகையோர் சுவனத்தில் பிரவேசிப்பார்கள் ; அவர்கள் அற்ப அளவு அநீதியும் செய்யப் படமாட்டார்கள்.

125. எவர் அல்லாஹ்வுக்கு (முற்றிலும் வழிபட்டு) தன் முகத்தை ஒப்படைத்து விட்டு, அவர் நன்மை செய்தவராக இருக்க, (அசத்தியத்திலிருந்து நீங்கி) சத்தியத்தைச் சார்ந்த இப்றாஹீமுடைய மார்க்கத்தையும் பின்பற்றுகிறாரோ அவரைவிட மார்க்கத்தால் மிக அழகானவர் யார்? மேலும், அல்லாஹ் இப்றாஹீமைத் (தன்னுடைய)உற்ற தோழராக எடுத்துக் கொண்டான்.

126. வானங்களிலுள்ளவை, மற்றும் பூமியிலுள்ளவை அல்லாஹ்வுக்கே உரியன; மேலும் அல்லாஹ், ஒவ்வொரு பொருளையும் சூழ்ந்த(றிப)வனாக இருக்கின்றான்.

127. (நபியே!) உம்மிடம் அவர்கள், பெண்கள் பற்றிய மார்க்கத்தீர்ப்பைக் கேட்கின்றார்கள்; அவர்கள் பற்றி, அல்லாஹ் உங்களுக்குத் தீர்ப்புக்கூறுவான் என்று நீர் கூறுவீராக! மேலும், (இதற்கு முன்னர் பெண்களைப் பற்றி) வேதத்தில் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கப்படுவது: எந்தப்பெண்களுக்கு அவர்களை நீங்கள் திருமணம் முடிக்க ஆசித்தவர்களாக இருக்க, அவர்களுக்கு விதிக்கப்பட்டதை நீங்கள் கொடுக்கமாட்டீர்களோ அத்தகைய அனாதைப் பெண்களைப் பற்றியதும், சிறார்களில் பலவீனமாக்கப்பட்டவர்கள் பற்றியதும், இன்னும் அனாதைகளுக்கு நீங்கள் நீதியை நிலைநிறுத்துவது பற்றியதுமாகும். இன்னும், (அவர்களுக்கு) நீங்கள் நன்மையில் எதைச்செய்கின்றீர்களோ அதனை, நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

وَاِنِ امْرَاَةٌ خَافَتْ مِنْۢ بَعْلِهَا نُشُوْزًا اَوْ اِعْرَاضًا فَلَا
جُنَاحَ عَلَيْهِمَآ اَنْ يُّصْلِحَا بَيْنَهُمَا صُلْحًا ؕ وَالصُّلْحُ خَيْرٌ ؕ
وَاُحْضِرَتِ الْاَنْفُسُ الشُّحَّ ؕ وَاِنْ تُحْسِنُوْا وَتَتَّقُوْا فَاِنَّ اللّٰهَ
كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا ﴿۱۲۸﴾ وَلَنْ تَسْتَطِيْعُوْٓا اَنْ تَعْدِلُوْا
بَيْنَ النِّسَآءِ وَلَوْ حَرَصْتُمْ فَلَا تَمِيْلُوْا كُلَّ الْمَيْلِ فَتَذَرُوْهَا
كَالْمُعَلَّقَةِ ؕ وَاِنْ تُصْلِحُوْا وَتَتَّقُوْا فَاِنَّ اللّٰهَ كَانَ غَفُوْرًا
رَّحِيْمًا ﴿۱۲۹﴾ وَاِنْ يَّتَفَرَّقَا يُغْنِ اللّٰهُ كُلًّا مِّنْ سَعَتِهٖ ؕ وَكَانَ
اللّٰهُ وَاسِعًا حَكِيْمًا ﴿۱۳۰﴾ وَلِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ؕ
وَلَقَدْ وَصَّيْنَا الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ وَاِيَّاكُمْ اَنِ
اتَّقُوا اللّٰهَ ؕ وَاِنْ تَكْفُرُوْا فَاِنَّ لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي
الْاَرْضِ ؕ وَكَانَ اللّٰهُ غَنِيًّا حَمِيْدًا ﴿۱۳۱﴾ وَلِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ
وَمَا فِي الْاَرْضِ ؕ وَكَفٰى بِاللّٰهِ وَكِيْلًا ﴿۱۳۲﴾ اِنْ يَّشَاْ يُذْهِبْكُمْ
اَيُّهَا النَّاسُ وَيَاْتِ بِاٰخَرِيْنَ ؕ وَكَانَ اللّٰهُ عَلٰى ذٰلِكَ
قَدِيْرًا ﴿۱۳۳﴾ مَنْ كَانَ يُرِيْدُ ثَوَابَ الدُّنْيَا فَعِنْدَ اللّٰهِ
ثَوَابُ الدُّنْيَا وَالْاٰخِرَةِ ؕ وَكَانَ اللّٰهُ سَمِيْعًا بَصِيْرًا ﴿۱۳۴﴾ ع ۱۹ ع ۸ ۱۶

128. இன்னும் ஒரு பெண் தன் கணவனிடமிருந்து வெறுப்பையோ அல்லது புறக்கணிப்பையோ பயந்தாளானால், அவர்களிருவரும் தங்களிருவருக்கிடையே ஒரு சமாதானத்தை எற்படுத்திக் கொள்வதில் அவ்விருவர் மீதும் குற்றமில்லை; சமாதானமே மிகமேலானது; (பொதுவாக) மனங்கள் உலோபித்தனத்திற்கு உட்பட்டு விடுகின்றன; இன்னும் நீங்கள் (ஒவ்வொருவரும் மற்றவருக்கு) உபகாரியாயிருந்து (அல்லாஹ்வுக்குப்) பயந்தும் கொண்டால், நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை நன்கு உணர்ந்து கொள்பவனாக இருக்கின்றான்.

129. இன்னும், நீங்கள் (உங்கள்) மனைவியருக்கிடையில் எவ்வளவு விரும்பிய போதிலும் நீதமாக நடக்க நீங்கள் சக்திபெறவே மாட்டீர்கள். ஆனால், (ஒரே மனைவியின் பக்கம்) நீங்கள் முற்றிலும் சாய்ந்து (மற்ற) அவளை(அந்தரத்தில்) தொங்கவிடப் பட்டவளைப்போல் விட்டுவிடாதீர்கள்; இன்னும் நீங்கள் சமாதானமாக நடந்துகொண்டு, (அல்லாஹ்வையும்) பயந்து கொண்டால் அப்போது நிச்சயமாக அல்லாஹ் (உங்கள் குற்றங்களை) மிக மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையவனாக இருக்கின்றான்.

130. மேலும் (சேர்ந்து வாழ முடியாமல்,) அவ்விருவரும் பிரிந்து விட்டால், அல்லாஹ்,, தன் தாராளத்தினால் (அவர்களில்) ஒவ்வொருவரையும் முற்றிலும் தேவையற்றவராக ஆக்கி விடுவான்; (கொடையளிப்பதில்) அல்லாஹ் மிக விசாலமானவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான்

131. மேலும், வானங்களிலுள்ளவை, மற்றும் பூமியிலுள்ளவை அல்லாஹ்வுக்கே உரியன; "உங்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களுக்கும், இன்னும் உங்களுக்கும் அல்லாஹ்வையே பயந்துகொள்ளுங்கள்" என்று நிச்சயமாக நாம் (நல்) உபதேசம் செய்தோம்; நீங்கள் அவனை நிராகரித்து விட்டால் நிச்சயமாக, வானங்களிலுள்ளவை, மற்றும் பூமியிலுள்ளவை அல்லாஹ்வுக்கே உரியன. அல்லாஹ் (எவருடைய) தேவையும் அற்றவனாக, (யாவரின்) புகழுக்குரியவனாக இருக்கின்றான்.

132. வானங்களிலுள்ளவை, மற்றும் பூமியிலுள்ளவை அல்லாஹ்வுக்கே உரியன; (உங்களின் எல்லாக்காரியங்களையும்) பொறுப்பேற்றுக் கொள்வதில் அல்லாஹ் (ஒருவனே) போதுமானவன்.

133. மனிதர்களே! அவன் நாடினால் உங்களை அழித்து, (உங்கள் இடத்தில்) மற்றவர்களைக் கொண்டு வருவான்; இன்னும் அல்லாஹ் இவ்வாறு செய்ய பேராற்றலுடையோனாகவே இருக்கின்றான்.

134. (விசுவாசங்கொண்டோரே!) எவர், இம்மையின் பலனை (மட்டும் அடைய) நாடுபவராக இருப்பின் (அவர் அறிந்து கொள்ளட்டும்) அல்லாஹ் விடத்திலோ, இம்மை இன்னும் மறுமையின் பலன் இருக்கின்றது. மேலும் அல்லாஹ் செவியேற்கிறவனாக, பார்க்கிறவனாக இருக்கின்றான்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ بِالْقِسْطِ شُهَدَآءَ لِلّٰهِ
وَلَوْ عَلٰۤى اَنْفُسِكُمْ اَوِ الْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ ۚ اِنْ يَّكُنْ غَنِيًّا
اَوْ فَقِيْرًا فَاللّٰهُ اَوْلٰى بِهِمَا ۫ فَلَا تَتَّبِعُوا الْهَوٰۤى اَنْ تَعْدِلُوْا ۚ
وَاِنْ تَلْوٗۤا اَوْ تُعْرِضُوْا فَاِنَّ اللّٰهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا ﴿١٣٥﴾
يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَالْكِتٰبِ الَّذِيْ نَزَّلَ
عَلٰى رَسُوْلِهٖ وَالْكِتٰبِ الَّذِيْۤ اَنْزَلَ مِنْ قَبْلُ ؕ وَمَنْ يَّكْفُرْ بِاللّٰهِ
وَمَلٰٓئِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ وَالْيَوْمِ الْاٰخِرِ فَقَدْ ضَلَّ ضَلٰلًاۢ
بَعِيْدًا ﴿١٣٦﴾ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا ثُمَّ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا ثُمَّ
ازْدَادُوْا كُفْرًا لَّمْ يَكُنِ اللّٰهُ لِيَغْفِرَ لَهُمْ وَلَا لِيَهْدِيَهُمْ سَبِيْلًا ؕ ﴿١٣٧﴾
بَشِّرِ الْمُنٰفِقِيْنَ بِاَنَّ لَهُمْ عَذَابًا اَلِيْمَا ﴿١٣٨﴾ ۙ الَّذِيْنَ يَتَّخِذُوْنَ
الْكٰفِرِيْنَ اَوْلِيَآءَ مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ ؕ اَيَبْتَغُوْنَ عِنْدَهُمُ
الْعِزَّةَ فَاِنَّ الْعِزَّةَ لِلّٰهِ جَمِيْعًا ﴿١٣٩﴾ ؕ وَقَدْ نَزَّلَ عَلَيْكُمْ فِي الْكِتٰبِ
اَنْ اِذَا سَمِعْتُمْ اٰيٰتِ اللّٰهِ يُكْفَرُ بِهَا وَيُسْتَهْزَاُ بِهَا فَلَا تَقْعُدُوْا
مَعَهُمْ حَتّٰى يَخُوْضُوْا فِيْ حَدِيْثٍ غَيْرِهٖۤ ۖ اِنَّكُمْ اِذًا مِّثْلُهُمْ ؕ
اِنَّ اللّٰهَ جَامِعُ الْمُنٰفِقِيْنَ وَالْكٰفِرِيْنَ فِيْ جَهَنَّمَ جَمِيْعًا ۙ ﴿١٤٠﴾

135. விசுவாசங்கொண்டோரே! (நீங்கள் சாட்சி கூறினால், அது) உங்களுக்கோ, அல்லது உங்கள் பெற்றோருக்கோ, அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருந்த போதிலும், நீதியை நிலைநிறுத்தியவர்களாக அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாக இருங்கள். ( சாட்சி கூறப்படும் ) அவர் பணக்காரராக இருந்தாலும் சரி, அல்லது ஏழையாக இருந்தாலும் சரி, (உண்மையையே கூறுங்கள். )அல்லாஹ் அவ்விருவருக்கும்(அவர்களைக் காப்பாற்றுவதற்கு) மிக உரியவன். இன்னும், நீங்கள் நியாயம் வழங்குவதில் (உங்கள் மனோ) இச்சையைப் பின்பற்றாதீர்கள்; நீங்கள் (சாட்சியத்தை) மாற்றிக்கூறினாலும், அல்லது (சாட்சிகூறாது) புறக்கணித்தாலும், நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை நன்குணர்பவனாக இருக்கின்றான்.

136. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், அவன் தன்னுடைய (இத்) தூதர் மீது இறக்கிவைத்த இவ்வேதத்தையும், (இதற்கு) முன்னர் அவன் இறக்கிய வேதங்களையும் விசுவாசியுங்கள்; இன்னும் எவர் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும் நிராகரிக்கின்றாரோ, நிச்சயமாக அவர் மிக தூரமான வழிகேடாக வழிகெட்டுவிட்டார்.

137. நிச்சயமாக விசுவாசங்கொண்டு, பின்னர் நிராகரித்து, பின்னர் அவர்கள் விசுவாசம் கொண்டு, பின்னரும் நிராகரித்து, பின்னரும் நிராகரிப்பை அதிகப்படுத்திக் கொண்டனரே அத்தகையோர்_ அவர்களை அல்லாஹ் மன்னிப்பவனாக இல்லை; இன்னும் அவர்களுக்கு (நேர்) வழிகாட்டுபவனாகவும் இல்லை.

138. (நபியே! வேஷதாரிகளாகிய) முனாஃபிக்குகளுக்கு நிச்சயமாகத் துன்புறுத்தும் வேதனை உண்டென்று நீர் அவர்களுக்கு நன்மாராயங்கூறுவீராக!

139. அத்தகையோர் விசுவாசிகளைத் தவிர்த்து, நிராகரிப்போரையே (தங்கள்) பாதுகாவலர்களாக எடுத்துக் கொள்கிறார்கள்; இவர்கள், அவர்களிடத்தில் கண்ணியத்தை(அடையத்) தேடுகிறார்களா? (அது அவர்களுக்கில்லை, ஏனெனில்) நிச்சயமாக கண்ணியம் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியதாகும்.

140. மேலும், அல்லாஹ்வுடைய வசனங்களை_ அவற்றை நிராகரிக்கப்படுவதையோ, அல்லது பரிகசிக்கப்படுவதையோ நீங்கள் செவியுற்றால் அவர்கள் இதனைத் தவிர்த்து வேறு விஷயத்தில் ஈடுபடும் வரையில் நீங்கள் அவர்களுடன் உட்கார வேண்டாம் என நிச்சயமாக (அல்லாஹ்வாகிய) அவன் (இவ்)வேதத்தில் உங்களுக்கு இறக்கி வைத்திருக்கிறான். (அவ்வாறு உட்கார்ந்தால்,) அந்நேரத்தில் நிச்சயமாக நீங்களும் அவர்களைப்போன்றுதான் (ஆவீர்கள்); நிச்சயமாக அல்லாஹ், (வேஷதாரிகளான ) முனாஃபிக்குகள், இன்னும் நிராகரிப்போர்கள் அனைவரையும் நரகத்தில் ஒன்று சேர்த்து விடக்கூடியவன்.

الَّذِيْنَ يَتَرَبَّصُوْنَ بِكُمْ ۚ فَاِنْ كَانَ لَكُمْ فَتْحٌ مِّنَ اللّٰهِ قَالُوْٓا
اَلَمْ نَكُنْ مَّعَكُمْ ۖ وَاِنْ كَانَ لِلْكٰفِرِيْنَ نَصِيْبٌ ۙ قَالُوْٓا اَلَمْ
نَسْتَحْوِذْ عَلَيْكُمْ وَنَمْنَعْكُمْ مِّنَ الْمُؤْمِنِيْنَ ؕ فَاللّٰهُ يَحْكُمُ بَيْنَكُمْ
يَوْمَ الْقِيٰمَةِ ؕ وَلَنْ يَّجْعَلَ اللّٰهُ لِلْكٰفِرِيْنَ عَلَى الْمُؤْمِنِيْنَ سَبِيْلًا ﴿١٤١﴾ ع 
اِنَّ الْمُنٰفِقِيْنَ يُخٰدِعُوْنَ اللّٰهَ وَهُوَ خَادِعُهُمْ ۚ وَاِذَا قَامُوْٓا
اِلَى الصَّلٰوةِ قَامُوْا كُسَالٰى ۙ يُرَآءُوْنَ النَّاسَ وَلَا يَذْكُرُوْنَ
اللّٰهَ اِلَّا قَلِيْلًا ﴿١٤٢﴾ ۙ مُّذَبْذَبِيْنَ بَيْنَ ذٰلِكَ ۖ ق لَآ اِلٰى هٰٓؤُلَآءِ وَلَآ
اِلٰى هٰٓؤُلَآءِ ؕ وَمَنْ يُّضْلِلِ اللّٰهُ فَلَنْ تَجِدَ لَهٗ سَبِيْلًا ﴿١٤٣﴾ يٰٓاَيُّهَا
الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوا الْكٰفِرِيْنَ اَوْلِيَآءَ مِنْ دُوْنِ
الْمُؤْمِنِيْنَ ؕ اَتُرِيْدُوْنَ اَنْ تَجْعَلُوْا لِلّٰهِ عَلَيْكُمْ سُلْطٰنًا مُّبِيْنًا ﴿١٤٤﴾
اِنَّ الْمُنٰفِقِيْنَ فِى الدَّرْكِ الْاَسْفَلِ مِنَ النَّارِ ۚ وَلَنْ تَجِدَ
لَهُمْ نَصِيْرًا ﴿١٤٥﴾ ۙ اِلَّا الَّذِيْنَ تَابُوْا وَاَصْلَحُوْا وَاعْتَصَمُوْا بِاللّٰهِ
وَاَخْلَصُوْا دِيْنَهُمْ لِلّٰهِ فَاُولٰٓئِكَ مَعَ الْمُؤْمِنِيْنَ ؕ وَسَوْفَ يُؤْتِ
اللّٰهُ الْمُؤْمِنِيْنَ اَجْرًا عَظِيْمًا ﴿١٤٦﴾ مَا يَفْعَلُ اللّٰهُ بِعَذَابِكُمْ
اِنْ شَكَرْتُمْ وَاٰمَنْتُمْ ؕ وَكَانَ اللّٰهُ شَاكِرًا عَلِيْمًا ﴿١٤٧﴾

141. (வேஷதாரிகளாகிய) இத்தகையோர், உங்களைப்பற்றி எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றனர்; அல்லாஹ்வி(ன் உதவியி)னால் உங்களுக்கு வெற்றி கிடைத்தால், "நாங்களும் உங்களுடன் இருக்கவில்லையா?" என்று கூறுகின்றனர். நிராகரிப்போருக்கு பங்கேதும் கிடைத்துவிட்டால், " நாங்கள் உங்களை வெற்றி கொள்ளக் கூடியநிலையிலிருந்தும், விசுவாசங் கொண்ட அவர்களிடமிருந்து நாங்கள் உங்களைத்தடுக்கவில்லையா?" என்று கூறுகின்றனர்; ஆகவே, உங்களுக்கிடையில் அல்லாஹ் மறுமை நாளில் தீர்ப்பளிப்பான்; இன்னும், விசுவாசிகளுக்கு எதிராக அந்நிராகரிப்பவர்களுக்கு அல்லாஹ் யாதொரு வழியையும் ஆக்கவே மாட்டான்.

142. நிச்சயமாக (வேஷதாரிகளான) முனாஃபிக்குகள் அல்லாஹ்வை வஞ்சிக்(கக் கருது)கின்றனர்; இன்னும், அவனோ, அவர்களை வஞ்சிக்கக்கூடியவனாக இருக்கின்றான். இன்னும், அவர்கள் தொழுகைக்காகத் தயாரானால், சோம்பேறிகளாகவே நிற்கிறார்கள். மனிதர்களுக்குக் காண்பிக்(க விரும்பு)கின்றார்கள்; இன்னும், அவர்கள் வெகு சொற்பமாகத்தவிர அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை.

143. அ(ந்த முனாஃபிக்குகள் இறை நிராகரிப்பு , விசுவாசம் ஆகிய ) வற்றிற்கு மத்தியில் தத்தளித்தவர்களாக இருக்கின்றனர். ( இவர்கள் மூமின்களாகிய) அவர்களுடனுமில்லை; (காஃபிர்களாகிய) இவர்களுடனுமில்லை. இன்னும் அல்லாஹ் எவரை வழிதவறவிட்டுவிடுகிறானோ அவருக்கு (நபியே!) நீர் யாதொரு வழியைக் காணவே மாட்டீர்.

144. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் விவாசிகளையல்லாமல், நிராகரிப்போரை உற்ற நன்பர்களாக எடுத்துக் கொள்ளாதீர்கள்;(இதன் மூலம்) உங்களுக் கெதிராக அல்லாஹ்வுக்கு ஒரு தெளிவான சான்றை ஏற்படுத்திவிட நீங்கள் நாடுகின்றீர்களா?

145. நிச்சயமாக (இவ்வேஷ தாரிகளாகிய ) முனாஃபிக்குகள் நரகத்தின் மிகவும் கீழான அடித்தளத்தில் இருப்பார்கள்; இன்னும்(அங்கு) அவர்களுக்கு உதவியாளரை நீர் காணவேமாட்டீர்.

146. (ஆனால் அவர்களில்) தங்கள் பாவத்திற்காகப் பச்சாதாபப்பட்டு, (அதிலிருந்து விலகி தங்கள் செயல்களை) சீர்திருந்தி அல்லாஹ்வை( அவனுடைய வேதத்தை) உறுதியாகப் பிடித்துக்கொண்டு, தங்கள் மார்க்கத்தை (வணக்கத்தை) அல்லாஹ்வுக்காகக் கலப்பற்றதாக்கிக் கொள்கின்றார்களே அத்தகையோர் தவிர; அவர்கள் விசுவாசிகளுடன் (மறுமையில்) இருப்பார்கள். இத்தகைய விசுவாசிகளுக்கு அல்லாஹ் மகத்தான (நற்)கூலியை வழங்குவான்.

147. நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திக்கொண்டும், (அவனை) விசுவாசம் கொண்டுமிருப்பின், உங்களை வேதனை செய்து அவன் என்ன செய்யப்போகிறான்? இன்னும் அல்லாஹ்வோ நன்றி பாராட்டுகிறவனாக, யாவையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

الجزء ٦ لَا يُحِبُّ اللّٰهُ الْجَهْرَ بِالسُّوْٓءِ مِنَ الْقَوْلِ اِلَّا مَنْ ظُلِمَ ؕ
وَكَانَ اللّٰهُ سَمِيْعًا عَلِيْمًا ﴿١٤٨﴾ اِنْ تُبْدُوْا خَيْرًا اَوْ تُخْفُوْهُ اَوْ تَعْفُوْا
عَنْ سُوْٓءٍ فَاِنَّ اللّٰهَ كَانَ عَفُوًّا قَدِيْرًا ﴿١٤٩﴾ اِنَّ الَّذِيْنَ يَكْفُرُوْنَ
بِاللّٰهِ وَرُسُلِهٖ وَيُرِيْدُوْنَ اَنْ يُّفَرِّقُوْا بَيْنَ اللّٰهِ وَرُسُلِهٖ
وَيَقُوْلُوْنَ نُؤْمِنُ بِبَعْضٍ وَّنَكْفُرُ بِبَعْضٍ ۙ وَّيُرِيْدُوْنَ اَنْ
يَّتَّخِذُوْا بَيْنَ ذٰلِكَ سَبِيْلًا ﴿١٥٠﴾ اُولٰٓئِكَ هُمُ الْكٰفِرُوْنَ حَقًّا ۚ وَ
اَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ عَذَابًا مُّهِيْنًا ﴿١٥١﴾ وَالَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَ
رُسُلِهٖ وَلَمْ يُفَرِّقُوْا بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ اُولٰٓئِكَ سَوْفَ يُؤْتِيْهِمْ اُجُوْرَهُمْ ؕ
ع ١١ ٢١ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا ﴿١٥٢﴾ ع يَسْـَٔلُكَ اَهْلُ الْكِتٰبِ اَنْ تُنَزِّلَ
عَلَيْهِمْ كِتٰبًا مِّنَ السَّمَآءِ فَقَدْ سَاَلُوْا مُوْسٰٓى اَكْبَرَ مِنْ ذٰلِكَ
فَقَالُوْٓا اَرِنَا اللّٰهَ جَهْرَةً فَاَخَذَتْهُمُ الصّٰعِقَةُ بِظُلْمِهِمْ ۚ ثُمَّ
اتَّخَذُوا الْعِجْلَ مِنْۢ بَعْدِ مَا جَآءَتْهُمُ الْبَيِّنٰتُ فَعَفَوْنَا عَنْ
ذٰلِكَ ۚ وَاٰتَيْنَا مُوْسٰى سُلْطٰنًا مُّبِيْنًا ﴿١٥٣﴾ وَرَفَعْنَا فَوْقَهُمُ
الطُّوْرَ بِمِيْثَاقِهِمْ وَقُلْنَا لَهُمُ ادْخُلُوا الْبَابَ سُجَّدًا وَّقُلْنَا
لَهُمْ لَا تَعْدُوْا فِي السَّبْتِ وَاَخَذْنَا مِنْهُمْ مِّيْثَاقًا غَلِيْظًا ﴿١٥٤﴾

148. அநீதமிழைக்கப்பட்டவரைத் தவிர, வார்த்தையில் தீயதை பகிரங்கமாகக் கூறுவதை அல்லாஹ் விரும்பமாட்டான். அல்லாஹ் (யாவையும்) செவியேற்கிறவனாக, நன்கறிந்தோனாக இருக்கின்றான்.

149. (செய்யும்) நன்மையை நீங்கள் வெளிப்படுத்தினாலும், அல்லது அதனை மறைத்துக் கொண்டாலும், அல்லது (ஒருவர் உங்களுக்குச் செய்த)யாதொரு தீங்கை நீங்கள் மன்னித்துவிட்டாலும் நிச்சயமாக அல்லாஹ்,(குற்றங்களை)மிக்க மன்னிப்போனாக,(தண்டிக்க) பேராற்றலுடையோனாக இருக்கின்றான்.

150. நிச்சயமாக அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் நிராகரித்துவிட்டு, இன்னும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதர்களுக்கும் இடையில் பாகுபாடுசெய்வதைநாடி,"(தூதர்களில்)சிலரை நாம் விசுவாசிப்போம்; இன்னும்சிலரை நாம் நிராகரிப்போம்" எனவும் கூறி,(நிராகரிப்பு,விசுவாசம் ஆகிய) இவற்றிற்கு மத்தியில் ஒரு பாதையை ஏற்படுத்தவும் நாடுகிறார்களே அத்தகையோர்—

151. அவர்கள் தான் உண்மையாகவே நிராகரிப்போராவர்; இன்னும், நிராகரிப்போருக்கு, நாம் இழிவுதரும் வேதனையையே தயார் படுத்தியும் வைத்திருக்கின்றோம்.

152. மேலும் , அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் விசுவாசித்து, அவர்களில் எவருக்கிடையிலும் பிரிவினைசெய்யவில்லையே அத்தகையோர்— அவர்களுக்கு அவர்களுடைய நற்கூலிகளை (விரைவில்அல்லாஹ் மறுமையில்) கொடுப்பான். இன்னும் அல்லாஹ் மிக்க (பிழை) பொறுப்போனாக, மிகக் கிருபையுடையோனாக இருக்கின்றான்.

153. (நபியே!) வேதத்தையுடையவர்கள், (தாங்கள் விரும்புகின்ற பிரகாரம்) வானத்திலிருந்து தங்கள் மீது ஒரு வேதத்தை நீர் இறக்கிவைக்குமாறு உம்மிடம் கேட்கின்றனர்; நிச்சயமாக இதைவிடப் பெரிய தொன்றையே மூஸாவிடம் அவர்கள் கேட்டார்கள்; ஆகவே, "அல்லாஹ்வை எங்களுக்குப்பகிரங்கமாகக் காண்பிப்பீராக" என்று கூறினார்கள். பின்னர், அவர்களின் அநியாயத்தின் காரணமாக, அவர்களை பெரும் சப்தம் (நெருப்பு வடிவில்) தாக்கியது; பின்னர் அவர்களிடம் அத்தாட்சிகள் வந்ததன் பின்னும் காளைக் கன்றை(த் தெய்வமாக) எடுத்துக் கொண்டனர்; அப்பொழுது(ம்) அதனை நாம் மன்னித்தோம். இன்னும் மூஸாவுக்குத் தெளிவான சான்றை நாம் கொடுத்தோம்.

154. மேலும், அவர்களிடம் உடன்படிக்கை வாங்குவதற்காக, தூரை ( ஸினாய் மலையை) அவர்களின் மீது உயர்த்தினோம்; அன்றியும் ("இந்நகரத்தின்) வாயிலில் தலைகுனிந்தவர்களாக பிரவேசியுங்கள்" என்று நாம் அவர்களுக்குக் கூறினோம். மேலும், (மீன் வேட்டையாடி) சனிக்கிழமையில் நீங்கள் வரம்பு மீறாதீர்கள் என்றும் நாம் அவர்களுக்குக் கூறினோம் ; (இன்னும் இவற்றிற்காக) உறுதியான வாக்குறுதியையும் நாம் அவர்களிடம் வாங்கினோம் (எனினும், அவர்கள் வாக்குறுதியை மீறி விட்டனர்).

فَبِمَا نَقْضِهِمْ مِّيْثَاقَهُمْ وَكُفْرِهِمْ بِاٰيٰتِ اللّٰهِ وَقَتْلِهِمُ الْاَنْۢبِيَآءَ
بِغَيْرِ حَقٍّ وَّقَوْلِهِمْ قُلُوْبُنَا غُلْفٌ ؕ بَلْ طَبَعَ اللّٰهُ عَلَيْهَا بِكُفْرِهِمْ
فَلَا يُؤْمِنُوْنَ اِلَّا قَلِيْلًا ﴿١٥٥﴾ وَّبِكُفْرِهِمْ وَقَوْلِهِمْ عَلٰى مَرْيَمَ بُهْتَانًا
عَظِيْمًا ۙ﴿١٥٦﴾ وَّقَوْلِهِمْ اِنَّا قَتَلْنَا الْمَسِيْحَ عِيْسَى ابْنَ مَرْيَمَ رَسُوْلَ
اللّٰهِ ۚ وَمَا قَتَلُوْهُ وَمَا صَلَبُوْهُ وَلٰكِنْ شُبِّهَ لَهُمْ ؕ وَاِنَّ الَّذِيْنَ
اخْتَلَفُوْا فِيْهِ لَفِيْ شَكٍّ مِّنْهُ ؕ مَا لَهُمْ بِهٖ مِنْ عِلْمٍ اِلَّا اتِّبَاعَ
الظَّنِّ ۚ وَمَا قَتَلُوْهُ يَقِيْنًا ۙ﴿١٥٧﴾ بَلْ رَّفَعَهُ اللّٰهُ اِلَيْهِ ؕ وَكَانَ اللّٰهُ عَزِيْزًا
حَكِيْمًا ﴿١٥٨﴾ وَاِنْ مِّنْ اَهْلِ الْكِتٰبِ اِلَّا لَيُؤْمِنَنَّ بِهٖ قَبْلَ مَوْتِهٖ ۚ
وَيَوْمَ الْقِيٰمَةِ يَكُوْنُ عَلَيْهِمْ شَهِيْدًا ۚ﴿١٥٩﴾ فَبِظُلْمٍ مِّنَ الَّذِيْنَ هَادُوْا
حَرَّمْنَا عَلَيْهِمْ طَيِّبٰتٍ اُحِلَّتْ لَهُمْ وَبِصَدِّهِمْ عَنْ سَبِيْلِ اللّٰهِ
كَثِيْرًا ۙ﴿١٦٠﴾ وَّاَخْذِهِمُ الرِّبٰوا وَقَدْ نُهُوْا عَنْهُ وَاَكْلِهِمْ اَمْوَالَ النَّاسِ
بِالْبَاطِلِ ؕ وَاَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ مِنْهُمْ عَذَابًا اَلِيْمًا ﴿١٦١﴾ لٰكِنِ
الرّٰسِخُوْنَ فِي الْعِلْمِ مِنْهُمْ وَالْمُؤْمِنُوْنَ يُؤْمِنُوْنَ بِمَآ اُنْزِلَ اِلَيْكَ
وَمَآ اُنْزِلَ مِنْ قَبْلِكَ وَالْمُقِيْمِيْنَ الصَّلٰوةَ وَالْمُؤْتُوْنَ الزَّكٰوةَ وَ
الْمُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ؕ اُولٰٓئِكَ سَنُؤْتِيْهِمْ اَجْرًا عَظِيْمًا ؑ﴿١٦٢﴾ ٢٢ ع ٢

155. ஆகவே, அவர்கள் தங்கள் உடன்படிக்கையை முறித்ததன் காரணமாகவும், அல்லாஹ்வுடைய வசனங்களை அவர்கள் நிராகரித்ததாலும், நியாயமின்றி நபிமார்களைக் கொலை செய்ததாலும், இன்னும் "எங்களுடைய இதயங்கள் திரையிடப் பட்டுவிட்டன" என்று, அவர்கள் கூறியதாலும் (அல்லாஹ் அவர்களை சபித்துவிட்டான்; அதுமட்டும்) அல்ல! அவர்களுடைய நிராகரிப்பின் காரணமாக அவற்றின் மீது அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான்; ஆதலால், (அவர்கள்) குறைவாகவேயன்றி விசுவாசங்கொள்ள மாட்டார்கள்.

156. இன்னும், அவர்களின் நிராகரிப்பின் காரணமாகவும், மர்யமின் மீது மாபெரும் அவதூறை அவர்கள் கூறியதாலும் (அவர்களை அல்லாஹ் சபித்துவிட்டான்).

157. இன்னும், "அல்லாஹ்வுடைய தூதர் மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹை, நிச்சயமாக நாங்கள் கொலை செய்து விட்டோம்", என்று அவர்கள் கூறியதன் காரணமாவும் (அவர்களை அல்லாஹ் சபித்துவிட்டான்) அவரை அவர்கள் கொல்லவுமில்லை; அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை; எனினும் அவர்களுக்கு (ஈஸாவின் தோற்றத்தைப்பெற்ற) ஒருவனை ஒப்பாக்(கிக் காண்பிக்)கப்பட்டது. இன்னும் நிச்சயமாக இ(வ்விஷயத்)தில், கருத்துவேறுபாடு கொண்டிருக்கிறார்களே அத்தகையோர், அதுபற்றி சந்தேகத்திலேயே உள்ளனர்; வெறும் யூகத்தைப் பின்பற்றுவதைத்தவிர, அதில் அவர்களுக்கு உண்மையானஅறிவு (ஆதாரம்) கிடையாது; மேலும், உறுதியாக அவர்கள் அவரை கொலைசெய்யவே இல்லை.

158. மாறாக, அல்லாஹ் அவரைத் தன் அளவில் உயர்த்திக் கொண்டான்; இன்னும் அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான்.

159. வேதத்தையுடையவர்களிலிருந்து எவரும் அவர் இறப்பதற்கு முன்னதாக, திட்டமாக அவரை விசுவாசிக்காமல் இருப்பதில்லை; இன்னும், மறுமை நாளில், அவர்களுக்கு அவர் பாதகமான சாட்சியாளராக இருப்பார்.

160. ஆகவே, யூதர்களாக இருந்த அவர்களின் அநியாயத்தின் காரணமாகவும், இன்னும் அவர்கள் அநேகரை அல்லாஹ்வின் பாதையைவிட்டும் (அதில்செல்ல விடாது) தடுத்துக் கொண்டதன் காரணமாகவும் அவர்களுக்கு (முன்னர்) அனுமதிக்கப் பட்டவைகளில் நல்லவைகளை, நாம் அவர்களுக்குத் தடுத்து (ஹராமாக்கி) விட்டோம்.

161. வட்டியை, அதைவிட்டும் அவர்கள் தடுக்கப்பட்டவர்களாக இருந்தும், (அதனை) வாங்கி வந்ததன் காரணமாகவும், மனிதர்களின் செல்வங்களை அவர்கள் நியாயமின்றி உண்டு வந்ததன் காரணமாகவும், அவர்களில், (இத்தகைய) நிராகரிப்போருக்குத் துன்புறுத்தும் வேதனையை நாம் தயார் செய்தும் வைத்திருக்கிறோம்.

162. எனினும், (நபியே!) அவர்களில் கல்வியில் உறுதியுடையோரும், இன்னும் விசுவாசிகளும் உம்மீது இறக்கிவைக்கப்பட்டதையும், உமக்கு முன்னர் இறக்கிவைக்கப்பட்டிருந்தவற்றையும் விசுவாசிக்கிறார்கள். இன்னும் (அவர்கள்) தொழுகையை (முறையாக) நிறைவேற்றுபவர்களாகவும், ஜகாத்தை கொடுப்பவர்களாகவும், அல்லாஹ்வையும், இறுதிநாளையும் விசுவாசிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். அத்தகையோருக்கு (மறுமையில்) மகத்தான நற்கூலியை நாம் கொடுப்போம்.

إِنَّآ أَوْحَيْنَآ إِلَيْكَ كَمَآ أَوْحَيْنَآ إِلَىٰ نُوحٍ وَّالنَّبِيِّـۧنَ مِنۢ بَعْدِهِۦ ۚ
وَأَوْحَيْنَآ إِلَىٰٓ إِبْرَٰهِيمَ وَإِسْمَٰعِيلَ وَإِسْحَٰقَ وَيَعْقُوبَ
وَالْأَسْبَاطِ وَعِيسَىٰ وَأَيُّوبَ وَيُونُسَ وَهَٰرُونَ وَسُلَيْمَٰنَ ۚ
وَءَاتَيْنَا دَاوُۥدَ زَبُورًا ﴿١٦٣﴾ وَرُسُلًا قَدْ قَصَصْنَٰهُمْ عَلَيْكَ مِن
قَبْلُ وَرُسُلًا لَّمْ نَقْصُصْهُمْ عَلَيْكَ ۚ وَكَلَّمَ اللَّهُ مُوسَىٰ
تَكْلِيمًا ﴿١٦٤﴾ رُّسُلًا مُّبَشِّرِينَ وَمُنذِرِينَ لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ
عَلَى اللَّهِ حُجَّةٌۢ بَعْدَ الرُّسُلِ ۚ وَكَانَ اللَّهُ عَزِيزًا حَكِيمًا ﴿١٦٥﴾
لَّٰكِنِ اللَّهُ يَشْهَدُ بِمَآ أَنزَلَ إِلَيْكَ ۖ أَنزَلَهُۥ بِعِلْمِهِۦ ۖ وَالْمَلَٰٓئِكَةُ
يَشْهَدُونَ ۚ وَكَفَىٰ بِاللَّهِ شَهِيدًا ﴿١٦٦﴾ إِنَّ الَّذِينَ كَفَرُوا وَ
صَدُّوا عَن سَبِيلِ اللَّهِ قَدْ ضَلُّوا ضَلَٰلًۢا بَعِيدًا ﴿١٦٧﴾ إِنَّ
الَّذِينَ كَفَرُوا وَظَلَمُوا لَمْ يَكُنِ اللَّهُ لِيَغْفِرَ لَهُمْ وَلَا لِيَهْدِيَهُمْ
طَرِيقًا ﴿١٦٨﴾ إِلَّا طَرِيقَ جَهَنَّمَ خَٰلِدِينَ فِيهَآ أَبَدًا ۚ وَكَانَ ذَٰلِكَ
عَلَى اللَّهِ يَسِيرًا ﴿١٦٩﴾ يَٰٓأَيُّهَا النَّاسُ قَدْ جَآءَكُمُ الرَّسُولُ بِالْحَقِّ
مِن رَّبِّكُمْ فَـَٔامِنُوا خَيْرًا لَّكُمْ ۚ وَإِن تَكْفُرُوا فَإِنَّ لِلَّهِ مَا فِى
السَّمَٰوَٰتِ وَالْأَرْضِ ۚ وَكَانَ اللَّهُ عَلِيمًا حَكِيمًا ﴿١٧٠﴾

163. (நபியே!) நூஹுக்கும் ,அவருக்குப் பின் வந்த நபிமார்களுக்கும் நாம் வஹீ அறிவித்தவாறே, உமக்கும் நிச்சயமாக நாம் வஹீ அறிவித்தோம்; அன்றியும், இப்றாஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் ஆகியவர்களுக்கும், (அவர்களுடைய) சந்ததிகளுக்கும், ஈஸா, அய்யூப், யூனுஸ், ஹாரூன், ஸுலைமான் முதலியவர்களுக்கும் (இவ்வாறே நாம் வஹீ அறிவித்தோம்); இன்னும் தாவூதுக்கு, ஜபூர் (என்னும்) வேதத்தை நாம் கொடுத்தோம்.

164. இன்னும் தூதர்கள் பலரையும் (நாம் அனுப்பி) அவர்களுடைய சரித்திரங்களையும் முன்னர் நாம் திட்டமாக உமக்குக் கூறியிருக்கின்றோம்; வேறு தூதர்கள் பலரையும் (நாம் அனுப்பி யிருக்கின்றோம். எனினும்,) அவர்களுடைய சரித்திரங்களை நாம் உமக்குக் கூறவில்லை; இன்னும், அல்லாஹ் மூஸாவுடன் உறுதியாக பேசியுமிருக்கின்றான்.

165. அல்லாஹ்வின் மீது மனிதர்களுக்கு (சாதகமாக) யாதொரு ஆதாரமும் இல்லாதிருப்பதற்காக, இத்தூதர்களுக்குப் பின்னரும், தூதர்கள் பலரை, (சுவர்க்கத்தைக் கொண்டு) நன்மாராயங் கூறுகின்றவர்களாகவும்,(நரகத்தைக் கொண்டு) அச்சமூட்டி எச்சரிக்கின்றவர் களாகவும் ( அல்லாஹ் அனுப்பி வைத்தான்) மேலும், அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தோனாக , தீர்க்கமான அறிவுடையோனாக இருக்கின்றான்.

166 . எனினும் , அவன் உமக்கு இறக்கிவைத்த (குர்ஆனாகிய இ)தற்கு அல்லாஹ்வே சாட்சி கூறுகின்றான்; அ(வ்வேதத்)தை தன் அறிவுகொண்டே (உம்மீது) இறக்கிவைத்தான்;(இதற்கு) மலக்குகளும் சாட்சி கூறுகின்றனர்; மேலும், சாட்சியால் அல்லாஹ் போதுமானவன்.

167. நிச்சயமாக நிராகரித்து, அல்லாஹ்வுடைய பாதையைவிட்டும் தடுத்தார்களே அத்தகையோர் _ அவர்கள், திட்டமாக வெகு தூரமான வழிகேடாக வழிகெட்டு விட்டனர்.

168. (நபியே!) நிச்சயமாக, நிராகரித்துவிட்டு, அநியாயமும் செய்தார்களே அத்தகையவர்கள்_அவர்களை அல்லாஹ் மன்னிப்பவனாக இல்லை; இன்னும் (நேரான) வழியில் அவன் அவர்களைச் செலுத்துபவனாகவும் இல்லை_

169. நரகத்தின் வழியைத்தவிர_அதில் தான் அவர்கள் நிரந்தரமாக என்றென்றும் (தங்கி) இருப்பவர்கள்; இ(வ்வாறு செய்வ)து, அல்லாஹ்வுக்கு மிக எளிதாக இருக்கிறது.

170. மனிதர்களே! உங்கள் இரட்சகனிடமிருந்து உண்மையானவற்றுடன் ஒரு தூதர், திட்டமாக உங்களிடம் வந்துவிட்டார். ஆகவே, நீங்கள் (அவர் கொண்டு வந்ததை) விசுவாசியுங்கள், (அது) உங்களுக்கு மிக்க நன்று; நீங்கள் நிராகரித்தும் விட்டால் வானங்கள், மற்றும் பூமியில் உள்ளவை நிச்சயமாக அல்லாஹ்வுக்கே உரியன; அல்லாஹ்வோ, (யாவரையும்) நன்கறிந்தவனாக தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான்.

يٰۤاَهۡلَ الۡكِتٰبِ لَا تَغۡلُوۡا فِىۡ دِيۡنِكُمۡ وَلَا تَقُوۡلُوۡا عَلَى اللّٰهِ
اِلَّا الۡحَـقَّ‌ ؕ اِنَّمَا الۡمَسِيۡحُ عِيۡسَى ابۡنُ مَرۡيَمَ رَسُوۡلُ اللّٰهِ وَكَلِمَتُهٗ ۚ
اَلۡقٰٮهَاۤ اِلٰى مَرۡيَمَ وَرُوۡحٌ مِّنۡهُ‌ فَاٰمِنُوۡا بِاللّٰهِ وَرُسُلِهٖ ‌ۚ وَلَا
تَقُوۡلُوۡا ثَلٰثَةٌ‌ ؕ اِنْتَهُوۡا خَيۡرًا لَّكُمۡ‌ ؕ اِنَّمَا اللّٰهُ اِلٰـهٌ وَّاحِدٌ‌ ؕ
سُبۡحٰنَهٗۤ اَنۡ يَّكُوۡنَ لَهٗ وَلَدٌ‌ ۘ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى
الۡاَرۡضِ‌ ؕ وَكَفٰى بِاللّٰهِ وَكِيۡلًا ﴿١٧١﴾ لَنۡ يَّسۡتَـنۡكِفَ الۡمَسِيۡحُ اَنۡ وقف لازم ع ٢٣
يَّكُوۡنَ عَبۡدًا لِّلّٰهِ وَلَا الۡمَلٰٓـئِكَةُ الۡمُقَرَّبُوۡنَ‌ ؕ وَمَنۡ يَّسۡتَـنۡكِفۡ
عَنۡ عِبَادَتِهٖ وَيَسۡتَكۡبِرۡ فَسَيَحۡشُرُهُمۡ اِلَيۡهِ جَمِيۡعًا ﴿١٧٢﴾ فَاَمَّا
الَّذِيۡنَ اٰمَنُوۡا وَعَمِلُوا الصّٰلِحٰتِ فَيُوَفِّيۡهِمۡ اُجُوۡرَهُمۡ وَ
يَزِيۡدُهُمۡ مِّنۡ فَضۡلِهٖ‌ ۚ وَاَمَّا الَّذِيۡنَ اسۡتَـنۡكَفُوۡا وَاسۡتَكۡبَرُوۡا
فَيُعَذِّبُهُمۡ عَذَابًا اَلِيۡمًا ۙ وَّلَا يَجِدُوۡنَ لَهُمۡ مِّنۡ دُوۡنِ اللّٰهِ
وَلِيًّا وَّلَا نَصِيۡرًا ﴿١٧٣﴾ يٰۤاَيُّهَا النَّاسُ قَدۡ جَآءَكُمۡ بُرۡهَانٌ
مِّنۡ رَّبِّكُمۡ وَاَنۡزَلۡنَاۤ اِلَيۡكُمۡ نُوۡرًا مُّبِيۡنًا ﴿١٧٤﴾ فَاَمَّا الَّذِيۡنَ
اٰمَنُوۡا بِاللّٰهِ وَاعۡتَصَمُوۡا بِهٖ فَسَيُدۡخِلُهُمۡ فِىۡ رَحۡمَةٍ
مِّنۡهُ وَفَضۡلٍ ۙ وَّيَهۡدِيۡهِمۡ اِلَيۡهِ صِرَاطًا مُّسۡتَقِيۡمًا ؕ ﴿١٧٥﴾

171. வேதத்தையுடையவர்களே! உங்கள் மார்க்கத்தில், நீங்கள் அளவு கடந்து செல்லாதீர்கள்; இன்னும், அல்லாஹ்வின் மீது உண்மையைத் தவிர (வேறெதையும்) கூறாதீர்கள்; நிச்சயமாக மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹ், அல்லாஹ்வுடைய ஒரு தூதரும், அவனுடைய வாக்கும் ஆவார்; அல்லாஹ், மர்யமின் பால் அ(ந்த வாக்கான)தைப் போட்டான்; (மற்ற ஆன்மாக்களைப் போன்று அவரும்,) அவனிடமிருந்து (படைக்கப்பட்ட) ஓர் ஆன்மாவே. ஆகவே, அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் நீங்கள் விசுவாசியுங்கள்; இன்னும் (வணக்கத்திற்குரிய தெய்வங்கள்) மூன்று என்று கூறாதீர்கள்; (இவ்வாறு கூறுவதை) விட்டுவிலகி விடுங்கள். (அது) உங்களுக்குத்தான் மிக்க நன்று. (ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ் ஒரே நாயன்தான்; அவனுக்கு மக்கள் இருப்பதைவிட்டும் அவன் மிகப் பரிசுத்தமானவன்; வானங்களில் உள்ளவை, மற்றும் பூமியில் உள்ளவை அவனுக்கே உரியன_ (உங்கள் யாவரின் காரியங்களை) பொறுப்பேற்றுக்கொள்ள அல்லாஹ் (ஒருவனே) போதுமானவன்.

172. மஸீஹூம், அல்லாஹ்வுக்கு நெருக்கமான மலக்குகளும், அல்லாஹ்வுக்கு அடிமையாயிருப்பதைக் குறைவாகக் கொள்ளவே மாட்டார்கள்; எவர்கள், அவனுக்கு வணக்கம் செலுத்துவதைவிட்டும் குறைவாகக்கருதி, கர்வமும் கொள்வார்களோ அவர்கள் யாவரையும் (மறுமையில் எழுப்பி ) அவன் தன் பக்கமே ஒன்று திரட்டுவான்.

173. எனவே (உண்மையாகவே) விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்கின்றார்களே அத்தகையோர்_ அவர்களுடைய கூலிகளை அவன் அவர்களுக்குப் பூரணமாக அளிப்பான். இன்னும் தன் பேரருளிலிருந்து அவர்களுக்கு அதிகப்படுத்துவான். மேலும் (அல்லாஹ்வுக்கு அடிமையாயிருப்பதைக்) குறைவாகக் கண்டு, கர்வமும் கொண்டார்களே அத்தகையோர்_ அவர்களை, துன்புறுத்தும் வேதனையைக் கொண்டு அவன் வேதனை செய்வான். அல்லாஹ்வையன்றி வேறு எவரையும் தங்களுக்கு காரியஸ்தனாகவோ, இன்னும் உதவிபுரிபவனாகவோ (அங்கு) அவர்கள் காணமாட்டார்கள்.

174. மனிதர்களே! உங்கள் இரட்சகனிடமிருந்து (போதுமான) சான்று திட்டமாக உங்களிடம் வந்துவிட்டது; இன்னும், தெளிவான பேரொளியையே நாம் உங்களுக்கு இறக்கி வைத்திருக்கின்றோம்.

175. ஆகவே, அல்லாஹ்வை (உண்மையாகவே) விசுவாசித்து, அவனைப் பலமாக பற்றிப் பிடித்துக்கொள்கின்றார்களே அத்தகையோர்_ அவர்களை, அவன் தன்னிடமிருந்துள்ள அன்பிலும், பேரருளிலும் பிரவேசிக்கச்செய்வான். அன்றியும் தன் பக்கம் (வருவதற்குரிய) நேரான வழியிலும் அவர்களைச் செலுத்துவான்.

يَسْتَفْتُوْنَكَ ؕ قُلِ اللّٰهُ يُفْتِيْكُمْ فِى الْكَلٰلَةِ ؕ اِنِ امْرُؤٌا هَلَكَ
لَيْسَ لَهٗ وَلَدٌ وَّلَهٗۤ اُخْتٌ فَلَهَا نِصْفُ مَا تَرَكَ ۚ وَهُوَ يَرِثُهَاۤ
اِنْ لَّمْ يَكُنْ لَّهَا وَلَدٌ ؕ فَاِنْ كَانَتَا اثْنَتَيْنِ فَلَهُمَا الثُّلُثٰنِ مِمَّا
تَرَكَ ؕ وَاِنْ كَانُوْۤا اِخْوَةً رِّجَالًا وَّنِسَآءً فَلِلذَّكَرِ مِثْلُ حَظِّ
الْاُنْثَيَيْنِ ؕ يُبَيِّنُ اللّٰهُ لَكُمْ اَنْ تَضِلُّوْا ؕ وَاللّٰهُ بِكُلِّ شَىْءٍ عَلِيْمٌ ﴿١٧٦﴾ ع ٢٤ع٥

## سُوْرَةُ الْمَآئِدَةِ مَدَنِيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّعِشْرُوْنَ اٰيَةً وَّسِتَّةَ عَشَرَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

المنزل الثانى ٢

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَوْفُوْا بِالْعُقُوْدِ ؕ اُحِلَّتْ لَكُمْ بَهِيْمَةُ
الْاَنْعَامِ اِلَّا مَا يُتْلٰى عَلَيْكُمْ غَيْرَ مُحِلِّى الصَّيْدِ وَاَنْتُمْ حُرُمٌ ؕ اِنَّ اللّٰهَ
يَحْكُمُ مَا يُرِيْدُ ﴿١﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تُحِلُّوْا شَعَآئِرَ اللّٰهِ وَلَا
الشَّهْرَ الْحَرَامَ وَلَا الْهَدْىَ وَلَا الْقَلَآئِدَ وَلَاۤ آٰمِّيْنَ الْبَيْتَ الْحَرَامَ
يَبْتَغُوْنَ فَضْلًا مِّنْ رَّبِّهِمْ وَرِضْوَانًا ؕ وَاِذَا حَلَلْتُمْ فَاصْطَادُوْا ؕ
وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَاٰنُ قَوْمٍ اَنْ صَدُّوْكُمْ عَنِ الْمَسْجِدِ الْحَرَامِ اَنْ
تَعْتَدُوْا ۘ وَتَعَاوَنُوْا عَلَى الْبِرِّ وَالتَّقْوٰى ۖ وَلَا تَعَاوَنُوْا عَلَى الْاِثْمِ
وَالْعُدْوَانِ ۖ وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ ﴿٢﴾

الربع ، وقف لازم

176. 'கலாலா' (_ தாய், தகப்பன், பாட்டன், பிள்ளை, பேரன் ஆகிய வாரிசுகள் இல்லாத சொத்து) பற்றிய மார்க்கக் கட்டளையை (நபியே! )அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். (அதற்கு) 'கலாலா' பற்றி அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடு கின்றான் என்று (நபியே!) நீர் கூறுவீராக: எவரேனுமொரு மனிதன் இறந்து, அவனுக்கு குழந்தையில்லாது ஒரு சகோதரி இருந்தால்,அவளுக்கு,அவன் விட்டுச் சென்ற (சொத்)தில் பாதி உண்டு ;(இதற்கு மாறாக ஒரு பெண் இறந்து) அவளுக்கு குழந்தையில்லாதிருந்தால் அவன் அவ(ள் விட்டுச் சென்றவைக)ளுக்கு வாரிசு ஆகி விடுவான்; (சகோதரிகளான) அவர்கள் இரு பெண்களாக இருந்தால், அவர் விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு ( பாகங்கள்) அவ்விருவருக்கும் உண்டு; அன்றியும், ஆண்களும், பெண்களுமான சகோதரர்களாயிருந்தால், (இறந்தவர் விட்டுச் சென்றதில்) ஆணுக்கு,பெண்ணுக்கிருப்பதைப்போல் இரண்டு பங்குண்டு; நீங்கள் வழி தவறாமல் இருப்பதற்காக, (இவைகளை) அல்லாஹ், உங்களுக்கு (இவ்வாறு) தெளிவாக விவரிக்கின்றான்; அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிகிறவன்.

---

அத்தியாயம் : 5

## அல்மாயிதா _ உணவு நிறைந்த மரவை

வசனங்கள் : 120 மதனீ ருகூஉகள் : 16

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. விசுவாசிகளே! நீங்கள் செய்துகொண்ட உடன்படிக்கைகளை(ப் பூரணமாக) நிறைவேற்றுங்கள்; (அன்றி,) உங்களுக்கு,(இனி) ஓதிக்காட்டப்படுபவற்றைத் தவிர, (மற்ற ஆடு, மாடு, ஒட்டகை முதலிய) கால் நடைகள் உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டிருக்கின்றன; (அவற்றை எந்நேரத்திலும் புசிக்கலாம், வேட்டையாடலாம். எனினும் உம்ரா, ஹஜ்ஜு யாத்திரையின் நிமித்தம்) நீங்கள் இஹ்ராமுடைய நிலையிலிருக்கும் சமயத்தில் (இவைகளை) வேட்டையாடுவதை, உங்களுக்கு ஆகுமாக்கிக் கொள்ளாதவர்களாக (இருப்பது கடமையாகும்) ; நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியதை(உங்களுக்கு)க் கட்டளையிடுகிறான்.

2. விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ்வின் (மார்க்க) அடையாளங்களையும், (ரஜப், துல்கஅதா, துல்ஹஜ்ஜு, முஹர்ரம் ஆகிய) சிறப்புற்ற மாதங்களையும், (ஹஜ்ஜின்) குர்பானிப் பிராணியையும்,(குர்பானிகளுக்காக கழுத்தில்) அடையாளம் கட்டப்பட்டவைகளையும், தங்கள் இரட்சகனின் அருளையும், பொருத்தத்தையும் தேடியவர்களாக கண்ணியமான (அவன்) இல்லத்தை நாடிச்செல்வோரையும் (தாக்குவதையோ, அவமதிப்பதையோ) நீங்கள் ஆகுமாக்கிக் கொள்ளாதீர்கள்; இன்னும், நீங்கள் (உங்கள்) இஹ்ராமை களைந்து விட்டால், அப்பொழுது (முன்னர் தடுக்கப்பட்டவைகளை) நீங்கள் வேட்டையாடிக் கொள்ளுங்கள்; கண்ணியமான மஸ்ஜிதுக்குச் செல்லவிடாது, உங்களைத் தடுத்துக் கொண்ட சமூகத்தார் மீது (உங்களுக்கு)ள்ள பகைமை(அவர்கள் மீது) நீங்கள் வரம்பு மீறும்படி உங்களைத் தூண்டிவிடவும் வேண்டாம்; இன்னும், நன்மைக்கும், (அல்லாஹ்வுடைய) பயபக்திக்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள்; பாவத்திலும் , பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டாம்; இன்னும், அல்லாஹ்வை நீங்கள் பயந்துகொள்ளுங்கள்;(ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் மிகக் கடினமானவன்.

حُرِّمَتْ عَلَيْكُمُ الْمَيْتَةُ وَالدَّمُ وَلَحْمُ الْخِنْزِيْرِ وَمَآ اُهِلَّ لِغَيْرِ
اللّٰهِ بِهٖ وَالْمُنْخَنِقَةُ وَالْمَوْقُوْذَةُ وَالْمُتَرَدِّيَةُ وَالنَّطِيْحَةُ وَمَآ
اَكَلَ السَّبُعُ اِلَّا مَا ذَكَّيْتُمْ ۣ وَمَا ذُبِحَ عَلَى النُّصُبِ وَاَنْ تَسْتَقْسِمُوْا
بِالْاَزْلَامِ ؕ ذٰلِكُمْ فِسْقٌ ؕ اَلْيَوْمَ يَىِٕسَ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ دِيْنِكُمْ
فَلَا تَخْشَوْهُمْ وَاخْشَوْنِ ؕ اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ
عَلَيْكُمْ نِعْمَتِيْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا ؕ فَمَنِ اضْطُرَّ فِيْ
مَخْمَصَةٍ غَيْرَ مُتَجَانِفٍ لِّاِثْمٍ ۙ فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ۳ يَسْـَٔلُوْنَكَ
مَاذَآ اُحِلَّ لَهُمْ ؕ قُلْ اُحِلَّ لَكُمُ الطَّيِّبٰتُ ۙ وَمَا عَلَّمْتُمْ مِّنَ الْجَوَارِحِ
مُكَلِّبِيْنَ تُعَلِّمُوْنَهُنَّ مِمَّا عَلَّمَكُمُ اللّٰهُ ۫ فَكُلُوْا مِمَّآ اَمْسَكْنَ عَلَيْكُمْ
وَاذْكُرُوا اسْمَ اللّٰهِ عَلَيْهِ ۪ وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ سَرِيْعُ الْحِسَابِ ۴
اَلْيَوْمَ اُحِلَّ لَكُمُ الطَّيِّبٰتُ ؕ وَطَعَامُ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ حِلٌّ
لَّكُمْ ۪ وَطَعَامُكُمْ حِلٌّ لَّهُمْ ۫ وَالْمُحْصَنٰتُ مِنَ الْمُؤْمِنٰتِ وَالْمُحْصَنٰتُ
مِنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ اِذَآ اٰتَيْتُمُوْهُنَّ اُجُوْرَهُنَّ
مُحْصِنِيْنَ غَيْرَ مُسٰفِحِيْنَ وَلَا مُتَّخِذِيْٓ اَخْدَانٍ ؕ وَمَنْ يَّكْفُرْ
بِالْاِيْمَانِ فَقَدْ حَبِطَ عَمَلُهٗ ۫ وَهُوَ فِي الْاٰخِرَةِ مِنَ الْخٰسِرِيْنَ ۵ ع ١ ٥ ٥

3. (விசுவாசிகளே! தானாகச்) செத்ததும், இரத்தமும், பன்றியின் இறைச்சியும், அல்லாஹ் அல்லாதவருக்காக (அறுப்புப்பிராணிகளில்) எதற்கு பெயர் கூற(ப்பட்டு விட)ப் பட்டதோ, அதுவும் கழுத்து நெறிபட்டுச் செத்ததும், அடிபட்டுச் செத்ததும், (மேலிருந்து) கீழே விழுந்து செத்ததும், கொம்பால் குத்திக் கொண்டு செத்ததும், (சிங்கம், புலி, சிறுத்தை போன்ற) வன விலங்குகள் தின்றவையும் உங்களுக்கு விலக்கப் பட்டிருக்கின்றன; ( உண்ண அனுமதிக்கப்பட்டவற்றில் அவை உயிரோடிருந்து " பிஸ்மில்லாஹ்" சொல்லி) நீங்கள் அறுத்தவைகளைத் தவிர; ( அவற்றை உண்ணலாம் ; இதர வணக்கங்கள் செய்வதற்காக ) நடப்பட்டவைகளுக்காக அறுக்கப் பட்டவைகளும், அம்புகள் மூலம் (அவற்றை எய்துகுறி கேட்டு) நீங்கள் பாகம் பிரித்துக் கொள்வதும் _ (உங்களுக்கு விலக்கப் பட்டிருக்கின்றன) ; இவை (யாவும்) பாவமாகும். இன்றையத்தினம் நிராகரிப்போர், உங்கள் மார்க்கத்தை(அழித்து விடலாம் என்பதை)ப் பற்றிய நம்பிக்கையை இழந்துவிட்டனர். ஆகவே, அவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; எனக்கே பயப்படுங்கள். இன்றையத்தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணமாக்கி வைத்துவிட்டேன்; என்னுடைய அருட்கொடையை உங்களின் மீது முழுமையுமாக்கி விட்டேன்; இன்னும், உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக்கொண்டேன். ஆகவே, எவர் பாவத்தின்பால் சாயாதவராக, பசியின் கொடுமையினால் நிர்ப்பந்திக்கப் பட்டு (மேலே கூறப்பட்ட, விலக்கப் பட்டவைகளைப் புசித்து)விட்டால் _ (அது குற்றமாகாது). ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன், மிகக் கிருபையுடையவன்.

4. (நபியே! உண்ணுவதற்கு) தங்களுக்கு ஆகுமாக்கப் பட்டவை எவை, என்று அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்; (அதற்கு) நீர் கூறுவீராக: (சுத்தமான) நல்ல பொருட்கள் உங்களுக்கு ஆகுமாக்கப் பட்டுள்ளன; இன்னும், வேட்டையாட நீங்கள் பயிற்சி அளித்தவர்களாக இருக்க _ அல்லாஹ் உங்களுக்குக் கற்றுத்தந்தவற்றிலிருந்து அவைகளுக்கு நீங்கள் (வேட்டையாட) கற்றுக் கொடுப்பவர்களாக இருக்க (நாய்,சிறுத்தை,ராஜாளிபோன்ற) வேட்டைப் பிராணிகளில் நீங்கள் கற்றுக்கொடுத்த(வைகள் வேட்டையாடிய)தும்(உங்களுக்கு உண்ணுவது ஆகுமாக்கப்பட்டுள்ளது.) எனவே, அவை (வேட்டையாடி, தாம் புசிக்காமல்) உங்களுக்காகப் பிடித்(து வைத்)திருப்பவற்றிலிருந்து(அவை இறந்து விட்டபோதிலும்) நீங்கள் புசியுங்கள்;(எனினும், வேட்டைக்கு அனுப்பும்பொழுது, 'பிஸ்மில்லாஹ்' என்று) அவற்றின்மீது அல்லாஹ்வின் பெயரைக் கூறுங்கள்; இன்னும், அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ், கேள்வி கணக்குக் கேட்பதில் மிகத் துரிதமானவன்.

5. (விசுவாசங் கொண்டோரே!) இன்று (முதல், உணவுவகைகளில் ) நல்லவைகள் உங்களுக்கு ஆகுமாக்கப் பட்டுள்ளன; வேதம் கொடுக்கப் பட்டார்களே அத்தகையோரின் உணவும் உங்களுக்கு ஆகுமானதாகும்; உங்களுடைய உணவும் அவர்களுக்கு ஆகுமானதாகும்; விசுவாசங்கொண்ட கற்புடைய பெண்களையும், உங்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப் பட்டவர்களிலுள்ள கற்புடைய பெண்களையும், நீங்கள் விபச்சாரம் செய்யாதவர்களாகவும், வைப்பாட்டிகளாக வைத்துக்கொள்ளாதவர்களாகவும் இருக்கும் நிலையில், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மஹர்களையும் அவர்களுக்கு நீங்கள் கொடுத்துவிட்டால், (திருமணம் செய்துகொள்வது உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளது) மேலும், எவர் விசுவாசம் கொண்டதன் பின்னர், (இவற்றை) நிராகரிக்கின்றாரோ, அவருடைய (நற்)செயல் திட்டமாக அழிந்துவிடும்; மேலும் அவர் மறுமையில் (முற்றிலும்) நஷ்டமடைந் தவர்களில் (உள்ளவராக) இருப்பார்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا قُمْتُمْ اِلَى الصَّلٰوةِ فَاغْسِلُوْا
وُجُوْهَكُمْ وَاَيْدِيَكُمْ اِلَى الْمَرَافِقِ وَامْسَحُوْا بِرُءُوْسِكُمْ وَاَرْجُلَكُمْ
اِلَى الْكَعْبَيْنِ ؕ وَاِنْ كُنْتُمْ جُنُبًا فَاطَّهَّرُوْا ؕ وَاِنْ كُنْتُمْ
مَّرْضٰٓى اَوْ عَلٰى سَفَرٍ اَوْ جَآءَ اَحَدٌ مِّنْكُمْ مِّنَ الْغَآئِطِ
اَوْ لٰمَسْتُمُ النِّسَآءَ فَلَمْ تَجِدُوْا مَآءً فَتَيَمَّمُوْا صَعِيْدًا
طَيِّبًا فَامْسَحُوْا بِوُجُوْهِكُمْ وَاَيْدِيْكُمْ مِّنْهُ ؕ مَا يُرِيْدُ اللّٰهُ
لِيَجْعَلَ عَلَيْكُمْ مِّنْ حَرَجٍ وَّلٰكِنْ يُّرِيْدُ لِيُطَهِّرَكُمْ وَ
لِيُتِمَّ نِعْمَتَهٗ عَلَيْكُمْ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿٦﴾ وَاذْكُرُوْا
نِعْمَةَ اللّٰهِ عَلَيْكُمْ وَمِيْثَاقَهُ الَّذِيْ وَاثَقَكُمْ بِهٖ ۙ اِذْ
قُلْتُمْ سَمِعْنَا وَاَطَعْنَا ۫ وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ عَلِيْمٌۢ بِذَاتِ
الصُّدُوْرِ ﴿٧﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ لِلّٰهِ
شُهَدَآءَ بِالْقِسْطِ ۫ وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَاٰنُ قَوْمٍ عَلٰٓى
اَلَّا تَعْدِلُوْا ؕ اِعْدِلُوْا ۟ هُوَ اَقْرَبُ لِلتَّقْوٰى ۫ وَاتَّقُوا
اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ ﴿٨﴾ وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ
اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ ۙ لَهُمْ مَّغْفِرَةٌ وَّاَجْرٌ عَظِيْمٌ ﴿٩﴾

6. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் தொழுகைக்குத் தயாரானால், (அதற்கு முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரையில் உங்கள் இரு கைகளையும், கழுவிக் கொள்ளுங்கள்; (நீரைத் தொட்டு) உங்கள் தலைகளையும் தடவி ('மஸ்ஹு' செய்து)க் கொள்ளுங்கள்; கணுக்கால் வரையில் உங்கள் இரு பாதங்களையும் (கழுவிக் கொள்ளுங்கள்). அன்றியும், நீங்கள் குளிக்கக் கடமைப் பட்டோராக இருந்தால் குளித்துப் பரிசுத்தமாகிக் கொள்ளுங்கள்; இன்னும், நீங்கள் நோயாளிகளாகவோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால், அல்லது உங்களில் எவரும் மலஜலம் கழிக்கச் சென்று வந்திருந்தாலும், அல்லது நீங்கள் பெண்களை (உடலுறவின்மூலம் ) தீண்டியிருந்தாலும் அப்பொழுது (சுத்தம் செய்துகொள்ள) தண்ணீரை நீங்கள் பெறாவிடில், பரிசுத்தமான மண்ணை நாடுங்கள்; பின்னர், அதிலிருந்து உங்களுடைய முகங்களையும், உங்களது கைகளையும் தடவி ('தயம்மும்' செய்து)க் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுக்கு நெருக்கடியைத் தர நாடவில்லை; எனினும், நீங்கள் (அவனுக்கு) நன்றி செலுத்துவதற்காக அவன் உங்களைப் பரிசுத்தமாக்கி வைக்கவும், தன் அருட்கொடையை உங்கள்மீது பூரணமாக்கி வைக்கவுமே நாடுகின்றான்.

7. (யூதர்களே!) உங்கள்மீதுள்ள அல்லாஹ்வின் கொடைகளையும், இன்னும் "நாங்கள் செவி சாய்த்தோம்; நாங்கள் (உனக்குக்) கீழ்ப்படிந்தோம்" என்று நீங்கள் கூறியசமயத்தில், எதைக் கொண்டு அவன் உங்களிடம் உறுதி மொழி எடுத்துள்ளானோ அத்தகைய அவனுடைய உறுதிமொழியையும் நினைவு கூருங்கள்; இன்னும் அல்லாஹ்வுக்குப் பயப்படுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் (அனைவரின்) நெஞ்சங்களில் உள்ளவற்றை நன்கறிகிறவன்.

8. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்காக நீதியைக் கொண்டு சாட்சி கூறுகிறவர்களாக (உண்மையின் மீது) நிலைத்தவர்களாக ஆகிவிடுங்கள்; எந்த சமூகத்தவரின் விரோதமும், நீங்கள் நீதமாக நடந்து கொள்ளாதிருக்க உங்களைத் திண்ணமாக தூண்டிவிட வேண்டாம்; (எவ்வளவு விரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதி செலுத்துங்கள்; அதுதான் பயபக்திக்கு மிக நெருக்கமானதாகும்; இன்னும், (எல்லா நிலைகளிலும்) நீங்கள் அல்லாஹ்வை பயப்படுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு உணர்கின்றவன்.

9. (உண்மையாகவே) விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்கின்றார்களே, அத்தகையோர்— அவர்களுக்கு பாவமன்னிப்பும், மகத்தான (நற்)கூலியும் உண்டு என அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்.

وَالَّذِيْنَ كَفَرُوْا وَكَذَّبُوْا بِاٰيٰتِنَآ اُولٰٓئِكَ اَصْحٰبُ
الْجَحِيْمِ ﴿١٠﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ
عَلَيْكُمْ اِذْ هَمَّ قَوْمٌ اَنْ يَّبْسُطُوْٓا اِلَيْكُمْ اَيْدِيَهُمْ
فَكَفَّ اَيْدِيَهُمْ عَنْكُمْ ۚ وَاتَّقُوا اللّٰهَ ؕ وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ
الْمُؤْمِنُوْنَ ﴿١١﴾ ع وَلَقَدْ اَخَذَ اللّٰهُ مِيْثَاقَ بَنِيْٓ اِسْرَآءِيْلَ ۚ ٢ع ٦
وَبَعَثْنَا مِنْهُمُ اثْنَيْ عَشَرَ نَقِيْبًا ؕ وَقَالَ اللّٰهُ اِنِّيْ مَعَكُمْ ؕ
لَئِنْ اَقَمْتُمُ الصَّلٰوةَ وَاٰتَيْتُمُ الزَّكٰوةَ وَاٰمَنْتُمْ
بِرُسُلِيْ وَعَزَّرْتُمُوْهُمْ وَاَقْرَضْتُمُ اللّٰهَ قَرْضًا حَسَنًا
لَّاُكَفِّرَنَّ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ وَلَاُدْخِلَنَّكُمْ جَنّٰتٍ تَجْرِيْ
مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۚ فَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ مِنْكُمْ
فَقَدْ ضَلَّ سَوَآءَ السَّبِيْلِ ﴿١٢﴾ فَبِمَا نَقْضِهِمْ مِّيْثَاقَهُمْ
لَعَنّٰهُمْ وَجَعَلْنَا قُلُوْبَهُمْ قٰسِيَةً ۚ يُحَرِّفُوْنَ الْكَلِمَ
عَنْ مَّوَاضِعِهٖ ۙ وَنَسُوْا حَظًّا مِّمَّا ذُكِّرُوْا بِهٖ ۚ وَلَا تَزَالُ
تَطَّلِعُ عَلٰى خَآئِنَةٍ مِّنْهُمْ اِلَّا قَلِيْلًا مِّنْهُمْ
فَاعْفُ عَنْهُمْ وَاصْفَحْ ؕ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُحْسِنِيْنَ ﴿١٣﴾

10. மேலும், நிராகரித்து, இன்னும், நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கினார்களே அத்தகையோர்_ அவர்களே நரகவாசிகளாவர்.

11. விசுவாசங்கொண்டோரே! ஒரு கூட்டத்தினர் உங்களுக்குத் தீங்கிழைக்கத் தீர்மானித்துத் தங்கள் கைகளை உங்கள் அளவில் நீட்டிய பொழுது, அவர்கள் கைகளை உங்களைவிட்டுத் தடுத்து, அல்லாஹ் உங்கள் மீது அருள்புரிந்ததை நீங்கள் நினைத்துப் பாருங்கள்; இன்னும், அல்லாஹ்வையே பயப்படுங்கள். அன்றியும் விசுவாசிகள் (யாவரும்) அல்லாஹ் (ஒருவன்)மீதே (தங்களின் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைக்கவும்.

12. இஸ்ராயீலின் மக்களிடம் அல்லாஹ் திட்டமாக உறுதிமொழி வாங்கியிருக்கின்றான்; மேலும், அவர்களிலிருந்தே பன்னிரண்டு (நம்பிக்கைக் குரிய) பொருப்பாளர்களை நாம் அனுப்பியிருக்கின்றோம்; ( அவ்வாறு உறுதிமொழி வாங்கிய போது, அவர்களிடம்), "நிச்சயமாக நான் உங்களுடனேயே இருக்கின்றேன்" என அல்லாஹ் கூறினான்; "நீங்கள் தொழுகையை(த் தவறாது) நிறைவேற்றி, ஜகாத்தும் கொடுத்து, என் தூதர்களையும் விசுவாசித்து, அவர்களுக்கு உதவியும் புரிந்து, (சிரமத்திலிருப்பவர்களுக்கு) அல்லாஹ்வுக்கு அழகிய கடனாக கடனும் கொடுத்தீர்களானால், நிச்சயமாக நான் (இவைகளை) உங்களுடைய பாவங்களுக்குப் பரிகாரமாக்கி வைத்து, சுவனபதிகளிலும் உங்களைப் பிரவேசிக்கச் செய்வேன்; அவற்றின் கீழ், ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் ; ஆகவே, உங்களில் இதற்குப் பின்னர் எவர் நிராகரித்து விட்டாரோ, அப்பொழுது நிச்சயமாக அவர் நேர் வழியிலிருந்து தவறிவிட்டார்" (என்று அல்லாஹ் கூறினான்).

13. அவர்கள் தங்களுடைய உறுதிமொழிக்கு மாறு செய்ததன் காரணமாக, நாம் அவர்களை சபித்துவிட்டோம்; அவர்களுடைய இதயங்களை கல் நெஞ்சங்களாகவும் ஆக்கிவிட்டோம்; அவர்கள் (தங்கள் வேத) வசனங்களை, அவற்றின் சரியான இடங்களிலிருந்து மாற்றிவிடுகிறார்கள். அன்றியும், அவர்கள் எதனைக்கொண்டு உபதேசிக்கப்பட்டனரோ அதிலிருந்து ஒரு பாகத்தை (இந்நபியைப் பற்றி அதில் அவர்களுக்கு நினைவூட்டப் பட்டிருந்ததை) மறந்தும்விட்டார்கள்; இன்னும், (நபியே!) அவர்களில் சிலரைத் தவிர அவர்களில் பெரும்பாலோர் ஏதேனுமொரு மோசடியின் மீது இருப்பதை நீர் சதா கண்டுகொண்டிருப்பீர்; ஆகவே, இவர்களை, நீர் மன்னித்துப் புறக்கணித்து விடுவீராக! நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோரை நேசிக்கின்றான்.

وَمِنَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّا نَصٰرٰٓى اَخَذْنَا مِيْثَاقَهُمْ
فَنَسُوْا حَظًّا مِّمَّا ذُكِّرُوْا بِهٖ ۠ فَاَغْرَيْنَا بَيْنَهُمُ
الْعَدَاوَةَ وَالْبَغْضَآءَ اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ ؕ وَسَوْفَ
يُنَبِّئُهُمُ اللّٰهُ بِمَا كَانُوْا يَصْنَعُوْنَ ۝۱۴ يٰٓاَهْلَ
الْكِتٰبِ قَدْ جَآءَكُمْ رَسُوْلُنَا يُبَيِّنُ لَكُمْ كَثِيْرًا
مِّمَّا كُنْتُمْ تُخْفُوْنَ مِنَ الْكِتٰبِ وَيَعْفُوْا عَنْ
كَثِيْرٍ ؕ قَدْ جَآءَكُمْ مِّنَ اللّٰهِ نُوْرٌ وَّكِتٰبٌ
مُّبِيْنٌ ۝۱۵ لا يَّهْدِيْ بِهِ اللّٰهُ مَنِ اتَّبَعَ رِضْوَانَهٗ
سُبُلَ السَّلٰمِ وَيُخْرِجُهُمْ مِّنَ الظُّلُمٰتِ اِلَى النُّوْرِ
بِاِذْنِهٖ وَيَهْدِيْهِمْ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ۝۱۶ لَقَدْ
كَفَرَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّ اللّٰهَ هُوَ الْمَسِيْحُ ابْنُ مَرْيَمَ ؕ
قُلْ فَمَنْ يَّمْلِكُ مِنَ اللّٰهِ شَيْئًا اِنْ اَرَادَ اَنْ يُّهْلِكَ
الْمَسِيْحَ ابْنَ مَرْيَمَ وَاُمَّهٗ وَمَنْ فِى الْاَرْضِ جَمِيْعًا ؕ
وَلِلّٰهِ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَيْنَهُمَا ؕ يَخْلُقُ
مَا يَشَآءُ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۝۱۷

15. மேலும், அவர்கள் மீது நம்முடைய தெளிவான வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டால்,(மறுமையில்) நம்முடைய சந்திப்பை(அதன் மூலம் ஏற்படும் தண்டனையை) பயப்படாத (இ)வர்கள் "இதல்லாத (வேறொரு) குர்ஆனை நீர் கொண்டுவாரும்; அல்லது (நாங்கள் விரும்புகிறவாறு) இதனை மாற்றிவிடும்" என்று கூறுகின்றனர்;(அதற்கு, "நீங்கள் விரும்புகிறவாறு)நான் என் புறத்திலிருந்து இதனை மாற்றிவிட எனக்கு எவ்வித உரிமையுமில்லை; எனக்கு அறிவிக்கப் படுவதைத்தவிர (வேறெதையும்) நான் பின்பற்றுவதில்லை; என்னுடைய இரட்சகனுக்கு நான் மாறு செய்தால், மகத்தான நாளுடைய வேதனையை நிச்சயமாக நான் பயப்படுகிறேன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

16. அல்லாஹ் நாடியிருந்தால், நான் இதனை உங்களுக்கு ஓதிக் காண்பித்திருக்க மாட்டேன்; இதனை உங்களுக்கு அவன் அறிவித்திருக்கவுமாட்டான்; ஆகவே நிச்சயமாக நான் இதற்கு முன்னரும் நீண்ட காலம் உங்களுடன் திட்டமாக தங்கியிருக்கிறேன்; ஆகவே, (இதை) நீங்கள் விளங்கிக்கொள்ளக்கூடாதா? என்று (நபியே!) நீர் கூறுவீராக!

17. ஆகவே, அல்லாஹ்வின்மீது பொய்யைக்கற்பனைச் செய்பவனைவிட, அல்லது அவனுடைய வசனங்களைப் பொய்யாக்குபவனைவிட மிகப்பெரிய அநியாயக்காரன் யார்? நிச்சயமாக குற்றவாளிகள் வெற்றியடையமாட்டார்கள்.

18. மேலும், அல்லாஹ்வையன்றி, தங்களுக்கு இடர் அளிக்காதவற்றை இன்னும், தங்களுக்குப் பலன் அளிக்காதவற்றை அவர்கள் வணங்குகிறார்கள்; "இவர்கள் அல்லாஹ்விடத்தில் எங்களுக்கு பரிந்துரையாளர்கள்" என்றும் அவர்கள் கூறுகின்றனர்;(ஆகவே, நபியே! நீர் அவர்களிடம்,) "வானங்களிலோ, பூமியிலோ அல்லாஹ்வுக்குத் தெரியாதவைகளை நீங்கள் அவனுக்கு அறிவிக்கின்றீர்களா? (அவனோ யாவையும் நன்கறிந்தவன்)அவன் மிகப் பரிசுத்தமானவன்; அவர்கள் இணைவைப்பவைகளை விட்டும் உயர்வடைந்துவிட்டான்" என்று கூறுவீராக!

19. மேலும், மனிதர்கள் (தொடக்கத்தில்) ஒரே சமுதாயத்தினராகவே தவிர இருக்கவில்லை; பின்னரே அவர்கள் (பிரிந்து) மாறுபட்டுவிட்டனர்; மேலும், (ஒவ்வொரு காரியத்திற்கும் தவணை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்ற) உமது இரட்சகனின் வாக்கு முந்தியிருக்காவிடில், அவர்கள் எதில் மாறுபட்டிருக்கின்றனரோ அதைப்பற்றி அவர்களிடையேமுடிவு செய்யப்பட்டேயிருக்கும்.

20. மேலும், "(முன்பிருந்த நபிமார்களுக்கு கொடுக்கப்பட்டவாறு) ஏதோர் அத்தாட்சி (அல்லாஹ்வின் தூதராகிய) அவர்மீது அவருடைய இரட்சகனிடமிருந்து இறக்கப்பட்டிருக்கவேண்டாமா?" என்றும் அவர்கள் கூறுகின்றனர்; அதற்கு "மறைவானவைகள் அல்லாஹ்விற்கே உரியன; ஆகவே, நீங்கள் எதிர்பார்த்திருங்கள்; நிச்சயமாக நான், உங்களுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்போரில் இருக்கிறேன்" என்று(நபியே! நீர்) கூறுவீராக!

وَاِذَآ اَذَقْنَا النَّاسَ رَحْمَةً مِّنْۢ بَعْدِ ضَرَّآءَ مَسَّتْهُمْ اِذَا لَهُمْ مَّكْرٌ
فِيْۤ اٰيَاتِنَا ؕ قُلِ اللّٰهُ اَسْرَعُ مَكْرًا ؕ اِنَّ رُسُلَنَا يَكْتُبُوْنَ مَا تَمْكُرُوْنَ ﴿۲۱﴾
هُوَ الَّذِيْ يُسَيِّرُكُمْ فِي الْبَرِّ وَالْبَحْرِ ؕ حَتّٰۤى اِذَا كُنْتُمْ فِي الْفُلْكِ ۚ وَ
جَرَيْنَ بِهِمْ بِرِيْحٍ طَيِّبَةٍ وَّفَرِحُوْا بِهَا جَآءَتْهَا رِيْحٌ عَاصِفٌ
وَّجَآءَهُمُ الْمَوْجُ مِنْ كُلِّ مَكَانٍ وَّظَنُّوْۤا اَنَّهُمْ اُحِيْطَ بِهِمْ ۙ دَعَوُا
اللّٰهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ۚ لَئِنْ اَنْجَيْتَنَا مِنْ هٰذِهٖ لَنَكُوْنَنَّ
مِنَ الشّٰكِرِيْنَ ﴿۲۲﴾ فَلَمَّآ اَنْجٰىهُمْ اِذَا هُمْ يَبْغُوْنَ فِي الْاَرْضِ بِغَيْرِ
الْحَقِّ ؕ يٰۤاَيُّهَا النَّاسُ اِنَّمَا بَغْيُكُمْ عَلٰۤى اَنْفُسِكُمْ ۙ مَّتَاعَ الْحَيٰوةِ الدُّنْيَا ز
ثُمَّ اِلَيْنَا مَرْجِعُكُمْ فَنُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۲۳﴾ اِنَّمَا مَثَلُ
الْحَيٰوةِ الدُّنْيَا كَمَآءٍ اَنْزَلْنٰهُ مِنَ السَّمَآءِ فَاخْتَلَطَ بِهٖ نَبَاتُ
الْاَرْضِ مِمَّا يَاْكُلُ النَّاسُ وَالْاَنْعَامُ ؕ حَتّٰۤى اِذَآ اَخَذَتِ الْاَرْضُ
زُخْرُفَهَا وَازَّيَّنَتْ وَظَنَّ اَهْلُهَآ اَنَّهُمْ قٰدِرُوْنَ عَلَيْهَآ ۙ اَتٰىهَآ
اَمْرُنَا لَيْلًا اَوْ نَهَارًا فَجَعَلْنٰهَا حَصِيْدًا كَاَنْ لَّمْ تَغْنَ
بِالْاَمْسِ ؕ كَذٰلِكَ نُفَصِّلُ الْاٰيٰتِ لِقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ ﴿۲۴﴾ وَاللّٰهُ
يَدْعُوْۤا اِلٰى دَارِ السَّلٰمِ ؕ وَيَهْدِيْ مَنْ يَّشَآءُ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿۲۵﴾

21. மேலும், மனிதர்களை_அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்குப்பின் ஒரு அருளைக்கொண்டு இன்பமடையும்படி நாம்செய்தால், அச்சமயம் அவர்கள் நம் வசனங்களில் (தவறான பொருள் கற்பிக்கச்) சூழ்ச்சி செய்வது அவர்களுக்கு (வழக்கமாக) உண்டு; (அதற்கு நபியே! உங்கள் சூழ்ச்சியைமுறியடிக்க) அல்லாஹ்(வின் சூழ்ச்சி முந்திக்கொள்ளும்; அவன்) சூழ்ச்சியால் மிகத்தீவிரமானவன் என்று கூறுவீராக! நிச்சயமாக, நம்முடைய தூதர்(களாகிய மலக்கு)கள் நீங்கள் செய்யும் சூழ்ச்சிகளை எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

22. கரையில் மற்றும் கடலில் அவனே உங்களை பயணம் செய்ய வைக்கின்றான்;முடிவாக, நீங்கள் கப்பல்களில் இருக்கும்போது நல்ல காற்றுடன் அவர்களை அவைகள் கொண்டு சென்றன; (அவ்வாறு நன்கு அவை செல்லும்) அதனைக் கொண்டு அவர்கள் மகிழ்ச்சியும் அடைந்திருந்த சமயத்தில் புயல் காற்று அதனிடம் வந்துவிட்டது; எல்லா இடங்களிலிருந்து அவர்களிடம் அலைகளும் வந்து விட்டன; "நிச்சயமாக அவர்கள் (அலைகளால்) சூழ்ந்து கொள்ளப்பட்டார்கள்; (அதிலிருந்து கரைசேரமுடியாது)" என்றும் அவர்கள் எண்ணிவிட்டனர்; (அப்பொழுது) அல்லாஹ்வை_ அவனுக்கே மார்க்கத்தை(வணக்கத்தை) கலப்பற்றதாக்கிய வர்களாக, (தூய உள்ளத்துடன், "எங்கள் இரட்சகனே!) இதிலிருந்து நீ எங்களை காப்பாற்றி விட்டால், நிச்சயமாக நாங்கள் (உனக்கு) நன்றி செலுத்துபவர்களில் உள்ளவர்களாக நாங்கள் இருப்போம்" என்று பிரார்த்திக்கின்றனர்.

23. ஆகவே அவன் அவர்களைக் காப்பாற்றியபொழுது, அவர்கள் (கரை சேர்க்கப்பட்ட) அந்நேரமே, நியாயமின்றி பூமியில் அழிச்சாட்டியம் செய் கின்றனர்; மனிதர்களே! உங்களுடைய அழிச்சாட்டியமெல்லாம் உங்களுக்கே கேடாக முடியும்; (அதனால்) இவ்வுலக வாழ்க்கையில் சிறிது சுகமனுபவிக்கலாம்; பின்னர், நம்மிடமே உங்கள் திரும்புதல் இருக்கிறது; (அப்போது) நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றை நாம் உங்களுக்கு அறிவித்துவிடுவோம்.

24. இவ்வுலக வாழ்க்கையின் உதாரணமெல்லாம் நீரைப் போன்றாகும்; அதை வானத்திலிருந்து நாம் இறக்கிவைத்தோம்; அது, மனிதர்களும், கால் நடைகளும் புசிக்கக் கூடிய புற்பூண்டு முதலியவைகளுடன் கலந்து,(அவை பூத்துக் காய்த்து, கதிர் வாங்கி) முடிவாக பூமி தனது செழிப்பைப்பிடித்து அலங்காரமும் அடைந்தபோது அதன் சொந்தக்காரர்கள், (நாளை) அதன்மீது நிச்சயமாக தாங்கள் (அறுவடை செய்ய) சக்தியுடையவர்கள் என்றும் தங்களை எண்ணிக் கொண்டிருந்தனர்; (அச்சமயம்,) இரவிலோ அல்லது பகலிலோ நம்முடைய கட்டளை வந்து (அதைநாம் அழித்துவிட்டோம்.) அதனால், அவை நேற்றைய தினம் அவ்விடத்தில் இல்லாததைப் போன்று அறுவடை செய்யப்பட்டதாக அதை நாம் ஆக்கிவிட்டோம்; சிந்தித்துணரக்கூடிய சமூகத்தார்க்கு நாம் (நம்முடைய)வசனங்களை இவ்வாறே(தெளிவாக) விவரிக்கிறோம்.

25. (மனிதர்களே!) அல்லாஹ்வோ சாந்தி அளிக்கக்கூடிய (சுவன) வீட்டின்பால் (உங்களை) அழைக்கின்றான்;மேலும், அவன் நாடியவர்களை (அதற்குரிய)நேரான வழியின்பால் செலுத்துகிறான்.

لِلَّذِيْنَ اَحْسَنُوا الْحُسْنٰى وَزِيَادَةٌ ؕ وَلَا يَرْهَقُ وُجُوْهَهُمْ قَتَرٌ وَّلَا
ذِلَّةٌ ؕ اُولٰٓئِكَ اَصْحٰبُ الْجَنَّةِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿٢٦﴾ وَالَّذِيْنَ كَسَبُوا
السَّيِّاٰتِ جَزَآءُ سَيِّئَةٍ بِمِثْلِهَا ۙ وَتَرْهَقُهُمْ ذِلَّةٌ ؕ مَا لَهُمْ مِّنَ اللّٰهِ
مِنْ عَاصِمٍ ۚ كَاَنَّمَآ اُغْشِيَتْ وُجُوْهُهُمْ قِطَعًا مِّنَ الَّيْلِ مُظْلِمًا ؕ
اُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿٢٧﴾ وَيَوْمَ نَحْشُرُهُمْ
جَمِيْعًا ثُمَّ نَقُوْلُ لِلَّذِيْنَ اَشْرَكُوْا مَكَانَكُمْ اَنْتُمْ وَشُرَكَآؤُكُمْ ۚ
فَزَيَّلْنَا بَيْنَهُمْ وَقَالَ شُرَكَآؤُهُمْ مَّا كُنْتُمْ اِيَّانَا تَعْبُدُوْنَ ﴿٢٨﴾
فَكَفٰى بِاللّٰهِ شَهِيْدًاۢ بَيْنَنَا وَبَيْنَكُمْ اِنْ كُنَّا عَنْ عِبَادَتِكُمْ
لَغٰفِلِيْنَ ﴿٢٩﴾ هُنَالِكَ تَبْلُوْا كُلُّ نَفْسٍ مَّآ اَسْلَفَتْ وَرُدُّوْٓا اِلَى اللّٰهِ
ع ٣ النصف ٨ مَوْلٰىهُمُ الْحَقِّ وَضَلَّ عَنْهُمْ مَّا كَانُوْا يَفْتَرُوْنَ ﴿٣٠﴾ ع قُلْ مَنْ
يَّرْزُقُكُمْ مِّنَ السَّمَآءِ وَالْاَرْضِ اَمَّنْ يَّمْلِكُ السَّمْعَ وَالْاَبْصَارَ وَ
مَنْ يُّخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَيُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَيِّ وَمَنْ يُّدَبِّرُ
الْاَمْرَ ؕ فَسَيَقُوْلُوْنَ اللّٰهُ ۚ فَقُلْ اَفَلَا تَتَّقُوْنَ ﴿٣١﴾ فَذٰلِكُمُ اللّٰهُ رَبُّكُمُ الْحَقُّ ۚ
فَمَاذَا بَعْدَ الْحَقِّ اِلَّا الضَّلٰلُ ۚ فَاَنّٰى تُصْرَفُوْنَ ﴿٣٢﴾ كَذٰلِكَ
حَقَّتْ كَلِمَتُ رَبِّكَ عَلَى الَّذِيْنَ فَسَقُوْٓا اَنَّهُمْ لَا يُؤْمِنُوْنَ ﴿٣٣﴾

24. (இதன் பிறகும், அவர்கள்,) "மூஸாவே! அவர்கள் அதில் இருந்துகொண்டிருக்கும் காலமெல்லாம் ஒருக்காலும் நாங்கள் அதில் நுழையவே மாட்டோம்; ஆகவே நீரும், உம்முடைய இரட்சகனும் சென்று (அவர்களுடன்) நீங்கள் இருவரும் யுத்தம் புரியுங்கள்; நிச்சயமாக நாங்கள் இங்கேயே உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள்" என்று கூறினார்கள்.

25. (அதற்கு மூஸா,) "என் இரட்சகனே! நிச்சயமாக நான் என்னையும், என் சகோதரரையும் தவிர (மற்றெவரையும் நான் உதவிக்குச்) சொந்தமாக்கிக் கொள்ளவில்லை; ஆகவே, எங்களுக்கிடையிலும் தீயவர்களான இக்கூட்டத்தினருக்கிடையிலும் பிரித்து விடுவாயாக" என்று (பிரார்த்தித்துக்) கூறினார்.

26. அவ்வாறாயின், நிச்சயமாக(அவர்களுக்கு வாக்களிக்கபட்ட பலஸ்தீன் என்ற)" அ(ந்த இடமான)து, நாற்பது ஆண்டுகள் வரையில் அவர்களுக்கு நிச்சயமாகத் தடுக்கப்பட்டு விட்டது; (அதுவரையில்) அவர்கள் பூமியில் தட்டழிவார்கள்; ஆகவே, இத்தீய கூட்டத்தாரைப் பற்றி நீர் கவலை கொள்ளாதீர்" என்று (மூஸாவுக்கு அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

27. மேலும், (நபியே!) ஆதமுடைய (ஹாபீல், காபீல் என்னும்) இரு குமாரர்களின் செய்தியை உண்மையைக் கொண்டு நீர் அவர்களுக்கு ஓதிக் காண்பிப்பீராக! அவ்விருவரும் குர்பானி (பலி) யை (அல்லாஹ்வின்பால் சமர்ப்பித்து) நெருக்கமாக்கி வைத்த சமயத்தில், அவ்விருவரில் ஒருவரிலிருந்து அது அங்கீகரிக்கப்பட்டது; மேலும், மற்றவரிலிருந்து அது அங்கீகரிக்கப் படவில்லை. ஆகவே, "நிச்சயமாக நான் உன்னைக் கொலை செய்து விடுவேன்" என்று (அங்கீகரிக்கப்படாதவர்) கூறினார்; ( அதற்கு, அங்கீகரிக்கப் பெற்ற ) அவர், "அல்லாஹ் அங்கீகரிப்பதெல்லாம் பயபக்தியுடையவர்களில் இருந்துதான்" என்று கூறினார்.

28. (மேலும்,) "நீ என்னைக்கொலைசெய்வதற்காக உன் கையை என்னளவில் நீட்டினாலும் நான், உன்னை கொலைசெய்வதற்காக என்னுடைய கையை உன்னளவில் நீட்டுபவன் அல்ல; (ஏனென்றால்) நிச்சமாக நான், அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன்"(என்றும் கூறினார்).

29. "என்னுடைய பாவத்தையும், உன்னுடைய பாவத்தையும் நீ சுமந்து கொண்டு (அல்லாஹ்விடம்) வருவதையே நிச்சயமாக நான் நாடுகிறேன்; அவ்வாறாயின், நீ நரகவாசிகளில் உள்ளவனாகிவிடுவாய்; இதுதான் அநியாயக்காரர்களுக்குரிய கூலியாகும்" (என்றும் கூறினார்).

30. (இதன்பின்னரும்) அவர், தன் சகோதரரைக்கொலை செய்துவிடுவதையே அவருடைய மனம் அவருக்கு எளிதாகக்காட்டியது; ஆகவே, அவர் அவரைக் கொலைசெய்துவிட்டார்; அதனால், அவர் நஷ்டமடைந்தவர்களில் (உள்ளவராக) ஆகிவிட்டார்.

31. பின்னர், பூமியைத்தோண்டக்கூடிய ஒரு காக்கையை, தன் சகோதரரின் பிரேதத்தை எவ்வாறு அவர் மறைக்க வேண்டுமென்பதை அவருக்கு அது காண்பிப்பதற்காக அல்லாஹ் அனுப்பிவைத்தான்; (அது பூமியைத்தோன்றிற்று. இதனைக் கண்ட) அவர், "என்னுடைய கேடே! இந்தக் காகத்தைப் போல் ஆவதற்குக்கூட இயலாதவனாக நான் ஆகிவிட்டேனா? அவ்வாறு (நான் இருந்திருந்தாலும்,) என் சகோதரரின் சவத்தை நான் மறைத்திருப்பேன் என்று (அழுது) கூறி கைசேதப்படக் கூடியவர்களில் ஒருவராக அவர் ஆகிவிட்டார்.

مِنْ اَجْلِ ذٰلِكَ ۛ كَتَبْنَا عَلٰى بَنِىْٓ اِسْرَآءِيْلَ اَنَّهٗ مَنْ
قَتَلَ نَفْسًۢا بِغَيْرِ نَفْسٍ اَوْ فَسَادٍ فِى الْاَرْضِ فَكَاَنَّمَا قَتَلَ
النَّاسَ جَمِيْعًا ؕ وَمَنْ اَحْيَاهَا فَكَاَنَّمَآ اَحْيَا النَّاسَ جَمِيْعًا ؕ
وَلَقَدْ جَآءَتْهُمْ رُسُلُنَا بِالْبَيِّنٰتِ ثُمَّ اِنَّ كَثِيْرًا مِّنْهُمْ بَعْدَ
ذٰلِكَ فِى الْاَرْضِ لَمُسْرِفُوْنَ ﴿۳۲﴾ اِنَّمَا جَزٰٓؤُا الَّذِيْنَ يُحَارِبُوْنَ
اللّٰهَ وَرَسُوْلَهٗ وَيَسْعَوْنَ فِى الْاَرْضِ فَسَادًا اَنْ يُّقَتَّلُوْٓا اَوْ
يُصَلَّبُوْٓا اَوْ تُقَطَّعَ اَيْدِيْهِمْ وَاَرْجُلُهُمْ مِّنْ خِلَافٍ اَوْ
يُنْفَوْا مِنَ الْاَرْضِ ؕ ذٰلِكَ لَهُمْ خِزْىٌ فِى الدُّنْيَا وَ
لَهُمْ فِى الْاٰخِرَةِ عَذَابٌ عَظِيْمٌ ﴿۳۳﴾ اِلَّا الَّذِيْنَ تَابُوْا
مِنْ قَبْلِ اَنْ تَقْدِرُوْا عَلَيْهِمْ ۚ فَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ غَفُوْرٌ
رَّحِيْمٌ ﴿۳۴﴾ ع يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَابْتَغُوْٓا ۵/۸/۹
اِلَيْهِ الْوَسِيْلَةَ وَجَاهِدُوْا فِىْ سَبِيْلِهٖ لَعَلَّكُمْ
تُفْلِحُوْنَ ﴿۳۵﴾ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا لَوْ اَنَّ لَهُمْ مَّا فِى
الْاَرْضِ جَمِيْعًا وَّمِثْلَهٗ مَعَهٗ لِيَفْتَدُوْا بِهٖ مِنْ عَذَابِ
يَوْمِ الْقِيٰمَةِ مَا تُقُبِّلَ مِنْهُمْ ۚ وَلَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿۳۶﴾

معانقة ۵ عند المتأخرين ۱۲ وقف النبی صلی اللہ علیہ وسلم

32. இதன் காரணமாகவே, "எவரொருவர் மற்றோர் ஆத்மாவின் கொலைக்குப் பிரதியாகவோ, அல்லது பூமியில் (உண்டாகும்) குழப்பத்தி(னைத் தடை செய்வத)ற்காகவோ தவிர, (அநியாயமாக மற்றொருவரை) கொலை செய்கின்றாரோ அவர், மனிதர்கள் யாவரையுமே கொலைசெய்தவர் போலாவார் என்றும், எவர் அதனை (ஓர் ஆத்மாவை) வாழவைக்கின்றாரோ அவர், மனிதர்கள் யாவரையுமே வாழவைத்தவர் போலாவார் " என்றும், இஸ்ராயீலின் மக்களின் மீது நாம் விதியாக்கி விட்டோம்; மேலும், நம்முடைய தூதர்கள் பலர் அவர்களிடம், நிச்சயமாகத் தெளிவான அத்தாட்சிகளையும் கொண்டு வந்திருந்தார்கள்; அப்பால் நிச்சயமாக அவர்களில் பெரும்பாலோர், இதற்குப் பின்னரும் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருந்தனர்.

33. அல்லாஹ்வுடனும், அவனுடைய தூதருடனும் போர் தொடுத்து, பூமியில் குழப்பம் செய்து கொண்டும் திரிகின்றவர்களுக்குரிய தண்டனையெல்லாம் (அவர்கள்) கொல்லப்பட வேண்டும், அல்லது சிலுவையில் அறையப்பட வேண்டும், அல்லது அவர்களின் கைகளும், அவர்களின் கால்களும் மாறாக (ஒரு பக்கத்துக்கையும் மறு பக்கத்துக்காலுமாக)த் துண்டிக்கப்பட வேண்டும், அல்லது நாடுகடத்தப் படுதல் வேண்டும்; இது இம்மையில் அவர்களுக்கு இழிவு (தரும் தண்டனை) ஆகும்; இன்னும், மறுமையில் மகத்தான வேதனை அவர்களுக்குண்டு.

34. (எனினும்,) பிடித்து தண்டிக்க அவர்கள் மீது நீங்கள் சக்தி பெறுவதற்கு முன்னதாக (அவர்களில்,) பச்சாதாபப்பட்டவர்களைத்தவிர; அப்போது நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

35. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள்; மேலும், அவன்பால் நெருங்கு வதற்குரிய வழியை (வணக்கவழிபாடு களின் மூலம்) தேடிக் கொள்ளுங்கள்; மேலும், அவனுடைய பாதையில் யுத்தம் செய்யுங்கள்; (அதனால்) நீங்கள் வெற்றியடையலாம்.

36. நிச்சயமாக நிராகரித்துவிட்டவர்கள் _ அவர்களுக்கு, மறுமை நாளில் (அவர்கள்)படும் வேதனையிலிருந்து( தங்களை விடுவித்துக் கொள்ள) இழப்பீடாகக் கொடுப்பதற்காக இப்பூமியில் உள்ள யாவும் இன்னும், அத்துடன் அதுபோன்றதும் நிச்சயமாக (ச்சொந்தமாக) இருந்தாலும் அவர்களிடமிருந்து, (அது) அங்கீகரிக்கப்படமாட்டாது; அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுமுண்டு.

يُرِيْدُوْنَ اَنْ يَّخْرُجُوْا مِنَ النَّارِ وَمَا هُمْ بِخٰرِجِيْنَ
مِنْهَا ۫ وَلَهُمْ عَذَابٌ مُّقِيْمٌ ﴿٣٧﴾ وَالسَّارِقُ وَالسَّارِقَةُ فَاقْطَعُوْٓا
اَيْدِيَهُمَا جَزَآءًۢ بِمَا كَسَبَا نَكَالًا مِّنَ اللّٰهِ ؕ وَاللّٰهُ عَزِيْزٌ
حَكِيْمٌ ﴿٣٨﴾ فَمَنْ تَابَ مِنْۢ بَعْدِ ظُلْمِهٖ وَاَصْلَحَ فَاِنَّ اللّٰهَ
يَتُوْبُ عَلَيْهِ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿٣٩﴾ اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ لَهٗ
مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ يُعَذِّبُ مَنْ يَّشَآءُ وَيَغْفِرُ لِمَنْ
يَّشَآءُ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿٤٠﴾ يٰۤاَيُّهَا الرَّسُوْلُ لَا
يَحْزُنْكَ الَّذِيْنَ يُسَارِعُوْنَ فِي الْكُفْرِ مِنَ الَّذِيْنَ قَالُوْٓا
اٰمَنَّا بِاَفْوَاهِهِمْ وَلَمْ تُؤْمِنْ قُلُوْبُهُمْ ۛۚ وَمِنَ الَّذِيْنَ
هَادُوْا ۛۚ سَمّٰعُوْنَ لِلْكَذِبِ سَمّٰعُوْنَ لِقَوْمٍ اٰخَرِيْنَ ۙ لَمْ
يَاْتُوْكَ ؕ يُحَرِّفُوْنَ الْكَلِمَ مِنْۢ بَعْدِ مَوَاضِعِهٖ ۚ يَقُوْلُوْنَ
اِنْ اُوْتِيْتُمْ هٰذَا فَخُذُوْهُ وَاِنْ لَّمْ تُؤْتَوْهُ فَاحْذَرُوْا ؕ
وَمَنْ يُّرِدِ اللّٰهُ فِتْنَتَهٗ فَلَنْ تَمْلِكَ لَهٗ مِنَ اللّٰهِ شَيْـًٔا ؕ
اُولٰٓئِكَ الَّذِيْنَ لَمْ يُرِدِ اللّٰهُ اَنْ يُّطَهِّرَ قُلُوْبَهُمْ ؕ لَهُمْ
فِي الدُّنْيَا خِزْيٌ ۖۚ وَّلَهُمْ فِي الْاٰخِرَةِ عَذَابٌ عَظِيْمٌ ﴿٤١﴾

مع ١ عند المتقدمين ١٢

37. அவர்கள் (நரக) நெருப்பிலிருந்து வெளியேறி விட நாடுவார்கள். (ஆனால்) அதைவிட்டு அவர்கள் வெளியேறுகிறவர்களாகவுமில்லை; மேலும், அவர்களுக்கு நிலையான வேதனையுண்டு.

38. திருடனும், திருடியும் அவ்விருவரும் சம்பாதித்ததற்குக்கூலியாக_ அல்லாஹ்விடமிருந்துள்ள தண்டனையாக அவ்விருவரின் கைகளைத் துண்டித்து விடுங்கள்; மேலும், அல்லாஹ்(யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

39. ஆகவே, எவர், தம்முடைய அநீதத்திற்குப் பின்னர், பச்சாதாபப்பட்டு, (தன்னைச்) சீர் திருத்தியும் கொண்டாரோ, அப்போது நிச்சயமாக அல்லாஹ் அவருடைய தவ்பாவை அங்கீகரிக்கின்றான்; (காரணம்,) நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன்.

40. (நபியே!) "நிச்சயமாக அல்லாஹ்வாகிறவன்_ அவனுக்கே வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி உரித்தானதென்பதை நீர் அறியவில்லையா?( ஆகவே) அவன் நாடியவர்களை வேதனை செய்வான்; அவன் நாடியவர்களுக்கு மன்னிப்பும் அளிப்பான்; அல்லாஹ், ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

41. (நம்முடைய) தூதரே! அவர்களது இதயங்கள் விசுவாசங் கொள்ளாதிருக்க, தங்களது வாய்களால் விசுவாசங்கொண்டோம் என்று கூறியோர்களிலிருந்தும், இன்னும் யூதர்களாகி விட்டவர்களிலிருந்தும் நிராகரிப்பில் விரைந்து சென்று கொண்டிருப்போர்கள் உமக்குக் கவலையைத்தரவேண்டாம். (அத்தகையோர்) பொய்யானவற்றையே (ஆவலோடு, ) அதிகமாகக் கேட்கின்றவர்கள் ; (இதுவரையில்) உம்மிடம் வராத மற்றொரு கூட்டத்தினருக்(கு இவைகளை அறிவிப்பதற்)காகவும் அதிகமாக(செவி கொடுத்து)க் கேட்கின்றவர்கள்; அவர்கள் (வேத) வசனங்களை, அவற்றின் உரிய இடங்களிலிருந்து மாற்றி (விட்டு இவர்களிடம்,)"உங்களுக்கு(இந்த நபியிடமிருந்து) இ(ன்ன)துகொடுக்கப் பட்டால், அதனை எடுத்துக் கொள்ளுங்கள்; இன்னும் அது உங்களுக்குக் கொடுக்கப்படாவிடில், (அதிலிருந்து விலகி) எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்" என்று கூறுகின்றனர்; மேலும், அல்லாஹ் எவருடைய வழிகேட்டை நாடுகிறானோ அவருக்காக அல்லாஹ்விடமிருந்து (எதையும் தடுக்க) நீர் ஒருபோதும் சக்தி பெறமாட்டீர்; இத்தகையோர்தான் _ அவர்களின் இதயங்களைப் பரிசுத்தமாக்கி வைக்க அல்லாஹ் நாடவில்லை; இவர்களுக்கு, இம்மையில் இழிவுண்டு; மறுமையில் இவர்களுக்கு மகத்தான வேதனையுமுண்டு.

سَمّٰعُوْنَ لِلْكَذِبِ اَكّٰلُوْنَ لِلسُّحْتِ ؕ فَاِنْ جَآءُوْكَ فَاحْكُمْ
بَيْنَهُمْ اَوْ اَعْرِضْ عَنْهُمْ ۚ وَاِنْ تُعْرِضْ عَنْهُمْ فَلَنْ يَّضُرُّوْكَ
شَيْــًٔا ؕ وَاِنْ حَكَمْتَ فَاحْكُمْ بَيْنَهُمْ بِالْقِسْطِ ؕ اِنَّ اللّٰهَ يُحِبُّ
الْمُقْسِطِيْنَ ﴿٤٢﴾ وَكَيْفَ يُحَكِّمُوْنَكَ وَعِنْدَهُمُ التَّوْرٰىةُ فِيْهَا
حُكْمُ اللّٰهِ ثُمَّ يَتَوَلَّوْنَ مِنْۢ بَعْدِ ذٰلِكَ ؕ وَمَاۤ اُولٰٓئِكَ
بِالْمُؤْمِنِيْنَ ﴿٤٣﴾ ع اِنَّاۤ اَنْزَلْنَا التَّوْرٰىةَ فِيْهَا هُدًى وَّنُوْرٌ ۚ ع ٦ ١٠
يَحْكُمُ بِهَا النَّبِيُّوْنَ الَّذِيْنَ اَسْلَمُوْا لِلَّذِيْنَ هَادُوْا وَ
الرَّبّٰنِيُّوْنَ وَالْاَحْبَارُ بِمَا اسْتُحْفِظُوْا مِنْ كِتٰبِ
اللّٰهِ وَكَانُوْا عَلَيْهِ شُهَدَآءَ ۚ فَلَا تَخْشَوُا النَّاسَ وَاخْشَوْنِ
وَلَا تَشْتَرُوْا بِاٰيٰتِيْ ثَمَنًا قَلِيْلًا ؕ وَمَنْ لَّمْ يَحْكُمْ بِمَاۤ
اَنْزَلَ اللّٰهُ فَاُولٰٓئِكَ هُمُ الْكٰفِرُوْنَ ﴿٤٤﴾ وَكَتَبْنَا عَلَيْهِمْ
فِيْهَاۤ اَنَّ النَّفْسَ بِالنَّفْسِ ۙ وَالْعَيْنَ بِالْعَيْنِ وَالْاَنْفَ
بِالْاَنْفِ وَالْاُذُنَ بِالْاُذُنِ وَالسِّنَّ بِالسِّنِّ ۙ وَالْجُرُوْحَ
قِصَاصٌ ؕ فَمَنْ تَصَدَّقَ بِهٖ فَهُوَ كَفَّارَةٌ لَّهٗ ؕ وَمَنْ
لَّمْ يَحْكُمْ بِمَاۤ اَنْزَلَ اللّٰهُ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ ﴿٤٥﴾

42. (அன்றி இவர்கள்) பொய்யையே அதிகமாக செவிமடுக்கின்றவர்கள் _ பாவமான (தடுக்கப்பட்ட)தையே அதிகமாக உண்பவர்கள் ; ஆகவே, அவர்கள் (தீர்ப்புத்தேடி) உம்மிடம் வந்தார்களானால், அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பீராக! அல்லது அவர்களைப் புறக்கணித்து விடுவீராக! நீர் அவர்களைப் புறக்கணித்துவிட்டாலும், அவர்கள் யாதொரு தீங்கும் ஒருபோதும் உமக்குச் செய்ய முடியாது; இன்னும், நீர் தீர்ப்பளித்தால், நீதியைக்கொண்டுஅவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பீராக! (ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ் நீதிமான்களை நேசிக்கின்றான்.

43. மேலும், (நபியே!) அவர்கள் உம்மை(த் தங்களுக்கு)த் தீர்ப்புக் கூறுபவராக எவ்வாறு எடுத்துக் கொள்வார்கள்? அவர்களிடத்திலோ, 'தவ்றாத்' (என்னும் வேதம்) இருக்கின்றது. அதில் அல்லாஹ்வுடைய சட்டமும் இருக்கின்றது; (அவ்வாறிருந்தும்) பின்னர், அதனை அதற்குப்பிறகு அவர்கள் புறக்கணித்து விடுகிறார்கள்; மேலும், (அதனை) அவர்கள் விசுவாசிக்கின்றவர்களல்லர்.

44. நிச்சயமாக நாம் தவ்றாத்தை இறக்கி வைத்தோம்; அதில்நேர்வழியும், பிரகாசமுமிருக்கின்றது; (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் கீழ்ப்படிந்து நடந்த நபிமார்களும், (யூதர்களுடைய பண்டிதர்களாகிய) 'ரிப்பிய்யூன்' களும் (குருமார்களாகிய) 'அஹ்பார்' களும், அல்லாஹ்வுடைய வேதத்தைப் பாதுகாக்க பொறுப்புக் கொடுக்கப்பட்டவர்கள் என்பதாலும், அதற்கு சாட்சிகளாக அவர்கள் இருந்தார்கள் என்பதாலும் அதனைக் கொண்டே யூதர்களுக்கு தீர்ப்பளித்து வந்தார்கள்; எனவே, (விசுவாசங்கொண்டோரே!) நீங்கள் மனிதர்களுக்குப் பயப்பட வேண்டாம்; எனக்கே பயப்படுங்கள். என் வசனங்களுக்குப் பகரமாக சொற்பக்கிரயத்தையும் வாங்காதீர்கள்;மேலும், எவர் அல்லாஹ் இறக்கிவைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அத்தகையோர் தாம் நிராகரிப்பவர்களாவர்.

45. மேலும், உயிருக்குப் பதிலாக உயிரும், கண்ணுக்குப் பதிலாக கண்ணும், மூக்குக்குப் பதிலாக மூக்கும், காதுக்குப் பதிலாக காதும், பல்லுக்குப் பதிலாகப் பல்லும் எனவும், காயங்களுக்கும் (அதற்கு நிகரான) பழி வாங்குதல் உண்டு என்பதாகவும், அவர்கள்மீது அ(வர்களுடைய வேதமாகிய "தவ்றாத்")தில் நாம் விதித்திருந்தோம்; பின்னர், எவரேனும் பழிவாங்குவதை(மன்னித்து)த்தானமாக விட்டுவிட்டால் ,அது அவரு(டைய தீ வினை)க்குப் பரிகாரமாகிவிடும்; இன்னும், எவர் அல்லாஹ் இறக்கியதைக்கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அத்தகையோர்தாம் அநியாயக்காரர்கள்ஆவர்.

وَقَفَّيْنَا عَلٰٓى اٰثَارِهِمْ بِعِيْسَى ابْنِ مَرْيَمَ مُصَدِّقًا لِّمَا بَيْنَ
يَدَيْهِ مِنَ التَّوْرٰىةِ ۠ وَاٰتَيْنٰهُ الْاِنْجِيْلَ فِيْهِ هُدًى وَّنُوْرٌ ۙ وَّ
مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ مِنَ التَّوْرٰىةِ وَهُدًى وَّمَوْعِظَةً
لِّلْمُتَّقِيْنَ ﴿٤٦﴾ ط وَلْيَحْكُمْ اَهْلُ الْاِنْجِيْلِ بِمَآ اَنْزَلَ اللّٰهُ فِيْهِ ط وَمَنْ
لَّمْ يَحْكُمْ بِمَآ اَنْزَلَ اللّٰهُ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ﴿٤٧﴾ وَاَنْزَلْنَآ
اِلَيْكَ الْكِتٰبَ بِالْحَقِّ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ مِنَ الْكِتٰبِ
وَمُهَيْمِنًا عَلَيْهِ فَاحْكُمْ بَيْنَهُمْ بِمَآ اَنْزَلَ اللّٰهُ وَلَا تَتَّبِعْ
اَهْوَآءَهُمْ عَمَّا جَآءَكَ مِنَ الْحَقِّ ط لِكُلٍّ جَعَلْنَا مِنْكُمْ شِرْعَةً
وَّمِنْهَاجًا ط وَلَوْ شَآءَ اللّٰهُ لَجَعَلَكُمْ اُمَّةً وَّاحِدَةً وَّلٰكِنْ لِّيَبْلُوَكُمْ
فِيْ مَآ اٰتٰىكُمْ فَاسْتَبِقُوا الْخَيْرٰتِ ط اِلَى اللّٰهِ مَرْجِعُكُمْ جَمِيْعًا فَيُنَبِّئُكُمْ
بِمَا كُنْتُمْ فِيْهِ تَخْتَلِفُوْنَ ﴿٤٨﴾ لا وَاَنِ احْكُمْ بَيْنَهُمْ بِمَآ اَنْزَلَ اللّٰهُ
وَلَا تَتَّبِعْ اَهْوَآءَهُمْ وَاحْذَرْهُمْ اَنْ يَّفْتِنُوْكَ عَنْ بَعْضِ مَآ
اَنْزَلَ اللّٰهُ اِلَيْكَ ط فَاِنْ تَوَلَّوْا فَاعْلَمْ اَنَّمَا يُرِيْدُ اللّٰهُ اَنْ يُّصِيْبَهُمْ
بِبَعْضِ ذُنُوْبِهِمْ ط وَاِنَّ كَثِيْرًا مِّنَ النَّاسِ لَفٰسِقُوْنَ ﴿٤٩﴾ اَفَحُكْمَ
الْجَاهِلِيَّةِ يَبْغُوْنَ ط وَمَنْ اَحْسَنُ مِنَ اللّٰهِ حُكْمًا لِّقَوْمٍ يُّوْقِنُوْنَ ﴿٥٠﴾ ع ٧ ١١

46. இன்னும், (முன்சென்ற நபிமார்களாகிய) அவர்களுடைய அடிச்சுவடுகளின் மீதே மர்யமுடைய மகன் ஈஸாவையும், அவருக்கு முன்பிருந்த தவ்றாத்தை உண்மையாக்கி வைப்பவராக நாம் தொடரச் செய்தோம். அன்றியும், அவருக்கு இன்ஜீலை நாம் கொடுத்தோம். அதிலும் நேர்வழியும், பிரகாசமும் இருந்தன; அது, அவருக்கு முன்பிருந்த தவ்றாத்தை உண்மையாக்குவதாகவும், பயபக்தியுடையோருக்கு அது ஒரு நேர் வழி(காட்டி)யாகவும், நல்லுபதேசமாகவும் இருந்தது.

47. இன்னும்,(உண்மையான) இன்ஜீலையுடையவர்கள் அதில் அல்லாஹ் இறக்கி வைத்ததைக்கொண்டு தீர்ப்பளிக்கவும்; இன்னும் எவர், அல்லாஹ் இறக்கி வைத்ததைக்கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அத்தகையோர் _ அவர்கள் பாவிகளாவர்.

48. மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கிவைத்துள்ளோம்; இது வேதத்திலிருந்து தனக்கு முன்னுள்ளவற்றை உண்மையாக்கி வைக்கக்கூடியதாகவும், அவற்றைப் பாதுகாப்பதாகவுமிருக்கின்றது; ஆகவே, அல்லாஹ் (உமக்கு) இறக்கிவைத்ததைக் கொண்டு அவர்களுக்கிடையில் (நபியே!) நீர் தீர்ப்பளிப்பீராக! இன்னும் உண்மையிலிருந்து உம்மிடம் வந்ததை புறக்கணித்துவிட்டு, அவர்களுடைய மன இச்சைகளை நீர் பின்பற்றாதீர்; உங்களில் ஒவ்வொரு வ(குப்பா)ருக்கும் மார்க்கத்தையும், வழிமுறையையும் நாம் ஆக்கினோம்; அல்லாஹ் நாடினால், உங்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருப்பான் ; எனினும், உங்களுக்கு அவன் கொடுத்ததில், (எவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள் என்று) உங்களைச் சோதிப்பதற்காகவே (இவ்வாறு அவன் செய்திருக்கின்றான்). ஆகவே, நன்மைகளின் பக்கம் முந்திக்கொள்ளுங்கள் . அல்லாஹ்வின் பக்கமே உங்களனைவரின் திரும்பிச் செல்லுதலுமிருக்கின்றது ; அப்பொழுது நீங்கள் எதில் மாறுபட்டுக் கொண்டிருந்தீர்களோ அதனை அவன் உங்களுக்கு நன்கறிவித்து விடுவான்.

49. மேலும், (நபியே!) அல்லாஹ் இறக்கிவைத்ததைக்கொண்டு நீர் அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பீராக! நீர், அவர்களுடைய மனஇச்சைகளைப் பின்பற்றியும்விடாதீர்; அன்றியும், உமக்கு அல்லாஹ் இறக்கிவைத்ததில் சிலவற்றைவிட்டும் அவர்கள் உம்மைத் திருப்பி விடாதபடியும், நீர் அவர்களைப்பற்றி எச்சரிக்கையாக இருப்பீராக! (உம்முடைய தீர்ப்பை)அவர்கள் புறக்கணித்துவிட்டால்,அப்போது அல்லாஹ் நாடுவதெல்லாம் அவர்களின் சில பாவங்களின் காரணமாக, அவர்களை அவன் (தண்டிக்க) பிடிப்பதைத்தான்என்பதை நீர் அறிந்து கொள்வீராக; மேலும், நிச்சயமாக மனிதர்களில் பெரும்பாலோர் பாவிகளாவர்.

50. அறியாமை காலத்துத் தீர்ப்பையா அவர்கள் தேடுகின்றனர்? உறுதியாக நம்பிக்கை கொண்ட சமூகத்தார்க்குத் தீர்ப்பளிப்பதில் அல்லாஹ்வைவிடவும் மிக்க அழகானவன் யார்?

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوا الْيَهُوْدَ وَالنَّصٰرٰۤى اَوْلِيَآءَ ؕۘ
بَعْضُهُمْ اَوْلِيَآءُ بَعْضٍ ؕ وَمَنْ يَّتَوَلَّهُمْ مِّنْكُمْ فَاِنَّهٗ مِنْهُمْ ؕ
اِنَّ اللّٰهَ لَا يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ ﴿٥١﴾ فَتَرَى الَّذِيْنَ فِىْ
قُلُوْبِهِمْ مَّرَضٌ يُّسَارِعُوْنَ فِيْهِمْ يَقُوْلُوْنَ نَخْشٰۤى اَنْ
تُصِيْبَنَا دَآئِرَةٌ ؕ فَعَسَى اللّٰهُ اَنْ يَّاْتِىَ بِالْفَتْحِ اَوْ اَمْرٍ مِّنْ عِنْدِهٖ
فَيُصْبِحُوْا عَلٰى مَاۤ اَسَرُّوْا فِىْۤ اَنْفُسِهِمْ نٰدِمِيْنَ ﴿٥٢﴾ وَيَقُوْلُ الَّذِيْنَ
اٰمَنُوْۤا اَهٰۤؤُلَآءِ الَّذِيْنَ اَقْسَمُوْا بِاللّٰهِ جَهْدَ اَيْمَانِهِمْ ۙ اِنَّهُمْ
لَمَعَكُمْ ؕ حَبِطَتْ اَعْمَالُهُمْ فَاَصْبَحُوْا خٰسِرِيْنَ ﴿٥٣﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ
اٰمَنُوْا مَنْ يَّرْتَدَّ مِنْكُمْ عَنْ دِيْنِهٖ فَسَوْفَ يَاْتِى اللّٰهُ بِقَوْمٍ
يُّحِبُّهُمْ وَيُحِبُّوْنَهٗۤ ۙ اَذِلَّةٍ عَلَى الْمُؤْمِنِيْنَ اَعِزَّةٍ عَلَى الْكٰفِرِيْنَ ؗ
يُجَاهِدُوْنَ فِىْ سَبِيْلِ اللّٰهِ وَلَا يَخَافُوْنَ لَوْمَةَ لَآئِمٍ ؕ ذٰلِكَ
فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ ﴿٥٤﴾ اِنَّمَا وَلِيُّكُمُ
اللّٰهُ وَرَسُوْلُهٗ وَالَّذِيْنَ اٰمَنُوا الَّذِيْنَ يُقِيْمُوْنَ الصَّلٰوةَ
وَيُؤْتُوْنَ الزَّكٰوةَ وَهُمْ رٰكِعُوْنَ ﴿٥٥﴾ وَمَنْ يَّتَوَلَّ اللّٰهَ وَ
رَسُوْلَهٗ وَالَّذِيْنَ اٰمَنُوْا فَاِنَّ حِزْبَ اللّٰهِ هُمُ الْغٰلِبُوْنَ ﴿٥٦﴾ ع

وقف لازم
وقف منزل عند البعض
وقف غفران

الثلثة

ع ٨ ١٢

51 விசுவாசங்கொண்டோரே! யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் (உங்களுக்கு) நண்பர்களாக எடுத்துக் கொள்ளாதீர்கள்; (உங்களுக்கு விரோதம் செய்வதில்) அவர்களில்சிலர், சிலருக்குப்பாதுகாவலர்களாக இருக்கின்றனர்; உங்களில் எவரேனும்அவர்களை(த்தனக்கு)ப் பாதுகாவலராக்கிக்கொண்டால்,அப்போது நிச்சயமாக அவரும் அவர்களில் உள்ளவர்தாம்; நிச்சயமாக அல்லாஹ், (இந்த) அநியாயக்கார சமூகத்தார்க்கு நேர்வழிகாட்ட மாட்டான்.

52. ஆகவே, (நபியே!) எவர்களுடைய இதயங்களில் (நயவஞ்சக) நோய் இருக்கின்றதோ அத்தகையவர்களை_ அவர்களிடம் (நட்புகொள்ள )அவர்கள் விரைந்து செல்வதை நீர் காண்பீர்; (அன்றி "நாங்கள் அவர்களை விரோதித்துக் கொண்டால்,) எங்களுக்கு யாதோர் ஆபத்து ஏற்பட்டுவிடுமென்று நாங்கள் பயப்படுகின்றோம்" என்று அவர்கள் கூறுகின்றனர். ஆகவே, அல்லாஹ் தன்னிடமிருந்து வெற்றியையோ அல்லது ஒரு (நற்)காரியத்தையோ (அதி சீக்கிரத்தில் உங்களுக்கு) கொண்டுவந்துவிடலாம்; அதுசமயம் அவர்கள் தங்கள் மனங்களில் மறைத்து வைத்திருந்ததைப் பற்றி கைசேதப்படுகிறவர்களாக ஆகிவிடுவார்கள்.

53. மேலும், "நிச்சயமாக தாங்களும் உங்களுடன் இருப்பதாக அல்லாஹ்வின் மீது உறுதியான சத்தியமாக சத்தியம் செய்து கொண்டிருந்தவர்கள் இவர்கள் தானா" என விசுவாசிகள் (மறுமையில் இவர்களைச்சுட்டிக்காண்பித்துக்) கூறுவார்கள்; இவர்களுடைய செயல்கள் அழிந்து விட்டன; ஆகவே,(இவர்கள்) நஷ்டமடைந்தவர்களாக ஆகிவிட்டனர்.

54. விசுவாசங்கொண்டோரே! உங்களிலிருந்து எவர் தன் மார்க்கத்தைவிட்டும் மாறிவிடுவாரானால் (அப்பொழுது அவர்களுக்குப்பகரமாக) வேறு சமூகத்தாரை அல்லாஹ் கொண்டு வருவான்; அவன் அவர்களை நேசிப்பான்; அவர்களும் அவனை நேசிப்பார்கள்; அவர்கள், விசுவாசங் கொண்டவர்களிடம் இரக்கம் காட்டுபவர்கள்; நிராகரிப்பவர்களிடம் கண்டிப்பாக நடந்து கொள்கிறவர்கள் ; அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிவார்கள்; இன்னும் பழிப்பவரின் பழிப்புக்கும் அவர்கள் அஞ்சமாட்டார்கள்; இது அல்லாஹ்வின் பேரருளாகும்;அவன் நாடியவர்களுக்கு இதனை அவன் கொடுக்கின்றான்;மேலும், அல்லாஹ் மிக விசாலமானவன்,(யாவரையும்) நன்கறிகிறவன்

55. உங்களுடைய நண்பனெல்லாம் அல்லாஹ்வும், அவனுடைய தூதரும், இன்னும் விசுவாசங்கொண்டார்களே அவர்களும்தான்; அவர்கள் எத்தகையவ ரெனில் (அல்லாஹ்வின் கட்டளைக்கு) பணிந்தவர்களாக தொழுகையை நிறைவேற்றுவார்கள்; ஜகாத்தும் கொடுத்துவருவார்கள் .

56. அன்றியும், எவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், விசுவாசங் கொண்டவர்களையும், (தங்களுக்குத்) தோழர்களாக எடுத்துக் கொள்கின்றார்களோ,_ அப்பொழுது (அவர்கள்தாம், _ அல்லாஹ்வின் கூட்டத்தினர் ஆவார்கள்). நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினர், அவர்கள்தாம் வெற்றியாளர்கள்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوا الَّذِيْنَ اتَّخَذُوْا دِيْنَكُمْ
هُزُوًا وَّ لَعِبًا مِّنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ
وَالْكُفَّارَ اَوْلِيَآءَ ۚ وَاتَّقُوا اللّٰهَ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿٥٧﴾ وَ
اِذَا نَادَيْتُمْ اِلَى الصَّلٰوةِ اتَّخَذُوْهَا هُزُوًا وَّ لَعِبًا ؕ ذٰلِكَ
بِاَنَّهُمْ قَوْمٌ لَّا يَعْقِلُوْنَ ﴿٥٨﴾ قُلْ يٰٓاَهْلَ الْكِتٰبِ هَلْ تَنْقِمُوْنَ
مِنَّآ اِلَّآ اَنْ اٰمَنَّا بِاللّٰهِ وَمَآ اُنْزِلَ اِلَيْنَا وَمَآ اُنْزِلَ مِنْ
قَبْلُ ۙ وَاَنَّ اَكْثَرَكُمْ فٰسِقُوْنَ ﴿٥٩﴾ قُلْ هَلْ اُنَبِّئُكُمْ بِشَرٍّ مِّنْ ذٰلِكَ
مَثُوْبَةً عِنْدَ اللّٰهِ ؕ مَنْ لَّعَنَهُ اللّٰهُ وَغَضِبَ عَلَيْهِ وَجَعَلَ
مِنْهُمُ الْقِرَدَةَ وَالْخَنَازِيْرَ وَعَبَدَ الطَّاغُوْتَ ؕ اُولٰٓئِكَ شَرٌّ
مَّكَانًا وَّ اَضَلُّ عَنْ سَوَآءِ السَّبِيْلِ ﴿٦٠﴾ وَاِذَا جَآءُوْكُمْ قَالُوْٓا
اٰمَنَّا وَقَدْ دَّخَلُوْا بِالْكُفْرِ وَهُمْ قَدْ خَرَجُوْا بِهٖ ؕ وَاللّٰهُ
اَعْلَمُ بِمَا كَانُوْا يَكْتُمُوْنَ ﴿٦١﴾ وَتَرٰى كَثِيْرًا مِّنْهُمْ يُسَارِعُوْنَ
فِي الْاِثْمِ وَالْعُدْوَانِ وَاَكْلِهِمُ السُّحْتَ ؕ لَبِئْسَ مَا كَانُوْا
يَعْمَلُوْنَ ﴿٦٢﴾ لَوْلَا يَنْهٰىهُمُ الرَّبّٰنِيُّوْنَ وَالْاَحْبَارُ عَنْ
قَوْلِهِمُ الْاِثْمَ وَاَكْلِهِمُ السُّحْتَ ؕ لَبِئْسَ مَا كَانُوْا يَصْنَعُوْنَ ﴿٦٣﴾

57. விசுவாசங்கொண்டோரே! உங்களுக்கு முன் வேதம் கொடுக்கப் பட்டவர்களில் உங்கள் மார்க்கத்தைப் பரிகாசமாகவும்,(வீண்) விளையாட்டாகவும் எடுத்துக் கொண்டிருக்கின்றனரே அத்தகையவர்களையும், நிராகரிப்போர்களையும் (உங்களுக்கு)த் தோழர்களாக எடுத்துக் கொள்ள வேண்டாம்;நீங்கள் (உண்மை)விசுவாசிகளாக இருந்தால் அல்லாஹ்வுக்கே பயந்து (நடந்து) கொள்ளுங்கள்.

58. அன்றியும், நீங்கள் (அவர்களைத்) தொழுகைக்கு அழைத்தால், அதனை அவர்கள் பரிகாசமாகவும், விளையாட்டாகவும் எடுத்துக் கொள்கின்றனர்; அது(ஏனெனில்) நிச்சயமாகவே அவர்கள் (முற்றிலும்) அறிவில்லாத சமூகத்தினர் என்பதினால்தான்.

59. "வேதத்தையுடையவர்களே! அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கி வைக்கப்பட்ட (இவ்வேதத்)தையும், இதற்கு முன் (உங்களுக்கு) இறக்கி வைக்கப்பட்டவைகளையும் நாங்கள் விசுவாசங் கொண்டுள்ளோம் என்பதைத்தவிர வேறு எதற்காகவும் எங்களை (இழித்துப் பழித்து) தண்டிக்கிறீர்களா?(என்று நபியே! நீர் அவர்களைக் கேட்டு)" நிச்சயமாக உங்களில் பெரும்பாலோர் பாவிகள் " என்று கூறுவீராக!

60. "அல்லாஹ்விடம் இருக்கும் தண்டனையால் இதைவிடக் கெட்டவரை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? அல்லாஹ் எவரை சபித்து,அவர் மீது கோபமும் கொண்டு, அவர்களில் (சிலரைக்) குரங்குகளாகவும், பன்றிகளாகவும் ஆக்கினானோ அவரும், (அவர்களில்)ஷைத்தானை வணங்கியவரும் ஆவர்; அத்தகையோர் தகுதியால் கெட்டவர்கள்; அன்றியும், நேரான வழியிலிருந்தும் மிகத் தவறியவர்கள்" என்று நீர் கூறுவீராக!

61. மேலும், (விசுவாசங்கொண்டோரே! இத்தகையோராகிய)அவர்கள் உங்களிடம் வந்தால் " நாங்கள் விசுவாசங்கொண்டோம்" என்று கூறுகின்றனர்; இன்னும், நிச்சயமாக அவர்கள், நிராகரிப்பை (மனதில் வைத்து)க் கொண்டே (உங்களிடம்) வந்தார்கள்; நிச்சயமாக அதனுடனேயே (உங்கள் முன்னிருந்து) அவர்கள் வெளியேறியும்விட்டார்கள்; அவர்கள் மறைத்துக் கொண்டிருப்பவைகளை அல்லாஹ்வோ மிக்க அறிந்தவன்.

62. மேலும், (நபியே!) அவர்களில் அதிகமானோரை பாவத்திலும், பகைமையிலும், விலக்கப்பட்டதை அவர்கள் உண்ணுவதிலும் விரைந்து செல்வோராக நீர் காண்பீர்! அவர்கள் செய்துகொண்டிருப்பவை மிகக் கெட்டவையாகிவிட்டது.

63. பாவமான அவர்களின் கூற்றிலிருந்தும், விலக்கப்பட்டவைகளை அவர்கள் உண்பதிலிருந்தும், (அவர்களுடைய பண்டிதர்களாகிய வணக்கசாலிகளான) மேதைகளும் (அஹ்பார்களான) அறிஞர்களும் அவர்களைத் தடுத்திருக்க வேண்டாமா? அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருப்பவைமிகக் கெட்டவையாகிவிட்டது.

وَقَالَتِ الْيَهُوْدُ يَدُ اللّٰهِ مَغْلُوْلَةٌ ؕ غُلَّتْ اَيْدِيْهِمْ وَلُعِنُوْا بِمَا
قَالُوْا ۘ بَلْ يَدٰهُ مَبْسُوْطَتٰنِ ۙ يُنْفِقُ كَيْفَ يَشَآءُ ؕ وَلَيَزِيْدَنَّ كَثِيْرًا وقف لازم
مِّنْهُمْ مَّاۤ اُنْزِلَ اِلَيْكَ مِنْ رَّبِّكَ طُغْيَانًا وَّكُفْرًا ؕ وَاَلْقَيْنَا بَيْنَهُمُ
الْعَدَاوَةَ وَالْبَغْضَآءَ اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ ؕ كُلَّمَاۤ اَوْقَدُوْا نَارًا
لِّلْحَرْبِ اَطْفَاَهَا اللّٰهُ ۙ وَيَسْعَوْنَ فِى الْاَرْضِ فَسَادًا ؕ وَاللّٰهُ لَا
يُحِبُّ الْمُفْسِدِيْنَ ﴿۶۴﴾ وَلَوْ اَنَّ اَهْلَ الْكِتٰبِ اٰمَنُوْا وَاتَّقَوْا لَكَفَّرْنَا
عَنْهُمْ سَيِّاٰتِهِمْ وَلَاَدْخَلْنٰهُمْ جَنّٰتِ النَّعِيْمِ ﴿۶۵﴾ وَلَوْ اَنَّهُمْ اَقَامُوا
التَّوْرٰىةَ وَالْاِنْجِيْلَ وَمَاۤ اُنْزِلَ اِلَيْهِمْ مِّنْ رَّبِّهِمْ لَاَكَلُوْا مِنْ
فَوْقِهِمْ وَمِنْ تَحْتِ اَرْجُلِهِمْ ؕ مِنْهُمْ اُمَّةٌ مُّقْتَصِدَةٌ ؕ وَكَثِيْرٌ
مِّنْهُمْ سَآءَ مَا يَعْمَلُوْنَ ﴿۶۶﴾ يٰۤاَيُّهَا الرَّسُوْلُ بَلِّغْ مَاۤ اُنْزِلَ اِلَيْكَ ع ۹ ۱۳
مِنْ رَّبِّكَ ؕ وَاِنْ لَّمْ تَفْعَلْ فَمَا بَلَّغْتَ رِسَالَتَهٗ ؕ وَاللّٰهُ يَعْصِمُكَ
مِنَ النَّاسِ ؕ اِنَّ اللّٰهَ لَا يَهْدِى الْقَوْمَ الْكٰفِرِيْنَ ﴿۶۷﴾ قُلْ يٰۤاَهْلَ
الْكِتٰبِ لَسْتُمْ عَلٰى شَىْءٍ حَتّٰى تُقِيْمُوا التَّوْرٰىةَ وَالْاِنْجِيْلَ وَمَاۤ
اُنْزِلَ اِلَيْكُمْ مِّنْ رَّبِّكُمْ ؕ وَلَيَزِيْدَنَّ كَثِيْرًا مِّنْهُمْ مَّاۤ اُنْزِلَ اِلَيْكَ
مِنْ رَّبِّكَ طُغْيَانًا وَّكُفْرًا ۚ فَلَا تَاْسَ عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ ﴿۶۸﴾

64. மேலும், "அல்லாஹ்வுடைய கை கட்டப்பட்டிருக்கிறது" என்று யூதர்கள் கூறுகின்றனர் ; அவர்களுடைய கைகள் தாம் கட்டப்பட்டிருக்கின்றன ; அன்றியும் இவ்வாறு அவர்கள் கூறியதன் காரணமாக அவர்கள் சபிக்கப்பட்டு விட்டனர் ; எனினும், அல்லாஹ் உடைய இரு கைகளும் விரிக்கப்பட்டே இருக்கின்றன ; அவன் நாடியவாறெல்லாம் செலவு செய்கிறான் ; இன்னும், உம் இரட்சகனால் உமக்கு இறக்கிவைக்கப்பட்ட (இவ்வேதமான) து அவர்களில் பெரும்பான்மையினருக்கு அட்டூழியத்தையும், நிராகரித்தலையுமே நிச்சயமாக அதிகப்படுத்துகிறது ; இன்னும், அவர்களுக்கிடையில் விரோதத்தையும், வெறுப்பையும் மறுமை நாள் வரையில் (இருக்கும்படி) நாம் போட்டுவிட்டோம்; அவர்கள் யுத்த நெருப்பை மூட்டும் போதெல்லாம் அல்லாஹ் அதனை அணைத்து விடுகின்றான் ; இன்னும் அவர்கள் பூமியில் குழப்பம் செய்து கொண்டே அலைகின்றார்கள் ; மேலும் , அல்லாஹ் குழப்பம் செய்வோரை நேசிக்கமாட்டான்.

65. மேலும், வேதத்தையுடைய(இ)வர்கள், (உண்மையாகவே) விசுவாசங்கொண்டு, (அல்லாஹ்வுக்குப்)பயந்து (நடந்து)ம் இருந்தால், அவர்களுடைய பாவங்களை அவர்களை விட்டும் நாம் போக்கிவிட்டிருப்போம்; மேலும், சகல இன்பங்களும் உள்ள சுவனபதிகளில் அவர்களை நிச்சயமாக நாம் பிரவேசிக்கச்செய்வோம்.

66. இன்னும் நிச்சயமாக தவ்றாத்தையும், இன்ஜீலையும், அவர்களுடைய இரட்சகனிடமிருந்து அவர்களுக்கு இறக்கிவைக்கப்பட்டதையும் அவர்கள் நிலைநாட்டியிருந்தால், அவர்களுக்கு மே(ல் வானத்தி)லிருந்தும், அவர்களுடைய பாதங்களின் கீழ்(பூமியில்) இருந்தும் புசித்திருப்பார்கள்; (ஆனால்) அவர்களில் சிலர் நேர்மையான சமுதாயத்தினராக இருக்கின்றனர். இன்னும், அவர்களில் பெரும்பான்மையினர்_ அவர்கள்செய்யும் காரியங்கள் மிகக் கெட்டவையாக இருக்கின்றன.

67. (நம்முடைய) தூதரே! உம் இரட்சகனிடமிருந்து உமக்கு இறக்கிவைக்கப்பட்டதை, (மனிதர்களுக்கு) எத்திவைத்துவிடுவீராக! நீர் (அவ்வாறு) செய்யாவிடில், அவனுடைய தூதை (முற்றிலும்) நீர் எத்திவைக்கவில்லை. மனிதர் (களின் தீங்கு) களிலிருந்து அல்லாஹ்வோ உம்மைக்காப்பாற்றிக்கொள்வான்; நிச்சயமாக அல்லாஹ், நிராகரிக்கும் கூட்டத்தாரை நேர்வழியில் செலுத்தமாட்டான்.

68. (அவர்களிடம்,) " வேதத்தையுடையவர்களே! நீங்கள் தவ்றாத்தையும், இன்ஜீலையும், உங்கள் இரட்சகனிடமிருந்து உங்களுக்கு இறக்கி வைக்கப்பட்டதையும் (உண்மையாகவே) நீங்கள் (கடைப்பிடித்தொழுகி) நிலைநிறுத்தும் வரை, நீங்கள் எதிலும் சேர்ந்தவர்களல்லர்" என்று (நபியே!) நீர் கூறுவீராக! உமதிரட்சகனிடமிருந்து உமக்கு இறக்கிவைக்கப்பட்ட (இவ்வேதமான)து அவர்களில் பெரும்பாலோருக்கு, அட்டூழியத்தையும், நிராகரிப்பையும் நிச்சயமாக அதிகப்படுத்துகிறது; ஆகவே, இந்நிராகரிக்கும் மக்களுக்காக நீர்கவலைகொள்ளவேண்டாம்!

إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَادُوا وَالصَّابِئُونَ وَالنَّصَارَىٰ
مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَعَمِلَ صَالِحًا فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ
يَحْزَنُونَ ﴿٦٩﴾ لَقَدْ أَخَذْنَا مِيثَاقَ بَنِي إِسْرَائِيلَ وَأَرْسَلْنَا إِلَيْهِمْ
رُسُلًا ۖ كُلَّمَا جَاءَهُمْ رَسُولٌ بِمَا لَا تَهْوَىٰ أَنْفُسُهُمْ فَرِيقًا كَذَّبُوا
وَفَرِيقًا يَقْتُلُونَ ﴿٧٠﴾ وَحَسِبُوا أَلَّا تَكُونَ فِتْنَةٌ فَعَمُوا وَصَمُّوا ثُمَّ
تَابَ اللَّهُ عَلَيْهِمْ ثُمَّ عَمُوا وَصَمُّوا كَثِيرٌ مِنْهُمْ ۚ وَاللَّهُ بَصِيرٌ بِمَا
يَعْمَلُونَ ﴿٧١﴾ لَقَدْ كَفَرَ الَّذِينَ قَالُوا إِنَّ اللَّهَ هُوَ الْمَسِيحُ ابْنُ مَرْيَمَ ۖ
وَقَالَ الْمَسِيحُ يَا بَنِي إِسْرَائِيلَ اعْبُدُوا اللَّهَ رَبِّي وَرَبَّكُمْ ۖ إِنَّهُ
مَنْ يُشْرِكْ بِاللَّهِ فَقَدْ حَرَّمَ اللَّهُ عَلَيْهِ الْجَنَّةَ وَمَأْوَاهُ النَّارُ ۖ
وَمَا لِلظَّالِمِينَ مِنْ أَنْصَارٍ ﴿٧٢﴾ لَقَدْ كَفَرَ الَّذِينَ قَالُوا إِنَّ اللَّهَ ثَالِثُ
ثَلَاثَةٍ ۘ وَمَا مِنْ إِلَٰهٍ إِلَّا إِلَٰهٌ وَاحِدٌ ۚ وَإِنْ لَمْ يَنْتَهُوا عَمَّا يَقُولُونَ وقف لازم
لَيَمَسَّنَّ الَّذِينَ كَفَرُوا مِنْهُمْ عَذَابٌ أَلِيمٌ ﴿٧٣﴾ أَفَلَا يَتُوبُونَ إِلَى
اللَّهِ وَيَسْتَغْفِرُونَهُ ۚ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ ﴿٧٤﴾ مَا الْمَسِيحُ ابْنُ مَرْيَمَ إِلَّا
رَسُولٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ وَأُمُّهُ صِدِّيقَةٌ ۖ كَانَا يَأْكُلَانِ
الطَّعَامَ ۗ انْظُرْ كَيْفَ نُبَيِّنُ لَهُمُ الْآيَاتِ ثُمَّ انْظُرْ أَنَّىٰ يُؤْفَكُونَ ﴿٧٥﴾

98. எனவே,(நாம் அழித்து விட்ட எத்தனையோ ஊர்களில் நம் வேதனை வரும் முன்)ஓர் ஊர் (மக்கள்) விசுவாசங் கொண்டு பின்னர், அதன் விசுவாசம் அதற்கு பயனளித்திருக்கக்கூடாதா? (அவ்வாறு எந்த ஊரும் இருக்கவில்லை) யூனுஸின் சமூகத்தாரைத்தவிர. (அவர்கள் அல்லாஹ்வின் தண்டனை வரும்முன் விசுவாசங்கொண்டு_ அதன் விசுவாசம் பயனளித்த ஊரைச்சார்ந்தவர்களாவர்) அவர்கள் விசுவாசங் கொண்டபோது, இவ்வுலக வாழ்வில் இழிவுபடுத்தும் வேதனையை அவர்களை விட்டும் நாம் அகற்றிவிட்டோம்; சிறிது காலம்வரை அவர்களை சுகமனுபவிக்குமாறும் செய்தோம்.

99. மேலும், உமதிரட்சகன் நாடியிருந்தால், பூமியிலுள்ள அனைவருமே முற்றிலும் விசுவாசித்திருப்பார்கள்; எனவே மனிதர்களை_ அவர்கள் (அனைவருமே) விசுவாசிகளாகிவிட வேண்டுமென்று நீர் நிர்ப்பந்திக்கிறீரா?

100. மேலும், எந்த ஆத்மாவிற்கும், அல்லாஹ்வின் அனுமதியின்றி அது விசுவாசங்கொள்வதற்கில்லை; மேலும்(இதை) விளங்கிக் கொள்ளாதவர்களின் மீது தண்டனையை அவன் ஆக்குகிறான்.

101. (நபியே! அவர்களிடம்,) "வானங்களிலும் பூமியிலும் என்ன இருக்கின்றன என்பதை கவனித்துப் பாருங்கள்" எனக்கூறுவீராக! எனினும், விசுவாசங் கொள்ளாதவர்களான சமூகத்தார்க்கு (நம்முடைய) அத்தாட்சிகளும், எச்சரிக்கைகளும் யாதொரு பயனுமளிக்கமாட்டா.

102. (நபியே!) அவர்கள் தங்களுக்கு முன் சென்றவர்களுக்கு ஏற்பட்ட நாட்களைப் போன்றதேயன்றி,(வேறெதனையும்) எதிர்பார்க்கின்றனரா? ஆகவே, (அந்நாட்களை) நீங்களும் எதிர் பார்த்திருங்கள்; நிச்சயமாக(அந்நாட்கள் உங்களுக்கு வருவதை) உங்களுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களில் நானும் இருக்கிறேன்" என்று கூறுவீராக!

103. பின்னர், (அவ்வாறு தண்டனைவந்தால்) நம்முடைய தூதர்களையும், அவ்வாறே விசுவாசங்கொண்டவர்களையும் நாம் காப்பாற்றுவோம்; விசுவாசங் கொண்டவர்களை நாம் காப்பாற்றுவது நம்மீது (கடமையாகவே) இருக்கிறது.

104. (நபியே! அவர்களிடம்,) "மனிதர்களே! நீங்கள் என்னுடைய மார்க்கத்தில் சந்தேகத்திலிருந்தால், அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்கமாட்டேன்; எனினும், உங்க(ளுடைய உயிர்க)ளைக் கைப்பற்றுபவனான அல்லாஹ்வையே நான் வணங்குகிறேன்; மேலும், விசுவாசிகளில் (உள்ளவனாக) இருக்க வேண்டுமென்றே நான் கட்டளையிடப் பட்டுள்ளேன்" என்று (நபியே!) நீர்கூறுவீராக!

105. (நபியே!) மேலும்(அசத்தியமான எல்லா மதங்களை விட்டும் நீங்கி) நேரான மார்க்கத்தின்பால் சார்ந்தவராக உம்முடைய முகத்தை நிலைபெறச்செய்வீராக! இணைவைக்கக்கூடியவர்களில் (உள்ளவராக)நிச்சயமாக நீரும் ஆகிவிட வேண்டாம்.

106. இன்னும், அல்லாஹ்வைத் தவிர உமக்கு பயனளிக்காதவற்றை மற்றும் உமக்கு இடர் செய்யாதவற்றை நீர் அழைக்க வேண்டாம்; அவ்வாறு செய்வீராயின், நிச்சயமாக அச்சமயமே அநியாயக்காரர்களில் (உள்ளவராக) நீர் ஆகிவிடுவீர்:

وَاِنْ يَّمْسَسْكَ اللّٰهُ بِضُرٍّ فَلَا كَاشِفَ لَهٗٓ اِلَّا هُوَ ۚ وَاِنْ يُّرِدْكَ
بِخَيْرٍ فَلَا رَآدَّ لِفَضْلِهٖ ؕ يُصِيْبُ بِهٖ مَنْ يَّشَآءُ مِنْ عِبَادِهٖ ؕ وَهُوَ
الْغَفُوْرُ الرَّحِيْمُ ﴿۱۰۷﴾ قُلْ يٰٓاَيُّهَا النَّاسُ قَدْ جَآءَكُمُ الْحَقُّ مِنْ
رَّبِّكُمْ ۚ فَمَنِ اهْتَدٰى فَاِنَّمَا يَهْتَدِيْ لِنَفْسِهٖ ۚ وَمَنْ ضَلَّ فَاِنَّمَا
يَضِلُّ عَلَيْهَا ۚ وَمَآ اَنَا عَلَيْكُمْ بِوَكِيْلٍ ﴿۱۰۸﴾ وَاتَّبِعْ مَا يُوْحٰٓى
اِلَيْكَ وَاصْبِرْ حَتّٰى يَحْكُمَ اللّٰهُ ۚ وَهُوَ خَيْرُ الْحٰكِمِيْنَ ﴿۱۰۹﴾ ع ۱۱ / ۱۶

## سُوْرَةُ هُوْدٍ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّثَلٰثَ عَشْرَةَ اٰيَةً وَّعَشْرُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

الٓرٰ ۟ كِتٰبٌ اُحْكِمَتْ اٰيٰتُهٗ ثُمَّ فُصِّلَتْ مِنْ لَّدُنْ حَكِيْمٍ خَبِيْرٍ ﴿۱﴾ اَلَّا
تَعْبُدُوْٓا اِلَّا اللّٰهَ ؕ اِنَّنِيْ لَكُمْ مِّنْهُ نَذِيْرٌ وَّبَشِيْرٌ ﴿۲﴾ وَّاَنِ اسْتَغْفِرُوْا
رَبَّكُمْ ثُمَّ تُوْبُوْٓا اِلَيْهِ يُمَتِّعْكُمْ مَّتَاعًا حَسَنًا اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى وَّ
يُؤْتِ كُلَّ ذِيْ فَضْلٍ فَضْلَهٗ ؕ وَاِنْ تَوَلَّوْا فَاِنِّيْٓ اَخَافُ عَلَيْكُمْ
عَذَابَ يَوْمٍ كَبِيْرٍ ﴿۳﴾ اِلَى اللّٰهِ مَرْجِعُكُمْ ۚ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿۴﴾
اَلَآ اِنَّهُمْ يَثْنُوْنَ صُدُوْرَهُمْ لِيَسْتَخْفُوْا مِنْهُ ؕ اَلَا حِيْنَ يَسْتَغْشُوْنَ
ثِيَابَهُمْ ۙ يَعْلَمُ مَا يُسِرُّوْنَ وَمَا يُعْلِنُوْنَ ۚ اِنَّهٗ عَلِيْمٌ بِذَاتِ الصُّدُوْرِ ﴿۵﴾

107. அல்லாஹ் உமக்கு ஒரு இடரை அடையச் செய்தால் அதனை நீக்குகிறவன் அவனைத் தவிர (வேறு) எவரும் இல்லை; மேலும், அவன் உமக்கு யாதொரு நன்மையை நாடினால் அவனது பேரருளை தடுப்பவர் எவருமில்லை; தன் அடியார்களில் அவன் நாடியவர்களுக்கு அதனை பெற்றுக்கொள்ளுமாறு செய்கின்றான்; அவனோ மிக்க மன்னிப்போன்; மிகக் கிருபையுடையோன்.

108. நபியே! நீர் கூறுவீராக: "மனிதர்களே! நிச்சயமாக உங்களுடைய இரட்சகனிடமிருந்து இந்தச் சத்திய(வேத)ம் உங்களிடம் வந்திருக்கிறது; ஆகவே எவர் நேர் வழியில் செல்கின்றாரோ, அவர் (அந்) நேர் வழியில் செல்வதெல்லாம் தன(து நன்மை)க்காகவேதான்; மேலும், எவர் வழி தவறுகின்றாரோ, அவர்வழி தவறுவதெல்லாம் அவருக்கே (கேடாகத்) தான்; அன்றியும், (நீங்கள் விசுவாசிகளாக ஆவதற்கு) உங்களுக்கு நான் பொறுப்புடையவனல்லன்".

109. (நபியே!) உமக்கு (வஹீ மூலம்) அறிவிக்கப்படுகின்றவற்றையே நீர் பின்பற்றுவீராக! மேலும், அல்லாஹ் தீர்ப்பு வழங்கும் வரையில் பொறுமையுடன் இருப்பீராக! இன்னும், அவன் தீர்ப்பளிப்பவர்களில் மிகவும் சிறந்தவன்.

---

அத்தியாயம் : 11

## ஹூது

வசனங்கள் : 123 மக்கீ ருகூஉகள் : 10

---

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. அலிஃப் லாம் றா. (இது அல்லாஹ்வின்) வேதம்; இதன் வசனங்கள் உறுதியாக்கப்பட்டு, அதன் பின்னர் அவை தீர்க்கமான அறிவுடையவன், நன்கறிந்தவனிடமிருந்து தெளிவு செய்யப்பட்டுள்ளன.

2. "நீங்கள் அல்லாஹ்வைத்தவிர (வேறு யாரையும்) வணங்காதீர்கள்; அவனிடமிருந்து உங்களுக்கு நிச்சயமாக நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனாகவும், நற்செய்தி கூறுபவனாகவும் இருக்கிறேன்"(என்றும்),

3. மேலும், "நீங்கள் உங்கள் இரட்சகனிடத்தில் பாவ மன்னிப்பைத் தேடுங்கள்; அதன் பின்னர் (பாவங்களை விட்டு தவ்பாச் செய்து) அவன் பக்கம் திரும்புங்கள்; (அவ்வாறு செய்தால்) அவன் குறிப்பிட்ட ஒரு காலம் வரையில் உங்களை அழகான சுகமாக சுகமடையச்செய்வான்; இன்னும், சிறப்புற்குரியவர் ஒவ்வொருவருக்கும் அவரது சிறப்பை அவன் கொடுப்பான்; நீங்கள் (அவனைப்) புறக்கணித்தால், (மா)பெரும்நாளின்வேதனையை நிச்சயமாக உங்கள் மீது நான் பயப்படுகின்றேன்" (என்றும்),

4. "அல்லாஹ்வின் பக்கமே உங்கள் மீளுமிடம் இருக்கிறது; அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்" (என்றும் நபியே! நீர் கூறுவீராக.)

5. (மனிதர்கள்) தங்களை (அல்லாஹ்வாகிய) அவனிடமிருந்து மறைத்துக் கொள்வதற்காக, தங்கள் நெஞ்சங்களைச் சுற்றி(மறைத்து)க்கொள்கின்றனர் என்பதை (நபியே! நீர்) அறிந்து கொள்வீராக! (நித்திரைக்குச் செல்லும்போது) அவர்கள் தங்கள் ஆடைகளால், தங்களை மூடிக் கொள்ளும் சமயத்தில் (தங்கள் நெஞ்சங்களில்) அவர்கள் இரகசியமாக்குவதையும், (அதற்கு மாறாக) அவர்கள் பகிரங்கப்படுத்துவதையும் அவன் (நன்கு) அறிகிறவன் என்பதை (நீர்) அறிந்து கொள்வீராக! நிச்சயமாக அவன் நெஞ்சங்களிலுள்ளவற்றை நன்கறிகிறவன்.

وَمَا مِنْ دَآبَّةٍ فِي الْاَرْضِ اِلَّا عَلَى اللّٰهِ رِزْقُهَا وَ الجزء ١٢
يَعْلَمُ مُسْتَقَرَّهَا وَمُسْتَوْدَعَهَا ؕ كُلٌّ فِيْ كِتٰبٍ مُّبِيْنٍ ۝٦ وَ
هُوَ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ فِيْ سِتَّةِ اَيَّامٍ وَّكَانَ
عَرْشُهٗ عَلَى الْمَآءِ لِيَبْلُوَكُمْ اَيُّكُمْ اَحْسَنُ عَمَلًا ؕ وَلَئِنْ قُلْتَ
اِنَّكُمْ مَّبْعُوْثُوْنَ مِنْۢ بَعْدِ الْمَوْتِ لَيَقُوْلَنَّ الَّذِيْنَ كَفَرُوْۤا اِنْ
هٰذَآ اِلَّا سِحْرٌ مُّبِيْنٌ ۝٧ وَلَئِنْ اَخَّرْنَا عَنْهُمُ الْعَذَابَ اِلٰۤى اُمَّةٍ
مَّعْدُوْدَةٍ لَّيَقُوْلُنَّ مَا يَحْبِسُهٗ ؕ اَلَا يَوْمَ يَاْتِيْهِمْ لَيْسَ مَصْرُوْفًا
عَنْهُمْ وَحَاقَ بِهِمْ مَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ۝٨ ع وَلَئِنْ اَذَقْنَا ع ٨ ١
الْاِنْسَانَ مِنَّا رَحْمَةً ثُمَّ نَزَعْنٰهَا مِنْهُ ۚ اِنَّهٗ لَيَئُوْسٌ كَفُوْرٌ ۝٩
وَلَئِنْ اَذَقْنٰهُ نَعْمَآءَ بَعْدَ ضَرَّآءَ مَسَّتْهُ لَيَقُوْلَنَّ ذَهَبَ
السَّيِّاٰتُ عَنِّيْ ؕ اِنَّهٗ لَفَرِحٌ فَخُوْرٌ ۝١٠ لا اِلَّا الَّذِيْنَ صَبَرُوْا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ ؕ اُولٰٓئِكَ لَهُمْ مَّغْفِرَةٌ وَّاَجْرٌ كَبِيْرٌ ۝١١
فَلَعَلَّكَ تَارِكٌۢ بَعْضَ مَا يُوْحٰۤى اِلَيْكَ وَضَآئِقٌۢ بِهٖ
صَدْرُكَ اَنْ يَّقُوْلُوْا لَوْلَاۤ اُنْزِلَ عَلَيْهِ كَنْزٌ اَوْ جَآءَ مَعَهٗ
مَلَكٌ ؕ اِنَّمَآ اَنْتَ نَذِيْرٌ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ وَّكِيْلٌ ۝١٢ ط

83. இன்னும், அவர்கள் (நம்) தூதர்மீது இறக்கப்பட்டதைச் செவியுற்றால், உண்மையை அவர்கள் அறிந்து கொண்டதன் காரணமாக, அவர்களின் கண்களை_அவை கண்ணீரால் நிரம்பி வடிப்பதை நீர் காண்பீர்!" எங்கள் இரட்சகனே! (இவ்வேதத்தை) நாங்கள் விசுவாசித்தோம், ஆகவே, (இவ்வேதம் உண்மையான தெனச்) சாட்சி கூறுபவர்களுடன் எங்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக!" என்று (பிரார்த்தித்துக்) கூறுகின்றனர்.

84. "மேலும், அல்லாஹ்வையும் (அவனிடமிருந்து) நமக்கு வந்த சத்திய (வேத)த்தையும் நாங்கள் விசுவாசங் கொள்ளாமலிருக்க, எங்களுக்கென்ன (தடை) இருக்கிறது? மேலும்,எங்கள் இரட்சகன் (நற்கருமங்கள் செய்த) நல்லோருடன் எங்களையும் சேர்த்து வைக்கவே நாங்கள் ஆசை கொள்கின்றோம்" என்றும் (கூறுகின்றனர்).

85. எனவே, அவர்கள் இவ்வாறு கூறியதன் காரணமாக, அல்லாஹ் அவர்களுக்குச் சுவனபதிகளைப் பிரதிபலனாகக் கொடுப்பான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்; அவற்றில் அவர்கள் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்; இன்னும் இதுவே நன்மை செய்வோருக்கு(ரிய நற்)கூலியுமாகும்.

86. இன்னும், நிராகரித்து, நம் வசனங்களையும் பொய்யாக்கினார்களே அத்தகையோர்_அவர்கள் நரகவாசிகள்.

87. விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ் உங்களுக்கு ஆகுமாக்கி வைத்திருக்கும் நல்லவற்றை நீங்கள் விலக்கப்பட்டதாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்; இன்னும் நீங்கள் வரம்பு மீறியும் செல்லாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுவோரை நேசிக்கமாட்டான்.

88. மேலும், அல்லாஹ் உங்களுக்கு அளித்தவற்றில் (நீங்கள் புசிக்க) ஆகுமான நல்லவற்றைப் புசியுங்கள். நீங்கள் யாரை விசுவாசித்திருக்கிறீர்களோ அத்தகைய அல்லாஹ்வை பயந்தும் கொள்ளுங்கள்.

89. உங்கள் சத்தியங்களில் வீணானவற்றைக் கொண்டு அல்லாஹ் உங்களை(க் குற்றம்) பிடிக்கமாட்டான்; எனினும், (ஏதேனுமொன்றை) உறுதிப்படுத்த நீங்கள் செய்யும் சத்தியத்தைப்பற்றி (அதில் தவறினால்) உங்களைப் பிடிப்பான்; எனவே, (அதில் தவறி அந்த சத்தியத்தை முறித்துவிட்டால்) அதற்குப் பரிகாரமாவது ; நீங்கள் உங்கள் குடும்பத்தினருக்கு உண்ணக் கொடுக்கும் ஆகாரத்தில், மத்தியதரமான (ஆகாரத்)திலிருந்து பத்து ஏழைகளுக்கு உண்ணக் கொடுப்பதாயிருக்கும்; அல்லது அவர்களுக்கு ஆடை அணிவித்தலாயிருக்கும் ; அல்லது ஓர் அடிமையை விடுதலை செய்தலாயிருக்கும் ; ஆகவே, எவர் (பரிகாரத்திற்குரிய எதனையும்) பெறவில்லையோ அப்போது மூன்று நாட்களுடைய நோன்பு (நோற்பது அதற்குப் பரிகாரம்)ஆகும்; இதுதான் உங்களுடைய சத்தியங்களுக்கு நீங்கள் சத்தியம் செய்து(முறித்து)விட்டால்_பரிகாரமாகும்; இன்னும் நீங்கள் உங்கள் சத்தியங்களை (பேணி)க் காப்பாற்றிக் கொள்ளுங்கள்; நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காக, அவன் தன்னுடைய வசனங்களை இவ்வாறு உங்களுக்கு விளக்குகின்றான்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِنَّمَا الْخَمْرُ وَ الْمَيْسِرُ وَ الْاَنْصَابُ وَ الْاَزْلَامُ
رِجْسٌ مِّنْ عَمَلِ الشَّيْطٰنِ فَاجْتَنِبُوْهُ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ﴿۹۰﴾ اِنَّمَا
يُرِيْدُ الشَّيْطٰنُ اَنْ يُّوْقِعَ بَيْنَكُمُ الْعَدَاوَةَ وَ الْبَغْضَآءَ فِي الْخَمْرِ
وَ الْمَيْسِرِ وَ يَصُدَّكُمْ عَنْ ذِكْرِ اللّٰهِ وَ عَنِ الصَّلٰوةِ ۚ فَهَلْ اَنْتُمْ مُّنْتَهُوْنَ ﴿۹۱﴾
وَ اَطِيْعُوا اللّٰهَ وَ اَطِيْعُوا الرَّسُوْلَ وَ احْذَرُوْا ۚ فَاِنْ تَوَلَّيْتُمْ فَاعْلَمُوْۤا اَنَّمَا
عَلٰى رَسُوْلِنَا الْبَلٰغُ الْمُبِيْنُ ﴿۹۲﴾ لَيْسَ عَلَى الَّذِيْنَ اٰمَنُوْا وَ عَمِلُوا
الصّٰلِحٰتِ جُنَاحٌ فِيْمَا طَعِمُوْۤا اِذَا مَا اتَّقَوْا وَّ اٰمَنُوْا وَ عَمِلُوا الصّٰلِحٰتِ
ثُمَّ اتَّقَوْا وَّ اٰمَنُوْا ثُمَّ اتَّقَوْا وَّ اَحْسَنُوْا ؕ وَ اللّٰهُ يُحِبُّ الْمُحْسِنِيْنَ ﴿۹۳﴾ ع يٰۤاَيُّهَا ۱۲/۲
الَّذِيْنَ اٰمَنُوْا لَيَبْلُوَنَّكُمُ اللّٰهُ بِشَيْءٍ مِّنَ الصَّيْدِ تَنَالُهٗۤ اَيْدِيْكُمْ وَ
رِمَاحُكُمْ لِيَعْلَمَ اللّٰهُ مَنْ يَّخَافُهٗ بِالْغَيْبِ ۚ فَمَنِ اعْتَدٰى بَعْدَ
ذٰلِكَ فَلَهٗ عَذَابٌ اَلِيْمٌ ﴿۹۴﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَقْتُلُوا الصَّيْدَ وَ اَنْتُمْ
حُرُمٌ ؕ وَ مَنْ قَتَلَهٗ مِنْكُمْ مُّتَعَمِّدًا فَجَزَآءٌ مِّثْلُ مَا قَتَلَ مِنَ النَّعَمِ
يَحْكُمُ بِهٖ ذَوَا عَدْلٍ مِّنْكُمْ هَدْيًۢا بٰلِغَ الْكَعْبَةِ اَوْ كَفَّارَةٌ طَعَامُ
مَسٰكِيْنَ اَوْ عَدْلُ ذٰلِكَ صِيَامًا لِّيَذُوْقَ وَبَالَ اَمْرِهٖ ؕ عَفَا اللّٰهُ
عَمَّا سَلَفَ ؕ وَ مَنْ عَادَ فَيَنْتَقِمُ اللّٰهُ مِنْهُ ؕ وَ اللّٰهُ عَزِيْزٌ ذُو انْتِقَامٍ ﴿۹۵﴾

90. விசுவாசங்கொண்டோரே! நிச்சயமாக மதுவும், சூதாட்டமும், (வணக்கத்திற்காக) நடப்பட்டுள்ளவை (களானசிலை) களும் ,குறிபார்க்கும் (சூதாட்ட)அம்புகளும்(ஆகிய இவையாவும்) ஷைத்தானுடைய செயலிலுள்ள அருவருக்கத்தக்கவையாகும்_ ஆகவே, இவைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்; (அதனால்) நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

91. நிச்சயமாக ஷைத்தான் நாடுவதெல்லாம், மதுவிலும், சூதாட்டத்திலும் (அதன் மூலம்) உங்களுக்கிடையில் விரோதத்தையும், வெறுப்பையும் உண்டு பண்ணவும், அல்லாஹ்வை நினைவு கூருவதை விட்டும், தொழுகையை (நிறைவேற்று வதை)விட்டும் உங்களைஅவன் தடுப்பதையுமே யாகும்;(ஆகவே, அவைகளிலிருந்து) நீங்கள் விலகிக் கொள்கிறீர்களா?

92. அல்லாஹ்வுக்கும் கீழ்ப்படியுங்கள்; (அவனுடைய) தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்;( மாறு செய்யாது) எச்சரிக்கையாகவுமிருங்கள்; எனவே (இதனை) நீங்கள் புறக்கணித்து விட்டால், அப்போது நிச்சயமாக நம் தூதர் மீது கடமையெல்லாம் (நம் கட்டளைகளை உங்களுக்குத்) தெளிவாக எத்தி வைப்பதுதான் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

93. விசுவாசங்கொண்டு,நற்கருமங்களையும் செய்தவர்கள்மீது அவர்கள் பயந்து, விசுவாசங்கொண்டு (அதன்மீது நிலைத்திருந்து) நற்செயல்கள் புரிந்து பின்னர் , அவர்கள் (அல்லாஹ்வை) பயந்து, விசுவாசங்கொண்டு பிறகும் அல்லாஹ்வை) பயந்து, (பிறருக்கு ) நன்மையும் செய்துகொண்டிருந்தால் (தடுக்கப் பட்டவற்றிலிருந்து முன்னர்) அவர்கள் சாப்பிட்டதில் எவ்வித குற்றமுமில்லை. அல்லாஹ்வோ (இத்தகைய) நன்மை செய்வோரை நேசிக்கிறான்.

94. விசுவாசங்கொண்டோரே! (நீங்கள் இஹ்ராமிலிருக்கும் நிலையில்) உங்களுடைய கரங்களும், உங்களுடைய ஈட்டிகளும் எதனை எளிதில் அடையுமோஅத்தகைய வேட்டைப்பிராணிகளில் ஏதாவதொன்றைக்கொண்டு நிச்சயமாக அல்லாஹ் உங்களைச் சோதிப்பான்; மறைவில் அல்லாஹ்வுக்கு அஞ்சுபவர் யார் என்பதை அவன் அறி(வித்து விடு)வதற்காகவே (இவ்வாறு செய்கிறான்). ஆகவே இதற்குப் பின்னர் எவர் (அல்லாஹ்வின் கட்டளையை) மீறுகிறாரோ அவருக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு.

95. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் இஹ்ராமிலிருக்கும் நிலையில், வேட்டைப் பிராணிகளைக் கொல்லாதீர்கள்; மேலும், உங்களில் எவரேனும், வேண்டுமென்றே அதனைக் கொன்றுவிட்டால், (ஆடு, மாடு, ஒட்டகம்ஆகிய) பிராணிகளிலிருந்து அவர்கொன்று விட்டதற்குச் சமமானது(அதற்கு) தண்டனை யாகும்; உங்களில் நீதியுடைய இருவர் அதற்குத் தீர்ப்பளி(க்கும் பொருளை நீங்கள் ஈடாகக் கொடு)க்க வேண்டும்; (அது) ‘கஅபா’வை அடையவேண்டிய குர்பானியாகும்; அல்லது (அதன் கிரயத்தில்,) ஏழைகளுக்கு ஆகாரமளிப்பது அதற்கு பரிகாரமாகும்; அல்லது தான்செய்த காரியத்தின் தண்டனையை அவன் அனுபவிப்பதற்காக (எண்ணிக்கையில்) அதற்குச் சமமான நோன்புகள் நோற்க வேண்டும்; முன் நடந்தவைகளை அல்லாஹ் மன்னித்து விட்டான். (இத்தகைய குற்றம் செய்ய) எவரும் (பின்னும்) மீண்டால் அப்போது, அல்லாஹ் அவரை தண்டனை செய்வான்; இன்னும், அல்லாஹ் (யாவரையும் )மிகைத்தவன், தண்டித்தலையுடையவன்.

أُحِلَّ لَكُمْ صَيْدُ الْبَحْرِ وَطَعَامُهُ مَتَاعًا لَّكُمْ وَلِلسَّيَّارَةِ ۚ وَحُرِّمَ
عَلَيْكُمْ صَيْدُ الْبَرِّ مَا دُمْتُمْ حُرُمًا ۗ وَاتَّقُوا اللّٰهَ الَّذِیْۤ اِلَیْهِ
تُحْشَرُوْنَ ﴿۹۶﴾ جَعَلَ اللّٰهُ الْكَعْبَةَ الْبَیْتَ الْحَرَامَ قِیٰمًا لِّلنَّاسِ
وَالشَّهْرَ الْحَرَامَ وَالْهَدْیَ وَالْقَلَآئِدَ ؕ ذٰلِكَ لِتَعْلَمُوْۤا اَنَّ اللّٰهَ
یَعْلَمُ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ وَاَنَّ اللّٰهَ بِكُلِّ شَیْءٍ
عَلِیْمٌ ﴿۹۷﴾ اِعْلَمُوْۤا اَنَّ اللّٰهَ شَدِیْدُ الْعِقَابِ وَاَنَّ اللّٰهَ غَفُوْرٌ
رَّحِیْمٌ ﴿۹۸﴾ مَا عَلَی الرَّسُوْلِ اِلَّا الْبَلٰغُ ؕ وَاللّٰهُ یَعْلَمُ مَا تُبْدُوْنَ
وَمَا تَكْتُمُوْنَ ﴿۹۹﴾ قُلْ لَّا یَسْتَوِی الْخَبِیْثُ وَالطَّیِّبُ وَلَوْ
اَعْجَبَكَ كَثْرَةُ الْخَبِیْثِ ۚ فَاتَّقُوا اللّٰهَ یٰۤاُولِی الْاَلْبَابِ لَعَلَّكُمْ
تُفْلِحُوْنَ ﴿۱۰۰﴾ ع یٰۤاَیُّهَا الَّذِیْنَ اٰمَنُوْا لَا تَسْـَٔلُوْا عَنْ اَشْیَآءَ اِنْ ع ۱۳ ۳
تُبْدَ لَكُمْ تَسُؤْكُمْ ۚ وَاِنْ تَسْـَٔلُوْا عَنْهَا حِیْنَ یُنَزَّلُ الْقُرْاٰنُ تُبْدَ
لَكُمْ ؕ عَفَا اللّٰهُ عَنْهَا ؕ وَاللّٰهُ غَفُوْرٌ حَلِیْمٌ ﴿۱۰۱﴾ قَدْ سَاَلَهَا قَوْمٌ
مِّنْ قَبْلِكُمْ ثُمَّ اَصْبَحُوْا بِهَا كٰفِرِیْنَ ﴿۱۰۲﴾ مَا جَعَلَ اللّٰهُ مِنْۢ
بَحِیْرَةٍ وَّلَا سَآئِبَةٍ وَّلَا وَصِیْلَةٍ وَّلَا حَامٍ ۙ وَّلٰكِنَّ الَّذِیْنَ كَفَرُوْا
یَفْتَرُوْنَ عَلَی اللّٰهِ الْكَذِبَ ؕ وَاَكْثَرُهُمْ لَا یَعْقِلُوْنَ ﴿۱۰۳﴾

96.(நீங்கள் இஹ்ராமிலிருக்கும் நிலையில்) உங்களுக்கும் (இதர) பிரயாணிகளுக்கும் பயன் பெறுவதற்காக கடலில் வேட்டையாடுவதும், அதைப்புசிப்பதும் உங்களுக்கு ஆகுமாக்கப் பட்டுள்ளது; இன்னும், நீங்கள் இஹ்ராமுடைய நிலையில் இருக்கும் போதெல்லாம், கரையில் வேட்டையாடுவது உங்களுக்குத் தடுக்கப்பட்டுள்ளது; இன்னும், எவனின்பால் நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்களோ அத்தகைய அல்லாஹ்வை பயந்துகொள்ளுங்கள்.

97. சிறப்புற்ற வீடாகிய கஅபாவை, மனிதர்களுக்கு (இம்மை, மறுமையின்) ஜீவிய ஆதாரமாக அல்லாஹ் ஆக்கியிருக்கின்றான்; (அவ்வாறே) சிறப்புற்ற மாதங்களையும், (ஹஜ்ஜில் அறுக்கப்படும்) அறுப்புப் பிராணிகளையும் (அறுத்துப்பலியிடுவதற்காக) அடையாளம் கட்டப்பட்ட கால்நடைகளையும், (அபயம்பெற்றவையாக ஆக்கியிருக்கின்றான்.) அ(வ்வாறு செய்த)து, வானங்களிலுள்ளவற்றை, மற்றும் பூமியிலுள்ளவற்றை நிச்சயமாக அல்லாஹ் நன்கறிகின்றான் என்பதையும் நீங்கள் அறிவதற்காகவேதான். இன்னும் நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிகிறவன்.

98. நிச்சயமாக அல்லாஹ், தண்டிப்பதில் கடுமையானவன்; இன்னும் நிச்சயமாக அல்லாஹ், மிக்க மன்னிக்கிறவன் , மிகக்கிருபையுடையவன், என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

99. (நம் தூதை) எத்திவைப்பதைத் தவிர இத்தூதர் மீது (வேறு கடமை) இல்லை; இன்னும் நீங்கள் வெளிப்படுத்துவதையும், நீங்கள் மறைத்துக் கொண்டிருப்பதையும் அல்லாஹ் அறிவான்.

100. கெட்டது அதிகமாக இருப்பது உம்மை ஆச்சரியப்படுத்திய போதிலும், "கெட்டதும், நல்லதும் சமமாகாது" என (நபியே!) நீர் கூறுவீராக ! ஆகவே அறிவாளிகளே! அல்லாஹ்வுக்குப் பயந்து (தீயவற்றிலிருந்து விலகிக்) கொள்ளுங்கள். (அதனால்) நீங்கள் வெற்றியடைவீர்கள்.

101 . விசுவாசங்கொண்டோரே! (நபியிடம்) பலவிஷயங்களைப் பற்றி கேட்காதீர்கள்; (அவைகள்) உங்களுக்கு வெளிப் படுத்தப்பட்டால், (அவை) உங்களுக்கு வருத்தம்தரக்கூடும்; மேலும் இந்தக் குர்ஆன் இறக்கப்படுகின்ற சமயத்தில் அவை பற்றி நீங்கள் கேட்பீர்களானால் அவை உங்களுக்கு தெளிவாக்கப்பட்டுவிடும்; (வீணாகக் கேட்டுக்கொண்டிருந்த) அதனைப் பற்றி அல்லாஹ் உங்களை மன்னித்து விட்டான்; மேலும் அல்லாஹ்வோ மிக்க மன்னிக்கிறவன், மிகுந்த சகிப்புத்தன்மையுடையவன்.

102. உங்களுக்கு முன்னிருந்தவர்களில் ஒரு கூட்டத்தார் அவற்றை (அவர்களுடைய நபியிடம், இவ்வாறே) திட்டமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்; (அவை பற்றி அவர்களுக்கு தெளிவுசெய்யப்பட்ட) பின்னர், அவர்கள் அவற்றை நிராகரிப்பவர்களாக ஆகிவிட்டனர்.

103. பஹீரா (காதுகிழிக்கப்பட்ட பெண் ஒட்டகம்); ஸாயிபா (சுதந்திரமாக மேயவிடப்படும் பெண் ஒட்டகம்); வஸீலா (இரட்டைக் குட்டிகளை ஈன்றதால் விக்ரகங்களுக்கு நேர்ந்துவிடப்பட்ட ஆடுகள்); ஹாம் (வேலைக்கு பயன்படுத்தப் படாது வீணடிக்கப்பட்ட ஆண்ஒட்டகம், முதலிய) இவைகளெல்லாம், அல்லாஹ் ஏற்படுத்தியவைகளல்ல; எனினும், நிராகரிப்போர் தாம் (அவைகள் அல்லாஹ் ஏற்படுத்தியவைகளென) அல்லாஹ்வின் மீது, பொய்யைக் கற்பனை செய்(து கூறு)கின்றனர்; மேலும், அவர்களில் அதிகமானோர் அறியமாட்டார்கள்.

وَاِذَا قِيۡلَ لَهُمۡ تَعَالَوۡا اِلٰى مَاۤ اَنۡزَلَ اللّٰهُ وَاِلَى الرَّسُوۡلِ قَالُوۡا
حَسۡبُنَا مَا وَجَدۡنَا عَلَيۡهِ اٰبَآءَنَا ؕ اَوَلَوۡ كَانَ اٰبَآؤُهُمۡ لَا يَعۡلَمُوۡنَ
شَيۡـًٔـا وَّلَا يَهۡتَدُوۡنَ ﴿۱۰۴﴾ يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا عَلَيۡكُمۡ اَنۡفُسَكُمۡ ۚ لَا
يَضُرُّكُمۡ مَّنۡ ضَلَّ اِذَا اهۡتَدَيۡتُمۡ ؕ اِلَى اللّٰهِ مَرۡجِعُكُمۡ جَمِيۡعًا فَيُنَبِّئُكُمۡ
بِمَا كُنۡتُمۡ تَعۡمَلُوۡنَ ﴿۱۰۵﴾ يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا شَهَادَةُ بَيۡنِكُمۡ اِذَا
حَضَرَ اَحَدَكُمُ الۡمَوۡتُ حِيۡنَ الۡوَصِيَّةِ اثۡنٰنِ ذَوَا عَدۡلٍ مِّنۡكُمۡ
اَوۡ اٰخَرٰنِ مِنۡ غَيۡرِكُمۡ اِنۡ اَنۡتُمۡ ضَرَبۡتُمۡ فِى الۡاَرۡضِ فَاَصَابَتۡكُمۡ
مُّصِيۡبَةُ الۡمَوۡتِ ؕ تَحۡبِسُوۡنَهُمَا مِنۡۢ بَعۡدِ الصَّلٰوةِ فَيُقۡسِمٰنِ بِاللّٰهِ
اِنِ ارۡتَبۡتُمۡ لَا نَشۡتَرِىۡ بِهٖ ثَمَنًا وَّلَوۡ كَانَ ذَا قُرۡبٰى ۙ وَلَا نَكۡتُمُ
شَهَادَةَ ۙ اللّٰهِ اِنَّاۤ اِذًا لَّمِنَ الۡاٰثِمِيۡنَ ﴿۱۰۶﴾ فَاِنۡ عُثِرَ عَلٰٓى اَنَّهُمَا اسۡتَحَقَّاۤ
اِثۡمًا فَاٰخَرٰنِ يَقُوۡمٰنِ مَقَامَهُمَا مِنَ الَّذِيۡنَ اسۡتَحَقَّ عَلَيۡهِمُ
الۡاَوۡلَيٰنِ فَيُقۡسِمٰنِ بِاللّٰهِ لَشَهَادَتُنَاۤ اَحَقُّ مِنۡ شَهَادَتِهِمَا وَ
مَا اعۡتَدَيۡنَاۤ ۖ اِنَّاۤ اِذًا لَّمِنَ الظّٰلِمِيۡنَ ﴿۱۰۷﴾ ذٰلِكَ اَدۡنٰٓى اَنۡ يَّاۡتُوۡا
بِالشَّهَادَةِ عَلٰى وَجۡهِهَاۤ اَوۡ يَخَافُوۡۤا اَنۡ تُرَدَّ اَيۡمَانٌۢ بَعۡدَ اَيۡمَانِهِمۡ ؕ
وَاتَّقُوا اللّٰهَ وَاسۡمَعُوۡا ؕ وَاللّٰهُ لَا يَهۡدِى الۡقَوۡمَ الۡفٰسِقِيۡنَ ﴿۱۰۸﴾ ع ١٤ ع ٤

104. "அல்லாஹ் இறக்கிவைத்த (வேதத்)தின்பாலும், (அவனுடைய) இத்தூதரின்பாலும் வாருங்கள்" என அவர்களுக்குக் கூறப்பட்டால், "எங்களுடைய மூதாதையர்களை எதன்மீதிருக்க நாங்கள் கண்டோமோ அதுவே (நாங்கள் பின்பற்ற)எங்களுக்குப் போதும்" எனக் கூறுகின்றனர்; அவர்களுடைய மூதாதையர்கள் யாதொன்றையும் அறியாதவர்களாகவும், நேரான வழியில் இல்லாதவர்களாகவும் இருந்தாலுமா? (அவர்கள் தங்கள் மூதாதையர்களைப் பின்பற்றுவார்கள்?)

105. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் (தவறான வழியில் செல்லாது) உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் நேரான வழியில் சென்றால், வழி தவறியவர் உங்களுக்கு எவ்விதத்தீங்கும் செய்யமாட்டார்; அல்லாஹ்வின்பக்கமே உங்கள் யாவரின் மீட்சி இருக்கிறது; நீங்கள் (இங்கு) செய்து கொண்டிருந்தவைகளைப் பற்றி (அது சமயம்) அவன் உங்களுக்கு அறிவித்துவிடுவான்.

106. விசுவாசங்கொண்டோரே! உங்களில் ஒருவருக்கு மரணம் (சம்பவிக்க) (அதன்அடையாளங்கள் காணப்பட்டு) ஆஜராகிவிட்டால் அவர் (மரண)சாசனம் செய்யும் சமயத்தில் உங்களுக்கிடையில்சாட்சி உங்களி(ன் சுற்றத்தாரி) லிருந்து நீதியுடைய இருவர் இருத்தல் வேண்டும்; அல்லது நீங்கள் பூமியில் பிரயாணம் செய்து அப்பொழுது மரணத்துன்பம் உங்களைப்பீடித்துவிட்டால் உங்களையல்லாத வேறு இருவர் சாட்சிகளாக இருத்தல் வேண்டும்; ( அந்த சாட்சிகளைப்பற்றி வாரிசுதாரர்களாகிய) நீங்கள் சந்தேகப்பட்டால் தொழுகைக்குப்பின் அவ்விருவரையும் நீங்கள் தடுத்து வைப்பீர்கள்; அப்போது அவ்விருவரும் அல்லாஹ்வைக் கொண்டு அதனை(நீதியாக சாட்சி கூறுவதன் மூலம் எங்களுக்கு அல்லாஹ்விடம் கிடைக்க இருக்கும் பாக்கியத்தை பொய் சாட்சி கூறுவதைக் கொண்டு இவ்வுலகில் எங்களுக்குக் கிடைக்கும்)சொற்ப கிரயத்திற்கு விற்று விடமாட்டோம்.(எவருக்கு சாட்சியம் கூறுகிறோமோ) அவர் சுற்றத்தாராக இருந்தாலும் சரியே; இன்னும்,அல்லாஹ்வின் சாட்சியத்தை மறைக்கவுமாட்டோம்;(அவ்வாறு மறைத்தால்) நிச்சயமாக நாங்கள் அப்பொழுது குற்றவாளிகளில் ஆகிவிடுவாம் என்று(கூறி அவ்விருவரும்) அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்வர்.

107. நிச்சயமாக அவ்விருவரும்,(இவ்வாறு அவர்கள் சத்தியம் செய்து கூறியபின் சாட்சியத்தில் அல்லது சத்தியத்தில் பொய்கூறி மோசடிசெய்திருப்பதன் மூலம்) பாவத்திற்குரியவர்களாகிவிட்டார்களென்று கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால், எவர்க(ளுக்கு சாசனம் செய்யப்பட்ட பொரு)ள் மீது உரிமை இருக்கிறதோ அத்தகையோரிலிருந்து (மரணசாசனம் செய்வித்தவர்க்கு ) மிக உரியவர்களான வேறு இருவர் அவ்விருவரின் இடத்தில் நின்று கொண்டு, திட்டமாக எங்களின் சாட்சியம் அவ்விருவரின் சாட்சியத்தைவிட மிக்க உண்மையானதாகும்; நாங்கள் (இவ்வாறு சத்தியம் செய்வதில் ) வரம்பு மீறவுமில்லை; (அவ்வாறு மீறி இருப்பின்) அப்போது நிச்சயமாக நாங்கள் அநியாயக்காரர்களில் உள்ளோராகிவிடுவோம் என்று அல்லாஹ்வைக்கொண்டு அவ்விருவரும் சத்தியம் செய்வர்.

108.(மேற்கூறப்பட்ட)அ(ம்முறையான)து சாட்சியத்தைஅதன் சரியான முறைப்படி (மாற்றாது, மோசடி செய்யாது) அவர்கள் கொண்டு வருவதற்கும், அல்லது (உண்மை கூறும்) அவர்களின் சத்தியங்களுக்குப் பின்(பொய் கூறிய இவர்களின்) சத்தியங்கள் மறுக்கப் பட்டுவிடும் என்பதை அவர்கள் பயப்படுவதற்கும் மிக நெருக்கமானதாகும்; மேலும்(பொய்ச்சத்தியம் கூறும் விஷயத்தில்) அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்; (அவனின் கட்டளைகளுக்கு) செவியும் சாயுங்கள்; இன்னும் அல்லாஹ் பாவிகளான சமூகத்தாரை நேர்வழியில் செலுத்தமாட்டான்.

يَوْمَ يَجْمَعُ اللّٰهُ الرُّسُلَ فَيَقُوْلُ مَاذَآ اُجِبْتُمْ ؕ قَالُوْا لَا عِلْمَ
لَنَا ؕ اِنَّكَ اَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ ﴿١٠٩﴾ اِذْ قَالَ اللّٰهُ يٰعِيْسَى ابْنَ مَرْيَمَ
اذْكُرْ نِعْمَتِيْ عَلَيْكَ وَعَلٰى وَالِدَتِكَ ۘ اِذْ اَيَّدْتُّكَ بِرُوْحِ وقف لازم
الْقُدُسِ ۛ قف تُكَلِّمُ النَّاسَ فِي الْمَهْدِ وَكَهْلًا ۚ وَاِذْ عَلَّمْتُكَ الْكِتٰبَ
وَالْحِكْمَةَ وَالتَّوْرٰىةَ وَالْاِنْجِيْلَ ۚ وَاِذْ تَخْلُقُ مِنَ الطِّيْنِ
كَهَيْـَٔةِ الطَّيْرِ بِاِذْنِيْ فَتَنْفُخُ فِيْهَا فَتَكُوْنُ طَيْرًۢا بِاِذْنِيْ وَ
تُبْرِئُ الْاَكْمَهَ وَالْاَبْرَصَ بِاِذْنِيْ ۚ وَاِذْ تُخْرِجُ الْمَوْتٰى بِاِذْنِيْ ۚ
وَاِذْ كَفَفْتُ بَنِيْٓ اِسْرَآءِيْلَ عَنْكَ اِذْ جِئْتَهُمْ بِالْبَيِّنٰتِ
فَقَالَ الَّذِيْنَ كَفَرُوْا مِنْهُمْ اِنْ هٰذَآ اِلَّا سِحْرٌ مُّبِيْنٌ ﴿١١٠﴾ وَ
اِذْ اَوْحَيْتُ اِلَى الْحَوَارِيّٖنَ اَنْ اٰمِنُوْا بِيْ وَبِرَسُوْلِيْ ۚ قَالُوْٓا
اٰمَنَّا وَاشْهَدْ بِاَنَّنَا مُسْلِمُوْنَ ﴿١١١﴾ اِذْ قَالَ الْحَوَارِيُّوْنَ
يٰعِيْسَى ابْنَ مَرْيَمَ هَلْ يَسْتَطِيْعُ رَبُّكَ اَنْ يُّنَزِّلَ
عَلَيْنَا مَآئِدَةً مِّنَ السَّمَآءِ ؕ قَالَ اتَّقُوا اللّٰهَ اِنْ كُنْتُمْ
مُّؤْمِنِيْنَ ﴿١١٢﴾ قَالُوْا نُرِيْدُ اَنْ نَّاْكُلَ مِنْهَا وَتَطْمَئِنَّ قُلُوْبُنَا
وَنَعْلَمَ اَنْ قَدْ صَدَقْتَنَا وَنَكُوْنَ عَلَيْهَا مِنَ الشّٰهِدِيْنَ ﴿١١٣﴾ الربع

109. "அல்லாஹ் (தன்) தூதர்களை ஒன்று சேர்க்கும் நாளில், (நீங்கள் எனது தூதை மக்களுக்கு எடுத்துரைத்த சமயத்தில் )என்ன பதில் அளிக்கப்பட்டீர்கள்" என்று கேட்பான்; (அதற்கவர்கள் அதுபற்றி)"எங்களுக்கு எவ்வித அறிவுமில்லை; நிச்சயமாக நீதான் மறைவானவற்றை நன்கறிந்தவன்" என்று கூறுவார்கள்.

110. "மர்யமுடைய மகன் ஈஸாவே! உம்மீதும், உம் தாய்மீதும் (நான் புரிந்து) உள்ள என்னுடைய அருளை நீர் நினைவுகூர்வீராக!" பரிசுத்த ஆன்மாவைக் கொண்டு, உம்மை நான் பலப்படுத்தியபொழுது, நீர் தொட்டிலிலும், பக்குவ வயதிலும், (மனிதர்களிடத்தில்) பேசினீரென்பதையும் (நினைவுகூர்வீராக!) மேலும், வேதத்தையும், ஞானத்தையும், தவ்றாத்தையும், இன்ஜீலையும் நான் உமக்குக் கற்றுக்கொடுத்ததையும், (நினைவுகூர்வீராக!) இன்னும், நீர் என் உத்தரவைக் கொண்டு, களிமண்ணால் பறவையின் உருவத்தைப்போல் செய்து, அதில் நீர் ஊதிய சமயத்தில், அது என் உத்தரவு கொண்டு பறவையானதையும், பிறவிக் குருடனையும், வெண் குஷ்டரோகியையும் என் உத்தரவைக்கொண்டு நீர் சுகப்படுத்தியதையும் (நினைவுகூர்வீராக!) நீர் என் உத்தரவைக் கொண்டு இறந்தோரை(க் கல்லறையிலிருந்து உயிர்ப்பித்து) நீர் வெளியேற்றியதையும் (நினைவுகூர்வீராக!) இன்னும் இஸ்ராயீலின் மக்களிடம் நீர் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்த போது அவர்களில் நிராகரித்தவர்கள், "நிச்சயமாக இது தெளிவான சூனியத்தைத் தவிர வேறில்லை" என்று கூறியசமயத்தில், அவர்(களுடைய தீங்கு) களிலிருந்து நான் உம்மைத் தடுத்துக்கொண்டதையும் நினைவுகூர்வீராக! என்று(ஈஸாவை அழைத்து)அல்லாஹ் கூறியதை(நபியே! நினைவு கூர்வீராக!).

111. " அன்றியும் என்னையும், என்னுடைய தூதரையும் விசுவாசியுங்கள் என (உமது) சீடர்களுக்கு நான் அறிவித்த சமயத்தில், (அவ்வாறே) "நாங்கள் விசுவாசித்தோம், நிச்சயமாக நாங்கள் ( முற்றிலும் கீழ்ப்படிந்த) முஸ்லிம்கள் என்பதற்கு நீரே சாட்சியாகவும் இருப்பீராக" என்று அவர்கள் கூறினார்கள் (என்பதையும் நினைவுகூர்வீராக! என்றும் அந்நாளில் கூறுவான்).

112. (தவிர, நபியே! நீர் அவர்களுக்கு நினைவு கூர்வீராக!) அச்சீடர்கள் (ஈஸாவிடம்,) "மர்யமுடைய மகன் ஈஸாவே! உம்முடைய இரட்சகன் வானத்திலிருந்து எங்களுக்காக (உணவுப் பொருள்கள் நிறைந்த) ஒரு மரவையை இறக்கி வைக்க ஆற்றல்பெறுவானா?" என்று கேட்டபோது, (ஈஸா, அவர்களிடம்,) "நீங்கள் விசுவாசங்கொண்டவர்களாக இருந்தால் (இத்தகைய கேள்வி கேட்பதைப்பற்றி) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து கொள்ளுங்கள்" என்று அவர் கூறினார்.

113. அ(தற்க)வர்கள் " அதிலிருந்து நாங்கள் உண்பதையும், எங்கள் இதயங்கள் திருப்தியடைவதைவும், இன்னும், நீர் (உம்முடைய தூதைப்பற்றி) திட்டமாக எங்களிடம் உண்மை கூறினீர் என்று நாங்கள் அறிந்து கொள்வதையும், அதற்கு நாங்கள் சாட்சியாளர்களாக ஆகிவிடுவதையுமே நாடுகின்றோம்" என்று கூறினார்கள்.

قَالَ عِيْسَى ابْنُ مَرْيَمَ اللّٰهُمَّ رَبَّنَآ اَنْزِلْ عَلَيْنَا مَآئِدَةً مِّنَ السَّمَآءِ
تَكُوْنُ لَنَا عِيْدًا لِّاَوَّلِنَا وَاٰخِرِنَا وَاٰيَةً مِّنْكَ ۚ وَارْزُقْنَا وَاَنْتَ
خَيْرُ الرّٰزِقِيْنَ ﴿۱۱۴﴾ قَالَ اللّٰهُ اِنِّيْ مُنَزِّلُهَا عَلَيْكُمْ ۚ فَمَنْ يَّكْفُرْ بَعْدُ
مِنْكُمْ فَاِنِّيْٓ اُعَذِّبُهٗ عَذَابًا لَّآ اُعَذِّبُهٗٓ اَحَدًا مِّنَ الْعٰلَمِيْنَ ﴿۱۱۵﴾ ع — ع ۱۵ ۷ ۵
وَاِذْ قَالَ اللّٰهُ يٰعِيْسَى ابْنَ مَرْيَمَ ءَاَنْتَ قُلْتَ لِلنَّاسِ اتَّخِذُوْنِيْ
وَاُمِّيَ اِلٰهَيْنِ مِنْ دُوْنِ اللّٰهِ ؕ قَالَ سُبْحٰنَكَ مَا يَكُوْنُ لِيْٓ اَنْ اَقُوْلَ
مَا لَيْسَ لِيْ ۗ بِحَقٍّ ؕ اِنْ كُنْتُ قُلْتُهٗ فَقَدْ عَلِمْتَهٗ ؕ تَعْلَمُ مَا فِيْ نَفْسِيْ — وقف النبي صلى الله عليه وسلم
وَلَآ اَعْلَمُ مَا فِيْ نَفْسِكَ ؕ اِنَّكَ اَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ ﴿۱۱۶﴾ مَا قُلْتُ لَهُمْ
اِلَّا مَآ اَمَرْتَنِيْ بِهٖٓ اَنِ اعْبُدُوا اللّٰهَ رَبِّيْ وَرَبَّكُمْ ۚ وَكُنْتُ عَلَيْهِمْ
شَهِيْدًا مَّا دُمْتُ فِيْهِمْ ۚ فَلَمَّا تَوَفَّيْتَنِيْ كُنْتَ اَنْتَ الرَّقِيْبَ عَلَيْهِمْ ؕ
وَاَنْتَ عَلٰى كُلِّ شَيْءٍ شَهِيْدٌ ﴿۱۱۷﴾ اِنْ تُعَذِّبْهُمْ فَاِنَّهُمْ عِبَادُكَ ۚ وَاِنْ
تَغْفِرْ لَهُمْ فَاِنَّكَ اَنْتَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۱۱۸﴾ قَالَ اللّٰهُ هٰذَا يَوْمُ يَنْفَعُ
الصّٰدِقِيْنَ صِدْقُهُمْ ؕ لَهُمْ جَنّٰتٌ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ
فِيْهَآ اَبَدًا ؕ رَضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ ؕ ذٰلِكَ الْفَوْزُ الْعَظِيْمُ ﴿۱۱۹﴾
لِلّٰهِ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا فِيْهِنَّ ؕ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿۱۲۰﴾ ع — ع ۱۶ ۵

114. (அதற்கு) மர்யமுடைய மகன் ஈஸா, "யாஅல்லாஹ் ! எங்கள் இரட்சகனே! வானத்திலிருந்து ஒரு(உணவு நிறைந்த) மரவையை எங்களுக்கு நீ இறக்கி வைப்பாயாக! எங்களுக்கும், எங்கள் முன்னவர்களுக்கும், எங்களுக்குப் பின் வருபவர்களுக்கும் ஒரு பெரு நாளாகவும், உன்னிலிருந்து ஓர் அத்தாட்சியாகவும் அது ஆகிவிடும்; மேலும், (அவ்வாறே) எங்களுக்கும் உணவளிப்பாயாக! நீயோ, உணவளிப்பவர்களில் மிகச் சிறந்தவன்" என்று (பிரார்த்தித்துக்) கூறினார்.

115. (அதற்கு) அல்லாஹ் , "நிச்சயமாக நான் அதனை உங்களுக்கு இறக்கி வைக்கிறவனாக உள்ளேன்; ஆனால் இதற்குப் பின்னர் உங்களில் எவர் நிராகரிப்பாரோ, அப்பொழுது நிச்சயமாக நான், அவரை அகிலத்தாரில் எவரையுமே நான் வேதனை செய்திராத கொடியதொரு வேதனையைக் கொண்டு நான் வேதனை செய்வேன்" என்று கூறினான்.

116. அன்றியும், அல்லாஹ், (மறுமை நாளில் ஈஸாவிடம்) "மர்யமுடைய மகன் ஈஸாவே! "அல்லாஹ்வைத் தவிர என்னையும், என்னுடைய தாயையும் இரண்டு வணக்கத்திற்குரியவர்களாக எடுத்துக்கொள்ளுங்கள் என்று மனிதர்களுக்கு நீர் கூறினீரா?" என்று கேட்பான். (அதற்கு) "நீ மிகப் பரிசுத்தமானவன்; எனக்கு ஒரு சிறிதும் உரிமை இல்லாததை நான் (ஒருபோதும்) கூறுவதற்கு எனக்குத் தகுதி இல்லை; அவ்வாறு நான் கூறியிருந்தால், நிச்சயமாக நீ அதனை அறிந்திருப்பாய்; என் உள்ளத்தில் உள்ளதை நீ நன்கறிவாய்; உன் உள்ளத்திலுள்ளதை நான் அறிய மாட்டேன். நிச்சயமாக நீதான் மறைவானவற்றை மிக்க அறிந்தவன் " என்று கூறுவார்.

117. "என்னுடைய இரட்சகனும், உங்களுடைய இரட்சகனுமான அல்லாஹ்வை வணங்குங்கள்" (என்று மக்களுக்கு நான் கூறவேண்டும்) என்று நீ எதை எனக்குக் கட்டளையிட்டாயோ அதைத் தவிர ( வேறு ) எதையும் நான் அவர்களுக்கு கூறவில்லை; நான் அவர்களுடன் ( உலகில்) இருந்தவரையில், அவர்களின் செயலைத் தெரிந்து கொண்டிருந்தேன்;பின்னர், நீ என்னைக் கைப்பற்றிய பொழுது, நீதான் அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தாய்; நீயே ஒவ்வொரு பொருளின்மீதும் சாட்சியாளன் "(என்றும்),

118. (இரட்சகா) "அவர்களை நீ வேதனை செய்தால், நிச்சயமாக அவர்கள் உன்னுடைய அடியார்களே! அன்றியும், அவர்களை நீ மன்னித்துவிட்டால் நிச்சயமாக நீதான் (யாவரையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்" (என்றும் கூறுவார்).

119. (அதற்கு) அல்லாஹ் " இது, உண்மையாளர்களுக்கு அவர்களுடைய உண்மை பலனளிக்கக் கூடிய நாளாகும்; அவர்களுக்கு சுவனபதிகள் உண்டு; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும் ; அவற்றில் அவர்கள்,நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்என்று கூறுவான்; (அந்நாளில்) அவர்களைப் பற்றி அல்லாஹ்வும் திருப்தியடைவான்; அவர்களும், அவனைப் பற்றித் திருப்தியடைவார்கள்; அது மகத்தான வெற்றியாகும்.

120. வானங்களுடைய, மற்றும் பூமியுடைய இன்னும் இவைகளிலுள்ள யாவற்றினுடையவும் ஆட்சி, அல்லாஹ்வுக்கே உரியது; அவனோ ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

سُوْرَةُ الْاَنْعَامِ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّخَمْسٌ وَّسِتُّوْنَ اٰيَةً وَّعِشْرُوْنَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَجَعَلَ الظُّلُمٰتِ
وَالنُّوْرَ ۗ ثُمَّ الَّذِيْنَ كَفَرُوْا بِرَبِّهِمْ يَعْدِلُوْنَ ① هُوَ الَّذِيْ
خَلَقَكُمْ مِّنْ طِيْنٍ ثُمَّ قَضٰىٓ اَجَلًا ۭ وَاَجَلٌ مُّسَمًّى عِنْدَهٗ ثُمَّ اَنْتُمْ
تَمْتَرُوْنَ ② وَهُوَ اللّٰهُ فِي السَّمٰوٰتِ وَفِي الْاَرْضِ ۭ يَعْلَمُ سِرَّكُمْ وَ
جَهْرَكُمْ وَيَعْلَمُ مَا تَكْسِبُوْنَ ③ وَمَا تَاْتِيْهِمْ مِّنْ اٰيَةٍ مِّنْ اٰيٰتِ
رَبِّهِمْ اِلَّا كَانُوْا عَنْهَا مُعْرِضِيْنَ ④ فَقَدْ كَذَّبُوْا بِالْحَقِّ لَمَّا جَاۗءَهُمْ ۭ
فَسَوْفَ يَاْتِيْهِمْ اَنْۢبٰۗؤُا مَا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ⑤ اَلَمْ يَرَوْا كَمْ
اَهْلَكْنَا مِنْ قَبْلِهِمْ مِّنْ قَرْنٍ مَّكَّنّٰهُمْ فِي الْاَرْضِ مَا لَمْ نُمَكِّنْ لَّكُمْ
وَاَرْسَلْنَا السَّمَاۗءَ عَلَيْهِمْ مِّدْرَارًا ۠ وَّجَعَلْنَا الْاَنْهٰرَ تَجْرِيْ مِنْ
تَحْتِهِمْ فَاَهْلَكْنٰهُمْ بِذُنُوْبِهِمْ وَاَنْشَاْنَا مِنْۢ بَعْدِهِمْ قَرْنًا اٰخَرِيْنَ ⑥
وَلَوْ نَزَّلْنَا عَلَيْكَ كِتٰبًا فِيْ قِرْطَاسٍ فَلَمَسُوْهُ بِاَيْدِيْهِمْ لَقَالَ
الَّذِيْنَ كَفَرُوْٓا اِنْ هٰذَآ اِلَّا سِحْرٌ مُّبِيْنٌ ⑦ وَقَالُوْا لَوْلَآ اُنْزِلَ
عَلَيْهِ مَلَكٌ ۭ وَلَوْ اَنْزَلْنَا مَلَكًا لَّقُضِيَ الْاَمْرُ ثُمَّ لَا يُنْظَرُوْنَ ⑧

அத்தியாயம் : 6

## அல் அன்ஆம் _ கால் நடைகள்

வசனங்கள் : 165 மக்கீ ருகூஃகள் : 20

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. வானங்களை, மற்றும் பூமியைப் படைத்து, இருள்களை, மற்றும் ஒளியை ஆக்கியவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியதாகும்; அதன் பின்னரும் நிராகரிப்போர் (அல்லாஹ்வாகிய) தங்கள் இரட்சகனுக்கு (அவன் படைத்தவற்றில் சிலவற்றை)ச் சமமாக்குகின்றனர்.

2. அவன் எத்தகையோனென்றால், உங்களைக் களிமண்ணால் அவன் படைத்தான்; பின்னர், (உங்களுக்கு) ஒரு தவணையையும் நிர்ணயம் செய்துள்ளான்; (உங்கள் விசாரணைக்காகவும்,) ஒரு குறிப்பிட்ட தவணையும் அவனிடத்தில் உண்டு; பின்னும், நீங்கள் (அவன் வணக்கத்திற்குறியவன் என்பதில்) சந்தேகப் படுகிறீர்கள்.

3. மேலும் அவனே வானங்களிலும், பூமியிலும் (வணக்கத்திற்குரிய) அல்லாஹ்; அவன் உங்களுடைய இரகசியத்தையும், உங்களுடைய பரகசியத்தையும் நன்கறிவான்; இன்னும், (நன்மையோ, தீமையோ செய்து) நீங்கள் சம்பாதிப்பவைகளையும் அவன் நன்கறிவான்.

4. (நிராகரிப்போர்) தங்களுடைய இரட்சகனின் வசனங்(களான அத்தாட்சி)களிலிருந்து எந்த வசனமும், அதனை அவர்கள் புறக்கணிக்கக்கூடியவர்களாக இருந்தே தவிர அவர்களிடம் வருவதில்லை

5. ஆகவே, சத்திய(வேத)த்தை_அது அவர்களிடம் வந்திருக்கும்போது திட்டமாக அவர்கள் பொய்யாக்கிவிட்டனர்; ஆகவே, எவ்விஷயங்கள் பற்றி, அவர்கள் பரிகசித்துக் கொண்டிருக்கின்றனரோ அவைபற்றிய செய்திகள் அவர்களுக்கு வந்தே தீரும்.

6. அவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்திருக்கின்றோம் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? பூமியில் உங்களுக்கு நாம் செய்து தராத வசதிகளையெல்லாம் அவர்களுக்கு நாம் செய்து தந்திருந்தோம்; மேலும் அவர்களின் மீது தொடர்ச்சியாக மழை பொழியுமாறு நாம் செய்தோம்; இன்னும், ஆறுகளை அவர்களுக்குக் கீழ் ஓடிக் கொண்டிருக்கும்படியாக நாம் ஆக்கினோம்; ஆகவே, அவர்களுடைய பாவங்களின் காரணமாக அவர்களை நாம் அழித்து விட்டோம்; மேலும், அவர்களுக்குப் பின்னர் வேறு தலைமுறையினரை நாம் உண்டாக்கினோம்.

7. காகிதத்தில் (எழுதப்பட்ட) ஒரு வேதத்தையே நாம் உம்மீது இறக்கி வைத்து, அதனை அவர்கள் தங்கள் கைகளால் தொட்டுப் பார்த்திருந்தபோதிலும், "இது பகிரங்கமான சூனியத்தைத் தவிர வேறில்லை" என்றே நிச்சயமாக இந்நிராகரிப்போர் கூறியிருப்பர்.

8. இன்னும், "( இவர் உண்மையான தூதர்தான் என்று சாட்சி கூற ) அவருக்காக ஒரு மலக்கு வானத்திலிருந்து இறக்கப்பட வேண்டாமா?" என்றும் அவர்கள் கூறுகின்றனர்; (அவர்கள் கூறுகின்ற பிரகாரமே) ஒரு மலக்கை நாம் இறக்கி வைத்திருந்தால் (அவர்களின்) காரியம் முடிக்கப் பட்டிருக்கும்; பிறகு அவர்கள் அவகாசம் கொடுக்கப்பட மாட்டார்கள்.

وَلَوْ جَعَلْنٰهُ مَلَكًا لَّجَعَلْنٰهُ رَجُلًا وَّلَلَبَسْنَا عَلَيْهِمْ مَّا
يَلْبِسُوْنَ ﴿٩﴾ وَلَقَدِ اسْتُهْزِئَ بِرُسُلٍ مِّنْ قَبْلِكَ فَحَاقَ
بِالَّذِيْنَ سَخِرُوْا مِنْهُمْ مَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ﴿١٠﴾ قُلْ ع ١
سِيْرُوْا فِي الْاَرْضِ ثُمَّ انْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُكَذِّبِيْنَ ﴿١١﴾
قُلْ لِّمَنْ مَّا فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ قُلْ لِّلّٰهِ ؕ كَتَبَ عَلٰى
نَفْسِهِ الرَّحْمَةَ ؕ لَيَجْمَعَنَّكُمْ اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ لَا رَيْبَ فِيْهِ ؕ اَلَّذِيْنَ
خَسِرُوْٓا اَنْفُسَهُمْ فَهُمْ لَا يُؤْمِنُوْنَ ﴿١٢﴾ وَلَهٗ مَا سَكَنَ فِي الَّيْلِ
وَالنَّهَارِ ؕ وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ﴿١٣﴾ قُلْ اَغَيْرَ اللّٰهِ اَتَّخِذُ وَلِيًّا
فَاطِرِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَهُوَ يُطْعِمُ وَلَا يُطْعَمُ ؕ قُلْ
اِنِّيْٓ اُمِرْتُ اَنْ اَكُوْنَ اَوَّلَ مَنْ اَسْلَمَ وَلَا تَكُوْنَنَّ مِنَ
الْمُشْرِكِيْنَ ﴿١٤﴾ قُلْ اِنِّيْٓ اَخَافُ اِنْ عَصَيْتُ رَبِّيْ عَذَابَ
يَوْمٍ عَظِيْمٍ ﴿١٥﴾ مَنْ يُّصْرَفْ عَنْهُ يَوْمَئِذٍ فَقَدْ رَحِمَهٗ ؕ وَ
ذٰلِكَ الْفَوْزُ الْمُبِيْنُ ﴿١٦﴾ وَاِنْ يَّمْسَسْكَ اللّٰهُ بِضُرٍّ فَلَا كَاشِفَ
لَهٗٓ اِلَّا هُوَ ؕ وَاِنْ يَّمْسَسْكَ بِخَيْرٍ فَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ
قَدِيْرٌ ﴿١٧﴾ وَهُوَ الْقَاهِرُ فَوْقَ عِبَادِهٖ ؕ وَهُوَ الْحَكِيْمُ الْخَبِيْرُ ﴿١٨﴾

9. மேலும்,(நம் தூதரான) அவரை ஒரு மலக்காக நாம் ஆக்கி(அனுப்ப)யிருந்தால் அவரை ஒரு மனிதராகவே நாம் ஆக்கி (அனுப்பி)யிருப்போம். அப்பொழுது அவர்கள் குழம்பிக்கொண்டிருந்த ஒன்றையே அவர்களுக்கு நாம் குழப்பியவர்களாவோம்.

10. (நபியே!) உமக்கு முன்னர் (வந்த மற்ற) தூதர்களும் திட்டமாக பரிகசிக்கப் பட்டனர்; (முடிவில்,) அவர்கள் எ(ந்த வேதனையான)தைப் பரிகசித்துக் கொண்டிருந்தனரோ அது, அவர்களில் பரிகசித்துக் கொண்டிருந்தார்களே அத்தகையோரைச் சூழ்ந்துகொண்டது.

11. "நீங்கள் பூமியில் சுற்றித் திரிந்து,பின்னர் (உங்களைப் போல் அல்லாஹ்வின் வசனங்களைப்) பொய்யாக்கிக் கொண்டிருந்தவர்களின் முடிவு எப்படி இருந்தது என்று நீங்கள் கவனித்துப் பாருங்கள்" என்று (நபியே! நீர் அவர்களிடம்) கூறுவீராக!

12. (அன்றியும்) "வானங்களில், மற்றும் பூமியில் உள்ளவை (யாவும்) யாருக்கு உரியன?" என நீர் (அவர்களைக்) கேட்பீராக! ,("இவை யாவும்) அல்லாஹ்வுக்கே உரியன" என்று கூறுவீராக! அவன் கருணையைத் தன் மீது கடமையாக்கிக் கொண்டிருக்கின்றான்; நிச்சயமாக உங்களை, மறுமை நாளில் அவன் ஒன்று சேர்ப்பான்; அ(ந்நாள் நடந்தேறுவ)தில் சந்தேகமேயில்லை; (நிராகரித்து,) தங்களுக்குத் தாங்களே நஷ்டத்தை உண்டு பண்ணிக் கொண்டார்களே அத்தகையோர்_ அவர்கள் (இதனை) நம்பவே மாட்டார்கள் .

13. இரவில்,மற்றும் பகலில் வாழ்ந்திருப்பவை (அனைத்தும்),அவனுக்கே உரியன! அவனேதான் நன்கு செவியேற்பவன்,(யாவற்றையும்) நன்கறிந்தோன்.

14. "வானங்களை, மற்றும் பூமியைப் படைத்த அல்லாஹ் அல்லாதவனை (வணக்கத்திற்கும், உதவியை நல்குவதற்குமுரிய) பாதுகாவலனாக நான் எடுத்துக் கொள்வேனா? அவன்தான் (நமக்கு) உணவளிக் கின்றான்; (எவராலும்) அவன் உணவளிக்கப்படமாட்டான்" என (நபியே!) நீர் கூறுவீராக! "முற்றிலும் அவனுக்கு கீழ்ப்படிந்தவர்களில் முதன்மையானவனாக நான் இருக்கவேண்டுமென்றும், (அல்லாஹ்வுக்கு) இணைவைத்துக்கொண்டிருப்போரில் (ஒருவராக) நீர் ஆகி விடாதீர் என்றும் நிச்சயமாக நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்" என்று(ம்) நீர் கூறுவீராக!

15. "என்னுடைய இரட்சகனுக்கு நான் மாறு செய்தால், மகத்தான நாளின் வேதனையை நிச்சயமாக நான் பயப்படுகிறேன்" என (நபியே! மேலும்) நீர் கூறுவீராக!

16. "எவர் அந்நாளில்அதனை(அவ்வேதனையை) விட்டுத்திருப்பப்படுகிறாரோ அவருக்கு திட்டமாக (அல்லாஹ்வாகிய)அவன் அருள் புரிந்து விட்டான்; அது தெளிவான வெற்றியுமாகும்"

17. இன்னும் (நபியே!) அல்லாஹ் உமக்கு ஏதாவது (ஒரு) துன்பத்தைக்கொண்டு பீடிப்பானாகில் அதனை நீக்குவோர் அவனையன்றி வேறு ஒருவரும் இல்லை; (அவ்வாறே) அவன் உமக்கு ஒரு நன்மையை ஏற்படுத்தித் தந்தால் (அதைத் தடுத்துவிடுவோர் எவருமில்லை.) அவன், ஒவ்வொருபொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

18. மேலும், அவனே தன் அடியார்களுக்கு மேலிருந்து (அவர்களை) அடக்கி ஆள்பவன்; அன்றியும் அவனே தீர்க்கமான அறிவுடையவன்; (யாவையும்) நன்கு உணர்பவன்.

قُلْ اَیُّ شَیْءٍ اَکْبَرُ شَهَادَةً ؕ قُلِ اللّٰهُ ۙ شَهِیْدٌۢ بَیْنِیْ وَبَیْنَکُمْ ۟
وَاُوْحِیَ اِلَیَّ هٰذَا الْقُرْاٰنُ لِاُنْذِرَکُمْ بِهٖ وَمَنْۢ بَلَغَ ؕ اَئِنَّکُمْ
لَتَشْهَدُوْنَ اَنَّ مَعَ اللّٰهِ اٰلِهَةً اُخْرٰی ؕ قُلْ لَّاۤ اَشْهَدُ ۚ قُلْ اِنَّمَا
هُوَ اِلٰهٌ وَّاحِدٌ وَّاِنَّنِیْ بَرِیْٓءٌ مِّمَّا تُشْرِکُوْنَ ۝۱۹ اَلَّذِیْنَ اٰتَیْنٰهُمُ

٨ ع ٢ وقف لازم وقف لازم

الْکِتٰبَ یَعْرِفُوْنَهٗ کَمَا یَعْرِفُوْنَ اَبْنَآءَهُمْ ۘ اَلَّذِیْنَ خَسِرُوْۤا اَنْفُسَهُمْ
فَهُمْ لَا یُؤْمِنُوْنَ ۝۲۰ وَمَنْ اَظْلَمُ مِمَّنِ افْتَرٰی عَلَی اللّٰهِ کَذِبًا اَوْ
کَذَّبَ بِاٰیٰتِهٖ ؕ اِنَّهٗ لَا یُفْلِحُ الظّٰلِمُوْنَ ۝۲۱ وَیَوْمَ نَحْشُرُهُمْ جَمِیْعًا
ثُمَّ نَقُوْلُ لِلَّذِیْنَ اَشْرَکُوْۤا اَیْنَ شُرَکَآؤُکُمُ الَّذِیْنَ کُنْتُمْ
تَزْعُمُوْنَ ۝۲۲ ثُمَّ لَمْ تَکُنْ فِتْنَتُهُمْ اِلَّاۤ اَنْ قَالُوْا وَاللّٰهِ رَبِّنَا مَا کُنَّا
مُشْرِکِیْنَ ۝۲۳ اُنْظُرْ کَیْفَ کَذَبُوْا عَلٰۤی اَنْفُسِهِمْ وَضَلَّ عَنْهُمْ
مَّا کَانُوْا یَفْتَرُوْنَ ۝۲۴ وَمِنْهُمْ مَّنْ یَّسْتَمِعُ اِلَیْکَ ۚ وَجَعَلْنَا عَلٰی
قُلُوْبِهِمْ اَکِنَّةً اَنْ یَّفْقَهُوْهُ وَفِیْۤ اٰذَانِهِمْ وَقْرًا ؕ وَاِنْ یَّرَوْا کُلَّ
اٰیَةٍ لَّا یُؤْمِنُوْا بِهَا ؕ حَتّٰۤی اِذَا جَآءُوْکَ یُجَادِلُوْنَکَ یَقُوْلُ الَّذِیْنَ
کَفَرُوْۤا اِنْ هٰذَاۤ اِلَّاۤ اَسَاطِیْرُ الْاَوَّلِیْنَ ۝۲۵ وَهُمْ یَنْهَوْنَ عَنْهُ
وَیَنْئَوْنَ عَنْهُ ۚ وَاِنْ یُّهْلِکُوْنَ اِلَّاۤ اَنْفُسَهُمْ وَمَا یَشْعُرُوْنَ ۝۲۶

19.(நபியே!) "சாட்சியால் மிகப் பெரியது எது?" என நீர் (அவர்களைக்) கேட்பீராக; (அவர்களால் என்ன கூற முடியும்? நீரே அவர்களிடம்,) "அல்லாஹ்வே எனக்கும் உங்களுக்குமிடையில் சாட்சியாக(வும்) இருக்கின்றான்; இன்னும், இந்தக் குர்ஆனைக் கொண்டு உங்களுக்கும், (இது) சென்றடைந்தவர்களுக்கும், நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவே இது எனக்கு வஹீ மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது" (என்று கூறி, ) "நிச்சயமாக அல்லாஹ்வுடன் வேறு வணக்கத்திற்குரியவர்கள் இருப்பதாக (மெய்யாகவே) நீங்கள் சாட்சி கூறுவீர்களா?" என்று (ம்அவர்களை) நீர் கேட்பீராக. ("இல்லை" அவ்வாறு) நான் சாட்சி கூறமாட்டேன்!" என்று நீர் கூறுவீராக! "நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) அவன் ஒரே நாயன் தான்; இன்னும், (அவனுக்கு) நீங்கள் இணைவைப்பதிலிருந்தும் நிச்சயமாக நான் நீங்கிக் கொண்டவன்" என்று கூறுவீராக!

20. எவர்களுக்கு நாம் வேதத்தை கொடுத்திருந்தோமோ அத்தகையவர்கள்_ அவர்கள் தங்களுடைய ஆண்மக்களை அறிவதைப்போல, அவரை அறிவார்கள் (எனினும், அவர்களில்) எவர்கள் (இதனை மறைத்து) தமக்குத் தாமே நஷ்டமிழைத்துக் கொண்டனரோ, அவர்கள் தாம் நம்பிக்கைகொள்ளமாட்டார்கள்.

21. மேலும், அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனை செய்தவரைவிட, அல்லது அவனுடைய வசனங்களைப் பொய்யாக்கியவரை விடவோ மிகப்பெரிய அநியாயக்காரர் யார்? நிச்சயமாக அநியாயக்காரர்கள் வெற்றி பெறமாட்டார்கள்.

22. இன்னும் (அந்) நாளில் நாம், அவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டுவோம்; பின்னர் (அவர்களில்) இணைவைத்து வணங்கிக்கொண்டிருந்தோரிடம், ("உங்கள் இணையாளர்கள் என) நீங்கள் எவர்களை(க் கற்பனையாக) எண்ணிக் கொண்டிருந்தீர்களோ, அத்தகைய உங்களுடைய இணையாளர்கள் எங்கே?" என்று நாம் கேட்போம்.

23. பின்னர் அவர்கள் "எங்களுடைய இரட்சகன் அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நாங்கள் இணைவைக்கக்கூடியவர்களாக இருக்கவில்லை!" என்று கூறுவதைத் தவிர அவர்களின் உபாயம் (வேறு) இல்லை.

24. தங்களுக்கெதிராக அவர்கள் எவ்வாறு பொய் கூறுகின்றனர் என்பதை (நபியே!) நீர் கவனிப்பீராக! (அல்லாஹ்வுக்கு இணையானவர்களென்று) அவர்கள் (பொய்யாகக்) கற்பனை செய்து கொண்டிருந்தவைகள் அவர்களைவிட்டும் மறைந்துவிடும்.

25. (நபியே!) மேலும், அவர்களில் சிலர் உம்பால்( உமது உபதேசங்களை) செவியேற்(பவர்கள் போன்று நடிப்)பார்கள். மேலும் அவர்கள் அதனை விளங்கிக் கொள்ளாதிருக்கும்படி, அவர்களுடைய இதயங்களில் திரைகளையும், அவர்களுடைய காதுகளில் (பயனுள்ளதைக் கேட்காத) செவிடையும் நாம் ஏற்படுத்தி விட்டோம். இன்னும் அத்தாட்சிகளை (கண்கூடாக)க் கண்டாலும், அவற்றை அவர்கள் நம்பவே மாட்டார்கள். (நபியே!) முடிவாக அவர்கள் உம்மிடம் வந்தால், உம்முடன் வாதாடுவார்கள்; "இவை முன்னோர்களின் கட்டுக் கதைகளேயன்றி (வேறு) இல்லை" என்றே நிராகரித்துக்கொண்டிருப்போர் கூறுவார்கள்.

26. அன்றியும், அவர்கள் (மற்றவர்களையும்) இ(க்குர்ஆனை கேட்ப)திலிருந்து தடுக்கிறார்கள். தாங்களும் இதைவிட்டு தூரமாகிக்கொள்கிறார்கள்; (இதனால்) அவர்கள் தங்களையே அல்லாது (வேறு எவரையும்) நாசமாக்கிக் கொள்வதில்லை; இன்னும் (இதனை) அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை.

وَلَوْ تَرٰىٓ اِذْ وُقِفُوْا عَلَى النَّارِ فَقَالُوْا يٰلَيْتَنَا نُرَدُّ وَلَا نُكَذِّبَ
بِاٰيٰتِ رَبِّنَا وَنَكُوْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ ﴿۲۷﴾ بَلْ بَدَا لَهُمْ مَّا كَانُوْا
يُخْفُوْنَ مِنْ قَبْلُ ؕ وَلَوْ رُدُّوْا لَعَادُوْا لِمَا نُهُوْا عَنْهُ وَاِنَّهُمْ
لَكٰذِبُوْنَ ﴿۲۸﴾ وَقَالُوْٓا اِنْ هِىَ اِلَّا حَيَاتُنَا الدُّنْيَا وَمَا نَحْنُ
بِمَبْعُوْثِيْنَ ﴿۲۹﴾ وَلَوْ تَرٰىٓ اِذْ وُقِفُوْا عَلٰى رَبِّهِمْ ؕ قَالَ اَلَيْسَ
هٰذَا بِالْحَقِّ ؕ قَالُوْا بَلٰى وَرَبِّنَا ؕ قَالَ فَذُوْقُوا الْعَذَابَ بِمَا
كُنْتُمْ تَكْفُرُوْنَ ﴿۳۰﴾ ع قَدْ خَسِرَ الَّذِيْنَ كَذَّبُوْا بِلِقَآءِ اللّٰهِ ؕ حَتّٰىٓ ۳ ع ۹
اِذَا جَآءَتْهُمُ السَّاعَةُ بَغْتَةً قَالُوْا يٰحَسْرَتَنَا عَلٰى مَا فَرَّطْنَا فِيْهَا ۙ
وَهُمْ يَحْمِلُوْنَ اَوْزَارَهُمْ عَلٰى ظُهُوْرِهِمْ ؕ اَلَا سَآءَ مَا يَزِرُوْنَ ﴿۳۱﴾ وَ
مَا الْحَيٰوةُ الدُّنْيَآ اِلَّا لَعِبٌ وَّلَهْوٌ ؕ وَلَلدَّارُ الْاٰخِرَةُ خَيْرٌ لِّلَّذِيْنَ
يَتَّقُوْنَ ؕ اَفَلَا تَعْقِلُوْنَ ﴿۳۲﴾ قَدْ نَعْلَمُ اِنَّهٗ لَيَحْزُنُكَ الَّذِىْ
يَقُوْلُوْنَ فَاِنَّهُمْ لَا يُكَذِّبُوْنَكَ وَلٰكِنَّ الظّٰلِمِيْنَ بِاٰيٰتِ اللّٰهِ
يَجْحَدُوْنَ ﴿۳۳﴾ وَلَقَدْ كُذِّبَتْ رُسُلٌ مِّنْ قَبْلِكَ فَصَبَرُوْا عَلٰى
مَا كُذِّبُوْا وَاُوْذُوْا حَتّٰىٓ اَتٰهُمْ نَصْرُنَا ۚ وَلَا مُبَدِّلَ
لِكَلِمٰتِ اللّٰهِ ۚ وَلَقَدْ جَآءَكَ مِنْ نَّبَاِى الْمُرْسَلِيْنَ ﴿۳۴﴾

27. (நரக) நெருப்பின் மீது அவர்கள் நிறுத்தப்படும் பொழுது, (நபியே!) நீர் (அவர்களைப்) பார்ப்பீராயின்," நாங்கள் (உலகத்திற்குத்) திரும்ப அனுப்பப்படவேண்டுமே! (அவ்வாறாயின்) எங்கள் இரட்சகனின் வசனங்களை நாங்கள் பொய்யாக்கவும் மாட்டோமே; இன்னும், விசுவாசிகளில் நாங்கள் ஆகிவிடுவோமே" என்று அவர்கள் கூறுவார்கள்.

28. அவ்வாறல்ல! இதற்கு முன்னர் அவர்கள் (தங்களுக்குள்) மறைத்து வைத்துக்கொண்டிருந்ததே அவர்களுக்கு வெளிப்பட்டு விட்டது. (ஏனென்றால்) அவர்கள் (இவ்வுலகத்திற்குத்) திரும்ப அனுப்பப்பட்ட போதிலும், எதைவிட்டுத்தடுக்கப்பட்டார்களோ அதன்பக்கமே திரும்புவார்கள்; இன்னும், நிச்சயமாக அவர்கள், பொய்யர்களாவர்.

29. அன்றியும், " இது, நம்முடைய இவ்வுலக வாழ்வைத் தவிர (இறந்தபின் வேறு வாழ்க்கை) இல்லை; (இறந்த பின்) நாம் (உயிர்ப்பிக்கப்பட்டு) எழுப்பப்படுகிறவர்களுமல்லர்" என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

30. மேலும், அவர்கள் (உயிர்ப்பிக்கப்பட்டுத்) தங்கள் இரட்சகன்முன் நிறுத்தப்படும் பொழுது, (நபியே! அவர்களை) நீர் காண்பீராயின், (அது சமயம் அவர்களிடம் ,"விசாரணை நாளாகிய) இது உண்மையல்லவா?" என்று அவன் கேட்பான். அ(தற்க)வர்கள் ," ஆம்! எங்கள் இரட்சகன் மீது ஆணையாக (உண்மை தான்)" எனக் கூறுவார்கள். அ(தற்க)வன், ("இதனை) நீங்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததன் காரணமாக (நரகத்தின்) வேதனையை நீங்கள் சுவைத்துப் பாருங்கள்" என்று கூறுவான்.

31. (ஆகவே மறுமையில்) அல்லாஹ்வைச் சந்திப்பதைப் பொய்யாக்கினார்களே அத்தகையோர் நிச்சயமாக நஷ்டமடைந்தவர்களாகி விட்டனர்; முடிவாக, அவர்களுக்கு மறுமை நாள் திடீரென வந்துவிட்டால், அவர்களோ தங்கள் பாவச்சுமைகளைத் தங்கள் முதுகுகளின்மீது சுமந்தவர்களாக, "அ(வ்வுலகத்)தில் நாங்கள் செய்யத்தவறவிட்டவைகளின்மீது எங்களுக்கு எற்பட்ட கைசேதமே!" என்று கூறுவார்கள்; தெரிந்து கொள்ளுங்கள்; அவர்கள் சுமந்து கொண்டிருப்பது மிகக் கெட்டதாகிவிட்டது.

32. மேலும் இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வீணுமேயன்றி (வேறு) இல்லை. இன்னும், பயபக்தியுடையோருக்கு நிச்சயமாக மறுமையின் வீடாகிறது மேலானதாகும்; நீங்கள் (இதனை) அறிந்து கொள்ளமாட்டீர்களா?

33. (நபியே! உம்மைப் பொய்யரென) நிச்சயமாக அவர்கள் கூறிக்கொண்டிருப்பது, உமக்குக் கவலையைத் தருகின்றது என்பதைத் திட்டமாக நாம் அறிவோம்; ஆகவே நிச்சயமாக அவர்கள் உம்மைப் பொய்யாக்கவில்லை; எனினும், அந்த அநியாயக்காரர்கள் அல்லாஹ்வின் வசனங்களை(யே பொய்யாக்கி) மறுக்கின்றனர்.

34. (நபியே!) திட்டமாக உமக்கு முன் (நம்முடைய) தூதர்களும் (இவ்வாறே) பொய்யாக்கப்பட்டனர்; தாம் பொய்யாக்கப்பட்டதன் மீதும், துன்புறுத்தப் பட்டதன் மீதும், அவர்களுக்கு நம்முடைய உதவி வரும் வரையில் அவர்கள் (உறுதியோடு) பொறுத்துக் கொண்டிருந்தனர்; அல்லாஹ்வுடைய வார்த்தை (பேச்சுக்)களை மாற்றுகிறவர் எவரும் இல்லை; ( நம்) தூதர்களின் (இத்தகைய) செய்தி திட்டமாக உம்மிடம் வந்துமிருக்கிறது.

وَاِنْ كَانَ كَبُرَ عَلَيْكَ اِعْرَاضُهُمْ فَاِنِ اسْتَطَعْتَ اَنْ تَبْتَغِيَ
نَفَقًا فِي الْاَرْضِ اَوْ سُلَّمًا فِي السَّمَآءِ فَتَاْتِيَهُمْ بِاٰيَةٍ ؕ وَلَوْ شَآءَ اللّٰهُ
لَجَمَعَهُمْ عَلَى الْهُدٰى فَلَا تَكُوْنَنَّ مِنَ الْجٰهِلِيْنَ ﴿۳۵﴾ اِنَّمَا يَسْتَجِيْبُ وقف منزل
الَّذِيْنَ يَسْمَعُوْنَ ؕ وَالْمَوْتٰى يَبْعَثُهُمُ اللّٰهُ ثُمَّ اِلَيْهِ يُرْجَعُوْنَ ﴿۳۶﴾ وَ وقف غفران
قَالُوْا لَوْلَا نُزِّلَ عَلَيْهِ اٰيَةٌ مِّنْ رَّبِّهٖ ؕ قُلْ اِنَّ اللّٰهَ قَادِرٌ عَلٰٓى اَنْ
يُّنَزِّلَ اٰيَةً وَّلٰكِنَّ اَكْثَرَهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿۳۷﴾ وَمَا مِنْ دَآبَّةٍ فِي
الْاَرْضِ وَلَا طٰٓئِرٍ يَّطِيْرُ بِجَنَاحَيْهِ اِلَّآ اُمَمٌ اَمْثَالُكُمْ ؕ مَا فَرَّطْنَا
فِي الْكِتٰبِ مِنْ شَيْءٍ ثُمَّ اِلٰى رَبِّهِمْ يُحْشَرُوْنَ ﴿۳۸﴾ وَالَّذِيْنَ كَذَّبُوْا
بِاٰيٰتِنَا صُمٌّ وَّبُكْمٌ فِي الظُّلُمٰتِ ؕ مَنْ يَّشَاِ اللّٰهُ يُضْلِلْهُ ؕ وَمَنْ يَّشَاْ
يَجْعَلْهُ عَلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿۳۹﴾ قُلْ اَرَءَيْتَكُمْ اِنْ اَتٰىكُمْ عَذَابُ
اللّٰهِ اَوْ اَتَتْكُمُ السَّاعَةُ اَغَيْرَ اللّٰهِ تَدْعُوْنَ ۚ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۴۰﴾
بَلْ اِيَّاهُ تَدْعُوْنَ فَيَكْشِفُ مَا تَدْعُوْنَ اِلَيْهِ اِنْ شَآءَ وَتَنْسَوْنَ
مَا تُشْرِكُوْنَ ﴿۴۱﴾ وَلَقَدْ اَرْسَلْنَآ اِلٰٓى اُمَمٍ مِّنْ قَبْلِكَ فَاَخَذْنٰهُمْ بِالْبَاْسَآءِ ع ۴ ۱۱
وَالضَّرَّآءِ لَعَلَّهُمْ يَتَضَرَّعُوْنَ ﴿۴۲﴾ فَلَوْلَآ اِذْ جَآءَهُمْ بَاْسُنَا تَضَرَّعُوْا
وَلٰكِنْ قَسَتْ قُلُوْبُهُمْ وَزَيَّنَ لَهُمُ الشَّيْطٰنُ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۴۳﴾

35. இன்னும் (நபியே!) அவர்களுடைய புறக்கணிப்பு உமக்குப் பெரிதாகத் தோன்றினால், பூமியில்(அதன் ஆழத்தில் செல்ல) ஒருசுரங்கத்தையோ அல்லது வானத்தில்(ஏறிச்செல்ல) ஒரு ஏணியையோ தேடிக்கொள்வதற்கும், பின்னர் (அவர்கள் விருப்பப்படி) ஓர் அத்தாட்சியை நீர் அவர்களுக்குக்கொண்டு வருவதற்கும் நீர் சக்திபெற்றால்_(அவ்வாறு செய்வீராக!அப்போதும் அவர்கள் உம்மை நிராகரித்துக்கொண்டுதானிருப்பார்கள்) இன்னும், அல்லாஹ் நாடினால் அவர்களை நேர் வழியின்மீது ஒன்று சேர்த்து விடுவான்; ஆகவே, நிச்சயமாக அறிவில்லாதவர்களில் (ஒருவராக) நீர் ஆகிவிடவேண்டாம்.

36. (உமதழைப்பிற்கு) பதில் கூறுபவரெல்லாம் (உமக்குச்) செவியேற்கிறார்களே அவர்கள் தாம். (இவர்களோ செவியேற்க முடியாத இறந்தவர்களைப் போலவே யிருக்கின்றனர்). இன்னும் இறந்தவர்கள்_அவர்களை (மறுமையில்தான்) அல்லாஹ் (உயிர் கொடுத்து) எழுப்புவான். பின்னர் அவனிடமே அவர்கள் மீட்டப்படுவார்கள்.

37. "(நம் விருப்பப் பிரகாரம்) அவருடைய இரட்சகனிடமிருந்து அவர்மீது ஓர் அத்தாட்சி இறக்கப்பட்டிருக்கக்கூடாதா?" என்றும் அவர்கள் கேட்கின்றனர்; (அதற்கு நபியே!) நீர் கூறுவீராக!" (அத்தகைய) ஓர் அத்தாட்சியை இறக்கிவைக்க நிச்சயமாக அல்லாஹ் சக்தியுடையவன். (அவ்வாறு இறக்கியும் வைத்துள்ளான்.) எனினும், அவர்களில் பெரும்பாலோர் (அதனை) அறியமாட்டார்கள்.

38. மேலும், பூமியில் ஊர்ந்து திரிகிறதும், தம்முடைய இரு இறக்கைகளால் (ஆகாயத்தில்) பறக்கக் கூடிய பறவையும், உங்களைப்போன்ற (ஜீவனுள்ள) இனங்களேயன்றி வேறில்லை; (இவைகளில்) எதையும் (நம்முடைய பதிவுப்)புத்தகத்தில் (_லவ்ஹுல் மஹ்ஃபூலில்) குறிப்பிடாது நாம் விட்டுவிடவில்லை; பின்னர், (ஒரு நாளில் யாவரும்) தம் இரட்சகனின்பக்கம் ஒன்று திரட்டப்படுவர்.

39. இன்னும் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குகின்றனரே அவர்கள், இருள்களில் (தட்டழியும்) செவிடர்களாகவும், ஊமையர்களாகவும் இருக்கின்றனர். அல்லாஹ் எவரை நாடுகிறானோ அவரைத் தவறான வழியிற் செல்ல விட்டு விடுகின்றான்: இன்னும், எவரை அவன் நாடுகிறானோ அவரை நேரான வழியில் ஆக்குகின்றான்.

40. (நபியே! அவர்களிடம்) நீர் கூறுவீராக!" உங்களுக்கு அல்லாஹ்வுடைய வேதனை வந்து விட்டால், அல்லது உங்களுக்கு மறுமைநாள் வந்து விட்டால், அதிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அல்லாஹ் அல்லாத(இ)வைகளையா நீங்கள் (உங்கள் உதவிக்கு) அழைப்பீர்கள்?" என்பதை நீங்கள் எனக்குத் தெரிவியுங்கள்.

41. அவ்வாறன்று!(அந்நேரத்தில்) அவனையே நீங்கள் அழைப்பீர்கள்; அதுசமயம் எதற்காக நீங்கள் அழைத்தீர்களோ அதை அவன் நாடினால் நீக்கிவிடுவான். நீங்கள் (அந்த அல்லாஹ்வுக்கு) இணை வைத்திருந்தவற்றை மறந்தும்விடுவீர்கள்.

42. இன்னும் (நபியே!) உமக்கு முன்னர் பல சமூகத்தார்க்கும் நாம் (நம்முடைய) தூதர்களை நிச்சயமாக அனுப்பிவைத்தோம். (எனினும், அத்தூதர்களை அவர்கள் நிராகரித்துவிட்டனர். ஆகவே,) அவர்கள் பணிந்து வருவதற்காக வறுமையைக் கொண்டும், நோயைக் கொண்டும் நாம் அவர்களைப் பிடித்தோம்.

43. நம் வேதனை அவர்களுக்கு வந்தபோது அவர்கள் (அதிலிருந்து காத்துக் கொள்ள பிரார்த்தனைகள் செய்து) பணிந்திருக்க வேண்டாமா? ஆனால், அவர்களுடைய இதயங்கள் கல்நெஞ்சாகிவிட்டன. இன்னும், அவர்கள் செய்து கொண்டிருந்தவைகளை, ஷைத்தான் அவர்களுக்கு அலங்காரமாகக் காண்பித்துவிட்டான்.

فَلَمَّا نَسُوْا مَا ذُكِّرُوْا بِهٖ فَتَحْنَا عَلَیْهِمْ اَبْوَابَ كُلِّ شَیْءٍ ؕ
حَتّٰۤی اِذَا فَرِحُوْا بِمَاۤ اُوْتُوْۤا اَخَذْنٰهُمْ بَغْتَةً فَاِذَا هُمْ
مُّبْلِسُوْنَ ﴿٤٤﴾ فَقُطِعَ دَابِرُ الْقَوْمِ الَّذِیْنَ ظَلَمُوْا ؕ وَالْحَمْدُ لِلّٰهِ
رَبِّ الْعٰلَمِیْنَ ﴿٤٥﴾ قُلْ اَرَءَیْتُمْ اِنْ اَخَذَ اللّٰهُ سَمْعَكُمْ وَ
اَبْصَارَكُمْ وَخَتَمَ عَلٰی قُلُوْبِكُمْ مَّنْ اِلٰهٌ غَیْرُ اللّٰهِ یَاْتِیْكُمْ بِهٖ ؕ اُنْظُرْ
كَیْفَ نُصَرِّفُ الْاٰیٰتِ ثُمَّ هُمْ یَصْدِفُوْنَ ﴿٤٦﴾ قُلْ اَرَءَیْتَكُمْ اِنْ
اَتٰىكُمْ عَذَابُ اللّٰهِ بَغْتَةً اَوْ جَهْرَةً هَلْ یُهْلَكُ اِلَّا الْقَوْمُ
الظّٰلِمُوْنَ ﴿٤٧﴾ وَمَا نُرْسِلُ الْمُرْسَلِیْنَ اِلَّا مُبَشِّرِیْنَ وَمُنْذِرِیْنَ ۚ
فَمَنْ اٰمَنَ وَاَصْلَحَ فَلَا خَوْفٌ عَلَیْهِمْ وَلَا هُمْ یَحْزَنُوْنَ ﴿٤٨﴾
وَالَّذِیْنَ كَذَّبُوْا بِاٰیٰتِنَا یَمَسُّهُمُ الْعَذَابُ بِمَا كَانُوْا
یَفْسُقُوْنَ ﴿٤٩﴾ قُلْ لَّاۤ اَقُوْلُ لَكُمْ عِنْدِیْ خَزَآىِٕنُ اللّٰهِ وَلَاۤ اَعْلَمُ
الْغَیْبَ وَلَاۤ اَقُوْلُ لَكُمْ اِنِّیْ مَلَكٌ ۚ اِنْ اَتَّبِعُ اِلَّا مَا یُوْحٰۤی اِلَیَّ ؕ
ع ٥ ٩ ١١ قُلْ هَلْ یَسْتَوِی الْاَعْمٰی وَالْبَصِیْرُ ؕ اَفَلَا تَتَفَكَّرُوْنَ ﴿٥٠﴾ ع
وَاَنْذِرْ بِهِ الَّذِیْنَ یَخَافُوْنَ اَنْ یُّحْشَرُوْۤا اِلٰی رَبِّهِمْ لَیْسَ
لَهُمْ مِّنْ دُوْنِهٖ وَلِیٌّ وَّلَا شَفِیْعٌ لَّعَلَّهُمْ یَتَّقُوْنَ ﴿٥١﴾

44. அவர்களுக்கு நினைவூட்டப் பட்ட (நல்லுபதேசத்)தை அவர்கள் மறந்துவிடவே, (அவர்களைச் சோதிக்கும் பொருட்டு) ஒவ்வொரு பொருளின் வாயில்களையும் நாம் அவர்களுக்குத் திறந்துவிட்டோம்;(அவர்களுக்கு தேவையானவை அனைத்தும் தாராளமாகக் கிடைத்துக் கொண்டிருந்தன.) முடிவாக அவர்களுக்குக் கொடுக்கப் பட்டவைகளைக் கொண்டு அவர்கள் ஆனந்தமடைந்துக் கொண்டிருந்த சமயத்தில் (நம் வேதனையைக் கொண்டு) நாம் அவர்களைத் திடீரெனப் பிடித்துவிட்டோம்; அந்நேரத்தில் அவர்கள் நம்பிக்கை இழந்தவர்களாகி விட்டனர்.

45. ஆகவே, அநியாயம் செய்துகொண்டிருந்த அச்சமூகத்தாரின் வேர் துண்டிக்கப் பட்டுவிட்டது (அவர்கள் அடியோடு அழிக்கப் பட்டனர்). இன்னும், எல்லாப் புகழும் அகிலத்தாரின் இரட்சகன் அல்லாஹ்வுக்கே உரியதாகும்.

46. "அல்லாஹ் உங்களுடைய செவிப் புலனையும், பார்வைகளையும் பறித்துவிட்டு, உங்கள் இதயங்களின்மீது முத்திரை வைத்துவிட்டால், அல்லாஹ்வையன்றி எந்த நாயன் அவைகளை உங்களுக்குத் திருப்பிக் கொடுப்பான், என்பதை நீங்கள் (எனக்குத்) தெரிவியுங்கள்" என்று (நபியே!) நீர் (அவர்களைக்) கேட்பீராக! (நம்முடைய ஆற்றலுக்குரிய) அத்தாட்சிகளை எவ்வாறு (வித விதமாக) நாம் விவரிக்கின்றோம் என்பதையும் நீர் கவனிப்பீராக! (இவ்வாறிருந்தும்) பின்னும் அவர்கள் புறக்கணித்தே வருகின்றனர்.

47. (நபியே! அவர்களை ) நீர் கேட்பீராக! "திடீரெனவோ, அல்லது வெளிப்படையாக கண்ணுக்கெதிரிலோ அல்லாஹ்வுடைய வேதனை உங்களிடம் வந்துவிட்டால், (என்னவாகும் என்பதை) நீங்கள் எனக்குக் கூறுங்கள். (அந்நேரத்தில் இந்த) அநியாயக்கார சமூகத்தாரைத் தவிர (மற்றெவரும்) அழிக்கப் படுவார்களா?" (இல்லை இவர்கள்தான் அழிக்கப் படுவார்கள்).

48. இன்னும், நன்மாராயம் கூறுகிறவர்களாகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவர்களாகவுமே தவிர தூதர்களை நாம் அனுப்பவில்லை. ஆகவே, எவர்கள் (இந்நபியை ) விசுவாசித்து, (தங்களைச்) சீர்திருத்திக் கொண்டார்களோ அவர்களுக்கு எத்தகைய பயமுமில்லை; அவர்கள் (அதுபற்றி) கவலையும் அடைய மாட்டார்கள்.

49. இன்னும், (உங்களில்) நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கினார்களே அத்தகையோர்_ அவர்கள் (அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்காது) பாவம் செய்து கொண்டிருந்ததன் காரணமாக அவர்களை வேதனை பிடித்துக் கொள்ளும்.

50. (நபியே! அவர்களுக்கு) நீர் கூறுவீராக! "அல்லாஹ்வுடைய பொக்கிஷங்கள் என்னிடம் இருக்கின்றன என்று நான் உங்களுக்குக் கூறவில்லை. மறைவானவற்றை நான் அறியவுமாட்டேன்; நிச்சயமாக நான் ஒரு மலக்கு என்று நான் உங்களிடம் கூறவுமில்லை; எனக்கு வஹீயின் மூலம் அறிவிக்கப் பட்டவைகளையன்றி (வேறெதையும்) நான் பின்பற்றுவதில்லை." "குருடனும், பார்வையுடையவனும் சமமாவார்களா?" என (நபியே!) நீர் கேட்பீராக! ஆகவே நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா?

51. இன்னும், (நபியே! மறுமையில்) தங்கள் இரட்சகனிடம் ஒன்று திரட்டப் படுவதை பயப்படுகின்றார்களே அத்தகையோரை, (குர்ஆனாகிய) அதனைக் கொண்டு அவர்கள் பயபக்தியுடையோராவதற்காக நீர் எச்சரிக்கை செய்வீராக! அவர்களுக்கு (அந்நாளில்) பாதுகாப்பளிப்பவரோ பரிந்து பேசுபவரோ அவனையன்றி (வேறெவரும்) இல்லை.

وَلَا تَطْرُدِ الَّذِيْنَ يَدْعُوْنَ رَبَّهُمْ بِالْغَدٰوةِ وَالْعَشِيِّ
يُرِيْدُوْنَ وَجْهَهٗ ؕ مَا عَلَيْكَ مِنْ حِسَابِهِمْ مِّنْ شَيْءٍ وَّ
مَا مِنْ حِسَابِكَ عَلَيْهِمْ مِّنْ شَيْءٍ فَتَطْرُدَهُمْ فَتَكُوْنَ مِنَ
الظّٰلِمِيْنَ ﴿۵۲﴾ وَكَذٰلِكَ فَتَنَّا بَعْضَهُمْ بِبَعْضٍ لِّيَقُوْلُوْا اَهٰؤُلَآءِ
مَنَّ اللّٰهُ عَلَيْهِمْ مِّنْ بَيْنِنَا ؕ اَلَيْسَ اللّٰهُ بِاَعْلَمَ بِالشّٰكِرِيْنَ ﴿۵۳﴾
وَاِذَا جَآءَكَ الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِاٰيٰتِنَا فَقُلْ سَلٰمٌ عَلَيْكُمْ كَتَبَ
رَبُّكُمْ عَلٰى نَفْسِهِ الرَّحْمَةَ ۙ اَنَّهٗ مَنْ عَمِلَ مِنْكُمْ سُوْٓءًۢا بِجَهَالَةٍ
ثُمَّ تَابَ مِنْۢ بَعْدِهٖ وَاَصْلَحَ ۙ فَاَنَّهٗ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۵۴﴾ وَكَذٰلِكَ
نُفَصِّلُ الْاٰيٰتِ وَلِتَسْتَبِيْنَ سَبِيْلُ الْمُجْرِمِيْنَ ﴿۵۵﴾ ع قُلْ اِنِّيْ ع ۶ ۱۲
نُهِيْتُ اَنْ اَعْبُدَ الَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ ؕ قُلْ لَّآ
اَتَّبِعُ اَهْوَآءَكُمْ ۙ قَدْ ضَلَلْتُ اِذًا وَّمَآ اَنَا مِنَ الْمُهْتَدِيْنَ ﴿۵۶﴾
قُلْ اِنِّيْ عَلٰى بَيِّنَةٍ مِّنْ رَّبِّيْ وَكَذَّبْتُمْ بِهٖ ؕ مَا عِنْدِيْ مَا
تَسْتَعْجِلُوْنَ بِهٖ ؕ اِنِ الْحُكْمُ اِلَّا لِلّٰهِ ؕ يَقُصُّ الْحَقَّ وَهُوَ
خَيْرُ الْفٰصِلِيْنَ ﴿۵۷﴾ قُلْ لَّوْ اَنَّ عِنْدِيْ مَا تَسْتَعْجِلُوْنَ بِهٖ
لَقُضِيَ الْاَمْرُ بَيْنِيْ وَبَيْنَكُمْ ؕ وَاللّٰهُ اَعْلَمُ بِالظّٰلِمِيْنَ ﴿۵۸﴾

52. மேலும், (நபியே!) காலையிலும் , மாலையிலும் தங்களுடைய இரட்சகனை, அவன் திருமுகத்தை நாடிக்கொண்டு அழைத்து(ப் பிரார்த்தித்து)க் கொண்டிருப்போரை நீர் விரட்டிவிட வேண்டாம் ; அவர்களுடைய கணக்கிலிருந்து யாதொன்றும் உம்மீது (பொறுப்பாக) இல்லை. உம்முடைய கணக்கிலிருந்து யாதொன்றும் அவர்கள் மீது (பொறுப்பாக) இல்லை ; ஆகவே, நீர் அவர்களை விரட்டினால், அநியாயக்காரர்களில் (ஒருவராக) நீர் ஆகிவிடுவீர்.

53. "நமக்கிடையில் (ஏழைகளாகிய) இவர்கள்மீதா அல்லாஹ் பேரருள்புரிந்து விட்டான்?" என்று(பணக்காரர்கள்)கூறுவதற்காக இவ்வாறே அவர்களில் சிலரை, சிலரைக் கொண்டு நாம் சோதித்தோம்; நன்றி செலுத்துவோரை அல்லாஹ் மிக்க அறிந்தவனில்லையா?

54. மேலும், நம்முடைய வசனங்களை விசுவாசிப்போர் (நபியே!) உம்மிடம் வந்தால், (நீர் அவர்களுக்கு, "ஸலாமுன் அலைக்கும்) _ உங்கள் மீது சாந்தி உண்டாவதாக!" உங்களுடைய இரட்சகன் (உங்களுக்கு) அருள் புரிவதைத் தன்மீது கடமையாக்கிக் கொண்டான்; நிச்சயமாக உங்களில் எவரேனும் அறியாமையின் காரணமாக (யாதொரு) தீமையைச் செய்து விட்டு, பிறகு அதன் பின்னர் அதற்காகப் பச்சாதாபப் பட்டு (அதிலிருந்து விலகி) சீர்திருத்திக் கொண்டாரோ (அவருடைய குற்றங்களை அல்லாஹ் மன்னித்துவிடுவான்; ஏனென்றால்,)" நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன், மிகக்கிருபையுடையவன்" என்று நீர் கூறுவீராக!

55. அன்றியும் வசனங்களை இவ்வாறே நாம் விவரிக்கின்றோம்; குற்றவாளிகளின் வழி (இன்னதெனச் சந்தேகமறத்) தெளிவாகி விடுவதற்காகவும் (இவ்வாறு விவரிக்கின்றோம்,)

56. (அவர்களிடம்) "அல்லாஹ்வையன்றி நீங்கள் (வணங்கி)அழைக்கின்றீர்களே அவர்களை நான் வணங்குவதை விட்டும் நிச்சயமாக நான் தடுக்கப் பட்டுள்ளேன்" என்று (நபியே! நீர் ) கூறுவீராக! "உங்களுடைய மன இச்சைகளை நான் பின்பற்ற மாட்டேன்; அப்போது திட்டமாக நானும் வழிதவறி விடுவேன்; நான் நேரான வழியை அடைந்தவர்களிலும் இருக்கமாட்டேன்" என்று(ம்) கூறும்.

57. "நிச்சயமாக நான், என் இரட்சகனின் தெளிவான அத்தாட்சியின் மீதே இருக்கின்றேன் ; அதனையும் நீங்கள் பொய்யாக்கினீர்கள் ; எதற்கு நீங்கள் அவசரப்படுகின்றீர்களோ அ(வ்வேதனையானது) என்னிடம் இல்லை ; அதிகாரம்யாவும் அல்லாஹ்வுக்கேயன்றி (வேறு எவருக்கும்) இல்லை ; அவன் உண்மையை விவரிக்கின்றான். இன்னும் , தீர்ப்பளிப்போரில் அவன் மிக்க மேலானவன் " என்று (நபியே!) நீர் கூறுவீராக!

58. "எ(வ்வேதனையான)தை நீங்கள் அவசரப் படுகிறீர்களோ அது நிச்சயமாக என்னிடம் இருந்திருந்தால், உங்களுக்கும், எனக்குமிடையிலுள்ள விவகாரம் (இதுவரையில்) தீர்க்கப்பட்டிருக்கும். மேலும், அல்லாஹ், அநியாயக்காரர்களை மிக்க அறிந்தவன்" என்றுகூறுவீராக!

وَعِنْدَهٗ مَفَاتِحُ الْغَيْبِ لَا يَعْلَمُهَآ اِلَّا هُوَ ؕ وَيَعْلَمُ مَا فِي الْبَرِّ وَالْبَحْرِ ؕ وَمَا
تَسْقُطُ مِنْ وَّرَقَةٍ اِلَّا يَعْلَمُهَا وَلَا حَبَّةٍ فِيْ ظُلُمٰتِ الْاَرْضِ وَلَا رَطْبٍ
وَّلَا يَابِسٍ اِلَّا فِيْ كِتٰبٍ مُّبِيْنٍ ﴿۵۹﴾ وَهُوَ الَّذِيْ يَتَوَفّٰىكُمْ بِالَّيْلِ وَ
يَعْلَمُ مَا جَرَحْتُمْ بِالنَّهَارِ ثُمَّ يَبْعَثُكُمْ فِيْهِ لِيُقْضٰٓى اَجَلٌ مُّسَمًّى ۚ
ثُمَّ اِلَيْهِ مَرْجِعُكُمْ ثُمَّ يُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۶۰﴾ ع وَهُوَ الْقَاهِرُ ع ۵ ۱۳
فَوْقَ عِبَادِهٖ وَيُرْسِلُ عَلَيْكُمْ حَفَظَةً ؕ حَتّٰٓى اِذَا جَآءَ اَحَدَكُمُ
الْمَوْتُ تَوَفَّتْهُ رُسُلُنَا وَهُمْ لَا يُفَرِّطُوْنَ ﴿۶۱﴾ ثُمَّ رُدُّوْٓا اِلَى اللّٰهِ
مَوْلٰىهُمُ الْحَقِّ ؕ اَلَا لَهُ الْحُكْمُ ۟ وَهُوَ اَسْرَعُ الْحٰسِبِيْنَ ﴿۶۲﴾ قُلْ مَنْ
يُّنَجِّيْكُمْ مِّنْ ظُلُمٰتِ الْبَرِّ وَالْبَحْرِ تَدْعُوْنَهٗ تَضَرُّعًا وَّخُفْيَةً ۚ لَئِنْ
اَنْجٰىنَا مِنْ هٰذِهٖ لَنَكُوْنَنَّ مِنَ الشّٰكِرِيْنَ ﴿۶۳﴾ قُلِ اللّٰهُ يُنَجِّيْكُمْ
مِّنْهَا وَمِنْ كُلِّ كَرْبٍ ثُمَّ اَنْتُمْ تُشْرِكُوْنَ ﴿۶۴﴾ قُلْ هُوَ الْقَادِرُ عَلٰٓى
اَنْ يَّبْعَثَ عَلَيْكُمْ عَذَابًا مِّنْ فَوْقِكُمْ اَوْ مِنْ تَحْتِ اَرْجُلِكُمْ اَوْ
يَلْبِسَكُمْ شِيَعًا وَّيُذِيْقَ بَعْضَكُمْ بَاْسَ بَعْضٍ ؕ اُنْظُرْ كَيْفَ نُصَرِّفُ
الْاٰيٰتِ لَعَلَّهُمْ يَفْقَهُوْنَ ﴿۶۵﴾ وَكَذَّبَ بِهٖ قَوْمُكَ وَهُوَ الْحَقُّ ؕ قُلْ
لَّسْتُ عَلَيْكُمْ بِوَكِيْلٍ ﴿۶۶﴾ لِكُلِّ نَبَاٍ مُّسْتَقَرٌّ ۡ وَّسَوْفَ تَعْلَمُوْنَ ﴿۶۷﴾

59. இன்னும், அவனிடமே மறைவானவற்றின் சாவிகள் இருக்கின்றன; அவற்(றிலுள் ளவற்)றை அவனையன்றி வேறெவரும் அறியார்; மேலும், கரையிலும், கடலிலும் உள்ளவைகளையும் அவன் நன்கறிவான்; அவன் அறியாமல் யாதோர் இலையும் உதிர்வதில்லை; பூமியின் (ஆழத்தில்) அடர்ந்த இருள்களில் (புதைந்து) கிடக்கும் வித்தும், பசுமையானதும், உலர்ந்ததும் (அவனுடைய) தெளிவான (பதிவுப்) புத்தகத்தில் இல்லாமலில்லை.

60. அன்றியும், அவன் எத்தகையவனென்றால், (மனிதர்களே!) இரவில் (நீங்கள் நித்திரை செய்யும்பொழுது) அவன்தான், உங்க(ளின் உயிர்க)ளை கைப்பற்றிக் கொள்கிறான்; மேலும், நீங்கள் பகலில் சம்பாதிக்கின்றவற்றையும் அவன் அறிகின்றான்; பின்னர் (உங்களுக்குக்) குறிப்பிட்டப்பட்ட தவணை பூர்த்திசெய்யப்படுவதற்காக அ(ப்பகலான)தில் அவன் (உணர்ச்சியை உண்டுபண்ணி) உங்களை எழுப்புகிறான்; பின்னர், உங்களுடைய (இறுதி) மீட்சி அவனின்பக்கமே இருக்கிறது; பின்னர், நீங்கள் (இங்கு) செய்து கொண்டிருந்தவைகளை (அங்கு) உங்களுக்கு அவன் அறிவிப்பான்.

61. மேலும், அவனே தன் அடியார்களுக்கு மேலிருந்து அடக்கி ஆளுகின்றவன்; இன்னும் உங்களுக்குப் பாதுகாப்பாளர்க(ளான மலக்குக)ளையும் அவன் அனுப்புகிறான்; முடிவாக உங்களில் ஒருவருக்கு மரணம் வந்துவிடுமானால், அவரை நம்முடைய தூதர்கள் இறக்கச் செய்கின்றனர்; அவர்கள் (கைப்பற்றிய உயிரை எங்கு சேர்த்து வைக்கவேண்டுமோ அங்கு சேர்த்துவைப்பதில் எக்)குறையும் செய்யமாட்டார்கள்.

62. (இதன்) பின்னர், அவர்கள் தங்களின் உண்மையான எஜமானனாகிய அல்லாஹ்விடமே திருப்பிக் கொண்டுவரப்படுவார்கள்; அறிந்து கொள்ளுங்கள்; (அந்நேரத்தில்) தீர்ப்புக் கூறும் அதிகாரம் அவனுக்கே உரித்தானது; அன்றியும் அவன் கணக்கெடுப்போரில் மிகத்தீவிரமானவன்.

63. "கரையிலும் கடலிலும் உள்ள இருள்களி(ல் நீங்கள் சிக்கித்தவிக்கும் போது அவற்றி) லிருந்து உங்களை ஈடேற்றுபவன் யார்? (அவ்வேளை) பணிவாகவும், மறைவாகவும் "எங்களை அவன் இதைவிட்டும் ஈடேற்றிவிட்டால், நிச்சயமாக நாங்கள் நன்றி செலுத்துவோர்களில் ஆகிவிடுவோம்" என்று நீங்கள் அவனிடம் பிரார்த்திக்கின்றீர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

64. "இதிலிருந்தும், மற்றெல்லாக் கஷ்டத்திலிருந்தும் உங்களை ஈடேற்றுபவன் அல்லாஹ்தான்; (அதிலிருந்து உங்களை ஈடேற்றிய) பின்னும் நீங்கள் (அவனுக்கு) இணைவைக்கின்றீர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

65. (நபியே! அவர்களிடம்) நீர் கூறுவீராக! "உங்க(ள் தலைக)ளுக்கு மேலிருந்தோ, அல்லது உங்கள் பாதங்களுக்குக் கீழிருந்தோ உங்களுக்கு (யாதொரு) வேதனையை அவன் அனுப்புவதற்கும், அல்லது உங்களைப் பல பிரிவுகளாக்கி, (உங்களுக்கு மத்தியில் நீங்கள் போர், சிறைச் சேதம் ஆகியவற்றைச் செய்து) உங்கள் சிலரின் கொடுமையை(க் கொண்டு) மற்ற சிலரைச் சுவைக்கச் செய்வதற்கும் அவன் சக்தியுடையவன்". அவர்கள் விளங்கிக் கொள்வதற்காக, நாம் நம்முடைய வசனங்களை எவ்வாறு பல வகைகளில் திருப்பித்திருப்பி கூறுகின்றோம் என்று நீர் கவனிப்பீராக.

66. (நபியே! குர்ஆனாகிய) இது முற்றிலும் உண்மையாக இருந்தும், உம்முடைய சமூகத்தார் இதனையும் பொய்யாக்குகின்றனர். (ஆகவே, அவர்களிடம்) "நான் உங்கள்மீது பொறுப்பாளனல்ல" என்று நீர் கூறுவீராக!

67. "ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு குறிப்பிட்ட கால நிர்ணயமுண்டு; (அதனைப் பற்றிவிரைவில்) நீங்கள் அறிந்துகொள்வீர்கள்".

وَاِذَا رَاَيْتَ الَّذِيْنَ يَخُوْضُوْنَ فِيْٓ اٰيٰتِنَا فَاَعْرِضْ عَنْهُمْ حَتّٰى
يَخُوْضُوْا فِيْ حَدِيْثٍ غَيْرِهٖ ۭ وَاِمَّا يُنْسِيَنَّكَ الشَّيْطٰنُ فَلَا تَقْعُدْ
بَعْدَ الذِّكْرٰى مَعَ الْقَوْمِ الظّٰلِمِيْنَ ﴿٦٨﴾ وَمَا عَلَى الَّذِيْنَ يَتَّقُوْنَ
مِنْ حِسَابِهِمْ مِّنْ شَيْءٍ وَّلٰكِنْ ذِكْرٰى لَعَلَّهُمْ يَتَّقُوْنَ ﴿٦٩﴾ وَذَرِ
الَّذِيْنَ اتَّخَذُوْا دِيْنَهُمْ لَعِبًا وَّلَهْوًا وَّغَرَّتْهُمُ الْحَيٰوةُ الدُّنْيَا وَ
ذَكِّرْ بِهٖٓ اَنْ تُبْسَلَ نَفْسٌۢ بِمَا كَسَبَتْ ڰ لَيْسَ لَهَا مِنْ دُوْنِ اللّٰهِ
وَلِيٌّ وَّلَا شَفِيْعٌ ۚ وَاِنْ تَعْدِلْ كُلَّ عَدْلٍ لَّا يُؤْخَذْ مِنْهَا ۭ اُولٰۗىِٕكَ
الَّذِيْنَ اُبْسِلُوْا بِمَا كَسَبُوْا ۚ لَهُمْ شَرَابٌ مِّنْ حَمِيْمٍ وَّعَذَابٌ
اَلِيْمٌۢ بِمَا كَانُوْا يَكْفُرُوْنَ ﴿٧٠﴾ قُلْ اَنَدْعُوْا مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا ع ٨ ١٤
يَنْفَعُنَا وَلَا يَضُرُّنَا وَنُرَدُّ عَلٰٓى اَعْقَابِنَا بَعْدَ اِذْ هَدٰىنَا اللّٰهُ
كَالَّذِي اسْتَهْوَتْهُ الشَّيٰطِيْنُ فِي الْاَرْضِ حَيْرَانَ ۠ لَهٗٓ اَصْحٰبٌ
يَّدْعُوْنَهٗٓ اِلَى الْهُدَى ائْتِنَا ۭ قُلْ اِنَّ هُدَى اللّٰهِ هُوَ الْهُدٰى ۭ
وَاُمِرْنَا لِنُسْلِمَ لِرَبِّ الْعٰلَمِيْنَ ﴿٧١﴾ وَاَنْ اَقِيْمُوا الصَّلٰوةَ وَ
اتَّقُوْهُ ۭ وَهُوَ الَّذِيْٓ اِلَيْهِ تُحْشَرُوْنَ ﴿٧٢﴾ وَهُوَ الَّذِيْ خَلَقَ
السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِالْحَقِّ ۭ وَيَوْمَ يَقُوْلُ كُنْ فَيَكُوْنُ ڛ الثلثة

5. "என் அருமை மகனே! நீர் கண்ட கனவை உம் சகோதரர்களிடம் சொல்லிக்காட்ட வேண்டாம்;(அவ்வாறு செய்தால்) அவர்கள் உமக்கு யாதேனும் தீங்கிழைக்கச் சதி செய்வார்கள்;(ஏனெனில்,) நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்கு பகிரங்கமான விரோதியாக இருக்கிறான்" என்று (யஃகூப் நபியாகிய )அவர் கூறினார்.

6. மேலும், "(நீர் கனவில் கண்ட) அவ்வாறே உமதிரட்சகன் உம்மைத் தேர்ந்தெடுத்து, கனவுகளின் விளக்கங்களையும் உமக்குக் கற்றுக் கொடுத்து, இதற்கு முன்னர் இப்றாஹீம், இஸ்ஹாக் ஆகிய உம்முடைய இரு மூதாதையர் மீதும் (தம் அருளாகிய) அதனைப் பூர்த்தியாக்கி வைத்தவாறே உம் மீதும், யஃகூபின் (மற்ற) குடும்பத்தினர் மீதும் அவன் தன் அருளைப் பூர்த்தியாக்கி வைப்பான்; நிச்சயமாக உமதிரட்சகன் (யாவற்றையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்"(என்றும் கூறினார்).

7. (நபியே!) நிச்சயமாக யூஸுஃபி(ன் சரித்திரத்தி)லும், அவரது சகோதரர்களி(ன் சரித்திரத்தி)லும் வினவுகின்றவர்களுக்கு பல படிப்பினைகள் இருக்கின்றன.

8. "நாம் (பலசாலிகளான) ஒரு கூட்டமாக இருந்தும், நிச்சயமாக யூஸுஃபும், அவருடைய சகோதரரும் நம் தந்தைக்கு நம்மைவிட அதிகப் பிரியமுள்ளவர்களாயிருக்கின்றனர்; (இதில்) நிச்சயமாக நம் தந்தை பகிரங்கமான தவற்றில் இருக்கிறார்" என்று அவர்கள் கூறிய சமயத்தை (நினைவு கூர்வீராக).

9. "(ஆகவே,) யூஸுஃபைக் கொலை செய்துவிடுங்கள்; அல்லது பூமியில் எங்கேனும் எறிந்து விடுங்கள்; உங்கள் தந்தையின்முகம் ( கவனம்) முற்றிலும் உங்கள் பக்கமே இருக்கும்; இதன் பின்னர், நீங்கள் (அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடிக்கொண்டு) நல்லவர்களான கூட்டத்தினராகிவிடுவீர்கள்" (என்று கூறினார்கள்).

10. (அதற்கு) அவர்களில் (நற்போதனை)கூறக்கூடிய ஒருவர், "யூஸுஃபை நீங்கள் கொலை செய்யாதீர்கள்; இன்னும், நீங்கள் (அவருக்கு ஏதும் தீமை) செய்பவர்களாக இருந்தால், ஆழமான ஒரு பாழ் கிணற்றில் அவரை போட்டுவிடுங்கள்; பிரயாணிகளில் சிலர் அவரை(க்கிணற்றிலிருந்து) எடுத்துக் கொள்ளக்கூடும்" என்று கூறினார்.

11. (பின்னர் அவர்கள் தங்கள் தந்தையிடம் வந்து,) "எங்கள் தந்தையே! யூஸுஃபைப்பற்றி (அவர் விஷயத்தில்) நீங்கள் எங்களை நம்பாமலிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? நாங்களோ, நிச்சயமாக அவருக்கு நன்மையை நாடுபவர்களாக இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

12. "நாளைய தினம் அவரை எங்களுடன் அனுப்பி வையுங்கள்; அவர் (காட்டிலுள்ள கனிகளை) நன்கு புசித்துக்கொண்டும், விளையாடிக்கொண்டும் இருப்பார். நிச்சயமாக, நாங்கள் அவரைப் பாதுகாத்துக் கொள்வோராகவும் இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

13. அ(தற்க)வர் "நீங்கள் அவரை(அழைத்து)க்கொண்டு செல்வது நிச்சயமாக என்னைக் கவலையடையச் செய்கிறது. நீங்கள் (விளையாடிக் கொண்டு) அவரைவிட்டும் பராமுகமானவர்களாகயிருக்கும் நிலையில் ஓநாய் அவரை (அடித்துத்) தின்று விடும் என்று நான் பயப்படுகிறேன்" என்று கூறினார்.

14. அ(தற்க)வர்கள், "(ஆற்றல் மிக்க )ஒரு கூட்டத்தினராக நாங்கள் இருந்தும், அவரை ஓர் ஓநாய் தின்றுவிடுமானால், நிச்சயமாக நாங்கள் அப்போது நஷ்டமடைந்தவர்களாகிவிடுவோம்" என்று கூறினர்.

فَلَمَّا ذَهَبُوْا بِهٖ وَاَجْمَعُوْٓا اَنْ يَّجْعَلُوْهُ فِيْ غَيٰبَتِ الْجُبِّ ۚ
وَاَوْحَيْنَآ اِلَيْهِ لَتُنَبِّئَنَّهُمْ بِاَمْرِهِمْ هٰذَا وَهُمْ لَا يَشْعُرُوْنَ ﴿١٥﴾
وَجَآءُوْٓ اَبَاهُمْ عِشَآءً يَّبْكُوْنَ ﴿١٦﴾ قَالُوْا يٰٓاَبَانَآ اِنَّا ذَهَبْنَا
نَسْتَبِقُ وَتَرَكْنَا يُوْسُفَ عِنْدَ مَتَاعِنَا فَاَكَلَهُ الذِّئْبُ ۚ وَمَآ
اَنْتَ بِمُؤْمِنٍ لَّنَا وَلَوْ كُنَّا صٰدِقِيْنَ ﴿١٧﴾ وَجَآءُوْ عَلٰى قَمِيْصِهٖ الثلثة
بِدَمٍ كَذِبٍ ۭ قَالَ بَلْ سَوَّلَتْ لَكُمْ اَنْفُسُكُمْ اَمْرًا ۭ فَصَبْرٌ
جَمِيْلٌ ۭ وَاللّٰهُ الْمُسْتَعَانُ عَلٰى مَا تَصِفُوْنَ ﴿١٨﴾ وَجَآءَتْ سَيَّارَةٌ
فَاَرْسَلُوْا وَارِدَهُمْ فَاَدْلٰى دَلْوَهٗ ۭ قَالَ يٰبُشْرٰى هٰذَا غُلٰمٌ ۭ
وَاَسَرُّوْهُ بِضَاعَةً ۭ وَاللّٰهُ عَلِيْمٌۢ بِمَا يَعْمَلُوْنَ ﴿١٩﴾ وَشَرَوْهُ
بِثَمَنٍۢ بَخْسٍ دَرَاهِمَ مَعْدُوْدَةٍ ۚ وَكَانُوْا فِيْهِ مِنَ الزّٰهِدِيْنَ ﴿٢٠﴾ ع ٢ ١٢
وَقَالَ الَّذِي اشْتَرٰىهُ مِنْ مِّصْرَ لِامْرَاَتِهٖٓ اَكْرِمِيْ مَثْوٰىهُ
عَسٰٓى اَنْ يَّنْفَعَنَآ اَوْ نَتَّخِذَهٗ وَلَدًا ۭ وَكَذٰلِكَ مَكَّنَّا لِيُوْسُفَ
فِي الْاَرْضِ ۡ وَلِنُعَلِّمَهٗ مِنْ تَاْوِيْلِ الْاَحَادِيْثِ ۭ وَاللّٰهُ غَالِبٌ
عَلٰٓى اَمْرِهٖ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿٢١﴾ وَلَمَّا بَلَغَ
اَشُدَّهٗٓ اٰتَيْنٰهُ حُكْمًا وَّعِلْمًا ۭ وَكَذٰلِكَ نَجْزِي الْمُحْسِنِيْنَ ﴿٢٢﴾

15. ஆகவே, (யூசுஃபாகிய)அவரை(அழைத்து)க்கொண்டு சென்று, அவரை ஆழமான ஒரு பாழ்கிணற்றில் ஆக்கிவிட வேண்டுமென்றே அவர்கள் ஒருமித்து முடிவு செய்த போது, "அவர்களோ (உம்மை) அறியாதவர்களாக இருக்க, அவர்களுடைய இக்காரியத்தைப்பற்றி (ஒரு காலத்தில்) நீர் அவர்களுக்கு நிச்சயமாகத்தெரிவிப்பீர்" என்று (யூசுஃபாகிய)அவருக்கு நாம் வஹீ அறிவித்தோம்.

16. மேலும், (அன்று) பொழுதடைந்த பின், அவர்கள் தங்கள் தந்தையிடம் அழுதவர்களாகவே வந்தனர்.

17. "எங்கள் தந்தையே! நிச்சயமாக நாங்கள் (ஒருவரை ஒருவர்) முந்திக் கொண்டு சென்று விட்டோம்; யூஸுஃபை எங்கள் சாமான்களிடம் நாங்கள் விட்டு விட்டோம்; அப்போது, அவரை ஓநாய் (அடித்துத்) தின்று விட்டது; நாங்கள் (எவ்வளவு) உண்மையாளர்களாக இருப்பினும் நீர் எங்களை நம்பக் கூடியவர் அல்லர்" என்று கூறினார்கள்.

18. அன்றியும்,(தங்கள் கூற்றைப் பலப்படுத்த) அவருடைய சட்டையில் (ஆட்டின்) பொய்யான இரத்தத்தை(த் தோய்த்து)க் கொண்டு வந்(து காண்பித்)தார்கள்; (இரத்தம் தோய்ந்த அச்சட்டை கிழியாதிருப்பதைக் கண்ட யாஃகூப் நபி,) "இல்லை; உங்கள் மனங்கள் ஒரு (தீய) காரியத்தை உங்களுக்கு அழகாகக் காண்பித்து விட்டன; ஆகவே, அழகான பொறுமை (யைக்கடைப் பிடிப்பது) தான் நன்று; மேலும், நீங்கள் வர்ணிக்கின்றவற்றிலிருந்து (யூஸுஃபை இரட்சிக்க)அல்லாஹ்வே உதவி தேடப் படுபவன் (அவனிடமே உதவி தேடுகிறேன்)" என்று கூறினார்.

19. (பின்னர், அக்கிணற்றின் சமீபமாக) ஒரு பிரயாணக் கூட்டமும் வந்தது; தங்களது தண்ணீர் கொண்டு வருபவரை(த் தண்ணீருக்காக) அவர்கள் அனுப்பினார்கள்; அவர் தன் வாளியை (அக் கிணற்றில்) விட்டார். (யூஸுஃப் அதில் உட்கார்ந்து கொண்டார். அதைக் கண்டு) "உங்களுக்கு) ஓ நன்மாராயமே! இதோ ஓர் (அழகிய)சிறுவன்!" என்று (யூஸுஃபைச் சுட்டிக் காட்டிக்) கூறினார்; (அவரைக் கண்ணுற்ற அவர்கள், தங்கள்) வர்த்தகப் பொருளாக அவரை (ஆக்கிக் கொள்ளக் கருதி) மறைத்துக் கொண்டார்கள்; மேலும், அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிகிறவன்.

20. மேலும், அவரை அவர்கள் அற்பக் கிரயத்திற்கு (விரல் விட்டு) எண்ணப்படுகின்ற (சொற்ப) வெள்ளிக் காசுகளுக்கு விற்று விட்டார்கள்; மேலும், அவர்கள் அதில் பற்றற்றவர்களாக இருந்தனர்.

21. (யூசுஃபை வாங்கியவர், அவரை எகிப்துக்குக் கொண்டு வந்து விற்றுவிட்டார்.) எகிப்தில் அவரை வாங்கியவர் தன் மனைவியிடம், "நீ அவர் தங்குமிடத்தை கண்ணியமாக வைத்துக் கொள்; அவர் நமக்குப்பயன்தரலாம்; அல்லது அவரை நாம் (சுவீகாரப்) புத்திரனாக எடுத்துக் கொள்ளலாம்" என்று கூறினார். அவ்வாறே அந்த (எகிப்து) பூமியில், யூஸுஃபுக்கு நாம் இடமளித்தோம்; கனவுகளின் விளக்கங்களை அவருக்குக் கற்பிப்பதற்காகவும் (நாம் அவருக்கு இடமளித்தோம்.) அல்லாஹ், தன் காரியத்தில் (யாவரையும்) மிகைத்தவன்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்து கொள்ள மாட்டார்கள்.

22. இன்னும், அவர் தன் வாலிபத்தை அடைந்தபொழுது நாம் அவருக்கு சட்ட நுணுக்கத்தையும், கல்வியையும் கொடுத்தோம்; இவ்வாறே நன்மை செய்வோருக்கு நாம் கூலி தருகிறோம்.

وَرَاوَدَتْهُ الَّتِيْ هُوَ فِيْ بَيْتِهَا عَنْ نَّفْسِهٖ وَغَلَّقَتِ الْاَبْوَابَ
وَقَالَتْ هَيْتَ لَكَ ؕ قَالَ مَعَاذَ اللّٰهِ اِنَّهٗ رَبِّيْٓ اَحْسَنَ مَثْوَايَ ؕ
اِنَّهٗ لَا يُفْلِحُ الظّٰلِمُوْنَ ﴿۲۳﴾ وَلَقَدْ هَمَّتْ بِهٖ ۚ وَهَمَّ بِهَا لَوْلَآ اَنْ
رَّاٰ بُرْهَانَ رَبِّهٖ ؕ كَذٰلِكَ لِنَصْرِفَ عَنْهُ السُّوْٓءَ وَالْفَحْشَآءَ ؕ
اِنَّهٗ مِنْ عِبَادِنَا الْمُخْلَصِيْنَ ﴿۲۴﴾ وَاسْتَبَقَا الْبَابَ وَقَدَّتْ
قَمِيْصَهٗ مِنْ دُبُرٍ وَّاَلْفَيَا سَيِّدَهَا لَدَا الْبَابِ ؕ قَالَتْ مَا جَزَآءُ
مَنْ اَرَادَ بِاَهْلِكَ سُوْٓءًا اِلَّآ اَنْ يُّسْجَنَ اَوْ عَذَابٌ اَلِيْمٌ ﴿۲۵﴾
قَالَ هِيَ رَاوَدَتْنِيْ عَنْ نَّفْسِيْ وَشَهِدَ شَاهِدٌ مِّنْ اَهْلِهَا ۚ
اِنْ كَانَ قَمِيْصُهٗ قُدَّ مِنْ قُبُلٍ فَصَدَقَتْ وَهُوَ مِنَ الْكٰذِبِيْنَ ﴿۲۶﴾
وَاِنْ كَانَ قَمِيْصُهٗ قُدَّ مِنْ دُبُرٍ فَكَذَبَتْ وَهُوَ مِنَ
الصّٰدِقِيْنَ ﴿۲۷﴾ فَلَمَّا رَاٰ قَمِيْصَهٗ قُدَّ مِنْ دُبُرٍ قَالَ اِنَّهٗ مِنْ
كَيْدِكُنَّ ؕ اِنَّ كَيْدَكُنَّ عَظِيْمٌ ﴿۲۸﴾ يُوْسُفُ اَعْرِضْ عَنْ هٰذَا ٚ
وَاسْتَغْفِرِيْ لِذَنْۢبِكِ ۖۚ اِنَّكِ كُنْتِ مِنَ الْخٰطِـِٕيْنَ ﴿۲۹﴾ وَقَالَ ع ۳ ۹ ۱۳
نِسْوَةٌ فِي الْمَدِيْنَةِ امْرَاَتُ الْعَزِيْزِ تُرَاوِدُ فَتٰىهَا عَنْ
نَّفْسِهٖ ۚ قَدْ شَغَفَهَا حُبًّا ؕ اِنَّا لَنَرٰىهَا فِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۳۰﴾

82. விசுவாசங் கொண்டு, பின்னர் தங்களுடைய ஈமானை (இணைவைத்தல் எனும்) அநீதத்தைக்கொண்டு கலந்து விடவில்லையே அத்தகையோர் _ அவர்களுக்கே அபயமுண்டு; அவர்களே நேர்வழி பெற்றவர்கள்.

83. இன்னும் (மேற் கூறப்பட்ட) அவை, நம்முடைய அத்தாட்சிகளாகும்; இப்றாஹீம் தன் சமூகத்தார்க்கெதிராக (வெற்றி கொள்வதற்காக) நாம் அவைகளை அவருக்குக் (கற்றுக்)கொடுத்தோம்; நாம் நாடுவோரின் பதவிகளை நாம் உயர்த்துவோம்; (நபியே!) நிச்சயமாக உம்முடைய இரட்சகன் மிக தீர்க்கமான அறிவுடையவன், நன்கறிகிறவன்.

84. இன்னும், நாம் (இப்றாஹீமாகிய) அவருக்கு இஸ்ஹாக்கையும், (அவருடைய குமாரர்) யஃகூபையும் வெகுமதியாக வழங்கினோம்; இவர்கள் ஒவ்வொருவரையும் நாம் நேர்வழியில் செலுத்தினோம்; (இதற்கு) முன்னர் நூஹையும், அவருடைய சந்ததியிலிருந்து தாவூதையும், ஸுலைமானையும், அய்யூபையும், யூஸுஃபையும், மூஸாவையும், ஹாரூனையும் நாம் நேரான வழியில் செலுத்தினோம்; நன்மை செய்வோருக்கு, இவ்வாறே நாம் (நற்)கூலி வழங்குகின்றோம்.

85. ஜகரிய்யாவையும், யஹ்யாவையும், ஈஸாவையும், இல்யாஸையும் (நேரான வழியில் செலுத்தினோம்.) இவர்களில் ஒவ்வொருவரும் நல்லவர்களில் உள்ளவராவர்.

86. இஸ்மாயீலையும், அல்யஸஉவையும், யூனுஸையும், லூத்தையும் (நேர் வழியில் செலுத்தி இவர்களில்) ஒவ்வொருவரையும் அகிலத்தாரை விட மேன்மையாக்கியும் வைத்தோம்.

87. இவர்களுடைய மூதாதையர்களிலிருந்தும், இவர்களுடைய சந்ததிகளிலிருந்தும் இவர்களுடைய சகோதரர்களிலிருந்தும், (பலரை மேன்மையாக்கி வைத்ததுடன்,) அவர்களை நாம் தேர்ந்தெடுத்து, நேரான வழியின்பாலும் அவர்களை நாம் செலுத்தினோம்.

88. (இவர்கள் யாவரும் சென்ற) அதுவே அல்லாஹ்வுடைய நேர் வழியாகும். தன் அடியார்களில் அவன் நாடுகிறவருக்கு இதன் மூலம் நேர் வழிகாட்டுகிறான்; இன்னும், அவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணை வைத்திருந்தால் அவர்கள் செய்து கொண்டிருந்த (நன்மையான)வைகள் (யாவும்) அவர்களை விட்டு அழிந்துவிடும்.

89. அவர்கள் எத்தகையோரென்றால், அவர்களுக்கு வேதத்தையும், (மார்க்க)சட்டத்தையும், நபித்துவத்தையும் நாம் கொடுத்திருந்தோம்; ஆகவே, அவைகளை (மக்காவாசிகளாகிய) இவர்கள் நிராகரித்து விடுவார்களாயின் (இவர்களுக்குப்பதிலாக) அவைகளை நிராகரிக்காதவர்களான (அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் முஸ்லிம்களாகிய) ஒருகூட்டத்தாரை, திட்டமாக நாம் அதற்கு பொறுப்பாக்கி(ஏற்படுத்தி)விடுவோம்.

90. (பொறுப்பாக்கப்பட்ட) அவர்கள் எத்தகையோரென்றால், அல்லாஹ் (அவர்களை) நேர் வழியில் செலுத்தினான்; ஆகவே, அவர்களுடைய நேர் வழியை நீரும் பின்பற்றுவீராக! " இ(ந்தக் குர்ஆனை உங்களுக்கு அறிவிப்ப)தற்காக, நான் உங்களிடம் யாதொரு கூலியை(பிரதிபலனை)யும் கேட்கவில்லை; (குர்ஆனாகிய)இது அகிலத்தார்க்கு நல்லுபதேசமே தவிர (வேறு) இல்லை" என (நபியே!) நீர் கூறுவீராக!

وَمَا قَدَرُوا اللّٰهَ حَقَّ قَدْرِهٖٓ اِذْ قَالُوْا مَآ اَنْزَلَ اللّٰهُ عَلٰى بَشَرٍ
مِّنْ شَيْءٍ ۭ قُلْ مَنْ اَنْزَلَ الْكِتٰبَ الَّذِيْ جَاۗءَ بِهٖ مُوْسٰى نُوْرًا وَّ
هُدًى لِّلنَّاسِ تَجْعَلُوْنَهٗ قَرَاطِيْسَ تُبْدُوْنَهَا وَتُخْفُوْنَ كَثِيْرًا ۚ
وَعُلِّمْتُمْ مَّا لَمْ تَعْلَمُوْٓا اَنْتُمْ وَلَآ اٰبَاۗؤُكُمْ ۭ قُلِ اللّٰهُ ۙ ثُمَّ ذَرْهُمْ فِيْ
خَوْضِهِمْ يَلْعَبُوْنَ ﴿۹۱﴾ وَهٰذَا كِتٰبٌ اَنْزَلْنٰهُ مُبٰرَكٌ مُّصَدِّقُ الَّذِيْ
بَيْنَ يَدَيْهِ وَلِتُنْذِرَ اُمَّ الْقُرٰى وَمَنْ حَوْلَهَا ۭ وَالَّذِيْنَ يُؤْمِنُوْنَ
بِالْاٰخِرَةِ يُؤْمِنُوْنَ بِهٖ وَهُمْ عَلٰى صَلَاتِهِمْ يُحَافِظُوْنَ ﴿۹۲﴾ وَمَنْ
اَظْلَمُ مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا اَوْ قَالَ اُوْحِيَ اِلَيَّ وَلَمْ يُوْحَ
اِلَيْهِ شَيْءٌ وَّمَنْ قَالَ سَاُنْزِلُ مِثْلَ مَآ اَنْزَلَ اللّٰهُ ۭ وَلَوْ تَرٰٓى اِذِ
الظّٰلِمُوْنَ فِيْ غَمَرٰتِ الْمَوْتِ وَالْمَلٰۗىِٕكَةُ بَاسِطُوْٓا اَيْدِيْهِمْ ۚ اَخْرِجُوْٓا
اَنْفُسَكُمْ ۭ اَلْيَوْمَ تُجْزَوْنَ عَذَابَ الْهُوْنِ بِمَا كُنْتُمْ تَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ
غَيْرَ الْحَقِّ وَكُنْتُمْ عَنْ اٰيٰتِهٖ تَسْتَكْبِرُوْنَ ﴿۹۳﴾ وَلَقَدْ جِئْتُمُوْنَا
فُرَادٰى كَمَا خَلَقْنٰكُمْ اَوَّلَ مَرَّةٍ وَّتَرَكْتُمْ مَّا خَوَّلْنٰكُمْ وَرَاۗءَ ظُهُوْرِكُمْ ۚ
وَمَا نَرٰى مَعَكُمْ شُفَعَاۗءَكُمُ الَّذِيْنَ زَعَمْتُمْ اَنَّهُمْ فِيْكُمْ شُرَكٰۗؤُا ۭ
لَقَدْ تَّقَطَّعَ بَيْنَكُمْ وَضَلَّ عَنْكُمْ مَّا كُنْتُمْ تَزْعُمُوْنَ ﴿۹۴﴾ ع ۱۱ ع ۱۴ ۱۷

91. மேலும், அல்லாஹ் எந்த மனிதனின் மீதும் எதையும் இறக்கிவைக்கவில்லை என்று அவர்கள் கூறிய பொழுது, அல்லாஹ்வை அவனுக்குரிய தகுதிக்குத்தக்கவாறு அவர்கள்மதிக்கவில்லை; (ஆகவே,நபியே! அவர்களிடம்) நீர் கேட்பீராக: "பிரகாசமானதாகவும், மனிதர்களுக்கு நேர் வழி காட்டக் கூடியதாகவும் (உள்ள) மூஸா கொண்டு வந்த ("தவ்றாத்" என்னும்) வேதத்தை இறக்கியவன் யார்? நீங்கள், அ(வ்வேதத்)தைத் தனித்தனி ஏடுகளாகப் பிரித்து (அவற்றில் சிலவற்றை) வெளிப்படுத்துகிறீர்கள்; (உங்கள் நோக்கத்திற்கு மாறான) பெரும்பாலானவற்றை நீங்கள் மறைத்தும் விடுகிறீர்கள்; (அதன் மூலமாகவே) நீங்களும், உங்கள் மூதாதையர்களும் அறியாமலிருந்தவைகளை நீங்கள் கற்பிக்கப்பட்டீர்கள்; (ஆகவே இத்தகைய வேதத்தை உங்களுக்கு அருளியது யார்? என நீரே அவர்களிடம் கேட்டுவிட்டு, ) "அல்லாஹ்தான் (அதை இறக்கி வைத்தான்)" என்று கூறுவீராக! பின்னர் (வீண் விவாதத்தில்) அவர்கள் மூழ்கிக்கொண்டிருப்பதிலேயே அவர்கள் விளையாடிக்கொண்டிருக்குமாறு அவர்களை விட்டுவிடுவீராக!

92. மேலும், (நபியே!) இது ஒரு வேதமாகும்; இதனை நாம் (உம்மீது) இறக்கிவைத்தோம்; (இதன் நன்மைகள் பன்மடங்காக்கப்பட்டதாக) பரகத்துச் செய்யப்பட்டதாகும், தனக்கு முன் உள்ள (வேதத்)தை உண்மையாக்கி வைக்கக்கூடியதாகும்; (ஆகவே,) நீர் (இதனைக் கொண்டு) உம்முல்குரா ( நகரங்களின் தாயாகிய மக்கா)வில் உள்ளவர்களையும், அதைச் சுற்றிலுமுள்ளவர்களையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும் (இவ்வேதத்தை உம்மீது இறக்கி வைத்தோம்) மேலும் மறுமையை நம்புகின்றார்களே, அத்தகையோர்_ அவர்கள் இ(வ்வேதத்)தை (அவசியம்) விசுவாசிப்பார்கள்; இன்னும் அவர்கள் தங்கள் தொழுகையைப் பேணுவார்கள்.

93. அல்லாஹ்வின்மீது பொய்யைக்கற்பனை செய்(து கூறு)பவனைவிட அல்லது வஹீ மூலம் அவனுக்கொன்றுமே அறிவிக்கப்படாமலிருக்க "எனக்கும் வஹீ அறிவிக்கப்பட்டது" என்று கூறுபவனைவிட அல்லது "அல்லாஹ் இறக்கிய இ(வ்வேதத்)தைப் போல் நானும் இறக்குவேன்" என்றுகூறுபவனை விடமிகப் பெரிய அநியாயக்காரன்யார்? இன்னும், இவ்வநியாயக் காரர்கள் மரண வேதனையிலிருக்கும் சமயத்தில் நீர் அவர்களைப் பார்ப்பீராயின், "மலக்குகள் தங்கள் கைகளை நீட்டி, (அவர்களிடம்) உங்களுடைய உயிர்களை வெளியேற்றுங்கள்; நீங்கள் உண்மையல்லாததை அல்லாஹ்வின்மீது (பொய்யாகக்) கூறிக் கொண்டிருந்ததாலும், இன்னும் அவனது வசனங்களைவிட்டும் (அவற்றை ஏற்கமறுத்து) நீங்கள் பெருமையடித்துக் கொண்டிருந்ததாலும் (அதற்குப் பகரமாக) இன்றையத்தினம் இழிவான வேதனையை நீங்கள் கொடுக்கப் படுகிறீர்கள்." (என்று கூறுவதை நீர் காண்பீர்).

94. அன்றியும், (அல்லாஹ், மறுமையில் அவர்களிடம்) "முதன் முறையாக நாம் உங்களைப்படைத்தபிரகாரமே (உங்களுடன் ஒன்றுமில்லாது) நிச்சயமாக நீங்கள் தன்னந்தனியாக நம்மிடம் வந்து சேர்ந்து விட்டீர்கள்; நாம் உங்களுக்குக் கொடுத்திருந்தவற்றையெல்லாம் உங்கள் முதுகுகளுக்குப் பின்னால் விட்டு விட்டீர்கள்; இன்னும், நிச்சயமாக அவர்கள் உங்களில் இணையாளர்கள் என எண்ணிக்கொண்டிருந்தீர்களே அத்தகைய உங்களுடைய பரிந்துரையாளர்களை உங்களுடன் நாம் காணவில்லை; உங்களுக்கிடையிலுள்ள (தொடர்புகளான)து திட்டமாக அறுந்தும்விட்டது; (உங்களுக்கு உதவியும், பரிந்துரையும் செய்வார்களென்று) நீங்கள் கற்பனை செய்து கொண்டிருந்தீர்களே அவைகள் உங்களை விட்டு மறைந்தும் விட்டன" (என்று கூறுவான்).

اِنَّ اللّٰهَ فَالِقُ الْحَبِّ وَالنَّوٰى ؕ يُخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَمُخْرِجُ
الْمَيِّتِ مِنَ الْحَيِّ ؕ ذٰلِكُمُ اللّٰهُ فَاَنّٰى تُؤْفَكُوْنَ ﴿٩٥﴾ فَالِقُ الْاِصْبَاحِ ۚ وَ
جَعَلَ الَّيْلَ سَكَنًا وَّالشَّمْسَ وَالْقَمَرَ حُسْبَانًا ؕ ذٰلِكَ تَقْدِيْرُ الْعَزِيْزِ
الْعَلِيْمِ ﴿٩٦﴾ وَهُوَ الَّذِيْ جَعَلَ لَكُمُ النُّجُوْمَ لِتَهْتَدُوْا بِهَا فِيْ
ظُلُمٰتِ الْبَرِّ وَالْبَحْرِ ؕ قَدْ فَصَّلْنَا الْاٰيٰتِ لِقَوْمٍ يَّعْلَمُوْنَ ﴿٩٧﴾ وَ
هُوَ الَّذِيْٓ اَنْشَاَكُمْ مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍ فَمُسْتَقَرٌّ وَّمُسْتَوْدَعٌ ؕ
قَدْ فَصَّلْنَا الْاٰيٰتِ لِقَوْمٍ يَّفْقَهُوْنَ ﴿٩٨﴾ وَهُوَ الَّذِيْٓ اَنْزَلَ مِنَ
السَّمَآءِ مَآءً ۚ فَاَخْرَجْنَا بِهٖ نَبَاتَ كُلِّ شَيْءٍ فَاَخْرَجْنَا مِنْهُ خَضِرًا
نُّخْرِجُ مِنْهُ حَبًّا مُّتَرَاكِبًا ۚ وَمِنَ النَّخْلِ مِنْ طَلْعِهَا قِنْوَانٌ دَانِيَةٌ
وَّجَنّٰتٍ مِّنْ اَعْنَابٍ وَّالزَّيْتُوْنَ وَالرُّمَّانَ مُشْتَبِهًا وَّغَيْرَ
مُتَشَابِهٍ ؕ اُنْظُرُوْٓا اِلٰى ثَمَرِهٖٓ اِذَآ اَثْمَرَ وَيَنْعِهٖ ؕ اِنَّ فِيْ ذٰلِكُمْ
لَاٰيٰتٍ لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿٩٩﴾ وَجَعَلُوْا لِلّٰهِ شُرَكَآءَ الْجِنَّ وَخَلَقَهُمْ
وَخَرَقُوْا لَهٗ بَنِيْنَ وَبَنٰتٍۭ بِغَيْرِ عِلْمٍ ؕ سُبْحٰنَهٗ وَتَعٰلٰى عَمَّا يَصِفُوْنَ ﴿١٠٠﴾ ع ١٢ ع ١٨
بَدِيْعُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ اَنّٰى يَكُوْنُ لَهٗ وَلَدٌ وَّلَمْ تَكُنْ لَّهٗ
صَاحِبَةٌ ؕ وَخَلَقَ كُلَّ شَيْءٍ ۚ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ﴿١٠١﴾

95. நிச்சயமாக அல்லாஹ்தான் வித்துக்களையும், விதைகளையும் வெடி(த்து முளை)க்கச் செய்கின்றவன்; இறந்ததிலிருந்து உயிருள்ளதை அவன் வெளிப்படுத்துகின்றான்; உயிருள்ளதிலிருந்து இறந்ததையும் அவனே வெளிப்படுத்துகின்றவன்;(இவ்வாறு செய்கின்ற) அவன்தான்,(உங்கள்)அல்லாஹ். ஆகவே, நீங்கள் (அவனுக்கு வணக்க வழிபாடுகளைச் செய்வதிலிருந்து) எவ்வாறு திசை திருப்பப்படுகிறீர்கள்.

96. அவனே அதிகாலை நேர(வெளிச்ச)த்தை (இரவின் இருள்களிலிருந்து) வெடிக்கச்செய்கிறவன்; அவனே (படைப்பினங்கள் அனைத்தும் களைப்பாறுவதற்காக) இரவை அமைதியானதாகவும், காலக்கணக்கிற்காகச் சூரியனையும், சந்திரனையும் ஆக்கினான்; இவை யாவும் (யாவரையும்) மிகைத்தோனாகிய, மிக்க அறிந்தோனாகியவனின் ஏற்பாடாகும்.

97. மேலும் அவன் எத்தகையவனென்றால், உங்களுக்காக நட்சத்திரங்களை_ அவற்றைக்கொண்டு கரையிலும்,கடலிலும் உள்ள இருள்களில் நீங்கள் (நேர்) வழியறிந்து செல்வதற்காக _உண்டாக்கினான்; (அசத்தியத்தைத்தவிர்த்து உண்மையை) அறியக்கூடிய கூட்டத்தினருக்கு (நம்முடைய) வசனங்களை நிச்சயமாக(இவ்வாறு) நாம் விவரிக்கின்றோம்.

98. இன்னும் அவன் எத்தகையவனென்றால், அவனே உங்களை ஓர் ஆத்மாவிலிருந்து உண்டாக்கினான்; பின்னர், (மனிதர்களே! ஒவ்வொருவருக்கும் தாயின் வயிற்றில்) தங்குமிடமும் (கப்றில்) ஒப்படைக்கப்படும் இடமும் உண்டு; விளங்கிக்கொள்கிற சமூகத்தினர்க்கு,(நம்முடைய) வசனங்களை நிச்சயமாக விவரிக்கின்றோம்.

99. மேலும் அவன் எத்தகையவனென்றால், வானத்திலிருந்து மழையை அவன் இறக்கி வைக்கின்றான்; பின்னர் அதைக் கொண்டே ஒவ்வொருபொருளின் புற்பூண்டுகளையும் நாம் (முளைக்கவைத்து,) வெளிப்படுத்தினோம். பின்னர் அதிலிருந்து பசுமையான (பயிர்கள் உள்ள)தை நாம் வெளிப்படுத்தினோம்; பின்னர் அதிலிருந்து ஒன்றின்மேல் ஒன்றாக அமைந்துள்ள (கதிர்களைப் போன்று) வித்துக்களை வெளிப்படுத்துகிறோம். பேரீச்சமரத்திலிருந்து_அதன் பாளையிலிருந்து(பறிப்பவர்களுக்குவளைந்து) அருகில் தொங்கும் பழக்குலைகளுமிருக்கின்றன; (அவற்றையும் நாமே வெளிப் படுத்துகின்றோம்.) திராட்சைத் தோட்டங்களையும்,(பார்வைக்கு) ஒன்று போலும் (ரசனையில்) வெவ்வேறாகவும் உள்ள ஜைய்த்தூன் (_ஒலிவம்) மாதுளை, ஆகியவற்றையும் நாமே (வெளிப்படுத்துகின்றோம்,) அவற்றின் கனிகளை _ அவை (பூத்துக்) காய்க்கும்போதும், பின்னர் அதுகனிந்து பழமாகும் விதத்தையும் நோக்குவீர்களாக! விசுவாசங்கொள்ளும் சமூகத்தினர்க்கு, நிச்சயமாக இவற்றில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன.

100. இன்னும் அவர்கள், ஜின்களில் (பலரை) அல்லாஹ்வுக்கு இணையாளர்களாக ஆக்குகின்றனர். (ஜின்களான) அவர்களையும் அவனே சிருஷ்டித்திருக்கின்றான்; இன்னும் அவர்கள் எவ்வித அறிவுமின்றி ஆண்மக்களையும், பெண்மக்களையும் அவனுக்கு (இணையாளர்களாகக்) கற்பனை செய்துவிட்டார்கள்; அவன்(மகா) தூயவன்; அவர்கள் (இவ்வாறு) வர்ணிப்பவைகளைவிட்டும் அவன் பரிசுத்தமடைந்துவிட்டான்.

101. முன் மாதிரியின்றியே, வானங்களை, மற்றும் பூமியைப் படைத்தவன்; அவனுக்கு மனைவியே இல்லாதிருக்க அவனுக்கு எவ்வாறு பிள்ளையிருக்க முடியும்? இன்னும் ஒவ்வொரு பொருளையும் அவனே படைத்திருக்கின்றான்; அன்றியும் அவன் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் நன்கறிந்தவன்.

ذٰلِكُمُ اللّٰهُ رَبُّكُمْ ۚ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ خَالِقُ كُلِّ شَیْءٍ فَاعْبُدُوْهُ ۚ وَهُوَ
عَلٰی كُلِّ شَیْءٍ وَّكِیْلٌ ﴿١٠٢﴾ لَا تُدْرِكُهُ الْاَبْصَارُ ۫ وَهُوَ یُدْرِكُ
الْاَبْصَارَ ۚ وَهُوَ اللَّطِیْفُ الْخَبِیْرُ ﴿١٠٣﴾ قَدْ جَآءَكُمْ بَصَآئِرُ مِنْ
رَّبِّكُمْ ۚ فَمَنْ اَبْصَرَ فَلِنَفْسِهٖ ۚ وَمَنْ عَمِیَ فَعَلَیْهَا ؕ وَمَآ اَنَا عَلَیْكُمْ
بِحَفِیْظٍ ﴿١٠٤﴾ وَكَذٰلِكَ نُصَرِّفُ الْاٰیٰتِ وَلِیَقُوْلُوْا دَرَسْتَ
وَلِنُبَیِّنَهٗ لِقَوْمٍ یَّعْلَمُوْنَ ﴿١٠٥﴾ اِتَّبِعْ مَآ اُوْحِیَ اِلَیْكَ مِنْ رَّبِّكَ ۚ لَآ
اِلٰهَ اِلَّا هُوَ ۚ وَاَعْرِضْ عَنِ الْمُشْرِكِیْنَ ﴿١٠٦﴾ وَلَوْ شَآءَ اللّٰهُ مَآ
اَشْرَكُوْا ؕ وَمَا جَعَلْنٰكَ عَلَیْهِمْ حَفِیْظًا ۚ وَمَآ اَنْتَ عَلَیْهِمْ
بِوَكِیْلٍ ﴿١٠٧﴾ وَلَا تَسُبُّوا الَّذِیْنَ یَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ فَیَسُبُّوا
اللّٰهَ عَدْوًۢا بِغَیْرِ عِلْمٍ ؕ كَذٰلِكَ زَیَّنَّا لِكُلِّ اُمَّةٍ عَمَلَهُمْ ۪ ثُمَّ
اِلٰی رَبِّهِمْ مَّرْجِعُهُمْ فَیُنَبِّئُهُمْ بِمَا كَانُوْا یَعْمَلُوْنَ ﴿١٠٨﴾ وَاَقْسَمُوْا
بِاللّٰهِ جَهْدَ اَیْمَانِهِمْ لَئِنْ جَآءَتْهُمْ اٰیَةٌ لَّیُؤْمِنُنَّ بِهَا ؕ قُلْ
اِنَّمَا الْاٰیٰتُ عِنْدَ اللّٰهِ وَمَا یُشْعِرُكُمْ ۙ اَنَّهَآ اِذَا جَآءَتْ لَا
یُؤْمِنُوْنَ ﴿١٠٩﴾ وَنُقَلِّبُ اَفْـِٕدَتَهُمْ وَاَبْصَارَهُمْ كَمَا لَمْ یُؤْمِنُوْا
بِهٖۤ اَوَّلَ مَرَّةٍ وَّنَذَرُهُمْ فِیْ طُغْیَانِهِمْ یَعْمَهُوْنَ ﴿١١٠﴾ ع ١٣ ع ١٠ ١٩

102. (இத்தகைய தகுதிகளையுடைய) அவன் தான் அல்லாஹ்; உங்களின் இரட்சகன்; வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர (வேறு ஒருவரும்) இல்லை; அவனே ஒவ்வொரு பொருளையும் படைத்தவன்; ஆகவே அவ(ன் ஒருவ)னையே நீங்கள் (யாவரும்) வணங்குங்கள்; அவனே ஒவ்வொரு பொருளின் மீதும் பொறுப்பாளன்.

103. பார்வைகள் அவனை அடையாது; அவனோ பார்வைகளை அடைகிறான்; அவனே (எவரின் பார்வைக்கும் அகப்படாத) நுட்பமானவன்; நன்கு உணர்பவன்.

104. உங்கள் இரட்சகனிடமிருந்து (நமது சத்தியத்திற்குரிய) அநேக சான்றுகள் உங்களிடம் திட்டமாக வந்துவிட்டன; ஆகவே, எவர் (அவற்றைக் கவனித்துப்) பார்க்கிறாரோ அப்பொழுது(அது) அவருக்கே (நன்று); மேலும் எவர் (அவற்றைப் பார்க்காது கண்ணை மூடிக்கொண்டு) குருடராகிவிடுகிறாரோ (அது) தமக்கே கேடாகும்; இன்னும்( நபியே! நீர் அவர்களிடம்,) "நான் உங்களைக் காப்போன் அல்ல" (அல்லாஹ்வின் தூதை எத்திவைப்பவன் மாத்திரமே என்று கூறுவீராக!).

105. ( நபியே! நீர் வேதக்காரர்களிடமிருந்து கற்றுக்கொண்டு இதை) பாடம் படித்து வந்தீர் என அவர்கள் கூறுவதற்காகவும், இன்னும் அறியக்கூடிய சமூகத்தார்க்கு நாம் அதைத் தெளிவு செய்வதற்காகவும் (நமது) வசனங்களை இவ்வாறு(விதவிதமாக) திரும்பத்திரும்ப நாம் தெளிவுசெய்கிறோம்.

106. (நபியே!) உம் இரட்சகனால் உமக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டவற்றையே நீர் பின்பற்றுவீராக! அவனைத் தவிர வணக்கத்திற்குரிய (வேறு) நாயன் இ(ல்லவே யி)ல்லை. இன்னும்(அவனுக்கு) இணை வைப்போரை விட்டும் நீர் புறக்கணித்து விடுவீராக!

107. மேலும் அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் இணை வைத்திருக்கமாட்டார்கள்; அவர்கள் மீது காப்பாளராகவும் உம்மை நாம் ஏற்படுத்தவுமில்லை; இன்னும் நீர் அவர்களின் (காரியங்களை நிர்வகிக்கும்) பொறுப்பாளருமல்லர்.

108. (விசுவாசிகளே!) அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைத்துக்கொண்டிருப்போரை நீங்கள் திட்டாதீர்கள்; அதனால் அவர்கள் அறியாமையின் காரணமாக, விரோதத்தால் அல்லாஹ்வைத் திட்டுவார்கள்; இவ்வாறே ஒவ்வொரு வகுப்பினருக்கும் அவர்களுடைய செயலை நாம் அலங்காரமாக்கி வைத்திருக்கின்றோம்; பின்னர், அவர்களின் மீட்சி அவர்களின் இரட்சகனின் பாலே உள்ளது; பின்னர் அவர்கள் செய்து கொண்டிருந்ததைப் பற்றி அவன் அவர்களுக்கு அறிவித்து விடுவான்.

109. மேலும், (அவர்கள் விரும்பியவாறு) யாதோர் அத்தாட்சி அவர்களுக்கு வந்தால், நிச்சயமாக அவர்கள் அதனை நம்புவார்கள் என அவர்கள் அல்லாஹ்வின் மீது உறுதியான சத்தியமாக சத்தியம் செய்(து கூறு)கின்றனர்; "நிச்சயமாக அத்தாட்சிகள் யாவும் அல்லாஹ்விடமேயிருக்கின்றன; (அவற்றை அவன் விரும்பியவாறே வெளியாக்குவான்; ) " என்று (நபியே )நீர் கூறுவீராக! (அவ்வாறு) அவர்களிடம் நிச்சயமாக அது வரும்பட்சத்தில், அதனை அவர்கள் விசுவாசிப்பார்கள் என்பதை (விசுவாசிகளே!) உங்களுக்கு அறிவித்தது எது?.(11)

110. மேலும், முதல் தடவை அவர்கள் இ(வ்வேதத்)தை விசுவாசிக்காது இருந்த பிரகாரமே நாம் அவர்களுடைய இதயங்களையும், பார்வைகளையும் புரட்டிவிடுவோம்; அவர்களுடைய வழிகேட்டிலேயே அவர்களைத் தட்டழிந்து திரியுமாறு விட்டு விடுவோம்.

الجزء ٨

وَلَوْ أَنَّنَا نَزَّلْنَآ إِلَيْهِمُ الْمَلٰٓئِكَةَ وَكَلَّمَهُمُ الْمَوْتٰى وَ
حَشَرْنَا عَلَيْهِمْ كُلَّ شَيْءٍ قُبُلًا مَّا كَانُوْا لِيُؤْمِنُوْٓا إِلَّآ أَنْ يَّشَآءَ
اللّٰهُ وَلٰكِنَّ أَكْثَرَهُمْ يَجْهَلُوْنَ ﴿١١١﴾ وَكَذٰلِكَ جَعَلْنَا لِكُلِّ نَبِيٍّ
عَدُوًّا شَيٰطِيْنَ الْإِنْسِ وَالْجِنِّ يُوْحِيْ بَعْضُهُمْ إِلٰى بَعْضٍ
زُخْرُفَ الْقَوْلِ غُرُوْرًا ط وَلَوْ شَآءَ رَبُّكَ مَا فَعَلُوْهُ فَذَرْهُمْ
وَمَا يَفْتَرُوْنَ ﴿١١٢﴾ وَلِتَصْغٰٓى إِلَيْهِ أَفْـِٕدَةُ الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ
بِالْاٰخِرَةِ وَلِيَرْضَوْهُ وَلِيَقْتَرِفُوْا مَا هُمْ مُّقْتَرِفُوْنَ ﴿١١٣﴾ أَفَغَيْرَ
اللّٰهِ أَبْتَغِيْ حَكَمًا وَّهُوَ الَّذِيْٓ أَنْزَلَ إِلَيْكُمُ الْكِتٰبَ مُفَصَّلًا ط
وَالَّذِيْنَ اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَعْلَمُوْنَ أَنَّهٗ مُنَزَّلٌ مِّنْ رَّبِّكَ
بِالْحَقِّ فَلَا تَكُوْنَنَّ مِنَ الْمُمْتَرِيْنَ ﴿١١٤﴾ وَتَمَّتْ كَلِمَتُ رَبِّكَ
صِدْقًا وَّعَدْلًا ط لَا مُبَدِّلَ لِكَلِمٰتِهٖ ج وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ﴿١١٥﴾
وَإِنْ تُطِعْ أَكْثَرَ مَنْ فِي الْأَرْضِ يُضِلُّوْكَ عَنْ سَبِيْلِ اللّٰهِ ط
إِنْ يَّتَّبِعُوْنَ إِلَّا الظَّنَّ وَإِنْ هُمْ إِلَّا يَخْرُصُوْنَ ﴿١١٦﴾ إِنَّ رَبَّكَ
هُوَ أَعْلَمُ مَنْ يَّضِلُّ عَنْ سَبِيْلِهٖ ج وَهُوَ أَعْلَمُ بِالْمُهْتَدِيْنَ ﴿١١٧﴾
فَكُلُوْا مِمَّا ذُكِرَ اسْمُ اللّٰهِ عَلَيْهِ إِنْ كُنْتُمْ بِاٰيٰتِهٖ مُؤْمِنِيْنَ ﴿١١٨﴾

111. இன்னும், (அவர்கள் கேட்டவாறு) நிச்சயமாக மலக்குகளை அவர்களிடம் நாம் இறக்கிவைத்தாலும், இறந்தோர் அவர்களிடம் பேசினாலும், ஒவ்வொரு பொருளையும் அவர்கள் (கண்) முன் கொண்டுவந்து ஒன்று சேர்த்தாலும்—அல்லாஹ் நாடினாலே தவிர அவர்கள் விசுவாசங் கொள்பவர்களாக இல்லை; அவர்களில் பெரும்பாலோர் அறியாதவர்களாகவே இருக்கின்றனர்.

112. மேலும், இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும், மனிதரிலும், ஜின்களிலும் உள்ள ஷைத்தான்களை விரோதியாக நாம் ஆக்கியிருந்தோம்; அவர்களில் சிலர் சிலருக்கு அலங்காரமான (பொய்க்) கூற்றுக்களை, ஏமாற்றுவதற்காக இரகசியமாக அறிவிக்கின்றனர்; மேலும், உம்முடைய இரட்சகன் நாடியிருந்தால் இவ்வாறு அவர்கள் செய்திருக்க மாட்டார்கள்; ஆகவே, (நபியே!) நீர் அவர்களையும் அவர்கள் கற்பனைசெய்துகொண்டிருப்பவைகளையும் விட்டுவிடுவீராக!

113. மறுமையை நம்பாதோரின் இதயங்கள் (ஷைத்தானின் அலங்காரமான பொய்க்கூற்றுக்களாகிய) அதற்குச் செவி சாய்ப்பதற்காகவும், அதனை அவர்கள் பொருந்திக் கொள்வதற்காகவும், அவர்கள் எதைச்செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்களோ அதனை அவர்கள் செய்வதற்காகவுமே (இவ்வாறு ஷைத்தான்கள் மயக்கி வந்தனர்).

114. "அல்லாஹ் அல்லாதவனையா தீர்ப்பாளனாக நான் தேடுவேன்? அவனே இவ்வேதத்தை விவரிக்கப்பட்டதாக உங்களுக்கு இறக்கி (அருளி)யிருக்கிறான்" (என்று நபியே! நீர் கூறுவீராக! இதற்கு முன்னர்) எவர்களுக்கு நாம் வேதம் கொடுத்திருக்கின்றோமோ அத்தகையவர்கள் , இது நிச்சயமாகவே உம் இரட்சகனிடமிருந்து உண்மையைக் கொண்டே இறக்கப்பட்டுள்ளது என்பதை உறுதியாக அவர்கள் அறிவார்கள். ஆகவே, சந்தேகப்படுவோரில் நிச்சயமாக நீர் (ஒருவராக) ஆகிவிடாதீர்.

115. மேலும், (நபியே!) உமதிரட்சகனின் வார்த்தைகள் (அவன் கூற்றுக்களில்) உண்மையாலும் (அவன் செயல்களில்) நீதத்தாலும் பூர்த்தியாகிவிட்டன; அவனுடைய வாக்குகளை மாற்றுவோர் எவருமில்லை. அவனே (யாவையும்) செவியேற்கிறவன்; நன்கறிகிறவன்.

116. மேலும், இப்புவியிலிருப்போரில் பெரும்பாலோருக்கு (அவர்களின் கூற்றை ஏற்று) நீர் கீழ்ப்படிந்து நடந்தால், அவர்கள் உம்மை அல்லாஹ்வுடைய பாதையிலிருந்து (திருப்பி) வழிகெடுத்து விடுவார்கள்; வெறும் யூகத்தைத் தவிர (வேறெதையும்) அவர்கள் பின் பற்றுவதில்லை; மேலும் அவர்கள் அனுமானம் செய்பவர்களே தவிர (வேறு)இல்லை.

117. (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன் தன் வழியைவிட்டும் தவறியவன் யார் என்பதை அவன் மிக்கஅறிந்தவன்; மேலும் நேர் வழியைப் பெற்றுவிட்டவர்களையும் அவன் மிக்க அறிந்தவன்.

118. ஆகவே, (விசுவாசிகளே!) நீங்கள் அவனுடைய வசனங்களை விசுவாசித்தவர்களாயிருந்தால், (அறுக்கும் பொழுது) எதன் மீது அல்லாஹ்வுடைய பெயர் கூறப்பட்டதோ அவற்றிலிருந்து நீங்கள் புசியுங்கள்.

وَمَا لَكُمْ اَلَّا تَاْكُلُوْا مِمَّا ذُكِرَ اسْمُ اللّٰهِ عَلَيْهِ وَقَدْ فَصَّلَ
لَكُمْ مَّا حَرَّمَ عَلَيْكُمْ اِلَّا مَا اضْطُرِرْتُمْ اِلَيْهِ ؕ وَاِنَّ كَثِيْرًا
لَّيُضِلُّوْنَ بِاَهْوَآئِهِمْ بِغَيْرِ عِلْمٍ ؕ اِنَّ رَبَّكَ هُوَ اَعْلَمُ
بِالْمُعْتَدِيْنَ ﴿۱۱۹﴾ وَذَرُوْا ظَاهِرَ الْاِثْمِ وَبَاطِنَهٗ ؕ اِنَّ الَّذِيْنَ
يَكْسِبُوْنَ الْاِثْمَ سَيُجْزَوْنَ بِمَا كَانُوْا يَقْتَرِفُوْنَ ﴿۱۲۰﴾ وَلَا تَاْكُلُوْا
مِمَّا لَمْ يُذْكَرِ اسْمُ اللّٰهِ عَلَيْهِ وَاِنَّهٗ لَفِسْقٌ ؕ وَاِنَّ الشَّيٰطِيْنَ
لَيُوْحُوْنَ اِلٰٓى اَوْلِيٰٓـِٕهِمْ لِيُجَادِلُوْكُمْ ۚ وَاِنْ اَطَعْتُمُوْهُمْ اِنَّكُمْ
لَمُشْرِكُوْنَ ﴿۱۲۱﴾ ع اَوَمَنْ كَانَ مَيْتًا فَاَحْيَيْنٰهُ وَجَعَلْنَا لَهٗ نُوْرًا ع ١٤
يَّمْشِيْ بِهٖ فِى النَّاسِ كَمَنْ مَّثَلُهٗ فِى الظُّلُمٰتِ لَيْسَ بِخَارِجٍ
مِّنْهَا ؕ كَذٰلِكَ زُيِّنَ لِلْكٰفِرِيْنَ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۲۲﴾ وَكَذٰلِكَ
جَعَلْنَا فِىْ كُلِّ قَرْيَةٍ اَكٰبِرَ مُجْرِمِيْهَا لِيَمْكُرُوْا فِيْهَا ؕ وَمَا
يَمْكُرُوْنَ اِلَّا بِاَنْفُسِهِمْ وَمَا يَشْعُرُوْنَ ﴿۱۲۳﴾ وَاِذَا جَآءَتْهُمْ
اٰيَةٌ قَالُوْا لَنْ نُّؤْمِنَ حَتّٰى نُؤْتٰى مِثْلَ مَاۤ اُوْتِىَ رُسُلُ اللّٰهِ ؔ ؕ وقف لازم / وقف منزل
اَللّٰهُ اَعْلَمُ حَيْثُ يَجْعَلُ رِسَالَتَهٗ ؕ سَيُصِيْبُ الَّذِيْنَ اَجْرَمُوْا
صَغَارٌ عِنْدَ اللّٰهِ وَعَذَابٌ شَدِيْدٌۢ بِمَا كَانُوْا يَمْكُرُوْنَ ﴿۱۲۴﴾

119. எதன்பக்கம் நீங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டவர்களாகி விட்டீர்களோ அதைத் தவிர, எதை உங்களின் மீது அவன் தடுத்து (ஹராமாக்கி உ)ள்ளானோ அதை அவன் உங்களுக்குத் திட்டமாக தெளிவு செய்திருக்க, எவற்றின் மீது (அறுக்கும் பொழுது) அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்டதோ அவற்றிலிருந்து நீங்கள் புசிக்காதிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? மேலும், நிச்சயமாக (மனிதர்களில்) பெரும்பாலோர் அறிவின்றியே தங்கள் மன இச்சைகளின்படியெல்லாம் (மக்களை) உறுதியாகவே வழி கெடுத்துவிடுகிறார்கள் (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன்_அவனே வரம்பு மீறியவர்களை மிக்க அறிந்தவன்.

120. (விசுவாசிகளே!) நீங்கள் பாவத்தில் வெளிப்படையானதையும், அதில் , இரகசியமானதையும் விட்டு விடுங்கள்; (ஏனென்றால்) நிச்சயமாக பாவத்தைச் சம்பாதிக்கின்றனரே அத்தகையோர்_ தாங்கள் சம்பாதித்தவற்றுக்கு (மறுமையில்) அவர்கள் கூலி கொடுக்கப்படுவார்கள்.

121. மேலும், (விசுவாசிகளே! அறுக்கும் பொழுது) எதன் மீது அல்லாஹ்வுடைய பெயர் கூறப்படவில்லையோ அதிலிருந்து நீங்கள் புசிக்காதீர்கள்; இன்னும் நிச்சயமாக அது பாவமாகும்; (இதில்) உங்களுடன் தர்க்கிக்குமாறு, நிச்சயமாக ஷைத்தான்கள் தங்களுடைய நண்பர்களைத் தூண்டுகின்றனர்; நீங்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தும்விட்டால், நிச்சயமாக நீங்கள் (அவர்களைப் போல்) இணைவைப்பவர்கள்(ஆவீர்கள்).

122. மரணித்தவனாக இருந்த ஒருவன்; பின்னர் நாம் அவனை உயிர்ப்பித்து, அவனுக்கு பிரகாசத்தையும் நாம் ஆக்கினோம்; அதன் மூலம் மனிதர்களிடையே நடக்கின்ற அவன் (குப்ர் எனும்) இருள்களில் (சிக்கி) அதிலிருந்து வெளியேற முடியாதிருக்கிறவனைப் போன்ற(வனுக்குச் சமமான)வனா? (ஒருபோதும் இல்லை.) இவ்வாறே நிராகரிப்போருக்கு அவர்கள் செய்துவந்த (தீய) செயல்கள் அலங்காரமாக்கப்பட்டு விட்டன.

123. இன்னும், இவ்வாறே ஒவ்வோர் ஊரிலும், அதில் (உள்ள) குற்றச் செயல்களைப் புரிந்து வருபவர்களில் தலைவர்களை அதில் அவர்கள் சூழ்ச்சி செய்வதற்காக நாம் ஆக்கியிருந்தோம்; மேலும், அவர்கள் தங்களுக்கே தவிர (மற்றெவருக்கும்)சதி செய்வதில்லை. (இதனை) அவர்கள் உணர்ந்து கொள்வது மில்லை.

124. இன்னும், அவர்களிடம் ஏதாவதொரு வசனம் வந்தால், "அல்லாஹ்வினுடைய தூதர்களுக்குக் கொடுக்கப்பட்டது போன்றதை நாங்கள் கொடுக்கப்படாத வரை, நாங்கள் (அதனை) விசுவாசங்கொள்ள மாட்டோம்" என்று கூறுகின்றனர்; அல்லாஹ் தன்னுடைய தூதுத்துவத்தை எங்கு (எவருக்கு) ஆக்குவது என்பதை மிக்க அறிந்தவன்; குற்றம் செய்துகொண்டிருந்தோரை _அவர்கள் சதி செய்து கொண்டிருந்த காரணத்தால்_ அல்லாஹ்விடமிருந்து சிறுமையும், கொடிய வேதனையும் வந்தடையும்.

فَمَنْ يُّرِدِ اللّٰهُ اَنْ يَّهْدِيَهٗ يَشْرَحْ صَدْرَهٗ لِلْاِسْلَامِۚ
وَمَنْ يُّرِدْ اَنْ يُّضِلَّهٗ يَجْعَلْ صَدْرَهٗ ضَيِّقًا حَرَجًا كَاَنَّمَا
يَصَّعَّدُ فِي السَّمَآءِؕ كَذٰلِكَ يَجْعَلُ اللّٰهُ الرِّجْسَ عَلَى الَّذِيْنَ
لَا يُؤْمِنُوْنَ ﴿۱۲۵﴾ وَهٰذَا صِرَاطُ رَبِّكَ مُسْتَقِيْمًاؕ قَدْ فَصَّلْنَا
الْاٰيٰتِ لِقَوْمٍ يَّذَّكَّرُوْنَ ﴿۱۲۶﴾ لَهُمْ دَارُ السَّلٰمِ عِنْدَ رَبِّهِمْ
وَهُوَ وَلِيُّهُمْ بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۲۷﴾ وَيَوْمَ يَحْشُرُهُمْ
جَمِيْعًاۚ يٰمَعْشَرَ الْجِنِّ قَدِ اسْتَكْثَرْتُمْ مِّنَ الْاِنْسِۚ وَقَالَ
اَوْلِيٰٓؤُهُمْ مِّنَ الْاِنْسِ رَبَّنَا اسْتَمْتَعَ بَعْضُنَا بِبَعْضٍ وَّبَلَغْنَآ
اَجَلَنَا الَّذِيْٓ اَجَّلْتَ لَنَاؕ قَالَ النَّارُ مَثْوٰىكُمْ خٰلِدِيْنَ
فِيْهَآ اِلَّا مَا شَآءَ اللّٰهُؕ اِنَّ رَبَّكَ حَكِيْمٌ عَلِيْمٌ ﴿۱۲۸﴾ وَكَذٰلِكَ
نُوَلِّيْ بَعْضَ الظّٰلِمِيْنَ بَعْضًا بِمَا كَانُوْا يَكْسِبُوْنَ ﴿۱۲۹﴾ ع ١٥ ٨ ٢
يٰمَعْشَرَ الْجِنِّ وَالْاِنْسِ اَلَمْ يَاْتِكُمْ رُسُلٌ مِّنْكُمْ
يَقُصُّوْنَ عَلَيْكُمْ اٰيٰتِيْ وَيُنْذِرُوْنَكُمْ لِقَآءَ يَوْمِكُمْ
هٰذَاؕ قَالُوْا شَهِدْنَا عَلٰٓى اَنْفُسِنَا وَغَرَّتْهُمُ الْحَيٰوةُ
الدُّنْيَا وَشَهِدُوْا عَلٰٓى اَنْفُسِهِمْ اَنَّهُمْ كَانُوْا كٰفِرِيْنَ ﴿۱۳۰﴾

125. ஆகவே அல்லாஹ் எவருக்கு நேர்வழிகாட்ட நாடுகிறானோ அவருடைய நெஞ்சை, இஸ்லாத்திற்காக (அதை ஏற்றுக் கொள்ள) அவன் விரிவாக்குகின்றான்; இன்னும் எவரை (அவருடைய) வழிகேட்டிலேயே விட்டுவிட அவன் நாடுகிறானோ அவருடைய நெஞ்சத்தை – அவர் வானத்தில் ஏறுபவரைப்போன்று நெருக்கடியானதாக, மிகக்கஷ்டமடைந்ததாக ஆக்கி விடுகிறான்; இவ்வாறே விசுவாசங் கொள்ளாதவர்கள் மீது வேதனையை அல்லாஹ் ஆக்குகிறான்.

126. மேலும்,(நபியே!) நேரானதாக இருக்க இதுவே உமதிரட்சகனின் வழியாகும்; (அத்தாட்சிகளை சிந்தித்து) நினைவு கூரும் கூட்டத்தார்க்கு (நம்முடைய) வசனங்களை நிச்சயமாக நாம் விவரித்திருக்கின்றோம்.

127. அவர்களுக்காக, அவர்கள் இரட்சகனிடத்தில் (சொர்க்கமாகிய) சாந்தி இல்லம் உண்டு; அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றின் காரணமாக அவனே அவர்களுக்குப்பாதுகாவலன்.

128. மேலும், அவர்கள் யாவரையும் அவன் ஒன்று திரட்டும் (மறுமை) நாளில், (ஜின் கூட்டத்தாரிடம்,) "ஜின் கூட்டத்தாரே! நீங்கள் மனிதர்களிலிருந்து (அநேகரைக் கெடுத்துஉங்கள் வழி நடப்போரை) நீங்கள் அதிகப்படுத்திக் கொண்டீர்கள். (அல்லவா?" என்று கேட்பான். அதற்கு) மனிதர்களில் உள்ள அவர்களின் நண்பர்கள், " எங்கள் இரட்சகனே! எங்களில் சிலர் (மாறு செய்த) சிலரைக் கொண்டு பயனடைந்திருக்கின்றனர்; எங்களுக்கு நீ ஏற்படுத்திய காலத்தை நாங்கள் அடைந்தும்விட்டோம் " என்று கூறுவார்கள்; (அதற்கு அல்லாஹ்,) "நரகந்தான் உங்கள் தங்குமிடம்; அல்லாஹ் நாடினாலன்றி அதில் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்" என்று (அல்லாஹ்வாகிய) அவன்கூறுவான்; (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன் தீர்க்கமான அறிவுடையவன்; நன்கறிகிறவன்.

129. இவ்வாறே அநியாயக்காரர்களில் சிலரை மற்றும் சிலருக்கு – அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்த(தீய)செயல்களின் காரணமாக நாம் சேர்த்து (நண்பர்களாக்கியு)ம்விடுவோம்.

130. "ஜின் இன, மனித இன வர்க்கத்தாரே! என்னுடைய வசனங்களை உங்களுக்கு ஓதிக் காண்பித்து, உங்களுடைய இந்நாளின் சந்திப்பைப்பற்றியும் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் தூதர்கள் உங்களிலிருந்தே உங்களுக்கு வரவில்லையா?" (என்று கேட்பான்.) அ(தற்க)வர்கள், " எங்கள் இரட்சகனே! நாங்களே எங்களுக்கு எதிராக சாட்சி கூறுகிறோம்" என்று கூறுவார்கள்; உலக வாழ்க்கை அவர்களை மயக்கி (ஏமாற்றி) யும் விட்டது; நிச்சயமாக அவர்கள் நிராகரிப்பவர்களாக இருந்தார்கள் என தங்களுக்கு பாதகமாக அவர்கள் சாட்சியும் கூறுவர்.

ذٰلِكَ اَنْ لَّمْ يَكُنْ رَّبُّكَ مُهْلِكَ الْقُرٰى بِظُلْمٍ وَّاَهْلُهَا
غٰفِلُوْنَ ﴿١٣١﴾ وَلِكُلٍّ دَرَجٰتٌ مِّمَّا عَمِلُوْا ۭ وَمَا رَبُّكَ
بِغَافِلٍ عَمَّا يَعْمَلُوْنَ ﴿١٣٢﴾ وَرَبُّكَ الْغَنِيُّ ذُو الرَّحْمَةِ ۭ
اِنْ يَّشَاْ يُذْهِبْكُمْ وَيَسْتَخْلِفْ مِنْۢ بَعْدِكُمْ مَّا يَشَاۗءُ كَمَآ
اَنْشَاَكُمْ مِّنْ ذُرِّيَّةِ قَوْمٍ اٰخَرِيْنَ ﴿١٣٣﴾ ۭ اِنَّ مَا تُوْعَدُوْنَ
لَاٰتٍ ۙ وَّمَآ اَنْتُمْ بِمُعْجِزِيْنَ ﴿١٣٤﴾ قُلْ يٰقَوْمِ اعْمَلُوْا عَلٰي
مَكَانَتِكُمْ اِنِّىْ عَامِلٌ ۚ فَسَوْفَ تَعْلَمُوْنَ ۙ مَنْ تَكُوْنُ لَهٗ
عَاقِبَةُ الدَّارِ ۭ اِنَّهٗ لَا يُفْلِحُ الظّٰلِمُوْنَ ﴿١٣٥﴾ وَجَعَلُوْا لِلّٰهِ
مِمَّا ذَرَاَ مِنَ الْحَرْثِ وَالْاَنْعَامِ نَصِيْبًا فَقَالُوْا
هٰذَا لِلّٰهِ بِزَعْمِهِمْ وَهٰذَا لِشُرَكَاۗىِٕنَا ۚ فَمَا كَانَ
لِشُرَكَاۗىِٕهِمْ فَلَا يَصِلُ اِلَى اللّٰهِ ۚ وَمَا كَانَ لِلّٰهِ فَهُوَ
يَصِلُ اِلٰى شُرَكَاۗىِٕهِمْ ۭ سَاۗءَ مَا يَحْكُمُوْنَ ﴿١٣٦﴾ وَكَذٰلِكَ
زَيَّنَ لِكَثِيْرٍ مِّنَ الْمُشْرِكِيْنَ قَتْلَ اَوْلَادِهِمْ
شُرَكَاۗؤُهُمْ لِيُرْدُوْهُمْ وَلِيَلْبِسُوْا عَلَيْهِمْ دِيْنَهُمْ ۭ
وَلَوْ شَاۗءَ اللّٰهُ مَا فَعَلُوْهُ فَذَرْهُمْ وَمَا يَفْتَرُوْنَ ﴿١٣٧﴾

131. (நபியே! )இ(வ்வாறு நபிமார்களை அனுப்புவ)து எவ்வூராரையும் அவர்கள் பராமுகமானவர்களாக இருக்கும் சமயத்தில், (அவர்களுக்கு எச்சரிக்கை செய்யாமல் ) அநியாயமாக அவர்களை அழிப்பவனாக உமதிரட்சகன் இருக்கவில்லை என்பதால்தான்.

132. (நபியே! அவர்கள்) ஒவ்வொருவருக்கும், அவர்களின் செயல்களுக்குத் தக்க பதவிகளும் உண்டு; அவர்கள் செயல்களைப்பற்றி உம்முடைய இரட்சகன் பராமுகமானவனாகவும் இல்லை.

133. மேலும், (நபியே!) உமதிரட்சகன், (படைப்புகளைவிட்டும்) தேவையற்றவன்; நிகரற்ற அருளுடையவன்; (மனிதர்களே!) அவன் நாடினால், உங்களை அவன் போக்கிவிடுவான். மேலும், வேறு சமூகத்தவர்களின் சந்ததியிலிருந்து உங்களை அவன் உற்பத்தி செய்தது போன்று தான் நாடியவரை (உங்களுடைய இடத்தில்) உங்களுக்குப்பிறகு அவன் பகரமாக்கி விடுவான்.

134. நிச்சயமாக நீங்கள் வாக்களிக்கப்படுவது (மறுமை நாளானது ) உறுதியாக வந்தே தீரும்; நீங்கள் (அதைத் தடுத்து) அல்லாஹ்வை இயலாமையிலாக்கி (மிகைத்து)விடக் கூடியவர்களும் அல்லர்.

135. (நபியே! அவர்களிடம்,) நீர் கூறுவீராக! என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் உங்கள் வழி வகையின்படி ( உங்கள்) காரியங்களைச் செய்து கொண்டே இருங்கள்; நிச்சயமாக நானும் (என் வழி வகையின்படி என் காரியங்களைச்) செய்து கொண்டிருப்பேன்; இம்மையின் முடிவு எவருக்குச் சாதகமாயிருக்கின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்; நிச்சயமாக அநியாயக்காரர்கள் வெற்றி பெற மாட்டார்கள்.

136. மேலும், விளைச்சல், இன்னும் (ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால் நடைகள் ஆகியவற்றில் அவன் உற்பத்தி செய்தவற்றிலிருந்து ஒரு பாகத்தை அல்லாஹ்வுக்கென ஆக்கிவிட்டுப்பிறகு அவர்கள் எண்ணப்படி இது, அல்லாஹ்விற்குரியது( என்றும், மற்றொரு பாகத்தை) இது எங்களுடைய இணையாளர்களுக்குரியது என்றும் கூறுகிறார்கள்; அவர்களின் இணையாளர்களுக்கு என இருந்த (பாகத்திலிருந்து) எதுவும் அல்லாஹ்வின்பால் சேருவதில்லை; அல்லாஹ்வுக்காக உரிய (பங்கான)து தங்களது இணையாளர்கள்பால் சேரும் என்ற அவர்கள் (வணக்க வழிபாடுகளை இவ்வாறு அல்லாஹ்விற்கும் அவனுடன் மற்றவர்களுக்கும் கூட்டாக்கிக் கூறிவந்த) தீர்ப்பு கெட்டது.

137. (விளைச்சல்,மற்றும் கால் நடைகளிலிருந்து, ஒரு பாகத்தை தங்களது இணையாளர்களான ஷைத்தான்களுக்கு ஆக்கிவிடுவதை அழகாகக் காட்டியது போன்ற) அவ்வாறே இணைவைப்போரில் அதிகமானவர்களுக்கு, அவர்களின் குழந்தைகளைக் கொன்றுவிடுவதை, அவர்களின் இணையாளர்க( ளான ஷைத்தான் )கள், அவர்களை அழித்து விடுவதற்காகவும், அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்குக் குழப்பிவிடுவதற்காகவும் அழகாக்கி வைத்துள்ளனர்; இன்னும், அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் இவ்வாறு செய்திருக்க மாட்டார்கள்; ஆகவே, (நபியே!) நீர் அவர்களையும், அவர்களுடைய பொய்க் கூற்றுக்களையும் விட்டுவிடுவீராக.

وَقَالُوْا هٰذِهٖٓ اَنْعَامٌ وَّحَرْثٌ حِجْرٌ ۖ لَّا يَطْعَمُهَآ اِلَّا مَنْ
نَّشَآءُ بِزَعْمِهِمْ وَاَنْعَامٌ حُرِّمَتْ ظُهُوْرُهَا وَاَنْعَامٌ
لَّا يَذْكُرُوْنَ اسْمَ اللّٰهِ عَلَيْهَا افْتِرَآءً عَلَيْهِ ؕ سَيَجْزِيْهِمْ
بِمَا كَانُوْا يَفْتَرُوْنَ ﴿١٣٨﴾ وَقَالُوْا مَا فِيْ بُطُوْنِ هٰذِهِ الْاَنْعَامِ
خَالِصَةٌ لِّذُكُوْرِنَا وَمُحَرَّمٌ عَلٰٓى اَزْوَاجِنَا ۚ وَاِنْ يَّكُنْ
مَّيْتَةً فَهُمْ فِيْهِ شُرَكَآءُ ؕ سَيَجْزِيْهِمْ وَصْفَهُمْ ؕ اِنَّهٗ حَكِيْمٌ
عَلِيْمٌ ﴿١٣٩﴾ قَدْ خَسِرَ الَّذِيْنَ قَتَلُوْٓا اَوْلَادَهُمْ سَفَهًا ۢ
بِغَيْرِ عِلْمٍ وَّحَرَّمُوْا مَا رَزَقَهُمُ اللّٰهُ افْتِرَآءً عَلَى اللّٰهِ ؕ
قَدْ ضَلُّوْا وَمَا كَانُوْا مُهْتَدِيْنَ ﴿١٤٠﴾ ع وَهُوَ الَّذِيْٓ اَنْشَاَ (ع ١٦ ٣)
جَنّٰتٍ مَّعْرُوْشٰتٍ وَّغَيْرَ مَعْرُوْشٰتٍ وَّالنَّخْلَ وَالزَّرْعَ
مُخْتَلِفًا اُكُلُهٗ وَالزَّيْتُوْنَ وَالرُّمَّانَ مُتَشَابِهًا وَّغَيْرَ
مُتَشَابِهٍ ؕ كُلُوْا مِنْ ثَمَرِهٖٓ اِذَآ اَثْمَرَ وَاٰتُوْا حَقَّهٗ يَوْمَ
حَصَادِهٖ ۖ وَلَا تُسْرِفُوْا ؕ اِنَّهٗ لَا يُحِبُّ الْمُسْرِفِيْنَ ﴿١٤١﴾ لا وَ
مِنَ الْاَنْعَامِ حَمُوْلَةً وَّفَرْشًا ؕ كُلُوْا مِمَّا رَزَقَكُمُ اللّٰهُ وَ
لَا تَتَّبِعُوْا خُطُوٰتِ الشَّيْطٰنِ ؕ اِنَّهٗ لَكُمْ عَدُوٌّ مُّبِيْنٌ ﴿١٤٢﴾ لا

138. மேலும், இது(நேர்ச்சைக்காக )தடுக்கப்பட்ட கால்நடைகளும், விவசாயமுமாகும்; நாங்கள் விரும்புகின்ற ( புரோகிதர் முதலிய)வர்களைத் தவிர (மற்றெவரும்) அதனைப் புசிக்கக் கூடாது என்று (தங்கள் தவறான எண்ணப்படி) அவர்கள் கூறுகின்றனர்; இன்னும், (அவ்வாறே வேறு) சில கால் நடைகள்_ அவற்றின் முதுகுகள் (அவற்றின்மீது சவாரிசெய்தல்,சுமை ஏற்றுதல்) தடுக்கப்பட்டிருக்கின்றன; என்றும், இன்னும் சில கால்நடைகள்( அவற்றை அறுக்கும் பொழுது) அவற்றின் மீது அல்லாஹ்வின் பெயரைக் கூறக் கூடாதென்றும் அவனின் மீது கற்பனையாகக்கூறுகின்றனர்; அவர்கள் கற்பனையாகக் கூறியதன் காரணமாக நிச்சயமாக (அல்லாஹ்வாகிய) அவன் அவர்களுக்குக் கூலி கொடுப்பான்.

139. இன்னும், அவர்கள் (வேறு சிலவற்றைக் குறிப்பிட்டு) " இக் கால் நடைகளின் வயிறுகளிலிருப்பவை, எங்களுடைய ஆண்களுக்கு (மட்டும்) சொந்தமானவையாகும்; எங்களுடைய மனைவியரின் மீது (அவையோ) தடுக்கப்பட்டுமிருக்கின்றன; மேலும், அவை செத்து(ப் பிறந்து)இருந்தால் அதில் அவர்கள் கூட்டுக்காரர் களாவர்;" என்றும் கூறுகின்றனர்; ஆகவே, அவர்களுடைய (பொய்யான) வர்ணனைக்காக, (அல்லாஹ்வாகிய) அவன் அவர்களுக்குக்கூலி கொடுப்பான். நிச்சயமாக அவன் தீர்க்கமான அறிவுடையவன்; (யாவற்றையும்) நன்கறிகிறவன்.

140. அறிவின்றி மடமையினால் தங்கள் (பெண்) மக்களைக் கொலை செய்தார்களே அவர்களும், அல்லாஹ் தங்களுக்கு(ப் புசிக்க)க் கொடுத்திருந்த (நல்ல)வற்றை, (ஆகாதென) அல்லாஹ்வின் மீது கற்பனையாகக்கூறி விலக்கிக் கொண்டார்களே அவர்களும், நிச்சயமாக நஷ்டமடைந்து விட்டார்கள். (ஆகவே,) திட்டமாக அவர்கள் வழி கெட்டு விட்டனர்; அவர்கள் நேர் வழி பெற்றவர்களாக இருக்கவுமில்லை.

141. மேலும், (திராட்சை போன்ற பந்தலின் மீது) படரவிடப்பட்ட தோட்டங்களையும், இன்னும் படரவிடப்படாதவைகளையும், இன்னும் பேரீத்த மரங்களையும், புசிக்க விதவிதமான (காய்கறி, தானியங்கள் போன்றவை உருவாகும்) விவசாயத்தையும்,(அதன் தோற்றத்தில்) ஒன்று போலும், (சுவையில்) ஒன்றுபோல் இல்லாததுமான (ஒலிவம்) ஜைத்தூனையும், மாதுளையையும், அவனே படைத்திருக்கிறான்; ஆகவே அவை(பருவ காலத்தில்) பலன் தந்தால், அவற்றின் கனியிலிருந்து ( தாராளமாக)ப் புசியுங்கள்; அவற்றை அறுவடை செய்யும் நாளில்(ஏழைகளுக்கு, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காக,) அதில் அதனுடைய பாகத்தையும் கொடுத்து விடுங்கள்; இன்னும்,(வீண்) விரயம் செய்யாதீர்கள்; வீண் விரயம் செய்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்க மாட்டான்.

142. இன்னும், கால் நடைகளில் சிலவற்றை சுமை சுமப்பதற்காகவும், ( மற்ற சிலவற்றை ) உணவுக்காகவும் (அவனே படைத்திருக்கிறான்; ஆகவே,) அல்லாஹ் உங்களுக்கு அளித்ததிலிருந்து நீங்கள் புசியுங்கள்; (இதில்) ஷைத்தானுடைய அடிச்சுவடுகளையும் பின்பற்றாதீர்கள்; நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான விரோதியாவான்.

ثَمٰنِيَةَ اَزْوَاجٍ ۚ مِنَ الضَّاْنِ اثْنَيْنِ وَمِنَ الْمَعْزِ اثْنَيْنِ ؕ
قُلْ ءٰٓالذَّكَرَيْنِ حَرَّمَ اَمِ الْاُنْثَيَيْنِ اَمَّا اشْتَمَلَتْ عَلَيْهِ
اَرْحَامُ الْاُنْثَيَيْنِ ؕ نَبِّـُٔوْنِىْ بِعِلْمٍ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ۙ ﴿١٤٣﴾
وَمِنَ الْاِبِلِ اثْنَيْنِ وَمِنَ الْبَقَرِ اثْنَيْنِ ؕ قُلْ ءٰٓالذَّكَرَيْنِ
حَرَّمَ اَمِ الْاُنْثَيَيْنِ اَمَّا اشْتَمَلَتْ عَلَيْهِ اَرْحَامُ الْاُنْثَيَيْنِ ؕ
اَمْ كُنْتُمْ شُهَدَآءَ اِذْ وَصّٰىكُمُ اللّٰهُ بِهٰذَا ۚ فَمَنْ اَظْلَمُ مِمَّنِ
افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا لِّيُضِلَّ النَّاسَ بِغَيْرِ عِلْمٍ ؕ اِنَّ اللّٰهَ لَا
يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ ﴿١٤٤﴾ قُلْ لَّاۤ اَجِدُ فِىْ مَاۤ اُوْحِىَ اِلَىَّ ١٧ ع ٢
مُحَرَّمًا عَلٰى طَاعِمٍ يَّطْعَمُهٗۤ اِلَّاۤ اَنْ يَّكُوْنَ مَيْتَةً اَوْ
دَمًا مَّسْفُوْحًا اَوْ لَحْمَ خِنْزِيْرٍ فَاِنَّهٗ رِجْسٌ اَوْ فِسْقًا
اُهِلَّ لِغَيْرِ اللّٰهِ بِهٖ ۚ فَمَنِ اضْطُرَّ غَيْرَ بَاغٍ وَّلَا عَادٍ فَاِنَّ
رَبَّكَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿١٤٥﴾ وَعَلَى الَّذِيْنَ هَادُوْا حَرَّمْنَا كُلَّ
ذِىْ ظُفُرٍ ۚ وَمِنَ الْبَقَرِ وَالْغَنَمِ حَرَّمْنَا عَلَيْهِمْ شُحُوْمَهُمَاۤ
اِلَّا مَا حَمَلَتْ ظُهُوْرُهُمَاۤ اَوِ الْحَوَايَاۤ اَوْ مَا اخْتَلَطَ
بِعَظْمٍ ؕ ذٰلِكَ جَزَيْنٰهُمْ بِبَغْيِهِمْ ۖ وَاِنَّا لَصٰدِقُوْنَ ﴿١٤٦﴾

143. (நபியே! புசிக்கக் கூடிய ஆடு, மாடு, ஒட்டகம் முதலியவற்றில்) எட்டு ஜோடிகளை (அல்லாஹ் படைத்துள்ளான். அவையாவன :) செம்மறியாட்டில் (ஆண், பெண்) இரண்டு. மற்றும் வெள்ளாட்டில்( ஆண்,பெண்) இரண்டு. (ஆகவே இவற்றில்) இரு இன ஆண்களையா அல்லது இரு இனப்பெண்களையா; அல்லது இரு பெண்ணினங்களுடைய கர்ப்பங்கள் எதனை உள்ளடக்கிவைத்திருக்கின்றனவோ அவற்றையா (அல்லாஹ்வாகிய) அவன் தடுத்திருக்கின்றான்? நீங்கள் உண்மை சொல்பவர்களாயின், அறிவுடன் (இதனை) நீங்கள் எனக்கு அறிவியுங்கள்"(என நீர் கேட்பீராக).

144. இன்னும், ஒட்டகையில்(ஆண்,பெண்) இரண்டு , மற்றும் மாட்டில் (ஆண்,பெண்) இரண்டு (ஆகிய இவற்றையும் அல்லாஹ்வாகிய அவன்தான் படைத்தான்). "இரு இன ஆண்களையா; அல்லது இரு இனப்பெண்களையா; அல்லது இரு பெண்ணினங்களுடைய கர்ப்பங்கள் எதனை உள்ளடக்கிவைத்திருக்கின்றனவோ அவற்றையா (அல்லாஹ்வாகிய) அவன் தடுத்திருக்கின்றான்?" என்று (நபியே!) நீர் கேட்பீராக! இவ்வாறு (தடுத்து) அல்லாஹ் உங்களுக்கு (கட்டளையிட்டதாகக் கூறுகின்றீர்களே, அவ்வாறு அவன்) கட்டளையிட்ட சமயம் நீங்களும் பிரசன்னமாகி இருந்தீர்களா?" (என்றும் நபியே! நீர் அவர்களைக் கேட்பீராக!) அறிவின்றி மனிதர்களை வழி கெடுப்பதற்காக அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனை செய்பவனைவிட மிகுந்த அநியாயக்காரன் யார்? நிச்சயமாக அல்லாஹ் (இத்தகைய) அநியாயக்காரச் சமூகத்தவருக்கு நேர் வழி காட்டமாட்டான்.

145. செத்தவையாக அல்லது ஓடும் இரத்தமாக, அல்லது பன்றியின் மாமிசமாக இருந்தாலல்லாது, உண்ணுபவருக்கு அதை உண்ணத் தடை செய்யப்பட்டதாக எனக்குவஹீ மூலம் அறிவிக்கப்பட்டவற்றில் நான் காணவில்லை; _ காரணம் நிச்சயமாக அவை அசுத்தமானவையாகும்_ அல்லது அதை அல்லாஹ் அல்லாதவருக்காக பெயர் கூறப்பட்ட பாவமானதையும் தவிர; (வேறு ஏதும் தடுக்கப்பட்டதாக எனக்கு அறிவிக்கப்பட்ட வற்றில் நான் காணவில்லை). ஆகவே, வரம்பை மீறாதவராகவும், பாவம் செய்யாதவராகவும், எவரேனும் நிர்ப்பந்திக்கப்பட்டு (புசித்து)விட்டால்,அப்போது (அது அவர்மீது குற்றமல்ல. காரணம்)நிச்சயமாக உம்முடைய இரட்சகன் மிக்க மன்னிப்பவன்; மிகக்கிருபையுடையவன்.

146. (நபியே! விரல்கள் பிளந்த) நகத்தையுடைய அனைத்தையும் (புசிக்கக் கூடாதென்று) யூதர்களாக இருந்தவர்கள் மீது நாம் தடுத்திருந்தோம்; இன்னும் மாடு,ஆடு ஆகியவற்றில் இருந்து அவ்விரண்டின் கொழுப்புகளையும் அவர்கள் மீது தடுத்திருந்தோம்_அவை இரண்டின் முதுகுகள் சுமந்துகொண்டிருப்பதையும் அல்லது அவ்விரண்டின் (வயிற்றினுள்) சிறு குடல்கள் (மீது சுற்றப்பட்டு) சுமந்து கொண்டிருப்பதையும் அல்லது எலும்போடு கலந்திருப்பதையும் தவிர (மற்றவைகளை அவர்கள் உண்ணலாகாது)அது (ஏனெனில்) அவர்கள் (நமக்கு) மாறுசெய்ததன் காரணமாக அவர்களுக்கு நாம் கூலி கொடுத்(து தண்டித்)தோம்; இன்னும் நிச்சயமாக நாம் (அவற்றை அவர்களுக்கு தடுத்து விட்டதுபற்றிய விஷயத்தில்) உண்மையாளராவோம்.

فَاِنْ كَذَّبُوْكَ فَقُلْ رَّبُّكُمْ ذُوْ رَحْمَةٍ وَّاسِعَةٍ ۚ وَلَا يُرَدُّ
بَاْسُهٗ عَنِ الْقَوْمِ الْمُجْرِمِيْنَ ﴿١٤٧﴾ سَيَقُوْلُ الَّذِيْنَ اَشْرَكُوْا
لَوْ شَآءَ اللّٰهُ مَآ اَشْرَكْنَا وَلَآ اٰبَآؤُنَا وَلَا حَرَّمْنَا مِنْ شَيْءٍ ؕ
كَذٰلِكَ كَذَّبَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ حَتّٰى ذَاقُوْا بَاْسَنَا ؕ
قُلْ هَلْ عِنْدَكُمْ مِّنْ عِلْمٍ فَتُخْرِجُوْهُ لَنَا ؕ اِنْ تَتَّبِعُوْنَ
اِلَّا الظَّنَّ وَاِنْ اَنْتُمْ اِلَّا تَخْرُصُوْنَ ﴿١٤٨﴾ قُلْ فَلِلّٰهِ الْحُجَّةُ الْبَالِغَةُ ۚ
فَلَوْ شَآءَ لَهَدٰىكُمْ اَجْمَعِيْنَ ﴿١٤٩﴾ قُلْ هَلُمَّ شُهَدَآءَكُمُ
الَّذِيْنَ يَشْهَدُوْنَ اَنَّ اللّٰهَ حَرَّمَ هٰذَا ۚ فَاِنْ شَهِدُوْا
فَلَا تَشْهَدْ مَعَهُمْ ۚ وَلَا تَتَّبِعْ اَهْوَآءَ الَّذِيْنَ كَذَّبُوْا
بِاٰيٰتِنَا وَالَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ بِالْاٰخِرَةِ وَهُمْ بِرَبِّهِمْ
يَعْدِلُوْنَ ﴿١٥٠﴾ ع قُلْ تَعَالَوْا اَتْلُ مَا حَرَّمَ رَبُّكُمْ عَلَيْكُمْ اَلَّا ع ١٨ ٥
تُشْرِكُوْا بِهٖ شَيْئًا وَّبِالْوَالِدَيْنِ اِحْسَانًا ۚ وَلَا تَقْتُلُوْٓا
اَوْلَادَكُمْ مِّنْ اِمْلَاقٍ ؕ نَحْنُ نَرْزُقُكُمْ وَاِيَّاهُمْ ۚ وَلَا تَقْرَبُوا
الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ ۚ وَلَا تَقْتُلُوا النَّفْسَ الَّتِيْ
حَرَّمَ اللّٰهُ اِلَّا بِالْحَقِّ ؕ ذٰلِكُمْ وَصّٰىكُمْ بِهٖ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ ﴿١٥١﴾

147. ஆகவே, (நபியே! இதற்குப் பின்னரும்,) அவர்கள் உம்மைப் பொய்யாக்கினால் (அவர்களிடம்,) "உங்களுடைய இரட்சகன் மிக்க விசாலமான அருளுடையவன் (தான்; எனினும்) குற்றம் செய்தவர்களான கூட்டத்தாரைவிட்டு அவனது தண்டனை தடுக்கப்படவுமாட்டாது என்று கூறுவீராக!

148. "அல்லாஹ் நாடியிருந்தால் நாங்களும், எங்களுடைய மூதாதையர்களும், (அல்லாஹ்வுக்கு எதனையும்) இணைவைத்திருக்க மாட்டோம்; (உண்ணக்கூடிய) யாதொன்றையும் (ஆகாதென்று) நாங்கள் விலக்கியிருக்கவுமாட்டோம்" என்று, இணைவைத்துக் கொண்டிருப்போர் கூறுவார்கள்; இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் நம்முடைய வேதனையைச் சுவைக்கும் வரையில் இவ்வாறே (தூதர்களைப்) பொய்யாக்கிக்கொண்டிருந்தனர். (ஆகவே நீர் " உங்கள் கூற்றுக்கு) உங்களிடம் ஏதும் அறிவார்த்த (மான ஆதார)முண்டா? (அவ்வாறு இருந்தால்) அதனை நமக்கு வெளிப்படுத்திக்காட்டுங்கள்; (உங்களது அர்த்தமற்ற வீணான) எண்ணத்தையல்லாது வேறு எதையும் நீங்கள் பின்பற்றவில்லை. இன்னும் நீங்கள் அனுமானம் கொள்கிறவர்களேயன்றி வேறில்லை _ என்று கூறுவீராக !

149. (யாருக்கு அவன் நேர்வழிகாட்டி விட்டானோ, இன்னும் யாரை வழிதவறச் செய்து விட்டானோ அதுபற்றிய மறுக்க முடியாத ) பூரணமான ஆதாரம் அல்லாஹ்விற்கே இருக்கிறது; ஆகவே, அவன் நாடியிருந்தால் உங்கள் யாவரையும் நிச்சயம் நேர் வழியில் செலுத்தியிருப்பான்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

150. (மேலும் அவர்களிடம், நீங்களாக உங்கள் மீது புசிக்க ஆகுமாக்கப் பட்டவற்றை தடுத்துக் கொண்டு), "நிச்சயமாக அல்லாஹ் தான் இதனைத் தடுத்திருக்கிறான் என்று சாட்சி கூறுகிறார்களே அத்தகைய உங்களது சாட்சியாளர்களை நீங்கள் கொண்டுவாருங்கள்", என்று (நபியே!) நீர் கூறுவீராக! அவர்களும் (அவ்வாறே பொய்) சாட்சி கூறுவார்களேயானால், (அதற்காக) நீரும் அவர்களுடன் (சேர்ந்து) சாட்சி கூறவேண்டாம்; மேலும், நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கியவர்கள், இன்னும், மறுமையை விசுவாசங் கொள்ளாதவர்கள் ஆகியோரின் மனஇச்சைகளை, நீர் பின்பற்றவேண்டாம். அவர்களோ தங்கள் இரட்சகனுக்கு (வழிபாட்டில் மற்றவர்களை) சமமாக்குகின்றனர்.

151. (நபியே! அவர்களிடம்,) நீர் கூறுவீராக! " வாருங்கள்! உங்கள் இரட்சகன் உங்களுக்கு விலக்கியிருப்பவற்றை(யும் ஏவியிருப்பவற்றையும்) நான் உங்களுக்கு ஓதிக்காண்பிக்கிறேன்; (அவையாவன:) அவனுக்கு எதையும் நீங்கள் இணையாக்காதீர்கள், இன்னும் (உங்கள்) பெற்றோருக்கு (அன்புடன்) உபகாரம் செய்யுங்கள்; (அவர்களோடு நன்றியுடன் நடந்து கொள்ளுங்கள்); வறுமைக்காக (அதைப்பயந்து) உங்கள் குழந்தைகளை நீங்கள் கொலை செய்தும்விடாதீர்கள்; உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம்; மேலும், மானக்கேடான காரியங்களை _அதில் வெளிப்படையானவற்றையும், இரகசியமானவற்றையும் (செய்ய) நீங்கள் நெருங்காதீர்கள்; இன்னும் (கொலை செய்யக் கூடாதென்று) அல்லாஹ் தடுத்துள்ள எந்த ஆத்மாவையும் (நியாயமான) உரிமையின்றிக் கொலை செய்யாதீர்கள்; (மேற்கூறப்பட்ட உபதேசங்களடங்கிய) அவை நீங்கள் (அவனுடைய ஏவல், விலக்கல்பற்றிய கட்டளைகளை அறிந்து) விளங்கிக் கொள்வதற்காக அவற்றைக்கொண்டு அவன் உங்களுக்கு ஏவுகிறான்.

وَلَا تَقْرَبُوْا مَالَ الْيَتِيْمِ اِلَّا بِالَّتِيْ هِيَ اَحْسَنُ حَتّٰى
يَبْلُغَ اَشُدَّهٗ ۚ وَاَوْفُوا الْكَيْلَ وَالْمِيْزَانَ بِالْقِسْطِ ۚ لَا نُكَلِّفُ
نَفْسًا اِلَّا وُسْعَهَا ۚ وَاِذَا قُلْتُمْ فَاعْدِلُوْا وَلَوْ كَانَ ذَا قُرْبٰى ۚ
وَبِعَهْدِ اللّٰهِ اَوْفُوْا ؕ ذٰلِكُمْ وَصّٰىكُمْ بِهٖ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ ﴿١٥٢﴾ ۙ
وَاَنَّ هٰذَا صِرَاطِيْ مُسْتَقِيْمًا فَاتَّبِعُوْهُ ۚ وَلَا تَتَّبِعُوا السُّبُلَ
فَتَفَرَّقَ بِكُمْ عَنْ سَبِيْلِهٖ ؕ ذٰلِكُمْ وَصّٰىكُمْ بِهٖ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿١٥٣﴾
ثُمَّ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ تَمَامًا عَلَى الَّذِيْۤ اَحْسَنَ وَتَفْصِيْلًا
لِّكُلِّ شَيْءٍ وَّهُدًى وَّرَحْمَةً لَّعَلَّهُمْ بِلِقَآءِ رَبِّهِمْ يُؤْمِنُوْنَ ﴿١٥٤﴾ ع ١٩ ع ٦
وَهٰذَا كِتٰبٌ اَنْزَلْنٰهُ مُبٰرَكٌ فَاتَّبِعُوْهُ وَاتَّقُوْا لَعَلَّكُمْ
تُرْحَمُوْنَ ﴿١٥٥﴾ ۙ اَنْ تَقُوْلُوْۤا اِنَّمَاۤ اُنْزِلَ الْكِتٰبُ عَلٰى طَآئِفَتَيْنِ
مِنْ قَبْلِنَا ۪ وَاِنْ كُنَّا عَنْ دِرَاسَتِهِمْ لَغٰفِلِيْنَ ﴿١٥٦﴾ ۙ اَوْ تَقُوْلُوْا
لَوْ اَنَّاۤ اُنْزِلَ عَلَيْنَا الْكِتٰبُ لَكُنَّاۤ اَهْدٰى مِنْهُمْ ۚ فَقَدْ
جَآءَكُمْ بَيِّنَةٌ مِّنْ رَّبِّكُمْ وَهُدًى وَّرَحْمَةٌ ۚ فَمَنْ اَظْلَمُ
مِمَّنْ كَذَّبَ بِاٰيٰتِ اللّٰهِ وَصَدَفَ عَنْهَا ؕ سَنَجْزِي الَّذِيْنَ
يَصْدِفُوْنَ عَنْ اٰيٰتِنَا سُوْٓءَ الْعَذَابِ بِمَا كَانُوْا يَصْدِفُوْنَ ﴿١٥٧﴾

152. " அநாதையின் பொருளை — அவர் பிராயமடையும் வரையில் நியாயமான முறையிலன்றி (அனுபவிக்க) நெருங்காதீர்கள்; அளவையும், நிறுவையையும் நீதமாக நிறைவு செய்யுங்கள்; எந்த ஒரு ஆத்மாவையும் அதன் சக்திக்குட்பட்டதைத்தவிர நாம் கஷ்டப்படுத்துவதில்லை; நீங்கள் பேசினால் (பாதிக்கப்படுவர் நெருங்கிய) உறவினராயினும் (சரியே) நீதத்தையே கூறுங்கள்; நீங்கள் அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியையும் பூரணமாக நிறைவேற்றுங்கள்; (மேற்கூறப்பட்ட உபதேசங்களடங்கிய) அவை நீங்கள் நினைவு கூர்வதற்காக அவற்றைக்கொண்டு அவன் உங்களுக்கு ஏவுகிறான்.

153. இன்னும் "நிச்சயமாக இது நேரானதாகஇருக்க என்னுடைய வழியாகும்; ஆகவே இதனையே நீங்கள் பின்பற்றுங்கள்; இன்னும், மற்ற வழிகளைப் பின்பற்றாதீர்கள். அவை, அவனுடைய வழியிலிருந்து உங்களைப் பிரித்துவிடும். (மேற்கூறப்பட்ட உபதேசங்களடங்கிய) அவை நீங்கள் பயபக்தியுடையவர்களாவதற்காக இவற்றை(அல்லாஹ்வாகிய ) அவன் உங்களுக்கு ஏவுகிறான்" (என்று கூறுவீராக!).

154. பின்னர், நன்மை செய்தோரின்மீது (நமது அருட்கொடையை) நிறைவுசெய்வதற்காகவும், ஒவ்வொரு விஷயத்திற்கும் தெளிவாகவும், நேர்வழியாகவும், அருளாகவும் மூஸாவுக்கு வேதத்தை நாம் கொடுத்தோம்; தங்கள் இரட்சகனின் சந்திப்பை அவர்கள் விசுவாசம் கொள்வதற்காக வேண்டி (இதனை நாம் இறக்கிவைத்தோம்).

155. (மனிதர்களே!) இதுவும் வேத நூலாகும்; இதனை நாம் இறக்கிவைத்துள்ளோம்; (இதன் நன்மைகள் பன்மடங்காக்கப்பட்டதாக) பரக்கத்துச் செய்யப்பட்டதாகும்; ஆகவே, இதனை நீங்கள் பின்பற்றுங்கள்; மேலும் நீங்கள், (அல்லாஹ்வினால்)அருள் செய்யப்படுவதற்காக (அவனுக்குப்) பயந்து (பாவத்திலிருந்து விலகிக்) கொள்ளுங்கள்.

156. (இணை வைப்போரே!) "இரு கூட்டத்தினர் (களாகிய யூத, கிறிஸ்தவர்கள்) மீது தான் நமக்கு முன்னர் வேதம் இறக்கப்பட்டது; ஆகவே, நாங்கள் அதனைப் படிக்க(வும், படித்துக் கேட்கவும்) முடியாமல் பராமுகமானவர்களாகி விட்டோம்" என்று நீங்கள் கூறாதிருப்பதற்காகவும்;

157. அல்லது, நிச்சயமாக நாங்கள்_ எங்கள் மீது ஒரு வேதம் இறக்கப்பட்டிருந்தால், அவர்களைவிட மிக்க நேர்வழியில் நாங்கள் இருந்திருப்போம்", என்று நீங்கள் கூறாதிருப்பதற்காகவும் இப்பொழுது உங்கள் இரட்சகனிடமிருந்து உங்களுக்குத் தெளிவான ஆதாரமும், நேர்வழியும், பெருங்கிருபையும்( கொண்டதுமான வேதம்) வந்து விட்டது; ஆகவே, எவர் அல்லாஹ்வுடைய (இத்தகைய) வசனங்களைப் பொய்யாக்கி, அவற்றிலிருந்து விலகிக் கொள்கிறாரோ அவரைவிட மிகுந்த அநியாயக்காரர் யார்? நம்முடைய வசனங்களிலிருந்து (இவ்வாறு) விலகிக் கொள்கின்றவர்களுக்கு, அவர்கள் விலகிக் கொண்டதன் காரணமாக_ நாம், கொடிய வேதனையைக் கூலியாகக் கொடுப்போம்.

هَلْ يَنْظُرُوْنَ اِلَّآ اَنْ تَاْتِيَهُمُ الْمَلٰٓئِكَةُ اَوْ يَاْتِيَ رَبُّكَ اَوْ يَاْتِيَ
بَعْضُ اٰيٰتِ رَبِّكَ ؕ يَوْمَ يَاْتِيْ بَعْضُ اٰيٰتِ رَبِّكَ لَا يَنْفَعُ نَفْسًا
اِيْمَانُهَا لَمْ تَكُنْ اٰمَنَتْ مِنْ قَبْلُ اَوْ كَسَبَتْ فِيْٓ اِيْمَانِهَا خَيْرًا ؕ قُلِ
انْتَظِرُوْٓا اِنَّا مُنْتَظِرُوْنَ ﴿١٥٨﴾ اِنَّ الَّذِيْنَ فَرَّقُوْا دِيْنَهُمْ وَكَانُوْا شِيَعًا
لَّسْتَ مِنْهُمْ فِيْ شَيْءٍ ؕ اِنَّمَآ اَمْرُهُمْ اِلَى اللّٰهِ ثُمَّ يُنَبِّئُهُمْ بِمَا كَانُوْا
يَفْعَلُوْنَ ﴿١٥٩﴾ مَنْ جَآءَ بِالْحَسَنَةِ فَلَهٗ عَشْرُ اَمْثَالِهَا ۚ وَمَنْ جَآءَ
بِالسَّيِّئَةِ فَلَا يُجْزٰٓى اِلَّا مِثْلَهَا وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿١٦٠﴾ قُلْ اِنَّنِيْ
هَدٰىنِيْ رَبِّيْٓ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ۚ دِيْنًا قِيَمًا مِّلَّةَ اِبْرٰهِيْمَ
حَنِيْفًا ۚ وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ ﴿١٦١﴾ قُلْ اِنَّ صَلَاتِيْ وَنُسُكِيْ وَ
مَحْيَايَ وَمَمَاتِيْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿١٦٢﴾ لَا شَرِيْكَ لَهٗ ۚ وَبِذٰلِكَ اُمِرْتُ
وَاَنَا اَوَّلُ الْمُسْلِمِيْنَ ﴿١٦٣﴾ قُلْ اَغَيْرَ اللّٰهِ اَبْغِيْ رَبًّا وَّهُوَ رَبُّ كُلِّ شَيْءٍ ؕ
وَلَا تَكْسِبُ كُلُّ نَفْسٍ اِلَّا عَلَيْهَا ۚ وَلَا تَزِرُ وَازِرَةٌ وِّزْرَ اُخْرٰى ۚ ثُمَّ اِلٰى
رَبِّكُمْ مَّرْجِعُكُمْ فَيُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ فِيْهِ تَخْتَلِفُوْنَ ﴿١٦٤﴾ وَهُوَ الَّذِيْ
جَعَلَكُمْ خَلٰٓئِفَ الْاَرْضِ وَرَفَعَ بَعْضَكُمْ فَوْقَ بَعْضٍ دَرَجٰتٍ لِّيَبْلُوَكُمْ
فِيْ مَآ اٰتٰىكُمْ ؕ اِنَّ رَبَّكَ سَرِيْعُ الْعِقَابِ ۖ وَاِنَّهٗ لَغَفُوْرٌ رَّحِيْمٌ ﴿١٦٥﴾ ع ٢٠ ١١ ٦ النصف

158. மலக்குகள் அவர்களிடம் (நேரில்) வருவதையோ, அல்லது உம் இரட்சகன் வருவதையோ, அல்லது உம்முடைய இரட்சகனின் அத்தாட்சிகளில் சில வருவதையோ தவிர, (வேறெதனையும்) அவர்கள் எதிர்பார்க்கின்றனரா? உம் இரட்சகனின் சில அத்தாட்சிகள் வரும் அந்நாளில் அதற்கு முன்னர் விசுவாசங்கொள்ளாதிருந்து, அல்லது (விசுவாசங்கொண்டிருந்தும்) அதன் ஈமானில் எந்த ஒரு நன்மையையும் சம்பாதிக்காதிருந்த எந்த ஆத்மாவிற்கும் அது (அந்நாளில்) கொள்ளும் விசுவாசம், யாதொரு பலனையும் அளிக்காது; ஆகவே, (அவர்களிடம், "அப்பெரிய அத்தாட்சிகளை) நீங்கள் எதிர்பார்த்திருங்கள்; நிச்சயமாக நாம் எதிர்பார்த்திருப்பவர்களாவோம்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

159. நிச்சயமாக தங்கள் மார்க்கத்தை(ப் பலவாறாக)ப் பிரித்து, பல பிரிவினர்களாகி விட்டனரே அத்தகையோர்_ அவர்களின் எக்காரியத்திலும் நீர் இல்லை ; அவர்களுடைய விஷயமெல்லாம் அல்லாஹ்விடமே இருக்கின்றது; அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றை பின்னர் அவன் அவர்களுக்கு அறிவித்து விடுவான்.

160. எவர் ஒருவர் ஒரு நன்மையைச் செய்கிறாரோ அவருக்கு (நன்மைகளில்)அதைப் போன்றவை பத்து(பங்கு) உண்டு; எவர் ஒருவர் ஒரு தீமையைச் செய்கிறாரோ, அதைப் போன்றதைத் தவிர (அதிகமாக) அவருக்குக் கூலியாக கொடுக்கப்பட மாட்டாது; அவர்களோ அநியாயம் செய்யப்படமாட்டார்கள்.

161. "நிச்சயமாக நான்_என்னை என்னுடைய இரட்சகன் நேர் வழியில் செலுத்தி விட்டான்; (அது) மிக்க உறுதியான, நிலையான மார்க்கமாகும்; இன்னும் (அது அசத்தியமான எல்லா வழிகளை விட்டு நீங்கி) சத்தியத்தின் பால் சார்ந்தவரான இப்றாஹீமுடைய மார்க்கமுமாகும்; அவர் இணைவைத்து வணங்குவோரில் இருந்ததுமில்லை" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

162. நிச்சயமாக என்னுடைய தொழுகையும், என்னுடைய அறுப்பு (குர்பானியு)ம், என் வாழ்வும், என் மரணமும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரித்தானவையாகும்", என்று (நபியே!) நீர் கூறுவீராக!

163. " அவனுக்கு யாதோர் இணையுமில்லை; (துணையுமில்லை,) இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன்; இன்னும் (அவனுக்குக் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களில் (இந்த உம்மத்தில்) நான் முதன்மையானவன்" (என்றும் கூறுவீராக!).

164. "அல்லாஹ் அல்லாதவனையா (எனக்கு) இரட்சகனாக நான் தேடுவேன்? அவனோ ஒவ்வொரு பொருளுக்கும் இரட்சகனுமாவான்" என்று (நபியே!) நீர் கூறுவீராக! பாவம் செய்யும் ஒவ்வோர் ஆத்மாவும் தனக்குப்பாதகமாகவே அல்லாது (பாவத்தை) சம்பாதிப்பதில்லை; இன்னும் (பாவத்தைச்) சுமக்கக்கூடிய (ஓர் ஆத்மாவான)து மற்றொன்றின் (பாவச்)சுமையைச் சுமக்காது;(இறந்த) பின்னர் நீங்கள் யாவரும் உங்கள் இரட்சகனிடமே திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது. அப்போது நீங்கள் எதில் அபிப்பிராய பேதம் கொண்டிருந்தீர்களோ அது பற்றி அவன் உங்களுக்கு அறிவிப்பான்.

165. அவன்தான் (உங்களுக்கு முன் இருந்தவர்களுக்கு) பிரதிநிதிகளாகப் பூமியில் உங்களை ஆக்கியுள்ளான்; அவன் உங்களுக்குக் கொடுத்துள்ளவற்றில் உங்களைச் சோதிப்பதற்காக உங்களில் சிலரை மற்ற சிலரை விடப் பதவிகளில் உயர்த்தியுமிருக்கின்றான்; (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன் தண்டிப்பதில் மிகத் தீவிரமானவன்; நிச்சயமாக அவன் மிக்க பிழைபொறுப்பவன்; பேரன்புடையவன்.

سُوْرَةُ الْاَعْرَافِ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَتَانِ وَّسِتُّ اٰيَاتٍ وَّاَرْبَعٌ وَّعِشْرُوْنَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

الٓمّٓصٓ ۝١ كِتٰبٌ اُنْزِلَ اِلَيْكَ فَلَا يَكُنْ فِيْ صَدْرِكَ حَرَجٌ
مِّنْهُ لِتُنْذِرَ بِهٖ وَذِكْرٰى لِلْمُؤْمِنِيْنَ ۝٢ اِتَّبِعُوْا مَآ اُنْزِلَ
اِلَيْكُمْ مِّنْ رَّبِّكُمْ وَلَا تَتَّبِعُوْا مِنْ دُوْنِهٖٓ اَوْلِيَآءَ ۭ قَلِيْلًا مَّا
تَذَكَّرُوْنَ ۝٣ وَكَمْ مِّنْ قَرْيَةٍ اَهْلَكْنٰهَا فَجَآءَهَا بَاْسُنَا بَيَاتًا
اَوْ هُمْ قَآئِلُوْنَ ۝٤ فَمَا كَانَ دَعْوٰىهُمْ اِذْ جَآءَهُمْ بَاْسُنَآ اِلَّآ اَنْ
قَالُوْٓا اِنَّا كُنَّا ظٰلِمِيْنَ ۝٥ فَلَنَسْئَلَنَّ الَّذِيْنَ اُرْسِلَ اِلَيْهِمْ
وَلَنَسْئَلَنَّ الْمُرْسَلِيْنَ ۝٦ فَلَنَقُصَّنَّ عَلَيْهِمْ بِعِلْمٍ وَّمَا كُنَّا
غَآئِبِيْنَ ۝٧ وَالْوَزْنُ يَوْمَئِذِ ۣ الْحَقُّ ۚ فَمَنْ ثَقُلَتْ مَوَازِيْنُهٗ
فَاُولٰۗئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ۝٨ وَمَنْ خَفَّتْ مَوَازِيْنُهٗ فَاُولٰۗئِكَ
الَّذِيْنَ خَسِرُوْٓا اَنْفُسَهُمْ بِمَا كَانُوْا بِاٰيٰتِنَا يَظْلِمُوْنَ ۝٩ وَلَقَدْ
مَكَّنّٰكُمْ فِي الْاَرْضِ وَجَعَلْنَا لَكُمْ فِيْهَا مَعَايِشَ ۭ قَلِيْلًا مَّا
تَشْكُرُوْنَ ۝١٠ وَلَقَدْ خَلَقْنٰكُمْ ثُمَّ صَوَّرْنٰكُمْ ثُمَّ قُلْنَا لِلْمَلٰۗئِكَةِ ع ١ ٨
اسْجُدُوْا لِاٰدَمَ ۤ فَسَجَدُوْٓا اِلَّآ اِبْلِيْسَ ۭ لَمْ يَكُنْ مِّنَ السّٰجِدِيْنَ ۝١١

அத்தியாயம் : 7

## அல் அஃராஃப் _ சிகரங்கள்

வசனங்கள் : 206 மக்கீ ருகூஃகள் : 24

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. அலிஃப் லாம் மீம் ஸாத்
2.(நபியே! இது) உம்மீது இறக்கப்பட்டுள்ள வேதமாகும்; இ(வ்வேதத்தை மக்களுக்கு
எத்திவைப்ப)தனால் உம்முடைய நெஞ்சத்தில் யாதொரு கலக்கமும்
இருக்கவேண்டாம். இதனைக் கொண்டு நீர் (மனிதர்களுக்கு) அச்சமூட்டி
எச்சரிக்கை செய்வதற்காகவும், விசுவாசங் கொண்டோருக்கு ஒரு
நல்லுபதேசமாகவும் (இவ் வேதம் இறக்கி வைக்கப்பட்டுள்ளது)
3. (மனிதர்களே!) உங்களுக்காக உங்கள் இரட்சகனிடமிருந்து
இறக்கிவைக்கப்பட்ட (இவ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்; அவனையன்றி
(மற்றெவரையும் உங்களுக்கு)ப் பாதுகாவலர்(களாக ஆக்கி, அவர்) களை
நீங்கள் பின்பற்றாதீர்கள்; (எனினும், இதனைக் கொண்டு) நீங்கள் மிகக்
குறைவாகவே நல்லுணர்ச்சி பெறுகிறீர்கள்.
4. இன்னும், ( அல்லாஹ்வின் தூதர்களைப் பொய்யாக்கியும் அவர்களுக்கு
மாற்றமாகவும் நடந்துவந்தவர்கள் வசித்திருந்த) எத்தனையோ
ஊர்களை_அவற்றை நாம் அழித்திருக்கின்றோம். இரவோடு இரவாக, அல்லது
அவர்கள் (களைப்பாறுவதற்காக) பகலில் தூங்கிக் கொண்டிருக்க நம்முடைய
வேதனை அவற்றை வந்தடைந்தது.
5. நம்முடைய வேதனை அவர்களுக்கு வந்தடைந்தபோது "நிச்சயமாக நாம்
அநியாயக்காரர்களாகி விட்டோம்" என்று அவர்கள் கூறியதைத் தவிர வேறு
எதுவும் அவர்களுடைய கூப்பாடாக இருக்கவில்லை.
6. ஆகவே, எவர்கள்பால் தூதர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்களோ
அவர்களையும் நிச்சயமாக நாம் கேட்(டு விசாரிப்)போம்; மேலும், (நம்முடைய)
தூதர்களையும் நிச்சயமாக நாம் கேட்(டு விசாரிப்)போம்.
7. (அவர்களின் செயலைப்பற்றி நாம்) நன்கறிந்துள்ளவாறு
(விசாரணைக்காலத்தில்) நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கூறிக்காண்பிப்போம்;
இன்னும் (அவர்களின் சகல நிலைகளை விட்டும்) மறைந்திருப்பவர்களாக நாம்
இருக்கவில்லை.
8. மேலும், (ஒவ்வொருவரின் நன்மை தீமைகளையும்,) அந்நாளில் (கூடுதல்
குறைவின்றி) எடைபோடுவது உண்மையாகும் ; அப்போது எவர்களுடைய
(நன்மையின்) எடைகள் கனத்தனவோ அவர்கள்தாம் நிச்சயமாக
வெற்றியாளர்கள்.
9. இன்னும், எவர்களுடைய (நன்மையின்) எடைகள் (கனம் குறைந்து) இலேசாக
இருக்கின்றனவோ அத்தகையோர், நம்முடைய வசனங்களை பொய்யாக்கிக்
கொண்டிருந்ததன் காரணமாக அவர்கள் தங்களுக்குத் தாமே நஷ்டமிழைத்துக்
கொண்டவர்கள் ஆவர்.
10. (மனிதர்களே!) மேலும், நிச்சயமாக நாம் உங்களை பூமியில் (அனைத்து
அதிகாரங்களுடன்) வசிக்கச் செய்தோம். அதில் உங்களுக்கு
வாழ்க்கை(வசதி)க்குரிய (அனைத்து)சாதனங்களையும் நாம் ஆக்கித்தந்தோம்.
(இவ்வாறிருந்தும்) நீங்கள் மிகக் குறைவாகவே நன்றி செலுத்துகிறீர்கள்.
11. இன்னும், திட்டமாக நாம் உங்களைப் படைத்தோம்; பின்பு உங்களுக்கு
உருவமமைத்தோம்; அதன் பின்னர், "ஆதமுக்குச் சிரம் பணியுங்கள்" என
மலக்குகளுக்கு நாம் கூறினோம்; அப்பொழுது இப்லீஸைத் தவிர (மற்ற யாவரும்
அவருக்கு) சிரம் பணிந்தார்கள்; சிரம் பணிந்தவர்களில் அவன் இருக்கவில்லை.

قَالَ مَا مَنَعَكَ اَلَّا تَسْجُدَ اِذْ اَمَرْتُكَ ؕ قَالَ اَنَا خَيْرٌ مِّنْهُ ۚ خَلَقْتَنِيْ
مِنْ نَّارٍ وَّخَلَقْتَهٗ مِنْ طِيْنٍ ﴿١٢﴾ قَالَ فَاهْبِطْ مِنْهَا فَمَا يَكُوْنُ لَكَ
اَنْ تَتَكَبَّرَ فِيْهَا فَاخْرُجْ اِنَّكَ مِنَ الصّٰغِرِيْنَ ﴿١٣﴾ قَالَ اَنْظِرْنِيْۤ
اِلٰى يَوْمِ يُبْعَثُوْنَ ﴿١٤﴾ قَالَ اِنَّكَ مِنَ الْمُنْظَرِيْنَ ﴿١٥﴾ قَالَ فَبِمَاۤ اَغْوَيْتَنِيْ
لَاَقْعُدَنَّ لَهُمْ صِرَاطَكَ الْمُسْتَقِيْمَ ﴿١٦﴾ ثُمَّ لَاٰتِيَنَّهُمْ مِّنْۢ بَيْنِ اَيْدِيْهِمْ
وَمِنْ خَلْفِهِمْ وَعَنْ اَيْمَانِهِمْ وَعَنْ شَمَآئِلِهِمْ ؕ وَلَا تَجِدُ اَكْثَرَهُمْ
شٰكِرِيْنَ ﴿١٧﴾ قَالَ اخْرُجْ مِنْهَا مَذْءُوْمًا مَّدْحُوْرًا ؕ لَمَنْ تَبِعَكَ مِنْهُمْ
لَاَمْلَئَنَّ جَهَنَّمَ مِنْكُمْ اَجْمَعِيْنَ ﴿١٨﴾ وَيٰۤاٰدَمُ اسْكُنْ اَنْتَ وَزَوْجُكَ
الْجَنَّةَ فَكُلَا مِنْ حَيْثُ شِئْتُمَا وَلَا تَقْرَبَا هٰذِهِ الشَّجَرَةَ فَتَكُوْنَا
مِنَ الظّٰلِمِيْنَ ﴿١٩﴾ فَوَسْوَسَ لَهُمَا الشَّيْطٰنُ لِيُبْدِيَ لَهُمَا مَاوٗرِيَ
عَنْهُمَا مِنْ سَوْاٰتِهِمَا وَقَالَ مَا نَهٰكُمَا رَبُّكُمَا عَنْ هٰذِهِ الشَّجَرَةِ
اِلَّاۤ اَنْ تَكُوْنَا مَلَكَيْنِ اَوْ تَكُوْنَا مِنَ الْخٰلِدِيْنَ ﴿٢٠﴾ وَقَاسَمَهُمَاۤ اِنِّيْ
لَكُمَا لَمِنَ النّٰصِحِيْنَ ﴿٢١﴾ فَدَلّٰىهُمَا بِغُرُوْرٍ ۚ فَلَمَّا ذَاقَا الشَّجَرَةَ بَدَتْ لَهُمَا
سَوْاٰتُهُمَا وَطَفِقَا يَخْصِفٰنِ عَلَيْهِمَا مِنْ وَّرَقِ الْجَنَّةِ ؕ وَنَادٰىهُمَا رَبُّهُمَاۤ اَلَمْ
اَنْهَكُمَا عَنْ تِلْكُمَا الشَّجَرَةِ وَاَقُلْ لَّكُمَاۤ اِنَّ الشَّيْطٰنَ لَكُمَا عَدُوٌّ مُّبِيْنٌ ﴿٢٢﴾

12. (ஆகவே, அல்லாஹ் இப்லீஸிடம்,) "நான் உனக்குக் கட்டளையிட்ட சமயத்தில், நீ சிரம் பணிவதிலிருந்து உன்னைத் தடுத்தது எது?" என்று கேட்டான்; அதற்கு "நான் அவரைவிட மேலானவன் (ஏனென்றால்,) நீ என்னை நெருப்பால் படைத்தாய்; அவரையோ களிமண்ணால் படைத்தாய்" என்று (இறுமாப்புடன் இப்லீஸாகிய) அவன் கூறினான்.

13. "இதிலிருந்து நீ இறங்கிவிடு; நீ இதில் பெருமை கொள்வதற்கு உனக்குத் தகுதியில்லை; ஆதலால், நீ வெளியேறிவிடு; (உன் பெருமையின் காரணமாக) நிச்சயமாக நீ சிறுமைப் பட்டோரில் இருக்கின்றாய்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

14. (அதற்கு இப்லீஸாகிய) அவன், "(இறந்தோர் மண்ணறைகளிலிருந்து) எழுப்பப்படும் நாள் வரையில் நீ எனக்கு அவகாசம் அளிப்பாயாக" என்று கேட்டான்.

15. "நிச்சயமாக நீ (அவ்வாறே) அவகாசமளிக்கப்பட்டோரில் (ஒருவனாக) இருக்கின்றாய்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

16. "நீ என்னை வழிகெட்டவனாக ஆக்கியதன் காரணத்தால் (ஆதமுடைய சந்ததிகள்) உன்னுடைய நேரான வழியில் (செல்லாது தடை செய்ய வழி மறித்து அதில்) அவர்களுக்காக திட்டமாக உட்கார்ந்து கொள்வேன்" என்றும் (இப்லீஸாகிய) அவன் கூறினான்.

17. "பின்னர், நிச்சயமாக அவர்களுக்கு முன்னும், அவர்களுக்குப் பின்னும், அவர்களின் வலப்புறங்களிலும், அவர்களின் இடப் புறங்களிலும் அவர்களிடம் நான் வந்து (அவர்களை வழி கெடுத்துக்) கொண்டேயிருப்பேன்; மேலும், அவர்களில் பெரும் பாலோரை (உனக்கு) நன்றி செலுத்துவோர்களாக நீ காணமாட்டாய்" (என்றும் கூறினான்.)

18. இகழப்பட்டவனாகவும், விரட்டப்பட்டவனாகவும் நீ இதிலிருந்து வெளியேறி விடு; நிச்சயமாக (உன்னையும்,) அவர்களில் உன்னைப் பின்பற்றியவர்களையும் (சேர்த்து) உங்கள் அனைவரிலிருந்தும் நிச்சயமாக நரகத்தை நான் நிரப்புவேன்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

19. மேலும், "ஆதமே! நீரும், உம்முடைய மனைவியும் (இச்)சுவர்க்கத்தில் வசித் திருங்கள்; பின்னர், நீங்கள் இருவரும் நீங்கள் நாடிய இடத்திலெல்லாம் (சென்று நாடியவாறு) புசியுங்கள்; இன்னும் இம்மரத்திற்கு(அருகில்) நீங்களிருவரும் நெருங்காதீர்கள்; (அவ்வாறு சென்றால்) நீங்களிருவரும் அநியாயக்காரர்களில் ஆகிவிடுவீர்கள்" (என்றும் அல்லாஹ் கூறினான்).

20. பின்னர், அவ்விருவருக்கும் மறைக்கப்பட்டிருந்த அவ்விருவருடைய வெட்கத்தலங்களை அவ்விருவருக்கும் வெளிப்படுத்துவதற்காக, ஷைத்தான் (அவர்களிடம் இரகசியமாகப் பேசி தவறான எண்ணத்தை) ஊசாட்டத்தை அவ்விருவருக்கும் உண்டாக்கினான். மேலும், "(அதன் கனியைப் புசித்தால்,) நீங்கள் இருவரும் மலக்குகளாகிவிடுவீர்கள்; அல்லது நிரந்தரமாக இருப்பவர்களில் நீங்கள் இருவரும் ஆகிவிடுவீர்கள் என்பதற்காகவே தவிர (வேறெதற்காகவும்) உங்கள் இரட்சகன் அம்மரத்தைவிட்டும் உங்களிருவரையும் தடுக்கவில்லை" என்று கூறினான்.

21. "நிச்சயமாக நான் உங்களிருவருக்கும் உபதேசம் செய்பவர்களில் (ஒருவனாக) இருக்கின்றேன்" என்று அவ்விருவரிடம் (இப்லீஸாகிய அவன்) சத்தியமும் செய்தான்.

22. (பின்னர்) அவ்விருவரை ஏமாற்றி (படிப்படியாக தங்கள் நிலையிலிருந்து)கீழே இறங்கச்செய்தான்; எனவே அவ்விருவரும், அம்மரத்தை (அதன்கனியை)ச் சுவைக்கவே, அவ்விருவரின் வெட்கத்தலங்களும் அவ்விருவருக்கும் வெளியா(கித்தெரியலா)யிற்று; அச்சுவனத்தின் இலைகளைக் கொண்டு அவ்விருவரும் தங்களை மூடிக் கொள்ளவும் ஆரம்பித்தனர். மேலும்(அதுசமயம்) அவ்விருவரின் இரட்சகன் அவ்விருவரையும் அழைத்து, "இம்மரத்தைவிட்டும் உங்களிருவரையும் நான் தடுக்கவில்லையா? நிச்சயமாக ஷைத்தான் உங்களிருவருக்கும் பகிரங்கமான பகைவன் என்றும் நான் உங்களுக்குக் கூறவில்லையா?" (என்று அவ்விருவரையும் கேட்டான்).

قَالَا رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا ۚ وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ
الْخٰسِرِيْنَ ﴿٢٣﴾ قَالَ اهْبِطُوْا بَعْضُكُمْ لِبَعْضٍ عَدُوٌّ ۚ وَلَكُمْ فِي
الْاَرْضِ مُسْتَقَرٌّ وَّمَتَاعٌ اِلٰى حِيْنٍ ﴿٢٤﴾ قَالَ فِيْهَا تَحْيَوْنَ وَفِيْهَا
تَمُوْتُوْنَ وَمِنْهَا تُخْرَجُوْنَ ﴿٢٥﴾ يٰبَنِيْٓ اٰدَمَ قَدْ اَنْزَلْنَا عَلَيْكُمْ لِبَاسًا ع ٢ ٥ ٩
يُّوَارِيْ سَوْاٰتِكُمْ وَرِيْشًا ۭ وَلِبَاسُ التَّقْوٰى ۙ ذٰلِكَ خَيْرٌ ۭ ذٰلِكَ مِنْ
اٰيٰتِ اللّٰهِ لَعَلَّهُمْ يَذَّكَّرُوْنَ ﴿٢٦﴾ يٰبَنِيْٓ اٰدَمَ لَا يَفْتِنَنَّكُمُ الشَّيْطٰنُ
كَمَآ اَخْرَجَ اَبَوَيْكُمْ مِّنَ الْجَنَّةِ يَنْزِعُ عَنْهُمَا لِبَاسَهُمَا لِيُرِيَهُمَا سَوْاٰتِهِمَا ۭ
اِنَّهٗ يَرٰىكُمْ هُوَ وَقَبِيْلُهٗ مِنْ حَيْثُ لَا تَرَوْنَهُمْ ۭ اِنَّا جَعَلْنَا الشَّيٰطِيْنَ
اَوْلِيَآءَ لِلَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ ﴿٢٧﴾ وَاِذَا فَعَلُوْا فَاحِشَةً قَالُوْا وَجَدْنَا
عَلَيْهَآ اٰبَآءَنَا وَاللّٰهُ اَمَرَنَا بِهَا ۭ قُلْ اِنَّ اللّٰهَ لَا يَاْمُرُ بِالْفَحْشَآءِ ۭ
اَتَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿٢٨﴾ قُلْ اَمَرَ رَبِّيْ بِالْقِسْطِ ۣ قف
وَاَقِيْمُوْا وُجُوْهَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ وَّادْعُوْهُ مُخْلِصِيْنَ
لَهُ الدِّيْنَ ۬ كَمَا بَدَاَكُمْ تَعُوْدُوْنَ ﴿٢٩﴾ ۭ فَرِيْقًا هَدٰى وَ
فَرِيْقًا حَقَّ عَلَيْهِمُ الضَّلٰلَةُ ۭ اِنَّهُمُ اتَّخَذُوا الشَّيٰطِيْنَ
اَوْلِيَآءَ مِنْ دُوْنِ اللّٰهِ وَيَحْسَبُوْنَ اَنَّهُمْ مُّهْتَدُوْنَ ﴿٣٠﴾

23. (அதற்கு) "எங்கள் இரட்சகனே! எங்களுக்கு நாங்களே அநீதமிழைத்துக் கொண்டோம்; நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள் புரியாவிடில் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிடுவோம்" என்று அவ்விருவரும் (பிரார்த்தித்துக்) கூறினர்.

24. (அதற்கு அல்லாஹ், இதிலிருந்து) நீங்கள் இறங்கிவிடுங்கள்; உங்களில் சிலர் (மற்ற) சிலருக்கு பகைவர்களாவீர்கள்; பூமியில் உங்களுக்குத் தங்குமிடமும் உண்டு; (அதில்) ஒரு காலம் வரை சுகம் அனுபவித்தலும் உண்டு" என்று கூறினான்

25. "அதிலேயே நீங்கள் வாழ்வீர்கள்; அதிலேயே நீங்கள் இறப்பீர்கள்; (பின்னர் ஒரு நாளில்) அதிலிருந்தே நீங்கள் (மீண்டும் உயிர்கொடுத்து ) வெளியாக்கப் படுவீர்கள்" என்று கூறினான்.

26. ஆதமுடைய மக்களே! உங்களுடைய மானத்தை மறைக்கக் கூடிய ஆடையையும் அலங்காரத்தையும் திட்டமாக நாம் உங்களுக்கு இறக்கிவைத்திருக்கின்றோம்; இன்னும் (பாவங்களை மறைத்துவிடக் கூடிய, பரிசுத்தத்தன்மையான) பயபக்தி எனும்ஆடை__ அதுதான் மிக்க மேலானது; அது அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். (இதனைக் கொண்டு) அவர்கள் நல்லுணர்ச்சி பெறலாம்.

27. ஆதமுடைய மக்களே! ஷைத்தான் உங்கள் பெற்றோர் இருவரையும், அவ்விருவரின் மானத்தை அவ்விருவருக்கும் காண்பிப்பதற்காகவேண்டி அவ்விருவரின் ஆடையை அவ்விருவரை விட்டும் அவன் களைந்து (அவர்கள் இன்பமுடன் வசித்து வந்த) சுவனத்திலிருந்து வெளியேற்றி (சோதனைக் குள்ளாக்கி)யது போன்று உங்களையும் அவன் சோதனைக்குள்ளாக்கி விட வேண்டாம்; நிச்சயமாக அவனும், அவனுடைய இனத்தாரும் நீங்கள் அவர்களைக் காண முடியாதவாறு (மறைவாக இருந்து கொண்டு) உங்களை (வழி கெடுக்க சமயம்) பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; நிச்சயமாக விசுவாசங் கொள்ளாதவர்களுக்கு அந்த ஷைத்தான்களை நாம் நண்பர்களாக்கி யிருக்கின்றோம்.

28. மேலும், (விசுவாசங்கொள்ளாத) அவர்கள், யாதொரு மானக்கேடான காரியத்தைச் செய்து விட்டால் அவர்கள், "எங்கள் மூதாதையர்களை இதன் மீதே நாங்கள் கண்டோம்; அல்லாஹ்வும் இதைக்கொண்டே எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கின்றான்" என்று கூறுகின்றனர்; (அதற்கு நபியே! அவர்களிடம்) "நிச்சயமாக அல்லாஹ், மானக்கேடான காரியங்களைக்கொண்டு (அவற்றைச் செய்யுமாறு) அவன்கட்டளையிடமாட்டான்; அல்லாஹ்வின் மீது நீங்கள் அறியாதவற்றை(ப் பொய்யாக)க் கூறுகிறீர்களா? என்று நீர் கூறுவீராக!

29. "என் இரட்சகன் நீதத்தையே கட்டளையிட்டிருக்கின்றான்; ஒவ்வொரு தொழும் இடத்திலும் ( தொழுகையின் போது) நீங்கள் உங்கள் முகங்களை (அவனளவிலேயே) நிலைப் படுத்திக் கொள்ளுங்கள்; நீங்கள் அவனுக்கே வணக்கத்தைக் கலப்பற்றதாக ஆக்கியவர்களாக அவனையே அழையுங்கள்; அவன் (இல்லாமையிலிருந்து) உங்களை(ப்படைக்க)த் துவக்கிய பிரகாரமே, (நீங்கள் இறந்த பின்னரும், அவனால் உயிர்ப்பிக்கப் பெற்று அவனிடமே) நீங்கள் மீள்வீர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

30. (உங்களில்) ஒரு கூட்டத்தாரை அவன் நேரான வழியில் செலுத்தினான்; மற்றொரு கூட்டத்தாருக்கோ வழிகேடு அவர்கள் மீது உறுதியாகி விட்டது; ( காரணம்) நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையன்றி, ஷைத்தான்களையே (தங்கள்) பாதுகாவலர்களாக எடுத்துக் கொண்டார்கள்; மேலும், தாங்கள் நிச்சயமாக நேர்வழி பெற்றவர்கள் என எண்ணுகிறார்கள்.

يٰبَنِيْٓ اٰدَمَ خُذُوْا زِيْنَتَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ وَّكُلُوْا وَاشْرَبُوْا وَلَا
٣ ع ١٠ تُسْرِفُوْا ۚ اِنَّهٗ لَا يُحِبُّ الْمُسْرِفِيْنَ ﴿٣١﴾ قُلْ مَنْ حَرَّمَ زِيْنَةَ اللّٰهِ الَّتِيْٓ
اَخْرَجَ لِعِبَادِهٖ وَالطَّيِّبٰتِ مِنَ الرِّزْقِ ؕ قُلْ هِيَ لِلَّذِيْنَ اٰمَنُوْا فِي
الْحَيٰوةِ الدُّنْيَا خَالِصَةً يَّوْمَ الْقِيٰمَةِ ؕ كَذٰلِكَ نُفَصِّلُ الْاٰيٰتِ لِقَوْمٍ
يَّعْلَمُوْنَ ﴿٣٢﴾ قُلْ اِنَّمَا حَرَّمَ رَبِّيَ الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ وَ
الْاِثْمَ وَالْبَغْيَ بِغَيْرِ الْحَقِّ وَاَنْ تُشْرِكُوْا بِاللّٰهِ مَا لَمْ يُنَزِّلْ بِهٖ سُلْطٰنًا
وَّاَنْ تَقُوْلُوْا عَلَى اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿٣٣﴾ وَلِكُلِّ اُمَّةٍ اَجَلٌ ۚ فَاِذَا جَآءَ
اَجَلُهُمْ لَا يَسْتَاْخِرُوْنَ سَاعَةً وَّلَا يَسْتَقْدِمُوْنَ ﴿٣٤﴾ يٰبَنِيْٓ اٰدَمَ اِمَّا
يَاْتِيَنَّكُمْ رُسُلٌ مِّنْكُمْ يَقُصُّوْنَ عَلَيْكُمْ اٰيٰتِيْ ۙ فَمَنِ اتَّقٰى وَاَصْلَحَ
فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ﴿٣٥﴾ وَالَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا
وَاسْتَكْبَرُوْا عَنْهَآ اُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿٣٦﴾ فَمَنْ
اَظْلَمُ مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا اَوْ كَذَّبَ بِاٰيٰتِهٖ ؕ اُولٰٓئِكَ
يَنَالُهُمْ نَصِيْبُهُمْ مِّنَ الْكِتٰبِ ؕ حَتّٰٓى اِذَا جَآءَتْهُمْ رُسُلُنَا
يَتَوَفَّوْنَهُمْ ۙ قَالُوْٓا اَيْنَ مَا كُنْتُمْ تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ ؕ
قَالُوْا ضَلُّوْا عَنَّا وَشَهِدُوْا عَلٰٓى اَنْفُسِهِمْ اَنَّهُمْ كَانُوْا كٰفِرِيْنَ ﴿٣٧﴾

31. ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் (ஆடைகளினால்) உங்களுடைய அலங்காரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்; மேலும், (அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்தவற்றை) நீங்கள் (தாராளமாக) உண்ணுங்கள்; மேலும், பருகுங்கள். (ஆனால்) வீண் விரயமும் செய்யாதீர்கள்; ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் வீண் விரயம் செய்வோரை நேசிக்கமாட்டான்.

32. (நபியே!) "அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியிருக்கும் (சகலவித) அலங்காரத்தையும், உணவு வகைகளில் நல்லவற்றையும் (ஆகாதவை யென்று) தடுத்தவர் யார்?" என்று கேட்பீராக! "அது இவ்வுலக வாழ்வில் விசுவாசங் கொண்டவர்களுக்கு (உரியதாகும். எனினும்,) மறுமை நாளில் (மற்றவர்களுக்கன்றி அவர்களுக்கு மட்டுமே) பிரத்தியேகமானதாகும் என்று கூறுவீராக! அறியக்கூடிய சமூகத்தார்க்கு (நம்முடைய) வசனங்களை இவ்வாறு விவரிக்கின்றோம்.

33. என்னுடைய இரட்சகன் (ஆகாதென்று) தடுத்திருப்பதெல்லாம் மானக்கேடான செயல்களை_ அவற்றில் வெளிப்படையானதையும், மறைமுகமானதையும், (இதர) பாவத்தையும், உரிமையின்றி வரம்பு மீறுதலையும், அல்லாஹ்விற்கு நீங்கள் இணைவைப்பதையும்_அதற்கு எந்தவித ஆதாரத்தையும் அவன் இறக்கிவைக்காதிருக்க, இன்னும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவதையும்_தான்" என்று (நபியே) நீர் கூறுவீராக!

34. ஒவ்வொரு சமுதாயத்தாருக்கும் ஒரு தவணையுண்டு; ஆகவே, அவர்களுடைய தவணை வந்துவிட்டால் ஒரு கணப்பொழுது பிந்தவு மாட்டார்கள்; முந்தவு மாட்டார்கள்.

35. ஆதமுடைய மக்களே! உங்களிலிருந்தே நிச்சயமாக உங்களிடம் (என்னுடைய) தூதர்கள் வந்து, என்னுடைய வசனங்களை உங்களுக்கு விவரித்துக்காண்பிக்கும் போது, எவர்கள் (அல்லாஹ்வுக்குப்) பயந்து, (தங்களைச்) சீர்திருத்திக்கொண்டார்களோ, அவர்களுக்கு எத்தகைய பயமுமில்லை; அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள்.

36. இன்னும் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கி, அவற்றை(ஏற்பதை) விட்டும் கர்வமும் கொண்டார்களே அத்தகையோர்_அவர்கள் நரகவாசிகளாவர்; அவர்கள் அதில் நிரந்தரமாக(த்தங்கி)இருப்பவர்கள்.

37. அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனை செய்து கூறுகின்றவரைவிட, அல்லது அவனுடைய வசனங்களைப் பொய்யாக்குகின்றவரைவிட மிக அநியாயக்காரர் யார்? அத்தகையோர் _அவர்களுக்கு எழுதப்பட்ட (உணவு, செல்வம் முதலிய)வைகளிலிருந்து அவர்களின் பாத்தியதை அவர்களுக்குக் கிடைக்கும்; முடிவாக நம் தூதர்(களான மலக்கு)கள் அவர்களிடம் வந்து அவர்க(ளுடைய உயிர்)களை கைப்பற்றும் சமயத்தில் "அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைத்துக் கொண்டிருந்தீர்களே அவர்கள் எங்கே?" என்று கேட்பார்கள். அ(தற்க)வர்கள், "(அவர்கள் யாவும்) எங்களை விட்டு(ஓடி) மறைந்துவிட்டனர்" என்று கூறி, நிச்சயமாகவே தாங்கள், (சத்தியத்தை) நிராகரிப்பவர்களாக இருந்தனர், என தங்களுக்கு விரோதமாகவே அவர்கள் சாட்சியம் கூறுவார்கள்.

قَالَ ادْخُلُوْا فِیْۤ اُمَمٍ قَدْ خَلَتْ مِنْ قَبْلِكُمْ مِّنَ الْجِنِّ وَالْاِنْسِ
فِی النَّارِ ؕ كُلَّمَا دَخَلَتْ اُمَّةٌ لَّعَنَتْ اُخْتَهَا ؕ حَتّٰۤی اِذَا ادَّارَكُوْا فِیْهَا
جَمِیْعًا ۙ قَالَتْ اُخْرٰىهُمْ لِاُوْلٰىهُمْ رَبَّنَا هٰۤؤُلَآءِ اَضَلُّوْنَا فَاٰتِهِمْ
عَذَابًا ضِعْفًا مِّنَ النَّارِ ؕ۬ قَالَ لِكُلٍّ ضِعْفٌ وَّلٰكِنْ لَّا تَعْلَمُوْنَ ۝۳۸
وَقَالَتْ اُوْلٰىهُمْ لِاُخْرٰىهُمْ فَمَا كَانَ لَكُمْ عَلَیْنَا مِنْ فَضْلٍ
فَذُوْقُوا الْعَذَابَ بِمَا كُنْتُمْ تَكْسِبُوْنَ ۝۳۹ ع اِنَّ الَّذِیْنَ كَذَّبُوْا ع ٤/٥
بِاٰیٰتِنَا وَاسْتَكْبَرُوْا عَنْهَا لَا تُفَتَّحُ لَهُمْ اَبْوَابُ السَّمَآءِ وَلَا
یَدْخُلُوْنَ الْجَنَّةَ حَتّٰی یَلِجَ الْجَمَلُ فِیْ سَمِّ الْخِیَاطِ ؕ وَكَذٰلِكَ
نَجْزِی الْمُجْرِمِیْنَ ۝۴۰ لَهُمْ مِّنْ جَهَنَّمَ مِهَادٌ وَّمِنْ فَوْقِهِمْ غَوَاشٍ ؕ
وَكَذٰلِكَ نَجْزِی الظّٰلِمِیْنَ ۝۴۱ وَالَّذِیْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ
لَا نُكَلِّفُ نَفْسًا اِلَّا وُسْعَهَاۤ ؗ اُولٰٓىِٕكَ اَصْحٰبُ الْجَنَّةِ ۚ هُمْ فِیْهَا
خٰلِدُوْنَ ۝۴۲ وَنَزَعْنَا مَا فِیْ صُدُوْرِهِمْ مِّنْ غِلٍّ تَجْرِیْ مِنْ
تَحْتِهِمُ الْاَنْهٰرُ ۚ وَقَالُوا الْحَمْدُ لِلّٰهِ الَّذِیْ هَدٰىنَا لِهٰذَا ۫ وَمَا كُنَّا
لِنَهْتَدِیَ لَوْلَاۤ اَنْ هَدٰىنَا اللّٰهُ ۚ لَقَدْ جَآءَتْ رُسُلُ رَبِّنَا بِالْحَقِّ ؕ
وَنُوْدُوْۤا اَنْ تِلْكُمُ الْجَنَّةُ اُوْرِثْتُمُوْهَا بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ۝۴۳ الثلثة

38. (அதற்கு அல்லாஹ் அவர்களிடம்,) "ஜின்களிலும், மனிதர்களிலும் உங்களுக்கு முன்னர் சென்றுவிட்ட கூட்டத்தினர்களுடன் நீங்களும் சேர்ந்து நரக நெருப்பில் நுழையுங்கள்" என்று கூறுவான்; அவர்களில் ஒவ்வொரு சமுதாயத்தினரும் (நரகத்திற்குள்) நுழையும் பொழுதெல்லாம் (தனக்கு முன் அங்கு வந்துள்ள) தங்கள் (இனத்தாரின் முன்சென்ற) சகக்கூட்டத்தினரை சபிப்பார்கள்; முடிவாக அவர்கள் யாவரும் நரகத்தையடைந்த பொழுது (அவர்களில்) பிந்தியவர்கள் (பின்பற்றியவர்கள், பின்பற்றப்பட்ட தலைவர்களான) முந்தியவர்களைப் பற்றி "எங்கள் இரட்சகனே! இவர்கள்தாம் எங்களை வழிகெடுத்தவர்கள்; ஆகவே, அவர்களுக்கு (எங்களைவிட) நரகத்தில் இரட்டிப்பான வேதனையைக் கொடுப்பாயாக!" என்று கூறுவார்கள்; அதற்கு அவன், "உங்களில் ஒவ்வொருவருக்குமே இரட்டிப்பு (வேதனை) உண்டு; எனினும், (இதன் காரணத்தை) நீங்கள் அறியமாட்டீர்கள்" என்று கூறுவான்.

39. அவர்களில் முந்தியவர்கள் அவர்களில் பிந்தியவர்களிடம், "எங்களைவிட உங்களுக்கு யாதொரு மேன்மையும் கிடையாது; ஆதலால் நீங்கள் சம்பாதித்துக் கொண்ட (தீ) வினையின் காரணமாக (நீங்களும் இரட்டிப்பு) வேதனையைச் சுவையுங்கள்" என்று கூறுவார்கள்.

40. நிச்சயமாக நம்முடைய வசனங்களைப் பொய்ப்பித்து, அவற்றை (ஏற்பதை) விட்டும் பெருமையும் கொண்டார்களே அத்தகையோர் _ அவர்களுக்கு, (அல்லாஹ்வின் அருளுக்குரிய) வானத்தின் (அருள்) வாயில்கள் திறக்கப்பட மாட்டாது; மேலும் ஊசியின் துவாரத்தில் ஒட்டகம் நுழையும் வரையில் அவர்கள் சுவனத்தில் நுழையமாட்டார்கள்; மேலும் குற்றவாளிகளுக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம்.

41. அவர்களுக்கு நரகத்திலிருந்து (நெருப்பு) விரிப்புகளும், அவர்களுக்கு மேலிருந்து (போர்த்திக் கொள்ள நெருப்புப்) போர்வைகளும் உண்டு; இன்னும் இவ்வாறே அநியாயக்காரர்களுக்கு நாம் கூலி கொடுப்போம்.

42. இன்னும், விசுவாசங்கொண்டு, நற்காரியங்களையும் செய்கின்றார்களே அத்தகையோர் _ எந்த ஓர் ஆத்மாவையும் அதன் சக்திக்குத் தக்கவாரல்லாது நாம் சிரமப்படுத்தமாட்டோம் _ அவர்கள்தான் சுவனவாசிகள்; அதில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்.

43. மேலும், அவர்களுடைய நெஞ்சங்களிலிருந்த குரோதத்தை நாம் நீக்கி விடுவோம்; அவர்களுக்குக் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்; இன்னும் அவர்கள், "இ(ந்தச் சுவனபதியை அடைவ)தற்குரிய நேரான வழியில் எங்களைச் செலுத்திய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியதாகும். அல்லாஹ் எங்களை நேர் வழியில் செலுத்தியிருக்காவிடில், நிச்சயமாக நாங்கள் நேர் வழியை அடைந்தவர்களாக ஆகி இருக்கவேமாட்டோம்; எங்கள் இரட்சகனின் தூதர்கள் (சந்தேகமின்றி) சத்திய (மார்க்க)த்தையே நிச்சயமாக (எங்களுக்கு)க் கொண்டு வந்தார்கள்" என்று கூறுவார்கள். அந்த சொர்க்கம், நீங்கள் (பூமியில்) செய்து கொண்டிருந்த (நன்மையான)வற்றின் (மூலம் அல்லாஹ்வின் அருளைப்பெற்று அதன்) காரணமாகவே அதனை நீங்கள் வாரிசாக்கப் பட்டுள்ளீர்கள் என்று (சப்தமிட்டு) அழைக்கப்படுவார்கள்.

وَنَادٰۤى اَصۡحٰبُ الۡجَـنَّةِ اَصۡحٰبَ النَّارِ اَنۡ قَدۡ وَجَدۡنَا مَا وَعَدَنَا
رَبُّنَا حَقًّا فَهَلۡ وَجَدْتُّمۡ مَّا وَعَدَ رَبُّكُمۡ حَقًّا ؕ قَالُوۡا نَعَمۡ ۚ فَاَذَّنَ
مُؤَذِّنٌۢ بَيۡنَهُمۡ اَنۡ لَّعۡنَةُ اللّٰهِ عَلَى الظّٰلِمِيۡنَ ۙ ﴿۴۴﴾ الَّذِيۡنَ يَصُدُّوۡنَ
عَنۡ سَبِيۡلِ اللّٰهِ وَيَبۡغُوۡنَهَا عِوَجًا ۚ وَهُمۡ بِالۡاٰخِرَةِ كٰفِرُوۡنَ ۘ ﴿۴۵﴾ وقف لازم
وَبَيۡنَهُمَا حِجَابٌ ۚ وَعَلَى الۡاَعۡرَافِ رِجَالٌ يَّعۡرِفُوۡنَ كُلًّاۢ بِسِيۡمٰٮهُمۡ ۚ
وَنَادَوۡا اَصۡحٰبَ الۡجَـنَّةِ اَنۡ سَلٰمٌ عَلَيۡكُمۡ ۟ لَمۡ يَدۡخُلُوۡهَا وَهُمۡ يَطۡمَعُوۡنَ ﴿۴۶﴾
وَاِذَا صُرِفَتۡ اَبۡصَارُهُمۡ تِلۡقَآءَ اَصۡحٰبِ النَّارِ ۙ قَالُوۡا رَبَّنَا لَا
تَجۡعَلۡنَا مَعَ الۡقَوۡمِ الظّٰلِمِيۡنَ ﴿۴۷﴾ وَنَادٰۤى اَصۡحٰبُ الۡاَعۡرَافِ رِجَالًا ع ۶ ۱۲
يَّعۡرِفُوۡنَهُمۡ بِسِيۡمٰٮهُمۡ قَالُوۡا مَاۤ اَغۡنٰى عَنۡكُمۡ جَمۡعُكُمۡ وَمَا كُنۡتُمۡ
تَسۡتَكۡبِرُوۡنَ ﴿۴۸﴾ اَهٰٓؤُلَۤاءِ الَّذِيۡنَ اَقۡسَمۡتُمۡ لَا يَنَالُهُمُ اللّٰهُ بِرَحۡمَةٍ ؕ
اُدۡخُلُوا الۡجَـنَّةَ لَا خَوۡفٌ عَلَيۡكُمۡ وَلَاۤ اَنۡتُمۡ تَحۡزَنُوۡنَ ﴿۴۹﴾ وَنَادٰۤى
اَصۡحٰبُ النَّارِ اَصۡحٰبَ الۡجَـنَّةِ اَنۡ اَفِيۡضُوۡا عَلَيۡنَا مِنَ الۡمَآءِ اَوۡ مِمَّا
رَزَقَكُمُ اللّٰهُ ؕ قَالُوۡۤا اِنَّ اللّٰهَ حَرَّمَهُمَا عَلَى الۡكٰفِرِيۡنَ ۙ ﴿۵۰﴾ الَّذِيۡنَ
اتَّخَذُوۡا دِيۡنَهُمۡ لَهۡوًا وَّلَعِبًا وَّغَرَّتۡهُمُ الۡحَيٰوةُ الدُّنۡيَا ۚ فَالۡيَوۡمَ
نَنۡسٰٮهُمۡ كَمَا نَسُوۡا لِقَآءَ يَوۡمِهِمۡ هٰذَا ۙ وَمَا كَانُوۡا بِاٰيٰتِنَا يَجۡحَدُوۡنَ ﴿۵۱﴾

44. இன்னும், (அந்நாளில்) சுவர்க்கவாசிகள் நரகவாசிகளை அழைத்து "எங்கள் இரட்சகன் எங்களுக்கு வாக்களித்திருந்ததை நாங்கள் உண்மையாக பெற்றுக்கொண்டோம்; நீங்களும், உங்கள் இரட்சகன் உங்களுக்கு வாக்களித்திருந்ததை உண்மையாகவே பெற்றுக் கொண்டீர்களா?" என்று (சப்தமிட்டுக்)கேட்பார்கள். அ(தற்க)வர்கள், "ஆம்!(பெற்றுக்கொண்டோம்)" என்று கூறுவார்கள்; அது சமயம், அவர்களுக்கு மத்தியில் அறிவிப்பாளர் ஒருவர் "நிச்சயமாக அல்லாஹ்வுடைய சாபம் (வரம்பு மீறிய) அநியாயக்காரர்கள் மீது உண்டாவதாக!" என அறிவிப்பார்.

45 அத்தகையோர்_ அவர்கள் அல்லாஹ்வின் பாதையைவிட்டு (மனிதர்களைத்) தடுத்துக்கொண்டும், இன்னும் (அவ்வழிக்கு யாரும் செல்லாதிருக்க)அதனைக் கோணலாக்கவும் தேடினார்கள்; அன்றியும் அவர்கள் மறுமையை நிராகரிப்பவர்கள்.

46. (நரக வாசிகளும் சுவன வாசிகளும் ஆகிய) அவ்விருவருக்குமிடையில் ஒரு திரை(தடுப்புச் சுவர்) இருக்கும்;(அதன்) சிகரங்களில் சில மனிதர்கள் இருப்பார்கள்; (நரகவாசி, சுவர்க்கவாசியாகிய) ஒவ்வொருவரையும் அவர்களின் அடையாளத்தைக் கொண்டே அவர்கள் அறிந்து கொள்வார்கள்; மேலும், அவர்கள், சுவர்க்கவாசிகளை அழைத்து, "அல்லாஹ்வின் சாந்தி உங்கள்மீது உண்டாவதாக!" என்று சப்தமிட்டுக் கூறுவார்கள். (சிகரங்களில் இருக்கும்) இவர்கள் (இதுவரையிலும்) அதில்(சுவனத்தில்) நுழையவில்லை; அவர்களோ (அதில் நுழைவதைமிக்கஆசித்து) ஆவல்கொண்டிருப்பார்கள்.

47. இன்னும், இவர்களின் பார்வைகள் நரகவாசிகளின் பக்கம் திருப்பப் பட்டால், (அவர்கள் படும் வேதனையைக் கண்டு திடுக்கிட்டு)" எங்கள் இரட்சகனே! அந்த அநியாயக்கார சமூகத்தாருடன் (நரகத்தில்) எங்களையும் நீ ஆக்கிவிடாதிருப்பாயாக!" என்று (பிரார்த்தித்துக்) கூறுவார்கள்.

48.சிகரங்களில் இருப்பவர்கள், சிலமனிதர்களை_ அவர்களின் அடையாளத்தைக்கொண்டு அவர்களை அறிந்துகொண்டு, அழைத்து "உங்களின் கூட்டமும், இன்னும் நீங்கள் பெருமையடித்துக் கொண்டிருந்தீர்களே அதுவும், உங்களை விட்டும் எதையும் தேவையற்று வைக்க (பலனளிக்க) வில்லையே" எனக் கூறுவார்கள்.

49. (முஸ்லிம்களான) அவர்களுக்கு அல்லாஹ் அருளைக் கிடைக்கச் செய்யமாட்டான் என்று(காபிர்களாகிய) நீங்கள் சத்தியம்செய்தீர்களே அவர்கள் இவர்கள் அல்லவா?( என்றும் கூறுவார்கள். பிறகு சிகர வாசிகளை நோக்கி,) "நீங்கள் சுவனபதிசென்றுவிடுங்கள் உங்களுக்கு எவ்வித பயமுமில்லை; நீங்கள் கவலையும் அடையமாட்டீர்கள்"(என்று அல்லாஹ் கூறுவான்).

50. பின்னர், நரகவாசிகள் சுவன வாசிகளை அழைத்து " தண்ணீரில் (சிறிதளவு) எங்கள் மீது கொட்டுங்கள்; அல்லது அல்லாஹ் உங்களுக்கு உணவாக அளித்ததிலிருந்து (சிறிதளவேனும் எங்களுக்குத் தாருங்கள்",) என்று (வருந்திக்) கேட்பார்கள்; அ(தற்க)வர்கள், நிச்சயமாக அல்லாஹ் (உங்களைப் போன்ற) நிராகரிப்போரின்மீது இவ்விரண்டையும் தடுத்துவிட்டான்" என்று (பதில்) கூறுவார்கள்.

51. அவர்கள் எத்தகையோரென்றால், அவர்கள் தங்களுடைய மார்க்கத்தை வீணாகவும், விளையாட்டாகவும் எடுத்துக் கொண்டார்கள் ; இவ்வுலக வாழ்க்கை அவர்களை ஏமாற்றியும் விட்டது. எனவே அவர்களுடைய இந்நாளின் சந்திப்பை அவர்கள் மறந்து, நம்முடைய வசனங்களையும் அவர்கள் மறுத்துக் கொண்டிருந்ததைப் போன்று, நாமும் இன்றைய தினம் அவர்களை மறந்து விடுவோம்(என்று அல்லாஹ் கூறிவிடுவான்).

وَلَقَدْ جِئْنٰهُمْ بِكِتٰبٍ فَصَّلْنٰهُ عَلٰى عِلْمٍ هُدًى وَّرَحْمَةً
لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿٥٢﴾ هَلْ يَنْظُرُوْنَ اِلَّا تَاْوِيْلَهٗ ؕ يَوْمَ يَاْتِيْ
تَاْوِيْلُهٗ يَقُوْلُ الَّذِيْنَ نَسُوْهُ مِنْ قَبْلُ قَدْ جَآءَتْ رُسُلُ
رَبِّنَا بِالْحَقِّ ۚ فَهَلْ لَّنَا مِنْ شُفَعَآءَ فَيَشْفَعُوْا لَنَآ اَوْ نُرَدُّ فَنَعْمَلَ
غَيْرَ الَّذِيْ كُنَّا نَعْمَلُ ؕ قَدْ خَسِرُوْٓا اَنْفُسَهُمْ وَضَلَّ عَنْهُمْ مَّا
كَانُوْا يَفْتَرُوْنَ ﴿٥٣﴾ ع اِنَّ رَبَّكُمُ اللّٰهُ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَ ٦ ع ٦ ١٣
الْاَرْضَ فِيْ سِتَّةِ اَيَّامٍ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ قف يُغْشِي الَّيْلَ
النَّهَارَ يَطْلُبُهٗ حَثِيْثًا ۙ وَّالشَّمْسَ وَالْقَمَرَ وَالنُّجُوْمَ مُسَخَّرٰتٍ ۢ
بِاَمْرِهٖ ؕ اَلَا لَهُ الْخَلْقُ وَالْاَمْرُ ؕ تَبٰرَكَ اللّٰهُ رَبُّ الْعٰلَمِيْنَ ﴿٥٤﴾ اُدْعُوْا
رَبَّكُمْ تَضَرُّعًا وَّخُفْيَةً ؕ اِنَّهٗ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ ﴿٥٥﴾ ج وَلَا تُفْسِدُوْا
فِي الْاَرْضِ بَعْدَ اِصْلَاحِهَا وَادْعُوْهُ خَوْفًا وَّطَمَعًا ؕ اِنَّ رَحْمَتَ
اللّٰهِ قَرِيْبٌ مِّنَ الْمُحْسِنِيْنَ ﴿٥٦﴾ وَهُوَ الَّذِيْ يُرْسِلُ الرِّيٰحَ
بُشْرًا بَيْنَ يَدَيْ رَحْمَتِهٖ ؕ حَتّٰٓى اِذَآ اَقَلَّتْ سَحَابًا ثِقَالًا
سُقْنٰهُ لِبَلَدٍ مَّيِّتٍ فَاَنْزَلْنَا بِهِ الْمَآءَ فَاَخْرَجْنَا بِهٖ مِنْ
كُلِّ الثَّمَرٰتِ ؕ كَذٰلِكَ نُخْرِجُ الْمَوْتٰى لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ ﴿٥٧﴾

52. திட்டமாக நாம் அவர்களுக்கு ஒரு வேதத்தைக் கொண்டு வந்தோம். அதில் ஒவ்வொன்றையும் நம் அறிவின் படி (அதன் அடிப்படையில்) விவரித்திருக் கின்றோம்; (அன்றி, அது) விசுவாசங் கொண்ட சமூகத்தார்க்கு நேரான வழியாகவும், அருளாகவும் இருக்கின்றது.

53. (மக்கா வாசிகள், தங்களுக்கு எச்சரிக்கப்பட்டு வந்த) அதன் முடிவு (வெளிப் படுவதைத்) தவிர (வேறெதனையும்) இவர்கள் எதிர்பார்க்கின்றனரா? அதன் முடிவு (வெளிப்பட்டு) வரும் நாளில் இதற்கு முன் அதனை (முற்றிலும்) மறந்திருந்தோர், "நிச்சயமாக எங்கள் இரட்சகனின் தூதர்கள் (எங்களிடம்) சத்திய (வேத)த்தைக் கொண்டு வந்தனர், (இன்று) எங்களுக்குப் பரிந்துரையாளர்கள் எவரும் உண்டா? அவ்வாறாயின், அவர்கள் எங்களுக்குப் பரிந்துரைக்கட்டும்; அல்லது நாங்கள் (உலகத்திற்குத்) திருப்பப்படுவோமா? (அவ்வாறாயின் முன்னர்) நாங்கள் செய்து கொண்டிருந்தவற்றல்லாததைச் செய்வோம்" என்று கூறுவார்கள்; திட்டமாக இவர்கள் தமக்குத் தாமே இழப்பை உண்டாக்கிக் கொண்டனர்; அன்றியும் இவர்கள் (பொய்யாகக்) கற்பனை செய்து கொண்டிருந்தவையும் (அது சமயம்) இவர்களை விட்டு மறைந்தும் விடும்.

54. நிச்சயமாக உங்கள் இரட்சகன் அல்லாஹ்தான்; அவன் எத்தகையவ னென்றால், வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான்; பின்னர் (தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீது இருப்பது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அவன் அர்ஷின் மீது உயர்ந்து (நிலைபெற்று) விட்டான்; அவனே இரவால் பகலை மூடுகிறான். அது தீவிரமாக அதனைப் பின் தொடர்கிறது; இன்னும் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் தன் கட்டளைக்கு வயப்படுத்தப் பட்டதாகப் (படைத்திருக்கிறான்) படைத்தலும், கட்டளையும் அவனுக்கே உரியதெனத் தெரிந்து கொள்ளுங்கள்; அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் மகத்துவமுடையவனாகி விட்டான்.

55. (ஆகவே, விசுவாசிகளே!) உங்கள் இரட்சகனை மிக்க பணிவாகவும், (தாழ்ந்த குரலில்) மெதுவாகவும் (உங்களுக்கு வேண்டியவைகளைக் கோரிப் பிரார்த்தனை செய்து) நீங்கள் அழையுங்கள்; நிச்சயமாக அவன் வரம்பு மீறுவோரை நேசிக்கமாட்டான்.

56. மேலும், பூமியில்_(மனிதர்களே! சமாதானமும், அமைதியும் உண்டாகி) அது சீர்திருத்தமான பின்னர், அதில் குழப்பம் செய்யாதீர்கள்; (இரட்சகனுடைய தண்டனைக்குப்) பயந்தும், (அவனுடைய அருளை) ஆசித்தும் அவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருங்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு மிக்க சமீபத்திலிருக்கிறது.

57. இன்னும், அவன் எத்தகையவனென்றால், அவனுடைய அருள் மாரிக்கு முன்னர், நன்மாராயமாக, (குளிர்ந்த) காற்றுகளை அவன் அனுப்பிவைக்கின்றான்; முடிவாக அது (கருக்கொண்டு) கனத்த மேகங்களைச் சுமந்து வருமானால் அதனை நாம், (வரண்டு) இறந்த ஊரின் பக்கம் ஓட்டிச் செல்கிறோம்; பின்னர் அதைக் கொண்டு நாம் தண்ணீரை இறக்கி வைக்கிறோம்; பின்னர் அதைக் கொண்டு சகல வகைக் கனிகளையும் வெளிப்படுத்துகின்றோம்; இவ்வாறே மரணித்தோரை (அவர்களின் சமாதிகளிலிருந்து) உயிர் கொடுத்து நாம் வெளிப்படுத்துவோம்; (இதனை அறிந்து) நீங்கள் நல்லுணர்ச்சி பெறலாம்.

وَالْبَلَدُ الطَّيِّبُ يَخْرُجُ نَبَاتُهٗ بِاِذْنِ رَبِّهٖ ۚ وَالَّذِيْ خَبُثَ
لَا يَخْرُجُ اِلَّا نَكِدًا ؕ كَذٰلِكَ نُصَرِّفُ الْاٰيٰتِ لِقَوْمٍ يَّشْكُرُوْنَ ﴿۵۸﴾ ع ۷ ۱۴
لَقَدْ اَرْسَلْنَا نُوْحًا اِلٰى قَوْمِهٖ فَقَالَ يٰقَوْمِ اعْبُدُوا اللّٰهَ مَا
لَكُمْ مِّنْ اِلٰهٍ غَيْرُهٗ ؕ اِنِّيْٓ اَخَافُ عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ عَظِيْمٍ ﴿۵۹﴾
قَالَ الْمَلَاُ مِنْ قَوْمِهٖٓ اِنَّا لَنَرٰىكَ فِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۶۰﴾ قَالَ
يٰقَوْمِ لَيْسَ بِيْ ضَلٰلَةٌ وَّلٰكِنِّيْ رَسُوْلٌ مِّنْ رَّبِّ الْعٰلَمِيْنَ ﴿۶۱﴾
اُبَلِّغُكُمْ رِسٰلٰتِ رَبِّيْ وَاَنْصَحُ لَكُمْ وَاَعْلَمُ مِنَ اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿۶۲﴾
اَوَعَجِبْتُمْ اَنْ جَآءَكُمْ ذِكْرٌ مِّنْ رَّبِّكُمْ عَلٰى رَجُلٍ مِّنْكُمْ
لِيُنْذِرَكُمْ وَلِتَتَّقُوْا وَلَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ﴿۶۳﴾ فَكَذَّبُوْهُ فَاَنْجَيْنٰهُ
وَالَّذِيْنَ مَعَهٗ فِي الْفُلْكِ وَاَغْرَقْنَا الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا ؕ
اِنَّهُمْ كَانُوْا قَوْمًا عَمِيْنَ ﴿۶۴﴾ ع وَاِلٰى عَادٍ اَخَاهُمْ هُوْدًا ؕ قَالَ ع ۸ ۱۵
يٰقَوْمِ اعْبُدُوا اللّٰهَ مَا لَكُمْ مِّنْ اِلٰهٍ غَيْرُهٗ ؕ اَفَلَا تَتَّقُوْنَ ﴿۶۵﴾
قَالَ الْمَلَاُ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ قَوْمِهٖٓ اِنَّا لَنَرٰىكَ فِيْ
سَفَاهَةٍ وَّاِنَّا لَنَظُنُّكَ مِنَ الْكٰذِبِيْنَ ﴿۶۶﴾ قَالَ يٰقَوْمِ
لَيْسَ بِيْ سَفَاهَةٌ وَّلٰكِنِّيْ رَسُوْلٌ مِّنْ رَّبِّ الْعٰلَمِيْنَ ﴿۶۷﴾

58. வளமான நல்லபூமி _ தன் இரட்சகனின் கட்டளையைக் கொண்டு அதன் தாவரத்தை வெளியாக்குகிறது; இன்னும், கெட்டது (வளமற்ற பூமி) வெகு சொற்பமேயன்றி வெளியாக்குவதில்லை; நன்றி செலுத்தும் மக்களுக்கு இவ்வாறு திரும்பத்திரும்ப(பலவகைகளிலும் நம்முடைய)வசனங்களை விவரிக்கின்றோம்.

59. திட்டமாக நாம்,"நூஹை" அவருடைய சமூகத்தாரின்பால் ( நம்முடைய தூதராக)அனுப்பி வைத்தோம்; அப்பொழுது அவர் (அவர்களிடம்)"என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்; அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் உங்களுக்கில்லை. (இதற்கு நீங்கள் மாறு செய்தால்) நிச்சயமாக, உங்களுக்கு (வரக்கூடிய) மகத்தானதொரு நாளின் வேதனையை நான் பயப்படுகிறேன்" என்று கூறினார்.

60. அதற்கு அவருடைய சமூகத்தாரிலிருந்த பிரதானிகள் " நிச்சயமாக நாங்கள் உம்மை பகிரங்கமான வழிகேட்டிலிருப்பதையே காண்கின்றோம்" என்று கூறினார்கள்.

61. அ(தற்க)வர், "என்னுடைய சமூகத்ினரே! என்னிடத்தில் எத்தகைய வழிகேடும் இல்லை; எனினும், நிச்சயமாக நான் அகிலத்தாரின் இரட்சகனிடமிருந்து(அனுப்பப்பட்ட) ஒரு தூதன்" என்று கூறினார்.

62. "நான் என் இரட்சகனின் தூதுகளையே உங்களுக்கு எத்திவைக்கிறேன்; உங்களுக்கு நல்லுபதேசமும் செய்கிறேன். மேலும், அல்லாஹ்விடமிருந்து நீங்கள் அறியாதவற்றை நான் அறிகிறேன்"(என்றும்),

63. "உங்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும், நீங்கள் பயந்து நடப்பதற்காகவும், (அல்லாஹ்வால்) நீங்கள் அருள் செய்யப்படவேண்டு மென்பதற்காகவும் உங்களிலுள்ள ஒரு மனிதர் மீது உங்களுடைய இரட்சகனிடமிருந்து உங்களுக்கு நல்லுபதேசம் வருவதைப் பற்றி நீங்கள் ஆச்சரியப் படுகிறீர்களா?"(என்றும் கூறினார்).

64. பின்னும், அவரை அவர்கள் பொய்யாக்கினர்; ஆதலால், அவரையும் அவருடனிருந்தோரையும் கப்பலில் (ஏற்றிக்) காப்பாற்றினோம்; மேலும், நம்முடைய வசனங்களைப் பொய்ப்படுத்தியவர்களை(ப் பெரு வெள்ளத்தில்)மூழ்கடித்து விட்டோம்; நிச்சயமாக அவர்கள் (சத்தியத்தைக் காண முடியாத) குருட்டு சமூகத்தாராகவே இருந்தனர்.

65. மேலும், "ஆது" (கூட்டத்தினர்)பால் அவர்களுடைய சகோதரர் ஹூதையும்(நம்முடைய நபியாக அனுப்பினோம்.) அவர் (அவர்களிடம்), "என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்; அவனைத் தவிர உங்களுக்கு (வணக்கத்திற்குரிய வேறு) நாயனில்லை; (ஆகவே) நீங்கள் (அவனுக்குப்)பயப்பட வேண்டாமா?" என்று கூறினார்.

66. (அதற்கு) அவருடைய சமூகத்தாரிலிருந்து நிராகரித்து விட்டார்களே அத்தகைய பிரதானிகள், "நிச்சயமாக நாம் உம்மை மடமையில் (ஆழ்ந்து கிடப்பவராகவே) காண்கிறோம்; அன்றியும் நிச்சயமாக உம்மைப் பொய்யர்களில் (உள்ளவரென) நாம் எண்ணுகின்றோம்" என்று கூறினார்கள்.

67. அ(தற்க)வர், "என்னுடைய சமூகத்தாரே! என்னிடம் மடமையில்லை, எனினும் நிச்சயமாக நான் அகிலத்தாரின் இரட்சகனிடமிருந்து(அனுப்பப்பட்ட) ஒரு தூதன் ஆவேன்" என்று கூறினார்.

أُبَلِّغُكُمْ رِسٰلٰتِ رَبِّيْ وَاَنَا لَكُمْ نَاصِحٌ اَمِيْنٌ ﴿٦٨﴾ اَوَعَجِبْتُمْ
اَنْ جَآءَكُمْ ذِكْرٌ مِّنْ رَّبِّكُمْ عَلٰى رَجُلٍ مِّنْكُمْ لِيُنْذِرَكُمْ ط
وَاذْكُرُوْٓا اِذْ جَعَلَكُمْ خُلَفَآءَ مِنْ بَعْدِ قَوْمِ نُوْحٍ وَّزَادَكُمْ
فِي الْخَلْقِ بَصْۜطَةً ۚ فَاذْكُرُوْٓا اٰلَآءَ اللّٰهِ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ﴿٦٩﴾
قَالُوْٓا اَجِئْتَنَا لِنَعْبُدَ اللّٰهَ وَحْدَهٗ وَنَذَرَ مَا كَانَ يَعْبُدُ
اٰبَآؤُنَا ۚ فَاْتِنَا بِمَا تَعِدُنَآ اِنْ كُنْتَ مِنَ الصّٰدِقِيْنَ ﴿٧٠﴾
قَالَ قَدْ وَقَعَ عَلَيْكُمْ مِّنْ رَّبِّكُمْ رِجْسٌ وَّغَضَبٌ ط
اَتُجَادِلُوْنَنِيْ فِيْٓ اَسْمَآءٍ سَمَّيْتُمُوْهَآ اَنْتُمْ وَاٰبَآؤُكُمْ مَّا
نَزَّلَ اللّٰهُ بِهَا مِنْ سُلْطٰنٍ ط فَانْتَظِرُوْٓا اِنِّيْ مَعَكُمْ مِّنَ
الْمُنْتَظِرِيْنَ ﴿٧١﴾ فَاَنْجَيْنٰهُ وَالَّذِيْنَ مَعَهٗ بِرَحْمَةٍ مِّنَّا وَ
قَطَعْنَا دَابِرَ الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا وَمَا كَانُوْا مُؤْمِنِيْنَ ﴿٧٢﴾ ع
ع ٩ ١٦ وقف لازم
وَاِلٰى ثَمُوْدَ اَخَاهُمْ صٰلِحًا ۘ قَالَ يٰقَوْمِ اعْبُدُوا اللّٰهَ مَا
لَكُمْ مِّنْ اِلٰهٍ غَيْرُهٗ ط قَدْ جَآءَتْكُمْ بَيِّنَةٌ مِّنْ رَّبِّكُمْ ط
هٰذِهٖ نَاقَةُ اللّٰهِ لَكُمْ اٰيَةً فَذَرُوْهَا تَاْكُلْ فِيْٓ
اَرْضِ اللّٰهِ وَلَا تَمَسُّوْهَا بِسُوْٓءٍ فَيَاْخُذَكُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿٧٣﴾

68. "என் இரட்சகனின் தூது(ச்செய்தி)களையே நான் உங்களுக்கு எத்திவைக்கிறேன்; மேலும், நான் உங்களுக்கு நம்பிக்கையான உபதேசியாகவும் இருக்கின்றேன்".

69. "உங்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக, உங்களிலுள்ள ஆடவர் மீது உங்கள் இரட்சகனிடமிருந்து உங்களுக்காக நல்லுபதேசம் வந்திருப்பதைப்பற்றி நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா? மேலும், நூஹ் உடைய சமூகத்தாருக்குப் பின்னர், அவன் உங்களை (முன்னவர்களுக்குப்) பின்தோன்றல்களாக்கி வைத்து, படைப்பில் (உடலமைப்பில் உயரமானவர்களாகவும்) விரிந்த தேகத்தையும் (மற்றவர்களைவிட) உங்களுக்கு அதிகமாக்கியிருப்பதையும் நீங்கள் நினைத்துப் பாருங்கள். ஆகவே நீங்கள் வெற்றியடைவதற்காக அல்லாஹ்வின் எண்ணிலடங்காத ஏனைய அருட்கொடைகளை நீங்கள் நினைத்துப் பாருங்கள்" (என்றும் கூறினார்).

70. அ(தற்க)வர்கள், "எங்கள் மூதாதையர்கள் வணங்கிக் கொண்டிருந்தவைகளை நாங்கள் விட்டு விட்டு, அல்லாஹ்வை (வணக்கத்தில்) அவன் தனித்தவனாக இருக்க நாங்கள் வணங்கவேண்டும் என்பதற்காகவா எங்களிடம் நீர் வந்தீர்? (நாங்கள் அவ்வாறு செய்யமாட்டோம்.) ஆகவே நீர் உண்மையாளர்களில் உள்ளவராக இருந்தால், நீர் வாக்களித்ததை எங்களுக்குக் கொண்டு வாரும்" என்று கூறினர்.

71. அ(தற்க)வர், "உங்கள் மீது உங்களுடைய இரட்சகனிடமிருந்து வேதனையும் (அவனுடைய) கோபமும் திட்டமாக விதியாகிவிட்டது; (நீங்கள் தெய்வங்களெனப் பெயர்வைத்திருக்கும்) சில பெயர்களில் என்னிடம் நீங்கள் தர்க்கிக்கின்றீர்களா? அவற்றை நீங்களும், உங்கள் மூதாதையர்களும் பெயர்களாக வைத்துக்கொண்டீர்கள்; அல்லாஹ் அதற்கு எவ்விதச்சான்றையும் இறக்கிவைக்கவில்லை; ஆகவே, (உங்களுக்கு வரக்கூடிய வேதனையை) நீங்கள் எதிர்பார்த்திருங்கள்; நிச்சயமாக நானும் உங்களுடன் எதிர்பார்ப்பவர்களில் இருக்கின்றேன்" என்று கூறினார்.

72. ஆகவே, அவரையும், அவருடன் இருந்தோரையும் நம்முடைய அருளைக் கொண்டு நாம் காப்பற்றினோம்; நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கியோரையும், விசுவாசங்கொள்ளாதவர்களாக இருந்தோரையும் வேரறுத்து விட்டோம்.

73. "ஸமூது" கூட்டத்தாருக்கு அவர்களுடைய சகோதரர் ஸாலிஹையும் (நம்முடைய தூதராக அனுப்பிவைத்தோம்.) அவர் (அவர்களிடம்) "என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள்; உங்களுக்கு அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயனில்லை; (இதற்காக) உங்கள் இரட்சகனிடமிருந்து தெளிவான ஒரு அத்தாட்சி உங்களிடம் திட்டமாக வந்திருக்கின்றது; உங்களுக்கோர் அத்தாட்சியாக, இது அல்லாஹ்வுடைய பெண்ஒட்டகமாகும்; ஆகவே அதனை நீங்கள் விட்டு விடுங்கள்; அது (தன் இஷ்டப்படி) அல்லாஹ்வுடைய பூமியில் (எங்கும் தடையின்றி தாராளமாக) மேய்ந்துகொள்ளும்; மேலும் அதை எத்தகைய தீங்கும் கொண்டு தீண்டாதீர்கள்; (அவ்வாறு செய்தால்) துன்புறுத்தும் வேதனை உங்களைப் பிடித்துக் கொள்ளும்" என்று கூறினார்.

وَاذْكُرُوْٓا اِذْ جَعَلَكُمْ خُلَفَآءَ مِنْۢ بَعْدِ عَادٍ وَّبَوَّاَكُمْ
فِی الْاَرْضِ تَتَّخِذُوْنَ مِنْ سُهُوْلِهَا قُصُوْرًا وَّتَنْحِتُوْنَ
الْجِبَالَ بُيُوْتًا ۚ فَاذْكُرُوْٓا اٰلَآءَ اللّٰهِ وَلَا تَعْثَوْا فِی الْاَرْضِ
مُفْسِدِيْنَ ﴿٧٤﴾ قَالَ الْمَلَاُ الَّذِيْنَ اسْتَكْبَرُوْا مِنْ قَوْمِهٖ
لِلَّذِيْنَ اسْتُضْعِفُوْا لِمَنْ اٰمَنَ مِنْهُمْ اَتَعْلَمُوْنَ اَنَّ صٰلِحًا
مُّرْسَلٌ مِّنْ رَّبِّهٖ ؕ قَالُوْٓا اِنَّا بِمَآ اُرْسِلَ بِهٖ مُؤْمِنُوْنَ ﴿٧٥﴾
قَالَ الَّذِيْنَ اسْتَكْبَرُوْٓا اِنَّا بِالَّذِیْٓ اٰمَنْتُمْ بِهٖ
كٰفِرُوْنَ ﴿٧٦﴾ فَعَقَرُوا النَّاقَةَ وَعَتَوْا عَنْ اَمْرِ رَبِّهِمْ وَ
قَالُوْا يٰصٰلِحُ ائْتِنَا بِمَا تَعِدُنَآ اِنْ كُنْتَ مِنَ
الْمُرْسَلِيْنَ ﴿٧٧﴾ فَاَخَذَتْهُمُ الرَّجْفَةُ فَاَصْبَحُوْا فِیْ دَارِهِمْ
جٰثِمِيْنَ ﴿٧٨﴾ فَتَوَلّٰى عَنْهُمْ وَقَالَ يٰقَوْمِ لَقَدْ اَبْلَغْتُكُمْ
رِسَالَةَ رَبِّیْ وَنَصَحْتُ لَكُمْ وَلٰكِنْ لَّا تُحِبُّوْنَ النّٰصِحِيْنَ ﴿٧٩﴾
وَلُوْطًا اِذْ قَالَ لِقَوْمِهٖٓ اَتَاْتُوْنَ الْفَاحِشَةَ مَا سَبَقَكُمْ
بِهَا مِنْ اَحَدٍ مِّنَ الْعٰلَمِيْنَ ﴿٨٠﴾ اِنَّكُمْ لَتَاْتُوْنَ الرِّجَالَ
شَهْوَةً مِّنْ دُوْنِ النِّسَآءِ ؕ بَلْ اَنْتُمْ قَوْمٌ مُّسْرِفُوْنَ ﴿٨١﴾

74. "ஆது (கூட்டத்தாரு)க்குப் பின்னர் உங்களை அவன் பின்தோன்றல்களாக்கி வைத்ததையும், பூமியில் உங்களை வசிக்கச் செய்ததையும் நீங்கள் நினைத்துப் பாருங்கள்; நீங்கள் அதன் இலகுவான பூமியில் மாளிகைகளைக் கட்டிக் கொள்கின்றீர்கள்; மலைகளை வீடுகளாகக் குடைந்து அமைத்துக் கொள்கின்றீர்கள்; ஆகவே அல்லாஹ்வின் இவ்வருட்கொடைகளையெல்லாம் நீங்கள் நினைத்துப்பாருங்கள்; அன்றியும் பூமியில் குழப்பம் செய்பவர்களாக அலையாதீர்கள்" (என்றும் கூறினார்).

75. (அதற்கு,) அவருடைய சமூகத்தாரில் கர்வங்கொண்டிருந்த பிரதானிகள், தங்களைவிட பலவீனமானவர்களென எண்ணப்பட்டிருந்த அவர்களில் விசுவாசங்கொண்டோரிடம் "நிச்சயமாக (இந்த) ஸாலிஹ் அவர் இரட்சகனால் அனுப்பப்பட்ட ஒரு தூதரென நீங்கள் உறுதியாக அறிவீர்களா?" என்று கேட்டார்கள்; அ(தற்க)வர்கள், " நிச்சயமாக நாங்கள் எதைக்கொண்டு அவர் அனுப்பப்பட்டாரோ அ(த்தூ)தை விசுவாசம் கொள்ளக்கூடியவர்கள் " என்று கூறினார்கள்

76. (அதற்கு) கர்வங்கொண்டிருந்தார்களே அவர்கள், (அவ் விசுவாசிகளிடம்) "நீங்கள் எதை விசுவாசங் கொண்டிருக்கிறீர்களோ அதை நிச்சயமாக நாங்கள் நிராகரிக்கக்கூடியவர்கள்" என்று கூறினார்கள்.

77. பின்னர், அந்த ஒட்டகத்தை அறுத்துவிட்டார்கள், தங்கள் இரட்சகனின் கட்டளையை மீறியும் விட்டனர்; இன்னும்,(அவர்கள் ஸாலிஹிடம்,) "ஸாலிஹே! நீர் (அல்லாஹ்வுடைய) தூதர்களில் (உள்ளவராக) இருந்தால், நீர் எங்களுக்கு வாக்களித்த(வேதனையான)தை எங்களிடம் கொண்டு வாரும்" என்று கூறினார்கள் .

78. ஆகவே,(முன்னர் அவர்களுக்கு எச்சரிக்கப்பட்டு வந்த) பூகம்பம் அவர்களைப் பிடித்துக்கொண்டது; அதனால் அவர்கள் தங்கள் வீடுகளில் (இறந்து)குப்புற வீழ்ந்து கிடக்க, காலைப்பொழுதை அடைந்தனர்.

79. (அந்நேரத்தில் ஸாலிஹ் நபி) அவர்களைவிட்டும் திரும்பிக் கொண்டார்; மேலும்,(அவர்களிடம்,)" என்னுடைய சமூகத்தாரே! நிச்சயமாக நான் உங்களுக்கு என் இரட்சகனின் தூதையே எத்திவைத்தேன்; உங்களுக்கு நல்லுபதேசமும் செய்தேன்; எனினும், நீங்களோ நல்லுபதேசம் செய்பவர்களை நேசிப்பவர்களாக இல்லை" என்று கூறினார்.

80. " லூத் " தையும் (நம்முடைய தூதராக அவருடைய சமூகத்தார்க்கு நாம் அனுப்பிவைத்தோம்.) அவர் தம் சமூகத்தாரிடம், "மானக்கேடானதொரு காரியத்தை நீங்கள் செய்கின்றீர்களா? அகிலத்தாரில் எவரும் அதை(செய்வது) கொண்டு உங்களை முந்திவிடவில்லை" என்று கூறியதை (நினைவு கூருங்கள்.)

81 . "நிச்சயமாக நீங்கள் பெண்களை விட்டு (விட்டு) ஆண்களிடம் காம இச்சைக்காக(அதைத் தணித்துக் கொள்ள) வருகின்றீர்கள்; மாறாக நீங்கள் மிக்க வரம்பு மீறிய சமூகத்தவராகவே இருக்கின்றீர்கள்" (என்று கூறினார்).

وَمَا كَانَ جَوَابَ قَوْمِهٖٓ اِلَّآ اَنْ قَالُوْٓا اَخْرِجُوْهُمْ
مِّنْ قَرْيَتِكُمْ ۚ اِنَّهُمْ اُنَاسٌ يَّتَطَهَّرُوْنَ ﴿٨٢﴾ فَاَنْجَيْنٰهُ
وَاَهْلَهٗٓ اِلَّا امْرَاَتَهٗ ۖ كَانَتْ مِنَ الْغٰبِرِيْنَ ﴿٨٣﴾ وَاَمْطَرْنَا
عَلَيْهِمْ مَّطَرًا ۭ فَانْظُرْ كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُجْرِمِيْنَ ﴿٨٤﴾ ع ١٠ ع ١٢ ١٧
وَاِلٰى مَدْيَنَ اَخَاهُمْ شُعَيْبًا ۭ قَالَ يٰقَوْمِ اعْبُدُوا اللّٰهَ
مَا لَكُمْ مِّنْ اِلٰهٍ غَيْرُهٗ ۭ قَدْ جَاۗءَتْكُمْ بَيِّنَةٌ مِّنْ
رَّبِّكُمْ فَاَوْفُوا الْكَيْلَ وَالْمِيْزَانَ وَلَا تَبْخَسُوا النَّاسَ
اَشْيَاۗءَهُمْ وَلَا تُفْسِدُوْا فِي الْاَرْضِ بَعْدَ اِصْلَاحِهَا ۭ
ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ﴿٨٥﴾ ۚ وَلَا تَقْعُدُوْا
بِكُلِّ صِرَاطٍ تُوْعِدُوْنَ وَتَصُدُّوْنَ عَنْ سَبِيْلِ اللّٰهِ
مَنْ اٰمَنَ بِهٖ وَتَبْغُوْنَهَا عِوَجًا ۚ وَاذْكُرُوْٓا اِذْ كُنْتُمْ
قَلِيْلًا فَكَثَّرَكُمْ ۠ وَانْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ
الْمُفْسِدِيْنَ ﴿٨٦﴾ وَاِنْ كَانَ طَاۗىِٕفَةٌ مِّنْكُمْ اٰمَنُوْا
بِالَّذِيْٓ اُرْسِلْتُ بِهٖ وَطَاۗىِٕفَةٌ لَّمْ يُؤْمِنُوْا فَاصْبِرُوْا
حَتّٰى يَحْكُمَ اللّٰهُ بَيْنَنَا ۚ وَهُوَ خَيْرُ الْحٰكِمِيْنَ ﴿٨٧﴾

82. (அதற்கு) அவரது சமுதாயத்தினரின் பதில் "அவர்களை உங்கள் ஊரைவிட்டு வெளியேற்றிவிடுங்கள்; (காரணம்)நிச்சயமாக அவர்கள் மிக்க பரிசுத்தமான மனிதர்களாக இருக்(க விரும்பு)கிறார்கள்" என்று அவர்கள் கூறியதைத்தவிர (வேறெதுவாகவும்) இருக்கவில்லை.

83. எனவே, அவருடைய மனைவியைத் தவிர அவரையும்,(மற்ற) அவருடைய குடும்பத்தினரையும் காப்பாற்றினோம். (அவருடைய மனைவியாகிய) அவள் (அவரைப் பின்பற்றாது அழிந்து போவோரில் ஒருத்தியாக) பின்தங்கியவர்களுடன் இருந்துவிட்டாள்.

84. மேலும், அவர்கள்மீது நாம் (கல்) மாரியைப் பொழிவித்து (அவர்களை அழித்து) விட்டோம். ஆகவே, (இக்) குற்றவாளிகளின் (இறுதி) முடிவு எப்படி இருந்தது என்பதை (நபியே!) நீர் நோக்குவீராக!

85. இன்னும் "மத்யன்" (என்னும் நகர) வாசிகளிடம் அவர்களுடைய சகோதரர் "ஷுஐபை" (நம்முடைய தூதராக அனுப்பிவைத்தோம்). அவர், "என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள்; அவனைத் தவிர உங்களுக்கு (வணக்கத்திற்குரியவேறு) நாயனில்லை; உங்கள் இரட்சகனிடமிருந்து திட்டமாக உங்களுக்குத் தெளிவான அத்தாட்சி வந்திருக்கின்றது; ஆகவே, அளவைப் பூர்த்தியாக அளந்து,எடையையும்சரியாக நிறுங்கள்;(நீங்கள் கொடுக்கவேண்டிய) மனிதர்களுடைய பொருட்களில் யாதொன்றை அவர்களுக்குக் குறைத்தும் விடாதீர்கள்; மேலும், பூமியில் (சமாதானம், அமைதிஏற்பட்டு) அது சீர்திருத்தம் அடைந்த பின்னர், குழப்பத்தை உண்டுபண்ணாதீர்கள்; நீங்கள் விசுவாசிகளாயின், இவைதாம் உங்களுக்கு நன்மையாக இருக்கும்" என்று கூறினார்.

86. மேலும், "ஒவ்வொரு வழியிலும், பயமுறுத்துபவர்களாகவும், அல்லாஹ்வின் வழியைவிட்டும் அவனை விசுவாசங்கொண்டோரை தடுப்பவர்களாகவும் அதில் கோணலைத் தேடக் கூடியவர்களாகவும் அமராதீர்கள்; குறைவானவர்களாக நீங்கள் இருந்தபோது, உங்களை அவன் அதிகமாக ஆக்கிவைத்ததையும் (அல்லாஹ்வுக்கு நன்றி செய்வதற்காக) நீங்கள் நினைவு கூருங்கள்; பூமியில் குழப்பம் செய்து கொண்டலைந்தவர்களின் (இறுதி) முடிவு எப்படி இருந்தது என்பதையும் நீங்கள் (கவனித்துப்) பார்ப்பீர்களாக!"

87. "இன்னும் நான் எதைக் கொண்டு அனுப்பப்பட்டேனோ அதை உங்களில் ஒருசாரார் விசுவாசம் கொண்டவர்களாக இருந்தும், ஒருசாரார் விசுவாசங் கொள்ளாதவர்களாகவும் இருந்தால், (அப்போது) நமக்கு மத்தியில் அல்லாஹ் தீர்ப்பு வழங்கும் வரை பொறுமையாக இருங்கள்; அவனே தீர்ப்பு வழங்குவோரில் மிக்க மேலானவன்" (என்று கூறினார்).

الجزء ٩

قَالَ الْمَلَاُ الَّذِيْنَ اسْتَكْبَرُوْا مِنْ قَوْمِهٖ لَنُخْرِجَنَّكَ
يٰشُعَيْبُ وَالَّذِيْنَ اٰمَنُوْا مَعَكَ مِنْ قَرْيَتِنَآ اَوْ لَتَعُوْدُنَّ فِيْ مِلَّتِنَا ؕ
قَالَ اَوَلَوْ كُنَّا كٰرِهِيْنَ ۚ ﴿٨٨﴾ قَدِ افْتَرَيْنَا عَلَى اللّٰهِ كَذِبًا اِنْ عُدْنَا
فِيْ مِلَّتِكُمْ بَعْدَ اِذْ نَجّٰىنَا اللّٰهُ مِنْهَا ؕ وَمَا يَكُوْنُ لَنَآ اَنْ نَّعُوْدَ فِيْهَآ
اِلَّآ اَنْ يَّشَآءَ اللّٰهُ رَبُّنَا ؕ وَسِعَ رَبُّنَا كُلَّ شَيْءٍ عِلْمًا ؕ عَلَى اللّٰهِ
تَوَكَّلْنَا ؕ رَبَّنَا افْتَحْ بَيْنَنَا وَبَيْنَ قَوْمِنَا بِالْحَقِّ وَاَنْتَ خَيْرُ
الْفٰتِحِيْنَ ﴿٨٩﴾ وَقَالَ الْمَلَاُ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ قَوْمِهٖ لَئِنِ اتَّبَعْتُمْ
شُعَيْبًا اِنَّكُمْ اِذًا لَّخٰسِرُوْنَ ﴿٩٠﴾ فَاَخَذَتْهُمُ الرَّجْفَةُ فَاَصْبَحُوْا
فِيْ دَارِهِمْ جٰثِمِيْنَ ۚۛ ﴿٩١﴾ الَّذِيْنَ كَذَّبُوْا شُعَيْبًا كَاَنْ لَّمْ يَغْنَوْا
فِيْهَا ۛۚ اَلَّذِيْنَ كَذَّبُوْا شُعَيْبًا كَانُوْا هُمُ الْخٰسِرِيْنَ ﴿٩٢﴾ فَتَوَلّٰى
عَنْهُمْ وَقَالَ يٰقَوْمِ لَقَدْ اَبْلَغْتُكُمْ رِسٰلٰتِ رَبِّيْ وَنَصَحْتُ لَكُمْ ۚ
فَكَيْفَ اٰسٰى عَلٰى قَوْمٍ كٰفِرِيْنَ ﴿٩٣﴾ ع وَمَآ اَرْسَلْنَا فِيْ قَرْيَةٍ مِّنْ نَّبِيٍّ
اِلَّآ اَخَذْنَآ اَهْلَهَا بِالْبَاْسَآءِ وَالضَّرَّآءِ لَعَلَّهُمْ يَضَّرَّعُوْنَ ﴿٩٤﴾
ثُمَّ بَدَّلْنَا مَكَانَ السَّيِّئَةِ الْحَسَنَةَ حَتّٰى عَفَوْا وَّقَالُوْا قَدْ مَسَّ
اٰبَآءَنَا الضَّرَّآءُ وَالسَّرَّآءُ فَاَخَذْنٰهُمْ بَغْتَةً وَّهُمْ لَا يَشْعُرُوْنَ ﴿٩٥﴾

مع عند المتقدمين ١٢

ع ١١/ ٩

88. அவருடைய சமூகத்தினரில் கர்வங் கொண்டிருந்தார்களே அந்தப்பிரதானிகள், "ஷுஐபே! நிச்சயமாக நாம், உம்மையும் உம்முடன் விசுவாசித்தோரையும் நம்முடைய ஊரிலிருந்து வெளியேற்றி விடுவோம்; அல்லது நிச்சயமாக நீங்கள் நம்முடைய மார்க்கத்திற்குத் திரும்பிவிடவேண்டும்" என்று கூறினார்கள். அ(தற்க)வர் (அவர்களிடம், "உங்களுடைய மார்க்கத்தை) நாங்கள் வெறுப்பவர்களாக இருந்தபோதிலுமா?" என்று கேட்டார்.

89. (அன்றி,) "உங்கள் மார்க்கத்திற்கு — அதிலிருந்து அல்லாஹ் எங்களைக் காப்பாற்றிவிட்டதன் பின்னர் — நாங்கள் திரும்பினால், நிச்சயமாக அல்லாஹ்வின் மீது நாங்கள் பொய்யைப் புனைந்து கூறியவர்களாகிவிடுவோம்; எங்கள் இரட்சகனாகிய அல்லாஹ் நாடினாலன்றி, நாங்கள் அதன்பால் மீளுவதற்கு எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை; எங்கள் இரட்சகன் தன் அறிவால் எல்லாப்பொருட்களையும் சூழ்ந்திருக்கிறான். அல்லாஹ்வின் மீதே நாங்கள் (எங்களுடைய காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைத்துள்ளோம்." (என்று கூறி,) "எங்கள் இரட்சகனே! எங்களுக்கும், எங்கள் சமூகத்தாருக்குமிடையில் நீ நியாயமான தீர்ப்பை வழங்குவாயாக! நிச்சயமாக நீயே தீர்ப்பளிப்போரில் மிக்க மேலானவன்" (என்றும் பிரார்த்தித்தார்).

90. அவருடைய சமூகத்தாரில் நிராகரித்து விட்டார்களே அத்தகைய பிரதானிகள், (மற்றவர்களிடம்,) "நீங்கள் ஷுஐபைப் பின்பற்றினால், அப்போது நிச்சயமாக நீங்கள்தாம் நஷ்டமடைந்தவர்கள்" என்று கூறினார்கள்.

91. ஆகவே, அவர்களை (மிக்க கொடூரமான) பூகம்பம் பிடித்துக் கொண்டது; அவர்கள் தங்கள் வீடுகளில் குப்புற வீழ்ந்து (இறந்து) கிடந்தவர்களாக காலைப்பொழுதை அடைந்தனர்.

92. ஷுஐபைப் பொய்யாக்கினார்களே அத்தகையவர்கள், அவற்றில் (தங்கள் வீடுகளில்) ஒருகாலத்திலுமே வசித்திராதவர்களைப் போலாகி (யாதோர் அடையாளமுமின்றி அழிந்து) விட்டனர். ஷுஐபைப் பொய்யாக்கினார்களே அத்தகையோர் — அவர்களே (முற்றிலும்) நஷ்டமடைந்தவர்களாக ஆகிவிட்டார்கள்.

93. (அது சமயம் ஷுஐபாகிய) அவர் அவர்களைவிட்டும் திரும்பி, "என்னுடைய சமூகத்தாரே! நிச்சயமாக நான் என் இரட்சகனின் தூதுகளையே உங்களுக்கு (எடுத்துரைத்து) எத்திவைத்துவிட்டேன்; இன்னும் உங்களுக்கு நல்லுபதேசமும் செய்துவிட்டேன்; ஆகவே, (அதனை) நிராகரித்துவிட்ட சமூகத்தாரின்மீது நான் எவ்வாறு கவலைப்படுவேன்" என்று கூறினார்.

94. மேலும், எந்த ஊரிலும் அவ்வூர்வாசிகளை, அவர்கள் பணிந்து வருவதற்காக வறுமையாலும், பிணியாலும் நாம் அவர்களை பிடித்தே தவிர எந்த நபியையும் நாம் அனுப்பவில்லை.

95. பின்னர் நாம் (வறுமை, பிணிபோன்ற) தீயதின் இடத்தில் நல்லதை மாற்றிக்கொடுத்தோம்; முடிவாக (பல்கிப் பெருகி) அதிகமானவர்களாகிவிட்ட அவர்கள்: "நம்முடைய மூதாதையர்களுக்குமே இத்தகைய சுக, துக்கம் ஏற்பட்டிருக்கின்றது" என்று (தாங்கள் அனுபவித்துவரும் இவையாவும் காலத்தின் ஏற்றத்தாழ்வினால் ஏற்பட்டதே என அலட்சியமாகக்) கூறினார்கள்; ஆதலால், அவர்கள் (ஒருசிறிதும்) உணர்ந்து கொள்ளாதவிதத்தில் (வேதனையைக் கொண்டு) திடீரென அவர்களை நாம் பிடித்துக் கொண்டோம்.

وَلَوْ اَنَّ اَهْلَ الْقُرٰۤى اٰمَنُوْا وَاتَّقَوْا لَفَتَحْنَا عَلَيْهِمْ بَرَكٰتٍ
مِّنَ السَّمَآءِ وَالْاَرْضِ وَلٰكِنْ كَذَّبُوْا فَاَخَذْنٰهُمْ بِمَا
كَانُوْا يَكْسِبُوْنَ ﴿٩٦﴾ اَفَاَمِنَ اَهْلُ الْقُرٰۤى اَنْ يَّاْتِيَهُمْ
بَاْسُنَا بَيَاتًا وَّهُمْ نَآئِمُوْنَ ﴿٩٧﴾ اَوَاَمِنَ اَهْلُ الْقُرٰۤى اَنْ
يَّاْتِيَهُمْ بَاْسُنَا ضُحًى وَّهُمْ يَلْعَبُوْنَ ﴿٩٨﴾ اَفَاَمِنُوْا مَكْرَ اللّٰهِ ۚ
فَلَا يَاْمَنُ مَكْرَ اللّٰهِ اِلَّا الْقَوْمُ الْخٰسِرُوْنَ ﴿٩٩﴾ اَوَلَمْ يَهْدِ ۱۲ ع ۲
لِلَّذِيْنَ يَرِثُوْنَ الْاَرْضَ مِنْۢ بَعْدِ اَهْلِهَاۤ اَنْ لَّوْ نَشَآءُ
اَصَبْنٰهُمْ بِذُنُوْبِهِمْ ۚ وَنَطْبَعُ عَلٰى قُلُوْبِهِمْ فَهُمْ لَا يَسْمَعُوْنَ ﴿١٠٠﴾
تِلْكَ الْقُرٰى نَقُصُّ عَلَيْكَ مِنْ اَنْۢبَآئِهَا ۚ وَلَقَدْ جَآءَتْهُمْ
رُسُلُهُمْ بِالْبَيِّنٰتِ ۚ فَمَا كَانُوْا لِيُؤْمِنُوْا بِمَا كَذَّبُوْا مِنْ قَبْلُ ؕ
كَذٰلِكَ يَطْبَعُ اللّٰهُ عَلٰى قُلُوْبِ الْكٰفِرِيْنَ ﴿١٠١﴾ وَمَا وَجَدْنَا
لِاَكْثَرِهِمْ مِّنْ عَهْدٍ ۚ وَاِنْ وَّجَدْنَاۤ اَكْثَرَهُمْ لَفٰسِقِيْنَ ﴿١٠٢﴾
ثُمَّ بَعَثْنَا مِنْۢ بَعْدِهِمْ مُّوْسٰى بِاٰيٰتِنَاۤ اِلٰى فِرْعَوْنَ وَمَلَا۟ئِهٖ
فَظَلَمُوْا بِهَا ۚ فَانْظُرْ كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُفْسِدِيْنَ ﴿١٠٣﴾ وَ
قَالَ مُوْسٰى يٰفِرْعَوْنُ اِنِّيْ رَسُوْلٌ مِّنْ رَّبِّ الْعٰلَمِيْنَ ﴿١٠٤﴾ لا

96. மேலும், அவ்வூர்களை உடையவர்கள் விசுவாசங்கொண்டு (அல்லாஹ்வுக்குப்) பயந்தும் நடந்திருந்தால், அவர்களுக்காக வானத்திலும், பூமியிலும் உள்ள பாக்கியங்(களின் வாசல்)களை நாம் திறந்து விட்டிருப்போம்; எனினும், அவர்கள் (நபிமார்களை விசுவாசிக்காது) பொய்யாக்கினார்கள்; ஆகவே, அவர்கள் சம்பாதித்துக் கொண்ட (பாவத்)தின் காரணமாக நாம் (வேதனையைக் கொண்டு) அவர்களைப் பிடித்துக் கொண்டோம்.

97. (நபியே! நிராகரித்த) அவ்வூர்களை உடையவர்கள் (தங்கள் வீடுகளில்) இரவில் அவர்கள் நித்திரை செய்து கொண்டிருக்கும் நிலையில், நம்முடைய வேதனை அவர்களிடம் வந்து விடுவதைப் பற்றி அவர்கள் அச்சமற்றிருக்கின்றனரா?

98. அல்லது (நிராகரித்த) அவ்வூர்களை உடையவர்கள் (கவலையற்று) முற்பகலில் விளையாடிக் கொண்(டு பராமுகமாக அவர்கள் காரியங்களில் ஈடுபட்)டிருக்கும் நிலையில், நம்முடைய வேதனை அவர்களிடம் வந்து விடுவதைப் பற்றி அவர்கள் அச்சமற்றிருக்கின்றனரா?

99. அல்லாஹ்வின் சூழ்ச்சியை அவர்கள் அச்சமற்றிருக்கின்றனரா? (முற்றிலும்) நஷ்டமடையக்கூடிய சமூகத்தாரைத் தவிர (எவரும்) அல்லாஹ்வின் சூழ்ச்சியை அச்சமற்றிருக்கமாட்டார்கள்.

100. பூமியை _ அதை உடையவர்களுக்குப் பின்னர் _ வாரிசாக அடைந்தோருக்கு_ நாம் நாடினால், இவர்களுடைய பாவங்களின் காரணமாக இவர்களையும், (அவ்வாறே) பிடித்திருப்போம் என்ற விஷயம் இவர்களுக்கு விளங்கவில்லையா? மேலும் நாம் இவர்களுடைய இதயங்களின் மீது முத்திரையிட்டுவிடுகிறோம்; ஆகவே, இவர்கள் (நல்லுபதேசங்களைச்) செவியேற்க மாட்டார்கள்.

101. (நபியே!) அந்த ஊர்கள் _ அவற்றின் (வரலாற்றுச்) செய்திகளை நாம் உமக்கு(விவரித்துக்) கூறுகின்றோம். (அவற்றில் வசித்திருந்த) அவர்களுக்கு (அல்லாஹ்வினால்) அனுப்பப்பட்ட தூதர்கள், அவர்களிடம் திட்டமாகத் தெளிவான அத்தாட்சிகளையே கொண்டு வந்தனர்; (ஆயினும்,) அவர்களோ, முன்னர் பொய்யாக்கிய காரணத்தினால் விசுவாசங் கொள்பவர்களாக இருக்கவில்லை; இவ்வாறே நிராகரிப்போரின் இதயங்களின் மீது அல்லாஹ் முத்திரையிட்டு விடுகின்றான்.

102. அவர்களில் பெரும்பாலோருக்கு, எந்த வாக்குறுதி(யை)யும் (நிறைவேற்றும் தன்மை) இருப்பதாகவும் நாம் காணவில்லை ; அன்றியும், நிச்சயமாக நாம் அவர்களில் பெரும்பாலோரைப் பாவிகளாகவே கண்டோம்.

103. (நபிமார்களாகிய நூஹ், ஹூத், ஸாலிஹ், ஷுஐப்) அவர்களுக்குப் பின்னர் மூஸாவை நம் அத்தாட்சிகளுடன் ஃபிர்அவ்னிடமும், அவனுடைய பிரதானிகளிடமும் நாம் அனுப்பிவைத்தோம்; (ஆயினும்,) அவர்கள் அவற்றை நிராகரித்து (அநியாயம் செய்து) விட்டனர்; ஆகவே, (இத்தகைய) குழப்பக்காரர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை (நபியே!) நீர் கவனிப்பீராக!

104. மேலும், மூஸா (ஃபிர்அவ்னிடம்,) "ஃபிர்அவ்னே! நிச்சயமாக நான் அகிலத்தாரின் இரட்சகனால் (உன்னிடம்) அனுப்பப்பட்ட ஒரு தூதன்" என்று கூறினார்.

حَقِيقٌ عَلَىٰٓ أَن لَّآ أَقُولَ عَلَى ٱللَّهِ إِلَّا ٱلْحَقَّ ۚ قَدْ جِئْتُكُم بِبَيِّنَةٍ
مِّن رَّبِّكُمْ فَأَرْسِلْ مَعِىَ بَنِىٓ إِسْرَٰٓءِيلَ ﴿١٠٥﴾ قَالَ إِن كُنتَ جِئْتَ
بِـَٔايَةٍ فَأْتِ بِهَآ إِن كُنتَ مِنَ ٱلصَّٰدِقِينَ ﴿١٠٦﴾ فَأَلْقَىٰ عَصَاهُ
فَإِذَا هِىَ ثُعْبَانٌ مُّبِينٌ ﴿١٠٧﴾ وَنَزَعَ يَدَهُۥ فَإِذَا هِىَ بَيْضَآءُ
ع ١٣ ٩ ٢ لِلنَّٰظِرِينَ ﴿١٠٨﴾ قَالَ ٱلْمَلَأُ مِن قَوْمِ فِرْعَوْنَ إِنَّ هَٰذَا لَسَٰحِرٌ
عَلِيمٌ ﴿١٠٩﴾ يُرِيدُ أَن يُخْرِجَكُم مِّنْ أَرْضِكُمْ ۖ فَمَاذَا تَأْمُرُونَ ﴿١١٠﴾
قَالُوٓا۟ أَرْجِهْ وَأَخَاهُ وَأَرْسِلْ فِى ٱلْمَدَآئِنِ حَٰشِرِينَ ﴿١١١﴾ يَأْتُوكَ
بِكُلِّ سَٰحِرٍ عَلِيمٍ ﴿١١٢﴾ وَجَآءَ ٱلسَّحَرَةُ فِرْعَوْنَ قَالُوٓا۟ إِنَّ لَنَا لَأَجْرًا
إِن كُنَّا نَحْنُ ٱلْغَٰلِبِينَ ﴿١١٣﴾ قَالَ نَعَمْ وَإِنَّكُمْ لَمِنَ ٱلْمُقَرَّبِينَ ﴿١١٤﴾
قَالُوا۟ يَٰمُوسَىٰٓ إِمَّآ أَن تُلْقِىَ وَإِمَّآ أَن نَّكُونَ نَحْنُ ٱلْمُلْقِينَ ﴿١١٥﴾
قَالَ أَلْقُوا۟ ۖ فَلَمَّآ أَلْقَوْا۟ سَحَرُوٓا۟ أَعْيُنَ ٱلنَّاسِ وَٱسْتَرْهَبُوهُمْ
وَجَآءُو بِسِحْرٍ عَظِيمٍ ﴿١١٦﴾ وَأَوْحَيْنَآ إِلَىٰ مُوسَىٰٓ أَنْ أَلْقِ عَصَاكَ ۖ
فَإِذَا هِىَ تَلْقَفُ مَا يَأْفِكُونَ ﴿١١٧﴾ فَوَقَعَ ٱلْحَقُّ وَبَطَلَ مَا
كَانُوا۟ يَعْمَلُونَ ﴿١١٨﴾ فَغُلِبُوا۟ هُنَالِكَ وَٱنقَلَبُوا۟ صَٰغِرِينَ ﴿١١٩﴾ وَ
أُلْقِىَ ٱلسَّحَرَةُ سَٰجِدِينَ ﴿١٢٠﴾ قَالُوٓا۟ ءَامَنَّا بِرَبِّ ٱلْعَٰلَمِينَ ﴿١٢١﴾

105. (அன்றி) "நான், அல்லாஹ்வின்மீது உண்மையயன்றி (வேறு எதையும்) கூறாமலிருப்பது (என்மீது) கடமையாகும்; உங்கள் இரட்சகனிடமிருந்து தெளிவான அத்தாட்சியை திட்டமாக நான் உங்களிடம் கொண்டு வந்திருக்கிறேன்; ஆதலால், நீ (அடிமைப்படுத்தி வைத்திருக்கும்) இஸ்ராயீலின் மக்களை என்னுடன் அனுப்பிவை" (என்றும் அவர் கூறினார்).

106. அ(தற்க)வன், "நீர் ஏதேனும் அத்தாட்சியைக் கொண்டு வந்திருந்தால் (அதுபற்றி) நீர் உண்மையாளர்களில் இருந்தால் அதனை நீர் கொண்டுவாரும்" என்று கூறினான்.

107. அப்போது அவர் தன் கைத்தடியை போட்டார்; அதே சமயம் அது தெளிவான பெரிய(தொரு) பாம்பாகிவிட்டது.

108. அன்றியும் அவர் தன்னுடைய கையை(ச் சட்டைப் பையிலிட்டு) வெளியில் எடுத்தார்; அதேசமயம் அது பார்ப்போருக்கு வெண்மையானதாக(வும் பிரகாசமானதாகவும்) இருந்தது.

109. (இதனைக்கண்ட) ஃபிர்அவ்னுடைய சமூகத்தாரைச்சேர்ந்த பிரதானிகள் "நிச்சயமாக இவர் மிக அறிந்த சூனியக்காரர்" என்று கூறினார்கள்.

110. "அவர் உங்களை உங்களுடைய பூமியிலிருந்து (நாட்டிலிருந்து) வெளியேற்றிவிட நாடுகிறார்; ஆகவே, இதைப்பற்றி நீங்கள் எதைக் கட்டளையிடுகிறீர்கள்?" (என்று ஃபிர்அவ்ன் கேட்டான்.)

111. அ(தற்க)வர்கள், "அவருக்கும், அவருடைய சகோதரருக்கும் தவணை கொடுத்துவிட்டு, பல பட்டணங்களுக்கு (சூனியக்காரர்களைத்) திரட்டிக் கொண்டுவருபவர்களை அனுப்பிவை" என்று கூறினார்கள்

112. "அவர்கள், நன்கறிந்த ஒவ்வொரு சூனியக்காரரையும் உம்மிடம் (அழைத்துக்)கொண்டுவருவார்கள்" (என்றும் கூறினார்கள்.)

113. (அவ்வாறு அனுப்பியதில் பல திசைகளிலும் இருந்த) சூனியக்காரர்கள் ஃபிர்அவ்னிடம் வந்து "நாங்கள் (மூஸாவை) வென்றவர்களாக ஆகிவிட்டால், நிச்சயமாக எங்களுக்கு(அதற்குரிய) வெகுமதி உண்டா?" என்று கேட்டனர்.

114. அதற்கவன், "ஆம்! (உங்களுக்கு வெகுமதி உண்டு)மேலும் நிச்சயமாக நீங்கள் (எம் சபையில் எமக்கு மிக்க) நெருக்கமாக்கப்பட்டவர்களிலுமிருப்பீர்கள்" என்று கூறினான்.

115. (பின்னர் அச்சூனியக்காரர்கள்) "மூஸாவே! (முதலில்) நீர் போடுகிறீரா? அல்லது (முதலில்) போடுபவர்களாக நாங்கள் இருக்கட்டுமா?" என்று கேட்டனர்.

116. (அதற்கு) மூஸா, "நீங்களே (முதலில்) போடுங்கள்" என்று கூறினார்; அவ்வாறு அவர்கள் (தங்களது கைத்தடிகளை) போட்டபோது அதனால் மனிதர்களுடைய கண்களை(க் கட்டி) சூனியம் செய்தனர்; அவர்களைத் திடுக்கிடும்படியும் செய்துவிட்டனர்; இன்னும் மகத்தான சூனியத்தை அவர்கள் கொண்டு வந்து விட்டனர்.

117. (அது சமயம்) நாம், "மூஸாவுக்கு நீர் உம்முடைய கைத்தடியை போடும்" என்றும் வஹீ அறிவித்தோம்; (அவ்வாறு அவர் போடவே,) உடனே அது (பெரியதொரு பாம்பாகி) அவர்கள் (சூனியத்தால்) கற்பனை செய்தவற்றை விழுங்கிவிட்டது.

118. ஆகவே உண்மை வெளிப்பட்டுவிட்டது, அவர்கள் செய்து கொண்டிருந்தவை (யாவும்) வீணாகியும் விட்டது.

119. ஆகவே, (கர்வங்கொண்டிருந்த) அவர்கள் அங்கேயே வெற்றி கொள்ளப்பட்டனர்; அவர்கள் சிறுமையடைந்தவர்களாகவும் திரும்பினார்கள்.

120. அன்றியும், அச்சூனியக்காரர்கள் சிரம்பணிந்தவர்களாக (க்கீழே) வீழ்த்தப்பட்டனர்.

121. "அகிலத்தாரின் இரட்சகனை நாங்கள் ஈமான் (விசுவாசம்) கொண்டுவிட்டோம்" என்று கூறினார்கள்.

رَبِّ مُوْسٰى وَهٰرُوْنَ ﴿١٢٢﴾ قَالَ فِرْعَوْنُ اٰمَنْتُمْ بِهٖ قَبْلَ اَنْ
اٰذَنَ لَكُمْ ۚ اِنَّ هٰذَا لَمَكْرٌ مَّكَرْتُمُوْهُ فِى الْمَدِيْنَةِ لِتُخْرِجُوْا مِنْهَآ
اَهْلَهَا ۚ فَسَوْفَ تَعْلَمُوْنَ ﴿١٢٣﴾ لَاُقَطِّعَنَّ اَيْدِيَكُمْ وَاَرْجُلَكُمْ
مِّنْ خِلَافٍ ثُمَّ لَاُصَلِّبَنَّكُمْ اَجْمَعِيْنَ ﴿١٢٤﴾ قَالُوْٓا اِنَّآ اِلٰى رَبِّنَا
مُنْقَلِبُوْنَ ﴿١٢٥﴾ ۚ وَمَا تَنْقِمُ مِنَّآ اِلَّآ اَنْ اٰمَنَّا بِاٰيٰتِ رَبِّنَا لَمَّا
جَآءَتْنَا ؕ رَبَّنَآ اَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَّتَوَفَّنَا مُسْلِمِيْنَ ﴿١٢٦﴾ ع وَقَالَ ع ١٤ ٨ ٤
الْمَلَاُ مِنْ قَوْمِ فِرْعَوْنَ اَتَذَرُ مُوْسٰى وَقَوْمَهٗ لِيُفْسِدُوْا
فِى الْاَرْضِ وَيَذَرَكَ وَاٰلِهَتَكَ ؕ قَالَ سَنُقَتِّلُ اَبْنَآءَهُمْ
وَنَسْتَحْيٖ نِسَآءَهُمْ ۚ وَاِنَّا فَوْقَهُمْ قٰهِرُوْنَ ﴿١٢٧﴾ قَالَ مُوْسٰى
لِقَوْمِهِ اسْتَعِيْنُوْا بِاللّٰهِ وَاصْبِرُوْا ۚ اِنَّ الْاَرْضَ لِلّٰهِ ۙ قف
يُوْرِثُهَا مَنْ يَّشَآءُ مِنْ عِبَادِهٖ ؕ وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ﴿١٢٨﴾
قَالُوْٓا اُوْذِيْنَا مِنْ قَبْلِ اَنْ تَاْتِيَنَا وَمِنْ بَعْدِ مَا جِئْتَنَا ؕ
قَالَ عَسٰى رَبُّكُمْ اَنْ يُّهْلِكَ عَدُوَّكُمْ وَيَسْتَخْلِفَكُمْ فِى
الْاَرْضِ فَيَنْظُرَ كَيْفَ تَعْمَلُوْنَ ﴿١٢٩﴾ ع وَلَقَدْ اَخَذْنَآ اٰلَ ع ١٥ ٣ ٥
فِرْعَوْنَ بِالسِّنِيْنَ وَنَقْصٍ مِّنَ الثَّمَرٰتِ لَعَلَّهُمْ يَذَّكَّرُوْنَ ﴿١٣٠﴾

122 (அவனே) மூஸாவிற்கும், ஹாரூனுக்கும் இரட்சகன்" (என்று கூறினார்கள்).

123 (அதற்கு) ஃபிர் அவ்ன், "உங்களுக்கு நான் அனுமதியளிப்பதற்கு முன்னதாகவே நீங்கள் (மூஸா, ஹாரூனுடைய இரட்சகனாகிய) அவனை விசுவாசங்கொண்டு விட்டீர்கள்? நிச்சயமாக இது ஒரு சதியாகும். இந்நகரத்தில் அதற்குரியவர்களை அதிலிருந்து நீங்கள் வெளியேற்றுவதற்காக இதை நீங்கள் செய்திருக்கிறீர்கள் ; ஆகவே (இச்சதியின் பலனை) நீங்கள் அறிந்து கொள்வீர்கள்" என்று கூறினான்.

124. "நிச்சயமாக நான் உங்களுடைய கைகளையும், உங்களுடைய கால்களையும் மாறாக (ஒரு பக்கத்துக் காலையும் மறுபக்கத்துக் கையையும்) துண்டித்து விடுவேன்; அதன்பின் உங்கள் யாவரையும் கழுவேற்றுவேன்" என்று கூறினான்.

125 அ(தற்க)வர்கள், (அவ்வாறாயின்) "நிச்சயமாக நாங்கள் எங்கள் இரட்சகனின் பால் திரும்பிச் செல்லக் கூடியவர்கள் (அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை)" என்று கூறினார்கள்.

126. எங்கள் இரட்சகனின் அத்தாட்சிகளை – அவை எங்களிடம் வந்த போது நாங்கள் ஈமான் கொண்டுவிட்டோம் என்பதற்கல்லாது நீ எங்களைத் தண்டிக்கவில்லை ; (என்று கூறிவிட்டு) "எங்கள் இரட்சகனே! எங்கள் மீது பொறுமையைப் பொழிவாயாக! இன்னும் (உனக்கு) முற்றிலும் கீழ்ப்பட்டவர்களாக (எங்களை ஆக்கி) நீ எங்க(ள் உயிர்க)ளைக் கைப்பற்றிக் கொள்வாயாக!" (என்றும் பிரார்த்தித்தார்கள்)

127. இன்னும், ஃபிர் அவ்னுடைய சமூகப்பிரதானிகள் (ஃபிர் அவ்னிடம்,) "மூஸாவையும், அவருடைய சமூகத்தாரையும் பூமியில் குழப்பம் செய்வதற்காகவும், உம்மையும், உம்தெய்வங்களையும் (புறக்கணித்து) விட்டுவிடுவதற்காகவும் நீர் அவர்களை விட்டு வைப்பீரா?" என்று கேட்டார்கள்; அ(தற்க)வன், "(அன்று) அவர்களுடைய ஆண் மக்களை வெட்டிக் கொன்று விடுவோம்; அவர்களுடைய பெண் மக்களை (மட்டும்) உயிருடன் வாழவும் விடுவோம்; இன்னும் நிச்சயமாக நாம் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்கள்" என்று கூறினான்.

128. (அதற்கு) மூஸா தன் சமூகத்தாரிடம், "நீங்கள் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள்; இன்னும், பொறுமையாகவுமிருங்கள் சகித்திருங்கள்; நிச்சயமாக இந்தப்பூமி அல்லாஹ்வுக்கே உரியது; இதனை அவன் தன் அடியார்களில், தான் நாடியவர்களுக்கு (உரிமைப்படுத்தி) அனந்தரமாக்கி விடுவான்; (நல்ல) முடிவு (அல்லாஹ்வுக்குப்) பயப்படுகிறவர்களுக்கே" என்று கூறினார்.

129. (அதற்கு மூஸாவுடைய சமூகத்தார் அவரிடம்,) "நீர் நம்மிடம் வருவதற்கு முன்னரும் நாங்கள் துன்புறுத்தப்பட்டோம்; நீர் வந்ததன் பின்னரும் (துன்புறுத்தப்பட்டே வருகின்றோம்;)" என்று அவர்கள் கூறினார்கள்; (அதற்கு மூஸா,) "உங்களுடைய இரட்சகன் உங்களுடைய விரோதிகளை அழித்து, (அவர்களுடைய) பூமிக்கு உங்களை பின்தோன்றல்களாக்கி வைக்கக்கூடும்; அப்பால் நீங்கள் எவ்வாறு செயலாற்றுகிறீர்கள் என்பதைக் கவனிப்பான்" என்று கூறினார்.

130. மேலும், ஃபிர் அவ்னைச்சார்ந்தவர்களை – அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்காக பஞ்சங்களைக் கொண்டும், காய்கனிப் பொருள்களில் குறைவைக் கொண்டும் திட்டமாக நாம் பிடித்தோம்.

فَاِذَا جَآءَتۡهُمُ الۡحَسَنَةُ قَالُوۡا لَنَا هٰذِهٖ‌ ۚ وَاِنۡ تُصِبۡهُمۡ سَيِّئَةٌ
يَّطَّيَّرُوۡا بِمُوۡسٰى وَمَنۡ مَّعَهٗ‌ ؕ اَلَاۤ اِنَّمَا طٰٓـئِرُهُمۡ عِنۡدَ اللّٰهِ
وَلٰـكِنَّ اَكۡثَرَهُمۡ لَا يَعۡلَمُوۡنَ ﴿۱۳۱﴾ وَقَالُوۡا مَهۡمَا تَاۡتِنَا بِهٖ
مِنۡ اٰيَةٍ لِّـتَسۡحَرَنَا بِهَا ۙ فَمَا نَحۡنُ لَكَ بِمُؤۡمِنِيۡنَ ﴿۱۳۲﴾ فَاَرۡسَلۡنَا
عَلَيۡهِمُ الطُّوۡفَانَ وَالۡجَـرَادَ وَالۡقُمَّلَ وَالضَّفَادِعَ وَالدَّمَ اٰيٰتٍ
مُّفَصَّلٰتٍ ۚ قف فَاسۡتَكۡبَرُوۡا وَكَانُوۡا قَوۡمًا مُّجۡرِمِيۡنَ ﴿۱۳۳﴾ وَلَمَّا
وَقَعَ عَلَيۡهِمُ الرِّجۡزُ قَالُوۡا يٰمُوۡسَى ادۡعُ لَنَا رَبَّكَ بِمَا عَهِدَ
عِنۡدَكَ‌ ۚ لَـئِنۡ كَشَفۡتَ عَنَّا الرِّجۡزَ لَـنُؤۡمِنَنَّ لَكَ وَلَـنُرۡسِلَنَّ
مَعَكَ بَنِىۡۤ اِسۡرَآءِيۡلَ‌ ۚ ﴿۱۳۴﴾ فَلَمَّا كَشَفۡنَا عَنۡهُمُ الرِّجۡزَ اِلٰٓى
اَجَلٍ هُمۡ بٰلِغُوۡهُ اِذَا هُمۡ يَنۡكُثُوۡنَ ﴿۱۳۵﴾ فَانۡتَقَمۡنَا مِنۡهُمۡ
فَاَغۡرَقۡنٰهُمۡ فِى الۡيَمِّ بِاَنَّهُمۡ كَذَّبُوۡا بِاٰيٰتِنَا وَكَانُوۡا عَنۡهَا
غٰفِلِيۡنَ ﴿۱۳۶﴾ وَاَوۡرَثۡنَا الۡقَوۡمَ الَّذِيۡنَ كَانُوۡا يُسۡتَضۡعَفُوۡنَ
مَشَارِقَ الۡاَرۡضِ وَمَغَارِبَهَا الَّتِىۡ بٰرَكۡنَا فِيۡهَا‌ ؕ وَتَمَّتۡ كَلِمَتُ
رَبِّكَ الۡحُسۡنٰى عَلٰى بَنِىۡۤ اِسۡرَآءِيۡلَ ۙ بِمَا صَبَرُوۡا‌ ؕ وَدَمَّرۡنَا
مَا كَانَ يَصۡنَعُ فِرۡعَوۡنُ وَقَوۡمُهٗ وَمَا كَانُوۡا يَعۡرِشُوۡنَ ﴿۱۳۷﴾ الربع

131. பின்னர், அவர்களுக்கு (யாதொரு) நன்மை வருமானால், இது எங்களுக்கே உரியது எனக் கூறுகிறார்கள்; மேலும்; அவர்களுக்கு தீமை ஏற்படுமானால், மூஸாவையும், அவருடனிருப்பவர்களையும்(கொண்டு ஏற்பட்ட) துர்ச்சகுனம் என்பார்கள். அவர்களுடைய துர்ச்சகுனமெல்லாம் அல்லாஹ்விடமிருந்தே (வந்து) உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்; எனினும், அவர்களில் பெரும்பாலோர் இதனை அறிந்துகொள்வதில்லை.

132. அன்றியும், அவர்கள் (மூஸாவிடம்,) "அவற்றின் மூலம் நீர் எங்களை வசியப்படுத்துவதற்காக,எவ்வளவு(அற்புதமான) அத்தாட்சியை நீர் (எங்களுக்குக்) கொண்டுவந்த போதிலும், நாங்கள் உம்மை விசுவாசிக்கக்கூடியவர்களாக இல்லை" என்று கூறினார்கள்.

133. ஆகவே, அவர்கள்மீது (மழையுடன்கூடிய) புயல் காற்று, வெட்டுக்கிளி, பேன், தவளைகள், இரத்தம் ஆகியவற்றை தெளிவான அத்தாட்சிகளாக (ஒன்றன் பின் ஒன்றாக) நாம் அனுப்பிவைத்தோம்; (இதன் பின்னரும்) அவர்கள், கர்வங்கொண்டார்கள்; குற்றம் செய்யும் சமூகத்தாராகவும் அவர்கள் இருந்தார்கள்.

134. அவர்களின் மீது(வானத்திலிருந்து) வேதனை வரும் போதெல்லாம் அவர்கள் (மூஸாவிடம்,)" மூஸாவே! உமதிரட்சகனிடம் அவன் உமக்கு அளித்திருக்கும் வாக்குறுதியின் பிரகாரம், (இக்கஷ்டத்தை நீக்கும்படி) எங்களுக்காக நீர் பிரார்த்தனை செய்வீராக; எங்களை விட்டும் இவ்வேதனையை நீர் நீக்கிவிட்டால், நிச்சயமாக நாங்கள் உம்மை விசுவாசித்து, இஸ்ராயீலின் மக்களையும் நிச்சயமாக நாம் உம்முடன் அனுப்பி விடுவோம்" என்றும் கூறினார்கள்.

135. ஆகவே, அதை அவர்கள் சென்றடையும் ஒரு தவணை வரை அவர்களைவிட்டும் வேதனையை நாம் நீக்கியபொழுது, அச்சமயம் அவர்கள்(தாம் அளித்த வாக்குறுதியை) முறித்துவிடுகின்றனர்.

136. ஆகவே, நிச்சயமாக அவர்கள் நம்முடைய அத்தாட்சிகளைப் பொய்யாக்கி, (அவற்றைப் பொருட்படுத்தாது) மறதியாளர்களாகவும் அவர்கள் இருந்ததன் காரணமாக அவர்களை நாம் தண்டித்தோம்; (அப்போது) அவர்களைக் கடலில் மூழ்கடித்தும் விட்டோம்.

137. இன்னும், பலமற்றவர்கள் எனக்கருதப்பட்டிருந்தார்களே அத்தகைய சமூகத்தவரை ,எதில் நாம்பெரும் பாக்கியங்களை நல்கியிருந்தோமோ அத்தகைய பூமியின் கிழக்குப் பகுதிகளுக்கும், அதன் மேற்குப்பகுதிகளுக்கும் நாம் வாரிசுகளாக்கினோம்; மேலும், இஸ்ராயீலின் மக்கள் மீது (ஃபிர்அவ்னால் ஏற்பட்ட கஷ்டங்களைப்) பொறுமையுடன் அவர்கள் (சகித்துக்கொண்டு) இருந்ததன் காரணமாக உம் இரட்சகனின் அழகிய வாக்கு பரிபூரணமாகி (நிறைவேறி) விட்டது; மேலும் பிர்அவ்னும், அவனுடைய சமூகத்தாரும் (மாடமாளிகைகளாக) உற்பத்தி செய்திருந்தவைகளையும், (மிக உயர்வாகக்கட்டி) அவர்கள் உயர்த்தியிருந்தவைகளையும் நாம் தரைமட்டமாக்கிவிட்டோம்.

وَجٰوَزْنَا بِبَنِیْۤ اِسْرَآءِیْلَ الْبَحْرَ فَاَتَوْا عَلٰی قَوْمٍ یَّعْكُفُوْنَ
عَلٰۤی اَصْنَامٍ لَّهُمْ ۚ قَالُوْا یٰمُوْسَی اجْعَلْ لَّنَاۤ اِلٰهًا كَمَا لَهُمْ
اٰلِهَةٌ ؕ قَالَ اِنَّكُمْ قَوْمٌ تَجْهَلُوْنَ ﴿۱۳۸﴾ اِنَّ هٰۤؤُلَآءِ مُتَبَّرٌ مَّا هُمْ
فِیْهِ وَبٰطِلٌ مَّا كَانُوْا یَعْمَلُوْنَ ﴿۱۳۹﴾ قَالَ اَغَیْرَ اللّٰهِ اَبْغِیْكُمْ
اِلٰهًا وَّهُوَ فَضَّلَكُمْ عَلَی الْعٰلَمِیْنَ ﴿۱۴۰﴾ وَاِذْ اَنْجَیْنٰكُمْ مِّنْ اٰلِ
فِرْعَوْنَ یَسُوْمُوْنَكُمْ سُوْٓءَ الْعَذَابِ ۚ یُقَتِّلُوْنَ اَبْنَآءَكُمْ وَ
یَسْتَحْیُوْنَ نِسَآءَكُمْ ؕ وَفِیْ ذٰلِكُمْ بَلَآءٌ مِّنْ رَّبِّكُمْ عَظِیْمٌ ﴿۱۴۱﴾ ع ۱۶ ۶
وَوٰعَدْنَا مُوْسٰی ثَلٰثِیْنَ لَیْلَةً وَّاَتْمَمْنٰهَا بِعَشْرٍ فَتَمَّ
مِیْقَاتُ رَبِّهٖۤ اَرْبَعِیْنَ لَیْلَةً ۚ وَقَالَ مُوْسٰی لِاَخِیْهِ
هٰرُوْنَ اخْلُفْنِیْ فِیْ قَوْمِیْ وَاَصْلِحْ وَلَا تَتَّبِعْ سَبِیْلَ
الْمُفْسِدِیْنَ ﴿۱۴۲﴾ وَلَمَّا جَآءَ مُوْسٰی لِمِیْقَاتِنَا وَكَلَّمَهٗ رَبُّهٗ ۙ قَالَ
رَبِّ اَرِنِیْۤ اَنْظُرْ اِلَیْكَ ؕ قَالَ لَنْ تَرٰىنِیْ وَلٰكِنِ انْظُرْ اِلَی
الْجَبَلِ فَاِنِ اسْتَقَرَّ مَكَانَهٗ فَسَوْفَ تَرٰىنِیْ ۚ فَلَمَّا تَجَلّٰی
رَبُّهٗ لِلْجَبَلِ جَعَلَهٗ دَكًّا وَّخَرَّ مُوْسٰی صَعِقًا ۚ فَلَمَّاۤ اَفَاقَ
قَالَ سُبْحٰنَكَ تُبْتُ اِلَیْكَ وَاَنَا اَوَّلُ الْمُؤْمِنِیْنَ ﴿۱۴۳﴾

138. மேலும் நாம் இஸ்ராயீலின் மக்களைக் கடலைக் கடந்து செல்லவைத்தோம்; (அப்போது) தங்களுக்குரிய விக்கிரகங்களை ஆராதனை செய்து கொண்டிருந்த ஒரு சமூகத்தினர் அருகில் அவர்கள் வந்தடைந்தனர்; (அப்போது, மூஸாவிடம்) "மூஸாவே! அவர்களுக்கு தெய்வங்கள் இருப்பதைப்போல் எங்களுக்கும் ஒரு தெய்வத்தை (நாங்கள் வணங்குவதற்கு) ஆக்கிவைப்பீராக!" என்று கூறினார்கள்; அதற்கு (மூஸாவாகிய) அவர், நிச்சயமாக நீங்கள் அறியாதவர்களான ஓர் கூட்டத்தினராவீர்கள் என்று கூறினார்.

139. "நிச்சயமாக ( விக்கிரக ஆராதனை செய்யும் ) இவர்கள் எதில் இருந்து கொண்டிருக்கிறார்களோ அது அழிந்துவிடக்கூடியதும், அவர்கள் எதை செய்து கொண்டிருக்கிறார்களோ அது முற்றிலும் வீணானதேயாகும்" என்று கூறினார்.

140. (தவிர,) "அல்லாஹ் அல்லாததையா நான் உங்களுக்கு இரட்சகனாகத் தேடுவேன்? அவனோ உங்களை அகிலத்தாரை விட மேன்மையாக்கி வைத்துள்ளான்" என்றும் அவர் கூறினார்.

141. மேலும், (இஸ்ராயீலின் மக்களே!) பிர்அவ்னுடைய கூட்டத்தாரிடமிருந்து நாம் உங்களைக் காப்பாற்றியதை (நீங்கள் நினைத்துப் பாருங்கள்.) அவர்கள் உங்களைக் கொடியவேதனையால் துன்புறுத்திக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் உங்கள் ஆண் மக்களைக் கொலை செய்துவிட்டு, உங்கள் பெண் மக்களை (மட்டும்) உயிருடன் வாழ விட்டும் வந்தார்கள்; இதில் உங்களுக்கு உங்கள் இரட்சகனால் மகத்தானதொரு சோதனையும் (ஏற்பட்டு) இருந்தது.

142. இன்னும், மூஸாவுக்கு நாம் முப்பது இரவுகளை வாக்களித்திருந்தோம்; மேலும், அதை பத்து (இரவுகளைக்) கொண்டு நாம் பூர்த்தியாக்கியும் வைத்தோம்; ஆகவே, அவருடைய இரட்சகனின் தவணை நாற்பது இரவுகளாகப் பூர்த்தியாயிற்று; அதுசமயம் மூஸா தன் சகோதரர் ஹாரூனிடம், "நீர் என்னுடைய சமூகத்தாரிடையே என் பிரதிநிதியாக இருந்து, அவர்களைச் சீர்திருத்தமும் செய்வீராக! அன்றியும் குழப்பக்காரர்களுடைய வழியை நீர் பின்பற்றா திருப்பீராக!" என்று கூறினார்.

143. மேலும், நாம் குறிப்பிட்ட நேரத்தில் (குறிப்பிட்ட இடத்திற்கு), மூஸா வந்து, அவருடைய இரட்சகனும் அவருடன் பேசியபொழுது, "என் இரட்சகனே! நீ (உன்னை) எனக்குக் காண்பிப்பாயாக! உன்பால் நான் பார்ப்பேன்" என்று கூறினார்; (அதற்கு அல்லாஹ், , மூஸாவே!) நீர் என்னை ஒருபோதும் பார்க்க முடியாது, எனினும், இம்மலையை நீர் பார்ப்பீராக; அது தன்னுடைய இடத்தில் நிலைத்திருந்தால் அப்போது நீர் என்னைக் காண்பீர்" என்று கூறினான்; ஆகவே அவருடைய இரட்சகன் அம்மலைமீது வெளிப்பட்டபோது அ(வ்வாறு வெளிப்பட்ட நிலையான)து, அ(ம்மலையான)தை தூளாக்கிவிட்டது; இன்னும் மூஸா (திடுக்கிட்டு) மூர்ச்சையாகி விழுந்துவிட்டார்; பின்னர் அவர் தெளிவு பெற்றபோது (அல்லாஹ்விடம்) "நீ மிகப் பரிசுத்தமானவன்; நான் உன்னிடம் பாவமீட்சி கோருகின்றேன்; இன்னும், (உன்னை) விசுவாசிப்போரில் நான் முதன்மையானவன்" என்று கூறினார்.

قَالَ يٰمُوْسٰٓى اِنِّى اصْطَفَيْتُكَ عَلَى النَّاسِ بِرِسٰلٰتِىْ وَ
بِكَلَامِىْ ۖ فَخُذْ مَآ اٰتَيْتُكَ وَكُنْ مِّنَ الشّٰكِرِيْنَ ﴿۱۴۴﴾ وَكَتَبْنَا
لَهٗ فِى الْاَلْوَاحِ مِنْ كُلِّ شَىْءٍ مَّوْعِظَةً وَّتَفْصِيْلًا لِّكُلِّ
شَىْءٍ ۚ فَخُذْهَا بِقُوَّةٍ وَّاْمُرْ قَوْمَكَ يَاْخُذُوْا بِاَحْسَنِهَا ۭ
سَاُورِيْكُمْ دَارَ الْفٰسِقِيْنَ ﴿۱۴۵﴾ سَاَصْرِفُ عَنْ اٰيٰتِىَ الَّذِيْنَ
يَتَكَبَّرُوْنَ فِى الْاَرْضِ بِغَيْرِ الْحَقِّ ۭ وَاِنْ يَّرَوْا كُلَّ اٰيَةٍ
لَّا يُؤْمِنُوْا بِهَا ۚ وَاِنْ يَّرَوْا سَبِيْلَ الرُّشْدِ لَا يَتَّخِذُوْهُ سَبِيْلًا ۚ
وَاِنْ يَّرَوْا سَبِيْلَ الْغَىِّ يَتَّخِذُوْهُ سَبِيْلًا ۭ ذٰلِكَ بِاَنَّهُمْ
كَذَّبُوْا بِاٰيٰتِنَا وَكَانُوْا عَنْهَا غٰفِلِيْنَ ﴿۱۴۶﴾ وَالَّذِيْنَ كَذَّبُوْا
بِاٰيٰتِنَا وَلِقَاۗءِ الْاٰخِرَةِ حَبِطَتْ اَعْمَالُهُمْ ۭ هَلْ يُجْزَوْنَ
اِلَّا مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۴۷﴾ ع وَاتَّخَذَ قَوْمُ مُوْسٰى مِنْۢ بَعْدِهٖ مِنْ ع ۱۷
حُلِيِّهِمْ عِجْلًا جَسَدًا لَّهٗ خُوَارٌ ۭ اَلَمْ يَرَوْا اَنَّهٗ لَا يُكَلِّمُهُمْ
وَلَا يَهْدِيْهِمْ سَبِيْلًا ۘ اِتَّخَذُوْهُ وَكَانُوْا ظٰلِمِيْنَ ﴿۱۴۸﴾ وَلَمَّا وقف لازم
سُقِطَ فِىْٓ اَيْدِيْهِمْ وَرَاَوْا اَنَّهُمْ قَدْ ضَلُّوْا ۙ قَالُوْا لَئِنْ
لَّمْ يَرْحَمْنَا رَبُّنَا وَيَغْفِرْ لَنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ ﴿۱۴۹﴾

144. (அதற்கு,) "மூஸாவே! என்னுடைய தூதுகளைக்கொண்டும், என்னுடைய பேச்சைக்கொண்டும் (எல்லா) மனிதர்களைவிட நிச்சயமாக நான் உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கின்றேன்; ஆகவே, நான் உமக்கு கொடுப்பதைப் (பலமாகப் பற்றிப்)பிடித்துக்கொள்வீராக! நன்றிசெலுத்துபவர்களிலும் நீர் ஆகிவிடுவீராக" என்று கூறினான்.

145. மேலும், (நாம் அவருக்குக் கொடுத்த) பலகைகளில் ஒவ்வொரு விஷயத்திலிருந்து நல்லுபதேசத்தையும், ஒவ்வொருவிஷயத்திற்குரிய விளக்கத்தையும் அவருக்காக நாம் எழுதி இருந்தோம், (ஆகவே), " நீர் இதனைப் பலமாகப் (பற்றிப்) பிடித்துக் கொண்டு, அதிலிருக்கும் நல்லவைகளை எடுத்து(செயல்பட்டு)க்கொள்ளுமாறுஉம்முடைய சமூகத்தாரை நீர் கட்டளையும் இடுவீராக! (உமக்கு மாறு செய்யும்) பாவிகளின் வீட்டை( தங்குமிடத்தை) நான் உங்களுக்குக் காண்பிப்பேன்" என்றும் (கூறினான்).

146. நியாயமின்றி, பூமியில் கர்வங்கொண்டிருப்போரை, என்னுடைய அத்தாட்சிகளை (விளங்கிக்கொள்வதை)விட்டும் திருப்பிவைத்துவிடுவேன்; அவர்கள் அத்தாட்சிகள் யாவையும் கண்ட போதிலும் அவைகளை நம்பிக்கை கொள்ளவுமாட்டார்கள்; (அவ்வாறே) நேர் வழியை அவர்கள் கண்டாலும் அதனை அவர்கள் (நேரான) வழியாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள்; (ஆனால்) தவறான வழியை அவர்கள் கண்டாலோ, அதனையே (தங்களுக்குரிய) வழியாக எடுத்துக்கொள்வார்கள்; அது(ஏனெனில்) நிச்சயமாக அவர்கள், நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கினர் என்பதாலும், அவைகளை விட்டும் அவர்கள் மறந்தவர்களாகவும் இருந்தார்கள் என்ற காரணத்தினாலுமாகும்.

147. நம்முடைய வசனங்களையும், மறுமையின் சந்திப்பையும் பொய்யாக்கு கின்றார்களே அத்தகையோர்_ அவர்களுடைய (நற்) காரியங்கள் யாவும் அழிந்து விட்டன; அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்கே தவிர (வேறெதற்கும்) கூலி கொடுக்கப்படுவார்களா?

148. மூஸாவுடைய சமூகத்தார் அவருக்குப் பின்னர், தங்கள் ஆபரணங் களிலிருந்து ஒருகாளைக்கன்றை (அதன்)_உடலை(த்தெய்வமாக) எடுத்துக் கொண்டார்கள்; அதற்கு, (மாட்டின் சப்தத்தைப் போன்ற) சப்தமிருந்தது. நிச்சயமாக அது, அவர்களுடன் பேசவுமாட்டாது; அவர்களுக்கு யாதொரு வழியைக் காட்டவுமாட்டாது என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? (எனினும்,) அவர்கள் அதனையே (தெய்வமாக) எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் (தமக்குத் தாமே) அநியாயக்காரர்களாகவும் ஆகிவிட்டனர்.

149. மேலும், அவர்கள்(செய்து விட்டது பற்றி) மிகவும் கைசேதப்பட்டு, திட்டமாகத் தாங்களே வழிதவறி விட்டார்கள் என்பதையும் அவர்கள் கண்டபொழுது, " எங்கள் இரட்சகன் எங்களுக்கு அருள் புரிந்து எங்களை மன்னிக்காவிடில் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிடுவோம்" என்று அவர்கள் கூறினார்கள்.

وَلَمَّا رَجَعَ مُوْسٰٓى اِلٰى قَوْمِهٖ غَضْبَانَ اَسِفًا ۙ قَالَ بِئْسَمَا
خَلَفْتُمُوْنِیْ مِنْۢ بَعْدِیْ ۚ اَعَجِلْتُمْ اَمْرَ رَبِّكُمْ ۚ وَاَلْقَى الْاَلْوَاحَ
وَاَخَذَ بِرَاْسِ اَخِیْهِ یَجُرُّهٗۤ اِلَیْهِ ؕ قَالَ ابْنَ اُمَّ اِنَّ الْقَوْمَ
اسْتَضْعَفُوْنِیْ وَكَادُوْا یَقْتُلُوْنَنِیْ ۫ۖ فَلَا تُشْمِتْ بِیَ الْاَعْدَآءَ وَ
لَا تَجْعَلْنِیْ مَعَ الْقَوْمِ الظّٰلِمِیْنَ ﴿١٥٠﴾ قَالَ رَبِّ اغْفِرْ لِیْ وَلِاَخِیْ وَ
اَدْخِلْنَا فِیْ رَحْمَتِكَ ۖ وَاَنْتَ اَرْحَمُ الرّٰحِمِیْنَ ﴿١٥١﴾ اِنَّ الَّذِیْنَ اتَّخَذُوا ع ١٨/٨
الْعِجْلَ سَیَنَالُهُمْ غَضَبٌ مِّنْ رَّبِّهِمْ وَذِلَّةٌ فِی الْحَیٰوةِ الدُّنْیَا ؕ
وَكَذٰلِكَ نَجْزِی الْمُفْتَرِیْنَ ﴿١٥٢﴾ وَالَّذِیْنَ عَمِلُوا السَّیِّاٰتِ ثُمَّ تَابُوْا
مِنْۢ بَعْدِهَا وَاٰمَنُوْۤا ۟ اِنَّ رَبَّكَ مِنْۢ بَعْدِهَا لَغَفُوْرٌ رَّحِیْمٌ ﴿١٥٣﴾
وَلَمَّا سَكَتَ عَنْ مُّوْسَی الْغَضَبُ اَخَذَ الْاَلْوَاحَ ۖۚ وَفِیْ نُسْخَتِهَا
هُدًی وَّرَحْمَةٌ لِّلَّذِیْنَ هُمْ لِرَبِّهِمْ یَرْهَبُوْنَ ﴿١٥٤﴾ وَاخْتَارَ مُوْسٰی
قَوْمَهٗ سَبْعِیْنَ رَجُلًا لِّمِیْقَاتِنَا ۚ فَلَمَّاۤ اَخَذَتْهُمُ الرَّجْفَةُ قَالَ رَبِّ
لَوْ شِئْتَ اَهْلَكْتَهُمْ مِّنْ قَبْلُ وَاِیَّایَ ؕ اَتُهْلِكُنَا بِمَا فَعَلَ السُّفَهَآءُ
مِنَّا ۚ اِنْ هِیَ اِلَّا فِتْنَتُكَ ؕ تُضِلُّ بِهَا مَنْ تَشَآءُ وَتَهْدِیْ مَنْ
تَشَآءُ ؕ اَنْتَ وَلِیُّنَا فَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا وَاَنْتَ خَیْرُ الْغٰفِرِیْنَ ﴿١٥٥﴾

150. மேலும், (இதனை அறிந்த மூஸா) கோபங்கொண்டவராக_ பெரும் வருத்தம்நிறைந்தவராக தன் சமூகத்தாரிடம் திரும்பி வந்தபொழுது, (அவர்களிடம்) "நான் இல்லாத சமயத்தில் நீங்கள் செய்த (இச்செயலான)து மிகக் கெட்டது; உங்கள் இரட்சகனின் கட்டளை (வேதனை) வருவதை நீங்கள் அவசரப் படுகின்றீர்களா?" என்று கூறி (அல்லாஹ்வின் கட்டளைகள் எழுதப்பட்ட) பலகைகளைப்போட்டுவிட்டு, தன் சகோதரரின் தலை (முடி)யைப் பிடித்துத் தன் பக்கம் இழுத்தார்; அ(தற்க)வர், "என் தாயின் மகனே! இந்த மக்கள் நிச்சயமாக என்னை பலவீனப்படுத்திவிட்டனர்; என்னைக் கொலை செய்துவிடவும் முற்பட்டனர். என்னுடைய விரோதிகள் என்னைப் பார்த்து சிரிக்குமாறு நீர் செய்துவிடாதீர்; இந்த அக்கிரமக்கார சமூகத்தாருடன் என்னை ஆக்கியும் விடாதீர்" என்று கூறினார்.

151. "என் இரட்சகனே ! என்னையும், என் சகோதரரையும் நீ மன்னித்தருள்வாயாக! உன்னுடைய கிருபையில் எங்களையும் பிரவேசிக்கச்செய்வாயாக ! நீ கிருபை செய்வோரிலெல்லாம், மிக்க கிருபையாளன்" என்று (பிரார்த்தனை செய்து) கூறினார்.

152. " நிச்சயமாக காளைக் கன்றை (த் தெய்வமாக) எடுத்துக்கொண்டார்களே அத்தகையோர்_ அவர்களுடைய இரட்சகனிடமிருந்து கோபமும், இவ்வுலக வாழ்க்கையில் இழிவும் அவர்களை வந்தடையும்; பொய்க் கற்பனை செய்வோருக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம்" (என்று அல்லாஹ் கூறினான்).

153. மேலும், தீயசெயல்கள் செய்துவிட்டு, (மனம் வருந்தி) அதன் பின் பச்சாதாபப்பட்டு, (அதிலிருந்து விலகி, உண்மையாகவே) விசுவாசமும் கொண்டு விட்டார்களே அத்தகையோர் _(அவர்களுடைய பாவத்தை) நிச்சயமாக உமதிரட்சகன் அதற்குப்பின் மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபை செய்பவன்.

154. மேலும் மூஸாவுடைய கோபம் தணிந்தபோது, அவர் (அந்தப்) பலகைகளை எடுத்துக்கொண்டார்; அவற்றில் வரையப்பட்டிருந்ததில் தங்களுடைய இரட்சகனை பயப்படுகின்றார்களே அத்தகையோருக்கு நேர் வழியும், (அவனின்) பேரருளும் இருந்தன.

155. மேலும், மூஸா நாம் குறித்த நேரத்திற்காக தம் சமூகத்தாரில் எழுபது ஆண்களைத் தேர்ந்தெடுத்தார்; அவர்களைப் பூகம்பம் பிடித்தபொழுது, "என் இரட்சகனே! நீ நாடியிருந்தால், இதற்கு முன்னதாகவே இவர்களையும், என்னையும் நீ அழித்திருக்கலாமே! எங்களிலுள்ள அறிவீனர்கள் சிலர் செய்ததற்காக, எங்களை நீ அழித்துவிடுகிறாயா? இது உன்னுடைய சோதனையேயன்றி வேறில்லை; இதனைக் கொண்டு நீ நாடியவர்களை வழி தவறச்செய்கிறாய்; நீ நாடியவர்களை நேர் வழியிலும் செலுத்துகிறாய்; நீயே எங்களுடைய பாதுகாவலன்; ஆகவே நீ எங்களை மன்னித்தருள்வாயாக! மேலும், எங்களுக்கு நீ அருள் புரிவாயாக! நீயே மன்னிப்பவர்களில் மிக்க மேலானவன்" என்று அவர் (பிரார்த்தித்துக்) கூறினார்.

وَاكْتُبْ لَنَا فِيْ هٰذِهِ الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ اِنَّا
هُدْنَآ اِلَيْكَ ؕ قَالَ عَذَابِيْۤ اُصِيْبُ بِهٖ مَنْ اَشَآءُ ۚ وَرَحْمَتِيْ
وَسِعَتْ كُلَّ شَيْءٍ ؕ فَسَاَكْتُبُهَا لِلَّذِيْنَ يَتَّقُوْنَ وَيُؤْتُوْنَ
الزَّكٰوةَ وَالَّذِيْنَ هُمْ بِاٰيٰتِنَا يُؤْمِنُوْنَ ۚ ﴿۱۵۶﴾ اَلَّذِيْنَ
يَتَّبِعُوْنَ الرَّسُوْلَ النَّبِيَّ الْاُمِّيَّ الَّذِيْ يَجِدُوْنَهٗ مَكْتُوْبًا
عِنْدَهُمْ فِي التَّوْرٰىةِ وَالْاِنْجِيْلِ ۫ يَاْمُرُهُمْ بِالْمَعْرُوْفِ
وَيَنْهٰىهُمْ عَنِ الْمُنْكَرِ وَيُحِلُّ لَهُمُ الطَّيِّبٰتِ وَيُحَرِّمُ عَلَيْهِمُ
الْخَبٰٓئِثَ وَيَضَعُ عَنْهُمْ اِصْرَهُمْ وَالْاَغْلٰلَ الَّتِيْ كَانَتْ
عَلَيْهِمْ ؕ فَالَّذِيْنَ اٰمَنُوْا بِهٖ وَعَزَّرُوْهُ وَنَصَرُوْهُ وَ
اتَّبَعُوا النُّوْرَ الَّذِيْۤ اُنْزِلَ مَعَهٗۤ ۙ اُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ۠ ﴿۱۵۷﴾ ع ١٩ ٩
قُلْ يٰۤاَيُّهَا النَّاسُ اِنِّيْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعَا
ا۟لَّذِيْ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ يُحْيٖ
وَيُمِيْتُ ۠ فَاٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهِ النَّبِيِّ الْاُمِّيِّ الَّذِيْ
يُؤْمِنُ بِاللّٰهِ وَكَلِمٰتِهٖ وَاتَّبِعُوْهُ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ ﴿۱۵۸﴾ وَ
مِنْ قَوْمِ مُوْسٰۤى اُمَّةٌ يَّهْدُوْنَ بِالْحَقِّ وَبِهٖ يَعْدِلُوْنَ ﴿۱۵۹﴾

156. இன்னும், "இவ்வுலகத்தில் எங்களுக்கு நன்மையை எழுதிவிடுவாயாக! மறுமையிலும் (நன்மையை எழுதுவாயாக!) நிச்சயமாக நாங்கள் உன்பக்கமே திரும்பி விட்டோம்" (என்றும் பிரார்த்தித்தார்). அ(தற்கு அல்லாஹ்வாகிய அ)வன், "என்னுடைய வேதனையாகிறது – அதனைக்கொண்டு நான் நாடியவர்களை பிடிப்பேன்; என்னுடைய அருளோ எல்லா வஸ்துக்களிலும் சூழ்ந்து விசாலமாகியுள்ளது; ஆகவே, "(என்னுடைய அருளாகிய) அதனை, (எனக்குப்) பயந்து, ஜகாத்தும் கொடுத்து வருகிறார்களே அத்தகையோருக்கும், நம்முடைய வசனங்களை விசுவாசிக்கிறார்களே அத்தகையோருக்கும் நான் (விதித்து) எழுதிவிடுவேன்" என்று கூறினான்.

157. அவர்கள் எத்தகையோரென்றால், தங்களிடமுள்ள தவ்றாத்திலும், இன்ஜீலிலும், அவரைப் பற்றி எழுதப்பட்டவராகக் காண்கிறார்களே அத்தகைய (எழுத்தாற்றல் அற்ற) உம்மிநபியான இத்தூதரை பின்பற்றுகிறார்கள்; (இத்தூதரோ) அவர்களை நன்மையான காரியங்களை(ச் செய்யுமாறு) ஏவி, பாவமான காரியங்களிலிருந்து அவர்களை விலக்குவார்; நல்லவைகளையே அவர்களுக்கு (உண்ண) அவர் ஆகுமாக்கியும் வைப்பார்; கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்தும்விடுவார்; அவர்களுடைய பளுவையும், அவர்கள் மீதிருந்ததே அத்தகைய கடினமானவைகளையும் (இரட்சகனின் அனுமதி கொண்டு) அவர்களை விட்டும் நீக்கிவிடுவார்; ஆகவே, அவரை (உண்மையாகவே) விசுவாசித்து, இன்னும் அவரை கண்ணியம் செய்து, அவருக்கு உதவியும் புரிந்து, அவருடன் இறக்கி வைக்கப்பட்ட ஒளி மிக்க (இவ்வேதத்)தையும் பின்பற்றுகிறார்களே அத்தகையோர் – அவர்கள்தாம் வெற்றியாளர்களாவர்.

158. (நபியே!) நீர் கூறுவீராக! மனிதர்களே! நிச்சயமாகவே நான் உங்கள் யாவருக்கும், அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன்; அவன் எத்தகையோனென்றால், வானங்கள், பூமியின் ஆட்சி அவனுக்கே உரியது; வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர (வேறு எவரும்) இல்லை; அவனே உயிர்ப்பிக்கிறான்; அவனே மரணிக்கச் செய்கிறான். ஆகவே, அந்த அல்லாஹ்வையும், (எழுத்தாற்றல் அற்ற) உம்மி நபியாகிய அவனுடைய (இத்)தூதரையும் நீங்கள் விசுவாசிப்பீர்களாக! அவர் எத்தகையவரென்றால் – அல்லாஹ்வையும், அவனுடைய வசனங்களையும் விசுவாசிக்கின்றார்; (ஆகவே) நீங்கள் நேர்வழி பெறுவதற்காக அவரையே நீங்கள் பின்பற்றுங்கள்.

159. இன்னும், மூஸாவுடைய சமூகத்தாரில் ஒரு கூட்டத்தினர் இருக்கின்றனர்; அவர்கள் சத்தியத்தைக் கொண்டு (மற்ற மனிதர்களுக்கு) வழி காண்பிக்கின்றனர்; அதன்படி நீதியும் செய்கின்றனர்.

وَقَطَّعْنٰهُمُ اثْنَتَیْ عَشْرَةَ اَسْبَاطًا اُمَمًا ؕ وَ اَوْحَیْنَاۤ اِلٰی
مُوْسٰۤی اِذِ اسْتَسْقٰىهُ قَوْمُهٗۤ اَنِ اضْرِبْ بِّعَصَاكَ الْحَجَرَ ۚ
فَانْۢبَجَسَتْ مِنْهُ اثْنَتَا عَشْرَةَ عَیْنًا ؕ قَدْ عَلِمَ كُلُّ اُنَاسٍ
مَّشْرَبَهُمْ ؕ وَ ظَلَّلْنَا عَلَیْهِمُ الْغَمَامَ وَ اَنْزَلْنَا عَلَیْهِمُ
الْمَنَّ وَ السَّلْوٰی ؕ كُلُوْا مِنْ طَیِّبٰتِ مَا رَزَقْنٰكُمْ ؕ وَ
مَا ظَلَمُوْنَا وَ لٰكِنْ كَانُوْۤا اَنْفُسَهُمْ یَظْلِمُوْنَ ﴿١٦٠﴾ وَ اِذْ قِیْلَ
لَهُمُ اسْكُنُوْا هٰذِهِ الْقَرْیَةَ وَ كُلُوْا مِنْهَا حَیْثُ
شِئْتُمْ وَ قُوْلُوْا حِطَّةٌ وَّ ادْخُلُوا الْبَابَ سُجَّدًا نَّغْفِرْ
لَكُمْ خَطِیْٓـٰٔتِكُمْ ؕ سَنَزِیْدُ الْمُحْسِنِیْنَ ﴿١٦١﴾ فَبَدَّلَ
الَّذِیْنَ ظَلَمُوْا مِنْهُمْ قَوْلًا غَیْرَ الَّذِیْ قِیْلَ لَهُمْ
فَاَرْسَلْنَا عَلَیْهِمْ رِجْزًا مِّنَ السَّمَآءِ بِمَا كَانُوْا
یَظْلِمُوْنَ ﴿١٦٢﴾ ع وَ سْـَٔلْهُمْ عَنِ الْقَرْیَةِ الَّتِیْ كَانَتْ
حَاضِرَةَ الْبَحْرِ ۘ اِذْ یَعْدُوْنَ فِی السَّبْتِ اِذْ تَاْتِیْهِمْ
حِیْتَانُهُمْ یَوْمَ سَبْتِهِمْ شُرَّعًا وَّ یَوْمَ لَا یَسْبِتُوْنَ ۙ لَا
تَاْتِیْهِمْ ۛ كَذٰلِكَ ۛ نَبْلُوْهُمْ بِمَا كَانُوْا یَفْسُقُوْنَ ﴿١٦٣﴾

ع ٢٠ ٥ وقف لازم
معانقة ٢ عند المتاخرين النصف

160. மேலும், (மூஸாவுடைய கூட்டத்தாராகிய) அவர்களை பன்னிரண்டு பிரிவினர்களாக_ கூட்டத்தினர்களாக_ நாம் பிரித்தோம்; மூஸாவிடம் அவருடைய கூட்டத்தார் தண்ணீர் கேட்டபோது,நாம் (அவரிடம்,) "உம்முடைய கைத்தடியைக்கொண்டு இக்கல்லை அடிப்பீராக! " என்று அவருக்கு வஹீ அறிவித்தோம்; அப்போது ( அவர் அவ்வாறு அடிக்கவே,) அதிலிருந்து பன்னிரண்டு ஊற்றுக்கள் பொங்கிவந்தன ; ஒவ்வொரு பிரிவினரும் (அவற்றில்) தங்கள் நீரருந்துமிடத்தைத் திட்டமாக அறிந்து கொண்டனர்;மேலும், அவர்கள் மீது மேகங்களை நிழலிடும்படிச் செய்தோம்; அவர்களுக்காக 'மன்னு,' 'ஸல்வா' (எனும் மேலான உண)வையும் இறக்கிவைத்து, நாம் உங்களுக்கு அளித்துள்ள நல்லவற்றிலிருந்து புசியுங்கள்; ( என்னும் நம் கட்டளைக்கு மாறுசெய்தனர். அதனால் ) அவர்கள் நமக்கு அநியாயம் செய்துவிடவில்லை; எனினும், அவர்கள் தமக்குத்தாமே அநியாயம் செய்கிறவர்களாக இருந்தனர்.

161. இன்னும், (அவர்களிடம்,) "நீங்கள் இவ்வூரில் குடியிருங்கள்; இதில் நீங்கள் நாடிய இடத்திலெல்லாம் உண்ணுங்கள்; ஹித்ததுன் ( எங்கள் பாவச் சுமை நீங்குக!) என்று கூறுங்கள்; (அதன்) வாயிலில் தலை தாழ்த்தியவர்களாகவும் நுழையுங்கள்; நாம் உங்களுடைய குற்றங்களை உங்களுக்கு மன்னித்துவிடுவோம்; நன்மை செய்வோருக்கு (அதன்கூலியை) நாம் அதிகப்படுத்துவோம்," என்று அவர்களுக்குக் கூறப்பட்டபோது;

162. அவர்களில் அநியாயம் செய்தோர் அவர்களுக்குக் கூறப்பட்டதல்லாத (வேறு) வார்த்தையாக (அதை) மாற்றி விட்டார்கள்; ஆகவே, (இவ்வாறு) அவர்கள் அநியாயம் செய்ததன் காரணமாக நாம் அவர்கள்மீது வானத்திலிருந்து வேதனையை இறக்கிவைத்தோம்.

163. மேலும், (நபியே!) கடலோரத்திலிருந்த ஓர் ஊர் (மக்களைப்) பற்றி நீர் அவர்களைக் கேட்பீராக! (தடுக்கப்பட்ட நாளாகிய) சனிக்கிழமையன்று (மீன் பிடிப்பது தடுக்கப்பட்டிருந்தும்)அவர்கள் வரம்புமீறி(மீன் பிடித்து)க் கொண்டிருந்தார்கள் . ஏனென்றால், சனிக்கிழமையன்று (அக்கடலிலிருந்து) மீன்கள் நீர்மட்டத்திற்குமேலாக தங்கள் தலைகளை நீட்டிக்கொண்டு அவர்கள் முன் வந்தன. சனிக்கிழமையல்லாத நாட்களில் அவர்களிடம் அவை வருவதில்லை; இவ்வாறு அவர்கள் பாவங்கள் செய்து கொண்டிருந்ததன் காரணத்தால் அவர்களை நாம் சோதனைக்குள்ளாக்கினோம்.

وَإِذْ قَالَتْ أُمَّةٌ مِّنْهُمْ لِمَ تَعِظُونَ قَوْمًا ۙ اللَّهُ مُهْلِكُهُمْ أَوْ
مُعَذِّبُهُمْ عَذَابًا شَدِيدًا ۖ قَالُوا مَعْذِرَةً إِلَىٰ رَبِّكُمْ وَلَعَلَّهُمْ
يَتَّقُونَ ﴿١٦٤﴾ فَلَمَّا نَسُوا مَا ذُكِّرُوا بِهِ أَنجَيْنَا الَّذِينَ يَنْهَوْنَ عَنِ
السُّوءِ وَأَخَذْنَا الَّذِينَ ظَلَمُوا بِعَذَابٍ بَئِيسٍ بِمَا كَانُوا
يَفْسُقُونَ ﴿١٦٥﴾ فَلَمَّا عَتَوْا عَن مَّا نُهُوا عَنْهُ قُلْنَا لَهُمْ كُونُوا
قِرَدَةً خَاسِئِينَ ﴿١٦٦﴾ وَإِذْ تَأَذَّنَ رَبُّكَ لَيَبْعَثَنَّ عَلَيْهِمْ إِلَىٰ
يَوْمِ الْقِيَامَةِ مَن يَسُومُهُمْ سُوءَ الْعَذَابِ ۗ إِنَّ رَبَّكَ لَسَرِيعُ
الْعِقَابِ ۖ وَإِنَّهُ لَغَفُورٌ رَّحِيمٌ ﴿١٦٧﴾ وَقَطَّعْنَاهُمْ فِي الْأَرْضِ أُمَمًا ۖ
مِّنْهُمُ الصَّالِحُونَ وَمِنْهُمْ دُونَ ذَٰلِكَ ۖ وَبَلَوْنَاهُم بِالْحَسَنَاتِ
وَالسَّيِّئَاتِ لَعَلَّهُمْ يَرْجِعُونَ ﴿١٦٨﴾ فَخَلَفَ مِن بَعْدِهِمْ خَلْفٌ وَرِثُوا
الْكِتَابَ يَأْخُذُونَ عَرَضَ هَٰذَا الْأَدْنَىٰ وَيَقُولُونَ سَيُغْفَرُ لَنَا
وَإِن يَأْتِهِمْ عَرَضٌ مِّثْلُهُ يَأْخُذُوهُ ۚ أَلَمْ يُؤْخَذْ عَلَيْهِم مِّيثَاقُ
الْكِتَابِ أَن لَّا يَقُولُوا عَلَى اللَّهِ إِلَّا الْحَقَّ وَدَرَسُوا مَا فِيهِ ۗ وَالدَّارُ
الْآخِرَةُ خَيْرٌ لِّلَّذِينَ يَتَّقُونَ ۗ أَفَلَا تَعْقِلُونَ ﴿١٦٩﴾ وَالَّذِينَ يُمَسِّكُونَ
بِالْكِتَابِ وَأَقَامُوا الصَّلَاةَ إِنَّا لَا نُضِيعُ أَجْرَ الْمُصْلِحِينَ ﴿١٧٠﴾

164. இன்னும், அவர்களில் ஒரு சாரார், (நல்லுபதேசம் செய்தவர்களிடம்) "அல்லாஹ் எவர்களை அழித்துவிடுகிறவனாக அல்லது அவர்களை கடினமான வேதனையாக வேதனை செய்கிறவனாக இருக்கின்றானோ அந்த மக்களுக்கு நீங்கள் ஏன் நல்லுபதேசம் செய்கிறீர்கள்" என்று கூறியபொழுது அவர்கள், இதனால் நாம் உங்கள் இரட்சகனிடம் (நம்) பொறுப்பிலிருந்து நீங்கிவிடுவதற்காகவும் ( அதனால் மீன் பிடிக்கும்) அவர்கள் (ஒருக்கால் தவறிலிருந்து விலகி அல்லாஹ்வை ) அஞ்சி விடலாம்" என்பதற்காகவும் (நாங்கள் உபதேசம் செய்கிறோம்) எனக் கூறினார்கள்.

165. பின்னர் அவர்களுக்கு எதுபற்றி நினைவுபடுத்தப்பட்டதோ அதை அவர்கள் மறந்து ( மீன்பிடிக்க முற்பட்டு) விட்டபோது தீமை செய்வதிலிருந்து தடுத்துக் கொண்டிருந்தோரை நாம் காப்பாற்றினோம்; அநியாயம் செய்தவர்களை அவர்கள் செய்துகொண்டிருந்த பாவத்தின் காரணமாக கொடிய வேதனையைக் கொண்டும் நாம் பிடித்துக் கொண்டோம்.

166. ஆகவே, எதனைவிட்டும் அவர்கள் தடுக்கப்பட்டிருந்தனரோ அதனைவிட்டும் அவர்கள் வரம்புமீறியபோது, "நீங்கள் இகழப்பட்டவர்களாக, குரங்குகளாகி விடுங்கள்" என்று அவர்களுக்கு நாம் (சபித்துக்) கூறினோம்.

167. மேலும், (நபியே!) உமதிரட்சகன்_அவர்களுக்குக் கொடிய வேதனை கொடுக்கக் கூடியவர்களையே அவர்கள் மீது (ஆதிக்கம் வகிக்கும்படி) இறுதிநாள் வரையில் அவன் நிச்சயமாக அனுப்பி வருவான் என்று (அவர்களுக்கு) அறிவித்ததை (நீர் அவர்களுக்கு நினைவூட்டுவீராக! ) நிச்சயமாக உமதிரட்சகன் (அவனுக்கு மாறு செய்து வந்தோரை) தண்டிப்பதில் மிக்க தீவிரமானவன்; மேலும் நிச்சயமாக (அவன்பால் மீளுகிறவர்களுக்கு) அவன் மிக்க மன்னிக்கிறவன்; நிகரற்ற அன்புடையவன்.

168. மேலும், அவர்களை இப்புவியில் பல கூட்டத்தினர்களாக நாம் பிரித்து விட்டோம்; அவர்களிலிருந்து நல்லோர்களும் இருக்கின்றனர்; இதுவல்லாத (பொல்லாத)வர்களும் அவர்களில் இருக்கின்றனர்; அவர்கள் (பாவங்களிலிருந்து) மீளுவதற்காக நல்லவைகளைக் கொண்டும், தீயவைகளைக் கொண்டும் நாம் அவர்களைச் சோதித்தோம்.

169. அவர்களுக்குப் பின்னர், அவர்களுடைய இடத்தை தீய ஒரு சாரார் அடைந்தனர்; அவர்கள், (தவ்றாத்) வேதத்திற்கு அனந்தரக்காரர்களாக ஆனார்கள்; இவ்வற்ப (உலகின்) பொருளைப் பெற்றுக்கொண்(டு வேதத்தை மாற்றி விட்)டனர். (இதைப்பற்றி) "எங்களுக்கு மன்னிப்பளிக்கப்படும்" என்றும் கூறுகிறார்கள்; (பின்னும் முன்போல் புரட்டுவதற்காக) இதேபோன்ற அற்பப் பொருள் அவர்களிடம் வருமானால், அதனை எடுத்துக்கொள்வார்கள்; அவர்கள், அல்லாஹ்வின்மீது உண்மையைத் தவிர வேறு எதையும் கூறக்கூடாதென்று (அவர்களுடைய) வேதத்தின் மூலம் அவர்களிடம் உறுதிமொழி வாங்கப் படவில்லையா? அதில் உள்ளதை அவர்கள் ஓதியும் வருகின்றனர்; (எனினும், அவற்றை அவர்கள் பொருட்படுத்துவதில்லை.) மேலும் பயபக்தியுடையவர்களுக்கு, மறுமையின் வீடே மிக்க மேலானதாகும். நீங்கள் விளங்கிக் கொள்ளமாட்டீர்களா?

170. இன்னும், (இவ்)வேதத்தைப் பலமாக(ப் பற்றி)ப் பிடித்துக் கொண்டு, தொழுகையையும் நிறைவேற்றி வருகின்றார்களே அத்தகையோர்_(அதுபோன்ற) நல்லோர்களின் கூலியை நிச்சயமாக நாம் வீணாக்கமாட்டோம்.

وَاِذْ نَتَقْنَا الْجَبَلَ فَوْقَهُمْ كَاَنَّهٗ ظُلَّةٌ وَّظَنُّوْٓا اَنَّهٗ وَاقِعٌۢ بِهِمْ ۚ
خُذُوْا مَآ اٰتَيْنٰكُمْ بِقُوَّةٍ وَّاذْكُرُوْا مَا فِيْهِ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿۱۷۱﴾ وَ ع ۲۱ / ۹
اِذْ اَخَذَ رَبُّكَ مِنْۢ بَنِيْٓ اٰدَمَ مِنْ ظُهُوْرِهِمْ ذُرِّيَّتَهُمْ وَ
اَشْهَدَهُمْ عَلٰٓى اَنْفُسِهِمْ ۚ اَلَسْتُ بِرَبِّكُمْ ؕ قَالُوْا بَلٰى ۛۚ شَهِدْنَا ۛۚ اَنْ
تَقُوْلُوْا يَوْمَ الْقِيٰمَةِ اِنَّا كُنَّا عَنْ هٰذَا غٰفِلِيْنَ ﴿۱۷۲﴾ ۙ اَوْ تَقُوْلُوْٓا اِنَّمَآ
اَشْرَكَ اٰبَآؤُنَا مِنْ قَبْلُ وَكُنَّا ذُرِّيَّةً مِّنْۢ بَعْدِهِمْ ۚ اَفَتُهْلِكُنَا
بِمَا فَعَلَ الْمُبْطِلُوْنَ ﴿۱۷۳﴾ وَكَذٰلِكَ نُفَصِّلُ الْاٰيٰتِ وَلَعَلَّهُمْ
يَرْجِعُوْنَ ﴿۱۷۴﴾ وَاتْلُ عَلَيْهِمْ نَبَاَ الَّذِيْٓ اٰتَيْنٰهُ اٰيٰتِنَا فَانْسَلَخَ
مِنْهَا فَاَتْبَعَهُ الشَّيْطٰنُ فَكَانَ مِنَ الْغٰوِيْنَ ﴿۱۷۵﴾ وَلَوْ شِئْنَا
لَرَفَعْنٰهُ بِهَا وَلٰكِنَّهٗٓ اَخْلَدَ اِلَى الْاَرْضِ وَاتَّبَعَ هَوٰىهُ ۚ فَمَثَلُهٗ
كَمَثَلِ الْكَلْبِ ۚ اِنْ تَحْمِلْ عَلَيْهِ يَلْهَثْ اَوْ تَتْرُكْهُ يَلْهَثْ ؕ
ذٰلِكَ مَثَلُ الْقَوْمِ الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا ۚ فَاقْصُصِ
الْقَصَصَ لَعَلَّهُمْ يَتَفَكَّرُوْنَ ﴿۱۷۶﴾ سَآءَ مَثَلًا ۨالْقَوْمُ الَّذِيْنَ
كَذَّبُوْا بِاٰيٰتِنَا وَاَنْفُسَهُمْ كَانُوْا يَظْلِمُوْنَ ﴿۱۷۷﴾ مَنْ يَّهْدِ اللّٰهُ
فَهُوَ الْمُهْتَدِيْ ۚ وَمَنْ يُّضْلِلْ فَاُولٰٓئِكَ هُمُ الْخٰسِرُوْنَ ﴿۱۷۸﴾

معانقة ۷ عند المتاخرین ۱۲

171. மேலும், ('ஸினாய்') மலையை அவர்களுக்கு மேல் அது நிழலைப் போன்று (இருக்க) நாம் உயர்த்தியசமயத்தில் நிச்சயமாக அ(ம்மலையான)து அவர்கள்மீது விழுந்து விடுமென்று அவர்கள் எண்ணி (பயந்த)னர்; (அப்போது,) "நாம் உங்களுக்குக் கொடுத்த (வேதத்)தைப் பலமாகப் பிடித்துக் கொள்ளுங்கள்; இன்னும், அதிலுள்ளவற்றை (எப்பொழுதும் கவனத்தில் வைத்து) நினைவு கூருங்கள்; (இன்னும் அதிலுள்ளவாறு நீங்கள் செயல்பட்டால்) நீங்கள் பயபக்தியுடையோர்களாகி விடலாம்" (என்று நாம் அவர்களுக்குக் கூறியதை, நபியே! நீர் அவர்களுக்கு நினைவு கூர்வீராக!)

172. (நபியே!) உமதிரட்சகன் ஆதமுடைய மக்களில் அவர்களுடைய முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததிகளை (வெளியாக்கி), அவர்களைத் தங்களுக்கே சாட்சியாக்கி, (அவர்களிடம்) "நான் உங்கள் இரட்சகனல்லவா?" என்று (கேட்டு உடன் படிக்கையை) எடுத்த சமயத்தில் "ஆம்! (நீதான் இரட்சகன், அதன்மீது) நாங்கள் சாட்சியம் கூறுகிறோம்" என்று அவர்கள் கூறியதை, (நீர் அவர்களுக்கு நினைவூட்டுவீராக! இது ஏனென்றால், "இதனை ஒருவரும் எங்களுக்கு நினைவூட்டாததனால்) நிச்சயமாக நாங்கள் இதனை மறந்தவர்களாக இருந்துவிட்டோம்" என்று மறுமை நாளில் நீங்கள் சொல்லாதிருப்பதற்காக_

173. அல்லது, "இணையாக்கியதெல்லாம் (எங்களுக்கு) முன்னிருந்த எங்கள் மூதாதையர்கள்தாம், நாங்களோ அவர்களுக்குப் பின்னுள்ள (அவர்களுடைய) சந்ததியினராக இருக்கிறோம்_ ஆகவே அந்த வழி கெட்டோர்கள் செய்தவற்றுக்காக நீ எங்களை அழித்துவிடலாமா?" என்று நீங்கள் சொல்லாமலிருப்பதற்காக (இதனை உங்களுக்கு நாம் நினைவூட்டுகிறோம் என்று நபியே! நீர் கூறுவீராக!).

174. மேலும், இவ்வாறே (நம்) வசனங்களை நாம் விவரிக்கிறோம்; (இதன் மூலம்) அவர்கள் (பாவங்களிலிருந்து விடுபட்டு நம்மிடம்) திரும்புவதற்காகவும் (நாம்விவரித்துக் கூறு கிறோம்.)

175. நாம் எவனுக்கு நம் அத்தாட்சிகளைக் கொடுத்திருந்தோமோ, அத்தகையவனின் செய்தியை (யூதர்களாகிய)அவர்களுக்கு (நபியே! நீர்) ஓதிக் காண்பிப்பீராக! பின்னர், அவன் அதிலிருந்து கழன்று கொண்டான்; ஆகவே, ஷைத்தான் அவனைப் பின்தொடர்ந்து சென்றான்; எனவே, (அவனது சூழ்ச்சிக்குள் சிக்கி) அவன் வழி தவறியவர்களில் (ஒருவனாக) ஆகிவிட்டான்.

176. மேலும், நாம் நாடியிருந்தால், (நம் அத்தாட்சிகளான)அவற்றைக் கொண்டு அவனை நாம் உயர்த்தியிருப்போம்; எனினும் அவன் பூமியின் (ஆடம்பர வாழ்க்கையின்) பால் சாய்ந்துவிட்டான்; தன் (மன) இச்சையையும் பின்பற்றி விட்டான்; ஆகவே அவனுடைய உதாரணம்: (ஒரு) நாயின் உதாரணத்தை ஒத்திருக்கின்றது; நீர் அதனைத் துரத்தினாலும் நாக்கைத் தொங்கவிட்டுக் கொள்கிறது; அதனை(த் துரத்தாது) விட்டுவிட்டாலும் நாக்கைத் தொங்கவிட்டுக் கொள்கிறது; இதுவே, நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கினார்களே அந்தக் கூட்டத்தினர்க்கு உதாரணமாகும். ஆகவே, அவர்கள் சிந்தித்து நல்லுணர்வு பெருவதற்காக (இத்தகைய) வரலாற்றைக் கூறுவீராக!

177. நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கிய கூட்டத்தாரின் உதாரணம் மிகக் கெட்டதாகும்; அவர்கள் தமக்குத் தாமே அநியாயம் செய்கிறவர்களாகவும் இருந்தனர்.

178. அல்லாஹ், யாரை நேர்வழி செலுத்துகின்றானோ அவரே நேர்வழி அடைந்தவர்; மேலும், எவரை அவன் வழிதவறச்செய்கிறானோ அத்தகையோர் தாம் நஷ்டவாளிகள்.

وَلَقَدْ ذَرَاْنَا لِجَهَنَّمَ كَثِيْرًا مِّنَ الْجِنِّ وَالْاِنْسِ ۖ لَهُمْ قُلُوْبٌ لَّا
يَفْقَهُوْنَ بِهَا ۡ وَلَهُمْ اَعْيُنٌ لَّا يُبْصِرُوْنَ بِهَا ۡ وَلَهُمْ اٰذَانٌ لَّا
يَسْمَعُوْنَ بِهَا ؕ اُولٰٓئِكَ كَالْاَنْعَامِ بَلْ هُمْ اَضَلُّ ؕ اُولٰٓئِكَ هُمُ الْغٰفِلُوْنَ ﴿١٧٩﴾
وَلِلّٰهِ الْاَسْمَآءُ الْحُسْنٰى فَادْعُوْهُ بِهَا ۪ وَذَرُوا الَّذِيْنَ يُلْحِدُوْنَ
فِيْٓ اَسْمَآئِهٖ ؕ سَيُجْزَوْنَ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿١٨٠﴾ وَمِمَّنْ خَلَقْنَآ اُمَّةٌ
يَّهْدُوْنَ بِالْحَقِّ وَبِهٖ يَعْدِلُوْنَ ﴿١٨١﴾ وَالَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا ع ٢٢ ١٢
سَنَسْتَدْرِجُهُمْ مِّنْ حَيْثُ لَا يَعْلَمُوْنَ ﴿١٨٢﴾ وَاُمْلِيْ لَهُمْ ؕ اِنَّ كَيْدِيْ
مَتِيْنٌ ﴿١٨٣﴾ اَوَلَمْ يَتَفَكَّرُوْا ٜ مَا بِصَاحِبِهِمْ مِّنْ جِنَّةٍ ؕ اِنْ هُوَ اِلَّا نَذِيْرٌ
مُّبِيْنٌ ﴿١٨٤﴾ اَوَلَمْ يَنْظُرُوْا فِيْ مَلَكُوْتِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا خَلَقَ
اللّٰهُ مِنْ شَيْءٍ ۙ وَّاَنْ عَسٰٓى اَنْ يَّكُوْنَ قَدِ اقْتَرَبَ اَجَلُهُمْ ۚ فَبِاَيِّ
حَدِيْثٍۭ بَعْدَهٗ يُؤْمِنُوْنَ ﴿١٨٥﴾ مَنْ يُّضْلِلِ اللّٰهُ فَلَا هَادِيَ لَهٗ ؕ وَ
يَذَرُهُمْ فِيْ طُغْيَانِهِمْ يَعْمَهُوْنَ ﴿١٨٦﴾ يَسْـَٔلُوْنَكَ عَنِ السَّاعَةِ اَيَّانَ
مُرْسٰىهَا ؕ قُلْ اِنَّمَا عِلْمُهَا عِنْدَ رَبِّيْ ۚ لَا يُجَلِّيْهَا لِوَقْتِهَآ اِلَّا هُوَ ؔ ثَقُلَتْ وقف لازم وقف منزل
فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ لَا تَاْتِيْكُمْ اِلَّا بَغْتَةً ؕ يَسْـَٔلُوْنَكَ كَاَنَّكَ حَفِيٌّ
عَنْهَا ؕ قُلْ اِنَّمَا عِلْمُهَا عِنْدَ اللّٰهِ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿١٨٧﴾

179. திட்டமாக ஜின்களிலும், மனிதர்களிலும் அநேகரை நரகத்திற்காகவே நாம் படைத்திருக்கின்றோம்; (அவர்கள் எத்தகையோரென்றால்,) அவர்களுக்கு இதயங்களிருக்கின்றன; அவற்றைக் கொண்டு (நல்லவற்றை) அவர்கள் விளங்கிக்கொள்ளமாட்டார்கள். அவர்களுக்கு கண்களுமுண்டு; (எனினும்) அவற்றைக் கொண்டு (இவ்வுலகிலுள்ள அல்லாஹ்வின் அத்தாட்சிகளை) அவர்கள் பார்க்கமாட்டார்கள்; அவர்களுக்குக் காதுகளுமுண்டு; அவற்றைக் கொண்டு அவர்கள் (நல்லவற்றைச்) செவியேற்கமாட்டார்கள்; அவர்கள் கால் நடைகளைப் போன்றவர்கள்; ஏன் (அவற்றைவிட) அவர்கள் மிக அதிகமாக வழிகெட்டவர்கள்; அவர்களேதாம், (நம் வசனங்களை அலட்சியம் செய்து) பராமுகமானவர்களாவர்.

180. இன்னும், அல்லாஹ்வுக்கு மிக்க அழகான பெயர்கள் இருக்கின்றன; ஆகவே, அவற்றைக் கொண்டே நீங்கள் அவனை அழையுங்கள்; அவனுடைய பெயர்களில் (தவறான பொருள் கொண்டு) திரித்துக்கூறுவோரை விட்டுவிடுங்கள்;அவர்கள் செய்து கொண்டிருந்தவைக்குரிய கூலியைக் கொடுக்கப் படுவார்கள்.(12)

181. மேலும், நாம் படைத்தவர்களில் ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள்; அவர்கள் உண்மைக்கு வழி காட்டுகிறார்கள்; (அதைப் பின்பற்றுவதுடன், மற்ற மனிதர்களுக்கும் அறிவித்து) அதனைக் கொண்டே நீதியும் செய்கின்றனர்.

182. இன்னும், நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குகின்றார்களே அத்தகையோர் — (அவர்களுக்கு சகலத்தையும் கொடுத்து) அவர்கள் உணர்ந்து கொள்ளாத விதத்தில், அவர்களை நாம் படிப்படியாக (கீழ்நிலைக்கு இறக்கி)ப் பிடித்துவிடுவோம்.

183. அன்றியும், (இவ்வுலகில்) நான் அவர்களுக்கு அவகாசம் கொடுப்பேன் ; நிச்சயமாக என்னுடைய சதி(த்திட்டம்) மிக்க உறுதியானது .

184. (நம் நபியாகிய) அவர்களுடைய தோழருக்கு எவ்விதப் பைத்தியமும் இல்லை என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லையா? அவர் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றவரே தவிர வேறில்லை.

185. இன்னும் வானங்களுடையவும், பூமியுடையவும் ஆட்சியிலும் , எப்பொருளிலிருந்தும், அல்லாஹ் படைத்திருக்கின்றவற்றிலும், இன்னும், அவர்களுடைய (மரண) தவணை நெருங்கியதாக ஆகி இருக்கக் கூடும் என்பதிலும் அவர்கள் (உணர்ந்து) பார்க்கவில்லையா? (குர்ஆனாகிய) இதற்குப் பின்னர், எந்தச் செய்தியைத்தான் அவர்கள் விசுவாசங்கொள்ளப் போகிறார்கள்?

186. எவரை அல்லாஹ் தவறான வழியில் செலுத்திவிடுகிறானோ அவரை நேரான வழியில் செலுத்துபவர் எவரும் இலர். தங்கள் வழிகேட்டிலேயே அவர்களை தட்டழிகிறவர்களாக அவன் விட்டும்விடுகின்றான்.

187. (நபியே!) மறுமை நாள் பற்றி — அதனுடைய வருகை எப்பொழுது என — அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள்; (அதற்கு) நீர் கூறுவீராக: அதன் அறிவெல்லாம் என் இரட்சகனிடத்தில்தான்; அதை (வரவேண்டிய) அதற்குரிய நேரத்தில் அவனையன்றி வேறு எவரும் வெளிப்படுத்தமாட்டார்; (அதுபற்றி முற்றிலும் அறிந்தவன் அவனே! அதுசமயம்) வானங்களிலும், பூமியிலும் பளு(வான சம்பவங்கள் )ஏற்பட்டுவிடும்; திடீரெனவே தவிர அது உங்களிடம் வராது; நிச்சயமாக நீர் அதனை முற்றிலும் அறிந்துகொண்டவர் போல் (அதனைப்பற்றி) உம்மிடம் கேட்கிறார்கள்; (அதற்கு) "அதன் அறிவெல்லாம் அல்லாஹ்விடத்தில்தான் இருக்கிறது; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (அதனை) அறியமாட்டார்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

قُلْ لَّآ اَمْلِكُ لِنَفْسِیْ نَفْعًا وَّلَا ضَرًّا اِلَّا مَا شَآءَ اللّٰهُ ؕ وَلَوْ
كُنْتُ اَعْلَمُ الْغَيْبَ لَاسْتَكْثَرْتُ مِنَ الْخَيْرِ ۚۛ وَمَا مَسَّنِیَ
السُّوْٓءُ ۚۛ اِنْ اَنَا اِلَّا نَذِيْرٌ وَّبَشِيْرٌ لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿۱۸۸﴾ ع هُوَ الَّذِیْ ع ۲۳ ۱۳
خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍ وَّجَعَلَ مِنْهَا زَوْجَهَا لِيَسْكُنَ اِلَيْهَا ۚ
فَلَمَّا تَغَشّٰىهَا حَمَلَتْ حَمْلًا خَفِيْفًا فَمَرَّتْ بِهٖ ۚ فَلَمَّآ اَثْقَلَتْ
دَّعَوَا اللّٰهَ رَبَّهُمَا لَئِنْ اٰتَيْتَنَا صَالِحًا لَّنَكُوْنَنَّ مِنَ الشّٰكِرِيْنَ ﴿۱۸۹﴾
فَلَمَّآ اٰتٰىهُمَا صَالِحًا جَعَلَا لَهٗ شُرَكَآءَ فِيْمَآ اٰتٰىهُمَا ۚ فَتَعٰلَى اللّٰهُ
عَمَّا يُشْرِكُوْنَ ﴿۱۹۰﴾ اَيُشْرِكُوْنَ مَا لَا يَخْلُقُ شَيْئًا وَّهُمْ يُخْلَقُوْنَ ﴿۱۹۱﴾ ۚ
وَلَا يَسْتَطِيْعُوْنَ لَهُمْ نَصْرًا وَّلَآ اَنْفُسَهُمْ يَنْصُرُوْنَ ﴿۱۹۲﴾ وَاِنْ
تَدْعُوْهُمْ اِلَى الْهُدٰى لَا يَتَّبِعُوْكُمْ ؕ سَوَآءٌ عَلَيْكُمْ اَدَعَوْتُمُوْهُمْ
اَمْ اَنْتُمْ صَامِتُوْنَ ﴿۱۹۳﴾ اِنَّ الَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ
عِبَادٌ اَمْثَالُكُمْ فَادْعُوْهُمْ فَلْيَسْتَجِيْبُوْا لَكُمْ اِنْ كُنْتُمْ
صٰدِقِيْنَ ﴿۱۹۴﴾ اَلَهُمْ اَرْجُلٌ يَّمْشُوْنَ بِهَآ اَمْ لَهُمْ اَيْدٍ يَّبْطِشُوْنَ
بِهَآ ز اَمْ لَهُمْ اَعْيُنٌ يُّبْصِرُوْنَ بِهَآ ز اَمْ لَهُمْ اٰذَانٌ يَّسْمَعُوْنَ
بِهَا ؕ قُلِ ادْعُوْا شُرَكَآءَكُمْ ثُمَّ كِيْدُوْنِ فَلَا تُنْظِرُوْنِ ﴿۱۹۵﴾

188. (நபியே!) நீர் கூறுவீராக: "அல்லாஹ் நாடியதைத் தவிர எனக்கே எவ்வித நன்மை(யைச் செய்வதற்)கும், தீமை(யைத் தடுத்துக் கொள்வதற்)கும் நான் சக்தி பெறமாட்டேன்; மறைவானவற்றை நான் அறிந்தவனாக இருந்திருந்தால், நன்மைகளையே அதிகமாகத் தேடிக்கொண்டிருப்பேன்; தீமை என்னைத்தொட்டிருக்காது; நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், விசுவாசங்கொண்ட சமுதாயத்தினருக்கு நன்மாராயங் கூறுபவனுமேயன்றி வேறில்லை".

189. அவன் எத்தகையவனென்றால், ஒரே ஆத்மாவிலிருந்து உங்களைப் படைத்து, அதிலிருந்து அதற்குரிய ஜோடி(யான மனைவி)யை அவளுடன் கூடி வசிப்பதற்காகவும் உண்டாக்கினான். அவளை அவர் மூடிக்கொண்டபோது, அவள் இலேசான சுமை சுமந்தாள்; பின்னர் அதனை(ச் சுமந்து)க்கொண்டு திரிந்தாள்; அது கனமானபோது, "நீ எங்களுக்கு(சந்ததியில்) நல்லதை அளித்தால், நிச்சயமாக நாங்கள் (உனக்கு) நன்றி செலுத்துவோரில் இருப்போம்" என்று அவ்விருவருடைய இரட்சகனாகிய அல்லாஹ்விடம் அவ்விருவரும் பிரார்த்தித்தார்கள்.

190. அவ்விருவருக்கும் நல்ல(சந்ததியான)தை அவன் கொடுத்தபோது, அவர்களுக்கு அவன் கொடுத்தவற்றில் அவ்விருவரும் இணையாளர்களை ஆக்கினார்கள்; அவர்கள் இணைவைப்பதை விட்டும் அல்லாஹ் உயர்வானவன்.

191. எப்பொருளையும் படைக்காதவற்றை அவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணையாக்குகின்றனரா? அவர்களும் (அவனால்) படைக்கப்பட்டவர்களே!

192. மேலும், அவர்கள் இவர்களுக்கு எத்தகைய உதவி செய்யச்சக்தி பெற மாட்டார்கள்; தங்களுக்குத்தாங்களே (ஏதும்) உதவி செய்து கொள்ளவும்(சக்தி பெற) மாட்டார்கள்.

193. நீங்கள் அவர்களை நேர் வழியின்பால் அழைத்தபோதிலும் உங்களை அவர்கள் பின்பற்றமாட்டார்கள்; நீங்கள் அவர்களை அழைப்பதும் அல்லது அழைக்காது வாய்மூடிக்கொண்டவர்களாக இருப்பதும் உங்களுக்குச் சமமேயாகும்.

194. நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர, நீங்கள் (தெய்வங்களென) அழைக்கின்றீர்களே அத்தகையவர்கள் உங்களைப் போன்ற அடியார்களே; (உங்களுக்குப்பயனளிப்பார்கள் என்ற கூற்றில்) நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், அவர்களை நீங்கள் அழைத்துப் பாருங்கள்; உங்களுக்கு அவர்கள் பதிலளிக்கட்டும்.

195. (இணை வைப்போரே! நீங்கள் வணங்கும்)அவர்களுக்கு எவற்றைக்கொண்டு அவர்கள் நடப்பார்களோ அத்தகைய கால்கள் உண்டா ?அல்லது எவற்றைக்கொண்டு அவர்கள் பிடிப்பார்களோ அத்தகைய கைகள் அவர்களுக்கு உண்டா? அல்லது எவற்றைக்கொண்டு அவர்கள் பார்ப்பார்களோ அத்தகைய கண்கள் அவர்களுக்கு உண்டா ? அல்லது எவற்றைக்கொண்டு அவர்கள் செவியுறுவார்களோ அத்தகைய செவிகள் அவர்களுக்கு உண்டா ? (அவ்வாறாயின்) "நீங்கள் உங்களுடைய இணையாளர்களை அழையுங்கள் ; பிறகு, (எனக்கு இடையூறு செய்ய) சூழ்ச்சி செய்யுங்கள்; (இதில்) நீங்கள் சிறிதும் எனக்கு அவகாசம் கொடுக்கவேண்டாம்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

اِنَّ وَلِیِّ اللّٰهُ الَّذِیْ نَزَّلَ الْكِتٰبَ ۖ وَهُوَ يَتَوَلَّى الصّٰلِحِيْنَ ﴿١٩٦﴾
وَالَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِهٖ لَا يَسْتَطِيْعُوْنَ نَصْرَكُمْ وَلَآ
اَنْفُسَهُمْ يَنْصُرُوْنَ ﴿١٩٧﴾ وَاِنْ تَدْعُوْهُمْ اِلَى الْهُدٰى لَا يَسْمَعُوْا ؕ
وَتَرٰىهُمْ يَنْظُرُوْنَ اِلَيْكَ وَهُمْ لَا يُبْصِرُوْنَ ﴿١٩٨﴾ خُذِ الْعَفْوَ وَاْمُرْ
بِالْعُرْفِ وَاَعْرِضْ عَنِ الْجٰهِلِيْنَ ﴿١٩٩﴾ وَاِمَّا يَنْزَغَنَّكَ مِنَ
الشَّيْطٰنِ نَزْغٌ فَاسْتَعِذْ بِاللّٰهِ ؕ اِنَّهٗ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿٢٠٠﴾ اِنَّ الَّذِيْنَ
اتَّقَوْا اِذَا مَسَّهُمْ طٰٓئِفٌ مِّنَ الشَّيْطٰنِ تَذَكَّرُوْا فَاِذَا هُمْ
مُّبْصِرُوْنَ ﴿٢٠١﴾ وَاِخْوَانُهُمْ يَمُدُّوْنَهُمْ فِى الْغَيِّ ثُمَّ لَا يُقْصِرُوْنَ ﴿٢٠٢﴾
وَاِذَا لَمْ تَاْتِهِمْ بِاٰيَةٍ قَالُوْا لَوْلَا اجْتَبَيْتَهَا ؕ قُلْ اِنَّمَآ اَتَّبِعُ
مَا يُوْحٰٓى اِلَيَّ مِنْ رَّبِّيْ ۚ هٰذَا بَصَآئِرُ مِنْ رَّبِّكُمْ وَهُدًى وَّ
رَحْمَةٌ لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿٢٠٣﴾ وَاِذَا قُرِئَ الْقُرْاٰنُ فَاسْتَمِعُوْا
لَهٗ وَاَنْصِتُوْا لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ﴿٢٠٤﴾ وَاذْكُرْ رَّبَّكَ فِيْ نَفْسِكَ
تَضَرُّعًا وَّخِيْفَةً وَّدُوْنَ الْجَهْرِ مِنَ الْقَوْلِ بِالْغُدُوِّ
وَالْاٰصَالِ وَلَا تَكُنْ مِّنَ الْغٰفِلِيْنَ ﴿٢٠٥﴾ اِنَّ الَّذِيْنَ عِنْدَ رَبِّكَ
لَا يَسْتَكْبِرُوْنَ عَنْ عِبَادَتِهٖ وَيُسَبِّحُوْنَهٗ وَلَهٗ يَسْجُدُوْنَ ﴿٢٠٦﴾ السجدة ع ٢٤ ١٨ ١٤

196. நிச்சயமாக இவ்வேதத்தை இறக்கிவைத்தவனாகிய அல்லாஹ்தான் என் பாதுகாவலன்; மேலும் அவனே நல்லடியார்களைப் பாதுகாக்கின்றான்.

197. (இணைவைத்து வணங்குவோரே!) அவனையன்றி நீங்கள் அழைக்கின்றீர்களே அத்தகையோர், உங்களுக்கு உதவி செய்ய சக்தி பெறமாட்டார்கள்; தமக்குத் தாமே உதவி செய்து கொள்ளவும் மாட்டார்கள்.

198. நீங்கள் அவர்களை நேர்வழியின் பக்கம் அழைப்பீர்களானாலும், அதை அவர்கள் கேட்கமாட்டார்கள்; (நபியே!) மேலும் அவர்களை உம்பால் அவர்கள் பார்ப்பதாக நீர் காண்பீர் (ஆனால்) அவர்களோ (உண்மையில் உம்மைப்) பார்ப்பதில்லை.

199. (நபியே!) நீர் மன்னிப்பை எடுத்துக்கொள்வீராக! நன்மையை ஏவியும் வருவீராக! அறிவீனர்களைப் புறக்கணித்தும் விடுவீராக!

200. ஷைத்தானிலிருந்து ஓர் (சிறிய) ஊசாட்டம் உமக்கு நிச்சயமாக ஊசாடுமானால் அல்லாஹ்வைக் கொண்டு நீர் காவல் தேடிக்கொள்வீராக! நிச்சயமாக அவன் செவியுறுகிறவன், (யாவையும்) நன்கறிகிறவன்.

201. நிச்சயமாக (அல்லாஹ்வுக்குப்) பயப்படுகிறார்களே அத்தகையோர்_ அவர்களை ஷைத்தானுடைய (தவறான) எண்ணம் தொட்டால், அவர்கள் (அல்லாஹ்வை) நினைவு கூறிவிடுவார்கள்; அது சமயம் அவர்கள் (கண் திறந்து) விழிப்படைந்தவர்கள் (ஆவர்).

202. இன்னும், (ஷைத்தான்களாகிய) அவர்களின் சகோதரர்களோ, அவர்களை வழிகேட்டில் இழுத்துச் செல்வார்கள்; பின்னர் யாதொரு குறைவும் செய்யமாட்டார்கள்.

203. மேலும், யாதொரு வசனத்தை நீர் அவர்களிடம் கொண்டுவராவிடில், அதனை நீர் (உம்புறத்திலிருந்தே) தேர்ந்தெடுத்திருக்கக் கூடாதா? என்று (பரிகாசமாகக்) கூறுகின்றனர்; அதற்கு (நபியே) நீர் கூறும்: "நான் பின்பற்றுவதெல்லாம் என் இரட்சகனால் எனக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டவைகளைத்தான்"; இது உங்கள் இரட்சகனால் (உங்களுக்கு) அளிக்கப்பட்ட அறிவொளிகளாகவும், விசுவாசங்கொண்ட சமூகத்தார்க்கு நேர் வழியாகவும், (அல்லாஹ்வின்) அருளாகவும் இருக்கின்றது.

204. இன்னும் (மனிதர்களே!) குர்ஆன் ஓதப்பட்டால் அதனை நீங்கள் செவிதாழ்த்திக் கேளுங்கள்; வாய்பொத்தியும் இருங்கள்; (அதனால்) நீங்கள் அருள் செய்யப்படலாம்.

205. (நபியே!) உம் மனதிற்குள் மிக்க பணிவோடும், பயத்தோடும் (மெதுவாக) சொல்லில் உரத்த சப்தமின்றியும், காலையிலும், மாலையிலும் உமதிரட்சகனை நினைவுகூர்வீராக! (அவனை) மறந்திருப்போரில் நீர் ஆகியும் விடாதீர்.

206. நிச்சயமாக உமதிரட்சகனிடத்தில் இருக்கின்றார்களே அத்தகையவர்கள், அவனை வணங்குவதில் இறுமாப்புக் கொள்ளமாட்டார்கள். இன்னும், அவனை (எப்பொழுதும்) துதி செய்து கொண்டும், அவனுக்குச் சிரம்பணிந்து (வணங்கிக்) கொண்டும் இருப்பர்.

سُوْرَةُ الْاَنْفَالِ مَدَنِيَّةٌ وَّهِيَ خَمْسٌ وَّسَبْعُوْنَ اٰيَةً وَّعَشْرُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

يَسْـَٔلُوْنَكَ عَنِ الْاَنْفَالِ ؕ قُلِ الْاَنْفَالُ لِلّٰهِ وَالرَّسُوْلِ ۚ فَاتَّقُوا
اللّٰهَ وَاَصْلِحُوْا ذَاتَ بَيْنِكُمْ ۪ وَاَطِيْعُوا اللّٰهَ وَرَسُوْلَهٗۤ اِنْ كُنْتُمْ
مُّؤْمِنِيْنَ ۱ اِنَّمَا الْمُؤْمِنُوْنَ الَّذِيْنَ اِذَا ذُكِرَ اللّٰهُ وَجِلَتْ
قُلُوْبُهُمْ وَاِذَا تُلِيَتْ عَلَيْهِمْ اٰيٰتُهٗ زَادَتْهُمْ اِيْمَانًا وَّعَلٰى
رَبِّهِمْ يَتَوَكَّلُوْنَ ۚ ۲ الَّذِيْنَ يُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَمِمَّا
رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ ۳ اُولٰٓئِكَ هُمُ الْمُؤْمِنُوْنَ حَقًّا ؕ لَهُمْ
دَرَجٰتٌ عِنْدَ رَبِّهِمْ وَمَغْفِرَةٌ وَّرِزْقٌ كَرِيْمٌ ۚ ۴ كَمَاۤ
اَخْرَجَكَ رَبُّكَ مِنْۢ بَيْتِكَ بِالْحَقِّ ۪ وَاِنَّ فَرِيْقًا مِّنَ الْمُؤْمِنِيْنَ
لَكٰرِهُوْنَ ۵ يُجَادِلُوْنَكَ فِي الْحَقِّ بَعْدَ مَا تَبَيَّنَ كَاَنَّمَا يُسَاقُوْنَ
اِلَى الْمَوْتِ وَهُمْ يَنْظُرُوْنَ ؕ ۶ وَاِذْ يَعِدُكُمُ اللّٰهُ اِحْدَى
الطَّآئِفَتَيْنِ اَنَّهَا لَكُمْ وَتَوَدُّوْنَ اَنَّ غَيْرَ ذَاتِ الشَّوْكَةِ
تَكُوْنُ لَكُمْ وَيُرِيْدُ اللّٰهُ اَنْ يُّحِقَّ الْحَقَّ بِكَلِمٰتِهٖ وَيَقْطَعَ دَابِرَ
الْكٰفِرِيْنَ ۷ لِيُحِقَّ الْحَقَّ وَيُبْطِلَ الْبَاطِلَ وَلَوْ كَرِهَ الْمُجْرِمُوْنَ ۸ ع

அத்தியாயம் : 8

## அல் அன்ஃபால் _ போரில் கிடைத்த வெற்றிப் பொருட்கள்

வசனங்கள் : 75 மதனீ ருகூஃகள் : 10

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1 . (நபியே!) 'அன்ஃபால்' (போர் முனையில் கிடைத்த வெற்றிப் பொருட்களைப்) பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறுவீராக: "அன்ஃபால் அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும் உரியதாகும்; ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள்; (அதில் யாதொன்றையும் மறைத்துக் கொள்ளாது) உங்களுக்கிடையில் (உங்களுடைய) நிலைகளை சீராக்கிக் கொள்ளுங்கள்; நீங்கள் உண்மை விசுவாசிகளாயிருந்தால் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங்கள்."

2 . (உண்மையான) விசுவாசிகள் யாரென்றால், அல்லாஹ்(_அவன் பெயர் அவர்கள் முன்) கூறப்பட்டால், அவர்களுடைய இதயங்கள் பயந்து நடுங்கிவிடும்; மேலும், ( இவ்வேதத்தை இறக்கிவைத்த) அவனுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால், அவை அவர்களுக்கு ஈமானை அதிகப்படுத்தும்; அவர்கள் தங்கள் இரட்சகனின் மீது ( தங்கள் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கையும் வைப்பார்கள்.

3. அவர்கள் எத்தகையோரென்றால், தொழுகையை நிறைவேற்றுவார்கள், நாம் அவர்களுக்குக் கொடுத்த (செல்வத்)திலிருந்து (தானமாகச்) செலவும் செய்வார்கள்.

4. இத்தகையோர்தாம் உண்மையாகவே விசுவாசிகள்; அவர்களுக்கு, அவர்கள் இரட்சகனிடத்தில் பல உயர் பதவிகளும், மன்னிப்பும், சங்கையான உணவும் உண்டு.

5. (நபியே! யுத்தப் பொருட்கள் பங்கீடு விஷயத்தில் அவர்கள் அதிருப்தியுற்றது) உமதிரட்சகன், உம் இல்லத்திலிருந்து உண்மையைக் கொண்டு உம்மை வெளியேற்றியதை (அவர்கள் விரும்பாததை)ப் போன்றிருக்கிறது. நிச்சயமாக, விசுவாசிகளில் ஒரு கூட்டத்தினர், ('பத்ரு' யுத்தத்தின்போது உம்முடன்வருவதை) வெறுக்கக் கூடியவர்களாக இருக்க;

6. (யுத்தம் செய்வது அவசியம் என அவர்களுக்குத்) தெளிவான பின்னர், தாங்கள் (கண்ணால் மரணத்தைப்) பார்த்துக் கொண்டிருக்க, (யாரோ ஒருவரால்) மரணத்தின்பால் அவர்கள் இழுத்துச் செல்லப்படுபவர்களைப் போன்று இவ்வுண்மை விஷயத்திலும் அவர்கள் உம்முடன் விவாதம் செய்கின்றனர்.

7. மேலும், (விரோதிகளின்) இரு கூட்டங்களில் (ஏதேனும்) ஒன்றை_ நிச்சயமாக அது உங்களுக்குத்தான் என அல்லாஹ் உங்களுக்கு வாக்களித்ததை_ (நினைவு கூருங்கள்; அவ்விரண்டில்) நிச்சயமாக ஆயுதமில்லாத (வர்த்தகக் கூட்டமான)து உங்களுக்குக் கிடைக்க வேண்டுமென நீங்கள் விரும்பினீர்கள்; இன்னும் அல்லாஹ்வோ, தன் வாக்குகளின் மூலம் உண்மையை நிலைநாட்டவும், நிராகரிப்போரை வேரறுத்துவிடவும் நாடுகிறான்.

8. குற்றவாளிகள் வெறுத்தபோதிலும் அவன் உண்மையை நிலைநாட்டிவிட, மற்றும் பொய்யை அவன் அழித்துவிடவுமே ( நாடுகிறான்).

اِذْ تَسْتَغِيْثُوْنَ رَبَّكُمْ فَاسْتَجَابَ لَكُمْ اَنِّيْ مُمِدُّكُمْ بِاَلْفٍ
مِّنَ الْمَلٰٓئِكَةِ مُرْدِفِيْنَ ﴿٩﴾ وَمَا جَعَلَهُ اللّٰهُ اِلَّا بُشْرٰى وَلِتَطْمَئِنَّ
بِهٖ قُلُوْبُكُمْ ۚ وَمَا النَّصْرُ اِلَّا مِنْ عِنْدِ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ عَزِيْزٌ
حَكِيْمٌ ﴿١٠﴾ ع اِذْ يُغَشِّيْكُمُ النُّعَاسَ اَمَنَةً مِّنْهُ وَيُنَزِّلُ عَلَيْكُمْ ع ١٥
مِّنَ السَّمَآءِ مَآءً لِّيُطَهِّرَكُمْ بِهٖ وَيُذْهِبَ عَنْكُمْ رِجْزَ
الشَّيْطٰنِ وَلِيَرْبِطَ عَلٰى قُلُوْبِكُمْ وَيُثَبِّتَ بِهِ الْاَقْدَامَ ﴿١١﴾ ؕ اِذْ
يُوْحِيْ رَبُّكَ اِلَى الْمَلٰٓئِكَةِ اَنِّيْ مَعَكُمْ فَثَبِّتُوا الَّذِيْنَ اٰمَنُوْا ؕ
سَاُلْقِيْ فِيْ قُلُوْبِ الَّذِيْنَ كَفَرُوا الرُّعْبَ فَاضْرِبُوْا فَوْقَ
الْاَعْنَاقِ وَاضْرِبُوْا مِنْهُمْ كُلَّ بَنَانٍ ﴿١٢﴾ ؕ ذٰلِكَ بِاَنَّهُمْ
شَآقُّوا اللّٰهَ وَرَسُوْلَهٗ ۚ وَمَنْ يُّشَاقِقِ اللّٰهَ وَرَسُوْلَهٗ فَاِنَّ
اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ ﴿١٣﴾ ذٰلِكُمْ فَذُوْقُوْهُ وَاَنَّ لِلْكٰفِرِيْنَ
عَذَابَ النَّارِ ﴿١٤﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا لَقِيْتُمُ الَّذِيْنَ
كَفَرُوْا زَحْفًا فَلَا تُوَلُّوْهُمُ الْاَدْبَارَ ﴿١٥﴾ ۚ وَمَنْ يُّوَلِّهِمْ يَوْمَئِذٍ
دُبُرَهٗٓ اِلَّا مُتَحَرِّفًا لِّقِتَالٍ اَوْ مُتَحَيِّزًا اِلٰى فِئَةٍ فَقَدْ بَآءَ
بِغَضَبٍ مِّنَ اللّٰهِ وَمَاْوٰىهُ جَهَنَّمُ ؕ وَبِئْسَ الْمَصِيْرُ ﴿١٦﴾

9. நீங்கள் உங்கள் இரட்சகனிடம் (உங்களை) இரட்சிக்கத்தேடியபோது, "(அணிஅணியாக) உங்களோடு இணைந்து (அடுத்து) வரக் கூடியவர்களாக மலக்குகளில் ஆயிரம்(பேர்களைக்) கொண்டு நிச்சயமாக நான் உங்களுக்கு உதவி செய்வேன்" என்று அவன் உங்களுக்கு பதிலளித்தான்.

10. (உங்களுக்கு) நன்மாராயமாகவும், அதனால் உங்கள் இதயங்கள் அமைதி பெறுவதற்காகவுமே தவிர அதை அல்லாஹ் ஆக்கவில்லை; இன்னும், உதவி அல்லாஹ்விடமிருந்தே தவிர இல்லை; நிச்சயமாக அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

11. (விசுவாசிகளே! உங்கள் மனம் மிகக் கூடுதலான எதிரிகளைக் கண்டு பயப்படாது) அபயம் பெறுவதற்காக அவனிடமிருந்து உங்களுக்கு சிறிய தூக்கத்தை அவன் போட்டான் என்பதை_ (நினைத்துப் பார்ப்பீர்களாக! அதுசமயம்) உங்களை அதைக்கொண்டு தூய்மைப் படுத்துவதற்காகவும், உங்களைவிட்டு ஷைத்தானுடைய அசுத்தத்தை( தீய ஊசாட்டத்தை)ப் போக்கிவிடுவதற்காகவும், உங்கள் இதயங்களைப் பலப்படுத்தி, அதைக்கொண்டு உங்கள் பாதங்களை உறுதிப் படுத்துவதற்காகவும், அவனே வானத்திலிருந்து உங்கள்மீது மழையையும் இறக்கிவைத்தான்.

12. (நபியே!) உமதிரட்சகன் மலக்குகளின்பால், "நிச்சயமாக நான் உங்களுடன் இருக்கிறேன்; ஆகவே, நீங்கள் விசுவாசங்கொண்டோரை உறுதிப்படுத்துங்கள், (என்று கட்டளையிட்டு) நிராகரிப்போருடைய இதயங்களில் திகிலை நான் போட்டு விடுவேன்; ஆகவே நீங்கள் அவர்களுடைய கழுத்துகளுக்கு மேல் வெட்டுங்கள்; அவர்களின் (உடலில் உள்ள உறுப்புக்களின்) இணைப்புகளைத் துண்டித்துவிடுங்கள்" என்று (விசுவாசிகளுக்குக் கூறுமாறு வஹீமூலம்) அறிவித்ததை(நினைத்துப் பார்ப்பீராக!)

13. அது, நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் மாறு செய்துவிட்டனர் என்றகாரணத்தினாலாகும்; இன்னும், எவர் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் முரண்படுகிறாரோ நிச்சயமாக அல்லாஹ்(அவர்களை) தண்டனை செய்வதில் மிகக் கடினமானவன்.

14. ("நிராகரிப்போர்களே! நீங்கள் அடையப்போகும் வேதனை) இதோ! இதனை நீங்கள் சுவைத்துப் பாருங்கள். (உங்களைப் போன்ற) நிராகரிப்போருக்கு (மறுமையில்) நிச்சயமாக நரக வேதனையுமுண்டு"(என்று கூறப்படும்).

15. விசுவாசங்கொண்டோரே! போர்முனையில் போரிட இரு அணியும் நெருங்கி நிற்கும்போது காஃபிர்களை நீங்கள் சந்தித்தால், நீங்கள் அவர்களுக்குப் புறமுதுகுகளைக் காட்(டி ஓடிவி)டாதீர்கள்.

16. போருக்காக(ப் பின்சென்று தாக்குவதன் நிமித்தம்) ஒதுங்கக் கூடியவரையும் அல்லது (தன்) கூட்டத்துடன் சேர்ந்து கொள்ளக்கூடியவரையும் அன்றி, எவரேனும் அது சமயம் புறமுதுகிட்டுச் சென்றால், நிச்சயமாக அவர் அல்லாஹ்வுடைய கோபத்தைக் கொண்டு மீண்டு விட்டார்; அவர் ஒதுங்குமிடமும் நரகமாகும்; இன்னும் சென்றடையும் இடத்தில் அது மிகக் கெட்டது.

فَلَمْ تَقْتُلُوْهُمْ وَلٰكِنَّ اللّٰهَ قَتَلَهُمْ ۠ وَمَا رَمَيْتَ اِذْ رَمَيْتَ وَ
لٰكِنَّ اللّٰهَ رَمٰى ۚ وَلِيُبْلِيَ الْمُؤْمِنِيْنَ مِنْهُ بَلَآءً حَسَنًا ؕ اِنَّ اللّٰهَ
سَمِيْعٌ عَلِيْمٌ ﴿١٧﴾ ذٰلِكُمْ وَاَنَّ اللّٰهَ مُوْهِنُ كَيْدِ الْكٰفِرِيْنَ ﴿١٨﴾ اِنْ
تَسْتَفْتِحُوْا فَقَدْ جَآءَكُمُ الْفَتْحُ ۚ وَاِنْ تَنْتَهُوْا فَهُوَ خَيْرٌ لَّكُمْ ۚ وَ
اِنْ تَعُوْدُوْا نَعُدْ ۚ وَلَنْ تُغْنِيَ عَنْكُمْ فِئَتُكُمْ شَيْئًا وَّلَوْ كَثُرَتْ ۙ
وَاَنَّ اللّٰهَ مَعَ الْمُؤْمِنِيْنَ ﴿١٩﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَطِيْعُوا ع ٢ ٩ ١٦
اللّٰهَ وَرَسُوْلَهٗ وَلَا تَوَلَّوْا عَنْهُ وَاَنْتُمْ تَسْمَعُوْنَ ﴿٢٠﴾ وَلَا
تَكُوْنُوْا كَالَّذِيْنَ قَالُوْا سَمِعْنَا وَهُمْ لَا يَسْمَعُوْنَ ﴿٢١﴾ ۚ اِنَّ
شَرَّ الدَّوَآبِّ عِنْدَ اللّٰهِ الصُّمُّ الْبُكْمُ الَّذِيْنَ لَا
يَعْقِلُوْنَ ﴿٢٢﴾ وَلَوْ عَلِمَ اللّٰهُ فِيْهِمْ خَيْرًا لَّاَسْمَعَهُمْ ؕ وَلَوْ
اَسْمَعَهُمْ لَتَوَلَّوْا وَّهُمْ مُّعْرِضُوْنَ ﴿٢٣﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا
اسْتَجِيْبُوْا لِلّٰهِ وَلِلرَّسُوْلِ اِذَا دَعَاكُمْ لِمَا يُحْيِيْكُمْ ۚ
وَاعْلَمُوْۤا اَنَّ اللّٰهَ يَحُوْلُ بَيْنَ الْمَرْءِ وَقَلْبِهٖ وَاَنَّهٗۤ اِلَيْهِ
تُحْشَرُوْنَ ﴿٢٤﴾ وَاتَّقُوْا فِتْنَةً لَّا تُصِيْبَنَّ الَّذِيْنَ ظَلَمُوْا
مِنْكُمْ خَآصَّةً ۚ وَاعْلَمُوْۤا اَنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ ﴿٢٥﴾

17. (விசுவாசிகளே! பத்ருப் போரில் எதிரிகளாகிய) அவர்களை நீங்கள் கொல்லவில்லை; எனினும், அல்லாஹ்தான் அவர்களைக் கொன்றான்; (நபியே! விரோதிகளின்மீது) நீர் (மண்ணை) எறிந்தபோது (அதனை) நீர் எறியவில்லை; எனினும், அல்லாஹ்தான் (உம்மூலம்அதனை) எறிந்தான்; (அதன்மூலம்) அழகான முறையில் விசுவாசிகளுக்கு அருட்கொடையை நல்குவதற்காக (இவ்வாறு அல்லாஹ் செய்தான்). நிச்சயமாக அல்லாஹ் செவியேற்கிறவன்; நன்கறிகிறவன்.

18. (இணை வைப்பவர்கள் கொல்லப்பட்டு முஸ்லிம்கள் வெற்றியடைந்த) அது (அல்லாஹ்விடமிருந்தாகும்.) இன்னும், நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்போரின் சூழ்ச்சியை பலவீனப் படுத்தக் கூடியவன்.

19. நீங்கள் தீர்ப்பைத் தேடக் கூடியவர்களாக இருந்தால் (இதோ அது பற்றிய) தீர்ப்பு உங்களிடம் திட்டமாக வந்துவிட்டது; இன்னும் நீங்கள் (போர் செய்வதை விட்டும்) விலகிக்கொண்டால், அது உங்களுக்கே நன்று. இன்னும் நீங்கள் (போர் செய்யத்) திரும்பினால் (உதவியை நல்க) நாமும் திரும்புவோம்; உங்களுடைய கூட்டம் (படை) அது எவ்வளவு பெரியதாக இருந்தபோதிலும் (அது) உங்களுக்கு யாதொரு பலனையும் ஒரு போதும்அளிக்காது; மேலும், நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகளுடன் இருக்கின்றான்.

20. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடங்கள்; நீங்கள் (அவருடைய போதனைகளைச் செவியுற்றுக் கொண்டிருக்கும் பொழுதே) அவருடைய கட்டளைக்கு மாறு செய்து அவரைவிட்டும் திரும்பி விடாதீர்கள்.

21. "நாங்கள் செவியுற்றோம்" என்று (வாயால் மட்டும்) கூறி(உண்மையாகச்) செவியேற்காமல் இருந்தவர்களைப் போல் நீங்களும் ஆகிவிட வேண்டாம்.

22. அல்லாஹ்விடம் நிச்சயமாக(பூமியில்)ஊர்ந்து திரிபவைகளில் மிகக்கெட்டவை (உண்மையை) விளங்கிக்கொள்ளாதவர்களான செவிடர்களும் ஊமையர்களுமே யாவர்.

23. அவர்களிடம் ஏதேனும் நன்மை இருக்கிறதென்று அல்லாஹ் அறிந்திருந்தால், அவன் அவர்களைச் செவிமடுக்கச் செய்திருப்பான்; (அவர்களிடம் யாதொரு நன்மையும் இல்லாததனால்) அவன் அவர்களைச் செவிமடுக்கச் செய்திருந்த போதிலும் (அதனைப்) புறக்கணித்தவர்களாகவே அவர்கள் திரும்பிவிடுவார்கள்.

24 . விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும் — உங்களை வாழவைப்பதன்பால் (அல்லாஹ்வின் தூதராகிய) அவர் உங்களை அழைத்தால் பதில் அளியுங்கள்; நிச்சயமாக அல்லாஹ், மனிதனுக்கும், அவனுடைய இதயத்திற்கும் மத்தியில் சூழ்ந்து(செயலாற்றிக் கொண்டு)இருக்கிறான். (ஆகவே, மனிதன் எதையும் அல்லாஹ்வின் அருளின்றி செய்யும் ஆற்றல் பெறமாட்டான்) என்பதையும், நிச்சயமாக அவனின் பாலே நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள் என்பதையும் நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.(13)

25. மேலும், உங்களில் அநியாயம் செய்தோரை மட்டுமே குறிப்பாகப் பிடிக்காத வேதனையை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்; (அதனால் ஏற்படும் விளைவு உங்களையும் சூழ்ந்து கொள்ளலாம்.) நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் மிகக்கடினமானவன் என்பதையும் நீங்கள் உறுதியாக அறிந்துகொள்ளுங்கள்.

وَاذْكُرُوْٓا اِذْ اَنْتُمْ قَلِيْلٌ مُّسْتَضْعَفُوْنَ فِي الْاَرْضِ تَخَافُوْنَ
اَنْ يَّتَخَطَّفَكُمُ النَّاسُ فَاٰوٰىكُمْ وَاَيَّدَكُمْ بِنَصْرِهٖ وَرَزَقَكُمْ
مِّنَ الطَّيِّبٰتِ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿٢٦﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا
تَخُوْنُوا اللّٰهَ وَالرَّسُوْلَ وَتَخُوْنُوْٓا اَمٰنٰتِكُمْ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ ﴿٢٧﴾
وَاعْلَمُوْٓا اَنَّمَآ اَمْوَالُكُمْ وَاَوْلَادُكُمْ فِتْنَةٌ ۙ وَّاَنَّ اللّٰهَ
عِنْدَهٗٓ اَجْرٌ عَظِيْمٌ ﴿٢٨﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنْ تَتَّقُوا اللّٰهَ ٣ ع ٩ ١٧
يَجْعَلْ لَّكُمْ فُرْقَانًا وَّيُكَفِّرْ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ وَيَغْفِرْ لَكُمْ ۭ وَ
اللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ﴿٢٩﴾ وَاِذْ يَمْكُرُ بِكَ الَّذِيْنَ كَفَرُوْا
لِيُثْبِتُوْكَ اَوْ يَقْتُلُوْكَ اَوْ يُخْرِجُوْكَ ۭ وَيَمْكُرُوْنَ وَيَمْكُرُ اللّٰهُ ۭ
وَاللّٰهُ خَيْرُ الْمٰكِرِيْنَ ﴿٣٠﴾ وَاِذَا تُتْلٰى عَلَيْهِمْ اٰيٰتُنَا قَالُوْا
قَدْ سَمِعْنَا لَوْ نَشَاۗءُ لَقُلْنَا مِثْلَ هٰذَآ ۙ اِنْ هٰذَآ اِلَّآ
اَسَاطِيْرُ الْاَوَّلِيْنَ ﴿٣١﴾ وَاِذْ قَالُوا اللّٰهُمَّ اِنْ كَانَ هٰذَا
هُوَ الْحَقَّ مِنْ عِنْدِكَ فَاَمْطِرْ عَلَيْنَا حِجَارَةً مِّنَ السَّمَاۗءِ
اَوِ ائْتِنَا بِعَذَابٍ اَلِيْمٍ ﴿٣٢﴾ وَمَا كَانَ اللّٰهُ لِيُعَذِّبَهُمْ وَاَنْتَ
فِيْهِمْ ۭ وَمَا كَانَ اللّٰهُ مُعَذِّبَهُمْ وَهُمْ يَسْتَغْفِرُوْنَ ﴿٣٣﴾

26. நீங்கள் (மக்காவெனும்) பூமியில் பலவீனமான மிகச் சிறுபான்மையினராக இருந்து உங்களை எம்மனிதரும், (எந்நேரத்திலும் பல வந்தமாக) இறாய்ஞ்சிக்கொண்டு சென்றுவிடுவார்களோ என்று நீங்கள் அஞ்சி (நடுங்கி)க்கொண்டிருந்த சமயத்தில், அவன் உங்களுக்கு (மதீனாவில்) இடமளித்து, தன் உதவியைக்கொண்டும் உங்களைப் பலப்படுத்தி,பரிசுத்தமான ஆகாரங்களை அவன் உங்களுக்கு அளித்ததையும் நினைத்துப்பாருங்கள். நீங்கள் நன்றி செலுத்துவதற்காக (இவ்வாறு செய்தான்).

27. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும் மோசம்செய்யாதீர்கள்; மேலும், நீங்கள் (செய்வது அக்கிரமம் என) அறிந்துகொண்டே உங்களிடம் உள்ள அமானிதங்களுக்கும் மோசம் செய்யாதீர்கள்.

28. "நிச்சயமாக உங்களுடைய செல்வங்களும், உங்களுடைய பிள்ளைகளும், (உங்களுக்குச்) சோதனையாயிருக்கின்றன என்பதையும், நிச்சயமாக அல்லாஹ்_அவனிடத்தில்தான் (உங்களுக்கு) மகத்தான (வெகுமதி) நற்கூலி உண்டு என்பதையும் நீங்கள் நன்கு அறிந்துகொள்ளுங்கள்.

29. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயப்படுவீர்களாயின், அவன் உங்களுக்கு (பத்ரில் நடத்தியதுபோன்று தீர்க்கமான)முடிவை ஆக்குவான்; உங்களைவிட்டும் பாவங்களைப் போக்கி உங்களை மன்னித்தும்விடுவான்; இன்னும் அல்லாஹ் மிக்க மகத்தான பேரருளுடையவன்.

30. மேலும், (நபியே!) நிராகரித்துக்கொண்டிருப்போர் உம்மை அவர்கள் சிறைப்படுத்தவோ, அல்லது உம்மை அவர்கள் கொலை செய்யவோ, அல்லது உம்மை அவர்கள் (ஊரை விட்டு) வெளியேற்றி விடவோ உமக்கு விரோதமாக, சூழ்ச்சி செய்து கொண்டிருந்த (நேரத்)தை (நினைத்துப் பார்ப்பீராக!) அவர்களும் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தனர்; (அவர்களுக் கெதிராக) அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தான். இன்னும் சூழ்ச்சி செய்வோரில் அல்லாஹ் மிக்க மேலானவன்.

31. " நம்முடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்படுமானால், அ(தற்க)வர்கள், "திட்டமாக நாம், (இதனை முன்னரே) செவியுற்றுள்ளோம்; நாங்கள் நாடினால் , இதைப்போன்று நாங்களும் கூறிவிடுவோம்; இவை முன்னோரின் கட்டுக்கதைகளேயன்றி வேறில்லை" என்று கூறுகின்றனர்.

32. இன்னும்( நிராகரிப்போர்) "அல்லாஹ்வே! உன்னிடமிருந்து வந்த இதுவே உண்மையானால் எங்கள்மீது வானத்திலிருந்து கல் மாரியைப் பொழியச்செய்வாயாக! அல்லது துன்புறுத்தும் (ஒரு) வேதனையை எங்களுக்குக் கொண்டுவருவாயாக" என்று அவர்கள் கூறியதை_ (நபியே! நீர் நினைத்துப் பார்ப்பீராக!)

33. நீர் அவர்களுக்கு மத்தியிலிருக்கும் நிலையில், அல்லாஹ் அவர்களை (ஒரு போதும்) வேதனை செய்பவனாக இல்லை; இன்னும் அவர்கள் பாவமன்னிப்பைக் கோரிக்கொண்டிருக்கும் நிலையில், அல்லாஹ் அவர்களை வேதனை செய்பவனாக இல்லை.

وَمَا لَهُمْ اَلَّا يُعَذِّبَهُمُ اللّٰهُ وَهُمْ يَصُدُّوْنَ عَنِ الْمَسْجِدِ
الْحَرَامِ وَمَا كَانُوْٓا اَوْلِيَآءَهٗ ؕ اِنْ اَوْلِيَآؤُهٗٓ اِلَّا الْمُتَّقُوْنَ
وَلٰكِنَّ اَكْثَرَهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿۳۴﴾ وَمَا كَانَ صَلَاتُهُمْ
عِنْدَ الْبَيْتِ اِلَّا مُكَآءً وَّتَصْدِيَةً ؕ فَذُوْقُوا الْعَذَابَ
بِمَا كُنْتُمْ تَكْفُرُوْنَ ﴿۳۵﴾ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا يُنْفِقُوْنَ
اَمْوَالَهُمْ لِيَصُدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ ؕ فَسَيُنْفِقُوْنَهَا ثُمَّ
تَكُوْنُ عَلَيْهِمْ حَسْرَةً ثُمَّ يُغْلَبُوْنَ ۬ؕ وَالَّذِيْنَ كَفَرُوْٓا
اِلٰى جَهَنَّمَ يُحْشَرُوْنَ ﴿۳۶﴾ لِيَمِيْزَ اللّٰهُ الْخَبِيْثَ مِنَ الطَّيِّبِ وَ
يَجْعَلَ الْخَبِيْثَ بَعْضَهٗ عَلٰى بَعْضٍ فَيَرْكُمَهٗ جَمِيْعًا
فَيَجْعَلَهٗ فِيْ جَهَنَّمَ ؕ اُولٰٓئِكَ هُمُ الْخٰسِرُوْنَ ﴿۳۷﴾ قُلْ لِّلَّذِيْنَ ع ٤ ٩ ١٨
كَفَرُوْٓا اِنْ يَّنْتَهُوْا يُغْفَرْ لَهُمْ مَّا قَدْ سَلَفَ ۚ وَاِنْ يَّعُوْدُوْا
فَقَدْ مَضَتْ سُنَّتُ الْاَوَّلِيْنَ ﴿۳۸﴾ وَقَاتِلُوْهُمْ حَتّٰى لَا
تَكُوْنَ فِتْنَةٌ وَّيَكُوْنَ الدِّيْنُ كُلُّهٗ لِلّٰهِ ۚ فَاِنِ انْتَهَوْا
فَاِنَّ اللّٰهَ بِمَا يَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿۳۹﴾ وَاِنْ تَوَلَّوْا فَاعْلَمُوْٓا
اَنَّ اللّٰهَ مَوْلٰىكُمْ ؕ نِعْمَ الْمَوْلٰى وَنِعْمَ النَّصِيْرُ ﴿۴۰﴾

34 அல்லாஹ் அவர்களை வேதனை செய்யாமலிருப்பதற்கு அவர்களுக்கு வேறு (காரணம்) என்ன இருக்கிறது ? அவர்களோ (புனிதப் பள்ளியான) மஸ்ஜிதுல் ஹராமை விட்டு (முஸ்லிம்களை)த்தடுக்கின்றனர் ; அவர்கள் அதற்குரிய காரியஸ்தர்களாகவும் இருக்க வில்லை ;அதற்குரிய காரியஸ்தர்கள் பயபக்தியுடையவர்களேயன்றி (வேறெவரும்) இல்லை; எனினும் அவர்களில் பெரும்பாலோர் (அதனை) அறியமாட்டார்கள்.

35. மேலும், (அல்லாஹ்வின்) இல்லத்தில் அவர்களின் தொழுகையெல்லாம் சீட்டியடிப்பதும், கை தட்டுவதும் தவிர வேறு (எதுவுமாக) இருக்கவில்லை; ஆகவே, "நீங்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததன் காரணமாக (இன்றையத் தினம்) வேதனையைச் சுவையுங்கள்" (என்று மறுமையில் கூறப்படும்).

36. நிச்சயமாக, நிராகரிப்பவர்கள் , தங்கள் செல்வங்களை (மனிதர்களை) அல்லாஹ்வின் பாதையி(ல் செல்வதி)லிருந்து தடை செய்வதற்காக செலவு செய்கின்றனர் ; இனியும் அவர்கள் அதை (இவ்வாறே) செலவு செய்வர் ; பின்னர் (முடிவில்) அது அவர்களுக்கே துக்கமாக ஏற்பட்டுவிடும் ; பின்னர் அவர்கள் வெற்றி கொள்ளப்படுவார்கள் ; மேலும் , (இத்தகைய) நிராகரித்துக் கொண்டிருப்போர் , (மறுமையில்) நரகத்தின்பால் ஒன்று திரட்டப்படுவார்கள்.

37. அல்லாஹ், நல்லவரிலிருந்து கெட்டவரை பிரிப்பதற்காகவும், கெட்டவரை_ அவர்களில் சிலரைச் சிலரின் மீது ஆக்கி, அவர்கள் அனைவரையும் குவியலாக்கிப் பின்னர், அ(க்குவியலான)தை அவன் நரகத்தில் ஆக்கி விடுவதற்காகவே_ (இவ்வாறு செய்தான்.) அவர்கள்தான் நஷ்டம் அடைந்தவர்கள்.

38. (நபியே!) நிராகரிப்போருக்கு நீர் கூறுவீராக : (இனியேனும்) அவர்கள், (விஷமம் செய்யாது) விலகிக்கொண்டால், திட்டமாக சென்றுவிட்ட (முந்திய) குற்றங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்; (அவ்வாறின்றி, விஷமம் செய்யவே) மீண்டும் அவர்கள் திரும்புவார்களாயின், முன் சென்(ற இவர்கள்போன்)றோரின் வழி திட்டமாக சென்றேயிருக்கின்றது (அவர்களுக்கு ஏற்பட்ட கதிதான் இவர்களுக்கும் ஏற்படும்).

39. (விசுவாசிகளே! இந்நிராகரிப்போரின் துன்புறுத்தலெனும்) குழப்பம் ஏற்படாமல் (இருக்கவும்,) மார்க்கம் அது, முற்றிலும் அல்லாஹ்விற்கு (நிலைபெற்றதாக)ஆகும் வரையிலும் (மக்காவாசிகளாகிய நிராகரிக்கும்) அவர்களுடன் யுத்தம் புரியுங்கள். (விஷமம் செய்வதிலிருந்து) அவர்கள் விலகிக்கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதைப் பார்க்கிறவன்.

40. அவர்கள் புறக்கணித்துவிட்டாலோ, நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய பாதுகாவலன் என்பதை நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்; பாதுகாவலனில் அவன் மிக நல்லவன்; இன்னும் உதவி செய்கிறவனிலும் அவன் மிக நல்லவன்.

وَاعْلَمُوْٓا اَنَّمَا غَنِمْتُمْ مِّنْ شَیْءٍ فَاَنَّ لِلّٰهِ خُمُسَهٗ وَ
لِلرَّسُوْلِ وَلِذِی الْقُرْبٰی وَالْیَتٰمٰی وَالْمَسٰكِیْنِ وَابْنِ
السَّبِیْلِ ۙ اِنْ كُنْتُمْ اٰمَنْتُمْ بِاللّٰهِ وَمَآ اَنْزَلْنَا عَلٰی عَبْدِنَا یَوْمَ
الْفُرْقَانِ یَوْمَ الْتَقَی الْجَمْعٰنِ ؕ وَاللّٰهُ عَلٰی كُلِّ شَیْءٍ قَدِیْرٌ ﴿۴۱﴾
اِذْ اَنْتُمْ بِالْعُدْوَةِ الدُّنْیَا وَهُمْ بِالْعُدْوَةِ الْقُصْوٰی وَ
الرَّكْبُ اَسْفَلَ مِنْكُمْ ؕ وَلَوْ تَوَاعَدْتُّمْ لَاخْتَلَفْتُمْ فِی
الْمِیْعٰدِ ۙ وَلٰكِنْ لِّیَقْضِیَ اللّٰهُ اَمْرًا كَانَ مَفْعُوْلًا ۙ لِّیَهْلِكَ
مَنْ هَلَكَ عَنْۢ بَیِّنَةٍ وَّیَحْیٰی مَنْ حَیَّ عَنْۢ بَیِّنَةٍ ؕ وَاِنَّ
اللّٰهَ لَسَمِیْعٌ عَلِیْمٌ ﴿۴۲﴾ ۙ اِذْ یُرِیْكَهُمُ اللّٰهُ فِیْ مَنَامِكَ قَلِیْلًا ؕ
وَلَوْ اَرٰىكَهُمْ كَثِیْرًا لَّفَشِلْتُمْ وَلَتَنَازَعْتُمْ فِی الْاَمْرِ
وَلٰكِنَّ اللّٰهَ سَلَّمَ ؕ اِنَّهٗ عَلِیْمٌۢ بِذَاتِ الصُّدُوْرِ ﴿۴۳﴾ وَ
اِذْ یُرِیْكُمُوْهُمْ اِذِ الْتَقَیْتُمْ فِیْٓ اَعْیُنِكُمْ قَلِیْلًا وَّیُقَلِّلُكُمْ
فِیْٓ اَعْیُنِهِمْ لِیَقْضِیَ اللّٰهُ اَمْرًا كَانَ مَفْعُوْلًا ؕ وَاِلَی اللّٰهِ
تُرْجَعُ الْاُمُوْرُ ﴿۴۴﴾ ع یٰٓاَیُّهَا الَّذِیْنَ اٰمَنُوْٓا اِذَا لَقِیْتُمْ فِئَةً ع ۵
فَاثْبُتُوْا وَاذْكُرُوا اللّٰهَ كَثِیْرًا لَّعَلَّكُمْ تُفْلِحُوْنَ ﴿۴۵﴾

41. மேலும், (விசுவாசிகளே!) நீங்கள் (உறுதியாக) அறிந்துகொள்ளுங்கள் ; நிச்சயமாக நீங்கள் (போர் செய்து) வெற்றிப் பொருளாக அடைந்தது, எப்பொருளாயினும், அப்பொழுது நிச்சயமாக அதனுடைய ஐந்திலொரு பாகம் அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும், (அவருடைய) பந்துக்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்கும் உரியதாகும். அல்லாஹ்வையும், இரு படைகளும் (பத்ரு யுத்தத்தில்) சந்தித்த தீர்ப்பு நாளில், நாம் நம் அடியார்மீது இறக்கி வைத்த (உதவியை அவன்தான் இறக்கிவைத்தான் என்ப)தையும் நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால்_( மேற் கூறிய அல்லாஹ்வின் கட்டளை பற்றி, உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்) மேலும், அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

42. ("பத்ரு யுத்த களத்தில் உங்களுக்கு) சமீபமாக உள்ள பள்ளத்தாக்கில் நீங்களும், (உங்களுக்கு எதிர்ப்புறமுள்ள) தூரமான பள்ளத்தாக்கில் அவர்களும், (அபூசுஃப்யானும் அவருடன் இருந்த வர்த்தகக் கூட்டத்தினராகிய) வாகனக்காரர்கள் உங்களுக்குக் கீழ்ப் புறத்திலும் இருந்த நேரத்தை (நீங்கள் நினைத்துப் பாருங்கள்); நீங்கள் ஒருவருக்கொருவர் (சந்திக்கும் காலத்தையும், இடத்தையும் குறிப்பிட்டு) வாக்குறுதி செய்துகொண்டுமிருந்தால் (நீங்கள் குறிப்பிட்ட காலத்தில் அங்கு வந்து சேராது) அவ்வாக்குறுதியில் நீங்கள் மாறுபட்டு இருந்திருப்பீர்கள்; எனினும் செய்யப்படவேண்டிய காரியத்தை அல்லாஹ் நிறைவேற்றுவதற்காகவும், (உங்கள் யாவரையும் ஒரே நேரத்தில் அங்கு ஒன்று சேர்த்தான்). அழிந்தவர்கள் தக்க முகாந்திரத்துடன் அழிவதற்காகவும், (தப்பிப்) பிழைத்தவர்கள் தக்க முகாந்திரத்தைக் கொண்டே (தப்பிப்) பிழைப்பதற்காகவும் (அல்லாஹ் இவ்வாறு செய்தான்); நிச்சயமாக அல்லாஹ் செவியேற்கிறவன்; (யாவையும்) நன்கறிகிறவன்.

43. (நபியே!) உம்முடைய கனவில் அல்லாஹ் (எண்ணிக்கையில்) அவர்களைக் குறைத்துக்காண்பித்ததையும், (நினைவு கூர்வீராக!) அவர்களை (எண்ணிக்கையில்) அதிகப் படுத்தி உமக்குக் காண்பித்திருந்தால், நீங்கள் தைரியமிழந்து யுத்தம் செய்வதைப் பற்றி உங்களுக்குள் ஒருவருக்கொருவர் பிணங்கிக்கொண்டு இருந்திருப்பீர்கள்; எனினும், அல்லாஹ் (உங்களைப்) பாதுகாத்துவிட்டான்; நிச்சயமாக அவன் நெஞ்சங்களிலுள்ளவற்றை நன்கறிகிறவன்.

44. நீங்கள் (இரு படையினரும்) சந்தித்த சமயத்தில் அவர்க(ளுடைய எண்ணிக்கை)களை, உங்கள் கண்களுக்குக் குறைவாக அவன் காட்டியதையும், உங்க(ளுடைய எண்ணிக்கை)களை அவர்களுடைய கண்களுக்குக்கு அவன் குறைவாக்கிக்காட்டியதையும் (நினைவு கூருங்கள்) நடந்தேறப்படவேண்டிய காரியத்தை நிறைவேற்றுவதற்காக(அல்லாஹ் அவ்வாறு செய்தான் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்); மேலும், அல்லாஹ்விடமே எல்லாக் காரியங்களும் திரும்பக் கொண்டுவரப்படும்.

45. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் (யுத்தத்தின்போது எதிரியின்) கூட்டத்தைச் சந்தித்தால், (கலக்கமுறாது) உறுதியாக இருங்கள் ; அல்லாஹ்வை நீங்கள் அதிகமாக நினைவும் கூருங்கள் ; (அதனால்) நீங்கள் வெற்றியடைவீர்கள்.

وَاَطِيْعُوا اللّٰهَ وَرَسُوْلَهٗ وَلَا تَنَازَعُوْا فَتَفْشَلُوْا وَتَذْهَبَ
رِيْحُكُمْ وَاصْبِرُوْا ؕ اِنَّ اللّٰهَ مَعَ الصّٰبِرِيْنَ ۚ﴿۴۶﴾ وَلَا تَكُوْنُوْا
كَالَّذِيْنَ خَرَجُوْا مِنْ دِيَارِهِمْ بَطَرًا وَّرِئَآءَ النَّاسِ وَ
يَصُدُّوْنَ عَنْ سَبِيْلِ اللّٰهِ ؕ وَاللّٰهُ بِمَا يَعْمَلُوْنَ مُحِيْطٌ ﴿۴۷﴾
وَاِذْ زَيَّنَ لَهُمُ الشَّيْطٰنُ اَعْمَالَهُمْ وَقَالَ لَا غَالِبَ لَكُمُ
الْيَوْمَ مِنَ النَّاسِ وَاِنِّيْ جَارٌ لَّكُمْ ۚ فَلَمَّا تَرَآءَتِ الْفِئَتٰنِ
نَكَصَ عَلٰى عَقِبَيْهِ وَقَالَ اِنِّيْ بَرِيْٓءٌ مِّنْكُمْ اِنِّيْٓ اَرٰى مَا لَا تَرَوْنَ
اِنِّيْٓ اَخَافُ اللّٰهَ ؕ وَاللّٰهُ شَدِيْدُ الْعِقَابِ ۧ﴿۴۸﴾ اِذْ يَقُوْلُ ع ۶
الْمُنٰفِقُوْنَ وَالَّذِيْنَ فِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ غَرَّ هٰٓؤُلَآءِ دِيْنُهُمْ ؕ
وَمَنْ يَّتَوَكَّلْ عَلَى اللّٰهِ فَاِنَّ اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿۴۹﴾ وَ
لَوْ تَرٰٓى اِذْ يَتَوَفَّى الَّذِيْنَ كَفَرُوا ۙ الْمَلٰٓئِكَةُ يَضْرِبُوْنَ
وُجُوْهَهُمْ وَاَدْبَارَهُمْ ۚ وَذُوْقُوْا عَذَابَ الْحَرِيْقِ ﴿۵۰﴾ ذٰلِكَ
بِمَا قَدَّمَتْ اَيْدِيْكُمْ وَاَنَّ اللّٰهَ لَيْسَ بِظَلَّامٍ لِّلْعَبِيْدِ ﴿۵۱﴾ ۙ
كَدَاْبِ اٰلِ فِرْعَوْنَ ۙ وَالَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ؕ كَفَرُوْا بِاٰيٰتِ اللّٰهِ
فَاَخَذَهُمُ اللّٰهُ بِذُنُوْبِهِمْ ؕ اِنَّ اللّٰهَ قَوِيٌّ شَدِيْدُ الْعِقَابِ ﴿۵۲﴾

46. அன்றியும் நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடங்கள்; மேலும், உங்களுக்குள் பிணங்கிக் கொள்ளாதீர்கள். அவ்வாறாயின் நீங்கள் தைரியத்தை இழந்துவிடுவீர்கள்; மேலும், உங்கள் வலிமை குன்றிவிடும்; ஆகவே நீங்கள் (துன்பங்களைச் சகித்துக் கொண்டு) பொறுமையாக இருங்கள். நிச்சயமாக அல்லாஹ், பொறுமையுடையோர்களுடன் இருக்கின்றான்.

47. பெருமைக்காகவும், மனிதர்களுக்குக் காண்பிப்பதற்காகவும் தங்கள் வீடுகளிலிருந்தும் (முஸ்லிம்களை எதிர்க்க "பத்ரு" யுத்தத்திற்குப்) புறப்பட்டு, அல்லாஹ்வுடைய பாதையை விட்டும் (அதில் மனிதர்கள் செல்வதைத்) தடைசெய்து கொண்டும் இருந்தவர்களைப் போல நீங்களும் ஆகிவிட வேண்டாம்; மேலும், அல்லாஹ், அவர்கள் செய்கின்றவற்றை சூழ்ந்து அறிந்துகொண்டிருக்கின்றான்.

48. ஷைத்தான், அவர்களுடைய (பாவச்) செயல்களை அவர்களுக்கு அலங்கரித்துக் காண்பித்து, "இன்று மனிதர்களில் உங்களை வெற்றி கொள்வோர் எவருமில்லை; நிச்சயமாக நானும் உங்களுக்கு(ப் பக்க)த் துணையாக நிற்கின்றேன்" என்று கூறிக் கொண்டிருந்ததையும் (நபியே! நினைவு கூர்வீராக! இவ்வாறு கூறிக்கொண்டிருந்த) அவன், இரு படைகளும் நேருக்கு நேராக சந்தித்துக் கொண்டபொழுது, புறமுதுகிட்டுச் சென்று, "நிச்சயமாக நான் உங்களை விட்டு விலகிக்கொண்டேன்; நிச்சயமாக நீங்கள் பார்க்காதவற்றை நான் பார்க்கின்றேன்; நிச்சயமாக நான் அல்லாஹ்வுக்குப் பயப்படுகிறேன்; தண்டிப்பதில் அல்லாஹ் மிக்க கடுமையானவன்" என்றும் கூறினான்.

49. .(வேஷதாரிகளான) முனாஃபிக்குகளும், இதயங்களில் நோயுள்ளவர்களும், (விசுவாசிகளைச் சுட்டிக்காண்பித்து) "இவர்களை இவர்களுடைய மார்க்கம் மயக்கிவிட்டது" என்று கூறிக்கொண்டிருந்ததையும் (நபியே! நீர் நினைவுகூர்வீராக!) இன்னும் எவர் (தன் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கின்றாரோ, (அவரே வெற்றியடைந்தவர்.) ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

50. நிராகரிப்போ(ரின் உயி)ர்களை மலக்குகள் கைப்பற்றும் சமயத்தில் (நபியே!)நீர் பார்ப்பீராயின்,( பயங்கர நிலையையே நீர் பார்ப்பீர். மலக்குகளான) அவர்கள், அவர்களின் முகங்களிலும், அவர்களின் பின் புறங்களிலும் அடிப்பார்கள்; மேலும் ," எரிக்கும் (நரக) வேதனையைச் சுவையுங்கள்" (என்றும் கூறுவார்கள்).

51 (அன்றி, மலக்குகள் அவர்களிடம்) அ(வ்வேதனையான)து உங்கள் கைகள் (தேடி) முற்படுத்தியவைகளின் காரணத்தினாலாகும்; நிச்சயமாக, அல்லாஹ் (தன்) அடியார்களுக்கு ஒரு சிறிதும் அநியாயம் செய்பவனாக இல்லை (என்றும் கூறுவார்கள்).

52.(நாம் தண்டிப்பதில்) "ஃபிர்அவ்னுடைய கூட்டத்தார், இன்னும் அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் நிலைமையும் போலவே (இவர்களுடைய நிலைமையும்) இருக்கிறது; அவர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களை நிராகரித்தனர்; ஆதலால், அவர்களுடைய பாவங்களின் காரணமாக அல்லாஹ் அவர்களைப் பிடித்துக்கொண்டான்; நிச்சயமாக, அல்லாஹ் வல்லமை மிக்கவன்; தண்டிப்பதில் மிகக் கடினமானவன்.

ذٰلِكَ بِاَنَّ اللّٰهَ لَمْ يَكُ مُغَيِّرًا نِّعْمَةً اَنْعَمَهَا عَلٰى قَوْمٍ حَتّٰى
يُغَيِّرُوْا مَا بِاَنْفُسِهِمْ ۙ وَاَنَّ اللّٰهَ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿۵۳﴾ كَدَاْبِ اٰلِ
فِرْعَوْنَ ۙ وَالَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۭ كَذَّبُوْا بِاٰيٰتِ رَبِّهِمْ فَاَهْلَكْنٰهُمْ
بِذُنُوْبِهِمْ وَاَغْرَقْنَآ اٰلَ فِرْعَوْنَ ۚ وَكُلٌّ كَانُوْا ظٰلِمِيْنَ ﴿۵۴﴾
اِنَّ شَرَّ الدَّوَآبِّ عِنْدَ اللّٰهِ الَّذِيْنَ كَفَرُوْا فَهُمْ لَا يُؤْمِنُوْنَ ﴿۵۵﴾
اَلَّذِيْنَ عٰهَدْتَّ مِنْهُمْ ثُمَّ يَنْقُضُوْنَ عَهْدَهُمْ فِيْ كُلِّ
مَرَّةٍ وَّهُمْ لَا يَتَّقُوْنَ ﴿۵۶﴾ فَاِمَّا تَثْقَفَنَّهُمْ فِي الْحَرْبِ فَشَرِّدْ بِهِمْ
مَّنْ خَلْفَهُمْ لَعَلَّهُمْ يَذَّكَّرُوْنَ ﴿۵۷﴾ وَاِمَّا تَخَافَنَّ مِنْ قَوْمٍ
خِيَانَةً فَانْۢبِذْ اِلَيْهِمْ عَلٰى سَوَآءٍ ۭ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْخَآئِنِيْنَ ﴿۵۸﴾ ع ٧ ١٠ ٣
وَلَا يَحْسَبَنَّ الَّذِيْنَ كَفَرُوْا سَبَقُوْا ۭ اِنَّهُمْ لَا يُعْجِزُوْنَ ﴿۵۹﴾ وَ
اَعِدُّوْا لَهُمْ مَّا اسْتَطَعْتُمْ مِّنْ قُوَّةٍ وَّمِنْ رِّبَاطِ الْخَيْلِ
تُرْهِبُوْنَ بِهٖ عَدُوَّ اللّٰهِ وَعَدُوَّكُمْ وَاٰخَرِيْنَ مِنْ دُوْنِهِمْ ۚ
لَا تَعْلَمُوْنَهُمْ ۚ اَللّٰهُ يَعْلَمُهُمْ ۭ وَمَا تُنْفِقُوْا مِنْ شَيْءٍ فِيْ سَبِيْلِ
اللّٰهِ يُوَفَّ اِلَيْكُمْ وَاَنْتُمْ لَا تُظْلَمُوْنَ ﴿۶۰﴾ وَاِنْ جَنَحُوْا لِلسَّلْمِ
فَاجْنَحْ لَهَا وَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ۭ اِنَّهٗ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ﴿۶۱﴾

53. அ(வ்வாறு தண்டிப்ப)து, நிச்சயமாக அல்லாஹ் எந்த ஒரு அருட்கொடையையும்_ ஒரு சமூகத்தார் மீது அவன் அருட் செய்தானே அதை _ (அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல், அவனுக்குக் கீழ்படிந்து நடத்தல் போன்ற)தங்களுக்குள்ள நிலைகளை அ(ச்சமூகத்த)வர்கள் மாற்றிக்கொள்ளாத வரையில் அவன் மாற்றுபவனாக இல்லை என்ற காரணத்தினாலாகும்; நிச்சயமாக அல்லாஹ், செவியேற்கிறவன், நன்கறிகிறவன்.

54. "ஃபிர்அவ்னுடைய கூட்டத்தார், இன்னும் அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் நிலைமையைப் போலவே, (இவர்களின் நிலைமையும் இருக்கின்றது.) அவர்களும், (இவர்களைப்போலவே) தங்கள் இரட்சகனின் அத்தாட்சிகளைப் பொய்யாக்கிக் கொண்டிருந்தனர்; ஆகவே, அவர்களுடைய பாவங்களின் காரணமாக நாம் (பலவகை வேதனைகளைக் கொண்டு, ஃபிர் அவ்னுக்கு முன்னிருந்த அவர்களை) அழித்துவிட்டோம்; மேலும், ஃபிர்அவ்னுடைய கூட்டத்தினரை நாம் (தண்ணீரில்) மூழ்கடித்துவிட்டோம். இவர்கள் ஒவ்வொருவருமே அநியாயக்காரர்களாக இருந்தனர்.

55. அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக (பூமியில்)ஊர்ந்து திரிபவைகளில் மிகக் கெட்டவை நிராகரித்தார்களே அவர்கள்தாம்; ஆகவே, அவர்கள் விசுவாசங் கொள்ள மாட்டார்கள்.

56. அவர்கள் எத்தகையோரென்றால், அவர்களில்(உள்ளோருடன்) நீர் உடன்படிக்கை செய்து கொண்டீர்; (அத்தகையோர் அல்லாஹ்விடத்தில் மிகக்கெட்டவர்களாவர்) பின்னர், அவர்களின் உடன்படிக்கையை ஒவ்வொரு தடவையும் அவர்கள் முறித்து விடுகின்றனர்; அவர்கள் (அல்லாஹ்வுக்குப்) பயப்படுவதுமில்லை.

57. ஆகவே, யுத்தத்தில் நீங்கள் அவர்களை(த்தாக்கும் வாய்ப்பை)ப் பெற்றுவிட்டால், அவர்களைக்(கொலை செய்வது கொண்டு, சிறை பிடிப்பது) கொண்டு பின்னிருப்பவர்களை (பயந்தோடுமாறு) சிதறடித்து விடுவீராக! (இதனால்) அவர்கள் படிப்பினை பெறலாம்.

58. மேலும், ஏதாவது ஒரு கூட்டத்தினரிடமிருந்து துரோகத்தை நீர் பயந்தால், (அதற்குச்) சமமாக(வே அவ்வுடன்படிக்கையை) அவர்கள்பால் எறிந்துவிடும்; நிச்சயமாக அல்லாஹ், துரோகம் செய்வோரை நேசிக்கமாட்டான்.

59. நிராகரித்துக்கொண்டிருப்போர் (நம் தண்டனையிலிருந்து) தாங்கள் தப்பித்துவிட்டதாக அவர்கள் எண்ணவும் வேண்டாம்; நிச்சயமாக அவர்கள் (நம்மை எதிலும்) இயலாமையில் ஆக்கிவிடமாட்டார்கள்.

60. மேலும், அவர்களுக்காக (அவர்களோடு போர் செய்வதற்காக) உங்களுக்கு பலத்தால் சாத்தியமானதையும், (திறமையான) போர்க் குதிரைகளைக் கட்டிவைப்பதையும் நீங்கள் (எந்நேரமும்) தயார் செய்து வையுங்கள்; இதனால், அல்லாஹ்வுடைய விரோதியையும், உங்களுடைய விரோதியையும், இவர்களல்லாத மற்றவர்களையும் பயப்படச்செய்வீர்கள்; அவர்களை நீங்கள் அறியமாட்டீர்கள்; அல்லாஹ்தான் அவர்களை அறிவான்; (இதற்காக) அல்லாஹ்வுடைய பாதையில் நீங்கள் எதைச் செலவு செய்த போதிலும், (அதன் கூலியை) உங்களுக்குப் பூரணமாகவே வழங்கப்படும்; (அதில் ஒரு சிறிதும்) நீங்கள் அநீதி இழைக்கப்படவுமாட்டீர்கள்.

61. அன்றியும் அவர்கள், சமாதானத்தின் பக்கம் சாய்ந்தால், அப்பொழுது (நபியே!) நீரும் அதன் பக்கம் சாய்வீராக! அல்லாஹ்வின்மீதே (காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கையும் வைப்பீராக! நிச்சயமாக அவனே செவியுறுவோன், (யாவற்றையும்) நன்கறிந்தோன்.

وَاِنْ يُّرِيْدُوْٓا اَنْ يَّخْدَعُوْكَ فَاِنَّ حَسْبَكَ اللّٰهُ ؕ هُوَ الَّذِيْٓ
اَيَّدَكَ بِنَصْرِهٖ وَبِالْمُؤْمِنِيْنَ ۙ﴿۶۲﴾ وَاَلَّفَ بَيْنَ قُلُوْبِهِمْ ؕ لَوْ اَنْفَقْتَ
مَا فِي الْاَرْضِ جَمِيْعًا مَّآ اَلَّفْتَ بَيْنَ قُلُوْبِهِمْ وَلٰكِنَّ اللّٰهَ
اَلَّفَ بَيْنَهُمْ ؕ اِنَّهٗ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿۶۳﴾ يٰٓاَيُّهَا النَّبِيُّ حَسْبُكَ اللّٰهُ وَ
مَنِ اتَّبَعَكَ مِنَ الْمُؤْمِنِيْنَ ﴿۶۴﴾ ع يٰٓاَيُّهَا النَّبِيُّ حَرِّضِ الْمُؤْمِنِيْنَ ع٨ ٢ ۴
عَلَى الْقِتَالِ ؕ اِنْ يَّكُنْ مِّنْكُمْ عِشْرُوْنَ صٰبِرُوْنَ يَغْلِبُوْا
مِائَتَيْنِ ۚ وَاِنْ يَّكُنْ مِّنْكُمْ مِّائَةٌ يَّغْلِبُوْٓا اَلْفًا مِّنَ الَّذِيْنَ
كَفَرُوْا بِاَنَّهُمْ قَوْمٌ لَّا يَفْقَهُوْنَ ﴿۶۵﴾ اَلْـٰٔنَ خَفَّفَ اللّٰهُ عَنْكُمْ
وَعَلِمَ اَنَّ فِيْكُمْ ضَعْفًا ؕ فَاِنْ يَّكُنْ مِّنْكُمْ مِّائَةٌ صَابِرَةٌ يَّغْلِبُوْا
مِائَتَيْنِ ۚ وَاِنْ يَّكُنْ مِّنْكُمْ اَلْفٌ يَّغْلِبُوْٓا اَلْفَيْنِ بِاِذْنِ اللّٰهِ ؕ وَ
اللّٰهُ مَعَ الصّٰبِرِيْنَ ﴿۶۶﴾ مَا كَانَ لِنَبِيٍّ اَنْ يَّكُوْنَ لَهٗٓ اَسْرٰى حَتّٰى
يُثْخِنَ فِي الْاَرْضِ ؕ تُرِيْدُوْنَ عَرَضَ الدُّنْيَا ۖۗ وَاللّٰهُ يُرِيْدُ
الْاٰخِرَةَ ؕ وَاللّٰهُ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿۶۷﴾ لَوْلَا كِتٰبٌ مِّنَ اللّٰهِ سَبَقَ
لَمَسَّكُمْ فِيْمَآ اَخَذْتُمْ عَذَابٌ عَظِيْمٌ ﴿۶۸﴾ فَكُلُوْا مِمَّا غَنِمْتُمْ
حَلٰلًا طَيِّبًا ۖؗ وَّاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۶۹﴾ ع ع٩ ٥ ٥

62. மேலும், (நபியே!) அவர்கள் ஏமாற்றி உமக்குச் சதி செய்யக்கருதினால் அப்பொழுது (உம்மைப் பாதுகாக்க) நிச்சயமாக, அல்லாஹ் உமக்குப் போதுமானவன்; அவன் தான் உம்மைத் தன் உதவியைக் கொண்டும், விசுவாசிகளைக் கொண்டும் பலப்படுத்தினான்.

63. மேலும், (விசுவாசிகளாகிய) அவர்களுடைய இதயங்களுக்கிடையில் (சிதறிக்கிடந்த அவர்களை இஸ்லாத்தின் மூலம்) அன்பையூட்டினான்; பூமியிலுள்ள யாவையும் நீர் செலவு செய்த போதிலும் அவர்களுடைய இதயங்களில் அன்பையூட்ட உம்மால் முடிந்திருக்காது; எனினும், அல்லாஹ்தான் அவர்களுக்கிடையில் அன்பை உண்டாக்கினான்; நிச்சயமாக அவன் (யாவையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

64. நபியே! உமக்கும், உம்மைப்பின்பற்றிய விசுவாசிகளுக்கும் அல்லாஹ் போதுமானவன்.(14)

65. நபியே! நீர், விசுவாசிகளை யுத்தத்திற்குத் (தயாராகும்படி) தூண்டுவீராக! உங்களில் (சகிப்புத் தன்மையும், உறுதியும் கொண்ட ) பொறுமையாளர்களான இருபது பேர்களிருந்தால், இருநூறு பேர்களை வெற்றி கொண்டுவிடுவார்கள்; உங்களில் (அத்தகைய) நூறு பேர்களிருந்தால், நிராகரிப்போரில் ஆயிரம்பேரை வெற்றிகொண்டு விடுவார்கள்; நிச்சயமாக இவர்கள், விளங்கிக்கொள்ளாத கூட்டத்தினராக இருப்பதுதான் இதற்குக்காரணமாகும்.

66. நிச்சயமாக உங்களில் பலவீனம் இருக்கின்றது என்பதை அல்லாஹ் நன்கறிந்து கொண்டு , இப்பொழுது(அதனை) உங்களுக்கு இலேசாக்கிவிட்டான் ;ஆகவே , உங்களில் (சகிப்புத் தன்மையும் , உறுதியும் கொண்ட) பொறுமையுடைய நூறு பேர்களிருந்தால் ,(மற்ற) இரு நூறு பேர்களை அவர்கள் வெற்றி கொண்டு விடுவார்கள் ; (இத்தகைய) ஆயிரம் பேர் உங்களில் இருந்தால் அல்லாஹ்வின் உத்தரவு கொண்டு (மற்ற) இரண்டாயிரம் பேர்களை அவர்கள் வெற்றி கொண்டுவிடுவார்கள் ;அல்லாஹ்வோ பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.

67. எந்த நபிக்கும் இரத்தத்தைப் பூமியில் ஓட்டாத வரையில் போர்க்கைதிகள் அவருக்கு இருப்பது தகுமானதல்ல; நீங்கள் இவ்வுலகப் பொருளை நாடுகின்றீர்கள்; அல்லாஹ்வோ (உங்களுடைய) மறுமை (வாழ்க்கை)யை நாடுகின்றான்; இன்னும் அல்லாஹ், மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

68. அல்லாஹ்விடமிருந்து ஓர் எழுத்து முந்தி விடாதிருப்பின், நீங்கள் ( பத்ருப் போரின் போது ஈட்டுப் பணத்தை ) எடுத்துக்கொண்டதில் மகத்தானதொரு வேதனை உங்களைப் பிடித்திருக்கும்.

69. ஆகவே, போரில் நீங்கள் அடைந்த வெற்றிப்பொருளிலிருந்து (அதை) ஆகுமானதாக, நல்லதாக(ப்)புசியுங்கள்; மேலும், அல்லாஹ்வுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ், மிக்க மன்னிக்கின்றவன்; மிகக் கிருபை உடையவன்.

يٰۤاَيُّهَا النَّبِيُّ قُلْ لِّمَنْ فِيْۤ اَيْدِيْكُمْ مِّنَ الْاَسْرٰۤى ۙ اِنْ يَّعْلَمِ اللّٰهُ فِيْ
قُلُوْبِكُمْ خَيْرًا يُّؤْتِكُمْ خَيْرًا مِّمَّاۤ اُخِذَ مِنْكُمْ وَيَغْفِرْ لَكُمْ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ
رَّحِيْمٌ ﴿٧٠﴾ وَاِنْ يُّرِيْدُوْا خِيَانَتَكَ فَقَدْ خَانُوا اللّٰهَ مِنْ قَبْلُ
فَاَمْكَنَ مِنْهُمْ ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿٧١﴾ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَهَاجَرُوْا
وَجٰهَدُوْا بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ وَالَّذِيْنَ اٰوَوْا
وَّنَصَرُوْۤا اُولٰٓئِكَ بَعْضُهُمْ اَوْلِيَآءُ بَعْضٍ ؕ وَالَّذِيْنَ اٰمَنُوْا
وَلَمْ يُهَاجِرُوْا مَا لَكُمْ مِّنْ وَّلَايَتِهِمْ مِّنْ شَيْءٍ حَتّٰى يُهَاجِرُوْا ۚ
وَاِنِ اسْتَنْصَرُوْكُمْ فِي الدِّيْنِ فَعَلَيْكُمُ النَّصْرُ اِلَّا عَلٰى قَوْمٍۭ
بَيْنَكُمْ وَبَيْنَهُمْ مِّيْثَاقٌ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿٧٢﴾ وَالَّذِيْنَ
كَفَرُوْا بَعْضُهُمْ اَوْلِيَآءُ بَعْضٍ ؕ اِلَّا تَفْعَلُوْهُ تَكُنْ فِتْنَةٌ فِي الْاَرْضِ
وَفَسَادٌ كَبِيْرٌ ﴿٧٣﴾ ؕ وَالَّذِيْنَ اٰمَنُوْا وَهَاجَرُوْا وَجٰهَدُوْا فِيْ
سَبِيْلِ اللّٰهِ وَالَّذِيْنَ اٰوَوْا وَّنَصَرُوْۤا اُولٰٓئِكَ هُمُ الْمُؤْمِنُوْنَ
حَقًّا ؕ لَهُمْ مَّغْفِرَةٌ وَّرِزْقٌ كَرِيْمٌ ﴿٧٤﴾ وَالَّذِيْنَ اٰمَنُوْا مِنْۢ بَعْدُ
وَهَاجَرُوْا وَجٰهَدُوْا مَعَكُمْ فَاُولٰٓئِكَ مِنْكُمْ ؕ وَاُولُوا الْاَرْحَامِ
بَعْضُهُمْ اَوْلٰى بِبَعْضٍ فِيْ كِتٰبِ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ﴿٧٥﴾ ع ١٠

70. நபியே! உங்கள் கைகளி(ன்வசத்தி)ல் இருக்கும் கைதிகளிடம் கூறுவீராக: "உங்களுடைய உள்ளங்களில் ஏதேனும் நன்மை இருப்பதை அல்லாஹ் அறிந்தால், உங்களிடமிருந்து (ஈட்டுத்தொகையாக) எடுக்கப்பட்டதை விட மிக சிறந்ததை உங்களுக்குக் கொடுப்பான், உங்களை அவன் மன்னித்தும்விடுவான்; இன்னும் அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன்.

71. (நபியே!) அவர்கள் உமக்கு மோசம் செய்ய நாடினால்,(அதற்காக நீர் கவலைப் படவேண்டாம்.) இதற்கு முன்னரும் அவர்கள், அல்லாஹ்வுக்கு மோசம் செய்திருக்கிறார்கள்; ஆதலால்தான், அவர்களிலிருந்து(ச் சிறைப்படுத்த உமக்கு) அவன் சக்தி அளித்தான்; அல்லாஹ், (அனைத்தையும்) மிக்க அறிந்தவன் ; தீர்க்கமான அறிவுடையவன்.

72. நிச்சயமாக விசுவாசங் கொண்டு, (தங்கள்) ஊரைவிட்டும் வெளியேறி, அல்லாஹ்வுடைய பாதையில் தங்கள் செல்வங்களாலும், தங்கள் உயிர்களாலும் அறப்போர் புரிந்தார்களே அத்தகையோரும், அவர்களுக்கு (த் தங்கள் வீடுகளில்) இடமளித்து (வைத்துக் கொண்டு) உதவியும் புரிந்தார்களே அத்தகையோருமாகிய இவர்கள் _ இவர்களில் சிலர் சிலருக்கு உற்ற நண்பர்களாவார்கள்; இன்னும் விசுவாசங் கொண்டு, (தங்களுடைய) ஊரைவிட்டு(ஹிஜ்ரத்துச் செய்து) புறப்படாமலிருக்கின்றனரே அத்தகையவர்கள் _ அவர்கள், (தங்களுடைய) ஊரை விட்டுப்புறப்படும் (ஹிஜ்ரத்துச் செய்யும்) வரையில் அவர்களுடைய நட்பில் உங்களுக்கு எதுவும் இல்லை; (எனினும்) அவர்கள் மார்க்க விஷயத்தில் உங்களிடம் உதவி தேடினாலோ, (அவர்களுக்கு) உதவி செய்வது உங்கள் மீது கடமையாகும்; (ஆயினும்வேறொரு சமூகத்தாராகிய) அவர்களுக்கும், உங்களுக்குமிடையில் உடன்படிக்கை உள்ள(தோ அந்த) சமூகத்தாரைத் தவிர, ( அவர்களுக்கு விரோதமாக உதவி செய்வது கூடாது.) மேலும், அல்லாஹ் நீங்கள் செய்பவைகளை பார்க்கிறவன்.

73. மேலும், நிராகரித்துக்கொண்டிருப்பவர்கள் _ அவர்களில் சிலர் , சிலருக்கு பாதுகாவலர்களாவர்.(இணைவைப்பவர்களைத்தவிர்த்து, விசுவாசிகளை நீங்கள் உங்களின் காரியஸ்தர்களாக ஆக்கிக் கொள்ளும்)இதை நீங்கள் செய்யாவிட்டால் பூமியில் குழப்பமும், பெருங்கலகமும் ஏற்பட்டுவிடும்.

74. விசுவாசங்கொண்டு, (தங்களுடைய) ஊரைவிட்டும் வெளியேறி (ஹிஜ்ரத்தும் செய்து), அல்லாஹ்வுடைய பாதையில் யுத்தம் புரிகின்றார்களே அத்தகையோரும், இன்னும், இவர்களுக்கு இடமளித்து (த் தங்களுடைய வீடுககளில்) வைத்துக் கொண்டு, (இவர்களுக்கு) உதவியும் செய்கின்றார்களே அத்தகையோருமாகிய இவர்கள் தாம் உண்மையான விசுவாசிகள்; அவர்களுக்கு மன்னிப்பும், கண்ணியமான ஆகாரமும் உண்டு.

75. இதன் பின்னரும் விசுவாசங் கொண்டு, (தங்களுடைய) ஊரைவிட்டுப் புறப்பட்டு, உங்களுடன் சேர்ந்து (விரோதியை எதிர்த்து) யுத்தம் புரிகிறார்களே அத்தகையோர் _ அவர்கள் உங்களைச்சார்ந்தவர்கள்; (இன்னும்) இரத்தக்கலப்புடைய பந்துக்கள் அல்லாஹ்வுடைய வேதத்தில் உள்ளபடி அவர்களில் சிலர் சிலருக்கு(வாரிசு உரிமைபெற) மிக உரியவர்கள்; நிச்சயமாக அல்லாஹ், ஒவ்வொரு பொருளையும் நன்கறிகிறவன்.

# سورة التوبة مدنية وهي مائة وتسع وعشرون آية وستة عشر ركوعا

بَرَآءَةٌ مِّنَ اللّٰهِ وَرَسُوْلِهٖٓ اِلَى الَّذِيْنَ عٰهَدْتُّمْ مِّنَ الْمُشْرِكِيْنَ ؕ ﴿١﴾
فَسِيْحُوْا فِي الْاَرْضِ اَرْبَعَةَ اَشْهُرٍ وَّاعْلَمُوْٓا اَنَّكُمْ غَيْرُ مُعْجِزِي اللّٰهِ ۙ
وَاَنَّ اللّٰهَ مُخْزِي الْكٰفِرِيْنَ ﴿٢﴾ وَاَذَانٌ مِّنَ اللّٰهِ وَرَسُوْلِهٖٓ اِلَى
النَّاسِ يَوْمَ الْحَجِّ الْاَكْبَرِ اَنَّ اللّٰهَ بَرِيْٓءٌ مِّنَ الْمُشْرِكِيْنَ ۙ۬ وَ
رَسُوْلُهٗ ؕ فَاِنْ تُبْتُمْ فَهُوَ خَيْرٌ لَّكُمْ ۚ وَاِنْ تَوَلَّيْتُمْ فَاعْلَمُوْٓا اَنَّكُمْ
غَيْرُ مُعْجِزِي اللّٰهِ ؕ وَبَشِّرِ الَّذِيْنَ كَفَرُوْا بِعَذَابٍ اَلِيْمٍ ۙ ﴿٣﴾ اِلَّا
الَّذِيْنَ عٰهَدْتُّمْ مِّنَ الْمُشْرِكِيْنَ ثُمَّ لَمْ يَنْقُصُوْكُمْ شَيْـًٔا وَّلَمْ
يُظَاهِرُوْا عَلَيْكُمْ اَحَدًا فَاَتِمُّوْٓا اِلَيْهِمْ عَهْدَهُمْ اِلٰى مُدَّتِهِمْ ؕ
اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُتَّقِيْنَ ﴿٤﴾ فَاِذَا انْسَلَخَ الْاَشْهُرُ الْحُرُمُ فَاقْتُلُوا
الْمُشْرِكِيْنَ حَيْثُ وَجَدْتُّمُوْهُمْ وَخُذُوْهُمْ وَاحْصُرُوْهُمْ
وَاقْعُدُوْا لَهُمْ كُلَّ مَرْصَدٍ ۚ فَاِنْ تَابُوْا وَاَقَامُوا الصَّلٰوةَ وَ
اٰتَوُا الزَّكٰوةَ فَخَلُّوْا سَبِيْلَهُمْ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿٥﴾ وَاِنْ
اَحَدٌ مِّنَ الْمُشْرِكِيْنَ اسْتَجَارَكَ فَاَجِرْهُ حَتّٰى يَسْمَعَ كَلٰمَ
اللّٰهِ ثُمَّ اَبْلِغْهُ مَاْمَنَهٗ ؕ ذٰلِكَ بِاَنَّهُمْ قَوْمٌ لَّا يَعْلَمُوْنَ ﴿٦﴾ ع ١ ٦

அத்தியாயம் : 9

## அத்தவ்பா _ பச்சாதாபம்

வசனங்கள் : 129 மதனீ ருகூஃகள் : 16

1. (விசுவாசிகளே! இது) இணைவைத்துக்கொண்டிருப்போரில் நீங்கள் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தீர்களே அத்தகையோர் பால் அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் நீங்கிக்கொண்ட(து பற்றிய)தாகும்.

2. ஆகவே, (இணைவைத்துக் கொண்டிருப்போரே! ) "நீங்கள் (இன்றிலிருந்து) நான்கு மாதங்கள் (வரையில்) பூமியில் (எங்கும்)சுற்றித்திரியுங்கள்; நிச்சயமாக நீங்கள், அல்லாஹ்வை இயலாமையில் ஆக்கக்கூடியவர்களல்லர் என்பதையும், நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்போரை இழிவுபடுத்தக்கூடியவன் என்பதையும் நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்!"(என்று நபியே! நீர் கூறுவீராக!)

3. (இது) நிச்சயமாக அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் இணைவைத்துக் கொண்டிருப்போரிலிருந்து விலகிக் கொண்டவர்கள் என்ற விஷயத்தை (ஹஜ்ஜுல் அக்பர் எனும்) இம்மாபெரும் ஹஜ்ஜுடைய நாளில், அல்லாஹ் விடமிருந்தும் அவனின் தூதரிடமிருந்தும் மனிதர்கள்பால் பகிரங்கமாக அறிவிப்பதாகும்; ஆகவே, (இணைவைத்துக் கொண்டிருப்போரே!) நீங்கள் தவ்பாச்செய்து கொண்டால், அது உங்களுக்குத்தான் மிக்க நன்று; (அவ்வாறின்றி) நீங்கள் புறக்கணித்தாலோ, நிச்சயமாக நீங்கள், அல்லாஹ்வை இயலாமையில் ஆக்கக்கூடியவர்களல்லர் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்; (நபியே! இந்) நிராகரிப்போருக்கு துன்புறுத்தும் வேதனையைக் கொண்டு நீர் நன்மாராயங் கூறுவீராக!

4. (ஆயினும்) இணைவைத்துக் கொண்டிருப்போரிலிருந்து நீங்கள் உடன்படிக்கை செய்து கொண்டு, பிறகு யாதொன்றையும் உங்களுக்குக் குறைவுசெய்யாமலும், உங்களுக்கு விரோதமாக எவருக்கும் உதவி செய்யாமலும் இருக்கின்றனரே அத்தகையோரைத்தவிர; அவர்களின் உடன்படிக்கையை அதன் தவணைவரையில் அவர்களுக்குப்பூர்த்தியாக்கி வையுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோரை நேசிக்கின்றான்.

5. ஆகவே, சிறப்புற்ற மாதங்கள் சென்றுவிட்டால், இணைவைத்துக் கொண்டிருப்போரை_ அவர்களைக் கண்டவிடமெல்லாம் கொன்றுவிடுங்கள்; இன்னும், அவர்களைப் பிடியுங்கள்; அவர்களை முற்றுகையுமிடுங்கள்; ஒவ்வொரு பதுங்குமிடத்திலும், அவர்களைக் குறிவைத்து உட்காருங்கள்; பின்னர் அவர்கள் (தங்கள் பாவங்களுக்கு) பச்சாதாபப்பட்டு விலகி, (விசுவாசித்துத்) தொழுகையையும் நிறைவேற்றி, ஜகாத்தையும் கொடுத்துவந்தால், அவர்கள் வழியில் (அவர்களை) விட்டுவிடுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்; மிகக் கிருபையுடையவன்.

6. மேலும், (நபியே!) இணைவைத்துக்கொண்டிருப்போரில் எவரொருவர் உம்மிடம் அபயம் தேடினால் அல்லாஹ்வுடைய வசனங்களை அவர் செவியேற்கும் வரையில் அவருக்கு அபயமளிப்பீராக! பின்னர், அவருக்கு அபயமளிக்கும் (வேறு) இடத்தில் அவரைச்சேர்த்து வைப்பீராக! அது, (ஏனென்றால்) நிச்சயமாக அவர்கள் அறியாத சமூகத்தினர் என்ற காரணத்தினாலாகும் .

كَيْفَ يَكُوْنُ لِلْمُشْرِكِيْنَ عَهْدٌ عِنْدَ اللّٰهِ وَعِنْدَ رَسُوْلِهٖٓ
اِلَّا الَّذِيْنَ عٰهَدْتُّمْ عِنْدَ الْمَسْجِدِ الْحَرَامِ ۚ فَمَا اسْتَقَامُوْا
لَكُمْ فَاسْتَقِيْمُوْا لَهُمْ ؕ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُتَّقِيْنَ ۝٧ كَيْفَ وَاِنْ
يَّظْهَرُوْا عَلَيْكُمْ لَا يَرْقُبُوْا فِيْكُمْ اِلًّا وَّلَا ذِمَّةً ؕ يُرْضُوْنَكُمْ
بِاَفْوَاهِهِمْ وَتَاْبٰى قُلُوْبُهُمْ ۚ وَاَكْثَرُهُمْ فٰسِقُوْنَ ۝٨ ۚ
اِشْتَرَوْا بِاٰيٰتِ اللّٰهِ ثَمَنًا قَلِيْلًا فَصَدُّوْا عَنْ سَبِيْلِهٖ ؕ
اِنَّهُمْ سَآءَ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ۝٩ لَا يَرْقُبُوْنَ فِيْ مُؤْمِنٍ اِلًّا
وَّلَا ذِمَّةً ؕ وَاُولٰٓئِكَ هُمُ الْمُعْتَدُوْنَ ۝١٠ فَاِنْ تَابُوْا وَاَقَامُوا
الصَّلٰوةَ وَاٰتَوُا الزَّكٰوةَ فَاِخْوَانُكُمْ فِي الدِّيْنِ ؕ وَنُفَصِّلُ
الْاٰيٰتِ لِقَوْمٍ يَّعْلَمُوْنَ ۝١١ وَاِنْ نَّكَثُوْٓا اَيْمَانَهُمْ
مِّنْۢ بَعْدِ عَهْدِهِمْ وَطَعَنُوْا فِيْ دِيْنِكُمْ فَقَاتِلُوْٓا
اَئِمَّةَ الْكُفْرِ ۙ اِنَّهُمْ لَآ اَيْمَانَ لَهُمْ لَعَلَّهُمْ
يَنْتَهُوْنَ ۝١٢ اَلَا تُقَاتِلُوْنَ قَوْمًا نَّكَثُوْٓا اَيْمَانَهُمْ
وَهَمُّوْا بِاِخْرَاجِ الرَّسُوْلِ وَهُمْ بَدَءُوْكُمْ اَوَّلَ مَرَّةٍ ؕ
اَتَخْشَوْنَهُمْ ۚ فَاللّٰهُ اَحَقُّ اَنْ تَخْشَوْهُ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ۝١٣

7. அல்லாஹ்விடத்திலும், அவனுடைய தூதரிடத்திலும் இணைவைத்துக் கொண்டிருப்போருக்கு எப்படி உடன்படிக்கை இருக்கமுடியும்? (ஆயினும் மஸ்ஜிதுல்ஹராமாகிய) சிறப்புற்ற மஸ்ஜிதில் நீங்கள் உடன்படிக்கை செய்துகொண்டீர்களே அவர்களைத்தவிர, ஆகவே அவர்கள் (தங்களுடைய உடன்படிக்கையின்படி) உங்களுடன் உறுதியாக இருக்கும் வரையில், நீங்களும் அவர்களுடன் உறுதியாகவே இருங்கள்; நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோரை நேசிக்கின்றான்.

8. (எனினும்) எப்படி (உடன்படிக்கை இருக்கமுடியும்)? இன்னும் உங்களை அவர்கள் வெற்றிகொண்டால் உங்களிலே (இருந்துவரும்) உறவையும், (செய்துகொண்ட) உடன்படிக்கையையும் பொருட்படுத்தமாட்டார்கள்; தங்கள் வாய்களைக் கொண்டு உங்களைத் திருப்திப்படுத்துகின்றனர்; அவர்களுடைய இதயங்களோ விலகிக்கொள்கின்றன; இன்னும், அவர்களில் பெரும்பாலோர் பாவிகளாவர்.

9. அவர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களுக்குப்பகரமாக சொற்பக் கிரயத்தை வாங்கிக்கொண்டனர்; பின்னர் (மனிதர்களை) அவனுடைய பாதையை விட்டும் தடுக்கின்றனர்; நிச்சயமாக அவர்கள்_ அவர்கள் செய்து கொண்டிருந்தார்களே அது மிகக் கெட்டது.

10. அவர்கள், எந்த விசுவாசியின் விஷயத்திலும் உறவையும், உடன்படிக்கையையும் பொருட்படுத்தவேமாட்டார்கள்; மேலும், இத்தகையோர்தாம் வரம்பு மீறியவர்கள்.

11. ஆகவே, அவர்கள் (தங்கள் பாவங்களிலிருந்து விலகிப்) பச்சாதாபப்பட்டு, தொழுகையையும் நிறைவேற்றி, ஜகாத்தையும் கொடுத்து வந்தால், அப்பொழுது (அவர்கள்) உங்களுக்கு மார்க்கத்தில் சகோதரர்களாவர்; இன்னும் அறிவுள்ள சமூகத்தார்க்கு நாம் வசனங்களை (இவ்வாறு) விவரிக்கின்றோம்.

12. தங்களுடைய உடன்படிக்கைக்குப் பின்னரும், அவர்கள் தங்களுடைய சத்தியங்களை முறித்து, உங்களுடைய மார்க்கத்தைப் பற்றிகுறைகள்கூறிக் கொண்டிருப்பார்களானால் (அவர்கள் மேற்கூறிய செயலிலிருந்து) விலகிக்கொள்வதற்காக நிராகரிப்போரின் தலைவர்களுடன் போரிடுங்கள்; ஏனெனில், நிச்சயமாக அவர்கள்_ அவர்களுக்கு சத்தியங்கள் (அவற்றைப் பேணிக்காத்தல்) எதுவுமில்லை.

13. தங்களுடைய சத்தியங்களை முறித்து, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் உறுதிகொண்ட மக்களுடன் நீங்கள் யுத்தம் புரிய வேண்டாமா? அவர்கள்தாம் உங்களிடம் முதன்முறையாக ஆரம்பித்தனர்; அவர்களுக்கு நீங்கள் பயப்படுகிறீர்களா? நீங்கள் விசுவாசங் கொண்டவர்களாயின், அல்லாஹ் _ அவனே நீங்கள் பயப்படுவதற்கு மிகத்தகுதியானவன்.

قَاتِلُوْهُمْ يُعَذِّبْهُمُ اللّٰهُ بِاَيْدِيْكُمْ وَيُخْزِهِمْ وَيَنْصُرْكُمْ عَلَيْهِمْ
وَيَشْفِ صُدُوْرَ قَوْمٍ مُّؤْمِنِيْنَ ﴿١٤﴾ وَيُذْهِبْ غَيْظَ قُلُوْبِهِمْ ۚ وَ
يَتُوْبُ اللّٰهُ عَلٰى مَنْ يَّشَآءُ ۚ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿١٥﴾ اَمْ حَسِبْتُمْ اَنْ
تُتْرَكُوْا وَلَمَّا يَعْلَمِ اللّٰهُ الَّذِيْنَ جٰهَدُوْا مِنْكُمْ وَلَمْ يَتَّخِذُوْا
مِنْ دُوْنِ اللّٰهِ وَلَا رَسُوْلِهٖ وَلَا الْمُؤْمِنِيْنَ وَلِيْجَةً ۚ وَاللّٰهُ خَبِيْرٌۢ
بِمَا تَعْمَلُوْنَ ﴿١٦﴾ مَا كَانَ لِلْمُشْرِكِيْنَ اَنْ يَّعْمُرُوْا مَسٰجِدَ اللّٰهِ ع ٢ ٨
شٰهِدِيْنَ عَلٰٓى اَنْفُسِهِمْ بِالْكُفْرِ ۚ اُولٰٓئِكَ حَبِطَتْ اَعْمَالُهُمْ ۚۖ وَ
فِى النَّارِ هُمْ خٰلِدُوْنَ ﴿١٧﴾ اِنَّمَا يَعْمُرُ مَسٰجِدَ اللّٰهِ مَنْ اٰمَنَ بِاللّٰهِ
وَالْيَوْمِ الْاٰخِرِ وَاَقَامَ الصَّلٰوةَ وَاٰتَى الزَّكٰوةَ وَلَمْ يَخْشَ اِلَّا اللّٰهَ ۗ
فَعَسٰٓى اُولٰٓئِكَ اَنْ يَّكُوْنُوْا مِنَ الْمُهْتَدِيْنَ ﴿١٨﴾ اَجَعَلْتُمْ سِقَايَةَ
الْحَآجِّ وَعِمَارَةَ الْمَسْجِدِ الْحَرَامِ كَمَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ
الْاٰخِرِ وَجٰهَدَ فِىْ سَبِيْلِ اللّٰهِ ۚ لَا يَسْتَوٗنَ عِنْدَ اللّٰهِ ۚ وَ
اللّٰهُ لَا يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ ﴿١٩﴾ اَلَّذِيْنَ اٰمَنُوْا وَ وقف لازم
هَاجَرُوْا وَجٰهَدُوْا فِىْ سَبِيْلِ اللّٰهِ بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ ۙ
اَعْظَمُ دَرَجَةً عِنْدَ اللّٰهِ ۚ وَاُولٰٓئِكَ هُمُ الْفَآئِزُوْنَ ﴿٢٠﴾

14. நீங்கள் அவர்களுடன் யுத்தம் செய்யுங்கள்; உங்கள் கைகளைக் கொண்டே அல்லாஹ் அவர்களை வேதனை செய்வான்; அவர்களை இழிவும்படுத்துவான்; அவர்களுக்கு பாதகமாக உங்களுக்கு உதவியும் செய்வான்; மேலும் விசுவாசங்கொண்ட சமூகத்தாரின்நெஞ்சங்களுக்கு ஆறுதலுமளிப்பான்.

15. (விசுவாசங்கொண்ட) அவர்களுடைய இதயங்களின் ஆத்திரத்தை அவன் (வெற்றியளிப்பதின் மூலம்) போக்கியும்விடுவான்; இன்னும், அல்லாஹ் (அவர்களில்) தான் நாடியவர்களின்தவ்பாவை ஏற்றுக்கொள்வான்; இன்னும், அல்லாஹ் நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

16. (விசுவாசிகளே!) உங்களில் யுத்தம் செய்தோரையும், அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விசுவாசிகளையும் தவிர, (வேறுஎவரையும் தங்களுடைய) அந்தரங்க நண்பர்களாக (உங்களில்) எவரும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதையும், அல்லாஹ் (சோதித்து) அறியாத நிலையில் நீங்கள் விட்டுவிடப் படுவீர்களென்று எண்ணிக்கொண்டீர்களா? அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை நன்குணர்பவன்.

17. இணை வைத்துக் கொண்டிருப்போருக்கு_ இவர்கள், தங்களுக்குத் தாங்களே நிராகரிப்பைக் கொண்டு சாட்சி கூறிக்கொள்பவர்களாக இருக்கும் நிலையில் அல்லாஹ்வுடைய பள்ளிகளை இவர்கள் பரிபாலனம் செய்ய எவ்வித உரிமையுமில்லை; அத்தகையோர்_ அவர்களுடைய செயல்கள் அழிந்து விட்டன; இன்னும், அவர்கள் (நரக) நெருப்பில் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்.

18. அல்லாஹ்வுடைய பள்ளிகளைப் பரிபாலனம் செய்கிறவரெல்லாம் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசித்து, தொழுகையையும் நிறைவேற்றி, ஜகாத்தும் கொடுத்து, அல்லாஹ்வையன்றி மற்றெவருக்கும் பயப்படாமலும் இருக்கின்றவர்கள் தாம் ; எனவே, அத்தகையோர் நேர்வழி பெற்றவர்களில் அவர்கள் இருக்கப் போதுமானவர்கள்.

19. (விசுவாசங்கொள்ளாமல் இருந்து கொண்டு) ஹாஜிகளுக்குத் தண்ணீர் புகட்டுவோரையும், சிறப்புற்ற அப்பள்ளியைப்பரிபாலஞ்செய்வோரையும் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங்கொண்டு, அல்லாஹ்வுடைய பாதையில் யுத்தம் புரிந்தோரைப் போன்று, (சமமானவர்களாக) நீங்கள் ஆக்கி விட்டீர்களா? அல்லாஹ்வின் சமூகத்தில் (இவ்விருசாராரும்) சமமாக மாட்டார்கள்;மேலும், அல்லாஹ் அநியாயக்கார சமூகத்தாரை நேர் வழியில் செலுத்த மாட்டான்.

20. விசுவாசங்கொண்டு, (தங்கள்) ஊர்களிலிருந்தும் (ஹிஜ்ரத்துச்செய்து) வெளியேறி, அல்லாஹ்வுடைய பாதையில் தங்கள் செல்வங்களாலும், தங்கள் உயிர்களாலும் யுத்தம் புரிகின்றனரே அத்தகையோர் அல்லாஹ்விடம் பதவியால் மிக மகத்தானவர்கள்;மேலும், இத்தகையோர்தாம் வெற்றியடைந்தவர்கள்.

يُبَشِّرُهُمْ رَبُّهُمْ بِرَحْمَةٍ مِّنْهُ وَرِضْوَانٍ وَّجَنّٰتٍ لَّهُمْ فِيْهَا
نَعِيْمٌ مُّقِيْمٌ ﴿٢١﴾ لا خٰلِدِيْنَ فِيْهَآ اَبَدًا ؕ اِنَّ اللّٰهَ عِنْدَهٗۤ اَجْرٌ
عَظِيْمٌ ﴿٢٢﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوْۤا اٰبَآءَكُمْ وَ
اِخْوَانَكُمْ اَوْلِيَآءَ اِنِ اسْتَحَبُّوا الْكُفْرَ عَلَى الْاِيْمَانِ ؕ وَمَنْ
يَّتَوَلَّهُمْ مِّنْكُمْ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ ﴿٢٣﴾ قُلْ اِنْ كَانَ
اٰبَآؤُكُمْ وَاَبْنَآؤُكُمْ وَاِخْوَانُكُمْ وَاَزْوَاجُكُمْ وَعَشِيْرَتُكُمْ وَ
اَمْوَالُ ۨاقْتَرَفْتُمُوْهَا وَتِجَارَةٌ تَخْشَوْنَ كَسَادَهَا وَ
مَسٰكِنُ تَرْضَوْنَهَآ اَحَبَّ اِلَيْكُمْ مِّنَ اللّٰهِ وَرَسُوْلِهٖ وَ
جِهَادٍ فِيْ سَبِيْلِهٖ فَتَرَبَّصُوْا حَتّٰى يَاْتِيَ اللّٰهُ بِاَمْرِهٖ ؕ وَاللّٰهُ
لَا يَهْدِي الْقَوْمَ الْفٰسِقِيْنَ ﴿٢٤﴾ ع لَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ فِيْ ع ٣ ٨ ٩
مَوَاطِنَ كَثِيْرَةٍ ۙ وَّيَوْمَ حُنَيْنٍ ۙ اِذْ اَعْجَبَتْكُمْ كَثْرَتُكُمْ
فَلَمْ تُغْنِ عَنْكُمْ شَيْـًٔا وَّضَاقَتْ عَلَيْكُمُ الْاَرْضُ بِمَا
رَحُبَتْ ثُمَّ وَلَّيْتُمْ مُّدْبِرِيْنَ ﴿٢٥﴾ ج ثُمَّ اَنْزَلَ اللّٰهُ سَكِيْنَتَهٗ
عَلٰى رَسُوْلِهٖ وَعَلَى الْمُؤْمِنِيْنَ وَاَنْزَلَ جُنُوْدًا لَّمْ تَرَوْهَا
وَعَذَّبَ الَّذِيْنَ كَفَرُوْا ؕ وَذٰلِكَ جَزَآءُ الْكٰفِرِيْنَ ﴿٢٦﴾

21. அவர்களுடைய இரட்சகன் தன்னிடமிருந்து கிருபையையும், பொருத்தத்தையும் (அளித்து), சுவனங்களையும் ( தருவதாக) அவர்களுக்கு நன்மாராயங்கூறுகிறான்; அவர்களுக்கு அவற்றில் என்றென்றும் நிலையான சுகங்களுண்டு.

22. அவற்றில் அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; நிச்சயமாக அல்லாஹ்_ அவனிடத்தில் (அவர்களுக்கு) மகத்தான கூலி உண்டு.

23. விசுவாசங்கொண்டோரே! உங்களுடைய தந்தையர்களையும், உங்களுடைய சகோதரர்களையும்_விசுவாசத்தைவிட நிராகரிப்பை அவர்கள் நேசித்தால்_ நீங்கள் அவர்களை (உங்கள்) பாதுகாப்பாளர்களாக எடுத்துக் கொள்ள வேண்டாம்; உங்களில் எவரேனும் அவர்களைப் பாதுகாப்பாளர்களாக எடுத்துக்கொண்டால், அவர்கள்தாம் அநியாயக்காரர்கள்.

24. (நபியே! விசுவாசிகளிடம்,) நீர் கூறுவீராக: உங்களுடைய தந்தைகளும், உங்களுடைய ஆண்மக்களும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய மனைவியரும், உங்களுடைய குடும்பத்தினரும், நீங்கள் எதனைச் சம்பாதித்து வைத்திருக்கிறீர்களோ அந்தச் செல்வங்களும், நீங்கள் எதனுடைய நஷ்டத்தைப் பயப்படுகிறீர்களோ அத்தகைய வியாபாரமும், நீங்கள் எதனை திருப்திப் படுகிறீர்களோ அத்தகைய (உங்கள்) குடியிருப்பிடங்களும் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், அவனுடைய பாதையில் போர் செய்வதையும் விட உங்களுக்கு மிக்க விருப்பமானவைகளாக இருந்தால், அப்போது நீங்கள் (தண்டனையைப்பற்றிய) அல்லாஹ்வுடைய கட்டளை வரும் வரையில் எதிர்பார்த்திருங்கள்; மேலும், பாவிகளான கூட்டத்தினரை, அல்லாஹ் நேர் வழியில் செலுத்தவுமாட்டான்.

25. அநேக (யுத்த) களங்களில் திட்டமாக அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்திருக்கின்றான்; இன்னும், 'ஹுனைன்' யுத்தத்தன்று உங்களை அகமகிழச்செய்துகொண்டிருந்த உங்களுடைய (ஜனத்தொகையின்) அதிகம் உங்களுக்கு யாதொரு பயனுமளிக்கவில்லை_ பூமியானது அது விசாலமாகயிருந்தும் உங்களுக்கு நெருக்கடியாகி விட்டது; பின்னர் நீங்கள் புறமுதுகிட்டவர்களாகத் திரும்பிவிட்டீர்கள்.

26. பின்னர், அல்லாஹ் தன்னுடைய தூதரின்மீதும், விசுவாசிகளின்மீதும் தன்னுடைய அமைதியை இறக்கியருளினான்; இன்னும் படைகளை (உங்களுக்கு உதவியாக) இறக்கி வைத்தான்; அவற்றை நீங்கள் பார்க்கவில்லை; இன்னும் நிராகரித்துக்கொண்டிருந்தோரை வேதனை செய்தான்; இதுவே நிராகரிப்போருக்குரிய கூலியாகும்.

ثُمَّ يَتُوبُ اللّٰهُ مِنْ بَعْدِ ذٰلِكَ عَلٰى مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ
غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿٢٧﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِنَّمَا الْمُشْرِكُوْنَ
نَجَسٌ فَلَا يَقْرَبُوا الْمَسْجِدَ الْحَرَامَ بَعْدَ عَامِهِمْ هٰذَا ۚ وَ
اِنْ خِفْتُمْ عَيْلَةً فَسَوْفَ يُغْنِيْكُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖۤ اِنْ شَآءَ ؕ
اِنَّ اللّٰهَ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿٢٨﴾ قَاتِلُوا الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ بِاللّٰهِ
وَلَا بِالْيَوْمِ الْاٰخِرِ وَلَا يُحَرِّمُوْنَ مَا حَرَّمَ اللّٰهُ وَ
رَسُوْلُهٗ وَلَا يَدِيْنُوْنَ دِيْنَ الْحَقِّ مِنَ الَّذِيْنَ
اُوْتُوا الْكِتٰبَ حَتّٰى يُعْطُوا الْجِزْيَةَ عَنْ يَّدٍ وَّهُمْ
صٰغِرُوْنَ ﴿٢٩﴾ ع وَقَالَتِ الْيَهُوْدُ عُزَيْرُ ِۨ ابْنُ اللّٰهِ وَقَالَتِ ع ٥ ١٠
النَّصٰرَى الْمَسِيْحُ ابْنُ اللّٰهِ ؕ ذٰلِكَ قَوْلُهُمْ بِاَفْوَاهِهِمْ ۚ
يُضَاهِئُوْنَ قَوْلَ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ قَبْلُ ؕ
قٰتَلَهُمُ اللّٰهُ ۚ اَنّٰى يُؤْفَكُوْنَ ﴿٣٠﴾ اِتَّخَذُوْۤا اَحْبَارَهُمْ
وَرُهْبَانَهُمْ اَرْبَابًا مِّنْ دُوْنِ اللّٰهِ وَالْمَسِيْحَ
ابْنَ مَرْيَمَ ۚ وَمَاۤ اُمِرُوْۤا اِلَّا لِيَعْبُدُوْۤا اِلٰهًا وَّاحِدًا ۚ
لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ؕ سُبْحٰنَهٗ عَمَّا يُشْرِكُوْنَ ﴿٣١﴾

27.அப்பால்_(அவர்கள் மனம்திருந்தி மன்னிப்புக் கோரினால்) அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு அதன் பின்னரும், தவ்பாவை (_பாவமன்னிப்பை) அங்கீகரித்துக் கொள்கிறான்; மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்; மிகக் கிருபையுடையவன்.

28. விசுவாசங்கொண்டோரே! நிச்சயமாக, இணைவைத்துக் கொண்டிருப் போரெல்லாம் அசுத்தமானவர்களே; ஆகவே அவர்கள் இவ்வருடத்திற்குப் பின்னர் சிறப்புற்ற இப்பள்ளியை (மஸ்ஜிதுல் ஹராமை) நெருங்கவேண்டாம்; வறுமையை நீங்கள் பயந்தால் அல்லாஹ்(விரைவில்)தன் பேரருளைக் கொண்டு அவன் நாடினால், உங்களைச் செல்வந்தர்களாக்கிவிடுவான் (என்பதை அறிந்து கொள்ளுங்கள்); நிச்சயமாக அல்லாஹ் (யாவையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

29.(விசுவாசிகளே!) வேதம் கொடுக்கப்பட்டவர்களில் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங் கொள்ளாமலும், அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் விலக்கியவைகளை விலக்கிக் கொள்ளாமலும், இந்த உண்மை மார்க்கத்தை, மார்க்கமாக ஏற்காமலும் இருக்கின்றனரே, அத்தகையோரை_ இழிவடைந்தவர்களாக அவர்கள் (தங்கள்)கையால் "ஜிஸ்யா"(வரியை)கொடுக்கும் வரை நீங்கள் (அவர்களுடன் )யுத்தம் புரியுங்கள்.

30. மேலும் யூதர்கள்," உஜைர் " அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகின்றனர்; கிறிஸ்தவர்கள்"மஸீஹ்" அல்லாஹ்வுடைய மகன் என்றும் கூறுகின்றனர்; அது இவர்கள் தங்கள் வாய்களால் கூறும் கூற்றே ஆகும்; இவர்களுக்கு முன்னிருந்த நிராகரிப்போரின் கூற்றுக்கு(கூற்றால் அவர்களைப்போன்று) ஒத்திருக்கிறார்கள்; அல்லாஹ் இவர்களை அழித்துவிடுவானாக! (சத்தியத்தைப் புறக்கணித்து,) இவர்கள் எங்கு திருப்பப்படுகிறார்கள்?

31.(இவ்வாறே) அவர்கள் அல்லாஹ்வையன்றித் தங்கள் பாதிரிகளையும், தங்கள் சந்நியாசிகளையும், மர்யமுடைய குமாரர் மஸீஹையும் தங்கள் தெய்வங்களாக எடுத்துக் கொண்டனர். இன்னும், ஒரே ஒரு இரட்சகனையே வணங்கவேண்டுமென்றல்லாது (வேறு எதனையும்) அவர்கள் கட்டளையிடப்படவில்லை; அவனையன்றி வணக்கத்திற்குரியவன், (வேறெவரும்) இல்லை; அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் அவன் மிகவும் பரிசுத்தமானவன்.

النصف

يُرِيدُونَ أَن يُطْفِـُٔوا نُورَ اللَّهِ بِأَفْوَاهِهِمْ وَيَأْبَى
اللَّهُ إِلَّا أَن يُتِمَّ نُورَهُ وَلَوْ كَرِهَ الْكٰفِرُونَ ﴿٣٢﴾ هُوَ
الَّذِي أَرْسَلَ رَسُولَهُ بِالْهُدَىٰ وَدِينِ الْحَقِّ لِيُظْهِرَهُ
عَلَى الدِّينِ كُلِّهِ ۙ وَلَوْ كَرِهَ الْمُشْرِكُونَ ﴿٣٣﴾ يَا أَيُّهَا الَّذِينَ
اٰمَنُوا إِنَّ كَثِيرًا مِّنَ الْأَحْبَارِ وَالرُّهْبَانِ لَيَأْكُلُونَ
أَمْوَالَ النَّاسِ بِالْبَاطِلِ وَيَصُدُّونَ عَن سَبِيلِ اللَّهِ ۗ
وَالَّذِينَ يَكْنِزُونَ الذَّهَبَ وَالْفِضَّةَ وَلَا يُنفِقُونَهَا فِي
سَبِيلِ اللَّهِ ۙ فَبَشِّرْهُم بِعَذَابٍ أَلِيمٍ ﴿٣٤﴾ ۙ يَوْمَ يُحْمَىٰ عَلَيْهَا
فِي نَارِ جَهَنَّمَ فَتُكْوَىٰ بِهَا جِبَاهُهُمْ وَجُنُوبُهُمْ وَظُهُورُهُمْ ۖ
هٰذَا مَا كَنَزْتُمْ لِأَنفُسِكُمْ فَذُوقُوا مَا كُنتُمْ تَكْنِزُونَ ﴿٣٥﴾
إِنَّ عِدَّةَ الشُّهُورِ عِندَ اللَّهِ اثْنَا عَشَرَ شَهْرًا فِي
كِتٰبِ اللَّهِ يَوْمَ خَلَقَ السَّمٰوٰتِ وَالْأَرْضَ مِنْهَا
أَرْبَعَةٌ حُرُمٌ ۚ ذٰلِكَ الدِّينُ الْقَيِّمُ ۙ فَلَا تَظْلِمُوا
فِيهِنَّ أَنفُسَكُمْ ۚ وَقَاتِلُوا الْمُشْرِكِينَ كَافَّةً كَمَا
يُقَاتِلُونَكُمْ كَافَّةً ۚ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ مَعَ الْمُتَّقِينَ ﴿٣٦﴾

32. அவர்கள் தங்கள் வாய்களினால் (ஊதி) அல்லாஹ்வின் பிரகாசத்தை அணைத்துவிட நாடுகின்றனர்; இந்நிராகரிப்போர் வெறுத்தபோதிலும், அல்லாஹ் தன்னுடைய பிரகாசத்தை பூர்த்தியாக்கி வைப்பதைத் தவிர (வேறெதையும்) நாடவில்லை.

33. அவன் எத்தகையவனென்றால், தன்னுடைய தூதரை நேர்வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக்கொண்டும் அனுப்பி வைத்தான்; இணைவைத்துக்கொண்டிருப்போர் (அதனை) வெறுத்தபோதிலும், (உலகிலுள்ள) எல்லா மார்க்கங்களையும் விட அதை மேலோங்கச்செய்யவே (அவ்வாறு செய்தான்).

34. விசுவாசங்கொண்டோரே! நிச்சயமாக (அவர்களுடைய) பாதிரிகளிலும், சந்நியாசிகளிலும் அநேகர், மனிதர்களின் பொருட்களைத் தவறான முறையில் உண்ணுகிறார்கள் ; இன்னும் (மக்கள்) அல்லாஹ்வுடைய வழியில் செல்வதற்கும் தடை விதிக்கின்றனர் ; (ஆகவே, இவர்களுக்கும்) இன்னும், பொன்னையும், வெள்ளியையும் சேகரித்து வைத்துக்கொண்டு அதனை அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்யாதிருக்கின்றனரே அத்தகையவர்களுக்கும், (நபியே!) நீர் துன்புறுத்தும் வேதனை உண்டு என்று நன்மாராயம் கூறுவீராக!

35. (பொன், வெள்ளியாகிய) அவற்றை நரக நெருப்பில் பழுக்கக்காய்ச்சப்பட்டு, பின்னர் அவற்றைக்கொண்டு அவர்களுடைய நெற்றிகளிலும், விலாப் புறங்களிலும், அவர்களுடைய முதுகுகளிலும் சூடுபோடப்படும்நாளில்_ "உங்களுக்காக நீங்கள் சேகரித்து வைத்திருந்தது இதுதாம்; ஆகவே, நீங்கள் சேகரித்து வைத்திருந்ததை சுவைத்துப் பாருங்கள்" (என்று அப்போது அவர்களுக்குக் கூறப்படும்).

36. வானங்களையும், பூமியையும் படைத்த நாளில், (இருந்து மறுமைநாள் வரை நடந்தேறும் அனைத்து விஷயங்களும் எழுதப்பட்ட) அல்லாஹ்வின் பதிவேட்டில் உள்ளவாறு நிச்சயமாக மாதங்களின் எண்ணிக்கை அல்லாஹ்விடத்தில் (ஒரு வருடத்திற்குப்) பன்னிரண்டு மாதங்களாகும்; அவற்றில் நான்கு (மாதங்கள்) புனிதமானவையாகும்; (இவ்வாறு அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று செயல்படுவதற்குரிய) அதுதான் நேரான மார்க்கமாகும். ஆகவே, அவற்றில் (நீங்கள் வரம்புமீறி) உங்களுக்கு நீங்களே அநீதமிழைத்துக் கொள்ளாதீர்கள்; இன்னும் இணைவைப்பவர்களுடன் அவர்கள் ஒருங்கிணைந்து உங்களுடன் போர் செய்வதைப்போன்று நீங்களும் ஒருங்கிணைந்து போர் செய்யுங்கள் ; நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோருடன் இருக்கின்றான் என்பதையும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.

إِنَّمَا النَّسِيٓءُ زِيَادَةٌ فِي الْكُفْرِ يُضَلُّ بِهِ الَّذِينَ كَفَرُوا
يُحِلُّونَهٗ عَامًا وَّيُحَرِّمُونَهٗ عَامًا لِّيُوَاطِئُوا عِدَّةَ مَا حَرَّمَ
اللّٰهُ فَيُحِلُّوا مَا حَرَّمَ اللّٰهُ ؕ زُيِّنَ لَهُمْ سُوٓءُ اَعْمَالِهِمْ ؕ وَاللّٰهُ
لَا يَهْدِي الْقَوْمَ الْكٰفِرِينَ ﴿٣٧﴾ يٰٓاَيُّهَا الَّذِينَ اٰمَنُوا مَا لَكُمْ ع ٥ ٨ ١١
اِذَا قِيلَ لَكُمُ انْفِرُوا فِي سَبِيلِ اللّٰهِ اثَّاقَلْتُمْ اِلَى الْاَرْضِ ؕ
اَرَضِيتُمْ بِالْحَيٰوةِ الدُّنْيَا مِنَ الْاٰخِرَةِ ۚ فَمَا مَتَاعُ الْحَيٰوةِ الدُّنْيَا
فِي الْاٰخِرَةِ اِلَّا قَلِيلٌ ﴿٣٨﴾ اِلَّا تَنْفِرُوا يُعَذِّبْكُمْ عَذَابًا اَلِيمًا ۙ
وَّيَسْتَبْدِلْ قَوْمًا غَيْرَكُمْ وَلَا تَضُرُّوهُ شَيْئًا ؕ وَاللّٰهُ عَلٰى
كُلِّ شَيْءٍ قَدِيرٌ ﴿٣٩﴾ اِلَّا تَنْصُرُوهُ فَقَدْ نَصَرَهُ اللّٰهُ اِذْ اَخْرَجَهُ
الَّذِينَ كَفَرُوا ثَانِيَ اثْنَيْنِ اِذْ هُمَا فِي الْغَارِ اِذْ يَقُولُ
لِصَاحِبِهٖ لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا ۚ فَاَنْزَلَ اللّٰهُ سَكِينَتَهٗ
عَلَيْهِ وَاَيَّدَهٗ بِجُنُودٍ لَّمْ تَرَوْهَا وَجَعَلَ كَلِمَةَ الَّذِينَ كَفَرُوا
السُّفْلٰى ؕ وَكَلِمَةُ اللّٰهِ هِيَ الْعُلْيَا ؕ وَاللّٰهُ عَزِيزٌ حَكِيمٌ ﴿٤٠﴾
اِنْفِرُوا خِفَافًا وَّثِقَالًا وَّجَاهِدُوا بِاَمْوَالِكُمْ وَاَنْفُسِكُمْ
فِي سَبِيلِ اللّٰهِ ؕ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُونَ ﴿٤١﴾

37. (சிறப்புற்ற மாதங்களை, அவர்கள் விருப்பப்படி) முன்பின் ஆக்குவதெல்லாம் நிச்சயமாக நிராகரிப்பில் அதிகப்படுத்துவதாகும். அதனால் நிராகரித்துக் கொண்டிருப்போர் வழி கெடுக்கப்படுகின்றனர்; ஒரு வருடத்தில் அ(வ்வாறு முன்பின் ஆக்குவ )தை ஆகுமாக்கிக் கொள்கின்றனர்; மற்றொரு வருடத்தில் அதை ஆகாததாக்கி விடுகின்றனர்; (இவ்வாறு செய்வதெல்லாம்,) அல்லாஹ் தடுத்திருக்கும் மாதங்களின் எண்ணிக்கைக்கு (அவர்களின் எண்ணிக்கையை) சரியாக்குவதற்காகத்தான்; (பின்னர்) அல்லாஹ் தடுத்தவற்றை அவர்கள் ஆகுமாக்கிக் கொள்கின்றனர்; அவர்களுடைய செயல்களின் தீமை (ஷைத்தானால்) அவர்களுக்கு அலங்காரமாக ஆக்கப்பட்டுவிட்டது; மேலும் அல்லாஹ், நிராகரிக்கும் (இக்) கூட்டத்தாரை நேர் வழியில் செலுத்தமாட்டான்.

38. விசுவாசங்கொண்டோரே! "அல்லாஹ்வுடைய பாதையில் (போர் செய்ய) நீங்கள் புறப்படுங்கள்" என்று உங்களுக்குக் கூறப்பட்டால், (அவ்வாறு புறப்படாமல்) நீங்கள் பூமியின்பால் சாய்ந்துவிடுகிறீர்களே, உங்களுக்கு என்ன (நேர்ந்து விட்டது)? மறுமையைவிட இவ்வுலக வாழ்க்கையைக்கொண்டு நீங்கள் திருப்தியடைந்துவிட்டீர்களா? மறுமை(யின் வாழ்க்கை)க்கு முன்பாக இவ்வுலக வாழ்வின் இன்பம் வெகு சொற்பமே தவிர (வேறு )இல்லை.

39. (அல்லாஹ்உடைய பாதையில் போர்செய்ய அழைக்கப்பட்டு) நீங்கள் புறப்படாவிடில், மிகத் துன்புறுத்தும் வேதனையால் (அல்லாஹ்வாகிய) அவன் உங்களை வேதனை செய்வான்; அன்றியும், (உங்களைப் போக்கி உங்களிடத்தில்) உங்களல்லாத (வேறு) சமூகத்தாரை பகரமாக்கி விடுவான் ; நீங்கள் எந்த ஒன்றாலும் அவனுக்குத் தீங்கிழைக்கவுமுடியாது; (ஏனென்றால்) அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

40. (நம்முடைய தூதராகிய) அவருக்கு நீங்கள் உதவி செய்யாவிட்டால், (அதனால் அவருக்கு எந்த நஷ்டமும் ஏற்பட்டு விடாது; ஏனென்றால்) நிராகரிப்போர் அவரை (ஊரைவிட்டு) வெளியேற்றிய சமயத்தில் திட்டமாக அல்லாஹ் அவருக்கு உதவி செய்து இருக்கின்றான்; இருவரில் ஒருவராக அவர் இருக்க_ (எதிரிகள் சூழ்ந்து கொண்ட சமயத்தில் அந்த) இருவரும் ('தவ்ர்' மலைக்)குகையில் இருந்த போது, (நம் தூதர்) தன்னுடன் (குகையில்) இருந்த தோழ(ராகிய அபூபக்)ரை நோக்கி "நீர் கவலைப்படாதீர்; நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான்" என்று அவர் கூறியநேரத்தில் _(அல்லாஹ் அவருக்கு உதவி செய்துள்ளான்) அப்போது அல்லாஹ் அவர் மீது தன்னுடைய அமைதியை இறக்கி வைத்தான்; மேலும், அவரைப் படைகளைக்கொண்டு பலப்படுத்தினான்; அவற்றை நீங்கள் பார்க்கவில்லை; இன்னும், நிராகரிப்போரின் வாக்கை (நிறைவேறாது) கீழாக்கினான்; (ஏனென்றால்) மேலும், அல்லாஹ்வின் வாக்கு_அதுதான் (எப்போதும்) உயர்வுடையது; அன்றியும் அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

41. இலேசாகவும், கனமாகவும் (_இளைஞர்கள், முதியவர்கள், செல்வந்தர்கள், செல்வமில்லாதவர்கள், வாகனத்தில் ஏறியவர்கள், நடப்பவர்கள் ஆகியோர்) புறப்பட்டு, உங்களின் செல்வங்களாலும், உங்களின் உயிர்களாலும் அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் போர் செய்யுங்கள்; நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால் இதுவே உங்களுக்கு மிகச்சிறந்ததாகும்.

لَوْ كَانَ عَرَضًا قَرِيْبًا وَّسَفَرًا قَاصِدًا لَّاتَّبَعُوْكَ
وَلٰكِنْۢ بَعُدَتْ عَلَيْهِمُ الشُّقَّةُ ؕ وَسَيَحْلِفُوْنَ بِاللّٰهِ
لَوِ اسْتَطَعْنَا لَخَرَجْنَا مَعَكُمْ ۚ يُهْلِكُوْنَ اَنْفُسَهُمْ ۚ
وَاللّٰهُ يَعْلَمُ اِنَّهُمْ لَكٰذِبُوْنَ ﴿۴۲﴾ عَفَا اللّٰهُ عَنْكَ ۚ لِمَ ع ٦ ٥ ١٢
اَذِنْتَ لَهُمْ حَتّٰى يَتَبَيَّنَ لَكَ الَّذِيْنَ صَدَقُوْا وَتَعْلَمَ
الْكٰذِبِيْنَ ﴿۴۳﴾ لَا يَسْتَاْذِنُكَ الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِاللّٰهِ
وَالْيَوْمِ الْاٰخِرِ اَنْ يُّجَاهِدُوْا بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ ؕ
وَاللّٰهُ عَلِيْمٌۢ بِالْمُتَّقِيْنَ ﴿۴۴﴾ اِنَّمَا يَسْتَاْذِنُكَ الَّذِيْنَ
لَا يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَارْتَابَتْ قُلُوْبُهُمْ
فَهُمْ فِيْ رَيْبِهِمْ يَتَرَدَّدُوْنَ ﴿۴۵﴾ وَلَوْ اَرَادُوا الْخُرُوْجَ
لَاَعَدُّوْا لَهٗ عُدَّةً وَّلٰكِنْ كَرِهَ اللّٰهُ انْۢبِعَاثَهُمْ
فَثَبَّطَهُمْ وَقِيْلَ اقْعُدُوْا مَعَ الْقٰعِدِيْنَ ﴿۴۶﴾
لَوْ خَرَجُوْا فِيْكُمْ مَّا زَادُوْكُمْ اِلَّا خَبَالًا
وَّلَاَاوْضَعُوْا خِلٰلَكُمْ يَبْغُوْنَكُمُ الْفِتْنَةَ ۚ
وَفِيْكُمْ سَمّٰعُوْنَ لَهُمْ ؕ وَاللّٰهُ عَلِيْمٌۢ بِالظّٰلِمِيْنَ ﴿۴۷﴾

42. (நபியே! நீர் எதன்பால் அவர்களை அழைத்தீரோ) அது சமீபமான (உடனே கிடைக்கக்கூடியதான) பொருளாகவும்,(வெகு தூரமில்லாத)நடு நிலையான பயணமாகவுமிருந்தால், நிச்சயமாக அவர்கள் உம்மைப் பின்பற்றி வந்தேயிருப்பார்கள்; எனினும், மிக தூரமான பயணம் அவர்கள் மீது பெரும் சிரமத்தைத்தந்தது; (ஆதலால், அவர்கள்) " நாங்கள் சக்தி பெற்றிருந்தால், நிச்சயமாக நாங்கள் உங்களுடன் வந்திருப்போம்" என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்(து கூறு)வார்கள். (இதனால்) அவர்கள் தங்களையே அழித்துக் கொள்கின்றனர்; மேலும், நிச்சயமாக அவர்கள் பொய்யர்கள்தான் என்பதை அல்லாஹ் நன்கறிவான்.

43. (நபியே!) அல்லாஹ் உம்மை மன்னித்தருள்வானாக! (போருக்கு வராது தங்கிவிட்ட) அவர்களில் உண்மை சொல்பவர்கள் (யார் என்பது) உமக்குத் தெளிவாகி, பொய்யர்களை நீர் அறியும் வரை ஏன் அவர்களுக்கு நீர் அனுமதியளித்தீர் ?

44. அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங் கொள்கிறார்களே அத்தகையோர்_ தங்கள் செல்வங்களைக் கொண்டும் , தம் உயிர்களைக் கொண்டும் யுத்தம் புரிவதற்கு உம்மிடம் அனுமதி கோரமாட்டார்கள்; மேலும், பயபக்தியுடையவர்களை அல்லாஹ் நன்கறிகிறவன்.

45. (போருக்குச்செல்லாமலிருக்க) உம்மிடம் அனுமதி கேட்பதெல்லாம் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங் கொள்ளாதவர்கள்தாம்; இன்னும், அவர்களுடைய இதயங்கள் சந்தேகத்தில் ஆழ்ந்து விட்டன; ஆகவே, அவர்கள் தங்கள் சந்தேகத்திலேயே தடுமாறிக்கொண்டிருக்கின்றனர்.

46. மேலும், அவர்கள்(போர் செய்யப்) புறப்படுவதை நாடியிருந்தார்களானால், அதற்கு வேண்டிய தயாரிப்புகளை அவர்கள் செய்திருப்பார்கள்; எனினும் (உம்முடன்) அவர்கள் புறப்படுவதை அல்லாஹ் வெறுத்து, அவர்களை(ப் புறப்படாது) தடுத்தும் விட்டான். "( யுத்தத்திற்கு வரமுடியாது வீட்டில் ) உட்கார்ந்திருப்போருடன் நீங்களும் உட்கார்ந்து விடுங்கள்" என்று (அவர்களுக்குக்)கூறப்பட்டு விட்டது.

47. அவர்கள் உங்களுடன் புறப்பட்டிருந்தாலும் குழப்பத்தைத் தவிர (வேறெதையும்)உங்களுக்கு அவர்கள் அதிகப்படுத்தியிருக்கமாட்டார்கள்;மேலும், உங்களுக்கு குழப்பத்தைத்தேடியவர்களாக இருக்கும் நிலையில், உங்களுக்கிடையே கோள்மூட்டியும் இருப்பார்கள்; அவர்களுக்காக (உங்களின் விஷயங்களை) செவியேற்போரும் உங்களில் இருக்கிறார்கள்; இன்னும் அல்லாஹ் அநியாயக்காரர்களை நன்கறிகிறவன்.

لَقَدِ ابْتَغَوُا الْفِتْنَةَ مِنْ قَبْلُ وَقَلَّبُوْا لَكَ الْاُمُوْرَ
حَتّٰى جَآءَ الْحَقُّ وَظَهَرَ اَمْرُ اللّٰهِ وَهُمْ كٰرِهُوْنَ ﴿٤٨﴾
وَمِنْهُمْ مَّنْ يَّقُوْلُ ائْذَنْ لِّىْ وَلَا تَفْتِنِّىْ ؕ اَلَا فِى
الْفِتْنَةِ سَقَطُوْا ؕ وَاِنَّ جَهَنَّمَ لَمُحِيْطَةٌۢ بِالْكٰفِرِيْنَ ﴿٤٩﴾
اِنْ تُصِبْكَ حَسَنَةٌ تَسُؤْهُمْ ۚ وَاِنْ تُصِبْكَ مُصِيْبَةٌ
يَّقُوْلُوْا قَدْ اَخَذْنَآ اَمْرَنَا مِنْ قَبْلُ وَيَتَوَلَّوْا وَّهُمْ
فَرِحُوْنَ ﴿٥٠﴾ قُلْ لَّنْ يُّصِيْبَنَآ اِلَّا مَا كَتَبَ اللّٰهُ لَنَا ۚ هُوَ
مَوْلٰىنَا ۚ وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُوْنَ ﴿٥١﴾ قُلْ
هَلْ تَرَبَّصُوْنَ بِنَآ اِلَّآ اِحْدَى الْحُسْنَيَيْنِ ؕ وَنَحْنُ
نَتَرَبَّصُ بِكُمْ اَنْ يُّصِيْبَكُمُ اللّٰهُ بِعَذَابٍ مِّنْ عِنْدِهٖۤ
اَوْ بِاَيْدِيْنَا ۖ فَتَرَبَّصُوْۤا اِنَّا مَعَكُمْ مُّتَرَبِّصُوْنَ ﴿٥٢﴾ قُلْ
اَنْفِقُوْا طَوْعًا اَوْ كَرْهًا لَّنْ يُّتَقَبَّلَ مِنْكُمْ ؕ اِنَّكُمْ كُنْتُمْ قَوْمًا
فٰسِقِيْنَ ﴿٥٣﴾ وَمَا مَنَعَهُمْ اَنْ تُقْبَلَ مِنْهُمْ نَفَقٰتُهُمْ اِلَّاۤ
اَنَّهُمْ كَفَرُوْا بِاللّٰهِ وَبِرَسُوْلِهٖ وَلَا يَاْتُوْنَ الصَّلٰوةَ
اِلَّا وَهُمْ كُسَالٰى وَلَا يُنْفِقُوْنَ اِلَّا وَهُمْ كٰرِهُوْنَ ﴿٥٤﴾

48. இதற்கு முன்னரும், திட்டமாக அவர்கள் குழப்பத்தையே தேடிக்கொண்டிருந்தார்கள்; உம்முடைய காரியங்களையும் (தலைகீழாய்ப்) புரட்டிக் கொண்டே இருந்தனர்; முடிவாக, உண்மை வந்து விட்டது_ மேலும்,அவர்கள் வெறுக்கக்கூடியவர்களாக இருக்க, அல்லாஹ்வின் காரியம் (மார்க்கம்) வெளிப்பட்டு (மேலோங்கி)விட்டது.

49. (நபியே! நான் வீட்டில் தங்கியிருக்க )"எனக்கு அனுமதி தாரும்; நீர் என்னைச் சோதனைக்குள்ளாக்கியும் விடாதீர்" என்று கூறுவோரும் அவர்களில் (சிலர்) இருக்கின்றனர்; (இவ்வாறு கூறும் ) அவர்கள் சோதனையில் விழுந்து விட்டனர் என்பதை அறிந்து கொள்ளுங்கள்; மேலும், நிச்சயமாக நரகம் நிராகரித்துக் கொண்டிருப்போரை சூழ்ந்து கொண்டிருக்கிறது.

50. (நபியே!) உமக்கு யாதொரு நன்மை ஏற்படின் (அது) அவர்களுக்குத் துன்பத்தைத் தருகின்றது; உமக்கு யாதொரு துன்பம் ஏற்படின்" திட்டமாக (இதற்கு) முன்னரே எங்களுடைய காரியத்தை (உங்களை சம்பந்தப்படுத்தாது எச்சரிக்கையாக ) நாங்கள் எடுத்துக் கொண்டோம்" என்று கூறி மிக்க மகிழ்ச்சியடைந்தவர்களாக (உம்மை விட்டுத்) திரும்பிச் சென்றும் விடுகின்றனர்.

51. (ஆகவே நபியே! அவர்களிடம்) "அல்லாஹ் எங்களுக்கு விதித்துள்ளதைத் தவிர (வேறொன்றும்) நிச்சயமாக எங்களை அணுகவே செய்யாது; அவன்(தான்) எங்களுடைய பாதுகாவலன்" என்று நீர் கூறுவீராக! அல்லாஹ்வின் மீதே விசுவாசிகள் (தங்களுடைய காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைக்கவும்.

52. (நபியே!) நீர் கூறுவீராக: (வெற்றி அல்லது வீர மரணம் ஆகிய) இரு அழகிய நன்மைகளில் ஒன்றைத் தவிர வேறு எதையும் நீங்கள் எங்களுக்காக எதிர் பார்க்கின்றீர்களா? ஆனால் அல்லாஹ் தன்னிடத்திலிருந்தோ , அல்லது எங்கள் கைகளைக்கொண்டோ உங்களுக்கு வேதனையை ஏற்படுத்துவதை உங்களுக்காக நாங்கள் எதிர்பார்க்கின்றோம்; (ஆகவே,) நீங்கள் (எங்களுக்கு வரவேண்டியதை) எதிர்பாருங்கள்; நிச்சயமாக நாங்கள் ( உங்களுக்கு வரவேண்டியதை) உங்களுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

53. "நீங்கள் விருப்பத்துடனோ அல்லது வெறுப்புடனோ (தர்மமாகச்) செலவு செய்யுங்கள்; (அது) உங்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படவே மாட்டாது; (ஏனென்றால்,) நிச்சயமாக நீங்கள் பாவம் செய்யும் கூட்டத்தினர்களாகவே இருக்கின்றீர்கள்" என்றும் (நபியே!) நீர் கூறிவிடும்.

54. அவர்களுடைய (தர்மச்)செலவுகள் (அல்லாஹ்வினால்) அங்கீகரிக்கப்படுவதை அவர்களுக்குத்தடுத்தது, நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் நிராகரித்து விட்டார்கள் என்பதற்காக அல்லாமல் (வேறு) இல்லை. மேலும், அவர்கள் சோம்பேறிகளாகவேயன்றி தொழுகைக்கு வருவதில்லை ; வெறுப்படைந்தவர்களாகவே தவிர அவர்கள் (தர்மச்)செலவுகள் செய்வதுமில்லை.

فَلَا تُعۡجِبۡكَ اَمۡوَالُهُمۡ وَلَاۤ اَوۡلَادُهُمۡ ؕ اِنَّمَا یُرِیۡدُ اللّٰهُ لِیُعَذِّبَهُمۡ
بِهَا فِی الۡحَیٰوةِ الدُّنۡیَا وَتَزۡهَقَ اَنۡفُسُهُمۡ وَهُمۡ كٰفِرُوۡنَ ﴿۵۵﴾
وَیَحۡلِفُوۡنَ بِاللّٰهِ اِنَّهُمۡ لَمِنۡكُمۡ ؕ وَمَا هُمۡ مِّنۡكُمۡ وَلٰكِنَّهُمۡ قَوۡمٌ
یَّفۡرَقُوۡنَ ﴿۵۶﴾ لَوۡ یَجِدُوۡنَ مَلۡجَاً اَوۡ مَغٰرٰتٍ اَوۡ مُدَّخَلًا
لَّوَلَّوۡا اِلَیۡهِ وَهُمۡ یَجۡمَحُوۡنَ ﴿۵۷﴾ وَمِنۡهُمۡ مَّنۡ یَّلۡمِزُكَ
فِی الصَّدَقٰتِ ۚ فَاِنۡ اُعۡطُوۡا مِنۡهَا رَضُوۡا وَاِنۡ لَّمۡ یُعۡطَوۡا
مِنۡهَاۤ اِذَا هُمۡ یَسۡخَطُوۡنَ ﴿۵۸﴾ وَلَوۡ اَنَّهُمۡ رَضُوۡا مَاۤ اٰتٰىهُمُ اللّٰهُ
وَرَسُوۡلُهٗ ۙ وَقَالُوۡا حَسۡبُنَا اللّٰهُ سَیُؤۡتِیۡنَا اللّٰهُ مِنۡ فَضۡلِهٖ وَ
رَسُوۡلُهٗۤ ۙ اِنَّاۤ اِلَی اللّٰهِ رٰغِبُوۡنَ ﴿۵۹﴾ اِنَّمَا الصَّدَقٰتُ لِلۡفُقَرَآءِ ع ۱۴
وَالۡمَسٰكِیۡنِ وَالۡعٰمِلِیۡنَ عَلَیۡهَا وَالۡمُؤَلَّفَةِ قُلُوۡبُهُمۡ وَفِی
الرِّقَابِ وَالۡغٰرِمِیۡنَ وَفِیۡ سَبِیۡلِ اللّٰهِ وَابۡنِ السَّبِیۡلِ ؕ فَرِیۡضَةً
مِّنَ اللّٰهِ ؕ وَاللّٰهُ عَلِیۡمٌ حَكِیۡمٌ ﴿۶۰﴾ وَمِنۡهُمُ الَّذِیۡنَ یُؤۡذُوۡنَ
النَّبِیَّ وَیَقُوۡلُوۡنَ هُوَ اُذُنٌ ؕ قُلۡ اُذُنُ خَیۡرٍ لَّكُمۡ یُؤۡمِنُ
بِاللّٰهِ وَیُؤۡمِنُ لِلۡمُؤۡمِنِیۡنَ وَرَحۡمَةٌ لِّلَّذِیۡنَ اٰمَنُوۡا
مِنۡكُمۡ ؕ وَالَّذِیۡنَ یُؤۡذُوۡنَ رَسُوۡلَ اللّٰهِ لَهُمۡ عَذَابٌ اَلِیۡمٌ ﴿۶۱﴾

55. ஆகவே, (நபியே!) அவர்களுடைய செல்வங்களும், அவர்களுடைய மக்களும் (பெருகியிருப்பது) உம்மை வியப்படையச் செய்ய வேண்டாம்; அல்லாஹ் நாடுவதெல்லாம் அவைகளைக்கொண்டு அவர்களை இவ்வுலக வாழ்விலேயே வேதனை செய்யவும், அவர்கள் நிராகரிப்பவர்களாக இருக்கும் நிலைமையில் அவர்களுடைய உயிர்கள் பிரிவதையும்தான்.

56. "நிச்சயமாக அவர்கள் உங்களைச் சார்ந்தவர்கள்தாம்" என்று அவர்கள் அல்லாஹ்வைக்கொண்டு சத்தியமும் செய்கின்றனர்; அவர்களோ உங்களைச் சார்ந்தவர்களன்று; எனினும் அவர்கள் பயந்த கூட்டத்தவராவர்.

57. (தப்பித்துக்கொள்ள) ஓர் ஒதுங்குமிடத்தையோ அல்லது (மலைக்) குகைகளையோ அல்லது ஒரு சுரங்கத்தையோ அவர்கள் காண்பார்களேயானால் (உம்மிடமிருந்து விலகி) விரைந்தோடிய நிலையில் அவற்றின் பக்கம் அவர்கள் ஒதுங்கி விடுவார்கள்.

58. (நபியே! நீர்) தர்ம(ங்களை பங்கீடு செய்யும் விஷயங்)களில்உம்மைக் குறை கூறுவோரும் அவர்களில் (சிலர்) இருக்கின்றனர். ஆகவே, அதிலிருந்து அவர்களுக்குக்கொடுக்கப்பட்டால்அவர்கள் திருப்தியடைகின்றனர்; அதிலிருந்து அவர்களுக்கு கொடுக்கப்படாவிட்டாலோ அப்பொழுது ஆத்திரமடைகின்றனர்.

59. அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் அவர்களுக்கு கொடுத்ததைக்கொண்டு திருப்தியடைந்து, "அல்லாஹ் நமக்குப் போதுமானவன்; அல்லாஹ் தன் பேரருளிலிருந்தும், அவனுடைய தூதரும் (போர்க்களத்தில் கிடைத்த, வெற்றிப் பொருட்களிலிருந்து) கொடுப்பார்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின்பாலே (அவனிடமிருப்பதையே) நாங்கள் ஆசை கொண்டவர்கள்" என்றும் நிச்சயமாக அவர்கள் கூறியிருப்பார்களேயானால்(அது அவர்களுக்கு நலமாக இருந்திருக்கும்).

60. தர்மங்களெல்லாம் வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், அதற்காக (வசூல் செய்வது, கணக்கிடுவதுபோன்ற வேலைகளில்) உழைப்பவர்களுக்கும், (புதிதாக இஸ்லாத்தை தழுவியோரில்) எவர்களின் இதயங்கள் அன்பு செலுத்தப்பட வேண்டுமோ அத்தகையோருக்கும், இன்னும் (அடிமைகளின்) பிடரிகளை விடுதலை செய்வதற்கும், கடனில் மூழ்கியவர் களுக்கும், அல்லாஹ்வுடைய பாதையி(ல் செலவழிப்பதி)லும், வழிப் போக்கருக்கும் உரித்தானதாகும்; (இது)அல்லாஹ் ஏற்படுத்திய கடமையாகும்; மேலும், அல்லாஹ் நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

61 (வேஷதாரிகளான) அவர்களில் நபியைத் துன்புறுத்துவோரும் இருக்கின்றனர்; "அவர் (எதைக் கூறியபோதிலும் அதைக் கேட்டு உண்மைப் படுத்தும்) செவி" என்றும் அவர்கள் கூறுகின்றனர்; (அதற்கு நபியே!) நீர் கூறுவீராக: (அவர்) "உங்களுக்கு நன்மையின் செவியாக இருக்கிறார்; அவர் அல்லாஹ்வை ஈமான் கொள்கிறார்; விசுவாசிகளையும் உண்மைப்படுத்துகிறார்; அன்றியும், உங்களில் விசுவாசங் கொண்டோருக்கு அருளாகவும் ஆவார்; ( ஆகவே) அல்லாஹ்வுடைய (அந்தத்) தூதரைத் துன்புறுத்துகிறார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு மிகத் துன்புறுத்தும் வேதனையுண்டு".

يَحْلِفُونَ بِاللّٰهِ لَكُمْ لِيُرْضُوكُمْ ۚ وَاللّٰهُ وَرَسُولُهٗۤ
اَحَقُّ اَنْ يُّرْضُوْهُ اِنْ كَانُوْا مُؤْمِنِيْنَ ﴿٦٢﴾ اَلَمْ يَعْلَمُوْۤا الثلثة
اَنَّهٗ مَنْ يُّحَادِدِ اللّٰهَ وَرَسُوْلَهٗ فَاَنَّ لَهٗ نَارَ جَهَنَّمَ
خَالِدًا فِيْهَا ؕ ذٰلِكَ الْخِزْيُ الْعَظِيْمُ ﴿٦٣﴾ يَحْذَرُ الْمُنٰفِقُوْنَ
اَنْ تُنَزَّلَ عَلَيْهِمْ سُوْرَةٌ تُنَبِّئُهُمْ بِمَا فِيْ قُلُوْبِهِمْ ؕ
قُلِ اسْتَهْزِءُوْا ۚ اِنَّ اللّٰهَ مُخْرِجٌ مَّا تَحْذَرُوْنَ ﴿٦٤﴾ وَلَئِنْ
سَاَلْتَهُمْ لَيَقُوْلُنَّ اِنَّمَا كُنَّا نَخُوْضُ وَنَلْعَبُ ؕ قُلْ اَبِاللّٰهِ
وَاٰيٰتِهٖ وَرَسُوْلِهٖ كُنْتُمْ تَسْتَهْزِءُوْنَ ﴿٦٥﴾ لَا تَعْتَذِرُوْا قَدْ
كَفَرْتُمْ بَعْدَ اِيْمَانِكُمْ ؕ اِنْ نَّعْفُ عَنْ طَآئِفَةٍ مِّنْكُمْ
نُعَذِّبْ طَآئِفَةًۢ بِاَنَّهُمْ كَانُوْا مُجْرِمِيْنَ ﴿٦٦﴾ اَلْمُنٰفِقُوْنَ ع ٧ / ٦
وَالْمُنٰفِقٰتُ بَعْضُهُمْ مِّنْۢ بَعْضٍ ۘ يَاْمُرُوْنَ بِالْمُنْكَرِ وقف لازم
وَيَنْهَوْنَ عَنِ الْمَعْرُوْفِ وَيَقْبِضُوْنَ اَيْدِيَهُمْ ؕ نَسُوا
اللّٰهَ فَنَسِيَهُمْ ؕ اِنَّ الْمُنٰفِقِيْنَ هُمُ الْفٰسِقُوْنَ ﴿٦٧﴾ وَعَدَ اللّٰهُ
الْمُنٰفِقِيْنَ وَالْمُنٰفِقٰتِ وَالْكُفَّارَ نَارَ جَهَنَّمَ خٰلِدِيْنَ
فِيْهَا ؕ هِيَ حَسْبُهُمْ ۚ وَلَعَنَهُمُ اللّٰهُ ۚ وَلَهُمْ عَذَابٌ مُّقِيْمٌ ﴿٦٨﴾

62. (விசுவாசிகளே!) உங்களைத் திருப்திப்படுத்துவதற்காக உங்களுக்காக அவர்கள் அல்லாஹ்வைக்கொண்டு சத்தியம் செய்கின்றனர்; அவர்கள் விசுவாசிகளாயிருந்தால் அல்லாஹ்வும், அவனுடைய தூதருமே — அவர்களை அவர்கள் திருப்திப்படுத்துவதற்கு — மிகத்தகுதியுடையோர் (என்பதை அறிந்திருப்பார்கள்).

63. "நிச்சயமாக எவர் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் மாறு செய்கின்றாரோ அப்பொழுது, நிச்சயமாக அவருக்குத்தான் நரக நெருப்பு இருக்கிறது; அதில் அவர் நிரந்தரமாக(த் தங்கி)இருப்பவர்" என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லையா? அது மாபெரிய இழிவாகும்.

64. (விசுவாசிகளாகிய) அவர்கள் மீது தங்கள் இதயங்களிலுள்ளவற்றை வெளிப்படுத்தி விடும் ஓர் அத்தியாயம் இறக்கிவைக்கப்படுவதை முனாஃபிக்குகள் (வேஷதாரிகள்)பயப்படுகின்றனர்; (நபியே! அவர்களிடம்) நீர் கூறுவீராக: நீங்கள் பரிகாசம் செய்து கொண்டிருங்கள்; நீங்கள் பயப்படுவதை(யே) நிச்சயமாக அல்லாஹ் வெளிப்படுத்தக்கூடியவன்.

65. (இதனைப் பற்றி) நீர் அவர்களைக் கேட்பீராயின், "நாங்கள் (வீண்) பேச்சில் மூழ்கியும், விளையாடிக் கொண்டுமிருந்தோம்" என்று நிச்சயமாக அவர்கள் கூறுவார்கள். (அதற்கு நபியே! அவர்களிடம்) "அல்லாஹ்வையும், அவனது வசனங்களையும், அவனது தூதரையுமா நீங்கள் பரிகசித்துக் கொண்டிருந்தீர்கள்?" என்று நீர் கேட்பீராக!

66. "நீங்கள் (செய்யும் பரிகாசத்திற்கு வீண்) புகல் கூறவேண்டாம்; உங்களின் விசுவாசத்திற்குப்பின்னர், திட்டமாக (அதனை) நீங்கள் நிராகரித்தே விட்டீர்கள்; (ஆகவே) உங்களில் ஒரு கூட்டத்தினரை நாம் மன்னித்தபோதிலும், மற்றொரு கூட்டத்தினரை நிச்சயமாக அவர்கள் குற்றவாளிகளாகவே இருப்பதனால், நாம் வேதனை செய்வோம்"(என்று நபியே! நீர் கூறுவீராக!)

67. முனாஃபிக்குகளான (வேஷதாரிகளான) ஆடவர்களும், முனாஃபிக்குகளான பெண்டிரும் அவர்களில் சிலர் சிலரைச்சேர்ந்தவர்கள்(—ஒத்த செயல்களையுடையவர்கள்) அவர்கள் பாவமான காரியத்தை(ச் செய்யுமாறு பிறரை) ஏவுவார்கள்; நன்மையை(ச்செய்வதை)விட்டும் (பிறரைத்) தடுப்பார்கள்; (அல்லாஹ்வின் பாதையில் செலவுசெய்யாது) தங்கள் கைகளை இறுக்கி (மூடி)யும் கொள்வார்கள்; இவர்கள் அல்லாஹ்வை மறந்துவிட்டார்கள்; ஆதலால், அவன் இவர்களை மறந்துவிட்டான்; நிச்சயமாக இந்த முனாஃபிக்குகள் — அவர்கள் பாவிகள்.

68. முனாஃபிக்குகளான (—வேஷதாரிகளான) ஆண்களுக்கும், முனாஃபிக்குகளான பெண்களுக்கும், (அவ்வாறே மற்ற) நிராகரிப்போருக்கும் நரக நெருப்பையே அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்; அதில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி)இருப்பவர்கள்; அது அவர்களுக்குப் போதுமானதாகும்; அன்றியும், அல்லாஹ் அவர்களைச் சபித்து விட்டான். அவர்களுக்கு நிலையான வேதனையுமுண்டு.

كَالَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ كَانُوْٓا اَشَدَّ مِنْكُمْ قُوَّةً وَّاَكْثَرَ
اَمْوَالًا وَّاَوْلَادًا ؕ فَاسْتَمْتَعُوْا بِخَلَاقِهِمْ فَاسْتَمْتَعْتُمْ
بِخَلَاقِكُمْ كَمَا اسْتَمْتَعَ الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ بِخَلَاقِهِمْ
وَخُضْتُمْ كَالَّذِيْ خَاضُوْا ؕ اُولٰٓئِكَ حَبِطَتْ اَعْمَالُهُمْ فِی
الدُّنْيَا وَالْاٰخِرَةِ ۚ وَاُولٰٓئِكَ هُمُ الْخٰسِرُوْنَ ﴿۶۹﴾ اَلَمْ يَاْتِهِمْ
نَبَاُ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ قَوْمِ نُوْحٍ وَّعَادٍ وَّثَمُوْدَ ۙ وَقَوْمِ
اِبْرٰهِيْمَ وَاَصْحٰبِ مَدْيَنَ وَالْمُؤْتَفِكٰتِ ؕ اَتَتْهُمْ رُسُلُهُمْ
بِالْبَيِّنٰتِ ۚ فَمَا كَانَ اللّٰهُ لِيَظْلِمَهُمْ وَلٰكِنْ كَانُوْٓا اَنْفُسَهُمْ
يَظْلِمُوْنَ ﴿۷۰﴾ وَالْمُؤْمِنُوْنَ وَالْمُؤْمِنٰتُ بَعْضُهُمْ اَوْلِيَآءُ
بَعْضٍ ۘ يَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وقف لازم
وَيُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَيُؤْتُوْنَ الزَّكٰوةَ وَيُطِيْعُوْنَ اللّٰهَ
وَرَسُوْلَهٗ ؕ اُولٰٓئِكَ سَيَرْحَمُهُمُ اللّٰهُ ؕ اِنَّ اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿۷۱﴾
وَعَدَ اللّٰهُ الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا
الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا وَمَسٰكِنَ طَيِّبَةً فِيْ جَنّٰتِ عَدْنٍ ؕ
وَرِضْوَانٌ مِّنَ اللّٰهِ اَكْبَرُ ؕ ذٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيْمُ ع ﴿۷۲﴾ ع ۹ ۱۵

69. (முனாஃபிக்குகளே!நீங்கள்) உங்களுக்கு முன்னிருந்தவர்களைப் போன்றிருக்கிறீர்கள்; அவர்கள் பலத்தால் உங்களைவிடமிகக் கடினமானவர்களாகவும், செல்வங்களாலும், மக்களாலும் மிக அதிக மானவர்களாகவும் இருந்தார்கள்; ஆகவே,(இவ்வுலகில்) தங்களுக்குக் கிடைத்த பங்கைக் கொண்டு அவர்கள் சுகமடைந்தார்கள்; உங்களுக்கு முன்னிருந்த அவர்கள் தங்களுக்குக் கிடைத்த பங்கைக் கொண்டு (இவ்வுலகில்) சுகமடைந்தவாறே, நீங்களும் உங்களுக்குக் கிடைத்த பங்கைக் கொண்டு சுகமடைந்து விட்டீர்கள்; அவர்கள் (இவ்வுலக வாழ்வில்) மூழ்கிக்கிடந்தவாறே நீங்களும் மூழ்கிவிட்டீர்கள்; அத்தகையோர்_அவர்களுடைய (நற்) செயல்கள் யாவும் இம்மையிலும், மறுமையிலும் அழிந்துவிட்டன; மேலும், அவர்கள்தாம் நஷ்டமடைந்தவர்கள்.

70. இவர்களுக்கு முன்னிருந்த (நபி)நூஹ் உடைய கூட்டத்தினர், ஆது, ஸமூது, (வர்க்கத்தினர்) இப்ராஹீமுடைய கூட்டத்தினர்,மத்யன் வாசிகள், தலைகீழாகப் புரட்டியடிக்கப்பட்ட ஊரார் ஆகியோரின் செய்தி அவர்களுக்கு வரவில்லையா? (நம்மால் அனுப்பப்பட்ட) அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தனர். ஆகவே, அல்லாஹ் அவர்களுக்கு அநியாயம் செய்பவனாக இல்லை; எனினும் அவர்கள் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொண்டிருந்தனர்.

71. விசுவாசங்கொண்ட ஆண்களும், விசுவாசங்கொண்ட பெண்களும் அவர்களில் சிலர் சிலருக்கு உற்ற காரியஸ்தர்களாயிருக்கின்றனர்; அவர்கள், (பிறரை) நன்மையைக் கொண்டு ஏவுகிறார்கள்; (மார்க்கத்தில் மறுக்கப்பட்ட) தீமையைவிட்டும் விலக்குகிறார்கள்; தொழுகையையும் நிறைவேற்றுகிறார்கள்; ஜகாத்தையும் கொடுத்து வருகிறார்கள்; அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்பட்டு நடக்கிறார்கள்; இத்தகையோர்_ அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிவான்_ நிச்சயமாக அல்லாஹ் (யாவரையும்)மிகைத்தவன், தீர்க்கமான அறிவுடையவன்.

72. விசுவாசங்கொண்ட ஆண்களுக்கும், விசுவாசங்கொண்ட பெண்களுக்கும் அல்லாஹ் சுவனங்களை வாக்களித்திருக்கின்றான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அவர்கள், அவற்றிலேயே நிரந்தரமாக(த் தங்கி) இருப்பவர்கள்;('அத்னு' எனும்) நிலையான சுவனங்களில் பரிசுத்தமான (அழகிய உயர்ந்த) குடியிருப்புகளையும் (அவன் வாக்களித்திருக்கின்றான்.) இன்னும்,(இவை யாவற்றையும்விட) அல்லாஹ்விடமிருந்துள்ள பொருத்தம் மிகப் பெரியது; அது தான் மகத்தான வெற்றியாகும்.

يٰۤاَيُّهَا النَّبِيُّ جَاهِدِ الْكُفَّارَ وَالْمُنٰفِقِيْنَ وَاغْلُظْ عَلَيْهِمْ ؕ وَ
مَاْوٰىهُمْ جَهَنَّمُ ؕ وَبِئْسَ الْمَصِيْرُ ﴿۷۳﴾ يَحْلِفُوْنَ بِاللّٰهِ مَا قَالُوْا ؕ
وَلَقَدْ قَالُوْا كَلِمَةَ الْكُفْرِ وَكَفَرُوْا بَعْدَ اِسْلَامِهِمْ وَهَمُّوْا
بِمَا لَمْ يَنَالُوْا ۚ وَمَا نَقَمُوْۤا اِلَّاۤ اَنْ اَغْنٰىهُمُ اللّٰهُ وَرَسُوْلُهٗ
مِنْ فَضْلِهٖ ۚ فَاِنْ يَّتُوْبُوْا يَكُ خَيْرًا لَّهُمْ ۚ وَاِنْ يَّتَوَلَّوْا
يُعَذِّبْهُمُ اللّٰهُ عَذَابًا اَلِيْمًا ۙ فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ ۚ وَمَا لَهُمْ
فِى الْاَرْضِ مِنْ وَّلِيٍّ وَّلَا نَصِيْرٍ ﴿۷۴﴾ وَمِنْهُمْ مَّنْ عٰهَدَ اللّٰهَ لَئِنْ
اٰتٰىنَا مِنْ فَضْلِهٖ لَنَصَّدَّقَنَّ وَلَنَكُوْنَنَّ مِنَ الصّٰلِحِيْنَ ﴿۷۵﴾
فَلَمَّاۤ اٰتٰىهُمْ مِّنْ فَضْلِهٖ بَخِلُوْا بِهٖ وَتَوَلَّوْا وَّهُمْ مُّعْرِضُوْنَ ﴿۷۶﴾
فَاَعْقَبَهُمْ نِفَاقًا فِيْ قُلُوْبِهِمْ اِلٰى يَوْمِ يَلْقَوْنَهٗ بِمَاۤ اَخْلَفُوا
اللّٰهَ مَا وَعَدُوْهُ وَبِمَا كَانُوْا يَكْذِبُوْنَ ﴿۷۷﴾ اَلَمْ يَعْلَمُوْۤا
اَنَّ اللّٰهَ يَعْلَمُ سِرَّهُمْ وَنَجْوٰىهُمْ وَاَنَّ اللّٰهَ عَلَّامُ
الْغُيُوْبِ ﴿۷۸﴾ ۚ اَلَّذِيْنَ يَلْمِزُوْنَ الْمُطَّوِّعِيْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ
فِى الصَّدَقٰتِ وَالَّذِيْنَ لَا يَجِدُوْنَ اِلَّا جُهْدَهُمْ
فَيَسْخَرُوْنَ مِنْهُمْ ؕ سَخِرَ اللّٰهُ مِنْهُمْ ۫ وَلَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿۷۹﴾

73. நபியே! நிராகரிப்போருடனும்,(வேஷதாரிகளான) முனாஃபிக்குகளுடனும் நீர் போரிடுவீராக! அவர்கள் மீது கண்டிப்பாகவும் நடந்து கொள்வீராக! அவர்கள் தங்குமிடமும் நரகம்தான்; சென்றடையுமிடத்தில் அது மிகவும் கெட்டது.

74. நிராகரிப்பான வார்த்தையை திட்டமாகக் கூறியிருந்தும் தாங்கள் கூறவே இல்லை என்று அல்லாஹ்வைக் கொண்டு (முனாஃபிக்குகளாகிய) அவர்கள் சத்தியம் செய்கின்றனர்; அன்றியும், இவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்ததன் பின்னர் (அதனை) நிராகரித்துமிருக்கின்றனர்; அவர்கள் அடையமுடியாததையும் நாடினார்கள்; அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் அவனுடைய பேரருளைக்கொண்டு இவர்களைச் சீமான்களாக்கியதற்காகவே தவிர இவர்கள் (முஸ்லிம்களாகிய உங்களை) பழிவாங்கவில்லை; இனியேனும், இவர்கள் பச்சாதாபப்பட்(டு விலகிக் கொண்)டால் (அது) அவர்களுக்கே நன்மையாகும்; அன்றியும் அவர்கள் புறக்கணித்தாலோ, இம்மையிலும், மறுமையிலும் அல்லாஹ் அவர்களை மிகத் துன்புறுத்தும் வேதனையாக வேதனை செய்வான்; இன்னும் பாதுகாப்பவரோ, உதவி செய்பவரோ அவர்களுக்கு இப்பூமியில் (ஒருவரும்) இல்லை.

75. இன்னும், "அல்லாஹ் தன் பேரருளிலிருந்து நமக்கு (செல்வத்தை)க் கொடுத்தால், நிச்சயமாக நாம் தர்மம் செய்வோம்; நிச்சயமாக நாம் நல்லடியார்களிலும் ஆகிவிடுவோம்" என்று அல்லாஹ்விடம் வாக்குறுதி செய்தவர்களும் அவர்களில்(சிலர்) இருக்கின்றனர்.

76. எனவே, அவன் அவர்களுக்குத் தன் பேரருளிலிருந்து (செல்வத்தைக்) கொடுத்த பொழுது, அவர்கள் அதில் உலோபத்தனம் செய்தனர் ; அவர்கள் (தங்கள் வாக்குறுதியைப்) புறக்கணித்தவர்களாகத் திரும்பியும் விட்டனர்.

77. ஆகவே, அல்லாஹ்வுக்கு— அவனுக்கு வாக்களித்ததில், அவர்கள் அவனுக்கு மாறு செய்துகொண்டும், பொய் சொல்லிக் கொண்டுமிருந்ததன் காரணமாக, அவனைச் சந்திக்கும் (இறுதி) நாள் வரையில் (தண்டனையாக) அவர்களுடைய இதயங்களில் அவர்களுக்கு நிஃபாக்கை (கபடத்தனத்தை)த் தொடருமாறு அவன் செய்து விட்டான்.

78. நிச்சயமாக அல்லாஹ், அவர்களுடைய இரகசியத்தையும், அவர்களுடைய இரகசிய ஆலோசனையையும் அறிவான் என்பதையும், இன்னும் நிச்சயமாக அல்லாஹ் மறைவானவற்றை மிக்க அறிந்தவன் என்பதையும் அவர்கள் அறியவில்லையா?

79. இவர்கள் எத்தகையோரென்றால், விசுவாசிகளில் தாராளமாக தர்மம் செய்பவர்களையும், தங்களது உழைப்பைத்தவிர வேறு எதையும் (தர்மம் செய்வதற்கு) பெறாதவர்களையும் குறைகூறுகிறார்கள்; பின்னர் அவர்களை ஏளன(மு)ம் செய்கிறார்கள்; (விசுவாசிகளை ஏளனம் செய்யும்) அவர்களை அல்லாஹ் ஏளனம் செய்கின்றான்; அன்றியும் (மறுமையில்) துன்புறுத்தும் வேதனையும் அவர்களுக்குண்டு.

اِسْتَغْفِرْ لَهُمْ اَوْ لَا تَسْتَغْفِرْ لَهُمْ ؕ اِنْ تَسْتَغْفِرْ لَهُمْ سَبْعِيْنَ مَرَّةً
فَلَنْ يَّغْفِرَ اللّٰهُ لَهُمْ ؕ ذٰلِكَ بِاَنَّهُمْ كَفَرُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ ؕ
وَاللّٰهُ لَا يَهْدِى الْقَوْمَ الْفٰسِقِيْنَ ﴿٨٠﴾ ع فَرِحَ الْمُخَلَّفُوْنَ بِمَقْعَدِهِمْ ع ١٠ ٨ ١٢
خِلٰفَ رَسُوْلِ اللّٰهِ وَكَرِهُوْۤا اَنْ يُّجَاهِدُوْا بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ
فِىْ سَبِيْلِ اللّٰهِ وَقَالُوْا لَا تَنْفِرُوْا فِى الْحَرِّ ؕ قُلْ نَارُ جَهَنَّمَ اَشَدُّ
حَرًّا ؕ لَوْ كَانُوْا يَفْقَهُوْنَ ﴿٨١﴾ فَلْيَضْحَكُوْا قَلِيْلًا وَّلْيَبْكُوْا كَثِيْرًا ۚ
جَزَآءًۢ بِمَا كَانُوْا يَكْسِبُوْنَ ﴿٨٢﴾ فَاِنْ رَّجَعَكَ اللّٰهُ اِلٰى طَآئِفَةٍ
مِّنْهُمْ فَاسْتَاْذَنُوْكَ لِلْخُرُوْجِ فَقُلْ لَّنْ تَخْرُجُوْا مَعِىَ اَبَدًا
وَّلَنْ تُقَاتِلُوْا مَعِىَ عَدُوًّا ؕ اِنَّكُمْ رَضِيْتُمْ بِالْقُعُوْدِ اَوَّلَ مَرَّةٍ
فَاقْعُدُوْا مَعَ الْخٰلِفِيْنَ ﴿٨٣﴾ وَلَا تُصَلِّ عَلٰۤى اَحَدٍ مِّنْهُمْ مَّاتَ
اَبَدًا وَّلَا تَقُمْ عَلٰى قَبْرِهٖ ؕ اِنَّهُمْ كَفَرُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَمَاتُوْا
وَهُمْ فٰسِقُوْنَ ﴿٨٤﴾ وَلَا تُعْجِبْكَ اَمْوَالُهُمْ وَاَوْلَادُهُمْ ؕ اِنَّمَا يُرِيْدُ
اللّٰهُ اَنْ يُّعَذِّبَهُمْ بِهَا فِى الدُّنْيَا وَتَزْهَقَ اَنْفُسُهُمْ وَهُمْ كٰفِرُوْنَ ﴿٨٥﴾
وَاِذَاۤ اُنْزِلَتْ سُوْرَةٌ اَنْ اٰمِنُوْا بِاللّٰهِ وَجَاهِدُوْا مَعَ رَسُوْلِهِ
اسْتَاْذَنَكَ اُولُوا الطَّوْلِ مِنْهُمْ وَقَالُوْا ذَرْنَا نَكُنْ مَّعَ الْقٰعِدِيْنَ ﴿٨٦﴾

80. (நபியே!) நீர் அவர்களுக்குப் பாவ மன்னிப்பைக் கோரும்; அல்லது நீர் அவர்களுக்குப் பாவ மன்னிப்பைக் கோராமலிரும்; (இரண்டும் சமம்தான். ஏனென்றால்,) அவர்களுக்காக நீர் எழுபது தடவை பாவ மன்னிப்புக் கோரியபோதிலும் நிச்சயமாக அல்லாஹ், அவர்களை மன்னிக்கவே மாட்டான்; அது ஏனெனில் நிச்சயமாக அவர்கள், அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் (மனமுரண்டாக) நிராகரித்தார்கள் என்பதினாலாகும்; அல்லாஹ், பாவம் செய்யும் (இத்தகைய) கூட்டத்தாரை நேர் வழியில் செலுத்தவு மாட்டான்.

81. (தபூக் யுத்தத்திற்குச் செல்லாது) பின் தங்கி விட்டவர்கள், அல்லாஹ்வின் தூதருக்கு மாறாக(த் தங்கள் வீடுகளில்) அவர்கள் இருந்து கொண்டதைப் பற்றி மகிழ்ச்சியடைகின்றனர்; அன்றியும் அல்லாஹ்வுடைய பாதையில், தங்கள் பொருட்களாலும், தங்கள் உயிர்களாலும் யுத்தம் செய்வதையும் வெறுக்கின்றனர்; (மற்றவர்களிடம்) "இந்த வெப்பத்தில் நீங்கள் (யுத்தத்திற்குச்) செல்லாதீர்கள்" என்றும் கூறுகின்றனர். (அதற்கு நபியே! அவர்களிடம்,) "நரகத்தின் நெருப்பு வெப்பத்தால் (இதைவிட) மிகக் கடுமையானதாகும்" என்று நீர் கூறுவீராக! (இதனை) அவர்கள் விளங்குபவர்களாக இருந்தால் (பின் தங்கி இருக்கமாட்டார்கள்).

82. ஆகவே, (இம்மையில்) அவர்கள் வெகு சொற்பமாகவே சிரிக்கட்டும்; அவர்கள் சம்பாதித்துக்கொண்டிருந்த (தீய)வற்றின் பிரதிபலனாக (மறுமையில்) அதிகமாக அவர்கள் அழட்டும்.

83. (நபியே!) நீர் அவர்களில் ஒரு சாராரின்பால் அல்லாஹ் உம்மை திரும்பி (வெற்றியுடன்) வரச்செய்து விட்டால், (உமது வெற்றியை அவர்கள் கண்டு உம்முடன் மற்றொரு யுத்தத்திற்கு ப்) புறப்பட உம்மிடம் அனுமதி கேட்பார்கள்; அப்பொழுது "நீங்கள் ஒரு காலத்திலும் என்னுடன் புறப்படவே வேண்டாம்; என்னுடன் சேர்ந்து, எந்த விரோதியுடனும் நீங்கள் ஒருபோதும் யுத்தம் புரியவும் வேண்டாம்; ஏனென்றால், நிச்சயமாக நீங்கள் முதற்தடவையில், (வீட்டில்) தங்கி விடுவதையே பொருந்திக் கொண்டீர்கள்; ஆதலால், (இது சமயமும்) நீங்கள் (வீட்டில்) தங்கிவிடுவோருடன் இருந்து விடுங்கள்" என்று நீர் கூறுவீராக!

84. அன்றியும், அவர்களில் இறந்துபோன எந்த ஒருவரின் மீதும் ஒருபோதும் நீர் தொழுகவும் வைககாதீர் அவருடைய கப்ரின்மீதும் ( மன்னிப்புக்கோர) நிற்கவும் வேண்டாம்; (ஏனென்றால்), நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் நிராகரித்தார்கள்; இன்னும் அவர்கள் பாவிகளாகவே இறந்துமிருக்கின்றனர்.

85. அவர்களுடைய செல்வங்களும், அவர்களுடைய மக்களும் (அதிகரிப்பது) உம்மை ஆச்சரியப்படுத்த வேண்டாம்; அல்லாஹ் நாடுவதெல்லாம் அவற்றைக்கொண்டு இவ்வுலகிலேயே அவர்களை அவன் வேதனை செய்வதையும், அவர்கள் (கர்வங்கொண்டு) நிராகரித்த வண்ணமே அவர்களின் உயிர்பிரிவதையும் தான்.

86. மேலும், "அல்லாஹ்வை விசுவாசம் கொள்ளுங்கள்; அவனுடைய தூதருடன் (சேர்ந்து) யுத்தமும் புரியுங்கள்" என ஏதாவது ஒரு அத்தியாயம் இறக்கப்பட்டால், அவர்களிலுள்ள வசதிபடைத்தவர்கள் (வீட்டில் தங்கிவிட) உம்மிடம் அனுமதி கோரி, " எங்களை விட்டுவிடும்; (வீட்டில்) தங்கியிருப்பவர்களுடன் நாங்களும் தங்கிவிடுகின்றோம்" என்றும் கூறுகின்றனர்.

رَضُوْا بِاَنْ يَّكُوْنُوْا مَعَ الْخَوَالِفِ وَطُبِعَ عَلٰى قُلُوْبِهِمْ
فَهُمْ لَا يَفْقَهُوْنَ ﴿٨٧﴾ لٰكِنِ الرَّسُوْلُ وَالَّذِيْنَ اٰمَنُوْا مَعَهٗ
جٰهَدُوْا بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ ؕ وَاُولٰٓئِكَ لَهُمُ الْخَيْرٰتُ ؗ
وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿٨٨﴾ اَعَدَّ اللّٰهُ لَهُمْ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ
تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا ؕ ذٰلِكَ الْفَوْزُ الْعَظِيْمُ ﴿٨٩﴾ وَ ع ۹ ۱۷
جَآءَ الْمُعَذِّرُوْنَ مِنَ الْاَعْرَابِ لِيُؤْذَنَ لَهُمْ وَقَعَدَ الَّذِيْنَ
كَذَبُوا اللّٰهَ وَرَسُوْلَهٗ ؕ سَيُصِيْبُ الَّذِيْنَ كَفَرُوْا مِنْهُمْ
عَذَابٌ اَلِيْمٌ ﴿٩٠﴾ لَيْسَ عَلَى الضُّعَفَآءِ وَلَا عَلَى الْمَرْضٰى وَلَا
عَلَى الَّذِيْنَ لَا يَجِدُوْنَ مَا يُنْفِقُوْنَ حَرَجٌ اِذَا نَصَحُوْا لِلّٰهِ وَ
رَسُوْلِهٖ ؕ مَا عَلَى الْمُحْسِنِيْنَ مِنْ سَبِيْلٍ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ۙ ﴿٩١﴾
وَّلَا عَلَى الَّذِيْنَ اِذَا مَآ اَتَوْكَ لِتَحْمِلَهُمْ قُلْتَ لَآ اَجِدُ
مَآ اَحْمِلُكُمْ عَلَيْهِ ۪ تَوَلَّوْا وَّاَعْيُنُهُمْ تَفِيْضُ مِنَ الدَّمْعِ
حَزَنًا اَلَّا يَجِدُوْا مَا يُنْفِقُوْنَ ﴿٩٢﴾ اِنَّمَا السَّبِيْلُ عَلَى الَّذِيْنَ
يَسْتَاْذِنُوْنَكَ وَهُمْ اَغْنِيَآءُ ۚ رَضُوْا بِاَنْ يَّكُوْنُوْا
مَعَ الْخَوَالِفِ ۙ وَطَبَعَ اللّٰهُ عَلٰى قُلُوْبِهِمْ فَهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿٩٣﴾

87. (போரில் கலந்துகொள்ளாதிருக்க அனுமதியளிக்கப்பட்ட) பின்தங்கி விடுபவர்களுடன் தாங்களும் இருந்துவிடுவதை, அவர்கள் பொருந்திக் கொண்டுவிட்டார்கள்;. அவர்களுடைய இதயங்களின்மீது முத்திரை யிடப்பட்டுவிட்டது. ஆதலால், (இதிலுள்ள தீமையை) அவர்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள்.

88. எனினும், (அல்லாஹ்வுடைய) தூதரும், அவருடன் உள்ள விசுவாசிகளும் தங்கள் செல்வங்களாலும், தங்கள் உயிர்களாலும் (அர்ப்பணம் செய்வதுகொண்டு)யுத்தம் புரிகின்றார்கள்; அத்தகையோர்_அவர்களுக்குத்தான் நன்மைகள் (யாவும்) உண்டு; மேலும், அத்தகையோர்_அவர்கள் தாம் வெற்றியடைந்தவர்கள்.

89. அவர்களுக்காக சுவனபதிகளை அல்லாஹ் தயார் செய்து வைத்திருக்கின்றான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அவற்றில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள் ; அதுவே, மகத்தான வெற்றியாகும்.

90. (மதீனாவைச் சுற்றியுள்ள அரபிகளான) கிராமவாசிகளில் புகல் கூறுபவர்கள் (சிலர் யுத்தத்திற்குச் செல்லாதிருக்கத்) தங்களுக்காக அனுமதி அளிக்கப்படவேண்டுமென்று (உம்மிடம்) வந்தனர்; அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் பொய்யாக்கியவர்கள் (அனுமதி கோராமலேயே வீட்டில்) உட்கார்ந்து கொண்டனர்; ஆகவே, இவர்களிலுள்ள (இந்) நிராகரித்தவர்களை மிகத் துன்புறுத்தும் வேதனை வந்தடையும்.

91. பலவீனர்களின் மீதும், நோயாளிகளின் மீதும், (யுத்தத்திற்குச்) செலவிடுவதற்கு எதையும் பெற்றுக்கொள்ளவில்லையே அவர்கள் மீதும் அல்லாஹ்விற்காகவும், அவனுடைய தூதருக்காகவும் அவர்கள் நன்மையை நாடியிருந்தார்களானால் (போருக்குச்செல்லாது வீட்டில் தங்கிவிடுவது) குற்றமில்லை. நன்மைசெய்வோரின் மீது (குறைகூற) எந்த வழியும் இல்லை ; இன்னும், அல்லாஹ் மிகவும் மன்னிக்கிறவன்; மிகக்கிருபைஉடையவன்.

92 . (யுத்தத்திற்குரிய) வாகனத்தை நீர் தருவீரென உம்மிடம் அவர்கள் வந்தபொழுது, "எதன் மீது உங்களை நான் ஏற்றிச் செல்வேனோ அத்தகைய (வாகனத்)தை நான் பெற்றுக் கொள்ளவில்லையே" என்று கூறினீர்; அவர்கள், தாம் செலவுசெய்வதற்குஎதையும் பெற்றுக்கொள்ளவில்லையே என்ற துக்கத்தினால் தங்கள் கண்கள் கண்ணீர் வடித்தவாறு( தம் இருப்பிடம்)திரும்பிச் சென்றார்களே அவர்கள்மீதும்( குற்றம்)இல்லை.

93 (குற்றம் சுமத்தப்படும்) வழியெல்லாம், அவர்கள் பணக்காரர்களாக இருக்க, உம்மிடம் அனுமதி கோரி (யுத்தத்திற்குச் செல்லாது வீட்டில்) தங்கிவிடுவோர்களுடன் தாங்களும் இருந்துவிடுவதைப் பொருந்திக் கொண்டார்களே அத்தகையவர்கள் மீதுதான்; மேலும் அவர்களுடைய இதயங்களின் மீது அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான்; ஆகவே, அவர்கள் (இதனால் இதன் தீமையை) அறிந்து கொள்ள மாட்டார்கள்.

يَعْتَذِرُوْنَ اِلَيْكُمْ اِذَا رَجَعْتُمْ اِلَيْهِمْ ؕ قُلْ لَّا النصف
تَعْتَذِرُوْا لَنْ نُّؤْمِنَ لَكُمْ قَدْ نَبَّاَنَا اللّٰهُ مِنْ اَخْبَارِكُمْ ؕ وَ
سَيَرَى اللّٰهُ عَمَلَكُمْ وَرَسُوْلُهٗ ثُمَّ تُرَدُّوْنَ اِلٰى عٰلِمِ الْغَيْبِ
وَالشَّهَادَةِ فَيُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿٩٤﴾ سَيَحْلِفُوْنَ بِاللّٰهِ
لَكُمْ اِذَا انْقَلَبْتُمْ اِلَيْهِمْ لِتُعْرِضُوْا عَنْهُمْ ؕ فَاَعْرِضُوْا عَنْهُمْ ؕ
اِنَّهُمْ رِجْسٌ ۫ وَّمَاْوٰىهُمْ جَهَنَّمُ ۚ جَزَآءًۢ بِمَا كَانُوْا يَكْسِبُوْنَ ﴿٩٥﴾
يَحْلِفُوْنَ لَكُمْ لِتَرْضَوْا عَنْهُمْ ۚ فَاِنْ تَرْضَوْا عَنْهُمْ فَاِنَّ اللّٰهَ
لَا يَرْضٰى عَنِ الْقَوْمِ الْفٰسِقِيْنَ ﴿٩٦﴾ اَلْاَعْرَابُ اَشَدُّ كُفْرًا وَّ
نِفَاقًا وَّاَجْدَرُ اَلَّا يَعْلَمُوْا حُدُوْدَ مَاۤ اَنْزَلَ اللّٰهُ عَلٰى
رَسُوْلِهٖ ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿٩٧﴾ وَمِنَ الْاَعْرَابِ مَنْ يَّتَّخِذُ
مَا يُنْفِقُ مَغْرَمًا وَّيَتَرَبَّصُ بِكُمُ الدَّوَآئِرَ ؕ عَلَيْهِمْ
دَآئِرَةُ السَّوْءِ ؕ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿٩٨﴾ وَمِنَ الْاَعْرَابِ مَنْ
يُّؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَيَتَّخِذُ مَا يُنْفِقُ قُرُبٰتٍ
عِنْدَ اللّٰهِ وَصَلَوٰتِ الرَّسُوْلِ ؕ اَلَاۤ اِنَّهَاۤ قُرْبَةٌ لَّهُمْ ؕ
سَيُدْخِلُهُمُ اللّٰهُ فِيْ رَحْمَتِهٖ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿٩٩﴾ ع ١٢ ع ١

94. (விசுவாசிகளே! போர் செய்து) நீங்கள் (வெற்றியோடு) அவர்களிடம் திரும்புவீர்களானால், உங்களிடம் அவர்கள் (வராததற்காக) புகல் கூறுகின்றனர்; (அதற்கு , நபியே!) நீர் கூறுவீராக: "நீங்கள் புகல் கூறாதீர்கள்; நாங்கள் உங்களை நம்பவே மாட்டோம்; உங்கள் விஷயங்களை திட்டமாக அல்லாஹ் எங்களுக்கு அறிவித்துவிட்டான்; அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் உங்கள் செயலைக்காணுவார்கள். பின்னர், மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிந்தவனிடம் நீங்கள் திருப்பப்படுவீர்கள்; நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளை உங்களுக்கு அவன் அறிவிப்பான்".

95. (விசுவாசிகளே! வெற்றியுடன்) அவர்களிடம் நீங்கள் திரும்பி விடுவீர்களானால், நீங்கள் அவர்களைப் புறக்கணித்து (விட்டு) விடுவதற்காக அல்லாஹ்வைக்கொண்டு அவர்கள் உங்களிடம் சத்தியம் செய்வார்கள்; ஆகவே, நீங்களும் அவர்களைப் புறக்கணித்து (விட்டு)விடுங்கள்; நிச்சயமாக அவர்கள் அசுத்தமானவர்கள்; அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தவற்றிற்குக் கூலியாக அவர்கள் செல்லுமிடமும் நரகம்தான்.

96. அவர்களைப்பற்றி நீங்கள் திருப்தியடைவதற்காக அவர்கள் உங்களிடம் சத்தியம் செய்கின்றனர்; ஆகவே, அவர்களைப்பற்றி நீங்கள் திருப்தியடைந்தாலும், நிச்சயமாக அல்லாஹ் பாவிகளான இந்தக் கூட்டத்தாரைப்பற்றித் திருப்தியடையமாட்டான்.

97. (அரபிகளிலுள்ள) கிராமவாசிகள் நிராகரிப்பிலும், "நிஃபாக்"கிலும் (கபடத்தனத்திலும்) மிகக் கொடியவர்கள்; அன்றியும், அல்லாஹ் தன் தூதர்மீது இறக்கிவைத்திருக்கும் (வேத) வரம்புகளை அறியாதிருக்கவும் மிகத்தகுதியானவர்கள்; (கல்வியால் குறைந்தவர்களாவர்.) இன்னும் அல்லாஹ் (யாவையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

98. (அரபிகளிலுள்ள) கிராமவாசிகளில் (சிலர்) அவர்கள் (தர்மத்திற்காகச்) செய்யும் செலவை நஷ்டமாக (க்கருதி அதை) ஆக்குவோரும் இருக்கின்றனர்; (ஆபத்துச்) சுழற்சிகளையும் அவர்கள் உங்களுக்கு எதிர் பார்க்கின்றனர்; (ஆபத்துகளின்) தீயசுழற்சி அவர்கள் மீதுதான் இருக்கிறது; மேலும், அல்லாஹ் செவியுறுகிறவன்; நன்கறிகிறவன்.

99. (அரபிகளிலுள்ள) கிராமவாசிகளில் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங் கொள்கின்ற சிலரும்இருக்கின்றனர்; அவர்கள், தாம் (தர்மமாகச்) செலவு செய்வதை அல்லாஹ்விடத்தில் நெருக்கங்களுக்காகவும், (அவனுடைய) தூதரின் பிரார்த்தனைகளுக்காகவும் ஆக்குகின்றனர்; நிச்சயமாக அது அவர்களை (அல்லாஹ்வுக்கு)ச் சமீபமாக்கிவைக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் அவர்களை தன் அருளில் நுழைவிப்பான்; நிச்சயமாக அல்லாஹ், மிக்க மன்னிக்கிறவன்; மிகக்கிருபையுடையவன்.

وَالسّٰبِقُوْنَ الْاَوَّلُوْنَ مِنَ الْمُهٰجِرِيْنَ وَالْاَنْصَارِ وَالَّذِيْنَ
اتَّبَعُوْهُمْ بِاِحْسَانٍ ۙ رَّضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ وَاَعَدَّ لَهُمْ
جَنّٰتٍ تَجْرِيْ تَحْتَهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَآ اَبَدًا ؕ ذٰلِكَ الْفَوْزُ
الْعَظِيْمُ ﴿۱۰۰﴾ وَمِمَّنْ حَوْلَكُمْ مِّنَ الْاَعْرَابِ مُنٰفِقُوْنَ ۛؕ وَمِنْ
اَهْلِ الْمَدِيْنَةِ ۛ مَرَدُوْا عَلَى النِّفَاقِ ۫ لَا تَعْلَمُهُمْ ؕ نَحْنُ
نَعْلَمُهُمْ ؕ سَنُعَذِّبُهُمْ مَّرَّتَيْنِ ثُمَّ يُرَدُّوْنَ اِلٰى عَذَابٍ عَظِيْمٍ ﴿۱۰۱﴾
وَاٰخَرُوْنَ اعْتَرَفُوْا بِذُنُوْبِهِمْ خَلَطُوْا عَمَلًا صَالِحًا وَّاٰخَرَ سَيِّئًا ؕ
عَسَى اللّٰهُ اَنْ يَّتُوْبَ عَلَيْهِمْ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۰۲﴾ خُذْ
مِنْ اَمْوَالِهِمْ صَدَقَةً تُطَهِّرُهُمْ وَتُزَكِّيْهِمْ بِهَا وَصَلِّ عَلَيْهِمْ ؕ
اِنَّ صَلٰوتَكَ سَكَنٌ لَّهُمْ ؕ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿۱۰۳﴾ اَلَمْ يَعْلَمُوْٓا اَنَّ
اللّٰهَ هُوَ يَقْبَلُ التَّوْبَةَ عَنْ عِبَادِهٖ وَيَاْخُذُ الصَّدَقٰتِ وَ
اَنَّ اللّٰهَ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ ﴿۱۰۴﴾ وَقُلِ اعْمَلُوْا فَسَيَرَى اللّٰهُ
عَمَلَكُمْ وَرَسُوْلُهٗ وَالْمُؤْمِنُوْنَ ؕ وَسَتُرَدُّوْنَ اِلٰى عٰلِمِ الْغَيْبِ
وَالشَّهَادَةِ فَيُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۱۰۵﴾ وَاٰخَرُوْنَ مُرْجَوْنَ
لِاَمْرِ اللّٰهِ اِمَّا يُعَذِّبُهُمْ وَاِمَّا يَتُوْبُ عَلَيْهِمْ ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿۱۰۶﴾

مع ٥ عند المتقدمين ١٢ وقف منزل

100. முஹாஜிர்களிலும், அன்ஸார்களிலும் (இஸ்லாத்தை ஏற்க) முதலாவதாக முந்திக் கொண்டவர்களும்,(அவர்களின் சொல், செயல்களாகிய)நற்கருமத்தில் அவர்களைப் பின்பற்றினார்களே அவர்களும்_ அவர்களை அல்லாஹ் திருப்தியடைந்தான்; அவர்களும் (அல்லாஹ்வாகிய) அவனை திருப்தியடைந்தனர்; அன்றியும், சுவனபதிகளை அவர்களுக்கென அவன் தயாராக்கி வைத்திருக்கின்றான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அவற்றிலேயே அவர்கள் நிரந்தரமாக(த் தங்கி)இருப்பவர்கள்; இது மகத்தான வெற்றியாகும்.

101. உங்களைச் சுற்றியுள்ள (அரபிகளிலுள்ள)கிராமத்து வாசிகளில் முனாஃபிக்குகளும் (வேஷதாரிகளும்) இருக்கின்றனர்; மதீனாவாசிகளிலும் (சிலர்) நிஃபாக்கிலேயே (கபடத்திலேயே) நிலைத்து விட்டவர்களும் இருக்கின்றார்கள்; (நபியே!) நீர் அவர்களை அறியமாட்டீர்; நாமே அவர்களை அறிவோம்; அவர்களை இரு முறை நாம் வேதனை செய்வோம்; பின்னர்(முடிவாக) கடுமையான வேதனையின் பால் அவர்கள் திருப்பப்படுவார்கள்.

102. இன்னும் தங்கள் பாவங்களை ஒப்புக்கொண்டவர்களாகிய வேறு சிலர் நல்ல செயலை மற்றொரு தீய செயலைக் கொண்டும் கலந்து விட்டனர்; அல்லாஹ் அவர்(களுடைய தவ்பாவை ஏற்று பாவங்)களை மன்னித்துவிடக்கூடும் ; நிச்சயமாக அல்லாஹ் , மிக்க மன்னிக்கிறவன் ; மிகக்கிருபையுடையவன்.

103. (நபியே!) அவர்களுடைய செல்வங்களிலிருந்து தர்மத்தை(ஜகாத்தை) எடுப்பீராக! அதனால்அவர்களை நீர் சுத்தப்படுத்தி, அவர்க(ளின் அகங்க)ளை தூய்மையாக்கிவைப்பீராக! மேலும், அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வீராக! நிச்சயமாக உமது பிரார்த்தனை அவர்களுக்கு நிம்மதியளிப்பதாகும்; மேலும், அல்லாஹ் செவியேற்கிறவன் ; மிக்க அறிகிறவன்.

104. நிச்சயமாக அல்லாஹ்_தன் அடியார்களிடமிருந்து தவ்பாவை (மன்னிப்புக் கோருதலை) அவனே ஒப்புக்கொள்கின்றான் என்பதையும், தருமங்களையும் அவனே எடுத்துக்கொள்கிறான் என்பதையும், இன்னும் நிச்சயமாக அல்லாஹ், அவனே தவ்பாக்களை மிகுதியாக ஏற்போன், மிகக்கிருபையுடையோன் என்பதையும் அவர்கள் அறியவில்லையா?

105. மேலும், (நபியே!) நீர் கூறுவீராக: " நீங்கள் செய்பவற்றைச் செய்யுங்கள்; நிச்சயமாக அல்லாஹ்வும், அவனுடைய தூதரும், விசுவாசிகளும் உங்கள் செயலைப் பார்ப்பார்கள்; மேலும், மறைவானதையும்,வெளிப்படையானதையும் அறிந்தவன்பால் நிச்சயமாக நீங்கள் திருப்பப்படுவீர்கள்; அப்போது நீங்கள் செய்துகொண்டிருந்தவற்றைப்பற்றி அவன் உங்களுக்கு அறிவித்து விடுவான்.

106. வேறு சிலரோ அல்லாஹ்வின் உத்தரவிற்காக பிற்படுத்தப்பட்டுள்ளனர்; (அல்லாஹ்) ஒருவேளை அவர்களை வேதனை செய்யலாம்; அல்லது அவர்களை மன்னித்து (விட்டுஅவர்களின் தவ்பாவை அங்கீகரித்து)ம்விடலாம்; மேலும், அல்லாஹ் (அவர்கள் செயலை) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

وَالَّذِيْنَ اتَّخَذُوْا مَسْجِدًا ضِرَارًا وَّكُفْرًا وَّتَفْرِيْقًا بَيْنَ
الْمُؤْمِنِيْنَ وَاِرْصَادًا لِّمَنْ حَارَبَ اللّٰهَ وَرَسُوْلَهٗ مِنْ قَبْلُ ؕ
وَلَيَحْلِفُنَّ اِنْ اَرَدْنَاۤ اِلَّا الْحُسْنٰى ؕ وَاللّٰهُ يَشْهَدُ اِنَّهُمْ
لَكٰذِبُوْنَ ﴿١٠٧﴾ لَا تَقُمْ فِيْهِ اَبَدًا ؕ لَمَسْجِدٌ اُسِّسَ عَلَى التَّقْوٰى
مِنْ اَوَّلِ يَوْمٍ اَحَقُّ اَنْ تَقُوْمَ فِيْهِ ؕ فِيْهِ رِجَالٌ يُّحِبُّوْنَ اَنْ
يَّتَطَهَّرُوْا ؕ وَاللّٰهُ يُحِبُّ الْمُطَّهِّرِيْنَ ﴿١٠٨﴾ اَفَمَنْ اَسَّسَ بُنْيَانَهٗ
عَلٰى تَقْوٰى مِنَ اللّٰهِ وَرِضْوَانٍ خَيْرٌ اَمْ مَّنْ اَسَّسَ بُنْيَانَهٗ
عَلٰى شَفَا جُرُفٍ هَارٍ فَانْهَارَ بِهٖ فِيْ نَارِ جَهَنَّمَ ؕ وَاللّٰهُ لَا
يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ ﴿١٠٩﴾ لَا يَزَالُ بُنْيَانُهُمُ الَّذِيْ بَنَوْا
رِيْبَةً فِيْ قُلُوْبِهِمْ اِلَّاۤ اَنْ تَقَطَّعَ قُلُوْبُهُمْ ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿١١٠﴾ ع ١٣ ١١ ٢
اِنَّ اللّٰهَ اشْتَرٰى مِنَ الْمُؤْمِنِيْنَ اَنْفُسَهُمْ وَاَمْوَالَهُمْ
بِاَنَّ لَهُمُ الْجَنَّةَ ؕ يُقَاتِلُوْنَ فِيْ سَبِيْلِ اللّٰهِ فَيَقْتُلُوْنَ وَ
يُقْتَلُوْنَ وَعْدًا عَلَيْهِ حَقًّا فِي التَّوْرٰىةِ وَالْاِنْجِيْلِ
وَالْقُرْاٰنِ ؕ وَمَنْ اَوْفٰى بِعَهْدِهٖ مِنَ اللّٰهِ فَاسْتَبْشِرُوْا
بِبَيْعِكُمُ الَّذِيْ بَايَعْتُمْ بِهٖ ؕ وَذٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيْمُ ﴿١١١﴾

107. (முஸ்லிம்களுக்குத்) தீங்கிழைப்பதற்காகவும், (அல்லாஹ்வை) நிராகரிப்பதற்காகவும், விசுவாசிகளுக்கிடையில் பிரிவினையை உண்டு பண்ணுவதற்காகவும், முன்னர் அல்லாஹ்வுடனும், அவனுடைய தூதருடனும் விரோதமாய் போர் புரிந்தவர்களுக்குப் பதுங்குமிடமாயிருப்பதற்காகவும் ஒரு பள்ளியைக் கட்டியிருக்கின்றார்களே அத்தகையோர் _ (அந்நயவஞ்சகர்களில் இருக்கின்றனர்.) மேலும், " நிச்சயமாக நாங்கள் நன்மையைத் தவிர (வேறெதனையும்) நாடவில்லை " என்று திண்ணமாக சத்தியமும் செய்கின்றனர்; இன்னும், நிச்சயமாக அவர்கள் பொய்யர்கள் என்று அல்லாஹ் சாட்சி கூறுகின்றான்.

108. (நபியே!) நீர் ஒருபோதும் அதில்(தொழுவதற்காக) நிற்க வேண்டாம்; ஆரம்பநாளிலிருந்தே (அல்லாஹ்வின்) பயபக்தியின் மீது அஸ்திவாரமிடப்பட்ட பள்ளியானது , அதில்தான், நீர் (தொழுகைக்காக) நிற்பது மிகத் தகுதியுடையது; பரிசுத்தமாக இருப்பதையே விரும்பும் (சிறந்த) மனிதர்கள் அதில் இருக்கின்றனர்; அல்லாஹ்வும் (இத்தகைய) பரிசுத்தமாக இருப்போரை நேசிக்கின்றான்.

109. ஆகவே, அல்லாஹ்விடமிருந்துள்ள பயபக்தியின் மீதும், (அவனுடைய) பொருத்தத்தின் மீதும் தன்கட்டடத்தை அஸ்திவாரமிட்டவர் சிறந்தவரா? அல்லது தன்கட்டிடத்தை வெள்ளத்தால் அரிக்கப்பட்டு விழுந்து விடும் ஓரக்கரையின் மீதுஅஸ்திவாரமிட்டவரா? ஆகவே, அது அவருடன் சேர்ந்து நரகநெருப்பில் சரிந்து விழுந்து விட்டது; மேலும் அநியாயக்கார சமூகத்தாரை அல்லாஹ் நேர் வழியில் செலுத்தமாட்டான்.

110. அவர்கள் கட்டிய அவர்களின் கட்டடம் அவர்களின் இதயங்களில் சந்தேகத்தை உடையதாகவே _ அவர்களுடைய இதயங்கள் துண்டு துண்டா(கி அவர்கள் மரணிக்)கும் வரை_இருந்து கொண்டிருக்கும்; மேலும், அல்லாஹ் (யாவரையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

111. நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகளிடமிருந்து அவர்களின் உயிர்களையும், அவர்களது செல்வங்களையும் நிச்சயமாக அவர்களுக்குச் சுவனம் உண்டு என்பதற்குப்பகரமாக (விலைக்கு) வாங்கிக் கொண்டான்; அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் போர் செய்து, அப்போது (விரோதிகளைக்) கொன்று விடுவார்கள்;(அல்லது விரோதிகளால்) கொல்லப்பட்டும் விடுவார்கள்; (இவர்களுக்குச் சுவனபதி தருவதாக) தவ்றாத்திலும், இன்ஜீலிலும், குர்ஆனிலும் (அல்லாஹ்) தன்மீது உண்மையான வாக்குறுதியாக (ஆக்கிக் கொண்டிருக்கின்றான்). அல்லாஹ்வைவிட தன் வாக்குறுதியைப் பூரணமாக நிறைவேற்றுபவர் யார்? ஆகவே,(விசுவாசிகளாகிய) நீங்கள் எதைக்கொண்டு ஒப்பந்தம் செய்து கொண்டீர்களோ அத்தகைய உங்களுடைய (இவ்)வர்த்தகத்தைக் கொண்டு மகிழ்ச்சியடையுங்கள்; மேலும், இதுவேதான் மகத்தான வெற்றியாகும்.

اَلتَّآئِبُوْنَ الْعٰبِدُوْنَ الْحٰمِدُوْنَ السَّآئِحُوْنَ الرّٰكِعُوْنَ
السّٰجِدُوْنَ الْاٰمِرُوْنَ بِالْمَعْرُوْفِ وَالنَّاهُوْنَ عَنِ الْمُنْكَرِ
وَالْحٰفِظُوْنَ لِحُدُوْدِ اللّٰهِ ؕ وَبَشِّرِ الْمُؤْمِنِيْنَ ﴿۱۱۲﴾ مَا كَانَ
لِلنَّبِيِّ وَالَّذِيْنَ اٰمَنُوْٓا اَنْ يَّسْتَغْفِرُوْا لِلْمُشْرِكِيْنَ وَ
لَوْ كَانُوْٓا اُولِيْ قُرْبٰى مِنْۢ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُمْ اَنَّهُمْ
اَصْحٰبُ الْجَحِيْمِ ﴿۱۱۳﴾ وَمَا كَانَ اسْتِغْفَارُ اِبْرٰهِيْمَ لِاَبِيْهِ
اِلَّا عَنْ مَّوْعِدَةٍ وَّعَدَهَآ اِيَّاهُ ۚ فَلَمَّا تَبَيَّنَ لَهٗٓ اَنَّهٗ عَدُوٌّ
لِّلّٰهِ تَبَرَّاَ مِنْهُ ؕ اِنَّ اِبْرٰهِيْمَ لَاَوَّاهٌ حَلِيْمٌ ﴿۱۱۴﴾ وَمَا كَانَ اللّٰهُ
لِيُضِلَّ قَوْمًۢا بَعْدَ اِذْ هَدٰىهُمْ حَتّٰى يُبَيِّنَ لَهُمْ مَّا
يَتَّقُوْنَ ؕ اِنَّ اللّٰهَ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ﴿۱۱۵﴾ اِنَّ اللّٰهَ لَهٗ مُلْكُ
السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ يُحْيٖ وَيُمِيْتُ ؕ وَمَا لَكُمْ مِّنْ
دُوْنِ اللّٰهِ مِنْ وَّلِيٍّ وَّلَا نَصِيْرٍ ﴿۱۱۶﴾ لَقَدْ تَّابَ اللّٰهُ عَلَى
النَّبِيِّ وَالْمُهٰجِرِيْنَ وَالْاَنْصَارِ الَّذِيْنَ اتَّبَعُوْهُ فِيْ
سَاعَةِ الْعُسْرَةِ مِنْۢ بَعْدِ مَا كَادَ يَزِيْغُ قُلُوْبُ فَرِيْقٍ
مِّنْهُمْ ثُمَّ تَابَ عَلَيْهِمْ ؕ اِنَّهٗ بِهِمْ رَءُوْفٌ رَّحِيْمٌ ﴿۱۱۷﴾ ۙ

112. (அத்தகையவர்கள்) பாவத்திலிருந்து மன்னிப்புக்கோரி (தவ்பாச் செய்து) மீண்டவர்கள், (அல்லாஹ் ஒருவனையே) வணங்குபவர்கள்; புகழ்பவர்கள்; நோன்பு நோற்பவர்கள்; ருகூஉ செய்பவர்கள்; ஸுஜூது செய்பவர்கள்; நன்மையான காரியங்களைச் செய்யும்படி ஏவுபவர்கள்; தீமையானவற்றை விட்டும் விலக்குபவர்கள்; அல்லாஹ்வுடைய வரம்புகளைப் பேணுபவர்கள்_ (அவர்கள்தான் அல்லாஹ்விடம் தங்களை விற்றவர்களாவார்கள்) விசுவாசிகளுக்கு (ச் சுவனபதி உண்டென்று, நபியே!) நீர் நன்மாராயமும் கூறுவீராக.(15)

113. நபிக்கோ, விசுவாசிகளுக்கோ இணைவைத்துக் கொண்டிருப்போருக்காக_ அவர்கள் (இவர்களுக்கு) நெருங்கிய பந்துக்களாக இருந்தாலும், அவர்கள் நிச்சயமாக நரகவாசிகள்தாம் என்று இவர்களுக்கு தெளிவானதன் பின்னர் _ மன்னிப்புக் கோருவது ஆகுமானதல்ல.

114. மேலும், (நபி) இப்றாஹீம் தன் தந்தைக்காக மன்னிப்புக் கோரியது, ஒரு வாக்குறுதியேதவிர வேறில்லை; அதை அவருக்கு அவர் வாக்களித்திருந்தார்; பின்னர், நிச்சயமாக(அவருடைய தந்தையாகிய) அவர் அல்லாஹ்வுக்கு விரோதி எனத் தெளிவாகிவிட்ட பொழுது, அதிலிருந்து அவர் விலகிக்கொண்டார்; நிச்சயமாக, இப்றாஹீம் மிக்க இரக்க மனமுடையவர்; துன்பங்களைச் சகித்துக்கொள்ளக்கூடியவர்.

115. எந்தக் கூட்டத்தினரையும் _ அல்லாஹ் அவர்களுக்கு நேர் வழி காட்டிய பின்னர், அவர்கள் விலகிக் கொள்ள வேண்டியதை, அவன் அவர்களுக்கு விவரமாகத் தெளிவுபடுத்துகின்றவரை_அவர்களை அவன் வழி கெடுப்பவனாக இல்லை. நிச்சயமாக அல்லாஹ், ஒவ்வொரு பொருளைப்பற்றியும் நன்கறிகிறவன்.

116. நிச்சயமாக அல்லாஹ்_அவனுக்கே வானங்கள், மற்றும் பூமியின் ஆட்சி உரியது; (அவனே) உயிர்ப்பிக்கின்றான்; (அவனே)மரணிக்கும்படியும் செய்கின்றான்; அல்லாஹ்வையன்றி உங்களுக்கு எந்த பாதுகாவலரும் இல்லை; எந்த உதவியாளரும் இல்லை.

117. (அல்லாஹ் தன்னுடைய) நபியின் மீதும், (அவ்வாறே)"முஹாஜிர்கள்" மீதும், இன்னும் அன்ஸார்கள் மீதும் (தவ்பாவை ஏற்று) திட்டமாக அல்லாஹ் பாவமன்னிப்புச் செய்தான்; அவர்கள் எத்தகையவர்களென்றால், அவர்களில் ஒரு சாராரின் இதயங்கள் சறுகி விடுவதற்கு நெருங்கிய பின்னர் நெருக்கடி சமயத்தில் (நமது நபியாகிய) அவரை (முழு மனதுடன்) பின் பற்றினர்; பின்னும் அவர்கள் மீது (தவ்பாவை ஏற்று) பாவமன்னிப்புச் செய்தான்; நிச்சயமாக அவன் அவர்களோடு மிக்க இரக்கமுடையவன்; மிகக்கிருபையுடையவன்.

وَّعَلَى الثَّلٰثَةِ الَّذِيْنَ خُلِّفُوْا ؕ حَتّٰۤى اِذَا ضَاقَتْ عَلَيْهِمُ
الْاَرْضُ بِمَا رَحُبَتْ وَضَاقَتْ عَلَيْهِمْ اَنْفُسُهُمْ وَظَنُّوْۤا اَنْ
لَّا مَلْجَاَ مِنَ اللّٰهِ اِلَّاۤ اِلَيْهِ ؕ ثُمَّ تَابَ عَلَيْهِمْ لِيَتُوْبُوْا ؕ اِنَّ
اللّٰهَ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ ﴿۱۱۸﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ ۱۴ ع ۸ ۳
وَكُوْنُوْا مَعَ الصّٰدِقِيْنَ ﴿۱۱۹﴾ مَا كَانَ لِاَهْلِ الْمَدِيْنَةِ وَمَنْ
حَوْلَهُمْ مِّنَ الْاَعْرَابِ اَنْ يَّتَخَلَّفُوْا عَنْ رَّسُوْلِ اللّٰهِ وَ
لَا يَرْغَبُوْا بِاَنْفُسِهِمْ عَنْ نَّفْسِهٖ ؕ ذٰلِكَ بِاَنَّهُمْ لَا يُصِيْبُهُمْ
ظَمَاٌ وَّلَا نَصَبٌ وَّلَا مَخْمَصَةٌ فِيْ سَبِيْلِ اللّٰهِ وَلَا يَطَـُٔوْنَ
مَوْطِئًا يَّغِيْظُ الْكُفَّارَ وَلَا يَنَالُوْنَ مِنْ عَدُوٍّ نَّيْلًا اِلَّا كُتِبَ
لَهُمْ بِهٖ عَمَلٌ صَالِحٌ ؕ اِنَّ اللّٰهَ لَا يُضِيْعُ اَجْرَ الْمُحْسِنِيْنَ ﴿۱۲۰﴾ لا
وَلَا يُنْفِقُوْنَ نَفَقَةً صَغِيْرَةً وَّلَا كَبِيْرَةً وَّلَا يَقْطَعُوْنَ
وَادِيًا اِلَّا كُتِبَ لَهُمْ لِيَجْزِيَهُمُ اللّٰهُ اَحْسَنَ مَا كَانُوْا
يَعْمَلُوْنَ ﴿۱۲۱﴾ وَمَا كَانَ الْمُؤْمِنُوْنَ لِيَنْفِرُوْا كَآفَّةً ؕ فَلَوْلَا نَفَرَ
مِنْ كُلِّ فِرْقَةٍ مِّنْهُمْ طَآئِفَةٌ لِّيَتَفَقَّهُوْا فِي الدِّيْنِ وَ
لِيُنْذِرُوْا قَوْمَهُمْ اِذَا رَجَعُوْۤا اِلَيْهِمْ لَعَلَّهُمْ يَحْذَرُوْنَ ﴿۱۲۲﴾ ع ۱۵ ع ۴ ۴

118. பிற்படுத்திவைக்கப்பட்டிருந்தோரான மூவரின் மீதும் (அல்லாஹ் அவர்களின் தவ்பாவை ஏற்று மன்னித்துவிட்டான்); முடிவில் பூமி – அது விஸ்தீரணமாக இருந்தும் அவர்களுக்கு நெருக்கடியாகிவிட்டது; இன்னும், அவர்கள்மீது அவர்களின் உயிர்களும் நெருக்கடியாகிவிட்டன; அல்லாஹ் விடமிருந்து ஒதுங்குமிடம் அவனின்பால் அல்லாது இல்லை என்பதையும் அவர்கள் உறுதியாக அறிந்துகொண்டனர்; ஆதலால், அவர்கள் (பாவத்திலிருந்து) விலகிக் கொள்வதற்காக, அவர்களை மன்னித்(து அருள் புரிந்)தான்; நிச்சயமாக அல்லாஹ்வே தவ்பாவை மிகவும் ஏற்(று மிக்க மன்னிப்)பவன்; மிகக் கிருபையுடையவன்.

119. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள்; (சொல்லாலும், செயலாலும்) உண்மையாளர்களுடனும் ஆகிவிடுங்கள்.

120. மதீனாவாசிகளுக்கும், (அரபிகளிலுள்ள) கிராமவாசிகளில் அவர்களைச் சூழ வசிப்பவருக்கும்–அவர்கள் அல்லாஹ்வுடைய தூதரைவிட்டுப் பின் தங்குவதும், (அல்லாஹ்வுடைய) தூதரின் உயிரைவிடத் தங்களின் உயிர்களையே (பெரிதாகக் கருதி) ஆசைவைப்பதும் அவர்களுக்குத் தகுமானதல்ல; அதன் காரணமாவது, "நிச்சயமாக அவர்கள், அல்லாஹ்வின் பாதையில் (செல்கையில்)தாகம், களைப்பு, பசி ஆகியவையும் அவர்களுக்கு ஏற்படுவதில்லை; (அதுபோன்றே) நிராகரிப்பவர்களை ஆத்திரமூட்டக்கூடிய எந்த இடத்திலும் அவர்கள் மிதிப்பதுமில்லை; எதிரியிடமிருந்து எ(ந்தத் துன்பத்)தையும் அவர்கள் அடைவதுமில்லை; அவற்றுக்குப் பகரமாக அவர்களுக்கு நல்ல செயல் (அதனுடைய நன்மை) எழுதப்பட்டே தவிர" என்பதாகும்; நிச்சயமாக, அல்லாஹ் (இத்தகைய) நன்மை செய்தோரின் கூலியை வீணாக்கிவிடமாட்டான்.

121. இன்னும், அவர்கள் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ செலவு செய்வதுமில்லை; எந்தப் பள்ளத்தாக்கையும் அவர்கள் கடப்பதுமில்லை அவர்களுக்கு (அவைகள் நற்கருமங்களாக) எழுதப்பட்டே தவிர; காரணம் அவர்கள் செய்துகொண்டிருந்தவைக்கு மிக அழகான கூலியை அவர்களுக்கு அல்லாஹ் நல்குவதற்காகவே.

122. விசுவாசிகள் ஒட்டுமொத்தமாக(ஊரை விட்டு) புறப்பட்டுச் செல்லலாகாது; அவர்களில் ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் ஒரு சிறிய கூட்டத்தார், மார்க்கத்தை விளங்கிக் கொள்வதற்காகவும், இன்னும் அவர்களின் கூட்டத்தாரை அவர்கள்பால் திரும்பிவிடும் பொழுது எச்சரிக்கை செய்வதற்காகவும் அவர்கள் புறப்பட்டுச் செல்லவேண்டாமா? (அதன் மூலம்) அவர்கள் (தீயவைகளை) தவிர்த்துக்கொள்ளலாம்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا قَاتِلُوا الَّذِيْنَ يَلُوْنَكُمْ مِّنَ
الْكُفَّارِ وَلْيَجِدُوْا فِيْكُمْ غِلْظَةً ؕ وَاعْلَمُوْۤا اَنَّ اللّٰهَ مَعَ
الْمُتَّقِيْنَ ﴿۱۲۳﴾ وَاِذَا مَاۤ اُنْزِلَتْ سُوْرَةٌ فَمِنْهُمْ مَّنْ يَّقُوْلُ الربع
اَيُّكُمْ زَادَتْهُ هٰذِهٖۤ اِيْمَانًا ۚ فَاَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا
فَزَادَتْهُمْ اِيْمَانًا وَّهُمْ يَسْتَبْشِرُوْنَ ﴿۱۲۴﴾ وَاَمَّا
الَّذِيْنَ فِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ فَزَادَتْهُمْ رِجْسًا اِلٰى
رِجْسِهِمْ وَمَاتُوْا وَهُمْ كٰفِرُوْنَ ﴿۱۲۵﴾ اَوَلَا يَرَوْنَ
اَنَّهُمْ يُفْتَنُوْنَ فِيْ كُلِّ عَامٍ مَّرَّةً اَوْ مَرَّتَيْنِ ثُمَّ لَا
يَتُوْبُوْنَ وَلَا هُمْ يَذَّكَّرُوْنَ ﴿۱۲۶﴾ وَاِذَا مَاۤ اُنْزِلَتْ سُوْرَةٌ
نَّظَرَ بَعْضُهُمْ اِلٰى بَعْضٍ ؕ هَلْ يَرٰىكُمْ مِّنْ اَحَدٍ ثُمَّ
انْصَرَفُوْا ؕ صَرَفَ اللّٰهُ قُلُوْبَهُمْ بِاَنَّهُمْ قَوْمٌ لَّا
يَفْقَهُوْنَ ﴿۱۲۷﴾ لَقَدْ جَآءَكُمْ رَسُوْلٌ مِّنْ اَنْفُسِكُمْ عَزِيْزٌ
عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيْصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِيْنَ رَءُوْفٌ
رَّحِيْمٌ ﴿۱۲۸﴾ فَاِنْ تَوَلَّوْا فَقُلْ حَسْبِيَ اللّٰهُ ۖۗ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ؕ
عَلَيْهِ تَوَكَّلْتُ وَهُوَ رَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ ﴿۱۲۹﴾ ع ١٦ ٧ ٥

123. விசுவாசங்கொண்டோரே! நிராகரிப்போரிலிருந்து உங்களை அடுத்திருப்போருடன் போர் செய்யுங்கள்; அவர்கள் உங்களிடம் கடுமையையே காணவேண்டும்; இன்னும் , நிச்சயமாக அல்லாஹ், பயபக்தியுடையோர்களுடன் இருக்கின்றான் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்.

124. மேலும், ஏதேனும் ஓர் (புதிய) அத்தியாயம் இறக்கிவைக்கப்பட்டால் "உங்களில் யாருக்கு இது விசுவாசத்தை அதிகப்படுத்தியிருக்கிறது?" என்று கேட்கக்கூடியவர்களும் அவர்களில் இருக்கின்றனர்; ஆகவே, விசுவாசங் கொண்டிருக்கிறார்களே அத்தகையோர் — அவர்களுக்கு அது விசுவாசத்தை அதிகப்படுத்தி விட்டது; (இதுகுறித்து) அவர்களோ மகிழ்ச்சியடைகின்றனர்.

125. அன்றியும், எவர்களுடைய இதயங்களில் நோய் இருக்கின்றதோ, அத்தகையோர் — அவர்களுக்கு அவர்களுடைய அசுத்தத்துக்கு மேல் அசுத்தத்தையே அது அதிகப்படுத்திவிட்டது; இன்னும், அவர்கள் நிராகரித்தவர்களாக இறந்தும் விட்டனர்.

126. "நிச்சயமாக அவர்கள் ஒவ்வொரு வருடத்திலும் ஒரு தடவையோ, அல்லது இரு தடவையோ (துன்பங்களுக்குள்ளாகிச்)சோதிக்கப்படுகின்றனர்" என்பதையும், (அதன்) பிறகும் அவர்கள் தவ்பாச்செய்து மீள்வதுமில்லை; நல்லுணர்ச்சி பெறுவதுமில்லை என்பதையும் அவர்கள் காணவில்லையா?

127. இன்னும், ஓர் அத்தியாயம் இறக்கிவைக்கப்பட்டால், அவர்களில் சிலர் சிலரைப் பார்க்கின்றனர்; (கண்ணால் சாடை காட்டி, விசுவாசிகளில்) "உங்களை எவரும் பார்த்தாரா?" என்று (கேட்டுவிட்டுப்) பின்னர் திரும்பி விடுகின்றனர். நிச்சயமாக அவர்கள் (சத்தியத்தை) விளங்கிக் கொள்ள முடியாத கூட்டத்தாராக இருப்பதன் காரணத்தால் அல்லாஹ் அவர்களுடைய இதயங்களை திருப்பிவிட்டான்.

128. (விசுவாசிகளே!) உங்களிலிருந்தே திட்டமாக ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார்; (உங்களுக்கு யாதொரு துன்பம் ஏற்பட்டு) நீங்கள் கஷ்டப்படுவது அவருக்கு மிக வருத்தமாக இருக்கும்; உங்கள்மீது மிக்க பேராசை கொண்டவர்; விசுவாசிகளோடு மிக இரக்கமுள்ளவர்; மிகக் கிருபையுடையவர்.

129. (நபியே! இதற்குப்) பின்னரும், அவர்கள் (உம்மை ஏற்காது) விலகிக் கொண்டால், (அவர்களிடம்,) நீர் கூறுவீராக: "அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன்; அவனைத் தவிர வணக்கத்திற்குரிய (வேறு) நாயனில்லை; அவன்மீது (என் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைத்துள்ளேன்; அவனே மகத்தான அர்ஷின் அதிபதியாவான்".

سُوْرَةُ يُوْنُسَ مَكِّيَّةٌ وَهِيَ مِائَةٌ وَتِسْعُ اٰيَاتٍ وَاِحْدٰى عَشَرَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

الٓرٰ قف تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ الْحَكِيْمِ ۝١ اَكَانَ لِلنَّاسِ عَجَبًا اَنْ اَوْحَيْنَآ
اِلٰى رَجُلٍ مِّنْهُمْ اَنْ اَنْذِرِ النَّاسَ وَبَشِّرِ الَّذِيْنَ اٰمَنُوْٓا اَنَّ لَهُمْ
قَدَمَ صِدْقٍ عِنْدَ رَبِّهِمْ ؕ قَالَ الْكٰفِرُوْنَ اِنَّ هٰذَا لَسٰحِرٌ مُّبِيْنٌ ۝٢
اِنَّ رَبَّكُمُ اللّٰهُ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ فِيْ سِتَّةِ اَيَّامٍ
ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ يُدَبِّرُ الْاَمْرَ ؕ مَا مِنْ شَفِيْعٍ اِلَّا مِنْۢ
بَعْدِ اِذْنِهٖ ؕ ذٰلِكُمُ اللّٰهُ رَبُّكُمْ فَاعْبُدُوْهُ ؕ اَفَلَا تَذَكَّرُوْنَ ۝٣ اِلَيْهِ
مَرْجِعُكُمْ جَمِيْعًا ؕ وَعْدَ اللّٰهِ حَقًّا ؕ اِنَّهٗ يَبْدَؤُا الْخَلْقَ ثُمَّ يُعِيْدُهٗ
لِيَجْزِيَ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ بِالْقِسْطِ ؕ وَالَّذِيْنَ كَفَرُوْا
لَهُمْ شَرَابٌ مِّنْ حَمِيْمٍ وَّعَذَابٌ اَلِيْمٌۢ بِمَا كَانُوْا يَكْفُرُوْنَ ۝٤
هُوَ الَّذِيْ جَعَلَ الشَّمْسَ ضِيَآءً وَّالْقَمَرَ نُوْرًا وَّقَدَّرَهٗ مَنَازِلَ
لِتَعْلَمُوْا عَدَدَ السِّنِيْنَ وَالْحِسَابَ ؕ مَا خَلَقَ اللّٰهُ ذٰلِكَ اِلَّا بِالْحَقِّ ۚ
يُفَصِّلُ الْاٰيٰتِ لِقَوْمٍ يَّعْلَمُوْنَ ۝٥ اِنَّ فِي اخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ
وَمَا خَلَقَ اللّٰهُ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّتَّقُوْنَ ۝٦

وقف النبی صلی اللہ علیہ وسلم

அத்தியாயம் : 10

## யூனுஸ்

வசனங்கள் : 109 மக்கீ ருகூஉகள் : 11

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. அலிஃப் லாம் றா. இவை தீர்க்கமான அறிவு நிறைந்த இவ் வேதத்தின் வசனங்களாகும்.

2. (நபியே!) மனிதர்களுக்கு நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக;(என்றும்) விசுவாசங்கொண்டார்களே அத்தகையோருக்கு_ நிச்சயமாக அவர்களுக்குத் தங்கள் இரட்சகனிடத்தில் பெரும் பதவியுண்டென்று நீர் நன்மாராயமும் கூறுவீராக என்று அவர்களில் ஒரு மனிதருக்கு நாம் வஹீ அறிவித்தது மனிதர்களுக்கு ஆச்சரியமாக இருக்கின்றதா? "நிச்சயமாக இவர் தெளிவான ஒரு சூனியக்காரர்" என்று நிராகரிப்போர் கூறினர்.

3. நிச்சயமாக உங்களுடைய இரட்சகன் அல்லாஹ்தான்; அவன் எத்தகையவனென்றால், வானங்களை மற்றும், பூமியை ஆறு நாட்களில் படைத்தான்; பின்னர் (தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீதிருப்பது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே)அவன் அர்ஷின் மீது உயர்ந்து(நிலைபெற்று) விட்டான். (இவைகள் பற்றிய) சகல காரியங்களையும் அவனே (திட்டமிட்டு) நிர்வகிக்கின்றான்; அவனுடைய அனுமதிக்குப் பின்னரே தவிர (அவனிடம்) பரிந்துரைப்போர் எவருமில்லை; அவன்தான் உங்கள் இரட்சகனாகிய அல்லாஹ்! ஆகவே, அவனையே நீங்கள் வணங்குங்கள்; நீங்கள் நினைவு கூரமாட்டீர்களா?

4. அவன் பக்கமே உங்கள் அனைவரின் திரும்பிச் செல்லுதல் இருக்கிறது; அல்லாஹ்வுடைய வாக்கு உண்மையானது. நிச்சயமாக , அவன்(தான்) படைப்பினங்களை முதல் தடவை (படைக்க) ஆரம்பிக்கிறான் ; பின்னர் , விசுவாசித்து , நற்கருமங்களையும் செய்தோருக்கு நீதமாக (நற்) கூலி கொடுப்பதற்காக(இறந்தபின் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பி)அவற்றை மீட்டுவான்;இன்னும் நிராகரிக்கின்றார்களே அத்தகையோர் _அவர்களுக்கு, அவர்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததன் காரணமாக முடிவுறக் காய்ந்த (கொதிநீரின்) பானமும் , மிகத் துன்புறுத்தும் வேதனையுமுண்டு.

5. அவன் எத்தகையவனென்றால், சூரியனை மின்னும் ஒளிமிகுந்ததாகவும், சந்திரனை (வெளிச்சந்தரக்கூடிய) பிரகாசமாகவும் ஆக்கினான்; இன்னும் வருடங்களின் எண்ணிக்கையையும்,(மாதங்களின்) கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்வதற்காக (சந்திரனாகிய) அதற்கு தங்குமிடங்களையும் அவன் ஏற்படுத்தினான்; உண்மையைக்கொண்டே தவிர இவைகளை அல்லாஹ் படைக்கவில்லை; அறியக்கூடிய சமூகத்தார்க்கு சான்றுகளை (இவ்வாறு) அவன் விவரிக்கின்றான்.

6. நிச்சயமாக இரவு மற்றும், பகல் (ஒன்றன்பின் ஒன்றாக ) மாறி மாறி வருவதிலும், வானங்களில், மற்றும் பூமியில் அல்லாஹ் படைத்திருப்பவற்றிலும் பயபக்தியுடைய சமூகத்தார்க்குப் பல சான்றுகள் திட்டமாக இருக்கின்றன.

اِنَّ الَّذِيْنَ لَا يَرْجُوْنَ لِقَآءَنَا وَرَضُوْا بِالْحَيٰوةِ الدُّنْيَا
وَاطْمَاَنُّوْا بِهَا وَالَّذِيْنَ هُمْ عَنْ اٰيٰتِنَا غٰفِلُوْنَ ۝۷ اُولٰٓئِكَ
مَاْوٰىهُمُ النَّارُ بِمَا كَانُوْا يَكْسِبُوْنَ ۝۸ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَ
عَمِلُوا الصّٰلِحٰتِ يَهْدِيْهِمْ رَبُّهُمْ بِاِيْمَانِهِمْ ۚ تَجْرِيْ مِنْ تَحْتِهِمُ
الْاَنْهٰرُ فِيْ جَنّٰتِ النَّعِيْمِ ۝۹ دَعْوٰىهُمْ فِيْهَا سُبْحٰنَكَ اللّٰهُمَّ وَ
تَحِيَّتُهُمْ فِيْهَا سَلٰمٌ ۚ وَاٰخِرُ دَعْوٰىهُمْ اَنِ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ
الْعٰلَمِيْنَ ۝۱۰ وَلَوْ يُعَجِّلُ اللّٰهُ لِلنَّاسِ الشَّرَّ اسْتِعْجَالَهُمْ بِالْخَيْرِ ع ۱
لَقُضِيَ اِلَيْهِمْ اَجَلُهُمْ ۭ فَنَذَرُ الَّذِيْنَ لَا يَرْجُوْنَ لِقَآءَنَا فِيْ
طُغْيَانِهِمْ يَعْمَهُوْنَ ۝۱۱ وَاِذَا مَسَّ الْاِنْسَانَ الضُّرُّ دَعَانَا
لِجَنْۢبِهٖٓ اَوْ قَاعِدًا اَوْ قَآئِمًا ۚ فَلَمَّا كَشَفْنَا عَنْهُ ضُرَّهٗ مَرَّ
كَاَنْ لَّمْ يَدْعُنَآ اِلٰى ضُرٍّ مَّسَّهٗ ۭ كَذٰلِكَ زُيِّنَ لِلْمُسْرِفِيْنَ
مَا كَانُوْا يَعْمَلُوْنَ ۝۱۲ وَلَقَدْ اَهْلَكْنَا الْقُرُوْنَ مِنْ قَبْلِكُمْ
لَمَّا ظَلَمُوْا ۙ وَجَآءَتْهُمْ رُسُلُهُمْ بِالْبَيِّنٰتِ وَمَا كَانُوْا
لِيُؤْمِنُوْا ۭ كَذٰلِكَ نَجْزِي الْقَوْمَ الْمُجْرِمِيْنَ ۝۱۳ ثُمَّ جَعَلْنٰكُمْ
خَلٰٓئِفَ فِي الْاَرْضِ مِنْۢ بَعْدِهِمْ لِنَنْظُرَ كَيْفَ تَعْمَلُوْنَ ۝۱۴

7. நிச்சயமாக நம்முடைய சந்திப்பில் ஆர்வம் கொள்ளாது , இவ்வுலக வாழ்க்கையைப் பொருந்திக்கொண்டு , இன்னும் அதனைக் கொண்டு திருப்தியடைந்து (அதிலேயே மூழ்கியும்) விட்டார்களே அவர்களும் , இன்னும் நம் வசனங்களைப் (புறக்கணித்து)விட்டு மறந்தவர்களாக இருக்கின்றனரே அவர்களும் _ (ஆகிய)

*8. அத்தகையோார்; அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்த(தீய)வற்றின் காரணமாக அவர்கள் தங்குமிடம் நரகந்தான்.*

*9. நிச்சயமாக விசுவாசங்கொண்டு, நற்கருமங்களும் செய்கிறார்களே அத்தகையோர் _ அவர்களுடைய இரட்சகன் அவர்களின் விசுவாசத்தின் காரணமாக அவர்களுக்கு நேர்வழிகாட்டுவான்; இன்பந்தரும் சுவனங்களில் (வசிக்கும்) அவர்களுக்குக் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்.*

*10. அவற்றில் அவர்களின் பிரார்த்தனையாகிறது "எங்கள் அல்லாஹ்வே! நீ மிகப் பரிசுத்தமானவன்" என்பதாகும்; அதில் (ஒருவர் மற்றவருக்கு கூறும்) அவர்களுடைய காணிக்கையாவது "ஸலாமுன் ( சாந்தி உண்டாவதாக)" என்பதாகும். இன்னும், "புகழனைத்தும், அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியது" என்பது அவர்களுடைய பிரார்த்தனையின் முடிவாக இருக்கும்.*

11. மனிதர்களுக்கு _ நன்மையை அடைய அவர்கள் அவசரப்படுவதைப்போல் , (கோபத்தில் மனிதர்கள் , தங்களுக்கும் மற்றவர்களுக்கும் பாதகமாக பிரார்த்தித்துக் கேட்ட) தீமையை (அவர்களுக்குத்தர) அல்லாஹ்வும் அவசரப்பட்டால் , (இது வரையில்) நிச்சயமாக அவர்களுடைய காலம் அவர்களுக்கு முடிக்கப் பெற்றே இருக்கும். ஆகவே , நம்முடைய சந்திப்பில் ஆர்வம் கொள்ளாதவர்களை , அவர்களுடைய வழிகேட்டிலேயே தட்டழிந்து கெட்டலையும்படி (இம்மையில்) நாம் விட்டுவிடுகிறோம்.

12. மனிதனை துன்பம் தீண்டுமானால் (அதனை நீக்குமாறு) அவன் (சாய்ந்து) படுத்தவனாக , அல்லது உட்கார்ந்தவனாக , அல்லது நின்றவனாக நம்மை அவன் (பிரார்த்தித்து) அழைக்கிறான். பின்னர் , அவனுடைய துன்பத்தை அவனைவிட்டு நாம் நீக்கிவிட்டோமானால் , அவன் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்கும்படி நம்மிடம் பிரார்த்தனையே செய்யாதது போல் (புறக்கணித்துச்) சென்று விடுகிறான் ; வரம்பு மீறுவோருக்கு அவர்கள் செய்து கொண்டிருந்த(தீய)து இவ்வாறு அலங்காரமாக ஆக்கப் பட்டுவிட்டது.

*13. மேலும், (மனிதர்களே!) உங்களுக்கு முன்னிருந்த எத்தனையோ தலைமுறையினரை, அவர்கள் அநியாயம் செய்து விட்டபோது திட்டமாக நாம் அழித்துவிட்டோம்; அவர்களிடம் (நம்மால்) அனுப்பப்பட்ட அவர்களுடைய தூதர்கள் தெளிவான சான்றுகளையே கொண்டுவந்தனர்; (அவற்றை) அவர்கள் நம்புபவர்களாகவும் இல்லை. குற்றவாளிகளான சமூகத்தினருக்கு இவ்வாறே நாம் கூலி கொடு(த்துத் தண்டி)க்கின்றோம்.*

*14. பின்னர், நீங்கள் எவ்வாறு செய்கின்றீர்கள் என்று நாம் கவனிப்பதற்காக, பூமியில் அவர்களுக்குப்பின்னர் உங்களை (அவர்களுக்கு) பின் தோன்றல்களாக நாம் ஆக்கினோம்.*

وَاِذَا تُتْلٰى عَلَيْهِمْ اٰيَاتُنَا بَيِّنٰتٍ ۙ قَالَ الَّذِيْنَ لَا يَرْجُوْنَ
لِقَآءَنَا ائْتِ بِقُرْاٰنٍ غَيْرِ هٰذَآ اَوْ بَدِّلْهُ ؕ قُلْ مَا يَكُوْنُ لِيْٓ
اَنْ اُبَدِّلَهٗ مِنْ تِلْقَآئِ نَفْسِيْ ۚ اِنْ اَتَّبِعُ اِلَّا مَا يُوْحٰٓى اِلَيَّ ۚ
اِنِّيْٓ اَخَافُ اِنْ عَصَيْتُ رَبِّيْ عَذَابَ يَوْمٍ عَظِيْمٍ ﴿١٥﴾ قُلْ
لَّوْ شَآءَ اللّٰهُ مَا تَلَوْتُهٗ عَلَيْكُمْ وَلَآ اَدْرٰىكُمْ بِهٖ ۖ فَقَدْ لَبِثْتُ
فِيْكُمْ عُمُرًا مِّنْ قَبْلِهٖ ؕ اَفَلَا تَعْقِلُوْنَ ﴿١٦﴾ فَمَنْ اَظْلَمُ مِمَّنِ
افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا اَوْ كَذَّبَ بِاٰيٰتِهٖ ؕ اِنَّهٗ لَا يُفْلِحُ
الْمُجْرِمُوْنَ ﴿١٧﴾ وَيَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَضُرُّهُمْ
وَلَا يَنْفَعُهُمْ وَيَقُوْلُوْنَ هٰٓؤُلَآءِ شُفَعَآؤُنَا عِنْدَ اللّٰهِ ؕ قُلْ
اَتُنَبِّـُٔوْنَ اللّٰهَ بِمَا لَا يَعْلَمُ فِي السَّمٰوٰتِ وَلَا فِي الْاَرْضِ ؕ
سُبْحٰنَهٗ وَتَعٰلٰى عَمَّا يُشْرِكُوْنَ ﴿١٨﴾ وَمَا كَانَ النَّاسُ
اِلَّآ اُمَّةً وَّاحِدَةً فَاخْتَلَفُوْا ؕ وَلَوْلَا كَلِمَةٌ سَبَقَتْ مِنْ
رَّبِّكَ لَقُضِيَ بَيْنَهُمْ فِيْمَا فِيْهِ يَخْتَلِفُوْنَ ﴿١٩﴾ وَيَقُوْلُوْنَ
لَوْلَآ اُنْزِلَ عَلَيْهِ اٰيَةٌ مِّنْ رَّبِّهٖ ۚ فَقُلْ اِنَّمَا
الْغَيْبُ لِلّٰهِ فَانْتَظِرُوْا ۚ اِنِّيْ مَعَكُمْ مِّنَ الْمُنْتَظِرِيْنَ ﴿٢٠﴾ ع ٢ ٧

15. மேலும், அவர்கள் மீது நம்முடைய தெளிவான வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டால்,(மறுமையில்) நம்முடைய சந்திப்பை (அதன் மூலம் ஏற்படும் தண்டனையை) பயப்படாத (இ)வர்கள் "இதல்லாத (வேறொரு) குர்ஆனை நீர் கொண்டுவாரும்; அல்லது (நாங்கள் விரும்புகிறவாறு) இதனை மாற்றிவிடும்" என்று கூறுகின்றனர்;(அதற்கு, "நீங்கள் விரும்புகிறவாறு) நான் என் புறத்திலிருந்து இதனை மாற்றிவிட எனக்கு எவ்வித உரிமையுமில்லை; எனக்கு அறிவிக்கப் படுவதைத்தவிர (வேறெதையும்) நான் பின்பற்றுவதில்லை; என்னுடைய இரட்சகனுக்கு நான் மாறு செய்தால், மகத்தான நாளுடைய வேதனையை நிச்சயமாக நான் பயப்படுகிறேன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

16. அல்லாஹ் நாடியிருந்தால், நான் இதனை உங்களுக்கு ஓதிக் காண்பித்திருக்க மாட்டேன்; இதனை உங்களுக்கு அவன் அறிவித்திருக்கவுமாட்டான்; ஆகவே நிச்சயமாக நான் இதற்கு முன்னரும் நீண்ட காலம் உங்களுடன் திட்டமாக தங்கியிருக்கிறேன்; ஆகவே, (இதை) நீங்கள் விளங்கிக்கொள்ளக்கூடாதா? என்று (நபியே!) நீர் கூறுவீராக!

17. ஆகவே, அல்லாஹ்வின்மீது பொய்யைக்கற்பனைச் செய்பவனைவிட, அல்லது அவனுடைய வசனங்களைப் பொய்யாக்குபவனைவிட மிகப்பெரிய அநியாயக்காரன் யார்? நிச்சயமாக குற்றவாளிகள் வெற்றியடையமாட்டார்கள்.

18. மேலும், அல்லாஹ்வையன்றி, தங்களுக்கு இடர் அளிக்காதவற்றை இன்னும், தங்களுக்குப் பலன் அளிக்காதவற்றை அவர்கள் வணங்குகிறார்கள்; "இவர்கள் அல்லாஹ்விடத்தில் எங்களுக்கு பரிந்துரையாளர்கள்" என்றும் அவர்கள் கூறுகின்றனர்; (ஆகவே, நபியே! நீர் அவர்களிடம்,) "வானங்களிலோ, பூமியிலோ அல்லாஹ்வுக்குத் தெரியாதவைகளை நீங்கள் அவனுக்கு அறிவிக்கின்றீர்களா? (அவனோ யாவையும் நன்கறிந்தவன்)அவன் மிகப் பரிசுத்தமானவன்; அவர்கள் இணைவைப்பவைகளை விட்டும் உயர்வடைந்துவிட்டான்" என்று கூறுவீராக!

19. மேலும், மனிதர்கள் (தொடக்கத்தில்) ஒரே சமுதாயத்தினராகவே தவிர இருக்கவில்லை; பின்னரே அவர்கள் (பிரிந்து) மாறுபட்டுவிட்டனர்; மேலும், (ஒவ்வொரு காரியத்திற்கும் தவணை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்ற) உமது இரட்சகனின் வாக்கு முந்தியிருக்காவிடில், அவர்கள் எதில் மாறுபட்டிருக்கின்றனரோ அதைப்பற்றி அவர்களிடையேமுடிவு செய்யப்பட்டேயிருக்கும்.

20. மேலும், "(முன்பிருந்த நபிமார்களுக்கு கொடுக்கப்பட்டவாறு) ஏதோர் அத்தாட்சி (அல்லாஹ்வின் தூதராகிய) அவர்மீது அவருடைய இரட்சகனிடமிருந்து இறக்கப்பட்டிருக்கவேண்டாமா?" என்றும் அவர்கள் கூறுகின்றனர்; அதற்கு "மறைவானவைகள் அல்லாஹ்விற்கே உரியன; ஆகவே, நீங்கள் எதிர்பார்த்திருங்கள்; நிச்சயமாக நான், உங்களுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்போரில் இருக்கிறேன்" என்று(நபியே! நீர்) கூறுவீராக!

وَإِذَآ أَذَقْنَا النَّاسَ رَحْمَةً مِّنْ بَعْدِ ضَرَّآءَ مَسَّتْهُمْ إِذَا لَهُمْ مَّكْرٌ
فِيْٓ اٰيَاتِنَا قُلِ اللّٰهُ اَسْرَعُ مَكْرًا اِنَّ رُسُلَنَا يَكْتُبُوْنَ مَا تَمْكُرُوْنَ ﴿٢١﴾
هُوَ الَّذِيْ يُسَيِّرُكُمْ فِي الْبَرِّ وَالْبَحْرِ حَتّٰٓى اِذَا كُنْتُمْ فِي الْفُلْكِ وَ
جَرَيْنَ بِهِمْ بِرِيْحٍ طَيِّبَةٍ وَّفَرِحُوْا بِهَا جَآءَتْهَا رِيْحٌ عَاصِفٌ
وَّجَآءَهُمُ الْمَوْجُ مِنْ كُلِّ مَكَانٍ وَّظَنُّوْٓا اَنَّهُمْ اُحِيْطَ بِهِمْ دَعَوُا
اللّٰهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ لَئِنْ اَنْجَيْتَنَا مِنْ هٰذِهٖ لَنَكُوْنَنَّ
مِنَ الشّٰكِرِيْنَ ﴿٢٢﴾ فَلَمَّآ اَنْجٰىهُمْ اِذَا هُمْ يَبْغُوْنَ فِي الْاَرْضِ بِغَيْرِ
الْحَقِّ يٰٓاَيُّهَا النَّاسُ اِنَّمَا بَغْيُكُمْ عَلٰٓى اَنْفُسِكُمْ مَّتَاعَ الْحَيٰوةِ الدُّنْيَا
ثُمَّ اِلَيْنَا مَرْجِعُكُمْ فَنُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿٢٣﴾ اِنَّمَا مَثَلُ
الْحَيٰوةِ الدُّنْيَا كَمَآءٍ اَنْزَلْنٰهُ مِنَ السَّمَآءِ فَاخْتَلَطَ بِهٖ نَبَاتُ
الْاَرْضِ مِمَّا يَاْكُلُ النَّاسُ وَالْاَنْعَامُ حَتّٰٓى اِذَآ اَخَذَتِ الْاَرْضُ
زُخْرُفَهَا وَازَّيَّنَتْ وَظَنَّ اَهْلُهَآ اَنَّهُمْ قٰدِرُوْنَ عَلَيْهَآ اَتٰهَآ
اَمْرُنَا لَيْلًا اَوْ نَهَارًا فَجَعَلْنٰهَا حَصِيْدًا كَاَنْ لَّمْ تَغْنَ
بِالْاَمْسِ كَذٰلِكَ نُفَصِّلُ الْاٰيٰتِ لِقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ ﴿٢٤﴾ وَاللّٰهُ
يَدْعُوْٓا اِلٰى دَارِ السَّلٰمِ وَيَهْدِيْ مَنْ يَّشَآءُ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿٢٥﴾

21. மேலும், மனிதர்களை_அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்குப்பின் ஒரு அருளைக்கொண்டு இன்பமடையும்படி நாம்செய்தால், அச்சமயம் அவர்கள் நம் வசனங்களில் (தவறான பொருள் கற்பிக்கச்) சூழ்ச்சி செய்வது அவர்களுக்கு (வழக்கமாக) உண்டு; (அதற்கு நபியே! உங்கள் சூழ்ச்சியைமுறியடிக்க) அல்லாஹ்(வின் சூழ்ச்சி முந்திக்கொள்ளும்; அவன்) சூழ்ச்சியால் மிகத்தீவிரமானவன் என்று கூறுவீராக! நிச்சயமாக, நம்முடைய தூதர்(களாகிய மலக்கு)கள் நீங்கள் செய்யும் சூழ்ச்சிகளை எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

22. கரையில் மற்றும் கடலில் அவனே உங்களை பயணம் செய்ய வைக்கின்றான்;முடிவாக, நீங்கள் கப்பல்களில் இருக்கும்போது நல்ல காற்றுடன் அவர்களை அவைகள் கொண்டு சென்றன; (அவ்வாறு நன்கு அவை செல்லும்) அதனைக் கொண்டு அவர்கள் மகிழ்ச்சியும் அடைந்திருந்த சமயத்தில் புயல் காற்று அதனிடம் வந்துவிட்டது; எல்லா இடங்களிலிருந்து அவர்களிடம் அலைகளும் வந்து விட்டன; "நிச்சயமாக அவர்கள் (அலைகளால்) சூழ்ந்து கொள்ளப்பட்டார்கள்; (அதிலிருந்து கரைசேரமுடியாது)" என்றும் அவர்கள் எண்ணிவிட்டனர்; (அப்பொழுது) அல்லாஹ்வை_ அவனுக்கே மார்க்கத்தை(வணக்கத்தை) கலப்பற்றதாக்கியவர்களாக, (தூய உள்ளத்துடன், "எங்கள் இரட்சகனே!) இதிலிருந்து நீ எங்களை காப்பாற்றி விட்டால், நிச்சயமாக நாங்கள் (உனக்கு) நன்றி செலுத்துபவர்களில் உள்ளவர்களாக நாங்கள் இருப்போம்" என்று பிரார்த்திக்கின்றனர்.

23. ஆகவே அவன் அவர்களைக் காப்பாற்றியபொழுது, அவர்கள் (கரை சேர்க்கப்பட்ட) அந்நேரமே, நியாயமின்றி பூமியில் அழிச்சாட்டியம் செய்கின்றனர்; மனிதர்களே! உங்களுடைய அழிச்சாட்டியமெல்லாம் உங்களுக்கே கேடாக முடியும்; (அதனால்) இவ்வுலக வாழ்க்கையில் சிறிது சுகமனுபவிக்கலாம்; பின்னர், நம்மிடமே உங்கள் திரும்புதல் இருக்கிறது; (அப்போது) நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றை நாம் உங்களுக்கு அறிவித்துவிடுவோம்.

24. இவ்வுலக வாழ்க்கையின் உதாரணமெல்லாம் நீரைப் போன்றாகும்; அதை வானத்திலிருந்து நாம் இறக்கிவைத்தோம்; அது, மனிதர்களும், கால் நடைகளும் புசிக்கக் கூடிய புற்பூண்டு முதலியவைகளுடன் கலந்து,(அவை பூத்துக் காய்த்து, கதிர் வாங்கி) முடிவாக பூமி தனது செழிப்பைப்பிடித்து அலங்காரமும் அடைந்தபோது அதன் சொந்தக்காரர்கள், (நாளை) அதன்மீது நிச்சயமாக தாங்கள் (அறுவடை செய்ய) சக்தியுடையவர்கள் என்றும் தங்களை எண்ணிக் கொண்டிருந்தனர்; (அச்சமயம்,) இரவிலோ அல்லது பகலிலோ நம்முடைய கட்டளை வந்து (அதைநாம் அழித்துவிட்டோம்.) அதனால், அவை நேற்றைய தினம் அவ்விடத்தில் இல்லாததைப் போன்று அறுவடை செய்யப்பட்டதாக அதை நாம் ஆக்கிவிட்டோம்; சிந்தித்துணரக்கூடிய சமூகத்தார்க்கு நாம் (நம்முடைய) வசனங்களை இவ்வாறே (தெளிவாக) விவரிக்கிறோம்.

25. (மனிதர்களே!) அல்லாஹ்வோ சாந்தி அளிக்கக்கூடிய (சுவன) வீட்டின்பால் (உங்களை) அழைக்கின்றான்; மேலும், அவன் நாடியவர்களை (அதற்குரிய) நேரான வழியின்பால் செலுத்துகிறான்.

لِلَّذِيْنَ اَحْسَنُوا الْحُسْنٰى وَزِيَادَةٌ ؕ وَلَا يَرْهَقُ وُجُوْهَهُمْ قَتَرٌ وَّلَا
ذِلَّةٌ ؕ اُولٰٓئِكَ اَصْحٰبُ الْجَنَّةِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿۲۶﴾ وَالَّذِيْنَ كَسَبُوا
السَّيِّاٰتِ جَزَآءُ سَيِّئَةٍ بِمِثْلِهَا ۙ وَتَرْهَقُهُمْ ذِلَّةٌ ؕ مَا لَهُمْ مِّنَ اللّٰهِ
مِنْ عَاصِمٍ ۚ كَاَنَّمَآ اُغْشِيَتْ وُجُوْهُهُمْ قِطَعًا مِّنَ الَّيْلِ مُظْلِمًا ؕ
اُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿۲۷﴾ وَيَوْمَ نَحْشُرُهُمْ
جَمِيْعًا ثُمَّ نَقُوْلُ لِلَّذِيْنَ اَشْرَكُوْا مَكَانَكُمْ اَنْتُمْ وَشُرَكَآؤُكُمْ ۚ
فَزَيَّلْنَا بَيْنَهُمْ وَقَالَ شُرَكَآؤُهُمْ مَّا كُنْتُمْ اِيَّانَا تَعْبُدُوْنَ ﴿۲۸﴾
فَكَفٰى بِاللّٰهِ شَهِيْدًۢا بَيْنَنَا وَبَيْنَكُمْ اِنْ كُنَّا عَنْ عِبَادَتِكُمْ
لَغٰفِلِيْنَ ﴿۲۹﴾ هُنَالِكَ تَبْلُوْا كُلُّ نَفْسٍ مَّآ اَسْلَفَتْ وَرُدُّوْٓا اِلَى اللّٰهِ
مَوْلٰىهُمُ الْحَقِّ وَضَلَّ عَنْهُمْ مَّا كَانُوْا يَفْتَرُوْنَ ﴿۳۰﴾ ع قُلْ مَنْ — النصف ع ۳ ۸
يَّرْزُقُكُمْ مِّنَ السَّمَآءِ وَالْاَرْضِ اَمَّنْ يَّمْلِكُ السَّمْعَ وَالْاَبْصَارَ وَ
مَنْ يُّخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَيُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَيِّ وَمَنْ يُّدَبِّرُ
الْاَمْرَ ؕ فَسَيَقُوْلُوْنَ اللّٰهُ ۚ فَقُلْ اَفَلَا تَتَّقُوْنَ ﴿۳۱﴾ فَذٰلِكُمُ اللّٰهُ رَبُّكُمُ الْحَقُّ ۚ
فَمَاذَا بَعْدَ الْحَقِّ اِلَّا الضَّلٰلُ ۚ فَاَنّٰى تُصْرَفُوْنَ ﴿۳۲﴾ كَذٰلِكَ
حَقَّتْ كَلِمَتُ رَبِّكَ عَلَى الَّذِيْنَ فَسَقُوْٓا اَنَّهُمْ لَا يُؤْمِنُوْنَ ﴿۳۳﴾

26. நன்மை செய்தவர்களுக்கு(க்கூலி) நன்மையும், (அவர்கள் செய்ததைவிட) இன்னும் அதிகமும் (_அல்லாஹ்வின் கண்ணியமான முகத்தைக் காணும் பாக்கியமும்) உண்டு; அவர்கள் முகங்களை (துக்கத்தின் காரணமாக தூசிபடிந்தது போன்று) இருளோ அல்லது இழிவோ சூழ்ந்து கொள்ளாது; நிச்சயமாக அவர்கள் சுவனவாசிகள்; அவர்கள் அதில் நிரந்தரமாக(த்தங்கி)இருப்பவர்கள்.

27. மேலும், தீமைகளைச் சம்பாதித்தார்களே அத்தகையோர்_(அவர்கள் செய்த) தீமைக்குரிய கூலி அதைப் போன்றதாகும்; அவர்களை இழிவும் சூழ்ந்து கொள்ளும்; அல்லாஹ்வி(ன் வேதனையி)லிருந்து அவர்களுக்கு பாதுகாப்பவர் (எவரும்) இல்லை; இருண்ட இருளையுடைய இரவின் ஒருபாகத்தால் அவர்களுடைய முகங்கள் மூடப்பட்டது போன்று (காணப்படும்); அவர்கள் நரகவாசிகள்; அதில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்.

28. மேலும், அவர்கள் அனைவரையும் நாம் ஒன்று திரட்டும் நாளை (நபியே! அவர்களுக்கு நினைவு கூர்வீராக!) பின்னர், இணைவைத்துக் கொண்டிருந்தார்களே அவர்களுக்கு, "நீங்களும் (அல்லாஹ்வின் வணக்கத்தில் கூட்டாக்கிய) உங்கள் இணையாளர்களும் உங்கள் இடத்திலேயே (அதை விட்டு நகராது) நில்லுங்கள்" என்று கூறுவோம்; (பின்னர்) "எங்களை நீங்கள் வணங்கக் கூடியவர்களாக இருக்கவே இல்லை" என்று அவர்களின் இணையாளர்கள் கூறியவர்களாக இருக்க, அவர்களுக்கு மத்தியில் (இருந்த தொடர்பை நீக்கி) நாம் பிரித்து விடுவோம்.

29. "ஆகவே, எங்களுக்கும் உங்களுக்குமிடையில் அல்லாஹ்வே சாட்சியாக இருக்கப்போதுமானவன்; உங்கள் வணக்கத்தைப்பற்றி நிச்சயமாக, நாங்கள் அறியாதவர்களாக இருந்தோம்" (என்றும் கூறுவர்).

30. அவ்விடத்தில் ஒவ்வோர் ஆத்மாவும் தான் முற்படுத்தியதைச் சோதித்து(க் கண் கூடாகப் பார்த்து)க் கொள்ளும். மேலும், அவர்கள் தங்களுடைய உண்மையான அதிபதியாகிய அல்லாஹ்வின் பக்கமே திருப்பப்படுவார்கள்; அவர்கள் (பொய்யாகக்) கற்பனை செய்து கொண்டிருந்தார்களே அவை அவர்களை விட்டு மறைந்தும் விடும்.

31. "வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார்? அல்லது செவிப்புலனையும், பார்வைகளையும் சொந்தமாக்கிக் கொண்டிருப்பவன் யார்? இறந்ததிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துபவனும், உயிருள்ளதிலிருந்து இறந்ததை வெளிப் படுத்துபவனும் யார்? (அகிலத்தாரின்) சகல காரியங்களைத் திட்டமிட்டு நிகழ்த்துபவனும் யார்?" என (நபியே!) நீர் (அவர்களைக்) கேட்பீராக! அ(தற்க)வர்கள் "அல்லாஹ்தான்" என்று கூறுவார்கள்; அவ்வாறாயின், "(அவனுக்கு) நீங்கள் பயப்படமாட்டீர்களா?" என்று நீர் கூறுவீராக!

32. (இத்தகைய தகுதிகளுக்குறிய) "அவன்தான் உங்களுடைய உண்மையான இரட்சகனாகிய அல்லாஹ்; இந்த உண்மைக்குப் பின்னர், வழிகேட்டைத் தவிர வேறு (எஞ்சியிருப்பது)யாது? (இவ்வுண்மையை விட்டு) நீங்கள் எங்கு திருப்பப்படுகிறீர்கள்?" (என்றும் நபியே! நீர் கேட்பீராக!)

33. "(இவர்கள் நிராகறித்த) இவ்வாறே பாவம் செய்பவர்கள் மீது, "நிச்சயமாக அவர்கள் விசுவாசங் கொள்ள மாட்டார்கள்" என்ற உமதிரட்சகனின் வாக்கு உண்மையாகிவிட்டது.

قُلْ هَلْ مِنْ شُرَكَآئِكُمْ مَّنْ يَّبْدَؤُا الْخَلْقَ ثُمَّ يُعِيْدُهٗ ؕ قُلِ اللّٰهُ
يَبْدَؤُا الْخَلْقَ ثُمَّ يُعِيْدُهٗ فَاَنّٰى تُؤْفَكُوْنَ ﴿۳۴﴾ قُلْ هَلْ مِنْ شُرَكَآئِكُمْ
مَّنْ يَّهْدِيْۤ اِلَى الْحَقِّ ؕ قُلِ اللّٰهُ يَهْدِيْ لِلْحَقِّ ؕ اَفَمَنْ يَّهْدِيْۤ
اِلَى الْحَقِّ اَحَقُّ اَنْ يُّتَّبَعَ اَمَّنْ لَّا يَهِدِّيْۤ اِلَّاۤ اَنْ يُّهْدٰى ۚ فَمَا لَكُمْ
كَيْفَ تَحْكُمُوْنَ ﴿۳۵﴾ وَمَا يَتَّبِعُ اَكْثَرُهُمْ اِلَّا ظَنًّا ؕ اِنَّ الظَّنَّ لَا يُغْنِيْ
مِنَ الْحَقِّ شَيْـًٔا ؕ اِنَّ اللّٰهَ عَلِيْمٌۢ بِمَا يَفْعَلُوْنَ ﴿۳۶﴾ وَمَا كَانَ هٰذَا
الْقُرْاٰنُ اَنْ يُّفْتَرٰى مِنْ دُوْنِ اللّٰهِ وَلٰكِنْ تَصْدِيْقَ الَّذِيْ
بَيْنَ يَدَيْهِ وَتَفْصِيْلَ الْكِتٰبِ لَا رَيْبَ فِيْهِ مِنْ رَّبِّ الْعٰلَمِيْنَ ﴿۳۷﴾
اَمْ يَقُوْلُوْنَ افْتَرٰىهُ ؕ قُلْ فَاْتُوْا بِسُوْرَةٍ مِّثْلِهٖ وَادْعُوْا مَنِ
اسْتَطَعْتُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۳۸﴾ بَلْ كَذَّبُوْا
بِمَا لَمْ يُحِيْطُوْا بِعِلْمِهٖ وَلَمَّا يَاْتِهِمْ تَاْوِيْلُهٗ ؕ كَذٰلِكَ كَذَّبَ
الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ فَانْظُرْ كَيْفَ كَانَ عَاقِبَةُ الظّٰلِمِيْنَ ﴿۳۹﴾ وَ
مِنْهُمْ مَّنْ يُّؤْمِنُ بِهٖ وَمِنْهُمْ مَّنْ لَّا يُؤْمِنُ بِهٖ ؕ وَرَبُّكَ اَعْلَمُ
بِالْمُفْسِدِيْنَ ﴿۴۰﴾ وَاِنْ كَذَّبُوْكَ فَقُلْ لِّيْ عَمَلِيْ وَلَكُمْ عَمَلُكُمْ ۚ ع ٤ ٩
اَنْتُمْ بَرِيْٓـُٔوْنَ مِمَّاۤ اَعْمَلُ وَاَنَا بَرِيْٓءٌ مِّمَّا تَعْمَلُوْنَ ﴿۴۱﴾

34. "உங்களுடைய இணையாளர்களில் தொடக்கமாகப் படைப்பைத் தொடங்கி, (அது அழிந்த) பின்னர் அதனை மீட்டுபவர் (யாரேனும்) உண்டா?" என்று (நபியே!) நீர் கேட்பீராக!(நீரே அவர்களிடம்)" அல்லாஹ்தான் சிருஷ்டிகளை முதலாவதாக உற்பத்தி செய்து,(அவை மரித்த) பின்னர், அவற்றை அவன் மீளவைப்பான்"(என்று கூறி," இந்த உண்மையை விட்டு) நீங்கள் எப்படித்தான் திருப்பப்படுகின்றீர்கள்?" என்று கேட்பீராக!

35. "உங்களுடைய இணையாளர்களில், சத்தியத்தின்பால் வழிகாட்டுபவர் உண்டா?"என்று கேட்பீராக! ( நீரே அவர்களிடம்,) "அல்லாஹ்தான் சத்திய (மார்க்க)த்திற்கு வழி காட்டுகிறான்" எனக்கூறுவீராக! சத்தியத்திற்கு வழிகாட்டுபவன் பின்பற்றப்பட மிக உரியவனா? அல்லது வழிகாட்டப்பட்டாலேயன்றி நேர்வழியை அடைய மாட்டானே அ(வன் பின்பற்றத்தக்க)வனா? உங்களுக்கு என்ன (கேடு) நேர்ந்தது? (இதற்கு மாறாக) நீங்கள் எவ்வாறு தீர்ப்பளிக்கிறீர்கள்?.

36. மேலும், அவர்களில் பெரும்பாலோர் (அவசியமில்லாத) எண்ணத்தையேயன்றி (வேறெதையும்) பின்பற்றுவதில்லை; நிச்சயமாக (அவசியமில்லாத) எண்ணம், உண்மையை அறிவதற்கு ஒரு சிறிதும் பயன்படாது; நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவைகளை நன்கறிந்தவன்.

37. இன்னும், இந்தக்குர்ஆன் அல்லாஹ்வால் (இறக்கப்பட்டதே) தவிர (மற்றெவராலும்) பொய்யாகக் கற்பனை செய்யப்பட்டதன்று; எனினும், (இது) இதற்கு முன்னுள்ள (வேதங்களான)தை உண்மையாக்கி வைத்து, வேதத்தை (அதிலுள்ளவற்றை) விவரித்துக் கூறுவதாகவும் இருக்கிறது; அகிலத்தாரின் இரட்சகனிடமிருந்துள்ள இதில் எந்த சந்தேகமும் இல்லை.

38. அல்லது (குர்ஆனாகிய) இதனை (நம்முடைய தூதராகிய)" அவர் (பொய்யாகக்) கற்பனை செய்துகொண்டார்" என அவர்கள் கூறுகின்றனரா?(அவ்வாறெனின் நபியே! அவர்களிடம்"உங்கள் கூற்றில்) நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அதனைப்போன்ற ஒரு அத்தியாயத்தைக் கொண்டுவாருங்கள்; அல்லாஹ்வையன்றி உங்களுக்குச் சாத்தியமானவர்களையும் (உங்களுக்கு உதவி செய்ய) அழைத்துக்கொள்ளுங்கள்" என்று நீர் கூறுவீராக!

39. மாறாக! (குர்ஆனாகிய) அதன் அறிவை(ப்பற்றி)அவர்கள் தெரிந்துகொள்ள முடியாததையும், அதன் விளக்கம் பற்றி அவர்களுக்கு வராதவற்றையும் அவர்கள் பொய்யாக்குகின்றனர்; அவர்களுக்கு முன்னிருந்தவர்களும் இவ்வாறே (அவற்றைப்) பொய்யாக்கிக் கொண்டிருந்தனர்; ஆகவே, அந்த அநியாயக் காரர்களின் முடிவு எப்படியிருந்தது என்பதை (நபியே!) நீர் பார்ப்பீராக.

40. மேலும், அவர்களில் (குர்ஆனாகிய) இதனை விசுவாசிப்பவரும் உள்ளனர்; அவர்களில் இதனை விசுவாசங் கொள்ளாதோரும் உள்ளனர்; இன்னும், உம்முடைய இரட்சகன் குழப்பக்காரர்களை மிக அறிந்தவன்.

41 இன்னும்,(நபியே!) உம்மைஅவர்கள் பொய்ப்படுத்தினால்,(நீர் அவர்களிடம்,) என் செயல்(அதன் பலன்) எனக்குரியது;(அவ்வாறே) உங்கள் செயல்(அதன் பலன்) உங்களுக்குரியது; நான் செய்வதிலிருந்து நீங்கள் நீங்கியவர்கள் ; நீங்கள் செய்வதிலிருந்து நானும் நீங்கியவன்" என்று கூறுவீராக!

وَمِنْهُمْ مَّنْ يَّسْتَمِعُوْنَ اِلَيْكَ ؕ اَفَاَنْتَ تُسْمِعُ الصُّمَّ وَلَوْ كَانُوْا
لَا يَعْقِلُوْنَ ﴿٤٢﴾ وَمِنْهُمْ مَّنْ يَّنْظُرُ اِلَيْكَ ؕ اَفَاَنْتَ تَهْدِى الْعُمْىَ وَ
لَوْ كَانُوْا لَا يُبْصِرُوْنَ ﴿٤٣﴾ اِنَّ اللّٰهَ لَا يَظْلِمُ النَّاسَ شَيْــًٔا وَّلٰكِنَّ
النَّاسَ اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ ﴿٤٤﴾ وَيَوْمَ يَحْشُرُهُمْ كَاَنْ لَّمْ يَلْبَثُوْۤا اِلَّا
سَاعَةً مِّنَ النَّهَارِ يَتَعَارَفُوْنَ بَيْنَهُمْ ؕ قَدْ خَسِرَ الَّذِيْنَ كَذَّبُوْا
بِلِقَآءِ اللّٰهِ وَمَا كَانُوْا مُهْتَدِيْنَ ﴿٤٥﴾ وَاِمَّا نُرِيَنَّكَ بَعْضَ الَّذِىْ
نَعِدُهُمْ اَوْ نَتَوَفَّيَنَّكَ فَاِلَيْنَا مَرْجِعُهُمْ ثُمَّ اللّٰهُ شَهِيْدٌ عَلٰى مَا
يَفْعَلُوْنَ ﴿٤٦﴾ وَلِكُلِّ اُمَّةٍ رَّسُوْلٌ ۚ فَاِذَا جَآءَ رَسُوْلُهُمْ قُضِىَ بَيْنَهُمْ
بِالْقِسْطِ وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿٤٧﴾ وَيَقُوْلُوْنَ مَتٰى هٰذَا الْوَعْدُ اِنْ
كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿٤٨﴾ قُلْ لَّاۤ اَمْلِكُ لِنَفْسِىْ ضَرًّا وَّلَا نَفْعًا اِلَّا مَا شَآءَ
اللّٰهُ ؕ لِكُلِّ اُمَّةٍ اَجَلٌ ؕ اِذَا جَآءَ اَجَلُهُمْ فَلَا يَسْتَاْخِرُوْنَ سَاعَةً
وَّلَا يَسْتَقْدِمُوْنَ ﴿٤٩﴾ قُلْ اَرَءَيْتُمْ اِنْ اَتٰىكُمْ عَذَابُهٗ بَيَاتًا اَوْ نَهَارًا
مَّاذَا يَسْتَعْجِلُ مِنْهُ الْمُجْرِمُوْنَ ﴿٥٠﴾ اَثُمَّ اِذَا مَا وَقَعَ اٰمَنْتُمْ بِهٖ ؕ
آٰلْــٰٔنَ وَقَدْ كُنْتُمْ بِهٖ تَسْتَعْجِلُوْنَ ﴿٥١﴾ ثُمَّ قِيْلَ لِلَّذِيْنَ ظَلَمُوْا
ذُوْقُوْا عَذَابَ الْخُلْدِ ۚ هَلْ تُجْزَوْنَ اِلَّا بِمَا كُنْتُمْ تَكْسِبُوْنَ ﴿٥٢﴾

42. மேலும், உமக்கு செவியேற்போரும் அவர்களில் இருக்கின்றனர்; செவிடர்களை_ அவர்கள்(எதனையும்)விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருந்தாலும்_நீர் செவியேற்கச் செய்வீரா?

43. இன்னும், உம்மைப் பார்ப்போரும் அவர்களில் (சிலர்) இருக்கின்றனர்; குருடர்களுக்கு அவர்கள் பார்க்காதவர்களாக இருப்பினும் நீர் வழிகாட்டுவீரா?

44. நிச்சயமாக அல்லாஹ் மனிதர்களுக்கு கொஞ்சமும் அநீதமிழைக்கமாட்டான். எனினும்,மனிதர்கள் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொள்கின்றனர்.

45. மேலும், அவர்களை அவன் ஒன்று திரட்டும் நாளில் (ஒரு) பகலில் சொற்ப நேரத்தைத் தவிர, (இவ்வுலகில்) தாங்கள் தங்கவில்லை என்பதைப் போன்று_ (அவர்கள் எண்ணுவதுடன்) தங்களுக்கிடையில் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்வார்கள்; அல்லாஹ்வின் சந்திப்பைப் பொய்யாக்கியோர் திட்டமாக (அந்நாளில்) நஷ்டமடைந்தே விட்டார்கள்; அவர்கள் நேர்வழி பெற்றவர்களாகவும் இருக்கவில்லை.

46. மேலும்,(நபியே!) நாம் அவர்களுக்கு வாக்களித்திருக்கும் (தண்டனைகளில்) சிலவற்றை (உம்முடைய வாழ்நாளிலேயே ) நாம் உமக்குக் காண்பித்தாலும் , அல்லது (நீர் பார்ப்பதற்கு முன்) நாம் உம்மைக் கைப்பற்றிக் கொண்டாலும் (எவ்வாறாயினும்,) அவர்களுடைய திரும்புதல் நம்பாலேயாகும்; பின்னர், அவர்கள் செய்பவற்றிற்கு அல்லாஹ் சாட்சியாளனாவான்.

47. ஒவ்வொரு சமூகத்தினருக்கும் (நம்மால் அனுப்பப்பட்ட) ஒரு தூதர் உண்டு; எனவே, அவர்களுடைய தூதர் (அவர்களிடம்) வந்துவிடும் பொழுது அவர்களுக்கிடையில் நீதமாகவே தீர்ப்பளிக்கப்படும்; மேலும், அவர்கள் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்.

48. "நீங்கள் (மறுமை நாள் பற்றிக் கூறுவதில்) உண்மையாளர்களாக இருந்தால், இந்த வாக்குறுதி எப்பொழுது (நடந்தேறும்)?" என்று (நிராகரிப்போராகிய) அவர்கள் கேட்கின்றனர்.

49.(அதற்கு நபியே!) நீர் கூறுவீராக: "அல்லாஹ் நாடியதையன்றி எனக்கு யாதொரு இடரை (நீக்கிக்கொள்வதை)யும், யாதொரு பலனை (ஈர்த்துக் கொள்வதை)யும் நான் சக்தி பெறமாட்டேன்; ஒவ்வொரு சமுதாயத்தாருக்கும் ஒரு (குறிப்பிட்ட) தவணையுண்டு; அவர்களுடைய தவணை வந்துவிட்டால் ஒரு நாழிகை பிந்தவுமாட்டார்கள், முந்தவு மாட்டார்கள்.

50. நீர் கூறுவீராக: " அவனுடைய வேதனை இரவிலோ அல்லது பகலிலோ உங்களிடம் வந்தடைந்து விடுமானால் (நீங்கள் அதனை தடுத்துவிட முடியுமா என்பதை) எனக்குக் கூறுங்கள்?" (நபியே!) " இக் குற்றவாளிகள் (எப்பொழுது வரும் என்று கேட்டு) அவனிடமிருந்து எதை அவசரப் படுகின்றனர்?"

51. "(அவசரப்பட்டுக் கொண்டிருக்கும்) அது நிகழ்ந்து விட்டதன் பின்னரா அதனை நீங்கள் நம்புவீர்கள்? நீங்கள் அவசரப் பட்டுக் கொண்டிருந்தநிலையில் (நிகழ்ந்துவிட்ட அதனை) இப்போது தானா நம்பிக்கை கொள்கிறீர்கள் ? (என்று அப்போது கூறப்படும்.)

52. பிறகு அநியாயம் செய்து கொண்டிருந்தவர்களிடம், "நிலையான (இவ்)வேதனையைச் சுவைத்துக்கொண்டிருங்கள்; நீங்கள் சம்பாதித்துக் கொண்டிருந்ததைத் தவிர (வேறு எதற்கும்) நீங்கள் கூலி கொடுக்கப்படுகிறீர்களா?" என்றும் கேட்கப்படும்.

وَیَسْتَنْۢبِـُٔوْنَكَ اَحَقٌّ هُوَ ؕ قُلْ اِیْ وَرَبِّیْۤ اِنَّهٗ لَحَقٌّ ؔؕ وَمَاۤ اَنْتُمْ بِمُعْجِزِیْنَ ﴿۵۳﴾ ع وقف النبی علیہ السلام
وَلَوْ اَنَّ لِكُلِّ نَفْسٍ ظَلَمَتْ مَا فِی الْاَرْضِ لَافْتَدَتْ بِهٖ ؕ وَاَسَرُّوا النَّدَامَةَ
لَمَّا رَاَوُا الْعَذَابَ ۚ وَقُضِیَ بَیْنَهُمْ بِالْقِسْطِ وَهُمْ لَا یُظْلَمُوْنَ ﴿۵۴﴾ اَلَاۤ
اِنَّ لِلّٰهِ مَا فِی السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ اَلَاۤ اِنَّ وَعْدَ اللّٰهِ حَقٌّ وَّلٰكِنَّ
اَكْثَرَهُمْ لَا یَعْلَمُوْنَ ﴿۵۵﴾ هُوَ یُحْیٖ وَیُمِیْتُ وَاِلَیْهِ تُرْجَعُوْنَ ﴿۵۶﴾ یٰۤاَیُّهَا
النَّاسُ قَدْ جَآءَتْكُمْ مَّوْعِظَةٌ مِّنْ رَّبِّكُمْ وَشِفَآءٌ لِّمَا فِی الصُّدُوْرِ ۙ۬
وَهُدًی وَّرَحْمَةٌ لِّلْمُؤْمِنِیْنَ ﴿۵۷﴾ قُلْ بِفَضْلِ اللّٰهِ وَبِرَحْمَتِهٖ
فَبِذٰلِكَ فَلْیَفْرَحُوْا ؕ هُوَ خَیْرٌ مِّمَّا یَجْمَعُوْنَ ﴿۵۸﴾ قُلْ اَرَءَیْتُمْ مَّاۤ اَنْزَلَ
اللّٰهُ لَكُمْ مِّنْ رِّزْقٍ فَجَعَلْتُمْ مِّنْهُ حَرَامًا وَّحَلٰلًا ؕ قُلْ آٰللّٰهُ اَذِنَ
لَكُمْ اَمْ عَلَی اللّٰهِ تَفْتَرُوْنَ ﴿۵۹﴾ وَمَا ظَنُّ الَّذِیْنَ یَفْتَرُوْنَ عَلَی اللّٰهِ
الْكَذِبَ یَوْمَ الْقِیٰمَةِ ؕ اِنَّ اللّٰهَ لَذُوْ فَضْلٍ عَلَی النَّاسِ وَلٰكِنَّ
اَكْثَرَهُمْ لَا یَشْكُرُوْنَ ﴿۶۰﴾ ع وَمَا تَكُوْنُ فِیْ شَاْنٍ وَّمَا تَتْلُوْا مِنْهُ مِنْ ع ۶ / ۱۱
قُرْاٰنٍ وَّلَا تَعْمَلُوْنَ مِنْ عَمَلٍ اِلَّا كُنَّا عَلَیْكُمْ شُهُوْدًا اِذْ تُفِیْضُوْنَ
فِیْهِ ؕ وَمَا یَعْزُبُ عَنْ رَّبِّكَ مِنْ مِّثْقَالِ ذَرَّةٍ فِی الْاَرْضِ وَلَا
فِی السَّمَآءِ وَلَاۤ اَصْغَرَ مِنْ ذٰلِكَ وَلَاۤ اَكْبَرَ اِلَّا فِیْ كِتٰبٍ مُّبِیْنٍ ﴿۶۱﴾

53. (நபியே) "அது உண்மைதானா? என்று தெரிவிக்குமாறு அவர்கள் உம்மிடம் செய்திகேட்கின்றனர்; (அதற்கு) நீர் கூறுவீராக : "ஆம்! என் இரட்சகன் மீது சத்தியமாக_நிச்சயமாக அது உண்மைதான்;(மண்ணோடு மண்ணாக ஆகியபின் மீண்டும் உங்களைத் திருப்பிக் கொண்டு வருவதிலிருந்து அல்லாஹ்வை) நீங்கள் இயலாதவனாக ஆக்கிவிடக்கூடியவர்களுமல்லர்.

54. மேலும், அநியாயம் செய்த ஒவ்வோர் ஆத்மாவிடமும் உலகத்தில் உள்ள (பொருள்) யாவும் இருந்த போதிலும் அவை யாவையுமே (அல்லாஹ்வின் தண்டனை யிலிருந்து தன்னை நீக்கிக் கொள்ள) ஈடாகக் கொடுத்துவிடும்;மேலும் அவர்கள் தண்டனையைக் கண்கூடாகப் பார்க்கின்ற பொழுது கைசேதத்தை (உள்ளூற) அவர்கள் மறைத்துக்கொள்வர்; (அந்நாளில்) அவர்களிடையே நீதியாகவேதீர்ப்பளிக்கப்படும்;அவர்கள் அநியாயம்செய்யப்படவுமாட்டார்கள்.

55. (மனிதர்களே!) வானங்கள், மற்றும் பூமியிலுள்ளவை நிச்சயமாக அல்லாஹ்வுக்கே உரியன என்பதை அறிந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானதுதான் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்; எனினும், அவர்களில் அதிகமானோர் (இதனை) அறிய மாட்டார்கள்.

56. அவனே (உங்களுக்கு) உயிர் கொடுக்கிறான்; அவனே (உங்களை) மரணிக்கச் செய்கிறான். பின்னர் அவனிடமே(மறுமையில்) நீங்கள் திருப்பப்படுவீர்கள்.

57. மனிதர்களே! உங்கள் இரட்சகனிடமிருந்து திட்டமாக ஒரு நல்லுபதேசமும், (உங்கள்) இதயங்களிலுள்ளவற்றைக் குணப்படுத்துவதும் உங்களுக்கு வந்துவிட்டது; மேலும், (அது) விசுவாசங் கொண்டவர்களுக்கு வழிகாட்டியாகவும், அருளாகவும் இருக்கிறது.

58. (அது) "அல்லாஹ்வின் பேரருளைக் கொண்டும், அவனுடைய அருளைக் கொண்டுமுள்ளதாகும்; ஆகவே அதைக்கொண்டு அவர்கள் சந்தோஷமடையட்டும்; இது அவர்கள் சேகரித்து வைத்திருப்பவற்றைவிட மிகச்சிறந்தது" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

59. (நபியே!) நீர் கூறுவீராக: "உங்களுக்காக அல்லாஹ் இறக்கி வைத்த உணவு வகைகளை நீங்கள் கவனித்தீர்களா? அவற்றில் சிலவற்றை ஆகாதவையென்றும், சிலவற்றை ஆகுமானவை யென்றும் நீங்கள் ஆக்கிக்கொண்டீர்கள்;" (இவ்வாறு செய்ய) "அல்லாஹ்தான் உங்களுக்கு அனுமதி அளித்திருக்கின்றானா? அல்லது, அல்லாஹ்வின்மீது (பொய்யைக்)கற்பனை செய்கிறீர்களா?" என்று நீர் கேட்பீராக!

60. "அல்லாஹ்வின்மீதுபொய்யைக் கற்பனைசெய்கின்றார்களே அவர்களின் எண்ணம் மறுமை நாளைப்பற்றி என்ன? (அவர்கள் தண்டிக்கப் படமாட்டார்களென எண்ணிக்கொண்டனரா?) நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது பேரருளுடையோனாக இருக்கிறான்; எனினும், அவர்களில் அதிகமானோர் நன்றிசெலுத்துவதில்லை.

61. எக்காரியத்திலும் நீர் இருப்பதில்லை; இந்தக் குர்ஆனிலிருந்து நீங்கள் ஓதுவதுமில்லை; செயலில் எதையும் நீங்கள் செய்வதுமில்லை; நீங்கள் அதில் ஈடுபட்டிருக்கும் பொழுது உங்கள் மீது நாம் பிரசன்னமானவர்களாக இருந்தே தவிர. இன்னும், பூமியிலோ, வானத்திலோ உள்ளவற்றில் ஓர் அணுவளவும் (நபியே!) உமதிரட்சகனுக்குத் தெரியாமல் மறைந்து விடுவதில்லை; இன்னும், இவற்றைவிடச் சிறிதோ, பெரிதோ (எதுவாயினும்) அவனுடைய தெளிவான (லவ்ஹுல் மஹ்பூல் எனும்) பதிவுப் புத்தகத்தில் (பதிவு செய்யப்பட்டு) இருந்தேயல்லாமல் இல்லை.

أَلَآ إِنَّ أَوْلِيَآءَ اللّٰهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ۚ ﴿۶۲﴾
الَّذِيْنَ اٰمَنُوْا وَكَانُوْا يَتَّقُوْنَ ﴿۶۳﴾ لَهُمُ الْبُشْرٰى فِى الْحَيٰوةِ
الدُّنْيَا وَفِى الْاٰخِرَةِ ۭ لَا تَبْدِيْلَ لِكَلِمٰتِ اللّٰهِ ۭ ذٰلِكَ هُوَ
الْفَوْزُ الْعَظِيْمُ ۭ ﴿۶۴﴾ وَلَا يَحْزُنْكَ قَوْلُهُمْ ۘ إِنَّ الْعِزَّةَ لِلّٰهِ وقف لازم
جَمِيْعًا ۭ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ﴿۶۵﴾ أَلَآ إِنَّ لِلّٰهِ مَنْ فِى السَّمٰوٰتِ
وَمَنْ فِى الْاَرْضِ ۭ وَمَا يَتَّبِعُ الَّذِيْنَ يَدْعُوْنَ مِنْ
دُوْنِ اللّٰهِ شُرَكَآءَ ۭ إِنْ يَّتَّبِعُوْنَ إِلَّا الظَّنَّ وَإِنْ هُمْ إِلَّا
يَخْرُصُوْنَ ﴿۶۶﴾ هُوَ الَّذِىْ جَعَلَ لَكُمُ الَّيْلَ لِتَسْكُنُوْا
فِيْهِ وَالنَّهَارَ مُبْصِرًا ۭ إِنَّ فِىْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ
يَّسْمَعُوْنَ ﴿۶۷﴾ قَالُوا اتَّخَذَ اللّٰهُ وَلَدًا سُبْحٰنَهٗ ۭ هُوَ الْغَنِىُّ ۭ
لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ ۭ إِنْ عِنْدَكُمْ مِّنْ
سُلْطٰنٍ ۢبِهٰذَا ۭ أَتَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿۶۸﴾
قُلْ إِنَّ الَّذِيْنَ يَفْتَرُوْنَ عَلَى اللّٰهِ الْكَذِبَ لَا
يُفْلِحُوْنَ ۭ ﴿۶۹﴾ مَتَاعٌ فِى الدُّنْيَا ثُمَّ إِلَيْنَا مَرْجِعُهُمْ ثُمَّ
نُذِيْقُهُمُ الْعَذَابَ الشَّدِيْدَ بِمَا كَانُوْا يَكْفُرُوْنَ ۧ ﴿۷۰﴾ ع ۷ / ۱۲

62. (விசுவாசிகளே!) அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்கள்_ அவர்களுக்கு யாதொரு பயமுமில்லை; அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள்.

63. அவர்கள் எத்தகையோரென்றால், (அல்லாஹ்வை உண்மையாகவே) விசுவாசித்து, (அவனைப்) பயந்தவர்களாகவும் இருப்பார்கள் .

64. அவர்களுக்கு இவ்வுலக வாழ்விலும், மறுமையிலும் நன்மாராயமுண்டு; (உயர் பதவிகளை அவர்களுக்கு வழங்குவதாகக் கூறியிருக்கும்) அல்லாஹ்வுடைய வாக்கு(றுதி)களில் எவ்வித மாற்றமுமில்லை; இதுவே மகத்தான வெற்றியாகும்.

65. இன்னும் (நபியே! உம்மை இழிவாகக் கூறும்) அவர்களுடைய கூற்று(கள்,) உம்மைக் கவலைப்படுத்தவேண்டாம்; நிச்சயமாகக் கண்ணியம் (அது) அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! அவனே செவியேற்கிறவன்; (யாவையும்) நன்கறிகிறவன்.

66. வானங்களில் இருப்பவை, மற்றும் பூமியில் இருப்பவை நிச்சயமாக அல்லாஹ்வுக்கே உரியன என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். (இவ்வாறிருக்க,) அல்லாஹ்வையன்றி இணையாளர்களை (தெய்வங்கள் என) அழைப்போர் எதைப் பின்பற்றுகின்றனர்? (வீண்) யூகத்தையன்றி வேறெதையும் அவர்கள் பின்பற்றுவதில்லை; அன்றியும், அவர்கள் வெறும் அனுமானங்கள் செய்பவர்களே அன்றி இல்லை.

67. அவன் எத்தகையோனென்றால், இரவை உங்களுக்காக _ அதில் நீங்கள் அமைதி பெறுவதற்காகவும், பகலை பார்வைக்குரிய(பிரகாசமான)தாகவும் ஆக்கினான்.(அவனுடைய வசனங்களுக்குச்) செவிசாய்க்கும் சமுதாயத்தவர்க்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

68. அல்லாஹ், குமாரனை எடுத்துக் கொண்டான் என அவர்கள் கூறுகின்றனர்; அவனோ (இக் கூற்றிலிருந்து) மிகப் பரிசுத்தமானவன்; அவன் தேவையற்றவன்; வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன; (அவனுக்கு மக்கள் உண்டென்று கூறும்) இதற்கு உங்களிடத்தில் எத்தகைய சான்றும் இல்லை; நீங்கள் அறிந்து கொள்ளாததை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுகிறீர்களா?

69. "நிச்சயமாக அல்லாஹ்வின் மீது (இவ்வாறு) பொய்யைக் கற்பனை செய்கின்றனரே அத்தகையோர்_ அவர்கள் வெற்றியடையமாட்டார்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

70. (இத்தகையோருக்கு) இவ்வுலகில் (சிறிது) சுகமனுபவித்தல் உண்டு; பின்னர், (மறுமையில்) நம்மிடமே அவர்களின் திரும்புதல் இருக்கிறது; பின்னர், (உண்மையை ) அவர்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததன் காரணமாக, அவர்களுக்கு நாம் கடினமான வேதனையை சுவைக்கச் செய்வோம்.

وقف لازم

وَاتْلُ عَلَيْهِمْ نَبَاَ نُوْحٍ اِذْ قَالَ لِقَوْمِهٖ يٰقَوْمِ اِنْ كَانَ كَبُرَ عَلَيْكُمْ
مَّقَامِيْ وَتَذْكِيْرِيْ بِاٰيٰتِ اللّٰهِ فَعَلَى اللّٰهِ تَوَكَّلْتُ فَاَجْمِعُوْٓا
اَمْرَكُمْ وَشُرَكَآءَكُمْ ثُمَّ لَا يَكُنْ اَمْرُكُمْ عَلَيْكُمْ غُمَّةً ثُمَّ اقْضُوْٓا اِلَيَّ وَ
لَا تُنْظِرُوْنِ ﴿٧١﴾ فَاِنْ تَوَلَّيْتُمْ فَمَا سَاَلْتُكُمْ مِّنْ اَجْرٍ اِنْ اَجْرِيَ
اِلَّا عَلَى اللّٰهِ وَاُمِرْتُ اَنْ اَكُوْنَ مِنَ الْمُسْلِمِيْنَ ﴿٧٢﴾ فَكَذَّبُوْهُ
فَنَجَّيْنٰهُ وَمَنْ مَّعَهٗ فِي الْفُلْكِ وَجَعَلْنٰهُمْ خَلٰٓئِفَ وَاَغْرَقْنَا
الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا فَانْظُرْ كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُنْذَرِيْنَ ﴿٧٣﴾
ثُمَّ بَعَثْنَا مِنْ بَعْدِهٖ رُسُلًا اِلٰى قَوْمِهِمْ فَجَآءُوْهُمْ بِالْبَيِّنٰتِ
فَمَا كَانُوْا لِيُؤْمِنُوْا بِمَا كَذَّبُوْا بِهٖ مِنْ قَبْلُ كَذٰلِكَ نَطْبَعُ عَلٰى
قُلُوْبِ الْمُعْتَدِيْنَ ﴿٧٤﴾ ثُمَّ بَعَثْنَا مِنْ بَعْدِهِمْ مُّوْسٰى وَهٰرُوْنَ اِلٰى
فِرْعَوْنَ وَمَلَا۟ئِهٖ بِاٰيٰتِنَا فَاسْتَكْبَرُوْا وَكَانُوْا قَوْمًا مُّجْرِمِيْنَ ﴿٧٥﴾
فَلَمَّا جَآءَهُمُ الْحَقُّ مِنْ عِنْدِنَا قَالُوْٓا اِنَّ هٰذَا لَسِحْرٌ مُّبِيْنٌ ﴿٧٦﴾
قَالَ مُوْسٰٓى اَتَقُوْلُوْنَ لِلْحَقِّ لَمَّا جَآءَكُمْ اَسِحْرٌ هٰذَا وَلَا يُفْلِحُ
السّٰحِرُوْنَ ﴿٧٧﴾ قَالُوْٓا اَجِئْتَنَا لِتَلْفِتَنَا عَمَّا وَجَدْنَا عَلَيْهِ اٰبَآءَنَا
وَتَكُوْنَ لَكُمَا الْكِبْرِيَآءُ فِي الْاَرْضِ وَمَا نَحْنُ لَكُمَا بِمُؤْمِنِيْنَ ﴿٧٨﴾

71. மேலும் (நபியே!) நூஹ்வுடைய சம்பவத்தை நீர் அவர்களுக்கு ஓதிக் காண்பிப்பீராக! அவர் தம் சமூகத்தாரிடம், "என்னுடைய சமூகத்தினரே! நான் (உங்களுக்கு மத்தியில்) இருப்பதும், நான் அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, (உபதேசித்து) நினைவு படுத்துவதும், உங்களுக்குப் பளுவாகத் தோன்றி (எனக்கு தீங்கு செய்யவேண்டுமா) னால், நான் அல்லாஹ்வின் மீதே (என் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைத்துள்ளேன்; (நீங்கள் முடிவெடுத்த) உங்களுடைய காரியத்தையும், உங்களுடைய இணையாளர்களையும் ஒன்றுகூட்டி முடிவுசெய்யுங்கள்; பின்னர் உங்களுடைய (அக்)காரியம் உங்களிடம் மறைமுகமாகவும் இருக்கவேண்டாம். பின்னர் (அம்முடிவை) என்னில் நிறைவேற்றிவிடுங்கள்; (இதில்) எனக்கு நீங்கள் காலதாமதம் கொடுக்கவேண்டாம்" என்று கூறியதை(நினைவு கூர்வீராக).

72. "ஆகவே, நீங்கள் (என்னுடைய தூதைப்) புறக்கணித்தால் நான் உங்களிடத்தில் யாதொரு கூலியும் கேட்கவில்லை; என்னுடைய கூலியெல்லாம் அல்லாஹ்வின் மீதே தவிர (மற்றெவரிடமும்) இல்லை; நான் (அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்கும்) முஸ்லிம்களில் (உள்ளவனாக) இருக்குமாறே ஏவப்பட்டுள்ளேன்" (என்று கூறினார்).

73. பின்னர் அவர்கள், அவரைப் பொய்யாக்கி விட்டனர்; ஆகவே, நாம் அவரையும், அவரைச் சார்ந்தோரையும் கப்பலில் (ஏற்றிக்) காப்பாற்றினோம்; மேலும் அவர்களை (முன்னவர்களுக்குப்) பின்தோன்றல்களாகவும் நாம் ஆக்கினோம்; இன்னும் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கியோரை(ப் பெரு வெள்ளத்தில்) மூழ்கடித்தோம்; பின்னர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்பட்டவர்களுடைய முடிவு எப்படி இருந்தது என்பதை (நபியே!) நீர் கவனிப்பீராக!

74. பிறகு, அவருக்கு(நூஹுக்கு)ப் பின்னர், தூதர்களை அவர்களின் சமூகத்தவர்பால் நாம் அனுப்பிவைத்தோம்; அவர்களும் தெளிவான அத்தாட்சிகளையே அவர்களிடம் கொண்டு வந்தார்கள்; அப்பொழுது, இவர்களுக்கு முன்னர் பொய்யாக்கிக் கொண்டிருந்தவைகளை, இவர்களும் விசுவாசிப்பவர்களாக இருக்கவில்லை; வரம்பு மீறியவர்களின் இதயங்கள் மீது இவ்வாறே நாம் முத்திரையிட்டு விடுவோம்.

75. பின்னர், அவர்களுக்குப்பிறகு மூஸாவையும், ஹாரூனையும் நம்முடைய அத்தாட்சிகளுடன் (நம்முடைய தூதர்களாக) ஃபிர்அவ்னிடமும், அவனுடைய பிரதானிகளிடமும் அனுப்பிவைத்தோம்; அப்பொழுது அவர்கள் கர்வங்கொண்டனர்; (உண்மையை நிராகரித்த) குற்றவாளிகளான சமூகத்தாராகவும் அவர்கள் இருந்தனர்.

76. எனவே நம்மிடமிருந்து அவர்களுக்கு சத்தியம் வந்தபொழுது, "நிச்சயமாக இது தெளிவான சூனியமாகும்" என்று கூறினார்கள்.

77. (அதற்கு) மூஸா, (அவர்களிடம்,) "உண்மையைப்பற்றி—அது உங்களிடம் வந்தபொழுது இது சூனியமா? என்று நீங்கள் கூறுகிறீர்களா? சூனியக் காரர்களோ வெற்றி பெறமாட்டார்கள்" என்று கூறினார்.

78. அ(தற்க)வர்கள், "எங்கள் மூதாதையர்களை எதில் இருக்க நாங்கள் கண்டோமோ அதிலிருந்து எங்களைத் திருப்பிவிடவும், இப்பூமியில் உங்களிருவருக்கும் பெருமை(—தலைமைத்தனம்) ஆகிவிடவேண்டுமென்பதற்குமா நீங்கள் எங்களிடம் வந்தீர்கள்? இன்னும், உங்களிருவரையும் (அல்லாஹ்வின் தூதர்களென்று) நாங்கள் விசுவாசங் கொள்ளக்கூடியவர்கள் அல்லர்" என்று கூறினர்.

وَقَالَ فِرْعَوْنُ ائْتُوْنِيْ بِكُلِّ سٰحِرٍ عَلِيْمٍ ﴿٧٩﴾ فَلَمَّا جَآءَ السَّحَرَةُ
قَالَ لَهُمْ مُّوْسٰۤى اَلْقُوْا مَاۤ اَنْتُمْ مُّلْقُوْنَ ﴿٨٠﴾ فَلَمَّاۤ اَلْقَوْا قَالَ مُوْسٰى
مَا جِئْتُمْ بِهِ ۙ السِّحْرُ ؕ اِنَّ اللّٰهَ سَيُبْطِلُهٗ ؕ اِنَّ اللّٰهَ لَا يُصْلِحُ عَمَلَ
الْمُفْسِدِيْنَ ﴿٨١﴾ وَيُحِقُّ اللّٰهُ الْحَقَّ بِكَلِمٰتِهٖ وَلَوْ كَرِهَ الْمُجْرِمُوْنَ ﴿٨٢﴾ ع ٨ ١٢ ١٣
فَمَاۤ اٰمَنَ لِمُوْسٰۤى اِلَّا ذُرِّيَّةٌ مِّنْ قَوْمِهٖ عَلٰى خَوْفٍ مِّنْ فِرْعَوْنَ
وَمَلَا۟ئِهِمْ اَنْ يَّفْتِنَهُمْ ؕ وَاِنَّ فِرْعَوْنَ لَعَالٍ فِى الْاَرْضِ ۚ وَاِنَّهٗ
لَمِنَ الْمُسْرِفِيْنَ ﴿٨٣﴾ وَقَالَ مُوْسٰى يٰقَوْمِ اِنْ كُنْتُمْ اٰمَنْتُمْ بِاللّٰهِ
فَعَلَيْهِ تَوَكَّلُوْۤا اِنْ كُنْتُمْ مُّسْلِمِيْنَ ﴿٨٤﴾ فَقَالُوْا عَلَى اللّٰهِ تَوَكَّلْنَا ۚ
رَبَّنَا لَا تَجْعَلْنَا فِتْنَةً لِّلْقَوْمِ الظّٰلِمِيْنَ ﴿٨٥﴾ ۙ وَنَجِّنَا بِرَحْمَتِكَ مِنَ
الْقَوْمِ الْكٰفِرِيْنَ ﴿٨٦﴾ وَاَوْحَيْنَاۤ اِلٰى مُوْسٰى وَاَخِيْهِ اَنْ تَبَوَّاٰ
لِقَوْمِكُمَا بِمِصْرَ بُيُوْتًا وَّاجْعَلُوْا بُيُوْتَكُمْ قِبْلَةً وَّاَقِيْمُوا
الصَّلٰوةَ ؕ وَبَشِّرِ الْمُؤْمِنِيْنَ ﴿٨٧﴾ وَقَالَ مُوْسٰى رَبَّنَاۤ اِنَّكَ
اٰتَيْتَ فِرْعَوْنَ وَمَلَاَهٗ زِيْنَةً وَّاَمْوَالًا فِى الْحَيٰوةِ الدُّنْيَا ۙ
رَبَّنَا لِيُضِلُّوْا عَنْ سَبِيْلِكَ ۚ رَبَّنَا اطْمِسْ عَلٰۤى اَمْوَالِهِمْ وَاشْدُدْ
عَلٰى قُلُوْبِهِمْ فَلَا يُؤْمِنُوْا حَتّٰى يَرَوُا الْعَذَابَ الْاَلِيْمَ ﴿٨٨﴾

79. ஃபிர்அவ்ன், (தன் கூட்டத்தாரிடம்,) "கற்றறிந்த சூனியக்காரர் ஒவ்வொருவரையும் என்னிடம்(அழைத்துக்)கொண்டு வாருங்கள்" என்றும் கூறினான்.

80. (பல பகுதிகளிலும் இருந்த) சூனியக்காரர்கள் (குறிப்பிட்ட நேரத்திற்கு) வந்த போது, மூஸா (அவர்களிடம்,) "நீங்கள் (சூனியம் செய்ய) போடக் கூடியதைப் போடுங்கள்" என்று கூறினார்.

81. (அவ்வாறு) அவர்கள் போட்டபொழுது, மூஸா (அவர்களிடம்) "நீங்கள் எதைக் கொண்டு வந்தீர்களோ அது (வெறும்) சூனியமே; நிச்சயமாக அல்லாஹ் இவைகளை அழித்துவிடுவான்; நிச்சயமாக அல்லாஹ் குழப்பம் செய்வோரின் செயலைச் சீர்படுத்தமாட்டான்" என்று கூறினார்.

82. மேலும்," நிச்சயமாக அல்லாஹ் தன் வாக்குகளைக் கொண்டு சத்தியத்தை_ (அதனைக்) குற்றவாளிகள் வெறுத்த போதிலும் சரியே உண்மையாக்கியும் வைக்கிறான்." (என்றும் கூறினார்.)

83. (இதன்பின்னர்) ஃபிர்அவ்னும், அவர்களின் பிரதானிகளும் தங்களைத் துன்புறுத்துவார்கள் என்ற பயத்தின்மீது அவருடைய சமூகத்தாரிலிருந்து ஒரு கிளையினரைத் தவிர (வேறு எவரும்) மூஸாவை ஈமான் கொள்ளவில்லை; மேலும், நிச்சயமாக ஃபிர்அவ்ன், (அப்)பூமியில் மிக்க சக்திவாய்ந்தவன்; (கொடுமை செய்வதில்)நிச்சயமாக அவன் வரம்பு மீறியவர்களிலும் உள்ளவனாவான்.

84. மூஸா(தன் சமூகத்தாரிடம்) "என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வை விசுவாசித்து, நீங்கள் அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிகிறவர்களாகவும் இருந்தால், (அவனிடமே உங்கள் காரியங்கள் யாவையும் ஒப்படைத்து முழுமையாக) அவனின் மீதே நம்பிக்கை வையுங்கள்" என்று கூறினார்.

85. அ(தற்க)வர்கள், "(அவ்வாறே) அல்லாஹ்வின் மீதே (எங்கள் காரியங்கள் யாவையும் ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைத்து விட்டோம்; எங்கள் இரட்சகனே! அநியாயக்காரர்களான சமூகத்தாரின் சோதனைக்கு நீ எங்களை ஆக்கி விடாதே!" என்று(பிரார்த்தித்துக்) கூறினார்கள்.

86. மேலும், "(எங்கள் இரட்சகனே!) நிராகரிக்கும் சமூகத்தாரிடமிருந்து உன் அருளைக் கொண்டு எங்களை நீ காப்பாற்றுவாயாக!" (என்றும் பிரார்த்தித்தார்கள்.)

87. மேலும் மூஸாவுக்கும், அவருடைய சகோதரருக்கும் "நீங்கள் இருவரும் உங்களுடைய சமூகத்தாருக்காக "மிஸ்ரில்" பல வீடுகளை அமைத்துக்கொடுங்கள், உங்களுடைய (அவ்) வீடுகளை கிப்லாவாக (_பள்ளிகளாக)வும் ஆக்குங்கள்; (அவற்றில் தவறாது)தொழுகையையும் நிறைவேற்றுங்கள்; ( அப்போது நீங்கள் வெற்றியடைந்து விடுவீர்கள் என்று) விசுவாசங் கொண்டோர்க்கு நீர் நன்மாராயமும் கூறுவீராக" என்று நாம் வஹீ அறிவித்தோம்:

88. இன்னும், எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ ஃபிர்அவ்னுக்கும், அவனுடைய பிரதானிகளுக்கும் அலங்காரத்தையும், இவ்வுலக வாழ்க்கைக்குரிய செல்வங்களையும் கொடுத்திருக்கிறாய்; ஆகவே, எங்கள் இரட்சகனே! அவர்கள் உன்னுடைய பாதையிலிருந்து மற்றவர்களை வழி கெடுத்து விடுவதற்காக (சோதனையாக நீ கொடுத்திருக்கிறாய்!) எங்கள் இரட்சகனே! அவர்களின் செல்வங்களை அழித்து, அவர்களுடைய இதயங்களையும் கடினமாக்கி விடுவாயாக! ஆகவே துன்புறுத்தும் வேதனையை அவர்கள் காணும் வரையில் அவர்கள் விசுவாசங் கொள்ளமாட்டார்கள்" என்று மூஸா (பிரார்த்தித்துக்) கூறினார்.

قَالَ قَدْ اُجِيْبَتْ دَّعْوَتُكُمَا فَاسْتَقِيْمَا وَلَا تَتَّبِعٰٓنِّ سَبِيْلَ
الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ ﴿۸۹﴾ وَجٰوَزْنَا بِبَنِيْٓ اِسْرَآءِيْلَ الْبَحْرَ فَاَتْبَعَهُمْ
فِرْعَوْنُ وَجُنُوْدُهٗ بَغْيًا وَّعَدْوًا ؕ حَتّٰٓى اِذَآ اَدْرَكَهُ الْغَرَقُ ۙ قَالَ
اٰمَنْتُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا الَّذِيْٓ اٰمَنَتْ بِهٖ بَنُوْٓا اِسْرَآءِيْلَ وَ
اَنَا مِنَ الْمُسْلِمِيْنَ ﴿۹۰﴾ آٰلْـٰٔنَ وَقَدْ عَصَيْتَ قَبْلُ وَكُنْتَ مِنَ
الْمُفْسِدِيْنَ ﴿۹۱﴾ فَالْيَوْمَ نُنَجِّيْكَ بِبَدَنِكَ لِتَكُوْنَ لِمَنْ خَلْفَكَ
اٰيَةً ؕ وَاِنَّ كَثِيْرًا مِّنَ النَّاسِ عَنْ اٰيٰتِنَا لَغٰفِلُوْنَ ﴿۹۲﴾ ع وَلَقَدْ ۹ ع ۱۴
بَوَّاْنَا بَنِيْٓ اِسْرَآءِيْلَ مُبَوَّاَ صِدْقٍ وَّرَزَقْنٰهُمْ مِّنَ الطَّيِّبٰتِ ۚ
فَمَا اخْتَلَفُوْا حَتّٰى جَآءَهُمُ الْعِلْمُ ؕ اِنَّ رَبَّكَ يَقْضِيْ بَيْنَهُمْ
يَوْمَ الْقِيٰمَةِ فِيْمَا كَانُوْا فِيْهِ يَخْتَلِفُوْنَ ﴿۹۳﴾ فَاِنْ كُنْتَ فِيْ شَكٍّ
مِّمَّآ اَنْزَلْنَآ اِلَيْكَ فَسْـَٔلِ الَّذِيْنَ يَقْرَءُوْنَ الْكِتٰبَ مِنْ
قَبْلِكَ ۚ لَقَدْ جَآءَكَ الْحَقُّ مِنْ رَّبِّكَ فَلَا تَكُوْنَنَّ مِنَ الْمُمْتَرِيْنَ ﴿۹۴﴾ ۙ
وَلَا تَكُوْنَنَّ مِنَ الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِ اللّٰهِ فَتَكُوْنَ مِنَ
الْخٰسِرِيْنَ ﴿۹۵﴾ اِنَّ الَّذِيْنَ حَقَّتْ عَلَيْهِمْ كَلِمَتُ رَبِّكَ لَا
يُؤْمِنُوْنَ ﴿۹۶﴾ ۙ وَلَوْ جَآءَتْهُمْ كُلُّ اٰيَةٍ حَتّٰى يَرَوُا الْعَذَابَ الْاَلِيْمَ ﴿۹۷﴾

89. "(மூஸா, ஹாரூனே!) உங்களிருவரின் பிரார்த்தனை திட்டமாக அங்கீகரிக்கப் பட்டுவிட்டது; ஆகவே நீங்களிருவரும் உறுதியாக இருங்கள்; அறியாதவர்களாக இருக்கிறார்களே அவர்களின் வழியை நிச்சயமாக நீங்களிருவரும் பின்பற்றி விடாதீர்கள்" என்று அவன் (அல்லாஹ்) கூறினான்.

90. இஸ்ராயீலின் மக்களை கடலைக் கடக்குமாறு நாம் செய்தோம்; அப்போது ஃபிர்அவ்னும், அவனுடைய படையினரும் (அளவு கடந்த) அநியாயமும், பகைமையும் கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள்; முடிவாக (ஃபிர்அவ்னாகிய)அவனை மூழ்குதல் வந்தடைந்தபோது, "இஸ்ராயீலின் மக்கள் யாரை விசுவாசங்கொண்டுள்ளார்களோ, அத்தகையவனைத்தவிர (வணக்கத்திற் குரிய வேறு) நாயனில்லை என நான் விசுவாசம் கொண்டு விட்டேன்; இன்னும், நான் அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தோரில் (முஸ்லிம்களில் ஒருவனாக) இருக்கிறேன்" என்று கூறினான்.

91. (அதற்கு நாம் அவனிடம்,) "இப்பொழுதா? (நீ விசுவாசங்கொள்கிறாய்? சற்று) முன்னர் நீ திட்டமாக மாறு செய்து கொண்டிருந்தாய்; குழப்பவாதிகளில் ஒரு வனாகவும் இருந்தாய்."

92. எனவே, "உனக்குப் பின்னுள்ளவர்களுக்கு, நீ ஓர் அத்தாட்சியாக ஆவதற்காக, இன்றையத்தினம் உன்னை(உயிரற்ற) உன்னுடைய தேகத்தோடு நாம் காப்பாற்றுவோம்" (என்று கூறினோம்.)"இன்னும், நிச்சயமாக மனிதர்களில் அநேகர் நம்முடைய சான்றுகளை விட்டும் பராமுகமானவர்கள்" (என்றும் அவனுக்குக் கூறப்பட்டது).

93. நிச்சயமாக, நாம் இஸ்ராயீலின் மக்களுக்கு மிக்க விருப்பமான இடத்தில் குடியேறச் செய்து, நல்ல வற்றிலிருந்து அவர்களுக்கு உணவளித்தும் வந்தோம்; எனவே (வேதமாகிய உண்மையான) அறிவு அவர்களிடம் வரும் வரையில், அவர்கள் மாறுபடவில்லை; எது விஷயத்தில் அவர்கள் மாறுபட்டிருந்தார்களோ, அதில் அவர்களுக்கிடையே நிச்சயமாக உமதிரட்சகன் மறுமை நாளில் தீர்ப்பு வழங்குவான்.

94. (நபியே!) நாம் உமக்கு இறக்கிவைத்துள்ளதில் நீர் சந்தேகத்தில் இருந்தால், உமக்கு முன்னர் வேதத்தை ஓதுவோரிடம் நீர் கேட்(டுப் பார்ப்)பீராக; நிச்சயமாக உமதிரட்சகனிடமிருந்தே (இவ்வேதமாகிய) உண்மை உம்மிடம் வந்துவிட்டது; ஆதலால், சந்தேகிக்கிறவர்களில் (உள்ளவராக)திண்ணமாக நீர் ஆகிவிட வேண்டாம்.

95. அன்றியும், அல்லாஹ்வுடைய வசனங்களைப் பொய்யாக்கியோர்களில் (உள்ளவராக) நீர் நிச்சயமாக ஆகிவிட வேண்டாம்; அவ்வாறாயின், நஷ்டமடைந்தோரில் நீர் ஆகிவிடுவீர்.

96. நிச்சயமாக எவர்களின்மீது உமதிரட்சகனுடைய வாக்கு நிரூபணமாகி (உரித்தாகி) விட்டதோ, அத்தகையவர்கள் விசுவாசங்கொள்ள மாட்டார்கள்.

97. துன்புறுத்தும் வேதனையை அவர்கள் காணும் வரையில், அனைத்து அத்தாட்சிகள் அவர்களுக்கு வந்தாலும் (அவர்கள் விசுவாசங்கொள்ளவே மாட்டார்கள்.)

فَلَوْلَا كَانَتْ قَرْيَةٌ اٰمَنَتْ فَنَفَعَهَآ اِيْمَانُهَآ اِلَّا قَوْمَ يُوْنُسَ ؕ لَمَّآ
اٰمَنُوْا كَشَفْنَا عَنْهُمْ عَذَابَ الْخِزْيِ فِي الْحَيٰوةِ الدُّنْيَا وَمَتَّعْنٰهُمْ
اِلٰى حِيْنٍ ﴿۹۸﴾ وَلَوْ شَآءَ رَبُّكَ لَاٰمَنَ مَنْ فِي الْاَرْضِ كُلُّهُمْ جَمِيْعًا ؕ
اَفَاَنْتَ تُكْرِهُ النَّاسَ حَتّٰى يَكُوْنُوْا مُؤْمِنِيْنَ ﴿۹۹﴾ وَمَا كَانَ لِنَفْسٍ
اَنْ تُؤْمِنَ اِلَّا بِاِذْنِ اللّٰهِ ؕ وَيَجْعَلُ الرِّجْسَ عَلَى الَّذِيْنَ لَا
يَعْقِلُوْنَ ﴿۱۰۰﴾ قُلِ انْظُرُوْا مَاذَا فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَمَا تُغْنِي
الْاٰيٰتُ وَالنُّذُرُ عَنْ قَوْمٍ لَّا يُؤْمِنُوْنَ ﴿۱۰۱﴾ فَهَلْ يَنْتَظِرُوْنَ اِلَّا
مِثْلَ اَيَّامِ الَّذِيْنَ خَلَوْا مِنْ قَبْلِهِمْ ؕ قُلْ فَانْتَظِرُوْٓا اِنِّيْ مَعَكُمْ
مِّنَ الْمُنْتَظِرِيْنَ ﴿۱۰۲﴾ ثُمَّ نُنَجِّيْ رُسُلَنَا وَالَّذِيْنَ اٰمَنُوْا كَذٰلِكَ ۚ
حَقًّا عَلَيْنَا نُنْجِ الْمُؤْمِنِيْنَ ﴿۱۰۳﴾ قُلْ يٰٓاَيُّهَا النَّاسُ اِنْ كُنْتُمْ فِيْ ع ۱۰/۱۵
شَكٍّ مِّنْ دِيْنِيْ فَلَآ اَعْبُدُ الَّذِيْنَ تَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ
وَلٰكِنْ اَعْبُدُ اللّٰهَ الَّذِيْ يَتَوَفّٰىكُمْ ۚۖ وَاُمِرْتُ اَنْ اَكُوْنَ مِنَ
الْمُؤْمِنِيْنَ ﴿۱۰۴﴾ وَاَنْ اَقِمْ وَجْهَكَ لِلدِّيْنِ حَنِيْفًا ۚ وَلَا تَكُوْنَنَّ
مِنَ الْمُشْرِكِيْنَ ﴿۱۰۵﴾ وَلَا تَدْعُ مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَنْفَعُكَ وَ
لَا يَضُرُّكَ ۚ فَاِنْ فَعَلْتَ فَاِنَّكَ اِذًا مِّنَ الظّٰلِمِيْنَ ﴿۱۰۶﴾

98. எனவே,(நாம் அழித்து விட்ட எத்தனையோ ஊர்களில் நம் வேதனை வரும் முன்)ஓர் ஊர் (மக்கள்) விசுவாசங் கொண்டு பின்னர், அதன் விசுவாசம் அதற்கு பயனளித்திருக்கக்கூடாதா? (அவ்வாறு எந்த ஊரும் இருக்கவில்லை) யூனுஸின் சமூகத்தாரைத்தவிர. (அவர்கள் அல்லாஹ்வின் தண்டனை வரும்முன் விசுவாசங்கொண்டு_ அதன் விசுவாசம் பயனளித்த ஊரைச்சார்ந்தவர்களாவர்) அவர்கள் விசுவாசங் கொண்டபோது, இவ்வுலக வாழ்வில் இழிவுபடுத்தும் வேதனையை அவர்களை விட்டும் நாம் அகற்றிவிட்டோம்; சிறிது காலம்வரை அவர்களை சுகமனுபவிக்குமாறும் செய்தோம்.

99. மேலும், உமதிரட்சகன் நாடியிருந்தால், பூமியிலுள்ள அனைவருமே முற்றிலும் விசுவாசித்திருப்பார்கள்; எனவே மனிதர்களை_ அவர்கள் (அனைவருமே) விசுவாசிகளாகிவிட வேண்டுமென்று நீர் நிர்ப்பந்திக்கிறீரா?

100. மேலும், எந்த ஆத்மாவிற்கும், அல்லாஹ்வின் அனுமதியின்றி அது விசுவாசங்கொள்வதற்கில்லை; மேலும்(இதை) விளங்கிக் கொள்ளாதவர்களின் மீது தண்டனையை அவன் ஆக்குகிறான்.

101. (நபியே! அவர்களிடம்,) "வானங்களிலும் பூமியிலும் என்ன இருக்கின்றன என்பதை கவனித்துப் பாருங்கள்" எனக்கூறுவீராக! எனினும், விசுவாசங் கொள்ளாதவர்களான சமூகத்தார்க்கு (நம்முடைய) அத்தாட்சிகளும், எச்சரிக்கைகளும் யாதொரு பயனுமளிக்கமாட்டா.

102. (நபியே!) அவர்கள் தங்களுக்கு முன் சென்றவர்களுக்கு ஏற்பட்ட நாட்களைப் போன்றதேயன்றி,(வேறெதனையும்) எதிர்பார்க்கின்றனரா? ஆகவே, (அந்நாட்களை) நீங்களும் எதிர்பார்த்திருங்கள்; நிச்சயமாக(அந்நாட்கள் உங்களுக்கு வருவதை) உங்களுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களில் நானும் இருக்கிறேன்" என்று கூறுவீராக!

103. பின்னர், (அவ்வாறு தண்டனைவந்தால்) நம்முடைய தூதர்களையும், அவ்வாறே விசுவாசங்கொண்டவர்களையும் நாம் காப்பாற்றுவோம்; விசுவாசங் கொண்டவர்களை நாம் காப்பாற்றுவது நம்மீது(கடமையாகவே) இருக்கிறது.

104. (நபியே! அவர்களிடம்,) "மனிதர்களே! நீங்கள் என்னுடைய மார்க்கத்தில் சந்தேகத்திலிருந்தால், அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்கமாட்டேன்; எனினும், உங்க(ளுடைய உயிர்க)ளைக் கைப்பற்றுபவனான அல்லாஹ்வையே நான் வணங்குகிறேன்; மேலும், விசுவாசிகளில் (உள்ளவனாக) இருக்க வேண்டுமென்றே நான் கட்டளையிடப் பட்டுள்ளேன்" என்று (நபியே!) நீர்கூறுவீராக!

105. (நபியே!) மேலும்(அசத்தியமான எல்லா மதங்களை விட்டும் நீங்கி) நேரான மார்க்கத்தின்பால் சார்ந்தவராக உம்முடைய முகத்தை நிலைபெறச்செய்வீராக! இணைவைக்கக்கூடியவர்களில் (உள்ளவராக)நிச்சயமாக நீரும் ஆகிவிட வேண்டாம்.

106. இன்னும், அல்லாஹ்வைத்தவிர உமக்கு பயனளிக்காதவற்றை மற்றும் உமக்கு இடர் செய்யாதவற்றை நீர் அழைக்க வேண்டாம்; அவ்வாறு செய்வீராயின், நிச்சயமாக அச்சமயமே அநியாயக்காரர்களில்(உள்ளவராக) நீர் ஆகிவிடுவீர்:

وَإِن يَمْسَسْكَ اللّٰهُ بِضُرٍّ فَلَا كَاشِفَ لَهٗٓ إِلَّا هُوَ ۚ وَإِن يُرِدْكَ
بِخَيْرٍ فَلَا رَآدَّ لِفَضْلِهٖ ۚ يُصِيبُ بِهٖ مَن يَشَآءُ مِنْ عِبَادِهٖ ۚ وَهُوَ
الْغَفُورُ الرَّحِيمُ ﴿١٠٧﴾ قُلْ يٰٓأَيُّهَا النَّاسُ قَدْ جَآءَكُمُ الْحَقُّ مِن
رَّبِّكُمْ ۖ فَمَنِ اهْتَدٰى فَإِنَّمَا يَهْتَدِي لِنَفْسِهٖ ۖ وَمَن ضَلَّ فَإِنَّمَا
يَضِلُّ عَلَيْهَا ۚ وَمَآ أَنَا عَلَيْكُم بِوَكِيلٍ ﴿١٠٨﴾ وَاتَّبِعْ مَا يُوحٰٓى
إِلَيْكَ وَاصْبِرْ حَتّٰى يَحْكُمَ اللّٰهُ ۚ وَهُوَ خَيْرُ الْحٰكِمِينَ ﴿١٠٩﴾ ع ١١ ١٦

## سُورَةُ هُودٍ مَكِّيَّةٌ وَهِيَ مِائَةٌ وَّثَلٰثٌ وَّعِشْرُونَ اٰيَةً وَّعَشْرُ رُكُوعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

الٓرٰ ۚ كِتٰبٌ أُحْكِمَتْ اٰيٰتُهٗ ثُمَّ فُصِّلَتْ مِن لَّدُنْ حَكِيمٍ خَبِيرٍ ﴿١﴾ أَلَّا
تَعْبُدُوٓا إِلَّا اللّٰهَ ۚ إِنَّنِي لَكُم مِّنْهُ نَذِيرٌ وَّبَشِيرٌ ﴿٢﴾ وَأَنِ اسْتَغْفِرُوا
رَبَّكُمْ ثُمَّ تُوبُوٓا إِلَيْهِ يُمَتِّعْكُم مَّتَاعًا حَسَنًا إِلٰٓى أَجَلٍ مُّسَمًّى وَّ
يُؤْتِ كُلَّ ذِي فَضْلٍ فَضْلَهٗ ۖ وَإِن تَوَلَّوْا فَإِنِّيٓ أَخَافُ عَلَيْكُمْ
عَذَابَ يَوْمٍ كَبِيرٍ ﴿٣﴾ إِلَى اللّٰهِ مَرْجِعُكُمْ ۖ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيرٌ ﴿٤﴾
أَلَآ إِنَّهُمْ يَثْنُونَ صُدُورَهُمْ لِيَسْتَخْفُوا مِنْهُ ۚ أَلَا حِينَ يَسْتَغْشُونَ
ثِيَابَهُمْ ۙ يَعْلَمُ مَا يُسِرُّونَ وَمَا يُعْلِنُونَ ۚ إِنَّهٗ عَلِيمٌ بِذَاتِ الصُّدُورِ ﴿٥﴾

107. அல்லாஹ் உமக்கு ஒரு இடரை அடையச் செய்தால் அதனை நீக்குகிறவன் அவனைத் தவிர (வேறு) எவரும் இல்லை; மேலும், அவன் உமக்கு யாதொரு நன்மையை நாடினால் அவனது பேரருளை தடுப்பவர் எவருமில்லை; தன் அடியார்களில் அவன் நாடியவர்களுக்கு அதனை பெற்றுக்கொள்ளுமாறு செய்கின்றான்; அவனோ மிக்க மன்னிப்போன்; மிகக் கிருபையுடையோன்.

108. நபியே! நீர் கூறுவீராக: "மனிதர்களே! நிச்சயமாக உங்களுடைய இரட்சகனிடமிருந்து இந்தச் சத்திய (வேத)ம் உங்களிடம் வந்திருக்கிறது; ஆகவே எவர் நேர் வழியில் செல்கின்றாரோ, அவர் (அந்) நேர் வழியில் செல்வதெல்லாம் தன(து நன்மை)க்காகவேதான்; மேலும், எவர் வழி தவறுகின்றாரோ, அவர்வழி தவறுவதெல்லாம் அவருக்கே (கேடாகத்) தான்; அன்றியும், (நீங்கள் விசுவாசிகளாக ஆவதற்கு) உங்களுக்கு நான் பொறுப்புடையவனல்லன்".

109. (நபியே!) உமக்கு (வஹீ மூலம்) அறிவிக்கப்படுகின்றவற்றையே நீர் பின்பற்று வீராக! மேலும், அல்லாஹ் தீர்ப்பு வழங்கும் வரையில் பொறுமையுடன் இருப்பீராக! இன்னும், அவன் தீர்ப்பளிப்பவர்களில் மிகவும் சிறந்தவன்.

---

அத்தியாயம் : 11

## ஹூது

வசனங்கள் : 123 மக்கீ ருகூஉகள் : 10

---

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. அலிஃப் லாம் றா. (இது அல்லாஹ்வின்) வேதம்; இதன் வசனங்கள் உறுதியாக்கப்பட்டு, அதன் பின்னர் அவை தீர்க்கமான அறிவுடையவன், நன்கறிந்தவனிடமிருந்து தெளிவு செய்யப்பட்டுள்ளன.

2. "நீங்கள் அல்லாஹ்வைத்தவிர (வேறு யாரையும்) வணங்காதீர்கள்; அவனிடமிருந்து உங்களுக்கு நிச்சயமாக நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனாகவும், நற்செய்தி கூறுபவனாகவும் இருக்கிறேன்" (என்றும்),

3. மேலும், "நீங்கள் உங்கள் இரட்சகனிடத்தில் பாவ மன்னிப்பைத் தேடுங்கள்; அதன் பின்னர் (பாவங்களை விட்டு தவ்பாச் செய்து) அவன் பக்கம் திரும்புங்கள்; (அவ்வாறு செய்தால்) அவன் குறிப்பிட்ட ஒரு காலம் வரையில் உங்களை அழகான சுகமாக சுகமடையச்செய்வான்; இன்னும், சிறப்புற்குரியவர் ஒவ்வொருவருக்கும் அவரது சிறப்பை அவன் கொடுப்பான்; நீங்கள் (அவனைப்) புறக்கணித்தால், (மா)பெரும்நாளின்வேதனையை நிச்சயமாக உங்கள் மீது நான் பயப்படுகின்றேன்" (என்றும்),

4. "அல்லாஹ்வின்பக்கமே உங்கள் மீளுமிடம் இருக்கிறது; அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்" (என்றும் நபியே! நீர் கூறுவீராக.)

5. (மனிதர்கள்) தங்களை (அல்லாஹ்வாகிய) அவனிடமிருந்து மறைத்துக் கொள்வதற்காக, தங்கள் நெஞ்சங்களைச் சுற்றி(மறைத்து)க்கொள்கின்றனர் என்பதை (நபியே! நீர்) அறிந்து கொள்வீராக! (நித்திரைக்குச் செல்லும்போது) அவர்கள் தங்கள் ஆடைகளால், தங்களை மூடிக் கொள்ளும் சமயத்தில் (தங்கள் நெஞ்சங்களில்) அவர்கள் இரகசியமாக்குவதையும், (அதற்கு மாறாக) அவர்கள் பகிரங்கப்படுத்துவதையும் அவன் (நன்கு) அறிகிறவன் என்பதை (நீர்) அறிந்து கொள்வீராக! நிச்சயமாக அவன் நெஞ்சங்களிலுள்ளவற்றை நன்கறிகிறவன்.

الجزء ۱۲ وَمَا مِنْ دَآبَّةٍ فِي الْاَرْضِ اِلَّا عَلَى اللّٰهِ رِزْقُهَا وَ
يَعْلَمُ مُسْتَقَرَّهَا وَمُسْتَوْدَعَهَا ؕ كُلٌّ فِيْ كِتٰبٍ مُّبِيْنٍ ۝٦ وَ
هُوَ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ فِيْ سِتَّةِ اَيَّامٍ وَّكَانَ
عَرْشُهٗ عَلَى الْمَآءِ لِيَبْلُوَكُمْ اَيُّكُمْ اَحْسَنُ عَمَلًا ؕ وَلَئِنْ قُلْتَ
اِنَّكُمْ مَّبْعُوْثُوْنَ مِنْۢ بَعْدِ الْمَوْتِ لَيَقُوْلَنَّ الَّذِيْنَ كَفَرُوْٓا اِنْ
هٰذَآ اِلَّا سِحْرٌ مُّبِيْنٌ ۝٧ وَلَئِنْ اَخَّرْنَا عَنْهُمُ الْعَذَابَ اِلٰٓى اُمَّةٍ
مَّعْدُوْدَةٍ لَّيَقُوْلُنَّ مَا يَحْبِسُهٗ ؕ اَلَا يَوْمَ يَاْتِيْهِمْ لَيْسَ مَصْرُوْفًا
ع ۸/۱ عَنْهُمْ وَحَاقَ بِهِمْ مَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ۝٨ ع وَلَئِنْ اَذَقْنَا
الْاِنْسَانَ مِنَّا رَحْمَةً ثُمَّ نَزَعْنٰهَا مِنْهُ ۚ اِنَّهٗ لَيَئُوْسٌ كَفُوْرٌ ۝٩
وَلَئِنْ اَذَقْنٰهُ نَعْمَآءَ بَعْدَ ضَرَّآءَ مَسَّتْهُ لَيَقُوْلَنَّ ذَهَبَ
السَّيِّاٰتُ عَنِّيْ ؕ اِنَّهٗ لَفَرِحٌ فَخُوْرٌ ۝١٠ لا اِلَّا الَّذِيْنَ صَبَرُوْا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ ؕ اُولٰٓئِكَ لَهُمْ مَّغْفِرَةٌ وَّاَجْرٌ كَبِيْرٌ ۝١١
فَلَعَلَّكَ تَارِكٌۢ بَعْضَ مَا يُوْحٰٓى اِلَيْكَ وَضَآئِقٌۢ بِهٖ
صَدْرُكَ اَنْ يَّقُوْلُوْا لَوْلَآ اُنْزِلَ عَلَيْهِ كَنْزٌ اَوْ جَآءَ مَعَهٗ
مَلَكٌ ؕ اِنَّمَآ اَنْتَ نَذِيْرٌ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ وَّكِيْلٌ ۝١٢ ؕ

6. பூமியிலுள்ள எந்த ஊர்வனவும் அவற்றின் உணவு அல்லாஹ்வின் மீது (பொறுப்பாக) இருந்தே தவிர இல்லை; அவை தங்குமிடத்தையும், அவை ஒப்படைக்கப் ப(ட்)டு (சேரு)மிடத்தையும் அவன் (நன்கு) அறிகிறவன்; (இவை) யாவும் (லவ்ஹூல் மஹ்ஃபூல் என்னும்) தெளிவான புத்தகத்தில் (பதிவு செய்யப் பட்டு) இருக்கின்றன.

7. அவன் எத்தகையோனென்றால், வானங்கள் , மற்றும் பூமியை ஆறு நாட்களில் படைத்தான்_ (அச்சமயம்) அவனுடைய 'அர்ஷு' தண்ணீரின் மீதிருந்தது ; உங்களில் நற்கருமங்களை நன்றாகச் செய்வோர் யார், என்று உங்களை அவன் சோதிப்பதற்காக ( அவன் படைத்தான்) மேலும், " இறந்த பின்னர் நிச்சயமாக (உயிர் கொடுத்து) நீங்கள் எழுப்பப்படுபவர்கள்" என்று அவர்களிடம் நீர் கூறினால் அதற்கு, "இது பகிரங்கமான சூனியமேதவிர வேறில்லை" என்று நிச்சயமாக நிராகரித்துக் கொண்டிருப்போர் கூறுகின்றனர்.

8. அவர்களுக்கு வேதனையை ஒரு குறிப்பிட்ட காலம் நாம் பிற்படுத்தினால், "அதனைத் தடுத்துக் கொண்டது எது?" என(த்திட்டமாக)அவர்கள் கேட்கின் றார்கள்; அறிந்து கொள்ளுங்கள்! அவர்களிடம் அது வரும் நாளில், அவர்களை விட்டு அது தடுக்கப்படுவதாக இல்லை; இன்னும், அவர்கள் எதைப்பரிகாசம் செய்து கொண்டிருந்தார்களோ அது அவர்களைச் சூழ்ந்து கொள்ளும்.

9. மேலும், நாம் மனிதனுக்கு நம்மிடமிருந்து அருளை சுவைக்கும்படிச் செய்து, பின்னர் அதனை அவனிடமிருந்து நாம் பிடுங்கிக்கொண்டால், நிச்சயமாக அவன் நம்பிக்கையிழந்தவன்; பெரும் நன்றி கெட்டவன் (ஆக மாறி விடுகிறான் ).

10. மேலும், அவனுக்கு ஏற்பட்ட துன்பத்திற்குப்பின் அருட்கொடைகளை அவனுக்கு நாம் சுவைக்கச்செய்தால், அ(தற்க)வன், "என்னை விட்டும் துன்பங்கள் போய்விட்டன;" என்று நிச்சயமாகக் கூறுகின்றான்; நிச்சயமாக அவன் மகிழ்ச்சி யடையக்கூடியவன்; பெருமையடிப்பவன்(ஆக மாறி விடுகின்றான்)_

11. (துன்பங்களைச் சகித்துப்) பொறுத்துக் கொண்டு, நன்மையான காரியங்களைச் செய்தும் வருகின்றார்களே அத்தகையவர்களைத்தவிர_ அத்தகையோர்_ அவர்களுக்கு மன்னிப்பும், மாபெரும் (நற்)கூலியும் உண்டு.

12. ஆகவே,(நபியே!) "அவர்மீது ஒரு பொக்கிஷம் இறக்கிவைக்கப்பட்டிருக்க வேண்டாமா? அல்லது அவருடன் ஒரு மலக்குவரவேண்டாமா?" என்று அவர்கள் (உம்மைப்பற்றி)கூறுவதற்காக, உமக்கு வஹீ மூலம் அறிவிக்கப்படுகின்றவற்றில் சிலதை (எத்தி வைக்காது)நீர்விட்டு விடக்கூடும். உம்முடைய நெஞ்சம் (வஹீமூலம் அறிவிக்கப்பட்ட) அதைக்கொண்டு இக்கட்டுக்குள்ளாகி விடக்கூடும்; நிச்சயமாக நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்தான்; அல்லாஹ்வோ ஒவ்வொரு பொருளின் மீதும் பொறுப்பாளனாவான்.

اَمْ يَقُوْلُوْنَ افْتَرٰىهُ ؕ قُلْ فَاْتُوْا بِعَشْرِ سُوَرٍ مِّثْلِهٖ مُفْتَرَيٰتٍ وَّ
ادْعُوْا مَنِ اسْتَطَعْتُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۱۳﴾
فَاِلَّمْ يَسْتَجِيْبُوْا لَكُمْ فَاعْلَمُوْۤا اَنَّمَاۤ اُنْزِلَ بِعِلْمِ اللّٰهِ وَاَنْ لَّاۤ اِلٰهَ
اِلَّا هُوَ ۚ فَهَلْ اَنْتُمْ مُّسْلِمُوْنَ ﴿۱۴﴾ مَنْ كَانَ يُرِيْدُ الْحَيٰوةَ الدُّنْيَا وَ
زِيْنَتَهَا نُوَفِّ اِلَيْهِمْ اَعْمَالَهُمْ فِيْهَا وَهُمْ فِيْهَا لَا يُبْخَسُوْنَ ﴿۱۵﴾
اُولٰٓئِكَ الَّذِيْنَ لَيْسَ لَهُمْ فِى الْاٰخِرَةِ اِلَّا النَّارُ ۖ وَحَبِطَ مَا
صَنَعُوْا فِيْهَا وَبٰطِلٌ مَّا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۶﴾ اَفَمَنْ كَانَ عَلٰى
بَيِّنَةٍ مِّنْ رَّبِّهٖ وَيَتْلُوْهُ شَاهِدٌ مِّنْهُ وَمِنْ قَبْلِهٖ كِتٰبُ مُوْسٰٓى
اِمَامًا وَّرَحْمَةً ؕ اُولٰٓئِكَ يُؤْمِنُوْنَ بِهٖ ؕ وَمَنْ يَّكْفُرْ بِهٖ مِنَ
الْاَحْزَابِ فَالنَّارُ مَوْعِدُهٗ ۚ فَلَا تَكُ فِىْ مِرْيَةٍ مِّنْهُ ۗ اِنَّهُ الْحَقُّ
مِنْ رَّبِّكَ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يُؤْمِنُوْنَ ﴿۱۷﴾ وَمَنْ اَظْلَمُ
مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا ؕ اُولٰٓئِكَ يُعْرَضُوْنَ عَلٰى رَبِّهِمْ وَ
يَقُوْلُ الْاَشْهَادُ هٰٓؤُلَآءِ الَّذِيْنَ كَذَبُوْا عَلٰى رَبِّهِمْ ۚ اَلَا
لَعْنَةُ اللّٰهِ عَلَى الظّٰلِمِيْنَ ﴿۱۸﴾ۙ الَّذِيْنَ يَصُدُّوْنَ عَنْ سَبِيْلِ
اللّٰهِ وَيَبْغُوْنَهَا عِوَجًا ؕ وَهُمْ بِالْاٰخِرَةِ هُمْ كٰفِرُوْنَ ﴿۱۹﴾

13. அல்லது (நமது தூதராகிய) "அவர் இதனைக் கற்பனை செய்துவிட்டார்" என்று அவர்கள் கூறுகின்றனரா? (அவ்வாறாயின், நபியே!) " இதைப் போன்று கற்பனை செய்யப்பட்ட பத்து அத்தியாயங்களை நீங்கள் கொண்டு வாருங்கள்; (நீங்கள் உங்கள் கூற்றில்) உண்மையாளர்களாக இருந்தால், அல்லாஹ்வை யன்றி உங்களுக்குச் சாத்தியமானவர்களையும் (இதுபோன்றதைக் கொண்டு வருவதற்காக) அழைத்துக் கொள்ளுங்கள்" என்று நீர் கூறுவீராக!

14. அவர்கள் உங்களுக்கு பதிலளிக்கவில்லையானால், நிச்சயமாக அது இறக்கப்பட்டதெல்லாம் அல்லாஹ்வின் அறிவைக் கொண்டேதான்; அவனைத் தவிர வணக்கத்திற்குரிய (வேறு) நாயன் இல்லை என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்; (இப்போதாவது) நீங்கள் (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் கீழ்ப்படி(ந்த முஸ்லிம்களாக ஆகிவிடு)கிறீர்களா? (என்று கேளுங்கள்).

15. எவர்கள், இவ்வுலக வாழ்வையும், அதன் அலங்காரத்தையும் நாடுபவர்களாக இருக்கின்றார்களோ, அவர்கள் செயல்க(ளுக்குரிய பலன்க)ளை, இ(வ்வுலகத்)திலேயே நாம் பூரணமாக அவர்களுக்கு நிறைவு செய்வோம்; அவர்களோ அதில் குறைவு செய்யப்படமாட்டார்கள்.

16. இத்தகையோர் தாம் _ அவர்களுக்கு மறுமையில் (நரக) நெருப்பைத்தவிர (வேறு ஒன்றும்) இல்லை; அவர்கள் அ(வ்வுலகத்)தில் செய்தவை அழிந்தும் விட்டன; அவர்கள் செய்து கொண்டிருந்தவை வீணானவையேயாகும்.

17. தம் இரட்சகனிடமிருந்து வந்த தெளிவின் மீது இருப்பவர், (அதன் உண்மைக்குச் சான்றாக) அவனிடமிருந்து அவரை ஒரு சாட்சியும்அடுத்திருக்க இன்னும் அதற்கு முன்பு மூஸாவுடைய வேதம் வழிகாட்டியாகவும், அருளாகவும் இருக்க, அ(த்தகைய)வரா? (நிராகரிப்போர் போன்று ஆவார்? ஆகமாட்டார்.) அத்தகைய (ஆதாரங்களைக் கொண்ட)வர்களே அவரை நம்பிக்கை கொள்வார்கள்; மேலும், பல கூட்டத்தார்களிலிருந்து அவரை எவர் நிராகரிப்பாரோ, அப்பொழுது நரகமே அவருக்கு வாக்களிக்கப்பட்ட இடமாகும்; ஆகவே, அ(வ்வேதத்)தைப் பற்றி நீர் சந்தேகத்தில் இருக்க வேண்டாம்; நிச்சயமாக அது உம்முடைய இரட்சகனிடமிருந்து(வந்து)ள்ள உண்மையாகும்; எனினும் மனிதர்களில் அதிகமானோர் (அதனை) நம்பிக்கை கொள்ளமாட்டார்கள்.

18. மேலும், அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனை செய்பவரைவிட மிகப் பெரிய அநியாயக்காரர் யார்? அத்தகையோர் (மறுமையில்) தங்கள் இரட்சகன் முன் நிறுத்தப்படுவர்; மேலும், "இவர்கள் தாம் தங்கள் இரட்சகன் மீது பொய்யுரைத்தவர்கள்" என்று (மலக்குகளான) சாட்சிகள் கூறுவார்கள்; அநியாயக்காரர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டென்பதை (நபியே! நீர்) அறிந்து கொள்வீராக!

19. அவர்கள் எத்தகையோரென்றால், அல்லாஹ்வின் பாதையை விட்டும் (அதில் செல்வோரைத்) தடுத்து, அதைக் கோணலாக்கத் தேடுகிறார்கள்; அவர்கள் தாம் மறுமையையும் நிராகரிப்பவர்கள் ஆவார்கள்.

أُولٰٓئِكَ لَمْ يَكُونُوا مُعْجِزِينَ فِي الْأَرْضِ وَمَا كَانَ لَهُمْ
مِّنْ دُونِ اللّٰهِ مِنْ أَوْلِيَآءَ ۘ يُضٰعَفُ لَهُمُ الْعَذَابُ ۚ مَا كَانُوا وقف لازم
يَسْتَطِيعُونَ السَّمْعَ وَمَا كَانُوا يُبْصِرُونَ ۲۰ أُولٰٓئِكَ الَّذِينَ
خَسِرُوٓا أَنْفُسَهُمْ وَضَلَّ عَنْهُمْ مَّا كَانُوا يَفْتَرُونَ ۲۱ لَا جَرَمَ
أَنَّهُمْ فِي الْاٰخِرَةِ هُمُ الْأَخْسَرُونَ ۲۲ إِنَّ الَّذِينَ اٰمَنُوا وَعَمِلُوا
الصّٰلِحٰتِ وَأَخْبَتُوٓا إِلٰى رَبِّهِمْ ۙ أُولٰٓئِكَ أَصْحٰبُ الْجَنَّةِ ۚ هُمْ
فِيهَا خٰلِدُونَ ۲۳ مَثَلُ الْفَرِيقَيْنِ كَالْأَعْمٰى وَالْأَصَمِّ وَالْبَصِيرِ
وَالسَّمِيعِ ۚ هَلْ يَسْتَوِيٰنِ مَثَلًا ۚ أَفَلَا تَذَكَّرُونَ ۲۴ ع وَلَقَدْ أَرْسَلْنَا ركوع
نُوحًا إِلٰى قَوْمِهٖٓ ۫ إِنِّي لَكُمْ نَذِيرٌ مُّبِينٌ ۲۵ أَنْ لَّا تَعْبُدُوٓا إِلَّا
اللّٰهَ ۚ إِنِّيٓ أَخَافُ عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ أَلِيمٍ ۲۶ فَقَالَ الْمَلَأُ الَّذِينَ
كَفَرُوا مِنْ قَوْمِهٖ مَا نَرٰىكَ إِلَّا بَشَرًا مِّثْلَنَا وَمَا نَرٰىكَ
اتَّبَعَكَ إِلَّا الَّذِينَ هُمْ أَرَاذِلُنَا بَادِيَ الرَّأْيِ ۚ وَمَا نَرٰى
لَكُمْ عَلَيْنَا مِنْ فَضْلٍ بَلْ نَظُنُّكُمْ كٰذِبِينَ ۲۷ قَالَ يٰقَوْمِ أَرَءَيْتُمْ
إِنْ كُنْتُ عَلٰى بَيِّنَةٍ مِّنْ رَّبِّي وَاٰتٰىنِي رَحْمَةً مِّنْ عِنْدِهٖ
فَعُمِّيَتْ عَلَيْكُمْ ۗ أَنُلْزِمُكُمُوهَا وَأَنْتُمْ لَهَا كٰرِهُونَ ۲۸

20. அத்தகையோர் பூமியில் (அல்லாஹ்வை) இயலாமையில் ஆக்கக் கூடியவர்களாக அவர்கள் இருக்கவில்லை; மேலும், அல்லாஹ்வையன்றி அவர்களுக்கு பாதுகாவலர்களுமில்லை; (மறுமையிலோ) அவர்களுக்கு வேதனை இரட்டிப்பாக்கப்படும்; (நல்லவற்றை) செவியேற்கச் சக்தியுடையோராக அவர்கள் இருக்கவில்லை; (நேர்வழியைப்) பார்ப்போராகவும் அவர்கள் இருக்கவில்லை.

21. அத்தகையோர்தாம், தமக்குத் தாமே நஷ்டத்தை விளைவித்துக் கொண்டவர்கள்; அவர்கள் கற்பனை செய்து கொண்டிருந்தவை (அந்நாளில்) அவர்களை விட்டும் மறைந்தும் விடும்.

22. நிச்சயமாக அவர்கள் மறுமையில் அவர்களே முற்றிலும் நஷ்டமடைந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

23. நிச்சயமாக விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்து, தங்களுடைய இரட்சகன் பக்கம் அடிபணியவும் செய்கின்றார்களே அத்தகையோர் அவர்கள் சுவனத்திற்குரியவர்கள்; அவர்கள் அதில் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்.

24. இவ்விரு பிரிவினருக்கு உதாரணம்: (ஒரு பிரிவினர்) குருடரையும், செவிடரையும்; (மற்றொரு பிரிவினர்) பார்வையுடையவரையும், நன்கு கேட்பவரையும் போலாவர்; இவ்விரு பிரிவினரும் தன்மையால் சமமாவார்களா? (இதனைக் கொண்டு) நீங்கள் நல்லுணர்ச்சி பெறமாட்டீர்களா?

25. மேலும், நிச்சயமாக நாம் நூஹை அவருடைய சமூகத்தாரிடம் அனுப்பி வைத்தோம்; "நிச்சயமாக நான் உங்களுக்குப் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவன்"(என்று அவர் கூறினார்).

26. "அல்லாஹ்வைத் தவிர (மற்றெதையும்) நீங்கள் வணங்காதீர்கள். (அவ்வாறு மற்றெதையும் நீங்கள் வணங்கினால்,) துன்புறுத்தும் நாளின் வேதனையைப் பற்றி) நிச்சயமாக உங்களின்மீது நான் பயப்படுகின்றேன்" (என்று கூறினார்).

27. அதற்கு, அவருடைய சமூகத்தாரில் நிராகரித்தோரின் பிரதானிகள், (நூஹிடம்,) "உம்மை எங்களைப் போன்ற ஒரு மனிதராகவே தவிர (வேறு விதமாக) நாங்கள் காணவில்லை; இன்னும் எங்களில் ஆழ்ந்து சிந்திக்காத இழிவானவர்களே தவிர (வேறெவரும்) உம்மைப் பின்பற்றி நடப்பதாக நாங்கள் காணவில்லை ; உங்களுக்கு எங்களைவிட எந்தச்சிறப்பும் இருப்பதாக நாங்கள் காணவில்லை; மாறாக உங்களைப் பொய்யர்களெனவே நாங்கள் எண்ணுகின்றோம்" என்று கூறினார்கள்.

28. அ(தற்க)வர் கூறினார்: "என்னுடைய சமூகத்தாரே ! நீங்கள் கவனித்தீர்களா? என் இரட்சகனுடைய ஆதாரத்தின் மீது நான் இருந்து, அவன் தன் புறத்திலிருந்து அருளை எனக்குக் கொடுத்திருந்தும் (அது உங்கள் கண்களுக்குப் புலப்படாமல்) உங்களுக்கு மறைக்கப்பட்டு விடுமானால், அதனை நீங்கள் வெறுத்தவர்களாக இருக்க, அதனைப் பின்பற்றும்படி நாம் உங்களை நிர்ப்பந்திப்போமா?"

وَيٰقَوْمِ لَآ اَسْـَٔلُكُمْ عَلَيْهِ مَالًا ؕ اِنْ اَجْرِىَ اِلَّا عَلَى اللّٰهِ وَمَآ اَنَا
بِطَارِدِ الَّذِيْنَ اٰمَنُوْا ؕ اِنَّهُمْ مُّلٰقُوْا رَبِّهِمْ وَلٰكِنِّىْٓ اَرٰىكُمْ قَوْمًا
تَجْهَلُوْنَ ﴿٢٩﴾ وَيٰقَوْمِ مَنْ يَّنْصُرُنِىْ مِنَ اللّٰهِ اِنْ طَرَدْتُّهُمْ ؕ اَفَلَا
تَذَكَّرُوْنَ ﴿٣٠﴾ وَلَآ اَقُوْلُ لَكُمْ عِنْدِىْ خَزَآئِنُ اللّٰهِ وَلَآ اَعْلَمُ
الْغَيْبَ وَلَآ اَقُوْلُ اِنِّىْ مَلَكٌ وَّلَآ اَقُوْلُ لِلَّذِيْنَ تَزْدَرِىْٓ اَعْيُنُكُمْ
لَنْ يُّؤْتِيَهُمُ اللّٰهُ خَيْرًا ؕ اَللّٰهُ اَعْلَمُ بِمَا فِىْٓ اَنْفُسِهِمْ ۖۚ اِنِّىْٓ اِذًا
لَّمِنَ الظّٰلِمِيْنَ ﴿٣١﴾ قَالُوْا يٰنُوْحُ قَدْ جٰدَلْتَنَا فَاَكْثَرْتَ جِدَالَنَا
فَاْتِنَا بِمَا تَعِدُنَآ اِنْ كُنْتَ مِنَ الصّٰدِقِيْنَ ﴿٣٢﴾ قَالَ اِنَّمَا يَاْتِيْكُمْ
بِهِ اللّٰهُ اِنْ شَآءَ وَمَآ اَنْتُمْ بِمُعْجِزِيْنَ ﴿٣٣﴾ وَلَا يَنْفَعُكُمْ نُصْحِىْٓ اِنْ
اَرَدْتُّ اَنْ اَنْصَحَ لَكُمْ اِنْ كَانَ اللّٰهُ يُرِيْدُ اَنْ يُّغْوِيَكُمْ ؕ هُوَ رَبُّكُمْ ۫ قف
وَاِلَيْهِ تُرْجَعُوْنَ ﴿٣٤﴾ ؕ اَمْ يَقُوْلُوْنَ افْتَرٰىهُ ؕ قُلْ اِنِ افْتَرَيْتُهٗ
فَعَلَىَّ اِجْرَامِىْ وَاَنَا بَرِىْٓءٌ مِّمَّا تُجْرِمُوْنَ ﴿٣٥﴾ ع وَاُوْحِىَ اِلٰى نُوْحٍ ع ١١ ٣ ٣
اَنَّهٗ لَنْ يُّؤْمِنَ مِنْ قَوْمِكَ اِلَّا مَنْ قَدْ اٰمَنَ فَلَا تَبْتَئِسْ
بِمَا كَانُوْا يَفْعَلُوْنَ ﴿٣٦﴾ ۚ وَاصْنَعِ الْفُلْكَ بِاَعْيُنِنَا وَوَحْيِنَا
وَلَا تُخَاطِبْنِىْ فِى الَّذِيْنَ ظَلَمُوْا ۚ اِنَّهُمْ مُّغْرَقُوْنَ ﴿٣٧﴾

29. அன்றியும், "என்னுடைய சமூகத்தாரே! இதற்காக நான் உங்களிடம் எப்பொருளையும் (கூலியாகக்)கேட்கவில்லை; என்னுடைய கூலி அல்லாஹ்விடமே தவிர (உங்களிடம்) இல்லை விசுவாசங்கொண்டோரை நான் விரட்டுபவனாகவும் இல்லை; நிச்சயமாக, அவர்கள் தங்கள் இரட்சகனை (க் கண்ணியத்துடன்) சந்திக்கிறவர்களாவர். எனினும், நிச்சயமாக உங்களை அறியாதவர்களான சமூகத்தவராகவே நான் காண்கின்றேன்."

30. மேலும், "என்னுடைய சமூகத்தாரே! (விசுவாசங்கொண்டோரான) அவர்களை நான் விரட்டிவிட்டால், அல்லாஹ் வி(ன் தண்டனையி)லிருந்து எனக்குஉதவி செய்கிறவர் யார்? நீங்கள் சிந்திக்கமாட்டீர்களா?

31. "அல்லாஹ்வுடைய பொக்கிஷங்கள் என்னிடம் இருக்கின்றனவென்று நான் உங்களிடம் கூறவுமாட்டேன்; நான் மறைவானவற்றை அறியவுமாட்டேன்; நிச்சயமாக நான் ஒரு மலக்கு என்று கூறவுமாட்டேன். மேலும், உங்களுடைய கண்கள் இழிவாகக்காண்கின்றனவோ அத்தகையவர்களுக்கு அல்லாஹ் யாதொரு நன்மையையும் அளிக்கவேமாட்டான் என்று நான் கூறவுமாட்டேன்; அவர்களின் மனங்களிலுள்ளதை (உங்களைவிட ) அல்லாஹ்(தான்) மிக அறிந்தவன்; (இதற்கு மாறாக நான் எதையும் கூறினால் ) நிச்சயமாக நான் அச்சமயமே அநியாயக்காரர்களில் உள்ளவன்(ஆகி விடுவேன்"என்றும் கூறினார்).

32. அ(தற்க)வர்கள், " நூஹே! நிச்சயமாக நீர் எங்களுடன் தர்க்கித்து விட்டீர்; பின்னும், எங்களுடன் தர்க்கிப்பதை அதிகமாக்கி விட்டீர். ஆகவே, நீர் உண்மையாளர்களில்(உள்ளவராக) இருந்தால்,நீர் எங்களுக்கு வாக்களித்ததை எங்களிடம் கொண்டு வாரும்" என்று கூறினார்கள்.

33. அ(தற்க)வர், "அ(வ் வேதனையான)தை உங்களிடம் கொண்டு வருபவன் அல்லாஹ்தான்; (அதுவும்) அவன் நாடினால், (அதனைக் கொண்டு வந்து விடுவான்.) அவனை நீங்கள் இயலாமலாக்கிவிடுகிறவர்களும் அல்லர்" என்று கூறினார்.

34. "நான் உங்களுக்கு நல்லுபதேசம் செய்ய நாடினாலும், அல்லாஹ் உங்களை வழிகேட்டிலேயே விட்டு விட வேண்டுமென்று அவன் நாடியிருந்தால், என்னுடைய நல்லுபதேசம் உங்களுக்கு யாதொரு பயனையும் அளிக்காது; அவன்தான் உங்களுடைய இரட்சகன். (மறுமையில்) அவன்பக்கமே நீங்கள் மீண்டும் கொண்டு வரப்படுவீர்கள்"(என்றும் கூறினார்).

35. அல்லது "அவர் இதனைக் கற்பனை செய்துவிட்டார் " என்று அவர்கள் கூறுகின்றனரா? "நான் அதனைக் கற்பனை செய்திருந்தால், குற்றம் என்மீதே சாரும்; நீங்கள் செய்யும் குற்றங்களிலிருந்து நான் நீங்கியவனாவேன் "என்று (நபியே!) நீர் கூறுவீராக!

36. மேலும், நிச்சயமாக அது: "(முன்னர்) விசுவாசம் கொண்டவர்களைத்தவிர, (இனி) உம்முடைய சமூகத்தாரில் ஒருவரும் நிச்சயமாக விசுவாசம் கொள்ளவே மாட்டார்கள்; ஆதலால், அவர்கள் செய்து கொண்டிருப்பதைப் பற்றி நீர் கவலைப்படாதீர் "என்று (நபி) நூஹ்வுக்கு வஹீ அறிவிக்கப்பட்டது.

37. மேலும்,"நம்முடைய கண்கள் முன்பாகவே, நம்முடைய அறிவிப்பின்படி, ஒரு கப்பலை நீர் செய்யும்; அக்கிரமம் செய்தவர்களைப் பற்றி (இனி) நீர் என்னுடன் (பரிந்து) பேசாதீர். நிச்சயமாக அவர்கள் (பெரு வெள்ளத்தில்) மூழ்கடிக்கப் படுகிறவர்கள்"(என்றும் அறிவிக்கப்பட்டது).

وَيَصْنَعُ الْفُلْكَ ۚ وَكُلَّمَا مَرَّ عَلَيْهِ مَلَاٌ مِّنْ قَوْمِهٖ سَخِرُوْا مِنْهُ ؕ
قَالَ اِنْ تَسْخَرُوْا مِنَّا فَاِنَّا نَسْخَرُ مِنْكُمْ كَمَا تَسْخَرُوْنَ ؕ﴿۳۸﴾ فَسَوْفَ
تَعْلَمُوْنَ ۙ مَنْ يَّاْتِيْهِ عَذَابٌ يُّخْزِيْهِ وَيَحِلُّ عَلَيْهِ عَذَابٌ
مُّقِيْمٌ ﴿۳۹﴾ حَتّٰۤى اِذَا جَآءَ اَمْرُنَا وَفَارَ التَّنُّوْرُ ۙ قُلْنَا احْمِلْ فِيْهَا مِنْ
كُلٍّ زَوْجَيْنِ اثْنَيْنِ وَاَهْلَكَ اِلَّا مَنْ سَبَقَ عَلَيْهِ الْقَوْلُ
وَمَنْ اٰمَنَ ؕ وَمَاۤ اٰمَنَ مَعَهٗۤ اِلَّا قَلِيْلٌ ﴿۴۰﴾ وَقَالَ ارْكَبُوْا فِيْهَا بِسْمِ
اللّٰهِ مَجْرٖىهَا وَمُرْسٰىهَا ؕ اِنَّ رَبِّيْ لَغَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۴۱﴾ وَهِيَ تَجْرِيْ
بِهِمْ فِيْ مَوْجٍ كَالْجِبَالِ ۚ وَنَادٰى نُوْحُ ِۨابْنَهٗ وَكَانَ فِيْ
مَعْزِلٍ يّٰبُنَيَّ ارْكَبْ مَّعَنَا وَلَا تَكُنْ مَّعَ الْكٰفِرِيْنَ ﴿۴۲﴾ قَالَ سَاٰوِيْۤ
اِلٰى جَبَلٍ يَّعْصِمُنِيْ مِنَ الْمَآءِ ؕ قَالَ لَا عَاصِمَ الْيَوْمَ مِنْ اَمْرِ
اللّٰهِ اِلَّا مَنْ رَّحِمَ ۚ وَحَالَ بَيْنَهُمَا الْمَوْجُ فَكَانَ مِنَ الْمُغْرَقِيْنَ ﴿۴۳﴾
وَقِيْلَ يٰۤاَرْضُ ابْلَعِيْ مَآءَكِ وَيٰسَمَآءُ اَقْلِعِيْ وَغِيْضَ الْمَآءُ
وَقُضِيَ الْاَمْرُ وَاسْتَوَتْ عَلَى الْجُوْدِيِّ وَقِيْلَ بُعْدًا لِّلْقَوْمِ
الظّٰلِمِيْنَ ﴿۴۴﴾ وَنَادٰى نُوْحٌ رَّبَّهٗ فَقَالَ رَبِّ اِنَّ ابْنِيْ مِنْ
اَهْلِيْ وَاِنَّ وَعْدَكَ الْحَقُّ وَاَنْتَ اَحْكَمُ الْحٰكِمِيْنَ ﴿۴۵﴾

قرأ حفص بفتح الميم وامالة الراء ۱۲

الثلثة

38. மேலும்,அவர் கப்பலைச் செய்து கொண்டிருந்தார்;(அப்போது) அவருடைய சமூகத்தாரின் பிரதானிகள் அதன் சமீபமாகச் சென்ற போதெல்லாம் அவரைப் பரிகசித்தனர்;அ(தற்க)வர்,"நீங்கள் எங்களைப் பரிகசிப்பீர்களானால்,(இப்போது எங்களை) நீங்கள் பரிகசிப்பதுபோல் நிச்சயமாக நாங்கள் உங்களைப் பரிகசிப்போம்" என்று கூறினார்.

39." யாருக்கு – அவரை, இழிவுபடுத்தும் வேதனை வருமென்பதையும், எவர் மீது நிலையான வேதனை இறங்குமென்பதையும் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்" (என்றும் கூறினார்).

40. இறுதியாக, நம்முடைய கட்டளை வந்து அடுப்பும் பொங்கிய போது, (நூஹே! ),"ஒவ்வொன்றிலிருந்தும் (ஆண், பெண் ஆகிய) இரண்டு கொண்ட ஜோடியை அதில் நீர் ஏற்றிக் கொள்வீராக! (அழிந்து விடுவார் என) எவரின் மீது நம் வாக்கு முந்தி விட்டதோ, அவரைத்தவிர உம்முடைய குடும்பத்தவரையும், (மற்ற) விசுவாசிகளையும் அதில் ஏற்றிக் கொள்வீராக" என்று நாம் கூறினோம்; வெகு சொற்பமானவர்களைத் தவிர (மற்றவர்) அவருடன் விசுவாசங் கொள்ளவில்லை.

41. அ(தற்க)வர், "இ(க் கப்பலான)துசெல்வதும், இது நிற்பதும் அல்லாஹ்வின் பெயரைக் கொண்டாகும் (எனக்கூறி) இதில் ஏறுங்கள்; நிச்சயமாக என் இரட்சகன் மிக்க மன்னிக்கிறவன், மிகக்கிருபையுடையவன்" என்று கூறினார்.

42. அ(க்கப்பலான)து, மலைகளைப் போன்ற அலைகளில் அவர்களைக் கொண்டு சென்றுகொண்டிருக்கிறது; நூஹ் தன் மகனை அழைத்தார்; அவனோ ஒதுங்கிய இடத்திலிருந்தான்; "என் மகனே! எங்களுடன் (விசுவாசித்து) நீயும் (இதில்) ஏறிக்கொள்; (விசுவாசிக்காது) நிராகரிப்பவர்களுடன் நீ ஆகிவிடவும் வேண்டாம்"(என்று கூறினார்).

43. அ(தற்க)வன், "தண்ணீரி(ல்மூழ்குவதி)லிருந்து என்னைப் பாதுகாக்கக் கூடிய ஒரு மலையின்பால் நான் ஒதுங்கிக் கொள்வேன்" என்று கூறினான்; அ(தற்க)வர், "இன்றையதினம் அல்லாஹ்வின் கட்டளையிலிருந்து யாருக்கு அவன் அருள் புரிந்திருக்கின்றானோ அவரைத்தவிர காப்பாற்றுகிறவர் எவருமில்லை" என்று கூறினார். (அச் சமயம்) அவ்விருவருக்கிடையிலும் ஓர் அலை எழும்பி குறுக்கிட்டது; அப்போது மூழ்கடிக்கப்பட்டவர்களில் அவன் ஆகிவிட்டான்.

44. (பின்னர்,)"பூமியே! நீ உன் நீரை விழுங்கிவிடு! வானமே! (மழை பொழிவதை) நிறுத்திக்கொள்" என்றும் கூறப்பட்டது. நீர் (குறைக்கப்பட்டு பூமியினுள்) வற்றவைக்கப்பட்டது. (அவர்கள் அழிக்கப்பட்டு அவர்களுடைய) காரியமும் முடிக்கப்பட்டுவிட்டது. (அக்கப்பலும்) ஜூதி (என்னும் மலை) யின் மீது நிலை பெற்றும் விட்டது; "அநியாயக்காரர்களான சமூகத்தார்க்கு(இத்தகைய) அழிவுதான்" என்றும் கூறப்பட்டது.

45. மேலும், நூஹ் தன் இரட்சகனை அழைத்தார்; அப்பொழுது அவர், "என் இரட்சகனே! நிச்சயமாக, என் மகன் என் குடும்பத்திலுள்ளவன்; நிச்சயமாக (நீ என் குடும்பத்தினரைக் காப்பாற்றுவதாக வாக்களித்த) உன்னுடைய வாக்குறுதியும் உண்மையானது; மேலும், தீர்ப்பளிப்போரில் நீ மிக மேலாகத் தீர்ப்பளிப்பவன்" என்று கூறினார்.

قَالَ يٰنُوۡحُ اِنَّهٗ لَيۡسَ مِنۡ اَهۡلِكَ‌ۚ اِنَّهٗ عَمَلٌ غَيۡرُ صَالِحٍ‌ۖ فَلَا
تَسۡـَٔلۡنِ مَا لَيۡسَ لَكَ بِهٖ عِلۡمٌ‌ؕ اِنِّىۡۤ اَعِظُكَ اَنۡ تَكُوۡنَ مِنَ
الۡجٰهِلِيۡنَ ﴿۴۶﴾ قَالَ رَبِّ اِنِّىۡۤ اَعُوۡذُ بِكَ اَنۡ اَسۡـَٔلَكَ مَا لَيۡسَ لِىۡ
بِهٖ عِلۡمٌ‌ؕ وَاِلَّا تَغۡفِرۡ لِىۡ وَتَرۡحَمۡنِىۡۤ اَكُنۡ مِّنَ الۡخٰسِرِيۡنَ ﴿۴۷﴾
قِيۡلَ يٰنُوۡحُ اهۡبِطۡ بِسَلٰمٍ مِّنَّا وَبَرَكٰتٍ عَلَيۡكَ وَعَلٰۤى اُمَمٍ
مِّمَّنۡ مَّعَكَ‌ؕ وَاُمَمٌ سَنُمَتِّعُهُمۡ ثُمَّ يَمَسُّهُمۡ مِّنَّا عَذَابٌ اَلِيۡمٌ ﴿۴۸﴾
تِلۡكَ مِنۡ اَنۡۢبَآءِ الۡغَيۡبِ نُوۡحِيۡهَاۤ اِلَيۡكَ‌ۚ مَا كُنۡتَ تَعۡلَمُهَاۤ اَنۡتَ
وَلَا قَوۡمُكَ مِنۡ قَبۡلِ هٰذَا‌ ؕۛ فَاصۡبِرۡ‌ ؕۛ اِنَّ الۡعَاقِبَةَ لِلۡمُتَّقِيۡنَ ﴿۴۹﴾ ع
وَاِلٰى عَادٍ اَخَاهُمۡ هُوۡدًا‌ ؕ قَالَ يٰقَوۡمِ اعۡبُدُوا اللّٰهَ مَا لَكُمۡ مِّنۡ
اِلٰهٍ غَيۡرُهٗ‌ ؕ اِنۡ اَنۡتُمۡ اِلَّا مُفۡتَرُوۡنَ ﴿۵۰﴾ يٰقَوۡمِ لَاۤ اَسۡـَٔلُكُمۡ عَلَيۡهِ
اَجۡرًا‌ ؕ اِنۡ اَجۡرِىَ اِلَّا عَلَى الَّذِىۡ فَطَرَنِىۡ‌ ؕ اَفَلَا تَعۡقِلُوۡنَ ﴿۵۱﴾
وَيٰقَوۡمِ اسۡتَغۡفِرُوۡا رَبَّكُمۡ ثُمَّ تُوۡبُوۡۤا اِلَيۡهِ يُرۡسِلِ السَّمَآءَ
عَلَيۡكُمۡ مِّدۡرَارًا وَّيَزِدۡكُمۡ قُوَّةً اِلٰى قُوَّتِكُمۡ وَلَا تَتَوَلَّوۡا
مُجۡرِمِيۡنَ ﴿۵۲﴾ قَالُوۡا يٰهُوۡدُ مَا جِئۡتَنَا بِبَيِّنَةٍ وَّمَا نَحۡنُ
بِتَارِكِىۡۤ اٰلِهَتِنَا عَنۡ قَوۡلِكَ وَمَا نَحۡنُ لَكَ بِمُؤۡمِنِيۡنَ ﴿۵۳﴾

معانقة ۹ عند المتاخرین ۱۲
الوقف علیٰ فاصبر احسن والتی ۱۲

46. (அதற்கு) "நூஹே! நிச்சயமாக அவன் உம் குடும்பத்தினரில் உள்ளவனல்லன்; நிச்சயமாக அவன் ஒழுக்கமில்லா செயலுடையவன்; ஆதலால், எதில் உமக்கு (உறுதியான) அறிவு இல்லையோ அதைப்பற்றி நீர் என்னிடம் கேட்க வேண்டாம்; அறியாதோரில் உள்ளவராக நீர் ஆவதை விட்டும் நிச்சயமாக நான் உமக்கு நல்லுபதேசம் செய்கிறேன்" என்று கூறினான்.

47. அ(தற்க)வர், "என் இரட்சகனே! எதில் எனக்கு (உறுதியான) அறிவு இல்லையோ அது பற்றி (இனி) உன்னிடம் கேட்பதை விட்டும் உன்னைக் கொண்டே நிச்சயமாக நான் பாது காவல் தேடுகிறேன்; மேலும், நீ என்னை மன்னித்து, எனக்கு நீ கிருபை செய்யாவிடில், நிச்சயமாக நான் நஷ்டமடைந்தோரில் ஆகிவிடுவேன்" என்று கூறினார்.

48. "நூஹே! உம் மீதும், உம்முடனிருப்பவர்களிலிருந்துள்ள சமூகத்தவர்கள் மீதும் நம்முடைய சாந்தியுடனும், அபிவிருத்தி (பரக்கத்)களுடனும் நீர் இறங்குவீராக! (பிற் காலத்தில்) இன்னும் சில சமூகத்தவர்கள்_ (இவ்வுலகில்) அவர்களை நிச்சயமாக நாம் சுகமனுபவிக்கச் செய்வோம்; பின்னர், நம்மிலிருந்து துன்புறுத்தும் வேதனை அவர்களை வந்தடையும்" என்று கூறப்பட்டது.

49. (நபியே!) இவை (உமக்கு) மறைவான செய்திகளில் உள்ளவையாகும்; நாம் இதனை உமக்கு அறிவிக்கின்றோம்; இதற்கு முன்னர் நீரோ, அல்லது உம்முடைய சமூகத்தாரோ இவற்றை அறிந்திருக்கவில்லை; ஆகவே ,(நபியே! கஷ்டங்களைச் சகித்துப்) பொறுமையுடனிருப்பீராக! நிச்சயமாக (நல்ல) முடிவு பயபக்தியுடையவர்களுக்காகும்.

50. மேலும், ஆது (சமூகத்தாரின்)பால் அவர்களுடைய சகோதரர் ஹூதையும் (நம் தூதராக அனுப்பிவைத்தோம்;)_அவர் கூறினார்: "என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ் ஒருவனையே நீங்கள் வணங்குங்கள்; அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் உங்களுக்கு இல்லை; (வேறு நாயன் உண்டென்று கூறினால்) நீங்கள் (பொய்க்) கற்பனை செய்பவர்களே தவிர (வேறு) இல்லை.

51. "என்னுடைய சமூகத்தாரே! இதற்காக நான் உங்களிடத்தில் யாதொரு கூலியையும் கேட்கவில்லை; என்னுடைய கூலி என்னைப் படைத்தானே அத்தகையவனிடமே தவிர (வேறு யாரிடமும்) இல்லை; (இதை) நீங்கள் விளங்கிக் கொள்ள மாட்டீர்களா?

52. "என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் உங்கள் இரட்சகனிடம் பிழை பொறுக்கத்தேடுங்கள்; அப்பால் (தவ்பாச் செய்து) அவன் பக்கமே திரும்புங்கள்; (அவ்வாறு செய்வீர்களாயின்) மழையை உங்கள் மீது தொடர்ச்சியாக பொழியச்செய்வான்; உங்களுடைய பலத்திற்கு மேல் பலத்தையும் உங்களுக்கு அதிகரிக்கச் செய்வான்; மேலும், குற்றவாளிகளாக நீங்கள் (அவனைப்) புறக்கணித்து விடாதீர்கள்" (என்றும் கூறினார்)

53. அ(தற்க)வர்கள், "ஹூதே! (நாம் கேட்டவாறு) எந்த ஒரு தெளிவான ஆதாரத்தையும் நீர் நம்மிடம் கொண்டு வரவில்லை; உம்முடைய சொல்லுக்காக நாங்கள் எங்களுடைய தெய்வங்களை விட்டு விடுகிறவர்களுமல்லர்; உம்மை நாங்கள் நம்பிக்கை கொள்ளக் கூடியவர்களுமல்லர்" என்று கூறினார்கள்.

اِنْ نَّقُوْلُ اِلَّا اعْتَرٰىكَ بَعْضُ اٰلِهَتِنَا بِسُوْٓءٍ ؕ قَالَ اِنِّیْٓ اُشْهِدُ اللّٰهَ
وَاشْهَدُوْٓا اَنِّیْ بَرِیْٓءٌ مِّمَّا تُشْرِكُوْنَ ﴿۵۴﴾ مِنْ دُوْنِهٖ فَكِیْدُوْنِیْ جَمِیْعًا
ثُمَّ لَا تُنْظِرُوْنِ ﴿۵۵﴾ اِنِّیْ تَوَكَّلْتُ عَلَى اللّٰهِ رَبِّیْ وَرَبِّكُمْ ؕ مَا مِنْ دَآبَّةٍ
اِلَّا هُوَ اٰخِذٌۢ بِنَاصِیَتِهَا ؕ اِنَّ رَبِّیْ عَلٰی صِرَاطٍ مُّسْتَقِیْمٍ ﴿۵۶﴾ فَاِنْ
تَوَلَّوْا فَقَدْ اَبْلَغْتُكُمْ مَّاۤ اُرْسِلْتُ بِهٖۤ اِلَیْكُمْ ؕ وَیَسْتَخْلِفُ رَبِّیْ قَوْمًا
غَیْرَكُمْ ۚ وَلَا تَضُرُّوْنَهٗ شَیْـًٔا ؕ اِنَّ رَبِّیْ عَلٰی كُلِّ شَیْءٍ حَفِیْظٌ ﴿۵۷﴾ وَ
لَمَّا جَآءَ اَمْرُنَا نَجَّیْنَا هُوْدًا وَّالَّذِیْنَ اٰمَنُوْا مَعَهٗ بِرَحْمَةٍ مِّنَّا ۚ وَ
نَجَّیْنٰهُمْ مِّنْ عَذَابٍ غَلِیْظٍ ﴿۵۸﴾ وَتِلْكَ عَادٌ ۟ۙ جَحَدُوْا بِاٰیٰتِ رَبِّهِمْ
وَعَصَوْا رُسُلَهٗ وَاتَّبَعُوْٓا اَمْرَ كُلِّ جَبَّارٍ عَنِیْدٍ ﴿۵۹﴾ وَاُتْبِعُوْا فِیْ
هٰذِهِ الدُّنْیَا لَعْنَةً وَّیَوْمَ الْقِیٰمَةِ ؕ اَلَاۤ اِنَّ عَادًا كَفَرُوْا رَبَّهُمْ ؕ
اَلَا بُعْدًا لِّعَادٍ قَوْمِ هُوْدٍ ﴿۶۰﴾ ع وَاِلٰی ثَمُوْدَ اَخَاهُمْ صٰلِحًا ۘ قَالَ یٰقَوْمِ
اعْبُدُوا اللّٰهَ مَا لَكُمْ مِّنْ اِلٰهٍ غَیْرُهٗ ؕ هُوَ اَنْشَاَكُمْ مِّنَ الْاَرْضِ
وَاسْتَعْمَرَكُمْ فِیْهَا فَاسْتَغْفِرُوْهُ ثُمَّ تُوْبُوْٓا اِلَیْهِ ؕ اِنَّ رَبِّیْ قَرِیْبٌ
مُّجِیْبٌ ﴿۶۱﴾ قَالُوْا یٰصٰلِحُ قَدْ كُنْتَ فِیْنَا مَرْجُوًّا قَبْلَ هٰذَاۤ اَتَنْهٰىنَاۤ اَنْ
نَّعْبُدَ مَا یَعْبُدُ اٰبَآؤُنَا وَاِنَّنَا لَفِیْ شَكٍّ مِّمَّا تَدْعُوْنَاۤ اِلَیْهِ مُرِیْبٍ ﴿۶۲﴾

ع ۵ وقف لازم ۵

54. (அன்றி) "எங்களுடைய தெய்வங்களிற் சில, கேட்டைக்கொண்டு உம்மைப் பிடித்துக்கொண்டு விட்டன என்பதைத் தவிர, நாங்கள் (வேறு எதையும்) கூறுவதற்கில்லை" (என்றார்கள்) அ(தற்க)வர், "நிச்சயமாக நான், அல்லாஹ்வை சாட்சியாக்குகிறேன்; இன்னும், நிச்சயமாக நான் (அவனையன்றி) நீங்கள் இணைவைப்பவைகளிலிருந்து விலகிக் கொண்டவன் என்பதற்கு நீங்களும் சாட்சியாயிருங்கள்" என்று கூறினார்.

55. "அவனையன்றி (நீங்கள் இணைவைப்பவைகளிலிருந்து நான் நீங்கிக் கொண்டேன்), ஆகவே, நீங்கள் அனைவரும் எனக்கு (ச்செய்யக்கூடிய) சூழ்ச்சியைச் செய்துவிடுங்கள்; பின்னர், நீங்கள் எனக்கு அவகாசம் (ஏதும்) அளிக்க வேண்டாம் "(என்றும் கூறினார்).

56. "நிச்சயமாக (என்னுடைய காரியங்கள் யாவற்றையும் ஒப்படைத்து முழுமையாக) என்னுடைய இரட்சகனும், உங்களுடைய இரட்சகனுமாகிய அல்லாஹ்வின் மீது நான் நம்பிக்கை வைத்துவிட்டேன். (பூமியின் மீது) ஊர்ந்துதிரியும் எந்த ஜீவராசியாயினும் _ அதன் முன்நெற்றி உரோமத்தை அவன் பிடித்துக்கொண்டே தவிர இல்லை; நிச்சயமாக என் இரட்சகன் நேரான வழியின் மீதிருக்கின்றான்" (என்றும்),

57. "நீங்கள் (என்னைப்) புறக்கணிப்பீர்களாயின், நான் உங்களிடம் எதனைக் கொண்டு அனுப்பப்பட்டேனோ அதனை நிச்சயமாக நான் உங்களிடம் சேர்ப்பித்து வைத்து விட்டேன்; (உங்களை அழித்து) உங்களை அல்லாத வேறுசமூகத்தை என் இரட்சகன் (உங்கள்இடத்தில்) பகரமாக்கிவிடுவான்; (இதற்காக) நீங்கள் அவனுக்கு எப்பொருளாலும் (யாதொரு) தீங்கும் செய்து விட முடியாது; நிச்சயமாக என் இரட்சகன் யாவற்றையும் பாதுகாப்பவன்" (என்றும் கூறினார்).

58. மேலும், (அவர்களுக்கு தண்டனைக்குரிய) நம்முடைய உத்தரவு வந்தபொழுது, ஹூதையும், அவருடன் விசுவாசங் கொண்டவர்களையும் நம்மிடமிருந்துள்ள அருளால் நாம் காப்பாற்றிவிட்டோம்; கடுமையான வேதனையிலிருந்தும் நாம் அவர்களைக் காப்பாற்றிவிட்டோம்.

59. (நபியே!) அது(தான்)ஆது (கூட்டத்தினர் சரித்திரமாகும்); அவர்கள் தங்கள் இரட்சகனின் அத்தாட்சிகளை மறுத்து அவனுடைய தூதர்களுக்கு மாறுபாடும் செய்தார்கள்; பிடிவாதக்காரனான ஒவ்வொரு வம்பனின் கட்டளையையும் அவர்கள் பின்பற்றவும் செய்தார்கள்.

60. மேலும், இவ்வுலகிலும், மறுமை நாளிலும் (அல்லாஹ்வுடைய) சாபத்தால் அவர்கள் தொடரப்பட்டார்கள்; அறிந்துகொள்ளுங்கள்: நிச்சயமாக ஆது (கூட்டத்தினர்), தங்கள் இரட்சகனை நிராகரித்தார்கள்; ஹூதுடைய சமூகத்தாராகிய ஆதுக்குக் கேடுதான் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

61. மேலும், ஸமூது (கூட்டத்தினர்) பால் அவர்களுடைய சகோதரர் ஸாலிஹை (நம் தூதராக அனுப்பிவைத்தோம்) _ அவர், "என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ்வை (அவன் ஒருவனை) யே நீங்கள் வணங்குங்கள்; உங்களுக்கு அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை; அவனே உங்களைப் பூமியிலிருந்து உண்டாக்கினான்; அதிலேயே அவன் உங்களை வசிக்கச் செய்தான்; ஆதலால், நீங்கள் அவனிடமே பிழை பொறுக்கத் தேடுங்கள்; பின்னர், தவ்பாச் செய்துஅவன் பக்கமே திரும்புங்கள்; நிச்சயமாக என்னுடைய இரட்சகன் (உங்களுக்கு) மிகச் சமீபமானவன், (பிரார்த்தனைகளை) அங்கீகரிப்பவன்" என்று கூறினார்.

62. அ(தற்க)வர்கள், "ஸாலிஹே! இதற்கு முன்பெல்லாம் நீர் எங்களுடைய விருப்பத்திற்குரியவராக இருந்தீர்; எங்கள் மூதாதையர் வணங்கிக் கொண்டிருந்தவைகளை நாங்கள் வணங்குவதை விட்டும் நீர் எங்களைத் தடை செய்கிறீரா? மேலும், நீர் நம்மை எதனளவில் அழைக்கிறீரோ அதனைப்பற்றி நிச்சயமாக நாம் அவநம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய சந்தேகத்திலிருக்கிறோம்" என்று கூறினார்கள்.

قَالَ يٰقَوْمِ اَرَءَيْتُمْ اِنْ كُنْتُ عَلٰى بَيِّنَةٍ مِّنْ رَّبِّىْ وَاٰتٰنِىْ مِنْهُ
رَحْمَةً فَمَنْ يَّنْصُرُنِىْ مِنَ اللّٰهِ اِنْ عَصَيْتُهٗ ۫ فَمَا تَزِيْدُوْنَنِىْ غَيْرَ
تَخْسِيْرٍ ﴿٦٣﴾ وَيٰقَوْمِ هٰذِهٖ نَاقَةُ اللّٰهِ لَكُمْ اٰيَةً فَذَرُوْهَا تَاْكُلْ فِىْٓ
اَرْضِ اللّٰهِ وَلَا تَمَسُّوْهَا بِسُوْٓءٍ فَيَاْخُذَكُمْ عَذَابٌ قَرِيْبٌ ﴿٦٤﴾
فَعَقَرُوْهَا فَقَالَ تَمَتَّعُوْا فِىْ دَارِكُمْ ثَلٰثَةَ اَيَّامٍ ؕ ذٰلِكَ وَعْدٌ غَيْرُ
مَكْذُوْبٍ ﴿٦٥﴾ فَلَمَّا جَآءَ اَمْرُنَا نَجَّيْنَا صٰلِحًا وَّالَّذِيْنَ اٰمَنُوْا مَعَهٗ
بِرَحْمَةٍ مِّنَّا وَمِنْ خِزْىِ يَوْمِئِذٍ ؕ اِنَّ رَبَّكَ هُوَ الْقَوِىُّ الْعَزِيْزُ ﴿٦٦﴾
وَاَخَذَ الَّذِيْنَ ظَلَمُوا الصَّيْحَةُ فَاَصْبَحُوْا فِىْ دِيَارِهِمْ جٰثِمِيْنَ ﴿٦٧﴾ لا
كَاَنْ لَّمْ يَغْنَوْا فِيْهَا ؕ اَلَآ اِنَّ ثَمُوْدَا۟ كَفَرُوْا رَبَّهُمْ ؕ اَلَا بُعْدًا
لِّثَمُوْدَ ﴿٦٨﴾ ع وَلَقَدْ جَآءَتْ رُسُلُنَآ اِبْرٰهِيْمَ بِالْبُشْرٰى قَالُوْا سَلٰمًا ؕ ع ٦
قَالَ سَلٰمٌ فَمَا لَبِثَ اَنْ جَآءَ بِعِجْلٍ حَنِيْذٍ ﴿٦٩﴾ فَلَمَّا رَآٰ اَيْدِيَهُمْ
لَا تَصِلُ اِلَيْهِ نَكِرَهُمْ وَاَوْجَسَ مِنْهُمْ خِيْفَةً ؕ قَالُوْا لَا تَخَفْ اِنَّآ
اُرْسِلْنَآ اِلٰى قَوْمِ لُوْطٍ ؕ ﴿٧٠﴾ وَامْرَاَتُهٗ قَآئِمَةٌ فَضَحِكَتْ فَبَشَّرْنٰهَا
بِاِسْحٰقَ ۙ وَمِنْ وَّرَآءِ اِسْحٰقَ يَعْقُوْبَ ﴿٧١﴾ قَالَتْ يٰوَيْلَتٰٓى ءَاَلِدُ
وَاَنَا عَجُوْزٌ وَّهٰذَا بَعْلِىْ شَيْخًا ؕ اِنَّ هٰذَا لَشَىْءٌ عَجِيْبٌ ﴿٧٢﴾

63. அ(தற்க)வர், "என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் கவனித்தீர்களா? நான் என் இரட்சகனின் தெளிவான அத்தாட்சியின் மீதிருக்க, அவன் தன் புறத்திலிருந்து அருளையும் எனக்குக் கொடுத்திருக்க, நான் அவனுக்கு மாறு செய்தால்,(அதற்காக அவன் என்னைத் தண்டித்துவிட்டால் அந்நேரத்தில்) அல்லாஹ்விடத்தில் எனக்கு உதவி செய்பவர் யார்? நீங்களோ, எனக்கு நஷ்டத்தைத் தவிர (வேறு எதையும்) அதிகமாக்கி விடமாட்டீர்கள்" என்று கூறினார்.

64. "அன்றியும் என்னுடைய சமூகத்தாரே! உங்களுக்கு ஓர் அத்தாட்சியாக, இது அல்லாஹ்வுடைய ஒரு பெண் ஒட்டகமாகும்; ஆகவே, அதனை விட்டுவிடுங்கள்; அல்லாஹ்வுடைய பூமியில் மேய்ந்து கொள்ளும்; அதற்கு யாதொரு தீமையும் செய்ய(க் கருதி) அதனைத் தொடாதீர்கள்;(அவ்வாறு செய்தால்) மிகவும் சமீபித்த வேதனை உங்களைப் பிடித்துக்கொள்ளும்"(என்றும் கூறினார்).

65. ஆகவே, அவர்கள் (அதன் கால்நரம்பினை துண்டித்து) அதை அறுத்து விட்டார்கள்; அப்பொழுது, அவர் மூன்று நாட்கள் வரையில் உங்கள் வீடுகளில் நீங்கள் சுகமடையுங்கள்; இது பொய்ப்பிக்கப்படாத வாக்காகும்" என்று கூறினார்.

66. நம்முடைய கட்டளை(க்கொப்ப வேதனை அவர்களுக்கு) வந்தபொழுது, ஸாலிஹையும், அவருடன் விசுவாசம் கொண்டோரையும் நம்மிடமிருந்துள்ள அருளைக் கொண்டு அந்நாளின் இழிவை விட்டும் நாம் காப்பாற்றினோம். (நபியே!) நிச்சயமாக உம்முடைய இரட்சகன் — அவனே பலமிக்கவன்;(யாவரையும்) மிகைத்தவன்.

67. மேலும், அநியாயம் செய்தோரை பயங்கரமான இடி முழக்கம் பிடித்துக் கொண்டது; ஆகவே, அவர்கள் தங்கள் வீடுகளில் காலைப் பொழுதை குப்புற விழுந்தநிலையில் (இறந்து)கிடக்க, அடைந்தனர்.

68. அதில் அவர்கள் ஒரு காலத்திலும் வசித்திருக்காதவர்களைப்போல் (அழிந்துவிட்ட னர்). நிச்சயமாக, ஸமூது (கூட்டத்தினர்) தங்கள் இரட்சகனை நிராகரித்து விட்டார்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்; அந்த ஸமூது (கூட்டத்தினர்) க்கு நாசம் ஏற்பட்டுவிட்டது என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

69. திட்டமாக, (மலக்குகளான) நம்முடைய தூதர்கள் இப்றாஹீமுக்கு நன்மாராயம் கொண்டு வந்து, "(உமக்குச்) சாந்தி உண்டாவதாக," என்று கூறினர்; (அதற்கு, "உங்களுக்கும்) சாந்தி உண்டாவதாக!" என்று கூறி (விருந்தளிக்க, அறுத்துப்) பொரித்ததொரு கன்றை(அதன் மாமிசத்தை)க் கொண்டுவருவதில் அவர் தாமதிக்கவில்லை.

70. ஆனால், அவர்களுடைய கைகள் அதன்பால் செல்லாததை அவர் கண்டபோது, அவர்களைப்பற்றி அவர் சந்தேகித்தார்; அவர்களைப்பற்றிய பயத்தையும் அவர் (தன்) மனதில் உணர்ந்தார்; (அப்பொழுது) அவர்கள், "நீர் பயப்படாதீர்; நிச்சயமாக நாங்கள் "லூத்"துடைய சமூகத்தார்பால் அனுப்பப் பட்டுள்ளோம்" என்று கூறினார்கள்.

71. மேலும், அவருடைய (வயதான) மனைவியும் (மறைவில் அங்கு) நின்று கொண்டிருந்தார்; அப்போது அவர் சிரித்தார்; பின்னர், அவருக்கு இஸ்ஹாக் பற்றியும், இஸ்ஹாக்குக்குப் பின்னர், யஃகூபு பற்றியும் நாம் நன்மாராயங் கூறினோம்.

72. "என்னுடைய கேடே!(மாதவிடாய் நின்று) நான் கிழவியாகவும், என்னுடைய இக்கணவர் ஒரு வயோதிகராகவும் இருக்க, நான் (கர்ப்பமாகி) பிள்ளை பெறுவேனா? நிச்சயமாக இது ஆச்சரியமான விஷயம்!" என்று (அவருடைய மனைவியாகிய) அவர் கூறினார்.

قَالُوْٓا اَتَعْجَبِيْنَ مِنْ اَمْرِ اللّٰهِ رَحْمَتُ اللّٰهِ وَبَرَكٰتُهٗ عَلَيْكُمْ اَهْلَ
الْبَيْتِ ؕ اِنَّهٗ حَمِيْدٌ مَّجِيْدٌ ﴿٧٣﴾ فَلَمَّا ذَهَبَ عَنْ اِبْرٰهِيْمَ الرَّوْعُ
وَجَآءَتْهُ الْبُشْرٰى يُجَادِلُنَا فِىْ قَوْمِ لُوْطٍ ؕ ﴿٧٤﴾ اِنَّ اِبْرٰهِيْمَ
لَحَلِيْمٌ اَوَّاهٌ مُّنِيْبٌ ﴿٧٥﴾ يٰۤاِبْرٰهِيْمُ اَعْرِضْ عَنْ هٰذَا ۚ اِنَّهٗ قَدْ
جَآءَ اَمْرُ رَبِّكَ ۚ وَاِنَّهُمْ اٰتِيْهِمْ عَذَابٌ غَيْرُ مَرْدُوْدٍ ﴿٧٦﴾ وَلَمَّا
جَآءَتْ رُسُلُنَا لُوْطًا سِیْٓءَ بِهِمْ وَضَاقَ بِهِمْ ذَرْعًا وَّقَالَ هٰذَا
يَوْمٌ عَصِيْبٌ ﴿٧٧﴾ وَجَآءَهٗ قَوْمُهٗ يُهْرَعُوْنَ اِلَيْهِ ؕ وَمِنْ قَبْلُ
كَانُوْا يَعْمَلُوْنَ السَّيِّاٰتِ ؕ قَالَ يٰقَوْمِ هٰٓؤُلَآءِ بَنَاتِىْ هُنَّ اَطْهَرُ
لَكُمْ فَاتَّقُوا اللّٰهَ وَلَا تُخْزُوْنِ فِىْ ضَيْفِىْ ؕ اَلَيْسَ مِنْكُمْ رَجُلٌ
رَّشِيْدٌ ﴿٧٨﴾ قَالُوْا لَقَدْ عَلِمْتَ مَا لَنَا فِىْ بَنَاتِكَ مِنْ حَقٍّ ۚ
وَاِنَّكَ لَتَعْلَمُ مَا نُرِيْدُ ﴿٧٩﴾ قَالَ لَوْ اَنَّ لِىْ بِكُمْ قُوَّةً اَوْ
اٰوِىْۤ اِلٰى رُكْنٍ شَدِيْدٍ ﴿٨٠﴾ قَالُوْا يٰلُوْطُ اِنَّا رُسُلُ رَبِّكَ
لَنْ يَّصِلُوْٓا اِلَيْكَ فَاَسْرِ بِاَهْلِكَ بِقِطْعٍ مِّنَ الَّيْلِ وَلَا
يَلْتَفِتْ مِنْكُمْ اَحَدٌ اِلَّا امْرَاَتَكَ ؕ اِنَّهٗ مُصِيْبُهَا مَآ اَصَابَهُمْ ؕ
اِنَّ مَوْعِدَهُمُ الصُّبْحُ ؕ اَلَيْسَ الصُّبْحُ بِقَرِيْبٍ ﴿٨١﴾

73. அ(தற்க)வர்கள்,"அல்லாஹ்வுடைய கட்டளையைப் பற்றி நீ ஆச்சரியமடைகின்றாயா? அல்லாஹ்வுடைய அருளும், அவனுடைய பாக்கியங்களும், இவ்வீட்டிலுள்ள உங்கள் மீதுள்ளன; நிச்சயமாக அவன் புகழப்படுபவன்; மாட்சிமையுடையவன்" என்று கூறினார்கள்.

74. இப்றாஹீமை விட்டு திடுக்கம் நீங்கி அவருக்கு நன்மாராயமும் வந்தபோது, லூத்துடைய சமூகத்தாரைப் பற்றி அவர் நம்மு(டைய மலக்குகளு)டன் தர்க்கம் செய்ய ஆரம்பித்து விட்டார்.

75. நிச்சயமாக இப்றாஹீம் மிக்க சகிப்புத்தன்மையுடையவர்; இளகிய மனமுடையவர்;(எதற்கும் அல்லாஹ்வின் பாலே) திரும்பக்கூடியவர்.

76. (ஆகவே, அத்தூதர்கள்,) "இப்றாஹீமே! நீர் இதைப் புறக்கணித்து விடும்; நிச்சயமாக உமதிரட்சகனுடைய கட்டளை வந்து விட்டது; அன்றியும், நிச்சயமாக அவர்கள் _ தட்ட முடியாத வேதனை அவர்களை வந்தடையும்" (என்று கூறினார்கள்).

77. நம் தூதர்கள் லூத்திடம் வந்தபொழுது, அவர்களால் அவர் கவலைக்குள்ளாக்கப்பட்டார்;மேலும்,(அவர்களைக் காப்பதற்கு தம் சக்தியின்மையினால்) அவர்களால் மன சங்கடத்திற்குள்ளானார், (அப்போது)" இது மிக்ககடினமான நாள் "என்றும் கூறினார்.

78. அன்றியும், அவருடைய சமூகத்தார் அவரின்பால் விரைந்தவர்களாக அவரிடம்வந்தனர்;முன்னரும் அவர்கள் தீயவற்றையேசெய்துகொண்டிருந்தனர்; அதற்கு (லூத் நபி, அவர்களிடம்,)" என்னுடைய சமூகத்தாரே! இவர்கள் என்னுடைய பெண்மக்கள்; அவர்கள் உங்களுக்கு(த்திருமணத்திற்கு) மிக்க பரிசுத்தமானவர்கள்; ஆகவே, அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து கொள்ளுங்கள்; என் விருந்தினர் விஷயத்தில் என்னை நீங்கள் அவமானப்படுத்தியும் விடாதீர்கள்; (உங்களுக்கு உபதேசிக்க) நேர்மையான மனிதன் (ஒருவர் கூட ) உங்களில் இல்லையா?"என்று கூறினார்.

79. அ(தற்க)வர்கள், "உம்முடைய பெண்மக்களிடம் எங்களுக்கு எந்தத் தேவையுமில்லை என்பதை நீர் நன்கறிவீர்; நாங்கள் விரும்புவது என்ன என்பதையும் நிச்சயமாக நீா அறிந்திருக்கிறீர்" என்றும் கூறினார்கள்.

80. அ(தற்க)வர் "உங்களைத் தடுக்கப் போதுமான பலம் எனக்கு இருந்திருப்பின், அல்லது பலமான ஆதரவை நான் அடைந்திருப்பின்,(உங்களை தண்டித்து எதையெல்லாம் செய்ய இயலுமோ அவையனைத்தையும் செய்திருப்பேன்)" என்று கூறினார்.

81. (அதைச்செவியுற்ற விருந்தினர்களான மலக்குகள், ) "லூத்தே! நிச்சயமாக, நாங்கள் உமதிரட்சகனின் தூதுவர்களாவோம்; இவர்கள் நிச்சயமாக உம்மை வந்தடையவே முடியாது; இரவின் ஒருபகுதியில் நீர் உம் குடும்பத்துடன் செல்வீராக! உங்களில் ஒருவரும் (அவர்களைத்) திரும்பியும்பார்க்க வேண்டாம்; (உமக்கு மாறுசெய்த) உம்முடைய மனைவியைத் தவிர; அவர்களைப் பிடிக்கக்கூடிய (அழிவான)து நிச்சயமாக அவளையும் பிடிக்கும்; (அழிவு வர) நிச்சயமாக இவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நேரம் விடியற் காலையாகும்; விடியற்காலை மிகச்சமீபமாக இல்லையா?" என்று கூறினார்கள்.

فَلَمَّا جَآءَ اَمْرُنَا جَعَلْنَا عَالِيَهَا سَافِلَهَا وَ اَمْطَرْنَا عَلَيْهَا
حِجَارَةً مِّنْ سِجِّيْلٍ ۙ مَّنْضُوْدٍ ﴿۸۲﴾ مُّسَوَّمَةً عِنْدَ رَبِّكَ ؕ وَ
مَا هِيَ مِنَ الظّٰلِمِيْنَ بِبَعِيْدٍ ﴿۸۳﴾ وَ اِلٰى مَدْيَنَ اَخَاهُمْ شُعَيْبًا ؕ (النصف ع ۱۵)
قَالَ يٰقَوْمِ اعْبُدُوا اللّٰهَ مَا لَكُمْ مِّنْ اِلٰهٍ غَيْرُهٗ ؕ وَ لَا
تَنْقُصُوا الْمِكْيَالَ وَ الْمِيْزَانَ اِنِّيْۤ اَرٰىكُمْ بِخَيْرٍ وَّ اِنِّيْۤ
اَخَافُ عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ مُّحِيْطٍ ﴿۸۴﴾ وَ يٰقَوْمِ اَوْفُوا
الْمِكْيَالَ وَ الْمِيْزَانَ بِالْقِسْطِ وَ لَا تَبْخَسُوا النَّاسَ اَشْيَآءَهُمْ
وَ لَا تَعْثَوْا فِي الْاَرْضِ مُفْسِدِيْنَ ﴿۸۵﴾ بَقِيَّتُ اللّٰهِ خَيْرٌ لَّكُمْ اِنْ
كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ۚ۬ وَ مَاۤ اَنَا عَلَيْكُمْ بِحَفِيْظٍ ﴿۸۶﴾ قَالُوْا يٰشُعَيْبُ
اَصَلٰوتُكَ تَاْمُرُكَ اَنْ نَّتْرُكَ مَا يَعْبُدُ اٰبَآؤُنَاۤ اَوْ اَنْ نَّفْعَلَ
فِيْۤ اَمْوَالِنَا مَا نَشٰٓؤُا ؕ اِنَّكَ لَاَنْتَ الْحَلِيْمُ الرَّشِيْدُ ﴿۸۷﴾ قَالَ
يٰقَوْمِ اَرَءَيْتُمْ اِنْ كُنْتُ عَلٰى بَيِّنَةٍ مِّنْ رَّبِّيْ وَ رَزَقَنِيْ مِنْهُ
رِزْقًا حَسَنًا ؕ وَ مَاۤ اُرِيْدُ اَنْ اُخَالِفَكُمْ اِلٰى مَاۤ اَنْهٰىكُمْ
عَنْهُ ؕ اِنْ اُرِيْدُ اِلَّا الْاِصْلَاحَ مَا اسْتَطَعْتُ ؕ وَ مَا
تَوْفِيْقِيْۤ اِلَّا بِاللّٰهِ ؕ عَلَيْهِ تَوَكَّلْتُ وَ اِلَيْهِ اُنِيْبُ ﴿۸۸﴾

82. நம்முடைய கட்டளை வந்ததும், அவர்களுடைய ஊரின் மேல்பகுதியை அதன் கீழ்ப்பகுதியாக (தலை கீழாக) ஆக்கிவிட்டோம்; அன்றியும், (அதற்கு முன்னர்) அதன் மீது சுடப்பட்ட செங்கற்களை (மழையாகப்) பொழியச் செய்தோம்.

83. ஆகவே, (பொழியப்பட்ட செங்கல் ஒவ்வொன்றும்) உம் இரட்சகனால் அடையாளமிடப் பட்டதாக இருந்தது; (புரட்டப்பட்ட) அ(வ்வூரான)து இந்த அநியாயக்காரர்களுக்கு வெகு தூரமானதுமல்ல.

84. "மத்யன்" (என்னும் ஊர்வாசிகள்) பாலும் அவர்களுடைய சகோதரர் ஷுஐபை (நம் தூதராக அனுப்பி வைத்தோம்) அவர், "என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்; உங்களுக்கு அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை; அளவையும், நிறுவையையும் நீங்கள் குறைக்காதீர்கள்; நீங்கள் நல்ல நிலைமையில் இருப்பதையே நான் காண்கிறேன்; (அவ்வாறிருக்க ஏன் மோசம் செய்கிறீர்கள்? அவ்வாறு செய்தால்,) நிச்சயமாக (உங்களைச்) சூழ்ந்து கொள்ளக்கூடிய ஒரு நாளின் வேதனையை உங்கள் மீது நான் பயப்படுகிறேன்" என்று கூறினார்.

85. "அன்றியும் என்னுடைய சமூகத்தாரே! அளவையும், நிறுவையையும் நீதமாகவே நிறைவு செய்யுங்கள்; மனிதர்களுக்கு அவர்களுடைய பொருட்களைக் குறைத்தும் விடாதீர்கள்; பூமியில் குழப்பம் செய்கிறவர்களாக வரம்புமீறியும் அலையாதீர்கள்".

86. "நீங்கள் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால், (உங்கள் தொழிலில்) அல்லாஹ் மீதப்படுத்துவதே உங்களுக்கு மிக்க மேலானதாகும்; (நீங்கள் நிறுக்கும் போதும், அளக்கும் போதும் குறைத்தால் அதன் தீயவிளைவுகளிலிருந்து) நான் உங்களைப் பாதுகாப்பவனும் அல்ல" (என்றும் கூறினார்).

87. அ(தற்க)வர்கள், "ஷுஐபே! எங்கள் மூதாதையர் வணங்கியவற்றையும், அல்லது எங்களுடைய செல்வங்களில் நாங்கள் நாடியவாறு செய்வதை நாங்கள் விட்டுவிடுமாறும் (நீர் எங்களுக்குக் கட்டளையிடும்படி) உம்முடைய தொழுகையா உம்மை ஏவுகிறது?" நிச்சயமாக நீர்தான் மிக்க சகிப்புத் தன்மையுடையவர்; (இன்னும்) நேர்மையாளர்" என்று (பரிகாசமாகக்) கூறினார்கள்.

88. அ(தற்க)வர், என்னுடைய சமூகத்தாரே! என் இரட்சகனின் தெளிவான அத்தாட்சியின் மீது நான் இருப்பதையும், அவன் தன்னிடமிருந்து எனக்கு அழகான உணவை வழங்கி இருப்பதையும் நீங்கள் கவனித்தீர்களா? (ஆகவே) நான் (தீமையிலிருந்து) எதைவிட்டும் உங்களைத் தடுக்கின்றேனோ அதன்பால் (தீமையானவற்றைச் செய்துகொண்டு) உங்களுக்கு மாறுசெய்வதையும் நான் நாடவில்லை; என்னால் இயன்ற மட்டும் (உங்களைச்) சீர்திருத்துவதைத் தவிர (வேறெதையும்) நான் நாடவில்லை; எனக்கு நல்லுதவி அல்லாஹ்வைக் கொண்டே தவிர இல்லை; (என் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) அவன் மீதே நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்; அவன்பாலே நான் மீளுகிறேன் என்று கூறினார்.

وَيٰقَوْمِ لَا يَجْرِمَنَّكُمْ شِقَاقِيْٓ اَنْ يُّصِيْبَكُمْ مِّثْلُ مَآ اَصَابَ
قَوْمَ نُوْحٍ اَوْ قَوْمَ هُوْدٍ اَوْ قَوْمَ صٰلِحٍ ؕ وَمَا قَوْمُ لُوْطٍ مِّنْكُمْ
بِبَعِيْدٍ ﴿۸۹﴾ وَاسْتَغْفِرُوْا رَبَّكُمْ ثُمَّ تُوْبُوْٓا اِلَيْهِ ؕ اِنَّ رَبِّيْ رَحِيْمٌ
وَّدُوْدٌ ﴿۹۰﴾ قَالُوْا يٰشُعَيْبُ مَا نَفْقَهُ كَثِيْرًا مِّمَّا تَقُوْلُ وَاِنَّا
لَنَرٰىكَ فِيْنَا ضَعِيْفًا ۚ وَلَوْلَا رَهْطُكَ لَرَجَمْنٰكَ ؗ وَمَآ اَنْتَ عَلَيْنَا
بِعَزِيْزٍ ﴿۹۱﴾ قَالَ يٰقَوْمِ اَرَهْطِيْٓ اَعَزُّ عَلَيْكُمْ مِّنَ اللّٰهِ ؕ وَ
اتَّخَذْتُمُوْهُ وَرَآءَكُمْ ظِهْرِيًّا ؕ اِنَّ رَبِّيْ بِمَا تَعْمَلُوْنَ مُحِيْطٌ ﴿۹۲﴾
وَيٰقَوْمِ اعْمَلُوْا عَلٰى مَكَانَتِكُمْ اِنِّيْ عَامِلٌ ؕ سَوْفَ تَعْلَمُوْنَ ۙ
مَنْ يَّاْتِيْهِ عَذَابٌ يُّخْزِيْهِ وَمَنْ هُوَ كَاذِبٌ ؕ وَارْتَقِبُوْٓا اِنِّيْ
مَعَكُمْ رَقِيْبٌ ﴿۹۳﴾ وَلَمَّا جَآءَ اَمْرُنَا نَجَّيْنَا شُعَيْبًا وَّالَّذِيْنَ
اٰمَنُوْا مَعَهٗ بِرَحْمَةٍ مِّنَّا ۚ وَاَخَذَتِ الَّذِيْنَ ظَلَمُوا الصَّيْحَةُ
فَاَصْبَحُوْا فِيْ دِيَارِهِمْ جٰثِمِيْنَ ﴿۹۴﴾ ۙ كَاَنْ لَّمْ يَغْنَوْا فِيْهَا ؕ اَلَا
بُعْدًا لِّمَدْيَنَ كَمَا بَعِدَتْ ثَمُوْدُ ﴿۹۵﴾ ع وَلَقَدْ اَرْسَلْنَا مُوْسٰى ع ۸ ۱۲ ۸
بِاٰيٰتِنَا وَسُلْطٰنٍ مُّبِيْنٍ ﴿۹۶﴾ ۙ اِلٰى فِرْعَوْنَ وَمَلَا۟ئِهٖ
فَاتَّبَعُوْٓا اَمْرَ فِرْعَوْنَ ۚ وَمَآ اَمْرُ فِرْعَوْنَ بِرَشِيْدٍ ﴿۹۷﴾

89. "என்னுடைய சமூகத்தாரே! என்னுடன் நீங்கள் பகைமை கொண்டிருப்பது நூஹ் உடைய சமூகத்தாரையும் அல்லது ஹூத் உடைய சமூகத்தாரையும் அல்லது ஸாலிஹ் உடைய சமூகத்தாரையும் பீடித்ததுபோன்ற (வேதனை யான)து, உங்களையும் பீடித்துக் கொள்ளுமாறு உங்களைத் திண்ணமாக சுமத்தி விடவேண்டாம்; இன்னும், லூத்துடைய சமூகத்தார் (வாழ்ந்த காலம்) உங்களுக்குத் தொலைவில் இல்லை."

90. "மேலும், உங்கள் இரட்சகனிடம் நீங்கள் மன்னிப்புக் கோருங்கள்; பின்னர் (மனம் வருந்தி) அவன் பக்கமே (தவ்பாச் செய்து) நீங்கள் மீளுங்கள்; நிச்சயமாக, என் இரட்சகன் மிகக்கிருபையுடையவன்; மிக்க நேசிப்பவன்" (என்று கூறினார்).

91. அ(தற்க)வர்கள், "ஷுஐபே! நீர் கூறுபவற்றில் அநேகவற்றை நாம் விளங்கிக் கொள்ள (முடிய)வில்லை; நிச்சயமாக நாம் உம்மை எங்களில் மிக்க பலவீனமானவராகவே காண்கிறோம்; மேலும், உம்முடைய குடும்பத்தார் இல்லாவிடில் உம்மைக் கல்லெறிந்து (கொன்று)இருப்போம். மேலும், நீர் நம்முடைய மதிப்பிற்குரியவரல்லர்" என்று கூறினார்கள்.

92. அ(தற்க)வர் "என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ்வைவிட என்னுடைய குடும்பத்தார் உங்களுக்கு மிக்க மதிப்புடையவர்களா? நீங்களோ (அல்லாஹ்வாகிய) அவனை உங்களுடைய முதுகுக்குப்பின் தள்ளி(ப் புறக்கணித்து) விட்டீர்கள்; நிச்சயமாக என் இரட்சகன் நீங்கள் செய்யக்கூடியவற்றை சூழ்ந்து அறிகிறவன்" என்று கூறினார்.

93. அன்றியும், "என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் உங்கள் வழியில் (உங்கள் காரியத்தைச்) செய்து கொண்டிருங்கள்; நானும் (என் வழியில் என் காரியத்தைச்) செய்து கொண்டிருக்கின்றேன்; எவருக்கு இழிவு படுத்தும் வேதனை அவரை வந்தடையும்? (என்றும்) இன்னும், பொய்யர் யார்? என்பதையும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்; (அதனை) நீங்கள் எதிர்பார்த்தும் இருங்கள்; நிச்சயமாக நான் உங்களுடன் எதிர்பார்த்திருக்கிறேன்" (என்று ஷுஐப் கூறினார்).

94. மேலும், (அவர்களிடம்) நம்முடைய கட்டளை வந்தபொழுது, ஷுஐபையும், அவருடன் விசுவாசங் கொண்டிருந்தோரையும் நம்மிடமிருந்துள்ள அருளைக்கொண்டு நாம் (இரட்சித்துக்) காப்பாற்றினோம்; அநியாயம் செய்தவர்களை பேரிடி முழக்கம் பிடித்துக் கொண்டது; அவர்கள் காலைப்பொழுதை தங்கள் வீடுகளில் முகம்குப்புற (இறந்து) கிடக்க அடைந்தனர்.

95. அதற்கு முன்னர் அதில் அவர்கள் வசித்திருக்காதவர்களைப் போல்— (அழிந்துவிட்டனர்.) ஸமூது நாசமானது போன்றே இந்த மத்யன் சமூகத்தார்க்கும் நாசம் ஏற்பட்டு விட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

96. இன்னும் நம் வசனங்களுடனும், தெளிவான சான்றுடனும் மூஸாவை நிச்சயமாக நாம் அனுப்பிவைத்தோம்—

97. ஃபிர்அவ்னிடமும், அவனுடைய பிரதானிகளிடமும் (அவர் சென்றார்.) ஃபிர் அவ்னுடைய கட்டளையை அவர்கள் பின்பற்றிக் கொண்டிருந்தனர்; ஃபிர் அவ்னுடைய கட்டளையோ நேர்மையுடையதாக இருக்கவில்லை.

يَقْدُمُ قَوْمَهٗ يَوْمَ الْقِيٰمَةِ فَاَوْرَدَهُمُ النَّارَ ؕ وَبِئْسَ الْوِرْدُ
الْمَوْرُوْدُ ﴿۹۸﴾ وَاُتْبِعُوْا فِيْ هٰذِهٖ لَعْنَةً وَّيَوْمَ الْقِيٰمَةِ ؕ بِئْسَ
الرِّفْدُ الْمَرْفُوْدُ ﴿۹۹﴾ ذٰلِكَ مِنْ اَنْۢبَآءِ الْقُرٰى نَقُصُّهٗ عَلَيْكَ مِنْهَا
قَآئِمٌ وَّحَصِيْدٌ ﴿۱۰۰﴾ وَمَا ظَلَمْنٰهُمْ وَلٰكِنْ ظَلَمُوْۤا اَنْفُسَهُمْ فَمَاۤ
اَغْنَتْ عَنْهُمْ اٰلِهَتُهُمُ الَّتِيْ يَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ مِنْ
شَيْءٍ لَّمَّا جَآءَ اَمْرُ رَبِّكَ ؕ وَمَا زَادُوْهُمْ غَيْرَ تَتْبِيْبٍ ﴿۱۰۱﴾ وَكَذٰلِكَ
اَخْذُ رَبِّكَ اِذَاۤ اَخَذَ الْقُرٰى وَهِيَ ظَالِمَةٌ ؕ اِنَّ اَخْذَهٗۤ اَلِيْمٌ
شَدِيْدٌ ﴿۱۰۲﴾ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً لِّمَنْ خَافَ عَذَابَ الْاٰخِرَةِ ؕ
ذٰلِكَ يَوْمٌ مَّجْمُوْعٌ ۙ لَّهُ النَّاسُ وَذٰلِكَ يَوْمٌ مَّشْهُوْدٌ ﴿۱۰۳﴾ وَمَا
نُؤَخِّرُهٗۤ اِلَّا لِاَجَلٍ مَّعْدُوْدٍ ؕ ﴿۱۰۴﴾ يَوْمَ يَاْتِ لَا تَكَلَّمُ نَفْسٌ اِلَّا
بِاِذْنِهٖ ۚ فَمِنْهُمْ شَقِيٌّ وَّسَعِيْدٌ ﴿۱۰۵﴾ فَاَمَّا الَّذِيْنَ شَقُوْا فَفِي
النَّارِ لَهُمْ فِيْهَا زَفِيْرٌ وَّشَهِيْقٌ ۙ ﴿۱۰۶﴾ خٰلِدِيْنَ فِيْهَا مَا دَامَتِ
السَّمٰوٰتُ وَالْاَرْضُ اِلَّا مَا شَآءَ رَبُّكَ ؕ اِنَّ رَبَّكَ فَعَّالٌ لِّمَا
يُرِيْدُ ﴿۱۰۷﴾ وَاَمَّا الَّذِيْنَ سُعِدُوْا فَفِي الْجَنَّةِ خٰلِدِيْنَ فِيْهَا مَا دَامَتِ
السَّمٰوٰتُ وَالْاَرْضُ اِلَّا مَا شَآءَ رَبُّكَ ؕ عَطَآءً غَيْرَ مَجْذُوْذٍ ﴿۱۰۸﴾

98. மறுமை நாளில், அவன் தன் சமூகத்தார்க்கு முன் (வழிகாட்டியாகச்) சென்று, அவர்களை (நரக) நெருப்பில் சேர்ப்பான்; அவர்கள் சென்று போய்ச்சேருமிடம் மிகக் கெட்டது.

99. (உலகமாகிய) இதிலும், மறுமைநாளிலும் சாபத்தால் அவர்கள் தொடரப்பட்டுள்ளனர்; அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இந்த சன்மானம் மிகக் கெட்டது.

100. இவை, சில ஊர் (வாசி)களின் சம்பவங்களாகும். இவற்றை நாம் உமக்கு அறிவித்தோம்; இவற்றில் சில நிலைத்து இருக்கின்றன; சில அறுவடை செய்யப்பட்டு (வேரறுக்கப்பட்டு)ம் விட்டன.

101 இன்னும், அவர்களுக்கு நாம் அநியாயம் செய்யவில்லை; எனினும் அவர்கள் தமக்குத்தாமே அநியாயம் செய்து கொண்டனர்; எனவே, உமதிரட்சகனின் கட்டளை (அவர்களை அழித்துவிட) வந்த சமயத்தில், அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைத்து (வணங்கி)க் கொண்டிருந்த அவர்களின் வணக்கத்திற்குறியவர்கள் அவர்களுக்கு எவ்விதப் பயனளிக்கவில்லை; அன்றியும், நஷ்டத்தைத்தவிர (வேறு எதையும்) அவர்களுக்கு அவர்கள் அதிகப்படுத்தவில்லை.

102. ஊர்களை — அவை அநியாயம் செய்து கொண்டிருக்க (வேதனையைக் கொண்டு) அவன் பிடித்தால் உம்முடைய இரட்சகனின் பிடி இப்படித்தான் இருக்கும்; நிச்சயமாக அவனுடைய பிடியானது துன்புறுத்தக் கூடியது; மிக்க கடினமானது.

103. மறுமையின் வேதனையைப் பயப்படக்கூடியவருக்கு நிச்சயமாக இதில் அத்தாட்சி இருக்கிறது; அ(ம்மறுமையான)து, ஒரு நாள் — அதற்காக மனிதர்கள் ஒன்று சேர்க்கப் படுவார்கள்; இன்னும், அது (அவர்கள் அனைவரும் அல்லாஹ்வின் சந்நிதியில்) முன்னிலைப்படுத்தப்படும் நாளாகும்.

104. அதற்கென குறிப்பிடப்பட்ட தவணைக்காகவே தவிர, அதனை நாம் பிற்படுத்தி வைக்கவில்லை.

105. அது வரும் நாளில் அவனுடைய அனுமதியின்றி, எந்த ஆத்மாவும் (அவனுடன்) பேசமுடியாது; அவர்களில் துர்பாக்கியவானும், நற்பாக்கியவானுமிருப்பர்.

106. எனவே, துர்பாக்கியமடைந்து விட்டனரே அத்தகையோர் — நரகத்தில் (வீழ்த்தப் படுவார்கள்; அப்பொழுது வேதனையைத் தாங்க முடியாது) — அதில் அவர்களுக்கு (கழுதையின் சப்தத்தைப் போன்று தொடக்கத்தில்) பெரும் கூச்சலும், (இறுதியில்) தேம்பியழுதலும் இருக்கும்.

107. உமதிரட்சகன் நாடினாலன்றி, வானங்கள், மற்றும் பூமி நிலைத்திருக்குங் காலமெல்லாம் அதில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; நிச்சயமாக உமதிரட்சகன், தான் நாடியதை(த் தடையின்றி)ச் செய்(து முடிப்)பவன்.

108. இன்னும் நற்பாக்கியமடைந்து விட்டனரே அத்தகையோர் — சுவனபதியில் (நுழைந்துவிடுவார்கள்); உமதிரட்சகன் நாடினாலன்றி, வானங்கள், மற்றும் பூமி நிலைத்திருக்குங் காலமெல்லாம் அதில்தான் அவர்கள் நிரந்தரமாக(த் தங்கி) இருப்பவர்கள்; (அது) முடிவுறாத ஓர் அருட் கொடையாக (நிலைத்திருக்கும்).

فَلَا تَكُ فِيْ مِرْيَةٍ مِّمَّا يَعْبُدُ هٰٓؤُلَآءِ ؕ مَا يَعْبُدُوْنَ اِلَّا كَمَا
يَعْبُدُ اٰبَآؤُهُمْ مِّنْ قَبْلُ ؕ وَاِنَّا لَمُوَفُّوْهُمْ نَصِيْبَهُمْ غَيْرَ
مَنْقُوْصٍ ﴿١٠٩﴾ وَلَقَدْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ فَاخْتُلِفَ فِيْهِ ؕ وَ ع ٩
لَوْلَا كَلِمَةٌ سَبَقَتْ مِنْ رَّبِّكَ لَقُضِيَ بَيْنَهُمْ ؕ وَاِنَّهُمْ لَفِيْ
شَكٍّ مِّنْهُ مُرِيْبٍ ﴿١١٠﴾ وَاِنَّ كُلًّا لَّمَّا لَيُوَفِّيَنَّهُمْ رَبُّكَ اَعْمَالَهُمْ ؕ
اِنَّهٗ بِمَا يَعْمَلُوْنَ خَبِيْرٌ ﴿١١١﴾ فَاسْتَقِمْ كَمَآ اُمِرْتَ وَمَنْ تَابَ
مَعَكَ وَلَا تَطْغَوْا ؕ اِنَّهٗ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿١١٢﴾ وَلَا تَرْكَنُوْٓا اِلَى
الَّذِيْنَ ظَلَمُوْا فَتَمَسَّكُمُ النَّارُ ۙ وَمَا لَكُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ مِنْ
اَوْلِيَآءَ ثُمَّ لَا تُنْصَرُوْنَ ﴿١١٣﴾ وَاَقِمِ الصَّلٰوةَ طَرَفَيِ النَّهَارِ وَزُلَفًا
مِّنَ الَّيْلِ ؕ اِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ ؕ ذٰلِكَ ذِكْرٰى
لِلذّٰكِرِيْنَ ﴿١١٤﴾ ۚ وَاصْبِرْ فَاِنَّ اللّٰهَ لَا يُضِيْعُ اَجْرَ الْمُحْسِنِيْنَ ﴿١١٥﴾ فَلَوْلَا
كَانَ مِنَ الْقُرُوْنِ مِنْ قَبْلِكُمْ اُولُوْا بَقِيَّةٍ يَّنْهَوْنَ عَنِ
الْفَسَادِ فِي الْاَرْضِ اِلَّا قَلِيْلًا مِّمَّنْ اَنْجَيْنَا مِنْهُمْ ۚ وَاتَّبَعَ
الَّذِيْنَ ظَلَمُوْا مَآ اُتْرِفُوْا فِيْهِ وَكَانُوْا مُجْرِمِيْنَ ﴿١١٦﴾ وَمَا
كَانَ رَبُّكَ لِيُهْلِكَ الْقُرٰى بِظُلْمٍ وَّاَهْلُهَا مُصْلِحُوْنَ ﴿١١٧﴾

109. மேலும், (நபியே!) இவர்கள் வணங்குபவைகளைப் பற்றி நீர் சந்தேகத்திலிருக்க வேண்டாம். (இதற்கு) முன்னர் இவர்களுடைய மூதாதையர் (யாதொரு ஆதாரமுமின்றி) வணங்கிக் கொண்டிருந்ததைப்போன்றே தவிர இவர்களும் வணங்கவில்லை. இவர்களுடைய (வேதனையின்) பாகத்தை இவர்களுக்கும், குறைவின்றி நிச்சயமாக, நாம் பூரணமாக கொடுக்கக்கூடியவர்கள்.

110. மேலும், நிச்சயமாக நாம் மூஸாவுக்கு ஒரு வேதத்தைக் கொடுத்தோம்; பின்னர், அதில் கருத்து வேறுபாடு கொள்ளப்பட்டது; (அவர்களின் காலம் மறுமை தான் என்று) உமதிரட்சகனின் வாக்கு முன்னரே ஏற்பட்டிராவிடில், இவர்களுக்கிடையில் (இம்மையிலேயே) தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கும்; மேலும், நிச்சயமாக அவர்கள் (குர்ஆனாகிய) அதைப் பற்றி அவநம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய சந்தேகத்தில் இருக்கின்றனர்.

111. நிச்சயமாக உமதிரட்சகன், அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய செயல்(களுக்குரிய கூலி)களை திட்டமாக அவர்களுக்கு பூரணமாகக் கொடுப்பான்; நிச்சயமாக அவன், அவர்கள் செய்பவற்றை நன்குணர்பவன்.

112. (நபியே!) உமக்கேவப்பட்ட பிரகாரம் நீரும், உம்முடன் பச்சாதாபப் பட்டோரும், (நேரான வழியில்) உறுதியாக இருங்கள்; (இதில்) நீங்கள் வரம்பு மீறியும் விடாதீர்கள்; நிச்சயமாக, அவன் நீங்கள் செய்பவற்றைப் பார்க்கிறவன்.

113. (விசுவாசிகளே!) இன்னும், அநியாயம் செய்து கொண்டிருப்போரின் பால் (சிறிதும்) நீங்கள் சாய்ந்துவிடாதீர்கள்; அவ்வாறாயின், நரக நெருப்பு உங்களைத்தீண்டிவிடும்; அல்லாஹ்வையன்றி எந்த உற்ற நேசர்களும் உங்களுக்கு இல்லை; பின்னர், (எவராலும்) நீங்கள் உதவி செய்யப்படமாட்டீர்கள்.

114. மேலும், பகலின் இருமுனை (களாகிய காலை, மாலை) களிலும், இரவின் நேரங்களிலும் தொழுகையை நிறைவேற்றுவீராக! நிச்சயமாக நற்செயல்கள் தீய செயல்களைப் போக்கிவிடும்; (அல்லாஹ்வை) நினைவு கூர்வோருக்கு இது ஒரு நல்லுபதேசமாகும்.

115. மேலும், (நபியே) பொறுமையுடன் இருப்பீராக! நிச்சயமாக அல்லாஹ் அழகானவற்றைச் செய்தோரின் கூலியை வீணாக்கிவிடமாட்டான்.

116. உங்களுக்கு முன்னிருந்த சமூகத்தார்களில், பூமியில் குழப்பம் செய்யாது தடுத்து வரக் கூடிய அறிவாளிகள் இருந்திருக்க வேண்டாமா? அவர்களிலிருந்து நாம் யாரைக் காப்பாற்றினோமோ அந்த சொற்ப எண்ணிக்கையினர் தவிர (மற்ற அனைவரும் குழப்பவாதிகளாக இருந்தனர்) ஆனால், அநியாயக்காரர்கள் எதில் சுகபோகமாக்கப் பட்டிருந்தார்களோ அதனையே பின்பற்றினார்கள்; இன்னும் குற்றம் செய்பவர்களாகவும் இருந்தனர்.

117. இன்னும், (நபியே!) ஊர்களை_ அவ்வூரார் சீர்திருத்துபவர்களாக இருக்கும் நிலையில், அநியாயமாக உமதிரட்சகன் அழித்து விடுபவனாக இல்லை.

وَلَوْ شَآءَ رَبُّكَ لَجَعَلَ النَّاسَ اُمَّةً وَّاحِدَةً وَّلَا يَزَالُوْنَ
مُخْتَلِفِيْنَ ﴿١١٨﴾ اِلَّا مَنْ رَّحِمَ رَبُّكَ ؕ وَلِذٰلِكَ خَلَقَهُمْ ؕ وَتَمَّتْ كَلِمَةُ
رَبِّكَ لَاَمْلَئَنَّ جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ اَجْمَعِيْنَ ﴿١١٩﴾ وَكُلًّا
نَّقُصُّ عَلَيْكَ مِنْ اَنْۢبَآءِ الرُّسُلِ مَا نُثَبِّتُ بِهٖ فُؤَادَكَ ۚ وَجَآءَكَ
فِىْ هٰذِهِ الْحَقُّ وَمَوْعِظَةٌ وَّذِكْرٰى لِلْمُؤْمِنِيْنَ ﴿١٢٠﴾ وَقُلْ لِّلَّذِيْنَ لَا
يُؤْمِنُوْنَ اعْمَلُوْا عَلٰى مَكَانَتِكُمْ ؕ اِنَّا عٰمِلُوْنَ ﴿١٢١﴾ وَانْتَظِرُوْا ۚ اِنَّا
مُنْتَظِرُوْنَ ﴿١٢٢﴾ وَلِلّٰهِ غَيْبُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَاِلَيْهِ يُرْجَعُ الْاَمْرُ
كُلُّهٗ فَاعْبُدْهُ وَتَوَكَّلْ عَلَيْهِ ؕ وَمَا رَبُّكَ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ﴿١٢٣﴾ ع ع١٠

## سُوْرَةُ يُوْسُفَ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّاِحْدٰى عَشْرَةَ اٰيَةً وَّاثْنَا عَشَرَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

الٓرٰ ۟ تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ الْمُبِيْنِ ﴿١﴾ اِنَّاۤ اَنْزَلْنٰهُ قُرْءٰنًا عَرَبِيًّا
لَّعَلَّكُمْ تَعْقِلُوْنَ ﴿٢﴾ نَحْنُ نَقُصُّ عَلَيْكَ اَحْسَنَ الْقَصَصِ بِمَاۤ
اَوْحَيْنَاۤ اِلَيْكَ هٰذَا الْقُرْاٰنَ ۖ وَاِنْ كُنْتَ مِنْ قَبْلِهٖ لَمِنَ
الْغٰفِلِيْنَ ﴿٣﴾ اِذْ قَالَ يُوْسُفُ لِاَبِيْهِ يٰۤاَبَتِ اِنِّىْ رَاَيْتُ اَحَدَ
عَشَرَ كَوْكَبًا وَّالشَّمْسَ وَالْقَمَرَ رَاَيْتُهُمْ لِىْ سٰجِدِيْنَ ﴿٤﴾

118. மேலும், உமதிரட்சகன் நாடியிருந்தால் (அனைத்து) மனிதர்களை ஒரே சமூகத்தினராக ஆக்கியிருப்பான்; இன்னும், அவர்கள் தங்களுக்குள் மாறுபட்டுக் கொண்டவர்களாகவே இருப்பார்கள்_

119. (அவர்களில்) உமதிரட்சகன் அருள் புரிந்தவர்களைத் தவிர; இதற்காகவே (மாறுபடும்) அவர்களைப் படைத்துமிருக்கிறான்; "(பாவம் செய்த) ஜின்கள் மற்றும் மனிதர்கள் ஆகிய அனைவராலும் நிச்சயமாக நான் நரகத்தை நிரப்புவேன்" என்ற உமதிரட்சகனின் வாக்கும் பூர்த்தியாகிவிட்டது.

120. நம் தூதர்களின் செய்திகளிலிருந்து உம் இதயத்தை எதைக்கொண்டு நாம் உறுதிப்படுத்துவோமோ, அவை ஒவ்வொன்றையும் நாம் உமக்குக் கூறினோம்; உமக்கு இவற்றில் உண்மை (யானவை)யும் விசுவாசிகளுக்கு நல்லுபதேசமும், நினைவூட்டலும் வந்துவிட்டது.

121. மேலும், விசுவாசங்கொள்ளாதவர்களுக்கு (நபியே!)நீர் கூறுவீராக: "நீங்கள் உங்கள் வழியில் (உங்கள் காரியங்களைச்) செய்து கொண்டிருங்கள்; நிச்சயமாக நாங்களும் (எங்கள் வழியில் எங்கள் காரியங்களை) செய்து கொண்டிருக்கிறோம்."

122. நீங்களும் எதிர்பார்த்துக் கொண்டிருங்கள்; நிச்சயமாக நாங்களும் (அதை) எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்."

123. வானங்களில் மற்றும், பூமியில் மறைந்திருப்பவை (யாவும்) அல்லாஹ்வுக்கே உரியன; சகல காரியமும் அவனிடமே மீட்டப்படும்; ஆதலால், அவ(ன் ஒருவ)னையே நீர் வணங்குவீராக! (சகல காரியங்களையும் ஒப்படைத்து முழுமையாக); அவன் மீதே நம்பிக்கையும் வைப்பீராக! உமதிரட்சகன், நீங்கள் செய்பவைகளைப்பற்றி பராமுகமானவனாகவுமில்லை.

---

அத்தியாயம் : 12

## யூஸுஃப்

வசனங்கள் : 111 மக்கீ ருகூஉகள் : 12

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. அலிஃப் லாம் றா. இவை தெளிவான (இவ்) வேதத்தின் வசனங்களாகும்.

2. நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக, இதனை அரபி (மொழி)யிலான குர்ஆனாக நிச்சயமாக நாமே இறக்கி வைத்தோம்.

3. (நபியே!) இந்தக் குர்ஆனை நாம் உமக்கு அறிவித்திருப்பதின்மூலம் மிக்க அழகான வரலாற்றை உமக்கு நாம் கூறுகிறோம்; இதற்கு முன்னர், நிச்சயமாக (இதனைப்பற்றி) அறியாதவர்களில் (ஒருவராக) நீர் இருந்தீர்.

4. யூஸுஃப் தன் தந்தையிடம், "என் தந்தையே! பதினொரு நட்சத்திரங்களையும், சூரியனையும், சந்திரனையும் நிச்சயமாக நான் (கனவில்)கண்டேன்; எனக்குச் சிரம் பணிபவையாகஅவற்றை நான் கண்டேன்" என்று கூறிய சமயத்தில்,

قَالَ يٰبُنَيَّ لَا تَقْصُصْ رُءْيَاكَ عَلٰٓى اِخْوَتِكَ فَيَكِيْدُوْا لَكَ
كَيْدًا ؕ اِنَّ الشَّيْطٰنَ لِلْاِنْسَانِ عَدُوٌّ مُّبِيْنٌ ۝٥ وَكَذٰلِكَ
يَجْتَبِيْكَ رَبُّكَ وَيُعَلِّمُكَ مِنْ تَاْوِيْلِ الْاَحَادِيْثِ وَيُتِمُّ نِعْمَتَهٗ
عَلَيْكَ وَعَلٰٓى اٰلِ يَعْقُوْبَ كَمَآ اَتَمَّهَا عَلٰٓى اَبَوَيْكَ مِنْ قَبْلُ
اِبْرٰهِيْمَ وَاِسْحٰقَ ؕ اِنَّ رَبَّكَ عَلِيْمٌ حَكِيْمٌ ۝٦ لَقَدْ كَانَ فِيْ يُوْسُفَ ١ ع ٦ ١١
وَاِخْوَتِهٖٓ اٰيٰتٌ لِّلسَّآئِلِيْنَ ۝٧ اِذْ قَالُوْا لَيُوْسُفُ وَاَخُوْهُ اَحَبُّ
اِلٰٓى اَبِيْنَا مِنَّا وَنَحْنُ عُصْبَةٌ ؕ اِنَّ اَبَانَا لَفِيْ ضَلٰلٍ مُّبِيْنِ ۝٨ ۖۚ
اِۨقْتُلُوْا يُوْسُفَ اَوِ اطْرَحُوْهُ اَرْضًا يَّخْلُ لَكُمْ وَجْهُ اَبِيْكُمْ وَ
تَكُوْنُوْا مِنْۢ بَعْدِهٖ قَوْمًا صٰلِحِيْنَ ۝٩ قَالَ قَآئِلٌ مِّنْهُمْ لَا تَقْتُلُوْا
يُوْسُفَ وَاَلْقُوْهُ فِيْ غَيٰبَتِ الْجُبِّ يَلْتَقِطْهُ بَعْضُ السَّيَّارَةِ
اِنْ كُنْتُمْ فٰعِلِيْنَ ۝١٠ قَالُوْا يٰٓاَبَانَا مَا لَكَ لَا تَاْمَنَّا عَلٰى يُوْسُفَ
وَاِنَّا لَهٗ لَنٰصِحُوْنَ ۝١١ اَرْسِلْهُ مَعَنَا غَدًا يَّرْتَعْ وَيَلْعَبْ وَاِنَّا
لَهٗ لَحٰفِظُوْنَ ۝١٢ قَالَ اِنِّيْ لَيَحْزُنُنِيْٓ اَنْ تَذْهَبُوْا بِهٖ وَاَخَافُ
اَنْ يَّاْكُلَهُ الذِّئْبُ وَاَنْتُمْ عَنْهُ غٰفِلُوْنَ ۝١٣ قَالُوْا لَئِنْ
اَكَلَهُ الذِّئْبُ وَنَحْنُ عُصْبَةٌ اِنَّآ اِذًا لَّخٰسِرُوْنَ ۝١٤

5. "என் அருமை மகனே! நீர் கண்ட கனவை உம் சகோதரர்களிடம் சொல்லிக்காட்ட வேண்டாம்; (அவ்வாறு செய்தால்) அவர்கள் உமக்கு யாதேனும் தீங்கிழைக்கச் சதி செய்வார்கள்; (ஏனெனில்,) நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்கு பகிரங்கமான விரோதியாக இருக்கிறான்" என்று (யஃகூப் நபியாகிய )அவர் கூறினார்.

6. மேலும், "(நீர் கனவில் கண்ட) அவ்வாறே உமதிரட்சகன் உம்மைத் தேர்ந்தெடுத்து, கனவுகளின் விளக்கங்களையும் உமக்குக் கற்றுக் கொடுத்து, இதற்கு முன்னர் இப்றாஹீம், இஸ்ஹாக் ஆகிய உம்முடைய இரு மூதாதையர் மீதும் (தம் அருளாகிய) அதனைப் பூர்த்தியாக்கி வைத்தவாரே உம் மீதும், யஃகூபின் (மற்ற) குடும்பத்தினர் மீதும் அவன் தன் அருளைப் பூர்த்தியாக்கி வைப்பான்; நிச்சயமாக உமதிரட்சகன் (யாவற்றையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்"(என்றும் கூறினார்).

7. (நபியே!) நிச்சயமாக யூஸுஃபி(ன் சரித்திரத்தி)லும், அவரது சகோதரர்களி(ன் சரித்திரத்தி)லும் வினவுகின்றவர்களுக்கு பல படிப்பினைகள் இருக்கின்றன.

8. "நாம் (பலசாலிகளான) ஒரு கூட்டமாக இருந்தும், நிச்சயமாக யூஸுஃபும், அவருடைய சகோதரரும் நம் தந்தைக்கு நம்மைவிட அதிகப் பிரியமுள்ளவர்களாயிருக்கின்றனர்; (இதில்) நிச்சயமாக நம் தந்தை பகிரங்கமான தவற்றில் இருக்கிறார்" என்று அவர்கள் கூறிய சமயத்தை (நினைவு கூர்வீராக).

9. "(ஆகவே,) யூஸுஃபைக் கொலை செய்துவிடுங்கள்; அல்லது பூமியில் எங்கேனும் எறிந்து விடுங்கள்; உங்கள் தந்தையின்முகம் ( கவனம்) முற்றிலும் உங்கள் பக்கமே இருக்கும்; இதன் பின்னர், நீங்கள் (அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடிக்கொண்டு) நல்லவர்களான கூட்டத்தினராகிவிடுவீர்கள்" (என்று கூறினார்கள்).

10. (அதற்கு) அவர்களில் (நற்போதனை)கூறக்கூடிய ஒருவர், "யூஸுஃபை நீங்கள் கொலை செய்யாதீர்கள்; இன்னும், நீங்கள் (அவருக்கு ஏதும் தீமை) செய்பவர்களாக இருந்தால், ஆழமான ஒரு பாழ் கிணற்றில் அவரை போட்டுவிடுங்கள்; பிரயாணிகளில் சிலர் அவரை(க்கிணற்றிலிருந்து) எடுத்துக் கொள்ளக்கூடும்" என்று கூறினார்.

11. (பின்னர் அவர்கள் தங்கள் தந்தையிடம் வந்து,) "எங்கள் தந்தையே! யூஸுஃபைப்பற்றி (அவர் விஷயத்தில்) நீங்கள் எங்களை நம்பாமலிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? நாங்களோ, நிச்சயமாக அவருக்கு நன்மையை நாடுபவர்களாக இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

12. "நாளைய தினம் அவரை எங்களுடன் அனுப்பி வையுங்கள்; அவர் (காட்டிலுள்ள கனிகளை) நன்கு புசித்துக்கொண்டும், விளையாடிக்கொண்டும் இருப்பார். நிச்சயமாக, நாங்கள் அவரைப் பாதுகாத்துக் கொள்வோராகவும் இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

13. அ(தற்க)வர் "நீங்கள் அவரை(அழைத்து)க்கொண்டு செல்வது நிச்சயமாக என்னைக் கவலையடையச் செய்கிறது. நீங்கள் (விளையாடிக் கொண்டு) அவரைவிட்டும் பராமுகமானவர்களாகயிருக்கும் நிலையில் ஓநாய் அவரை (அடித்துத்) தின்றுவிடும் என்று நான் பயப்படுகிறேன்" என்று கூறினார்.

14. அ(தற்க)வர்கள், "(ஆற்றல் மிக்க )ஒரு கூட்டத்தினராக நாங்கள் இருந்தும், அவரை ஓர் ஓநாய் தின்றுவிடுமானால், நிச்சயமாக நாங்கள் அப்போது நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்" என்று கூறினர்.

فَلَمَّا ذَهَبُوْا بِهٖ وَاَجْمَعُوْٓا اَنْ يَّجْعَلُوْهُ فِيْ غَيٰبَتِ الْجُبِّ ۚ
وَاَوْحَيْنَآ اِلَيْهِ لَتُنَبِّئَنَّهُمْ بِاَمْرِهِمْ هٰذَا وَهُمْ لَا يَشْعُرُوْنَ ﴿۱۵﴾
وَجَآءُوْٓ اَبَاهُمْ عِشَآءً يَّبْكُوْنَ ﴿۱۶﴾ قَالُوْا يٰٓاَبَانَآ اِنَّا ذَهَبْنَا
نَسْتَبِقُ وَتَرَكْنَا يُوْسُفَ عِنْدَ مَتَاعِنَا فَاَكَلَهُ الذِّئْبُ ۚ وَمَآ
اَنْتَ بِمُؤْمِنٍ لَّنَا وَلَوْ كُنَّا صٰدِقِيْنَ ﴿۱۷﴾ وَجَآءُوْ عَلٰى قَمِيْصِهٖ الثلاثة
بِدَمٍ كَذِبٍ ؕ قَالَ بَلْ سَوَّلَتْ لَكُمْ اَنْفُسُكُمْ اَمْرًا ؕ فَصَبْرٌ
جَمِيْلٌ ؕ وَاللّٰهُ الْمُسْتَعَانُ عَلٰى مَا تَصِفُوْنَ ﴿۱۸﴾ وَجَآءَتْ سَيَّارَةٌ
فَاَرْسَلُوْا وَارِدَهُمْ فَاَدْلٰى دَلْوَهٗ ؕ قَالَ يٰبُشْرٰى هٰذَا غُلٰمٌ ؕ
وَاَسَرُّوْهُ بِضَاعَةً ؕ وَاللّٰهُ عَلِيْمٌۢ بِمَا يَعْمَلُوْنَ ﴿۱۹﴾ وَشَرَوْهُ
بِثَمَنٍۢ بَخْسٍ دَرَاهِمَ مَعْدُوْدَةٍ ۚ وَكَانُوْا فِيْهِ مِنَ الزّٰهِدِيْنَ ﴿۲۰﴾ ع ۲ ۱۴ ۱۲
وَقَالَ الَّذِى اشْتَرٰىهُ مِنْ مِّصْرَ لِامْرَاَتِهٖٓ اَكْرِمِىْ مَثْوٰىهُ
عَسٰٓى اَنْ يَّنْفَعَنَآ اَوْ نَتَّخِذَهٗ وَلَدًا ؕ وَكَذٰلِكَ مَكَّنَّا لِيُوْسُفَ
فِى الْاَرْضِ ؗ وَلِنُعَلِّمَهٗ مِنْ تَاْوِيْلِ الْاَحَادِيْثِ ؕ وَاللّٰهُ غَالِبٌ
عَلٰٓى اَمْرِهٖ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿۲۱﴾ وَلَمَّا بَلَغَ
اَشُدَّهٗٓ اٰتَيْنٰهُ حُكْمًا وَّعِلْمًا ؕ وَكَذٰلِكَ نَجْزِى الْمُحْسِنِيْنَ ﴿۲۲﴾

15. ஆகவே, (யூசுஃபாகிய)அவரை(அழைத்து)க்கொண்டு சென்று, அவரை ஆழமான ஒரு பாழ்கிணற்றில் ஆக்கிவிட வேண்டுமென்றே அவர்கள் ஒருமித்து முடிவு செய்த போது, "அவர்களோ (உம்மை) அறியாதவர்களாக இருக்க, அவர்களுடைய இக்காரியத்தைப்பற்றி (ஒரு காலத்தில்) நீர் அவர்களுக்கு நிச்சயமாகத்தெரிவிப்பீர்" என்று (யூசுஃபாகிய)அவருக்கு நாம் வஹீ அறிவித்தோம்.

16. மேலும், (அன்று) பொழுதடைந்த பின், அவர்கள் தங்கள் தந்தையிடம் அழுதவர்களாகவே வந்தனர்.

17. "எங்கள் தந்தையே! நிச்சயமாக நாங்கள் (ஒருவரை ஒருவர்) முந்திக் கொண்டு சென்று விட்டோம்; யூஸுஃபை எங்கள் சாமான்களிடம் நாங்கள் விட்டு விட்டோம்; அப்போது, அவரை ஓநாய் (அடித்துத்) தின்று விட்டது; நாங்கள் (எவ்வளவு) உண்மையாளர்களாக இருப்பினும் நீர் எங்களை நம்பக் கூடியவர் அல்லர்" என்று கூறினார்கள்.

18. அன்றியும்,(தங்கள் கூற்றைப் பலப்படுத்த) அவருடைய சட்டையில் (ஆட்டின்) பொய்யான இரத்தத்தை(த் தோய்த்து)க் கொண்டு வந்(து காண்பித்)தார்கள்; (இரத்தம் தோய்ந்த அச்சட்டை கிழியாதிருப்பதைக்கண்ட யாஃகூப் நபி,) "இல்லை; உங்கள் மனங்கள் ஒரு (தீய) காரியத்தை உங்களுக்கு அழகாகக் காண்பித்து விட்டன; ஆகவே, அழகான பொறுமை (யைக்கடைப் பிடிப்பது) தான் நன்று; மேலும், நீங்கள் வர்ணிக்கின்றவற்றிலிருந்து (யூஸுஃபை இரட்சிக்க)அல்லாஹ்வே உதவி தேடப் படுபவன் (அவனிடமே உதவி தேடுகிறேன்)" என்று கூறினார்.

19. (பின்னர், அக்கிணற்றின் சமீபமாக) ஒரு பிரயாணக் கூட்டமும் வந்தது; தங்களது தண்ணீர் கொண்டு வருபவரை(த் தண்ணீருக்காக) அவர்கள் அனுப்பினார்கள்; அவர் தன் வாளியை (அக் கிணற்றில்) விட்டார். (யூஸுஃப் அதில் உட்கார்ந்து கொண்டார். அதைக் கண்டு " உங்களுக்கு) ஓ நன்மாராயமே! இதோ ஓர் (அழகிய)சிறுவன்!" என்று (யூஸுஃபைச் சுட்டிக் காட்டிக்) கூறினார்; (அவரைக் கண்ணுற்ற அவர்கள், தங்கள்) வர்த்தகப் பொருளாக அவரை (ஆக்கிக் கொள்ளக் கருதி) மறைத்துக் கொண்டார்கள்; மேலும், அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிகிறவன்.

20. மேலும், அவரை அவர்கள் அற்பக் கிரயத்திற்கு_ (விரல் விட்டு) எண்ணப்படுகின்ற (சொற்ப) வெள்ளிக் காசுகளுக்கு விற்று விட்டார்கள்; மேலும், அவர்கள் அதில் பற்றற்றவர்களாக இருந்தனர்.

21. (யூசுஃபை வாங்கியவர் , அவரை எகிப்துக்குக் கொண்டு வந்து விற்றுவிட்டார்.) எகிப்தில் அவரை வாங்கியவர் தன் மனைவியிடம், "நீ அவர் தங்குமிடத்தை கண்ணியமாக வைத்துக் கொள்; அவர் நமக்குப்பயன்தரலாம்; அல்லது அவரை நாம் ( சுவீகாரப்) புத்திரனாக எடுத்துக் கொள்ளலாம்" என்று கூறினார். அவ்வாறே அந்த (எகிப்து) பூமியில் ,யூஸுஃபுக்கு நாம் இடமளித்தோம்; கனவுகளின் விளக்கங்களை அவருக்குக் கற்பிப்பதற்காகவும் ( நாம் அவருக்கு இடமளித்தோம்.) அல்லாஹ், தன் காரியத்தில் (யாவரையும்) மிகைத்தவன்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்து கொள்ள மாட்டார்கள் .

22. இன்னும், அவர் தன் வாலிபத்தை அடைந்தபொழுது நாம் அவருக்கு சட்ட நுணுக்கத்தையும், கல்வியையும் கொடுத்தோம்; இவ்வாறே நன்மை செய்வோருக்கு நாம் கூலி தருகிறோம்.

وَرَاوَدَتْهُ الَّتِیْ هُوَ فِیْ بَیْتِهَا عَنْ نَّفْسِهٖ وَغَلَّقَتِ الْاَبْوَابَ
وَقَالَتْ هَیْتَ لَكَ ؕ قَالَ مَعَاذَ اللّٰهِ اِنَّهٗ رَبِّیْۤ اَحْسَنَ مَثْوَایَ ؕ
اِنَّهٗ لَا یُفْلِحُ الظّٰلِمُوْنَ ﴿۲۳﴾ وَلَقَدْ هَمَّتْ بِهٖ ۚ وَهَمَّ بِهَا لَوْلَاۤ اَنْ
رَّاٰ بُرْهَانَ رَبِّهٖ ؕ كَذٰلِكَ لِنَصْرِفَ عَنْهُ السُّوْٓءَ وَالْفَحْشَآءَ ؕ
اِنَّهٗ مِنْ عِبَادِنَا الْمُخْلَصِیْنَ ﴿۲۴﴾ وَاسْتَبَقَا الْبَابَ وَقَدَّتْ
قَمِیْصَهٗ مِنْ دُبُرٍ وَّ اَلْفَیَا سَیِّدَهَا لَدَا الْبَابِ ؕ قَالَتْ مَا جَزَآءُ
مَنْ اَرَادَ بِاَهْلِكَ سُوْٓءًا اِلَّاۤ اَنْ یُّسْجَنَ اَوْ عَذَابٌ اَلِیْمٌ ﴿۲۵﴾
قَالَ هِیَ رَاوَدَتْنِیْ عَنْ نَّفْسِیْ وَشَهِدَ شَاهِدٌ مِّنْ اَهْلِهَا ۚ
اِنْ كَانَ قَمِیْصُهٗ قُدَّ مِنْ قُبُلٍ فَصَدَقَتْ وَهُوَ مِنَ الْكٰذِبِیْنَ ﴿۲۶﴾
وَاِنْ كَانَ قَمِیْصُهٗ قُدَّ مِنْ دُبُرٍ فَكَذَبَتْ وَهُوَ مِنَ
الصّٰدِقِیْنَ ﴿۲۷﴾ فَلَمَّا رَاٰ قَمِیْصَهٗ قُدَّ مِنْ دُبُرٍ قَالَ اِنَّهٗ مِنْ
كَیْدِكُنَّ ؕ اِنَّ كَیْدَكُنَّ عَظِیْمٌ ﴿۲۸﴾ یُوْسُفُ اَعْرِضْ عَنْ هٰذَا ٚ
وَاسْتَغْفِرِیْ لِذَنْۢبِكِ ۖۚ اِنَّكِ كُنْتِ مِنَ الْخٰطِـِٕیْنَ ﴿۲۹﴾ وَقَالَ ع ۳ ۱۳
نِسْوَةٌ فِی الْمَدِیْنَةِ امْرَاَتُ الْعَزِیْزِ تُرَاوِدُ فَتٰىهَا عَنْ
نَّفْسِهٖ ۚ قَدْ شَغَفَهَا حُبًّا ؕ اِنَّا لَنَرٰىهَا فِیْ ضَلٰلٍ مُّبِیْنٍ ﴿۳۰﴾

23. மேலும், அவர் எவளுடைய வீட்டில் இருந்தாரோ, அவள் அவர் மீது காதல் கொண்டு, தன் விருப்பத்திற்கிணங்குமாறு எல்லாக் கதவுகளையும் மூடிவிட்டு அவரை "வாரும்" என்றழைத்தாள்; அ(தற்க)வர், "அல்லாஹ் (இத் தீய செயலிலிருந்து) காத்தருள்வானாகவும்! நிச்சயமாக என் எஜமானனாகிய (உன்கண)வர் என் தங்குமிடத்தை அழகாக்கி வைத்திருக்கிறார்; நிச்சயமாக, (இத்தகைய நன்மை செய்வோருக்குத் துரோகம் செய்யும்) அநியாயக்காரர்கள் வெற்றி பெறமாட்டார்கள்" என்று கூறினார்.

24. அவள் அவரை(அடைய) திடமாக ஆசைகொண்டு விட்டாள்; அவர் தன் இரட்சகனுடைய சான்றைக் கண்டிராவிடில், அவரும் அவள் மீது ஆசை கொண்டே இருப்பார்; தீமையையும், மானக்கேடான செயல்களையும் அவரைவிட்டும் நாம் திருப்பிவிடுவதற்காக (அவருக்கு) இவ்வாறு (எச்சரிக்கை செய்தோம்.) நிச்சயமாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நம் அடியார்களில் உள்ளவராவார்.

25. (யூசுஃப் அவளை விட்டுத் தப்பிக்க வெளியில் செல்ல ஓடினார்; அவள் அவரைப் பிடிக்க இவ்வாறாக) இருவரும், ஒருவரை ஒருவர் முந்திக் கொள்ள வாசல் பக்கம் ஓடினார்கள்;(யூசுஃப் முந்திக்கொள்ளவே, அவருடைய சட்டையை அவள் பிடித்திழுத்தாள்.) ஆகவே, அவருடைய சட்டையைப் பின்புறமாக அவள் கிழித்துவிட்டாள்; (அச்சமயம்) வாசலில் அவளுடைய கணவரை இருவரும் (காணப்)பெற்றனர்; (ஆகவே, அவள் தான் தப்பிக்க அவரிடம்,) "உம்முடைய மனைவிக்குத் தீங்கை நாடியவனுக்கு அவன் சிறையிலிடப்படுவதையோ அல்லது துன்புறுத்தும் வேதனையையோ தவிர (வேறு) என்ன தண்டனை (இருக்கக்கூடும்)?" என்று கூறினாள்.

26. (யூஸுஃப் அதனை மறுத்து,) "அவள்தான் தன் விருப்பத்திற்கிணங்குமாறு என்னை அழைத்தாள்" என்று கூறினார்; (அது சமயம்) அவளுடைய குடும்பத்திலிருந்தசாட்சியாளர் ஒருவர் (பின் வருமாறு) சாட்சி கூறினார் : "அவருடைய சட்டை முன்புறமாகக் கிழிக்கப்பட்டிருந்தால், அவள் உண்மை சொல்கிறாள்; அவரோ பொய்யர்களில் உள்ளவராவார்.

27. அன்றியும், அவருடைய சட்டை பின்புறமாக் கிழிக்கப்பட்டிருந்தால், அவள் பொய் சொல்கிறாள்; அவர் உண்மையாளர்களில் உள்ளவராவார்" (என்றார்).

28. ஆகவே, (யூஸுஃபாகிய) அவருடைய சட்டையை _ அது பின்புறமாகக் கிழிக்கப்பட்டிருப்பதை அவர் பார்த்தபோது (தன் மனைவியிடம்,) "நிச்சயமாக இது (பெண்களாகிய) உங்களுடைய சதியிலுள்ளதே; நிச்சயமாக உங்களின் சதி மகத்தானது" என்று கூறினார்.

29. (யூஸுஃபிடம்,) "யூஸுஃபே! நீர் இதனை விட்டும் புறக்கணித்து விடும் (என்று கூறி மீண்டும் அவளிடம்,) நீ உன் பாவத்திற்கு மன்னிப்புத் தேடிக்கொள்; நிச்சயமாக நீ தவறு செய்தவர்களில் இருக்கிறாய்" என்று (அவளது கணவராகிய) அவர் கூறினார்.

30. அப்பட்டணத்திலுள்ள பெண்கள் பலரும் "(எகிப்திய அரசின்) அமைச்சருடைய மனைவி தன்னுடைய (அடிமை) வாலிபனை தன் விருப்பத்திற் கிணங்குமாறு அழைக்கிறாள்; காதலால் அவர் அவளை மிகைத்து விட்டார்; நிச்சயமாக, அவளை பகிரங்கமான வழி கேட்டிலேயே நாம் காண்கின்றோம்" என்று( இழிவாகக்) கூறினர்.

فَلَمَّا سَمِعَتْ بِمَكْرِهِنَّ اَرْسَلَتْ اِلَيْهِنَّ وَاَعْتَدَتْ لَهُنَّ مُتَّكَاً
وَّاٰتَتْ كُلَّ وَاحِدَةٍ مِّنْهُنَّ سِكِّيْنًا وَّقَالَتِ اخْرُجْ عَلَيْهِنَّ ۚ فَلَمَّا
رَاَيْنَهٗۤ اَكْبَرْنَهٗ وَقَطَّعْنَ اَيْدِيَهُنَّ وَقُلْنَ حَاشَ لِلّٰهِ مَا هٰذَا بَشَرًا ؕ
اِنْ هٰذَاۤ اِلَّا مَلَكٌ كَرِيْمٌ ﴿٣١﴾ قَالَتْ فَذٰلِكُنَّ الَّذِيْ لُمْتُنَّنِيْ فِيْهِ ؕ وَ
لَقَدْ رَاوَدْتُّهٗ عَنْ نَّفْسِهٖ فَاسْتَعْصَمَ ؕ وَلَئِنْ لَّمْ يَفْعَلْ مَاۤ اٰمُرُهٗ
لَيُسْجَنَنَّ وَلَيَكُوْنًا مِّنَ الصّٰغِرِيْنَ ﴿٣٢﴾ قَالَ رَبِّ السِّجْنُ اَحَبُّ
اِلَيَّ مِمَّا يَدْعُوْنَنِيْۤ اِلَيْهِ ۚ وَاِلَّا تَصْرِفْ عَنِّيْ كَيْدَهُنَّ اَصْبُ
اِلَيْهِنَّ وَاَكُنْ مِّنَ الْجٰهِلِيْنَ ﴿٣٣﴾ فَاسْتَجَابَ لَهٗ رَبُّهٗ فَصَرَفَ عَنْهُ
كَيْدَهُنَّ ؕ اِنَّهٗ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ﴿٣٤﴾ ثُمَّ بَدَا لَهُمْ مِّنْۢ بَعْدِ مَا رَاَوُا
الْاٰيٰتِ لَيَسْجُنُنَّهٗ حَتّٰى حِيْنٍ ﴿٣٥﴾ وَدَخَلَ مَعَهُ السِّجْنَ فَتَيٰنِ ؕ قَالَ ع ٤ / ١٤
اَحَدُهُمَاۤ اِنِّيْۤ اَرٰىنِيْۤ اَعْصِرُ خَمْرًا ۚ وَقَالَ الْاٰخَرُ اِنِّيْۤ اَرٰىنِيْۤ اَحْمِلُ فَوْقَ
رَاْسِيْ خُبْزًا تَاْكُلُ الطَّيْرُ مِنْهُ ؕ نَبِّئْنَا بِتَاْوِيْلِهٖ ۚ اِنَّا نَرٰىكَ مِنَ
الْمُحْسِنِيْنَ ﴿٣٦﴾ قَالَ لَا يَاْتِيْكُمَا طَعَامٌ تُرْزَقٰنِهٖۤ اِلَّا نَبَّاْتُكُمَا
بِتَاْوِيْلِهٖ قَبْلَ اَنْ يَّاْتِيَكُمَا ؕ ذٰلِكُمَا مِمَّا عَلَّمَنِيْ رَبِّيْ ؕ اِنِّيْ تَرَكْتُ
مِلَّةَ قَوْمٍ لَّا يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَهُمْ بِالْاٰخِرَةِ هُمْ كٰفِرُوْنَ ﴿٣٧﴾

31. அவர்களின் சூழ்ச்சியை(எகிப்திய அரசின் அமைச்சருடைய மனைவியாகிய) அவள் செவியுற்றபோது, (அழைத்து வருபவரை அப்பெண்களாகிய ) அவர்கள் பால் அனுப்பினாள்.அவர்களுக்காக ஒரு விருந்து சபையை ஏற்பாடும்செய்தாள்; அ(ங்கு வந்திருந்த)வர்களில் ஒவ்வொருத்திக்கும் (ஒரு பழமும்,) ஒரு கத்தியும் கொடுத்தாள்; இன்னும் (யூஸுஃபாகிய )அவரை (அலங்கரித்து,) "அவர்கள் முன் வெளிப்படுவீராக" என்று கூறினாள்; (அப்பெண்களாகிய)அவர்கள் அவரைப் பார்த்த பொழுது (அவருடைய அழகில் மயங்கி ) அவரை மிக்க மேன்மையாகக் கண்டு, தங்கள் கை(விரல்)களை அறுத்துக் கொண்டனர்; மேலும், "அல்லாஹ் பரிசுத்தமானவன்! இவர் மனிதரல்ல; இவர் மேன்மைக்குரிய ஒரு மலக்கே தவிர (வேறு)இல்லை"என்றுகூறினார்கள்.

32. அ(தற்க)வள், "நீங்கள் எவரைப் பற்றி என்னை நிந்தித்தீர்களோ அவர் இவர்தான்; நிச்சயமாக,நான் தான் என் விருப்பத்திற்கிணங்குமாறுஅவரை நான் அழைத்தேன்; எனினும், அவர்(மன உறுதியுடன் தப்பித்து)விலகிக் கொண்டார்; இனியும் நான் கட்டளையிடுகிறபடி அவர் செய்யாவிடில், நிச்சயமாக அவர் சிறையிலிடப்படுவார்; மேலும் அவர் சிறுமைப்பட்டவர்களில் உள்ளவராக நிச்சயமாக ஆகிவிடுவார்," என்று கூறினாள்.

33. அ(தற்க)வர், "என் இரட்சகனே! அவர்கள் என்னை எதன்பக்கம் அழைக்கிறார்களோ அ(த் தீய காரியத்)தை விட சிறைக்கூடமே எனக்கு மிக விருப்பமானதாகும்; ஆகவே, (இப்பெண்களாகிய) அவர்களுடைய சூழ்ச்சியிலிருந்து நீ என்னைத் திருப்பாவிட்டால்,அவர்களின் பக்கம் சாய்ந்து விடுவேன்; மேலும்(பாவம்செய்யும்) அறிவீனர்களில் ஒருவனாக நான் ஆகிவிடுவேன்" என்று (பிரார்த்தித்துக்)கூறினார்.

34. எனவே அவரது பிரார்த்தனையை அவருடைய இரட்சகன் அங்கீகரித்தான்; பின்னர், (அப்பெண்களாகிய) அவர்களின் சூழ்ச்சியை அவரை விட்டும் திருப்பிவிட்டான்; நிச்சயமாக, அவனே செவியுறுகிறவன்; யாவையும் நன்கறிகிறவன்.

35. பின்னர், (யூஸுஃப் தூயவர் என்பதற்குரிய ) அத்தாட்சிகளை அவர்கள் கண்டதன் பிறகு,சிறிது காலம்வரை (யூஸுஃபாகிய) அவரை,அவர்கள் நிச்சயமாக சிறையிலிடுவார்கள் என அவர்களுக்குத் தோன்றியது (ஆகவே, அவரைச் சிறையிலிட்டனர்).

36. மேலும் (மற்ற குற்றங்களுக்காக வேறு ) இரு வாலிபர்கள் அவருடன் சிறையில் நுழைந்தனர்; அவ்விருவரில் ஒருவன் , "நான் (திராட்சையைப்பிழிந்து) மதுரஸம் தயார் செய்துகொண்டிருப்பதாக நிச்சயமாக என்னை நான் (கனவில்) கண்டேன் "என்று கூறினான்; மற்றவன், " என் தலையின் மீது ரொட்டியை சுமந்து கொண்டிருக்க அதிலிருந்து பட்சிகள் (கொத்திப்) புசிப்பதாக நிச்சயமாக என்னை நான் (கனவில்) கண்டேன்," என்று கூறி, "இவற்றின் விளக்கத்தை எங்களுக்கு நீர் தெரிவிப்பீராக! நிச்சயமாக நாங்கள் உம்மை மிக்க (ஞானமுடைய) நல்லவர்களில் (ஒருவராகக்) காண்கிறோம்" ( என்று யூஸுஃபிடம் கூறினார்கள் ).

37. (அதற்கு யூஸுஃப்,) நீங்களிருவரும் எதை உணவாக வழங்கப் படுகிறீர்களோ அது உங்களிருவருக்கும் வந்து சேரும் முன் அதன் விளக்கத்தை உங்களிருவருக்கும் நான் அறிவித்தே அல்லாது (அந்த)உணவு உங்களிருவருக்கும் வருவதில்லை; இவ்விரண்டு(க்குரிய விளக்கமு)ம் என் இரட்சகன் எனக்குக்கற்றுக் கொடுத்தவற்றில் உள்ளவையாகும்; அல்லாஹ்வை விசுவாசிக்காத சமூகத்தாரின் மார்க்கத்தை நிச்சயமாக நான் விட்டு விட்டேன்; இன்னும், அவர்கள்_ அவர்களே மறுமையை நிராகரிக்கக் கூடியவர்கள்.

وَاتَّبَعْتُ مِلَّةَ اٰبَآءِیْۤ اِبْرٰهِیْمَ وَاِسْحٰقَ وَیَعْقُوْبَ ؕ مَا كَانَ
لَنَاۤ اَنْ نُّشْرِكَ بِاللّٰهِ مِنْ شَیْءٍ ؕ ذٰلِكَ مِنْ فَضْلِ اللّٰهِ عَلَیْنَا
وَعَلَى النَّاسِ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا یَشْكُرُوْنَ ﴿۳۸﴾ یٰصَاحِبَیِ
السِّجْنِ ءَاَرْبَابٌ مُّتَفَرِّقُوْنَ خَیْرٌ اَمِ اللّٰهُ الْوَاحِدُ الْقَهَّارُ ﴿۳۹﴾ ؕ
مَا تَعْبُدُوْنَ مِنْ دُوْنِهٖۤ اِلَّاۤ اَسْمَآءً سَمَّیْتُمُوْهَاۤ اَنْتُمْ وَ
اٰبَآؤُكُمْ مَّاۤ اَنْزَلَ اللّٰهُ بِهَا مِنْ سُلْطٰنٍ ؕ اِنِ الْحُكْمُ اِلَّا لِلّٰهِ ؕ
اَمَرَ اَلَّا تَعْبُدُوْۤا اِلَّاۤ اِیَّاهُ ؕ ذٰلِكَ الدِّیْنُ الْقَیِّمُ وَلٰكِنَّ اَكْثَرَ
النَّاسِ لَا یَعْلَمُوْنَ ﴿۴۰﴾ یٰصَاحِبَیِ السِّجْنِ اَمَّاۤ اَحَدُكُمَا
فَیَسْقِیْ رَبَّهٗ خَمْرًا ۚ وَاَمَّا الْاٰخَرُ فَیُصْلَبُ فَتَاْكُلُ الطَّیْرُ
مِنْ رَّاْسِهٖ ؕ قُضِیَ الْاَمْرُ الَّذِیْ فِیْهِ تَسْتَفْتِیٰنِ ﴿۴۱﴾ ؕ وَقَالَ
لِلَّذِیْ ظَنَّ اَنَّهٗ نَاجٍ مِّنْهُمَا اذْكُرْنِیْ عِنْدَ رَبِّكَ ؗ فَاَنْسٰىهُ
الشَّیْطٰنُ ذِكْرَ رَبِّهٖ فَلَبِثَ فِی السِّجْنِ بِضْعَ سِنِیْنَ ﴿۴۲﴾ ع ع ٥ ١٥
وَقَالَ الْمَلِكُ اِنِّیْۤ اَرٰى سَبْعَ بَقَرٰتٍ سِمَانٍ یَّاْكُلُهُنَّ
سَبْعٌ عِجَافٌ وَّسَبْعَ سُنْۢبُلٰتٍ خُضْرٍ وَّاُخَرَ یٰبِسٰتٍ ؕ یٰۤاَیُّهَا
الْمَلَاُ اَفْتُوْنِیْ فِیْ رُءْیَایَ اِنْ كُنْتُمْ لِلرُّءْیَا تَعْبُرُوْنَ ﴿۴۳﴾

38. அன்றியும், என்னுடைய மூதாதையர்களான இப்றாஹீம், இஸ்ஹாக், யஃகூப் ஆகியோரின் மார்க்கத்தையே நான் பின்பற்றிவிட்டேன்; (ஆதலால்,) அல்லாஹ்வுக்கு எப்பொருளையும் நாங்கள் இணையாக்குவது எங்களுக்குத் தகுமானதல்ல; இ(க் கொள்கை மீது இருப்ப)து, எங்கள் மீதும், (மற்ற) மனிதர்கள் மீதும் அல்லாஹ் புரிந்த பேரருளாகும்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர், (அல்லாஹ்வின் அருளுக்கு) நன்றி செலுத்த மாட்டார்கள்.

39. சிறைச்சாலையின் என்னிரு தோழர்களே! (யாதொரு சக்தியுமற்ற) பல்வேறு தெய்வங்கள் மேலா? அல்லது (யாவற்றையும்) அடக்கி ஆளுகின்ற ஒருவனான அல்லாஹ்வா?

40. அவனையன்றி நீங்கள் வணங்குபவை வெறும் (கற்பனைப்) பெயர்களைத் தவிர (வேறொன்றும்) இல்லை; நீங்களும் உங்கள் மூதாதையர்களும் அவற்றைப் பெயர்களாக வைத்துக்கொண்டீர்கள்; அல்லாஹ் இதற்கு யாதோர் ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை; அல்லாஹ் ஒருவனுக்கேயன்றி (மற்றெவருக்கும்) அதிகாரம் இல்லை; அவனைத் தவிர (மற்றெவரையும்) நீங்கள் வணங்கக் கூடாதென்று அவனே கட்டளையிட்டிருக்கின்றான்; இதுதான் நிலையான மார்க்கமாகும்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்து கொள்ளமாட்டார்கள் (என்று யூஸுஃப் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்த பின்);

41. (அவர்களிடம்,) "சிறைச்சாலையின் என்னிரு தோழர்களே! (உங்கள் கனவுகளின் விளக்கம்:) உங்களில் ஒருவன் (முன் போலவே) தன் எஜமானனுக்கு மது ரஸம் புகட்டிக்கொண்டிருப்பான்; மற்றொருவனோ சிலுவையில் அறையப்பட்டு, அவன் தலையிலிருந்து பட்சிகள் (கொத்தித்) தின்னும்; எதில் நீங்கள் இருவரும் விளக்கம் தேடினீர்களோ அக்காரியம் விதிக்கப்பட்டு விட்டது (அவ்வாறு நடந்தே தீரும்)" என்று கூறினார்.

42. அவ்விருவரில் எவர் நிச்சயமாக விடுதலை பெறுவார் என அவர் எண்ணினாரோ அத்தகையவரிடம், "நீ உன் எஜமானனிடம் என்னைப்பற்றிக் கூறுவாயாக!" என்று (யூஸுஃபாகிய) அவர் கூறினார்; ஆனால் (சிறைக் கூடத்திலிருந்து வெளியேறிய) அவர் தன் எஜமானனிடம் கூற இருந்த (எண்ணத்)தை ஷைத்தான் அவருக்கு மறக்கடித்துவிட்டான்; ஆதலால் அவர் சிறைக் கூடத்தில் (பின்னும்) சில ஆண்டுகள் தங்கிவிட்டார்.

43. மேலும், (எகிப்தின்) அரசர், (தம் பிரதானிகளிடம்,) "கொழுத்துப் பருத்த ஏழு பசுக்கள் — அவற்றை இளைத்து வற்றிய ஏழு பசுக்கள் புசிப்பதாகவும், நன்கு விளைந்த பசுமையான ஏழு கதிர்களையும், காய்ந்த வேறு (ஏழு) கதிர்களையும் நிச்சயமாக நான் (கனவில்) கண்டேன்; என் பிரதானிகளே! நீங்கள் கனவுகளுக்கு விளக்கம் கூறக்கூடியவர்களாக இருந்தால் என்னுடைய கனவுக்கு விளக்கம் கூறுங்கள்" என்று கூறினார்.

قَالُوْٓا اَضْغَاثُ اَحْلَامٍ ۚ وَمَا نَحْنُ بِتَاْوِيْلِ الْاَحْلَامِ بِعٰلِمِيْنَ ﴿۴۴﴾
وَقَالَ الَّذِیْ نَجَا مِنْهُمَا وَادَّكَرَ بَعْدَ اُمَّةٍ اَنَا اُنَبِّئُكُمْ بِتَاْوِيْلِهٖ
فَاَرْسِلُوْنِ ﴿۴۵﴾ يُوْسُفُ اَيُّهَا الصِّدِّيْقُ اَفْتِنَا فِیْ سَبْعِ بَقَرٰتٍ
سِمَانٍ يَّاْكُلُهُنَّ سَبْعٌ عِجَافٌ وَّسَبْعِ سُنْۢبُلٰتٍ خُضْرٍ وَّاُخَرَ
يٰبِسٰتٍ ۙ لَّعَلِّیْٓ اَرْجِعُ اِلَى النَّاسِ لَعَلَّهُمْ يَعْلَمُوْنَ ﴿۴۶﴾ قَالَ تَزْرَعُوْنَ
سَبْعَ سِنِيْنَ دَاَبًا ۚ فَمَا حَصَدْتُّمْ فَذَرُوْهُ فِیْ سُنْۢبُلِهٖٓ اِلَّا قَلِيْلًا
مِّمَّا تَاْكُلُوْنَ ﴿۴۷﴾ ثُمَّ يَاْتِیْ مِنْۢ بَعْدِ ذٰلِكَ سَبْعٌ شِدَادٌ يَّاْكُلْنَ مَا
قَدَّمْتُمْ لَهُنَّ اِلَّا قَلِيْلًا مِّمَّا تُحْصِنُوْنَ ﴿۴۸﴾ ثُمَّ يَاْتِیْ مِنْۢ بَعْدِ ذٰلِكَ
عَامٌ فِيْهِ يُغَاثُ النَّاسُ وَفِيْهِ يَعْصِرُوْنَ ﴿۴۹﴾ وَقَالَ الْمَلِكُ ائْتُوْنِیْ ع ٧ ١٦
بِهٖ ۚ فَلَمَّا جَآءَهُ الرَّسُوْلُ قَالَ ارْجِعْ اِلٰی رَبِّكَ فَسْـَٔلْهُ مَا بَالُ
النِّسْوَةِ الّٰتِیْ قَطَّعْنَ اَيْدِيَهُنَّ ؕ اِنَّ رَبِّیْ بِكَيْدِهِنَّ عَلِيْمٌ ﴿۵۰﴾
قَالَ مَا خَطْبُكُنَّ اِذْ رَاوَدْتُّنَّ يُوْسُفَ عَنْ نَّفْسِهٖ ؕ قُلْنَ حَاشَ
لِلّٰهِ مَا عَلِمْنَا عَلَيْهِ مِنْ سُوْٓءٍ ؕ قَالَتِ امْرَاَتُ الْعَزِيْزِ الْـٰٔنَ حَصْحَصَ
الْحَقُّ ۡ اَنَا رَاوَدْتُّهٗ عَنْ نَّفْسِهٖ وَاِنَّهٗ لَمِنَ الصّٰدِقِيْنَ ﴿۵۱﴾ ذٰلِكَ لِيَعْلَمَ
اَنِّیْ لَمْ اَخُنْهُ بِالْغَيْبِ وَاَنَّ اللّٰهَ لَا يَهْدِیْ كَيْدَ الْخَآئِنِيْنَ ﴿۵۲﴾

44. அ(தற்க)வர்கள், "இது பொய்க் கனவுகளாகும்; (இத்தகைய) பொய்க் கனவுகளுக்கு விளக்கம்கூற நாங்கள் அறிந்தோராக இல்லை" என்று கூறினார்கள்.

45. மேலும் அவ்விருவரில், விடுதலையடைந்தவர், இன்னும் பல ஆண்டுகளுக்குப் பின்னர் (யூசுஃபை) நினைவுபடுத்திக் கொண்டவராகிய அவர், "இக்கனவின் விளக்கத்தை நான் உங்களுக்கு அறிவிப்பேன்; ஆகவே, என்னை (சிறைக் கூடத்திற்கு)அனுப்பி வையுங்கள்" என்று கூறினான்.

46. (சிறைக்கூடம் சென்று அவன்,) "யூஸுஃபே! உண்மையாளரே! கொழுத்துப் பருத்த ஏழு பசுக்களை _அவற்றை இளைத்து வற்றிய ஏழு பசுக்கள் புசிப்பதைப் பற்றியும், நன்கு விளைந்த பசுமையான ஏழு கதிர்களையும் (சாவியாகிய) காய்ந்து உலர்ந்த மற்ற (ஏழு) கதிர்களையும் (கனவில் கண்டால் அதன் பொருள் என்ன? என்பதைப்) பற்றி நீர் எங்களுக்கு அறிவிப்பீராக; என்னை (அனுப்பிய) மக்கள் (இதனைத்) தெரிந்து கொள்வதற்காக அவர்களிடம் நான் திரும்பிச் செல்ல வேண்டியதிருக்கின்றது" (என்று கேட்டார்).

47. அ(தற்க)வர், "தொடர்ந்து வழக்கப்படி (நல்ல விதமாக) ஏழு ஆண்டுகள் நீங்கள் விவசாயம் செய்வீர்கள்; நீங்கள் அறுவடை செய்வதை _ நீங்கள் உண்பதற்கு வேண்டிய ஒருசொற்ப அளவைத் தவிர_(மற்ற யாவற்றையும்) அதன் கதிர்களிலேயே விட்டு வையுங்கள் என்று கூறினார்.

48. "பின்னர், அதற்கப்பால், கடினமான (பஞ்சத்தைக் கொண்ட) ஏழு (ஆண்டுகள்) வரும். நீங்கள் சேமித்து வைத்திருப்பவற்றிலிருந்து, (பஞ்சமான வருடங்களாகிய)அவைகளுக்காக நீங்கள் (கதிர்களில்)முற்படுத்திவைத்தவற்றில் குறைவானவற்றைத் தவிர (மற்றதை) அவை தின்று விடும்.

49. பின்னர், " அதற்கப்பால் ஒரு வருடம் வரும்; அதில் மனிதர்கள் ஏராளமாக மழை பொழிவிக்கப்படுவர்; (கனிவர்க்கங்களிருந்து அவற்றின் ரஸத்தைப்) பிழிந்து கொண்டுமிருப்பார்கள்" (என்றும் கூறினார்.)

50. மேலும், (கனவுகளின் விளக்கம்பற்றி அவன் கேட்டு வந்ததை அரசருக்கு அவன் அறிவிக்கவே) அதற்கு அரசர், "(இவ்விளக்கங் கூறிய) அவரை என்னிடம் கொண்டு வாருங்கள்" எனக்(கட்டளையிட்டுக்)கூறினார்; அவருடைய தூதர் யூஸுஃபிடம் (இதுபற்றிச் சொல்ல) வரவே, (அவரிடம்) "நீர் உம் எஜமானனிடம் திரும்பிச் சென்று, தங்கள் கைகளை வெட்டிக்கொண்டவர்களான பெண்களின் நிலை என்ன?" என்று அவரைக்கேளும்; நிச்சயமாக, அவர்களின் சூழ்ச்சியை என் இரட்சகன் நன்கறிந்தவன்" என்று கூறினார்.

51. (அதற்கரசர், அப்பெண்களை அழைத்து,) "நீங்கள் யூஸுஃபை (கண்டு) விரும்பியபோது உங்களுக்கு நேர்ந்ததென்ன?" என்று கேட்டார்; அ(தற்க)வர்கள், "அல்லாஹ் தூய்மையானவன்; நாங்கள் அவரிடத்தில் யாதொரு தீங்கையும் அறியவில்லை" என்று கூறிவிட்டார்கள்; (எகிப்திய அரசின்) அமைச்சருடைய மனைவி, "உண்மை இப்போது வெளிப்பட்டுவிட்டது. நான்தான் என் விருப்பத்திற்கிணங்குமாறு அவரை அழைத்தேன்; (யூஸுஃப் அழைக்கவில்லை) நிச்சயமாக, அவர் உண்மையாளர்களில் உள்ளவர்" என்று கூறினாள்_

52. இதன் காரணம்: நிச்சயமாக (என்னைவிட்டு அவரும், அவரை விட்டு நானும்) மறைவாக இருந்த சமயத்தில் அவருக்கு நான் துரோகம் செய்யவில்லை என்பதையும், நிச்சயமாக அல்லாஹ் துரோகிகளின் சூழ்ச்சிக்கு வழி காட்டமாட்டான் என்பதையும் அவர் அறிந்து கொள்வதற்காகவேதான்" (என்றும்);

الجزء ۱۳ وَمَاۤ اُبَرِّئُ نَفۡسِیۡ ۚ اِنَّ النَّفۡسَ لَاَمَّارَۃٌۢ بِالسُّوۡٓءِ اِلَّا
مَا رَحِمَ رَبِّیۡ ؕ اِنَّ رَبِّیۡ غَفُوۡرٌ رَّحِیۡمٌ ﴿۵۳﴾ وَ قَالَ الۡمَلِکُ ائۡتُوۡنِیۡ
بِہٖۤ اَسۡتَخۡلِصۡہُ لِنَفۡسِیۡ ۚ فَلَمَّا کَلَّمَہٗ قَالَ اِنَّکَ الۡیَوۡمَ لَدَیۡنَا
مَکِیۡنٌ اَمِیۡنٌ ﴿۵۴﴾ قَالَ اجۡعَلۡنِیۡ عَلٰی خَزَآئِنِ الۡاَرۡضِ ۚ اِنِّیۡ حَفِیۡظٌ
عَلِیۡمٌ ﴿۵۵﴾ وَ کَذٰلِکَ مَکَّنَّا لِیُوۡسُفَ فِی الۡاَرۡضِ ۚ یَتَبَوَّاُ مِنۡہَا حَیۡثُ
یَشَآءُ ؕ نُصِیۡبُ بِرَحۡمَتِنَا مَنۡ نَّشَآءُ وَ لَا نُضِیۡعُ اَجۡرَ الۡمُحۡسِنِیۡنَ ﴿۵۶﴾
وَ لَاَجۡرُ الۡاٰخِرَۃِ خَیۡرٌ لِّلَّذِیۡنَ اٰمَنُوۡا وَ کَانُوۡا یَتَّقُوۡنَ ﴿۵۷﴾ ع وَ جَآءَ ع ۷ / ۱
اِخۡوَۃُ یُوۡسُفَ فَدَخَلُوۡا عَلَیۡہِ فَعَرَفَہُمۡ وَ ہُمۡ لَہٗ مُنۡکِرُوۡنَ ﴿۵۸﴾ وَ
لَمَّا جَہَّزَہُمۡ بِجَہَازِہِمۡ قَالَ ائۡتُوۡنِیۡ بِاَخٍ لَّکُمۡ مِّنۡ اَبِیۡکُمۡ ۚ اَلَا
تَرَوۡنَ اَنِّیۡۤ اُوۡفِی الۡکَیۡلَ وَ اَنَا خَیۡرُ الۡمُنۡزِلِیۡنَ ﴿۵۹﴾ فَاِنۡ لَّمۡ تَاۡتُوۡنِیۡ
بِہٖ فَلَا کَیۡلَ لَکُمۡ عِنۡدِیۡ وَ لَا تَقۡرَبُوۡنِ ﴿۶۰﴾ قَالُوۡا سَنُرَاوِدُ عَنۡہُ
اَبَاہُ وَ اِنَّا لَفٰعِلُوۡنَ ﴿۶۱﴾ وَ قَالَ لِفِتۡیٰنِہِ اجۡعَلُوۡا بِضَاعَتَہُمۡ فِیۡ
رِحَالِہِمۡ لَعَلَّہُمۡ یَعۡرِفُوۡنَہَاۤ اِذَا انۡقَلَبُوۡۤا اِلٰۤی اَہۡلِہِمۡ لَعَلَّہُمۡ
یَرۡجِعُوۡنَ ﴿۶۲﴾ فَلَمَّا رَجَعُوۡۤا اِلٰۤی اَبِیۡہِمۡ قَالُوۡا یٰۤاَبَانَا مُنِعَ مِنَّا
الۡکَیۡلُ فَاَرۡسِلۡ مَعَنَاۤ اَخَانَا نَکۡتَلۡ وَ اِنَّا لَہٗ لَحٰفِظُوۡنَ ﴿۶۳﴾

53. "மேலும், நான் (யூஸுஃபின் மீது மோகங்கொள்ளவில்லை என்று கூறி) என் மனதைநான் தூய்மைப்படுத்தவில்லை;(ஏனென்றால்) நிச்சயமாக என் இரட்சகன் அருள் புரிந்தவரையன்றி, (மனிதனுடைய) மனம் பாவம் செய்யும்படி அதிகம் தூண்டக்கூடியதாகவே இருக்கின்றது; நிச்சயமாக என் இரட்சகன் மிக்க மன்னிப்பவன்; மிகக் கிருபையுடையவன்" (என்று எகிப்திய அரசரின் அமைச்சருடைய மனைவி கூறினாள்)(16)

54. (சிறைச் சாலையிலிருக்கும் யூஸுஃபின் ஞானத்தை அறிந்த )அரசர்: "அவரை என்னிடம் (அழைத்துக்)கொண்டு வாருங்கள் ; எனக்கு மட்டும் பிரத்தியேக மானவராக அவரை நான் அமர்த்திக் கொள்வேன்" என்று கூறினார்; (ஆகவே சிறையிலிருந்து வெளியாகிய) அவருடன் பேசிய பொழுது, நிச்சயமாக நீர் இன்றிலிருந்து நம்மிடம் பெரும் மதிப்பும், நம்பிக்கையும் பெற்றவராக இருக்கிறீர்" என்று கூறினார்.

55. அ(தற்க)வர், "இந்தப் பூமியின் களஞ்சியங்களின்மீது( நிர்வாகியாக )என்னை ஆக்கிவிடும்; நிச்சயமாக நான் (அவற்றைப்) பாதுகாக்கக் கூடியவன்; நன்கறிந்தவன்" என்று சொன்னார் (அரசரும் அவ்வாறே செய்தார்).

56. இவ்வாறே யூஸுஃபுக்கு பூமியில் அவர் விரும்பியவாறு வசித்துக்கொள்ள நாம் அவருக்கு வசதியளித்தோம்; நாம் விரும்பியவர்களுக்கு (இவ்வாறே) நம் அருளை கிடைக்கும்படிச்செய்கிறோம்; நன்மை செய்பவர்களின் கூலியை நாம் வீணாக்கிவிடவுமாட்டோம்.

57. மேலும், விசுவாசங் கொண்டு, பயபக்தியுடையவர்களாகவும் இருந்தார்களே அவர்களுக்கு மறுமையின் கூலியானது மிக மேலானதாக இருக்கும்.

58. மேலும், யூஸுஃபுடைய சகோதரர்கள் (கன்ஆனிலிருந்து) வந்து, அவரிடம் நுழைந்த பொழுது, அவர்களோ அவரை(யூஸுஃபை) அறியாதவர்களாக இருந்த நிலையில் அவர்களை (தன் சகோதரர்கள் என யூஸுஃபாகிய) அவர் அறிந்து கொண்டார்.

59. மேலும், (யூஸுஃபாகிய) அவர் அவர்களுக்கு (வேண்டிய ) தானியங்களைச் தயார்ப்படுத்திக் கொடுத்தபோது, (மறுமுறை நீங்கள் வந்தால் ) "உங்களுடைய தந்தையிலிருந்துள்ள உங்களுக்குரிய சகோதர(ன் புன்யாமீ) னையும் என்னிடம் (அழைத்துக்) கொண்டுவாருங்கள்; நான் நிச்சயமாக (உங்களுக்கு தானியங் களைப்) பூர்த்தியாக்குபவன் என்பதையும், விருந்துபசாரம் செய்பவர்களில் நான் மிகச் சிறந்தவன் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா?" என்று கூறினார்.

60. "ஆகவே, நீங்கள் அவரை என்னிடம் கொண்டு வராவிடில், என்னிடம் உங்களுக்கு (தானியத்தை) அளப்பது இல்லை, நீங்கள் என்னை நெருங்கவும் வேண்டாம்" (என்று கூறினார்).

61. அ(தற்க) வர்கள், "நாங்கள் அவருடைய தந்தையிடம் (உங்களிடம் அவரைக் கொண்டுவர) அவரைப் பற்றி (சாத்தியமான எல்லா) முயற்சிகளையும் மேற்கொள்வோம்; நிச்சயமாக நாங்கள் (அதைச்) செய்பவர்களாகவும் இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

62. (பின்னர் யூஸுஃப்) தன் பணியாட்களிடம், " (கிரயமாகக் கொடுத்த) அவர்களின் பொருளை அவர்களுடைய (பொதி) மூட்டைகளில்ஆக்கி (மறைத்து வைத்து)விடுங்கள்; அவர்கள் தங்கள் குடும்பத்தாரிடம் திரும்பிச் சென்றடைந்தால், (தானிய மூட்டைகளை அவிழ்க்கும்போது ) அதனை அவர்கள் அறிந்துகொண்டு, (அதனை நம்மிடம் செலுத்த) அவர்கள் திரும்பி வரக்கூடும்" என்று கூறினார்.

63. அவர்கள் தம் தந்தையிடம் திரும்பி வந்தபொழுது, "எங்கள் தந்தையே! எங்களுக்கு (த் தானியம்) அளப்பது தடுக்கப்பட்டு விட்டது ; ஆதலால் , எங்கள் சகோதரனையும் எங்களுடன் அனுப்பிவையுங்கள். நாங்கள் தானியம் அளந்து வாங்கிக்கொண்டு , நிச்சயமாக அவரையும் பாதுகாப்பவர்களாக இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

قَالَ هَلْ اٰمَنُكُمْ عَلَيْهِ اِلَّا كَمَآ اَمِنْتُكُمْ عَلٰٓى اَخِيْهِ مِنْ قَبْلُ ؕ
فَاللّٰهُ خَيْرٌ حٰفِظًا ۪ وَّهُوَ اَرْحَمُ الرّٰحِمِيْنَ ﴿٦٤﴾ وَلَمَّا فَتَحُوْا
مَتَاعَهُمْ وَجَدُوْا بِضَاعَتَهُمْ رُدَّتْ اِلَيْهِمْ ؕ قَالُوْا يٰٓاَبَانَا مَا
نَبْغِيْ ؕ هٰذِهٖ بِضَاعَتُنَا رُدَّتْ اِلَيْنَا ۚ وَنَمِيْرُ اَهْلَنَا وَنَحْفَظُ اَخَانَا
وَنَزْدَادُ كَيْلَ بَعِيْرٍ ؕ ذٰلِكَ كَيْلٌ يَّسِيْرٌ ﴿٦٥﴾ قَالَ لَنْ اُرْسِلَهٗ
مَعَكُمْ حَتّٰى تُؤْتُوْنِ مَوْثِقًا مِّنَ اللّٰهِ لَتَاْتُنَّنِيْ بِهٖٓ اِلَّآ اَنْ
يُّحَاطَ بِكُمْ ۚ فَلَمَّآ اٰتَوْهُ مَوْثِقَهُمْ قَالَ اللّٰهُ عَلٰى مَا نَقُوْلُ وَكِيْلٌ ﴿٦٦﴾
وَقَالَ يٰبَنِيَّ لَا تَدْخُلُوْا مِنْۢ بَابٍ وَّاحِدٍ وَّادْخُلُوْا مِنْ
اَبْوَابٍ مُّتَفَرِّقَةٍ ؕ وَمَآ اُغْنِيْ عَنْكُمْ مِّنَ اللّٰهِ مِنْ شَيْءٍ ؕ
اِنِ الْحُكْمُ اِلَّا لِلّٰهِ ؕ عَلَيْهِ تَوَكَّلْتُ ۚ وَعَلَيْهِ فَلْيَتَوَكَّلِ
الْمُتَوَكِّلُوْنَ ﴿٦٧﴾ وَلَمَّا دَخَلُوْا مِنْ حَيْثُ اَمَرَهُمْ اَبُوْهُمْ ؕ مَا
كَانَ يُغْنِيْ عَنْهُمْ مِّنَ اللّٰهِ مِنْ شَيْءٍ اِلَّا حَاجَةً فِيْ نَفْسِ
يَعْقُوْبَ قَضٰىهَا ؕ وَاِنَّهٗ لَذُوْ عِلْمٍ لِّمَا عَلَّمْنٰهُ وَلٰكِنَّ اَكْثَرَ
ع ٨ ١١ ٢ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿٦٨﴾ وَلَمَّا دَخَلُوْا عَلٰى يُوْسُفَ اٰوٰٓى اِلَيْهِ
اَخَاهُ قَالَ اِنِّيْٓ اَنَا اَخُوْكَ فَلَا تَبْتَىِٕسْ بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿٦٩﴾

64. அதற்கு (யாஃகூபாகிய)அவர், "இதற்கு முன்னர் இவருடைய சகோதரர் (யூஸுஃப்) விஷயத்தில் நான் உங்களை நம்பி(மோசம்போ)னது போல் அல்லாது இவர் விஷயத்திலும் நான் உங்களை நம்புவேனா? (முடியாது) ஆகவே, பாதுகாப்பவனில் அல்லாஹ் மிக்க மேலானவன்; மேலும், அவனே அருள் புரிவோரிலெல்லாம்மிக்கஅருளாளன்" என்றுகூறிவிட்டார்.

65. இன்னும், அவர்கள் தங்கள் சாமான் (மூட்டை)களை அவிழ்த்தபொழுது, அவர்கள் (கிரயமாகக்)கொடுத்த பொருளை அவர்களிடமே திருப்பப் பட்டுவிட்டதைக் கண்டு, "எங்கள் தந்தையே! (இன்னும்,) நாங்கள் எதைத் தேடுவோம்? இதோ, நாம்(கிரயமாகக்)கொடுத்த பொருள் நம்மிடமே திருப்பப்பட்டுவிட்டது; (ஆகவே, புன்யாமீனையும் அழைத்துச் செல்ல அனுமதி தாருங்கள்.) நம் குடும்பத்திற்கு வேண்டிய தானியங்களையும் நாங்கள் வாங்கி வருவோம்; எங்கள் சகோதரனையும் பாதுகாத்து வருவோம்; (அவருக்காகவும்) ஓர் ஒட்டகச் சுமை தானியத்தை அதிகமாகவும் கொண்டு வருவோம்.இ(வ்வாறு அவர்கள் அதிகமாகக் கொடுப்ப)து, எளிதான (தானிய) அளவைதான்" என்று கூறினார்கள்.

66. (அதற்கு) "உங்கள் யாவரையும் (ஏதேனும் ஆபத்து) சூழ்ந்துகொண்டாலன்றி, நிச்சயமாக அவரை என்னிடம் கொண்டு வருவீர்களென்று அல்லாஹ்வின்மீது நீங்கள் (யாவரும்) எனக்கு உறுதிமொழி கொடுக்கும்வரை, நான் அவரை உங்களுடன்அனுப்பவே மாட்டேன்," என்று (யாஃகூப் நபியாகிய)அவர் கூறினார்; ஆகவே அவர்கள் (அவ்வாறு) அவருக்கு உறுதிமொழி கொடுக்கவே, (அதற்கு) அவர் "நாம் பேசிக்கொண்டதற்கு அல்லாஹ்வே கண்காணிப்பவனாக இருக்கிறான்" என்று கூறினார்;

67. இன்னும் (அவர்களிடம்,) "என் (அருமை) மக்களே! (எகிப்தினுள்) ஒரே வாசலில் நுழையாதீர்கள்; வெவ்வேறு வாசல்களில் நுழையுங்கள்; அல்லாஹ்விலிருந்து (ஏற்படவிருக்கும்)எந்த ஒன்றை விட்டும் உங்களை நான் தடுத்து விடவும் முடியாது; (ஏனென்றால், சகல) அதிகாரம் அல்லாஹ்வுக்கேயன்றி (வேறெவருக்கும்) இல்லை; (உங்கள் யாவரையும் அவனிடமே ஒப்படைத்து முழுமையாக) அவன் மீது நம்பிக்கை வைத்துவிட்டேன்; ஆகவே, (முழுமையாக) நம்பிக்கை வைக்கிறவர்கள் (இவ்வாறே) அவன் மீதே (முழுமையாக) நம்பிக்கை வைக்கவும்" என்றார்.

68. மேலும், அவர்களின் தந்தை அவர்களுக்குக் கட்டளையிட்டவாறு அவர்கள் (எகிப்தில்) நுழைந்தபோது, யாஃகூபினுடைய மனதிலிருந்த ஒருதேவையை_அதை அவர் நிறைவேற்றி விட்டார் என்பதைத் தவிர, அல்லாஹ்விடமிருந்து (ஏற்படயிருந்த )எந்த ஒன்றையும் அவர்களைவிட்டு அவர் தடுத்து விடுபவராக இருக்கவில்லை; மேலும், நாம் அவருக்குக் கற்றுக் கொடுத்தவற்றில் நிச்சயமாக அவர் அறிவுடையவராக இருந்தார்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (அதனை) அறியமாட்டார்கள்.

69. மேலும், யூஸுஃபிடம் அவர்கள் நுழைந்தபொழுது, அவர் தன் சகோதர(ன் புன்யாமீ)னைத் (தனியாக அழைத்து) தன்பால் ஒதுக்கிக் கொண்டு "நிச்சயமாக நான்தான் உம்முடைய சகோதரன் (யூஸுஃப்); ஆகவே, (எனக்கு இவர்கள்) செய்தவற்றைப் பற்றி நீர் கவலைப்படாதீர்" என்று (இரகசியமாகக்) கூறினார்.

فَلَمَّا جَهَّزَهُمْ بِجَهَازِهِمْ جَعَلَ السِّقَايَةَ فِيْ رَحْلِ
اَخِيْهِ ثُمَّ اَذَّنَ مُؤَذِّنٌ اَيَّتُهَا الْعِيْرُ اِنَّكُمْ لَسٰرِقُوْنَ ۝۷۰ قَالُوْا
وَاَقْبَلُوْا عَلَيْهِمْ مَّاذَا تَفْقِدُوْنَ ۝۷۱ قَالُوْا نَفْقِدُ صُوَاعَ
الْمَلِكِ وَلِمَنْ جَآءَ بِهٖ حِمْلُ بَعِيْرٍ وَّاَنَا بِهٖ زَعِيْمٌ ۝۷۲
قَالُوْا تَاللّٰهِ لَقَدْ عَلِمْتُمْ مَّا جِئْنَا لِنُفْسِدَ فِي الْاَرْضِ وَمَا
كُنَّا سٰرِقِيْنَ ۝۷۳ قَالُوْا فَمَا جَزَآؤُهٗۤ اِنْ كُنْتُمْ كٰذِبِيْنَ ۝۷۴ قَالُوْا
جَزَآؤُهٗ مَنْ وُّجِدَ فِيْ رَحْلِهٖ فَهُوَ جَزَآؤُهٗ ؕ كَذٰلِكَ نَجْزِي
الظّٰلِمِيْنَ ۝۷۵ فَبَدَاَ بِاَوْعِيَتِهِمْ قَبْلَ وِعَآءِ اَخِيْهِ ثُمَّ
اسْتَخْرَجَهَا مِنْ وِّعَآءِ اَخِيْهِ ؕ كَذٰلِكَ كِدْنَا لِيُوْسُفَ ؕ مَا
كَانَ لِيَاْخُذَ اَخَاهُ فِيْ دِيْنِ الْمَلِكِ اِلَّاۤ اَنْ يَّشَآءَ اللّٰهُ ؕ نَرْفَعُ
دَرَجٰتٍ مَّنْ نَّشَآءُ ؕ وَفَوْقَ كُلِّ ذِيْ عِلْمٍ عَلِيْمٌ ۝۷۶ قَالُوْۤا اِنْ
يَّسْرِقْ فَقَدْ سَرَقَ اَخٌ لَّهٗ مِنْ قَبْلُ ۚ فَاَسَرَّهَا يُوْسُفُ فِيْ
نَفْسِهٖ وَلَمْ يُبْدِهَا لَهُمْ ۚ قَالَ اَنْتُمْ شَرٌّ مَّكَانًا ۚ وَاللّٰهُ اَعْلَمُ
بِمَا تَصِفُوْنَ ۝۷۷ قَالُوْا يٰۤاَيُّهَا الْعَزِيْزُ اِنَّ لَهٗۤ اَبًا شَيْخًا
كَبِيْرًا فَخُذْ اَحَدَنَا مَكَانَهٗ ۚ اِنَّا نَرٰىكَ مِنَ الْمُحْسِنِيْنَ ۝۷۸

70. பின்னர், அவர்களுக்கு வேண்டிய தானியங்களைத் தயார் செய்த பொழுது, தன்னுடைய சகோதர(ன் புன்யாமீ)னுடைய சுமையில் (ஒரு பொற்) குவளையை ஆக்கி விட்டார்; பின்னர், (அவர்கள் சிறிது தூரம் செல்லவே) "ஓ! ஒட்டகக் கூட்டத்தார்களே! நிச்சயமாக நீங்கள் திருடர்களே" என்று ஓர் அறிவிப்பாளர் அறிவித்தார்.

71. அ(தற்க)வர்கள், இவர்களை முன்னோக்கி வந்து " நீங்கள் எதை இழந்துவிட்டீர்கள்?" என்று கேட்டார்கள்.

72. அ(தற்க)வர்கள் , "அரசருடைய (ஒரு பொற்) குவளையை நாங்கள் இழந்துவிட்டோம்; மேலும், அதனை எவர் (தேடிக்) கொண்டுவந்த போதிலும் அவருக்கு ஓர் ஒட்டகச் சுமை (தானியம் வெகுமதி)உண்டு; இதற்கு நானே பொறுப்பாளியாவேன்" என்று (அவர்களில் ஒருவன் ) கூறினான்.

73. அ(தற்க)வர்கள் , "அல்லாஹ்வின்மீது சத்தியமாக, நாங்கள் (இப்) பூமியில் குழப்பம் செய்வதற்காக வரவில்லை என்பதைத் திட்டமாக நீங்களும் நன்கறிந்திருக்கிறீர்கள்; அன்றியும், நாங்கள் திருடர்களாக இருந்ததுமில்லை" என்று கூறினார்கள்.

74. அ(தற்க)வர்கள், "நீங்கள் (இதில்) பொய்யர்களாயிருந்தால், அதற்குரிய தண்டனை என்ன?" என்று கேட்டனர்.

75. "அதற்குரிய தண்டனையானது: எவனுடைய சுமையில் அது காணப்படுகிறதோ அப்போதுஅவனே அதற்குரிய தண்டனையாகும்; அநியாயக்காரர்களுக்கு இவ்வாறே நாங்கள் தண்டனை அளிப்போம்" என்று அவர்கள் கூறினார்கள்.

76. ஆகவே, தன் சகோதர(ன் புன்யாமீ)னின் பொதிக்குமுன்னதாக மற்றவர்களின் பொதிகளைச் சோதிக்க ஆரம்பித்தார். பின்னர், தன் சகோதரனின் பொதியிலிருந்து அதனை வெளிப்படுத்தினார்; யூஸுஃபுக்கு இவ்வுபாயத்தை நாம் ஏற்படுத்திக் கொடுத்தோம்; அல்லாஹ் நாடினாலன்றி, அவர் தன் சகோதரனை எடுத்துக் கொள்ள(எகிப்து) அரசரின் சட்டப்படி முடியாதிருந்தார்; நாம் நாடியவர்களின் பதவிகளை உயர்த்துகிறோம்; அறிவுடைய ஒவ்வொருவருக்கும் மேலாக (அவரைவிட) மிக அறிந்தவர் இருக்கிறார்.

77. (இவ்வாறு கண்ட யூஸுஃபின் மற்ற சகோதரர்கள்,) "அவன் (அதனைத்) திருடியிருந்தால், அவனுடைய சகோதரன் (யூஸுஃபும்) இதற்கு முன் நிச்சயமாகத் திருடியே இருப்பான்" என்று, கூறிக் கொண்டனர்; யூஸுஃப் அவர்களுக்கு வெளியாக்காது, அவர் அதைத் தன்மனதுக்குள் மறைத்து வைத்துக்கொண்டு, "நீங்கள் இடத்தால் தீயவர்கள்; ( இவர் சகோதரரும் திருடியதாக) நீங்கள் வர்ணிக்கிறீர்களே அதனை அல்லாஹ் மிக்க அறிந்தவன் " என்று(மனதில்) கூறிக் கொண்டார்.

78. அ(தற்க)வர்கள்,(யூஸுஃபிடம் , எகிப்திய அரசின்) "அமைச்சரே! நிச்சயமாக முதிர்ச்சியடைந்த வயோதிகரான தந்தை அவருக்கு இருக்கிறார். ஆகவே, அவருக்குப் பதிலாக எங்களில் ஒருவரை நீர் எடுத்துக்கொள்வீராக! நிச்சயமாக நாம் உம்மை உபகாரம் செய்பவர்களில் (ஒருவராகக்) காண்கிறோம்" என்று கூறினார்கள்.

قَالَ مَعَاذَ اللّٰهِ اَنْ نَّاْخُذَ اِلَّا مَنْ وَّجَدْنَا مَتَاعَنَا عِنْدَهٗۤ
اِنَّاۤ اِذًا لَّظٰلِمُوْنَ ﴿۷۹﴾ فَلَمَّا اسْتَيْـَٔسُوْا مِنْهُ خَلَصُوْا نَجِيًّا ؕ ۹ ع ۱۱ ۲
قَالَ كَبِيْرُهُمْ اَلَمْ تَعْلَمُوْۤا اَنَّ اَبَاكُمْ قَدْ اَخَذَ عَلَيْكُمْ
مَّوْثِقًا مِّنَ اللّٰهِ وَمِنْ قَبْلُ مَا فَرَّطْتُّمْ فِیْ يُوْسُفَ ۚ فَلَنْ
اَبْرَحَ الْاَرْضَ حَتّٰى يَاْذَنَ لِیْۤ اَبِیْۤ اَوْ يَحْكُمَ اللّٰهُ لِیْ ۚ وَهُوَ
خَيْرُ الْحٰكِمِيْنَ ﴿۸۰﴾ اِرْجِعُوْۤا اِلٰۤى اَبِيْكُمْ فَقُوْلُوْا يٰۤاَبَانَاۤ اِنَّ
ابْنَكَ سَرَقَ ۚ وَمَا شَهِدْنَاۤ اِلَّا بِمَا عَلِمْنَا وَمَا كُنَّا
لِلْغَيْبِ حٰفِظِيْنَ ﴿۸۱﴾ وَسْـَٔلِ الْقَرْيَةَ الَّتِیْ كُنَّا فِيْهَا
وَالْعِيْرَ الَّتِیْۤ اَقْبَلْنَا فِيْهَا ؕ وَاِنَّا لَصٰدِقُوْنَ ﴿۸۲﴾ قَالَ بَلْ
سَوَّلَتْ لَكُمْ اَنْفُسُكُمْ اَمْرًا ؕ فَصَبْرٌ جَمِيْلٌ ؕ عَسَى اللّٰهُ اَنْ
يَّاْتِيَنِیْ بِهِمْ جَمِيْعًا ؕ اِنَّهٗ هُوَ الْعَلِيْمُ الْحَكِيْمُ ﴿۸۳﴾ وَتَوَلّٰى
عَنْهُمْ وَقَالَ يٰۤاَسَفٰى عَلٰى يُوْسُفَ وَابْيَضَّتْ عَيْنٰهُ مِنَ
الْحُزْنِ فَهُوَ كَظِيْمٌ ﴿۸۴﴾ قَالُوْا تَاللّٰهِ تَفْتَؤُا تَذْكُرُ يُوْسُفَ حَتّٰى
تَكُوْنَ حَرَضًا اَوْ تَكُوْنَ مِنَ الْهٰلِكِيْنَ ﴿۸۵﴾ قَالَ اِنَّمَاۤ اَشْكُوْا
بَثِّیْ وَحُزْنِیْۤ اِلَى اللّٰهِ وَاَعْلَمُ مِنَ اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿۸۶﴾

79. அ(தற்க)வர், "எம்முடைய பொருளை எவரிடம் நாங்கள் பெற்றுக் கொண்டோமோ அவரைத் தவிர, (மற்றெவரையும்) பிடித்துக் கொள்ளாது (எங்களை) அல்லாஹ் காப்பாற்றுவானாக! (மற்றெவரையும் பிடித்துக் கொண்டால்) அச்சமயத்தில் நிச்சயமாக நாம் அநியாயக்காரர்களாகிவிடுவோம்" என்றுகூறி விட்டார்.

80. அவரிடம் அவர்கள் நம்பிக்கை இழந்துவிடவே, அவர்கள் (தங்களுக்குள்) தனித்து ஆலோசனை செய்தார்கள்; அவர்களில் பெரியவர், (மற்றவர்களிடம்) "உங்கள் தந்தை உங்களிடம் அல்லாஹ்வின் உறுதிமொழியை வாங்கியிருப்பதையும், இதற்கு முன்னர் நீங்கள் யூஸுஃப் விஷயத்தில் செய்த பெருங்குறையையும் நீங்கள் அறியவில்லையா? ஆகவே, என் தந்தை எனக்கு அனுமதியளிக்கும் வரையில், அல்லது அல்லாஹ் எனக்கு தீர்ப்பளிக்கும் வரையில் (நான் இருக்கும்) இப்பூமியிலிருந்து நான் அகலவேமாட்டேன்; தீர்ப்பளிப்போரில் அவன்தான் மிக்க மேலானவன்" என்று கூறினார்.

81. (மேலும், அவர்களிடம்) "நீங்கள் (யாவரும்) உங்கள் தந்தையிடம் திரும்பிச் சென்று: எங்கள் தந்தையே! உங்கள் மகன் (புன்யாமீன்) நிச்சயமாகத் திருடிவிட்டான்; உண்மையாகவே நாங்கள் கண்டதையே அன்றி (வேறெதையும்) நாங்கள் கூறவில்லை ; இன்னும், மறைவானவற்றின் பாதுகாவலர்களாகவும் நாங்கள் இருக்கவில்லை" என்று கூறுங்கள்.

82 "(எங்கள் கூற்றை நீங்கள் நம்பாவிட்டால்,) நாங்கள் தங்கியிருந்த அவ்வூராரையும், எங்களுடன் வந்த ஒட்டகைக் கூட்டத்தினரையும் நீங்கள் கேட்(டறிந்து கொள்)ளுங்கள். நிச்சயமாக, நாங்கள் உண்மையாளர்களாவோம்" (என்று சொல்லுங்கள் என்று கூறியனுப்பினார்).

83 (ஊர் திரும்பியவர்கள் நடந்தவற்றைத் தங்கள் தந்தையிடம் கூறவே அதற்கவர், "நீங்கள் கூறுவது) சரியல்ல! உங்கள் மனங்கள் ஒரு(தவறான)விஷயத்தைச் செய்யும்படி உங்களைத் தூண்டிவிட்டன; ஆகவே, அழகான பொறுமையைக் கைக்கொள்வதே மிக்க நன்று ; அல்லாஹ் அவர்கள் யாவரையும் என்னிடம் கொண்டுவந்து சேர்த்து வைக்கப் போதுமானவன்; நிச்சயமாக அவனே யாவற்றையும் அறிந்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்" என்று கூறினார்.

84. இன்னும் அவர்களை விட்டு அவர் விலகிச் சென்று, "யூஸுஃபைப் பற்றி ஏற்பட்டிருக்கும் என்னுடைய துக்கமே!" என்று அவர் (வருத்தப்பட்டுக்) கூறினார்; அவரது இரு கண்களும் துக்கத்தால் (அழுதழுது)வெளுத்துப்போயின; பின்னர், அவர் (தன் துக்கத்தையும்) விழுங்கி (அடக்கி)க் கொள்பவராக இருந்தார்.

85. (இதனைக் கண்ட அவருடைய மக்கள் தந்தையே,) "அல்லாஹ்வின் மீது சத்தியமாக (நீங்கள் யூஸுஃபை நினைத்து நினைத்து) இளைத்தவராக நீர் ஆகிவிடும் வரை அல்லது அழிந்துவிடுவோரில் நீர் ஆகி விடும் வரை யூஸுஃபை நினைத்துக் கொண்டே யிருப்பீர்" என்று(கடிந்து) கூறினார்கள்.

86. அ(தற்க)வர், "என்னுடைய துக்கத்தையும், கவலையையும் நான் முறையிடுவதெல்லாம் அல்லாஹ்விடமேதான்; நீங்கள் அறியாதவற்றையும் அல்லாஹ்வி(ன் புறத்தி)லிருந்து நான் மிக்க அறிந்திருக்கிறேன்" என்று கூறினார்.

يٰبَنِىَّ اذْهَبُوْا فَتَحَسَّسُوْا مِنْ يُّوْسُفَ وَاَخِيْهِ وَلَا تَايْـَٔسُوْا
مِنْ رَّوْحِ اللّٰهِ ؕ اِنَّهٗ لَا يَايْـَٔسُ مِنْ رَّوْحِ اللّٰهِ اِلَّا الْقَوْمُ
الْكٰفِرُوْنَ ﴿۸۷﴾ فَلَمَّا دَخَلُوْا عَلَيْهِ قَالُوْا يٰۤاَيُّهَا الْعَزِيْزُ مَسَّنَا
وَاَهْلَنَا الضُّرُّ وَجِئْنَا بِبِضَاعَةٍ مُّزْجٰىةٍ فَاَوْفِ لَنَا الْكَيْلَ
وَتَصَدَّقْ عَلَيْنَا ؕ اِنَّ اللّٰهَ يَجْزِى الْمُتَصَدِّقِيْنَ ﴿۸۸﴾ قَالَ
هَلْ عَلِمْتُمْ مَّا فَعَلْتُمْ بِيُوْسُفَ وَاَخِيْهِ اِذْ اَنْتُمْ جٰهِلُوْنَ ﴿۸۹﴾
قَالُوْۤا ءَاِنَّكَ لَاَنْتَ يُوْسُفُ ؕ قَالَ اَنَا يُوْسُفُ وَهٰذَاۤ اَخِىْ ز
قَدْ مَنَّ اللّٰهُ عَلَيْنَا ؕ اِنَّهٗ مَنْ يَّتَّقِ وَيَصْبِرْ فَاِنَّ اللّٰهَ
لَا يُضِيْعُ اَجْرَ الْمُحْسِنِيْنَ ﴿۹۰﴾ قَالُوْا تَاللّٰهِ لَقَدْ اٰثَرَكَ
اللّٰهُ عَلَيْنَا وَاِنْ كُنَّا لَخٰطِـِٔيْنَ ﴿۹۱﴾ قَالَ لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ
الْيَوْمَ ؕ يَغْفِرُ اللّٰهُ لَكُمْ ز وَهُوَ اَرْحَمُ الرّٰحِمِيْنَ ﴿۹۲﴾ اِذْهَبُوْا
بِقَمِيْصِىْ هٰذَا فَاَلْقُوْهُ عَلٰى وَجْهِ اَبِىْ يَاْتِ بَصِيْرًا ج
وَاْتُوْنِىْ بِاَهْلِكُمْ اَجْمَعِيْنَ ﴿۹۳﴾ ع وَلَمَّا فَصَلَتِ ع ۱۰
الْعِيْرُ قَالَ اَبُوْهُمْ اِنِّىْ لَاَجِدُ رِيْحَ يُوْسُفَ لَوْلَاۤ اَنْ
تُفَنِّدُوْنِ ﴿۹۴﴾ قَالُوْا تَاللّٰهِ اِنَّكَ لَفِىْ ضَلٰلِكَ الْقَدِيْمِ ﴿۹۵﴾ الربع

87. "என்னுடைய மக்களே! நீங்கள் செல்லுங்கள்; பின்னர், யூஸுஃபையும், அவரது சகோதரரையும் துருவித்தேடுங்கள்; அல்லாஹ்வின் அருளிலிருந்து நீங்கள் நம்பிக்கை இழந்துவிடாதீர்கள்! நிச்சயமாக (அல்லாஹ்வின் மீது நம்பிக்கையற்ற)நிராகரிப்போரைத் தவிர, (மற்றெவரும்) அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிட மாட்டார்கள் (என்றும் கூறினார்).

88. பிறகு, அவர்கள் (எகிப்துக்கு வந்து யூஸுஃபாகிய) அவர்பால்நுழைந்து அவரிடம் (எகிப்திய அரசின்) "அமைச்சரே! எங்களையும் எங்கள் குடும்பத்தினரையும் (பஞ்சத்தின்) கொடுமை பீடித்துக்கொண்டது; (எங்களிடமிருந்த) அற்பப் பொருளையே நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்; ஆகவே, (அதனைப் பெற்றுக்கொண்டு,) எங்களுக்கு வேண்டிய (தானியத்) தைப் பூரணமாக அளந்து கொடுத்து(மேற் கொண்டும்) எங்களுக்குத் தானமாகவும் கொடுத்தருள்வீராக! நிச்சயமாக அல்லாஹ் தானம் செய்வோருக்கு நற்கூலி அளிப்பான்" என்று கூறினார்கள்.

89. (அச்சமயம் அவர்,) "நீங்கள் அறிவீனர்களாக இருந்தபோது, யூஸுஃபையும், அவருடைய சகோதரரையும் என்ன செய்தீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா?" என்று கேட்டார்.

90. அ(தற்க)வர்கள் (திடுக்கிட்டு) "நிச்சயமாக நீர்தான், யூஸுஃபா? "என்று கேட்டார்கள். அ(தற்க)வர்,"நான்தான் யூஸுஃப்;இவர் என் சகோதரர்;திட்டமாக அல்லாஹ் எங்கள்மீது பேரருள் புரிந்திருக்கிறான்; (ஏனென்றால்,) அது நிச்சயமாக: எவர் பயபக்தியுடன் இருந்து (கஷ்டங்களையும் சகித்துப்) பொறுத்துக் கொள்கிறாரோ (அத்தகைய) நன்மை செய்தோரின் கூலியை நிச்சயமாக அல்லாஹ் வீணாக்கி விடமாட்டான்" என்று கூறினார்.

91. அ(தற்க)வர்கள், "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நாங்கள் (உமக்கு பெரும்) தவறிழைத்தவர்களாக இருப்பினும், நிச்சயமாக அல்லாஹ், எங்களைவிட (பெருங்கிருபை கொண்டு) உம்மை மேன்மையாக்கி வைத்திருக்கிறான்" என்று கூறினார்கள்.

92. அ(தற்க)வர்,"இன்றையத்தினம் உங்கள்மீது யாதொரு நிந்தனையும் இல்லை; அல்லாஹ்(வும்) உங்கள் குற்றங்களை மன்னித்து விடுவானாக! அவனே கிருபையாளர்களிலெல்லாம் மகாக்கிருபையாளன்" என்று கூறினார்.

93. "நீங்கள் என்னுடைய இந்தச்சட்டையைக்கொண்டுபோய் என் தந்தை முகத்தின் மீது போடுங்கள்; (அதனால், உடனே) அவர் பார்வையுடையவராக (த்திரும்பி) வருவார்; பின்னர், நீங்கள் உங்கள் குடும்பத்திலுள்ள யாவரையும் அழைத்துக்கொண்டு என்னிடம் வாருங்கள்" என்று கூறி (அனுப்பி)னார்.

94. (அவர்களுடைய) ஒட்டகக்கூட்டம் (எகிப்திலிருந்து) பிரிந்த சமயமே, அவர்களின் தந்தை "(இதோ)யூஸுஃபுடைய வாடையை நிச்சயமாக நான் நுகர்கிறேன்; (முதுமையின் காரணமாக)அறிவு மங்கிப் பேசுவதாக என்னை நீங்கள் கூறாதிருக்கவேண்டுமே! என்றார்.

95. (இதனைச் செவியுற்ற அவருடைய ஏனைய மக்கள்) "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நிச்சயமாக நீர் உம்முடைய பழைய வழிகேட்டில்தான் இருக்கிறீர்"என்று கூறினார்கள்.

فَلَمَّآ اَنۡ جَآءَ الۡبَشِيۡرُ اَلۡقٰىهُ عَلٰى وَجۡهِهٖ فَارۡتَدَّ بَصِيۡرًا ۚ
قَالَ اَلَمۡ اَقُلۡ لَّكُمۡ ۚ اِنِّىۡۤ اَعۡلَمُ مِنَ اللّٰهِ مَا لَا تَعۡلَمُوۡنَ ﴿۹۶﴾
قَالُوۡا يٰۤاَبَانَا اسۡتَغۡفِرۡ لَنَا ذُنُوۡبَنَاۤ اِنَّا كُنَّا خٰطِـئِيۡنَ ﴿۹۷﴾
قَالَ سَوۡفَ اَسۡتَغۡفِرُ لَـكُمۡ رَبِّىۡ ؕ اِنَّهٗ هُوَ الۡغَفُوۡرُ الرَّحِيۡمُ ﴿۹۸﴾
فَلَمَّا دَخَلُوۡا عَلٰى يُوۡسُفَ اٰوٰۤى اِلَيۡهِ اَبَوَيۡهِ وَقَالَ ادۡخُلُوۡا
مِصۡرَ اِنۡ شَآءَ اللّٰهُ اٰمِنِيۡنَ ﴿۹۹﴾ؕ وَرَفَعَ اَبَوَيۡهِ عَلَى الۡعَرۡشِ
وَخَرُّوۡا لَهٗ سُجَّدًا ۚ وَقَالَ يٰۤاَبَتِ هٰذَا تَاۡوِيۡلُ رُءۡيَاىَ مِنۡ
قَبۡلُ قَدۡ جَعَلَهَا رَبِّىۡ حَقًّا ؕ وَقَدۡ اَحۡسَنَ بِىۡۤ اِذۡ اَخۡرَجَنِىۡ
مِنَ السِّجۡنِ وَجَآءَ بِكُمۡ مِّنَ الۡبَدۡوِ مِنۡۢ بَعۡدِ اَنۡ نَّزَغَ
الشَّيۡطٰنُ بَيۡنِىۡ وَبَيۡنَ اِخۡوَتِىۡ ؕ اِنَّ رَبِّىۡ لَطِيۡفٌ لِّمَا يَشَآءُ ؕ
اِنَّهٗ هُوَ الۡعَلِيۡمُ الۡحَكِيۡمُ ﴿۱۰۰﴾ رَبِّ قَدۡ اٰتَيۡتَنِىۡ مِنَ الۡمُلۡكِ وَ
عَلَّمۡتَنِىۡ مِنۡ تَاۡوِيۡلِ الۡاَحَادِيۡثِ ۚ فَاطِرَ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ قف
اَنۡتَ وَلِىّٖ فِى الدُّنۡيَا وَالۡاٰخِرَةِ ۚ تَوَفَّنِىۡ مُسۡلِمًا وَّ اَلۡحِقۡنِىۡ
بِالصّٰلِحِيۡنَ ﴿۱۰۱﴾ ذٰلِكَ مِنۡ اَنۡۢبَآءِ الۡغَيۡبِ نُوۡحِيۡهِ اِلَيۡكَ ۚ
وَمَا كُنۡتَ لَدَيۡهِمۡ اِذۡ اَجۡمَعُوۡۤا اَمۡرَهُمۡ وَهُمۡ يَمۡكُرُوۡنَ ﴿۱۰۲﴾

96. அப்போது (யூஸுஃபைப்பற்றி) நன்மாராயங் கூறுபவர் வந்து, (யூஸுஃபுடைய சட்டையாகிய) அதனை அவர் (தந்தையின்) முகத்தின் மீது போடவே, அவர் (இழந்த தன்) பார்வையை அடைந்து, "(யூஸுஃப் உயிரோடிருப்பதைப் பற்றி ) நீங்கள் அறியாதவற்றையெல்லாம் அல்லாஹ்வின் புறத்திலிருந்து நிச்சயமாக நான் அறிவேன் என்பதாக ( முன்னர்) நான் உங்களுக்குக் கூறவில்லையா?" என்று கேட்டார்.

97. "எங்கள் தந்தையே! எங்கள் பாவங்களை மன்னிக்குமாறு நீங்கள் எங்களுக்காக மன்னிப்புத் தேடுவீர்களாக! நிச்சயமாகவே நாங்கள் குற்றவாளிகளாகவே இருக்கிறோம்" என்று அவர்கள் கூறினார்கள்.

98. அ(தற்க)வர், "நான் என் இரட்சகனிடம் அடுத்து உங்களுக்காக மன்னிப்பைக் கோருவேன்; நிச்சயமாக அவனே மிக மன்னிப்போன், மிகக் கிருபையுடையோன்" என்று கூறினார்.

99. (பின்னர், குடும்பத்துடன் கன்ஆனிலிருந்த) அவர்கள் யூஸுஃபிடம் (எகிப்துக்கு) வந்து நுழைந்தபொழுது, அவர் தன் தாய் தந்தையை ( மிக்க மரியாதையுடன் வரவேற்று) தன் பக்கம் சேர்த்துக் கொண்டு, "அல்லாஹ் நாடினால் நீங்கள் அச்சமற்றவர்களாக எகிப்தில் நுழையுங்கள் " என்றும் கூறினார்.

100. இன்னும், அவர் தன் பெற்றோரை சிம்மாசனத்தின் மீது உயர்த்தி (கண்ணியமாக அமரச்செய்யலா)னார். (எகிப்தின் அதிபதியாக இருந்த) அவருக்கு (அக்காலத்திய முறைப்படி) அவர்கள் அனைவரும் சிரம்பணிந்தவர்களாகவும் விழுந்தார்கள்; அச்சமயம் யூஸுஃப் (தன் தந்தையிடம்,) "என் தந்தையே! முன்னர் நான் கண்ட கனவின் விளக்கம் இதுதான்; என் இரட்சகன் அதனைத் திட்டமாக உண்மையாக்கிவிட்டான்; (எவருடைய சிபாரிசுமின்றியே) சிறைக்கூடத்திலிருந்து என்னை (அல்லாஹ்வாகிய) அவன் வெளியேற்றியபோது (அல்லாஹ்) எனக்குத்திட்டமாக பேருபகாரம் புரிந்துவிட்டான்; எனக்கும், என் சகோதரர்களுக்குமிடையில் ஷைத்தான் பிரிவினையை உண்டுபண்ணிய பின்னரும், உங்கள் யாவரையும் கிராமப்புறத்திலிருந்து என்னிடம் கொண்டு வந்துள்ளான்; நிச்சயமாக என் இரட்சகன், தான் நாடியதை மிக நுட்பமாகச் செய்கின்றவன்; நிச்சயமாக அவனே (யாவற்றையும்) நன்கறிந்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்" என்றார்.

101. (அன்றி) "என் இரட்சகனே! நிச்சயமாக நீ எனக்கு ஓர் ஆட்சியையும் தந்(தருள் புரிந்)து, கனவுகளின் விளக்கங்களையும் எனக்குக் கற்பித்தாய்; வானங்களை மற்றும் பூமியைப்படைத்தவனே! இம்மையிலும், மறுமையிலும் நீயே என் பாதுகாவலன்; முற்றிலும் (உனக்கு) கீழ்ப்படிந்த(முஸ்லிமான)வனாகவே என்னை நீ கைப்பற்றிக்கொள்வாயாக! நல்லோர்களுடன் என்னையும் சேர்த்தருள்வாயாக" (என்று பிரார்த்தித்தார்).

102. (நபியே!) இது (நீர் அறியாத) மறைவான செய்திகளில் உள்ளதாகும்; இதை உமக்கு நாம் (வஹீ மூலமே) அறிவிக்கிறோம்; இன்னும், அவர்கள் சூழ்ச்சி செய்கிறவர்களாக, (யூஸுஃபைக் கிணற்றில் தள்ள வேண்டுமென்று) தங்கள் காரியத்தில் அவர்கள் முடிவெடுக்க ஒருமித்த போது நீர் அவர்களிடத்தில் இருக்கவுமில்லை.

وَمَآ اَكْثَرُ النَّاسِ وَلَوْ حَرَصْتَ بِمُؤْمِنِيْنَ ﴿۱۰۳﴾ وَمَا تَسْـَٔلُهُمْ عَلَيْهِ
مِنْ اَجْرٍ ؕ اِنْ هُوَ اِلَّا ذِكْرٌ لِّلْعٰلَمِيْنَ ﴿۱۰۴﴾ ع وَكَاَيِّنْ مِّنْ اٰيَةٍ فِى ع ۱۱ ۵
السَّمٰوٰتِ وَالْاَرْضِ يَمُرُّوْنَ عَلَيْهَا وَهُمْ عَنْهَا مُعْرِضُوْنَ ﴿۱۰۵﴾
وَمَا يُؤْمِنُ اَكْثَرُهُمْ بِاللّٰهِ اِلَّا وَهُمْ مُّشْرِكُوْنَ ﴿۱۰۶﴾ اَفَاَمِنُوْٓا اَنْ
تَاْتِيَهُمْ غَاشِيَةٌ مِّنْ عَذَابِ اللّٰهِ اَوْ تَاْتِيَهُمُ السَّاعَةُ بَغْتَةً وَّ
هُمْ لَا يَشْعُرُوْنَ ﴿۱۰۷﴾ قُلْ هٰذِهٖ سَبِيْلِىْٓ اَدْعُوْٓا اِلَى اللّٰهِ ؔ عَلٰى وقف النبی صلی اللہ علیہ وسلم
بَصِيْرَةٍ اَنَا وَمَنِ اتَّبَعَنِىْ ؕ وَسُبْحٰنَ اللّٰهِ وَمَآ اَنَا مِنَ الْمُشْرِكِيْنَ ﴿۱۰۸﴾
وَمَآ اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ اِلَّا رِجَالًا نُّوْحِىْٓ اِلَيْهِمْ مِّنْ اَهْلِ الْقُرٰى ؕ
اَفَلَمْ يَسِيْرُوْا فِى الْاَرْضِ فَيَنْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الَّذِيْنَ
مِنْ قَبْلِهِمْ ؕ وَلَدَارُ الْاٰخِرَةِ خَيْرٌ لِّلَّذِيْنَ اتَّقَوْا ؕ اَفَلَا تَعْقِلُوْنَ ﴿۱۰۹﴾
حَتّٰٓى اِذَا اسْتَيْـَٔسَ الرُّسُلُ وَظَنُّوْٓا اَنَّهُمْ قَدْ كُذِبُوْا جَآءَهُمْ
نَصْرُنَا ۙ فَنُجِّىَ مَنْ نَّشَآءُ ؕ وَلَا يُرَدُّ بَاْسُنَا عَنِ الْقَوْمِ الْمُجْرِمِيْنَ ﴿۱۱۰﴾
لَقَدْ كَانَ فِىْ قَصَصِهِمْ عِبْرَةٌ لِّاُولِى الْاَلْبَابِ ؕ مَا كَانَ
حَدِيْثًا يُّفْتَرٰى وَلٰكِنْ تَصْدِيْقَ الَّذِىْ بَيْنَ يَدَيْهِ وَ
تَفْصِيْلَ كُلِّ شَىْءٍ وَّهُدًى وَّرَحْمَةً لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿۱۱۱﴾ ع ع ۱۲ ۷ ۶

103. நீர் (எவ்வளவுதான்) பேராவல் கொண்டாலும் (அம்) மனிதர்களில் பெரும்பாலோர் (அல்லாஹ்வை) விசுவாசங் கொள்பவர்களாக இல்லை.

104. இதற்காக நீர் அவர்களிடத்தில் யாதொரு கூலியையும் கேட்பதில்லை; அகிலத்தார்க்கும் இது ஒரு நல்லுபதேசமே தவிர (வேறு) இல்லை.

105. இன்னும், வானங்களில், மற்றும் பூமியில் எத்தனையோ அத்தாட்சிகள் இருக்கின்றன; (ஆனால்) அவற்றை(ச் சிந்திக்காது) புறக்கணித்தவர்களாகவே அவற்றின் பக்கம் அவர்கள் (அனுதினமும்) செல்கின்றனர்.

106. மேலும், அவர்களில் பெரும்பாலோர் — அவர்கள் இணைவைக்கிறவர்களாகவே தவிர அல்லாஹ்வை விசுவாசிப்பதில்லை.

107. (அவர்களைச்) சூழ்ந்து கொள்ளக்கூடிய அல்லாஹ்வின் வேதனை அவர்களிடம் வந்து விடுவதைப் பற்றியும், அல்லது அவர்கள் அறியாத நிலைமையில் திடுகூறாய் (அவர்களுடைய முடிவு காலமான) மறுமை அவர்களுக்கு வந்து விடுவதைப்பற்றியும் அவர்கள் அச்சமற்றிருக்கின்றனரா?

108. (நபியே!) நீர் கூறுவீராக: இதுவே எனது (நேரான) வழியாகும்; நான் (உங்களை) அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறேன்; தெளிவான ஆதாரத்தின்மீதே நானும், என்னைப் பின்பற்றியவர்களும் இருக்கிறோம்; அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன்; நான் (அவனுக்கு) இணைவைப்போரில் உள்ளவனுமல்லன்.

109. உமக்கு முன்னர் ஊர்வாசிகளிலுள்ள (மனித இனத்தவர்களில்) ஆடவர்களை அல்லாமல் (மலக்குகளை) நாம் (தூதர்களாக) அனுப்பவில்லை; அவர்களுக்கு (நம்முடைய கட்டளைகளை) வஹீ மூலம் அறிவிக்கின்றோம்; அவர்கள் பூமியில் பிரயாணம் செய்யவில்லையா? (அவ்வாறு பிரயாணம் செய்தால்) அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எப்படி ஆயிற்று என்பதை அவர்கள் கண்டுகொள்வார்கள்; மறுமையின் வீடோ பயபக்தியுடையோர்களுக்கு மிக்க மேலானது; நீங்கள் விளங்கிக் கொள்ளமாட்டீர்களா?

110. (நபியே! எந்த சமூகத்தார் மீதும் தண்டனையை நாம் துரிதப்படுத்தவில்லை). எதுவரையெனில், (தம் சமூகத்தவர்கள் விசுவாசம் கொள்ளவே மாட்டார்கள் என அத்)தூதர்கள் நிராசை அடைந்து, நிச்சயமாக நாம் (அவர்களால்) பொய்ப்படுத்தப்பட்டுவிட்டோம் என அவர்கள் உறுதி கொண்டுவிட்டனர். (அப்போது) அவர்களுக்கு நம்முடைய உதவி வந்தது; (பின்னர்) நாம் நாடியவர்கள் காப்பாற்றப்பட்டனர்; குற்றவாளிகளான சமூகத்தாரை விட்டும் நம் தண்டனை நீக்கப்படவுமாட்டாது.

111. அறிவுடையோருக்கு, (நபிமார்களாகிய) இவர்களுடைய வரலாற்றில் நல்லதொரு படிப்பினை திட்டமாக இருக்கிறது; (இந்தக் குர்ஆன்) பொய்யாகக் கற்பனை செய்யப்படுகின்ற செய்தியாக இருந்ததில்லை; ஆயினும், இதற்கு முன் உள்ள(வேதத்)தை உண்மையாக்கி வைத்து, ஒவ்வொரு விஷயத்தையும் விவரித்துக்கூறுவதாகவும் இருக்கிறது; அன்றியும், விசுவாசங் கொண்டோருக்கு நேர் வழியாகவும், அருளாகவும் இருக்கிறது.

## سُورَةُ الرَّعْدِ مَكِّيَّةٌ وَّهِيَ ثَلٰثٌ وَّاَرْبَعُوْنَ اٰيَةً وَّسِتُّ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
الٓمّٓرٰ قف تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ ط وَالَّذِيْٓ اُنْزِلَ اِلَيْكَ مِنْ رَّبِّكَ الْحَقُّ
وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يُؤْمِنُوْنَ ① اَللّٰهُ الَّذِيْ رَفَعَ السَّمٰوٰتِ بِغَيْرِ
عَمَدٍ تَرَوْنَهَا ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ وَسَخَّرَ الشَّمْسَ وَالْقَمَرَ ط
كُلٌّ يَّجْرِيْ لِاَجَلٍ مُّسَمًّى ط يُدَبِّرُ الْاَمْرَ يُفَصِّلُ الْاٰيٰتِ لَعَلَّكُمْ
بِلِقَآءِ رَبِّكُمْ تُوْقِنُوْنَ ② وَهُوَ الَّذِيْ مَدَّ الْاَرْضَ وَجَعَلَ فِيْهَا
رَوَاسِيَ وَاَنْهٰرًا ط وَمِنْ كُلِّ الثَّمَرٰتِ جَعَلَ فِيْهَا زَوْجَيْنِ اثْنَيْنِ
يُغْشِي الَّيْلَ النَّهَارَ ط اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ ③ وَ
فِي الْاَرْضِ قِطَعٌ مُّتَجٰوِرٰتٌ وَّجَنّٰتٌ مِّنْ اَعْنَابٍ وَّزَرْعٌ وَّنَخِيْلٌ
صِنْوَانٌ وَّغَيْرُ صِنْوَانٍ يُّسْقٰى بِمَآءٍ وَّاحِدٍ قف وَنُفَضِّلُ بَعْضَهَا
عَلٰى بَعْضٍ فِي الْاُكُلِ ط اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ ④ وَ
اِنْ تَعْجَبْ فَعَجَبٌ قَوْلُهُمْ ءَاِذَا كُنَّا تُرٰبًا ءَاِنَّا لَفِيْ خَلْقٍ
جَدِيْدٍ ۬ ط اُولٰٓئِكَ الَّذِيْنَ كَفَرُوْا بِرَبِّهِمْ ج وَاُولٰٓئِكَ الْاَغْلٰلُ فِيْٓ
اَعْنَاقِهِمْ ج وَاُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ج هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ⑤

அத்தியாயம் : 13

## அர்ரஃது – இடி

வசனங்கள் : 43 மக்கீ ருகூஃகள் : 6

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. அலிஃப் லாம் மீம் றா இவை இவ்வேதத்தின் வசனங்களாகும்; (நபியே!) உம்முடைய இரட்சகனிடமிருந்து உம்பால் இறக்கிவைக்கப்பட்ட இது (முற்றிலும்) உண்மையானதாகும்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) நம்புவதில்லை.

2. (இவ்வேதத்தை உமக்கு இறக்கிவைத்த) அல்லாஹ் எத்தகையோனென்றால், வானங்களைத் தூணின்றி உயர்த்தியுள்ளான்; அவற்றை நீங்கள் (உங்கள் கண்களால்) காண்கிறீர்கள்; பின்னர், (தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீதிருப்பது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அவன் அர்ஷின்மீது உயர்ந்து(நிலைபெற்று)விட்டான்; அவனே சூரியனையும், சந்திரனையும் (தன்) அதிகாரத்திற்குள் (வசப்படுத்தி) வைத்திருக்கிறான்; (இவை) ஒவ்வொன்றும் (அவற்றிற்குக்)குறிப்பிடப்பட்ட தவணையின்படி நடந்து வருகின்றன; (அவற்றில் நடைபெறும்) சகல காரியங்களையும் அவனே நிர்வகிக்கிறான்; நீங்கள் (இறந்த பின்னர் உயிர் பெற்று) உங்கள் இரட்சகனைச் சந்திப்பதை உறுதிகொள்வதற்காக(த் தன்னுடைய) வசனங்களை (இவ்வாறு உங்களுக்கு) விவரிக்கிறான்.

3. மேலும், அவன் எத்தகையோனென்றால், பூமியை விரித்து, அதில் உறுதியான (பெரிய பெரிய )மலைகளையும்,( நீண்ட) ஆறுகளையும்அவன் ஆக்கினான்; ஒவ்வொரு கனி வர்க்கத்திலிருந்தும் (இருவகை கொண்ட) ஜோடிகள் இரண்டை அதில் உண்டாக்கினான்; இரவைப் பகலால் அவன்மூடுகிறான்; சிந்திக்கக்கூடிய கூட்டத்தினர்க்கு நிச்சயமாக, இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

4. மேலும், பூமியில் அடுத்தடுத்த பலபகுதிகள் உண்டு; இன்னும், (அதில்) திராட்சைத் தோட்டங்களும், விவசாயப்பயிர் நிலங்களும், கிளைகள் உள்ளவையும், கிளைகள் இல்லாதவையுமான பேரீச்சமரங்களும் உள்ளன; (அவைகளுக்கு) ஒரே வித நீர் புகட்டப்படுகிறது. (அவ்வாறிருக்க) சிலவற்றை, சிலவற்றைவிடச்சுவையில் நாம் மேன்மையாக்கியும் வைத்திருக்கிறோம்; இதில், சிந்தித்து அறியும் மக்களுக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

5. இன்னும், (நபியே! இந்நிராகரிப்போர் மறுமையைப் பொய்யாக்குவதுபற்றி) நீர் ஆச்சரியப்படுவதாயின், நிச்சயமாக நாம் (இறந்து உக்கி) மண்ணாக ஆகி விட்டாலுமா? புதியதொரு படைப்பில் நிச்சயமாக நாம் இருப்போம்? என்று அவர்கள் கூறுவது (இதனை விட மிக்க) ஆச்சரியமானதே! அத்தகையோர் தான்–அவர்கள் தங்களின் இரட்சகனை நிராகரித்து விட்டவர்களாவர்; மேலும், அத்தகையோர்– (மறுமையில்) விலங்குகள் அவர்களுடைய கழுத்துக்களில் இருக்கும்; இன்னும், அவர்கள் நரக வாசிகளே! அதில் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்.

وَيَسْتَعْجِلُوْنَكَ بِالسَّيِّئَةِ قَبْلَ الْحَسَنَةِ وَقَدْ خَلَتْ مِنْ
قَبْلِهِمُ الْمَثُلٰتُ ؕ وَاِنَّ رَبَّكَ لَذُوْ مَغْفِرَةٍ لِّلنَّاسِ عَلٰى
ظُلْمِهِمْ ۚ وَاِنَّ رَبَّكَ لَشَدِيْدُ الْعِقَابِ ﴿٦﴾ وَيَقُوْلُ الَّذِيْنَ
كَفَرُوْا لَوْلَآ اُنْزِلَ عَلَيْهِ اٰيَةٌ مِّنْ رَّبِّهٖ ؕ اِنَّمَآ اَنْتَ مُنْذِرٌ وَّ
لِكُلِّ قَوْمٍ هَادٍ ﴿٧﴾ اَللّٰهُ يَعْلَمُ مَا تَحْمِلُ كُلُّ اُنْثٰى وَمَا تَغِيْضُ ع ٧
الْاَرْحَامُ وَمَا تَزْدَادُ ؕ وَكُلُّ شَيْءٍ عِنْدَهٗ بِمِقْدَارٍ ﴿٨﴾ عٰلِمُ الْغَيْبِ
وَالشَّهَادَةِ الْكَبِيْرُ الْمُتَعَالِ ﴿٩﴾ سَوَآءٌ مِّنْكُمْ مَّنْ اَسَرَّ الْقَوْلَ وَ
مَنْ جَهَرَ بِهٖ وَمَنْ هُوَ مُسْتَخْفٍۢ بِالَّيْلِ وَسَارِبٌۢ بِالنَّهَارِ ﴿١٠﴾
لَهٗ مُعَقِّبٰتٌ مِّنْۢ بَيْنِ يَدَيْهِ وَمِنْ خَلْفِهٖ يَحْفَظُوْنَهٗ
مِنْ اَمْرِ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتّٰى يُغَيِّرُوْا مَا
بِاَنْفُسِهِمْ ؕ وَاِذَآ اَرَادَ اللّٰهُ بِقَوْمٍ سُوْٓءًا فَلَا مَرَدَّ لَهٗ ۚ وَمَا لَهُمْ
مِّنْ دُوْنِهٖ مِنْ وَّالٍ ﴿١١﴾ هُوَ الَّذِيْ يُرِيْكُمُ الْبَرْقَ خَوْفًا وَّطَمَعًا
وَّيُنْشِئُ السَّحَابَ الثِّقَالَ ﴿١٢﴾ وَيُسَبِّحُ الرَّعْدُ بِحَمْدِهٖ وَالْمَلٰٓئِكَةُ
مِنْ خِيْفَتِهٖ ۚ وَيُرْسِلُ الصَّوَاعِقَ فَيُصِيْبُ بِهَا مَنْ
يَّشَآءُ وَهُمْ يُجَادِلُوْنَ فِي اللّٰهِ ۚ وَهُوَ شَدِيْدُ الْمِحَالِ ﴿١٣﴾ ؕ

6. மேலும், (நபியே!) நன்மைக்கு முன்னதாகவே தீமையைக்கொண்டு (வருமாறு) இவர்கள் உம்மிடம் அவசரப்படுகின்றனர்; இவர்களுக்கு முன்னர் நிச்சயமாக (தண்டனை கொடுக்கப்பட்ட) முன்மாதிரியானவைகள் நிகழ்ந்தும் இருக்கின்றன; மேலும், நிச்சயமாக உமதிரட்சகன், மனிதர்களுக்கு அவர்களின் அக்கிரமங்களுக்காக மன்னிப்பை உடையவன்; (அவ்வாறே) நிச்சயமாக உமதிரட்சகன் தண்டிப்பதிலும் மிகக் கடுமையானவன்.

7. மேலும், (நபியே!) நிராகரிப்போர் (உம்மைப்பற்றி)" இவர் மீது இவருடைய இரட்சகனிடமிருந்து (நாம் விரும்புகிறவாறு) ஓர் அத்தாட்சி இறக்கப்பட வேண்டாமா?" என்று கூறுகின்றனர்; (நபியே!) நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவரே (ஆவீர்); மேலும், ஒவ்வொரு சமூகத்தவர்க்கும் ஒரு நேர்வழி காட்டியுண்டு.

8. ஒவ்வொரு பெண்ணும் கர்ப்பம் தரிப்பதையும், கர்ப்பப் பைகள் (கர்ப்பம் தரித்த பின் குறை சிசுவாக விழுவதன் மூலம் கர்ப்பங்கள்) குறைவதையும் (கர்ப்பம் தரித்த பின் சிசு ஒன்பது மாதம் நிறைவு பெற்று) அவை அதிகமாவதையும் அல்லாஹ் (நன்கு) அறிவான்; ஒவ்வொரு பொருளும் அவனிடம் (அவன் ஏற்படுத்திய) அளவைக் கொண்டே இருக்கிறது.

9. (இம்மட்டுமா!) மறைவானதையும், வெளிப்படையானதையும் (அவன்) நன்கறிகிறவன்; (எல்லோரையும் விட) அவன் மிகப் பெரியவன்; மிக்க உயர்வுடையவன்.

10. உங்களில், கூற்றை மெதுவாகக் கூறியவரும், அதை உரக்கக் கூறியவரும், எவர் இரவில் மறைந்து கொள்கிறாரோ அவரும், பகலில் வெளிப்படையாக நடப்பவரும் (இவர்கள் யாவரும் அல்லாஹ்விடம்) சமமே.

11. (மனிதர்களில் ஒவ்வொருவருக்கும்) அவருக்கு முன்னும், அவருக்கு பின்னும் தொடர்ந்து வரக்கூடிய (மலக்குகள்) பலர் இருக்கின்றனர்; அவர்கள், அல்லாஹ்வுடைய கட்டளையைக் கொண்டு அவரைப் பாதுகாக்கின்றார்கள்; நிச்சயமாக அல்லாஹ், எந்த ஒரு சமுதாயத்திற்குரியதையும் அவர்கள் தங்களுக்குரிய (அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல், அவனுக்குக் கீழ்படிந்து நடத்தல் போன்ற நிலைகளான)தை மாற்றிக் கொள்ளாத வரையில் நிச்சயமாக, அல்லாஹ்வும் (அவர்களுக்குப் புரிந்த அருளை) மாற்றிவிடுவதில்லை; மேலும், அல்லாஹ் ஒரு சமூகத்தினருக்கு தீங்கிழைக்க நாடினால், அதனைத் தடுப்போர் ஒருவருமில்லை; அவர்களுக்கு அவனையன்றி உதவி செய்பவருமில்லை.

12. அவன் எத்தகையோனென்றால், (உங்களில் பிரயாணம் செய்பவருக்கு) பயமாகவும், (ஊரில் தங்கியிருப்பவருக்கு) ஆதரவாகவும் மின்னலை உங்களுக்கு அவன் காட்டுகிறான்; (மழையைச் சுமந்த) பளுவான மேகங்களையும் அவனே உருவாக்குகிறான்.

13. இடியும் அவனது புகழைக்கொண்டு துதிக்கிறது; (அவ்வாறே,) அவனின் பயத்தால் மலக்குகளும் _ (அவனைத் துதி செய்கின்றனர்.) அவனே இடிகளையும் அனுப்புகிறான்; (பின்னர்) அவன் நாடியவர்களை அதைக்கொண்டு அவன் (தாக்கிப்)பிடிக்கச் செய்கிறான். அவர்களோ அல்லாஹ்வைப் பற்றி (உம்மிடம்) தர்க்கம் செய்கின்றனர்; மேலும், (அவர்களை தண்டிக்க நாடினால், அவர்களை நழுவாது பிடிப்பதில்) அவன் பலமிக்கவன்.

لَهٗ دَعْوَةُ الْحَقِّ ؕ وَالَّذِيْنَ يَدْعُوْنَ مِنْ دُوْنِهٖ لَا يَسْتَجِيْبُوْنَ
لَهُمْ بِشَيْءٍ اِلَّا كَبَاسِطِ كَفَّيْهِ اِلَى الْمَآءِ لِيَبْلُغَ فَاهُ وَمَا هُوَ
بِبَالِغِهٖ ؕ وَمَا دُعَآءُ الْكٰفِرِيْنَ اِلَّا فِيْ ضَلٰلٍ ﴿۱۴﴾ وَلِلّٰهِ يَسْجُدُ
مَنْ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ طَوْعًا وَّكَرْهًا وَّظِلٰلُهُمْ بِالْغُدُوِّ
وَالْاٰصَالِ ﴿۱۵﴾ السجدة قُلْ مَنْ رَّبُّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ قُلِ اللّٰهُ ؕ قُلْ السجدة ۴
اَفَاتَّخَذْتُمْ مِّنْ دُوْنِهٖ اَوْلِيَآءَ لَا يَمْلِكُوْنَ لِاَنْفُسِهِمْ نَفْعًا
وَّلَا ضَرًّا ؕ قُلْ هَلْ يَسْتَوِي الْاَعْمٰى وَالْبَصِيْرُ ۙ اَمْ هَلْ
تَسْتَوِي الظُّلُمٰتُ وَالنُّوْرُ ۚ اَمْ جَعَلُوْا لِلّٰهِ شُرَكَآءَ خَلَقُوْا
كَخَلْقِهٖ فَتَشَابَهَ الْخَلْقُ عَلَيْهِمْ ؕ قُلِ اللّٰهُ خَالِقُ كُلِّ شَيْءٍ
وَّهُوَ الْوَاحِدُ الْقَهَّارُ ﴿۱۶﴾ اَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَسَالَتْ
اَوْدِيَةٌۢ بِقَدَرِهَا فَاحْتَمَلَ السَّيْلُ زَبَدًا رَّابِيًا ؕ وَمِمَّا
يُوْقِدُوْنَ عَلَيْهِ فِي النَّارِ ابْتِغَآءَ حِلْيَةٍ اَوْ مَتَاعٍ زَبَدٌ
مِّثْلُهٗ ؕ كَذٰلِكَ يَضْرِبُ اللّٰهُ الْحَقَّ وَالْبَاطِلَ ۬ۚ فَاَمَّا
الزَّبَدُ فَيَذْهَبُ جُفَآءً ۚ وَاَمَّا مَا يَنْفَعُ النَّاسَ
فَيَمْكُثُ فِي الْاَرْضِ ؕ كَذٰلِكَ يَضْرِبُ اللّٰهُ الْاَمْثَالَ ﴿۱۷﴾ؕ

14. "உண்மையான அழைப்பு (பிரார்த்தனை) அவனுக்கே உரியதாகும்; அவனையன்றி (மற்ற பொய்யான தெய்வங்களைப் பிரார்த்தனை செய்து) அழைக்கிறார்களே அத்தகையவர்கள்_ அவர்களுக்கு, யாதொரு விடையும் (அழைக்கப்பட்ட) அவர்கள் அளிக்கமாட்டார்கள். (அல்லாஹ்வையன்றி பிறவற்றை அழைப்போரின் உதாரணம்) தண்ணீரின்பால் அது (தானாகவே) தன் வாயில் சென்றுவிட வேண்டுமென்று கருதி, தன் இரு முன் கைகளையும் (நீட்டி அள்ளிக்குடிக்காமல்) விரித்துக்கொண்டே இருப்பவனைப்போல் அல்லாமல், (வேறில்லை. அள்ளிக் குடிக்கும் வரையில், அவனுடைய) வாயை அது அடைந்தும்விடாது; மேலும் நிராகரிப்போர் செய்யும் பிரார்த்தனை (இத்தகைய) வழிகேட்டிலல்லாது இல்லை.

15. வானங்களில் மற்றும் பூமியில் இருப்பவை (யாவும் அவை) விருப்பத்துடனும், வெறுப்புடனும் அல்லாஹ்வுக்கே சிரம் பணிகின்றன; அவற்றின் நிழல்களும் காலையிலும், மாலையிலும் (அவனுடைய கட்டளைக்குப் பணிந்து சாஷ்டாங்கம் செய்கின்றன).

16. (நபியே! அவர்களிடம்,) "வானங்கள், மற்றும் பூமியின் இரட்சகன் (ரப்பு) யார்?" என்று நீர் கேட்பீராக! (அவர்களிடம்) "அல்லாஹ் தான் என்று நீர் கூறுவீராக! (அவ்வாறிருக்க,) அவனையன்றி பாதுகாவலர்களாக (பொய்யான தெய்வங்களை) நீங்கள் எடுத்துக் கொண்டுவிட்டீர்களா? (அவர்களோ) தங்களுக்கே யாதொரு நன்மையும் தீமையும் செய்யச் சக்தியற்றவர்களாக இருக்கின்றனர்" என்று கூறுவீராக! (பின்னும் அவர்களிடம்) "குருடரும், பார்வையுடையவரும் சமமாவாரா? அல்லது இருள்களும், பிரகாசமும் சமமாகுமா?" என்று கேட்பீராக! அல்லது "அவர்கள் அல்லாஹ்வுக்கு இணையாளர்களை ஆக்கியிருக்கின்றனரே அவர்கள் அவன் படைத்திருப்பதைப்போன்று (எதனையும்) படைத்திருக்கின்றனரா? "அவ்வாறாயின், அப்படைப்பு இவர்களுக்கு (அல்லாஹ் படைத்ததற்கு) ஒப்பாகி விட்டதா?" (அவ்வாறுமில்லையே! ஆகவே, அவர்களிடம்) அல்லாஹ்தான்" ஒவ்வொரு பொருளையும் படைக்கிறவன்; மேலும், அவன் ஒருவன், (அவனே யாவற்றையும்) அடக்கி ஆளுபவனாவான்.' என்று (நபியே!) நீர் கூறுவீராக!

17. "வானத்திலிருந்து நீரை அவன் இறக்கினான்; பின், ஓடைகள் தம் அளவுக்குத் தக்கவாறு (நீரைக்கொண்டு) ஓடின; பிறகு, வெள்ளம் (நீருக்கு மேல் மிதக்கும்) நுரையைமேலே சுமந்து சென்றது; (இது போன்றே) ஆபரணங்களையோ அல்லது (வேறு) சாமான்களையோ செய்வதற்காக நெருப்பில் அவர்கள் (உலோகங்களை) உருக்குவதிலிருந்தும், அது போன்ற நுரை உண்டாகின்றது; இவ்வாறே சத்தியத்தையும், அசத்தியத்தையும் அல்லாஹ் உதாரணமாகக் கூறுகின்றான்; எனவே, (அழுக்கு) நுரையோ வீணாகிப் போய்விடுகிறது; (ஆனால்,) மனிதர்களுக்குப் பலன் அளிக்கக்கூடியதோ பூமியில் தங்கி விடுகிறது" _இவ்வாறே (நிராகரிப்போரை அழுக்கு நுரைக்கும், விசுவாசிகளைப் பூமியில் பயன்தரும் பொருட்களுக்கும் ஒப்பிட்டு) அல்லாஹ் உவமைகளை விவரிக்கின்றான்.

وقف النبي صلى الله عليه وسلم

للذين استجابوا لربهم الحسنى ۚ والذين لم يستجيبوا له لو ان
لهم ما في الارض جميعا ومثله معه لافتدوا به ۚ اولئك لهم
سوء الحساب ۙ وماوىهم جهنم ۖ وبئس المهاد ﴿١٨﴾ افمن يعلم ع ٢ / ١١ / ٨ النصف
انما انزل اليك من ربك الحق كمن هو اعمى ۚ انما يتذكر اولوا
الالباب ﴿١٩﴾ الذين يوفون بعهد الله ولا ينقضون الميثاق ﴿٢٠﴾
والذين يصلون ما امر الله به ان يوصل ويخشون ربهم و
يخافون سوء الحساب ﴿٢١﴾ والذين صبروا ابتغاء وجه ربهم
واقاموا الصلوة وانفقوا مما رزقنهم سرا وعلانية ويدرءون
بالحسنة السيئة اولئك لهم عقبى الدار ﴿٢٢﴾ جنت عدن
يدخلونها ومن صلح من ابائهم وازواجهم وذريتهم والملئكة
يدخلون عليهم من كل باب ﴿٢٣﴾ سلم عليكم بما صبرتم فنعم
عقبى الدار ﴿٢٤﴾ والذين ينقضون عهد الله من بعد ميثاقه
ويقطعون ما امر الله به ان يوصل ويفسدون في الارض ۙ اولئك
لهم اللعنة ولهم سوء الدار ﴿٢٥﴾ الله يبسط الرزق لمن يشاء ويقدر ۚ
وفرحوا بالحيوة الدنيا ۚ وما الحيوة الدنيا في الاخرة الا متاع ﴿٢٦﴾ ع ٣ / ٨ / ٩

18. தங்கள் இரட்சகனுக்கு (அவனுடைய கட்டளைகளை ஏற்று)பதில் கூறினார்களே அத்தகையவர்களுக்கு (மறுமையில் அழகான நற்கூலிகள் எனும்)நன்மையுண்டு; இன்னும், அவனுக்கு (அவன் கட்டளையை ஏற்று)பதில் கூறவில்லையே அத்தகையவர்கள் _ நிச்சயமாக அவர்களுக்கு பூமியில் உள்ள அனைத்தும், அத்துடன் அது போன்றதும் இருந்தால் (அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வேதனையிலிருந்து விடுவித்துக் கொள்ள)அவற்றை ஈடாகக் கொடுத்து விடுவார்கள்; (எனினும், அது ஆகாத காரியம்! அன்றியும்)அத்தகையோர் _ அவர்களுக்கு(மிக்க)கொடிய(கேள்வி)கணக்குண்டு; இன்னும், அவர்கள் தங்குமிடம் நரகமாகும்; தங்குமிடத்திலும்(அது)மிகக் கெட்டது.

19. நிச்சயமாக உமதிரட்சகனால் உமக்கு இறக்கிவைக்கப்பட்டதெல்லாம் உண்மைதான் என்று உறுதியாக (நம்பி)அறிகின்றவர், யார் குருடராக இருக்கின்றாரோ அவர் போன்று ஆவாரா? (ஆகமாட்டார்.) நிச்சயமாக, (இதனைக் கொண்டு) நல்லுபதேசம் பெறுபவரெல்லாம் அறிவுடையோர் தாம்.

20. அவர்கள் எத்தகையோரென்றால், அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியை(ப் பூரணமாக) நிறைவேற்றுவார்கள்; (தாங்கள் செய்த) உடன்படிக்கையை முறித்து விடவு மாட்டார்கள்.

21. மேலும், அவர்கள் எத்தகையோரென்றால், எதை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென அல்லாஹ் கட்டளையிட்டானோ அ(ந்த இரத்த சொந்தத்)தையும்சேர்த்துக்கொள்வார்கள்; (அதைத்துண்டித்து விடும்விஷயத்தில்) தங்கள் இரட்சகனுக்குப் பயந்தும் நடப்பார்கள்; கேள்வி கணக்கின் கடுமையையும் பயந்து கொண்டிருப்பார்கள்.

22. இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் இரட்சகனின் திருமுகத்தைக் கருதி (எத்தகைய இன்னலையும் பொறுமையுடன்) சகித்துக்கொள்வார்கள் ; தொழுகையையும் நிறைவேற்றுவார்கள் ; நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து இரகசியமாகவும், பரகசியமாகவும் (நம் வழியில்) செலவும் செய்வார்கள் ; நன்மையைக் கொண்டே தீமையைத் தட்(டிவி)டுவார்கள் ; இத்தகைய அவர்களுக்கு (இம்மையில் செய்த நன்மைகளின் நற்கூலியாக) மறுமையில் நல்ல இருப்பிட(மாகிய சுவர்க்க)ம் உண்டு.

23. (அவை) நிலையான சுவனங்களாகும்; அவற்றில் அவர்களும் பிரவேசிப்பார்கள்; இன்னும், அவர்களின் தந்தையர்களில், அவர்களின் மனைவியரில், அவர்களுடைய சந்ததிகளில் (அல்லாஹ்வுடைய கட்டளைகளை ஏற்று) யார் நல்லவர்களாக இருந்தார்களோ அவர்களும் (அதில் பிரவேசிப்பர்); மலக்குகளும் ஒவ்வொரு வாசலிலிருந்து அவர்களிடம் பிரவேசிப்பார்கள்.

24. "நீங்கள் (உங்கள் வாழ்க்கையில் கஷ்டங்களைப்) பொறுத்துக் கொண்டதன் காரணமாக, உங்களுக்குச் சாந்தி உண்டாவதாக! (உங்களுடைய இந்தக்) கடைசி வீடு மிக்க நல்லதாயிற்று" (என்று அவர்களிடம் கூறுவார்கள்).

25. மேலும், அல்லாஹ்வின் வாக்குறுதியை _ அதனை உறுதிப்படுத்திய பின்னர் _ முறித்து விடுகிறார்களே(அவர்களும்), இன்னும் சேர்த்துக் கொள்ளப் படவேண்டுமென அல்லாஹ் கட்டளையிட்ட (இரத்த சொந்தத்)தைத் துண்டித்து, பூமியில் குழப்பமும் செய்கிறார்களே அத்தகையோர் _ அவர்களுக்கு, (அல்லாஹ்வுடைய) சாபந்தான் உண்டு; அவர்களுக்கு(நரகமான) மிகக் கெட்ட வீடும் உண்டு.

26. அல்லாஹ், தான் நாடியவர்களுக்கு வாழ்வாதாரத்தை ஏராளமாகக் கொடுக்கிறான்; (தான் விரும்பியவர்களுக்கு) அளவோடும் கொடுக்கிறான். இன்னும், (நிராகரிப்போர்) இவ்வுலக வாழ்க்கையைக் கொண்டே மகிழ்ச்சியடைகின்றனர். இவ்வுலக வாழ்க்கையோ மறுமைக்கு (ஒப்பிட்டுப் பார்த்தால் அதன்)முன்னே மிக அற்ப சுகமே தவிர (வேறு) இல்லை.

وَيَقُولُ الَّذِينَ كَفَرُوا لَوْلَا أُنْزِلَ عَلَيْهِ آيَةٌ مِنْ رَبِّهِ ۚ قُلْ إِنَّ اللَّهَ
يُضِلُّ مَنْ يَشَاءُ وَيَهْدِي إِلَيْهِ مَنْ أَنَابَ ﴿٢٧﴾ الَّذِينَ آمَنُوا وَتَطْمَئِنُّ
قُلُوبُهُمْ بِذِكْرِ اللَّهِ ۗ أَلَا بِذِكْرِ اللَّهِ تَطْمَئِنُّ الْقُلُوبُ ﴿٢٨﴾ الَّذِينَ آمَنُوا
وَعَمِلُوا الصَّالِحَاتِ طُوبَىٰ لَهُمْ وَحُسْنُ مَآبٍ ﴿٢٩﴾ كَذَٰلِكَ أَرْسَلْنَاكَ فِي
أُمَّةٍ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهَا أُمَمٌ لِتَتْلُوَ عَلَيْهِمُ الَّذِي أَوْحَيْنَا إِلَيْكَ وَ
هُمْ يَكْفُرُونَ بِالرَّحْمَٰنِ ۚ قُلْ هُوَ رَبِّي لَا إِلَٰهَ إِلَّا هُوَ عَلَيْهِ تَوَكَّلْتُ وَإِلَيْهِ
مَتَابِ ﴿٣٠﴾ وَلَوْ أَنَّ قُرْآنًا سُيِّرَتْ بِهِ الْجِبَالُ أَوْ قُطِّعَتْ بِهِ الْأَرْضُ
أَوْ كُلِّمَ بِهِ الْمَوْتَىٰ ۗ بَلْ لِلَّهِ الْأَمْرُ جَمِيعًا ۗ أَفَلَمْ يَيْأَسِ الَّذِينَ آمَنُوا أَنْ
لَوْ يَشَاءُ اللَّهُ لَهَدَى النَّاسَ جَمِيعًا ۗ وَلَا يَزَالُ الَّذِينَ كَفَرُوا تُصِيبُهُمْ
بِمَا صَنَعُوا قَارِعَةٌ أَوْ تَحُلُّ قَرِيبًا مِنْ دَارِهِمْ حَتَّىٰ يَأْتِيَ وَعْدُ اللَّهِ ۚ إِنَّ
اللَّهَ لَا يُخْلِفُ الْمِيعَادَ ﴿٣١﴾ وَلَقَدِ اسْتُهْزِئَ بِرُسُلٍ مِنْ قَبْلِكَ فَأَمْلَيْتُ ع ٥
لِلَّذِينَ كَفَرُوا ثُمَّ أَخَذْتُهُمْ ۖ فَكَيْفَ كَانَ عِقَابِ ﴿٣٢﴾ أَفَمَنْ هُوَ قَائِمٌ
عَلَىٰ كُلِّ نَفْسٍ بِمَا كَسَبَتْ ۗ وَجَعَلُوا لِلَّهِ شُرَكَاءَ قُلْ سَمُّوهُمْ ۚ أَمْ تُنَبِّئُونَهُ
بِمَا لَا يَعْلَمُ فِي الْأَرْضِ أَمْ بِظَاهِرٍ مِنَ الْقَوْلِ ۗ بَلْ زُيِّنَ لِلَّذِينَ كَفَرُوا
مَكْرُهُمْ وَصُدُّوا عَنِ السَّبِيلِ ۗ وَمَنْ يُضْلِلِ اللَّهُ فَمَا لَهُ مِنْ هَادٍ ﴿٣٣﴾

27. இன்னும், "அவர்மீது அவருடைய இரட்சகனிடமிருந்து ஓர் அத்தாட்சி இறக்கி வைக்கப்படவேண்டாமா" என்று (உம்மைப் பற்றி) நிராகரித்துவிட்டார்களே அவர்கள், கூறுகின்றனர்.(அதற்கு நபியே!) நீர் கூறுவீராக : நிச்சயமாக, அல்லாஹ்அவன் (தண்டிக்க) நாடியவரைத் தவறான வழியில் விட்டு விடுகிறான்; மேலும், (தவ்பாச் செய்து) அவன்பால் திரும்பிவருபவரை, நேர் வழியில் செலுத்துகிறான்.

28. (இத்தகுதிக்குரியோர்) எத்தகையோரென்றால், அவர்கள் (மெய்யாகவே) விசுவாசங் கொண்டார்கள்; இன்னும், அல்லாஹ்வை நினைவு கூர்வது கொண்டு அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன; (ஏனென்றால்,) அல்லாஹ்வை நினைவுகூர்வதால் இதயங்கள் நிச்சயமாக அமைதி பெறும் என்பதை அறிந்து கொள்வீர்களாக!

29. விசுவாசங்கொண்டு ,நற்காரியங்களையும் செய்துவருகிறார்களே, அத்தகையோர்_ அவர்களுக்கு நல்வாழ்க்கையுண்டு; மேலும், நல்ல இருப்பிடமும் உண்டு.

30. (நபியே! தூதர்கள் பலரை அனுப்பிய)அவ்வாறே உம்மையும் நாம் (நம் தூதராக) ஒரு கூட்டத்தாரிடம் அனுப்பிவைத்தோம்; இதற்கு முன்னரும் (இவர்களில்) பல சமுதாயங்கள் திட்டமாக சென்றிருக்கின்றன; ஆகவே, நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பவற்றை அவர்களுக்கு நீர் ஓதிக் காண்பிப்பதற்காகவே (உம்மை அனுப்பினோம். ஆனால்,) இவர்களோ (அளவற்ற அருளாளனாகிய) அர்ரஹ்மானையே நிராகரிக்கின்றனர்; நீர் (அவர்களிடம்) கூறுவீராக: " அவன்தான் என்னுடைய இரட்சகன்; அவனைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் (வேறு) ஒருவனுமில்லை. (என் காரியங்களை முழுமையாக ஒப்படைத்து) அவன் மீது நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்; அவன்பாலே (என்) மீட்சியும் இருக்கிறது.

31. நிச்சயமாக குர்ஆன்_ அதைக்கொண்டு மலைகள் நகர்த்தப் பட்டாலும், அல்லது அதைக்கொண்டு பூமியைத் துண்டு துண்டாக ஆக்கப்பட்டாலும், அல்லது அதைக்கொண்டு இறந்தவர்களைப் பேசும்படியாகச் செய்யப்பட்டாலும் (அவர்கள் விசுவாசங்கொள்ளவே மாட்டார்கள்) மாறாக, காரியங்கள் யாவும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும்; ஆகவே, நிச்சயமாக அல்லாஹ் நாடியிருந்தால், மனிதர்கள் அனைவரையும் நேர் வழியில் நடத்தியிருப்பான் என்பது(பற்றி) விசுவாசிகளுக்கு தெளிவாகவில்லையா? நிராகரிப்போரை, அவர்கள் செய்திட்ட (தீய)வற்றின் காரணமாக (அவர்கள் திடுக்கிடக் கூடிய) யாதேனுமொரு சம்பவம் அவர்களை வந்தடைந்து கொண்டேயிருக்கும்; அல்லது அவர்கள் வீட்டிற்குச் சமீபமாகவேனும், (அதுபோன்ற சம்பவங்கள்) அல்லாஹ்வின் வாக்குறுதி (அவர்களுக்கு மரணம்) வரும்வரை அது இறங்கி(சம்பவித்து)க் கொண்டே யிருக்கும்; நிச்சயமாக, அல்லாஹ் வாக்குறுதியில் மாறு செய்யமாட்டான்.

32. மேலும் , (நபியே!) உமக்கு முன்னர் தூதர்கள்( பலரும் இவ்வாறே) நிச்சயமாகப் பரிகசிக்கப்பட்டனர்; நிராகரித்துக் கொண்டிருந்தவர்களுக்கு நான் தவணையளித்து (விட்டு)வைத்தேன்; பின்னர், நான் அவர்களைப் பிடித்துக் கொண்டேன்; ஆகவே (நம்முடைய) தண்டனை எப்படி இருந்தது? (என்பதைச் சிந்திப்பீராக!)

33. எவன் ஒவ்வொரு ஆத்மாவின் மீதும் அது சம்பாதித்தவற்றுக்கு பொறுப்பேற்று நிற்கிறானோ அவனா? ( அவர்களின் விக்கிரகங் களைப்போன்றாவான்?) அவர்களோ அல்லாஹ்விற்கு இணையாளர்களை ஆக்குகிறார்கள்; ("நீங்கள் வணங்கும் தெய்வங்கள், அவனுக்கு இணையானவையாயிருந்தால்,) அவற்றின் பெயரை நீங்கள் கூறுங்கள் , அல்லது பூமியில் (அவனுக்கு இணையான ஒன்றிருந்து அதனை) அவன் அறியாதுபோய் அதைப்பற்றி அவனுக்கு நீங்கள் அறிவிக்கிறீர்களா? அல்லது , (நீங்கள் கூறுவது, உண்மையல்லாத) வெளிப்படையான (வெறும்) வார்த்தைதாமா?" என்று கேட்பீராக; (இவைகளில் ஒன்றும்) இல்லை! நிராகரிப்பவர்களுக்கு அவர்களுடைய சூழ்ச்சி அழகாகக் காண்பிக்கப்பட்டுவிட்டது; (ஆகவே, நேரான) வழியிலிருந்து அவர்கள் தடுக்கப்பட்டும் விட்டனர்; இன்னும், எவரை அல்லாஹ் தவறான வழியில் விட்டுவிட்டானோ, அவரை நேர் வழியில் செலுத்தக்கூடியவர் ஒருவருமில்லை.

لَهُمْ عَذَابٌ فِي الْحَيٰوةِ الدُّنْيَا وَلَعَذَابُ الْاٰخِرَةِ اَشَقُّ ۚ وَمَا
لَهُمْ مِّنَ اللّٰهِ مِنْ وَّاقٍ ﴿۳۴﴾ مَثَلُ الْجَنَّةِ الَّتِيْ وُعِدَ الْمُتَّقُوْنَ ؕ
تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ؕ اُكُلُهَا دَآئِمٌ وَّظِلُّهَا ؕ تِلْكَ عُقْبَى
الَّذِيْنَ اتَّقَوْا ۖ وَّعُقْبَى الْكٰفِرِيْنَ النَّارُ ﴿۳۵﴾ وَالَّذِيْنَ اٰتَيْنٰهُمُ
الْكِتٰبَ يَفْرَحُوْنَ بِمَآ اُنْزِلَ اِلَيْكَ وَمِنَ الْاَحْزَابِ مَنْ يُّنْكِرُ
بَعْضَهٗ ؕ قُلْ اِنَّمَآ اُمِرْتُ اَنْ اَعْبُدَ اللّٰهَ وَلَآ اُشْرِكَ بِهٖ ؕ اِلَيْهِ
اَدْعُوْا وَاِلَيْهِ مَاٰبِ ﴿۳۶﴾ وَكَذٰلِكَ اَنْزَلْنٰهُ حُكْمًا عَرَبِيًّا ؕ وَلَئِنِ
اتَّبَعْتَ اَهْوَآءَهُمْ بَعْدَ مَا جَآءَكَ مِنَ الْعِلْمِ ۙ مَا لَكَ مِنَ اللّٰهِ
مِنْ وَّلِيٍّ وَّلَا وَاقٍ ﴿۳۷﴾ ع وَلَقَدْ اَرْسَلْنَا رُسُلًا مِّنْ قَبْلِكَ وَ ع ۱۱
جَعَلْنَا لَهُمْ اَزْوَاجًا وَّذُرِّيَّةً ؕ وَمَا كَانَ لِرَسُوْلٍ اَنْ يَّاْتِيَ
بِاٰيَةٍ اِلَّا بِاِذْنِ اللّٰهِ ؕ لِكُلِّ اَجَلٍ كِتَابٌ ﴿۳۸﴾ يَمْحُوا اللّٰهُ مَا يَشَآءُ
وَيُثْبِتُ ۚۖ وَعِنْدَهٗۤ اُمُّ الْكِتٰبِ ﴿۳۹﴾ وَاِنْ مَّا نُرِيَنَّكَ بَعْضَ
الَّذِيْ نَعِدُهُمْ اَوْ نَتَوَفَّيَنَّكَ فَاِنَّمَا عَلَيْكَ الْبَلٰغُ وَعَلَيْنَا
الْحِسَابُ ﴿۴۰﴾ اَوَلَمْ يَرَوْا اَنَّا نَاْتِي الْاَرْضَ نَنْقُصُهَا مِنْ اَطْرَافِهَا ؕ
وَاللّٰهُ يَحْكُمُ لَا مُعَقِّبَ لِحُكْمِهٖ ؕ وَهُوَ سَرِيْعُ الْحِسَابِ ﴿۴۱﴾

34. அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையில் வேதனையுண்டு; (அவர்களுக்கு), மறுமையின் வேதனையோ மிகக் கடுமையானது; அல்லாஹ்விடத்திலிருந்து அவர்களைக் காப்போர் எவருமில்லை.

35. பயபக்தியுடையவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவனபதியின் தன்மையாகிறது, நீரருவிகள் அதன் கீழ் ஓடிக்கொண்டிருக்கும்;(கனி வகைகளால்) அதன் உணவும் நிலையானதாகும்; அதன் நிழலும் (அவ்வாறே நிலையானதாகும்). இது பயபக்தியுடையோரின் முடிவாகும்; இன்னும் நிராகரிப்போரின் முடிவு நரகமாகும்.

36. நாம் எவர்களுக்கு வேதம் கொடுத்திருந்தோமோ அத்தகையவர்கள், உம்பால் இறக்கப்பட்டதைப் பற்றி மகிழ்ச்சியடைவார்கள்; (அதில்) சிலவற்றை மறுப்பவர்களும் அக்கூட்டத்தார்களில் இருக்கிறார்கள்; ஆகவே, நீர், "நான் ஏவப்பட்டிருப்பதெல்லாம் அல்லாஹ்வையே நான் வணங்கவேண்டும், அவனுக்கு யாதொன்றையும் நான் இணையாக்கக் கூடாது" என்றுதான்; அவன் பக்கமே (உங்களை) நான் அழைக்கின்றேன்; இன்னும் அவன் பக்கமே (என்) மீட்சியும் இருக்கின்றது" என்று (அவர்களுக்குக்) கூறுவீராக!

37. இன்னும், இவ்வாறே அரபி (மொழி)யில் சட்டதிட்டங்களைக் கொண்டதாக (குர்ஆனாகிய)இதனை நாம் இறக்கிவைத்திருக்கிறோம் ; ஆகவே, உமக்கு ( குர்ஆனின்) ஞானம் வந்து விட்டதற்குப் பின்னரும், நீர் அவர்களுடைய இச்சைகளைப் பின்பற்றினால் அல்லாஹ்விடமிருந்து உமக்கு உதவி செய்பவரும், காப்பவரும் (எவரும்)இல்லை.

38. (நபியே!) நிச்சயமாக, நாம் உமக்கு முன்னரும் தூதர்களை அனுப்பியிருக்கிறோம்; அவர்களுக்கு மனைவியரையும், சந்ததியினரையும் நாம் ஆக்கியிருந்தோம்; அன்றியும், அல்லாஹ்வின் அனுமதியின்றி, எந்தத் தூதருக்கும் எத்தகைய அத்தாட்சியையும் கொண்டு வருவதற்கில்லை; ஒவ்வொரு தவணைக்கும் (பதிவு) ஏடு உள்ளது.

39. (அப்பதிவேட்டில்) அல்லாஹ் அவன் நாடியதை அழித்துவிடுவான்; (அவன் நாடியதை) நிலைப்படுத்தியும் விடுவான்; இன்னும், (அனைத்திற்கும்) மூலப்பதிவேடு அவனிடத்தில் உள்ளது.

40. (நபியே!) அவர்களுக்கு நாம் வாக்களித்த (வேதனைகளில்) சிலவற்றை (நீர் உயிரோடிருக்கும் போதே உம்முடைய கண்ணால் நீர் காணும்படி)நாம் உமக்குக் காண்பித்தாலும், அல்லது (அது வரு முன்) நாம் உம்மைக் கைப்பற்றிக் கொண்டாலும் ( நீர் கவலைப்படாதீர்) உம்முடைய கடமையெல்லாம் தூதை எத்தி வைப்பதுதான்! இன்னும்,(அவர்களுடைய) கணக்கு நம் மீதாகும்.

41. பூமியை அதன் ஓரங்களிலிருந்து நிச்சயமாக நாம் (படிப்படியாகக்) குறைத்து வருவதை அவர்கள் காணவில்லையா? மேலும் அல்லாஹ் தீர்ப்பளிப்பான்; அவனுடைய தீர்ப்பைத் தடை செய்யக் கூடியவர் எவருமில்லை; இன்னும், அவன் கேள்வி கணக்குக் கேட்பதில் மிகத்தீவிரமானவன்.

وَقَدۡ مَكَرَ الَّذِيۡنَ مِنۡ قَبۡلِهِمۡ فَلِلّٰهِ الۡمَكۡرُ جَمِيۡعًا‌ ؕ يَعۡلَمُ
مَا تَكۡسِبُ كُلُّ نَفۡسٍ‌ ؕ وَسَيَعۡلَمُ الۡكُفّٰرُ لِمَنۡ عُقۡبَى الدَّارِ ﴿۴۲﴾
وَيَقُوۡلُ الَّذِيۡنَ كَفَرُوۡا لَسۡتَ مُرۡسَلًا ‌ؕ قُلۡ كَفٰى بِاللّٰهِ شَهِيۡدًاۢ
بَيۡنِىۡ وَبَيۡنَكُمۡ ۙ وَمَنۡ عِنۡدَهٗ عِلۡمُ الۡكِتٰبِ ﴿۴۳﴾ ع ۶ / ۱۲

سُوۡرَةُ اِبۡرٰهِيۡمَ مَكِّيَّةٌ وَّهِىَ اثۡنَتَانِ وَخَمۡسُوۡنَ اٰيَةً وَّسَبۡعُ رُكُوۡعَاتٍ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

الۤرٰ‌ كِتٰبٌ اَنۡزَلۡنٰهُ اِلَيۡكَ لِـتُخۡرِجَ النَّاسَ مِنَ الظُّلُمٰتِ اِلَى
النُّوۡرِ ۙ بِاِذۡنِ رَبِّهِمۡ اِلٰى صِرَاطِ الۡعَزِيۡزِ الۡحَمِيۡدِۙ ﴿۱﴾ اللّٰهِ الَّذِىۡ لَهٗ مَا
فِى السَّمٰوٰتِ وَمَا فِى الۡاَرۡضِ‌ ؕ وَوَيۡلٌ لِّلۡكٰفِرِيۡنَ مِنۡ عَذَابٍ شَدِيۡدِ ۙ ﴿۲﴾
اۨلَّذِيۡنَ يَسۡتَحِبُّوۡنَ الۡحَيٰوةَ الدُّنۡيَا عَلَى الۡاٰخِرَةِ وَيَصُدُّوۡنَ عَنۡ
سَبِيۡلِ اللّٰهِ وَيَبۡغُوۡنَهَا عِوَجًا‌ ؕ اُولٰۤـئِكَ فِىۡ ضَلٰلٍۢ بَعِيۡدٍ ﴿۳﴾ وَمَاۤ
اَرۡسَلۡنَا مِنۡ رَّسُوۡلٍ اِلَّا بِلِسَانِ قَوۡمِهٖ لِيُبَيِّنَ لَهُمۡ‌ ؕ فَيُضِلُّ اللّٰهُ
مَنۡ يَّشَآءُ وَيَهۡدِىۡ مَنۡ يَّشَآءُ‌ ؕ وَهُوَ الۡعَزِيۡزُ الۡحَكِيۡمُ ﴿۴﴾ وَلَقَدۡ
اَرۡسَلۡنَا مُوۡسٰى بِاٰيٰتِنَاۤ اَنۡ اَخۡرِجۡ قَوۡمَكَ مِنَ الظُّلُمٰتِ اِلَى النُّوۡرِ ۙ
وَذَكِّرۡهُمۡ بِاَيّٰٮمِ اللّٰهِ‌ ؕ اِنَّ فِىۡ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّـكُلِّ صَبَّارٍ شَكُوۡرٍ ﴿۵﴾

42. (நபியே!) இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் திட்டமாகச் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர்; ஆகவே, சூழ்ச்சிகள் யாவும் அல்லாஹ்விடமே உள்ளன; (ஏனென்றால்), ஒவ்வோர் ஆத்மாவும் சம்பாதிக்கின்றவற்றை அவன் (திட்டமாக) நன்கறிவான்; ஆகவே, இறுதி வீடு யாருக்கு(நல்லதாக இருக்கும்) என்பதை நிராகரிப்போர் அறிந்து கொள்வார்கள்.

43. மேலும் (நபியே!) "நீர் (அல்லாஹ்வினால்) அனுப்பப்பட்ட தூதர் அல்ல" என்று நிராகரித்துக் கொண்டிருப்போர் கூறுகின்றனர்; ("இதைப்பற்றி) எனக்கும் உங்களுக்குமிடையில் அல்லாஹ், மற்றும் வேதஞானம் யாரிடமிருக்கிறதோ அவர்கள் சாட்சியால் போதுமானவர்கள்" என்று கூறுவீராக!

---

அத்தியாயம் : 14

## இப்றாஹீம்

வசனங்கள் : 52 மக்கீ ருகூஃகள் : 7

---

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. அலிஃப் லாம் றா. (நபியே! இது) வேதமாகும்; (இதன் மூலம்) மனிதர்களை, அவர்களுடைய இரட்சகனின் அனுமதிகொண்டு இருள்களிலிருந்து பிரகாசத்தின்பால்_(சகலரையும்) மிகைத்தோன், புகழுக்குரியோன் ஆகியவனின் பாதையின்பால் _ நீர் வெளியேற்றுவதற்காக இ(வ் வேதத்)தை நாமே உம்மீது இறக்கிவைத்திருக்கிறோம்.

2. (அவனே)அல்லாஹ்; (அவன்) எத்தகையோனென்றால் வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவையும் அவனுக்கே உரியன; மேலும், (இதனை) நிராகரிப்போருக்கு கடினமான வேதனையின் காரணமாக பெருங்கேடுதான்.

3. (நிராகரிப்போராகிய) அவர்கள் எத்தகையோரென்றால் மறுமையைவிட, இவ்வுலக வாழ்க்கையையே விரும்புகின்றனர்; அல்லாஹ்வுடைய பாதையை விட்டும் (மற்றவர்களை) தடுக்கின்றனர்; (அப்பாதை மிகச்சரியானதாயிருக்க) அதை கோணலுடையதாகவும் தேடுகின்றனர்; அவர்கள் வெகுதூரமான வழிகேட்டிலிருக்கின்றனர்.

4. மேலும், (நபியே! ஒவ்வொரு சமூகத்தார்க்கும்) அவர்களுக்கு (நம் தூதுத்துவத்தை) அவர் விளக்கிக் கூறுவதற்காக, எந்த ஒரு தூதரையும் அவ(ரவ)ருடைய சமூகத்தாரின் மொழியைக் கொண்டேயல்லாது நாம் அனுப்பவில்லை; (ஆகவே) அல்லாஹ் நாடியவர்களை தவறான வழியில் விட்டுவிடுகிறான்; மேலும், அவன் நாடியவர்களை நேர் வழியில் செலுத்துகிறான்; அவனே(யாவற்றையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

5. திட்டமாக நாம் மூஸாவை நம்முடைய பல அத்தாட்சிகளுடன் அனுப்பிவைத்து, "நீர் உம் சமூகத்தாரை இருள்களிலிருந்து பிரகாசத்தின்பால் வெளியேற்றுவீராக! இன்னும், (சென்றுவிட்ட சமூகத்தாரில் அருட்கொடைகளாலும், தண்டனைகளாலும் நிறையபெற்ற) அல்லாஹ்வின் (அந்)நாட்களை அவர்களுக்கு நீர் நினைவூட்டுவீராக!" (என்று அவருக்கு நாம் ஏவினோம்;) மிகுந்த பொறுமையுடனிருப்போர், அதிக நன்றி செலுத்துவோர் ஆகிய ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

وَ اِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهِ اذْكُرُوْا نِعْمَةَ اللّٰهِ عَلَيْكُمْ اِذْ
اَنْجٰىكُمْ مِّنْ اٰلِ فِرْعَوْنَ يَسُوْمُوْنَكُمْ سُوْٓءَ الْعَذَابِ وَ
يُذَبِّحُوْنَ اَبْنَآءَكُمْ وَ يَسْتَحْيُوْنَ نِسَآءَكُمْ ؕ وَ فِيْ ذٰلِكُمْ بَلَآءٌ
مِّنْ رَّبِّكُمْ عَظِيْمٌ ﴿۶﴾ وَ اِذْ تَاَذَّنَ رَبُّكُمْ لَئِنْ شَكَرْتُمْ ع ۱۴
لَاَزِيْدَنَّكُمْ وَ لَئِنْ كَفَرْتُمْ اِنَّ عَذَابِيْ لَشَدِيْدٌ ﴿۷﴾ وَ قَالَ
مُوْسٰۤى اِنْ تَكْفُرُوْۤا اَنْتُمْ وَ مَنْ فِي الْاَرْضِ جَمِيْعًا ۙ فَاِنَّ
اللّٰهَ لَغَنِيٌّ حَمِيْدٌ ﴿۸﴾ اَلَمْ يَاْتِكُمْ نَبَؤُا الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ
قَوْمِ نُوْحٍ وَّ عَادٍ وَّ ثَمُوْدَ ۬ۛ وَ الَّذِيْنَ مِنْۢ بَعْدِهِمْ ۛؕ لَا
يَعْلَمُهُمْ اِلَّا اللّٰهُ ؕ جَآءَتْهُمْ رُسُلُهُمْ بِالْبَيِّنٰتِ فَرَدُّوْۤا
اَيْدِيَهُمْ فِيْۤ اَفْوَاهِهِمْ وَ قَالُوْۤا اِنَّا كَفَرْنَا بِمَاۤ اُرْسِلْتُمْ بِهٖ
وَ اِنَّا لَفِيْ شَكٍّ مِّمَّا تَدْعُوْنَنَاۤ اِلَيْهِ مُرِيْبٍ ﴿۹﴾ قَالَتْ رُسُلُهُمْ
اَفِي اللّٰهِ شَكٌّ فَاطِرِ السَّمٰوٰتِ وَ الْاَرْضِ ؕ يَدْعُوْكُمْ
لِيَغْفِرَ لَكُمْ مِّنْ ذُنُوْبِكُمْ وَ يُؤَخِّرَكُمْ اِلٰۤى اَجَلٍ مُّسَمًّى ؕ
قَالُوْۤا اِنْ اَنْتُمْ اِلَّا بَشَرٌ مِّثْلُنَا ؕ تُرِيْدُوْنَ اَنْ تَصُدُّوْنَا
عَمَّا كَانَ يَعْبُدُ اٰبَآؤُنَا فَاْتُوْنَا بِسُلْطٰنٍ مُّبِيْنٍ ﴿۱۰﴾

مع حدعند المتقدمین

الثلثة

6. மூஸா தன் சமூகத்தாரிடம், "அல்லாஹ் உங்கள் மீது – அவன் உங்களை ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரிடமிருந்து காப்பாற்றியபொழுது – புரிந்திருக்கும் அருட்கொடையை நினைத்துப் பாருங்கள்; அவர்கள், உங்களை கொடிய வேதனை செய்து கொண்டிருந்தார்கள்; மேலும், உங்கள் ஆண் மக்களை அறுத்(துக்கொலை செய்)தும், பெண் மக்களை (உயிருடன் வாழ) விட்டும் விட்டார்கள்;இதில் உங்கள் இரட்சகனிடமிருந்து உங்களுக்குப் பெரும்சோதனை ஏற்பட்டிருந்தது" என்றும் கூறியதை(நபியே! நீர் நினைவு கூர்வீராக).

7. அன்றியும், உங்கள் இரட்சகன் (இதற்காக) நீங்கள் (எனக்கு) நன்றி செலுத்தினால் (என் அருளை) நிச்சயமாக உங்களுக்கு அதிகப்படுத்துவேன்; இன்னும், நீங்கள் மாறு செய்தீர்களானால், நிச்சயமாக என்னுடைய வேதனை மிகக் கடினமானது" என்று அறிவித்ததையும்(நபியே! நீர் நினைவு கூர்வீராக).

8. இன்னும், மூஸா (தன் சமூகத்தாரிடம்) "நீங்களும், பூமியிலுள்ள (மனிதர்கள்) அனைவரும் (அல்லாஹ்வுக்கு) மாறு செய்த போதிலும், நிச்சயமாக அல்லாஹ் தேவையற்றவன்;புகழப்படுபவன்" என்றும் கூறினார்.

9. உங்களுக்கு முன்னர் இருந்தவர்களில் நூஹ், ஆது, ஸமூது ஆகிய சமூகத்தாருடையவும், அவர்களுக்குப் பின்னர் உள்ளவர்களுடையவும் செய்தி(கள்) உங்களுக்கு வரவில்லையா? அவர்(களின் விபரங்)களை அல்லாஹ்வைத் தவிர(மற்றெவரும்) அறியமாட்டார்; (அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட) அவர்களுடைய தூதர்கள் தெளிவான அத்தாட்சிகளுடன் அவர்களிடம் வந்தார்கள்; (நேரான வழிக்கு "வாருங்கள்," என்று அழைத்த சமயத்தில்,) அவர்களுடைய கைகளை அவர்களுடைய வாய்களின் பக்கமே கொண்டுசென்று (தூதர்களின் கூற்றை மறுத்து அவர்களிடம்,) "நிச்சயமாக நீங்கள் எதைக்கொண்டு அனுப்பப்பட்டிருக்கின்றீர்களோ, அதை நிச்சயமாக நாங்கள் நிராகரிக்கின்றோம்; அன்றியும், நீங்கள் எங்களை எதன்பால் அழைக்கின்றீர்களோ, அதைப்பற்றி நிச்சயமாக நாங்கள் அவநம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய சந்தேகத்திலிருக்கிறோம்" என்றும் கூறினார்கள்.

10. அதற்கு, அவர்களுடைய தூதர்கள் (அவர்களிடம்), "வானங்களையும், பூமியையும் படைத்த அல்லாஹ்வைப் பற்றியா சந்தேகம்? உங்களுடைய குற்றங்களை உங்களுக்கு மன்னிப்பதற்காக உங்களை அவன் அழைக்கிறான்; ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் உங்களை (வாழ்ந்திருக்க) பிற்படுத்தியும் வைப்பான்" என்று கூறினார்கள்; அ(தற்க)வர்கள், "நீங்கள் நம்மைப்போன்ற மனிதர்களேயன்றி (வேறு) இல்லை; எங்கள் மூதாதையர்கள் வணங்கிக் கொண்டிருந்தவற்றை விட்டு எங்களைத் தடை செய்ய நீங்கள் நாடுகிறீர்கள்; அவ்வாறாயின் (அதற்குரிய) தெளிவான சான்றை எங்களுக்குக் கொண்டு வாருங்கள்" என்று கூறினார்கள்.

قَالَتْ لَهُمْ رُسُلُهُمْ اِنْ نَّحْنُ اِلَّا بَشَرٌ مِّثْلُكُمْ وَلٰكِنَّ اللّٰهَ يَمُنُّ
عَلٰى مَنْ يَّشَآءُ مِنْ عِبَادِهٖ ؕ وَمَا كَانَ لَنَآ اَنْ نَّاْتِيَكُمْ بِسُلْطٰنٍ
اِلَّا بِاِذْنِ اللّٰهِ ؕ وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُوْنَ ﴿۱۱﴾ وَمَا لَنَآ اَلَّا
نَتَوَكَّلَ عَلَى اللّٰهِ وَقَدْ هَدٰىنَا سُبُلَنَا ؕ وَلَنَصْبِرَنَّ عَلٰى مَآ
اٰذَيْتُمُوْنَا ؕ وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُتَوَكِّلُوْنَ ﴿۱۲﴾ ۧ وَقَالَ الَّذِيْنَ ع ۲ ۱۴
كَفَرُوْا لِرُسُلِهِمْ لَنُخْرِجَنَّكُمْ مِّنْ اَرْضِنَآ اَوْ لَتَعُوْدُنَّ فِيْ مِلَّتِنَا ؕ
فَاَوْحٰٓى اِلَيْهِمْ رَبُّهُمْ لَنُهْلِكَنَّ الظّٰلِمِيْنَ ﴿۱۳﴾ ۙ وَلَنُسْكِنَنَّكُمُ الْاَرْضَ
مِنْۢ بَعْدِهِمْ ؕ ذٰلِكَ لِمَنْ خَافَ مَقَامِيْ وَخَافَ وَعِيْدِ ﴿۱۴﴾ وَاسْتَفْتَحُوْا
وَخَابَ كُلُّ جَبَّارٍ عَنِيْدٍ ﴿۱۵﴾ ۙ مِّنْ وَّرَآئِهٖ جَهَنَّمُ وَيُسْقٰى مِنْ مَّآءٍ
صَدِيْدٍ ﴿۱۶﴾ ۙ يَّتَجَرَّعُهٗ وَلَا يَكَادُ يُسِيْغُهٗ وَيَاْتِيْهِ الْمَوْتُ مِنْ كُلِّ
مَكَانٍ وَّمَا هُوَ بِمَيِّتٍ ؕ وَمِنْ وَّرَآئِهٖ عَذَابٌ غَلِيْظٌ ﴿۱۷﴾ مَثَلُ الَّذِيْنَ
كَفَرُوْا بِرَبِّهِمْ اَعْمَالُهُمْ كَرَمَادِ ِۨاشْتَدَّتْ بِهِ الرِّيْحُ فِيْ يَوْمٍ عَاصِفٍ ؕ
لَا يَقْدِرُوْنَ مِمَّا كَسَبُوْا عَلٰى شَيْءٍ ؕ ذٰلِكَ هُوَ الضَّلٰلُ الْبَعِيْدُ ﴿۱۸﴾
اَلَمْ تَرَ اَنَّ اللّٰهَ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِالْحَقِّ ؕ اِنْ يَّشَاْ يُذْهِبْكُمْ
وَيَاْتِ بِخَلْقٍ جَدِيْدٍ ﴿۱۹﴾ ۙ وَّمَا ذٰلِكَ عَلَى اللّٰهِ بِعَزِيْزٍ ﴿۲۰﴾

11. (அதற்கு) அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம், "நாங்கள் உங்களைப் போன்ற மனிதர்களே தவிர வேறில்லை; எனினும், அல்லாஹ் தன் அடியார்களில் தான் நாடியவர்கள் மீது பேரருள் புரிகின்றான்; மேலும், அல்லாஹ்வுடைய அனுமதி கொண்டல்லாது எந்தச் சான்றையும் உங்களுக்கு நாங்கள் கொண்டு வருவது எங்களுக்கு(சாத்தியம்)இல்லை; (சகலகாரியங்களையும் அல்லாஹ்விடம் ஒப்படைத்து முழுமையாக) விசுவாசிகள் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்கட்டும்" என்று கூறினார்கள்.

12. "இன்னும், நாங்கள் அல்லாஹ்வின் மீது (முழுமையாக) நம்பிக்கை வைக்காதிருக்க எங்களுக்கென்ன (நேர்ந்தது)? திட்டமாக, அவன் எங்களுடைய வழிகளை எங்களுக்கு காண்பித்துள்ளான்; மேலும் (நிராகரிப்போரே !) நீங்கள் எங்களுக்கிழைக்கும் துன்பங்களை நிச்சயமாக, நாங்கள் பொருத்துக்கொண்டு (உறுதியாக) இருப்போம்; இன்னும்,(சகல காரியங்களையும் அல்லாஹ்விடம் ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைக்கிறவர்கள் (யாவரும்) அல்லாஹ்வின் மீதே (முழுமையாக) நம்பிக்கை வைக்கட்டும் (என்றும் கூறினார்கள்).

13. நிராகரித்துக்கொண்டிருந்தோர், தங்களின்(பால் அனுப்பப்பட்ட அத்)தூதர்களிடம் நிச்சயமாக, நாங்கள் உங்களை எங்கள் பூமியிலிருந்து வெளியேற்றிவிடுவோம்; அல்லது நிச்சயமாக எங்கள் மார்க்கத்தில் நீங்கள் திரும்பி விடவேண்டும் என்று கூறினார்கள்; அப்போது, அநியாயக்காரர்களை நிச்சயமாக நாம் அழித்துவிடுவோம் என அவர்கள்பால் அவர்களின் இரட்சகன் (வஹீ) அறிவித்தான்.

14. இன்னும்," அவர்களுக்குப் பின்னர் உங்களை,(இந்த) பூமியில் நிச்சயமாக நாம் குடியேற்றுவோம்" (என்றும் வஹீ மூலம் அறிவித்து,) "இது, என் முன்னால் (விசாரணைக்காக) நிற்பதை பயந்தவருக்கும், என் அச்சமூட்டலைப் பயந்தவருக்குமாகும்(என்றும் இரட்சகன் அறிவித்தான்).

15. இன்னும், அ(த்தூது)வர்கள் (அல்லாஹ்வின்) உதவியைக் கோரினார்கள்; பிடிவாதக்கார வம்பன் ஒவ்வொருவனும் நஷ்டமடைந்துவிட்டான்.

16. அவனுக்கு முன்பாக நரகம்(தான்) இருக்கிறது; மேலும், சீழ் நீரிலிருந்து அவன் புகட்டப்படுவான்.

17. அதனை அவன் (சங்கடத்தோடு) சிறுகச் சிறுக விழுங்குவான்; எனினும், அதை அவன் எளிதாக விழுங்க நெருங்கமாட்டான்; ஒவ்வொரு திசையிலிருந்தும் மரணம் அவனுக்கு வந்துகொண்டுமிருக்கும்; அவன் மரணிப்பவனுமல்லன்; மேலும், அதற்கப்பால் கடினமான வேதனையுமுண்டு.

18. தங்கள் இரட்சகனை நிராகரிக்கின்றார்களே, அத்தகையவர்களுக்கு உதாரணம்: அவர்களுடைய செயல்கள் சாம்பலைப் போலிருக்கிறது! கடும்புயல் வீசும் நாளில் காற்று கடினமாக அதனை அடித்துக்கொண்டு போய்விட்டது; இது போன்றே தாங்கள் சம்பாதித்தவற்றிலிருந்து எதன் மீதும் (எப்பயனையும் அடைய)அவர்கள் சக்தி பெற மாட்டார்கள்; இதுவே வெகு தூரமான வழிகேடாகும்.

19. நிச்சயமாக அல்லாஹ்(தான்) வானங்களையும், பூமியையும் உண்மையைக் கொண்டே படைத்திருக்கிறான் என்பதை (மனிதனே!) நீ பார்க்கவில்லையா? அவன் நாடினால் உங்களைப் போக்கிவிட்டு, புதியதொரு படைப்பைக்கொண்டு வந்தும்விடுவான்.

20. மேலும்,அ(வ்வாறு செய்வதான)து அல்லாஹ்வின்மீது சிரமமானதுமல்ல.

وَبَرَزُوْا لِلّٰهِ جَمِيْعًا فَقَالَ الضُّعَفٰٓؤُا لِلَّذِيْنَ اسْتَكْبَرُوْٓا اِنَّا
كُنَّا لَكُمْ تَبَعًا فَهَلْ اَنْتُمْ مُّغْنُوْنَ عَنَّا مِنْ عَذَابِ اللّٰهِ مِنْ
شَيْءٍ ؕ قَالُوْا لَوْ هَدٰىنَا اللّٰهُ لَهَدَيْنٰكُمْ ؕ سَوَآءٌ عَلَيْنَآ اَجَزِعْنَآ اَمْ
صَبَرْنَا مَا لَنَا مِنْ مَّحِيْصٍ ع ﴿۲۱﴾ وَقَالَ الشَّيْطٰنُ لَمَّا قُضِيَ الْاَمْرُ ۳ ع ۱۵
اِنَّ اللّٰهَ وَعَدَكُمْ وَعْدَ الْحَقِّ وَوَعَدْتُّكُمْ فَاَخْلَفْتُكُمْ ؕ وَمَا كَانَ
لِيَ عَلَيْكُمْ مِّنْ سُلْطٰنٍ اِلَّآ اَنْ دَعَوْتُكُمْ فَاسْتَجَبْتُمْ لِيْ ۚ فَلَا
تَلُوْمُوْنِيْ وَلُوْمُوْٓا اَنْفُسَكُمْ ؕ مَآ اَنَا بِمُصْرِخِكُمْ وَمَآ اَنْتُمْ بِمُصْرِخِيَّ ؕ
اِنِّيْ كَفَرْتُ بِمَآ اَشْرَكْتُمُوْنِ مِنْ قَبْلُ ؕ اِنَّ الظّٰلِمِيْنَ لَهُمْ
عَذَابٌ اَلِيْمٌ ﴿۲۲﴾ وَاُدْخِلَ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ
جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا بِاِذْنِ رَبِّهِمْ ؕ
تَحِيَّتُهُمْ فِيْهَا سَلٰمٌ ﴿۲۳﴾ اَلَمْ تَرَ كَيْفَ ضَرَبَ اللّٰهُ مَثَلًا كَلِمَةً
طَيِّبَةً كَشَجَرَةٍ طَيِّبَةٍ اَصْلُهَا ثَابِتٌ وَّفَرْعُهَا فِي السَّمَآءِ ۙ ﴿۲۴﴾
تُؤْتِيْٓ اُكُلَهَا كُلَّ حِيْنٍۭ بِاِذْنِ رَبِّهَا ؕ وَيَضْرِبُ اللّٰهُ الْاَمْثَالَ
لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَذَكَّرُوْنَ ﴿۲۵﴾ وَمَثَلُ كَلِمَةٍ خَبِيْثَةٍ كَشَجَرَةٍ
خَبِيْثَةِ ۨاجْتُثَّتْ مِنْ فَوْقِ الْاَرْضِ مَا لَهَا مِنْ قَرَارٍ ﴿۲۶﴾

21. மேலும், (மறுமையில்) அனைவரும் அல்லாஹ்வின் முன்னிலையில் வெளிப்பட்டு (நின்று)விடுவார்கள். (இவ்வுலகில்) பலவீனமானவர்கள் கர்வங்கொண்டிருந்தவர்களிடம், "நிச்சயமாக (உலகில்) நாங்கள்(நீங்கள் காட்டியவழியில்) உங்களையே பின்தொடர்ந்தவர்களாக இருந்தோம். ஆகவே (வர இருக்கும்), அல்லாஹ்வுடைய வேதனையிலிருந்து ஒரு சிறிதளவையேனும் எங்களைவிட்டும் நீங்கள் தடுக்கக் கூடியவர்களா?" என்று கேட்பார்கள்; அ(தற்க)வர்கள், " அல்லாஹ் எங்களுக்கு (யாதொரு) வழியைக் காண்பித்தால் (அதனை) நாங்கள் உங்களுக்குக் காண்பித்துத் தருவோம்; (எங்கள் வேதனையைப்பற்றி) நாங்கள் பதைபதைத்துத் துடிதுடிப்பதும், அல்லது பொறுத்திருப்பதும் எங்களுக்கு சமமானதாகும்; (இவ்வேதனையிலிருந்து விலகி) தப்பிச் செல்லுமிடம் எங்களுக்கில்லையே" என்று(வருந்திக்) கூறுவார்கள்.

22. (இக்குற்றவாளிகளைப் பற்றித்) தீர்ப்புக் கூறப்பட்ட பின்னர், ஷைத்தான் (இவர்களிடம்) "நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உண்மையான வாக்குறுதியாக வாக்களித்திருந்தான் (அவ்வாறே நிறைவேற்றியும் விட்டான்); உங்களுக்கு நானும் (பொய்யாக) வாக்களித்திருந்தேன்; ஆனால் நான் உங்களுக்கு (கொடுத்த வாக்கில்) மாறுசெய்தேன்; நான் உங்களை அழைத்தேன்; நீங்கள் எனக்கு பதில் கூறினீர்கள் என்பதைத் தவிர, எனக்கு யாதோர் அதிகாரமும் உங்கள்மீது இல்லை. ஆதலால், நீங்கள் என்னை நிந்திக்காதீர்கள்; உங்களையே நீங்கள் நிந்தித்துக் கொள்ளுங்கள்; நான் உங்களை காப்பாற்றுபவனல்ல; என்னை நீங்கள் காப்பாற்றுபவர்களுமல்லர்; (இதற்கு) முன்னர் நீங்கள் என்னை (அல்லாஹ்வுக்கு) இணையாக்கிக் கொண்டிருந்ததையும் நிச்சயமாக நான் நிராகரித்துவிட்டேன்; நிச்சயமாக அநியாயக்காரர்கள்_ அவர்களுக்கு மிக்க துன்புறுத்தும் வேதனையுண்டு" என்று கூறுவான்.

23. இன்னும், விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்கின்றார்களே அத்தகையோர் சுவனபதிகளில் பிரவேசிக்கப்படுவார்கள்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; தங்கள் இரட்சகனின் உத்தரவு கொண்டு அவற்றில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; அவற்றில் அவர்களின் காணிக்கை ( யானது ஒருவர் மற்றவருக்கு, "உங்களுக்கு) சாந்தி உண்டாவதாக!" என்பதாகும்.

24. நல்ல வாக்கியத்திற்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணத்தைக் கூறியுள்ளான் என்பதை (நபியே!) நீர்பார்க்கவில்லையா? (அது) நல்லமரத்தைப் போன்றாகும்; அதன் வேர் (பூமியில்) ஆழப்பதிந்தும், அதன் கிளை வானளாவியும் இருக்கிறது.

25. அது தன் இரட்சகனின் அனுமதி கொண்டு ஒவ்வொரு நேரத்திலும் கனிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது; மேலும், மனிதர்களுக்கு_ அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்காக இவ்வுதாரணங்களை அல்லாஹ் கூறுகிறான் .

26. இன்னும், கெட்டவாக்கியத்திற்கு உதாரணமாகிறது பூமியின் மேற்புறத்திலிருந்து வேரோடு பிடுங்கப்பட்ட கெட்ட மரத்தைப் போன்றாகும்; அதற்கு (நிலைத்து நிற்கும்) உறுதியான நிலை இல்லை.

يُثَبِّتُ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا بِالْقَوْلِ الثَّابِتِ فِي الْحَيٰوةِ الدُّنْيَا
وَفِي الْاٰخِرَةِ ۚ وَيُضِلُّ اللّٰهُ الظّٰلِمِيْنَ ۙ وَيَفْعَلُ اللّٰهُ مَا يَشَآءُ ع ﴿۲۷﴾ ع ۴ ۱۶
اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ بَدَّلُوْا نِعْمَتَ اللّٰهِ كُفْرًا وَّاَحَلُّوْا قَوْمَهُمْ
دَارَ الْبَوَارِ ﴿۲۸﴾ جَهَنَّمَ ۚ يَصْلَوْنَهَا ۭ وَبِئْسَ الْقَرَارُ ﴿۲۹﴾ وَجَعَلُوْا لِلّٰهِ
اَنْدَادًا لِّيُضِلُّوْا عَنْ سَبِيْلِهٖ ۭ قُلْ تَمَتَّعُوْا فَاِنَّ مَصِيْرَكُمْ
اِلَى النَّارِ ﴿۳۰﴾ قُلْ لِّعِبَادِيَ الَّذِيْنَ اٰمَنُوْا يُقِيْمُوا الصَّلٰوةَ
وَيُنْفِقُوْا مِمَّا رَزَقْنٰهُمْ سِرًّا وَّعَلَانِيَةً مِّنْ قَبْلِ اَنْ
يَّاْتِيَ يَوْمٌ لَّا بَيْعٌ فِيْهِ وَلَا خِلٰلٌ ﴿۳۱﴾ اَللّٰهُ الَّذِيْ خَلَقَ
السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَاَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَاَخْرَجَ بِهٖ
مِنَ الثَّمَرٰتِ رِزْقًا لَّكُمْ ۚ وَسَخَّرَ لَكُمُ الْفُلْكَ لِتَجْرِيَ فِي الْبَحْرِ
بِاَمْرِهٖ ۚ وَسَخَّرَ لَكُمُ الْاَنْهٰرَ ﴿۳۲﴾ وَسَخَّرَ لَكُمُ الشَّمْسَ وَالْقَمَرَ
دَآئِبَيْنِ ۚ وَسَخَّرَ لَكُمُ الَّيْلَ وَالنَّهَارَ ﴿۳۳﴾ وَاٰتٰىكُمْ مِّنْ كُلِّ مَا
سَاَلْتُمُوْهُ ۭ وَاِنْ تَعُدُّوْا نِعْمَتَ اللّٰهِ لَا تُحْصُوْهَا ۭ اِنَّ الْاِنْسَانَ
لَظَلُوْمٌ كَفَّارٌ ع ﴿۳۴﴾ وَاِذْ قَالَ اِبْرٰهِيْمُ رَبِّ اجْعَلْ هٰذَا ع ۵ ۱۷
الْبَلَدَ اٰمِنًا وَّاجْنُبْنِيْ وَبَنِيَّ اَنْ نَّعْبُدَ الْاَصْنَامَ ۭ ﴿۳۵﴾

27. விசுவாசங் கொண்டுள்ளார்களே அத்தகையோரை, இம்மை வாழ்விலும், மறுமையிலும் (ஷஹாதத்துக் கலிமாவை கூறுவதன் மூலம்) உறுதியான சொல்லைக் கொண்டு அல்லாஹ் நிலைப்படுத்துகிறான்; மேலும் அல்லாஹ், அநியாயக்காரர்களை (அவர்களுடைய பாவத்தின்காரணமாக)த் தவறான வழியில் விட்டும் விடுகிறான்; மேலும் அல்லாஹ் தான் நாடியதைச் செய்கிறான்.

28. அல்லாஹ்வின் அருட்கொடையை நிராகரிப்பாக மாற்றி, தங்கள் சமூகத்தினரை அழிவுவீட்டில் இறக்கிவிட்டவர்களையும் (நபியே!) நீர் பார்க்கவில்லையா?

29. (அழிவு வீடானஅது) நரகமாகும்; அதில் அவர்கள் பிரவேசிப்பார்கள்; இன்னும், தங்குமிடத்தில் (அது) மிகக்கெட்டது.

30. இன்னும், அல்லாஹ்வுக்கு _ அவனுடைய பாதையை விட்டும் அவர்கள் (மக்களை) வழிகெடுப்பதற்காக _ சமமானவர்களை அவர்கள் ஆக்கினர்; (நபியே!) அவர்களிடம், "நீங்கள் சுகமனுபவித்துக் கொள்ளுங்கள்; நிச்சயமாக, நீங்கள் திரும்பிச் சேருமிடம் நரகம்தான்" என்று கூறுவீராக!

31. விசுவாசங் கொண்ட என் அடியார்களுக்கு_" அவர்கள் தொழுகையை நிறைவேற்றவும், கொடுக்கல் வாங்கலோ, நட்போ இராத நாள் வருவதற்கு முன்னதாகவே, நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றிலிருந்து இரகசியமாகவும், பகிரங்கமாகவும் (தர்மச்) செலவு செய்யவும்" _என்று (நபியே!)நீர் கூறுவீராக!

32. அல்லாஹ் எத்தகையவனென்றால், அவன் தான் வானங்களையும், பூமியையும் படைத்தான்; அவனே வானத்திலிருந்து மழைபொழியச் செய்து பின்னர், அதைக்கொண்டு உங்களுக்கு உணவாக(ப் பற்பல) கனிவர்க்கங்களையும் வெளிப்படுத்தினான்; மேலும், (நீங்கள் பிரயாணம் செய்வதற்காகக்) கப்பலை தன் கட்டளைப்படி கடலில் அது செல்வதற்காக உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்தான்; மேலும், ஆறுகளையும் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்தான்.

33. சூரியனையும், சந்திரனையும் (முறைப்படி தத்தம் வழிகளில்) அவ்விரண்டும் சென்று கொண்டேயிருக்க, அவன் உங்களுக்கு வசப்படுத்தித்தந்தான். மேலும், (மாறிமாறிவரும்) இரவையும், பகலையும் உங்களுக்கு அவன் வசப்படுத்தித் தந்தான்.

34. (இவையன்றி) மேலும், எவற்றை நீங்கள் அவனிடம் கேட்டீர்களோ அவற்றில் ஒவ்வொன்றிலிருந்தும் அவன் உங்களுக்குக் கொடுத்தான்; ஆகவே, அல்லாஹ்வுடைய அருட்கொடைகளை நீங்கள் எண்ணுவீர்களாயின் அவற்றை நீங்கள் கணக்கிட்டு (எண்ணி வரையறுத்து) விடமாட்டீர்கள்; நிச்சயமாக மனிதன் மிக்க அநியாயக்காரன்; மிக்க நன்றி கெட்டவன்.

35. இப்றாஹீம்: "என்னுடைய இரட்சகனே! (மக்காவாகிய) இவ்வூரை, அபயமளிக்கக்கூடியதாய் நீ ஆக்கி வைப்பாயாக! மேலும், என்னையும், என் மக்களையும் சிலைகளை வணங்குவதிலிருந்து தூரப்படுத்துவாயாக!" என்று கூறியதை (நபியே! நீர் நினைவுகூர்வீராக!)

رَبِّ اِنَّهُنَّ اَضۡلَلۡنَ كَثِيۡرًا مِّنَ النَّاسِ ۚ فَمَنۡ
تَبِعَنِىۡ فَاِنَّهٗ مِنِّىۡ ۚ وَمَنۡ عَصَانِىۡ فَاِنَّكَ غَفُوۡرٌ
رَّحِيۡمٌ ﴿٣٦﴾ رَبَّنَاۤ اِنِّىۡۤ اَسۡكَنۡتُ مِنۡ ذُرِّيَّتِىۡ بِوَادٍ غَيۡرِ
ذِىۡ زَرۡعٍ عِنۡدَ بَيۡتِكَ الۡمُحَرَّمِ ۙ رَبَّنَا لِيُقِيۡمُوا
الصَّلٰوةَ فَاجۡعَلۡ اَفۡـئِدَةً مِّنَ النَّاسِ تَهۡوِىۡۤ اِلَيۡهِمۡ
وَارۡزُقۡهُمۡ مِّنَ الثَّمَرٰتِ لَعَلَّهُمۡ يَشۡكُرُوۡنَ ﴿٣٧﴾ رَبَّنَاۤ
اِنَّكَ تَعۡلَمُ مَا نُخۡفِىۡ وَمَا نُعۡلِنُ ؕ وَمَا يَخۡفٰى عَلَى اللّٰهِ
مِنۡ شَىۡءٍ فِى الۡاَرۡضِ وَلَا فِى السَّمَآءِ ﴿٣٨﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ الَّذِىۡ
وَهَبَ لِىۡ عَلَى الۡكِبَرِ اِسۡمٰعِيۡلَ وَاِسۡحٰقَ ؕ اِنَّ رَبِّىۡ لَسَمِيۡعُ
الدُّعَآءِ ﴿٣٩﴾ رَبِّ اجۡعَلۡنِىۡ مُقِيۡمَ الصَّلٰوةِ وَمِنۡ ذُرِّيَّتِىۡ ۖ
رَبَّنَا وَتَقَبَّلۡ دُعَآءِ ﴿٤٠﴾ رَبَّنَا اغۡفِرۡ لِىۡ وَلِوَالِدَىَّ
وَلِلۡمُؤۡمِنِيۡنَ يَوۡمَ يَقُوۡمُ الۡحِسَابُ ﴿٤١﴾ ع وَلَا تَحۡسَبَنَّ ع ٦ ١٨
اللّٰهَ غَافِلًا عَمَّا يَعۡمَلُ الظّٰلِمُوۡنَ ؕ اِنَّمَا يُؤَخِّرُهُمۡ
لِيَوۡمٍ تَشۡخَصُ فِيۡهِ الۡاَبۡصَارُ ۙ ﴿٤٢﴾ مُهۡطِعِيۡنَ مُقۡنِعِىۡ
رُءُوۡسِهِمۡ لَا يَرۡتَدُّ اِلَيۡهِمۡ طَرۡفُهُمۡ ۚ وَاَفۡـئِدَتُهُمۡ هَوَآءٌ ؕ ﴿٤٣﴾

36. "என் இரட்சகனே! நிச்சயமாக (சிலைகளாகிய) அவைகள் மனிதர்களில் அநேகரை வழிகெடுத்துவிட்டன; ஆகவே, (அவைகளை வணங்காது) எவர் என்னைப் பின்பற்றுகிறாரோ, அவர்தான் நிச்சயமாக என்னில் உள்ளவராவார்; மேலும், எவர் எனக்கு மாறு செய்கிறாரோ, அப்போது நிச்சயமாக நீ மிக்க மன்னிப்பவன்; மிகக் கிருபைசெய்பவன்."

37. "எங்களுடைய இரட்சகனே! நிச்சயமாக நான் என்னுடைய சந்ததியை மிக்க கண்ணியம் வாய்ந்த உன் வீட்டின் சமீபமாக, விவசாயமில்லாத பள்ளத்தாக்கில் குடியேற்றிவிட்டேன்; எங்களுடைய இரட்சகனே! அவர்கள் (அங்கு)தொழுகையை நிறைவேற்றுவதற்காக; ஆகவே, மனிதர்களி(ல் ஒரு சிலரி)ன் இதயங்களை அவர்கள்பால் சாய்ந்தவையாக நீ ஆக்குவாயாக! அவர்கள் உனக்கு நன்றி செலுத்துவதற்காக, (பற்பல) கனி வர்க்கங்களிலிருந்து நீ அவர்களுக்கு உணவும் அளிப்பாயாக!"

38. "எங்களுடைய இரட்சகனே! நாங்கள் (இதயங்களில்) மறைத்துக் கொள்வதையும், நாங்கள் பகிரங்கப்படுத்துவதையும் நிச்சயமாக நீ நன்கறிவாய்; பூமியிலோ, வானத்திலோ (உள்ளவற்றில்) எப்பொருளும் அல்லாஹ்வுக்கு மறைந்ததல்ல."

39. "(என்னுடைய) வயோதிக(கால)த்தில் இஸ்மாயீலையும், இஸ்ஹாக்கையும் எனக்கு அன்பளிப்பாக வழங்கினானே அத்தகைய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும். நிச்சயமாக என் இரட்சகன் பிரார்த்தனையைச் செவி யேற்கிறவன்"

40. மேலும், "என்னுடைய இரட்சகனே! என்னையும், என் சந்ததியிலுள்ளோரையும் தொழுகையை நிறைவேற்றுபவர்களாக ஆக்கி வைப்பாயாக! எங்களுடைய இரட்சகனே! என்னுடைய பிரார்த்தனையை அங்கீகரித்தும் கொள்வாயாக!"

41. "எங்களுடைய இரட்சகனே! எனக்கும், என் பெற்றோருக்கும், (மற்ற) விசுவாசிகளுக்கும் கேள்வி கணக்கு நிலைபெறும் (மறுமை) நாளில் மன்னித்தருள்வாயாக "(என்றும் பிரார்த்தித்தார்).

42. மேலும், (நபியே!) அநியாயக்காரர்கள் செய்கின்றவைகளைப்பற்றி அல்லாஹ்வை பராமுகமானவனாக நீர் நிச்சயமாக எண்ண வேண்டாம்; அவர்களை அவன் தாமதப்படுத்துவதெல்லாம் பார்வைகள் எதில் நிலை குத்தியவாறு இருக்குமோ அந்த (கொடியதொரு மறுமை)நாளுக்காகத்தான்.

43. (அந்நாளில்) அவர்கள் விரைந்து ஓடக்கூடியவர்களாக, தங்கள் தலைகளை உயர்த்தி (மேல் நோக்கி)யவர்களாக இருப்பர். அவர்களுடைய (நிலைகுத்திய) பார்வை அவர்கள் பக்கம் திரும்பாது அவர்களுடைய இதயங்கள் (திக்பிரமை கொண்டு) செயலற்று விடும்.

وَاَنْذِرِ النَّاسَ يَوْمَ يَاْتِيْهِمُ الْعَذَابُ فَيَقُوْلُ الَّذِيْنَ
ظَلَمُوْا رَبَّنَآ اَخِّرْنَآ اِلٰٓى اَجَلٍ قَرِيْبٍۙ نُّجِبْ دَعْوَتَكَ وَنَتَّبِعِ
الرُّسُلَؕ اَوَلَمْ تَكُوْنُوْٓا اَقْسَمْتُمْ مِّنْ قَبْلُ مَا لَكُمْ مِّنْ زَوَالٍۙ ﴿۴۴﴾ وَّسَكَنْتُمْ
فِيْ مَسٰكِنِ الَّذِيْنَ ظَلَمُوْٓا اَنْفُسَهُمْ وَتَبَيَّنَ لَكُمْ كَيْفَ فَعَلْنَا بِهِمْ
وَضَرَبْنَا لَكُمُ الْاَمْثَالَ ﴿۴۵﴾ وَقَدْ مَكَرُوْا مَكْرَهُمْ وَعِنْدَ اللّٰهِ مَكْرُهُمْؕ
وَاِنْ كَانَ مَكْرُهُمْ لِتَزُوْلَ مِنْهُ الْجِبَالُ ﴿۴۶﴾ فَلَا تَحْسَبَنَّ اللّٰهَ مُخْلِفَ
وَعْدِهٖ رُسُلَهٗؕ اِنَّ اللّٰهَ عَزِيْزٌ ذُو انْتِقَامٍؕ ﴿۴۷﴾ يَوْمَ تُبَدَّلُ الْاَرْضُ
غَيْرَ الْاَرْضِ وَالسَّمٰوٰتُ وَبَرَزُوْا لِلّٰهِ الْوَاحِدِ الْقَهَّارِ ﴿۴۸﴾ وَتَرَى
الْمُجْرِمِيْنَ يَوْمَئِذٍ مُّقَرَّنِيْنَ فِي الْاَصْفَادِۚ ﴿۴۹﴾ سَرَابِيْلُهُمْ مِّنْ
قَطِرَانٍ وَّتَغْشٰى وُجُوْهَهُمُ النَّارُۙ ﴿۵۰﴾ لِيَجْزِيَ اللّٰهُ كُلَّ نَفْسٍ مَّا
كَسَبَتْؕ اِنَّ اللّٰهَ سَرِيْعُ الْحِسَابِ ﴿۵۱﴾ هٰذَا بَلٰغٌ لِّلنَّاسِ وَلِيُنْذَرُوْا
بِهٖ وَلِيَعْلَمُوْٓا اَنَّمَا هُوَ اِلٰهٌ وَّاحِدٌ وَّلِيَذَّكَّرَ اُولُوا الْاَلْبَابِ ﴿۵۲﴾ ع ۷ ۱۱ ۱۹

سُوْرَةُ الْحِجْرِ مَكِّيَّةٌ وَهِيَ تِسْعٌ وَّتِسْعُوْنَ اٰيَةً وَّسِتُّ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

الٓرٰ ۚ قف تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ وَقُرْاٰنٍ مُّبِيْنٍ ﴿۱﴾

44. அன்றியும், (நபியே!) மனிதர்களை _ அவர்களுக்கு வேதனை வரும்நாளைப் பற்றி நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! அநியாயம் செய்தார்களே அத்தகையோர் _ (அந்நாளில்) "எங்கள் இரட்சகனே! சமீபத்திய (சொற்ப) தவணை வரை எங்களைப் பிற்படுத்துவாயாக! (அவ்வாறு நீ எங்களை பிற்படுத்தினால்) நாங்கள் உன் அழைப்பை ஏற்கின்றோம்; (உன்) தூதர்களையும் பின் பற்றுகின்றோம்" என்று கூறுவார்கள். "(இதற்கு) முன்னர் உங்களுக்கு அழிவே இல்லை என்று நீங்கள் சத்தியம் செய்து (கூறிக்) கொண்டிருக்கவில்லையா?" (என்றும்),

45. "அன்றியும், தமக்குத் தாமே அநியாயம் செய்து கொண்டிருந்தவர்களின் வசிப்பிடங்களில் நீங்கள் வசித்தீர்கள்; நாம் அவர்களை எவ்வாறு (வேதனை) செய்தோம் என்பது உங்களுக்கு நன்கு தெளிவாகியும்விட்டது; (இதனைப்பற்றி) உங்களுக்குப் பல (முன்) உதாரணங்களையும் நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம்" (என்றும் அல்லாஹ் பதில் கூறுவான்).

46. இன்னும், அவர்கள் தங்கள் சூழ்ச்சியை உறுதியாகச் செய்து கொண்டிருந்தனர்; அவர்களுடைய சூழ்ச்சி (க்குரிய தண்டனை) அல்லாஹ்விடம் இருக்கிறது; அவர்களுடைய சூழ்ச்சி, அதனால் மலைகளும் பெயர்ந்துவிடக் கூடியவைகளாக இருந்த போதிலும், (ஒன்றும் பலனளிக்கப் போவதில்லை!)

47. அல்லாஹ்வை _ தன்னுடைய தூதர்களுக்கு தான் வாக்களித்ததற்கு மாறுசெய்கின்றவன் என (நபியே!) நீர் நிச்சயமாக எண்ணவேண்டாம்; மேலும், நிச்சயமாக அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவன்; தண்டித்தலையுடையவன்.

48. இந்த பூமி வேறு (விதப்) பூமியாகவும்; வானங்களும் (அவ்வாறே) மாற்றப்படும்நாளில் (அல்லாஹ் தன் வாக்குறுதியை நிறைவேற்றுவான்) மேலும், யாவரையும் அடக்கி ஆளுகின்ற ஒருவனாகிய அல்லாஹ்வின் சந்நிதியில் அவர்கள் (அனைவரும் அணியணியாக) வெளியாகி (நின்று) விடுவர்.

49. அன்றியும், அந்நாளில் குற்றவாளிகளை (சிலரைச்சிலரோடு) சங்கிலிகளில் இணைக்கப்பட்டவர்களாக நீர் காண்பீர்.

50. அவர்களுடைய சட்டைகள் தாரால் (செய்யப்பட்டு) இருக்கும்; அவர்களுடைய முகங்களை நெருப்பு மூடிக்கொண்டுமிருக்கும்.

51. ஒவ்வோர் ஆத்மாவுக்கும் அது சம்பாதித்தவற்றுக்கு அல்லாஹ் கூலி நல்குவதற்காக (இவ்வாறு நபியே! நீர் காண்பீர்) நிச்சயமாக அல்லாஹ் (கேள்வி) கணக்குக் கேட்பதில் மிக்க தீவிரமானவன்.

52. இ(வ் வேதமான)து மனிதர்களுக்கு எத்தி வைத்தலாகும்; இதனைக்கொண்டு அவர்கள் எச்சரிக்கப்படுவதற்காகவும், வணக்கத்திற்குரியவன் ஒரே நாயன் (ஆன அல்லாஹ்) தான் என்று அவர்கள் உறுதியாக அறிந்து கொள்வதற்காகவும், இன்னும் அறிவுடையோர் நல்லுணர்ச்சி பெறுவதற்காகவுமாகும்.

---

அத்தியாயம் : 15

## அல் ஹிஜ்ர் _ ஸமூது கூட்டத்தார் வாழ்ந்த பகுதி

வசனங்கள் : 99 மக்கீ ருகூஉகள் : 6

---

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்

அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. அலிஃப் லாம் றா. இவை இவ்வேதத்தினுடைய _ இன்னும், தெளிவான குர்ஆனுடைய _ வசனங்களாகும்.

رُبَمَا يَوَدُّ الَّذِيْنَ كَفَرُوْا لَوْ كَانُوْا مُسْلِمِيْنَ ﴿٢﴾ الجزء ١٤

ذَرْهُمْ يَاْكُلُوْا وَيَتَمَتَّعُوْا وَيُلْهِهِمُ الْاَمَلُ فَسَوْفَ

يَعْلَمُوْنَ ﴿٣﴾ وَمَآ اَهْلَكْنَا مِنْ قَرْيَةٍ اِلَّا وَلَهَا كِتَابٌ

مَّعْلُوْمٌ ﴿٤﴾ مَا تَسْبِقُ مِنْ اُمَّةٍ اَجَلَهَا وَمَا يَسْتَاْخِرُوْنَ ﴿٥﴾ وَ

قَالُوْا يٰٓاَيُّهَا الَّذِيْ نُزِّلَ عَلَيْهِ الذِّكْرُ اِنَّكَ لَمَجْنُوْنٌ ﴿٦﴾ لَوْ

مَا تَاْتِيْنَا بِالْمَلٰٓئِكَةِ اِنْ كُنْتَ مِنَ الصّٰدِقِيْنَ ﴿٧﴾ مَا نُنَزِّلُ

الْمَلٰٓئِكَةَ اِلَّا بِالْحَقِّ وَمَا كَانُوْٓا اِذًا مُّنْظَرِيْنَ ﴿٨﴾ اِنَّا نَحْنُ

نَزَّلْنَا الذِّكْرَ وَاِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ ﴿٩﴾ وَلَقَدْ اَرْسَلْنَا مِنْ

قَبْلِكَ فِيْ شِيَعِ الْاَوَّلِيْنَ ﴿١٠﴾ وَمَا يَاْتِيْهِمْ مِّنْ رَّسُوْلٍ اِلَّا

كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ﴿١١﴾ كَذٰلِكَ نَسْلُكُهٗ فِيْ قُلُوْبِ الْمُجْرِمِيْنَ ﴿١٢﴾

لَا يُؤْمِنُوْنَ بِهٖ وَقَدْ خَلَتْ سُنَّةُ الْاَوَّلِيْنَ ﴿١٣﴾ وَلَوْ فَتَحْنَا

عَلَيْهِمْ بَابًا مِّنَ السَّمَآءِ فَظَلُّوْا فِيْهِ يَعْرُجُوْنَ ﴿١٤﴾ لَقَالُوْٓا اِنَّمَا سُكِّرَتْ

اَبْصَارُنَا بَلْ نَحْنُ قَوْمٌ مَّسْحُوْرُوْنَ ﴿١٥﴾ وَلَقَدْ جَعَلْنَا فِي السَّمَآءِ ع ١٥ ١

بُرُوْجًا وَّزَيَّنّٰهَا لِلنّٰظِرِيْنَ ﴿١٦﴾ وَحَفِظْنٰهَا مِنْ كُلِّ شَيْطٰنٍ

رَّجِيْمٍ ﴿١٧﴾ اِلَّا مَنِ اسْتَرَقَ السَّمْعَ فَاَتْبَعَهٗ شِهَابٌ مُّبِيْنٌ ﴿١٨﴾

2. நிராகரிப்போர் தாங்களும் முஸ்லிம்களாக இருந்திருக்க வேண்டுமே என்று பெரிதும் விரும்புவர்.

3. (நபியே!)நீர் அவர்களை விட்டு விடுவீராக!அவர்கள் உண்ணட்டும். சுகமுமனுபவிக்கட்டும்; (அவர்களுடைய வீண்) ஆசை (மறுமையை) அவர்களுக்கு மறக்கடித்து விட்டது;(இதன் முடிவை) அவர்கள் நன்கறிந்து கொள்வார்கள்.

4. எவ்வூ(ரா)ரையும் , அதற்குக் குறிப்பிட்ட (காலத்) தவணையிலன்றி, நாம் (அவர்களை) அழித்துவிடவில்லை.

5. (அழிக்கப்படுவதற்காக உள்ள) எந்த ஒரு சமுதாயமும் தனக்குரிய தவணையை முந்தவும் மாட்டாது; அவர்கள் பிந்தவும்மாட்டார்கள்.

6. மேலும்,(குர்ஆனாகிய) "உபதேசம் எவர் மீது இறக்கப்பட்டுள்ளதோ அத்தகையவரே! நீர் நிச்சயமாக பைத்தியக்காரர்தான்" என அவர்கள் கூறுகின்றனர்.

7. "உண்மையாளர்களில் உள்ளவராக நீர் இருந்தால், (உமக்குச் சாட்சியாக) நீர் எங்களிடம் மலக்குகளை (அழைத்து) க்கொண்டு வந்திருக்க வேண்டாமா?" (என்றும் கூறுகின்றனர்).

8. (நபியே!) உண்மையைக்கொண்டல்லாது மலக்குகளை நாம் இறக்கி வைப்பதில்லை, (எனவே, வேதனையைக்கொண்டு அவர்கள் இறங்கினால்) அச்சமயம் அவர்கள் அவகாசம் கொடுக்கப்படுபவர்களாகவும் இருக்க மாட்டார்கள்.

9. நிச்சயமாக நாம்தான் (திக்ரு என்னும் இவ்) வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம்; நிச்சயமாக நாமே அதனை பாதுகாப்பவர்கள்.

10. (நபியே!) உமக்கு முன்னர் (சென்று போன) முந்தைய பல கூட்டதார்களிலும் நிச்சயமாக நாம் (தூதர்களை) அனுப்பிவைத்தோம்.

11. (நம்முடைய) எந்தத் தூதரும் _ அவரை அவர்கள் பரிகாசம் செய்பவர்களாக இருந்தேயல்லாது அவர்களிடம் _ அவர் வரவில்லை;

12. இவ்வாறே குற்றவாளிகளின் உள்ளங்களிலும் அ(வ்விஷமத்)தை நாம் புகச்செய்கிறோம்.

13. (ஆகவே, வேதமான ) இதனை அவர்கள் விசுவாசங்கொள்ள மாட்டார்கள்; (இவ்வாறே அவர்களுக்கு) முன் சென்றவர்களின் வழிமுறை திட்டமாகச் சென்றே விட்டது.

14. மேலும்,வானத்திலிருந்து ஒரு வாசலை நாம் அவர்களுக்குத் திறந்து விட்டு, அவர்கள் அதில் (நாள் முழுவதும் தொடர்ந்து) ஏறிக் கொண்டிருந்தாலும், (அவ்வேதத்தை உண்மைப்படுத்தமாட்டார்கள்; மாறாக, அவர்கள்)

15. (பார்க்க முடியாது, தடுக்கப்பட்டு )"மயக்கப்பட்டதெல்லாம் எங்களுடைய பார்வைகள் தான்; (அது மட்டும்)அல்ல, நாங்கள் சூனியம் செய்யப்பட்ட ஒரு கூட்டத்தினர்" என்றே கூறுவார்கள்.

16. மேலும், நிச்சயமாக நாம் வானத்தில் கிரகங்களை அமைத்து ,பார்ப்போருக்கு அதனை அலங்கரித்துள்ளோம்..

17. மேலும், விரட்டப்பட்ட ஒவ்வொரு ஷைத்தானை விட்டும் அவற்றை நாம் பாதுகாத்துக்கொண்டோம்.

18. திருட்டுத்தனமாக (ஒட்டு)க் கேட்பவ(னான ஷைத்தா)னைத்தவிர; அப்போது பிரகாசமான தீப்பந்தம் அவனை (விரட்டி)ப் பின் தொடர்ந்து செல்லும்.

وَالْاَرْضَ مَدَدْنٰهَا وَاَلْقَيْنَا فِيْهَا رَوَاسِيَ وَاَنْۢبَتْنَا فِيْهَا
مِنْ كُلِّ شَيْءٍ مَّوْزُوْنٍ ﴿۱۹﴾ وَجَعَلْنَا لَكُمْ فِيْهَا مَعَايِشَ وَمَنْ
لَّسْتُمْ لَهٗ بِرٰزِقِيْنَ ﴿۲۰﴾ وَاِنْ مِّنْ شَيْءٍ اِلَّا عِنْدَنَا خَزَآئِنُهٗ وَمَا
نُنَزِّلُهٗۤ اِلَّا بِقَدَرٍ مَّعْلُوْمٍ ﴿۲۱﴾ وَاَرْسَلْنَا الرِّيٰحَ لَوَاقِحَ فَاَنْزَلْنَا
مِنَ السَّمَآءِ مَآءً فَاَسْقَيْنٰكُمُوْهُ وَمَآ اَنْتُمْ لَهٗ بِخٰزِنِيْنَ ﴿۲۲﴾ وَ
اِنَّا لَنَحْنُ نُحْيٖ وَنُمِيْتُ وَنَحْنُ الْوٰرِثُوْنَ ﴿۲۳﴾ وَلَقَدْ عَلِمْنَا
الْمُسْتَقْدِمِيْنَ مِنْكُمْ وَلَقَدْ عَلِمْنَا الْمُسْتَاْخِرِيْنَ ﴿۲۴﴾ وَاِنَّ
رَبَّكَ هُوَ يَحْشُرُهُمْ اِنَّهٗ حَكِيْمٌ عَلِيْمٌ ﴿۲۵﴾ وَلَقَدْ خَلَقْنَا ع ۲ ۲
الْاِنْسَانَ مِنْ صَلْصَالٍ مِّنْ حَمَاٍ مَّسْنُوْنٍ ﴿۲۶﴾ وَالْجَآنَّ
خَلَقْنٰهُ مِنْ قَبْلُ مِنْ نَّارِ السَّمُوْمِ ﴿۲۷﴾ وَاِذْ قَالَ رَبُّكَ
لِلْمَلٰٓئِكَةِ اِنِّيْ خَالِقٌۢ بَشَرًا مِّنْ صَلْصَالٍ مِّنْ حَمَاٍ مَّسْنُوْنٍ ﴿۲۸﴾
فَاِذَا سَوَّيْتُهٗ وَنَفَخْتُ فِيْهِ مِنْ رُّوْحِيْ فَقَعُوْا لَهٗ سٰجِدِيْنَ ﴿۲۹﴾
فَسَجَدَ الْمَلٰٓئِكَةُ كُلُّهُمْ اَجْمَعُوْنَ ﴿۳۰﴾ اِلَّآ اِبْلِيْسَ اَبٰٓى اَنْ يَّكُوْنَ مَعَ
السّٰجِدِيْنَ ﴿۳۱﴾ قَالَ يٰٓاِبْلِيْسُ مَا لَكَ اَلَّا تَكُوْنَ مَعَ السّٰجِدِيْنَ ﴿۳۲﴾ قَالَ
لَمْ اَكُنْ لِّاَسْجُدَ لِبَشَرٍ خَلَقْتَهٗ مِنْ صَلْصَالٍ مِّنْ حَمَاٍ مَّسْنُوْنٍ ﴿۳۳﴾

19. பூமியை_ அதனை நாம் விரித்து அதில் அசையாத மலைகளையும் நாட்டினோம்; மேலும், ஒவ்வொரு பொருளையும் (அதற்குரிய) அளவின்படி அதில் நாம் முளைக்கவைத்தோம்.

20. "உங்களுக்கும், நீங்கள் எவருக்கு உணவளிக்கிறவர்களாக இல்லையோ அவர்களுக்கும் வாழத்தேவையானவற்றை அதில் நாமே ஆக்கியுள்ளோம்.

21. எந்தப் பொருளும் அதன் களஞ்சியங்கள் நம்மிடமிருந்தே தவிர இல்லை; எனினும், அவற்றை குறிப்பிட்ட அளவிலே தவிர நாம் இறக்கிவைப்பதும் இல்லை.

22. இன்னும், காற்றுகளை சூல் கொண்ட மேகங்களாக நாமே அனுப்புகிறோம்; பின்னர் வானத்திலிருந்து நாமே (மழையெனும்) நீரைப் பொழிவித்து, அதனை உங்களுக்கு நாம் புகட்டுகிறோம்; நீங்கள் அதனைச் சேமித்து வைப்பவர்களாகவும் இல்லை.

23. (படைப்பினங்களுக்கு) நிச்சயமாக நாம்தாம் உயிரும் கொடுக்கிறோம்; நாமே (அவற்றை) இறக்கவும் வைக்கிறோம்; (யாவற்றிற்கும்) நாமே வாரிசாவோம்.

24. மேலும் உங்களில் (உங்களுக்கு) முன் சென்றோரையும் நிச்சயமாக நாம் அறிந்துள்ளோம்; (உங்களுக்குப்) பின் வரக்கூடியவர்களையும் நிச்சயமாக நாம் அறிந்துள்ளோம்.

25. இன்னும், (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன் தான், அவர்களை மறுமையில் ஒன்று திரட்டுவான்; நிச்சயமாக அவன் தீர்க்கமான அறிவுடையவன்; (யாவற்றையும்) நன்கறிகிறவன்.

26. இன்னும் (தட்டினால்) சப்தம் வரக்கூடிய, மாற்றமடைந்த கறுப்பான களிமண்ணிலிருந்து மனிதனை(_ ஆதமை) திட்டமாக நாம் படைத்தோம்.

27. மேலும், ஜின்னை (அதற்கு) முன்னதாகக் கொடிய உஷ்ணமுள்ள நெருப்பிலிருந்து அதனை நாம் படைத்தோம்.

28. மேலும், (நபியே!) உமதிரட்சகன் மலக்குகளிடம், "நிச்சயமாக நான், மனிதனை (தட்டினால்) சப்தம் வரக்கூடிய, மாற்றமடைந்த கறுப்புக் களிமண்ணிலிருந்து படைக்கப்போகிறேன்" என்று கூறிய சமயத்தை_(நபியே! நினைவு கூர்வீராக!)

29. பின்னர், "அவரை நான் சரியாக உருவாக்கி, அவரில் என் ஆவியிலிருந்தும் நான் ஊதியபோது, அவருக்கு சிரம்பணிந்தவர்களாக விழுங்கள்" (என்று மலக்குகளிடம் அல்லாஹ் கூறியதும்)

30. உடனே மலக்குகள் _ அவர்கள் ஒவ்வொருவரும் ஒருமித்து (அவருக்கு மரியாதை செலுத்த) சிரம் பணிந்தார்கள்_

31. _ இப்லீஸைத் தவிர ; சிரம் பணிந்தவர்களுடன் ஆகுவதிலிருந்து அவன் விலகிக்கொண்டான்.

32. (அதற்கு அல்லாஹ்) "இப்லீஸே! சிரம் பணிந்தோருடன் நீயும் ஆகாதிருக்க உனக்கு என்ன நேர்ந்தது?" என்றுகேட்டான்.

33. அ(தற்க)வன், "(தட்டினால்) சப்தம் கொடுக்கக் கூடிய மாற்றமடைந்த கருப்புக் களிமண்ணால் நீ அவரைசிருஷ்டித்த (ஒரு) மனிதனுக்கு, (நெருப்பால் படைக்கப்பட்ட) நான் சிரம் பணிபவனாக இருப்பதற்கில்லை" என்று கூறினான்.

قَالَ فَاخْرُجْ مِنْهَا فَاِنَّكَ رَجِيْمٌ ﴿۳۴﴾ وَّاِنَّ عَلَيْكَ
اللَّعْنَةَ اِلٰى يَوْمِ الدِّيْنِ ﴿۳۵﴾ قَالَ رَبِّ فَاَنْظِرْنِىْٓ اِلٰى يَوْمِ
يُبْعَثُوْنَ ﴿۳۶﴾ قَالَ فَاِنَّكَ مِنَ الْمُنْظَرِيْنَ ﴿۳۷﴾ اِلٰى يَوْمِ الْوَقْتِ
الْمَعْلُوْمِ ﴿۳۸﴾ قَالَ رَبِّ بِمَآ اَغْوَيْتَنِىْ لَاُزَيِّنَنَّ لَهُمْ فِى
الْاَرْضِ وَلَاُغْوِيَنَّهُمْ اَجْمَعِيْنَ ﴿۳۹﴾ اِلَّا عِبَادَكَ مِنْهُمُ
الْمُخْلَصِيْنَ ﴿۴۰﴾ قَالَ هٰذَا صِرَاطٌ عَلَىَّ مُسْتَقِيْمٌ ﴿۴۱﴾ اِنَّ
عِبَادِىْ لَيْسَ لَكَ عَلَيْهِمْ سُلْطٰنٌ اِلَّا مَنِ اتَّبَعَكَ
مِنَ الْغٰوِيْنَ ﴿۴۲﴾ وَاِنَّ جَهَنَّمَ لَمَوْعِدُهُمْ اَجْمَعِيْنَ ﴿۴۳﴾
لَهَا سَبْعَةُ اَبْوَابٍ ؕ لِكُلِّ بَابٍ مِّنْهُمْ جُزْءٌ مَّقْسُوْمٌ ﴿۴۴﴾ ع ۳
اِنَّ الْمُتَّقِيْنَ فِىْ جَنّٰتٍ وَّعُيُوْنٍ ﴿۴۵﴾ اُدْخُلُوْهَا بِسَلٰمٍ
اٰمِنِيْنَ ﴿۴۶﴾ وَنَزَعْنَا مَا فِىْ صُدُوْرِهِمْ مِّنْ غِلٍّ اِخْوَانًا عَلٰى
سُرُرٍ مُّتَقٰبِلِيْنَ ﴿۴۷﴾ لَا يَمَسُّهُمْ فِيْهَا نَصَبٌ وَّمَا هُمْ مِّنْهَا
بِمُخْرَجِيْنَ ﴿۴۸﴾ نَبِّئْ عِبَادِىْٓ اَنِّىْٓ اَنَا الْغَفُوْرُ الرَّحِيْمُ ﴿۴۹﴾ وَاَنَّ
عَذَابِىْ هُوَ الْعَذَابُ الْاَلِيْمُ ﴿۵۰﴾ وَنَبِّئْهُمْ عَنْ ضَيْفِ اِبْرٰهِيْمَ ﴿۵۱﴾ وقف لازم
اِذْ دَخَلُوْا عَلَيْهِ فَقَالُوْا سَلٰمًا ؕ قَالَ اِنَّا مِنْكُمْ وَجِلُوْنَ ﴿۵۲﴾

34. "இங்கிருந்து நீ வெளியேறிவிடு ; ஏனெனில் நிச்சயமாக நீ விரட்டப் பட்டவன்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

35. மேலும், "நியாயத்தீர்ப்பு நாள் வரையில் உன் மீது நிச்சயமாக (என்னுடைய) சாபம் உண்டாவதாக!" (என்றும் அல்லாஹ் கூறினான்).

36. அ(தற்க)வன், "என்னுடைய இரட்சகனே! (இறந்தோரான) அவர்கள் எழுப்பப்படும் நாள் வரையில் நீ எனக்கு அவகாசமளிப்பாயாக" என்று கூறினான்.

37. (அதற்கு அல்லாஹ்,) "நிச்சயமாக நீ அவகாசம் அளிக்கப்பட்டோரில் இருக்கிறாய்" என்று கூறினான்.

38. "குறிப்பிட்ட நேரத்தின் நாள் வரை" (என்று அல்லாஹ் கூறினான்.)

39. அ(தற்க)வன், "என்னுடைய இரட்சகனே! நீ என்னை வழிகேட்டில் விட்டு விட்டதன் காரணமாக பூமியில் (உள்ளவற்றை) நான், நிச்சயமாக அவர்களுக்கு அலங்கரித்துக் காண்பித்து, அவர்கள் அனைவரையும் நிச்சயமாக நான் வழி கெடுத்து விடுவேன்" என்று கூறினான்.

40. "அவர்களில் (உன்னால்) தேர்ந்தெடுக்கப்பட்ட உன் (அருள் பெற்ற நல்) அடியார்களைத் தவிர".

41. (அதற்கு அல்லாஹ், என்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லடியார்களின் வழி யாகிய) "இதுதான் என்னிடம் (வருவதற்குரிய) நேரான வழியாகும்" என்று கூறினான்.

42. "நிச்சயமாக என்னுடைய அடியார்கள், உனக்கு அவர்கள் மீதுயாதொரு அதிகாரமும் இல்லை.(திசைதிருப்பப்பட்டு) வழிகெட்டவர்களிலிருந்து உன்னைப் பின்பற்றியவர்களைத் தவிர.

43. "நிச்சயமாக நரகமாகிறது, (உன்னைப் பின்பற்றிய) அவர்கள் அனை வருக்கும் வாக்களிக்கப்பட்ட இடமாகும்."

44. "அதற்கு ஏழுவாசல்கள் இருக்கின்றன; ஒவ்வொருவாசலுக்கும் அவர்களிலிருந்து (குறிப்பிட்ட) பங்கீடுசெய்யப்பட்ட ஒருபகுதி உண்டு" (என்றும் அல்லாஹ் கூறினான்).

45. நிச்சயமாக பயபக்தியுடையவர்கள் சுவனபதிகளிலும், நீரூற்றுகளிலும் (மகிழ்ச்சியுடையோராக) இருப்பார்கள்.

46. (அவர்களிடம்,) "நீங்கள் சாந்தியுடன், அச்சமற்றவர்களாக அவற்றில் நுழையுங்கள்" (என்று கூறப்படும்).

47. மேலும், (இம்மையில்) அவர்களின் நெஞ்சங்களில் இருந்த குரோதத்தை நாம் நீக்கிவிடுவோம்; (அவர்களும் உண்மையான) சகோதரர்களாக ஒருவரை ஒருவர் முன்னோக்கியவர்களாகக் கட்டில்களில் (மகிழ்ச்சியுடையோராக சாய்ந்து) இருப்பார்கள்.

48. அவற்றில் அவர்களை யாதொரு சிரமமும் அணுகாது; அதிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படுபவர்களும் அல்லர்.

49. (நபியே!) "நிச்சயமாக, நானே மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன்" என என் அடியார்களுக்குத் தெரிவிப்பீராக!

50. "என்னுடைய வேதனையோ, அதுவே நோவினை தரும் வேதனையாகும்" (என்றும் நபியே! நீர்தெரிவிப்பீராக!)

51. இன்னும், (நபியே!) இப்றாஹீமுடைய விருந்தாளிகள் பற்றி நீர் அவர்களுக்கு தெரிவிப்பீராக!

52. அவர்கள் அவரிடம் நுழைந்தபோது "ஸலாமுன்" (சாந்தி உண்டாவதாக!) என்று கூறினார்கள்; "நிச்சயமாக அவர், நாம் உங்களைப் பற்றி பயப்படக் கூடியவர்கள்" என்றார்.

قَالُوْا لَا تَوْجَلْ اِنَّا نُبَشِّرُكَ بِغُلٰمٍ عَلِیْمٍ ﴿٥٣﴾ قَالَ اَبَشَّرْتُمُوْنِیْ
عَلٰۤی اَنْ مَّسَّنِیَ الْكِبَرُ فَبِمَ تُبَشِّرُوْنَ ﴿٥٤﴾ قَالُوْا بَشَّرْنٰكَ
بِالْحَقِّ فَلَا تَكُنْ مِّنَ الْقٰنِطِیْنَ ﴿٥٥﴾ قَالَ وَمَنْ یَّقْنَطُ مِنْ
رَّحْمَةِ رَبِّهٖۤ اِلَّا الضَّآلُّوْنَ ﴿٥٦﴾ قَالَ فَمَا خَطْبُكُمْ اَیُّهَا
الْمُرْسَلُوْنَ ﴿٥٧﴾ قَالُوْۤا اِنَّاۤ اُرْسِلْنَاۤ اِلٰی قَوْمٍ مُّجْرِمِیْنَ ﴿٥٨﴾ اِلَّاۤ اٰلَ
لُوْطٍ ؕ اِنَّا لَمُنَجُّوْهُمْ اَجْمَعِیْنَ ﴿٥٩﴾ اِلَّا امْرَاَتَهٗ قَدَّرْنَاۤ ۙ اِنَّهَا لَمِنَ
الْغٰبِرِیْنَ ﴿٦٠﴾ فَلَمَّا جَآءَ اٰلَ لُوْطِ ِۣ الْمُرْسَلُوْنَ ﴿٦١﴾ قَالَ اِنَّكُمْ قَوْمٌ ع ٤ ١٤ ٤
مُّنْكَرُوْنَ ﴿٦٢﴾ قَالُوْا بَلْ جِئْنٰكَ بِمَا كَانُوْا فِیْهِ یَمْتَرُوْنَ ﴿٦٣﴾ وَ
اَتَیْنٰكَ بِالْحَقِّ وَاِنَّا لَصٰدِقُوْنَ ﴿٦٤﴾ فَاَسْرِ بِاَهْلِكَ بِقِطْعٍ مِّنَ
الَّیْلِ وَاتَّبِعْ اَدْبَارَهُمْ وَلَا یَلْتَفِتْ مِنْكُمْ اَحَدٌ وَّامْضُوْا
حَیْثُ تُؤْمَرُوْنَ ﴿٦٥﴾ وَقَضَیْنَاۤ اِلَیْهِ ذٰلِكَ الْاَمْرَ اَنَّ دَابِرَ هٰۤؤُلَآءِ
مَقْطُوْعٌ مُّصْبِحِیْنَ ﴿٦٦﴾ وَجَآءَ اَهْلُ الْمَدِیْنَةِ یَسْتَبْشِرُوْنَ ﴿٦٧﴾
قَالَ اِنَّ هٰۤؤُلَآءِ ضَیْفِیْ فَلَا تَفْضَحُوْنِ ﴿٦٨﴾ وَاتَّقُوا اللّٰهَ وَلَا
تُخْزُوْنِ ﴿٦٩﴾ قَالُوْۤا اَوَلَمْ نَنْهَكَ عَنِ الْعٰلَمِیْنَ ﴿٧٠﴾ قَالَ هٰۤؤُلَآءِ بَنٰتِیْۤ
اِنْ كُنْتُمْ فٰعِلِیْنَ ﴿٧١﴾ لَعَمْرُكَ اِنَّهُمْ لَفِیْ سَكْرَتِهِمْ یَعْمَهُوْنَ ﴿٧٢﴾

53. அ(தற்க)வர்கள், "நீர் பயப்படாதீர்; நிச்சயமாக நாம் உமக்கு மிக்க அறிவார்ந்த ஒரு குமாரனைக் கொண்டு நன்மாராயங் கூறு(வதற்காகவே வந்திருக்)கின்றோம்" என்று கூறினார்கள்.
54. அ(தற்க)வர், "என்னை முதுமை வந்தடைந்து விட்டபோதா நீங்கள் எனக்கு (குமாரனைக் கொண்டு) நன்மாராயங் கூறுகின்றீர்கள்? எதனைக் கொண்டு நீங்கள் எனக்கு நன்மாராயம் கூறுகின்றீர்கள்?" என்று கேட்டார்.
55. அ(தற்க)வர்கள், "உண்மையைக்கொண்டே நாங்கள் உமக்கு (மகனைப் பற்றி) நன்மாராயம் கூறுகிறோம். (அதைப்பற்றி) நிராசை கொண்டோரில் (ஒருவராக) நீர் ஆகிவிடவேண்டாம்" என்று கூறினார்கள்.
56. அ(தற்க)வர், "வழிகெட்டவர்களைத் தவிர, வேறெவர் தன் இரட்சகனின் அருளைப்பற்றி நிராசை கொள்வார்?" என்றார்.
57. (பின்னர் மலக்குகளிடம், "அல்லாஹ்வினால்) அனுப்பப்பட்டவர்களே! உங்கள் செய்தி என்ன? என்று கேட்டார்.
58. அ(தற்க)வர்கள் "பாவிகளான ஒரு கூட்டத்தார் பால் (அவர்களை அழித்துவிட)நிச்சயமாக நாங்கள் அனுப்பப்பட்டுள்ளோம்" என்று கூறினார்கள்.
59. லூத்துடைய குடும்பத்தாரைத் தவிர_ நிச்சயமாக நாங்கள் அவர்கள் அனைவரையும் காப்பாற்றுகிறவர்கள்_
60. _"அவருடைய மனைவியைத் தவிர; நிச்சயமாக அவள் (வேதனையடைவதில்) தங்கியவர்களில் உள்ளவளென்று நாம் நிர்ணயித்துவிட்டோம்" (என்று அல்லாஹ் கூறியதாகக் கூறினார்கள்).
61. (அல்லாஹ்வால்) அனுப்பப்பட்ட (மலக்குகளான அத்தூது)வர்கள், லூத்துடைய குடும்பத்தாரிடம் வந்தபொழுது_
62. அவர் (அவர்களிடம்) "நிச்சயமாக நீங்கள் (எனக்கு) அறிமுகமில்லாக் கூட்டத்தவர்" என்று கூறினார்.
63. அ(தற்க)வர்கள், "அல்ல! அவர்கள் எதை சந்தேகித்துக் கொண்டிருந்தார்களோ அதை, நாம் உம்மிடம் கொண்டு வந்திருக்கிறோம்" என்று கூறினார்கள்.
64. "(நடந்தேறக்கூடியதான) உண்மையையே நாம் உம்மிடம் கொண்டு வந்திருக்கிறோம்; நிச்சயமாக நாம் உண்மையாளர்களாகவே இருக்கிறோம்.
65. ஆகவே, இரவின் ஒருபகுதியில் நீர் உம் குடும்பத்தினருடன் சென்றுவிடுவீராக! அன்றியும், அவர்களுக்குப்பின்னால் நீர் தொடர்ந்து செல்வீராக! உங்களில் ஒருவருமே திரும்பிப் பார்க்கவும் வேண்டாம்; நீங்கள் ஏவப்பட்ட இடத்திற்குச் சென்றும்விடுங்கள்" (என்றார்கள்).
66. அன்றியும், நிச்சயமாக இவர்கள் அனைவரும் காலைப்பொழுதை அடைந்தவர்களாக வேரறுக்கப்பட்டு விடுவார்கள் என்றும் நாம் முடிவெடுத்து அவருக்கு அறிவித்தோம்.
67. மேலும், (வாலிபர்கள் சிலர் வந்திருப்பதாக அறிந்த) அந்நகரவாசிகள், மிக்க மகிழ்ச்சியடைந்தவர்களாக வந்துவிட்டனர்.
68. (லூத் நபி அவர்களிடம்) "நிச்சயமாக இவர்கள் என்னுடைய விருந்தாளிகள்; ஆகவே, (அவர்கள் விஷயத்தில்) என்னை நீங்கள் அவமானப்படுத்திவிடாதீர்கள்" என்று கூறினார்.
69. "அன்றியும், நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள்; என்னை இழிவுப்படுத்தியும்விடாதீர்கள்" (என்று கூறினார்).
70. அ(தற்க)வர்கள், "அகிலத்தார் பற்றியெல்லாம் (பேசவேண்டாம் என) நாம் உம்மைத் தடுக்கவில்லையா?" என்றுகூறினார்கள்.
71. அ(தற்க)வர், "இவர்கள் என்னுடைய பெண்மக்கள்; நீங்கள் (ஏதும்) செய்பவர்களாக இருந்தால், (இவர்களைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்)" என்று கூறினார்.
72. (நபியே!) உம்முடைய உயிரின் மீது சத்தியமாக! நிச்சயமாக அவர்கள் தங்களுடைய மதிமயக்கத்திலேயே தட்டழிந்துகொண்டிருக்கிறார்கள்.

فَاَخَذَتۡهُمُ الصَّيۡحَةُ مُشۡرِقِيۡنَ ۝۷۳ لا فَجَعَلۡنَا عَالِيَهَا سَافِلَهَا وَ
اَمۡطَرۡنَا عَلَيۡهِمۡ حِجَارَةً مِّنۡ سِجِّيۡلٍ ۝۷۴ ط اِنَّ فِىۡ ذٰلِكَ لَاٰيٰتٍ
لِّلۡمُتَوَسِّمِيۡنَ ۝۷۵ وَاِنَّهَا لَبِسَبِيۡلٍ مُّقِيۡمٍ ۝۷۶ اِنَّ فِىۡ ذٰلِكَ لَاٰيَةً
لِّلۡمُؤۡمِنِيۡنَ ۝۷۷ ط وَاِنۡ كَانَ اَصۡحٰبُ الۡاَيۡكَةِ لَظٰلِمِيۡنَ ۝۷۸ لا فَانۡتَقَمۡنَا
مِنۡهُمۡ‌ۘ وَاِنَّهُمَا لَبِاِمَامٍ مُّبِيۡنٍ ۝۷۹ ط ع وَلَقَدۡ كَذَّبَ اَصۡحٰبُ الۡحِجۡرِ ع ۵ ۱۹ ۵ وقف لازم
الۡمُرۡسَلِيۡنَ ۝۸۰ لا وَاٰتَيۡنٰهُمۡ اٰيٰتِنَا فَكَانُوۡا عَنۡهَا مُعۡرِضِيۡنَ ۝۸۱ لا
وَكَانُوۡا يَنۡحِتُوۡنَ مِنَ الۡجِبَالِ بُيُوۡتًا اٰمِنِيۡنَ ۝۸۲
فَاَخَذَتۡهُمُ الصَّيۡحَةُ مُصۡبِحِيۡنَ ۝۸۳ لا فَمَاۤ اَغۡنٰى عَنۡهُمۡ مَّا
كَانُوۡا يَكۡسِبُوۡنَ ۝۸۴ ط وَمَا خَلَقۡنَا السَّمٰوٰتِ وَالۡاَرۡضَ وَمَا
بَيۡنَهُمَاۤ اِلَّا بِالۡحَقِّ‌ ط وَاِنَّ السَّاعَةَ لَاٰتِيَةٌ فَاصۡفَحِ الصَّفۡحَ
الۡجَمِيۡلَ ۝۸۵ اِنَّ رَبَّكَ هُوَ الۡخَلّٰقُ الۡعَلِيۡمُ ۝۸۶ وَلَقَدۡ اٰتَيۡنٰكَ
سَبۡعًا مِّنَ الۡمَثَانِىۡ وَالۡقُرۡاٰنَ الۡعَظِيۡمَ ۝۸۷ لَا تَمُدَّنَّ
عَيۡنَيۡكَ اِلٰى مَا مَتَّعۡنَا بِهٖۤ اَزۡوَاجًا مِّنۡهُمۡ وَلَا تَحۡزَنۡ
عَلَيۡهِمۡ وَاخۡفِضۡ جَنَاحَكَ لِلۡمُؤۡمِنِيۡنَ ۝۸۸ وَقُلۡ اِنِّىۡۤ اَنَا
النَّذِيۡرُ الۡمُبِيۡنُ ۝۸۹ ج كَمَاۤ اَنۡزَلۡنَا عَلَى الۡمُقۡتَسِمِيۡنَ ۝۹۰ لا

73. ஆகவே, பொழுது உதயத்திற்குப்பிறகுள்ள நேரத்தை அவர்கள் அடைய, பேரிடிமுழக்கம் அவர்களைப் பிடித்துக் கொண்டது.

74. அ(வ்வூரான)தன் மேற்பகுதியை அதன் கீழ்ப்பகுதியாக (_மேல்கீழாக) ஆக்கிவிட்டோம்; இன்னும் (களிமண்ணாலான)சுடப்பட்ட கற்களைஅவர்கள் மீது நாம் பொழியச் செய்தோம்.

75. சிந்திப்போருக்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

76. நிச்சயமாக அ(வ்வூரான)து ,(நீங்கள் பிரயாணத்தில் சென்று திரும்பும்) நேரான பாதையில்தான் இருக்கிறது.

77. நிச்சயமாக இதில்விசுவாசங் கொண்டோர்க்கு ஒரு அத்தாட்சி இருக்கிறது.

78. (ஷுஐபுடைய சமூகத்தாராகிய )அடர்ந்த தோப்புடையோரும் நிச்சயமாக அநியாயக்காரர்களாகவே இருந்தனர்.

79. ஆகவே, அவர்களை நாம் தண்டித்தோம்; நிச்சயமாக (அழிக்கப்பட்ட) இவ்விரண்டு (ஊர்களு)ம் பகிரங்கமான வழியில்தான் இருக்கின்றன.

80. (மதீனாவிற்கும், தபூக்கிற்கும் இடைப் பகுதியிலுள்ள "ஹிஜ்ர்" என்ற ஊரில் வாழ்ந்து வந்த ஸமூது கூட்டத்தினரான) ஹிஜ்ருவாசிகளும் ( நம்) தூதர்களை திட்டமாகப் பொய்யாக்கினர்.

81. நாம் அவர்களுக்கு நம்முடைய பல அத்தாட்சிகளையும் கொடுத்தோம்; அப்பொழுது அவற்றைவிட்டும் அவர்கள் புறக்கணித்தவர்களாகவே இருந்தார்கள்.

82. அவர்கள் அச்சமற்றவர்களாக மலைகளிலிருந்து வீடுகளைக் குடை(ந்து உருவாக்கு)பவர்களாகவும் இருந்தனர்.

83. அவர்கள் அதிகாலைப்பொழுதை அடைந்தவர்களாக இருக்க, பேரிடி முழக்கம் அவர்களைப் பிடித்துக்கொண்டது.

84. அவர்கள் (தங்களைப் பாதுகாத்துக் கொள்ளச்)செய்திருந்தவைகளில் ஏதும் அவர்களுக்கு அப்போது பலனளிக்கவில்லை.

85. வானங்களையும், பூமியையும், இவ்விரண்டிற்கு மத்தியிலுள்ளவைகளையும் உண்மையைக் கொண்டேயல்லாது நாம் படைக்கவில்லை; (நபியே! இவர்களுடைய தண்டனைக்குரிய காலமான) மறுமை நாள் நிச்சயமாக வரக்கூடியதே! (அது வரையில் இத் தீயவர்களின் துன்புறுத்தலை) நீர் முற்றாகப் புறக்கணித்து அழகாக மன்னித்துவிடுவீராக.

86. நிச்சயமாக உமதிரட்சகன்_ அவனே(அனைத்தையும்) படைத்தோன்; (இவர்களைப்பற்றி) நன்கறிந்தோன்.

87. (நபியே!) நிச்சயமாக நாம் உமக்கு, திரும்பத் திரும்ப ஓதக் கூடிய ஏழு வசனங்களை (யுடைய அல்ஃபாத்திஹா அத்தியாயத்தை)யும், இந்த மகத்தான குர்ஆனையும் தந்திருக்கிறோம்.

88. எதை நாம் அவர்களில் பலதரப்பட்டவர்களுக்கு சுகமனுபவிக்க வைத்துள்ளோமோ,அதன் பால் உம்முடைய இருகண்களை (_பார்வைகளை)யும் நிச்சயமாக நீர் நீட்டாதீர்! நீர் அவர்களுக்காக கவலையும் படாதீர்; இன்னும், நீர் விசுவாசிகளுக்கு(பணிவெனும்) இறக்கையைத் தாழ்த்துவீராக.

89. அன்றியும், "நிச்சயமாக நானே பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவன்" என்றும் நீர் கூறுவீராக!

90. (நபியே! முந்தைய வேதங்களைப்) பலவாறாகப் பிரித்தோர் மீது, இறக்கியவாறே,(வேதனையை நாம் இறக்குவோம்_)

الَّذِيْنَ جَعَلُوا الْقُرْاٰنَ عِضِيْنَ ﴿۹۱﴾ فَوَرَبِّكَ لَنَسْـَٔلَنَّهُمْ

اَجْمَعِيْنَ ﴿۹۲﴾ عَمَّا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۹۳﴾ فَاصْدَعْ بِمَا تُؤْمَرُ وَ الربع

اَعْرِضْ عَنِ الْمُشْرِكِيْنَ ﴿۹۴﴾ اِنَّا كَفَيْنٰكَ الْمُسْتَهْزِءِيْنَ ﴿۹۵﴾ الَّذِيْنَ

يَجْعَلُوْنَ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ ۚ فَسَوْفَ يَعْلَمُوْنَ ﴿۹۶﴾ وَلَقَدْ نَعْلَمُ

اَنَّكَ يَضِيْقُ صَدْرُكَ بِمَا يَقُوْلُوْنَ ﴿۹۷﴾ فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَكُنْ

مِّنَ السّٰجِدِيْنَ ﴿۹۸﴾ وَاعْبُدْ رَبَّكَ حَتّٰى يَاْتِيَكَ الْيَقِيْنُ ﴿۹۹﴾ ع

## سُوْرَةُ النَّحْلِ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّثَمَانٌ وَّعِشْرُوْنَ اٰيَةً وَّسِتَّةَ عَشَرَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَتٰٓى اَمْرُ اللّٰهِ فَلَا تَسْتَعْجِلُوْهُ ؕ سُبْحٰنَهٗ وَتَعٰلٰى عَمَّا

يُشْرِكُوْنَ ﴿۱﴾ يُنَزِّلُ الْمَلٰٓئِكَةَ بِالرُّوْحِ مِنْ اَمْرِهٖ عَلٰى مَنْ يَّشَآءُ

مِنْ عِبَادِهٖٓ اَنْ اَنْذِرُوْٓا اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّآ اَنَا فَاتَّقُوْنِ ﴿۲﴾ خَلَقَ

السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِالْحَقِّ ؕ تَعٰلٰى عَمَّا يُشْرِكُوْنَ ﴿۳﴾ خَلَقَ

الْاِنْسَانَ مِنْ نُّطْفَةٍ فَاِذَا هُوَ خَصِيْمٌ مُّبِيْنٌ ﴿۴﴾ وَالْاَنْعَامَ

خَلَقَهَا ۚ لَكُمْ فِيْهَا دِفْءٌ وَّمَنَافِعُ وَمِنْهَا تَاْكُلُوْنَ ﴿۵﴾

وَلَكُمْ فِيْهَا جَمَالٌ حِيْنَ تُرِيْحُوْنَ وَحِيْنَ تَسْرَحُوْنَ ﴿۶﴾

91. அவர்கள் எத்தகையோரென்றால் (இந்தக்) குர்ஆனைப் பல பாகங்களாக ஆக்கிவிட்டனர்.

92. ஆகவே, உமதிரட்சகன் மீது சத்தியமாக, அவர்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் (விசாரணைசெய்து) கேட்போம்_

93. அவர்கள் செய்து கொண்டிருந்தவைகளைப் பற்றி.

94. ஆகவே, உமக்கு ஏவப்பட்டதை(த் தயக்கமின்றி) நீர் அவர்களுக்குத் தெளிவாகக் கூறி விடுவீராக! இணைவைத்துக்கொண்டிருப்போரை புறக்கணித்தும் விடுவீராக!

95. (உம்மைப்) பரிகாசம் செய்பவர்களுக்கு (தண்டனை அளிக்க) நிச்சயமாக நாமே உமக்குப் போதுமானவர்களாக இருக்கிறோம்.

96. அவர்கள் எத்தகையோரென்றால்_ அல்லாஹ்வுடன் (பொய்யாக) மற்றொரு வணக்கத்திற்குரிய (தெய்வத்)தையும் (இணையாக) ஆக்குகிறார்கள்; (இதன் முடிவைப்பின்னர்) இவர்கள் அறிந்து கொள்வார்கள்.

97. மேலும், (நபியே!) அவர்கள் (கேவலமாகக்) கூறுபவற்றின் காரணமாக உமது நெஞ்சம் கலக்கத்திற்குள்ளாவதை நிச்சயமாக நாம் அறிவோம்.

98. ஆகவே நீர் (அவர்களின் கூற்றைப் பொருட்படுத்தாது) உமதிரட்சகனின் புகழைக்கொண்டு துதிப்பீராக! இன்னும், சிரம் பணிவோர்களில் நீரும் ஆகிவிடுவீராக!.

99. உமக்கு (யகீன் என்னும்) மரணம் வரும்வரையில் உமதிரட்சகனை வணங்கிக் கொண்டிருப்பீராக!.

---

அத்தியாயம் : 16

## அந்நஹ்ல் _ தேனீ

வசனங்கள் : 128 மக்கீ ருகூஃகள் : 16

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (இதோ) அல்லாஹ்வுடைய கட்டளை வந்துவிட்டது; ஆகவே, அதைப்பற்றி நீங்கள் அவசரப்படாதீர்கள் ; அவன் மிகப் பரிசுத்தமானவன்; அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் (மிக்க) உயர்வானவன்.

2. நிச்சயமாக அது (காரியம் என்னவென்றால்) "வணக்கத்திற்குரியவன் என்னைத் தவிர( வேறு எவரும் )இல்லை; (ஆகவே) என்னையே பயந்து கொள்ளுங்கள் என நீங்கள் எச்சரிக்கை செய்யுங்கள்" என்று தன் அடியார்களில் தான் நாடியவர் மீது, தன் கட்டளையினால் வஹீயைக்கொண்டு அமரர்களை அவன் இறக்கி வைக்கிறான்.

3. வானங்களையும், பூமியையும் (வீண் விளையாட்டிற்காக இல்லாமல்) உண்மையைக்கொண்டு அவன் படைத்திருக்கிறான்; அவர்கள் இணை வைப்பவைகளைவிட்டும் அவன் மிக்கப் பரிசுத்தமானவன்.

4. ஒரு துளி இந்திரியத்திலிருந்து மனிதனை அவன் படைத்தான்; ( அவ்வாறு படைக்கப்பட்ட அவன் வளர்ந்து நிறைவு பெற்று விட்டு) இப்போது அவன் பகிரங்கமாகத் தர்க்கிக்கக்கூடியவன்(ஆக இருக்கிறான்).

5. மேலும், (மனிதர்களே!) கால்நடைகளை_ அவற்றை (உங்களுக்காக) அவனே படைத்தான். அவற்றில் உங்களுக்காக (குளிரைத்தடுத்துக்கொள்ளக்கூடிய) கதகதப்புண்டு . இன்னும், (வேறு) பயன்களும் உங்களுக்குண்டு; மேலும், அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கின்றீர்கள்.

6. நீங்கள் அவற்றை (மேய்த்து,) மாலையில் ஓட்டி வரும்பொழுதும், (மேய்ச்சலுக்காக) காலையில் ஓட்டிச்செல்லும்பொழுதும் அவற்றில் உங்களுக்கு அழகுமிருக்கிறது.

وَتَحْمِلُ اَثْقَالَكُمْ اِلٰى بَلَدٍ لَّمْ تَكُوْنُوْا بٰلِغِيْهِ اِلَّا بِشِقِّ
الْاَنْفُسِ ؕ اِنَّ رَبَّكُمْ لَرَءُوْفٌ رَّحِيْمٌ ۙ﴿۷﴾ وَّالْخَيْلَ وَالْبِغَالَ
وَالْحَمِيْرَ لِتَرْكَبُوْهَا وَزِيْنَةً ؕ وَيَخْلُقُ مَا لَا تَعْلَمُوْنَ ﴿۸﴾
وَعَلَى اللّٰهِ قَصْدُ السَّبِيْلِ وَمِنْهَا جَآئِرٌ ؕ وَلَوْ شَآءَ لَهَدٰىكُمْ
اَجْمَعِيْنَ ﴿۹﴾ هُوَ الَّذِيْٓ اَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً لَّكُمْ مِّنْهُ ع ۱ ۹ ۷
شَرَابٌ وَّمِنْهُ شَجَرٌ فِيْهِ تُسِيْمُوْنَ ﴿۱۰﴾ يُنْۢبِتُ لَكُمْ بِهِ
الزَّرْعَ وَالزَّيْتُوْنَ وَالنَّخِيْلَ وَالْاَعْنَابَ وَمِنْ كُلِّ
الثَّمَرٰتِ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ ﴿۱۱﴾ وَسَخَّرَ
لَكُمُ الَّيْلَ وَالنَّهَارَ ۙ وَالشَّمْسَ وَالْقَمَرَ ؕ وَالنُّجُوْمُ
مُسَخَّرٰتٌۢ بِاَمْرِهٖ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ ۙ﴿۱۲﴾
وَمَا ذَرَاَ لَكُمْ فِي الْاَرْضِ مُخْتَلِفًا اَلْوَانُهٗ ؕ اِنَّ فِيْ
ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّذَّكَّرُوْنَ ﴿۱۳﴾ وَهُوَ الَّذِيْ
سَخَّرَ الْبَحْرَ لِتَاْكُلُوْا مِنْهُ لَحْمًا طَرِيًّا وَّتَسْتَخْرِجُوْا
مِنْهُ حِلْيَةً تَلْبَسُوْنَهَا ۚ وَتَرَى الْفُلْكَ مَوَاخِرَ
فِيْهِ وَلِتَبْتَغُوْا مِنْ فَضْلِهٖ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿۱۴﴾

7. மேலும், மிக்க கஷ்டத்துடனன்றி நீங்கள் சென்றடையமுடியாத அத்தகைய ஊர்களுக்கு அவை உங்களுடைய பளுவான சுமைகளையும் சுமந்து செல்கின்றன; நிச்சயமாக உங்கள் இரட்சகன் (உங்கள்மீது) மிக்க இரக்கமுள்ளவன்; மிகக்கிருபையுடையவன்.

8. இன்னும் குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும், கழுதைகளையும்_ அவற்றில் நீங்கள் ஏறிச்செல்வதற்காகவும், (உங்களுக்கு)அலங்காரமாகவும் (அவனே படைத்துள்ளான்). இன்னும் நீங்கள் அறியாதவற்றையும் அவன் படைக்கின்றான்.

9. (கோணலில்லாத) நேரான வழியைத் தெளிவு செய்வது அல்லாஹ்வின் மீதே இருக்கிறது; அதில் கோணல் வழியும் உண்டு; இன்னும் அவன் நாடினால், உங்கள் அனைவரையும் நேர் வழியில் செலுத்திவிடுவான்.

10. அவன் எத்தகையவனென்றால், வானத்திலிருந்து நீரை உங்களுக்கு இறக்கிவைத்தான்; அதிலிருந்து குடிப்பும் உங்களுக்குண்டு; அதிலிருந்து (வளர்ந்த) மரங்களும் உங்களுக்குண்டு; அதில் (உங்கள் கால் நடைகளை) நீங்கள் மேய்க்கிறீர்கள்.

11. அதனைக்கொண்டே (விவசாயப்) பயிர்களையும் , ஜைத்தூன், பேரீச்சை, திராட்சைகளையும், இன்னும் பலவகைக் கனிகளிலிருந்தும் அவன் உங்களுக்காக முளைப்பிக்கச் செய்கிறான்; நிச்சயமாக இதில், சிந்திக்கக்கூடிய கூட்டத்தார்க்கு ஓர் அத்தாட்சி இருக்கின்றது.

12. இன்னும், அவன் இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்துள்ளான்; (அவ்வாறே) நட்சத்திரங்களும் அவனுடைய கட்டளைப்படியே வசப்படுத்தப்பட்டுள்ளன; நிச்சயமாக இதிலும், நினைவுகூறக்கூடிய கூட்டத்தார்க்கு (தகுந்த )அத்தாட்சிகள் இருக்கின்றன.

13. பூமியில் உங்களுக்காக அவன் படைத்தவற்றையும், அதன் நிறங்கள் மாறுபட்டவைகளாக இருக்க (அவனே அவற்றை உங்களுக்கு வசப்படுத்தித் தந்துள்ளான்) ; நிச்சயமாக, அதில் படிப்பினைபெறும் சமூகத்தார்க்கு அத்தாட்சியிருக்கிறது.

14. இன்னும், அவன் எத்தகையவனென்றால் , கடலை _ அதிலிருந்து நீங்கள் புதிய இறைச்சியை(மீன் போன்றவற்றை) உண்ணுவதற்காகவும், இன்னும், எதை நீங்கள் அணிகின்றீர்களோ அத்தகைய ஆபரணத்தை அதிலிருந்து நீங்கள் வெளிப்படுத்துவதற்காகவும் வசப்படுத்திக் கொடுத்துள்ளான்; இன்னும், தண்ணீரைக் கிழித்துக் கொண்டு அதில் செல்பவைகளாக கப்பல்களை நீர் காண்பீர்; மேலும், அவனது பேரருளை நீங்கள் தேடிக்கொள்வதற்காகவும், நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் (இவ்வாறு கடலை அவனே உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளான்).

وَاَلْقٰى فِى الْاَرْضِ رَوَاسِىَ اَنْ تَمِيْدَ بِكُمْ وَاَنْهٰرًا وَّسُبُلًا
لَّعَلَّكُمْ تَهْتَدُوْنَ ﴿۱۵﴾ ۙ وَعَلٰمٰتٍ ؕ وَبِالنَّجْمِ هُمْ يَهْتَدُوْنَ ﴿۱۶﴾ اَفَمَنْ
يَّخْلُقُ كَمَنْ لَّا يَخْلُقُ ؕ اَفَلَا تَذَكَّرُوْنَ ﴿۱۷﴾ وَاِنْ تَعُدُّوْا نِعْمَةَ اللّٰهِ
لَا تُحْصُوْهَا ؕ اِنَّ اللّٰهَ لَغَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۸﴾ وَاللّٰهُ يَعْلَمُ مَا تُسِرُّوْنَ وَ
مَا تُعْلِنُوْنَ ﴿۱۹﴾ وَالَّذِيْنَ يَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ لَا يَخْلُقُوْنَ
شَيْـًٔا وَّهُمْ يُخْلَقُوْنَ ﴿۲۰﴾ ؕ اَمْوَاتٌ غَيْرُ اَحْيَآءٍ ۚ وَمَا يَشْعُرُوْنَ ۙ
اَيَّانَ يُبْعَثُوْنَ ﴿۲۱﴾ ع اِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ ۚ فَالَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ ع ۲/۴ ۸
بِالْاٰخِرَةِ قُلُوْبُهُمْ مُّنْكِرَةٌ وَّهُمْ مُّسْتَكْبِرُوْنَ ﴿۲۲﴾ لَا جَرَمَ اَنَّ
اللّٰهَ يَعْلَمُ مَا يُسِرُّوْنَ وَمَا يُعْلِنُوْنَ ؕ اِنَّهٗ لَا يُحِبُّ الْمُسْتَكْبِرِيْنَ ﴿۲۳﴾
وَاِذَا قِيْلَ لَهُمْ مَّاذَآ اَنْزَلَ رَبُّكُمْ ۙ قَالُوْۤا اَسَاطِيْرُ
الْاَوَّلِيْنَ ﴿۲۴﴾ ۙ لِيَحْمِلُوْۤا اَوْزَارَهُمْ كَامِلَةً يَّوْمَ الْقِيٰمَةِ ۙ
وَمِنْ اَوْزَارِ الَّذِيْنَ يُضِلُّوْنَهُمْ بِغَيْرِ عِلْمٍ ؕ اَلَا سَآءَ مَا
يَزِرُوْنَ ﴿۲۵﴾ ع قَدْ مَكَرَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ فَاَتَى ع ۳/۵ ۹
اللّٰهُ بُنْيَانَهُمْ مِّنَ الْقَوَاعِدِ فَخَرَّ عَلَيْهِمُ السَّقْفُ مِنْ
فَوْقِهِمْ وَاَتٰىهُمُ الْعَذَابُ مِنْ حَيْثُ لَا يَشْعُرُوْنَ ﴿۲۶﴾

15. பூமியின் மீது _அது உங்களைக் கொண்டு அசையாதிருப்பதற்காகப் (பெரிய) பெரிய மலைகளை உறுதியாக அவன் அமைத்தான்! (உங்கள் போக்குவரத்துக்கு சரியான வழியை) நீங்கள் அறிவதற்குப்( பல) பாதைகளையும், ஆறுகளையும் (அமைத்தான்).

16. இன்னும், (வழிகாட்டும்) பல அடையாளங்களையும் (அவன் அமைத்துள்ளான்); நட்சத்திரங்களைக் கொண்டும் (பிரயாணிகளாகிய) அவர்கள் (தங்கள்) வழியை அறிந்து கொள்கின்றனர்.

17. எவன் படைக்கின்றானோ (அவன் எதையுமே) படைக்காத ஒருவனைப் போன்றவனா? நீங்கள் (இதை )சிந்திக்க மாட்டீர்களா?

18. மேலும், அல்லாஹ்வின் அருட்கொடையை நீங்கள் எண்ணுவீர்களாயின், அதனை நீங்கள் (கணக்கிட்டு எண்ணி) வரையறுத்து விடமாட்டீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக்கிருபையுடையோன்.

19. நீங்கள் மறைத்து வைத்திருப்பதையும், நீங்கள் பகிரங்கப்படுத்துவதையும் நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிவான்.

20. மேலும், அல்லாஹ்வையன்றி, அவர்கள் அழைக்கிறார்களே அத்தகையோர்_ அவர்கள் எந்தப் பொருளையும் படைக்கமாட்டார்கள்; அவர்களோ (அவனால்) படைக்கப் படுபவர்களாவர்.

21. (அன்றி,அவர்கள்) இறந்தவர்களே_ உயிருள்ளவர்களல்லர்; அவர்கள் எப்பொழுது (உயிர் கொடுத்து ) எழுப்பப்படுவார்கள் என்பதையும் அவர்கள் அறியமாட்டார்கள்

22. உங்களுடைய (வணக்கத்திற்குரிய) நாயன் ஒரே நாயன்தான்; ஆகவே, மறுமையை நம்பவில்லையே அத்தகையோர்_ அவர்களுடைய இதயங்கள் (எதைக்கேட்டபோதிலும்) மறுப்பவைகளாகவே இருக்கின்றன; அவர்கள் பெருமையடித்துக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

23. நிச்சயமாக அல்லாஹ், அவர்கள் மறைத்து வைத்திருப்பதையும், அவர்கள் பகிரங்கப்படுத்துவதையும் நன்கு அறிவான் என்பதில் சந்தேகமில்லை; நிச்சயமாக அவன் பெருமையடித்துக்கொண்ட (இ)வர்களை நேசிப்பதில்லை.

24. இன்னும், ( குர்ஆனைக் குறிப்பிட்டு அதில்,) "உங்களுடைய இரட்சகன் எதை இறக்கி வைத்தான்" என்று அவர்களிடம் கேட்கப்பட்டால், "(இது) முன்னுள்ளோரின் கட்டுக்கதைகள்" என்று அவர்கள் (பதில்) கூறுகின்றனர்.

25. மறுமை நாளில் தங்கள் பாவச் சுமைகளை இவர்கள் பூரணமாகச் சுமப்பதற்காக மற்றும் அறிவின்றி இவர்கள் வழிகெடுத்த மற்றவர்களின் பாவச்சுமைகளை இவர்களே சுமப்பதற்காக வேண்டி (இவ்வாறு கூறுகிறார்கள்; இருவரின் பாவச்சுமைகளை) அவர்கள் சுமப்பது மிகக் கெட்டது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

26. இவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்களும் நிச்சயமாகச் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தார்கள்; ஆகவே, அல்லாஹ் அவர்களின் கட்டடத்தை அடித்தளங்களிலிருந்து அடியோடு பெயர்த்தெடுத்து விட்டான்; (எனவே அக்கட்டடத்தின்) முகடு அவர்களுக்கு மேலிருந்து அவர்களின் மீது விழுந்து விட்டது; இன்னும், அவர்கள் உணர்ந்து கொள்ளமுடியாத விதத்தில், வேதனை அவர்களை வந்தடைந்தது.

ثُمَّ يَوْمَ الْقِيٰمَةِ يُخْزِيْهِمْ وَيَقُوْلُ اَيْنَ شُرَكَآءِيَ الَّذِيْنَ
كُنْتُمْ تُشَآقُّوْنَ فِيْهِمْ ؕ قَالَ الَّذِيْنَ اُوْتُوا الْعِلْمَ اِنَّ الْخِزْيَ
الْيَوْمَ وَالسُّوْٓءَ عَلَى الْكٰفِرِيْنَ ۙ﴿۲۷﴾ الَّذِيْنَ تَتَوَفّٰىهُمُ الْمَلٰٓئِكَةُ
ظَالِمِيْٓ اَنْفُسِهِمْ ۪ فَاَلْقَوُا السَّلَمَ مَا كُنَّا نَعْمَلُ مِنْ سُوْٓءٍ ؕ بَلٰٓى اِنَّ
اللّٰهَ عَلِيْمٌۢ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۲۸﴾ فَادْخُلُوْٓا اَبْوَابَ جَهَنَّمَ
خٰلِدِيْنَ فِيْهَا ؕ فَلَبِئْسَ مَثْوَى الْمُتَكَبِّرِيْنَ ﴿۲۹﴾ وَقِيْلَ لِلَّذِيْنَ
اتَّقَوْا مَاذَآ اَنْزَلَ رَبُّكُمْ ؕ قَالُوْا خَيْرًا ؕ لِلَّذِيْنَ اَحْسَنُوْا فِيْ
هٰذِهِ الدُّنْيَا حَسَنَةٌ ؕ وَلَدَارُ الْاٰخِرَةِ خَيْرٌ ؕ وَلَنِعْمَ دَارُ الْمُتَّقِيْنَ ۙ﴿۳۰﴾
جَنّٰتُ عَدْنٍ يَّدْخُلُوْنَهَا تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ لَهُمْ فِيْهَا
مَا يَشَآءُوْنَ ؕ كَذٰلِكَ يَجْزِي اللّٰهُ الْمُتَّقِيْنَ ۙ﴿۳۱﴾ الَّذِيْنَ تَتَوَفّٰىهُمُ
الْمَلٰٓئِكَةُ طَيِّبِيْنَ ۙ يَقُوْلُوْنَ سَلٰمٌ عَلَيْكُمُ ۙ ادْخُلُوا الْجَنَّةَ بِمَا
كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۳۲﴾ هَلْ يَنْظُرُوْنَ اِلَّآ اَنْ تَاْتِيَهُمُ الْمَلٰٓئِكَةُ اَوْ
يَاْتِيَ اَمْرُ رَبِّكَ ؕ كَذٰلِكَ فَعَلَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ؕ وَمَا ظَلَمَهُمُ
اللّٰهُ وَلٰكِنْ كَانُوْٓا اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ ﴿۳۳﴾ فَاَصَابَهُمْ سَيِّاٰتُ
مَا عَمِلُوْا وَحَاقَ بِهِمْ مَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ﴿۳۴﴾ ع ۴ ۹ ۱۰

27. பின்னர், மறுமை நாளில் அவன் அவர்களை இழிவுபடுத்துவான்; மேலும், "(விசுவாசிகளுடன்) நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருந்தீர்களே அத்தகைய என்னுடைய இணையாளர்கள் எங்கே?" என்றும் கேட்பான்; (அச்சமயம்,) அறிவு கொடுக்கப்பட்டார்களே அத்தகையோர் "இன்றையத்தினம் இழிவும், வேதனையும் நிச்சயமாக நிராகரிப்போரின் மீதுதான்" என்று கூறுவார்கள்.

28. அவர்கள் எத்தகையோரென்றால், தமக்குத் தாமே அநியாயம் செய்துகொண்டவர்களாக இருக்கும் நிலையில் அவர்(களின் உயிர்) களை மலக்குகள் கைப்பற்றுவார்கள்; அவர்கள் "நாங்கள் எவ்விதக் குற்றமும் செய்யவில்லை" என்று (கூறி மலக்குகளிடம்) சமாதானத்தைக் கோருவார்கள்; "அல்ல! நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றை நன்கறிந்தவன்" (என்று மலக்குகள் பதிலளிப்பார்கள்).

29. ஆகவே, "நரகத்தின் வாயில்களில் _ அதில் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்களாக நீங்கள் புகுந்துவிடுங்கள்" (என்று கூறுவார்கள்). ஆகவே, பெருமையடித்துக்கொண்டிருந்த (இ)வர்களின் ஒதுங்குமிடம் மகா கெட்டது.

30. மேலும், பயபக்தியுடையவர்களிடம், உங்கள் இரட்சகன் எதை இறக்கிவைத்தான் என்று கேட்கப்பட்டது; (அப்போது) அவர்கள், "நன்மையையே (இறக்கி வைத்தான்)" என்று கூறுவார்கள்; இவ்வுலகில் அழகானவற்றைச் செய்தார்களே அத்தகையோருக்கு (இவ்வுலகிலும் அழகான) நன்மையுண்டு; (அவர்களுடைய) மறுமையின் வீடும் மிக்க மேலானதாக இருக்கும்; இன்னும், பயபக்தியுடையவர்களின் வீடு திட்டமாக நல்லதாகி விட்டது.

31. நிலைத்திருக்கக்கூடிய சுவனபதிகளாகும்; அவற்றில் அவர்கள் பிரவேசிப்பார்கள்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அவர்கள் விரும்பியவை அவற்றில் அவர்களுக்குண்டு; பயபக்தியுடையோருக்கு இவ்வாறே அல்லாஹ் நற்கூலி கொடுக்கின்றான்.

32. அவர்கள் எத்தகையோரென்றால், (ஈமானுடன்) நல்லவர்களாக இருக்கும் நிலைமையில் மலக்குகள் அவர்(களுடைய உயிர்)களைக் கைப்பற்றுவார்கள்; அவர்களிடம் "ஸலாமுன் அலைக்கும் (உங்களுக்குச் சாந்தி உண்டாவதாக!) நீங்கள் செய்துகொண்டிருந்ததின் காரணமாக சுவனபதியில் பிரவேசியுங்கள்" என்று அவர்கள் கூறுவார்கள்.

33. (நிராகரிப்போர்களோ, தங்கள் உயிரைக் கைப்பற்றுவதற்காக) அவர்களிடம் மலக்குகள் வருவதையோ, அல்லது உமதிரட்சகனின் கட்டளை வருவதையோ தவிர, (வேறெதனையும்) அவர்கள் எதிர்பார்க்கின்றனரா? இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் இவ்வாறே செய்துகொண்டிருந்தனர்; அல்லாஹ் அவர்களுக்கு அநியாயம் (எதுவும்) செய்யவில்லை; எனினும், அவர்கள் தமக்குத்தாமே அநியாயம் செய்பவர்களாக இருந்தார்கள்.

34. ஆகவே, அவர்கள் செய்துகொண்டிருந்த தீமைகள் அவர்களை வந்தடைந்தன; மேலும் எதை அவர்கள் பரிகாசம் செய்துகொண்டிருந்தார்களோ, அது அவர்களைச் சூழ்ந்து கொண்டது.

وَقَالَ الَّذِيْنَ اَشْرَكُوْا لَوْ شَآءَ اللّٰهُ مَا عَبَدْنَا مِنْ دُوْنِهٖ
مِنْ شَیْءٍ نَّحْنُ وَلَآ اٰبَآؤُنَا وَلَا حَرَّمْنَا مِنْ دُوْنِهٖ مِنْ شَیْءٍؕ
كَذٰلِكَ فَعَلَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْۚ فَهَلْ عَلَى الرُّسُلِ اِلَّا
الْبَلٰغُ الْمُبِيْنُ ﴿٣٥﴾ وَلَقَدْ بَعَثْنَا فِیْ كُلِّ اُمَّةٍ رَّسُوْلًا اَنِ
اعْبُدُوا اللّٰهَ وَاجْتَنِبُوا الطَّاغُوْتَۚ فَمِنْهُمْ مَّنْ هَدَى اللّٰهُ
وَمِنْهُمْ مَّنْ حَقَّتْ عَلَيْهِ الضَّلٰلَةُؕ فَسِيْرُوْا فِی الْاَرْضِ فَانْظُرُوْا
كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُكَذِّبِيْنَ ﴿٣٦﴾ اِنْ تَحْرِصْ عَلٰی هُدٰىهُمْ
فَاِنَّ اللّٰهَ لَا يَهْدِیْ مَنْ يُّضِلُّ وَمَا لَهُمْ مِّنْ نّٰصِرِيْنَ ﴿٣٧﴾ وَ
اَقْسَمُوْا بِاللّٰهِ جَهْدَ اَيْمَانِهِمْۙ لَا يَبْعَثُ اللّٰهُ مَنْ يَّمُوْتُؕ
بَلٰی وَعْدًا عَلَيْهِ حَقًّا وَّلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿٣٨﴾ۙ
لِيُبَيِّنَ لَهُمُ الَّذِیْ يَخْتَلِفُوْنَ فِيْهِ وَلِيَعْلَمَ الَّذِيْنَ كَفَرُوْۤا
اَنَّهُمْ كَانُوْا كٰذِبِيْنَ ﴿٣٩﴾ اِنَّمَا قَوْلُنَا لِشَیْءٍ اِذَاۤ اَرَدْنٰهُ اَنْ نَّقُوْلَ
لَهٗ كُنْ فَيَكُوْنُ ﴿٤٠﴾ؒ وَالَّذِيْنَ هَاجَرُوْا فِی اللّٰهِ مِنْۢ بَعْدِ مَا
ظُلِمُوْا لَنُبَوِّئَنَّهُمْ فِی الدُّنْيَا حَسَنَةًؕ وَلَاَجْرُ الْاٰخِرَةِ اَكْبَرُۘ لَوْ
كَانُوْا يَعْلَمُوْنَ ﴿٤١﴾ۙ الَّذِيْنَ صَبَرُوْا وَعَلٰی رَبِّهِمْ يَتَوَكَّلُوْنَ ﴿٤٢﴾

ع ٥ — وقف لازم

35. "அல்லாஹ் நாடியிருந்தால், நாங்களும், எங்கள் மூதாதையர்களும் அவனையன்றி மற்றெதையும் வணங்கி இருக்கவும் மாட்டோம்; அவனுடைய கட்டளையின்றி எதனையும் (ஆகாதவையெனத்) தடுத்திருக்கவும் மாட்டோம்" என்று இணைவைத்துக் கொண்டிருந்தோர் கூறுகின்றனர். இவ்வாறே இவர்களுக்கு முன் இருந்தவர்களும் செய்தார்கள். (நம் தூதைத்) தெளிவாக எத்திவைப்பதைத்தவிர (வேறு எதுவும் நம்) தூதர்களின் மீது உண்டா?

36. ஒவ்வொரு சமூகத்திலும் திட்டமாக நாம் ஒரு தூதரை அனுப்பியிருக்கிறோம்; (அத்தூதர் அச்சமூகத்தவர்களிடம்,) அல்லாஹ்வையே வணங்குங்கள்; (அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் ஷைத்தான்களாகிய அனைத்து) தாகூத்திலிருந்தும் நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்; (என்று கூறினார்கள்) ஆகவே, அவர்களில் அல்லாஹ் நேர்வழியில் செலுத்தியவர்களும் இருக்கிறார்கள்; இன்னும் எவர்மீது வழிகேடு விதியாகிவிட்டதோ அவரும் அவர்களில் இருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் பூமியில் சுற்றித்திரிந்து (அத்தூதர்களைப்) பொய்யாக்கியவர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை (கவனித்து)ப்பாருங்கள்.

37. (நபியே!) அவர்கள் நேர் வழிபெறுவதின் மீது நீர் (எவ்வளவுதான்) பேராசை கொண்டாலும் நிச்சயமாக அல்லாஹ், அவன் வழிதவறச்செய்தவரை நேர் வழியில் செலுத்தமாட்டான்; இன்னும், அவர்களுக்கு உதவிசெய்பவர்கள் (எவரும்) இல்லை.

38. (நபியே!)இறந்தவர்களை அல்லாஹ் (உயிர்கொடுத்து) எழுப்பமாட்டான் என்று அல்லாஹ்வின் மீது (நிராகரிப்போரான) அவர்கள் மிக்க உறுதியான சத்தியமாக சத்தியம் செய்கின்றனர்; அவ்வாறன்று! (இறந்தவர்களை உயிர் கொடுத்து எழுப்புவான் என்ற) அவனின் வாக்கு முற்றிலும் உண்மையானதே; எனினும் மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை)அறிந்து கொள்ளமாட்டார்கள்.

39. (உலகில்) எ(வ்விஷயத்)தில் அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்களோ அதனை அவர்களுக்கு அவன் தெளிவு செய்வதற்காகவும், நிராகரித்தோர் நிச்சயமாக அவர்கள் பொய்யர்களாகவே இருந்தார்கள் என்பதை அறிந்துகொள்வதற்காகவும் (அவர்களை அவன் உயிர்கொடுத்து எழுப்புவான்).

40. ஏதேனும் ஒரு பொருளுக்கு—அதை (உண்டுபண்ண) நாம் நாடினால், நமது கூற்றெல்லாம் "ஆகுக" என்று அதற்கு நாம் கூறுவதுதான்; (உடனே) அது ஆகிவிடும்.

41. (விசுவாசிகளே!) விரோதிகளால் அநீதமிழைக்கப்பட்ட பின்னர், அல்லாஹ்வுக்காக(த் தங்கள் ஊரைத்துறந்து) ஹிஜ்ரத்துப் புறப்பட்டார்களே அத்தகையோர் — அவர்களை நிச்சயமாக நாம் இவ்வுலகில் அழகிய இடத்தில் குடியிருத்தாட்டுவோம்; அவர்கள் அறிந்துகொண்டவர்களாக இருந்தால் மறுமையின் கூலியோ மிகப்பெரியதாகும்.

42. இவர்கள் எத்தகையோரென்றால், (இம்மை வாழ்க்கையில் கஷ்டங்களை சகித்துப்) பொறுத்துக்கொண்டார்கள்; (தங்களின்காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) தங்களுடைய இரட்சகன் மீதே நம்பிக்கையும் வைப்பார்கள்.

وَمَآ اَرۡسَلۡنَا مِنۡ قَبۡلِكَ اِلَّا رِجَالًا نُّوۡحِىۡۤ اِلَيۡهِمۡ فَسۡـَٔلُوۡۤا اَهۡلَ
الذِّكۡرِ اِنۡ كُنۡتُمۡ لَا تَعۡلَمُوۡنَۙ ۝۴۳ بِالۡبَيِّنٰتِ وَالزُّبُرِؕ وَاَنۡزَلۡنَاۤ اِلَيۡكَ
الذِّكۡرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ اِلَيۡهِمۡ وَلَعَلَّهُمۡ يَتَفَكَّرُوۡنَ ۝۴۴ النصف
اَفَاَمِنَ الَّذِيۡنَ مَكَرُوا السَّيِّاٰتِ اَنۡ يَّخۡسِفَ اللّٰهُ بِهِمُ الۡاَرۡضَ
اَوۡ يَاۡتِيَهُمُ الۡعَذَابُ مِنۡ حَيۡثُ لَا يَشۡعُرُوۡنَۙ ۝۴۵ اَوۡ يَاۡخُذَهُمۡ
فِىۡ تَقَلُّبِهِمۡ فَمَا هُمۡ بِمُعۡجِزِيۡنَۙ ۝۴۶ اَوۡ يَاۡخُذَهُمۡ عَلٰى تَخَوُّفٍؕ فَاِنَّ
رَبَّكُمۡ لَرَءُوۡفٌ رَّحِيۡمٌ ۝۴۷ اَوَلَمۡ يَرَوۡا اِلٰى مَا خَلَقَ اللّٰهُ مِنۡ شَىۡءٍ
يَّتَفَيَّؤُا ظِلٰلُهٗ عَنِ الۡيَمِيۡنِ وَالشَّمَآئِلِ سُجَّدًا لِّلّٰهِ وَهُمۡ
دٰخِرُوۡنَ ۝۴۸ وَلِلّٰهِ يَسۡجُدُ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الۡاَرۡضِ مِنۡ
دَآبَّةٍ وَّالۡمَلٰٓئِكَةُ وَهُمۡ لَا يَسۡتَكۡبِرُوۡنَ ۝۴۹ يَخَافُوۡنَ رَبَّهُمۡ مِّنۡ فَوۡقِهِمۡ
وَيَفۡعَلُوۡنَ مَا يُؤۡمَرُوۡنَ ۝۵۰ السجدة وَقَالَ اللّٰهُ لَا تَتَّخِذُوۡۤا اِلٰهَيۡنِ اثۡنَيۡنِۚ ع ۶/۱۰/۱۲ السجدة
اِنَّمَا هُوَ اِلٰهٌ وَّاحِدٌۚ فَاِيَّاىَ فَارۡهَبُوۡنِ ۝۵۱ وَلَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَ
الۡاَرۡضِ وَلَهُ الدِّيۡنُ وَاصِبًاؕ اَفَغَيۡرَ اللّٰهِ تَتَّقُوۡنَ ۝۵۲ وَمَا بِكُمۡ
مِّنۡ نِّعۡمَةٍ فَمِنَ اللّٰهِ ثُمَّ اِذَا مَسَّكُمُ الضُّرُّ فَاِلَيۡهِ تَجۡـَٔرُوۡنَۚ ۝۵۳
ثُمَّ اِذَا كَشَفَ الضُّرَّ عَنۡكُمۡ اِذَا فَرِيۡقٌ مِّنۡكُمۡ بِرَبِّهِمۡ يُشۡرِكُوۡنَۙ ۝۵۴

43. (நபியே!) இன்னும் உமக்கு முன்னர் (மனிதர்களில் தூதுவர்களாக) ஆடவர்களையே தவிர நாம் அனுப்பவில்லை ; அவர்கள் பால் நாம் வஹீ அறிவித்தோம்; ஆகவே, நீங்கள்(அதனைப்பற்றி) அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டு(த் தெரிந்து)க்கொள்ளுங்கள்.

44. தெளிவானஅத்தாட்சிகளையும், வேதங்களையும் (அத்தூதர்களுக்கு நாம் கொடுத்தனுப்பினோம்) . மேலும், மனிதர்களுக்கு அவர்கள்பால் இறக்கி வைக்கப்பட்டதை நீர் அவர்களுக்குத் தெளிவு படுத்துவதற்காக மற்றும் அவர்கள் சிந்திப்பவர்களாக ஆகிவிடலாம் என்பதற்காகவும் உம்பால் இவ்வேதத்தை நாம் இறக்கி வைத்தோம்.

45. தீமைகளைச் (செய்திட ) சூழ்ச்சி செய்வோர் _ அல்லாஹ் அவர்களைக் கொண்டு பூமியை விழுங்குமாறு செய்வான் என்பதையோ, அல்லது அவர்கள் அறிந்து கொள்ளாத விதத்தில் அவர்களை வேதனை வந்தடையும் என்பதையோ அவர்கள் அச்சமற்றிருக்கிறார்களா ?

46. அல்லது அவர்கள் (காரியங்களில்) ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போதே அவர்களை அவன் பிடித்துவிடுவான் என்பதையும் (அச்சமற்றிருக்கிறார்களா?) அவர்கள் (நம்மை) இயலாமலாக்கக்கூடியவர்கள் அல்லர்.

47. அல்லது ( யாதோர் ஆபத்துவருமென்ற) பயத்தின்மீது (இவர்கள் இருக்கும் நிலையில்) இவர்களை அவன் பிடித்துவிடுவான் என்பதையும்(அவர்கள் அச்சமற்றிருக்கிறார்களா?) ஆகவே , நிச்சயமாக உங்கள் இரட்சகன் மிக்க இரக்கமுடையவன்; மிகக்கிருபையுடையவன்.

48. அல்லாஹ் படைத்தவற்றில் உள்ள எப்பொருளும் அதனுடைய நிழல்கள், அவை தாழ்வானவையாக இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு சாஷ்டாங்கம் செய்தவையாக வலப்பக்கமும், இடப்பக்கங்களிலும் சாய்கின்றன என்பதை இவர்கள் பார்க்கவில்லையா?

49. ஜீவராசிகளில் வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வுக்கே சிரம் பணி(ந்து வணங்கு)கின்றன; இன்னும் மலக்குகளும்_ (அவ்வாறே சிரம் பணிகின்றனர்.) அவர்களோ பெருமையடிக்கமாட்டார்கள்.

50. அவர்கள் தங்களுக்கு மேல் உள்ள தங்கள் இரட்சகனைப் பயப்படுகின்றனர்; இன்னும் தங்களுக்கு கட்டளையிடப்படுகின்றதைச் செய்கின்றனர்.

51. இன்னும், அல்லாஹ் கூறுகிறான்: (ஒன்றுக்குப் பதிலாக )"இரு தெய்வங்களை நீங்கள் எடுத்துக்கொள்ளாதீர்கள்; நிச்சயமாக, அவன் (வணக்கத்திற்குரிய) ஒரே ஒரு நாயன்தான்; ஆகவே (மனிதர்களே!அந்த ஒருவனாகிய) என்னையே நீங்கள் பயப்படுங்கள்".

52. மேலும், வானங்களிலுள்ளவையும் , பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன; வணக்கமும் நிரந்தரமாக அவனுக்கே உரியதாகும்; எனவே, அல்லாஹ் அல்லாததையா நீங்கள் பயப்படுகிறீர்கள்?

53. அருட்கொடைகளில் உங்களிடம் இருப்பவை அல்லாஹ்விடமிருந்து உள்ளவையாகும்; பிறகு உங்களை யாதொரு துன்பம் தொட்டுவிட்டால் (அதிலிருந்து விடுபட ) அவனிடமே முறையிடுகிறீர்கள்.

54. பின்னர் , உங்களைவிட்டும் அத்துன்பத்தை அவன் நீக்கிவிட்டால், அச்சமயத்தில் உங்களில் ஒரு பிரிவினர் (இத்தகைய) தங்கள் இரட்சகனுக்கே இணைவைக்கின்றனர்.

لِيَكْفُرُوْا بِمَآ اٰتَيْنٰهُمْ ؕ فَتَمَتَّعُوْا ۫ فَسَوْفَ تَعْلَمُوْنَ ﴿۵۵﴾ وَيَجْعَلُوْنَ
لِمَا لَا يَعْلَمُوْنَ نَصِيْبًا مِّمَّا رَزَقْنٰهُمْ ؕ تَاللّٰهِ لَتُسْـَٔلُنَّ عَمَّا كُنْتُمْ
تَفْتَرُوْنَ ﴿۵۶﴾ وَيَجْعَلُوْنَ لِلّٰهِ الْبَنٰتِ سُبْحٰنَهٗ ۙ وَلَهُمْ مَّا يَشْتَهُوْنَ ﴿۵۷﴾
وَاِذَا بُشِّرَ اَحَدُهُمْ بِالْاُنْثٰى ظَلَّ وَجْهُهٗ مُسْوَدًّا وَّهُوَ كَظِيْمٌ ۚ ﴿۵۸﴾
يَتَوَارٰى مِنَ الْقَوْمِ مِنْ سُوْٓءِ مَا بُشِّرَ بِهٖ ؕ اَيُمْسِكُهٗ عَلٰى هُوْنٍ اَمْ
يَدُسُّهٗ فِى التُّرَابِ ؕ اَلَا سَآءَ مَا يَحْكُمُوْنَ ﴿۵۹﴾ لِلَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ
بِالْاٰخِرَةِ مَثَلُ السَّوْءِ ۚ وَلِلّٰهِ الْمَثَلُ الْاَعْلٰى ؕ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۶۰﴾ ع ١٤ ٧
وَلَوْ يُؤَاخِذُ اللّٰهُ النَّاسَ بِظُلْمِهِمْ مَّا تَرَكَ عَلَيْهَا مِنْ دَآبَّةٍ وَّلٰكِنْ
يُّؤَخِّرُهُمْ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى ۚ فَاِذَا جَآءَ اَجَلُهُمْ لَا يَسْتَاْخِرُوْنَ
سَاعَةً وَّلَا يَسْتَقْدِمُوْنَ ﴿۶۱﴾ وَيَجْعَلُوْنَ لِلّٰهِ مَا يَكْرَهُوْنَ وَتَصِفُ
اَلْسِنَتُهُمُ الْكَذِبَ اَنَّ لَهُمُ الْحُسْنٰى ؕ لَا جَرَمَ اَنَّ لَهُمُ النَّارَ وَ
اَنَّهُمْ مُّفْرَطُوْنَ ﴿۶۲﴾ تَاللّٰهِ لَقَدْ اَرْسَلْنَآ اِلٰٓى اُمَمٍ مِّنْ قَبْلِكَ
فَزَيَّنَ لَهُمُ الشَّيْطٰنُ اَعْمَالَهُمْ فَهُوَ وَلِيُّهُمُ الْيَوْمَ وَلَهُمْ عَذَابٌ
اَلِيْمٌ ﴿۶۳﴾ وَمَآ اَنْزَلْنَا عَلَيْكَ الْكِتٰبَ اِلَّا لِتُبَيِّنَ لَهُمُ الَّذِى
اخْتَلَفُوْا فِيْهِ ۙ وَهُدًى وَّرَحْمَةً لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿۶۴﴾

55. நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றைக்கொண்டு அவர்கள் நிராகரித்து விடுவதற்காக (இணை வைக்கின்றனர்). ஆதலால் ( இவ்வுலகில் ) சிறிது சுகம் அனுபவித்துக்கொள்ளுங்கள்; பின்னர் (மறுமையில்) நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

56. அன்றியும், நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றிலிருந்து ஒருபாகத்தைத் தாங்கள் அறியாதவை (களான தெய்வங்) களுக்கென ஆக்குகின்றனர்; அல்லாஹ்வின்மீது சத்தியமாக! நீங்கள் இட்டுக்கட்டிக் கூறிக்கொண்டிருந்ததைப் பற்றி, நிச்சயமாக நீங்கள் (மறுமையில்) கேட்கப்படுவீர்கள்.

57. மேலும், (நபியே !) அவர்கள் அல்லாஹ்வுக்குப் பெண் மக்களை ஆக்குகிறார்கள்; அவனோ, (இதனை விட்டும்) மிகப் பரிசுத்தமானவன்; இன்னும், தங்களுக்காக அவர்கள் (தங்கள் மனம்) விரும்புவதை (_ஆண் மக்களை ஆக்குகின்றனர்.)

58. இன்னும், அவர்களில் ஒருவன் பெண் குழந்தை (பிறந்திருப்பது) கொண்டு நன்மாராயங் கூறப்பட்டால், கோபத்தை அடக்கி விழுங்கியவனாக அவன் இருக்க, அவனுடைய முகம் (துக்கத்தால்) கறுத்ததாக ஆகிவிடுகிறது.

59. எதனைக் கொண்டு நன்மாராயங்கூறப்பட்டானோ, அதன் தீமையினால் இழிவுடன் அதை வைத்துக்கொள்வதா? அல்லது அதை மண்ணில் புதைத்து விடுவதா? என்று (கவலைப்பட்டு, மக்கள் முன் வராமல் ) சமூகத்தாரை விட்டும் மறைந்து கொள்கிறான்; அவர்கள் செய்யும் தீர்மானம் மிகக் கெட்டது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

60. (இத்தகைய) கெட்ட வர்ணனை மறுமையை விசுவாசிக்காதவர்களுக்குரியதாகும்; அல்லாஹ்வுக்கோ, மிக்க மேலான வர்ணனை உண்டு; அவனே(யாவரையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்.

61. இன்னும், மனிதர்களை_ அவர்கள் செய்யும் அநியாயத்துக்காக அவர்களை (உடனுக்குடன்) அல்லாஹ் பிடிப்பதாக இருந்தால், (பூமியில்) ஊர்ந்து திரிபவைகளில் எதையுமே அவன் விட்டுவைக்கமாட்டான்; எனினும், ஒரு குறிப்பிட்ட தவணை வரையில் அவர்களைப் பிற்படுத்துகிறான்; ஆகவே அவர்களுடைய தவணை வந்து விட்டால், ஒரு கனமேனும் அவர்கள் பிந்தவோ, முந்தவோ மாட்டார்கள்

62. மேலும், தாங்கள் வெறுக்கின்ற(பெண் சந்ததியான)தை அல்லாஹ்வுக்கு அவர்கள் ஆக்குகின்றனர்; இன்னும், (மறுமையில்) நிச்சயமாகத் தங்களுக்கு நன்மை உண்டு என்று இவர்களுடைய நாவுகள்பொய்யை வர்ணிக்கின்றன; நிச்சயமாக இவர்களுக்கு நரக நெருப்புத்தான் உண்டு என்பதிலும், நிச்சயமாக, முதலாவதாக (நரகத்திற்கு) இவர்கள் தாம் முற்படுத்தப்படுபவர்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

63. அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உமக்கு முன்னிருந்த பல சமூகத்தார்பால் திட்டமாக நாம் (நம்) தூதர்களை அனுப்பி வைத்தோம்; அப்போது ஷைத்தான் அவர்களுக்கு அவர்களுடைய (தீய) காரியங்களை அலங்கரித்துக் காண்பித்தான்; ஆகவே இன்றையத்தினம் அவர்களுக்கு அவனே தோழனாக இருக்கிறான்; (மறுமையில்) அவர்களுக்கு மிக்க துன்புறுத்தும் வேதனையுண்டு.

64. அன்றியும், (நபியே!) அவர்கள் எ(வ்விஷயத்)தில் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்களோ அதனை, நீர் தெளிவாக்குவதற்காகவும், விசுவாசமுடைய கூட்டத்தினருக்கு (இது) நேர் வழியாகவும், ஓர் அருளாகவும் இருப்பதற்கே தவிர இவ்வேதத்தை உம்மீது நாம் இறக்கி வைக்கவில்லை.

وَاللّٰهُ اَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَاَحْيَا بِهِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا ؕ اِنَّ فِیْ
ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّسْمَعُوْنَ ﴿٦٥﴾ وَاِنَّ لَكُمْ فِی الْاَنْعَامِ لَعِبْرَةً ؕ نُسْقِيْكُمْ ع ٨ ١٤
مِّمَّا فِیْ بُطُوْنِهٖ مِنْۢ بَيْنِ فَرْثٍ وَّدَمٍ لَّبَنًا خَالِصًا سَآئِغًا لِّلشّٰرِبِيْنَ ﴿٦٦﴾
وَمِنْ ثَمَرٰتِ النَّخِيْلِ وَالْاَعْنَابِ تَتَّخِذُوْنَ مِنْهُ سَكَرًا وَّرِزْقًا
حَسَنًا ؕ اِنَّ فِیْ ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ ﴿٦٧﴾ وَاَوْحٰی رَبُّكَ اِلَی
النَّحْلِ اَنِ اتَّخِذِیْ مِنَ الْجِبَالِ بُيُوْتًا وَّمِنَ الشَّجَرِ وَمِمَّا يَعْرِشُوْنَ ﴿٦٨﴾
ثُمَّ كُلِیْ مِنْ كُلِّ الثَّمَرٰتِ فَاسْلُكِیْ سُبُلَ رَبِّكِ ذُلُلًا ؕ يَخْرُجُ مِنْۢ
بُطُوْنِهَا شَرَابٌ مُّخْتَلِفٌ اَلْوَانُهٗ فِيْهِ شِفَآءٌ لِّلنَّاسِ ؕ اِنَّ فِیْ ذٰلِكَ
لَاٰيَةً لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ ﴿٦٩﴾ وَاللّٰهُ خَلَقَكُمْ ثُمَّ يَتَوَفّٰىكُمْ ؕ وَمِنْكُمْ مَّنْ
يُّرَدُّ اِلٰۤى اَرْذَلِ الْعُمُرِ لِكَیْ لَا يَعْلَمَ بَعْدَ عِلْمٍ شَيْئًا ؕ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ
قَدِيْرٌ ﴿٧٠﴾ وَاللّٰهُ فَضَّلَ بَعْضَكُمْ عَلٰی بَعْضٍ فِی الرِّزْقِ ۚ فَمَا الَّذِيْنَ ع ٩ ١٥
فُضِّلُوْا بِرَآدِّیْ رِزْقِهِمْ عَلٰی مَا مَلَكَتْ اَيْمَانُهُمْ فَهُمْ فِيْهِ سَوَآءٌ ؕ اَفَبِنِعْمَةِ
اللّٰهِ يَجْحَدُوْنَ ﴿٧١﴾ وَاللّٰهُ جَعَلَ لَكُمْ مِّنْ اَنْفُسِكُمْ اَزْوَاجًا وَّ
جَعَلَ لَكُمْ مِّنْ اَزْوَاجِكُمْ بَنِيْنَ وَحَفَدَةً وَّرَزَقَكُمْ مِّنَ
الطَّيِّبٰتِ ؕ اَفَبِالْبَاطِلِ يُؤْمِنُوْنَ وَبِنِعْمَتِ اللّٰهِ هُمْ يَكْفُرُوْنَ ﴿٧٢﴾

65. இன்னும், அல்லாஹ் வானத்திலிருந்து நீரை இறக்கிவைத்து , அதைக் கொண்டு பூமியை_ அது உயிரிழந்த பின் உயிர் பெறச்செய்கின்றான்; செவியேற்கும் கூட்டத்தினர்க்கு,நிச்சயமாக இதில் ஓர் அத்தாட்சி இருக்கின்றது.

66. (மனிதர்களே ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) கால் நடைகளிலும் உங்களுக்கு நிச்சயமாக ஒரு படிப்பினை உண்டு; சாணத்திற்கும், இரத்தத்திற்குமிடையே _ அதன் வயிறுகளிலிருந்து கலப்பற்ற பாலை (உற்பத்தி செய்து, அதை) அருந்துபவர்களுக்கு மிக்க இன்பகரமானதாக இருக்க, நாம் உங்களுக்குப் புகட்டுகிறோம்.

67. பேரீச்சை, திராட்சைகள்(ஆகிய) பழங்களிலிருந்து மதுவையும், அழகான உணவையும் நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள்; நிச்சயமாக இதிலும் அறிகின்ற கூட்டத்தினர்க்கு ஓர் அத்தாட்சி இருக்கின்றது.

68. மேலும், "மலைகளிலும், மரங்களிலும், அவர்கள் கட்டுபவைகளிலும் நீ கூடுகளை அமைத்துக்கொள்" என்று உமதிரட்சகன் தேனீக்கு உள்ளுணர்ச்சியை உண்டாக்கினான்.

69. "பின்னர், நீ எல்லா விதமான கனி(யின் மலர்)களிலிருந்தும் உணவருந்தி, பின்னர், உனதிரட்சகனின்வழிகளில் (அவை உனக்கு) எளிதாக்கப்பட்டதாக இருக்கச் செல்" (எனவும் உணர்வை உமதிரட்சகன்உண்டாக்கினான்). இதனால் அதன் வயிறுகளிலிருந்து (தேனாகிய)ஒரு பானம் வெளியாகின்றது; அதன் நிறங்கள் மாறுபட்டவையாகும்; அதில் மனிதர்களுக்கு குணப்படுத்துதலுண்டு. நிச்சயமாக, இதிலும் சிந்திக்கக்கூடிய கூட்டத்தினர்க்கு ஓர் அத்தாட்சி இருக்கின்றது.

70. இன்னும், அல்லாஹ் உங்களைப் படைத்தான்; பின்னர், அவனே உங்களை மரணிக்கச் செய்கின்றான்; ( கற்று)அறிந்தபின் அவர் ஒன்றுமே அறியாதவராக ஆவதற்காக தளர்ந்த வயது வரையில் (வாழ்வதற்கு) தள்ளப்படுபவர்களும் உங்களில் உண்டு; (உங்களில் யார் யாரை எவ்வளவு காலம் விட்டுவைக்க வேண்டுமென்பதை) நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன்; (அவ்வாறு செய்ய) மிக்க ஆற்றலுடையவன்.

71. மேலும், உங்களில் சிலரை, (மற்ற) சிலரைவிடச் சம்பத்தில் அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருக்கின்றான்; ஆகவே, அவ்வாறு மேன்மையாக்கப்பட்டவர்கள் தங்கள் சம்பத்தை தங்களது வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்(களான அடிமை)களுக்குஅதில் அவர்கள் (அனைவரும்) சமமானவர்களாக இருக்க, கொடுத்து விடுபவர்களாக இல்லை; ஆகவே, (அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட அவனின்அடியார்களை அவனுக்குக் கூட்டாக்கி) அல்லாஹ்வின் அருட்கொடையை இவர்கள் மறுக்கிறார்களா?

72. உங்களிலிருந்தே உங்களுக்காக மனைவியரை அல்லாஹ் ஆக்கியுள்ளான்; உங்கள் மனைவியரிலிருந்து ஆண் மக்களையும், பேரக்குழந்தைகளையும் உங்களுக்கு அவன் ஆக்கியுள்ளான்; இன்னும், நல்லவற்றிலிருந்து உங்களுக்கு உணவளித்துள்ளான்; அவர்கள் பொய்யானதை விசுவாசித்து அல்லாஹ்வின் அருட் கொடையையும் நிராகரிக்கின்றனரா?

وَيَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَمْلِكُ لَهُمْ رِزْقًا مِّنَ
السَّمٰوٰتِ وَالْاَرْضِ شَيْـًٔا وَّلَا يَسْتَطِيْعُوْنَ ﴿٧٣﴾ فَلَا تَضْرِبُوْا
لِلّٰهِ الْاَمْثَالَ ؕ اِنَّ اللّٰهَ يَعْلَمُ وَاَنْتُمْ لَا تَعْلَمُوْنَ ﴿٧٤﴾ ضَرَبَ
اللّٰهُ مَثَلًا عَبْدًا مَّمْلُوْكًا لَّا يَقْدِرُ عَلٰى شَيْءٍ وَّمَنْ رَّزَقْنٰهُ
مِنَّا رِزْقًا حَسَنًا فَهُوَ يُنْفِقُ مِنْهُ سِرًّا وَّجَهْرًا ؕ هَلْ
يَسْتَوٗنَ ؕ اَلْحَمْدُ لِلّٰهِ ؕ بَلْ اَكْثَرُهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿٧٥﴾ وَضَرَبَ
اللّٰهُ مَثَلًا رَّجُلَيْنِ اَحَدُهُمَآ اَبْكَمُ لَا يَقْدِرُ عَلٰى شَيْءٍ وَّهُوَ
كَلٌّ عَلٰى مَوْلٰىهُ ۙ اَيْنَمَا يُوَجِّهْهُّ لَا يَاْتِ بِخَيْرٍ ؕ هَلْ يَسْتَوِيْ
هُوَ ۙ وَمَنْ يَّاْمُرُ بِالْعَدْلِ ۙ وَهُوَ عَلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿٧٦﴾ ع ١٠ ١٣
وَلِلّٰهِ غَيْبُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَمَآ اَمْرُ السَّاعَةِ اِلَّا
كَلَمْحِ الْبَصَرِ اَوْ هُوَ اَقْرَبُ ؕ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿٧٧﴾
وَاللّٰهُ اَخْرَجَكُمْ مِّنْۢ بُطُوْنِ اُمَّهٰتِكُمْ لَا تَعْلَمُوْنَ شَيْـًٔا ۙ وَّ
جَعَلَ لَكُمُ السَّمْعَ وَالْاَبْصَارَ وَالْاَفْـِٕدَةَ ۙ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿٧٨﴾
اَلَمْ يَرَوْا اِلَى الطَّيْرِ مُسَخَّرٰتٍ فِيْ جَوِّ السَّمَآءِ ؕ مَا يُمْسِكُهُنَّ
اِلَّا اللّٰهُ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿٧٩﴾

73. மேலும், அல்லாஹ்வையன்றி _ வானங்கள் மற்றும் பூமியிலிருந்துள்ள எப்பொருளையும் இவர்களுக்கு உணவாக அளிக்கச் சொந்தமாக்கிக் கொள்ளாத, இன்னும் (அதற்கு) சக்தி பெறாதவைகளை அவர்கள் வணங்குகிறார்கள்.

74. ஆகவே, அல்லாஹ்வுக்கு நீங்கள் உதாரணங்களைக் கூறாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் (சகலவற்றையும்) அறிவான்; நீங்களோ அறிய மாட்டீர்கள்.

75. எதன் மீதும் ஆற்றல் பெறாத (பிறருக்குச்) சொந்தமாக்கப்பட்ட ஒரு அடிமையையும், நம்மிடமிருந்து அழகான சம்பத்தை நாம் அவருக்கு நல்கியவரையும் (ஆகிய இருவரை) அல்லாஹ் உதாரணமாகக்கூறுகிறான்; (சம்பத்துக்கள் நல்கப்பட்ட)அவர் அவற்றிலிருந்து இரகசியமாகவும், பகிரங்கமாகவும் (தர்மமாகச்) செலவு செய்து வருகிறார்; இ(வ்விரு நிலையுடைய)வர்கள் சமமாவார்களா? (சமமாக மாட்டார்கள்.)புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன; எனினும், அவர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்துகொள்ளமாட்டார்கள்.

76. மேலும், இரு மனிதரை அல்லாஹ் உதாரணமாகக் கூறுகின்றான் ; அவ்விருவரில் ஒருவன் ஊமை (யான அடிமை); எதன் மீதும் சக்தி பெறமாட்டான்; இன்னும் அவன் தன் எஜமானனுக்குச் சுமையாகவும் இருக்கிறான்; (எஜமானாகிய) அவன், அவனை எங்கு அனுப்பிய போதிலும், யாதொரு நன்மையையும்அவன் கொண்டுவர மாட்டான் ; அவனும், நேரான வழியில் தானும் இருந்து கொண்டு (பிறருக்கு) நீதத்தையே ஏவிக் கொண்டுமிருப்பவனும் சமமாவானா?

77. மேலும்,வானங்கள் மற்றும் பூமியினுடைய மறைவானது அல்லாஹ்வுக்கே உரியதாகும்; ஆகவே, மறுமையின் காரியம் இமை கொட்டி விழிப்பதைப்போல, அல்லது அதைவிட மிகச் சமீபமாகவே தவிர இல்லை ; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

78. அல்லாஹ்தான் ஒன்றையுமே நீங்கள் அறியாதவர்களாக இருந்த நிலைமையில், உங்களுடைய தாய்மார்களின் வயிறுகளிலிருந்து உங்களை வெளிப்படுத்தினான்; அன்றியும், உங்களுக்கு செவிப் புலனையும், பார்வைகளையும், இதயங்களையும்_ நீங்கள் (அவனுக்கு) நன்றி செய்வதற்காக ஆக்கியுள்ளான்.

79. வானவெளியில், (அல்லாஹ்வின் கட்டளைக்குக்) கட்டுப் பட்டவையாக (பறந்துசெல்லும்) பறவைகளை அவர்கள் பார்க்க வில்லையா? அல்லாஹ்வைத்தவிர (வேறொருவரும் ) அவற்றை தடுத்து நிறுத்தவில்லை; நிச்சயமாக, விசுவாசங்கொண்ட சமூகத்தார்க்கு இதிலும் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

وَاللّٰهُ جَعَلَ لَكُمْ مِّنْ بُيُوْتِكُمْ سَكَنًا وَّجَعَلَ لَكُمْ مِّنْ جُلُوْدِ
الْاَنْعَامِ بُيُوْتًا تَسْتَخِفُّوْنَهَا يَوْمَ ظَعْنِكُمْ وَيَوْمَ اِقَامَتِكُمْ ۙ
وَمِنْ اَصْوَافِهَا وَاَوْبَارِهَا وَاَشْعَارِهَاۤ اَثَاثًا وَّمَتَاعًا
اِلٰى حِيْنٍ ﴿٨٠﴾ وَاللّٰهُ جَعَلَ لَكُمْ مِّمَّا خَلَقَ ظِلٰلًا وَّجَعَلَ لَكُمْ
مِّنَ الْجِبَالِ اَكْنَانًا وَّجَعَلَ لَكُمْ سَرَابِيْلَ تَقِيْكُمُ الْحَرَّ
وَسَرَابِيْلَ تَقِيْكُمْ بَاْسَكُمْ ؕ كَذٰلِكَ يُتِمُّ نِعْمَتَهٗ عَلَيْكُمْ
لَعَلَّكُمْ تُسْلِمُوْنَ ﴿٨١﴾ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا عَلَيْكَ الْبَلٰغُ
الْمُبِيْنُ ﴿٨٢﴾ يَعْرِفُوْنَ نِعْمَتَ اللّٰهِ ثُمَّ يُنْكِرُوْنَهَا وَاَكْثَرُهُمُ
الْكٰفِرُوْنَ ﴿٨٣﴾ ع وَيَوْمَ نَبْعَثُ مِنْ كُلِّ اُمَّةٍ شَهِيْدًا ثُمَّ لَا ع ١٧
يُؤْذَنُ لِلَّذِيْنَ كَفَرُوْا وَلَا هُمْ يُسْتَعْتَبُوْنَ ﴿٨٤﴾ وَاِذَا رَاَ الَّذِيْنَ
ظَلَمُوا الْعَذَابَ فَلَا يُخَفَّفُ عَنْهُمْ وَلَا هُمْ يُنْظَرُوْنَ ﴿٨٥﴾ وَ
اِذَا رَاَ الَّذِيْنَ اَشْرَكُوْا شُرَكَآءَهُمْ قَالُوْا رَبَّنَا هٰٓؤُلَآءِ
شُرَكَآؤُنَا الَّذِيْنَ كُنَّا نَدْعُوْا مِنْ دُوْنِكَ ۚ فَاَلْقَوْا
اِلَيْهِمُ الْقَوْلَ اِنَّكُمْ لَكٰذِبُوْنَ ﴿٨٦﴾ ج وَاَلْقَوْا اِلَى اللّٰهِ الثلثة
يَوْمَئِذِ ِۨالسَّلَمَ وَضَلَّ عَنْهُمْ مَّا كَانُوْا يَفْتَرُوْنَ ﴿٨٧﴾

80. மேலும், அல்லாஹ் உங்கள் வீடுகளை உங்களுக்கு அமைதி தரும் இடமாக அமைத்துள்ளான்; உங்கள் பிரயாண நாளிலும்,உங்களுடைய (ஊரில் நீங்கள்) தங்கும் நாளிலும் எளிதாக அவற்றைப் பயன்படுத்த (ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால் நடைகளின் தோல்களிலிருந்தும் உங்களுக்கு (கூடாரங்களாக உபயோகிக்கும்) வீடுகளையும் அவன் ஆக்கினான்; அவற்றில் செம்மறியாட்டின் கதகதப்பான உரோமங்கள், ஒட்டகத்தின் உரோமங்கள், வெள்ளாட்டின் உரோமங்கள் ஆகியவற்றிலிருந்து உங்களுக்கு ஆடைகளை(அதை விற்று அதன் மூலம் சாதனங்களை)யும் குறிப்பிட்ட காலம் வரை சுகத்தையும் (அவற்றில் அல்லாஹ் அமைத்துத் தந்திருக்கிறான்.)

81. அல்லாஹ் தான் படைத்திருப்பவைகளிலிருந்து உங்களுக்கு நிழல் (தரக்கூடியவை) களையும் ஆக்கியிருக்கிறான்; மலைகளில் உங்களுக்கு (தங்குமிடங்களாக) குகைகளையும் அவன் ஆக்கியிருக்கிறான்; வெப்பத்திலிருந்து உங்களைக்காக்கக்கூடிய சட்டைகளையும், உங்களுடைய போரில் உங்களைக் காக்கக்கூடிய (கவசங்களையும், உருக்குச்) சட்டைகளையும் உங்களுக்காக அவனே ஆக்கியிருக்கிறான்; நீங்கள்( அவனுக்கு) முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பதற்காக இவ்வாறு அவன் தன் அருளை உங்கள் மீது பூர்த்தியாக்கி இருக்கிறான்.

82. ஆகவே,( நபியே!) அவர்கள் (உம்மைப்) புறக்கணித்தால் (நீர் கவலைப் படாதீர்; ஏனென்றால்) உம்மீது (கடமையு)ள்ளதெல்லாம் (தூதை) தெளிவாகச் சேர்ப்பிப்பதுதான்.

83. அல்லாஹ்வின் (இத்தகைய) அருட் கொடையை அவர்கள் நன்றாக அறிகின்றனர்; பின்னர் அதனை அவர்கள் நிராகரிக்கின்றனர்; அவர்களில் பெரும்பாலோர் (நன்றி கெட்ட) காஃபிர்களாகவே இருக்கின்றனர்.

84. ஒவ்வொரு சமூகத்தாரிலிருந்தும் ( அவர்களுக்கு) சாட்சியாளரை நாம் எழுப்பும் நாளை( நபியே! நீர் அவர்களுக்கு நினைவூட்டுவீராக!) ; பின்னர் நிராகரித்தோருக்கு (ஏதும் பேச) அனுமதியளிக்கப்பட மாட்டாது; (அவர்களின் இரட்சகனைத் திருப்திப் படுத்தும் எச்செயலையும் செய்ய)அவர்கள் சிரமப் படுத்தப்படவும் மாட்டார்கள்.

85. மேலும், அநியாயம் செய்தார்களே அவர்கள் (மறுமையில்) வேதனையைக் கண்டுவிட்டால் அவர்களைவிட்டும் அ(வ்வதேனையான)து குறைக்கப்பட மாட்டாது; அவர்கள் அவகாசம் அளிக்கப்படவும் மாட்டார்கள்; (துரிதமாக அவர்களை நரகில் சேர்க்கப்படும்).

86. இணைவைத்துக்கொண்டிருந்தோர் தாங்கள் இணையாக்கியவர்களை (மறுமையில்) கண்டால் (அல்லாஹ்விடம்) "எங்கள் இரட்சகனே! உன்னையன்றி, (வணக்கத்திற்குரியவர்கள் என்று) நாங்கள் அழைத்து (வணங்கி) வந்தோமே அத்தகைய எங்களுடைய இணையாளர்கள் இவர்கள்தான்" என்று கூறுவார்கள்; அப்போது அவர்கள் "நிச்சயமாக நீங்கள் பொய்யர்கள் (நாங்கள் வணக்கத்திற்குரியவர்களல்லர் )" என்ற கூற்றை அவர்கள் பால் போடுவர்.

87. மேலும்,(அந்நாளில்) இவர்கள் அல்லாஹ்வுக்கு முற்றிலும் பணிந்து விடுவதைஎடுத்துவைப்பார்கள்; பின்னர், இவர்கள் (பொய்யாகக்) கற்பனை செய்துகொண்டிருந்தவை அவர்களை விட்டும் மறைந்துவிடும்.

الَّذِيْنَ كَفَرُوْا وَصَدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ زِدْنٰهُمْ عَذَابًا
فَوْقَ الْعَذَابِ بِمَا كَانُوْا يُفْسِدُوْنَ ﴿۸۸﴾ وَيَوْمَ نَبْعَثُ فِيْ كُلِّ
اُمَّةٍ شَهِيْدًا عَلَيْهِمْ مِّنْ اَنْفُسِهِمْ وَجِئْنَا بِكَ شَهِيْدًا
عَلٰى هٰٓؤُلَآءِ ۭ وَنَزَّلْنَا عَلَيْكَ الْكِتٰبَ تِبْيَانًا لِّكُلِّ شَيْءٍ وَّ
هُدًى وَّرَحْمَةً وَّبُشْرٰى لِلْمُسْلِمِيْنَ ﴿۸۹﴾ ع اِنَّ اللّٰهَ يَاْمُرُ ع ۱۲ ۴ ۱۸
بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآئِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ
الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ ۚ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ ﴿۹۰﴾ وَ
اَوْفُوْا بِعَهْدِ اللّٰهِ اِذَا عٰهَدْتُّمْ وَلَا تَنْقُضُوا الْاَيْمَانَ
بَعْدَ تَوْكِيْدِهَا وَقَدْ جَعَلْتُمُ اللّٰهَ عَلَيْكُمْ كَفِيْلًا ۭ اِنَّ اللّٰهَ
يَعْلَمُ مَا تَفْعَلُوْنَ ﴿۹۱﴾ وَلَا تَكُوْنُوْا كَالَّتِيْ نَقَضَتْ غَزْلَهَا
مِنْ بَعْدِ قُوَّةٍ اَنْكَاثًا ۭ تَتَّخِذُوْنَ اَيْمَانَكُمْ دَخَلًا بَيْنَكُمْ اَنْ
تَكُوْنَ اُمَّةٌ هِيَ اَرْبٰى مِنْ اُمَّةٍ ۭ اِنَّمَا يَبْلُوْكُمُ اللّٰهُ بِهٖ ۭ وَلَيُبَيِّنَنَّ
لَكُمْ يَوْمَ الْقِيٰمَةِ مَا كُنْتُمْ فِيْهِ تَخْتَلِفُوْنَ ﴿۹۲﴾ وَلَوْ شَآءَ
اللّٰهُ لَجَعَلَكُمْ اُمَّةً وَّاحِدَةً وَّلٰكِنْ يُّضِلُّ مَنْ يَّشَآءُ
وَيَهْدِيْ مَنْ يَّشَآءُ ۭ وَلَتُسْـَٔـلُنَّ عَمَّا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۹۳﴾

88. நிராகரித்து, அல்லாஹ்வுடைய பாதையை விட்டு தடுத்துக் கொண்டுமிருந்தார்களே அத்தகையோர் — அவர்கள் குழப்பம் செய்துகொண்டிருந்ததன் காரணமாக, வேதனைக்கு மேல் வேதனையை அவர்களுக்கு நாம் அதிகப்படுத்துவோம்.

89. இன்னும், (நபியே!) ஒவ்வொரு சமூதாயத்தினரிலும் அவர்களின் மீது ஒரு சாட்சியாளரை அவர்களிலிருந்தே நாம் எழுப்பும் நாளில், உம்மையும் (உம் சமூகத்தாராகிய) இவர்கள் மீது சாட்சியாளராக நாம் கொண்டு வருவோம்; (நபியே!) ஒவ்வொரு விஷயத்திற்கும் தெளிவாகவும், நேர் வழியாகவும், அருளாகவும், முற்றிலும் தங்களை இரட்சகனிடம் ஒப்படைத்து விட்டவர்களுக்கு நன்மாராயமாகவும் உம்மீது இவ்வேதத்தை நாம் இறக்கி வைத்திருக்கிறோம்.

90. (விசுவாசங்கொண்டோரே!) நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு(பொருளை)க் கொடுக்குமாறும் (உங்களை) ஏவுகிறான்; மேலும், மானக்கேடான காரியங்கள், (மார்க்கத்தில்) மறுக்கப்பட்டவை, வரம்பு மீறுதல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) அவன்விலக்குகிறான். (இவைகளை) நீங்கள் நினைவில் வைத்துக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு உபதேசிக்கிறான்.

91. இன்னும், நீங்கள் உங்களுக்கு மத்தியில் உடன்படிக்கை செய்து கொண்டால், அல்லாஹ்வின் (பெயரால் செய்யப்பட்ட) உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள்; சத்தியங்களை அவற்றை உறுதிப்படுத்திய பின்னர், உங்கள் மீது (அவற்றுக்கு) அல்லாஹ்வை பொறுப்பாகவும் நீங்கள் ஆக்கியிருக்க நீங்கள் துண்டித்தும் விடாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு அறிவான்.

92. (மனிதர்களே! உறுதிப்படுத்திய உடன் படிக்கைகளையும், சத்தியங்களையும் துண்டிக்கும் விஷயத்தில்) தான் உறுதியாக நெய்தபின் அவள் நெய்ததை பல துண்டுகளாக்கி விட்டவளைப்போன்று நீங்களும் ஆகி விடவேண்டாம்; (அன்றி) ஒரு வகுப்பாரை விட மற்றொரு வகுப்பார் எண்ணிக்கையில் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்னும் காரணத்தால், உங்கள் சத்தியங்களை ஏமாற்றி மோசடியாக உங்களுக்கிடையில் எடுத்து (ஆக்கி)க் கொள்கிறீர்கள்; அல்லாஹ் உங்களைச் சோதிப்பதெல்லாம் இதைக் கொண்டுதான்; இன்னும், எதில் நீங்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தீர்களோ அதை மறுமைநாளில் நிச்சயமாக அவன், உங்களுக்குத் தெளிவாக்குவான்.

93. மேலும், அல்லாஹ் நாடியிருந்தால், உங்களை ஒரே (மார்க்கத்தைக்கொண்ட) சமுதாயத்தினராக ஆக்கி இருப்பான்; எனினும், தான் நாடியவர்களை தவறான வழியில் அவன் விட்டு விடுகிறான்; இன்னும் தான் நாடியவர்களை நேர் வழியில் செலுத்துகிறான்; மேலும், நீங்கள் செய்துகொண்டிருந்தவை பற்றி நிச்சயமாக நீங்கள் (மறுமையில்) கேட்கப்படுவீர்கள்.

وَلَا تَتَّخِذُوْٓا اَيْمَانَكُمْ دَخَلًا بَيْنَكُمْ فَتَزِلَّ قَدَمٌۢ بَعْدَ
ثُبُوْتِهَا وَتَذُوْقُوا السُّوْٓءَ بِمَا صَدَدْتُّمْ عَنْ سَبِيْلِ اللّٰهِ ۚ وَ
لَكُمْ عَذَابٌ عَظِيْمٌ ﴿۹۴﴾ وَلَا تَشْتَرُوْا بِعَهْدِ اللّٰهِ ثَمَنًا قَلِيْلًا ؕ
اِنَّمَا عِنْدَ اللّٰهِ هُوَ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۹۵﴾ مَا عِنْدَكُمْ
يَنْفَدُ وَمَا عِنْدَ اللّٰهِ بَاقٍ ؕ وَلَنَجْزِيَنَّ الَّذِيْنَ صَبَرُوْٓا
اَجْرَهُمْ بِاَحْسَنِ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۹۶﴾ مَنْ عَمِلَ صَالِحًا
مِّنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهٗ حَيٰوةً طَيِّبَةً ۚ
وَلَنَجْزِيَنَّهُمْ اَجْرَهُمْ بِاَحْسَنِ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۹۷﴾ فَاِذَا
قَرَاْتَ الْقُرْاٰنَ فَاسْتَعِذْ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ﴿۹۸﴾
اِنَّهٗ لَيْسَ لَهٗ سُلْطٰنٌ عَلَى الَّذِيْنَ اٰمَنُوْا وَعَلٰى رَبِّهِمْ
يَتَوَكَّلُوْنَ ﴿۹۹﴾ اِنَّمَا سُلْطٰنُهٗ عَلَى الَّذِيْنَ يَتَوَلَّوْنَهٗ وَالَّذِيْنَ
۱۳ ع ۱۱ ۱۹ هُمْ بِهٖ مُشْرِكُوْنَ ﴿۱۰۰﴾ ع وَاِذَا بَدَّلْنَآ اٰيَةً مَّكَانَ اٰيَةٍ ۙ وَّ
اللّٰهُ اَعْلَمُ بِمَا يُنَزِّلُ قَالُوْٓا اِنَّمَآ اَنْتَ مُفْتَرٍ ؕ بَلْ اَكْثَرُهُمْ
لَا يَعْلَمُوْنَ ﴿۱۰۱﴾ قُلْ نَزَّلَهٗ رُوْحُ الْقُدُسِ مِنْ رَّبِّكَ بِالْحَقِّ
لِيُثَبِّتَ الَّذِيْنَ اٰمَنُوْا وَهُدًى وَّبُشْرٰى لِلْمُسْلِمِيْنَ ﴿۱۰۲﴾

94. நீங்கள் உங்களுடைய சத்தியங்களை உங்களுக்கிடையே மோசடியாக ஆக்கிக்கொள்ளாதீர்கள்; (அவ்வாறு செய்தால் உங்களுடைய) பாதம் – அது நிலை பெற்றபின் சறுகிவிடும்; அன்றியும் அல்லாஹ்வின் பாதையை விட்டும் நீங்கள் (மக்களை) தடுத்ததன் காரணமாக (இம்மையில் பெரும்) துன்பத்தை நீங்கள் சுவைத்துவிடுவீர்கள்; (மறுமையில்) உங்களுக்கு மகத்தான வேதனையும் உண்டு.

95. அல்லாஹ்வுடைய வாக்குறுதிக்குப் பகரமாக சொற்பக் கிரயத்தை நீங்கள் வாங்கிக்கொள்ளாதீர்கள்; நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால், நிச்சயமாக அல்லாஹ்விடம் இருப்பது – அதுதான் உங்களுக்கு மிகவும் நன்மையானதாக இருக்கும்.

96. உங்களிடமுள்ளவை (யாவும்) தீர்ந்துவிடும்; அல்லாஹ்விடம் உள்ளதோ நிலைத்திருக்கும்; பொறுமையைக் கடைப்பிடித்தோர்க்கு – அவர்களுடைய கூலியை அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றில் மிக அழகானதைக் கொண்டு திண்ணமாக நாம் வழங்குவோம்.

97. ஆண் அல்லது பெண் – அவர் விசுவாசங்கொண்டவராக இருக்க, யார் நற்செயலைச் செய்தாரோ நிச்சயமாக நாம் அவரை நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம்; இன்னும், நிச்சயமாக, அவர்களுக்கு அவர்களது கூலியை அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றில், மிக அழகானதைக் கொண்டு நாம் கொடுப்போம்.

98. (நபியே!)நீர் குர்ஆனை ஓத ஆரம்பித்தால், விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் காவல் தேடிக் கொள்வீராக!

99. நிச்சயமாக (ஷைத்தானாகிய)அவன் – விசுவாசங்கொண்டு, (தங்கள் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) தங்கள் இரட்சகனின் மீது நம்பிக்கையும் வைத்திருக்கிறார்களே அத்தகையவர்களின் மீது(ஷைத்தானாகிய) அவனுக்கு எவ்வித அதிகாரமுமில்லை.

100. அவனுடைய அதிகாரமெல்லாம், அவனை நண்பராக எடுத்துக் கொள்கிறார்களே அத்தகையவர்கள் மீதும், அவனால் இணை வைக்கக் கூடியவர்களாக இருக்கிறார்களே அத்தகையவர்களின் மீதும்தான்.

101. மேலும், (நபியே!) ஒரு வசனத்தை மற்றொரு வசனத்தின் இடத்தில் நாம் மாற்றினால் – அல்லாஹ்வோ தான் இறக்கி வைப்பதை நன்கு அறிந்தவன் – (இந்நிலையில்) இவர்கள் "நிச்சயமாக நீர் இட்டுக்கட்டுபவர்தான்" என்று (உம்மைப் பற்றிக்) கூறுகின்றனர்; என்றாலும், இவர்களில் பெரும்பாலோர் (உண்மையை) அறிய மாட்டார்கள்.

102. "விசுவாசங்கொண்டோரை உறுதிப் படுத்துவதற்காகவும், முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்போருக்கு நேர் வழியாகவும், நன்மாராயமாகவும் இருப்பதற்காக உண்மையைக் கொண்டு இதனை உமதிரட்சகனிடமிருந்து 'ரூஹுல் குத்ஸ்' (என்னும் ஜிப்ரீல்) இறக்கிவைத்தார்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

وَلَقَدْ نَعْلَمُ اَنَّهُمْ يَقُوْلُوْنَ اِنَّمَا يُعَلِّمُهٗ بَشَرٌ ؕ لِسَانُ الَّذِیْ
یُلْحِدُوْنَ اِلَیْهِ اَعْجَمِیٌّ وَّهٰذَا لِسَانٌ عَرَبِیٌّ مُّبِیْنٌ ﴿۱۰۳﴾
اِنَّ الَّذِیْنَ لَا یُؤْمِنُوْنَ بِاٰیٰتِ اللّٰهِ ۙ لَا یَهْدِیْهِمُ اللّٰهُ وَلَهُمْ
عَذَابٌ اَلِیْمٌ ﴿۱۰۴﴾ اِنَّمَا یَفْتَرِی الْكَذِبَ الَّذِیْنَ لَا یُؤْمِنُوْنَ
بِاٰیٰتِ اللّٰهِ ۚ وَاُولٰٓئِكَ هُمُ الْكٰذِبُوْنَ ﴿۱۰۵﴾ مَنْ كَفَرَ بِاللّٰهِ مِنْۢ
بَعْدِ اِیْمَانِهٖۤ اِلَّا مَنْ اُكْرِهَ وَقَلْبُهٗ مُطْمَئِنٌّۢ بِالْاِیْمَانِ وَلٰكِنْ
مَّنْ شَرَحَ بِالْكُفْرِ صَدْرًا فَعَلَیْهِمْ غَضَبٌ مِّنَ اللّٰهِ ۚ وَلَهُمْ
عَذَابٌ عَظِیْمٌ ﴿۱۰۶﴾ ذٰلِكَ بِاَنَّهُمُ اسْتَحَبُّوا الْحَیٰوةَ الدُّنْیَا
عَلَی الْاٰخِرَةِ ۙ وَاَنَّ اللّٰهَ لَا یَهْدِی الْقَوْمَ الْكٰفِرِیْنَ ﴿۱۰۷﴾
اُولٰٓئِكَ الَّذِیْنَ طَبَعَ اللّٰهُ عَلٰی قُلُوْبِهِمْ وَسَمْعِهِمْ وَاَبْصَارِهِمْ ۚ
وَاُولٰٓئِكَ هُمُ الْغٰفِلُوْنَ ﴿۱۰۸﴾ لَا جَرَمَ اَنَّهُمْ فِی الْاٰخِرَةِ هُمُ
الْخٰسِرُوْنَ ﴿۱۰۹﴾ ثُمَّ اِنَّ رَبَّكَ لِلَّذِیْنَ هَاجَرُوْا مِنْۢ بَعْدِ
مَا فُتِنُوْا ثُمَّ جٰهَدُوْا وَصَبَرُوْۤا ۙ اِنَّ رَبَّكَ مِنْۢ بَعْدِهَا
لَغَفُوْرٌ رَّحِیْمٌ ﴿۱۱۰﴾ ع یَوْمَ تَاْتِیْ كُلُّ نَفْسٍ تُجَادِلُ عَنْ ١٤ ع ٢٠
نَّفْسِهَا وَتُوَفّٰی كُلُّ نَفْسٍ مَّا عَمِلَتْ وَهُمْ لَا یُظْلَمُوْنَ ﴿۱۱۱﴾

103. அவருக்குக் கற்றுக் கொடுப்பதெல்லாம் ஒரு மனிதர்தான் என்று அவர்கள் கூறுவதையும்நிச்சயமாக நாம் அறிவோம்; எவர் பால் (கற்றுத்தந்ததாக) இணைத்துக்கூறுகிறார்களோ அவருடைய மொழி அரபி அல்லாத மொழியாகும்; ஆனால் இவ்வேதமோ மிகத்தெளிவான அரபி மொழியாகும்.

104. நிச்சயமாக அல்லாஹ்வுடைய வசனங்களை விசுவாசிக்கவில்லையே அத்தகையோர்_அவர்களை, அல்லாஹ் நேர் வழியில் செலுத்த மாட்டான். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுமுண்டு.

105. நிச்சயமாக பொய்யைக் கற்பனை செய்வதெல்லாம் அல்லாஹ்வுடைய வசனங்களை நம்பாதவர்கள்தாம்;இன்னும்,(உண்மையில்) அத்தகையவர்கள் தாம் பொய்யர்கள்.

106. எவர், தாம் விசுவாசங்கொண்ட பின்னர் அல்லாஹ்வை நிராகரித்து விடுகிறாரோ, (அவரின்மீது அல்லாஹ்வின் கோபம் உண்டு; ஆயினும்) எவருடைய உள்ளம் ஈமானைக் கொண்டு அமைதி பெற்றிருக்க (நிராகரிக்குமாறு) நிர்ப்பந்திக்கப்பட்டாரோ அவரைத் தவிர; (அவர்மீது குற்றமில்லை) எனினும், எவர் நெஞ்சத்தை நிராகரிப்பைக் கொண்டு விரிவடையச் செய்து( அதை ஏற்றுக்) கொண்டாரோ _ அவர்கள் மீது அல்லாஹ்விடமிருந்துள்ள கோபம் உண்டு ; அவர்களுக்கு(மறுமையில்) மகத்தான வேதனையுமுண்டு.

107. அது, நிச்சயமாக அவர்கள் மறுமையைவிட இவ்வுலக வாழ்க்கையையே நேசிக்கிறார்கள் (என்பதாலும்,) மேலும், நிச்சயமாக அல்லாஹ் நிராகரிக்கும் இத்தகைய சமூகத்தாரை நேர் வழியில் செலுத்தமாட்டான் என்ற காரணத்தினாலுமாகும்.

108. அத்தகையோர்தான்_ அவர்களுடைய இதயங்களின் மீதும், அவர்களின் செவிப்புலன் மீதும், அவர்களின் பார்வைகள் மீதும் அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான்;இன்னும், அவர்கள் தாம் மறந்தவர்களாவர்.

109. நிச்சயமாக அவர்கள் தாம் மறுமையில் முற்றிலும் நஷ்டமடைந்தோர் என்பதில் எவ்விதச்சந்தேகமுமில்லை.

110. பின்னர், (நபியே! பகைவர்களால் துன்புறுத்தப்பட்டதால்) சோதனைகளுக் குள்ளாக்கப்பட்டபின்(தங்கள் இல்லங்களைத் துறந்து) ஹிஜ்ரத்துச் செய்து, (வெளியேறி) பின்னர் அறப்போர் செய்து (அதனால் ஏற்படும் துன்பங்களை) பொறுத்துக் கொண்டும் (உறுதியாக) இருந்தார்களே, அவர்களுக்(கருள் புரிவதற்)காகவே நிச்சயமாக உம்முடைய இரட்சகன் இருக்கிறான்; நிச்சயமாக உம்முடைய இரட்சகன் அதற்குப் பின் (அவர்களை) மிக்க மன்னிக்கிறவன்; (அவர்கள்மீது) மிகக் கிருபையுடையவன்.

111. ஒவ்வோர் ஆத்மாவும் தன்னைப் பற்றி அது வாதாட வரும் நாளை,(நபியே! நீர் அவர்களுக்கு நினைவூட்டுவீராக! அந் நாளில் )ஒவ்வோர் ஆத்மாவுக்கும், அது செய்ததற்குரிய (கூலியான)து பூரணமாகக் கொடுக்கப்படும்; அவர்களோ அநியாயம் செய்யப்படமாட்டார்கள்.

وَضَرَبَ اللّٰهُ مَثَلًا قَرْيَةً كَانَتْ اٰمِنَةً مُّطْمَئِنَّةً
يَّاْتِيْهَا رِزْقُهَا رَغَدًا مِّنْ كُلِّ مَكَانٍ فَكَفَرَتْ بِاَنْعُمِ
اللّٰهِ فَاَذَاقَهَا اللّٰهُ لِبَاسَ الْجُوْعِ وَالْخَوْفِ بِمَا كَانُوْا
يَصْنَعُوْنَ ﴿۱۱۲﴾ وَلَقَدْ جَآءَهُمْ رَسُوْلٌ مِّنْهُمْ فَكَذَّبُوْهُ
فَاَخَذَهُمُ الْعَذَابُ وَهُمْ ظٰلِمُوْنَ ﴿۱۱۳﴾ فَكُلُوْا مِمَّا
رَزَقَكُمُ اللّٰهُ حَلٰلًا طَيِّبًا ۠ وَّاشْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ اِنْ
كُنْتُمْ اِيَّاهُ تَعْبُدُوْنَ ﴿۱۱۴﴾ اِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ الْمَيْتَةَ وَ
الدَّمَ وَلَحْمَ الْخِنْزِيْرِ وَمَاۤ اُهِلَّ لِغَيْرِ اللّٰهِ بِهٖ ۚ فَمَنِ
اضْطُرَّ غَيْرَ بَاغٍ وَّلَا عَادٍ فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۱۵﴾
وَلَا تَقُوْلُوْا لِمَا تَصِفُ اَلْسِنَتُكُمُ الْكَذِبَ هٰذَا
حَلٰلٌ وَّهٰذَا حَرَامٌ لِّتَفْتَرُوْا عَلَى اللّٰهِ الْكَذِبَ ؕ اِنَّ
الَّذِيْنَ يَفْتَرُوْنَ عَلَى اللّٰهِ الْكَذِبَ لَا يُفْلِحُوْنَ ﴿۱۱۶﴾ ؕ
مَتَاعٌ قَلِيْلٌ ۠ وَّلَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿۱۱۷﴾ وَعَلَى الَّذِيْنَ
هَادُوْا حَرَّمْنَا مَا قَصَصْنَا عَلَيْكَ مِنْ قَبْلُ ۚ وَمَا
ظَلَمْنٰهُمْ وَلٰكِنْ كَانُوْۤا اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ ﴿۱۱۸﴾

112. மேலும், அல்லாஹ் ஓர் ஊரை உதாரணமாகக் கூறுகிறான்; அது அச்சமற்றதாக, அமைதியானதாக இருந்தது; அதற்குரிய உணவு(வகைகள்) ஒவ்வொரு திசையிலிருந்தும் அதற்கு தாராளமாக வந்து கொண்டு-மிருந்தது; அல்லாஹ்வுடைய அருட் கொடைகளுக்கு (நன்றி செலுத்தாமல்) அ(வ்வூரான)து மாறு செய்தது; ஆகவே, அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றின் காரணமாக அல்லாஹ் பசி, பயம் என்னும் ஆடையை அதற்கு (அணிவித்து, அவ்வூரார்களை)ச் சுவைக்கச் செய்தான்.

113. மேலும், அவர்களிலிருந்தே (நம்முடைய) ஒரு தூதர் நிச்சயமாக அவர்களிடம் வந்தார்; பின்னர், அவர்கள் அவரைப் பொய்யாக்கிவிட்டனர்; ஆகவே, அவர்கள் அநியாயக்காரர்களாக இருக்கும் நிலையில், அவர்களை வேதனை பிடித்துக் கொண்டது.

114. ஆகவே, அல்லாஹ் உங்களுக்கு அளித்தவற்றிலிருந்து ஆகுமான நல்லவைகளையே புசியுங்கள்; நீங்கள் அவனையே வணங்குவோராக இருந்தால், அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நீங்கள் நன்றியும் செலுத்திக் கொண்டிருங்கள்.

115. (புசிக்கக் கூடாதென்று) உங்களுக்கு அவன் (ஹராமாக்கி) விலக்கியிருப்பவையெல்லாம் செத்ததையும், இரத்தத்தையும், பன்றியின் மாமிசத்தையும், எதை அல்லாஹ் அல்லாதவருக்காக பெயர் கூறப்பட்(டுவிடப்பட்)டதோ அதையும்தான்; ஆகவே, எவரொருவர் வரம்பு மீறாமலும், பாவம் செய்யும் எண்ணமின்றியும், நிர்ப்பந்திக்கப்பட்டு (இவைகளைப் புசித்து) விட்டால், அப்பொழுது நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன்.

116. அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனை செய்வதற்காக உங்கள் நாவுகள் பொய்யாக வர்ணிப்பதை, (சில பிராணிகள் பற்றி) இது (ஹலால்) ஆகும், இது (ஹராம்) ஆகாது என்று கூறாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனை செய்கிறார்களே அவர்கள் வெற்றியடைய மாட்டார்கள்.

117. (இத்தகையோருக்கு இவ்வுலகில்) குறைந்த இன்பம் தான்; (மறுமையில்) அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுமுண்டு.

118. இன்னும், (நபியே!) முன்னர் நாம் உமக்கு விவரித்தவைகளை, யூதர்களின் மீது நாம் தடுத்து விட்டோம்; நாம் அவர்களுக்கு அநீதமிழைத்துவிடவுமில்லை; எனினும் அவர்கள் தமக்குத் தாமே அநீதமிழைப்பவர்களாக இருந்தனர்.

ثُمَّ اِنَّ رَبَّكَ لِلَّذِيْنَ عَمِلُوا السُّوْٓءَ بِجَهَالَةٍ ثُمَّ تَابُوْا مِنْۢ
بَعْدِ ذٰلِكَ وَاَصْلَحُوْٓا اِنَّ رَبَّكَ مِنْۢ بَعْدِهَا لَغَفُوْرٌ رَّحِيْمٌ ﴿١١٩﴾ ع ١٥ ٢١
اِنَّ اِبْرٰهِيْمَ كَانَ اُمَّةً قَانِتًا لِّلّٰهِ حَنِيْفًا ؕ وَلَمْ يَكُ مِنَ
الْمُشْرِكِيْنَ ﴿١٢٠﴾ شَاكِرًا لِّاَنْعُمِهٖ ؕ اِجْتَبٰىهُ وَهَدٰىهُ اِلٰى صِرَاطٍ
مُّسْتَقِيْمٍ ﴿١٢١﴾ وَاٰتَيْنٰهُ فِى الدُّنْيَا حَسَنَةً ؕ وَاِنَّهٗ فِى الْاٰخِرَةِ لَمِنَ
الصّٰلِحِيْنَ ﴿١٢٢﴾ ؕ ثُمَّ اَوْحَيْنَآ اِلَيْكَ اَنِ اتَّبِعْ مِلَّةَ اِبْرٰهِيْمَ حَنِيْفًا ؕ
وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ ﴿١٢٣﴾ اِنَّمَا جُعِلَ السَّبْتُ عَلَى الَّذِيْنَ
اخْتَلَفُوْا فِيْهِ ؕ وَاِنَّ رَبَّكَ لَيَحْكُمُ بَيْنَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ فِيْمَا
كَانُوْا فِيْهِ يَخْتَلِفُوْنَ ﴿١٢٤﴾ اُدْعُ اِلٰى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ
وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُمْ بِالَّتِيْ هِيَ اَحْسَنُ ؕ اِنَّ
رَبَّكَ هُوَ اَعْلَمُ بِمَنْ ضَلَّ عَنْ سَبِيْلِهٖ وَهُوَ اَعْلَمُ بِالْمُهْتَدِيْنَ ﴿١٢٥﴾
وَاِنْ عَاقَبْتُمْ فَعَاقِبُوْا بِمِثْلِ مَا عُوْقِبْتُمْ بِهٖ ؕ وَلَئِنْ
صَبَرْتُمْ لَهُوَ خَيْرٌ لِّلصّٰبِرِيْنَ ﴿١٢٦﴾ وَاصْبِرْ وَمَا صَبْرُكَ اِلَّا بِاللّٰهِ
وَلَا تَحْزَنْ عَلَيْهِمْ وَلَا تَكُ فِيْ ضَيْقٍ مِّمَّا يَمْكُرُوْنَ ﴿١٢٧﴾
اِنَّ اللّٰهَ مَعَ الَّذِيْنَ اتَّقَوْا وَّالَّذِيْنَ هُمْ مُّحْسِنُوْنَ ﴿١٢٨﴾ ع ١٦ ٢٢

119. பிறகு, (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன், (எவர்கள் தங்கள்) அறியாமையினால் பாவத்தைச் செய்துவிட்டு, அதற்குப் பின்னர் (அதிலிருந்து விலகி) தவ்பாச் செய்து, (தங்களைச்) சீர்திருத்தியும் கொள்கிறார்களே அத்தகையோருக்(கு மன்னிப்பதற்)காகவே இருக்கிறான்; அதன் பின்னரும் நிச்சயமாக உமதிரட்சகன், மிக்க மன்னிப்பவன்; (அவன்) மிகக் கிருபையுடையவன்.

120. நிச்சயமாக இப்றாஹீம், பின்பற்றப்படும் ஒரு தலைவராகவும், அல்லாஹ்வுக்குப் பயந்து அடிபணிபவராகவும், (இணைவைத்தலை விட்டு முற்றிலும் நீங்கி) ஏகத்துவத்தின்பால் சார்ந்தவராகவும் இருந்தார்; மேலும், இணைவைப்போரில்(ஒருவராக) அவர் இருக்கவில்லை.

121. (அல்லாஹ்வாகிய) அவனின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துபவராக (இருந்தார்; அல்லாஹ்வாகிய) அவன், அவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்; மேலும் அவரை நேரான பாதையில் செலுத்தினான்.

122. மேலும், நாம் அவருக்கு இவ்வுலகில் அழகானதைக்கொடுத்தோம்; மேலும், நிச்சயமாக அவர் மறுமையில்(ஸாலிஹான) நல்லவர்களில் உள்ளவர்.

123. பின்னர், (இணை வைத்தலை விட்டு முற்றிலும் நீங்கி) ஏகத்துவத்தைச் சார்ந்தவரான இப்றாஹீமுடைய (நேரான) மார்க்கத்தை "நீர், பின்பற்றுவீராக!" என்று (நபியே!) உமக்கு நாம் வஹீ அறிவித்தோம். மேலும், அவர் இணைவைத்துக் கொண்டிருப்போரில் உள்ளவராக இருக்கவேயில்லை.

124. சனிக்கிழமை(ஒன்றுகூடும் நாளாக )ஆக்கப்பட்டதெல்லாம், அதைப்பற்றி கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்களே அவர்களுக்குத்தான்; நிச்சயமாக உமதிரட்சகன்,அவர்களுக்கிடையில்,எதில்அவர்கள்(இம்மையில்)கருத்துவேறுபாடு கொண்டிருந்தார்களோ அதுபற்றி மறுமை நாளில் தீர்ப்பளிப்பான்.

125. (நபியே) நீர் (மனிதர்களை) விவேகத்தைக்கொண்டு, மற்றும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டு உமதிரட்சகனின் வழியின்பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ, அதைக்கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக! நிச்சயமாக உமதிரட்சகன், அவனுடைய வழியிலிருந்து தவறியவரை மிக்கஅறிந்தவன்; இன்னும் நேர்வழி பெற்றவர்களையும் அவன் மிக்க அறிந்தவன்.

126. விசுவாசிகளே! (உங்களைத் துன்புறுத்தியவர்களை)நீங்கள் தண்டிப்பதாக இருந்தால் எந்த அளவிற்கு நீங்கள் தண்டிக்கப்பட்டீர்களோ, அதுபோன்ற அளவிற்கே தண்டியுங்கள்; (தண்டிக்காது) பொறுத்துக்கொள்வீர்களானால், நிச்சயமாக அது பொறுமையாளர்களுக்கு மிகச்சிறந்ததாகும்.

127. இன்னும், (நபியே!) நீர் பொறுமையுடன் இருப்பீராக! இன்னும், உம்முடைய பொறுமை அல்லாஹ்வைக்கொண்டே தவிர இல்லை ; அவர்களுக்காக நீர் கவலைப்படவும்வேண்டாம். அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளைப்பற்றி நீர் இக்கட்டிலும் ஆகிவிடவேண்டாம்.

128. நிச்சயமாக அல்லாஹ், பயபக்தியுடையவர்களாக இருக்கிறார்களே அத்தகையோருடனும், நன்மைகள் செய்கிறார்களே அவர்களுடனும் (உண்மையாகவே)இருக்கின்றான்.

المنزل ۴ الجزء ۱۵

سورۃ بنی اسرآءیل مکیۃ وھی مائۃ واحد عشر اٰیۃ واثنا عشر رکوعا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

سُبْحٰنَ الَّذِيْٓ اَسْرٰى بِعَبْدِهٖ لَيْلًا مِّنَ الْمَسْجِدِ
الْحَرَامِ اِلَى الْمَسْجِدِ الْاَقْصَا الَّذِيْ بٰرَكْنَا حَوْلَهٗ لِنُرِيَهٗ مِنْ
اٰيٰتِنَا ؕ اِنَّهٗ هُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ ۝۱ وَاٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ وَ
جَعَلْنٰهُ هُدًى لِّبَنِيْٓ اِسْرَآءِيْلَ اَلَّا تَتَّخِذُوْا مِنْ دُوْنِيْ وَكِيْلًا ۝۲ ؕ
ذُرِّيَّةَ مَنْ حَمَلْنَا مَعَ نُوْحٍ ؕ اِنَّهٗ كَانَ عَبْدًا شَكُوْرًا ۝۳
وَقَضَيْنَآ اِلٰى بَنِيْٓ اِسْرَآءِيْلَ فِي الْكِتٰبِ لَتُفْسِدُنَّ فِي الْاَرْضِ
مَرَّتَيْنِ وَلَتَعْلُنَّ عُلُوًّا كَبِيْرًا ۝۴ فَاِذَا جَآءَ وَعْدُ اُوْلٰىهُمَا بَعَثْنَا
عَلَيْكُمْ عِبَادًا لَّنَآ اُولِيْ بَاْسٍ شَدِيْدٍ فَجَاسُوْا خِلٰلَ الدِّيَارِ ؕ
وَكَانَ وَعْدًا مَّفْعُوْلًا ۝۵ ثُمَّ رَدَدْنَا لَكُمُ الْكَرَّةَ عَلَيْهِمْ
وَاَمْدَدْنٰكُمْ بِاَمْوَالٍ وَّبَنِيْنَ وَجَعَلْنٰكُمْ اَكْثَرَ نَفِيْرًا ۝۶
اِنْ اَحْسَنْتُمْ اَحْسَنْتُمْ لِاَنْفُسِكُمْ ۣ وَاِنْ اَسَاْتُمْ فَلَهَا ؕ
فَاِذَا جَآءَ وَعْدُ الْاٰخِرَةِ لِيَسُوْٓءٗا وُجُوْهَكُمْ وَلِيَدْخُلُوا
الْمَسْجِدَ كَمَا دَخَلُوْهُ اَوَّلَ مَرَّةٍ وَّلِيُتَبِّرُوْا مَا عَلَوْا تَتْبِيْرًا ۝۷

அத்தியாயம் : 17

## பனீ இஸ்ராயீல் _ இஸ்ராயீலின் மக்கள்

வசனங்கள் : 111 மக்கீ ருகூஉகள் : 12

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. தன் அடியாரை (கஅபாவாகிய) சிறப்புப் பெற்ற பள்ளியிலிருந்து (பைத்துல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு, இரவின் ஒரு பகுதியில் பயணம் செய்வித்தானே அத்தகையவன் மிகப் பரிசுத்தமானவன்; (மஸ்ஜிதுல் அக்ஸாவாகிய)அது எத்தகையதென்றால் நாம்,அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை அபிவிருத்தி யடையச் செய்திருக்கிறோம்; நம்முடைய அத்தாட்சிகளை அவருக்குக் காண்பிப்பதற்காகவே (அழைத்துச் சென்றோம்.) நிச்சயமாக (உமதிரட்சகனாகிய) அவனே,செவியேற்கிறவன்,பார்க்கிறவன்.

2. மேலும், மூஸாவிற்கு வேதத்தை நாம் கொடுத்தோம்; அதனை இஸ்ராயீலின் மக்களுக்கு வழிகாட்டியாகவும் ஆக்கி, "நீங்கள் என்னைத் தவிர (மற்றெவரையும் உங்கள் செயல்களுக்கு) பொறுப்பாளராக எடுத்துக் கொள்ளவேண்டாம்" (என்றும் கட்டளையிட்டோம்).

3. (நபி) நூஹுடன் (கப்பலில்) நாம் ஏற்றிக்(காப்பாற்றிக்) கொண்டவர்களின் சந்ததிகளே! நிச்சயமாக அவர் (அதற்கு) மிக்க நன்றி செலுத்தும் அடியாராகவே இருந்தார்.

4. இஸ்ராயீலின் மக்களுக்கு,"நிச்சயமாக நீங்கள் இரு தடவை பூமியில் குழப்பம் செய்வீர்கள்" என்றும், நிச்சயமாக நீங்கள் (அகம்பாவத்துடன் அக்கிரமங்கள் செய்து) பெரும் உயர்வாக உயர்வீர்கள்" என்றும் (உங்களுக்களிக்கப்பட்ட) வேதத்தில் நாம் முடிவு செய்திருந்தோம்.

5. எனவே, அவ்விரண்டில் முதல் வாக்குறுதி வந்த சமயத்தில், நம் அடியார்களில் பெரும் பலசாலிக(ளாகிய மனிதர்க)ளை உங்களுக்கு எதிராக (உங்கள் மீது ஏவி ) அனுப்பினோம். அவர்கள் (பைத்துல் முகத்தஸிலிருந்த உங்கள்) வீடுகளுக்குள் ஊடுருவிச் சென்று விட்டார்கள். அது நிறைவேற்றப்பட்ட வாக்காகவும் இருந்தது.

6. பின்னர், அவர்கள் மீது நீங்கள் வெற்றி கொள்ளும் வாய்ப்பை உங்கள் வகையில் திருப்பினோம்; (ஏராளமான) பொருட்களையும், ஆண்மக்களையும் (நல்கியது) கொண்டு நாம் உங்களுக்கு உதவி புரிந்தோம்; மேலும், உங்களை எண்ணிக்கையில் (அவர்களை விட) மிக அதிகமானவர்களாக நாம் ஆக்கினோம்.

7. நீங்கள் நன்மை செய்தால் உங்கள் ஆத்மாக்களுக்கே நன்மை செய்து கொள்கிறீர்கள்; நீங்கள் தீமை செய்தால் அ(தன் தீமையான)து அவற்றின் மீதேயாகும்; (என்று நாம் கூறினோம். பின்னும், அவர்கள் அக்கிரமம் செய்யத் தலைப் பட்டனர். ஆகவே,) இரண்டாவது தவணை வந்த சமயத்தில், உங்களுடைய முகங்களை அவர்கள் இழிவடையச் செய்வதற்காகவும், (அக்ஸா) பள்ளியில் முந்திய தடவை அதில் அவர்கள் நுழைந்தவாறே (இந்தத் தடவையும்) அவர்கள் நுழைந்துவிடுவதற்காகவும், எவற்றை அவர்கள் மிகைத்து விட்டார்களோ அவற்றையெல்லாம் அவர்கள் (இடித்தழித்து) பெரும் சேதத்தை விளைவித்துவிடுவதற்காகவும் (அவர்களை நாம் உங்கள் மீது ஏவி அனுப்பினோம்.)

عَسٰی رَبُّکُمْ اَنْ یَّرْحَمَکُمْ ۚ وَاِنْ عُدْتُّمْ عُدْنَا ۘ وَجَعَلْنَا جَهَنَّمَ وقف لازم
لِلْکٰفِرِیْنَ حَصِیْرًا ﴿٨﴾ اِنَّ هٰذَا الْقُرْاٰنَ یَهْدِیْ لِلَّتِیْ هِیَ اَقْوَمُ وَ
یُبَشِّرُ الْمُؤْمِنِیْنَ الَّذِیْنَ یَعْمَلُوْنَ الصّٰلِحٰتِ اَنَّ لَهُمْ اَجْرًا کَبِیْرًا ۙ ﴿٩﴾
وَّاَنَّ الَّذِیْنَ لَا یُؤْمِنُوْنَ بِالْاٰخِرَةِ اَعْتَدْنَا لَهُمْ عَذَابًا اَلِیْمًا ﴿١٠﴾ ع ١
وَیَدْعُ الْاِنْسَانُ بِالشَّرِّ دُعَآءَهٗ بِالْخَیْرِ ؕ وَکَانَ الْاِنْسَانُ عَجُوْلًا ﴿١١﴾
وَجَعَلْنَا الَّیْلَ وَالنَّهَارَ اٰیَتَیْنِ فَمَحَوْنَآ اٰیَةَ الَّیْلِ وَجَعَلْنَآ اٰیَةَ
النَّهَارِ مُبْصِرَةً لِّتَبْتَغُوْا فَضْلًا مِّنْ رَّبِّکُمْ وَلِتَعْلَمُوْا عَدَدَ السِّنِیْنَ
وَالْحِسَابَ ؕ وَکُلَّ شَیْءٍ فَصَّلْنٰهُ تَفْصِیْلًا ﴿١٢﴾ وَکُلَّ اِنْسَانٍ اَلْزَمْنٰهُ
طٰٓئِرَهٗ فِیْ عُنُقِهٖ ؕ وَنُخْرِجُ لَهٗ یَوْمَ الْقِیٰمَةِ کِتٰبًا یَّلْقٰهُ مَنْشُوْرًا ﴿١٣﴾
اِقْرَاْ کِتٰبَکَ ؕ کَفٰی بِنَفْسِکَ الْیَوْمَ عَلَیْکَ حَسِیْبًا ﴿١٤﴾ ؕ مَنِ اهْتَدٰی فَاِنَّمَا
یَهْتَدِیْ لِنَفْسِهٖ ۚ وَمَنْ ضَلَّ فَاِنَّمَا یَضِلُّ عَلَیْهَا ؕ وَلَا تَزِرُ وَازِرَةٌ
وِّزْرَ اُخْرٰی ؕ وَمَا کُنَّا مُعَذِّبِیْنَ حَتّٰی نَبْعَثَ رَسُوْلًا ﴿١٥﴾ وَاِذَآ اَرَدْنَآ
اَنْ نُّهْلِکَ قَرْیَةً اَمَرْنَا مُتْرَفِیْهَا فَفَسَقُوْا فِیْهَا فَحَقَّ عَلَیْهَا
الْقَوْلُ فَدَمَّرْنٰهَا تَدْمِیْرًا ﴿١٦﴾ وَکَمْ اَهْلَکْنَا مِنَ الْقُرُوْنِ مِنْۢ
بَعْدِ نُوْحٍ ؕ وَکَفٰی بِرَبِّکَ بِذُنُوْبِ عِبَادِهٖ خَبِیْرًۢا بَصِیْرًا ﴿١٧﴾

8. (நீங்கள் குழப்பம் செய்வதை விட்டு விலகிக் கொண்டால்,) உங்கள் இரட்சகன் உங்கள் மீது கருணை புரியப் போதுமானவன்; (அவ்வாறின்றி, உங்கள் குழப்பத்தின் பாலே) பின்னும் நீங்கள் திரும்புவீர்களானால், நாமும் (தண்டிக்கத்)திரும்புவோம்; இன்னும், நிராகரிப்போருக்கு நரகத்தைச் சிறைச்சாலையாக நாம் ஆக்கியுள்ளோம்.

9. நிச்சயமாக இந்தக் குர்ஆன், (மனிதர்களுக்கு) எது மிகமிக நேர்மையானதோ அதன்பால் வழிகாட்டுகிறது; நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகைய விசுவாசிகள்_ அவர்களுக்கு நிச்சயமாக மிகப் பெரிய நற்கூலி உண்டென்று நன்மாராயமும் கூறுகின்றது.

10. மேலும், நிச்சயமாக மறுமையை விசுவாசங்கொள்ளவில்லையே அத்தகையோர்_அவர்களுக்கு நாம் மிகத் துன்புறுத்தும் வேதனையை தயாராக்கி வைத்திருக்கிறோம் (என்று எச்சரிக்கையும் செய்கிறது).

11. மேலும், மனிதன் _நன்மையைக் கோரி அவன் பிரார்த்திப்பதைப் போலவே, (சில சமயங்களில்) தீமையைக் கோரியும் பிரார்த்திக்கின்றான்; மனிதன் (பொறுமையிழந்த) அவசரக்காரனாகவே இருக்கின்றான்.

12. இரவையும், பகலையும் இரு சான்றுகளாக நாம் ஆக்கினோம்; (அதில்) இரவின் சான்றினை மங்கச் செய்தோம்; (பல பகுதிகளுக்கும் சென்று) நீங்கள் உங்கள் இரட்சகனின் பேரருளைத் தேடிக் கொள்வதற்காகவும், ஆண்டுகளின் எண்ணிக்கையையும், (மாதங்களின்) கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்வதற்காகவும், பகலின் சான்றினை பார்ப்பதற்குரிய (பிரகாசமான)தாக ஆக்கினோம்; ஒவ்வொரு பொருளையும்_ அதைத் தெளிவாக நாம் விவரித்துள்ளோம்.

13. மேலும், ஒவ்வொரு மனிதனின் செயலைப் பற்றிய (தினசரிக்)குறிப்பை அவனுடைய கழுத்தில் அவனுக்கு நாம் மாட்டி இருக்கின்றோம்; மறுமை நாளில் அவனுக்காக ஒரு புத்தகத்தையும் வெளிப்படுத்துவோம்; அவன் அதனை விரிக்கப் பட்டதாகப் பெற்றுக் கொள்வான்.

14. "உன்னுடைய புத்தகத்தை நீயே படித்துப் பார்; இன்றையத்தினம் உனக்கு (எதிராக) நீயே கணக்குப்பார்ப்பவனாக இருக்கப்போதும்" (என்று அவனிடம் கூறப்படும்).

15. எவர் நேர் வழியில் செல்கின்றாரோ, அவர் நேர் வழியில் செல்வதெல்லாம் தன(து நன்மை)க்காகவேதான்; எவர் வழிகேட்டில் செல்கின்றாரோ அவர் வழி கெடுவதெல்லாம் தனக்கே (தீங்கிழைத்துக் கொள்ளத்)தான்; இன்னும், (பாவத்தைச்) சுமக்கக்கூடிய(ஒரு ஆத்மாவான)து மற்றொன்றின் (பாவச்) சுமையைச் சுமக்காது; மேலும், (நம்முடைய) தூதரை அனுப்பாத வரையில் நாம் (எவரையும்)வேதனை செய்பவர்களாக இல்லை.

16. மேலும், ஏதேனும் ஓர் ஊரை நாம் அழித்துவிட நாடினால், அதில் சுகமாக வாழ்வோரை (நம் கட்டளைகளுக்குக் கீழ்ப் படிந்து நடக்குமாறு) நாம் ஏவுவோம்; (ஆனால்,) அவர்கள் (நம் கட்டளைகளை மீறி), அதில் பாவம் செய்(ய ஆரம்பித்து விடு)வார்கள்; பின்னர், அதன் மீது (வேதனை பற்றிய) நம்முடைய வாக்கு உறுதியாகிவிடுகிறது; ஆகவே, அதனை நாம் அடியோடு அழித்துவிடுகிறோம்.

17. நூஹுவுக்குப் பின் நாம் எத்தனையோ தலை முறையினரை அழித்திருக்கிறோம்; தன் அடியார்களின் பாவங்களை நன்கு உணர்பவனாக, பார்க்கிறவனாக இருப்பதற்கு உமதிரட்சகனே போதுமானவன்.

مَنْ كَانَ يُرِيْدُ الْعَاجِلَةَ عَجَّلْنَا لَهٗ فِيْهَا مَا نَشَآءُ لِمَنْ نُّرِيْدُ ثُمَّ جَعَلْنَا
لَهٗ جَهَنَّمَ ۚ يَصْلٰىهَا مَذْمُوْمًا مَّدْحُوْرًا ﴿۱۸﴾ وَمَنْ اَرَادَ الْاٰخِرَةَ وَسَعٰى لَهَا
سَعْيَهَا وَهُوَ مُؤْمِنٌ فَاُولٰٓئِكَ كَانَ سَعْيُهُمْ مَّشْكُوْرًا ﴿۱۹﴾ كُلًّا نُّمِدُّ هٰٓؤُلَآءِ
وَهٰٓؤُلَآءِ مِنْ عَطَآءِ رَبِّكَ ۭ وَمَا كَانَ عَطَآءُ رَبِّكَ مَحْظُوْرًا ﴿۲۰﴾ اُنْظُرْ كَيْفَ
فَضَّلْنَا بَعْضَهُمْ عَلٰى بَعْضٍ ۭ وَلَلْاٰخِرَةُ اَكْبَرُ دَرَجٰتٍ وَّاَكْبَرُ تَفْضِيْلًا ﴿۲۱﴾
لَا تَجْعَلْ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ فَتَقْعُدَ مَذْمُوْمًا مَّخْذُوْلًا ﴿۲۲﴾ ع وَقَضٰى رَبُّكَ ۲ع ۱۲ ۲
اَلَّا تَعْبُدُوْٓا اِلَّآ اِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا ۭ اِمَّا يَبْلُغَنَّ عِنْدَكَ الْكِبَرَ
اَحَدُهُمَآ اَوْ كِلٰهُمَا فَلَا تَقُلْ لَّهُمَآ اُفٍّ وَّلَا تَنْهَرْهُمَا وَقُلْ لَّهُمَا قَوْلًا
كَرِيْمًا ﴿۲۳﴾ وَاخْفِضْ لَهُمَا جَنَاحَ الذُّلِّ مِنَ الرَّحْمَةِ وَقُلْ رَّبِّ ارْحَمْهُمَا
كَمَا رَبَّيٰنِيْ صَغِيْرًا ﴿۲۴﴾ ۭ رَبُّكُمْ اَعْلَمُ بِمَا فِيْ نُفُوْسِكُمْ ۭ اِنْ تَكُوْنُوْا صٰلِحِيْنَ
فَاِنَّهٗ كَانَ لِلْاَوَّابِيْنَ غَفُوْرًا ﴿۲۵﴾ وَاٰتِ ذَا الْقُرْبٰى حَقَّهٗ وَالْمِسْكِيْنَ
وَابْنَ السَّبِيْلِ وَلَا تُبَذِّرْ تَبْذِيْرًا ﴿۲۶﴾ اِنَّ الْمُبَذِّرِيْنَ كَانُوْٓا اِخْوَانَ
الشَّيٰطِيْنِ ۭ وَكَانَ الشَّيْطٰنُ لِرَبِّهٖ كَفُوْرًا ﴿۲۷﴾ وَاِمَّا تُعْرِضَنَّ عَنْهُمُ ابْتِغَآءَ
رَحْمَةٍ مِّنْ رَّبِّكَ تَرْجُوْهَا فَقُلْ لَّهُمْ قَوْلًا مَّيْسُوْرًا ﴿۲۸﴾ وَلَا تَجْعَلْ يَدَكَ
مَغْلُوْلَةً اِلٰى عُنُقِكَ وَلَا تَبْسُطْهَا كُلَّ الْبَسْطِ فَتَقْعُدَ مَلُوْمًا مَّحْسُوْرًا ﴿۲۹﴾

18. எவர்,(மறுமையை மறந்து விட்டு) இம்மையை நாடுகிறவராக இருக்கிறாரோ, அவருக்கு அதில் நாம் நாடியதை, நாம் நாடியவருக்குத் துரிதமாக கொடுத்துவிடுகிறோம்; பின்னர், மறுமையில் அ(த்தகைய)வருக்காக நரகத்தை நாம் ஆக்குகின்றோம். அ(த்தகைய)வர் நிந்திக்கப் பட்டவராக,(அல்லாஹ்வின் அருளிலிருந்து)தூரமாக்கப்பட்டவராக அதில் நுழைவார்.

19. இன்னும், எவர் மறுமையை நாடி அவர் விசுவாசியாக இருக்க, அதற்குரிய முயற்சியையும் அதன்பொருட்டு முயன்றாரோ அத்தகையோர்_ அவர்களின் முயற்சி(அல்லாஹ்விடம்) அங்கீகரிக்கப் பட்டதாகும்.

20. (இம்மையை விரும்பும்) இவர்களுக்கும், (மறுமையை விரும்பும்) அவர்களுக்கும் (இவ்விருவரில்) _ ஒவ்வொருவருக்கும், உம்முடைய இரட்சகனின்அன்பளிப்பிலிருந்து நாம் அதிகப்படுத்துகின்றோம்; மேலும், உமதிரட்சகனின் அன்பளிப்பு (இவ்விருசாராருக்கும்) தடுக்கப் பட்டதாக இல்லை.

21. (நபியே! இவர்களில்) சிலரைச் சிலரை விட எவ்வாறு மேன்மையாக்கி வைத்திருக்கின்றோம் என்பதை, நீர் (கவனித்துப்) பார்ப்பீராக! மறுமையோ, பதவிகளால் மிகப் பெரியதும், சிறப்பால் மிகப் பெரியதுமாகும்.

22.(நபியே!) அல்லாஹ்வுடன் மற்றோர் வணக்கத்திற்குரியவனை (இணையாக) நீர் ஆக்க வேண்டாம். (அவ்வாறு செய்தால்) நீர் நிந்திக்கப் பட்டவராக, உதவியற்றவராக, அமர்ந்து விடுவீர்.

23. (நபியே!) உமதிரட்சகன் _ அவனைத் தவிர (மற்றெவரையும்) நீங்கள் வணங்கக் கூடாதென்றும், பெற்றோர்க்கு உபகாரம் செய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கின்றான்; அவ்விருவரில் ஒருவரோ, அல்லது அவ்விருவருமோ உம்மிடத்தில் திண்ணமாக முதுமையை அடைந்து விட்டால், அவ்விருவருக்கும் (இழித்துக் கூறப்படும் வார்த்தைகளிலுள்ள )"சீ " என்று (கூட) நீ சொல்ல வேண்டாம்; (உம்மிடமிருந்து) அவ்விருவரையும் விரட்டி விடவும்வேண்டாம்; அவ்விருவருக்கும் மரியாதையான வார்த்தையைக் கூறுவீராக!

24. இன்னும், இவ்விருவருக்காக இரக்கத்துடன் பணிவு எனும் இறக்கையை நீர் தாழ்த்துவீராக! மேலும் "என் இரட்சகனே! நான் குழந்தையாக இருந்தபொழுது (மிக்க அன்பாக) என்னை அவர்கள் வளர்த்தது போன்று நீயும் அவ்விருவருக்கும் அருள் புரிவாயாக!" என்றும்(பிரார்த்தித்துக்)கூறுவீராக!

25. (பெற்றோரை நடத்துவது பற்றி) உங்கள் உள்ளங்களில் இருப்பதை உங்கள் இரட்சகன் மிக்க அறிந்தவன்; நீங்கள் நன்னடத்தையுடையவர்களாக இருந்தால், அப்போது நிச்சயமாக (மன்னிப்புக் கோரி, அல்லாஹ்வின்பால்) திரும்புகின்றவர்களுக்கு அவன் மன்னிப்பவனாகவே இருக்கின்றான்.

26. இன்னும், உறவினருக்கு அவரின் உரிமையை வழங்குவீராக! மேலும் ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்கும் (அவரவர்களுடைய உரிமையை வழங்குவீராக! செல்வத்தை) அளவு கடந்து வீண் விரயம் செய்யாதுமிருப்பீராக!

27. நிச்சயமாக வீண் விரயம் செய்வோர், ஷைத்தானுடைய சகோதரர்களாக இருக்கின்றனர்; ஷைத்தானோ, தன் இரட்சகனுக்கு நன்றி செலுத்தா(து மாறு செய்)தவனாக இருக்கின்றான்.

28. (நபியே! ) நீர் உமதிரட்சகனின் அருளை எதிர்பார்த்திருக்கும் சமயத்தில், (உம்மிடம் யாரேனும் வந்து ஏதேனும் பொருள் கேட்டு, நீர் ஒன்றும் கொடுக்க இயலாமல்போய்) அவர்களை நீர் புறக்கணிக்கும்படி நேரிட்டால் அவர்களுக்கு (அன்பான )கடினமில்லாச் சொல்லையே கூறுவீராக!

29. மேலும், (உலோபியைப் போன்று, செலவு செய்யாது) உம்முடைய கையை உம்முடைய கழுத்தில் கட்டப்பட்டதாக ஆக்கிக் கொள்ளாதீர்! அன்றியும், (உம்மிடம் இருப்பதை செலவழித்துவிட்டு) அ(க்கையான)தை ஒரே விரிப்பாக விரித்தும் விடாதீர்! அதனால் நீர் நிந்திக்கப் பட்டவராக, முடைப்பட்டவராக உட்கார்ந்துவிடுவீர்.

اِنَّ رَبَّكَ يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَّشَآءُ وَيَقْدِرُ ۭ اِنَّهٗ كَانَ بِعِبَادِهٖ
خَبِيْرًاۢ بَصِيْرًا ﴿٣٠﴾ وَلَا تَقْتُلُوْٓا اَوْلَادَكُمْ خَشْيَةَ اِمْلَاقٍ ۭ نَحْنُ نَرْزُقُهُمْ
وَاِيَّاكُمْ ۭ اِنَّ قَتْلَهُمْ كَانَ خِطْاً كَبِيْرًا ﴿٣١﴾ وَلَا تَقْرَبُوا الزِّنٰٓى اِنَّهٗ كَانَ
فَاحِشَةً ۭ وَسَاۗءَ سَبِيْلًا ﴿٣٢﴾ وَلَا تَقْتُلُوا النَّفْسَ الَّتِيْ حَرَّمَ اللّٰهُ اِلَّا
بِالْحَقِّ ۭ وَمَنْ قُتِلَ مَظْلُوْمًا فَقَدْ جَعَلْنَا لِوَلِيِّهٖ سُلْطٰنًا فَلَا يُسْرِفْ
فِّي الْقَتْلِ ۭ اِنَّهٗ كَانَ مَنْصُوْرًا ﴿٣٣﴾ وَلَا تَقْرَبُوْا مَالَ الْيَتِيْمِ اِلَّا بِالَّتِيْ
هِىَ اَحْسَنُ حَتّٰى يَبْلُغَ اَشُدَّهٗ ۠ وَاَوْفُوْا بِالْعَهْدِ ۚ اِنَّ الْعَهْدَ كَانَ
مَسْــُٔوْلًا ﴿٣٤﴾ وَاَوْفُوا الْكَيْلَ اِذَا كِلْتُمْ وَزِنُوْا بِالْقِسْطَاسِ الْمُسْتَقِيْمِ ۭ
ذٰلِكَ خَيْرٌ وَّاَحْسَنُ تَاْوِيْلًا ﴿٣٥﴾ وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهٖ عِلْمٌ ۭ اِنَّ
السَّمْعَ وَالْبَصَرَ وَالْفُؤَادَ كُلُّ اُولٰۗىِٕكَ كَانَ عَنْهُ مَسْـُٔوْلًا ﴿٣٦﴾ وَلَا
تَمْشِ فِي الْاَرْضِ مَرَحًا ۚ اِنَّكَ لَنْ تَخْرِقَ الْاَرْضَ وَلَنْ تَبْلُغَ الْجِبَالَ
طُوْلًا ﴿٣٧﴾ كُلُّ ذٰلِكَ كَانَ سَيِّئُهٗ عِنْدَ رَبِّكَ مَكْرُوْهًا ﴿٣٨﴾ ذٰلِكَ مِمَّآ
اَوْحٰٓى اِلَيْكَ رَبُّكَ مِنَ الْحِكْمَةِ ۭ وَلَا تَجْعَلْ مَعَ اللّٰهِ اِلٰـهًا اٰخَرَ
فَتُلْقٰى فِيْ جَهَنَّمَ مَلُوْمًا مَّدْحُوْرًا ﴿٣٩﴾ اَفَاَصْفٰىكُمْ رَبُّكُمْ بِالْبَنِيْنَ وَ
اتَّخَذَ مِنَ الْمَلٰۗىِٕكَةِ اِنَاثًا ۭ اِنَّكُمْ لَتَقُوْلُوْنَ قَوْلًا عَظِيْمًا ﴿٤٠﴾ ع

30. நிச்சயமாக உமதிரட்சகன், தான் நாடியவர்களுக்கு வாழ்வாதாரத்தை விரிவாகக் கொடுக்கின்றான்; (தான் நாடியவர்களுக்கு) அளவாகவும் கொடுக்கின்றான்; (ஏனென்றால்) நிச்சயமாக அவன், தன் அடியார்(களின் தன்மை)களை நன்குணர்ந்தவனாக, பார்ப்பவனாக இருக்கின்றான்.

31. (மனிதர்களே!) நீங்கள் வறுமைக்குப் பயந்து, உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள்; அவர்களுக்கும், உங்களுக்கும் நாமே உணவை(வாழ்க்கைத் தேவைகளை) வழங்குகிறோம்; நிச்சயமாக அவர்களைக் கொலை செய்வது, பெரும் குற்றமாக இருக்கிறது.

32. (விசுவாசங்கொண்டோரே!) நீங்கள் விபச்சாரத்தையும் நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது, மானக்கேடானதாக இருக்கிறது. இன்னும், அது (மனித குலத்திற்கு பெரும் கேடு விளைவிக்கும்) வழியால் மிகக் கெட்டது.

33. மேலும், அல்லாஹ் தடுத்துள்ள எந்த உயிரையும் உரிமையின்றிக் கொலைசெய்யாதீர்கள்; எவரேனும் அநீதியிழைக்கப்பட்டவராக கொலை செய்யப்பட்டு விட்டால், (பழி வாங்க) அவனுடைய வாரிசுக்கு நாம் அதிகாரம் அளித்திருக்கிறோம்; ஆகவே, (பழிவாங்க) கொலை செய்வதில் அவன் வரம்பு கடந்து விட வேண்டாம்; நிச்சயமாக (கொலையுண்டவரின் வாரிசாகிய) அவர் (நீதியைக் கொண்டு)உதவி செய்யப் பட்டவராவார்.

34. மேலும்,(விசுவாசங் கொண்டோரே!) அநாதையின் செல்வத்திற்கு— அவர் தன் பருவ வயதை எய்தும் வரையில் எது அழகிய முறையோ அதைத் தவிர — (வேறு வழியில் அதை அனுபவிக்க) நீங்கள் நெருங்காதீர்கள்; இன்னும், வாக்குறுதியை நீங்கள் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள்; (ஏனெனில்) நிச்சயமாக வாக்குறுதி (மறுமையில்) விசாரிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது.

35. நீங்கள் அளந்தால், அளவை (குறைவின்றி) நிறைவு செய்யுங்கள்; (நிறுத்தால்) சரியான தராசைக் கொண்டு நிறுங்கள்; இது, (உங்களுக்கு) மிக்க சிறந்ததும், முடிவால் மிக அழகானதுமாகும்.

36. (நபியே!) எதைப்பற்றி உமக்குத் தீர்க்கமான அறிவில்லையோ அதை நீர் பின் தொடராதீர்! (ஏனெனில்) நிச்சயமாக, செவி, பார்வை, இதயம் (ஆகிய) இவை ஒவ்வொன்றும் — அதனைப் பற்றி (மறுமையில்) விசாரிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது.

37. மேலும், பூமியில் கர்வம் கொண்டு நீர் நடக்க வேண்டாம்; (அவ்வாறு நீர் நடப்பதால்), நிச்சயமாக நீர் பூமியை (ஆழத்தால்) பிளந்து விடவே மாட்டீர்; இன்னும், உயரத்தால் மலைகளை அடைந்துவிடவே மாட்டீர்.

38. (மேற்கூறப்பட்ட) அவை ஒவ்வொன்றும்—அதன் தீமை உமதிரட்சகனிடத்தில் வெறுக்கப்பட்டதாக இருக்கின்றது.

39. (நபியே! மேற்கூறப்பட்ட ) அவை, தீர்க்கமான அறிவிலிருந்து உம்முடைய இரட்சகன் உமக்கு (வஹீ மூலம்) அறிவித்தவற்றில் உள்ளவையாகும்; ஆகவே, அல்லாஹ்வுடன், மற்றோர் வணக்கத்திற்குரியவனை (இணையாக) ஆக்காதீர்; (அவ்வாறு செய்தால்), அப்பொழுது நிந்திக்கப் பட்டவராக, (அல்லாஹ்வின் அனைத்து நன்மைகளிலிருந்து) தூரமாக்கப்பட்டவராக நரகத்தில் நீர் எறியப் படுவீர்.

40. (மனிதர்களே!) உங்கள் இரட்சகன் உங்களுக்கு (மட்டும்) ஆண் மக்களைத் தேர்ந்தெடுத்து விட்டு(த் தனக்கு மட்டும்) மலக்குகளிலிருந்து பெண்மக்களை ஆக்கிக் கொண்டானா? (இவ்வாறு கூறும்) நீங்கள், நிச்சயமாக, மகத்தான (பொய்க்)கூற்றையே கூறுகிறீர்கள்.

وَلَقَدْ صَرَّفْنَا فِیْ هٰذَا الْقُرْاٰنِ لِیَذَّكَّرُوْاؕ وَ مَا یَزِیْدُهُمْ اِلَّا نُفُوْرًا ﴿۴۱﴾ قُلْ
لَّوْ كَانَ مَعَهٗۤ اٰلِهَةٌ كَمَا یَقُوْلُوْنَ اِذًا لَّابْتَغَوْا اِلٰى ذِی الْعَرْشِ سَبِیْلًا ﴿۴۲﴾
سُبْحٰنَهٗ وَ تَعٰلٰى عَمَّا یَقُوْلُوْنَ عُلُوًّا كَبِیْرًا ﴿۴۳﴾ تُسَبِّحُ لَهُ السَّمٰوٰتُ السَّبْعُ
وَ الْاَرْضُ وَ مَنْ فِیْهِنَّؕ وَ اِنْ مِّنْ شَیْءٍ اِلَّا یُسَبِّحُ بِحَمْدِهٖ وَ لٰكِنْ لَّا
تَفْقَهُوْنَ تَسْبِیْحَهُمْؕ اِنَّهٗ كَانَ حَلِیْمًا غَفُوْرًا ﴿۴۴﴾ وَ اِذَا قَرَاْتَ الْقُرْاٰنَ
جَعَلْنَا بَیْنَكَ وَ بَیْنَ الَّذِیْنَ لَا یُؤْمِنُوْنَ بِالْاٰخِرَةِ حِجَابًا مَّسْتُوْرًا ﴿۴۵﴾ۙ
وَّ جَعَلْنَا عَلٰى قُلُوْبِهِمْ اَكِنَّةً اَنْ یَّفْقَهُوْهُ وَ فِیْۤ اٰذَانِهِمْ وَقْرًاؕ وَ اِذَا
ذَكَرْتَ رَبَّكَ فِی الْقُرْاٰنِ وَحْدَهٗ وَلَّوْا عَلٰۤى اَدْبَارِهِمْ نُفُوْرًا ﴿۴۶﴾ نَحْنُ
اَعْلَمُ بِمَا یَسْتَمِعُوْنَ بِهٖۤ اِذْ یَسْتَمِعُوْنَ اِلَیْكَ وَ اِذْ هُمْ نَجْوٰۤى اِذْ
یَقُوْلُ الظّٰلِمُوْنَ اِنْ تَتَّبِعُوْنَ اِلَّا رَجُلًا مَّسْحُوْرًا ﴿۴۷﴾ اُنْظُرْ كَیْفَ ضَرَبُوْا
لَكَ الْاَمْثَالَ فَضَلُّوْا فَلَا یَسْتَطِیْعُوْنَ سَبِیْلًا ﴿۴۸﴾ وَ قَالُوْۤا ءَاِذَا كُنَّا ع
عِظَامًا وَّ رُفَاتًا ءَاِنَّا لَمَبْعُوْثُوْنَ خَلْقًا جَدِیْدًا ﴿۴۹﴾ قُلْ كُوْنُوْا حِجَارَةً
اَوْ حَدِیْدًا ﴿۵۰﴾ۙ اَوْ خَلْقًا مِّمَّا یَكْبُرُ فِیْ صُدُوْرِكُمْۚ فَسَیَقُوْلُوْنَ مَنْ
یُّعِیْدُنَاؕ قُلِ الَّذِیْ فَطَرَكُمْ اَوَّلَ مَرَّةٍۚ فَسَیُنْغِضُوْنَ اِلَیْكَ
رُءُوْسَهُمْ وَ یَقُوْلُوْنَ مَتٰى هُوَؕ قُلْ عَسٰۤى اَنْ یَّكُوْنَ قَرِیْبًا ﴿۵۱﴾

41. இன்னும், அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்காக, (இந்தக்) குர்ஆனில் நிச்சயமாக நாம் பற்பல வகையில் (நல்லுபதேசங்களைத் திரும்பத்திரும்பக்) கூறி இருக்கின்றோம்; மேலும் புறக்கணிப்பைத் தவிர, (வேறெதனையும்) அது அவர்களுக்கு அதிகப் படுத்தவில்லை.

42. (ஆகவே, நபியே! அவர்களிடம்) நீர் கூறுவீராக: அவர்கள் சொல்லு கின்றதைப்போன்று அவனுடன் வேறு வணக்கத்திற்குரியவர்கள் (தெய்வங்கள்) இருந்தால், அப்போது அர்ஷுடைய (அல்லாஹ்வாகிய அ)வனின் பக்கம் (அவனை மிகைக்க) ஒரு வழியை அவர்கள் தேடி இருப்பார்கள்.

43. அவன் மிகப் பரிசுத்தமானவன்; அவர்கள் கூறுவதை விட்டும் மிகப் பெரும் உயர்வாக (அவன்) உயர்ந்துவிட்டான்.

44. ஏழு வானங்களும், பூமியும், அவற்றில் உள்ளவையும் அவனைத் துதிசெய்கின்றன. (இவற்றில்) எப்பொருளும் அவனின் புகழைக் கொண்டு துதிசெய்துகொண்டே தவிர இல்லை; எனினும், அவற்றின் துதியை நீங்கள் விளங்கிக் கொள்ள மாட்டீர்கள்; நிச்சயமாக அவன் மிக்க சகித்துக் கொள்ளக்கூடியவனாக, மிக்க மன்னிக்கக் கூடியவனாக இருக்கின்றான்.

45. மேலும், (நபியே!) நீர் குர்ஆனை ஓதினால் உமக்கும், மறுமையை நம்பிக்கை கொள்ளாதோருக்குமிடையில் மறைக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு திரையை நாம் ஆக்கி விடுகிறோம்.

46. மேலும், அவர்களுடைய இதயங்களின் மீது, அதனை அவர்கள் விளங்கிக் கொள்ள முடியாதவாறு திரைகளையும் (அமைத்து), அவர்களுடைய காதுகளில் அடைப்பையும் ஆக்கிவிடுகின்றோம். மேலும், குர்ஆனில் உம்முடைய இரட்சகனை (மட்டும் அவர்களின் கூட்டுக்காரர்களைத் தவிர்த்து) அவனைத்தனித்தவனாக நீர் கூறினால், அவர்கள் வெறுப்படைந்து தங்கள் பின் புறங்களில் (திரும்பிச்)சென்று விடுகின்றனர்.

47. அவர்கள் உமக்குச் செவி சாய்க்கின்றபொழுது எதற்கு (என்ன நோக்கத்துடன்) செவி சாய்க்கிறார்கள் என்பதையும், மேலும், அவர்கள் (தங்களுக்குள்) இரகசியமாக ஆலோசனை செய்யும் சமயத்தில், "சூனியம் செய்யப்பட்ட மனிதனையேயன்றி (வேறொருவரையும்) நீங்கள் பின் பற்றவில்லை" என்று அநியாயக்காரர்கள் (உம்மைப் பற்றிக்)கூறுகின்ற போதும் நாம் மிக்க அறிவோம்.

48. (நபியே!) உமக்கு எப்படி உதாரணங்களை அவர்கள் கூறுகிறார்கள் என்பதை நீர் கவனிப்பீராக! (அவ்வாறு கூறுவதால்) அவர்கள் வழிகெட்டு விட்டார்கள்; ஆகவே, (நேர்) வழியை அடைய அவர்கள் சக்தி பெறமாட்டார்கள்.

49. "நாங்கள் (இறந்து) எலும்புகளாகவும், மக்கிப் போனவையாகவும் ஆகிவிட்டாலுமா நிச்சயமாக புதிய படைப்பாக நாங்கள் எழுப்பப் படுகிறவர்கள்?" என்றும் அவர்கள் கேட்கின்றார்கள்.

50. (அதற்கு, நபியே!) நீர் கூறுவீராக: "நீங்கள் கல்லாகவோ, இரும்பாகவோ ஆகிவிடுங்கள்_

51. "அல்லது உங்கள் நெஞ்சங்களில் பெரிதாக இருப்பதிலிருந்து (அவ்வாறு தோன்றும்) ஒரு படைப்பாக ஆகிவிடுங்கள்;" (இவ்வாறு ஆகிய)பின்னர், எங்களை எவன் (உயிர் கொடுத்து) மீட்டுவான் என்று அவர்கள் கேட்பார்கள்; (அவ்வாறு கேட்டால், நபியே! நீர்) "உங்களை முதலாவதாக எவன் படைத்தானோ அவன்தான் (நீங்கள் மரணித்த பின்னும் உங்களை எழுப்புவான்)" என்று கூறுவீராக! அப்போது அவர்கள் தங்கள் சிரசுகளை உம் அளவில் சாய்த்து, "அது எப்பொழுது (வரும்)?" என்றும் கேட்பார்கள். (அதற்கு) "அது வெகு சமீபத்தில் ஏற்பட்டுவிடலாம்" என்றுநீர் கூறுவீராக!

یوم یدعوکم فتستجیبون بحمدہٖ وتظنون ان لبثتم الا
ع ۵/۱۲/۵ قلیلا ع ﴿۵۲﴾ وقل لعبادی یقولوا التی ھی احسن ط ان الشیطن ینزغ
بینھم ط ان الشیطن کان للانسان عدوا مبینا ﴿۵۳﴾ ربکم اعلم بکم ط
ان یشا یرحمکم او ان یشا یعذبکم ط وما ارسلنک علیھم وکیلا ﴿۵۴﴾
وربک اعلم بمن فی السموت والارض ط ولقد فضلنا بعض
النبیین علی بعض وّاتینا داود زبورا ﴿۵۵﴾ قل ادعوا الذین زعمتم
من دونہٖ فلا یملکون کشف الضر عنکم ولا تحویلا ﴿۵۶﴾ اولٓئک
الذین یدعون یبتغون الی ربھم الوسیلۃ ایھم اقرب ویرجون
رحمتہٗ ویخافون عذابہٗ ط ان عذاب ربک کان محذورا ﴿۵۷﴾ وان
من قریۃ الا نحن مھلکوھا قبل یوم القیمۃ او معذبوھا عذابا
شدیدا ط کان ذلک فی الکتب مسطورا ﴿۵۸﴾ وما منعنا ان نرسل
بالایت الا ان کذب بھا الاولون ط واتینا ثمود الناقۃ مبصرۃ
فظلموا بھا ط وما نرسل بالایت الا تخویفا ﴿۵۹﴾ واذ قلنا لک ان ربک
احاط بالناس ط وما جعلنا الرءیا التی ارینک الا فتنۃ للناس و
ع ۶/۸/۶ الشجرۃ الملعونۃ فی القران ط ونخوفھم فما یزیدھم الا طغیانا کبیرا ع ﴿۶۰﴾

52. உங்களை அவன் அழைக்கும் நாளில், நீங்கள் அவனின் புகழைக்கொண்டு (அதைக் கூறியவர்களாக) பதில் கூறுவீர்கள்; (இறந்த பின்) வெகு சொற்ப (நேர)மே யன்றி தங்கியிருக்கவில்லை _ என்றும் (அன்றையத் தினம்) நீங்கள் எண்ணுவீர்கள்.

53. என்னுடைய அடியார்களுக்கு (நபியே!) நீர் கூறுவீராக: (எம் மனிதருடன் பேசியபோதிலும்) எது நல்லதோ அதையே அவர்கள் கூறவும்; நிச்சயமாக ஷைத்தான் அவர்களுக்கிடையில் குழப்பம் செய்வான். (ஏனென்றால்) நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்குப் பகிரங்கமான விரோதியாக இருக்கின்றான்.

54. உங்களுடைய இரட்சகன் உங்களை(ப்பற்றி) மிக்க அறிந்தவன்; அவன் நாடினால் உங்களுக்கு அவன் அருள் புரிவான்; அல்லது அவன் நாடினால் உங்களை வேதனை செய்வான்; இன்னும், அவர்கள் மீது பொறுப்பாளராக (நபியே!) உம்மை நாம் அனுப்ப வில்லை.

55. வானங்கள் மற்றும் பூமியில் உள்ளவர்களைப்பற்றியும் உமதிரட்சகன் மிக்க அறிந்தவன். நபிமார்களில் சிலரை, வேறு சிலரை விடவும் நிச்சயமாக நாம் மேன்மையாக்கி வைத்தோம்; இன்னும் (நபி) தாவூதுக்கு ஜபூர் (என்னும்) வேதத்தை நாம் கொடுத்தோம்.

56. "அல்லாஹ்வையன்றி (வேறு வணக்கத்திற்குரியவர்கள் இருப்பதாக) நீங்கள் எண்ணிக்கொண்டு இருக்கின்றீர்களே, அத்தகையவர்களை நீங்கள் (உங்கள் கஷ்டங்களை நீக்க) அழையுங்கள்; (அவ்வாறு அழைத்தால்) அவர்கள் உங்களை விட்டும் யாதொரு கஷ்டத்தை நீக்கி வைக்கவும், (அதனைத்) திருப்பி விடவும் சக்தி பெறமாட்டார்கள் "என்று நபியே! நீர் கூறுவீராக!

57. இவர்கள் (ஆண்டவன் என) யாரை அழைக்கிறார்களோ அவர்களே _ அவர்களில் (இறைவனோடு) மிக்க நெருங்கியவர்கள் யார் என்பதனை அறிய (வணக்கங்களால்) தங்கள் இரட்சகனின்பால் நெருங்கிச் செல்வதை தேடிக்கொண்டும் , அவனுடைய அருளை வேண்டிக்கொண்டும் , அவனது வேதனையைப் பற்றி பயந்துக்கொண்டும் இருக்கிறார்கள்; நிச்சயமாக உமதிரட்சகனின் வேதனை எச்சரிக்கப்பட்டதாக இருக்கின்றது.

58. (அக்கிரமக்காரர்கள் வசிக்கும்) எந்த ஊரையும் _ மறுமை நாளைக்கு முன்னதாக நாம் அதை _ அழிப்போராகவோ, அல்லது அதனைக் கடினமான வேதனையாக வேதனை செய்வோராகவோ தவிர இல்லை. இது (நம்மிடமுள்ள) பதிவேட்டில் எழுதப்பட்டதாக இருக்கின்றது.

59. (நம்முடைய அத்தாட்சிகளை) முன்னிருந்தவர்கள் பொய்யாக்கி விட்டனர் என்பதைத் தவிர, (இவர்கள் கோரும்) அத்தாட்சிகளை அனுப்ப (வேறெதுவும்) நம்மைத் தடுக்க வில்லை; (இதற்கு முன்னர்) ஸமூது சமூகத்தார்க்கு ஒரு பெண் ஒட்டகத்தைக் கண்கூடான அத்தாட்சியாகக் கொடுத்திருந்தோம்; அவர்களோ, (வரம்பு மீறி) அதற்கு அநியாயம் செய்து விட்டனர்; (இத்தகைய) அத்தாட்சிகளை(யெல்லாம் மனிதர்களுக்குப்) பயமுறுத்துவதற்காகவே அன்றி நாம் அனுப்புவதில்லை.

60. மேலும், நிச்சயமாக உமதிரட்சகன் மனிதர்களை (தன் அறிவால், சக்தியால்) சூழ்ந்து கொண்டான் என்று நாம் உமக்கு கூறியதை (நபியே! நீர் நினைவு கூர்வீராக!) மேலும், உமக்கு நாம் (மிஃராஜின் போது) காண்பித்த காட்சியையும், குர்ஆனில் சபிக்கப்பட்ட மரத்தையும் மனிதர்களுக்கு சோதனையாகவே தவிர நாம் ஆக்கவில்லை; இன்னும், அவர்களை நாம் பயமுறுத்துகிறோம்; ஆனால் பெரும் அழிச்சாட்டியத்தைத் தவிர (வேறு எதையும்) அவர்களுக்கு அது அதிகப்படுத்துவதில்லை.

وَاِذْ قُلْنَا لِلْمَلٰٓئِكَةِ اسْجُدُوْا لِاٰدَمَ فَسَجَدُوْٓا اِلَّآ اِبْلِيْسَ ؕ قَالَ
ءَاَسْجُدُ لِمَنْ خَلَقْتَ طِيْنًا ۚ﴿۶۱﴾ قَالَ اَرَءَيْتَكَ هٰذَا الَّذِىْ كَرَّمْتَ
عَلَىَّ ۫ لَئِنْ اَخَّرْتَنِ اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ لَاَحْتَنِكَنَّ ذُرِّيَّتَهٗٓ اِلَّا
قَلِيْلًا ﴿۶۲﴾ قَالَ اذْهَبْ فَمَنْ تَبِعَكَ مِنْهُمْ فَاِنَّ جَهَنَّمَ جَزَآؤُكُمْ
جَزَآءً مَّوْفُوْرًا ﴿۶۳﴾ وَاسْتَفْزِزْ مَنِ اسْتَطَعْتَ مِنْهُمْ بِصَوْتِكَ
وَاَجْلِبْ عَلَيْهِمْ بِخَيْلِكَ وَرَجِلِكَ وَشَارِكْهُمْ فِى الْاَمْوَالِ
وَالْاَوْلَادِ وَعِدْهُمْ ؕ وَمَا يَعِدُهُمُ الشَّيْطٰنُ اِلَّا غُرُوْرًا ﴿۶۴﴾ اِنَّ عِبَادِىْ
لَيْسَ لَكَ عَلَيْهِمْ سُلْطٰنٌ ؕ وَكَفٰى بِرَبِّكَ وَكِيْلًا ﴿۶۵﴾ رَبُّكُمُ الَّذِىْ
يُزْجِىْ لَكُمُ الْفُلْكَ فِى الْبَحْرِ لِتَبْتَغُوْا مِنْ فَضْلِهٖ ؕ اِنَّهٗ كَانَ بِكُمْ
رَحِيْمًا ﴿۶۶﴾ وَاِذَا مَسَّكُمُ الضُّرُّ فِى الْبَحْرِ ضَلَّ مَنْ تَدْعُوْنَ
اِلَّآ اِيَّاهُ ۚ فَلَمَّا نَجّٰىكُمْ اِلَى الْبَرِّ اَعْرَضْتُمْ ؕ وَكَانَ الْاِنْسَانُ
كَفُوْرًا ﴿۶۷﴾ اَفَاَمِنْتُمْ اَنْ يَّخْسِفَ بِكُمْ جَانِبَ الْبَرِّ اَوْ يُرْسِلَ
عَلَيْكُمْ حَاصِبًا ثُمَّ لَا تَجِدُوْا لَكُمْ وَكِيْلًا ۙ﴿۶۸﴾ اَمْ اَمِنْتُمْ اَنْ
يُّعِيْدَكُمْ فِيْهِ تَارَةً اُخْرٰى فَيُرْسِلَ عَلَيْكُمْ قَاصِفًا مِّنَ
الرِّيْحِ فَيُغْرِقَكُمْ بِمَا كَفَرْتُمْ ۙ ثُمَّ لَا تَجِدُوْا لَكُمْ عَلَيْنَا بِهٖ تَبِيْعًا ﴿۶۹﴾

61. மேலும், மலக்குகளிடம், "ஆதமுக்கு நீங்கள் சிரம் பணியுங்கள்" என்று நாம் கூறிய சமயத்தில், இப்லீஸைத் தவிர (மலக்குகளான) அவர்கள் சிரம் பணிந்தார்கள்; அவனோ, "களிமண்ணால் நீ படைத்தவருக்கு நான் சிரம் பணிவேனா?" என்று கூறினான்.

62. (அன்றியும்,) "என்னைவிட மேலாக நீ கண்ணியப் படுத்திய (ஆதமாகிய) இவரை நீ பார்த்தாயா? என்னை மறுமை நாள் வரையில் பிற்படுத்தி (வாழ) வைத்தால், சிலரைத் தவிர இவருடைய சந்ததியினரை நான் (வழி கெடுத்து) திண்ணமாக வேரறுத்து விடுவேன்" என்று (இப்லீஸாகிய) அவன் கூறினான்.

63. (அதற்கு) "நீ சென்று விடு; அவர்களில் யார் உன்னைப் பின்பற்றுகிறாரோ, (அவருக்கும் உனக்கும்) நிச்சயமாக நரகம்தான் நிரப்பமான கூலியாக உங்களுடைய கூலியாகும்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

64. இன்னும், "அவர்களிலிருந்து (வழி தவறச்செய்ய) நீ சக்தி பெற்றிருக்கின்றவர்களை உன் கூப்பாட்டைக் கொண்டு வழி தவறச் செய்; உன்னுடைய குதிரைப் படைகளையும், காலாட் படைகளையும் அவர்கள் மீது ஏவி விடு; (அவர்களுடைய )செல்வங்களிலும், பிள்ளைகளிலும் நீ கூட்டாகவும் இருந்துகொள்; இன்னும், (பொய்யானவற்றைக் கொண்டு) அவர்களுக்கு வாக்களித்து விடு; ஏமாற்றத்தைத் தவிர, வேறு எதையும் ஷைத்தான் அவர்களுக்கு வாக்களிப்பதில்லை" என்றும் (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

65. "நிச்சயமாக என்னுடைய அடியார்கள் மீது (ஷைத்தானே!) உனக்கு எவ்வித அதிகாரமுமில்லை" ( ஆகவே, அவர்களுக்குப்) பொறுப்பேற்றுக் கொள்ள உமதிரட்சகனே போதுமானவன்.

66. உங்களுடைய இரட்சகன் எத்தகையவனென்றால், (கடலில் நீங்கள் யாத்திரை செய்து), அவனது பேரருளை நீங்கள் தேடிக் கொள்வதற்காக அவனே உங்களுக்காக கடலில் கப்பலை செலுத்துகின்றான்; நிச்சயமாக அவன் உங்கள் மீது மிகக் கிருபையுடையவனாக இருக்கின்றான்.

67. இன்னும், கடலில் உங்களை ஏதேனும் ஆபத்து அணுகினால், (அல்லாஹ்வாகிய) அவனையன்றி நீங்கள் யாரை (வணக்கத்திற்குரிய தெய்வங்கள் என்று) அழைக்கிறீர்களோ அவர்கள் (உங்களை விட்டும்) மறைந்து விடுவர்; (அல்லாஹ்வாகிய) அவன் உங்களைக் கரையளவில் ஈடேற்றிச் சேர்க்கும் பொழுது (அல்லாஹ்வை) நீங்கள் புறக்கணித்து விடுகின்றீர்கள்! மேலும், மனிதன் மிக்க நன்றி கெட்டவனாக இருக்கின்றான்.

68. (கரை சேர்ந்த பின்) கரையின் ஒரு பகுதியில் உங்களை அவன் விழுங்கச் செய்வதையோ, அல்லது உங்கள் மீது கல் மாரியை அவன் அனுப்புவதையோ நீங்கள் அச்சமற்றிருக்கின்றீர்களா? (அவ்வாறு நிகழ்ந்தால் அதன்) பின்னர், உங்களுக்கு உதவி செய்பவர் எவரையும் நீங்கள் காணமாட்டீர்கள்.

69. அல்லது (அல்லாஹ்வாகிய) அவன் மீண்டும் ஒரு முறை உங்களைக் கடலில் திரும்ப(பிரயாணிக்க)ச்செய்து (நீங்கள் கடலில் இருக்கும் பொழுது எல்லாவற்றையும் அழித்து விடும்) புயல் காற்றை உங்கள் மீது அவன் அனுப்பி, நீங்கள் நிராகரித்ததன்காரணமாக உங்களை மூழ்கடித்து விடுவதை நீங்கள் அச்சமற்றிருக்கின்றீர்களா? (அவ்வாறெல்லாம் செய்ததன்) பின்னர், அதற்காக நம்மை(த் தொடர்ந்து)பழிவாங்குபவர் எவரையும் உங்களுக்காக நீங்கள் காணமாட்டீர்கள்.

وَلَقَدْ كَرَّمْنَا بَنِيْٓ اٰدَمَ وَحَمَلْنٰهُمْ فِي الْبَرِّ وَالْبَحْرِ وَرَزَقْنٰهُمْ مِّنَ
الطَّيِّبٰتِ وَفَضَّلْنٰهُمْ عَلٰى كَثِيْرٍ مِّمَّنْ خَلَقْنَا تَفْضِيْلًا ۷۰ ع يَوْمَ ع ۷ ۱۰ ۷
نَدْعُوْا كُلَّ اُنَاسٍۭ بِاِمَامِهِمْ ۚ فَمَنْ اُوْتِيَ كِتٰبَهٗ بِيَمِيْنِهٖ فَاُولٰٓئِكَ
يَقْرَءُوْنَ كِتٰبَهُمْ وَلَا يُظْلَمُوْنَ فَتِيْلًا ۷۱ وَمَنْ كَانَ فِيْ هٰذِهٖٓ
اَعْمٰى فَهُوَ فِي الْاٰخِرَةِ اَعْمٰى وَاَضَلُّ سَبِيْلًا ۷۲ وَاِنْ كَادُوْا لَيَفْتِنُوْنَكَ
عَنِ الَّذِيْٓ اَوْحَيْنَآ اِلَيْكَ لِتَفْتَرِيَ عَلَيْنَا غَيْرَهٗ ۖ وَاِذًا لَّاتَّخَذُوْكَ
خَلِيْلًا ۷۳ وَلَوْلَآ اَنْ ثَبَّتْنٰكَ لَقَدْ كِدْتَّ تَرْكَنُ اِلَيْهِمْ شَيْئًا قَلِيْلًا ۷۴ لا ق
اِذًا لَّاَذَقْنٰكَ ضِعْفَ الْحَيٰوةِ وَضِعْفَ الْمَمَاتِ ثُمَّ لَا تَجِدُ لَكَ
عَلَيْنَا نَصِيْرًا ۷۵ وَاِنْ كَادُوْا لَيَسْتَفِزُّوْنَكَ مِنَ الْاَرْضِ لِيُخْرِجُوْكَ
مِنْهَا وَاِذًا لَّا يَلْبَثُوْنَ خِلٰفَكَ اِلَّا قَلِيْلًا ۷۶ سُنَّةَ مَنْ قَدْ اَرْسَلْنَا
قَبْلَكَ مِنْ رُّسُلِنَا وَلَا تَجِدُ لِسُنَّتِنَا تَحْوِيْلًا ۷۷ ع اَقِمِ الصَّلٰوةَ لِدُلُوْكِ ع ۸ ۷ ۸
الشَّمْسِ اِلٰى غَسَقِ الَّيْلِ وَقُرْاٰنَ الْفَجْرِ ۭ اِنَّ قُرْاٰنَ الْفَجْرِ كَانَ
مَشْهُوْدًا ۷۸ وَمِنَ الَّيْلِ فَتَهَجَّدْ بِهٖ نَافِلَةً لَّكَ ۖ عَسٰٓى اَنْ يَّبْعَثَكَ
رَبُّكَ مَقَامًا مَّحْمُوْدًا ۷۹ وَقُلْ رَّبِّ اَدْخِلْنِيْ مُدْخَلَ صِدْقٍ وَّ
اَخْرِجْنِيْ مُخْرَجَ صِدْقٍ وَّاجْعَلْ لِّيْ مِنْ لَّدُنْكَ سُلْطٰنًا نَّصِيْرًا ۸۰

70. மேலும் ,ஆதமுடைய மக்களைத் திட்டமாக நாம் கண்ணியப்படுத்தினோம்; கரையிலும், கடலிலும் நாம் அவர்களை சுமந்து சென்றோம் ; நல்லவற்றிலிருந்து அவர்களுக்கு நாமே உணவளித்தோம்; நாம் படைத்தவற்றில் அனேகவற்றை விட (தகுதியில்) நாம் அவர்களை மிகமிக மேன்மையாக்கியும் வைத்திருக்கின்றோம்.

71. ஒவ்வொரு மனிதரையும் அவரவருடைய தலைவருடன்(அந்தந்த சமூகத்தாரின் நபியுடன்விசாரணைக்காக) நாம் அழைக்கும் நாளில், அவர்களின் (செயல்கள் எழுதப் பட்ட ) புத்தகம், எவர்களுடைய வலது கையில் கொடுக்கப் பட்டதோ அவர்கள், தங்களுடைய அப் புத்தகத்தை (மிக்க மகிழ்ச்சியோடு) வாசிப்பார்கள். (அவர்களுடைய கூலியில்) ஓர் அணுவளவும் (குறைத்து) அநியாயம் செய்யப் படவுமாட்டார்கள்.

72. எவர் இ(ம்மையான)தில் ( நேர் வழியைக் காணாது) குருடராக இருக்கின்றாரோ, அவர் மறுமையிலும் குருடரே; இன்னும், பாதையால் அவர் மிகத் தவறியவராவார்.

73. நிச்சயமாக நாம் உமக்கு வஹீ மூலம் அறிவித்தோமே அதனை விட்டு (விட்டு) அதல்லாததை நீர் நம் மீது பொய்யாகக் கற்பனை செய்து கூறும்படி உம்மை அவர்கள் திசை திருப்பவேமுனைந்தார்கள் ; (அவ்வாறு நீர் செய்திருந்தால்,) அப்போது உம்மை அவர்கள் (தங்கள்) உற்ற நண்பராகவும் ஆக்கிக்கொண்டிருப்பார்கள்.

74. உம்மை நாம் உண்மை வழியில் நிலைப் படுத்தி வைக்காவிடில், நீர் ஒரு சிறிதேனும் அவர்களின் பக்கம் சாய்ந்து விட சமீபித்திருப்பீர்.

75. அப்பொழுது (அவ்வாறு நீர் சமீபித்திருந்தால்) ஜீவியத்தில் இருமடங்கு(வேதனையையு)ம்,(உமது) மரணத்தில் இரு மடங்கு (வேதனையையு)ம் நாம் உம்மைச் சுவைக்கச் செய்திருப்போம்; பின்னர், நமக்கு எதிராக உமக்கு உதவியாளரை நீர் பெற்றுக்கொள்ளமாட்டீர்.

76. நிச்சயமாக, (நபியே! உம்முடைய) ஊரிலிருந்து உம்மை அடிபெயரச்செய்து, அதிலிருந்து உம்மை வெளியேற்றிவிட அவர்கள் முனைகின்றார்கள்; (அப்படிச் செய்திருந்தால்,) உமக்குப் பின்னர் வெகு சொற்பமேயன்றி அவர்களும் அங்கு (மக்காவில்) தங்கியிருக்க மாட்டார்கள்.

77. நம்முடைய தூதர்களிலிருந்து உமக்கு முன்னர் திட்டமாக நாம் அனுப்பியவர்களின் வழி முறையாக (இதுவே) இருந்தது; நம்முடைய (அந்த) வழி முறையில் நீர் யாதொரு மாற்றத்தையும் காணமாட்டீர்.

78. (நபியே!) சூரியன் (உச்சியை விட்டுச்) சாய்ந்ததிலிருந்து, இரவின் இருள் சூழும் வரையில் ( ளுஹர் , அஸர், மஃக்ரிப் , இஷா நேரத் ) தொழுகைகளை நிறைவேற்றுவீராக! ஃபஜ்ருத் தொழுகையையும் (நிறைவேற்றுவீராக!) இன்னும் நிச்சயமாக ஃபஜ்ருத் தொழுகையானது (இரவின் மலக்குகளும், பகலின் மலக்கு களும் ஒருமித்து) ஆஜராகும் தொழுகையாக உள்ளது.

79. நீர் உமக்கு உபரியாக இரவிலும் "தஹஜ்ஜுத்" தொழுகையை (குர்ஆனாகிய)இதை (ஓதுவதை)க் கொண்டு நிறைவேற்றுவீராக! (இதனால் மக்காமே மஹ்மூத்என்னும்) மிக்க புகழ் பெற்ற இடத்தில் உம்மை உமதிரட்சகன் (மறுமையில்) எழுப்பப் போதுமானவன்.

80. அன்றியும், "என் இரட்சகனே! என்னை (மதீனாவில்) உண்மையான பிரவேசமாக பிரவேசிக்க வைப்பாயாக! (மக்காவிலிருந்து) உண்மையான வெளியேற்றுதலாக என்னை வெளியேற்றி வைப்பாயாக! உன்னிடமிருந்து உதவியைப் பெறும் அதிகாரத்தையும் எனக்கு நீ ஆக்கித்தருவாயாக!" என்று (நபியே!) நீர் (பிரார்த்தித்துக்)கூறுவீராக!

وَقُلْ جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ ۗ اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا ﴿۸۱﴾
وَنُنَزِّلُ مِنَ الْقُرْاٰنِ مَا هُوَ شِفَآءٌ وَّرَحْمَةٌ لِّلْمُؤْمِنِيْنَ ۙ وَلَا يَزِيْدُ
الظّٰلِمِيْنَ اِلَّا خَسَارًا ﴿۸۲﴾ وَاِذَآ اَنْعَمْنَا عَلَى الْاِنْسَانِ اَعْرَضَ وَنَاٰ
بِجَانِبِهٖ ۚ وَاِذَا مَسَّهُ الشَّرُّ كَانَ يَـُٔوْسًا ﴿۸۳﴾ قُلْ كُلٌّ يَّعْمَلُ عَلٰى
شَاكِلَتِهٖ ۗ فَرَبُّكُمْ اَعْلَمُ بِمَنْ هُوَ اَهْدٰى سَبِيْلًا ﴿۸۴﴾ ع وَيَسْـَٔلُوْنَكَ ۹ ع ۹
عَنِ الرُّوْحِ ۗ قُلِ الرُّوْحُ مِنْ اَمْرِ رَبِّيْ وَمَآ اُوْتِيْتُمْ مِّنَ الْعِلْمِ
اِلَّا قَلِيْلًا ﴿۸۵﴾ وَلَئِنْ شِئْنَا لَنَذْهَبَنَّ بِالَّذِيْٓ اَوْحَيْنَآ اِلَيْكَ ثُمَّ
لَا تَجِدُ لَكَ بِهٖ عَلَيْنَا وَكِيْلًا ﴿۸۶﴾ لا اِلَّا رَحْمَةً مِّنْ رَّبِّكَ ۗ اِنَّ فَضْلَهٗ
كَانَ عَلَيْكَ كَبِيْرًا ﴿۸۷﴾ قُلْ لَّئِنِ اجْتَمَعَتِ الْاِنْسُ وَالْجِنُّ عَلٰٓى
اَنْ يَّاْتُوْا بِمِثْلِ هٰذَا الْقُرْاٰنِ لَا يَاْتُوْنَ بِمِثْلِهٖ وَلَوْ كَانَ بَعْضُهُمْ
لِبَعْضٍ ظَهِيْرًا ﴿۸۸﴾ وَلَقَدْ صَرَّفْنَا لِلنَّاسِ فِيْ هٰذَا الْقُرْاٰنِ مِنْ
كُلِّ مَثَلٍ ۫ فَاَبٰٓى اَكْثَرُ النَّاسِ اِلَّا كُفُوْرًا ﴿۸۹﴾ وَقَالُوْا لَنْ نُّؤْمِنَ لَكَ
حَتّٰى تَفْجُرَ لَنَا مِنَ الْاَرْضِ يَنْۢبُوْعًا ﴿۹۰﴾ لا اَوْ تَكُوْنَ لَكَ جَنَّةٌ مِّنْ
نَّخِيْلٍ وَّعِنَبٍ فَتُفَجِّرَ الْاَنْهٰرَ خِلٰلَهَا تَفْجِيْرًا ﴿۹۱﴾ لا اَوْ تُسْقِطَ السَّمَآءَ
كَمَا زَعَمْتَ عَلَيْنَا كِسَفًا اَوْ تَاْتِيَ بِاللّٰهِ وَالْمَلٰٓئِكَةِ قَبِيْلًا ﴿۹۲﴾ لا

81. அன்றியும், "சத்தியம் வந்து விட்டது; அசத்தியம் அழிந்துவிட்டது; நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்" என்றும் கூறுவீராக!.

82. விசுவாசங்கொண்டோருக்கு, எது குணப்படுத்துமோ அதையும், இன்னும் அருளையும் இந்தக் குர்ஆனிலிருந்து நாம் இறக்கி வைக்கிறோம். இன்னும், அக்கிரமக்காரர்களுக்கு இது நஷ்டத்தையே தவிர (வேறெதையும்) அதிகமாக்காது.

83. மேலும், நாம் மனிதனுக்கு அருட் கொடைகளை வழங்கினால் அவன் புறக்கணித்து,(நம்மை விட்டும்) அவன் வெகு தூரத்தில் சென்றும் விடுகின்றான்; அவனை (ஏதேனும் ஒரு) தீங்கு அணுகினாலோ (நம்பிக்கை இழந்து) நிராசையுடையவனாகி விடுகிறான்.

84. "ஒவ்வொருவரும் தன் வழியிலேயே செயல்படுகிறார்; ஆகவே, நேர் வழியில் செல்பவர் யார் என்பதை உங்கள் இரட்சகன்தான் மிக்க அறிந்தவன்" என்று (நபியே! நீர் )கூறுவீராக!

85. (நபியே!) ரூஹை(ஆன்மாவை) ப் பற்றி (யூதர்களாகிய) அவர்கள் உம்மிடம் கேட்கின்றார்கள்; ( அதற்கு) நீர், "ரூஹு" எனது இரட்சகனின் கட்டளையில் உள்ளதாகும்; (அதைப் பற்றிய) அறிவிலிருந்து வெகு சொற்பமே தவிர நீங்கள் கொடுக்கப்படவில்லை; (ஆதலால் அதன் நுட்பங்களை நீங்கள் அறிந்து கொள்ள முடியாது)" என்று கூறுவீராக!

86. மேலும், (நபியே!) நாம் நாடினால் உமக்கு வஹீ மூலம் அறிவித்திருந்தோமே அத்தகைய(குர் ஆனாகிய) தை (உம்மிடமிருந்து) நிச்சயமாக நாம் போக்கி விடுவோம்; பிறகு (இதனை உம்மிடம் கொண்டுவர) நமக்கு விரோதமாக, அதற்காகப் பொறுப்பேற்கக் கூடிய எவரையும் நீர் காணமாட்டீர்.

87. உமதிரட்சகனின் அருளாகவே தவிர (அதை நாம் விட்டுவைத்திருக்கவில்லை). நிச்சயமாக உம்மீது அவனுடைய பேரருள் மிகப் பெரிதாகவே இருக்கிறது.

88. "இந்தக் குர்ஆனைப் போன்று கொண்டு வருவதற்கு மனிதர்களும், ஜின்களும் ஒன்று சேர்ந்தாலும் இதனைப் போன்று அவர்கள் கொண்டுவரமாட்டார்கள்; அவர்களில் சிலர் சிலருக்கு உதவியாளராக இருந்தாலும் சரியே!" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

89. மேலும், இந்தக் குர்ஆனில், சகல உதாரணங்களையும் மனிதர்களுக்கு நாம் (திருப்பித் திருப்பி) விவரித்துத் தெளிவாக்கியுள்ளோம்; ஆனால், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) நிராகரிப்பதைத் தவிர (வேறு எதையும்) ஏற்பதில்லை.

90. இன்னும், "(நபியே! இப்)பூமியிலிருந்து, நீர் ஒரு நீரூற்றை எங்களுக்காக பீறிட்டு ஓடச் செய்யும் வரை உம்மை நாங்கள் விசுவாசிக்கவே மாட்டோம்" என்று அவர்கள் கூறினார்கள்_

91. _அல்லது பேரீச்சை, திராட்சை (மரங்களை) யுடைய ஒரு தோட்டம் உமக்கு இருந்து, அவைகளுக்கிடையில் ஆறுகளை (ஏற்படுத்தி) நீர் ஓடச் செய்யும் வரை_

92. _ அல்லது நீர் எண்ணியதுபோன்று எங்களின் மீது வானத்திலிருந்து துண்டுகளை விழச்செய்யும்வரை_ அல்லது அல்லாஹ்வையும், மலக்குகளையும் (நம்) முன்பாக நீர் கொண்டு வரும்வரை_

اَوْ يَكُوْنَ لَكَ بَيْتٌ مِّنْ زُخْرُفٍ اَوْ تَرْقٰى فِى السَّمَآءِ ؕ وَلَنْ نُّؤْمِنَ
لِرُقِيِّكَ حَتّٰى تُنَزِّلَ عَلَيْنَا كِتٰبًا نَّقْرَؤُهٗ ؕ قُلْ سُبْحَانَ رَبِّىْ هَلْ
كُنْتُ اِلَّا بَشَرًا رَّسُوْلًا ﴿۹۳﴾ ع وَمَا مَنَعَ النَّاسَ اَنْ يُّؤْمِنُوْٓا اِذْ جَآءَهُمُ ع ۱۰
الْهُدٰٓى اِلَّآ اَنْ قَالُوْٓا اَبَعَثَ اللّٰهُ بَشَرًا رَّسُوْلًا ﴿۹۴﴾ قُلْ لَّوْ كَانَ فِى
الْاَرْضِ مَلٰٓئِكَةٌ يَّمْشُوْنَ مُطْمَئِنِّيْنَ لَنَزَّلْنَا عَلَيْهِمْ مِّنَ السَّمَآءِ
مَلَكًا رَّسُوْلًا ﴿۹۵﴾ قُلْ كَفٰى بِاللّٰهِ شَهِيْدًا ۢ بَيْنِىْ وَبَيْنَكُمْ ؕ اِنَّهٗ كَانَ
بِعِبَادِهٖ خَبِيْرًا ۢ بَصِيْرًا ﴿۹۶﴾ وَمَنْ يَّهْدِ اللّٰهُ فَهُوَ الْمُهْتَدِ ۚ وَمَنْ
يُّضْلِلْ فَلَنْ تَجِدَ لَهُمْ اَوْلِيَآءَ مِنْ دُوْنِهٖ ؕ وَنَحْشُرُهُمْ يَوْمَ الْقِيٰمَةِ
عَلٰى وُجُوْهِهِمْ عُمْيًا وَّبُكْمًا وَّصُمًّا ؕ مَاْوٰىهُمْ جَهَنَّمُ ؕ كُلَّمَا خَبَتْ
زِدْنٰهُمْ سَعِيْرًا ﴿۹۷﴾ ذٰلِكَ جَزَآؤُهُمْ بِاَنَّهُمْ كَفَرُوْا بِاٰيٰتِنَا وَقَالُوْٓا النصف
ءَاِذَا كُنَّا عِظَامًا وَّرُفَاتًا ءَاِنَّا لَمَبْعُوْثُوْنَ خَلْقًا جَدِيْدًا ﴿۹۸﴾
اَوَلَمْ يَرَوْا اَنَّ اللّٰهَ الَّذِىْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ قَادِرٌ عَلٰٓى
اَنْ يَّخْلُقَ مِثْلَهُمْ وَجَعَلَ لَهُمْ اَجَلًا لَّا رَيْبَ فِيْهِ ؕ فَاَبَى الظّٰلِمُوْنَ
اِلَّا كُفُوْرًا ﴿۹۹﴾ قُلْ لَّوْ اَنْتُمْ تَمْلِكُوْنَ خَزَآئِنَ رَحْمَةِ رَبِّىْٓ اِذًا
لَّاَمْسَكْتُمْ خَشْيَةَ الْاِنْفَاقِ ؕ وَكَانَ الْاِنْسَانُ قَتُوْرًا ﴿۱۰۰﴾ ع ع ۱۱

93. _ அல்லது (மிக்க அழகான) பொன்னாலாகிய ஒரு (மாளிகை) வீடு உமக்கு ஆகும்வரை, அல்லது வானத்தில் நீர் உயர்ந்து செல்லும்வரை(உம்மை விசுவாசிக்க மாட்டோம்). இன்னும், நாம் ஓதக்கூடிய ஒரு வேதத்தை நீர் (நேராக) நம் மீது இறக்கி வைக்கும் வரை (நீர் வானத்தில்) ஏறியதை நம்பவே மாட்டோம்(என் றும் கூறுகின் றனர். அதற்கு) "என் இரட்சகன் மிகப் பரிசுத்தமானவன்; நான் (அல்லாஹ்வின்) தூதனாகிய ஒரு மனிதனாகவே தவிர இருக்கின்றேனா?" என்று நீர் கூறுவீராக!

94. மனிதர்களை_அவர்களிடம் நேர் வழி வந்த சமயத்தில் , "அல்லாஹ் ஒரு மனிதரையா(தன்) தூதராக அனுப்பிவைத்தான்" என்று அவர்கள் கூறுவதைத் தவிர_அவர்கள் விசுவாசங் கொள்வதை (வேறெதுவும்) தடுக்கவில்லை.

95. (அதற்கு) நீர் கூறுவீராக: "பூமியில் மலக்குகள் (வசித்து) இருந்து, (அதில்) அவர்கள் நிம்மதியுடையோராக நடந்து திரிந்து கொண்டிருந்தால், நிச்சயமாக நாம் வானத்திலிருந்து ஒரு மலக்கையே (நம்முடைய) தூதராக அவர்களிடம் இறக்கிவைத்திருப்போம்; (எனினும், அவர்கள் மனிதர்களாக இருப்பதனால் ஒரு மனிதரே தவிர அவர்களுக்குத் தூதராக வரமாட்டார்).

96. (இன்னும்) நீர் கூறுவீராக: "எனக்கும், உங்களுக்குமிடையிலும் (உண்மையை நிலை நிறுத்த) சாட்சியாக அல்லாஹ் (ஒருவனே) போதுமானவன்; (ஏனென்றால்,) நிச்சயமாக அவன் தன் அடியார்களைப் பற்றி நன்குணர்பவனாக, (சாட்சியாக இருக்க, யாவற்றையும்) பார்ப்பவனாக இருக்கின்றான்.

97. மேலும், அல்லாஹ் எவரை நேர் வழியில் செலுத்துகிறானோ அவர் தாம் நேர் வழி பெற்றவராவார். எவர்களை (அல்லாஹ்) தவறான வழியில் விட்டு விடுகிறானோ அவர்களுக்கு அவனையன்றி (வேறு) உதவியாளரை நீர் காணமாட்டீர். மேலும், அவர்களைக் குருடர்களாகவும் , ஊமையர்களாகவும், செவிடர்களாகவும் (ஆக்கி) அவர்கள் தங்கள் முகங்கள் மீது குப்புற வரும்படி(ச்செய்து) அவர்களை (மறுமை நாளில்) ஒன்று சேர்ப்போம்; அவர்கள் தங்குமிடம் நரகந்தான்; அ(தன் நெருப்பான)து தணியும் போதெல்லாம் (அது) கொழுந்து விட்டெரிவதை அவர்களுக்கு (பின்னும்) நாம் அதிகப்படுத்துவோம்.

98. நிச்சயமாக அவர்கள் நம் வசனங்களை நிராகரித்துவிட்டனர் என்பதாலும், அன்றியும் "எலும்புகளாகவும், மக்கிவிட்டதாகவும் நாம் ஆகிவிட்டாலும் நிச்சயமாக நாங்கள் புதிய படைப்பாக (உருவாக்கப்பட்டு) எழுப்பப் படுபவர்களா?" எனக்கூறியதாலும் அது அவர்களுக்குரிய கூலியாகும்.

99. நிச்சயமாக வானங்களையும், பூமியையும் படைத்தானே அத்தகைய அல்லாஹ் (மறுதடவையும் முன்னிருந்த) அவர்களைப் போன்றே படைக்க ஆற்றலுடையோன் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? மேலும், (இதற்காக) அவர்களுக்கு ஒரு தவணையையும் ஏற்படுத்தி யிருக்கிறான்; அதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆகவே அநியாயக்காரர்கள் நிராகரிப்பைத்தவிர வேறு எதையும் ஏற்பதில்லை.

100. (நபியே!) நீர் கூறுவீராக! என் இரட்சகனின் அருட் களஞ்சியங்களை நீங்களே சொந்தப்படுத்திக்கொண்டு இருப்பீர்களானால், அப்போது அது செலவாகி விடுவதைப் பயந்து (எவருக்கும் எதையும் கொடுக்காது) நீங்கள் தடுத்துக் கொள்வீர்கள்! மனிதன் பெரும் உலோபியாகவும் இருக்கிறான்.

وَلَقَدْ اٰتَيْنَا مُوْسٰى تِسْعَ اٰيٰتٍۢ بَيِّنٰتٍ فَسْئَلْ بَنِيْٓ اِسْرَآءِيْلَ اِذْ جَآءَهُمْ
فَقَالَ لَهٗ فِرْعَوْنُ اِنِّيْ لَاَظُنُّكَ يٰمُوْسٰى مَسْحُوْرًا ﴿۱۰۱﴾ قَالَ لَقَدْ عَلِمْتَ مَآ
اَنْزَلَ هٰٓؤُلَآءِ اِلَّا رَبُّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ بَصَآئِرَ ۚ وَاِنِّيْ لَاَظُنُّكَ
يٰفِرْعَوْنُ مَثْبُوْرًا ﴿۱۰۲﴾ فَاَرَادَ اَنْ يَّسْتَفِزَّهُمْ مِّنَ الْاَرْضِ فَاَغْرَقْنٰهُ وَ
مَنْ مَّعَهٗ جَمِيْعًا ﴿۱۰۳﴾ لا وَّقُلْنَا مِنْۢ بَعْدِهٖ لِبَنِيْٓ اِسْرَآءِيْلَ اسْكُنُوا
الْاَرْضَ فَاِذَا جَآءَ وَعْدُ الْاٰخِرَةِ جِئْنَا بِكُمْ لَفِيْفًا ﴿۱۰۴﴾ ط وَبِالْحَقِّ اَنْزَلْنٰهُ
وَبِالْحَقِّ نَزَلَ ۗ وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا مُبَشِّرًا وَّنَذِيْرًا ﴿۱۰۵﴾ وَقُرْاٰنًا فَرَقْنٰهُ وقف لازم
لِتَقْرَاَهٗ عَلَى النَّاسِ عَلٰى مُكْثٍ وَّنَزَّلْنٰهُ تَنْزِيْلًا ﴿۱۰۶﴾ قُلْ اٰمِنُوْا بِهٖٓ اَوْ
لَا تُؤْمِنُوْا ۗ اِنَّ الَّذِيْنَ اُوْتُوا الْعِلْمَ مِنْ قَبْلِهٖٓ اِذَا يُتْلٰى عَلَيْهِمْ
يَخِرُّوْنَ لِلْاَذْقَانِ سُجَّدًا ﴿۱۰۷﴾ لا وَّيَقُوْلُوْنَ سُبْحٰنَ رَبِّنَآ اِنْ كَانَ
وَعْدُ رَبِّنَا لَمَفْعُوْلًا ﴿۱۰۸﴾ وَيَخِرُّوْنَ لِلْاَذْقَانِ يَبْكُوْنَ وَيَزِيْدُهُمْ
خُشُوْعًا ﴿۱۰۹﴾ السجدۃ قُلِ ادْعُوا اللّٰهَ اَوِ ادْعُوا الرَّحْمٰنَ ۗ اَيًّا مَّا تَدْعُوْا فَلَهُ الْاَسْمَآءُ السجدۃ ۱۴
الْحُسْنٰى ۚ وَلَا تَجْهَرْ بِصَلَاتِكَ وَلَا تُخَافِتْ بِهَا وَابْتَغِ بَيْنَ ذٰلِكَ
سَبِيْلًا ﴿۱۱۰﴾ وَقُلِ الْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ لَمْ يَتَّخِذْ وَلَدًا وَّلَمْ يَكُنْ لَّهٗ
شَرِيْكٌ فِي الْمُلْكِ وَلَمْ يَكُنْ لَّهٗ وَلِيٌّ مِّنَ الذُّلِّ وَكَبِّرْهُ تَكْبِيْرًا ﴿۱۱۱﴾ ع ۱۲ ع ۱۲

101. மேலும், திட்டமாக நாம் மூஸாவுக்குத் தெளிவான ஒன்பது அத்தாட்சிகளைக் கொடுத்திருந்தோம். (அதைப் பெற்றுக் கொண்ட) அவர், (தன் சமூகத்தினரான) அவர்களிடம் (அதைக் கொண்டு) வந்த பொழுது (என்ன நடந்ததென) இஸ்ராயீலின் மக்களிடம் (நபியே!) நீர் கேட்பீராக! அப்போது ஃபிர்அவ்ன் அவரிடம், "மூஸாவே! நிச்சயமாக நீர் சூனியம் செய்யப்பட்டவரென நான் உம்மை எண்ணுகிறேன்" என்று கூறினான்.

102. (அதற்கு) மூஸா, வானங்கள், மற்றும் பூமியின் இரட்சகனைத் தவிர (வேறு எவரும்) இவற்றை உங்களுக்குத் தெளிவான சான்றுகளாக இறக்கி வைக்கவில்லை என்பதைத் திட்டமாக நீ அறிந்து விட்டாய்; மேலும், ஃபிர்அவ்னே! நிச்சயமாக நான் உன்னை, அழிக்கப்படுபவன் என்றே நான் எண்ணுகிறேன்" என்று கூறினார்.

103. எனவே, (மூஸாவையும், அவருடைய சமூகத்தினருமான) அவர்களை தன் தேசத்திலிருந்து விரட்டி விடவே அவன் நாடினான்; பின்னர், அவனையும், அவனுடனிருந்த (அவனுடைய சமூகத்தார்) யாவரையும் நாம் மூழ்கடித்து விட்டோம்.

104. இதன் பின்னர் இஸ்ராயீலின் மக்களுக்கு நாம் கூறினோம்: "நீங்கள் இப்பூமியில் வசித்திருங்கள்; மறுமையின் வாக்குறுதி வந்தால், உங்கள் யாவரையும் (எல்லாக் கிளையினரிலிருந்தும் விசாரணைக்காக) ஒரு சேர நம்மிடம் கொண்டு வந்து சேர்ப்போம்."

105. இன்னும், உண்மையைக் கொண்டே (குர்ஆனாகிய) இதை நாம் இறக்கிவைத்தோம்; அதுவும் உண்மையைக் கொண்டே இறங்கியது; மேலும், (நபியே!) நாம் உம்மை நன்மாராயங் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிப்பவராகவுமே தவிர அனுப்பவில்லை.

106. குர்ஆனை மனிதர்களுக்கு அதனைச் சிறிது சிறிதாக நீர் ஓதிக் காண்பிப்பதற்காக, அதனை நாம் பிரித்து இறக்கி வைத்தோம்; இன்னும், அதனைப் படிப் படியாக இறக்கி வைத்தோம்.

107. (நபியே!) நீர் கூறுவீராக: "இதனை நீங்கள் விசுவாசியுங்கள்; அல்லது விசுவாசிக்காதிருங்கள்; நிச்சயமாக இதற்கு முன் (வேத) அறிவு கொடுக்கப் பட்டிருந்தார்களே அத்தகையோர் — அவர்களுக்கு இது ஓதிக்காண்பிக்கப் பட்டால், (இதனை விசுவாசித்து பணிந்து) ஸுஜூது செய்தவர்களாக முகங்குப்புற விழுவார்கள்;

108. "எங்கள் இரட்சகன் மிகப் பரிசுத்தமானவன்; எங்களுடைய இரட்சகனுடைய வாக்கு நிச்சயமாக நிறைவேற்றப்பட்டதாக ஆகிவிட்டது," என்றும் அவர்கள் கூறுவார்கள்.

109. இன்னும், அவர்கள் அழுதவர்களாக முகங்குப்புற விழுவார்கள்; அவர்களுக்கு அது பயபக்தியை அதிகப்படுத்தும்.

110. (நபியே!) நீர் கூறுவீராக: "அல்லாஹ் என்று அழையுங்கள்; அல்லது அர்ரஹ்மான் என்று அழையுங்கள்; (இவ்விரண்டில்) எதைக் கொண்டு நீங்கள் அவனை அழைத்த போதிலும் அவனுக்கு அழகான பெயர்கள் இருக்கின்றன; (நபியே!) உம்முடைய தொழுகையில் நீர் (மிக்க) சப்தமிட்டும் ஓத வேண்டாம்; அதில் (மிக) மெதுவாகவும் ஓத வேண்டாம்; இவற்றிற்கிடையே (மத்திய) ஒரு வழியைத் தேடிக் கொள்வீராக!

111. இன்னும், "பிள்ளையை (தனக்கு) எடுத்துக் கொள்ளாதவனும், ஆட்சியில் தனக்கு துணைவன் இல்லாதவனும், இழிவிலிருந்து (காக்க) அவனுக்கு உதவி செய்பவரே இல்லாதவனும் ஆகிய — இத்தகைய அல்லாஹ்விற்கே புகழ் அனைத்தும் உரித்தாகுக" எனவும் (நபியே!) நீர் கூறுவீராக! ஆகவே (மாபெரும் மகத்துவத்திற்குரிய) அவனை மிக மிக பெருமைப்படுத்துவீராக!

سُوْرَةُ الْكَهْفِ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّعَشْرُ اٰيَاتٍ وَّاثْنَا عَشَرَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْٓ اَنْزَلَ عَلٰى عَبْدِهِ الْكِتٰبَ وَلَمْ يَجْعَلْ
لَّهٗ عِوَجًا ۜ ﴿١﴾ قَيِّمًا لِّيُنْذِرَ بَاْسًا شَدِيْدًا مِّنْ لَّدُنْهُ وَيُبَشِّرَ
الْمُؤْمِنِيْنَ الَّذِيْنَ يَعْمَلُوْنَ الصّٰلِحٰتِ اَنَّ لَهُمْ اَجْرًا حَسَنًا ۙ ﴿٢﴾
مَّاكِثِيْنَ فِيْهِ اَبَدًا ۙ ﴿٣﴾ وَّيُنْذِرَ الَّذِيْنَ قَالُوا اتَّخَذَ اللّٰهُ
وَلَدًا ۗ ﴿٤﴾ مَا لَهُمْ بِهٖ مِنْ عِلْمٍ وَّلَا لِاٰبَآئِهِمْ ؕ كَبُرَتْ كَلِمَةً
تَخْرُجُ مِنْ اَفْوَاهِهِمْ ؕ اِنْ يَّقُوْلُوْنَ اِلَّا كَذِبًا ﴿٥﴾ فَلَعَلَّكَ
بَاخِعٌ نَّفْسَكَ عَلٰٓى اٰثَارِهِمْ اِنْ لَّمْ يُؤْمِنُوْا بِهٰذَا الْحَدِيْثِ
اَسَفًا ﴿٦﴾ اِنَّا جَعَلْنَا مَا عَلَى الْاَرْضِ زِيْنَةً لَّهَا لِنَبْلُوَهُمْ اَيُّهُمْ
اَحْسَنُ عَمَلًا ﴿٧﴾ وَاِنَّا لَجٰعِلُوْنَ مَا عَلَيْهَا صَعِيْدًا جُرُزًا ؕ ﴿٨﴾
اَمْ حَسِبْتَ اَنَّ اَصْحٰبَ الْكَهْفِ وَالرَّقِيْمِ كَانُوْا مِنْ
اٰيٰتِنَا عَجَبًا ﴿٩﴾ اِذْ اَوَى الْفِتْيَةُ اِلَى الْكَهْفِ فَقَالُوْا رَبَّنَآ
اٰتِنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً وَّهَيِّئْ لَنَا مِنْ اَمْرِنَا رَشَدًا ﴿١٠﴾
فَضَرَبْنَا عَلٰٓى اٰذَانِهِمْ فِى الْكَهْفِ سِنِيْنَ عَدَدًا ۙ ﴿١١﴾

அத்தியாயம் : 18

# அல் கஹ்ஃப் _ குகை

வசனங்கள் : 110 மக்கீ ருகூஃகள் : 12

## அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. தன் அடியார் மீது (இவ்) வேதத்தை இறக்கிவைத்தானே, அத்தகைய அல்லாஹ்விற்கே புகழ் அனைத்தும் உரியதாகும்; அதில் அவன் எத்தகைய (குறைபாட்டையும்) கோணலையும் ஆக்கவில்லை.

2. அது (மாற்ற முடியாத) மிக்க உறுதியானது. அவனிடமிருந்து கடினமான வேதனையைப் பற்றி (நிராகரிப்போருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும், நற்கருமங்கள் செய்கிறார்களே, அத்தகைய விசுவாசிகளுக்கு_ நிச்சயமாக அவர்களுக்கு அழகிய கூலிஉண்டு என நற்செய்தி கூறுவதற்காகவும் (இதனை இறக்கி வைத்தான்).

3. அதில் அவர்கள் என்றென்றும் தங்கியவர்களாக இருப்பார்கள்.

4. அன்றியும், அல்லாஹ் பிள்ளையை எடுத்துக்கொண்டான் என்று கூறுவோரை அது எச்சரிப்பதற்காகவும் (இதனை இறக்கிவைத்தான்).

5. அவர்களுக்கோ, அவர்களுடைய மூதாதையர்களுக்கோ இதைப்பற்றிய அறிவாதாரம் (ஒரு சிறிதும்) இல்லை; இவர்கள் வாயிலிருந்து வெளியாகும் வார்த்தையால் இது பெரிதாகிவிட்டது; பொய்யையன்றி (வேறெதையும்) அவர்கள் கூறவில்லை.

6. (நபியே!) இவ்வேதத்தை அவர்கள் விசுவாசங்கொள்ளாவிட்டால், (புறக்கணித்து விட்ட)அவர்களின் அடிச்சுவடுகள் மீது நீர்(அதே) துக்கத்தால் உம்மையே அழித்துக்கொள்ளக்கூடியவராக இருக்கிறீர்; (அதற்காக நீர் கவலைப்பட்டு அவ்வாறு செய்யவேண்டாம்).

7. அவர்களில் யார் செயலால் அழகானவர்(கள்) என்று அவர்களை நாம் சோதிப்பதற்காக, பூமியின் மீதிருப்பவற்றை அதற்கு அலங்காரமாக நிச்சயமாக நாம் ஆக்கினோம்.

8. மேலும், (ஒரு நாளில்) நிச்சயமாக நாம் அதன் மீது உள்ளவற்றை (அழித்து) புற்பூண்டில்லா வெட்டவெளியாக்கி விடக்கூடியவர்கள்.

9. (நபியே! "அஸ்ஹாபுல் கஹ்ஃபு" என்னும் குகையுடையவர்களைப் பற்றி யூதர்கள் உம்மிடம் கேட்கின்றனர்.) அந்தக் குகையுடையவர்களும், சாஸனத்தையுடையவர்களும், நிச்சயமாக நம்முடைய அத்தாட்சிகளில் ஆச்சரியமா(னவர்களா)க இருந்தனர் என்று எண்ணிக்கொண்டீரா? (அவர்களின் சம்பவத்தைக் கூறுகிறோம்:)

10. ஒரு சில இளைஞர்கள் (ஒரு) குகையினுள் (அபயத்தை நாடி) ஒதுங்கிய போது அவர்கள் "எங்கள் இரட்சகனே! உன்னிடமிருந்து அருளை எங்களுக்கு அளிப்பாயாக! நீ எங்களுக்காக எங்கள் காரியத்தில் நேர்வழியை (எங்களுக்கு இலகுவாக்கி) அமைத்துத் தருவாயாக!" என்று (பிரார்த்தனை செய்து) கூறினார்கள்.

11. ஆதலால், அக்குகையில் எண்ணப்பட்ட பல வருடங்கள் வரை அவர்களை நித்திரை செய்யும்படிச் செய்தோம்.

ثُمَّ بَعَثْنٰهُمْ لِنَعْلَمَ اَیُّ الْحِزْبَیْنِ اَحْصٰی لِمَا لَبِثُوْۤا اَمَدًا ۧ ﴿۱۲﴾ ع ۱ ۱۲ ۱۳
نَحْنُ نَقُصُّ عَلَیْكَ نَبَاَهُمْ بِالْحَقِّ ؕ اِنَّهُمْ فِتْیَةٌ اٰمَنُوْا بِرَبِّهِمْ
وَ زِدْنٰهُمْ هُدًی ۖۗ ﴿۱۳﴾ وَّ رَبَطْنَا عَلٰی قُلُوْبِهِمْ اِذْ قَامُوْا فَقَالُوْا
رَبُّنَا رَبُّ السَّمٰوٰتِ وَ الْاَرْضِ لَنْ نَّدْعُوَاۡ مِنْ دُوْنِهٖۤ اِلٰهًا لَّقَدْ
قُلْنَاۤ اِذًا شَطَطًا ﴿۱۴﴾ هٰۤؤُلَآءِ قَوْمُنَا اتَّخَذُوْا مِنْ دُوْنِهٖۤ اٰلِهَةً ؕ لَوْ
لَا یَاْتُوْنَ عَلَیْهِمْ بِسُلْطٰنٍۭ بَیِّنٍ ؕ فَمَنْ اَظْلَمُ مِمَّنِ افْتَرٰی
عَلَی اللّٰهِ كَذِبًا ﴿۱۵﴾ وَ اِذِ اعْتَزَلْتُمُوْهُمْ وَ مَا یَعْبُدُوْنَ اِلَّا اللّٰهَ
فَاْوٗۤا اِلَی الْكَهْفِ یَنْشُرْ لَكُمْ رَبُّكُمْ مِّنْ رَّحْمَتِهٖ وَ یُهَیِّئْ لَكُمْ
مِّنْ اَمْرِكُمْ مِّرْفَقًا ﴿۱۶﴾ وَ تَرَی الشَّمْسَ اِذَا طَلَعَتْ تَّزٰوَرُ عَنْ
كَهْفِهِمْ ذَاتَ الْیَمِیْنِ وَ اِذَا غَرَبَتْ تَّقْرِضُهُمْ ذَاتَ الشِّمَالِ
وَ هُمْ فِیْ فَجْوَةٍ مِّنْهُ ؕ ذٰلِكَ مِنْ اٰیٰتِ اللّٰهِ ؕ مَنْ یَّهْدِ اللّٰهُ فَهُوَ
الْمُهْتَدِ ۚ وَ مَنْ یُّضْلِلْ فَلَنْ تَجِدَ لَهٗ وَلِیًّا مُّرْشِدًا ۧ ﴿۱۷﴾ وَ ع ۲ ۵ ۱۴
تَحْسَبُهُمْ اَیْقَاظًا وَّ هُمْ رُقُوْدٌ ۖۗ وَّ نُقَلِّبُهُمْ ذَاتَ الْیَمِیْنِ وَ
ذَاتَ الشِّمَالِ ۖۗ وَ كَلْبُهُمْ بَاسِطٌ ذِرَاعَیْهِ بِالْوَصِیْدِ ؕ لَوِ اطَّلَعْتَ
عَلَیْهِمْ لَوَلَّیْتَ مِنْهُمْ فِرَارًا وَّ لَمُلِئْتَ مِنْهُمْ رُعْبًا ﴿۱۸﴾

12. பின்பு அவர்கள் (அக்குகையில்) தங்கி இருந்த காலத்தை, (ப்பற்றி கருத்து வேறுபாடு அவர்களில் இருந்த) இரு வகுப்பாரில் எவர்கள் நன்கு அறிந்தவர்கள் என்பதை நாம் அறி(வித்து விடு)வதற்காக, (நித்திரையிலிருந்து) அவர்களை எழுப்பினோம்.

13. (நபியே!) நாம் அவர்களுடைய செய்தியை உண்மையைக் கொண்டு உமக்குக் கூறுகிறோம்; நிச்சயமாக அவர்கள் சில இளைஞர்கள்; அவர்கள் தங்கள் இரட்சகனை விசுவாசித்தார்கள்; இன்னும் நேர் வழியை அவர்களுக்கு நாம் அதிகப்படுத்தினோம்.

14. மேலும், (அக்காலத்திய அரசன் முன்னிலையில்) அவர்கள் எழுந்து நின்று, "வானங்களுக்கும், பூமிக்கும் இரட்சகன்தான் எங்கள் இரட்சகன்; அவனையன்றி வணக்கத்திற்குரிய(வேறு) நாயனை நாங்கள் அழைக்கவே மாட்டோம்; (அவ்வாறு அழைத்தால்,) அப்போது திட்டமாக நாம் வரம்பு மீறிய வார்த்தையைக் கூறிவிட்டோம்" என்று அவர்கள் உறுதியாகக்கூறியபோது, அவர்களுடைய உள்ளங்களை (நேரான வழியில்) நாம் உறுதிப்படுத்தி விட்டோம்.

15. "எங்கள் சமுதாயத்தவராகிய இவர்கள் அவனையன்றி வணக்கத்திற்குரிய(வேறு) தெய்வங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றனர்; அவர்களி(ன் வணக்கத்தி)ன் மீது தெளிவான அத்தாட்சியை அவர்கள் கொண்டு வர வேண்டாமா? ஆகவே, அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டுபவனைவிட அநியாயக்காரன் யார்?" (என்றார்கள்.)

16. "அவர்களையும், அல்லாஹ்வையன்றி அவர்கள் வணங்குபவற்றையும் விட்டு நீங்கள் விலகி விட்டால், இக்குகையின்பால் நீங்கள் ஒதுங்கிக் கொள்ளுங்கள்; உங்கள் இரட்சகன் உங்கள் மீது தன் அருளை விசாலமாகக் கொடுத்து, உங்கள் காரியங்களை எளிதாகவும் உங்களுக்கு அமைத்துத்தருவான்" (என்றும் தங்களுக்குள் கூறிக் கொண்டனர்.)

17. மேலும், சூரியனை—அது உதிக்கும்போது அவர்கள் (இருக்கும் அக்)குகையின் வலப் பக்கத்தில் அது சாய்வதையும், அது மறையும்போது அவர்களின் இடப் பக்கத்தை அது கடந்து செல்வதையும் நீர் காண்பீர்! அவர்களோ, அதில் (நடு மையமான) விசாலமான இடத்தில் இருக்கின்றனர்; இது அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்; எவரை அல்லாஹ் நேர்வழியில் செலுத்துகிறானோ அவர் நேர் வழியை அடைந்தவராவார்; எவரை அவன் தவறான வழியில் விட்டும் விடுகிறானோ, அவருக்கு நேரான வழியை அறிவிக்கக்கூடிய எந்த உதவியாளரையும் நீர் காணவேமாட்டீர்.(17)

18. (நபியே! அக்குகையிலுள்ள) அவர்கள் நித்திரை செய்து கொண்டிருக்க, அவர்களை விழித்துக் கொண்டிருப்பவர்களாகவே நீர் எண்ணுவீர்; அவர்களை வலப்பக்கமாகவும், இடப்பக்கமாகவும் (மாற்றி மாற்றி) நாம் புரட்டுகிறோம்; அவர்களுடைய நாயோ , தன் இரு முன்னங்கால்களையும் விரித்துக் கொண்டு வாசலில் (உட்கார்ந்து) இருக்கிறது (என்பதை நீர் காண்பீர்;) அவர்களை நீர் உற்றுப்பார்த்தால், அவர்களை விட்டு வெருண்டோடிப் பின் வாங்குவீர்; அவர்களிலிருந்து (ஏற்பட்டிருக்கும் பயங்கர நிலையைக் கண்டு உம் மனதில்) நீர் திடுக்கத்தால் நிரப்பப்பட்டுவிடுவீர்.

وَكَذٰلِكَ بَعَثْنٰهُمْ لِيَتَسَآءَلُوْا بَيْنَهُمْ ۭ قَالَ قَآئِلٌ مِّنْهُمْ
كَمْ لَبِثْتُمْ ۭ قَالُوْا لَبِثْنَا يَوْمًا اَوْ بَعْضَ يَوْمٍ ۭ قَالُوْا رَبُّكُمْ
اَعْلَمُ بِمَا لَبِثْتُمْ ۭ فَابْعَثُوْٓا اَحَدَكُمْ بِوَرِقِكُمْ هٰذِهٖٓ
اِلَى الْمَدِيْنَةِ فَلْيَنْظُرْ اَيُّهَآ اَزْكٰى طَعَامًا فَلْيَاْتِكُمْ بِرِزْقٍ
مِّنْهُ وَلْيَتَلَطَّفْ وَلَا يُشْعِرَنَّ بِكُمْ اَحَدًا ﴿۱۹﴾
اِنَّهُمْ اِنْ يَّظْهَرُوْا عَلَيْكُمْ يَرْجُمُوْكُمْ اَوْ يُعِيْدُوْكُمْ
فِيْ مِلَّتِهِمْ وَلَنْ تُفْلِحُوْٓا اِذًا اَبَدًا ﴿۲۰﴾ وَكَذٰلِكَ اَعْثَرْنَا
عَلَيْهِمْ لِيَعْلَمُوْٓا اَنَّ وَعْدَ اللّٰهِ حَقٌّ وَّاَنَّ السَّاعَةَ لَا
رَيْبَ فِيْهَا ۚ اِذْ يَتَنَازَعُوْنَ بَيْنَهُمْ اَمْرَهُمْ فَقَالُوا ابْنُوْا
عَلَيْهِمْ بُنْيَانًا ۭ رَبُّهُمْ اَعْلَمُ بِهِمْ ۭ قَالَ الَّذِيْنَ غَلَبُوْا
عَلٰٓي اَمْرِهِمْ لَنَتَّخِذَنَّ عَلَيْهِمْ مَّسْجِدًا ﴿۲۱﴾ سَيَقُوْلُوْنَ
ثَلٰثَةٌ رَّابِعُهُمْ كَلْبُهُمْ ۚ وَيَقُوْلُوْنَ خَمْسَةٌ سَادِسُهُمْ كَلْبُهُمْ
رَجْمًۢا بِالْغَيْبِ ۚ وَيَقُوْلُوْنَ سَبْعَةٌ وَّثَامِنُهُمْ كَلْبُهُمْ ۭ قُلْ
رَّبِّيْٓ اَعْلَمُ بِعِدَّتِهِمْ مَّا يَعْلَمُهُمْ اِلَّا قَلِيْلٌ ڛ فَلَا تُمَارِ فِيْهِمْ
اِلَّا مِرَاۗءً ظَاهِرًا ۠ وَّلَا تَسْتَفْتِ فِيْهِمْ مِّنْهُمْ اَحَدًا ﴿۲۲﴾ ع ۳ ۵/۵

نصف القرآن باعتبار عدد الحروف بان التاء بعد الیاء من النصف الاول واللام الثانیۃ من النصف الاخیر ۱۲

19. அவர்கள் (அதில் எவ்வளவு காலம் இருந்தனர் என்பதைத்) தங்களுக்கிடையே கேட்டு(அறிந்து)க் கொள்ளும் பொருட்டு (நித்திரை செய்யும்) அவர்களை இவ்வாறே நாம் எழுப்பினோம். அவர்களிலிருந்து கேட்பவர் ஒருவர், " நீங்கள் எவ்வளவு (நேரம் நித்திரையில்) தங்கி இருந்தீர்கள்?" என்று கேட்டார். (அதற்கு) அவர்களில் சிலர், " ஒரு நாள் அல்லது ஒரு நாளில் சிறிது தங்கி இருந்திருப்போம் என்று கூறினார்கள்; (மற்ற சிலர்) நீங்கள் (நித்திரையில்) தங்கி இருந்த (காலத்)தை உங்கள் இரட்சகன் தான் நன்கு அறிந்தவன்; ஆகவே உங்களில் ஒருவரை உங்களுடைய இந்த வெள்ளி நாணயத்தைக் கொண்டு, பட்டணத்திற்கு அனுப்பிவையுங்கள்; அவர் (அங்கு சென்று,) எது மிகச்சுத்தமான உணவு என்பதை(த் தேடி)ப்பார்த்து அதிலிருந்து உணவை உங்களுக்காகக் கொண்டு வரட்டும்; இன்னும் அவர் (ஊர் மக்களிடம்) இனிதாக நடந்து கொள்ளவும்; உங்களைப் பற்றி (மனிதர்களில்) எவருக்கும் நிச்சயமாக அவர் அறிவித்துவிடவும் வேண்டாம்" என்று கூறினார்கள்.

20. "நிச்சயமாக (அவ்வூர்வாசிகளான) அவர்கள் உங்களை அறிந்து கொண்டால், அவர்கள் உங்களைக் கல்லால் எறிந்து (கொன்று) விடுவார்கள்; அல்லது தங்களுடைய மார்க்கத்தில் உங்களைத் திருப்பி விடுவார்கள்; அப்பொழுது ஒரு போதும் நீங்கள் வெற்றி பெறவே மாட்டீர்கள்" (என்று கூறினார்கள்).

21. மேலும், அல்லாஹ்வுடைய வாக்குறுதி நிச்சயமாக உண்மையானது என்றும், நிச்சயமாக மறுமை வருவதில் யாதொரு சந்தேகமுமில்லை என்றும், அவர்கள் உறுதியாக அறிந்து கொள்ளும் பொருட்டே இவ்வாறு (உணவு தேடி அப்பட்டணத்திற்குச் செல்லுமாறு நாம் செய்து,) அவர்களுக்கு இவர்களைப் பற்றிய (விஷயத்)தை வெளிப்படுத்தினோம்; (அந்நகரவாசிகள்) இவர்கள் யார் என்பதைப் பற்றி தங்களுக்கிடையில் தர்க்கித்துக் கொண்டிருந்தபோது, இவர்கள் (இருந்த இடத்தின்) மீது ஒரு கட்டிடத்தைக் கட்டுங்கள்; இவர்களை(ப் பற்றி) இவர்களின் இரட்சகனே நன்கறிந்தவன் என்றும் கூறினார்கள்; தம்காரியத்தில் (விவாதித்து அதில்) வெற்றிபெற்றார்களே அவர்கள், "இவர்கள் (இருந்த இடத்தின்) மீது ஒரு பள்ளியை நிச்சயமாக நாம் அமைத்துவிடுவோம்" என்றுகூறினார்கள்.

22. (குகையிலிருந்தவர்கள்) மூவர்; அவர்களில் நான்காவது அவர்களுடைய நாய் என்று (சிலர்) கூறுகின்றனர். (வேறு சிலர், அவர்கள்) ஐவர்; அவர்களில் ஆறாவது அவர்களுடைய நாய் என்றும், மறைவானதை யூகம் செய்து கூறுகின்றனர். இன்னும் (சிலரோ, அவர்கள்) எழுவர்; அவர்களில் எட்டாவது அவர்களுடைய நாய் என்று கூறுகின்றனர். (நபியே!) "அவர்களுடைய தொகையை என் இரட்சகன் தான் மிக அறிந்தவன்; அவர்களை(ப் பற்றிய உண்மையை) குறைவானவர்களே தவிர அறிய மாட்டார்கள்" என்று கூறுவீராக! தவிரவும் அவர்களைப் பற்றி வெளிப்படையான தர்க்கத்தைத்தவிர நீர் தர்க்கம்செய்யாதீர்; அவர்களைப் பற்றி இவர்களில் எவரிடமும் நீர் தீர்ப்புக் கேட்கவும் வேண்டாம்.

وَلَا تَقُوْلَنَّ لِشَايْءٍ اِنِّيْ فَاعِلٌ ذٰلِكَ غَدًا ۲۳ اِلَّآ اَنْ يَّشَآءَ
اللّٰهُ ۡ وَاذْكُرْ رَّبَّكَ اِذَا نَسِيْتَ وَقُلْ عَسٰٓى اَنْ يَّهْدِيَنِ
رَبِّيْ لِاَقْرَبَ مِنْ هٰذَا رَشَدًا ۲۴ وَلَبِثُوْا فِيْ كَهْفِهِمْ
ثَلٰثَ مِائَةٍ سِنِيْنَ وَازْدَادُوْا تِسْعًا ۲۵ قُلِ اللّٰهُ اَعْلَمُ بِمَا
لَبِثُوْا ۚ لَهٗ غَيْبُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۭ اَبْصِرْ بِهٖ وَاَسْمِعْ ۭ مَا
لَهُمْ مِّنْ دُوْنِهٖ مِنْ وَّلِيٍّ ۡ وَّلَا يُشْرِكُ فِيْ حُكْمِهٖٓ اَحَدًا ۲۶
وَاتْلُ مَآ اُوْحِيَ اِلَيْكَ مِنْ كِتَابِ رَبِّكَ ۭ لَا مُبَدِّلَ لِكَلِمٰتِهٖ ۚ قف
وَلَنْ تَجِدَ مِنْ دُوْنِهٖ مُلْتَحَدًا ۲۷ وَاصْبِرْ نَفْسَكَ مَعَ الَّذِيْنَ
يَدْعُوْنَ رَبَّهُمْ بِالْغَدٰوةِ وَالْعَشِيِّ يُرِيْدُوْنَ وَجْهَهٗ
وَلَا تَعْدُ عَيْنٰكَ عَنْهُمْ ۚ تُرِيْدُ زِيْنَةَ الْحَيٰوةِ الدُّنْيَا ۚ وَ
لَا تُطِعْ مَنْ اَغْفَلْنَا قَلْبَهٗ عَنْ ذِكْرِنَا وَاتَّبَعَ هَوٰىهُ وَكَانَ
اَمْرُهٗ فُرُطًا ۲۸ وَقُلِ الْحَقُّ مِنْ رَّبِّكُمْ ۣ فَمَنْ شَاۗءَ فَلْيُؤْمِنْ
وَّمَنْ شَاۗءَ فَلْيَكْفُرْ ۙ اِنَّآ اَعْتَدْنَا لِلظّٰلِمِيْنَ نَارًا
اَحَاطَ بِهِمْ سُرَادِقُهَا ۭ وَاِنْ يَّسْتَغِيْثُوْا يُغَاثُوْا بِمَاۗءٍ
كَالْمُهْلِ يَشْوِي الْوُجُوْهَ ۭ بِئْسَ الشَّرَابُ ۭ وَسَاۗءَتْ مُرْتَفَقًا ۲۹

الثلاثۃ

23. (நபியே!) இன்னும் எந்த விஷயத்தைப் பற்றியும் " நிச்சயமாக நான் அதனை நாளைக்குச் செய்வேன்" என்று திண்ணமாக நீர் கூறவேண்டாம்_

24. "அல்லாஹ் நாடினாலே தவிர_ (இன்ஷா அல்லாஹ் என்று இணைத்துக் கூறுவீராக!) நீர் (இதனை) மறந்து விட்டால் (நினைவு வந்ததும்) உம் இரட்சகனை நினைவு கூர்வீராக! நல்வழியில் இன்னும் இதைவிட மிக நெருக்கமானவற்றின் பால் எனக்கு நேர்வழி காட்ட என் இரட்சகன் எனக்குப் போதுமானவன்" என்றும் கூறுவீராக!"

25. இன்னும், அவர்கள் குகையில் முன்னூறு வருடங்கள் தங்கியிருந்தனர்; (என்றும்) இன்னும் (அதற்கு மேல்) ஒன்பதை அதிகப்படுத்தி(த்தங்கி)னார்கள், (என்றும் சிலர் கூறுகின்றனர்).

26. (நபியே!) நீர் கூறுவீராக: "அவர்கள் (அதில்) தங்கி இருந்த (காலத்)தை அல்லாஹ்தான் மிக்க அறிந்தவன்; வானங்கள், இன்னும் பூமியில் மறைவானது அவனுக்கே உரியதாகும்; அவனைப்பார்க்கச்செய்ததும், கேட்கச்செய்ததும் எது? அவனைத் தவிர (காரியங்களை) நிர்வகிப்பவன் அவர்களுக்கு வேறு எவருமில்லை; அவன் தன்னுடைய தீர்ப்பில் ஒருவரையும் கூட்டாக்கிக் கொள்ளவுமாட்டான்".

27. இன்னும், (நபியே!) உம்முடைய இரட்சகனின் வேதத்திலிருந்து உமக்கு (வஹீ மூலம்) அறிவிக்கப்பட்டதை நீர் ஓதி (உபதேசித்து) வருவீராக! அவனுடைய வார்த்தை (கட்டளை)களை மாற்றுபவர் இல்லை; அவனையன்றி (உமக்கு) எந்தப் புகலிடத்தையும் நீர் காணவே மாட்டீர்.

28. (நபியே!) தங்கள் இரட்சகனைக் காலையிலும், மாலையிலும் அழைத்துக் கொண்டு அவனுடைய (மேன்மையான) முகத்தையும் நாடுகின்றார்களே அத்தகையோருடன் உம்மை நீரும் (ஆக்கிக்) கட்டுப்படுத்திக் கொள்வீராக! இவ்வுலக வாழ்வின் அலங்காரத்தை நீர் நாடி அத்தகைய (நல்ல)வர்களை விட்டு உம் கண்களை திருப்பியும் விடாதீர்; மேலும் எவனுடைய இதயத்தை நம்மை நினைவு கூர்வதிலிருந்து நாம் மறக்கச் செய்து அவன் தன் மனோ இச்சையைப் பின் பற்றி விட்டானோ அவனுக்கும் நீர் கீழ்ப்படியாதீர்; அவனுடைய காரியமும் எல்லை கடந்ததாகி விட்டது.

29. (நபியே!) நீர் கூறுவீராக: "உங்கள் இரட்சகனிடமிருந்து (நான் கொண்டு வந்திருக்கும்) இ(வ்வேதமான)து சத்தியமானதாகும்; ஆகவே, எவர் நாடுகிறாரோ அவர் (இதை) விசுவாசித்துக்கொள்ளட்டும்; இன்னும் எவர் நாடுகிறாரோ அவர் (இதை) நிராகரித்துவிடட்டும்." (ஆனால் இதை நிராகரிக்கும்) அநியாயக் காரர்களுக்கு நிச்சயமாக நாம் நரகத்தை தயார்ப்படுத்தி உள்ளோம்; அந்நரகத்தின் சுவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டுவிட்டது; அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடினால், சூட்டின் உச்சத்தை அடைந்த_ பழுக்கக் காய்ச்சப்பட்டதைப் போன்ற தண்ணீரைக் கொண்டே அவர்கள் இரட்சிக்கப் படுவார்கள்; அது அவர்களுடைய முகங்களைச் சுட்டுக் கருக்கிவிடும். (அன்றி) அது மிக்க கெட்டபானமாகும்; அவர்கள் இளைப்பாற இறங்கு மிடத்தாலும் அது மிகக்கெட்டதாகும்.

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ اِنَّا لَا نُضِيْعُ اَجْرَ مَنْ
اَحْسَنَ عَمَلًا ۚ ﴿۳۰﴾ اُولٰٓئِكَ لَهُمْ جَنّٰتُ عَدْنٍ تَجْرِيْ مِنْ
تَحْتِهِمُ الْاَنْهٰرُ يُحَلَّوْنَ فِيْهَا مِنْ اَسَاوِرَ مِنْ ذَهَبٍ وَّ
يَلْبَسُوْنَ ثِيَابًا خُضْرًا مِّنْ سُنْدُسٍ وَّاِسْتَبْرَقٍ مُّتَّكِـِٕيْنَ
فِيْهَا عَلَى الْاَرَآئِكِ ۭ نِعْمَ الثَّوَابُ ۭ وَحَسُنَتْ مُرْتَفَقًا ﴿۳۱﴾ وَاضْرِبْ ع ۴ ۵ ۱۶
لَهُمْ مَّثَلًا رَّجُلَيْنِ جَعَلْنَا لِاَحَدِهِمَا جَنَّتَيْنِ مِنْ اَعْنَابٍ
وَّحَفَفْنٰهُمَا بِنَخْلٍ وَّجَعَلْنَا بَيْنَهُمَا زَرْعًا ۭ ﴿۳۲﴾ كِلْتَا الْجَنَّتَيْنِ
اٰتَتْ اُكُلَهَا وَلَمْ تَظْلِمْ مِّنْهُ شَيْـًٔا ۙ وَّفَجَّرْنَا خِلٰلَهُمَا نَهَرًا ۙ ﴿۳۳﴾
وَّكَانَ لَهٗ ثَمَرٌ ۚ فَقَالَ لِصَاحِبِهٖ وَهُوَ يُحَاوِرُهٗٓ اَنَا
اَكْثَرُ مِنْكَ مَالًا وَّاَعَزُّ نَفَرًا ﴿۳۴﴾ وَدَخَلَ جَنَّتَهٗ وَهُوَ
ظَالِمٌ لِّنَفْسِهٖ ۚ قَالَ مَآ اَظُنُّ اَنْ تَبِيْدَ هٰذِهٖٓ اَبَدًا ۙ ﴿۳۵﴾
وَّمَآ اَظُنُّ السَّاعَةَ قَآئِمَةً ۙ وَّلَئِنْ رُّدِدْتُّ اِلٰى رَبِّيْ لَاَجِدَنَّ
خَيْرًا مِّنْهَا مُنْقَلَبًا ۚ ﴿۳۶﴾ قَالَ لَهٗ صَاحِبُهٗ وَهُوَ يُحَاوِرُهٗٓ
اَكَفَرْتَ بِالَّذِيْ خَلَقَكَ مِنْ تُرَابٍ ثُمَّ مِنْ نُّطْفَةٍ ثُمَّ
سَوّٰىكَ رَجُلًا ۭ ﴿۳۷﴾ لٰكِنَّا۠ هُوَ اللّٰهُ رَبِّيْ وَلَآ اُشْرِكُ بِرَبِّيْٓ اَحَدًا ﴿۳۸﴾

30. நிச்சயமாக விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்தார்களே அத்தகையோர்_ நிச்சயமாக நாம்(அத்தகைய) அழகிய செயல் புரிந்தோரின் கூலியை வீணாக்கமாட்டோம்.

31. அத்தகையோர்_ அவர்களுக்கு நிலையான சுவனபதிகள் உண்டு; அவர்களுக்குக் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்; அவற்றில் (அவர்களுக்குப் பரிசாக) பொன்னால் (ஆன) கடகங்கள் அணிவிக்கப்படுவார்கள்; மெல்லியதாகவோ, அழுத்தமானதாகவோ (அவர்கள் விரும்பிய) பசுமையான பட்டாடைகளையும் அணிவார்கள்; அவற்றில் (உள்ள) ஆசனங்களின் மீது சாய்ந்தவர்களாக (மிக்க உல்லாசமாக) இருப்பார்கள்; (இவர்களுடைய) கூலி அது நல்லதாகி விட்டது; இளைப்பாறுமிடத்தாலும் அது நல்லதாகி விட்டது.

32. (நபியே!) இரு மனிதர்களை அவர்களுக்கு உதாரணமாகவும் கூறுவீராக! அவர்களில் ஒருவனுக்கு திராட்சைகளின் இரு தோட்டங்களை நாம் ஆக்கியிருந்தோம்; பேரீச்ச மரங்களைக் கொண்டு அவ்விரண்டையும் சூழச்செய்திருந்தோம்; அவ்விரண்டிற்கும் மத்தியில் விவசாயத்தையும் அமைத்தோம்.

33. அவ்விரு தோட்டங்களில் ஒவ்வொன்றும், அதனதன் பலனை யாதொரு குறைவுமின்றிக் கொடுத்துக் கொண்டிருந்தது; அவ்விரண்டிற்கும் மத்தியில் ஒரு ஆறையும் பீறிட்டு ஓடச்செய்தோம்.

34. அவனுக்கு (இவைகளன்றி) வேறு பல கனி(கொடுக்கும் மரங்)களும் இருந்தன. அப்பொழுது (ஒரு நாள்) அவன் தன்னுடன் பேசிக் கொண்டிருந்த தன் தோழனிடம், "நான் உன்னைவிட பொருளால் மிக அதிகமானவன்; ஜனத்தொகையிலும் நான்(உன்னை) மிகைத்தவன்" என்று (கர்வத்துடன்) கூறினான்.

35. மேலும், அவன் தனக்குத் தானே அநியாயம் இழைத்துக் கொண்டவனாக, தன் தோப்புக்குள் நுழைந்து "இவை ஒரு காலத்திலும் அழிந்துவிடுமென நான் எண்ணவில்லை" என்று கூறினான்.

36. மேலும்," மறுமை நாள் நிலைபெறக்கூடியது என்றும் நான் எண்ணவில்லை; (அப்படியே) நான் என் இரட்சகனிடம் மீண்டும் கொண்டு செல்லப்பட்டாலும் திரும்புமிடத்தால் இங்கிருப்பதை விட மிக மேலானதையே நிச்சயமாக நான் பெறுவேன்"(என்றும் கூறினான்).

37. (அதற்கு) அவனுடைய தோழன் அவனுடன் இது பற்றி தர்க்கித்தவனாக, "உன்னை மண்ணிலிருந்தும், பின்னர் ஒரு துளி இந்திரியத்திலிருந்தும் படைத்து, பின்னர் உன்னை சரியான மனிதனாக ஆக்கி விட்டானே அவனையா நீ நிராகரிக்கின்றாய்?" என்று அவனிடம் கேட்டான்.

38. எனினும், "அவனே அல்லாஹ்; அவன் என் இரட்சகன் (என்று, நான்உறுதியாக நம்பி இருக்கிறேன்.) ஆகவே, நான் என்னுடைய இரட்சகனுக்கு ஒருவரையும் இணையாக்கவுமாட்டேன்.

وَلَوْلَآ اِذْ دَخَلْتَ جَنَّتَكَ قُلْتَ مَا شَآءَ اللّٰهُ ۙ لَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ ۚ
اِنْ تَرَنِ اَنَا اَقَلَّ مِنْكَ مَالًا وَّوَلَدًا ﴿۳۹﴾ فَعَسٰى رَبِّیْٓ اَنْ
یُّؤْتِیَنِ خَیْرًا مِّنْ جَنَّتِكَ وَیُرْسِلَ عَلَیْهَا حُسْبَانًا مِّنَ السَّمَآءِ
فَتُصْبِحَ صَعِیْدًا زَلَقًا ﴿۴۰﴾ۙ اَوْ یُصْبِحَ مَآؤُهَا غَوْرًا فَلَنْ تَسْتَطِیْعَ
لَهٗ طَلَبًا ﴿۴۱﴾ وَاُحِیْطَ بِثَمَرِهٖ فَاَصْبَحَ یُقَلِّبُ كَفَّیْهِ عَلٰى مَآ
اَنْفَقَ فِیْهَا وَهِیَ خَاوِیَةٌ عَلٰى عُرُوْشِهَا وَیَقُوْلُ یٰلَیْتَنِیْ
لَمْ اُشْرِكْ بِرَبِّیْٓ اَحَدًا ﴿۴۲﴾ وَلَمْ تَكُنْ لَّهٗ فِئَةٌ یَّنْصُرُوْنَهٗ
مِنْ دُوْنِ اللّٰهِ وَمَا كَانَ مُنْتَصِرًا ﴿۴۳﴾ؕ هُنَالِكَ الْوَلَایَةُ
لِلّٰهِ الْحَقِّ ؕ هُوَ خَیْرٌ ثَوَابًا وَّخَیْرٌ عُقْبًا ﴿۴۴﴾ۧ وَاضْرِبْ لَهُمْ ع ۵ ۱۴ ۱۷
مَّثَلَ الْحَیٰوةِ الدُّنْیَا كَمَآءٍ اَنْزَلْنٰهُ مِنَ السَّمَآءِ
فَاخْتَلَطَ بِهٖ نَبَاتُ الْاَرْضِ فَاَصْبَحَ هَشِیْمًا تَذْرُوْهُ
الرِّیٰحُ ؕ وَكَانَ اللّٰهُ عَلٰى كُلِّ شَیْءٍ مُّقْتَدِرًا ﴿۴۵﴾ اَلْمَالُ وَ
الْبَنُوْنَ زِیْنَةُ الْحَیٰوةِ الدُّنْیَا ۚ وَالْبٰقِیٰتُ الصّٰلِحٰتُ خَیْرٌ
عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَّخَیْرٌ اَمَلًا ﴿۴۶﴾ وَیَوْمَ نُسَیِّرُ الْجِبَالَ وَ
تَرَى الْاَرْضَ بَارِزَةً ۙ وَّحَشَرْنٰهُمْ فَلَمْ نُغَادِرْ مِنْهُمْ اَحَدًا ﴿۴۷﴾ۚ

39. மேலும், உன் தோட்டத்தில் நீ நுழைந்தபொழுது அல்லாஹ் நாடியதே நடக்கும்; சக்தி அனைத்தும் அல்லாஹ்வைக் கொண்டல்லாது இல்லை என்று நீ கூறி இருக்க வேண்டாமா? செல்வத்திலும், பிள்ளையிலும் நான் உன்னைவிடக் குறைவாக இருப்பதாக நீ கண்டபோதிலும்_

40. "உன்னுடைய தோட்டத்தைவிட மிக்க மேலானதை என் இரட்சகன் எனக்குக் கொடுக்கவும், மேலும் (உன் நன்றி கெட்ட தன்மையின் காரணமாக,) அதன்மீது வானத்திலிருந்து வேதனையை (_பேரிடியைக் கொண்ட மழையை) அனுப்பி வைக்கவும் போதுமானவன், அப்பொழுது அது வழுக்கக்கூடிய வெட்டவெளியாக ஆகி விடும்.

41. "அல்லது, அதன் நீர் முழுவதும் பூமிக்குள் உறிஞ்சப்பட்டதாகி விடக்கூடும்; பின்னர் அதை நீ தேடிக்காண சக்தி பெற மாட்டாய்" (என்றும் கூறினார்.)

42. (அவர் கூறியவாறே) அவனுடைய விளைபொருள் யாவும் (அழிவினால்) சூழப்பட்டது; அவை அவற்றின் முகடுகளின் மீது வீழ்ந்து கிடந்த நிலையில் அதற்காக அவன் செலவுசெய்ததைப் பற்றி வருந்தி தன் இருகைகளையும் பிசைந்து கொண்டிருந்தான்; (இந்நிலைக்கு ஆளாகிய பின்) "என் இரட்சகனுக்கு நான் எவரையும் இணைவைக்காமல் இருந்திருக்க வேண்டுமே" என்று கூறினான்.

43. அல்லாஹ்வையன்றி அவனுக்கு உதவி செய்யும் கூட்டத்தார் எவரும் அவனுக்காக இருக்கவுமில்லை; மேலும் (அல்லாஹ்விடம்) பழிவாங்குகிற (சக்தியுடைய)வனாகவும் அவன் இருக்கவில்லை.

44. அந்த இடத்தில் உதவி செய்தல் உண்மையான அல்லாஹ்வுக்கே உரியதாகும்; அவனே (தன் அடியார்களுக்கு) கூலி கொடுப்பதால் மிக்க மேலானவன்; (தன் அடியார்களின் செயல்களுக்கு நற்கூலி வழங்க) முடிவு செய்வதிலும் மிக்க மேலானவன் (என்பதையும் அவன் அறிந்து கொண்டான்)

45. மேலும், (நபியே!) இவ்வுலக வாழ்க்கைக்கு ஓர் உதாரணத்தை அவர்களுக்குக் கூறுவீராக: (அது) வானத்திலிருந்து நாம் இறக்கிவைத்த நீரைப் போல் இருக்கிறது; பூமியிலுள்ள புற்பூண்டுகள் (அதனைக் குடித்து) அதனுடன் கலந்தன; (அதனால் பயிர்கள் செழித்தன. இந்நிலைக்குப்பின்) அது காய்ந்த சருகாகி அவற்றைக் காற்றுகள் (அடித்துச் சென்று) பரத்தி விடுகிறது; (இதுவே இவ்வுலக வாழ்க்கைக்கு உதாரணமாகும்.) மேலும், அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றலுடையோனாக இருக்கிறான்.

46. (ஆகவே) செல்வமும், ஆண்மக்களும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரமாகும்; மேலும், என்றுமே நிலையான நற்கருமங்கள் தாம், உம் இரட்சகனிடத்தில் நற்கூலியால் மிகச் சிறந்ததாகும் ; (மறுமையை) ஆதரவு கொள்வதற்கும் மிகச் சிறந்ததாகும்.

47. மேலும், (நபியே!) நாம், மலைகளை (அவற்றின் இடங்களிலிருந்துபெயர்த்து) நடத்தாட்டி விடும் நாளை (நினைவு கூர்வீராக! அந்நாளில்) பூமியைச் சமமான வெட்ட வெளியாகவும் நீர் காண்பீர்; (அந்நாளில்) அவர்களையும் நாம் ஒன்று திரட்டுவோம்; பின்னர், அவர்களில் ஒருவரையும் நாம் விட்டு வைக்க மாட்டோம்.

وَعُرِضُوْا عَلٰى رَبِّكَ صَفًّا ۭ لَقَدْ جِئْتُمُوْنَا كَمَا خَلَقْنٰكُمْ
اَوَّلَ مَرَّةٍۢ ۡ بَلْ زَعَمْتُمْ اَلَّنْ نَّجْعَلَ لَكُمْ مَّوْعِدًا ﴿۴۸﴾ وَوُضِعَ
الْكِتٰبُ فَتَرَى الْمُجْرِمِيْنَ مُشْفِقِيْنَ مِمَّا فِيْهِ وَ
يَقُوْلُوْنَ يٰوَيْلَتَنَا مَالِ هٰذَا الْكِتٰبِ لَا يُغَادِرُ صَغِيْرَةً
وَّلَا كَبِيْرَةً اِلَّآ اَحْصٰىهَا ۚ وَوَجَدُوْا مَا عَمِلُوْا حَاضِرًا ۭ وَ
لَا يَظْلِمُ رَبُّكَ اَحَدًا ﴿۴۹﴾ ۧ وَاِذْ قُلْنَا لِلْمَلٰۗىِٕكَةِ اسْجُدُوْا ٦ع٥ ١٨
لِاٰدَمَ فَسَجَدُوْٓا اِلَّآ اِبْلِيْسَ ۭ كَانَ مِنَ الْجِنِّ فَفَسَقَ عَنْ
اَمْرِ رَبِّهٖ ۭ اَفَتَتَّخِذُوْنَهٗ وَذُرِّيَّتَهٗٓ اَوْلِيَاۗءَ مِنْ دُوْنِيْ وَهُمْ
لَكُمْ عَدُوٌّ ۭ بِئْسَ لِلظّٰلِمِيْنَ بَدَلًا ﴿۵۰﴾ مَآ اَشْهَدْتُّهُمْ خَلْقَ
السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَلَا خَلْقَ اَنْفُسِهِمْ ۠ وَمَا كُنْتُ مُتَّخِذَ
الْمُضِلِّيْنَ عَضُدًا ﴿۵۱﴾ وَيَوْمَ يَقُوْلُ نَادُوْا شُرَكَاۗءِيَ الَّذِيْنَ
زَعَمْتُمْ فَدَعَوْهُمْ فَلَمْ يَسْتَجِيْبُوْا لَهُمْ وَجَعَلْنَا بَيْنَهُمْ
مَّوْبِقًا ﴿۵۲﴾ وَرَاَ الْمُجْرِمُوْنَ النَّارَ فَظَنُّوْٓا اَنَّهُمْ مُّوَاقِعُوْهَا وَ
لَمْ يَجِدُوْا عَنْهَا مَصْرِفًا ﴿۵۳﴾ ۧ وَلَقَدْ صَرَّفْنَا فِيْ هٰذَا الْقُرْاٰنِ ٧ع٦ ١٩
لِلنَّاسِ مِنْ كُلِّ مَثَلٍ ۭ وَكَانَ الْاِنْسَانُ اَكْثَرَ شَيْءٍ جَدَلًا ﴿۵۴﴾

48. மேலும், உமதிரட்சகன் முன் அவர்கள் யாவரும் அணியணியாகக் கொண்டு வரப்படுவார்கள்; " நாம் உங்களை முதல் தடவை படைத்ததுபோன்றே, (இப்பொழுதும் உங்களுக்கு நாம் உயிர் கொடுத்து) நீங்கள் நம்மிடம் திட்டமாக வந்து விட்டீர்கள்; மாறாக, (நம்) வாக்கை நிறைவேற்றுமிடத்தை (இந்நாளை) உங்களுக்கு நாம் ஆக்கவேமாட்டோம் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்கள் (இவ்வாறு நடந்தேறுமென நீங்கள் எண்ணிப்பார்க்கவே இல்லை).

49. (செயல்கள் பதியப்பட்ட) புத்தகமும் (அவர்கள் முன்) வைக்கப்படும்; அப்போது, அதில் இருப்பதைக் கண்டு பயந்தவர்களாக குற்றவாளிகளை நீர் காண்பீர். மேலும் அவர்கள், "எங்களுடைய கேடே! இந்தப் புத்தகத்திற்கு என்ன நேர்ந்தது? (எங்களுடைய பாவங்கள் )சிறிதோ, பெரிதோ அதைக்கணக் கெடுத்(துபதிந்)தே தவிர, அது விட்டுவைக்கவில்லை" எனக் கூறுவார்கள்; அவர்கள் செய்தவற்றை (எதிரில்) முன் வைக்கப்பட்டதாகவும் பெறுவார்கள்; இன்னும், உமதிரட்சகன் எவருக்கும் அநியாயம் செய்ய மாட்டான்.

50. அன்றியும் மலக்குகளிடம், " ஆதமுக்குச் சிரம் பணியுங்கள்" என்று நாம் கூறியதை (நபியே! நீர் நினைவு கூர்வீராக!) அப்போது இப்லீஸைத் தவிர அவர்கள் (அனைவரும்) சிரம் பணிந்தார்கள்; அவன் ஜின் இனத்திலுள்ளவனாக இருந்தான்; ஆகவே, அவன் தன் இரட்சகனுடைய கட்டளைக்கு மாறு செய்து விட்டான்; எனவே (மனிதர்களே!) நீங்கள் என்னையன்றி அவனையும், அவனுடைய சந்ததிகளையும் உற்ற நண்பர்களாக எடுத்துக் கொள்வீர்களா? அவர்களோ உங்களுக்கு(க் கொடிய) விரோதிகள்; அநியாயக்காரர்களுக்கு (அவர்கள் என்னை விட்டுவிட்டு, அவர்களைத் தங்களுக்கு உற்ற நண்பர்களாக) மாற்றிக் கொண்டது மிகக் கெட்டது.

51. வானங்களையும், பூமியையும் சிருஷ்டிப்பதற்கும், மேலும் அவர்களையே சிருஷ்டிப்பதற்கும், அவர்களை நான் (உதவிக்காக) முன்னிலையாக்கிக் கொள்ளவில்லை; வழிகெடுப்பவர்(களான இவர்)களை (எவ்விஷயத்திலும்) நான் என்னுடைய உதவியாளர்களாக ஆக்கிக்கொள்பவனாகவும் இல்லை.

52. (இரட்சகன், இணைவைத்து வணங்குவோரிடம்,) "நீங்கள் எனக்கு இணையானவர்களென எண்ணிக் கொண்டிருந்தீர்களே அவர்களை நீங்கள் அழையுங்கள்! என்று கூறும் நாளில், அவர்கள் அவர்களை அழைப்பார்கள்; (எனினும்) அவர்கள் அவர்களுக்குப் பதில் கொடுக்க மாட்டார்கள்; அன்றியும், நாம் அவர்களுக்கிடையில் நரகக் கிடங்கை ஏற்படுத்தி விடுவோம்".

53. இன்னும், குற்றவாளிகள் (அந்நாளில் நரக) நெருப்பைப் பார்த்து விடுவார்கள்; அப்போது நிச்சயமாக, அதில் தாங்கள் விழக்கூடியவர்கள் என்பதை அவர்கள் உறுதியாக அறிந்து கொள்வார்கள்; மேலும், அவர்கள் அதிலிருந்து (தப்ப வேறு) திரும்பும் இடத்தைக் காண மாட்டார்கள்.

54. நாம் மனிதர்களுக்கு இந்தக்குர்ஆனில், ஒவ்வோர் உதாரணத்தையும் திட்டமாக விவரித்திருக்கிறோம்; (எனினும்) மனிதன் (வீண்)தர்க்கம் செய்வதால் மிக அதிகமானவனாக இருக்கிறான்.

وَمَا مَنَعَ النَّاسَ اَنْ يُّؤْمِنُوْٓا اِذْ جَآءَهُمُ الْهُدٰى وَيَسْتَغْفِرُوْا

رَبَّهُمْ اِلَّآ اَنْ تَاْتِيَهُمْ سُنَّةُ الْاَوَّلِيْنَ اَوْ يَاْتِيَهُمُ

الْعَذَابُ قُبُلًا ﴿۵۵﴾ وَمَا نُرْسِلُ الْمُرْسَلِيْنَ اِلَّا مُبَشِّرِيْنَ

وَمُنْذِرِيْنَ ۚ وَيُجَادِلُ الَّذِيْنَ كَفَرُوْا بِالْبَاطِلِ لِيُدْحِضُوْا

بِهِ الْحَقَّ وَاتَّخَذُوْٓا اٰيٰتِىْ وَمَآ اُنْذِرُوْا هُزُوًا ﴿۵۶﴾ وَمَنْ

اَظْلَمُ مِمَّنْ ذُكِّرَ بِاٰيٰتِ رَبِّهٖ فَاَعْرَضَ عَنْهَا وَنَسِىَ مَا قَدَّمَتْ

يَدٰهُ ۭ اِنَّا جَعَلْنَا عَلٰى قُلُوْبِهِمْ اَكِنَّةً اَنْ يَّفْقَهُوْهُ وَفِىْٓ

اٰذَانِهِمْ وَقْرًا ۭ وَاِنْ تَدْعُهُمْ اِلَى الْهُدٰى فَلَنْ يَّهْتَدُوْٓا

اِذًا اَبَدًا ﴿۵۷﴾ وَرَبُّكَ الْغَفُوْرُ ذُو الرَّحْمَةِ ۭ لَوْ يُؤَاخِذُهُمْ بِمَا

كَسَبُوْا لَعَجَّلَ لَهُمُ الْعَذَابَ ۭ بَلْ لَّهُمْ مَّوْعِدٌ لَّنْ يَّجِدُوْا

مِنْ دُوْنِهٖ مَوْىِٕلًا ﴿۵۸﴾ وَتِلْكَ الْقُرٰٓى اَهْلَكْنٰهُمْ لَمَّا ظَلَمُوْا وَجَعَلْنَا

لِمَهْلِكِهِمْ مَّوْعِدًا ؏ ﴿۵۹﴾ وَاِذْ قَالَ مُوْسٰى لِفَتٰىهُ لَآ اَبْرَحُ حَتّٰٓى ع ۸ ۲

اَبْلُغَ مَجْمَعَ الْبَحْرَيْنِ اَوْ اَمْضِىَ حُقُبًا ﴿۶۰﴾ فَلَمَّا بَلَغَا مَجْمَعَ

بَيْنِهِمَا نَسِيَا حُوْتَهُمَا فَاتَّخَذَ سَبِيْلَهٗ فِى الْبَحْرِ سَرَبًا ﴿۶۱﴾ فَلَمَّا

جَاوَزَا قَالَ لِفَتٰىهُ اٰتِنَا غَدَآءَنَا ۡ لَقَدْ لَقِيْنَا مِنْ سَفَرِنَا هٰذَا نَصَبًا ﴿۶۲﴾

55. மனிதர்களை_அவர்களிடம் நேர்வழி வந்தபோது,(அதை) அவர்கள் ஈமான் கொள்வதிலிருந்தும், அவர்களுடைய இரட்சகனிடம் அவர்கள் பாவ மன்னிப்புக் கேட்பதிலிருந்தும், முன் சென்றவர்களுக்குரிய அல்லாஹ்வின் வழி முறை(யான தண்டனை) அவர்களுக்கு வருவதையும், அல்லது (கண்) முன் வேதனை அவர்களுக்கு வருவதையும் தவிர(வேறெதுவும்) தடுக்கவில்லை.

56. நன்மாராயங்கூறுபவர்களாகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும் அல்லாமல் தூதர்களை நாம் அனுப்பவில்லை; நிராகரிப்போரோ பொய்யைக் கொண்டு தர்க்கம் செய்கிறார்கள்; காரணம், அதைக்கொண்டு சத்தியத்தை அவர்கள் அழித்து விடுவதற்காக; மேலும், என்னுடைய வசனங்களையும், அவர்கள் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்பட்ட (வேதனை வருவ)தையும் பரிகாசமாக அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

57. மேலும், தன்னுடைய இரட்சகனின் வசனங்களைக் கொண்டு நினைவு படுத்தப்பட்டு,பின்னர் அவற்றைப் புறக்கணித்து, தன்கைகள் முற்படுத்தியவற்றை மறந்தும் விட்டவனை விட மிக அநியாயக்காரன் யார்?(குர்ஆனாகிய)இதனை அவர்கள் விளங்கிக்கொள்ளாதவாறு அவர்களுடைய இதயங்களின் மீது திரைகளையும், அவர்களுடைய காதுகளில் அடைப்பையும் நிச்சயமாக நாம் ஆக்கிவிட்டோம்.(ஆதலால்,நபியே!) நீர் அவர்களை நேர் வழியின்பால்,(எவ்வாறு வருந்தி) அழைத்த போதிலும், அப்போது அவர்கள் ஒருபோதும் நேர் வழியை அடையவே மாட்டார்கள்.

58. இன்னும், (நபியே!) உமதிரட்சகன் மிக்க பிழை பொறுப்பவன்; மிகக் கிருபையுடையவன்; அவர்கள் சம்பாதித்த (தீய)வற்றின் காரணமாக அவன், (உடனுக்குடன்) அவர்களைப் பிடிப்பதாயிருந்தால், நிச்சயமாக அவர்களுக்கு வேதனையை துரிதமாக்கியிருப்பான்; எனினும், (அவர்களைப்பிடிக்க) அவர்களுக்கு ஒரு வாக்களிக்கப்பட்ட தவணையுண்டு. அவனையன்றி அவர்கள் (தப்பி) ஒதுங்குமிடத்தைப் பெறவேமாட்டார்கள்.

59. மேலும், இத்தகைய ஊர்(வாசி)கள்_ அவர்கள் பாவம் செய்த போது அவர்களை நாம் அழித்துவிட்டோம்; அவர்களை அழிப்பதற்கு ஒரு தவணையையும் நாம் ஏற்படுத்தியிருந்தோம் ( அத்தவணையில் நாம் அவர்களை அழித்தோம்).

60. மூஸா தன்(னுடனிருந்த) இளைஞனிடம்,"இரு கடல்களும் சந்திக்குமிடத்தை நான் அடையும் வரையில் நான் சென்று (பிரயாணித்துக்) கொண்டேயிருப்பேன்; அல்லது நீண்ட காலம் (பிரயாணிக்க நேர்ந்தாலும்) நான் சென்று கொண்டிருப்பேன்" என்று கூறியதை (நபியே! அவர்களுக்கு நீர் நினைவு படுத்துவீராக!)

61. அவர்கள் இருவரும், அவ்விரண்டு(கடல்களு)க்குமிடையே சந்திக்குமிடத்தை அடைந்தபொழுது, தங்களுடைய மீனை அவர்களிருவரும் மறந்துவிட்டனர்; அப்போது அது,கடலில் தன்னுடைய வழியைச் சுரங்கமாக அமைத்துக்கொண்டு (சென்று)விட்டது.

62. (தாங்கள் செல்லுமிடம் அதுதான் என அறியாது) அவ்விருவரும் (அதைக்) கடந்துவிட்டபோது,(மூஸா) தன் இளைஞனிடம், "நம்முடைய (காலை) உணவை நீர் நமக்குக் கொண்டுவாரும்; நிச்சயமாக நாம் நம்முடைய இந்த யாத்திரையில் களைப்பைச் சந்தித்து விட்டோம்" என்று கூறினார்.

قَالَ اَرَءَيۡتَ اِذۡ اَوَيۡنَاۤ اِلَى الصَّخۡرَةِ فَاِنِّىۡ نَسِيۡتُ الۡحُوۡتَ ۚ وَ
مَاۤ اَنۡسٰنِيۡهُ اِلَّا الشَّيۡطٰنُ اَنۡ اَذۡكُرَهٗ ۚ وَاتَّخَذَ سَبِيۡلَهٗ فِى
الۡبَحۡرِ ۖ عَجَبًا ﴿۶۳﴾ قَالَ ذٰلِكَ مَا كُنَّا نَبۡغِ ۖ فَارۡتَدَّا عَلٰۤى اٰثَارِهِمَا
قَصَصًا ۙ ﴿۶۴﴾ فَوَجَدَا عَبۡدًا مِّنۡ عِبَادِنَاۤ اٰتَيۡنٰهُ رَحۡمَةً مِّنۡ عِنۡدِنَا
وَعَلَّمۡنٰهُ مِنۡ لَّدُنَّا عِلۡمًا ﴿۶۵﴾ قَالَ لَهٗ مُوۡسٰى هَلۡ اَتَّبِعُكَ عَلٰۤى
اَنۡ تُعَلِّمَنِ مِمَّا عُلِّمۡتَ رُشۡدًا ﴿۶۶﴾ قَالَ اِنَّكَ لَنۡ تَسۡتَطِيۡعَ
مَعِىَ صَبۡرًا ﴿۶۷﴾ وَكَيۡفَ تَصۡبِرُ عَلٰى مَا لَمۡ تُحِطۡ بِهٖ خُبۡرًا ﴿۶۸﴾
قَالَ سَتَجِدُنِىۡۤ اِنۡ شَآءَ اللّٰهُ صَابِرًا وَّلَاۤ اَعۡصِىۡ لَـكَ اَمۡرًا ﴿۶۹﴾
قَالَ فَاِنِ اتَّبَعۡتَنِىۡ فَلَا تَسۡـَٔلۡنِىۡ عَنۡ شَىۡءٍ حَتّٰۤى اُحۡدِثَ
لَـكَ مِنۡهُ ذِكۡرًا ﴿۷۰﴾ فَانْطَلَقَا ۙ حَتّٰۤى اِذَا رَكِبَا فِى السَّفِيۡنَةِ خَرَقَهَا ؕ ۹ ع ۱۱ ۲۱
قَالَ اَخَرَقۡتَهَا لِتُغۡرِقَ اَهۡلَهَا ۚ لَقَدۡ جِئۡتَ شَيۡـًٔـا اِمۡرًا ﴿۷۱﴾
قَالَ اَلَمۡ اَقُلۡ اِنَّكَ لَنۡ تَسۡتَطِيۡعَ مَعِىَ صَبۡرًا ﴿۷۲﴾ قَالَ لَا
تُؤَاخِذۡنِىۡ بِمَا نَسِيۡتُ وَلَا تُرۡهِقۡنِىۡ مِنۡ اَمۡرِىۡ عُسۡرًا ﴿۷۳﴾
فَانْطَلَقَا ۙ حَتّٰۤى اِذَا لَقِيَا غُلٰمًا فَقَتَلَهٗ ۙ قَالَ اَقَتَلۡتَ
نَفۡسًا زَكِيَّةًۢ بِغَيۡرِ نَفۡسٍ ؕ لَقَدۡ جِئۡتَ شَيۡـًٔـا نُّكۡرًا ﴿۷۴﴾

63. அ(தற்க)வர், " அக்கற்பாறையில் நாம் ஒதுங்கிய சமயத்தில் நீங்கள் பார்த்தீர்களா? அப்போது நிச்சயமாக நான் மீனை (ப்பற்றிக்கூற) மறந்து விட்டேன்; அதனை நான்கூறுவதை ஷைத்தானையன்றி (மற்றெவரும்) எனக்கு மறக்கச்செய்யவில்லை;(அங்கு அது) கடலில் (செல்ல) ஆச்சரியமான விதத்தில் தன் வழியை எடுத்துக் கொண்டது" என்று கூறினார்.

64. (அதற்கு மூஸாவாகிய) அவர் "அதுதான் நாம் தேடிக்கொண்டிருந்த (இடமான) தாகும்" என்று கூறினார்; பின்னர் அவ்விருவரும் (அவ்விடத்தைத் தேடித்) தங்கள் அடிச்சுவடுகளின் மீதே பின்பற்றி, (வந்த வழியே) இருவரும் திரும்பிச் சென்றார்கள்.

65. ஆகவே, அவ்விருவரும் (அங்கு) நம் அடியார்களில் ஒரு அடியாரைக் கண்டார்கள். அவருக்கு நம்மிடமிருந்து அருளை அளித்திருந்தோம்; இன்னும் நாம் அவருக்கு நம்மிடமிருந்து அறிவையும் கற்பித்திருந்தோம்.

66. மூஸா அவரிடம், "உங்களுக்குக் கற்பிக்கப்பட்ட நன்மையானவற்றை நீங்கள் எனக்குக் கற்றுக்கொடுப்பதற்காக நான் உங்களைப் பின் தொடரட்டுமா? என்று கேட்டார்.

67. அ(தற்க)வர், " என்னுடன் பொறுமையாக இருக்க நிச்சயமாக நீர் சக்தி பெறவே மாட்டீர்!" என்று கூறினார்.

68. "(ஆகவே,)செய்தியால் எதைப்பற்றி நீர் முழுமையாக அறியமாட்டீரோ அதன் மீது நீர் எவ்வாறு பொறுமையாக இருப்பீர்" (என்றும் கூறினார்).

69. (அதற்கு மூஸாவாகிய) அவர்,"அல்லாஹ் நாடினால் (எவ்விஷயத்திலும்) பொறுமையாளனாகவும், எக்காரியத்திலும் நான் உமக்கு மாறு செய்யாதவனாகவும் என்னை நீர் காண்பீர்" என்று கூறினார்.

70. அ(தற்க)வர், "நீர் என்னைப் பின்பற்றுவதாயின், எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும், நானாகவே அதனைப்பற்றி உமக்கு செய்தி விளக்கும்வரையில் நீர் என்னிடம் கேட்காதீர்" என்று கூறினார்.

71. (இவ்வாறு முடிவெடுத்துக் கொண்டு) பின்னர், அவ்விருவரும் ஒரு கப்பலில் ஏறும் வரையில் சென்றார்கள்; (கப்பலில் ஏறிய பின்னர்) அவர் (அதன் ஒரு பலகையைப் பெயர்த்து) அதனை ஓட்டையாக்கிவிட்டார்; (அதற்கு மூஸாவாகிய)அவர் "இதிலுள்ளவர்களை மூழ்கடிக்கவா நீர் ஓட்டையாக்கினீர்; நிச்சயமாக நீர் மிகப்பெரும் காரியத்தைச் செய்துவிட்டீர்!" என்று கூறினார்.

72. அ(தற்க)வர், " நிச்சயமாக நீர் என்னுடன் பொறுமையாக இருக்கச்சக்தி பெறவேமாட்டீர் என்று நான் கூறவில்லையா?" என்றார்.

73. அ(தற்க)வர் "நான் மறந்துவிட்டதைப்பற்றி நீர் என்னைக் குற்றம் பிடிக்க வேண்டாம், என் விஷயத்தில் எனக்கு சிரமத்தையும் ஏற்படுத்தி (என்னை நெருக்கடியிலும் ஆக்கி)விடவேண்டாம்" என்று கூறினார்.

74. பின்னர் இருவரும் (கப்பலிலிருந்து இறங்கி) நடந்தனர்; முடிவாக (வழியில்) ஒரு சிறுவனை அவ்விருவரும் சந்திக்கவே, அவர் அ(ச்சிறு)வனை கொன்று விட்டார்; கொலைக் குற்றமின்றி ஒரு பரிசுத்தமான ஆத்மாவை நீர் கொலை செய்து விட்டீரே? நிச்சயமாக, நீர் மறுக்கப்படவேண்டிய ஒரு (தகாத) காரியத்தைச் செய்துவிட்டீர்!" என்று (மூஸாவாகிய) அவர் கூறினார்.

قَالَ اَلَمْ اَقُلْ لَّكَ اِنَّكَ لَنْ تَسْتَطِيْعَ مَعِيَ صَبْرًا ﴿٧٥﴾ الجزء
قَالَ اِنْ سَاَلْتُكَ عَنْ شَیْءٍۭ بَعْدَهَا فَلَا تُصٰحِبْنِیْ ۚ قَدْ بَلَغْتَ
مِنْ لَّدُنِّیْ عُذْرًا ﴿٧٦﴾ فَانْطَلَقَا ٚ حَتّٰۤى اِذَاۤ اَتَیَاۤ اَهْلَ قَرْیَةِ ِۨاسْتَطْعَمَاۤ
اَهْلَهَا فَاَبَوْا اَنْ یُّضَیِّفُوْهُمَا فَوَجَدَا فِیْهَا جِدَارًا یُّرِیْدُ اَنْ
یَّنْقَضَّ فَاَقَامَهٗ ؕ قَالَ لَوْ شِئْتَ لَتَّخَذْتَ عَلَیْهِ اَجْرًا ﴿٧٧﴾ قَالَ
هٰذَا فِرَاقُ بَیْنِیْ وَ بَیْنِكَ ۚ سَاُنَبِّئُكَ بِتَاْوِیْلِ مَا لَمْ تَسْتَطِعْ عَّلَیْهِ
صَبْرًا ﴿٧٨﴾ اَمَّا السَّفِیْنَةُ فَكَانَتْ لِمَسٰكِیْنَ یَعْمَلُوْنَ فِی الْبَحْرِ
فَاَرَدْتُّ اَنْ اَعِیْبَهَا وَ كَانَ وَرَآءَهُمْ مَّلِكٌ یَّاْخُذُ كُلَّ سَفِیْنَةٍ
غَصْبًا ﴿٧٩﴾ وَ اَمَّا الْغُلٰمُ فَكَانَ اَبَوٰهُ مُؤْمِنَیْنِ فَخَشِیْنَاۤ اَنْ یُّرْهِقَهُمَا
طُغْیَانًا وَّ كُفْرًا ﴿٨٠﴾ ۚ فَاَرَدْنَاۤ اَنْ یُّبْدِلَهُمَا رَبُّهُمَا خَیْرًا مِّنْهُ زَكٰوةً
وَّ اَقْرَبَ رُحْمًا ﴿٨١﴾ وَ اَمَّا الْجِدَارُ فَكَانَ لِغُلٰمَیْنِ یَتِیْمَیْنِ فِی
الْمَدِیْنَةِ وَ كَانَ تَحْتَهٗ كَنْزٌ لَّهُمَا وَ كَانَ اَبُوْهُمَا صَالِحًا ۚ فَاَرَادَ
رَبُّكَ اَنْ یَّبْلُغَاۤ اَشُدَّهُمَا وَ یَسْتَخْرِجَا كَنْزَهُمَا ۖۗ رَحْمَةً مِّنْ رَّبِّكَ ۚ
وَ مَا فَعَلْتُهٗ عَنْ اَمْرِیْ ؕ ذٰلِكَ تَاْوِیْلُ مَا لَمْ تَسْطِعْ عَّلَیْهِ صَبْرًا ﴿٨٢﴾ ؑ ع ١٠ ١
وَ یَسْــَٔلُوْنَكَ عَنْ ذِی الْقَرْنَیْنِ ؕ قُلْ سَاَتْلُوْا عَلَیْكُمْ مِّنْهُ ذِكْرًا ﴿٨٣﴾ ؕ

75. அ(தற்க)வர் "நிச்சயமாக நீர் என்னுடன் பொறுமையாக இருக்க சக்தி பெறவே மாட்டீர் என்று நான் உமக்கு (முன்னரே) கூறவில்லையா?" என்று (மூஸாவிடம்) கேட்டார்.

76. (அதற்கு மூஸா,) "இதன் பின்னர், எவ்விஷயத்தைப் பற்றியும் உம்மிடம் நான் கேட்பேனாயின், நீர் என்னை உம்முடன் வைத்துக்கொள்ளவேண்டாம்; என்னிடமிருந்து மன்னிக்கும் எல்லையை நிச்சயமாக நீர் அடைந்துவிட்டீர்" என்று கூறினார்.

77. பின்னர், அவ்விருவரும் ஓர் ஊர்வாசிகளிடம் வந்து சேரும் வரை நடந்தனர்; (அங்கு வந்துசேர்ந்தபின்) தங்களிருவருக்கும் உணவளிக்குமாறு அவ்வூராரைக் கேட்டார்கள்; ஆனால், அவர்கள் இவ்விருவருக்கும் விருந்தளிக்க மறுத்துவிட்டனர். பிறகு, அதில் ஒரு சுவரை_ அது துரிதமாக இடிந்து விழுந்துவிடக்கூடியதாக_ அவ்விருவரும் கண்டனர்; ஆகவே, அவர் அதனை (விழாது) நிறுத்திவைத்தார், (அதற்கு மூஸா அவரிடம்,) "நீர் நாடியிருந்தால் (இவ்வூராரிடம்) இதற்குரிய கூலியை எடுத்திருக்கலாமே" என்று கூறினார்.

78. அ(தற்க)வர், "எனக்கும், உமக்குமிடையில் இதுதான் பிரிவாகும்; எதன் மீது பொறுமையாய் இருக்க நீர் சக்தி பெறவில்லையோ அதன் விளக்கத்தை நான் உமக்கு அறிவிக்கிறேன்" என்றுகூறினார்.

79. அக்கப்பல், கடலில் வேலை செய்யும் ஏழைகள் சிலருக்கு உரியதாக இருந்தது; ஆகவே, அதனைப் பழுதாக்க நான் நாடினேன்; மேலும், (இது, செல்லும் வழியில்) அவர்களுக்கு (முன்) அப்பால் ஓர் அரசன் இருக்கிறான்; அவன் (பழுதற்ற) கப்பல் ஒவ்வொன்றையும் அபகரித்து எடுத்துக்கொள்கிறான்.

80. மேலும், "(கொல்லப்பட்ட) அந்தச் சிறுவன்_அவனுடைய பெற்றோர் இருவரும் விசுவாசிகளாக இருக்கிறார்கள்; அவன் (வளர்ந்து) அவ்விருவரையும் அக்கிரமம் செய்யுமாறும், (அல்லாஹ்வை) நிராகரிக்குமாறும் சிரமப்படுத்தி விடுவான் என்று நாம் பயந்(து அவ்வாறு செய்)தோம்."

81. ஆகவே, அவ்விருவருக்கும் (கொல்லப்பட்ட) இவனைவிட பரிசுத்தத்தால் மிகச் சிறந்தவனையும், (பெற்றோர் மீது) அன்பு செலுத்துவதில் (நன்றியுள்ள) மிக நெருக்கமுடையவனையும் அவ்விருவரின் இரட்சகன் மாற்றிக் கொடுப்பதை நாம் நாடினோம்.

82. "அந்தச் சுவர்: அப்பட்டணத்திலுள்ள அனாதைச் சிறுவர் இருவருக்குரியதாக இருந்தது; அதற்குக் கீழ் அவ்விருவருக்குச் சொந்தமான புதையல் ஒன்றும் இருந்தது; அவ்விருவரின் தந்தை மிக்க நல்லவராக இருந்தார்; ஆகவே, உமதிரட்சகனிடமிருந்துள்ள அருளாக, உமதிரட்சகன், அவ்விருவரும் அவ்விருவரின் வாலிபத்தையடைந்து, தங்களிருவருடைய புதையலை வெளியிலெடுத்துக் கொள்ளுமாறு செய்ய நாடினான். இதனை நான் என் இஷ்டப்படி செய்துவிடவில்லை. இதுதான் எதன்மீது பொருமையாகயிருக்க நீர் சக்தி பெறவில்லையோ அதனுடைய விளக்கமாகும்" (என்று கூறினார்.)

83. (நபியே!) துல்கர்னைனைப் பற்றியும் (யூதர்கள்) உம்மிடம் கேட்கின்றனர்; "அவருடைய செய்தியை நான் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கிறேன்" என்று நீர் கூறுவீராக.

إِنَّا مَكَّنَّا لَهُ فِي الْأَرْضِ وَآتَيْنَاهُ مِنْ كُلِّ شَيْءٍ سَبَبًا ﴿٨٤﴾ فَأَتْبَعَ
سَبَبًا ﴿٨٥﴾ حَتَّىٰ إِذَا بَلَغَ مَغْرِبَ الشَّمْسِ وَجَدَهَا تَغْرُبُ فِي عَيْنٍ
حَمِئَةٍ وَوَجَدَ عِنْدَهَا قَوْمًا ۗ قُلْنَا يَا ذَا الْقَرْنَيْنِ إِمَّا أَنْ
تُعَذِّبَ وَإِمَّا أَنْ تَتَّخِذَ فِيهِمْ حُسْنًا ﴿٨٦﴾ قَالَ أَمَّا مَنْ ظَلَمَ
فَسَوْفَ نُعَذِّبُهُ ثُمَّ يُرَدُّ إِلَىٰ رَبِّهِ فَيُعَذِّبُهُ عَذَابًا نُكْرًا ﴿٨٧﴾ وَأَمَّا مَنْ
آمَنَ وَعَمِلَ صَالِحًا فَلَهُ جَزَاءً الْحُسْنَىٰ ۖ وَسَنَقُولُ لَهُ مِنْ أَمْرِنَا
يُسْرًا ﴿٨٨﴾ ثُمَّ أَتْبَعَ سَبَبًا ﴿٨٩﴾ حَتَّىٰ إِذَا بَلَغَ مَطْلِعَ الشَّمْسِ وَجَدَهَا تَطْلُعُ
عَلَىٰ قَوْمٍ لَمْ نَجْعَلْ لَهُمْ مِنْ دُونِهَا سِتْرًا ﴿٩٠﴾ كَذَٰلِكَ وَقَدْ أَحَطْنَا
بِمَا لَدَيْهِ خُبْرًا ﴿٩١﴾ ثُمَّ أَتْبَعَ سَبَبًا ﴿٩٢﴾ حَتَّىٰ إِذَا بَلَغَ بَيْنَ السَّدَّيْنِ
وَجَدَ مِنْ دُونِهِمَا قَوْمًا لَا يَكَادُونَ يَفْقَهُونَ قَوْلًا ﴿٩٣﴾ قَالُوا يَا ذَا
الْقَرْنَيْنِ إِنَّ يَأْجُوجَ وَمَأْجُوجَ مُفْسِدُونَ فِي الْأَرْضِ فَهَلْ
نَجْعَلُ لَكَ خَرْجًا عَلَىٰ أَنْ تَجْعَلَ بَيْنَنَا وَبَيْنَهُمْ سَدًّا ﴿٩٤﴾ قَالَ مَا
مَكَّنِّي فِيهِ رَبِّي خَيْرٌ فَأَعِينُونِي بِقُوَّةٍ أَجْعَلْ بَيْنَكُمْ وَبَيْنَهُمْ
رَدْمًا ﴿٩٥﴾ آتُونِي زُبَرَ الْحَدِيدِ ۖ حَتَّىٰ إِذَا سَاوَىٰ بَيْنَ الصَّدَفَيْنِ قَالَ
انْفُخُوا ۖ حَتَّىٰ إِذَا جَعَلَهُ نَارًا قَالَ آتُونِي أُفْرِغْ عَلَيْهِ قِطْرًا ﴿٩٦﴾

84. நிச்சயமாக, நாம் அவருக்குப் பூமியில் (அவருடைய ஆட்சியை நிறுவ) வசதியளித்தோம்; ஒவ்வொரு பொருளிலிருந்தும் (தக்க பயனடையும்) வழியை அவருக்கு நாம் கொடுத்தோம்.

85. ஆகவே, அவர் ஒரு வழியைப் பின்பற்றிச் சென்றார்.

86. முடிவாக, சூரியன் மறையுமிடத்தை அவர் அடைந்தபொழுது சேற்றுக் கடலில் அது மறைவதைக்கண்டார்; அவ்விடத்தில் ஒருசமூகத்தாரையும்கண்டார். (நாம் அவரிடம்,) "துல்கர்னைனே! ஒன்று நீர் (இவர்களை) வேதனை செய்யலாம்; அல்லது அவர்களுக்கு அழகிய நன்மையை நீர் உண்டாக்கலாம்" என்று கூறினோம்.

87. ஆகவே, அவர் (அவர்களிடம்) "எவர், அநியாயம் செய்கிறாரோ அவரை, நாம் வேதனை செய்வோம்; பின்னர், அவர் தன் இரட்சகனிடம் திருப்பப்படுவார்; அப்போது அவரை அவன் மிகக் கடினமான வேதனையாக வேதனை செய்வான்" என்று கூறினார்.

88. அன்றியும், "எவர் விசுவாசங்கொண்டு (அதனடிப்படையில்) நற்கருமமும் செய்கிறாரோ அவருக்கு, (இரட்சகனிடத்திலும்) அழகான (நற்)கூலி இருக்கிறது; நாமும் நம்முடைய காரியத்திலிருந்து சுலபமானதை அவருக்குக் கூறுவோம்" (என்றும் கூறினார்)

89. பின்னர், அவர் ஒரு வழியைப் பின்பற்றிச் சென்றார்.

90. முடிவாக, அவர் சூரியன் உதயமாகுமிடத்தை அடைந்தபொழுது, அது ஒரு சமூகத்தாரின் மீது உதயமாகி இருப்பதையும் கண்டார்; அவர்களுக்கு அதைத்தவிர்த்து (அதன் வெப்பத்திலிருந்து காத்துக்கொள்ள) எந்தத் தடுப்பையும் நாம் ஏற்படுத்தவில்லை.

91. (அவர்களுடைய நிலைமை உண்மையில்) அவ்வாறே (இருந்தது); இன்னும், அவரிடம் இருந்ததை நிறைவான அறிவால் திட்டமாக நாம் நன்கறிந்திருந்தோம்.

92. பின்னர், அவர் ஒரு வழியைப் பின்பற்றிச் சென்றார்.

93. முடிவாக, அவர் இரு மலைகளுக்கிடையே (இருந்த ஓர் இடத்தை) அடைந்தபொழுது அவ்விரண்டிற்கும் அப்பால் (இருந்த) ஒரு சமூகத்தாரைக் கண்டார்; (அவர்களுடைய மொழியிலல்லாத அவரின்) கூற்றை விளங்கக் கூடியவர்களாக அவர்களிருக்கவில்லை.

94. அவர்கள், (இவரிடம் சாடை மூலம்) "துல்கர்னைனே! நிச்சயமாக யாஜூஜும், மாஜூஜும் (எங்கள்) பூமியில் (வந்து) பெரும் குழப்பவாதிகளாக இருக்கிறார்கள்; எங்களுக்கும் அவர்களுக்குமிடையில் நீர் ஒரு தடையை (தடுப்புச்சுவற்றை) ஏற்படுத்துவதற்காக ஒரு தொகையை உமக்காக நாங்கள் ஆக்கித்தரலாமா?" என்று கேட்டார்கள்.

95. அ(தற்க)வர், "என் இரட்சகன் எனக்கு எதில் வசதியளித்துள்ளானோ அது மிக்க மேலானது. (உங்கள்) பலம்கொண்டு எனக்கு உதவிசெய்யுங்கள்; உங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் உறுதியான ஒரு தடுப்பை நான் அமைத்துவிடுகிறேன்" என்று கூறினார்.

96. "நீங்கள் இரும்புப் பாளங்களை என்னிடம் கொண்டுவாருங்கள்" (அவைகளைக்கொண்டு இரு மலைகளுக்கிடையிலுள்ள பள்ளத்தை நிரப்புங்கள்) முடிவாக இருமலைகளுக்கிடையில் (உச்சிக்கு) அவை சமமாகும்போது ஊதுங்கள் என்றார்; அதனை நெருப்பாக ஆக்கியதும் (உருக்கிய செம்பை) என்னிடம் கொண்டுவாருங்கள். (அந்த) உருக்கிய செம்பை நான் அதன்மேல் ஊற்றுவேன்" என்று கூறினார்.

فَمَا اسْطَاعُوْٓا اَنْ يَّظْهَرُوْهُ وَمَا اسْتَطَاعُوْا لَهٗ نَقْبًا ﴿٩٧﴾ قَالَ
هٰذَا رَحْمَةٌ مِّنْ رَّبِّيْ ۚ فَاِذَا جَآءَ وَعْدُ رَبِّيْ جَعَلَهٗ دَكَّآءَ ۚ وَكَانَ
وَعْدُ رَبِّيْ حَقًّا ﴿٩٨﴾ وَتَرَكْنَا بَعْضَهُمْ يَوْمَئِذٍ يَّمُوْجُ فِيْ بَعْضٍ وَّنُفِخَ
فِي الصُّوْرِ فَجَمَعْنٰهُمْ جَمْعًا ﴿٩٩﴾ وَّعَرَضْنَا جَهَنَّمَ يَوْمَئِذٍ لِّلْكٰفِرِيْنَ
عَرْضًا ﴿١٠٠﴾ الَّذِيْنَ كَانَتْ اَعْيُنُهُمْ فِيْ غِطَآءٍ عَنْ ذِكْرِيْ وَكَانُوْا
لَا يَسْتَطِيْعُوْنَ سَمْعًا ﴿١٠١﴾ اَفَحَسِبَ الَّذِيْنَ كَفَرُوْٓا اَنْ يَّتَّخِذُوْا ع ١٩
عِبَادِيْ مِنْ دُوْنِيْٓ اَوْلِيَآءَ ؕ اِنَّآ اَعْتَدْنَا جَهَنَّمَ لِلْكٰفِرِيْنَ نُزُلًا ﴿١٠٢﴾
قُلْ هَلْ نُنَبِّئُكُمْ بِالْاَخْسَرِيْنَ اَعْمَالًا ﴿١٠٣﴾ اَلَّذِيْنَ ضَلَّ سَعْيُهُمْ
فِي الْحَيٰوةِ الدُّنْيَا وَهُمْ يَحْسَبُوْنَ اَنَّهُمْ يُحْسِنُوْنَ صُنْعًا ﴿١٠٤﴾ اُولٰٓئِكَ
الَّذِيْنَ كَفَرُوْا بِاٰيٰتِ رَبِّهِمْ وَلِقَآئِهٖ فَحَبِطَتْ اَعْمَالُهُمْ فَلَا
نُقِيْمُ لَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ وَزْنًا ﴿١٠٥﴾ ذٰلِكَ جَزَآؤُهُمْ جَهَنَّمُ بِمَا كَفَرُوْا
وَاتَّخَذُوْٓا اٰيٰتِيْ وَرُسُلِيْ هُزُوًا ﴿١٠٦﴾ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا
الصّٰلِحٰتِ كَانَتْ لَهُمْ جَنّٰتُ الْفِرْدَوْسِ نُزُلًا ﴿١٠٧﴾ خٰلِدِيْنَ فِيْهَا
لَا يَبْغُوْنَ عَنْهَا حِوَلًا ﴿١٠٨﴾ قُلْ لَّوْ كَانَ الْبَحْرُ مِدَادًا لِّكَلِمٰتِ رَبِّيْ
لَنَفِدَ الْبَحْرُ قَبْلَ اَنْ تَنْفَدَ كَلِمٰتُ رَبِّيْ وَلَوْ جِئْنَا بِمِثْلِهٖ مَدَدًا ﴿١٠٩﴾

97. பின்னர், (யாஜூஜ், மாஜூஜ் கூட்டத்தாராகிய) அவர்கள் அதன்மீது ஏறச்சக்தி பெறமாட்டார்கள்; அதனைத் துளைத்துத் துவாரமிடவும் அவர்கள் சக்திபெறமாட்டார்கள்.

98. (இவ்வாறு தடுப்பை உண்டாக்கிய அவர்,) "இது என் இரட்சகனிடமிருந்துள்ள அருளாகும்; என் இரட்சகனின் வாக்குறுதி(யாகிய மறுமை நாள்) வந்துவிட்டால் இதனை அவன் தூள் தூளாக்கி விடுவான். என் இரட்சகனின் வாக்குறுதி (முற்றிலும்) உண்மையானதாக இருக்கிறது" என்று கூறினார்.

99. அந்நாளில் சிலரைச் சிலருடன் (சமுத்திர அலைகளைப்போல்) கலந்து(மோதி) விடுமாறும் நாம் விட்டுவிடுவோம்; (பின்னர்) சூர் (எக்காளம்) ஊதப்பட்(டு யாவரும் அழிந்துவிட்)டால், பின்னர் (உயிர் கொடுத்து) அவர்கள் யாவரையும் முற்றிலுமாக ஒன்று சேர்த்துவிடுவோம்.

100. மேலும், நிராகரித்துக்கொண்டிருந்தோருக்கு, அந்நாளில் நரகத்தை நாம் (நிச்சயமாக) அவர்கள் முன்னிலையில் எடுத்துக் காட்டுவோம்.

101. அவர்கள் எத்தகையோரென்றால், என்னை நினைவு கூர்வதைவிட்டும் அவர்களுடைய கண்கள் திரைக்குள் இருந்தன; இன்னும், அவர்கள் (நல்லுபதேசங்களைச்) செவியேற்கச் சக்தியற்றவர்களாக ஆகிவிட்டனர்.

102. நிராகரிப்போர், என்னை விட்டுவிட்டு, என் அடியார்களை(த் தங்களுக்கு) பாதுகாவலர்களாக எடுத்துக்கொள்ள எண்ணிக் கொண்டிருக்கின்றனரா? நிச்சயமாக நிராகரித்துக்கொண்டிருப்போருக்கு நரகத்தை தங்குமிடமாக நாம் தயார்செய்து வைத்திருக்கிறோம்.

103. (தம்) செயல்களால் மிகப் பெரிய நஷ்டவாளிகள் யார் என்பதை உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என்று (நபியே!) நீர் கேட்பீராக!

104. (அவர்கள்) எத்தகையோரென்றால், இவ்வுலக வாழ்க்கையில் அவர்களின் முயற்சி பயனற்றுவிட்டது; நிச்சயமாக அவர்களோ, காரியங்களில் அழகானவற்றையே தாங்கள் செய்வதாக எண்ணிக் கொள்கின்றனர்.

105. இத்தகையோர்தாம் தங்கள் இரட்சகனின் வசனங்களையும், (மறுமையில்) அவனுடைய சந்திப்பையும் நிராகரித்துவிட்டவர்கள்; ஆகவே, அவர்களுடைய (நற்) செயல்கள் யாவும் அழிந்துவிட்டன; ( அவர்களின் செயல்கள் நிறுவையில் கனமானதாக இராது.) ஆகவே, மறுமை நாளில் அவர்களின் செயல்களுக்காக எந்த எடையையும்(மதிப்பையும்) நாம் ஏற்படுத்த மாட்டோம்.

106. ( உண்மையை) அவர்கள் நிராகரித்து, என்னுடைய வசனங்களையும், என்னுடைய தூதர்களையும் பரிகாசமாக எடுத்துக்கொண்டதன் காரணமாக அதுவே அவர்களின் கூலி நரகமாகும்.

107. நிச்சயமாக விசுவாசங்கொண்டு நற்கருமங்களும் செய்கின்றார்களே அத்தகையோர்_ ஃபிர்தவ்ஸ் என்னும் சுவனபதிகள் அவர்களுக்கு விருந்தினர் தங்குமிடமாக ஆகிவிட்டது.

108. அதில், அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; அதை விட்டு மாறுவதை அவர்கள் தேட மாட்டார்கள்.

109. (நபியே!) நீர் கூறுவீராக: என் இரட்சகனின் வாக்கியங்களுக்கு(_அதை எழுதுவதற்கு) கடல் (நீர்) யாவும் மையாக இருந்தாலும் என் இரட்சகனின் வாக்கியங்கள் (எழுதி)முடிவதற்கு முன்னதாகவே, கடல்(நீர்) முடிந்து (செலவாகி)விடும்_ அதுபோன்றதை (இன்னொரு கடலையும்) நாம் உதவிக்கு கொண்டுவந்த போதிலும் சரியே.

قُلْ اِنَّمَاۤ اَنَا بَشَرٌ مِّثْلُكُمْ يُوْحٰۤى اِلَيَّ اَنَّمَاۤ اِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ ۚ فَمَنْ كَانَ

يَرْجُوْا لِقَآءَ رَبِّهٖ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَّلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهٖۤ اَحَدًا ﴿١١٠﴾ ع ١٢ ٩ ٣

## سُوْرَةُ مَرْيَمَ مَكِّيَّةٌ وَّهِيَ ثَمَانٍ وَّتِسْعُوْنَ اٰيَةً وَّسِتُّ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

كٓهٰيٰعٓصٓ ﴿١﴾ ذِكْرُ رَحْمَتِ رَبِّكَ عَبْدَهٗ زَكَرِيَّا ﴿٢﴾ اِذْ نَادٰى رَبَّهٗ

نِدَآءً خَفِيًّا ﴿٣﴾ قَالَ رَبِّ اِنِّيْ وَهَنَ الْعَظْمُ مِنِّيْ وَاشْتَعَلَ الرَّاْسُ

شَيْبًا وَّلَمْ اَكُنْ بِدُعَآئِكَ رَبِّ شَقِيًّا ﴿٤﴾ وَاِنِّيْ خِفْتُ الْمَوَالِيَ مِنْ

وَّرَآءِيْ وَكَانَتِ امْرَاَتِيْ عَاقِرًا فَهَبْ لِيْ مِنْ لَّدُنْكَ وَلِيًّا ﴿٥﴾ يَّرِثُنِيْ

وَيَرِثُ مِنْ اٰلِ يَعْقُوْبَ ۖ وَاجْعَلْهُ رَبِّ رَضِيًّا ﴿٦﴾ يٰزَكَرِيَّاۤ اِنَّا نُبَشِّرُكَ

بِغُلٰمِ ۣ اسْمُهٗ يَحْيٰى ۙ لَمْ نَجْعَلْ لَّهٗ مِنْ قَبْلُ سَمِيًّا ﴿٧﴾ قَالَ رَبِّ اَنّٰى

يَكُوْنُ لِيْ غُلٰمٌ وَّكَانَتِ امْرَاَتِيْ عَاقِرًا وَّقَدْ بَلَغْتُ مِنَ الْكِبَرِ

عِتِيًّا ﴿٨﴾ قَالَ كَذٰلِكَ ۚ قَالَ رَبُّكَ هُوَ عَلَيَّ هَيِّنٌ وَّقَدْ خَلَقْتُكَ

مِنْ قَبْلُ وَلَمْ تَكُ شَيْئًا ﴿٩﴾ قَالَ رَبِّ اجْعَلْ لِّيْۤ اٰيَةً ؕ قَالَ

اٰيَتُكَ اَلَّا تُكَلِّمَ النَّاسَ ثَلٰثَ لَيَالٍ سَوِيًّا ﴿١٠﴾ فَخَرَجَ عَلٰى قَوْمِهٖ

مِنَ الْمِحْرَابِ فَاَوْحٰۤى اِلَيْهِمْ اَنْ سَبِّحُوْا بُكْرَةً وَّعَشِيًّا ﴿١١﴾

110. (நபியே!) நீர் கூறுவீராக: "நிச்சயமாக, நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான்; நிச்சயமாக உங்களுடைய (வணக்கத்திற்குரிய) நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீமூலம் அறிவிக்கப்படுகிறது. ஆகவே, எவர் தன் இரட்சகனைச் சந்திக்க ஆதரவு வைக்கிறாரோ, அவர் நற்கருமங்களைச் செய்யவும்; தன் இரட்சகனின் வணக்கத்தில், அவர் எவரையும் இணையாக்க வேண்டாம்.

அத்தியாயம் : 19

## மர்யம்

வசனங்கள் : 98 மக்கீ ருகூஃகள் : 6

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. காஃப் ஹா யா ஐன் ஸாத்.

2. (நபியே! இது) உம்முடைய இரட்சகன் தன் அடியார் ஜகரிய்யாவுக்குப் புரிந்த அருள் பற்றி நினைவு கூர்வதாகும்.

3. அவர் தன் இரட்சகனைத் தாழ்ந்த குரலில் அழைத்(துப்பிரார்த்தித்)த பொழுது,

4. "என்னுடைய இரட்சகனே! நிச்சயமாக நான் _ என் எலும்புகள் பலவீனமடைந்துவிட்டன; என் தலையும் நரையால் இலங்குகிறது; என் இரட்சகனே! (இதுவரையில்) நான் உன்னிடம் பிரார்த்தனை செய்து (கேட்டதில்) பாக்கியம் இல்லாதவனாக நான் ஆகவில்லை" என்று கூறினார்.

5. "நிச்சயமாக நான் எனக்குப் பின் என் உறவினர்க(ளின் தீமைக)ளை பயப்படுகிறேன்; என்னுடைய மனைவியோ மலடாக ஆகிவிட்டாள்; ஆகவே, உன்னிடத்திலிருந்து (எனக்குப்பின் என் காரியங்களை கவனிக்கும்) ஒருவாரிசை நீ அளிப்பாயாக!"

6. "அவர் எனக்கு( என் உடமையில் )வாரிஸாகவும் இருப்பார்; யஃகூபுடைய சந்ததிகளிலிருந்து (நபித்துவத்திற்கு) வாரிஸாகவும் இருப்பார்; என் இரட்சகனே! அவரை (உன்னால்) பொருந்திக் கொள்ளப்பட்டவராகவும் நீ ஆக்கிவைப்பாயாக" (என்று பிரார்த்தித்துக்கூறினார்).

7. (அதற்கு அல்லாஹ் அவரிடம்) "ஜகரிய்யாவே! நிச்சயமாக நாம் ஒரு மகனை (த்தருவதாக) உமக்கு நன்மாராயங் கூறுகிறோம்; அவர் பெயர் யஹ்யாவாகும். இதற்கு முன் அப்பெயரிடப்பட்ட ஒருவரையும் அதற்கு நாம் ஆக்கவில்லை" (என்று கூறினான்).

8. அ(தற்க)வர் "என் இரட்சகனே! என் மனைவியோ மலடியாக இருக்கிறாள், நானோ முதுமையின் முடிவை திட்டமாக அடைந்து விட்டேன் (இந்நிலையில்) எனக்கு எவ்வாறு ஒரு புதல்வன் உண்டாவான்?" என்று கேட்டார்.

9. "அ(தற்க)வன், அவ்வாறே (நடைபெறும்) என்று கூறினான்; இது எனக்கு மிக்க எளிதானது; இதற்கு முன்னர், நீர் ஒன்றுமில்லாமலிருந்த நிலையில் நானே உம்மைப்படைத்தேன்" என்று உமதிரட்சகன் கூறினான்.

10. அ(தற்க)வர், "என் இரட்சகனே! (இதற்கு) எனக்கோர் அத்தாட்சியை ஆக்குவாயாக! என (பிரார்த்தித்து)க்கேட்டார். அவன் "உமக்கு அத்தாட்சியாவது, நீர் சரீர சுகவாசியாக இருக்க மூன்று இரவுகள் (பகல்கள்) மனிதர்களுடன் பேச முடியாமல் இருப்பதாகும்" என்று கூறினான்.

11. பின்னர், அவர் தொழுமிடத்திலிருந்து தன் சமூகத்தினர்பால் வெளியேறி (முன் வந்து) காலையிலும் மாலையிலும் (அல்லாஹ்வைப் புகழ்ந்து) துதிசெய்யுங்கள் என்று (தன் கையால்) அவர்களுக்கு சாடையாகக் காண்பித்தார்.

يٰيَحْيٰى خُذِ الْكِتٰبَ بِقُوَّةٍ ؕ وَاٰتَيْنٰهُ الْحُكْمَ صَبِيًّا ﴿١٢﴾ ۙ وَّحَنَانًا
مِّنْ لَّدُنَّا وَزَكٰوةً ؕ وَكَانَ تَقِيًّا ﴿١٣﴾ ۙ وَّبَرًّۢا بِوَالِدَيْهِ وَلَمْ يَكُنْ
جَبَّارًا عَصِيًّا ﴿١٤﴾ وَسَلٰمٌ عَلَيْهِ يَوْمَ وُلِدَ وَيَوْمَ يَمُوْتُ وَيَوْمَ
يُبْعَثُ حَيًّا ﴿١٥﴾ ع وَاذْكُرْ فِى الْكِتٰبِ مَرْيَمَ ۘ اِذِ انْتَبَذَتْ مِنْ اَهْلِهَا ع ٥ ١ وقف لازم
مَكَانًا شَرْقِيًّا ﴿١٦﴾ ۙ فَاتَّخَذَتْ مِنْ دُوْنِهِمْ حِجَابًا ۣ قف فَاَرْسَلْنَآ
اِلَيْهَا رُوْحَنَا فَتَمَثَّلَ لَهَا بَشَرًا سَوِيًّا ﴿١٧﴾ قَالَتْ اِنِّىْٓ اَعُوْذُ
بِالرَّحْمٰنِ مِنْكَ اِنْ كُنْتَ تَقِيًّا ﴿١٨﴾ قَالَ اِنَّمَآ اَنَا رَسُوْلُ رَبِّكِ ۖ ق
لِاَهَبَ لَكِ غُلٰمًا زَكِيًّا ﴿١٩﴾ قَالَتْ اَنّٰى يَكُوْنُ لِىْ غُلٰمٌ وَّلَمْ
يَمْسَسْنِىْ بَشَرٌ وَّلَمْ اَكُ بَغِيًّا ﴿٢٠﴾ قَالَ كَذٰلِكِ ۚ قَالَ رَبُّكِ الربع
هُوَ عَلَىَّ هَيِّنٌ ۚ وَلِنَجْعَلَهٗٓ اٰيَةً لِّلنَّاسِ وَرَحْمَةً مِّنَّا ۚ وَكَانَ
اَمْرًا مَّقْضِيًّا ﴿٢١﴾ فَحَمَلَتْهُ فَانْتَبَذَتْ بِهٖ مَكَانًا قَصِيًّا ﴿٢٢﴾
فَاَجَآءَهَا الْمَخَاضُ اِلٰى جِذْعِ النَّخْلَةِ ۚ قَالَتْ يٰلَيْتَنِىْ مِتُّ
قَبْلَ هٰذَا وَكُنْتُ نَسْيًا مَّنْسِيًّا ﴿٢٣﴾ فَنَادٰىهَا مِنْ تَحْتِهَآ
اَلَّا تَحْزَنِىْ قَدْ جَعَلَ رَبُّكِ تَحْتَكِ سَرِيًّا ﴿٢٤﴾ وَهُزِّىْٓ
اِلَيْكِ بِجِذْعِ النَّخْلَةِ تُسٰقِطْ عَلَيْكِ رُطَبًا جَنِيًّا ﴿٢٥﴾ ن

12 (நாம் வாக்களித்தவாறே யஹ்யா பிறந்த பின்னர் நாம் அவரிடம்) "யஹ்யாவே! நீர் இவ்வேதத்தை பலமாகப் பிடித்துக்கொள்வீராக!" (என்று கூறினோம்). அவர் குழந்தையாக இருந்தபோதே அவருக்கு (சட்ட) ஞானத்தையும் நாம் அளித்தோம்.

13. அன்றியும், நம்மிடமிருந்து இரக்கத்தன்மையையும், பரிசுத்தத் தன்மையையும் (நாம் அவருக்குக் கொடுத்தோம்;) இன்னும், அவர் மிக்க பயபக்தியுடையவராக இருந்தார்.
14. இன்னும் அவர், தம் பெற்றோர்க்கு நன்மை செய்பவராகவும் (இருந்தார்); அவர் பெருமை கொண்டவராகவோ (அல்லாஹ்வுக்கு) மாறு செய்பவராகவோ இருக்கவில்லை.

15. அவர் பிறந்த நாளிலும், அவர் இறக்கும் நாளிலும், அவர் உயிர் பெற்றவராக எழுப்பப்படும் (மறுமை) நாளிலும் அவர் மீது சாந்தி உண்டாவதாக.
16. (நபியே!) இவ்வேதத்தில், மர்யமைப் பற்றியும் நினைவு கூர்வீராக! அவர் தன் குடும்பத்தினரை விட்டு கிழக்குப் பக்கமுள்ள இடத்தில் தனித்தபோது;

17. அவர் (தம்மை) அவர்களிடமிருந்து (மறைத்துக்கொள்வதற்காக) ஒரு திரையை ஆக்கிக் கொண்டார்; அப்பொழுது (ஜிப்ரீல் என்னும்) நம்முடைய ரூஹை அவரிடம் நாம் அனுப்பிவைத்தோம்; அவர் சரியான ஒரு மனிதருடைய உருவத்தில் அவருக்கு முன் தோற்றமளித்தார்.

18. (மர்யம் ஜிப்ரீலைக் கண்டதும்) "நிச்சயமாக நான் உம்மைவிட்டும் (காக்குமாறு) ரஹ்மானிடம் பாதுகாவல் தேடுகிறேன்; நீர் பயபக்தியுடையவராக இருந்தால் (என்னிடம் நெருங்காதீர்)" என்று கூறினார்.
19. அ(தற்க)வர், "பரிசுத்தமான ஒரு மகனை (அல்லாஹ்விடமிருந்து) உமக்கு நான் நன்கொடையளிப்பதற்காக நிச்சயமாக நான் உமதிரட்சகனின் (மலக்காகிய) ஒரு தூதன்தான்" என்று கூறினார்.

20. அ(தற்க)வர், "எனக்கு எவ்வாறு புதல்வன் உண்டாக முடியும்? (விவாகத்தின் மூலம்) எந்த ஆடவரும் என்னைத்தீண்டியதில்லையே! நான் கெட்ட நடத்தையுள்ளவளுமல்லவே" என்று கூறினார்.

21. அ(தற்க)வர், அவ்வாறே! "அது எனக்கு எளிது; அவரை மனிதர்களுக்கு ஒரு அத்தாட்சியாகவும், நம்மிடமிருந்து ஓர் அருளாகவும் நாம் ஆக்குவதற்காக (நாம் அவரை உண்டாக்கினோம்) என்றும், இது விதிக்கப்பட்டுவிட்ட ஒரு விஷயம் என்றும் உமதிரட்சகனே கூறுகிறான்" என்று கூறினார்.

22. பின்னர், அவர் (மர்யம், ஈஸாவாகிய) அவரைக்கருவுற்றார். பின்னர், அ(க் கர்ப்ப)த்துடன் தூரமான ஓர் இடத்திற்கு ஒதுங்கிச் சென்றடைந்தார்.

23. பின்பு (அவருக்கு ஏற்பட்ட) பிரசவவேதனை, ஒரு பேரீச்ச மரத்தின் (காய்ந்த) அடி பாகத்தின் பால் அவரைக் கொண்டுவந்து சேர்த்தது; "இதற்கு முன்னதாகவே நான் இறந்து முற்றிலும் மறக்கடிக்கப்பட்டவளாக நான் ஆகியிருக்கவேண்டுமே" என்று (மர்யம்) கூறினார்.

24. அப்போது, அவருக்குக் கீழ் புறமிருந்து (ஜிப்ரீயீலாகிய) அவர் சப்தமிட்டு அவரை அழைத்து, "(மர்யமே!) நீர் கவலைப்படாதீர்! உம(து பாதத்து)க்கு கீழாக உமதிரட்சகன் ஓர் ஊற்றை திட்டமாக ஆக்கியிருக்கின்றான்" (என்றும்),
25. மேலும், " இப்பேரீச்ச மரத்தின் அடிப்பாகத்தை நீர் உம்பக்கம் (இழுத்துக்) குலுக்குவீராக! அது பழுத்த பழங்களை உம் மீது சொரியும்" (என்றும்),

فَكُلِيْ وَاشْرَبِيْ وَقَرِّيْ عَيْنًا ۚ فَاِمَّا تَرَيِنَّ مِنَ الْبَشَرِ اَحَدًا ۙ
فَقُوْلِيْٓ اِنِّيْ نَذَرْتُ لِلرَّحْمٰنِ صَوْمًا فَلَنْ اُكَلِّمَ الْيَوْمَ اِنْسِيًّا ۚ ﴿٢٦﴾
فَاَتَتْ بِهٖ قَوْمَهَا تَحْمِلُهٗ ۭ قَالُوْا يٰمَرْيَمُ لَقَدْ جِئْتِ شَيْـًٔا فَرِيًّا ﴿٢٧﴾
يٰٓاُخْتَ هٰرُوْنَ مَا كَانَ اَبُوْكِ امْرَاَ سَوْءٍ وَّمَا كَانَتْ اُمُّكِ بَغِيًّا ﴿٢٨﴾
فَاَشَارَتْ اِلَيْهِ ۭ قَالُوْا كَيْفَ نُكَلِّمُ مَنْ كَانَ فِي الْمَهْدِ صَبِيًّا ﴿٢٩﴾
قَالَ اِنِّيْ عَبْدُ اللّٰهِ ۭ اٰتٰىنِيَ الْكِتٰبَ وَجَعَلَنِيْ نَبِيًّا ﴿٣٠﴾ ۙ وَّجَعَلَنِيْ
مُبٰرَكًا اَيْنَ مَا كُنْتُ ۠ وَاَوْصٰنِيْ بِالصَّلٰوةِ وَالزَّكٰوةِ مَا دُمْتُ
حَيًّا ﴿٣١﴾ ۙ وَّبَرًّا بِوَالِدَتِيْ ۡ وَلَمْ يَجْعَلْنِيْ جَبَّارًا شَقِيًّا ﴿٣٢﴾ وَالسَّلٰمُ
عَلَيَّ يَوْمَ وُلِدْتُّ وَيَوْمَ اَمُوْتُ وَيَوْمَ اُبْعَثُ حَيًّا ﴿٣٣﴾ ذٰلِكَ
عِيْسَى ابْنُ مَرْيَمَ ۚ قَوْلَ الْحَقِّ الَّذِيْ فِيْهِ يَمْتَرُوْنَ ﴿٣٤﴾ مَا كَانَ
لِلّٰهِ اَنْ يَّتَّخِذَ مِنْ وَّلَدٍ ۙ سُبْحٰنَهٗ ۭ اِذَا قَضٰٓى اَمْرًا فَاِنَّمَا يَقُوْلُ
لَهٗ كُنْ فَيَكُوْنُ ﴿٣٥﴾ ۭ وَاِنَّ اللّٰهَ رَبِّيْ وَرَبُّكُمْ فَاعْبُدُوْهُ ۭ هٰذَا
صِرَاطٌ مُّسْتَقِيْمٌ ﴿٣٦﴾ فَاخْتَلَفَ الْاَحْزَابُ مِنْۢ بَيْنِهِمْ ۚ فَوَيْلٌ
لِّلَّذِيْنَ كَفَرُوْا مِنْ مَّشْهَدِ يَوْمٍ عَظِيْمٍ ﴿٣٧﴾ اَسْمِعْ بِهِمْ وَاَبْصِرْ ۙ
يَوْمَ يَاْتُوْنَنَا لٰكِنِ الظّٰلِمُوْنَ الْيَوْمَ فِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿٣٨﴾

26. "அப்போது, (அப்பழங்களை) நீர் உண்பீராக! இன்னும், (ஊற்றின் நீரைக்) குடித்துக்கொள்வீராக! (இக்குழந்தையினால் உம்) கண் குளிர்ந்துமிருப்பீராக! பின்னர், மனிதர்களில் எவரையேனும் நிச்சயமாக நீர் கண்டால், நான் அர்ரஹ்மானுக்கு நோன்பை நேர்ச்சை செய்திருக்கின்றேன்; ஆகவே, இன்றையத் தினம் எந்தமனிதருடனும் நான் பேசவே மாட்டேன் என்று (சைகை மூலம்) கூறிவிடுவீராக!" (என்றும் கூறினார்.)

27. (அக்குழந்தையைப் பிரசவித்த) பின்னர், அவர் (மர்யம்) அதைச் சுமந்து கொண்டு தன் சமூகத்தாரிடம் வந்தார்; அவர்கள் (இவரை நோக்கி,) " மர்யமே! நிச்சயமாக மறுக்கப்பட்ட (இழிவான ஒரு பெருங்) காரியத்தை நீர் கொண்டுவந்து விட்டீர்" என்று கூறினார்கள்.

28. "ஹாரூனுடைய சகோதரியே! உன் தந்தை கெட்டமனிதராக இருக்கவில்லை(யே)! உன் தாயும் நடத்தை கெட்டவராக இருக்கவில்லை" என்று (நிந்தித்துக்) கூறினார்கள்.

29. (இதைப்பற்றித் தன் குழந்தையிடமே கேட்குமாறு மர்யமாகிய) அவர் அதன் பக்கம் சுட்டிக் காண்பித்தார்; அ(தற்க)வர்கள், " மடியில் குழந்தையாக இருப்பவரிடம் நாங்கள் எவ்வாறு பேசுவோம்?" என்று கூறினார்கள்.

30. (அப்பொழுது அவர்களிடம்) "நிச்சயமாக நான், அல்லாஹ்வுடைய அடியான்; அவன் எனக்கு ஒரு வேதத்தைக் கொடுத்து நபியாகவும் என்னை அவன் ஆக்கி இருக்கிறான்" என்று (அக்குழந்தை) கூறியது.

31. "நான் எங்கிருந்த போதிலும், அவன் என்னை (மிக்க) பரக்கத்துச் செய்யப்பட்டவனாகவும் ஆக்கியிருக்கிறான்; நான் ஜீவித்திருக்கும் காலமெல்லாம் தொழுகையை (நிறைவேற்றுவது) க்கொண்டும், ஜகாத்தைக் (கொடுத்துவருவது) கொண்டும் அவன் எனக்கு உபதேசம் செய்திருக்கிறான்.

32. "இன்னும், என்னுடைய தாயாருக்கு நான் நன்றி செய்பவனாகவும், (என்னை ஆக்கினான்.) பெருமைக்காரனாக(வோ), துர்ப்பாக்கிய முள்ளவனாக(வோ) அவன் என்னை ஆக்கவில்லை.

33. "நான் பிறந்த நாளிலும், நான் இறக்கும் நாளிலும் (மறுமையில்) நான் உயிர்பெற்றவனாக எழுப்பப்படும் நாளிலும், (அல்லாஹ்வின்) சாந்தி என் மீது உண்டாவதாக" (என்றும் கூறியது).

34. அவர்தான் மர்யமுடைய மகன் ஈஸா (ஆவார்); எதில் அவர்கள் (சந்தேகித்து) தர்க்கித்துக் கொண்டிருக்கிறார்களோ, அது பற்றிய உண்மையான சொல் இதுதான்.

35. அல்லாஹ்விற்கு — எந்த ஒரு புதல்வனையும் —அவன் எடுத்துக் கொள்ள வேண்டியது (அவசியம்) இல்லை; அவன் மிகப் பரிசுத்தமானவன்; அவன் ஒருகாரியத்தை முடிவு செய்தால், அவன் அதற்குச் சொல்லுவதெல்லாம் "ஆகுக"! என்பதுதான். (உடனே) அது ஆகிவிடும்.

36. (மனிதர்களே!)" நிச்சயமாக அல்லாஹ்தான் என்னுடைய இரட்சகனும், உங்களின் இரட்சகனுமாவான்; (ஈஸாவாகிய நானல்ல;) ஆகவே, அ(வன் ஒரு)வனையே நீங்கள் வணங்குங்கள்; இதுதான் நேரான வழி" (என்று ஈஸா கூறினார்).

37. ஆனால் , அவர்களிலுள்ள (பல்வேறுகருத்துக்கொண்ட) கூட்டத்தார்கள் (இதைப்பற்றி) தங்களுக்கிடையே கருத்துவேறுபாடு கொண்டனர் ;ஆகவே ( நாம் கூறிய இதனை) நிராகரிப்போருக்கு மகத்தான (மறுமை) நாளின் (பெரும்) காட்சியை காணுமிடத்தில் கேடுதான் (உண்டு).

38. நம்மிடம் அவர்கள் வரும் (மறுமை) நாளில் அவர்களைக் கேட்கச்செய்ததும், பார்க்கச்செய்ததும் எது? (நன்றாகக் கேட்கவும், பார்க்கவும் செய்வார்கள்.) எனினும், அந்த அநியாயக்காரர்கள் இன்றையத்தினம் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்.

وَاَنۡذِرۡهُمۡ يَوۡمَ الۡحَسۡرَةِ اِذۡ قُضِىَ الۡاَمۡرُ‌ۘ وَهُمۡ فِىۡ غَفۡلَةٍ وَّهُمۡ وقف لازم
لَا يُؤۡمِنُوۡنَ ﴿۳۹﴾ اِنَّا نَحۡنُ نَرِثُ الۡاَرۡضَ وَمَنۡ عَلَيۡهَا وَاِلَيۡنَا
يُرۡجَعُوۡنَ ﴿۴۰﴾ ع وَاذۡكُرۡ فِى الۡكِتٰبِ اِبۡرٰهِيۡمَ ؕ اِنَّهٗ كَانَ صِدِّيۡقًا ع ۲ ۵
نَّبِيًّا ﴿۴۱﴾ اِذۡ قَالَ لِاَبِيۡهِ يٰۤاَبَتِ لِمَ تَعۡبُدُ مَا لَا يَسۡمَعُ وَلَا يُبۡصِرُ وَ
لَا يُغۡنِىۡ عَنۡكَ شَيۡــًٔا ﴿۴۲﴾ يٰۤاَبَتِ اِنِّىۡ قَدۡ جَآءَنِىۡ مِنَ الۡعِلۡمِ مَا لَمۡ
يَاۡتِكَ فَاتَّبِعۡنِىۡۤ اَهۡدِكَ صِرَاطًا سَوِيًّا ﴿۴۳﴾ يٰۤاَبَتِ لَا تَعۡبُدِ الشَّيۡطٰنَ‌ؕ
اِنَّ الشَّيۡطٰنَ كَانَ لِلرَّحۡمٰنِ عَصِيًّا ﴿۴۴﴾ يٰۤاَبَتِ اِنِّىۡۤ اَخَافُ اَنۡ
يَّمَسَّكَ عَذَابٌ مِّنَ الرَّحۡمٰنِ فَتَكُوۡنَ لِلشَّيۡطٰنِ وَلِيًّا ﴿۴۵﴾ قَالَ اَرَاغِبٌ
اَنۡتَ عَنۡ اٰلِهَتِىۡ يٰۤـاِبۡرٰهِيۡمُ‌ۚ لَـئِنۡ لَّمۡ تَنۡتَهِ لَاَرۡجُمَنَّكَ‌ وَاهۡجُرۡنِىۡ مَلِيًّا ﴿۴۶﴾
قَالَ سَلٰمٌ عَلَيۡكَ‌ۚ سَاَسۡتَغۡفِرُ لَـكَ رَبِّىۡ‌ؕ اِنَّهٗ كَانَ بِىۡ حَفِيًّا ﴿۴۷﴾ وَ
اَعۡتَزِلُكُمۡ وَمَا تَدۡعُوۡنَ مِنۡ دُوۡنِ اللّٰهِ وَاَدۡعُوۡا رَبِّىۡ ۖ عَسٰۤى اَلَّاۤ
اَكُوۡنَ بِدُعَآءِ رَبِّىۡ شَقِيًّا ﴿۴۸﴾ فَلَمَّا اعۡتَزَلَهُمۡ وَمَا يَعۡبُدُوۡنَ مِنۡ
دُوۡنِ اللّٰهِ ۙ وَهَبۡنَا لَهٗۤ اِسۡحٰقَ وَيَعۡقُوۡبَ‌ؕ وَكُلًّا جَعَلۡنَا نَبِيًّا ﴿۴۹﴾
وَوَهَبۡنَا لَهُمۡ مِّنۡ رَّحۡمَتِنَا وَجَعَلۡنَا لَهُمۡ لِسَانَ صِدۡقٍ عَلِيًّا ﴿۵۰﴾ ع ع ۳ ۶
وَاذۡكُرۡ فِى الۡكِتٰبِ مُوۡسٰٓى‌ اِنَّهٗ كَانَ مُخۡلَصًا وَّكَانَ رَسُوۡلًا نَّبِيًّا ﴿۵۱﴾

39. மேலும் (நபியே! நியாயத் தீர்ப்பளிக்கப்பட்டு)காரியம் முடிக்கப் பட்டுவிடும்போது மிக்க கைசேதமான (அந்த) நாளைப்பற்றி நீர் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! இன்னும், (இன்றையத் தினம்) அவர்கள் (அதுபற்றி) மறதியில் இருக்கிறார்கள்; அவர்களோ விசுவாசங் கொள்ள மாட்டார்கள்.

40. நிச்சயமாக, நாமே பூமியையும், அதன் மீதிருப்பவர்களையும் வாரிசாக்கி (அனந்தரமாக்கி)க் கொள்வோம்; அவர்கள் (யாவரும்) நம்மிடமே மீட்க(ப்பட்டுக் கொண்டுவர)ப்படுவார்கள்.

41. மேலும், (நபியே!) இவ்வேதத்தில், இப்றாஹீமை(ப் பற்றி) நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் மிக்க உண்மையாளராக, நபியாக இருந்தார்.

42. அவர் தன் தந்தையிடம், "என் தந்தையே! எதையும் செவியேற்காத, மற்றும் (எதையும்) பார்க்காத, (நன்மையை ஈர்த்தும், தீமையைத்தடுத்தும்) உம்மைவிட்டும் எதையும் தடுக்காததை நீர் ஏன் வணங்குகிறீர்?" என்று கூறியதை (நபியே!நினைவு கூர்வீராக! அப்போது)

43. " என் தந்தையே! நிச்சயமாக நான்_என்னிடம் அறிவிலிருந்து உமக்கு வந்திராதது திட்டமாக வந்திருக்கிறது; ஆகவே நீர்என்னைப் பின்பற்றுவீராக! (அப்பொழுது) நான் உமக்கு செவ்வையான வழியைக் காட்டுவேன்(என்றும்),

44. " என் தந்தையே! ஷைத்தானை நீர் வணங்காதீர்; நிச்சயமாக ஷைத்தான் மிகக்கிருபையுடையோ(னாகிய ரஹ்மா)னுக்கு மாறு செய்பவனாக இருக்கிறான்(என்றும்),

45. "என் தந்தையே! மிகக்கிருபையுடையவனிலிருந்து வேதனை உம்மைப் பிடித்து (அதனால்) ஷைத்தானுக்கு நீர் சினேகிதராகிவிடுவதை நிச்சயமாக நான் பயப்படுகிறேன்"(என்றும் கூறியபோது),

46. (அதற்கு) அவர்(தந்தை)," இப்றாஹீமே! நீர் என்னுடைய (வணக்கத்திற்குரிய) தெய்வங்களைப் புறக்கணிக்கின்றீரா? நீர் இ(வ்வெண்ணத்)திலிருந்து விலகிக்கொள்ளாவிடில் உம்மைக்கல்லால் எறி(ந்து கொல்)வேன்; (இனி) நீர் என்னை விட்டு நெடுங்காலத்திற்கு விலகிப் போய்விடும்," என்று கூறினார்.

47.(அதற்கு இப்றாஹீம்)" உம்மீது சாந்தி உண்டாவதாக!(பின்னர்,) நான் உமக்காக என் இரட்சகனிடத்தில் பாவமன்னிப்புக் கோருவேன்; நிச்சயமாக அவன் என்னுடன் இரக்கமுடையோனாக இருக்கிறான்" என்று கூறினார்.

48. " உங்களையும், அல்லாஹ்வையன்றி நீங்கள் (தெய்வமென) அழைப்பவைகளையும் விட்டு நான் விலகிக்கொள்கிறேன்; என் இரட்சகனையே நான் பிரார்த்தித்துக் கொண்டிருப்பேன்;என் இரட்சகனைப் பிரார்த்திப்பது கொண்டு நான் துர்ப்பாக்கியமுடையவனாக ஆகாமல் இருக்கப்போதும் (என்றும் கூறினார்).

49. பின்னர் அவர், அவர்களையும், அல்லாஹ்வையன்றி அவர்கள் வணங்கிக் கொண்டிருந்தவற்றையும் விட்டு விலகிக் கொண்ட போது, இஸ்ஹாக்கையும், யஃகூபையும் அவருக்கு(ச்சந்ததிகளாக) நாம் அன்பளிப்பாக அளித்தோம்.; அவர்கள் ஒவ்வொருவரையும் நபியாக நாம் ஆக்கினோம்.

50. இன்னும், அவர்களுக்கு நம் அருளிலிருந்து அன்பளிப்பாகக் கொடுத்தோம்; (எல்லாச் சமூகத்தாரிடத்தும்) உயர்வான நற்பெயரையும் நாம் அவர்களுக்கு ஆக்கினோம்.

51. மேலும், இவ்வேதத்தில் மூஸாவைப்பற்றி (நபியே!) நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருந்தார்; இன்னும், அவர் (நம்முடைய) தூதராக, நபியாக இருந்தார்.

وَنَادَيْنٰهُ مِنْ جَانِبِ الطُّوْرِ الْاَيْمَنِ وَقَرَّبْنٰهُ نَجِيًّا ﴿۵۲﴾ وَ
وَهَبْنَا لَهٗ مِنْ رَّحْمَتِنَآ اَخَاهُ هٰرُوْنَ نَبِيًّا ﴿۵۳﴾ وَاذْكُرْ فِي الْكِتٰبِ
اِسْمٰعِيْلَ اِنَّهٗ كَانَ صَادِقَ الْوَعْدِ وَكَانَ رَسُوْلًا نَّبِيًّا ﴿۵۴﴾ وَ
كَانَ يَاْمُرُ اَهْلَهٗ بِالصَّلٰوةِ وَالزَّكٰوةِ وَكَانَ عِنْدَ رَبِّهٖ مَرْضِيًّا ﴿۵۵﴾
وَاذْكُرْ فِي الْكِتٰبِ اِدْرِيْسَ اِنَّهٗ كَانَ صِدِّيْقًا نَّبِيًّا ﴿۵۶﴾ وَّرَفَعْنٰهُ
مَكَانًا عَلِيًّا ﴿۵۷﴾ اُولٰٓئِكَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ
مِنْ ذُرِّيَّةِ اٰدَمَ وَمِمَّنْ حَمَلْنَا مَعَ نُوْحٍ وَّمِنْ ذُرِّيَّةِ اِبْرٰهِيْمَ
وَاِسْرَآءِيْلَ وَمِمَّنْ هَدَيْنَا وَاجْتَبَيْنَا اِذَا تُتْلٰى عَلَيْهِمْ اٰيٰتُ
الرَّحْمٰنِ خَرُّوْا سُجَّدًا وَّبُكِيًّا ﴿۵۸﴾ السجدة فَخَلَفَ مِنْ بَعْدِهِمْ خَلْفٌ
اَضَاعُوا الصَّلٰوةَ وَاتَّبَعُوا الشَّهَوٰتِ فَسَوْفَ يَلْقَوْنَ غَيًّا ﴿۵۹﴾
اِلَّا مَنْ تَابَ وَاٰمَنَ وَعَمِلَ صَالِحًا فَاُولٰٓئِكَ يَدْخُلُوْنَ
الْجَنَّةَ وَلَا يُظْلَمُوْنَ شَيْئًا ﴿۶۰﴾ جَنّٰتِ عَدْنِ ﹰالَّتِيْ وَعَدَ
الرَّحْمٰنُ عِبَادَهٗ بِالْغَيْبِ اِنَّهٗ كَانَ وَعْدُهٗ مَاْتِيًّا ﴿۶۱﴾ لَا يَسْمَعُوْنَ
فِيْهَا لَغْوًا اِلَّا سَلٰمًا وَلَهُمْ رِزْقُهُمْ فِيْهَا بُكْرَةً وَّعَشِيًّا ﴿۶۲﴾
تِلْكَ الْجَنَّةُ الَّتِيْ نُوْرِثُ مِنْ عِبَادِنَا مَنْ كَانَ تَقِيًّا ﴿۶۳﴾

السجدة

52. இன்னும் தூர்(ஸினாய்) மலையின் வலப் பக்கத்திலிருந்து அவரை நாம் கூப்பிட்டோம்; இரகசியம் பேசுகிறவராக அவரை நாம்(நமக்கு) நெருக்கமாக்கியும் வைத்தோம்.

53. மேலும், நம் அருளிலிருந்து அவருடைய சகோதரர் ஹாரூனை நபியாக அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தோம்.

54. மேலும், இவ்வேதத்தில் இஸ்மாயீலைப் பற்றி(நபியே!) நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் வாக்குறுதியில் உண்மையானவராக இருந்தார்; இன்னும் அவர், (நம்முடைய) தூதராக, நபியாக இருந்தார்.

55. இன்னும், அவர் தன் குடும்பத்தினரை, தொழுகையை (நிறைவேற்றுவது)க்கொண்டும், ஜகாத்தைக்(கொடுத்து வருவது) கொண்டும் ஏவுகிறவாராக இருந்தார்; அவர் தன் இரட்சகனிடத்தில் பொருந்திக் கொள்ளப்பட்டவராகவும் இருந்தார்.

56. மேலும், இத்ரீஸைப் பற்றி(நபியே!) இவ்வேதத்தில் நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் மிக்க உண்மையாளராக, (நம்முடைய) நபியாக இருந்தார்.
57. மேலும், அவரை மிக்க மேலான இடத்திற்கு நாம் உயர்த்திவிட்டோம்.

58. (மேற் கூறப்பட்ட) அவர்கள் எத்தகையோரென்றால், ஆதமுடைய சந்ததியிலுள்ள நபிமார்களிலிருந்தும், (நபி) நூஹ்வுடன் கப்பலில் நாம் ஏற்றிக் கொண்டவர்களி(ன் சந்ததிகளி)லிருந்தும், இப்றாஹீம், இஸ்ராயீலின் சந்ததியிலிருந்தும் நாம் நேர் வழியில் செலுத்தி, நாம் தேர்ந்தெடுத்தவர் களிலுமிருந்து (ம் உள்ளோராவர்) அவர்களின் மீது அல்லாஹ் அருள் செய்து விட்டான். அவர்கள் மீது அர்ரஹ்மானுடைய வசனங்கள் ஓதிக்காண்பிக்கப் பட்டால் (சிரம் பணிந்து) ஸுஜூது செய்தவர்களாக; மற்றும் அழுதவர்களாக விழுந்து விடுவார்கள்.

59. இவர்களுக்குப் பின்னர், (வழிகெட்ட) தீய பின் தோன்றல்கள் இவர்களுடைய இடத்தை அடைந்தார்கள்; தொழுகையை (த் தொழாது) வீணாக்கினார்கள்; மனோ இச்சைகளையும்பின்பற்றினார்கள்; ஆகவே அவர்கள் (மறுமையில்) பெரும் தீமையைச் சந்திப்பார்கள்.

60. (ஆயினும்,) அவர்களில் எவர் (பச்சாதாபப்பட்டு) தவ்பாச் செய்து, விசுவாசமுங் கொண்டு, நற்கருமங்களையும் செய்தார்களோ அவர்களைத்தவிர; அத்தகையோர் சுவனத்தில் பிரவேசிப்பார்கள்; இன்னும் அவர்கள் ஒரு சிறிதும் அநியாயம் செய்யப்படமாட்டார்கள்.

61. "அத்னு" என்ற (நிலையான) சொர்க்கங்கள் (அவர்களுக்கு கூலியாகும்) _ அவை எத்தகையவை யென்றால், ரஹ்மான் தன் (நல்) அடியார்களுக்கு(அவை) மறைவாக இருக்கும் நிலையில் வாக்களித்துள்ளான்; நிச்சயமாக அவனுடைய வாக்கு வரக்கூடியதாகவே உள்ளது.

62. அவற்றில் அவர்கள் ஸலாம் (எனும் சாந்தி) என்பதைத் தவிர (வார்த்தைகளால்வேறு) வீணானதைச் செவியேற்கமாட்டார்கள்; அவற்றில் அவர்களுக்குக்காலையிலும், மாலையிலும் (மிக்க மேலான) உணவும் உண்டு.

63. அந்தசொர்க்கம் எத்தகையதென்றால், நம் அடியார்களில் பயபக்தியுடைய வர்களுக்கு (அதை)நாம் அனந்தரமாக்கிவிடுவோம்.

وَمَا نَتَنَزَّلُ اِلَّا بِاَمْرِ رَبِّكَ ۚ لَهٗ مَا بَيْنَ اَيْدِيْنَا وَمَا خَلْفَنَا
وَمَا بَيْنَ ذٰلِكَ ۚ وَمَا كَانَ رَبُّكَ نَسِيًّا ﴿٦٤﴾ ۚ رَبُّ السَّمٰوٰتِ وَ
الْاَرْضِ وَمَا بَيْنَهُمَا فَاعْبُدْهُ وَاصْطَبِرْ لِعِبَادَتِهٖ ؕ هَلْ تَعْلَمُ
لَهٗ سَمِيًّا ﴿٦٥﴾ ع وَيَقُوْلُ الْاِنْسَانُ ءَاِذَا مَا مِتُّ لَسَوْفَ اُخْرَجُ حَيًّا ﴿٦٦﴾ ع
اَوَلَا يَذْكُرُ الْاِنْسَانُ اَنَّا خَلَقْنٰهُ مِنْ قَبْلُ وَلَمْ يَكُ شَيْـًٔا ﴿٦٧﴾
فَوَرَبِّكَ لَنَحْشُرَنَّهُمْ وَالشَّيٰطِيْنَ ثُمَّ لَنُحْضِرَنَّهُمْ حَوْلَ جَهَنَّمَ
جِثِيًّا ﴿٦٨﴾ ۚ ثُمَّ لَنَنْزِعَنَّ مِنْ كُلِّ شِيْعَةٍ اَيُّهُمْ اَشَدُّ عَلَى الرَّحْمٰنِ
عِتِيًّا ﴿٦٩﴾ ۚ ثُمَّ لَنَحْنُ اَعْلَمُ بِالَّذِيْنَ هُمْ اَوْلٰى بِهَا صِلِيًّا ﴿٧٠﴾ وَاِنْ
مِّنْكُمْ اِلَّا وَارِدُهَا ۚ كَانَ عَلٰى رَبِّكَ حَتْمًا مَّقْضِيًّا ﴿٧١﴾ ۚ ثُمَّ نُنَجِّى
الَّذِيْنَ اتَّقَوْا وَّنَذَرُ الظّٰلِمِيْنَ فِيْهَا جِثِيًّا ﴿٧٢﴾ وَاِذَا تُتْلٰى عَلَيْهِمْ
اٰيٰتُنَا بَيِّنٰتٍ قَالَ الَّذِيْنَ كَفَرُوْا لِلَّذِيْنَ اٰمَنُوْٓا ۙ اَيُّ الْفَرِيْقَيْنِ
خَيْرٌ مَّقَامًا وَّاَحْسَنُ نَدِيًّا ﴿٧٣﴾ وَكَمْ اَهْلَكْنَا قَبْلَهُمْ مِّنْ قَرْنٍ هُمْ
اَحْسَنُ اَثَاثًا وَّرِءْيًا ﴿٧٤﴾ قُلْ مَنْ كَانَ فِى الضَّلٰلَةِ فَلْيَمْدُدْ لَهُ
الرَّحْمٰنُ مَدًّا ۚ حَتّٰٓى اِذَا رَاَوْا مَا يُوْعَدُوْنَ اِمَّا الْعَذَابَ وَاِمَّا
السَّاعَةَ ؕ فَسَيَعْلَمُوْنَ مَنْ هُوَ شَرٌّ مَّكَانًا وَّاَضْعَفُ جُنْدًا ﴿٧٥﴾

64. மேலும், (ஜிப்ரீலானவர், நபியிடம்) உமதிரட்சகனின் கட்டளையைக் கொண்டல்லாது நாம் இறங்குவதில்லை; எங்களுக்கு முன்னிருப்பவைகளும், பின்னிருப்பவைகளும், இவ்விரண்டிற்கு மத்தியிலிருப்பவைகளும் அவனுக்குச் சொந்தமானவைகளாக இருக்கின்றன; மேலும், (இதில் யாதொன்றையும்) உமதிரட்சகன் மறப்பவனாக இல்லை(என்று கூறினார்).

65. வானங்களுக்கும், பூமிக்கும் அவை இரண்டிற்கு மத்தியிலுள்ளவைகளுக்கும் (அவனே) இரட்சகனாவான்; ஆதலால் அ(வன் ஒரு)வனையே நீர் வணங்குவீராக! அவனை வணங்குவதில் (உமக்கு ஏற்படும் கஷ்டங்களையும்) நீர் பொறுத்துக்கொள்வீராக; (பெயரில், வல்லமையில் மற்றும் அனைத்துப் பண்புகளில்) அவனுக்கு ஒப்பானவனை நீர் அறிவீரா? (இவற்றில் ஒப்பானவர் அவனுக்கு நிகராக எவருமே இல்லை)

66. (இவ்வாறிருக்க) "மனிதன் நான் இறந்துவிட்டால், பின்னர் உயிருள்ளவனாக வெளியாக்கப்படுவேனா?" என்று கேட்கிறான்.

67. (அதற்கு) "முன்னர் யாதொரு பொருளாகவும் இல்லாதிருக்க, நாம் தான் அவனைப் படைத்தோம் என்பதை மனிதன் நினைத்துப்பார்க்க வேண்டாமா?"

68. ஆகவே (நபியே!) உமதிரட்சகன்மீது சத்தியமாக! நாம் அவர்களையும் (அவர்கள் வணங்கிக் கொண்டிருக்கிற) ஷைத்தான்களையும் நிச்சயமாக (உயிர் கொடுத்து) ஒன்று திரட்டுவோம்; பின்னர் நரகத்தைச் சூழ முழந்தாளிட்டவர்களாக அவர்களை நாம் நிச்சயமாக முன்னிலைப் படுத்துவோம்.

69. பின்னர், ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் அவர்களில் எவர் ரஹ்மானுக்கு மாறு செய்வதில் மிகக்கடினமானவரோ அவரை நிச்சயமாக நாம் (பிரித்து) கழற்றி எடுத்துவிடுவோம்.

70. பின்னர், அ(ந்நரகத்)தில் நுழைவதற்கு எவர்கள் மிகத் தகுதியுடையோரோ, அவர்களை நிச்சயமாக நாம் அறிவோம்.

71. இன்னும், உங்களில் எவரும் (ஸிராத் எனும் பாலமான) அதற்கு வரக்கூடியவராகவேயல்லாது இல்லை; உமது இரட்சகன் மீது இது கட்டாயமான முடிவு செய்யப்பட்டதாக ஆகிவிட்டது.

72. (அவ்வாறுவந்ததன்) பின்னர் பயபக்தியுடையோராக இருந்தார்களே அவர்களை நாம் ஈடேற்றுவோம்; அநியாயக்காரர்களை முழந்தாளிட்டவர்களாக அதில் விட்டும்விடுவோம்.

73. மேலும், அவர்கள் மீது நம்முடைய வசனங்கள் தெளிவானவையாக ஓதப்பட்டால், விசுவாசிகளிடம் நிராகரிப்பவர்கள், நம் இரு வகுப்பாரில் தங்குமிடத்தால் மிகச் சிறந்தவர் யார், இன்னும் சபையால் மிக்க அழகானவர் யார்? என்று கூறுகின்றனர்.

74. இன்னும், அவர்களுக்கு முன்னர் நாம் எத்தனையோ கூட்டத்தாரை அழித்திருக்கின்றோம்; அவர்கள் தளவாடங்களாலும், தோற்றத்தாலும் மிக அழகானவர்கள்(ஆவர்).

75. "எவர் வழிகேட்டிலிருக்கிறாரோ அவருக்கு அர்ரஹ்மான் கால அவகாசத்தை நீட்டிவிடுகிறான்; முடிவாக அவர்கள் வாக்களிக்கப்பட்டதை_(அதாவது) ஒன்று: இம்மையில் வேதனையை, மற்றொன்று: மறுமையை அவர்கள் கண்டுவிட்டால்_ அப்போது இடத்தால் கெட்டவர் யார்? படையால் மிகவும் பலவீனமானவர் யார்? என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்" (என்று நபியே!) நீர் (அவர்களுக்குக்)கூறுவீராக!

وَيَزِيْدُ اللّٰهُ الَّذِيْنَ اهْتَدَوْا هُدًى ۭ وَالْبٰقِيٰتُ الصّٰلِحٰتُ
خَيْرٌ عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَّخَيْرٌ مَّرَدًّا ﴿٧٦﴾ اَفَرَءَيْتَ الَّذِيْ كَفَرَ
بِاٰيٰتِنَا وَقَالَ لَاُوْتَيَنَّ مَالًا وَّوَلَدًا ﴿٧٧﴾ ۭ اَطَّلَعَ الْغَيْبَ اَمِ اتَّخَذَ
عِنْدَ الرَّحْمٰنِ عَهْدًا ﴿٧٨﴾ ۙ كَلَّا ۭ سَنَكْتُبُ مَا يَقُوْلُ وَنَمُدُّ لَهٗ مِنَ
الْعَذَابِ مَدًّا ﴿٧٩﴾ ۙ وَّنَرِثُهٗ مَا يَقُوْلُ وَيَاْتِيْنَا فَرْدًا ﴿٨٠﴾ وَاتَّخَذُوْا
مِنْ دُوْنِ اللّٰهِ اٰلِهَةً لِّيَكُوْنُوْا لَهُمْ عِزًّا ﴿٨١﴾ ۙ كَلَّا ۭ سَيَكْفُرُوْنَ
بِعِبَادَتِهِمْ وَيَكُوْنُوْنَ عَلَيْهِمْ ضِدًّا ﴿٨٢﴾ ع اَلَمْ تَرَ اَنَّآ اَرْسَلْنَا الشَّيٰطِيْنَ ع ٥/٧ ٨
عَلَى الْكٰفِرِيْنَ تَؤُزُّهُمْ اَزًّا ﴿٨٣﴾ ۙ فَلَا تَعْجَلْ عَلَيْهِمْ ۭ اِنَّمَا نَعُدُّ لَهُمْ عَدًّا ﴿٨٤﴾ ج
يَوْمَ نَحْشُرُ الْمُتَّقِيْنَ اِلَى الرَّحْمٰنِ وَفْدًا ﴿٨٥﴾ ۙ وَّنَسُوْقُ الْمُجْرِمِيْنَ
اِلٰى جَهَنَّمَ وِرْدًا ﴿٨٦﴾ ۘ لَا يَمْلِكُوْنَ الشَّفَاعَةَ اِلَّا مَنِ اتَّخَذَ عِنْدَ وقف لازم
الرَّحْمٰنِ عَهْدًا ﴿٨٧﴾ ۘ وَقَالُوا اتَّخَذَ الرَّحْمٰنُ وَلَدًا ﴿٨٨﴾ ۭ لَقَدْ جِئْتُمْ شَيْـًٔا وقف لازم
اِدًّا ﴿٨٩﴾ ۙ تَكَادُ السَّمٰوٰتُ يَتَفَطَّرْنَ مِنْهُ وَتَنْشَقُّ الْاَرْضُ وَتَخِرُّ الْجِبَالُ
هَدًّا ﴿٩٠﴾ ۙ اَنْ دَعَوْا لِلرَّحْمٰنِ وَلَدًا ﴿٩١﴾ ۚ وَمَا يَنْۢبَغِيْ لِلرَّحْمٰنِ اَنْ يَّتَّخِذَ وَلَدًا ﴿٩٢﴾ ۭ
اِنْ كُلُّ مَنْ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ اِلَّآ اٰتِي الرَّحْمٰنِ عَبْدًا ﴿٩٣﴾ ۭ لَقَدْ
اَحْصٰىهُمْ وَعَدَّهُمْ عَدًّا ﴿٩٤﴾ ۭ وَكُلُّهُمْ اٰتِيْهِ يَوْمَ الْقِيٰمَةِ فَرْدًا ﴿٩٥﴾

76. இன்னும், நேர் வழியில் செல்கிறார்களே அத்தகையோருக்கு அல்லாஹ் (மேலும்) நேர் வழியை அதிகப்படுத்துகிறான்; நிலையாக இருக்கக்கூடிய நற்செயல்கள் தாம் உம்முடைய இரட்சகனிடத்தில் நற்கூலியால் மிகச் சிறந்ததாகும்; திரும்பிச் செல்லும் இடத்தாலும் மிகச் சிறந்ததாகும்.
77. (நபியே) நம்முடைய வசனங்களை நிராகரித்தோனை நீர் பார்த்தீரா? அவன் (மறுமையிலும்) நான் நிச்சயமாக செல்வமும், பிள்ளையும் கொடுக்கப்படுவேன் எனவும் கூறினான்.
78. (மறுமையில் அவன் கூறியது போன்றதுஉண்டா? என்ற) மறைவானதை அவன் அறிந்திருக்கின்றானா?அல்லது அர்ரஹ்மானிடத்தில் அதுபற்றியதொரு உறுதி மொழியைப் பெற்றிருக்கின்றானா?
79. (அவன் கூறுகிற அவ்வாறு) அன்று! அவன் கூறுகின்றவற்றை நாம் எழுதி வருவோம்; (அதற்குத் தக்கவாறு) வேதனையிலிருந்து நாம் அவனுக்கு மிக மிகஅதிகப் படுத்தியும் விடுவோம்.
80. இன்னும், அவன் கூறுகின்றவற்றுக்கு நாமே அனந்தரங் கொண்டு விடுவோம்; (இவைகளை இழந்துவிட்டு) தனியாகவே நம்மிடம் அவன் வருவான்.
81. (இணை வைத்துக்கொண்டிருந்த) இவர்கள், (அல்லாஹ்வின் வேதனையிலிருந்து காத்து) தங்களுக்கு உதவியாக அவர்கள் ஆவதற்காக அல்லாஹ்வையன்றி வேறு தெய்வங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.
82. அவ்வாறன்று! தங்களை இவர்கள் வணங்கியதையும் (அத்தெய்வங்கள்) நிராகரிப்பார்கள்; இவர்களுக்கு விரோதமாகவும் அவர்கள் ஆகிவிடுவர்.
83. (நபியே!) நிராகரிப்போரை (தீயவைகளைச் செய்யுமாறு) தூண்டிக் கொண்டிருப்பதற்காகவே ஷைத்தான்களை நாம் (அவர்களிடம்) அனுப்பியிருக்கிறோம் என்பதை நீர் பார்க்கவில்லையா?
84. ஆதலால், அவர்களுக்காக நீர் அவசரப்படாதீர்; அவர்களுக்காக (வேதனை ஏற்படக்கூடிய நாட்களை) எண்ணிக்கையால் நாம் கணித்துக் கொண்டேயிருக்கிறோம்.
85. பயபக்தியுடையவர்களை அர்ரஹ்மானிடம், கண்ணியமிக்க (விருந்தினர்) குழுவாக நாம் ஒன்று திரட்டும் நாளில்_
86. மேலும், குற்றவாளிகளைத் தாகித்தவர்களாக நரகத்தின்பால்(அந் நாளில்) நாம் ஓட்டிச் செல்வோம்.
87. அர்ரஹ்மானிடம் உறுதிமொழி பெற்றவர்களைத் தவிர எவரும்,(எவருக்கும்) பரிந்துரை செய்ய அதிகாரம் பெறமாட்டார்கள்.
88. இன்னும், (கிறிஸ்தவர்களான) அவர்கள் ரஹ்மான் (தனக்கு) குமாரனை எடுத்துக்கொண்டான் எனக் கூறுகின்றனர்.
89. நிச்சயமாக நீங்கள் பெரியதோர் அபாண்டத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள் (என்று நபியே! அவர்களிடம் நீர் கூறுவீராக!)
90. இ(வ்வாறு நீங்கள் கூறுவ)தனால் வானங்கள் வெடித்துவிடவும், பூமி பிளந்து விடவும், மலைகள் இடிந்து நொறுங்கி விடவும் நெருங்கிவிடும்.
91. ரஹ்மானுக்கு குமாரன் உண்டென்று அவர்கள் அழைத்ததன் காரணமாக (அவை நிகழக் கூடும்).
92. குமாரனை எடுத்துக்கொள்வது அர்ரஹ்மானுக்கு அவசியமுமல்ல.
93. (ஏனென்றால்,) வானங்களிலும், பூமியிலும் உள்ள (மனிதர்கள், ஜின் இனத்தவர், அமரர்கள் ஆகியோரில்) ஒவ்வொருவரும் அர்ரஹ்மானிடம் அடிமையாக வந்தேயல்லாமல் (வேறு) இல்லை.
94. அவர்களை திட்டமாக அவன்( பூரணமாக) சூழ்ந்தறிந்துள்ளான்; அவர் (களின் எண்ணிக்கை)களை துள்ளியமாக கணக்கிட்டும் வைத்திருக்கிறான்.
95. அவர்களில் ஒவ்வொருவரும் மறுமை நாளில் அவனிடம் தனியாகவே வருவர்.

إِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ سَيَجْعَلُ لَهُمُ الرَّحْمٰنُ
وُدًّا ﴿٩٦﴾ فَاِنَّمَا يَسَّرْنٰهُ بِلِسَانِكَ لِتُبَشِّرَ بِهِ الْمُتَّقِيْنَ وَتُنْذِرَ
بِهٖ قَوْمًا لُّدًّا ﴿٩٧﴾ وَكَمْ اَهْلَكْنَا قَبْلَهُمْ مِّنْ قَرْنٍ ؕ هَلْ تُحِسُّ
مِنْهُمْ مِّنْ اَحَدٍ اَوْ تَسْمَعُ لَهُمْ رِكْزًا ﴿٩٨﴾ ع النصف

## سُوْرَةُ طٰهٰ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّخَمْسٌ وَّثَلٰثُوْنَ اٰيَةً وَّثَمَانُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
طٰهٰ ﴿١﴾ مَآ اَنْزَلْنَا عَلَيْكَ الْقُرْاٰنَ لِتَشْقٰٓى ﴿٢﴾ اِلَّا تَذْكِرَةً لِّمَنْ
يَّخْشٰى ﴿٣﴾ تَنْزِيْلًا مِّمَّنْ خَلَقَ الْاَرْضَ وَالسَّمٰوٰتِ الْعُلٰى ﴿٤﴾ ط
اَلرَّحْمٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوٰى ﴿٥﴾ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي
الْاَرْضِ وَمَا بَيْنَهُمَا وَمَا تَحْتَ الثَّرٰى ﴿٦﴾ وَاِنْ تَجْهَرْ بِالْقَوْلِ
فَاِنَّهٗ يَعْلَمُ السِّرَّ وَاَخْفٰى ﴿٧﴾ اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ؕ لَهُ الْاَسْمَآءُ
الْحُسْنٰى ﴿٨﴾ وَهَلْ اَتٰىكَ حَدِيْثُ مُوْسٰى ﴿٩﴾ اِذْ رَاٰ نَارًا فَقَالَ وقف لازم
لِاَهْلِهِ امْكُثُوْٓا اِنِّيْٓ اٰنَسْتُ نَارًا لَّعَلِّيْٓ اٰتِيْكُمْ مِّنْهَا بِقَبَسٍ اَوْ
اَجِدُ عَلَى النَّارِ هُدًى ﴿١٠﴾ فَلَمَّآ اَتٰىهَا نُوْدِيَ يٰمُوْسٰى ﴿١١﴾ ؕ اِنِّيْٓ اَنَا
رَبُّكَ فَاخْلَعْ نَعْلَيْكَ ۚ اِنَّكَ بِالْوَادِ الْمُقَدَّسِ طُوًى ﴿١٢﴾ ؕ

96. நிச்சயமாக விசுவாசங் கொண்டு நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையோர் அவர்களுக்கு (விசுவாசிகளின் இதயங்களில்) நேசத்தையும் அர்ரஹ்மான் நிச்சயமாக ஏற்படுத்திக் கொடுப்பான்.

97. (நபியே!) உம்முடைய மொழியில் நாம் இதை (இறக்கி,) எளிதாக்கி வைத்ததெல்லாம், இதைக் கொண்டு நீர் பயபக்தியுடையவர்களுக்கு நன்மாராயங் கூறுவதற்காகவும், இன்னும், இதனைக் கொண்டு வீண் தர்க்கம் செய்யும் சமூகத்தார்க்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும்தான்.

98. அவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்திருக்கிறோம்; அவர்களில் எவரையேனும் நீர் காண்கின்றீரா? அல்லது அவர்களுடைய இலேசான சப்தத்தையேனும் நீர் கேட்கின்றீரா?

---

அத்தியாயம் : 20

## தாஹா

வசனங்கள் : 135 மக்கீ ருகூஉகள் : 8

---

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. தா ஹா.

2. நீர் சங்கடப்படுவதற்காக (இந்தக்) குர்ஆனை உம்மீது நாம் இறக்கி வைக்கவில்லை.

3. (அல்லாஹ்வாகிய அவனை) பயந்தோருக்கு உபதேசமாகவே அன்றி (இதனை நாம் இறக்கவில்லை).

4. பூமியையும், உயர்ந்த வானங்களையும் படைத்தவனிடமிருந்து(இவ்வேதம்) இறக்கப்பட்டுள்ளது.

5. அர்ரஹ்மான் (தன் கண்ணியத்திற்குத்தக்கவாறும்,மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின்மீதிருப்பது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அவன் அர்ஷின் மீது உயர்ந்து(நிலைபெற்று)விட்டான்.

6. வானங்களிலுள்ளவையும், பூமியில் உள்ளவையும், இவ்விரண்டிற்கு மத்தியில் உள்ளவையும்,பூமிக்குக்கீழ் ( ஈரமான மண்ணுக்கடியில்) உள்ளவையும் அவனுக்கே உரியவையாகும்.

7. (நபியே! உம்) சொல்லை நீர் சப்தமாகக் கூறினாலும், நிச்சயமாக அவன் இரகசியத்தையும் அதைவிட மறைவானதையும் அறிகிறான்.

8. அல்லாஹ்_ அவனைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு நாயன் இல்லை; அவனுக்கு அழகான (பல) பெயர்கள் இருக்கின்றன.

9. இன்னும், (நபியே!) மூஸாவின் செய்தி உம்மிடம் வந்ததா?

10. (தூர் என்னும் மலைமீது)நெருப்பை அவர் கண்டபோது, தன் குடும்பத்தினரிடம், "நீங்கள் (இங்கு சிறிது ) தங்குங்கள்; நிச்சயமாக நான் நெருப்பைக் காண்கிறேன்; அதிலிருந்து ஒரு தீப்பந்தத்தை உங்களுக்குக் கொண்டு வரவோ, அல்லது நெருப்பி (ன் வெளிச்சத்தி) னால் வழியை நான் பெறவோ செய்யலாம்" என்றார்.

11. ஆகவே, அவர் அதனிடம் வரவே மூஸாவே! என அவர் அழைக்கப்பட்டார்.

12. "நிச்சயமாக நான் தான் உமதிரட்சகன்; ஆகவே உம்முடைய காலணிகள் இரண்டையும் கழற்றிவிடும்; நிச்சயமாக நீர் "துவா" என்னும் பரிசுத்தமான பள்ளத்தாக்கில் இருக்கிறீர்."

وَاَنَا اخْتَرْتُكَ فَاسْتَمِعْ لِمَا یُوْحٰی ﴿١٣﴾ اِنَّنِیْۤ اَنَا اللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّاۤ
اَنَا فَاعْبُدْنِیْ ۙ وَاَقِمِ الصَّلٰوةَ لِذِكْرِیْ ﴿١٤﴾ اِنَّ السَّاعَةَ اٰتِیَةٌ
اَكَادُ اُخْفِیْهَا لِتُجْزٰی كُلُّ نَفْسٍۭ بِمَا تَسْعٰی ﴿١٥﴾ فَلَا یَصُدَّنَّكَ عَنْهَا
مَنْ لَّا یُؤْمِنُ بِهَا وَاتَّبَعَ هَوٰىهُ فَتَرْدٰی ﴿١٦﴾ وَمَا تِلْكَ بِیَمِیْنِكَ یٰمُوْسٰی ﴿١٧﴾
قَالَ هِیَ عَصَایَ ۚ اَتَوَكَّؤُا عَلَیْهَا وَاَهُشُّ بِهَا عَلٰی غَنَمِیْ وَلِیَ فِیْهَا
مَاٰرِبُ اُخْرٰی ﴿١٨﴾ قَالَ اَلْقِهَا یٰمُوْسٰی ﴿١٩﴾ فَاَلْقٰىهَا فَاِذَا هِیَ حَیَّةٌ
تَسْعٰی ﴿٢٠﴾ قَالَ خُذْهَا وَلَا تَخَفْ ٚ سَنُعِیْدُهَا سِیْرَتَهَا الْاُوْلٰی ﴿٢١﴾
وَاضْمُمْ یَدَكَ اِلٰی جَنَاحِكَ تَخْرُجْ بَیْضَآءَ مِنْ غَیْرِ سُوْٓءٍ اٰیَةً
اُخْرٰی ﴿٢٢﴾ لِنُرِیَكَ مِنْ اٰیٰتِنَا الْكُبْرٰی ۚ ﴿٢٣﴾ اِذْهَبْ اِلٰی فِرْعَوْنَ اِنَّهٗ
طَغٰی ﴿٢٤﴾ قَالَ رَبِّ اشْرَحْ لِیْ صَدْرِیْ ﴿٢٥﴾ وَیَسِّرْ لِیْۤ اَمْرِیْ ﴿٢٦﴾ وَاحْلُلْ ع
عُقْدَةً مِّنْ لِّسَانِیْ ﴿٢٧﴾ یَفْقَهُوْا قَوْلِیْ ﴿٢٨﴾ وَاجْعَلْ لِّیْ وَزِیْرًا مِّنْ
اَهْلِیْ ﴿٢٩﴾ هٰرُوْنَ اَخِی ﴿٣٠﴾ اشْدُدْ بِهٖۤ اَزْرِیْ ﴿٣١﴾ وَاَشْرِكْهُ فِیْۤ اَمْرِیْ ﴿٣٢﴾
كَیْ نُسَبِّحَكَ كَثِیْرًا ﴿٣٣﴾ وَّنَذْكُرَكَ كَثِیْرًا ؕ ﴿٣٤﴾ اِنَّكَ كُنْتَ بِنَا
بَصِیْرًا ﴿٣٥﴾ قَالَ قَدْ اُوْتِیْتَ سُؤْلَكَ یٰمُوْسٰی ﴿٣٦﴾ وَلَقَدْ مَنَنَّا
عَلَیْكَ مَرَّةً اُخْرٰۤی ﴿٣٧﴾ اِذْ اَوْحَیْنَاۤ اِلٰۤی اُمِّكَ مَا یُوْحٰۤی ﴿٣٨﴾

13. மேலும், "நான் உம்மை (என்னுடைய தூதராக)த் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்; ஆதலால் (வஹீ மூலம் உமக்கு) அறிவிக்கப்படுபவைகளை நீர் செவியேற்பீராக"!

14. "நிச்சயமாக நான் தான் அல்லாஹ்;என்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு நாயன் இல்லை; ஆகவே, என்னையே நீர் வணங்குவீராக! என்னை நினைவு கூர்வதற்காக தொழுகையையும் நிறை வேற்றுவீராக".

15. "நிச்சயமாக மறுமை வரக்கூடியதாக இருக்கிறது; ஒவ்வோர் ஆத்மாவும் அது முயற்சி செய்ததற்குத்தக்க கூலி வழங்கப்படுவதற்காக அதனை நான் (மனிதர்களுக்கு) மறைத்துவைக்க சமீபிக்கிறேன்"(முற்றிலும் மறைத்து வைத்துள்ளேன்).

16. ஆகவே, அதனை நம்பிக்கை கொள்ளாது, தன் (மன) இச்சையையும் பின்பற்றியவன் அதனைவிட்டும் திண்ணமாக உம்மைத் தடுத்து விடவேண்டாம். அவ்வாறாயின் நீர் அழிந்துவிடுவீர்!(என்று கூறி)

17. "மேலும், மூஸாவே! உமது வலது கையில் இருப்பது என்ன?"(என்றும் கேட்டான்.)

18. அ(தற்க)வர், "இது என்னுடைய கைத்தடி; இதன்மீது நான் சாய்ந்து கொள்வேன்; இதைக்கொண்டு என்னுடைய ஆடுகளுக்கு (த்தழை குழைகளைமரங்களிலிருந்து) பறிப்பேன்; இன்னும் இதில் எனக்கு வேறுபலதேவைகளும் இருக்கின்றன" என்று கூறினார்.

19. (அதற்கு அல்லாஹ்)" மூஸாவே! நீர் அதனை(த்தரையில்) போடுவீராக " என்று கூறினான்.

20. அப்பொழுது அவர் அதனைப்போட்டார்;அச்சமயமே அது நெளிந்துசெல்லும் ஒரு பெரியபாம்பாயிற்று.

21. "நீர் அதைப் பிடியும்; மேலும், பயப்படாதீர்; உடனே அதனைமுந்திய நிலைக்கே (கைத்தடியாக)நாம் மீட்டுவோம்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

22. மேலும் "உம்முடைய கையை உம்முடைய விலாப்புறத்தின் பால் சேர்ப்பீராக! அது இன்னொரு அத்தாட்சியாக எவ்விதத்தீங்குமின்றி வெண்மையாக வெளிவரும்.

23. "(இவ்வாறு) நம்முடைய பெரிய அத்தாட்சிகளிலிருந்து ( சிலவற்றை) உமக்கு காண்பிப்பதற்காக (இவற்றைச் செய்யுமாறு நாம் கட்டளையிட்டோம்).

24. "நீர் ஃபிர் அவ்னிடம் செல்வீராக! நிச்சயமாக அவன் தன் (தகுதியை மறந்து இரட்சகனின்) வரம்பை மீறி விட்டான்"(என்றும் கூறினான்).

25. (அதற்கு மூஸா) கூறினார்:" என் இரட்சகனே! என் நெஞ்சத்தை (த் திடப்படுத்தி) விரிவாக்கி வைப்பாயாக"!

26. "என்னுடைய காரியத்தை எனக்கு எளிதாக்கியும் வைப்பாயாக!

27. "என் நாவிலுள்ள முடிச்சை அவிழ்த்தும் விடுவாயாக!

28. "(அப்பொழுது) என் சொல்லை அவர்கள் விளங்கிக் கொள் வார்கள் .

29. "என் குடும்பத்திலிருந்து எனக்கு உதவியாளரை ஆக்கியும் வைப்பாயாக!

30. "என் சகோதரர் ஹாரூனை (அவ்வாறு ஆக்கி வைப்பாயாக).

31. "அவரைக்கொண்டு என் பலத்தை உறுதிப்படுத்தி வைப்பாயாக!

32. "என் காரியங்களில் அவரைக் கூட்டாக்கியும் வைப்பாயாக!

33. நாங்கள் உன்னை அதிகமாகக் துதி செய்து போற்றுவதற்காகவும்;

34. "நாங்கள் உன்னை அதிகமாக நினைவு கூர்வதற்காகவும் (என் கோரிக்கைகளை ஏற்று அருள்வாயாக).

35. "நிச்சயமாக நீ எங்களை பார்க்கக்கூடியவனாகவே இருக்கிறாய் "(என்று மூஸா நபி பிரார்த்தனை செய்தார்).

36. (அதற்கு ) "மூஸாவே! நீர் கேட்டவற்றை திட்டமாக நீர் கொடுக்கப்பட்டு விட்டீர்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான் .

37. "மற்றொரு தடவையும் திட்டமாக நாம் உம்மீது பேரருள் புரிந்திருக்கிறோம்.

38. உமது தாய்க்கு (உம்மைப்பற்றி) அறிவிக்கப்பட வேண்டியவற்றை நாம் அறிவித்த சமயம்_(அதாவது)

أَنِ اقْذِفِيهِ فِي التَّابُوتِ فَاقْذِفِيهِ فِي الْيَمِّ فَلْيُلْقِهِ الْيَمُّ
بِالسَّاحِلِ يَأْخُذْهُ عَدُوٌّ لِّي وَعَدُوٌّ لَّهُ ؕ وَأَلْقَيْتُ عَلَيْكَ مَحَبَّةً
مِّنِّي ۚ وَلِتُصْنَعَ عَلَىٰ عَيْنِي ﴿٣٩﴾ إِذْ تَمْشِي أُخْتُكَ فَتَقُولُ هَلْ
أَدُلُّكُمْ عَلَىٰ مَن يَكْفُلُهُ ؕ فَرَجَعْنَاكَ إِلَىٰ أُمِّكَ كَيْ تَقَرَّ عَيْنُهَا
وَلَا تَحْزَنَ ۚ وَقَتَلْتَ نَفْسًا فَنَجَّيْنَاكَ مِنَ الْغَمِّ وَفَتَنَّاكَ
فُتُونًا ۚ فَلَبِثْتَ سِنِينَ فِي أَهْلِ مَدْيَنَ ۙ ثُمَّ جِئْتَ عَلَىٰ قَدَرٍ
يَا مُوسَىٰ ﴿٤٠﴾ وَاصْطَنَعْتُكَ لِنَفْسِي ﴿٤١﴾ اذْهَبْ أَنتَ وَأَخُوكَ بِآيَاتِي
وَلَا تَنِيَا فِي ذِكْرِي ﴿٤٢﴾ اذْهَبَا إِلَىٰ فِرْعَوْنَ إِنَّهُ طَغَىٰ ﴿٤٣﴾ فَقُولَا لَهُ
قَوْلًا لَّيِّنًا لَّعَلَّهُ يَتَذَكَّرُ أَوْ يَخْشَىٰ ﴿٤٤﴾ قَالَا رَبَّنَا إِنَّنَا نَخَافُ أَن
يَفْرُطَ عَلَيْنَا أَوْ أَن يَطْغَىٰ ﴿٤٥﴾ قَالَ لَا تَخَافَا إِنَّنِي مَعَكُمَا أَسْمَعُ
وَأَرَىٰ ﴿٤٦﴾ فَأْتِيَاهُ فَقُولَا إِنَّا رَسُولَا رَبِّكَ فَأَرْسِلْ مَعَنَا بَنِي
إِسْرَائِيلَ ۙ وَلَا تُعَذِّبْهُمْ ؕ قَدْ جِئْنَاكَ بِآيَةٍ مِّن رَّبِّكَ ؕ وَالسَّلَامُ
عَلَىٰ مَنِ اتَّبَعَ الْهُدَىٰ ﴿٤٧﴾ إِنَّا قَدْ أُوحِيَ إِلَيْنَا أَنَّ الْعَذَابَ عَلَىٰ مَن
كَذَّبَ وَتَوَلَّىٰ ﴿٤٨﴾ قَالَ فَمَن رَّبُّكُمَا يَا مُوسَىٰ ﴿٤٩﴾ قَالَ رَبُّنَا الَّذِي أَعْطَىٰ
كُلَّ شَيْءٍ خَلْقَهُ ثُمَّ هَدَىٰ ﴿٥٠﴾ قَالَ فَمَا بَالُ الْقُرُونِ الْأُولَىٰ ﴿٥١﴾

وقف لازم

39. "அவரை பேழையில் வைத்து (நைல்) நதியில் அதனை எறிந்துவிடு; அந்நதி அவரைக் கரையில் சேர்த்து விடும்; எனக்கு விரோதியும், அவருக்கு விரோதியாகவும் உள்ளவன் அவரை எடுத்துக்கொள்வான்" என்றும்(உம் தாய்க்கு அறிவித்தோம்); என்னிடமிருந்து அன்பையும் உம்மீது நான் பொழிந்தேன், இன்னும் என் கண் காணிப்பில் நீர் வளர்க்கப்படுவதற்காக.

40. உம் சகோதரி நடந்தபோது (அப்பேழையை எடுத்தவர்களிடம்) "அவருக்கு பொறுப்பேற்றுக் கொள்ளும் ஒருவரை (செவிலித்தாயை) உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா?" என்று கூறினாள். பின்னர், உமது தாயாரின்பால், அவரின் கண் குளிர்ந்திருப்பதற்காக இன்னும், அவர் கவலை கொள்ளாதிருப்பதற்காக உம்மை நாம் திருப்பிக் கொடுத்தோம்; இன்னும் நீர் ஒரு மனிதரைக் கொலை செய்து விட்டீர்;(அதன்) கவலையிலிருந்து உம்மை நாம் ஈடேற்றினோம்; இன்னும், உம்மை சோதிப்பதற்காக(பல சோதனைகளைக்கொண்டு)சோதித்தோம்;பின்னர் மத்யன் வாசிகளிடையே பல வருடங்கள் நீர் தங்கியிருந்தீர்; அதன் பின்னர் (நாம் உம்மை, முன்பு நம் தூதராக்க) நிர்ணயித்தபடி மூஸாவே நீர் வந்தீர்!

41 மேலும், உம்மை எனக்காக நான் தேர்ந்தெடுத்திருக்கின்றேன்.

42. (ஆகவே) "நீரும், உம்முடைய சகோதரரும் என்னுடைய அத்தாட்சிகளைக் கொண்டு செல்லுங்கள்; நீங்கள் இருவரும் என்னைத் தியானிப்பதில் சோர்வடைந்தும் விடாதீர்கள்".

43. "நீங்கள் இருவரும் ஃபிர்அவ்னிடம் செல்லுங்கள்; நிச்சயமாக அவன் மிக்க வரம்பு கடந்து விட்டான்.

44. ஆகவே, "நீங்கள் இருவரும் கனிவான சொல்லை அவனுக்குச் சொல்லுங்கள்; அதனால் அவன் நல்லுபதேசம் பெறலாம்; அல்லது அச்சமடையலாம் (என்று அல்லாஹ் கூறினான்).

45. (அதற்கு) "எங்கள் இரட்சகனே! அவன் எங்களுக்கு (தீங்கிழைக்க) அவசரப்படவோ, அல்லது வரம்பு மீறவோசெய்யலாம் என்று நிச்சயமாக நாங்கள் பயப்படுகிறோம்" என்று அவ்விருவரும் கூறினார்கள்.

46. "நீங்கள் இருவரும் பயப்பட வேண்டாம்; நிச்சயமாக நான் உங்களிருவருடன் (யாவையும்) கேட்டுக்கொண்டும், பார்த்துக்கொண்டும் இருப்பேன் என (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்".

47. "ஆகவே, நீங்களிருவரும் அவனிடம் வந்து, பின்னர், "நாங்கள் இருவரும் உன் இரட்சகனின் தூதர்கள்; இஸ்ராயீலின் மக்களை எங்களுடன் அனுப்பிவிடு; அவர்களை வேதனையும் செய்யாதே; திட்டமாக நாங்கள் உன் இரட்சகனிடமிருந்து அத்தாட்சியை உன்னிடம் கொண்டுவந்திருக்கின்றோம்; நேர்வழியைப் பின்பற்றியவர் மீது சாந்தியும் உண்டாவதாக!" என்று நீங்களிருவரும் கூறுங்கள்.

48. "நிச்சயமாக நாங்கள் _ எங்கள்பால் _ எவன் பொய்யாக்கிப் புறக்கணிக்கின்றானோ அவன் மீது நிச்சயமாக வேதனை ஏற்படுமென்று திட்டமாக (வஹீமூலம்) அறிவிக்கப்பட்டுள்ளது" (என்றும் கூறுங்கள்).

49. (அவ்விருவரும் ஃபிர்அவ்னிடம் வந்து கூறவே, அதற்கு) அவன் "மூஸாவே உங்களிருவரின் இரட்சகன் யார்?" என்று கேட்டான்.

50. (அதற்கு) "எவன் ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய தோற்றத்தை கொடுத்து பின்னர் வழியையும் காட்டியிருக்கிறானோ அவன்தான் எங்கள் இரட்சகன்" என்று அவர் கூறினார்.

51. (அதற்கு) அவன் "முன்னர் சென்றுபோன தலைமுறையினரின் (உண்மை) நிலையாது?" என்று கேட்டான்.

قَالَ عِلْمُهَا عِنْدَ رَبِّيْ فِيْ كِتٰبٍ ۚ لَا يَضِلُّ رَبِّيْ وَلَا يَنْسَى ﴿٥٢﴾
الَّذِيْ جَعَلَ لَكُمُ الْاَرْضَ مَهْدًا وَّسَلَكَ لَكُمْ فِيْهَا سُبُلًا وَّ
اَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً ۗ فَاَخْرَجْنَا بِهٖۤ اَزْوَاجًا مِّنْ نَّبَاتٍ شَتّٰى ﴿٥٣﴾
كُلُوْا وَارْعَوْا اَنْعَامَكُمْ ۗ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّاُولِي النُّهٰى ﴿٥٤﴾ مِنْهَا ع ٢ / ١١
خَلَقْنٰكُمْ وَفِيْهَا نُعِيْدُكُمْ وَمِنْهَا نُخْرِجُكُمْ تَارَةً اُخْرٰى ﴿٥٥﴾ وَلَقَدْ اَرَيْنٰهُ
اٰيٰتِنَا كُلَّهَا فَكَذَّبَ وَاَبٰى ﴿٥٦﴾ قَالَ اَجِئْتَنَا لِتُخْرِجَنَا مِنْ اَرْضِنَا
بِسِحْرِكَ يٰمُوْسٰى ﴿٥٧﴾ فَلَنَاْتِيَنَّكَ بِسِحْرٍ مِّثْلِهٖ فَاجْعَلْ بَيْنَنَا وَبَيْنَكَ
مَوْعِدًا لَّا نُخْلِفُهٗ نَحْنُ وَلَآ اَنْتَ مَكَانًا سُوًى ﴿٥٨﴾ قَالَ مَوْعِدُكُمْ
يَوْمُ الزِّيْنَةِ وَاَنْ يُّحْشَرَ النَّاسُ ضُحًى ﴿٥٩﴾ فَتَوَلّٰى فِرْعَوْنُ فَجَمَعَ
كَيْدَهٗ ثُمَّ اَتٰى ﴿٦٠﴾ قَالَ لَهُمْ مُّوْسٰى وَيْلَكُمْ لَا تَفْتَرُوْا عَلَى اللّٰهِ كَذِبًا
فَيُسْحِتَكُمْ بِعَذَابٍ ۚ وَقَدْ خَابَ مَنِ افْتَرٰى ﴿٦١﴾ فَتَنَازَعُوْٓا اَمْرَهُمْ
بَيْنَهُمْ وَاَسَرُّوا النَّجْوٰى ﴿٦٢﴾ قَالُوْٓا اِنْ هٰذٰنِ لَسٰحِرٰنِ يُرِيْدٰنِ اَنْ
يُّخْرِجٰكُمْ مِّنْ اَرْضِكُمْ بِسِحْرِهِمَا وَيَذْهَبَا بِطَرِيْقَتِكُمُ الْمُثْلٰى ﴿٦٣﴾
فَاَجْمِعُوْا كَيْدَكُمْ ثُمَّ ائْتُوْا صَفًّا ۚ وَقَدْ اَفْلَحَ الْيَوْمَ مَنِ اسْتَعْلٰى ﴿٦٤﴾
قَالُوْا يٰمُوْسٰٓى اِمَّآ اَنْ تُلْقِيَ وَاِمَّآ اَنْ نَّكُوْنَ اَوَّلَ مَنْ اَلْقٰى ﴿٦٥﴾

52. அவர், "அது பற்றிய அறிவுஎன் இரட்சகனிடம் (இருக்கும் பதிவுப்) புத்தகத்தில் இருக்கின்றது; என் இரட்சகன் (அதில் யாதொன்றைத்) தவறிழைத்து (விட்டு) விடவுமாட்டான்; மறந்துவிடவும்மாட்டான்" என்று கூறினார்.

53. "(என்னுடைய இரட்சகன்) எத்தகையவனென்றால், அவன் பூமியை உங்களுக்கு விரிப்பாக அமைத்து, அதில் உங்களுக்காக பாதைகளையும் ஏற்படுத்தினான்; மேலும், வானத்திலிருந்து (மழை) நீரை இறக்கினான்; இதைக்கொண்டு நாம் பலதரப்பட்ட தாவரங்களிலிருந்து பலவகைகளை வெளிப்படுத்தி விட்டோம்" (என்று தன் இரட்சகனின் தகுதி பற்றி மூஸா கூறினார்).

54. "(அவற்றை) நீங்களும் உண்ணுங்கள்; உங்கள் (ஆடு, மாடு, ஒட்டகம், முதலிய) கால் நடைகளையும் மேயவிடுங்கள்; அறிவுடையோருக்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

55. (பூமியாகிய) அதிலிருந்தே நாம் உங்களைப்படைத்தோம்; பின்னர், அதிலேயே நாம் உங்களை மீளவைப்போம்; மற்றொரு தடவையும் (உங்களுக்கு உயிர் கொடுத்து) அதிலிருந்தே நாம் உங்களை வெளிப்படுத்துவோம்" (என்று அவனுக்குக் கூறும்படிச் செய்தோம்).

56. இன்னும், நம்முடைய அத்தாட்சிகளை — அவை யாவையும் நாம் அவனுக்குக் காண்பித்தோம்; ஆனால் அவனோ (அவை யாவற்றையும்) பொய்ப்படுத்தி விட்டான்; மேலும், (விசுவாசிக்காது) விலகிக் கொண்டான்.

57. "மூஸாவே! உம்முடைய சூனியத்தின் மூலம் எங்களை எங்களின் பூமியைவிட்டு வெளியேற்றுவதற்காகவா எங்களிடம் நீர் வந்தீர்?" என்று கூறினான்.

58. அவ்வாறாயின் இதைப்போன்ற சூனியத்தை (எதிராக)க் கொண்டு நிச்சயமாக நாங்களும் உம்மிடம் வருவோம்; ஆகவே, நாங்களோ அல்லது நீரோ, மாறுபடாது இருக்கக் கூடியவாறு மையமான இடத்தில் நமக்கும், உமக்குமிடையே ஒரு தவணையை(க் குறிப்பிட்டு) ஆக்குவீராக! என்று கூறினான்.

59. (அதற்கு மூஸா " உங்கள்) பண்டிகை நாளே உங்களுக்குத் தவணையாகும்; இன்னும், மனிதர்கள் யாவரும் முற்பகலிலேயே ஒன்று திரட்டப்பட்டு விடவேண்டும்" என்று கூறினார்.

60. பின்னர், ஃபிர்அவ்ன் (அங்கிருந்து) திரும்பிச் சென்று, (சூனியத்திற்குரிய) தன்னுடைய (சகல) சூழ்ச்சிகளையும் சேகரித்துக் கொண்டு பின்னர் (குறித்த இடத்திற்கு) வந்தான்.

61. மூஸா, அ(ங்கு கூடியிருந்த)வர்களிடம்: "உங்களுக்குக் கேடுதான். அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக் கட்டாதீர்கள்; (அவ்வாறு செய்தால்,) அவன் (தன்) வேதனையைக் கொண்டு உங்களை அழித்து விடுவான்; இன்னும், எவன் (பொய்யை) இட்டுக்கட்டுகிறானோ திட்டமாக அவன் நஷ்டப்பட்டு விட்டான்," என்று கூறினார்.

62. (இதைக்கேட்ட) அவர்கள், தங்களுடைய காரியத்தில் தங்களுக்கிடையே தர்க்கித்துக் கொண்டு, இரகசியமாக ஆலோசனையும் செய்தனர்.

63. அவர்கள், "நிச்சயமாக இவ்விருவரும் இரு சூனியக்காரர்களே! தங்களுடைய சூனியத்தினால் உங்களை, உங்களுடைய பூமியை விட்டும் இவ்விருவரும் வெளியேற்றி விடவும், உங்களுடைய மேலான (மார்க்கப்)பாதையை இருவரும் போக்கி விடவும் இவ்விருவரும் நாடுகிறார்கள்" என்று கூறினார்கள்.

64. "ஆதலால் உங்கள்சூழ்ச்சித் திட்டத்தில் நீங்கள் உறுதிகொண்டு அதன் பின்னர் அணியாகவாருங்கள்; இன்றையத்தினம் (மற்றவரை) மிகைத்து விட்டவர் திட்டமாக வெற்றி பெறுவார்" என்று கூறினார்கள்.

65. பின்னர், (சூனியம் செய்ய வந்த) அவர்கள், (மூஸாவிடம்) " மூஸாவே! ஒன்று நீர்போடுகிறீரா? அல்லது போடுபவரில் முதலாவதாக நாங்கள் இருக்கவா ?" என்று கேட்டார்கள்.

قَالَ بَلْ اَلْقُوْا ۚ فَاِذَا حِبَالُهُمْ وَعِصِيُّهُمْ يُخَيَّلُ اِلَيْهِ مِنْ سِحْرِهِمْ
اَنَّهَا تَسْعٰى ﴿٦٦﴾ فَاَوْجَسَ فِيْ نَفْسِهٖ خِيْفَةً مُّوْسٰى ﴿٦٧﴾ قُلْنَا لَا تَخَفْ
اِنَّكَ اَنْتَ الْاَعْلٰى ﴿٦٨﴾ وَاَلْقِ مَا فِيْ يَمِيْنِكَ تَلْقَفْ مَا صَنَعُوْا ؕ اِنَّمَا
صَنَعُوْا كَيْدُ سٰحِرٍ ؕ وَلَا يُفْلِحُ السَّاحِرُ حَيْثُ اَتٰى ﴿٦٩﴾ فَاُلْقِيَ السَّحَرَةُ
سُجَّدًا قَالُوْۤا اٰمَنَّا بِرَبِّ هٰرُوْنَ وَمُوْسٰى ﴿٧٠﴾ قَالَ اٰمَنْتُمْ لَهٗ قَبْلَ
اَنْ اٰذَنَ لَكُمْ ؕ اِنَّهٗ لَكَبِيْرُكُمُ الَّذِيْ عَلَّمَكُمُ السِّحْرَ ۚ فَلَاُقَطِّعَنَّ
اَيْدِيَكُمْ وَاَرْجُلَكُمْ مِّنْ خِلَافٍ وَّلَاُصَلِّبَنَّكُمْ فِيْ جُذُوْعِ النَّخْلِ ۫
وَلَتَعْلَمُنَّ اَيُّنَاۤ اَشَدُّ عَذَابًا وَّاَبْقٰى ﴿٧١﴾ قَالُوْا لَنْ نُّؤْثِرَكَ عَلٰى مَا
جَآءَنَا مِنَ الْبَيِّنٰتِ وَالَّذِيْ فَطَرَنَا فَاقْضِ مَاۤ اَنْتَ قَاضٍ ؕ
اِنَّمَا تَقْضِيْ هٰذِهِ الْحَيٰوةَ الدُّنْيَا ؕ ﴿٧٢﴾ اِنَّاۤ اٰمَنَّا بِرَبِّنَا لِيَغْفِرَ لَنَا
الثلثة خَطٰيٰنَا وَمَاۤ اَكْرَهْتَنَا عَلَيْهِ مِنَ السِّحْرِ ؕ وَاللّٰهُ خَيْرٌ وَّاَبْقٰى ﴿٧٣﴾
اِنَّهٗ مَنْ يَّاْتِ رَبَّهٗ مُجْرِمًا فَاِنَّ لَهٗ جَهَنَّمَ ؕ لَا يَمُوْتُ فِيْهَا وَ
لَا يَحْيٰى ﴿٧٤﴾ وَمَنْ يَّاْتِهٖ مُؤْمِنًا قَدْ عَمِلَ الصّٰلِحٰتِ فَاُولٰٓئِكَ
لَهُمُ الدَّرَجٰتُ الْعُلٰى ﴿٧٥﴾ جَنّٰتُ عَدْنٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا
ع ٣ ٢٢ ١٢ الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا ؕ وَذٰلِكَ جَزٰٓؤُا مَنْ تَزَكّٰى ﴿٧٦﴾ ع

66. அ(தற்க)வர் "அவ்வாறன்று; நீங்கள் (முதலில்) போடுங்கள்" என்று கூறினார்; (அவர்கள் போடவே,போடப்பட்ட) அந்நேரத்தில் அவர்களுடைய கயிறுகளும் அவர்களுடைய தடிகளும், அவர்களின் சூனியத்தின் காரணமாக, நிச்சயமாகவே அவை (பாம்புகளாக)விரைந்து ஓடுவது போல் இவருக்குத்தோன்றியது.

67. ஆகவே,மூஸா தன் மனதில் பயத்தை உணர்ந்தார்.

68. (அது சமயம் அவரிடம்,) "நீர் பயப்படாதீர்; நிச்சயமாக நீர் தான் (இந்த சூனியக்காரர்களை மிகைத்து) மிகமேலோங்கியவர்" என்று நாம் கூறினோம்.
69. மேலும், "உமது வலக்கையில் இருப்பதை நீர் போடுவீராக; அவர்கள் செய்தவற்றை அது விழுங்கிவிடும்; அவர்கள் செய்ததெல்லாம் சூனியக்காரரின் சூழ்ச்சியே ஆகும்; சூனியக்காரன் எங்கு வந்த போதிலும் வெற்றி பெறமாட்டான்"(என்றும் கூறினோம்).

70. (மூஸா மேலோங்கிய பொழுது) அச்சூனியக்காரர்கள் சிரம் பணிந்தவர்களாக (ஸஜ்தாவில்) வீழ்த்தப்பட்டு, "நாங்கள் ஹாரூன், மூஸா ஆகிய இவ்விருவருடைய இரட்சகனை(க்கொண்டு )விசுவாசித்துவிட்டோம்", என்று கூறினார்கள்.

71. (இதனைக்கண்ட ஃபிர்அவ்ன்)"நான் உங்களுக்கு அனுமதியளிப்பதற்கு முன் அவருக்கு நீங்கள் விசுவாசங் கொண்டு விட்டீர்கள்; உங்களுக்கு சூனியத்தைக் கற்றுக் கொடுத்தாரே அத்தகைய உங்களின் பெரியவர் நிச்சயமாக அவர்தான். ஆகவே, நிச்சயமாக நான் உங்களது கைகளையும், உங்களது கால்களையும் மாறாக ( ஒரு பக்கத்துக் காலையும் மறு பக்கத்துக் கையையும்) துண்டிப்பேன்; இன்னும் பேரீச்ச மரங்களின் அடிப்பாகங்களில் உங்களை நிச்சயமாக நான் கழுவேற்றுவேன்; வேதனைசெய்வதில் மிகக் கடுமையானவரும், (அவ்வேதனையில்) மிக நிலையானவரும் நம்மில் யார் என நிச்சயமாக நீங்கள் அறிந்துகொள்வீர்கள் என்று கூறினான்.

72. (அதற்கவர்கள் ஃபிர்அவ்னிடம்) "எங்களுக்கு வந்து விட்ட தெளிவான அத்தாட்சிகளை விடவும், எங்களைப்படைத்தானே அவனை விடவும், உன்னை நாங்கள் (பெரிதாகக் கருதி) தேர்வு செய்யமாட்டோம்; ஆகவே,எதை நீ தீர்ப்புக் கூற இருக்கிறாயோ (அதை) நீ தீர்ப்புக் கூறிவிடு; நீ தீர்ப்புக் கூறுவதெல்லாம் இவ்வுலகவாழ்க்கையில்தான்" என்று கூறினர்.

73. "நிச்சயமாக நாங்கள் (மெய்யான) எங்கள் இரட்சகனையே விசுவாசித்தோம்; எங்களுடைய குற்றங்களையும், உன்னுடைய நிர்ப்பந்தத்தினால் நாங்கள் செய்த சூனிய(த்தின் குற்ற)ங்களையும் அவன் எங்களுக்கு மன்னித்துவிடுவான்; அல்லாஹ் மிக்க மேலானவனும், நிலைத்திருப்பவனும் ஆவான்" என்று கூறினார்கள்.

74. நிச்சயமாக எவன் தன் இரட்சகனிடம் குற்றவாளியாக வருகின்றானோ, அவனுக்கு நிச்சயமாக நரகம் இருக்கிறது. அதில் அவன் சாகவும் மாட்டான்; (சுகத்துடன்) வாழவும் மாட்டான்(வேதனையை அனுபவித்துக் கொண்டேயிருப்பான்).

75. மேலும், எவர் விசுவாசங்கொண்டவராக, திட்டமாக நற்கருமங்களைச் செய்த நிலையில் (அல்லாஹ்வாகிய) அவனிடத்தில் வருகின்றாரோ — அத்தகையோர்களுக்கு உயர் பதவிகள் இருக்கின்றன.

76. ( அத்தகையோருக்கு) நிலையான சொர்க்கங்கள் உண்டு; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவற்றில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; மேலும், அது பரிசுத்தமானவருடைய கூலியாகும்.

وَلَقَدْ اَوْحَيْنَآ اِلٰى مُوْسٰٓى ۙ اَنْ اَسْرِ بِعِبَادِيْ فَاضْرِبْ
لَهُمْ طَرِيْقًا فِي الْبَحْرِ يَبَسًا ۙ لَّا تَخٰفُ دَرَكًا وَّلَا تَخْشٰى ﴿٧٧﴾
فَاَتْبَعَهُمْ فِرْعَوْنُ بِجُنُوْدِهٖ فَغَشِيَهُمْ مِّنَ الْيَمِّ مَا غَشِيَهُمْ ﴿٧٨﴾ ط
وَاَضَلَّ فِرْعَوْنُ قَوْمَهٗ وَمَا هَدٰى ﴿٧٩﴾ يٰبَنِيْٓ اِسْرَآءِيْلَ قَدْ
اَنْجَيْنٰكُمْ مِّنْ عَدُوِّكُمْ وَوٰعَدْنٰكُمْ جَانِبَ الطُّوْرِ الْاَيْمَنَ
وَنَزَّلْنَا عَلَيْكُمُ الْمَنَّ وَالسَّلْوٰى ﴿٨٠﴾ كُلُوْا مِنْ طَيِّبٰتِ مَا
رَزَقْنٰكُمْ وَلَا تَطْغَوْا فِيْهِ فَيَحِلَّ عَلَيْكُمْ غَضَبِيْ ۚ وَمَنْ
يَّحْلِلْ عَلَيْهِ غَضَبِيْ فَقَدْ هَوٰى ﴿٨١﴾ وَاِنِّيْ لَغَفَّارٌ لِّمَنْ
تَابَ وَاٰمَنَ وَعَمِلَ صَالِحًا ثُمَّ اهْتَدٰى ﴿٨٢﴾ وَمَآ اَعْجَلَكَ
عَنْ قَوْمِكَ يٰمُوْسٰى ﴿٨٣﴾ قَالَ هُمْ اُولَآءِ عَلٰٓى اَثَرِيْ وَ
عَجِلْتُ اِلَيْكَ رَبِّ لِتَرْضٰى ﴿٨٤﴾ قَالَ فَاِنَّا قَدْ فَتَنَّا
قَوْمَكَ مِنْۢ بَعْدِكَ وَاَضَلَّهُمُ السَّامِرِيُّ ﴿٨٥﴾ فَرَجَعَ
مُوْسٰٓى اِلٰى قَوْمِهٖ غَضْبَانَ اَسِفًا ۚ قَالَ يٰقَوْمِ اَلَمْ يَعِدْكُمْ
رَبُّكُمْ وَعْدًا حَسَنًا ۬ ط اَفَطَالَ عَلَيْكُمُ الْعَهْدُ اَمْ اَرَدْتُّمْ اَنْ
يَّحِلَّ عَلَيْكُمْ غَضَبٌ مِّنْ رَّبِّكُمْ فَاَخْلَفْتُمْ مَّوْعِدِيْ ﴿٨٦﴾

77. மேலும், நிச்சயமாக நாம், மூஸாவுக்கு "நீர் என்னுடைய அடியார்களை அழைத்துக் கொண்டு, இரவில் சென்றுவிடுவீராக! (வழியில் )கடலில் (உமது தடியால்) அடித்து உலர்ந்த வழியை அவர்களுக்கு ஏற்படுத்துவீராக! (உம்மை ஃபிர்அவ்ன் ) அடைந்து விடுவானென்று நீர் பயப்படவேண்டாம்; ( கடலில் மூழ்கிவிடுவோம் என) நீர் அஞ்சவும் வேண்டாம் என்றும் அறிவித்தோம்.

78. ஃபிர்அவ்ன் தன் படைகளுடன் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றான்; அப்போது அவர்களை மூடிக்கொள்கிற(அலையான)து அவர்களை மூடிக்கொண்டது.

79. ஃபிர் அவ்ன் தன் சமூகத்தாரை வழி கெடுத்தான்;(அவர்களுக்கு)நேர்வழியை அவன் காட்டவுமில்லை.

80. "இஸ்ராயீலின் மக்களே! நிச்சயமாக நாம் உங்களை, உங்களுடைய பகைவனிடமிருந்து ஈடேற்றிக் கொண்டோம்; (ஸினாய் மலையான) 'தூரின்' வலப்பாகத்தை உங்களுக்கு நாம் வாக்களித்தோம்; உணவாக உங்களுக்கு 'மன்னு, ஸல்வா' வையும் இறக்கி வைத்தோம்.

81. "நாம் உங்களுக்கு அளித்தவற்றில் நல்லவற்றிலிருந்து நீங்கள் உண்ணுங்கள்; அதில் நீங்கள் வரம்புமீறியும் விடாதீர்கள்; (மீறினால் ) உங்கள்மீது என்கோபம் இறங்கிவிடும்; எவரின் மீது என்னுடைய கோபம் இறங்குகிறதோ அவர், நிச்சயமாக(ஹாவியா எனும் நரகத்தில்)வீழ்ந்து விட்டார்".

82. "இன்னும், எவர் பச்சாதாபப்பட்டு (பாவத்திலிருந்து தவ்பாச்செய்து), விசுவாசமும் கொண்டு, நற்கருமங்களையும் செய்து அதன் பின்னர் நேர் வழியில் நிலைத்திருக்கிறாரோ அவருக்கு நிச்சயமாக நான் மிக மன்னிக்கிறவன்."

83. மேலும், (அவரிடம்) மூஸாவே! நீர் உம்முடைய சமூகத்தாரை விட்டு (விட்டு நீர் மட்டும் வர) உம்மை அவசரப்படுத்தியது எது? (என்று அல்லாஹ்வாகிய அவன் கேட்டான்).

84. அ(தற்க)வர், "அவர்கள் என் அடிச்சுவட்டின் மீது வருகின்றனர்; என் இரட்சகனே! நீ (என் மீது)திருப்திப்படுவதற்காக துரிதமாக உன்னிடம் (முன்னதாகவே) வந்துவிட்டேன்" என்று கூறினார்.

85. அதற்கு, "நீர் வந்த பின்னர் நிச்சயமாக நாம் உம்முடைய சமூகத்தாரை ஒரு சோதனைக்குள்ளாக்கினோம்; சாமிரீ என்பவன் அவர்களை வழி கெடுத்து விட்டான்" என்று (அவர் ஸினாய் மலைக்கு வந்த சமயம் அல்லாஹ்வாகிய அவன்) கூறினான்.

86. (உடனே) மூஸா கோபங்கொண்டவராக_பெரும் வருத்தம் நிறைந்தவராகத் தன்னுடைய சமூகத்தாரிடம் திரும்பி வந்து; "என்னுடைய சமூகத்தார்களே! உங்கள் இரட்சகன் உங்களுக்கு அழகான வாக்குறுதியை அவன் வாக்களிக்கவில்லையா ? எனவே அவ்வாக்குறுதி(யின் காலம்) உங்களுக்கு நீண்டுவிட்டதா? அல்லது உங்கள் மீது, உங்கள் இரட்சகனின் கோபம் இறங்கவேண்டுமென்று நீங்கள் விரும்பியே, எனக்கு நீங்கள் செய்த வாக்குறுதிக்கு மாறு செய்தீர்களா?" என்று அவர்கேட்டார்.

قَالُوْا مَآ اَخْلَفْنَا مَوْعِدَكَ بِمَلْكِنَا وَلٰكِنَّا حُمِّلْنَآ اَوْزَارًا مِّنْ زِيْنَةِ
الْقَوْمِ فَقَذَفْنٰهَا فَكَذٰلِكَ اَلْقَى السَّامِرِيُّ ﴿٨٧﴾ فَاَخْرَجَ لَهُمْ عِجْلًا
جَسَدًا لَّهٗ خُوَارٌ فَقَالُوْا هٰذَآ اِلٰهُكُمْ وَاِلٰهُ مُوْسٰى ۵ فَنَسِيَ ﴿٨٨﴾ اَفَلَا
يَرَوْنَ اَلَّا يَرْجِعُ اِلَيْهِمْ قَوْلًا ۵ وَّلَا يَمْلِكُ لَهُمْ ضَرًّا وَّلَا نَفْعًا ﴿٨٩﴾ ع ٤ ١٤ ١٢
وَلَقَدْ قَالَ لَهُمْ هٰرُوْنُ مِنْ قَبْلُ يٰقَوْمِ اِنَّمَا فُتِنْتُمْ بِهٖ ۚ وَاِنَّ
رَبَّكُمُ الرَّحْمٰنُ فَاتَّبِعُوْنِيْ وَاَطِيْعُوْٓا اَمْرِيْ ﴿٩٠﴾ قَالُوْا لَنْ نَّبْرَحَ
عَلَيْهِ عٰكِفِيْنَ حَتّٰى يَرْجِعَ اِلَيْنَا مُوْسٰى ﴿٩١﴾ قَالَ يٰهٰرُوْنُ مَا
مَنَعَكَ اِذْ رَاَيْتَهُمْ ضَلُّوْٓا ﴿٩٢﴾ اَلَّا تَتَّبِعَنِ ۭ اَفَعَصَيْتَ اَمْرِيْ ﴿٩٣﴾
قَالَ يَبْنَؤُمَّ لَا تَاْخُذْ بِلِحْيَتِيْ وَلَا بِرَاْسِيْ ۚ اِنِّيْ خَشِيْتُ اَنْ
تَقُوْلَ فَرَّقْتَ بَيْنَ بَنِيْٓ اِسْرَآءِيْلَ وَلَمْ تَرْقُبْ قَوْلِيْ ﴿٩٤﴾ قَالَ
فَمَا خَطْبُكَ يٰسَامِرِيُّ ﴿٩٥﴾ قَالَ بَصُرْتُ بِمَا لَمْ يَبْصُرُوْا بِهٖ
فَقَبَضْتُ قَبْضَةً مِّنْ اَثَرِ الرَّسُوْلِ فَنَبَذْتُهَا وَكَذٰلِكَ سَوَّلَتْ
لِيْ نَفْسِيْ ﴿٩٦﴾ قَالَ فَاذْهَبْ فَاِنَّ لَكَ فِي الْحَيٰوةِ اَنْ تَقُوْلَ لَا
مِسَاسَ ۠ وَاِنَّ لَكَ مَوْعِدًا لَّنْ تُخْلَفَهٗ ۚ وَانْظُرْ اِلٰٓى اِلٰهِكَ الَّذِيْ
ظَلْتَ عَلَيْهِ عَاكِفًا ۭ لَنُحَرِّقَنَّهٗ ثُمَّ لَنَنْسِفَنَّهٗ فِي الْيَمِّ نَسْفًا ﴿٩٧﴾

87. அ(தற்க)வர்கள் நாங்கள் உமக்குச் செய்த வாக்குறுதிக்கு எங்கள் சக்தி கொண்டு(சுயமாக) மாறு செய்யவில்லை;என்றாலும்,நாங்கள் (ஃபிர்அவ்னுடைய) சமூகத்தாரின் அலங்கார (ஆபரண)ங்களிலிருந்து கனமான சுமைகளைச் சுமத்தப்பட்டோம்; ஆகவே, அவற்றை நாங்கள் (நெருப்பில்) எறிந்தோம்; அவ்வாறே சாமிரீயும் (தன்னிடமிருந்தவற்றை) எறிந்தான்.

88. "பின்னர், அவன் அவர்களுக்காக ஒரு காளைக் கன்றை_(உருவாக்கி) உடலாக வெளியாக்கினான்; அதற்கு (அர்த்தமற்ற) சப்தமுமிருந்தது; (இதைக்கேட்ட) சிலர், "இதுதான் உங்களுடைய(வணக்கத்திற்குரிய) இரட்சகனும், மூஸாவினுடைய (வணக்கத்திற்குரிய) இரட்சகனுமாகும்; (இதனை)அவர் (மூஸா) மறந்து (மலைக்குச் சென்று) விட்டார்" என்று கூறினார்கள்.

89. நிச்சயமாக, அவர்களுடைய எந்தப் பேச்சுக்கும் அவர்களின்பால் அ(க்காளை மாடான)து (பதில் கூற) திரும்பாமல் இருப்பதையும், அவர்களுக்கு தீமையோ நன்மையோ செய்யச் சக்திபெறாமல் இருப்பதையும் அவர்கள் பார்க்க வில்லையா?

90. இன்னும், (இதற்கு) முன்னதாகவே ஹாரூன் அவர்களிடம், "என்னுடைய சமூகத்தார்களே! நீங்கள் சோதனைக்குள்ளாக்கப்பட்டதெல்லாம் இதைக் கொண்டுதான்; நிச்சயமாக உங்கள் இரட்சகன் அர்ரஹ்மான்தான்; (இதுவல்ல) ஆகவே என்னைப்பின்பற்றுங்கள்; என்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியுங்கள் என திட்டமாகக் கூறியிருந்தார்.

91. அ(தற்க)வர்கள் "மூஸா எங்கள் பால் திரும்பி வரும்வரையில் இதன் (வணக்கத்தின் ) மீதே நிலைத்தவர்களாக நீங்காது இருப்போம்" என்று கூறி விட்டார்கள்.

92. (மூஸா, ஹாரூனிடம்)"ஹாரூனே! இவர்கள் வழிகெட்டுவிட்டார்கள் என்பதை நீர் கண்டபோது (அதை மறுக்காமலிருக்க) எது உம்மைத் தடுத்தது ?" எனக்கேட்டார்.

93. "நீர் என்னைப் பின்பற்றுவதிலிருந்து (உம்மைத்தடுத்தது எது?) என் கட்டளைக்கு மாறு செய்தீரா?" (என்று கேட்டார்).

94. அ(தற்க)வர் " என் தாயின் மகனே! என்னுடைய தாடியையும், என்னுடைய தலையையும் பிடி(த்திழு)க்காதீர்; இஸ்ராயீலின் மக்களுக்கிடையில், நீர்பிரிவினையை உண்டு பண்ணிவிட்டீர்; என்னுடைய வார்த்தைக்காக நீர் காத்திருக்கவில்லை என்று நீர் கூறுவீர் என்பதை நிச்சயமாக நான் பயந்தேன் " என்று கூறினார்.

95. (பின்னர், மூஸா ) "சாமிரீயே! உன் விஷயமென்ன? எனக் கேட்டார்.

96. அ(தற்க)வன், "அவர்கள் பார்க்காத (வியப்பான) ஒன்றை நான் பார்த்தேன். தூதருடைய (அடிச்)சுவட்டிலிருந்து ஒரு பிடி (மண்) பிடித்து அதில் எறிந்தேன்; இவ்வாறு (செய்யுமாறு) என் மனம் என்னைத் தூண்டிற்று" என்று கூறினான்.

97. (அதற்கு) மூஸா ("இங்கிருந்து) நீ சென்று விடு; நிச்சயமாக நீ (யாரைப்பார்த்தாலும்) என்னைத் தீண்டாதீர் என்று கூறுவதுதான் இவ்வுலக வாழ்க்கையில் உனக்குரியது.(மறுமையிலோ,) நிச்சயமாக உனக்கு ஒரு தவணையும் உண்டு; அதில் நீ மாற்றம் செய்யப்படமாட்டாய்;"(அதிலிருந்து நீ தப்பிவிட மாட்டாய் )மேலும், (வணக்கம் செலுத்துவது கொண்டு) "எதன் மீது நீ நிலையானவனாக இருந்தாயோ அத்தகைய உனது (வணக்கத்திற்குரிய) தெய்வத்தைப்பார்; நிச்சயமாக நாம் அதனை நெருப்பிலிட்டு எரிப்போம்; பின்னர், திண்ணமாகக் கடலில் அதை முற்றிலுமாகத் தூவி விடுவோம்" என்று கூறினார்.

إِنَّمَآ إِلٰهُكُمُ اللّٰهُ الَّذِي لَآ إِلٰهَ إِلَّا هُوَ ۚ وَسِعَ كُلَّ شَيْءٍ عِلْمًا ﴿٩٨﴾ كَذٰلِكَ
نَقُصُّ عَلَيْكَ مِنْ أَنۢبَآءِ مَا قَدْ سَبَقَ ۚ وَقَدْ آتَيْنٰكَ مِنْ لَّدُنَّا
ذِكْرًا ﴿٩٩﴾ مَنْ أَعْرَضَ عَنْهُ فَإِنَّهُ يَحْمِلُ يَوْمَ الْقِيٰمَةِ وِزْرًا ﴿١٠٠﴾ خٰلِدِينَ
فِيهِ ۚ وَسَآءَ لَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ حِمْلًا ﴿١٠١﴾ يَوْمَ يُنْفَخُ فِي الصُّورِ وَنَحْشُرُ
الْمُجْرِمِينَ يَوْمَئِذٍ زُرْقًا ﴿١٠٢﴾ يَتَخٰفَتُونَ بَيْنَهُمْ إِنْ لَّبِثْتُمْ إِلَّا
عَشْرًا ﴿١٠٣﴾ نَحْنُ أَعْلَمُ بِمَا يَقُولُونَ إِذْ يَقُولُ أَمْثَلُهُمْ طَرِيقَةً إِنْ
لَّبِثْتُمْ إِلَّا يَوْمًا ﴿١٠٤﴾ وَيَسْـَٔلُونَكَ عَنِ الْجِبَالِ فَقُلْ يَنْسِفُهَا رَبِّي نَسْفًا ﴿١٠٥﴾ ع ١٥ ١٤
فَيَذَرُهَا قَاعًا صَفْصَفًا ﴿١٠٦﴾ لَّا تَرٰى فِيهَا عِوَجًا وَّلَآ أَمْتًا ﴿١٠٧﴾ يَوْمَئِذٍ
يَّتَّبِعُونَ الدَّاعِيَ لَا عِوَجَ لَهُ ۚ وَخَشَعَتِ الْأَصْوَاتُ لِلرَّحْمٰنِ
فَلَا تَسْمَعُ إِلَّا هَمْسًا ﴿١٠٨﴾ يَوْمَئِذٍ لَّا تَنْفَعُ الشَّفَاعَةُ إِلَّا مَنْ أَذِنَ
لَهُ الرَّحْمٰنُ وَرَضِيَ لَهُ قَوْلًا ﴿١٠٩﴾ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ
وَلَا يُحِيطُونَ بِهِ عِلْمًا ﴿١١٠﴾ وَعَنَتِ الْوُجُوهُ لِلْحَيِّ الْقَيُّومِ ۖ وَقَدْ
خَابَ مَنْ حَمَلَ ظُلْمًا ﴿١١١﴾ وَمَنْ يَّعْمَلْ مِنَ الصّٰلِحٰتِ وَهُوَ مُؤْمِنٌ
فَلَا يَخٰفُ ظُلْمًا وَّلَا هَضْمًا ﴿١١٢﴾ وَكَذٰلِكَ أَنْزَلْنٰهُ قُرْآنًا عَرَبِيًّا وَّ
صَرَّفْنَا فِيهِ مِنَ الْوَعِيدِ لَعَلَّهُمْ يَتَّقُونَ أَوْ يُحْدِثُ لَهُمْ ذِكْرًا ﴿١١٣﴾

98. "உங்கள் (வணக்கத்திற்குரிய)நாயன் அல்லாஹ்( ஒருவன்)தான்; அவன் எத்தகையவனென்றால் அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் (வேறு எவரும்) இல்லை; அவன், ஒவ்வொரு பொருளையும் (தன்) அறிவால் விசாலமாக (அறிந்து) வைத்துள்ளான்" (என்றும் மூஸா) கூறினார்.

99. (நபியே!) இவ்வாறே (உமக்கு) முன்னர் சென்றுபோனவர்களின் செய்திகளை நாம் உமக்குக்கூறுவோம்; நம்மிடமிருந்து (இவ்வேதமாகிய) நல்லுபதேசத்தை நிச்சயமாக நாம் உமக்குக் கொடுத்திருக்கிறோம்.

100. எவர் அதனைப் புறக்கணிக்கின்றாரோ நிச்சயமாக அவர், மறுமை நாளில் (பெரிய தொரு) பாவத்தை (அதற்குரிய தண்டனையையே) சுமப்பார்.

101. அ(ந்நரகத்)தில் அவர்கள் நிரந்தரமாக இருப்பவர்கள்; மறுமை நாளில், சுமையால் அவர்களுக்கு அது மிகக் கெட்டது.

102. (ஸூர்) "குழல்" ஊதப்படும் நாளை ( நினைவு கூர்வீராக! ) குற்றவாளிகளை அந்நாளில், நீலம் பூத்த (கண்களுடைய)வர்களாக (இழுத்துக் கொண்டு வந்து ) ஒன்றுதிரட்டுவோம்.

103. நீங்கள் பத்து ( நாட்கள் ) தவிர (உலகில் ) தங்கியிருக்கவில்லை என்று அவர்களுக்கு மத்தியில் இரகசியமாக பேசிக்கொள்வார்கள்.

104. அவர்களில் நிறையறிவுடையவர்கள் (அவர்களிடம்) "ஒரு நாளேயன்றி நீங்கள் தங்கியிருக்கவில்லை" என்று கூறும் சமயத்தில், அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை நாம் நன்கறிவோம்.

105. மேலும்,(நபியே!) உம்மிடம் அவர்கள் மலைகளைப் பற்றிக்கேட்கிறார்கள்; (அதற்கு) நீர் கூறும்: என் இரட்சகன் அவைகளைத் தூள் தூளாக்கிவிடுவான்.

106. (பின்னர்) அவற்றை (ப்புற்பூண்டோ, கட்டிடங்களோ இல்லாத) சம வெளியாக்கி விட்டுவிடுவான்.

107. அதில் பள்ளத்தையோ, மே(ட்)டையோ நீர் காணமாட்டீர்.

108. அந்நாளில் (ஸூர் ஊதுகின்ற) அழைப்பாளரையே பின்பற்றிச் செல்வார்கள்; அதில் எவ்விதக் கோணலும்(மறுப்பும்) இருக்காது; சப்தங்கள் (அனைத்தும்) அர்ரஹ்மானுக்குப் பணிந்து(அடங்கி)விடும்; ஆகவே,(மெதுவான) காலடிச் சப்தத்தைத் தவிர (வேறெதனையும்) நீர் கேட்கமாட்டீர்.

109. அந்நாளில் அர்ரஹ்மான் எவருக்கு அனுமதி அளித்து, சொல்லால் அவருக்காக பொருந்திக்கொண்டானோ அவரைத் தவிர (மற்றெவருக்கும்) பரிந்துரை பயனளிக்காது.

110. அவர்களுக்கு முன்னுள்ளதையும், அவர்களுக்குப் பின்னுள்ளதையும் அவன் நன்கறிவான்; அவர்கள் அவனை(த் தங்கள்) கல்வியால் தீர அறிந்து கொள்ள மாட்டார்கள்.

111. (அந்நாளில் அல்லாஹுதஆலாவான) நிலையானவனாகிய நித்திய ஜீவனுக்கு(முன்) யாவருடைய முகங்களும் கவிழ்ந்துவிடும்; எவன்(இணையாக்குதல் என்னும்) அநியாயத்தைச் சுமந்து கொண்டானோ அவன் திட்டமாக நஷ்டமடைந்துவிட்டான்.

112. எவர் விசுவாசங் கொண்ட நிலையில், நற்கருமங்களையும் செய்கிறாரோ அவர்,(தனக்கு) அநீதத்தையோ, (தன்செயல்களுக்குரிய நற்கூலியில்) குறைவையோ பயப்படமாட்டார்.

113. இவ்வாறே, இதனை அரபி மொழியிலான குர்ஆனாக நாம் இறக்கிவைத்தோம்; அவர்கள் பயபக்தியுடையவர்களாக ஆவதற்காக, அல்லது இது அவர்களுக்கு நல்லுபதேசத்தை உண்டாக்குவதற்காக இதில் நாம்(நம்முடைய வேதனையைப் பற்றி) அவர்களுக்கு எச்சரிக்கையை (பலவாறாக) திரும்பத்திரும்ப விவரித்திருக்கிறோம்.

فَتَعٰلَى اللّٰهُ الۡمَلِكُ الۡحَـقُّۚ وَلَا تَعۡجَلۡ بِالۡقُرۡاٰنِ مِنۡ قَبۡلِ اَنۡ
يُّقۡضٰۤى اِلَيۡكَ وَحۡيُهٗ وَقُلْ رَّبِّ زِدۡنِىۡ عِلۡمًا ﴿۱۱۴﴾ وَلَـقَدۡ عَهِدۡنَاۤ
اِلٰٓى اٰدَمَ مِنۡ قَبۡلُ فَنَسِىَ وَلَمۡ نَجِدۡ لَهٗ عَزۡمًا ﴿۱۱۵﴾ وَاِذۡ قُلۡنَا لِلۡمَلٰٓـئِكَةِ ع ۶ / ۱۵
اسۡجُدُوۡا لِاٰدَمَ فَسَجَدُوۡۤا اِلَّاۤ اِبۡلِيۡسَؕ اَبٰى ﴿۱۱۶﴾ فَقُلۡنَا يٰۤـاٰدَمُ اِنَّ هٰذَا
عَدُوٌّ لَّكَ وَلِزَوۡجِكَ فَلَا يُخۡرِجَنَّكُمَا مِنَ الۡجَـنَّةِ فَتَشۡقٰى ﴿۱۱۷﴾ اِنَّ
لَكَ اَلَّا تَجُوۡعَ فِيۡهَا وَلَا تَعۡرٰى ﴿۱۱۸﴾ وَاَنَّكَ لَا تَظۡمَؤُا فِيۡهَا وَلَا تَضۡحٰى ﴿۱۱۹﴾
فَوَسۡوَسَ اِلَيۡهِ الشَّيۡطٰنُ قَالَ يٰۤـاٰدَمُ هَلۡ اَدُلُّكَ عَلٰى شَجَرَةِ
الۡخُـلۡدِ وَمُلۡكٍ لَّا يَبۡلٰى ﴿۱۲۰﴾ فَاَكَلَا مِنۡهَا فَبَدَتۡ لَهُمَا سَوۡاٰتُهُمَا
وَطَفِقَا يَخۡصِفٰنِ عَلَيۡهِمَا مِنۡ وَّرَقِ الۡجَـنَّةِ وَعَصٰۤى اٰدَمُ رَبَّهٗ
فَغَوٰى ﴿۱۲۱﴾ ثُمَّ اجۡتَبٰهُ رَبُّهٗ فَتَابَ عَلَيۡهِ وَهَدٰى ﴿۱۲۲﴾ قَالَ اهۡبِطَا
مِنۡهَا جَمِيۡعًاۢ بَعۡضُكُمۡ لِبَعۡضٍ عَدُوٌّ ۚ فَاِمَّا يَاۡتِيَنَّكُمۡ مِّنِّىۡ هُدًى ۙ
فَمَنِ اتَّبَعَ هُدَاىَ فَلَا يَضِلُّ وَلَا يَشۡقٰى ﴿۱۲۳﴾ وَمَنۡ اَعۡرَضَ
عَنۡ ذِكۡرِىۡ فَاِنَّ لَهٗ مَعِيۡشَةً ضَنۡكًا وَّنَحۡشُرُهٗ يَوۡمَ الۡقِيٰمَةِ
اَعۡمٰى ﴿۱۲۴﴾ قَالَ رَبِّ لِمَ حَشَرۡتَنِىۡۤ اَعۡمٰى وَقَدۡ كُنۡتُ بَصِيۡرًا ﴿۱۲۵﴾
قَالَ كَذٰلِكَ اَتَتۡكَ اٰيٰتُنَا فَنَسِيۡتَهَا ۚ وَكَذٰلِكَ الۡيَوۡمَ تُنۡسٰى ﴿۱۲۶﴾

114. எனவே உண்மையான அரசனாகிய அல்லாஹ் (இணை வைப்பவர்களின் இணைவைப்பிலிருந்து) உயர்ந்துவிட்டான். (நபியே! )குர்ஆனைக்கொண்டு —அதனுடைய அறிவிப்பு உம்மளவில் முடிக்கப்படுவதற்கு முன்னதாக (அதனை ஓத) நீர் அவசரப்படவேண்டாம்; "இன்னும், என் இரட்சகனே! எனக்கு அறிவை அதிகப்படுத்துவாயாக" என்றுநீர் (பிரார்த்தனை செய்து)கூறுவீராக!

115. மேலும், இதற்கு முன்னர், ஆதமிடம் நிச்சயமாக நாம் வாக்குறுதி வாங்கியிருந்தோம்; பின்னர்,(அதனை) அவர் மறந்து விட்டார்;மேலும்,(அதன்படி நடக்கும்) உறுதியை நாம் அவரிடம் காணவில்லை.

116. மேலும், மலக்குகளிடம் நீங்கள் ஆதமுக்குச் சிரம்பணியுங்கள் என்று நாம் கூறிய சமயத்தில், இப்லீஸைத் தவிர அவர்கள் சிரம்பணிந்தார்கள்; அவன் விலகிக்கொண்டான் (என்பதை நபியே! நீர் நினைவு கூர்வீராக).

117. ஆதலால் (நாம் ஆதமிடம்,) "ஆதமே! நிச்சயமாக இவன் உமக்கும், உம்முடைய மனைவிக்கும் விரோதியாவான்; எனவே உங்களிருவரையும் இச்சுவனத்திலிருந்து (தன் சூழ்ச்சியால்)அவன் நிச்சயமாக வெளியேற்றிவிட வேண்டாம்; அவ்வாறெனில், நீர் கஷ்டத்திற்குள்ளாகிவிடுவீர் "என்று கூறினோம்.

118. நீர், பசியில்லாதிருப்பதும், நீர் நிர்வாணமாகாதிருப்பதும் இ(ச்சுவனத்)தில் நிச்சயமாக உமக்குண்டு.

119. அன்றியும் இதில் நிச்சயமாக நீர் தாகிக்கவுமாட்டீர்; வெயிலில் (கஷ்டப்)படவுமாட்டீர் (என்று கூறினோம்).

120. ஆனால் ஷைத்தான் அவருக்கு (அவர்மனதில்) ஊசாட்டத்தை உண்டாக்கி விட்டான்; நித்தியவாழ்வளிக்கும் மரத்தையும், முடிவில்லா அரசாங்கத்தையும், உமக்கு நான் அறிவித்துத்தரட்டுமா? என்று கேட்டான்.

121. (முடிவாக)அவ்விருவரும் அ(ம்மரத்)திலிருந்து புசித்து விட்டார்கள்; உடனே (அவ் விருவரின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டிருந்த) அவ் விருவரின் மர்மஸ்தானங்களும் அவ் விருவருக்கும் வெளியாயின; அச்சுவனத்தின் இலைகளைக் கொண்டு, தங்களை மறைத்துக்கொள்ள அவ் விருவரும் முற்பட்டனர்; ஆகவே, ஆதம் தன் இரட்சகனுக்கு மாறுசெய்துவிட்டார்; எனவே,அவர் வழிதவறிவிட்டார்.

122. பின்னர், அவருடைய இரட்சகன் அவரைத்தேர்ந்தெடுத்தான்; அவருடைய தவ்பாவை (பாவமீட்சியை)ஏற்று (அவருக்கு) நல்வழியும் காட்டினான்.

123. (அன்றி அவ் விருவரிடம்) "நீங்கள் இருவரும் இதிலிருந்து சேகரமாக இறங்கிவிடுங்கள்; உங்க(ளுடைய சந்ததிக)ளில் சிலர் சிலருக்கு விரோதிகளாவார்கள்; நிச்சயமாக என்னிடமிருந்து நேர்வழி உங்களுக்கு வரும். ஆகவே, என்னுடைய நேர்வழியை எவர் பின்பற்றுகிறாரோ, அவர் வழி தவறமாட்டார்; துர்பாக்கியவானாக ஆகவுமாட்டார்" என்று கூறினான்.

124. மேலும், "எவர் என்னுடைய நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கின்றாரோ, நிச்சயமாக அவருக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கிறது; மேலும், மறுமை நாளில் நாம் அவனைக் குருடனாகவே எழுப்புவோம்".

125. (அதுசமயம்) அவன் "என் இரட்சகனே! ஏன் என்னை குருடனாக நீ எழுப்பினாய்? நான் திட்டமாக (உலகத்தில்) பார்க்கிறவனாக இருந்தேனே" என்று கேட்பான்.

126. ( அதற்கு) "அவ்வாறே! நம் வசனங்கள் உன்னிடம் வந்தன; நீ அவைகளை மறந்துவிட்டாய்;(நீ மறந்த) அவ்வாறே இன்றையத்தினம் நீயும் (நம் அருளிலிருந்து) மறக்கப்படுகிறாய்" என்று (அல்லாஹ்) கூறுவான்.

وَكَذٰلِكَ نَجْزِيْ مَنْ اَسْرَفَ وَلَمْ يُؤْمِنْ بِاٰيٰتِ رَبِّهٖ ؕ وَلَعَذَابُ
الْاٰخِرَةِ اَشَدُّ وَاَبْقٰى ﴿۱۲۷﴾ اَفَلَمْ يَهْدِ لَهُمْ كَمْ اَهْلَكْنَا قَبْلَهُمْ مِّنَ
الْقُرُوْنِ يَمْشُوْنَ فِيْ مَسٰكِنِهِمْ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّاُولِى النُّهٰى ﴿۱۲۸﴾ ع ۷ ۱۳ ۱۶
وَلَوْلَا كَلِمَةٌ سَبَقَتْ مِنْ رَّبِّكَ لَكَانَ لِزَامًا وَّاَجَلٌ مُّسَمًّى ﴿۱۲۹﴾ ؕ
فَاصْبِرْ عَلٰى مَا يَقُوْلُوْنَ وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ قَبْلَ طُلُوْعِ الشَّمْسِ
وَقَبْلَ غُرُوْبِهَا ۚ وَمِنْ اٰنَآئِ الَّيْلِ فَسَبِّحْ وَاَطْرَافَ النَّهَارِ
لَعَلَّكَ تَرْضٰى ﴿۱۳۰﴾ وَلَا تَمُدَّنَّ عَيْنَيْكَ اِلٰى مَا مَتَّعْنَا بِهٖۤ اَزْوَاجًا
مِّنْهُمْ زَهْرَةَ الْحَيٰوةِ الدُّنْيَا ۙ۬ لِنَفْتِنَهُمْ فِيْهِ ؕ وَرِزْقُ رَبِّكَ
خَيْرٌ وَّاَبْقٰى ﴿۱۳۱﴾ وَاْمُرْ اَهْلَكَ بِالصَّلٰوةِ وَاصْطَبِرْ عَلَيْهَا ؕ لَا
نَسْـَٔلُكَ رِزْقًا ؕ نَحْنُ نَرْزُقُكَ ؕ وَالْعَاقِبَةُ لِلتَّقْوٰى ﴿۱۳۲﴾ وَقَالُوْا
لَوْلَا يَاْتِيْنَا بِاٰيَةٍ مِّنْ رَّبِّهٖ ؕ اَوَلَمْ تَاْتِهِمْ بَيِّنَةُ مَا فِي الصُّحُفِ
الْاُوْلٰى ﴿۱۳۳﴾ وَلَوْ اَنَّاۤ اَهْلَكْنٰهُمْ بِعَذَابٍ مِّنْ قَبْلِهٖ لَقَالُوْا
رَبَّنَا لَوْلَاۤ اَرْسَلْتَ اِلَيْنَا رَسُوْلًا فَنَتَّبِعَ اٰيٰتِكَ مِنْ قَبْلِ
اَنْ نَّذِلَّ وَنَخْزٰى ﴿۱۳۴﴾ قُلْ كُلٌّ مُّتَرَبِّصٌ فَتَرَبَّصُوْا ۚ
فَسَتَعْلَمُوْنَ مَنْ اَصْحٰبُ الصِّرَاطِ السَّوِيِّ وَمَنِ اهْتَدٰى ﴿۱۳۵﴾ ع ۸ ۷ ۱۷

127. எனவே, தன் இரட்சகனின் வசனங்களை விசுவாசிக்காது வரம்பு மீறி நடக்கின்றவருக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம்; (அவனுக்குக் கிடைக்கும்) மறுமையின் வேதனையோ மிகக் கடினமானதும், நிலையானதுமாகும்.

128. இவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்து விட்டோம் என்பது இவர்களை நேர்வழியில் செலுத்தவில்லையா? (அழிக்கப்பட்ட) அவர்கள் குடியிருந்த இடங்களில் (சமீபமாகவே) இவர்கள் செல்கின்றனர்; அறிவுடையோருக்கு, நிச்சயமாக அதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

129. மேலும், (நபியே! தீர்ப்பளிக்கப்படுவது மறுமையில்தான் என்ற) உம்முடைய இரட்சகனின் வாக்கு மற்றும் குறிப்பிடப்பட்ட தவணை முந்தியிரா விட்டால்அ(ழிவான)துகட்டாயமாகியிருக்கும்.

130. ஆகவே, அவர்கள் (உம்மைக் குறை) கூறுவதைப் பற்றி நீர் பொறுத்துக் கொள்வீராக!மேலும்,சூரிய உதயத்திற்கு முன்னரும்,அது மறைவதற்கு முன்னரும் உம்முடைய இரட்சகனின் புகழைக்கொண்டு துதி செய்து கொண்டிருப்பீராக! இரவு நேரங்களிலும் (இவ்வாறே) பகலின் ஓரங்களிலும் (இரட்சகனைப் புகழ்ந்து) துதி செய்து கொண்டிருப்பீராக! இதனால் நீர் திருப்தியடையலாம்.

131. (நபியே!) அவர்களில் சில பிரிவாருக்கு உலக வாழ்க்கையின் அலங்காரமாக எதைக்கொண்டு சுகமனுபவிக்கச் செய்திருக்கிறோமோ அதன் பக்கம் உம்முடைய இரு கண்களையும் நீர் திண்ணமாகச்செலுத்த வேண்டாம்; (இவையாவும்)அதில் அவர்களை சோதிப்பதற்காகவே (நாம் கொடுத்திருக்கிறோம்). ஆனால் உம் இரட்சகன் (உமக்கு மறுமையில்) கொடுக்கவிருப்பது மிகச்சிறந்ததும், மிக நிலையானதுமாகும்.

132. மேலும் ,(நபியே!) "நீர் உம் குடும்பத்தினரைத் தொழுகையைக்கொண்டு ஏவுவீராக! நீரும் அதன் மீது(பொறுமையுடன்)நிலைத்திருப்பீராக! நாம் உம்மிடம் உணவைக்கேட்கவில்லை; உமக்கு நாமே உணவளிக்கிறோம்; மேலும் நல்லமுடிவு பயபக்தி(உடையவர்களு)க்கே உரியதாகும்.

133. "தன் இரட்சகனிடமிருந்து ஓர் அத்தாட்சியை அவர் நம்மிடம் கொண்டுவர வேண்டாமா?" என்றும் அவர்கள் கூறுகின்றனர்; முந்திய வேதங்களிலுள்ள தெளிவு, (அத்தாட்சி) அவர்களிடம் வரவில்லையா?

134. மேலும், (நம் தூதராகிய) இவருக்கு முன்னதாகவே நிச்சயமாகநாம் இவர்களை வேதனையைக் கொண்டு அழித்திருந்தால்,"எங்கள் இரட்சகனே! நீ எங்களுக்கு ஒரு தூதரை அனுப்பியிருக்க வேண்டாமா? (அவ்வாறிருந்தால்) நாங்கள் இழிவுபடுவதற்கும், கேவலப்படுவதற்கும் முன்னதாகவே உன்னுடைய வசனங்களை நாங்கள் பின் பற்றியிருப்போமே" என்று கூறுவார்கள்.

135. (நபியே!) நீர் கூறுவீராக: ஒவ்வொருவரும் (மறுமைநாளை) எதிர்பார்த்திருப்பவரே! ஆகவே , நீங்களும் எதிர்பார்த்திருங்கள்; நேரான வழியை உடையவர்கள் யார்? என்பதையும், நேர்வழி பெற்றவர் யார்? என்பதையும் (பின்னர்) நீங்கள் நிச்சயமாக நன்கறிந்துகொள்வீர்கள்.

سُوْرَۃُ الْاَنْبِیَآءِ مَکِّیَّۃٌ وَّھِیَ مِائَۃٌ وَّاثْنَتَا عَشْرَۃَ اٰیَۃً وَّسَبْعُ رُکُوْعَاتٍ

بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ

اِقْتَرَبَ لِلنَّاسِ حِسَابُہُمْ وَھُمْ فِیْ غَفْلَۃٍ الجزء ۱۷
مُّعْرِضُوْنَ ۱ مَا یَاْتِیْہِمْ مِّنْ ذِکْرٍ مِّنْ رَّبِّہِمْ مُّحْدَثٍ اِلَّا اسْتَمَعُوْہُ
وَھُمْ یَلْعَبُوْنَ ۲ لَاھِیَۃً قُلُوْبُہُمْ ؕ وَاَسَرُّوا النَّجْوَی ۖ الَّذِیْنَ ظَلَمُوْا ۖ
ھَلْ ھٰذَآ اِلَّا بَشَرٌ مِّثْلُکُمْ ۚ اَفَتَاْتُوْنَ السِّحْرَ وَاَنْتُمْ تُبْصِرُوْنَ ۳
قٰلَ رَبِّیْ یَعْلَمُ الْقَوْلَ فِی السَّمَآءِ وَالْاَرْضِ ز وَھُوَ السَّمِیْعُ الْعَلِیْمُ ۴
بَلْ قَالُوْٓا اَضْغَاثُ اَحْلَامٍۭ بَلِ افْتَرٰىہُ بَلْ ھُوَ شَاعِرٌ ۚ ۖ فَلْیَاْتِنَا
بِاٰیَۃٍ کَمَآ اُرْسِلَ الْاَوَّلُوْنَ ۵ مَآ اٰمَنَتْ قَبْلَہُمْ مِّنْ قَرْیَۃٍ اَھْلَکْنٰہَا ۚ
اَفَھُمْ یُؤْمِنُوْنَ ۶ وَمَآ اَرْسَلْنَا قَبْلَکَ اِلَّا رِجَالًا نُّوْحِیْٓ اِلَیْہِمْ
فَسْئَلُوْٓا اَھْلَ الذِّکْرِ اِنْ کُنْتُمْ لَا تَعْلَمُوْنَ ۷ وَمَا جَعَلْنٰہُمْ
جَسَدًا لَّا یَاْکُلُوْنَ الطَّعَامَ وَمَا کَانُوْا خٰلِدِیْنَ ۸ ثُمَّ صَدَقْنٰہُمُ
الْوَعْدَ فَاَنْجَیْنٰہُمْ وَمَنْ نَّشَآءُ وَاَھْلَکْنَا الْمُسْرِفِیْنَ ۹ لَقَدْ
اَنْزَلْنَآ اِلَیْکُمْ کِتٰبًا فِیْہِ ذِکْرُکُمْ ؕ اَفَلَا تَعْقِلُوْنَ ۱۰ ع وَکَمْ قَصَمْنَا ع ۱
مِنْ قَرْیَۃٍ کَانَتْ ظَالِمَۃً وَّاَنْشَاْنَا بَعْدَھَا قَوْمًا اٰخَرِیْنَ ۱۱

அத்தியாயம் : 21

## அல் அன்பியா _ நபிமார்கள்

வசனங்கள் : 112 மக்கீ ருகூஉகள் : 7

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. மனிதர்களுக்கு அவர்களுடைய (கேள்வி) கணக்கு (நாள்) நெருங்கிவிட்டது; அவர்களோ (அதனைப்) புறக்கணித்தவர்களாக மறதியில் இருக்கின்றனர்.

2. அவர்களுடைய இரட்சகனிடமிருந்து புதிதாக யாதொரு நினைவூட்டுதல்_ அவர்கள் விளையாடியவர்களாக _அதைச் செவிமடுத்தேயல்லாது அவர்களுக்கு வருவதில்லை.

3. அவர்களுடைய உள்ளங்கள் (உண்மையைச் சிந்திக்காது) மறதியாக இருக்கும் நிலையில்_(செவியேற்கின்றனர்) இன்னும், இத்தகைய அநியாயக்காரர்கள், (நம்முடைய தூதரைப் பற்றி) "இவர் உங்களைப் போன்ற ஒரு மனிதரேயன்றி, (வேறு)இல்லை; நீங்கள் பார்த்துக் கொண்டே இருக்க (அவருடைய) சூனியத்திற்கு(அதைப் பின்பற்ற) வருகிறீர்களா?" என்று தங்களுக்குள் இரகசியமாகப் பேசிக்கொள்கின்றனர்.

4. "என்னுடைய இரட்சகன், வானிலும், பூமியிலும் உள்ள கூற்றை நன்கறிவான்; (ஏனென்றால்) அவனோ (யாவையும்) செவியேற்கிறவன்; நன்கறிகிறவன்" என்று (நபியாகிய) அவர் கூறினார்.

5. அதற்கவர்கள் அவ்வாறல்ல! "இவை அர்த்தமற்ற கனவுகளாகும்! அல்ல, அவரே அதனை(ப் பொய்யாக)க்கற்பனை செய்துகொண்டார்! அல்ல, அவர் ஒரு கவிஞர்! ஆகவே, (அவர் அல்லாஹ்வின் உண்மையான தூதராக இருப்பின்) "முந்தையவர்கள் (அத்தாட்சிகளுடன்) அனுப்பப்பட்டது போன்று இவரும் (நாம் விரும்புகிறவாறு) ஓர் அத்தாட்சியை நம்மிடம் கொண்டுவரட்டும்" என்று கூறுகின்றனர்.

6. இவர்களுக்கு முன்னர், நாம் அதை அழித்துவிட்ட எந்த ஊ(ரா)ரும் விசுவாசங்கொள்ளவில்லை; (அவ்வாறிருக்க) இவர்கள் விசுவாசங் கொள்வார்களா?

7. மேலும், (நபியே!) உமக்கு முன்னரும்(மனிதர்களிலிருந்து) ஆடவர்களையே அன்றி, வேறெவரையும் நாம் நம்முடைய தூதராக அனுப்பவில்லை; (உமக்கு அறிவிக்கிற பிரகாரமே) அவர்களுக்கு நாம் வஹீ அறிவித்தோம்; ஆகவே (இவர்களிடம் நீர் கூறுவீராக: "இதனை) நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் (வேதத்தை) அறிந்தோரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்."

8. அன்றியும், அவர்களுக்கு உணவே உண்ணாதிருக்கக்கூடிய உடலை நாம் ஆக்கவில்லை; மேலும், அவர்கள் (பூமியில்) நிரந்தரமானவர்களாகவும் இருக்கவில்லை.

9. பின்னர், (அவர்களைக் காப்பாற்றுவதாக,) அவர்களுக்கு (அளித்த) வாக்குறுதியை நாம் உண்மையாக்கினோம்; ஆகவே அவர்களையும், நாம் நாடியவர்களையும் காப்பாற்றினோம். வரம்பு மீறியவர்களை நாம் அழித்தும்விட்டோம்.

10. திட்டமாக, உங்கள் பால் ஒரு வேதத்தை நாம் இறக்கி இருக்கிறோம். _ அதில் உங்களுடைய நினைவுகூர்தல் (உங்களைப்பற்றிய சிறப்பு) இருக்கிறது;(அதை) நீங்கள் விளங்கிக் கொள்ளமாட்டீர்களா?

11. அநியாயம் செய்து கொண்டிருந்த எத்தனையோ ஊர்களை நாம் அழித்து விட்டோம். அதற்குப் பின்னர், (அவ்விடத்தில்) வேறு சமூகத்தவர்களை உண்டாக்கினோம்.

فَلَمَّآ اَحَسُّوْا بَاْسَنَآ اِذَا هُمْ مِّنْهَا يَرْكُضُوْنَ ؕ﴿١٢﴾ لَا تَرْكُضُوْا وَ
ارْجِعُوْٓا اِلٰى مَآ اُتْرِفْتُمْ فِيْهِ وَمَسٰكِنِكُمْ لَعَلَّكُمْ تُسْـَٔلُوْنَ ﴿١٣﴾
قَالُوْا يٰوَيْلَنَآ اِنَّا كُنَّا ظٰلِمِيْنَ ﴿١٤﴾ فَمَا زَالَتْ تِّلْكَ دَعْوٰىهُمْ حَتّٰى
جَعَلْنٰهُمْ حَصِيْدًا خٰمِدِيْنَ ﴿١٥﴾ وَمَا خَلَقْنَا السَّمَآءَ وَالْاَرْضَ
وَمَا بَيْنَهُمَا لٰعِبِيْنَ ﴿١٦﴾ لَوْ اَرَدْنَآ اَنْ نَّتَّخِذَ لَهْوًا لَّاتَّخَذْنٰهُ
مِنْ لَّدُنَّآ ۖ اِنْ كُنَّا فٰعِلِيْنَ ﴿١٧﴾ بَلْ نَقْذِفُ بِالْحَقِّ عَلَى الْبَاطِلِ
فَيَدْمَغُهٗ فَاِذَا هُوَ زَاهِقٌ ؕ وَلَكُمُ الْوَيْلُ مِمَّا تَصِفُوْنَ ﴿١٨﴾
وَلَهٗ مَنْ فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَمَنْ عِنْدَهٗ لَا يَسْتَكْبِرُوْنَ
عَنْ عِبَادَتِهٖ وَلَا يَسْتَحْسِرُوْنَ ۚ﴿١٩﴾ يُسَبِّحُوْنَ الَّيْلَ وَالنَّهَارَ
لَا يَفْتُرُوْنَ ﴿٢٠﴾ اَمِ اتَّخَذُوْٓا اٰلِهَةً مِّنَ الْاَرْضِ هُمْ يُنْشِرُوْنَ ﴿٢١﴾
لَوْ كَانَ فِيْهِمَآ اٰلِهَةٌ اِلَّا اللّٰهُ لَفَسَدَتَا ۚ فَسُبْحٰنَ اللّٰهِ رَبِّ
الْعَرْشِ عَمَّا يَصِفُوْنَ ﴿٢٢﴾ لَا يُسْـَٔلُ عَمَّا يَفْعَلُ وَهُمْ
يُسْـَٔلُوْنَ ﴿٢٣﴾ اَمِ اتَّخَذُوْا مِنْ دُوْنِهٖٓ اٰلِهَةً ؕ قُلْ هَاتُوْا
بُرْهَانَكُمْ ۚ هٰذَا ذِكْرُ مَنْ مَّعِىَ وَذِكْرُ مَنْ قَبْلِىْ ؕ
بَلْ اَكْثَرُهُمْ لَا يَعْلَمُوْنَ ۙ الْحَقَّ فَهُمْ مُّعْرِضُوْنَ ﴿٢٤﴾

12. அவர்கள் நமது வேதனையை (அது அவர்களுக்கு வரவிருப்பதை) உணர்ந்து கொண்ட பொழுது, அதே சமயம் அவர்கள் அங்கிருந்து (துரிதமாக) வெருண்டோடலானார்கள்.

13. (அது சமயம்)" நீங்கள் வெருண்டோடாதீர்கள்! எதில் நீங்கள் சுகபோக வாழ்வு கொடுக்கப்பட்டிருந்தீர்களோ அதன்பாலும், இன்னும் உங்கள் குடியிருப்புகளின் பாலும் திரும்பிச் செல்லுங்கள்; நீங்கள் (அதுபற்றிக்) கேட்கப்படலாம்" (என்று கூறினோம்).

14. அ(தற்க)வர்கள்" எங்களுடைய கேடே! நிச்சயமாக நாங்கள் (இரட்சகனை மறுத்து) அநியாயக்காரர்களாக இருந்தோம்" என (வருந்தி)க் கூறினார்கள்.

15. அறுவடை செய்யப்பட்ட (வயலின்) அரிதாள்களைப் போன்று கரிந்து அழிந்து விட்டவர்களாக நாம் அவர்களை ஆக்கும் வரையில் (எங்களுடைய கேடே! என்ற) இதுவே அவர்களின் அழைப்பாக, (கூப்பாடாக) நீங்காமல் இருந்தது.

16. வானையும், பூமியையும், அவ்விரண்டிற்கு மத்தியிலுள்ளவைகளையும் விளையாடியவர்களாக (வீண் விளையாட்டுக்காக) நாம் படைக்கவில்லை.

17. (வீண்) விளையாட்டுக்கென (மனைவி, மக்கள் கொண்ட) எதனையும் ஆக்கிக் கொள்ள நாம் நாடி, (அதை) செய்வோராக நாம் இருந்திருப்பின் நம்மிடத்தி(ல் உள்ளவற்றி)லிருந்தே அதை நாம் எடுத்துக் கொண்டிருப்போம்.

18. அவ்வாறன்று! சத்தியத்தை அசத்தியத்தின் மீது எறிகின்றோம்; அ(ந்த சத்தியமான)து அ(சத்தியத்)தை அடக்கி விடுகின்றது; உடனே அது அழிந்து விடுகின்றது; (அல்லாஹ்வைப் பற்றி, அவனுக்கு தகுதியற்றவைகளைக்கூறி) நீங்கள் வர்ணிப்பதிலிருந்து உங்களுக்குக் கேடுதான் (உண்டு).

19. வானங்களிலும், பூமியிலும் உள்ளோர் அவனுக்கே உரியவர்கள்; மேலும், அவனிடமிருப்பவர்கள் (ஆகிய மலக்குகள்) அவனை வணங்குவதை விட்டும் பெருமையடிக்கமாட்டார்கள்; சோர்வடையவுமாட்டார்கள்.

20. அவர்கள் இரவிலும், பகலிலும் துதி செய்கின்றனர்; (ஆனால் அதில்) அவர்கள் தளர்ச்சியடையமாட்டார்கள்.

21. பூமியி(லுள்ளவற்றி)லிருந்து அவர்கள் (வணக்கத்திற்குரிய) தெய்வங்களாக எடுத்துக்கொண்டிருக்கின்றனரே அவர்கள், (மரணித்தோரை) உயிர் கொடுத்து எழுப்புவார்களா?

22. (வானங்கள், பூமி ஆகிய) அவை இரண்டிலும் அல்லாஹ்வைத் தவிர (வணக்கத்திற்குரிய) வேறு தெய்வங்கள் இருந்திருந்தால், அவை இரண்டும் சீர்குலைந்து (அழிந்து) போயிருக்கும்; ஆகவே, அர்ஷின் இரட்சகனாகிய அல்லாஹ், அவர்கள் வர்ணிக்கும் (இத்தகைய) தன்மைகளிலிருந்து மிகப் பரிசுத்தமானவன்.

23. அவன் செய்பவைகளைப் பற்றி, (எவராலும் விசாரணை செய்து) அவன் கேட்கப்படமாட்டான்; (ஆனால்) அவர்கள்தாம் (அவனால் விசாரணை செய்து) கேட்கப்படுவர்.

24. (நபியே!) அவர்கள் அவனையன்றி (வணக்கத்திற்குரிய) வேறு தெய்வங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றனரா? "(அவ்வாறாயின், அது பற்றிய) உங்கள் ஆதாரத்தைக் கொண்டு வாருங்கள்; (இன்னும், அவர்களிடம்,) இது (குர்ஆன்) என்னுடன் இருப்பவர்களின் உபதேசமும், எனக்கு முன் சென்றவர்களின் உபதேசமுமாகும்" என்று கூறுவீராக; எனினும் அவர்களில் பெரும்பாலோர் உண்மையை அறிந்துகொள்ளமாட்டார்கள்; ஆகவே, (இதனை) அவர்கள் புறக்கணிக்கக்கூடியவர்கள்.

وَمَآ اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَّسُوْلٍ اِلَّا نُوْحِیْۤ اِلَیْهِ اَنَّهٗ
لَاۤ اِلٰهَ اِلَّاۤ اَنَا فَاعْبُدُوْنِ ﴿٢٥﴾ وَقَالُوا اتَّخَذَ الرَّحْمٰنُ وَلَدًا
سُبْحٰنَهٗ ؕ بَلْ عِبَادٌ مُّكْرَمُوْنَ ﴿٢٦﴾ لَا یَسْبِقُوْنَهٗ بِالْقَوْلِ وَهُمْ
بِاَمْرِهٖ یَعْمَلُوْنَ ﴿٢٧﴾ یَعْلَمُ مَا بَیْنَ اَیْدِیْهِمْ وَمَا خَلْفَهُمْ وَ
لَا یَشْفَعُوْنَ ۙ اِلَّا لِمَنِ ارْتَضٰی وَهُمْ مِّنْ خَشْیَتِهٖ مُشْفِقُوْنَ ﴿٢٨﴾
وَمَنْ یَّقُلْ مِنْهُمْ اِنِّیْۤ اِلٰهٌ مِّنْ دُوْنِهٖ فَذٰلِكَ نَجْزِیْهِ جَهَنَّمَ ؕ
كَذٰلِكَ نَجْزِی الظّٰلِمِیْنَ ﴿٢٩﴾ اَوَلَمْ یَرَ الَّذِیْنَ كَفَرُوْۤا اَنَّ ع ١٩
السَّمٰوٰتِ وَالْاَرْضَ كَانَتَا رَتْقًا فَفَتَقْنٰهُمَا ؕ وَجَعَلْنَا مِنَ الْمَآءِ
كُلَّ شَیْءٍ حَیٍّ ؕ اَفَلَا یُؤْمِنُوْنَ ﴿٣٠﴾ وَجَعَلْنَا فِی الْاَرْضِ رَوَاسِیَ اَنْ
تَمِیْدَ بِهِمْ ۪ وَجَعَلْنَا فِیْهَا فِجَاجًا سُبُلًا لَّعَلَّهُمْ یَهْتَدُوْنَ ﴿٣١﴾
وَجَعَلْنَا السَّمَآءَ سَقْفًا مَّحْفُوْظًا ۚۖ وَّهُمْ عَنْ اٰیٰتِهَا مُعْرِضُوْنَ ﴿٣٢﴾
وَهُوَ الَّذِیْ خَلَقَ الَّیْلَ وَالنَّهَارَ وَالشَّمْسَ وَالْقَمَرَ ؕ كُلٌّ
فِیْ فَلَكٍ یَّسْبَحُوْنَ ﴿٣٣﴾ وَمَا جَعَلْنَا لِبَشَرٍ مِّنْ قَبْلِكَ الْخُلْدَ ؕ
اَفَاۡئِنْ مِّتَّ فَهُمُ الْخٰلِدُوْنَ ﴿٣٤﴾ كُلُّ نَفْسٍ ذَآئِقَةُ
الْمَوْتِ ؕ وَنَبْلُوْكُمْ بِالشَّرِّ وَالْخَیْرِ فِتْنَةً ؕ وَاِلَیْنَا تُرْجَعُوْنَ ﴿٣٥﴾

25. மேலும், நிச்சயமாக என்னைத் தவிர (வணக்கத்திற்குரிய) இறைவன் இல்லை; எனவே, என்னையே நீங்கள் வணங்க வேண்டும் என்று நாம் வஹீ அறிவிக்காமல் (நபியே!) உமக்கு முன்னர் எந்தத் தூதரையும் நாம் அனுப்பவில்லை.

26. மேலும், அவர்கள், "அர்ரஹ்மான் (தனக்காக) குமாரனை எடுத்துக் கொண்டான்" என்று கூறுகின்றனர்; அவன் மிகப் பரிசுத்தமானவன்; (மலக்குகள் அவனுடைய சந்ததிகள்) அல்ல; (அவர்கள் அவனுடைய) கண்ணியமிக்க அடியார்கள்.

27. சொல்லைக்கொண்டு அவனை அவர்கள் முந்தமாட்டார்கள்; அவர்களோ அவனின் கட்டளையைக் கொண்டு செயல்படுவார்கள்.

28. அவர்களுக்கு முன்னிருப்பவற்றையும், பின்னிருப்பவற்றையும் அவன் நன்கறிவான்; அவன் பொருந்திக் கொண்டவரைத் தவிர (மற்றெவருக்கும்) இவர்கள் பரிந்துரை செய்யவுமாட்டார்கள்; இன்னும் அவனது பயத்தால் அவர்கள் நடுங்குபவர்களாவர்.

29. இன்னும் அவர்களில் எவர், "(அல்லாஹ்வாகிய) அவனையன்றி நிச்சயமாக நான்தான் (வணக்கத்திற்குரிய) நாயன்" என்று கூறுகிறாரோ அ(வ்வாறுகூறுப)வர்_அவருக்கு நரகத்தையே நாம் கூலியாகக் கொடுப்போம்; அநியாயக்காரர்களுக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம்.

30. (ஆரம்பத்தில்) நிச்சயமாக வானங்களும், பூமியும் (இடைவெளியின்றி) இணைந்திருந்தன; பின்னர், அவ்விரண்டையும் நாமே பிரித்தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொரு பொருளையும் தண்ணீரிலிருந்து உண்டாக்கினோம் என்பதையும் இந்நிராகரிப்போர் அறியவில்லையா ? (இதை அறிந்தும்) அவர்கள் விசுவாசங்கொள்ளமாட்டார்களா?

31. இன்னும் பூமி, (மனிதர்களாகிய) அவர்களைக்கொண்டு அசைந்து விடாதிருப்பதற்காக, அதில் உறுதியான மலைகளை நாம் ஆக்கினோம்; அவர்கள் நேரான வழியைப் பெறுவதற்காக அதில் விசாலமான பாதைகளையும் நாம் ஆக்கினோம்.

32. வானத்தைப் பாதுகாக்கப்பட்ட முகடாகவும் நாம் ஆக்கினோம்; அவர்களோ அவற்றின் அத்தாட்சிகளைவிட்டும் புறக்கணிக்கின்றவர்களாக இருக்கின்றனர்.

33. இன்னும், அவன் எத்தகையவனென்றால் இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் படைத்தான்; (அவை) ஒவ்வொன்றும் (வானத்தில் தமக்குரிய) மண்டலங்களில் நீந்திச் செல்கின்றன.

34. மேலும், (நபியே!) உமக்கு முன்னர் எம்மனிதருக்கும் (இவ்வுலகில்) நிரந்தர(ஜீவிய)த்தை நாம் ஆக்கவில்லை; ஆகவே, நீர் இறந்துவிட்டால் அவர்கள் (மட்டும்என்றென்றும்)நிரந்தரமாகஇருக்கப்போகிறார்களா?

35. ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைக்கக்கூடியதாகவே இருக்கிறது; தீமையை (துன்பங்களை)க் கொண்டும், நன்மையை (இன்பங்களை)க் கொண்டும் பரீட்சிப்பதற்காக உங்களை நாம் சோதிக்கிறோம்; மேலும், நீங்கள் நம்மிடமே திருப்பப்படுவீர்கள்.

وَاِذَا رَاٰكَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِنْ يَّتَّخِذُوْنَكَ اِلَّا هُزُوًا ؕ اَهٰذَا
الَّذِيْ يَذْكُرُ اٰلِهَتَكُمْ ۚ وَهُمْ بِذِكْرِ الرَّحْمٰنِ هُمْ كٰفِرُوْنَ ﴿٣٦﴾
خُلِقَ الْاِنْسَانُ مِنْ عَجَلٍ ؕ سَاُورِيْكُمْ اٰيٰتِيْ فَلَا تَسْتَعْجِلُوْنِ ﴿٣٧﴾
وَيَقُوْلُوْنَ مَتٰى هٰذَا الْوَعْدُ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿٣٨﴾ لَوْ يَعْلَمُ
الَّذِيْنَ كَفَرُوْا حِيْنَ لَا يَكُفُّوْنَ عَنْ وُّجُوْهِهِمُ النَّارَ وَلَا
عَنْ ظُهُوْرِهِمْ وَلَا هُمْ يُنْصَرُوْنَ ﴿٣٩﴾ بَلْ تَاْتِيْهِمْ بَغْتَةً
فَتَبْهَتُهُمْ فَلَا يَسْتَطِيْعُوْنَ رَدَّهَا وَلَا هُمْ يُنْظَرُوْنَ ﴿٤٠﴾
وَلَقَدِ اسْتُهْزِئَ بِرُسُلٍ مِّنْ قَبْلِكَ فَحَاقَ بِالَّذِيْنَ سَخِرُوْا
مِنْهُمْ مَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ﴿٤١﴾ ع قُلْ مَنْ يَّكْلَؤُكُمْ بِالَّيْلِ ع ٣ ١٢ ٣
وَالنَّهَارِ مِنَ الرَّحْمٰنِ ؕ بَلْ هُمْ عَنْ ذِكْرِ رَبِّهِمْ مُّعْرِضُوْنَ ﴿٤٢﴾
اَمْ لَهُمْ اٰلِهَةٌ تَمْنَعُهُمْ مِّنْ دُوْنِنَا ؕ لَا يَسْتَطِيْعُوْنَ نَصْرَ
اَنْفُسِهِمْ وَلَا هُمْ مِّنَّا يُصْحَبُوْنَ ﴿٤٣﴾ بَلْ مَتَّعْنَا هٰٓؤُلَآءِ وَ
اٰبَآءَهُمْ حَتّٰى طَالَ عَلَيْهِمُ الْعُمُرُ ؕ اَفَلَا يَرَوْنَ اَنَّا نَاْتِي
الْاَرْضَ نَنْقُصُهَا مِنْ اَطْرَافِهَا ؕ اَفَهُمُ الْغٰلِبُوْنَ ﴿٤٤﴾ قُلْ اِنَّمَآ
اُنْذِرُكُمْ بِالْوَحْيِ ۖ وَلَا يَسْمَعُ الصُّمُّ الدُّعَآءَ اِذَا مَا يُنْذَرُوْنَ ﴿٤٥﴾

36. (நபியே!) நிராகரிப்போர் உம்மைக் கண்டால் உம்மை அவர்கள் பரிகாசமாகவேயன்றி எடுத்துக்கொள்வதில்லை;" உங்கள் தெய்வங்களைக் குறை கூறுபவர் இவரா?" (என்று உம்மைச் சுட்டிக்காட்டி அதிசயமாகக் கூறுகின்றனர்) அவர்களோ, "ரஹ்மான்" என்று (இரட்சகனின் பெயரைக்) கூறுவதையும் மறுப்பவர்களாக இருக்கின்றனர்.

37. மனிதன் அவசரக்காரனாகப் படைக்கப்பட்டிருக்கின்றான்; (ஆகவே வேதனை பற்றிய) என்னுடைய அத்தாட்சிகளை நான் உங்களுக்குக் காண்பிப்பேன்; (அதற்காக) நீங்கள் என்னிடம் அவசரப்படவேண்டாம்.

38. மேலும், "(வேதனை வருமென்ற கூற்றில் விசுவாசிகளாகிய) நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் இந்த வாக்குறுதி எப்பொழுது (நடந்தேறும்)?" என்று அவர்கள் (நிராகரிப்பவர்கள்) கேட்கிறார்கள்.

39. தங்கள் முகங்களையும், தங்கள் முதுகுகளையும் (நரக)நெருப்பிலிருந்து தடுத்துக்கொள்ள முடியாமலும்,யாராலும் தங்களுக்கு உதவி செய்யப்படாமலும் இருப்பார்களே அந்த நேரத்தை நிராகரிப்பவர்களாகிய (இ)வர்கள் அறிந்துகொள்வார்களானால் (அதுபற்றி கேட்கமாட்டார்கள்.)

40. அவ்வாறல்ல! அது இவர்களிடம் திடீரென வந்து, அவர்களைத் தட்டுக் கெட்டுத் தடுமாறச் செய்துவிடும்; அதனைத் தட்டி(க் கழித்து ) விட இவர்கள் சக்திபெற மாட்டார்கள்; இவர்கள் (தப்பித்துக்கொள்ள) அவகாசம் கொடுக்கப் படவுமாட்டார்கள்.

41. (நபியே!) உமக்கு முன்னர் (வந்த நம்முடைய ) தூதர்களும், (இவ்வாறே விரோதிகளால்) பரிகாசம் செய்யப்பட்டனர்; ஆகவே, அவர்கள் எதனைப் பற்றிப் பரிகாசம் செய்து கொண்டிருந்தார்களோ அது, அவர்களில் பரிகாசம் செய்து வந்தோரைச் சூழ்ந்து கொண்டது.

42. (நபியே! இவர்களிடம் ) இரவிலும், பகலிலும் (வரக்கூடிய) அர்ரஹ்மானி(ன் வேதனையி)லிருந்து உங்களைப் பாதுகாக்கக் கூடியவர் யார்? என்று நீர் கேட்பீராக; ஆனால், இவர்களோ தங்கள் இரட்சகனை நினைப்பதையே முற்றிலும் புறக்கணிக்கக் கூடியவர்களாவர்.

43. இவர்களை (நம்முடைய வேதனையை) விட்டும் தடுக்கக்கூடிய (வேறு) தெய்வங்கள் நம்மையன்றி அவர்களுக்கு இருக்கின்றனவா? அவர்கள் தமக்குத் தாமே உதவி செய்து கொள்ள சக்திபெறமாட்டார்கள்; இன்னும் அவர்கள் நம்மிடமிருந்து (நம் வேதனையை விட்டும்) காப்பாற்றப்படவுமாட்டார்கள்.

44. எனினும், இவர்களையும், இவர்களுடைய மூதாதையரையும், இவர்களின் ஆயுட்காலம் நீண்டதாக ஆகும் வரை சுகமனுபவிக்கச் செய்தோம்; நிச்சயமாக, நாம் பூமியை அதன் ஓரங்களிலிருந்து குறைத்துக்கொண்டு வருகிறோம் என்பதை இவர்கள் பார்க்கவில்லையா? (அவ்வாறிருக்க,) இவர்களா நம்மை மிகைத்துவிடுகிறவர்கள்?

45. (நபியே! அவர்களிடம்) "நான் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதெல்லாம் வஹீயைக் கொண்டுதான்" என்று நீர் கூறுவீராக; இன்னும் அவர்கள் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்படும்பொழுது, அச்செவிடர்கள் (உம்) அழைப்பை செவியேற்க மாட்டார்கள்.

وَلَئِنْ مَّسَّتْهُمْ نَفْحَةٌ مِّنْ عَذَابِ رَبِّكَ لَيَقُولُنَّ يٰوَيْلَنَآ
إِنَّا كُنَّا ظٰلِمِينَ ﴿٤٦﴾ وَنَضَعُ الْمَوَازِينَ الْقِسْطَ لِيَوْمِ الْقِيٰمَةِ
فَلَا تُظْلَمُ نَفْسٌ شَيْئًا ۖ وَإِنْ كَانَ مِثْقَالَ حَبَّةٍ مِّنْ
خَرْدَلٍ أَتَيْنَا بِهَا ۗ وَكَفٰى بِنَا حٰسِبِينَ ﴿٤٧﴾ وَلَقَدْ اٰتَيْنَا
مُوسٰى وَهٰرُونَ الْفُرْقَانَ وَضِيَآءً وَّذِكْرًا لِّلْمُتَّقِينَ ﴿٤٨﴾
الَّذِينَ يَخْشَوْنَ رَبَّهُمْ بِالْغَيْبِ وَهُمْ مِّنَ السَّاعَةِ
مُشْفِقُونَ ﴿٤٩﴾ وَهٰذَا ذِكْرٌ مُّبٰرَكٌ أَنْزَلْنٰهُ ۚ أَفَأَنْتُمْ لَهٗ
مُنْكِرُونَ ﴿٥٠﴾ وَلَقَدْ اٰتَيْنَآ إِبْرٰهِيمَ رُشْدَهٗ مِنْ قَبْلُ وَ ع ٩ ٤
كُنَّا بِهٖ عٰلِمِينَ ﴿٥١﴾ إِذْ قَالَ لِأَبِيهِ وَقَوْمِهٖ مَا هٰذِهِ التَّمَاثِيلُ
الَّتِيْٓ أَنْتُمْ لَهَا عٰكِفُونَ ﴿٥٢﴾ قَالُوا وَجَدْنَآ اٰبَآءَنَا لَهَا
عٰبِدِينَ ﴿٥٣﴾ قَالَ لَقَدْ كُنْتُمْ أَنْتُمْ وَاٰبَآؤُكُمْ فِي ضَلٰلٍ
مُّبِينٍ ﴿٥٤﴾ قَالُوٓا أَجِئْتَنَا بِالْحَقِّ أَمْ أَنْتَ مِنَ اللّٰعِبِينَ ﴿٥٥﴾
قَالَ بَلْ رَّبُّكُمْ رَبُّ السَّمٰوٰتِ وَالْأَرْضِ الَّذِي
فَطَرَهُنَّ ۖ وَأَنَا عَلٰى ذٰلِكُمْ مِّنَ الشّٰهِدِينَ ﴿٥٦﴾ وَ
تَاللّٰهِ لَأَكِيدَنَّ أَصْنَامَكُمْ بَعْدَ أَنْ تُوَلُّوا مُدْبِرِينَ ﴿٥٧﴾

46. மேலும், உம் இரட்சகனுடைய வேதனையிலிருந்து ஒரு சிறிதளவு அவர்களைத் தொட்டு விடுமானால், "எங்களுக்கு ஏற்பட்ட கேடே! திட்டமாக, நாங்கள் அநியாயக்காரர்களாக இருந்தோம்" என்று நிச்சயமாகக் கூறுவார்கள்.

47. மேலும், மறுமை நாளில் நீதமான தராசுகளை நாம் வைப்போம்; எந்த ஓர் ஆத்மாவும், (எதையும் குறைத்தோ, கூட்டியோ) சிறிதளவும் அநியாயம் செய்யப்படமாட்டாது; (நன்மையோ, தீமையோ) ஒரு கடுகின் வித்தளவு அது இருந்தபோதிலும், அதனையும் (நிறுக்கக்) கொண்டு வருவோம்; கணக்கெடுப்பவர்களில் (நமக்கு) நாமே போதும்; (கணக்கெடுக்க மற்றவரின் உதவி நமக்குத் தேவையில்லை).

48. இன்னும், மூஸாவுக்கும், ஹாரூனுக்கும் (நன்மை தீமையைப்) பிரித்தறிவிக்கக் கூடியதையும், ஒளியையும், பயபக்தியுடையோருக்கு உபதேசத்தையும் நிச்சயமாக நாம் கொடுத்திருந்தோம்.

49. (பயபக்தியுடைய) அவர்கள் எத்தகையோரென்றால், மறைந்த நிலையில் தங்கள் இரட்சகனை பயப்படுவார்கள்; இன்னும், அவர்கள் மறுமையைப் பற்றியும் பயந்து (நடுங்கிக்) கொண்டிருப்பவர்கள்.

50. இன்னும், இ(ந்த குர்ஆனாகிற)து (அதன் நன்மைகள் பன்மடங்காக் கப்பட்ட நிலையில்) பரக்கத்துச் செய்யப்பட்ட நல்லுபதேசமாகும், இதனை நாம் இறக்கி வைத்தோம்; இதனை நீங்கள் மறுக்கக்கூடியவர்களா?

51. நிச்சயமாக, இப்றாஹீமுக்கு முன்னரே (சிறு பிராயத்திலிருந்தே) அவருடைய நல்வழியை நாம் கொடுத்திருந்தோம்; அவரைப்பற்றி நாம் நன்கறிந்தோராகவும் இருந்தோம்.

52. அவர் தன் தந்தையிடமும், தன் சமூகத்தாரிடமும், " இச்சிலைகளென்ன? அவை எத்தகையவையென்றால் நீங்கள் அவற்றிற்காக (வழிபடுவதில்) நிலைத்திருக்கிறீர்கள்" என்று கேட்டபோது,

53. அவர்கள், "எங்கள் மூதாதையர்கள் இவைகளை வணங்கக்கூடியவர்களாக (இருந்ததை) நாங்கள் கண்டோம்" என்று கூறினார்கள்.

54. அ(தற்க)வர், "திட்டமாக நீங்களும், உங்கள் மூதாதையரும் பகிரங்கமான வழி கேட்டில் (தான்) இருந்துவிட்டீர்கள்" என்று கூறினார்.

55. அ(தற்க)வர்கள், "நீர் எங்களிடம் ஏதும் உண்மை(யான செய்தி)யைக் கொண்டு வந்திருக்கின்றீரா? அல்லது விளையாடுபவர்களில் நீர் இருக்கின்றீரா?" என்று கேட்டனர்.

56. அ(தற்க)வர்; (அவ்வாறு)" அல்ல! உங்களுடைய இரட்சகன் (அவன்தான்) வானங்களுக்கும், பூமிக்கும் இரட்சகனாவான்; அவனே அவற்றைப்படைத்தான்; இதற்கு சாட்சியம் கூறுபவர்களில் நானும் ஒருவனாக இருக்கிறேன்" என்று (இப்றாஹீம்) கூறினார்.

57. "இன்னும், அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நீங்கள் (இங்கிருந்து) புறங்காட்டி யவர்களாகத் திரும்பிச் சென்ற பின், உங்கள் சிலைகளுக்குத் திண்ணமாக நான் சதி செய்வேன்" (என்றும் கூறினார்.)

فَجَعَلَهُمْ جُذٰذًا اِلَّا كَبِيْرًا لَّهُمْ لَعَلَّهُمْ اِلَيْهِ يَرْجِعُوْنَ ﴿۵۸﴾
قَالُوْا مَنْ فَعَلَ هٰذَا بِاٰلِهَتِنَآ اِنَّهٗ لَمِنَ الظّٰلِمِيْنَ ﴿۵۹﴾ قَالُوْا
سَمِعْنَا فَتًى يَّذْكُرُهُمْ يُقَالُ لَهٗۤ اِبْرٰهِيْمُ ؕ﴿۶۰﴾ قَالُوْا
فَاْتُوْا بِهٖ عَلٰۤى اَعْيُنِ النَّاسِ لَعَلَّهُمْ يَشْهَدُوْنَ ﴿۶۱﴾ قَالُوْۤا
ءَاَنْتَ فَعَلْتَ هٰذَا بِاٰلِهَتِنَا يٰۤاِبْرٰهِيْمُ ؕ﴿۶۲﴾ قَالَ بَلْ فَعَلَهٗ ۖۗ
كَبِيْرُهُمْ هٰذَا فَسْـَٔلُوْهُمْ اِنْ كَانُوْا يَنْطِقُوْنَ ﴿۶۳﴾ فَرَجَعُوْۤا اِلٰۤى
اَنْفُسِهِمْ فَقَالُوْۤا اِنَّكُمْ اَنْتُمُ الظّٰلِمُوْنَ ۙ﴿۶۴﴾ ثُمَّ نُكِسُوْا عَلٰى
رُءُوْسِهِمْ ۚ لَقَدْ عَلِمْتَ مَا هٰۤؤُلَآءِ يَنْطِقُوْنَ ﴿۶۵﴾ قَالَ اَفَتَعْبُدُوْنَ
مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَنْفَعُكُمْ شَيْـًٔا وَّلَا يَضُرُّكُمْ ؕ﴿۶۶﴾ اُفٍّ
لَّكُمْ وَلِمَا تَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ ؕ اَفَلَا تَعْقِلُوْنَ ﴿۶۷﴾
قَالُوْا حَرِّقُوْهُ وَانْصُرُوْۤا اٰلِهَتَكُمْ اِنْ كُنْتُمْ فٰعِلِيْنَ ﴿۶۸﴾
قُلْنَا يٰنَارُ كُوْنِىْ بَرْدًا وَّسَلٰمًا عَلٰۤى اِبْرٰهِيْمَ ۙ﴿۶۹﴾ وَاَرَادُوْا
بِهٖ كَيْدًا فَجَعَلْنٰهُمُ الْاَخْسَرِيْنَ ۚ﴿۷۰﴾ وَنَجَّيْنٰهُ وَلُوْطًا
اِلَى الْاَرْضِ الَّتِىْ بٰرَكْنَا فِيْهَا لِلْعٰلَمِيْنَ ﴿۷۱﴾ وَوَهَبْنَا لَهٗۤ
اِسْحٰقَ ؕ وَيَعْقُوْبَ نَافِلَةً ؕ وَكُلًّا جَعَلْنَا صٰلِحِيْنَ ﴿۷۲﴾

58. (அவர்கள் அங்கிருந்து சென்ற பின்னர்) அவற்றில் பெரியதைத் தவிர (மற்ற) யாவற்றையும் துண்டு துண்டாக ஆக்கி(உடைத்துத் தள்ளி) விட்டார்; (பெரிய சிலையாகிய) அதன்பால் (விளக்கம் கேட்டு) அவர்கள் திரும்புவதற்காக (அதனை மட்டும் உடைக்கவில்லை).

59. (திரும்ப வந்து, இவற்றைக் கண்ட) அவர்கள், "எங்கள் (வணக்கத்திற்குரிய) தெய்வங்களை இவ்வாறு செய்தவன் யார்? நிச்சயமாக, அவன் அநியாயக்காரர்களில் உள்ளவன்" என்று கூறினார்கள்.

60. அ(தற்க)வர்களில் சிலர் "ஒரு இளைஞர் இவைகளைப் பற்றிக் (குறை) கூறிக்கொண்டிருந்ததை நாங்கள் செவியுற்றிருக்கிறோம், அவருக்கு இப்றாஹீம் என்று (பெயர்) கூறப்படுகிறது" என்று கூறினார்கள்.

61. அ(தற்க)வர்கள், "அவ்வாறாயின், அவரை மக்களின் கண்களுக்கெதிரில் கொண்டுவாருங்கள்; (அவரை யாவரும் பார்த்து) அவர்கள் சாட்சியம் கூறலாம்" என்று கூறினார்கள்.

62. (அவ்வாறு கொண்டு வரப்பட்ட அவரிடம்,) "இப்றாஹீமே! எங்களுடைய (வணக்கத்திற்குரிய) தெய்வங்களை இவ்வாறு செய்தவர் நீர்தானா?" என்று கேட்டனர்.

63. அ(தற்க)வர், "அவ்வாறல்ல! அதை அவர்களில் பெரியது தான் செய்தது; (உடைக்கப்பட்ட) அவர்கள் பேசக்கூடியவர்களாக இருந்தால் அவர்களையே கேளுங்கள்!" என்று கூறினார்.

64. அவர்கள் (நாணமுற்று) தங்கள் பக்கமே திரும்பி (ஒருவர் மற்றவரிடம்,) "நிச்சயமாக நீங்கள் தான் (இவற்றை வணங்கி)அக்கிரமம் செய்துவிட்டீர்கள்" என்று கூறிக்கொண்டார்கள்.

65. பின்னர்,(வெட்கத்தால்) அவர்கள் தலை குனியச்செய்யப்பட்டார்கள்;(சற்று நேரத்திற்குப் பிறகு இப்றாஹீமிடம்,) "இவைகள் பேசமாட்டா என்பதை நிச்சயமாக நீர் அறிந்திருக்கிறீர்" என்று கூறினார்கள்.

66. "கொஞ்சமும் உங்களுக்கு நன்மை செய்யாத,உங்களுக்குத் தீமையும் செய்யாத, அல்லாஹ் அல்லாதவற்றையா நீங்கள் வணங்குகிறீர்கள்?" என்று (இப்றாஹீமாகிய) அவர் கேட்டார்.

67. "சீச்சீ! உங்களுக்கும், நீங்கள் வணங்கும் அல்லாஹ் அல்லாத (இ) வைகளுக்கும் (நாசம்தான்) நீங்கள் விளங்கிக் கொள்ள மாட்டீர்களா?" என்று கூறினார்.

68. அ(தற்க)வர்கள், "நீங்கள் ஏதும் செய்பவர்களாக இருந்தால், இவரை (நெருப்பிலிட்டு) எரியுங்கள்; (அதன் மூலம்) உங்கள் (வணக்கத்திற்குரிய) தெய்வங்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று (தங்களைச் சார்ந்தோரிடம்) கூறினார்கள்.

69. (அவர்கள், இப்றாஹீமை நெருப்புக் கிடங்கில் எறியவே,) "நெருப்பே! இப்றாஹீமுக்குக் குளிர்ச்சியாகவும், சுகமளிக்கக்கூடியதாகவும் ஆகிவிடு!" என்று நாம் கூறினோம்.

70. மேலும், அவர்கள், அவருக்குச் சதி செய்ய நாடினார்கள்; நாம் அவர்களையே நஷ்டமடைந்தவர்களாகச் செய்துவிட்டோம்.

71. நாம் அவரையும், லூத்தையும் அகிலத்தார்க்கு நாம் பாக்கியத்தை நல்கிய பூமியின் (பைத்துல் முகத்தஸின்) பால்(வரச்செய்து) ஈடேற்றம் பெறச் செய்தோம்.

72. அன்றியும், நாம் அவருக்கு இஸ்ஹாக்கையும், கூடுதலாக யஃகூபையும் அன்பளிப்புச் செய்தோம்; (இவர்களில்) ஒவ்வொருவரையும் நல்லோர்களாகவும் நாம் ஆக்கினோம்.

وَجَعَلْنٰهُمْ اَىِٕمَّةً يَّهْدُوْنَ بِاَمْرِنَا وَاَوْحَيْنَآ اِلَيْهِمْ فِعْلَ
الْخَيْرٰتِ وَاِقَامَ الصَّلٰوةِ وَاِيْتَآءَ الزَّكٰوةِ ۚ وَكَانُوْا لَنَا عٰبِدِيْنَ ﴿۷۳﴾ۙ
وَلُوْطًا اٰتَيْنٰهُ حُكْمًا وَّعِلْمًا وَّنَجَّيْنٰهُ مِنَ الْقَرْيَةِ الَّتِىْ
كَانَتْ تَّعْمَلُ الْخَبٰٓىِٕثَ ؕ اِنَّهُمْ كَانُوْا قَوْمَ سَوْءٍ فٰسِقِيْنَ ﴿۷۴﴾ۙ
وَاَدْخَلْنٰهُ فِىْ رَحْمَتِنَا ؕ اِنَّهٗ مِنَ الصّٰلِحِيْنَ ﴿۷۵﴾ ع وَنُوْحًا ع ۵ ۲۵ ۵
اِذْ نَادٰى مِنْ قَبْلُ فَاسْتَجَبْنَا لَهٗ فَنَجَّيْنٰهُ وَاَهْلَهٗ مِنَ الْكَرْبِ
الْعَظِيْمِ ﴿۷۶﴾ۚ وَنَصَرْنٰهُ مِنَ الْقَوْمِ الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا ؕ
اِنَّهُمْ كَانُوْا قَوْمَ سَوْءٍ فَاَغْرَقْنٰهُمْ اَجْمَعِيْنَ ﴿۷۷﴾ وَدَاوٗدَ
وَسُلَيْمٰنَ اِذْ يَحْكُمٰنِ فِى الْحَرْثِ اِذْ نَفَشَتْ فِيْهِ غَنَمُ
الْقَوْمِ ۚ وَكُنَّا لِحُكْمِهِمْ شٰهِدِيْنَ ﴿۷۸﴾ۙ فَفَهَّمْنٰهَا سُلَيْمٰنَ ۚ
وَكُلًّا اٰتَيْنَا حُكْمًا وَّعِلْمًا ۫ وَّسَخَّرْنَا مَعَ دَاوٗدَ الْجِبَالَ
يُسَبِّحْنَ وَالطَّيْرَ ؕ وَكُنَّا فٰعِلِيْنَ ﴿۷۹﴾ وَعَلَّمْنٰهُ صَنْعَةَ
لَبُوْسٍ لَّكُمْ لِتُحْصِنَكُمْ مِّنْۢ بَاْسِكُمْ ۚ فَهَلْ اَنْتُمْ
شٰكِرُوْنَ ﴿۸۰﴾ وَلِسُلَيْمٰنَ الرِّيْحَ عَاصِفَةً تَجْرِىْ بِاَمْرِهٖۤ
اِلَى الْاَرْضِ الَّتِىْ بٰرَكْنَا فِيْهَا ؕ وَكُنَّا بِكُلِّ شَىْءٍ عٰلِمِيْنَ ﴿۸۱﴾

73. இன்னும், நம்முடைய கட்டளையின்படி நேர் வழி காட்டுகின்ற தலைவர்களாகவும் அவர்களை நாம் ஆக்கினோம்; அன்றியும், நன்மையான காரியங்களைச் செய்யுமாறும், தொழுகையை நிறைவேற்றுமாறும், ஜகாத்தைக் கொடுத்து வருமாறும் இவர்களுக்கு (வஹீ மூலம்) நாம் அறிவித்தோம்; இவர்கள் அனைவரும் நம்மையே வணங்குபவர்களாக இருந்தார்கள்.

74. லூத்தையும் (நபியாக்கி) _அவருக்கு நபித்துவத்தையும், கல்வியையும் கொடுத்து, அருவருக்கத்தக்க செயல்களைச் செய்துகொண்டிருந்த ஊரிலிருந்தும் நாம் அவரை காப்பாற்றிக் கொண்டோம்; நிச்சயமாக, அவர்கள் (மனிதர்களில்) மிகக் கெட்ட சமூகத்தினராக, பெரும் பாவிகளாக இருந்தனர்.

75. நாம் (லூத் ஆகிய)அவரை நம்முடைய அருளில் புகுத்திக்கொண்டோம், நிச்சயமாக, அவர் நல்லோர்களில் உள்ளவராவார்.

76. நூஹையும்(நினைவுகூர்வீராக!) முன்னர் அவர் (பிரார்த்தனை செய்து) அழைத்தபோது, அவருக்கு (அவரது பிரார்த்தனையை ஏற்று) நாம் பதில் கூறினோம்; (அதன் பொருட்டு) அவரையும், அவரது குடும்பத்தினரையும் பெரும் கஷ்டத்திலிருந்து நாம் காப்பாற்றினோம்.

77. நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கிய சமூகத்தாரிலிருந்து (அவர்களின் தீமையைத் தடுத்து) அவருக்கு நாம் உதவியும் செய்தோம்; நிச்சயமாக அவர்களும் மிகக் கெட்ட சமூகத்தவராகவே இருந்தனர்; ஆதலால் அவர்கள் யாவரையும் (பெருவெள்ளத்தில்) மூழ்கடித்துவிட்டோம்.

78. வேளாண்மை நிலத்தில் ஒரு சமூகத்தாரின் ஆடுகள் இரவில் இறங்கி மேய்ந்து விட்டபோது, அவ்வேளாண்மை விஷயத்தில் தாவூது,சுலைமான்(ஆகிய இருவரும்) தீர்ப்பளித்த சந்தர்ப்பத்தை (நபியே! நினைவு கூர்வீராக! அப்போது) அவர்களுடைய தீர்ப்பை பார்ப்பவர்களாக நாம் இருந்தோம்.

79. தீர்ப்புக் கூறுவதில் நாம் ஸுலைமானுக்கு அ(தன் நியாயத்)தை விளங்க வைத்தோம்; (அவ்விருவரில்) ஒவ்வொருவருக்கும் (தீர்ப்புக் கூறும்) அறிவையும், ஞானத்தையும் நாம் கொடுத்திருந்தோம்; மலைகளையும், பட்சிகளையும் தாவூதுடன் (தஸ்பீஹ் செய்ய) வசப்படுத்தியும் கொடுத்தோம். அவை (அவருடன் அல்லாஹ்வை) துதிசெய்தன; நாம்தாம் (இவற்றையெல்லாம்) செய்வோராய் இருந்தோம்.

80. இன்னும்,(நீங்கள் எதிரிகளுடன் போரிடும்போது) உங்களுடைய யுத்தத்தில் உங்களை தற்காத்துக் கொள்வதற்காக அணிந்துகொள்ளும் கவசங்கள் செய்வதை உங்களுக்காக நாம் அவருக்குக் கற்றுக்கொடுத்தோம்;இதற்காக நீங்கள் நன்றி செலுத்துபவர்களாக இருக்கிறீர்களா?

81. ஸுலைமானுக்கு, வேகமாக வீசும் காற்றையும் (நாம் வசப்படுத்திக் கொடுத்தோம்). அது அவருடைய கட்டளையின்படி, எந்த பூமியில் பாக்கியத்தை நாம் நல்கினோமோ அந்த பூமியின்பால் (அவரை எடுத்துச்) செல்லும்; மேலும், ஒவ்வொரு பொருளைப் பற்றியும் நாம் அறிந்தோராக இருந்தோம்.

وَمِنَ الشَّيٰطِيۡنِ مَنۡ يَّغُوۡصُوۡنَ لَهٗ وَيَعۡمَلُوۡنَ عَمَلًا
دُوۡنَ ذٰلِكَ‌ۚ وَكُنَّا لَهُمۡ حٰفِظِيۡنَۙ ﴿۸۲﴾ وَاَيُّوۡبَ اِذۡ نَادٰى
رَبَّهٗۤ اَنِّىۡ مَسَّنِىَ الضُّرُّ وَاَنۡتَ اَرۡحَمُ الرّٰحِمِيۡنَ‌ۚ‌ۖ ﴿۸۳﴾
فَاسۡتَجَبۡنَا لَهٗ فَكَشَفۡنَا مَا بِهٖ مِنۡ ضُرٍّ‌ وَّاٰتَيۡنٰهُ اَهۡلَهٗ وَ
مِثۡلَهُمۡ مَّعَهُمۡ رَحۡمَةً مِّنۡ عِنۡدِنَا وَذِكۡرٰى لِلۡعٰبِدِيۡنَ ﴿۸۴﴾
وَاِسۡمٰعِيۡلَ وَاِدۡرِيۡسَ وَذَا الۡكِفۡلِ‌ؕ كُلٌّ مِّنَ الصّٰبِرِيۡنَ‌ۖ‌ۙ ﴿۸۵﴾
وَاَدۡخَلۡنٰهُمۡ فِىۡ رَحۡمَتِنَا‌ؕ اِنَّهُمۡ مِّنَ الصّٰلِحِيۡنَ ﴿۸۶﴾ وَ
ذَا النُّوۡنِ اِذْ ذَّهَبَ مُغَاضِبًا فَظَنَّ اَنۡ لَّنۡ نَّقۡدِرَ عَلَيۡهِ
فَنَادٰى فِى الظُّلُمٰتِ اَنۡ لَّاۤ اِلٰهَ اِلَّاۤ اَنۡتَ سُبۡحٰنَكَ‌ۖ‌ۗ
اِنِّىۡ كُنۡتُ مِنَ الظّٰلِمِيۡنَ‌ۚ‌ۖ ﴿۸۷﴾ فَاسۡتَجَبۡنَا لَهٗ ۙ وَنَجَّيۡنٰهُ
مِنَ الۡغَمِّ‌ؕ وَكَذٰلِكَ نُـنۡجِى الۡمُؤۡمِنِيۡنَ ﴿۸۸﴾ وَزَكَرِيَّاۤ
اِذۡ نَادٰى رَبَّهٗ رَبِّ لَا تَذَرۡنِىۡ فَرۡدًا وَّاَنۡتَ خَيۡرُ
الۡوٰرِثِيۡنَ‌ۚ‌ۖ ﴿۸۹﴾ فَاسۡتَجَبۡنَا لَهٗ وَوَهَبۡنَا لَهٗ يَحۡيٰى وَاَصۡلَحۡنَا
لَهٗ زَوۡجَهٗ‌ؕ اِنَّهُمۡ كَانُوۡا يُسٰرِعُوۡنَ فِى الۡخَيۡرٰتِ وَ
يَدۡعُوۡنَنَا رَغَبًا وَّرَهَبًا‌ؕ وَكَانُوۡا لَنَا خٰشِعِيۡنَ ﴿۹۰﴾

82. ஷைத்தான்களிலிருந்து அவருக்காக கடலில் மூழ்கி (முத்துக்களை மற்றும் பவளங்களையும் கொண்டு) வரக்கூடியவர்களையும், (நாம் அவருக்கு வசப்படுத்திக் கொடுத்திருந்தோம்.) இது தவிர (அவருக்காக வேறு) வேலைகளையும் அவர்கள் செய்து கொண்டிருந்தனர். மேலும், நாம்தாம் அவர்களைப் பாதுகாப்போராக இருந்தோம்.

83. (நபியே!) அய்யூபையும் (நினைவு கூர்வீராக!) அவர், தன் இரட்சகனிடம், "நிச்சயமாகத் துன்பம் என்னைப்பீடித்துக் கொண்டது; நீயோ கிருபையாளர்களிலெல்லாம்மிகக் கிருபையாளன்" என்று (பிரார்த்தனை செய்து) அழைத்தபோது,

84. நாம் அவருக்கு பதிலளித்து; பின்னர், அவருக்கிருந்த துன்பத்தையும் நீக்கிவிட்டோம்; அவருடைய குடும்பத்தையும், அவர்களுடன் அவர்களைப் போன்றவர்களையும் அவருக்கு நாம் கொடுத்தோம்; இது, நம்மிடத்திலிருந்துள்ள கிருபையாகவும் (நம்மை) வணங்குவோருக்கு நினைவூட்டுதலாகவும் இருக்கிறது.

85. இஸ்மாயீலையும், இத்ரீஸையும், துல்கிப்லுவையும்_ (நபியே! நீர் நினைவு கூர்வீராக!) இவர்கள் ஒவ்வொருவரும், பொறுமையாளர்களாக இருந்தனர்.

86. இன்னும், அவர்களை நாம் நம்முடைய அருளில் புகுத்திக்கொண்டோம். நிச்சயமாக அவர்கள் நல்லோர்களில் உள்ளவராவார்கள்.

87. துன்னூனையும் (யூனுஸ் நபியாகிய மீனுடையவரை நபியே! நினைவு கூர்வீராக! தம் சமூகத்தாரை விட்டு)_ அவர் கோபமாக வெளியேறிய சமயத்தில், (நாம் அவரைப் பிடித்து) நெருக்கடிக்குள்ளாக்கி (தண்டித்து) விடமாட்டோம் என்று எண்ணிக் கொண்டார்; (ஆகவே மீன் வயிற்றின்) இருள்களில் "(நெருக்கடிக்குள்ளான அவர்,) உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் (வேறு ஒருவனும்) இல்லை; நீ மிகப் பரிசுத்தமானவன்; நிச்சயமாக நான், அநியாயக்காரர்களில் (ஒருவனாக) ஆகிவிட்டேன்;" என்று (பிரார்த்தனை செய்து) அழைத்தார்.

88. பின்னர், அவருக்கு நாம் பதிலளித்தோம்; (அவருடைய ) துக்கத்திலிருந்து, அவரை நாம் (விடுவித்துக்)காப்பாற்றினோம். இவ்வாறே விசுவாசிகளையும் நாம் காப்பாற்றுவோம்.

89. ஜகரிய்யாவையும் (நபியே! நீர் நினைவு கூர்வீராக!) அவர் தன் இரட்சகனை அழைத்து, "என் இரட்சகனே! என்னை(ச் சந்ததியில்லாது) தனித்தவனாக நீ விட்டுவிடாதே! நீயோ, வாரிசுரிமை கொள்வோரில் மிக்க மேலானவன்" என்று (பிரார்த்தனை செய்த) சமயத்தில்,

90. நாம் அவருக்கு பதில் கூறினோம்; யஹ்யாவை அவருக்கு(மகனாக)க் கொடுத்தோம்; இன்னும், (மலடாக இருந்த) அவருடைய மனைவியை (மகப்பேறுபெற) சீராக்கினோம்; நிச்சயமாக, இவர்கள் யாவரும், நன்மைகளில் (மிகத்துரிதமாக) விரைபவர்களாக இருந்தார்கள்; (நம்முடைய அருளை) ஆசித்தும், (நம் தண்டனையைப்) பயந்தும், நம்மை (பிரார்த்தனை செய்து) அழைப்பவர்களாகவும் இருந்தார்கள்; இன்னும் அவர்கள் (யாவரும்) நம்மிடம் உள்ளச்சமுடையோர்களாகவும் இருந்தார்கள்.

وَالَّتِيْٓ اَحْصَنَتْ فَرْجَهَا فَنَفَخْنَا فِيْهَا مِنْ رُّوْحِنَا وَ
جَعَلْنٰهَا وَابْنَهَآ اٰيَةً لِّلْعٰلَمِيْنَ ﴿٩١﴾ اِنَّ هٰذِهٖٓ اُمَّتُكُمْ
اُمَّةً وَّاحِدَةً ۖ وَّاَنَا رَبُّكُمْ فَاعْبُدُوْنِ ﴿٩٢﴾ وَتَقَطَّعُوْٓا اَمْرَهُمْ
بَيْنَهُمْ ۭ كُلٌّ اِلَيْنَا رٰجِعُوْنَ ﴿٩٣﴾ فَمَنْ يَّعْمَلْ مِنَ الصّٰلِحٰتِ ع ٦
وَهُوَ مُؤْمِنٌ فَلَا كُفْرَانَ لِسَعْيِهٖ ۚ وَاِنَّا لَهٗ كٰتِبُوْنَ ﴿٩٤﴾ وَ
حَرٰمٌ عَلٰى قَرْيَةٍ اَهْلَكْنٰهَآ اَنَّهُمْ لَا يَرْجِعُوْنَ ﴿٩٥﴾ حَتّٰٓى اِذَا
فُتِحَتْ يَاْجُوْجُ وَمَاْجُوْجُ وَهُمْ مِّنْ كُلِّ حَدَبٍ يَّنْسِلُوْنَ ﴿٩٦﴾
وَاقْتَرَبَ الْوَعْدُ الْحَقُّ فَاِذَا هِيَ شَاخِصَةٌ اَبْصَارُ الَّذِيْنَ
كَفَرُوْا ۭ يٰوَيْلَنَا قَدْ كُنَّا فِيْ غَفْلَةٍ مِّنْ هٰذَا بَلْ
كُنَّا ظٰلِمِيْنَ ﴿٩٧﴾ اِنَّكُمْ وَمَا تَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ
حَصَبُ جَهَنَّمَ ۭ اَنْتُمْ لَهَا وٰرِدُوْنَ ﴿٩٨﴾ لَوْ كَانَ هٰٓؤُلَاۗءِ
اٰلِهَةً مَّا وَرَدُوْهَا ۭ وَكُلٌّ فِيْهَا خٰلِدُوْنَ ﴿٩٩﴾ لَهُمْ فِيْهَا
زَفِيْرٌ وَّهُمْ فِيْهَا لَا يَسْمَعُوْنَ ﴿١٠٠﴾ اِنَّ الَّذِيْنَ سَبَقَتْ
لَهُمْ مِّنَّا الْحُسْنٰٓى ۙ اُولٰۗىِٕكَ عَنْهَا مُبْعَدُوْنَ ﴿١٠١﴾ لَا يَسْمَعُوْنَ
حَسِيْسَهَا ۚ وَهُمْ فِيْ مَا اشْتَهَتْ اَنْفُسُهُمْ خٰلِدُوْنَ ﴿١٠٢﴾ ج

91. தன் கற்பைக் காத்துக்கொண்ட (மர்யம் என்ப)வரையும் (நீர் நினைவு கூர்வீராக!) நம் ஆன்மாவிலிருந்து அவரில் நாம் ஊதினோம்; அவரையும், அவருடைய மகனையும் அகிலத்தார்க்கு ஓர் அத்தாட்சியாகவும் நாம் ஆக்கினோம்.

92. நிச்சயமாக( உங்களுக்குத் தெளிவு செய்யப்பட்ட)இது ஒரே மார்க்கமான உங்களுடைய மார்க்கமாகும் ; மேலும் நான்(தான்) உங்கள் இரட்சகன். ஆகவே என்னையே வணங்குங்கள்.

93. தங்களது (மார்க்கக்) காரியத்தில் அவர்களுக்கு மத்தியில் அவர்கள் பிளவுபட்டும் விட்டனர். இவர்கள் ஒவ்வொருவரும் நம்மிடம் திரும்ப வரக்கூடியவர்கள் .

94. ஆகவே, (இவர்களில்) எவர் விசுவாசங்கொண்டவராக, நற்கருமங்களைச் செய்கின்றாரோ, அவருடைய முயற்சி மறுப்பிற்குரியதல்ல; நிச்சயமாக நாம் அவருக்காக(அவரின் செயல்களை)பதிவு செய்வோராய் இருக்கின்றோம்.

95. மேலும், எதனை நாம் அழித்துவிட்டோமோ அவ்வூ(ரா)ர் மீது(அவர்கள் உலகிற்குத் திரும்புவது) தடுக்கப்பட்டுள்ளது; நிச்சயமாக அவர்கள் திரும்பமாட்டார்கள்.

96. கடைசியாக, யாஜூஜ், மாஜூஜ்க்( கூட்டத்திற்)கு (வழி) திறக்கப்பட்டால், அவர்கள் ஒவ்வொரு மேட்டிலிருந்தும் இறங்கி (குழப்பம் விளைவிக்க உலகின் பல பாகங்களிலும் )விரைவார்கள்.

97. (மறுமை நாள் பற்றிய) உண்மையான வாக்குறுதி நெருங்கியும்விட்டது; எனவே,(அது வந்து விட்டால்) நிராகரிப்போரின் கண்கள் திறந்தது திறந்தவாறே இருக்கும்; (அப்பொழுது) "எங்களுடைய கேடே! திட்டமாக நாம் இதனைப் பற்றிமறந்தவர்களாக இருந்துவிட்டோம்; அதுமட்டுமல்லாது; நாங்கள் அநியாயக்காரர்களாகவுமிருந்தோம்"(என்று கூறுவார்கள்).

98.(அப்போது அவர்களிடம்,)நிச்சயமாக நீங்களும் அல்லாஹ்வையன்றி(நீங்கள்) வணங்கியவைகளும் நரகத்தின் விறகுகளே! நீங்கள் யாவரும் அதற்கு வரவேண்டியவர்களாவர் (என்று கூறப்படும்).

99. (அவர்களால் வணங்கப்பட்ட) இவை வணக்கத்திற்குரியவர்களாக இருந்தால், அதன்(அந்நரகத்தின்) பால் வந்திருக்கமாட்டா; இன்னும், அவர்கள் யாவரும் நிரந்தரமாக(நரகமாகிய) அதில் (தங்கி) இருப்பவர்கள்.

100. அதில் அவர்களுக்கு (வேதனையின் கடினம் காரணமாக)விம்மிக்கதறுதல் உண்டு.மேலும், அங்கு அவர்கள் (வேறு) எதையும் செவியுறமாட்டார்கள்.

101. நிச்சயமாக எவர்களுக்கு நம்மிடமிருந்து நன்மை முந்திவிட்டதோ அத்தகையோர்_அவர்கள் அ(ந்நரகத்)தைவிட்டும் தூரமாக்கப்பட்டவர்களாவர்.

102. (நரகமாகிய) அதன் (அசைவின்) சப்தத்தை(க்கூட) அவர்கள்( தங்கள் காதால்) கேட்கமாட்டார்கள்; அன்றியும் அவர்கள் தங்களின் மனங்கள் விரும்பிய (சுகபோகங்களைச் சுவைப்ப)தில் நிரந்தரமாக இருப்பவர்கள்.

لَا يَحْزُنُهُمُ الْفَزَعُ الْاَكْبَرُ وَتَتَلَقّٰىهُمُ الْمَلٰٓئِكَةُ ؕ هٰذَا يَوْمُكُمُ
الَّذِيْ كُنْتُمْ تُوْعَدُوْنَ ﴿١٠٣﴾ يَوْمَ نَطْوِي السَّمَآءَ كَطَيِّ السِّجِلِّ
لِلْكُتُبِ ؕ كَمَا بَدَاْنَاۤ اَوَّلَ خَلْقٍ نُّعِيْدُهٗ ؕ وَعْدًا عَلَيْنَا ؕ اِنَّا كُنَّا
فٰعِلِيْنَ ﴿١٠٤﴾ وَلَقَدْ كَتَبْنَا فِي الزَّبُوْرِ مِنْۢ بَعْدِ الذِّكْرِ اَنَّ
الْاَرْضَ يَرِثُهَا عِبَادِيَ الصّٰلِحُوْنَ ﴿١٠٥﴾ اِنَّ فِيْ هٰذَا لَبَلٰغًا
لِّقَوْمٍ عٰبِدِيْنَ ﴿١٠٦﴾ ؕ وَمَاۤ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ ﴿١٠٧﴾
قُلْ اِنَّمَا يُوْحٰۤى اِلَيَّ اَنَّمَاۤ اِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ ۚ فَهَلْ اَنْتُمْ
مُّسْلِمُوْنَ ﴿١٠٨﴾ فَاِنْ تَوَلَّوْا فَقُلْ اٰذَنْتُكُمْ عَلٰى سَوَآءٍ ؕ وَاِنْ اَدْرِيْۤ
اَقَرِيْبٌ اَمْ بَعِيْدٌ مَّا تُوْعَدُوْنَ ﴿١٠٩﴾ اِنَّهٗ يَعْلَمُ الْجَهْرَ مِنَ
الْقَوْلِ وَيَعْلَمُ مَا تَكْتُمُوْنَ ﴿١١٠﴾ وَاِنْ اَدْرِيْ لَعَلَّهٗ فِتْنَةٌ لَّكُمْ
وَمَتَاعٌ اِلٰى حِيْنٍ ﴿١١١﴾ قٰلَ رَبِّ احْكُمْ بِالْحَقِّ ؕ وَرَبُّنَا
الرَّحْمٰنُ الْمُسْتَعَانُ عَلٰى مَا تَصِفُوْنَ ﴿١١٢﴾ ع ١٩ النصف

## سُوْرَةُ الْحَجِّ مَدَنِيَّةٌ وَهِيَ ثَمَانٌ وَّسَبْعُوْنَ اٰيَةً وَّعَشْرُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

يٰۤاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمْ ۚ اِنَّ زَلْزَلَةَ السَّاعَةِ شَيْءٌ عَظِيْمٌ ﴿١﴾

103. (மறுமைநாளில்) மாபெரும் திடுக்கம், அவர்களை கவலைக்குள்ளாக்காது; மேலும், மலக்குகள் அவர்களை எதிர்கொண்டழைத்து நீங்கள் வாக்களிக்கப்பட்டிருந்தீர்களே அத்தகைய உங்களுடைய நாள் இதுதான்"(என்று கூறுவார்கள்).

104. (நபியே!) எழுதப்பட்ட (பெரும்) ஏடுகளைச் சுருட்டுவதைப்போல, நாம் வானத்தைச் சுருட்டிவிடும் நாளை (நினைவு கூர்வீராக!) முதல் படைப்பை நாம் ஆரம்பித்ததுபோன்றே அதை நாம்(திரும்பவும்) மீளவைப்போம். (இது) நம் மீது கட்டாயமான வாக்குறுதியாகும். நிச்சயமாக நாம் (இதை) செய்வோராய் இருக்கிறோம்.

105. மேலும், நிச்சயமாக நாம், ஜபூர் (என்னும்) வேதத்தில் நல்லுபதேசங்களுக்குப் பின்னர், "நிச்சயமாக பூமியை என்னுடைய நல்லடியார்கள்தாம் அதை வாரிசாக அடைவார்கள்" என்று எழுதிவிட்டோம்.

106. (இரட்சகனையே) வணங்குகின்ற சமூகத்தார்களுக்கு நிச்சயமாக இதில் (வழிகாட்டல்களைக் கொண்ட அத்தாட்சிகள்) போதுமானது உள்ளது.

107. (நபியே!) உம்மை அகிலத்தார்க்கு ஓர் அருளாகவேயன்றி நாம் அனுப்பவில்லை.

108. (எனவே) நீர் கூறுவீராக: "எனக்கு வஹீ அறிவிக்கப்படுவதெல்லாம், உங்களுடைய (வணக்கத்திற்குரிய)நாயன் ஒரே ஒரு நாயன் என்று தான்; ஆகவே நீங்கள் (அவனுக்கு) முற்றிலும் வழிப்பட்டு(முஸ்லிம்களாக) நடப்பீர்களா?"

109. " எனவே அவர்கள்(இதைப்) புறக்கணித்துவிட்டால், நான் (என்னுடைய தூதை) உங்கள் யாவருக்கும் சமமாக அறிவித்துவிட்டேன். நீங்கள் வாக்களிக்கப்பட்டது (வேதனையான அது) சமீபத்திலிருக்கிறதா, அல்லது தூரத்திலிருக்கிறதா என்பதை நான் அறியமாட்டேன்" என்று (நபியே!) நீர்கூறுவீராக!

110. " நிச்சயமாக, (என் இரட்சகனாகிய) அவன் சொல்லில் பகிரங்கமானதை அறிகிறான்; (அதற்கு மாறாக ) நீங்கள் மறைத்து வைத்திருப்பதையும் அறிந்துகொள்கிறான்."

111. "இன்னும் ( உங்களுக்கு வேதனையை பிற்படுத்திவைத்திருப்பதான)அது உங்களுக்குச் சோதனையாகவும், சிறிதுகாலம் வரை (நீங்கள்) சுகம் அனுபவிப்பதற்காகவும் இருக்கலாமோ என்பதையும் நான் அறிய மாட்டேன்."(என்றும் கூறுவீராக!)

112. (மேலும் ) "என் இரட்சகனே! (எனக்கும், சத்தியத்தைப் பொய்யாக்கி யோருக்குமிடையில்) சத்தியத்தீர்ப்பு வழங்குவாயாக!" என்று கூறினார். எங்கள் இரட்சகனோ பேரருளாளன்; நீங்கள் (பொய்யாக) வர்ணிப்பவைகளுக்கெதிராக உதவி தேடப்படுபவன்.

---

அத்தியாயம் : 22

## அல் ஹஜ்ஜ்

வசனங்கள் : 78 மதனீ ருகூஃகள் : 10

---

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. மனிதர்களே! நீங்கள் உங்கள் இரட்சகனை பயந்துகொள்ளுங்கள். நிச்சயமாக மறுமை நாளின் அதிர்ச்சி மகத்தானதாகும்.

يَوْمَ تَرَوْنَهَا تَذْهَلُ كُلُّ مُرْضِعَةٍ عَمَّآ اَرْضَعَتْ
وَتَضَعُ كُلُّ ذَاتِ حَمْلٍ حَمْلَهَا وَتَرَى النَّاسَ سُكٰرٰى
وَمَا هُمْ بِسُكٰرٰى وَلٰكِنَّ عَذَابَ اللّٰهِ شَدِيْدٌ ۞٢ وَمِنَ
النَّاسِ مَنْ يُّجَادِلُ فِى اللّٰهِ بِغَيْرِ عِلْمٍ وَّيَتَّبِعُ كُلَّ
شَيْطٰنٍ مَّرِيْدٍ ۞٣ كُتِبَ عَلَيْهِ اَنَّهٗ مَنْ تَوَلَّاهُ فَاَنَّهٗ يُضِلُّهٗ
وَيَهْدِيْهِ اِلٰى عَذَابِ السَّعِيْرِ ۞٤ يٰۤاَيُّهَا النَّاسُ اِنْ كُنْتُمْ
فِىْ رَيْبٍ مِّنَ الْبَعْثِ فَاِنَّا خَلَقْنٰكُمْ مِّنْ تُرَابٍ ثُمَّ مِنْ
نُّطْفَةٍ ثُمَّ مِنْ عَلَقَةٍ ثُمَّ مِنْ مُّضْغَةٍ مُّخَلَّقَةٍ وَّغَيْرِ
مُخَلَّقَةٍ لِّنُبَيِّنَ لَكُمْ ؕ وَنُقِرُّ فِى الْاَرْحَامِ مَا نَشَآءُ اِلٰٓى
اَجَلٍ مُّسَمًّى ثُمَّ نُخْرِجُكُمْ طِفْلًا ثُمَّ لِتَبْلُغُوْٓا اَشُدَّكُمْ ۚ
وَمِنْكُمْ مَّنْ يُّتَوَفّٰى وَمِنْكُمْ مَّنْ يُّرَدُّ اِلٰٓى اَرْذَلِ الْعُمُرِ
لِكَيْلَا يَعْلَمَ مِنْۢ بَعْدِ عِلْمٍ شَيْـًٔا ؕ وَتَرَى الْاَرْضَ
هَامِدَةً فَاِذَآ اَنْزَلْنَا عَلَيْهَا الْمَآءَ اهْتَزَّتْ وَرَبَتْ
وَاَنْۢبَتَتْ مِنْ كُلِّ زَوْجٍۢ بَهِيْجٍ ۞٥ ذٰلِكَ بِاَنَّ اللّٰهَ
هُوَ الْحَقُّ وَاَنَّهٗ يُحْىِ الْمَوْتٰى وَاَنَّهٗ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ۞٦

2. அதனை நீங்கள் காணும் அந்நாளில், பாலூட்டிக் கொண்டிருக்கும் ஒவ்வொருத்தியும் , தான் பாலூட்டியதை( குழந்தயை) மறந்து விடுவாள்; கர்ப்பமுடைய ஒவ்வொருத்தியும் தன் சுமையை வைத்துவிடுவாள் ; மேலும் மனிதர்களை (பீதியின் கடுமையால்) மதி மயக்கம் கொண்டவர்களாக இருக்க நீர் காண்பீர்; அவர்கள் ( மதுவினால்) மதிமயங்கியவர்களும் அல்லர்; எனினும், அல்லாஹ்வுடைய வேதனை மிகக்கடினமானதாகும்.

3. மேலும், அறிவின்றி அல்லாஹ்வுடைய விஷயத்தில் தர்க்கம் செய்கின்றவரும், மனமுரண்டான ஒவ்வொரு ஷைத்தானைப் பின்பற்றுகிறவரும் மனிதர்களில் (சிலர்) இருக்கின்றனர்.

4. நிச்சயமாக எவன்(ஷைத்தானாகிய) அவனை நண்பனாக ஆக்கிக் கொள்கிறானோ, நிச்சயமாக காரியம்: அவன், இவனை (ஷைத்தானாகிய) அவன் வழிகெடுத்து, நரக வேதனையின்பக்கமே செலுத்திவிடுவான் என்று (ஷைத்தானாகிய)அவன்மீது விதியாக்கப்பட்டுவிட்டது.

5. மனிதர்களே! (இறந்தபின் உங்களுக்கு உயிர்கொடுத்து) எழுப்புவதைப் பற்றி நீங்கள் சந்தேகத்தில் இருந்தால்,(அது பற்றித்தெரிந்துகொள்ளுங்கள்.)நிச்சயமாக உங்களை (ஆரம்பமாக) மண்ணிலிருந்தும், பின்னர் (உங்களை) ஒரு துளி இந்திரியத்திலிருந்தும், பின்னர் இரத்தக்கட்டியிலிருந்தும், பின்னர் (நிறைவாக உருவம் கொடுக்கப்பட்டு) படைக்கப்பட்ட,(அல்லது நிறைவாக உருவம் கொடுக்கப்பட்டு) படைக்கப் படாத தசைக்கட்டியிலிருந்தும் நாம் படைத்தோம்; (என்ற நம் ஆற்றலை) உங்களுக்குத் தெளிவு செய்வதற்காகவே (இவ்வாறு விளக்குகிறோம் .) மேலும், நாம் நாடியவைகளைக் கர்ப்பப்பைகளில் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் (நிலைப்படுத்தி) தங்கிவிடும்படிச் செய்கிறோம்; பின்னர் உங்களைக் குழந்தையாக நாம் வெளிப்படுத்துகிறோம்; பின்பு உங்கள் வாலிபத்தை நீங்கள் அடைவதற்காக(தக்க வளர்ச்சியை த்தருகிறோம் ) இன்னும் உங்களில் ( சிலர் பருவ வயதை அடையுமுன்பே ) இறந்துவிடுகிறவரும் இருக்கின்றனர்; (அல்லது ஜீவித்திருந்து) யாவையும் அறிந்தபின்னர், ஒன்றுமே அறியாதவர்களைப்போல் ஆகிவிடக்கூடிய தளர்ந்த வயதுவரையில்(உயிர் வாழ) விட்டுவைக்கப்படுபவரும் உங்களில் இருக்கின்றனர்; மேலும், பூமியை வரண்டதாகப் பார்க்கிறீர்; அப்பொழுது, அதன் மீது நாம் மழையை இறக்கிவைப்போமானால், அது பசுமையாகி, இன்னும் வளர்ந்து, அழகான ஒவ்வொருவகையிலிருந்தும் (உயர்ந்த புற்பூண்டுகளை) முளைப்பிக்கின்றது.

6. இது (ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ்_ அவனே உண்மையானவன்; நிச்சயமாக அவன் தான் மரித்தோரை உயிர்ப்பிக்கின்றான்; நிச்சயமாக அவன் தான் ஒவ்வொரு பொருளின்மீதும் மிக்க ஆற்றலுடையவன் என்பதனாலாகும்.

وَّاَنَّ السَّاعَةَ اٰتِيَةٌ لَّا رَيْبَ فِيْهَا ۙ وَاَنَّ اللّٰهَ يَبْعَثُ مَنْ
فِي الْقُبُوْرِ ۞ ⁷ وَمِنَ النَّاسِ مَنْ يُّجَادِلُ فِي اللّٰهِ بِغَيْرِ عِلْمٍ
وَّلَا هُدًى وَّلَا كِتٰبٍ مُّنِيْرٍ ۙ ۞ ⁸ ثَانِيَ عِطْفِهٖ لِيُضِلَّ عَنْ
سَبِيْلِ اللّٰهِ ؕ لَهٗ فِي الدُّنْيَا خِزْيٌ وَّنُذِيْقُهٗ يَوْمَ الْقِيٰمَةِ
عَذَابَ الْحَرِيْقِ ۞ ⁹ ذٰلِكَ بِمَا قَدَّمَتْ يَدٰكَ وَاَنَّ اللّٰهَ لَيْسَ
بِظَلَّامٍ لِّلْعَبِيْدِ ۞ ¹⁰ ع وَمِنَ النَّاسِ مَنْ يَّعْبُدُ اللّٰهَ عَلٰى حَرْفٍ ۚ ع ١ ١٠ ٨
فَاِنْ اَصَابَهٗ خَيْرُ ۟ اطْمَاَنَّ بِهٖ ۚ وَاِنْ اَصَابَتْهُ فِتْنَةُ ۟ انْقَلَبَ عَلٰى
وَجْهِهٖ ۚ قف خَسِرَ الدُّنْيَا وَالْاٰخِرَةَ ؕ ذٰلِكَ هُوَ الْخُسْرَانُ الْمُبِيْنُ ۞ ¹¹
يَدْعُوْا مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَضُرُّهٗ وَمَا لَا يَنْفَعُهٗ ؕ ذٰلِكَ هُوَ
الضَّلٰلُ الْبَعِيْدُ ۞ ¹² ج يَدْعُوْا لَمَنْ ضَرُّهٗۤ اَقْرَبُ مِنْ نَّفْعِهٖ ؕ
لَبِئْسَ الْمَوْلٰى وَلَبِئْسَ الْعَشِيْرُ ۞ ¹³ اِنَّ اللّٰهَ يُدْخِلُ الَّذِيْنَ
اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ؕ
اِنَّ اللّٰهَ يَفْعَلُ مَا يُرِيْدُ ۞ ¹⁴ مَنْ كَانَ يَظُنُّ اَنْ لَّنْ
يَّنْصُرَهُ اللّٰهُ فِي الدُّنْيَا وَالْاٰخِرَةِ فَلْيَمْدُدْ بِسَبَبٍ اِلَى
السَّمَآءِ ثُمَّ لْيَقْطَعْ فَلْيَنْظُرْ هَلْ يُذْهِبَنَّ كَيْدُهٗ مَا يَغِيْظُ ۞ ¹⁵

7. இன்னும், நிச்சயமாக மறுமை நாள் வரக்கூடியதாகும்; அதில் சந்தேகமில்லை; இன்னும், சமாதிகளில் இருப்போரை, நிச்சயமாக அல்லாஹ் (அந்நாளில் உயிர் கொடுத்து) எழுப்புவான் (என்பதினாலுமாகும்).

8. " அறிவின்றியும், நேர்வழியின்றியும் பிரகாசமான வேத(ஆதார)மின்றியும் அல்லாஹ்வுடைய விஷயத்தில் தர்க்கம் செய்பவர்கள் மனிதர்களில் (சிலர்) இருக்கிறார்கள்.

9. அல்லாஹ்வுடைய பாதையிலிருந்து (ஜனங்களைத் திருப்பி) வழி கெடுப்பதற்காக (கர்வங்கொண்டு) தன் கழுத்தைத் திருப்பியவனாக, (உண்மையைப் புறக்கணிக்கின்றான்). அவனுக்கு இம்மையில் இழிவு இருக்கிறது; மறுமை நாளிலோ, எரிக்கும் (நெருப்பின்) வேதனையை அவனுக்கு நாம் சுவைக்கச் செய்வோம்.

10. " இது, உன்னுடைய இரு கரங்களும் முற்படுத்திவைத்த (பாவங்களின்) காரணத்தாலும், நிச்சயமாக அல்லாஹ், தன் அடியார்களுக்கு எவ்வகையிலும் ஒரு சிறிதும் அநியாயம் செய்கிறவனல்லன் என்பதினாலுமாகும் " (என அந்நாளில் அவனுக்குக் கூறப்படும்).

11. இன்னும், மனிதர்களில் (உறுதியின்றி, சந்தேகத்தின்) விளிம்பின் மீதிருந்து (கொண்டு) அல்லாஹ்வை வணங்குகிறவனும் இருக்கிறான்; எனவே, அவனுக்கு ஒரு நன்மை ஏற்படுமாயின் அதைக் கொண்டுஅவன் திருப்தியடைகிறான். அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்படுமாயின் அவன் தன் முகத்தின் மீது(ஈமானை விட்டும்இறை நிராகரிப்பின்பால்) புரண்டுவிடுகிறான். (இத்தகையவன்) இம்மையிலும், மறுமையிலும் நஷ்டமடைந்து விட்டான்; இது தான் தெளிவான நஷ்டமாகும்.

12. அல்லாஹ்வையன்றி அவன் தனக்கு தீங்கிழைக்காததையும், இன்னும் தனக்கு பயனளிக்காததையும் (வணங்கி) அழைக்கிறான். அதுவே தெளிவான நஷ்டமாகும்.

13. எவனுடைய தீங்கு அவனுடைய பயனைவிட மிகச்சமீபமாக இருக்கிறதோ, அவனையே இவன் அழைக்கிறான்; திடமாக (அவன் அழைக்கும்) பாதுகாவலன் மிகக் கெட்டவன்; (அவனின்) நண்பனும் திடமாக மிகக் கெட்டவன்.

14. நிச்சயமாக அல்லாஹ், விசுவாசங் கொண்டு, நற்கருமங்களையும் செய்கின்றவர்களைச் சுவனபதிகளில் பிரவேசிக்கச் செய்கிறான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் ; நிச்சயமாக அல்லாஹ், தான் நாடியதைச் செய்வான்.

15. தூதராகிய அவருக்கு எவன் இம்மையிலும், மறுமையிலும் அல்லாஹ் உதவி செய்யவேமாட்டான் என்று (தன்னுடைய காழ்ப்புணர்ச்சியின் காரணமாக) எண்ணுகின்றானோ அவன், ஒரு கயிற்றை வானத்தின் பால் (அதன் அளவிற்கு) நீட்டவும்; பின்னர் (நபிக்குக்கிடைத்துவரும் உதவியை தடுக்க முடிந்தால்) அவன் துண்டித்துவிடவும். இப்பொழுது அவனுடைய சூழ்ச்சி அவன் கோபம் கொண்டதைத் திண்ணமாகப் போக்கிவிட்டதா என்று (கவனித்துப்)பார்க்கவும்.

وَكَذٰلِكَ اَنْزَلْنٰهُ اٰيٰتٍۭ بَيِّنٰتٍ ۙ وَّاَنَّ اللّٰهَ يَهْدِيْ مَنْ يُّرِيْدُ ﴿۱۶﴾
اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَالَّذِيْنَ هَادُوْا وَالصّٰبِـِٕيْنَ وَالنَّصٰرٰى
وَالْمَجُوْسَ وَالَّذِيْنَ اَشْرَكُوْٓا ۖ ۚ اِنَّ اللّٰهَ يَفْصِلُ بَيْنَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ ؕ
اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَيْءٍ شَهِيْدٌ ﴿۱۷﴾ اَلَمْ تَرَ اَنَّ اللّٰهَ يَسْجُدُ لَهٗ مَنْ
فِي السَّمٰوٰتِ وَمَنْ فِي الْاَرْضِ وَالشَّمْسُ وَالْقَمَرُ وَالنُّجُوْمُ وَ
الْجِبَالُ وَالشَّجَرُ وَالدَّوَآبُّ وَكَثِيْرٌ مِّنَ النَّاسِ ؕ وَكَثِيْرٌ حَقَّ
عَلَيْهِ الْعَذَابُ ؕ وَمَنْ يُّهِنِ اللّٰهُ فَمَا لَهٗ مِنْ مُّكْرِمٍ ؕ اِنَّ اللّٰهَ
يَفْعَلُ مَا يَشَآءُ ۩ السجدة ﴿۱۸﴾ هٰذٰنِ خَصْمٰنِ اخْتَصَمُوْا فِيْ رَبِّهِمْ ۡ السجدة ۱۰
فَالَّذِيْنَ كَفَرُوْا قُطِّعَتْ لَهُمْ ثِيَابٌ مِّنْ نَّارٍ ؕ يُصَبُّ مِنْ
فَوْقِ رُءُوْسِهِمُ الْحَمِيْمُ ﴿۱۹﴾ يُصْهَرُ بِهٖ مَا فِيْ بُطُوْنِهِمْ وَالْجُلُوْدُ ؕ ﴿۲۰﴾
وَلَهُمْ مَّقَامِعُ مِنْ حَدِيْدٍ ﴿۲۱﴾ كُلَّمَآ اَرَادُوْٓا اَنْ يَّخْرُجُوْا
مِنْهَا مِنْ غَمٍّ اُعِيْدُوْا فِيْهَا ۚ وَذُوْقُوْا عَذَابَ الْحَرِيْقِ ﴿۲۲﴾ ع ۲/۱۲ ۹
اِنَّ اللّٰهَ يُدْخِلُ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ جَنّٰتٍ
تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ يُحَلَّوْنَ فِيْهَا مِنْ
اَسَاوِرَ مِنْ ذَهَبٍ وَّلُؤْلُؤًا ؕ وَلِبَاسُهُمْ فِيْهَا حَرِيْرٌ ﴿۲۳﴾

16. இன்னும், இவ்வாறே தெளிவான வசனங்களாகவே (குர்ஆனாகிய) இதனை நாம் இறக்கிவைத்தோம்; நிச்சயமாக அல்லாஹ், தான் நாடியவர்களையே (இதன் மூலம்) நேர்வழியில் செலுத்துகின்றான்.

17. நிச்சயமாக விசுவாசங்கொண்டார்களே அவர்களும், யூதர்களாக இருந்தார்களே அவர்களும், ஸாபியீன்களும், கிறிஸ்தவர்களும், (நெருப்பை வணங்குபவர்களான) மஜூஸிகளும், இணைவைத்துக்கொண்டிருந்தோரும்— (ஆகிய இவர்களில் நேர்வழியில் இருந்தவர்கள் யார் என்பதை) இவர்களுக்கிடையில், நிச்சயமாக அல்லாஹ் மறுமை நாளில் தீர்ப்பளிப்பான்; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் சாட்சியாக இருக்கிறான் (அவனுக்கு எதுவும் மறைந்ததல்ல).

18. (நபியே!) நிச்சயமாக அல்லாஹ் — அவனுக்கு வானங்களிலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், (பூமியின் மீது) ஊர்ந்துதிரியும் பிராணிகளும், மனிதர்களில் அதிகமானோரும் சிரம்பணிந்து வணங்குகின்றனர் என்பதை நீர் பார்க்கவில்லையா? இன்னும், பெரும்பாலோர் அவர்கள் மீது வேதனை விதியாகிவிட்டது. மேலும், அல்லாஹ் யாரை இழிவு படுத்துகின்றானோ அவனை கண்ணியப்படுத்துபவர் எவருமில்லை; நிச்சயமாக அல்லாஹ், தான் நாடியதைச்செய்வான்.

19. (விசுவாசிகளும், நிராகரிக்கும் காஃபிர்களும் ஆகிய) இவ்விரு வழக்காளிகள் தங்கள் இரட்சகனைப்பற்றி தர்க்கித்துக்கொண்டிருக்கின்றனர். ஆகவே நிராகரிக்கின்றார்களே அவர்கள்— நெருப்பு ஆடைகள் அவர்களுக்கு வெட்டி வைக்கப்பட்டு(தயார்ப்படுத்தப்பட்டு) இருக்கின்றன. (அக்கினியைப் போல்) கொதித்துக் கொண்டிருக்கும் தண்ணீர் அவர்களின் தலைகளின் மீது ஊற்றப்படும்.

20. அதனால் அவர்களுடைய வயிறுகளில் இருப்பவைகளும், (அவர்களின்) தோல்களும் உருக்கப்ப(ட்டு வடிந்து வி)டும்.

21. அவர்களுக்காக இரும்பினால்(ஆன) சம்மட்டிகளுமுண்டு. (அவைகளைக் கொண்டு அவர்கள் அடிக்கப்படுவார்கள்.)

22. துக்கத்தால் (நரகமாகிய) அதிலிருந்து அவர்கள் வெளியேற நாடும்போதெல்லாம், அதிலேயே திருப்பப் படுவார்கள்; இன்னும், "எரிக்கும் (நெருப்பு) வேதனையைச் சுவைத்துக்கொண்டிருங்கள்" (எனவும் கூறப்படும்).

23. விசுவாசங்கொண்டு நற்கருமங்களையும் செய்கிறார்களே அவர்களை, நிச்சயமாக அல்லாஹ் சுவனபதிகளில் நுழைவிப்பான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; (பின்னும்) அவற்றில் தங்கத்தினாலான கடகங்களும், முத்து(ஆபரணமு)ம் அவர்கள் அணிவிக்கப்படுவர்; அதில் அவர்களுடைய உடைகளும் பட்டாகும்.

وَهُدُوْٓا اِلَى الطَّيِّبِ مِنَ الْقَوْلِ ۖۚ وَهُدُوْٓا اِلٰى صِرَاطِ
الْحَمِيْدِ ﴿٢٤﴾ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا وَيَصُدُّوْنَ عَنْ سَبِيْلِ اللّٰهِ
وَالْمَسْجِدِ الْحَرَامِ الَّذِيْ جَعَلْنٰهُ لِلنَّاسِ سَوَآءَ ۨالْعَاكِفُ
فِيْهِ وَالْبَادِ ؕ وَمَنْ يُّرِدْ فِيْهِ بِاِلْحَادٍۢ بِظُلْمٍ نُّذِقْهُ مِنْ
عَذَابٍ اَلِيْمٍ ﴿٢٥﴾ وَاِذْ بَوَّاْنَا لِاِبْرٰهِيْمَ مَكَانَ الْبَيْتِ اَنْ لَّا ع ٣ ١٠
تُشْرِكْ بِيْ شَيْـًٔا وَّطَهِّرْ بَيْتِيَ لِلطَّآئِفِيْنَ وَالْقَآئِمِيْنَ وَ
الرُّكَّعِ السُّجُوْدِ ﴿٢٦﴾ وَاَذِّنْ فِي النَّاسِ بِالْحَجِّ يَاْتُوْكَ رِجَالًا
وَّعَلٰى كُلِّ ضَامِرٍ يَّاْتِيْنَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ ﴿٢٧﴾ ۙ لِّيَشْهَدُوْا
مَنَافِعَ لَهُمْ وَيَذْكُرُوا اسْمَ اللّٰهِ فِيْٓ اَيَّامٍ مَّعْلُوْمٰتٍ
عَلٰى مَا رَزَقَهُمْ مِّنْۢ بَهِيْمَةِ الْاَنْعَامِ ۚ فَكُلُوْا مِنْهَا
وَاَطْعِمُوا الْبَآئِسَ الْفَقِيْرَ ﴿٢٨﴾ ثُمَّ لْيَقْضُوْا تَفَثَهُمْ
وَلْيُوْفُوْا نُذُوْرَهُمْ وَلْيَطَّوَّفُوْا بِالْبَيْتِ الْعَتِيْقِ ﴿٢٩﴾
ذٰلِكَ ۗ وَمَنْ يُّعَظِّمْ حُرُمٰتِ اللّٰهِ فَهُوَ خَيْرٌ لَّهٗ عِنْدَ رَبِّهٖ ؕ
وَاُحِلَّتْ لَكُمُ الْاَنْعَامُ اِلَّا مَا يُتْلٰى عَلَيْكُمْ فَاجْتَنِبُوا
الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ ﴿٣٠﴾ ۙ

24. இன்னும் (கலிமா தைய்யிபா எனும்) பரிசுத்தமான கூற்றின் பால் அவர்கள் வழிகாட்டப்பட்டிருந்தனர்; இன்னும் புகழுக்குரியவனின் பாதையின்பாலும் அவர்கள் (இம்மையில்) செலுத்தப்பட்டிருந்தனர்.

25. நிச்சயமாக நிராகரித்து , அல்லாஹ்வின் பாதையை (அதில் விசுவாசிகள் செல்வதை) விட்டும் , (மற்றும் மஸ்ஜிதுல் ஹராம்) அதில் வசிப்போராயினும் , (அதற்கு தூரமாக) வெளியில் வசிப்போராயினும், மனிதர்களில் யாவருக்குமே சமமாக அதை நாம் ஆக்கியிருக்கிறோமே அத்தகைய புனிதமான பள்ளியை (அதனுள் செல்வதை)விட்டும் தடுக்கிறார்களே அத்தகையோர் (நஷ்டவாளிகளாவர்.)இன்னும் அதில்(பாவம் செய்தலெனும்) அநியாயத்தைக் கொண்டு யார் (அசத்தியத்தின்பால்) சாய்வதை நாடுகிறாரோ அவருக்கு நோவினைதரும் வேதனையிலிருந்து நாம் சுவைக்கச் செய்வோம்.

26. (நபியே!) இப்றாஹீமுக்கு (நமது) வீட்டின் இடத்தை நிர்ணயித்து," நீர் எனக்கு எவரையும் இணையாக்காதீர்; என்னுடைய வீட்டை சுற்றி வருவோருக்கும், அதில் (தொழுகைகளை நிறைவேற்ற) நிற்போருக்கும், அதில் குனிந்து சிரம்பணி(ந்துதொழு) வோருக்கும் அதனைப்பரிசுத்தப்படுத்திவைப்பீராக!" என்று நாம் கூறியதை(நீர் நினைவு கூர்வீராக!)

27. " ஹஜ்ஜுக்காக (அதைச் செய்ய வருமாறு) நீர் மனிதர்களை அழைப்பீராக! " (அவ்வழைப்பை ஏற்று) அவர்கள் நடந்தவர்களாக உம்மிடம் வருவார்கள் ; இன்னும் , இளைத்த(களைப்புற்ற) ஒட்டகங்களின் மீது(சவாரி செய்தவர்களாகவும் வருவார்கள்.) அவை தூரமான ஒவ்வொரு வழியிலிருந்தும் (அவர்களைக்கொண்டு) வரும்.

28. தங்களுக்குரிய (இம்மை மறுமையின்) பலன்களை அவர்கள் அடைவதற்காகவும், அல்லாஹ்வின் பெயரை _ அவன் அவர்களுக்குக் கொடுத்த (குர்பானிப் பிராணிகளான ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) நாற்கால் பிராணிகள்மீது குறிப்பிட்ட நாட்களில் கூறுவதற்காகவும்(வருவார்கள்.) ஆகவே, அ(றுக்கப்பட்ட)வைகளிலிருந்து நீங்களும் புசியுங்கள்; கஷ்டப்படும் ஏழைக்கும் உண்ணக் கொடுங்கள்.

29. பின்னர் (தலைமுடி இறக்கி, நகம் தறித்து, குளித்து இஹ்ராமை களைவதன் மூலம்) தங்கள் அழுக்குகளை அவர்கள் நீக்கிக்கொள்ளவும்; தம் நேர்ச்சைகளையும் அவர்கள் நிறைவேற்றவும்; (ஹஜ்ஜின் அடிப்படைக்கடமையான தவாபை நிறைவேற்ற) பூர்வீக ஆலயமான (கஃபா எனும்) வீட்டையும் அவர்கள் தவாஃப் செய்யவும்.

30. இதுவே(ஹஜ்ஜுடைய கிரியைகள் பற்றிய முறையாகும்). மேலும், அல்லாஹ்வினால் புனிதமாக்கப்பட்டவைகளை எவர் மேன்மைப்படுத்துகிறாரோ அது அவருடைய இரட்சகனிடத்தில் அவருக்கு மிகச்சிறந்ததாகும்; மேலும்,(ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால்நடைப் பிராணிகளிலிருந்து உங்களுக்கு (விலக்கப்பட்டவையென) ஓதிக்காட்டப்பட்டதைத்தவிர, மற்றவை உங்களுக்கு (உண்ண) அனுமதிக்கப்பட்டுள்ளன; ஆகவே விக்ரக (வணக்க)ங்களிலுள்ள அசுத்தத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்; பொய்க்கூற்றையும் நீங்கள் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

حُنَفَآءَ لِلّٰهِ غَيْرَ مُشْرِكِيْنَ بِهٖ ؕ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَكَاَنَّمَا
خَرَّ مِنَ السَّمَآءِ فَتَخْطَفُهُ الطَّيْرُ اَوْ تَهْوِيْ بِهِ الرِّيْحُ فِيْ
مَكَانٍ سَحِيْقٍ ﴿۳۱﴾ ذٰلِكَ ۗ وَمَنْ يُّعَظِّمْ شَعَآئِرَ اللّٰهِ فَاِنَّهَا مِنْ
تَقْوَى الْقُلُوْبِ ﴿۳۲﴾ لَكُمْ فِيْهَا مَنَافِعُ اِلٰۤى اَجَلٍ مُّسَمًّى ثُمَّ
مَحِلُّهَاۤ اِلَى الْبَيْتِ الْعَتِيْقِ ﴿۳۳﴾ وَلِكُلِّ اُمَّةٍ جَعَلْنَا مَنْسَكًا ع ۴ ۸ ۱۱
لِّيَذْكُرُوا اسْمَ اللّٰهِ عَلٰى مَا رَزَقَهُمْ مِّنْۢ بَهِيْمَةِ الْاَنْعَامِ ؕ
فَاِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ فَلَهٗۤ اَسْلِمُوْا ؕ وَبَشِّرِ الْمُخْبِتِيْنَ ﴿۳۴﴾ لا
الَّذِيْنَ اِذَا ذُكِرَ اللّٰهُ وَجِلَتْ قُلُوْبُهُمْ وَالصّٰبِرِيْنَ عَلٰى
مَاۤ اَصَابَهُمْ وَالْمُقِيْمِي الصَّلٰوةِ ۙ وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ ﴿۳۵﴾
وَالْبُدْنَ جَعَلْنٰهَا لَكُمْ مِّنْ شَعَآئِرِ اللّٰهِ لَكُمْ فِيْهَا خَيْرٌ ۖ ق
فَاذْكُرُوا اسْمَ اللّٰهِ عَلَيْهَا صَوَآفَّ ۚ فَاِذَا وَجَبَتْ جُنُوْبُهَا
فَكُلُوْا مِنْهَا وَاَطْعِمُوا الْقَانِعَ وَالْمُعْتَرَّ ؕ كَذٰلِكَ سَخَّرْنٰهَا
لَكُمْ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿۳۶﴾ لَنْ يَّنَالَ اللّٰهَ لُحُوْمُهَا وَلَا
دِمَآؤُهَا وَلٰكِنْ يَّنَالُهُ التَّقْوٰى مِنْكُمْ ؕ كَذٰلِكَ سَخَّرَهَا
لَكُمْ لِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰىكُمْ ؕ وَبَشِّرِ الْمُحْسِنِيْنَ ﴿۳۷﴾

31. அல்லாஹ்வுக்காக (அசத்தியத்தை விட்டும் சத்தியத்தின்பால்) சாய்ந்தவர்களாக, அவனுக்கு எதனையும் இணை வைக்காதவர்களாக, (வழிப்பட்டுவிடுங்கள்.) இன்னும், எவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றானோ அப்பொழுது அவன், வானத்திலிருந்து (முகங்குப்புற) விழுந்து பறவைகள் அவனை இராய்ஞ்சிக் கொண்டு சென்றதைப் போன்றோ அல்லது (பெருங்) காற்று அவனை வெகு தூரத்தில் உள்ள இடத்திற்கு அடித்துக் கொண்டு சென்றதைப் போன்றோ இருக்கின்றான்.

32. அதுவே (அவனுடைய கதியாகும்); இன்னும் எவர் அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களை கண்ணியப்படுத்துகின்றாரோ அப்போது நிச்சயமாக அது இதயங்களிலுள்ள பயபக்தியில் (ஏற்பட்டது) ஆகும்.

33. (குர்பானிப் பிராணிகளான, ஆடு, மாடு, ஒட்டகங்கள் ஆகியவைகளான) அவைகளில் (அவற்றின் பாலை அருந்துதல், சவாரிசெய்தல், அவற்றின் உரோமங்களை பயன்படுத்திக் கொள்ளுதல் போன்ற) பலன்கள் குறிப்பிட்ட நேரம் வரை உங்களுக்குண்டு; பின்னர், அவைகளுக்குரிய இடம் பூர்வீக வீட்டின்பாலாகும்.

34. (ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால்நடைப் பிராணிகளிலிருந்து அவன் அவர்களுக்கு கொடுத்திருக்கின்றவற்றின் மீது அல்லாஹ்வின் பெயரை அவர்கள் கூறுவதற்காக ஒவ்வொரு சமூகத்தாருக்கும் குர்பானி செய்வதை நாம் ஏற்படுத்தியிருந்தோம்; ஆகவே உங்களுடைய (வணக்கத்திற்குரிய) நாயன் (ஒரே) ஒரு நாயன்தான்; அவன் ஒருவனுக்கே நீங்கள் முற்றிலும் கீழ்ப்படிந்து நடங்கள். மேலும், உள்ளச்சம் உடையவர்களுக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!

35. அவர்கள் எத்தகையோரென்றால், அல்லாஹ் (வுடைய பெயர்) கூறப்பட்டால், அவர்களுடைய இதயங்கள் (அச்சத்தால் பயந்து) நடுங்கிவிடும்; (துன்பங் களிலிருந்து) அவர்களுக்கு ஏற்பட்டதின் மீது பொறுமையாளர்களாகவும், தொழுகையை நிறைவேற்றுபவர்களாகவும் இருப்பர்; அவர்களுக்கு நாம் அளித்தவற்றிலிருந்து (தர்மமாகச்) செலவும் செய்வார்கள்.

36. (அல்லாஹ்வின் பெயரால் ஹரமின்பால் கொண்டு செல்லப்படும் கொழுத்த) ஒட்டகங்களை — அவற்றை உங்களுக்காக அல்லாஹ்வுடைய அடையாளங்களில் உள்ளவையாக நாம் ஆக்கியிருக்கிறோம்; உங்களுக்கு அவற்றில் பெரும் நன்மை இருக்கிறது; ஆகவே (அதன் இடது முன் காலை மடக்கிக் கட்டி மீதமுள்ள மூன்று மூன்று கால்களில் அது நிற்குமாறு) நிறுத்தி வைத்து, அல்லாஹ்வின் பெயரைக் கூறி (அறுத்து) விடுங்கள். அது விலாப்புறமாக கீழே விழுந்து விட்டால், அதிலிருந்து நீங்களும் உண்ணுங்கள்; (தேவையுடையோராய் இருந்தும் பிறரிடம்) கேட்காதவர்களுக்கும், அதை யாசித்துக் கேட்டவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள்; நீங்கள் நன்றி செலுத்துவதற்காக அவ்வாறு அதனை உங்களுக்கு வசப்படுத்தித் தந்தோம்.

37. (இவ்வாறு குர்பானி செய்யப்பட்ட,) அவற்றின் மாமிசங்களோ அல்லது அவற்றின் இரத்தங்களோ அல்லாஹ்வை ஒருபோதும் அடைந்து விடுவதில்லை; எனினும் உங்களிலுள்ள பயபக்திதான் அவனை அடையும்; உங்களை அவன் நேர்வழியில் செலுத்தியதற்காக (தக்பீர் கூறி) அல்லாஹ்வை நீங்கள் பெருமைப்படுத்துவதற்காக, இவ்வாறு அவைகளை உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான்; மேலும், (நபியே!) நன்மை செய்வோருக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக!

اِنَّ اللّٰهَ يُدٰفِعُ عَنِ الَّذِيْنَ اٰمَنُوْا ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ كُلَّ
خَوَّانٍ كَفُوْرٍ ﴿۳۸﴾ ع اُذِنَ لِلَّذِيْنَ يُقٰتَلُوْنَ بِاَنَّهُمْ ظُلِمُوْا ؕ وَاِنَّ اللّٰهَ ع ۵ ۱۲
عَلٰى نَصْرِهِمْ لَقَدِيْرُ ﴿۳۹﴾ لا الَّذِيْنَ اُخْرِجُوْا مِنْ دِيَارِهِمْ بِغَيْرِ حَقٍّ
اِلَّآ اَنْ يَّقُوْلُوْا رَبُّنَا اللّٰهُ ؕ وَلَوْلَا دَفْعُ اللّٰهِ النَّاسَ بَعْضَهُمْ
بِبَعْضٍ لَّهُدِّمَتْ صَوَامِعُ وَبِيَعٌ وَّصَلَوٰتٌ وَّمَسٰجِدُ يُذْكَرُ
فِيْهَا اسْمُ اللّٰهِ كَثِيْرًا ؕ وَلَيَنْصُرَنَّ اللّٰهُ مَنْ يَّنْصُرُهٗ ؕ اِنَّ اللّٰهَ لَقَوِيٌّ
عَزِيْزٌ ﴿۴۰﴾ اَلَّذِيْنَ اِنْ مَّكَّنّٰهُمْ فِى الْاَرْضِ اَقَامُوا الصَّلٰوةَ وَاٰتَوُا
الزَّكٰوةَ وَاَمَرُوْا بِالْمَعْرُوْفِ وَنَهَوْا عَنِ الْمُنْكَرِ ؕ وَلِلّٰهِ عَاقِبَةُ
الْاُمُوْرِ ﴿۴۱﴾ وَاِنْ يُّكَذِّبُوْكَ فَقَدْ كَذَّبَتْ قَبْلَهُمْ قَوْمُ نُوْحٍ وَّعَادٌ
وَّثَمُوْدُ ﴿۴۲﴾ لا وَقَوْمُ اِبْرٰهِيْمَ وَقَوْمُ لُوْطٍ ﴿۴۳﴾ لا وَّاَصْحٰبُ مَدْيَنَ ۚ وَكُذِّبَ
مُوْسٰى فَاَمْلَيْتُ لِلْكٰفِرِيْنَ ثُمَّ اَخَذْتُهُمْ ۚ فَكَيْفَ كَانَ نَكِيْرِ ﴿۴۴﴾
فَكَاَيِّنْ مِّنْ قَرْيَةٍ اَهْلَكْنٰهَا وَهِىَ ظَالِمَةٌ فَهِىَ خَاوِيَةٌ عَلٰى عُرُوْشِهَا
وَبِئْرٍ مُّعَطَّلَةٍ وَّقَصْرٍ مَّشِيْدٍ ﴿۴۵﴾ اَفَلَمْ يَسِيْرُوْا فِى الْاَرْضِ فَتَكُوْنَ
لَهُمْ قُلُوْبٌ يَّعْقِلُوْنَ بِهَآ اَوْ اٰذَانٌ يَّسْمَعُوْنَ بِهَا ۚ فَاِنَّهَا لَا
تَعْمَى الْاَبْصَارُ وَلٰكِنْ تَعْمَى الْقُلُوْبُ الَّتِىْ فِى الصُّدُوْرِ ﴿۴۶﴾

38. நிச்சயமாக அல்லாஹ் விசுவாசங் கொண்டவர்களை (நிராகரிப்போரின் தீங்கு அவர்களை அணுகாது) தடுத்துக்கொள்கிறான். (உடன்படிக்கைகளை உடைத்தெறிகின்ற) அதிமோசக்காரர்களை, (அவனின் அருட் கொடைகளுக்கு நன்றி செய்யாது) மறுப்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கமாட்டான்.

39. (நிராகரிப்போரால்) போர் தொடுக்கப்பட்டோர்க்கு அவர்கள் அநீதமிழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் (போர்த் தொடுத்தோரை எதிர்த்து) யுத்தம் செய்ய அனுமதியளிக்கப்பட்டுவிட்டது; நிச்சயமாக அல்லாஹ்வோ, இவர்களுக்கு உதவி செய்ய மிக்க ஆற்றலுடையவன்.

40. அவர்கள் எத்தகையோரென்றால் நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து (விரோதிகளால்) வெளியேற்றப்பட்டார்கள்; "எங்களுடைய இரட்சகன் அல்லாஹ் (ஒருவன்)தான்" என்று கூறியதைத்தவிர(வேறெதுவும் அவர்கள் வாக்காக இருக்கவில்லை). மேலும், மனிதர்களில் (அநியாயம் செய்யும்) சிலரை, (மற்ற) சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால், (பாதிரிகளின்) மடங்களும், கிறிஸ்தவர்களின் வணக்கஸ்தலங்களும், யூதர்களின் வணக்கஸ்தலங்களும், மஸ்ஜிதுகளும்— இவற்றில் அல்லாஹ்வுடைய பெயர் அதிகமாக கூறப்படுபவை(யாவும்) இடிக்கப்பட்டுப் போயிருக்கும்; அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கிறானோ அவனுக்கு நிச்சயமாக அல்லாஹ்வும் உதவி செய்கிறான். நிச்சயமாக அல்லாஹ் வலிமைமிக்கவன், யாவரையும் மிகைத்தவன்.

41. அவர்கள் எத்தகையோரென்றால், நாம் அவர்களுக்கு பூமியில் (காரியங்களை நிர்வகிக்கும்) ஆற்றலை ஏற்படுத்திக்கொடுத்தால், அவர்கள் தொழுகையை முறையாக நிறைவேற்றுவார்கள்; ஜகாத்தையும் கொடுத்து வருவார்கள்; நன்மையை ஏவி தீமையை விட்டும் விலக்குவார்கள்; மேலும் சகல காரியங்களின் முடிவும் அல்லாஹ்விடமே இருக்கிறது.

42. மேலும் (நபியே!) இவர்கள் உம்மைப் பொய்யாக்கினால், (அதனால் நீர் கலக்கமுற வேண்டாம்; ஏனெனில்) இவர்களுக்கு முன்னிருந்த நூஹ்வுடைய சமூகத்தாரும், ஆது(கூட்டத்தாரு)ம், ஸமூது(கூட்டத்தாரு)ம் (தங்கள் நபிமார்களை) நிச்சயமாகப் பொய்யாக்கினர்.

43. இன்னும், (இப்றாஹீமை) இப்றாஹீமுடைய சமூகத்தவரும், (லூத்தை)லூத்துடைய சமூகத்தவரும் (பொய்யாக்கினார்கள்).

44. (இவ்வாறே) மதியன் வாசிகளும், (அல்லாஹ்வின் தூதரைப் பொய்ப்படுத்தினர். இவ்வாறே) மூஸாவும் (தம் சமூகத்தாரால்) பொய்யாக்கப்பட்டார்; ஆகவே, நிராகரித்தோருக்கு நான் அவகாசம் கொடுத்தேன், பின்னர் அவர்களை நான் பிடித்துக்கொண்டேன்; (என்னுடைய) வேதனை(யின் பயங்கரம்) எவ்வாறிருந்தது? (என்பதை கவனிப்பீராக.)

45. எத்தனையோ ஊர்களை —அவை அநியாயம் செய்துகொண்டிருக்க நாம் அவற்றை அழித்துள்ளோம்; அவை அவற்றின் முகடுகளின் மீது விழுந்து கிடக்கின்றன; இன்னும், பாழடிக்கப்பட்ட கிணறுகளின்மீதும், உறுதியாக கட்டப்பட்ட கோட்டைகளின்மீதும், (அவை விழுந்தழிந்து கிடக்கின்றன.)

46. பூமியில் அவர்கள் பிரயாணம் செய்யவில்லையா? (அவ்வாறு பிரயாணம் செய்வார்களாயின்) உணர்ந்து கொள்ளக்கூடிய இதயங்கள் அதன்மூலம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்; அல்லது (நல்லுபதேசத்தைக்) கேட்கக்கூடிய காதுகள் அதன் மூலம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்; நிச்சயமாக, அவர்களுடைய (வெளிப்)பார்வைகள் குருடாகவில்லை; எனினும், நெஞ்சங்களிலுள்ள (அவர்களுடைய) இதயங்கள் குருடாகிவிட்டன.

وَيَسْتَعْجِلُوْنَكَ بِالْعَذَابِ وَلَنْ يُّخْلِفَ اللّٰهُ وَعْدَهٗ ؕ وَاِنَّ يَوْمًا
عِنْدَ رَبِّكَ كَاَلْفِ سَنَةٍ مِّمَّا تَعُدُّوْنَ ﴿٤٧﴾ وَكَاَيِّنْ مِّنْ قَرْيَةٍ
اَمْلَيْتُ لَهَا وَهِيَ ظَالِمَةٌ ثُمَّ اَخَذْتُهَا ۚ وَاِلَيَّ الْمَصِيْرُ ﴿٤٨﴾ قُلْ ع ١٢
يٰۤاَيُّهَا النَّاسُ اِنَّمَاۤ اَنَا لَكُمْ نَذِيْرٌ مُّبِيْنٌ ﴿٤٩﴾ فَالَّذِيْنَ اٰمَنُوْا وَ
عَمِلُوا الصّٰلِحٰتِ لَهُمْ مَّغْفِرَةٌ وَّرِزْقٌ كَرِيْمٌ ﴿٥٠﴾ وَالَّذِيْنَ سَعَوْا
فِيْۤ اٰيٰتِنَا مُعٰجِزِيْنَ اُولٰٓئِكَ اَصْحٰبُ الْجَحِيْمِ ﴿٥١﴾ وَمَاۤ اَرْسَلْنَا
مِنْ قَبْلِكَ مِنْ رَّسُوْلٍ وَّلَا نَبِيٍّ اِلَّاۤ اِذَا تَمَنّٰۤى اَلْقَى الشَّيْطٰنُ
فِيْۤ اُمْنِيَّتِهٖ ۚ فَيَنْسَخُ اللّٰهُ مَا يُلْقِي الشَّيْطٰنُ ثُمَّ يُحْكِمُ اللّٰهُ
اٰيٰتِهٖ ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿٥٢﴾ لِّيَجْعَلَ مَا يُلْقِي الشَّيْطٰنُ
فِتْنَةً لِّلَّذِيْنَ فِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ وَّالْقَاسِيَةِ قُلُوْبُهُمْ ؕ وَ
اِنَّ الظّٰلِمِيْنَ لَفِيْ شِقَاقٍۭ بَعِيْدٍ ﴿٥٣﴾ وَّلِيَعْلَمَ الَّذِيْنَ اُوْتُوا
الْعِلْمَ اَنَّهُ الْحَقُّ مِنْ رَّبِّكَ فَيُؤْمِنُوْا بِهٖ فَتُخْبِتَ لَهٗ
قُلُوْبُهُمْ ؕ وَاِنَّ اللّٰهَ لَهَادِ الَّذِيْنَ اٰمَنُوْۤا اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿٥٤﴾
وَلَا يَزَالُ الَّذِيْنَ كَفَرُوْا فِيْ مِرْيَةٍ مِّنْهُ حَتّٰى تَاْتِيَهُمُ
السَّاعَةُ بَغْتَةً اَوْ يَاْتِيَهُمْ عَذَابُ يَوْمٍ عَقِيْمٍ ﴿٥٥﴾

47. மேலும், (நபியே!) அவர்கள் வேதனையை(அது எங்கே எனக் கேட்டு)உம்மிடம் அவசரமாகத்தேடுகின்றனர்; அல்லாஹ் தன் வாக்கிற்கு ஒரு போதும் மாற்றம் செய்யமாட்டான்; மேலும் நிச்சயமாக, உம் இரட்சகனிடத்தில் ஒரு நாளாகிறது, நீங்கள் கணக்கிடும் ஆயிரம் வருடங்கள் போன்றதாகும்.

48. எத்தனையோ ஊர் (வாசி) கள்_ அவை அநியாயம் செய்துகொண்டிருந்த நிலையில் நான் அவற்றுக்கு அவகாசம் அளித்திருந்தேன்; ( ஆனால் அவர்கள் அக்கிரமமே செய்து வந்தார்கள்) பின்னர் நான் அவற்றைப்பிடித்துக்கொண்டேன்; (அவர்கள் இறந்த பின்னரும்) என்பாலே மீண்டும் வரவேண்டியதிருக்கின்றது.

49. (நபியே!) நீர் கூறும்: மனிதர்களே! நான் உங்களுக்குத் தெளிவாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றவன்தான்.

50. ஆகவே விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு மன்னிப்பு, மற்றும் கண்ணியமான உணவும் உண்டு.

51. இன்னும், நம்முடைய வசனங்களில் (நம்மை) இயலாமலாக்குவதற்காக முயற்சிக்கின்றார்களே அத்தகையோர்_அவர்கள் நரகவாசிகள்!

52. (நபியே!) உமக்குமுன் எந்தத் தூதரையும், எந்த நபியையும் அவர் ஓதினால், அவருடைய ஓதுதலில் ஷைத்தான் (நோயிருப்பவர்களின் நெஞ்சங்களில்) குழப்பத்தைப் போட்டே அல்லாமல் நாம் (அவர்களை) அனுப்பவில்லை. (அவர்களுடைய மனதில் ) ஷைத்தான் போட்டதை அல்லாஹ் நீக்கிவிட்டு அதன்பின்னர், தன்னுடைய வசனங்களை (அறிவுடையோர்களுடைய இதயங்களில்) உறுதிப்படுத்திவிடுகிறான். இன்னும் அல்லாஹ் யாவையும் நன்கறிந்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

53. (இவ்வாறு) ஷைத்தான் போட்ட(குழப்பத்)தை எவர்களுடைய இதயங்களில் நோய் இருக்கின்றதோ அவர்களுக்கும், எவர்களுடைய இதயங்கள் (கல்லைப்போல்) கடினமாயிருக்கின்றனவோ அவர்களுக்கும் சோதனையாக ஆக்குவதற்காகவே (அல்லாஹ் அவ்வாறு செய்தான்) நிச்சயமாக அநியாயக்காரர்கள் வெகு தூரமான பிளவில்தான் இருக்கின்றனர்.

54. மேலும், அறிவு கொடுக்கப்பட்டிருந்தார்களே அத்தகையவர்கள், நிச்சயமாக இ(வ்வேதமான)து, உம் இரட்சகனிடமிருந்து வந்த உண்மை என அறிந்து, அதை அவர்கள் விசுவாசிப்பதற்காகவும், இன்னும் (இதனால்) அவர்களின் இதயங்கள் அவனுக்குப்பணிவதற்காகவும் ( அவ்வாறு செய்தான்) .மேலும், விசுவாசங் கொண்டோரை நிச்சயமாக அவர்களை, அல்லாஹ் நேரான வழியில் செலுத்துகிறவன்.

55. நிராகரிப்போர், தங்களிடம் மறுமைநாள் திடீரென வரும் வரை; அல்லது மலட்டுநாளின் வேதனை அவர்களிடம் வரும் வரையில், இ(வ்வேதத்)தைப்பற்றி சந்தேகத்திலேயே இருந்து கொண்டிருப்பர்.(18)

اَلْمُلْكُ يَوْمَئِذٍ لِّلّٰهِ ؕ يَحْكُمُ بَيْنَهُمْ ؕ فَالَّذِيْنَ اٰمَنُوْا وَ
عَمِلُوا الصّٰلِحٰتِ فِيْ جَنّٰتِ النَّعِيْمِ ﴿٥٦﴾ وَالَّذِيْنَ كَفَرُوْا وَ
كَذَّبُوْا بِاٰيٰتِنَا فَاُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ مُّهِيْنٌ ﴿٥٧﴾ وَالَّذِيْنَ ع ٩ ١٤
هَاجَرُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ ثُمَّ قُتِلُوْٓا اَوْ مَاتُوْا لَيَرْزُقَنَّهُمُ
اللّٰهُ رِزْقًا حَسَنًا ؕ وَاِنَّ اللّٰهَ لَهُوَ خَيْرُ الرّٰزِقِيْنَ ﴿٥٨﴾
لَيُدْخِلَنَّهُمْ مُّدْخَلًا يَّرْضَوْنَهٗ ؕ وَاِنَّ اللّٰهَ لَعَلِيْمٌ
حَلِيْمٌ ﴿٥٩﴾ ذٰلِكَ ۚ وَمَنْ عَاقَبَ بِمِثْلِ مَا عُوْقِبَ بِهٖ
ثُمَّ بُغِيَ عَلَيْهِ لَيَنْصُرَنَّهُ اللّٰهُ ؕ اِنَّ اللّٰهَ لَعَفُوٌّ غَفُوْرٌ ﴿٦٠﴾
ذٰلِكَ بِاَنَّ اللّٰهَ يُوْلِجُ الَّيْلَ فِي النَّهَارِ وَيُوْلِجُ النَّهَارَ
فِي الَّيْلِ وَاَنَّ اللّٰهَ سَمِيْعٌۢ بَصِيْرٌ ﴿٦١﴾ ذٰلِكَ بِاَنَّ اللّٰهَ هُوَ
الْحَقُّ وَاَنَّ مَا يَدْعُوْنَ مِنْ دُوْنِهٖ هُوَ الْبَاطِلُ وَاَنَّ
اللّٰهَ هُوَ الْعَلِيُّ الْكَبِيْرُ ﴿٦٢﴾ اَلَمْ تَرَ اَنَّ اللّٰهَ اَنْزَلَ
مِنَ السَّمَآءِ مَآءً ز فَتُصْبِحُ الْاَرْضُ مُخْضَرَّةً ؕ اِنَّ
اللّٰهَ لَطِيْفٌ خَبِيْرٌ ﴿٦٣﴾ ۚ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا
فِي الْاَرْضِ ؕ وَاِنَّ اللّٰهَ لَهُوَ الْغَنِيُّ الْحَمِيْدُ ﴿٦٤﴾ ع ٨ ٧ ١٥

56. அந்நாளில், (சர்வ அதிகாரமும் கொண்ட) ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அவனே அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பான்; ஆகவே ; விசுவாசங் கொண்டு நற்கருமங்களும் செய்கிறார்களே அத்தகையோர் அருட்கொடைகள் உடைய சுவனபதிகளில் இருப்பார்கள்.

57. இன்னும், நிராகரித்து, நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குகிறார்களே அத்தகையோர்_ அவர்களுக்கே இழிவுதரும் வேதனையுண்டு.

58. மேலும், அல்லாஹ்வுடைய பாதையில் (ஹிஜ்ரத்துச் செய்து) புறப்பட்டு, பின்னர் (யுத்தத்தில் ) கொல்லப்பட்டோ, அல்லது இறந்தோ விடுகின்றனரே அத்தகையோர்_ அவர்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் மிக்க அழகான (முறையில்) உணவளிக்கிறான்; இன்னும், நிச்சயமாக அல்லாஹ்_ அவன் தான் உணவளிப்பவர்களிலெல்லாம் மிக்க மேலானவன்.

59. (ஆகவே) நிச்சயமாக, எதனை அவர்கள் பொருந்திக் கொள்கிறார்களோ அப்பிரவேசிக்குமிடத்தில் அவன் அவர்களைப் பிரவேசிக்கச் செய்வான்; மேலும், நிச்சயமாக அல்லாஹ், யாவையும் நன்கறிகிறவன், மிகுந்த சகிப்புத்தன்மையுடையவன்.

60. (அத்தகைய அருட்கொடைகள் அனைத்தும் கொண்ட) அது (அவர்களுக்கே உரியதாகும்.) மேலும், எவர் தான் எதனால் துன்புறுத்தப் பட்டாரோ அது போன்றே (துன்புறுத்தியவரை) தண்டித்துவிட்டு, அதன்பின்னர் அவர் மீது கொடுமை செய்யப்படுமானால் நிச்சயமாக அல்லாஹ் (துன்பத்திற்குள்ளான) அவருக்கு உதவி புரிவான்; நிச்சயமாக அல்லாஹ், மிகவும் பிழை பொறுப்பவன், மிக்க மன்னிப்பவன்.

61. அ(வ்வாறு உதவி செய்த)து நிச்சயமாக அல்லாஹ், இரவைப் பகலில் புகுத்துகிறான்; பகலை இரவில் புகுத்துகிறான் எனும் (அவனது வல்லமையின்) காரணத்தினாலாகும். இன்னும் (அனைத்தையும்) நிச்சயமாக அல்லாஹ் செவியேற்கிறவன்; பார்க்கிறவன்.

62. (இரவைப் பகலிலும் பகலை இரவிலும் நுழைவிக்கும் மாபெரிய ஆற்றலாகிய) அது, (ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ்_ அவன் தான் உண்மையானவன்; மற்றும் நிச்சயமாக அவனையன்றி (வேறு) எதை அவர்கள் பிரார்த்திக்கின்றார்களோ அதுவே பொய்யானதாகும்; இன்னும் ; நிச்சயமாக அல்லாஹ்_ அவன்தான் மிக உயர்ந்தவன், மிகப் பெரியவன் என்பதினாலுமாகும்.

63. நிச்சயமாக அல்லாஹ் வானத்திலிருந்து நீரை (மழையை) இறக்குகிறான்; (அதனால்) பூமி பசுமையாகிவிடுகிறது என்பதை (நபியே!) நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ் நுட்பமாக அறிகிறவன், (யாவையும்) நன்குணர்பவன்.

64. வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ளவையும் அவனுக்கே உரியவையாகும்; மேலும், நிச்சயமாக அல்லாஹ்_ அவன்தான் (பிறரின்) தேவையற்றவன்; புகழுக்குரியவன்.

اَلَمْ تَرَ اَنَّ اللّٰهَ سَخَّرَ لَكُمْ مَّا فِی الْاَرْضِ وَالْفُلْكَ تَجْرِیْ
فِی الْبَحْرِ بِاَمْرِهٖ ؕ وَیُمْسِكُ السَّمَآءَ اَنْ تَقَعَ عَلَی الْاَرْضِ
اِلَّا بِاِذْنِهٖ ؕ اِنَّ اللّٰهَ بِالنَّاسِ لَرَءُوْفٌ رَّحِیْمٌ ﴿۶۵﴾ وَهُوَ الَّذِیْۤ
اَحْیَاكُمْ ؗ ثُمَّ یُمِیْتُكُمْ ثُمَّ یُحْیِیْكُمْ ؕ اِنَّ الْاِنْسَانَ لَكَفُوْرٌ ﴿۶۶﴾
لِكُلِّ اُمَّةٍ جَعَلْنَا مَنْسَكًا هُمْ نَاسِكُوْهُ فَلَا یُنَازِعُنَّكَ فِی
الْاَمْرِ وَادْعُ اِلٰی رَبِّكَ ؕ اِنَّكَ لَعَلٰی هُدًی مُّسْتَقِیْمٍ ﴿۶۷﴾
وَاِنْ جٰدَلُوْكَ فَقُلِ اللّٰهُ اَعْلَمُ بِمَا تَعْمَلُوْنَ ﴿۶۸﴾ اَللّٰهُ
یَحْكُمُ بَیْنَكُمْ یَوْمَ الْقِیٰمَةِ فِیْمَا كُنْتُمْ فِیْهِ تَخْتَلِفُوْنَ ﴿۶۹﴾ اَلَمْ
تَعْلَمْ اَنَّ اللّٰهَ یَعْلَمُ مَا فِی السَّمَآءِ وَالْاَرْضِ ؕ اِنَّ ذٰلِكَ فِیْ كِتٰبٍ ؕ
اِنَّ ذٰلِكَ عَلَی اللّٰهِ یَسِیْرٌ ﴿۷۰﴾ وَیَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ مَا
لَمْ یُنَزِّلْ بِهٖ سُلْطٰنًا وَّمَا لَیْسَ لَهُمْ بِهٖ عِلْمٌ ؕ وَمَا لِلظّٰلِمِیْنَ
مِنْ نَّصِیْرٍ ﴿۷۱﴾ وَاِذَا تُتْلٰی عَلَیْهِمْ اٰیٰتُنَا بَیِّنٰتٍ تَعْرِفُ فِیْ
وُجُوْهِ الَّذِیْنَ كَفَرُوا الْمُنْكَرَ ؕ یَكَادُوْنَ یَسْطُوْنَ بِالَّذِیْنَ
یَتْلُوْنَ عَلَیْهِمْ اٰیٰتِنَا ؕ قُلْ اَفَاُنَبِّئُكُمْ بِشَرٍّ مِّنْ ذٰلِكُمْ ؕ
اَلنَّارُ ؕ وَعَدَهَا اللّٰهُ الَّذِیْنَ كَفَرُوْا ؕ وَبِئْسَ الْمَصِیْرُ ﴿۷۲﴾ ع ٩ ٨ ١٦

65. (நபியே!) நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ் பூமியிலுள்ளவற்றையும், அவனுடைய கட்டளையைக் கொண்டு கடலில் செல்லும் கப்பலையும் உங்களுக்கு வசப்படுத்தித்தந்திருக்கிறான்; வானத்தை—அது தன்னுடைய அனுமதியின்றி, பூமியின் மீது விழுந்து விடாதவாறும் அவன் அதனை தடுத்துக்கொண்டிருக்கிறான்; நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது மிக்க இரக்கமுடையவன்; மிகக் கிருபையுடையவன்.

66. இன்னும் அவன் எத்தகையவனென்றால், உங்களுக்கு அவன் உயிரளித்தான்; பின்னர் உங்களை அவன் மரணிக்கச்செய்வான்; பின்னர் உங்களை அவன் உயிர்ப்பிப்பான்; (எனினும்) நிச்சயமாக மனிதன் மிக நன்றி கெட்டவனாக இருக்கிறான்.

67. (நபியே!) ஒவ்வொரு சமூகத்தினருக்கும் வழிபாட்டுமுறையை நாம் ஆக்கினோம்; அவர்கள் அதனை (முறையாக)ச் செய்கிறவர்களாக இருக்கின்றனர்; ஆகவே அவர்கள் திட்டமாக இக்காரியத்தில் உம்முடன் பிணங்கிக் கொள்ள வேண்டாம்; இன்னும், நீர் அவர்களை உம்முடைய இரட்சகன்(ஏற்படுத்திய வழியின்) பக்கம் அழைப்பீராக! நிச்சயமாக, நீர் தான் நேர் வழியில் இருக்கின்றீர்.

68. (நபியே! பின்னும்) அவர்கள் உம்முடன் தர்க்கம் செய்தாலோ, "நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் மிக அறிந்தவன்" என்று (அவர்களுக்கு) நீர் கூறுவீராக!

69. நீங்கள் எதில் (என்னுடன்) கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறீர்களோ அதில் அல்லாஹ் மறுமை நாளில் உங்களிடையே தீர்ப்பளிப்பான் (என்றும் கூறுவீராக).

70. (நபியே!) வானத்திலும், பூமியிலும் இருப்பவற்றை நிச்சயமாக அல்லாஹ் அறிவான் என்பதை நீர் அறியவில்லையா? நிச்சயமாக, இது (லவ்ஹுல் மஹ்ஃபூல் என்னும்) புத்தகத்தில் இருக்கின்றது; நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக்க சுலபமானதேயாகும்.

71. (நபியே!) இன்னும் அவர்கள் அல்லாஹ்வையன்றி — அதற்கு அவன் எந்தச்சான்றையும் இறக்கிவைக்காததையும், இன்னும், எதுபற்றிய அறிவு அவர்களுக்கில்லையோ அதையும் வணங்குகின்றனர்; (இத்தகைய) அநியாயக்காரர்களுக்கு (மறுமையில்) உதவிசெய்வோர் எவருமில்லை.

72. இன்னும் தெளிவானவைகளான நம்முடைய வசனங்கள் இவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால், (அவற்றை) நிராகரிப்பவர்களுடைய முகங்களில் (கோபத்தினால் ஏற்பட்ட) வெறுப்பை நீர் அறிவீர்; நம்முடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக்காண்பிப்போரை அவர்கள் தாக்குவதற்கு நெருங்குவர்; (ஆகவே,) இவர்களிடம் நீர் கூறுவீராக: "நான் உங்களுக்கு இதனைவிடக் கெட்டதை அறிவிக்கட்டுமா? (அது நரக) நெருப்புத்தான்; அதனையே (உங்களைப் போன்ற) நிராகரிப்போருக்கு அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்; (அது) சேருமிடத்திலும் மிகக்கெட்டது."

يٰۤاَيُّهَا النَّاسُ ضُرِبَ مَثَلٌ فَاسْتَمِعُوْا لَهٗ ؕ اِنَّ الَّذِيْنَ
تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ لَنْ يَّخْلُقُوْا ذُبَابًا وَّلَوِ
اجْتَمَعُوْا لَهٗ ؕ وَاِنْ يَّسْلُبْهُمُ الذُّبَابُ شَيْـًٔا لَّا يَسْتَنْقِذُوْهُ
مِنْهُ ؕ ضَعُفَ الطَّالِبُ وَالْمَطْلُوْبُ ﴿۷۳﴾ مَا قَدَرُوا اللّٰهَ
حَقَّ قَدْرِهٖ ؕ اِنَّ اللّٰهَ لَقَوِىٌّ عَزِيْزٌ ﴿۷۴﴾ اَللّٰهُ يَصْطَفِىْ مِنَ
الْمَلٰٓئِكَةِ رُسُلًا وَّمِنَ النَّاسِ ؕ اِنَّ اللّٰهَ سَمِيْعٌۢ بَصِيْرٌ ۚ ﴿۷۵﴾
يَعْلَمُ مَا بَيْنَ اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ ؕ وَاِلَى اللّٰهِ تُرْجَعُ
الْاُمُوْرُ ﴿۷۶﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا ارْكَعُوْا وَاسْجُدُوْا وَ
اعْبُدُوْا رَبَّكُمْ وَافْعَلُوا الْخَيْرَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ۚ ﴿۷۷﴾ السجدة عند الشافعی
وَجَاهِدُوْا فِى اللّٰهِ حَقَّ جِهَادِهٖ ؕ هُوَ اجْتَبٰىكُمْ وَمَا
جَعَلَ عَلَيْكُمْ فِى الدِّيْنِ مِنْ حَرَجٍ ؕ مِلَّةَ اَبِيْكُمْ
اِبْرٰهِيْمَ ؕ هُوَ سَمّٰىكُمُ الْمُسْلِمِيْنَ ۙ۬ مِنْ قَبْلُ وَفِىْ هٰذَا
لِيَكُوْنَ الرَّسُوْلُ شَهِيْدًا عَلَيْكُمْ وَتَكُوْنُوْا شُهَدَآءَ عَلَى
النَّاسِ ۚۖ فَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَاعْتَصِمُوْا
بِاللّٰهِ ؕ هُوَ مَوْلٰىكُمْ ۚ فَنِعْمَ الْمَوْلٰى وَنِعْمَ النَّصِيْرُ ﴿۷۸﴾ ع ۱۰ / ۱۷

73. மனிதர்களே! ஓர் உதாரணம் கூறப்படுகிறது; ஆகவே அதனை(ச் செவிதாழ்த்தி)க் கேளுங்கள்; அல்லாஹ்வையன்றி நிச்சயமாக நீங்கள்(தெய்வங்களென) அழைக்கிறீர்களே அத்தகையவர்கள் – அவர்கள் அதற்காக ஒன்று கூடினாலும் சரியே! ஒரு "ஈ" யைக்கூட படைக்கவே மாட்டார்கள்; மேலும், ஓர் "ஈ" அவர்களிடமிருந்து ஏதேனும் ஒரு பொருளை பறித்துக் கொண்டாலும் அதனை அதனிடமிருந்து விடுவிக்கவும் அவர்களால் முடியாது; (ஏனென்றால், அவற்றை தெய்வங்களெனத்) தேடுபவரும், (அவர்களால் தெய்வங்களென) தேடப்படுகிறவரும் பலவீனமடைந்துவிட்டனர்!

74. அல்லாஹ்வை அவனுடைய தகுதிக்குத் தக்கவாறு அவர்கள் மதிக்கவில்லை; நிச்சயமாக அல்லாஹ் மிக்க பலம் வாய்ந்தவன், (யாவரையும்) மிகைத்தவன்.

75. அல்லாஹ் – மலக்குகளிலிருந்தும், மனிதர்களிலிருந்தும் தூதர்களை – அவன் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்; நிச்சயமாக அல்லாஹ், (யாவற்றையும்) செவியேற்கிறவன், பார்க்கிறவன்.

76. அவர்களுக்கு முன்(னர் சென்று) இருப்பவற்றையும், அவர்களுக்குப் பின்(னர் வர) இருப்பவற்றையும் அவன் அறிவான்; இன்னும் எல்லாக் காரியங்களும் அல்லாஹ்வின் பக்கமே (தீர்ப்புக்காக) திருப்பிக் கொண்டுவரப்படும்.

77. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் (குனிந்து) ருகூஉச் செய்யுங்கள்; இன்னும் (சிரம்பணிந்து) ஸுஜூதும் செய்யுங்கள்; இன்னும் உங்கள் இரட்சகனை வணங்குங்கள்; மேலும் நீங்கள் வெற்றியடைவதற்காக நன்மையைச் செய்யுங்கள்.

78. (விசுவாசங்கொண்டோரே!) இன்னும் நீங்கள் அல்லாஹ்வுடைய பாதையில் (உங்களுடைய முழு சக்தியையும் பயன்படுத்தி) அறப்போர் செய்ய வேண்டிய முறைப்படி அறப்போர் (ஜிஹாது) செய்யுங்கள்; அவனே உங்களைத் தேர்ந்தெடுத்(து மேன்மையாக்கி வைத்)திருக்கிறான்; இந்த மார்க்கத்தில் அவன் உங்களுக்கு யாதொரு சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை; உங்களுடைய தந்தை இப்றாஹீமுடைய மார்க்கத்தை(கடைபிடியுங்கள்!) அவன்தான் (இதற்கு) முன்னர், உங்களுக்கு முஸ்லிம்கள் எனப்பெயரிட்டான்; இ(வ் வேதத்)திலும்தான் (அவ்வாறே உங்களுக்குப் பெயர் கூறப்பட்டுள்ளது; இதுஏனெனில் நம்முடைய) இத்தூதரே உங்களுக்குச் சாட்சியாக இருப்பதற்காகவும், நீங்கள் மற்ற மனிதர்களுக்குச்சாட்சியாக இருப்பதற்காகவுமேயாகும்; எனவே, தொழுகையை நீங்கள் நிறைவேற்றுங்கள்; ஜகாத்தையும் கொடுங்கள்; அல்லாஹ்வை (அவனின் மார்க்கத்தை)ப் பலமாகப் பிடித்துக்கொள்ளுங்கள்; அவன் தான் உங்களுடைய பாதுகாவலன்; பாதுகாவலனில் அவன் நல்லவன்; மேலும், நல்ல உதவியாளன்.

سُوْرَةُ الْمُؤْمِنُوْنَ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّثَمَانِ عَشْرَةَ اٰيَةً وَّسِتُّ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

قَدْ اَفْلَحَ الْمُؤْمِنُوْنَ ۙ﴿۱﴾ الَّذِيْنَ هُمْ فِيْ صَلَاتِهِمْ
خٰشِعُوْنَ ۙ﴿۲﴾ وَالَّذِيْنَ هُمْ عَنِ اللَّغْوِ مُعْرِضُوْنَ ۙ﴿۳﴾ وَالَّذِيْنَ
هُمْ لِلزَّكٰوةِ فٰعِلُوْنَ ۙ﴿۴﴾ وَالَّذِيْنَ هُمْ لِفُرُوْجِهِمْ حٰفِظُوْنَ ۙ﴿۵﴾ اِلَّا
عَلٰٓى اَزْوَاجِهِمْ اَوْ مَا مَلَكَتْ اَيْمَانُهُمْ فَاِنَّهُمْ غَيْرُ مَلُوْمِيْنَ ۚ﴿۶﴾ فَمَنِ
ابْتَغٰى وَرَآءَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْعٰدُوْنَ ۚ﴿۷﴾ وَالَّذِيْنَ هُمْ
لِاَمٰنٰتِهِمْ وَعَهْدِهِمْ رٰعُوْنَ ۙ﴿۸﴾ وَالَّذِيْنَ هُمْ عَلٰى صَلَوٰتِهِمْ يُحَافِظُوْنَ ﴿۹﴾
اُولٰٓئِكَ هُمُ الْوٰرِثُوْنَ ۙ﴿۱۰﴾ الَّذِيْنَ يَرِثُوْنَ الْفِرْدَوْسَ ؕ هُمْ فِيْهَا
خٰلِدُوْنَ ﴿۱۱﴾ وَلَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ مِنْ سُلٰلَةٍ مِّنْ طِيْنٍ ۚ﴿۱۲﴾
ثُمَّ جَعَلْنٰهُ نُطْفَةً فِيْ قَرَارٍ مَّكِيْنٍ ۪﴿۱۳﴾ ثُمَّ خَلَقْنَا النُّطْفَةَ عَلَقَةً
فَخَلَقْنَا الْعَلَقَةَ مُضْغَةً فَخَلَقْنَا الْمُضْغَةَ عِظٰمًا فَكَسَوْنَا الْعِظٰمَ
لَحْمًا ۗ ثُمَّ اَنْشَاْنٰهُ خَلْقًا اٰخَرَ ؕ فَتَبٰرَكَ اللّٰهُ اَحْسَنُ الْخٰلِقِيْنَ ؕ﴿۱۴﴾
ثُمَّ اِنَّكُمْ بَعْدَ ذٰلِكَ لَمَيِّتُوْنَ ؕ﴿۱۵﴾ ثُمَّ اِنَّكُمْ يَوْمَ الْقِيٰمَةِ تُبْعَثُوْنَ ﴿۱۶﴾
وَلَقَدْ خَلَقْنَا فَوْقَكُمْ سَبْعَ طَرَآئِقَ ۖ وَمَا كُنَّا عَنِ الْخَلْقِ غٰفِلِيْنَ ﴿۱۷﴾

وقف لازم

அத்தியாயம் : 23

## அல் முஃமினூன் _ விசுவாசிகள்

வசனங்கள் : 118 மக்கீ ருகூஃகள் : 6

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. விசுவாசிகள் திட்டமாக வெற்றியடைந்துவிட்டனர்.

2. அவர்கள் எத்தகையோரென்றால், தம் தொழுகையில் மிக்க உள்ளச்சம் உடையவர்கள்.

3. இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால், வீணானவற்றைப்புறக்கணித்து இருப்பவர்கள்.

4. இன்னும்,அவர்கள் எத்தகையோரென்றால், ஜகாத்தை(முறைப்படி) செய்து விடுகிறவர்கள்.

5. இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் வெட்கத்தலங்களை (விபச்சாரத்திலிருந்து) பாதுகாத்துக்கொள்கிறவர்கள்.

6. (ஆனால்) தங்கள் மனைவியரிடமோ, அல்லது தங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர் (களான அடிமைப்பெண்)களிடமோ தவிர; (இவர்களோடுள்ள உறவில்) நிச்சயமாக அவர்கள் நிந்திக்கப்படுபவர்களல்லர்.

7. ஆகவே, எவர்கள் இதனைத்தவிர (வேறு தவறான வழிகளைத்) தேடுகிறார்களோ அப்போது அவர்கள் தாம் வரம்பு மீறியவர்கள்.

8. இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால், தங்களுடைய அமானிதங்களையும், தங்களுடைய வாக்குறுதியையும் (பேணிக்) காப்பாற்றுகிறவர்கள்.

9. இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகைகளைப் பேணுவார்கள்.

10. இத்தகையோர்தாம் (சுவர்க்கத்தை) அனந்தரம் கொள்பவர்கள்.

11. இவர்கள் எத்தகையோரென்றால் 'ஃபிர்தௌஸ்' (என்னும் சுவனபதியை) அனந்தரமாகக் கொள்வார்கள்; அவர்கள் அதில் நிரந்தரமாக(த் தங்கி) இருப்பவர்கள்.

12. நிச்சயமாக, (முதல்) மனிதனைக் களிமண்ணின் மூலச்சத்திலிருந்து படைத்தோம்.

13. பின்னர்,(அதெற்கென உள்ள) ஒரு பாதுகாப்பான இடத்தில் (கர்ப்பப்பையில்) நாம் அவனை இந்திரியத்துளியாக்கினோம்.

14. பின்னர், அந்த இந்திரியத்தை இரத்தக் கட்டியாகப்படைத்தோம்; பின்னர், அவ்விரத்தக் கட்டியை மாமிசத்துண்டாகப் படைத்தோம்; பின்னர், அம்மாமிசத்துண்டை எலும்புகளாகப் படைத்தோம்; பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம்; பின்னர், நாம் அதனை வேறு படைப்பாக (முழு மனிதனாக) உருவாக்கினோம்; ஆகவே, படைக்கிறவர்களில் மிக அழகானவனான (பெரும் பாக்கியங்களுக்குரிய ) அல்லாஹ் உயர்வானவன்.

15. (மனிதர்களே!) பின்னர், நிச்சயமாக நீங்கள் இறப்பெய்தக் கூடியவர்கள்.

16. பின்னர், மறுமை நாளின் போது நிச்சயமாக நீங்கள் (உயிர் கொடுத்து) எழுப்பப்படுவீர்கள்.

17. நிச்சயமாக உங்களுக்கு மேலுள்ள ஏழு பாதைகளை(வானங்களை)யும் நாமே படைத்திருக்கிறோம்; இப்படைப்புகளைப்பற்றி ஒரு போதும் நாம் பராமுகமானவர்களாகவும் இருக்கவில்லை.

وَاَنۡزَلۡنَا مِنَ السَّمَآءِ مَآءًۢ بِقَدَرٍ فَاَسۡكَنّٰهُ فِى الۡاَرۡضِ ‌ۖ وَاِنَّا عَلٰى
ذَهَابٍۢ بِهٖ لَقٰدِرُوۡنَ ۱۸ فَاَنۡشَاۡنَا لَـكُمۡ بِهٖ جَنّٰتٍ مِّنۡ نَّخِيۡلٍ وَّ
اَعۡنَابٍ‌ۘ لَـكُمۡ فِيۡهَا فَوَاكِهُ كَثِيۡرَةٌ وَّمِنۡهَا تَاۡكُلُوۡنَ ۱۹ وَشَجَرَةً وقف لازم
تَخۡرُجُ مِنۡ طُوۡرِ سَيۡنَآءَ تَنۡۢبُتُ بِالدُّهۡنِ وَصِبۡغٍ لِّلۡاٰكِلِيۡنَ ۲۰ وَ
اِنَّ لَـكُمۡ فِى الۡاَنۡعَامِ لَعِبۡرَةً ‌ؕ نُسۡقِيۡكُمۡ مِّمَّا فِىۡ بُطُوۡنِهَا وَلَـكُمۡ فِيۡهَا
مَنَافِعُ كَثِيۡرَةٌ وَّمِنۡهَا تَاۡكُلُوۡنَ ۲۱ وَعَلَيۡهَا وَعَلَى الۡفُلۡكِ تُحۡمَلُوۡنَ ۲۲ ع ۱
وَلَقَدۡ اَرۡسَلۡنَا نُوۡحًا اِلٰى قَوۡمِهٖ فَقَالَ يٰقَوۡمِ اعۡبُدُوا اللّٰهَ مَا لَـكُمۡ
مِّنۡ اِلٰهٍ غَيۡرُهٗ ‌ؕ اَفَلَا تَتَّقُوۡنَ ۲۳ فَقَالَ الۡمَلَؤُا الَّذِيۡنَ كَفَرُوۡا مِنۡ
قَوۡمِهٖ مَا هٰذَاۤ اِلَّا بَشَرٌ مِّثۡلُكُمۡ ۙ يُرِيۡدُ اَنۡ يَّتَفَضَّلَ عَلَيۡكُمۡ ‌ؕ وَلَوۡ شَآءَ
اللّٰهُ لَاَنۡزَلَ مَلٰۤئِكَةً ۖۚ مَّا سَمِعۡنَا بِهٰذَا فِىۡۤ اٰبَآئِنَا الۡاَوَّلِيۡنَ ۲۴ اِنۡ هُوَ
اِلَّا رَجُلٌۢ بِهٖ جِنَّةٌ فَتَرَبَّصُوۡا بِهٖ حَتّٰى حِيۡنٍ ۲۵ قَالَ رَبِّ انۡصُرۡنِىۡ
بِمَا كَذَّبُوۡنِ ۲۶ فَاَوۡحَيۡنَاۤ اِلَيۡهِ اَنِ اصۡنَعِ الۡفُلۡكَ بِاَعۡيُنِنَا وَ
وَحۡيِنَا فَاِذَا جَآءَ اَمۡرُنَا وَفَارَ التَّنُّوۡرُ ۙ فَاسۡلُكۡ فِيۡهَا مِنۡ كُلٍّ
زَوۡجَيۡنِ اثۡنَيۡنِ وَاَهۡلَكَ اِلَّا مَنۡ سَبَقَ عَلَيۡهِ الۡقَوۡلُ
مِنۡهُمۡ‌ ۚ وَلَا تُخَاطِبۡنِىۡ فِى الَّذِيۡنَ ظَلَمُوۡا ‌ۚ اِنَّهُمۡ مُّغۡرَقُوۡنَ ۲۷

18. வானத்திலிருந்து அளவோடு தண்ணீரை(மழையை) நாம் இறக்கி வைக்கிறோம்;(அதன் பின்னர்) அதனைப் பூமியில் தங்குமாறு செய்கின்றோம், நிச்சயமாக, அதனைப் (பூமிக்குள் இழுக்கப்பட்டு) போக்கிவைக்கவும் நாம் ஆற்றலுடையோர் (ஆவோம்).

19. பின்னர் அதனைக்கொண்டு பேரீச்சை, திராட்சைகள் (முதலிய) தோட்டங்களை உங்களுக்காக நாம் உற்பத்தி செய்திருக்கின்றோம்; அவைகளில் உங்களுக்கு அநேகக் கனிகள் இருக்கின்றன; இன்னும் அவற்றிலிருந்தும் நீங்கள் உண்ணுகின்றீர்கள்.

20. தூர் ஸைனாவிலிருந்து (முளைத்து) வெளிப்படும் ஒரு மரத்தையும் (நாம் படைத்தோம்). அது எண்ணெயையும், புசிப்போருக்கு (சுவைமிக்க) குழம்பையும் கொண்டு முளைக்கிறது.

21. இன்னும், நிச்சயமாக (ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய )கால்நடைகளில் உங்களுக்கொரு படிப்பினை இருக்கின்றது; அவற்றின் வயிறுகளில் உள்ளவற்றிலிருந்து (பாலை) நாம் உங்களுக்குப் புகட்டுகிறோம்; அவைகளில் உங்களுக்கு அநேகப்பயன்களும் இருக்கின்றன; மேலும், அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கின்றீர்கள்.
22. அவற்றின் மீதும், கப்பல்களின்மீதும் நீங்கள் சுமந்து செல்லப்படுகின்றீர்கள்.

23. மேலும், நிச்சயமாக நாம் "நூஹை" நம்முடைய தூதராக அவருடைய சமூகத்தாரின்பால் அனுப்பிவைத்தோம்; அவர் (அவர்களிடம்) "என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ்வை நீங்கள் வணங்குங்கள்; அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) வேறு நாயன் உங்களுக்கு இல்லை ; (அவனுக்கு) நீங்கள் பயப்படமாட்டீர்களா?" என்று கூறினார்.

24. அப்போது (அவரை) நிராகரித்துவிட்ட அவருடைய சமூகத்தாரில் உள்ள தலைவர்கள் "இவர் உங்களைப் போன்ற ஒரு மனிதரேயன்றி வேறில்லை;(எனினும்) இவர், உங்கள்மீது சிறப்புப்பெற நாடுகிறார்; மேலும், அல்லாஹ் நாடியிருந்தால் மலக்குகளைத் திட்டமாக இறக்கிவைத்திருப்பான்; முன்னுள்ள நம் மூதாதையர்களிடம், இதனைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டதேயில்லை" என்று கூறினார்கள்.

25. "இவர் ஒரு பைத்தியக்கார மனிதரே தவிர வேறில்லை; ஆகவே சிறிது காலம்வரை இவரை எதிர்பார்த்திருங்கள் (என்றும் கூறினார்கள்.)

26. "என்னுடைய இரட்சகனே! என்னை இவர்கள் பொய்யாக்கியதன் காரணமாக நீ எனக்கு உதவி செய்வாயாக!" என்று (பிரார்த்தித்துக்) கூறினார்.

27. (அதற்கு) "நீர் நம் கண்களின் முன்பாகவும், நாம் அறிவிக்கின்ற பிரகாரமும் ஒரு கப்பலைச் செய்வீராக! நம்முடைய உத்தரவு வந்து, அடுப்புக்கொதிக்க ஆரம்பித்தால்,(ஒவ்வொரு ஜீவராசிகளிலும்) ஆண்,பெண்,இரண்டிரண்டு சேர்ந்த ஜோடிகளையும், உம்முடைய குடும்பத்தினரில், எவர் மீது நம்முடைய (தண்டனை பற்றிய) வாக்கு முந்திவிட்டதோ அவரைத் தவிர, மற்ற (உம்முடைய குடும்பத்த)வரையும் நீர் அதில் ஏற்றிக்கொள்வீராக; அநியாயம் செய்து விட்டார்களே அவர்களைப் பற்றி, நீர் என்னிடம் பேசாதீர், நிச்சயமாக அவர்கள் (பெரு வெள்ளத்தில்) மூழ்கடிக்கப்பட்டுவிடுபவர்கள்" என்று அவருக்கு நாம் வஹீ அறிவித்தோம்.

فَاِذَا اسْتَوَيْتَ اَنْتَ وَمَنْ مَّعَكَ عَلَى الْفُلْكِ فَقُلِ الْحَمْدُ لِلّٰهِ
الَّذِيْ نَجّٰىنَا مِنَ الْقَوْمِ الظّٰلِمِيْنَ ﴿٢٨﴾ وَقُلْ رَّبِّ اَنْزِلْنِيْ مُنْزَلًا مُّبٰرَكًا
وَّاَنْتَ خَيْرُ الْمُنْزِلِيْنَ ﴿٢٩﴾ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ وَّاِنْ كُنَّا لَمُبْتَلِيْنَ ﴿٣٠﴾
ثُمَّ اَنْشَاْنَا مِنْۢ بَعْدِهِمْ قَرْنًا اٰخَرِيْنَ ﴿٣١﴾ فَاَرْسَلْنَا فِيْهِمْ رَسُوْلًا
مِّنْهُمْ اَنِ اعْبُدُوا اللّٰهَ مَا لَكُمْ مِّنْ اِلٰهٍ غَيْرُهٗ ؕ اَفَلَا تَتَّقُوْنَ ﴿٣٢﴾ وَقَالَ ع ٢
الْمَلَاُ مِنْ قَوْمِهِ الَّذِيْنَ كَفَرُوْا وَكَذَّبُوْا بِلِقَآءِ الْاٰخِرَةِ وَاَتْرَفْنٰهُمْ
فِي الْحَيٰوةِ الدُّنْيَا ۙ مَا هٰذَاۤ اِلَّا بَشَرٌ مِّثْلُكُمْ ۙ يَاْكُلُ مِمَّا تَاْكُلُوْنَ مِنْهُ
وَيَشْرَبُ مِمَّا تَشْرَبُوْنَ ﴿٣٣﴾ وَلَئِنْ اَطَعْتُمْ بَشَرًا مِّثْلَكُمْ ۙ اِنَّكُمْ اِذًا
لَّخٰسِرُوْنَ ﴿٣٤﴾ اَيَعِدُكُمْ اَنَّكُمْ اِذَا مِتُّمْ وَكُنْتُمْ تُرَابًا وَّعِظَامًا اَنَّكُمْ
مُّخْرَجُوْنَ ﴿٣٥﴾ هَيْهَاتَ هَيْهَاتَ لِمَا تُوْعَدُوْنَ ﴿٣٦﴾ اِنْ هِيَ اِلَّا
حَيَاتُنَا الدُّنْيَا نَمُوْتُ وَنَحْيَا وَمَا نَحْنُ بِمَبْعُوْثِيْنَ ﴿٣٧﴾ اِنْ هُوَ
اِلَّا رَجُلُ ِۨ افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا وَّمَا نَحْنُ لَهٗ بِمُؤْمِنِيْنَ ﴿٣٨﴾ قَالَ
رَبِّ انْصُرْنِيْ بِمَا كَذَّبُوْنِ ﴿٣٩﴾ قَالَ عَمَّا قَلِيْلٍ لَّيُصْبِحُنَّ نٰدِمِيْنَ ﴿٤٠﴾
فَاَخَذَتْهُمُ الصَّيْحَةُ بِالْحَقِّ فَجَعَلْنٰهُمْ غُثَآءً ۚ فَبُعْدًا لِّلْقَوْمِ
الظّٰلِمِيْنَ ﴿٤١﴾ ثُمَّ اَنْشَاْنَا مِنْۢ بَعْدِهِمْ قُرُوْنًا اٰخَرِيْنَ ﴿٤٢﴾

28. ஆகவே, நீரும், உம்முடன் உள்ளவர்களும் கப்பலில் ஏறி அமர்ந்துவிட்டால் அப்போது, "அநியாயக்கார சமூகத்தாரிடமிருந்து எங்களைக் காப்பாற்றிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்" என்று கூறுவீராக! (என்றும்,)

29. "மேலும், என் இரட்சகனே! நீ என்னை, மிக்க பாக்கியம் செய்யப்பட்ட இறங்கும் இடத்தில் இறக்கி வைப்பாயாக! நீயே இறக்கி வைப்பவர்களில் மிக்க மேலானவன் என்றும் (பிரார்த்தித்துக்) கூறுவீராக!" (என்றும் கூறினோம்).

30. (இவ்வாறு) நாம் சோதிப்பவர்களாக இருப்பினும் நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

31. அப்பால் (பெருவெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்ட) இவர்களுக்குப் பின்னர், மற்றொரு தலைமுறையினரை நாம் உண்டாக்கினோம்.

32. ஆகவே, அவர்களிலிருந்தே ஒரு தூதரை அவர்களிலே நாம் அனுப்பி வைத்தோம்; அவர் (அவர்களிடம்,) "அல்லாஹ்வை நீங்கள் வணங்குங்கள்; அவனைத்தவிர உங்களுக்கு (வணக்கத்திற்குரிய) வேறு நாயன் இல்லை; (அவனுக்கு) நீங்கள் பயப்படமாட்டீர்களா?" (என்று கூறினார்).

33. அதற்கு, அவருடைய சமூகத்தாரிலிருந்து (அவரை) நிராகரித்து, மறுமையின் சந்திப்பைப் பொய்யாக்கி இவ்வுலக வாழ்க்கையில் சுகபோகங்களை நாம் யாருக்குக் கொடுத்திருந்தோமோ அத்தகைய தலைவர்கள் (இந்நபியைக் காண்பித்து) "இவர் உங்களைப் போன்ற ஒரு மனிதரேயன்றி வேறில்லை; நீங்கள் எதிலிருந்து உண்ணுகிறீர்களோ அதையே அவரும் உண்கிறார்; நீங்கள் குடிப்பதிலிருந்து அவரும் குடிக்கிறார்" என்று கூறினார்கள்.

34. ஆகவே, "உங்களைப் போன்ற ஒரு மனிதருக்கு நீங்கள் கீழ்ப்படிந்தால் அப்போது நிச்சயமாக நீங்கள் நஷ்டமடைந்தவர்கள்" (என்றும்)—

35. "நிச்சயமாக நீங்கள் இறந்து மண்ணாகவும், எலும்புகளாகவும் ஆகிவிட்டால், நிச்சயமாக நீங்கள் (மீண்டும் உயிர் கொடுத்து) வெளிப்படுத்தப்படுபவர்கள் என்று அவர் உங்களுக்கு வாக்குறுதி அளிக்கிறாரா?" (என்றும்)—

36. "உங்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டது (எவ்வாறு நடந்தேறும்) அது வெகுதொலைவு, (அது) வெகு தொலைவு" (என்றும்)—

37. "இது நம்முடைய இவ்வுலக வாழ்க்கையைத் தவிர வேறு எதுவும் இல்லை; (இதிலேயே) நாம் இறந்துவிடுவோம்; (இப்போது) நாம் உயிரோடும் உள்ளோம்; (ஆனால், நாம் இறந்தபின்னர்) நாம் உயிர் கொடுத்து எழுப்பப்படப் போகிறவர்களும் அல்லர்" (என்றும்)—

38. "இவர், அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனை செய்து கூறும் ஒரு மனிதரே தவிர வேறில்லை; இவரை நாம் நம்பக்கூடியவர்களாகவும் இல்லை" (என்றும் கூறினார்கள்).

39. அ(தற்க)வர், "என் இரட்சகனே! இவர்கள் என்னைப் பொய்ப்படுத்திவிட்டதன் காரணத்தால் நீ எனக்கு உதவி செய்வாயாக!" என்று (பிரார்த்தித்துக்)கூறினார்.

40. (அதற்கு) "சிறிது காலத்தில் நிச்சயமாக அவர்கள் கைசேதத்தை உடையோராக ஆகிவிடுவர்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

41. ஆகவே, ஒரு பெரும் சப்தம் உண்மையாக அவர்களைப் பிடித்துக்கொண்டது; அவர்களை (வெள்ளத்தில் மிதக்கும்) குப்பை கூளங்களாய் நாம் ஆக்கிவிட்டோம்; ஆகவே, அநியாயக்கார சமூகத்தார்க்கு அல்லாஹ்வின் அருள் தூரமாகிவிட்டது.

42. பிறகு அவர்களுக்குப் பின், வேறு பல தலைமுறையினரையும் நாம் உண்டாக்கினோம்..

مَا تَسْبِقُ مِنْ اُمَّةٍ اَجَلَهَا وَمَا يَسْتَاْخِرُوْنَ ﴿۴۳﴾ ثُمَّ اَرْسَلْنَا
رُسُلَنَا تَتْرَا ؕ كُلَّمَا جَآءَ اُمَّةً رَّسُوْلُهَا كَذَّبُوْهُ فَاَتْبَعْنَا بَعْضَهُمْ
بَعْضًا وَّجَعَلْنٰهُمْ اَحَادِيْثَ ۚ فَبُعْدًا لِّقَوْمٍ لَّا يُؤْمِنُوْنَ ﴿۴۴﴾ ثُمَّ
اَرْسَلْنَا مُوْسٰى وَاَخَاهُ هٰرُوْنَ ۙ بِاٰيٰتِنَا وَسُلْطٰنٍ مُّبِيْنٍ ﴿۴۵﴾ ۙ
اِلٰى فِرْعَوْنَ وَمَلَا۟ئِهٖ فَاسْتَكْبَرُوْا وَكَانُوْا قَوْمًا عَالِيْنَ ﴿۴۶﴾ ۚ فَقَالُوْٓا
اَنُؤْمِنُ لِبَشَرَيْنِ مِثْلِنَا وَقَوْمُهُمَا لَنَا عٰبِدُوْنَ ﴿۴۷﴾ ۚ فَكَذَّبُوْهُمَا
فَكَانُوْا مِنَ الْمُهْلَكِيْنَ ﴿۴۸﴾ وَلَقَدْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ لَعَلَّهُمْ
يَهْتَدُوْنَ ﴿۴۹﴾ وَجَعَلْنَا ابْنَ مَرْيَمَ وَاُمَّهٗٓ اٰيَةً وَّاٰوَيْنٰهُمَآ اِلٰى
رَبْوَةٍ ذَاتِ قَرَارٍ وَّمَعِيْنٍ ﴿۵۰﴾ ۧ يٰٓاَيُّهَا الرُّسُلُ كُلُوْا مِنَ الطَّيِّبٰتِ ع ۳
وَاعْمَلُوْا صَالِحًا ؕ اِنِّىْ بِمَا تَعْمَلُوْنَ عَلِيْمٌ ﴿۵۱﴾ ؕ وَاِنَّ هٰذِهٖٓ اُمَّتُكُمْ اُمَّةً
وَّاحِدَةً وَّاَنَا رَبُّكُمْ فَاتَّقُوْنِ ﴿۵۲﴾ فَتَقَطَّعُوْٓا اَمْرَهُمْ بَيْنَهُمْ زُبُرًا ؕ
كُلُّ حِزْبٍۢ بِمَا لَدَيْهِمْ فَرِحُوْنَ ﴿۵۳﴾ فَذَرْهُمْ فِيْ غَمْرَتِهِمْ حَتّٰى
حِيْنٍ ﴿۵۴﴾ اَيَحْسَبُوْنَ اَنَّمَا نُمِدُّهُمْ بِهٖ مِنْ مَّالٍ وَّبَنِيْنَ ﴿۵۵﴾ ۙ نُسَارِعُ
لَهُمْ فِى الْخَيْرٰتِ ؕ بَلْ لَّا يَشْعُرُوْنَ ﴿۵۶﴾ اِنَّ الَّذِيْنَ هُمْ مِّنْ خَشْيَةِ
رَبِّهِمْ مُّشْفِقُوْنَ ﴿۵۷﴾ ۙ وَالَّذِيْنَ هُمْ بِاٰيٰتِ رَبِّهِمْ يُؤْمِنُوْنَ ﴿۵۸﴾ ۙ

43. எந்த ஒரு சமுதாயமும் அதனுடைய தவணையை முந்தவும்மாட்டாது, அவர்கள் பிந்தவுமாட்டார்கள்.

44. பின்னர், நாம் நம்முடைய தூதர்களை தொடர்ச்சியாக (ஒருவர் பின்ஒருவராக) அனுப்பிவைத்தோம்; ஏதேனும் ஒரு சமுதாயத்திற்கு அதன் தூதர் வந்தபோதெல்லாம் அவர்கள் அவரைப் பொய்யாக்கிக் கொண்டிருந் தார்கள்; ஆகவே அவர்களில் சிலரை சிலருக்குப்பின் (அழிப்பதில்) நாம் தொடரச்செய்தோம்; அவர்களை (பின்வந்தோர் பேசும்) கதைகளாக்கி விட்டோம்; ஆகவே, விசுவாசங் கொள்ளாத (இத்தகைய) சமூகத்தவர்க்கு (அல்லாஹ்வின் அருள்) வெகுதூரமாகிவிட்டது.

45. பின்னர் நாம், மூஸாவையும், அவருடைய சகோதரர் ஹாரூனையும் நம்முடைய அத்தாட்சிகளைக்கொண்டும், தெளிவான சான்றைக்கொண்டும் (நம்முடைய தூதர்களாக) அனுப்பினோம்_

46. ஃபிர்அவ்னிடமும், அவனுடைய பிரதானிகளிடமும் (அனுப்பினோம்). அவர்கள் கர்வங்கொண்டு (தங்களை) உயர்வாகக்கருதும் சமூகத்தவராக இருந்தார்கள்.

47. ஆகவே, "நம்மைப் போன்ற இரு மனிதர்களை நாம் விசுவாசிப்போமா? அவ்விருவரின் சமூகத்தாரும் நமக்கு (ஊழியம் செய்து) அடிமைகளாக இருக்கும் நிலையில்!" என்று கூறினார்கள்.

48. ஆகவே, அவ்விருவரையும் அவர்கள் பொய்யாக்கினார்கள்; எனவே அவர்கள் அழிக்கப்பட்டவர்களில் ஆகிவிட்டனர்.

49. அவர்கள் நேர் வழி பெறுவதற்காக, மூஸாவுக்குத் திட்டமாக நாம் வேதத்தையும் கொடுத்தோம்.

50. இன்னும், மர்யமுடைய மகனையும், அவருடைய தாயாரையும் ஓர் அத்தாட்சி யாக நாம் ஆக்கினோம்; தங்கும் வசதியும், நீர்வளமும் பொருந்திய (தகுதியான) உயர்ந்த இடத்தில் அவ்விருவரையும் நாம் தங்கவும் வைத்தோம்.

51. (என்னுடைய) தூதர்களே! நீங்கள் நல்லவற்றிலிருந்து உண்ணுங்கள்; நல்ல காரியத்தையும் செய்யுங்கள்; நிச்சயமாக நான் நீங்கள் செய்பவைகளை நன்கறிகிறவன் (என்றும்),

52. "நிச்சயமாக (உங்களுக்குத் தெளிவு செய்யப்பட்ட) இது ஒரே மார்க்கமான உங்களுடைய மார்க்கமாகும். இன்னும் நான் (தான்) உங்கள் இரட்சகன்; ஆகவே, என்னையே நீங்கள் பயப்படுங்கள்" (என்றும் கூறினோம்).

53. பிறகு (அச்சமூகத்தவர்களான) அவர்கள், தங்கள் (மார்க்கக்) காரியத்தைத் தங்களிடையே பல பிரிவுகளாகப் பிரித்து விட்டனர்; ஒவ்வொரு வகுப்பாரும் தங்களிடம் இருப்பதைக்கொண்டு மகிழ்ச்சியடைபவர்களாக உள்ளனர்.

54. எனவே (நபியே !) நீர் ஒரு காலம் வரையில் அவர்களை, அவர்களுடைய வழிகேட்டிலேயே (ஆழ்ந்து கிடக்க) விட்டுவிடுவீராக!

55. "செல்வத்தாலும், குமாரர்களாலும் எதை நாம் அவர்களுக்கு கொடுத்து உதவினோமோ, அது பற்றி அவர்கள் எண்ணிக்கொண்டார்களா?

56. (அவ்வாறு நாம் செய்வதால்) அவர்களுக்கு நன்மையானவற்றை விரைந்து வழங்குகின்றோம் (எனஎண்ணிக்கொண்டார்களா?) அவ்வாறல்ல, (அது ஏன் என) அவர்கள் உணரமாட்டார்கள்.

57. நிச்சயமாக, தங்கள் இரட்சகனின் பயத்தால் அஞ்சி எச்சரிக்கையாக இருக்கிறார்களே அத்தகையோரும்_

58. இன்னும், தங்கள் இரட்சகனின் வசனங்களை விசுவாசிக்கின்றார்களே அத்தகையோரும்_

وَالَّذِيْنَ هُمْ بِرَبِّهِمْ لَا يُشْرِكُوْنَ ﴿۵۹﴾ وَالَّذِيْنَ يُؤْتُوْنَ مَآ اٰتَوْا وَّ
قُلُوْبُهُمْ وَجِلَةٌ اَنَّهُمْ اِلٰى رَبِّهِمْ رٰجِعُوْنَ ﴿۶۰﴾ اُولٰٓئِكَ يُسٰرِعُوْنَ
فِى الْخَيْرٰتِ وَهُمْ لَهَا سٰبِقُوْنَ ﴿۶۱﴾ وَلَا نُكَلِّفُ نَفْسًا اِلَّا وُسْعَهَا
وَلَدَيْنَا كِتٰبٌ يَّنْطِقُ بِالْحَقِّ وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿۶۲﴾ بَلْ قُلُوْبُهُمْ فِىْ
غَمْرَةٍ مِّنْ هٰذَا وَلَهُمْ اَعْمَالٌ مِّنْ دُوْنِ ذٰلِكَ هُمْ لَهَا عٰمِلُوْنَ ﴿۶۳﴾
حَتّٰٓى اِذَآ اَخَذْنَا مُتْرَفِيْهِمْ بِالْعَذَابِ اِذَا هُمْ يَجْـَٔرُوْنَ ؕ﴿۶۴﴾ لَا تَجْـَٔرُوا
الْيَوْمَ ۣ اِنَّكُمْ مِّنَّا لَا تُنْصَرُوْنَ ﴿۶۵﴾ قَدْ كَانَتْ اٰيٰتِىْ تُتْلٰى عَلَيْكُمْ فَكُنْتُمْ
عَلٰٓى اَعْقَابِكُمْ تَنْكِصُوْنَ ﴿۶۶﴾ مُسْتَكْبِرِيْنَ ۖۗ بِهٖ سٰمِرًا تَهْجُرُوْنَ ﴿۶۷﴾
اَفَلَمْ يَدَّبَّرُوا الْقَوْلَ اَمْ جَآءَهُمْ مَّا لَمْ يَاْتِ اٰبَآءَهُمُ الْاَوَّلِيْنَ ﴿۶۸﴾
اَمْ لَمْ يَعْرِفُوْا رَسُوْلَهُمْ فَهُمْ لَهٗ مُنْكِرُوْنَ ﴿۶۹﴾ اَمْ يَقُوْلُوْنَ بِهٖ جِنَّةٌ ؕ
بَلْ جَآءَهُمْ بِالْحَقِّ وَاَكْثَرُهُمْ لِلْحَقِّ كٰرِهُوْنَ ﴿۷۰﴾ وَلَوِ اتَّبَعَ الْحَقُّ اَهْوَآءَهُمْ
لَفَسَدَتِ السَّمٰوٰتُ وَالْاَرْضُ وَمَنْ فِيْهِنَّ ؕ بَلْ اَتَيْنٰهُمْ بِذِكْرِهِمْ فَهُمْ
عَنْ ذِكْرِهِمْ مُّعْرِضُوْنَ ﴿۷۱﴾ اَمْ تَسْـَٔلُهُمْ خَرْجًا فَخَرَاجُ رَبِّكَ خَيْرٌ ۖۗ
وَّهُوَ خَيْرُ الرّٰزِقِيْنَ ﴿۷۲﴾ وَاِنَّكَ لَتَدْعُوْهُمْ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿۷۳﴾ الربع
وَاِنَّ الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ بِالْاٰخِرَةِ عَنِ الصِّرَاطِ لَنٰكِبُوْنَ ﴿۷۴﴾

59. இன்னும், தங்கள் இரட்சகனுக்கு (எதனையும்) இணையாக்காதிருக்கின்றனரே அத்தகையோரும்—

60. இன்னும், தம் இரட்சகனின்பால் தாங்கள் திரும்பக்கூடியவர்கள் என்று அவர்களுடைய இதயங்கள் அஞ்சக்கூடியதாகயிருக்க,(தானதர்மங்களாக)அவர்கள் கொடுத்தவற்றை (அல்லாஹ்விற்காக) கொடுக்கிறார்களே அத்தகையோரும்—

61. (ஆகிய) இவர்கள்தாம் நன்மையான காரியங்களில் விரைகின்றனர்; இன்னும் (அதை நிறைவேற்ற) அவற்றிற்காக அவர்கள் முந்திக் கொள்ளக்கூடியவர்கள்.

62. நாம் எந்த ஆத்மாவையும், அதனுடைய சக்திக்குத் தக்கவாறல்லாது (அதிகமாக) சிரமப்படுத்தமாட்டோம்; மேலும், (அவர்களின் செயல்கள் பற்றிய) உண்மை பேசும் புத்தகம் நம்மிடம் இருக்கிறது; (சிறிதளவேனும்) அவர்கள் அநியாயம் செய்யப்படவுமாட்டார்கள்.

63. எனினும், அவர்களுடைய இதயங்கள் இ(வ்வேதத்)தைப்பற்றி மறதியில் ஆழ்ந்து கிடக்கின்றன; இன்னும், இதுவன்றி அவர்களுக்கு வேறு(தீய)காரியங்களும் உண்டு; அவற்றை அவர்கள் செய்யக்கூடியவர்களாக இருக்கின்றனர்.

64. முடிவாக, அவர்களில் சுக போக வாழ்க்கைக் கொடுக்கப்பட்டவர்களை வேதனையைக் கொண்டு நாம் பிடித்துக்கொண்டால், அப்போது அவர்கள் அபயம்தேடி சப்தமிடுவார்கள்.

65. " இன்றையத் தினம் நீங்கள் சப்தமிடாதீர்கள்; நிச்சயமாக நீங்கள் நம்மால் உதவி செய்யப்பட மாட்டீர்கள்" (என்று அவர்களிடம் கூறப்படும்).

66. "நிச்சயமாக, என்னுடைய வசனங்கள் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டன; ஆனால், நீங்கள் உங்கள் குதிங்கால்கள் மீது திரும்பிச் சென்று கொண்டிருந்தீர்கள்.

67. "நீங்கள் கர்வங்கொண்டவர்களாக இராக்காலத்தில் (கூடி, குர்ஆனாகிய) அதனைப் பற்றி குறைகளைக் கூறிவந்தீர்கள்" (என்றும் அவர்களிடம் கூறப்படும்).

68. "(குர்ஆனின்) வாக்கியத்தைப் பற்றி அவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லையா? அல்லது அவர்களுடைய முந்தையவர்களான மூதாதையருக்கு வராதது ஏதும் அவர்களுக்கு வந்துவிட்டதா?"

69. அல்லது, தங்களுடைய தூதரை தாங்கள் அறிந்து கொள்ளவில்லையா? அதனால் அவர்கள் அவரை நிராகரிக்கக் கூடியவர்களா?

70. அல்லது "அவருக்குப் பைத்தியமிருக்கின்றது" என்று அவர்கள் கூறுகின்றனரா? இல்லை; (நம்தூதராகிய) அவர் அவர்களுக்குச் சத்தியத்தைக் கொண்டு வந்தார்; இன்னும், அவர்களில் பெரும்பாலோர் அ(ந்தச் சத்தியத்)தை வெறுக்கின்றவர்கள்.

71. இன்னும்,(இச்) சத்தியம் அவர்களுடைய மனோஇச்சைகளைப் பின்பற்றுவதென்றால், வானங்களும், பூமியும் அவற்றிலுள்ளவைகளும் சீர்கெட்டுவிடும். மாறாக, அவர்களுடைய நல்லுபதேசத்தை(குர்ஆனை) அவர்களுக்கு நாம் கொடுத்தோம்; ஆனாலும் அவர்கள், தங்களுடைய நல்லுபதேசத்தை (குர்ஆனை)ப் புறக்கணிக்கக் கூடியவர்கள்(ஆக இருக்கின்றனர்).

72. அல்லது அவர்களிடம் நீர் கூலியைக் கேட்கின்றீரா? (இல்லை; ஏனெனில்) உமதிரட்சகனின் கூலியே மிக்க மேலானது; அவனோ கொடுப்பவர்களில் மிக்க மேலானவன்.

73. இன்னும், (நபியே!) நிச்சயமாக, நீர் அவர்களை நேரான வழியின்பால் அழைக்கிறீர்.

74. இன்னும், நிச்சயமாக மறுமையை விசுவாசங்கொள்ளவில்லையே அத்தகையவர்கள்,(நேரான) வழியை விட்டும் பிசகியவர்களாவர்.

وَلَوْ رَحِمْنٰهُمْ وَكَشَفْنَا مَا بِهِمْ مِّنْ ضُرٍّ لَّلَجُّوْا فِيْ طُغْيَانِهِمْ

يَعْمَهُوْنَ ﴿٧٥﴾ وَلَقَدْ اَخَذْنٰهُمْ بِالْعَذَابِ فَمَا اسْتَكَانُوْا لِرَبِّهِمْ

وَمَا يَتَضَرَّعُوْنَ ﴿٧٦﴾ حَتّٰۤى اِذَا فَتَحْنَا عَلَيْهِمْ بَابًا ذَا عَذَابٍ شَدِيْدٍ

اِذَا هُمْ فِيْهِ مُبْلِسُوْنَ ﴿٧٧﴾ ع وَهُوَ الَّذِيْۤ اَنْشَاَ لَكُمُ السَّمْعَ وَالْاَبْصَارَ ۴ ع ۲۷ ۴

وَالْاَفْـِٕدَةَ ؕ قَلِيْلًا مَّا تَشْكُرُوْنَ ﴿٧٨﴾ وَهُوَ الَّذِيْ ذَرَاَكُمْ فِي

الْاَرْضِ وَاِلَيْهِ تُحْشَرُوْنَ ﴿٧٩﴾ وَهُوَ الَّذِيْ يُحْيٖ وَيُمِيْتُ

وَلَهُ اخْتِلَافُ الَّيْلِ وَالنَّهَارِ ؕ اَفَلَا تَعْقِلُوْنَ ﴿٨٠﴾ بَلْ قَالُوْا

مِثْلَ مَا قَالَ الْاَوَّلُوْنَ ﴿٨١﴾ قَالُوْۤا ءَاِذَا مِتْنَا وَكُنَّا تُرَابًا وَّ

عِظَامًا ءَاِنَّا لَمَبْعُوْثُوْنَ ﴿٨٢﴾ لَقَدْ وُعِدْنَا نَحْنُ وَاٰبَآؤُنَا هٰذَا

مِنْ قَبْلُ اِنْ هٰذَاۤ اِلَّاۤ اَسَاطِيْرُ الْاَوَّلِيْنَ ﴿٨٣﴾ قُلْ لِّمَنِ الْاَرْضُ

وَمَنْ فِيْهَاۤ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿٨٤﴾ سَيَقُوْلُوْنَ لِلّٰهِ ؕ قُلْ اَفَلَا

تَذَكَّرُوْنَ ﴿٨٥﴾ قُلْ مَنْ رَّبُّ السَّمٰوٰتِ السَّبْعِ وَرَبُّ الْعَرْشِ

الْعَظِيْمِ ﴿٨٦﴾ سَيَقُوْلُوْنَ لِلّٰهِ ؕ قُلْ اَفَلَا تَتَّقُوْنَ ﴿٨٧﴾ قُلْ مَنْۢ

بِيَدِهٖ مَلَكُوْتُ كُلِّ شَيْءٍ وَّهُوَ يُجِيْرُ وَلَا يُجَارُ عَلَيْهِ اِنْ

كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿٨٨﴾ سَيَقُوْلُوْنَ لِلّٰهِ ؕ قُلْ فَاَنّٰى تُسْحَرُوْنَ ﴿٨٩﴾

75. நாம் அவர்கள்மீது அருளும் செய்து, அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை நாம் நீக்கி விடுவோமானாலும், அவர்கள் தங்களுடைய அழிச்சாட்டியத்திலேயே தட்டழிகிறவர்களாக நிலைத்து விடுகின்றனர்.
76. திட்டமாக, நாம் அவர்களை வேதனையைக் கொண்டு பிடித்தும் கொண்டோம்; ஆனால், (அதன் மூலம்) அவர்கள் தங்கள் இரட்சகனுக்கு அடிபணியவுமில்லை; அவர்கள் (அவனிடம்) தாழ்ந்து பிரார்த்தனை செய்யவுமில்லை!
77. முடிவாக, அவர்கள் மீது கடினமான வேதனையுடைய ஒரு வாயிலை நாம் திறந்து விடுவோமானால், அப்போது அவர்கள் அதில் நிராசையானவர்களாக ஆகி விடுகின்றனர்.
78. இன்னும், (அல்லாஹ்வாகிய) அவன்எத்தகையவனென்றால் உங்களுக்குச் செவிப்புலனையும், பார்வைகளையும், இதயங்களையும் உண்டாக்கினான்; (இவ்வாறிருந்தும் அவனுக்கு) நீங்கள் வெகு சொற்பமாகவே நன்றி செலுத்துகிறீர்கள்.
79. மேலும், அவன் எத்தகையவனென்றால் உங்களைப் பூமியில் (பல பகுதிகளிலும் பல்கிப் பெருக) பரவச் செய்திருக்கின்றான்; மேலும்,(மரணத்திற்குப்பிறகு) அவனிடமே நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள்.
80. அவன் எத்தகையவனென்றால், அவனே உயிர் கொடுக்கின்றான்; இன்னும் அவனே மரணிக்கச்செய்கின்றான்; மற்றும் இரவு, பகல் மாறி மாறி வருவதும் அவனுக்கு உரியது. (இவற்றையெல்லாம் தொடக்கத்திலிருந்து செய்து வரும் அவனுக்கு உங்களை உயிர் கொடுத்து எழுப்புவது கடினம் அல்ல என்பதை) நீங்கள் விளங்கிக் கொள்ளமாட்டீர்களா?
81. மாறாக, (இவர்களுக்கு) முன்னுள்ளோர்கள் கூறியவாறே, இவர்களும் கூறுகின்றனர்.
82. (அதாவது) "நாம் இறந்து,மண்ணாகவும்,எலும்புகளாகவும் ஆகிவிட்டாலுமா நிச்சயமாக,நாங்கள் (மீண்டும்)எழுப்பப் படுவோர்கள்?" என்று கூறினார்கள்.
83. (அன்றி) "நாமும், இதற்கு முன்னர் நம்முடைய மூதாதையர்களும் இதனையே திட்டமாக வாக்களிக்கப்பட்டிருக்கிறோம்; (ஆனால்) இது முன்னுள்ளோரின் கட்டுக் கதைகளேயன்றி (வேறு) இல்லை" (என்றும் கூறுகின்றனர்)
84. "பூமியும், அதிலுள்ளவையும் யாருக்கு உரியது என நீங்கள் அறிந்திருந்தால் கூறுங்கள்!" என்று (நபியே) நீர் கேட்பீராக!
85. அ(தற்க)வர்கள், "அல்லாஹ்வுக்கே உரியன" என்று கூறுவார்கள்; "(அவ்வாறாயின் அல்லாஹ்தான் வணக்கத்திற்குரியவன் என்பதை) நீங்கள் நினைத்துப்பார்க்க மாட்டீர்களா?" என்று (நபியே) நீர்கூறுவீராக!
86. (அன்றி) "ஏழு வானங்களின் இரட்சகனும், மகத்தான அர்ஷின் இரட்சகனும் யார்?" என்று(நபியே!) நீர் கேட்பீராக!
87. அ(தற்க)வர்கள் (அவை யாவும்), "அல்லாஹ்வுக்கே உரியன" என்று கூறுவார்கள். "(அவ்வாறாயின்) நீங்கள் (அவனுடைய தண்டனையை) பயப்பட மாட்டீர்களா?" என்று நீர் கூறுவீராக!
88. ஒவ்வொரு பொருளின் ஆட்சியும் எவன் கைவசம் இருக்கின்றது? அவன் பாதுகாக்கிறான், (அவனது தண்டனையிலிருந்து தப்ப) அவனுக்கு எதிராக எவரும் பாதுகாக்கப் படமுடியாதே—அவன் யார்? என நீங்கள் அறிந்தவர்களாக இருப்பின் (கூறுங்கள்) என்று கேட்பீராக!
89. அ(தற்க)வர்கள் "(சகல அதிகாரமும்) அல்லாஹ்வுக்கே உரியது" என்று கூறுவார்கள். "(அவ்வாறாயின்) நீங்கள், எங்கிருந்து சூனியமாக்கப்படுகிறீர்கள் (எவ்வாறு மதிமயக்கப்படுகிறீர்கள்) என்று கேட்பீராக!

بَلْ اَتَيْنٰهُمْ بِالْحَقِّ وَاِنَّهُمْ لَكٰذِبُوْنَ ﴿٩٠﴾ مَا اتَّخَذَ اللّٰهُ مِنْ
وَّلَدٍ وَّمَا كَانَ مَعَهٗ مِنْ اِلٰهٍ اِذًا لَّذَهَبَ كُلُّ اِلٰهٍۢ بِمَا خَلَقَ
وَلَعَلَا بَعْضُهُمْ عَلٰى بَعْضٍ ؕ سُبْحٰنَ اللّٰهِ عَمَّا يَصِفُوْنَ ﴿٩١﴾ عٰلِمِ
الْغَيْبِ وَالشَّهَادَةِ فَتَعٰلٰى عَمَّا يُشْرِكُوْنَ ﴿٩٢﴾ ع قُلْ رَّبِّ اِمَّا ٥/٥ ع
تُرِيَنِّيْ مَا يُوْعَدُوْنَ ﴿٩٣﴾ رَبِّ فَلَا تَجْعَلْنِيْ فِي الْقَوْمِ
الظّٰلِمِيْنَ ﴿٩٤﴾ وَاِنَّا عَلٰٓى اَنْ نُّرِيَكَ مَا نَعِدُهُمْ لَقٰدِرُوْنَ ﴿٩٥﴾
اِدْفَعْ بِالَّتِيْ هِيَ اَحْسَنُ السَّيِّئَةَ ؕ نَحْنُ اَعْلَمُ بِمَا يَصِفُوْنَ ﴿٩٦﴾
وَقُلْ رَّبِّ اَعُوْذُ بِكَ مِنْ هَمَزٰتِ الشَّيٰطِيْنِ ﴿٩٧﴾ وَاَعُوْذُ بِكَ
رَبِّ اَنْ يَّحْضُرُوْنِ ﴿٩٨﴾ حَتّٰٓى اِذَا جَآءَ اَحَدَهُمُ الْمَوْتُ قَالَ رَبِّ
ارْجِعُوْنِ ﴿٩٩﴾ لَعَلِّيْٓ اَعْمَلُ صَالِحًا فِيْمَا تَرَكْتُ كَلَّا ؕ اِنَّهَا كَلِمَةٌ هُوَ
قَآئِلُهَا ؕ وَمِنْ وَّرَآئِهِمْ بَرْزَخٌ اِلٰى يَوْمِ يُبْعَثُوْنَ ﴿١٠٠﴾ فَاِذَا نُفِخَ
فِي الصُّوْرِ فَلَآ اَنْسَابَ بَيْنَهُمْ يَوْمَئِذٍ وَّلَا يَتَسَآءَلُوْنَ ﴿١٠١﴾
فَمَنْ ثَقُلَتْ مَوَازِيْنُهٗ فَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿١٠٢﴾ وَمَنْ خَفَّتْ
مَوَازِيْنُهٗ فَاُولٰٓئِكَ الَّذِيْنَ خَسِرُوْٓا اَنْفُسَهُمْ فِيْ جَهَنَّمَ
خٰلِدُوْنَ ﴿١٠٣﴾ تَلْفَحُ وُجُوْهَهُمُ النَّارُ وَهُمْ فِيْهَا كٰلِحُوْنَ ﴿١٠٤﴾

90. எனினும், நாம் அவர்களுக்குச் சத்தியத்தையே கொடுத்திருந்தோம்;(இதனை மறுத்துக் கூறும்) அவர்கள் நிச்சயமாகப் பொய்யர்களாகவே இருக்கிறார்கள்.
91. அல்லாஹ் எந்த ஒரு மகவையும்( தனக்குச்சந்ததியாக) எடுத்துக் கொள்ளவில்லை; அவனுடன் (வணக்கத்திற்குரிய வேறு எந்த) நாயனும் இல்லை; (அவர்கள் கற்பனையின்படி) அவ்வாறிருப்பின் ஒவ்வொரு நாயனும் தான் படைத்ததைக் கொண்டு சென்றுவிடுவர்; இன்னும் தம்மில் சிலர், சிலரை (மிகைத்து) உயர்ந்தும் விடுவர். இ(ந்நிராகரிப்ப)வர்கள் வர்ணிப்பவற்றை விட்டும் அல்லாஹ் மிகத் தூயவன்.
92. (அவன்) மறைவானதையும், பகிரங்கமானதையும் நன்கறிந்தவன்; இவர்கள் இணைவைப்பவைகளை விட்டும் அவன் மிக்க உயர்ந்தவன்.
93. (நபியே!) நீர் கூறுவீராக: என் இரட்சகனே! எதை அவர்கள் வாக்களிக்கப்பட்டார்களோ அ(வ்வேதனையான)தை எனக்கு நீ காண்பிப்பதாயின்_
94. "என் இரட்சகனே!(அது சமயம்) இந்த அநியாயக்காரர்களான சமூகத்தாரில் என்னை நீ ஆக்கிவிடாதிருப்பாயாக" (என்றும் நபியே! நீர் பிரார்த்தித்துக் கூறுவீராக).
95. இன்னும், நிச்சயமாக நாம், அவர்களுக்கு வாக்களித்த ஒன்றை உமக்குக் காண்பிக்கவும் நாம் ஆற்றலுடையோராக உள்ளோம்.
96. எது மிக அழகானதோ அதைக் கொண்டு தீமையை நீர் தடுத்துக் கொள்வீராக! அவர்கள் (பொய்யாக) வர்ணிப்பதை நாம் நன்கறிவோம்.
97. இன்னும்,"என் இரட்சகனே! ஷைத்தானுடைய தூண்டுதல்களிலிருந்து நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்" என்றும் (நபியே!) நீர் கூறுவீராக!
98. "என் இரட்சகனே! இன்னும் அவை (என் காரியங்களில்) பிரசன்னமாகாதிருக்கவும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்" (என்றும் நபியே! நீர் பிரார்த்தித்துக் கூறுவீராக!).
99. முடிவாக, அவர்களில் ஒருவருக்கு மரணம் வந்துவிடுமானால் (அவன் தன் இரட்சகனிடம்) "என் இரட்சகனே! என்னை (உலகத்திற்கு)த் திருப்பி அனுப்பிவிடுவாயாக!" என்று கூறுவான்.
100. "உலகில் நான் விட்டுவந்ததில், (இனி) நல்ல காரியங்களைச் செய்வதற்காக" (என்றும் கூறுவான்); அவ்வாறன்று! நிச்சயமாக அது _ அவன் அதைக் கூறக்கூடிய (வெறும்)ஒரு வார்த்தையாகும்; இன்னும், அவர்கள் (மறுமைக்காக )எழுப்பப்படும் நாள் வரை அவர்கள் முன்னே தடுப்பு இருக்கிறது(அதனால் அவர்கள் உலகுக்குத்திரும்பி வர ஆற்றல்பெறமாட்டார்கள்).
101. ஆகவே, சூர் (குழல்) ஊதப்பட்டால், அந்நாளில் அவர்களுக்கிடையில் பந்தங்கள் (பயனளிப்பது) இல்லை; ஒருவரின் செய்தியை மற்றொருவர் விசாரிக்கவும் மாட்டார்கள்( ஒவ்வொருவருக்கும் அவரவர் கவலையே பெரிதாக இருக்கும்).
102. ஆகவே, எவர்களுடைய (நன்மையின்) எடைகள் கனமாக இருக்கின்றனவோ அவர்கள்தாம் வெற்றியாளர்கள்.
103. இன்னும் எவர்களுடைய (நன்மையின்) எடைகள் கனம் குறைந்து இருக்கின்றனவோ, அவர்கள் தங்களுக்குத் தாங்களே நஷ்டத்தையுண்டு பண்ணிக்கொண்டவர்கள்; (அவர்கள்) நரகத்தில் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்.
104. அவர்களுடைய முகங்களை, (நரகத்தின்) நெருப்புப் பொசுக்கும்; அதில் அவர்கள் விகாரமானவர்களாகவும் இருப்பார்கள்.

اَلَمْ تَكُنْ اٰيٰتِيْ تُتْلٰى عَلَيْكُمْ فَكُنْتُمْ بِهَا تُكَذِّبُوْنَ ﴿١٠٥﴾ قَالُوْا
رَبَّنَا غَلَبَتْ عَلَيْنَا شِقْوَتُنَا وَكُنَّا قَوْمًا ضَآلِّيْنَ ﴿١٠٦﴾ رَبَّنَآ
اَخْرِجْنَا مِنْهَا فَاِنْ عُدْنَا فَاِنَّا ظٰلِمُوْنَ ﴿١٠٧﴾ قَالَ اخْسَـُٔوْا فِيْهَا
وَلَا تُكَلِّمُوْنِ ﴿١٠٨﴾ اِنَّهٗ كَانَ فَرِيْقٌ مِّنْ عِبَادِيْ يَقُوْلُوْنَ
رَبَّنَآ اٰمَنَّا فَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا وَاَنْتَ خَيْرُ الرّٰحِمِيْنَ ﴿١٠٩﴾
فَاتَّخَذْتُمُوْهُمْ سِخْرِيًّا حَتّٰٓى اَنْسَوْكُمْ ذِكْرِيْ وَكُنْتُمْ مِّنْهُمْ
تَضْحَكُوْنَ ﴿١١٠﴾ اِنِّيْ جَزَيْتُهُمُ الْيَوْمَ بِمَا صَبَرُوْٓا اَنَّهُمْ هُمُ
الْفَآئِزُوْنَ ﴿١١١﴾ قٰلَ كَمْ لَبِثْتُمْ فِي الْاَرْضِ عَدَدَ سِنِيْنَ ﴿١١٢﴾
قَالُوْا لَبِثْنَا يَوْمًا اَوْ بَعْضَ يَوْمٍ فَسْـَٔلِ الْعَآدِّيْنَ ﴿١١٣﴾
قٰلَ اِنْ لَّبِثْتُمْ اِلَّا قَلِيْلًا لَّوْ اَنَّكُمْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿١١٤﴾
اَفَحَسِبْتُمْ اَنَّمَا خَلَقْنٰكُمْ عَبَثًا وَّاَنَّكُمْ اِلَيْنَا لَا تُرْجَعُوْنَ ﴿١١٥﴾
فَتَعٰلَى اللّٰهُ الْمَلِكُ الْحَقُّ لَآ اِلٰهَ اِلَّا هُوَ رَبُّ الْعَرْشِ
الْكَرِيْمِ ﴿١١٦﴾ وَمَنْ يَّدْعُ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ لَا بُرْهَانَ
لَهٗ بِهٖ فَاِنَّمَا حِسَابُهٗ عِنْدَ رَبِّهٖ اِنَّهٗ لَا يُفْلِحُ الْكٰفِرُوْنَ ﴿١١٧﴾
وَقُلْ رَّبِّ اغْفِرْ وَارْحَمْ وَاَنْتَ خَيْرُ الرّٰحِمِيْنَ ﴿١١٨﴾ ع ٦ ٦

105. " என்னுடைய வசனங்கள் உங்கள் மீது ஓதிக் காண்பிக்கப் படவில்லையா? அப்போது அவற்றை நீங்கள் பொய்யாக்கிக் கொண்டிருந்தீர்கள்" (என்று அவர்களிடம் கூறப்படும்.)

106. அ(தற்க)வர்கள், "எங்கள் இரட்சகனே! எங்களுடைய துர்பாக்கியம் எங்கள்மீது மிகைத்துவிட்டது, (ஆதலால்,) நாங்கள் வழி தவறிவிட்ட சமூகத்தவராகவும் இருந்துவிட்டோம்" என்று கூறுவார்கள்.

107. (அன்றி)"எங்கள் இரட்சகனே! இ(ந்த நரகத்)திலிருந்து எங்களை வெளியேற்றிவிடுவாயாக! பின்னர் நாங்கள் (திரும்பவும் பாவம் செய்ய) மீண்டால் நிச்சயமாக நாங்கள் அநியாயக்காரர்கள்"(என்பார்கள்).

108. (அதற்கு) அவன், "அதிலேயே சிறுமைப்பட்டவர்களாகக் கிடங்கள்; என்னிடம் நீங்கள் பேசாதீர்கள்" என்று கூறுவான்.

109. நிச்சயமாக என்னுடைய அடியார்களில் ஒரு பிரிவினர் "எங்கள் இரட்சகனே! நாங்கள் (உன்னை) விசுவாசம் கொண்டோம்; ஆகவே, நீ எங்களுடைய குற்றங்களை மன்னித்து விடுவாயாக; மேலும், எங்களுக்குக்கிருபை செய்வாயாக! கிருபைசெய்வோரிலெல்லாம் நீயே மிக்க மேலானவன்" என்று (பிரார்த்தித்துக்) கூறுபவர்களாக இருந்தனர்.

110. அப்போது என்னை நினைவு கூருவதை விட்டும் உங்களை அவர்கள் மறக்கச் செய்யும் வரை, அவர்களை நீங்கள் பரிகாசமாக எடுத்துக் கொண்டீர்கள்; இன்னும், நீங்கள் அவர்கள் பற்றி சிரித்துக் கொண்டுமிருந்தீர்கள்.

111. "(உங்கள் பரிகாசத்தைப்பற்றிக் கவலைகொள்ளாது) அவர்கள் பொறுமையாக இருந்ததன் காரணமாக, இன்றையத்தினம் நிச்சயமாக நான் அவர்களுக்கு (நற்) கூலி கொடுத்துவிட்டேன்; நிச்சயமாக, அவர்கள்தாம் வெற்றி பெற்றோர்"(என்றும் அல்லாஹ் கூறுவான்).

112. "ஆண்டுகளின் எண்ணிக்கையால் நீங்கள் பூமியில் எவ்வளவு காலம் தங்கியிருந்தீர்கள்?" என்று அவன் கேட்பான்.

113. அ(தற்க)வர்கள், "ஒரு நாள், அல்லது ஒரு நாளில் சிறிது பாகம் தங்கியிருந்திருப்போம்; (ஆகவே,) கணக்கு வைத்திருப்பவர்களை நீ கேட்பாயாக!" எனக் கூறுவார்கள்.

114. அ(தற்க)வன் "ஒரு சொற்ப காலத்தைத் தவிர நீங்கள் தங்கவில்லை (இதை முன்னதாகவே) நீங்கள் அறிந்திருந்தால்!" (இதைப் பற்றித் தெரிந்திருப்பீர்கள்) என்று கூறுவான்.

115. " உங்களை நாம் படைத்ததெல்லாம் வீணுக்காகத்தான் என்றும், நிச்சயமாக நீங்கள் நம்மிடம் மீட்டப்படமாட்டீர்கள் என்றும் நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்களா?"(என்று கூறுவான்).

116. ஆகவே, உண்மையான அரசனாகிய அல்லாஹ் மிக்க உயர்ந்தவன்; அவனைத் தவிர வணக்கத்திற்குரிய (வேறு) நாயன் இல்லை; (அவன்) கண்ணியத்திற்குரிய (அழகான தோற்றமுடைய) அர்ஷின் இரட்சகன்.

117. மேலும் , (நபியே!) எவன் , அல்லாஹ்வுடன் வேறு நாயனை (வணக்கத்திற்குரியவன் என) அழைக்கிறானோ அவனிடத்தில் அதைப்பற்றி யாதொரு சான்றும் இல்லாமலே அவனுடைய கணக்கெல்லாம் அவனுடைய இரட்சகனிடத்தில்தான் உண்டு ; நிச்சயமாக நிராகரிக்கக்கூடியவர்கள் வெற்றி பெறமாட்டார்கள்.

118. (நபியே!) நீர் கூறுவீராக: என் இரட்சகனே! நீ (என்னை) மன்னிப்பாயாக! கிருபையும் செய்வாயாக! கிருபை செய்பவர்களில் நீயே மிகச்சிறந்தவன்."

سُوْرَةُ النُّوْرِ مَدَنِيَّةٌ وَّهِيَ اَرْبَعٌ وَّسِتُّوْنَ اٰيَةً وَّتِسْعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

سُوْرَةٌ اَنْزَلْنٰهَا وَفَرَضْنٰهَا وَاَنْزَلْنَا فِيْهَاۤ اٰيٰتٍۭ بَيِّنٰتٍ لَّعَلَّكُمْ
تَذَكَّرُوْنَ ۱ اَلزَّانِيَةُ وَالزَّانِيْ فَاجْلِدُوْا كُلَّ وَاحِدٍ مِّنْهُمَا
مِائَةَ جَلْدَةٍ ۪ وَّلَا تَاْخُذْكُمْ بِهِمَا رَاْفَةٌ فِيْ دِيْنِ اللّٰهِ اِنْ كُنْتُمْ
تُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ۚ وَلْيَشْهَدْ عَذَابَهُمَا طَآئِفَةٌ
مِّنَ الْمُؤْمِنِيْنَ ۲ اَلزَّانِيْ لَا يَنْكِحُ اِلَّا زَانِيَةً اَوْ مُشْرِكَةً ۫ وَّ
الزَّانِيَةُ لَا يَنْكِحُهَاۤ اِلَّا زَانٍ اَوْ مُشْرِكٌ ۚ وَحُرِّمَ ذٰلِكَ عَلَى
الْمُؤْمِنِيْنَ ۳ وَالَّذِيْنَ يَرْمُوْنَ الْمُحْصَنٰتِ ثُمَّ لَمْ يَاْتُوْا
بِاَرْبَعَةِ شُهَدَآءَ فَاجْلِدُوْهُمْ ثَمٰنِيْنَ جَلْدَةً وَّلَا تَقْبَلُوْا لَهُمْ
شَهَادَةً اَبَدًا ۚ وَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ۴ اِلَّا الَّذِيْنَ تَابُوْا
مِنْۢ بَعْدِ ذٰلِكَ وَاَصْلَحُوْا ۚ فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ۵ وَالَّذِيْنَ
يَرْمُوْنَ اَزْوَاجَهُمْ وَلَمْ يَكُنْ لَّهُمْ شُهَدَآءُ اِلَّاۤ اَنْفُسُهُمْ
فَشَهَادَةُ اَحَدِهِمْ اَرْبَعُ شَهٰدٰتٍۭ بِاللّٰهِ ۙ اِنَّهٗ لَمِنَ الصّٰدِقِيْنَ ۶
وَالْخَامِسَةُ اَنَّ لَعْنَتَ اللّٰهِ عَلَيْهِ اِنْ كَانَ مِنَ الْكٰذِبِيْنَ ۷

அத்தியாயம் : 24

## அந்நூர் _ பிரகாசம்

வசனங்கள் : 64 மதனீ ருகூஉகள் : 9

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (இது) ஓர் அத்தியாயம்; இதனை நாம் இறக்கி வைத்தோம்; இதனை _ (இதிலுள்ள சட்டங்களை உங்கள் மீது) நாமே விதியாக்கினோம்; இன்னும், (இதனைக் கொண்டு) நீங்கள் நல்லுபதேசம் பெறுவதற்காக, இதில் தெளிவான வசனங்களை நாம் இறக்கி வைத்தோம்.

2. (திருமணமாகாத) விபச்சாரி, விபச்சாரகன் இவ்விருவரில் ஒவ்வொருவரையும் நூறு கசையடி அடியுங்கள்; நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால் அல்லாஹ்வின் மார்க்கத்(தில் விதிக்கப்பட்ட சட்டத்தை அமுல்செய்வ) தில், அவ்விருவருக்காக உங்களை இரக்கம் பிடித்து விட வேண்டாம்; இன்னும், அவ்விருவரின் வேதனையை விசுவாசிகளில் ஒரு சாரார் (நேரில் பிரசன்னமாகிப்) பார்க்கவும்.

3. விபச்சாரகன், விபச்சாரியை அல்லது இணைவைப்பவளையே தவிர (மற்றெவளையும்) மணந்து கொள்ளமாட்டான்; (அவ்வாறே) விபச்சாரி _ அவளை விபச்சாரகனோ, அல்லது இணைவைப்பவனோ தவிர (மற்றெவரும்) மணந்து கொள்ளமாட்டான்; மேலும், இ(த்தகையோரைத் திருமணம் செய்வ)து விசுவாசிகளுக்குத் தடுக்கப்பட்டிருக்கிறது.

4. மேலும், பத்தினிப்பெண்களை அவதூறு கூறி (அதன்) பிறகு (அதற்குரிய) நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டு வரவில்லையே அத்தகையோர் _ அப்போது அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள்; மேலும், அவர்களின் சாட்சியத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்; இன்னும் அத்தகையோர் பாவிகளாவர்.

5. இதற்குப் பின்னர் (தங்கள் குற்றங்களிலிருந்து விலகிப்) பச்சாதாபப்பட்டு(த் தங்கள் நிலைகளை) சீர்திருத்திக் கொண்டவர்கள் தவிர. (இத்தகையோரை) நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்; பெருங்கிருபை செய்பவன்.

6. இன்னும், தங்கள் மனைவியரை (விபச்சாரக் குற்றம் சாட்டி) அவதூறு கூறி, இன்னும், தங்களையன்றி அவர்களுக்கு வேறு சாட்சிகள் இருக்கவில்லையே அத்தகையோர், அப்போது (அவதூறு கூறிய) அவர்களில் ஒருவரின் சாட்சியானது _ "நிச்சயமாக தான் உண்மையாளர்களில் உள்ளவன்" என்று அல்லாஹ்வைக் கொண்டு நான்கு(முறை சத்தியம் செய்து) சாட்சி கூறுவதாகும்.

7. இன்னும், ஐந்தாவது முறையாக (இவ்விஷயத்தில்) "தான் பொய் சொல்பவர்களில் உள்ளவனாக இருந்தால், நிச்சயமாக அல்லாஹ்வுடைய சாபம் தன்மீது உண்டாவதாக" என்று(ம் அவன் கூற வேண்டும்).

وَيَدْرَؤُا عَنْهَا الْعَذَابَ اَنْ تَشْهَدَ اَرْبَعَ شَهٰدٰتٍۭ بِاللّٰهِ ۙ اِنَّهٗ
لَمِنَ الْكٰذِبِيْنَ ﴿٨﴾ وَالْخَامِسَةَ اَنَّ غَضَبَ اللّٰهِ عَلَيْهَآ اِنْ كَانَ
مِنَ الصّٰدِقِيْنَ ﴿٩﴾ وَلَوْلَا فَضْلُ اللّٰهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهٗ وَاَنَّ اللّٰهَ
ع ١ تَوَّابٌ حَكِيْمٌ ﴿١٠﴾ اِنَّ الَّذِيْنَ جَآءُوْ بِالْاِفْكِ عُصْبَةٌ مِّنْكُمْ ؕ لَا
تَحْسَبُوْهُ شَرًّا لَّكُمْ ؕ بَلْ هُوَ خَيْرٌ لَّكُمْ ؕ لِكُلِّ امْرِئٍ مِّنْهُمْ مَّا اكْتَسَبَ
مِنَ الْاِثْمِ ۚ وَالَّذِيْ تَوَلّٰى كِبْرَهٗ مِنْهُمْ لَهٗ عَذَابٌ عَظِيْمٌ ﴿١١﴾ لَوْلَآ
اِذْ سَمِعْتُمُوْهُ ظَنَّ الْمُؤْمِنُوْنَ وَالْمُؤْمِنٰتُ بِاَنْفُسِهِمْ خَيْرًا ۙ وَّقَالُوْا
هٰذَآ اِفْكٌ مُّبِيْنٌ ﴿١٢﴾ لَوْلَا جَآءُوْ عَلَيْهِ بِاَرْبَعَةِ شُهَدَآءَ ۚ فَاِذْ لَمْ يَاْتُوْا
بِالشُّهَدَآءِ فَاُولٰٓئِكَ عِنْدَ اللّٰهِ هُمُ الْكٰذِبُوْنَ ﴿١٣﴾ وَلَوْلَا فَضْلُ اللّٰهِ
عَلَيْكُمْ وَرَحْمَتُهٗ فِي الدُّنْيَا وَالْاٰخِرَةِ لَمَسَّكُمْ فِيْ مَآ اَفَضْتُمْ فِيْهِ
عَذَابٌ عَظِيْمٌ ۚ ﴿١٤﴾ اِذْ تَلَقَّوْنَهٗ بِاَلْسِنَتِكُمْ وَتَقُوْلُوْنَ بِاَفْوَاهِكُمْ مَّا
لَيْسَ لَكُمْ بِهٖ عِلْمٌ وَّتَحْسَبُوْنَهٗ هَيِّنًا ۖۗ وَّهُوَ عِنْدَ اللّٰهِ عَظِيْمٌ ﴿١٥﴾ وَ
لَوْلَآ اِذْ سَمِعْتُمُوْهُ قُلْتُمْ مَّا يَكُوْنُ لَنَآ اَنْ نَّتَكَلَّمَ بِهٰذَا ۖ سُبْحٰنَكَ
هٰذَا بُهْتَانٌ عَظِيْمٌ ﴿١٦﴾ يَعِظُكُمُ اللّٰهُ اَنْ تَعُوْدُوْا لِمِثْلِهٖٓ اَبَدًا اِنْ
كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ۚ ﴿١٧﴾ وَيُبَيِّنُ اللّٰهُ لَكُمُ الْاٰيٰتِ ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿١٨﴾

8. மேலும்,(அவனுடைய மனைவி தன்மீது சுமத்தப்பட்ட அவதூறை மறுத்து) "நிச்சயமாக அவன் பொய்யர்களில் உள்ளவன்" என்று அல்லாஹ்வைக்கொண்டு (சத்தியம் செய்து) நான்கு முறை அவள் சாட்சி கூறுவது அவளை விட்டும் (விபச்சாரக் குற்றத்திற்கான) தண்டனையை நீக்கிவிடும்.

9. இன்னும், ஐந்தாவது முறையாக, "அவன் (இவ்விஷயத்தில்) உண்மையாளர்களில் உள்ளவனாக இருந்தால், நிச்சயமாக தன் மீது அல்லாஹ்வின் கோபம் உண்டாவதாக" (என்றும் அவள் கூறுவாள்.)
10. அல்லாஹ்வுடைய பேரருளும், அவனுடைய கிருபையும் உங்கள் மீது இல்லாதிருந்திருப்பின், (உங்களுக்கு அழிவு ஏற்பட்டிருக்கும்) இன்னும் நிச்சயமாக, அல்லாஹ் மிகுதியாக (தவ்பாக்களை ஏற்று) பாவமன்னிப்பளிப்பவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

11. நிச்சயமாக (ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் பற்றி பொய்யாக) அவதூறைக் கொண்டு வந்தார்களே அத்தகையவர்கள் உங்களில் உள்ள ஒரு கூட்டத்தினரே; அதை உங்களுக்கு தீமையாக நீங்கள் எண்ணவேண்டாம்; மாறாக, அது உங்களுக்கு நன்மையாகும்; அவர்களில் ஒவ்வொரு மனிதருக்கும், பாவத்தால் எதை அவர் சம்பாதித்தாரோ அது அவருக்கு உண்டு; இன்னும், இ(ந்த அவதூறை உருவாக்கிய விஷயத்)தில் அவர்களில் பெரும் பங்கெடுத்துக் கொண்டானே அத்தகையவன்—அவனுக்கு மகத்தான வேதனையுண்டு.

12. நீங்கள் இதைக் கேள்வியுற்ற சமயத்தில், விசுவாசம் கொண்ட ஆண்களும், விசுவாசம் கொண்ட பெண்களும் தங்க(ள் கூட்டத்தினர்க)ளைப் பற்றி நன்மையானதையே எண்ணி "இது தெளிவான அவதூறு(தான்)" என்றும் கூறியிருக்க வேண்டாமா?

13. இதன்மீது நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டுவந்திருக்க வேண்டாமா? (இதற்குரிய) சாட்சிகளை அவர்கள் கொண்டுவராதபொழுது அத்தகையோர்—அல்லாஹ்விடத்தில் அவர்கள் பொய்யர்கள்.

14. இன்னும், உங்கள் மீது அல்லாஹ்வுடைய பேரருளும், அவனின் பெருங்கிருபையும் இம்மையிலும், மறுமையிலும் இல்லாதிருந்தால், எதில் நீங்கள் ஈடுபட்டிருந்தீர்களோ (அதன் காரணமாக,) அதில் மகத்தான வேதனை நிச்சயமாக உங்களைத்தொட்டிருக்கும்.

15. இதனை நீங்கள் (சிலரிடமிருந்து சிலர்) உங்கள் நாவுகளால் எடுத்துக் கொண்டு, உங்களுக்கு எதுபற்றி அறிவு இல்லையோ அ(ந்த விஷயத்)தை, உங்கள் வாய்களால் கூறிக்கொண்டிருந்த பொழுது (உங்களுக்கு வேதனை ஏற்பட்டிருக்கும்); இதனை நீங்கள் இலேசாகவும் எண்ணிவிட்டீர்கள்; இதுவோ, அல்லாஹ்விடத்தில் மிக மகத்தானதாகும்.

16. நீங்கள் இதனைக் கேள்விப்பட்டபோது "இதனை நாம் பேசுவது நமக்கு(த் தகுதி) இல்லை; (அல்லாஹ்வே!) நீயே மிகப் பரிசுத்தமானவன், இது மகத்தான (பெரும்) அவதூறு" என்று நீங்கள் கூறி இருக்க வேண்டாமா?

17. நீங்கள் விசுவாசிகளாகயிருந்தால், இதுபோன்றதின்பால் ஒருபோதும் நீங்கள் மீளலாகாது என்று அல்லாஹ் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான்.
18. இன்னும், அல்லாஹ் (தன்னுடைய) வசனங்களை உங்களுக்கு விளக்கிக் கூறுகிறான்; மேலும், அல்லாஹ் (யாவையும்) நன்கறிந்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

إِنَّ الَّذِينَ يُحِبُّونَ أَنْ تَشِيعَ الْفَاحِشَةُ فِي الَّذِينَ آمَنُوا لَهُمْ
عَذَابٌ أَلِيمٌ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ ۚ وَاللَّهُ يَعْلَمُ وَأَنْتُمْ لَا تَعْلَمُونَ ﴿١٩﴾
وَلَوْلَا فَضْلُ اللَّهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهُ وَأَنَّ اللَّهَ رَءُوفٌ رَحِيمٌ ﴿٢٠﴾ ع ٢ النصف ٨
يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَتَّبِعُوا خُطُوَاتِ الشَّيْطَانِ ۚ وَمَنْ يَتَّبِعْ خُطُوَاتِ
الشَّيْطَانِ فَإِنَّهُ يَأْمُرُ بِالْفَحْشَاءِ وَالْمُنْكَرِ ۚ وَلَوْلَا فَضْلُ اللَّهِ عَلَيْكُمْ
وَرَحْمَتُهُ مَا زَكَىٰ مِنْكُمْ مِنْ أَحَدٍ أَبَدًا وَلَٰكِنَّ اللَّهَ يُزَكِّي مَنْ يَشَاءُ ۗ
وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ ﴿٢١﴾ وَلَا يَأْتَلِ أُولُو الْفَضْلِ مِنْكُمْ وَالسَّعَةِ أَنْ
يُؤْتُوا أُولِي الْقُرْبَىٰ وَالْمَسَاكِينَ وَالْمُهَاجِرِينَ فِي سَبِيلِ اللَّهِ ۖ
وَلْيَعْفُوا وَلْيَصْفَحُوا ۗ أَلَا تُحِبُّونَ أَنْ يَغْفِرَ اللَّهُ لَكُمْ ۗ وَاللَّهُ غَفُورٌ
رَحِيمٌ ﴿٢٢﴾ إِنَّ الَّذِينَ يَرْمُونَ الْمُحْصَنَاتِ الْغَافِلَاتِ الْمُؤْمِنَاتِ لُعِنُوا
فِي الدُّنْيَا وَالْآخِرَةِ وَلَهُمْ عَذَابٌ عَظِيمٌ ﴿٢٣﴾ يَوْمَ تَشْهَدُ عَلَيْهِمْ
أَلْسِنَتُهُمْ وَأَيْدِيهِمْ وَأَرْجُلُهُمْ بِمَا كَانُوا يَعْمَلُونَ ﴿٢٤﴾ يَوْمَئِذٍ يُوَفِّيهِمُ
اللَّهُ دِينَهُمُ الْحَقَّ وَيَعْلَمُونَ أَنَّ اللَّهَ هُوَ الْحَقُّ الْمُبِينُ ﴿٢٥﴾ الْخَبِيثَاتُ
لِلْخَبِيثِينَ وَالْخَبِيثُونَ لِلْخَبِيثَاتِ ۖ وَالطَّيِّبَاتُ لِلطَّيِّبِينَ وَالطَّيِّبُونَ
لِلطَّيِّبَاتِ ۚ أُولَٰئِكَ مُبَرَّءُونَ مِمَّا يَقُولُونَ ۖ لَهُمْ مَغْفِرَةٌ وَرِزْقٌ كَرِيمٌ ﴿٢٦﴾ ع ٣ ٩

19. (இதற்குப் பின்னரும்) விசுவாசங்கொண்டோருக்கிடையில் (இவ்வாறான) மானக்கேடான விஷயம் பரவவேண்டுமென விரும்புகிறார்களே நிச்சயமாக அத்தகையோர்_ அவர்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் மிக்க துன்புறுத்தும் வேதனையுண்டு; (அதனால் ஏற்படும் தீங்குகளை) அல்லாஹ்வே நன்கறிவான்; நீங்களோ அறியமாட்டீர்கள்.

20. இன்னும், உங்கள் மீது அல்லாஹ்வுடைய பேரருளும், அவனின் கிருபையும் இல்லாதிருந்தால், (உங்களை வேதனை பிடித்திருக்கும்) நிச்சயமாக அல்லாஹ்வோ மிக்க இரக்கமுடையவன்; மிகக்கிருபையுடையவன்.

21. விசுவாசம் கொண்டோரே! ஷைத்தானுடைய அடிச் சுவடுகளைப் பின்பற்றாதீர்கள்; எவன் ஷைத்தானுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்று கிறானோ அவனை, மானக்கேடானதைக்கொண்டும், வெறுக்கப் பட்டதைக் கொண்டும் நிச்சயமாக(ஷைத்தானாகிய) அவன் ஏவுவான்; இன்னும் உங்கள் மீது அல்லாஹ்வுடைய பேரருளும், அவனின் கிருபையும் இல்லாதிருப்பின் உங்களில் ஒருவருமே ஒருபோதும் பரிசுத்தமாக முடியாது; எனினும் அல்லாஹ், தான் நாடியவர்களை பரிசுத்தமாக்குகிறான்; மேலும், அல்லாஹ் செவியேற்கிறவன்; நன்கறிகிறவன்.

22. உங்களிலுள்ள (செல்வ)வளம் பெற்றோரும், (மற்றவருக்கு உதவ) வசதியுடையோரும், (தங்கள்) பந்துக்களுக்கும், ஏழைகளுக்கும், அல்லாஹ்வுடைய பாதையில் ஹிஜ்ரத் செய்தவர்களுக்கும் (எப்பொருளையும்) அவர்கள் கொடுக்காமலிருக்க சத்தியம் செய்யவேண்டாம்; அவர்களை மன்னித்து விடவும்; (பழைய வருத்தத்தைப்) பொருட்படுத்தாது விட்டுவிடவும்; அல்லாஹ் உங்களுக்கு மன்னிப்பளிப்பதை நீங்கள் விரும்பமாட்டீர்களா? மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மிக்க கிருபையுடையவன்.

23. நிச்சயமாக, கற்புள்ள அப்பாவிகளான விசுவாசிகளான பெண்களை அவதூறு கூறுகிறார்களே அத்தகையோர்_ இம்மையிலும், மறுமையிலும் (அல்லாஹ்வினால்) அவர்கள் சபிக்கப்பட்டுள்ளனர்; இன்னும், (மறுமையில்) அவர்களுக்கு மகத்தான வேதனையும் உண்டு.

24. அவர்களுடைய நாவுகளும், அவர்களுடைய கைகளும், அவர்களுடைய கால்களும் அவர்கள் செய்துகொண்டிருந்ததைப்பற்றி அவர்களுக்கு விரோதமாக சாட்சி சொல்லும் நாளில் (அவர்களுக்குக் கடுமையான வேதனையுண்டு).

25. அந்நாளில் அவர்களுக்குரிய (செயல்களுக்கு) உண்மையான கூலியை அல்லாஹ் அவர்களுக்குப் பூரணமாகக் கொடுப்பான்; நிச்சயமாக அல்லாஹ்_ அவனே (கணக்குகளை நீதமாகவைத்து அவற்றை) வெளியாக்கிவிடக்கூடிய உண்மையாளன் என்பதை அவர்கள் அறிந்தும் கொள்வார்கள்.

26. கெட்ட பெண்கள், கெட்ட ஆண்களுக்கும்; கெட்ட ஆண்கள், கெட்ட பெண்களுக்கும்; இன்னும் பரிசுத்தமான பெண்கள், பரிசுத்தமான ஆண்களுக்கும்; பரிசுத்தமான ஆண்கள், பரிசுத்தமான பெண்களுக்கும் (தகுதியானவர்கள்); அ(த்தகைய)வர்கள், இவர்கள் கூறுவதைவிட்டும் நீக்கம் செய்யப்பட்ட (பரிசுத்தமான)வர்கள்; இவர்களுக்கு மன்னிப்பும், கண்ணியமான உணவும் உண்டு.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَدْخُلُوْا بُيُوْتًا غَيْرَ بُيُوْتِكُمْ حَتّٰى تَسْتَاْنِسُوْا
وَتُسَلِّمُوْا عَلٰۤى اَهْلِهَا ؕ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ ﴿۲۷﴾ فَاِنْ لَّمْ تَجِدُوْا
فِيْهَاۤ اَحَدًا فَلَا تَدْخُلُوْهَا حَتّٰى يُؤْذَنَ لَكُمْ ۚ وَاِنْ قِيْلَ لَكُمُ ارْجِعُوْا
فَارْجِعُوْا هُوَ اَزْكٰى لَكُمْ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ عَلِيْمٌ ﴿۲۸﴾ لَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ
اَنْ تَدْخُلُوْا بُيُوْتًا غَيْرَ مَسْكُوْنَةٍ فِيْهَا مَتَاعٌ لَّكُمْ ؕ وَاللّٰهُ يَعْلَمُ مَا تُبْدُوْنَ
وَمَا تَكْتُمُوْنَ ﴿۲۹﴾ قُلْ لِّلْمُؤْمِنِيْنَ يَغُضُّوْا مِنْ اَبْصَارِهِمْ وَيَحْفَظُوْا
فُرُوْجَهُمْ ؕ ذٰلِكَ اَزْكٰى لَهُمْ ؕ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا يَصْنَعُوْنَ ﴿۳۰﴾ وَقُلْ
لِّلْمُؤْمِنٰتِ يَغْضُضْنَ مِنْ اَبْصَارِهِنَّ وَيَحْفَظْنَ فُرُوْجَهُنَّ وَلَا يُبْدِيْنَ
زِيْنَتَهُنَّ اِلَّا مَا ظَهَرَ مِنْهَا وَلْيَضْرِبْنَ بِخُمُرِهِنَّ عَلٰى جُيُوْبِهِنَّ ۪ وَلَا
يُبْدِيْنَ زِيْنَتَهُنَّ اِلَّا لِبُعُوْلَتِهِنَّ اَوْ اٰبَآئِهِنَّ اَوْ اٰبَآءِ بُعُوْلَتِهِنَّ اَوْ
اَبْنَآئِهِنَّ اَوْ اَبْنَآءِ بُعُوْلَتِهِنَّ اَوْ اِخْوَانِهِنَّ اَوْ بَنِيْۤ اِخْوَانِهِنَّ اَوْ
بَنِيْۤ اَخَوٰتِهِنَّ اَوْ نِسَآئِهِنَّ اَوْ مَا مَلَكَتْ اَيْمَانُهُنَّ اَوِ التّٰبِعِيْنَ غَيْرِ
اُولِى الْاِرْبَةِ مِنَ الرِّجَالِ اَوِ الطِّفْلِ الَّذِيْنَ لَمْ يَظْهَرُوْا عَلٰى
عَوْرٰتِ النِّسَآءِ ۪ وَلَا يَضْرِبْنَ بِاَرْجُلِهِنَّ لِيُعْلَمَ مَا يُخْفِيْنَ مِنْ
زِيْنَتِهِنَّ ؕ وَتُوْبُوْۤا اِلَى اللّٰهِ جَمِيْعًا اَيُّهَ الْمُؤْمِنُوْنَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ﴿۳۱﴾

27. விசுவாசங்கொண்டோரே! உங்கள் வீடுகள் அல்லாத ( வேறு) வீடுகளில் (நீங்கள் நுழைய அவசியம் ஏற்பட்டால் அவ்வீடுகளில் உள்ளவர்களிடம்) நீங்கள் (மூன்றுமுறை) அனுமதி கோரி, அவ்வீடுகளில் உள்ளோருக்கு ஸலாம் கூறாதவரை (அவற்றில்) நுழையாதீர்கள்; இ(வ்வாறு நடந்துகொள்வ)துவே உங்களுக்கு மிகச்சிறந்ததாகும். நீங்கள் நல்லுபதேசம் பெறும் பொருட்டு (இது உங்களுக்குக் கூறப்படுகிறது).

28. அவற்றில் எவரையுமே நீங்கள் காணவில்லையென்றால், உங்களுக்கு அனுமதியளிக்கப்படும் வரையில் அவற்றில் நுழையாதீர்கள்; மேலும், "நீங்கள் திரும்பிவிடுங்கள்" என்று (அவற்றில் உள்ளோரிடமிருந்து) உங்களுக்குக் கூறப்பட்டால் நீங்கள் திரும்பிவிடுங்கள்; அதுவே உங்களுக்கு மிகப் பரிசுத்த மானதாகும்; இன்னும், நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிகிறவன்.

29. (விசுவாசிகளே! எவராலும்) குடியிருக்கப்படாத வீடுகளில் _ அவற்றில் உங்களுடைய பொருட்கள் இருந்து, (அதற்காக) நீங்கள் அவற்றில் நுழைவது உங்கள் மீது குற்றமாகாது; மேலும், அல்லாஹ், நீங்கள் வெளியாக்குவதையும், மறைத்துக்கொள்வதையும் அறிவான்.

30. ( நபியே!) விசுவாசிகளுக்கு நீர் கூறுவீராக: "அவர்கள் தங்கள் பார்வைகளைக் தாழ்த்திக் கொள்ளவும்; தங்கள் மர்மஸ்தானங்களையும் பேணிக்காத்துக் கொள்ளவும்;" அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும்; நிச்சயமாக அல்லாஹ், அவர்கள் செய்பவைகளை நன்கு உணர்பவன்.

31 . மேலும், (நபியே!) விசுவாசிகளான பெண்களுக்கு நீர் கூறுவீராக: "தங்கள் பார்வைகளை அவர்கள் தாழ்த்திக் கொள்ளவும்; தங்கள் மர்மஸ்தானங்களையும் பேணிப்பாதுகாத்துக் கொள்ளவும்; அதினின்று வெளியில் தெரியக்கூடிய வைகளைத் தவிர, தங்கள் (அலங்காரத்தை) அவர்கள் வெளிப்படுத்தவேண்டாம்; தங்கள் முந்தானைகளை தம் மேல்சட்டைகளின் மீது போட்டு (தலை,கழுத்து, நெஞ்சு ஆகியவற்றை மறைத்து)க் கொள்ளவேண்டும்; மேலும், அவர்கள் தம் அலங்காரத்தை தம் கணவர்கள், அல்லது தம் தந்தையர், அல்லது தம் கணவர்களின் தந்தையர் , அல்லது தம் குமாரர்கள், அல்லது தம் கணவர்களின் குமாரர்கள், அல்லது தங்கள் சகோதரர்கள், அல்லது தம் சகோதரர்களின் குமாரர்கள், அல்லது தம் சகோதரிகளின் குமாரர்கள், அல்லது தங்களுடைய பெண்கள், அல்லது தங்களுடைய வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள், அல்லது (ஆண்களில் பெண்களின் மீது) விருப்பமற்ற பணியாளர்கள், அல்லது பெண்களின் மறைவான அவயங்களை அறிந்து கொள்ளாத சிறு பிராயத்தை யுடைய சிறார்கள் ஆகியவர்களைத் தவிர, (மற்றெவருக்கும்) வெளிப்படுத்த வேண்டாம். அன்றியும் தம் அலங்காரத்திலிருந்து தாம் மறைத்திருப்பதை அறியப்படுவதற்காக, தங்களுடைய கால்களை (பூமியில்) அடிக்க வேண்டாம்; விசுவாசிகளே! நீங்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வின் பக்கம் (பாவ மன்னிப்பைக் கோரி) தவ்பாச் செய்யுங்கள்.

وَاَنْكِحُوا الْاَيَامٰى مِنْكُمْ وَالصّٰلِحِيْنَ مِنْ عِبَادِكُمْ وَاِمَآئِكُمْ ؕ اِنْ
يَّكُوْنُوْا فُقَرَآءَ يُغْنِهِمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ ﴿۳۲﴾
وَلْيَسْتَعْفِفِ الَّذِيْنَ لَا يَجِدُوْنَ نِكَاحًا حَتّٰى يُغْنِيَهُمُ اللّٰهُ مِنْ
فَضْلِهٖ ؕ وَالَّذِيْنَ يَبْتَغُوْنَ الْكِتٰبَ مِمَّا مَلَكَتْ اَيْمَانُكُمْ فَكَاتِبُوْهُمْ
اِنْ عَلِمْتُمْ فِيْهِمْ خَيْرًا ۖۗ وَّاٰتُوْهُمْ مِّنْ مَّالِ اللّٰهِ الَّذِيْۤ اٰتٰىكُمْ ؕ وَلَا
تُكْرِهُوْا فَتَيٰتِكُمْ عَلَى الْبِغَآءِ اِنْ اَرَدْنَ تَحَصُّنًا لِّتَبْتَغُوْا عَرَضَ الْحَيٰوةِ
الدُّنْيَا ؕ وَمَنْ يُّكْرِهْهُّنَّ فَاِنَّ اللّٰهَ مِنْ بَعْدِ اِكْرَاهِهِنَّ غَفُوْرٌ
رَّحِيْمٌ ﴿۳۳﴾ وَلَقَدْ اَنْزَلْنَآ اِلَيْكُمْ اٰيٰتٍ مُّبَيِّنٰتٍ وَّمَثَلًا مِّنَ الَّذِيْنَ
ع ۴ ۱۰ خَلَوْا مِنْ قَبْلِكُمْ وَمَوْعِظَةً لِّلْمُتَّقِيْنَ ﴿۳۴﴾ اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ
وَالْاَرْضِ ؕ مَثَلُ نُوْرِهٖ كَمِشْكٰوةٍ فِيْهَا مِصْبَاحٌ ؕ اَلْمِصْبَاحُ فِيْ
زُجَاجَةٍ ؕ اَلزُّجَاجَةُ كَاَنَّهَا كَوْكَبٌ دُرِّيٌّ يُّوْقَدُ مِنْ شَجَرَةٍ
مُّبٰرَكَةٍ زَيْتُوْنَةٍ لَّا شَرْقِيَّةٍ وَّلَا غَرْبِيَّةٍ ۙ يَّكَادُ زَيْتُهَا يُضِيْٓءُ وَلَوْ
لَمْ تَمْسَسْهُ نَارٌ ؕ نُوْرٌ عَلٰى نُوْرٍ ؕ يَهْدِي اللّٰهُ لِنُوْرِهٖ مَنْ يَّشَآءُ ؕ وَ
يَضْرِبُ اللّٰهُ الْاَمْثَالَ لِلنَّاسِ ؕ وَاللّٰهُ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ﴿۳۵﴾ فِيْ بُيُوْتٍ اَذِنَ
اللّٰهُ اَنْ تُرْفَعَ وَيُذْكَرَ فِيْهَا اسْمُهٗ ۙ يُسَبِّحُ لَهٗ فِيْهَا بِالْغُدُوِّ وَالْاٰصَالِ ﴿۳۶﴾

32. உங்களில் வாழ்க்கைத் துணையில்லாதவருக்கும் (அவ்வாறே வாழ்க்கைத் துணைவரில்லாத) உங்களுடைய ஆண் அடிமைகள், இன்னும், அடிமைப் பெண்களிலிருந்து நல்லொழுக்கமுள்ளவர்களுக்கும் திருமணம் செய்து வையுங்கள்; அவர்கள் ஏழைகளாக இருந்தால், அல்லாஹ் தன்னுடைய பேரருளைக் கொண்டு அவர்களைச் சீமான்களாக்கி வைப்பான்; மேலும், (நல்குவதில்) அல்லாஹ் மிக்க விசாலமானவன்;(யாவற்றையும்) நன்கறிந்தவன்.

33. திருமணத்தை(ச் செய்ய வசதிகளை)ப் பெற்றுக்கொள்ளாதவர்கள், அல்லாஹ் தன்பேரருளால் அவர்களை சீமான்களாக்கி வைக்கும் வரை பத்தினித்தனமாக இருந்துகொள்ளவும்;உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக்கொண்டவர்களிலிருந்து (தன்னை விடுவிப்பதற்குரிய) உரிமைப் பத்திரத்தை எழுதுமாறு தேடுகிறார்களே அத்தகையோர் _ அவர்களில் நன்மையை நீங்கள் அறிந்தால், (உரிமைப் பத்திரத்தை) அவர்களுக்கு எழுதிக் கொடுத்து விடுங்கள்;(விசுவாசிகளே!) இன்னும், அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருளிலிருந்து நீங்கள் அவர்களுக்குக் கொடுங்கள்; இன்னும், உங்கள் அடிமைப் பெண்களை_பத்தினித்தனத்தை அவர்கள் நாடுவார்களானால் இவ்வுலகவாழ்க்கைக்குரிய ஓர் அற்பப்பொருளை நீங்கள் அடைவதற்காக, விபச்சாரத்திற்கு(அதைச் செய்யுமாறு) நிர்ப்பந்திக் காதீர்கள்; அவர்களை எவரேனும் நிர்ப்பந்தித்தால், நிச்சயமாக அல்லாஹ், அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டபின் (அவர்களை) மிக்க மன்னிப்பவன்; மிக்க கிருபையுடையவன்.

34. இன்னும், தெளிவுபடுத்தும் வசனங்களையும், உங்களுக்கு முன் சென்றுள்ளோர்களிலிருந்து உதாரணத்தையும், பயபக்தியுடையோர்க்கு நல்லுபதேசத்தையும் (இதில்) உங்கள்பால் நிச்சயமாக நாம் இறக்கி வைத்திருக்கிறோம்.

35. அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியின் பிரகாசமாக இருக்கிறான். அவனுடைய பிரகாசத்திற்கு உதாரணம்: அதில் விளக்கு இருக்கும் ஒருமாடம் போன்றதாகும்; அவ்விளக்கு கண்ணாடியினுள் இருக்கிறது; நிச்சயமாக அக்கண்ணாடி பிரகாசிக்கும் ஒருநட்சத்திரத்தைப்போன்றதாகும்.(அது)பாக்கியம் பெற்ற ஜைத்தூன் மரத்தி(ன் எண்ணெயி)னால் எரிக்கப்படுகிறது (அது) கீழ்த்திசையைச்சேர்ந்ததுமன்று; மேல்திசையைச்சேர்ந்ததுமன்று; அதன் எண்ணெய், அதை நெருப்பு தொடாவிடினும் பிரகாசிக்கவே முற்படும் (இவை யாவும் இணைந்து)ஒளிக்குமேல் ஒளியாகும்; அல்லாஹ் தான் நாடியவர்களைத் தன்பிராகாசத்தின் பால் செலுத்துகிறான்; மேலும், மனிதர்களுக்கு அல்லாஹ் இத்தகைய உதாரணங்களைக் கூறுகிறான். அல்லாஹ், ஒவ்வொரு பொருளைப்பற்றியும் நன்கறிந்தவன்.

36. (அல்லாஹ்வின் இல்லங்களானஅவ்)வீடுகளில் (வணக்க வழிபாடுகளின்மூலம்) அவை உயர்த்தப்படவும், அவற்றில் அவனது பெயர் கூறப்பட வேண்டுமெனவும் அல்லாஹ் கட்டளையிடுகிறான். அவற்றில் காலையிலும் மாலையிலும் அவனை (நல்லடியார்கள்)துதி செய்வர்.

رِجَالٌ ۙ لَّا تُلْهِيْهِمْ تِجَارَةٌ وَّلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللّٰهِ وَاِقَامِ الصَّلٰوةِ وَ
اِيْتَآءِ الزَّكٰوةِ ۙ يَخَافُوْنَ يَوْمًا تَتَقَلَّبُ فِيْهِ الْقُلُوْبُ وَالْاَبْصَارُ ﴿۳۷﴾ ۙ
لِيَجْزِيَهُمُ اللّٰهُ اَحْسَنَ مَا عَمِلُوْا وَيَزِيْدَهُمْ مِّنْ فَضْلِهٖ ؕ وَاللّٰهُ يَرْزُقُ
مَنْ يَّشَآءُ بِغَيْرِ حِسَابٍ ﴿۳۸﴾ وَالَّذِيْنَ كَفَرُوْۤا اَعْمَالُهُمْ كَسَرَابٍۭ
بِقِيْعَةٍ يَّحْسَبُهُ الظَّمْاٰنُ مَآءً ؕ حَتّٰۤى اِذَا جَآءَهٗ لَمْ يَجِدْهُ شَيْـًٔا وَّ
وَجَدَ اللّٰهَ عِنْدَهٗ فَوَفّٰىهُ حِسَابَهٗ ؕ وَاللّٰهُ سَرِيْعُ الْحِسَابِ ﴿۳۹﴾ ۙ اَوْ
كَظُلُمٰتٍ فِيْ بَحْرٍ لُّجِّيٍّ يَّغْشٰىهُ مَوْجٌ مِّنْ فَوْقِهٖ مَوْجٌ مِّنْ فَوْقِهٖ
سَحَابٌ ؕ ظُلُمٰتٌۢ بَعْضُهَا فَوْقَ بَعْضٍ ؕ اِذَاۤ اَخْرَجَ يَدَهٗ لَمْ يَكَدْ
يَرٰىهَا ؕ وَمَنْ لَّمْ يَجْعَلِ اللّٰهُ لَهٗ نُوْرًا فَمَا لَهٗ مِنْ نُّوْرٍ ﴿۴۰﴾ ع اَلَمْ تَرَ اَنَّ ع ۵ ۱۱
اللّٰهَ يُسَبِّحُ لَهٗ مَنْ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَالطَّيْرُ صٰٓفّٰتٍ ؕ كُلٌّ قَدْ
عَلِمَ صَلَاتَهٗ وَتَسْبِيْحَهٗ ؕ وَاللّٰهُ عَلِيْمٌۢ بِمَا يَفْعَلُوْنَ ﴿۴۱﴾ وَلِلّٰهِ مُلْكُ
السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ وَاِلَى اللّٰهِ الْمَصِيْرُ ﴿۴۲﴾ اَلَمْ تَرَ اَنَّ اللّٰهَ يُزْجِيْ سَحَابًا ثُمَّ
يُؤَلِّفُ بَيْنَهٗ ثُمَّ يَجْعَلُهٗ رُكَامًا فَتَرَى الْوَدْقَ يَخْرُجُ مِنْ خِلٰلِهٖ ۚ وَيُنَزِّلُ
مِنَ السَّمَآءِ مِنْ جِبَالٍ فِيْهَا مِنْۢ بَرَدٍ فَيُصِيْبُ بِهٖ مَنْ يَّشَآءُ وَ
يَصْرِفُهٗ عَنْ مَّنْ يَّشَآءُ ؕ يَكَادُ سَنَا بَرْقِهٖ يَذْهَبُ بِالْاَبْصَارِ ﴿۴۳﴾ ؕ

37. (அவ்வாறு துதி செய்யும்)ஆடவர்கள்_அவர்களை வாணிபமோ (கொடுப்பினையின் மூலம்) விற்பனையோ, அல்லாஹ்வை நினைவு கூருவதைவிட்டும், தொழுகையை முறையாக நிறை வேற்றுவதைவிட்டும், ஜகாத் கொடுப்பதைவிட்டும் (பராமுகமாக்கி) வீணாக்கிவிடாது; இன்னும், ஒருநாளை அவர்கள் பயந்து கொண்டிருப்பர். அதில் (அந்நாளில்) இதயங்களும், பார்வைகளும்(திடுக்கிட்டுத்)தடுமாற்றமடைந்து விடும்.

38. அவர்கள் செய்து கொண்டிருந்ததற்கு மிக அழகானதை அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலியாகக் கொடுப்பதற்காகவும், தன் பேரருளிலிருந்து அவர்களுக்கு அதிகமாக்கவும், (இவ்வாறு தொழுது அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்து வருவார்கள்.)மேலும்,அல்லாஹ் தான் நாடியவர்களுக்குக் கணக்கின்றியே கொடுப்பான்.

39. இன்னும் நிராகரித்துவிட்டார்களே அவர்கள்_ அவர்களின் செயல்கள் பாலைவனத்தில் (தோற்றமளிக்கும்)கானல் (நீரைப்) போலாகும்; தாகித்தவன் அதைத்தண்ணீர் என எண்ணிக் கொள்கிறான்; எதுவரையெனில் (முடிவாக) அவன் அதனிடத்தில் வந்தடைந்தால் அதை அவன் ஒரு பொருளாகப் பெற்றுக் கொள்ளமாட்டான். (மறுமையில் இது காஃபிர்களின் நிலையாகும். அங்கு) அதனிடத்தில்(தனக்கெதிரில்) அல்லாஹ்வைக் காண்கிறான். அப்போது அவனுடைய கணக்கை அவனுக்கு அவன்(அல்லாஹ்) நிறைவு செய்துவிடுகிறான்; இன்னும்,அல்லாஹ் கணக்குத்தீர்ப்பதில் தீவிரமானவன்.

40. அல்லது (அவர்களுடைய செயல்களுக்கு உதாரணம்): ஆழ் கடலிலுள்ள இருள்களைப்போன்றதாகும்;அதனை ஒரு அலை மூடிக்கொள்கிறது;அதற்குமேல் மற்றோர் அலை; அதற்கு மேல் மேகம்; (இவ்வாறு)பல இருள்கள்; அதில் சில, சிலவற்றுக்குமேல் இருக்கின்றன; (இருள்களால் சூழப்பட்ட நிலையில் பார்ப்பவன்) தன் கையை வெளியாக்கி(நீட்டி)னால் அதனை அவனால் பார்க்கமுடியாது; இன்னும், எவருக்கு அல்லாஹ் ஒளியை ஆக்கவில்லையோ அவருக்கு(எங்கும்) ஒளி இல்லை.

41. நிச்சயமாக, அல்லாஹ்_ அவனை வானங்களிலும், பூமியிலும் உள்ளவைகளும், (தங்கள்)இறக்கைகளை விரித்(துப் பறந்)தவண்ணமாக பறவைகளும் துதி செய்து கொண்டிருக்கின்றன என்பதை (நபியே!) நீர் காணவில்லையா?(இவற்றில்) ஒவ்வொன்றும் தன் தொழுகையையும், அவனைத் துதி செய்யும் முறையையும் திட்டமாக அறிந்திருக்கின்றன. மேலும், அல்லாஹ் அவைகள் செய்பவற்றை நன்கறிகிறவன்.

42 இன்னும், வானங்களுடையவும், பூமியினுடையவும் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது! அல்லாஹ்வின் பாலே அனைவரின் திரும்பச் செல்லுதல் இருக்கிறது.

43. (நபியே!)நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக, அல்லாஹ்தான் (பல பாகங்களிலிருந்து) மேகங்களை மெதுவாக இழுத்து, பின்னர் அவைகளை ஒன்றாகச் சேர்த்து, அதன்பின் ஒன்றின்மேல் ஒன்றாக இணையச்செய்கிறான்; (பின்னர், அம்மேகங்களான) அவற்றிற்கு மத்தியிலிருந்து மழை வெளிப்படுவதை நீர் காண்கிறீர்; அவனே வானத்திலுள்ள மலைகளிலிருந்து ஆலங்கட்டி யையும் இறக்கிவைக்கிறான்; அதனைக் கொண்டு அவன் நாடியவர்களைப் பிடிக்கச் செய்கிறான். இன்னும், அவன் நாடியவர்களைவிட்டு அதனைத் திருப்பி விடுகிறான்; அதன் மின்னலின் ஒளி பார்வைகளைப் பறிக்க நெருங்குகிறது.

يُقَلِّبُ اللّٰهُ الَّيْلَ وَالنَّهَارَ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَعِبْرَةً لِّاُولِي الْاَبْصَارِ ﴿۴۴﴾
وَاللّٰهُ خَلَقَ كُلَّ دَآبَّةٍ مِّنْ مَّآءٍ ۚ فَمِنْهُمْ مَّنْ يَّمْشِيْ عَلٰى بَطْنِهٖ ۚ وَمِنْهُمْ
مَّنْ يَّمْشِيْ عَلٰى رِجْلَيْنِ ۚ وَمِنْهُمْ مَّنْ يَّمْشِيْ عَلٰٓى اَرْبَعٍ ؕ يَخْلُقُ اللّٰهُ مَا
يَشَآءُ ؕ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿۴۵﴾ لَقَدْ اَنْزَلْنَآ اٰيٰتٍ مُّبَيِّنٰتٍ ؕ وَ
اللّٰهُ يَهْدِيْ مَنْ يَّشَآءُ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿۴۶﴾ وَيَقُوْلُوْنَ اٰمَنَّا
بِاللّٰهِ وَبِالرَّسُوْلِ وَاَطَعْنَا ثُمَّ يَتَوَلّٰى فَرِيْقٌ مِّنْهُمْ مِّنْۢ بَعْدِ
ذٰلِكَ ؕ وَمَآ اُولٰٓئِكَ بِالْمُؤْمِنِيْنَ ﴿۴۷﴾ وَاِذَا دُعُوْٓا اِلَى اللّٰهِ وَرَسُوْلِهٖ
لِيَحْكُمَ بَيْنَهُمْ اِذَا فَرِيْقٌ مِّنْهُمْ مُّعْرِضُوْنَ ﴿۴۸﴾ وَاِنْ يَّكُنْ لَّهُمُ الْحَقُّ
يَاْتُوْٓا اِلَيْهِ مُذْعِنِيْنَ ﴿۴۹﴾ اَفِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ اَمِ ارْتَابُوْٓا اَمْ
يَخَافُوْنَ اَنْ يَّحِيْفَ اللّٰهُ عَلَيْهِمْ وَرَسُوْلُهٗ ؕ بَلْ اُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ ﴿۵۰﴾ ع ۶ ۱۲
اِنَّمَا كَانَ قَوْلَ الْمُؤْمِنِيْنَ اِذَا دُعُوْٓا اِلَى اللّٰهِ وَرَسُوْلِهٖ لِيَحْكُمَ
بَيْنَهُمْ اَنْ يَّقُوْلُوْا سَمِعْنَا وَاَطَعْنَا ؕ وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿۵۱﴾ وَمَنْ
يُّطِعِ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَيَخْشَ اللّٰهَ وَيَتَّقْهِ فَاُولٰٓئِكَ هُمُ الْفَآئِزُوْنَ ﴿۵۲﴾
وَاَقْسَمُوْا بِاللّٰهِ جَهْدَ اَيْمَانِهِمْ لَئِنْ اَمَرْتَهُمْ لَيَخْرُجُنَّ ؕ قُلْ لَّا
تُقْسِمُوْا ۚ طَاعَةٌ مَّعْرُوْفَةٌ ؕ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ ﴿۵۳﴾

44. இரவையும், பகலையும் அல்லாஹ்வே (திருப்பித் திருப்பி)மாற்றிக்கொண்டு இருக்கிறான். பார்வைகள் உடையோர்க்கு நிச்சயமாக இதில் ஒரு (நல்ல) படிப்பினை உண்டு.

45. அல்லாஹ் – (பூமியின் மீது ஊர்ந்து திரியும்) ஒவ்வொரு உயிர்ப்பிராணியையும் நீரிலிருந்து – அவன் படைத்திருக்கின்றான்; அவைகளில் தன் வயிற்றின்மீது நடப்பவையும் உண்டு; அவைகளில் இரு கால்களால் நடப்பவையும் உண்டு; இன்னும் அவைகளில் நான்கு(கால்)களால் நடப்பவைகளும் உண்டு; (இவ்வாறு) அல்லாஹ் தான் நாடியதை படைக்கிறான்; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் பேராற்றலுடையவன்.

46. (மனிதர்களே!) தெளிவாக்கி வைக்கக்கூடிய வசனங்களையே நிச்சயமாக நாம் (இதில்) இறக்கியிருக்கிறோம்; இன்னும், அல்லாஹ் தான் நாடிய (நல்ல)வர்களை நேரான வழியின்பால் செலுத்துகிறான்.

47. "அல்லாஹ்வையும், (அவனுடைய) தூதரையும் நாங்கள் விசுவாசித்திருக்கிறோம்; (அவர்களின் கட்டளைகளுக்கு) நாங்கள் கீழ்ப்படிகிறோம் என்றும் (நபியே! இந்த முனாஃபிக்குகள்) கூறுகின்றனர்; பின்னர், அவர்களில் ஒரு பிரிவினர் அதற்குப் பிறகு புறக்கணித்துவிடுகின்றனர்; ஆகவே, இவர்கள் (உண்மையான) விசுவாசிகள் அல்லர்.

48. மேலும், தங்களுக்கிடையில் (ஏற்பட்டவற்றில் அல்லாஹ்வின் தூதராகிய) அவர் தீர்ப்பளிக்க அல்லாஹ்விடமும், அவனுடைய தூதரிடமும் வாருங்கள் என அவர்கள் அழைக்கப்பட்டால், அப்போது அவர்களில் ஒரு பிரிவினர் புறக்கணிக்கக்கூடியவர்களாக இருக்கின்றனர்.

49. மேலும், உண்மை அவர்கள் பக்கம் இருக்குமானால் கீழ்ப்படிந்தவர்களாக (விரைந்து) அவரிடம் வருகிறார்கள்.

50. அவர்களுடைய இதயங்களில் நோய் இருக்கின்றதா? அல்லது (அவரைப்பற்றி) இவர்கள் சந்தேகிக்கின்றனரா? அல்லது அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் அவர்களுக்கு அநீதியிழைத்துவிடுவார்கள் என்று பயப்படுகின்றனரா? அல்ல; இவர்கள் தாம் (தமக்குத்தாமே) அநியாயக்காரர்கள்.

51. விசுவாசிகளின் கூற்றாக இருப்பதெல்லாம் – அவர்களுக்கிடையே (அல்லாஹ்வுடைய தூதராகிய) அவர் தீர்ப்புக்கூறுவதற்காக அல்லாஹ்விடமும், அவனுடைய தூதரிடமும் (வருமாறு) அவர்கள் அழைக்கப்பட்டால் – "நாங்கள் செவியுற்றோம், இன்னும் கீழ்ப் படிந்தோம்" என்று அவர்கள் கூறுவதுதான்; இன்னும், அவர்கள் தாம் வெற்றியாளர்கள்

52. இன்னும், எவர் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து, இன்னும், அல்லாஹ்வை அஞ்சி, அவனைபயந்தும் கொள்கிறாரோ அத்தகையோர் – அவர்கள்தாம் வெற்றி பெற்றவர்கள்.

53. (நபியே!) நீர் அவர்களுக்குக் கட்டளையிட்டால், நிச்சயமாக அவர்கள் (போர்செய்ய) புறப்பட்டுவிடுவதாக அல்லாஹ்வின் மீது அவர்கள் உறுதியான சத்தியம் செய்(து கூறு)கின்றார்கள்; "சத்தியம் செய்யாதீர்கள் என்று நீர் கூறுவீராக; (உங்களுடைய) கீழ்ப்படிதல் (நயவஞ்சக மானதென) அறியப்பட்டதுதான்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு உணர்பவன்."

قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ ۚ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا عَلَيْهِ
مَا حُمِّلَ وَعَلَيْكُمْ مَّا حُمِّلْتُمْ ؕ وَاِنْ تُطِيْعُوْهُ تَهْتَدُوْا ؕ وَمَا عَلَى
الرَّسُوْلِ اِلَّا الْبَلٰغُ الْمُبِيْنُ ﴿۵۴﴾ وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَ
عَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ
مِنْ قَبْلِهِمْ ۪ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ
مِّنْ ۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِىْ لَا يُشْرِكُوْنَ بِىْ شَيْئًا ؕ وَمَنْ
كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ﴿۵۵﴾ وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَ
اٰتُوا الزَّكٰوةَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ﴿۵۶﴾ لَا تَحْسَبَنَّ
الَّذِيْنَ كَفَرُوْا مُعْجِزِيْنَ فِى الْاَرْضِ ۚ وَمَاْوٰىهُمُ النَّارُ ؕ وَلَبِئْسَ
الْمَصِيْرُ ﴿۵۷﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لِيَسْتَاْذِنْكُمُ الَّذِيْنَ مَلَكَتْ ع ۷ ۱۴
اَيْمَانُكُمْ وَالَّذِيْنَ لَمْ يَبْلُغُوا الْحُلُمَ مِنْكُمْ ثَلٰثَ مَرّٰتٍ ؕ مِنْ
قَبْلِ صَلٰوةِ الْفَجْرِ وَحِيْنَ تَضَعُوْنَ ثِيَابَكُمْ مِّنَ الظَّهِيْرَةِ
وَمِنْ ۢ بَعْدِ صَلٰوةِ الْعِشَآءِ ۫ ثَلٰثُ عَوْرٰتٍ لَّكُمْ ؕ لَيْسَ عَلَيْكُمْ وَ
لَا عَلَيْهِمْ جُنَاحٌ ۢ بَعْدَهُنَّ ؕ طَوّٰفُوْنَ عَلَيْكُمْ بَعْضُكُمْ عَلٰى
بَعْضٍ ؕ كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَكُمُ الْاٰيٰتِ ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿۵۸﴾

54. (நபியே!)நீர் கூறுவீராக: "அல்லாஹ்வுக்கு நீங்கள் கீழ்ப்படியுங்கள்; (அவனுடைய) தூதருக்கும் நீங்கள் கீழ்ப்படியுங்கள்; நீங்கள் புறக்கணித்தாலோ, அவர் மீதுள்ளதெல்லாம் அவர்மீது சுமத்தப்பட்ட (தூதை உங்களுக்கு எடுத்துரைப்ப)து தான்; உங்கள்மீதுள்ளதெல்லாம் நீங்கள் சுமத்தப்பட்ட(வாறு கீழ்ப்படிவ)துதான்; மேலும், நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் நீங்கள் நேர்வழியை அடைந்து விடுவீர்கள்; (நம் தூதைத்) தெளிவாக எத்திவைப்பதைத் தவிர, (வேறொன்றும் நம்)தூதர்மீது(கடமை)இல்லை.

55. (மனிதர்களே!)உங்களில் விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையவர்களுக்கு_ அவர்களுக்கு முன்னர் சென்றவர்களை அதிபதிகளாக்கிய பிரகாரமே, இவர்களையும் நிச்சயமாகப் பூமிக்கு அதிபதிகளாக்கிவைப்பதாகவும், அவன் அவர்களுக்குப் பொருந்திக்கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக உறுதிப்படுத்திவைப்பதாகவும், அவர்களுடைய பயத்திற்குப்பிறகு அமைதியைக் கொண்டு நிச்சயமாக மாற்றிவிடுவதாகவும் _ அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்; அவர்கள் எனக்கு யாதொன்றையும் இணையாக்காது என்னையே வணங்குவார்கள்; இதன் பின்னர் (உங்களில்) எவர் நிராகரிப்பவராகிவிட்டாரோ நிச்சயமாக, அவர்கள்தாம் (அல்லாஹ்வின் கட்டளையை ஏற்காத)பாவிகள்.

56. இன்னும், (விசுவாசிகளே!) தொழுகையை (முறையாக) நிறைவேற்றுங்கள்; ஜகாத்தையும் கொடுங்கள்; மேலும், (அல்லாஹ்வின்) தூதருக்குக் கீழ்ப்படியுங்கள்; (அவற்றின் மூலம்) நீங்கள் அருள் செய்யப்படுவீர்கள்.

57. (நபியே!) நிராகரிப்போர் பூமியில் தப்பித்துக் கொண்டுவிடுவார்கள் என நிச்சயமாக நீர் எண்ணவேண்டாம்; (மறுமையில்) அவர்கள் ஒதுங்குமிடம் நரகம்தான். திட்டமாக திரும்பிச்செல்லும் இடத்தில் அது மிகவும் கெட்டது.

58. விசுவாசங்கொண்டோரே! உங்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களும்(_அடிமைகளும் ), உங்களில் பிராயமடையாத சிறுவர்களும், (நீங்கள் வீட்டினுள் இருக்கக்கூடிய நேரங்களில் உங்களிடம் வருவதாயின்,)மூன்று நேரங்களில் அவர்கள் அனுமதி கோரவேண்டும்; (அந்நேரங்களாவன;) ஃபஜ்ரு தொழுகைக்கு முன்னரும், உச்சிப்பொழுதில் உங்களுடைய ( மிச்சமான) ஆடைகளைக் களைந்துவைத்திருக்கும் நேரத்திலும், இஷா தொழுகைக்குப் பின்னரும்(இவை) உங்களுக்கு மறைவுடைய மூன்று (நேரங்கள்) ஆகும்; இவற்றுக்குப்பின் (வருவது)உங்கள் மீதோ, அவர்கள் மீதோ குற்றமில்லை. (காரணம்,) இவர்கள் (அடிக்கடி ) உங்களிடம் சுற்றி வருபவர்கள்; உங்களில் சிலர் சிலரிடம்(திரும்பத்திரும்ப வருபவர்களாகவும் இருக்கிறீர்கள்). இவ்வாறு அல்லாஹ் (தன்)வசனங்களை உங்களுக்கு விளக்குகிறான்; இன்னும், அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

وَإِذَا بَلَغَ الْأَطْفَالُ مِنْكُمُ الْحُلُمَ فَلْيَسْتَأْذِنُوا كَمَا
اسْتَأْذَنَ الَّذِينَ مِنْ قَبْلِهِمْ ۚ كَذَٰلِكَ يُبَيِّنُ اللَّهُ لَكُمْ
آيَاتِهِ ۗ وَاللَّهُ عَلِيمٌ حَكِيمٌ ﴿٥٩﴾ وَالْقَوَاعِدُ مِنَ النِّسَاءِ اللَّاتِي
لَا يَرْجُونَ نِكَاحًا فَلَيْسَ عَلَيْهِنَّ جُنَاحٌ أَنْ يَضَعْنَ
ثِيَابَهُنَّ غَيْرَ مُتَبَرِّجَاتٍ بِزِينَةٍ ۖ وَأَنْ يَسْتَعْفِفْنَ
خَيْرٌ لَهُنَّ ۗ وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ ﴿٦٠﴾ لَيْسَ عَلَى الْأَعْمَىٰ
حَرَجٌ وَلَا عَلَى الْأَعْرَجِ حَرَجٌ وَلَا عَلَى الْمَرِيضِ حَرَجٌ
وَلَا عَلَىٰ أَنْفُسِكُمْ أَنْ تَأْكُلُوا مِنْ بُيُوتِكُمْ أَوْ
بُيُوتِ آبَائِكُمْ أَوْ بُيُوتِ أُمَّهَاتِكُمْ أَوْ بُيُوتِ إِخْوَانِكُمْ
أَوْ بُيُوتِ أَخَوَاتِكُمْ أَوْ بُيُوتِ أَعْمَامِكُمْ أَوْ بُيُوتِ عَمَّاتِكُمْ
أَوْ بُيُوتِ أَخْوَالِكُمْ أَوْ بُيُوتِ خَالَاتِكُمْ أَوْ مَا مَلَكْتُمْ
مَفَاتِحَهُ أَوْ صَدِيقِكُمْ ۚ لَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ أَنْ
تَأْكُلُوا جَمِيعًا أَوْ أَشْتَاتًا ۚ فَإِذَا دَخَلْتُمْ بُيُوتًا
فَسَلِّمُوا عَلَىٰ أَنْفُسِكُمْ تَحِيَّةً مِنْ عِنْدِ اللَّهِ مُبَارَكَةً
طَيِّبَةً ۚ كَذَٰلِكَ يُبَيِّنُ اللَّهُ لَكُمُ الْآيَاتِ لَعَلَّكُمْ تَعْقِلُونَ ﴿٦١﴾ ع ۸ ۱۴

59. இன்னும், உங்களிலுள்ள சிறுவர்கள் பிராயமடைந்துவிட்டால், அவர்களுக்கு முன்னுள்ள (மூத்த)வர்கள் அனுமதி கேட்டதுபோன்று அவர்களும் அனுமதி கேட்கவேண்டும்; இவ்வாறே அல்லாஹ் தன்னுடைய வசனங்களை உங்களுக்கு விளக்குகிறான்; மேலும், அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

60. பெண்களில் திருமண விருப்பமற்ற (மாத விலக்கு நின்று குழந்தைகள் பெறும் நிலையைத் தாண்டிவிட்ட,) முதியவர்கள், தங்கள் அழகை வெளிப் படுத்தாதவர்களாக, தங்கள் மேல்ஆடைகளைக் களைந்து விட்டிருப்பதில் அவர்கள்மீது குற்றமில்லை.(இதனையும் தவிர்த்து) அவர்கள் பேணிக்கொள்வது அவர்களுக்கு மிக்க நன்று. அல்லாஹ்வோ (யாவற்றையும்) கேட்கிறவன்; நன்கறிகிறவன்.

61. (விசுவாசிகளே! உங்களுடன் சேர்ந்து உண்ணுவதில்)குருடர் மீதும் குற்றமில்லை; முடவர்மீதும் குற்றமில்லை; நோயாளியின் மீதும் குற்றமில்லை; நீங்கள் உங்கள் வீடுகளிலோ, அல்லது உங்கள் தந்தைகள் வீடுகளிலோ, அல்லது உங்கள் தாய்மார்கள் வீடுகளிலோ, அல்லது உங்கள் சகோதரர்களின் வீடுகளிலோ, அல்லது உங்கள் சகோதரிகளின் வீடுகளிலோ, அல்லது உங்கள் தந்தையுடைய சகோதரர்களின் வீடுகளிலோ , அல்லது உங்கள் தந்தையுடைய சகோதரிகளின் வீடுகளிலோ, அல்லது உங்கள் தாயுடைய சகோதரர்களின் வீடுகளிலோ, அல்லது உங்கள் தாயுடைய சகோதரிகளின் வீடுகளிலோ அல்லது எ(ந்)த(வீட்டி)ன் சாவிகளை நீங்கள் உடமையாக்கிக்கொண்டீர்களோ அவற்றிலோ, அல்லது உங்கள் தோழர்களிடத்திலோ நீங்கள் உண்பது உங்கள் மீது குற்றமில்லை; நீங்கள்(பலர்) ஒன்று சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ உண்பதுஉங்கள் மீது குற்றமில்லை; ஆகவே, நீங்கள் வீடுகளில் நுழைந்தால், அல்லாஹ்விடமிருந்துள்ள பரிசுத்தமான பாக்கியமுள்ள காணிக்கையாக உங்களின்மீது நீங்கள் ஸலாம் சொல்லிக்கொள்ளுங்கள்; நீங்கள் விளங்கிக்கொள்வதற்காக இவ்வாறு அல்லாஹ் (தன்) வசனங்களை உங்களுக்கு விவரிக்கின்றான்.

اِنَّمَا الْمُؤْمِنُوْنَ الَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَاِذَا كَانُوْا
مَعَهٗ عَلٰٓى اَمْرٍ جَامِعٍ لَّمْ يَذْهَبُوْا حَتّٰى يَسْتَاْذِنُوْهُ ؕ اِنَّ
الَّذِيْنَ يَسْتَاْذِنُوْنَكَ اُولٰٓئِكَ الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَرَسُوْلِهٖ ۚ
فَاِذَا اسْتَاْذَنُوْكَ لِبَعْضِ شَاْنِهِمْ فَاْذَنْ لِّمَنْ شِئْتَ مِنْهُمْ
وَاسْتَغْفِرْ لَهُمُ اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۶۲﴾ لَا تَجْعَلُوْا دُعَآءَ
الرَّسُوْلِ بَيْنَكُمْ كَدُعَآءِ بَعْضِكُمْ بَعْضًا ؕ قَدْ يَعْلَمُ اللّٰهُ الَّذِيْنَ
يَتَسَلَّلُوْنَ مِنْكُمْ لِوَاذًا ۚ فَلْيَحْذَرِ الَّذِيْنَ يُخَالِفُوْنَ عَنْ اَمْرِهٖٓ
اَنْ تُصِيْبَهُمْ فِتْنَةٌ اَوْ يُصِيْبَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿۶۳﴾ اَلَآ اِنَّ لِلّٰهِ مَا
فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ قَدْ يَعْلَمُ مَآ اَنْتُمْ عَلَيْهِ ؕ وَيَوْمَ
يُرْجَعُوْنَ اِلَيْهِ فَيُنَبِّئُهُمْ بِمَا عَمِلُوْا ؕ وَاللّٰهُ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ﴿۶۴﴾ ع ۹ ۳ ۱۵

## سُوْرَةُ الْفُرْقَانِ مَكِّيَّةٌ وَّهِيَ سَبْعٌ وَّسَبْعُوْنَ اٰيَةً وَّسِتُّ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

تَبٰرَكَ الَّذِيْ نَزَّلَ الْفُرْقَانَ عَلٰى عَبْدِهٖ لِيَكُوْنَ لِلْعٰلَمِيْنَ نَذِيْرَا ۙ ﴿۱﴾
الَّذِيْ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَلَمْ يَتَّخِذْ وَلَدًا وَّلَمْ يَكُنْ
لَّهٗ شَرِيْكٌ فِي الْمُلْكِ وَخَلَقَ كُلَّ شَيْءٍ فَقَدَّرَهٗ تَقْدِيْرًا ﴿۲﴾

62. உண்மையான விசுவாசிகளெல்லாம், "அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விசுவாசங்கொண்டார்களே அத்தகையோர்தாம்; மேலும், அவர்கள் யாதொரு பொது விஷயத்தைப் பற்றி (ஆலோசனைசெய்ய) அவ(னுடைய தூத)ருடன் இருந்தால், அவரிடம் அனுமதி பெறும் வரை(கூட்டத்திலிருந்து) அவர்கள் போகமாட்டார்கள். நிச்சயமாக உம்மிடம் அனுமதி கோருகின்றனரே அத்தகையோர் _ அவர்கள்தாம் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விசுவாசங் கொண்டவர்கள்; ஆகவே, அவர்கள் தங்களுடைய காரியத்தின் சிலவற்றுக்காக உம்மிடம் அனுமதிகோரினால், அவர்களில் நீர் நாடுபவர்களுக்கு அனுமதி கொடுப்பீராக! அவர்களுக்காக அல்லாஹ்விடத்தில் மன்னிப்பும் கோருவீராக! நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிக்க கிருபையுடையவன்.

63. உங்களுக்கு மத்தியில் சிலர் சிலரை (ப்பெயர்கூறி) அழைப்பது போன்று அல்லாஹ்வின் தூதரின் அழைப்பை ( முஹம்மதே என்று கூறி) ஆக்கிக்கொள்ளாதீர்கள்; நிச்சயமாக உங்களில் (கூட்டத்திலிருந்து )மறைவாக நழுவி விடுகிறார்களே அத்தகையவர்களை, அல்லாஹ் அறிவான்; ஆகவே, (நம் தூத ராகிய) அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களே அத்தகையவர்கள், (உலகில்) தங்களுக்கு யாதொரு துன்பம் பிடித்துவிடுவதையோ அல்லது துன்புறுத்தும் வேதனை பிடித்துவிடுவதையோ பயந்து கொண்டிருக்கவும்.

64. நிச்சயமாக வானங்களிலும், பூமியிலும் இருப்பவை அல்லாஹ்வுக்கே உரியன என்பதை அறிந்துகொள்ளுங்கள்; நீங்கள் எந்நிலையில் இருக்கிறீர்களோ அதை அவன் திட்டமாக அறிவான்; இன்னும், அவன்பக்கமே அவர்கள் மீட்டப்படும் (அந்)நாளில் அவர்கள் செய்தவற்றை அவர்களுக்கு அவன் அறிவிப்பான்; மேலும், அல்லாஹ் ஒவ்வொரு பொருள் பற்றியும் நன்கறிந்தவன்.

---

அத்தியாயம் : 25

## அல்ஃபுர்கான் _ பிரித்தறிவித்தல்

வசனங்கள் : 77 மக்கீ ருகூஃகள் : 6

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. தன் அடியார் (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்) மீது (அசத்தியத்திலிருந்து சத்தியத்தைப் பிரித்தறிவிக்கும்) ஃபுர்கானை _ அதுஅகிலத்தார்க்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியதாக ஆவதற்காக _ இறக்கிவைத்தானே அத்தகையோன் மிக்க பாக்கியமுடையவன்.

2. (இவ்வேதத்தை அருட்செய்தவன்) எத்தகையோனென்றால், வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அவனுக்கே உரியது; அவன் (தனக்கென) மகனை எடுத்துக்கொள்ளவுமில்லை; (அவனுடைய) ஆட்சியில் அவனுக்குக் கூட்டுக் காரரும் இல்லை; அவனே ஒவ்வொரு பொருளையும் படைத்தான்; பிறகு அதனதன் முறைப்படி அதைச் சரியாக அமைத்தான்.

وَاتَّخَذُوْا مِنْ دُوْنِهٖٓ اٰلِهَةً لَّا يَخْلُقُوْنَ شَيْـًٔا وَّهُمْ يُخْلَقُوْنَ
وَلَا يَمْلِكُوْنَ لِاَنْفُسِهِمْ ضَرًّا وَّلَا نَفْعًا وَّلَا يَمْلِكُوْنَ مَوْتًا
وَّلَا حَيٰوةً وَّلَا نُشُوْرًا ﴿۳﴾ وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِنْ هٰذَآ اِلَّآ
اِفْكُ اِۨفْتَرٰىهُ وَاَعَانَهٗ عَلَيْهِ قَوْمٌ اٰخَرُوْنَ ۛۚ فَقَدْ جَآءُوْ
ظُلْمًا وَّزُوْرًا ﴿۴﴾ۚۛ وَقَالُوْٓا اَسَاطِيْرُ الْاَوَّلِيْنَ اكْتَتَبَهَا فَهِيَ
تُمْلٰى عَلَيْهِ بُكْرَةً وَّاَصِيْلًا ﴿۵﴾ قُلْ اَنْزَلَهُ الَّذِيْ يَعْلَمُ السِّرَّ
فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ اِنَّهٗ كَانَ غَفُوْرًا رَّحِيْمًا ﴿۶﴾ وَقَالُوْا
مَالِ هٰذَا الرَّسُوْلِ يَاْكُلُ الطَّعَامَ وَيَمْشِيْ فِي الْاَسْوَاقِ ؕ
لَوْلَآ اُنْزِلَ اِلَيْهِ مَلَكٌ فَيَكُوْنَ مَعَهٗ نَذِيْرًا ﴿۷﴾ۙ اَوْ يُلْقٰٓى
اِلَيْهِ كَنْزٌ اَوْ تَكُوْنُ لَهٗ جَنَّةٌ يَّاْكُلُ مِنْهَا ؕ وَقَالَ الظّٰلِمُوْنَ
اِنْ تَتَّبِعُوْنَ اِلَّا رَجُلًا مَّسْحُوْرًا ﴿۸﴾ اُنْظُرْ كَيْفَ ضَرَبُوْا لَكَ
الْاَمْثَالَ فَضَلُّوْا فَلَا يَسْتَطِيْعُوْنَ سَبِيْلًا ﴿۹﴾ؑ تَبٰرَكَ الَّذِيْٓ
اِنْ شَآءَ جَعَلَ لَكَ خَيْرًا مِّنْ ذٰلِكَ جَنّٰتٍ تَجْرِيْ
مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۙ وَيَجْعَلْ لَّكَ قُصُوْرًا ﴿۱۰﴾ بَلْ كَذَّبُوْا
بِالسَّاعَةِ وَاَعْتَدْنَا لِمَنْ كَذَّبَ بِالسَّاعَةِ سَعِيْرًا ﴿۱۱﴾ۚ

معانقة: عند الـٰـاخرين ۱۲

ع ۱ ۶

3. (ஆனால் இணைவைத்துக்கொண்டிருப்போர்) அவனையன்றி (வேறு வணக்கத்திற்குரிய) தெய்வங்களை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் எதையும் படைக்க (சக்தி பெற) மாட்டார்கள்; அவர்களோ (அல்லாஹ்வினால்) படைக்கப்படுகிறார்கள்; மேலும், அவர்கள் தங்களுக்குத் தீமையையோ, நன்மையையோ செய்து கொள்ள அதிகாரம் (சக்தி) பெறமாட்டார்கள். இன்னும் அவர்கள் (யாரையும்) மரணிக்கச் செய்யவோ, (எதையும்) உயிர்ப்பிக்கவோ, (இறந்ததை உயிர் கொடுத்து) மீண்டும் எழுப்பவோ அதிகாரம் பெறமாட்டார்கள்.

4. இன்னும் (குர்ஆனாகிய) "இது பொய்யே அன்றி (வேறு) இல்லை; இதனை (அபாண்டமாக) அவர் கற்பனைசெய்துகொண்டார்; இதில் வேறு கூட்டத்தினரும் அவருக்கு உதவி புரிந்துள்ளார்கள்" என்று நிராகரிப்பவர்கள் கூறுகிறார்கள். ஆனால் (இவ்வாறு கூறுவதால்) அக்கிரமத்தையும், பொய்யையும் திட்டமாக அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள்.

5. இன்னும், (இது) முன்னோர்களின் கட்டுக்கதைகள்; (மற்றவரின் உதவி கொண்டு) இவற்றை இவரே எழுதச்செய்து கொண்டிருக்கிறார்; அது இவருக்குக் காலையிலும், மாலையிலும் ஓதிக்காண்பிக்கப்படுகிறது என்று (நிராகரிப்பவர்களாகிய) அவர்கள் கூறுகிறார்கள்.

6. (அதற்கு) "வானங்களிலும், பூமியிலுமுள்ள இரகசியத்தை அறிகின்றானே அத்தகையவன் இதனை இறக்கிவைத்தான்; நிச்சயமாக அவன் மிக்க மன்னிக்கிறவனாக, மிக்க கிருபையுடையவனாக இருக்கிறான்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

7. மேலும் அவர்கள் கூறுகின்றனர்: "இந்தத் தூதருக்கென்ன? அவர் (மற்ற மனிதர்களைப் போன்றே) உணவு உண்ணுகிறார்; இன்னும், கடைவீதிகளில் நடக்கிறார். (அல்லாஹ்வுடைய தூதராக அவர் இருந்தால்,) அவர்பால் ஒரு மலக்கு இறக்கிவைக்கப்பட்டிருக்கவேண்டாமா? அப்பொழுது அவர் இவருடனிருந்து அச்சமூட்டி எச்சரிக்கைச்செய்பவராக இருப்பார்.

8. அல்லது அவர்பால் ஒரு புதையல் போடப்பட்டிருக்க வேண்டாமா? அல்லது அவர் அதிலிருந்து புசித்துக்கொள்வாரே அத்தகைய ஒரு சோலை, அவருக்கு உண்டாகி இருக்கவேண்டாமா? (என்றும் கூறுகிறார்கள்). அன்றியும் இந்த அநியாயக்காரர்கள் சூனியம் செய்யப்பட்ட மனிதரையே அன்றி (வேறெவரையும்) நீங்கள் பின்பற்றவில்லை என்று (விசுவாசிகளிடம்) கூறுகிறார்கள்.

9. உம்மைப்பற்றி அவர்கள் எப்படி உதாரணங்களைக் கூறுகின்றார்கள் என்பதை (நபியே! கவனித்து)ப் பார்ப்பீராக; இவர்கள் வழிகெட்டுப் போனார்கள்; ஆதலால் நேர்வழிக்கு (வர) அவர்கள் சக்திபெறமாட்டார்கள்.

10. (நபியே!) மிக்க பாக்கியமுடைய அவன் எத்தகையவனெனின், அவன் நாடினால், இதைவிட மிக்க மேலான சுவனங்களை உமக்கு ஆக்கித்தருவான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; இன்னும் உமக்கு (அதில்) மாளிகைகளையும் அமைத்துவிடுவான்.

11. எனினும், இவர்கள் மறுமை நாளைப் பொய்யாக்குகின்றனர்; மறுமை நாளைப் பொய்யாக்குகிறவனுக்கு (கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும்) நரகத்தை நாம் தயார் செய்தும் வைத்துள்ளோம்.

إِذَا رَأَتْهُمْ مِّنْ مَّكَانٍۭ بَعِيْدٍ سَمِعُوْا لَهَا تَغَيُّظًا وَّزَفِيْرًا ﴿١٢﴾
وَإِذَآ أُلْقُوْا مِنْهَا مَكَانًا ضَيِّقًا مُّقَرَّنِيْنَ دَعَوْا هُنَالِكَ
ثُبُوْرًا ﴿١٣﴾ لَا تَدْعُوا الْيَوْمَ ثُبُوْرًا وَّاحِدًا وَّادْعُوْا ثُبُوْرًا
كَثِيْرًا ﴿١٤﴾ قُلْ أَذٰلِكَ خَيْرٌ أَمْ جَنَّةُ الْخُلْدِ الَّتِيْ وُعِدَ
الْمُتَّقُوْنَ ؕ كَانَتْ لَهُمْ جَزَآءً وَّمَصِيْرًا ﴿١٥﴾ لَهُمْ فِيْهَا مَا يَشَآءُوْنَ
خٰلِدِيْنَ ؕ كَانَ عَلٰى رَبِّكَ وَعْدًا مَّسْـُٔوْلًا ﴿١٦﴾ وَيَوْمَ يَحْشُرُهُمْ
وَمَا يَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ فَيَقُوْلُ ءَأَنْتُمْ أَضْلَلْتُمْ
عِبَادِيْ هٰٓؤُلَآءِ أَمْ هُمْ ضَلُّوا السَّبِيْلَ ؕ ﴿١٧﴾ قَالُوْا سُبْحٰنَكَ
مَا كَانَ يَنْۢبَغِيْ لَنَآ أَنْ نَّتَّخِذَ مِنْ دُوْنِكَ مِنْ أَوْلِيَآءَ وَ
لٰكِنْ مَّتَّعْتَهُمْ وَاٰبَآءَهُمْ حَتّٰى نَسُوا الذِّكْرَ ۚ وَكَانُوْا قَوْمًا
بُوْرًا ﴿١٨﴾ فَقَدْ كَذَّبُوْكُمْ بِمَا تَقُوْلُوْنَ ۙ فَمَا تَسْتَطِيْعُوْنَ صَرْفًا
وَّلَا نَصْرًا ۚ وَمَنْ يَّظْلِمْ مِّنْكُمْ نُذِقْهُ عَذَابًا كَبِيْرًا ﴿١٩﴾
وَمَآ أَرْسَلْنَا قَبْلَكَ مِنَ الْمُرْسَلِيْنَ إِلَّآ إِنَّهُمْ لَيَأْكُلُوْنَ
الطَّعَامَ وَيَمْشُوْنَ فِي الْأَسْوَاقِ ؕ وَجَعَلْنَا بَعْضَكُمْ
لِبَعْضٍ فِتْنَةً ؕ أَتَصْبِرُوْنَ ۚ وَكَانَ رَبُّكَ بَصِيْرًا ﴿٢٠﴾ ع ٢ ١١ ١٧

12. அ(ந்நரகமான)து இவர்களை வெகுதொலைவான இடத்திலிருந்து கண்டால் அதற்குரிய கொந்தளிப்பையும், அது மூச்சுவிடும் பேரிரைச்சலையும் இவர்கள் (தங்கள் செவியால்)கேட்பார்கள்.

13. மேலும், அவர்கள் (சங்கிலியால்) கட்டப்பட்டவர்களாக, அதில் மிக்க நெருக்கடியான ஓர் இடத்தில் போடப்பட்டால் (கஷ்டத்தைத் தாங்க முடியாமல்) அழிவை அங்கு அவர்கள் அழைப்பார்கள்.

14. "இன்றையத் தினம் நீங்கள் ஓர் அழிவை மாத்திரம் அழைக்காதீர்கள்; இன்னும் அநேக அழிவுகளை அழைத்துக் கொள்ளுங்கள்"(என்று அவர்களிடம் கூறப்படும்).

15. "(நரகமாகிய) அது மேலானதா? அல்லது பயபக்தியுடையவர்கள் வாக்களிக்கப்பட்டுள்ளார்களே அத்தகைய நிலையான சுவனபதி மேலானதா?" என்று நீர் கேட்பீராக! அது அவர்களுக்கு (நற்) கூலியாகவும், (அவர்கள்) சேருமிடமாகவும் இருக்கின்றது.

16. அவர்கள் நாடியவைகளெல்லாம் அதில் அவர்களுக்குண்டு; (அதில்) அவர்கள்நிரந்தரமாக(த்தங்கி)இருப்பவர்கள்;(நபியே!) அது உமது இரட்சகனிடம் (மலக்குகளால் பிரார்த்தித்துக்)கேட்கப்படக் கூடிய வாக்குறுதியாக இருக்கிறது.

17. அவர்களையும், அல்லாஹ்வையன்றி அவர்கள் வணங்கிக் கொண்டிருந்த (அல்லாஹ் அல்லாத)வர்களையும் அவன் (விசாரணைக்காக) ஒன்று திரட்டும் (மறுமை) நாளில், "என்னுடைய இந்த அடியார்களை நீங்கள் தாம் வழிகெடுத்தீர்களா? அல்லது அவர்கள் தாமாகவே வழிகெட்டுவிட்டனரா?" என்று (அல்லாஹ்) கேட்பான்.

18. அ(தற்க)வர்கள் "நீ மிகப் பரிசுத்தமானவன்; உன்னையன்றி (மற்றெதனையும்) நாங்கள் எங்களுக்குப் பாதுகாவலர்களாக எடுத்துக் கொள்வது எங்களுக்கு அவசியமன்று; எனினும், நீதான் அவர்களையும், அவர்களின் மூதாதையரையும் (உன்னை) நினைவுகூர்வதை அவர்கள் மறந்துவிடும்வரை சுகமனுபவிக்கச் செய்தாய்; மேலும், அவர்கள் அழிந்து போகும் கூட்டத்தினராகி விட்டார்கள்" என்று கூறுவர்.

19. ஆகவே, நீங்கள் கூறியதை திட்டமாக இவர்கள் பொய்யாக்கிவிட்டனர்; ஆதலால் (நம்முடைய தண்டனையைத்) தடுத்துக் கொள்ளவோ, இன்னும் உதவியைப் பெற்றுக்கொள்ளவோ நீங்கள் சக்திபெறமாட்டீர்கள்; மேலும், உங்களில் எவர் அநியாயம் செய்கிறாரோ அவரை மாபெரும் வேதனையைச் சுவைக்குமாறு நாம் செய்வோம்" (என்று அவர்களுக்கு நாம் கூறுவோம்).

20. மேலும், (நபியே! உமக்கு) முன்னர் (நாம் அனுப்பிய) தூதர்களிலிருந்து நிச்சயமாக அவர்கள் உணவு உண்பவர்களாகவும்,கடைத்தெருவில் நடமாடுபவர்களாகவுமே தவிர நாம் அனுப்பவில்லை; மேலும் உங்களில் சிலரை, (மற்றும்) சிலருக்குச் சோதனையாக ஆக்கிவைத்தோம். (அச்சோதனையில்) நீங்கள் பொறுமையாய் இருப்பீர்களா? (நபியே!) மேலும், உம்முடைய இரட்சகன் (யாவற்றையும்) பார்க்கக்கூடியவனாக இருக்கிறான்.

وَقَالَ الَّذِيْنَ لَا يَرْجُوْنَ لِقَآءَنَا لَوْلَآ اُنْزِلَ عَلَيْنَا
الْمَلٰٓئِكَةُ اَوْ نَرٰى رَبَّنَا ؕ لَقَدِ اسْتَكْبَرُوْا فِيْٓ اَنْفُسِهِمْ وَعَتَوْ عُتُوًّا
كَبِيْرًا ﴿٢١﴾ يَوْمَ يَرَوْنَ الْمَلٰٓئِكَةَ لَا بُشْرٰى يَوْمَئِذٍ لِّلْمُجْرِمِيْنَ وَ
يَقُوْلُوْنَ حِجْرًا مَّحْجُوْرًا ﴿٢٢﴾ وَقَدِمْنَآ اِلٰى مَا عَمِلُوْا مِنْ عَمَلٍ
فَجَعَلْنٰهُ هَبَآءً مَّنْثُوْرًا ﴿٢٣﴾ اَصْحٰبُ الْجَنَّةِ يَوْمَئِذٍ خَيْرٌ مُّسْتَقَرًّا
وَّاَحْسَنُ مَقِيْلًا ﴿٢٤﴾ وَيَوْمَ تَشَقَّقُ السَّمَآءُ بِالْغَمَامِ وَنُزِّلَ الْمَلٰٓئِكَةُ
تَنْزِيْلًا ﴿٢٥﴾ اَلْمُلْكُ يَوْمَئِذِ ۨالْحَقُّ لِلرَّحْمٰنِ ؕ وَكَانَ يَوْمًا عَلَى
الْكٰفِرِيْنَ عَسِيْرًا ﴿٢٦﴾ وَيَوْمَ يَعَضُّ الظَّالِمُ عَلٰى يَدَيْهِ يَقُوْلُ
يٰلَيْتَنِى اتَّخَذْتُ مَعَ الرَّسُوْلِ سَبِيْلًا ﴿٢٧﴾ يٰوَيْلَتٰى لَيْتَنِىْ لَمْ
اَتَّخِذْ فُلَانًا خَلِيْلًا ﴿٢٨﴾ لَقَدْ اَضَلَّنِىْ عَنِ الذِّكْرِ بَعْدَ اِذْ جَآءَنِىْ ؕ
وَكَانَ الشَّيْطٰنُ لِلْاِنْسَانِ خَذُوْلًا ﴿٢٩﴾ وَقَالَ الرَّسُوْلُ يٰرَبِّ
اِنَّ قَوْمِى اتَّخَذُوْا هٰذَا الْقُرْاٰنَ مَهْجُوْرًا ﴿٣٠﴾ وَكَذٰلِكَ جَعَلْنَا لِكُلِّ
نَبِىٍّ عَدُوًّا مِّنَ الْمُجْرِمِيْنَ ؕ وَكَفٰى بِرَبِّكَ هَادِيًا وَّنَصِيْرًا ﴿٣١﴾
وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْا لَوْلَا نُزِّلَ عَلَيْهِ الْقُرْاٰنُ جُمْلَةً
وَّاحِدَةً ۛۚ كَذٰلِكَ ۛۚ لِنُثَبِّتَ بِهٖ فُؤَادَكَ وَرَتَّلْنٰهُ تَرْتِيْلًا ﴿٣٢﴾

مع ٧ عند المتقدمين ١٢

21. மேலும்,(மறுமையில்) நம் சந்திப்பை நம்பாதிருக்கிறார்களே அத்தகையோர், "எங்கள்மீது மலக்குகள் இறக்கப்பட்டிருக்க வேண்டாமா? அல்லது நாங்கள் எங்கள் இரட்சகனை (கண்களால்) காணவேண்டாமா?" என்று கூறுகின்றனர்; இவர்கள் தங்கள் மனங்களில் திட்டமாக தங்களைப் பெரிதாக எண்ணிக் கொண்டனர்; பெரிய அளவு வரம்பு கடந்து(சென்று)ம் விட்டனர்.

22 (அவர்களை மரணிக்கச் செய்ய வரும்) மலக்குகளை அவர்கள் காணும் நாளில், அக் குற்றவாளிகளுக்கு அன்றையத்தினம் யாதொரு நற்செய்தியும் இராது; (உங்களுக்கு நற் செய்தி கூறப்படுவது) முற்றாகத் தடுக்கப்பட்டுவிட்டது என்றும் அவர்கள் கூறுவார்கள்.

23. மேலும், (இம்மையில்) செயலால் அவர்கள் செய்து கொண்டிருந்த வற்றின்பால் நாம் முன்னோக்கி, பின்னர் (அவர்கள் உலகில் விசுவாசம். கொள்ளாததால்) பரத்தப்பட்ட புழுதியாக (பலனற்றதாக) அவைகளை நாம் ஆக்கிவிடுவோம்.

24. அந்நாளில் சுவனவாசிகள் தங்குமிடத்தால் மிகச்சிறந்தவர்களாகவும், ஓய்வுபெறும் இடத்தால் மிக அழகானவர்களாகவும் இருப்பர்.

25. இன்னும், வானம் மேகத்தால் பிளந்து, மலக்குகள் உறுதியாகவே இறக்கிவைக்கப்படும் நாளை_(அவர்களுக்கு எச்சரிக்கை செய்வீராக).

26. அந்நாளில் உண்மையான ஆட்சி அர்ரஹ்மா(ன் ஒருவ)னுக்கே இருக்கும்; மேலும்,நிராகரிப்போருக்கு அது (மிக்க) கடினமான நாளாகவும் இருக்கும்.

27. மேலும், "அத்தூதருடன் நானும் (நேரான) வழியை எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமே!" என்று கூறியவனாக அநியாயக்காரன் தன் இரு கைகளையும் கடித்துக்கொள்ளும் நாளை (அவர்களுக்கு நீர் நினைவுபடுத்துவீராக).

28. "எனக்கு வந்த கேடே! (வழிகேட்டிற்கு அழைத்த) இன்னவனை நான் என்னுடைய சிநேகிதனாக ஆக்கிக் கொள்ளாதிருந்திருக்க வேண்டுமே!" (என்றும்),

29. "நல்லுபதேசத்தை விட்டும் _ அது என்னிடம் வந்ததன் பின்னர் (நல்லுபதேசம் பெறுவதிலிருந்து) அவன் தான் என்னைத்திட்டமாக வழி கெடுத்துவிட்டான்; மேலும்,"ஷைத்தான் மனிதனுக்குப் பெரும் மோசக்காரனாக இருக்கிறான்" (என்றும் பிதற்றுவான்).

30. (நம்முடைய) தூதர், "என் இரட்சகனே! நிச்சயமாக என்னுடைய சமூகத்தார் இந்தக் குர்ஆனை முற்றிலும் புறக்கணிக்கப்பட்டதாக எடுத்துக் கொண்டனர்" என்று கூறுவார்.

31. இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும், குற்றவாளிகளிலிருந்து பகைவரை நாம் ஆக்கினோம். நேர் வழிகாட்டுபவனாகவும், உதவி செய்பவனாகவும் இருக்க (நபியே!) உம் இரட்சகன் (உமக்குப்) போதுமானவன்.

32. மேலும்,(நபியே!) நிராகரித்தோர்," இவர் மீது குர்ஆன் (தவ்றாத், இன்ஜீல், ஜபூர் ஆகிய வேதங்கள் இறக்கப்பட்டது போன்று முழுவதும் )ஒரே தொகுப்பாக இறக்கப்பட்டிருக்க வேண்டாமா?" என்று கூறுகின்றனர்; அப்படித்தான் அதைக் கொண்டு உம் இதயத்தை நாம் உறுதிப்படுத்துவதற்காக; (இறக்கிவைத்தோம்) இன்னும் இதனைப் படிப்படியாக நாம் ஓதிக் காண்பித்(து விளக்கத்தையும் தெளிவு செய்)தோம்.

وَلَا يَأْتُوْنَكَ بِمَثَلٍ اِلَّا جِئْنٰكَ بِالْحَقِّ وَاَحْسَنَ تَفْسِيْرًا ﴿٣٣﴾ اَلَّذِيْنَ
يُحْشَرُوْنَ عَلٰى وُجُوْهِهِمْ اِلٰى جَهَنَّمَ ۙ اُولٰٓئِكَ شَرٌّ مَّكَانًا وَّاَضَلُّ
سَبِيْلًا ﴿٣٤﴾ وَلَقَدْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ وَجَعَلْنَا مَعَهٗٓ اَخَاهُ هٰرُوْنَ ع ٣ ١٤ ١
وَزِيْرًا ﴿٣٥﴾ فَقُلْنَا اذْهَبَآ اِلَى الْقَوْمِ الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا ۭ فَدَمَّرْنٰهُمْ
تَدْمِيْرًا ﴿٣٦﴾ وَقَوْمَ نُوْحٍ لَّمَّا كَذَّبُوا الرُّسُلَ اَغْرَقْنٰهُمْ وَجَعَلْنٰهُمْ لِلنَّاسِ
اٰيَةً ۭ وَاَعْتَدْنَا لِلظّٰلِمِيْنَ عَذَابًا اَلِيْمًا ﴿٣٧﴾ وَّعَادًا وَّثَمُوْدَا۟ وَ
اَصْحٰبَ الرَّسِّ وَقُرُوْنًۢا بَيْنَ ذٰلِكَ كَثِيْرًا ﴿٣٨﴾ وَكُلًّا ضَرَبْنَا لَهُ
الْاَمْثَالَ ۡ وَكُلًّا تَبَّرْنَا تَتْبِيْرًا ﴿٣٩﴾ وَلَقَدْ اَتَوْا عَلَى الْقَرْيَةِ الَّتِيْٓ
اُمْطِرَتْ مَطَرَ السَّوْءِ ۭ اَفَلَمْ يَكُوْنُوْا يَرَوْنَهَا ۚ بَلْ كَانُوْا لَا
يَرْجُوْنَ نُشُوْرًا ﴿٤٠﴾ وَاِذَا رَاَوْكَ اِنْ يَّتَّخِذُوْنَكَ اِلَّا هُزُوًا ۭ اَهٰذَا
الَّذِيْ بَعَثَ اللّٰهُ رَسُوْلًا ﴿٤١﴾ اِنْ كَادَ لَيُضِلُّنَا عَنْ اٰلِهَتِنَا لَوْ
لَآ اَنْ صَبَرْنَا عَلَيْهَا ۭ وَسَوْفَ يَعْلَمُوْنَ حِيْنَ يَرَوْنَ الْعَذَابَ
مَنْ اَضَلُّ سَبِيْلًا ﴿٤٢﴾ اَرَءَيْتَ مَنِ اتَّخَذَ اِلٰهَهٗ هَوٰىهُ ۭ اَفَاَنْتَ
تَكُوْنُ عَلَيْهِ وَكِيْلًا ﴿٤٣﴾ اَمْ تَحْسَبُ اَنَّ اَكْثَرَهُمْ يَسْمَعُوْنَ
اَوْ يَعْقِلُوْنَ ۭ اِنْ هُمْ اِلَّا كَالْاَنْعَامِ بَلْ هُمْ اَضَلُّ سَبِيْلًا ﴿٤٤﴾ ع ٤ ١٥ ٢

33. உம்மிடம் எந்த உதாரணத்தையும் அவர்கள் கொண்டு வருவதில்லை, (அதைவிட) உண்மையானதையும், விளக்கத்தால் மிக அழகானதையும் நாம் உம்மிடம் கொண்டுவந்தே தவிர.

34. தங்களின் முகங்களின் மீது(முகங்குப்புற)நரகத்தின்பால் இழுத்துச் செல்லப்படுவார்களே அத்தகையோர்_அவர்கள் (தங்கும்) இடத்தால் மிகவும் கெட்டவர்கள்; பாதையால் மிகவும் வழி தவறியவர்கள்.

35. மேலும், நிச்சயமாக, மூஸாவுக்கு(த் 'தவ்றாத்' என்னும்) வேதத்தை நாம் கொடுத்தோம்; அவருடன் அவருடைய சகோதரர் ஹாரூனை உதவியாளராகவும் ஆக்கினோம்.

36. ஆகவே நாம்,"நீங்கள் இருவரும் நம்முடைய அத்தாட்சிகளைப் பொய்யாக்கினார்களே அத்தகைய சமூகத்தாரிடம் செல்லுங்கள்" எனக்கூறினோம்; பின்னர், (அவ்விருவரையும் விசுவாசம் கொள்ளாத) அவர்களை நாம் அடியோடு அழித்துவிட்டோம்.

37. இன்னும், (நபி) நூஹ்வுடைய சமூகத்தாரை _ அவர்கள் (நம்)தூதர்களைப் பொய்யாக்கியபோது அவர்களை மூழ்கடித்தோம்;அவர்களை மனிதர்களுக்குஓர் அத்தாட்சியாகவும் ஆக்கினோம்; இன்னும், அநியாயக்காரர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையை நாம் தயாராக்கி வைத்திருக்கிறோம்.

38. ஆ(துக்கூட்டத்)தையும்,ஸமூ(துக்கூட்டத்)தையும்,ரஸ்(கிணறு)வாசிகளையும், இவர்களுக்கிடையில் இன்னும் அநேக தலைமுறையினர்களையும் (நாம் அழித்துவிட்டோம்).

39. ஒவ்வொருவருக்கும் (நாம் தெளிவான சான்றுகளைக் கொடுத்து) அவ(ரவ)ருக்குரிய பல உதாரணங்களையும் கூறினோம்; (அவைகளை ஏற்காது மறுத்துவிட்ட) ஒவ்வொருவரையும் நாம் அடியோடு அழித்துவிட்டோம்.

40. நிச்சயமாக (மக்கத்துக்காஃபிர்களான) இவர்கள், தீய (கல்மாரி) மழை பொழிவிக்கப்பட்டிருந்ததே அத்தகைய ஊருக்கு(ச் சென்று) வந்திருக்கிறார்கள்; அதை அவர்கள் பார்த்திருக்கவில்லையா? எனினும், (மரணத்திற்குப்பின் உயிர் கொடுத்து)எழுப்பப்படுவதை அவர்கள் நம்பாதவர்களாக இருந்தனர்.

41. மேலும், (நபியே!) அவர்கள் உம்மைப்பார்த்துவிட்டால், பரிகாசமாகவே தவிர அவர்கள் உம்மை எடுத்துக் கொள்வதில்லை; "அல்லாஹ்(தன்னுடைய) தூதராக அனுப்பினானே அத்தகையவர்தானா இவர் ?" (என்று கூறுகின்றனர்).

42. (தெய்வங்களாகிய) அவற்றின் மீது நாம் உறுதியாக இல்லாதிருந்தால், நம்முடைய (வணக்கத்திற்குரிய) தெய்வங்களை விட்டும் திருப்பி நம்மை இவர் வழிகெடுக்க சமீபித்து இருப்பார்(என்றும் கூறுகின்றனர்; மறுமையில்) அவர்கள் வேதனையைக் கண்ணால் காணும் நேரத்தில், பாதையால் மிக வழிகெட்டவர்கள் யார் என்பதை நன்கறிந்துகொள்வார்கள்.

43. (நபியே!) தன் மனோ இச்சையைத் தன் (வணக்கத்திற்குரிய) தெய்வமாக எடுத்துக் கொண்டவனை நீர் பார்த்தீரா? நீர் அவனுக்குப் பாதுகாப்பாளராக இருப்பீரா?

44. அல்லது, நிச்சயமாக அவர்களில் பெரும்பாலோர் (உம்முடைய கூற்றை) கேட்கின்றார்கள் என்றோ, அல்லது அதனை விளங்கிக்கொள்கிறார்கள் என்றோ நீர் எண்ணிக் கொண்டீரா? அவர்கள் (ஆடு, மாடு, ஒட்டகங்கள் ஆகிய) கால்நடைகளைப் போன்றவர்களேயன்றி வேறில்லை. அல்ல; (அவற்றை விட) அவர்கள் பாதையால் மிக வழிதவறியவர்கள்.

اَلَمْ تَرَ اِلٰى رَبِّكَ كَيْفَ مَدَّ الظِّلَّ ۚ وَلَوْ شَآءَ لَجَعَلَهٗ سَاكِنًا ۚ ثُمَّ
جَعَلْنَا الشَّمْسَ عَلَيْهِ دَلِيْلًا ۙ ﴿۴۵﴾ ثُمَّ قَبَضْنٰهُ اِلَيْنَا قَبْضًا يَّسِيْرًا ﴿۴۶﴾
وَهُوَ الَّذِيْ جَعَلَ لَكُمُ الَّيْلَ لِبَاسًا وَّالنَّوْمَ سُبَاتًا وَّجَعَلَ
النَّهَارَ نُشُوْرًا ﴿۴۷﴾ وَهُوَ الَّذِيْٓ اَرْسَلَ الرِّيٰحَ بُشْرًۢا بَيْنَ يَدَيْ
رَحْمَتِهٖ ۚ وَاَنْزَلْنَا مِنَ السَّمَآءِ مَآءً طَهُوْرًا ۙ ﴿۴۸﴾ لِّنُحْيِۦَ بِهٖ بَلْدَةً
مَّيْتًا وَّنُسْقِيَهٗ مِمَّا خَلَقْنَآ اَنْعَامًا وَّاَنَاسِيَّ كَثِيْرًا ﴿۴۹﴾ وَلَقَدْ
صَرَّفْنٰهُ بَيْنَهُمْ لِيَذَّكَّرُوْا ۖ فَاَبٰٓى اَكْثَرُ النَّاسِ اِلَّا كُفُوْرًا ﴿۵۰﴾ وَلَوْ
شِئْنَا لَبَعَثْنَا فِيْ كُلِّ قَرْيَةٍ نَّذِيْرًا ۖ ﴿۵۱﴾ فَلَا تُطِعِ الْكٰفِرِيْنَ وَ
جَاهِدْهُمْ بِهٖ جِهَادًا كَبِيْرًا ﴿۵۲﴾ وَهُوَ الَّذِيْ مَرَجَ الْبَحْرَيْنِ هٰذَا
عَذْبٌ فُرَاتٌ وَّهٰذَا مِلْحٌ اُجَاجٌ ۚ وَجَعَلَ بَيْنَهُمَا بَرْزَخًا وَّحِجْرًا
مَّحْجُوْرًا ﴿۵۳﴾ وَهُوَ الَّذِيْ خَلَقَ مِنَ الْمَآءِ بَشَرًا فَجَعَلَهٗ نَسَبًا وَّ
صِهْرًا ۗ وَكَانَ رَبُّكَ قَدِيْرًا ﴿۵۴﴾ وَيَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ
مَا لَا يَنْفَعُهُمْ وَلَا يَضُرُّهُمْ ۗ وَكَانَ الْكَافِرُ عَلٰى رَبِّهٖ
ظَهِيْرًا ﴿۵۵﴾ وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا مُبَشِّرًا وَّنَذِيْرًا ﴿۵۶﴾ قُلْ مَآ اَسْـَٔلُكُمْ
عَلَيْهِ مِنْ اَجْرٍ اِلَّا مَنْ شَآءَ اَنْ يَّتَّخِذَ اِلٰى رَبِّهٖ سَبِيْلًا ﴿۵۷﴾

45. (நபியே!) உம் இரட்சகனின்பக்கம்_ நிழலை அவன் எவ்வாறு நீட்டுகிறான் என்பதை நீர் பார்க்கவில்லையா? அவன் நாடியிருந்தால் அதனை நிலை பெற்றதாகவும் ஆக்கிவிடுவான்; பிறகு சூரியனை (நிழலாகிய) அதற்கு ஆதாரமாக நாம் ஆக்கினோம்.

46. பின்னர், நாம் அதனைச் சிறுகச் சிறுக குறைத்து நம்மளவில் அதைக் கைப்பற்றிக் கொள்கிறோம்.

47. இன்னும், அவன் எத்தகையவனென்றால் உங்களுக்கு இரவை ஆடையாகவும், நித்திரையை இளைப்பாறுதலாகவும் ஆக்கினான்; பகலை (நீங்கள் தூக்கத்திலிருந்து) மீண்டெழு(ந்து வாழ்க்கைக்குரியவற்றை பூமியின் பல பாகங்களிலும் தேடிக் கொள்)வதற்காகவும் ஆக்கினான்.

48. மேலும், அவன் எத்தகையவனென்றால், (மழை எனும்) தன் அருளுக்கு முன்னதாகக் (குளிர்ந்த) காற்றுகளை நன்மாராயமாக அனுப்பிவைக்கின்றான்; (மனிதர்களே!) நாம் தாம் வானத்திலிருந்து பரிசுத்தமான நீரை இறக்கியும் வைக்கிறோம்.

49. அதனைக் கொண்டு இறந்த பூமியை நாம் உயிர்ப்பிப்பதற்காகவும், நாம் படைத்தவற்றில் (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) கால்நடைகளுக்கும், அநேக மனிதர்களுக்கும் அதனைப் புகட்டுவதற்காகவும் (நீரை இறக்கிவைக்கிறோம்).

50. திட்டமாக நாம் (நம் அருட்கொடைகளை) அவர்கள் நினைவு கூர்வதற்காக (மழையான) அதை அவர்களுக்கிடையில் (தேவைக்குத்தக்க)பங்கீடு செய்தோம். (ஆனால்) மனிதர்களில் அதிகமானவர்கள் நிராகரிப்பைத்தவிர (வேறு எதையும்) ஏற்பதில்லை.

51. மேலும், நாம் நாடியிருந்தால் ஒவ்வொரு ஊரிலும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியவரை, திட்டமாக நாம் அனுப்பியிருப்போம்.

52. ஆகவே, நீர் நிராகரிப்போருக்கு (நபியே!) கீழ்ப்படியாதீர்; அன்றி (குர்ஆனாகிய) இதனை (சான்றாக)க் கொண்டு, நீர் அவர்களுடன் பலமாகப் போராடுவீராக.

53. இன்னும் அவன் எத்தகையவனென்றால், இரு கடல்களையும் அவன் ஒன்று சேர்த்திருக்கின்றான்; (அதில் ஒன்றான) இது மிக்க மதுரமானது, தாகம் தீர்க்கக் கூடியது; (அதில் மற்றொன்றான) இது உப்புக்கரிப்பானது, கசப்பானது; இவ்விரண்டிற்கிடையில் (அவை ஒன்றோடொன்று கலந்திடாமல்) திரையையும், மீறமுடியாத ஒரு தடையையும் அவன் ஆக்கியிருக்கின்றான்.

54. இன்னும் அவன் எத்தகையவனென்றால், மனிதனை(ஒரு துளி) நீரிலிருந்து படைத்தான். பின்னர் அவனுக்கு வம்சாவழியையும், (அதன் மூலம் ஏற்படும் உறவையும், திருமணம் மூலம் ஏற்படும்) சம்பந்தத்தையும் ஆக்கினான்; மேலும், (நபியே!) உம் இரட்சகன் (எவ்வாறும் செய்ய) ஆற்றலுடையோனாக இருக்கின்றான்.

55. மேலும், அல்லாஹ்வையன்றி தங்களுக்கு பலன்தராதவற்றையும், தங்களுக்கு இடர் செய்யாதவற்றையும் இணைவைப்பவர்களான அவர்கள் வணங்குகின்றனர்; நிராகரிப்பவன் தன் இறைவனுக்கு விரோதமாக (ஷைத்தானுக்கு) உதவுபவனாக இருக்கின்றான்.

56. மேலும், நன்மாராயங்கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமே தவிர (நபியே!) உம்மை நாம் அனுப்பவில்லை.

57. இதன்மீது எந்தக் கூலியையும் உங்களிடம் நான் கேட்கவில்லை; தன் இரட்சகனின் பக்கம்(செல்லும்)வழியை எடுத்துக்கொள்ள நாடுகிறவரைத்தவிர; (மற்ற யாவரும் நஷ்டத்தில் உள்ளனர்) என்று (நபியே!) நீர் கூறுவீராக!

وَتَوَكَّلْ عَلَى الْحَيِّ الَّذِيْ لَا يَمُوْتُ وَسَبِّحْ بِحَمْدِهٖ ؕ وَكَفٰى بِهٖ
بِذُنُوْبِ عِبَادِهٖ خَبِيْرًا ۝٥٨ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا
بَيْنَهُمَا فِيْ سِتَّةِ اَيَّامٍ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ ۚ اَلرَّحْمٰنُ فَسْئَلْ
بِهٖ خَبِيْرًا ۝٥٩ وَاِذَا قِيْلَ لَهُمُ اسْجُدُوْا لِلرَّحْمٰنِ ۚ قَالُوْا وَمَا
الرَّحْمٰنُ ۗ اَنَسْجُدُ لِمَا تَاْمُرُنَا وَزَادَهُمْ نُفُوْرًا ۝٦٠ تَبٰرَكَ الَّذِيْ
جَعَلَ فِي السَّمَآءِ بُرُوْجًا وَّجَعَلَ فِيْهَا سِرٰجًا وَّقَمَرًا مُّنِيْرًا ۝٦١
وَهُوَ الَّذِيْ جَعَلَ الَّيْلَ وَالنَّهَارَ خِلْفَةً لِّمَنْ اَرَادَ اَنْ يَّذَّكَّرَ
اَوْ اَرَادَ شُكُوْرًا ۝٦٢ وَعِبَادُ الرَّحْمٰنِ الَّذِيْنَ يَمْشُوْنَ عَلَى الْاَرْضِ
هَوْنًا وَّاِذَا خَاطَبَهُمُ الْجٰهِلُوْنَ قَالُوْا سَلٰمًا ۝٦٣ وَالَّذِيْنَ يَبِيْتُوْنَ
لِرَبِّهِمْ سُجَّدًا وَّقِيَامًا ۝٦٤ وَالَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَا اصْرِفْ عَنَّا
عَذَابَ جَهَنَّمَ ۖ اِنَّ عَذَابَهَا كَانَ غَرَامًا ۝٦٥ اِنَّهَا سَآءَتْ
مُسْتَقَرًّا وَّمُقَامًا ۝٦٦ وَالَّذِيْنَ اِذَآ اَنْفَقُوْا لَمْ يُسْرِفُوْا وَلَمْ
يَقْتُرُوْا وَكَانَ بَيْنَ ذٰلِكَ قَوَامًا ۝٦٧ وَالَّذِيْنَ لَا يَدْعُوْنَ
مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ وَلَا يَقْتُلُوْنَ النَّفْسَ الَّتِيْ حَرَّمَ اللّٰهُ اِلَّا
بِالْحَقِّ وَلَا يَزْنُوْنَ ۚ وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ يَلْقَ اَثَامًا ۝٦٨

مع عند المتقدمین ٥ ع السجدة ٣

58. இறந்து விடமாட்டானே அத்தகைய உயிருள்ளவனின் மீது (உமது காரியங்களை ஒப்படைத்து அவன் மீது முழு) நம்பிக்கையும் வைப்பீராக! இன்னும், அவனின் புகழைக் கொண்டு (அவனைத்) துதி செய்வீராக! இன்னும் அவன் தன் அடியார்களின் பாவங்களை நன்குணர்ந்திருப்பவனாவதில் போதுமானவன்.

59. அவன் எத்தகையவனென்றால், வானங்களையும், பூமியையும், இவையிரண்டுக் கிடையிலுள்ளவைகளையும் ஆறு நாட்களில் அவன் படைத்தான்; பின்னர் (தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீதிருப்பது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அவன் அர்ஷின் மீது உயர்ந்து (நிலைபெற்று) விட்டான். அவன்தான் (பேரருளாளனாகிய) அர்ரஹ்மான்; அவனைப் பற்றி நன்கு தெரிந்தவரைக் கேட்பீராக!

60. (ஆகவே மிகக்கிருபையுடையவனாகிய) அர்ரஹ்மானுக்கு சிரம்பணியுங்கள் என அவர்களுக்குக் கூறப்பட்டால், அர்ரஹ்மான் யார்? நீர் கட்டளையிடுபவனுக்கு நாங்கள் சிரம்பணிவோமா? என்று கேட்கின்றனர்; (அர்ரஹ்மானுக்கு சிரம்பணியுங்கள் என கூறப்பட்டதாகிய) அது அவர்களுக்கு (மார்க்கத்தின் மீது) வெறுப்பையே அதிகமாக்கியது.

61. வானத்தில் (கோளங்கள் சுழன்று வர) பெரும் தங்குமிடங்களை ஆக்கி, அதில் ஒரு விளக்கை (ப்போன்று சூரியனை)யும், பிரகாசிக்கக்கூடிய சந்திரனையும் அமைத்தானே அத்தகையவன் (அந்த ரஹ்மான் மிக்க) பாக்கியமுடையவன்.

62. இன்னும் அவன் எத்தகையவனென்றால், (அவனது பேராற்றலை) நினைவுகூர நாடியவர்களுக்கு, அல்லது (அவனுக்கு) நன்றி செலுத்த நாடியவர்களுக்கு இரவையும், பகலையும் ஒன்றன் பின் ஒன்றாக (மாறி மாறி) வருமாறு ஆக்கினான்.

63. இன்னும், அர்ரஹ்மானுடைய அடியார்கள் எத்தகையோரெனில், அவர்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள்; மூடர்கள் அவர்களுடன் (வேண்டாதவற்றைப்) பேசமுற்பட்டால், "ஸலாமுன்" (சாந்தி உண்டாகட்டும்) என்று கூறி (அவர்களைவிட்டு விலகி) விடுவார்கள்.

64. இன்னும், அவர்கள் எத்தகையோரெனில், தங்கள் இரட்சகனை, சிரம்பணிந்தவர்களாக (ஸஜ்தா செய்தவர்களாக)வும், நின்றவர்களாகவும் (அல்லாஹ்வின் வழிபாட்டில்) இரவைக் கழிப்பார்கள்.

65. இன்னும், அவர்கள் எத்தகையோரெனில், "எங்கள் இரட்சகனே! நரகத்தின் வேதனையை எங்களைவிட்டும் நீ திருப்பிவிடுவாயாக! (ஏனென்றால்,) நிச்சயமாக அதன் வேதனை நிலையானதாகும்," என்று (பிரார்த்தனைசெய்து) கூறுவார்கள்.

66. "நிச்சயமாக அது நிலையாகத் தங்குமிடத்தாலும், சிறிது நேரம் தங்குமிடத்தாலும் மிகக்கெட்டது.

67. இன்னும், அவர்கள் எத்தகையோரெனில், அவர்கள் செலவு செய்தால், வீண் விரயம் செய்யமாட்டார்கள்; (ஒரேயடியாக) சுருக்கிக்கொள்ளவும் மாட்டார்கள்; அ(வ்வாறு செலவு செய்வதான)து அவ்விரண்டு நிலைகளுக்கும் மத்தியிலிருக்கும்.

68. இன்னும் அவர்கள் எத்தகையோரெனில், அல்லாஹ்வுடன் வேறொரு நாயனை (வணக்கத்திற்குரியவனாக பிரார்த்தித்து) அழைக்கமாட்டார்கள்; அல்லாஹ் தடுத்திருக்கும் எந்த உயிரையும் அவர்கள் உரிமையின்றி கொலை செய்து விடவுமாட்டார்கள்; அவர்கள் விபச்சாரமும் செய்யமாட்டார்கள்; எவரேனும் இவைகளைச் செய்யமுற்பட்டால், அவர் (அதற்குரிய) தண்டனையைச் சந்திப்பார்.

يُضٰعَفْ لَهُ الْعَذَابُ يَوْمَ الْقِيٰمَةِ وَيَخْلُدْ فِيْهٖ مُهَانًا ﴿٦٩﴾ اِلَّا مَنْ
تَابَ وَاٰمَنَ وَعَمِلَ عَمَلًا صَالِحًا فَاُولٰٓئِكَ يُبَدِّلُ اللّٰهُ سَيِّاٰتِهِمْ
حَسَنٰتٍ ۗ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا ﴿٧٠﴾ وَمَنْ تَابَ وَعَمِلَ صَالِحًا
فَاِنَّهٗ يَتُوْبُ اِلَى اللّٰهِ مَتَابًا ﴿٧١﴾ وَالَّذِيْنَ لَا يَشْهَدُوْنَ الزُّوْرَ ۙ وَ
اِذَا مَرُّوْا بِاللَّغْوِ مَرُّوْا كِرَامًا ﴿٧٢﴾ وَالَّذِيْنَ اِذَا ذُكِّرُوْا بِاٰيٰتِ رَبِّهِمْ لَمْ
يَخِرُّوْا عَلَيْهَا صُمًّا وَّعُمْيَانًا ﴿٧٣﴾ وَالَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَا هَبْ لَنَا
مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا ﴿٧٤﴾
اُولٰٓئِكَ يُجْزَوْنَ الْغُرْفَةَ بِمَا صَبَرُوْا وَيُلَقَّوْنَ فِيْهَا تَحِيَّةً وَّسَلٰمًا ۙ ﴿٧٥﴾
خٰلِدِيْنَ فِيْهَا ۗ حَسُنَتْ مُسْتَقَرًّا وَّمُقَامًا ﴿٧٦﴾ قُلْ مَا يَعْبَؤُا بِكُمْ
رَبِّيْ لَوْلَا دُعَآؤُكُمْ ۚ فَقَدْ كَذَّبْتُمْ فَسَوْفَ يَكُوْنُ لِزَامًا ﴿٧٧﴾ ع ٦ / ٦

سُوْرَةُ الشُّعَرَآءِ مَكِّيَّةٌ وَهِيَ مِائَتَانِ وَسَبْعٌ وَّعِشْرُوْنَ اٰيَةً وَّاَحَدَ عَشَرَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

طٰسٓمّٓ ﴿١﴾ تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ الْمُبِيْنِ ﴿٢﴾ لَعَلَّكَ بَاخِعٌ
نَّفْسَكَ اَلَّا يَكُوْنُوْا مُؤْمِنِيْنَ ﴿٣﴾ اِنْ نَّشَاْ نُنَزِّلْ عَلَيْهِمْ
مِّنَ السَّمَآءِ اٰيَةً فَظَلَّتْ اَعْنَاقُهُمْ لَهَا خٰضِعِيْنَ ﴿٤﴾

المنزل ٥

69. மறுமை நாளில் அவருக்கு வேதனை இரட்டிப்பாக்கப்படும்; மேலும், இழிவுபடுத்தப்பட்டவராக அதில் என்றென்றும் தங்கிவிடுவார்.

70. (இப்பாவங்களிலிருந்து)எவர் தவ்பாச்செய்து, விசுவாசமும் கொண்டு நற்செயலும் செய்தாரோ அவரைத்தவிர; எனவே அத்தகையோர் – அவர்களுடைய தீமைகளை நன்மைகளாக அல்லாஹ் மாற்றிவிடுவான்; மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையவனாக இருக்கிறான்.

71. இன்னும், எவர் தவ்பாச்செய்து, நற்கருமங்களையும் செய்கின்றாரோ அவர், நிச்சயமாக முற்றிலும் அல்லாஹ்வின்பாலே திரும்பிவிடுகின்றார்.

72. இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால், பொய்சாட்சி சொல்ல மாட்டார்கள்; (ஒருகால்) வீணான காரிய(ம் நடக்கும் இட)த்தின் பக்கம் அவர்கள் சென்றுவிட்டால், கண்ணியமானவர்களாக (அதனைவிட்டும் ஒதுங்கிச்) சென்றுவிடுவார்கள்.

73. இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் இரட்சகனின் வசனங்களைக் கொண்டு உபதேசிக்கப்பட்டால் செவிடர்களாகவும், குருடர்களாகவும் அதன் மீது விழமாட்டார்கள் (அதனை நன்குணர்ந்து அதன்படி நடப்பார்கள்).

74. மேலும், அவர்கள் எத்தகையோரென்றால் "எங்கள் இரட்சகனே! எங்கள் மனைவியர்களிடமிருந்தும், எங்கள் சந்ததிகளிலிருந்தும் எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியைத் தந்தருள்வாயாக! அன்றியும், பயபக்தியுடையவர்களுக்கு எங்களை (நல்வழியில் நின்று அதன்பால் அழைக்கும்)வழிகாட்டியாகவும் நீ ஆக்குவாயாக" என்று (பிரார்த்தித்துக்) கூறுவார்கள்.

75. அத்தகையோர் – அவர்கள் கஷ்டங்களைப்பொறுத்துக் கொண்டதன் காரணமாக, உயர்ந்த மாளிகையை (மறுமையில்) அவர்கள் கூலியாகக் கொடுக்கப்படுவார்கள். காணிக்கையாலும், சாந்தியாலும் அதில் வரவேற்கப்படுவார்கள்.

76. அதில் (அவர்கள்) நிரந்தரமாக(த் தங்கி)இருப்பவர்கள்; நிலையாகத் தங்குமிடத்தாலும், சிறிதுநேரம் தங்குமிடத்தாலும் அது அழகானதாகிவிட்டது.

77. (நபியே!) நீர் கூறுவீராக: "நீங்கள் (அல்லாஹ்வை) அழை(த்துப்பிரார்த்தி)ப்பது (மட்டும்)இல்லையெனில், என்னுடைய இரட்சகன் உங்களை பொருட்படுத்தியிருக்க மாட்டான்; ஏனெனில், நீங்கள் (அவனுடைய வசனங்களைப்) பொய்ப்படுத்திவிட்டீர்கள்; எனவே அ(தற்குரிய தண்டனையான)து கட்டாயமாக உங்களுக்கு உண்டாகும்.

---

அத்தியாயம் : 26

## அஷ்ஷுஅரா – கவிஞர்கள்

வசனங்கள் : 227 மக்கீ ருகூஃகள் : 11

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. தா ஸீம் மீம்.

2. இவை, தெளிவான வேதத்தின் வசனங்களாகும்.

3. (நபியே! உம்மை) விசுவாசங் கொள்பவர்களாக அவர்கள் இல்லாததன் காரணமாக(த் துக்கத்தால்) உம்மை நீரே மாய்த்துக்கொள்வீர் போலும்!

4. நாம் நாடினால் வானத்திலிருந்து ஓர் அத்தாட்சியை அவர்கள் மீது இறக்கியிருப்போம்; (அப்போது) அவர்களுடைய கழுத்துகள் அதற்கு(க்குனிந்து) பணிந்தவையாக ஆகிவிடும்.

وَمَا يَأْتِيْهِمْ مِّنْ ذِكْرٍ مِّنَ الرَّحْمٰنِ مُحْدَثٍ اِلَّا كَانُوْا عَنْهُ
مُعْرِضِيْنَ ﴿٥﴾ فَقَدْ كَذَّبُوْا فَسَيَاْتِيْهِمْ اَنْۢبٰٓؤُا مَا كَانُوْا بِهٖ
يَسْتَهْزِءُوْنَ ﴿٦﴾ اَوَلَمْ يَرَوْا اِلَى الْاَرْضِ كَمْ اَنْۢبَتْنَا فِيْهَا مِنْ كُلِّ
زَوْجٍ كَرِيْمٍ ﴿٧﴾ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً ؕ وَمَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِيْنَ ﴿٨﴾
وَاِنَّ رَبَّكَ لَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿٩﴾ وَاِذْ نَادٰى رَبُّكَ مُوْسٰٓى اَنِ ع ١ ٥
ائْتِ الْقَوْمَ الظّٰلِمِيْنَ ﴿١٠﴾ قَوْمَ فِرْعَوْنَ ؕ اَلَا يَتَّقُوْنَ ﴿١١﴾ قَالَ رَبِّ
اِنِّيْٓ اَخَافُ اَنْ يُّكَذِّبُوْنِ ﴿١٢﴾ وَيَضِيْقُ صَدْرِيْ وَلَا يَنْطَلِقُ لِسَانِيْ
فَاَرْسِلْ اِلٰى هٰرُوْنَ ﴿١٣﴾ وَلَهُمْ عَلَيَّ ذَنْۢبٌ فَاَخَافُ اَنْ يَّقْتُلُوْنِ ﴿١٤﴾
قَالَ كَلَّا ۚ فَاذْهَبَا بِاٰيٰتِنَآ اِنَّا مَعَكُمْ مُّسْتَمِعُوْنَ ﴿١٥﴾ فَاْتِيَا فِرْعَوْنَ
فَقُوْلَآ اِنَّا رَسُوْلُ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿١٦﴾ اَنْ اَرْسِلْ مَعَنَا بَنِيْٓ اِسْرَآءِيْلَ ﴿١٧﴾
قَالَ اَلَمْ نُرَبِّكَ فِيْنَا وَلِيْدًا وَّلَبِثْتَ فِيْنَا مِنْ عُمُرِكَ سِنِيْنَ ﴿١٨﴾
وَفَعَلْتَ فَعْلَتَكَ الَّتِيْ فَعَلْتَ وَاَنْتَ مِنَ الْكٰفِرِيْنَ ﴿١٩﴾ قَالَ فَعَلْتُهَآ
اِذًا وَّاَنَا مِنَ الضَّآلِّيْنَ ﴿٢٠﴾ فَفَرَرْتُ مِنْكُمْ لَمَّا خِفْتُكُمْ فَوَهَبَ لِيْ
رَبِّيْ حُكْمًا وَّجَعَلَنِيْ مِنَ الْمُرْسَلِيْنَ ﴿٢١﴾ وَتِلْكَ نِعْمَةٌ تَمُنُّهَا عَلَيَّ
اَنْ عَبَّدْتَّ بَنِيْٓ اِسْرَآءِيْلَ ﴿٢٢﴾ قَالَ فِرْعَوْنُ وَمَا رَبُّ الْعٰلَمِيْنَ ﴿٢٣﴾

5. அர்ரஹ்மானிடமிருந்து புதிதான யாதொரு (நல்)உபதேசமும் _ அதனை அவர்கள் (நிராகரித்துப்) புறக்கணிக்கிறவர்களாக இருந்தே தவிர_ அவர்களிடம் வருவதில்லை.
6. (ஆகவே, வேதமாகிய இதனையும்) அவர்கள் திட்டமாகப் பொய்யாக்கினார்கள்; ஆகவே, அவர்கள் எதனைப் பரிகசித்துக் கொண்டிருந்தார்களோ அதன் (உண்மைச்) செய்திகள் அவர்களிடம் வந்துவிடும்.
7. பூமியின் பால் அவர்கள் பார்க்கவில்லையா? (அதில்) மேலான ஒவ்வொரு வகையிலிருந்தும் (பயன்தரக்கூடிய) எவ்வளவோ (புற்பூண்டுகளை ஜதை ஜதையாகவே) நாம் முளைப்பித்திருக்கின்றோம்.
8. நிச்சயமாக இதில் அத்தாட்சி இருக்கின்றது;(எனினும்) அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங்கொள்வோராக இருக்கவுமில்லை.
9. மேலும், (நபியே!) உம்முடைய இரட்சகன் _ அவனே நிச்சயமாக (யாவரையும்) மிகைத்தோன்; மிகக் கிருபையுடையோன்.
10. இன்னும், (நபியே! ) உம்முடைய இரட்சகன், " நீர் அநியாயக்கார சமூகத்தாரிடம் செல்வீராக!" என (க்கட்டளையிட்டு) மூஸாவை அழைத்ததை (நீர் நினைவு கூர்வீராக).
11. ஃபிர் அவ்னுடைய சமூகத்தாரிடம்(செல்வீராக!) அவர்கள் (அல்லாஹ்வுக்கு) பயப்பட மாட்டார்களா?
12. அ(தற்க)வர் " என் இரட்சகனே ! அவர்கள் என்னைப் பொய்ப்படுத்தி விடுவார்கள் என்று நிச்சயமாக நான் பயப்படுகிறேன்" என்றுகூறினார்.
13. "(அவ்வாறு பொய்ப்படுத்தினால்) என் மனம் நெருக்கடிக்குள்ளாகியும்விடும்; என் நாவும் (சரியாக) பேசாது; ஆதலால் (எனக்கு வஹீஅனுப்பியது போன்று) ஹாரூனுக்கு (வஹீ ) அனுப்புவாயாக!
14. " மேலும், அவர்களுக்கு என்மீது ஒரு (கொலைக்)குற்றச்சாட்டுதலும் உண்டு; அதற்காக அவர்கள் என்னைக் கொன்று விடுவார்கள் என்றும் நான் பயப்படுகிறேன்" (என்று கூறினார்).
15. (அதற்கு) "அவ்வாறன்று, நீங்களிருவரும் நம்முடைய அத்தாட்சிகளை (எடுத்து)க் கொண்டு செல்லுங்கள்; நிச்சயமாக நாம் உங்களுடன் (யாவற்றையும்) செவியேற்கக்கூடியவர்களாக இருப்போம்என்று (அல்லாஹ்வாகிய)அவன் கூறினான்.
16. ஆகவே, நீங்களிருவரும் ஃபிர்அவ்னிடம் சென்று, நிச்சயமாக நாங்கள் அகிலத்தாரின் இரட்சகனாகிய தூதராவோம் என்று நீங்களிருவரும் கூறுங்கள்.(அதன் காரணமாக)
17. "இஸ்ராயீலின் மக்களை நீ எங்களுடன் அனுப்பிவிடு" (என்றும் கூறுங்கள்).
18. (அவ்வாறே ஃபிர் அவ்னிடம் சென்று அவ்விருவரும் கூறவே,) அதற்கவன் (மூஸாவிடம்), " குழந்தையாக உம்மை (எடுத்து) எங்களுக்கு மத்தியில் நாங்கள் வளர்க்கவில்லையா? நீர் உம் வயதில் அநேக ஆண்டுகள் நம்மிடத்தில் தங்கியும் இருந்தீர்" என்று அவன் கூறினான்.
19. "நீர் செய்த (கொலைச்) செயலையும் செய்தீர்! மேலும், நீர் நன்றிமறந்தவர்களில் உள்ளவராகவும் இருக்கின்றீர்"(என்றும் ஃபிர்அவ்ன் கூறினான்).
20. அதற்கு; " நான் அந்நேரத்தில் அறியாதவர்களில் (ஒருவனாக) இருந்த நிலையில் அதனை நான் செய்தேன்" என்று(மூஸாவாகிய)அவர் கூறினார்.
21. "ஆதலால் நான் உங்களுக்கு பயந்தபொழுது உங்களை விட்டு வெருண்டோடிவிட்டேன்; பிறகு என்னுடைய இரட்சகன் எனக்கு அறிவையும் கொடுத்துத் (தன்னுடைய) தூதர்களில் உள்ளவனாகவும் என்னை ஆக்கினான்."
22. "மேலும், (குழந்தைப்பருவத்தில் என்னை நீ வளர்த்துப்பரிபாலித்த)அது, (என் இனத்தாராகிய) இஸ்ராயீலின் மக்களை நீ அடிமையாக வைத்துக் கொண்டிருக்கும் நிலைமையில்,(என்னையும் அடிமையாக்காது) நீ எனக்குசொல்லிக் காண்பிக்கக்கூடிய ஓர் அருட்கொடையே ஆகும்"(என்று கூறினார்).
23. (அதற்கு) ஃபிர்அவ்ன் "அகிலத்தாரின் இரட்சகன் என்றால் என்ன?" என்று கேட்டான்.

قَالَ رَبُّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَيْنَهُمَا ؕ اِنْ كُنْتُمْ مُّوْقِنِيْنَ ﴿٢٤﴾
قَالَ لِمَنْ حَوْلَهٗۤ اَلَا تَسْتَمِعُوْنَ ﴿٢٥﴾ قَالَ رَبُّكُمْ وَرَبُّ اٰبَآئِكُمُ
الْاَوَّلِيْنَ ﴿٢٦﴾ قَالَ اِنَّ رَسُوْلَكُمُ الَّذِيْۤ اُرْسِلَ اِلَيْكُمْ لَمَجْنُوْنٌ ﴿٢٧﴾
قَالَ رَبُّ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ وَمَا بَيْنَهُمَا ؕ اِنْ كُنْتُمْ تَعْقِلُوْنَ ﴿٢٨﴾
قَالَ لَئِنِ اتَّخَذْتَ اِلٰهًا غَيْرِيْ لَاَجْعَلَنَّكَ مِنَ الْمَسْجُوْنِيْنَ ﴿٢٩﴾
قَالَ اَوَلَوْ جِئْتُكَ بِشَيْءٍ مُّبِيْنٍ ﴿٣٠﴾ قَالَ فَاْتِ بِهٖۤ اِنْ كُنْتَ مِنَ
الصّٰدِقِيْنَ ﴿٣١﴾ فَاَلْقٰى عَصَاهُ فَاِذَا هِيَ ثُعْبَانٌ مُّبِيْنٌ ﴿٣٢﴾ۚۖ وَّنَزَعَ يَدَهٗ
فَاِذَا هِيَ بَيْضَآءُ لِلنّٰظِرِيْنَ ﴿٣٣﴾ قَالَ لِلْمَلَاِ حَوْلَهٗۤ اِنَّ هٰذَا لَسٰحِرٌ ع ٢
عَلِيْمٌ ﴿٣٤﴾ يُّرِيْدُ اَنْ يُّخْرِجَكُمْ مِّنْ اَرْضِكُمْ بِسِحْرِهٖ ۖۗ فَمَاذَا تَاْمُرُوْنَ ﴿٣٥﴾
قَالُوْۤا اَرْجِهْ وَاَخَاهُ وَابْعَثْ فِي الْمَدَآئِنِ حٰشِرِيْنَ ﴿٣٦﴾ لا يَاْتُوْكَ بِكُلِّ
سَحَّارٍ عَلِيْمٍ ﴿٣٧﴾ فَجُمِعَ السَّحَرَةُ لِمِيْقَاتِ يَوْمٍ مَّعْلُوْمٍ ﴿٣٨﴾ لا وَّقِيْلَ
لِلنَّاسِ هَلْ اَنْتُمْ مُّجْتَمِعُوْنَ ﴿٣٩﴾ لا لَعَلَّنَا نَتَّبِعُ السَّحَرَةَ اِنْ
كَانُوْا هُمُ الْغٰلِبِيْنَ ﴿٤٠﴾ فَلَمَّا جَآءَ السَّحَرَةُ قَالُوْا لِفِرْعَوْنَ اَئِنَّ
لَنَا لَاَجْرًا اِنْ كُنَّا نَحْنُ الْغٰلِبِيْنَ ﴿٤١﴾ قَالَ نَعَمْ وَاِنَّكُمْ اِذًا لَّمِنَ
الْمُقَرَّبِيْنَ ﴿٤٢﴾ قَالَ لَهُمْ مُّوْسٰۤى اَلْقُوْا مَاۤ اَنْتُمْ مُّلْقُوْنَ ﴿٤٣﴾

24. (அதற்கு) "நீங்கள் உறுதிகொண்டவர்களாக இருப்பின், வானங்கள் மற்றும் பூமி, அவை இரண்டிற்கும் மத்தியிலுள்ளவை ஆகியவற்றின் இரட்சகன்" என்று (மூஸா) கூறினார்.

25. அ(தற்க)வன், "தன்னைச் சூழ இருந்தவர்களிடம், நீங்கள் (இவர் கூற்றைச்) செவிமடுக்கிறீர்கள் அல்லவா?" என்று கேட்டான்.

26. (அதற்கு மூஸாவாகிய) அவர்; உங்களின் இரட்சகனும், முன் சென்று போன உங்கள் மூதாதையர்களின் இரட்சகனுமாவான் என்று கூறினார்.

27. "நிச்சயமாக உங்களிடம் அனுப்பப் பட்டிருக்கிறாரே உங்களுடைய தூதர்_(அவர்) திட்டமாக ஒரு பைத்தியக்காரர்தாம்" என்று (ஃபிர் அவ்னாகிய) அவன் கூறினான்.

28. (அதற்கு மூஸா "அவனே) கிழக்கிற்கும், மேற்கிற்கும், இவ்விரண்டிற்குமிடையே உள்ளவற்றிற்கும் இரட்சகன். (இதனை) நீங்கள் விளங்கிக் கொள்பவர்களாக இருப்பின்(அவனை விசுவாசங்கொள்ளுங்கள்)" என்று கூறினார்.

29. அ(தற்க)வன், "என்னை அன்றி (மற்றெதனையும் வணக்கத்திற்குரிய) நாயனாக நீர் எடுத்துக்கொண்டால், நிச்சயமாக நான் உம்மைச் சிறையிடப்பட்டோரில் (ஒருவராக) ஆக்கி விடுவேன்" என்று கூறினான்.

30. அ(தற்க)வர், "தெளிவான (அத்தாட்சியாக) ஒரு பொருளை நான் உன்னிடம் கொண்டு வந்தாலுமா?" என்று கேட்டார்.

31. அ(தற்க)வன், "நீர் உண்மையாளர்களில் இருப்பின், அதனைக் கொண்டுவாரும்" என்று கூறினான்.

32. ஆகவே, (மூஸாவாகிய)அவர் தன் தடியைப் போட்டார்; உடனே அது தெளிவானதொரு (மலைப்) பாம்பாகிவிட்டது.

33. இன்னும் அவர் தன்னுடைய கையை(ச் சட்டைக்குள்ளிலிருந்து) வெளியில் எடுத்தார்; அப்போது அது பார்ப்போருக்கு (ஒளிமயமான) வெண்மையாக இருந்தது.

34. தன்னைச் சூழ இருந்த பிரதானிகளிடம் "நிச்சயமாக இவர் (மிகவும்) நன்கறிந்த சூனியக்காரர்" என்று (ஃபிர் அவ்னாகிய) அவன் கூறினான்.

35. "இவர் தன் சூனியத்தைக்கொண்டு, உங்கள் (ஊரான இப்) பூமியை விட்டும் உங்களை வெளியேற்றிவிட நாடுகிறார்; ஆகவே, (இதைப்பற்றி) நீங்கள் (எனக்கு)எதை(ச்செய்ய) ஏவுகிறீர்கள்? (என்று ஃபிர் அவ்ன் கேட்டான்.)

36. அ(தற்க)வர்கள், "அவருக்கும், அவருடைய சகோதரருக்கும் தவணை கொடுத்து விடு; மேலும், (சூனியக்காரர்களை) திரட்டிக் கொண்டு வருவோரைப் பல நகரங்களுக்கும் அனுப்பிவை" என்று கூறினார்கள்.

37. "அவர்கள் கற்றறிந்த ஒவ்வொரு சூனியக்காரனையும் உம்மிடம் (அழைத்துக்) கொண்டு வருவார்கள்" (என்று கூறினார்கள்).

38. ஆகவே, (பல நகரங்களுக்கும் திரட்டுவோர் அனுப்பி வைக்கப்பட்டு) குறிப்பிட்ட நாளின், குறித்த நேரத்திற்குச் சூனியக்காரர்கள் யாவரும் ஒன்று சேர்க்கப்பட்டார்கள்.

39. (சகல) மனிதர்களிடமும், (குறித்த நேரத்தில்) நீங்கள் (வந்து )ஒன்று சேருவீர்களா? என்றும் கேட்கப்பட்டது.

40. சூனியக்காரர்களை_அவர்கள் வெற்றி பெற்றவர்களாக ஆகி விட்டால்_ நாம் பின் பற்றக்கூடும் (என்றும் கூறப்பட்டது);

41. ஆகவே, சூனியக்காரர்கள் வந்தபொழுது, அவர்கள் ஃபிர்அவ்னிடம், "நாங்களே மிகைத்தவர்களாகி(வென்று)விட்டால், (அதற்குரிய) கூலி (வெகுமதி) நிச்சயமாக எங்களுக்கு உண்டா?" என்று கேட்டார்கள்.

42. அ(தற்க)வன், "ஆம்! உண்டு. அந்நேரத்தில், நிச்சயமாக நீங்கள் (நம்முடைய சபையிலும்) நமக்கு நெருக்கமாக்கப்பட்டவர்களில் உள்ளவராவீர்கள்" என்று கூறினான்.

43. "நீங்கள் (சூனியம் செய்ய) எதைப்போடக் கூடியவர்களோ போடுங்கள்" என மூஸா அவர்களிடம் கூறினார்.

فَاَلْقَوْا حِبَالَهُمْ وَعِصِیَّهُمْ وَقَالُوْا بِعِزَّةِ فِرْعَوْنَ اِنَّا لَنَحْنُ
الْغٰلِبُوْنَ ﴿۴۴﴾ فَاَلْقٰى مُوْسٰى عَصَاهُ فَاِذَا هِیَ تَلْقَفُ مَا یَاْفِكُوْنَ ﴿۴۵﴾
فَاُلْقِیَ السَّحَرَةُ سٰجِدِیْنَ ﴿۴۶﴾ قَالُوْۤا اٰمَنَّا بِرَبِّ الْعٰلَمِیْنَ ﴿۴۷﴾ رَبِّ مُوْسٰى
وَهٰرُوْنَ ﴿۴۸﴾ قَالَ اٰمَنْتُمْ لَهٗ قَبْلَ اَنْ اٰذَنَ لَكُمْ اِنَّهٗ لَكَبِیْرُكُمُ الَّذِیْ
عَلَّمَكُمُ السِّحْرَ فَلَسَوْفَ تَعْلَمُوْنَ لَاُقَطِّعَنَّ اَیْدِیَكُمْ وَاَرْجُلَكُمْ
مِّنْ خِلَافٍ وَّلَاُوصَلِّبَنَّكُمْ اَجْمَعِیْنَ ﴿۴۹﴾ قَالُوْا لَا ضَیْرَ اِنَّاۤ اِلٰى
رَبِّنَا مُنْقَلِبُوْنَ ﴿۵۰﴾ اِنَّا نَطْمَعُ اَنْ یَّغْفِرَ لَنَا رَبُّنَا خَطٰیٰنَاۤ اَنْ كُنَّاۤ اَوَّلَ
الْمُؤْمِنِیْنَ ﴿۵۱﴾ وَاَوْحَیْنَاۤ اِلٰى مُوْسٰۤى اَنْ اَسْرِ بِعِبَادِیْۤ اِنَّكُمْ مُّتَّبَعُوْنَ ﴿۵۲﴾ ع
فَاَرْسَلَ فِرْعَوْنُ فِی الْمَدَآىِٕنِ حٰشِرِیْنَ ﴿۵۳﴾ اِنَّ هٰۤؤُلَآءِ لَشِرْذِمَةٌ
قَلِیْلُوْنَ ﴿۵۴﴾ وَاِنَّهُمْ لَنَا لَغَآىِٕظُوْنَ ﴿۵۵﴾ وَاِنَّا لَجَمِیْعٌ حٰذِرُوْنَ ﴿۵۶﴾
فَاَخْرَجْنٰهُمْ مِّنْ جَنّٰتٍ وَّعُیُوْنٍ ﴿۵۷﴾ وَّكُنُوْزٍ وَّمَقَامٍ كَرِیْمٍ ﴿۵۸﴾ كَذٰلِكَ
وَاَوْرَثْنٰهَا بَنِیْۤ اِسْرَآءِیْلَ ﴿۵۹﴾ فَاَتْبَعُوْهُمْ مُّشْرِقِیْنَ ﴿۶۰﴾ فَلَمَّا تَرَآءَ
الْجَمْعٰنِ قَالَ اَصْحٰبُ مُوْسٰۤى اِنَّا لَمُدْرَكُوْنَ ﴿۶۱﴾ قَالَ كَلَّا اِنَّ مَعِیَ
رَبِّیْ سَیَهْدِیْنِ ﴿۶۲﴾ فَاَوْحَیْنَاۤ اِلٰى مُوْسٰۤى اَنِ اضْرِبْ بِّعَصَاكَ الْبَحْرَ
فَانْفَلَقَ فَكَانَ كُلُّ فِرْقٍ كَالطَّوْدِ الْعَظِیْمِ ﴿۶۳﴾ وَاَزْلَفْنَا ثَمَّ الْاٰخَرِیْنَ ﴿۶۴﴾

44. ஆகவே, தங்களுடைய கயிறுகளையும், தங்களுடைய தடிகளையும் அவர்கள் போட்டார்கள்; "ஃபிர்அவ்னுடைய கெளரவத்தின் மீது சத்தியமாக, நிச்சயமாக நாமே வெற்றியாளர்கள்" என்றும் கூறினார்கள்.

45. (பிறகு) மூஸா தன் தடியைப் போட்டார்; அப்பொழுது அது அவர்கள் பொய்யாகச் செய்திருந்தவற்றை விழுங்கியது.

46. அப்பொழுது(இதனைக் கண்ட) சூனியக்காரர்கள் சிரம்பணிந்தவர்களாக (க்கீழே) வீழ்த்தப்பட்டனர்_

47."அகிலத்தாரின் இரட்சகனையே நாங்கள் விசுவாசங்கொண்டோம்" என்று கூறினார்கள்_

48."(அவன்தான்) மூஸாவுக்கும், ஹாரூனுக்கும் இரட்சகன்"(என்று கூறினார்கள்).

49. (அதற்கு ஃபிர்அவ்னாகிய) அவன் "நான் உங்களுக்கு அனுமதியளிப்பதற்கு முன்னரே நீங்கள் அவரை விசுவாசித்துவிட்டீர்களா? நிச்சயமாக, உங்களுக்கு சூனியத்தைக் கற்றுக்கொடுத்த உங்களின் பெரியவர் அவர்தான்; அதிசீக்கிரத்தில் (இதன் முடிவை) நீங்கள் அறிந்துகொள்வீர்கள்; திண்ணமாக உங்களுடைய கைகளையும், உங்களுடைய கால்களையும் மாறாக(ஒரு பக்கத்துக்கையையும், மறுபக்கத்துக் காலையும்) நான் துண்டித்து, உங்கள் அனைவரையும் நிச்சயமாக நான் கழுவேற்றிவிடுவேன்" என்று கூறினான்.

50. அ(தற்க)வர்கள், "(அவ்வாறு செய்வதால்) எங்களுக்கு யாதொரு கெடுதியுமில்லை. (ஏனென்றால்) நிச்சயமாக நாங்கள் எங்கள் இரட்சகன் பக்கமே திரும்பச் செல்லக்கூடியவர்கள்" என்று கூறினார்கள்.

51. "நிச்சயமாக (மூஸாவை) விசுவாசங்கொண்டவர்களில் முதலாமவர்களாக நாங்கள் இருப்பதினால், எங்கள் இரட்சகன் எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னித்துவிடுவான் என்று நிச்சயமாக நாங்கள் ஆதரவுவைக்கிறோம்"(என்றும் கூறினார்கள்).

52. இன்னும், மூஸாவுக்கு நாம் வஹீ அறிவித்தோம்: "(இஸ்ராயீலின் மக்களாகிய) என்னுடைய அடியார்களை இரவில் அழைத்துச் செல்வீராக; நிச்சயமாக நீங்கள் பின்தொடரப்படுவோராய் உள்ளீர்கள்."

53. பின்னர், ஃபிர்அவ்ன் பல நகரங்களுக்கும் (ஜனங்களைத் திரட்டுவதற்காக) திரட்டுவோரை அனுப்பிவைத்தான்.

54. "நிச்சயமாக(இஸ்ராயீலின் மக்களாகிய) இவர்கள் வெகு சொற்பத்தொகையினர்களான ஒரு கூட்டம்.

55. இன்னும், நிச்சயமாக அவர்கள் நமக்குக்கோபமூட்டுகிறவர்கள்.

56. மேலும், "நிச்சயமாக நாம் அனைவரும் எச்சரிக்கையுடனிருக்கின்றவர்கள்" (என்று கூறினான்).

57. பின்னர்(அவர்களுடைய) தோட்டங்களிலிருந்தும், நீரூற்றுக்களிலிருந்தும் நாம் அவர்களை வெளியேற்றிவிட்டோம்.

58. இன்னும், (அவர்களுடைய) பொக்கிஷங்களிலிருந்தும், மிகச் சிறந்த தங்குமிடத்திலிருந்தும் (அவர்களை வெளியேற்றினோம்.)

59. அவ்வாறு (வெளியேற்றிவிட்டு) இஸ்ராயீலின் மக்களை அவைகளுக்கு வாரிசாகவும் ஆக்கிவிட்டோம்.

60. சூரியன் உதிக்கும் நேரத்தில் (ஃபிர்அவ்னின் கூட்டத்தாராகிய) அவர்கள் அவர்களைப் பின்தொடர்ந்தனர்.

61. இவ்விரு கூட்டத்தினரும் ஒருவரையொருவர் கண்டபோது, "நிச்சயமாக நாம் (அவர்களால்) பிடிபட்டுவிடுபவர்கள்தாம்" என்று மூஸாவுடைய தோழர்கள் கூறினார்கள்.

62. (அதற்கு ) "ஒரு போதும் இல்லை! நிச்சயமாக என்னுடன், என்னுடைய இரட்சகன் இருக்கின்றான்; (இதிலிருந்து ஈடேறும்) வழியை நிச்சயமாக எனக்கு அவன் காட்டுவான்" என்று(மூஸாவாகிய) அவர் கூறினார்.

63. (அப்போது) "நீர் உம்முடைய (கைத்) தடியினால் கடலை அடிப்பீராக" என மூஸாவின்பால் வஹீ அறிவித்தோம் (அவர் அடிக்கவே) அது பிளந்து விட்டது; ஒவ்வொரு பிளவும் பெரும் மலை போன்று ஆகிவிட்டது.

64. (பின்தொடர்ந்த) மற்றவர்களையும் அந்த இடத்தை நெருங்கச்செய்தோம்.

وَاَنْجَيْنَا مُوْسٰى وَمَنْ مَّعَهٗۤ اَجْمَعِيْنَ ﴿٦٥﴾ ثُمَّ اَغْرَقْنَا الْاٰخَرِيْنَ ﴿٦٦﴾
اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً ؕ وَمَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِيْنَ ﴿٦٧﴾ وَاِنَّ رَبَّكَ
لَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿٦٨﴾ وَاتْلُ عَلَيْهِمْ نَبَاَ اِبْرٰهِيْمَ ﴿٦٩﴾ اِذْ قَالَ لِاَبِيْهِ ع ٤ ٨ وقف لازم
وَقَوْمِهٖ مَا تَعْبُدُوْنَ ﴿٧٠﴾ قَالُوْا نَعْبُدُ اَصْنَامًا فَنَظَلُّ لَهَا عٰكِفِيْنَ ﴿٧١﴾
قَالَ هَلْ يَسْمَعُوْنَكُمْ اِذْ تَدْعُوْنَ ﴿٧٢﴾ اَوْ يَنْفَعُوْنَكُمْ اَوْ يَضُرُّوْنَ ﴿٧٣﴾
قَالُوْا بَلْ وَجَدْنَاۤ اٰبَآءَنَا كَذٰلِكَ يَفْعَلُوْنَ ﴿٧٤﴾ قَالَ اَفَرَءَيْتُمْ مَّا
كُنْتُمْ تَعْبُدُوْنَ ﴿٧٥﴾ اَنْتُمْ وَاٰبَآؤُكُمُ الْاَقْدَمُوْنَ ﴿٧٦﴾ فَاِنَّهُمْ عَدُوٌّ
لِّيْۤ اِلَّا رَبَّ الْعٰلَمِيْنَ ﴿٧٧﴾ الَّذِيْ خَلَقَنِيْ فَهُوَ يَهْدِيْنِ ﴿٧٨﴾ وَ
الَّذِيْ هُوَ يُطْعِمُنِيْ وَيَسْقِيْنِ ﴿٧٩﴾ وَاِذَا مَرِضْتُ فَهُوَ يَشْفِيْنِ ﴿٨٠﴾
وَالَّذِيْ يُمِيْتُنِيْ ثُمَّ يُحْيِيْنِ ﴿٨١﴾ وَالَّذِيْۤ اَطْمَعُ اَنْ يَّغْفِرَ لِيْ
خَطِيْٓـَٔتِيْ يَوْمَ الدِّيْنِ ﴿٨٢﴾ رَبِّ هَبْ لِيْ حُكْمًا وَّاَلْحِقْنِيْ بِالصّٰلِحِيْنَ ﴿٨٣﴾
وَاجْعَلْ لِّيْ لِسَانَ صِدْقٍ فِي الْاٰخِرِيْنَ ﴿٨٤﴾ وَاجْعَلْنِيْ مِنْ
وَّرَثَةِ جَنَّةِ النَّعِيْمِ ﴿٨٥﴾ وَاغْفِرْ لِاَبِيْۤ اِنَّهٗ كَانَ مِنَ الضَّآلِّيْنَ ﴿٨٦﴾
وَلَا تُخْزِنِيْ يَوْمَ يُبْعَثُوْنَ ﴿٨٧﴾ يَوْمَ لَا يَنْفَعُ مَالٌ وَّلَا بَنُوْنَ ﴿٨٨﴾ اِلَّا
مَنْ اَتَى اللّٰهَ بِقَلْبٍ سَلِيْمٍ ﴿٨٩﴾ وَاُزْلِفَتِ الْجَنَّةُ لِلْمُتَّقِيْنَ ﴿٩٠﴾

65. மூஸாவையும், அவருடனிருந்த அனைவரையும் நாம் காப்பாற்றிக் கொண்டோம்.
66. பின்னர், (அவர்களைப் பின்தொடர்ந்த) மற்றவர்களை நாம் மூழ்கடித்துவிட்டோம்.
67. நிச்சயமாக இதில் ஓர் அத்தாட்சி இருக்கிறது; (எனினும்) அவர்களில் பெரும் பாலோர் விசுவாசங்கொள்வோராக இருக்கவுமில்லை.
68. மேலும், (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன் அவனேதான் (யாவரையும்) மிகைத்தோன், மிகக்கிருபையுடையோன்.
69. மேலும், (நபியே!) அவர்களுக்கு இப்றாஹீமுடைய செய்தியையும் ஓதிக் காண்பிப்பீராக!
70. அவர் தன் தந்தையிடமும், தன் சமூகத்தாரிடமும், "நீங்கள் எதை வணங்குகிறீர்கள்?" எனக் கேட்டபோது:
71. அவர்கள், "நாங்கள் சிலைகளை வணங்குகிறோம்; நாங்கள் அவற்றி(ன் வணக்கத்தி)ற்காக நிலைகொண்டுள்ளோம்" என்று கூறினார்கள்.
72. "அவைகளை நீங்கள் அழைக்கின்ற சமயத்தில் உங்களுக்கு அவை (காது கொடுத்து) செவிசாய்க்கின்றனவா?" என்று(இப்றாஹீம் அவர்களிடம்)கேட்டார்.
73. "அல்லது (அவைகளை நீங்கள் வணங்கினால்) உங்களுக்குப் பலன் தருகின்றனவா? அல்லது (வணங்காவிட்டால்) அவை இடையூறு செய்கின்றனவா?" என்றும் கேட்டார்.
74. "இல்லை; எங்கள் மூதாதையர்களை இவ்வாறே செய்பவர்களாக நாங்கள் கண்டோம்" என்று அவர்கள் கூறினார்கள்.
75. "நீங்கள் எவற்றை வணங்கிக் கொண்டிருந்தீர்கள் என்பதை நீங்கள் பார்த்தீர்களா?" (அதுபற்றிச் சொல்லுங்கள் என்று இப்றாஹீமாகிய) அவர் கேட்டார்.
76. நீங்களும், உங்களுடைய முன்னோர்களான மூதாதையர்களும் (எவற்றை வணங்கி வந்தீர்கள் என்பதைப் பாருங்கள்).
77. ஆகவே, "நிச்சயமாக அவைகள் எனக்கு விரோதிகளே! அகிலத்தாரின் இரட்சகனைத்தவிர.
78. "அவன் எத்தகையவனென்றால், என்னைப் படைத்தான்; பின்னர் எனக்கு நேர் வழி காண்பிக்கிறான்."
79. இன்னும் அவன் எத்தகையவனென்றால், "அவனே எனக்கு உணவளிக்கிறான்; அவனே(எனக்கு) குடிக்கவும் தருகிறான்."
80. மேலும், "நான் நோயுற்று விட்டால், அவனே என்னைக் குணப்படுத்துகின்றான்."
81. இன்னும், அவன் எத்தகையவனென்றால்" என்னை இறப்பெய்தச் செய்வான்; பின்னர் என்னை (மறுமையில்)அவன் உயிர்ப்பிப்பான்."
82. இன்னும், அவன் எத்தகையவனென்றால், "கூலி கொடுக்கும் (மறுமை) நாளில், என்னுடைய குற்றங்களை மன்னிக்க அவனையே நான் ஆதரவு வைக்கிறேன்."
83. "என் இரட்சகனே! நீ எனக்கு அறிவை அளிப்பாயாக! மேலும், நல்லோர்களுடன் என்னைச் சேர்த்து வைப்பாயாக!"
84. "பின்வருபவர்களில் (அவர்கள் என் விஷயத்தில், என்னைப்பற்றி அழகானவற்றைக் கூற) எனக்கு நற்பெயரை ஏற்படுத்துவாயாக."
85. "கொடைகளுடைய சுவனபதிக்கு வாரிசானவர்களிலும் என்னை நீ ஆக்கிவைப்பாயாக!"
86. "என்னுடைய தந்தையையும் நீ மன்னித்தருள்வாயாக! நிச்சயமாக அவர் வழிதவறிவிட்டவர்களில்(ஒருவராக) இருக்கிறார்."
87. மேலும், "(படைப்பினங்கள் உயிர் கொடுக்கப்பட்டு) எழுப்பப்படும் (மறுமை)நாளில் நீ என்னை இழிவு படுத்தாதிருப்பாயாக!"
88. செல்வமும், குமாரர்களும் (யாதொரு) பயனளிக்காத(அந்த) நாளில்_
89. (ஆயினும், இணைவைப்பதிலிருந்து நீக்கம் பெற்ற) பரிசுத்தமான இதயத்துடன் (தன் இரட்சகனாகிய) அல்லாஹ்விடம் யார் வந்தாரோ அவர் தவிர (மற்றவருக்குப் பயனளிக்காத நாள்).
90. மேலும், பயபக்தியுடையவர்களுக்கு சொர்க்கம் (மிக) நெருக்கி வைக்கப்படும்.

وَبُرِّزَتِ الْجَحِيْمُ لِلْغٰوِيْنَ ﴿۹۱﴾ وَقِيْلَ لَهُمْ اَيْنَمَا كُنْتُمْ تَعْبُدُوْنَ ﴿۹۲﴾
مِنْ دُوْنِ اللّٰهِ ؕ هَلْ يَنْصُرُوْنَكُمْ اَوْ يَنْتَصِرُوْنَ ﴿۹۳﴾ فَكُبْكِبُوْا فِيْهَا
هُمْ وَالْغَاوٗنَ ﴿۹۴﴾ وَجُنُوْدُ اِبْلِيْسَ اَجْمَعُوْنَ ﴿۹۵﴾ قَالُوْا وَهُمْ فِيْهَا
يَخْتَصِمُوْنَ ﴿۹۶﴾ تَاللّٰهِ اِنْ كُنَّا لَفِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۹۷﴾ اِذْ نُسَوِّيْكُمْ بِرَبِّ
الْعٰلَمِيْنَ ﴿۹۸﴾ وَمَآ اَضَلَّنَآ اِلَّا الْمُجْرِمُوْنَ ﴿۹۹﴾ فَمَا لَنَا مِنْ شٰفِعِيْنَ ﴿۱۰۰﴾
وَلَا صَدِيْقٍ حَمِيْمٍ ﴿۱۰۱﴾ فَلَوْ اَنَّ لَنَا كَرَّةً فَنَكُوْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ ﴿۱۰۲﴾
اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً ؕ وَمَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِيْنَ ﴿۱۰۳﴾ وَاِنَّ رَبَّكَ
لَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿۱۰۴﴾ كَذَّبَتْ قَوْمُ نُوْحِ ِۨ الْمُرْسَلِيْنَ ﴿۱۰۵﴾ اِذْ قَالَ لَهُمْ ۵ ع ۲۶ ۹
اَخُوْهُمْ نُوْحٌ اَلَا تَتَّقُوْنَ ﴿۱۰۶﴾ اِنِّيْ لَكُمْ رَسُوْلٌ اَمِيْنٌ ﴿۱۰۷﴾ فَاتَّقُوا اللّٰهَ وَ
اَطِيْعُوْنِ ﴿۱۰۸﴾ وَمَآ اَسْئَلُكُمْ عَلَيْهِ مِنْ اَجْرٍ ۚ اِنْ اَجْرِيَ اِلَّا عَلٰى رَبِّ
الْعٰلَمِيْنَ ﴿۱۰۹﴾ فَاتَّقُوا اللّٰهَ وَاَطِيْعُوْنِ ﴿۱۱۰﴾ قَالُوْٓا اَنُؤْمِنُ لَكَ وَاتَّبَعَكَ
الْاَرْذَلُوْنَ ﴿۱۱۱﴾ قَالَ وَمَا عِلْمِيْ بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۱۲﴾ اِنْ حِسَابُهُمْ
اِلَّا عَلٰى رَبِّيْ لَوْ تَشْعُرُوْنَ ﴿۱۱۳﴾ وَمَآ اَنَا بِطَارِدِ الْمُؤْمِنِيْنَ ﴿۱۱۴﴾ اِنْ اَنَا
اِلَّا نَذِيْرٌ مُّبِيْنٌ ﴿۱۱۵﴾ قَالُوْا لَئِنْ لَّمْ تَنْتَهِ يٰنُوْحُ لَتَكُوْنَنَّ
مِنَ الْمَرْجُوْمِيْنَ ﴿۱۱۶﴾ قَالَ رَبِّ اِنَّ قَوْمِيْ كَذَّبُوْنِ ﴿۱۱۷﴾

91. வழிகெட்டோருக்கு (அவர்களுக்கெதிரில்) நரகம் வெளிப்படுத்தப்படும்.

92. அவர்களிடம், நீங்கள் வணங்கிக்கொண்டிருந்தவை எங்கே? எனக் கேட்கப்படும்_

93. அல்லாஹ்வையன்றி _(நீங்கள் வணங்கிவந்த) அவை (இப்போது) உங்களுக்கு உதவி செய்யுமா? அல்லது தங்களுக்குத்தாங்களே உதவி செய்து (தங்களைக் காப்பாற்றிக்) கொள்ளுமா? (என்று கேட்கப்படும்)

94. "ஆகவே, அவைகளும் (அவைகளால்) வழி தவறியவர்களும், முகங்குப்புற (நரகமாகிய) அதில் தள்ளப்படுவார்கள்.

95. இப்லீஸின் சேனைகள் அனைவரும் (அவ்வாறே நரகில் தள்ளப்படுவார்கள்).

96. அவர்களோ (தங்களுக்குள்) அதில் தர்க்கித்துக்கொண்டவர்களாகக் கூறுவார்கள்:

97. "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நாங்கள் பகிரங்கமான வழிகேட்டிலிருந்தோம்_

98. "அகிலத்தாரின் இரட்சகனாக இருப்பவனுக்கு (இணையாக்கப்பட்ட) உங்களை நாங்கள் சமமாக ஆக்கிவைத்தபோது_(பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தோம்)

99. "(இக்) குற்றவாளிகளேயன்றி (வேறுஎவரும்) எங்களை வழிகெடுக்கவுமில்லை.

100. ஆகவே, "எங்களுக்குப் பரிந்துரையாளர்களிலிருந்து எவரும் இல்லை.

101. "நெருங்கிய எந்த சிநேகிதனும் இல்லை.

102. "ஆகவே, நிச்சயமாக எங்களுக்கு (உலகிற்குத்) திரும்பிச் செல்லுதல் (என்பது) இருந்தால் விசுவாசங்கொண்டோர்களில் நாங்கள் ஆகிவிடுவோம்" (என்று பிதற்றுவார்கள்)

103. நிச்சயமாக இதில் ஒரு படிப்பினை இருக்கின்றது; (எனினும்) அவர்களில் பெரும்பாலோர் (இதனை) விசுவாசங்கொள்வோராக இருக்கவுமில்லை.

104. மேலும், (நபியே!) நிச்சயமாக உம்முடைய இரட்சகன்_ அவனே திட்டமாக (யாவரையும்) மிகைத்தோன், மிகக் கிருபையுடையோன்.

105. நூஹ்வுடைய சமூகத்தார் (நம்மால் அனுப்பப்பட்ட) தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.

106. அவர்களுடைய சகோதரர் நூஹ் அவர்களிடம் "நீங்கள் (அல்லாஹ்வுக்கு) பயப்பட மாட்டீர்களா? எனக் கூறியபோது,

107. நிச்சயமாக நான் உங்களுக்கு (அல்லாஹ்வினால்) அனுப்பப்பட்ட மிக்க நம்பிக்கைக்குரிய ஒரு தூதனாவேன்_

108. " ஆகவே, அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து கொள்ளுங்கள்; இன்னும், எனக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடங்கள்".

109. (இதற்காக) "நான் உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்கவில்லை; என்னுடைய கூலி அகிலத்தாரின் இரட்சகனின் மீதே தவிர (வேறு எவரிடமிருந்தும்) இல்லை".

110. "ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு பயந்துகொள்ளுங்கள்; இன்னும், எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள்" (என்று கூறினார்).

111. அ(தற்க)வர்கள்" (எங்களில் தரத்தால்) மிகத்தாழ்ந்தவர்கள் உம்மைப் பின்பற்றியிருக்கின்ற நிலையில் உம்மை நாங்கள் விசுவாசிப்போமா?" என்று கூறினார்கள்.

112. (அதற்கு) அவர், "அவர்கள் செய்து கொண்டிருப்பவைபற்றி எனக்கு என்ன தெரியும்?" என்று கூறினார்.

113. ("அவைபற்றிய) அவர்களின் கணக்கு என் இரட்சகன் மீதே தவிர (என்மீது கடமை) இல்லை (இதுபற்றி) நீங்கள் உணருபவர்களாக இருப்பின்" (அவர்களை இழித்துக்கூறி இருக்கமாட்டீர்கள்).

114. "விசுவாசங்கொண்டோரை நான் விரட்டிவிடுபவனுமல்லன்."

115. "நான் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனேதவிர (வேறு) இல்லை" (என்றும் கூறினார்).

116. அ(தற்க)வர்கள், " நூஹே! நீர் (இவ்வாறு கூறுவதிலிருந்து) விலகிக்கொள்ளவில்லையானால், (கல்லால்) எறியப்படுபவர்களில் (ஒருவராக) நிச்சயமாக நீர் ஆகிவிடுவீர்" என்று கூறினார்கள்.

117. அ(தற்க)வர், "என் இரட்சகனே! நிச்சயமாக என்னுடைய சமூகத்தார் என்னைப் பொய்யாக்கிவிட்டார்கள்" என்று கூறினார்.

فَافْتَحْ بَيْنِيْ وَبَيْنَهُمْ فَتْحًا وَّنَجِّنِيْ وَمَنْ مَّعِيَ مِنَ الْمُؤْمِنِيْنَ ﴿۱۱۸﴾ النصف
فَاَنْجَيْنٰهُ وَمَنْ مَّعَهٗ فِي الْفُلْكِ الْمَشْحُوْنِ ﴿۱۱۹﴾ ثُمَّ اَغْرَقْنَا بَعْدُ
الْبٰقِيْنَ ﴿۱۲۰﴾ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً ؕ وَمَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِيْنَ ﴿۱۲۱﴾ وَ
اِنَّ رَبَّكَ لَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿۱۲۲﴾ كَذَّبَتْ عَادُ ۨالْمُرْسَلِيْنَ ﴿۱۲۳﴾ اِذْ ع ٦ / ١٠
قَالَ لَهُمْ اَخُوْهُمْ هُوْدٌ اَلَا تَتَّقُوْنَ ﴿۱۲۴﴾ اِنِّيْ لَكُمْ رَسُوْلٌ اَمِيْنٌ ﴿۱۲۵﴾
فَاتَّقُوا اللّٰهَ وَاَطِيْعُوْنِ ﴿۱۲۶﴾ وَمَآ اَسْـَٔلُكُمْ عَلَيْهِ مِنْ اَجْرٍ ۚ اِنْ اَجْرِيَ
اِلَّا عَلٰى رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۱۲۷﴾ اَتَبْنُوْنَ بِكُلِّ رِيْعٍ اٰيَةً تَعْبَثُوْنَ ﴿۱۲۸﴾ وَ
تَتَّخِذُوْنَ مَصَانِعَ لَعَلَّكُمْ تَخْلُدُوْنَ ﴿۱۲۹﴾ وَاِذَا بَطَشْتُمْ بَطَشْتُمْ
جَبَّارِيْنَ ﴿۱۳۰﴾ فَاتَّقُوا اللّٰهَ وَاَطِيْعُوْنِ ﴿۱۳۱﴾ وَاتَّقُوا الَّذِيْٓ اَمَدَّكُمْ بِمَا
تَعْلَمُوْنَ ﴿۱۳۲﴾ اَمَدَّكُمْ بِاَنْعَامٍ وَّبَنِيْنَ ﴿۱۳۳﴾ وَجَنّٰتٍ وَّعُيُوْنٍ ﴿۱۳۴﴾ اِنِّيْٓ
اَخَافُ عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ عَظِيْمٍ ﴿۱۳۵﴾ قَالُوْا سَوَآءٌ عَلَيْنَآ اَوَعَظْتَ
اَمْ لَمْ تَكُنْ مِّنَ الْوٰعِظِيْنَ ﴿۱۳۶﴾ اِنْ هٰذَآ اِلَّا خُلُقُ الْاَوَّلِيْنَ ﴿۱۳۷﴾ وَمَا
نَحْنُ بِمُعَذَّبِيْنَ ﴿۱۳۸﴾ فَكَذَّبُوْهُ فَاَهْلَكْنٰهُمْ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً ؕ وَ
مَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِيْنَ ﴿۱۳۹﴾ وَاِنَّ رَبَّكَ لَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿۱۴۰﴾ ع ٧ / ١١
كَذَّبَتْ ثَمُوْدُ الْمُرْسَلِيْنَ ﴿۱۴۱﴾ اِذْ قَالَ لَهُمْ اَخُوْهُمْ صٰلِحٌ اَلَا تَتَّقُوْنَ ﴿۱۴۲﴾

118. " ஆதலால், எனக்கிடையிலும், அவர்களுக்கிடையிலும் நீ ஒரு தீர்ப்புச் செய்வாயாக! என்னையும், விசுவாசங்கொண்டவர்களில் என்னுடன் உள்ளவர்களையும் காப்பாற்றுவாயாக" (என்று பிரார்த்தித்தார்.)

119. ஆகவே, அவரையும் (விசுவாசங்கொண்டவர்களாக) அவருடன் இருந்தவர்களையும் (மற்ற ஜீவராசிகளால்) நிறைக்கப்பட்டிருந்த கப்பலில் (ஏற்றிக்) நாம் காப்பாற்றினோம்.

120. பின்னர் எஞ்சியிருந்தவர்களை அப்பால் நாம் மூழ்கடித்துவிட்டோம்.

121. நிச்சயமாக இதில் ஒரு படிப்பினை இருக்கிறது; அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங்கொள்பவர்களாக இருக்கவுமில்லை.

122 மேலும், நிச்சயமாக (நபியே!) உமதிரட்சகன் (அவனை நிராகரித்தவரை தண்டனை செய்வதில் யாவரையும்) அவன்தான் மிகைத்தவன்; மிகக்கிருபையுடையவன்.

123 ஆது (கூட்டத்தார் நம்முடைய) தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.

124. அவர்களுடைய சகோதரர் ஹூது அவர்களிடம், " நீங்கள் (அல்லாஹ்வுக்குப்) பயப்படமாட்டீர்களா" என்று கூறியபோது,

125. "நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதனாவேன்".

126. "ஆகவே நீங்கள் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்; இன்னும், எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள்".

127. " இதற்காக உங்களிடத்தில் யாதொரு கூலியையும் நான் கேட்கவில்லை; என்னுடைய கூலி(யாவும்) அகிலத்தாரின் இரட்சகனின் மீதே தவிர (வேறு எவரிடமிருந்தும்) இல்லை".

128. ஒவ்வொரு உயர்ந்த இடத்திலும் வீண்வேலை செய்கிறவர்களாக அடையாளமிடப்பட்ட கட்டிடங்களைக் கட்டுகிறீர்களா?

129. இன்னும், "நீங்கள் நிரந்தரமாக இருந்துவிடலாம் என்பதற்காக உயர்ந்த மாளிகைகளை ஆக்கிக்கொள்கிறீர்களா?"

130. மேலும், " (எவரையேனும் ஏதுங்குற்றத்திற்காக) நீங்கள் பிடித்தால் (கொடூரமாக) மிக்க கொடுமையாளர்களின் பிடியாகப் பிடிக்கிறீர்கள்."

131. ஆகவே, "நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள்; எனக்குக் கீழ்ப்படிந்தும் நடங்கள்."

132. " நீங்கள் அறிந்திருப்பவற்றைக் கொண்டு உங்களுக்கு (க் கொடுத்து) உதவி புரிந்திருக்கிறானே அத்தகையவனை நீங்கள் பயந்துகொள்ளுங்கள்".

133. "(ஆடு, மாடு, ஒட்டகங்கள் போன்ற) கால் நடைகளையும், ஆண்மக்களையும் உங்களுக்கு (க் கொடுத்து) அவன் உதவி செய்திருக்கிறான் _

134. "இன்னும் தோட்டங்களையும், நீரூற்றுகளையும் கொண்டு (அவன் உதவியளித்துள்ளான்).

135. (அவனுக்கு நீங்கள் மாறு செய்தால்) "நிச்சயமாக நான் மகத்தானதொரு நாளின் வேதனையை (அது உங்களுக்கு வரும் என்பது பற்றி) பயப்படுகிறேன்" என்று கூறினார்.

136. அ(தற்க)வர்கள் "நீர் எங்களுக்கு உபதேசம் செய்தாலும், உபதேசம் செய்பவர்களில் நீர் இல்லாமலிருந்தாலும் சமம் தான் (நாங்கள் எங்கள் வழியிலிருந்து திரும்பப்போவதில்லை) என்று கூறினார்கள்.

137. இது முன்னவர்களின் வழக்கமேதவிர (வேறு) இல்லை.

138. இன்னும், " நாங்கள் (உம் கூற்றுப்படி) வேதனை செய்யப்படுவர்களும் அல்லர்" (என்றும் கூறினர்).

139. எனவே, அவர்கள் அவரைப் பொய்யாக்கினார்கள்; ஆகவே, நாம் அவர்களை அழித்துவிட்டோம். நிச்சயமாக இதில் ஓர் அத்தாட்சி இருக்கிறது; இன்னும், அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங்கொள்பவர்களாக இருக்கவில்லை.

140. மேலும், (நபியே!) உமதிரட்சகன் _ அவன் தான் (சகலரையும்) மிகைத்தவன், மிகக் கிருபையுடையவன்.

141. ஸமூது (கூட்டத்தார் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட) தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.

142. அவர்களுடைய சகோதரர் (நபியாகிய) ஸாலிஹ் அவர்களிடம், " நீங்கள் (அல்லாஹ்வை) பயந்து கொள்ளமாட்டீர்களா"? எனக் கூறியபோது (அவரை அவர்கள் பொய்யாக்கினார்கள்.)

اِنِّیْ لَكُمْ رَسُوْلٌ اَمِیْنٌ ﴿۱۴۳﴾ فَاتَّقُوا اللّٰهَ وَ اَطِیْعُوْنِ ﴿۱۴۴﴾ وَ مَاۤ اَسْـَٔلُكُمْ عَلَیْهِ
مِنْ اَجْرٍ ۚ اِنْ اَجْرِیَ اِلَّا عَلٰی رَبِّ الْعٰلَمِیْنَ ﴿۱۴۵﴾ اَتُتْرَكُوْنَ فِیْ مَا هٰهُنَاۤ
اٰمِنِیْنَ ﴿۱۴۶﴾ فِیْ جَنّٰتٍ وَّ عُیُوْنٍ ﴿۱۴۷﴾ وَّ زُرُوْعٍ وَّ نَخْلٍ طَلْعُهَا هَضِیْمٌ ﴿۱۴۸﴾
وَ تَنْحِتُوْنَ مِنَ الْجِبَالِ بُیُوْتًا فٰرِهِیْنَ ﴿۱۴۹﴾ فَاتَّقُوا اللّٰهَ وَ اَطِیْعُوْنِ ﴿۱۵۰﴾
وَ لَا تُطِیْعُوْۤا اَمْرَ الْمُسْرِفِیْنَ ﴿۱۵۱﴾ الَّذِیْنَ یُفْسِدُوْنَ فِی الْاَرْضِ وَ
لَا یُصْلِحُوْنَ ﴿۱۵۲﴾ قَالُوْۤا اِنَّمَاۤ اَنْتَ مِنَ الْمُسَحَّرِیْنَ ﴿۱۵۳﴾ مَاۤ اَنْتَ اِلَّا بَشَرٌ
مِّثْلُنَا ۚۖ فَاْتِ بِاٰیَةٍ اِنْ كُنْتَ مِنَ الصّٰدِقِیْنَ ﴿۱۵۴﴾ قَالَ هٰذِهٖ نَاقَةٌ
لَّهَا شِرْبٌ وَّ لَكُمْ شِرْبُ یَوْمٍ مَّعْلُوْمٍ ﴿۱۵۵﴾ وَ لَا تَمَسُّوْهَا بِسُوْٓءٍ فَیَاْخُذَكُمْ
عَذَابُ یَوْمٍ عَظِیْمٍ ﴿۱۵۶﴾ فَعَقَرُوْهَا فَاَصْبَحُوْا نٰدِمِیْنَ ﴿۱۵۷﴾ فَاَخَذَهُمُ
الْعَذَابُ ؕ اِنَّ فِیْ ذٰلِكَ لَاٰیَةً ؕ وَ مَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِیْنَ ﴿۱۵۸﴾
وَ اِنَّ رَبَّكَ لَهُوَ الْعَزِیْزُ الرَّحِیْمُ ﴿۱۵۹﴾ كَذَّبَتْ قَوْمُ لُوْطِ الْمُرْسَلِیْنَ ﴿۱۶۰﴾ ع ۸ ۹ ۱۲
اِذْ قَالَ لَهُمْ اَخُوْهُمْ لُوْطٌ اَلَا تَتَّقُوْنَ ﴿۱۶۱﴾ اِنِّیْ لَكُمْ رَسُوْلٌ اَمِیْنٌ ﴿۱۶۲﴾
فَاتَّقُوا اللّٰهَ وَ اَطِیْعُوْنِ ﴿۱۶۳﴾ وَ مَاۤ اَسْـَٔلُكُمْ عَلَیْهِ مِنْ اَجْرٍ ۚ اِنْ اَجْرِیَ
اِلَّا عَلٰی رَبِّ الْعٰلَمِیْنَ ﴿۱۶۴﴾ اَتَاْتُوْنَ الذُّكْرَانَ مِنَ الْعٰلَمِیْنَ ﴿۱۶۵﴾ وَ
تَذَرُوْنَ مَا خَلَقَ لَكُمْ رَبُّكُمْ مِّنْ اَزْوَاجِكُمْ ؕ بَلْ اَنْتُمْ قَوْمٌ عٰدُوْنَ ﴿۱۶۶﴾

143. "நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதனாவேன்.
144. "எனவே, நீங்கள் அல்லாஹ்வை பயந்துகொள்ளுங்கள்; இன்னும், எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள்;"
145." இதற்காக உங்களிடத்தில் யாதொரு கூலியையும் நான்கேட்கவில்லை;என்னுடைய கூலி(யாவும்) அகிலத்தாரின் இரட்சகனின் மீதே தவிர (வேறு எவரிடமிருந்தும்) இல்லை.
146. "இங்குள்ள (சுகபோகங்களான)வற்றில் அச்சமற்றவர்களாக (இருக்க) நீங்கள் விட்டு வைக்கப்படுவீர்களா?"
147."தோட்டங்களில், இன்னும் நீருற்றுக்களில்_
148."வேளாண்மைகளிலும்,(மிருதுவான ஈரமுள்ள பழங்களைத்தாங்கியதாக) அவற்றின் குலைகள் இருக்கும் பேரீச்ச மரங்களிலும்" (ஆகியவற்றிலெல்லாம் நீங்கள் அச்சமற்றிருக்க விட்டுவைக்கப்படுவீர்களா?).
149. இன்னும், மிகத்திறமைசாலிகளாக (ஆணவம் கொண்டவர்களாக) மலைகளில் வீடுகளைக் குடைந்து (அமைத்துக்) கொள்கிறீர்கள்."
150. "ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள்; இன்னும் எனக்குக் கீழ்ப்படியுங்கள்."
151. "மேலும், வரம்பு மீறுவோரின் கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படியாதீர்கள்."
152. அவர்கள் எத்தகையோரென்றால், பூமியில் குழப்பம் செய்வார்கள்; இன்னும் சீர்திருத்தம் செய்யமாட்டார்கள் (என்றெல்லாம் ஸாலிஹ் நபி கூறியதற்கு),
153. அவர்கள் (ஸாலிஹே!)"நிச்சயமாக நீரோ சூனியம் செய்யப்பட்டவர்களில் உள்ளவர்" என்று கூறினார்கள்.
154. " நீர் எங்களைப் போன்ற ஒரு மனிதரேதவிர (வேறு)இல்லை; ஆகவே, உண்மையாளர்களில் நீர் இருந்தால் (நாங்கள் வேண்டியவாறு) ஓர் அத்தாட்சியைக் கொண்டு வாரும்" (என்று கூறினார்கள்).
155. அ(தற்க)வர் (அத்தாட்சியாக) "இதோ ஒரு பெண் ஒட்டகம் (குறிப்பிட்ட நாளில் கிணற்றிலிருந்து) இதற்கு தண்ணீர் அருந்தும் பங்கும், (அதுபோன்று) உங்களுக்கு குறிப்பிட்ட ஒருநாள் தண்ணீர் அருந்தும் பங்கும் உண்டு" என்று கூறினார்.
156. அன்றியும் "நீங்கள் எந்தத்தீங்கைக் கொண்டும் அதனைத் தீண்டாதீர்கள்;(அவ்வாறு தீண்டினால்,) மகத்தான நாளின் வேதனை உங்களைப் பிடித்துக்கொள்ளும்" (என்று கூறினார்).
157.(இவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தும் அதன் குதிகால் நரம்பினைத் தறித்து) அவர்கள் அதை அறுத்துவிட்டார்கள்;பின்னர் கைசேதப்பட்டோராய் ஆகி விட்டனர்.
158. எனவே, வேதனை அவர்களைப் பிடித்துக்கொண்டது; நிச்சயமாக இதிலோர் அத்தாட்சி இருக்கிறது; அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங் கொள்பவர்களாக இருக்கவுமில்லை.
159. மேலும், நிச்சயமாக (நபியே!) உமதிரட்சகன், அவன் தான் (யாவரையும்) மிகைத்தவன்; மிகக்கிருபையுடையவன்.
160. (நபி) லூத் துடைய சமூகத்தார் தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.
161. அவர்களுடைய சகோதரர் லூத் அவர்களிடம், " நீங்கள் (அல்லாஹ்வை) பயந்து கொள்ளமாட்டீர்களா?" என்று கூறிய போது,
162. "நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதனாவேன்_
163. "ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள்; இன்னும், எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள்.
164." இதற்காக நான் உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்கவில்லை; என்னுடைய கூலி (யாவும்) அகிலத்தாரின் இரட்சகனின் மீதல்லாது (வேறு எவரின் மீதும்) இல்லை.
165."(தீய காரியத்திற்காக) அகிலத்தாரில் ஆடவர்களிடம் வருகின்றீர்களா?
166. " உங்கள் இரட்சகன் உங்களின் மனைவியரிலிருந்து உங்களுக்கெனப் படைத்ததையும் நீங்கள் விட்டுவிடுகிறீர்கள்; இல்லை! நீங்கள் (அல்லாஹ்வின்) வரம்பைக்கடந்த சமூகத்தவர்கள்" (என்றும் கூறினார்).

قَالُوْا لَئِنْ لَّمْ تَنْتَهِ يٰلُوْطُ لَتَكُوْنَنَّ مِنَ الْمُخْرَجِيْنَ ﴿١٦٧﴾ قَالَ اِنِّيْ

لِعَمَلِكُمْ مِّنَ الْقَالِيْنَ ﴿١٦٨﴾ رَبِّ نَجِّنِيْ وَاَهْلِيْ مِمَّا يَعْمَلُوْنَ ﴿١٦٩﴾ فَنَجَّيْنٰهُ وَ

اَهْلَهٗٓ اَجْمَعِيْنَ ﴿١٧٠﴾ اِلَّا عَجُوْزًا فِي الْغٰبِرِيْنَ ﴿١٧١﴾ ثُمَّ دَمَّرْنَا الْاٰخَرِيْنَ ﴿١٧٢﴾

وَاَمْطَرْنَا عَلَيْهِمْ مَّطَرًا ۚ فَسَآءَ مَطَرُ الْمُنْذَرِيْنَ ﴿١٧٣﴾ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً ؕ

وَمَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِيْنَ ﴿١٧٤﴾ وَاِنَّ رَبَّكَ لَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿١٧٥﴾ ع ٩ ١٦ ١٣

كَذَّبَ اَصْحٰبُ لْئَيْكَةِ الْمُرْسَلِيْنَ ﴿١٧٦﴾ اِذْ قَالَ لَهُمْ شُعَيْبٌ اَلَا

تَتَّقُوْنَ ﴿١٧٧﴾ اِنِّيْ لَكُمْ رَسُوْلٌ اَمِيْنٌ ﴿١٧٨﴾ فَاتَّقُوا اللّٰهَ وَاَطِيْعُوْنِ ﴿١٧٩﴾

وَمَآ اَسْئَلُكُمْ عَلَيْهِ مِنْ اَجْرٍ ۚ اِنْ اَجْرِيَ اِلَّا عَلٰى رَبِّ الْعٰلَمِيْنَ ﴿١٨٠﴾

اَوْفُوا الْكَيْلَ وَلَا تَكُوْنُوْا مِنَ الْمُخْسِرِيْنَ ﴿١٨١﴾ وَزِنُوْا بِالْقِسْطَاسِ

الْمُسْتَقِيْمِ ﴿١٨٢﴾ وَلَا تَبْخَسُوا النَّاسَ اَشْيَآءَهُمْ وَلَا تَعْثَوْا فِي الْاَرْضِ

مُفْسِدِيْنَ ﴿١٨٣﴾ وَاتَّقُوا الَّذِيْ خَلَقَكُمْ وَالْجِبِلَّةَ الْاَوَّلِيْنَ ﴿١٨٤﴾

قَالُوْٓا اِنَّمَآ اَنْتَ مِنَ الْمُسَحَّرِيْنَ ﴿١٨٥﴾ وَمَآ اَنْتَ اِلَّا بَشَرٌ مِّثْلُنَا وَ

اِنْ نَّظُنُّكَ لَمِنَ الْكٰذِبِيْنَ ﴿١٨٦﴾ فَاَسْقِطْ عَلَيْنَا كِسَفًا مِّنَ السَّمَآءِ

اِنْ كُنْتَ مِنَ الصّٰدِقِيْنَ ﴿١٨٧﴾ قَالَ رَبِّيْٓ اَعْلَمُ بِمَا تَعْمَلُوْنَ ﴿١٨٨﴾ فَكَذَّبُوْهُ

فَاَخَذَهُمْ عَذَابُ يَوْمِ الظُّلَّةِ ؕ اِنَّهٗ كَانَ عَذَابَ يَوْمٍ عَظِيْمٍ ﴿١٨٩﴾

167. அ(தற்க)வர்கள்,"லூத்தே! (இவ்வாறு உபதேசிப்பதிலிருந்து) நீர் விலகிக்கொள்ளாவிடில், நிச்சயமாக நீர் (ஊரிலிருந்து) வெளியேற்றப்பட்டவர்களில் ஆகிவிடுவீர்" என்று கூறினார்கள்.

168. அ(தற்க)வர் "நிச்சயமாக நான் உங்களுடைய (இத்தீச்)செயலை வெறுப்பவர்களில் உள்ளவனாவேன்" என்று கூறினார்.

169. "என் இரட்சகனே!என்னையும் என் குடும்பத்தாரையும் இவர்கள் செய்து கொண்டிருப்பவற்றிலிருந்து(ம் அதன் தண்டனையிலிருந்தும்) காப்பாற்றுவாயாக" (என்று பிரார்த்தித்தார்).

170. ஆகவே அவரையும், அவர் குடும்பத்தினர் அனைவரையும் நாம் காப்பாற்றினோம்.

171 (தண்டிக்கப்படுபவர்களோடு) எஞ்சியிருப்போரில் ஆகிவிட்ட ஒரு கிழவி(யான அவர் மனைவி)யைத் தவிர.

172. பின்னர், மற்றவர்களை (அடியோடு) நாம் அழித்துவிட்டோம்.

173. இன்னும், அவர்கள் மீது நாம், (கல்)மாரியை பொழியச் செய்தோம்; ஆகவே அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்பட்ட (அ)வர்களின் (மீது பொழியச்செய்த கல்) மாரி கெட்டதாகி விட்டது.

174. நிச்சயமாக இதிலோர் அத்தாட்சி இருக்கிறது; அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங்கொள்பவர்களாக இருக்கவுமில்லை.

175. (நபியே!) இன்னும், நிச்சயமாக உமதிரட்சகன் _ அவனே (யாவரையும்) மிகைத்தவன்; பெருங்கிருபையுடையவன்.

176. (மரங்கள் அடர்ந்த பகுதியில் மத்யன் என்னும் ஊரில் வாழ்ந்த) தோப்புவாசிகளும் தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.

177. (நபியாகிய) ஷுஐப், அவர்களிடம் " நீங்கள் (அல்லாஹ்வை) பயப்பட மாட்டீர்களா?" என்று கூறிய போது _(அவரை அவர்கள் பொய்யாக்கினார்கள்)

178. "நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதராவேன்".

179. "அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள்; இன்னும், எனக்குக் கீழ்ப்படிந்துநடங்கள்."

180. " இதற்காக நான் உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்கவில்லை; என்னுடைய கூலி(யாவும்) அகிலத்தாரின் இரட்சகன் மீதே தவிர(வேறு எவரின் மீதும்) இல்லை."

181. " அளவையைப் பூரணமாக்குங்கள்; (அளவைக்குறைத்து ஜனங்களுக்கு) நஷ்டமிழைப்போராகவும் நீங்கள் ஆகிவிடாதீர்கள்."

182. மேலும், "சரியான தராசு கொண்டு நிறுங்கள்".

183. " மனிதர்களுக்கு அவர்களின் பொருள்களை நீங்கள் குறைத்தும்விடாதீர்கள்; நீங்கள் பூமியில் குழப்பம் செய்கிறவர்களாகவும் அலையாதீர்கள்."

184. மேலும், "உங்களையும், (உங்களுக்கு) முன்னவர்களான படைப்பினரையும் எவன் படைத்தானோ அத்தகையவனை நீங்கள் பயப்படுங்கள்" (என்றும் கூறினார்).

185. அ(தற்க)வர்கள், "நீரோ சூனியம் செய்யப்பட்டவர்களில் உள்ளவர்" என்று கூறினார்கள்.

186. மேலும், " நீர் எங்களைப் போன்ற ஒரு மனிதரேதவிர (வேறு) இல்லை;இன்னும், நிச்சயமாக நாம் உம்மைப் பொய்யர்களில் உள்ளவராக எண்ணுகிறோம்.

187. " எனவே, நீர் உண்மையாளர்களில் உள்ளவராக இருந்தால் வானத்திலிருந்து பல துண்டுகளை எங்களின் மீது விழச்செய்வீராக" (என்றும் கூறினார்கள்).

188. அ(தற்க)வர், " நீங்கள் செய்துகொண்டிருப்பவற்றை என் இரட்சகன் மிக்க அறிந்தவன்" என்று கூறினார்.

189. பின்னரும், அவர்கள் அவரைப் பொய்யாக்கினார்கள்; ஆகவே (அடர்ந்திருண்ட மேகங்களின்) நிழலுடைய நாளின் வேதனை அவர்களைப் பிடித்துக்கொண்டது; நிச்சயமாக அது மகத்தான(கடினமான) நாளின் வேதனையாக இருந்தது.

إِنَّ فِي ذَٰلِكَ لَآيَةً ۖ وَمَا كَانَ أَكْثَرُهُمْ مُؤْمِنِينَ ﴿١٩٠﴾ وَإِنَّ رَبَّكَ
لَهُوَ الْعَزِيزُ الرَّحِيمُ ﴿١٩١﴾ وَإِنَّهُ لَتَنْزِيلُ رَبِّ الْعَالَمِينَ ﴿١٩٢﴾ نَزَلَ بِهِ ع
الرُّوحُ الْأَمِينُ ﴿١٩٣﴾ عَلَىٰ قَلْبِكَ لِتَكُونَ مِنَ الْمُنْذِرِينَ ﴿١٩٤﴾ بِلِسَانٍ
عَرَبِيٍّ مُبِينٍ ﴿١٩٥﴾ وَإِنَّهُ لَفِي زُبُرِ الْأَوَّلِينَ ﴿١٩٦﴾ أَوَلَمْ يَكُنْ لَهُمْ آيَةً أَنْ
يَعْلَمَهُ عُلَمَاءُ بَنِي إِسْرَائِيلَ ﴿١٩٧﴾ وَلَوْ نَزَّلْنَاهُ عَلَىٰ بَعْضِ الْأَعْجَمِينَ ﴿١٩٨﴾
فَقَرَأَهُ عَلَيْهِمْ مَا كَانُوا بِهِ مُؤْمِنِينَ ﴿١٩٩﴾ كَذَٰلِكَ سَلَكْنَاهُ فِي قُلُوبِ
الْمُجْرِمِينَ ﴿٢٠٠﴾ لَا يُؤْمِنُونَ بِهِ حَتَّىٰ يَرَوُا الْعَذَابَ الْأَلِيمَ ﴿٢٠١﴾ فَيَأْتِيَهُمْ
بَغْتَةً وَهُمْ لَا يَشْعُرُونَ ﴿٢٠٢﴾ فَيَقُولُوا هَلْ نَحْنُ مُنْظَرُونَ ﴿٢٠٣﴾
أَفَبِعَذَابِنَا يَسْتَعْجِلُونَ ﴿٢٠٤﴾ أَفَرَأَيْتَ إِنْ مَتَّعْنَاهُمْ سِنِينَ ﴿٢٠٥﴾ ثُمَّ
جَاءَهُمْ مَا كَانُوا يُوعَدُونَ ﴿٢٠٦﴾ مَا أَغْنَىٰ عَنْهُمْ مَا كَانُوا يُمَتَّعُونَ ﴿٢٠٧﴾
وَمَا أَهْلَكْنَا مِنْ قَرْيَةٍ إِلَّا لَهَا مُنْذِرُونَ ﴿٢٠٨﴾ ذِكْرَىٰ قف وَمَا كُنَّا مع ٩ عند المتقدمين ١٢
ظَالِمِينَ ﴿٢٠٩﴾ وَمَا تَنَزَّلَتْ بِهِ الشَّيَاطِينُ ﴿٢١٠﴾ وَمَا يَنْبَغِي لَهُمْ وَمَا
يَسْتَطِيعُونَ ﴿٢١١﴾ إِنَّهُمْ عَنِ السَّمْعِ لَمَعْزُولُونَ ﴿٢١٢﴾ فَلَا تَدْعُ مَعَ
اللَّهِ إِلَٰهًا آخَرَ فَتَكُونَ مِنَ الْمُعَذَّبِينَ ﴿٢١٣﴾ وَأَنْذِرْ عَشِيرَتَكَ
الْأَقْرَبِينَ ﴿٢١٤﴾ وَاخْفِضْ جَنَاحَكَ لِمَنِ اتَّبَعَكَ مِنَ الْمُؤْمِنِينَ ﴿٢١٥﴾

190. நிச்சயமாக இதிலோர் அத்தாட்சி இருக்கிறது; அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங்கொள்வோராக இருக்கவுமில்லை.
191. மேலும், நிச்சயமாக (நபியே!) உமதிரட்சகன்—அவன்தான் (யாவரையும்) மிகைத்தவன், மிகக்கிருபையுடையவன்.
192. மேலும், (நபியே!) நிச்சயமாக (குர்ஆனாகிய) இது அகிலத்தாரின் இரட்சகனால் இறக்கிவைக்கப்பட்டதாகும்.
193. (அல்லாஹ்வின் கட்டளைப்படி) ரூஹுல் அமீன் (எனும் ஜிப்ரீல்) இதனைக்கொண்டு இறங்கினார்—
194. அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களில் (ஒருவராக) நீர் ஆவதற்காக உமது இதயத்தின் மீது (கூடுதல் குறைவின்றி இதைக் கொண்டு இறங்கினார்)
195. தெளிவான அரபி மொழியைக்கொண்டு (இறங்கினார்).
196. நிச்சயமாக (குர்ஆனாகிய) இது (பற்றிய அறிவிப்பு) முந்தயவர்களின் (வேத) நூல்களிலும் (கூறப்பட்டு) உள்ளது.
197. இஸ்ராயீலின் மக்களிலுள்ள அறிஞர்கள் இதனை அறிந்திருப்பது, அவர்களுக்குப் (போதுமான) அத்தாட்சியாக இருக்கவில்லையா?
198. நாம் (குர்ஆனாகிய) இதை அரபியல்லாத சிலரின் மீது இறக்கிவைத்திருப்போமாயின்;
199. பின்னர், அவர்(கள்) இதை அவர்களுக்கு ஓதிக்காட்டினாலும் இதனை அவர்கள் விசுவாசம் கொள்கிறவர்களாக இல்லை.
200. இவ்வாறே இதனை (இக்) குற்றவாளிகளின் இதயங்களில் நாம் புகுத்திவிட்டோம்.
201. (ஆகவே!) துன்புறுத்தும் வேதனையை அவர்கள் (கண்கூடாகக்) காணும் வரை, இதனைக் கொண்டு அவர்கள் விசுவாசிக்கமாட்டார்கள்.
202. ஆகவே, அ(த் தண்டனையான)து அவர்கள் உணர்ந்து கொள்ளாதிருக்கும் நிலையில், திடீரென அவர்களிடம் வரும்.
203. அது சமயம் அவர்கள் "நாங்கள் (சிறிது) அவகாசம் கொடுக்கப்படுவோரா?" என்று கேட்பார்கள்.
204. "நம்முடைய வேதனைக்காகவா அவர்கள் அவசரப்படுகிறார்கள்?
205. (நபியே!) நீர் பார்த்தீரா? நாம் இவர்களை (இவர்கள் இஷ்டப்பட்டவாறு) பல வருடங்கள் சுகமனுபவிக்கச் செய்திருந்தால்—
206. பின்னர் அவர்கள் வாக்களிக்கப்படுபவர்களாக இருந்தார்களே அ(வ்வேதனையான)து அவர்களுக்கு வந்துவிட்டால்—
207. அவர்கள் சுகமனுபவிக்கச்செய்யப்பட்டிருந்தவை அவர்களுக்கு யாதொரு பயனும்தராது.
208. எந்த ஊ(ரா)ரையும், அதற்கு அச்சமூட்டிஎச்சரிப்பவர்கள் இல்லாது நாம் அழித்துவிடவில்லை.
209. (அவர்களுக்கு) நினைவூட்டவே (எச்சரிக்கையாளர்களை நாம் அனுப்பினோம்) இன்னும் (எவருக்கும்) அநியாயம் செய்பவர்களாகவும் நாம் இருக்கவில்லை.
210. இன்னும், (குர்ஆனாகிய) இ(வ்வேதத்)தைக் கொண்டு ஷைத்தான்கள் இறங்கவில்லை.
211. மேலும், (அது) அவர்களுக்குத் தகுதியுமன்று; அவர்கள் (அதற்கு) சக்தி பெறவும்மாட்டார்கள்.
212. நிச்சயமாக அவர்கள் செவியேற்பதிலிருந்தும் தடுக்கப்பட்டவர்களாவர்.
213. எனவே, அல்லாஹ்வுடன் வேறோர் நாயனை நீர் அழைக்காதீர்; (அவ்வாறு அழைத்தால்) அதனால் நீர் வேதனை செய்யப்படுபவர்களில் (உள்ளவராக) ஆகிவிடுவீர்.
214. இன்னும் நீர் உம்முடைய நெருங்கிய உறவினர்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக!
215. இன்னும் விசுவாசிகளில் உம்மைப்பின்பற்றியோருக்கு உம்முடைய (அன்பு காட்டுதல் எனும்) இறக்கையைத் தாழ்த்துவீராக!

فَإِنْ عَصَوْكَ فَقُلْ إِنِّي بَرِيٓءٌ مِّمَّا تَعْمَلُونَ ﴿٢١٦﴾ وَتَوَكَّلْ عَلَى الْعَزِيزِ
الرَّحِيمِ ﴿٢١٧﴾ الَّذِي يَرٰىكَ حِينَ تَقُومُ ﴿٢١٨﴾ وَتَقَلُّبَكَ فِي السّٰجِدِينَ ﴿٢١٩﴾
إِنَّهٗ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ ﴿٢٢٠﴾ هَلْ أُنَبِّئُكُمْ عَلٰى مَنْ تَنَزَّلُ الشَّيٰطِينُ ﴿٢٢١﴾
تَنَزَّلُ عَلٰى كُلِّ أَفَّاكٍ أَثِيمٍ ﴿٢٢٢﴾ يُّلْقُونَ السَّمْعَ وَأَكْثَرُهُمْ كٰذِبُونَ ﴿٢٢٣﴾
وَالشُّعَرَآءُ يَتَّبِعُهُمُ الْغَاوٗنَ ﴿٢٢٤﴾ أَلَمْ تَرَ أَنَّهُمْ فِي كُلِّ وَادٍ
يَّهِيمُونَ ﴿٢٢٥﴾ وَأَنَّهُمْ يَقُولُونَ مَا لَا يَفْعَلُونَ ﴿٢٢٦﴾ إِلَّا الَّذِينَ أٰمَنُوا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَذَكَرُوا اللّٰهَ كَثِيرًا وَّانْتَصَرُوا مِنْ بَعْدِ مَا
ظُلِمُوا ؕ وَسَيَعْلَمُ الَّذِينَ ظَلَمُوٓا أَيَّ مُنْقَلَبٍ يَّنْقَلِبُونَ ﴿٢٢٧﴾ ع ١١ ٣٦ ١٥

سُورَةُ النَّمْلِ مَكِّيَّةٌ وَهِيَ ثَلٰثٌ وَّتِسْعُونَ اٰيَةً وَّسَبْعُ رُكُوعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○

طٰسٓ قف تِلْكَ اٰيٰتُ الْقُرْاٰنِ وَكِتَابٍ مُّبِينٍ ﴿١﴾ هُدًى وَّبُشْرٰى
لِلْمُؤْمِنِينَ ﴿٢﴾ الَّذِينَ يُقِيمُونَ الصَّلٰوةَ وَيُؤْتُونَ الزَّكٰوةَ وَ
هُمْ بِالْاٰخِرَةِ هُمْ يُوقِنُونَ ﴿٣﴾ إِنَّ الَّذِينَ لَا يُؤْمِنُونَ بِالْاٰخِرَةِ
زَيَّنَّا لَهُمْ أَعْمَالَهُمْ فَهُمْ يَعْمَهُونَ ﴿٤﴾ أُولٰٓئِكَ الَّذِينَ
لَهُمْ سُوٓءُ الْعَذَابِ وَهُمْ فِي الْاٰخِرَةِ هُمُ الْأَخْسَرُونَ ﴿٥﴾

216. ஆகவே உமக்கு அவர்கள் மாறு செய்தால், "நிச்சயமாக நீங்கள் செய்வதைவிட்டும் நான் நீங்கியவன்" என்று கூறுவீராக!
217. (யாவரையும்) மிகைத்தவனாகிய, மிகக்கிருபையுடையவனின் மீது (சகலத்தையும் ஒப்படைத்து முழுமையாக)நம்பிக்கை வைப்பீராக.
218. அவன் எத்தகையவனென்றால், நீர் (தனித்து வணங்குவதற்காக) நிற்கும்சமயத்தில், அவன் உம்மைப்பார்க்கிறான்.
219. சிரம்பணிவோரில் (ருகூவு, ஸுஜூது செய்வதுகொண்டு நீர் இருக்கின்ற போது)உம்முடைய இயங்குதலையும் (அவன்பார்க்கிறான்.)
220. நிச்சயமாக அவன்_அவனே செவியேற்கிறவன், நன்கறிகிறவன்.
221. (விசுவாசிகளே!) ஷைத்தான்கள் எவர்மீது இறங்குகின்றனர் என்பதை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா?
222. (செயலால்) பாவியான, (சொல்லால்) அதிகமாகப் பொய்கூறும் ஒவ்வொருவரின் மீதும் அவர்கள் இறங்குகின்றனர்.
223. தாங்கள் கேள்விப்பட்டதை, ( அப்பொய்யர்களின் காதுகளில்) போடுகிறார்கள்; அவர்களில் பெரும்பாலோர் (பெரும்) பொய்யர்களே!
224. இன்னும் கவிஞர்கள் _ அவர்களை வழிகெட்டவர்கள் தாம் பின்பற்றுகிறார்கள்.
225. நிச்சயமாக அவர்கள் ஒவ்வொரு பள்ளத்தாக்கிலும் (தட்டழிந்து) திரிகிறார்கள் என்பதை நீர் காணவில்லையா?
226. இன்னும் நிச்சயமாக அவர்கள் தாங்கள்செய்யாதவைகளை(ச் செய்ததாக)க் கூறுகிறார்கள்.
227. (ஆயினும் அவர்களில்) விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்து, அல்லாஹ்வையும் அதிகமாக நினைவுகூர்ந்து, தாங்கள் அநியாயம் செய்யப்பட்டபின் பழி தீர்த்துக் கொண்டார்களே அத்தகையோரைத்தவிர. மேலும், அநியாயம் செய்தோர், தாங்கள் எந்த மீளும் தலத்திற்கு திரும்பச் செல்ல வேண்டுமென்பதை (அதிசீக்கிரத்தில்)அறிந்துகொள்வார்கள்.

---

அத்தியாயம் : 27

## அந்நம்லு _ எறும்புகள்

வசனங்கள் : 93 மக்கீ ருகூஉகள் : 7

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. தா ஸீன் _ இவை குர்ஆனுடைய _ இன்னும் தெளிவான வேதத்தினுடைய _ வசனங்களாகும்.
2. விசுவாசங்கொண்டோருக்கு ஒரு நேர்வழியாகவும், நன்மாராயமாகவும் இருக்கிறது.
3. அவர்கள் எத்தகையோரென்றால், தொழுகையை நிறைவேற்றுவார்கள்; ஜகாத்தும் கொடுத்து வருவார்கள்; அன்றியும், மறுமையையும் அவர்கள் உறுதிகொள்வார்கள்.
4. நிச்சயமாக மறுமையைக்கொண்டு விசுவாசங்கொள்ளவில்லையே அத்தகையவர்கள் _(அவர்களுடைய நிராகரிப்பின் காரணமாக) அவர்களுடைய செயல்களை நாம் அவர்களுக்கு அலங்கரித்துக்காண்பித்துவிட்டோம். ஆகவே, அவர்கள் (அதில்) தட்டழி(ந்து திரி)கின்றனர்.
5. அவர்கள் எத்தகையோரென்றால், (இம்மையில்) அவர்களுக்குத் தீய வேதனை உண்டு; இன்னும், அவர்கள் மறுமையில்_ அவர்களே பெரும் நஷ்டமடைந்தவர்கள்.

الثلثة وَاِنَّكَ لَتُلَقَّى الْقُرْاٰنَ مِنْ لَّدُنْ حَكِيْمٍ عَلِيْمٍ ۝٦ اِذْ قَالَ مُوْسٰى
لِاَهْلِهٖٓ اِنِّیْٓ اٰنَسْتُ نَارًا ؕ سَاٰتِيْكُمْ مِّنْهَا بِخَبَرٍ اَوْ اٰتِيْكُمْ بِشِهَابٍ قَبَسٍ
لَّعَلَّكُمْ تَصْطَلُوْنَ ۝٧ فَلَمَّا جَآءَهَا نُوْدِیَ اَنْۢ بُوْرِكَ مَنْ فِی النَّارِ وَ
مَنْ حَوْلَهَا ؕ وَسُبْحٰنَ اللّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٨ يٰمُوْسٰٓى اِنَّهٗٓ اَنَا اللّٰهُ
الْعَزِيْزُ الْحَكِيْمُ ۙ۝٩ وَاَلْقِ عَصَاكَ ؕ فَلَمَّا رَاٰهَا تَهْتَزُّ كَاَنَّهَا جَآنٌّ
وَّلّٰى مُدْبِرًا وَّلَمْ يُعَقِّبْ ؕ يٰمُوْسٰى لَا تَخَفْ ۣ اِنِّیْ لَا يَخَافُ لَدَیَّ
الْمُرْسَلُوْنَ ۝١٠ اِلَّا مَنْ ظَلَمَ ثُمَّ بَدَّلَ حُسْنًۢا بَعْدَ سُوْٓءٍ فَاِنِّیْ
غَفُوْرٌ رَّحِيْمٌ ۝١١ وَاَدْخِلْ يَدَكَ فِیْ جَيْبِكَ تَخْرُجْ بَيْضَآءَ مِنْ
غَيْرِ سُوْٓءٍ ۣ فِیْ تِسْعِ اٰيٰتٍ اِلٰى فِرْعَوْنَ وَقَوْمِهٖ ؕ اِنَّهُمْ كَانُوْا
قَوْمًا فٰسِقِيْنَ ۝١٢ فَلَمَّا جَآءَتْهُمْ اٰيٰتُنَا مُبْصِرَةً قَالُوْا هٰذَا
سِحْرٌ مُّبِيْنٌ ۝١٣ وَجَحَدُوْا بِهَا وَاسْتَيْقَنَتْهَآ اَنْفُسُهُمْ ظُلْمًا وَّعُلُوًّا ؕ
ع ١ ١٤ ١٦ فَانْظُرْ كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُفْسِدِيْنَ ۝١٤ وَلَقَدْ اٰتَيْنَا دَاوٗدَ وَ
سُلَيْمٰنَ عِلْمًا ۚ وَقَالَا الْحَمْدُ لِلّٰهِ الَّذِیْ فَضَّلَنَا عَلٰى كَثِيْرٍ مِّنْ عِبَادِهِ
الْمُؤْمِنِيْنَ ۝١٥ وَوَرِثَ سُلَيْمٰنُ دَاوٗدَ وَقَالَ يٰٓاَيُّهَا النَّاسُ عُلِّمْنَا
مَنْطِقَ الطَّيْرِ وَاُوْتِيْنَا مِنْ كُلِّ شَیْءٍ ؕ اِنَّ هٰذَا لَهُوَ الْفَضْلُ الْمُبِيْنُ ۝١٦

6. (நபியே!) நிச்சயமாக தீர்க்கமான அறிவுடைய, (யாவையும்) நன்கறிந்தவனிடமிருந்து நீர் இந்தக் குர்ஆனைக் கொடுக்கப்படுகிறீர்.

7. மூஸா, தன் குடும்பத்தினரிடம், "நிச்சயமாக நான் ஒரு நெருப்பைக் காண்கிறேன்; (சென்றடையவேண்டிய வழிபற்றி) ஏதேனும் ஒரு செய்தியை அங்கிருந்து உங்களுக்குக் கொண்டு வருகிறேன். அல்லது நீங்கள் குளிர்காய்வதற்கு ஒரு நெருப்புப்பந்தத்தை (யாவது)கொண்டு வருகிறேன்" என்று கூறியதை (நபியே! நீர் நினைவு கூர்வீராக).

8. எனவே, அவர் அதனிடம் வந்த சமயத்தில், "நெருப்பில் இருப்பவர் மீதும், அதைச் சூழ இருப்பவர்(களான மலக்கு)கள் மீதும் பெரும் பாக்கியமளிக்கப்பட்டுள்ளது; மேலும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் மிக்க பரிசுத்தமானவன்" என்று அழைக்கப்பட்டார்.

9. "மூஸாவே! நிச்சயமாக நான்தான் அல்லாஹ்; (யாவரையும்) மிகைத்தோன், தீர்க்கமான அறிவுடையோன்."

10. மேலும் "நீர் உம்முடைய தடியைப் போடும்" (என்று கூறப்பட்டதும், அவர் அதைப் போட்டார்.) அது ஒரு பாம்பைப்போல் மிகத்துரிதமாக நெளிந்து கொண்டிருக்க அதனைக் கண்டு, (பயந்து) அவர் திரும்பிப் பார்க்காது புறமுதுகிட்டுப் பின் சென்றார்; (அப்போது) "மூஸாவே! நீர் பயப்படாதீர்; நிச்சயமாக நான் (எத்தகையோனென்றால்) – தூதர்கள் என்னிடத்தில் பயப்படமாட்டார்கள்" (என்று அவருக்குக் கூறப்பட்டது)

11. "(ஆயினும்) எவர் அநியாயம் செய்து பின்னர் தீமைக்குப்பின் (அதனை) நன்மையாக மாற்றிக்கொள்கிறாரோ, அவரைத்தவிர – அப்பொழுது நிச்சயமாக நான் மிக்க மன்னிக்கிறவன், மிகக் கிருபையுடையவன்.

12. ("மூஸாவே!) இன்னும் நீர் உமது கையை, உம்முடைய சட்டைப்பைக்குள் நுழைப்பீராக! அது எவ்விதத் தீங்குமின்றி வெண்மையாக (ப் பிரகாசத்துடன்) வெளிவரும்; (இவை இரண்டும்) ஃபிர்அவ்னிடமும், அவனுடைய சமூகத்தாரிடமும் (நீர் எடுத்துச் சென்று காண்பிப்பதற்குரிய) ஒன்பது அத்தாட்சிகளில் உள்ளவையாகும்; நிச்சயமாக அவர்கள் பாவம் செய்யும் சமூகத்தவராக இருக்கின்றனர்" (என்றும் கூறப்பட்டது).

13. நம்முடைய அத்தாட்சிகள் (மிகத்தெளிவாக) பார்க்கக்கூடியவையாக அவர்களிடம் வந்தபொழுது, "இது தெளிவான சூனியம்தான்" என்று அவர்கள் கூறினார்கள்.

14. அவர்களுடைய இதயங்கள் அதனை (உண்மையென) உறுதிகொண்ட நிலையில் அநியாயமாகவும், அகம்பாவத்தாலும் அதனை அவர்கள் மறுத்தார்கள்; ஆகவே இந்த குழப்பவாதிகளின் முடிவு எப்படி இருந்தது என்பதை (நபியே!) நீர் (கவனித்துப்)பார்ப்பீராக!

15. தாவூதுக்கும், ஸுலைமானுக்கும் நிச்சயமாக நாம் கல்வியைக் கொடுத்தோம்; "விசுவாசங்கொண்ட தன்னுடைய (நல்ல) அடியார்களில் அநேகரைவிட எங்களை மேன்மையாக்கி வைத்தவனாகிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் உரியது" என்று அவ்விருவரும் கூறி (நன்றி செலுத்தி)னார்கள்.

16. மேலும் ஸுலைமான், தாவூதுக்கு வாரிசாக ஆனார்; இன்னும், "மனிதர்களே! பறவைகளின் மொழியை நாங்கள் கற்றுக்கொடுக்கப்பட்டுள்ளோம்; இன்னும், (எங்களுக்கு வேண்டிய) ஒவ்வொரு பொருளிலிருந்தும் (ஏராளமாக) நாங்கள் கொடுக்கப்பட்டுள்ளோம்; நிச்சயமாக இது – இதுதான் (அல்லாஹ்வின்) மிகத் தெளிவான பேரருளாகும்" என்று அவர் கூறி (நன்றியும் செலுத்தி)னார்.

وَحُشِرَ لِسُلَيْمٰنَ جُنُوْدُهٗ مِنَ الْجِنِّ وَالْاِنْسِ وَالطَّيْرِ فَهُمْ يُوْزَعُوْنَ ﴿۱۷﴾
حَتّٰۤى اِذَاۤ اَتَوْا عَلٰى وَادِ النَّمْلِ ۙ قَالَتْ نَمْلَةٌ يّٰۤاَيُّهَا النَّمْلُ ادْخُلُوْا
مَسٰكِنَكُمْ ۚ لَا يَحْطِمَنَّكُمْ سُلَيْمٰنُ وَجُنُوْدُهٗ ۙ وَهُمْ لَا يَشْعُرُوْنَ ﴿۱۸﴾
فَتَبَسَّمَ ضَاحِكًا مِّنْ قَوْلِهَا وَقَالَ رَبِّ اَوْزِعْنِيْۤ اَنْ اَشْكُرَ
نِعْمَتَكَ الَّتِيْۤ اَنْعَمْتَ عَلَيَّ وَعَلٰى وَالِدَيَّ وَاَنْ اَعْمَلَ صَالِحًا
تَرْضٰىهُ وَاَدْخِلْنِيْ بِرَحْمَتِكَ فِيْ عِبَادِكَ الصّٰلِحِيْنَ ﴿۱۹﴾ وَتَفَقَّدَ
الطَّيْرَ فَقَالَ مَا لِيَ لَاۤ اَرَى الْهُدْهُدَ ۖ اَمْ كَانَ مِنَ الْغَآئِبِيْنَ ﴿۲۰﴾
لَاُعَذِّبَنَّهٗ عَذَابًا شَدِيْدًا اَوْ لَاۡاَذْبَحَنَّهٗۤ اَوْ لَيَاْتِيَنِّيْ بِسُلْطٰنٍ
مُّبِيْنٍ ﴿۲۱﴾ فَمَكَثَ غَيْرَ بَعِيْدٍ فَقَالَ اَحَطْتُّ بِمَا لَمْ تُحِطْ بِهٖ وَ
جِئْتُكَ مِنْ سَبَاٍ ۭ بِنَبَاٍ يَّقِيْنٍ ﴿۲۲﴾ اِنِّيْ وَجَدْتُّ امْرَاَةً تَمْلِكُهُمْ
وَاُوْتِيَتْ مِنْ كُلِّ شَيْءٍ وَّلَهَا عَرْشٌ عَظِيْمٌ ﴿۲۳﴾ وَجَدْتُّهَا وَقَوْمَهَا
يَسْجُدُوْنَ لِلشَّمْسِ مِنْ دُوْنِ اللّٰهِ وَزَيَّنَ لَهُمُ الشَّيْطٰنُ اَعْمَالَهُمْ
فَصَدَّهُمْ عَنِ السَّبِيْلِ فَهُمْ لَا يَهْتَدُوْنَ ۙ ﴿۲۴﴾ اَلَّا يَسْجُدُوْا لِلّٰهِ
الَّذِيْ يُخْرِجُ الْخَبْءَ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَيَعْلَمُ مَا تُخْفُوْنَ
وَمَا تُعْلِنُوْنَ ﴿۲۵﴾ اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ رَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ ۩ ﴿۲۶﴾

السجدة ۸

17. மேலும் ஸுலைமானுக்கு, ஜின்கள், மனிதர்கள், பறவைகள் முதலியவற்றிலிருந்து அவரது படைகள் அவர் முன் திரட்டப்பட்டது; பிறகு (அவர்களில் முன்னுள்ளவர்களுடன் அவர்களில் பின்னுள்ளவர்கள் சேர்ந்து கொள்வதற்காக)_ அவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டனர்.

18. இறுதியாக அவர்கள் எறும்புகள் வசிக்கும் ஓர் ஓடையின் சமீபமாக வந்தபொழுது (அவற்றில்) ஓர் எறும்பு: (மற்ற எறும்புகளிடம்,) "எறும்புகளே! நீங்கள் உங்கள் புற்றுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள் ; ஸுலைமானும், அவருடைய படையினரும்(உங்களைப்பற்றி)உணராது,உங்களைத் திண்ணமாக மிதித்துவிடவேண்டாம்" என்று கூறியது.

19. அப்போது அதனுடைய சொல்லால் சிரித்தவராக அவர் புன்னகை புரிந்தார். "என் இரட்சகனே! நீ என்மீதும், என் தாய் தந்தையர் மீதும் புரிந்த உன்னுடைய அருள்களுக்கு (உனக்கு) நான் நன்றி செலுத்துவதற்கும், எதனை நீ பொருந்திக்கொள்வாயோ அத்தகைய நற்செயலையும் நான் செய்ய(க்கூடிய நற்பேறை எனக்கு) அருள் புரிவாயாக! இன்னும், உன்னுடைய கிருபையைக் கொண்டு உன்னுடைய நல்லடியார்களின் கூட்டத்தில் என்னைப் பிரவேசிக்கச் செய்வாயாக!" என்று (பிரார்த்தனை செய்து) அவர் கூறினார்.

20. இன்னும் அவர், பறவைகளை(க்கணக்கெடுக்க)ப் பார்வையிட்டார். "எனக்கு என்ன ஆயிற்று ?(பறவைகளில்) "ஹுத் ஹுதை" நான் காணவில்லையே! அல்லது அது (வராமல்) மறைந்தவற்றில் ஆகிவிட்டதா?" என்று கூறினார்.

21. "நிச்சயமாக நான் அதனைக் கடினமான வேதனையாக வேதனை செய்வேன்; அல்லது அதனை நிச்சயமாக நான் அறுத்துவிடுவேன்; அல்லது (அது வராததற்குத்) தெளிவான ஆதாரத்தைத் திட்டமாக அது (என் முன்) கொண்டுவரவேண்டும்" என்று கூறினார்.

22. (இவ்வாறு கூறி) சிறிது நேரம் தாமதித்தார். (அதற்குள் ஹுத் ஹுத் வந்து) "நீங்கள் அறியாத ஒரு விஷயத்தை நான் அறிந்துகொண்டேன். 'ஸபஉ'விலிருந்து உம்மிடம் உறுதியான செய்தியைக் கொண்டுவந்திருக்கிறேன்" என்று அது கூறியது.

23. "அவர்களை (அங்கு) ஆட்சிசெய்கின்ற ஒரு பெண்ணை நிச்சயமாக நான் கண்டேன்; ஒவ்வொரு பொருளிலிருந்தும் அவள் கொடுக்கப்பட்டுள்ளாள்; மகத்தான சிம்மாசனமும் அவளுக்கு இருக்கின்றது."

24. "அவளையும், அவளுடைய சமூகத்தாரையும் அல்லாஹ்வையன்றி சூரியனுக்குச் சிரம்பணி(ந்து வணங்கு)பவர்களாக நான் கண்டேன்; அவர்களுடைய இக்காரியங்களை ஷைத்தான் அவர்களுக்கு அலங்காரமாகக் காண்பித்தும்விட்டான்; எனவே, அவர்களை நேரான பாதையிலிருந்து அவன் தடுத்துவிட்டான்; ஆகவே, அவர்கள் நேர்வழி பெறவில்லை_

25."வானங்களிலும், பூமியிலும் மறைந்திருப்பவற்றை வெளிக்கொணர்பவனும், நீங்கள் மறைத்துக்கொள்வதையும், நீங்கள் வெளியாக்குவதையும் நன்கறிபவனுமாகிய அல்லாஹ்வுக்கு அவர்கள் சிரம்பணியாமல் இருப்பதற்கு (ஷைத்தான் தடுத்துவிட்டதே) காரணமாகும்.

26. அல்லாஹ்_அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை; அவன் தான் மகத்தான அர்ஷுக்குரியவன்" (என்று ஹுத் ஹுது கூறிற்று.)

قَالَ سَنَنْظُرُ اَصَدَقْتَ اَمْ كُنْتَ مِنَ الْكٰذِبِيْنَ ﴿٢٧﴾ اِذْهَبْ بِّكِتٰبِيْ
هٰذَا فَاَلْقِهْ اِلَيْهِمْ ثُمَّ تَوَلَّ عَنْهُمْ فَانْظُرْ مَاذَا يَرْجِعُوْنَ ﴿٢٨﴾ قَالَتْ
يٰاَيُّهَا الْمَلَؤُا اِنِّيْٓ اُلْقِيَ اِلَيَّ كِتٰبٌ كَرِيْمٌ ﴿٢٩﴾ اِنَّهٗ مِنْ سُلَيْمٰنَ وَاِنَّهٗ
ع ٢ ١٧ ١٧ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣٠﴾ اَلَّا تَعْلُوْا عَلَيَّ وَاْتُوْنِيْ مُسْلِمِيْنَ ﴿٣١﴾ ع
قَالَتْ يٰاَيُّهَا الْمَلَؤُا اَفْتُوْنِيْ فِيْٓ اَمْرِيْ ۚ مَا كُنْتُ قَاطِعَةً اَمْرًا
حَتّٰى تَشْهَدُوْنِ ﴿٣٢﴾ قَالُوْا نَحْنُ اُولُوْا قُوَّةٍ وَّاُولُوْا بَاْسٍ شَدِيْدٍ ۙ۵
وَّالْاَمْرُ اِلَيْكِ فَانْظُرِيْ مَاذَا تَاْمُرِيْنَ ﴿٣٣﴾ قَالَتْ اِنَّ الْمُلُوْكَ
اِذَا دَخَلُوْا قَرْيَةً اَفْسَدُوْهَا وَجَعَلُوْٓا اَعِزَّةَ اَهْلِهَآ اَذِلَّةً ۚ وَ
كَذٰلِكَ يَفْعَلُوْنَ ﴿٣٤﴾ وَاِنِّيْ مُرْسِلَةٌ اِلَيْهِمْ بِهَدِيَّةٍ فَنٰظِرَةٌۢ بِمَ
يَرْجِعُ الْمُرْسَلُوْنَ ﴿٣٥﴾ فَلَمَّا جَآءَ سُلَيْمٰنَ قَالَ اَتُمِدُّوْنَنِ بِمَالٍ ۫ فَمَآ
اٰتٰىنِۦَ اللّٰهُ خَيْرٌ مِّمَّآ اٰتٰىكُمْ ۚ بَلْ اَنْتُمْ بِهَدِيَّتِكُمْ تَفْرَحُوْنَ ﴿٣٦﴾ اِرْجِعْ
اِلَيْهِمْ فَلَنَاْتِيَنَّهُمْ بِجُنُوْدٍ لَّا قِبَلَ لَهُمْ بِهَا وَلَنُخْرِجَنَّهُمْ مِّنْهَآ
اَذِلَّةً وَّهُمْ صٰغِرُوْنَ ﴿٣٧﴾ قَالَ يٰاَيُّهَا الْمَلَؤُا اَيُّكُمْ يَاْتِيْنِيْ بِعَرْشِهَا
قَبْلَ اَنْ يَّاْتُوْنِيْ مُسْلِمِيْنَ ﴿٣٨﴾ قَالَ عِفْرِيْتٌ مِّنَ الْجِنِّ اَنَا اٰتِيْكَ
بِهٖ قَبْلَ اَنْ تَقُوْمَ مِنْ مَّقَامِكَ ۚ وَاِنِّيْ عَلَيْهِ لَقَوِيٌّ اَمِيْنٌ ﴿٣٩﴾

27. "நீ உண்மை சொல்கிறாயா, அல்லது பொய்யர்களில் நீ இருக்கிறாயா? என்பதை நாம் காண்போம்" என்றும் (ஸுலைமானாகிய) அவர் கூறினார்.

28. "என்னுடைய இக்கடிதத்தைக் கொண்டுசென்று, அவர்கள்பால் போட்டுவிட்டுப் பின்னர் அவர்களை விட்டுப்பின் வாங்கி (இருந்து), அவர்கள் என்ன முடிவுக்கு வருகிறார்கள் என்பதை நீ கவனி(த்து வா" என்று கூறினார்).

29. (அவ்வாறே அப்பறவை செய்தது, அக்கடிதத்தைப் பெற்ற அவ்வரசி) "பிரதானிகளே! மிக்க கண்ணியமுள்ள ஒரு கடிதம் என் முன் போடப்பட்டிருக்கின்றது" என்று அவள் கூறினாள்.

30. நிச்சயமாக "இது ஸுலைமானிடமிருந்து வந்துள்ளது; இன்னும், நிச்சயமாக அ(தன் ஆரம்பமான)து பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம் என்று "(எழுதப்பட்டு) இருக்கிறது.

31. "நீங்கள் என் மீது(எனக்கெதிராக) பெருமை பாராட்டாதீர்கள். (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களாக என்னிடம் வாருங்கள்" என்று(ம்,எழுதப்பட்டு) இருக்கின்றது,(என அவள் கூறினாள்.)

32. "பிரதானிகளே ! என்னுடைய (இவ்) விஷயத்தில் நீங்கள் (உங்கள்) ஆலோசனையைக் கூறுவீர்களாக! எனக்கு நீங்கள் முன்னிலையாகி (அபிப்பிராயம்) கூறாதவரையில், நான் எவ்விஷயத்தையும் முடிவு செய்பவளல்ல" என்று அவள் கூறினாள்.

33. அ(தற்க)வர்கள், "நாங்கள் பலசாலிகளாகவும், கடுமையாக போர் செய்யக் கூடியவர்களாகவும் இருக்கின்றோம்; இன்னும், கட்டளையிடுவது உங்களிடமுள்ளது; ஆகவே, நீங்கள் எதைக்கட்டளையிடுகிறீர்கள் என்பதை நன்கு கவனித்துப் பாருங்கள்" என்று கூறினார்கள்.

34. அ(தற்க)வள்: "நிச்சயமாக அரசர்கள் எந்த ஒரு ஊரிலும் (படையெடுத்து) நுழைவார்களானால், அதனைப் பாழ்படுத்தி விடுகின்றனர்; அன்றியும், அங்குள்ள கண்ணியவான்களை (இழிவுபடுத்தி) சிறுமையாளர்களாக ஆக்கி விடுகின்றனர். இவர்களும் அவ்வாறே செய்வார்கள்" என்று கூறினாள்.

35. மேலும், "நிச்சயமாக நான் அவர்களிடம் ஓர் அன்பளிப்பை அனுப்பி வைக்கக்கூடியவளாக இருக்கிறேன்; பின்னர் தூதர்கள் என்ன பதில் கொண்டுவருகிறார்கள் என்பதை நான் பார்க்கப்போகிறேன்" (என்றும் கூறினாள்).

36. அவர்கள் ஸுலைமானிடம் வரவே, "நீங்கள் பொருளைக் கொண்டு எனக்கு உதவி செய்கின்றீர்களா? அல்லாஹ் எனக்குக் கொடுத்திருப்பவைகள் உங்களுக்குக் கொடுத்திருப்பவைகளைவிட மிகச் சிறந்ததாகும்; மாறாக, உங்களுடைய அன்பளிப்பைக் கொண்டு நீங்களே சந்தோஷமடைவீர்கள்" என்றுகூறினார்.

37. "நீர் அவர்களிடம் திரும்பிச் செல்வீராக! நிச்சயமாக நாங்கள் படைகளுடன் அவர்களிடம் வருவோம்; அவர்களுக்கு அதை எதிர்க்க பலம் இல்லை; இன்னும், அவர்கள் சிறுமையடைந்தவர்களாக இருக்கும் நிலையில், கேவலமான வர்களாக அ(வர்களின் நகரத்) திலிருந்து அவர்களை நிச்சயமாக வெளியேற்றி விடுவோம் (என்றும் கூறினார்).

38. "பிரதானிகளே! அவர்கள் முஸ்லிம்களாக என்னிடம் வந்து சேர்வதற்கு முன்னதாகவே, உங்களில் யார் அவளுடைய சிம்மாசனத்தை என்னிடம் கொண்டு வருபவர்?" என்று (ஸுலைமானாகிய) அவர் கேட்டார்.

39. அதற்கு ஜின்களிலுள்ள இஃப்ரீத் (என்ற மிகப்பலம்பெற்ற ஜின்), " நீங்கள் உங்கள் இடத்திலிருந்து எழுந்திருப்பதற்கு முன், அதனை நான் உங்களிடம் கொண்டுவந்துவிடுவேன்; நிச்சயமாக நான் இதற்கு மிக்க சக்தியுடையவன்; மிக்க நம்பிக்கையும் உடையவன்" என்று கூறியது.

قَالَ الَّذِیۡ عِنۡدَهٗ عِلۡمٌ مِّنَ الۡكِتٰبِ اَنَا اٰتِیۡكَ بِهٖ قَبۡلَ
اَنۡ یَّرۡتَدَّ اِلَیۡكَ طَرۡفُكَ ؕ فَلَمَّا رَاٰهُ مُسۡتَقِرًّا عِنۡدَهٗ قَالَ
هٰذَا مِنۡ فَضۡلِ رَبِّیۡ ۫قف لِیَبۡلُوَنِیۡۤ ءَاَشۡكُرُ اَمۡ اَكۡفُرُ ؕ وَ مَنۡ
شَكَرَ فَاِنَّمَا یَشۡكُرُ لِنَفۡسِهٖ ۚ وَ مَنۡ كَفَرَ فَاِنَّ رَبِّیۡ غَنِیٌّ
كَرِیۡمٌ ﴿۴۰﴾ قَالَ نَكِّرُوۡا لَهَا عَرۡشَهَا نَنۡظُرۡ اَتَهۡتَدِیۡۤ اَمۡ تَكُوۡنُ
مِنَ الَّذِیۡنَ لَا یَهۡتَدُوۡنَ ﴿۴۱﴾ فَلَمَّا جَآءَتۡ قِیۡلَ اَهٰكَذَا
عَرۡشُكِ ؕ قَالَتۡ كَاَنَّهٗ هُوَ ۚ وَ اُوۡتِیۡنَا الۡعِلۡمَ مِنۡ قَبۡلِهَا وَ
كُنَّا مُسۡلِمِیۡنَ ﴿۴۲﴾ وَ صَدَّهَا مَا كَانَتۡ تَّعۡبُدُ مِنۡ دُوۡنِ اللّٰهِ ؕ
اِنَّهَا كَانَتۡ مِنۡ قَوۡمٍ كٰفِرِیۡنَ ﴿۴۳﴾ قِیۡلَ لَهَا ادۡخُلِی الصَّرۡحَ ۚ
فَلَمَّا رَاَتۡهُ حَسِبَتۡهُ لُجَّةً وَّ كَشَفَتۡ عَنۡ سَاقَیۡهَا ؕ قَالَ اِنَّهٗ
صَرۡحٌ مُّمَرَّدٌ مِّنۡ قَوَارِیۡرَ ۬ؕ قَالَتۡ رَبِّ اِنِّیۡ ظَلَمۡتُ نَفۡسِیۡ وَ
اَسۡلَمۡتُ مَعَ سُلَیۡمٰنَ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۴۴﴾ وَ لَقَدۡ اَرۡسَلۡنَاۤ اِلٰی ع ۳ ۳ ۱۸
ثَمُوۡدَ اَخَاهُمۡ صٰلِحًا اَنِ اعۡبُدُوا اللّٰهَ فَاِذَا هُمۡ فَرِیۡقٰنِ
یَخۡتَصِمُوۡنَ ﴿۴۵﴾ قَالَ یٰقَوۡمِ لِمَ تَسۡتَعۡجِلُوۡنَ بِالسَّیِّئَةِ قَبۡلَ
الۡحَسَنَةِ ۚ لَوۡ لَا تَسۡتَغۡفِرُوۡنَ اللّٰهَ لَعَلَّكُمۡ تُرۡحَمُوۡنَ ﴿۴۶﴾

40. (எனினும்,) வேதத்திலிருந்து அறிவைத் தன்னிடம் கொண்டிருந்தவரான ஒருவர் "உம்முடைய பார்வை உம் பக்கம் திரும்புமுன்(கண் இமைப்பதற்குள்) அதனை நான் உம்மிடம் கொண்டுவந்துவிடுவேன்" என்று கூறினார்;(அவ்வாறே கொண்டுவரப்பட்டு,) அது தம் முன் நிலைபெற்றிருப்பதை (ஸுலைமானாகிய) அவர் கண்டபோது," இது என் இரட்சகனின் பேரருளில்உள்ளதாகும்; நான் அவனுக்கு நன்றி செலுத்துகின்றேனா? அல்லது நன்றி கெட்டவனாக இருக்கிறேனா? என்று என்னைச் சோதிப்பதற்காக(இவ்வாறு வழங்கியுள்ளான்); மேலும், எவர் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துகிறாரோ அவர் நன்றிசெலுத்துவதெல்லாம் (அதன் பலன்) அவருக்கே; இன்னும், எவர் (நன்றிசெய்யாது) நிராகரிக்கிறாரோ(அது அவருக்கே கேடாகும், காரணம்:) நிச்சயமாக என் இரட்சகன் (எவரிடமிருந்தும்) தேவையற்றவன்; கண்ணியமுள்ளவன்" என்று கூறினார்.

41. "அவளுடைய சிம்மாசனத்தை (அதன் அமைப்பை) மாற்றி விடுங்கள்; அவள் (அதனை பற்றி)அறிந்துகொள்கிறாளா? அல்லது அறிந்துகொள்ள முடியாதவர்களில்( ஒருத்தியாக) இருக்கிறாளா? என்று பார்ப்போம்" என்று (ஸுலைமானாகிய) அவர் கூறினார்.

42. அவள் வந்த பொழுது (அவளிடம்,) " உன்னுடைய சிம்மாசனம் இவ்வாறு தானா?" என்று கேட்கப்பட்டது. அ(தற்க)வள் "நிச்சயமாக இது அதைப்போலவே இருக்கின்றது என்று கூறினாள். இதற்கு முன்னதாகவே (உங்களைப்பற்றிய) அறிவை நாம் கொடுக்கப்பட்டிருந்தோம்; நாங்கள் முற்றிலும் (அல்லாஹ்வுக்கு) கீழ்ப்படிந்தவர்களாகவும் இருக்கிறோம்"(என்று ஸுலைமான் கூறினார்).

43. அல்லாஹ்வையன்றி அவள் (மற்றவைகளை) வணங்கிக் கொண்டிருந்தது அவளை (விசுவாசங்கொள்வதிலிருந்து) தடுத்துவிட்டது. ( ஏனென்றால்), நிச்சயமாக அவள் (அல்லாஹ்வை) நிராகரிப்பவர்களின் சமூகத்தாரில் உள்ளவளாக இருந்தாள்.

44. (பின்னர்) அவளிடம், "இம்மாளிகையில் பிரவேசிப்பாயாக !"எனக் கூறப்பட்டது. அவள் அதைப்பார்த்த போது தண்ணீர் தடாகம் என்றெண்ணிவிட்டாள்; (நனைந்து போகாதிருக்க தன் ஆடையை) தனது இரு கெண்டைக்கால்களுக்குமேல் உயர்த்தினாள்;(இதைக்கண்ட ஸுலைமான்,"அது தண்ணீரல்ல) நிச்சயமாக இது பளிங்குகளால் பளபளப்பாக்கப்பட்ட மாளிகை" என்று கூறினார். அ(தற்க)வள், "என் இரட்சகனே! நிச்சயமாக நான் எனக்கே அநியாயம் செய்துவிட்டேன்; அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கு, ஸுலைமானுடன் நானும் முற்றிலும் கீழ்ப்படிந்து( இஸ்லாமாகி) விட்டேன்" என்று கூறினாள்.

45. மேலும், நிச்சயமாக நாம், ஸமூது (கூட்டத்தார்)பால் அவர்களுடைய சகோதரர் ஸாலிஹை அனுப்பிவைத்தோம்; அவர், (அவர்களிடம்,) "நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள் "(என்று கூறினார்) ; அது சமயம் அவர்கள் இரு பிரிவினராகப்பிரிந்து,(தங்களுக்குள்) தர்க்கம்செய்துகொள்ளலாயினர்.

46. "என்னுடைய சமூகத்தாரே! நன்மைக்கு முன்னதாகத் தீமையைக் கொண்டு நீங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? நீங்கள் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரவேண்டாமா? (அதன் மூலம்) நீங்கள் கிருபை செய்யப்படுவீர்கள்" என்று (ஸாலிஹாகிய) அவர் கூறினார்.

قَالُوا اطَّيَّرْنَا بِكَ وَبِمَنْ مَّعَكَ ؕ قَالَ طٰٓئِرُكُمْ عِنْدَ اللّٰهِ بَلْ
اَنْتُمْ قَوْمٌ تُفْتَنُوْنَ ﴿٤٧﴾ وَكَانَ فِى الْمَدِيْنَةِ تِسْعَةُ رَهْطٍ يُّفْسِدُوْنَ
فِى الْاَرْضِ وَلَا يُصْلِحُوْنَ ﴿٤٨﴾ قَالُوْا تَقَاسَمُوْا بِاللّٰهِ لَنُبَيِّتَنَّهٗ وَ
اَهْلَهٗ ثُمَّ لَنَقُوْلَنَّ لِوَلِيِّهٖ مَا شَهِدْنَا مَهْلِكَ اَهْلِهٖ وَاِنَّا لَصٰدِقُوْنَ ﴿٤٩﴾
وَمَكَرُوْا مَكْرًا وَّمَكَرْنَا مَكْرًا وَّهُمْ لَا يَشْعُرُوْنَ ﴿٥٠﴾ فَانْظُرْ كَيْفَ
كَانَ عَاقِبَةُ مَكْرِهِمْ ۙ اَنَّا دَمَّرْنٰهُمْ وَقَوْمَهُمْ اَجْمَعِيْنَ ﴿٥١﴾ فَتِلْكَ
بُيُوْتُهُمْ خَاوِيَةًۢ بِمَا ظَلَمُوْا ؕ اِنَّ فِىْ ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّعْلَمُوْنَ ﴿٥٢﴾
وَاَنْجَيْنَا الَّذِيْنَ اٰمَنُوْا وَكَانُوْا يَتَّقُوْنَ ﴿٥٣﴾ وَلُوْطًا اِذْ قَالَ
لِقَوْمِهٖٓ اَتَاْتُوْنَ الْفَاحِشَةَ وَاَنْتُمْ تُبْصِرُوْنَ ﴿٥٤﴾ اَئِنَّكُمْ
لَتَاْتُوْنَ الرِّجَالَ شَهْوَةً مِّنْ دُوْنِ النِّسَآءِ ؕ بَلْ اَنْتُمْ قَوْمٌ
تَجْهَلُوْنَ ﴿٥٥﴾ فَمَا كَانَ جَوَابَ قَوْمِهٖٓ اِلَّآ اَنْ قَالُوْٓا اَخْرِجُوْٓا اٰلَ
لُوْطٍ مِّنْ قَرْيَتِكُمْ ۚ اِنَّهُمْ اُنَاسٌ يَّتَطَهَّرُوْنَ ﴿٥٦﴾ فَاَنْجَيْنٰهُ وَ
اَهْلَهٗٓ اِلَّا امْرَاَتَهٗ ۡ قَدَّرْنٰهَا مِنَ الْغٰبِرِيْنَ ﴿٥٧﴾ وَاَمْطَرْنَا
عَلَيْهِمْ مَّطَرًا ۚ فَسَآءَ مَطَرُ الْمُنْذَرِيْنَ ﴿٥٨﴾ ع قُلِ الْحَمْدُ لِلّٰهِ وَسَلٰمٌ ع ٤ ١٤ ١٩
عَلٰى عِبَادِهِ الَّذِيْنَ اصْطَفٰى ؕ ءٰٓاللّٰهُ خَيْرٌ اَمَّا يُشْرِكُوْنَ ﴿٥٩﴾

47. அ(தற்க)வர்கள், "உம்மையும், உம்முடன் இருப்பவர்களையும் நாங்கள் துர்ச்சகுனமாகக்கருதுகிறோம்" என்று கூறினார்கள்; அ(தற்க)வர், "உங்கள் துர்ச்சகுனம் (அதன் காரணம்) அல்லாஹ்விடம் இருக்கிறது. மாறாக, நீங்கள் (அல்லாஹ்வினால்)சோதனைக்குள்ளாக்கப்படும்சமூகத்தாராக இருக்கின்றீர்கள்" என்று கூறினார்.

48. (ஸாலிஹ் நபி வாழ்ந்து வந்த) அந்நகரில், ஒன்பது மனிதர்கள் இருந்தார்கள்; அவர்கள் பூமியில் குழப்பம் செய்பவர்களாக, மற்றும் சீர்திருத்தம் செய்யாதவர்களாக இருந்தனர்.

49. (குழப்பக்காரர்களான அவர்கள்) நிச்சயமாக (ஸாலிஹ் நபியாகிய) அவரையும், அவருடைய குடும்பத்தினரையும் நாம் இரவோடு இரவாக அழித்துவிடுவோம் என்று நீங்கள் அல்லாஹ்வைக்கொண்டு சத்தியம் செய்து கொள்ளுங்கள்;பின்னர், அவர் குடும்பத்தினர் அழிக்கப்பட்ட இடத்திற்கு நாங்கள் வரவேயில்லை; நிச்சயமாக நாங்கள் உண்மையே சொல்கிறோம் என்று அவருடைய பாதுகாப்பாளரிடம் திட்டமாகக் கூறிக்கொள்வோம்" என்று (அவர்களுக்குள்) கூறினார்கள் .

50. இன்னும், (இதுபோன்றே) அவர்கள் ஒரு சூழ்ச்சி செய்தார்கள்; நாமும் (நம் தண்டனையைக் கொண்டு அவர்களின் சூழ்ச்சியை முறியடிக்க) சூழ்ச்சிசெய்தோம்; அவர்களோ (அதனை) உணர்ந்துகொள்ளவில்லை.

51. ஆகவே, அவர்களுடைய சூழ்ச்சியின் முடிவு எப்படி இருந்தது என்பதை (நபியே!) நீர் கவனிப்பீராக; நிச்சயமாக அவர்களையும், அவர்களுடைய சமூகத்தார் அனைவரையும் அடியோடு நாம் அழித்து விட்டோம்.

52. ஆகவே, அவர்கள் செய்துகொண்டிருந்த அநியாயங்களின் காரணமாக அவர்களுடைய அந்தவீடுகள், குடியிருப்பற்றுக் கிடக்கின்றன; அறியக்கூடிய சமூகத்தார்க்கு நிச்சயமாக இதில் ஒரு படிப்பினை இருக்கின்றது.

53. விசுவாசங்கொண்டு, (அல்லாஹ்வுக்குப்) பயந்தும் கொண்டிருந்தார்களே அத்தகையவர்களை நாமேகாப்பாற்றினோம்.

54. லூத்தையும்_ (நாம் நம்முடைய தூதராக அனுப்பிவைத்ததை நினைவு கூர்வீராக) அவர் தன் ஜனங்களிடம், "நீங்கள் (உங்களில் சிலர் சிலரைப்) பார்த்தவர்களாக இருக்க மானக்கேடான செயலைச்செய்கின்றீர்களா?"என்று அவர் கூறியபோது_

55. "நிச்சயமாக நீங்கள் பெண்களைத்தவிர்த்து(விட்டு) ஆண்களிடம் மோகங்கொண்டு வருகின்றீர்களா? மாறாக நீங்கள் முற்றிலும் அறிவில்லாதக் கூட்டத்தினராக இருக்கிறீர்கள்"(என்று கூறினார்).

56. "லூத்துடைய குடும்பத்தை உங்கள் ஊரைவிட்டு நீங்கள் வெளியேற்றி விடுங்கள்; நிச்சயமாக அவர்கள் மிகப் பரிசுத்தமான மனிதர்கள் என்று (பரிகாசமாக)அவர்கள் கூறியதைத்தவிர,(வேறெதுவும்)அவருடைய சமூகத்தாரின் பதிலாக இருந்ததில்லை.

57. ஆகவே, அவருடைய மனைவியைத் தவிர அவரையும், அவருடைய குடும்பத்தினரையும் நாம் காப்பாற்றிக்கொண்டோம்; அவளை (வேதனை செய்யப்படுபவர்களோடு) தங்கிவிடுபவர்களில் உள்ளவளாக நாம் நிர்ணயித்து விட்டோம்.

58. ஆகவே, அவர்கள் மீது (கல்) மாரியை நாம் பொழியச்செய்தோம்;. எச்சரிக்கப்பட்டவர்களின்(கல்)மாரி மிகக்கெட்டது.

59. (ஆகவே, நபியே!)" புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! இன்னும், அவன் தேர்ந்தெடுத்தோரான அவனுடைய அடியார்கள் மீது சாந்தி உண்டாவதாக," என்று கூறுவீராக! அல்லாஹ் மேலானவனா, அல்லது அவர்கள் (அவனுக்கு) இணையாக்குகின்றவைகளா?

أَمَّنْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْأَرْضَ وَأَنْزَلَ لَكُمْ مِّنَ
السَّمَآءِ مَآءً ۚ فَأَنْۢبَتْنَا بِهٖ حَدَآئِقَ ذَاتَ بَهْجَةٍ ۚ مَا كَانَ
لَكُمْ أَنْ تُنْۢبِتُوْا شَجَرَهَا ؕ ءَاِلٰهٌ مَّعَ اللّٰهِ ؕ بَلْ هُمْ قَوْمٌ يَّعْدِلُوْنَ ﴿٦٠﴾
أَمَّنْ جَعَلَ الْأَرْضَ قَرَارًا وَّجَعَلَ خِلٰلَهَآ أَنْهٰرًا وَّجَعَلَ
لَهَا رَوَاسِيَ وَجَعَلَ بَيْنَ الْبَحْرَيْنِ حَاجِزًا ؕ ءَاِلٰهٌ مَّعَ اللّٰهِ ؕ
بَلْ أَكْثَرُهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿٦١﴾ ؕ أَمَّنْ يُّجِيْبُ الْمُضْطَرَّ إِذَا دَعَاهُ
وَيَكْشِفُ السُّوْٓءَ وَيَجْعَلُكُمْ خُلَفَآءَ الْأَرْضِ ؕ ءَاِلٰهٌ مَّعَ اللّٰهِ ؕ
قَلِيْلًا مَّا تَذَكَّرُوْنَ ﴿٦٢﴾ ؕ أَمَّنْ يَّهْدِيْكُمْ فِيْ ظُلُمٰتِ الْبَرِّ وَ
الْبَحْرِ وَمَنْ يُّرْسِلُ الرِّيٰحَ بُشْرًا بَيْنَ يَدَيْ رَحْمَتِهٖ ؕ
ءَاِلٰهٌ مَّعَ اللّٰهِ ؕ تَعٰلَى اللّٰهُ عَمَّا يُشْرِكُوْنَ ﴿٦٣﴾ ؕ أَمَّنْ يَّبْدَؤُا
الْخَلْقَ ثُمَّ يُعِيْدُهٗ وَمَنْ يَّرْزُقُكُمْ مِّنَ السَّمَآءِ وَالْأَرْضِ ؕ
ءَاِلٰهٌ مَّعَ اللّٰهِ ؕ قُلْ هَاتُوْا بُرْهَانَكُمْ إِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿٦٤﴾
قُلْ لَّا يَعْلَمُ مَنْ فِي السَّمٰوٰتِ وَالْأَرْضِ الْغَيْبَ إِلَّا اللّٰهُ ؕ
وَمَا يَشْعُرُوْنَ أَيَّانَ يُبْعَثُوْنَ ﴿٦٥﴾ بَلِ ادّٰرَكَ عِلْمُهُمْ فِي
الْاٰخِرَةِ ۫ بَلْ هُمْ فِيْ شَكٍّ مِّنْهَا ۫ بَلْ هُمْ مِّنْهَا عَمُوْنَ ﴿٦٦﴾ ع ۵ ۴

60. (உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா?)அல்லது வானங்களையும், பூமியையும் படைத்து, வானத்திலிருந்து உங்களுக்காக தண்ணீரை (மழையை)யும் இறக்கி வைத்தவ(ன் சிறந்தவ)னா? (பின்னர்) நாமே அதனைக் கொண்டு செழிப்பான தோட்டங்களை முளைக்கச்செய்கிறோம்; (நாம் மழையை இறக்காவிட்டால்) அதன் மரங்களை முளைக்கச்செய்யவே உங்களால் முடியாது; ஆகவே, அல்லாஹ்வுடன் வேறு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றானா?இல்லை; இவர்கள் (தங்கள் தெய்வங்களாக கற்பனை செய்தவற்றை அல்லாஹ்வுக்கு) சமமாக்குகின்ற கூட்டத்தினராக இருக்கின்றனர்.

61. (உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா?) அல்லது பூமியை உறுதியானதாக்கி அதனிடையே ஆறுகளையும் உண்டாக்கி, அதற்காக(அதன் மீது) கனமான மலைகளையும் அமைத்து, இரு கடல்களுக்கிடையில் தடுப்பையும் ஏற்படுத்தியவ( ன் சிறந்தவ)னா?( இவைகளைச் செய்த ) அல்லாஹ்வுடன் வேறு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றானா ? இல்லை! அவர்களில் பெரும்பாலோர் இதுபற்றி அறியமாட்டார்கள்.

62. (உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா ? ) அல்லது கடுந்துன்பத்திற்குள்ளாக்கப் பட்டவனுக்கு, அவனை இவன் அழைத்தால், (அவனுக்குப்) பதிலளித்து, மேலும், (அவனுடைய) அத்துன்பத்தை நீக்கி, பூமியில் உங்களை(த் தன்னுடைய) பிரதிநிதிகளாகவும் ஆக்கியவ(ன் சிறந்தவ)னா ? (இத்தகைய) அல்லாஹ்வுடன், வேறு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றானா ? (இல்லை !) நீங்கள் சிந்திப்பது மிகக்குறைவாகும்.

63. (உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா ?) அல்லது கரையிலும், கடலிலும் உள்ள இருள்களில் உங்களுக்கு நேர்வழி காண்பித்து,(மழையெனும்) அவனுடைய அருள் மாரிக்கு முன்னதாகக் காற்றுகளையும் நன்மாராயமாக அனுப்பி வைப்பவ(ன் சிறந்தவ)னா? (இத்தகுதிகளுடைய) அல்லாஹ்வுடன் வேறு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றானா? (இல்லை!) அவர்கள் இணை வைப்பவைகளை விட்டும் அல்லாஹ் மிக்க உயர்ந்தவன்.

64.(உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா ?) அல்லது ஆரம்பத்தில் (யாதொரு முன்மாதிரியும் இன்றியே) படைப்பைத்துவங்கி, பின்னர் அதனை மீட்டுபவனும், வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவ(ன் சிறந்தவ)னா? அல்லாஹ்வுடன், வேறு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றானா? "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், (இதற்கு) உங்களுடைய அத்தாட்சியைக் கொண்டுவாருங்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

65. அல்லாஹ்வைத் தவிர வானங்களிலும் பூமியிலும் உள்ளவர்கள்(எவரும்) மறைந்திருப்பவைகளை அறியமாட்டார்கள்; மேலும், அவர்கள் எப்பொழுது (உயிர் கொடுத்து)எழுப்பப்படுவார்கள் என்பதையும் அவர்கள் உணர மாட்டார்கள்" என்று (நபியே!)நீர் கூறுவீராக!

66. எனினும், மறுமையைப் பற்றிய இவர்களுடைய அறிவோ (களைப்புற்றுக்கீழ் நிலை அடைந்து) முடிவுபெற்றுவிட்டது; மாறாக அதுபற்றி இவர்கள்( பெரும்) சந்தேகத்தில் இருக்கின்றனர்; இல்லை! அதைப்பற்றி இவர்கள் குருடர்களாகவே இருக்கிறார்கள்.

وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْٓا ءَاِذَا كُنَّا تُرٰبًا وَّاٰبَآؤُنَآ اَئِنَّا
لَمُخْرَجُوْنَ ﴿۶۷﴾ لَقَدْ وُعِدْنَا هٰذَا نَحْنُ وَاٰبَآؤُنَا مِنْ
قَبْلُ ۙ اِنْ هٰذَآ اِلَّآ اَسَاطِيْرُ الْاَوَّلِيْنَ ﴿۶۸﴾ قُلْ سِيْرُوْا
فِي الْاَرْضِ فَانْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُجْرِمِيْنَ ﴿۶۹﴾
وَلَا تَحْزَنْ عَلَيْهِمْ وَلَا تَكُنْ فِيْ ضَيْقٍ مِّمَّا يَمْكُرُوْنَ ﴿۷۰﴾
وَيَقُوْلُوْنَ مَتٰى هٰذَا الْوَعْدُ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۷۱﴾ قُلْ
عَسٰٓى اَنْ يَّكُوْنَ رَدِفَ لَكُمْ بَعْضُ الَّذِيْ تَسْتَعْجِلُوْنَ ﴿۷۲﴾
وَاِنَّ رَبَّكَ لَذُوْ فَضْلٍ عَلَى النَّاسِ وَلٰكِنَّ اَكْثَرَهُمْ لَا
يَشْكُرُوْنَ ﴿۷۳﴾ وَاِنَّ رَبَّكَ لَيَعْلَمُ مَا تُكِنُّ صُدُوْرُهُمْ وَمَا
يُعْلِنُوْنَ ﴿۷۴﴾ وَمَا مِنْ غَآئِبَةٍ فِي السَّمَآءِ وَالْاَرْضِ اِلَّا فِيْ
كِتٰبٍ مُّبِيْنٍ ﴿۷۵﴾ اِنَّ هٰذَا الْقُرْاٰنَ يَقُصُّ عَلٰى بَنِيْٓ
اِسْرَآءِيْلَ اَكْثَرَ الَّذِيْ هُمْ فِيْهِ يَخْتَلِفُوْنَ ﴿۷۶﴾ وَاِنَّهٗ
لَهُدًى وَّرَحْمَةٌ لِّلْمُؤْمِنِيْنَ ﴿۷۷﴾ اِنَّ رَبَّكَ
يَقْضِيْ بَيْنَهُمْ بِحُكْمِهٖ ۚ وَهُوَ الْعَزِيْزُ الْعَلِيْمُ ﴿۷۸﴾
فَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ۭ اِنَّكَ عَلَى الْحَقِّ الْمُبِيْنِ ﴿۷۹﴾

67. "நாங்களும், எங்களுடைய மூதாதையர்களும் மண்ணாகிவிட்டால் நிச்சயமாக (மீண்டும் உயிர் பெற்று பூமியிலிருந்து) நாங்கள் வெளியேற்றப் படுவோர்களா?" என்று நிராகரிப்போர் கூறுகின்றனர்.

68. "நிச்சயமாக இதுபற்றி நாங்களும், இதற்கு முன்னர் எங்கள் மூதாதையர்களும் வாக்களிக்கப்பட்டிருந்தோம்; இது முன்னுள்ளோரின் கட்டுக்கதைகளே தவிர (வேறு) இல்லை" (என்றும் கூறுகின்றனர்).

69. (ஆகவே,) "பூமியில் பிரயாணம் செய்து குற்றவாளிகளின் முடிவு எப்படி இருந்தது என்பதை (கவனித்து)ப் பாருங்கள் என்று (நபியே!) நீர் கூறுவீராக!"

70. மேலும், (நபியே!) அவர்களுக்காக நீர் கவலை கொள்ளாதீர்; அவர்கள் செய்யும் சூழ்ச்சி பற்றி நீர் நெருக்கடியில் ஆகிவிடவும்வேண்டாம்.

71. இன்னும், "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், (வேதனை வருமென்ற) இந்த வாக்கு எப்பொழுது வரும்?" என்று அவர்கள் கேட்கின்றார்கள்.

72. (அதற்கு) "நீங்கள் அவசரப்படுகின்றீர்களே அத்தகையவை சில (இப்பொழுதே) உங்களை வந்தடையக் கூடும் என்று (நபியே!) நீர் கூறுவீராக!

73. இன்னும், நிச்சயமாக உமதிரட்சகன் மனிதர்களின் மீது பேரருளுடையவன்; எனினும் அவர்களில் பெரும்பாலோர் நன்றி செலுத்துவதில்லை.

74. இன்னும், (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன், அவர்களுடைய நெஞ்சங்கள் மறைத்துவைத்திருக்கின்றதையும், (அதற்கு மாறாக) அவர்கள் வெளிப்படுத்து கின்றதையும் நன்கறிவான்.

75. வானத்தில் மற்றும் பூமியில் மறைவாக இருப்பதிலிருந்து எதுவும், ("லவ்ஹுல் மஹ்ஃபூள்" என்னும் அவனுடைய) தெளிவான புத்தகத்தில்இருந்தே தவிர இல்லை.

76. நிச்சயமாக இந்தக் குர்ஆன், இஸ்ராயீலின் மக்களுக்கு எதில் அவர்கள் வேறுபட்டு(த் தர்க்கித்து)க் கொண்டிருக்கிறார்களோ அதில் பெரும்பாலானவற்றை விவரித்துக் கூறுகிறது.

77. இன்னும் நிச்சயமாக இ(ந்தக்குர்ஆனான)து, விசுவாசங்கொண்டோர்களுக்கு நேர்வழியாகவும், அருளாகவும் இருக்கின்றது.

78. நிச்சயமாக உமதிரட்சகன், தன் தீர்ப்பைக் கொண்டு அவர்களுக்கிடையில் (மறுமையில்) தீர்ப்பளிப்பான்; அவன் தான் (யாவரையும்) மிகைத்தவன், (யாவற்றையும்) நன்கறிகிறவன்.

79. ஆகவே (நபியே! உமது காரியங்களை அவனிடமே ஒப்படைத்து முழுமையாக) அல்லாஹ்வின் மீது நீர் நம்பிக்கை வைப்பீராக! நிச்சயமாக நீர் தெளிவான உண்மையின் மீது இருக்கின்றீர்.

اِنَّكَ لَا تُسْمِعُ الْمَوْتٰى وَلَا تُسْمِعُ الصُّمَّ الدُّعَآءَ اِذَا
وَلَّوْا مُدْبِرِيْنَ ﴿٨٠﴾ وَمَآ اَنْتَ بِهٰدِى الْعُمْىِ عَنْ ضَلٰلَتِهِمْ ؕ
اِنْ تُسْمِعُ اِلَّا مَنْ يُّؤْمِنُ بِاٰيٰتِنَا فَهُمْ مُّسْلِمُوْنَ ﴿٨١﴾ وَ
اِذَا وَقَعَ الْقَوْلُ عَلَيْهِمْ اَخْرَجْنَا لَهُمْ دَآبَّةً مِّنَ الْاَرْضِ
تُكَلِّمُهُمْ ۙ اَنَّ النَّاسَ كَانُوْا بِاٰيٰتِنَا لَا يُوْقِنُوْنَ ﴿٨٢﴾ وَ ع ٦
يَوْمَ نَحْشُرُ مِنْ كُلِّ اُمَّةٍ فَوْجًا مِّمَّنْ يُّكَذِّبُ
بِاٰيٰتِنَا فَهُمْ يُوْزَعُوْنَ ﴿٨٣﴾ حَتّٰٓى اِذَا جَآءُوْ قَالَ اَكَذَّبْتُمْ
بِاٰيٰتِىْ وَلَمْ تُحِيْطُوْا بِهَا عِلْمًا اَمَّاذَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿٨٤﴾
وَوَقَعَ الْقَوْلُ عَلَيْهِمْ بِمَا ظَلَمُوْا فَهُمْ لَا يَنْطِقُوْنَ ﴿٨٥﴾
اَلَمْ يَرَوْا اَنَّا جَعَلْنَا الَّيْلَ لِيَسْكُنُوْا فِيْهِ وَالنَّهَارَ مُبْصِرًا ؕ
اِنَّ فِىْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿٨٦﴾ وَيَوْمَ يُنْفَخُ
فِى الصُّوْرِ فَفَزِعَ مَنْ فِى السَّمٰوٰتِ وَمَنْ فِى الْاَرْضِ
اِلَّا مَنْ شَآءَ اللّٰهُ ؕ وَكُلٌّ اَتَوْهُ دٰخِرِيْنَ ﴿٨٧﴾ وَتَرَى الْجِبَالَ
تَحْسَبُهَا جَامِدَةً وَّهِىَ تَمُرُّ مَرَّ السَّحَابِ ؕ صُنْعَ اللّٰهِ
الَّذِىْٓ اَتْقَنَ كُلَّ شَىْءٍ ؕ اِنَّهٗ خَبِيْرٌ بِمَا تَفْعَلُوْنَ ﴿٨٨﴾

80. (நபியே!) நிச்சயமாக நீர் மரணித்தோரைச் செவியேற்கச் செய்யமாட்டீர்;(அது உம்மால் முடியாது)மேலும்,செவிடர்களுக்கும்_ அவர்கள் புறங்காட்டிய வர்களாக திரும்பிச்சென்றால் (உம்முடைய ) அழைப்பை நீர் செவியேற்கச் செய்யமாட்டீர்.

81. குருடர்களுக்கு_ அவர்களுடைய வழிகேட்டை விட்டும் (நீக்கி) நேர்வழி காட்டுபவராகவும் நீர் இல்லை; நம்முடைய வசனங்களைக்கொண்டு விசுவாசம் கொள்கிறவரைத்தவிர (வேறெவரையும்) நீர்(அவற்றைச்) செவியுறச் செய்ய முடியாது; அவர்கள் (முற்றிலும்)கீழ்ப்படிந்து நடப்பவர்கள்.

82.(இறுதி நாளைப் பற்றிய நம்முடைய)கூற்று அவர்கள் மீது நிகழ்ந்தும்விட்டால், அவர்களுக்காகப் பூமியிலிருந்து ஒரு பிராணியை நாம் வெளிப்படுத்துவோம்; நிச்சயமாக மனிதர்கள், நம்முடைய வசனங்களை உறுதி கொள்ளாதவர்களாக இருந்தார்கள் என்று அது அவர்களிடம்(தெளிவாகப்)பேசும்.

83. ஒவ்வொரு சமுதாயத்திலிருந்து நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கிக் கொண்டிருந்தவர்களை, ஒரு படையாக நாம் ஒன்றுதிரட்டும் நாளை (நபியே நீர் நினைவுகூர்வீராக!) பின்னர்(மஹ்ஷர் மைதானத்தின்பால் செல்லும்போது அவர்களில் முன்னுள்ளவர்களுடன் அவர்களில் பின்னுள்ளவர்கள் சேர்ந்து கொள்வதற்காக)அவர்கள்நிறுத்திவைக்கப்படுவர்.

84. முடிவாக_அவர்கள் (யாவரும் தங்கள் இரட்சகனிடம்) வந்து விடுவார் களானால்,(அவர்களிடம்) "நீங்கள் என்னுடைய வசனங்களை_ அவற்றை முழு மையாக நீங்கள் அறிந்து கொள்ளாமல் இருந்தும் பொய்யாக்கிக் கொண்டி ருந்தீர்களா? அல்லது என்னதான் நீங்கள் செய்துகொண்டிருந்தீர்கள்?" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கேட்பான்.

85. மேலும், அவர்கள் அநியாயம் செய்து கொண்டிருந்ததன் காரணமாக அவர்கள் மீது (தண்டனையைப் பற்றிய ) கூற்று ஏற்பட்டுவிட்டது; ஆகவே, அவர்கள் பேசமாட்டார்கள்.

86.நிச்சயமாக நாம் இரவை,அதில் அவர்கள் அமைதி பெறுவதற்காகவும்,பகலை (யாவற்றையும்) நன்கு பார்ப்பதற்காகவும் நாமே ஆக்கினோம் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? நிச்சயமாக இதில் விசுவாசங்கொண்டசமூகத்தார்க்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

87. ஸூர் (குழல்) ஊதப்படும் நாளில், அல்லாஹ்(காப்பாற்ற) நாடியவர்களைத் தவிர வானங்களிலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும் திடுக்கிட்டு விடுவார்கள்;ஒவ்வொருவரும் பணிந்தவர்களாக அவனிடம் வந்து விடுவர்.

88.மேலும்,நீர் மலைகளை _அவைகளைத் திடமானவையாக(அசையாததாக)நீர் எண்ணுகிறீர் _(எனினும் அந்நாளின்போது) அவை மேகம் நகர்வது போல் நகர்வதை நீர் காண்பீர்; ஒவ்வொரு பொருளையும் (படைத்து,) உறுதியாக ஒழுங்குபடுத்திய, அல்லாஹ்வுடைய (கலைத்திறன் நிறைந்த) செயலாக (அவ்வாறு நடைபெறும்.) நிச்சயமாக அவன், நீங்கள் செய்துகொண்டிருப்பவற்றை நன்கு உணர்பவன்.

مَنْ جَآءَ بِالْحَسَنَةِ فَلَهٗ خَيْرٌ مِّنْهَا ۚ وَهُمْ مِّنْ فَزَعٍ يَّوْمَئِذٍ
اٰمِنُوْنَ ﴿٨٩﴾ وَمَنْ جَآءَ بِالسَّيِّئَةِ فَكُبَّتْ وُجُوْهُهُمْ فِي النَّارِ ۭ هَلْ
تُجْزَوْنَ اِلَّا مَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿٩٠﴾ اِنَّمَآ اُمِرْتُ اَنْ اَعْبُدَ رَبَّ هٰذِهِ
الْبَلْدَةِ الَّذِيْ حَرَّمَهَا وَلَهٗ كُلُّ شَيْءٍ ۡ وَّاُمِرْتُ اَنْ اَكُوْنَ مِنَ
الْمُسْلِمِيْنَ ﴿٩١﴾ وَاَنْ اَتْلُوَا الْقُرْاٰنَ ۚ فَمَنِ اهْتَدٰى فَاِنَّمَا يَهْتَدِيْ لِنَفْسِهٖ ۚ
وَمَنْ ضَلَّ فَقُلْ اِنَّمَآ اَنَا مِنَ الْمُنْذِرِيْنَ ﴿٩٢﴾ وَقُلِ الْحَمْدُ لِلّٰهِ
سَيُرِيْكُمْ اٰيٰتِهٖ فَتَعْرِفُوْنَهَا ۭ وَمَا رَبُّكَ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ﴿٩٣﴾ ع ١١ ٣

سُوْرَةُ الْقَصَصِ مَكِّيَّةٌ وَّهِيَ ثَمَانٍ وَّثَمَانُوْنَ اٰيَةً وَّتِسْعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

طٰسٓمّٓ ﴿١﴾ تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ الْمُبِيْنِ ﴿٢﴾ نَتْلُوْا عَلَيْكَ مِنْ نَّبَاِ
مُوْسٰى وَفِرْعَوْنَ بِالْحَقِّ لِقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿٣﴾ اِنَّ فِرْعَوْنَ
عَلَا فِي الْاَرْضِ وَجَعَلَ اَهْلَهَا شِيَعًا يَّسْتَضْعِفُ طَآئِفَةً
مِّنْهُمْ يُذَبِّحُ اَبْنَآءَهُمْ وَيَسْتَحْيٖ نِسَآءَهُمْ ۭ اِنَّهٗ كَانَ مِنَ
الْمُفْسِدِيْنَ ﴿٤﴾ وَنُرِيْدُ اَنْ نَّمُنَّ عَلَى الَّذِيْنَ اسْتُضْعِفُوْا
فِي الْاَرْضِ وَنَجْعَلَهُمْ اَئِمَّةً وَّنَجْعَلَهُمُ الْوٰرِثِيْنَ ﴿٥﴾

89. எவர் ஒரு நன்மையைக் கொண்டு வந்தாரோ, அதைவிட மிகச் சிறந்த(கூலியான)து அவருக்கு உண்டு; மேலும், (அவ்வாறு செய்யும்) அவர்கள் அந்நாளின் திடுக்கத்திலிருந்து அச்சமற்றவர்கள்.

90. மேலும், எவர் ஒரு தீமையைக்கொண்டு வந்தாரோ, அவர்களுடைய முகங்கள் நரகத்தில் குப்புறத்தள்ளப்படும்; நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளுக்கன்றி (வேறு எதற்கும்)கூலி கொடுக்கப்படுகிறீர்களா?(என்று கேட்கப்படுவர்.)

91. "நான் கட்டளையிடப்பட்டதெல்லாம் (மக்காவாகிய) இந்த ஊரின் இரட்சகனை நான் வணங்குவதைத்தான்; அவன் எத்தகையவனென்றால், இதை அவன் புனிதமாக்கிவைத்துள்ளான்; ஒவ்வொரு பொருளும் அவனுக்கே உரியது! இன்னும், அவனுக்கே முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களில் உள்ளவனாக (முஸ்லிமாக) இருக்குமாறும் நான் ஏவப்பட்டுள்ளேன்"(என்று நபியே! நீர் கூறுவீராக!).

92. "அன்றியும், குர்ஆனை நான் ஓதிக்கொண்டிருக்குமாறும்(ஏவப்பட்டுள்ளேன். அதனைக் கொண்டு) எவர் நேர் வழியை அடைகின்றாரோ அவர் நேர்வழியடைவதெல்லாம் அவருக்கே(தன் சுய நன்மைக்காகவே) ஆகும்; இன்னும் எவர் (இதிலிருந்து)வழி தவறி விடுகிறாரோ நிச்சயமாக நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களில் உள்ளவனே" என்று கூறுவீராக!

93. மேலும், "புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது; தன்னுடைய அத்தாட்சிகளை அடுத்து அவன் உங்களுக்குக் காண்பிப்பான்; அது சமயம் அவைகளை நீங்கள் (உண்மையென) அறிந்து கொள்வீர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக! மேலும், நீங்கள் செய்துகொண்டிருப்பவற்றைப் பற்றி (நபியே!) உமதிரட்சகன் பராமுகமானவனாக இல்லை.

---

அத்தியாயம் : 28

## அல் கஸஸ் _ சரித்திரம்

வசனங்கள் : 88 மக்கீ ருகூஃகள் : 9

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. தா ஸீம் மீம்.

2. (நபியே!) இவைதெளிவான இவ்வேத வசனங்களாகும்.

3. (நபியே!) விசுவாசங்கொள்ளும் கூட்டத்தாருக்காக மூஸா, ஃபிர்அவ்னுடைய செய்தியை உண்மையைக் கொண்டு உமக்கு நாம் ஓதிக் காண்பிக்கிறோம்.

4. நிச்சயமாக ஃபிர்அவ்ன் பூமியில் (மிகவும்) பெருமை கொண்டு, அதிலுள்ளவர்களைப் பல பிரிவினர்களாக்கி, அவர்களில் ஒரு பிரிவினரைப் பலவீனப்படுத்தினான்; அவர்களுடைய ஆண் மக்களை அறுத்(துக் கொலை செய்)தான்; மேலும் அவர்களின் பெண் மக்களை (உயிருடன் வாழ) விட்டுவைத்தான்; நிச்சயமாக அவன் குழப்பம் செய்பவர்களில் (உள்ளவனாக) இருந்தான்.

5. (எகிப்திய) பூமியில் அவனால் பலவீனப்படுத்தப்பட்டோர் மீது நாம் உபகாரம் செய்யவும், அவர்களைத் தலைவர்களாக நாம் ஆக்கிவைக்கவும்,(கொடுமை செய்தோரான பலசாலிகளின் உடமைகளுக்கு)அவர்களை வாரிசுகளாக நாம் ஆக்கி வைக்கவும் நாடினோம்.

وَنُمَكِّنَ لَهُمْ فِی الْاَرْضِ وَنُرِیَ فِرْعَوْنَ وَهَامٰنَ وَجُنُوْدَهُمَا
مِنْهُمْ مَّا كَانُوْا یَحْذَرُوْنَ ۝۶ وَاَوْحَیْنَاۤ اِلٰۤی اُمِّ مُوْسٰۤی اَنْ
اَرْضِعِیْهِ ۚ فَاِذَا خِفْتِ عَلَیْهِ فَاَلْقِیْهِ فِی الْیَمِّ وَلَا تَخَافِیْ وَلَا
تَحْزَنِیْ ۚ اِنَّا رَآدُّوْهُ اِلَیْكِ وَجَاعِلُوْهُ مِنَ الْمُرْسَلِیْنَ ۝۷
فَالْتَقَطَهٗۤ اٰلُ فِرْعَوْنَ لِیَكُوْنَ لَهُمْ عَدُوًّا وَّحَزَنًا ؕ اِنَّ
فِرْعَوْنَ وَهَامٰنَ وَجُنُوْدَهُمَا كَانُوْا خٰطِـِٕیْنَ ۝۸ وَقَالَتِ
امْرَاَتُ فِرْعَوْنَ قُرَّتُ عَیْنٍ لِّیْ وَلَكَ ؕ لَا تَقْتُلُوْهُ ۖ ق
عَسٰۤی اَنْ یَّنْفَعَنَاۤ اَوْ نَتَّخِذَهٗ وَلَدًا وَّهُمْ لَا یَشْعُرُوْنَ ۝۹
وَاَصْبَحَ فُؤَادُ اُمِّ مُوْسٰی فٰرِغًا ؕ اِنْ كَادَتْ لَتُبْدِیْ بِهٖ
لَوْلَاۤ اَنْ رَّبَطْنَا عَلٰی قَلْبِهَا لِتَكُوْنَ مِنَ الْمُؤْمِنِیْنَ ۝۱۰
وَقَالَتْ لِاُخْتِهٖ قُصِّیْهِ ۫ فَبَصُرَتْ بِهٖ عَنْ جُنُبٍ وَّهُمْ
لَا یَشْعُرُوْنَ ۝۱۱ ۙ وَحَرَّمْنَا عَلَیْهِ الْمَرَاضِعَ مِنْ قَبْلُ فَقَالَتْ
هَلْ اَدُلُّكُمْ عَلٰۤی اَهْلِ بَیْتٍ یَّكْفُلُوْنَهٗ لَكُمْ وَهُمْ لَهٗ
نٰصِحُوْنَ ۝۱۲ فَرَدَدْنٰهُ اِلٰۤی اُمِّهٖ كَیْ تَقَرَّ عَیْنُهَا وَلَا تَحْزَنَ
وَلِتَعْلَمَ اَنَّ وَعْدَ اللّٰهِ حَقٌّ وَّلٰكِنَّ اَكْثَرَهُمْ لَا یَعْلَمُوْنَ ۝۱۳ ع ۱ ۱۳ ۲

6. மேலும், அப்பூமியில் நாம் அவர்களை ஸ்திரப்படுத்தி வைக்கவும், ஃபிர் அவ்னுக்கும், ஹாமானுக்கும், அவ்விருவரின் படையினருக்கும் இவர்களிடமிருந்து அவர்கள் எ(வ்விஷயத்)தை பயந்துகொண்டிருந்தார்களோ அதனை அவர்களுக்குக் காண்பிக்கவும் (நாடினோம்).

7. மேலும், மூஸாவின் தாய்க்கு நாம் வஹீ (மூலம்) அறிவித்தோம்: "அவருக்குப் பாலூட்டுவாயாக! பின்னர்(உன்னிடம் இருப்பதில்) அவரைப் பற்றி நீ பயந்தால், அவரை(ப்பேழையில் வைத்து) ஆற்றில் போட்டு விடுவாயாக; நீ அவரைப் பற்றிப்பயப்படவும் வேண்டாம்; கவலைப்படவும் வேண்டாம் ; நிச்சயமாக நாம் அவரை உன்னிடமே திருப்பிக் கொண்டு வந்து சேர்ப்போராகவும், அவரை, (நம்) தூதர்களில் (ஒருவராக) ஆக்குவோராகவும் உள்ளோம்!"

8. (ஆகவே, நதியில் மிதந்து வந்த) அக்குழந்தையை ஃபிர் அவ்னுடைய குடும்பத்தினர், அவர் அவர்களுக்கு விரோதியாகவும், துக்கம்தரக்கூடியவராகவும் ஆவதற்காக கண்டெடுத்துக்கொண்டார்கள்; நிச்சயமாக ஃபிர் அவ்னும், ஹாமானும், அவ்விருவருடைய படைகளும் தவறிழைத்தவர்களாக இருந்தனர்.

9. மேலும், (கண்டெடுக்கப்பட்ட குழந்தையைப் பார்த்த) ஃபிர் அவ்னுடைய மனைவி, (தன் கணவனிடம்), "எனக்கும், உமக்கும் (இது) ஒரு கண்குளிர்ச்சியாக இருக்கும்; இதனை நீங்கள் கொலைசெய்து விடவேண்டாம்; இது நமக்கு பயனளிக்கலாம்; அல்லது இதனை நாம் நம்முடைய (சுவீகாரக்) குழந்தையாக்கிக்கொள்ளலாம்" என்று கூறினாள். இன்னும் (இவரால் தங்களுக்கு என்ன நேரும் என்பதை) அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை.

10. (குழந்தையை ஆற்றில் போட்ட பின்னர், அவரைப்பற்றிய நினைவைத் தவிர மற்றவைகளை நினைப்பதை விட்டும்) மூஸாவுடைய தாயின் இதயம் வெறுமையாகி விட்டது; அவள் நம்புபவர்களில் உள்ளவளாக இருப்பதற்காக நாம் அவளுடைய இதயத்தை (நம்முடைய பேருதவியைக் கொண்டு) கட்டுப்படுத்தியிருக்காவிடில், அவள் இ(வ்விஷயத்)தை (மற்றவருக்கு) வெளிப்படுத்த முனைந்திருப்பாள்.

11. மேலும், (அக்குழந்தையாகிய) அவரின் சகோதரியிடம் "நீ அதனைப் பின் தொடர்ந்து செல்" என்று (மூஸாவுடையதாயாகிய) அவள் கூறினாள்; ஆகவே, அவர்கள் உணராத விதத்தில் தூரத்திலிருந்தே அதனை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

12. (நம்திட்டப்படி) முன்னரே பால் கொடுப்பவர்களிலிருந்து(பால் குடிப்பதை விட்டும்)அவரை நாம் தடுத்துவிட்டோம்; அப்பொழுது, "உங்களுக்காக அதற்குப்பொறுப்பேற்றுக்கொள்ளும் ஒரு வீட்டினரை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? இன்னும், அவர்கள் அதற்கு நன்மையையே நாடு கிறவர்கள்" என்று (மூஸாவின் சகோதரியான) அவள் கூறினாள்.

13. பின்னர், அவருடைய தாயிடம் _ அவளுடைய கண்குளிர்ச்சியடைவதற்காகவும், அவள் கவலை அடையாதிருப்பதற்காகவும், நிச்சயமாக அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானது தான் என்று அவள் அறிந்து கொள்வதற்காகவும் _அவரை நாம் திருப்பிக் கொடுத்தோம். எனினும், அவர்களில் பெரும்பாலோர் (இதன் உண்மையை) அறியமாட்டார்கள்.

وَلَمَّا بَلَغَ اَشُدَّهٗ وَاسْتَوٰۤى اٰتَيْنٰهُ حُكْمًا وَّعِلْمًا ؕ وَكَذٰلِكَ
نَجْزِى الْمُحْسِنِيْنَ ﴿۱۴﴾ وَدَخَلَ الْمَدِيْنَةَ عَلٰى حِيْنِ غَفْلَةٍ مِّنْ
اَهْلِهَا فَوَجَدَ فِيْهَا رَجُلَيْنِ يَقْتَتِلٰنِ ۫ هٰذَا مِنْ شِيْعَتِهٖ وَهٰذَا
مِنْ عَدُوِّهٖ ۚ فَاسْتَغَاثَهُ الَّذِىْ مِنْ شِيْعَتِهٖ عَلَى الَّذِىْ مِنْ
عَدُوِّهٖ ۙ فَوَكَزَهٗ مُوْسٰى فَقَضٰى عَلَيْهِ ۫ قَالَ هٰذَا مِنْ عَمَلِ الشَّيْطٰنِ ؕ
اِنَّهٗ عَدُوٌّ مُّضِلٌّ مُّبِيْنٌ ﴿۱۵﴾ قَالَ رَبِّ اِنِّىْ ظَلَمْتُ نَفْسِىْ فَاغْفِرْ لِىْ
فَغَفَرَ لَهٗ ؕ اِنَّهٗ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ ﴿۱۶﴾ قَالَ رَبِّ بِمَاۤ اَنْعَمْتَ عَلَىَّ
فَلَنْ اَكُوْنَ ظَهِيْرًا لِّلْمُجْرِمِيْنَ ﴿۱۷﴾ فَاَصْبَحَ فِى الْمَدِيْنَةِ خَآئِفًا
يَّتَرَقَّبُ فَاِذَا الَّذِى اسْتَنْصَرَهٗ بِالْاَمْسِ يَسْتَصْرِخُهٗ ؕ قَالَ
لَهٗ مُوْسٰۤى اِنَّكَ لَغَوِىٌّ مُّبِيْنٌ ﴿۱۸﴾ فَلَمَّاۤ اَنْ اَرَادَ اَنْ يَّبْطِشَ
بِالَّذِىْ هُوَ عَدُوٌّ لَّهُمَا ۙ قَالَ يٰمُوْسٰۤى اَتُرِيْدُ اَنْ تَقْتُلَنِىْ
كَمَا قَتَلْتَ نَفْسًۢا بِالْاَمْسِ ۖ اِنْ تُرِيْدُ اِلَّاۤ اَنْ تَكُوْنَ جَبَّارًا
فِى الْاَرْضِ وَمَا تُرِيْدُ اَنْ تَكُوْنَ مِنَ الْمُصْلِحِيْنَ ﴿۱۹﴾ وَجَآءَ
رَجُلٌ مِّنْ اَقْصَا الْمَدِيْنَةِ يَسْعٰى ۫ قَالَ يٰمُوْسٰۤى اِنَّ الْمَلَاَ
يَاْتَمِرُوْنَ بِكَ لِيَقْتُلُوْكَ فَاخْرُجْ اِنِّىْ لَكَ مِنَ النّٰصِحِيْنَ ﴿۲۰﴾

14. அவர் வாலிபத்தையடைந்து, (வாழ்க்கையில்) அவர் நிறைவு நிலையைப் பெற்றபோது அவருக்கு ஞானத்தையும், கல்வியையும் நாம் வழங்கினோம்; இவ்வாறே நன்மை செய்வோருக்கு நாம் (நற்) கூலி வழங்குவோம்.

15. அந்நகரத்தில்_ அதைச்சார்ந்தோர் பாராமுகமாக (அயர்ந்து தூக்கத்தில்) இருந்த சமயத்தில் (மூஸாவாகிய) அவர் நுழைந்தார்; அப்போது சண்டையிட்டுக் கொண்டிருந்த இரண்டுமனிதர்களை அதில் அவர் கண்டார்; இ(தில் ஒரு)வன் அவருடைய கூட்டத்தைச் சார்ந்தவன்; இ(ன்னொரு)வன் அவருடைய பகைவனைச் சார்ந்தவன். அப்போது அவர் இனத்தைச் சேர்ந்தவன், அவருடைய பகைவனைச் சார்ந்தவனுக்கு எதிராக உதவி செய்யுமாறு அவரிடத்தில் கோரினான்; (அதற்கிணங்கி) மூஸா அவனை ஒரு குத்துக் குத்தினார்; அவன் காரியத்தை முடித்துவிட்டார். (அவன் இறந்துவிட்டதை அறிந்த மூஸா,) "இது ஷைத்தானுடைய செயலில் உள்ளதாகும்; நிச்சயமாக அவன் பகிரங்கமாக வழிகெடுக்கக்கூடிய விரோதி" எனக்கூறினார்.

16. அவர் "என் இரட்சகனே! நிச்சயமாக நான் எனக்கே அநியாயம் செய்துவிட்டேன்; ஆகவே, நீ என்னை மன்னிப்பாயாக!" என்று (பிரார்த்தித்துக்) கூறினார். அப்போது (அல்லாஹ்வாகிய) அவன் அவரை மன்னித்துவிட்டான். நிச்சயமாக அவனே மிக்க மன்னிக்கிறவன், மிகக் கிருபை செய்கிறவன்.

17. "என் இரட்சகனே! என் மீது நீ அருள் புரிந்ததன் காரணமாக, (இனி) குற்றவாளிகளுக்கு உதவி செய்பவனாக நான் ஒருபோதும் இருக்கமாட்டேன்" என்று அவர் கூறினார்.

18. பின்னர் (மறுநாள்) காலையில் அந்நகரத்தில் (தமக்கு என்ன ஏற்படுமோ என்று) பயந்தவராக (அங்கும் இங்குமாக) அவர் கவனித்துக்கொண்டிருந்த அச்சமயத்தில், நேற்று இவரிடம் உதவி தேடியவன், (பின்னும் தனக்கு உதவி கேட்டு) கூச்சலிட்டு இவரை அழைத்தான்; அதற்கு மூஸா அவனிடம், "நீ பகிரங்கமான அழிச்சாட்டியக்காரனாக இருக்கின்றாய்" என்று கூறினார்.

19. பின்னர், தம்மிருவருக்கும் விரோதியாயிருந்தவனைப் பிடிக்க (மூஸாவாகிய) அவர் நாடியபோது, (மூஸாவுடைய கூட்டத்தைச் சார்ந்தவன், அதைத்தவறாக புரிந்துகொண்டு) "மூஸாவே! நேற்றையத்தினம் ஒரு மனிதனைக் கொலை செய்தது போல், என்னையும் நீர் கொலை செய்ய நாடுகிறீரா? பூமியில் வம்பனாகஆவதைத் தவிர (வேறு எதனையும்) நீர் நாடவில்லை; இன்னும், சீர்திருத்துவோரில் உள்ளவராவதையும் நீர் நாடவில்லை" என்று அவன் கூறினான்.

20. மேலும், பட்டணத்தின் கோடியிலிருந்து ஒரு மனிதர் விரைவாக (ஓடி) வந்து, "மூஸாவே! நிச்சயமாக உம்மைக் கொலைசெய்துவிட, (இந்நகரப்) பிரதானிகள் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்; ஆதலால், நீர் (இங்கிருந்து) வெளியேறிவிடும்; நிச்சயமாக நான் (உம்முடைய நன்மையைக் கருதி) உபதேசம் செய்பவர்களிலுள்ளவனாவேன்" என்று கூறினார்.

فَخَرَجَ مِنْهَا خَآئِفًا يَّتَرَقَّبُ ؗ قَالَ رَبِّ نَجِّنِيْ مِنَ الْقَوْمِ الظّٰلِمِيْنَ ﴿٢١﴾ ع ٢ ع ٨ ٥
وَلَمَّا تَوَجَّهَ تِلْقَآءَ مَدْيَنَ قَالَ عَسٰى رَبِّيْٓ اَنْ يَّهْدِيَنِيْ سَوَآءَ
السَّبِيْلِ ﴿٢٢﴾ وَلَمَّا وَرَدَ مَآءَ مَدْيَنَ وَجَدَ عَلَيْهِ اُمَّةً مِّنَ
النَّاسِ يَسْقُوْنَ ۠ وَوَجَدَ مِنْ دُوْنِهِمُ امْرَاَتَيْنِ تَذُوْدٰنِ ۚ
قَالَ مَا خَطْبُكُمَا ؕ قَالَتَا لَا نَسْقِيْ حَتّٰى يُصْدِرَ الرِّعَآءُ ٚ وَاَبُوْنَا
شَيْخٌ كَبِيْرٌ ﴿٢٣﴾ فَسَقٰى لَهُمَا ثُمَّ تَوَلّٰىٓ اِلَى الظِّلِّ فَقَالَ رَبِّ اِنِّيْ
لِمَآ اَنْزَلْتَ اِلَيَّ مِنْ خَيْرٍ فَقِيْرٌ ﴿٢٤﴾ فَجَآءَتْهُ اِحْدٰىهُمَا تَمْشِيْ عَلَى
اسْتِحْيَآءٍ ۠ قَالَتْ اِنَّ اَبِيْ يَدْعُوْكَ لِيَجْزِيَكَ اَجْرَ مَا سَقَيْتَ لَنَا ؕ
فَلَمَّا جَآءَهٗ وَقَصَّ عَلَيْهِ الْقَصَصَ ۙ قَالَ لَا تَخَفْ ۫ نَجَوْتَ مِنَ
الْقَوْمِ الظّٰلِمِيْنَ ﴿٢٥﴾ قَالَتْ اِحْدٰىهُمَا يٰٓاَبَتِ اسْتَاْجِرْهُ ۠ اِنَّ خَيْرَ
مَنِ اسْتَاْجَرْتَ الْقَوِيُّ الْاَمِيْنُ ﴿٢٦﴾ قَالَ اِنِّيْٓ اُرِيْدُ اَنْ اُنْكِحَكَ
اِحْدَى ابْنَتَيَّ هٰتَيْنِ عَلٰٓى اَنْ تَاْجُرَنِيْ ثَمٰنِيَ حِجَجٍ ۚ فَاِنْ اَتْمَمْتَ
عَشْرًا فَمِنْ عِنْدِكَ ۚ وَمَآ اُرِيْدُ اَنْ اَشُقَّ عَلَيْكَ ؕ سَتَجِدُنِيْٓ اِنْ
شَآءَ اللّٰهُ مِنَ الصّٰلِحِيْنَ ﴿٢٧﴾ قَالَ ذٰلِكَ بَيْنِيْ وَبَيْنَكَ ؕ اَيَّمَا الْاَجَلَيْنِ
قَضَيْتُ فَلَا عُدْوَانَ عَلَيَّ ؕ وَاللّٰهُ عَلٰى مَا نَقُوْلُ وَكِيْلٌ ﴿٢٨﴾ ع ٣ ع ٧ ٦

21. ஆகவே, அவர் பயந்தவராக (தன்னைப்பற்றி கவலைப்பட்டுஅங்குமிங்கும் திரும்பி) கவனித்தவராக அ(வ்வூரான)தைவிட்டு வெளியேறி, " என் இரட்சகனே! அநியாயக்காரர்களின் கூட்டத்திலிருந்து என்னை நீ காப்பாற்றுவாயாக!" என்று கூறினார்.

22. இன்னும், அவர் மத்யன்(நகரத்தின்)பக்கம்முன்னோக்கிச் சென்றசமயத்தில், "என் இரட்சகன் (அதற்குரிய) நேரான வழியில் என்னை செலுத்தப் போதுமானவன்" என்று கூறினார்.

23. இன்னும், (அவ்வாறு சென்ற) அவர், மத்யன் (நகரத்தின் வெளியிலிருந்த) தண்ணீருக்கு (அதன் கிணற்றுக்கு அருகே) வந்தபொழுது, அங்கு ஜனங்களில் ஒரு கூட்டத்தினரை(த்தங்கள் ஆடு, மாடு முதலிய கால்நடைகளுக்குத்) தண்ணீர் புகட்டிக் கொண்டிருப்பவர்களாகக் கண்டார்; இன்னும் அவர்களைத்தவிர இரு பெண்கள் (தங்கள் ஆட்டு மந்தையை) வளைத்து (நிறுத்தி)க்கொண்டிருப்பதையும் கண்டார்; அப்பொழுது (அப்பெண்களிடம்)உங்கள் இருவரின் விஷயமென்ன? என்று கேட்டார்; அதற்கு: "இம்மேய்ப்பாளர்கள் (தண்ணீர் புகட்டிவிட்டு) விலகும்வரை நாங்கள் தண்ணீர் புகட்ட முடியாது;எங்கள் தந்தையோ முதிர்ந்த வயதையுடைய பெரியவர்" என்று அவ்விருவரும் கூறினார்கள்.

24. ஆகவே அவர் அவ்விருவரு(டைய கால்நடைகளு)க்குத் தண்ணீர் (இறைத்துப்) புகட்டினார், அதன்பின்னர் அவர் ஒரு (மரத்தின்) நிழலின்பக்கம் திரும்பி, " என் இரட்சகனே!என்பால் எந்த நன்மையை நீ இறக்கிவைக்கிறாயோ நிச்சயமாக நான் (அதற்குத்) தேவையுடையவனாக இருக்கிறேன்" என்று கூறினார்.

25. (சிறிது நேரத்திற்குப்) பிறகு அவ்விருவரில் ஒருத்தி மிக்க நாணத்துடன் நடந்து அவரிடம் வந்து, "நீர் எங்(கள் கால்நடை) களுக்குத் தண்ணீர் புகட்டியதற்குரிய கூலியை உமக்குக் கொடுப்பதற்காக நிச்சயமாக என் தந்தை உம்மை அழைக்கிறார்" என்று கூறினாள். (இவ்வாறாக) மூஸா அவரிடம் வந்து (தன்) வரலாற்றைக் கூறவே, அவர் "நீர் பயப்படவேண்டாம்; அநியாயக்காரர்களான கூட்டத்தாரைவிட்டு நீர் தப்பித்துவிட்டீர்" என்று கூறினார்.

26. (அப்போது) அவ்விருவரில் ஒருத்தி" என் தந்தையே! நீங்கள் இவரைக்கூலிக்கு வைத்துக்கொள்ளுங்கள்.நீங்கள் கூலிக்குவைத்துக்கொண்டவர்களில் நிச்சயமாக (இவர்) மிகச்சிறந்தபலமிக்கவர், நம்பிக்கைக்குரியவர்ஆவார் "என்று கூறினாள்.

27. அ(தற்க)வர் (மூஸாவிடம்) " நீர் எனக்கு எட்டு வருடங்கள் (ஆடு மேய்த்து) வேலை செய்ய வேண்டுமென்ற நிபந்தனையின்மீது என்னுடைய இவ்விரு குமாரத்திகளில் ஒருத்தியை நான் உமக்குத் திருமணம் செய்து கொடுக்க நிச்சயமாக நான் நாடுகிறேன்;நீர் (அதைப்)பத்துவருடங்களாகப் பூர்த்தி செய்தால் (அது உம்விருப்பப்படி) உம்மிடத்திலிருந்தாகும்; நான் உமக்கு சிரமத்தை உண்டாக்க நாடவில்லை; அல்லாஹ் நாடினால், நீர் என்னை நல்லவர்களில் உள்ள(ஒரு)வராகவே காண்பீர்" என்று கூறினார்.

28. அதற்கு ( மூஸா) " அது எனக்கும், உங்களுக்குமிடையில் உள்ளதாகும். இரு தவணைகளில் எதனை நான் நிறைவேற்றினாலும் என்மீது குற்றமில்லை; நாம் கூறுவதற்கு அல்லாஹ்வே சாட்சியாளன்" என்று கூறினார்.

فَلَمَّا قَضٰى مُوْسَى الْاَجَلَ وَسَارَ بِاَهْلِهٖۤ اٰنَسَ مِنْ جَانِبِ
الطُّوْرِ نَارًاۚ قَالَ لِاَهْلِهِ امْكُثُوْۤا اِنِّیْۤ اٰنَسْتُ نَارًا لَّعَلِّیْۤ اٰتِیْكُمْ
مِّنْهَا بِخَبَرٍ اَوْ جَذْوَةٍ مِّنَ النَّارِ لَعَلَّكُمْ تَصْطَلُوْنَ ﴿۲۹﴾
فَلَمَّاۤ اَتٰىهَا نُوْدِیَ مِنْ شَاطِئِ الْوَادِ الْاَیْمَنِ فِی الْبُقْعَةِ
الْمُبٰرَكَةِ مِنَ الشَّجَرَةِ اَنْ یّٰمُوْسٰۤى اِنِّیْۤ اَنَا اللّٰهُ رَبُّ الْعٰلَمِیْنَ ﴿۳۰﴾
وَاَنْ اَلْقِ عَصَاكَؕ فَلَمَّا رَاٰهَا تَهْتَزُّ كَاَنَّهَا جَآنٌّ وَّلّٰى
مُدْبِرًا وَّلَمْ یُعَقِّبْؕ یٰمُوْسٰۤى اَقْبِلْ وَلَا تَخَفْ اِنَّكَ مِنَ
الْاٰمِنِیْنَ ﴿۳۱﴾ اُسْلُكْ یَدَكَ فِیْ جَیْبِكَ تَخْرُجْ بَیْضَآءَ مِنْ
غَیْرِ سُوْٓءٍ٘ وَّاضْمُمْ اِلَیْكَ جَنَاحَكَ مِنَ الرَّهْبِ فَذٰنِكَ بُرْهَانٰنِ
مِنْ رَّبِّكَ اِلٰى فِرْعَوْنَ وَمَلَا۠ئِهٖؕ اِنَّهُمْ كَانُوْا قَوْمًا فٰسِقِیْنَ ﴿۳۲﴾
قَالَ رَبِّ اِنِّیْ قَتَلْتُ مِنْهُمْ نَفْسًا فَاَخَافُ اَنْ یَّقْتُلُوْنِ ﴿۳۳﴾
وَاَخِیْ هٰرُوْنُ هُوَ اَفْصَحُ مِنِّیْ لِسَانًا فَاَرْسِلْهُ مَعِیَ رِدْاً
یُّصَدِّقُنِیْۤ٘ اِنِّیْۤ اَخَافُ اَنْ یُّكَذِّبُوْنِ ﴿۳۴﴾ قَالَ سَنَشُدُّ
عَضُدَكَ بِاَخِیْكَ وَنَجْعَلُ لَكُمَا سُلْطٰنًا فَلَا یَصِلُوْنَ
اِلَیْكُمَاۚۛ بِاٰیٰتِنَاۚۛ اَنْتُمَا وَمَنِ اتَّبَعَكُمَا الْغٰلِبُوْنَ ﴿۳۵﴾

معانقة ۱۱ عند المتاخرین

29. ஆகவே, மூஸா (தம்) தவணையை முடித்துக் கொண்டு தன் குடும்பத்தினருடன் (இரவில்) பயணம் செய்து கொண்டிருந்த பொழுது, (வழி தெரியாது திகைத்துக் கொண்டிருந்த சமயத்தில்) தூர் (ஸீனாய் மலையின்) புறத்திலிருந்து ஒரு நெருப்பைப் பார்த்தார்; தன் குடும்பத்தினரிடம், " நீங்கள் தங்கியிருங்கள்; நிச்சயமாக நான் ஒரு நெருப்பைக் காண்கிறேன்; அதிலிருந்து (பாதையைப் பற்றிய) ஒரு தகவலையோ அல்லது நீங்கள் குளிர்காய்வதற்காக நெருப்பின் ஒரு பந்தத்தையோ உங்களுக்கு நான் கொண்டுவரக்கூடும்" என்று கூறினார்.

30. அவர் அதனிடம் வந்தபொழுது, மிக்க பாக்கியம் பெற்ற பகுதியிலுள்ள வலப் பக்கத்திலுள்ள ஓடையின் ஒரு மரத்திலிருந்து ," மூஸாவே! நிச்சயமாக நானே அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்" என அழைக்கப்பட்டார்.

31. அன்றியும்" நீர் உம்முடைய தடியைப் போடுவீராக! " (என்று அவருக்குக் கூறப்பட்டது.) அப்பொழுது நிச்சயமாக அது பெரியதொரு பாம்பைப் போன்று மிகவேகமாக நெளிவதைக்கண்டு (பயந்து) அவர் திரும்பிப் பார்க்காதவராக (அதனைவிட்டும் விலகி) புறமுதுகிட்டுத் திரும்பினார். (அச்சமயத்தில் )" மூஸாவே! நீர் முன்னோக்கிவாரும்; இன்னும் நீர் பயப்படாதீர்; நிச்சயமாக நீர் அச்சமற்றவர்களில் உள்ளவராவீர்"(என்றும் சொல்லப்பட்டது).

32. " உம்முடைய சட்டைப்பைக்குள் உம்முடைய கையை நுழைப்பீராக; அது எவ்விதத்தீங்கின்றி (பிரகாசமுள்ள) வெண்மையாக வெளிப்படும்; பயத்திலிருந்து (விடுபட) உம்முடைய புஜங்களை உம் (விலாவின்) பால் சேர்த்துக் கொள்வீராக! இவ்விரண்டும் ஃபிர் அவ்னுக்கும், அவனுடைய பிரதானிகளுக்கும் (நீர் எடுத்துச் செல்வதற்கு) உரிய உமதிரட்சகனிடமிருந்துள்ள இரு அத்தாட்சிகளாகும்; நிச்சயமாக அவர்கள் பாவம் செய்யும் கூட்டத்தினர்களாகவே இருக்கிறார்கள்" (என்றும் அவருக்குக் கூறப்பட்டது).

33. அ(தற்க)வர்,"என் இரட்சகனே! நிச்சயமாக நான் அவர்களில் ஒருவரைக் கொலை செய்திருக்கின்றேன்; ஆகவே அதற்கு(ப் பகரமாக) என்னை அவர்கள் கொலைசெய்துவிடுவார்கள் என்று நான் பயப்படுகிறேன்"என்று கூறினார்.

34."மேலும், என்னுடைய சகோதரர் ஹாரூன், அவர் என்னைவிட பேச்சால் மிகத் தெளிவானவர்; ஆகவே அவரை எனக்கு உதவியாக என்னுடன் நீ அனுப்பிவை; அவர் என்னை உண்மைப்படுத்திவைப்பார்; அவர்கள் என்னைப் பொய்யாக்கிவிடுவதை நிச்சயமாக நான் பயப்படுகிறேன்"(என்று கூறினார்).

35. (அதற்கு அல்லாஹ்) "உம் சகோதரரைக் கொண்டு உம் புஜத்தை நாம் வலுப்படுத்துவோம்; நாம் உங்களிருவருக்குமே வெற்றியைத் தருவோம்; ஆகவே அவர்கள் உங்களிருவர்பால் நெருங்கமாட்டார்கள்; நீங்கள் நம்முடைய அத்தாட்சிகளுடன் (செல்லுங்கள்); நீங்களிருவரும், உங்கள் இருவரைப் பின்பற்றுவோரும்தான் வெற்றி பெறக்கூடியவர்கள் " என்று கூறினான்.

فَلَمَّا جَآءَهُمْ مُّوْسٰى بِاٰيٰتِنَا بَيِّنٰتٍ قَالُوْا مَا هٰذَآ اِلَّا سِحْرٌ
مُّفْتَرًى وَّمَا سَمِعْنَا بِهٰذَا فِيْٓ اٰبَآئِنَا الْاَوَّلِيْنَ ﴿۳۶﴾ وَقَالَ
مُوْسٰى رَبِّيْٓ اَعْلَمُ بِمَنْ جَآءَ بِالْهُدٰى مِنْ عِنْدِهٖ وَمَنْ تَكُوْنُ
لَهٗ عَاقِبَةُ الدَّارِ ؕ اِنَّهٗ لَا يُفْلِحُ الظّٰلِمُوْنَ ﴿۳۷﴾ وَقَالَ فِرْعَوْنُ
يٰٓاَيُّهَا الْمَلَاُ مَا عَلِمْتُ لَكُمْ مِّنْ اِلٰهٍ غَيْرِيْ ۚ فَاَوْقِدْ لِيْ
يٰهَامٰنُ عَلَى الطِّيْنِ فَاجْعَلْ لِّيْ صَرْحًا لَّعَلِّيْٓ اَطَّلِعُ اِلٰٓى
اِلٰهِ مُوْسٰى ۙ وَاِنِّيْ لَاَظُنُّهٗ مِنَ الْكٰذِبِيْنَ ﴿۳۸﴾ وَاسْتَكْبَرَ
هُوَ وَجُنُوْدُهٗ فِي الْاَرْضِ بِغَيْرِ الْحَقِّ وَظَنُّوْٓا اَنَّهُمْ اِلَيْنَا
لَا يُرْجَعُوْنَ ﴿۳۹﴾ فَاَخَذْنٰهُ وَجُنُوْدَهٗ فَنَبَذْنٰهُمْ فِي الْيَمِّ ۚ
فَانْظُرْ كَيْفَ كَانَ عَاقِبَةُ الظّٰلِمِيْنَ ﴿۴۰﴾ وَجَعَلْنٰهُمْ اَئِمَّةً
يَّدْعُوْنَ اِلَى النَّارِ ۚ وَيَوْمَ الْقِيٰمَةِ لَا يُنْصَرُوْنَ ﴿۴۱﴾
وَاَتْبَعْنٰهُمْ فِيْ هٰذِهِ الدُّنْيَا لَعْنَةً ۚ وَيَوْمَ الْقِيٰمَةِ هُمْ
مِّنَ الْمَقْبُوْحِيْنَ ﴿۴۲﴾ ع وَلَقَدْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ ع۴
مِنْۢ بَعْدِ مَآ اَهْلَكْنَا الْقُرُوْنَ الْاُوْلٰى بَصَآئِرَ
لِلنَّاسِ وَهُدًى وَّرَحْمَةً لَّعَلَّهُمْ يَتَذَكَّرُوْنَ ﴿۴۳﴾

36. எனவே, மூஸா அவர்களிடம் நம்முடைய தெளிவான அத்தாட்சிகளுடன் வந்தபொழுது, அவர்கள்: " இது இட்டுக்கட்டப்பட்ட சூனியத்தைத்தவிர வேறில்லை; முன்னோர்களான எங்கள் மூதாதையரிடத்திலும் இ(வ்விஷயத்)தை நாங்கள் கேள்விப்படவுமில்லை" என்று கூறினார்கள்.

37. (அதற்கு) மூஸா," என் இரட்சகன், தன்னிடமிருந்து நேர் வழியைக் கொண்டு வந்தவர் யார் என்பதையும், இறுதி(யில் சுவன) வீடு யாருக்குக்கிடைக்கும் என்பதையும் மிக அறிவான். நிச்சயமாக, அநியாயக்காரர்கள் வெற்றி பெறமாட்டார்கள்" என்று கூறினார்.

38. (அதற்கு) ஃபிர்அவ்ன், " பிரதானிகளே! என்னைத் தவிர வேறொரு (வணக்கத்திற்குரிய) நாயன் உங்களுக்கு இருப்பதாக நான் அறியவில்லை; ஆகவே, ஹாமானே! களிமண்ணின் மீது (செங்கல் சூளைக்கு) எனக்காக நெருப்பை மூட்டி (அவற்றைக் கொண்டு மிக உயரமான) மாளிகையை எனக்காக நீ கட்டுவாயாக; (அதில் ஏறி) மூஸாவுடைய இரட்சகனை நான் எட்டிப் பார்க்க வேண்டும்; (அவர் தனக்கு வேறு இரட்சகன் இருப்பதாகக் கூறுகிறாரே, இவ்விஷயத்தில்) நிச்சயமாக அவரைப் பொய்யர்களில் உள்ளவராகவே நான் எண்ணுகிறேன்" என்றும் கூறினான்.

39. அவனும், அவனுடைய படையினரும் நியாயமின்றி பூமியில் பெருமையடித்துக் கொண்டிருந்தனர்; நிச்சயமாக அவர்கள் நம்பக்கம் திருப்பப் படமாட்டார்கள் என்றும் எண்ணிக்கொண்டார்கள்.

40. ஆதலால் நாம் அவனையும், அவனுடைய படையினரையும் பிடித்தோம்; பின்னர் அவர்களைக் கடலில் எறிந்து விட்டோம்; ஆகவே, (நபியே!) அநியாயக்காரர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை நீர் கவனிப்பீராக.

41. மேலும், நரகத்தின் பக்கம் அழைக்கக்கூடிய தலைவர்களாகவே (இம்மையில்) நாம் அவர்களை ஆக்கிவைத்திருந்தோம். இன்னும், மறுமை நாளில் அவர்கள் (எவராலும்) உதவி செய்யப்படமாட்டார்கள்.

42. அன்றியும், இவ்வுலகில் (நம்முடைய) சாபத்தை அவர்களுக்கு பின்தொடரச்செய்தோம்; மேலும், மறுமை நாளில் அவர்கள் இழிநிலையுடையவர்களில் உள்ளோராவர்.

43. மேலும், (இவ்வாறு) முந்தைய தலைமுறையினர்களை நாம் அழித்துவிட்ட பின்னர், நிச்சயமாக நாம் மூஸாவுக்கு ஒரு வேதத்தைக் கொடுத்தோம்; (அது) மனிதர்களுக்கு நல்ல படிப்பினைகளை தரக்கூடியதாகவும், நேர் வழியாகவும், அருளாகவும் இருந்தது; அவர்கள் (இதனைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவதற்காக (க்கொடுத்தோம்).

وَمَا كُنْتَ بِجَانِبِ الْغَرْبِيِّ اِذْ قَضَيْنَاۤ اِلٰى مُوْسَى الْاَمْرَ وَمَا
كُنْتَ مِنَ الشّٰهِدِيْنَ ۝٤٤ وَلٰكِنَّاۤ اَنْشَاْنَا قُرُوْنًا فَتَطَاوَلَ عَلَيْهِمُ
الْعُمُرُ ۚ وَمَا كُنْتَ ثَاوِيًا فِيْۤ اَهْلِ مَدْيَنَ تَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِنَا ۙ
وَلٰكِنَّا كُنَّا مُرْسِلِيْنَ ۝٤٥ وَمَا كُنْتَ بِجَانِبِ الطُّوْرِ اِذْ نَادَيْنَا
وَلٰكِنْ رَّحْمَةً مِّنْ رَّبِّكَ لِتُنْذِرَ قَوْمًا مَّاۤ اَتٰىهُمْ مِّنْ نَّذِيْرٍ
مِّنْ قَبْلِكَ لَعَلَّهُمْ يَتَذَكَّرُوْنَ ۝٤٦ وَلَوْلَاۤ اَنْ تُصِيْبَهُمْ
مُّصِيْبَةٌۢ بِمَا قَدَّمَتْ اَيْدِيْهِمْ فَيَقُوْلُوْا رَبَّنَا لَوْلَاۤ اَرْسَلْتَ
اِلَيْنَا رَسُوْلًا فَنَتَّبِعَ اٰيٰتِكَ وَنَكُوْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ ۝٤٧ فَلَمَّا
جَآءَهُمُ الْحَقُّ مِنْ عِنْدِنَا قَالُوْا لَوْلَاۤ اُوْتِيَ مِثْلَ مَاۤ
اُوْتِيَ مُوْسٰى ؕ اَوَلَمْ يَكْفُرُوْا بِمَاۤ اُوْتِيَ مُوْسٰى مِنْ قَبْلُ ۚ
قَالُوْا سِحْرٰنِ تَظٰهَرَا ۟ وَقَالُوْۤا اِنَّا بِكُلٍّ كٰفِرُوْنَ ۝٤٨
قُلْ فَاْتُوْا بِكِتٰبٍ مِّنْ عِنْدِ اللّٰهِ هُوَ اَهْدٰى مِنْهُمَاۤ اَتَّبِعْهُ
اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ۝٤٩ فَاِنْ لَّمْ يَسْتَجِيْبُوْا لَكَ فَاعْلَمْ اَنَّمَا
يَتَّبِعُوْنَ اَهْوَآءَهُمْ ؕ وَمَنْ اَضَلُّ مِمَّنِ اتَّبَعَ هَوٰىهُ بِغَيْرِ
هُدًى مِّنَ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ لَا يَهْدِي الْقَوْمَ الظّٰلِمِيْنَ ۝٥٠ ع ٥ ع ٨

44. (நபியே !) நாம் மூஸாவுக்குக் கட்டளையை விதித்தபோது, நீர் (சினாய் மலையின்) மேற்குத் திசையில் இருக்கவுமில்லை; அங்கு அதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களிலும் நீர் இருக்கவில்லை.

45. எனினும், (அவர்களுக்குப் பின்னர்) எத்தனையோ தலைமுறையினர்களை நாம் உற்பத்தி செய்தோம்; அவர்கள் மீது (பல) காலமும் நீண்டது; இன்னும் மத்யன்வாசிகளிடம்_ அவர்களுக்கு நம்முடைய வசனங்களை நீர் ஓதிக் காண்பித்துக் கொண்டு தங்கியவராக நீர் இருக்கவில்லை; எனினும் (தூதர்களை) நாம் அனுப்புவோராக இருந்தோம்.

46. மேலும், (மூஸாவை) நாம் அழைத்த பொழுது, தூர் (மலையின் ஒரு) பகுதியிலும் நீர் இருக்கவில்லை; எனினும் உமக்கு முன்னர் அச்சமூட்டி எச்சரிப்பவர் வராத (இச்) சமூகத்தார்க்கு நீர் அச்சமூட்டி எச்சரிப்பதற்காக உம்முடைய இரட்சகனின் ஓர் அருளாக (உமக்கு வஹீ அறிவித்தோம். இதனால்) அவர்கள் நல்லுபதேசம் பெறலாம்.

47. அவர்களுடைய கைகள் முற்படுத்திய (தீ) வினையின் காரணமாக அவர்களை ஏதேனும் ஒரு துன்பம் வந்தடையுமென்பது இல்லையானால் (உம்மை நம்முடைய தூதராக நாம் அனுப்பி இருக்கமாட்டோம்). ஆகவே அவர்கள் "எங்கள் இரட்சகனே! எங்கள்பால் (உன்னுடைய) ஒரு தூதரை அனுப்பி வைத்திருக்க வேண்டாமா ? (அவ்வாறு நீ அனுப்பியிருந்தால்) உன்னுடைய வசனங்களை நாங்கள் பின்பற்றி(உன்னை) விசுவாசித்தவர்களில் நாங்களும் ஆகியிருப்போம்" என்று அவர்கள் கூறுவார்கள்.

48. பின்னர் நம்மிடமிருந்து சத்தியம் அவர்களுக்கு வந்த பொழுது, "மூஸாவுக்குக் கொடுக்கப்பட்டதைப் போல் இவருக்கும் கொடுக்கப்பட வேண்டாமா?" என்று அவர்கள் கூறுகின்றனர்; முன்னர் மூஸாவுக்குக் கொடுக்கப்பட்டதை இவர்(களின் மூதாதையர்)கள் நிராகரித்து விடவில்லையா? (குர் ஆனும், தவ்ராத்தும்) ஒன்றையொன்று உறுதிப்படுத்தக்கூடிய இரண்டு சூனியங்கள் தாம் என்று இவர்கள் கூறினார்கள்; மேலும் "நிச்சயமாக நாங்கள் இவை ஒவ்வொன்றையும் நிராகரிப்பவர்கள்" என்று கூறினார்கள்.

49. "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இவ்விரண்டையும் விட அதிக நேர் வழியை அறிவிக்கக்கூடிய(மிக்க மேலானதொரு) வேதத்தை அல்லாஹ்விடமிருந்து கொண்டுவாருங்கள்; அதனை நான் பின்பற்றுகிறேன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

50. (பின்னர்) உமக்கவர்கள் பதில் கூறவில்லையானால், நிச்சயமாக அவர்கள் பின்பற்றுவதெல்லாம் தங்களின் மனோ இச்சைகளைத்தான்என்று உறுதியாக நீர் அறிந்துகொள்வீராக! அல்லாஹ்விடமிருந்துள்ள நேர் வழியை அன்றி தன்னுடைய மனோ இச்சையைப் பின்பற்றியவனை விடவும் மிக வழிகெட்டவன் யார்? நிச்சயமாக அல்லாஹ்(இத்தகைய)அநியாயக்கார சமூகத்தாரை நேர்வழியில் செலுத்தமாட்டான்.

النصف

وَلَقَدْ وَصَّلْنَا لَهُمُ الْقَوْلَ لَعَلَّهُمْ يَتَذَكَّرُوْنَ ؕ﴿۵۱﴾ اَلَّذِيْنَ
اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ مِنْ قَبْلِهٖ هُمْ بِهٖ يُؤْمِنُوْنَ ﴿۵۲﴾ وَاِذَا يُتْلٰى عَلَيْهِمْ
قَالُوْٓا اٰمَنَّا بِهٖٓ اِنَّهُ الْحَقُّ مِنْ رَّبِّنَآ اِنَّا كُنَّا مِنْ قَبْلِهٖ مُسْلِمِيْنَ ﴿۵۳﴾
اُولٰٓئِكَ يُؤْتَوْنَ اَجْرَهُمْ مَّرَّتَيْنِ بِمَا صَبَرُوْا وَيَدْرَءُوْنَ
بِالْحَسَنَةِ السَّيِّئَةَ وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ ﴿۵۴﴾ وَاِذَا سَمِعُوا
اللَّغْوَ اَعْرَضُوْا عَنْهُ وَقَالُوْا لَنَآ اَعْمَالُنَا وَلَكُمْ اَعْمَالُكُمْ ؗ
سَلٰمٌ عَلَيْكُمْ ؗ لَا نَبْتَغِى الْجٰهِلِيْنَ ﴿۵۵﴾ اِنَّكَ لَا تَهْدِيْ مَنْ
اَحْبَبْتَ وَلٰكِنَّ اللّٰهَ يَهْدِيْ مَنْ يَّشَآءُ ۚ وَهُوَ اَعْلَمُ
بِالْمُهْتَدِيْنَ ﴿۵۶﴾ وَقَالُوْٓا اِنْ نَّتَّبِعِ الْهُدٰى مَعَكَ نُتَخَطَّفْ
مِنْ اَرْضِنَا ؕ اَوَلَمْ نُمَكِّنْ لَّهُمْ حَرَمًا اٰمِنًا يُّجْبٰٓى اِلَيْهِ ثَمَرٰتُ
كُلِّ شَيْءٍ رِّزْقًا مِّنْ لَّدُنَّا وَلٰكِنَّ اَكْثَرَهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿۵۷﴾
وَكَمْ اَهْلَكْنَا مِنْ قَرْيَةٍ بَطِرَتْ مَعِيْشَتَهَا ۚ فَتِلْكَ مَسٰكِنُهُمْ
لَمْ تُسْكَنْ مِّنْ بَعْدِهِمْ اِلَّا قَلِيْلًا ؕ وَكُنَّا نَحْنُ الْوٰرِثِيْنَ ﴿۵۸﴾ وَ
مَا كَانَ رَبُّكَ مُهْلِكَ الْقُرٰى حَتّٰى يَبْعَثَ فِيْٓ اُمِّهَا رَسُوْلًا يَّتْلُوْا
عَلَيْهِمْ اٰيٰتِنَا ۚ وَمَا كُنَّا مُهْلِكِي الْقُرٰٓى اِلَّا وَاَهْلُهَا ظٰلِمُوْنَ ﴿۵۹﴾

51. மேலும் அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்காக நம்முடைய (வேத) வாக்கை அவர்களுக்குத் திட்டமாக சேர்த்துவைத்தோம்.

52. ( ஆகவே, குர் ஆனாகிய ) இதற்கு முன்னர் எவர்களுக்கு நாம் (நம்முடைய) வேதத்தைக் கொடுத்திருக்கிறோமோ அத்தகையோர் _ அவர்களே இதனை விசுவாசிக்கின்றார்கள்.

53. இன்னும் அவர்கள் மீது (இவ்வேதம்) ஓதிக்காண்பிக்கப்பட்டால், அ(தற்க)வர்கள், "இதனைக் கொண்டு விசுவாசங்கொண்டோம் ; நிச்சயமாக இதுவும் எங்கள் இரட்சகனிடமிருந்து வந்த உண்மை(யான வேதம்) தான்; இதற்கு முன்னதாகவே, நிச்சயமாக நாங்கள் (முற்றிலும் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களாகவே இருந்தோம்" என்று கூறுகிறார்கள்.

54. அத்தகையோர் _ அவர்கள் பொறுமையாக இருந்ததன் காரணத்தால், இரண்டு தடவை அவர்களது(நற்) கூலியை கொடுக்கப்படுவார்கள்; இவர்கள் நன்மையைக் கொண்டே தீமையைத் தடுத்துக்கொள்வார்கள்; நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து அவர்கள் (தர்மமாகச்)செலவும் செய்வார்கள்.

55. இன்னும் அவர்கள் (செய்திகளில்)வீணானதைச் செவியுற்றால், அதனைப் புறக்கணித்துவிட்டு, " எங்களுடைய செயல்கள் எங்களுக்கும், உங்களுடைய செயல்கள் உங்களுக்கும் (உரியன) உங்களுக்கு ஸலாம் ! அறிவீனர்களை நாங்கள் விரும்பமாட்டோம்" என்று கூறுவார்கள்.

56.(நபியே!) நிச்சயமாக நீர் விரும்பியோரை நேர் வழியில் செலுத்தி விட மாட்டீர்; எனினும் அல்லாஹ், தான் நாடியோரையே நேர் வழியில் செலுத்துகின்றான்; மேலும் நேர் வழி பெறுகிறவர்களை அவனே மிக அறிந்தவன்.

57. (நபியே ! மக்காவாசிகளான ) இவர்கள் " நாங்கள் உம்முடன் (குர் ஆனாகிய) இந்த நேர்வழியைப் பின்பற்றினால் எங்கள் ஊரிலிருந்து நாங்கள் இறாய்ஞ்சி(த் தூக்கி)ச் செல்லப்பட்டு விடுவோம்" என்று கூறுகின்றனர்( இவர்கள் சிந்திக்க வேண்டாமா ?) அபயமளிக்கும் கண்ணியமான இடத்தை அவர்களுக்கு (வசிக்க) நாம் ஆக்கித்தரவில்லையா? நம்மிடமிருந்து உணவாக(பல பகுதிகளிலிருந்தும்) ஒவ்வொருவகைக் கனிவர்க்கமும் அதன்பால் கொண்டு வரப்படுகிறது; எனினும் அவர்களில் பெரும்பாலோர் (இதனை)அறியமாட்டார்கள்.

58. மேலும், தம் வாழ்க்கை வசதிகளின் மேம்பாட்டால்(அட்டூழியம் செய்து) வரம்பு மீறி விட்ட எத்தனையோ ஊ(ரா)ர்களை நாம் அழித்திருக்கிறோம். அவை அவர்களின் குடியிருப்புகளாகும்; கொஞ்ச(நேர)மே தவிர அவர்களுக்குப்பின் (யாராலும்) குடியிருக்கப்படவில்லை; நாமே (அவைகளுக்கு) வாரிசுகளாக ஆகிவிட்டோம்.

59. மேலும், (நபியே ! ) உமதிரட்சகன் _ ஊர்களை, அவற்றின் தலைநகருக்கு நம்முடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக்காண்பிக்கும் ஒரு தூதரை அனுப்புகிற வரை—அழிப்பவனாக இல்லை. மேலும் ஊர்களை,அவ்வூர்வாசிகள் அநியாயக்காரர்களாக இருந்தேதவிர நாம் அழிக்கக் கூடியவர்களாக இல்லை.

وَمَآ اُوْتِيْتُمْ مِّنْ شَيْءٍ فَمَتَاعُ الْحَيٰوةِ الدُّنْيَا وَزِيْنَتُهَا ۚ وَمَا
عِنْدَ اللّٰهِ خَيْرٌ وَّاَبْقٰى ؕ اَفَلَا تَعْقِلُوْنَ ﴿۶۰﴾ اَفَمَنْ وَّعَدْنٰهُ وَعْدًا ع ۶ / ۱۰ / ۹
حَسَنًا فَهُوَ لَاقِيْهِ كَمَنْ مَّتَّعْنٰهُ مَتَاعَ الْحَيٰوةِ الدُّنْيَا ثُمَّ هُوَ
يَوْمَ الْقِيٰمَةِ مِنَ الْمُحْضَرِيْنَ ﴿۶۱﴾ وَيَوْمَ يُنَادِيْهِمْ فَيَقُوْلُ اَيْنَ
شُرَكَآءِيَ الَّذِيْنَ كُنْتُمْ تَزْعُمُوْنَ ﴿۶۲﴾ قَالَ الَّذِيْنَ حَقَّ عَلَيْهِمُ
الْقَوْلُ رَبَّنَا هٰٓؤُلَآءِ الَّذِيْنَ اَغْوَيْنَا ۚ اَغْوَيْنٰهُمْ كَمَا غَوَيْنَا ۚ تَبَرَّاْنَآ
اِلَيْكَ ۫ مَا كَانُوْٓا اِيَّانَا يَعْبُدُوْنَ ﴿۶۳﴾ وَقِيْلَ ادْعُوْا شُرَكَآءَكُمْ
فَدَعَوْهُمْ فَلَمْ يَسْتَجِيْبُوْا لَهُمْ وَرَاَوُا الْعَذَابَ ۚ لَوْ اَنَّهُمْ
كَانُوْا يَهْتَدُوْنَ ﴿۶۴﴾ وَيَوْمَ يُنَادِيْهِمْ فَيَقُوْلُ مَاذَآ اَجَبْتُمُ
الْمُرْسَلِيْنَ ﴿۶۵﴾ فَعَمِيَتْ عَلَيْهِمُ الْاَنْۢبَآءُ يَوْمَىِٕذٍ فَهُمْ لَا
يَتَسَآءَلُوْنَ ﴿۶۶﴾ فَاَمَّا مَنْ تَابَ وَاٰمَنَ وَعَمِلَ صَالِحًا فَعَسٰٓى اَنْ
يَّكُوْنَ مِنَ الْمُفْلِحِيْنَ ﴿۶۷﴾ وَرَبُّكَ يَخْلُقُ مَا يَشَآءُ وَيَخْتَارُ ؕ مَا
كَانَ لَهُمُ الْخِيَرَةُ ؕ سُبْحٰنَ اللّٰهِ وَتَعٰلٰى عَمَّا يُشْرِكُوْنَ ﴿۶۸﴾ وَرَبُّكَ يَعْلَمُ
مَا تُكِنُّ صُدُوْرُهُمْ وَمَا يُعْلِنُوْنَ ﴿۶۹﴾ وَهُوَ اللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ؕ لَهُ
الْحَمْدُ فِي الْاُوْلٰى وَالْاٰخِرَةِ ۫ وَلَهُ الْحُكْمُ وَاِلَيْهِ تُرْجَعُوْنَ ﴿۷۰﴾

60. (நபியே! நீர் கூறுவீராக!) இன்னும் எப்பொருளிலிருந்து நீங்கள் கொடுக்கப்பட்டுள்ளீர்களோ அவை இவ்வுலகவாழ்க்கையிலுள்ள (அற்ப) சுகமும், அதனுடைய அலங்காரமும் தான். ஆனால் அல்லாஹ்விடத்தில் இருப்பதோ, மிகச் சிறந்ததும், நிலையானதுமாகும்; (இதை) நீங்கள் விளங்கிக்கொள்ளமாட்டீர்களா?

61. (என்னே !) எவனுக்கு நாம் அழகான வாக்காக வாக்களித்து, அதை அவனும் அடைய இருக்கின்றானோ அவன், எவனுக்கு நாம் இவ்வுலக வாழ்க்கையின் (அற்ப) சுகங்களை (மட்டும்) அளித்து, பின்னர் அவன் மறுமைநாளில் (குற்றம்சாட்டப்பட்டு தண்டனைக்காக) முன்னிலைப்படுத்தப்படுபவர்களில் இருப்பானோ அவனைப்போல் ஆவானா?

62. இன்னும், (அல்லாஹ்வாகிய) அவன் அவர்களை அழைக்கும் நாளில், (அவர்களிடம்,) "நீங்கள் எண்ணிக்கொண்டிருந்தீர்களே அத்தகைய என்னுடைய இணையாளர்கள் எங்கே?" என்று கேட்பான்.

63. எவர்கள் மீது (தண்டனை பற்றிய) வாக்கு உறுதியாகி விட்டதோ அவர்கள், "எங்கள் இரட்சகனே! நாங்கள் எவர்களை வழிகெடுத்தோமோ அவர்கள் இவர்கள் தாம்; நாங்கள் வழிகெட்டது போன்றே இவர்களையும் நாங்கள் வழிகெடுத்தோம்; (எங்களை அவர்கள் வணங்கிக் கொண்டிருந்ததிலிருந்து அவர்களை விட்டும்) நாங்கள் உன்பால் நீங்கிக் கொள்கிறோம்— அவர்கள் எங்களை வணங்கிக் கொண்டிருக்கவில்லை" என்று கூறுவார்கள்.

64. "பின்னர், உங்கள் இணையாளர்(களானதெய்வங்) களை (உதவிக்கு) அழையுங்கள்" என்று (அவர்களுக்குக்) கூறப்படும்; (அவ்வாறே) அவர்களை இவர்கள் அழைப்பார்கள். ஆனால், அவர்கள் இவர்களுக்கு பதிலளிக்கமாட்டார்கள். மேலும் இவர்கள் (தங்கள்) வேதனையைக் கண்டுகொள்வார்கள். நிச்சயமாக இவர்கள் (உலகில்)நேரான வழியில் சென்றவர்களாக இருந்திருந்தால் (அவர்களுக்கு நன்மையாக இருந்திருக்கும்).

65. மேலும், (விசாரணைக்காக அல்லாஹ்வாகிய) அவன் அவர்களை அழைக்கும் நாளில் ("உங்களிடம் வந்த) நம்முடைய தூதர்களுக்கு நீங்கள் என்ன பதில் கூறினீர்கள்?" என்று கேட்பான்.

66. அந்நாளில் (சகல) செய்திகளும் அவர்களுக்கு மறைந்ததாகி விடும். (எதைப்பற்றியும்) ஒருவர் ஒருவரைக் கேட்டுக்கொள்ளவும் மாட்டார்கள்.

67. ஆகவே, (அவர்களில்) எவர் பச்சாதாபப்பட்டு, விசுவாசமுங்கொண்டு நற்கருமங்களையும் செய்கின்றாரோ, அவர் அப்போது வெற்றியடைந்தோரில் ஆகிவிடலாம்.

68. மேலும், (நபியே!) உமதிரட்சகன், தான் நாடியவற்றைப் படைக்கிறான், (தன்னுடைய தூதுக்காக அவர்களில் தான் விரும்பியவர்களைத்) தேர்ந்தெடுக்கின்றான்; (அவ்வாறு தூதரைத்) தேர்ந்தெடுத்தல் அவர்களுக்கு இல்லை; அல்லாஹ் மிகப்பரிசுத்தமானவன்; இன்னும், இவர்கள் இணைவைப்பவைகளை விட்டும் அவன் மிக்க உயர்ந்தவனாகிவிட்டான்.

69. உமதிரட்சகன், அவர்களுடைய நெஞ்சங்கள் மறைத்து வைத்திருப்பதையும், (அதற்கு மாறாக) அவர்கள் வெளிப்படுத்துவதையும் நன்கறிவான்.

70. இன்னும், அவனே அல்லாஹ்; அவனைத் தவிர (வேறு) வணக்கத் திற்குரியவன் இல்லை. இம்மையிலும், மறுமையிலும் புகழ் யாவும் அவனுக்கே உரியது! (தீர்ப்புக்கூறும்) அதிகாரமும் அவனுக்கே உரியது! ஆதலால் (மறுமையில்) நீங்கள் (யாவரும்) அவன்பக்கமே திருப்பிக் கொண்டுவரப்படுவீர்கள்.

قُلْ اَرَءَيْتُمْ اِنْ جَعَلَ اللّٰهُ عَلَيْكُمُ الَّيْلَ سَرْمَدًا اِلٰى يَوْمِ
الْقِيٰمَةِ مَنْ اِلٰهٌ غَيْرُ اللّٰهِ يَاْتِيْكُمْ بِضِيَآءٍ ؕ اَفَلَا تَسْمَعُوْنَ ﴿۷۱﴾
قُلْ اَرَءَيْتُمْ اِنْ جَعَلَ اللّٰهُ عَلَيْكُمُ النَّهَارَ سَرْمَدًا اِلٰى يَوْمِ
الْقِيٰمَةِ مَنْ اِلٰهٌ غَيْرُ اللّٰهِ يَاْتِيْكُمْ بِلَيْلٍ تَسْكُنُوْنَ فِيْهِ ؕ اَفَلَا
تُبْصِرُوْنَ ﴿۷۲﴾ وَمِنْ رَّحْمَتِهٖ جَعَلَ لَكُمُ الَّيْلَ وَالنَّهَارَ لِتَسْكُنُوْا
فِيْهِ وَلِتَبْتَغُوْا مِنْ فَضْلِهٖ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿۷۳﴾ وَيَوْمَ
يُنَادِيْهِمْ فَيَقُوْلُ اَيْنَ شُرَكَآءِىَ الَّذِيْنَ كُنْتُمْ تَزْعُمُوْنَ ﴿۷۴﴾
وَنَزَعْنَا مِنْ كُلِّ اُمَّةٍ شَهِيْدًا فَقُلْنَا هَاتُوْا بُرْهَانَكُمْ
فَعَلِمُوْٓا اَنَّ الْحَقَّ لِلّٰهِ وَضَلَّ عَنْهُمْ مَّا كَانُوْا يَفْتَرُوْنَ ﴿۷۵﴾ ع ۷ ۱۵ ۱۰
اِنَّ قَارُوْنَ كَانَ مِنْ قَوْمِ مُوْسٰى فَبَغٰى عَلَيْهِمْ ۪ وَاٰتَيْنٰهُ
مِنَ الْكُنُوْزِ مَآ اِنَّ مَفَاتِحَهٗ لَتَنُوْٓاُ بِالْعُصْبَةِ اُولِى الْقُوَّةِ ق
اِذْ قَالَ لَهٗ قَوْمُهٗ لَا تَفْرَحْ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْفَرِحِيْنَ ﴿۷۶﴾
وَابْتَغِ فِيْمَآ اٰتٰىكَ اللّٰهُ الدَّارَ الْاٰخِرَةَ وَلَا تَنْسَ نَصِيْبَكَ
مِنَ الدُّنْيَا وَاَحْسِنْ كَمَآ اَحْسَنَ اللّٰهُ اِلَيْكَ وَلَا تَبْغِ
الْفَسَادَ فِى الْاَرْضِ ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْمُفْسِدِيْنَ ﴿۷۷﴾

71. (நபியே!) நீர் கூறுவீராக: மறுமைநாள் வரை அல்லாஹ் உங்கள் மீது இரவை நிரந்தரமாக ஆக்கிவிட்டால், உங்களுக்கு (ப்பகலின்) வெளிச்சத்தைக் கொண்டுவரக்கூடியவன் அல்லாஹ்வையன்றி (வணக்கத்திற்குரிய) வேறுநாயன் யார்? (இருக்கின்றான்) என்பதை நீங்கள் (சிந்தித்துப்) பார்த்தீர்களா? (இதனை) நீங்கள் செவியுறமாட்டீர்களா?

72. (நபியே!) நீர் கூறுவீராக: "மறுமை நாள் வரை உங்கள் மீது அல்லாஹ் பகலை நிரந்தரமாக ஆக்கி விட்டால், நீங்கள் எதில் இளைப்பாறுவீர்களோ அந்த இரவை உங்களுக்குக்கொண்டுவரக்கூடியவன் அல்லாஹ்வையன்றி (வணக்கத்திற்குரிய) வேறு நாயன் யார்? (இருக்கிறான்) என்பதை நீங்கள் (சிந்தித்துப்) பார்த்தீர்களா? (இதனை) நீங்கள் (உணர்ந்து) பார்க்கமாட்டீர்களா?

73. இன்னும் தன் அருளால் இரவையும், பகலையும் உங்களுக்கு அவனே ஆக்கினான். (இரவை) அதில் நீங்கள் இளைப்பாறுவதற்கும், பகலை நீங்கள் (அதில்) அவனுடைய அருளைத் தேடிக் கொள்வதற்கும், இன்னும் நீங்கள் (அவனுக்கு) நன்றி செலுத்துவதற்காகவும் (அவ்வாறு ஆக்கியுள்ளான்).

74. (நபியே! அல்லாஹ்வாகிய) அவன் அவர்களை (விசாரணைக்காக) அழைக்கும் நாளில், "நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்களே அத்தகைய எனது இணையாளர்கள் எங்கே?" என்று கேட்பான்.

75. இன்னும், ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும், சாட்சியைத் தனித்தனியாக நாம் வெளிப்படுத்தி, (இணை வைத்துக் கொண்டிருந்தீர்களே, அதற்குரிய) "உங்களுடைய ஆதாரத்தைக் கொண்டுவாருங்கள்" என்று கூறுவோம்; அப்போது நிச்சயமாக உண்மை அல்லாஹ்விற்கே உரியதென்று அவர்கள் நன்கறிந்து கொள்வார்கள்; இன்னும் அவர்கள் இட்டுக்கட்டியவை (யாவும்) அவர்களை விட்டும் மறைந்துவிடும்.

76. நிச்சயமாக காரூன் (என்பவன்) மூஸாவுடைய சமூகத்தாரில் உள்ளவனாக இருந்தான்; அவர்கள் மீது அவன் அட்டூழியம் செய்தான்; ஏராளமான பொக்கிஷங்களிலிருந்து_ அவைகளின் சாவிகள் (மாத்திரம்) பலசாலிகளான ஒரு கூட்டத்தார்க்கு (அதைச்சுமப்பது) கனமாகிவிடுமே அந்த அளவு _நாம் அவனுக்குக் கொடுத்திருந்தோம்; (அப்போது) அவனுடைய கூட்டத்தார் அவனிடம், "நீ அகம்பாவம் கொள்ளாதே! அகம்பாவம் கொள்வோரை நிச்சயமாக அல்லாஹ் விரும்பமாட்டான்" என்று கூறிய நேரத்தை (நினைவு கூர்வீராக!)

77. இன்னும், "அல்லாஹ் உனக்குக் கொடுத்ததிலிருந்து (தர்மம் செய்து) மறுமை வீட்டைத்தேடிக்கொள்; மேலும் இம்மையில் உன் பங்கை நீ மறந்துவிடாதே! அல்லாஹ் உனக்கு உபகாரம் செய்தவாறு நீயும் உபகாரம் செய்; பூமியில் நீ குழப்பத்தையும் தேடாதே! (ஏனென்றால்), குழப்பம்செய்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் விரும்பமாட்டான்" (என்று அவனின் சமூகத்தார் கூறினர்).

قَالَ اِنَّمَآ اُوْتِيْتُهٗ عَلٰى عِلْمٍ عِنْدِيْ ؕ اَوَلَمْ يَعْلَمْ اَنَّ اللّٰهَ قَدْ
اَهْلَكَ مِنْ قَبْلِهٖ مِنَ الْقُرُوْنِ مَنْ هُوَ اَشَدُّ مِنْهُ قُوَّةً وَّاَكْثَرُ
جَمْعًا ؕ وَلَا يُسْـَٔلُ عَنْ ذُنُوْبِهِمُ الْمُجْرِمُوْنَ ﴿٧٨﴾ فَخَرَجَ عَلٰى قَوْمِهٖ
فِيْ زِيْنَتِهٖ ؕ قَالَ الَّذِيْنَ يُرِيْدُوْنَ الْحَيٰوةَ الدُّنْيَا يٰلَيْتَ لَنَا
مِثْلَ مَآ اُوْتِيَ قَارُوْنُ ۙ اِنَّهٗ لَذُوْ حَظٍّ عَظِيْمٍ ﴿٧٩﴾ وَقَالَ الَّذِيْنَ
اُوْتُوا الْعِلْمَ وَيْلَكُمْ ثَوَابُ اللّٰهِ خَيْرٌ لِّمَنْ اٰمَنَ وَعَمِلَ صَالِحًا ۚ
وَلَا يُلَقّٰىهَآ اِلَّا الصّٰبِرُوْنَ ﴿٨٠﴾ فَخَسَفْنَا بِهٖ وَبِدَارِهِ الْاَرْضَ ۫ فَمَا
كَانَ لَهٗ مِنْ فِئَةٍ يَّنْصُرُوْنَهٗ مِنْ دُوْنِ اللّٰهِ ۗ وَمَا كَانَ مِنَ
الْمُنْتَصِرِيْنَ ﴿٨١﴾ وَاَصْبَحَ الَّذِيْنَ تَمَنَّوْا مَكَانَهٗ بِالْاَمْسِ يَقُوْلُوْنَ
وَيْكَاَنَّ اللّٰهَ يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَّشَآءُ مِنْ عِبَادِهٖ وَيَقْدِرُ ۚ
لَوْلَآ اَنْ مَّنَّ اللّٰهُ عَلَيْنَا لَخَسَفَ بِنَا ؕ وَيْكَاَنَّهٗ لَا يُفْلِحُ
الْكٰفِرُوْنَ ﴿٨٢﴾ تِلْكَ الدَّارُ الْاٰخِرَةُ نَجْعَلُهَا لِلَّذِيْنَ لَا ع ٨ ١١
يُرِيْدُوْنَ عُلُوًّا فِي الْاَرْضِ وَلَا فَسَادًا ؕ وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ﴿٨٣﴾
مَنْ جَآءَ بِالْحَسَنَةِ فَلَهٗ خَيْرٌ مِّنْهَا ۚ وَمَنْ جَآءَ بِالسَّيِّئَةِ فَلَا
يُجْزَى الَّذِيْنَ عَمِلُوا السَّيِّاٰتِ اِلَّا مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿٨٤﴾

78. அ(தற்க)வன், "அதனை நான் கொடுக்கப்பட்டதெல்லாம் என்னிடம் இருக்கும் சொந்த அறிவி(ன் திறமையி)னால்தான்" என்று (பதில்) கூறினான். இவனுக்கு முன்னிருந்த கூட்டத்தார்களில் இவனைவிட மிக்க பலசாலிகளாகவும், இவனைவிட அதிகப்பொருளுடையவர்களாகவும் இருந்த எத்தனையோ தலைமுறையினர்களை அல்லாஹ் நிச்சயமாக அழித்திருக்கின்றான் என்பதை இவன் அறியவில்லையா? குற்றவாளிகள் அவர்கள் செய்த பாவங்கள் பற்றி (அல்லாஹ் அவைகளைப்பற்றி மிக அறிந்துள்ளதால்) கேட்கப்படமாட்டார்கள்.

79. பின்னர், அவன் தன் அலங்காரத்தில் தன் சமூகத்தார்க்கு முன் புறப்பட்டுவந்தான்(அதனைக் கண்ணுற்றவர்களில்) இவ்வுலக வாழ்க்கையையே (பெரிதென) விரும்புகிறவர்கள், "காரூன் கொடுக்கப்பட்டது போன்று நமக்கும் இருந்திருக்கவேண்டுமே! (ஏனென்றால்) நிச்சயமாக அவன் மகத்தான பாக்கியவான்" என்று கூறினார்கள்.

80. (அவர்களில் ) அறிவு கொடுக்கப்பட்டவர்களோ,( மற்றவர்களிடம்) "உங்களுக்கு கேடுதான்! விசுவாசங்கொண்டு நற்கருமங்களும் செய்தவர்களுக்கு, (மறுமையில்) அல்லாஹ் கொடுக்கும் வெகுமதி (இதனைவிட) எவ்வளவோ மேலானதாகும்; மேலும், அதனைப் பொறுமையாளர்களைத் தவிர (மற்றெவரும்) கொடுக்கப்படமாட்டார்கள்" என்று கூறினார்கள்.

81. எனவே, அவனையும்,அவனுடைய மாளிகையையும் பூமிக்குள் நாம் அழுந்தச்செய்தோம் . அல்லாஹ்வையன்றி அவனுக்கு உதவி செய்யக்கூடிய எந்தக்கூட்டமும் இருக்கவில்லை; (தன்னிலிருந்தோ, மற்றவரிடமிருந்தோ)அவன் உதவி பெறுபவர்களிலும் இருக்கவில்லை.

82. (அவனும், அவனுடைய மாளிகையும் பூமியில் அழுத்தப்பட்டதைக் கண்டு) நேற்றையதினம் அவனுடைய பதவியை விரும்பியவர்கள், அந்தோ நாசமே!நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களில், தான் நாடியவருக்கு சம்பத்துகளை ஏராளமாகக் கொடுக்கின்றான்;(தான்நாடியவருக்கு) அளவோடும் கொடுக்கின்றான், அல்லாஹ் நம்மீது பேருபகாரம் செய்திருக்காவிட்டால் நிச்சயமாக நம்மையும் (பூமிக்குள்) அழுந்தச்செய்திருப்பான் என்பதைப் பார்க்கவில்லையா?அந்தோ நாசமே! நிச்சயமாக (அல்லாஹ்வின் நன்றியை) மறுப்போர் வெற்றியடையவே மாட்டார்கள்" என்பதைக் காணவில்லையா? என்று கூறியவர்களாக காலைப்பொழுதை அடைந்தார்கள்.

83. மறுமையின் அந்த வீடாகிறது_அதை பூமியில் அகம்பாவத்தையும், குழப்பத்தையும் நாடாதவர்களுக்கே அதை நாம் (சொந்தமாக) ஆக்கிவிடுவோம்; இன்னும் (நல்ல) முடிவு பயபக்தியுடையவர்களுக்குத்தான்.

84. யார் நன்மையைக் கொண்டுவந்தாரோ அவருக்கு அதைவிடச் சிறந்தது (கூலியாக) உண்டு, இன்னும் யார் தீமையைக் கொண்டுவந்தாரோ(அப்போது) தீமையைச் செய்தோர் அவர்கள் எதைச் செய்துகொண்டிருந்தார்களோ அதையல்லாது (வேறு எதையும்) கூலியாகக் கொடுக்கப்படமாட்டார்கள்.

اِنَّ الَّذِیۡ فَرَضَ عَلَیۡکَ الۡقُرۡاٰنَ لَرَآدُّکَ اِلٰی مَعَادٍ ؕ

قُلۡ رَّبِّیۡۤ اَعۡلَمُ مَنۡ جَآءَ بِالۡهُدٰی وَمَنۡ هُوَ فِیۡ ضَلٰلٍ

مُّبِیۡنٍ ﴿۸۵﴾ وَمَا کُنۡتَ تَرۡجُوۡۤا اَنۡ یُّلۡقٰۤی اِلَیۡکَ الۡکِتٰبُ

اِلَّا رَحۡمَةً مِّنۡ رَّبِّکَ فَلَا تَکُوۡنَنَّ ظَهِیۡرًا لِّلۡکٰفِرِیۡنَ ﴿۸۶﴾ ز

وَلَا یَصُدُّنَّکَ عَنۡ اٰیٰتِ اللّٰهِ بَعۡدَ اِذۡ اُنۡزِلَتۡ اِلَیۡکَ

وَادۡعُ اِلٰی رَبِّکَ وَلَا تَکُوۡنَنَّ مِنَ الۡمُشۡرِکِیۡنَ ﴿۸۷﴾ وَلَا تَدۡعُ

مَعَ اللّٰهِ اِلٰـهًا اٰخَرَ ۘ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۟ قف کُلُّ شَیۡءٍ هَالِکٌ اِلَّا

وَجۡهَهٗ ؕ لَهُ الۡحُکۡمُ وَاِلَیۡهِ تُرۡجَعُوۡنَ ﴿۸۸﴾ ع

ع ۹ وقف لازم ۱۲ الثلث

## سُوۡرَةُ الۡعَنۡکَبُوۡتِ مَکِّیَّةٌ وَّهِیَ تِسۡعٌ وَّسِتُّوۡنَ اٰیَةً وَّسَبۡعُ رُکُوۡعَاتٍ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝

الٓمّٓ ۚ﴿۱﴾ اَحَسِبَ النَّاسُ اَنۡ یُّتۡرَکُوۡۤا اَنۡ یَّقُوۡلُوۡۤا اٰمَنَّا وَهُمۡ لَا

یُفۡتَنُوۡنَ ﴿۲﴾ وَلَقَدۡ فَتَنَّا الَّذِیۡنَ مِنۡ قَبۡلِهِمۡ فَلَیَعۡلَمَنَّ اللّٰهُ

الَّذِیۡنَ صَدَقُوۡا وَلَیَعۡلَمَنَّ الۡکٰذِبِیۡنَ ﴿۳﴾ اَمۡ حَسِبَ الَّذِیۡنَ

یَعۡمَلُوۡنَ السَّیِّاٰتِ اَنۡ یَّسۡبِقُوۡنَا ؕ سَآءَ مَا یَحۡکُمُوۡنَ ﴿۴﴾ مَنۡ کَانَ

یَرۡجُوۡا لِقَآءَ اللّٰهِ فَاِنَّ اَجَلَ اللّٰهِ لَاٰتٍ ؕ وَهُوَ السَّمِیۡعُ الۡعَلِیۡمُ ﴿۵﴾

85. (நபியே!) நிச்சயமாக உம்மீது இந்தக்குர்ஆனை விதியாக்கி(இறக்கி)யவன் உம்மை மீளுமிடத்தின்பால் (மக்காவின் பக்கம்) திரும்பச் சேர்த்து வைப்பவனாவான். (ஆகவே, நபியே!) நீர் கூறுவீராக: "நேரான வழியைக் கொண்டு வந்திருப்பவர் யார்? (அதனை மறுத்து) பகிரங்கமான வழிகேட்டில் இருப்பவர் யார்? என்பதை என் இரட்சகன் மிக அறிந்தவன்."

86. அன்றியும், (நபியே!)இவ்வேதம் உமக்குக் கொடுக்கப்படும் என்று நீர் எதிர்பார்த்து இருக்கவில்லை; எனினும் உம்முடைய இரட்சகனிடமிருந்து அருளாகவே(நீர் அதைக் கொடுக்கப்பட்டீர்); ஆகவே, நிராகரிப்போருக்கு உதவியாளராக திண்ணமாக நீர் ஆகிவிடவேண்டாம்.

87. இன்னும், அல்லாஹ்வின் வசனங்கள் உம்பால்இறக்கிவைக்கப்பட்டதன் பின்னர் நிச்சயமாக அவர்கள் (அவற்றை எத்திவைப்பதிலிருந்து) உம்மைத் தடுத்துவிடவேண்டாம்; இன்னும் உமதிரட்சகன் பக்கம் நீர் (அவர்களை) அழைப்பீராக! நிச்சயமாக நீர் இணைவைப்போரில் ஆகிவிடவும் வேண்டாம்.

88. மேலும்,(நபியே!) அல்லாஹ்வுடன் வேறொரு(வணக்கத்திற்குரிய) நாயனை நீர் அழைக்கவேண்டாம்; அவனைத் தவிர( வணக்கத்திற்குரிய) வேறொரு நாயன் இல்லை; அவன் முகம் தவிர ஒவ்வொரு பொருளும் அழிந்துவிடக்கூடியதே. அதிகாரம் (அனைத்தும்) அவனுக்கே உரியதாகும்; அவனிடமே நீங்கள் (யாவரும்) திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள்.

---

அத்தியாயம் : 29

## அல் அன்கபூத் _ சிலந்திப்பூச்சி

வசனங்கள் : 69 மக்கீ ருகூஃகள் : 7

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. அலிஃப் லாம் மீம்.

2. மனிதர்கள் _"நாங்கள் விசுவாசங் கொண்டோம்" என்று அவர்கள் கூறுவது கொண்டு (மட்டும்) அவர்கள் விட்டுவிடப்படுவார்கள் என்றும், அவர்கள் சோதனைக்குள்ளாக்கப்படவுமாட்டார்கள் என்றும்எண்ணிக்கொண்டார்களா?

3. இவர்களுக்கு முன்னிருந்தோரையும் திட்டமாக நாம் சோதித்திருக்கின்றோம்; ஆகவே, (விசுவாசங் கொண்டோம் என்று கூறும் இவர்களில்) உண்மை சொல்பவர்களை, நிச்சயமாக அல்லாஹ் அறிவான்; (அவ்வாறே, இவர்களில் ) பொய்யர்களையும் நிச்சயமாக அவன் அறிவான்.

4. அல்லது, தீயவைகளைச் செய்கிறார்களே அவர்கள் நம்மை விட்டும் தாங்கள் தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டார்களா?(அவ்வாறாயின் இதைப் பற்றி) அவர்கள் தீர்மானம்செய்தது மிகக்கெட்டது.

5. அல்லாஹ்வுடைய சந்திப்பை எவர் ஆதரவுவைக்கிறாரோ அவர் (அதற்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்துகொள்ளட்டும்) ; ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ்வுடைய தவணை வரக்கூடியதாகும்; அவனே (யாவையும்) செவியேற்கிறவன்; நன்கறிகிறவன்.

وَمَنْ جٰهَدَ فَاِنَّمَا يُجَاهِدُ لِنَفْسِهٖ ؕ اِنَّ اللّٰهَ لَغَنِیٌّ عَنِ
الْعٰلَمِيْنَ ۝٦ وَالَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَنُكَفِّرَنَّ
عَنْهُمْ سَيِّاٰتِهِمْ وَلَنَجْزِيَنَّهُمْ اَحْسَنَ الَّذِیْ كَانُوْا يَعْمَلُوْنَ ۝٧
وَوَصَّيْنَا الْاِنْسَانَ بِوَالِدَيْهِ حُسْنًا ؕ وَاِنْ جٰهَدٰكَ
لِتُشْرِكَ بِیْ مَا لَيْسَ لَكَ بِهٖ عِلْمٌ فَلَا تُطِعْهُمَا ؕ اِلَیَّ
مَرْجِعُكُمْ فَاُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ۝٨ وَالَّذِيْنَ اٰمَنُوْا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَنُدْخِلَنَّهُمْ فِی الصّٰلِحِيْنَ ۝٩ وَمِنَ
النَّاسِ مَنْ يَّقُوْلُ اٰمَنَّا بِاللّٰهِ فَاِذَآ اُوْذِیَ فِی اللّٰهِ جَعَلَ
فِتْنَةَ النَّاسِ كَعَذَابِ اللّٰهِ ؕ وَلَىِٕنْ جَآءَ نَصْرٌ مِّنْ رَّبِّكَ
لَيَقُوْلُنَّ اِنَّا كُنَّا مَعَكُمْ ؕ اَوَلَيْسَ اللّٰهُ بِاَعْلَمَ بِمَا فِیْ صُدُوْرِ
الْعٰلَمِيْنَ ۝١٠ وَلَيَعْلَمَنَّ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا وَلَيَعْلَمَنَّ
الْمُنٰفِقِيْنَ ۝١١ وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْا لِلَّذِيْنَ اٰمَنُوا اتَّبِعُوْا
سَبِيْلَنَا وَلْنَحْمِلْ خَطٰيٰكُمْ ؕ وَمَا هُمْ بِحٰمِلِيْنَ مِنْ خَطٰيٰهُمْ
مِّنْ شَیْءٍ ؕ اِنَّهُمْ لَكٰذِبُوْنَ ۝١٢ وَلَيَحْمِلُنَّ اَثْقَالَهُمْ وَاَثْقَالًا مَّعَ
اَثْقَالِهِمْ ۫ وَلَيُسْـَٔلُنَّ يَوْمَ الْقِيٰمَةِ عَمَّا كَانُوْا يَفْتَرُوْنَ ۝١٣ ع ١ ١٣ ١٣

6. மேலும், (அல்லாஹ்வுடைய வழியில்) எவர் ஜிஹாது (அறப்போர்) செய்கிறாரோ அவர் ஜிஹாது செய்வதெல்லாம்(அதன் பயனெல்லாம்) தனக்காகத்தான்; நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட்டும் தேவையற்றவன்.

7. இன்னும், விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையோர்_ அவர்களுடைய தீமைகளை அவர்களை விட்டும் நிச்சயமாக நாம் நீக்கிவிடுவோம்; அவர்கள் செய்துகொண்டிருந்தவற்றில் மிக அழகானதை நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கூலியாகவும்கொடுப்போம்.

8. மேலும், தன் பெற்றோருக்கு நன்மை செய்யும்படியாக நாம் மனிதனுக்கு நல்லுபதேசம் செய்திருக்கின்றோம்; அன்றியும், எதைப் பற்றி உனக்கு அறிவு இல்லையோ அதை எனக்கு இணையாக்குமாறு (மனிதனே!) அவர்கள்இருவரும் உன்னை நிர்ப்பந்தித்தால் (அவ்விஷயத்தில்) நீ அவ்விருவருக்கும் கீழ்ப்படிய வேண்டாம்; என்னிடமே உங்களின் மீளுதல் இருக்கிறது; அது சமயம் நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளைப் பற்றி நான் உங்களுக்கு அறிவிப்பேன்.

9. மேலும், விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையோர்_ அவர்களை நிச்சயமாக நாம் நல்லோர்களி(ன் கூட்டத்தாருடன் சுவனத்தி)ல் நுழைவிப்போம்.

10. இன்னும் மனிதர்களில், "அல்லாஹ்வை நாங்கள் விசுவாசம் கொண்டுள்ளோம்" என்று கூறுகின்ற சிலர் இருக்கின்றனர்; ஆகவே, அவர்கள் அல்லாஹ்வுடைய வழியில் துன்புறுத்தப்பட்டால், மனிதர்களால் ஏற்படும்(அத்) துன்பத்தை, அல்லாஹ்வுடைய வேதனையைப்போலாக்கி ( உங்களிடமிருந்து விலகி)க் கொள்கின்றனர். உமதிரட்சகனிடமிருந்து (உங்களுக்கு) ஏதேனும் உதவி வந்து விட்டாலோ, "நிச்சயமாக நாங்கள் உங்களுடன் தான் இருந்தோம்" என்று கூறுகின்றனர். அகிலத்தாரின் இதயங்களில் உள்ளவற்றை அல்லாஹ் மிக அறிந்தவனாக இல்லையா?

11. (ஆகவே,) விசுவாசங்கொண்டிருப்போரையும் நிச்சயமாக அல்லாஹ் நன்கறிவான்; (வேஷதாரிகளான) முனாஃபிக்குகளையும், நிச்சயமாக அவன் நன்கறிவான்.

12. நிராகரிப்போ(ரில்பல)ர் விசுவாசிகளிடம், "நீங்கள் எங்களுடைய வழியைப் பின்பற்றுங்கள்; (அதனால் ஏதும் குற்றம் குறைகள் ஏற்பட்டால்,) உங்களுடைய குற்றங்களையும் நாங்கள் சுமந்து கொள்கின்றோம்" என்றும் கூறுகின்றனர்; அன்றியும், அவர்களுடைய குற்றங்களிலிருந்து எதனையுமே இவர்கள் சுமந்து கொள்பவர்களாக இல்லை_ நிச்சயமாக அவர்கள் பொய்யர்களே!

13. அன்றியும், அவர்கள் தங்கள் (பாவச்)சுமைகளையும், தம் (பாவச்)சுமைகளுடன் (அவர்கள் வழிகெடுத்தோரின் பாவச்)சுமைகளையும் நிச்சயமாகச் சுமப்பார்கள்; இன்னும் அவர்கள், இட்டுக்கட்டிக்கொண்டிருந்தவைகளைப் பற்றியும் நிச்சயமாக மறுமைநாளில் (விசாரித்துக்)கேட்கப்படுவார்கள்.

وَلَقَدْ اَرْسَلْنَا نُوْحًا اِلٰى قَوْمِهٖ فَلَبِثَ فِيْهِمْ اَلْفَ سَنَةٍ
اِلَّا خَمْسِيْنَ عَامًا ؕ فَاَخَذَهُمُ الطُّوْفَانُ وَهُمْ ظٰلِمُوْنَ ﴿۱۴﴾
فَاَنْجَيْنٰهُ وَاَصْحٰبَ السَّفِيْنَةِ وَجَعَلْنٰهَاۤ اٰيَةً لِّلْعٰلَمِيْنَ ﴿۱۵﴾
وَاِبْرٰهِيْمَ اِذْ قَالَ لِقَوْمِهِ اعْبُدُوا اللّٰهَ وَاتَّقُوْهُ ؕ ذٰلِكُمْ
خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۱۶﴾ اِنَّمَا تَعْبُدُوْنَ مِنْ
دُوْنِ اللّٰهِ اَوْثَانًا وَّتَخْلُقُوْنَ اِفْكًا ؕ اِنَّ الَّذِيْنَ
تَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ لَا يَمْلِكُوْنَ لَكُمْ رِزْقًا فَابْتَغُوْا
عِنْدَ اللّٰهِ الرِّزْقَ وَاعْبُدُوْهُ وَاشْكُرُوْا لَهٗ ؕ اِلَيْهِ
تُرْجَعُوْنَ ﴿۱۷﴾ وَاِنْ تُكَذِّبُوْا فَقَدْ كَذَّبَ اُمَمٌ مِّنْ
قَبْلِكُمْ ؕ وَمَا عَلَى الرَّسُوْلِ اِلَّا الْبَلٰغُ الْمُبِيْنُ ﴿۱۸﴾
اَوَلَمْ يَرَوْا كَيْفَ يُبْدِئُ اللّٰهُ الْخَلْقَ ثُمَّ يُعِيْدُهٗ ؕ
اِنَّ ذٰلِكَ عَلَى اللّٰهِ يَسِيْرٌ ﴿۱۹﴾ قُلْ سِيْرُوْا فِى الْاَرْضِ
فَانْظُرُوْا كَيْفَ بَدَاَ الْخَلْقَ ثُمَّ اللّٰهُ يُنْشِئُ
النَّشْاَةَ الْاٰخِرَةَ ؕ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۚ ﴿۲۰﴾
يُعَذِّبُ مَنْ يَّشَآءُ وَيَرْحَمُ مَنْ يَّشَآءُ ۚ وَاِلَيْهِ تُقْلَبُوْنَ ﴿۲۱﴾

14 . இன்னும், (நபி) நூஹை (நம்முடைய தூதராக) அவருடைய சமூகத்தார்பால் திட்டமாக நாம் அனுப்பிவைத்தோம்; அவர் ஐம்பது ஆண்டுகள் நீங்கலாக ஓராயிரம் வருடங்கள் அவர்களிடையே தங்கியிருந்தார். பின்னர் அவர்கள் (விசுவாசங்கொள்ளாது) அநியாயக்காரர்களாக இருந்தநிலையில் வெள்ளப் பிரளயம் அவர்களைப்பிடித்துக் கொண்டது.

15 . பின்னர், அவரையும், (அவருடைய ) கப்பல் தோழர்களையும் நாம் காப்பாற்றினோம்; அ(ச் சம்பவத்)தை அகிலத்தார்க்கு ஓர் அத்தாட்சியாகவும் நாம் ஆக்கினோம்.

16. இப்றாஹீமையும் (நம்முடைய தூதராக அவருடைய ஜனங்களிடம் அனுப்பி வைத்த சமயத்தில்,) அவர், தன்னுடைய சமூகத்தார்க்கு "நீங்கள் அல்லாஹ்வை(யே) வணங்குங்கள்; அவனுக்கே நீங்கள் பயப்படுங்கள்; நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால் இதுவே உங்களுக்கு மிக்க நன்மையுடையதாக இருக்கும், (என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்)" என்று கூறியதை (நபியே! நினைவூட்டுவீராக!)

17. (தவிர,) "அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்குவதெல்லாம் விக்கிரகங்களைத்தான்; நீங்கள் பொய்யாக (உங்கள் கைகளால் அவைகளைப்) படைத்துக்கொண்டீர்கள். (ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்குகின்றவை உங்களுக்கு உணவளிக்கச் சக்திபெறமாட்டா. ஆகவே, (உங்களுக்கு வேண்டிய) உணவை அல்லாஹ்விடமே தேடுங்கள்; அவ(ன் ஒருவ)னையே வணங்குங்கள்; அவனுக்கு நன்றியும் செலுத்துங்கள்; அவன் பக்கமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்.

18 . " மேலும், நீங்கள் (என்னைப்) பொய்யாக்கினால், (அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஏனென்றால்,) உங்களுக்கு முன்னிருந்த சமுதாயத்தினர் (தூதர்களை இவ்வாறே) பொய்யாக்கியிருக்கின்றனர்; (நம்) தூதரின்மீதோ பகிரங்கமாக எத்தி வைப்பதைத் தவிர (வேறு கடமை) இல்லை.

19 " அல்லாஹ் படைப்பை எவ்வாறு ஆரம்பத்தில் (படைக்கத்) துவங்குகிறான்; (அவை அழிந்த) பின்னர் அதனை (எவ்வாறு) மீள வைக்கிறான் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? நிச்சயமாக இ(வ்வாறு செய்வ)து, அல்லாஹ்வுக்கு மிக்க சுலபமானதே!

20. " பூமியில் நீங்கள் சுற்றித்திரிந்து, படைப்பை எவ்வாறு (ஆரம்பத்தில்) அவன் துவங்கி, பின்னர் அல்லாஹ் மற்றொரு உற்பத்தியை (எவ்வாறு) உண்டு பண்ணுகிறான், என்பதைப் பாருங்கள்; நிச்சயமாக அல்லாஹ், ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையோன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக.

21. தான் நாடியவர்களை அவன் வேதனை செய்வான்; தான் நாடியவர்களுக்கு அவன் கிருபையும் செய்வான்; (முடிவில்) அவனளவிலேயே நீங்கள் திருப்பப் படுவீர்கள்.

وَمَآ اَنْتُمْ بِمُعْجِزِیْنَ فِی الْاَرْضِ وَلَا فِی السَّمَآءِ ز وَمَا
لَكُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ مِنْ وَّلِیٍّ وَّلَا نَصِیْرٍ ﴿٢٢﴾ ع وَالَّذِیْنَ ع ٢ ٩ ١٤
كَفَرُوْا بِاٰیٰتِ اللّٰهِ وَلِقَآئِهٖٓ اُولٰٓئِكَ یَئِسُوْا مِنْ رَّحْمَتِیْ
وَاُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ اَلِیْمٌ ﴿٢٣﴾ فَمَا كَانَ جَوَابَ قَوْمِهٖٓ
اِلَّآ اَنْ قَالُوا اقْتُلُوْهُ اَوْ حَرِّقُوْهُ فَاَنْجٰىهُ اللّٰهُ مِنَ النَّارِ ط
اِنَّ فِیْ ذٰلِكَ لَاٰیٰتٍ لِّقَوْمٍ یُّؤْمِنُوْنَ ﴿٢٤﴾ وَقَالَ اِنَّمَا اتَّخَذْتُمْ
مِّنْ دُوْنِ اللّٰهِ اَوْثَانًا لا مَّوَدَّةَ بَیْنِكُمْ فِی الْحَیٰوةِ
الدُّنْیَا ج ثُمَّ یَوْمَ الْقِیٰمَةِ یَكْفُرُ بَعْضُكُمْ بِبَعْضٍ
وَّیَلْعَنُ بَعْضُكُمْ بَعْضًا ز وَّمَاْوٰىكُمُ النَّارُ وَمَا لَكُمْ
مِّنْ نّٰصِرِیْنَ ﴿٢٥﴾ قلے فَاٰمَنَ لَهٗ لُوْطٌ م وَقَالَ اِنِّیْ مُهَاجِرٌ وقف لازم
اِلٰى رَبِّیْ ط اِنَّهٗ هُوَ الْعَزِیْزُ الْحَكِیْمُ ﴿٢٦﴾ وَوَهَبْنَا لَهٗٓ اِسْحٰقَ
وَیَعْقُوْبَ وَجَعَلْنَا فِیْ ذُرِّیَّتِهِ النُّبُوَّةَ وَالْكِتٰبَ
وَاٰتَیْنٰهُ اَجْرَهٗ فِی الدُّنْیَا ج وَاِنَّهٗ فِی الْاٰخِرَةِ لَمِنَ
الصّٰلِحِیْنَ ﴿٢٧﴾ وَلُوْطًا اِذْ قَالَ لِقَوْمِهٖٓ اِنَّكُمْ لَتَاْتُوْنَ
الْفَاحِشَةَ ز مَا سَبَقَكُمْ بِهَا مِنْ اَحَدٍ مِّنَ الْعٰلَمِیْنَ ﴿٢٨﴾

22. பூமியிலோ, இன்னும் வானத்திலோ நீங்கள்(ஒளிந்து கொண்டு, அவனைத் தோற்கடித்து) இயலாமல் ஆக்கி விடுபவர்கள் அல்லர்; மேலும், அல்லாஹ்வை யன்றி உங்களுக்கு(வேறு) பாதுகாவலனுமில்லை; உதவிசெய்வோனுமில்லை.

23. மேலும், அல்லாஹ்வுடைய வசனங்களையும், அவனை சந்திப்பதையும் மறுக்கின்றனரே அத்தகையோர்_அவர்கள் என் கிருபையை விட்டும் நிராசையாகி விட்டனர்; மேலும் அத்தகையோர்_அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு.

24. (இப்றாஹீமாகிய) "அவரைக்கொன்றுவிடுங்கள்; அல்லது (நெருப்பிலிட்டு) எரித்துவிடுங்கள்" என்று கூறியதைத்தவிர வேறு எதுவும் அவருடைய சமூகத்தாரின் பதிலாக இருக்கவில்லை; (அன்றியும் அவரை நெருப்பில் எறிந்தார்கள்.) ஆகவே (அந்) நெருப்பிலிருந்து அல்லாஹ் அவரை ஈடேற்றிக் கொண்டான்; விசுவாசங்கொண்ட சமூகத்தார்க்கு நிச்சயமாக இதில் (பல) சான்றுகள் இருக்கின்றன.

25. "நீங்கள் அல்லாஹ்வையன்றி (இந்த) விக்கிரகங்களை(த் தெய்வமாக) எடுத்துக் கொண்டதெல்லாம் இவ்வுலக வாழ்க்கையில் உங்களுக்கிடையில் உள்ள நேசம் காரணமாகத்தான்; பின்னர், மறுமை நாளில் உங்களில் சிலர், சிலரை (விட்டும் நீங்கிக்கொண்டு) நிராகரிப்பர்; இன்னும் உங்களில் சிலர் சிலரை (நிந்தித்து)சபிப்பர்; (முடிவில்) உங்கள் (யாவரின்) தங்குமிடமும் (நரக) நெருப்புத்தான்; (அங்கு)உங்களுக்கு உதவி செய்வோர்களுமில்லை" என்றும் (இப்றாஹீம்)கூறினார்.

26. எனவே, (இப்றாஹீம் இவ்வளவு கூறியும்) லூத் (நபி மட்டும்) தான் அவரை விசுவாசித்தார்; (ஆகவே, இப்றாஹீம் அவரிடம்,) "நிச்சயமாக, நான் என் இரட்சகனின்பால் (என்னுடைய இந்த ஊரை விட்டும்) ஹிஜ்ரத்துச் செல்கிறேன்; நிச்சயமாக அவன்தான் (யாவரையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்" என்றுகூறினார்.

27. அன்றியும், அவருக்கு இஸ்ஹாக்கையும், யஃகூபையும் (சந்ததிகளாகக்) கொடுத்தோம்; இன்னும் அவருடைய சந்ததியில் நபித்துவத்தையும், வேதத்தையும் நாம் ஆக்கினோம்; அவருக்கு அவருடைய கூலியை இம்மையிலும் கொடுத்தோம்; இன்னும் நிச்சயமாக அவர் மறுமையிலும் நல்லோரில் உள்ளவராவார்.

28. மேலும், லூத்தை_(நம்முடைய தூதராக அவர் சமூகத்தாரிடம் அனுப்பிவைத்தோம்); அவர் தம் சமூகத்தாரிடம் "மானக்கேடான (ஒரு காரியத்)தை, நிச்சயமாக நீங்கள் செய்கின்றீர்கள்; உலகத்தாரில் எவரும் அதைக்கொண்டு உங்களை முந்தவில்லை"என்று கூறியதை (நினைவூட்டுவீராக).

اَئِنَّكُمْ لَتَاْتُوْنَ الرِّجَالَ وَتَقْطَعُوْنَ السَّبِيْلَ ۙ وَتَاْتُوْنَ
فِيْ نَادِيْكُمُ الْمُنْكَرَ ؕ فَمَا كَانَ جَوَابَ قَوْمِهٖۤ اِلَّاۤ اَنْ قَالُوا
ائْتِنَا بِعَذَابِ اللّٰهِ اِنْ كُنْتَ مِنَ الصّٰدِقِيْنَ ﴿۲۹﴾ قَالَ رَبِّ
۳ ع ۴ ۱۵ انْصُرْنِيْ عَلَى الْقَوْمِ الْمُفْسِدِيْنَ ﴿۳۰﴾ ع وَلَمَّا جَآءَتْ رُسُلُنَاۤ
اِبْرٰهِيْمَ بِالْبُشْرٰى ۙ قَالُوْۤا اِنَّا مُهْلِكُوْۤا اَهْلِ هٰذِهِ
الْقَرْيَةِ ۚ اِنَّ اَهْلَهَا كَانُوْا ظٰلِمِيْنَ ﴿۳۱﴾ ۚ ۖ قَالَ اِنَّ فِيْهَا
لُوْطًا ؕ قَالُوْا نَحْنُ اَعْلَمُ بِمَنْ فِيْهَا لَنُنَجِّيَنَّهٗ وَاَهْلَهٗۤ
اِلَّا امْرَاَتَهٗ كَانَتْ مِنَ الْغٰبِرِيْنَ ﴿۳۲﴾ وَلَمَّاۤ اَنْ جَآءَتْ
رُسُلُنَا لُوْطًا سِيْٓءَ بِهِمْ وَضَاقَ بِهِمْ ذَرْعًا وَّقَالُوْا
لَا تَخَفْ وَلَا تَحْزَنْ وقف اِنَّا مُنَجُّوْكَ وَاَهْلَكَ اِلَّا
امْرَاَتَكَ كَانَتْ مِنَ الْغٰبِرِيْنَ ﴿۳۳﴾ اِنَّا مُنْزِلُوْنَ عَلٰۤى اَهْلِ
هٰذِهِ الْقَرْيَةِ رِجْزًا مِّنَ السَّمَآءِ بِمَا كَانُوْا يَفْسُقُوْنَ ﴿۳۴﴾
وَلَقَدْ تَّرَكْنَا مِنْهَاۤ اٰيَةًۢ بَيِّنَةً لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ ﴿۳۵﴾ وَاِلٰى
مَدْيَنَ اَخَاهُمْ شُعَيْبًا ۙ فَقَالَ يٰقَوْمِ اعْبُدُوا اللّٰهَ وَ
ارْجُوا الْيَوْمَ الْاٰخِرَ وَلَا تَعْثَوْا فِي الْاَرْضِ مُفْسِدِيْنَ ﴿۳۶﴾

29. "நீங்கள் (பெண்களை விட்டு,) ஆண்களிடம் (மோகங்கொண்டவர்களாக) வருகின்றீர்களா? (இத்தீய செயலைக் கொண்டு பிரயாணிகளை) வழிமறிக்கவும் செய்கின்றீர்கள்; (ஜனங்கள் நிறைந்த) உங்கள் சபையிலும் (பகிரங்கமாகவே மிக்க) வெறுக்கத்தக்க (இக்காரியத்)தைச் செய்யவருகிறீர்கள்" (என்றும் கூறினார்); அதற்கு, "நீர் உண்மையாளரில் (ஒருவராக) இருப்பின் அல்லாஹ்வுடைய வேதனையை எங்களிடம் கொண்டுவாரும்" என்பதைத் தவிர (வேறு எதுவும்) அவருடைய சமூகத்தாரின் பதிலாக இருக்கவில்லை.

30. (அதற்கு)அவர், "இரட்சகனே! குழப்பக்காரர்களான சமூகத்தார்க்கு எதிராக எனக்கு நீ உதவி புரிவாயாக!" என்று (பிரார்த்தித்துக்) கூறினார்.

31. மேலும், நம்முடைய தூதர்கள் இப்றாஹீமிடம் நன்மாராயத்தைக்கொண்டு வந்த சமயத்தில், (அவரிடம்,) "லூத்துடைய) இந்த ஊர்வாசிகளை நிச்சயமாக நாங்கள் அழிக்கக் கூடியவர்களாக உள்ளோம்; (ஏனென்றால்) நிச்சயமாக இவ்வூரைச்சேர்ந்தோர் அநியாயக்காரர்களாக இருக்கிறார்கள்" என்று கூறினார்கள்.

32. அ(தற்க)வர், "நிச்சயமாக அதில் லூத் இருக்கின்றாரே" என்று கூறினார்; (அதற்கு) அவர்கள், "அதில் யார் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் நன்கறிவோம்; அவருடைய மனைவியைத் தவிர , அவரையும், அவருடைய குடும்பத்தாரையும் நிச்சயமாக நாங்கள் காப்பாற்றுவோம்;(அவர் மனைவியாகிய) அவள் (அழிக்கப்படுவோரில் ஒருத்தியாக) தங்கி விடுகிறவர்களில்ஆகிவிட்டாள்" என்று கூறினார்கள்.

33. இன்னும் நம்முடைய (அத்) தூதர்கள்(நபி) லூத்திடம் வந்தபொழுதுஅவர்,(தம் ஜனங்களிடமிருந்து எவ்வாறு இவர்களைப் பாதுகாப்பது என்று) அவர்களால் துக்கத்திலாக்கப்பட்டார்; மேலும்,(அவர்களைக்காப்பதற்கு வழியறியாது ) அவர்களால் மனதில் நெருக்கடிக்குள்ளானார்; அ(தற்க) வர்கள் , "நீர் அஞ்ச வேண்டாம்; கவலையும்படவேண்டாம்; நிச்சயமாக நாங்கள் (இவ்வூரை அழித்துவிட்டு) உம்முடைய மனைவியைத்தவிர, உம்மையும், உமது குடும்பத்தினரையும் காப்பாற்றக்கூடியவர்களாக உள்ளோம்; (உம் மனைவியாகிய)அவள் (அழிந்துபோவோரில் ஒருத்தியாக)தங்கி விடுகிறவர்களில் ஆகிவிட்டாள்" என்று கூறினார்கள்.

34. "நிச்சயமாக, நாங்கள் இவ்வூரார் மீது இவர்கள்பாவம் செய்து கொண்டிருந்ததன் காரணமாக, வானத்திலிருந்து வேதனையை இறக்கி வைப்பவர்களாக இருக்கின்றோம்" (என்றும் கூறினார்கள்).

35. (பின்னர், அவர்கள் யாவரும் அழிக்கப்பட்டு விட்டனர் . ) திட்டமாக நாம், அறிவுடைய சமூகத்தாருக்கு அதிலிருந்தும் தெளிவான அத்தாட்சியை விட்டு வைத்திருக்கின்றோம்.

36. மேலும்,மத்யன் (வாசிகள்) பால் அவர்களுடைய சகோதரர் ஷுஐபை _(நாம் நம்முடைய தூதராக அனுப்பி வைத்தோம்); பின்னர் அவர்: "என் சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்; ( உங்கள் வழிபாட்டின் பலனைப் பெற) இறுதி நாளையும் ஆதரவு வையுங்கள்; பூமியில் விஷமம் செய்வோராகவும் அலையாதீர்கள்" என்று கூறினார்.

فَكَذَّبُوْهُ فَاَخَذَتْهُمُ الرَّجْفَةُ فَاَصْبَحُوْا فِيْ دَارِهِمْ
جٰثِمِيْنَ ﴿۳۷﴾ وَعَادًا وَّثَمُوْدَاۡ وَقَدْ تَّبَيَّنَ لَكُمْ مِّنْ مَّسٰكِنِهِمْ وقفة
وَزَيَّنَ لَهُمُ الشَّيْطٰنُ اَعْمَالَهُمْ فَصَدَّهُمْ عَنِ السَّبِيْلِ
وَكَانُوْا مُسْتَبْصِرِيْنَ ﴿۳۸﴾ وَقَارُوْنَ وَفِرْعَوْنَ وَهَامٰنَ قف وَلَقَدْ
جَآءَهُمْ مُّوْسٰى بِالْبَيِّنٰتِ فَاسْتَكْبَرُوْا فِي الْاَرْضِ وَمَا كَانُوْا
سٰبِقِيْنَ ﴿۳۹﴾ فَكُلًّا اَخَذْنَا بِذَنْۢبِهٖ ۚ فَمِنْهُمْ مَّنْ اَرْسَلْنَا عَلَيْهِ
حَاصِبًا ۚ وَمِنْهُمْ مَّنْ اَخَذَتْهُ الصَّيْحَةُ ۚ وَمِنْهُمْ مَّنْ خَسَفْنَا
بِهِ الْاَرْضَ ۚ وَمِنْهُمْ مَّنْ اَغْرَقْنَا ۚ وَمَا كَانَ اللّٰهُ لِيَظْلِمَهُمْ
وَلٰكِنْ كَانُوْٓا اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ ﴿۴۰﴾ مَثَلُ الَّذِيْنَ اتَّخَذُوْا
مِنْ دُوْنِ اللّٰهِ اَوْلِيَآءَ كَمَثَلِ الْعَنْكَبُوْتِ ۚ اِتَّخَذَتْ بَيْتًا ۗ وَ
اِنَّ اَوْهَنَ الْبُيُوْتِ لَبَيْتُ الْعَنْكَبُوْتِ لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ ﴿۴۱﴾ وقف لازم
اِنَّ اللّٰهَ يَعْلَمُ مَا يَدْعُوْنَ مِنْ دُوْنِهٖ مِنْ شَيْءٍ ۗ وَهُوَ
الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۴۲﴾ وَتِلْكَ الْاَمْثَالُ نَضْرِبُهَا لِلنَّاسِ ۚ وَمَا
يَعْقِلُهَآ اِلَّا الْعٰلِمُوْنَ ﴿۴۳﴾ خَلَقَ اللّٰهُ السَّمٰوٰتِ وَ
الْاَرْضَ بِالْحَقِّ ۗ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً لِّلْمُؤْمِنِيْنَ ﴿۴۴﴾ ع ۴ ۱۶

37. பின்னர், அவர்கள் அவரைப் பொய்ப்படுத்தினார்கள்; ஆதலால், பூகம்பம் அவர்களை பிடித்துக் கொண்டது; ஆகவே அவர்கள் தங்கள் வீடுகளில் முகங்குப்புற வீழ்ந்து (இறந்து) கிடந்தவர்களாக காலைப் பொழுதை அடைந்தனர்.

38. மேலும், ஆதையும், ஸமூதையும் (இவ்வாறே நாம் அழித்து விட்டோம்); அவர்கள் வாழ்ந்திருந்த இடங்(களில் உள்ள சின்னங்)களிலிருந்து, (அவர்கள் அடைந்த முடிவு) உங்களுக்குத் திட்டமாக தெளிவாகி விட்டது; அவர்களுடைய செயல்களை ஷைத்தான் அவர்களுக்கு அலங்காரமாக்கியும் காண்பித்தான்; ஆகவே, அவர்கள் நல்லறிவுடையோர்களாக இருந்தும் (நேர்)வழியை விட்டும் அவன் அவர்களைத் தடுத்துவிட்டான்.

39. காரூனையும், ஃபிர்அவ்னையும், ஹாமானையும்(நாம் அழித்து விட்டோம்); நிச்சயமாக மூஸா, அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்திருந்தார்; பின்னர், அவர்கள் (அவரை நிராகரித்து விட்டு,)பூமியில் பெருமை கொண்டு நடந்தனர்; (அதனால் நம் வேதனையிலிருந்து) அவர்கள் தப்பித்துக் கொள்பவர்களாகவும் இருக்கவில்லை.

40. ஆகவே,(அவர்கள்) ஒவ்வொருவரையும், அவருடைய பாவத்தின் காரணமாக நாம் பிடித்துக்கொண்டோம்; அவர்களில் எவர் மீது (கடும்புயல்காற்றின் மூலமாக) நாம் கல்மாரியை அனுப்பினோமோ அவர்களும் உள்ளனர்; மேலும், அவர்களில் எவரைப் பேரிடி முழக்கம் பிடித்துக் கொண்டதோ அவர்களும் உள்ளனர்; இன்னும், அவர்களில் (காரூன் போன்று)எவரைப் பூமிக்குள் நாம் அழுந்தச்செய்துவிட்டோமோ அவர்களும் உள்ளனர்; மேலும், அவர்களில் (ஃபிர்அவ்ன், ஹாமான் போன்றுகடலில்) நாம் மூழ்கடித்தவர்களும் உள்ளனர்; அல்லாஹ் அவர்களுக்கு அநியாயம் செய்வதற்காக இருக்கவில்லை; எனினும், அவர்கள் தங்களுக்குத் தாமே அநியாயம் இழைத்துக் கொள்பவர்களாக இருந்தனர்.

41. அல்லாஹ்வையன்றி (மற்றவர்களைத்தங்களுக்குப் )பாதுகாவலர்களாக எடுத்துக் கொண்டவர்களுக்கு உதாரணம் சிலந்திப்பூச்சியின் உதாரணத்தைப் போன்றதாகும்; அது ஒரு வீட்டை எடுத்துக் கொண்டது; இன்னும், நிச்சயமாக வீடுகளில் மிகப்பலவீனமானது சிலந்திப் பூச்சியின் வீடாகும்; (இதை) அவர்கள் அறிவார்களாயின் (தாங்கள் அல்லாஹ்வையன்றி மற்றவர்களைப் பாதுகாவலர்களாக எடுத்துக்கொண்டதன் தீமையை அறிவர்.)

42. அவனையன்றி அவர்கள் எதனை அழைக்கின்றார்களோ, அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிவான்; மேலும், அவன் (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

43. மேலும், இவ்வுதாரணங்கள் _ மனிதர்களுக்காக இவற்றை நாம் கூறுகிறோம்; (சிந்தித்தறியக்கூடிய) அறிவுடையவர்களைத் தவிர, (மற்றெவரும்) இதனை விளங்கிக்கொள்ளவுமாட்டார்கள்.

44. வானங்களையும், பூமியையும் அல்லாஹ் உண்மையைக் கொண்டு படைத்தான். விசுவாசங் கொண்டோருக்கு நிச்சயமாக இதில் ஓர் அத்தாட்சி இருக்கின்றது.

اُتْلُ مَآ اُوْحِیَ اِلَیْكَ مِنَ الْكِتٰبِ وَ اَقِمِ الصَّلٰوةَ ؕ الجزء ۲۱
اِنَّ الصَّلٰوةَ تَنْهٰی عَنِ الْفَحْشَآءِ وَ الْمُنْكَرِ ؕ وَ لَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ ؕ
وَ اللّٰهُ یَعْلَمُ مَا تَصْنَعُوْنَ ﴿۴۵﴾ وَ لَا تُجَادِلُوْۤا اَهْلَ الْكِتٰبِ اِلَّا
بِالَّتِیْ هِیَ اَحْسَنُ ۗ اِلَّا الَّذِیْنَ ظَلَمُوْا مِنْهُمْ وَ قُوْلُوْۤا اٰمَنَّا
بِالَّذِیْۤ اُنْزِلَ اِلَیْنَا وَ اُنْزِلَ اِلَیْكُمْ وَ اِلٰهُنَا وَ اِلٰهُكُمْ وَاحِدٌ
وَّ نَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ ﴿۴۶﴾ وَ كَذٰلِكَ اَنْزَلْنَاۤ اِلَیْكَ الْكِتٰبَ ؕ فَالَّذِیْنَ
اٰتَیْنٰهُمُ الْكِتٰبَ یُؤْمِنُوْنَ بِهٖ ۚ وَ مِنْ هٰۤؤُلَآءِ مَنْ یُّؤْمِنُ بِهٖ ؕ وَ
مَا یَجْحَدُ بِاٰیٰتِنَاۤ اِلَّا الْكٰفِرُوْنَ ﴿۴۷﴾ وَ مَا كُنْتَ تَتْلُوْا مِنْ قَبْلِهٖ
مِنْ كِتٰبٍ وَّ لَا تَخُطُّهٗ بِیَمِیْنِكَ اِذًا لَّارْتَابَ الْمُبْطِلُوْنَ ﴿۴۸﴾
بَلْ هُوَ اٰیٰتٌۢ بَیِّنٰتٌ فِیْ صُدُوْرِ الَّذِیْنَ اُوْتُوا الْعِلْمَ ؕ وَ مَا یَجْحَدُ
بِاٰیٰتِنَاۤ اِلَّا الظّٰلِمُوْنَ ﴿۴۹﴾ وَ قَالُوْا لَوْ لَاۤ اُنْزِلَ عَلَیْهِ اٰیٰتٌ مِّنْ رَّبِّهٖ ؕ قُلْ
اِنَّمَا الْاٰیٰتُ عِنْدَ اللّٰهِ ؕ وَ اِنَّمَاۤ اَنَا نَذِیْرٌ مُّبِیْنٌ ﴿۵۰﴾ اَوَ لَمْ یَكْفِهِمْ اَنَّاۤ اَنْزَلْنَا
عَلَیْكَ الْكِتٰبَ یُتْلٰی عَلَیْهِمْ ؕ اِنَّ فِیْ ذٰلِكَ لَرَحْمَةً وَّ ذِكْرٰی لِقَوْمٍ
یُّؤْمِنُوْنَ ﴿۵۱﴾ ع قُلْ كَفٰی بِاللّٰهِ بَیْنِیْ وَ بَیْنَكُمْ شَهِیْدًا ۚ یَعْلَمُ مَا فِی السَّمٰوٰتِ ع ۵ ۷
وَ الْاَرْضِ ؕ وَ الَّذِیْنَ اٰمَنُوْا بِالْبَاطِلِ وَ كَفَرُوْا بِاللّٰهِ ۙ اُولٰٓىِٕكَ هُمُ الْخٰسِرُوْنَ ﴿۵۲﴾

45. (நபியே! குர்ஆனாகிய) இவ்வேதத்திலிருந்து உமக்கு அறிவிக்கப்பட்டதை நீர் ஓதுவீராக; தொழுகையையும் (அல்லாஹ் விதியாக்கியவாறு) நிறைவேற்றுவீராக; நிச்சயமாக தொழுகை, (அதை நிறைவேற்றுபவரை) மானக்கேடான செயலிலிருந்தும், (மார்க்கத்தில்) மறுக்கப்பட்டதிலிருந்தும் தடுக்கும்; நிச்சயமாக, (தொழுகையின் மூலம்) அல்லாஹ்வை நினைவு கூருவது (எல்லாவற்றையும் விட) மிகவும் பெரிதாகும்; இன்னும், நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கு அறிகிறான்.

46. (விசுவாசிகளே!) நீங்கள் வேதத்தையுடையோர்களுடன் எது மிக அழகானதோ அதைக்கொண்டல்லாது (அவர்களுடன்) தர்க்கிக்கவேண்டாம்; (ஆயினும்,) அவர்களில் அநியாயம் செய்தோர் தவிர; (அவர்களுடன் தர்க்கித்தால்,) "எங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)தையும், உங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)தையும் நாங்கள் விசுவாசிக்கின்றோம்; எங்கள் வணக்கத்திற்குரியவனும், உங்கள் வணக்கத்திற்குரியவனும் ஒருவனே; மேலும், நாங்கள் அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்கின்றவர்கள்" என்று கூறுங்கள்.

47. (நபியே! முந்திய தூதர்களுக்கு வேதத்தை இறக்கிய) அவ்வாறே, நாம் உம்பால் (இவ்) வேதத்தை இறக்கியிருக்கின்றோம்; ஆகவே, நாம் அவர்களுக்கு (முன்னர்) வேதத்தைக் கொடுத்திருக்கின்றோமோ அத்தகையோர் _ அவர்கள், இ(வ்வேதத்)தை விசுவாசிப்பார்கள்; (மக்காவாசிகளாகிய) இவர்களிலும் இதனை (நம்பி) விசுவாசிப்பவர்களும் உள்ளனர்; மேலும், காஃபிர்களைத் தவிர (மற்றெவரும்) நம்முடைய வசனங்களை நிராகரிக்கமாட்டார்கள்.

48. மேலும் (நபியே!) இதற்கு முன்னர் எந்த வேதத்தையும் நீர் ஓதுபவராக இருக்கவில்லை; உமது வலக்கையால் நீர் அதனை எழுதுபவராக (இருக்க)வும் இல்லை. (அவ்வாறு இருந்திருக்குமானால்,) அப்பொழுது இப்பொய்யர்கள் (அல்லாஹ்வினால் அருளப்பட்டதல்ல என்று) திடமாக சந்தேகம் கொண்டிருப்பர்.

49. அவ்வாறல்ல! (குர்ஆனாகிய) இது அறிவு கொடுக்கப்பட்டிருக்கிறார்களே அவர்களின் இதயங்களில் (பதியத்தக்க) தெளிவான வசனங்களாகும்; மேலும், அநியாயக்காரர்களைத் தவிர (மற்றெவரும்) நம்முடைய வசனங்களை நிராகரிக்க மாட்டார்கள்.

50. "அவருடைய இரட்சகனிடமிருந்து அத்தாட்சிகள் அவரின் மீது இறக்கப்படவேண்டாமா?" என்றும் அவர்கள் கூறுகின்றனர்; அதற்கு (நபியே!) "அத்தாட்சிகளெல்லாம் அல்லாஹ்விடத்தில்தான் உள்ளன; (என்னிடமில்லை.) நானோ பகிரங்கமாக (அச்சமூட்டி) எச்சரிக்கை செய்கிறவன்தான்" என்று கூறுவீராக!

51. நிச்சயமாக நாம் (இவ்) வேதத்தை உம்மீது இறக்கி வைத்து (அது) அவர்கள் மீது ஓதப்பட்டு வருவது அவர்களுக்குப் போதாதா? (ஏனென்றால்,) நிச்சயமாக அதில், (அல்லாஹ்வுடைய ) அருளும், விசுவாசங்கொண்ட சமூகத்தார்க்கு ஒரு நினைவூட்டலும் இருக்கின்றன.

52. (நபியே !) நீர் கூறும்: எனக்கும், உங்களுக்குமிடையில் சாட்சியாக (இருக்க) அல்லாஹ்வே போதுமானவன்; (ஏனென்றால்,) வானங்களிலும், பூமியிலும் உள்ளவற்றை அவன் நன்கு அறிவான்; பொய்யை விசுவாசங்கொண்டு, அல்லாஹ்வை நிராகரித்தும் விடுகின்றார்களே அத்தகையோர் _ அவர்கள் தாம் நஷ்டமடைந்தவர்கள்.

وَيَسْتَعْجِلُوْنَكَ بِالْعَذَابِ ؕ وَلَوْلَاۤ اَجَلٌ مُّسَمًّى لَّجَآءَهُمُ الْعَذَابُ ؕ
وَلَيَاْتِيَنَّهُمْ بَغْتَةً وَّهُمْ لَا يَشْعُرُوْنَ ﴿۵۳﴾ يَسْتَعْجِلُوْنَكَ بِالْعَذَابِ ؕ وَ
اِنَّ جَهَنَّمَ لَمُحِيْطَةٌ بِالْكٰفِرِيْنَ ۙ﴿۵۴﴾ يَوْمَ يَغْشٰهُمُ الْعَذَابُ مِنْ
فَوْقِهِمْ وَمِنْ تَحْتِ اَرْجُلِهِمْ وَيَقُوْلُ ذُوْقُوْا مَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۵۵﴾
يٰعِبَادِيَ الَّذِيْنَ اٰمَنُوْۤا اِنَّ اَرْضِيْ وَاسِعَةٌ فَاِيَّايَ فَاعْبُدُوْنِ ﴿۵۶﴾
كُلُّ نَفْسٍ ذَآئِقَةُ الْمَوْتِ ۫ ثُمَّ اِلَيْنَا تُرْجَعُوْنَ ﴿۵۷﴾ وَالَّذِيْنَ اٰمَنُوْا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَنُبَوِّئَنَّهُمْ مِّنَ الْجَنَّةِ غُرَفًا تَجْرِيْ مِنْ
تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا ؕ نِعْمَ اَجْرُ الْعٰمِلِيْنَ ۖۗ﴿۵۸﴾ الَّذِيْنَ
صَبَرُوْا وَعَلٰى رَبِّهِمْ يَتَوَكَّلُوْنَ ﴿۵۹﴾ وَكَاَيِّنْ مِّنْ دَآبَّةٍ لَّا تَحْمِلُ
رِزْقَهَا ۖۗ اَللّٰهُ يَرْزُقُهَا وَاِيَّاكُمْ ۖۗ وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ﴿۶۰﴾ وَلَئِنْ
سَاَلْتَهُمْ مَّنْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَسَخَّرَ الشَّمْسَ وَالْقَمَرَ
لَيَقُوْلُنَّ اللّٰهُ ۚ فَاَنّٰى يُؤْفَكُوْنَ ﴿۶۱﴾ اَللّٰهُ يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَّشَآءُ
مِنْ عِبَادِهٖ وَيَقْدِرُ لَهٗ ؕ اِنَّ اللّٰهَ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ﴿۶۲﴾ وَلَئِنْ
سَاَلْتَهُمْ مَّنْ نَّزَّلَ مِنَ السَّمَآءِ مَآءً فَاَحْيَا بِهِ الْاَرْضَ مِنْۢ بَعْدِ
مَوْتِهَا لَيَقُوْلُنَّ اللّٰهُ ؕ قُلِ الْحَمْدُ لِلّٰهِ ؕ بَلْ اَكْثَرُهُمْ لَا يَعْقِلُوْنَ ﴿۶۳﴾ ع ۶ ۱۲ ۲

53. மேலும்,(மறுமையின்) வேதனையைப்பற்றி,(அது எப்பொழுது வரும்? என்று) அவர்கள் உம்மை அவசரப்படுத்துகின்றனர்; இன்னும், ஒரு குறிப்பிடப்பட்ட தவணையில்லாதிருந்தால் அ(வ்வேதனையான)து அவர்களை வந்தடைந்திருக்கும்; இன்னும், (அத்தவணை) அவர்கள் உணர்ந்து கொள்ளாத நிலையில், அது திடீரென அவர்களிடம் திட்டமாக வந்துவிடும்.

54. அவர்கள் (அவ்) வேதனையைப்பற்றி உம்மை அவசரப்படுத்துகின்றனர்; நிச்சயமாக நரகமோ நிராகரிப்போரைச் சூழ்ந்து கொள்ளக்கூடியதாகும்.

55. அவர்களுக்கு மேலிருந்தும், அவர்களுடைய கால்களுக்குக் கீழிருந்தும் வேதனை அவர்களை மூடிக்கொள்ளும் (அந்)நாளில், "நீங்கள் செய்து கொண்டிருந்ததை நீங்கள் சுவைத்துப்பாருங்கள்" என்றும் (அல்லாஹ்வாகிய) அவன் கூறுவான்.

56. விசுவாசங்கொண்ட என்னுடைய அடியார்களே! நிச்சயமாக என்னுடைய பூமி(மிக்க) விசாலமானது;எனவே (அதில்) நீங்கள் என்னையே வணங்குங்கள்.

57. ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைக்கக்கூடியதாகும்; பின்னர் நீங்கள் நம்மிடமே திருப்பிக்கொண்டு வரப்படுவீர்கள்.

58. மேலும், "விசுவாசங்கொண்டு நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையோர்_ அவர்களைச் சுவனபதியிலுள்ள உயர்ந்த மாளிகைகளில் (அவர்கள் தங்கி விடுவதற்காக)திட்டமாக நாம் இறக்குவோம்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அவற்றில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; (நன்மையான) செயல் புரிவோரின் கூலி நல்லதாகிவிட்டது.

59. அத்தகையோர் பொறுமையுடனிருந்து ( தங்களின் காரியங்களை அல்லாஹ்விடம் ஒப்படைத்து முழுமையாக) தங்கள் இரட்சகனின் மீது நம்பிக்கையும் வைப்பார்கள்.

60. மேலும், எத்தனையோ பிராணிகள் _அவை தங்கள் உணவைச் சுமந்து திரிவதில்லை; அல்லாஹ் தான் அவைகளுக்கும், உங்களுக்கும் உணவளிக்கிறான்; (இவ்வாறிருக்க, அதற்காக நீங்கள் ஏன் அதிகக் கவலைப்பட வேண்டும்?) அவனே(யாவையும்) செவியேற்கிறவன், நன்கறிகிறவன்.

61. மேலும், "வானங்களையும் பூமியையும் படைத்து, சூரியனையும், சந்திரனையும் (தன் திட்டப்பிரகாரமே நடக்கும் படி) வசப்படுத்தியவன் யார்?" என்று (நபியே!) நீர் அவர்களைக் கேட்பீராயின், "அல்லாஹ்" என்று அவர்கள் நிச்சயமாகக் கூறுவார்கள்; அவ்வாறாயின், அவர்கள் (அவனை வணங்குவதை விட்டும்) எங்கு திருப்பப்படுகிறார்கள்?

62. அல்லாஹ் தன்னுடைய அடியார்களில் தான் நாடியவர்களுக்கு (வாழ்க்கை வசதிகளுக்குத் தேவையான) உணவை விரிவாகவும் கொடுக்கிறான்; (தான் நாடியவர்களுக்கு) அளவோடும் கொடுக்கிறான்; நிச்சயமாக அல்லாஹ், ஒவ்வொரு பொருளையும்(பற்றி) நன்கறிந்தவன்.

63. மேலும், (நபியே! ) "வானத்திலிருந்து மழையை இறக்கி அதனைக் கொண்டு பூமியை _ அது இறந்ததன் பின் உயிர்ப்பிப்பவன் யார்?" என்று நீர் அவர்களைக் கேட்பீராயின், "அல்லாஹ்" என்று அவர்கள் நிச்சயமாகக் கூறுவார்கள்; (அதற்கு) "புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது" என்று நீர் கூறுவீராக! எனினும் அவர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்து கொள்ளமாட்டார்கள்.

وَمَا هٰذِهِ الْحَيٰوةُ الدُّنْيَآ اِلَّا لَهْوٌ وَّلَعِبٌ ؕ وَاِنَّ الدَّارَ الْاٰخِرَةَ
لَهِىَ الْحَيَوَانُ ۘ لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ ﴿۶۴﴾ فَاِذَا رَكِبُوْا فِى الْفُلْكِ دَعَوُا وقف لازم
اللّٰهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ۚ فَلَمَّا نَجّٰىهُمْ اِلَى الْبَرِّ اِذَا هُمْ
يُشْرِكُوْنَ ﴿۶۵﴾ لِيَكْفُرُوْا بِمَآ اٰتَيْنٰهُمْ ۚۙ وَلِيَتَمَتَّعُوْا ۠ فَسَوْفَ
يَعْلَمُوْنَ ﴿۶۶﴾ اَوَلَمْ يَرَوْا اَنَّا جَعَلْنَا حَرَمًا اٰمِنًا وَّيُتَخَطَّفُ النَّاسُ
مِنْ حَوْلِهِمْ ؕ اَفَبِالْبَاطِلِ يُؤْمِنُوْنَ وَبِنِعْمَةِ اللّٰهِ يَكْفُرُوْنَ ﴿۶۷﴾
وَمَنْ اَظْلَمُ مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا اَوْ كَذَّبَ بِالْحَقِّ
لَمَّا جَآءَهٗ ؕ اَلَيْسَ فِىْ جَهَنَّمَ مَثْوًى لِّلْكٰفِرِيْنَ ﴿۶۸﴾ وَالَّذِيْنَ
جٰهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا ؕ وَاِنَّ اللّٰهَ لَمَعَ الْمُحْسِنِيْنَ ﴿۶۹﴾ ع ۷

## سُوْرَةُ الرُّوْمِ مَكِّيَّةٌ وَّهِىَ سِتُّوْنَ اٰيَةً وَّسِتُّ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

الٓمّٓ ۚ ﴿۱﴾ غُلِبَتِ الرُّوْمُ ﴿۲﴾ فِىْٓ اَدْنَى الْاَرْضِ وَهُمْ مِّنْۢ بَعْدِ
غَلَبِهِمْ سَيَغْلِبُوْنَ ﴿۳﴾ فِىْ بِضْعِ سِنِيْنَ ۚ لِلّٰهِ الْاَمْرُ مِنْ
قَبْلُ وَمِنْۢ بَعْدُ ؕ وَيَوْمَئِذٍ يَّفْرَحُ الْمُؤْمِنُوْنَ ﴿۴﴾
بِنَصْرِ اللّٰهِ ؕ يَنْصُرُ مَنْ يَّشَآءُ ؕ وَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿۵﴾

64. மேலும், இவ்வுலக வாழ்க்கை வீணும், விளையாட்டுமே தவிர வேறொன்றுமில்லை. அவர்கள் அறிந்தவர்களாக இருப்பின் நிச்சயமாக மறுமையின் வீடு, அதுவே (நித்திய) வாழ்க்கையாகும்.

65. மேலும், அவர்கள் கப்பலில் ஏறி (ய பின் ஆபத்தில் சிக்கி)க் கொண்டால், அவர்கள் முற்றிலும் வணக்கத்தை அவனுக்கே கலப்பற்றதாக ஆக்கியவர்களாக அல்லாஹ்வை அழைக்கின்றனர்; அவன், அவர்களைக் கரையின் பால் (சேர்த்து வைத்துக்) காப்பாற்றிய பொழுது, அவனுக்கே அவர்கள் இணைவைக்கின்றனர்.

66. நாம் அவர்களுக்கு அருளியதை அவர்கள் நிராகரிப்பதற்காகவும் (தங்கள் விருப்பப்படி) அவர்கள் சுகமனுபவித்துக் கொண்டிருப்பதற்காகவும் (இணை வைக்கின்றனர்.) ஆனால் அவர்கள் (இதன் பலனை) விரைவில் தெரிந்து கொள்வார்கள்.

67. அவர்களைச் சூழ (மக்காவிற்கு வெளியில்) உள்ள மனிதர்கள் எதிரிகளால் இறாய்ஞ்சி(த் தூக்கி)ச் செல்லப்படும் நிலையில் (இந்த மக்காவை) அபயமளிக்கும் புனித இடமாக நாம் ஆக்கியிருப்பதை அவர்கள் பார்க்கவில்லையா? இவர்கள் பொய்யை விசுவாசங்கொண்டு, அல்லாஹ்வின் (இந்த) அருட் கொடையையும் நிராகரிக்கின்றனரா?

68. இன்னும், அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனைச்செய்தவனை விட, அல்லது சத்தியத்தை — அது தன்னிடம் வந்த போது — பொய்யாக்கியவனை விட மிக்க அக்கிரமக்காரன் யார்? (இத்தகைய) நிராகரிப்போரின் தங்குமிடம் நரகத்தில் இல்லையா?

69. மேலும், நம்முடைய வழியில் (செல்ல) முயற்சிக்கின்றார்களே அத்தகையோர் — நிச்சயமாக நாம் அவர்களை, நம்முடைய (நேரான) வழியில் செலுத்துகின்றோம்; மேலும், நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோர்களுடன் இருக்கிறான்.

---

அத்தியாயம் : 30

## அர்ரூம் — ரோமாபுரி

வசனங்கள் : 60 மக்கீ ருகூஉகள் : 6

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. அலிஃப் லாம் மீம்.

2. ரோமாபுரி (பாரசீகர்களால்) வெற்றி கொள்ளப்பட்டுவிட்டது.

3. சமீபத்திலுள்ள பூமியில் — அவர்களின் தோல்விக்குப் பிறகு அவர்கள் வெற்றியடைவார்கள் —

4. சில வருடங்களில் (அவர்கள் வெற்றியடைவர். வெற்றி தோல்வி அளிக்கும்) அதிகாரம் (இதற்கு) முன்னரும், (இதற்குப்) பின்னரும் அல்லாஹ்வுக்கே உரியது; (அவர்கள் வெற்றியடையும்) அந்நாளில், விசுவாசிகள் மகிழ்ச்சியடைவார்கள்.

5. அல்லாஹ்வின் உதவிகொண்டு (மகிழ்ச்சி அடைவர்). அவன் தான் நாடியவர்களுக்கு உதவி புரிகிறான்; அவன் (யாவரையும்) மிகைத்தவன்; பெருங் கிருபையுடையவன்.

وَعْدَ اللّٰهِ ؕ لَا يُخْلِفُ اللّٰهُ وَعْدَهٗ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا
يَعْلَمُوْنَ ۝۶ يَعْلَمُوْنَ ظَاهِرًا مِّنَ الْحَيٰوةِ الدُّنْيَا ۖۚ وَهُمْ عَنِ
الْاٰخِرَةِ هُمْ غٰفِلُوْنَ ۝۷ اَوَلَمْ يَتَفَكَّرُوْا فِيْۤ اَنْفُسِهِمْ ۫ مَا خَلَقَ اللّٰهُ
السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَاۤ اِلَّا بِالْحَقِّ وَاَجَلٍ مُّسَمًّى ؕ وَ
اِنَّ كَثِيْرًا مِّنَ النَّاسِ بِلِقَآئِ رَبِّهِمْ لَكٰفِرُوْنَ ۝۸ اَوَلَمْ يَسِيْرُوْا
فِي الْاَرْضِ فَيَنْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ؕ
كَانُوْۤا اَشَدَّ مِنْهُمْ قُوَّةً وَّاَثَارُوا الْاَرْضَ وَعَمَرُوْهَاۤ اَكْثَرَ
مِمَّا عَمَرُوْهَا وَجَآءَتْهُمْ رُسُلُهُمْ بِالْبَيِّنٰتِ ؕ فَمَا كَانَ اللّٰهُ لِيَظْلِمَهُمْ
وَلٰكِنْ كَانُوْۤا اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ ؕ۝۹ ثُمَّ كَانَ عَاقِبَةَ الَّذِيْنَ
اَسَآءُوا السُّوْۤاٰى اَنْ كَذَّبُوْا بِاٰيٰتِ اللّٰهِ وَكَانُوْا بِهَا يَسْتَهْزِءُوْنَ ۝۱۰ ع
اَللّٰهُ يَبْدَؤُا الْخَلْقَ ثُمَّ يُعِيْدُهٗ ثُمَّ اِلَيْهِ تُرْجَعُوْنَ ۝۱۱ وَيَوْمَ
تَقُوْمُ السَّاعَةُ يُبْلِسُ الْمُجْرِمُوْنَ ۝۱۲ وَلَمْ يَكُنْ لَّهُمْ
مِّنْ شُرَكَآئِهِمْ شُفَعٰٓؤُا وَكَانُوْا بِشُرَكَآئِهِمْ كٰفِرِيْنَ ۝۱۳
وَيَوْمَ تَقُوْمُ السَّاعَةُ يَوْمَئِذٍ يَّتَفَرَّقُوْنَ ۝۱۴ فَاَمَّا الَّذِيْنَ
اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ فَهُمْ فِيْ رَوْضَةٍ يُّحْبَرُوْنَ ۝۱۵

6. (இது) அல்லாஹ்வுடைய வாக்குறுதி; அல்லாஹ் தன்னுடைய வாக்குறுதியில் மாற்றம் செய்யமாட்டான்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறியமாட்டார்கள்.

7. அவர்கள் இவ்வுலக வாழ்க்கையிலிருந்து வெளிப்படையானதை(மட்டும்) அறிவார்கள்; அவர்களோ மறுமையைப் பற்றி மறந்தவர்களாகவே இருக்கின்றனர்.

8. அவர்கள் தங்களைப்பற்றி(அல்லாஹ் அவர்களை எவ்வாறு படைத்துள்ளான் என) சிந்தித்துப்பார்க்கவில்லையா? வானங்களையும், பூமியையும், அவையிரண்டிற்கு மத்தியிலுள்ளவைகளையும் உண்மையை (நீதியை)க் கொண்டும்,( ஒவ்வொன்றுக்கும்) குறிப்பிடப்பட்ட தவணையைக் கொண்டுமே தவிர அல்லாஹ் படைக்கவில்லை; இன்னும், நிச்சயமாக மனிதர்களில் பெரும்பாலோர் தங்கள் இரட்சகனின் சந்திப்பை நிராகரிக்கக் கூடியவர்களாகவே இருக்கின்றனர்.

9. இவர்கள் பூமியில் சுற்றித்திரிந்து, இவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை(கவனித்து)ப் பார்க்கவேண்டாமா? (முன் இருந்த) அவர்கள், இவர்களைவிட மிகுந்த பலசாலிகளாக இருந்தனர்; இவர்கள் எவ்வளவு பூமியைப் பண்படுத்தி விவசாயம் செய்து அபிவிருத்திச்செய்தார்களோ அதை விட அதிகமாகப் (பூமியைப்) பண்படுத்தி அபிவிருத்தி செய்தவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள்; இன்னும் (அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட) அவர்களின் தூதர்கள் தெளிவான அத்தாட்சிகளைக்கொண்டு அவர்களிடம் வந்தார்கள்; ஆகவே அல்லாஹ் ஒருபோதும் அவர்களுக்கு அநியாயம் செய்வதற்காக இருக்கவில்லை; எனினும் அவர்கள் (அந்நபிமார்களைப் பொய்யாக்கி) தங்களுக்குத் தாமே அநியாயம் செய்து கொண்டனர்.

10. பின்னர், தீமை செய்து கொண்டிருந்தவர்களின் முடிவு, அல்லாஹ்வுடைய வசனங்களை அவர்கள் பொய்யாக்கியதாலும், அவற்றை அவர்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்ததாலும் மிகத் தீயதாகவே ஆகிவிட்டது.

11. (மனிதர்களே!) அல்லாஹ்(வே) படைப்பை(ஆரம்பமாக)த் தொடங்குகின்றான்; பின்னர், அதனை அவன் மீளவைப்பான்; பின்னர், ( மனிதர்களே!) நீங்கள் (அனைவரும்) அவனிடமே(மறுமைக்காக) திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்.

12. மேலும், மறுமை நாள் நிலைபெறும் நாளில், குற்றவாளிகள் நம்பிக்கையிழந்து விடுவார்கள்.

13. (ஏனென்றால், அல்லாஹ்வுக்கு இணையாக்கிய) அவர்களுடைய இணையாளர்களிலிருந்து பரிந்துரையாளர்கள் அவர்களுக்கு இருக்கவேமாட்டார்கள்; தாங்கள் இணையாக்கியவர்களை அவர்களும் நிராகரிப்போராகி விடுவார்கள்.

14. இன்னும், மறுமைநாள் நிலைபெறும் நாளில்_ (விசுவாசிகள், நிராகரித்தோர் என இருபிரிவாக) அந்நாளில் அவர்கள் பிரிந்து விடுவார்கள்.

15. எனவே, "விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்தார்களே அத்தகையோர்_ (மறுமையில் சுவனபதியிலுள்ள உன்னதமான) பூங்காவனத்தில் அவர்கள் மகிழ்விக்கப் படுவார்கள்.

وَاَمَّا الَّذِيۡنَ كَفَرُوۡا وَكَذَّبُوۡا بِاٰيٰتِنَا وَلِقَآئِ الۡاٰخِرَةِ
فَاُولٰٓئِكَ فِى الۡعَذَابِ مُحۡضَرُوۡنَ ﴿۱۶﴾ فَسُبۡحٰنَ اللّٰهِ حِيۡنَ
تُمۡسُوۡنَ وَحِيۡنَ تُصۡبِحُوۡنَ ﴿۱۷﴾ وَلَهُ الۡحَمۡدُ فِى السَّمٰوٰتِ
وَالۡاَرۡضِ وَعَشِيًّا وَّحِيۡنَ تُظۡهِرُوۡنَ ﴿۱۸﴾ يُخۡرِجُ الۡحَىَّ مِنَ
الۡمَيِّتِ وَيُخۡرِجُ الۡمَيِّتَ مِنَ الۡحَىِّ وَيُحۡىِ الۡاَرۡضَ بَعۡدَ
مَوۡتِهَا ؕ وَكَذٰلِكَ تُخۡرَجُوۡنَ ﴿۱۹﴾ ع وَمِنۡ اٰيٰتِهٖۤ اَنۡ خَلَقَكُمۡ مِّنۡ ۲ ۹ ۵
تُرَابٍ ثُمَّ اِذَاۤ اَنۡتُمۡ بَشَرٌ تَنۡتَشِرُوۡنَ ﴿۲۰﴾ وَمِنۡ اٰيٰتِهٖۤ اَنۡ خَلَقَ
لَكُمۡ مِّنۡ اَنۡفُسِكُمۡ اَزۡوَاجًا لِّتَسۡكُنُوۡۤا اِلَيۡهَا وَجَعَلَ بَيۡنَكُمۡ
مَّوَدَّةً وَّرَحۡمَةً ؕ اِنَّ فِىۡ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوۡمٍ يَّتَفَكَّرُوۡنَ ﴿۲۱﴾
وَمِنۡ اٰيٰتِهٖ خَلۡقُ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ وَاخۡتِلَافُ اَلۡسِنَتِكُمۡ
وَاَلۡوَانِكُمۡ ؕ اِنَّ فِىۡ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّلۡعٰلِمِيۡنَ ﴿۲۲﴾ وَمِنۡ اٰيٰتِهٖ
مَنَامُكُمۡ بِالَّيۡلِ وَالنَّهَارِ وَابۡتِغَآؤُكُمۡ مِّنۡ فَضۡلِهٖ ؕ اِنَّ فِىۡ
ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوۡمٍ يَّسۡمَعُوۡنَ ﴿۲۳﴾ وَمِنۡ اٰيٰتِهٖ يُرِيۡكُمُ الۡبَرۡقَ
خَوۡفًا وَّطَمَعًا وَّيُنَزِّلُ مِنَ السَّمَآءِ مَآءً فَيُحۡىٖ بِهِ الۡاَرۡضَ
بَعۡدَ مَوۡتِهَا ؕ اِنَّ فِىۡ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوۡمٍ يَّعۡقِلُوۡنَ ﴿۲۴﴾

16. மேலும், (நம்மை) நிராகரித்து, நம்முடைய வசனங்களையும், மறுமையின் சந்திப்பையும் பொய்யாக்குகின்றார்களே அத்தகையோர் – அவர்கள் வேதனையில் பிரசன்னமாக்கப்படுபவர்கள்.

17. ஆகவே, (விசுவாசிகளே!) நீங்கள் மாலைப்பொழுதை அடையும்போதும், காலைப் பொழுதை அடையும்போதும் அல்லாஹ்வைத் துதி செய்து கொண்டிருங்கள்.

18. வானங்களிலும், பூமியிலும் புகழனைத்தும் அவனுக்கே உரியன; இன்னும், முன்னிரவிலும், நீங்கள் நடுப்பகலை அடையும் சமயத்திலும் (அல்லாஹ்வைத் துதியுங்கள்).

19. அவன் உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகின்றான்; மேலும், அவன் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளிப்படுத்துகின்றான்; அவனே பூமியை – அது இறந்த(தாகி வறண்ட)பின் (செழிப்பாக்கி) உயிர்ப்பிக்கின்றான்; இவ்வாறே (மரணித்த பின்னர் மறுமையில்) நீங்களும் வெளிப்படுத்தப்படுவீர்கள்.

20. இன்னும், அவன் உங்களை மண்ணிலிருந்து படைத்திருப்பதும், பின்னர், இப்பொழுது நீங்கள் (பூமியின் பல பாகங்களிலும்) மனிதர்களாக பரவி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்.

21. (நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை நீங்கள் அவர்களிடம் மனநிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்து, உங்களுக்கிடையில் அன்பையும், கிருபையையும் ஆக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்தார்க்கு இதில் நிச்சயமாக(ப் பல) அத்தாட்சிகளிருக்கின்றன.

22. வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதும், உங்களுடைய மொழிகளும், நிறங்களும் வேறுபட்டிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்; இதில் அறிவுடையோருக்கு நிச்சயமாக(ப் பல) அத்தாட்சிகளிருக்கின்றன.

23. இரவிலும், பகலிலும் நீங்கள் நித்திரை செய்(து இளைப்பாறிக்கொள்)வதும், (பூமியின் பல பாகங்களுக்குச் சென்று) நீங்கள் அவனுடைய பேரருளைத் தேடிக்கொள்வதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்; (கவனமாகச்) செவியுறும் சமூகத்தார்க்கு, இதில் நிச்சயமாக (ப் பல) அத்தாட்சிகளிருக்கின்றன.

24. இன்னும், பயமும், ஆதரவும் தரக்கூடியவாறு மின்னலை அவன் உங்களுக்குக் காண்பிப்பதும், வானத்திலிருந்து மழையை இறக்கி வைத்துப் பின்னர் அதனைக் கொண்டு பூமியை – அது இறந்த (தாகி வறண்ட) பின் உயிர்ப்பிக்க( வைத்துச் செழிக்க)ச் செய்வதும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும். (அல்லாஹ்வின் பிரமாண்டமான அத்தாட்சிகளை) அறிந்து கொள்ளும் சமூகத்தார்க்கு நிச்சயமாக இதில் அத்தாட்சிகளிருக்கின்றன.

وَمِنْ اٰيٰتِهٖٓ اَنْ تَقُوْمَ السَّمَآءُ وَالْاَرْضُ بِاَمْرِهٖ ؕ ثُمَّ اِذَا دَعَاكُمْ
دَعْوَةً ۖ مِّنَ الْاَرْضِ ۖ اِذَآ اَنْتُمْ تَخْرُجُوْنَ ﴿۲۵﴾ وَلَهٗ مَنْ فِى
السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ كُلٌّ لَّهٗ قٰنِتُوْنَ ﴿۲۶﴾ وَهُوَ الَّذِىْ يَبْدَؤُا
الْخَلْقَ ثُمَّ يُعِيْدُهٗ وَهُوَ اَهْوَنُ عَلَيْهِ ؕ وَلَهُ الْمَثَلُ الْاَعْلٰى
فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۲۷﴾ ضَرَبَ لَكُمْ ع ۳ ۸
مَّثَلًا مِّنْ اَنْفُسِكُمْ ؕ هَلْ لَّكُمْ مِّنْ مَّا مَلَكَتْ اَيْمَانُكُمْ
مِّنْ شُرَكَآءَ فِىْ مَا رَزَقْنٰكُمْ فَاَنْتُمْ فِيْهِ سَوَآءٌ تَخَافُوْنَهُمْ
كَخِيْفَتِكُمْ اَنْفُسَكُمْ ؕ كَذٰلِكَ نُفَصِّلُ الْاٰيٰتِ لِقَوْمٍ يَّعْقِلُوْنَ ﴿۲۸﴾
بَلِ اتَّبَعَ الَّذِيْنَ ظَلَمُوْٓا اَهْوَآءَهُمْ بِغَيْرِ عِلْمٍ ۚ فَمَنْ يَّهْدِىْ
مَنْ اَضَلَّ اللّٰهُ ؕ وَمَا لَهُمْ مِّنْ نّٰصِرِيْنَ ﴿۲۹﴾ فَاَقِمْ وَجْهَكَ
لِلدِّيْنِ حَنِيْفًا ؕ فِطْرَتَ اللّٰهِ الَّتِىْ فَطَرَ النَّاسَ عَلَيْهَا ؕ لَا
تَبْدِيْلَ لِخَلْقِ اللّٰهِ ؕ ذٰلِكَ الدِّيْنُ الْقَيِّمُ ۙ وَلٰكِنَّ اَكْثَرَ
النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿۳۰﴾ مُنِيْبِيْنَ اِلَيْهِ وَاتَّقُوْهُ وَاَقِيْمُوا
الصَّلٰوةَ وَلَا تَكُوْنُوْا مِنَ الْمُشْرِكِيْنَ ﴿۳۱﴾ مِنَ الَّذِيْنَ فَرَّقُوْا
دِيْنَهُمْ وَكَانُوْا شِيَعًا ؕ كُلُّ حِزْبٍۢ بِمَا لَدَيْهِمْ فَرِحُوْنَ ﴿۳۲﴾

25. வானமும், பூமியும் அவன் கட்டளைப்படி நிலைபெற்று நிற்பதும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்; பின்னர், அவன் உங்களை ஒருமுறை அழைத்தால், அதே சமயம் நீங்கள் பூமியிலிருந்து வெளிப்பட்டுவிடுவீர்கள்.

26. வானங்களிலும் பூமியிலும் உள்ளவையாவும் அவனுக்கே உரியன! (இவை) ஒவ்வொன்றும் அவனுக்கே கீழ்ப்படிந்து நடக்கின்றன.

27. அவன் எத்தகையவனென்றால், படைப்பை (முன் மாதிரியின்றியே ஆரம்பமாக) அவன் தொடங்குகின்றான்; பின்னர் அதை அவன் மீளவைக்கிறான்; இது அவனுக்கு மிகவும் எளிதானதாகும். வானங்களிலும், பூமியிலும் மிக்க மேலான வர்ணனை(பண்பு) அவனுக்குரியதே; மேலும், அவனே (யாவற்றையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

28. (மனிதர்களே!) உங்களிலிருந்தே உங்களுக்கு ஓர் உதாரணத்தை (அல்லாஹ்வாகிய) அவன் கூறுகிறான்: உங்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களிலிருந்து, நாம் உங்களுக்கு வழங்கிய (செல்வம், அதிகாரம் முதலிய)வற்றில், நீங்கள் (அனைவரும்) அதில் சமமானவர்களாக இருக்கும் கூட்டுக்காரர்கள் உங்களுக்கு உண்டா? நீங்கள் உங்களைப்(போன்ற சுதந்திரமான கூட்டுக்காரர்களின் நன்மை,தீமைகளை) பயந்து கொள்வது போன்று (உங்களுக்குச் சமமான கூட்டுக்காரர்களாக அடிமைகளான அவர்கள் ஆகிவிடும் விஷயத்தில்) அவர்களை நீங்கள் பயப்படுகிறீர்கள்; (உங்கள் இனத்தைச் சேர்ந்த அடிமையை உங்களுக்கு சமமானவர்களாக ஆக்க நீங்கள் விரும்பாத போது, அல்லாஹ்வுக்கு மற்றவர்களை எவ்வாறு சமமாக்குகிறீர்கள்?) அறிவுடைய சமூகத்தார்க்கு (நம்முடைய) வசனங்களை இவ்வாறு விவரித்துக் கூறுகிறோம்.

29. மாறாக, அநியாயக்காரர்கள் எவ்வித அறிவுமின்றியே தங்களுடைய மனோ இச்சைகளைப் பின்பற்றுகின்றனர்; எனவே, அல்லாஹ் எவர்களை வழிகெடுத்துவிட்டானோ அவர்களை நேர் வழியில் கொண்டு வருபவர் யார்? மேலும் அவர்களுக்கு உதவி செய்பவர்களும் இல்லை.

30. (நபியே!) நீர் உம்முடைய முகத்தை மார்க்கத்தின்பால் (முற்றிலும்) திருப்பியவராக நிலைநிறுத்தி விடுவீராக! அல்லாஹ் மனிதர்களை எ(ந்த மார்க்கத்)தில் படைத்தானோ அத்தகைய இயற்கை மார்க்க(மாகிய இஸ்லா)த்தை (பற்றிப்பிடித்து நிலைத்திருப்பீராக!) அல்லாஹ்வின் படைப்பில் எவ்வித மாற்றமும் இல்லை; இதுவே (சரியான) நிலையான மார்க்கமாகும். எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்து கொள்ள மாட்டார்கள்.

31. (விசுவாசிகளே!) அவன்பக்கமே திரும்பியவர்களாக (இயற்கை மார்க்கமான இஸ்லாத்தில் நிலைத்திருங்கள்), இன்னும் அவனை பயந்து கொள்ளுங்கள்; தொழுகையையும் நிறைவேற்றுங்கள்; மேலும் இணைவைத்துக் கொண்டிருப்போரில் நீங்கள் ஆகிவிடாதீர்கள்.

32. தங்கள் மார்க்கத்தை(பலவாறாக)ப்பிரித்து, (பல) பிரிவினர்களாக ஆகிவிட்டனரே, அத்தகையோரில் (நீங்கள் ஆகிவிட வேண்டாம் அவ்வாறுபிரிந்த) ஒவ்வொரு பிரிவாரும் தங்களிடமுள்ள (தவறான) தைக் கொண்டு சந்தோஷப்படுபவர்களாக இருக்கின்றனர்.

وَاِذَا مَسَّ النَّاسَ ضُرٌّ دَعَوْا رَبَّهُمْ مُّنِيْبِيْنَ اِلَيْهِ ثُمَّ اِذَآ
اَذَاقَهُمْ مِّنْهُ رَحْمَةً اِذَا فَرِيْقٌ مِّنْهُمْ بِرَبِّهِمْ يُشْرِكُوْنَ ﴿۳۳﴾ لِيَكْفُرُوْا
بِمَآ اٰتَيْنٰهُمْ ؕ فَتَمَتَّعُوْا ۫ فَسَوْفَ تَعْلَمُوْنَ ﴿۳۴﴾ اَمْ اَنْزَلْنَا عَلَيْهِمْ سُلْطٰنًا
فَهُوَ يَتَكَلَّمُ بِمَا كَانُوْا بِهٖ يُشْرِكُوْنَ ﴿۳۵﴾ وَاِذَآ اَذَقْنَا النَّاسَ رَحْمَةً فَرِحُوْا
بِهَا ؕ وَاِنْ تُصِبْهُمْ سَيِّئَةٌۢ بِمَا قَدَّمَتْ اَيْدِيْهِمْ اِذَا هُمْ يَقْنَطُوْنَ ﴿۳۶﴾
اَوَلَمْ يَرَوْا اَنَّ اللّٰهَ يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَّشَآءُ وَيَقْدِرُ ؕ اِنَّ فِيْ
ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿۳۷﴾ فَاٰتِ ذَا الْقُرْبٰى حَقَّهٗ وَ
الْمِسْكِيْنَ وَابْنَ السَّبِيْلِ ؕ ذٰلِكَ خَيْرٌ لِّلَّذِيْنَ يُرِيْدُوْنَ وَجْهَ
اللّٰهِ ۫ وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿۳۸﴾ وَمَآ اٰتَيْتُمْ مِّنْ رِّبًا لِّيَرْبُوَا۠
فِيْٓ اَمْوَالِ النَّاسِ فَلَا يَرْبُوْا عِنْدَ اللّٰهِ ۚ وَمَآ اٰتَيْتُمْ مِّنْ زَكٰوةٍ
تُرِيْدُوْنَ وَجْهَ اللّٰهِ فَاُولٰٓئِكَ هُمُ الْمُضْعِفُوْنَ ﴿۳۹﴾ اَللّٰهُ الَّذِيْ
خَلَقَكُمْ ثُمَّ رَزَقَكُمْ ثُمَّ يُمِيْتُكُمْ ثُمَّ يُحْيِيْكُمْ ؕ هَلْ مِنْ
شُرَكَآئِكُمْ مَّنْ يَّفْعَلُ مِنْ ذٰلِكُمْ مِّنْ شَيْءٍ ؕ سُبْحٰنَهٗ وَتَعٰلٰى عَمَّا
يُشْرِكُوْنَ ﴿۴۰﴾ ع ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ بِمَا كَسَبَتْ اَيْدِي ع ۴ ۱۳ ۷
النَّاسِ لِيُذِيْقَهُمْ بَعْضَ الَّذِيْ عَمِلُوْا لَعَلَّهُمْ يَرْجِعُوْنَ ﴿۴۱﴾

33. மனிதர்களை ஏதேனுமொரு தீங்கு தொட்டுவிடுமானால் அவர்கள் தங்கள் இரட்சகனை_(கலப்பற்ற இதயத்துடன் அவனுக்கு இணையாளர்களை ஆக்காது) அவன் பாலே திரும்பியவர்களாக (அவனை மட்டும் பிரார்த்தித்து) அழைக்கின்றார்கள்; பின்னர், அவன் (அத்தீங்கை நீக்கி) அவர்களை தன்னிடமிருந்துள்ள அருளை சுவைக்கும்படிச் செய்தால், அப்பொழுது அவர்களிலிருந்து ஒரு பிரிவினர், தங்களுடைய இரட்சகனுக்கே இணை வைக்கின்றனர்.

34. நாம் அவர்களுக்குக் கொடுத்ததை அவர்கள் நிராகரிப்பதற்காக (இணை வைக்கிறார்கள்) ஆகவே, நீங்கள் (இவ்வுலகில்) சுகமனுபவியுங்கள்; (அதன் விளைவை) அடுத்து நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

35. அல்லது ( வணக்கத்தில் இணையாக்கும்) இவர்களுக்கு யாதோர் சான்றை நாம் இறக்கி வைத்திருக்கிறோமா? அப்போது அது, அவர்கள் எதைக் கொண்டு இணைவைத்து (அவர்கள் வணங்கி)க்கொண்டிருக்கிறார்களோ அது பற்றிக்கூறும்;(ஆனால் அவ்வாறு எதுவுமில்லை).

36. இன்னும் நாம் மனிதர்களுக்கு (நம்முடைய) அருளைச்சுவைக்கச் செய்தால் , அதைக்கொண்டு அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்; அவர்களுடைய கைகள் முற்படுத்தியவற்றின் காரணமாக அவர்களுக்கு யாதொரு தீங்கேற்பட்டால், அப்பொழுது அவர்கள் நிராசையடைந்து விடுகிறார்கள்.

37. நிச்சயமாக அல்லாஹ், தான் நாடியவர்களுக்கு வாழ்வாதாரங்களை விசாலமாக்குகிறான்; (தான் நாடியவர்களுக்கு) அளவோடு (சுருக்கியும்) கொடுக்கிறான் என்பதை அவர்கள் கவனிக்கவில்லையா? விசுவாசங்கொண்ட சமூகத்தாருக்கு, நிச்சயமாக இதில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன.

38. ஆகவே (நபியே! உமது பொருளில்) உறவினருக்கு _ அவருடைய உரிமையை கொடுத்துவிடுவீராக! (அவ்வாறே)ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்கும் (அவர்களுடைய பாத்தியதையைக் கொடுத்துவிடுவீராக!) அல்லாஹ்வுடைய திரு முகத்தை நாடுகிறவர்களுக்கு இதுவே மிகச்சிறந்ததாகும்; மேலும், இத்தகை யோர்தாம் வெற்றியாளர்கள்.

39. (மற்ற ) மனிதர்களுடைய பொருட்களில் (சேர்ந்து உங்கள் பொருள்களும்) பெருகி (வளர்ந்து)விடுவதற்காக வட்டிக்கு நீங்கள் கொடுக்கிறீர்களே அது அல்லாஹ்விடத்தில் (பெருகி) வளர்வதில்லை; அன்றியும், அல்லாஹ்வின் (சங்கையான) முகத்தை நாடியவர்களாக ஜகாத்திலிருந்து எதை நீங்கள் கொடுக்கின்றீர்களோ, (அது அல்லாஹ்விடத்தில் பெருகி வளரும்.) இத்தகையோர்தாம் (தம் கூலியை) இரட்டிப்பாக்கிக் கொண்டவர்களாவர்.

40. அல்லாஹ் எத்தகையவனென்றால், அவன் உங்களைப் படைத்தான்; பின்னர் அவன் உங்களுக்கு வாழ்வாதாரங்களைக் கொடுத்தான்; பின்னர் அவன் உங்களை மரணிக்கச் செய்வான்; பிறகு, அவன் உங்களை உயிர்ப்பிப்பான்; அவற்றில் எதையேனும் ஒன்றைச் செய்பவர்கள் உங்கள் இணையாளர்களில் (எவரேனும்) உண்டா? அவன் தூயவன்; அவர்கள் இணைவைப்பதைவிட்டும் அவனே மிகவும் உயர்ந்தவன்.

41. மனிதர்களின் கைகள் சம்பாதித்த (தீய)வற்றின் காரணமாகக் கரையிலும், கடலிலும் (அழிவு_) குழப்பம் வெளிப்பட்டுவிட்டது; அவர்கள் செய்த(தீய)வற்றில் சிலவற்றை அவர்களுக்கு அவன் சுவைக்கும்படிச் செய்வதற்காக (இவ்வாறு சோதிக்கிறான்; அதன் மூலம்) அவர்கள் (தவ்பாச் செய்து அவன் பால்) திரும்பிவிடுவார்கள் என .

قُلْ سِيْرُوْا فِى الْاَرْضِ فَانْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الَّذِيْنَ
مِنْ قَبْلُ ؕ كَانَ اَكْثَرُهُمْ مُّشْرِكِيْنَ ۝۴۲ فَاَقِمْ وَجْهَكَ لِلدِّيْنِ
الْقَيِّمِ مِنْ قَبْلِ اَنْ يَّاْتِىَ يَوْمٌ لَّا مَرَدَّ لَهٗ مِنَ اللّٰهِ يَوْمَئِذٍ
يَّصَّدَّعُوْنَ ۝۴۳ مَنْ كَفَرَ فَعَلَيْهِ كُفْرُهٗ ۚ وَمَنْ عَمِلَ صَالِحًا
فَلِاَنْفُسِهِمْ يَمْهَدُوْنَ ۝۴۴ لِيَجْزِىَ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا
الصّٰلِحٰتِ مِنْ فَضْلِهٖ ؕ اِنَّهٗ لَا يُحِبُّ الْكٰفِرِيْنَ ۝۴۵ وَمِنْ اٰيٰتِهٖۤ
اَنْ يُّرْسِلَ الرِّيٰحَ مُبَشِّرٰتٍ وَّلِيُذِيْقَكُمْ مِّنْ رَّحْمَتِهٖ وَلِتَجْرِىَ
الْفُلْكُ بِاَمْرِهٖ وَلِتَبْتَغُوْا مِنْ فَضْلِهٖ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ۝۴۶ وَ
لَقَدْ اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ رُسُلًا اِلٰى قَوْمِهِمْ فَجَآءُوْهُمْ
بِالْبَيِّنٰتِ فَانْتَقَمْنَا مِنَ الَّذِيْنَ اَجْرَمُوْا ؕ وَكَانَ حَقًّا
عَلَيْنَا نَصْرُ الْمُؤْمِنِيْنَ ۝۴۷ اَللّٰهُ الَّذِىْ يُرْسِلُ الرِّيٰحَ
فَتُثِيْرُ سَحَابًا فَيَبْسُطُهٗ فِى السَّمَآءِ كَيْفَ يَشَآءُ وَيَجْعَلُهٗ
كِسَفًا فَتَرَى الْوَدْقَ يَخْرُجُ مِنْ خِلٰلِهٖ ۚ فَاِذَآ اَصَابَ بِهٖ
مَنْ يَّشَآءُ مِنْ عِبَادِهٖۤ اِذَا هُمْ يَسْتَبْشِرُوْنَ ۝۴۸ وَاِنْ
كَانُوْا مِنْ قَبْلِ اَنْ يُّنَزَّلَ عَلَيْهِمْ مِّنْ قَبْلِهٖ لَمُبْلِسِيْنَ ۝۴۹

42. (நபியே!) நீர் கூறுவீராக: "பூமியில் நீங்கள் சுற்றித் திரிந்து (உங்களுக்கு) முன்னிருந்தவர்களின் முடிவு எப்படி இருந்தது? என்பதைப் பாருங்கள்; (முன்னிருந்த) அவர்களில் பெரும்பாலோர், இணைவைத்துக்கொண்டிருப்போராகவே இருந்தனர்."

43. ஆகவே (நபியே!) அல்லாஹ்விடமிருந்து அதைத் தடுத்துவிட முடியாத ஒரு நாள் வருவதற்கு முன்னதாகவே நீர் உம்முடைய முகத்தை நிலையான மார்க்கத்தின் பக்கம் (திருப்பி,) நிலை நிறுத்துவீராக! அந்நாளில் (நல்லோர் தீயோர் வெவ்வேறாகப்) பிரிந்துவிடுவார்கள்.

44. எவர் (அல்லாஹ்வை) நிராகரித்தாரோ அவருடைய நிராகரிப்பு அவர் மீதே (கேடாக) இருக்கும். எவர் நற்காரியங்களைச் செய்தாரோ, அவர்கள் (அதன் மூலம் மறுமையில்) தங்களுக்கே (அருட்கொடைகளின் நன்மைகளை) அமைத்துக் கொள்கிறார்கள்.

45. விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்தோருக்கு (அல்லாஹ்வாகிய) அவன் தன் பேரருளிலிருந்து கூலி கொடுப்பதற்காக (அவர்கள் அந்நாளில் பிரிந்துவிடுவார்கள்) நிச்சயமாக அவன் நிராகரிப்போரை நேசிக்கமாட்டான்.

46. (மழையைக்கொண்டு) நற்செய்தி கூறுபவைகளாக காற்றுகளை அவன் அனுப்புவது அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்; அவனுடைய அருளிலிருந்து உங்களை சுவைக்கச் செய்வதற்காகவும், அவன் கட்டளையைக் கொண்டு கப்பல்கள் (கடலில்) செல்வதற்காகவும் (அவற்றின் மூலம் பிரயாணம் செய்து) அவனின் பேரருளை நீங்கள் தேடிக் கொள்வதற்காகவும், நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் (அவன் காற்றுகளை நன்மாராயமாக அனுப்புகிறான்).

47. மேலும் (நபியே!) திட்டமாக நாம் உமக்கு முன்னர் அநேக தூதர்களை அவர்களுடைய சமூகத்தார்களிடம் அனுப்பிவைத்தோம்; அவர்களும் தெளிவானவை(களான அத்தாட்சி)களை அவர்களிடம் கொண்டுவந்தனர்; (எனினும், அவற்றை அவர்கள் நிராகரித்து குற்றமிழைத்தனர்.) ஆகவே, குற்றமிழைத்தோரை நாம் தண்டித்தோம்; விசுவாசிகளுக்கு உதவி செய்வதும் நம்மீது கடமையாக இருந்தது.

48. அல்லாஹ் எத்தகையவனென்றால் _ அவன் காற்றுகளை அனுப்பிவைக்கின்றான். பின்னர், அவை மேகங்களை ஓட்டுகின்றன; பிறகு தான் நாடியவாறு அதனை வானத்தில் பரத்துகிறான்; அதைப் பலதுண்டுகளாகவும் அவன் ஆக்கிவிடுகிறான்; பின்னர், அதன் மத்தியிலிருந்து மழை வெளிவருவதை நீர் காண்பீர்; பிறகு தன் அடியார்களில் தான் நாடியவருக்கு அதை வந்தடையும்படி அவன் செய்துவிட்டால் அப்போது அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

49. அவர்கள் மீது அ(ம்மழையான)து இறக்கப்படுவதற்கு முன்னர் _ (மழையின்மையால்) அதற்கு முன்னரும் _ அவர்கள் நிராசையுடையோராய் இருந்தார்கள்.

فَانْظُرْ اِلٰۤى اٰثٰرِ رَحْمَتِ اللّٰهِ كَيْفَ يُحْيِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا ؕ
اِنَّ ذٰلِكَ لَمُحْيِ الْمَوْتٰى ۚ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿۵۰﴾ وَلَئِنْ
اَرْسَلْنَا رِيْحًا فَرَاَوْهُ مُصْفَرًّا لَّظَلُّوْا مِنْۢ بَعْدِهٖ يَكْفُرُوْنَ ﴿۵۱﴾ فَاِنَّكَ
لَا تُسْمِعُ الْمَوْتٰى وَلَا تُسْمِعُ الصُّمَّ الدُّعَآءَ اِذَا وَلَّوْا مُدْبِرِيْنَ ﴿۵۲﴾
وَمَآ اَنْتَ بِهٰدِ الْعُمْيِ عَنْ ضَلٰلَتِهِمْ ؕ اِنْ تُسْمِعُ اِلَّا مَنْ يُّؤْمِنُ
بِاٰيٰتِنَا فَهُمْ مُّسْلِمُوْنَ ﴿۵۳﴾ اَللّٰهُ الَّذِيْ خَلَقَكُمْ مِّنْ ضُعْفٍ
ثُمَّ جَعَلَ مِنْۢ بَعْدِ ضُعْفٍ قُوَّةً ثُمَّ جَعَلَ مِنْۢ بَعْدِ قُوَّةٍ
ضُعْفًا وَّشَيْبَةً ؕ يَخْلُقُ مَا يَشَآءُ ۚ وَهُوَ الْعَلِيْمُ الْقَدِيْرُ ﴿۵۴﴾
وَيَوْمَ تَقُوْمُ السَّاعَةُ يُقْسِمُ الْمُجْرِمُوْنَ ۙ۬ مَا لَبِثُوْا غَيْرَ سَاعَةٍ ؕ
كَذٰلِكَ كَانُوْا يُؤْفَكُوْنَ ﴿۵۵﴾ وَقَالَ الَّذِيْنَ اُوْتُوا الْعِلْمَ وَ
الْاِيْمَانَ لَقَدْ لَبِثْتُمْ فِيْ كِتٰبِ اللّٰهِ اِلٰى يَوْمِ الْبَعْثِ ۫ فَهٰذَا
يَوْمُ الْبَعْثِ وَلٰكِنَّكُمْ كُنْتُمْ لَا تَعْلَمُوْنَ ﴿۵۶﴾ فَيَوْمَئِذٍ لَّا يَنْفَعُ
الَّذِيْنَ ظَلَمُوْا مَعْذِرَتُهُمْ وَلَا هُمْ يُسْتَعْتَبُوْنَ ﴿۵۷﴾ وَلَقَدْ
ضَرَبْنَا لِلنَّاسِ فِيْ هٰذَا الْقُرْاٰنِ مِنْ كُلِّ مَثَلٍ ؕ وَلَئِنْ جِئْتَهُمْ
بِاٰيَةٍ لَّيَقُوْلَنَّ الَّذِيْنَ كَفَرُوْۤا اِنْ اَنْتُمْ اِلَّا مُبْطِلُوْنَ ﴿۵۸﴾

ع ۵ ۳ — حفص بضم الضاد وفتحها فی الثلاثۃ لکن الضم مختار ۱۲

50. ஆகவே, (நபியே!) அல்லாஹ்வுடைய அருளின் அடையாளங்(களான பலன்)கள்பால் நீர் கவனிப்பீராக! பூமியை, அது இறந்த(தாகி வறண்ட)பின் எவ்வாறு (செழிக்கச் செய்து) அவன் உயிர்ப்பிக்கின்றான்; நிச்சயமாக இறந்தோரையும் அவன் உயிர்ப்பிக்கிறவன்; மேலும், அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றலுடையவன்.

51. மேலும், (வறண்ட) ஒரு காற்றை நாம் அனுப்பி, அ(தைக் கொண்டு பயிரான)தை மஞ்சணித்திருப்பதாக அவர்கள் கண்டால், அதன் பின்னர் (நன்றியை மறந்து) நிராகரிப்போராகவே இருந்துவிடுகின்றனர்.

52. ஆகவே (நபியே!) நிச்சயமாக நீர் இறந்தோரைச் செவியுறச்செய்யமாட்டீர்; (உம்மால் முடியாது;) இன்னும் செவிடர்களையும் அவர்கள் புறமுதுகிட்டவர்களாக புறக்கணித்து திரும்பிச் சென்றால் நீர் (உம்முடைய) அழைப்பை செவியுறச் செய்யமாட்டீர்.

53. இன்னும் குருடர்களை – அவர்களுடைய வழிகேட்டை விட்டும் (திருப்பி) நேர் வழியில் செலுத்துபவராகவும் நீர் இல்லை; நம்முடைய வசனங்களை விசுவாசங் கொள்பவர்களைத் தவிர, (மற்றெவரையும்) நீர் செவியுறச் செய்யமாட்டீர்; (விசுவாசித்த) அவர்கள் முற்றிலும் கீழ்ப்படிந்தவர்கள்.

54. அல்லாஹ் – எத்தகையவனென்றால், உங்களை (ஆரம்பத்தில்) பலவீனத்திலிருந்து அவன் படைத்தான்; பின்னர் பலவீனத்திற்குப் பிறகு (உங்களுக்கு) பலத்தையும் உண்டாக்கினான்; அப்பால் (அப்)பலத்திற்குப்பின்னர் (முதுமையின்) பலவீனத்தையும், முதுமைப்பருவத்தையும் ஆக்கினான்; தான் நாடியதைப் படைக்கிறான்; மேலும், அவனே (யாவையும்) நன்கறிந்தோன், மிக்க ஆற்றலுடையோன்.

55. மேலும், மறுமைநாள் நிலைபெறும் நாளில் குற்றவாளிகள் (இவ்வுலகில்) கொஞ்சநேரமே தவிர தாங்கள் தங்கியிருக்கவில்லை என்று சத்தியம் செய்வார்கள். இவ்வாறே (இவ்வுலகத்தில் உண்மையைவிட்டும்) திருப்பப்படுபவர்களாக இருந்தனர்.

56. (மார்க்க) அறிவும், விசுவாசமும் கொடுக்கப்பட்டிருந்தார்களே அத்தகையவர்கள்; (அதனை மறுத்து) "அல்லாஹ்வின் ஏட்டில் உள்ளவாறு நீங்கள் உயிர்பெற்றெழும் (இந்)நாள் வரை திட்டமாகத் தங்கியிருந்தீர்கள்; எனவே இது(தான்) எழுப்பப்படும் நாள்; எனினும் நிச்சயமாக நீங்கள் (இதனை) அறிந்து கொள்ளாதவர்களாகவே இருந்தீர்கள்" என்று கூறுவார்கள்.

57. ஆகவே அந்நாளில் அநியாயம் செய்தவர்களுக்கு அவர்களின் புகல்கள் பயனளிக்காது; (அவர்களின் இரட்சகனைத் திருப்திப்படுத்தும் எச்செயலையும் செய்ய) அவர்கள் சிரமப்படுத்தப் படவுமாட்டார்கள்.

58. மனிதர்களுக்கு வேண்டிய ஒவ்வொரு (விதமான) உதாரணத்தையும் இந்தக் குர்ஆனில் நிச்சயமாக நாம் கூறி இருக்கிறோம்; மேலும், எந்த அத்தாட்சியை நீர் அவர்களிடம் கொண்டு வந்த போதிலும், (நபியே! உம்மையும், விசுவாசிகளையும் நோக்கி) "நீங்கள் பொய்யர்களேயன்றி (வேறு) இல்லை" என்று நிராகரிப்போர் நிச்சயமாகக் கூறுவார்கள்.

كَذٰلِكَ يَطْبَعُ اللّٰهُ عَلٰى قُلُوْبِ الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ ﴿۵۹﴾ فَاصْبِرْ
اِنَّ وَعْدَ اللّٰهِ حَقٌّ وَّلَا يَسْتَخِفَّنَّكَ الَّذِيْنَ لَا يُوْقِنُوْنَ ﴿۶۰﴾ ع ۶ ۷ ۹

سُوْرَةُ لُقْمٰنَ مَكِّيَّةٌ وَّهِيَ اَرْبَعٌ وَّثَلٰثُوْنَ اٰيَةً وَّاَرْبَعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

الٓمّٓ ﴿۱﴾ تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ الْحَكِيْمِ ﴿۲﴾ هُدًى وَّرَحْمَةً لِّلْمُحْسِنِيْنَ ﴿۳﴾
الَّذِيْنَ يُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَيُؤْتُوْنَ الزَّكٰوةَ وَهُمْ بِالْاٰخِرَةِ هُمْ
يُوْقِنُوْنَ ﴿۴﴾ اُولٰٓئِكَ عَلٰى هُدًى مِّنْ رَّبِّهِمْ وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿۵﴾
وَمِنَ النَّاسِ مَنْ يَّشْتَرِيْ لَهْوَ الْحَدِيْثِ لِيُضِلَّ عَنْ سَبِيْلِ
اللّٰهِ بِغَيْرِ عِلْمٍ ۖ وَّيَتَّخِذَهَا هُزُوًا ؕ اُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ مُّهِيْنٌ ﴿۶﴾
وَاِذَا تُتْلٰى عَلَيْهِ اٰيٰتُنَا وَلّٰى مُسْتَكْبِرًا كَاَنْ لَّمْ يَسْمَعْهَا كَاَنَّ
فِيْٓ اُذُنَيْهِ وَقْرًا ۚ فَبَشِّرْهُ بِعَذَابٍ اَلِيْمٍ ﴿۷﴾ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا
الصّٰلِحٰتِ لَهُمْ جَنّٰتُ النَّعِيْمِ ﴿۸﴾ خٰلِدِيْنَ فِيْهَا ؕ وَعْدَ اللّٰهِ حَقًّا ؕ
وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۹﴾ خَلَقَ السَّمٰوٰتِ بِغَيْرِ عَمَدٍ تَرَوْنَهَا وَاَلْقٰى
فِى الْاَرْضِ رَوَاسِيَ اَنْ تَمِيْدَ بِكُمْ وَبَثَّ فِيْهَا مِنْ كُلِّ دَآبَّةٍ ؕ
وَاَنْزَلْنَا مِنَ السَّمَآءِ مَآءً فَاَنْۢبَتْنَا فِيْهَا مِنْ كُلِّ زَوْجٍ كَرِيْمٍ ﴿۱۰﴾

59. இவ்வாறே அறியாதோரின் இதயங்கள் மீது அல்லாஹ் முத்திரையிடுகிறான்.

60. ஆகவே (நபியே!) நீர் பொறுமையாய் இருப்பீராக! நிச்சயமாக அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானதாகும்; (ஆகவே முடிவில் நீர் தான் மிகைப்பீர், மறுமையை) உறுதிகொள்ளாதோர் நிச்சயமாக உம்மை, இலேசாகக் கருதிவிடவேண்டாம்.

---

அத்தியாயம் : 31

## லுக்மான்

வசனங்கள் : 34 மக்கீ ருகூஃகள் : 4

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. அலிஃப் லாம் மீம்.

2. இவை தீர்க்கமான அறிவு நிறைந்த (இவ்) வேதத்தின் வசனங்களாகும்.

3. (இது) நன்மை செய்வோருக்கு நேர் வழிகாட்டியாகவும், அருளாகவும் இருக்கின்றது.

4. அவர்கள் எத்தகையோரென்றால், தொழுகையை முறையாக நிறைவேற்றுவார்கள்; ஜகாத்தையும் கொடுப்பார்கள்; இன்னும், அவர்கள் – மறுமையைக் கொண்டு அவர்களே – உறுதி(யாக நம்பிக்கைக்)கொள்வார்கள்.

5. இத்தகையோர்தாம், தங்கள் இரட்சகனின் நேர் வழியில் இருப்பவர்கள்; மேலும், இத்தகையோர்தாம் வெற்றிபெறுகிறவர்கள்.

6. (இவர்களைத் தவிர) மனிதரில் – அறிவின்றி அல்லாஹ்வின் வழியிலிருந்து (மனிதர்களை) வழிகெடுப்பதற்காக வீணான செய்திகளை விலைக்கு வாங்குகின்றவர்களும் இருக்கின்றனர்; (அல்லாஹ்வின் வசனங்களாகிய) அதனைப் பரிகாசமாகவும் எடுத்துக்கொள்கின்றனர். இத்தகையோர் – அவர்களுக்கு இழிவு தரும் வேதனை உண்டு.

7. மேலும், அ(த்தகைய)வனின் மீது நம்முடைய வசனங்கள் ஓதிக்காண்பிக்கப்பட்டால், அவற்றை அவன் கேட்காதவனைப் போல், தன்னுடைய இரு காதுகளிலும் தடுப்பு உள்ளவனைப் போல் கர்வங் கொண்டவனாக(ப் புறக்கணித்து)த்திரும்பிவிடுகிறான். ஆகவே, அவனுக்கு துன்புறுத்தும் வேதனையைக்கொண்டு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!

8. நிச்சயமாக, விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்கின்றார்களே அத்தகையோர் – அவர்களுக்கு அருட்கொடையுடைய சுவனபதிகளுண்டு.

9. அதில் அவர்கள் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்; அல்லாஹ்வுடைய (இவ்) வாக்குறுதி உண்மையானதே! அவனோ (யாவரையும்) மிகைத்தோன், தீர்க்கமான அறிவுடையோன்.

10. அவன் வானங்களைத் தூண்களின்றியே படைத்திருக்கிறான்; அதனை நீங்கள் பார்க்கின்றீர்கள்; பூமியில் – அது உங்களைக்கொண்டு அசைந்து விடாதிருக்கும் பொருட்டு, அசையாத மலைகளையும் அதில் ஆக்கிவைத்தான்; இன்னும், ஒவ்வொரு (விதமான) பிராணியையும் அதில் அவன் பரவச்செய்தான்; (மனிதர்களே! அல்லாஹ்வாகிய) நாமே வானத்திலிருந்து நீரை இறக்கிவைத்தோம்; பின்னர், (புற்பூண்டுகளில்) அழகான ஒவ்வொரு வகையிலிருந்து அதில் நாம் முளைக்கச் செய்தோம்.

هٰذَا خَلْقُ اللّٰهِ فَاَرُوْنِیْ مَاذَا خَلَقَ الَّذِیْنَ مِنْ دُوْنِهٖ ؕ بَلِ
الظّٰلِمُوْنَ فِیْ ضَلٰلٍ مُّبِیْنٍ ﴿۱۱﴾ وَلَقَدْ اٰتَیْنَا لُقْمٰنَ الْحِكْمَةَ اَنِ اشْكُرْ ع ۱۰
لِلّٰهِ ؕ وَمَنْ یَّشْكُرْ فَاِنَّمَا یَشْكُرُ لِنَفْسِهٖ ۚ وَمَنْ كَفَرَ فَاِنَّ اللّٰهَ غَنِیٌّ
حَمِیْدٌ ﴿۱۲﴾ وَاِذْ قَالَ لُقْمٰنُ لِابْنِهٖ وَهُوَ یَعِظُهٗ یٰبُنَیَّ لَا تُشْرِكْ بِاللّٰهِ ؕ
اِنَّ الشِّرْكَ لَظُلْمٌ عَظِیْمٌ ﴿۱۳﴾ وَوَصَّیْنَا الْاِنْسَانَ بِوَالِدَیْهِ ۚ حَمَلَتْهُ
اُمُّهٗ وَهْنًا عَلٰی وَهْنٍ وَّفِصٰلُهٗ فِیْ عَامَیْنِ اَنِ اشْكُرْ لِیْ وَلِوَالِدَیْكَ ؕ
اِلَیَّ الْمَصِیْرُ ﴿۱۴﴾ وَاِنْ جٰهَدٰكَ عَلٰۤی اَنْ تُشْرِكَ بِیْ مَا لَیْسَ لَكَ
بِهٖ عِلْمٌ فَلَا تُطِعْهُمَا وَصَاحِبْهُمَا فِی الدُّنْیَا مَعْرُوْفًا ۫ وَّاتَّبِعْ
سَبِیْلَ مَنْ اَنَابَ اِلَیَّ ۚ ثُمَّ اِلَیَّ مَرْجِعُكُمْ فَاُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ
تَعْمَلُوْنَ ﴿۱۵﴾ یٰبُنَیَّ اِنَّهَاۤ اِنْ تَكُ مِثْقَالَ حَبَّةٍ مِّنْ خَرْدَلٍ
فَتَكُنْ فِیْ صَخْرَةٍ اَوْ فِی السَّمٰوٰتِ اَوْ فِی الْاَرْضِ یَاْتِ بِهَا
اللّٰهُ ؕ اِنَّ اللّٰهَ لَطِیْفٌ خَبِیْرٌ ﴿۱۶﴾ یٰبُنَیَّ اَقِمِ الصَّلٰوةَ وَاْمُرْ
بِالْمَعْرُوْفِ وَانْهَ عَنِ الْمُنْكَرِ وَاصْبِرْ عَلٰی مَاۤ اَصَابَكَ ؕ
اِنَّ ذٰلِكَ مِنْ عَزْمِ الْاُمُوْرِ ۚ ﴿۱۷﴾ وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا
تَمْشِ فِی الْاَرْضِ مَرَحًا ؕ اِنَّ اللّٰهَ لَا یُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُوْرٍ ۚ ﴿۱۸﴾

النصف

11.(ஆகவே நபியே! நீர் அவர்களிடம் கூறுவீராக:)"இவை (யாவும்) அல்லாஹ்வின் படைப்பாகும்; ஆகவே அவனையன்றி (நீங்கள் வணக்கத்திற்குரிய வர்களெனக் கூறுகின்ற) அவர்கள் எதனைப் படைத்திருக்கின்றனர் என்பதை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள்;(அவ்வாறு ஒன்றும்)இல்லை!(அல்லாஹ்வை யன்றி மற்றவைகளை வணங்கும் இந்த ) அநியாயக்காரர்கள் பகிரங்கமான வழிகேட்டில் இருக்கின்றனர்.

12. நிச்சயமாக, நாம் லுக்மானுக்கு (ச்சிறந்த) அறிவையும் கொடுத்தோம்; நீர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவீராக! (என்று கூறினோம்) இன்னும், எவர் நன்றி செலுத்துகின்றாரோ அவர் நன்றி செலுத்துவதெல்லாம் தம(து நன்மை)க்குத்தான்; மேலும், எவர் (அவனை) நிராகரிக்கின்றாரோ_ (அவர் தனக்கே தீங்கைத் தேடிக்கொள்கிறார். ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ் தேவையற்றவன் ; புகழப்படுபவன் (என்று கூறினோம்).

13. மேலும், லுக்மான் தன் மைந்தனுக்கு_அவர் அவருக்கு உபதேசம் செய்தவராக_ என் அருமை மைந்தனே! நீ அல்லாஹ்வுக்கு இணைவைக்காதே! நிச்சயமாக, இணைவைத்தல் மிகப்பெரிய அநியாயமாகும் என்று கூறியதை _ (நபியே ! நீர் நினைவு கூர்வீராக!)

14. நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் அன்பு கொண்டு அரவணைத்துக் கொள்வது) பற்றி நல்லுபதேசமும் செய்தோம்; அவனுடைய தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனம் அடைந்தவளாக அவனைச் சுமந்தாள்; இன்னும் (அவனுக்குப் பால்குடி மறக்கடித்து)அவன் பிரிவது இரண்டு வருடங்களிலாகும்; (ஆகவே மனிதனே!) "நீ எனக்கும், உன்னுடைய பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக; (முடிவில் ) என்னிடமே (உன்)மீளுதல் இருக்கிறது."

15. எது பற்றி உனக்கு அறிவு(ஆதாரம்) இல்லையோ, அதை எனக்கு நீ இணையாக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால் (அவ்விஷயத்தில் )நீ அவ்விருவருக்கும் கீழ்ப்படியவேண்டாம்; ஆயினும், இவ்வுலகத்தில் நன்மையான காரியத்தில் நீ அவ்விருவருடனும் (அன்புடன் ஒத்து) உடனிருப்பாயாக; இன்னும், (வழிபாட்டில்) என்பால் திரும்பியவரின் வழியை நீ பின்பற்றுவாயாக; பின்னர், நீங்கள் (யாவரும்) என்னிடமே திரும்பி வந்து சேரவேண்டியதிருக்கின்றது; அப்பொழுது நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளைப் பற்றி நான் உங்களுக்கு அறிவிப்பேன்.

16. " என்னருமை மைந்தனே! நிச்சயமாக அது (நன்மையோ, தீமையோ) கடுகின் வித்தளவாக இருப்பினும் (சரி) அது ஒரு பாறைக்குள் அல்லது வானங்களில் அல்லது பூமியில் (மறைந்து) இருந்த போதிலும் (கேள்வி கணக்கின் போது) அல்லாஹ் அதனைக் கொண்டுவந்துவிடுவான்; ( ஏனென்றால் ,) நிச்சயமாக அல்லாஹ் வெகு நுட்பமான (அறிவுடைய)வன்; நன்கு உணர்பவன்."

17. "என்னருமை மைந்தனே! நீ தொழுகையை நிறைவேற்றுவாயாக! நன்மையைக்கொண்டும் (பிறரை)ஏவுவாயாக! பாவமான காரியங்களிலிருந்தும் (மனிதர்களை) விலக்குவாயாக! மேலும், உனக்கேற்படும் கஷ்டங்களை, நீ பொறுமையுடன் சகித்துக்கொள்வாயாக! நிச்சயமாக (அல்லாஹ் கட்டளையிட்ட) இது காரியங்களில், உறுதியானதில் உள்ளதாகும்."

18. அன்றியும், "(பெருமை கொண்டு) உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக்கொள்ளாதே! மேலும், பூமியில் கர்வமாக நடக்காதே! நிச்சயமாக அல்லாஹ், தற்பெருமைக்காரர், கர்வங்கொண்டோர் ஒவ்வொருவரையும் நேசிக்கமாட்டான்."

وَاقْصِدْ فِيْ مَشْيِكَ وَاغْضُضْ مِنْ صَوْتِكَ ؕ اِنَّ اَنْكَرَ الْاَصْوَاتِ
لَصَوْتُ الْحَمِيْرِ ﴿١٩﴾ اَلَمْ تَرَوْا اَنَّ اللّٰهَ سَخَّرَ لَكُمْ مَّا فِي السَّمٰوٰتِ وَمَا ع ٢/٨ ١١
فِي الْاَرْضِ وَاَسْبَغَ عَلَيْكُمْ نِعَمَهٗ ظَاهِرَةً وَّبَاطِنَةً ؕ وَمِنَ النَّاسِ
مَنْ يُّجَادِلُ فِي اللّٰهِ بِغَيْرِ عِلْمٍ وَّلَا هُدًى وَّلَا كِتٰبٍ مُّنِيْرٍ ﴿٢٠﴾ وَ
اِذَا قِيْلَ لَهُمُ اتَّبِعُوْا مَاۤ اَنْزَلَ اللّٰهُ قَالُوْا بَلْ نَتَّبِعُ مَا وَجَدْنَا
عَلَيْهِ اٰبَآءَنَا ؕ اَوَلَوْ كَانَ الشَّيْطٰنُ يَدْعُوْهُمْ اِلٰى عَذَابِ السَّعِيْرِ ﴿٢١﴾
وَمَنْ يُّسْلِمْ وَجْهَهٗۤ اِلَى اللّٰهِ وَهُوَ مُحْسِنٌ فَقَدِ اسْتَمْسَكَ
بِالْعُرْوَةِ الْوُثْقٰى ؕ وَاِلَى اللّٰهِ عَاقِبَةُ الْاُمُوْرِ ﴿٢٢﴾ وَمَنْ كَفَرَ فَلَا
يَحْزُنْكَ كُفْرُهٗ ؕ اِلَيْنَا مَرْجِعُهُمْ فَنُنَبِّئُهُمْ بِمَا عَمِلُوْا ؕ اِنَّ اللّٰهَ
عَلِيْمٌۢ بِذَاتِ الصُّدُوْرِ ﴿٢٣﴾ نُمَتِّعُهُمْ قَلِيْلًا ثُمَّ نَضْطَرُّهُمْ اِلٰى
عَذَابٍ غَلِيْظٍ ﴿٢٤﴾ وَلَئِنْ سَاَلْتَهُمْ مَّنْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ
لَيَقُوْلُنَّ اللّٰهُ ؕ قُلِ الْحَمْدُ لِلّٰهِ ؕ بَلْ اَكْثَرُهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿٢٥﴾ لِلّٰهِ مَا
فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ اِنَّ اللّٰهَ هُوَ الْغَنِيُّ الْحَمِيْدُ ﴿٢٦﴾ وَلَوْ اَنَّمَا
فِي الْاَرْضِ مِنْ شَجَرَةٍ اَقْلَامٌ وَّالْبَحْرُ يَمُدُّهٗ مِنْۢ بَعْدِهٖ
سَبْعَةُ اَبْحُرٍ مَّا نَفِدَتْ كَلِمٰتُ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿٢٧﴾

19. மேலும், "உன் நடையில் மத்தியதரத்தை கடைப்பிடிப்பாயாக! உன் சப்தத்தையும் தாழ்த்திக்கொள்வாயாக! (ஏனென்றால்) நிச்சயமாக சப்தங்களிலெல்லாம் மிக வெறுக்கத்தக்கது, கழுதைகளின் சப்தமே" (என்று கூறினார்).

20. (மனிதர்களே!) வானங்களில் உள்ளவற்றையும், பூமியில் உள்ளவற்றையும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கின்றான் என்பதையும், அவன் தன் அருட் கொடைகளை (அவற்றில்) வெளிப்படையானவற்றையும், மறைவானவற்றையும் உங்கள் மீது நிறைவாக்கியிருக்கின்றான் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா?(ஆனாலும்) மனிதர்களில் சிலர் கல்வியறிவோ, நேர் வழியோ, ஒளிமிக்க வேத(ஆதார)மோ இன்றி, அல்லாஹ்வைப் பற்றி (வீணாக)த் தர்க்கிக்கின்றனர்.

21. அன்றியும், "அல்லாஹ் இறக்கிய (இவ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்" என அவர்களுக்கு கூறப்பட்டால், (அதற்கு) அவர்கள், "அவ்வாறல்ல! எங்கள் மூதாதையரை எதன் மீதிருக்க நாங்கள் கண்டோமோ, அதனையே நாங்கள் பின்பற்றுவோம்" என்று கூறுகின்றனர்; அவர்(களின் மூதாதையர்)களை ஷைத்தான் கொழுந்துவிட்டெரியும் வேதனையின்பால் அழைத்தாலுமா (அவர்களைப் பின்பற்றுவார்கள்)?

22. எவர் _ அவர் நன்மை செய்கிறவராயிருக்கும் நிலையில் (தனது காரியத்தை முழுமையாக ஒப்படைத்து) அல்லாஹ்வின் பால் தன் முகத்தை திருப்புகிறாரோ அவர், நிச்சயமாக மிக மிக பலமானதொரு கயிற்றைப் பற்றிப் பிடித்துக்கொண்டார்; சகல காரியங்களின் முடிவும் அல்லாஹ்விடமே இருக்கின்றது.

23. மேலும், (நபியே!) எவர் நிராகரித்துவிட்டாரோ, அவருடைய நிராகரிப்பு உமக்குக் கவலையை உண்டாக்க வேண்டாம்; அவர்களின் மீளுதல் நம் பக்கமேயாகும்; அது சமயம் அவர்கள் செய்தவற்றைப் பற்றி நாம் அவர்களுக்கு அறிவிப்போம்; நிச்சயமாக அல்லாஹ், (மனிதர்களின்) நெஞ்சங்களில் உள்ளவைகளை நன்கறிகிறவன்.

24. (இம்மையில்) அவர்களைச் சிறிது சுகமனுபவிக்கச் செய்வோம்; பின்னர், கடுமையான வேதனையின்பால் (செல்லும்படி)நாம் அவர்களை நிர்ப்பந்திப்போம்.

25. மேலும் வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தவன் யார்? என்று (நபியே!) நீர் அவர்களைக் கேட்பீராயின் அ(தற்க)வர்கள், "அல்லாஹ்" என்று நிச்சயமாக கூறுவார்கள்; (அது பற்றி) புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே என்று கூறுவீராக! எனினும் அவர்களில் பெரும்பாலோர் (இரட்சகனை இவ்வாறு புகழ்ந்து துதி செய்ய) அறியமாட்டார்கள்.

26. வானங்களிலும், பூமியிலும் உள்ளவை அல்லாஹ்வுக்கே உரியவை; (எனினும்) நிச்சயமாக அல்லாஹ் _ (சகலவற்றிலிருந்தும்) அவன் தேவையற்றவன்; புகழப்படுபவன்.

27. மேலும், நிச்சயமாக பூமியில் உள்ள மரங்கள் (யாவும்) எழுதுகோல்களாகவும், கடல் (நீர் யாவும் மையாக இருந்து) அ(து தீர்ந்த)தற்கு பின்னர் ஏழுகடல்கள் அதனுடன் (மையாக)சேர்ந்து(கொள்ள அவற்றால் எழுதிக்) கொண்டிருந்தாலும் அல்லாஹ்வின் வாக்குகள் (எழுதித்) தீராது; நிச்சயமாக அல்லாஹ் (யாவையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

مَا خَلْقُكُمْ وَلَا بَعْثُكُمْ اِلَّا كَنَفْسٍ وَّاحِدَةٍ ؕ اِنَّ اللّٰهَ سَمِيْعٌۢ بَصِيْرٌ ﴿۲۸﴾
اَلَمْ تَرَ اَنَّ اللّٰهَ يُوْلِجُ الَّيْلَ فِى النَّهَارِ وَيُوْلِجُ النَّهَارَ فِى الَّيْلِ
وَسَخَّرَ الشَّمْسَ وَالْقَمَرَ ۫ كُلٌّ يَّجْرِىْۤ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى وَّاَنَّ اللّٰهَ
بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ ﴿۲۹﴾ ذٰلِكَ بِاَنَّ اللّٰهَ هُوَ الْحَقُّ وَاَنَّ مَا يَدْعُوْنَ
ع ۳ ۱۱ ۱۲ مِنْ دُوْنِهِ الْبَاطِلُ ۙ وَاَنَّ اللّٰهَ هُوَ الْعَلِىُّ الْكَبِيْرُ ﴿۳۰﴾ ع اَلَمْ تَرَ اَنَّ
الْفُلْكَ تَجْرِىْ فِى الْبَحْرِ بِنِعْمَتِ اللّٰهِ لِيُرِيَكُمْ مِّنْ اٰيٰتِهٖ ؕ اِنَّ فِىْ
ذٰلِكَ لَاٰيٰتٍ لِّكُلِّ صَبَّارٍ شَكُوْرٍ ﴿۳۱﴾ وَاِذَا غَشِيَهُمْ مَّوْجٌ كَالظُّلَلِ
دَعَوُا اللّٰهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ۚ۬ فَلَمَّا نَجّٰىهُمْ اِلَى الْبَرِّ
فَمِنْهُمْ مُّقْتَصِدٌ ؕ وَمَا يَجْحَدُ بِاٰيٰتِنَاۤ اِلَّا كُلُّ خَتَّارٍ كَفُوْرٍ ﴿۳۲﴾
يٰۤاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمْ وَاخْشَوْا يَوْمًا لَّا يَجْزِىْ وَالِدٌ
عَنْ وَّلَدِهٖ ۫ وَلَا مَوْلُوْدٌ هُوَ جَازٍ عَنْ وَّالِدِهٖ شَيْــًٔا ؕ اِنَّ وَعْدَ
اللّٰهِ حَقٌّ فَلَا تَغُرَّنَّكُمُ الْحَيٰوةُ الدُّنْيَا ٚ وَقفة وَلَا يَغُرَّنَّكُمْ بِاللّٰهِ
الْغَرُوْرُ ﴿۳۳﴾ اِنَّ اللّٰهَ عِنْدَهٗ عِلْمُ السَّاعَةِ ۚ وَيُنَزِّلُ الْغَيْثَ ۚ وَ
يَعْلَمُ مَا فِى الْاَرْحَامِ ؕ وَمَا تَدْرِىْ نَفْسٌ مَّاذَا تَكْسِبُ غَدًا ؕ
ع ۴ ۱۲ ۱۳ وَمَا تَدْرِىْ نَفْسٌۢ بِاَىِّ اَرْضٍ تَمُوْتُ ؕ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ ﴿۳۴﴾ ع

28. (மனிதர்களே!) உங்களை(ப் புதிதாக)ப் படைப்பதும், (மரணித்தபின்) உங்களை (மீண்டும் உயிர் கொடுத்து) எழுப்புவதும் ஓர் ஆத்மாவைப் படை(த்து உயிர் கொடு)ப்பது போலவே தவிர (வேறு) இல்லை. நிச்சயமாக அல்லாஹ், (யாவையும்) செவியேற்கிறவன், பார்க்கிறவன்.

29. (நபியே!) நிச்சயமாக அல்லாஹ் இரவைப் பகலில் புகவைக்கிறான்; பகலை இரவில் புகவைக்கிறான் என்பதையும், சூரியனையும் சந்திரனையும் வசப்படுத்தியிருக்கிறான் என்பதையும் நீர் பார்க்கவில்லையா? (இவற்றில்) ஒவ்வொன்றும் குறிப்பிடப்பட்ட தவணையின்பால் நடக்கின்றன; இன்னும், நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை, நன்கு உணர்பவன்.

30. அது( ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ் _ அவனே மெய்யானவனாவான்; அவனைத் தவிர அவர்கள் அழைப்பது பொய்யானதாகும்; மேலும், நிச்சயமாக அல்லாஹ் _ அவனே (சகலரையும்விட) உயர்வுடையவன்; மிகப்பெரியவன் என்ற காரணத்திலாகும்.

31. தன்னுடைய அத்தாட்சிகளை உங்களுக்கு அவன் காண்பிப்பதற்காகவேண்டி அல்லாஹ்வின் அருட்கொடையைக் கொண்டு, கடலில் நிச்சயமாக கப்பல் (மிதந்து) செல்வதை நீர் காணவில்லையா? நிச்சயமாக இதில், அதிகமாகப் பொறுமையுடையோர் _ நன்றியுடையோருக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

32. (கடலில் பிரயாணிக்கும்) அவர்களை(ப் புயல் காற்றடித்து நாலா பக்கங்களிலிருந்தும்) அலைகள், மேல் முகடுகளைப் போல் சூழ்ந்து கொள்ளும் சமயத்தில் அல்லாஹ்வை _ அவனுக்கே மார்க்கத்தை கலப்பற்றதாக ஆக்கியவர்களாக _ அவர்கள் அழை(த்துப் பிரார்த்தி)க்கின்றனர்; அவன், அவர்களைக் காப்பாற்றி கரை சேர்த்துவிட்டால், அப்போது அவர்களில் (அல்லாஹ்வை விசுவாசங் கொள்ளும்) நீதமானவரும் உண்டு; இன்னும் மிக நன்றிகெட்ட பெரும் சதிகாரர்களைத் தவிர, (மற்றெவரும்) நம்முடைய அத்தாட்சிகளை நிராகரிப்பதில்லை.

33. மனிதர்களே! உங்கள் இரட்சகனுக்கு பயந்து கொள்ளுங்கள்; இன்னும், ஒரு நாளை பயப்படுங்கள்; (அந்நாளில்,) எந்தத் தந்தையும் தன் பிள்ளைக்கு உதவமாட்டான்; எந்தப் பிள்ளையும் தன் தந்தைக்கு எத்தகைய உதவியும் செய்பவனாக இல்லை. நிச்சயமாக (அந்நாள் வருமென்ற) அல்லாஹ்வுடைய வாக்குறுதி, உண்மையானதாகும்; ஆகவே, நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை உங்களை ஏமாற்றிவிடவேண்டாம்; (ஷைத்தானாகிய) ஏமாற்றுபவனும், அல்லாஹ்வைப்பற்றி உங்களை ஏமாற்றி விட வேண்டாம்.

34. நிச்சயமாக அல்லாஹ் _ அவனிடம்தான் மறுமைநாள் பற்றிய அறிவு, இருக்கிறது; அவனே மழையையும் இறக்கிவைக்கிறான்; அவனே கர்ப்பங்களில் உள்ளவைகளையும் அறிகிறான்; எந்த ஆத்மாவும், நாளை அது எதைச் சம்பாதிக்கும் என அறியாது; மேலும், எந்த ஆத்மாவும் எந்தப் பூமியில் தனக்கு மரணம் சம்பவிக்கும் என்பதையும் அறியாது; நிச்சயமாக அல்லாஹ் (அவனே) நன்கறிகிறவன்; (செய்திகளை) நன்குணர்பவன்.

سُوْرَةُ السَّجْدَةِ مَكِّيَّةٌ وَّهِيَ ثَلٰثُوْنَ اٰيَةً وَّفِيْهَا ثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

الٓمّٓ ۟ۚ ﴿۱﴾ تَنْزِيْلُ الْكِتٰبِ لَا رَيْبَ فِيْهِ مِنْ رَّبِّ الْعٰلَمِيْنَ ؕ﴿۲﴾ اَمْ
يَقُوْلُوْنَ افْتَرٰىهُ ۚ بَلْ هُوَ الْحَقُّ مِنْ رَّبِّكَ لِتُنْذِرَ قَوْمًا مَّآ
اَتٰىهُمْ مِّنْ نَّذِيْرٍ مِّنْ قَبْلِكَ لَعَلَّهُمْ يَهْتَدُوْنَ ﴿۳﴾ اَللّٰهُ
الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَا فِيْ سِتَّةِ اَيَّامٍ
ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ ؕ مَا لَكُمْ مِّنْ دُوْنِهٖ مِنْ وَّلِيٍّ وَّلَا شَفِيْعٍ ؕ
اَفَلَا تَتَذَكَّرُوْنَ ﴿۴﴾ يُدَبِّرُ الْاَمْرَ مِنَ السَّمَآءِ اِلَى الْاَرْضِ ثُمَّ
يَعْرُجُ اِلَيْهِ فِيْ يَوْمٍ كَانَ مِقْدَارُهٗۤ اَلْفَ سَنَةٍ مِّمَّا تَعُدُّوْنَ ﴿۵﴾
ذٰلِكَ عٰلِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ الْعَزِيْزُ الرَّحِيْمُ ۙ﴿۶﴾ الَّذِيْۤ اَحْسَنَ
كُلَّ شَيْءٍ خَلَقَهٗ وَبَدَاَ خَلْقَ الْاِنْسَانِ مِنْ طِيْنٍ ۚ﴿۷﴾ ثُمَّ جَعَلَ
نَسْلَهٗ مِنْ سُلٰلَةٍ مِّنْ مَّآءٍ مَّهِيْنٍ ۚ﴿۸﴾ ثُمَّ سَوّٰىهُ وَنَفَخَ فِيْهِ مِنْ
رُّوْحِهٖ وَجَعَلَ لَكُمُ السَّمْعَ وَالْاَبْصَارَ وَالْاَفْـِٕدَةَ ؕ قَلِيْلًا مَّا
تَشْكُرُوْنَ ﴿۹﴾ وَقَالُوْۤا ءَاِذَا ضَلَلْنَا فِي الْاَرْضِ ءَاِنَّا لَفِيْ
خَلْقٍ جَدِيْدٍ ؕ۬ بَلْ هُمْ بِلِقَآءِ رَبِّهِمْ كٰفِرُوْنَ ﴿۱۰﴾

அத்தியாயம் : 32

## அஸ்ஸஜ்தா — சிரம் பணிதல்

வசனங்கள் : 30 மக்கீ ருகூஃகள் : 3

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. அலிஃப் லாம் மீம்

2. (நபியே! உம்மீது) அகிலத்தாரின் இரட்சகனிடமிருந்து (இவ்) வேதம் இறக்கியருளப்பட்டது; அதில் யாதொரு சந்தேகமுமில்லை.

3. மாறாக, "இதனை(த் தாமாகவே)அவர் கற்பனை செய்துகொண்டார் " என்று (உம்மைப்பற்றி) அவர்கள் கூறுகின்றார்களா? அவ்வாறல்ல! எவர்களுக்கு உமக்கு முன்னர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் வரவில்லையோ, அந்த சமூகத்தினருக்கு அவர்கள் நேர்வழி பெறுவதற்காக நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக அது உம்முடைய இரட்சகனிடமிருந்து (அருளப்பட்ட) உண்மையா(ன வேதமா)கும்.

4. அல்லாஹ் எத்தகையவனென்றால், வானங்களையும், பூமியையும், இவையிரண்டிற்கு மத்தியிலுள்ளவைகளையும் ஆறு நாட்களில் அவன் படைத்தான்; பின்னர் (தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீதிருப்பதுஎவ்வாறு தகுமோ அவ்வாறே) அர்ஷின் மீது உயர்ந்து (நிலைபெற்று) விட்டான்; அவனைத்தவிர உங்களுக்குப் பாது காவலனோ, அல்லது (உங்களுக்குப்)பரிந்து பேசுபவனோ (வேறொருவரும்) இல்லை;(இதனை) நீங்கள் சிந்திக்கமாட்டீர்களா?

5. வானத்திலிருந்து பூமிவரை உள்ள காரியத்தை அவன் நிர்வகிக்கின்றான்; பின்னர் (நிர்வகிக்கப்பட்ட காரியமான)அது நீங்கள் எண்ணுகின்ற (உங்கள்) கணக்கின்படி ஆயிரம் வருடங்களாக அதனுடைய அளவுஇருக்கும் (அந்)நாளில் அவன்பக்கம் உயரும்.

6. (மேற் கூறப்பட்ட தகுதிகளுக்குரிய) அவனே (வானம் பூமியிலுள்ள) மறைவானதையும், வெளிப்படையானதையும் நன்கு அறிந்தவன்; (அன்றி யாவற்றையும்அவனே) மிகைத்தோன்;பெருங்கிருபையுடையோன்.

7. (அவன்) எத்தகையவனென்றால், எதனை அவன் படைத்தானோ அந்த ஒவ்வொருபொருளையும்,(அதன் வடிவமைப்பையும்) மிக்க அழகாக்கிவைத்தான்; மேலும், அவன் மனிதனின் படைப்பைக் களிமண்ணிலிருந்து ஆரம்பித்தான் .

8. பின்னர் வடிகட்டி எடுக்கப்பட்ட அற்ப நீரில் (_இந்திரியத்தில்) இருந்து அவனுடைய சந்ததியை (உருவகித்து) உண்டாக்கினான்.

9. பின்னர், அதனைச் சரியாக உருவாக்கி, தன்னுடைய "ரூஹ்" (ஆன்மா)விலிருந்து அதில் ஊதி (மனிதனை உண்டாக்கி)னான்; இன்னும் உங்களுக்குச் செவிப்புலனையும், பார்வை(ப்புலன்) களையும், இதயங்களையும் அவனே அமைத்தான். (இவ்வாறிருந்தும்) நீங்கள் மிகக்குறைவாகவே நன்றி செலுத்துகிறீர்கள் .

10. "(நாங்கள் இறந்து) பூமியில் மறைந்து(அழிந்து)போன பின்னர் , நிச்சயமாக நாங்கள் புதிய படைப்பில் ஆவோமா?" என்று அவர்கள் கூறுகின்றனர் . அ(வ்வாற)ல்ல! அவர்கள் தங்கள் இரட்சகனின் சந்திப்பையே நிராகரிப்போராக இருக்கின்றனர்.

قُلْ يَتَوَفّٰىكُمْ مَّلَكُ الْمَوْتِ الَّذِيْ وُكِّلَ بِكُمْ ثُمَّ اِلٰى رَبِّكُمْ
تُرْجَعُوْنَ ﴿۱۱﴾ وَلَوْ تَرٰٓى اِذِ الْمُجْرِمُوْنَ نَاكِسُوْا رُءُوْسِهِمْ عِنْدَ رَبِّهِمْ ؕ ع ۱۴
رَبَّنَآ اَبْصَرْنَا وَسَمِعْنَا فَارْجِعْنَا نَعْمَلْ صَالِحًا اِنَّا مُوْقِنُوْنَ ﴿۱۲﴾ وَ
لَوْ شِئْنَا لَاٰتَيْنَا كُلَّ نَفْسٍ هُدٰىهَا وَلٰكِنْ حَقَّ الْقَوْلُ مِنِّيْ
لَاَمْلَئَنَّ جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ اَجْمَعِيْنَ ﴿۱۳﴾ فَذُوْقُوْا بِمَا
نَسِيْتُمْ لِقَآءَ يَوْمِكُمْ هٰذَا ۚ اِنَّا نَسِيْنٰكُمْ وَذُوْقُوْا عَذَابَ الْخُلْدِ بِمَا
كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۱۴﴾ اِنَّمَا يُؤْمِنُ بِاٰيٰتِنَا الَّذِيْنَ اِذَا ذُكِّرُوْا بِهَا خَرُّوْا
سُجَّدًا وَّسَبَّحُوْا بِحَمْدِ رَبِّهِمْ وَهُمْ لَا يَسْتَكْبِرُوْنَ ﴿۱۵﴾ السجدة تَتَجَافٰى السجدة ۹
جُنُوْبُهُمْ عَنِ الْمَضَاجِعِ يَدْعُوْنَ رَبَّهُمْ خَوْفًا وَّطَمَعًا ۫ وَّمِمَّا
رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ ﴿۱۶﴾ فَلَا تَعْلَمُ نَفْسٌ مَّآ اُخْفِيَ لَهُمْ مِّنْ قُرَّةِ
اَعْيُنٍ ۚ جَزَآءًۢ بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۷﴾ اَفَمَنْ كَانَ مُؤْمِنًا كَمَنْ كَانَ
فَاسِقًا ؕ لَا يَسْتَوٗنَ ﴿۱۸﴾ اَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ فَلَهُمْ وقف غفران
جَنّٰتُ الْمَاْوٰى ۫ نُزُلًۢا بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۹﴾ وَاَمَّا الَّذِيْنَ فَسَقُوْا
فَمَاْوٰىهُمُ النَّارُ ؕ كُلَّمَآ اَرَادُوْٓا اَنْ يَّخْرُجُوْا مِنْهَآ اُعِيْدُوْا فِيْهَا وَ
قِيْلَ لَهُمْ ذُوْقُوْا عَذَابَ النَّارِ الَّذِيْ كُنْتُمْ بِهٖ تُكَذِّبُوْنَ ﴿۲۰﴾

11. ஆகவே (நபியே!) நீர் கூறுவீராக: உங்களுக்கென நியமனம் செய்யப்பட்டிருக்கும் மலக்குல் மவ்த் (ஆகிய வானவர் தான்) உங்களுடைய உயிரைக் கைப்பற்றுவார்; பின்னர் (மீண்டும் உயிர்கொடுக்கப்பட்டு), உங்கள் இரட்சகனிடமே நீங்கள் திருப்பிக் கொண்டு வரப்படுவீர்கள்.

12. மேலும், இக்குற்றவாளிகள் தங்கள் இரட்சகனிடத்தில் அவர்கள் தலைகுனிந்தவர்களாக, "எங்கள் இரட்சகனே!(இது சமயம்) நாங்கள்(எதைப் பொய்ப்படுத்தினோமோ அதைப்) பார்த்துக்கொண்டோம்;இன்னும், கேட்டுக்கொண்டோம். ஆகவே (உலகிற்கு ஒரு தடவை) எங்களைத் திருப்பி அனுப்பிவை! நாங்கள் நற்செயல்களைச் செய்வோம். நிச்சயமாக நாங்கள் (இந்த நாளை) உறுதி கொண்டவர்களாக ஆகிவிட்டோம்"( என்று பிரார்த்திப்பதை நீர் காண்பீர்).

13. மேலும், நாம் நாடியிருந்தால்,(இவர்களில் உள்ள) ஒவ்வோர் ஆத்மாவிற்கும், அதற்குரிய நேர்வழியை நாம் கொடுத்திருப்போம்; எனினும் "ஜின்களாலும், மனிதர் (களில் உள்ள குற்றவாளி)கள் யாவராலும் நிச்சயமாக நான் நரகத்தை நிரப்புவேன்" என்று என்னிடமிருந்து வாக்கு (முன்னரே) ஏற்பட்டுவிட்டது.

14. "ஆகவே, உங்களுடைய இந்நாளின் சந்திப்பை நீங்கள் மறந்து விட்டதனால் (வேதனையை), நீங்கள் சுவைத்துப் பாருங்கள்; (இந்நாளை நீங்கள் மறந்தவாறே,) நிச்சயமாக நாம் உங்களை மறந்துவிட்டோம்; மேலும், நீங்கள் செய்து கொண்டிருந்த (தீ) வினையின் காரணமாக, (என்றென்றும்) நிலையான வேதனையைச் சுவைத்துக்கொண்டிருங்கள்" (என்றும் கூறப்படும்.)

15. நம்முடைய வசனங்களைக்கொண்டு விசுவாசிப்பவர்களெல்லாம், அவற்றைக் கொண்டு நினைவூட்டப்பட்டால் சிரம் பணிந்தவர்களாக விழுவார்களே அத்தகையோர்தாம். மேலும், தங்கள் இரட்சகனின் புகழைக்கொண்டு துதி செய்வார்கள்;அவர்களோ பெருமையடிக்கமாட்டார்கள்.

16. அவர்களின் விலாக்கள் படுக்கைகளை விட்டு (தூக்கத்திலிருந்து) விலகிவிடும்; தங்களுடைய இரட்சகனை அச்சத்தோடும், ஆதரவோடும் அழை(த்து பிரார்த்தி)ப்பார்கள்; நாம் அவர்களுக்கு கொடுத்தவற்றிலிருந்து அவர்கள் (தர்மமாகச்) செலவும் செய்வார்கள்.

17. ஆகவே, அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்குக் கூலியாக, அவர்களுக்காக மறைத்துவைக்கப்பட்டிருக்கும் கண்களின் குளிர்ச்சியை எந்த ஒரு ஆத்மாவும் அறியாது.

18. விசுவாசங்கொண்டவராக இருந்தவர், (அல்லாஹ்வுக்கு) மாறு செய்து கொண்டிருந்தவரைப் போலாவாரா? அவர்கள்(இருவரும்) சமமாகமாட்டார்கள்.

19. ஆகவே, விசுவாசங்கொண்டு நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையோர் _ அவர்களுக்கு, அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்கு விருந்தாக தங்குவதற்குரிய சுவனபதிகள் உண்டு.

20. மேலும், பாவம் செய்கிறார்களே அத்தகையோர் _ அவர்கள் தங்குமிடம் (நரக) நெருப்பாகும்; அதிலிருந்து அவர்கள் வெளியேற நாடும்போதெல்லாம் அதிலேயே மீட்டப்படுவார்கள்; மேலும், நீங்கள் பொய்யாக்கிக் கொண்டிருந்தீர்களே, அந்த(நரக) நெருப்பின் வேதனையைச் சுவைத்துப்பாருங்கள்" என்று அவர்களுக்குக் கூறப்படும்.

وَلَنُذِيْقَنَّهُمْ مِّنَ الْعَذَابِ الْاَدْنٰى دُوْنَ الْعَذَابِ
الْاَكْبَرِ لَعَلَّهُمْ يَرْجِعُوْنَ ۝۲۱ وَمَنْ اَظْلَمُ مِمَّنْ ذُكِّرَ
بِاٰيٰتِ رَبِّهٖ ثُمَّ اَعْرَضَ عَنْهَا ۭ اِنَّا مِنَ الْمُجْرِمِيْنَ مُنْتَقِمُوْنَ ۝۲۲ ع ۲ ع ۱۱ ۱۵
وَلَقَدْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ فَلَا تَكُنْ فِيْ مِرْيَةٍ
مِّنْ لِّقَاۗىِٕهٖ وَجَعَلْنٰهُ هُدًى لِّبَنِيْٓ اِسْرَاۗءِيْلَ ۝۲۳ ج وَ
جَعَلْنَا مِنْهُمْ اَىِٕمَّةً يَّهْدُوْنَ بِاَمْرِنَا لَمَّا صَبَرُوْا ۣ ط وَ
كَانُوْا بِاٰيٰتِنَا يُوْقِنُوْنَ ۝۲۴ اِنَّ رَبَّكَ هُوَ يَفْصِلُ بَيْنَهُمْ
يَوْمَ الْقِيٰمَةِ فِيْمَا كَانُوْا فِيْهِ يَخْتَلِفُوْنَ ۝۲۵ اَوَلَمْ يَهْدِ لَهُمْ
كَمْ اَهْلَكْنَا مِنْ قَبْلِهِمْ مِّنَ الْقُرُوْنِ يَمْشُوْنَ فِيْ مَسٰكِنِهِمْ ط
اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ ط اَفَلَا يَسْمَعُوْنَ ۝۲۶ اَوَلَمْ يَرَوْا اَنَّا نَسُوْقُ
الْمَاۗءَ اِلَى الْاَرْضِ الْجُرُزِ فَنُخْرِجُ بِهٖ زَرْعًا تَاْكُلُ مِنْهُ
اَنْعَامُهُمْ وَاَنْفُسُهُمْ ط اَفَلَا يُبْصِرُوْنَ ۝۲۷ وَيَقُوْلُوْنَ مَتٰى النصف
هٰذَا الْفَتْحُ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ۝۲۸ قُلْ يَوْمَ الْفَتْحِ لَا يَنْفَعُ
الَّذِيْنَ كَفَرُوْٓا اِيْمَانُهُمْ وَلَا هُمْ يُنْظَرُوْنَ ۝۲۹ فَاَعْرِضْ
عَنْهُمْ وَانْتَظِرْ اِنَّهُمْ مُّنْتَظِرُوْنَ ۝۳۰ ع ۳ ع ۸ ۱۶

21. மேலும், அவர்கள் (பாவங்களிலிருந்து) திரும்பிவிடுவதற்காக (மறுமையில் கிடைக்கவிருக்கும்) மிகப்பெரிய வேதனையின்றி (அதற்கு முன்னர்) குறைந்த(இம்மை) வேதனையிலிருந்தும் அவர்களை நிச்சயமாக நாம் சுவைக்கச் செய்வோம்.

22. மேலும், தன்னுடைய இரட்சகனின் வசனங்களைக்கொண்டு நினைவுபடுத்தப்பட்டு, அதன்பின்னர் அவைகளைப் புறக்கணித்து விடுகிறவனை விட மிக அநியாயக்காரன் யார்? நிச்சயமாக, நாம் (இத்தகைய) குற்றவாளிகளை (அவர்களின் முந்திய பாவத்திற்காக) தண்டிக்கக்கூடியவர்களாவோம்.

23. நிச்சயமாக நாம், மூஸாவுக்கு(தவ்ராத்)வேதத்தையும் கொடுத்திருந்தோம். எனவே, (நபியே!) அவர் அதனைப் பெற்றதைப்பற்றி நீர் சந்தேகத்தில் ஆகிவிட வேண்டாம்; நாம்(மூஸாவுக்குக் கொடுத்த) அதனை, இஸ்ராயீலின் மக்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் ஆக்கினோம்.

24. மேலும், அவர்கள் பொறுமையாக இருந்த பொழுது, நம்முடைய கட்டளையைக் கொண்டு நேர்வழி நடப்பவர்களான தலைவர்களையும் அவர்களிலிருந்து நாம் ஆக்கினோம்; அவர்கள் நம்முடைய வசனங்களை உறுதி கொள்பவர்களாகவும் இருந்தனர்.

25. அவர்கள் எ(வ் விஷயத்)தில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்களோ அ(வ் விஷயத்)தில், மறுமை நாளில் நிச்சயமாக உமதிரட்சகன்_அவனே அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பான்.

26. அவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்திருக்கின்றோம்; அவர்கள் வசித்திருந்த இடங்களில் (பிரயாணித்து) இவர்கள் நடக்கிறார்கள். (இவ்வாறு அவர்களின் குடியிருப்புத்தலங்கள் பாழடைந்து கிடப்பதைப்பார்ப்பது) இவர்களுக்கு நேர்வழி காட்டவில்லையா? நிச்சயமாக இதில் அத்தாட்சிகளிருக்கின்றன; (இதற்கு) அவர்கள் செவிசாய்க்க மாட்டார்களா?

27. நிச்சயமாக நாமே, வறண்ட பூமியின் பக்கம் மழையை இழுத்துவந்து, (பொழியச் செய்து,) பின்னர் அதன்மூலம் பயிர்களை நாம் வெளிப் படுத்துகின்றோம்; இவர்களுடைய கால்நடைகளும், இவர்களும் அதிலிருந்து உண்ணுகிறார்கள் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? (இதனை) அவர்கள் பார்க்க வேண்டாமா?

28. மேலும், "(வாக்களிக்கப்பட்ட) இந்த வெற்றி (நாள்) எப்பொழுது (வரும்)? நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால்,(அது பற்றிக்கூறுங்கள்)" என அவர்கள் கேட்கின்றனர்.

29. (அதற்கு) நீர் கூறுவீராக: "அந்த வெற்றி நாளின் பொழுது நிராகரிப்போர் விசுவாசங் கொள்வது, அவர்களுக்குப் பயனளிக்காது; அவர்கள் தவணை கொடுக்கப்படவுமாட்டார்கள்."

30. ஆகவே, நீர் அவர்களைப் புறக்கணித்து விடுவீராக! (அந்நாளை) எதிர்பார்த்துமிருப்பீராக! நிச்சயமாக அவர்கள் எதிர்பார்க்கிறவர்கள்தாம்!

## سُوْرَةُ الْاَحْزَابِ مَدَنِيَّةٌ وَّهِيَ ثَلٰثٌ وَّسَبْعُوْنَ اٰيَةً وَّتِسْعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يٰۤاَيُّهَا النَّبِىُّ اتَّقِ اللّٰهَ وَلَا تُطِعِ الْكٰفِرِيْنَ وَالْمُنٰفِقِيْنَ ؕ اِنَّ
اللّٰهَ كَانَ عَلِيْمًا حَكِيْمًا ۙ﴿۱﴾ وَّاتَّبِعْ مَا يُوْحٰۤى اِلَيْكَ مِنْ رَّبِّكَ ؕ
اِنَّ اللّٰهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا ۙ﴿۲﴾ وَّتَوَكَّلْ عَلَى اللّٰهِ ؕ وَكَفٰى بِاللّٰهِ
وَكِيْلًا ﴿۳﴾ مَا جَعَلَ اللّٰهُ لِرَجُلٍ مِّنْ قَلْبَيْنِ فِىْ جَوْفِهٖ ۚ وَمَا جَعَلَ
اَزْوَاجَكُمُ الّٰٓـىِٔ تُظٰهِرُوْنَ مِنْهُنَّ اُمَّهٰتِكُمْ ۚ وَمَا جَعَلَ اَدْعِيَآءَكُمْ
اَبْنَآءَكُمْ ؕ ذٰلِكُمْ قَوْلُكُمْ بِاَفْوَاهِكُمْ ؕ وَاللّٰهُ يَقُوْلُ الْحَقَّ وَهُوَ
يَهْدِى السَّبِيْلَ ﴿۴﴾ اُدْعُوْهُمْ لِاٰبَآئِهِمْ هُوَ اَقْسَطُ عِنْدَ اللّٰهِ ۚ
فَاِنْ لَّمْ تَعْلَمُوْۤا اٰبَآءَهُمْ فَاِخْوَانُكُمْ فِى الدِّيْنِ وَمَوَالِيْكُمْ ؕ وَ
لَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ فِيْمَاۤ اَخْطَاْتُمْ بِهٖ وَلٰكِنْ مَّا تَعَمَّدَتْ قُلُوْبُكُمْ ؕ
وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا ﴿۵﴾ اَلنَّبِىُّ اَوْلٰى بِالْمُؤْمِنِيْنَ مِنْ
اَنْفُسِهِمْ وَاَزْوَاجُهٗۤ اُمَّهٰتُهُمْ ؕ وَاُولُوا الْاَرْحَامِ بَعْضُهُمْ اَوْلٰى
بِبَعْضٍ فِىْ كِتٰبِ اللّٰهِ مِنَ الْمُؤْمِنِيْنَ وَالْمُهٰجِرِيْنَ اِلَّاۤ اَنْ
تَفْعَلُوْۤا اِلٰۤى اَوْلِيٰٓئِكُمْ مَّعْرُوْفًا ؕ كَانَ ذٰلِكَ فِى الْكِتٰبِ مَسْطُوْرًا ﴿۶﴾

அத்தியாயம் : 33

## அல் அஹ்ஜாப் _ எதிரணிகள்

வசனங்கள் : 73 மதனீ ருகூஉகள் : 9

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. நபியே! நீர் அல்லாஹ்வை பயந்துகொள்வீராக! நிராகரிப்போருக்கும், (வேஷதாரிகளான) முனாஃபிக்குகளுக்கும் கீழ்ப்படியாதிருப்பீராக! நிச்சயமாக அல்லாஹ் (யாவையும்) நன்கறிகிறவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கிறான்.

2. இன்னும், (நபியே!) உமதிரட்சகனிடமிருந்து உமக்கு (வஹீ மூலம்) அறிவிக்கப்படுவதையே நீர் பின்பற்றுவீராக! நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை நன்குணர்பவனாக இருக்கிறான்.

3. மேலும், நீர் அல்லாஹ்வின் மீது (அவனிடமே சகல பொறுப்பையும் ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைப்பீராக! (உமது காரியங்களுக்குப்) பொறுப்பேற்றுக்கொள்கிறவனாக இருக்க அல்லாஹ்வே போதுமானவன்.

4. எம்மனிதனுக்கும் அவனுடைய உட்புறத்தில் இரண்டு இதயங்களை அல்லாஹ் அமைக்கவில்லை; இன்னும், உங்கள் மனைவியரை_அவர்களிலிருந்து (தன் மனைவியைத் தன் தாய் போன்றவள் என்று கூறி) உங்களுடைய தாய்மார்களுக்கு ஒப்பாகக் கூறுகிறவர்களை_ உங்களுடைய (உண்மைத்) தாய்மார்களாகவும் அவன் ஆக்கவில்லை. (அவ்வாறே) உங்களுடைய வளர்ப்புப் பிள்ளைகளை உங்கள் புதல்வர்களாகவும் அவன் ஆக்கவில்லை. இவை (யாவும்) உங்கள் வாய்களால் கூறும் உங்கள் வார்த்தைகளே(தவிர உண்மையல்ல). மேலும், அல்லாஹ் உண்மையைக் கூறுகிறான்; அவனே (நேர்) வழியையும் காட்டுகிறான்.

5. ஆகவே, நீங்கள் (வளர்த்த) அவர்களை, அவர்களுடைய தந்தைகளுக்கே (அவர்களின் பெயர்களைக் கூறியே) அழையுங்கள்; அதுதான் அல்லாஹ்விடத்தில் மிக நீதமாகும்; ஆனால், அவர்களின் தந்தைகளை நீங்கள் அறியவில்லையாயின், அப்பொழுது மார்க்கத்தில் உங்களுடைய சகோதரர்களாகவும், உங்கள் சிநேகிதர்களாகவும் இருக்கின்றனர்; (இதற்கு முன்னர்) எதில் நீங்கள் தவறுசெய்தீர்களோ (அதைப் பற்றி) உங்கள் மீது எவ்வித குற்றமுமில்லை; எனினும், உங்கள் உள்ளங்கள் வேண்டுமென்று எண்ணுவதே (குற்றமாகும்); மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக்கிருபையுடையவனாக இருக்கிறான்.

6. விசுவாசிகளுக்கு, அவர்களுடைய உயிர்களைவிட இந்த நபி மிக முன்னுரிமைக்குரியவராவார்; இன்னும், அவருடைய மனைவியர்கள் அவர்களுடைய தாய்மார்களாவார்கள்; மேலும், விசுவாசிகளை விடவும், ஹிஜ்ரத் செய்தவர்களைவிடவும் சொந்த பந்துக்களே அவர்களில் சிலர் சிலரைவிட அல்லாஹ்வுடைய வேதத்திலுள்ள பிரகாரம் (ஒரு முஸ்லிமுடைய சொத்தையடைய) மிக உரியவர்களாவர்; (என்றாலும்) உங்கள் நண்பர்களுக்கு ஏதேனும் ஒரு நன்மையைச் செய்ய நாடினால் தவிர (அவர்களுக்கு உங்கள் விருப்பப்படி செய்ய உங்களுக்கு அனுமதியுண்டு.) இது வேதத்தில் எழுதப்பட்டதாக இருக்கிறது.

وَاِذْ اَخَذْنَا مِنَ النَّبِيّٖنَ مِيْثَاقَهُمْ وَمِنْكَ وَمِنْ نُّوْحٍ وَّاِبْرٰهِيْمَ
وَمُوْسٰى وَعِيْسَى ابْنِ مَرْيَمَ ۠ وَاَخَذْنَا مِنْهُمْ مِّيْثَاقًا غَلِيْظًا ۙ﴿۷﴾
لِّيَسْـَٔلَ الصّٰدِقِيْنَ عَنْ صِدْقِهِمْ ۚ وَاَعَدَّ لِلْكٰفِرِيْنَ عَذَابًا اَلِيْمًا ﴿۸﴾ ع ع ۸ ۱۷
يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اذْكُرُوْا نِعْمَةَ اللّٰهِ عَلَيْكُمْ اِذْ جَآءَتْكُمْ جُنُوْدٌ
فَاَرْسَلْنَا عَلَيْهِمْ رِيْحًا وَّجُنُوْدًا لَّمْ تَرَوْهَا ۭ وَكَانَ اللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ
بَصِيْرًا ۚ﴿۹﴾ اِذْ جَآءُوْكُمْ مِّنْ فَوْقِكُمْ وَمِنْ اَسْفَلَ مِنْكُمْ وَاِذْ
زَاغَتِ الْاَبْصَارُ وَبَلَغَتِ الْقُلُوْبُ الْحَنَاجِرَ وَتَظُنُّوْنَ بِاللّٰهِ
الظُّنُوْنَا ۭ﴿۱۰﴾ هُنَالِكَ ابْتُلِيَ الْمُؤْمِنُوْنَ وَزُلْزِلُوْا زِلْزَالًا شَدِيْدًا ﴿۱۱﴾
وَاِذْ يَقُوْلُ الْمُنٰفِقُوْنَ وَالَّذِيْنَ فِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ مَّا وَعَدَنَا
اللّٰهُ وَرَسُوْلُهٗۤ اِلَّا غُرُوْرًا ﴿۱۲﴾ وَاِذْ قَالَتْ طَّاۗىِٕفَةٌ مِّنْهُمْ يٰۤاَهْلَ
يَثْرِبَ لَا مُقَامَ لَكُمْ فَارْجِعُوْا ۚ وَيَسْتَاْذِنُ فَرِيْقٌ مِّنْهُمُ النَّبِيَّ
يَقُوْلُوْنَ اِنَّ بُيُوْتَنَا عَوْرَةٌ ۭ وَمَا هِيَ بِعَوْرَةٍ ۚ اِنْ يُّرِيْدُوْنَ اِلَّا مع ۱۰ عند المتقدمین ۱۲
فِرَارًا ﴿۱۳﴾ وَلَوْ دُخِلَتْ عَلَيْهِمْ مِّنْ اَقْطَارِهَا ثُمَّ سُىِٕلُوا الْفِتْنَةَ
لَاٰتَوْهَا وَمَا تَلَبَّثُوْا بِهَاۤ اِلَّا يَسِيْرًا ﴿۱۴﴾ وَلَقَدْ كَانُوْا عَاهَدُوا اللّٰهَ
مِنْ قَبْلُ لَا يُوَلُّوْنَ الْاَدْبَارَ ۭ وَكَانَ عَهْدُ اللّٰهِ مَسْـُٔوْلًا ﴿۱۵﴾

7. மேலும், நபிமார்களிடமிருந்தும்_ உம்மிடமிருந்தும், நூஹிடமிருந்தும் இன்னும்,இப்றாஹீம், மூஸா, மர்யமுடைய மகன் ஈஸா ஆகியோரிடமிருந்தும் அவர்களின் உறுதிமொழியை நாம் எடுத்த சமயத்தில்_ அவர்களிடமிருந்து மிக்க உறுதியான உறுதிமொழியையே நாம் எடுத்தோம் (என்பதை இவர்களுக்கு நினைவுபடுத்துவீராக! ஏனெனில்,)

8. (தூதர்களான) உண்மையாளர்களிடம், அவர்களுடைய (தூதின்) உண்மையைப் பற்றி அவன் கேட்பதற்காக(இவ்வாறு உறுதி மொழி எடுத்தான்); நிராகரித்தோர்க்குத் துன்புறுத்தும் வேதனையை அவன் தயார் செய்தும் வைத்திருக்கிறான்.

9. விசுவாசங்கொண்டோரே! உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருட் கொடையை நினைத்துப் பாருங்கள்; உங்கள் மீது (எதிரிகளின்) படைகள் வந்த சமயத்தில் (புயற்) காற்றையும், நீங்கள் அதைப்பார்க்கவில்லையே அத்தகைய படைகளையும் அவர்கள் மீது நாம் அனுப்பி வைத்தோம்; மேலும், நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் பார்க்கக்கூடியவனாக இருக்கிறான்.

10. உங்களுக்கு மேற்புறமிருந்தும், உங்களுக்குக் கீழ்ப் புறமிருந்தும் அவர்கள் (படையெடுத்து) உங்களிடம் வந்த சமயத்தில், இன்னும் (உங்களுடைய) பார்வைகள் (மாறிச்) சாய்ந்தும்,(உங்களுடைய) இதயங்கள் உங்கள் தொண்டை(க் குழி)களை அடைந்துமிருந்த சமயத்தில் (உங்களை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருந்தான்;) மேலும், அல்லாஹ்வைப் பற்றி நீங்கள் (தவறாக) பலவாறான எண்ணங்களை எண்ணிய சமயத்தில் (அல்லாஹ் உங்களுக்குச் செய்த பேரருளை நீங்கள் நினைத்துப் பாருங்கள்.)

11. அந்த இடத்தில், விசுவாசிகள் (பெரும்) சோதனைக்குள்ளாக்கப்பட்டு மிக்க கடினமான அலைக்கழித்தலாக அலைக்கழிக்கப்பட்டும் விட்டனர்.

12. மேலும், (வேஷதாரிகளான) முனாஃபிக்குகளும், எவர்களின் இதயங்களில் நோயிருந்ததோ அவர்களும், "அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் ஏமாற்றத்தைத் தவிர (வேறு) எதையும் எமக்கு வாக்களிக்க வில்லை" என்று கூறியதையும்_(நினைவு கூர்வீராக!)

13. மேலும், அவர்களில் ஒரு கூட்டத்தினர், (மதீனா வாசிகளிடம்,) "யஸ்ரிப் வாசிகளே! (யுத்தகளத்தில்) உங்களுக்குத் தங்குதல் இல்லை ; ஆதலால் நீங்கள் திரும்பிச் சென்றுவிடுங்கள்" என்று கூறியபோது, அவர்களில் (மற்றும்) ஒரு பிரிவினரோ, " நிச்சயமாக எங்களுடைய வீடுகள் பாதுகாப்பற்றவையாக இருக்கின்றன" என்று கூறி , அவை பாதுகாப்பற்றவையாக இல்லாமலிருந்தும் , (அங்கிருந்து சென்றுவிட) நபியிடம் அனுமதி கோரினார்கள்; (அங்கிருந்து) வெருண்டோடுவதைத் தவிர (வேறெதனையும்) அவர்கள் நாடவில்லை.

14. மேலும், அதன் பல பாகங்களிலிருந்தும் அவர்கள் மீது (எதிரிப் படைகள்) புகுத்தப்பட்டு, பின்னர் குழப்பம் செய்யுமாறு அவர்களைக் கேட்கப்பட்டிருந்தால் அவர்கள் அதனைச் செய்திருப்பார்கள். சொற்பமேயன்றி அவர்கள் அதில் தங்கவுமாட்டார்கள்.

15. அவர்கள் (போரில்) புறமுதுகிட்டு ஓடுவதில்லை என்று அல்லாஹ்விடத்தில் இதற்கு முன்னர் திட்டமாக வாக்குறுதியும் செய்திருந்தார்கள்; மேலும், அல்லாஹ்வின் வாக்குறுதி (மறுமையில்) விசாரிக்கப்படுவதாக உள்ளது.

قُلْ لَّنْ یَّنْفَعَكُمُ الْفِرَارُ اِنْ فَرَرْتُمْ مِّنَ الْمَوْتِ اَوِ الْقَتْلِ وَ اِذًا
لَّا تُمَتَّعُوْنَ اِلَّا قَلِیْلًا ﴿۱۶﴾ قُلْ مَنْ ذَا الَّذِیْ یَعْصِمُكُمْ مِّنَ اللّٰهِ اِنْ
اَرَادَ بِكُمْ سُوْٓءًا اَوْ اَرَادَ بِكُمْ رَحْمَةً ؕ وَ لَا یَجِدُوْنَ لَهُمْ مِّنْ دُوْنِ
اللّٰهِ وَلِیًّا وَّ لَا نَصِیْرًا ﴿۱۷﴾ قَدْ یَعْلَمُ اللّٰهُ الْمُعَوِّقِیْنَ مِنْكُمْ وَ الْقَآئِلِیْنَ
لِاِخْوَانِهِمْ هَلُمَّ اِلَیْنَا ۚ وَ لَا یَاْتُوْنَ الْبَاْسَ اِلَّا قَلِیْلًا ۙ﴿۱۸﴾ اَشِحَّةً
عَلَیْكُمْ ۖۚ فَاِذَا جَآءَ الْخَوْفُ رَاَیْتَهُمْ یَنْظُرُوْنَ اِلَیْكَ تَدُوْرُ
اَعْیُنُهُمْ كَالَّذِیْ یُغْشٰی عَلَیْهِ مِنَ الْمَوْتِ ۚ فَاِذَا ذَهَبَ الْخَوْفُ
سَلَقُوْكُمْ بِاَلْسِنَةٍ حِدَادٍ اَشِحَّةً عَلَی الْخَیْرِ ؕ اُولٰٓئِكَ لَمْ یُؤْمِنُوْا
فَاَحْبَطَ اللّٰهُ اَعْمَالَهُمْ ؕ وَ كَانَ ذٰلِكَ عَلَی اللّٰهِ یَسِیْرًا ﴿۱۹﴾ یَحْسَبُوْنَ
الْاَحْزَابَ لَمْ یَذْهَبُوْا ۚ وَ اِنْ یَّاْتِ الْاَحْزَابُ یَوَدُّوْا لَوْ اَنَّهُمْ
بَادُوْنَ فِی الْاَعْرَابِ یَسْاَلُوْنَ عَنْ اَنْۢبَآئِكُمْ ؕ وَ لَوْ كَانُوْا فِیْكُمْ مَّا
قٰتَلُوْۤا اِلَّا قَلِیْلًا ﴿۲۰﴾ؑ لَقَدْ كَانَ لَكُمْ فِیْ رَسُوْلِ اللّٰهِ اُسْوَةٌ حَسَنَةٌ ع ۲ ۱۸
لِّمَنْ كَانَ یَرْجُوا اللّٰهَ وَ الْیَوْمَ الْاٰخِرَ وَ ذَكَرَ اللّٰهَ كَثِیْرًا ﴿۲۱﴾ؕ وَ لَمَّا رَاَ
الْمُؤْمِنُوْنَ الْاَحْزَابَ ۙ قَالُوْا هٰذَا مَا وَعَدَنَا اللّٰهُ وَ رَسُوْلُهٗ وَ
صَدَقَ اللّٰهُ وَ رَسُوْلُهٗ ۫ وَ مَا زَادَهُمْ اِلَّاۤ اِیْمَانًا وَّ تَسْلِیْمًا ﴿۲۲﴾ؕ

16. (நபியே!) நீர் கூறுவீராக: "மரணத்தை விட்டோ அல்லது கொல்லப்படுவதை விட்டோ நீங்கள் வெருண்டோடுவீர்களாயின், அவ்வாறு வெருண்டோடுவது உங்களுக்கு யாதொரு பயனுமளிக்காது; மேலும், அது சமயம் வெகு சொற்பமேயன்றி நீங்கள் சுகம் கொடுக்கப்பட மாட்டீர்கள்!"

17. (நபியே! மேலும்) நீர் கூறுவீராக: "அல்லாஹ்விடமிருந்து – அவன் உங்களுக்கு ஒரு தீங்கிழைக்க நாடினால் – உங்களைப் பாதுகாப்பவர் யார்? அல்லது, அவன் அருள் புரிய நாடினால் (உங்களைவிட்டு அதனை தடுத்துவிடுபவர் யார்?) அல்லாஹ்வையன்றி அவர்களுக்குப் பாதுகாவலரையும், உதவி செய்பவரையும் அவர்கள் காண மாட்டார்கள்."

18. உங்களில் (போர்செய்யச் செல்வோரைத்) தடை செய்வோரையும், தங்கள் சகோதரர்களிடம், "நீங்கள் நம்மிடம் வந்துவிடுங்கள்" என்று கூறுவோரையும் நிச்சயமாக அல்லாஹ் அறிவான்; மேலும், (அவர்களில்) சொற்பமானவர்களன்றி (பெரும்பாலோர்) யுத்தத்திற்கு வரமாட்டார்கள்.

19. (போர்க்களத்தில் கிடைத்த பொருட்களில் அவர்கள்) உங்கள் மீது கஞ்சத்தனமாக இருக்கின்றனர்; அப்பொழுது, (எதிரிகளைப் பற்றி) பயம் வந்துவிட்டால், மரணத்தினால் மயக்கமாக்கப்பட்டவரைப் போன்று அவர்கள் கண்கள் சுழல்கின்ற நிலையில், அவர்கள் உம்மைப் பார்த்த வண்ணமாயிருப்பதை நீர் காண்பீர்; அப்பயம் நீங்கி (விசுவாசிகளுக்கு வெற்றி ஏற்பட்டு) விட்டாலோ நன்மையின் மீது (யுத்தத்தில் கிடைத்த பொருட்கள்மீது) பேராசைக்கொண்டு கூரிய நாவுகளால் (கொடிய வார்த்தைகளைக்கூறி) உங்களை(க் கடிந்து) இம்சிக்கின்றனர்; இத்தகையோர் (உண்மையாக) விசுவாசங்கொள்ளவில்லை; ஆகவே, அவர்களின் (நற்)செயல்களை அல்லாஹ் அழித்துவிட்டான்; இது அல்லாஹ்வுக்கு மிக எளிதாகவே இருக்கிறது.

20. (எதிர்ப்பு) அணியினர் (இன்னும்) போகவில்லை என்றே இவர்கள் எண்ணுவார்கள்; (அந்த எதிர்ப்பு) அணியினர் (திரும்ப) வந்துவிட்டால் கிராமப்புறங்களில் அவர்கள் நிச்சயமாக வெளியேறிச்சென்று, உங்களைப் பற்றிய செய்திகளைக் கேட்டு விசாரித்துக் கொண்டிருக்கவேண்டுமே என்று விரும்புவார்கள்; அவர்கள் உங்களுடன் இருந்திருப்பினும் சொற்பமேயன்றி (அதிகமாக) அவர்கள் யுத்தம் புரிய மாட்டார்கள்.

21. (உங்களில்) அல்லாஹ்வையும், மறுமை நாளையும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வையும் அதிகமாக நினைவு கூர்பவராக இருப்பவருக்கு, அல்லாஹ்வின் தூதரில் திட்டமாக உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது.

22. மேலும், விசுவாசிகள் (எதிர்ப்பு) அணியினரைக் கண்டபொழுது, "இது, அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் நமக்கு வாக்களித்ததாகும்; அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் உண்மையையே கூறினார்கள்" என்று கூறினார்கள்; அவர்களுடைய விசுவாசத்தையும், வழிப்படுதலையும் தவிர (வேறெதையும்) அவர்களுக்கு அது அதிகப்படுத்திவிடவில்லை.

مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا عَاهَدُوا اللّٰهَ عَلَيْهِ ۚ فَمِنْهُمْ
مَّنْ قَضٰى نَحْبَهٗ وَمِنْهُمْ مَّنْ يَّنْتَظِرُ ۖ وَمَا بَدَّلُوْا تَبْدِيْلًا ﴿۲۳﴾ لِّيَجْزِيَ
اللّٰهُ الصّٰدِقِيْنَ بِصِدْقِهِمْ وَيُعَذِّبَ الْمُنٰفِقِيْنَ اِنْ شَآءَ اَوْ
يَتُوْبَ عَلَيْهِمْ ؕ اِنَّ اللّٰهَ كَانَ غَفُوْرًا رَّحِيْمًا ۚ ﴿۲۴﴾ وَرَدَّ اللّٰهُ الَّذِيْنَ
كَفَرُوْا بِغَيْظِهِمْ لَمْ يَنَالُوْا خَيْرًا ؕ وَكَفَى اللّٰهُ الْمُؤْمِنِيْنَ الْقِتَالَ ؕ
وَكَانَ اللّٰهُ قَوِيًّا عَزِيْزًا ۚ ﴿۲۵﴾ وَاَنْزَلَ الَّذِيْنَ ظَاهَرُوْهُمْ مِّنْ اَهْلِ
الْكِتٰبِ مِنْ صَيَاصِيْهِمْ وَقَذَفَ فِيْ قُلُوْبِهِمُ الرُّعْبَ فَرِيْقًا
تَقْتُلُوْنَ وَتَاْسِرُوْنَ فَرِيْقًا ۚ ﴿۲۶﴾ وَاَوْرَثَكُمْ اَرْضَهُمْ وَدِيَارَهُمْ وَ
اَمْوَالَهُمْ وَاَرْضًا لَّمْ تَطَـُٔوْهَا ؕ وَكَانَ اللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرًا ﴿۲۷﴾ ع ۳/۷ ۱۹
يٰۤاَيُّهَا النَّبِيُّ قُلْ لِّاَزْوَاجِكَ اِنْ كُنْتُنَّ تُرِدْنَ الْحَيٰوةَ الدُّنْيَا
وَزِيْنَتَهَا فَتَعَالَيْنَ اُمَتِّعْكُنَّ وَاُسَرِّحْكُنَّ سَرَاحًا جَمِيْلًا ﴿۲۸﴾
وَاِنْ كُنْتُنَّ تُرِدْنَ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَالدَّارَ الْاٰخِرَةَ فَاِنَّ
اللّٰهَ اَعَدَّ لِلْمُحْسِنٰتِ مِنْكُنَّ اَجْرًا عَظِيْمًا ﴿۲۹﴾ يٰنِسَآءَ
النَّبِيِّ مَنْ يَّاْتِ مِنْكُنَّ بِفَاحِشَةٍ مُّبَيِّنَةٍ يُّضٰعَفْ
لَهَا الْعَذَابُ ضِعْفَيْنِ ؕ وَكَانَ ذٰلِكَ عَلَى اللّٰهِ يَسِيْرًا ﴿۳۰﴾

23. விசுவாசிகளில் சில ஆடவர்கள் இருக்கின்றனர்; எதன்மீது அவர்கள் அல்லாஹ்விடம் வாக்குறுதி செய்தார்களோ அதை உண்மையாக்கி வைத்தார்கள்; ஆகவே, அவர்களில் தங்கள் இலட்சியத்தை (வீரமரணத்தை) அடைந்து விட்டவரும் இருக்கின்றனர்; அவர்களில் (அதற்காக) எதிர்பார்ப்பவரும் இருக்கின்றனர்; (தங்கள் வாக்குறுதியில்) அவர்கள் மாறிவிடவே இல்லை.

24. உண்மையாளர்களுக்கு, அவர்களின் உண்மையின் காரணத்தால், அல்லாஹ் (நற்)கூலி வழங்குவதற்காகவும், அவன் நாடினால் முனாஃபிக்குகளை (வேஷதாரிகளை) வேதனை செய்வதற்காகவும், அல்லது அவர்களின் தவ்பாவை அங்கீகரிப்பதற்காகவும் (அடியார்களை இவ்வாறு சோதிக்கிறான்); நிச்சயமாக அல்லாஹ், மிக்க மன்னிப்பவனாக, மிகக்கிருபையுடையவனாக இருக்கிறான்.

25. மேலும், நிராகரித்து விட்டார்களே அத்தகையோரை_ அவர்களுடைய கடுங்கோபத்தில் அல்லாஹ் திருப்பி விட்டான்; (இந்த யுத்தத்தில்) அவர்கள் யாதொரு நன்மையை(யும்) அடையவில்லை; ( அகழ்) யுத்தத்தில் விசுவாசிகளுக்கு (வெற்றியளிக்க)அல்லாஹ் போதுமானவனாகவே இருந்தான்; மேலும், அல்லாஹ்(யாவரையும் விட) மிக்க பலமிக்கவனாக,(யாவரையும்) மிகைத்தவனாக இருக்கின்றான்.

26. இன்னும் வேதக்காரர்களிலிருந்து, அ(ப்பகை)வர்களுக்கு உதவி செய்தார்களே அவர்களை, அவர்களுடைய கோட்டைகளிலிருந்து (அல்லாஹ்) இறக்கிவிட்டான்; அவர்களுடைய இதயங்களில் கடும் பயத்தையும் போட்டு விட்டான்; (ஆகவே,) ஒரு சாராரை நீங்கள் கொன்று விட்டீர்கள்; (மற்றும்) ஒரு சாராரை நீங்கள் சிறைபிடித்தும் கொண்டீர்கள்.

27. இன்னும், (அல்லாஹ்வாகிய) அவன் அவர்களுடைய பூமி,மற்றும் அவர்களுடைய வீடுகள் மற்றும் அவர்களுடைய செல்வங்கள், இன்னும்(இதுவரையில்) நீங்கள் அதை மிதித்திராத (அவர்களுடைய மற்ற) பூமிஆகியவற்றிற்கு உங்களை வாரிசாக்கினான்; மேலும் அல்லாஹ், ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவனாக இருக்கிறான்.

28. நபியே! உம்முடைய மனைவியருக்கு நீர் கூறுவீராக: " நீங்கள் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் நாடுபவர்களாக நீங்கள் இருந்தால், வாருங்கள்! உங்களுக்கு(வாழ்க்கைக்குரியதைக் கொடுத்து)சுகத்தை அளிக்கிறேன்; அழகிய விடுவித்தலாக(விவாக பந்தத்தை) விடுவித்தும் விடுகிறேன்."

29. "அன்றியும் நீங்கள் அல்லாஹ்வையும் , அவனுடைய தூதரையும்,இறுதி வீட்டையும்நாடுபவர்களாக நீங்கள் இருந்தால், அப்பொழுது நிச்சயமாக அல்லாஹ் உங்களில் (இத்தகைய) நன்மையுடையோருக்கு மகத்தான கூலியை தயார் செய்து வைத்திருக்கிறான்."

30. நபியுடைய மனைவியரே! உங்களில் எவர் பகிரங்கமான மானக்கேடான ஒரு காரியத்தைச் செய்வாரோ, அவருக்கு இரு மடங்காக வேதனை இரட்டிப்பாக்கப்படும். இது அல்லாஹ்வுக்கு மிகவும் சுலபமானதாகவே இருக்கிறது.

وَمَنْ يَّقْنُتْ مِنْكُنَّ لِلّٰهِ وَرَسُوْلِهٖ وَتَعْمَلْ صَالِحًا
نُّؤْتِهَآ اَجْرَهَا مَرَّتَيْنِ ۙ وَاَعْتَدْنَا لَهَا رِزْقًا كَرِيْمًا ﴿٣١﴾ يٰنِسَآءَ
النَّبِيِّ لَسْتُنَّ كَاَحَدٍ مِّنَ النِّسَآءِ اِنِ اتَّقَيْتُنَّ فَلَا تَخْضَعْنَ
بِالْقَوْلِ فَيَطْمَعَ الَّذِيْ فِيْ قَلْبِهٖ مَرَضٌ وَّقُلْنَ قَوْلًا مَّعْرُوْفًا ﴿٣٢﴾ ج
وَقَرْنَ فِيْ بُيُوْتِكُنَّ وَلَا تَبَرَّجْنَ تَبَرُّجَ الْجَاهِلِيَّةِ الْاُوْلٰى
وَاَقِمْنَ الصَّلٰوةَ وَاٰتِيْنَ الزَّكٰوةَ وَاَطِعْنَ اللّٰهَ وَرَسُوْلَهٗ ؕ
اِنَّمَا يُرِيْدُ اللّٰهُ لِيُذْهِبَ عَنْكُمُ الرِّجْسَ اَهْلَ الْبَيْتِ
وَيُطَهِّرَكُمْ تَطْهِيْرًا ﴿٣٣﴾ ج وَاذْكُرْنَ مَا يُتْلٰى فِيْ بُيُوْتِكُنَّ
مِنْ اٰيٰتِ اللّٰهِ وَالْحِكْمَةِ ؕ اِنَّ اللّٰهَ كَانَ لَطِيْفًا خَبِيْرًا ﴿٣٤﴾ ع ٤
اِنَّ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمٰتِ وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ
وَالْقٰنِتِيْنَ وَالْقٰنِتٰتِ وَالصّٰدِقِيْنَ وَالصّٰدِقٰتِ وَالصّٰبِرِيْنَ
وَالصّٰبِرٰتِ وَالْخٰشِعِيْنَ وَالْخٰشِعٰتِ وَالْمُتَصَدِّقِيْنَ وَ
الْمُتَصَدِّقٰتِ وَالصَّآئِمِيْنَ وَالصّٰٓئِمٰتِ وَالْحٰفِظِيْنَ
فُرُوْجَهُمْ وَالْحٰفِظٰتِ وَالذّٰكِرِيْنَ اللّٰهَ كَثِيْرًا وَّ
الذّٰكِرٰتِ اَعَدَّ اللّٰهُ لَهُمْ مَّغْفِرَةً وَّاَجْرًا عَظِيْمًا ﴿٣٥﴾

31. அன்றியும், உங்களில் எவர் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து, நற்கருமங்களையும் செய்கிறாரோ, அவருக்குரிய (நற்)கூலியை அவருக்கு நாம் இரு முறை தருவோம்; இன்னும் அவருக்கு (சுவனத்தில்) மிக்க கண்ணியமான உணவை நாம் தயார் படுத்தி வைத்திருக்கின்றோம்.

32. நபியுடைய மனைவியரே! நீங்கள் (இதர) பெண்களில் எந்த ஒருவரைப் போன்றவர்களுமல்லர்; நீங்கள் (அல்லாஹ்வுக்கு) பயந்துகொண்டவர்களானால் (அந்நியருடன்) பேச்சில் நீங்கள் நளினம் காட்டாதீர்கள்; ஏனென்றால், எவனுடைய இதயத்தில் (பாவ) நோய் இருக்கின்றதோ அத்தகையவன் (தவறான விருப்பங்களில்) ஆசை கொள்வான்; மேலும், நீங்கள் (நேர்மையான) பேச்சையே பேசிவிடுங்கள்.

33. இன்னும், (நபியுடைய மனைவியரே!) நீங்கள் உங்கள் வீடுகளிலேயே தங்கியிருங்கள். முந்தைய அறியாமைக் காலத்தில் (பெண்கள் மறைக்க வேண்டியதை மறைக்காது) வெளிப்படுத்தியதைப் போன்று வெளிப்படுத்தித் திரியாதீர்கள்; மேலும், தொழுகையை நிறைவேற்றுங்கள்; ஜகாத்தையும் கொடு(த்து வாரு)ங்கள்; அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்; (நபியுடைய) வீட்டினரே! அல்லாஹ் நாடுவதெல்லாம் உங்களை விட்டும் (சகல) அசுத்தத்தைப் போக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கு வதையும்தான்.

34. மேலும், உங்கள் வீடுகளில் ஓதப்படுகின்ற அல்லாஹ்வின் வசனங்களையும், ஹிக்மத் (எனும் சுன்னத்தை)தையும் நினைவு கூருங்கள்; (அவற்றின் மூலம் உபதேசம் அடையுங்கள்) நிச்சயமாக அல்லாஹ் நுட்பமானவனாக (யாவையும்) நன்கறிந்தோனாக இருக்கிறான்.

35. நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும், முஸ்லிம்களான பெண்களும், விசுவாசிகளான ஆண்களும், விசுவாசிகளான பெண்களும், (அல்லாஹ்வுக்கு) வழிபாடு செய்பவர்களான ஆண்களும், வழிபாடு செய்பவர்களான பெண்களும், உண்மையே கூறுபவர்களான ஆண்களும், உண்மையே கூறுபவர்களான பெண்களும், பொறுமையாளர்களான ஆண்களும், பொறுமையாளர்களான பெண்களும் , உள்ளச்சத்தோடு (அல்லாஹ்வை)பயந்து நடக்கும் ஆண்களும், உள்ளச்சத்தோடு (அல்லாஹ்வை) பயந்து நடக்கும் பெண்களும், தானம் செய்பவர்களான ஆண்களும், தானம் செய்பவர்களான பெண்களும், நோன்பு நோற்பவர்களான ஆண்களும், நோன்பு நோற்பவர்களான பெண்களும், தங்கள் மர்மஸ்தானங்களைக் காத்துக் கொள்பவர்களான ஆண்களும், (மர்மஸ்தானங்களைக்) காத்துக் கொள்பவர்களான பெண்களும், அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருபவர்களான ஆண்களும், (அல்லாஹ்வை அதிகமாக) நினைவு கூருபவர்களான பெண்களும் _ (ஆகிய) இவர்களுக்கு, அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான (நற்)கூலியையும் தயார் செய்து வைத்திருக்கிறான்.

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَّلَا مُؤْمِنَةٍ اِذَا قَضَى اللّٰهُ وَرَسُوْلُهٗۤ اَمْرًا اَنْ
يَّكُوْنَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ اَمْرِهِمْ ؕ وَمَنْ يَّعْصِ اللّٰهَ وَرَسُوْلَهٗ فَقَدْ
ضَلَّ ضَلٰلًا مُّبِيْنًا ﴿٣٦﴾ وَاِذْ تَقُوْلُ لِلَّذِيْۤ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِ وَاَنْعَمْتَ
عَلَيْهِ اَمْسِكْ عَلَيْكَ زَوْجَكَ وَاتَّقِ اللّٰهَ وَتُخْفِيْ فِيْ نَفْسِكَ
مَا اللّٰهُ مُبْدِيْهِ وَتَخْشَى النَّاسَ ۚ وَاللّٰهُ اَحَقُّ اَنْ تَخْشٰىهُ ؕ فَلَمَّا
قَضٰى زَيْدٌ مِّنْهَا وَطَرًا زَوَّجْنٰكَهَا لِكَيْ لَا يَكُوْنَ عَلَى الْمُؤْمِنِيْنَ
حَرَجٌ فِيْۤ اَزْوَاجِ اَدْعِيَآئِهِمْ اِذَا قَضَوْا مِنْهُنَّ وَطَرًا ؕ وَكَانَ اَمْرُ
اللّٰهِ مَفْعُوْلًا ﴿٣٧﴾ مَا كَانَ عَلَى النَّبِيِّ مِنْ حَرَجٍ فِيْمَا فَرَضَ اللّٰهُ لَهٗ ؕ
سُنَّةَ اللّٰهِ فِي الَّذِيْنَ خَلَوْا مِنْ قَبْلُ ؕ وَكَانَ اَمْرُ اللّٰهِ قَدَرًا مَّقْدُوْرَا ۙ﴿٣٨﴾
الَّذِيْنَ يُبَلِّغُوْنَ رِسٰلٰتِ اللّٰهِ وَيَخْشَوْنَهٗ وَلَا يَخْشَوْنَ اَحَدًا اِلَّا
اللّٰهَ ؕ وَكَفٰى بِاللّٰهِ حَسِيْبًا ﴿٣٩﴾ مَا كَانَ مُحَمَّدٌ اَبَآ اَحَدٍ مِّنْ رِّجَالِكُمْ
وَلٰكِنْ رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ ؕ وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَيْءٍ
عَلِيْمًا ﴿٤٠﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اذْكُرُوا اللّٰهَ ذِكْرًا كَثِيْرًا ۙ﴿٤١﴾ وَّ ع ٥ ٢
سَبِّحُوْهُ بُكْرَةً وَّاَصِيْلًا ﴿٤٢﴾ هُوَ الَّذِيْ يُصَلِّيْ عَلَيْكُمْ وَمَلٰٓئِكَتُهٗ
لِيُخْرِجَكُمْ مِّنَ الظُّلُمٰتِ اِلَى النُّوْرِ ؕ وَكَانَ بِالْمُؤْمِنِيْنَ رَحِيْمًا ﴿٤٣﴾

36. அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் யாதொரு காரியத்தை முடிவெடுத்துவிட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் சுயமாக வேறு அபிப்பிராயம்கொள்வதற்கு, விசுவாசியான எந்த ஆணுக்கும், எந்தப் பெண்ணுக்கும் உரிமையில்லை. (அதில்) அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எவர் மாறு செய்கிறாரோ அவர், பகிரங்கமான வழிகேடாக திட்டமாக வழிகெட்டுவிட்டார்.

37. அல்லாஹ் எவருக்கு (நேர் வழி காட்டுவதன் மூலம்) அருள் புரிந்து, நீரும் எவருக்கு(அடிமைத்தனத்திலிருந்து உரிமைவிடுவதன்மூலம்)உபகாரம்செய்தீரோ அவரிடத்தில் " (ஜைனபு ஆகிய) உம்முடைய மனைவியை (விவாக பந்தத்திலிருந்து நீக்காது) உம்மிடமே (மனைவியாக) நிறுத்திக் கொள்ளும், இன்னும் அல்லாஹ்வுக்கு பயந்து கொள்ளும்" என்று நீர் கூறிய சமயத்தில் – ( நடந்த இச்சம்பவத்தை நினைவு கூர்வீராக ). அல்லாஹ் வெளியாக்க இருந்ததை நீர் உம் மனதில் மறைத்திருந்தீர்; மேலும், மனிதர்களுக்கு நீர் பயப்படுகிறீர்; இன்னும் அல்லாஹ் – அவன்தான் நீர் பயப்படுவதற்கு மிக உரியவன் (மனிதர்களல்ல). ஜைது(என்பவர் ஜைனபைத் திருமணம்செய்து தாம்பத்திய வாழ்க்கை எனும் தன்) தேவையை அவளிடமிருந்து நிறைவேற்றிவிட்டபோது, நாம் அவளை உமக்குத் திருமணம் செய்து வைத்தோம்; ஏனென்றால், விசுவாசிகளால் வளர்க்கப் பட்டவர்கள் தங்கள் தேவையை (அப்பெண்களான) அவர்களிடம் பூர்த்தி செய்துகொண்டு (அவர்களைத் தலாக்குக் கூறி)விட்டால், (அவர்களை வளர்த்த) விசுவாசிகள், (அவ்வாறு தலாக் கூறப்பட்ட) அப்பெண்களை திருமணம் செய்து கொள்வதில் யாதொரு குற்றமிருக்கக்கூடாது என்பதற்காக(உமக்கு, உமது வளர்ப்பு மகனால் விவாகரத்துச் செய்யப்பட்ட ஜைனபை திருமணம் செய்துவைத்தோம்) ; மேலும், அல்லாஹ்வுடைய கட்டளை(இவ்வாறு) நடைபெற்றுத்தீரவேண்டியதாக இருந்தது.

38. (ஜைனபை மணமுடிக்கும் விஷயத்தில்,)நபியின் மீது அல்லாஹ் அவருக்காக விதியாக்கியதில் எவ்வித குற்றமும் இல்லை; இதற்கு முன் சென்றுவிட்டவர் (களாகிய நபிமார்)களுக்கு, (அல்லாஹ் ஏற்படுத்திய) வழியும் இதுவே; இன்னும் அல்லாஹ்வுடைய கட்டளை தீர்மானிக்கப்பட்ட முடிவாக இருக்கின்றது.

39. (முன் சென்றுவிட்ட) அவர்கள் எத்தகையோரென்றால் அல்லாஹ்வுடைய (இத்தகைய) தூதுச்செய்திகளை (மக்களுக்குக் கூடுதல் குறைவின்றி) எத்திவைப்பார்கள்; இன்னும் அவர்கள் அவ(ன் ஒருவ)னுக்கே பயப்படுவார்கள்; அல்லாஹ்வைத் தவிர மற்றெவருக்கும் அவர்கள் பயப்பட மாட்டார்கள்; கணக்குக் கேட்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன்.

40. உங்களுடைய ஆண்களில் எவருக்கும் முஹம்மது, தகப்பனாக இருக்கவில்லை; எனினும், அல்லாஹ்வுடைய தூதராகவும், நபிமார்களுக்கு (க்கடைசி) முத்திரையாகவும்,(இறுதி நபியாகவும்) இருக்கிறார்; அன்றியும், அல்லாஹ் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் நன்கறிந்தோனாக இருக்கிறான்.

41. விசுவாசிகளே! அல்லாஹ்வை அதிகமான நினைவு கூருதலாக நினைவு கூருங்கள்.

42. காலையிலும் மாலையிலும் அவனைத் துதி செய்யுங்கள்.

43. அவன் எத்தகையவனென்றால், உங்கள் மீது அவன் அருள் புரிகின்றான்; இன்னும் அவனது மலக்குகளும் (உங்களுக்காக பாவ மன்னிப்புக் கேட்கிறார்கள்); காரணம், இருள்களிலிருந்து ஒளியின்பால் உங்களை அவன் வெளியேற்றுவதற்காக; மேலும், அல்லாஹ் விசுவாசி(களாகிய உங்)கள் மீது மிக்க கிருபையுடையோனாக இருக்கிறான்.

تَحِيَّتُهُمْ يَوْمَ يَلْقَوْنَهٗ سَلٰمٌ ۚۖ وَّاَعَدَّ لَهُمْ اَجْرًا كَرِيْمًا ﴿۴۴﴾ يٰۤاَيُّهَا
النَّبِيُّ اِنَّاۤ اَرْسَلْنٰكَ شَاهِدًا وَّمُبَشِّرًا وَّنَذِيْرًا ﴿۴۵﴾ وَّدَاعِيًا اِلَى
اللّٰهِ بِاِذْنِهٖ وَسِرَاجًا مُّنِيْرًا ﴿۴۶﴾ وَبَشِّرِ الْمُؤْمِنِيْنَ بِاَنَّ لَهُمْ مِّنَ
اللّٰهِ فَضْلًا كَبِيْرًا ﴿۴۷﴾ وَلَا تُطِعِ الْكٰفِرِيْنَ وَالْمُنٰفِقِيْنَ وَدَعْ اَذٰىهُمْ
وَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ؕ وَكَفٰى بِاللّٰهِ وَكِيْلًا ﴿۴۸﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا
نَكَحْتُمُ الْمُؤْمِنٰتِ ثُمَّ طَلَّقْتُمُوْهُنَّ مِنْ قَبْلِ اَنْ تَمَسُّوْهُنَّ
فَمَا لَكُمْ عَلَيْهِنَّ مِنْ عِدَّةٍ تَعْتَدُّوْنَهَا ۚ فَمَتِّعُوْهُنَّ
وَسَرِّحُوْهُنَّ سَرَاحًا جَمِيْلًا ﴿۴۹﴾ يٰۤاَيُّهَا النَّبِيُّ اِنَّاۤ اَحْلَلْنَا
لَكَ اَزْوَاجَكَ الّٰتِيْۤ اٰتَيْتَ اُجُوْرَهُنَّ وَمَا مَلَكَتْ يَمِيْنُكَ
مِمَّاۤ اَفَآءَ اللّٰهُ عَلَيْكَ وَبَنٰتِ عَمِّكَ وَبَنٰتِ عَمّٰتِكَ وَبَنٰتِ
خَالِكَ وَبَنٰتِ خٰلٰتِكَ الّٰتِيْ هَاجَرْنَ مَعَكَ ۫ وَامْرَاَةً
مُّؤْمِنَةً اِنْ وَّهَبَتْ نَفْسَهَا لِلنَّبِيِّ اِنْ اَرَادَ النَّبِيُّ اَنْ
يَّسْتَنْكِحَهَا ۗ خَالِصَةً لَّكَ مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ ؕ قَدْ عَلِمْنَا
مَا فَرَضْنَا عَلَيْهِمْ فِيْۤ اَزْوَاجِهِمْ وَمَا مَلَكَتْ اَيْمَانُهُمْ
لِكَيْلَا يَكُوْنَ عَلَيْكَ حَرَجٌ ؕ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا ﴿۵۰﴾

44. அவனை அவர்கள் சந்திக்கும் நாளில், அவர்களுக்குரிய காணிக்கை "(உங்களுக்குச்) சாந்தி உண்டாவதாக" என்பதாகும்; மேலும், அவர்களுக்காக கண்ணியமான கூலியையும் அவன் தயாராக்கி வைத்திருக்கிறான்.

45. நபியே! நிச்சயமாக நாம் உம்மை (மனிதர்களுக்குச்) சாட்சியாளராகவும், நன்மாராயங்கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பி வைத்திருக்கிறோம்.

46. இன்னும், அல்லாஹ்வின்பால்_ அவனின் அனுமதி கொண்டு_(ஜனங்களை) நீர் அழைப்பவராகவும், பிரகாசிக்கும் விளக்காகவும் (உம்மை நாம் அனுப்பியுள்ளோம்.)

47. (நபியே!) விசுவாசிகளுக்கு _ அல்லாஹ்விடமிருந்து, நிச்சயமாக அவர்களுக்கு_ பெரும் பேரருள் உண்டு என்று நீர் நன்மாராயமும் கூறுவீராக!

48. மேலும், நிராகரிப்போருக்கும், (வேஷதாரிகளான) முனாஃபிக்குகளுக்கும் நீர் கீழ்ப்படியாதீர்; அவர்கள் (இழைக்கும்) துன்பங்களையும் நீர் (புறக்கணித்து) விட்டு விடுவீராக! (உம்முடைய சகல காரியங்களையும் அவனிடமே ஒப்படைத்து முழுமையாக) அல்லாஹ்வின் மீது நம்பிக்கையும் வைப்பீராக! பொறுப்பேற்கிறவனாக இருக்க அல்லாஹ்வே (உமக்குப்) போதுமானவன்.

49. விசுவாசங் கொண்டோரே! நீங்கள் விசுவாசங்கொண்ட பெண்களைத் திருமணம் செய்து, பிறகு அவர்களை நீங்கள் தீண்டுவதற்கு முன் தலாக் கூறி விட்டால், (மற்ற விவாகரத்து செய்யப்பட்ட பெண்களுக்காக) நீங்கள் எதைக் கணக்கிடுவீர்களோ அத்தகைய எந்த "இத்தா"வும் அவர்களின் மீது (நிர்ணயிக்க) உங்களுக்கு (உரிமை) இல்லை. எனவே, நீங்கள் அவர்களுக்கு ஏதும் (பொருள்) கொடுத்து அழகான முறையில் (விவாக பந்தத்திலிருந்து) அவர்களை விடுவித்தும் விடுங்கள்.

50. நபியே! எவர்களின் மஹர்களை நீர் கொடுத்து விட்டீரோ அத்தகைய உம்முடைய மனைவியரையும், அல்லாஹ் உமக்கு (யுத்தத்தில்) அளித்து உம் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களையும், (மக்காவை விட்டு) உம்முடன் ஹிஜ்ரத் செய்து வந்தார்களே அத்தகைய உம் தந்தையின் சகோதரரின் புதல்வியரையும், உம் தந்தையின் சகோதரிகளுடைய புதல்வியரையும், உமது தாய் மாமனின் புதல்வியரையும், உம் தாயின் சகோதரிகளுடைய புதல்வியரையும் (மஹர் கொடுத்து நீர் திருமணம் செய்து கொள்ள) நிச்சயமாக நாம் உமக்கு ஆகுமாக்கி வைத்திருக்கின்றோம்; மேலும், விசுவாசங் கொண்ட ஒரு பெண், தன்னை (மஹரின்றியே) நபிக்கு அர்ப்பணம் செய்து, நபியும் அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினால், (அவளையும் மணக்க உமக்கு அனுமதி அளித்தோம்.) நபியே! இது மற்ற விசுவாசிகளுக்கன்றி உமக்கு மட்டும் பிரத்தியேகமாக உள்ளதாகும்; (மற்ற விசுவாசிகள்) அவர்கள் மனைவியரிலும், அவர்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவற்றிலும், நாம் அவர்கள் மீது விதித்திருக்கும் கட்டளையை நாம் நன்கறிவோம்; உமக்கு (அனுமதிக்கப்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொண்ட விஷயத்தில்) எவ்வித சங்கடமும் ஏற்படாமலிப்பதற்காக (அக்கடமையிலிருந்து உமக்கு விதி விலக்குச் செய்தோம்.) மேலும், அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவனாக, மிக்க கிருபையுடையவனாக இருக்கிறான்.

تُرْجِيْ مَنْ تَشَآءُ مِنْهُنَّ وَتُـْٔوِيْٓ اِلَيْكَ مَنْ تَشَآءُ ۭ وَمَنِ ابْتَغَيْتَ
مِمَّنْ عَزَلْتَ فَلَا جُنَاحَ عَلَيْكَ ۭ ذٰلِكَ اَدْنٰٓى اَنْ تَقَرَّ اَعْيُنُهُنَّ
وَلَا يَحْزَنَّ وَيَرْضَيْنَ بِمَآ اٰتَيْتَهُنَّ كُلُّهُنَّ ۭ وَاللّٰهُ يَعْلَمُ مَا
فِيْ قُلُوْبِكُمْ ۭ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَلِيْمًا ﴿٥١﴾ لَا يَحِلُّ لَكَ النِّسَآءُ
مِنْۢ بَعْدُ وَلَآ اَنْ تَبَدَّلَ بِهِنَّ مِنْ اَزْوَاجٍ وَّلَوْ اَعْجَبَكَ
حُسْنُهُنَّ اِلَّا مَا مَلَكَتْ يَمِيْنُكَ ۭ وَكَانَ اللّٰهُ عَلٰي كُلِّ شَيْءٍ
رَّقِيْبًا ﴿٥٢﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَدْخُلُوْا بُيُوْتَ النَّبِيِّ ع ٦ ١٢ ٣
اِلَّآ اَنْ يُّؤْذَنَ لَكُمْ اِلٰى طَعَامٍ غَيْرَ نٰظِرِيْنَ اِنٰىهُ وَلٰكِنْ اِذَا
دُعِيْتُمْ فَادْخُلُوْا فَاِذَا طَعِمْتُمْ فَانْتَشِرُوْا وَلَا مُسْتَاْنِسِيْنَ
لِحَدِيْثٍ ۭ اِنَّ ذٰلِكُمْ كَانَ يُؤْذِي النَّبِيَّ فَيَسْتَحْيٖ مِنْكُمْ ۡ
وَاللّٰهُ لَا يَسْتَحْيٖ مِنَ الْحَقِّ ۭ وَاِذَا سَاَلْتُمُوْهُنَّ مَتَاعًا
فَسْـَٔلُوْهُنَّ مِنْ وَّرَاۗءِ حِجَابٍ ۭ ذٰلِكُمْ اَطْهَرُ لِقُلُوْبِكُمْ وَقُلُوْبِهِنَّ ۭ
وَمَا كَانَ لَكُمْ اَنْ تُؤْذُوْا رَسُوْلَ اللّٰهِ وَلَآ اَنْ تَنْكِحُوْٓا اَزْوَاجَهٗ
مِنْۢ بَعْدِهٖٓ اَبَدًا ۭ اِنَّ ذٰلِكُمْ كَانَ عِنْدَ اللّٰهِ عَظِيْمًا ﴿٥٣﴾ اِنْ
تُبْدُوْا شَيْـًٔا اَوْ تُخْفُوْهُ فَاِنَّ اللّٰهَ كَانَ بِكُلِّ شَيْءٍ عَلِيْمًا ﴿٥٤﴾

51. (நபியே! உம்முடைய மனைவியராகிய)அவர்களில், நீர் விரும்பியவரை ஒதுக்கி வைக்கலாம்; நீர் விரும்பியவரை உம்முடன் தங்கவும் வைக்கலாம்; நீர் ஒதுக்கியவர்களில், நீர் எவரையேனும் (மீண்டும்) நாடினால் உம்மீது குற்றமில்லை; அது, அவர்களுடைய கண்கள் குளிர்ச்சியடைவதற்கும், அவர்கள் கவலைப்படாமலிருப்பதற்கும், நீர் அவர்களனைவருக்கும் எதைக் கொடுத்தீரோ அதைக் கொண்டு திருப்தியடைவதற்கும் மிக்க நெருக்கமானதாகும்; இன்னும், உங்களுடைய உள்ளங்களில் உள்ளவற்றை அல்லாஹ் நன்கு அறிவான்; மேலும், அல்லாஹ் (யாவையும்) நன்கறிந்தவனாக, சகித்துக் கொள்பவனாக இருக்கிறான்.

52. (நபியே! இதற்குப்) பின்னர், உம்வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களைத் தவிர (நீர் திருமணம் செய்து கொள்ள) வேறு பெண்கள் உமக்கு ஆகுமாகமாட்டார்கள்; இன்னும், அவர்களுடைய (இடத்தில் வேறு பெண்களின்) அழகு உம்மை கவர்ந்த போதிலும் அவர்களை, (உம்முடைய மனைவியராக) இவர்களைக் கொண்டு நீர் மாற்றிக் கொள்வதும் உமக்கு (அனுமதி)இல்லை; அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் கண்காணிக்கிறவனாக இருக்கிறான்.

53. விசுவாசங்கொண்டோரே! உணவின்பால் (அதை உண்ண) உங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டாலே தவிர, அது தயாராவதை எதிர்பார்த்திராதவர்களாக (முன்னதாகவே ) நபியுடைய வீடுகளில் பிரவேசிக்காதீர்கள். எனினும் நீங்கள் அழைக்கப்பட்டால், அப்பொழுது பிரவேசியுங்கள்; பின்னர் நீங்கள் உணவைப் புசித்துவிட்டால், (அங்கிருந்து கொண்டே) பேசுவதில் விருப்பம் கொண்டவர்களாகவும் ஆகிவிடாது கலைந்து சென்று விடுங்கள்; நிச்சயமாக இது நபியை நோவினை செய்வதாக இருந்தது; ஆகவே, (இதனை) உங்களிடம் (கூற) அவர் வெட்கப்படுகிறார்; உண்மையைச் சொல்ல அல்லாஹ் வெட்கப்படவு மாட்டான்; மேலும், (நபியுடைய மனைவியராக) அவர்களிடம் யாதொரு பொருளை நீங்கள் கேட்(க நேரிட்)டால், நீங்கள் திரைக்கு அப்பால் இருந்து கொண்டே அவர்களிடம் கேளுங்கள்; அ(வ்வாறு செய்வ)து உங்கள் உள்ளங்களுக்கும், அவர்கள் உள்ளங்களுக்கும் மிகப் பரிசுத்தமானதாகும்; மேலும், அல்லாஹ்வுடைய தூதருக்கு நீங்கள் தொல்லை கொடுப்பது உங்களுக்குத் தகுமானதன்று; அவருடைய மனைவியரை அவருக்குப் பின்னர் நீங்கள் திருமணம் செய்து கொள்வதும் ஒரு காலத்திலும் கூடாது; நிச்சயமாக அது அல்லாஹ்விடத்தில் (பாவத்தால்) மிக்க மகத்தானதாக இருக்கிறது.

54. ஒரு விஷயத்தை நீங்கள் வெளிப்படுத்தினாலும், அல்லது அதனை மறைத்துக் கொண்டாலும் அப்பொழுது நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொருபொருளைப் பற்றியும் நன்கு அறிகிறவனாக இருக்கிறான்.

لَا جُنَاحَ عَلَيْهِنَّ فِيْٓ اٰبَآئِهِنَّ وَلَآ اَبْنَآئِهِنَّ وَلَآ اِخْوَانِهِنَّ
وَلَآ اَبْنَآءِ اِخْوَانِهِنَّ وَلَآ اَبْنَآءِ اَخَوٰتِهِنَّ وَلَا نِسَآئِهِنَّ وَلَا
مَا مَلَكَتْ اَيْمَانُهُنَّ ۚ وَاتَّقِيْنَ اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلٰى كُلِّ
شَيْءٍ شَهِيْدًا ﴿٥٥﴾ اِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ ؕ يٰٓاَيُّهَا
الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا ﴿٥٦﴾ اِنَّ الَّذِيْنَ
يُؤْذُوْنَ اللّٰهَ وَرَسُوْلَهٗ لَعَنَهُمُ اللّٰهُ فِي الدُّنْيَا وَالْاٰخِرَةِ وَاَعَدَّ
لَهُمْ عَذَابًا مُّهِيْنًا ﴿٥٧﴾ وَالَّذِيْنَ يُؤْذُوْنَ الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ
بِغَيْرِ مَا اكْتَسَبُوْا فَقَدِ احْتَمَلُوْا بُهْتَانًا وَّاِثْمًا مُّبِيْنًا ﴿٥٨﴾ ع يٰٓاَيُّهَا ع٧
النَّبِيُّ قُلْ لِّاَزْوَاجِكَ وَبَنٰتِكَ وَنِسَآءِ الْمُؤْمِنِيْنَ يُدْنِيْنَ
عَلَيْهِنَّ مِنْ جَلَابِيْبِهِنَّ ؕ ذٰلِكَ اَدْنٰٓى اَنْ يُّعْرَفْنَ فَلَا يُؤْذَيْنَ ؕ
وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا ﴿٥٩﴾ لَئِنْ لَّمْ يَنْتَهِ الْمُنٰفِقُوْنَ وَ
الَّذِيْنَ فِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ وَّالْمُرْجِفُوْنَ فِي الْمَدِيْنَةِ
لَنُغْرِيَنَّكَ بِهِمْ ثُمَّ لَا يُجَاوِرُوْنَكَ فِيْهَآ اِلَّا قَلِيْلًا ۛۚ ﴿٦٠﴾ مَّلْعُوْنِيْنَ ۛۚ معانقة ١٢ عند المتاخرين ١٢
اَيْنَمَا ثُقِفُوْٓا اُخِذُوْا وَقُتِّلُوْا تَقْتِيْلًا ﴿٦١﴾ سُنَّةَ اللّٰهِ فِي
الَّذِيْنَ خَلَوْا مِنْ قَبْلُ ۚ وَلَنْ تَجِدَ لِسُنَّةِ اللّٰهِ تَبْدِيْلًا ﴿٦٢﴾ الربع

55. (நபியுடைய மனைவியர்) தங்களுடைய தந்தைகள் (முன்பாகவும்), தங்கள் ஆண் மக்கள் (முன்பாகவும்), தங்கள் சகோதரர்கள் (முன்பாகவும்), தங்கள் சகோதரர்களின் புதல்வர்கள் (முன்பாகவும்), தங்கள் சகோதரிகளின் புதல்வர்கள் (முன்பாகவும்), தங்கள் பெண்கள் (முன்பாகவும்), தங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களி(ன் முன்பாக வருவதி)லும் அவர்களின் மீது குற்றமில்லை. மேலும், நீங்கள் அல்லாஹ்வுக்கு பயந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் சாட்சியாளனாக இருக்கிறான்.

56. நிச்சயமாக அல்லாஹ்வும், அவனுடைய மலக்குகளும் நபியின் மீது ஸலவாத்து(அருள், பிரார்த்தனை)ச் செய்கிறார்கள்; (ஆகவே) விசுவாசிகளே ! நீங்கள் அவர் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள்; ஸலாமும் கூறுங்கள்.

57. நிச்சயமாக, அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் துன்புறுத்து கிறார்களே அத்தகையோர்_அவர்களை அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் சபித்து விட்டான்; இழிவு தரும் வேதனையையும் அவர்களுக்கு தயார் செய்து வைத்திருக்கிறான்.

58. மேலும், விசுவாசங்கொண்ட ஆண்களையும், விசுவாசங்கொண்ட பெண்களையும் அவர்கள் செய்யாத (குற்றத்)தை(ச் செய்ததாக)க் கூறி துன்புறுத்துகிறார்களே அத்தகையவர்கள், நிச்சயமாக(ப் பெரும்) அவதூறையும், பகிரங்கமான பாவத்தையும் சுமந்து கொண்டனர்.

59. நபியே! உம்முடைய மனைவியருக்கும், உம்முடைய புதல்விகளுக்கும் , விசுவாசிகளின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலை முந்தானைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு நீர் கூறுவீராக! அதனால் அவர்கள் (சுதந்திர மானவர்கள் என) அறியப்படுவதற்கு இது மிக நெருக்கமானதாகும்; அப்போது அவர்கள்(பிறரால்) நோவினை செய்யப்படமாட்டார்கள்; இன்னும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக்கிருபையுடையவனாக இருக்கிறான்.

60. (நபியே! வேஷதாரிகளான) முனாஃபிக்குகளும், எவர்களுடைய இதயத்தில் (பாவ)நோய் உள்ளதோ அத்தகையோரும், மதீனாவில் பொய்யான விஷயங்களை மக்களுக்கு மத்தியில் பரப்பக்கூடியவர்களும் , (தங்களின் இச்செயலிலிருந்து) விலகிக் கொள்ளாவிடில், நிச்சயமாக நாம் உம்மை அவர்களின் மீது சாட்டிவிடுவோம்; பின்னர், வெகு சொற்பமே தவிர (மதீனாவாகிய )அதில் உம் அண்டை வீட்டினராக அவர்கள் வசித்திருக்க மாட்டார்கள்.

61. சபிக்கப்பட்டவர்களாக (அவர்கள் இருப்பர் ,ஆகவே) அவர்கள் எங்கு காணப்பட்ட போதிலும் பிடிக்கப் படுவார்கள் , இன்னும் கொன்றொழிக்கப் படுவார்கள்.

62. இதற்கு முன் சென்று விட்டார்களே அத்தகையோரில் அல்லாஹ்வின் வழி முறை(இது)தான்; ஆகவே, (நபியே!) நீர் அல்லாஹ்வுடைய வழிமுறையில் யாதொரு மாறுதலையும் காணவே மாட்டீர்.

يَسْأَلُكَ النَّاسُ عَنِ السَّاعَةِ ؕ قُلْ إِنَّمَا عِلْمُهَا عِنْدَ اللّٰهِ ؕ وَمَا
يُدْرِيكَ لَعَلَّ السَّاعَةَ تَكُونُ قَرِيبًا ﴿٦٣﴾ إِنَّ اللّٰهَ لَعَنَ الْكٰفِرِينَ
وَأَعَدَّ لَهُمْ سَعِيرًا ﴿٦٤﴾ خٰلِدِينَ فِيهَا أَبَدًا ۚ لَا يَجِدُونَ وَلِيًّا وَّلَا
نَصِيرًا ﴿٦٥﴾ يَوْمَ تُقَلَّبُ وُجُوهُهُمْ فِي النَّارِ يَقُولُونَ يٰلَيْتَنَا أَطَعْنَا
اللّٰهَ وَأَطَعْنَا الرَّسُولَا ﴿٦٦﴾ وَقَالُوا رَبَّنَا إِنَّا أَطَعْنَا سَادَتَنَا وَكُبَرَاءَنَا
فَأَضَلُّونَا السَّبِيلَا ﴿٦٧﴾ رَبَّنَا آتِهِمْ ضِعْفَيْنِ مِنَ الْعَذَابِ وَالْعَنْهُمْ
لَعْنًا كَبِيرًا ﴿٦٨﴾ يٰأَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَكُونُوا كَالَّذِينَ آذَوْا ع ۸ ۵
مُوسٰى فَبَرَّأَهُ اللّٰهُ مِمَّا قَالُوا ؕ وَكَانَ عِنْدَ اللّٰهِ وَجِيهًا ﴿٦٩﴾
يٰأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللّٰهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا ﴿٧٠﴾ يُصْلِحْ
لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ؕ وَمَنْ يُطِعِ اللّٰهَ وَرَسُولَهُ
فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا ﴿٧١﴾ إِنَّا عَرَضْنَا الْأَمَانَةَ عَلَى السَّمٰوٰتِ
وَالْأَرْضِ وَالْجِبَالِ فَأَبَيْنَ أَنْ يَحْمِلْنَهَا وَأَشْفَقْنَ مِنْهَا وَ
حَمَلَهَا الْإِنْسَانُ ؕ إِنَّهُ كَانَ ظَلُومًا جَهُولًا ﴿٧٢﴾ لِيُعَذِّبَ اللّٰهُ
الْمُنٰفِقِينَ وَالْمُنٰفِقٰتِ وَالْمُشْرِكِينَ وَالْمُشْرِكٰتِ وَيَتُوبَ
اللّٰهُ عَلَى الْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنٰتِ ؕ وَكَانَ اللّٰهُ غَفُورًا رَحِيمًا ﴿٧٣﴾ ع ۹ ۵ ۶

63. (நபியே!) மறுமை நாளைப்பற்றி ("அது எப்பொழுது" என்று) உம்மிடம் மனிதர்கள் கேட்கின்றனர்; (அதற்கு) நீர் கூறும்: ("அது எப்பொழுது என்ற) அதன் அறிவெல்லாம் அல்லாஹ்விடம் (மட்டும்)தான் இருக்கின்றது;" மேலும், மறுமை நாள் சமீபத்தில் வந்து விடக்கூடும் என உமக்கு எது அறிவித்துக் கொடுக்கும்?

64. நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்போரைச் சபித்துவிட்டான்; கொழுந்து விட்டெரியும் நெருப்பை அவர்களுக்குத் தயார் செய்தும் வைத்திருக்கின்றான்.

65. அவர்கள் என்றென்றும் அதில் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; (அவர்களைக்) காப்பவரையும், (அவர்களுக்கு) உதவி செய்பவரையும் அவர்கள் (அங்கு) காணமாட்டார்கள்.

66. அவர்களுடைய முகங்கள் (நரக) நெருப்பில் புரட்டப்படும் நாளில், "நாங்கள் அல்லாஹ்வுக்கு வழிபட்டிருக்க வேண்டுமே! (அவனுடைய) தூதருக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமே" என்று கூறுவார்கள்.

67. மேலும் "எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நாங்கள் எங்களுடைய தலைவர்களுக்கும், எங்கள் பெரியோர்களுக்கும் கீழ்ப்படிந்தோம்; ஆகவே, அவர்கள் எங்களை வழி தவறச்செய்து விட்டார்கள்."

68. ஆகவே "எங்கள் இரட்சகனே! நீ அவர்களுக்கு வேதனையில் இருமடங்கை கொடுப்பாயாக! இன்னும், பெரும் சாபமாக அவர்களைச் சபிப்பாயாக!" (என்றும் கூறுவார்கள்).

69. விசுவாசங்கொண்டோரே! மூஸாவை நோவினை செய்தார்களே அவர்களைப் போல் நீங்கள் ஆகிவிடவேண்டாம்; பின்னர், அவர்கள் கூறியதிலிருந்து அல்லாஹ் அவரை நிரபராதியாக்கி விட்டான்; மேலும், அவர் அல்லாஹ்விடத்தில் பெரும் தகுதியுடையவராக இருந்தார்.

70. (ஆகவே) விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்; நேர்மையான கூற்றையே கூறுங்கள்.

71. (அவ்வாறு நீங்கள் செய்தால்) அவன் உங்களுடைய செயல்களை உங்களுக்குச் சீர் படுத்தி வைப்பான்; உங்களுடைய குற்றங்களையும் மன்னிப்பான்; மேலும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப் படிகின்றாரோ அப்போது அவர், திட்டமாக மகத்தான வெற்றியாக வெற்றியடைந்து விட்டார்.

72. நிச்சயமாக நாம் அமானிதத்தை வானங்கள், பூமி, மலைகள் ஆகியவற்றின் மீது (அதைச் சுமந்து கொள்ளுமாறு) எடுத்துக் காட்டினோம்; அப்போது அதைச் சுமந்து கொள்வதிலிருந்து அவை விலகிக்கொண்டன; இன்னும், அ(தைச் சுமப்ப)திலிருந்து அவை பயந்தன; (ஆனால்) மனிதனோ அதனைச்சுமந்து கொண்டான்; நிச்சயமாக அவன் (அமானிதத்தை நிறைவேற்றும் விஷயத்தில்) பெரும் அநியாயக்காரனாக (அதன் கடமையை) அறியாதவனாக இருக்கின்றான்.

73. (அத்தகைய அமானிதத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு மாறாக நடக்கும்) முனாஃபிக்கான (வேஷதாரிகளான) ஆண்களையும், முனாஃபிக்கான பெண்களையும், இணை வைத்துக் கொண்டிருக்கும் ஆண்களையும், இணை வைத்துக் கொண்டிருக்கும் பெண்களையும் அல்லாஹ் வேதனை செய்வதற்காகவும், (அந்த அமானிதத்தை ஏற்றபின் மதித்து நடக்கும்) விசுவாசிகளான ஆண்களையும், விசுவாசிகளான பெண்களையும் அவர்களுடைய தவ்பாவை ஏற்று மன்னிப்பதற்காகவும் (இவ்வாறு எடுத்துக்காட்டினான்). மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையவனாக இருக்கின்றான்.

سُوْرَةُ سَبَاٍ مَكِّيَّةٌ وَهِيَ اَرْبَعٌ وَّخَمْسُوْنَ اٰيَةً وَّسِتُّ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ وَلَهُ
الْحَمْدُ فِي الْاٰخِرَةِ ؕ وَهُوَ الْحَكِيْمُ الْخَبِيْرُ ۝١ يَعْلَمُ مَا يَلِجُ فِي
الْاَرْضِ وَمَا يَخْرُجُ مِنْهَا وَمَا يَنْزِلُ مِنَ السَّمَآءِ وَمَا يَعْرُجُ
فِيْهَا ؕ وَهُوَ الرَّحِيْمُ الْغَفُوْرُ ۝٢ وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْا لَا تَاْتِيْنَا
السَّاعَةُ ؕ قُلْ بَلٰى وَرَبِّيْ لَتَاْتِيَنَّكُمْ عٰلِمِ الْغَيْبِ ۚ لَا يَعْزُبُ عَنْهُ
مِثْقَالُ ذَرَّةٍ فِي السَّمٰوٰتِ وَلَا فِي الْاَرْضِ وَلَاۤ اَصْغَرُ مِنْ ذٰلِكَ
وَلَاۤ اَكْبَرُ اِلَّا فِيْ كِتٰبٍ مُّبِيْنٍ ۝٣ ۙ لِّيَجْزِيَ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا
الصّٰلِحٰتِ ؕ اُولٰٓئِكَ لَهُمْ مَّغْفِرَةٌ وَّرِزْقٌ كَرِيْمٌ ۝٤ وَالَّذِيْنَ
سَعَوْ فِيْۤ اٰيٰتِنَا مُعٰجِزِيْنَ اُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ مِّنْ رِّجْزٍ
اَلِيْمٌ ۝٥ وَيَرَى الَّذِيْنَ اُوْتُوا الْعِلْمَ الَّذِيْۤ اُنْزِلَ اِلَيْكَ مِنْ
رَّبِّكَ هُوَ الْحَقَّ ۙ وَيَهْدِيْۤ اِلٰى صِرَاطِ الْعَزِيْزِ الْحَمِيْدِ ۝٦
وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْا هَلْ نَدُلُّكُمْ عَلٰى رَجُلٍ يُّنَبِّئُكُمْ
اِذَا مُزِّقْتُمْ كُلَّ مُمَزَّقٍ ۙ اِنَّكُمْ لَفِيْ خَلْقٍ جَدِيْدٍ ۝٧ ۚ

அத்தியாயம் : 34

## ஸபஉ _ ஸபஉ எனும் நகரம்

வசனங்கள் : 54 மக்கீ ருகூஉகள் : 6

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். அவன் எத்தகையவனென்றால், வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியதாகும். மறுமையிலும் சகல புகழும் அவனுக்கே உரியதாகும்; மேலும், அவன் தீர்க்கமான அறிவுடையவன்; (யாவையும்) நன்குணர்பவன்.

2. பூமிக்குள் நுழைகின்றதையும், அதிலிருந்து வெளிப்படுகின்றதையும், வானத்திலிருந்து இறங்குகின்றதையும், அதில் ஏறுகின்றதையும் அவன் அறிவான்; மேலும், அவன் மிகக் கிருபையுடையவன்; மிக்க மன்னிப்பவன்.

3. மேலும் நிராகரிப்போர், "மறுமை நாள் நமக்கு (வரவே) வராது" என்று கூறுகின்றனர்; (நபியே!) நீர் கூறுவீராக: "அவ்வாறல்ல! மறைவானவற்றை அறியக்கூடிய என் இரட்சகனின் மீது சத்தியமாக, நிச்சயமாக அது உங்களிடம் வந்தே தீரும்; வானங்களிலோ, பூமியிலோ (உள்ளவற்றில்) ஓர் அணுவளவும் அவனை விட்டும் மறையாது; இன்னும், அதைவிட மிகச் சிறியதோ, மிகப்பெரியதோ (ஒவ்வொன்றும் லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) தெளிவான புத்தகத்தில் இல்லாமலில்லை."

4. விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்தோருக்கு (அந்நாளில்) அவன் கூலி கொடுப்பதற்காக_ (அவ்வாறு அதில் பதியப்பட்டுள்ளது); அத்தகையோர்_ அவர்களுக்கு மன்னிப்பும், கண்ணியமான உணவும் உண்டு.

5. மேலும், நம்முடைய வசனங்கள் விஷயத்தில் (நம்மை) இயலாமையிலாக்குகின்ற (எண்ணங்கொண்ட)வர்களாக (நமக்கு எதிராக) முயற்சி செய்தார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு வேதனையில் துன்புறுத்தும் வேதனையுண்டு.

6. (நபியே!) இன்னும், (வேதக்) கல்வி கொடுக்கப்பட்டார்களே அத்தகையோர்_ உமதிரட்சகனிடமிருந்து உமக்கு இறக்கிவைக்கப்பட்ட (இவ்வேதத்)தை, இதுவே உண்மை(யான வேதம்) என்றும், யாவரையும் மிகைத்த, மிக்க புகழுக்குரியவனின் நேரான வழியின்பால் இது வழிகாட்டும் என்றும் காண்கிறார்கள்.

7. இன்னும், நிராகரிக்கிறார்களே அவர்கள், (மற்றவர்களிடம்,) "நீங்கள் (இறந்து மக்கி) முற்றிலுமாக துண்டு துண்டாக ஆக்கப்பட்டுவிடுவீர்களானால், நிச்சயமாக நீங்கள் (மீண்டும்) புதிய படைப்பில் இருப்பீர்களென்று உங்களுக்குத் தெரிவிக்கும் ஒரு மனிதனை நாம் உங்களுக்கு அறிவிக்கவா?" என்று (பரிகாசமாகக்) கேட்கின்றனர்.

اَفْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا اَمْ بِهٖ جِنَّةٌ ؕ بَلِ الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ
بِالْاٰخِرَةِ فِى الْعَذَابِ وَالضَّلٰلِ الْبَعِيْدِ ﴿٨﴾ اَفَلَمْ يَرَوْا اِلٰى مَا
بَيْنَ اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ مِّنَ السَّمَآءِ وَالْاَرْضِ ؕ اِنْ نَّشَاْ نَخْسِفْ
بِهِمُ الْاَرْضَ اَوْ نُسْقِطْ عَلَيْهِمْ كِسَفًا مِّنَ السَّمَآءِ ؕ اِنَّ فِىْ ذٰلِكَ
ع ٩ لَاٰيَةً لِّكُلِّ عَبْدٍ مُّنِيْبٍ ﴿٩﴾ وَلَقَدْ اٰتَيْنَا دَاوٗدَ مِنَّا فَضْلًا ؕ
يٰجِبَالُ اَوِّبِىْ مَعَهٗ وَالطَّيْرَ ۚ وَاَلَنَّا لَهُ الْحَدِيْدَ ﴿١٠﴾ اَنِ اعْمَلْ
سٰبِغٰتٍ وَّقَدِّرْ فِى السَّرْدِ وَاعْمَلُوْا صَالِحًا ؕ اِنِّىْ بِمَا تَعْمَلُوْنَ
بَصِيْرٌ ﴿١١﴾ وَلِسُلَيْمٰنَ الرِّيْحَ غُدُوُّهَا شَهْرٌ وَّرَوَاحُهَا شَهْرٌ ۚ وَ
اَسَلْنَا لَهٗ عَيْنَ الْقِطْرِ ؕ وَمِنَ الْجِنِّ مَنْ يَّعْمَلُ بَيْنَ يَدَيْهِ بِاِذْنِ
رَبِّهٖ ؕ وَمَنْ يَّزِغْ مِنْهُمْ عَنْ اَمْرِنَا نُذِقْهُ مِنْ عَذَابِ السَّعِيْرِ ﴿١٢﴾
يَعْمَلُوْنَ لَهٗ مَا يَشَآءُ مِنْ مَّحَارِيْبَ وَتَمَاثِيْلَ وَجِفَانٍ كَالْجَوَابِ
وَقُدُوْرٍ رّٰسِيٰتٍ ؕ اِعْمَلُوْۤا اٰلَ دَاوٗدَ شُكْرًا ؕ وَقَلِيْلٌ مِّنْ عِبَادِىَ
الشَّكُوْرُ ﴿١٣﴾ فَلَمَّا قَضَيْنَا عَلَيْهِ الْمَوْتَ مَا دَلَّهُمْ عَلٰى مَوْتِهٖۤ
اِلَّا دَآبَّةُ الْاَرْضِ تَاْكُلُ مِنْسَاَتَهٗ ۚ فَلَمَّا خَرَّ تَبَيَّنَتِ الْجِنُّ
اَنْ لَّوْ كَانُوْا يَعْلَمُوْنَ الْغَيْبَ مَا لَبِثُوْا فِى الْعَذَابِ الْمُهِيْنِ ﴿١٤﴾

8. "அல்லாஹ்வின் மீது அவர் பொய்யை இட்டுக்கட்டுகிறாரா? அல்லது அவருக்குப் பைத்தியமா?" (என்றும் கூறுகின்றனர்.) அல்ல! மறுமையை நம்பவில்லையே அவர்கள் தாம் (பெரும்) வேதனையிலும், வெகுதூரமான வழிகேட்டிலும் இருக்கின்றனர்.

9. வானத்திலும், பூமியிலும், அவர்களுக்கு முன்னிருப்பதையும், பின்னிருப்பதையும் அவர்கள் பார்க்கவில்லையா? நாம் நாடினால் அவர்களை பூமிக்குள் அழுந்தச்செய்துவிடுவோம்; அல்லது வானத்திலிருந்து பல துண்டுகளை அவர்கள் மேல் விழச்செய்து (அவர்களை அழித்து) விடுவோம்; நிச்சயமாக தவ்பாச்செய்து (அல்லாஹ்வின்பக்கமே) திரும்பும் ஒவ்வோர் அடியானுக்கும் இதில் ஓர் அத்தாட்சி இருக்கின்றது.

10. இன்னும் திட்டமாக நாம் தாவூதுக்கு நம்மிடமிருந்து பேரருளைக் கொடுத்தோம்; "மலைகளே! நீங்கள் அவருடன் (சேர்ந்து) துதி(யை எதிரொலிக்கச் செய்)யுங்கள்" (என்று கூறினோம்); இன்னும் பறவைகளையும் (வசப்படுத்திக் கொடுத்தோம்.) அன்றியும், அவருக்கு இரும்பை மிருதுவாக்கியிருந்தோம்.

11. (மேலும்)" நிறைவான போர்க்கவசங்களைச் செய்வீராக! அவற்றின் வளையங்களில் (அளவை) ஒழுங்கு படுத்துவீராக" என்றும், "நீங்கள் நற்கருமங்களையே செய்துகொண்டிருங்கள்; நிச்சயமாக நான் நீங்கள் செய்பவற்றை பார்க்கிறவன்" (என்றும் கூறினோம்).

12. இன்னும், ஸுலைமானுக்குக் காற்றை (நாம் வசப்படுத்திக் கொடுத்தோம்.) அதன் காலைப் பயணம் ஒரு மாத தூரமும், அதன் மாலைப் பயணம் ஒரு மாத தூரமாகவும் இருந்தது; மேலும், நாம் அவருக்காக செம்பு ஊற்றை (தண்ணீரைப் போன்று உருகி) ஓடச்செய்தோம்; தன் இரட்சகனுடைய அனுமதிப்படி அவருக்குமுன் வேலை செய்யக்கூடிய ஜின்களையும் (நாம் அவருக்கு வசப்படுத்திக் கொடுத்தோம்;) அவர்களில் எவர் நம்முடைய கட்டளையை விட்டும் (புறக்கணித்துத்) திரும்புகின்றாரோ அவரை, கொழுந்து விட்டெரியும் (நரக) வேதனையிலிருந்து சுவைக்குமாறு நாம் செய்வோம் (என்று கூறினோம்).

13. அவைகள் (ஸுலைமானாகிய) அவர் நாடிய, மிஹ்ராபுகளை (பள்ளிகள், கோட்டைகள் உயர்ந்த குடியிருப்புத்தலங்கள் ஆகியவற்றை)யும், சிற்பங்களையும், (பெரிய பெரிய தண்ணீர்த்) தடாகங்களைப்போன்ற பெருங்கொப்பரைகளையும், அசைக்கமுடியாத (நிலையான) பெரிய (சமையல்) பாத்திரங்களையும் அவருக்காகச் செய்துகொண்டிருந்தன. (ஆகவே,) "தாவூதுடைய சந்ததிகளே! (நீங்கள் நமக்கு) நன்றி செலுத்துவதற்காக செயல்படுங்கள்; மேலும், என்னுடைய அடியார்களில் நன்றிசெலுத்துவோர் (வெகு) சொற்பமேயாவர்" (என்று கூறினோம்).

14. அவர்மீது நாம் மரணத்தை விதியாக்கிய பொழுது, அவருடைய மரணத்தைப் பற்றி (அவர் சாய்ந்திருந்த) அவருடைய தடியை அரித்துவிட்ட கறையானைத் தவிர, (வேறெதுவும்) அ(ந்த ஜின் இனத்த)வர்களுக்கு அறிவிக்கவில்லை; பின்னர், அவர் கீழே விழவே, "மறைவானதை அறியக்கூடியவர்களாக தாங்கள் இருந்திருந்தால் இழிவான வேதனையில் தாங்கள் தரிப்பட்டிருக்க வேண்டியதில்லையே!" என்று ஜின்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டன.

لَقَدْ كَانَ لِسَبَاٍ فِيْ مَسْكَنِهِمْ اٰيَةٌ ۚ جَنَّتٰنِ عَنْ يَّمِيْنٍ وَّشِمَالٍ ۬ۗ
كُلُوْا مِنْ رِّزْقِ رَبِّكُمْ وَاشْكُرُوْا لَهٗ ؕ بَلْدَةٌ طَيِّبَةٌ وَّرَبٌّ
غَفُوْرٌ ﴿۱۵﴾ فَاَعْرَضُوْا فَاَرْسَلْنَا عَلَيْهِمْ سَيْلَ الْعَرِمِ وَبَدَّلْنٰهُمْ
بِجَنَّتَيْهِمْ جَنَّتَيْنِ ذَوَاتَيْ اُكُلٍ خَمْطٍ وَّاَثْلٍ وَّشَيْءٍ مِّنْ سِدْرٍ
قَلِيْلٍ ﴿۱۶﴾ ذٰلِكَ جَزَيْنٰهُمْ بِمَا كَفَرُوْا ؕ وَهَلْ نُجٰزِيْۤ اِلَّا الْكَفُوْرَ ﴿۱۷﴾
وَجَعَلْنَا بَيْنَهُمْ وَبَيْنَ الْقُرَى الَّتِيْ بٰرَكْنَا فِيْهَا قُرًى ظَاهِرَةً
وَّقَدَّرْنَا فِيْهَا السَّيْرَ ؕ سِيْرُوْا فِيْهَا لَيَالِيَ وَاَيَّامًا اٰمِنِيْنَ ﴿۱۸﴾
فَقَالُوْا رَبَّنَا بٰعِدْ بَيْنَ اَسْفَارِنَا وَظَلَمُوْۤا اَنْفُسَهُمْ فَجَعَلْنٰهُمْ
اَحَادِيْثَ وَمَزَّقْنٰهُمْ كُلَّ مُمَزَّقٍ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّكُلِّ
صَبَّارٍ شَكُوْرٍ ﴿۱۹﴾ وَلَقَدْ صَدَّقَ عَلَيْهِمْ اِبْلِيْسُ ظَنَّهٗ فَاتَّبَعُوْهُ
اِلَّا فَرِيْقًا مِّنَ الْمُؤْمِنِيْنَ ﴿۲۰﴾ وَمَا كَانَ لَهٗ عَلَيْهِمْ مِّنْ سُلْطٰنٍ
اِلَّا لِنَعْلَمَ مَنْ يُّؤْمِنُ بِالْاٰخِرَةِ مِمَّنْ هُوَ مِنْهَا فِيْ شَكٍّ ؕ وَ
رَبُّكَ عَلٰى كُلِّ شَيْءٍ حَفِيْظٌ ﴿۲۱﴾ ع قُلِ ادْعُوا الَّذِيْنَ زَعَمْتُمْ مِّنْ ع ٢ ٨
دُوْنِ اللّٰهِ ۚ لَا يَمْلِكُوْنَ مِثْقَالَ ذَرَّةٍ فِي السَّمٰوٰتِ وَلَا فِي
الْاَرْضِ وَمَا لَهُمْ فِيْهِمَا مِنْ شِرْكٍ وَّمَا لَهٗ مِنْهُمْ مِّنْ ظَهِيْرٍ ﴿۲۲﴾

15. திட்டமாக ஸபஉ (என்னும் ஊர்) வாசிகளுக்கு அவர்கள் வசித்திருந்த இடங்களில் ஒரு (நல்ல) அத்தாட்சியிருந்தது; (அதுவே) வலப் புறத்திலும், இடப் புறத்திலும் (இருந்த) இரு சோலைகள். "உங்கள் இரட்சகனின் உணவிலிருந்து உண்ணுங்கள்; அவனுக்கு நன்றியும் செலுத்தி வாருங்கள்; பரிசுத்தமான நகரம், மிக்க மன்னிப்பளிக்கும் இரட்சகன்" (எனவும் கூறப்பட்டது).

16. ஆனால், அவர்கள் (நம்மைப்) புறக்கணித்துவிட்டனர்; (ஆகவே, "மஆரிப்" அணையை உடைக்கக்கூடிய) பெரு வெள்ளத்தை அவர்கள் மீது நாம் அனுப்பிவைத்தோம்; அவர்களுடைய (சுவைமிகுந்த கனிகளையுடைய) இரு சோலைகளை, கசப்பும் புளிப்புமுள்ள பழங்களையுடைய மரங்களாகவும், சில இலந்தை மரங்களையும் உடைய இரு சோலைகளாகவும் நாம் மாற்றிவிட்டோம்.

17. அவர்கள் நிராகரித்ததன் காரணமாக, இதனை நாம் அவர்களுக்குக் கூலியாகக் கொடுத்தோம்; நிராகரிப்போருக்கே தவிர, (இதுபோன்ற) கூலியை நாம் கொடுப்போமா?

18. இன்னும், அவர்களுக்கிடையேயும், நாம் பரக்கத்துச் செய்திருந்த ஊர்களுக்கிடையேயும் வெளிப்படையாகத் தென்படக்கூடிய பல ஊர்களையும் ஆக்கி, அவைகளில்பிரயாணத்தை நாம் அமைத்தோம்; "இரவுகளிலும், பகல் களிலும் அவற்றில் அச்சமற்றவர்களாகப் பிரயாணம் செய்யுங்கள்" (என்று கூறினோம்.)

19. ஆனால், அவர்கள் "எங்கள் இரட்சகனே! எங்கள் யாத்திரைகளை நெடுந்தூரமாகும்படி செய்வாயாக!" என்று கூறி, தமக்குத் தாமே அவர்கள் அநியாயம் செய்து கொண்டனர்; ஆகவே, அவர்களை(ப்பற்றி அதிசயமாக ஜனங்கள் பேசும்) செய்திகளாக்கிவிட்டோம். இன்னும் அவர்களை (பல ஊர்களில்) சிதறடித்து(ப்பிரித்து) விட்டோம்; பொறுமையுடையவர், நன்றி செலுத்துபவர் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக இதில் (பல) படிப்பினைகள் இருக்கின்றன.

20. நிச்சயமாக (ஸபஉ வாசிகளான)அவர்களைப்பற்றி இப்லீஸ் எண்ணிய எண்ணத்தை அவன் உண்மை ஆக்கிக்கொண்டான்; ஆகவே, விசுவாசங்கொண்ட ஒரு பிரிவினரைத் தவிர, (மற்றவர்கள்) அவனைப் பின்பற்றினர்.

21. மேலும், அவர்கள்மீது அவனுக்கு எவ்வித அதிகாரமும் இருக்கவில்லை_ ஆயினும், மறுமையை நம்பாது அவர்களில் சந்தேகத்திலிருப்போரிலிருந்து (மறுமையை) நம்புபவர் எவர் என்பதை நாம் தெளிவாக அறி(வித்து விடு)வதற்காகவே, (இது நடந்தது.) இன்னும், உமதிரட்சகன் ஒவ்வொரு பொருளையும் பாதுகாப்பவன்.

22. (நபியே!) நீர் கூறுவீராக: "அல்லாஹ்வையன்றி, நீங்கள் (கடவுள்களெனத் தவறாக) எண்ணிக்கொண்டீர்களே அவர்களை, நீங்கள் அழைத்துப் பாருங்கள் ; வானங்களிலோ, பூமியிலோ அவர்கள் ஓர் அணுவளவையும் சொந்தமாக்கிக் கொள்ளமாட்டார்கள்; அவ்விரண்டிலும், அவர்களுக்கு எத்தகைய கூட்டுமில்லை; (இதில்) அவனுக்கு உதவியாளரும் அவர்களில் யாருமில்லை.

وَلَا تَنْفَعُ الشَّفَاعَةُ عِنْدَهٗٓ اِلَّا لِمَنْ اَذِنَ لَهٗ ؕ حَتّٰٓى اِذَا فُزِّعَ
عَنْ قُلُوْبِهِمْ قَالُوْا مَاذَا ۙ قَالَ رَبُّكُمْ ؕ قَالُوا الْحَقَّ ۚ وَهُوَ الْعَلِيُّ
الْكَبِيْرُ ﴿۲۳﴾ قُلْ مَنْ يَّرْزُقُكُمْ مِّنَ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ قُلِ اللّٰهُ ۙ وَ
اِنَّآ اَوْ اِيَّاكُمْ لَعَلٰى هُدًى اَوْ فِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۲۴﴾ قُلْ لَّا تُسْـَٔلُوْنَ
عَمَّآ اَجْرَمْنَا وَلَا نُسْـَٔلُ عَمَّا تَعْمَلُوْنَ ﴿۲۵﴾ قُلْ يَجْمَعُ بَيْنَنَا رَبُّنَا ثُمَّ يَفْتَحُ
بَيْنَنَا بِالْحَقِّ ؕ وَهُوَ الْفَتَّاحُ الْعَلِيْمُ ﴿۲۶﴾ قُلْ اَرُوْنِيَ الَّذِيْنَ اَلْحَقْتُمْ
بِهٖ شُرَكَآءَ كَلَّا ؕ بَلْ هُوَ اللّٰهُ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۲۷﴾ وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا كَآفَّةً
لِّلنَّاسِ بَشِيْرًا وَّنَذِيْرًا وَّلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿۲۸﴾ وَيَقُوْلُوْنَ
مَتٰى هٰذَا الْوَعْدُ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۲۹﴾ قُلْ لَّكُمْ مِّيْعَادُ يَوْمٍ لَّا
تَسْتَاْخِرُوْنَ عَنْهُ سَاعَةً وَّلَا تَسْتَقْدِمُوْنَ ﴿۳۰﴾ ع وَقَالَ الَّذِيْنَ ع ۳ ۹ ۹
كَفَرُوْا لَنْ نُّؤْمِنَ بِهٰذَا الْقُرْاٰنِ وَلَا بِالَّذِيْ بَيْنَ يَدَيْهِ ؕ وَلَوْ
تَرٰٓى اِذِ الظّٰلِمُوْنَ مَوْقُوْفُوْنَ عِنْدَ رَبِّهِمْ ۖۚ يَرْجِعُ بَعْضُهُمْ اِلٰى بَعْضِ
اِۨلْقَوْلَ ۚ يَقُوْلُ الَّذِيْنَ اسْتُضْعِفُوْا لِلَّذِيْنَ اسْتَكْبَرُوْا لَوْلَآ اَنْتُمْ
لَكُنَّا مُؤْمِنِيْنَ ﴿۳۱﴾ قَالَ الَّذِيْنَ اسْتَكْبَرُوْا لِلَّذِيْنَ اسْتُضْعِفُوْٓا اَنَحْنُ
صَدَدْنٰكُمْ عَنِ الْهُدٰى بَعْدَ اِذْ جَآءَكُمْ بَلْ كُنْتُمْ مُّجْرِمِيْنَ ﴿۳۲﴾

23. இன்னும் யாருக்கு அவன் அனுமதி அளித்தானோ அவருக்குத் தவிர அவனிடத்தில் பரிந்துரை பயனளிக்காது; முடிவாக அவர்களுடைய இதயங்களிலிருந்து நடுக்கம் நீக்கப்படுமானால், (அவர்களில் ஒருவர் மற்றவர்களிடம்,) "உங்கள் இரட்சகன் என்ன கூறினான்?" என்று கேட்பார்கள். (அதற்கு மற்றவர்கள்,) "உண்மையையே கூறினான்; அவனோ மிக்க உயர்ந்தவன், மிகப்பெரியவன்" என்று கூறுவார்கள்.

24. (நபியே!) "வானங்களிலிருந்தும், பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார்?" என்று (நிராகரிப்போரிடம்) கேட்பீராக! (அதற்கு பதிலாக) "அல்லாஹ்தான்" என்று கூறுவீராக! இன்னும், நேர் வழியின் மீது, அல்லது பகிரங்கமான வழிகேட்டில் இருப்பது நிச்சயமாக நாங்களா? அல்லது நீங்களா? (என்றும் கேட்பீராக!)

25. (நபியே!) நீர் கூறுவீராக: "நாங்கள் செய்த குற்றங்களைப் பற்றி நீங்கள் கேட்கப்படமாட்டீர்கள்; (அவ்வாறே) நீங்கள் செய்பவற்றைப் பற்றி நாங்களும் கேட்கப்படமாட்டோம்."

26. (மேலும்) நீர் கூறுவீராக: "(மறுமை நாளில்) எங்களுடைய இரட்சகன் நமக்கிடையில் ஒன்று சேர்ப்பான்; பின்னர் நமக்கிடையில் நீதமாகவே தீர்ப்பளிப்பான்; இன்னும் அவனே தீர்ப்பளிப்பவன், (யாவையும்) நன்கறிகிறவன்.

27. (அன்றி) "அவனுக்கு இணையானவர்கள் என(க் கூறி) நீங்கள் அவனுடன் சேர்த்து வைத்தீர்களே அவர்களை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள்! அவ்வாறில்லை! மாறாக, அவன்தான் அல்லாஹ்! யாவரையும் மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்" என்று கூறுவீராக!

28. மேலும், (நபியே!) உம்மை மனிதர்கள் அனைவருக்கும் நன்மாராயங் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி நாம் அனுப்பவில்லை. எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்துகொள்ளமாட்டார்கள்.

29. மேலும், "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இந்த வாக்குறுதி எப்பொழுது (வரும்?") என்று (நபியே! உம்மிடம்) அவர்கள் கேட்கின்றனர்.

30. அதற்கு நீர் கூறுவீராக: "உங்களுக்காக ஒரு நாளின் தவணையிருக்கிறது; அதிலிருந்து நீங்கள் ஒரு நாழிகை பிந்தவும்மாட்டீர்கள்; முந்தவும்மாட்டீர்கள்.

31. "நிச்சயமாக நாங்கள் இந்தக் குர்ஆனையும், இதற்கு முன்னுள்ள (வேதத்)தையும் நம்பவே மாட்டோம்" என்றும் (இந்த) நிராகரிப்போர் கூறுகின்றனர்; ஆகவே இந்த அநியாயக்காரர்கள் தங்கள் இரட்சகன் முன் நிறுத்தப்பட்டவர்களாக நீர் பார்ப்பீராயின், அவர்களில் சிலர் சிலரின்பால் கூற்றைத் திருப்புவர்; (அப்போது) பலவீனமாகக் கருதப்பட்டவர்கள் பெருமையடித்துக் கொண்டிருந்தோரிடம், "நீங்கள் இல்லாவிடில், நிச்சயமாக நாங்கள் விசுவாசங்கொண்டவர்களாகி யிருந்திருப்போம்" என்று கூறுவார்கள்.

32. (அதற்கு அவர்களில்) பெருமையடித்துக்கொண்டிருந்தவர்கள், பலவீனமாகக் கருதப்பட்டவர்களிடம், "உங்களிடம் நேர் வழி வந்ததன் பின்னர், (நீங்கள் அதில் செல்லாது) அதை விட்டும் நாங்களா உங்களை தடுத்தோம்? (அவ்வாறு) இல்லை; நீங்கள் தாம் (அதில் செல்லாது) குற்றவாளிகளாக இருந்தீர்கள்" என்று கூறுவார்கள்.

وَقَالَ الَّذِيْنَ اسْتُضْعِفُوْا لِلَّذِيْنَ اسْتَكْبَرُوْا بَلْ مَكْرُ الَّيْلِ وَ
النَّهَارِ اِذْ تَاْمُرُوْنَنَآ اَنْ نَّكْفُرَ بِاللّٰهِ وَنَجْعَلَ لَهٗٓ اَنْدَادًا ؕ وَاَسَرُّوا
النَّدَامَةَ لَمَّا رَاَوُا الْعَذَابَ ؕ وَجَعَلْنَا الْاَغْلٰلَ فِيْٓ اَعْنَاقِ الَّذِيْنَ
كَفَرُوْا ؕ هَلْ يُجْزَوْنَ اِلَّا مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۳۳﴾ وَمَآ اَرْسَلْنَا فِيْ قَرْيَةٍ
مِّنْ نَّذِيْرٍ اِلَّا قَالَ مُتْرَفُوْهَآ ۙ اِنَّا بِمَآ اُرْسِلْتُمْ بِهٖ كٰفِرُوْنَ ﴿۳۴﴾ وَ
قَالُوْا نَحْنُ اَكْثَرُ اَمْوَالًا وَّاَوْلَادًا ۙ وَّمَا نَحْنُ بِمُعَذَّبِيْنَ ﴿۳۵﴾ قُلْ
اِنَّ رَبِّيْ يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَّشَآءُ وَيَقْدِرُ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ
لَا يَعْلَمُوْنَ ﴿۳۶﴾ ع وَمَآ اَمْوَالُكُمْ وَلَآ اَوْلَادُكُمْ بِالَّتِيْ تُقَرِّبُكُمْ ع ۴ ۱۰
عِنْدَنَا زُلْفٰٓى اِلَّا مَنْ اٰمَنَ وَعَمِلَ صَالِحًا ۫ فَاُولٰٓئِكَ لَهُمْ
جَزَآءُ الضِّعْفِ بِمَا عَمِلُوْا وَهُمْ فِي الْغُرُفٰتِ اٰمِنُوْنَ ﴿۳۷﴾ وَ
الَّذِيْنَ يَسْعَوْنَ فِيْٓ اٰيٰتِنَا مُعٰجِزِيْنَ اُولٰٓئِكَ فِي الْعَذَابِ
مُحْضَرُوْنَ ﴿۳۸﴾ قُلْ اِنَّ رَبِّيْ يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَّشَآءُ
مِنْ عِبَادِهٖ وَيَقْدِرُ لَهٗ ؕ وَمَآ اَنْفَقْتُمْ مِّنْ شَيْءٍ فَهُوَ
يُخْلِفُهٗ ۚ وَهُوَ خَيْرُ الرّٰزِقِيْنَ ﴿۳۹﴾ وَيَوْمَ يَحْشُرُهُمْ جَمِيْعًا
ثُمَّ يَقُوْلُ لِلْمَلٰٓئِكَةِ اَهٰٓؤُلَآءِ اِيَّاكُمْ كَانُوْا يَعْبُدُوْنَ ﴿۴۰﴾

33. அன்றியும், பலவீனமாகக் கருதப்பட்டவர்கள், பெருமையடித்துக் கொண்டிருந்தவர்களிடம்,"அவ்வாறல்ல! நாங்கள் அல்லாஹ்வை நிராகரிப்பதற்கும், அவனுக்குச் சமமானவர்களை(_கூட்டுக்காரர்களை) நாங்கள் ஆக்குவதற்கும் நீங்கள் எங்களை ஏவிய பொழுது, (உங்களுக்குக் கீழ்ப்படியச்செய்தது)இரவிலும், பகலிலும் (எங்களுக்கு நீங்கள்) செய்த சூழ்ச்சியாகும். "இன்னும், அவர்கள் (யாவருமே) வேதனையைக் (கண்ணால்) காணும் சமயத்தில், தங்கள் கைசேதத்தை (தங்களுக்குள்) மறைத்துக்கொள்வார்கள்; மேலும், நிராகரித்தோருடைய கழுத்துகளில் நாம் விலங்குகளை ஆக்குவோம்; அவர்கள் செய்து கொண்டிருந்ததற்கல்லாமல் (வேறெதற்கும்) அவர்கள் கூலி கொடுக்கப்படுவார்களா?

34. இன்னும், எந்த ஊருக்கும்_ அங்கிருந்த செல்வந்தர்கள், "நிச்சயமாக நீங்கள் எதைக் கொண்டு அனுப்பப்பட்டீர்களோ அதை நாங்கள் நிராகரிக்கின்றோம்" என்று கூறியே தவிர, நாம் அச்சமூட்டி எச்சரிப்போரை அனுப்பவில்லை.

35. அன்றியும்," செல்வங்களாலும், மக்களாலும் நாங்கள் மிக அதிகமானவர்கள்; (ஆகவே மறுமையில்) நாங்கள் வேதனை செய்யப்படுபவர்களும் அல்லர்" என்றும் அவர்கள் கூறினர்.

36. (அதற்கு நபியே!) நீர் கூறுவீராக: "நிச்சயமாக என் இரட்சகன், தான் நாடியவர்களுக்கு சம்பத்தை விசாலமாகவும் கொடுக்கின்றான்; (தான் நாடியவர்களுக்கு அளவோடு) சுருக்கியும் கொடுக்கின்றான்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (அதன் கருத்தை) அறிந்து கொள்ளமாட்டார்கள்.

37. உங்களுடைய செல்வங்களோ, உங்களுடைய மக்களோ உங்களை நம்மிடத்தில் சமீபமாக நெருக்கிவைப்பவர்கள் அல்லர்_ விசுவாசங்கொண்டு நற்செயல்களும் செய்தவரைத்தவிர_ அவர்களுக்கு அவர்கள் செய்த (நல்) வினையின் காரணமாக இரட்டிப்பான கூலியுண்டு; அவர்களோ (சுவனபதியிலுள்ள) உயர்ந்த மாளிகைகளில் நிம்மதியாக இருப்பவர்கள்.

38. மேலும், நம்முடைய வசனங்கள் விஷயத்தில் இயலாமையிலாக்குகின்ற (எண்ணங்கொண்ட)வர்களாக முயற்சிக்கின்றார்களே அத்தகையோர்_ (மறுமையில்) நரக வேதனையில் முன்னிலைப்படுத்தப்(பட்டு சேர்க்கப்)படுபவர்கள்.

39. (நபியே!) நீர் கூறுவீராக:"நிச்சயமாக என் இரட்சகன், தன் அடியார்களில் தான் நாடியவர்களுக்கு, வாழ்வாதாரத்தை விசாலப் படுத்துகிறான்; (தான் விரும்பியவர்களுக்கு) அளவோடும் கொடுக்கிறான். எந்தப் பொருளை நீங்கள் செலவு செய்த போதிலும் அதற்குப் பகரமானதை அவன் அளிக்கிறான்; இன்னும், வாழ்வாதாரங்களை நல்குவோரில் அவன் மிகச் சிறந்தவன்.

40. (மலக்குகளை வணங்கி வந்த) அவர்கள் அனைவரையும் அவன் (_அல்லாஹ்) ஒன்றுதிரட்டும் நாளை(நினைவு கூருங்கள்). பின்னர் மலக்குகளிடம், இவர்கள்தானா உங்களை வணங்கிக் கொண்டிருந்தவர்கள்? என்று அவன் கேட்பான்.

قَالُوْا سُبْحٰنَكَ اَنْتَ وَلِيُّنَا مِنْ دُوْنِهِمْ ۚ بَلْ كَانُوْا يَعْبُدُوْنَ
الْجِنَّ ۚ اَكْثَرُهُمْ بِهِمْ مُّؤْمِنُوْنَ ﴿٤١﴾ فَالْيَوْمَ لَا يَمْلِكُ بَعْضُكُمْ
لِبَعْضٍ نَّفْعًا وَّلَا ضَرًّا ۭ وَنَقُوْلُ لِلَّذِيْنَ ظَلَمُوْا ذُوْقُوْا عَذَابَ
النَّارِ الَّتِيْ كُنْتُمْ بِهَا تُكَذِّبُوْنَ ﴿٤٢﴾ وَاِذَا تُتْلٰى عَلَيْهِمْ اٰيٰتُنَا
بَيِّنٰتٍ قَالُوْا مَا هٰذَا اِلَّا رَجُلٌ يُّرِيْدُ اَنْ يَّصُدَّكُمْ عَمَّا كَانَ
يَعْبُدُ اٰبَاۗؤُكُمْ ۚ وَقَالُوْا مَا هٰذَآ اِلَّآ اِفْكٌ مُّفْتَرًى ۭ وَقَالَ
الَّذِيْنَ كَفَرُوْا لِلْحَقِّ لَمَّا جَاۗءَهُمْ ۙ اِنْ هٰذَآ اِلَّا سِحْرٌ مُّبِيْنٌ ﴿٤٣﴾
وَمَآ اٰتَيْنٰهُمْ مِّنْ كُتُبٍ يَّدْرُسُوْنَهَا وَمَآ اَرْسَلْنَآ اِلَيْهِمْ قَبْلَكَ
مِنْ نَّذِيْرٍ ﴿٤٤﴾ وَكَذَّبَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۙ وَمَا بَلَغُوْا مِعْشَارَ
مَآ اٰتَيْنٰهُمْ فَكَذَّبُوْا رُسُلِيْ ۣ فَكَيْفَ كَانَ نَكِيْرِ ﴿٤٥﴾ ؏ قُلْ اِنَّمَآ ع ٥ ١١
اَعِظُكُمْ بِوَاحِدَةٍ ۚ اَنْ تَقُوْمُوْا لِلّٰهِ مَثْنٰى وَفُرَادٰى ثُمَّ
تَتَفَكَّرُوْا ۣ مَا بِصَاحِبِكُمْ مِّنْ جِنَّةٍ ۭ اِنْ هُوَ اِلَّا نَذِيْرٌ لَّكُمْ
بَيْنَ يَدَيْ عَذَابٍ شَدِيْدٍ ﴿٤٦﴾ قُلْ مَا سَاَلْتُكُمْ مِّنْ اَجْرٍ
فَهُوَ لَكُمْ ۭ اِنْ اَجْرِيَ اِلَّا عَلَى اللّٰهِ ۚ وَهُوَ عَلٰي كُلِّ شَيْءٍ
شَهِيْدٌ ﴿٤٧﴾ قُلْ اِنَّ رَبِّيْ يَقْذِفُ بِالْحَقِّ ۚ عَلَّامُ الْغُيُوْبِ ﴿٤٨﴾

41. அ(தற்க)வர்கள், "(எங்கள் இரட்சகனே!) நீ மிகப் பரிசுத்தமானவன்; அவர்களன்றி நீதான் எங்கள் பாதுகாவலன்; எனினும், அவர்கள் ஜின்களை வணங்கிக்கொண்டிருந்தனர்; அவர்களில் பெரும்பாலோர் அவர்களை(_அந்த ஜின்களை) விசுவாசித்துமிருந்தவர்கள்" என்று கூறுவார்கள்.

42. "எனவே, இந்நாளில் உங்களில் சிலர் (மற்ற) சிலருக்கு நன்மையோ, தீமையோ செய்ய அதிகாரம் பெற மாட்டார்; (இம்மையில்)அநியாயம் செய்தார்களே அவர்களுக்கு " நீங்கள் எதைப் பொய்யாக்கிக் கொண்டிருந்தீர்களோ அத்தகைய(நரக) நெருப்பின் வேதனையைச்சுவைத்துப் பாருங்கள்" என்றும் நாம் கூறுவோம்.

43. இன்னும் தெளிவான நம்முடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால், "உங்கள் மூதாதையர்கள் வணங்கிக் கொண்டிருந்த வைகளை விட்டும், உங்களைத் தடுத்துவிட நாடுகின்ற ஒரு மனிதரேயன்றி இவர் (வேறு)இல்லை" என்று அவர்கள் கூறுகின்றனர்; மேலும் அவர்கள், (அவர் கூறுகிற) "இது இட்டுக்கட்டப்பட்ட பொய்யேயன்றி வேறில்லை" என்றும் கூறுகின்றனர்; மேலும், (திருக்குர்ஆனாகிய இந்த) உண்மை _ அவர்களிடம் வந்த சமயத்தில், "இது பகிரங்கமான சூனியமேயன்றி (வேறு) இல்லை" என்றும் நிராகரிப்போர் கூறுகின்றனர்.

44. (நபியே! ) இவர்களுக்கு, (இதற்கு முன்னர்)வேதங்களிலிருந்து எதையும் _ அதனை அவர்கள் ஓதுவதற்காக நாம் கொடுக்கவுமில்லை; அச்சமூட்டி எச்சரிக்கக்கூடிய எவரையும் உமக்கு முன்னர் நாம் அவர்களின்பால் அனுப்பவுமில்லை .

45. இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் (நம்முடைய தூதர்களைப்) பொய்யாக்கினார்கள்; இன்னும் அவர்களுக்கு நாம் கொடுத்திருந்ததில், பத்தில் ஒரு பாகத்தையேனும் இவர்கள் அடைந்துவிடவில்லை. பின்னர் அவர்கள் என்னுடைய தூதர்களை (நிராகரித்து)ப் பொய்ப்படுத்தினார்கள்; ஆகவே, (என்னை மறுத்ததன் காரணமாக தண்டனையைக் கொண்டும் , வேதனையைக் கொண்டும் பிடித்த என்னுடைய) மறுப்பு எவ்வாறிருந்தது?

46. "நான் உங்களுக்கு உபதேசிப்பதெல்லாம் ஒரே ஒரு விஷயத்தைப் பற்றிதான்; நீங்கள் இரண்டிரண்டு பேர்களாகவோ, தனித்தனியாகவோ, அல்லாஹ்வுக்காகச் சிறிது எழுந்து (நின்று), பின்னர் (உங்களுக்குள்) சிந்தித்துப்பாருங்கள்" என்று (நபியே! நீர்) கூறுவீராக! "உங்களுடைய சிநேகிதர் (ஆகிய என)க்கு எத்தகைய பைத்தியமுமில்லை; கடினமான வேதனை வருவதற்கு முன்னர் அவர் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவரேதவிர வேறில்லை"(என்பதைத் தெளிவாக உணர்வீர்கள்).

47. (நபியே ! மேலும்) நீர் கூறுவீராக : "நான் உங்களிடம் எவ்விதக் கூலியையும் கேட்கவில்லை; அவ்வாறாயின் அது உங்களுக்கே உரியது; என்னுடைய கூலி அல்லாஹ்விடமேயன்றி (உங்களிடம்) இல்லை_ அவனோ ஒவ்வொரு பொருளின் மீதும் சாட்சியாக இருக்கிறான்."

48. (மேலும்) நீர் கூறுவீராக: "நிச்சயமாக எனது இரட்சகன் உண்மையைப் போடுகின்றான்; (அது பொய்யை அழித்து மேலோங்கி விடுகிறது) மறைவானவற்றை(அவன்) மிக அறிந்தவன்."

قُلْ جَآءَ الْحَقُّ وَمَا يُبْدِئُ الْبَاطِلُ وَمَا يُعِيدُ ﴿٤٩﴾ قُلْ إِنْ
ضَلَلْتُ فَإِنَّمَآ أَضِلُّ عَلَىٰ نَفْسِي ۖ وَإِنِ اهْتَدَيْتُ فَبِمَا يُوحِيٓ
إِلَيَّ رَبِّي ۚ إِنَّهُۥ سَمِيعٌ قَرِيبٌ ﴿٥٠﴾ وَلَوْ تَرَىٰٓ إِذْ فَزِعُوا فَلَا فَوْتَ
وَأُخِذُوا مِن مَّكَانٍ قَرِيبٍ ﴿٥١﴾ وَقَالُوٓا آمَنَّا بِهِۦ ۖ وَأَنَّىٰ لَهُمُ
التَّنَاوُشُ مِن مَّكَانٍۭ بَعِيدٍ ﴿٥٢﴾ وَقَدْ كَفَرُوا بِهِۦ مِن قَبْلُ ۖ
وَيَقْذِفُونَ بِالْغَيْبِ مِن مَّكَانٍۭ بَعِيدٍ ﴿٥٣﴾ وَحِيلَ بَيْنَهُمْ وَبَيْنَ مَا
يَشْتَهُونَ كَمَا فُعِلَ بِأَشْيَاعِهِم مِّن قَبْلُ ۚ إِنَّهُمْ كَانُوا فِي شَكٍّ مُّرِيبٍ ﴿٥٤﴾ ع ٦ ٩ ١٢

## سُورَةُ فَاطِرٍ مَكِّيَّةٌ وَهِيَ خَمْسٌ وَأَرْبَعُونَ آيَةً وَخَمْسُ رُكُوعَاتٍ

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ ○

الْحَمْدُ لِلَّهِ فَاطِرِ السَّمَٰوَٰتِ وَالْأَرْضِ جَاعِلِ الْمَلَٰٓئِكَةِ رُسُلًا
أُولِيٓ أَجْنِحَةٍ مَّثْنَىٰ وَثُلَٰثَ وَرُبَٰعَ ۚ يَزِيدُ فِي الْخَلْقِ مَا يَشَآءُ ۚ إِنَّ اللَّهَ
عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ ﴿١﴾ مَا يَفْتَحِ اللَّهُ لِلنَّاسِ مِن رَّحْمَةٍ فَلَا مُمْسِكَ
لَهَا ۖ وَمَا يُمْسِكْ فَلَا مُرْسِلَ لَهُۥ مِنۢ بَعْدِهِۦ ۚ وَهُوَ الْعَزِيزُ الْحَكِيمُ ﴿٢﴾
يَٰٓأَيُّهَا النَّاسُ اذْكُرُوا نِعْمَتَ اللَّهِ عَلَيْكُمْ ۚ هَلْ مِنْ خَٰلِقٍ غَيْرُ اللَّهِ
يَرْزُقُكُم مِّنَ السَّمَآءِ وَالْأَرْضِ ۚ لَآ إِلَٰهَ إِلَّا هُوَ ۖ فَأَنَّىٰ تُؤْفَكُونَ ﴿٣﴾

49. (நபியே) நீர் கூறுவீராக: "உண்மை (மார்க்கம்) வந்துவிட்டது; பொய் புதிதாக ஒன்றையும் (இதுவரையில்) செய்யவில்லை; இனியும் செய்யப்போவதுமில்லை."

50. (மேலும்) நீர் கூறுவீராக: "நான் (உண்மையான வழியை விட்டு) வழி தவறிவிடுவேனாயின் அப்போது நான் வழி தவறி விடுவதெல்லாம் என்மீதே (பாவமாக) ஆகும்; நான் நேர் வழியை அடைந்திருந்தால், (அது) என் இரட்சகன் எனக்கு வஹீ மூலமாக அறிவித்ததைக் கொண்டேயாகும்; நிச்சயமாக அவன், (யாவற்றையும்) செவியேற்பவன், (யாவற்றிற்கும்) நெருக்கமானவன்.

51. (இன்னும் மறுமையில் காஃபிர்களான) அவர்கள், திடுக்கமுற்றிருக்கும் பொழுது நீர் காண்பீராயின், அப்பொழுது (அவர்களால் எங்கும்) தப்பிச் செல்ல முடியாது; மிகச் சமீபமான இடத்திலிருந்து அவர்கள் பிடிக்கப் பட்டும் விடுவார்கள்.

52. மேலும், (அச்சமயம்) அவர்கள் (திடுக்கிட்டு) "நாங்கள் அ(வ் வேதத்)தை விசுவாசங் கொண்டோம்" என்று கூறுவார்கள்; (அவர்களிடமிருந்து செயல்கள் அங்கீகரிக்கப்படும் இடத்தை விட்டு) மேலும், வெகு தூரமான இடத்திலிருந்து கொண்டு (உண்மை விசுவாசத்தைப்) பெறுதல் எவ்வாறு அவர்களுக்கு முடியும்?

53. (இதற்கு) முன்னர், அதைத்திட்டமாக அவர்கள் நிராகரித்தும்விட்டார்கள்; மேலும் வெகு தூரமான இடத்திலிருந்து மறைவானதைப் பற்றி (வீண்எண்ணத்தைக் கொண்டே) எறிந்து (சொல்லிக்) கொண்டும் இருந்தார்கள்.

54. இதற்கு முன்பு இவர்களைப்போன்ற (நிராகரித்த) வர்களுக்கு செய்யப்பட்டது போல் இவர்களுக்கிடையிலும், இவர்கள் விருப்பம் கொண்டிருந்தவைகளுக்கிடையிலும் திரைபோடப்பட்டுவிட்டது; (ஏனென்றால்) நிச்சயமாக, அவர்கள் அவநம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய சந்தேகத்திலேயே இருந்தார்கள்.

---

அத்தியாயம் : 35

## ஃபாதிர் — ஆரம்பமாகப் படைப்பவன்

வசனங்கள் : 45 மக்கீ ருகூஃகள் : 5

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**

**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும்; அவன் வானங்களையும், பூமியையும் ஆரம்பமாகப் படைத்தவன்; இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்நான்கும் இறக்கைகளுடைய மலக்குகளைத் தூதர்களாக ஆக்கியவன்; அவன் நாடியதை(த் தன்) படைப்பில் (பின்னும்) அதிகப்படுத்துவான்; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையோன்.

2. அல்லாஹ் (தன்) அருளிலிருந்து மனிதர்களுக்குத் திறந்து விட்டால், அதனைத் தடுத்துவிடக்கூடியவர் (ஒருவரும்) இல்லை. அவன் (தன் அருளைத்) தடுத்துக் கொண்டால் அதன் பின் அதனை அனுப்பக் கூடிய (ஒரு)வரும் இல்லை; இன்னும், அவன் (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

3. மனிதர்களே! உங்கள் மீதுள்ள அல்லாஹ்வின் அருட்கொடையை நினைத்துப்பாருங்கள்; வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன், அல்லாஹ்வையன்றி வேறொரு படைக்கிறவன் இருக்கின்றானா? அவனைத்தவிர வேறொரு (வணக்கத்திற்குரிய) நாயன் இல்லை; ஆகவே, நீங்கள் (அவனை விட்டு) எவ்வாறு திருப்பப்படுகிறீர்கள்?

وَإِن يُكَذِّبُوكَ فَقَدْ كُذِّبَتْ رُسُلٌ مِّن قَبْلِكَ ۚ وَإِلَى اللَّهِ تُرْجَعُ
الْأُمُورُ ﴿٤﴾ يَا أَيُّهَا النَّاسُ إِنَّ وَعْدَ اللَّهِ حَقٌّ ۖ فَلَا تَغُرَّنَّكُمُ الْحَيٰوةُ
الدُّنْيَا ۖ وقفة وَلَا يَغُرَّنَّكُم بِاللَّهِ الْغَرُورُ ﴿٥﴾ إِنَّ الشَّيْطٰنَ لَكُمْ عَدُوٌّ فَاتَّخِذُوهُ
عَدُوًّا ۚ إِنَّمَا يَدْعُو حِزْبَهُ لِيَكُونُوا مِنْ أَصْحٰبِ السَّعِيرِ ﴿٦﴾ الَّذِينَ
كَفَرُوا لَهُمْ عَذَابٌ شَدِيدٌ ۖ وَالَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَهُم
مَّغْفِرَةٌ وَأَجْرٌ كَبِيرٌ ﴿٧﴾ أَفَمَن زُيِّنَ لَهُ سُوءُ عَمَلِهِ فَرَآهُ حَسَنًا ۖ فَإِنَّ ع ١ ١٤
اللَّهَ يُضِلُّ مَن يَشَاءُ وَيَهْدِي مَن يَشَاءُ ۖ فَلَا تَذْهَبْ نَفْسُكَ
عَلَيْهِمْ حَسَرٰتٍ ۚ إِنَّ اللَّهَ عَلِيمٌ بِمَا يَصْنَعُونَ ﴿٨﴾ وَاللَّهُ الَّذِي أَرْسَلَ
الرِّيٰحَ فَتُثِيرُ سَحَابًا فَسُقْنٰهُ إِلَىٰ بَلَدٍ مَّيِّتٍ فَأَحْيَيْنَا بِهِ الْأَرْضَ
بَعْدَ مَوْتِهَا ۚ كَذٰلِكَ النُّشُورُ ﴿٩﴾ مَن كَانَ يُرِيدُ الْعِزَّةَ فَلِلَّهِ الْعِزَّةُ
جَمِيعًا ۚ إِلَيْهِ يَصْعَدُ الْكَلِمُ الطَّيِّبُ وَالْعَمَلُ الصَّالِحُ يَرْفَعُهُ ۚ وَ
الَّذِينَ يَمْكُرُونَ السَّيِّاٰتِ لَهُمْ عَذَابٌ شَدِيدٌ ۖ وَمَكْرُ أُولٰٓئِكَ هُوَ
يَبُورُ ﴿١٠﴾ وَاللَّهُ خَلَقَكُم مِّن تُرَابٍ ثُمَّ مِن نُّطْفَةٍ ثُمَّ جَعَلَكُمْ
أَزْوَاجًا ۚ وَمَا تَحْمِلُ مِنْ أُنثَىٰ وَلَا تَضَعُ إِلَّا بِعِلْمِهِ ۚ وَمَا يُعَمَّرُ مِن
مُّعَمَّرٍ وَلَا يُنقَصُ مِنْ عُمُرِهِ إِلَّا فِي كِتٰبٍ ۚ إِنَّ ذٰلِكَ عَلَى اللَّهِ يَسِيرٌ ﴿١١﴾

4. மேலும், (நபியே!) அவர்கள் உம்மைப் பொய்ப்படுத்தி விடுவார்களானால் (பொறுமையைக் கடைப்பிடிப்பீராக! ஏனெனில்,) உமக்கு முன்னர் (வந்த) தூதர்களும் பொய்ப்படுத்தப் பட்டனர்; அன்றியும், அல்லாஹ்விடமே சகல காரியங்களும் மீட்டுக் கொண்டு வரப்படும்.

5. மனிதர்களே! நிச்சயமாக அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானதாகும்; ஆகவே, இவ்வுலக வாழ்க்கை உங்களைத்திட்டமாக ஏமாற்றி விட வேண்டாம்; (ஷைத்தானாகிய) ஏமாற்றுகிறவனும் அல்லாஹ்வைப் பற்றி உங்களைத்திட்டமாக (மோசடியில் ஆக்கி) ஏமாற்றி விட வேண்டாம்.

6. நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு விரோதியாக இருக்கின்றான்; ஆகவே, அவனை நீங்களும் விரோதியாகவே எடுத்துக் கொள்ளுங்கள்; அவன் (தனக்கு வழிபட்ட) தன் கூட்டத்தாரை அழைப்பதெல்லாம் அவர்கள் கொழுந்து விட்டெரியும் நரகவாசிகளில் ஆகிவிடுவதற்காகவேதான்.

7. (ஷைத்தானைப் பின்பற்றி உண்மையை) நிராகரிக்கின்றார்களே அத்தகையோர் – அவர்களுக்குக் கடினமான வேதனையுண்டு; மேலும், விசுவாசங் கொண்டு, நற்கருமங்களையும் செய்கின்றார்களே அத்தகையோர் – அவர்களுக்கு மன்னிப்பும், (மிகப்) பெரிய (நற்) கூலியும் உண்டு.

8. எனவே, எவருக்கு அவருடைய செயலின் தீமை அலங்காரமாகக் காண்பிக்கப்பட்டு, அவர் அதை அழகாகக் காண்கின்றாரோ அவரா? (இதைத் தவிர்த்தவருக்கு சமமாவார்?) ஆகவே, நிச்சயமாக அல்லாஹ், தான் நாடியவர்களைத்தவறான வழியில் விட்டுவிடுகிறான்; தான் நாடியவர்களை நேரான வழியிலும் செலுத்துகிறான்; ஆகவே, (நபியே!) அவர்கள் மீதுள்ள கவலைகளால் உம்முடைய உயிர் போய் விடவேண்டாம்; நிச்சயமாக, அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கறிகிறவன்.

9. மேலும், அல்லாஹ் எத்தகையவனென்றால், காற்றுகளை அவன் அனுப்புகிறான்; அவை மேகங்களைக் கிளறுகின்றன; பின்னர், நாம் அவைகளை இறந்து போன ஊருக்கு (மழையாகப் பொழிவிக்க) இழுத்துச் செல்கிறோம்; அப்போது அதனைக்கொண்டு பூமியை – அது (வறண்டு) இறந்துபோனபின் உயிர்ப்பிக்கின்றோம்; (மரணித்தோர் மறுமையில்) உயிர் பெற்றெழுவதும் இவ்வாறுதான்.

10. எவர் கண்ணியத்தை நாடுகிறாரோ கண்ணியம் யாவும் அல்லாஹ்வுக்கே உரியதாகும்; தூய வாக்கியங்கள் அவனளவில் மேலேறிச் செல்கின்றன; நல்ல செயலும் அதை (அல்லாஹ்வின் பால்) உயர்த்துகிறது; மேலும், (நபியே!) தீமைகளுக்குச் சதி செய்கின்றார்களே அத்தகையோர் – அவர்களுக்குக் கடினமான வேதனையுண்டு; இவர்களுடைய சதி (ஒன்றுமில்லாது) அது அழிந்தே போகும்.

11. மேலும், அல்லாஹ் உங்களை (துவக்கத்தில்) மண்ணிலிருந்து படைத்தான்; பின்னர் ஒரு துளி இந்திரியத்திலிருந்து – பின்னர் (ஆண் – பெண் கொண்ட) ஜோடிகளாக ஆக்கினான்; அவன் அறிவைக்கொண்டே தவிர எந்தப் பெண்ணும் கர்ப்பமாவதும் இல்லை; அவள் பிரசவிப்பதும் இல்லை; வயதானவரின் வயது அதிகப்படுத்தப்படுவதும், அவரின் வயதிலிருந்து குறைக்கப்படுவதும் (லவ்ஹுல் மஹ்ஃபூள் எனும் பதிவுப்) புத்தகத்தில் இல்லாமலில்லை; நிச்சயமாக இ(வை யாவற்றையும் செய்வ)து அல்லாஹ்வுக்குச் சுலபமானதே!

وَمَا يَسْتَوِي الْبَحْرٰنِ ۖ هٰذَا عَذْبٌ فُرَاتٌ سَآئِغٌ شَرَابُهٗ وَ
هٰذَا مِلْحٌ اُجَاجٌ ؕ وَمِنْ كُلٍّ تَاْكُلُوْنَ لَحْمًا طَرِيًّا وَّتَسْتَخْرِجُوْنَ
حِلْيَةً تَلْبَسُوْنَهَا ۚ وَتَرَى الْفُلْكَ فِيْهِ مَوَاخِرَ لِتَبْتَغُوْا مِنْ
فَضْلِهٖ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿١٢﴾ يُوْلِجُ الَّيْلَ فِي النَّهَارِ وَيُوْلِجُ النَّهَارَ
فِي الَّيْلِ ۙ وَسَخَّرَ الشَّمْسَ وَالْقَمَرَ ۖ كُلٌّ يَّجْرِيْ لِاَجَلٍ مُّسَمًّى ؕ
ذٰلِكُمُ اللّٰهُ رَبُّكُمْ لَهُ الْمُلْكُ ؕ وَالَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِهٖ مَا
يَمْلِكُوْنَ مِنْ قِطْمِيْرٍ ﴿١٣﴾ اِنْ تَدْعُوْهُمْ لَا يَسْمَعُوْا دُعَآءَكُمْ ۚ وَلَوْ
سَمِعُوْا مَا اسْتَجَابُوْا لَكُمْ ؕ وَيَوْمَ الْقِيٰمَةِ يَكْفُرُوْنَ بِشِرْكِكُمْ ؕ
وَلَا يُنَبِّئُكَ مِثْلُ خَبِيْرٍ ﴿١٤﴾ ع يٰۤاَيُّهَا النَّاسُ اَنْتُمُ الْفُقَرَآءُ اِلَى ع ٧
اللّٰهِ ۚ وَاللّٰهُ هُوَ الْغَنِيُّ الْحَمِيْدُ ﴿١٥﴾ اِنْ يَّشَاْ يُذْهِبْكُمْ
وَيَاْتِ بِخَلْقٍ جَدِيْدٍ ﴿١٦﴾ ۚ وَمَا ذٰلِكَ عَلَى اللّٰهِ بِعَزِيْزٍ ﴿١٧﴾ وَ
لَا تَزِرُ وَازِرَةٌ وِّزْرَ اُخْرٰى ؕ وَاِنْ تَدْعُ مُثْقَلَةٌ اِلٰى حِمْلِهَا
لَا يُحْمَلْ مِنْهُ شَيْءٌ وَّلَوْ كَانَ ذَا قُرْبٰى ؕ اِنَّمَا تُنْذِرُ
الَّذِيْنَ يَخْشَوْنَ رَبَّهُمْ بِالْغَيْبِ وَاَقَامُوا الصَّلٰوةَ ؕ
وَمَنْ تَزَكّٰى فَاِنَّمَا يَتَزَكّٰى لِنَفْسِهٖ ؕ وَاِلَى اللّٰهِ الْمَصِيْرُ ﴿١٨﴾

12. இன்னும், இரு கடல்களும் சமமாகிவிடாது (இரண்டில்) இது மிக்க மதுரமான, (தாகம் தீர்க்கக்கூடியதான,) அதை அருந்துவதற்கு இலேசானது; இதுவோ, உப்பும் மிக்க கசப்பும் (உடைய நீர்) ஆகும். (இரு வகையாகிய) ஒவ்வொன்றிலிருந்தும் புதிய (சுவையான மீன்) இறைச்சியை உண்ணுகின்றீர்கள்; எதை நீங்கள் அணிகின்றீர்களோ அத்தகைய ஆபரணங்களையும் (அவற்றிலிருந்து) வெளியாக்குகிறீர்கள்; (யாத்திரையின் மூலம்) அவனது பேரருளை நீங்கள் தேடிக் கொள்வதற்காகவும், (அவற்றுக்காக) நீங்கள் நன்றி செய்வதற்காகவும் அதில் கப்பல்களை நீரைப் பிளந்து செல்பவையாக நீர் காண்கிறீர்.

13. அவனே இரவைப் பகலில் நுழையச் செய்கிறான்; இன்னும், பகலை இரவில் நுழையச் செய்கிறான்; சூரியனையும், சந்திரனையும் வசப்படுத்தி வைத்திருக்கிறான்; (இவை) ஒவ்வொன்றும் (அதற்குக்) குறிப்பிடப்பட்ட தவணைப்படியே செல்கின்றன; (இத்தகைய தகுதிகளுக்குரிய) அவன்தான் உங்கள் இரட்சகனாகிய அல்லாஹ்; அரசாட்சி அவனுடையதே! இன்னும், அவனையன்றி நீங்கள் பிரார்த்தித்து அழைக்கின்றீர்களே அத்தகையவர்கள், ஒரு வித்தின் (மேலிருக்கும்) தொலி அளவும் அதிகாரம் பெறமாட்டார்கள்.

14. அவர்களை நீங்கள் அழைத்தபோதிலும், உங்களுடைய அழைப்பை அவர்கள் செவியுற மாட்டார்கள்; அவர்கள் செவியுற்றபோதிலும் உங்களுக்குப் பதிலளிக்க மாட்டார்கள்; மறுமை நாளிலோ நீங்கள் (அவர்களை) இணைவைத்ததையும் அவர்கள் நிராகரித்து விடுவார்கள்; (விஷயங்களை) அறிந்தவனைப் போல் (மற்றெவரும்) உமக்கு(ச்செய்திகளை) அறிவிக்க மாட்டார்.

15. மனிதர்களே! நீங்கள் அல்லாஹ்வின்பால் தேவையுடையவர்கள்; அல்லாஹ் — அவன்தான் (பிறர்) தேவையற்றவன்; (சீமான்;) புகழுக்குரியவன்.

16. அவன் நாடினால் உங்களைப் போக்கி விடுவான்; (மற்றொரு) புதிய சிருஷ்டியைக் கொண்டுவந்தும் விடுவான்.

17. இது அல்லாஹ்வுக்குக் கடினமானதுமல்ல.

18. பாவம் செய்த எந்த ஆத்மாவும் மற்றொரு பாவம் செய்த ஆத்மாவின் பாவத்தை (மறுமையில்) சுமக்காது; பாவச்சுமை கனத்துவிட்ட எந்த ஆத்மாவும், அதைச் சுமக்க (யாரையேனும் அது) அழைத்தாலும் (அழைக்கப் பட்டவன்) சுற்றத்தாராக இருப்பினும், அதிலிருந்து சிறிதளவேனும் (மற்றவர் மீது) சுமத்தப்படமாட்டாது. (நபியே!) நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதெல்லாம், (தங்கள் கண்களால் காணாமலிருந்தும்) மறைவில் தங்கள் இரட்சகனை பயந்து, தொழுகையையும்நிறைவேற்றிவருகின்றார்களே அத்தகையோரைத் தான்; எவர் பரிசுத்தமடைகின்றாரோ, அவர் பரிசுத்தமடைவதெல்லாம் (அதன் பலனெல்லாம்) தமக்காகத்தான்; அல்லாஹ்விடமே (யாவும்) மீண்டு செல்ல வேண்டியதிருக்கின்றது.

وَمَا يَسْتَوِي الْاَعْمٰى وَالْبَصِيْرُ ﴿١٩﴾ وَلَا الظُّلُمٰتُ وَلَا النُّوْرُ ﴿٢٠﴾
وَلَا الظِّلُّ وَلَا الْحَرُوْرُ ﴿٢١﴾ وَمَا يَسْتَوِي الْاَحْيَآءُ وَلَا الْاَمْوَاتُ ۭ
اِنَّ اللّٰهَ يُسْمِعُ مَنْ يَّشَآءُ ۚ وَمَآ اَنْتَ بِمُسْمِعٍ مَّنْ فِي
الْقُبُوْرِ ﴿٢٢﴾ اِنْ اَنْتَ اِلَّا نَذِيْرٌ ﴿٢٣﴾ اِنَّآ اَرْسَلْنٰكَ بِالْحَقِّ
بَشِيْرًا وَّنَذِيْرًا ۭ وَاِنْ مِّنْ اُمَّةٍ اِلَّا خَلَا فِيْهَا نَذِيْرٌ ﴿٢٤﴾
وَاِنْ يُّكَذِّبُوْكَ فَقَدْ كَذَّبَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۚ جَآءَتْهُمْ
رُسُلُهُمْ بِالْبَيِّنٰتِ وَبِالزُّبُرِ وَبِالْكِتٰبِ الْمُنِيْرِ ﴿٢٥﴾ ثُمَّ
اَخَذْتُ الَّذِيْنَ كَفَرُوْا فَكَيْفَ كَانَ نَكِيْرِ ﴿٢٦﴾ اَلَمْ تَرَ اَنَّ ع ٣ ١٢ ١٥
اللّٰهَ اَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً ۚ فَاَخْرَجْنَا بِهٖ ثَمَرٰتٍ مُّخْتَلِفًا
اَلْوَانُهَا ۭ وَمِنَ الْجِبَالِ جُدَدٌۢ بِيْضٌ وَّحُمْرٌ مُّخْتَلِفٌ
اَلْوَانُهَا وَغَرَابِيْبُ سُوْدٌ ﴿٢٧﴾ وَمِنَ النَّاسِ وَالدَّوَآبِّ
وَالْاَنْعَامِ مُخْتَلِفٌ اَلْوَانُهٗ كَذٰلِكَ ۭ اِنَّمَا يَخْشَى اللّٰهَ
مِنْ عِبَادِهِ الْعُلَمٰٓؤُا ۭ اِنَّ اللّٰهَ عَزِيْزٌ غَفُوْرٌ ﴿٢٨﴾ اِنَّ الَّذِيْنَ
يَتْلُوْنَ كِتٰبَ اللّٰهِ وَاَقَامُوا الصَّلٰوةَ وَاَنْفَقُوْا مِمَّا
رَزَقْنٰهُمْ سِرًّا وَّعَلَانِيَةً يَّرْجُوْنَ تِجَارَةً لَّنْ تَبُوْرَ ﴿٢٩﴾

19. குருடனும், பார்வையுடையோனும் சமமாவதில்லை.

20. (அவ்வாறே) இருள்களும், பிரகாசமும் (சமமாவது)இல்லை:

21. (அவ்வாறே) நிழலும், வெயிலும் (சமமாவது)இல்லை.

22. மேலும், உயிருள்ளவர்களும், இறந்தவர்களும் சமமாக மாட்டார்கள்; நிச்சயமாக அல்லாஹ், தான் நாடியவர்களைச் செவியேற்குமாறு செய்கின்றான்; (நபியே!) "கப்ரு"(சமாதி)களில் உள்ளவர்களைச் செவியேற்கச் செய்பவராகவும் நீர் இல்லை.

23. நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவரே தவிர (வேறு) இல்லை.

24. (நபியே!) நிச்சயமாக நாம், உம்மை சத்தியத்தைக் கொண்டு நன்மாராயங் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பினோம்; மேலும் எந்த சமுதாயத்தவரும் அ(ச்சமுதாயத்)தில் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் (நம்முடைய) தூதர் சென்றே தவிர (இப்புவியில்) இல்லை.

25. (நபியே!) இன்னும், அவர்கள் உம்மைப் பொய்ப்படுத்துவார்களானால் அவர்களுக்கு முன்னிருந்தவர்களும், (நம்முடைய தூதர்களைப்) பொய்யாக்கினார்கள்; அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் (அத்தாட்சிகளில்) தெளிவானவைகளையும், ("ஜுபுரு" எனும்) ஆகமங்களையும், பிரகாசமான வேதத்தையும் கொண்டு வந்திருந்தனர்.

26. பின்னர், நிராகரித்துக் கொண்டிருந்தோரை நான் பிடித்துக் கொண்டேன்; ஆகவே, (அவர்களை அழிப்பதன் மூலம் என்னுடைய) மறுப்பு எப்படி இருந்தது? (என்பதை நீர் கவனித்தீரா?)

27. (நபியே!) நிச்சயமாக, அல்லாஹ் வானத்திலிருந்து மழையை இறக்கி வைக்கின்றான் என்பதை நீர் பார்க்கவில்லையா? பின்னர், நாம்தாம் அதனைக்கொண்டு, அவற்றின் நிறங்கள் மாறுபட்டவையான கனிகளை வெளியாக்கினோம்; இன்னும், மலைகளிலிருந்து, அதன் நிறங்கள் மாறுபட்டவையான வெள்ளையும், சிவப்புமான பாதைகளும், சுத்தக்கறுப்பு நிறமுடையதும் உள்ளன.

28. இன்னும், அவ்வாறே மனிதர்களிலும், பூமியில் ஊர்ந்து திரிபவற்றிலும் (ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) கால் நடைகளிலும் அதனுடைய நிறங்கள் மாறுபட்டிருக்கின்றன; நிச்சயமாக அல்லாஹ்வை — அவனுடைய அடியார்களில் பயப்படுவதெல்லாம் (அவனைப்பற்றி அறிந்த) கல்விமான்கள் தாம்; நிச்சயமாக அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவன், மிக்க மன்னிப்புடையவன்.

29. அல்லாஹ்வுடைய வேதத்தை ஓதி, தொழுகையையும் நிறைவேற்றி , நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து இரகசியமாகவும், பரகசியமாகவும் (தர்மமாக) செலவு செய்கிறார்களே நிச்சயமாக அத்தகையோர் — என்றுமே நஷ்டமடையாத (லாபம் தரும்) ஒரு வர்த்தகத்தை அவர்கள் ஆதரவு வைக்கிறார்கள்.

لِيُوَفِّيَهُمْ اُجُوْرَهُمْ وَيَزِيْدَهُمْ مِّنْ فَضْلِهٖ ؕ اِنَّهٗ غَفُوْرٌ
شَكُوْرٌ ﴿٣٠﴾ وَالَّذِيْٓ اَوْحَيْنَآ اِلَيْكَ مِنَ الْكِتٰبِ هُوَ الْحَقُّ مُصَدِّقًا
لِّمَا بَيْنَ يَدَيْهِ ؕ اِنَّ اللّٰهَ بِعِبَادِهٖ لَخَبِيْرٌۢ بَصِيْرٌ ﴿٣١﴾ ثُمَّ اَوْرَثْنَا
الْكِتٰبَ الَّذِيْنَ اصْطَفَيْنَا مِنْ عِبَادِنَا ۚ فَمِنْهُمْ ظَالِمٌ لِّنَفْسِهٖ ۚ
وَمِنْهُمْ مُّقْتَصِدٌ ۚ وَمِنْهُمْ سَابِقٌۢ بِالْخَيْرٰتِ بِاِذْنِ اللّٰهِ ؕ ذٰلِكَ
هُوَ الْفَضْلُ الْكَبِيْرُ ﴿٣٢﴾ جَنّٰتُ عَدْنٍ يَّدْخُلُوْنَهَا يُحَلَّوْنَ
فِيْهَا مِنْ اَسَاوِرَ مِنْ ذَهَبٍ وَّلُؤْلُؤًا ۚ وَلِبَاسُهُمْ فِيْهَا حَرِيْرٌ ﴿٣٣﴾
وَقَالُوا الْحَمْدُ لِلّٰهِ الَّذِيْٓ اَذْهَبَ عَنَّا الْحَزَنَ ؕ اِنَّ رَبَّنَا
لَغَفُوْرٌ شَكُوْرُۨ ﴿٣٤﴾ الَّذِيْٓ اَحَلَّنَا دَارَ الْمُقَامَةِ مِنْ فَضْلِهٖ ۚ
لَا يَمَسُّنَا فِيْهَا نَصَبٌ وَّلَا يَمَسُّنَا فِيْهَا لُغُوْبٌ ﴿٣٥﴾ وَالَّذِيْنَ كَفَرُوْا
لَهُمْ نَارُ جَهَنَّمَ ۚ لَا يُقْضٰى عَلَيْهِمْ فَيَمُوْتُوْا وَلَا يُخَفَّفُ
عَنْهُمْ مِّنْ عَذَابِهَا ؕ كَذٰلِكَ نَجْزِيْ كُلَّ كَفُوْرٍ ﴿٣٦﴾ ۚ وَهُمْ
يَصْطَرِخُوْنَ فِيْهَا ۚ رَبَّنَآ اَخْرِجْنَا نَعْمَلْ صَالِحًا غَيْرَ
الَّذِيْ كُنَّا نَعْمَلُ ؕ اَوَلَمْ نُعَمِّرْكُمْ مَّا يَتَذَكَّرُ فِيْهِ مَنْ
تَذَكَّرَ وَجَآءَكُمُ النَّذِيْرُ ؕ فَذُوْقُوْا فَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ نَّصِيْرٍ ﴿٣٧﴾ ع ٤ ١١ ١٦

30. காரணம்: (அல்லாஹ்வாகிய) அவன், அவர்களுக்கு அவர்களுடைய கூலியைப் பூரணமாகக் கொடுப்பதற்காகவும், தன்னுடைய பேரருளிலிருந்து அவர்களுக்கு அதிகப்படுத்துவதற்காகவும்தான்; நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன்; மிக்க நன்றி பாராட்டுபவன்.

31. மேலும், (நபியே!) நாம் உமக்கு வேதத்தால் எதை (வஹீ மூலம்) அறிவித்திருக்கின்றோமோ அதுதான்_ (வேதங்களில்) தனக்கு முன்னிருந்ததை உண்மைப்படுத்தக்கூடியதாக இருக்கும் நிலையில் _ சத்தியமானதாக இருக்கின்றது. நிச்சயமாக அல்லாஹ், தன் அடியார்களை நன்குணர்கிறவன், பார்க்கிறவன்.

32. பின்னர், நம்முடைய அடியார்களிலிருந்து நாம் தேர்ந்தெடுத்தோமே அத்தகையோரை அவ்வேதத்திற்கு வாரிசுகளாக்கி வைத்தோம்; ஆகவே, அவர்களில் தமக்குத்தாமே அநியாயம் செய்து கொண்டவரும் உள்ளனர்; அவர்களில் நடு நிலையான வழியில் சென்றவர்களும் உள்ளனர்; அவர்களில், அல்லாஹ்வின் கட்டளையைக் கொண்டு நன்மையானவற்றில் முந்திக் கொண்டோரும் உள்ளனர்; இதுவே மிகப்பெரும் பேரருளாகும்.

33. (அது) நிலையான சுவனபதிகள்_ அவற்றில் அவர்கள் நுழைவார்கள்; அவற்றில் அவர்கள் பொன்னாலான கடகங்கள் அணிவிக்கப்படுவார்கள்; முத்துக்களையும் (அணிவிக்கப்படுவார்கள்). இன்னும் அவற்றில் அவர்களுடைய ஆடை பட்டாகும்.

34. இன்னும், அவர்கள் "எங்களை விட்டு கவலையைப் போக்கிய அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரித்தாகும்; நிச்சயமாக எங்கள் இரட்சகன் மிக்க மன்னிப்பவன்; மிக்க நன்றி பாராட்டுபவன்" என்று (புகழ்ந்து) கூறுவார்கள்.

35. "அவன் எத்தகையவனென்றால், தன்னுடைய பேரருளால் என்றென்றும் நிலையான வீட்டில் எங்களை இறக்கிவைத்தான்; அதில் எவ்வித சிரமும் எங்களைத் தொடாது; யாதொரு சடைவும் எங்களை அதில் தொடாது( என்றும் கூறுவார்கள்).

36. இன்னும், நிராகரித்து விட்டார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு நரக நெருப்பு உண்டு. அவர்களுக்கு (இறப்பு ஏற்படவேண்டுமென) தீர்ப்புச் செய்யப்படமாட்டாது; (அவ்வாறு தீர்ப்புச் செய்யப்பட்டால்தானே) அவர்கள் இறப்பெய்துவார்கள்; அதன் வேதனையிலிருந்து அவர்களுக்கு (ஒரு சிறிதும்) குறைக்கப்படவுமாட்டாது; இவ்வாறே ஒவ்வொரு நிராகரிப்போருக்கும் நாம் கூலி கொடுப்போம்.

37. அ(ந்நரகத்)தில் அவர்கள், "எங்கள் இரட்சகனே! (இதிலிருந்து) எங்களை வெளியேற்றிவிடு; (இனி) நாங்கள் செய்து கொண்டிருந்ததல்லாத நற்செயலையே செய்வோம்" என்று பெரும் சப்தமிடுவார்கள்; (அதற்கு அல்லாஹ்) "நல்லுணர்ச்சி பெறக்கூடியவன் நல்லுணர்ச்சி பெறுவதற்குப் போதுமான நீண்ட காலம் வரை, நாம் அதில் உங்களை (வாழ) விட்டுவைத்திருக்கவில்லையா? மேலும், (இது பற்றி) உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவர் உங்களிடம் வந்தே இருந்தார்; ஆதலால் (நரக வேதனையை) நீங்கள் சுவைத்துக்கொண்டிருங்கள்; அநியாயக்காரர்களுக்கு எந்த உதவியாளருமில்லை" (என்று கூறுவான்).

اِنَّ اللّٰهَ عٰلِمُ غَيْبِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ اِنَّهٗ عَلِيْمٌۢ بِذَاتِ
الصُّدُوْرِ ﴿۳۸﴾ هُوَ الَّذِيْ جَعَلَكُمْ خَلٰٓئِفَ فِي الْاَرْضِ ؕ فَمَنْ كَفَرَ
فَعَلَيْهِ كُفْرُهٗ ؕ وَلَا يَزِيْدُ الْكٰفِرِيْنَ كُفْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ اِلَّا
مَقْتًا ۚ وَلَا يَزِيْدُ الْكٰفِرِيْنَ كُفْرُهُمْ اِلَّا خَسَارًا ﴿۳۹﴾ قُلْ اَرَءَيْتُمْ
شُرَكَآءَكُمُ الَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ ؕ اَرُوْنِيْ مَاذَا خَلَقُوْا
مِنَ الْاَرْضِ اَمْ لَهُمْ شِرْكٌ فِي السَّمٰوٰتِ ۚ اَمْ اٰتَيْنٰهُمْ كِتٰبًا
فَهُمْ عَلٰى بَيِّنَتٍ مِّنْهُ ۚ بَلْ اِنْ يَّعِدُ الظّٰلِمُوْنَ بَعْضُهُمْ
بَعْضًا اِلَّا غُرُوْرًا ﴿۴۰﴾ اِنَّ اللّٰهَ يُمْسِكُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ
اَنْ تَزُوْلَا ۚ۬ وَلَئِنْ زَالَتَآ اِنْ اَمْسَكَهُمَا مِنْ اَحَدٍ مِّنْۢ
بَعْدِهٖ ؕ اِنَّهٗ كَانَ حَلِيْمًا غَفُوْرًا ﴿۴۱﴾ وَاَقْسَمُوْا بِاللّٰهِ جَهْدَ
اَيْمَانِهِمْ لَئِنْ جَآءَهُمْ نَذِيْرٌ لَّيَكُوْنُنَّ اَهْدٰى مِنْ اِحْدَى
الْاُمَمِ ۚ فَلَمَّا جَآءَهُمْ نَذِيْرٌ مَّا زَادَهُمْ اِلَّا نُفُوْرَا ۙ﴿۴۲﴾ اِسْتِكْبَارًا
فِي الْاَرْضِ وَمَكْرَ السَّيِّئِ ؕ وَلَا يَحِيْقُ الْمَكْرُ السَّيِّئُ اِلَّا
بِاَهْلِهٖ ؕ فَهَلْ يَنْظُرُوْنَ اِلَّا سُنَّتَ الْاَوَّلِيْنَ ۚ فَلَنْ تَجِدَ
لِسُنَّتِ اللّٰهِ تَبْدِيْلًا ۚ۬ وَلَنْ تَجِدَ لِسُنَّتِ اللّٰهِ تَحْوِيْلًا ﴿۴۳﴾

38. நிச்சயமாக அல்லாஹ் வானங்கள் மற்றும், பூமியில் மறைந்திருப்பதை அறிகிறவன்; நிச்சயமாக அவன், இதயங்களில் இருப்பவற்றை நன்கறிகிறவன்.

39. அவன்எத்தகையவனென்றால், உங்களை இப்புவியில் (முந்தையவர்களுக்கு) பின்தோன்றல்களாக ஆக்கினான்; ஆகவே,(உங்களில்) எவர் நிராகரிக்கின்றாரோ அவரின் நிராகரிப்(பின் பாதிப்)பு அவர் மீதேயாகும்;மேலும், நிராகரிப்போருக்கு அவர்களுடைய நிராகரிப்பு, அவர்களுடைய இரட்சகனிடத்தில் கோபத்தைத் தவிர (வேறெதனையும்) அதிகரிக்கச் செய்வதில்லை. நிராகரிப்போருக்கு அவர்களுடைய நிராகரிப்பு நஷ்டத்தைத் தவிர (வேறெதனையும்) அதிகரிக்கச் செய்வதில்லை.

40. (நபியே!) நீர் கூறுவீராக: "அல்லாஹ்வையன்றி நீங்கள் பிரார்த்தித்து அழைக்கும் உங்கள் கூட்டுக்காரர்களை நீங்கள் கவனித்தீர்களா? அவர்கள் பூமியிலிருந்து எதைப் படைத்திருக்கிறார்கள் என்பதை எனக்குக் காண்பியுங்கள்; அல்லது அவர்களுக்கு, வானங்களில்(அங்கு நடந்தேறும் காரியங்களில்)கூட்டு உண்டா? அல்லது (அவர்களை இணையாளர்களெனக் கூறுவதற்கு) இவர்களுக்கு நாம் வேதத்தைக்கொடுத்து, அதிலிருந்து அப்போது அவர்கள் தெளிவான ஆதாரத்தின் மீது இருக்கிறார்களா?" இல்லை; அநியாயக் காரர்கள், அவர்களில் சிலர் மற்றசிலருக்கு ஏமாற்றுதலைத் தவிர(வேறு எதையும்) வாக்களிப்பதில்லை.

41. நிச்சயமாக அல்லாஹ், வானங்கள் மற்றும் பூமியை அவையிரண்டும் அதனதன் இடத்திலிருந்து நீங்கி விடாதபடி தடுத்து வைத்திருக்கின்றான்; அவ்விரண்டும் அதனிடத்திலிருந்து நீங்கிவிடுமாயின், அதற்குப் பிறகு அவ்விரண்டையும் நீங்கி விடாத படி தடுத்து நிறுத்த(அவனையன்றி) எவருமில்லை; நிச்சயமாக அவன், சகித்துக் கொள்ளக்கூடியவனாக, மிக்க மன்னிப்பவனாக இருக்கிறான்.

42. இன்னும், தங்களிடம் அச்சமூட்டி எச்சரிப்பவர் வந்தால், நிச்சயமாக தாங்கள், (அல்லாஹ்வின் தூதர்களைப் பொய்ப்படுத்திய மற்ற) சமூகங்களில் உள்ள எந்த ஒரு சமுதாயத்தாரையும் விட மிக்க நேர் வழியில் ஆகிவிடுவார்கள் என அவர்கள் அல்லாஹ் வின் மீது மிக்க உறுதியான சத்தியம் செய்தார்கள். பின்னர், அவர்களிடம் (நம் தூதரான) அச்சமூட்டி எச்சரிப்பவர் வந்த பொழுது, அவர்களுக்கு அது வெருண்டோடுவதைத் தவிர (வேறு எதையும்) அதிகப்படுத்தவில்லை.

43. பூமியில் பெருமையடிப்பதையும், தீய சூழ்ச்சியையும்(தவிர வேறு எதையும் அவர்களுக்கு அதிகப்படுத்தவில்லை; ஆகவே, நம் தூதரை விட்டும் தூரமானார்கள்). மேலும் தீய சூழ்ச்சி, அந்த சூழ்ச்சிக்காரரைத் தவிர (மற்றெவரையும்) சூழ்ந்து கொள்ளாது; ஆகவே முந்தியவர்களின் வழியைத் தவிர, (வேறு எவ்வழியையும்) இவர்கள் எதிர்பார்க்கின்றனரா?( இல்லை) ஆகவே, அல்லாஹ் ஏற்படுத்திய வழியில் யாதொரு மாற்றத்தை நீர் காணவே மாட்டீர்; (அவ்வாறே) அல்லாஹ் ஏற்படுத்திய வழியில் யாதொரு திருப்பத்தையும் நீர் காணவேமாட்டீர்.

اَوَلَمْ يَسِيْرُوْا فِى الْاَرْضِ فَيَنْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ
الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ وَكَانُوْٓا اَشَدَّ مِنْهُمْ قُوَّةً ؕ وَمَا
كَانَ اللّٰهُ لِيُعْجِزَهٗ مِنْ شَیْءٍ فِى السَّمٰوٰتِ وَلَا فِى الْاَرْضِ ؕ
اِنَّهٗ كَانَ عَلِيْمًا قَدِيْرًا ﴿۴۴﴾ وَلَوْ يُؤَاخِذُ اللّٰهُ النَّاسَ بِمَا
كَسَبُوْا مَا تَرَكَ عَلٰى ظَهْرِهَا مِنْ دَآبَّةٍ وَّلٰكِنْ
يُّؤَخِّرُهُمْ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى ۚ فَاِذَا جَآءَ اَجَلُهُمْ فَاِنَّ
اللّٰهَ كَانَ بِعِبَادِهٖ بَصِيْرًا ﴿۴۵﴾ ع ۵ ع ۸ ۱۷

## سُوْرَةُ يٰسٓ مَكِّيَّةٌ وَّهِيَ ثَلٰثٌ وَّثَمٰنُوْنَ اٰيَةً وَّخَمْسُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يٰسٓ ﴿۱﴾ وَالْقُرْاٰنِ الْحَكِيْمِ ﴿۲﴾ لا اِنَّكَ لَمِنَ الْمُرْسَلِيْنَ ﴿۳﴾ عَلٰى صِرَاطٍ
مُّسْتَقِيْمٍ ﴿۴﴾ ط تَنْزِيْلَ الْعَزِيْزِ الرَّحِيْمِ ﴿۵﴾ لا لِتُنْذِرَ قَوْمًا مَّآ اُنْذِرَ
اٰبَآؤُهُمْ فَهُمْ غٰفِلُوْنَ ﴿۶﴾ لَقَدْ حَقَّ الْقَوْلُ عَلٰٓى اَكْثَرِهِمْ فَهُمْ
لَا يُؤْمِنُوْنَ ﴿۷﴾ اِنَّا جَعَلْنَا فِیْٓ اَعْنَاقِهِمْ اَغْلٰلًا فَهِیَ اِلَى
الْاَذْقَانِ فَهُمْ مُّقْمَحُوْنَ ﴿۸﴾ وَجَعَلْنَا مِنْۢ بَيْنِ اَيْدِيْهِمْ
سَدًّا وَّمِنْ خَلْفِهِمْ سَدًّا فَاَغْشَيْنٰهُمْ فَهُمْ لَا يُبْصِرُوْنَ ﴿۹﴾

44. பூமியில் அவர்கள் சுற்றித்திரிந்து, அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை அவர்கள் காணவில்லையா? மேலும், அவர்கள் இவர்களைவிட பலத்தால் மிகக் கடினமானவர்களாக இருந்தனர்; (அவ்வாறிருந்தும், அல்லாஹ்வுடைய வேதனையிலிருந்து அவர்களால் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.) மேலும், அல்லாஹ் – அவனை இயலாமையில் ஆக்குவதற்கு வானங்களிலோ, பூமியிலோ எப்பொருளும் இருக்கவில்லை; நிச்சயமாக அவன் (யாவையும்) நன்கறிந்தவனாக, மிக்க ஆற்றலுடையோனாக இருக்கிறான்.

45. மேலும், மனிதர்களை அவர்கள் சம்பாதித்துக்கொண்டவைக்காகவேண்டி அல்லாஹ் பிடி(த்துத் தண்டி)ப்பதாக இருந்தால், (பூமியாகிய)அதன் முதுகின் மீது யாதொரு ஊர்ந்துதிரிபவற்றையும் அவன் விட்டுவைத்திருக்கமாட்டான்; எனினும், குறிப்பிடப்பட்ட தவணைவரை அவர்களை அவன் பிற்படுத்துகிறான்; ஆகவே அவர்களுடைய தவணை வந்து விட்டால் (அவர்களைப் பிடித்துவிடுவான்). எனவே நிச்சயமாக அல்லாஹ், தன் அடியார்களைப் பார்ப்பவனாக இருக்கிறான்.

அத்தியாயம் : 36

## யாஸீன்

வசனங்கள் : 83 மக்கீ ருகூஉகள் : 5

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. யா ஸீ ன்.

2. தீர்க்கமான (சட்டங்களையும் தெளிவான ஆதாரங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள) இந்தக் குர்ஆனின் மீது சத்தியமாக,

3. (நபியே!) நிச்சயமாக, நீர் (நம்முடைய) தூதர்களில் உள்ளவராவீர்.

4. (நீர்) நேரான வழியின் மீதிருக்கின்றீர்.

5. (இது யாவரையும்) மிகைத்தோன், மிகக் கிருபையுடையோனா(கிய அல்லாஹ்வினா)ல் இறக்கப்பட்டதாகும்.

6. தங்களின் மூதாதையர்கள் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்படாத ஒரு சமூகத்தார்க்கு,நீர் எச்சரிக்கை செய்வதற்காக(இவ்வேதம் இறக்கியருளப்பட்டது); அவர்கள் (அலட்சியமாக) மறந்தவர்களாக இருக்கிறார்கள்.

7. நிச்சயமாக இவர்களில் அநேகர் மீது (அவர்களுக்கு வேதனை உண்டு என்ற அல்லாஹ்வின்) வாக்கு உண்மையாகிவிட்டது; ஆகவே, அவர்கள் விசுவாசங் கொள்ளமாட்டார்கள்.

8. நிச்சயமாக நாம் அவர்களுடைய கழுத்துகளில் விலங்குச் சங்கிலிகளை ஆக்கிவிட்டோம்; அவை மோவாய்க் கட்டைகள் வரையில் இருக்கின்றன. ஆகவே,(குனிய முடியாதவாறு) அவர்கள் தலை உயர்த்தப்பட்டவர்கள்.

9. அவர்களுக்கு முன்னால் ஒரு தடுப்பையும், அவர்களுக்குப் பின்னால் ஒரு தடுப்பையும் நாம் ஆக்கி விட்டோம்; பின்னர், அவர்களை மூடிவிட்டோம்; ஆதலால், அவர்கள் (எதனையும்) பார்க்க(ச்சக்திபெற) மாட்டார்கள்.

وَسَوَآءٌ عَلَيْهِمْ ءَاَنْذَرْتَهُمْ اَمْ لَمْ تُنْذِرْهُمْ لَا يُؤْمِنُوْنَ ﴿۱۰﴾
اِنَّمَا تُنْذِرُ مَنِ اتَّبَعَ الذِّكْرَ وَخَشِيَ الرَّحْمٰنَ بِالْغَيْبِ ۚ
فَبَشِّرْهُ بِمَغْفِرَةٍ وَّاَجْرٍ كَرِيْمٍ ﴿۱۱﴾ اِنَّا نَحْنُ نُحْيِ الْمَوْتٰى
وَنَكْتُبُ مَا قَدَّمُوْا وَاٰثَارَهُمْ ۗ وَكُلَّ شَيْءٍ اَحْصَيْنٰهُ فِيْٓ
اِمَامٍ مُّبِيْنٍ ﴿۱۲﴾ ع وَاضْرِبْ لَهُمْ مَّثَلًا اَصْحٰبَ الْقَرْيَةِ ۘ اِذْ
جَآءَهَا الْمُرْسَلُوْنَ ﴿۱۳﴾ اِذْ اَرْسَلْنَآ اِلَيْهِمُ اثْنَيْنِ فَكَذَّبُوْهُمَا
فَعَزَّزْنَا بِثَالِثٍ فَقَالُوْٓا اِنَّآ اِلَيْكُمْ مُّرْسَلُوْنَ ﴿۱۴﴾ قَالُوْا
مَآ اَنْتُمْ اِلَّا بَشَرٌ مِّثْلُنَا ۙ وَمَآ اَنْزَلَ الرَّحْمٰنُ مِنْ شَيْءٍ ۙ
اِنْ اَنْتُمْ اِلَّا تَكْذِبُوْنَ ﴿۱۵﴾ قَالُوْا رَبُّنَا يَعْلَمُ اِنَّآ اِلَيْكُمْ
لَمُرْسَلُوْنَ ﴿۱۶﴾ وَمَا عَلَيْنَآ اِلَّا الْبَلٰغُ الْمُبِيْنُ ﴿۱۷﴾ قَالُوْٓا
اِنَّا تَطَيَّرْنَا بِكُمْ ۚ لَئِنْ لَّمْ تَنْتَهُوْا لَنَرْجُمَنَّكُمْ وَلَيَمَسَّنَّكُمْ
مِّنَّا عَذَابٌ اَلِيْمٌ ﴿۱۸﴾ قَالُوْا طَآئِرُكُمْ مَّعَكُمْ ۗ اَئِنْ
ذُكِّرْتُمْ ۗ بَلْ اَنْتُمْ قَوْمٌ مُّسْرِفُوْنَ ﴿۱۹﴾ وَجَآءَ مِنْ اَقْصَا
الْمَدِيْنَةِ رَجُلٌ يَّسْعٰى قَالَ يٰقَوْمِ اتَّبِعُوا الْمُرْسَلِيْنَ ﴿۲۰﴾
اتَّبِعُوْا مَنْ لَّا يَسْـَٔلُكُمْ اَجْرًا وَّهُمْ مُّهْتَدُوْنَ ﴿۲۱﴾

وقف غفران
وقف لازم ع ۱۴

10. அவர்களுக்கு நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதும், அல்லது அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யாமலிருப்பதும் அவர்களுக்குச் சமமே! ஆகவே, அவர்கள் விசுவாசங் கொள்ள மாட்டார்கள்.

11. நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதெல்லாம், (குர்ஆனாகிய) நல்லுபதேசத்தைப் பின்பற்றி, மறைவில் அர்ரஹ்மானை அஞ்சுகின்றாரே அவருக்குத்தான். ஆகவே, அ(த்தகைய)வருக்கு மன்னிப்பைக்கொண்டும், கண்ணியமாக கூலியைக்கொண்டும் நீர் நன்மாராயம் கூறுவீராக!

12. நிச்சயமாக நாமே, மரணித்தோரை (மறுமையில்) உயிர்ப்பிக்கிறோம்; அவர்கள் முற்படுத்தியவற்றையும், (அவர்கள் மரணித்த பின்னும் நன்மையைச் சேர்த்து வைக்கின்ற) அவர்களின் (நற்செயல்களான) அடிச்சுவடுகளையும் நாம் எழுதுகிறோம்; ஒவ்வொரு பொருளை(ப்பற்றி)யும், (லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) தெளிவான ஏட்டில் அதைக்கணக்கெடுத்து(பதிந்து) வைத்திருக்கின்றோம்.

13. இன்னும் (நபியே!) ஓர் ஊர்வாசிகளை – அவ்வூராரிடம் (நம்மால்) அனுப்பப்பட்ட தூதர்கள் வந்த(போது நடந்த)தை – உதாரணமாக அவர்களுக்குக் கூறுவீராக!

14. நாம் அவர்களிடம் இரு தூதர்களை அனுப்பியபோது, அவ்விருவரையும் அவர்கள் பொய்யாக்கினார்கள்; ஆகவே, மூன்றாவது தூதரைக் கொண்டு (அவ்விருவரையும்) நாம் வலுப்படுத்தினோம்; ஆகவே, இவர்கள் "நிச்சயமாக நாங்கள் உங்களிடம் அனுப்பப்பட்ட (அல்லாஹ்வின் தூது) வர்களாவோம்" என்று கூறினார்கள்.

15. அ(தற்க)வர்கள், " நீங்கள் எங்களைப் போன்ற மனிதர்களேயன்றி (வேறு) இல்லை; அர்ரஹ்மான் (உங்கள் மீது) யாதொன்றையும் இறக்கிவைக்கவுமில்லை; நீங்கள் பொய் சொல்கிறீர்களே தவிர வேறில்லை" என்று கூறினார்கள்.

16. அ(தற்க)வர்கள், "நிச்சயமாக நாங்கள் உங்களிடம் அனுப்பப்பட்ட (தூது)வர்கள்தாம் என்பதை எங்கள் இரட்சகனே நன்கறிவான்" என்று கூறினர்.

17. " மேலும், எங்கள் மீது ( அல்லாஹ்வுடைய தூதைப்) பகிரங்கமாக எத்திவைப்பதைத் தவிர (வேறு கடமை) இல்லை" ( என்றும் கூறினார்கள் ).

18. அ(தற்க)வர்கள், " நிச்சயமாக, நாங்கள் உங்களைத் துர்ச்சகுனமாகவே கருதுகின்றோம்; நீங்கள் (இதிலிருந்து) விலகிக் கொள்ளாவிடில், உங்களைத் திட்டமாக நாம் கல்லால் எறிவோம்; அன்றியும், எம்மிடமிருந்து துன்புறுத்தும் வேதனையும் உங்களைப் பிடித்துக் கொள்ளும்" என்று கூறினார்கள்.

19. (அதற்கு நம் தூதர்கள்,) "உங்களுடைய துர்ச்சகுனம் உங்களுடன்தான் இருக்கின்றது; (எங்கள் மூலம் அல்லாஹ்வைப் பற்றி) நீங்கள் (நற்போதனை செய்யப்பட்டு) நினைவூட்டப்பட்டீர்களானாலுமா? (துர்ச்சகுனமென்று கூறுவீர்கள்?) அவ்வாறல்ல! நீங்கள் வரம்பு மீறிய சமூகத்தார் என்று கூறினார்கள்.

20. மேலும், அப்பட்டணத்தின் கடைக் கோடியிலிருந்து ஒரு மனிதர் விரைந்தோடி வந்து (அப்பட்டணவாசிகளிடம்) "என்னுடைய சமூகத்தார்களே! நீங்கள் இத்தூதர்களைப் பின்பற்றுங்கள்" என்று கூறினார்.

21. " உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்காதவர்(களான இத்தூதர்)களை நீங்கள் பின்பற்றுங்கள்; மேலும், (இவர்கள் நேர்வழி போதனை செய்பவர்கள் மட்டுமல்ல,) இவர்கள் (அல்லாஹ்வினால்)நேர்வழிபெற்றவர்கள்" (என்றும் கூறினார்).

وَمَا لِيَ لَآ اَعْبُدُ الَّذِيْ فَطَرَنِيْ وَاِلَيْهِ تُرْجَعُوْنَ ﴿۲۲﴾
ءَاَتَّخِذُ مِنْ دُوْنِهٖٓ اٰلِهَةً اِنْ يُّرِدْنِ الرَّحْمٰنُ بِضُرٍّ لَّا تُغْنِ عَنِّيْ
شَفَاعَتُهُمْ شَيْـًٔا وَّلَا يُنْقِذُوْنِ ﴿۲۳﴾ اِنِّيْٓ اِذًا لَّفِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۲۴﴾ اِنِّيْٓ
اٰمَنْتُ بِرَبِّكُمْ فَاسْمَعُوْنِ ﴿۲۵﴾ قِيْلَ ادْخُلِ الْجَنَّةَ ۭ قَالَ يٰلَيْتَ قَوْمِيْ
يَعْلَمُوْنَ ﴿۲۶﴾ بِمَا غَفَرَ لِيْ رَبِّيْ وَجَعَلَنِيْ مِنَ الْمُكْرَمِيْنَ ﴿۲۷﴾ وَمَآ
اَنْزَلْنَا عَلٰي قَوْمِهٖ مِنْۢ بَعْدِهٖ مِنْ جُنْدٍ مِّنَ السَّمَاۗءِ وَمَا كُنَّا مُنْزِلِيْنَ ﴿۲۸﴾
اِنْ كَانَتْ اِلَّا صَيْحَةً وَّاحِدَةً فَاِذَا هُمْ خٰمِدُوْنَ ﴿۲۹﴾ يٰحَسْرَةً عَلَي
الْعِبَادِ ۚ مَا يَاْتِيْهِمْ مِّنْ رَّسُوْلٍ اِلَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ﴿۳۰﴾ اَلَمْ يَرَوْا
كَمْ اَهْلَكْنَا قَبْلَهُمْ مِّنَ الْقُرُوْنِ اَنَّهُمْ اِلَيْهِمْ لَا يَرْجِعُوْنَ ﴿۳۱﴾ وَاِنْ
كُلٌّ لَّمَّا جَمِيْعٌ لَّدَيْنَا مُحْضَرُوْنَ ﴿۳۲﴾ وَاٰيَةٌ لَّهُمُ الْاَرْضُ الْمَيْتَةُ ښ
اَحْيَيْنٰهَا وَاَخْرَجْنَا مِنْهَا حَبًّا فَمِنْهُ يَاْكُلُوْنَ ﴿۳۳﴾ وَجَعَلْنَا فِيْهَا جَنّٰتٍ
مِّنْ نَّخِيْلٍ وَّاَعْنَابٍ وَّفَجَّرْنَا فِيْهَا مِنَ الْعُيُوْنِ ﴿۳۴﴾ لِيَاْكُلُوْا مِنْ
ثَمَرِهٖ ۙ وَمَا عَمِلَتْهُ اَيْدِيْهِمْ ۭ اَفَلَا يَشْكُرُوْنَ ﴿۳۵﴾ سُبْحٰنَ الَّذِيْ خَلَقَ
الْاَزْوَاجَ كُلَّهَا مِمَّا تُنْۢبِتُ الْاَرْضُ وَمِنْ اَنْفُسِهِمْ وَمِمَّا لَا يَعْلَمُوْنَ ﴿۳۶﴾
وَاٰيَةٌ لَّهُمُ الَّيْلُ ښ نَسْلَخُ مِنْهُ النَّهَارَ فَاِذَا هُمْ مُّظْلِمُوْنَ ﴿۳۷﴾

الجزء ۲۳
وقف غفران
الربع ۲

22. "என்னைப் படைத்தானே அத்தகையவனை நான் வணங்காதிருக்க எனக்கென்ன (இருக்கிறது) அவனிடமே நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்."
23."அவனையன்றி வேறு வணங்கப்படுபவர்களை (என் வணக்கத்திற்குரியவர்களாக) நான் எடுத்துக் கொள்வேனா? அர்ரஹ்மான் யாதொரு இடரை எனக்கு நாடினால் இவர்களின் பரிந்துரை எதற்கும் எனக்குப் பயனளிக்காது; (அதிலிருந்து) என்னை இவர்கள் விடுவிக்கவும் மாட்டார்கள்."
24. "ஆகவே,(அல்லாஹ்வைத் தவிர்த்து இவர்களை வணங்கினால்) அப்போது நிச்சயமாக நான் பகிரங்கமான வழிகேட்டில் இருப்பேன்.
25. " நிச்சயமாக நான், உங்கள் இரட்சகனையே விசுவாசித்திருக்கிறேன்; ஆதலால், நீங்கள் எனக்குச் செவிசாயுங்கள்"(என்று கூறினார்).
26.(எனினும், அச்சமூகத்தார் அவரைக் கொலை செய்துவிட்டனர்; ஆகவே,)"நீர் சுவனபதியில் நுழைவீராக!" என (அவருக்கு)க்கூறப்பட்டது;(சுவனபதி நுழைந்த) அவர், "என்னுடைய சமூகத்தார் (எனக்குக் கிடைத்த இப்பாக்கியத்தை) அறிந்துகொள்ள வேண்டுமே" என்று கூறினார்.
27. "என் இரட்சகன் என்னை மன்னித்து மிக்க கண்ணியமானவர்களில் ஒருவனாகவும் என்னை ஆக்கிவிட்டான்" என்பதை (அவர்கள் அறிந்து கொள்ளவேண்டுமே என்று கூறினார்).
28. மேலும், அ(வரைக் கொலை செய்த)தற்குப் பின்னர், அவருடைய சமூகத்தவர்மீது வானத்திலிருந்து (அவர்களை அழிக்க) யாதொரு படையையும் நாம் இறக்கிவைக்கவில்லை; (அவ்வாறு) இறக்கிவைப்பவர்களாகவும் நாம் இல்லை.
29. (அவர்களின்அழிவு) ஒரே ஒருபயங்கர சப்தத்தைத் தவிர வேறு இல்லை; அப்பொழுது அவர்கள் நூர்ந்து(சாம்பலாகி)விட்டவர்கள் ஆயினர்.
30. அடியார்கள் மீதுள்ள கைசேதமே! அவர்களிடம் எந்தத்தூதரும் — அவரை அவர்கள் பரிகாசம் செய்து கொண்டவர்களாக இருந்தேயல்லாது வருவதில்லை.
31. "அவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலை முறையினரை நாம் அழித்திருக்கிறோம்; நிச்சயமாக(அழிந்துவிட்ட) அவர்கள் இவர்கள்பால் திரும்பமாட்டார்கள்" என்பதை அவர்கள் பார்க்கவில்லையா?
32. மேலும், அவர்கள் அனைவரும் (விசாரணைக்காக) ஒன்று திரட்டப்பட்டு நம்மிடம் முன்னிலைப்படுத்தப்படுபவர்களே தவிர வேறில்லை.
33. இறந்த(பொட்டலான) பூமியும் இவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும்; அதனை நாம்(மழையைக் கொண்டு)உயிர்ப்பிக்கிறோம்;இன்னும்,அதிலிருந்து தானியத்தை வெளிப்படுத்துகின்றோம்; அப்போது அதிலிருந்து(தான்) அவர்கள் உண்ணுகின்றார்கள்.
34. இன்னும், அதில் நாம் பேரீச்சை, திராட்சைகளிலிருந்து தோட்டங்களை அமைத்தோம்; அதில் நீரூற்றுக்களைப் பீறிட்டு ஓடவும் செய்கின்றோம்.
35. அதன் கனி(வர்க்கங்)களிலிருந்து அவர்கள் உண்ணுவதற்காக(இவைகளைப் படைத்தோம்); அவர்களுடைய கைகள் அதைச் செய்யவில்லை ; ஆகவே அவர்கள் நன்றி செலுத்தமாட்டார்களா?
36. பூமி முளைப்பித்தவற்றிலிருந்தும்,(மனிதர்களாகிய) அவர்கள் தம்மிலிருந்தும், அவர்கள் அறியாதவற்றிலிருந்தும் ஜோடிகளை—அவை ஒவ்வொன்றையும் படைத்தானே அவன் மிகத்தூய்மையானவன்.
37. இரவும் அவர்களுக்கோர் அத்தாட்சியாகும்; அதிலிருந்து பகலை நாம் கழற்றுகின்றோம்; அப்போது இவர்கள் இருளில் ஆகிவிடுகிறார்கள்.

وَالشَّمْسُ تَجْرِيْ لِمُسْتَقَرٍّ لَّهَا ؕ ذٰلِكَ تَقْدِيْرُ الْعَزِيْزِ الْعَلِيْمِ ﴿۳۸﴾ؕ وَالْقَمَرَ
قَدَّرْنٰهُ مَنَازِلَ حَتّٰى عَادَ كَالْعُرْجُوْنِ الْقَدِيْمِ ﴿۳۹﴾ لَا الشَّمْسُ يَنْۢبَغِيْ
لَهَاۤ اَنْ تُدْرِكَ الْقَمَرَ وَلَا الَّيْلُ سَابِقُ النَّهَارِ ؕ وَكُلٌّ فِيْ فَلَكٍ
يَّسْبَحُوْنَ ﴿۴۰﴾ وَاٰيَةٌ لَّهُمْ اَنَّا حَمَلْنَا ذُرِّيَّتَهُمْ فِي الْفُلْكِ الْمَشْحُوْنِ ﴿۴۱﴾ۙ
وَخَلَقْنَا لَهُمْ مِّنْ مِّثْلِهٖ مَا يَرْكَبُوْنَ ﴿۴۲﴾ وَاِنْ نَّشَاْ نُغْرِقْهُمْ فَلَا صَرِيْخَ
لَهُمْ وَلَا هُمْ يُنْقَذُوْنَ ﴿۴۳﴾ۙ اِلَّا رَحْمَةً مِّنَّا وَمَتَاعًا اِلٰى حِيْنٍ ﴿۴۴﴾ وَاِذَا
قِيْلَ لَهُمُ اتَّقُوْا مَا بَيْنَ اَيْدِيْكُمْ وَمَا خَلْفَكُمْ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ﴿۴۵﴾ وَمَا
تَاْتِيْهِمْ مِّنْ اٰيَةٍ مِّنْ اٰيٰتِ رَبِّهِمْ اِلَّا كَانُوْا عَنْهَا مُعْرِضِيْنَ ﴿۴۶﴾ وَاِذَا
قِيْلَ لَهُمْ اَنْفِقُوْا مِمَّا رَزَقَكُمُ اللّٰهُ ۙ قَالَ الَّذِيْنَ كَفَرُوْا لِلَّذِيْنَ اٰمَنُوْۤا
اَنُطْعِمُ مَنْ لَّوْ يَشَآءُ اللّٰهُ اَطْعَمَهٗۤ ۖۗ اِنْ اَنْتُمْ اِلَّا فِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۴۷﴾
وَيَقُوْلُوْنَ مَتٰى هٰذَا الْوَعْدُ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۴۸﴾ مَا يَنْظُرُوْنَ
اِلَّا صَيْحَةً وَّاحِدَةً تَاْخُذُهُمْ وَهُمْ يَخِصِّمُوْنَ ﴿۴۹﴾ فَلَا يَسْتَطِيْعُوْنَ
تَوْصِيَةً وَّلَاۤ اِلٰۤى اَهْلِهِمْ يَرْجِعُوْنَ ﴿۵۰﴾ؒ وَنُفِخَ فِي الصُّوْرِ فَاِذَا هُمْ ۳ ع ۸ ۲
مِّنَ الْاَجْدَاثِ اِلٰى رَبِّهِمْ يَنْسِلُوْنَ ﴿۵۱﴾ قَالُوْا يٰوَيْلَنَا مَنْۢ بَعَثَنَا
مِنْ مَّرْقَدِنَا ۜٚ هٰذَا مَا وَعَدَ الرَّحْمٰنُ وَصَدَقَ الْمُرْسَلُوْنَ ﴿۵۲﴾

38. சூரியனும் அதற்குரிய தங்குமிடத்தின்பால் அது சென்று கொண்டிருக்கிறது; இது(யாவரையும்) மிகைத்தவன், நன்கறிந்தவன் ஏற்படுத்தியதாகும்.

39. இன்னும், சந்திரனை_(உலர்ந்து வளைந்த) பழைய பேரீச்சங் குலையின் குச்சி போல் அது மீண்டுவிடும் வரையில், அதற்கு நாம் பல தங்குமிடங்களை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

40. சூரியன்_ அதற்குச் சந்திரனை (அணுகி)ப்பிடிக்கமுடியாது; இரவு, பகலை முந்தவும் முடியாது. (இவ்வாறே கிரகங்கள், நட்சத்திரங்கள்) ஒவ்வொன்றும் (தனது) வட்டத்துக்குள் நீந்திச்செல்கின்றன.

41. இன்னும், நாம் அவர்களுடைய சந்ததியினரை, (சகலவற்றாலும்) நிரப்பப்பட்ட கப்பலில் நாம் ஏற்றி(ச்சுமந்து காப்பாற்றி)னோம் என்பதும் இவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும்.

42. அதைப் போன்று அவர்கள் ஏறிச் செல்கின்றவைகளையும் நாம் அவர்களுக்காகப் படைத்திருக்கின்றோம்.

43. மேலும், நாம் நாடினால், அவர்களை(க் கடலில்) மூழ்கடித்துவிடுவோம்; அதுசமயம்(அபயக் குரலிடும்) அவர்களைக் காப்பாற்றுவோர் ஒருவருமிரார்; அவர்கள் விடுவிக்கப்படவும் மாட்டார்கள்.

44. என்றாலும் நம்மிடமிருந்துள்ள அருளால்(கடலிலும் கரையிலும் நாம் நடத்திச்செல்கிறோம்) இன்னும் ஒரு காலம் வரை அவர்கள் சுகமனுபவிப்பதற்காக (விட்டும் வைக்கிறோம்).

45. "இன்னும், நீங்கள் கிருபைசெய்யப்படுவதற்காக, உங்களுக்கு முன் இருப்பதையும், உங்களுக்குப் பின் இருப்பதையும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள்" என்று அவர்களுக்குக் கூறப்பட்டால்(அதனை அவர்கள் பொருட்படுத்துவதில்லை).

46. இன்னும், அவர்களுடைய இரட்சகனின் அத்தாட்சிகளில் எந்த ஓர் அத்தாட்சியும் அதனை அவர்கள் புறக்கணிக்கக்கூடியவர்களாக இருந்தே தவிர அவர்களிடம் வருவதில்லை.

47. மேலும், "அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்திருப்பவற்றிலிருந்து செலவு செய்யுங்கள் என்று அவர்களுக்குக் கூறப்பட்டால், "அல்லாஹ் நாடியிருந்தால் எவர்களுக்கு அவன் உணவளித்துவிடுவானோ, அவர்களுக்கு நாங்கள் உணவளிப்போமா? நீங்கள் பகிரங்கமான வழிகேட்டிலன்றி வேறில்லை" என்று விசுவாசிகளிடம் நிராகரிப்போர் (பரிகாசமாகக்) கூறுகின்றனர்.

48. "நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின் (நீங்கள் கூறும் தண்டனை பற்றிய) அந்த வாக்குறுதி எப்பொழுது (வரும்)?" என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

49. ஒரே ஒரு (பெரும்) சப்தத்தைத் தவிர (வேறு எதையும்) அவர்கள் எதிர்பார்(த்திரு)க்கவில்லை! (இதனைப் பற்றி) அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருக்கும் நிலையில் அது அவர்களைப் பிடித்துக்கொள்ளும்.

50. அப்போது அவர்கள் (தங்களுக்குரிய சாதக, பாதகம்பற்றிய) மரணோபதேசம் கூற சக்தியும் பெறமாட்டார்கள்; தங்கள் குடும்பத்தாரிடம் திரும்பிச் செல்லவும் மாட்டார்கள்(அதற்குள் அழிந்துவிடுவார்கள்).

51. மேலும், (ஸூர் எனும்) குழல் ஊதப்படும்; உடனே அவர்கள் சமாதிகளிலிருந்து (வெளியேறி) தங்கள் இரட்சகன்பால் விரைந்து நடப்பார்கள்.

52. (அந்நாளின் அமளியைக் கண்டு மதியிழந்து) "எங்களுடைய நாசமே! எங்களை, எங்கள் (சமாதிகளாகிய) தூங்குமிடங்களிலிருந்து எழுப்பியவர் யார்?" என்று கேட்பார்கள்; (அதற்கு மலக்குகள் அவர்களிடம்) "அர்ரஹ்மான் (உங்களுக்கு) வாக்களித்ததும், தூதர்கள் (உங்களுக்கு) உண்மை (என எடுத்துக்) கூறியதும் இது தான்" (என்று கூறுவார்கள்).

إِن كَانَتْ إِلَّا صَيْحَةً وَاحِدَةً فَإِذَا هُمْ جَمِيعٌ لَّدَيْنَا مُحْضَرُونَ ۵۳
فَالْيَوْمَ لَا تُظْلَمُ نَفْسٌ شَيْئًا وَلَا تُجْزَوْنَ إِلَّا مَا كُنتُمْ تَعْمَلُونَ ۵۴ إِنَّ
أَصْحَابَ الْجَنَّةِ الْيَوْمَ فِي شُغُلٍ فَاكِهُونَ ۵۵ هُمْ وَأَزْوَاجُهُمْ فِي ظِلَالٍ
عَلَى الْأَرَائِكِ مُتَّكِئُونَ ۵۶ لَهُمْ فِيهَا فَاكِهَةٌ وَلَهُم مَّا يَدَّعُونَ ۵۷
سَلَامٌ قَوْلًا مِّن رَّبٍّ رَّحِيمٍ ۵۸ وَامْتَازُوا الْيَوْمَ أَيُّهَا الْمُجْرِمُونَ ۵۹
أَلَمْ أَعْهَدْ إِلَيْكُمْ يَا بَنِي آدَمَ أَن لَّا تَعْبُدُوا الشَّيْطَانَ إِنَّهُ لَكُمْ عَدُوٌّ
مُّبِينٌ ۶۰ وَأَنِ اعْبُدُونِي هَٰذَا صِرَاطٌ مُّسْتَقِيمٌ ۶۱ وَلَقَدْ أَضَلَّ وقف غفران
مِنكُمْ جِبِلًّا كَثِيرًا أَفَلَمْ تَكُونُوا تَعْقِلُونَ ۶۲ هَٰذِهِ جَهَنَّمُ الَّتِي
كُنتُمْ تُوعَدُونَ ۶۳ اصْلَوْهَا الْيَوْمَ بِمَا كُنتُمْ تَكْفُرُونَ ۶۴ الْيَوْمَ
نَخْتِمُ عَلَىٰ أَفْوَاهِهِمْ وَتُكَلِّمُنَا أَيْدِيهِمْ وَتَشْهَدُ أَرْجُلُهُم بِمَا كَانُوا
يَكْسِبُونَ ۶۵ وَلَوْ نَشَاءُ لَطَمَسْنَا عَلَىٰ أَعْيُنِهِمْ فَاسْتَبَقُوا الصِّرَاطَ فَأَنَّىٰ
يُبْصِرُونَ ۶۶ وَلَوْ نَشَاءُ لَمَسَخْنَاهُمْ عَلَىٰ مَكَانَتِهِمْ فَمَا اسْتَطَاعُوا
مُضِيًّا وَلَا يَرْجِعُونَ ۶۷ وَمَن نُّعَمِّرْهُ نُنَكِّسْهُ فِي الْخَلْقِ أَفَلَا ع ۴/۷
يَعْقِلُونَ ۶۸ وَمَا عَلَّمْنَاهُ الشِّعْرَ وَمَا يَنبَغِي لَهُ إِنْ هُوَ إِلَّا ذِكْرٌ وَقُرْآنٌ
مُّبِينٌ ۶۹ لِّيُنذِرَ مَن كَانَ حَيًّا وَيَحِقَّ الْقَوْلُ عَلَى الْكَافِرِينَ ۷۰

53. அது ஒரே ஒரு (பெரும்) சப்தத்தைத் தவிர_(வேறொன்றுமாக) இருக்காது; அப்பொழுது அவர்கள் அனைவரும் நம்மிடம் (ஒன்றுதிரட்டப்பட்டு கேள்வி கணக்கிற்காக)முன்னிலைப்படுத்தப்பட்டுவிடுபவர்களாவர்.

54. எனவே, அந்நாளில், எந்த ஆத்மாவும் ஒரு சிறிதும் அநியாயம் செய்யப்பட மாட்டாது; இன்னும், நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளுக்கன்றி (வேறு எதற்கும்) நீங்கள் கூலிகொடுக்கப்படமாட்டீர்கள்.

55. நிச்சயமாக சுவனவாசிகள் அந்நாளில் தங்கள் காரியத்தில் மகிழ்ச்சியுடையோராக இருப்பர்.

56. அவர்களும், அவர்களுடைய மனைவியரும் நிழல்களில் (உள்ள) கட்டில்களின் மேல் (வெகு உல்லாசமாக) சாய்ந்தவர்களாக இருப்பார்கள்.

57. அதில் அவர்களுக்கு (விதவிதமான) கனிவர்க்கங்களுண்டு; இன்னும், அவர்கள் வேண்டுவன(யாவும்)அவர்களுக்குண்டு.

58. (அவர்களை நோக்கி) நிகரற்ற அன்புடைய இரட்சகனின் சொல்லாக_ "சாந்தி உண்டாகுக!"(என்று கூறுதல்) உண்டு.

59. மேலும், "குற்றவாளிகளே! இன்றையத்தினம் நீங்கள் (நல்லோரிலிருந்து) பிரிந்து விடுங்கள்" (என்று கூறப்படும்).

60. "ஆதமுடைய மக்களே! நீங்கள் ஷைத்தானை வணங்காதீர்கள்; நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான விரோதி "என்று நான் உங்களிடம் உறுதி மொழி வாங்கவில்லையா?

61. " என்னையே நீங்கள் வணங்குங்கள், இதுதான் நேரான வழியாகும் (என்றும் நான் உங்களிடம் உறுதி மொழி வாங்கவில்லையா?).

62. "உங்களில் பெருந்தொகையினரை அவன் நிச்சயமாக வழிகெடுத்தும்விட்டான்; இதனை நீங்கள் விளங்கிக் கொள்பவர்களாக இருக்கவில்லையா?

63. "இதுதான் நீங்கள் வாக்களிக்கப்பட்டிருந்தீர்களே அந்த நரகம்.

64. "(இதனை) நீங்கள் நிராகரித்துக்கொண்டிருந்ததன் காரணமாக, இன்றையத்தினம் இதில் நீங்கள் நுழைந்துவிடுங்கள்" (என்று கூறப்படும்).

65. இன்றையத் தினம் நாம் அவர்களுடைய வாய்களின் மீது முத்திரையிட்டுவிடுவோம்; அன்றியும், அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தவைகளைப்பற்றி அவர்களுடைய கைகள் நம்மிடம் பேசும்; அவர்களுடைய கால்களும் சாட்சி கூறும்.

66. மேலும், நாம் நாடியிருந்தால் அவர்களுடைய கண்களைப் போக்கி (குருடாக்கி)யிருப்போம்; பின்னர் (தப்பித்துக்கொள்ளும்)வழியின்பால் (அதைக்கடக்க) முந்தியிருப்பார்கள்; அப்போது (அவர்கள் உண்மைவழியை) எவ்வாறு பார்ப்பார்கள்?

67. இன்னும், நாம் நாடியிருந்தால், அவர்கள் இருந்த இடத்திலேயே அவர்கள் உருவத்தை மாற்றி (கல்லாகவோ, மற்ற ஜடப் பொருளாகவோ ஆக்கி)யிருப்போம். அது சமயம், அவர்கள் முன் செல்லவும் சக்திபெறமாட்டார்கள்; பின் திரும்பவும் மாட்டார்கள்.

68. எவரை நாம் (வயோதிகராக்கி) வயதை நீட்டிவிடுகிறோமோ அவரை, படைப்பில் (வாலிபத்திற்குப்பிறகு முதுமையையும், பலத்திற்குப்பிறகு பலவீனத்தையும் கொடுத்து), தலைகீழாக மாற்றி விடுகின்றோம். (இதனை) அவர்கள் அறிந்துகொள்ள மாட்டார்களா?

69. (நம்முடைய தூதராகிய) அவருக்கு நாம் கவிதையை (இயற்ற)க் கற்றுக் கொடுக்கவுமில்லை; அது அவருக்கு அவசியமானதுமல்ல; இது நல்லுபதேசமும், தெளிவான குர்ஆனுமே தவிர (வேறு) இல்லை.

70. அ(க்குர்ஆனான)து, உயிரோடு(_உண்மையை ஏற்று பொய்யை மறுக்கும் உள்ளத்துடன்) இருப்பவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும், நிராகரிப்போர் மீது ( தண்டனையைப் பற்றிய ) வாக்கை உறுதிப்படுத்துவதற்காகவும் (இறக்கப்பட்டது).

اَوَلَمْ يَرَوْا اَنَّا خَلَقْنَا لَهُمْ مِّمَّا عَمِلَتْ اَيْدِيْنَآ اَنْعَامًا فَهُمْ لَهَا مٰلِكُوْنَ ﴿۷۱﴾
وَذَلَّلْنٰهَا لَهُمْ فَمِنْهَا رَكُوْبُهُمْ وَمِنْهَا يَاْكُلُوْنَ ﴿۷۲﴾ وَلَهُمْ فِيْهَا مَنَافِعُ
وَمَشَارِبُ ؕ اَفَلَا يَشْكُرُوْنَ ﴿۷۳﴾ وَاتَّخَذُوْا مِنْ دُوْنِ اللّٰهِ اٰلِهَةً لَّعَلَّهُمْ
يُنْصَرُوْنَ ﴿۷۴﴾ؕ لَا يَسْتَطِيْعُوْنَ نَصْرَهُمْ ۙ وَهُمْ لَهُمْ جُنْدٌ مُّحْضَرُوْنَ ﴿۷۵﴾ فَلَا
يَحْزُنْكَ قَوْلُهُمْ ۘ اِنَّا نَعْلَمُ مَا يُسِرُّوْنَ وَمَا يُعْلِنُوْنَ ﴿۷۶﴾ اَوَلَمْ يَرَ الْاِنْسَانُ
اَنَّا خَلَقْنٰهُ مِنْ نُّطْفَةٍ فَاِذَا هُوَ خَصِيْمٌ مُّبِيْنٌ ﴿۷۷﴾ وَضَرَبَ لَنَا مَثَلًا وَّ
نَسِيَ خَلْقَهٗ ؕ قَالَ مَنْ يُّحْيِ الْعِظَامَ وَهِيَ رَمِيْمٌ ﴿۷۸﴾ قُلْ يُحْيِيْهَا الَّذِيْٓ
اَنْشَاَهَآ اَوَّلَ مَرَّةٍ ؕ وَهُوَ بِكُلِّ خَلْقٍ عَلِيْمُ ﴿۷۹﴾ۙ الَّذِيْ جَعَلَ لَكُمْ مِّنَ
الشَّجَرِ الْاَخْضَرِ نَارًا فَاِذَآ اَنْتُمْ مِّنْهُ تُوْقِدُوْنَ ﴿۸۰﴾ اَوَلَيْسَ الَّذِيْ
خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِقٰدِرٍ عَلٰٓى اَنْ يَّخْلُقَ مِثْلَهُمْ ؕ بَلٰى ۗ وَهُوَ
الْخَلّٰقُ الْعَلِيْمُ ﴿۸۱﴾ اِنَّمَآ اَمْرُهٗٓ اِذَآ اَرَادَ شَيْئًا اَنْ يَّقُوْلَ لَهٗ كُنْ فَيَكُوْنُ ﴿۸۲﴾
فَسُبْحٰنَ الَّذِيْ بِيَدِهٖ مَلَكُوْتُ كُلِّ شَيْءٍ وَّاِلَيْهِ تُرْجَعُوْنَ ﴿۸۳﴾ ع

وقف لازم — وقف غفران ۱۲ — ع ۵

سُوْرَةُ الصّٰفّٰتِ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّاثْنَتَانِ وَّثَمَانُوْنَ اٰيَةً وَّخَمْسُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَالصّٰٓفّٰتِ صَفًّا ﴿۱﴾ۙ فَالزّٰجِرٰتِ زَجْرًا ﴿۲﴾ۙ فَالتّٰلِيٰتِ ذِكْرًا ﴿۳﴾ۙ

المنزل ۶

71. நம்முடைய கைகள் செய்தவற்றிலிருந்து நிச்சயமாக நாம் அவர்களுக்காக (ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) கால்நடைகளைப் படைத்திருக்கின்றோம் என்பதை அவர்கள் காணவில்லையா? பின்னர், அவர்கள் அவற்றுக்கு உரிமையாளர்களாக இருக்கின்றார்கள்.

72. அவைகளை, (இலகுவான முறையில்) அவர்களுக்குக் கீழ்ப்படியும்படியும் நாம் செய்தோம்; அவைகளில், அவர்கள் (வாகனமாக) ஏறக்கூடியவைகளும் இருக்கின்றன; அவர்கள் அவற்றிலிருந்து உண்ணவும் செய்கிறார்கள்.

73. இன்னும் அநேகபயன்களும், பானங்களும் அவர்களுக்கு அவைகளில் இருக்கின்றன; எனவே, அவர்கள் நன்றி செலுத்தமாட்டார்களா?

74. இன்னும், அல்லாஹ்வையன்றி (அவற்றால்) தங்களுக்கு உதவிசெய்யப்படக்கூடும் என்பதற்காக, அவர்கள் (வணக்கத்திற்குரிய வேறு) தெய்வங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

75. (ஆனால்) அவர்கள், அவர்களுக்கு உதவி செய்யும் ஆற்றல் பெற மாட்டார்கள்; (ஆயினும் மறுமையில்) அவர்கள் இவர்களுக்கு (எதிராகச் சாட்சிகூற) முன்னிலைப்படுத்தப்படும் படையினராவர்.

76. (நபியே! உமக்கு விரோதமாகக் கூறப்படும்) அவர்களுடைய கூற்று உம்மைக் கவலைக்குள்ளாக்கவேண்டாம்; நிச்சயமாக, அவர்கள் (தங்கள் இதயங்களில்) மறைத்திருப்பதையும், அவர்கள் வெளிப்படுத்துவதையும் நாம் நன்கறிவோம்.

77. மனிதன்_அவனை ஒரு துளி இந்திரியத்திலிருந்து நிச்சயமாக நாம் படைத்தோம் என்பதை_ அவன் பார்க்கவில்லையா? பின்னர் திடீரென அவன், பகிரங்கமாகத் தர்க்கிக்கக் கூடியவனாக இருக்கிறான்.

78. மேலும், அவன் தன்னுடைய படைப்பை (தான் எவ்வாறு படைக்கப்பட்டான் என்பதை) மறந்துவிட்டு, ஓர் உதாரணத்தையும் நமக்காக அவன் கூறுகிறான்; "எலும்புகளை, அவை மக்கிப்போன நிலையில் உயிரூட்டுபவன் யார்?" என்று அவன் கேட்கிறான்.

79. (நபியே! அதற்கு) நீர் கூறுவீராக: "முதன்முறையில் அதனைப்படைத்தானே அத்தகையவனே அதனை உயிர்ப்பிப்பான்; அவன் ஒவ்வொரு படைப்பைப்பற்றியும் நன்கறிகிறவன்."

80. அவன் எத்தகையவனென்றால், உங்களுக்காக பசுமையான மரத்திலிருந்து நெருப்பை உண்டாக்கினான்; அப்போது அதிலிருந்து நீங்கள் (நெருப்பை) மூட்டுகிறீர்கள்.

81. வானங்களையும், பூமியையும் படைத்தானே அத்தகையவன், அவர்களைப் போன்றதைப் படைக்கச் சக்திபெற்றவனாக இல்லையா? ஏன் இல்லை? (அவனே ஆற்றலுடையவன்.) நிச்சயமாக, அவனே மிகப் பெரும் படைப்பாளன், நன்கறிகிறவன்.

82. அவன் யாதொரு பொருளை (ப் படைக்க) நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம் "ஆகுக!" எனக் கூறுவதுதான் உடனே அது ஆகிவிடும்.

83. ஆகவே, சகலவற்றின் அதிகாரம் (ஆட்சி) எவனுடைய கைவசம் இருக்கின்றதோ அத்தகையவனே மிகப் பரிசுத்தமானவன்; மேலும் அவன்பாலே நீங்கள் திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள்.

---

அத்தியாயம் : 37

## அஸ்ஸாஃப்ஃபாத் _ அணியினர்

வசனங்கள் : 182 மக்கீ ருகூஃகள் : 5

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. அணியாக அணிவகுத்து நிற்போர் மீது சத்தியமாக,
2. தீவிரமாக விரட்டுவோர் மீது சத்தியமாக,
3. (அல்லாஹ்வின்) வேதத்தை ஓதுவோர் மீது சத்தியமாக,

إِنَّ إِلٰهَكُمْ لَوَاحِدٌ ﴿٤﴾ رَبُّ السَّمٰوٰتِ وَالْأَرْضِ وَمَا بَيْنَهُمَا وَرَبُّ
الْمَشَارِقِ ﴿٥﴾ إِنَّا زَيَّنَّا السَّمَاءَ الدُّنْيَا بِزِينَةٍ الْكَوَاكِبِ ﴿٦﴾ وَحِفْظًا
مِنْ كُلِّ شَيْطٰنٍ مَارِدٍ ﴿٧﴾ لَا يَسَّمَّعُونَ إِلَى الْمَلَإِ الْأَعْلٰى وَيُقْذَفُونَ
مِنْ كُلِّ جَانِبٍ ﴿٨﴾ دُحُورًا وَلَهُمْ عَذَابٌ وَاصِبٌ ﴿٩﴾ إِلَّا مَنْ خَطِفَ
الْخَطْفَةَ فَأَتْبَعَهُ شِهَابٌ ثَاقِبٌ ﴿١٠﴾ فَاسْتَفْتِهِمْ أَهُمْ أَشَدُّ خَلْقًا أَمْ
مَنْ خَلَقْنَا إِنَّا خَلَقْنٰهُمْ مِنْ طِينٍ لَازِبٍ ﴿١١﴾ بَلْ عَجِبْتَ وَيَسْخَرُونَ ﴿١٢﴾
وَإِذَا ذُكِّرُوا لَا يَذْكُرُونَ ﴿١٣﴾ وَإِذَا رَأَوْا آيَةً يَسْتَسْخِرُونَ ﴿١٤﴾ وَقَالُوا إِنْ
هٰذَا إِلَّا سِحْرٌ مُبِينٌ ﴿١٥﴾ أَإِذَا مِتْنَا وَكُنَّا تُرَابًا وَعِظَامًا أَإِنَّا لَمَبْعُوثُونَ ﴿١٦﴾
أَوَآبَاؤُنَا الْأَوَّلُونَ ﴿١٧﴾ قُلْ نَعَمْ وَأَنْتُمْ دٰخِرُونَ ﴿١٨﴾ فَإِنَّمَا هِيَ زَجْرَةٌ
وَاحِدَةٌ فَإِذَا هُمْ يَنْظُرُونَ ﴿١٩﴾ وَقَالُوا يٰوَيْلَنَا هٰذَا يَوْمُ الدِّينِ ﴿٢٠﴾ هٰذَا
يَوْمُ الْفَصْلِ الَّذِي كُنْتُمْ بِهِ تُكَذِّبُونَ ﴿٢١﴾ احْشُرُوا الَّذِينَ ظَلَمُوا ع
وَأَزْوَاجَهُمْ وَمَا كَانُوا يَعْبُدُونَ ﴿٢٢﴾ مِنْ دُونِ اللّٰهِ فَاهْدُوهُمْ إِلٰى
صِرَاطِ الْجَحِيمِ ﴿٢٣﴾ وَقِفُوهُمْ إِنَّهُمْ مَسْئُولُونَ ﴿٢٤﴾ مَا لَكُمْ لَا تَنَاصَرُونَ ﴿٢٥﴾ بَلْ
هُمُ الْيَوْمَ مُسْتَسْلِمُونَ ﴿٢٦﴾ وَأَقْبَلَ بَعْضُهُمْ عَلٰى بَعْضٍ يَتَسَاءَلُونَ ﴿٢٧﴾
قَالُوا إِنَّكُمْ كُنْتُمْ تَأْتُونَنَا عَنِ الْيَمِينِ ﴿٢٨﴾ قَالُوا بَلْ لَمْ تَكُونُوا مُؤْمِنِينَ ﴿٢٩﴾

4. நிச்சயமாக உங்கள் வணக்கத்திற்குரிய நாயன் ஒரே ஒருவன் தான்.

5. வானங்களுக்கும், பூமிக்கும், அவை இரண்டிற்கு மத்தியில் உள்ளவற்றிற்கும் (அவனே) இரட்சகன்; (மேல்திசை)கீழ்த்திசைகளுக்கும் (அவனே) இரட்சகன்.

6.நிச்சயமாக நாம், (இந்தப் பூமிக்குச்)சமீபமாக உள்ள வானத்தை நட்சத்திரங்களின் அழகைக்கொண்டு அலங்கரித்துள்ளோம்.

7. கட்டுப்படாத ஒவ்வொரு ஷைத்தானிலிருந்தும் பாதுகாப்பதற்காக(நாம் ஆக்கினோம்).

8. மிக உயர்வான (மலக்குகளின்) கூட்டத்தார்பால் (அவர்களின் பேச்சுக்களை மறைந்திருந்து ஷைத்தான்களாகிய) இவர்கள் செவியேற்கமாட்டார்கள்; ஒவ்வொரு பகுதியிலிருந்தும் (எரி கொள்ளிகளால்)எறியப்படுவார்கள்.

9. விரட்டப்படுவதற்காக(எறியப்படுவார்கள்); அவர்களுக்கு நிலையான வேதனையுமுண்டு.

10. (திருட்டுத்தனமாக ஏதேனும்) செய்தியை இறாய்ஞ்சிச் செல்பவனைத் தவிர — அப்போது பிரகாசமான தீப்பந்தம் அவனைப் பின் தொடரும்.

11. ஆகவே "படைப்பால் அவர்கள் மிகக் கடினமானவர்களா? அல்லது நாம் படைத்திருப்பவைகளா?" என இவர்களிடம் (நபியே! நீர்) விளக்கம் கேட்பீராக! நிச்சயமாக நாம் அவர்களை பிசு பிசுப்பான களிமண்ணால் படைத்திருக்கின்றோம்.

12. எனினும்,(நபியே!) நீர் ஆச்சரியப்படுகின்றீர்; அவர்களோ,(அதனைப்) பரிகசிக்கின்றனர்.

13. அன்றியும், அவர்கள் உபதேசிக்கப்பட்டால், அவர்கள் உபதேசம் பெறமாட்டார்கள்.

14. எந்த அத்தாட்சியைக் கண்டபோதிலும் அவர்கள் அளவுகடந்து பரிகாசம் செய்கின்றனர்.

15. "இது பகிரங்கமான சூனியமே தவிர(வேறு)இல்லை" என்றும் கூறுகின்றனர்.

16. நாம் இறந்து மண்ணாகவும், எலும்புகளாகவும் நாங்கள் ஆகிவிட்டாலும்,(பின்னர்) நிச்சயமாக நாம் எழுப்பப்படுவோர்களா?(என்றும் கேட்கின்றனர்).

17. " எம்முடைய முன்னோர்களான மூதாதையர்களுமா? (எழுப்பப்படுவார்கள்)" என்றும் கேட்கின்றனர்.)

18.(நபியே!) நீர் கூறுவீராக: "ஆம்! நீங்களும் சிறுமைப்பட்டவர்களாக(எழுப்பப்படுவீர்கள்).

19. அதுவெல்லாம் ஒரே ஒரு சப்தம்தான்; உடனே அவர்கள் (எழுந்து மறுமை நாள் நிலைபெற்றுவிட்டதைப்)பார்ப்பார்கள்.

20. "எங்களுடைய கேடே! இது கூலி கொடுக்கப்படும் நாள் (ஆயிற்றே!)" என்றும் அவர்கள் கூறுவார்கள்.

21. "எதை நீங்கள் பொய்யாக்கிக் கொண்டிருந்தீர்களோ அந்தத் தீர்ப்பு நாள் இதுதான்" (என்று அவர்களிடம் கூறப்படும்).

22. "அநியாயம் செய்தார்களே அவர்களையும், (அநியாயம் செய்வதில் அவர்களுக்கு நிகரானவர்களான) அவர்களின் துணைவர்களையும், அவர்கள் வணங்கிக் கொண்டிருந்தார்களே அவர்களையும் ஒன்று திரட்டுங்கள்".

23."அல்லாஹ்வையன்றி(வணங்கிக்கொண்டிருந்தவர்களையும் ஒன்றுதிரட்டுங்கள்) பின்னர் அவர்களுக்கு நரகத்தின் பாதையின்பால் வழிகாட்டுங்கள்.

24. (அங்கு) அவர்களை நிறுத்தியும் வையுங்கள்; நிச்சயமாக அவர்கள் (கேள்வி கணக்குக்) கேட்கப்படவேண்டியவர்கள் (என்றும் கூறப்படும்).

25. உங்களுக்கு என்ன நேர்ந்தது? நீங்கள் ஏன் ஒருவருக்கொருவர் (உலகில் உதவி செய்தது போன்று) உதவி செய்து கொள்ளவில்லை? ( என்றும் கேட்கப்படும்.)

26. இல்லை; இன்றைய தினம் அவர்கள் (அல்லாஹ்வுக்கு) சரணடைந்தவர்களாக இருப்பார்கள்.

27. இன்னும், அவர்களில் சிலர் சிலரை முன்னோக்கிக்(கேள்விகளைக்)கேட்டுக் கொள்வார்கள்.

28. "வலப்பக்கத்திலிருந்து எங்களிடம் (உங்கள் பலத்தால் நல்லவற்றைச் செய்வதிலிருந்து தடுத்தும், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதிலிருந்து எங்களைத் திருப்பி விட்டும்) வருபவர்களாகவும் இருந்தீர்கள்" என்று கூறுவார்கள்.(19)

29. (அதற்கு) "அவ்வாறல்ல! நீங்கள்தாம் விசுவாசங்கொண்டவர்களாக இருக்கவில்லை" என்று அ(த்தலை)வர்கள் கூறுவார்கள்.

وَمَا كَانَ لَنَا عَلَيْكُمْ مِّنْ سُلْطٰنٍ ۚ بَلْ كُنْتُمْ قَوْمًا طٰغِيْنَ ﴿٣٠﴾ فَحَقَّ عَلَيْنَا
قَوْلُ رَبِّنَآ ۖ اِنَّا لَذَآئِقُوْنَ ﴿٣١﴾ فَاَغْوَيْنٰكُمْ اِنَّا كُنَّا غٰوِيْنَ ﴿٣٢﴾ فَاِنَّهُمْ
يَوْمَئِذٍ فِى الْعَذَابِ مُشْتَرِكُوْنَ ﴿٣٣﴾ اِنَّا كَذٰلِكَ نَفْعَلُ بِالْمُجْرِمِيْنَ ﴿٣٤﴾
اِنَّهُمْ كَانُوْٓا اِذَا قِيْلَ لَهُمْ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ ۙ يَسْتَكْبِرُوْنَ ﴿٣٥﴾ وَيَقُوْلُوْنَ
اَئِنَّا لَتَارِكُوْٓا اٰلِهَتِنَا لِشَاعِرٍ مَّجْنُوْنٍ ﴿٣٦﴾ بَلْ جَآءَ بِالْحَقِّ وَصَدَّقَ
الْمُرْسَلِيْنَ ﴿٣٧﴾ اِنَّكُمْ لَذَآئِقُوا الْعَذَابِ الْاَلِيْمِ ﴿٣٨﴾ وَمَا تُجْزَوْنَ اِلَّا مَا
كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿٣٩﴾ اِلَّا عِبَادَ اللّٰهِ الْمُخْلَصِيْنَ ﴿٤٠﴾ اُولٰٓئِكَ لَهُمْ رِزْقٌ
مَّعْلُوْمٌ ﴿٤١﴾ فَوَاكِهُ ۚ وَهُمْ مُّكْرَمُوْنَ ﴿٤٢﴾ فِىْ جَنّٰتِ النَّعِيْمِ ﴿٤٣﴾ عَلٰى سُرُرٍ
مُّتَقٰبِلِيْنَ ﴿٤٤﴾ يُطَافُ عَلَيْهِمْ بِكَاْسٍ مِّنْ مَّعِيْنٍ ﴿٤٥﴾ بَيْضَآءَ لَذَّةٍ
لِّلشّٰرِبِيْنَ ﴿٤٦﴾ لَا فِيْهَا غَوْلٌ وَّلَا هُمْ عَنْهَا يُنْزَفُوْنَ ﴿٤٧﴾ وَعِنْدَهُمْ قٰصِرٰتُ
الطَّرْفِ عِيْنٌ ﴿٤٨﴾ كَاَنَّهُنَّ بَيْضٌ مَّكْنُوْنٌ ﴿٤٩﴾ فَاَقْبَلَ بَعْضُهُمْ عَلٰى بَعْضٍ
يَّتَسَآءَلُوْنَ ﴿٥٠﴾ قَالَ قَآئِلٌ مِّنْهُمْ اِنِّىْ كَانَ لِىْ قَرِيْنٌ ﴿٥١﴾ يَّقُوْلُ
ءَاِنَّكَ لَمِنَ الْمُصَدِّقِيْنَ ﴿٥٢﴾ ءَاِذَا مِتْنَا وَكُنَّا تُرَابًا وَّعِظَامًا
ءَاِنَّا لَمَدِيْنُوْنَ ﴿٥٣﴾ قَالَ هَلْ اَنْتُمْ مُّطَّلِعُوْنَ ﴿٥٤﴾ فَاطَّلَعَ
فَرَاٰهُ فِىْ سَوَآءِ الْجَحِيْمِ ﴿٥٥﴾ قَالَ تَاللّٰهِ اِنْ كِدْتَّ لَتُرْدِيْنِ ﴿٥٦﴾

30. எங்களுக்கு உங்கள் மீது யாதோர் அதிகாரமும் இருக்கவில்லை. எனினும் நீங்கள் தாம் வரம்பு கடந்த கூட்டத்தாராக இருந்தீர்கள்.

31."ஆதலால், எங்கள் இரட்சகனுடைய வாக்கு எங்கள் மீது உண்மையாகி விட்டது; நிச்சயமாக நாம் (வேதனையைச்) சுவைக்க வேண்டியவர்கள் தாம்.

32. "(ஆம்!) உங்களை நாங்கள் வழிகெடுத்தோம்: (ஏனென்றால்) நிச்சயமாக நாங்களும் வழிகெட்டுப் போயிருந்தோம்" (என்றும் கூறுவார்கள்).

33. எனவே, நிச்சயமாக அவர்கள் அந்நாளில் வேதனையில் கூட்டானவர்களாகவே இருப்பர்.

34. நிச்சயமாக நாம் குற்றவாளிகளை இவ்வாறே செய்வோம்.

35."அல்லாஹ்வைத் தவிர வேறொரு (வணக்கத்திற்குரிய) நாயன் இல்லை!" என்று அவர்களுக்குக் கூறப்பட்டால், நிச்சயமாக அவர்கள், பெருமையடிப்பவர்களாக இருந்தனர்.

36."நாங்கள் பைத்தியக்காரரான ஒரு கவிஞருக்காக எங்களுடைய வணக்கத்துக்குரியவர் (களான தெய்வங்)களை நிச்சயமாக விட்டுவிடுகின்றவர்களா?" என்றும் அவர்கள் கூறுபவர்களாக இருந்தனர்.

37. (அவர் பைத்தியக்காரர்) அல்ல! அவர் உண்மையான(மார்க்கத்)தையே கொண்டு வந்தார். (தனக்கு முன்சென்ற)தூதர்களையும் அவர் உண்மைப்படுத்தினார்.

38. நிச்சயமாக நீங்கள் துன்புறுத்தும் வேதனையைச்சுவைக்க வேண்டியவர்கள் தாம்.

39. நீங்கள் செய்துகொண்டிருந்தவைகளுக்கல்லாமல் (வேறு) எதற்கும் நீங்கள் கூலி கொடுக்கப்படமாட்டீர்கள் (என்றும் கூறப்படும்).

40. (அல்லாஹ்வால்) தேர்ந்தெடுக்கப்பட்டோரான அல்லாஹ்வின் அடியார்களைத்தவிர;

41. அத்தகையோர்_ அவர்களுக்கு அறியப்பட்டுள்ள உணவு உண்டு.

42. (அது) கனி(வகை)கள், இன்னும் அவர்கள் கண்ணியப்படுத்தப் படுபவர்கள்.

43. இன்பம் தரும் சுவனபதிகளில்_

44. கட்டில்கள் மீது (அமர்ந்து) ஒருவர் மற்றொருவரை முன் நோக்கியவர்களாக (உல்லாசமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள்).

45. சுத்தமான (மது)பானம் நிறைந்த குவளை (சிறார்கள் மூலம்) அவர்களைச் சுற்றி கொண்டுவரப்படும்.

46. மிக்க வெண்மையானது (அதை) அருந்துவோருக்கு மதுரமளிக்கக் கூடியதாகும்.

47. அதில் கெடுதியும் இருக்காது; அதனால் (போதையுற்று) அவர்கள் மதிமயக்கப்படவும் மாட்டார்கள்.

48. அவர்களிடத்தில் பார்வைதாழ்த்திய (ஹூருல் ஈன் என்னும்) கண்ணழகிகளும் இருப்பார்கள்.

49. அவர்கள் (கறைபடாது) மறைக்கப்பட்ட முட்டை(களின் உள்ளிருக்கும் வெள்ளைத் தொலி)களைப் போன்று (பாதுகாக்கப்பட்டு) இருப்பர்.

50. பின்னர், அவர்களில் சிலர் சிலரை முன்னோக்கியவாறு (உலகத்தில் இருந்த அவர்களின் நிலைபற்றி) ஒருவரை ஒருவர் கேட்டு (விசாரித்து)க் கொள்வார்கள்.

51. அவர்களில் சொல்லக்கூடிய ஒருவர், "நிச்சயமாக நான்_ எனக்கு (இம்மையில்) ஒரு நண்பன் இருந்தான்" எனக்கூறுவார்.

52. அவன் (என்னிடம் மறுமையை) உண்மைப்படுத்தக்கூடியவர்களில் நிச்சயமாக நீயுமா? எனக்கூறுவான்.

53. நிச்சயமாக நாம் இறந்து மண்ணாகவும், எலும்புகளாகவும், ஆகிவிட்டாலும் (உயிர்ப்பித்து) நாம் கூலி வழங்கப்படுவோரா?(என்றும் கூறுபவனாக இருந்தான்).

54. (ஆகவே அவனை) நீங்கள் எட்டிப் பார்க்(கவிரும்பு)கின்றீர்களா? என்று கேட்டார்.

55. பிறகு அவர் எட்டிப் பார்க்கிறார்; அப்போது அவனை நரகத்தின் மத்தியில் அவர் காண்கிறார்.

56. (அவனிடம்) "அல்லாஹ்வின்மீது சத்தியமாக, நீ என்னை(உலகில் இருக்கும் போது வழி கெடுத்து நரகக்)குழியில் தள்ளிவிடவே எத்தனித்தாய்" என்று கூறுவார்.

وَلَوۡلَا نِعۡمَةُ رَبِّیۡ لَكُنۡتُ مِنَ الۡمُحۡضَرِیۡنَ ﴿۵۷﴾ اَفَمَا نَحۡنُ
بِمَیِّتِیۡنَ ﴿۵۸﴾ اِلَّا مَوۡتَتَنَا الۡاُوۡلٰی وَمَا نَحۡنُ بِمُعَذَّبِیۡنَ ﴿۵۹﴾ اِنَّ
هٰذَا لَهُوَ الۡفَوۡزُ الۡعَظِیۡمُ ﴿۶۰﴾ لِمِثۡلِ هٰذَا فَلۡیَعۡمَلِ الۡعٰمِلُوۡنَ ﴿۶۱﴾ اَذٰلِكَ
خَیۡرٌ نُّزُلًا اَمۡ شَجَرَةُ الزَّقُّوۡمِ ﴿۶۲﴾ اِنَّا جَعَلۡنٰهَا فِتۡنَةً لِّلظّٰلِمِیۡنَ ﴿۶۳﴾
اِنَّهَا شَجَرَةٌ تَخۡرُجُ فِیۡۤ اَصۡلِ الۡجَحِیۡمِ ﴿۶۴﴾ طَلۡعُهَا كَاَنَّهٗ رُءُوۡسُ
الشَّیٰطِیۡنِ ﴿۶۵﴾ فَاِنَّهُمۡ لَاٰكِلُوۡنَ مِنۡهَا فَمَالِـُٔوۡنَ مِنۡهَا الۡبُطُوۡنَ ﴿۶۶﴾
ثُمَّ اِنَّ لَهُمۡ عَلَیۡهَا لَشَوۡبًا مِّنۡ حَمِیۡمٍ ﴿۶۷﴾ ثُمَّ اِنَّ مَرۡجِعَهُمۡ لَاِ۠لَی
الۡجَحِیۡمِ ﴿۶۸﴾ اِنَّهُمۡ اَلۡفَوۡا اٰبَآءَهُمۡ ضَآلِّیۡنَ ﴿۶۹﴾ فَهُمۡ عَلٰۤی اٰثٰرِهِمۡ
یُهۡرَعُوۡنَ ﴿۷۰﴾ وَلَقَدۡ ضَلَّ قَبۡلَهُمۡ اَكۡثَرُ الۡاَوَّلِیۡنَ ﴿۷۱﴾ وَلَقَدۡ
اَرۡسَلۡنَا فِیۡهِمۡ مُّنۡذِرِیۡنَ ﴿۷۲﴾ فَانۡظُرۡ كَیۡفَ كَانَ عَاقِبَةُ
الۡمُنۡذَرِیۡنَ ﴿۷۳﴾ اِلَّا عِبَادَ اللّٰهِ الۡمُخۡلَصِیۡنَ ﴿۷۴﴾ وَلَقَدۡ نَادٰىنَا نُوۡحٌ ع ۳
فَلَنِعۡمَ الۡمُجِیۡبُوۡنَ ﴿۷۵﴾ وَنَجَّیۡنٰهُ وَاَهۡلَهٗ مِنَ الۡكَرۡبِ الۡعَظِیۡمِ ﴿۷۶﴾
وَجَعَلۡنَا ذُرِّیَّتَهٗ هُمُ الۡبٰقِیۡنَ ﴿۷۷﴾ وَتَرَكۡنَا عَلَیۡهِ فِی الۡاٰخِرِیۡنَ ﴿۷۸﴾
سَلٰمٌ عَلٰی نُوۡحٍ فِی الۡعٰلَمِیۡنَ ﴿۷۹﴾ اِنَّا كَذٰلِكَ نَجۡزِی الۡمُحۡسِنِیۡنَ ﴿۸۰﴾
اِنَّهٗ مِنۡ عِبَادِنَا الۡمُؤۡمِنِیۡنَ ﴿۸۱﴾ ثُمَّ اَغۡرَقۡنَا الۡاٰخَرِیۡنَ ﴿۸۲﴾

57. "என் இரட்சகனுடைய அருள் (என்மீது) இல்லாதிருந்தால், நானும் (நரகத்திற்கு) ஆஜர்படுத்தப்பட்டவர்களில் ஒருவனாக இருந்திருப்பேன்" (என்றும் கூறுவார்).

58. (பின்னர் சுவர்க்கவாசிகளிடம்,) " நாம் (மற்றொரு முறையும்) இறந்து விடுபவர்கள் இல்லையே? (என்பார்.)

59. "நம்முடைய முந்தைய மரணத்தைத் தவிர (வேறில்லை); நாம் வேதனை செய்யப்படுபவர்களும் அல்லர் (என்றும் சுவனவாசிகள் கூறுவர்).

60. நிச்சயமாக இதுவே மகத்தானதொரு வெற்றியாகும்!

61. இதுபோன்றதற்காகவே, செயல்படக்கூடியவர்கள் செயல்படவும்.

62. (அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும்) விருந்துபசாரத்தால் அது சிறந்ததா? அல்லது (நரகத்திலிருக்கும்) கள்ளி மரமா?

63. நிச்சயமாக நாம் அதனை, அநியாயக்காரர்களுக்கு ஒரு சோதனையாகவே ஆக்கியிருக்கின்றோம்.

64. நிச்சயமாக அது, நரகத்தின் அடித் தளத்திலிருந்து வெளிப்படும் ஒரு மரமாகும்.

65. (குழைகளுக்கொப்பான) அதன் பழங்கள், நிச்சயமாக, ஷைத்தான்களின் தலைகளைப்போலிருக்கும்.

66. எனவே, நிச்சயமாக அவர்கள், திட்டமாக அதிலிருந்து உண்ணக் கூடியவர்கள்; பின்னர் அதிலிருந்து வயிறுகளை நிரப்பிக் கொள்ளக் கூடியவர்கள்

67. பின்னர், நிச்சயமாக அதற்குமேல் கடுமையாகக் கொதிக்கவைக்கப் பட்டுள்ள நீரிலிருந்து கலப்பு(பானமு)ம் அவர்களுக்கு உண்டு.

68. பின்னர், நிச்சயமாக அவர்கள் திரும்பிச் செல்லுமிடம் நரகத்தின் பாலாகும்.

69. நிச்சயமாக, இவர்கள் தங்கள் மூதாதையரை வழிகெட்டவர்களாகக் கண்டார்கள்,

70. ஆகவே, அவர்களுடைய அடிச்சுவடுகளின் மீதே இவர்கள் விரைந்துசெல்ல தூண்டப்பட்டார்கள்.

71. முன்னோர்களில் பெரும்பாலோர் (இவ்வாறே) அவர்களுக்கு முன்னரும் திட்டமாக வழி கெட்டிருந்தனர்.

72. மேலும், அவர்களுக்கிடையே அச்சமூட்டி எச்சரிக்கக்கூடியவர்களை திட்டமாக நாம் அனுப்பிவைத்தோம்.

73. ஆகவே, "அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்பட்டவர்களுடைய முடிவு எப்படி இருந்தது" என்பதை (நபியே!) நீர் காண்பீராக!

74. தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லாஹ்வுடைய அடியார்களைத் தவிர.

75. மேலும், நூஹ் நம்மைத் திட்டமாக அழைத்தார்; (நாமே) பதிலளிப்போரில் மிக நல்லோர் (ஆவோம்).

76. அவரையும், அவருடைய குடும்பத்தினரையும் மகத்தான (மிகப்பெரும்) கஷ்டத்திலிருந்து காப்பாற்றினோம்.

77. அவருடைய சந்ததியையே எஞ்சியுள்ளோராய் நாம் ஆக்கினோம்.

78. மேலும், அவருக்காக (அவருடைய கீர்த்தியை,) பின்னுள்ளோர்களில் (நிலைத்திருக்க)விட்டுவைத்தோம்.

79. அகிலத்தார் அனைத்திலும் நூஹ்மீது ஸலாம் (சாந்தி) உண்டாவதாக.

80. நிச்சயமாக, இவ்வாறே நன்மை செய்கிறவர்களுக்கு நாம் கூலி கொடுக்கிறோம்.

81. நிச்சயமாக அவர் விசுவாசிகளான நம் அடியார்களில் உள்ளவராவார்.

82. பின்னர், மற்றவர்களை நாம் மூழ்கடித்துவிட்டோம்.

وقف لازم

وَ اِنَّ مِنْ شِيْعَتِهٖ لَاِبْرٰهِيْمَ ﴿٨٣﴾ اِذْ جَآءَ رَبَّهٗ بِقَلْبٍ سَلِيْمٍ ﴿٨٤﴾
اِذْ قَالَ لِاَبِيْهِ وَ قَوْمِهٖ مَاذَا تَعْبُدُوْنَ ﴿٨٥﴾ اَئِفْكًا اٰلِهَةً دُوْنَ اللّٰهِ
تُرِيْدُوْنَ ﴿٨٦﴾ فَمَا ظَنُّكُمْ بِرَبِّ الْعٰلَمِيْنَ ﴿٨٧﴾ فَنَظَرَ نَظْرَةً فِي النُّجُوْمِ ﴿٨٨﴾
فَقَالَ اِنِّيْ سَقِيْمٌ ﴿٨٩﴾ فَتَوَلَّوْا عَنْهُ مُدْبِرِيْنَ ﴿٩٠﴾ فَرَاغَ اِلٰۤى اٰلِهَتِهِمْ
فَقَالَ اَلَا تَاْكُلُوْنَ ﴿٩١﴾ مَا لَكُمْ لَا تَنْطِقُوْنَ ﴿٩٢﴾ فَرَاغَ عَلَيْهِمْ
ضَرْبًۢا بِالْيَمِيْنِ ﴿٩٣﴾ فَاَقْبَلُوْۤا اِلَيْهِ يَزِفُّوْنَ ﴿٩٤﴾ قَالَ اَتَعْبُدُوْنَ مَا
تَنْحِتُوْنَ ﴿٩٥﴾ وَ اللّٰهُ خَلَقَكُمْ وَ مَا تَعْمَلُوْنَ ﴿٩٦﴾ قَالُوا ابْنُوْا لَهٗ بُنْيَانًا
فَاَلْقُوْهُ فِي الْجَحِيْمِ ﴿٩٧﴾ فَاَرَادُوْا بِهٖ كَيْدًا فَجَعَلْنٰهُمُ الْاَسْفَلِيْنَ ﴿٩٨﴾
وَ قَالَ اِنِّيْ ذَاهِبٌ اِلٰى رَبِّيْ سَيَهْدِيْنِ ﴿٩٩﴾ رَبِّ هَبْ لِيْ مِنَ
الصّٰلِحِيْنَ ﴿١٠٠﴾ فَبَشَّرْنٰهُ بِغُلٰمٍ حَلِيْمٍ ﴿١٠١﴾ فَلَمَّا بَلَغَ مَعَهُ السَّعْيَ
قَالَ يٰبُنَيَّ اِنِّيْۤ اَرٰى فِي الْمَنَامِ اَنِّيْۤ اَذْبَحُكَ فَانْظُرْ مَاذَا تَرٰى ط
قَالَ يٰۤاَبَتِ افْعَلْ مَا تُؤْمَرُ سَتَجِدُنِيْۤ اِنْ شَآءَ اللّٰهُ مِنَ
الصّٰبِرِيْنَ ﴿١٠٢﴾ فَلَمَّاۤ اَسْلَمَا وَ تَلَّهٗ لِلْجَبِيْنِ ﴿١٠٣﴾ وَ نَادَيْنٰهُ اَنْ يّٰۤاِبْرٰهِيْمُ ﴿١٠٤﴾
قَدْ صَدَّقْتَ الرُّءْيَا اِنَّا كَذٰلِكَ نَجْزِي الْمُحْسِنِيْنَ ﴿١٠٥﴾ اِنَّ
هٰذَا لَهُوَ الْبَلٰٓؤُا الْمُبِيْنُ ﴿١٠٦﴾ وَ فَدَيْنٰهُ بِذِبْحٍ عَظِيْمٍ ﴿١٠٧﴾

83. மேலும் , நிச்சயமாக அவருடைய வழியைப் பின் பற்றியவர்களில் உள்ள(ஒரு)வர் தாம் இப்றாஹீம்.

84. அவர் தன் இரட்சகனிடம் தூய (பண்பட்ட) இதயத்துடன் வந்த சமயத்தை (நபியே!நினைவு கூர்வீராக!)

85. அவர் தம் தந்தை மற்றும் தம் சமூகத்தாரிடம்"எதனை நீங்கள் வணங்குகிறீர்கள்" என்று கூறியபோது,

86. "நீங்கள் அல்லாஹ்வையன்றி (வணக்கத்திற்குரிய) பொய்யான தெய்வங்களை நாடுகிறீர்களா?"

87. அவ்வாறாயின், "அகிலத்தாரின் இரட்சகனைப்பற்றி உங்கள் எண்ண மென்ன?" (என்றும் கேட்டார்)

88. பின்னர், நட்சத்திரங்களில் (ஆழ்ந்த சிந்தனையோடு) ஒரு பார்வை பார்த்தார்.

89. பின்னர், நிச்சயமாக நான் நோயுற்றிருக்கிறேன் எனக்கூறினார்.

90. அவர்கள் அவரை (ஊரில்) விட்டு விட்டு (திருவிழாவிற்கு)ச் சென்றுவிட்டனர்.

91. பின்னர், அவர் அவர்களுடைய வணக்கத்துக்குரியவர்(களான தெய்வங்) களின் பால் (மறைவாகச்) சென்று (அங்கு அவர்களுக்கென படைக்கப் பட்டிருந்தவற்றைச் சுட்டிக்காட்டி) "நீங்கள் உண்ணமாட்டீர்களா?" என்று கேட்டார்.

92. "உங்களுக்கென்ன (நேர்ந்தது?) நீங்கள் (ஏன்) பேசுவதில்லை?"(என்று கேட்டார்).

93. பின்னர் அவற்றின் பால் சென்று தன் வலக்கையினால் அவைகளை அடித்து (உடைத்து) விட்டார்.

94. (திருவிழாவிலிருந்து திரும்பி வந்து) அவர்பால் அவர்கள் விரைந்து (ஓடி) வந்தனர்.

95. அவர் (அவர்களிடம்) "நீங்கள் செதுக்கியவைகளை நீங்களே வணங்குகிறீர்களா?" என்று கேட்டார்.

96. "உங்களையும், நீங்கள் செய்கின்றவற்றையும் அல்லாஹ்வே படைத்தான்"(என்றார்).

97. (அவர்கள் கோபங் கொண்டு) இவருக்காக ஒரு கிடங்கை எழுப்புங்கள்; பின்னர், (அதில் நெருப்பை உண்டாக்கி) அந்நெருப்பில் அவரைப் போட்டு விடுங்கள்" என்று கூறினார்கள்.

98. ஆகவே, அவர்கள் அவருக்குச் சதிசெய்ய நாடினார்கள்; ஆனால், நாம் அவர்களை இழிவடைந்தோராய் ஆக்கிவிட்டோம்.

99. (பின்னர், இப்றாஹீம்) "நிச்சயமாக நான், என் இரட்சகனின்பால் செல்லுகிறேன்; அவன் எனக்கு நேர் வழியைக் காண்பிப்பான்" என்றும் கூறினார்.

100. " என் இரட்சகனே! நல்லோர்களில் (ஒருவரை) நீ எனக்கு (ச் சந்ததியாகத் ) தந்தருள் புரிவாயாக!"(என்றார்).

101. ஆதலால், மிகுந்த சகிப்புத்தன்மையுடைய (இஸ்மாயீல் எனும்) மகனைக் கொண்டு அவருக்கு நன்மாராயம் கூறினோம்.

102. எனவே, (இஸ்மாயீல்) அவருடன் சேர்ந்து உழைக்கக்கூடிய பருவத்தை அவர் அடைந்தபொழுது, அவர் (தன் மகனிடம்) "என் அருமை மகனே! நிச்சயமாக நான், உன்னை அறு(த்து)ப் ப(லியிடுவ)தாக, நிச்சயமாக நான் கனவில் கண்டேன்; (இதைப் பற்றி ) நீ என்ன அபிப்பிராயப்படுகிறாய்?" என்று கேட்டார்; அ(தற்க)வர், "என் தந்தையே! நீங்கள் ஏவப்பட்டபடியே செய்யுங்கள்; அல்லாஹ் நாடினால் என்னை நீங்கள் பொறுமையாளர்களில் உள்ளவனாகக் காண்பீர்கள்" என்று கூறினார்.

103. ஆகவே, அவ்விருவரும் (அல்லாஹ்வின் கட்டளைக்கு) முற்றிலும் கீழ்ப்படிந்து, (இப்றாஹீமாகிய) அவர், (இஸ்மாயீலாகிய) அவரை (அறுத்துப் பலியிட) முகங் குப்புறக் கிடத்தியபோது;

104. (அச்சமயம்) நாம் அவரை "இப்றாஹீமே!" என அழைத்தோம்.

105. "நிச்சயமாக நீர் (உம்முடைய) கனவை உண்மையாக்கி வைத்துவிட்டீர். நிச்சயமாக, நன்மை செய்கிறவர்களுக்கு நாம் இவ்வாறே கூலி கொடுப்போம்.

106. "நிச்சயமாக இது_ இதுவே தெளிவான பெரும் சோதனையாகும்(என்றும் கூறினோம்).

107. மேலும், (அவருக்கு பதிலாக) ஒரு மகத்தான பலியைக் கொண்டு அவரைப் பகரமாக்கினோம்.

وَتَرَكْنَا عَلَيْهِ فِي الْاٰخِرِيْنَ ﴿۱۰۸﴾ سَلٰمٌ عَلٰٓى اِبْرٰهِيْمَ ﴿۱۰۹﴾ كَذٰلِكَ
نَجْزِي الْمُحْسِنِيْنَ ﴿۱۱۰﴾ اِنَّهٗ مِنْ عِبَادِنَا الْمُؤْمِنِيْنَ ﴿۱۱۱﴾ وَبَشَّرْنٰهُ
بِاِسْحٰقَ نَبِيًّا مِّنَ الصّٰلِحِيْنَ ﴿۱۱۲﴾ وَبٰرَكْنَا عَلَيْهِ وَعَلٰٓى اِسْحٰقَ ؕ وَ
مِنْ ذُرِّيَّتِهِمَا مُحْسِنٌ وَّظَالِمٌ لِّنَفْسِهٖ مُبِيْنٌ ﴿۱۱۳﴾ وَلَقَدْ مَنَنَّا عَلٰى ع ۳ ۹
مُوْسٰى وَهٰرُوْنَ ﴿۱۱۴﴾ وَنَجَّيْنٰهُمَا وَقَوْمَهُمَا مِنَ الْكَرْبِ الْعَظِيْمِ ﴿۱۱۵﴾
وَنَصَرْنٰهُمْ فَكَانُوْا هُمُ الْغٰلِبِيْنَ ﴿۱۱۶﴾ وَاٰتَيْنٰهُمَا الْكِتٰبَ الْمُسْتَبِيْنَ ﴿۱۱۷﴾
وَهَدَيْنٰهُمَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۱۱۸﴾ وَتَرَكْنَا عَلَيْهِمَا فِي
الْاٰخِرِيْنَ ﴿۱۱۹﴾ سَلٰمٌ عَلٰى مُوْسٰى وَهٰرُوْنَ ﴿۱۲۰﴾ اِنَّا كَذٰلِكَ نَجْزِي
الْمُحْسِنِيْنَ ﴿۱۲۱﴾ اِنَّهُمَا مِنْ عِبَادِنَا الْمُؤْمِنِيْنَ ﴿۱۲۲﴾ وَاِنَّ اِلْيَاسَ
لَمِنَ الْمُرْسَلِيْنَ ﴿۱۲۳﴾ اِذْ قَالَ لِقَوْمِهٖٓ اَلَا تَتَّقُوْنَ ﴿۱۲۴﴾ اَتَدْعُوْنَ
بَعْلًا وَّتَذَرُوْنَ اَحْسَنَ الْخٰلِقِيْنَ ﴿۱۲۵﴾ اللّٰهَ رَبَّكُمْ وَرَبَّ اٰبَآئِكُمُ
الْاَوَّلِيْنَ ﴿۱۲۶﴾ فَكَذَّبُوْهُ فَاِنَّهُمْ لَمُحْضَرُوْنَ ﴿۱۲۷﴾ اِلَّا عِبَادَ اللّٰهِ
الْمُخْلَصِيْنَ ﴿۱۲۸﴾ وَتَرَكْنَا عَلَيْهِ فِي الْاٰخِرِيْنَ ﴿۱۲۹﴾ سَلٰمٌ عَلٰٓى
اِلْ يَاسِيْنَ ﴿۱۳۰﴾ اِنَّا كَذٰلِكَ نَجْزِي الْمُحْسِنِيْنَ ﴿۱۳۱﴾ اِنَّهٗ مِنْ
عِبَادِنَا الْمُؤْمِنِيْنَ ﴿۱۳۲﴾ وَاِنَّ لُوْطًا لَّمِنَ الْمُرْسَلِيْنَ ﴿۱۳۳﴾ ؕ

108. இன்னும் அவருக்காக (அவரின் கீர்த்தியைப்) பின்னுள்ளோர்களில் (நிலைத்திருக்க) விட்டு வைத்தோம்.

109. இப்றாஹீமின் மீது சாந்தி உண்டாவதாக.

110. இவ்வாறே நன்மை செய்கிறவர்களுக்கு நாம் கூலி கொடுக்கிறோம்.

111. நிச்சயமாக அவர், விசுவாசிகளான நமது அடியார்களில் உள்ளவர்.

112. இன்னும், நல்லோர்களிலுள்ளவரான இஸ்ஹாக்கை நபியாக அவருக்கு நாம் நன்மாராயம் கூறினோம்.

113. அவர் மீதும், இஸ்ஹாக்மீதும் நாம் நமது பாக்கியங்களை நல்கினோம். அவ்விருவரின் சந்ததியரில் நன்மை செய்பவரும், பகிரங்கமாகத் தமக்குத் தாமே அநீதமிழைத்துக்கொள்பவரும் இருக்கின்றனர்.

114. நிச்சயமாக நாம் மூஸா, இன்னும் ஹாரூன்மீதும் பேருபகாரம் புரிந்தோம்.

115. அவ்விருவரையும், அவ்விருவரின் சமூகத்தாரையும் மகத்தானதொரு துன்பத்திலிருந்து காப்பாற்றினோம்.

116. மேலும், நாம் அவர்களுக்கு உதவிசெய்தோம்; ஆகவே, (தங்கள் விரோதிகளின் மீது) அவர்கள்தாம் வெற்றிபெற்றோராக இருந்தனர்.

117. அவ்விருவருக்கும் தெளிவான வேதத்தையும் நாம் கொடுத்தோம்.

118. அவ்விருவருக்கும் நேர்வழியையும் நாம் காண்பித்தோம்.

119. மேலும், அவ்விருவருக்காக (அவ்விருவரின் கீர்த்தியை) பின்னோர்களில் (நிலைத்திருக்க) விட்டு வைத்தோம்.

120. மூஸா, இன்னும் ஹாரூன்மீதும் சாந்தி உண்டாவதாக.

121. நிச்சயமாக நாம் நன்மை செய்கிறவர்களுக்கு இவ்வாறே கூலி கொடுக்கின்றோம்.

122. நிச்சயமாக அவ்விருவரும் விசுவாசங் கொண்டவர்களான நமது அடியார்களில் உள்ளவர்களாவர்.

123. நிச்சயமாக இல்யாஸும் (நமது தூதர்களாக) அனுப்பப்பட்டவர்களில் உள்ளவராவர்.

124. அவர் தம் சமூகத்தாரிடம், நீங்கள் (அல்லாஹ்வுக்குப்) பயப்பட மாட்டீர்களா? என்று கூறிய சமயத்தை (நினைவு கூர்வீராக!)

125. "படைப்பவர்களில் மிகச் சிறந்தவனை நீங்கள் விட்டு விட்டு 'பஅல்' (என்னும்) விக்ரகத்தை நீங்கள் அழைக்கின்றீர்களா?

126. உங்கள் இரட்சகனும், முன் சென்ற உங்கள் மூதாதையர்களின் இரட்சகனுமான அல்லாஹ்வை(விட்டு விடுகிறீர்களா என்று கூறினார்).

127. பின்னர், அவர்கள் அவரைப் பொய்யாக்கினார்கள்; ஆதலால், நிச்சயமாக அவர்கள் (நம்மிடம் தண்டனைக்காக) முன்னிலைப்படுத்தப்படுகிறவர்களாவர்.

128. தேர்ந்தெடுக்கப்பட்டோரான அல்லாஹ்வுடைய அடியார்களைத் தவிர. (இவர்களுக்கு நல்ல சன்மானமுண்டு.)

129. இன்னும், அவருக்காக (அவருடைய கீர்த்தியை)ப் பின்னுள்ளோர்களில் (நிலைக்க) விட்டுவைத்தோம்.

130. "இல்யாஸீன் மீது சாந்தி உண்டாவதாக!"

131. நிச்சயமாக நன்மை செய்கிறவர்களுக்கு நாம் இவ்வாறே கூலி கொடுக்கிறோம்.

132. நிச்சயமாக அவர் விசுவாசங் கொண்டவர்களான நமது அடியார்களில் உள்ளவராவர்.

133. நிச்சயமாக 'லூத்'தும் (நமது தூதர்களாக) அனுப்பப்பட்டவர்களில் உள்ளவராவர்.

إِذْ نَجَّيْنٰهُ وَأَهْلَهٗٓ أَجْمَعِيْنَ ﴿۱۳۴﴾ إِلَّا عَجُوْزًا فِى الْغٰبِرِيْنَ ﴿۱۳۵﴾ ثُمَّ
دَمَّرْنَا الْاٰخَرِيْنَ ﴿۱۳۶﴾ وَإِنَّكُمْ لَتَمُرُّوْنَ عَلَيْهِمْ مُّصْبِحِيْنَ ﴿۱۳۷﴾ وَبِالَّيْلِ
أَفَلَا تَعْقِلُوْنَ ﴿۱۳۸﴾ وَإِنَّ يُوْنُسَ لَمِنَ الْمُرْسَلِيْنَ ﴿۱۳۹﴾ إِذْ أَبَقَ إِلَى ع ۵ ۸
الْفُلْكِ الْمَشْحُوْنِ ﴿۱۴۰﴾ فَسَاهَمَ فَكَانَ مِنَ الْمُدْحَضِيْنَ ﴿۱۴۱﴾
فَالْتَقَمَهُ الْحُوْتُ وَهُوَ مُلِيْمٌ ﴿۱۴۲﴾ فَلَوْلَآ أَنَّهٗ كَانَ مِنَ الْمُسَبِّحِيْنَ ﴿۱۴۳﴾
لَلَبِثَ فِىْ بَطْنِهٖٓ إِلٰى يَوْمِ يُبْعَثُوْنَ ﴿۱۴۴﴾ فَنَبَذْنٰهُ بِالْعَرَآءِ وَهُوَ النصف
سَقِيْمٌ ﴿۱۴۵﴾ وَأَنْبَتْنَا عَلَيْهِ شَجَرَةً مِّنْ يَّقْطِيْنٍ ﴿۱۴۶﴾ وَأَرْسَلْنٰهُ إِلٰى
مِائَةِ أَلْفٍ أَوْ يَزِيْدُوْنَ ﴿۱۴۷﴾ فَاٰمَنُوْا فَمَتَّعْنٰهُمْ إِلٰى حِيْنٍ ﴿۱۴۸﴾
فَاسْتَفْتِهِمْ أَلِرَبِّكَ الْبَنَاتُ وَلَهُمُ الْبَنُوْنَ ﴿۱۴۹﴾ أَمْ خَلَقْنَا الْمَلٰٓئِكَةَ
إِنَاثًا وَّهُمْ شٰهِدُوْنَ ﴿۱۵۰﴾ أَلَآ إِنَّهُمْ مِّنْ إِفْكِهِمْ لَيَقُوْلُوْنَ ﴿۱۵۱﴾
وَلَدَ اللّٰهُ وَإِنَّهُمْ لَكٰذِبُوْنَ ﴿۱۵۲﴾ أَصْطَفَى الْبَنَاتِ عَلَى الْبَنِيْنَ ﴿۱۵۳﴾
مَا لَكُمْ كَيْفَ تَحْكُمُوْنَ ﴿۱۵۴﴾ أَفَلَا تَذَكَّرُوْنَ ﴿۱۵۵﴾ أَمْ لَكُمْ سُلْطٰنٌ
مُّبِيْنٌ ﴿۱۵۶﴾ فَأْتُوْا بِكِتٰبِكُمْ إِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۱۵۷﴾ وَجَعَلُوْا بَيْنَهٗ
وَبَيْنَ الْجِنَّةِ نَسَبًا وَلَقَدْ عَلِمَتِ الْجِنَّةُ إِنَّهُمْ لَمُحْضَرُوْنَ ﴿۱۵۸﴾
سُبْحٰنَ اللّٰهِ عَمَّا يَصِفُوْنَ ﴿۱۵۹﴾ إِلَّا عِبَادَ اللّٰهِ الْمُخْلَصِيْنَ ﴿۱۶۰﴾

134. அவரையும், அவருடைய குடும்பத்தினர் அனைவரையும் நாம் காப்பாற்றியதை (நினைவு கூர்வீராக!)

135. தங்கிவிட்டோர்களில் இருந்துவிட்ட (அவருடைய) கிழ (மனை)வியைத் தவிர (அவள் வேதனை செய்யப்படுபவர்களுடன் தங்கிவிட்டாள்).

136. பின்னர், மற்றவர்களை நாம் அழித்துவிட்டோம்.

137. ஆகவே,(மக்கா வாசிகளே! நீங்கள் வர்த்தகத்திற்குச் சென்று திரும்புகின்ற போது) காலைப் பொழுதை அடைந்தவர்களாக நிச்சயமாக நீங்கள் அவர்களின் (ஊரின்) மீதே நடந்து செல்கின்றீர்கள்.

138. இரவிலும் (அவ்வூர்ப்பக்கம் செல்கின்றீர்கள்); இதனைக்கொண்டு நீங்கள் நல்லறிவு பெறமாட்டீர்களா?

139. நிச்சயமாக யூனுஸும் (நம் தூதர்களாக)அனுப்பப்பட்டவர்களில் உள்ளவராவர்.

140. நிரப்பப்பட்ட கப்பலின் பக்கம் அவர் வெருண்டோடிய சமயத்தில் (அவர் சோதனைக்குள்ளாக்கப்பட்டு அதில்அவர் ஏறிக்கொண்டார்).

141. அ(க்கப்பலிலுள்ள)வர்கள் சீட்டுப்போட்டனர்; (அதில் அவர் பெயர்வரவே கடலில் எறியப்படவேண்டிய) தோல்வியுற்றோரில் அவர் ஆகிவிட்டார்.

142. எனவே,(இவரை அவர்கள் கடலில் எறியவே )அவர் நிந்தனைக்கு ஆளானவராகயிருக்க, (ஒரு) மீன் அவரை விழுங்கிற்று.

143. நிச்சயமாக அவர் (மீன் வயிற்றினுள் நம்மைத்) துதி செய்து கொண்டிருப்பவர்களில் இல்லாமலிருந்திருந்தால்;

144. (மறுமைக்காக படைப்பினங்களாகிய )அவர்கள் எழுப்பப்படும் நாள் (வரும்) வரையில், அவர் அதன் வயிற்றில் தங்கியிருந்திருப்பார்.

145. (அவர் துதி செய்ததன் காரணமாக) அவர் நோயுற்றவராக இருந்தநிலையில் வெட்ட வெளியில்,(மீன் வயிற்றிலிருந்து) அவரை நாம் எறிந்தோம்.

146. மேலும், அவரின் மீது (நிழல்தருவதற்காக) ஒரு சுரைக்கொடியை நாம் முளைப்பித்தோம்.

147. இன்னும், நாம் அவரை ஒரு நூறாயிரம், அல்லது (அதற்கு) அதிகமானவர்களிடம் (நம்முடைய) தூதராக அனுப்பிவைத்தோம்.

148. ஆகவே, அவர்கள் விசுவாசங்கொண்டார்கள்; ஆகவே, நாமும் அவர்களை ஒரு(நீண்ட) காலம் வரையில் சுகமாக வாழவைத்தோம்.

149. (நபியே! இணைவைப்பவர்களான) அவர்களிடம், "உமது இரட்சகனுக்கு பெண்மக்களும், அவர்களுக்கு ஆண் மக்களுமா?" என்று நீர் விளக்கம் கேட்பீராக!

150. அல்லது மலக்குகளைப் பெண்களாக, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்க நாம் படைத்தோமா?

151. அறிந்து கொள்வீராக! நிச்சயமாக இவர்கள் தங்கள் பொய்யினால் கூறுகின்றனர்;

152. அல்லாஹ் (பிள்ளைகளைப்)பெற்றெடுத்தான் (என்று)_ நிச்சயமாக அவர்கள் பொய்யர்களே.

153. (அதிலும்) ஆண்(மக்)களைவிட பெண்(மக்)களை அவன் தெரிவுசெய்து கொண்டானா?

154. (இவ்வாறு கூற) உங்களுக்கு என்ன நேர்ந்தது ? (இதைப் பற்றி) எவ்வாறு நீங்கள் தீர்ப்பளிக்கிறீர்கள்?

155. நீங்கள் (என்ன கூறுகிறீர்களென்று)சிந்திக்கமாட்டீர்களா?

156. அல்லது உங்களுக்கு (இதற்காக ஏதேனும்) தெளிவான சான்று உண்டா?

157. (அவ்வாறு கூறுவதில்) நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின் (அதற்கு) உங்கள் வேத (ஆதார)த்தைக் கொண்டுவாருங்கள்.

158. மேலும் (நபியே!) இவர்கள், அவனுக்கும் ஜின்களுக்கும் இடையில் வம்சாவழி உறவை (கற்பனையாக) ஆக்குகின்றனர்; ஜின்கள் (தண்டனைக்காக) நிச்சயமாக தாம் (அல்லாஹ்விடம்) கொண்டுவரப்படுபவர்கள் என்று திட்டமாக அறிந்தும் இருக்கின்றனர்.

159. அவர்கள் வர்ணிக்கின்றவைகளை விட்டும் அல்லாஹ் மிக்க பரிசுத்தமானவன்.

160. தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லாஹ்வின் அடியார்களைத் தவிர, (மற்றவர்கள் தண்டனைக்குரியவர்களாவர்).

فَاِنَّكُمْ وَمَا تَعْبُدُوْنَ ﴿۱۶۱﴾ مَآ اَنْتُمْ عَلَيْهِ بِفٰتِنِيْنَ ﴿۱۶۲﴾ اِلَّا مَنْ هُوَ
صَالِ الْجَحِيْمِ ﴿۱۶۳﴾ وَمَا مِنَّآ اِلَّا لَهٗ مَقَامٌ مَّعْلُوْمٌ ﴿۱۶۴﴾ وَّاِنَّا لَنَحْنُ
الصَّآفُّوْنَ ﴿۱۶۵﴾ وَاِنَّا لَنَحْنُ الْمُسَبِّحُوْنَ ﴿۱۶۶﴾ وَاِنْ كَانُوْا لَيَقُوْلُوْنَ ﴿۱۶۷﴾
لَوْ اَنَّ عِنْدَنَا ذِكْرًا مِّنَ الْاَوَّلِيْنَ ﴿۱۶۸﴾ لَكُنَّا عِبَادَ اللّٰهِ الْمُخْلَصِيْنَ ﴿۱۶۹﴾
فَكَفَرُوْا بِهٖ فَسَوْفَ يَعْلَمُوْنَ ﴿۱۷۰﴾ وَلَقَدْ سَبَقَتْ كَلِمَتُنَا لِعِبَادِنَا
الْمُرْسَلِيْنَ ﴿۱۷۱﴾ اِنَّهُمْ لَهُمُ الْمَنْصُوْرُوْنَ ﴿۱۷۲﴾ وَاِنَّ جُنْدَنَا لَهُمُ
الْغٰلِبُوْنَ ﴿۱۷۳﴾ فَتَوَلَّ عَنْهُمْ حَتّٰى حِيْنٍ ﴿۱۷۴﴾ وَّاَبْصِرْهُمْ فَسَوْفَ يُبْصِرُوْنَ ﴿۱۷۵﴾
اَفَبِعَذَابِنَا يَسْتَعْجِلُوْنَ ﴿۱۷۶﴾ فَاِذَا نَزَلَ بِسَاحَتِهِمْ فَسَآءَ صَبَاحُ
الْمُنْذَرِيْنَ ﴿۱۷۷﴾ وَتَوَلَّ عَنْهُمْ حَتّٰى حِيْنٍ ﴿۱۷۸﴾ وَّاَبْصِرْ فَسَوْفَ يُبْصِرُوْنَ ﴿۱۷۹﴾
سُبْحٰنَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُوْنَ ﴿۱۸۰﴾ وَسَلٰمٌ عَلَى
الْمُرْسَلِيْنَ ﴿۱۸۱﴾ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۱۸۲﴾ ع ۵ ۹

سُوْرَةُ صٓ مَكِّيَّةٌ وَّهِيَ ثَمَانٌ وَّثَمَانُوْنَ اٰيَةً وَّخَمْسُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

صٓ وَالْقُرْاٰنِ ذِي الذِّكْرِ ﴿۱﴾ بَلِ الَّذِيْنَ كَفَرُوْا فِيْ عِزَّةٍ وَّشِقَاقٍ ﴿۲﴾
كَمْ اَهْلَكْنَا مِنْ قَبْلِهِمْ مِّنْ قَرْنٍ فَنَادَوْا وَّلَاتَ حِيْنَ مَنَاصٍ ﴿۳﴾

161. எனவே நிச்சயமாக நீங்களும், நீங்கள் வணங்குபவைகளும்;

162.(ஒன்று சேர்ந்தபோதிலும், எவரையும் அல்லாஹ்வாகிய) அவனுக்கு விரோதமாக நீங்கள் வழிகெடுத்து விடுபவர்களல்லர்_

163. நரகத்தில் புக இருக்கிறானே அவனைத் தவிர.

164. மேலும், (மலக்குகளாகிய) எங்களில் எவருக்கும் ஒரு குறிப்பிட்ட இடம் (வானத்தில்)அவருக்கில்லாமலில்லை(என்றும்);

165. நிச்சயமாக, நாங்கள் (அல்லாஹ்வின் கட்டளையை எதிர்பார்த்து) அணிவகுத்தவர்களாகவே இருக்கின்றோம்(என்றும்);

166. நிச்சயமாக நாங்கள் (அவனைப் புகழ்ந்து) துதிசெய்பவர்களாகவும் இருக்கிறோம் (என்றும் மலக்குகள் கூறுகிறார்கள்).

167. மேலும்,(நபியே ! இதற்கு முன் மக்காவாசிகளாகிய) அவர்கள் உறுதியாக கூறக்கூடியவர்களாக இருந்தனர் ;(அதாவது)

168. "முன்னுள்ளோர்களிடமிருந்து, (அல்லாஹ்வை) நினைவூட்டும் (வேதம்) ஏதேனுமொன்று நிச்சயமாக எங்களிடமிருந்திருந்தால்_

169. நிச்சயமாக, நாங்கள்(அல்லாஹ்வையே வணங்குவதற்கென ) தேர்ந்தெடுக்கப் பட்டவர்களான அல்லாஹ்வுடைய அடியார்களாக இருந்திருப்போம்.

170. அப்போது (இவ்வேதம் வரவே,) இதை அவர்கள் நிராகரித்துவிட்டனர்; அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

171. மேலும், நம்முடைய தூதர்களாகிய நம் அடியார்களுக்கு நம்முடைய வாக்கு முந்திவிட்டது.

172. நிச்சயமாக அவர்கள்_அவர்களேதான் உதவி செய்யப்படுபவர்கள்.

173. மேலும் நிச்சயமாக, நம்முடைய படையினர்கள்தான், அவர்களே திட்டமாக மிகைத்தவர்களாக இருப்பர்.

174.(ஒருகுறிப்பிட்ட)நேரம் வரை அவர்களைவிட்டும் (சிறிதுகாலம்) புறக்கணித்துவிடுவீராக!

175. இன்னும் அவர்களைப் பார்த்திரும்; (அவர்களுக்கு நேர இருப்பதை) அடுத்து அவர்களும் பார்ப்பார்கள்.

176. நம்முடைய வேதனைக்காகவா அவர்கள் அவசரப் படுகிறார்கள்?

177. பின்னர் (நம்முடைய வேதனை) அவர்களது முற்றத்தில் இறங்கிவிடுமானால், அப்போது எச்சரிக்கப்பட்டவர்களின் காலை(ப்பொழுது) மிகக் கெட்டதாக இருக்கும்.

178. மேலும், ஒரு (குறிப்பிட்ட)காலம் வரை அவர்களை விட்டும் புறக்கணித்து விடுவீராக!

179. இன்னும் (அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வேதனை வருவதை எதிர்) பார்ப்பீராக! (தங்களுக்கு ஏற்படப்போவதை) அவர்கள் அடுத்துப்பார்ப்பார்கள்.

180 அவர்கள் வர்ணிப்பதைவிட்டும் கண்ணியத்திற்குரியவனாகிய உமது இரட்சகன் (மிகத்)தூயவன்.

181.மேலும், அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட(அவனின் தூது)வர்கள் மீது சாந்தி உண்டாவதாக.

182. இன்னும் புகழ் அனைத்தும் அகிலத்தாரின் இரட்சகனான அல்லாஹ்விற்கே(உரியதாகும்).

---

அத்தியாயம் : 38

## ஸாத்

வசனங்கள் : 88 மக்கீ ருகூஉகள் : 5

---

## அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. ஸாத் (நல்லுபதேசங்களின்) நினைவுறுத்தலையுடைய இக்குர்ஆனின் மீது சத்தியமாக!

2. ஆனால், நிராகரித்தோர் பெருமையிலும், முரண்பாட்டிலும் (மூழ்கி) இருக்கின்றனர்.

3. இவர்களுக்கு முன்னர், எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்திருக்கின்றோம்; (வேதனை வந்த சமயத்தில்) அவர்கள் (உதவி தேடி) அழைத்தார்கள்; (அது வேதனையிலிருந்து) தப்பித்துக்கொள்ளக்கூடிய நேரமாகவும் இருக்கவில்லை.

وَعَجِبُوْٓا اَنْ جَآءَهُمْ مُّنْذِرٌ مِّنْهُمْ وَقَالَ الْكٰفِرُوْنَ هٰذَا سٰحِرٌ
كَذَّابٌ ۝۴ اَجَعَلَ الْاٰلِهَةَ اِلٰهًا وَّاحِدًا ۚ اِنَّ هٰذَا لَشَیْءٌ عُجَابٌ ۝۵
وَانْطَلَقَ الْمَلَاُ مِنْهُمْ اَنِ امْشُوْا وَاصْبِرُوْا عَلٰٓی اٰلِهَتِكُمْ ۚ اِنَّ هٰذَا
لَشَیْءٌ یُّرَادُ ۝۶ مَا سَمِعْنَا بِهٰذَا فِی الْمِلَّةِ الْاٰخِرَةِ ۚ اِنْ هٰذَآ اِلَّا
اخْتِلَاقٌ ۝۷ ءَاُنْزِلَ عَلَیْهِ الذِّكْرُ مِنْۢ بَیْنِنَا ؕ بَلْ هُمْ فِیْ شَكٍّ مِّنْ
ذِكْرِیْ ۚ بَلْ لَّمَّا یَذُوْقُوْا عَذَابِ ۝۸ اَمْ عِنْدَهُمْ خَزَآئِنُ رَحْمَةِ
رَبِّكَ الْعَزِیْزِ الْوَهَّابِ ۝۹ اَمْ لَهُمْ مُّلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا
بَیْنَهُمَا ۫ فَلْیَرْتَقُوْا فِی الْاَسْبَابِ ۝۱۰ جُنْدٌ مَّا هُنَالِكَ مَهْزُوْمٌ مِّنَ
الْاَحْزَابِ ۝۱۱ كَذَّبَتْ قَبْلَهُمْ قَوْمُ نُوْحٍ وَّعَادٌ وَّفِرْعَوْنُ ذُو الْاَوْتَادِ ۝۱۲ ۙ
وَثَمُوْدُ وَقَوْمُ لُوْطٍ وَّاَصْحٰبُ لْــَٔیْكَةِ ؕ اُولٰٓئِكَ الْاَحْزَابُ ۝۱۳ اِنْ
كُلٌّ اِلَّا كَذَّبَ الرُّسُلَ فَحَقَّ عِقَابِ ۝۱۴ وَمَا یَنْظُرُ هٰٓؤُلَآءِ ع ۱ ۱۴ ۱
اِلَّا صَیْحَةً وَّاحِدَةً مَّا لَهَا مِنْ فَوَاقٍ ۝۱۵ وَقَالُوْا رَبَّنَا
عَجِّلْ لَّنَا قِطَّنَا قَبْلَ یَوْمِ الْحِسَابِ ۝۱۶ اِصْبِرْ عَلٰی مَا
یَقُوْلُوْنَ وَاذْكُرْ عَبْدَنَا دَاوٗدَ ذَا الْاَیْدِ ۚ اِنَّهٗٓ اَوَّابٌ ۝۱۷
اِنَّا سَخَّرْنَا الْجِبَالَ مَعَهٗ یُسَبِّحْنَ بِالْعَشِیِّ وَالْاِشْرَاقِ ۝۱۸ ۙ

4. மேலும் (அவர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிப்பவர் (ஆகிய நீர்) அவர்களி(ன் இனத்தி)லிருந்தே அவர்களிடம் வந்ததைப் பற்றி அவர்கள் ஆச்சரியப்பட்டனர்; "இவர் பெரும் பொய்யரான சூனியக்காரர்" என்றும் (உம்மைப்பற்றி) நிராகரிப்போர் கூறினர்.

5. (என்ன!) இவர் (நம்முடைய வணக்கத்திற்குரிய) தெய்வங்களை (நிராகரித்து விட்டு) ஒரே ஒரு வணக்கத்திற்குரியவனாக ஆக்கிவிட்டாரா? நிச்சயமாக இது ஓர் ஆச்சரியமான விஷயம்தான்" (என்றும் கூறினர்).

6. அவர்களிலுள்ள தலைவர்கள், (மற்றவர்களிடம்," இவரை விட்டு உங்கள் வழியில்) நீங்கள் சென்றுவிடுங்கள்; இன்னும், உங்கள் தெய்வங்களின் மீது நீங்கள் (உறுதியுடன்) பொறுமையாக இருங்கள். நிச்சயமாக, (உங்கள் தெய்வங்களைக் கைவிடும்படி கூறும்) இ(க் கூற்றான)து ஏதோ ஒன்றை (சுயநலத்தை கருத்தில் கொண்டு) நாடப்பட்டதாக உள்ளது" என்று (கூறிக்கொண்டே) சென்றுவிட்டனர்.

7. "கடைசிமார்க்க(மான கிறிஸ்தவ மத)த்திலும் இதுபற்றி நாம் கேள்விப் பட்டதில்லை; இது (இவரால் உண்டாக்கப்பட்ட)பொய்யைத்தவிர வேறில்லை" (என்றும்);

8. "நம்மவர்களுக்கிடையில் இவர் மீது (வேத) உபதேசம் இறக்கப்பட்டுவிட்டதா" (என்றும் கூறினார்கள்.) அவ்வாறன்று! உண்மையில் இவர்கள் என்னுடைய (வேத) உபதேசத்தைப்பற்றி சந்தேகத்திலிருக்கின்றனர்; இல்லை, இதுவரையில் அவர்கள் என்னுடைய வேதனையைச் சுவைத்(துப் பார்த்)ததில்லை.

9. அல்லது (யாவரையும்) மிகைத்த, பெருங்கொடையாளனாகிய உமதிரட்சகனின் அருள் பொக்கிஷங்கள் அவர்களிடம் இருக்கின்றனவா?

10. அல்லது வானங்கள் மற்றும் பூமி, இன்னும் இவ்விரண்டிற்கு மத்தியிலுள்ளவற்றின் ஆட்சி அவர்களுக்கு இருக்கிறதா? அவ்வாறாயின், (வானங்களின்) வழிகளில்(ஏறும் சாதனங்கள் மூலம்) அவர்கள் ஏறிச்செல்லட்டும்.

11. (முன்சென்ற நபிமார்களைப் பொய்யாக்கிய) கூட்டத்தார்களில், இங்கிருப்பவர்கள் தோற்கடிக்கப்படும் ஓர் அற்பப்படை;

12. (இவ்வாறே) இவர்களுக்கு முன்னர் (இருந்த) நூஹ்வுடைய சமூகத்தாரும், ஆது(சமூகத்தாரு)ம், முளைகளுடைய(_பெரும் படைகளுடைய) ஃபிர்அவ்னும் (நம்முடைய தூதர்களைப்)பொய்யாக்கினார்கள்.

13. (அவ்வாறே) ஸமூதும், லூத்துடைய சமூகத்தாரும்,(மத்யன்) தோப்புவாசிகளும் (பொய்யாக்கினார்கள்); இவர்கள்தாம் (முறியடிக்கப்பட்ட) அக்கூட்டத்தினர்கள் ஆவார்கள்.

14. இவர்கள் ஒவ்வொருவரும் (நம்முடைய) தூதர்களைப் பொய்யாக்கியே தவிர இருக்கவில்லை; ஆகவே, (அவர்களுக்கு) என்னுடைய தண்டனை நிச்சயமாகிவிட்டது.

15. மேலும், இவர்கள் ஒரே ஒரு பெரும் சப்தத்தைத் தவிர (வேறெதனையும்) எதிர்பார்க்கவில்லை; அ(துவருவ)தில் தாமதமும் இராது.

16. மேலும், "எங்கள் இரட்சகனே!(கேள்வி) கணக்குடைய நாளைக்கு முன்னதாகவே, எங்களுடைய (வேதனையின்) பங்கை எங்களுக்குத் துரிதப் படுத்திவிடுவாயாக!" என்று இவர்கள் (பரிகாசமாகக்) கேட்கின்றார்கள்.

17. (நபியே!) அவர்கள் கூறுவதின்மீது நீர் பொறுமையாக இருப்பீராக! அன்றியும், மிக்க பலசாலியாகிய நமது அடியார் தாவூதை நினைவு கூர்வீராக!நிச்சயமாக அவர் (நம் பக்கமே) மிகுதியாகத் திரும்பக்கூடியவராக இருந்தார்.

18. நிச்சயமாக, மலைகளை நாம் அவருக்கு வசப்படுத்தித் தந்தோம்; அவை அவருடன் சேர்ந்து மாலையிலும், காலையிலும் துதித்துக் கொண்டிருந்தன.

وَالطَّيۡرَ مَحۡشُوۡرَةً ؕ كُلٌّ لَّهٗۤ اَوَّابٌ ﴿۱۹﴾ وَشَدَدۡنَا مُلۡكَهٗ وَاٰتَيۡنٰهُ الۡحِكۡمَةَ

وَفَصۡلَ الۡخِطَابِ ﴿۲۰﴾ وَهَلۡ اَتٰٮكَ نَبَؤُا الۡخَصۡمِ ۘ اِذۡ تَسَوَّرُوا الۡمِحۡرَابَ ۙ﴿۲۱﴾ وقف لازم

اِذۡ دَخَلُوۡا عَلٰى دَاوٗدَ فَفَزِعَ مِنۡهُمۡ قَالُوۡا لَا تَخَفۡ ۚ خَصۡمٰنِ بَغٰى

بَعۡضُنَا عَلٰى بَعۡضٍ فَاحۡكُمۡ بَيۡنَنَا بِالۡحَـقِّ وَلَا تُشۡطِطۡ وَاهۡدِنَاۤ اِلٰى

سَوَآءِ الصِّرَاطِ ﴿۲۲﴾ اِنَّ هٰذَاۤ اَخِىۡ قف لَهٗ تِسۡعٌ وَّتِسۡعُوۡنَ نَعۡجَةً وَّلِىَ

نَعۡجَةٌ وَّاحِدَةٌ قف فَقَالَ اَكۡفِلۡنِيۡهَا وَعَزَّنِىۡ فِى الۡخِطَابِ ﴿۲۳﴾ قَالَ لَقَدۡ

ظَلَمَكَ بِسُؤَالِ نَعۡجَتِكَ اِلٰى نِعَاجِهٖ ؕ وَاِنَّ كَثِيۡرًا مِّنَ الۡخُلَطَآءِ

لَيَبۡغِىۡ بَعۡضُهُمۡ عَلٰى بَعۡضٍ اِلَّا الَّذِيۡنَ اٰمَنُوۡا وَعَمِلُوا الصّٰلِحٰتِ

وَقَلِيۡلٌ مَّا هُمۡ ؕ وَظَنَّ دَاوٗدُ اَنَّمَا فَتَنّٰهُ فَاسۡتَغۡفَرَ رَبَّهٗ وَخَرَّ رَاكِعًا

وَّاَنَابَ ۩ السجدة ﴿۲۴﴾ فَغَفَرۡنَا لَهٗ ذٰلِكَ ؕ وَاِنَّ لَهٗ عِنۡدَنَا لَزُلۡفٰى وَحُسۡنَ السجدۃ ۱۰

مَاٰبٍ ﴿۲۵﴾ يٰدَاوٗدُ اِنَّا جَعَلۡنٰكَ خَلِيۡفَةً فِى الۡاَرۡضِ فَاحۡكُمۡ بَيۡنَ

النَّاسِ بِالۡحَـقِّ وَلَا تَتَّبِعِ الۡهَوٰى فَيُضِلَّكَ عَنۡ سَبِيۡلِ اللّٰهِ ؕ

اِنَّ الَّذِيۡنَ يَضِلُّوۡنَ عَنۡ سَبِيۡلِ اللّٰهِ لَهُمۡ عَذَابٌ شَدِيۡدٌ ۢ بِمَا نَسُوۡا

يَوۡمَ الۡحِسَابِ ﴿۲۶﴾ وَمَا خَلَقۡنَا السَّمَآءَ وَالۡاَرۡضَ وَمَا بَيۡنَهُمَا بَاطِلًا ؕ ع ۲

ذٰلِكَ ظَنُّ الَّذِيۡنَ كَفَرُوۡا ۚ فَوَيۡلٌ لِّلَّذِيۡنَ كَفَرُوۡا مِنَ النَّارِ ؕ﴿۲۷﴾

19. இன்னும், தடுக்கப்பட்டவையாக இருக்கும் நிலையில் பறவைகளையும் (அவருக்கு நாம் வசப்படுத்திக் கொடுத்தோம்.) அவை ஒவ்வொன்றும் (அவருடன் அல்லாஹ்வைத் துதிசெய்து அவனுக்கு வழிப்படுவதின் மூலம்) அவனின் பக்கம் திரும்பக் கூடியவையாக இருந்தன.

20. இன்னும், அவருடைய ஆட்சியை நாம் வலுப்படுத்தினோம், அவருக்கு (ஆழ்ந்து சிந்தித்து செயல்படும் உறுதியான ) அறிவையும், (விவகாரங்களைத் தீர்க்கும்) தெளிவான விளக்கத்தையும் கொடுத்தோம்.

21. (நபியே!) அந்த வழக்காளிகளின் செய்தி உமக்கு வந்திருக்கிறதா? (அவர் வணங்கிக்கொண்டிருந்த) தொழுமிடத்தின் சுவரை அவர்கள் தாண்டியசமயம்_

22. தாவூதிடம் அவர்கள் நுழைந்த போது அவர், அவர்களைப்பற்றி திடுக்கமுற்றார். அ(தற்க)வர்கள் ("தாவூதே!) நீர் பயப்படாதீர்; (நாங்களிருவரும்) இரு வழக்காளிகள்; எங்களில் சிலர் சிலரின் மீது அநியாயம் செய்திருக்கின்றனர்; ஆகவே, எங்களுக்கிடையில் உண்மையைக்கொண்டு நீர் தீர்ப்பளிப்பீராக! (அதில்) தவறிழைத்தும்விடாதீர்; எங்களை நேரான வழியிலும் செலுத்துவீராக!" என்று கூறினார்கள்.

23."நிச்சயமாக இவர், என்னுடைய சகோதரர்; இவருக்கு தொண்ணூற்றொன்பது பெண் ஆடுகள் இருக்கின்றன; எனக்கு ஒரே ஒரு பெண் ஆடு தான் இருக்கிறது; பின்னர் அவர், "அதனை என் பொறுப்பில் ஆக்கி(எனக்குக் கொடுத்து) விடு" என்று கூறி, வாதத்தில் அவர் என்னை மிகைத்தும் விட்டார் " (என்று கூறினார்).

24. (அதற்கு தாவூத்,) "உம்முடைய பெண் ஆட்டை அவர் தன்னுடைய பெண் ஆடுகளுடன் சேர்த்துவிடுமாறு கேட்டதனால், நிச்சயமாக அவர் உமக்கு அநியாயமிழைத்து விட்டார்; இன்னும் நிச்சயமாகக் கூட்டாளிகளில் பெரும்பாலோர், அவர்களில் சிலர் மற்றசிலரின் மீது வரம்பு மீறிவிடுகின்றனர்; விசுவாசங் கொண்டு நற்கருமங்களையும் செய்தார்களே அத்தகையோர்களைத் தவிர; இவர்கள் குறைந்தவர்களே" என்று கூறினார்; (இதற்குள்) தாவூத் நிச்சயமாக நாமே (அவர் தீர்ப்பு செய்யும் திறன் படைத்தவரா? என)அவரைச் சோதனைக்குள்ளாக்கிவிட்டோம் என்று எண்ணினார்; ஆகவே, தன் இரட்சகனிடம் மன்னிப்புத் தேடி, குனிந்தவராக (ஸஜ்தாவில்) விழுந்தார்; மேலும், (அல்லாஹ்வின் பால் தவ்பா செய்து )மீண்டார்.

25. எனவே,( தாம் குற்றம் இழைத்துவிட்டதாக) அ(வர் கருதிய)தை அவருக்கு நாம் மன்னித்துவிட்டோம்; நிச்சயமாக அவருக்கு, நம்மிடத்தில் (மிக்க) நெருக்கமும் , அழகான இருப்பிடமும் உண்டு.

26. "தாவூதே ! நிச்சயமாக நாம், உம்மை பூமியில் பிரதிநிதியாக ஆக்கினோம்; ஆகவே நீர் மனிதர்களுக்கிடையில், சத்தியத்தைக் கொண்டுத் தீர்ப்புச்செய்வீராக! மனோ இச்சையைப் பின்பற்றவேண்டாம். (பின்பற்றினால்,) அது உம்மை அல்லாஹ்வுடைய பாதையைவிட்டும் வழிதவறச் செய்துவிடும். நிச்சயமாக, அல்லாஹ்வின் பாதையைவிட்டு வழி தவறி விடுகின்றார்களே அத்தகையவர்கள்_ (கேள்வி) கணக்கு (க்கேட்கும்) நாளை அவர்கள் மறந்து விட்டதன் காரணமாக, அவர்களுக்குக் கடினமான வேதனை உண்டு" (என்று கூறினோம்).

27. வானத்தையும், பூமியையும், இவை இரண்டிற்கு மத்தியிலுள்ளவற்றையும் வீணாக நாம் படைக்கவில்லை; இது நிராகரித்தார்களே அத்தகையோரின் எண்ணமேயாகும்; ஆகவே, நிராகரித்துவிட்டார்களே அத்தகையவர்களுக்கு (நரக) நெருப்பின் கேடுதான்(உண்டு).

اَمْ نَجْعَلُ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ كَالْمُفْسِدِيْنَ فِي الْاَرْضِ ز
اَمْ نَجْعَلُ الْمُتَّقِيْنَ كَالْفُجَّارِ ﴿۲۸﴾ كِتٰبٌ اَنْزَلْنٰهُ اِلَيْكَ مُبٰرَكٌ
لِّيَدَّبَّرُوْٓا اٰيٰتِهٖ وَلِيَتَذَكَّرَ اُولُوا الْاَلْبَابِ ﴿۲۹﴾ وَوَهَبْنَا لِدَاوٗدَ سُلَيْمٰنَ ط
نِعْمَ الْعَبْدُ ط اِنَّهٗٓ اَوَّابٌ ﴿۳۰﴾ اِذْ عُرِضَ عَلَيْهِ بِالْعَشِيِّ الصّٰفِنٰتُ
الْجِيَادُ ﴿۳۱﴾ لا فَقَالَ اِنِّيْٓ اَحْبَبْتُ حُبَّ الْخَيْرِ عَنْ ذِكْرِ رَبِّيْ ج حَتّٰى
تَوَارَتْ بِالْحِجَابِ ﴿۳۲﴾ قف رُدُّوْهَا عَلَيَّ ط فَطَفِقَ مَسْحًا بِالسُّوْقِ وَ
الْاَعْنَاقِ ﴿۳۳﴾ وَلَقَدْ فَتَنَّا سُلَيْمٰنَ وَاَلْقَيْنَا عَلٰى كُرْسِيِّهٖ جَسَدًا ثُمَّ
اَنَابَ ﴿۳۴﴾ قَالَ رَبِّ اغْفِرْ لِيْ وَهَبْ لِيْ مُلْكًا لَّا يَنْۢبَغِيْ لِاَحَدٍ مِّنْۢ
بَعْدِيْ ج اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ ﴿۳۵﴾ فَسَخَّرْنَا لَهُ الرِّيْحَ تَجْرِيْ بِاَمْرِهٖ
رُخَآءً حَيْثُ اَصَابَ ﴿۳۶﴾ لا وَالشَّيٰطِيْنَ كُلَّ بَنَّآءٍ وَّغَوَّاصٍ ﴿۳۷﴾ لا وَّاٰخَرِيْنَ
مُقَرَّنِيْنَ فِي الْاَصْفَادِ ﴿۳۸﴾ هٰذَا عَطَآؤُنَا فَامْنُنْ اَوْ اَمْسِكْ بِغَيْرِ
حِسَابٍ ﴿۳۹﴾ وَاِنَّ لَهٗ عِنْدَنَا لَزُلْفٰى وَحُسْنَ مَاٰبٍ ﴿۴۰﴾ ع وَاذْكُرْ عَبْدَنَآ
اَيُّوْبَ اِذْ نَادٰى رَبَّهٗٓ اَنِّيْ مَسَّنِيَ الشَّيْطٰنُ بِنُصْبٍ وَّعَذَابٍ ط ﴿۴۱﴾
اُرْكُضْ بِرِجْلِكَ ج هٰذَا مُغْتَسَلٌۢ بَارِدٌ وَّشَرَابٌ ﴿۴۲﴾ وَوَهَبْنَا لَهٗٓ
اَهْلَهٗ وَمِثْلَهُمْ مَّعَهُمْ رَحْمَةً مِّنَّا وَذِكْرٰى لِاُولِي الْاَلْبَابِ ﴿۴۳﴾

ع ۳ وقف لازم

28. அல்லது விசுவாசங்கொண்டு, நற்கருமங்களும் செய்தார்களே அத்தகையோரை, பூமியில் குழப்பம் செய்கிறவர்களைப்போல் நாம் ஆக்கிவிடுவோமா ? அல்லது பயபக்தியுடையவர்களை (குற்றம்புரியும்) பாவிகளைப்போல் நாம் ஆக்கிவிடுவோமா?

29. (நபியே! குர்ஆனாகிய இது, அதன் நன்மைகள் பன்மடங்காக்கப்பட்டதாக இருக்க) பாக்கியமிக்க வேதமாகும்; இதனுடைய வசனங்களை அவர்கள் சிந்திப்பதற்காகவும், (இதனைக் கொண்டு) அறிவுடையோர் நல்லுபதேசம் பெறுவதற்காகவும் நாம் இதை உம்மீது இறக்கிவைத்தோம்.

30. மேலும் தாவூதுக்கு, ஸுலைமானை அன்பளிப்பாக நாம் வழங்கினோம்;(அவர்) மிக்க நல்லடியார்_ நிச்சயமாக அவர்,(நம்பக்கமே) மிகுதியாகத் திரும்புபவர்.

31. மூன்று கால்களிலும், நான்காவது காலின் குழம்பிலும் நின்று, துரிதமாகச் செல்லும் (பயிற்சி அளிக்கப்பட்ட) குதிரைகள் (ஒரு நாளன்று) மாலை நேரத்தில் அவர் முன் கொண்டுவரப்பட்டபொழுது,

32. (அதன் மேல் கவனம் கொண்டதனால், சூரியன் அஸ்தமித்து, அவருடைய தியான நேரம் தவறிவிட்டது, அதற்கவர்)" நிச்சயமாக நான் (சூரியன்) திரையினுள் மறைந்துவிடும் வரை என் இரட்சகனை நினைவுகூர்வதைவிட்டும் இந்த நல்ல பொருள்களை அதிகமாக அன்பு கொண்டுவிட்டேன்" என்று கூறினார்.

33. "அவற்றை என்னிடம் திரும்பக்கொண்டுவாருங்கள்" எனக் கூறி, அவைகளின் பின்னங்கால்களையும் கழுத்துகளையும்(கையால்) தடவிக்கொடுத்தார்.

34. இன்னும் நிச்சயமாக, நாம் ஸுலைமானை (மற்றொரு விதத்திலும்) சோதித்தோம்; மேலும்,அவருடைய சிம்மாசனத்தில் ஒரு சடலத்தை நாம் போட்டோம்; பின்னர் அவர், (நம்மளவில்) திரும்பினார்.

35. (ஆகவே,) "என் இரட்சகனே ! என்னை மன்னித்து விடுவாயாக! எனக்குப் பின்னர், எவருக்குமே கிடைக்காத ஓர் ஆட்சியை, எனக்கு நீ அன்பளிப்புச் செய்வாயாக! நிச்சயமாக நீயே பெரும் கொடையாளனாவாய்" என்று (பிரார்த்தனை செய்து) அவர் கூறினார்.

36. ஆதலால், காற்றை அவருக்கு நாம் வசப்படுத்திக் கொடுத்தோம்; அது அவருடைய கட்டளையின் பிரகாரம் அவர் நாடியவாறு(பல இடங்களுக்கும்) மிக்க இலகுவாக (அவரைச் சுமந்து) சென்று கொண்டிருந்தது.

37. அன்றியும், ஷைத்தான்களிலுள்ள கட்டடங்கட்டுவோர் (இன்னும் விலை உயர்ந்த முத்துக்கள் போன்ற சாதனங்களை எடுத்து வரக் கடலில்)மூழ்குவோர் ஆகிய ஒவ்வொருவரையும்_

38. _சங்கிலிகளில் பிணைக்கப்பட்டவர்களான மற்றவர்களையும் (நாம் அவருக்கு வசப்படுத்திக் கொடுத்தோம்).

39. "இது (உமக்குக் கொடுக்கப்பட்ட) நம்முடைய அன்பளிப்பாகும்; ஆகவே, (இதிலிருந்து பிறருக்குக் கொடுத்து) உபகாரம் செய்யும், அல்லது (உம்மிடமே) நிறுத்திக்கொள்ளும்; உம் மீது எந்த கேள்வி கணக்கும் இல்லை".

40. நிச்சயமாக அவருக்கு, நம்மிடத்தில் (மிக்க) நெருக்கமும் அழகான இருப்பிடமும் உண்டு.

41. மேலும் (நபியே!) நமது அடியார் அய்யூபை நினைவுகூர்வீராக! அவர் தன் இரட்சகனை அழைத்(துப் பிரார்த்தனை செய்) து " நிச்சயமாக என்னை ஷைத்தான் துன்பத்தையும், வேதனையையும் கொண்டு தீண்டிவிட்டான்" (என்று கூறியபோது, அதற்கு நாம்)

42. "உம்முடைய காலால் (பூமியில்) அடியும்" (என்று கூறினோம்; அவர் அடிக்கவே அங்கு ஓர் ஊற்று உதித்தோடியது; அவரிடம்,) "இதோ குளிர்ச்சியான குளிக்குமிடமும், பானமும் இருக்கின்றன (என்று கூறினோம்; அதனால் அவருடைய நோய் குணமாகிவிட்டது).

43. மேலும், நம்மிடமிருந்து அருளாகவும், அறிவுடையோர் நல்லுணர்ச்சி பெறுவதற்காகவும் அவருக்கு அவருடைய குடும்பத்தினரையும், அவர்களுடன் அவர்களைப் போன்றோரையும் நாம் அன்பளிப்பாக வழங்கினோம்.

وَخُذْ بِيَدِكَ ضِغْثًا فَاضْرِبْ بِّهٖ وَلَا تَحْنَثْ ؕ اِنَّا وَجَدْنٰهُ صَابِرًا ؕ
نِعْمَ الْعَبْدُ ؕ اِنَّهٗۤ اَوَّابٌ ﴿۴۴﴾ وَاذْكُرْ عِبٰدَنَاۤ اِبْرٰهِيْمَ وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ
اُولِى الْاَيْدِىْ وَالْاَبْصَارِ ﴿۴۵﴾ اِنَّاۤ اَخْلَصْنٰهُمْ بِخَالِصَةٍ ذِكْرَى الدَّارِ ﴿۴۶﴾ ۚ
وَاِنَّهُمْ عِنْدَنَا لَمِنَ الْمُصْطَفَيْنَ الْاَخْيَارِ ﴿۴۷﴾ ؕ وَاذْكُرْ اِسْمٰعِيْلَ وَ
الْيَسَعَ وَذَا الْكِفْلِ ؕ وَكُلٌّ مِّنَ الْاَخْيَارِ ﴿۴۸﴾ ؕ هٰذَا ذِكْرٌ ؕ وَاِنَّ
لِلْمُتَّقِيْنَ لَحُسْنَ مَاٰبٍ ﴿۴۹﴾ ۙ جَنّٰتِ عَدْنٍ مُّفَتَّحَةً لَّهُمُ الْاَبْوَابُ ﴿۵۰﴾ ۚ
مُتَّكِـِٕيْنَ فِيْهَا يَدْعُوْنَ فِيْهَا بِفَاكِهَةٍ كَثِيْرَةٍ وَّشَرَابٍ ﴿۵۱﴾
وَعِنْدَهُمْ قٰصِرٰتُ الطَّرْفِ اَتْرَابٌ ﴿۵۲﴾ هٰذَا مَا تُوْعَدُوْنَ لِيَوْمِ
الْحِسَابِ ﴿۵۳﴾ اِنَّ هٰذَا لَرِزْقُنَا مَا لَهٗ مِنْ نَّفَادٍ ﴿۵۴﴾ ۚۖ هٰذَا ؕ وَاِنَّ الثلٰثة
لِلطّٰغِيْنَ لَشَرَّ مَاٰبٍ ﴿۵۵﴾ ۙ جَهَنَّمَ ۚ يَصْلَوْنَهَا ۚ فَبِئْسَ الْمِهَادُ ﴿۵۶﴾ هٰذَا ۙ
فَلْيَذُوْقُوْهُ حَمِيْمٌ وَّغَسَّاقٌ ﴿۵۷﴾ ۙ وَّاٰخَرُ مِنْ شَكْلِهٖۤ اَزْوَاجٌ ﴿۵۸﴾ ؕ هٰذَا
فَوْجٌ مُّقْتَحِمٌ مَّعَكُمْ ۚ لَا مَرْحَبًۢا بِهِمْ ؕ اِنَّهُمْ صَالُوا النَّارِ ﴿۵۹﴾ قَالُوْا
بَلْ اَنْتُمْ ۚ لَا مَرْحَبًۢا بِكُمْ ؕ اَنْتُمْ قَدَّمْتُمُوْهُ لَنَا ۚ فَبِئْسَ الْقَرَارُ ﴿۶۰﴾
قَالُوْا رَبَّنَا مَنْ قَدَّمَ لَنَا هٰذَا فَزِدْهُ عَذَابًا ضِعْفًا فِى النَّارِ ﴿۶۱﴾
وَقَالُوْا مَا لَنَا لَا نَرٰى رِجَالًا كُنَّا نَعُدُّهُمْ مِّنَ الْاَشْرَارِ ﴿۶۲﴾ ؕ

44. மேலும், "புல்லிலிருந்து ஒரு பிடியை உமது கையில் எடுத்து, அதனைக் கொண்டு(உம் மனைவியை) அடியும்; நீர் (உம்முடைய) சத்தியத்தை முறிக்கவும் வேண்டாம்"(என்று கூறினோம்). நிச்சயமாக நாம், அவரை மிக்க பொறுமையாளராகவே கண்டோம்;(அவர்) மிக்க நல்லடியார். நிச்சயமாக அவர்(நம்பால்) அதிகமாக மீளக்கூடியவராக இருந்தார்.

45. (நபியே! அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றும்) ஆற்றல்களும், (மார்க்கத்தின் நுணுக்கங்களை விளங்கும்) பார்வைகளும் உடையவர்களாக இருந்த நமது அடியார்களான இப்றாஹீமையும், இஸ்ஹாக்கையும், யஃகூபையும் நினைவு கூர்வீராக!

46. நிச்சயமாக(மறுமை) வீட்டை நினைவுகூருவதை நோக்கமாகக் கொண்டு (செயல்படுபவர்களாக) அவர்களை நாம் பிரத்தியேகப்படுத்தினோம்.

47. மேலும், நிச்சயமாக அவர்கள், நம்மிடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்தோரில் உள்ளவர்களாவார்கள்.

48. (நபியே !) இன்னும் இஸ்மாயீலையும், அல்யஸஉவையும், துல்கிப்லுவையும் நினைவு கூர்வீராக!(இவர்கள்) எல்லோரும் நல்லடியார்களில் உள்ளவர்களாவர்.

49. இது (விசுவாசிகளுக்கு) நல்லுபதேசமாகும்; நிச்சயமாக (இத்தகைய) பயபக்தியாளர்களுக்கு அழகான இருப்பிடமும் உண்டு.

50. (அவ்விருப்பிடம் அத்னுஎனும்) நிலையான சுவனபதிகளில் (இருக்கிறது;) அவர்களுக்காக(அதன்) வாயல்கள் திறக்கப்பட்டவையாக இருக்கும்.

51. அதில் (தலையணைகளின்மீது) சாய்ந்தவர்களாக, ஏராளமான கனிகளையும் (இன்பமான) பானங்களையும் கேட்(டு வாங்கிப் புசித்து அருந்திக் கொண்டிருப்)பார்கள்.

52. மேலும், அவர்களிடத்தில், கீழ்நோக்கிய பார்வைகளையுடைய ஒத்த வயதுடைய கன்னிகைகள் (பலரும்)இருப்பார்கள்.

53. இது, (கேள்வி) "கணக்கிற்குரிய நாளுக்கென நீங்கள் வாக்களிக்கப்பட்டவையாகும்."

54. "நிச்சயமாக இவை நம்முடைய கொடையாகும்; இதற்கு முடிவே இல்லை" (என்று அவர்களுக்குக் கூறப்படும்)

55. இது(வே நல்லோரின் முடிவாகும்)மேலும் நிச்சயமாக, (அல்லாஹ்வின் கட்டளையைமீறிய) கெட்டவர்களுக்கு மிகக்கெட்ட தங்குமிடம் இருக்கிறது.

56. (அதுவே) நரகம்_ அதில் அவர்கள் புகுவார்கள் ; தங்குமிடமான அது மிகக் கெட்டது.

57. இது(தீயோரின் முடிவாகும்); ஆகவே, இதை அவர்கள் சுவைத்துப் பார்க்கட்டும்_ (இதுவே) கொதித்த நீரும்,(நரகவாசிகளின் உடலிலிருந்து வடியும்) சீழ்ஜலமுமாகும்.

58. இதைப்போன்ற வேறு பலவகை(வேதனை)களும் உண்டு.

59. (இவர்களுடைய தலைவர்களிடம்) "இது உங்களுடன் (நரகத்தில்) புகும் படையாகும்"(என்று கூறப்படும். அதற்கு அவர்கள்,) "இது அவர்களுக்கு நல்வரவாகாது; நிச்சயமாக, அவர்கள் நரகத்தில் புகுந்து விட்டவர்களே!"(என்று கூறுவார்கள்).

60. அதற்கு அ(த்தலைவர்களைப் பின்பற்றிய)வர்கள் (தலைவர்களிடம், "எங்களுக்கு) அன்று! நீங்களும்தான்; உங்களுக்கு நல் வரவில்லை; நீங்கள்தாம் எங்களுக்கு இதனை முற்படுத்தித்தந்தீர்கள்; ஆதலால், ( நம்மிருசாராரின்) தங்குமிடம் மிகக் கெட்டது" என்று கூறுவார்கள்.

61. " எங்களிரட்சகனே! எவன் இதனை எங்களுக்கு முற்படுத்தி வைத்தானோ அவனுக்கு நரகத்தின் வேதனையை இரு மடங்கு அதிகப்படுத்துவாயாக!" என்று கூறுவார்கள்.

62. இன்னும், "எங்களுக்கென்ன நேர்ந்தது? எவர்களை தீயவர்களில் உள்ளவர்கள் என்று (உலகத்தில்) எண்ணிக்கொண்டிருந்தோமோ அந்த மனிதர்களை (நரகத்தில்) காணவில்லையே!" என்று கூறுவார்கள்.

اَتَّخَذۡنٰهُمۡ سِخۡرِيًّا اَمۡ زَاغَتۡ عَنۡهُمُ الۡاَبۡصَارُ ﴿۶۳﴾ اِنَّ ذٰلِكَ لَحَقٌّ
تَخَاصُمُ اَهۡلِ النَّارِ ﴿۶۴﴾ قُلۡ اِنَّمَاۤ اَنَا مُنۡذِرٌ ۖ وَّمَا مِنۡ اِلٰهٍ اِلَّا اللّٰهُ ع ۴
الۡوَاحِدُ الۡقَهَّارُ ﴿۶۵﴾ رَبُّ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ وَمَا بَيۡنَهُمَا الۡعَزِيۡزُ
الۡغَفَّارُ ﴿۶۶﴾ قُلۡ هُوَ نَبَؤٌا عَظِيۡمٌ ﴿۶۷﴾ اَنۡتُمۡ عَنۡهُ مُعۡرِضُوۡنَ ﴿۶۸﴾ مَا
كَانَ لِىَ مِنۡ عِلۡمٍۢ بِالۡمَلَاِ الۡاَعۡلٰۤى اِذۡ يَخۡتَصِمُوۡنَ ﴿۶۹﴾ اِنۡ يُّوۡحٰۤى
اِلَىَّ اِلَّاۤ اَنَّمَاۤ اَنَا نَذِيۡرٌ مُّبِيۡنٌ ﴿۷۰﴾ اِذۡ قَالَ رَبُّكَ لِلۡمَلٰٓئِكَةِ اِنِّىۡ
خَالِقٌۢ بَشَرًا مِّنۡ طِيۡنٍ ﴿۷۱﴾ فَاِذَا سَوَّيۡتُهٗ وَنَفَخۡتُ فِيۡهِ مِنۡ رُّوۡحِىۡ
فَقَعُوۡا لَهٗ سٰجِدِيۡنَ ﴿۷۲﴾ فَسَجَدَ الۡمَلٰٓئِكَةُ كُلُّهُمۡ اَجۡمَعُوۡنَ ﴿۷۳﴾ اِلَّاۤ
اِبۡلِيۡسَ ؕ اِسۡتَكۡبَرَ وَكَانَ مِنَ الۡكٰفِرِيۡنَ ﴿۷۴﴾ قَالَ يٰۤاِبۡلِيۡسُ مَا مَنَعَكَ
اَنۡ تَسۡجُدَ لِمَا خَلَقۡتُ بِيَدَىَّ ؕ اَسۡتَكۡبَرۡتَ اَمۡ كُنۡتَ مِنَ
الۡعَالِيۡنَ ﴿۷۵﴾ قَالَ اَنَا خَيۡرٌ مِّنۡهُ ؕ خَلَقۡتَنِىۡ مِنۡ نَّارٍ وَّخَلَقۡتَهٗ
مِنۡ طِيۡنٍ ﴿۷۶﴾ قَالَ فَاخۡرُجۡ مِنۡهَا فَاِنَّكَ رَجِيۡمٌ ﴿۷۷﴾ ۖ وَّاِنَّ عَلَيۡكَ
لَعۡنَتِىۡۤ اِلٰى يَوۡمِ الدِّيۡنِ ﴿۷۸﴾ قَالَ رَبِّ فَاَنۡظِرۡنِىۡۤ اِلٰى يَوۡمِ
يُبۡعَثُوۡنَ ﴿۷۹﴾ قَالَ فَاِنَّكَ مِنَ الۡمُنۡظَرِيۡنَ ﴿۸۰﴾ اِلٰى يَوۡمِ
الۡوَقۡتِ الۡمَعۡلُوۡمِ ﴿۸۱﴾ قَالَ فَبِعِزَّتِكَ لَاُغۡوِيَنَّهُمۡ اَجۡمَعِيۡنَ ﴿۸۲﴾

63. "அவர்களைப் பரிகாசமாக நாம் எடுத்துக்கொண்டிருந்தோமா? அல்லது (அவர்கள் இங்கிருந்தும்) அவர்களைப் பார்க்காதவாறு நம்முடைய பார்வைகள் தாம் சாய்ந்துவிட்டனவா!"(என்றும் கூறுவார்கள்.)

64. நிச்சயமாக நரகவாசிகள் (இவ்வாறு)தர்க்கித்துக்கொள்ளும் இது திட்டமாக உண்மையாகும்.

65. " நிச்சயமாக நான் (இதனைப்பற்றி) அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவனே; (யாவரையும்) அடக்கி ஆளுகின்ற ஒரே அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய (வேறு) நாயன் இல்லை" என்றும் (நபியே!) நீர் கூறுவீராக!

66. (அவன் தான்) வானங்கள் மற்றும் பூமி இன்னும், இவ்விரண்டிற்கு மத்தியிலுள்ளவற்றிற்கு இரட்சகன்; (அவன் யாவற்றையும்)மிகைத்தோன்; மிக்க மன்னிப்புடையோன்.

67. "(உங்களுக்கு நான் எடுத்துரைக்கும்) இது,மிக மகத்தான செய்தியாகும்"என்று (நபியே!) நீர் கூறுவீராக:

68. (ஆனால்) நீங்கள் ,அதனைப் புறக்கணிக்கின்றவர்களாக இருக்கிறீர்கள்.

69. " (ஆதமை அல்லாஹ் படைத்தபோது,) மிக மேலான கூட்டத்தார் (ஆகிய மலக்குகள் தங்களுக்குள்) தர்க்கித்துக்கொண்டதுபற்றி (அல்லாஹ் அறிவித்ததே தவிர) எனக்கொன்றும் தெரியாது(என்றும்),

70. " நிச்சயமாக நான் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவன் என்பதைத்தவிர (வேறு எதையும்) எனக்கு (வஹீமூலம்) அறிவிக்கப்படவில்லை" .(என்றும் கூறுவீராக!)

71. உமதிரட்சகன் மலக்குகளிடம்,நிச்சயமாக" நான் மனிதனைக் களிமண்ணால் படைக்கப்போகிறேன்" என்று கூறிய வேளையை (நபியே நீர் நினைவு கூர்வீராக!).

72. பிறகு நான் அவரை (அவருடைய தோற்றத்தைஉருவாக்கி) ச்சரிப்படுத்தி என் உயிரிலிருந்தும் அவரில் ஊதியபோது,அவருக்குச் சிரம் பணிந்தவர்களாக விழுங்கள் (எனக் கூறியதும்).

73(அதுசமயம்)மலக்குகள் — அவர்கள் அனைவரும்ஒன்றாகச்சிரம்பணிந்தார்கள் —

74.இப்லீஸைத்தவிர — அவன் கர்வங்கொண்டான்; நிராகரிப்பவர்களிலும் ஆகிவிட்டான்.

75. (அதற்கு அல்லாஹ்,) " இப்லீஸே! என் இருகரங்களால் நான் படைத்ததற்கு நீ சிரம் பணியாது உன்னைத் தடுத்தது எது? நீ கர்வங்கொண்டுவிட்டாயா? அல்லது, நீ உயர்ந்த (பதவியுடைய)வர்களில் ஆகிவிட்டாயா?" என்றான்.

76. அ(தற்க)வன்," நான் அவரை விட மிக்க மேலானவன்; என்னை, நெருப்பிலிருந்து நீ படைத்தாய்; இன்னும், அவரைக் களிமண்ணிலிருந்து நீ படைத்தாய்" என்றான்.

77. (அதற்கு அல்லாஹ்," அவ்வாறாயின்,) நீ இதிலிருந்து வெளியேறி விடு; நிச்சயமாக நீ விரட்டப்பட்டவன்" என்று கூறினான்.

78. " என்னுடைய சாபமும் தீர்ப்பு நாள்வரை நிச்சயமாக உன்மீது இருக்கும்", (என்று கூறினான்.)

79. அ(தற்க)வன்,"என் இரட்சகனே! (இறந்தோர்) எழுப்பப்படும் நாள்வரையில் நீ எனக்கு அவகாசம் அளிப்பாயாக!" என்று கூறினான்.

80. (அதற்கு அல்லாஹ்,) "நிச்சயமாக, நீ அவகாசம் அளிக்கப்பட்டவர்களில் உள்ளாய்" என்று கூறினான்.

81. குறிப்பிட்ட நேரத்தின் நாள்வரையில் (உன் தவணை உண்டுஎன்று கூறினான்).

82. (அப்போது)அவன்," உன் மகத்துவத்தின் மீது சத்தியமாக, நிச்சயமாக நான் அவர்கள் அனைவரையும் வழிகெடுத்துவிடுவேன்" என்றான்.

اِلَّا عِبَادَكَ مِنْهُمُ الْمُخْلَصِيْنَ ﴿۸۳﴾ قَالَ فَالْحَقُّ وَالْحَقَّ اَقُوْلُ ﴿۸۴﴾
لَاَمْلَـَٔنَّ جَهَنَّمَ مِنْكَ وَمِمَّنْ تَبِعَكَ مِنْهُمْ اَجْمَعِيْنَ ﴿۸۵﴾ قُلْ
مَآ اَسْـَٔلُكُمْ عَلَيْهِ مِنْ اَجْرٍ وَّمَآ اَنَا مِنَ الْمُتَكَلِّفِيْنَ ﴿۸۶﴾ اِنْ
هُوَ اِلَّا ذِكْرٌ لِّلْعٰلَمِيْنَ ﴿۸۷﴾ وَلَتَعْلَمُنَّ نَبَاَهٗ بَعْدَ حِيْنٍ ﴿۸۸﴾ ع

سُوْرَةُ الزُّمَرِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسٌ وَّسَبْعُوْنَ اٰيَةً وَّثَمَانُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

تَنْزِيْلُ الْكِتٰبِ مِنَ اللّٰهِ الْعَزِيْزِ الْحَكِيْمِ ﴿۱﴾ اِنَّآ اَنْزَلْنَآ اِلَيْكَ
الْكِتٰبَ بِالْحَقِّ فَاعْبُدِ اللّٰهَ مُخْلِصًا لَّهُ الدِّيْنَ ﴿۲﴾ اَلَا لِلّٰهِ الدِّيْنُ
الْخَالِصُ ؕ وَالَّذِيْنَ اتَّخَذُوْا مِنْ دُوْنِهٖٓ اَوْلِيَآءَ ۘ مَا نَعْبُدُهُمْ
اِلَّا لِيُقَرِّبُوْنَآ اِلَى اللّٰهِ زُلْفٰى ؕ اِنَّ اللّٰهَ يَحْكُمُ بَيْنَهُمْ فِيْ مَا هُمْ فِيْهِ
يَخْتَلِفُوْنَ ۬ؕ اِنَّ اللّٰهَ لَا يَهْدِيْ مَنْ هُوَ كٰذِبٌ كَفَّارٌ ﴿۳﴾ لَوْ اَرَادَ
اللّٰهُ اَنْ يَّتَّخِذَ وَلَدًا لَّاصْطَفٰى مِمَّا يَخْلُقُ مَا يَشَآءُ ۙ سُبْحٰنَهٗ ؕ
هُوَ اللّٰهُ الْوَاحِدُ الْقَهَّارُ ﴿۴﴾ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِالْحَقِّ ۚ
يُكَوِّرُ الَّيْلَ عَلَى النَّهَارِ وَيُكَوِّرُ النَّهَارَ عَلَى الَّيْلِ وَسَخَّرَ الشَّمْسَ
وَالْقَمَرَ ؕ كُلٌّ يَّجْرِيْ لِاَجَلٍ مُّسَمًّى ؕ اَلَا هُوَ الْعَزِيْزُ الْغَفَّارُ ﴿۵﴾

83. "அவர்களில் (உன்னால்) தேர்ந்தெடுக்கப்பட்ட உன் அடியார்களைத் தவிர".
84. (அதற்கு) "உண்மையே! இன்னும், நான் உண்மையையே கூறுகிறேன்" என்று (அல்லாஹ்) கூறினான்.
85. (அதாவது) "நிச்சயமாக உன்னாலும், அவர்களில் உன்னைப் பின்பற்றியவர்களாலும் ஆகிய (உங்கள்) அனைவர்களாலும் நரகத்தைத் திண்ணமாக நான் நிரப்புவேன்" (என்றான்).
86. (மனிதர்களே!) "இ(வ்வேதத்தை ஓதிக் காண்பிப்ப)தற்காக உங்களிடத்தில் எவ்விதக் கூலியையும் நான் கேட்கவில்லை; (எதையும்) உண்டாக்கி (பொய்யாக)க்கூறுபவர்களில் நான் உள்ளவனுமல்லன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!
87. அகிலத்தார்க்கெல்லாம் இது நல்லுபதேசமே தவிர இல்லை.
88. நிச்சயமாக, சிறிது காலத்திற்குப் பின், நீங்கள் இதன் (உண்மைச்) செய்தியைத் திட்டமாக அறிந்துகொள்வீர்கள்.

அத்தியாயம் : 39

## அல் ஜுமர் _ கூட்டங்கள்

வசனங்கள் : 75 மக்கீ ருகூஉகள் : 8

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. (யாவரையும்) மிகைத்தவனான, தீர்க்கமான அறிவுடையவனான அல்லாஹ்விடமிருந்து இவ்வேதம் இறக்கிவைக்கப்பட்டுள்ளதாகும்.

2. (நபியே!) நிச்சயமாக நாமே உண்மையைக் கொண்டு இவ்வேதத்தை உமக்கு இறக்கிவைத்திருக்கின்றோம்; ஆகவே, நீர் முற்றிலும் மார்க்கத்தை (வணக்கத்தை) அவனுக்கே கலப்பற்றதாக ஆக்கியவராக அல்லாஹ்வை வணங்குவீராக!

3. தூய மார்க்கம் (வழிபாடு) அல்லாஹ்வுக்கே உரித்தானது என்பதை அறிந்துகொள்வீராக! இன்னும், அவனையன்றி (மற்றவர்களைப்) பாதுகாவலர்களாக எடுத்துக் கொண்டிருக்கிறார்களே அத்தகையவர்கள், "எங்களை அவர்கள் நெருக்கத்தால் அல்லாஹ்வுக்கு சமீபமாக்கி வைப்பார்கள் என்பதற்காகவேயன்றி அவர்களை நாங்கள் வணங்கவில்லை" (என்று கூறுகின்றனர்); எதில் அவர்கள் வேறுபட்டுக் கொண்டிருக்கிறார்களோ அது பற்றி, நிச்சயமாக அல்லாஹ் (மறுமையில்) அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பான்; நிச்சயமாக அல்லாஹ், எவன் (உண்மையை) மிக்க மறுக்கிறவனாக, பொய்யனாக இருக்கிறானோ அவனை, நேர் வழியில் செலுத்தமாட்டான்.

4. அல்லாஹ் (தனக்கொரு) பிள்ளையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாடியிருந்தால், அவன் படைத்தவற்றிலிருந்து அவன் நாடியதைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருப்பான்; அவன் மிகப் பரிசுத்தமானவன்; அவனே (யாவரையும்) அடக்கி ஆளுகின்ற (வல்லமை மிக்க)வனாகிய, தனித்தவனாகிய அல்லாஹ்.

5. அவன் வானங்களை மற்றும் பூமியை உண்மையைக் கொண்டு படைத்திருக்கின்றான்; அவன் இரவைப் பகலின் மீது மூடிக்கொள்ளச் செய்கின்றான்; இன்னும், பகலை இரவின் மீது மூடிக்கொள்ளச் செய்கின்றான்; சூரியனையும், சந்திரனையும் (தன் ஆதிக்கத்தில்) அவன் வசப்படுத்தியும் வைத்திருக்கின்றான்; (இவை) ஒவ்வொன்றும், (குறிப்பிடப்பட்ட எல்லைக்குள்) குறிப்பிடப்பட்ட தவணை வரை நடக்கின்றது; அறிந்து கொள்ளுங்கள்; அவனே (யாவரையும்) மிகைத்தவன்; மிகுதியாக மன்னிக்கிறவன்.

خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍ ثُمَّ جَعَلَ مِنْهَا زَوْجَهَا وَاَنْزَلَ لَكُمْ
مِّنَ الْاَنْعَامِ ثَمٰنِيَةَ اَزْوَاجٍ ؕ يَخْلُقُكُمْ فِيْ بُطُوْنِ اُمَّهٰتِكُمْ خَلْقًا مِّنْۢ
بَعْدِ خَلْقٍ فِيْ ظُلُمٰتٍ ثَلٰثٍ ؕ ذٰلِكُمُ اللّٰهُ رَبُّكُمْ لَهُ الْمُلْكُ ؕ لَاۤ اِلٰهَ اِلَّا
هُوَ ۚ فَاَنّٰى تُصْرَفُوْنَ ﴿۶﴾ اِنْ تَكْفُرُوْا فَاِنَّ اللّٰهَ غَنِيٌّ عَنْكُمْ ۟ وَلَا
يَرْضٰى لِعِبَادِهِ الْكُفْرَ ۚ وَاِنْ تَشْكُرُوْا يَرْضَهُ لَكُمْ ؕ وَلَا تَزِرُ وَازِرَةٌ
وِّزْرَ اُخْرٰى ؕ ثُمَّ اِلٰى رَبِّكُمْ مَّرْجِعُكُمْ فَيُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ؕ اِنَّهٗ
عَلِيْمٌۢ بِذَاتِ الصُّدُوْرِ ﴿۷﴾ وَاِذَا مَسَّ الْاِنْسَانَ ضُرٌّ دَعَا رَبَّهٗ
مُنِيْبًا اِلَيْهِ ثُمَّ اِذَا خَوَّلَهٗ نِعْمَةً مِّنْهُ نَسِيَ مَا كَانَ يَدْعُوْۤا اِلَيْهِ
مِنْ قَبْلُ وَجَعَلَ لِلّٰهِ اَنْدَادًا لِّيُضِلَّ عَنْ سَبِيْلِهٖ ؕ قُلْ تَمَتَّعْ
بِكُفْرِكَ قَلِيْلًا ۖۗ اِنَّكَ مِنْ اَصْحٰبِ النَّارِ ﴿۸﴾ اَمَّنْ هُوَ قَانِتٌ
اٰنَآءَ الَّيْلِ سَاجِدًا وَّقَآئِمًا يَّحْذَرُ الْاٰخِرَةَ وَيَرْجُوْا رَحْمَةَ رَبِّهٖ ؕ
قُلْ هَلْ يَسْتَوِي الَّذِيْنَ يَعْلَمُوْنَ وَالَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ ؕ اِنَّمَا
يَتَذَكَّرُ اُولُوا الْاَلْبَابِ ﴿۹﴾ قُلْ يٰعِبَادِ الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوْا ع ۱ ۹ ۱۵
رَبَّكُمْ ؕ لِلَّذِيْنَ اَحْسَنُوْا فِيْ هٰذِهِ الدُّنْيَا حَسَنَةٌ ؕ وَاَرْضُ اللّٰهِ
وَاسِعَةٌ ؕ اِنَّمَا يُوَفَّى الصّٰبِرُوْنَ اَجْرَهُمْ بِغَيْرِ حِسَابٍ ﴿۱۰﴾

6. (ஆரம்பத்தில்) ஒரே ஆத்மாவிலிருந்து அவன் உங்களைப் படைத்தான்; பின்னர், அதிலிருந்து அதனுடைய மனைவியை ஆக்கினான்; இன்னும், கால் நடைகளில் எட்டு (வகை) ஜோடிகளை இறக்கி (அருளி)யிருக்கின்றான்; உங்கள் தாய்மார்களின் வயிறுகளில், ஒரு படைப்புக்குப்பின், மற்றொரு படைப்பாக மூன்று இருள்களில் (அவைகளுக்கிடையில்) உங்களைப் படைக்கின்றான்; அவன்தான் உங்களுடைய இரட்சகனாகிய அல்லாஹ்; ஆட்சி அவனுக்கே உரியது; அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை. ஆகவே, (அவனுக்கு வணக்கம் செலுத்துவதைவிட்டும்) நீங்கள் எவ்வாறு (மற்றவற்றை வணங்கத்) திருப்பப்படுகிறீர்கள்?

7. (அவனை) நீங்கள் நிராகரித்துவிட்டால், நிச்சயமாக அல்லாஹ், உங்களைவிட்டும் தேவையற்றவன்; இன்னும், தன் அடியார்களிடத்தில் நிராகரிப்பை அவன் பொருந்திக்கொள்வதில்லை; மேலும், நீங்கள் (அவனுக்கு) நன்றி செலுத்தினால், உங்களுக்காக அதனை அவன் திருப்தியடைவான்; (பாவத்தைச் சுமக்கின்ற) எந்த ஆத்மாவும் மற்ற ஆத்மாவின் (பாவச்)சுமையை சுமக்காது; பின்னர், உங்கள் மீளுமிடம் உங்கள் இரட்சகனின்பக்கமேயாகும்; அப்பொழுது நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றை அவன் உங்களுக்கு அறிவிப்பான்; நெஞ்சங்களிலுள்ளவற்றை நிச்சயமாக அவன் நன்கறிகிறவன்.

8. மேலும், மனிதனை ஏதேனும் ஒரு சங்கடம் தீண்டுமானால் அவன் தன் இரட்சகனை — அவன்பால் (தவ்பாச்செய்து) மீண்டவனாக — அழை(த்துப் பிரார்த்தி)க்கிறான்; பின்னர் அவன் தன்னிடமிருந்து (மகத்தான) ஓர் அருட்கொடையை அவனுக்குக் கொடுத்தானாகில், இதற்கு முன்னர் அவன் எதற்காகப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தானோ அதனையே அவன் மறந்துவிடுகிறான்; இன்னும், அல்லாஹ்வுக்கு இணைகளை அவன் ஆக்குகிறான், (மற்றவர்களை) அவனுடைய பாதையிலிருந்து வழி கெடுப்பதற்காக; (நபியே! அவனுக்கு,) "உன் நிராகரிப்பைக் கொண்டு சிறிது காலம் சுகம் அனுபவித்துக்கொள்; (முடிவில்) நிச்சயமாக நீ, நரகவாசிகளில் உள்ளவனாவாய்" என்று நீர் கூறுவீராக!

9. (அல்லாஹ்வுக்கு இணைவைப்பவன் சிறந்தவனா?) அல்லது, எவர், மறுமையைப் பயந்து, தன் இரட்சகனின் அருளை ஆதரவுவைத்து, இரவு காலங்களில் சிரம் பணிந்தவராகவும், நின்றவராகவும் (அல்லாஹ்வை) வணங்கிக்கொண்டிருக்கின்றாரோ அவரா? "அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? (இதனைக்கொண்டு) நல்லுபதேசம் பெறுவோரெல்லாம் அறிவுடையோரே" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

10. "விசுவாசங் கொண்டோரான என்னுடைய (நல்) அடியார்களே! உங்கள் இரட்சகனை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்; இவ்வுலகத்தில் நன்மை செய்தோருக்கு நன்மையுண்டு; இன்னும், அல்லாஹ்வுடைய பூமி விசாலமானது; பொறுமையாளர்கள், தங்களுடைய கூலியை நிறைவு செய்யப்படுவதெல்லாம் கணக்கின்றியேதான்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

قُلْ إِنِّيٓ أُمِرْتُ أَنْ أَعْبُدَ اللّٰهَ مُخْلِصًا لَّهُ الدِّيْنَ ﴿۱۱﴾ وَأُمِرْتُ لِأَنْ
أَكُوْنَ أَوَّلَ الْمُسْلِمِيْنَ ﴿۱۲﴾ قُلْ إِنِّيٓ أَخَافُ إِنْ عَصَيْتُ رَبِّيْ عَذَابَ
يَوْمٍ عَظِيْمٍ ﴿۱۳﴾ قُلِ اللّٰهَ أَعْبُدُ مُخْلِصًا لَّهٗ دِيْنِيْ ﴿۱۴﴾ فَاعْبُدُوْا مَا
شِئْتُمْ مِّنْ دُوْنِهٖ ؕ قُلْ إِنَّ الْخٰسِرِيْنَ الَّذِيْنَ خَسِرُوْٓا أَنْفُسَهُمْ وَ
أَهْلِيْهِمْ يَوْمَ الْقِيٰمَةِ ؕ أَلَا ذٰلِكَ هُوَ الْخُسْرَانُ الْمُبِيْنُ ﴿۱۵﴾ لَهُمْ مِّنْ
فَوْقِهِمْ ظُلَلٌ مِّنَ النَّارِ وَمِنْ تَحْتِهِمْ ظُلَلٌ ؕ ذٰلِكَ يُخَوِّفُ اللّٰهُ بِهٖ
عِبَادَهٗ ؕ يٰعِبَادِ فَاتَّقُوْنِ ﴿۱۶﴾ وَالَّذِيْنَ اجْتَنَبُوا الطَّاغُوْتَ أَنْ
يَّعْبُدُوْهَا وَأَنَابُوْٓا إِلَى اللّٰهِ لَهُمُ الْبُشْرٰى ۚ فَبَشِّرْ عِبَادِ ﴿۱۷﴾ الَّذِيْنَ
يَسْتَمِعُوْنَ الْقَوْلَ فَيَتَّبِعُوْنَ أَحْسَنَهٗ ؕ أُولٰٓئِكَ الَّذِيْنَ هَدٰىهُمُ اللّٰهُ
وَأُولٰٓئِكَ هُمْ أُولُوا الْأَلْبَابِ ﴿۱۸﴾ أَفَمَنْ حَقَّ عَلَيْهِ كَلِمَةُ الْعَذَابِ ؕ
أَفَأَنْتَ تُنْقِذُ مَنْ فِي النَّارِ ﴿۱۹﴾ لٰكِنِ الَّذِيْنَ اتَّقَوْا رَبَّهُمْ لَهُمْ غُرَفٌ مِّنْ
فَوْقِهَا غُرَفٌ مَّبْنِيَّةٌ ۙ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْأَنْهٰرُ ؕ وَعْدَ اللّٰهِ ؕ لَا يُخْلِفُ
اللّٰهُ الْمِيْعَادَ ﴿۲۰﴾ أَلَمْ تَرَ أَنَّ اللّٰهَ أَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَسَلَكَهٗ يَنَابِيْعَ
فِي الْأَرْضِ ثُمَّ يُخْرِجُ بِهٖ زَرْعًا مُّخْتَلِفًا أَلْوَانُهٗ ثُمَّ يَهِيْجُ فَتَرٰىهُ مُصْفَرًّا
ثُمَّ يَجْعَلُهٗ حُطَامًا ؕ إِنَّ فِيْ ذٰلِكَ لَذِكْرٰى لِأُولِي الْأَلْبَابِ ﴿۲۱﴾ ع ۲ ۱۶

11. "மார்க்கத்தை(_வணக்கத்தை) அவனுக்கே கலப்பற்றதாக ஆக்கியவனாக அல்லாஹ்வையே நான் வணங்குமாறு நிச்சயமாக நான் ஏவப் பட்டுள்ளேன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

12. இன்னும், (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்போரில் முதன்மையானவனாக நான் இருக்கவேண்டுமென்றும் ஏவப்பட்டுள்ளேன்" (என்றும் நபியே! நீர்கூறுவீராக!)

13." என் இரட்சகனுக்கு நான் மாறு செய்தால், மிகமகத்தானநாளின் வேதனைக்கு நிச்சயமாக நான் பயப்படுகிறேன் என்று(ம்) நீர் கூறுவீராக!

14. "முற்றிலும் என் மார்க்கத்தை (வணக்கத்தை) அவனுக்கே கலப்பற்றதாக ஆக்கியவனாக நான் அல்லாஹ்வையே வணங்குகிறேன்" என்று(ம்) நீர் கூறுவீராக!

15. எனவே, அவனையன்றி நீங்கள் நாடியவற்றை நீங்கள் வணங்கிக் கொள்ளுங்கள்; (அதற்குரிய வேதனையைப் பெறுவீர்கள்;) "நிச்சயமாக நஷ்டவாளிகள், கியாமத்து நாளில் தமக்கும், தம் குடும்பத்தினருக்கும் நஷ்டத்தை ஏற்படுத்திக்கொண்டார்களே அத்தகையவர்கள்தாம்; அதுவே தெளிவான நஷ்டமாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள் என்று (நபியே!) நீர் கூறுவீராக!"

16. (மறுமை நாளில்) அவர்களுக்கு, அவர்களின் மேலிருந்து நெருப்பிலான தட்டுகளும், அவர்களுக்குக் கீழிருந்து (நெருப்பிலான) தட்டுகளும் இருக்கும்; (நரகத்தின் நிலை பற்றிக்கூறப்பட்ட) அது; அதனைக் கொண்டு, அல்லாஹ் தன் அடியார்களை பயமுறுத்துகிறான்; என் அடியார்களே! (பாவங்களைத் தவிர்ப்பதன்மூலம்) என்னை நீங்கள் பயந்துகொள்ளுங்கள்.

17. மேலும், ஷைத்தான்களை_அவர்களை வணங்குவதைத்தவிர்த்து_ (விலகி முற்றிலும்) அல்லாஹ்வின் (வணக்கத்தின்) பால்திரும்பிவிட்டார்களே அத்தகையோர்_ அவர்களுக்குத் தான் நன்மாராயம் உண்டு; ஆகவே,(நபியே!) என் அடியார்களுக்கு நீர் நன்மாராயம் கூறுவீராக!

18. அவர்கள் எத்தகையோரென்றால், சொல்லை செவியுறுவார்கள்; பின்னர் அதில் மிக அழகானதைப் பின்பற்றுவார்கள். அவர்கள் எத்தகையோரென்றால், அல்லாஹ் அவர்களை நேர் வழியில் செலுத்திவிட்டான்; இன்னும் அவர்கள்தாம் அறிவுடையோர்.

19.(நபியே!) எவன் மீது வேதனை பற்றிய வாக்கு உண்மையாகிவிட்டதோ அவனா? (இரட்சகனை பயந்தவனைப் போன்றவன்?) (நரக)நெருப்பில் (செல்ல) இருக்கும் அவனை நீர் காப்பாற்றிவிடுவீரா?

20. எனினும், தங்கள் இரட்சகனுக்கு அஞ்சி நடக்கின்றார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு, (சுவனபதியில் அடுக்கடுக்காக) மாளிகைகள் உண்டு; அவைகளுக்கு மேலும் கட்டப்பட்ட மாளிகைகள் உண்டு; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; (இதுவே) அல்லாஹ்வின் வாக்குறுதியாகும்; அல்லாஹ் (தன்னுடைய) வாக்குறுதியில் மாறமாட்டான்.

21. (நபியே !) நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ், வானத்திலிருந்து (மழை) நீரை இறக்கி அதனைப் பூமியில் ஊற்றுகளாக ஓடச்செய்கின்றான்; பின்னர், அதனைக் கொண்டு பல வேளாண்மை (ப்பயிர்)களை _ அதன் நிறங்கள் மாறுபட்டவையாக இருக்க அவன் வெளிப்படுத்துகின்றான்; பின்னர் உளர்ந்து, அவை மஞ்சள் நிறமடைவதை நீர் காண்கின்றீர்; பின்னர், அதனை(க்காய்ந்த) சருகுகளாக்கிவிடுகின்றான்; நிச்சயமாக இதில், அறிவுடை யோர்களுக்கு படிப்பினை இருக்கிறது.

أَفَمَنْ شَرَحَ اللّٰهُ صَدْرَهٗ لِلْإِسْلَامِ فَهُوَ عَلٰى نُوْرٍ مِّنْ رَّبِّهٖ ۭ فَوَيْلٌ
لِّلْقٰسِيَةِ قُلُوْبُهُمْ مِّنْ ذِكْرِ اللّٰهِ ۭ أُولٰٓئِكَ فِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۲۲﴾ اَللّٰهُ
نَزَّلَ أَحْسَنَ الْحَدِيْثِ كِتٰبًا مُّتَشَابِهًا مَّثَانِيَ تَقْشَعِرُّ مِنْهُ جُلُوْدُ
الَّذِيْنَ يَخْشَوْنَ رَبَّهُمْ ۚ ثُمَّ تَلِيْنُ جُلُوْدُهُمْ وَقُلُوْبُهُمْ إِلٰى ذِكْرِ
اللّٰهِ ۭ ذٰلِكَ هُدَى اللّٰهِ يَهْدِيْ بِهٖ مَنْ يَّشَآءُ ۭ وَمَنْ يُّضْلِلِ اللّٰهُ
فَمَا لَهٗ مِنْ هَادٍ ﴿۲۳﴾ أَفَمَنْ يَّتَّقِيْ بِوَجْهِهٖ سُوْٓءَ الْعَذَابِ يَوْمَ
الْقِيٰمَةِ ۭ وَقِيْلَ لِلظّٰلِمِيْنَ ذُوْقُوْا مَا كُنْتُمْ تَكْسِبُوْنَ ﴿۲۴﴾ كَذَّبَ
الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ فَأَتٰىهُمُ الْعَذَابُ مِنْ حَيْثُ لَا يَشْعُرُوْنَ ﴿۲۵﴾
فَأَذَاقَهُمُ اللّٰهُ الْخِزْيَ فِي الْحَيٰوةِ الدُّنْيَا ۚ وَلَعَذَابُ الْاٰخِرَةِ
أَكْبَرُ لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ ﴿۲۶﴾ وَلَقَدْ ضَرَبْنَا لِلنَّاسِ فِيْ هٰذَا وقف لازم
الْقُرْاٰنِ مِنْ كُلِّ مَثَلٍ لَّعَلَّهُمْ يَتَذَكَّرُوْنَ ﴿۲۷﴾ ۚ قُرْاٰنًا عَرَبِيًّا غَيْرَ
ذِيْ عِوَجٍ لَّعَلَّهُمْ يَتَّقُوْنَ ﴿۲۸﴾ ضَرَبَ اللّٰهُ مَثَلًا رَّجُلًا فِيْهِ
شُرَكَآءُ مُتَشٰكِسُوْنَ وَرَجُلًا سَلَمًا لِّرَجُلٍ ۭ هَلْ يَسْتَوِيٰنِ مَثَلًا ۭ
اَلْحَمْدُ لِلّٰهِ ۭ بَلْ أَكْثَرُهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿۲۹﴾ إِنَّكَ مَيِّتٌ وَّإِنَّهُمْ
مَّيِّتُوْنَ ﴿۳۰﴾ ثُمَّ إِنَّكُمْ يَوْمَ الْقِيٰمَةِ عِنْدَ رَبِّكُمْ تَخْتَصِمُوْنَ ﴿۳۱﴾ ع ۳ ۱۷

22. "அல்லாஹ் எவருடைய இதயத்தை இஸ்லாத்திற்காக (அதை ஏற்பதற்கு) விசாலமாக்கி வைத்திருக்கின்றானோ அவரா?(எவருடைய இதயம் அதை ஏற்பதிலிருந்து சுருங்கி இறுகிவிட்டதோ அவரைப்போன்று ஆவார்?) அவர்(அதன்காரணமாக)தன் இரட்சகனிடமிருந்துள்ள பிரகாசத்தின் மீது இருக்கிறார்;ஆகவே,அல்லாஹ்வை நினைவு கூருவதைவிட்டும்(விலகி)எவர்களின் இதயங்கள்(இறுகி) கடினமாகிவிட்டனவோ அவர்களுக்குக் கேடுதான், அவர்கள் பகிரங்கமான வழிகேட்டில்(தான்) இருக்கின்றனர்.

23. அல்லாஹ் மிக்க அழகான செய்தியை வேதமாக (குர்ஆனாக) இறக்கி இருக்கின்றான்; (இதிலுள்ள வசனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாமல்) ஒன்றை மற்றொன்று ஒத்ததாக, திரும்பத் திரும்பக் கூறப்படுவதாக உள்ளன; தங்கள் இரட்சகனுக்குப் பயப்படுகிறார்களே அத்தகையோரின் தோல்(களின் உரோமங்)கள் (அதனைக் கேட்ட மாத்திரத்தில்) சிலிர்த்து விடுகின்றன; பின்னர் அவர்களுடைய தோல்களும், இதயங்களும் அல்லாஹ்வை நினைவு கூர்வதின்பால் இளகுகின்றன. அதுவே அல்லாஹ்வுடைய நேர் வழியாகும்; தான் நாடியவர்களை அவன் இதன் மூலம் நேர் வழியில் செலுத்துகிறான்; எவரை அல்லாஹ் தவறான வழியில் விட்டுவிட்டானோ, அவரை நேர் வழியில் செலுத்தக்கூடியவன் ஒருவனும் இல்லை.

24. எவர், மறுமை நாளில் தீய வேதனையைத் தம் முகத்தைக் கொண்டேனும் (தன்னைவிட்டு) தடுத்துக்கொள்ள முற்படுகிறாரோ அவரா? (சுவன வாசிக்குச் சமமாவார்?) இன்னும் அநியாயக்காரர்களிடம், "நீங்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தவற்றை(அதன் தீய பலனை)ச் சுவைத்துப் பாருங்கள்" என்று கூறப்படும்.

25. (இவ்வாறே) இவர்களுக்கு முன்னிருந்தோர் (நம் தூதர்களைப்) பொய்யாக்கினார்கள்; ஆகவே, அவர்கள் (ஒரு சிறிதும்) உணர்ந்துகொள்ளாத விதத்தில் வேதனை அவர்களை வந்தடைந்தது.

26. பின்னர், இவ்வுலக வாழ்க்கையில் இழிவைச் சுவைக்குமாறு அவர்களை அல்லாஹ் செய்தான். அவர்கள், அறிந்துகொண்டிருப்பார்களாயின் மறுமையிலுள்ள வேதனை(யோ)மிகப்பெரிது(என்பதை அறிந்துகொள்வார்கள்).

27. நிச்சயமாக, மனிதர்களுக்கு இந்தக் குர்ஆனில் ஒவ்வொரு உதாரணத்தையும் (அதைக்கொண்டு) அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்காக நாம் (எடுத்துக்) கூறியிருக்கிறோம்.

28. (அல்லாஹ்வுக்கு) அவர்கள் பயந்துகொள்வதற்காக, எத்தகைய கோணலும் அற்ற அரபி மொழியிலான குர்ஆனாக இருக்கும் நிலையில்(அதனை இறக்கி வைத்தோம்).

29. கருத்து வேற்றுமையுள்ள (தீய குணங்களைக் கொண்ட)பல கூட்டுக்காரர்களைக் கொண்ட ஒரு மனிதனையும், (எந்த கூட்டுக்காரர்களும் இல்லாது கலப்பற்றவாறு) ஒரே மனிதனுக்குச் சொந்தமான வேறு ஒரு மனிதனையும் அல்லாஹ் உதாரணமாகக் கூறுகிறான்; உதாரணத்தால் அவ்விருவரும் சமமாவார்களா ? ( சமமானவர்கள் அல்லர்!) புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியவையாகும்; எனினும், அவர்களில் பெரும்பாலோர் அறியமாட்டார்கள்.

30. (நபியே!) நிச்சயமாக நீர் இறந்துவிடுகிறவரே; நிச்சயமாக அவர்களும் இறந்துவிடுகிறவர்கள்தாம்.

31. பின்னர், நிச்சயமாக நீங்கள் மறுமை நாளில் உங்கள் இரட்சகனிடத்தில் தர்க்கித்துக்கொள்வீர்கள்.

فَمَنْ اَظْلَمُ مِمَّنْ كَذَبَ عَلَى اللّٰهِ وَكَذَّبَ بِالصِّدْقِ
اِذْ جَآءَهٗ ؕ اَلَیْسَ فِیْ جَهَنَّمَ مَثْوًى لِّلْكٰفِرِیْنَ ﴿۳۲﴾ وَالَّذِیْ جَآءَ
بِالصِّدْقِ وَصَدَّقَ بِهٖۤ اُولٰٓئِكَ هُمُ الْمُتَّقُوْنَ ﴿۳۳﴾ لَهُمْ مَّا
یَشَآءُوْنَ عِنْدَ رَبِّهِمْ ؕ ذٰلِكَ جَزٰٓؤُا الْمُحْسِنِیْنَ ﴿۳۴﴾ لِیُكَفِّرَ اللّٰهُ
عَنْهُمْ اَسْوَاَ الَّذِیْ عَمِلُوْا وَیَجْزِیَهُمْ اَجْرَهُمْ بِاَحْسَنِ
الَّذِیْ كَانُوْا یَعْمَلُوْنَ ﴿۳۵﴾ اَلَیْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ ؕ وَیُخَوِّفُوْنَكَ
بِالَّذِیْنَ مِنْ دُوْنِهٖ ؕ وَمَنْ یُّضْلِلِ اللّٰهُ فَمَا لَهٗ مِنْ هَادٍ ﴿۳۶﴾ ع
وَمَنْ یَّهْدِ اللّٰهُ فَمَا لَهٗ مِنْ مُّضِلٍّ ؕ اَلَیْسَ اللّٰهُ بِعَزِیْزٍ
ذِی انْتِقَامٍ ﴿۳۷﴾ وَلَئِنْ سَاَلْتَهُمْ مَّنْ خَلَقَ السَّمٰوٰتِ
وَالْاَرْضَ لَیَقُوْلُنَّ اللّٰهُ ؕ قُلْ اَفَرَءَیْتُمْ مَّا تَدْعُوْنَ
مِنْ دُوْنِ اللّٰهِ اِنْ اَرَادَنِیَ اللّٰهُ بِضُرٍّ هَلْ هُنَّ كٰشِفٰتُ
ضُرِّهٖۤ اَوْ اَرَادَنِیْ بِرَحْمَةٍ هَلْ هُنَّ مُمْسِكٰتُ رَحْمَتِهٖ ؕ قُلْ
حَسْبِیَ اللّٰهُ ؕ عَلَیْهِ یَتَوَكَّلُ الْمُتَوَكِّلُوْنَ ﴿۳۸﴾ قُلْ یٰقَوْمِ
اعْمَلُوْا عَلٰى مَكَانَتِكُمْ اِنِّیْ عَامِلٌ ۚ فَسَوْفَ تَعْلَمُوْنَ ﴿۳۹﴾ لا
مَنْ یَّاْتِیْهِ عَذَابٌ یُّخْزِیْهِ وَیَحِلُّ عَلَیْهِ عَذَابٌ مُّقِیْمٌ ﴿۴۰﴾

32. ஆகவே, அல்லாஹ்வின்மீது பொய்யுரைத்து, இன்னும் உண்மையை (யாகிய வேதத்தை)_அது தன்னிடம் வந்தபோது பொய்யாக்கியவனைவிட பெரும் அநியாயக்காரன் யார்?(அத்தகைய)நிராகரிப்பவர்களுக்குத் தங்குமிடம் நரகத்தில் இல்லையா?

33. மேலும், உண்மையைக் கொண்டு வந்தவ(ராகிய நமது தூத)ரும், அதனை உண்மையென்றே(ஒப்புக்கொண்டு)ஏற்பவர்களும்(ஆகிய)அத்தகையவர்கள்தாம் பயபக்தியாளர்கள்.

34. அவர்களுக்கு தங்களின் இரட்சகனிடத்தில் அவர்கள் நாடியவை உண்டு. அது நன்மை செய்து கொண்டிருந்தோருக்குரிய (தகுதியான)கூலியாகும்.

35. ஏனெனில், அவர்கள் செய்தவற்றில் மிகத் தீயதை அல்லாஹ் அவர்களை விட்டும் நீக்கி (மன்னித்து) விட்டு, அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்கு மிக அழகானவற்றையும்(நற்)கூலியாக அவர்களுக்குக் கொடுப்பான்.

36. தன் அடியாருக்கு அல்லாஹ் (ஒருவனே சகலவற்றிற்கும்) போதுமானவனாக இல்லையா? இன்னும், (நபியே!) அவர்கள் அவனல்லாத (அவர்களின் தெய்வங்களான)வற்றைக்கொண்டு உம்மை பயமுறுத்துகின்றனர்; இன்னும், எவரை அல்லாஹ் தவறான வழியில் விட்டுவிடுகின்றானோ அவரை, நேர் வழியில் செலுத்தக்கூடியவன் ஒருவனுமில்லை.

37. எவரை அல்லாஹ் நேர் வழியில் செலுத்துகின்றானோ அவரை, வழிகெடுத்துவிடக் கூடியவன் எவனுமில்லை; அல்லாஹ்(யாவரையும்) மிகைத்தவனாக, தண்டித்தலை உடையவனாக இல்லையா?

38. மேலும், "வானங்களையும், பூமியையும் படைத்தவன் யார்?" என்று (நபியே!) நீர் அவர்களைக் கேட்பீராயின், "அல்லாஹ்தான்" என்று நிச்சயமாக அவர்கள் கூறுவார்கள்; (பின்னும் நபியே! அவர்களிடம்) "அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைக்கின்றவற்றை பார்த்தீர்களா? அல்லாஹ் எனக்கு ஏதேனும் இடரை (உண்டாக்க) நாடினால், அவைகள் அவனது(நாட்டத்தால் எனக்கு ஏற்பட்ட) இடரை நீக்கிவிடக்கூடியவையா? அல்லது எனக்கு ஏதேனும் ஓர் அருளை அவன் நாடினால், அவனுடைய அருளை அவை தடுத்துவிடக்கூடியவையா?" என்று நீர்கேட்பீராக!" அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன்; (சகல காரியங்களையும் அவனிடம் ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைப்பவர்கள் அவன்மீதே முழுமையாக நம்பிக்கை வைப்பார்கள்" என்று கூறுவீராக!

39. "என்னுடைய சமூகத்தாரே! உங்களுடைய வழி முறையின் மீதே நீங்கள் (செய்யக்கூடியதை) நீங்கள் செய்துகொண்டிருங்கள். (என்னுடைய வழியின் மீது) நிச்சயமாக நான் செய்து வருபவன்; ஆகவே (எவருடைய செயல் சரியானது என்பதை அடுத்து) நீங்கள் அறிந்துகொள்வீர்கள்" என்று (நபியே!)நீர் கூறுவீராக!

40. " தன்னை இழிவுபடுத்தும் வேதனை யாருக்குவரும்? என்பதையும், இன்னும் நிலையான வேதனை யார் மீது இறங்கும் என்பதையும் (நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.)"

اِنَّآ اَنۡزَلۡنَا عَلَيۡكَ الۡكِتٰبَ لِلنَّاسِ بِالۡحَقِّ‌ ۚ فَمَنِ اهۡتَدٰى
فَلِنَفۡسِهٖ‌ ۚ وَمَنۡ ضَلَّ فَاِنَّمَا يَضِلُّ عَلَيۡهَا‌ ۚ وَمَاۤ اَنۡتَ عَلَيۡهِمۡ
ع ۴ / ۱ بِوَكِيۡلٍ ۝۴۱ اَللّٰهُ يَتَوَفَّى الۡاَنۡفُسَ حِيۡنَ مَوۡتِهَا وَالَّتِىۡ لَمۡ
تَمُتۡ فِىۡ مَنَامِهَا‌ ۚ فَيُمۡسِكُ الَّتِىۡ قَضٰى عَلَيۡهَا الۡمَوۡتَ وَ
يُرۡسِلُ الۡاُخۡرٰٓى اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى‌ ؕ اِنَّ فِىۡ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوۡمٍ
يَّتَفَكَّرُوۡنَ ۝۴۲ اَمِ اتَّخَذُوۡا مِنۡ دُوۡنِ اللّٰهِ شُفَعَآءَ‌ ؕ قُلۡ
اَوَلَوۡ كَانُوۡا لَا يَمۡلِكُوۡنَ شَيۡـًٔا وَّلَا يَعۡقِلُوۡنَ ۝۴۳ قُلۡ لِّلّٰهِ
الشَّفَاعَةُ جَمِيۡعًا‌ ؕ لَهٗ مُلۡكُ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ‌ ؕ ثُمَّ اِلَيۡهِ
تُرۡجَعُوۡنَ ۝۴۴ وَاِذَا ذُكِرَ اللّٰهُ وَحۡدَهُ اشۡمَاَزَّتۡ قُلُوۡبُ الَّذِيۡنَ
لَا يُؤۡمِنُوۡنَ بِالۡاٰخِرَةِ‌ ۚ وَاِذَا ذُكِرَ الَّذِيۡنَ مِنۡ دُوۡنِهٖۤ اِذَا هُمۡ
يَسۡتَبۡشِرُوۡنَ ۝۴۵ قُلِ اللّٰهُمَّ فَاطِرَ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ عٰلِمَ
الۡغَيۡبِ وَالشَّهَادَةِ اَنۡتَ تَحۡكُمُ بَيۡنَ عِبَادِكَ فِىۡ مَا كَانُوۡا
فِيۡهِ يَخۡتَلِفُوۡنَ ۝۴۶ وَلَوۡ اَنَّ لِلَّذِيۡنَ ظَلَمُوۡا مَا فِى الۡاَرۡضِ
جَمِيۡعًا وَّمِثۡلَهٗ مَعَهٗ لَافۡتَدَوۡا بِهٖ مِنۡ سُوۡٓءِ الۡعَذَابِ يَوۡمَ
الۡقِيٰمَةِ‌ ؕ وَبَدَا لَهُمۡ مِّنَ اللّٰهِ مَا لَمۡ يَكُوۡنُوۡا يَحۡتَسِبُوۡنَ ۝۴۷

41. (நபியே!) நிச்சயமாக நாம், மனிதர்களுக்காக உண்மையைக் கொண்டுள்ள (இவ்)வேதத்தை உம் மீது இறக்கினோம்; ஆகவே, எவர் நேர்வழி பெற்று விடுகின்றாரோ அது அவருக்கே (நன்மை) ஆகும்; எவர் (அதிலிருந்து) வழிகெட்டுவிடுகின்றாரோ அவர் வழிகெடுவதெல்லாம் அவரின் மீதே (கேடாக)ஆகும்;(நபியே!)நீர் அவர்களுக்காகப் பொறுப்பேற்றுக்கொள்பவரும் அல்லர்.

42. உயிர்களை_ அவை இறக்கும் பொழுதும், தம் நித்திரையில் இறப்பெய்யாதவற்றையும்_ அல்லாஹ்வே கைப்பற்றுகிறான்; பின்னர், எதன் மீது மரணத்தை அவன் விதித்துவிட்டானோ அதை(த் தன்னிடமே) அவன் நிறுத்திக்கொள்கின்றான்; மேலும், மற்றவற்றை குறிப்பிடப்பட்ட காலம் வரை (வாழ்வதற்காக) அவன் அனுப்பிவிடுகின்றான்; சிந்தித்துப் பார்க்கக்கூடிய சமூகத்தார்க்கு, நிச்சயமாக இதில் படிப்பினைகள் இருக்கின்றன.

43. இவர்கள் அல்லாஹ் அல்லாதவற்றை(த் தங்களுக்கு)ப் பரிந்துரையாளர்களாக எடுத்துக் கொண்டார்களா? "அவர்கள் (காரியத்தில்) எதையும் சொந்தமாக்கிக் கொள்ளாதவர்களாகவும், (எதையும்) விளங்காதவர்களாகவும் இருந்தாலுமா?" என்று (நபியே! அவர்களை) நீர் கேட்பீராக!

44. (பின்னும் நபியே!) நீர் கூறுவீராக:" பரிந்துரைகள் யாவும் அல்லாஹ்வுக்கே உரியதாகும்". (ஆகவே, அவனுடைய அனுமதியும், அவன் பொருத்தமுமின்றி அவனிடத்தில் ஒருவரும் பரிந்துரை செய்ய முடியாது) வானங்கள், மற்றும் பூமியின் ஆட்சி (முழுவதும்) அவனுக்கே உரியது; பின்னர் (மறுமையில்) அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்.

45. மேலும்,(இவர்களின் கூட்டுக்காரர்களன்றி) அல்லாஹ்(வை மட்டும்)_ அவன் தனித்தவனாகக் கூறப்பட்டால், மறுமையை நம்பிக்கைக் கொள்ளவில்லையே அத்தகையோரின் இதயங்கள் (கோபத்தால்) சுருங்கிவிடுகின்றன; இன்னும், அவனையன்றி மற்றோர்(களின் பெயர்)கள் கூறப்பட்டால் அது சமயம் அவர்கள் மகிழ்வடைகின்றனர்.

46. "அல்லாஹ்வே! வானங்களையும், பூமியையும் படைத்தவனே! மறைவானவற்றையும், வெளிப்படையானவற்றையும் அறிந்தவனே! உன் அடியார்களுக்கு மத்தியில் அவர்கள் எதில் வேறுபாடு கொண்டிருக்கிறார்களோ, அதில் நீயே தீர்ப்புவழங்குவாய்(என்று நபியே!) நீர் கூறுவீராக!

47. மேலும், அநியாயம் செய்துவிட்டார்களே அத்தகையோருக்கு பூமியிலுள்ள அனைத்துமிருந்து, அத்துடன் அது போன்றதும்(சொந்தமாக) இருந்திருந்தால், கொடிய வேதனையிலிருந்து (விடிவுதேடி தப்பித்துக் கொள்வதற்கு) மறுமை நாளில் அதை ஈடாகக் கொடுத்துவிடுவார்கள்; அன்றியும்,(அப்பொழுது) அவர்கள் எண்ணிப்பார்த்திராததெல்லாம் அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு வெளியாகும்.

وَبَدَا لَهُمْ سَيِّاٰتُ مَا كَسَبُوْا وَحَاقَ بِهِمْ مَّا كَانُوْا بِهٖ
يَسْتَهْزِءُوْنَ ﴿۴۸﴾ فَاِذَا مَسَّ الْاِنْسَانَ ضُرٌّ دَعَانَا ۫ ثُمَّ اِذَا
خَوَّلْنٰهُ نِعْمَةً مِّنَّا ۙ قَالَ اِنَّمَآ اُوْتِيْتُهٗ عَلٰى عِلْمٍ ؕ بَلْ هِىَ فِتْنَةٌ
وَّلٰكِنَّ اَكْثَرَهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿۴۹﴾ قَدْ قَالَهَا الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ
فَمَآ اَغْنٰى عَنْهُمْ مَّا كَانُوْا يَكْسِبُوْنَ ﴿۵۰﴾ فَاَصَابَهُمْ سَيِّاٰتُ
مَا كَسَبُوْا ؕ وَالَّذِيْنَ ظَلَمُوْا مِنْ هٰۤؤُلَآءِ سَيُصِيْبُهُمْ سَيِّاٰتُ
مَا كَسَبُوْا ۙ وَمَا هُمْ بِمُعْجِزِيْنَ ﴿۵۱﴾ اَوَلَمْ يَعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ يَبْسُطُ
الرِّزْقَ لِمَنْ يَّشَآءُ وَيَقْدِرُ ؕ اِنَّ فِىْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ
يُّؤْمِنُوْنَ ﴿۵۲﴾ قُلْ يٰعِبَادِىَ الَّذِيْنَ اَسْرَفُوْا عَلٰٓى اَنْفُسِهِمْ ع ۵ ۲
لَا تَقْنَطُوْا مِنْ رَّحْمَةِ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا ؕ
اِنَّهٗ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ ﴿۵۳﴾ وَاَنِيْبُوْٓا اِلٰى رَبِّكُمْ وَاَسْلِمُوْا لَهٗ مِنْ
قَبْلِ اَنْ يَّاْتِيَكُمُ الْعَذَابُ ثُمَّ لَا تُنْصَرُوْنَ ﴿۵۴﴾ وَاتَّبِعُوْٓا اَحْسَنَ
مَآ اُنْزِلَ اِلَيْكُمْ مِّنْ رَّبِّكُمْ مِّنْ قَبْلِ اَنْ يَّاْتِيَكُمُ الْعَذَابُ
بَغْتَةً وَّاَنْتُمْ لَا تَشْعُرُوْنَ ﴿۵۵﴾ ۙ اَنْ تَقُوْلَ نَفْسٌ يّٰحَسْرَتٰى عَلٰى
مَا فَرَّطْتُّ فِىْ جَنْۢبِ اللّٰهِ وَاِنْ كُنْتُ لَمِنَ السّٰخِرِيْنَ ﴿۵۶﴾ ۙ

48. மேலும், அவர்கள் சம்பாதித்தவற்றின் தீயவைகளும் அவர்களுக்கு வெளிப்பட்டுவிடும்; அன்றியும் அவர்கள் எதனைப் பரிகாசம் செய்து கொண்டிருந்தார்களோ அது அவர்களைச் சூழ்ந்து கொள்ளும்.

49. ஆகவே, மனிதனை ஏதேனும் துன்பம் தொட்டுவிடுமானால் (அதனை நீக்கிவிடுமாறு பிரார்த்தித்து)அவன் நம்மை அழைக்கின்றான்; (அதனை நீக்கிய பின் நம்மிடமிருந்து) அவனுக்கு யாதோர் அருட்கொடையை நாம் கொடுத்தால், "இதை நான் கொடுக்கப்பட்டதெல்லாம் (என்) அறிவினால் தான்" என்று அவன் கூறுகிறான்; அவ்வாறல்ல! அது(அவர்களுக்கு ) ஒரு சோதனையாகும்;எனினும், அவர்களில் பெரும்பாலானோர் (இதனை) அறியமாட்டார்கள்.

50. இவர்களுக்கு முன்னிருந்தார்களே அத்தகையோரும் இதனைத்திட்டமாகக் கூறிக் கொண்டிருந்தார்கள்; பின்னர், அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தார்களே, அது அவர்களுக்குப் பயனளிக்கவில்லை.

51. ஆகவே, அவர்கள் சம்பாதித்த தீயவைகள் அவர்களைப்பீடித்தன; மேலும், இவர்களில் அநியாயம் செய்தார்களே அத்தகையோர்_அவர்கள் சம்பாதித்ததன் தீயவைகள் அவர்களை வந்தடையும்; அவர்கள் (அல்லாஹ்வை எதிலும்) இயலாமல் ஆக்கக்கூடியவர்களும் அல்லர்.

52. நிச்சயமாக அல்லாஹ், தான் நாடியவர்களுக்கு உணவை (சம்பத்துகளை) விரிவாக்குகின்றான்; (தான் நாடியவர்களுக்கு) சுருக்கியும் விடுகிறான் என்பதை அவர்கள் அறியவில்லையா? விசுவாசங்கொண்ட சமூகத்தார்க்கு நிச்சயமாக இதில் அத்தாட்சிகள் இருக்கின்றன.

53. "தங்கள் மீது (தாங்களே) அளவு கடந்து( பாவங்கள் செய்து) விட்டோராகிய என் அடியார்களே! அல்லாஹ்வின் அருளிலிருந்து(அவன் மன்னிப்பை விட்டும்) நிராசையற்றோராக நீங்கள் ஆகிவிடவேண்டாம்; நிச்சயமாக அல்லாஹ்_ (உங்களுடைய) பாவங்கள் யாவையும்_(நீங்கள் பிழை பொறுக்கத் தேடினால்,) அவன் மன்னித்துவிடுவான்; (ஏனென்றால்) நிச்சயமாக அவன்தான் மிக்க மன்னிக்கிறவன்,மிகக்கிருபையுடையவன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

54. இன்னும் (மனிதர்களே!)உங்களுக்கு வேதனை வருவதற்கு முன்னதாக,உங்கள் இரட்சகன்பால் (தவ்பாச்செய்து) நீங்கள் திரும்பிவிடுங்கள்; அவனுக்கு (முற்றிலும்) நீங்கள் கீழ்ப்படிந்தும் விடுங்கள்;(வேதனை வந்துவிட்டால்,)பின்னர் (எவராலும்) நீங்கள் உதவி செய்யப்படமாட்டீர்கள்.

55. (மனிதர்களே!) நீங்கள் உணர்ந்து கொள்ளாத நிலையில் திடீரென உங்களுக்கு வேதனை வருவதற்கு முன்னதாக, உங்களிரட்சகனிடமிருந்து உங்களின்பக்கம் இறக்கிவைக்கப்பட்ட மிக்க அழகானவற்றையும் பின்பற்றுங்கள்:

56. "அல்லாஹ்விற்கு நான் செலுத்தவேண்டியவற்றில் குறை செய்து விட்டதன்மீது என்னுடைய கைசேதமே! இன்னும் நான் (உலகில்) பரிகாசம் செய்கிறவர்களில் இருந்தேனே" என்று எந்த ஒரு ஆத்மாவும் கூறாமலிருப்பதற்காகவும்,

اَوْ تَقُوْلَ لَوْ اَنَّ اللّٰهَ هَدٰىنِیْ لَكُنْتُ مِنَ الْمُتَّقِیْنَ ﴿۵۷﴾ اَوْ
تَقُوْلَ حِیْنَ تَرَى الْعَذَابَ لَوْ اَنَّ لِیْ كَرَّةً فَاَكُوْنَ مِنَ
الْمُحْسِنِیْنَ ﴿۵۸﴾ بَلٰى قَدْ جَآءَتْكَ اٰیٰتِیْ فَكَذَّبْتَ بِهَا وَاسْتَكْبَرْتَ
وَكُنْتَ مِنَ الْكٰفِرِیْنَ ﴿۵۹﴾ وَیَوْمَ الْقِیٰمَةِ تَرَى الَّذِیْنَ كَذَبُوْا
عَلَى اللّٰهِ وُجُوْهُهُمْ مُّسْوَدَّةٌ ؕ اَلَیْسَ فِیْ جَهَنَّمَ مَثْوًى
لِّلْمُتَكَبِّرِیْنَ ﴿۶۰﴾ وَیُنَجِّی اللّٰهُ الَّذِیْنَ اتَّقَوْا بِمَفَازَتِهِمْ ۫ لَا
یَمَسُّهُمُ السُّوْٓءُ وَلَا هُمْ یَحْزَنُوْنَ ﴿۶۱﴾ اَللّٰهُ خَالِقُ كُلِّ شَیْءٍ ۫ وَّ
هُوَ عَلٰى كُلِّ شَیْءٍ وَّكِیْلٌ ﴿۶۲﴾ لَهٗ مَقَالِیْدُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَ
الَّذِیْنَ كَفَرُوْا بِاٰیٰتِ اللّٰهِ اُولٰٓىِٕكَ هُمُ الْخٰسِرُوْنَ ﴿۶۳﴾ ع قُلْ ع ۶ ۱۱ ۳
اَفَغَیْرَ اللّٰهِ تَاْمُرُوْٓنِّیْٓ اَعْبُدُ اَیُّهَا الْجٰهِلُوْنَ ﴿۶۴﴾ وَلَقَدْ
اُوْحِیَ اِلَیْكَ وَاِلَى الَّذِیْنَ مِنْ قَبْلِكَ ۚ لَىِٕنْ اَشْرَكْتَ
لَیَحْبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِیْنَ ﴿۶۵﴾ بَلِ اللّٰهَ
فَاعْبُدْ وَكُنْ مِّنَ الشّٰكِرِیْنَ ﴿۶۶﴾ وَمَا قَدَرُوا اللّٰهَ حَقَّ
قَدْرِهٖ ۖۗ وَالْاَرْضُ جَمِیْعًا قَبْضَتُهٗ یَوْمَ الْقِیٰمَةِ وَالسَّمٰوٰتُ
مَطْوِیّٰتٌۢ بِیَمِیْنِهٖ ؕ سُبْحٰنَهٗ وَتَعٰلٰى عَمَّا یُشْرِكُوْنَ ﴿۶۷﴾

57. அல்லது " அல்லாஹ் எனக்கு நேர் வழிகாட்டியிருந்தால் நான் பயபக்தியுடையவர்களில் (ஒருவனாக) ஆகி இருப்பேன்!" என்று கூறாமலிருப்பதற்காகவும்_

58. அல்லது வேதனையை அது காணும் சமயத்தில், "நிச்சயமாக எனக்கு (உலகத்திற்கு) திரும்பிச் செல்லுதல் இருக்குமானால், நான் நன்மை செய்வோரில் உள்ளவனாகி விடுவேன்" என்று கூறாமலிருப்பதற்காகவும்_

59. ஏன் இல்லை, " திட்டமாகவே என்னுடைய வசனங்கள் உன்னிடம் வந்தன; பின்னர் நீ அவற்றைப் பொய்யாக்கினாய்; கர்வமும் கொண்டாய்; (அதனை) நிராகரிப்பவர்களில் உள்ளவனாகவும் இருந்தாய்"(என்று அல்லாஹ் கூறுவான்).

60. இன்னும், (நபியே !) அல்லாஹ்வின் மீது பொய்யுரைத்தார்களே அத்தகையோரை_ அவர்களுடைய முகங்கள் மறுமை நாளில் கறுப்பாக்கப் பட்டவையாக(இருப்பதை) நீர் காண்பீர்; கர்வங் கொண்டிருந்தவர்களுக்குத் தங்குமிடம் நரகத்தில் இல்லையா ?

61. இன்னும், (அல்லாஹ்வை)பயந்து (பாவம் செய்வதிலிருந்து விலகிக்) கொண்டார்களே அத்தகையோரை_ அவர்களின் வெற்றியைக் கொண்டு அல்லாஹ் ஈடேற்றுவான்; தீமை அவர்களைத் தொடாது; அவர்கள் கவலையடையவும் மாட்டார்கள்.

62. அல்லாஹ்(வே) ஒவ்வொரு பொருளையும் படைக்கிறவன்; அவனே ஒவ்வொரு பொருளின் மீதும் பொறுப்பாளனுமாவான்.

63. வானங்கள் மற்றும் பூமியின் (களஞ்சியங்களின்) சாவிகள் அவனிடமே இருக்கின்றன; இன்னும் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரிக்கின்றார்களே அத்தகையோர்_ அவர்கள் தாம் (முற்றிலும்) நஷ்டமடைந்தவர்களாவர்.

64. (நபியே!) நீர் கூறுவீராக: " அறிவீனர்களே! அல்லாஹ் அல்லாததை நான் வணங்க வேண்டுமென்று நிச்சயமாக என்னை நீங்கள் ஏவுகின்றீர்களா ?"

65. (நபியே!)" நீர் இணைவைத்தால் நிச்சயமாக உம்முடைய செயல்(கள் யாவும்) அழிந்துவிடும்; நிச்சயமாக நீர் நஷ்டமடைபவர்களிலும் ஆகிவிடுவீர்" என உமக்கும், உமக்கு முன்னிருந்தவர்களுக்கும் (வஹீ) அறிவிக்கப்பட்டது.

66. ஆகவே, நீர் அல்லாஹ்வையே வணங்குவீராக! மேலும், அவனுக்கு நன்றி செலுத்துவோரில் நீர் ஆகிவிடுவீராக!

67. மேலும், (நபியே!) அல்லாஹ்வை_ அவனுடைய கண்ணியத்திற்குத் தக்கவாறு அவர்கள் மதிப்பளிக்கவில்லை; இன்னும், பூமி அனைத்தும் மறுமை நாளில் அவனுடைய (ஒரு கைப் ) பிடியிலும், வானங்கள் (அனைத்தும்) அவனுடைய வலக்கையிலும் சுருட்டப்பட்டவையாயிருக்கும்; அவன் தூயவன்; இன்னும், அவர்கள் இணைவைப்பவற்றைவிட்டும் அவன் மிக உயர்ந்தவன்.

وَنُفِخَ فِي الصُّوْرِ فَصَعِقَ مَنْ فِي السَّمٰوٰتِ وَمَنْ فِي الْاَرْضِ
اِلَّا مَنْ شَآءَ اللّٰهُ ؕ ثُمَّ نُفِخَ فِيْهِ اُخْرٰى فَاِذَا هُمْ قِيَامٌ يَّنْظُرُوْنَ ﴿٦٨﴾
وَاَشْرَقَتِ الْاَرْضُ بِنُوْرِ رَبِّهَا وَوُضِعَ الْكِتٰبُ وَجِايْٓءَ بِالنَّبِيّٖنَ
وَالشُّهَدَآءِ وَقُضِيَ بَيْنَهُمْ بِالْحَقِّ وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿٦٩﴾ وَوُفِّيَتْ
كُلُّ نَفْسٍ مَّا عَمِلَتْ وَهُوَ اَعْلَمُ بِمَا يَفْعَلُوْنَ ﴿٧٠﴾ ع وَسِيْقَ ع ٧ ٤
الَّذِيْنَ كَفَرُوْٓا اِلٰى جَهَنَّمَ زُمَرًا ؕ حَتّٰٓى اِذَا جَآءُوْهَا فُتِحَتْ
اَبْوَابُهَا وَقَالَ لَهُمْ خَزَنَتُهَآ اَلَمْ يَاْتِكُمْ رُسُلٌ مِّنْكُمْ
يَتْلُوْنَ عَلَيْكُمْ اٰيٰتِ رَبِّكُمْ وَيُنْذِرُوْنَكُمْ لِقَآءَ يَوْمِكُمْ
هٰذَا ؕ قَالُوْا بَلٰى وَلٰكِنْ حَقَّتْ كَلِمَةُ الْعَذَابِ عَلَى الْكٰفِرِيْنَ ﴿٧١﴾
قِيْلَ ادْخُلُوْٓا اَبْوَابَ جَهَنَّمَ خٰلِدِيْنَ فِيْهَا ۚ فَبِئْسَ مَثْوَى
الْمُتَكَبِّرِيْنَ ﴿٧٢﴾ وَسِيْقَ الَّذِيْنَ اتَّقَوْا رَبَّهُمْ اِلَى الْجَنَّةِ زُمَرًا ؕ
حَتّٰٓى اِذَا جَآءُوْهَا وَفُتِحَتْ اَبْوَابُهَا وَقَالَ لَهُمْ خَزَنَتُهَا
سَلٰمٌ عَلَيْكُمْ طِبْتُمْ فَادْخُلُوْهَا خٰلِدِيْنَ ﴿٧٣﴾ وَقَالُوا
الْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ صَدَقَنَا وَعْدَهٗ وَاَوْرَثَنَا الْاَرْضَ
نَتَبَوَّاُ مِنَ الْجَنَّةِ حَيْثُ نَشَآءُ ۚ فَنِعْمَ اَجْرُ الْعٰمِلِيْنَ ﴿٧٤﴾

68. மேலும், ஸூர்(குழல்) ஊதப்படும்; பின்னர் வானங்களில் இருப்பவர்களும், பூமியில் இருப்பவர்களும் _ அல்லாஹ் நாடியவர்களைத் தவிர _ மூர்ச்சித்து(ச் சித்தமிழந்து விழுந்து) விடுவார்கள்; பிறகு அதில் மறுமுறை ஊதப்படும்; அப்போது அவர்கள் (அல்லாஹ்வின் கட்டளைகளைஎதிர்) பார்ப்பவர்களாக (யாவரும்உயிர் பெற்று)எழுந்துநிற்பார்கள்.

69. பூமி, தன் இரட்சகனின் "ஒளி" யைக் கொண்டு பிரகாசித்தும்விடும்; குறிப்பேடு வைக்கப்பட்டும்விடும்; நபிமார்களும்,(அவர்களுடைய மற்ற)சாட்சியாளர்களும் கொண்டு வரப்படுவார்கள்; அவர்களுக்கிடையே நியாயமாகத் தீர்ப்பளிக்கப்படும்; அவர்கள் (சிறிதும்) அநியாயம் செய்யப்படவுமாட்டார்கள்.

70. ஒவ்வோர் ஆத்மாவும் _ அது செய்த(தற்குரிய கூலியான)தை (பூரணமாக அதற்கு) நிறைவு செய்யப்படும்; (அல்லாஹ்வாகிய) அவனோ, அவர்கள் செய்தவற்றை மிக்க அறிந்தவன்.

71. மேலும், (அந்நாளில்) நிராகரித்துக்கொண்டிருந்தார்களே அத்தகையோர் கூட்டங்கூட்டமாக நரகத்தின் பால் இழுத்துக்கொண்டு வரப்படுவார்கள்; இறுதியாக அங்கு அவர்கள் வந்தடைந்தால் அதன் வாயில்கள் திறக்கப்பட்டுவிடும்; அதன் காவலாளர்கள் அவர்களிடம், "உங்களிலிருந்து (அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட) தூதர்கள், உங்கள் இரட்சகனுடைய வசனங்களை அவர்கள் உங்களுக்கு ஓதிக்காண்பிப்பவர்களாகவும், இந்த உங்களுடைய நாளின் சந்திப்பைப்பற்றி எச்சரிக்கை செய்பவர்களாகவும் உங்களிடம் வரவில்லையா?" என்றும் கேட்பார்கள். அ(தற்க)வர்கள், "ஆம் (வந்தார்கள்); எனினும், நிராகரிப்போரின் மீது வேதனை பற்றிய வாக்கு உறுதியாகி விட்டது" என்றே கூறுவார்கள்.

72. (ஆகவே) "நரகவாயில்களில் _அவற்றில் நிரந்தரமானவர்களாகத் தங்கியிருக்கும் நிலையில் நீங்கள் நுழைந்து விடுங்கள்" என்று கூறப்படும்; ஆகவே, பெருமையடித்துக் கொண்டிருந்தவர்களின் தங்குமிடம் மிகக் கெட்டது.

73. தங்கள் இரட்சகனுக்கு பயந்து (நடந்து) கொண்டிருந்தார்களே அத்தகையோர், (அந் நாளில்) கூட்டங் கூட்டமாகச் சுவர்க்கத்தின்பால் அழைத்து(க்கொண்டு)ம்வரப்படுவார்கள்; இறுதியாக அதன் வாயில்கள்(அவர்கள் வரும் முன்பே) திறக்கப்பட்டிருக்கும் நிலையில்அங்கு அவர்கள் வந்தடைந்து விட்டால் (மகிழ்ச்சியடைவார்கள்); மேலும், அதன் காவலாளர்கள் அவர்களிடம் "உங்களுக்கு சாந்தி உண்டாவதாக! நீங்கள் நல்லவர்களாகி விட்டீர்கள். ஆகவே, நீங்கள் இதில் நிரந்தரமானவர்களாகத் தங்கியிருக்கும் நிலையில் நுழைந்து விடுங்கள்" என்று கூறுவார்கள்.

74. அ(தற்க)வர்கள், "புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! அவன் எத்தகையவனென்றால், தன்னுடைய வாக்குறுதியை எங்களுக்கு உண்மையாக்கி வைத்தான்; சுவனபதியில் நாங்கள் நாடிய இடத்தில் நாங்கள் குடியிருக்க (அதன்) பூமியை எங்களுக்கு அனந்தரமாக்கியும் கொடுத்தான்" என்றும் கூறுவார்கள்; எனவே நன்மைசெய்தோர்களின் கூலி, (இவ்வாறு) மிக நல்லதாகவே இருக்கிறது.

وَتَرَى الْمَلٰٓئِكَةَ حَآفِّيْنَ مِنْ حَوْلِ الْعَرْشِ يُسَبِّحُوْنَ بِحَمْدِ
رَبِّهِمْ ۚ وَقُضِيَ بَيْنَهُمْ بِالْحَقِّ وَقِيْلَ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۷۵﴾ ع (ربع ۸ ۵)

سُوْرَةُ الْمُؤْمِنِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسٌ وَّثَمٰنُوْنَ اٰيَةً وَّتِسْعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

حٰمٓ ﴿۱﴾ تَنْزِيْلُ الْكِتٰبِ مِنَ اللّٰهِ الْعَزِيْزِ الْعَلِيْمِ ﴿۲﴾ غَافِرِ الذَّنْۢبِ
وَقَابِلِ التَّوْبِ شَدِيْدِ الْعِقَابِ ذِي الطَّوْلِ ۭ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۭ
اِلَيْهِ الْمَصِيْرُ ﴿۳﴾ مَا يُجَادِلُ فِيْٓ اٰيٰتِ اللّٰهِ اِلَّا الَّذِيْنَ كَفَرُوْا فَلَا
يَغْرُرْكَ تَقَلُّبُهُمْ فِي الْبِلَادِ ﴿۴﴾ كَذَّبَتْ قَبْلَهُمْ قَوْمُ نُوْحٍ وَّ
الْاَحْزَابُ مِنْۢ بَعْدِهِمْ ۠ وَهَمَّتْ كُلُّ اُمَّةٍۢ بِرَسُوْلِهِمْ
لِيَاْخُذُوْهُ وَجٰدَلُوْا بِالْبَاطِلِ لِيُدْحِضُوْا بِهِ الْحَقَّ فَاَخَذْتُهُمْ ۣ وقف
فَكَيْفَ كَانَ عِقَابِ ﴿۵﴾ وَكَذٰلِكَ حَقَّتْ كَلِمَتُ رَبِّكَ عَلَى الَّذِيْنَ
كَفَرُوْٓا اَنَّهُمْ اَصْحٰبُ النَّارِ ﴿۶﴾ ۘ اَلَّذِيْنَ يَحْمِلُوْنَ الْعَرْشَ وَمَنْ
حَوْلَهٗ يُسَبِّحُوْنَ بِحَمْدِ رَبِّهِمْ وَيُؤْمِنُوْنَ بِهٖ وَيَسْتَغْفِرُوْنَ
لِلَّذِيْنَ اٰمَنُوْا ۚ رَبَّنَا وَسِعْتَ كُلَّ شَيْءٍ رَّحْمَةً وَّعِلْمًا فَاغْفِرْ
لِلَّذِيْنَ تَابُوْا وَاتَّبَعُوْا سَبِيْلَكَ وَقِهِمْ عَذَابَ الْجَحِيْمِ ﴿۷﴾

وقف لازم — وقف النبی صلی اللہ علیہ وسلم ۱۲

75. மேலும்,"அர்ஷை" சுற்றிச் சூழ்ந்தவர்களாக மலக்குகளை (நபியே! அந்நாளில்) நீர் காண்பீர்; அவர்கள் தங்கள் இரட்சகனின் புகழைக் கொண்டு துதித்துக் கொண்டிருப்பார்கள்;(சிலரை சுவனத்திற்கும், பலரை நரகத்திற்கும் செல்லுமாறு கட்டளையிட்டு) அவர்களுக்கிடையில் நியாயமாகவே தீர்ப்பளிக்கப்படும்; "அகிலத்தார்க்கெல்லாம் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரியவை" என்று கூறப்படும்.

---

அத்தியாயம் : 40

## அல் முஃமின் _ விசுவாசி

வசனங்கள் : 85 மக்கீ ருகூஃகள் : 9

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. ஹாமீம்

2. (இது யாவரையும்_) மிகைத்தவனாகிய, (அனைத்தையும்) நன்கறிந்தவனாகிய அல்லாஹ்விடமிருந்து இறக்கிவைக்கப்பட்ட வேதமாகும்.

3. (அவன்) பாவத்தை மன்னிப்பவன்; (குற்றவாளிகளுடைய) தவ்பாவை (பாவ மீட்சியை )ஏற்பவன்; (குற்றம் புரிந்தோரைத்) தண்டிப்பதில் கடுமையானவன்; (நல்லோர் மீது) அருட்கொடைகள் உடையவன். அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை; அவனிடமே திரும்ப வேண்டியதிருக்கின்றது.

4. (நபியே!) நிராகரிப்போரைத் தவிர, (மற்றெவரும்) அல்லாஹ்வுடைய வசனங்களில் தர்க்கிக்கமாட்டார்கள்; ஆகவே, அவர்கள், நகரங்களில் (சுதந்திரமாக) சுற்றித்திரிவது உம்மை ஏமாற்றிவிடவேண்டாம்.

5. இவர்களுக்கு முன் நூஹ்வுடைய சமூகத்தாரும், அவர்களுக்குப் பின் (வந்த) பல கூட்டத்தினர்களும் (நம்மால் அனுப்பப்பட்டோரைப்) பொய்யாக்கினார்கள்; மேலும், (அவர்களில்) ஒவ்வொரு சமுதாயத்தினரும் தங்களிடம் வந்த தூதர்களை(க் கொலை செய்ய அல்லது சிறை)ப் பிடிக்க நாட்டங்கொண்டார்கள்; அன்றியும், அவர்கள் அசத்தியத்தைக் கொண்டு_ அதன் மூலம் சத்தியத்தை அழித்து விடுவதற்காக (அவர்களுடன்) தர்க்கித்தார்கள். ஆதலால், அவர்களை நான் பிடித்துக் கொண்டேன்;ஆகவே, என்னுடைய தண்டனை எப்படி இருந்தது?

6. இவ்வாறே, நிராகரித்தோர் மீது_ நிச்சயமாக அவர்கள் நரகவாசிகள் என்ற உமதிரட்சகனின் வாக்கும் கடமையாகி(நிறைவேறி)விட்டது.

7. "அர்ஷை" சுமந்து கொண்டிருப்பவர்களும், அதனைச் சுற்றி இருப்பவர்களும் தங்களிரட்சகனின் புகழைக் கொண்டு (அவனைத்) துதிசெய்கிறார்கள்; இன்னும், அவனை விசுவாசிக்கிறார்கள்; மேலும், விசுவாசங்கொண்டோருக்காக (அவர்களின் குற்றங்களை) மன்னிக்குமாறு(அல்லாஹ்விடம்) கோருகிறார்கள்; "எங்கள் இரட்சகனே! நீ (உன்னுடைய) கருணையாலும், அறிவாலும் ஒவ்வொரு பொருளையும் விசாலமாக அறிந்திருக்கின்றாய்; ஆகவே, தவ்பா செய்து உன்னுடைய (நேர்) வழியைப் பின்பற்றியோருக்கும், நீ (பாவத்தை) பொறுத்தருள்வாயாக; அவர்களை நரக வேதனையிலிருந்து நீ காத்தருள் வாயாக!

رَبَّنَا وَاَدۡخِلۡهُمۡ جَنّٰتِ عَدۡنِ ۣالَّتِیۡ وَعَدۡتَّهُمۡ وَمَنۡ صَلَحَ
مِنۡ اٰبَآئِهِمۡ وَ اَزۡوَاجِهِمۡ وَذُرِّیّٰتِهِمۡ ؕ اِنَّكَ اَنۡتَ الۡعَزِیۡزُ
الۡحَكِیۡمُ ۙ﴿۸﴾ وَقِهِمُ السَّیِّاٰتِ ؕ وَمَنۡ تَقِ السَّیِّاٰتِ یَوۡمَئِذٍ
فَقَدۡ رَحِمۡتَهٗ ؕ وَذٰلِكَ هُوَ الۡفَوۡزُ الۡعَظِیۡمُ ﴿۹﴾ ع اِنَّ الَّذِیۡنَ ع ۹/۱
كَفَرُوۡا یُنَادَوۡنَ لَمَقۡتُ اللّٰهِ اَكۡبَرُ مِنۡ مَّقۡتِكُمۡ اَنۡفُسَكُمۡ
اِذۡ تُدۡعَوۡنَ اِلَی الۡاِیۡمَانِ فَتَكۡفُرُوۡنَ ﴿۱۰﴾ قَالُوۡا رَبَّنَاۤ اَمَتَّنَا
اثۡنَتَیۡنِ وَاَحۡیَیۡتَنَا اثۡنَتَیۡنِ فَاعۡتَرَفۡنَا بِذُنُوۡبِنَا فَهَلۡ اِلٰی
خُرُوۡجٍ مِّنۡ سَبِیۡلٍ ﴿۱۱﴾ ذٰلِكُمۡ بِاَنَّهٗۤ اِذَا دُعِیَ اللّٰهُ وَحۡدَهٗ
كَفَرۡتُمۡ ۚ وَاِنۡ یُّشۡرَكۡ بِهٖ تُؤۡمِنُوۡا ؕ فَالۡحُكۡمُ لِلّٰهِ الۡعَلِیِّ الۡكَبِیۡرِ ﴿۱۲﴾
هُوَ الَّذِیۡ یُرِیۡكُمۡ اٰیٰتِهٖ وَیُنَزِّلُ لَكُمۡ مِّنَ السَّمَآءِ رِزۡقًا ؕ
وَمَا یَتَذَكَّرُ اِلَّا مَنۡ یُّنِیۡبُ ﴿۱۳﴾ فَادۡعُوا اللّٰهَ مُخۡلِصِیۡنَ لَهُ
الدِّیۡنَ وَلَوۡ كَرِهَ الۡكٰفِرُوۡنَ ﴿۱۴﴾ رَفِیۡعُ الدَّرَجٰتِ ذُو الۡعَرۡشِ ۚ
یُلۡقِی الرُّوۡحَ مِنۡ اَمۡرِهٖ عَلٰی مَنۡ یَّشَآءُ مِنۡ عِبَادِهٖ لِیُنۡذِرَ
یَوۡمَ التَّلَاقِ ۙ﴿۱۵﴾ یَوۡمَ هُمۡ بٰرِزُوۡنَ ۬ۚ لَا یَخۡفٰی عَلَی اللّٰهِ
مِنۡهُمۡ شَیۡءٌ ؕ لِمَنِ الۡمُلۡكُ الۡیَوۡمَ ؕ لِلّٰهِ الۡوَاحِدِ الۡقَهَّارِ ﴿۱۶﴾

8. "எங்கள் இரட்சகனே! நீ அவர்களுக்கு வாக்களித்திருக்கும் நிலையான சுவனபதிகளில் அவர்களையும், அவர்களுடைய மூதாதையரிலும், அவர்கள் மனைவியரிலும், அவர்களுடைய சந்ததியினரிலும்(ஈமான் கொண்டு, நற்செயல்புரிந்து)யார் நல்லோராகி விட்டாரோ அவர்களையும் புகுத்துவாயாக! நிச்சயமாக, நீயே (யாவரையும்) மிகைத்தோன்; (யாவையும் அறிந்த) தீர்க்கமான அறிவுடையோன்."

9. மேலும்,"(சகல) தீமைகளிலிருந்தும்(அவற்றின் தண்டனையிலிருந்தும்), அவர்களைக் காப்பாயாக! அன்றைய தினம், எவரை நீ தீமைகளிலிருந்து காத்துக்கொள்கிறாயோ அவர்மீது திட்டமாக, நீ அருள் புரிந்துவிட்டாய்; இன்னும், அதுவே மகத்தான வெற்றியாகும்"(என்றும் கூறுவார்கள்).

10. நிச்சயமாக நிராகரித்துவிட்டார்களே அவர்கள் _ "உங்களையே நீங்கள் கோபித்துக்கொள்வதை விட அல்லாஹ்வின் கோபம் (உங்களின்மீது) மிகப்பெரியதாகும்; (ஏனென்றால்,) நீங்கள் விசுவாசத்தின்பால் (உலகில்) அழைக்கப்பட்ட சமயத்தில்(அதனை)நிராகரித்துவிட்டீர்கள்"என்று(மறுமையில் மலக்குகளால்)_அழைக்கப்(பட்டுகூறப்)படுவார்கள்

11. அ(தற்க)வர்கள், "எங்கள் இரட்சகனே! இருமுறை நீ எங்களை மரணமடையச் செய்தாய்; இன்னும், இருமுறை நீ எங்களை உயிர்ப்பித்தாய்; ஆகவே, எங்களுடைய பாவங்களை நாங்கள் ஒப்புக்கொண்டோம்; எனவே, (இதிலிருந்து நாங்கள் தப்பித்து)வெளியேறுவதற்கு ஏதும் வழி உண்டா?" என்று அவர்கள் கேட்பார்கள்.

12. இ(த்தண்டனை யான)து_நிச்சயமாக அதன்காரணம்: அல்லாஹ், அவன் தனித்தவனாக அழைக்கப்பட்டால் நீங்கள் நிராகரித்தீர்கள்; மேலும், அவனுக்கு (உங்கள் தெய்வங்கள்) இணையாக்கப்பட்டால் (அதை) விசுவாசித்தீர்கள்; இப்பொழுது தீர்ப்பு(வழங்குவது) மிக்கஉயர்வானவனாகிய மிகப்பெரியவனான அல்லாஹ்விற்கு(மட்டும்) உரியதாகும்(என்று கூறப்படும்).

13. அவன் எத்தகையவனென்றால், தன்னுடைய அத்தாட்சிகளை உங்களுக்கு அவன் காண்பிக்கிறான்; மேலும், வானத்திலிருந்து உங்களுக்கு உணவை இறக்கிவைக்கிறான்; (ஒவ்வொரு விஷயத்திலும் அவனுக்குக் கீழ்ப்படிந்து அவன்பக்கம்) திரும்புபவர்களைத் தவிர, (வேறெவரும் இதனைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறவுமாட்டார்கள்.

14. ஆகவே, நிராகரித்துக் கொண்டிருப்போர் வெறுத்தபோதிலும், நீங்கள் அல்லாஹ்வை_ முற்றிலும் வணக்கத்தை அவனுக்கே கலப்பற்றவர்களாக்கி வைக்கிறவர்களாக (பிரார்த்தித்து) அழையுங்கள்.

15. (அவன்) பதவிகளை உயர்த்துபவன்; அர்ஷுடையவன்; (தன்னைச்) சந்திக்கும் நாளை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக தன் அடியார்களில், தான் நாடியவர்களின்மீது தன் கட்டளையின்படி வஹீயை இறக்கிவைக்கின்றான்.

16. (மரணித்த) அவர்கள் (மண்ணறைகளிலிருந்து) வெளிப்பட்டவர்களாக வரும் நாளில், அவர்களிலிருந்து எப்பொருளும் அல்லாஹ்வுக்கு மறைந்ததாக இருக்காது; "ஆட்சி, இன்று யாருக்குரியது?" (என்று கேட்டுவிட்டு, அதற்கு விடையாக, "யாவரையும்) அடக்கியாளும் ஏகனாகிய அல்லாஹ்வுக்கே உரியது" (என்று அவன் கூறுவான்).

اَلۡيَوۡمَ تُجۡزٰى كُلُّ نَفۡسٍۢ بِمَا كَسَبَتۡ‌ؕ لَا ظُلۡمَ الۡيَوۡمَ‌ؕ اِنَّ اللّٰهَ
سَرِيۡعُ الۡحِسَابِ ﴿۱۷﴾ وَاَنۡذِرۡهُمۡ يَوۡمَ الۡاٰزِفَةِ اِذِ الۡقُلُوۡبُ لَدَى
الۡحَـنَـاجِرِ كٰظِمِيۡنَ ؕ مَا لِلظّٰلِمِيۡنَ مِنۡ حَمِيۡمٍ وَّلَا شَفِيۡعٍ
يُّطَاعُ ؕ ﴿۱۸﴾ يَعۡلَمُ خَآئِنَةَ الۡاَعۡيُنِ وَمَا تُخۡفِى الصُّدُوۡرُ ﴿۱۹﴾
وَاللّٰهُ يَقۡضِىۡ بِالۡحَـقِّ‌ؕ وَالَّذِيۡنَ يَدۡعُوۡنَ مِنۡ دُوۡنِهٖ لَا
يَقۡضُوۡنَ بِشَىۡءٍ‌ؕ اِنَّ اللّٰهَ هُوَ السَّمِيۡعُ الۡبَصِيۡرُ ﴿۲۰﴾ اَوَلَمۡ ع ۲/۱۱
يَسِيۡرُوۡا فِى الۡاَرۡضِ فَيَنۡظُرُوۡا كَيۡفَ كَانَ عَاقِبَةُ الَّذِيۡنَ
كَانُوۡا مِنۡ قَبۡلِهِمۡ‌ؕ كَانُوۡا هُمۡ اَشَدَّ مِنۡهُمۡ قُوَّةً وَّاٰثَارًا فِى
الۡاَرۡضِ فَاَخَذَهُمُ اللّٰهُ بِذُنُوۡبِهِمۡ‌ؕ وَمَا كَانَ لَهُمۡ مِّنَ اللّٰهِ
مِنۡ وَّاقٍ ﴿۲۱﴾ ذٰلِكَ بِاَنَّهُمۡ كَانَتۡ تَّاۡتِيۡهِمۡ رُسُلُهُمۡ بِالۡبَيِّنٰتِ
فَكَفَرُوۡا فَاَخَذَهُمُ اللّٰهُ‌ؕ اِنَّهٗ قَوِىٌّ شَدِيۡدُ الۡعِقَابِ ﴿۲۲﴾ وَلَقَدۡ
اَرۡسَلۡنَا مُوۡسٰى بِاٰيٰتِنَا وَسُلۡطٰنٍ مُّبِيۡنٍ ﴿۲۳﴾ لا اِلٰى فِرۡعَوۡنَ وَ
هَامٰنَ وَقَارُوۡنَ فَقَالُوۡا سٰحِرٌ كَذَّابٌ ﴿۲۴﴾ فَلَمَّا جَآءَهُمۡ
بِالۡحَـقِّ مِنۡ عِنۡدِنَا قَالُوا اقۡتُلُوۡۤا اَبۡنَآءَ الَّذِيۡنَ اٰمَنُوۡا مَعَهٗ
وَاسۡتَحۡيُوۡا نِسَآءَهُمۡ‌ؕ وَمَا كَيۡدُ الۡكٰفِرِيۡنَ اِلَّا فِىۡ ضَلٰلٍ ﴿۲۵﴾

17. "இன்றையத்தினம் ஒவ்வோர் ஆத்மாவும், அது சம்பாதித்தது கொண்டு கூலி கொடுக்கப்படும். இன்றையத் தினம் (எவ்வித) அநியாயமும் இல்லை; நிச்சயமாக, அல்லாஹ் (கேள்வி) கணக்குக் கேட்பதில் மிகத் தீவிரமானவன்" (என்றும் கூறப்படும்).

18. மேலும், (நபியே!) சமீபித்து வரும் (மறுமை) நாளைப் பற்றி நீர் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! அழுதவர்களாக, இதயங்கள் தொண்டைக்குழிகளை அடைந்துவிடும் சமயத்தில் (_அந்நாளில்) அநியாயக் காரர்களுக்கு(இரக்கப்படும்)நண்பனோ, (அல்லாஹ்விடம்) அங்கீகரிக்கப்படும் பரிந்துரை செய்பவனோ இருக்கமாட்டான்.

19. (மனிதர்களின்) கண்களின் மோசடியையும், நெஞ்சங்கள் மறைத்து வைத்திருப்பதையும் அவன் நன்கறிவான்.

20. மேலும், அல்லாஹ் உண்மையைக் கொண்டு (நீதமாகவே) தீர்ப்பளிப்பான்; அவனையன்றி, அவர்கள் அழைக்கிறார்களே அத்தகையோர்_( இவர்களுக்காக) எந்த ஒன்றையும்_அவர்கள் தீர்ப்புச் செய்யமாட்டார்கள்; நிச்சயமாக அல்லாஹ், அவனே (யாவையும்) செவியேற்கிறவன்; பார்க்கிறவன்.

21. (நபியே!) இவர்கள் பூமியில் சுற்றி(த் திரிந்து) இவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? (முன்னிருந்த) அவர்களோ, பலத்ாலும், பூமியில் விட்டுச்சென்ற (பூர்வ) அடையாளங்களாலும் இவர்களை விட மிகக் கடினமான வர்களாகவே இருந்தனர்; அப்போது, அவர்களுடைய பாவங்களின் காரணமாக அவர்களை அல்லாஹ் பிடித்துக் கொண்டான்; அல்லாஹ்வி(ன் பிடியி)லிருந்து அவர்களைக் காப்பவர் எவரும் இருக்கவில்லை.

22. அது(ஏனெனில்) நிச்சயமாக (அத்தாட்சிகளில்) தெளிவானவற்றுடன் அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் வந்துகொண்டிருந்தனர்; ஆனால், (அவர்களை) இவர்கள் நிராகரித்துவிட்டனர் என்ற காரணத்தினாலாகும். ஆகவே, அல்லாஹ் அவர்களைப் பிடித்துக்கொண்டான்; நிச்சயமாக, அவன் மிக்க பலமுடையவன்; (குற்றவாளிகளைத்) தண்டிப்பதில் மிகக் கடுமையானவன்.

23. மேலும், திட்டமாக நாம், மூஸாவை நம்முடைய அத்தாட்சிகளைக் கொண்டும், தெளிவான சான்றைக் கொண்டும் அனுப்பிவைத்தோம்.

24. ஃபிர்அவ்ன், ஹாமான், காரூன் ஆகியவர்களின்பால் (அவரை அனுப்பி வைத்தோம்) ; அப்பொழுது அவர்களோ (அவரைச்) சூனியக்காரர்; பெரும் பொய்யர் என்று கூறினார்கள்.

25. ஆகவே அவர், நம்மிடமிருந்து சத்தியத்தை அவர்களிடம் கொண்டு வந்தபோது, அவர்கள், (மூஸாவாகிய) "அவருடன் விசுவாசங் கொண்டிருக் கின்றார்களே, அவர்களுடைய ஆண்மக்களைக் கொன்றுவிடுங்கள்; இன்னும், அவர்களுடைய பெண்மக்களை உயிருடன் வாழ (விட்டு) விடுங்கள்" என்று கூறினார்கள். மேலும், நிராகரிப்போரின் சூழ்ச்சி வழிகேட்டிலேயே தவிர இல்லை.

وَقَالَ فِرْعَوْنُ ذَرُوْنِیْۤ اَقْتُلْ مُوْسٰی وَلْیَدْعُ رَبَّهٗ ۚ اِنِّیْۤ
اَخَافُ اَنْ یُّبَدِّلَ دِیْنَكُمْ اَوْ اَنْ یُّظْهِرَ فِی الْاَرْضِ
الْفَسَادَ ﴿۲۶﴾ وَقَالَ مُوْسٰۤی اِنِّیْ عُذْتُ بِرَبِّیْ وَرَبِّكُمْ
مِّنْ كُلِّ مُتَكَبِّرٍ لَّا یُؤْمِنُ بِیَوْمِ الْحِسَابِ ﴿۲۷﴾ وَقَالَ رَجُلٌ ع ۳ ۷ ۸
مُّؤْمِنٌ ۖۗ مِّنْ اٰلِ فِرْعَوْنَ یَكْتُمُ اِیْمَانَهٗۤ اَتَقْتُلُوْنَ رَجُلًا
اَنْ یَّقُوْلَ رَبِّیَ اللّٰهُ وَقَدْ جَآءَكُمْ بِالْبَیِّنٰتِ مِنْ رَّبِّكُمْ ؕ
وَاِنْ یَّكُ كَاذِبًا فَعَلَیْهِ كَذِبُهٗ ۚ وَاِنْ یَّكُ صَادِقًا یُّصِبْكُمْ
بَعْضُ الَّذِیْ یَعِدُكُمْ ؕ اِنَّ اللّٰهَ لَا یَهْدِیْ مَنْ هُوَ مُسْرِفٌ
كَذَّابٌ ﴿۲۸﴾ یٰقَوْمِ لَكُمُ الْمُلْكُ الْیَوْمَ ظٰهِرِیْنَ فِی الْاَرْضِ ؗ
فَمَنْ یَّنْصُرُنَا مِنْۢ بَاْسِ اللّٰهِ اِنْ جَآءَنَا ؕ قَالَ فِرْعَوْنُ
مَاۤ اُرِیْكُمْ اِلَّا مَاۤ اَرٰی وَمَاۤ اَهْدِیْكُمْ اِلَّا سَبِیْلَ الرَّشَادِ ﴿۲۹﴾
وَقَالَ الَّذِیْۤ اٰمَنَ یٰقَوْمِ اِنِّیْۤ اَخَافُ عَلَیْكُمْ مِّثْلَ
یَوْمِ الْاَحْزَابِ ﴿۳۰﴾ لا مِثْلَ دَاْبِ قَوْمِ نُوْحٍ وَّعَادٍ وَّثَمُوْدَ
وَالَّذِیْنَ مِنْۢ بَعْدِهِمْ ؕ وَمَا اللّٰهُ یُرِیْدُ ظُلْمًا لِّلْعِبَادِ ﴿۳۱﴾
وَیٰقَوْمِ اِنِّیْۤ اَخَافُ عَلَیْكُمْ یَوْمَ التَّنَادِ ﴿۳۲﴾ لا

26. ஃபிர்அவ்ன் (தன் ஜனங்களிடம்) "என்னை விட்டுவிடுங்கள்; மூஸாவை நான் கொலை செய்துவிடுவேன்; மேலும், அவர் (தன்னைக்காத்துக்கொள்ள) தன் இரட்சகனை அழைக்கட்டும்; அவர் உங்களுடைய மார்க்கத்தை மாற்றிவிடுவார்; அல்லது, பூமியில் குழப்பத்தை வெளிப்படுத்துவார் என்று நிச்சயமாக, நான் பயப்படுகிறேன்" என்றும் கூறினான்.

27. அதற்கு மூஸா (அவனிடம், "கேள்வி) கணக்கு(க் கேட்கப்படும்) நாளை நம்பிக்கை கொள்ளாத கர்வங்கொண்ட (தீயவர்களாகிய உங்கள்) ஒவ்வொருவரையும் விட்டு, என் இரட்சகனும் உங்கள் இரட்சகனுமாகிய அவனிடமே நிச்சயமாக நான் பாதுகாவல் தேடுகிறேன்" என்று கூறினார்.

28. மேலும், "ஃபிர்அவ்னுடைய குடும்பத்தினரில் தன் ஈமானை மறைத்து வைத்திருந்த விசுவாசியான ஒரு மனிதர், (அச்சமயம் அவர்களிடம்,) "ஒரு மனிதரை_அவர் அல்லாஹ்தான் என்னுடைய இரட்சகன் என்று கூறியதற்காக, நீங்கள் கொலை செய்துவிடுவீர்களா? அவரோ உங்கள் இரட்சகனிடமிருந்து தெளிவான அத்தாட்சிகளைத் திட்டமாக உங்களிடம் கொண்டு வந்திருக்கின்றார்; அவர் பொய்யராக இருந்தால், அவருடைய பொய் அவரின் மீதே(கேடாக) ஆகும்; (ஆனால், வேதனை வருமென்பதில்) அவர் உண்மையாளராகவும் இருந்து விட்டால், அவர் உங்களுக்கு வாக்களிப்பவற்றில் சில உங்களை வந்தடைந்துவிடும்; யார் வரம்பு மீறுகிறவரோ, பெரும் பொய்யரோ அவரை நிச்சயமாக அல்லாஹ், நேர் வழியில் செலுத்தமாட்டான்" என்று கூறினார்.

29. "என்னுடைய சமூகத்தாரே! இந்த பூமியில் (நீங்களே) மிகைத்தவர்களாக இருக்க இன்றையத்தினம் ஆட்சி உங்களிடம்தான் இருக்கின்றது. ஆகவே, அல்லாஹ்வுடைய வேதனையிலிருந்து _ அது நமக்கு வந்துவிட்டால், (அதனைத் தடுத்து) நமக்கு உதவி செய்பவன் யார்?" (என்றும் கூறினார்; அதற்கு) ஃபிர்அவ்ன் (தன் சமூகத்தாரிடம்,) "நான் (சரி என்று) கண்டதைத் தவிர (வேறொன்றையும்) நான் உங்களுக்கு அறிவிக்கவில்லை; நேரான வழியையே தவிர (மற்றெதனையும்) உங்களுக்குநான் காட்டவில்லை" என்று கூறினான்.

30. மேலும், விசுவாசங்கொண்டிருந்தாரே அவர்_"என்னுடைய சமூகத்தாரே! (அழிந்து போன மற்ற) கூட்டத்தினர்களின் (கெட்ட) நாள் போன்றது உங்கள்மீதும் (வந்துவிடுமென்று) நிச்சயமாக நான் பயப்படுகின்றேன்" என்று கூறினார்.

31. "(இதற்கு முன்னிருந்த) நூஹ்வுடைய சமூகத்தார், ஆது, ஸமூது, இன்னும் அவர்களுக்குப் பின் வந்தவர்கள் நிலைமை போன்ற (ஆபத்)து (உங்களுக்கும் வந்துவிடுமென்று நான் பயப்படுகிறேன்); மேலும், அல்லாஹ் தன் அடியார்களுக்கு அநியாயத்தை நாடமாட்டான் (என்று கூறினார்).

32. மேலும், "என்னுடைய சமூகத்தாரே! அழைக்கப்படும் (மறுமை) நாளைப்பற்றியும் உங்கள் மீது நிச்சயமாக நான் பயப்படுகிறேன்(என்றும்),

يَوْمَ تُوَلُّوْنَ مُدْبِرِيْنَ ۚ مَا لَكُمْ مِّنَ اللّٰهِ مِنْ عَاصِمٍ ۚ وَمَنْ يُّضْلِلِ
اللّٰهُ فَمَا لَهٗ مِنْ هَادٍ ﴿۳۳﴾ وَلَقَدْ جَآءَكُمْ يُوْسُفُ مِنْ قَبْلُ
بِالْبَيِّنٰتِ فَمَا زِلْتُمْ فِيْ شَكٍّ مِّمَّا جَآءَكُمْ بِهٖ ۭ حَتّٰٓى اِذَا هَلَكَ قُلْتُمْ
لَنْ يَّبْعَثَ اللّٰهُ مِنْۢ بَعْدِهٖ رَسُوْلًا ۭ كَذٰلِكَ يُضِلُّ اللّٰهُ مَنْ هُوَ
مُسْرِفٌ مُّرْتَابُ ۚ ﴿۳۴﴾ الَّذِيْنَ يُجَادِلُوْنَ فِيْٓ اٰيٰتِ اللّٰهِ بِغَيْرِ سُلْطٰنٍ
اَتٰىهُمْ ۭ كَبُرَ مَقْتًا عِنْدَ اللّٰهِ وَعِنْدَ الَّذِيْنَ اٰمَنُوْا ۭ كَذٰلِكَ يَطْبَعُ
اللّٰهُ عَلٰى كُلِّ قَلْبِ مُتَكَبِّرٍ جَبَّارٍ ﴿۳۵﴾ وَقَالَ فِرْعَوْنُ يٰهَامٰنُ ابْنِ
لِيْ صَرْحًا لَّعَلِّيْٓ اَبْلُغُ الْاَسْبَابَ ﴿۳۶﴾ اَسْبَابَ السَّمٰوٰتِ فَاَطَّلِعَ
اِلٰٓى اِلٰهِ مُوْسٰى وَاِنِّيْ لَاَظُنُّهٗ كَاذِبًا ۭ وَكَذٰلِكَ زُيِّنَ لِفِرْعَوْنَ سُوْۗءُ
ع ۴ ۹ عَمَلِهٖ وَصُدَّ عَنِ السَّبِيْلِ ۭ وَمَا كَيْدُ فِرْعَوْنَ اِلَّا فِيْ تَبَابٍ ﴿۳۷﴾ ع
وَقَالَ الَّذِيْٓ اٰمَنَ يٰقَوْمِ اتَّبِعُوْنِ اَهْدِكُمْ سَبِيْلَ الرَّشَادِ ﴿۳۸﴾ ۚ
يٰقَوْمِ اِنَّمَا هٰذِهِ الْحَيٰوةُ الدُّنْيَا مَتَاعٌ ۡ وَّاِنَّ الْاٰخِرَةَ هِيَ دَارُ
الْقَرَارِ ﴿۳۹﴾ مَنْ عَمِلَ سَيِّئَةً فَلَا يُجْزٰٓى اِلَّا مِثْلَهَا ۚ وَمَنْ
عَمِلَ صَالِحًا مِّنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى وَهُوَ مُؤْمِنٌ فَاُولٰۗىِٕكَ
يَدْخُلُوْنَ الْجَنَّةَ يُرْزَقُوْنَ فِيْهَا بِغَيْرِ حِسَابٍ ﴿۴۰﴾

33. "நீங்கள் (தண்டனைக்கு பயந்து) புறங்காட்டியவர்களாக ஓடும் நாளை (பயப்படுகிறேன்; அந்நாளில்) அல்லாஹ்விடமிருந்து காப்பாற்றக்கூடியவர் உங்களுக்கு எவருமில்லை; அல்லாஹ் எவரைத் தவறான வழியில் விட்டு விடுகின்றானோ, அவரை நேர் வழியில் செலுத்தக்கூடியவனும் இல்லை.

34. "(மூஸாவுக்கு) முன்னர், யூஸுஃபும் திட்டமாக தெளிவான அத்தாட்சிகளை உங்களிடம் கொண்டுவந்தார்; பின்னர், அவர் எதை உங்களிடம் கொண்டுவந்தாரோ அதைப் பற்றிய சந்தேகத்திலேயே (தொடர்ந்து) நீங்கள் இருந்தீர்கள்; இறுதியாக அவர் இறந்தபோது, அவருக்குப் பின் எந்தத் தூதரையும் அல்லாஹ் அனுப்பவே மாட்டான்" என்று கூறினீர்கள். (உங்களைப் போல) எவர் (செயலில்) வரம்பு மீறி (உள்ளத்தில்) சந்தேகிக்கிறாரோ அவரை, இவ்வாறே அல்லாஹ் தவறான வழியில் விட்டுவிடுகிறான்(என்றும் கூறினார்).

35. அவர்கள் எத்தகையோரென்றால் (அல்லாஹ்விடமிருந்து) தங்களுக்கு வந்த யாதோர் ஆதாரமின்றி, அல்லாஹ்வுடைய வசனங்களில் தர்க்கம் செய்கின்றனர்; அ(வ்வாறு தர்க்கம் செய்வ)து அல்லாஹ்விடத்திலும், விசுவாசங் கொண்டவர்களிடத்திலும் கோபத்தால் பெரிதாகிவிட்டது; இவ்வாறே பெருமைகொண்ட, வம்பு செய்கின்ற ஒவ்வோர் இதயத்தின் மீது(ம்) அல்லாஹ் முத்திரையிட்டுவிடுகிறான்"(என்றும் அவர் கூறினார்).

36. (அதற்கு) ஃபிர்அவ்ன், "ஹாமானே! (சகலருக்கும் தெரியும்படியான) உயர்ந்த (ஒரு) மாளிகையை எனக்காக கட்டும்;(அதன் மூலம் உயரச் செல்லும்) வழிகளை நான் அறியலாம்" என்றுகூறினான்.

37. வானங்களை அடையும் வழிகளை (நான் அறியலாம், அவற்றின் மூலம் சென்று) மூஸாவுடைய வணக்கத்திற்குரியவனை நான் பார்க்கவேண்டும்; அவர் பொய் சொல்கிறார் என்றே நிச்சயமாக நான் எண்ணுகிறேன்" (என்றும் ஃபிர்அவ்ன் கூறினான்). இவ்வாறே ஃபிர்அவ்னுக்கு, அவனுடைய செயலின் தீமை அலங்கரித்துக் காட்டப்பட்டு விட்டது;(நேரான)வழியிலிருந்து அவன் தடுக்கப்பட்டும்விட்டான்; ஃபிர்அவ்னுடைய சூழ்ச்சி அழிவிலேயே தவிர இல்லை.

38. மேலும், அவர்களில் விசுவாசங்கொண்டிருந்தாரே அவர்_ "என்னுடைய சமூகத்தாரே! என்னை நீங்கள் பின்பற்றுங்கள், நான் உங்களுக்கு நேரான வழியைக்காண்பிக்கிறேன்"என்று கூறினார்.

39. "என்னுடைய சமூகத்தாரே! நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கையெல்லாம் (அழிந்து விடும்) இன்பந்தான்; நிச்சயமாக மறுமையோ_அதுதான் நிலையான (இன்பந்தரும்) வீடாகும்.

40. எவர் ஒரு தீமையைச் செய்கிறாரோ, அவர் அதைப்போன்றதையே தவிர (அதற்கதிகமாய்) கூலியாகக் கொடுக்கப்படமாட்டார்; இன்னும், எவர் ஆணாயினும், அல்லது பெண்ணாயினும் அவர் விசுவாசங்கொண்டவராக இருக்கும் நிலையில், நல்ல செயலைச் செய்தாரோ அ(த்தகைய)வர்கள் சுவனபதியில் நுழைந்துவிடுவார்கள்;அதில் கணக்கின்றியே (அனைத்து சுவனத்து அருட்கொடைகளிலிருந்தும்) அவர்கள் கொடுக்கப்படுவார்கள்.

الثمن

وَيٰقَوْمِ مَا لِيْٓ اَدْعُوْكُمْ اِلَى النَّجٰوةِ وَتَدْعُوْنَنِيْٓ اِلَى النَّارِ ۭ ۴۱
تَدْعُوْنَنِيْ لِاَكْفُرَ بِاللّٰهِ وَاُشْرِكَ بِهٖ مَا لَيْسَ لِيْ بِهٖ عِلْمٌ ز
وَّاَنَا اَدْعُوْكُمْ اِلَى الْعَزِيْزِ الْغَفَّارِ ۴۲ لَا جَرَمَ اَنَّمَا تَدْعُوْنَنِيْٓ
اِلَيْهِ لَيْسَ لَهٗ دَعْوَةٌ فِي الدُّنْيَا وَلَا فِي الْاٰخِرَةِ وَاَنَّ مَرَدَّنَآ
اِلَى اللّٰهِ وَاَنَّ الْمُسْرِفِيْنَ هُمْ اَصْحٰبُ النَّارِ ۴۳ فَسَتَذْكُرُوْنَ
مَآ اَقُوْلُ لَكُمْ ۭ وَاُفَوِّضُ اَمْرِيْٓ اِلَى اللّٰهِ ۭ اِنَّ اللّٰهَ بَصِيْرٌۢ
بِالْعِبَادِ ۴۴ فَوَقٰىهُ اللّٰهُ سَيِّاٰتِ مَا مَكَرُوْا وَحَاقَ
بِاٰلِ فِرْعَوْنَ سُوْۗءُ الْعَذَابِ ۴۵ اَلنَّارُ يُعْرَضُوْنَ عَلَيْهَا
غُدُوًّا وَّعَشِيًّا ۚ وَيَوْمَ تَقُوْمُ السَّاعَةُ قف اَدْخِلُوْٓا اٰلَ
فِرْعَوْنَ اَشَدَّ الْعَذَابِ ۴۶ وَاِذْ يَتَحَاۗجُّوْنَ فِي النَّارِ
فَيَقُوْلُ الضُّعَفٰۗؤُا لِلَّذِيْنَ اسْتَكْبَرُوْٓا اِنَّا كُنَّا لَكُمْ
تَبَعًا فَهَلْ اَنْتُمْ مُّغْنُوْنَ عَنَّا نَصِيْبًا مِّنَ النَّارِ ۴۷
قَالَ الَّذِيْنَ اسْتَكْبَرُوْٓا اِنَّا كُلٌّ فِيْهَآ ۙ اِنَّ اللّٰهَ قَدْ حَكَمَ
بَيْنَ الْعِبَادِ ۴۸ وَقَالَ الَّذِيْنَ فِي النَّارِ لِخَزَنَةِ جَهَنَّمَ
ادْعُوْا رَبَّكُمْ يُخَفِّفْ عَنَّا يَوْمًا مِّنَ الْعَذَابِ ۴۹

41. இன்னும், "என்னுடைய சமூகத்தாரே! எனக்கென்ன? நானோ, உங்களை ஈடேற்றத்தின் பால் அழைக்கின்றேன்; நீங்களோ என்னை நரகத்தின் பக்கம் அழைக்கின்றீர்கள்;

42. "நான் அல்லாஹ்வை நிராகரிக்கவும், எதைப்பற்றி எனக்கு அறிவில்லையோ அதை அவனுக்கு நான் இணையாக்கவும் என்னை நீங்கள் அழைக்கின்றீர்கள்; நானோ, (யாவரையும்)மிகைத்தவன், மிக்க மன்னிப்பவனின் பக்கம் உங்களை அழைக்கிறேன்.

43. "என்னை நீங்கள் எதன்பக்கம் அழைக்கின்றீர்களோ, அது இம்மையிலும், மறுமையிலும் (நாயனென்று) அழைப்பதற்கு நிச்சயமாக, ஒரு சிறிதும் தகுதியற்றது. நம்முடைய திரும்புமிடம் அல்லாஹ்வின்பக்கமேயாகும்; இன்னும் நிச்சயமாக, வரம்பு மீறுவோர் நரகவாசிகள்தாம் என்பதில் சந்தேகமில்லை.

44. "நான் உங்களுக்குக் கூறுவதை நிச்சயமாக நீங்கள் நினைவு கூர்வீர்கள்; மேலும், என்னுடைய காரியத்தை அல்லாஹ்விடம் நான் ஒப்படைக்கின்றேன்; நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களைப் பார்க்கிறவன்" (என்றும் கூறினார்).

45. ஆகவே, அவர்கள் சூழ்ச்சி செய்ததின் தீமைகளை விட்டும் (ஈமானை மறைத்துக்கொண்டிருந்த) அவரை அல்லாஹ் பாதுகாத்துக்கொண்டான்; மேலும் ஃபிர்அவ்னைச் சார்ந்தோரை தீயவேதனை சூழ்ந்து கொண்டது.

46. அந்(நரக)நெருப்பு_ அதன் மீது காலையிலும், மாலையிலும் அவர்கள் எடுத்துக் காட்டப்படுகிறார்கள்; மேலும் மறுமைநாள் நிலைபெற்று விடும் நாளில், "ஃபிர்அவ்னைச் சார்ந்தோரைக் கடினமான வேதனையில் புகுத்துங்கள்" (என மலக்குகளுக்குக்கூறப்படும்).

47. மேலும்,(நரகவாசிகளாகிய) அவர்கள் நரகத்தில் தர்க்கம் செய்துகொள்ளும் சமயத்தில், அப்போது (அவர்களிலுள்ள) பலவீனமானவர்கள், பெருமையடித்துக் கொண்டிருந்தவர்களிடம், "நிச்சயமாக நாங்கள் உங்களையே பின்பற்றுவோராக இருந்தோம்; ஆகவே, (இன்று) நரகத்தி(ன் வேதனையி)லிருந்து ஒரு பகுதியையேனும் எங்களை விட்டும் நீங்கள் தடுத்துவிடக் கூடியவர்களா?" என்று கேட்பர்.

48. (அதற்கு அவர்களுடைய தலைவர்களான) பெருமையடித்துக் கொண்டிருந்தோர் "நிச்சயமாக நாம் ஒவ்வொருவரும் இதில்தான் இருக்கிறோம்; நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய அடியார்களுக்கிடையே திட்டமாக தீர்ப்பளித்துவிட்டான்" என்று கூறுவர்.

49. இன்னும், நரகத்திலுள்ளவர்கள், நரகக்காவலர்களிடம், "உங்கள் இரட்சகனிடம் (எங்களுக்காக) நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள்; வேதனையை ஒரு நாளேனும் எங்களுக்கு அவன் இலேசாக்குவான்" என்று கூறுவார்கள்.

قَالُوْٓا اَوَلَمْ تَكُ تَاْتِيْكُمْ رُسُلُكُمْ بِالْبَيِّنٰتِ ؕ قَالُوْا بَلٰى ؕ
قَالُوْا فَادْعُوْا ۚ وَمَا دُعٰٓؤُا الْكٰفِرِيْنَ اِلَّا فِيْ ضَلٰلٍ ﴿۵۰﴾ ع ۵ ۱۰
اِنَّا لَنَنْصُرُ رُسُلَنَا وَالَّذِيْنَ اٰمَنُوْا فِي الْحَيٰوةِ الدُّنْيَا
وَيَوْمَ يَقُوْمُ الْاَشْهَادُ ﴿۵۱﴾ لا يَوْمَ لَا يَنْفَعُ الظّٰلِمِيْنَ
مَعْذِرَتُهُمْ وَلَهُمُ اللَّعْنَةُ وَلَهُمْ سُوْٓءُ الدَّارِ ﴿۵۲﴾ وَلَقَدْ
اٰتَيْنَا مُوْسَى الْهُدٰى وَاَوْرَثْنَا بَنِيْٓ اِسْرَآءِيْلَ الْكِتٰبَ ﴿۵۳﴾ لا
هُدًى وَّذِكْرٰى لِاُولِي الْاَلْبَابِ ﴿۵۴﴾ فَاصْبِرْ اِنَّ وَعْدَ
اللّٰهِ حَقٌّ وَّاسْتَغْفِرْ لِذَنْۢبِكَ وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ
بِالْعَشِيِّ وَالْاِبْكَارِ ﴿۵۵﴾ اِنَّ الَّذِيْنَ يُجَادِلُوْنَ فِيْٓ اٰيٰتِ
اللّٰهِ بِغَيْرِ سُلْطٰنٍ اَتٰىهُمْ ۙ لا اِنْ فِيْ صُدُوْرِهِمْ اِلَّا كِبْرٌ
مَّا هُمْ بِبَالِغِيْهِ ۚ فَاسْتَعِذْ بِاللّٰهِ ؕ اِنَّهٗ هُوَ السَّمِيْعُ
الْبَصِيْرُ ﴿۵۶﴾ لَخَلْقُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ اَكْبَرُ مِنْ خَلْقِ
النَّاسِ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿۵۷﴾ وَمَا
يَسْتَوِي الْاَعْمٰى وَالْبَصِيْرُ ۙ لا وَالَّذِيْنَ اٰمَنُوْا وَ
عَمِلُوا الصّٰلِحٰتِ وَلَا الْمُسِيْٓءُ ؕ قَلِيْلًا مَّا تَتَذَكَّرُوْنَ ﴿۵۸﴾

50. அ(தற்க)வர்கள் (இவர்களிடம் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட) "உங்களுடைய தூதர்கள் தெளிவான அத்தாட்சிகளுடன் உங்களிடம் வந்து கொண்டிருக்கவில்லையா?" என்று கேட்பார்கள்; அ(தற்க)வர்கள், "ஆம்!" என்று கூறுவார்கள்;அ(தற்க)வர்கள், "அவ்வாறாயின் (நாங்கள் அல்லாஹ்விடம் கேட்க மாட்டோம்) நீங்களே பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்" என்று கூறிவிடுவார்கள்; மேலும், நிராகரிப்போரின் பிரார்த்தனை வழிகேட்டிலேயே தவிர இல்லை.

51. நிச்சயமாக நாம், நம்முடைய தூதர்களுக்கும், விசுவாசங்கொண்டோருக்கும் இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் நிலைபெறும் (மறுமை) நாளிலும் திண்ணமாக உதவி செய்வோம்.

52. (அந் நாள்) அநியாயக்காரர்களுக்கு, அவர்கள் புகல் (கூறுதல் ஒன்றுமே) பயனளிக்காத நாள் ; அவர்களுக்கு (அல்லாஹ்வின்) சாபமும் உண்டு; அவர்களுக்கு(வேதனையால் மறுமை) வீட்டின் கெடுதியுமுண்டு.

53. மேலும், திட்டமாக நாம் மூஸாவுக்கு ( தவ்ராத் வேதமாகிய) நேர் வழியைக் கொடுத்தோம்; இஸ்ராயீலின் மக்களை அவ்வேதத்திற்கு வாரிசுகளாகவும் ஆக்கினோம்.

54. (அது)நேர்வழியாகவும் அறிவுடையோருக்கு நல்லுபதேசமாகவும் (இருந்தது).

55. எனவே, (நபியே!) நீர்(கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு) பொறுமையாக இருப்பீராக! நிச்சயமாக, அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானதாகும்; மேலும், நீர் உம்முடைய பாவத்திற்காக மன்னிப்புக்கோருவீராக! மேலும், மாலையிலும், காலையிலும் உமதிரட்சகனின் புகழைக்கொண்டு துதி செய்து கொண்டிருப்பீராக!

56. நிச்சயமாக அல்லாஹ்வுடைய வசனங்களில், தங்களுக்கு வந்த எவ்வித சான்றுமில்லாமல் தர்க்கம் செய்கின்றார்களே அத்தகையவர்கள் _ அவர்களுடைய இதயங்களில் (வெறும்) பெருமையல்லாது (வேறு) இல்லை; அதை அவர்கள் அடையக்கூடியவர்களல்லர்; ஆகவே, நீர் அல்லாஹ்வைக்கொண்டு பாதுகாவல் தேடுவீராக ! நிச்சயமாக, அவனே (யாவற்றையும்)செவியேற்கிறவன், பார்க்கிறவன்.

57. திட்டமாக வானங்களையும், பூமியையும் படைப்பது மனிதர்களைப் படைப்பதைவிட மிகப்பெரியதாகும். எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் இதனை அறியமாட்டார்கள்.

58. குருடரும், பார்வையுடையவரும் சமமாக மாட்டார்கள்; (அவ்வாறே,) விசுவாசங் கொண்டு நற்கருமங்கள் செய்தார்களே அவர்களும், தீயவரும் ( சமமாக மாட்டார்கள்). வெகு சொற்பமாகவே (இதனைக்கொண்டு) நீங்கள் நல்லுணர்ச்சி பெறுகிறீர்கள்.

اِنَّ السَّاعَةَ لَاٰتِيَةٌ لَّا رَيْبَ فِيْهَا وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ
لَا يُؤْمِنُوْنَ ﴿٥٩﴾ وَقَالَ رَبُّكُمُ ادْعُوْنِيْٓ اَسْتَجِبْ لَكُمْ ؕ
اِنَّ الَّذِيْنَ يَسْتَكْبِرُوْنَ عَنْ عِبَادَتِيْ سَيَدْخُلُوْنَ جَهَنَّمَ
دٰخِرِيْنَ ﴿٦٠﴾ اَللّٰهُ الَّذِيْ جَعَلَ لَكُمُ الَّيْلَ لِتَسْكُنُوْا فِيْهِ ع ٦
وَالنَّهَارَ مُبْصِرًا ؕ اِنَّ اللّٰهَ لَذُوْ فَضْلٍ عَلَى النَّاسِ وَ
لٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَشْكُرُوْنَ ﴿٦١﴾ ذٰلِكُمُ اللّٰهُ رَبُّكُمْ خَالِقُ
كُلِّ شَيْءٍ ۘ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۫ فَاَنّٰى تُؤْفَكُوْنَ ﴿٦٢﴾ كَذٰلِكَ
يُؤْفَكُ الَّذِيْنَ كَانُوْا بِاٰيٰتِ اللّٰهِ يَجْحَدُوْنَ ﴿٦٣﴾ اَللّٰهُ
الَّذِيْ جَعَلَ لَكُمُ الْاَرْضَ قَرَارًا وَّالسَّمَآءَ بِنَآءً وَّصَوَّرَكُمْ
فَاَحْسَنَ صُوَرَكُمْ وَرَزَقَكُمْ مِّنَ الطَّيِّبٰتِ ؕ ذٰلِكُمُ
اللّٰهُ رَبُّكُمْ ۚۖ فَتَبٰرَكَ اللّٰهُ رَبُّ الْعٰلَمِيْنَ ﴿٦٤﴾ هُوَ
الْحَيُّ لَآ اِلٰهَ اِلَّا هُوَ فَادْعُوْهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ؕ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٦٥﴾ قُلْ اِنِّيْ نُهِيْتُ اَنْ اَعْبُدَ
الَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ لَمَّا جَآءَنِيَ الْبَيِّنٰتُ
مِنْ رَّبِّيْ ۫ وَاُمِرْتُ اَنْ اُسْلِمَ لِرَبِّ الْعٰلَمِيْنَ ﴿٦٦﴾

59. நிச்சயமாக மறுமைநாள் வரக்கூடியதே; அதில் சந்தேகமே இல்லை; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) நம்பமாட்டார்கள்.

60. இன்னும், உங்களுடைய இரட்சகன் கூறுகிறான்: "நீங்கள் என்னையே அழை(த்துப் பிரார்த்தி)யுங்கள்; நான் உங்களு(டைய பிரார்த் தனை)க்கு பதிலளிப்பேன்; நிச்சயமாக, என்னை வணங்குவதைவிட்டும் பெருமை அடிக்கிறார்களே, அத்தகையோர் – அவர்கள் இழிவடைந்தவர்களாய் நரகம் புகுவார்கள்".

61. அல்லாஹ் – அவன் எத்தகையவனென்றால், உங்களுக்காக இரவை – அதில் நீங்கள் ஓய்வு பெறுவதற்காகவும், பகலைப் பார்ப்பதற்காகவும் அவன் அமைத்தான்; நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது பேரருள் உடையவன்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் நன்றி செலுத்தமாட்டார்கள்.

62. அவன்தான் அல்லாஹ் – உங்களுடைய இரட்சகன்; ஒவ்வொரு பொருளையும் படைக்கிறவன்; அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை; ஆகவே (அவனைப் புறக்கணித்து விட்டு) நீங்கள் எங்கே திருப்பப்படுகிறீர்கள்?

63. அல்லாஹ்வுடைய வசனங்களை நிராகரித்துக்கொண்டிருந்தார்களே, அவர்களும் இவ்வாறே திருப்பப்படுகிறார்கள்.

64. அல்லாஹ் – அவன் எத்தகையவனென்றால், உங்களுக்காக பூமியைத் தங்குமிடமாகவும், வானத்தை முகடாகவும் அவன் அமைத்தான்; மேலும், உங்க(ள் தோற்றங்க)ளை உருவகப்படுத்தினான்; பின்னர், உங்களின் தோற்றங்களை அவன் அழகாக்கினான்; இன்னும், (பரிசுத்தமான) நல்லவைகளிலிருந்து உங்களுக்கு அவன் உணவும் அளித்தான்; (இத்தகுதிகளுக்குரியவனான) அவன் தான் உங்களுடைய இரட்சகனாகிய அல்லாஹ்; ஆகவே, அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் மிக்க பாக்கியமிக்கவன்.

65. அவனே உயிரோடிருப்பவன்; அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை; எனவே, நீங்கள் வணக்கத்தை அவனுக்கே தூய்மையாக்கியவர்களாக அவனை பிரார்த்தி(த்து அழை)யுங்கள். அனைத்துப் புகழும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியவையாகும்.

66. (நபியே!) நீர் கூறுவீராக: "என் இரட்சகனிடமிருந்து தெளிவான அத்தாட்சிகள் எனக்கு வந்தபோது, அல்லாஹ்வையன்றி நீங்கள் (தெய்வங்களாக) அழைப்பவைகளை நான் வணங்குவதை விட்டும் நிச்சயமாக நான் தடுக்கப்பட்டு விட்டேன். அன்றியும், அகிலத்தாரின் இரட்சகனுக்கே நான் முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்குமாறு நான் கட்டளையிடப்பட்டு விட்டேன்."

هُوَ الَّذِیْ خَلَقَكُمْ مِّنْ تُرَابٍ ثُمَّ مِنْ نُّطْفَةٍ ثُمَّ مِنْ عَلَقَةٍ
ثُمَّ یُخْرِجُكُمْ طِفْلًا ثُمَّ لِتَبْلُغُوْۤا اَشُدَّكُمْ ثُمَّ لِتَكُوْنُوْا شُیُوْخًا ۚ
وَ مِنْكُمْ مَّنْ یُّتَوَفّٰى مِنْ قَبْلُ وَ لِتَبْلُغُوْۤا اَجَلًا مُّسَمًّى وَّ لَعَلَّكُمْ
تَعْقِلُوْنَ ﴿۶۷﴾ هُوَ الَّذِیْ یُحْیٖ وَ یُمِیْتُ ۚ فَاِذَا قَضٰۤى اَمْرًا فَاِنَّمَا
یَقُوْلُ لَهٗ كُنْ فَیَكُوْنُ ﴿۶۸﴾ ع اَلَمْ تَرَ اِلَى الَّذِیْنَ یُجَادِلُوْنَ فِیْۤ ع ۸ ۱۲
اٰیٰتِ اللّٰهِ ؕ اَنّٰى یُصْرَفُوْنَ ﴿۶۹﴾ ۛ الَّذِیْنَ كَذَّبُوْا بِالْكِتٰبِ وَ بِمَاۤ
اَرْسَلْنَا بِهٖ رُسُلَنَا ۛ فَسَوْفَ یَعْلَمُوْنَ ﴿۷۰﴾ لا اِذِ الْاَغْلٰلُ فِیْۤ معانقة ۱۳ عند المتاخرين ۱۲
اَعْنَاقِهِمْ وَ السَّلٰسِلُ ؕ یُسْحَبُوْنَ ﴿۷۱﴾ لا فِی الْحَمِیْمِ ۙ۬ ثُمَّ فِی
النَّارِ یُسْجَرُوْنَ ﴿۷۲﴾ ج ثُمَّ قِیْلَ لَهُمْ اَیْنَ مَا كُنْتُمْ تُشْرِكُوْنَ ﴿۷۳﴾ لا
مِنْ دُوْنِ اللّٰهِ ؕ قَالُوْا ضَلُّوْا عَنَّا بَلْ لَّمْ نَكُنْ نَّدْعُوْا مِنْ
قَبْلُ شَیْـًٔا ؕ كَذٰلِكَ یُضِلُّ اللّٰهُ الْكٰفِرِیْنَ ﴿۷۴﴾ ذٰلِكُمْ بِمَا كُنْتُمْ
تَفْرَحُوْنَ فِی الْاَرْضِ بِغَیْرِ الْحَقِّ وَ بِمَا كُنْتُمْ تَمْرَحُوْنَ ﴿۷۵﴾ ج
اُدْخُلُوْۤا اَبْوَابَ جَهَنَّمَ خٰلِدِیْنَ فِیْهَا ۚ فَبِئْسَ مَثْوَى
الْمُتَكَبِّرِیْنَ ﴿۷۶﴾ فَاصْبِرْ اِنَّ وَعْدَ اللّٰهِ حَقٌّ ۚ فَاِمَّا نُرِیَنَّكَ
بَعْضَ الَّذِیْ نَعِدُهُمْ اَوْ نَتَوَفَّیَنَّكَ فَاِلَیْنَا یُرْجَعُوْنَ ﴿۷۷﴾

67. அவன் எத்தகையவனென்றால், உங்களை (ஆரம்பத்தில்)மண்ணிலிருந்து படைத்தான்; பின்னர்,இந்திரியத் துளியிலிருந்தும்,பின்னர்,இரத்தக் கட்டியிலிருந்தும்,(உருவாக்கி) பின்னர் உங்களைக் குழந்தையாக வெளியாக்கு கிறான்; பின்னர் (படிப்படியாக) நீங்கள் உங்கள் வாலிபத்தை அடைவதற்காகவும், பின்னர் நீங்கள் முதியோராக ஆவதற்காகவும், (உங்களைப் படைத்தான். இதற்கு) முன்னரே மரணிப்பவரும் உங்களில் இருக்கிறார்கள்; இன்னும், குறிப்பிடப்பட்ட தவணையை நீங்கள் அடைவதற்காகவும், (இதிலிருந்து அவனின் சக்தியை)நீங்கள் விளங்கிக் கொள்வதற்காகவும்(இவ்வாறு செய்தான்).

68. அவன் எத்தகையவனென்றால், அவனே உயிரளிக்கின்றான்; இன்னும், மரணிக்கச் செய்கின்றான்; எனவே, ஏதேனும்ஒரு காரியத்தை(ச்செய்ய)அவன் தீர்மானித்தால்,அப்போது அதற்கு அவன் கூறுவதெல்லாம் ஆகுக! என்பதைத்தான்.(அப்போது) உடனே அது ஆகிவிடும்.

69. (நபியே!)அல்லாஹ்வின் (அத்தாட்சிகளாகிய அவனது)வசனங்களில்தர்க்கம் செய்கின்றார்களே அத்தகையோர்பால்_அவர்கள் எவ்வாறு (சத்தியத்திலிருந்து) திருப்பப் படுகின்றனர் என்று நீர் பார்க்கவில்லையா?

70. அவர்கள் எத்தகையோரென்றால்,( நம்முடைய) இவ் வேதத்தையும், இன்னும்,எ(வ்வேதத்) தைக் கொண்டு நமது தூதர்களை நாம் அனுப்பி வைத்தோமோ, அதையும் பொய்யாக்கினார்கள்; ஆகவே (விரைவில் அதன் பலனை) அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

71. அவர்களின் கழுத்துக்களில் வளையங்களாலும், சங்கிலிகளாலும் (கட்டப்பட்டு மலக்குகளால்) அவர்கள் இழுத்து வரப்படும் போது_(அதனை அறிவார்கள்).

72. கொதிக்கும் நீரில், பின்னர், நரகத்தில்(அவர்களைக்கொண்டுவந்து தீ) மூட்டப்படுவார்கள்.

73. பின்னர், அவர்களிடம் நீங்கள் (அல்லாஹ்வுக்கு)இணை வைத்துக் கொண்டிருந்தவை எங்கே? என்று கேட்கப்படும்.

74. அல்லாஹ்வையன்றி( நீங்கள் இணை வைத்துக் கொண்டிருந்தவை எங்கே? எனக் கேட்கப்படும்; அதற்கு) "எங்களை விட்டும் அவை மறைந்து விட்டன; எனினும் இதற்கு முன்னர் நாங்கள்( அல்லாஹ் அல்லாத)யாதொன்றையும் (ஆண்டவனென)அழைத்துக் கொண்டிருக்கவில்லையே" என்று(பொய்) கூறுவார்கள்;இவ்வாறு நிராகரிப்போரை அல்லாஹ் வழி கெடச் செய்கிறான்.

75. (பின்னர் அவர்களிடம்,) "அ(வ்வாறு வழி கெடுத்த)து நீங்கள் பூமியில் நியாயமின்றி (அளவு கடந்து)மகிழ்ச்சியடைந்தவர்களாக இருந்ததன் காரணமாகவும், இறு மாப்புக் கொண்டவர்களாக இருந்ததன் காரணத்தினா லுமாகும்"(என்றும்),

76. "நரகத்தின் வாயல்களில் நுழையுங்கள்; அ(ந்நரகத்)தில் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்களாக நீங்கள் இருக்கும் நிலையில்," (என்றும் கூறப்படும்) . எனவே, பெருமையடித்துக்கொண்டிருந்தவர்களின் ஒதுங்குமிடம் மிகக் கெட்டது.

77. ஆகவே, (நபியே!)நீர் பொறுமையுடன் (உறுதியாக) இருப்பீராக! நிச்சயமாக, அல்லாஹ்வுடைய வாக்கு உண்மையானதாகும்; ஆகவே, அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட சிலவற்றை நாம் உமக்குக் காண்பித்தாலும், அல்லது (அதற்கு முன்) நாம் உம்மை மரணிக்கச் செய்தாலும் (இரு நிலையிலும்) அவர்கள் பின்னர்,நம்மிடமே திருப்பிக் கொண்டுவரப்படுவார்கள்.

وَلَقَدْ اَرْسَلْنَا رُسُلًا مِّنْ قَبْلِكَ مِنْهُمْ مَّنْ قَصَصْنَا عَلَيْكَ
وَمِنْهُمْ مَّنْ لَّمْ نَقْصُصْ عَلَيْكَ ؕ وَمَا كَانَ لِرَسُوْلٍ اَنْ يَّاْتِيَ
بِاٰيَةٍ اِلَّا بِاِذْنِ اللّٰهِ ۚ فَاِذَا جَآءَ اَمْرُ اللّٰهِ قُضِيَ بِالْحَقِّ وَخَسِرَ
ع ۸ ۱۴ هُنَالِكَ الْمُبْطِلُوْنَ ۷۸ ع اَللّٰهُ الَّذِيْ جَعَلَ لَكُمُ الْاَنْعَامَ
لِتَرْكَبُوْا مِنْهَا وَمِنْهَا تَاْكُلُوْنَ ۷۹ وَلَكُمْ فِيْهَا مَنَافِعُ وَ
لِتَبْلُغُوْا عَلَيْهَا حَاجَةً فِيْ صُدُوْرِكُمْ وَعَلَيْهَا وَعَلَى الْفُلْكِ
تُحْمَلُوْنَ ۸۰ وَيُرِيْكُمْ اٰيٰتِهٖ ۖ فَاَيَّ اٰيٰتِ اللّٰهِ تُنْكِرُوْنَ ۸۱
اَفَلَمْ يَسِيْرُوْا فِي الْاَرْضِ فَيَنْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ
الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ؕ كَانُوْٓا اَكْثَرَ مِنْهُمْ وَاَشَدَّ قُوَّةً وَّ
اٰثَارًا فِي الْاَرْضِ فَمَآ اَغْنٰى عَنْهُمْ مَّا كَانُوْا يَكْسِبُوْنَ ۸۲
فَلَمَّا جَآءَتْهُمْ رُسُلُهُمْ بِالْبَيِّنٰتِ فَرِحُوْا بِمَا عِنْدَهُمْ مِّنَ الْعِلْمِ
وَحَاقَ بِهِمْ مَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ۸۳ فَلَمَّا رَاَوْا بَاْسَنَا
قَالُوْٓا اٰمَنَّا بِاللّٰهِ وَحْدَهٗ وَكَفَرْنَا بِمَا كُنَّا بِهٖ مُشْرِكِيْنَ ۸۴
فَلَمْ يَكُ يَنْفَعُهُمْ اِيْمَانُهُمْ لَمَّا رَاَوْا بَاْسَنَا ؕ سُنَّتَ اللّٰهِ
ع ۹ ۱۴ الَّتِيْ قَدْ خَلَتْ فِيْ عِبَادِهٖ ۚ وَخَسِرَ هُنَالِكَ الْكٰفِرُوْنَ ۸۵ ع

78. மேலும்,(நபியே!)திட்டமாக,நாம்உமக்கு முன்னர்(பல)தூதர்களை அனுப்பி இருக்கின்றோம்; அவர்களில் சிலருடைய வரலாற்றை நாம் உமக்குக் கூறி இருக்கின்றோம்; இன்னும், அவர்களில் சிலருடைய வரலாற்றை நாம் உமக்குக் கூறவில்லை;(இவ்விரு சாராரில்) எந்தத் தூதருக்கும் அல்லாஹ்வுடைய அனுமதியின்றி யாதோர் அத்தாட்சியையும் அவர் கொண்டு வருவதற்கு (அதிகாரம்) இல்லை; ஆகவே, அல்லாஹ்வுடைய கட்டளை வந்து விடுமானால் நீதியைக் கொண்டு தீர்ப்பளிக்கப்படும்;மேலும்,(அதனைப்)பொய்யாக்கியவர்கள் அந்த இடத்தில் நஷ்டமடைவார்கள்.

79. அல்லாஹ்_ அவன் எத்தகையவனென்றால் கால் நடைகளை உங்களுக்காக உண்டாக்கி இருக்கிறான்; அவற்றில் (சிலவற்றின் மீது) நீங்கள் சவாரி செய்வதற்காக;இன்னும்,அவைகளி(ல் சிலவற்றி)லிருந்து நீங்கள் புசிக்கிறீர்கள்.

80. இன்னும்,அவற்றில் உங்களுக்கு(வேறு பல) பயன்களும் இருக்கின்றன;மேலும், உங்கள் நெஞ்சங்களிலுள்ள தேவையை அவற்றின் மூலம் நீங்கள் அடைந்து கொள்வதற்காகவும் (படைத்தான்); அவற்றின் மீதும், கப்பல்களின் மீதும் (பல பகுதிகளுக்கும்)நீங்கள் சுமந்து செல்லப் படுகிறீர்கள்.

81. மேலும், அவன் உங்களுக்கு தன் அத்தாட்சிகளைக் காண்பிக்கிறான்; ஆகவே அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் எதனை நீங்கள் நிராகரிக்கிறீர்கள்.

82. இவர்கள் பூமியில் சுற்றித் திரியவில்லையா? அப்போது அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை அவர்கள் பார்த்திருப்பர். அவர்களோ இவர்களை விட (எண்ணிக்கையால்) மிக அதிகமானவர்களாகவும், (உடல்களின்)பலத்தாலும், பூமியில்(விட்டுச் சென்ற) அடையாளச் சின்னங்களாலும் (மற்றவர்களைவிட) மிகக் கடினமானவர்களாக இருந்தார்கள்; பின்னர், அவர்கள் சம்பாதித்(து வைத்)திருந்தது அவர்களுக்குப் பயனளிக்கவில்லை.

83. எனவே, அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டுவந்தசமயத்தில்(அதனை அவர்கள் பரிகாசம்செய்து நிராகரித்து விட்டு) கல்வியினால் தங்களிடமுள்ளதைக் கொண்டு பெரு மகிழ்ச்சி அடைந்திருந்தார்கள்; இன்னும், அவர்கள் எதைப் பரிகாசம் செய்து கொண்டிருந்தார்களோ அது அவர்களைச் சூழ்ந்து கொண்டது.

84. பிறகு நம்முடைய வேதனையைக் (கண் கூடாக) கண்ட சமயத்தில், அவர்கள் "அல்லாஹ்வை அவன் தனித்தவன் என நாங்கள் விசுவாசிக்கின்றோம். நாங்கள் இணைவைக்கக்கூடியவர்களாக இருந்தவற்றை நாங்கள் நிராகரித்தும் விட்டோம்"எனக் கூறினார்கள்.

85. ஆகவே, நம்முடைய வேதனையை அவர்கள் கண்ட போது, அவர்களின் விசுவாசம் அவர்களுக்குப் பயனளிப்பதாக இருக்கவில்லை; _(இதற்கு முன்னர்) அவனுடைய அடியார்களில்சென்றுவிட்டதே அத்தகைய அல்லாஹ்வுடைய வழிமுறையாக_(இது நடந்தேறியது.) அவ்விடத்தில் நிராகரிப்போர் நஷ்டத்தையே அடைந்தார்கள்.

سُوْرَةُ حٰمٓ السَّجْدَةِ مَكِّيَّةٌ وَّهِيَ اَرْبَعٌ وَّخَمْسُوْنَ اٰيَةً وَّسِتُّ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

حٰمٓ ۚ ﴿۱﴾ تَنْزِيْلٌ مِّنَ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۚ ﴿۲﴾ كِتٰبٌ فُصِّلَتْ اٰيٰتُهٗ قُرْاٰنًا
عَرَبِيًّا لِّقَوْمٍ يَّعْلَمُوْنَ ۙ ﴿۳﴾ بَشِيْرًا وَّنَذِيْرًا ۚ فَاَعْرَضَ اَكْثَرُهُمْ فَهُمْ
لَا يَسْمَعُوْنَ ﴿۴﴾ وَقَالُوْا قُلُوْبُنَا فِيْٓ اَكِنَّةٍ مِّمَّا تَدْعُوْنَآ اِلَيْهِ وَفِيْٓ
اٰذَانِنَا وَقْرٌ وَّمِنْۢ بَيْنِنَا وَبَيْنِكَ حِجَابٌ فَاعْمَلْ اِنَّنَا عٰمِلُوْنَ ﴿۵﴾ النصف
قُلْ اِنَّمَآ اَنَا بَشَرٌ مِّثْلُكُمْ يُوْحٰٓى اِلَيَّ اَنَّمَآ اِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ
فَاسْتَقِيْمُوْٓا اِلَيْهِ وَاسْتَغْفِرُوْهُ ؕ وَوَيْلٌ لِّلْمُشْرِكِيْنَ ۙ ﴿۶﴾ الَّذِيْنَ
لَا يُؤْتُوْنَ الزَّكٰوةَ وَهُمْ بِالْاٰخِرَةِ هُمْ كٰفِرُوْنَ ﴿۷﴾ اِنَّ الَّذِيْنَ
اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَهُمْ اَجْرٌ غَيْرُ مَمْنُوْنٍ ع ﴿۸﴾ قُلْ اَئِنَّكُمْ ع ۱ ۸ ۱۵
لَتَكْفُرُوْنَ بِالَّذِيْ خَلَقَ الْاَرْضَ فِيْ يَوْمَيْنِ وَتَجْعَلُوْنَ لَهٗٓ
اَنْدَادًا ؕ ذٰلِكَ رَبُّ الْعٰلَمِيْنَ ۚ ﴿۹﴾ وَجَعَلَ فِيْهَا رَوَاسِيَ مِنْ فَوْقِهَا
وَبٰرَكَ فِيْهَا وَقَدَّرَ فِيْهَآ اَقْوَاتَهَا فِيْٓ اَرْبَعَةِ اَيَّامٍ ؕ سَوَآءً
لِّلسَّآئِلِيْنَ ﴿۱۰﴾ ثُمَّ اسْتَوٰٓى اِلَى السَّمَآءِ وَهِيَ دُخَانٌ فَقَالَ
لَهَا وَلِلْاَرْضِ ائْتِيَا طَوْعًا اَوْ كَرْهًا ؕ قَالَتَآ اَتَيْنَا طَآئِعِيْنَ ﴿۱۱﴾

அத்தியாயம் : 41

## ஹாமீம் ஸஜ்தா

வசனங்கள் : 54 மக்கீ ருகூஉகள் : 6

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. ஹா மீம்.

2. அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோனிடமிருந்து இறக்கப் பட்டுள்ளது.

3. (இது) வேதமாகும்; அறிந்து கொள்ளும் சமூகத்தாருக்காக அரபி (மொழி)க் குர்ஆனாக அதனுடைய வசனங்கள் தனித்தனியாக்கப்பட்டு (தெளிவு செய்யப்பட்டு)ள்ளன.

4. (விசுவாசிகளுக்கு இது) நன்மாராயம் கூறுகின்றதாகவும், (நிராகரித்தோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றதாகவும்_ (இருக்கின்றது.) பின்னரும், அவர்களில் பெரும்பாலோர் (இதனைப்) புறக்கணித்து விட்டனர்_ (ஆகவே,) அவர்கள் (இதற்குச்) செவிசாய்க்கமாட்டார்கள்.

5. அன்றியும், "நீர் எதன்பால் எங்களை அழைக்கின்றீரோ அதைவிட்டும் எங்களுடைய இதயங்கள் திரைகளில் இருக்கின்றன; எங்களுடைய செவிகளில் அடைப்பும் இருக்கிறது; எங்களுக்கும், உமக்குமிடையே திரை இருக்கிறது; ஆகவே, நீர் (உம் காரியத்தைச்) செய்து கொண்டிருப்பீராக! நிச்சயமாக, நாங்களும் (எங்கள் காரியத்தைச்) செய்து கொண்டிருப்போம்" என்றும் (நிராகரிப்போர்) கூறுகின்றனர்.

6. (ஆகவே நபியே!) நீர் கூறுவீராக: "நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான்; (ஆனால்) உங்களுடைய (வணக்கத்திற்குரிய) நாயன் ஒரே ஒரு நாயன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்படுகிறது; ஆதலால், (செயல்களைக் கலப்பற்றதாக்கி) அவனளவிலேயே நீங்கள் உறுதியாக நில்லுங்கள்; அவனிடம் நீங்கள் பிழை பொறுக்கவும் தேடுங்கள்; இன்னும், (அவனுக்கு) இணைவைத்துக்கொண்டிருப்போருக்குக் கேடுதான்:

7. அவர்கள் எத்தகையோரென்றால், ஜகாத்தைக் கொடுக்கமாட்டார்கள்; இன்னும், அவர்கள்தாம் மறுமையை நிராகரிக்கக் கூடியவர்கள்.

8. நிச்சயமாக, விசுவாசங்கொண்டு நற்கருமங்களும் செய்கின்றார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு, முடிவில்லாத (நிலையான) கூலியுண்டு.

9. (நபியே!) நீர் கூறுவீராக: "பூமியை இரண்டே நாட்களில் படைத்தானே அத்தகையவனைத் திட்டமாக நீங்கள் நிராகரித்துவிட்டு, அவனுக்குச் சமமானவர்களையும் நீங்கள் ஆக்குகிறீர்களா? அவன் (தான்) அகிலத்தாரின் இரட்சகனாவான்."

10. அவனே அதில்_ அதன் மேல் (பகுதியில்) இருந்து உறுதியான மலைகளை அமைத்தான்; அதில் அபிவிருத்தியை நல்கினான்; மேலும், அதில் அதன் உணவுகளை நான்கு நாட்களில் நிர்ணயம் செய்தான்; (இவ்வாறு செய்ததைப் பற்றிக்) கேட்போருக்கு (பதில்) நிறைவாகி விட்டது.

11. பின்னர் வானத்தை_ அது புகையாக இருக்கும் நிலையில் அவன் நாடினான்; பின்னர், அவன் அதற்கும், பூமிக்கும் "நீங்களிருவரும் கீழ்ப்படிந்தோ, அல்லது நிர்ப்பந்தமாகவோ வாருங்கள்" என்று கூறினான்; (அதற்கு) அவை இரண்டும் "நாங்கள் கீழ்ப்படிந்தவர்களாகவே வந்தோம்" என்று கூறின.

فَقَضٰىهُنَّ سَبْعَ سَمٰوَاتٍ فِیْ یَوْمَیْنِ وَاَوْحٰى فِیْ كُلِّ سَمَآءٍ اَمْرَهَا
وَزَیَّنَّا السَّمَآءَ الدُّنْیَا بِمَصَابِیْحَ ۖۗ وَحِفْظًا ؕ ذٰلِكَ تَقْدِیْرُ الْعَزِیْزِ
الْعَلِیْمِ ﴿۱۲﴾ فَاِنْ اَعْرَضُوْا فَقُلْ اَنْذَرْتُكُمْ صٰعِقَةً مِّثْلَ صٰعِقَةِ
عَادٍ وَّثَمُوْدَ ﴿۱۳﴾ اِذْ جَآءَتْهُمُ الرُّسُلُ مِنْۢ بَیْنِ اَیْدِیْهِمْ وَمِنْ
خَلْفِهِمْ اَلَّا تَعْبُدُوْۤا اِلَّا اللّٰهَ ؕ قَالُوْا لَوْ شَآءَ رَبُّنَا لَاَنْزَلَ مَلٰٓئِكَةً
فَاِنَّا بِمَاۤ اُرْسِلْتُمْ بِهٖ كٰفِرُوْنَ ﴿۱۴﴾ فَاَمَّا عَادٌ فَاسْتَكْبَرُوْا فِی
الْاَرْضِ بِغَیْرِ الْحَقِّ وَقَالُوْا مَنْ اَشَدُّ مِنَّا قُوَّةً ؕ اَوَلَمْ یَرَوْا اَنَّ اللّٰهَ
الَّذِیْ خَلَقَهُمْ هُوَ اَشَدُّ مِنْهُمْ قُوَّةً ؕ وَكَانُوْا بِاٰیٰتِنَا یَجْحَدُوْنَ ﴿۱۵﴾
فَاَرْسَلْنَا عَلَیْهِمْ رِیْحًا صَرْصَرًا فِیْۤ اَیَّامٍ نَّحِسَاتٍ لِّنُذِیْقَهُمْ
عَذَابَ الْخِزْیِ فِی الْحَیٰوةِ الدُّنْیَا ؕ وَلَعَذَابُ الْاٰخِرَةِ اَخْزٰى وَهُمْ
لَا یُنْصَرُوْنَ ﴿۱۶﴾ وَاَمَّا ثَمُوْدُ فَهَدَیْنٰهُمْ فَاسْتَحَبُّوا الْعَمٰى عَلَى الْهُدٰى
فَاَخَذَتْهُمْ صٰعِقَةُ الْعَذَابِ الْهُوْنِ بِمَا كَانُوْا یَكْسِبُوْنَ ﴿۱۷﴾ۚ وَ
نَجَّیْنَا الَّذِیْنَ اٰمَنُوْا وَكَانُوْا یَتَّقُوْنَ ﴿۱۸﴾ۧ وَیَوْمَ یُحْشَرُ اَعْدَآءُ ع ۲ ۱۶
اللّٰهِ اِلَى النَّارِ فَهُمْ یُوْزَعُوْنَ ﴿۱۹﴾ حَتّٰۤى اِذَا مَا جَآءُوْهَا شَهِدَ
عَلَیْهِمْ سَمْعُهُمْ وَاَبْصَارُهُمْ وَجُلُوْدُهُمْ بِمَا كَانُوْا یَعْمَلُوْنَ ﴿۲۰﴾

12. பின்னர், அவன் அவைகளை இரண்டு நாட்களில் ஏழு வானங்களாக சமப்படுத்திமுடித்தான்; ஒவ்வொரு வானத்திலும் அதனுடைய காரியத்தை அறிவித்தான்; மேலும், நாமே தாழ்வாக உள்ள (முதல்) வானத்தை(நட்சத்திர) விளக்குகளைக் கொண்டு அலங்கரித்தோம்; (அதனை ஷைத்தான்களை விட்டும்) பாதுகாக்கப்பட்டதாகவும் (ஆக்கினோம்) ; இது(யாவரையும்) மிகைத்தோன், (யாவையும்) நன்கு அறிந்தோனின் ஏற்பாடாகும்.

13. ஆகவே, (நபியே!) அவர்கள் (பின்னும் விசுவாசங்கொள்ளாது) புறக்கணித்து விடுவார்களாயின் அப்போது, "ஆது, ஸமூதுடைய(சமூகத்தார்க்கு ஏற்பட்ட) இடி முழக்கம் போன்றதோர் இடி முழக்கத்தையே, நான் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கின்றேன்" என்று நீர் கூறுவீராக!

14. "அல்லாஹ்வைத் தவிர (மற்ற) எதனையும் நீங்கள் வணங்காதீர்கள்" என்று(கூறி நம்முடைய) தூதர்கள் அவர்களுக்கு முன்பாகவும், அவர்களுக்குப் பின்பாகவும் அவர்களிடத்தில் வந்தபோது, (அத்தூதர்களிடம்) அவர்கள் "எங்கள் இரட்சகன் நாடியிருந்தால், அவன் மலக்குகளை (த்தூதர்களாக)திட்டமாக இறக்கி வைத்திருப்பான்; ஆகவே, நிச்சயமாக, நீங்கள் எதைக் கொண்டு அனுப்பப்பட்டிருக்கிறீர்களோ அதை நாங்கள் நிராகரிக்கக் கூடியவர்கள்தாம்" என்று கூறினார்கள்.

15. ஆகவே, ஆது (கூட்டத்தார்) பற்றிய விளக்கமாவது: அவர்கள் பூமியில் நியாயமின்றிப் பெருமையடித்துக் கொண்டிருந்தார்கள்; எங்களைவிட பலத்தால் மிக்கவர் யார்? என்றும் கூறினார்கள்; அவர்களை படைத்தானே அத்தகைய அல்லாஹ்_ அவன் நிச்சயமாக, அவர்களைவிட பலத்தால் மிக்கவன் என்பதை, அவர்கள் பார்க்கவில்லையா? அவர்கள் நம்முடைய (இத்தகைய) அத்தாட்சிகளை மறுப்பவர்களாகவும் இருந்தார்கள்.

16. ஆகவே , இவ்வுலக வாழ்வில் இழிவு தரும் வேதனையை அவர்களுக்கு நாம் சுவைக்கச் செய்வதற்காக, துர்ச்சகுனமான நாட்களில் அவர்களின் மீது கொடிய புயல் காற்றை நாம் அனுப்பிவைத்தோம்; மறுமையின் வேதனையோ, (இதனைவிட) மிக இழிவு தரக்கூடியதாகும்; (அங்கு எவராலும்) அவர்கள் உதவி செய்யப்படவுமாட்டார்கள்.

17. இன்னும் ஸமூது (கூட்டத்தார்)பற்றிய விளக்கமாவது: அவர்களுக்கு நாம் நேர்வழியைக் காண்பித்தோம்; எனினும், அவர்கள் நேர்வழியைவிட குருட்டுத்தனத்தையே விரும்பினார்கள். ஆகவே, அவர்கள் சம்பாதித்துக் கொண்டதன் காரணமாக இழிவான, வேதனையான இடிமுழக்கம் அவர்களைப் பிடித்துக்கொண்டது.

18. இன்னும் விசுவாசங்கொண்டு, பயந்துகொண்டிருந்தார்களே, அத்தகையோரை நாம் காப்பாற்றினோம்.

19. மேலும், அல்லாஹ்வுடைய விரோதிகள் நரகத்தின்பால் ஒன்று சேர்க்கப்படும் நாளில்(அவர்கள் தொடக்கம் முதல் கடைசிவரையில் உள்ளோரை வரிசைப்படுத்தி ஒருவரையொருவர் முந்திவிடாது மலக்குகளால்) அவர்கள் தடுத்து நிறுத்தப்படுவார்கள்.

20. இறுதியாக (நரகமாகிய) அதன் பால் அவர்கள் வந்தடைந்து விடுவார்களானால், (பாவம் செய்த) அவர்களுக்கு விரோதமாக அவர்களுடைய செவியும், அவர்களுடைய பார்வைகளும், அவர்களுடைய தோல்களும் அவர்கள் செய்துகொண்டிருந்தவை பற்றி சாட்சி கூறும்.

وَقَالُوْا لِجُلُوْدِهِمْ لِمَ شَهِدْتُّمْ عَلَيْنَا ؕ قَالُوْٓا اَنْطَقَنَا اللّٰهُ
الَّذِيْٓ اَنْطَقَ كُلَّ شَيْءٍ وَّهُوَ خَلَقَكُمْ اَوَّلَ مَرَّةٍ وَّاِلَيْهِ
تُرْجَعُوْنَ ﴿۲۱﴾ وَمَا كُنْتُمْ تَسْتَتِرُوْنَ اَنْ يَّشْهَدَ عَلَيْكُمْ
سَمْعُكُمْ وَلَآ اَبْصَارُكُمْ وَلَا جُلُوْدُكُمْ وَلٰكِنْ ظَنَنْتُمْ اَنَّ اللّٰهَ
لَا يَعْلَمُ كَثِيْرًا مِّمَّا تَعْمَلُوْنَ ﴿۲۲﴾ وَذٰلِكُمْ ظَنُّكُمُ الَّذِيْ
ظَنَنْتُمْ بِرَبِّكُمْ اَرْدٰىكُمْ فَاَصْبَحْتُمْ مِّنَ الْخٰسِرِيْنَ ﴿۲۳﴾ فَاِنْ
يَّصْبِرُوْا فَالنَّارُ مَثْوًى لَّهُمْ ۚ وَاِنْ يَّسْتَعْتِبُوْا فَمَا هُمْ مِّنَ
الْمُعْتَبِيْنَ ﴿۲۴﴾ وَقَيَّضْنَا لَهُمْ قُرَنَآءَ فَزَيَّنُوْا لَهُمْ مَّا بَيْنَ
اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ وَحَقَّ عَلَيْهِمُ الْقَوْلُ فِيْٓ اُمَمٍ
قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِمْ مِّنَ الْجِنِّ وَالْاِنْسِ ۚ اِنَّهُمْ كَانُوْا
خٰسِرِيْنَ ﴿۲۵﴾ وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْا لَا تَسْمَعُوْا لِهٰذَا الْقُرْاٰنِ ع ۳ ۱۷
وَالْغَوْا فِيْهِ لَعَلَّكُمْ تَغْلِبُوْنَ ﴿۲۶﴾ فَلَنُذِيْقَنَّ الَّذِيْنَ
كَفَرُوْا عَذَابًا شَدِيْدًا ۙ وَّلَنَجْزِيَنَّهُمْ اَسْوَاَ الَّذِيْ كَانُوْا
يَعْمَلُوْنَ ﴿۲۷﴾ ذٰلِكَ جَزَآءُ اَعْدَآءِ اللّٰهِ النَّارُ ۚ لَهُمْ فِيْهَا
دَارُ الْخُلْدِ ؕ جَزَآءًۢ بِمَا كَانُوْا بِاٰيٰتِنَا يَجْحَدُوْنَ ﴿۲۸﴾

21. அ(தற்க)வர்கள் , தங்களின் தோல்களிடம்,"எங்களுக்கு எதிராக நீங்கள் ஏன் சாட்சி கூறினீர்கள்?"என்றும் கேட்பார்கள்;அதற்கு அவைகள், "ஒவ்வொரு பொருளையும் பேசச் செய்தவனாகிய அல்லாஹ்தான் எங்களைப் பேசவைத்தான்; அவன் தான் உங்களை முதல் தடவையும் படைத்தான்;(இறந்த பின்னரும்) நீங்கள் அவனிடமே திருப்பப்பட்டிருக்கின்றீர்கள்" என்று கூறும்.

22. "உங்களுடைய செவிப்புலனும், உங்களுடைய பார்வைகளும், உங்களுடைய தோல்களும் உங்களுக்கெதிராக சாட்சியங்கூறாமலிருக்க, நீங்கள் (உங்களுடைய செயல்களை அவைகளுக்கு) மறைத்துக்கொள்ளக் கூடியவர்களாக நீங்கள் இருந்திருக்கவில்லை; எனினும், நீங்கள் செய்பவற்றிலிருந்து அநேகவற்றை நிச்சயமாக அல்லாஹ் அறியமாட்டான் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்கள்."

23. "அதுதான், உங்கள் இரட்சகனைப்பற்றி நீங்கள் எண்ணிக்கொண்டிருந்த உங்களுடைய (தீய) எண்ணமாகும்; அது உங்களை அழித்துவிட்டது; ஆதலால் நீங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிட்டீர்கள்"(என்றும் அவை கூறும்).

24. பின்னர், அவர்கள் பொறுத்துக் கொள்வார்களானால், அவர்கள் தங்குமிடம் நரகம்தான்; இன்னும், அவர்கள்(நற்செயல்கள் செய்து அல்லாஹ்வைத்)திருப்திப்படுத்தத்தேடினால்,(அல்லாஹ்வைத் திருப்திப்படுத்தும் எச்செயலையும் செய்ய)அவர்கள் சிரமப்படுத்தப் படுபவர்களில் உள்ளவர்களல்லர்.

25. மேலும், நாம் அவர்களுக்கு (ஷைத்தான்களிலிருந்து) தோழர்களை இணைத்துவிட்டோம்; ஆகவே, (அத்தோழர்கள்) அவர்களுக்கு முன்னிருப்பதையும், அவர்களுக்குப் பின்னிருப்பதையும் அவர்களுக்கு அழகாக்கிக் காண்பித்தார்கள்; இன்னும், இவர்களுக்கு முன் சென்று போன ஜின்கள், மனிதர்கள் ஆகிய சமூகத்தவர்களுடன் நம்முடைய(வேதனையின்) வாக்கு இவர்களின் மீது உறுதியாகிவிட்டது; நிச்சயமாக, இவர்கள்( யாவரும்) நஷ்டமடைந்தவர்களாக ஆகிவிட்டனர்.

26. மேலும், நிராகரித்து விட்டார்களே அத்தகையோர் (மற்றவர்களிடம்) "நீங்கள் இந்தக் குர்ஆனை கேட்காதீர்கள்; (அது ஓதப்படும் போது மற்றவர்கள் கேட்காதிருக்க )அதில் (கூச்சலிடுவது போன்ற) வீணானவற்றையும் செய்யுங்கள்; நீங்கள் (அதனால்) மிகைத்துவிடலாம்" என்று கூறினர்.

27. ஆகவே, நாம் நிச்சயமாக நிராகரித்துவிட்டோரை கடினமான வேதனையைச் சுவைக்குமாறு செய்வோம். இன்னும் நிச்சயமாக, நாம் அவர்கள் செய்துகொண்டிருந்தவற்றில் மிகத்தீயதை அவர்களுக்குக் கூலியாகக் கொடுப்போம்.

28. அதுவே, அல்லாஹ்வுடைய விரோதிகளுக்குரிய கூலி (யான)நரகமாகும்; நம்முடைய வசனங்களை (இவ்வாறு) அவர்கள் மறுத்துக்கொண்டிருந்ததன் கூலியாக, அவர்களுக்கு நிலையான வீடு அ(ந்நரகத்)தில் இருக்கிறது.

وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْا رَبَّنَآ اَرِنَا الَّذَيْنِ اَضَلّٰنَا مِنَ الْجِنِّ
وَالْاِنْسِ نَجْعَلْهُمَا تَحْتَ اَقْدَامِنَا لِيَكُوْنَا مِنَ الْاَسْفَلِيْنَ ﴿٢٩﴾
اِنَّ الَّذِيْنَ قَالُوْا رَبُّنَا اللّٰهُ ثُمَّ اسْتَقَامُوْا تَتَنَزَّلُ عَلَيْهِمُ
الْمَلٰٓئِكَةُ اَلَّا تَخَافُوْا وَلَا تَحْزَنُوْا وَاَبْشِرُوْا بِالْجَنَّةِ الَّتِيْ كُنْتُمْ
تُوْعَدُوْنَ ﴿٣٠﴾ نَحْنُ اَوْلِيٰٓؤُكُمْ فِي الْحَيٰوةِ الدُّنْيَا وَفِي الْاٰخِرَةِ
وَلَكُمْ فِيْهَا مَا تَشْتَهِيْٓ اَنْفُسُكُمْ وَلَكُمْ فِيْهَا مَا تَدَّعُوْنَ ﴿٣١﴾ نُزُلًا مِّنْ
غَفُوْرٍ رَّحِيْمٍ ﴿٣٢﴾ وَمَنْ اَحْسَنُ قَوْلًا مِّمَّنْ دَعَآ اِلَى اللّٰهِ وَعَمِلَ ع ٧ ١٨
صَالِحًا وَّقَالَ اِنَّنِيْ مِنَ الْمُسْلِمِيْنَ ﴿٣٣﴾ وَلَا تَسْتَوِي الْحَسَنَةُ وَ
لَا السَّيِّئَةُ اِدْفَعْ بِالَّتِيْ هِيَ اَحْسَنُ فَاِذَا الَّذِيْ بَيْنَكَ وَبَيْنَهٗ
عَدَاوَةٌ كَاَنَّهٗ وَلِيٌّ حَمِيْمٌ ﴿٣٤﴾ وَمَا يُلَقّٰىهَآ اِلَّا الَّذِيْنَ صَبَرُوْا وَمَا
يُلَقّٰىهَآ اِلَّا ذُوْ حَظٍّ عَظِيْمٍ ﴿٣٥﴾ وَاِمَّا يَنْزَغَنَّكَ مِنَ الشَّيْطٰنِ نَزْغٌ
فَاسْتَعِذْ بِاللّٰهِ اِنَّهٗ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ﴿٣٦﴾ وَمِنْ اٰيٰتِهِ الَّيْلُ وَالنَّهَارُ
وَالشَّمْسُ وَالْقَمَرُ لَا تَسْجُدُوْا لِلشَّمْسِ وَلَا لِلْقَمَرِ وَاسْجُدُوْا لِلّٰهِ
الَّذِيْ خَلَقَهُنَّ اِنْ كُنْتُمْ اِيَّاهُ تَعْبُدُوْنَ ﴿٣٧﴾ فَاِنِ اسْتَكْبَرُوْا فَالَّذِيْنَ
السجدة ١١ عِنْدَ رَبِّكَ يُسَبِّحُوْنَ لَهٗ بِالَّيْلِ وَالنَّهَارِ وَهُمْ لَا يَسْــَٔمُوْنَ ﴿٣٨﴾ السجدة

29. நிராகரிப்போர் (அந்நாளில் அல்லாஹ்விடம்) "எங்கள் இரட்சகனே! ஜின்களிலிருந்தும், மனிதர்களிலிருந்தும், எங்களை வழிகெடுத்த இருசாராரையும் எங்களுக்கு நீ காண்பிப்பாயாக! அவ்விருவரும் தாழ்ந்தோரில் ஆகிவிடுவதற்காக அவ்விருவரையும் நாங்கள் எங்கள் பாதங்களுக்குக் கீழ் ஆக்குவோம்" என்று கூறுவார்கள்.

30. (எனினும்) நிச்சயமாக "எங்கள் இரட்சகன் அல்லாஹ்தான் என்று கூறி பின்னர், (அதன்மீது) உறுதியாக நிலைத்துமிருந்தார்களே அத்தகையோர்_ அவர்களின் மீது மலக்குகள் (மரண வேளையில்) இறங்கி (செல்ல இருக்கும் மறுமையைப்பற்றி) நீங்கள் பயப்படாதீர்கள் ; (நீங்கள் இவ்வுலகில் விட்டுச்செல்லும் மனைவி, மக்கள், சொத்து சுகம் யாவற்றையும் பற்றி) கவலையும்படாதீர்கள். நீங்கள் வாக்களிக்கப்பட்டுக் கொண்டிருந்தீர்களே, அத்தகைய சுவனபதியைக்கொண்டு நன்மாராயம் பெறுங்கள்" (எனக் கூறுவார்கள்).

31. நாங்கள் உலக வாழ்விலும், மறுமையிலும் உங்களுக்கு உதவியாளர்கள்; அ(ச்சுவனத்)தில் உங்கள் மனம் விரும்பியவை உங்களுக்குண்டு ; இன்னும், அதில் நீங்கள் தேடுகின்றவை உங்களுக்குண்டு.

32. (பாவங்களை) மிகவும் மன்னிப்பவனான, பெருங்கிருபையுடையோனிட மிருந்துள்ள விருந்தாக _(இது உங்களுக்குண்டு என்று மலக்குகள் கூறுவார்கள்.)

33. எவர் அல்லாஹ் அளவில் (மனிதர்களை) அழைத்து(த் தாமும்) நற்கருமங்களையும் செய்து, நிச்சயமாக நான் (அல்லாஹ்வுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களில் உள்ளேன் என்றும் கூறுகின்றாரோ, அவரைவிடச் சொல்லால் மிக்க அழகானவர் யார்?

34. நன்மையும் தீமையும் சமமாகிவிடாது (ஆதலால், நபியே!) எது மிக அழகானதோ அதைக்கொண்டு (தீமையை) தடுத்துக்கொள்வீராக! அப்பொழுது எவருக்கும் உமக்குமிடையே பகைமை இருந்ததோ அவர், உம்முடைய உற்ற சிநேகிதரைப் போல் ஆகிவிடுவார்.

35. பொறுமையாய் இருந்தார்களே அத்தகையோரைத் தவிர, (வேறு) எவரும் அதனை அடையமாட்டார்கள்; மேலும் மகத்தான பாக்கியத்தையுடையோரைத் தவிர, (மற்ற) எவரும் அதனை அடையமாட்டார்கள்.

36. மேலும், (நபியே!) ஷைத்தானிலிருந்து ஏதேனுமொரு ஊசாட்டம் உம்மைத்தொட்டுவிடுமாயின் தாமதமின்றி அல்லாஹ்விடத்தில் நீர் காவல்தேடிக் கொள்வீராக! நிச்சயமாக அவனே, (யாவையும்) செவியேற்பவன்; நன்கறிபவன்.

37. இரவும், பகலும், சூரியனும், சந்திரனும் (அல்லாஹ்வைப்பற்றி அறிவிக்கக்கூடிய) அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்; நீங்கள் சூரியனுக்கும், சந்திரனுக்கும் ஸஜ்தா செய்யவேண்டாம்; நீங்கள் அவனையே வணங்குபவர்களாக இருந்தால், அவற்றைப்படைத்தவனாகிய அல்லாஹ்விற்கே ஸஜ்தா செய்யுங்கள்.

38. (நபியே!) பின்னும், இவர்கள் பெருமையடித்துக்(கொண்டு அல்லாஹ்வை வணங்காது விலகிக்) கொள்வார்களாயின், அப்போது உமதிரட்சகனிடத்தில் உள்ளவர் (களாகிய மலக்கு) கள் இரவிலும், பகலிலும் அவனைத் துதிசெய்து (புகழ்ந்து) கொண்டேயிருக்கின்றனர்; அவர்கள் (அதில்) சோர்வடையவும் மாட்டார்கள்.

وَمِنْ اٰيٰتِهٖٓ اَنَّكَ تَرَى الْاَرْضَ خَاشِعَةً فَاِذَآ اَنْزَلْنَا عَلَيْهَا الْمَآءَ
اهْتَزَّتْ وَرَبَتْ ؕ اِنَّ الَّذِيْٓ اَحْيَاهَا لَمُحْيِ الْمَوْتٰى ؕ اِنَّهٗ عَلٰى كُلِّ
شَيْءٍ قَدِيْرٌ ﴿۳۹﴾ اِنَّ الَّذِيْنَ يُلْحِدُوْنَ فِيْٓ اٰيٰتِنَا لَا يَخْفَوْنَ عَلَيْنَا ؕ
اَفَمَنْ يُّلْقٰى فِي النَّارِ خَيْرٌ اَمْ مَّنْ يَّاْتِيْٓ اٰمِنًا يَّوْمَ الْقِيٰمَةِ ؕ اِعْمَلُوْا مَا
شِئْتُمْ ۙ اِنَّهٗ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿۴۰﴾ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا بِالذِّكْرِ لَمَّا
جَآءَهُمْ ۚ وَاِنَّهٗ لَكِتٰبٌ عَزِيْزٌ ﴿۴۱﴾ لَّا يَاْتِيْهِ الْبَاطِلُ مِنْ بَيْنِ يَدَيْهِ
وَلَا مِنْ خَلْفِهٖ ؕ تَنْزِيْلٌ مِّنْ حَكِيْمٍ حَمِيْدٍ ﴿۴۲﴾ مَا يُقَالُ لَكَ اِلَّا مَا
قَدْ قِيْلَ لِلرُّسُلِ مِنْ قَبْلِكَ ؕ اِنَّ رَبَّكَ لَذُوْ مَغْفِرَةٍ وَّذُوْ عِقَابٍ
اَلِيْمٍ ﴿۴۳﴾ وَلَوْ جَعَلْنٰهُ قُرْاٰنًا اَعْجَمِيًّا لَّقَالُوْا لَوْلَا فُصِّلَتْ اٰيٰتُهٗ ؕ
ءَاَعْجَمِيٌّ وَّعَرَبِيٌّ ؕ قُلْ هُوَ لِلَّذِيْنَ اٰمَنُوْا هُدًى وَّشِفَآءٌ ؕ وَ قرأ حفص بتسهيل الهمزة الثانية ۱۲
الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ فِيْٓ اٰذَانِهِمْ وَقْرٌ وَّهُوَ عَلَيْهِمْ عَمًى ؕ اُولٰٓئِكَ
يُنَادَوْنَ مِنْ مَّكَانٍ بَعِيْدٍ ﴿۴۴﴾ ع وَلَقَدْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ ع ۵ ۲۱ ۱۹
فَاخْتُلِفَ فِيْهِ ؕ وَلَوْلَا كَلِمَةٌ سَبَقَتْ مِنْ رَّبِّكَ لَقُضِيَ
بَيْنَهُمْ ؕ وَاِنَّهُمْ لَفِيْ شَكٍّ مِّنْهُ مُرِيْبٍ ﴿۴۵﴾ مَنْ عَمِلَ صَالِحًا
فَلِنَفْسِهٖ ۚ وَمَنْ اَسَآءَ فَعَلَيْهَا ؕ وَمَا رَبُّكَ بِظَلَّامٍ لِّلْعَبِيْدِ ﴿۴۶﴾

39. (நபியே!) காய்ந்து விட்டதாக பூமியை நிச்சயமாக நீர் காண்பதும், அவ
னுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்; அதன் மீது நாம் நீரை இறக்கி வைத்தால்,
அது செழிப்படைந்து வளர்கிறது; அதை நிச்சயமாக, உயிர்ப்பித்தானே
அத்தகையவன் மரணித்தோரையும் உயிர்ப்பிக்கக் கூடிய வனாவான்; நிச்சயமாக
அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றலுடையவன்.
40. நிச்சயமாக, நம்முடைய வசனங்களில் (அனர்த்தம் கூறி பிழை சேர்க்க
பொய்யின்பால்) சாய்ந்து விடுகின்றார்களே அத்தகையோர்_ நம்மிலிருந்து
அவர்கள் மறைந்து விடமாட்டார்கள்; ஆகவே, (மறுமையில்) நரகத்தில்
எறியப்படுபவன் சிறந்தவனா? அல்லது மறுமை நாளில் எத்தகைய
பயமுமற்றவனாக வருப(வன் மேலான)வனா? (மனிதர்களே!) நீங்கள் நாடியதைச்
செய்துகொண்டிருங்கள்; நீங்கள் செய்பவற்றை நிச்சயமாக, அவன் பார்க்கக்
கூடியவன்.

41 நிச்சயமாக,(குர்ஆனாகிய) நல்லுபதேசத்தை_ அது அவர்களிடம் வந்தபோது
நிராகரிக்கின்றார்களே அத்தகையோர்_(அவர்கள் மறுமையில் தங்கள் நிலையை
அறிந்துகொள்வார்கள்;) மேலும், நிச்சயமாக இது, மிக்க கண்ணியமானதொரு
வேதமாகும்.

42.(குர்ஆனாகிய இதில்) இதற்கு முன்னிருந்தோ, இதற்குப் பின்னிருந்தோ பொய்
இதனிடம் வராது; தீர்க்கமான அறிவுடைய, மிக்க புகழுக்குரியவனிடமிருந்து
(இது) இறக்கப் பட்டுள்ளதாகும்.

43. (நபியே!) உமக்குமுன்(வந்த) தூதர்களுக்குத்திட்டமாகக்கூறப்பட்டதைத் தவிர
(வேறெதுவும்) உமக்குக் கூறப்படவில்லை; நிச்சயமாக, உமதிரட்சகன்
மன்னிப்புடையவன்; துன்புறுத்தும் தண்டனையுடையவன்.

44. மேலும், "அரபி அல்லாத (மொழியின்) குர்ஆனாக இதனை நாம் ஆக்கி
வைத்திருந்தால் ,(இந்த மக்காவாசிகள்) இதனுடைய வசனங்கள் (நம் மொழியில் )
விவரித்துக் கூறப்பட்டிருக்கவேண்டாமோ? (வேதம்) அரபி அல்லாத
(மொழியுடைய) தும், (நபியோ ) அரபியருமா ? என்று கூறுவார்கள்.
(நபியே!) நீர் கூறுவீராக: இது (அரபி மொழிவேதமாக இருப்பதுடன்) விசுவாசங்
கொண்டவர்களுக்குநேர்வழியாகவும், (உடல் மற்றும் மனநோய்களை)
குணப்படுத்துவதாகவும் இருக்கின்றது; இன்னும் விசுவாசங்கொள்ளவில்லையே
அவர்களுடைய காதுகளில் அடைப்பு இருக்கின்றது; இது அவர்கள் விஷயத்தில்
குருட்டுத்தனத்தையுடையதாகவும் இருக்கிறது (ஆகவே, அவர்கள் இதன்
உண்மையைப் பார்க்கமாட்டார்கள்). அவர்கள் வெகு தொலை தூரத்திலிருந்து
அழைக்கப்படு(பவர்கள்போன்று கேட்காதவர்களாக இருக்)கின்றனர்.

45. மேலும், திட்டமாக நாம் மூஸாவுக்கு வேதத்தைக் கொடுத்தோம்; அதில்
மாறுபாடுகள் செய்யப்பட்டுவிட்டன;(அவர்களின் விசாரணை மறுமையில் தான்
என்று) உமதிரட்சகனிடமிருந்து வாக்கு முந்தியிருக்காவிடில், அவர்களுக்
கிடையில்(இம்மையில்)திட்டமாக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும்; நிச்சயமாக
அவர்களும்(_குர்ஆனாகிய) இதில் அவநம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய சந்தேகத்தில்
இருக்கிறார்கள்.
46. எவர் நல்ல செயல் செய்கிறாரோ,(அது) அவருக்கே (நன்மையாகும்) ;
எவரேனும் தீமை செய்தால் அவருக்கே (அது)கேடாகும்; மேலும், உமதிரட்சகன்
(தன் ) அடியார்களுக்கு அநியாயம் செய்பவன் அல்லன்!

إِلَيْهِ يُرَدُّ عِلْمُ السَّاعَةِ ۚ وَمَا تَخْرُجُ مِن ثَمَرَاتٍ مِّنْ
أَكْمَامِهَا وَمَا تَحْمِلُ مِنْ أُنثَىٰ وَلَا تَضَعُ إِلَّا بِعِلْمِهِ ۚ وَيَوْمَ
يُنَادِيهِمْ أَيْنَ شُرَكَائِي قَالُوا آذَنَّاكَ مَا مِنَّا مِن شَهِيدٍ ﴿۴۷﴾
وَضَلَّ عَنْهُم مَّا كَانُوا يَدْعُونَ مِن قَبْلُ ۖ وَظَنُّوا مَا لَهُم مِّن
مَّحِيصٍ ﴿۴۸﴾ لَّا يَسْأَمُ الْإِنسَانُ مِن دُعَاءِ الْخَيْرِ وَإِن مَّسَّهُ الشَّرُّ
فَيَئُوسٌ قَنُوطٌ ﴿۴۹﴾ وَلَئِنْ أَذَقْنَاهُ رَحْمَةً مِّنَّا مِن بَعْدِ ضَرَّاءَ
مَسَّتْهُ لَيَقُولَنَّ هَٰذَا لِي وَمَا أَظُنُّ السَّاعَةَ قَائِمَةً وَلَئِن
رُّجِعْتُ إِلَىٰ رَبِّي إِنَّ لِي عِندَهُ لَلْحُسْنَىٰ ۚ فَلَنُنَبِّئَنَّ الَّذِينَ
كَفَرُوا بِمَا عَمِلُوا وَلَنُذِيقَنَّهُم مِّنْ عَذَابٍ غَلِيظٍ ﴿۵۰﴾ وَإِذَا
أَنْعَمْنَا عَلَى الْإِنسَانِ أَعْرَضَ وَنَأَىٰ بِجَانِبِهِ ۚ وَإِذَا مَسَّهُ الشَّرُّ
فَذُو دُعَاءٍ عَرِيضٍ ﴿۵۱﴾ قُلْ أَرَأَيْتُمْ إِن كَانَ مِنْ عِندِ اللَّهِ
ثُمَّ كَفَرْتُم بِهِ مَنْ أَضَلُّ مِمَّنْ هُوَ فِي شِقَاقٍ بَعِيدٍ ﴿۵۲﴾
سَنُرِيهِمْ آيَاتِنَا فِي الْآفَاقِ وَفِي أَنفُسِهِمْ حَتَّىٰ يَتَبَيَّنَ لَهُمْ
أَنَّهُ الْحَقُّ ۗ أَوَلَمْ يَكْفِ بِرَبِّكَ أَنَّهُ عَلَىٰ كُلِّ شَيْءٍ شَهِيدٌ ﴿۵۳﴾ أَلَا
إِنَّهُمْ فِي مِرْيَةٍ مِّن لِّقَاءِ رَبِّهِمْ ۗ أَلَا إِنَّهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيطٌ ﴿۵۴﴾ ع ۶

47. (நபியே!) மறுமை நாள்பற்றிய அறிவு அவன் பக்கமே திருப்பப்படும், அவன் அறிவில் இல்லாது, கனிகளில் எதுவும் அதன் பாளைகளிலிருந்து வெளியாவது மில்லை; யாதொரு பெண்ணும் கர்ப்பமாவதுமில்லை; அவள் பிரசவிப்பது மில்லை; மேலும், என்னுடைய இணையாளர்கள் எங்கே? என்று அவன் அவர்களை அழைக்கும் நாளில்,"எங்களில்(அதற்கு)சாட்சி கூறுவோர் ஒருவருமே இல்லையென்று நாங்கள் உனக்கு அறிவித்துவிடுகின்றோம்" என்று அவர்கள் கூறுவார்கள்.

48. இன்னும்(இதற்கு) முன்னர் அவர்கள் (வணக்கத்திற்குரிய தெய்வங்களென) அழைத்துக் கொண்டிருந்தவை(யாவும்)அவர்களை விட்டு மறைந்து விடும்; தங்களுக்கு(த்தப்பி) ஓடுமிடமும் இல்லை என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

49. (பிரார்த்தித்து) நன்மையைக் கேட்பதில் மனிதன் (ஒரு பொழுதும்) சோர்வடையமாட்டான்; இன்னும் அவனை (ஒரு) தீமை தொடுமானால் அப்பொழுதுஅவன் நம்பிக்கையிழந்தவன், நிராசையானவன்.

50. அவனைத் தொட்டிருந்த கெடுதிக்குப் பின்னர், நம்மிடமிருந்து அருளை அவனுக்கு நாம் சுவைக்கச் செய்தால் இது எனக்குரியதே என்றும், மறுமை நாள் நிலைபெறக்கூடியது என நான் எண்ணவில்லை என்றும், (அவ்வாறு மறுமை ஏற்பட்டு) என் இரட்சகனிடம் நான் திருப்பிக் கொண்டு போகப்பட்டாலும், அவனிடத்தில் நிச்சயமாக எனக்கே நன்மை உண்டு என்றும் திடமாகக்கூறுகிறான்; எனவே, நிராகரித்தோர்க்கு அவர்கள் செய்தவற்றை (அந்நாளில்) நிச்சயமாக நாம் தெரிவிப்போம்; அன்றியும், கடினமான வேதனையிலிருந்து அவர்களை நிச்சயமாக நாம் சுவைக்கச் செய்வோம்.

51. இன்னும், நாம் அருட்கொடையை மனிதனுக்கு நல்கினால் (நம்மை) அவன் புறக்கணித்து, தன் பக்கமே (திரும்பி முற்றிலும் நன்றி செய்யாது) தூரமாகி விடுகிறான். மேலும், அவனை (ஏதும்) கெடுதி தொட்டால், வெகு நீண்ட பிரார்த்தனையுடையவனாகின்றான்.

52. அ(வ் வேதமான)து அல்லாஹ்விடமிருந்துள்ளதாக இருந்து, பின்னர் இதை நீங்கள் நிராகரித்துவிட்டால், (உங்கள் நிலை என்னவாகும். இவ்வாறு) தூரமான பிரிவினையில் இருக்கும் அவனைவிட மிக வழிகெட்டவன் யார் என்பதை எனக்குத் தெரிவியுங்கள் என்று (நபியே!) நீர் கேட்பீராக!

53. நிச்சயமாக (வேதமாகிய) இது, உண்மையானதுதான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் வரையில், (உலகின்)பல பாகங்களிலும், அவர்களிலும் நம்முடைய அத்தாட்சிகளை அவர்களுக்கு நாம் காண்பிப்போம்; (நபியே!) உமதிரட்சகனுக்கு, நிச்சயமாக அவன் ஒவ்வொரு பொருளின் மீதும்(அதுபற்றி நன்கறிந்து) சாட்சியாக இருக்கிறான் என்பது போதுமானதாக இல்லையா?

54. நிச்சயமாக அவர்கள், தங்கள் இரட்சகனை சந்திப்பதைப்பற்றி சந்தேகத்தில் இருக்கிறார்கள் என்பதை (நபியே! நீர் )அறிந்து கொள்வீராக! நிச்சயமாக அவன், ஒவ்வொரு பொருளைப்பற்றியும் (தன் அறிவால்) சூழ்ந்து (அறிந்து) கொண்டிருக்கிறான் என்பதையும் அறிந்து கொள்வீராக!

سُورَةُ الشُّورٰى مَكِّيَّةٌ وَّهِيَ ثَلٰثٌ وَّخَمْسُونَ اٰيَةً وَّخَمْسُ رُكُوعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

حٰمٓ ۝١ عٓسٓقٓ ۝٢ كَذٰلِكَ يُوْحِيْٓ اِلَيْكَ وَاِلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكَ
اللّٰهُ الْعَزِيْزُ الْحَكِيْمُ ۝٣ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ وَهُوَ
الْعَلِيُّ الْعَظِيْمُ ۝٤ تَكَادُ السَّمٰوٰتُ يَتَفَطَّرْنَ مِنْ فَوْقِهِنَّ وَالْمَلٰٓئِكَةُ
يُسَبِّحُوْنَ بِحَمْدِ رَبِّهِمْ وَيَسْتَغْفِرُوْنَ لِمَنْ فِي الْاَرْضِ اَلَآ اِنَّ
اللّٰهَ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ ۝٥ وَالَّذِيْنَ اتَّخَذُوْا مِنْ دُوْنِهٖٓ اَوْلِيَآءَ اللّٰهُ
حَفِيْظٌ عَلَيْهِمْ وَمَآ اَنْتَ عَلَيْهِمْ بِوَكِيْلٍ ۝٦ وَكَذٰلِكَ اَوْحَيْنَآ
اِلَيْكَ قُرْاٰنًا عَرَبِيًّا لِّتُنْذِرَ اُمَّ الْقُرٰى وَمَنْ حَوْلَهَا وَتُنْذِرَ يَوْمَ
الْجَمْعِ لَا رَيْبَ فِيْهِ فَرِيْقٌ فِي الْجَنَّةِ وَفَرِيْقٌ فِي السَّعِيْرِ ۝٧ وَلَوْ
شَآءَ اللّٰهُ لَجَعَلَهُمْ اُمَّةً وَّاحِدَةً وَّلٰكِنْ يُّدْخِلُ مَنْ يَّشَآءُ
فِيْ رَحْمَتِهٖ وَالظّٰلِمُوْنَ مَا لَهُمْ مِّنْ وَّلِيٍّ وَّلَا نَصِيْرٍ ۝٨ اَمِ اتَّخَذُوْا
مِنْ دُوْنِهٖٓ اَوْلِيَآءَ فَاللّٰهُ هُوَ الْوَلِيُّ وَهُوَ يُحْيِ الْمَوْتٰى وَهُوَ
عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۝٩ وَمَا اخْتَلَفْتُمْ فِيْهِ مِنْ شَيْءٍ فَحُكْمُهٗٓ ع ۱ ۹ ۲
اِلَى اللّٰهِ ذٰلِكُمُ اللّٰهُ رَبِّيْ عَلَيْهِ تَوَكَّلْتُ وَاِلَيْهِ اُنِيْبُ ۝١٠

அத்தியாயம் : 42

## அஷ்ஷூரா _ கலந்தாலோசித்தல்

வசனங்கள் : 53 மக்கீ ருகூஉகள் : 5

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. ஹா மீம்

2. அய்ன் ஸீன் காஃப்

3. ( நபியே! யாவரையும்) மிகைத்தவனான; தீர்க்கமான அறிவுடையவனான அல்லாஹ் உமக்கும், உமக்கு முன்னிருந்தவர்களுக்கும் இவ்வாறே (தன்னுடைய வசனங்களை) வஹீ மூலம் அறிவிக்கிறான்.

4. வானங்களிலுள்ளவைகளும், பூமியிலுள்ளவைகளும் அவனுக்கே உரியவையாகும்; (யாவரையும் விட) அவனே மிக்க உயர்வானவன்; மிக மகத்தானவன்.

5. (அல்லாஹ்வின் மகத்துவத்தால்) வானங்கள் _அவற்றின் மேற்புறத்திலிருந்து பிளந்துவிட சமீபிக்கும்; மலக்குகளும் (பயந்து) தங்களிரட்சகனின் புகழைக் கொண்டு துதி செய்து, பூமியில் உள்ளவர்களுக்காக பாவமன்னிப்புத் தேடுகின்றனர்; நிச்சயமாக அல்லாஹ்வே, மிக்க மன்னிப்பவன்; மிக்க கிருபையுடையோன் என்பதை( நபியே! நீர்) அறிந்துகொள்வீராக!

6. அன்றியும், அவனைத்தவிர (தங்களுக்குப்) பாதுகாவலர்களாக எடுத்துக் கொண்டார்களே அத்தகையவர்கள்_ அல்லாஹ் அவர்(களின் செயல்)களை கவனித்தவனாக இருக்கின்றான்; (நபியே!) அவர்கள்(காரியத்தின்)மீது நீர் பொறுப்பாளரும் அல்லர்.

7. மேலும் அவ்வாறே " நகரங்களின் தாய் (ஆகிய மக்காவில் உள்ளோரு) க்கும், அதைச் சூழ உள்ளோர்(ராகிய அகிலத்தார் யாவ)ருக்கும், நீர் அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும், அதில் சந்தேகத்திற்கிடமின்றி (மனிதர்கள்) ஒன்று திரட்டப்படும்(மறுமை) நாளைப்பற்றியும் நீர் அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும் அரபி (மொழி) க் குர்ஆனை உமக்கு நாம் (வஹீயின் மூலம்) அறிவித்தோம். (அந்நாளில்) ஒரு கூட்டத்தார் சுவனத்திலும், ஒரு கூட்டத்தார் நரகத்திலும் (இருப்பார்கள்).

8. அன்றியும் அல்லாஹ் நாடியிருந்தால், அவர்களை (ஒரே மார்க்கத்தையுடைய) ஒரே சமுதாயத்தினராக ஆக்கியிருப்பான்; எனினும், தான் நாடியவர்களை தன் அருளில் அவன் புகச்செய்வான்; அநியாயக்காரர்களோ_ அவர்களுக்குப் பாதுகாவலனும் இல்லை;எந்த உதவியாளனும் இல்லை.

9. (நபியே! அல்லாஹ்வாகிய) அவனைத்தவிர (வேறு) பாதுகாவலர்களை அவர்கள் எடுத்துக்கொண்டனரா?(அது சரியல்ல) ஆகவே, அல்லாஹ் அவன்(ஒருவன்)தான் (உண்மையான) பாதுகாவலன்; அவனே மரணித்தோரை உயிர்ப்பிக்கிறான்; அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

10. இன்னும்(நபியே! அவர்களிடம் நீர் கூறுவீராக!) நீங்கள் எவ்விஷயத்தில் கருத்து வேறுபாடுகொண்டிருக்கிறீர்களோ,அதன்தீர்ப்பு அல்லாஹ்வின் பக்கமே இருக்கின்றது; அந்த அல்லாஹ்தான் என் இரட்சகன்; அவன்மீதே (என்னுடைய காரியங்களை ஒப்படைத்துமுழுமையாக) நம்பிக்கை வைக்கிறேன்; இன்னும் அவனளவிலேயே (வழிபட்டு) நான் திரும்புவேன்.

فَاطِرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ جَعَلَ لَكُمْ مِّنْ اَنْفُسِكُمْ اَزْوَاجًا وَّ
مِنَ الْاَنْعَامِ اَزْوَاجًا ۚ يَذْرَؤُكُمْ فِيْهِ ؕ لَيْسَ كَمِثْلِهٖ شَيْءٌ ۚ وَهُوَ
السَّمِيْعُ الْبَصِيْرُ ﴿۱۱﴾ لَهٗ مَقَالِيْدُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ يَبْسُطُ
الرِّزْقَ لِمَنْ يَّشَآءُ وَيَقْدِرُ ؕ اِنَّهٗ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ﴿۱۲﴾ شَرَعَ لَكُمْ
مِّنَ الدِّيْنِ مَا وَصّٰى بِهٖ نُوْحًا وَّالَّذِيْٓ اَوْحَيْنَآ اِلَيْكَ وَمَا
وَصَّيْنَا بِهٖٓ اِبْرٰهِيْمَ وَمُوْسٰى وَعِيْسٰٓى اَنْ اَقِيْمُوا الدِّيْنَ وَ
لَا تَتَفَرَّقُوْا فِيْهِ ؕ كَبُرَ عَلَى الْمُشْرِكِيْنَ مَا تَدْعُوْهُمْ اِلَيْهِ ؕ اَللّٰهُ
يَجْتَبِيْٓ اِلَيْهِ مَنْ يَّشَآءُ وَيَهْدِيْٓ اِلَيْهِ مَنْ يُّنِيْبُ ﴿۱۳﴾ وَمَا
تَفَرَّقُوْٓا اِلَّا مِنْۢ بَعْدِ مَا جَآءَهُمُ الْعِلْمُ بَغْيًۢا بَيْنَهُمْ ؕ وَلَوْلَا
كَلِمَةٌ سَبَقَتْ مِنْ رَّبِّكَ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى لَّقُضِيَ بَيْنَهُمْ ؕ وَ
اِنَّ الَّذِيْنَ اُوْرِثُوا الْكِتٰبَ مِنْۢ بَعْدِهِمْ لَفِيْ شَكٍّ مِّنْهُ مُرِيْبٍ ﴿۱۴﴾
فَلِذٰلِكَ فَادْعُ ۚ وَاسْتَقِمْ كَمَآ اُمِرْتَ ۚ وَلَا تَتَّبِعْ اَهْوَآءَهُمْ ۚ
وَقُلْ اٰمَنْتُ بِمَآ اَنْزَلَ اللّٰهُ مِنْ كِتٰبٍ ۚ وَاُمِرْتُ لِاَعْدِلَ
بَيْنَكُمْ ؕ اَللّٰهُ رَبُّنَا وَرَبُّكُمْ ؕ لَنَآ اَعْمَالُنَا وَلَكُمْ اَعْمَالُكُمْ ؕ لَا
حُجَّةَ بَيْنَنَا وَبَيْنَكُمْ ؕ اَللّٰهُ يَجْمَعُ بَيْنَنَا ۚ وَاِلَيْهِ الْمَصِيْرُ ؕ ﴿۱۵﴾

11.(அவனே) வானங்களையும், பூமியையும் புதிதாகப் படைத்தவன்; உங்களுக்காக உங்களிலிருந்தே ஜோடி(களான மனைவி)களையும், கால்நடைகளிலிருந்து ஜோடிகளையும் அவன் ஆக்கி, அதைக்கொண்டு (இன உற்பத்திகளை இவ்வாறே பெருக்கி) உங்களை அவன் அதில் பரவச் செய்கிறான்; அவனைப்போன்று எப்பொருளும் இல்லை; அவனே (யாவற்றையும்) செவியேற்கிறவன்; பார்க்கிறவன்.

12. வானங்கள் மற்றும் பூமியின் (களஞ்சியங்களின்) சாவிகள் அவனுக்கே உரியதாகும். அவன் நாடியவர்களுக்கு உணவை (சம்பத்தை) விரிவாக்குகின்றான்; அளவோடும் கொடுக்கிறான்; நிச்சயமாக அவன், ஒவ்வொரு பொருளைப் பற்றியும் நன்கறிகிறவன்.

13. (விசுவாசிகளே!) மார்க்கத்திலிருந்து நூஹ்வுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கு அவன் மார்க்கமாக்கி இருக்கின்றான்; ஆகவே, (நபியே!) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவித்ததும், இப்றாஹீம், மூஸா, ஈஸா ஆகியோருக்கு நாம் உபதேசித்ததும் (என்னவென்றால்) "நீங்கள் (ஏகதெய்வக் கொள்கையுடைய சத்திய) மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள்; நீங்கள் அதில் பிரிந்தும்விடாதீர்கள் (என்பதேயாகும்); ஆகவே இணைவைத்துக்கொண்டிருப் போர்களுக்கு, அவர்களை எதன் பால் நீர் அழைக்கின்றீரோ அது பளுவாகத் தெரிகிறது. அல்லாஹ் தான் நாடியவர்களை தன்பக்கம் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்; அவன் பக்கம் மீள்வோருக்கு நேர் வழியும் காட்டுகிறான்.

14. அவர்கள் தங்களுக்கிடையிலுள்ள பொறாமையால் தங்களிடம் (வேத) அறிவு வந்த பின்னரே தவிர, (இம்மார்க்கத்தில்) அவர்கள் பிரிந்துவிடவில்லை. (அவர்களுக்குரிய தீர்ப்பு) ஒருகுறிப்பிடப்பட்ட தவணைவரைதான் என்று உமதி ரட்சகனுடைய வாக்கு முந்தியிருக்காவிடில், அவர்களுக்கிடையில் (இதுவரை) தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும்; இன்னும் நிச்சயமாக அவர்களுக்குப் பின்னர், அவ்வேதத்திற்கு அனந்தரக்காரர்களாக ஆக்கப்பட்டார்களே, அத்தகையோர் அ(வ்வேதத்)திலிருந்து அவநம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய சந்தேகத்தில் இருக்கிறார்கள்.

15. ஆகவே, அதற்காக(சத்தியமார்க்கத்தின்பால் அவர்களை) நீர் அழைப்பீராக! நீர் ஏவப்பட்ட பிரகாரம் நிலைத்தும் நிற்பீராக! அவர்களுடைய மனோ இச்சைகளையும் நீர் பின்பற்றாதீர்; இன்னும், (அவர்களிடம்) நீர் கூறுவீராக: "அல்லாஹ் வேதத்திலிருந்து எதனை இறக்கி வைத்தானோ, அதனையே நான் விசுவாசிக்கின்றேன்; உங்களுக்கிடையில் நீதமாகவே தீர்ப்பளிக்குமாறு நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்; அல்லாஹ் (தான்) எங்கள் இரட்சகனும் உங்கள் இரட்சகனுமாவான்; எங்கள் செயல்கள் எங்களுக்கு; உங்கள் செயல்களோ உங்களுக்கு; எங்களுக்கிடையிலும் உங்களுக்கிடையிலும் யாதொரு தர்க்கமும் இல்லை; நம்மிடையே (மறுமையில்) அல்லாஹ் ஒன்று சேர்ப்பான்; அவன்பக்கமே (நாம் யாவரும்) திரும்பிச் செல்ல வேண்டியதிருக்கிறது.

وَالَّذِيْنَ يُحَاۤجُّوْنَ فِى اللّٰهِ مِنْۢ بَعْدِ مَا اسْتُجِيْبَ لَهٗ حُجَّتُهُمْ
دَاحِضَةٌ عِنْدَ رَبِّهِمْ وَعَلَيْهِمْ غَضَبٌ وَّلَهُمْ عَذَابٌ شَدِيْدٌ ﴿۱۶﴾
اَللّٰهُ الَّذِىْۤ اَنْزَلَ الْكِتٰبَ بِالْحَقِّ وَالْمِيْزَانَ ؕ وَمَا يُدْرِيْكَ
لَعَلَّ السَّاعَةَ قَرِيْبٌ ﴿۱۷﴾ يَسْتَعْجِلُ بِهَا الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ
بِهَا ۚ وَالَّذِيْنَ اٰمَنُوْا مُشْفِقُوْنَ مِنْهَا ۙ وَيَعْلَمُوْنَ اَنَّهَا الْحَقُّ ؕ
اَلَاۤ اِنَّ الَّذِيْنَ يُمَارُوْنَ فِى السَّاعَةِ لَفِىْ ضَلٰلٍۭ بَعِيْدٍ ﴿۱۸﴾
اَللّٰهُ لَطِيْفٌۢ بِعِبَادِهٖ يَرْزُقُ مَنْ يَّشَاۤءُ ۚ وَهُوَ الْقَوِىُّ الْعَزِيْزُ ﴿۱۹﴾ ع ۲
مَنْ كَانَ يُرِيْدُ حَرْثَ الْاٰخِرَةِ نَزِدْ لَهٗ فِىْ حَرْثِهٖ ۚ وَمَنْ
كَانَ يُرِيْدُ حَرْثَ الدُّنْيَا نُؤْتِهٖ مِنْهَا ۙ وَمَا لَهٗ فِى الْاٰخِرَةِ
مِنْ نَّصِيْبٍ ﴿۲۰﴾ اَمْ لَهُمْ شُرَكٰۤؤُا شَرَعُوْا لَهُمْ مِّنَ الدِّيْنِ
مَا لَمْ يَاْذَنْۢ بِهِ اللّٰهُ ؕ وَلَوْلَا كَلِمَةُ الْفَصْلِ لَقُضِىَ بَيْنَهُمْ ؕ
وَاِنَّ الظّٰلِمِيْنَ لَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿۲۱﴾ تَرَى الظّٰلِمِيْنَ
مُشْفِقِيْنَ مِمَّا كَسَبُوْا وَهُوَ وَاقِعٌۢ بِهِمْ ؕ وَالَّذِيْنَ
اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ فِىْ رَوْضٰتِ الْجَنّٰتِ ۚ لَهُمْ مَّا
يَشَاۤءُوْنَ عِنْدَ رَبِّهِمْ ؕ ذٰلِكَ هُوَ الْفَضْلُ الْكَبِيْرُ ﴿۲۲﴾

16. இன்னும், அல்லாஹ்வி(ன் விஷயத்தி)ல் (விசுவாசிகளால்) அவனது அழைப்பிற்கு பதில் கூறப்பட்டபின்னர் தர்க்கித்துக் கொண்டிருக்கிறார்களே அத்தகையோர்_ அவர்களுடைய தர்க்கம் அவர்களின் இரட்சகனிடம் வீணானதாகும்; அவர்களின்மீது (அல்லாஹ்வின்) கோபமும் உண்டு, கடினமான வேதனையும் அவர்களுக்குண்டு.

17. அல்லாஹ் எத்தகையவனென்றால், அவன்தான் உண்மையைக்கொண்டு (இவ்) வேதத்தையும், நீதத்தையும் இறக்கிவைத்தான்; (நபியே!) மறுமை நாள் சமீபத்தில் இருக்கலாம் என உமக்கு அறிவிப்பது எது?

18. (மறுமைநாளான) அதனை நம்பிக்கைக் கொள்ளாதவர்கள் அதைப்பற்றி (எப்போது வரும், என்று) அவசரப்படுகின்றனர்; மேலும், விசுவாசம் கொண்டார்களே அத்தகையவர்கள் அதனைப்பற்றி பயந்தவர்களாக இருக்கின்றார்கள்; இன்னும் நிச்சயமாக, அது (வருவது) உண்மைதான் என்றும் அவர்கள் அறிவார்கள்; நிச்சயமாக மறுமையைப்பற்றி சந்தேகத்தி லிருக்கின்றார்களே அத்தகையவர்கள், வெகு தூரமான வழிகேட்டில்தான் இருக்கிறார்கள் என்பதை(நபியே! நீர்) அறிந்துகொள்வீராக.

19. அல்லாஹ், தன் அடியார்களை அன்பாகக் கவனித்து வருபவன். (ஆகவே) அவன் நாடியவர்களுக்கு (வேண்டிய) உணவளிக்கிறான்; அவனே பலமிக்கவன் (யாவரையும்)மிகைத்தோன்.

20. (தன் செயலின் மூலம் ) எவர் மறுமையின் விளைச்சலை (பயனை) நாடுகின்றாரோ, அவருடைய விளைச்சலில் நாம் அவருக்காக அதிகப்படுத்து வோம்; இன்னும் எவர் இம்மையின் விளைச்சலை_(பயனை மட்டும்) நாடுகின்றாரோ, நாம் அவருக்கு அதிலிருந்து கொடுக்கின்றோம்; அவருக்கு மறுமையில் யாதொரு பாத்தியதையுமில்லை.

21. மார்க்கத்தில் அல்லாஹ் எதற்கு அனுமதியளிக்கவில்லையோ அதை அவர்களுக்கு மார்க்கமாக்கி வைக்கக்கூடிய இணையாளர்கள் அவர்களுக்கு இருக்கின்றார்களா? (கூலி கொடுப்பது மறுமை நாளில்தான் என்ற) தீர்ப்புப்பற்றிய (அல்லாஹ்வுடைய) வாக்கு இல்லாதிருந்தால், அவர்களுக் கிடையில் (இது வரையில்) தீர்ப்பளிக்கப்பட்டே இருக்கும்; நிச்சயமாக (இத்தகைய)அநியாயக்காரர்கள்_அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை உண்டு.

22. (நபியே!) அநியாயக்காரர்களை_ தாங்கள் சம்பாதித்ததிலிருந்து (தங்களுக்கு என்ன ஏற்படுமோ என) பயந்து கொண்டிருப்பவர்களாக (அந்நாளில்) நீர் காண்பீர். அதுவோ அவர்களுக்கு நிகழக்கூடியதாக உள்ளது; இன்னும் விசுவாசங்கொண்டு, நற்கருமங்களும் செய்கின்றார்களே அத்தகையவர்கள், சுவனபதிகளின் பூங்காவனங்களில் இருப்பார்கள்; அவர்களுடைய இரட்சக னிடத்தில் அவர்கள் நாடியவை அவர்களுக்குண்டு; அதுவே மிகப்பெரும் பேரருளாகும்.

ذٰلِكَ الَّذِيْ يُبَشِّرُ اللّٰهُ عِبَادَهُ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ ؕ
قُلْ لَّآ اَسْـَٔلُكُمْ عَلَيْهِ اَجْرًا اِلَّا الْمَوَدَّةَ فِي الْقُرْبٰى ؕ وَمَنْ يَّقْتَرِفْ
حَسَنَةً نَّزِدْ لَهٗ فِيْهَا حُسْنًا ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ شَكُوْرٌ ﴿۲۳﴾ اَمْ يَقُوْلُوْنَ
افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا ۚ فَاِنْ يَّشَاِ اللّٰهُ يَخْتِمْ عَلٰى قَلْبِكَ ؕ وَيَمْحُ
اللّٰهُ الْبَاطِلَ وَيُحِقُّ الْحَقَّ بِكَلِمٰتِهٖ ؕ اِنَّهٗ عَلِيْمٌۢ بِذَاتِ الصُّدُوْرِ ﴿۲۴﴾
وَهُوَ الَّذِيْ يَقْبَلُ التَّوْبَةَ عَنْ عِبَادِهٖ وَيَعْفُوْا عَنِ السَّيِّاٰتِ
وَيَعْلَمُ مَا تَفْعَلُوْنَ ﴿۲۵﴾ وَيَسْتَجِيْبُ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ
وَيَزِيْدُهُمْ مِّنْ فَضْلِهٖ ؕ وَالْكٰفِرُوْنَ لَهُمْ عَذَابٌ شَدِيْدٌ ﴿۲۶﴾ وَلَوْ
بَسَطَ اللّٰهُ الرِّزْقَ لِعِبَادِهٖ لَبَغَوْا فِي الْاَرْضِ وَلٰكِنْ يُّنَزِّلُ بِقَدَرٍ
مَّا يَشَآءُ ؕ اِنَّهٗ بِعِبَادِهٖ خَبِيْرٌۢ بَصِيْرٌ ﴿۲۷﴾ وَهُوَ الَّذِيْ يُنَزِّلُ الْغَيْثَ
مِنْۢ بَعْدِ مَا قَنَطُوْا وَيَنْشُرُ رَحْمَتَهٗ ؕ وَهُوَ الْوَلِيُّ الْحَمِيْدُ ﴿۲۸﴾ وَ
مِنْ اٰيٰتِهٖ خَلْقُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَثَّ فِيْهِمَا مِنْ دَآبَّةٍ ؕ
وَهُوَ عَلٰى جَمْعِهِمْ اِذَا يَشَآءُ قَدِيْرٌ ﴿۲۹﴾ ع وَمَآ اَصَابَكُمْ مِّنْ مُّصِيْبَةٍ فَبِمَا ع ٣ ١٤
كَسَبَتْ اَيْدِيْكُمْ وَيَعْفُوْا عَنْ كَثِيْرٍ ؕ ﴿۳۰﴾ وَمَآ اَنْتُمْ بِمُعْجِزِيْنَ
فِي الْاَرْضِ ۚۖ وَمَا لَكُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ مِنْ وَّلِيٍّ وَّلَا نَصِيْرٍ ﴿۳۱﴾

23. விசுவாசங்கொண்டு, நற்கருமங்களும் செய்த தன் அடியார்களுக்கு அல்லாஹ் நன்மாராயங்கூறுவதும் அதுவே! (நபியே!) நீர் கூறுவீராக: "பந்துக்களில் நட்பைத் தவிர இதற்காக நான் யாதொரு கூலியையும் கேட்கவில்லை;" எவர் ஒரு நன்மை செய்கிறாரோ அவருக்கு நாம் அதில் (மேலும்) நன்மையை அதிகப்படுத்துவோம்; நிச்சயமாக அல்லாஹ், மிக்க மன்னிக்கிறவன், நன்றி பாராட்டுகிறவன்.

24. (நபியே!) அல்லாஹ்வின் மீது அவர் பொய்யைக் கற்பனை செய்(து கூறு)கிறார் என்று அவர்கள் (உம்மைப்பற்றிக் )கூறுகின்றார்களா? அல்லாஹ் நாடினால், உமது இதயத்தில் முத்திரையிட்டுவிடுவான்; அல்லாஹ்வோ பொய்யை அழித்துவிடுகிறான்; இன்னும், தன் வார்த்தைகளைக்கொண்டு உண்மையை நிலைநிறுத்துவான்; நிச்சயமாக அவன், நெஞ்சங்களில் உள்ளவைகளை நன்கறிகிறவன்.

25. மேலும் அவன் எத்தகையவனென்றால், தன் அடியார்களின் தவ்பாவை (_பாவமீட்சியை) அவனே ஏற்றுக்கொள்கிறான்; தீயவைகளை மன்னித்தும் விடுகின்றான்; நீங்கள் செய்பவைகளையும் அவன் நன்கறிகிறான்.

26. அன்றியும் விசுவாசங்கொண்டு, நற்கருமங்களும் செய்தோர் (களின் பிரார்த்தனை) களுக்கும் பதிலளித்து, தன்னுடைய பேரருளிலிருந்து (இன்னும்) அவர்களுக்கு அதிகப்படுத்துகின்றான்; இன்னும் நிராகரிப்போர்_அவர்களுக்குக் கடினமான வேதனையுண்டு.

27. அல்லாஹ் தன் அடியார்களுக்கு (அவர்களின் தேவைக்குமேல்) உணவை(சம்பத்தை) விரிவாக்கி(க் கொடுத்து)விட்டால், அவர்கள் பூமியில் அட்டூழியம் செய்துவிடுவார்கள். எனினும், (அவர்களின் தேவைக்குத் தக்கவாறு) தான் நாடிய அளவைக்கொண்டு (வானத்திலிருந்து) இறக்கிவைக்கிறான்; நிச்சயமாக அவன், தன் அடியார்களைப்பற்றி நன்கு உணர்பவன்; (அவர்களுடைய செயலைப்)பார்க்கிறவன்.

28. இன்னும், அவன் எத்தகையவனென்றால், அவர்கள் நிராசையடைந்து விட்டபின்னர், மழையை அவன் இறக்கிவைக்கின்றான்; மேலும், தன்னுடைய அருளைப் பரப்புகிறான். அவனே புகழுக்குரிய பாதுகாவலன்.

29. வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதும், ஊர்வனவற்றிலிருந்து அவை இரண்டிலும் பரவச் செய்திருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்; இன்னும், அவன் நாடிய போது (அவை இறந்தபின்னர்) அவைகளை ஒன்று சேர்ப்பதின் மீது ஆற்றலுடையவன்.

30. மேலும், துன்பத்தால் எது உங்களை வந்தடைந்தாலும், உங்கள் கரங்கள் சம்பாதித்துக் கொண்ட(காரணத்)தினாலாகும். (உங்களைப் பிடிக்க வேண்டியவற்றிலிருந்து) பெரும்பாலானவற்றை அவன் மன்னித்தும் விடுகிறான்.

31. நீங்களோ பூமியில் (அல்லாஹ்வாகிய அவனை) இயலாமையில் ஆக்கிவிடுபவர்களல்லர்; மேலும், அல்லாஹ்வையன்றி, உங்களுக்கு எந்த பாதுகாவலனும், உதவிபுரிபவனும் இல்லை.

وَمِنْ اٰیٰتِهِ الْجَوَارِ فِی الْبَحْرِ كَالْاَعْلَامِ ﴿۳۲﴾ اِنْ یَّشَاْ یُسْكِنِ الرِّیْحَ
فَیَظْلَلْنَ رَوَاكِدَ عَلٰی ظَهْرِهٖ ؕ اِنَّ فِیْ ذٰلِكَ لَاٰیٰتٍ لِّكُلِّ صَبَّارٍ
شَكُوْرٍ ﴿۳۳﴾ اَوْ یُوْبِقْهُنَّ بِمَا كَسَبُوْا وَ یَعْفُ عَنْ كَثِیْرٍ ﴿۳۴﴾ وَّ یَعْلَمَ
الَّذِیْنَ یُجَادِلُوْنَ فِیْۤ اٰیٰتِنَا ؕ مَا لَهُمْ مِّنْ مَّحِیْصٍ ﴿۳۵﴾ فَمَاۤ اُوْتِیْتُمْ
مِّنْ شَیْءٍ فَمَتَاعُ الْحَیٰوةِ الدُّنْیَا ۚ وَ مَا عِنْدَ اللّٰهِ خَیْرٌ وَّ اَبْقٰی
لِلَّذِیْنَ اٰمَنُوْا وَ عَلٰی رَبِّهِمْ یَتَوَكَّلُوْنَ ﴿۳۶﴾ وَ الَّذِیْنَ یَجْتَنِبُوْنَ
كَبٰٓئِرَ الْاِثْمِ وَ الْفَوَاحِشَ وَ اِذَا مَا غَضِبُوْا هُمْ یَغْفِرُوْنَ ﴿۳۷﴾ ۚ
وَ الَّذِیْنَ اسْتَجَابُوْا لِرَبِّهِمْ وَ اَقَامُوا الصَّلٰوةَ ۪ وَ اَمْرُهُمْ شُوْرٰی
بَیْنَهُمْ ۪ وَ مِمَّا رَزَقْنٰهُمْ یُنْفِقُوْنَ ﴿۳۸﴾ ۚ وَ الَّذِیْنَ اِذَاۤ اَصَابَهُمُ
الْبَغْیُ هُمْ یَنْتَصِرُوْنَ ﴿۳۹﴾ وَ جَزٰٓؤُا سَیِّئَةٍ سَیِّئَةٌ مِّثْلُهَا ۚ
فَمَنْ عَفَا وَ اَصْلَحَ فَاَجْرُهٗ عَلَی اللّٰهِ ؕ اِنَّهٗ لَا یُحِبُّ الظّٰلِمِیْنَ ﴿۴۰﴾
وَ لَمَنِ انْتَصَرَ بَعْدَ ظُلْمِهٖ فَاُولٰٓئِكَ مَا عَلَیْهِمْ مِّنْ
سَبِیْلٍ ﴿۴۱﴾ ؕ اِنَّمَا السَّبِیْلُ عَلَی الَّذِیْنَ یَظْلِمُوْنَ النَّاسَ وَ
یَبْغُوْنَ فِی الْاَرْضِ بِغَیْرِ الْحَقِّ ؕ اُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ
اَلِیْمٌ ﴿۴۲﴾ وَ لَمَنْ صَبَرَ وَ غَفَرَ اِنَّ ذٰلِكَ لَمِنْ عَزْمِ الْاُمُوْرِ ﴿۴۳﴾ ع ۴ ۵

32. இன்னும், மலைகளைப்போன்று கடலில் செல்லும் கப்பல்களும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்.

33. அவன் நாடினால் காற்றை நிறுத்திவிடுவான்; அப்போது அதன் மேல் பரப்பின் மீது (இருந்தவாறே அசைவற்று) நின்றவையாக அவை ஆகிவிடும்; அதிகமாகப் பொறுமை கொள்வோர், நன்றி செலுத்துவோர் ஆகிய ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

34. அல்லது அவர்கள் தேடிக் கொண்ட (தீ) வினையின் காரணமாக, அவைகளை(க் கடலில்) அவன் (மூழ்கடிக்கச் செய்து)அழித்துவிடுவான்; (அவர்கள் செய்த பாவங்களில்) அனேகவற்றை அவன் மன்னித்தும் விடுகின்றான்.

35. மேலும், நம்முடைய அத்தாட்சிகளில் தர்க்கம் செய்கின்றார்களே அத்தகையோர்(நம்முடைய பிடியிலிருந்து) தப்ப அவர்களுக்கு எந்த வழியுமில்லை என்பதை அறிந்து கொள்வார்கள்.

36. ஆகவே, எப்பொருளிலிருந்தும் நீங்கள் கொடுக்கப்பட்டிருப்பது (நிலையற்ற) இவ்வுலக வாழ்க்கையின் (அற்ப) சுகங்களே! விசுவாசங்கொண்டு, தங்கள் இரட்சகனின் மீது (தங்கள் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைப்போருக்கு, அல்லாஹ்விடத்தில் உள்ளது மிக்க மேலானதும், மிக நிலையானதுமாகும்.

37. மேலும்,அவர்கள் எத்தகையோரென்றால் பெரும் பாவங்களையும்,மானக்கேடான விஷயங்களையும் தவிர்த்துக்கொள்வர்; இன்னும் அவர்களுக்குக் கோபம் ஏற்பட்டால் (பழி தீர்க்காது)மன்னித்து விடுவார்கள்.

38. இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் இரட்சகனின் கட்டளைகளை ஏற்று தொழுகையையும் நிறைவேற்றுவார்கள்;(இத்தகையோர்) இவர்களின் காரியமோ தங்களுக்குள் கலந்தாலோசித்தலாக இருக்கும்; நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து (தர்மமாகச்) செலவும் செய்வார்கள்.

39. இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், அவர்களுக்கு (மற்றவர்களால்) அக்கிரமம் ஏற்பட்டால், அதற்கு அவர்கள் (வரம்பு மீறாமல் தனக்கு அக்கிரமம் செய்தவர்களைத் தண்டிப்பதில்) உதவி பெறுவர்.

40. தீமைக்குக் கூலி (யாக) அதைப் போன்ற தீமையேயாகும்; ஆனால் எவரேனும் (பிறரின் அக்கிரமத்தை) மன்னித்து (அவருடன்) சமாதானம் செய்து கொண்டால், அவருடைய கூலி அல்லாஹ்வின் மீது ( கடமையாக ) இருக்கின்றது ; நிச்சயமாக , அவன் (இதற்கு மாறாக) அநியாயம் செய்வோர்களை நேசிக்க மாட்டான்.

41. இன்னும் எவர், தமக்கு அக்கிரமம் இழைக்கப்பட்ட பின் (அதே அளவு பழி தீர்த்துக் கொள்வதற்கு)உதவி பெற்றுக்கொண்டாரோ_ அத்தகையோர் அவர்களின் மீது (குற்றம் சுமத்த) யாதொரு வழியும் இல்லை.

42. (குற்றம் சுமத்த ) வழி ஏற்படுவதெல்லாம் மனிதர்களுக்கு அநியாயம் செய்து நியாயமின்றி பூமியில் கொடுமை செய்கிறார்களே, அவர்கள் மீது தான்; அத்தகையோர்_ அவர்களுக்கு மிகத்துன்புறுத்தும் வேதனையுண்டு.

43. மேலும், எவரொருவர் (பிறரால் பாதிக்கப்பட்ட பின்) பொறுத்துக் கொண்டு, மன்னித்தும்விட்டால், நிச்சயமாக இது, காரியங்களில் மிக்க உறுதியானதாகும்.

وَمَنۡ يُّضۡلِلِ اللّٰهُ فَمَا لَهٗ مِنۡ وَّلِىٍّ مِّنۡۢ بَعۡدِهٖ‌ ؕ وَتَرَى الظّٰلِمِيۡنَ
لَمَّا رَاَوُا الۡعَذَابَ يَقُوۡلُوۡنَ هَلۡ اِلٰى مَرَدٍّ مِّنۡ سَبِيۡلٍ‌ۚ ﴿۴۴﴾ وَتَرٰٮهُمۡ
يُعۡرَضُوۡنَ عَلَيۡهَا خٰشِعِيۡنَ مِنَ الذُّلِّ يَنۡظُرُوۡنَ مِنۡ طَرۡفٍ خَفِىٍّ‌ ؕ
وَقَالَ الَّذِيۡنَ اٰمَنُوۡۤا اِنَّ الۡخٰسِرِيۡنَ الَّذِيۡنَ خَسِرُوۡۤا اَنۡفُسَهُمۡ وَاَهۡلِيۡهِمۡ
يَوۡمَ الۡقِيٰمَةِ‌ ؕ اَلَاۤ اِنَّ الظّٰلِمِيۡنَ فِىۡ عَذَابٍ مُّقِيۡمٍ ﴿۴۵﴾ وَمَا كَانَ لَهُمۡ
مِّنۡ اَوۡلِيَآءَ يَنۡصُرُوۡنَهُمۡ مِّنۡ دُوۡنِ اللّٰهِ‌ ؕ وَمَنۡ يُّضۡلِلِ اللّٰهُ فَمَا لَهٗ
مِنۡ سَبِيۡلٍؕ ﴿۴۶﴾ اِسۡتَجِيۡبُوۡا لِرَبِّكُمۡ مِّنۡ قَبۡلِ اَنۡ يَّاۡتِىَ يَوۡمٌ لَّا مَرَدَّ لَهٗ
مِنَ اللّٰهِ‌ ؕ مَا لَـكُمۡ مِّنۡ مَّلۡجَاٍ يَّوۡمَـئِذٍ وَّمَا لَـكُمۡ مِّنۡ نَّكِيۡرٍ ﴿۴۷﴾ فَاِنۡ اَعۡرَضُوۡا
فَمَاۤ اَرۡسَلۡنٰكَ عَلَيۡهِمۡ حَفِيۡظًا ؕ اِنۡ عَلَيۡكَ اِلَّا الۡبَلٰغُ‌ ؕ وَاِنَّاۤ اِذَاۤ اَذَقۡنَا
الۡاِنۡسَانَ مِنَّا رَحۡمَةً فَرِحَ بِهَا‌ ۚ وَاِنۡ تُصِبۡهُمۡ سَيِّئَةٌ ۢ بِمَا قَدَّمَتۡ
اَيۡدِيۡهِمۡ فَاِنَّ الۡاِنۡسَانَ كَفُوۡرٌ ﴿۴۸﴾ لِلّٰهِ مُلۡكُ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ‌ ؕ
يَخۡلُقُ مَا يَشَآءُ‌ ؕ يَهَبُ لِمَنۡ يَّشَآءُ اِنَاثًا وَّيَهَبُ لِمَنۡ يَّشَآءُ الذُّكُوۡرَ ۙ ﴿۴۹﴾
اَوۡ يُزَوِّجُهُمۡ ذُكۡرَانًا وَّاِنَاثًا‌ ۚ وَيَجۡعَلُ مَنۡ يَّشَآءُ عَقِيۡمًا‌ ؕ اِنَّهٗ عَلِيۡمٌ
قَدِيۡرٌ ﴿۵۰﴾ وَمَا كَانَ لِبَشَرٍ اَنۡ يُّكَلِّمَهُ اللّٰهُ اِلَّا وَحۡيًا اَوۡ مِنۡ وَّرَآىٴِ
حِجَابٍ اَوۡ يُرۡسِلَ رَسُوۡلًا فَيُوۡحِىَ بِاِذۡنِهٖ مَا يَشَآءُ‌ ؕ اِنَّهٗ عَلِىٌّ حَكِيۡمٌ ﴿۵۱﴾

44. இன்னும் எவரை அல்லாஹ் தவறான வழியில் விட்டுவிடுகிறானோ அதற்குப் பின்னர், அவருக்குப் பாதுகாவலர் எவருமில்லை; மேலும், (நபியே! வரம்பு மீறி) அநியாயம் செய்தவர்கள், வேதனையைக் கண்டுவிட்ட சமயத்தில், "(அங்கிருந்து)திரும்பிச் செல்ல ஏதாகிலும் வழியுண்டா?" என்று அவர்கள் கூறுவதை நீர் காண்பீர்.

45. இன்னும், சிறுமையினால் (தலை தாழ்த்திப்) பணிந்தவர்களாக, மறைவாகக் கடைக் கண்ணால் நோட்டமிட்டவர்களாக (நரகமாகிய) அதன் மீது அவர்கள் எடுத்துக்காட்டப்படுபவர்களாக அவர்களை (நபியே! நீர் ) காண்பீர்; இன்னும் விசுவாசங்கொண்டோர், "நிச்சயமாக நஷ்டமடைந்தவர்கள், மறுமை நாளில் தங்களுக்கும், தம் குடும்பத்தினருக்கும் நஷ்டத்தைத் தேடிக் கொண்டவர்கள்தான்" என்று (அப்போது) கூறுவார்கள்; நிச்சயமாக (இத்தகைய) அநியாயக்காரர்கள் நிலையான வேதனையில் இருப்பார்கள் என்பதை அறிந்து கொள்வீராக!

46. (அந்நாளில்) அல்லாஹ்வையன்றி அவர்களுக்கு உதவிசெய்கின்ற பாதுகாவலர்கள் அவர்களுக்கு இருக்கவுமாட்டார்கள்; இன்னும், எவரை அல்லாஹ் வழிகேட்டில் விட்டு விட்டானோ, அவருக்கு ( அதிலிருந்து விடுபட) யாதொரு வழியுமில்லை.

47. அல்லாஹ்விடமிருந்து மற்றெவராலும் தடுக்கமுடியாத (கியாம)நாள் வருவதற்கு முன்னதாகவே, உங்கள் இரட்சகனுக்குப் பதிலளியுங்கள்; அந்நாளில் உங்களுக்கு யாதொரு ஒதுங்கு மிடமும் இராது; (உங்கள் பாவங்களை ) நீங்கள் மறுப்பதும் உங்களுக்கில்லை.

48. ஆகவே, (நபியே!) அவர்கள் புறக்கணித்துவிட்டால் (நீர் கவலையுறாதீர்; ஏனென்றால்,) அவர்களைப் பாதுகாப்போராக நாம் உம்மை அனுப்பவில்லை;(நம் தூதை) எத்தி வைப்பதைத்தவிர (வேறெதுவும்) உம்மீதில்லை; இன்னும், நிச்சயமாக நாம் நம்மிடமிருந்து அருளை மனிதனுக்கு நாம் சுவைக்கச் செய்தால், அதனைக்கொண்டு அவன் மகிழ்ச்சி அடைகிறான்; அவர்களுடைய கரங்கள் முற்படுத்திய(பாவத்தின் காரணத்)தால், அவர்களைத் தீங்கு பீடித்தால், நிச்சயமாக மனிதன் (நன்றி கெட்டவனாகி அல்லாஹ்வையே) நிராகரிப்பவனாக இருக்கிறான்.

49. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியதாகும்; அவன் நாடியவற்றை அவன் படைக்கிறான்; (ஆகவே) அவன் நாடியவர்களுக்குப் பெண் மக்களை அன்பளிப்புச் செய்கிறான்; அவன் நாடியவர்களுக்கு ஆண் மக்களை அன்பளிப்புச் செய்கிறான்.

50. அல்லது, ஆண்மக்களையும், பெண்மக்களையும் கலந்தே கொடுக்கின்றான்; அன்றியும், அவன் நாடியவர்களை மலடாகவும் ஆக்கி விடுகின்றான்; நிச்சயமாக அவன் (யாவற்றையும்) நன்கறிந்தவன்;(தான் விரும்பியதைச் செய்ய)மிக்க ஆற்றலுடையவன்.

51. வஹீயின் மூலமோ, அல்லது திரைக்கு அப்பாலிருந்தோ; அல்லது ஒரு தூதரை அனுப்பியோ தவிர எந்த மனிதருக்கும் அல்லாஹ் அவருடன் பேசுவது (சாத்தியம்) இல்லை.(அத்தூதர்,)அவன் நாடியதை அவன் அனுமதி கொண்டு அவர் அறிவிப்பார்; நிச்சயமாக அவன், மிகஉயர்ந்தவன், தீர்க்கமான அறிவுடையவன்.

وَكَذٰلِكَ اَوْحَيْنَآ اِلَيْكَ رُوْحًا مِّنْ اَمْرِنَا ۭ مَا كُنْتَ تَدْرِيْ مَا الْكِتٰبُ
وَلَا الْاِيْمَانُ وَلٰكِنْ جَعَلْنٰهُ نُوْرًا نَّهْدِيْ بِهٖ مَنْ نَّشَاۗءُ مِنْ عِبَادِنَا ۭ
وَاِنَّكَ لَتَهْدِيْٓ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ۝۵۲ۙ صِرَاطِ اللّٰهِ الَّذِيْ لَهٗ مَا
فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ۭ اَلَآ اِلَى اللّٰهِ تَصِيْرُ الْاُمُوْرُ ۝۵۳ۧ ع ۵

سُوْرَةُ الزُّخْرُفِ مَكِّيَّةٌ وَهِيَ تِسْعٌ وَّثَمَانُوْنَ اٰيَةً وَسَبْعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

حٰمۗ ۝۱ۚۛ وَالْكِتٰبِ الْمُبِيْنِ ۝۲ۙۛ اِنَّا جَعَلْنٰهُ قُرْءٰنًا عَرَبِيًّا لَّعَلَّكُمْ مع
تَعْقِلُوْنَ ۝۳ۚ وَاِنَّهٗ فِيْٓ اُمِّ الْكِتٰبِ لَدَيْنَا لَعَلِيٌّ حَكِيْمٌ ۝۴ۭ اَفَنَضْرِبُ
عَنْكُمُ الذِّكْرَ صَفْحًا اَنْ كُنْتُمْ قَوْمًا مُّسْرِفِيْنَ ۝۵ وَكَمْ اَرْسَلْنَا عند المتقدمین ۱۲
مِنْ نَّبِيٍّ فِي الْاَوَّلِيْنَ ۝۶ وَمَا يَاْتِيْهِمْ مِّنْ نَّبِيٍّ اِلَّا كَانُوْا بِهٖ
يَسْتَهْزِءُوْنَ ۝۷ فَاَهْلَكْنَآ اَشَدَّ مِنْهُمْ بَطْشًا وَّمَضٰى مَثَلُ
الْاَوَّلِيْنَ ۝۸ وَلَىِٕنْ سَاَلْتَهُمْ مَّنْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ لَيَقُوْلُنَّ
خَلَقَهُنَّ الْعَزِيْزُ الْعَلِيْمُ ۝۹ۙ الَّذِيْ جَعَلَ لَكُمُ الْاَرْضَ مَهْدًا وَّ
جَعَلَ لَكُمْ فِيْهَا سُبُلًا لَّعَلَّكُمْ تَهْتَدُوْنَ ۝۱۰ۚ وَالَّذِيْ نَزَّلَ مِنَ
السَّمَاۗءِ مَاۗءًۢ بِقَدَرٍ ۚ فَاَنْشَرْنَا بِهٖ بَلْدَةً مَّيْتًا ۚ كَذٰلِكَ تُخْرَجُوْنَ ۝۱۱

52. (நபியே!) இவ்வாறே உமக்கு நம்முடைய கட்டளையில் (குர்ஆனாகிய) உயிரானதை வஹீ மூலமாக அறிவிக்கின்றோம்; (இதற்கு முன்னர்) நீர் வேதம் என்றால் என்ன, இன்னும் விசுவாசம் என்றால் என்ன என்பதை அறிந்தவராக இருக்கவில்லை; ஆயினும், (இவ்வேதத்தை உமக்கு வஹீ மூலம் அறிவித்து) இதனைப் பிரகாசமாகவும் ஆக்கி, நம் அடியார்களில் நாம் நாடியவர்களுக்கு இதனைக்கொண்டு நாம் நேர் வழி செலுத்துகின்றோம்; (நபியே!) நிச்சயமாக நீர், (மனிதர்களுக்கு) நேரானவழியின்பால் வழிகாட்டுவீர்.

53. (திட்டமாக இது தான்) அல்லாஹ்வுடைய வழி; அவன் எத்தகையவனென்றால் வானங்களில் இருப்பவையும் பூமியில் இருப்பவையும் அவனுக்கே உரியன; சகல காரியங்களும் அல்லாஹ்வின் பக்கமே சேரும் என்பதை (நபியே! நீர்) அறிந்து கொள்வீராக!

---

அத்தியாயம் : 43

## அல் ஜுக்ருஃப் — அலங்காரம்

வசனங்கள் : 89 மக்கீ ருகூஃகள் : 7

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. ஹா மீம்

2. தெளிவான வேதத்தின் மீது சத்தியமாக;

3. நிச்சயமாக நாம், இதனை நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அரபி மொழியிலான குர்ஆனாக ஆக்கியிருக்கிறோம்.

4. இன்னும் நிச்சயமாக, இது நம்மிடத்திலுள்ள (லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) தாய் நூலில் (பாதுகாக்கப்பட்டு) இருக்கிறது; (இது வேதங்களில்) மிக்க உயர்வான, ஞானம் நிறைந்ததாகும்.

5. நீங்கள் வரம்பு மீறிய சமூகத்தவராகி விட்டீர்கள் என்பதற்காக, (வேதத்தின்) நினைவுறுத்தலை உங்களை விட்டு முற்றாகநாம் தடுத்துவிடுவோமா?

6. (உங்களுக்கு) முன்னிருந்த(சமூகத்த)வர்களிலும், நாம் எத்தனையோ நபிமார்களை அனுப்பி இருக்கின்றோம்.

7. எந்த நபியும்— அவரை அவர்கள் பரிகசிக்கக்கூடியவர்களாக இருந்தே தவிர— அவர்களிடம் வருவதில்லை,

8. பின்னர் இவர்களைவிட மிக்க பலசாலி(களான அவர்)களை நாம் அழித்துவிட்டோம்; (இதற்கு) முன்னிருந்தோரின் உதாரணம் (படிப்பினையாகச்) சென்றே உள்ளது.

9. (நபியே!) அவர்களிடம்; "வானங்களையும், பூமியையும் படைத்தவன் யார்?" என்று நீர் கேட்டால், (யாவையும்)மிகைத்தவன், நன்கறிகிறவன் (ஆகிய அல்லாஹ்)தான் அவைகளை படைத்தான் என்று நிச்சயமாக அவர்கள் (பதில்) கூறுவார்கள்.

10. அவன் எத்தகையவனென்றால், உங்களுக்கு பூமியை (உறுதியான) விரிப்பாக ஆக்கினான்; நீங்கள் (பிரயாணத்தில்) வழிபெறுவதற்காக அதில் பல பாதைகளையும் உங்களுக்காக அவன் அமைத்தான்.

11. இன்னும் அவன் எத்தகையவனென்றால், அவன் வானத்திலிருந்து தண்ணீரை அளவோடு இறக்கி வைக்கிறான்; (அல்லாஹ்வாகிய)நாமே, பின்னர் அதனைக்கொண்டு, இறந்துபோன ஊரை (பூமியை) உயிர்ப்பிக்கின்றோம்; இவ்வாறே நீங்களும் (இறந்த பின்னர் உயிர் கொடுத்து) வெளிப்படுத்தப்படுவீர்கள்.

وَالَّذِیْ خَلَقَ الْاَزْوَاجَ كُلَّهَا وَجَعَلَ لَكُمْ مِّنَ الْفُلْكِ وَالْاَنْعَامِ
مَا تَرْكَبُوْنَ ۝۱۲ لِتَسْتَوٗا عَلٰی ظُهُوْرِهٖ ثُمَّ تَذْكُرُوْا نِعْمَةَ رَبِّكُمْ اِذَا
اسْتَوَیْتُمْ عَلَیْهِ وَتَقُوْلُوْا سُبْحٰنَ الَّذِیْ سَخَّرَ لَنَا هٰذَا وَمَا كُنَّا
لَهٗ مُقْرِنِیْنَ ۝۱۳ وَاِنَّاۤ اِلٰی رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ ۝۱۴ وَجَعَلُوْا لَهٗ مِنْ
عِبَادِهٖ جُزْءًا ؕ اِنَّ الْاِنْسَانَ لَكَفُوْرٌ مُّبِیْنٌ ۝۱۵ ؕ اَمِ اتَّخَذَ مِمَّا یَخْلُقُ ع ۵/۷
بَنٰتٍ وَّاَصْفٰىكُمْ بِالْبَنِیْنَ ۝۱۶ وَاِذَا بُشِّرَ اَحَدُهُمْ بِمَا ضَرَبَ
لِلرَّحْمٰنِ مَثَلًا ظَلَّ وَجْهُهٗ مُسْوَدًّا وَّهُوَ كَظِیْمٌ ۝۱۷ اَوَمَنْ یُّنَشَّؤُا
فِی الْحِلْیَةِ وَهُوَ فِی الْخِصَامِ غَیْرُ مُبِیْنٍ ۝۱۸ وَجَعَلُوا الْمَلٰٓئِكَةَ
الَّذِیْنَ هُمْ عِبٰدُ الرَّحْمٰنِ اِنَاثًا ؕ اَشَهِدُوْا خَلْقَهُمْ ؕ سَتُكْتَبُ
شَهَادَتُهُمْ وَیُسْـَٔلُوْنَ ۝۱۹ وَقَالُوْا لَوْ شَآءَ الرَّحْمٰنُ مَا عَبَدْنٰهُمْ ؕ
مَا لَهُمْ بِذٰلِكَ مِنْ عِلْمٍ ۗ اِنْ هُمْ اِلَّا یَخْرُصُوْنَ ۝۲۰ ؕ اَمْ اٰتَیْنٰهُمْ
كِتٰبًا مِّنْ قَبْلِهٖ فَهُمْ بِهٖ مُسْتَمْسِكُوْنَ ۝۲۱ بَلْ قَالُوْۤا اِنَّا وَجَدْنَاۤ
اٰبَآءَنَا عَلٰۤی اُمَّةٍ وَّاِنَّا عَلٰۤی اٰثٰرِهِمْ مُّهْتَدُوْنَ ۝۲۲ وَكَذٰلِكَ مَاۤ
اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ فِیْ قَرْیَةٍ مِّنْ نَّذِیْرٍ اِلَّا قَالَ مُتْرَفُوْهَاۤ ۙ
اِنَّا وَجَدْنَاۤ اٰبَآءَنَا عَلٰۤی اُمَّةٍ وَّاِنَّا عَلٰۤی اٰثٰرِهِمْ مُّقْتَدُوْنَ ۝۲۳

12 இன்னும் அவன் எத்தகையவனென்றால், அவன்தான் (படைப்பினங்களின்) வகைகளை_அவை ஒவ்வொன்றையும் (மனிதனுக்குப் பயனளிக்கும் வகையில்)படைத்தான்; அன்றியும் கப்பல்களிலிருந்தும், கால்நடைகளிலிருந்தும் நீங்கள் ஏறிச் செல்பவைகளை உங்களுக்காக உண்டாக்கினான்_

13 (ஏறிச்செல்பவைகளான) அவற்றின் முதுகுகளின் மீது நீங்கள் சரியாக அமர்ந்து கொள்வதற்காக; அவற்றின் மீது நீங்கள் அமர்ந்து விட்டால், பின்னர் உங்கள் இரட்சகனின் அருளை நீங்கள் நினைவு கூர்ந்து," எங்களுக்கு , இதனை வசப்படுத்தித் தந்தவனாகிய அவன் மிக்க பரிசுத்தமானவன்; (இதன் மீது பிரயாணிக்க அவன் வசப்படுத்தித் தந்திராவிட்டால்) இதற்கு சக்திபெற்றவர்களாக நாங்கள் இருக்கவில்லை" என்று நீங்கள் கூறுவதற்காகவும்_

14. இன்னும், "நிச்சயமாக நாங்கள் எங்கள் இரட்சகன் பக்கமே திரும்பிச் செல்பவர்களாக இருக்கிறோம்"(என்றும் நீங்கள் பிரார்த்தித்துக் கூறுவதற்காகவும் அவற்றை உங்களுக்குப் பிரயாணம் செய்ய வசதியாக ஆக்கியுள்ளான்).

15. அவர்களோ, அவனுடைய அடியார்களில் ஒரு பகுதியினரை (மலக்குகளை) அவனுக்கு(ப் பெண் சந்ததியினராக)ஆக்குகின்றார்கள்; நிச்சயமாக மனிதன் பகிரங்கமாக நிராகரிப்பவன்.

16. அல்லது(அல்லாஹ்) தான் படைத்ததிலிருந்து( தனக்கென) அவன் பெண் மக்களை எடுத்துக் கொண்டு, உங்களுக்கு ஆண்மக்களை தேர்ந்தெடுத்துக் கொண்டானா ?

17. அர்ரஹ்மானுக்கு அவர்கள் எதை உதாரணமாகக் கூறினார்களோ அதை(_பெண் மகவை)க் கொண்டு (அது பிறந்து விட்டதாக) அவர்களில் ஒருவனுக்கு நன்மாராயம் கூறப்பட்டால், (பெண் மக்களை விரும்பாத) அவன் (கவலையினால்) கடுங்கோபம் கொண்டவனாக இருக்கும் நிலையில் அவன் முகம் கறுத்துவிடுகிறது.

18. ஆபரணத்திலும் (சிங்காரிப்பிலும் ) வளர்க்கப்பட்டு, தன்(சொந்த) விவகாரத்தில் (கூட தனது நிலையை) தெளிவாக எடுத்துக்கூற சக்தியற்ற ஒன்றையா?(பெண்களையா? அவனுக்குச் சந்ததிகள் என்று ஆக்குகிறார்கள்).

19. மேலும், மலக்குகளை_ எவர்கள் அர்ரஹ்மானின் அடியார்களாக இருக்கிறார்களோ அத்தகையோரை_அவர்கள் பெண்களாக ஆக்கிவிட்டனர்; (நாம்) அவர்களைப் படைக்கும் பொழுது இவர்கள் (உடனிருந்து) பார்த்துக் கொண்டிருந்தனரா? இவர்களின் சாட்சி (நம்மிடத்தில்) எழுதப்படும்; (அதனைப் பற்றி விசாரித்து மறுமையில்) கேள்வியும் கேட்கப் படுவார்கள்.

20 . இன்னும் "அர்ரஹ்மான் நாடியிருந்தால், நாம் அவர்களை வணங்கியிருக்க மாட்டோம்" என்று அவர்கள் கூறுகின்றனர்; அவர்களுக்கு இதைப் பற்றி எவ்வித அறிவுமில்லை; அவர்கள் (பொய்) கற்பனை செய்பவர்களே தவிர (வேறு) இல்லை.

21 . அல்லது இதற்கு முன்னர் ஏதேனும் ஒரு வேதத்தை நாம் அவர்களுக்குக் கொடுத்து,அதனை அவர்கள் (இதற்கு ஆதாரமாக) பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்களா?

22 . மாறாக, இவர்கள் "நிச்சயமாக நாங்கள் எங்கள் மூதாதையரை ஒரு வழியில் (மார்க்கத்தில்இருக்கக்) கண்டோம்; இன்னும் நிச்சயமாக நாங்கள் அவர்களின் அடிச் சுவடுகளின் மீது நேர் வழி பெறக்கூடியவர்களாக இருக்கிறோம்" என்று கூறினார்கள்.

23. இவ்வாறே எந்த ஊருக்கும், அதில் வசதியுடன் வாழ்ந்தவர்கள், "நிச்சயமாக நாங்கள் எங்கள் மூதாதையரை ஒரு வழியில் (இருக்கக்)கண்டோம்; நிச்சயமாக நாங்கள் அவர்களின் அடிச்சுவடுகளின் மீதே பின்பற்றிச் செல்பவர்கள்" என்று கூறியே தவிர நாம் உமக்கு முன்னர் (நம்முடைய) எச்சரிக்கையாளரை அனுப்பவில்லை.

قُلَ اَوَلَوْ جِئْتُكُمْ بِاَهْدٰى مِمَّا وَجَدْتُّمْ عَلَيْهِ اٰبَآءَكُمْ ؕ قَالُوْٓا اِنَّا
بِمَآ اُرْسِلْتُمْ بِهٖ كٰفِرُوْنَ ﴿۲۴﴾ فَانْتَقَمْنَا مِنْهُمْ فَانْظُرْ كَيْفَ كَانَ
عَاقِبَةُ الْمُكَذِّبِيْنَ ﴿۲۵﴾ وَاِذْ قَالَ اِبْرٰهِيْمُ لِاَبِيْهِ وَقَوْمِهٖٓ اِنَّنِيْ ع ۲ ۸
بَرَآءٌ مِّمَّا تَعْبُدُوْنَ ﴿۲۶﴾ اِلَّا الَّذِيْ فَطَرَنِيْ فَاِنَّهٗ سَيَهْدِيْنِ ﴿۲۷﴾ وَ
جَعَلَهَا كَلِمَةًۢ بَاقِيَةً فِيْ عَقِبِهٖ لَعَلَّهُمْ يَرْجِعُوْنَ ﴿۲۸﴾ بَلْ مَتَّعْتُ
هٰٓؤُلَآءِ وَاٰبَآءَهُمْ حَتّٰى جَآءَهُمُ الْحَقُّ وَرَسُوْلٌ مُّبِيْنٌ ﴿۲۹﴾ وَلَمَّا
جَآءَهُمُ الْحَقُّ قَالُوْا هٰذَا سِحْرٌ وَّاِنَّا بِهٖ كٰفِرُوْنَ ﴿۳۰﴾ وَقَالُوْا لَوْلَا
نُزِّلَ هٰذَا الْقُرْاٰنُ عَلٰى رَجُلٍ مِّنَ الْقَرْيَتَيْنِ عَظِيْمٍ ﴿۳۱﴾ اَهُمْ
يَقْسِمُوْنَ رَحْمَتَ رَبِّكَ ؕ نَحْنُ قَسَمْنَا بَيْنَهُمْ مَّعِيْشَتَهُمْ فِي الْحَيٰوةِ
الدُّنْيَا وَرَفَعْنَا بَعْضَهُمْ فَوْقَ بَعْضٍ دَرَجٰتٍ لِّيَتَّخِذَ بَعْضُهُمْ
بَعْضًا سُخْرِيًّا ؕ وَرَحْمَتُ رَبِّكَ خَيْرٌ مِّمَّا يَجْمَعُوْنَ ﴿۳۲﴾ وَلَوْلَآ اَنْ
يَّكُوْنَ النَّاسُ اُمَّةً وَّاحِدَةً لَّجَعَلْنَا لِمَنْ يَّكْفُرُ بِالرَّحْمٰنِ
لِبُيُوْتِهِمْ سُقُفًا مِّنْ فِضَّةٍ وَّمَعَارِجَ عَلَيْهَا يَظْهَرُوْنَ ﴿۳۳﴾ وَلِبُيُوْتِهِمْ
اَبْوَابًا وَّسُرُرًا عَلَيْهَا يَتَّكِـُٔوْنَ ﴿۳۴﴾ وَزُخْرُفًا ؕ وَاِنْ كُلُّ ذٰلِكَ لَمَّا
مَتَاعُ الْحَيٰوةِ الدُّنْيَا ؕ وَالْاٰخِرَةُ عِنْدَ رَبِّكَ لِلْمُتَّقِيْنَ ﴿۳۵﴾ ع ۳ ۹

24. "உங்கள் மூதாதையரை எதன் மீதிருக்க நீங்கள் கண்டீர்களோ அதைவிட மிக்க நேர் வழியை நான் உங்களுக்குக் கொண்டுவந்தாலுமா?" என்று (எச்சரிக்கையாளர்கள்) கேட்டார்கள். அ(தற்க)வர்கள், "நீங்கள் எதைக் கொண்டு அனுப்பப்பட்டீர்களோ அதை நிச்சயமாக நாங்கள் நிராகரிக்கக்கூடியவர்களே" என்று கூறினார்கள்.

25. ஆதலால், நாம் அவர்களைத் தண்டித்தோம்; ஆகவே, (நபியே! நம்மால் அனுப்பப்பட்ட தூதர்களைப்) பொய்யாக்கிக் கொண்டிருந்தவர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை நீர் (கவனித்துப்) பார்ப்பீராக!

26. மேலும், (நபியே!) இப்றாஹீம் தம் தந்தை மற்றும் தம் சமூகத்தாரிடம் நிச்சயமாக நான் நீங்கள் வணங்குபவைகளை விட்டும் நீங்கிக்கொண்டேன் என்று கூறியதை(யும் நினைவு கூர்வீராக!).

27. எவன் என்னைப் படைத்தானோ அத்தகையவனைத்தவிர,(வேறு யாரையும் வணங்க மாட்டேன்;) ஆகவே, நிச்சயமாக அவனே எனக்கு நேர் வழி காட்டுவான்.

28. இன்னும், ("லாயிலாஹ இல்லல்லாஹு" எனும் ஏகத்துவக் கூற்றான) அதனை அவர் தன்னுடைய சந்ததியில் நிலைத்திருக்கும் வாக்காக ஆக்கிவிட்டார்; அக்கூற்றின் பால் அவர்கள் திரும்புவதற்காகவே (அவ்வாறு செய்தோம்).

29. ஆயினும், அவர்களிடம் உண்மையும், தெளிவான தூதரும் வரும் வரையில், அவர்களையும் அவர்களுடைய மூதாதையரையும் சுகமனுபவிக்கச் செய்தேன்.

30. இன்னும் அவர்களிடம் உண்மை வந்த போது, "இது சூனியமே; நிச்சயமாக நாங்கள் இதனை நிராகரிக்கக்கூடியவர்களே" என்று அவர்கள் கூறிவிட்டனர்.

31. ("தாயிஃப், மக்கா ஆகிய) இவ்விரண்டு ஊர்களிலுள்ள (யாதொரு) பெரிய மனிதரின் மீது இந்தக் குர்ஆன் இறக்கி வைக்கப்பட்டிருக்க வேண்டாமா?" என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

32. (நபியே!) உமதிரட்சகனின் அருளை அவர்களா பங்கிடுகிறார்கள்? இவ்வுலக வாழ்வில் அவர்களுடைய வாழ்க்கை(த் தேவை)யை அவர்களுக்கிடையில் நாமே பங்கிட்டிருக்கிறோம்; அவர்களில் சிலர், சிலரை பணியாளர்களாக வைத்துக்கொள்வதற்காக; அவர்களில் சிலரை (மற்ற) சிலரைவிட தரங்களில் நாம் உயர்த்தியுமிருக்கிறோம்; உமதிரட்சகனின் அருளோ, அவர்கள் சேகரித்து வைத்திருப்பதைவிட மிக்க மேலானதாகும்.

33. (நிராகரிப்போருக்கு நாம் வழங்கியதைக் கண்டு மற்ற) மனிதர்கள் (யாவரும் நிராகரிக்கும்) ஒரே சமுதாயமாக ஆகிவிடுவார்கள் என்பது இல்லையென்றால், (அல்லாஹ்வாகிய) அர்ரஹ்மானை நிராகரிப்போருக்கு அவர்களின் வீடுகளுக்குரிய முகடுகளையும், எவற்றின் மீது அவர்கள் ஏறிச்செல்வார்களோ அந்தப்படிகளையும் நாம் வெள்ளியினால் ஆக்கியிருப்போம்.

34. அவர்களுடைய வீடுகளுக்குரிய வாயில்களையும், எதன் மீது அவர்கள் சாய்ந்து கொண்டிருப்பார்களோ அத்தகைய கட்டில்களையும் (வெள்ளியினால் ஆக்கியிருப்போம்).

35. இன்னும், தங்கமாகவும் (ஆக்கியிருப்போம்; ஆனால்,) இவை ஒவ்வொன்றும், இவ்வுலக வாழ்க்கையிலுள்ள சுகங்களே தவிர வேறில்லை; உமதிரட்சகனிடத்தில் மறுமையோ பயந்து நடப்பவர்களுக்கு உரியதாகும்.

وَمَنْ يَّعْشُ عَنْ ذِكْرِ الرَّحْمٰنِ نُقَيِّضْ لَهٗ شَيْطٰنًا فَهُوَ لَهٗ قَرِيْنٌ ﴿۳۶﴾
وَاِنَّهُمْ لَيَصُدُّوْنَهُمْ عَنِ السَّبِيْلِ وَيَحْسَبُوْنَ اَنَّهُمْ مُّهْتَدُوْنَ ﴿۳۷﴾
حَتّٰۤى اِذَا جَآءَنَا قَالَ يٰلَيْتَ بَيْنِىْ وَبَيْنَكَ بُعْدَ الْمَشْرِقَيْنِ
فَبِئْسَ الْقَرِيْنُ ﴿۳۸﴾ وَلَنْ يَّنْفَعَكُمُ الْيَوْمَ اِذْ ظَّلَمْتُمْ اَنَّكُمْ فِى الْعَذَابِ
مُشْتَرِكُوْنَ ﴿۳۹﴾ اَفَاَنْتَ تُسْمِعُ الصُّمَّ اَوْ تَهْدِى الْعُمْىَ وَمَنْ كَانَ
فِىْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۴۰﴾ فَاِمَّا نَذْهَبَنَّ بِكَ فَاِنَّا مِنْهُمْ مُّنْتَقِمُوْنَ ﴿۴۱﴾ لا
اَوْ نُرِيَنَّكَ الَّذِىْ وَعَدْنٰهُمْ فَاِنَّا عَلَيْهِمْ مُّقْتَدِرُوْنَ ﴿۴۲﴾ فَاسْتَمْسِكْ
بِالَّذِىْۤ اُوْحِىَ اِلَيْكَ ۚ اِنَّكَ عَلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿۴۳﴾ وَاِنَّهٗ لَذِكْرٌ
لَّكَ وَلِقَوْمِكَ ۚ وَسَوْفَ تُسْئَلُوْنَ ﴿۴۴﴾ وَسْئَلْ مَنْ اَرْسَلْنَا
مِنْ قَبْلِكَ مِنْ رُّسُلِنَاۤ ۟ اَجَعَلْنَا مِنْ دُوْنِ الرَّحْمٰنِ اٰلِهَةً
يُّعْبَدُوْنَ ﴿۴۵﴾ ع وَلَقَدْ اَرْسَلْنَا مُوْسٰى بِاٰيٰتِنَاۤ اِلٰى فِرْعَوْنَ وَمَلَا۟ئِهٖ ع ۴ ۱۰
فَقَالَ اِنِّىْ رَسُوْلُ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۴۶﴾ فَلَمَّا جَآءَهُمْ بِاٰيٰتِنَاۤ اِذَا هُمْ
مِّنْهَا يَضْحَكُوْنَ ﴿۴۷﴾ وَمَا نُرِيْهِمْ مِّنْ اٰيَةٍ اِلَّا هِىَ اَكْبَرُ مِنْ اُخْتِهَا ۫ وَ
اَخَذْنٰهُمْ بِالْعَذَابِ لَعَلَّهُمْ يَرْجِعُوْنَ ﴿۴۸﴾ وَقَالُوْا يٰۤاَيُّهَ
السّٰحِرُ ادْعُ لَنَا رَبَّكَ بِمَا عَهِدَ عِنْدَكَ ۚ اِنَّنَا لَمُهْتَدُوْنَ ﴿۴۹﴾

36. எவர் அர்ரஹ்மானுடைய நல்லுபதேசத்தைப் புறக்கணித்து விடுகின்றாரோ, அவருக்கு நாம் ஒரு ஷைத்தானை (நண்பனாக)ச் சாட்டிவிடுவோம் ; அவன் அவருக்கு இணை பிரியாத தோழனாகி விடுகிறான்.

37. நிச்சயமாக, (ஷைத்தான்களாகிய) அவர்கள், அவர்களை (அல்லாஹ்வின்)நேரான பாதையிலிருந்து தடுத்தும்விடுகின்றனர்; மேலும், அவர்களோ தாங்கள் நேரான பாதையில் இருப்பவர்கள் என எண்ணிக் கொள்வார்கள்.

38. முடிவாக, (ஷைத்தானை நண்பனாக இணைக்கப்பட்ட) அவன் (மறுமையில்) நம்மிடம் வந்து விடுவானேயானால், "எனக்கும், உனக்குமிடையில்கிழக்குத் திசைக்கும், மேற்குத் திசைக்கும் உள்ள தொலை தூரமாக இருந்திருக்க வேண்டுமே? என்றும், (என்னை வழிகெடுத்த) இந்தத் தோழன் மிகக் கெட்டவன்" என்றும் கூறுவான்.

39. (உலகில் இருந்தபோது) நீங்கள் அநியாயம் செய்துவிட்டதற்காக,இன்றையத் தினம் உங்களுக்கு (எதுவும்) பயனளிக்கவே செய்யாது; நிச்சயமாக நீங்கள் வேதனையில் கூட்டானவர்களாக இருப்பீர்கள்(என்று கூறப்படும்).

40. (நபியே!) நீர் செவிடனை கேட்கச்செய்வீரா? அல்லது நீர் குருடனையும், பகிரங்கமான வழிகேட்டிலிருப்பவனையும் நேர்வழியில் செலுத்துவீரா?

41. பின்னர் (நபியே!) உம்மை நாம்(மரணிக்கச்செய்துஇவ்வுலகிலிருந்து)கொண்டு செல்வோமாயின், அப்போது நிச்சயமாக நாம் அவர்களைத் தண்டிக்கக்கூடியவர்கள்தாம் _

42. அல்லது நாம் அவர்களுக்கு வாக்களித்திருந்தோமே அத்தகையதை (_ தண்டனையை) நிச்சயமாக நாம் உமக்குக் காண்பிப்போம் ; ஏனெனில் நிச்சயமாக நாம் அவர்கள் மீது ஆற்றலுடையோராவோம்.

43. ஆகவே, (நபியே! ) வஹீ மூலம் உமக்கு அறிவிக்கப்பட்டதே அத்தகையதைப் பலமாகப் பிடித்துக்கொள்வீராக! நிச்சயமாக நீர் நேரான பாதையின் மீது இருக்கின்றீர்.

44. மேலும், நிச்சயமாக (குர்ஆனாகிய )இது உமக்கும், உம்முடைய சமூகத்தார்க்கும் ஒரு நல்லுபதேசமாகும்;(மறுமையில்) நீங்கள் கேட்கப்படுவீர்கள்.

45. (நபியே!) நம்முடைய தூதர்களாகிய உமக்கு முன்னர்,நாம் அனுப்பி வைத்தவர்களிடம் அர்ரஹ்மானையன்றி வணங்கப்படும் வேறு தெய்வங்களை நாம் ஆக்கியிருந்தோமா? என்று நீர் கேட்பீராக!

46. நிச்சயமாக மூஸாவை நம்முடைய அத்தாட்சிகளுடன் ஃபிர் அவ்னிடமும், அவனுடைய சமுதாயத் தலைவர்களிடமும் நாம் அனுப்பி வைத்தோம்; அப்பொழுது அவர் (அவர்களிடம்)"நிச்சயமாக நான் அகிலத்தாரின் இரட்சகனுடைய தூதன்" (ஆவேன்) என்று கூறினார்.

47. ஆகவே, அவர்களிடம் நம்முடைய அத்தாட்சிகளைக் கொண்டு அவர் வந்த போது, உடனே அவர்கள் அ(தை ஏற்றுக்கொள்வ)தை விட்டு(ஏளனம் செய்து) சிரித்தனர்.

48. மேலும் எந்த அத்தாட்சியையும், அது அதற்கு முந்தியதைவிட மிகப்பெரியதாகவே தவிர நாம் அவர்களுக்குகாண்பிக்கவில்லை; மேலும், அவர்கள் (பாவத்திலிருந்து ) மீள்வதற்காக (இலேசான) வேதனையைக்கொண்டு நாம் அவர்களைப் பிடித்தோம்.

49. மேலும் அவர்கள் (மூஸாவிடம்,)"சூனியக்காரரே! உமதிரட்சகனிடம் அவன் உமக்களித்த வாக்குறுதியைக் கொண்டு எங்களுக்(கு அருள் புரிவதற்)காக நீர் பிரார்த்தனை செய்வீராக!(அவ்வாறு செய்தால்)நிச்சயமாக நாங்கள் (உம்முடைய) நேர் வழியை அடைந்தவர்களாவோம்" என்று கூறினார்கள்.

فَلَمَّا كَشَفْنَا عَنْهُمُ الْعَذَابَ اِذَا هُمْ يَنْكُثُوْنَ ﴿٥٠﴾ وَنَادٰى فِرْعَوْنُ
فِىْ قَوْمِهٖ قَالَ يٰقَوْمِ اَلَيْسَ لِىْ مُلْكُ مِصْرَ وَهٰذِهِ الْاَنْهٰرُ
تَجْرِىْ مِنْ تَحْتِىْ ۚ اَفَلَا تُبْصِرُوْنَ ﴿٥١﴾ ؕ اَمْ اَنَا خَيْرٌ مِّنْ هٰذَا الَّذِىْ هُوَ
مَهِيْنٌ ۙ وَّلَا يَكَادُ يُبِيْنُ ﴿٥٢﴾ فَلَوْلَآ اُلْقِىَ عَلَيْهِ اَسْوِرَةٌ مِّنْ ذَهَبٍ
اَوْ جَآءَ مَعَهُ الْمَلٰٓئِكَةُ مُقْتَرِنِيْنَ ﴿٥٣﴾ فَاسْتَخَفَّ قَوْمَهٗ فَاَطَاعُوْهُ ؕ
اِنَّهُمْ كَانُوْا قَوْمًا فٰسِقِيْنَ ﴿٥٤﴾ فَلَمَّآ اٰسَفُوْنَا انْتَقَمْنَا مِنْهُمْ فَاَغْرَقْنٰهُمْ
اَجْمَعِيْنَ ﴿٥٥﴾ ۙ فَجَعَلْنٰهُمْ سَلَفًا وَّمَثَلًا لِّلْاٰخِرِيْنَ ﴿٥٦﴾ ع وَلَمَّا ضُرِبَ ع ٥ ١١
ابْنُ مَرْيَمَ مَثَلًا اِذَا قَوْمُكَ مِنْهُ يَصِدُّوْنَ ﴿٥٧﴾ وَقَالُوْٓا ءَاٰلِهَتُنَا خَيْرٌ
اَمْ هُوَ ؕ مَا ضَرَبُوْهُ لَكَ اِلَّا جَدَلًا ؕ بَلْ هُمْ قَوْمٌ خَصِمُوْنَ ﴿٥٨﴾ اِنْ هُوَ
اِلَّا عَبْدٌ اَنْعَمْنَا عَلَيْهِ وَجَعَلْنٰهُ مَثَلًا لِّبَنِىْٓ اِسْرَآءِيْلَ ﴿٥٩﴾ ؕ وَلَوْ
نَشَآءُ لَجَعَلْنَا مِنْكُمْ مَّلٰٓئِكَةً فِى الْاَرْضِ يَخْلُفُوْنَ ﴿٦٠﴾ وَاِنَّهٗ لَعِلْمٌ
لِّلسَّاعَةِ فَلَا تَمْتَرُنَّ بِهَا وَاتَّبِعُوْنِ ؕ هٰذَا صِرَاطٌ مُّسْتَقِيْمٌ ﴿٦١﴾
وَلَا يَصُدَّنَّكُمُ الشَّيْطٰنُ ۚ اِنَّهٗ لَكُمْ عَدُوٌّ مُّبِيْنٌ ﴿٦٢﴾ وَ
لَمَّا جَآءَ عِيْسٰى بِالْبَيِّنٰتِ قَالَ قَدْ جِئْتُكُمْ بِالْحِكْمَةِ وَلِاُبَيِّنَ
لَكُمْ بَعْضَ الَّذِىْ تَخْتَلِفُوْنَ فِيْهِ ۚ فَاتَّقُوا اللّٰهَ وَاَطِيْعُوْنِ ﴿٦٣﴾

50. (மூஸாவின் பிரார்த்தனைக்குப்) பின்னர் , நாம் அவர்களுடைய வேதனையை நீக்கியபொழுது, அச்சமயத்தில் அவர்கள் (தங்கள் வாக்குறுதியை) மீறிவிட்டார்கள்.

51. மேலும் , ஃபிர்அவ்ன் தன்னுடைய சமூகத்தாரை விளித்து, "என்னுடைய சமூகத்தாரே! (இந்த ) மிஸ்ரின் (எகிப்து நாட்டின்) ஆட்சி என்னுடையதில்லையா? இந்த ஆறுகள் எனக்குக்கீழ் (என் காலடியில்)ஓடுகின்றனவே; (இதை) நீங்கள் பார்க்கவில்லையா?" என்று கூறினான்.

52. அல்லது இழிவானவரும், இன்னும், தெளிவாகப் பேச இயலாதவருமான (மூஸாவாகிய) இவரைவிட நான் மேலானவனல்லவா? (என்றும்),

53. "(அவர் என்னைவிட மேலானவராக இருப்பின், ) பொன்னாலான கடகங்கள் அவருக்கு அணிவிக்கப்பட்டிருக்க வேண்டாமா? அல்லது அவருடன் மலக்குகள் (அவருக்கு சேவை செய்ய) இணைந்தவர்களாக வரவேண்டாமா? (என்றும் கூறினான்)

54. அவன் தன்னுடைய சமூகத்தாரை (குறைமதியுடையோராகக்கருதி) இலேசாக மதித்தான். ஆதலால், அவர்களும் அவனுக்குக் கீழ்ப்படிந்து விட்டார்கள்; நிச்சயமாக அவர்கள் (அல்லாஹ்வின் கட்டளையை ஏற்காது அதை மீறிய )பாவிகளான சமூகத்தினராக இருந்தனர்.

55. (இவ்வாறு அவர்கள் ) நம்மை கோபப்படுத்தியபோது, அவர்களை நாம் தண்டனை செய்தோம்; பின்னர் அவர்கள் அனைவரையும் மூழ்கடித்து விட்டோம்.

56. பின்னர், அவர்களை (படிப்பினையால்) முந்தியவர்களாகவும், பிற்காலத்திலுள்ளோருக்கு உதாரணமாகவும் நாம்ஆக்கினோம்.

57. (நபியே!) இன்னும் மர்யமுடைய மகன் உதாரணமாகக் கூறப்பட்டபோது, அதைப்பற்றி உம்முடைய சமூகத்தார் (சிரித்தும், கேலியாகவும்) அதுசமயம் கூச்சலிட்டார்கள்.

58. மேலும் எங்களுடைய தெய்வங்கள் மிகச் சிறந்தவையா? அல்லது அவரா?என்றும் கேட்கிறார்கள். (வீண்)தர்க்கத்திற்காகவே தவிர உம்மிடம் அவர்கள், அவரை உதாரணமாகக் கூறவில்லை; மாறாக இவர்கள் வீண் தர்க்கம் செய்யும் சமூகத்தாராக இருக்கின்றனர்.

59. (ஈஸாவாகிய) அவர், (நம்முடைய) அடியாரே அன்றி (அவர் தெய்வம்) இல்லை; அவர் மீது நாம் அருள் புரிந்து, இஸ்ராயீலின் மக்களுக்கு அவரை ஓர் உதாரணமாக்கினோம்.

60. நாம் நாடினால், உங்களுக்குப்பகரமாக பூமியில் மலக்குகளை நாம் ஆக்கி இருப்போம்; (உங்களது அழிவிற்குப்பின் ) அவர்கள் (உங்களுக்குப்) பின் தோன்றல்களாக (ஆகி) இருப்பர்.

61. இன்னும், நிச்சயமாக அவர், (ஈஸா அலைஹிஸ்ஸலாம் வானத்திலிருந்து இறங்குவது கொண்டு) மறுமைநாளின் ( அடையாளம் நெருங்கிவிட்டது என அறியப்படும்ஓர் ) அத்தாட்சியாவார். ஆகவே, நிச்சயமாக நீங்கள் இதில் சந்தேகிக்க வேண்டாம்; நீங்கள் என்னையே பின்பற்றுங்கள்; இதுவே நேரான வழியாகும்(என்று நபியே! நீர் கூறுவீராக!).

62 . உங்களை ஷைத்தான் (நேர் வழியில் செல்வதைவிட்டும்) தடுத்து விடவும் வேண்டாம். நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான விரோதியாவான்.

63. இன்னும் ஈஸா (அத்தாட்சிகளில்) தெளிவானவைகளைக் கொண்டு வந்தபொழுது, "உங்களிடம் திட்டமாக ஞானத்தை (நபித்துவத்தை) நான் கொண்டு வந்திருக்கிறேன்; எதில் நீங்கள் (தர்க்கித்து)கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறீர்களோ அத்தகைய சிலவற்றை உங்களுக்கு விளக்கிக்கூறுவதற்காகவும் (நான் வந்துள்ளேன்). ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து எனக்குக் கீழ்ப்படியுங்கள்" என்று (தன் சமூகத்தாரிடம்)கூறினார்.

إِنَّ اللَّهَ هُوَ رَبِّي وَرَبُّكُمْ فَاعْبُدُوهُ ۚ هَٰذَا صِرَاطٌ مُسْتَقِيمٌ ﴿۶۴﴾
فَاخْتَلَفَ الْأَحْزَابُ مِنْ بَيْنِهِمْ ۖ فَوَيْلٌ لِلَّذِينَ ظَلَمُوا مِنْ
عَذَابِ يَوْمٍ أَلِيمٍ ﴿۶۵﴾ هَلْ يَنْظُرُونَ إِلَّا السَّاعَةَ أَنْ تَأْتِيَهُمْ
بَغْتَةً وَهُمْ لَا يَشْعُرُونَ ﴿۶۶﴾ الْأَخِلَّاءُ يَوْمَئِذٍ بَعْضُهُمْ لِبَعْضٍ
عَدُوٌّ إِلَّا الْمُتَّقِينَ ﴿۶۷﴾ يَا عِبَادِ لَا خَوْفٌ عَلَيْكُمُ الْيَوْمَ وَلَا أَنْتُمْ ع ۶ ۱۲
تَحْزَنُونَ ﴿۶۸﴾ الَّذِينَ آمَنُوا بِآيَاتِنَا وَكَانُوا مُسْلِمِينَ ﴿۶۹﴾ ادْخُلُوا
الْجَنَّةَ أَنْتُمْ وَأَزْوَاجُكُمْ تُحْبَرُونَ ﴿۷۰﴾ يُطَافُ عَلَيْهِمْ بِصِحَافٍ
مِنْ ذَهَبٍ وَأَكْوَابٍ ۖ وَفِيهَا مَا تَشْتَهِيهِ الْأَنْفُسُ وَتَلَذُّ
الْأَعْيُنُ ۖ وَأَنْتُمْ فِيهَا خَالِدُونَ ﴿۷۱﴾ وَتِلْكَ الْجَنَّةُ الَّتِي أُورِثْتُمُوهَا
بِمَا كُنْتُمْ تَعْمَلُونَ ﴿۷۲﴾ لَكُمْ فِيهَا فَاكِهَةٌ كَثِيرَةٌ مِنْهَا
تَأْكُلُونَ ﴿۷۳﴾ إِنَّ الْمُجْرِمِينَ فِي عَذَابِ جَهَنَّمَ خَالِدُونَ ﴿۷۴﴾
لَا يُفَتَّرُ عَنْهُمْ وَهُمْ فِيهِ مُبْلِسُونَ ﴿۷۵﴾ وَمَا ظَلَمْنَاهُمْ وَ
لَٰكِنْ كَانُوا هُمُ الظَّالِمِينَ ﴿۷۶﴾ وَنَادَوْا يَا مَالِكُ لِيَقْضِ عَلَيْنَا
رَبُّكَ ۖ قَالَ إِنَّكُمْ مَاكِثُونَ ﴿۷۷﴾ لَقَدْ جِئْنَاكُمْ بِالْحَقِّ وَلَٰكِنَّ
أَكْثَرَكُمْ لِلْحَقِّ كَارِهُونَ ﴿۷۸﴾ أَمْ أَبْرَمُوا أَمْرًا فَإِنَّا مُبْرِمُونَ ﴿۷۹﴾

64. "நிச்சயமாக அல்லாஹ்தான் என்னுடைய இரட்சகனும், உங்களுடைய இரட்சகனுமாவான்; ஆதலால், அ(வன் ஒரு)வனையே நீங்கள் வணங்குங்கள்; இதுதான் நேரான வழி" (என்றும் கூறினார்.)

65. பிறகு அவர்களுக்கு மத்தியிலிருந்து (உருவான) பல்வேறு கூட்டத்தினர் மாறுபட்டனர்; ஆகவே, அநியாயம் செய்தார்களே அவர்களுக்குத் துன்புறுத்தும் நாளுடைய வேதனையின் கேடுதான் இருக்கிறது.

66. அவர்கள் உணர்ந்து கொள்ளாத விதத்தில் திடீரென அவர்களிடம் மறுமை நாள் (விசாரணைக் காலம்) வருவதையன்றி(வேறெதனையும்) அவர்கள் எதிர் பார்க்கின்றனரா?

67. பயபக்தியுடையோர்களைத் தவிர (உலகிலிருந்த) உற்ற நண்பர்கள் அந்நாளில், அவர்களில் சிலர் சிலருக்கு எதிரிகளாவார்கள்.

68. (அந்நாளில் பயபக்தியுடையவர்களிடம்) "என் அடியார்களே! இன்றையத் தினம் உங்களுக்கு எவ்விதமான பயமுமில்லை; (எதைப் பற்றியும்) நீங்கள் கவலையும் அடைய மாட்டீர்கள்" (என்று கூறப்படும்).

69. அவர்கள் எத்தகையோரென்றால், அவர்கள் தாம் நம்முடைய வசனங்களை விசுவாசித்து, நமக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடந்தவர்களாகவும் இருந்தனர்.

70. (ஆகவே, மறுமையில் இவர்களிடம்) "நீங்களும், உங்கள் மனைவியரும் மகிழ்விக்கப்படுபவர்களாக சுவனபதிக்குள் நுழைந்துவிடுங்கள்" (என்று கூறப்படும்).

71. பொற்தட்டுகளையும், பிடி இல்லாத கிண்ணங்களையும் கொண்டு (சிறார்கள் மூலம்) அவர்கள் மீது சுற்றி வரப்படும்; அவர்கள் மனங்கள் எதை விரும்புகின்றனவோ அதுவும், கண்கள் இன்பமடையுமே அதுவும் அதில் உள்ளன; மேலும், (அவர்களிடம்) "நீங்கள் இதில் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள் (என்றும் கூறப்படும்)."

72. இன்னும், "அச்சுவனபதி _ எத்தகையதென்றால் அதை _ நீங்கள் (உலகில்) செய்து கொண்டிருந்தவை(களான நன்மை)களுக்குப் பகரமாக அனந்தரக்காரர்களாக ஆக்கப் பட்டுள்ளீர்கள் (என்றும்)."

73. " அதில் உங்களுக்கு அனேகக் கனிவகைகள் இருக்கின்றன; அவற்றிலிருந்து நீங்கள் புசிப்பீர்கள் (என்றும் கூறப்படும்)."

74. நிச்சயமாக (பாவம் செய்த) குற்றவாளிகள் நரக வேதனையில் நிரந்தரமாக (த்தங்கி)இருப்பவர்கள்.

75. அவர்களை விட்டும் (வேதனை)_ஒரு சிறிதும் குறைக்கப்படமாட்டாது; அதில் அவர்கள் நம்பிக்கையும் இழந்தவர்களாகி விடுவார்கள்.

76. மேலும், அவர்களுக்கு நாம் அநியாயம் செய்து விடவில்லை; எனினும், அவர்களே அநியாயக்காரர்களாக இருந்தனர்.

77. (நரகத்தின் பொறுப்பாளரிடம்) "மாலிக்கே! உமதிரட்சகன் எங்களுக்கு (மரணத்தின் மூலமாவது) தீர்ப்பளிக்கட்டும்" என்று சப்தமிடுவார்கள்; அதற்கு அவர் "நிச்சயமாக நீங்கள் (இதே நிலையில், மரணிக்காது) தங்கியிருக்கவேண்டியவர்களே" என்று கூறுவார்.

78. நிச்சயமாக நாம் உங்களிடம் உண்மையைக் கொண்டுவந்தோம்; எனினும் உங்களில் பெரும்பாலோர் அவ்வுண்மையை வெறுக்கின்றவர்களாக இருந்தீர்கள்.

79. (நபியே!) அவர்கள் ஏதேனும் ஒருகாரியத்தை(உமக்கெதிராக) முடிவு கட்டிக் கொண்டிருக்கின்றனரா? அவ்வாறாயின், (அதற்குரிய பரிகாரத்தை) நிச்சயமாக நாமும் முடிவுசெய்கிறவர்கள்.

أَمْ يَحْسَبُونَ أَنَّا لَا نَسْمَعُ سِرَّهُمْ وَنَجْوٰىهُمْ ۭ بَلٰى وَرُسُلُنَا لَدَيْهِمْ
يَكْتُبُونَ ﴿٨٠﴾ قُلْ إِنْ كَانَ لِلرَّحْمٰنِ وَلَدٌ ۖ فَأَنَا أَوَّلُ الْعٰبِدِينَ ﴿٨١﴾
سُبْحٰنَ رَبِّ السَّمٰوٰتِ وَالْأَرْضِ رَبِّ الْعَرْشِ عَمَّا يَصِفُونَ ﴿٨٢﴾
فَذَرْهُمْ يَخُوضُوا وَيَلْعَبُوا حَتّٰى يُلٰقُوا يَوْمَهُمُ الَّذِي يُوعَدُونَ ﴿٨٣﴾
وَهُوَ الَّذِي فِي السَّمَاءِ إِلٰهٌ وَفِي الْأَرْضِ إِلٰهٌ ۭ وَهُوَ الْحَكِيمُ
الْعَلِيمُ ﴿٨٤﴾ وَتَبٰرَكَ الَّذِي لَهُ مُلْكُ السَّمٰوٰتِ وَالْأَرْضِ وَمَا بَيْنَهُمَا ۚ
وَعِنْدَهُ عِلْمُ السَّاعَةِ ۚ وَإِلَيْهِ تُرْجَعُونَ ﴿٨٥﴾ وَلَا يَمْلِكُ الَّذِينَ
يَدْعُونَ مِنْ دُونِهِ الشَّفَاعَةَ إِلَّا مَنْ شَهِدَ بِالْحَقِّ وَهُمْ
يَعْلَمُونَ ﴿٨٦﴾ وَلَئِنْ سَأَلْتَهُمْ مَنْ خَلَقَهُمْ لَيَقُولُنَّ اللّٰهُ فَأَنّٰى
يُؤْفَكُونَ ﴿٨٧﴾ وَقِيلِهِ يٰرَبِّ إِنَّ هٰٓؤُلَاءِ قَوْمٌ لَا يُؤْمِنُونَ ﴿٨٨﴾ وقف لازم
فَاصْفَحْ عَنْهُمْ وَقُلْ سَلٰمٌ ۭ فَسَوْفَ يَعْلَمُونَ ﴿٨٩﴾ ع ١٣

سُورَةُ الدُّخَانِ مَكِّيَّةٌ وَهِيَ تِسْعٌ وَخَمْسُونَ آيَةً وَثَلٰثُ رُكُوعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

حٰمٓ ﴿١﴾ وَالْكِتٰبِ الْمُبِينِ ﴿٢﴾ إِنَّآ أَنْزَلْنٰهُ فِي لَيْلَةٍ مُّبٰرَكَةٍ معانقة ١٢
إِنَّا كُنَّا مُنْذِرِينَ ﴿٣﴾ فِيهَا يُفْرَقُ كُلُّ أَمْرٍ حَكِيمٍ ﴿٤﴾

80. அல்லது அவர்களின் இரகசியத்தையும், அவர்களின் இரகசிய ஆலோசனையையும் நிச்சயமாக நாம் செவியேற்பதில்லை என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கின்றனரா? அல்ல! அவர்களிடத்திலிருக்கும் (மலக்குகளாகிய) நம்முடைய தூதர்கள் எழுதிக் கொள்கிறார்கள்.

81. "அர்ரஹ்மானுக்கு பிள்ளை இருக்குமானால் (அதனை) வணங்குவோரில் நானே முதன்மையானவன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

82. வானங்கள் மற்றும் பூமியின் இரட்சகன், அர்ஷுடைய இரட்சகன் அவர்கள் வர்ணிப்பவற்றை விட்டும் மிக்க தூயவன்.

83. ஆகவே, (நபியே!) "இவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட அந்த (வேதனையின்) நாளை அவர்கள் சந்திக்கும் வரையில், அவர்கள் (வீண் தர்க்கத்தில்) மூழ்கிக் கொண்டிருக்கவும், அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கவும் அவர்களை நீர் விட்டு விடுவீராக!"

84. வானத்திலும் அவன் தான் (வணக்கத்திற்குரிய) நாயன், பூமியிலும் அவன் தான் (வணக்கத்திற்குரிய) நாயன்; அவனோ தீர்க்கமான அறிவுடையவன்; (யாவையும்) நன்கறிந்தவன்.

85. மேலும், வானங்கள் மற்றும் பூமி, இன்னும் இவையிரண்டிற்கு மத்தியிலுள்ளவைகளின் ஆட்சி எவனுக்குரியதோ அத்தகையவன் பெரும் பாக்கியமுடையவன்; அவனிடத்தில் தான் மறுமை நாள் பற்றிய அறிவும் இருக்கின்றது; மேலும், அவன் பக்கமே நீங்கள் திரும்பக் கொண்டு போகப் படுவீர்கள்.

86. மேலும், (அல்லாஹ்வாகிய) அவனையன்றி, இவர்கள் (தெய்வங்களாக) அழைக்கின்றார்களே அத்தகையவர்கள் (இவர்களுக்காக அவனிடத்தில்) பரிந்துரை செய்ய அதிகாரம் உள்ளவர்கள் அல்லர்; ஆயினும், அவர்கள் அறிந்தோராக இருக்க சத்தியத்தைக் கொண்டு சாட்சியம் கூறினார்களே, அவர்களைத் தவிர (வேறு எவரும் பரிந்துரை செய்பவர்களல்லர்).

87. மேலும் (நபியே!) அவர்களைப் படைத்தவன் யார் என்று நீர் அவர்களிடம் கேட்பீராயின், அல்லாஹ் தான் என்று நிச்சயமாக அவர்கள் கூறுவார்கள்; அவ்வாறாயின், (அவனை விட்டு) அவர்கள் எங்கு திருப்பப்படுகிறார்கள்.

88. "என் இரட்சகனே! நிச்சயமாக இவர்கள் விசுவாசங் கொள்ளாத சமூகத்தாரேயாகும்" என்று அவர் (_நபி) கூறுவதையும் (அவன் அறிகிறான்.)

89. ஆகவே, நீர் அவர்களைப் புறக்கணித்து விட்டு ஸலாமுன் (_ சாந்தி,) என்று கூறிவிடுவீராக! பின்னர் அவர்கள் (இதன் உண்மையை) அறிந்து கொள்வார்கள்.

---

அத்தியாயம் : 44

## அத்துகான் _ புகை

வசனங்கள் : 59 மக்கீ ருகூஉகள் : 3

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. ஹாமீம்

2. தெளிவான இவ்வேதத்தின் மீது சத்தியமாக!

3. நிச்சயமாக நாம், இதனைப் பாக்கியமுள்ள ஓர் இரவில் இறக்கி வைத்தோம்: நிச்சயமாக, நாம் (இவ்வேதத்தின் மூலம்) அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியோராய் இருந்து கொண்டிருக்கிறோம்.

4. அந்த இரவில், உறுதி செய்யப்பட்ட ஒவ்வொரு காரியமும் (பிரித்துத்) தெளிவு செய்யப்படுகிறது_

أَمْرًا مِّنْ عِنْدِنَا ۚ إِنَّا كُنَّا مُرْسِلِينَ ﴿۵﴾ رَحْمَةً مِّنْ رَّبِّكَ ۚ إِنَّهُ
هُوَ السَّمِيعُ الْعَلِيمُ ﴿۶﴾ رَبِّ السَّمٰوٰتِ وَالْأَرْضِ وَمَا بَيْنَهُمَا ۘ إِنْ
وقف لازم
كُنْتُمْ مُّوقِنِينَ ﴿۷﴾ لَآ إِلٰهَ إِلَّا هُوَ يُحْيِي وَيُمِيتُ ۖ رَبُّكُمْ وَرَبُّ آبَآئِكُمُ
الْأَوَّلِينَ ﴿۸﴾ بَلْ هُمْ فِي شَكٍّ يَّلْعَبُونَ ﴿۹﴾ فَارْتَقِبْ يَوْمَ تَأْتِي السَّمَآءُ
بِدُخَانٍ مُّبِينٍ ﴿۱۰﴾ يَّغْشَى النَّاسَ ۖ هٰذَا عَذَابٌ أَلِيمٌ ﴿۱۱﴾ رَبَّنَا اكْشِفْ
عَنَّا الْعَذَابَ إِنَّا مُؤْمِنُونَ ﴿۱۲﴾ أَنّٰى لَهُمُ الذِّكْرٰى وَقَدْ جَآءَهُمْ
رَسُولٌ مُّبِينٌ ﴿۱۳﴾ ثُمَّ تَوَلَّوْا عَنْهُ وَقَالُوا مُعَلَّمٌ مَّجْنُونٌ ﴿۱۴﴾ إِنَّا
كَاشِفُوا الْعَذَابِ قَلِيلًا إِنَّكُمْ عَآئِدُونَ ﴿۱۵﴾ يَوْمَ نَبْطِشُ الْبَطْشَةَ
وقف لازم وقف لازم
الْكُبْرٰى ۚ إِنَّا مُنْتَقِمُونَ ﴿۱۶﴾ وَلَقَدْ فَتَنَّا قَبْلَهُمْ قَوْمَ فِرْعَوْنَ وَ
جَآءَهُمْ رَسُولٌ كَرِيمٌ ﴿۱۷﴾ أَنْ أَدُّوٓا إِلَيَّ عِبَادَ اللّٰهِ ۖ إِنِّي لَكُمْ رَسُولٌ
أَمِينٌ ﴿۱۸﴾ وَّأَنْ لَّا تَعْلُوا عَلَى اللّٰهِ ۖ إِنِّيٓ آتِيكُمْ بِسُلْطٰنٍ مُّبِينٍ ﴿۱۹﴾ وَإِنِّي
عُذْتُ بِرَبِّي وَرَبِّكُمْ أَنْ تَرْجُمُونِ ﴿۲۰﴾ وَإِنْ لَّمْ تُؤْمِنُوا لِي فَاعْتَزِلُونِ ﴿۲۱﴾
فَدَعَا رَبَّهُ أَنَّ هٰٓؤُلَآءِ قَوْمٌ مُّجْرِمُونَ ﴿۲۲﴾ فَأَسْرِ بِعِبَادِي لَيْلًا
النصف
إِنَّكُمْ مُّتَّبَعُونَ ﴿۲۳﴾ وَاتْرُكِ الْبَحْرَ رَهْوًا ۖ إِنَّهُمْ جُنْدٌ مُّغْرَقُونَ ﴿۲۴﴾
كَمْ تَرَكُوا مِنْ جَنّٰتٍ وَّعُيُونٍ ﴿۲۵﴾ وَّزُرُوعٍ وَّمَقَامٍ كَرِيمٍ ﴿۲۶﴾

5. நம்மிடமிருந்துள்ள கட்டளையாக (அது நடந்தேறும்); நிச்சயமாக நாம் (தூதர்களை) அனுப்புகிறவர்களாக இருந்தோம்.

6. உமதிரட்சகனிடமிருந்துள்ள அருளாக(இதை இறக்கினோம்); நிச்சயமாக அவனே(யாவையும்) செவியேற்கிறவன்;நன்கறிகிறவன்.

7. (இவ்வேதத்தை இறக்கிவைத்தவனாகிய அவனே) வானங்களுக்கும்,பூமிக்கும், அவ்விரண்டிற்கு மத்தியிலுள்ளவைகளுக்கும் இரட்சகன் (என்பதை) நீங்கள் உறுதியுடையவர்களாக இருப்பின்(அறிவீர்கள்).

8. அவனைத் தவிர(வணக்கத்திற்குரிய வேறு)நாயன் இல்லை;அவனே உயிர்ப்பிக்கிறான்,அவனே இறக்குமாறும் செய்கிறான்; (அவனே) உங்களின் இரட்சகனும், முன்னோர்களான உங்கள் மூதாதையரின் இரட்சகனுமாவான்.

9. எனினும், அவர்கள் சந்தேகத்தில் விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.

10. ஆகவே, (நபியே!) வானம் தெளிவானதொரு புகையைக் கொண்டு வரும் நாளை நீர் எதிர்பார்ப்பீராக!

11. மனிதர்களை அ(ப்புகையான)து சூழ்ந்து கொள்ளும்,"இது துன்புறுத்தும் வேதனையாகும்".

12. "எங்கள் இரட்சகனே! நீ எங்களைவிட்டும் இவ்வேதனையை நீக்கி விடுவாயாக; நிச்சயமாக நாங்கள் (உன்னை)விசுவாசங்கொண்டவர்களாக இருக்கின்றோம்"(என்று அந்நாளில் மனிதர்கள், அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார்கள்).

13. (அந்நேரத்தில்) அவர்களுக்கு நல்லுபதேசம் எவ்வாறு பயனளிக்கும்? நிச்சயமாக(சத்தியத்தை) விளக்குபவரான(நம்முடைய) தூதர்(இதற்கு முன்னர்) அவர்களிடம் வந்தே இருக்கின்றார்.

14. பின்னர் அவர்கள் அவரைப் புறக்கணித்தனர்; (அவரைப் பற்றி," இவர் பிறரால்) கற்றுக்கொடுக்கப்பட்டவர்; பைத்தியக்காரர்" என்றும் கூறினர்.

15. நிச்சயமாக அவ்வேதனையை(ப் பின்னும்) சிறிது (காலத்திற்கு) நாம் நீக்குவோராய் இருக்கிறோம்; (எனினும்) நிச்சயமாக நீங்கள், (நிராகரிப்பின்பாலே) மீளக்கூடியவர்களாக இருக்கிறீர்கள்.

16. மிகப் பெரும்பிடியாக அவர்களை நாம் பிடிக்கும் (அந்)நாளில் நிச்சயமாக (அவர்களைத்) தண்டிப்போராய் இருக்கிறோம்.

17. மேலும், இவர்களுக்கு முன்னர் ஃபிர்அவ்னுடைய சமூகத்தவரை திட்டமாக நாம் சோதித்தோம். அவர்களிடம் கண்ணியமான (நம்முடைய) தூதரும் வந்தார்.

18. (அவர்) "அல்லாஹ்வின் அடியார்(களாகிய இஸ்ராயீலின் மக்)களை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள்; நிச்சயமாக, நான் உங்களுக்கு (அல்லாஹ் விடமிருந்து வந்துள்ள) நம்பிக்கைக்குரிய ஒரு தூதனாவேன்(என்றும்),

19. மேலும்,"அல்லாஹ்வின்(கட்டளைகளுக்குக் கீழ்ப் படிவதை விட்டுவிடுவதன் மூலம் அவன்) மீது உங்களை நீங்கள் உயர்த்திக்கொள்ளாதீர்கள்; நிச்சயமாக நான், உங்களிடம் தெளிவான ஒரு சான்றைக் கொண்டுவந்திருக்கிறேன்"(என்றும் கூறினார்.)

20. "என்னை நீங்கள் கல்லாலெறிந்து (கொன்று)விடுவதைவிட்டும் என் இரட்சகனும், உங்கள் இரட்சகனுமாகியவனிடம் நிச்சயமாக,நான் பாதுகாவல் தேடிக்கொண்டுவிட்டேன்"(என்றும்),

21. இன்னும், நீங்கள் என்னை (அல்லாஹ்வின் நபியென) நம்பிக்கைக் கொள்ளவில்லையாயின், என்னை விட்டு நீங்கிவிடுங்கள்(என்றும் கூறினார்).

22. பின்னர், நிச்சயமாக இவர்கள் குற்றவாளிகளான சமூகத்தவராகவே இருக்கிறார்கள் என தன் இரட்சகனைஅவர் அழைத்துப் பிரார்த்தித்தார்.

23. (அதற்கு அல்லாஹ்,) " நீர் (இஸ்ராயீலின் மக்களாகிய) என்னுடைய அடியார்களை (அழைத்து)க்கொண்டு இரவில் செல்வீராக; நிச்சயமாக நீங்கள் பின் தொடரப்படுவீர்கள் _

24. "அன்றியும்,(பிளந்த) அக்கடலை பிளவுபட்டதாக விட்டு (நீங்கள் அதைக் கடந்து) விடுங்கள்; நிச்சயமாக அவர்கள் மூழ்கடிக்கப்படவேண்டிய படையினராக இருக்கிறார்கள் (என்று கூறி, அவ்விதமே மூழ்கடித்தான்).

25. எத்தனை(யோ)தோட்டங்களையும்,நீரூற்றுகளையும் அவர்கள் விட்டுச் சென்றுவிட்டனர்.

26. இன்னும் (எத்தனையோ) விவசாய (நில)ங்களையும், (அழகுமிகுந்த) மேலான வீடுகளையும் (விட்டுச் சென்றனர்).

وَّنَعْمَةٍ كَانُوْا فِيْهَا فٰكِهِيْنَ ﴿۲۷﴾ كَذٰلِكَ ۣ وَاَوْرَثْنٰهَا قَوْمًا اٰخَرِيْنَ ﴿۲۸﴾
فَمَا بَكَتْ عَلَيْهِمُ السَّمَآءُ وَالْاَرْضُ وَمَا كَانُوْا مُنْظَرِيْنَ ﴿۲۹﴾ وَلَقَدْ ع ۱ ۲۹ ۱۴
نَجَّيْنَا بَنِيْٓ اِسْرَآءِيْلَ مِنَ الْعَذَابِ الْمُهِيْنِ ﴿۳۰﴾ مِنْ فِرْعَوْنَ ؕ اِنَّهٗ
كَانَ عَالِيًا مِّنَ الْمُسْرِفِيْنَ ﴿۳۱﴾ وَلَقَدِ اخْتَرْنٰهُمْ عَلٰى عِلْمٍ عَلَى
الْعٰلَمِيْنَ ﴿۳۲﴾ وَاٰتَيْنٰهُمْ مِّنَ الْاٰيٰتِ مَا فِيْهِ بَلٰٓؤٌا مُّبِيْنٌ ﴿۳۳﴾ اِنَّ هٰٓؤُلَآءِ
لَيَقُوْلُوْنَ ﴿۳۴﴾ اِنْ هِيَ اِلَّا مَوْتَتُنَا الْاُوْلٰى وَمَا نَحْنُ بِمُنْشَرِيْنَ ﴿۳۵﴾
فَاْتُوْا بِاٰبَآئِنَآ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۳۶﴾ اَهُمْ خَيْرٌ اَمْ قَوْمُ تُبَّعٍ ۙ وَّ
الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ؕ اَهْلَكْنٰهُمْ ۫ اِنَّهُمْ كَانُوْا مُجْرِمِيْنَ ﴿۳۷﴾ وَمَا
خَلَقْنَا السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَا لٰعِبِيْنَ ﴿۳۸﴾ مَا خَلَقْنٰهُمَآ اِلَّا
بِالْحَقِّ وَلٰكِنَّ اَكْثَرَهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿۳۹﴾ اِنَّ يَوْمَ الْفَصْلِ
مِيْقَاتُهُمْ اَجْمَعِيْنَ ﴿۴۰﴾ يَوْمَ لَا يُغْنِيْ مَوْلًى عَنْ مَّوْلًى شَيْـًٔا وَّلَا
هُمْ يُنْصَرُوْنَ ﴿۴۱﴾ اِلَّا مَنْ رَّحِمَ اللّٰهُ ؕ اِنَّهٗ هُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿۴۲﴾ ع ۲ ۱۹ ۱۵
اِنَّ شَجَرَتَ الزَّقُّوْمِ ﴿۴۳﴾ طَعَامُ الْاَثِيْمِ ﴿۴۴﴾ كَالْمُهْلِ ۚ يَغْلِيْ معانقة ۱۲
فِي الْبُطُوْنِ ﴿۴۵﴾ كَغَلْيِ الْحَمِيْمِ ﴿۴۶﴾ خُذُوْهُ فَاعْتِلُوْهُ اِلٰى سَوَآءِ عند المتاخرین ۱۲
الْجَحِيْمِ ﴿۴۷﴾ ثُمَّ صُبُّوْا فَوْقَ رَاْسِهٖ مِنْ عَذَابِ الْحَمِيْمِ ﴿۴۸﴾

27. இன்னும், அவர்கள் எதில் இன்பம் அனுபவித்துக்கொண்டிருந்தனரோ அத்தகைய (எத்தனையோ) சுகானுபவப் பொருளையும்(விட்டுச் சென்றனர்).
28. இவ்வாறே_(நடந்தேறியது); அவற்றிற்கு வேறு சமூகத்தாரையும் அனந்தரக்காரர்களாக்கினோம்.
29. (அழிந்துபோன) அவர்களுக்காக வானமும், பூமியும் (துக்கித்து) அழவில்லை; (தப்பிச்செல்ல) அவகாசம் கொடுக்கப்பட்டவர்களாகவும் அவர்கள் இருக்கவில்லை.
30. மேலும் (ஃபிர்அவ்ன் இழைத்த) இழிவுதரும் வேதனையிலிருந்து இஸ்ராயீலின் மக்களை நாம் திட்டமாகக் காப்பாற்றினோம்.
31. ஃபிர்அவ்னைவிட்டும் (காப்பாற்றிவிட்டோம்). நிச்சயமாக, அவன் (அடக்கி ஆளுதல், ஆணவம் கொள்ளுதல் ஆகியவற்றில்) உயர்ந்தவனாக(நிராகரிப்பில்) வரம்பு மீறியவர்களில்(உள்ளவனாக) இருந்தான்.
32. (இஸ்ராயீலின் மக்களாகிய) அவர்களை நன்கு அறிந்தே அகிலத்தாரை விடவும் அவர்களை நாம் திட்டமாகத் தெரிவு செய்தோம்.
33. மேலும், எதில் தெளிவானசோதனை இருந்ததோ அத்தகைய அத்தாட்சிகளை (மன்னு, ஸல்வா என்னும் உணவை இறக்கிவைத்தது, கடலை பிளக்கவைத்தது போன்றவற்றை) அவர்களுக்கு நாம் கொடுத்தோம்.
34. நிச்சயமாக (காஃபிர்களாகிய) இவர்கள் கூறுகிறார்கள்:
35. "அது (இவ்வுலகில்) எங்களுக்கு ஏற்படும் முதல் மரணத்தைத் தவிர வேறில்லை, இன்னும்,(மரணித்த பின்னர்) நாங்கள் உயிர் கொடுத்து எழுப்பப் படுபவர்களுமல்லர்."
36.(என்று கூறுவதுடன் விசுவாசிகளிடம்) "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் (இறந்துபோன) எங்கள் மூதாதையரைக் கொண்டுவாருங்கள்" (என்றனர்).
37. (நபியே!) அவர்கள் மிகச் சிறந்தவர்களா? அல்லது "துப்பஃஉ" சமூகத்தாரும், அவர்களுக்கு முன்னிருந்தவர்களுமா? அவர்களை(யும்) நாம் அழித்துவிட்டோம்; (ஏனென்றால்,) நிச்சயமாக அவர்கள் பாவம் செய்பவர்களாகவே இருந்தார்கள்.
38. வானங்களையும், பூமியையும், அவ்விரண்டிற்கு மத்தியிலுள்ளவைகளையும் விளையாடுவோராய் நாம் படைக்கவில்லை.
39. (நிச்சயமாக) அவ்விரண்டையும் உண்மையைக்கொண்டே தவிர_ நாம் படைக்கவில்லை; எனினும், அவர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிய மாட்டார்கள்.
40. நிச்சயமாக (நியாயத்) தீர்ப்பு நாள் அவர்கள் அனைவருக்கும் (குறிப்பிடப்பட்ட) தவணையாகும்.
41. அந்நாளில், ஒரு நண்பன் மற்றொரு நண்பனுக்கு எத்தகைய (உதவியும் புரிந்து) பயனும் அளிக்கமாட்டான்; அன்றியும், அவர்கள் (மற்றவர்களிடமிருந்து) உதவியும் செய்யப்பட மாட்டார்கள்.
42. (ஆயினும்) அல்லாஹ் அருள் புரிந்தோர் தவிர (அவர்களுக்கு சகல உதவியும் கிடைக்கும்)நிச்சயமாகஅவனே(யாவரையும்)மிகைத்தவன்,மிகக்கிருபையுடையவன்.
43. நிச்சயமாக (நரகத்திலிருக்கும்) கள்ளி மரம்,
44. (அதுவே) பாவிகளின் ஆகாரமாகும்.
45. (அது) உருகிய செம்பைப்போல் (அவர்களுடைய) வயிறுகளில் கொதிக்கும்.
46. கடுமையாகக் காய்ச்சப்பட்ட நீர் கொதிப்பதைப்போல் (அது கொதித்துப் பொங்கிவரும்)
47. (குற்றவாளியான) அவனைப் பிடியுங்கள்; பின்னர், நரகத்தின் மையத்திற்கு இழுத்துக்கொண்டு செல்லுங்கள்.
48. பின்னர், அவனுடைய தலைக்கு மேல், கொதித்த நீரின் வேதனையிலிருந்து ஊற்றுங்கள், (என்று நரகக்காவலாளிகளுக்குக் கூறப்படுவதுடன், அதிலிருக்கும் பாவிகளிடம்,)

ذُقْ ۚ اِنَّكَ اَنْتَ الْعَزِيْزُ الْكَرِيْمُ ﴿۴۹﴾ اِنَّ هٰذَا مَا كُنْتُمْ بِهٖ
تَمْتَرُوْنَ ﴿۵۰﴾ اِنَّ الْمُتَّقِيْنَ فِيْ مَقَامٍ اَمِيْنٍ ﴿۵۱﴾ فِيْ جَنّٰتٍ وَّعُيُوْنٍ ﴿۵۲﴾
يَّلْبَسُوْنَ مِنْ سُنْدُسٍ وَّاِسْتَبْرَقٍ مُّتَقٰبِلِيْنَ ﴿۵۳﴾ كَذٰلِكَ ۫ وَزَوَّجْنٰهُمْ
بِحُوْرٍ عِيْنٍ ﴿۵۴﴾ يَدْعُوْنَ فِيْهَا بِكُلِّ فَاكِهَةٍ اٰمِنِيْنَ ﴿۵۵﴾ لَا يَذُوْقُوْنَ
فِيْهَا الْمَوْتَ اِلَّا الْمَوْتَةَ الْاُوْلٰى ۚ وَوَقٰهُمْ عَذَابَ الْجَحِيْمِ ﴿۵۶﴾
فَضْلًا مِّنْ رَّبِّكَ ۭ ذٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيْمُ ﴿۵۷﴾ فَاِنَّمَا يَسَّرْنٰهُ
بِلِسَانِكَ لَعَلَّهُمْ يَتَذَكَّرُوْنَ ﴿۵۸﴾ فَارْتَقِبْ اِنَّهُمْ مُّرْتَقِبُوْنَ ﴿۵۹﴾ ع ۳ ۱۷ ۱۶

## سورة الجاثية مكية وهي سبع وثلثون اٰية واربع ركوعات

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

حٰمٓ ﴿۱﴾ تَنْزِيْلُ الْكِتٰبِ مِنَ اللّٰهِ الْعَزِيْزِ الْحَكِيْمِ ﴿۲﴾ اِنَّ فِي السَّمٰوٰتِ
وَالْاَرْضِ لَاٰيٰتٍ لِّلْمُؤْمِنِيْنَ ﴿۳﴾ وَفِيْ خَلْقِكُمْ وَمَا يَبُثُّ مِنْ دَآبَّةٍ
اٰيٰتٌ لِّقَوْمٍ يُّوْقِنُوْنَ ﴿۴﴾ وَاخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ وَمَآ اَنْزَلَ
اللّٰهُ مِنَ السَّمَآءِ مِنْ رِّزْقٍ فَاَحْيَا بِهِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا وَ
تَصْرِيْفِ الرِّيٰحِ اٰيٰتٌ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ ﴿۵﴾ تِلْكَ اٰيٰتُ اللّٰهِ نَتْلُوْهَا
عَلَيْكَ بِالْحَقِّ ۚ فَبِاَيِّ حَدِيْثٍ بَعْدَ اللّٰهِ وَاٰيٰتِهٖ يُؤْمِنُوْنَ ﴿۶﴾

49. "நீ (இவ்வேதனையைச்) சுவைத்துப்பார்; நிச்சயமாக, நீ தான் மிக்க கண்ணியமும்,மரியாதையுமுடையவன்;(என்று ஏளனமாகக் கூறப்படும்)
50. நிச்சயமாக இது எதை நீங்கள் சந்தேகித்துக்கொண்டிருந்தீர்களோ அதுவேயாகும்(என்றும் கூறப்படும்).
51. நிச்சயமாக,பயபக்தியுடையவர்கள் அச்சமற்ற இடத்திலிருப்பார்கள்.
52. சுவனபதி(யின் சோலை)களிலும், நீர் ஊற்றுக்களிலே(அவற்றினிடையே)யும் (இருப்பார்கள்).
53. ஒருவரையொருவர் முன்நோக்கியவர்களாக மெல்லியதும்,திடமானதுமான பட்டாடைகளை அணிந்து கொண்டிருப்பார்கள்.
54. இவ்வாறே (அது நடைபெறும்); மேலும், "ஹூருல்ஈன்" (என்னும் கண்ணழகிகளாகிய கன்னிகை)களையும் நாம் அவர்களுக்குத் திருமணம் செய்துவைப்போம்.
55. அச்சமற்றவர்களாக கனி வர்க்கங்கள் ஒவ்வொன்றையும், அங்கு கேட்டுக் கொண்டும் இருப்பார்கள்.
56. முந்திய மரணத்தைத் தவிர; அவற்றில் அவர்கள் (வேறு யாதொரு) மரணத்தையும் சுவைக்கமாட்டார்கள்; மேலும், நரக வேதனையை விட்டும் அவர்களை (அல்லாஹ்வாகிய)அவன் காத்துக்கொண்டான்.
57. (நபியே! இது) உமதிரட்சகனின் பேரருளாக( வழங்கப்படுகிறது); அதுதான் மகத்தான வெற்றியாகும்.
58. ஆகவே, (வேதமாகிய) இதனை நாம் உம்முடைய மொழியில் எளிதாக்கி வைத்திருப்பதெல்லாம்,அவர்கள் நல்லுபதேசம் பெறுவதற்காகத்தான்.
59. ஆகவே, (நல்லுபதேசம் பெறாவிடில், அதனால் ஏற்படும் தீயமுடிவை) நீர் எதிர்பார்த்திரும்; நிச்சயமாக,அவர்களும் எதிர்பார்க்கக் கூடியவர்கள்தாம்.

---

அத்தியாயம் : 45

## அல் ஜாஸியா _ முழந்தாளிடுதல்

வசனங்கள் : 37 மக்கீ ருகூஃகள் : 4

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. ஹாமீம்
2. (யாவரையும்) மிகைத்தோன் தீர்க்கமான அறிவுடையோன் ஆகிய அல்லாஹ்விடமிருந்து இவ்வேதம் இறக்கப்பட்டுள்ளது.
3. விசுவாசங்கொண்டோர்க்கு நிச்சயமாக வானங்களிலும், பூமியிலும் அத்தாட்சிகளிருக்கின்றன.
4. இன்னும், உங்களைப் படைத்திருப்பதிலும், ஜீவராசிகளை அவன் பரவச்செய்திருப்பதிலும், (விசுவாசத்தில்) உறுதிகொள்கின்ற சமூகத்தார்க்கு அத்தாட்சிகளிருக்கின்றன.
5. மேலும், இரவு பகல் மாறி மாறி வருவதிலும், இன்னும் வானத்திலிருந்து மழையை அல்லாஹ் இறக்கிவைத்து, அதனைக் கொண்டு பூமியை அது (வறட்சியினால்)இறந்துபோனபின் உயிர்ப்பிப்பதிலும், (நாலாபாகங்களிலும் பருவத்திற்குத்தக்கவாறு) காற்றுகளைத் திருப்பிவிடுவதிலும் விளங்கிக் கொள்ளும் சமூகத்தார்க்கு அத்தாட்சிகளிருக்கின்றன.
6. அவை (களைத் தன்னகத்தே கொண்ட குர்ஆன்) அல்லாஹ்வுடைய வசனங்களாகும்; உண்மையைக் கொண்டு அவற்றை உம்மீது நாம் ஓதிக் காண்பிக்கிறோம்; எனவே அல்லாஹ்வுக்கும், அவனுடைய வசனங்களுக்கும் பின்னர், இவர்கள் எச்செய்தியைத்தான் நம்புவார்கள்?

وَيْلٌ لِّكُلِّ اَفَّاكٍ اَثِيْمٍ ۙ﴿۷﴾ يَّسْمَعُ اٰيٰتِ اللّٰهِ تُتْلٰى عَلَيْهِ ثُمَّ يُصِرُّ مُسْتَكْبِرًا
كَاَنْ لَّمْ يَسْمَعْهَا ۚ فَبَشِّرْهُ بِعَذَابٍ اَلِيْمٍ ﴿۸﴾ وَاِذَا عَلِمَ مِنْ اٰيٰتِنَا شَيْـًٔا
اِتَّخَذَهَا هُزُوًا ؕ اُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ مُّهِيْنٌ ؕ﴿۹﴾ مِنْ وَّرَآئِهِمْ جَهَنَّمُ ۚ
وَلَا يُغْنِيْ عَنْهُمْ مَّا كَسَبُوْا شَيْـًٔا وَّلَا مَا اتَّخَذُوْا مِنْ دُوْنِ اللّٰهِ اَوْلِيَآءَ ۚ
وَلَهُمْ عَذَابٌ عَظِيْمٌ ؕ﴿۱۰﴾ هٰذَا هُدًى ۚ وَالَّذِيْنَ كَفَرُوْا بِاٰيٰتِ رَبِّهِمْ لَهُمْ
عَذَابٌ مِّنْ رِّجْزٍ اَلِيْمٌ ۠﴿۱۱﴾ اَللّٰهُ الَّذِيْ سَخَّرَ لَكُمُ الْبَحْرَ لِتَجْرِيَ الْفُلْكُ ع ۱ ۱۱ ۱۷
فِيْهِ بِاَمْرِهٖ وَلِتَبْتَغُوْا مِنْ فَضْلِهٖ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ۚ﴿۱۲﴾ وَسَخَّرَ لَكُمْ مَّا
فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ جَمِيْعًا مِّنْهُ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ
لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ ﴿۱۳﴾ قُلْ لِّلَّذِيْنَ اٰمَنُوْا يَغْفِرُوْا لِلَّذِيْنَ لَا يَرْجُوْنَ
اَيَّامَ اللّٰهِ لِيَجْزِيَ قَوْمًا ۢ بِمَا كَانُوْا يَكْسِبُوْنَ ﴿۱۴﴾ مَنْ عَمِلَ صَالِحًا
فَلِنَفْسِهٖ ۚ وَمَنْ اَسَآءَ فَعَلَيْهَا ۫ ثُمَّ اِلٰى رَبِّكُمْ تُرْجَعُوْنَ ﴿۱۵﴾ وَلَقَدْ
اٰتَيْنَا بَنِيْٓ اِسْرَآءِيْلَ الْكِتٰبَ وَالْحُكْمَ وَالنُّبُوَّةَ وَرَزَقْنٰهُمْ مِّنَ الطَّيِّبٰتِ
وَفَضَّلْنٰهُمْ عَلَى الْعٰلَمِيْنَ ۚ﴿۱۶﴾ وَاٰتَيْنٰهُمْ بَيِّنٰتٍ مِّنَ الْاَمْرِ ۚ فَمَا اخْتَلَفُوْٓا
اِلَّا مِنْ ۢ بَعْدِ مَا جَآءَهُمُ الْعِلْمُ ۙ بَغْيًا ۢ بَيْنَهُمْ ؕ اِنَّ رَبَّكَ
يَقْضِيْ بَيْنَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ فِيْمَا كَانُوْا فِيْهِ يَخْتَلِفُوْنَ ﴿۱۷﴾

7. (நாவால்) பெரும் பொய்கூறி, (செயலால்) பாவியான ஒவ்வொருவருக்கும் கேடுதான்.

8. தன் மீது ஓதிக்காண்பிக்கப்படும் அல்லாஹ்வின் வசனங்களை அவன் (செவியேற்றுக்) கேட்கிறான்; பின்னர் கர்வங்கொண்டு அவற்றைக்( காதால்) கேட்காதவனைப்போல் (தன் நிராகரிப்பில்) பிடிவாதமாக இருக்கின்றான்; அ(த்தகைய)வனுக்குத் துன்புறுத்தும் வேதனையைக் கொண்டு (நபியே !) நீர் நன்மாராயங் கூறுவீராக!

9. மேலும், நம்முடைய வசனங்களில் எதனையாவது அவன் அறிந்து கொண்டால், அதனை அவன் பரிகாசமாக எடுத்துக்கொள்கிறான்; அத்தகையோர் _அவர்களுக்கு இழிவு தரும் வேதனை உண்டு.

10. அவர்களுக்கு முன்னால் நரகந்தான் இருக்கின்றது; அவர்கள் சம்பாதித்துக் கொண்டவை எவையும் அவர்களுக்குப் பயனளிக்காது; அல்லாஹ்வையன்றி பாதுகாப்பாளர்களாக அவர்கள் எடுத்துக் கொண்டவர்களும் (அவர்களுக்குப் பயன்அளிப்பவர்) அல்லர்; மேலும், அவர்களுக்கு மகத்தான வேதனையுமுண்டு.

11. (குர்ஆனாகிய) இது நேர் வழியாகும்; இன்னும், தங்களுடைய இரட்சகனின் வசனங்களை நிராகரிக்கின்றார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு மிகக்கடுமையான வேதனையிலிருந்து துன்புறுத்தும் வேதனையுண்டு.

12. அல்லாஹ் எத்தகையவனென்றால், கடலை _ அதில் அவன் கட்டளையைக் கொண்டு கப்பல்கள் செல்வதற்காகவும், மேலும் (அதன் மூலம்), அவனின் பேர ருளை நீங்கள் தேடிக்கொள்வதற்காகவும், நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் உங்களுக்காக அவன் வசப்படுத்திக் கொடுத்தான்.

13. இன்னும், வானங்களில் உள்ளவை, பூமியிலுள்ளவை அனைத்தையும் தன்னிடமிருந்து உங்களுக்கு அவனே வசப்படுத்திக் கொடுத்தான்; நிச்சயமாக, இதில் சிந்திக்கும் சமூகத்தார்க்கு பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

14. (நபியே!)விசுவாசங்கொண்டோருக்கு நீர் கூறுவீராக: அல்லாஹ்வுடைய (தண்டனைகளின்) நாட்களை நம்பாதவர்களை, அவர்கள் மன்னித்துவிடட்டும்; ஏனென்றால், அவர்கள் சம்பாதித்துக் கொண்டவற்றிற்குப் பிரதியாக கூட்டத்தினருக்கு அவன் கூலி கொடுப்பதற்காக.

15. எவர் நற்செயல் செய்கின்றாரோ, (அது) அவருக்கே நன்று; எவர் தீமை செய்கின்றாரோ (அது) அவருக்கே கேடாகும், பின்னர் நீங்கள் உங்கள் இரட்சகனின்பக்கமே மீட்டப்படுவீர்கள்.

16. நிச்சயமாக, நாம் இஸ்ராயீலின் மக்களுக்கு வேதத்தையும், அதிகாரத்தையும், நபித்துவத்தையும் கொடுத்தோம்; மேலும் (உண்ணுவதற்கு) நல்லவற்றிலிருந்து அவர்களுக்கு உணவும் கொடுத்தோம்; அன்றியும் அகிலத்தாரைவிட அவர்களைநாம் மேன்மையாக்கியும் வைத்தோம்.

17. இன்னும், (மார்க்கக்) காரியத்தில் (சான்றுகளிலிருந்து) தெளிவானவைகளை நாம் அவர்களுக்குக் கொடுத்தோம்; பின்னர், அவர்கள் தங்களுக்கிடையே உண்டான பொறாமையின் காரணமாக, அவர்களுக்கு (வேத) அறிவு வந்ததன் பின்னரே தவிர அவர்கள் அபிப்பிராயபேதம் கொள்ளவில்லை; (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன், அவர்கள் எதில் அபிப்பிராயபேதம் கொண்டிருந்தார்களோ அதில், மறுமை நாளில் அவர்களிடையே தீர்ப்பளிப்பான்.

ثُمَّ جَعَلْنٰكَ عَلٰى شَرِيْعَةٍ مِّنَ الْاَمْرِ فَاتَّبِعْهَا وَلَا تَتَّبِعْ اَهْوَآءَ
الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ ﴿١٨﴾ اِنَّهُمْ لَنْ يُّغْنُوْا عَنْكَ مِنَ اللّٰهِ شَيْـًٔا ؕ وَ
اِنَّ الظّٰلِمِيْنَ بَعْضُهُمْ اَوْلِيَآءُ بَعْضٍ ۚ وَاللّٰهُ وَلِيُّ الْمُتَّقِيْنَ ﴿١٩﴾
هٰذَا بَصَآئِرُ لِلنَّاسِ وَهُدًى وَّرَحْمَةٌ لِّقَوْمٍ يُّوْقِنُوْنَ ﴿٢٠﴾ اَمْ
حَسِبَ الَّذِيْنَ اجْتَرَحُوا السَّيِّاٰتِ اَنْ نَّجْعَلَهُمْ كَالَّذِيْنَ اٰمَنُوْا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ ۙ سَوَآءً مَّحْيَاهُمْ وَمَمَاتُهُمْ ؕ سَآءَ مَا يَحْكُمُوْنَ ﴿٢١﴾ ع وَ ٢ ع ١٨
خَلَقَ اللّٰهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِالْحَقِّ وَلِتُجْزٰى كُلُّ نَفْسٍۢ بِمَا
كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿٢٢﴾ اَفَرَءَيْتَ مَنِ اتَّخَذَ اِلٰهَهٗ هَوٰىهُ وَاَضَلَّهُ اللّٰهُ
عَلٰى عِلْمٍ وَّخَتَمَ عَلٰى سَمْعِهٖ وَقَلْبِهٖ وَجَعَلَ عَلٰى بَصَرِهٖ غِشٰوَةً ؕ فَمَنْ
يَّهْدِيْهِ مِنْۢ بَعْدِ اللّٰهِ ؕ اَفَلَا تَذَكَّرُوْنَ ﴿٢٣﴾ وَقَالُوْا مَا هِيَ اِلَّا حَيَاتُنَا
الدُّنْيَا نَمُوْتُ وَنَحْيَا وَمَا يُهْلِكُنَآ اِلَّا الدَّهْرُ ۚ وَمَا لَهُمْ بِذٰلِكَ
مِنْ عِلْمٍ ۚ اِنْ هُمْ اِلَّا يَظُنُّوْنَ ﴿٢٤﴾ وَاِذَا تُتْلٰى عَلَيْهِمْ اٰيٰتُنَا بَيِّنٰتٍ
مَّا كَانَ حُجَّتَهُمْ اِلَّآ اَنْ قَالُوا ائْتُوْا بِاٰبَآئِنَآ اِنْ كُنْتُمْ
صٰدِقِيْنَ ﴿٢٥﴾ قُلِ اللّٰهُ يُحْيِيْكُمْ ثُمَّ يُمِيْتُكُمْ ثُمَّ يَجْمَعُكُمْ اِلٰى
يَوْمِ الْقِيٰمَةِ لَا رَيْبَ فِيْهِ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿٢٦﴾ ع ٣ ع ٥ ١٩

18. இதன் பின்னர் (மார்க்கக்) காரியத்தில் (தெளிவான) ஒரு வழியின் மீது உம்மை நாம் ஆக்கி இருக்கின்றோம்; ஆகவே, அதனை(யே) நீர் பின்பற்றுவீராக! (உண்மையை) அறியாதவர்களாக இருக்கிறார்களே அவர்களின் மனோ இச்சைகளை நீர் பின்பற்றாதீர்.

19. நிச்சயமாக, அவர்கள் அல்லாஹ்வுக்கு விரோதமாக உம்மைவிட்டு எதனையும் தடுத்து விடவேமாட்டார்கள்; நிச்சயமாக, அநியாயக்காரர்கள் _ அவர்களில் சிலர், சிலருக்கு உதவியாளர்களாகவும் இருக்கிறார்கள்; இன்னும் அல்லாஹ், பயபக்தியுடையவர்களின் பாதுகாவலன்.

20. (குர்ஆனாகிய) இது மனிதர்களுக்குத் தெளிவான ஆதாரங்களாகவும், உறுதி கொள்கின்ற சமூகத்தார்க்கு நேர் வழியாகவும், அருளாகவும் இருக்கிறது.

21 தீமைகளைச் சம்பாதித்துக் கொண்டார்களே அத்தகையோர் _ விசுவாசங் கொண்டு நற்கருமங்களையும் செய்தார்களே அத்தகையோரைப் போன்று அவர்களையும் நாம் ஆக்கிவிடுவோம் என்று எண்ணிக் கொண்டார்களா? அவர்கள் ஜீவித்து இருப்பதும், அவர்கள் மரணித்துவிடுவதும் சமமே; அவர்கள் (இதற்கு மாறாகத்) தீர்ப்புச் செய்து கொண்டது மிகக்கெட்டதாகி விட்டது.

22. வானங்களையும் பூமியையும் அல்லாஹ் நீதியைக் கொண்டு (தக்க காரணத்திற்காகவே) படைத்திருக்கிறான்; இன்னும், ஒவ்வொரு ஆத்மாவும் அது சம்பாதித்ததைக்கொண்டு கூலி கொடுக்கப்படுவதற்காகவும் (படைத்துள்ளான்); அவர்கள் அநியாயம் செய்யப்படவுமாட்டார்கள்.

23. (நபியே!) தன்னுடைய (மனோ) இச்சையை(த் தான் வணங்கும்) தெய்வமாக எடுத்துக்கொண்டானே அவனை நீர் பார்த்தீரா? (அவன் வழி கெடுவதற்கு உரியவன் என்ற தன்) அறிவினால் அல்லாஹ் அவனைத் தவறான வழியில் விட்டு விட்டான்; அவனுடைய செவியின் மீதும், அவனுடைய இதயத்தின் மீதும் முத்திரையிட்டுவிட்டான்; அன்றியும், அவனுடைய பார்வையின் மீதும் ஒரு திரையை ஆக்கிவிட்டான்; அல்லாஹ்வுக்குப்பிறகு, அவனுக்கு நேர் வழிகாட்டு பவர் யார்? நீங்கள் நினைவுகூ(ர்ந்து உண)ரமாட்டீர்களா?

24. "இது நமது இவ்வுலக வாழ்க்கையைத் தவிர வேறு(வாழ்க்கை) இல்லை;" (இதில்தான்) நாம் இறந்துவிடுகின்றோம்; இன்னும், ஜீவிக்கிறோம்; காலத்தைத் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை" என்றும் அவர்கள் கூறுகின்றனர்; அது பற்றிய எவ்வித அறிவும் அவர்களுக்கில்லை; அவர்கள் (வீண் கற்பனையாக) எண்ணுகிறார்களே தவிர (வேறு) இல்லை.

25. மேலும், அவர்களுக்கு நம்முடைய தெளிவான வசனங்கள் ஓதிக் காண்பிக்கப் பட்டால், அவர்களின் வாதம் "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் எங்களுடைய மூதாதையரை (உயிர்ப்பித்து)க் கொண்டுவாருங்கள்" என்று அவர்கள் கூறுவதைத் தவிர (வேறெதுவும்) இல்லை.

26. (நபியே!) நீர் (அவர்களிடம்) கூறுவீராக: "அல்லாஹ்(தான்) உங்களை உயிர்ப்பிக்கிறான்; பின்னர், உங்களை அவன் மரணிக்கச்செய்கிறான்; பின்னர், மறுமை நாளுக்காக _ (உயிர் கொடுத்து) உங்களை அவன் ஒன்று சேர்ப்பான்; _ இதில் சந்தேகமில்லை; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறியமாட்டார்கள்.

وَلِلّٰهِ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَيَوْمَ تَقُوْمُ السَّاعَةُ يَوْمَئِذٍ يَّخْسَرُ
الْمُبْطِلُوْنَ ﴿٢٧﴾ وَتَرٰى كُلَّ اُمَّةٍ جَاثِيَةً ۫ كُلُّ اُمَّةٍ تُدْعٰۤى اِلٰى كِتٰبِهَا ؕ
اَلْيَوْمَ تُجْزَوْنَ مَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿٢٨﴾ هٰذَا كِتٰبُنَا يَنْطِقُ عَلَيْكُمْ
بِالْحَقِّ ؕ اِنَّا كُنَّا نَسْتَنْسِخُ مَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿٢٩﴾ فَاَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ فَيُدْخِلُهُمْ رَبُّهُمْ فِىْ رَحْمَتِهٖ ؕ ذٰلِكَ هُوَ الْفَوْزُ
الْمُبِيْنُ ﴿٣٠﴾ وَاَمَّا الَّذِيْنَ كَفَرُوْا ۟ اَفَلَمْ تَكُنْ اٰيٰتِىْ تُتْلٰى عَلَيْكُمْ
فَاسْتَكْبَرْتُمْ وَكُنْتُمْ قَوْمًا مُّجْرِمِيْنَ ﴿٣١﴾ وَاِذَا قِيْلَ اِنَّ وَعْدَ
اللّٰهِ حَقٌّ وَّالسَّاعَةُ لَا رَيْبَ فِيْهَا قُلْتُمْ مَّا نَدْرِىْ مَا السَّاعَةُ ۙ
اِنْ نَّظُنُّ اِلَّا ظَنًّا وَّمَا نَحْنُ بِمُسْتَيْقِنِيْنَ ﴿٣٢﴾ وَبَدَا لَهُمْ سَيِّاٰتُ مَا
عَمِلُوْا وَحَاقَ بِهِمْ مَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ﴿٣٣﴾ وَقِيْلَ الْيَوْمَ
نَنْسٰىكُمْ كَمَا نَسِيْتُمْ لِقَآءَ يَوْمِكُمْ هٰذَا وَمَاْوٰىكُمُ النَّارُ وَمَا لَكُمْ
مِّنْ نّٰصِرِيْنَ ﴿٣٤﴾ ذٰلِكُمْ بِاَنَّكُمُ اتَّخَذْتُمْ اٰيٰتِ اللّٰهِ هُزُوًا وَّغَرَّتْكُمُ
الْحَيٰوةُ الدُّنْيَا ۚ فَالْيَوْمَ لَا يُخْرَجُوْنَ مِنْهَا وَلَا هُمْ يُسْتَعْتَبُوْنَ ﴿٣٥﴾
فَلِلّٰهِ الْحَمْدُ رَبِّ السَّمٰوٰتِ وَرَبِّ الْاَرْضِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٣٦﴾
وَلَهُ الْكِبْرِيَآءُ فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۪ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿٣٧﴾ ع ٤ ١١ ٢٠

27. அன்றியும் வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது; மறுமை நாள் நிலைபெறும் நாளில் பொய்யாக்குவோர் அந்நாளில் நஷ்டமடைவார்கள்.

28. (நபியே! அந்நாளில்) ஒவ்வொரு சமுதாயத்தையும் முழந்தாளிட்டிருக்கும் நிலையில் நீர் காண்பீர். ஒவ்வொரு சமுதாயமும் (விசாரணைக்காக) அதனதன் பதிவுப் புத்தகத்தின்பால் அழைக்கப்படும் _ "இன்றையத்தினம் நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்குக் கூலி கொடுக்கப்படுவீர்கள்" (என்றும்);

29. "இது உங்களைப் பற்றிய உண்மையைக் கூறும் நம்முடைய (பதிவுப்) புத்தகம்; நிச்சயமாக நாம், நீங்கள் செய்துகொண்டிருந்தவற்றை (அதில்) பதிவு செய்பவர்களாக இருந்தோம்" (என்றும் கூறப்படும்).

30. ஆகவே, விசுவாசங்கொண்டு நற்கருமங்களையும் செய்தார்களே அத்தகையோர் _ அவர்களை, அவர்களுடைய இரட்சகன் தன்னுடைய அருளில் நுழைவிக்கிறான்; அதுதான் தெளிவான வெற்றியாகும்.

31. இன்னும், நிராகரித்தார்களே அத்தகையோர் _ (அவர்களிடம்,) "உங்களுக்கு என்னுடைய வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கவில்லையா? பின்னர் நீங்கள் பெருமையடித்துக்கொண்டிருந்தீர்கள்; அன்றியும், நீங்கள் குற்றவாளிகளான சமூகத்தாராகவும் இருந்தீர்கள்" (என்றும் கூறப்படும்).

32. மேலும், "நிச்சயமாக அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானது; மறுமைநாள் _ அ(து வருமென்ப)தில் யாதொரு சந்தேகமுமில்லை" என்று கூறப்பட்டால், "மறுமைநாள் இன்னதென்றே நாங்கள் அறியோம்; அது வெறும் எண்ணத்தைத் தவிர (வேறு) இல்லை என்றே எண்ணுகிறோம்; (அதனை உண்மையென்று) நாங்கள் உறுதியாக நம்புகிறவர்களாகவும் இல்லை என்று நீங்கள் கூறினீர்கள் (அல்லவா?" என்று அவர்களிடம் கேட்கப்படும்).

33. மேலும், அவர்கள் செய்துகொண்டிருந்த தீயவைகள் (யாவும்,) அவர்களுக்கு வெளிப்பட்டுவிடும்; எதை அவர்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்தார்களோ, அது அவர்களைச் சூழ்ந்துகொள்ளும்.

34. அன்றியும் (அவர்களிடம்) "நீங்கள் உங்களுடைய இந்நாளின் சந்திப்பை மறந்தவாறே நாமும் இன்றையத் தினம் உங்களை மறந்துவிட்டோம்; மேலும், உங்கள் தங்குமிடம் நரகமாகும்; உங்களுக்கு எந்த உதவியாளர்களுமில்லை" என்றும் கூறப்படும்.

35. "இ(ந்தத்தண்டனையான)து: நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்வுடைய வசனங்களைப் பரிகாசமாக எடுத்துக்கொண்டீர்கள் என்பதினாலாகும்; இவ்வுலக வாழ்க்கை உங்களை மயக்கியும்விட்டது" (என்று கூறப்படும்); இன்றையத் தினம் அதிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படமாட்டார்கள்; மேலும், (அந்நாளில் நற்செயல்கள் செய்து இரட்சகனைத்) திருப்திப்படுத்த அவர்கள் தேடப்படமாட்டார்கள்.

36. ஆகவே, வானங்களின் இரட்சகனும், பூமியின் இரட்சகனும், அகிலாத்தாரின் இரட்சகனுமாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகும்.

37. வானங்களிலும், பூமியிலும் (உள்ள) பெருமை அவனுக்கே உரியது; அவனே (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

سُوْرَۃُ الْاَحْقَافِ مَکِّیَّۃٌ وَّ هِیَ خَمْسٌ وَّ ثَلٰثُوْنَ اٰیَۃً وَّ اَرْبَعُ رُکُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ○

حٰمٓ ﴿۱﴾ تَنْزِیْلُ الْكِتٰبِ مِنَ اللّٰهِ الْعَزِیْزِ الْحَكِیْمِ ﴿۲﴾
مَا خَلَقْنَا السَّمٰوٰتِ وَ الْاَرْضَ وَ مَا بَیْنَهُمَاۤ اِلَّا بِالْحَقِّ وَ اَجَلٍ
مُّسَمًّى ؕ وَ الَّذِیْنَ كَفَرُوْا عَمَّاۤ اُنْذِرُوْا مُعْرِضُوْنَ ﴿۳﴾ قُلْ اَرَءَیْتُمْ
مَّا تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ اَرُوْنِیْ مَا ذَا خَلَقُوْا مِنَ الْاَرْضِ
اَمْ لَهُمْ شِرْكٌ فِی السَّمٰوٰتِ ؕ اِیْتُوْنِیْ بِكِتٰبٍ مِّنْ قَبْلِ هٰذَاۤ اَوْ
اَثٰرَةٍ مِّنْ عِلْمٍ اِنْ كُنْتُمْ صٰدِقِیْنَ ﴿۴﴾ وَ مَنْ اَضَلُّ مِمَّنْ یَّدْعُوْا
مِنْ دُوْنِ اللّٰهِ مَنْ لَّا یَسْتَجِیْبُ لَهٗۤ اِلٰى یَوْمِ الْقِیٰمَةِ وَ هُمْ عَنْ
دُعَآىٕهِمْ غٰفِلُوْنَ ﴿۵﴾ وَ اِذَا حُشِرَ النَّاسُ كَانُوْا لَهُمْ اَعْدَآءً وَّ
كَانُوْا بِعِبَادَتِهِمْ كٰفِرِیْنَ ﴿۶﴾ وَ اِذَا تُتْلٰى عَلَیْهِمْ اٰیٰتُنَا بَیِّنٰتٍ
قَالَ الَّذِیْنَ كَفَرُوْا لِلْحَقِّ لَمَّا جَآءَهُمْ ۙ هٰذَا سِحْرٌ مُّبِیْنٌ ﴿۷﴾ ؕ
اَمْ یَقُوْلُوْنَ افْتَرٰىهُ ؕ قُلْ اِنِ افْتَرَیْتُهٗ فَلَا تَمْلِكُوْنَ
لِیْ مِنَ اللّٰهِ شَیْـًٔا ؕ هُوَ اَعْلَمُ بِمَا تُفِیْضُوْنَ فِیْهِ ؕ كَفٰى بِهٖ
شَهِیْدًۢا بَیْنِیْ وَ بَیْنَكُمْ ؕ وَ هُوَ الْغَفُوْرُ الرَّحِیْمُ ﴿۸﴾

அத்தியாயம் : 46

## அல் அஹ்காஃப் _ மணல் மேடுகள்

வசனங்கள் : 35 மக்கீ ருகூஃகள் : 4

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. ஹாமீம்

2. (யாவரையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன் ஆகிய அல்லாஹ்விடமிருந்தே இவ்வேதம் இறக்கப்பட்டிருக்கிறது.

3. வானங்களையும் பூமியையும் அவை இரண்டிற்கு மத்தியில் உள்ளவைகளையும், உண்மையைக்கொண்டும், குறிப்பிடப்பட்ட தவணையையும் கொண்டே தவிர நாம் படைக்கவில்லை; மேலும், (அல்லாஹ்வை) நிராகரிக்கின்றார்களே அத்தகையோர், அவர்கள் தங்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டதைவிட்டும் புறக்கணிக்கின்றவர்களாக இருக்கின்றனர்.

4. (ஆகவே நபியே ! அவர்களிடம்) நீர் கூறுவீராக: அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைக்கின்றவற்றை நீங்கள் பார்த்தீர்களா? பூமியிலிருந்து எதனை அவர்கள் படைத்திருக்கிறார்கள்? அல்லது வானங்களின் படைப்பில் அவர்களுக்குக் கூட்டு உண்டா? என்பதை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள்! நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இதற்கு (ஆதாரமாக) முன்னுள்ள யாதொரு வேதத்தையோ, அல்லது (முன்னோர்களில் யாரிடமிருந்தாவது கிடைக்கப்பெற்ற) அடிச்சுவட்டிலிருந்து (எஞ்சியிருக்கும்) அறிவு ஆதாரத்தையோ கொண்டுவாருங்கள்.

5. மேலும், அல்லாஹ்வை விடுத்து மறுமை நாள் வரை (அழைத்த போதிலும்) தனக்கு பதில் கொடுக்காதவர்களை அழைப்பவனைவிட மிக வழி கெட்டவன் யார்? அவர்களோ, இவர்களுடைய அழைப்பைப் பற்றி மறந்தவர்களாக உள்ளனர்.

6. மேலும், மனிதர்கள் (மறுமை நாளுக்காக) ஒன்றுதிரட்டப் பட்டால், (வணங்கப் பட்டவர்களான) அவர்கள் இவர்களுக்கு விரோதிகளாக இருப்பர். இவர்கள் (தங்களை) வணங்கிக் கொண்டிருந்ததையும் அவர்கள் நிராகரித்து விடுவர்.

7. இன்னும், நம்முடைய வசனங்கள் தெளிவானவையாக அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால், சத்திய(வேத)த்தை நிராகரித்து விட்டார்களே அத்தகையோர் _ அ(வ்வுண்மையான)து, அவர்களிடம் வந்தபோது இது தெளிவான சூனியமாகும் என்று கூறினார்கள்.

8. அல்லது, (நபியே! குர்ஆனாகிய) இதனை அவர் இட்டுக்கட்டிக் கொண்டார் என்று (உம்மைப்பற்றி) அவர்கள் கூறுகின்றனரா ? (அவ்வாறாயின், நபியே!) நீர் கூறுவீராக: "இதனை நான் இட்டுக்கட்டியிருந்தால் (அதற்காக ) அல்லாஹ்விடமிருந்து (உள்ள தண்டனையில்) எதையும் (தடுத்து என்னைக்காப்பாற்றிட) நீங்கள் சக்தி பெறமாட்டீர்கள்; இதைப்பற்றி (எனக்கு விரோதமாகக்கூறி) எதில் நீங்கள் மூழ்கியிருக்கிறீர்களோ, அவைகளை அவன் நன்குஅறிவான். (ஆகவே) எனக்கும், உங்களுக்கும் மத்தியில் சாட்சியாளனாக இருக்க அவனே இதற்குப் போதுமானவன்; அவனே மிக்க மன்னிப்போன்; பெரும் கிருபையுடையோன்.

قُلْ مَا كُنْتُ بِدْعًا مِّنَ الرُّسُلِ وَمَآ اَدْرِيْ مَا يُفْعَلُ بِيْ وَلَا بِكُمْ ؕ
اِنْ اَتَّبِعُ اِلَّا مَا يُوْحٰٓى اِلَيَّ وَمَآ اَنَا اِلَّا نَذِيْرٌ مُّبِيْنٌ ۹ قُلْ اَرَءَيْتُمْ
اِنْ كَانَ مِنْ عِنْدِ اللّٰهِ وَكَفَرْتُمْ بِهٖ وَشَهِدَ شَاهِدٌ مِّنْۢ بَنِيْٓ
اِسْرَآءِيْلَ عَلٰى مِثْلِهٖ فَاٰمَنَ وَاسْتَكْبَرْتُمْ ؕ اِنَّ اللّٰهَ لَا يَهْدِي الْقَوْمَ
الظّٰلِمِيْنَ ۱۰ وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْا لِلَّذِيْنَ اٰمَنُوْا لَوْ كَانَ خَيْرًا مَّا ع ۱
سَبَقُوْنَآ اِلَيْهِ ؕ وَاِذْ لَمْ يَهْتَدُوْا بِهٖ فَسَيَقُوْلُوْنَ هٰذَآ اِفْكٌ قَدِيْمٌ ۱۱
وَمِنْ قَبْلِهٖ كِتٰبُ مُوْسٰٓى اِمَامًا وَّرَحْمَةً ؕ وَهٰذَا كِتٰبٌ مُّصَدِّقٌ
لِّسَانًا عَرَبِيًّا لِّيُنْذِرَ الَّذِيْنَ ظَلَمُوْا ۖۗ وَبُشْرٰى لِلْمُحْسِنِيْنَ ۱۲ اِنَّ
الَّذِيْنَ قَالُوْا رَبُّنَا اللّٰهُ ثُمَّ اسْتَقَامُوْا فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ
يَحْزَنُوْنَ ۱۳ اُولٰٓئِكَ اَصْحٰبُ الْجَنَّةِ خٰلِدِيْنَ فِيْهَا ۚ جَزَآءًۢ بِمَا كَانُوْا
يَعْمَلُوْنَ ۱۴ وَوَصَّيْنَا الْاِنْسَانَ بِوَالِدَيْهِ اِحْسٰنًا ؕ حَمَلَتْهُ اُمُّهٗ
كُرْهًا وَّوَضَعَتْهُ كُرْهًا ؕ وَحَمْلُهٗ وَفِصٰلُهٗ ثَلٰثُوْنَ شَهْرًا ؕ حَتّٰٓى اِذَا بَلَغَ
اَشُدَّهٗ وَبَلَغَ اَرْبَعِيْنَ سَنَةً ۙ قَالَ رَبِّ اَوْزِعْنِيْٓ اَنْ اَشْكُرَ نِعْمَتَكَ
الَّتِيْٓ اَنْعَمْتَ عَلَيَّ وَعَلٰى وَالِدَيَّ وَاَنْ اَعْمَلَ صَالِحًا تَرْضٰىهُ
وَاَصْلِحْ لِيْ فِيْ ذُرِّيَّتِيْ ۚ اِنِّيْ تُبْتُ اِلَيْكَ وَاِنِّيْ مِنَ الْمُسْلِمِيْنَ ۱۵

9. (நபியே!அவர்களிடம்,) நீர் கூறுவீராக: "(அல்லாஹ் அனுப்பிய) தூதர்களில் நான் புதியவனாக இருக்கவில்லை; மேலும், என்னைக்கொண்டும், உங்களைக் கொண்டும் என்ன செய்யப்படும் என்பதையும் நான் அறியேன்; எனக்கு வஹீ மூலமாக எதை அறிவிக்கப்படுகிறதோ அதைத்தவிர, (மற்றெதையும்) நான் பின்பற்றுவதில்லை; மேலும், நான் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனேதவிர வேறில்லை."

10. (நபியே!) நீர் கூறுவீராக: நீங்கள் பார்த்தீர்களா? இ(வ்வேதமான)து அல்லாஹ்விடமிருந்து வந்ததாக இருந்து, இதை நீங்கள் நிராகரித்தும் விட்டவர்களாக இருக்கும் நிலையில் (இது உண்மையானது என) இஸ்ராயீலின் மக்களில் உள்ள சாட்சியாளர் இதுபோன்றதற்கு சாட்சியமும் கூறி (பின்னர் இதை) அவர் விசுவாசமும் கொண்டுள்ளார்; (ஆனால், இதை ஏற்காது) நீங்கள் பெருமையும் அடித்துக் கொண்டீர்கள் (ஆகவே, உங்களை விட அநியாயக் காரர்கள் யார்); நிச்சயமாக, அல்லாஹ் அநியாயக்கார சமூகத்தார்க்கு நேர்வழி காட்டமாட்டான்.

11. நிராகரிப்போர் விசுவாசிகளிடம்: "இது நன்மையானதாக இருந்தால், இதனளவில் அவர்கள் எங்களை முந்தியிருக்கமாட்டார்கள்;" என்றும் கூறுகின்றனர்; அவர்கள் இ(வ்வுண்மையான வேதத்)தைக் கொண்டு நேர்வழியும் பெறாதபோது "இது பழைய பொய்யாகும்" என்று அவர்கள் கூறுவார்கள்.

12. இதற்குமுன் மூஸாவுடைய வேதம் வழி காட்டியாகவும் அருளாகவும் இருந்தது; (குர்ஆனாகிய) இது (அதனை) உண்மைப்படுத்துகிற அரபி மொழியிலான வேதமாகும்; (இது) அநியாயம் செய்வோரை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும், நன்மை செய்வோருக்கு நன்மாராயமாகவும் இருக்கின்றது.

13. நிச்சயமாக, "எங்கள் இரட்சகன் அல்லாஹ்தான்" என்று கூறி (அதன்) பிறகு (அதில்) நிலைத்து இருக்கின்றார்களே, அத்தகையோர்_ அவர்களுக்கு (யாதொரு) பயமுமில்லை; அவர்கள் கவலையும் அடையமாட்டார்கள்.

14. அவர்கள் சுவனவாசிகள்; அவர்கள் செய்து கொண்டிருந்ததற்குக் கூலியாக நிரந்தரமாக அதில்(தங்கி)இருப்பவர்கள்.

15. மேலும், தன்னுடைய பெற்றோர்க்கு நன்மை செய்யுமாறு, மனிதனுக்கு நாம் உபதேசம் செய்தோம்; அவனுடைய தாய், சிரமத்துடன் அவனைச் சுமந்திருந்து, சிரமத்துடன் அவனைப் பிரசவிக்கின்றாள்; (அவள்) கர்ப்பத்தில் அவனைச் சுமப்பதும், அவனுக்குப் பால்குடி மறக்கச் செய்வதும் முப்பது மாதங்களாகும். முடிவாக இவன் வாலிபமாகி, நாற்பது வயதை அடைந்ததும்: "என் இரட்சகனே! நீ என் மீதும், என் பெற்றோர்மீதும் புரிந்த உன் அருளுக்காக உனக்கு நான் நன்றி செலுத்தி, நீ எதனைப் பொருந்திக்கொள்வாயோ அந்த நற்செயலைச் செய்யவும் (நல்லறிவை) நீ எனக்கு உதிக்கச்செய்வாயாக! எனக்காக என்னுடைய சந்ததியில் (உள்ளோரை) நீ சீர்திருத்தியும் வைப்பாயாக! நிச்சயமாக, நான் தவ்பா செய்து உன் பக்கம் திரும்பிவிட்டேன்; நிச்சயமாக, நானோ (உனக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களில் (ஒருவனாகவும்) இருக்கிறேன்" என்று கூறுவான்.

اُولٰٓئِكَ الَّذِيْنَ نَتَقَبَّلُ عَنْهُمْ اَحْسَنَ مَا عَمِلُوْا وَنَتَجَاوَزُ عَنْ سَيِّاٰتِهِمْ
فِيْٓ اَصْحٰبِ الْجَنَّةِ ؕ وَعْدَ الصِّدْقِ الَّذِيْ كَانُوْا يُوْعَدُوْنَ ﴿۱۶﴾ وَالَّذِيْ
قَالَ لِوَالِدَيْهِ اُفٍّ لَّكُمَآ اَتَعِدٰنِنِيْٓ اَنْ اُخْرَجَ وَقَدْ خَلَتِ الْقُرُوْنُ
مِنْ قَبْلِيْ ۚ وَهُمَا يَسْتَغِيْثٰنِ اللّٰهَ وَيْلَكَ اٰمِنْ ۖ اِنَّ وَعْدَ اللّٰهِ حَقٌّ ۚ
فَيَقُوْلُ مَا هٰذَآ اِلَّآ اَسَاطِيْرُ الْاَوَّلِيْنَ ﴿۱۷﴾ اُولٰٓئِكَ الَّذِيْنَ حَقَّ عَلَيْهِمُ
الْقَوْلُ فِيْٓ اُمَمٍ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِمْ مِّنَ الْجِنِّ وَالْاِنْسِ ؕ اِنَّهُمْ
كَانُوْا خٰسِرِيْنَ ﴿۱۸﴾ وَلِكُلٍّ دَرَجٰتٌ مِّمَّا عَمِلُوْا ۚ وَلِيُوَفِّيَهُمْ اَعْمَالَهُمْ
وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿۱۹﴾ وَيَوْمَ يُعْرَضُ الَّذِيْنَ كَفَرُوْا عَلَى النَّارِ ؕ
اَذْهَبْتُمْ طَيِّبٰتِكُمْ فِيْ حَيَاتِكُمُ الدُّنْيَا وَاسْتَمْتَعْتُمْ بِهَا ۚ فَالْيَوْمَ
تُجْزَوْنَ عَذَابَ الْهُوْنِ بِمَا كُنْتُمْ تَسْتَكْبِرُوْنَ فِي
الْاَرْضِ بِغَيْرِ الْحَقِّ وَبِمَا كُنْتُمْ تَفْسُقُوْنَ ﴿۲۰﴾ ع وَاذْكُرْ اَخَا ۲ ع ۱۰ ۲
عَادٍ ؕ اِذْ اَنْذَرَ قَوْمَهٗ بِالْاَحْقَافِ وَقَدْ خَلَتِ النُّذُرُ مِنْۢ
بَيْنِ يَدَيْهِ وَمِنْ خَلْفِهٖٓ اَلَّا تَعْبُدُوْٓا اِلَّا اللّٰهَ ؕ اِنِّيْٓ اَخَافُ
عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ عَظِيْمٍ ﴿۲۱﴾ قَالُوْٓا اَجِئْتَنَا لِتَاْفِكَنَا
عَنْ اٰلِهَتِنَا ۚ فَاْتِنَا بِمَا تَعِدُنَآ اِنْ كُنْتَ مِنَ الصّٰدِقِيْنَ ﴿۲۲﴾

16. அவர்கள் எத்தகையோரென்றால்_சொர்க்க வாசிகளில் உள்ளவர்களாக இருக்க, அவர்கள் செய்தவற்றில்(உள்ள)மிக அழகானதை நாம் அங்கீகரித்துக் கொண்டு, அவர்களுடைய தீமைகளை விட்டும் புறக்கணித்து விடுவோம்; அவர்கள் வாக்களிக்கப் பட்டிருந்தார்களே அத்தகையது உண்மையான வாக்குறுதியாகும்.

17. ஒருவன் தன் பெற்றோரிடம்,(அவர்கள் மறுமையைப் பற்றிக் கூறிய நன் மொழிகளை மறுத்துஇகழ்ச்சிக்குரிய வார்த்தையான), " சீச்சீ! உங்களுக்கென்ன நேர்ந்தது! நான் இறந்த பின் உயிர்ப்பித்து வெளியாக்கப்படுவேன் என்று நீங்கள் இருவரும் என்னை பயமுறுத்துகிறீர்களா? திட்டமாக எனக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினர் சென்றுவிட்டனர், (அவர்களின் நிலை என்ன?)" என்று கூறுகிறான்; (அவனது தீமையிலிருந்து காத்து) இரட்சிக்குமாறு அவ்விருவரும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து (பின்னர் அவனிடம்) "உனக்கென்ன கேடு? நீ (அல்லாஹ்வை) விசுவாசிப்பாயாக! நிச்சயமாக, அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானது" (என்றும் கூறுகின்றார்கள்); அப்பொழுது, "இவைகளெல்லாம் முன்னோரின் கட்டுக் கதைகளேயன்றி வேறில்லை," என்று அவன் கூறுகின்றான்.

18. (இவ்வாறுகூறும்) இத்தகையோர் _ இவர்களுக்கு முன் சென்று போன மனு, ஜின்களிலுள்ள சமூகத்தார்களில் (பாவம் செய்தால், அல்லாஹ்வுடைய வேதனை வந்திறங்கியே தீருமென்ற)இரட்சகனின்கூற்று அவர்களின் மீது உண்மையாகி விட்டது; நிச்சயமாக, அவர்கள் நஷ்டமடைந்தவர்களாகிவிட்டனர்.

19. (இவர்களில்) ஒவ்வொருவருக்கும் அவ(ரவ)ர்கள் செயலுக்குத் தக்க பதவி களிருக்கின்றன; அவர்களின் செயல்(களுக்குரிய கூலி)களை அவன் அவர்களுக்கு நிறைவு செய்வதற்காகவும், (பதவிகளை நல்குகிறான்;) அவர்கள் அநீதமிழைக்கப்படவும் மாட்டார்கள்.

20. அன்றியும், நிராகரிப்போர் நரகத்தின் முன் கொண்டுவரப்படும் நாளில் (அவர்களிடம்)," உங்களுடைய நல்லவைகளை உங்களுடைய உலகவாழ்க்கையில் நீங்கள் போக்கிவிட்டீர்கள், அவற்றைக்கொண்டு இன்பமனுபவித்தும் விட்டீர்கள்; ஆகவே, நீங்கள் பூமியில் நியாயமின்றிப் பெருமையடித்துக் கொண்டிருந்த காரணத்தாலும், இன்னும், பாவம் செய்துகொண்டிருந்த காரணத்தாலும் இழிவு தரும் வேதனையை இன்றையத் தினம் நீங்கள் கூலியாகக் கொடுக்கப்படுவீர்கள்" (என்று கூறப்படும்).

21 (நபியே!) நீர், (ஹூத் நபியாகிய)" ஆது" உடைய சகோதரரை நினைவு கூர்வீராக! அவர் மணல் குன்றுகளில் (குடி) இருந்த தன் சமூகத்தாரை எச்சரிக்கை செய்த போது, அவருக்கு முன்னும், அவருக்குப் பின்னும் எச்சரிக்கை செய்வோர் திட்டமாக வந்து சென்று விட்டனர்; (அவர் தன் சமூகத்தாரிடம்) "அல்லாஹ்வை யன்றி (வேறெதனையும்) நீங்கள் வணங்காதீர்கள்; நிச்சயமாக, மகத்தான நாளின் வேதனையை உங்கள்மீது நான் பயப்படுகிறேன்" (என்றார்).

22. அ(தற்க)வர்கள், " எங்களுடைய (வணக்கத்திற்குரிய) தெய்வங்களை விட்டு, எங்களைத் திருப்பிவிட நீர் எங்களிடம்வந்தீரா? நீர் உண்மையாளர்களில் இருந்தால், நீர் எங்களுக்கு எதைக் கொண்டுவாக்களித்தீரோ அ(வ்வேதனை யான)தை நம்மிடம் கொண்டு வாரும்" என்று கூறினார்கள்.

قَالَ اِنَّمَا الْعِلْمُ عِنْدَ اللّٰهِ ۖ وَاُبَلِّغُكُمْ مَّاۤ اُرْسِلْتُ بِهٖ وَلٰكِنِّيْۤ
اَرٰىكُمْ قَوْمًا تَجْهَلُوْنَ ﴿٢٣﴾ فَلَمَّا رَاَوْهُ عَارِضًا مُّسْتَقْبِلَ اَوْدِيَتِهِمْ ۙ
قَالُوْا هٰذَا عَارِضٌ مُّمْطِرُنَا ؕ بَلْ هُوَ مَا اسْتَعْجَلْتُمْ بِهٖ ؕ رِيْحٌ
فِيْهَا عَذَابٌ اَلِيْمٌ ﴿٢٤﴾ ۙ تُدَمِّرُ كُلَّ شَيْءٍۭ بِاَمْرِ رَبِّهَا
فَاَصْبَحُوْا لَا يُرٰۤى اِلَّا مَسٰكِنُهُمْ ؕ كَذٰلِكَ نَجْزِي الْقَوْمَ
الْمُجْرِمِيْنَ ﴿٢٥﴾ وَلَقَدْ مَكَّنّٰهُمْ فِيْمَاۤ اِنْ مَّكَّنّٰكُمْ فِيْهِ
وَجَعَلْنَا لَهُمْ سَمْعًا وَّاَبْصَارًا وَّاَفْـِٕدَةً ۖ فَمَاۤ اَغْنٰى عَنْهُمْ
سَمْعُهُمْ وَلَاۤ اَبْصَارُهُمْ وَلَاۤ اَفْـِٕدَتُهُمْ مِّنْ شَيْءٍ اِذْ
كَانُوْا يَجْحَدُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ وَحَاقَ بِهِمْ مَّا كَانُوْا بِهٖ
يَسْتَهْزِءُوْنَ ﴿٢٦﴾ ع وَلَقَدْ اَهْلَكْنَا مَا حَوْلَكُمْ مِّنَ الْقُرٰى ع ٣ ٣
وَصَرَّفْنَا الْاٰيٰتِ لَعَلَّهُمْ يَرْجِعُوْنَ ﴿٢٧﴾ فَلَوْلَا نَصَرَهُمُ
الَّذِيْنَ اتَّخَذُوْا مِنْ دُوْنِ اللّٰهِ قُرْبَانًا اٰلِهَةً ؕ بَلْ ضَلُّوْا
عَنْهُمْ ۚ وَذٰلِكَ اِفْكُهُمْ وَمَا كَانُوْا يَفْتَرُوْنَ ﴿٢٨﴾ وَاِذْ صَرَفْنَاۤ
اِلَيْكَ نَفَرًا مِّنَ الْجِنِّ يَسْتَمِعُوْنَ الْقُرْاٰنَ ۚ فَلَمَّا حَضَرُوْهُ
قَالُوْۤا اَنْصِتُوْا ۚ فَلَمَّا قُضِيَ وَلَّوْا اِلٰى قَوْمِهِمْ مُّنْذِرِيْنَ ﴿٢٩﴾

23. அ(தற்க)வர், ("வேதனை எப்பொழுது என்ற) அறிவு எல்லாம் அல்லாஹ்விடமே இருக்கின்றது; அன்றியும், எதனைக்கொண்டு நான் அனுப்பப்பட்டேனோ அதனையே நான் உங்களுக்கு எத்திவைக்கிறேன்; என்றாலும் உங்களை நான் அறிவில்லாத சமூகத்தவராகவே காணுகிறேன்" என்றார்.

24. பின்னர், அதனை தம்முடைய பள்ளத் தாக்குகளை முன்னோக்கி வருகின்ற மேகமாக அவர்கள் கண்டபோது, இது எங்களுக்கு மழைபெய்ய வரும் மேகம்தான் என்று கூறினார்கள்; (அதற்கு அவர்களிடம்) "அப்படியல்ல! இது நீங்கள் எதற்காக அவசரப்பட்டீர்களோ அதுதான்; (இது ஒரு) கொடுங்காற்று, இதில் துன்புறுத்தும் வேதனை இருக்கின்றது" (என்றும்),

25. அது தன் இரட்சகனின் கட்டளைப்படி சகல பொருட்களையும் அழித்துவிடும் (என்றும் ஹூத் கூறினார். அவர்கள் வசித்திருந்து அழிந்த) அவர்களுடைய குடியிருப்புகளைத் தவிர வேறொன்றும் காணப்படாதவாறு காலையில் அவர்கள் (அழிவிற்குள்) ஆகி விட்டனர்; இவ்வாறே குற்றவாளிகளான கூட்டத்தினருக்கு நாம் கூலி கொடுக்கின்றோம்.

26. மேலும், உங்களுக்கு எதில் நாம் வசதி செய்து கொடுக்கவில்லையோ அதில் அவர்களுக்குத் திட்டமாக நாம் வசதி செய்து கொடுத்திருந்தோம்; மேலும், அவர்களுக்குச் செவிப்புலனையும், பார்வைகளையும், இதயங்களையும் நாம் ஆக்கினோம்; ஆயினும் அவர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களை நிராகரித்துக் கொண்டிருந்தவர்களாக இருந்த சமயத்தில் அவர்களுடைய செவிப்புலனும், அவர்களுடைய பார்வைகளும், அவர்களுடைய இதயங்களும் அவர்களுக்கு யாதொரு பயனுமளிக்கவில்லை; எதனை அவர்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்தார்களோ அது அவர்களைச் சூழ்ந்தும் கொண்டது.

27. ஊர்களில் உங்களைச் சுற்றியுள்ளவைகளையும் நிச்சயமாக நாம் அழித்து விட்டோம்; அவர்கள் (பாவத்திலிருந்து) திரும்புவதற்காக அத்தாட்சிகளை நாம் திரும்பத் திரும்பக் காண்பித்தோம்.

28. (தங்களை அல்லாஹ்வுக்கு) சமீபமாக்கி வைக்கக்கூடிய (வணக்கத்திற்குரிய) தெய்வங்களென்று அல்லாஹ் அல்லாதவற்றை இவர்கள் எடுத்துக் கொண்டார்களே அத்தகையவர்கள் இவர்களுக்கு உதவி செய்திருக்க வேண்டாமா? இல்லை, அவர்களெல்லாம் இவர்களை விட்டு மறைந்து விட்டனர்; இது, அவர்கள் பொய்யாகக் கூறியதும், அவர்கள் இட்டுக்கட்டிக் கொண்டிருந்தார்களே அதுவுமாகும் (என்று தெளிவாகிவிட்டது).

29. (நபியே!) ஜின்களில் சிலரை இந்தக் குர்ஆனை அவர்கள் செவியேற்பதற்காக உம்மிடம் நாம் திருப்பியதையும் (நினைவு கூர்வீராக!) பின்னர் அவர்கள் அங்கு வந்தடைந்து (சிலர் சிலரிடம்) "நீங்கள் வாய் பொத்தி இருங்கள்" என்று கூறினார்கள்; பிறகு அது முடிக்கப்பட்டபோது, தங்கள் கூட்டத்தாரிடம் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகத் திரும்பினர்.

قَالُوْا يٰقَوْمَنَآ اِنَّا سَمِعْنَا كِتٰبًا اُنْزِلَ مِنْ بَعْدِ مُوْسٰى مُصَدِّقًا
لِّمَا بَيْنَ يَدَيْهِ يَهْدِيْٓ اِلَى الْحَقِّ وَاِلٰى طَرِيْقٍ مُّسْتَقِيْمٍ ﴿۳۰﴾ يٰقَوْمَنَآ
اَجِيْبُوْا دَاعِيَ اللّٰهِ وَاٰمِنُوْا بِهٖ يَغْفِرْ لَكُمْ مِّنْ ذُنُوْبِكُمْ وَيُجِرْكُمْ
مِّنْ عَذَابٍ اَلِيْمٍ ﴿۳۱﴾ وَمَنْ لَّا يُجِبْ دَاعِيَ اللّٰهِ فَلَيْسَ بِمُعْجِزٍ فِي
الْاَرْضِ وَلَيْسَ لَهٗ مِنْ دُوْنِهٖٓ اَوْلِيَآءُ ۭ اُولٰۗىِٕكَ فِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۳۲﴾
اَوَلَمْ يَرَوْا اَنَّ اللّٰهَ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَلَمْ يَعْيَ
بِخَلْقِهِنَّ بِقٰدِرٍ عَلٰٓى اَنْ يُّحْيِۦَ الْمَوْتٰى ۭ بَلٰٓى اِنَّهٗ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿۳۳﴾
وَيَوْمَ يُعْرَضُ الَّذِيْنَ كَفَرُوْا عَلَى النَّارِ ۭ اَلَيْسَ هٰذَا بِالْحَقِّ ۭ قَالُوْا
بَلٰى وَرَبِّنَا ۭ قَالَ فَذُوْقُوا الْعَذَابَ بِمَا كُنْتُمْ تَكْفُرُوْنَ ﴿۳۴﴾ فَاصْبِرْ
كَمَا صَبَرَ اُولُوا الْعَزْمِ مِنَ الرُّسُلِ وَلَا تَسْتَعْجِلْ لَّهُمْ ۭ كَاَنَّهُمْ
يَوْمَ يَرَوْنَ مَا يُوْعَدُوْنَ ۙ لَمْ يَلْبَثُوْٓا اِلَّا سَاعَةً مِّنْ نَّهَارٍ ۭ
بَلٰغٌ ۚ فَهَلْ يُهْلَكُ اِلَّا الْقَوْمُ الْفٰسِقُوْنَ ﴿۳۵﴾ ع ۴

## سُوْرَةُ مُحَمَّدٍ مَدَنِيَّةٌ وَّهِيَ ثَمَانٌ وَّثَلٰثُوْنَ اٰيَةً وَّاَرْبَعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلَّذِيْنَ كَفَرُوْا وَصَدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ اَضَلَّ اَعْمَالَهُمْ ﴿۱﴾

30. (அவர்களிடம்,)"எங்களுடைய கூட்டத்தார்களே! நிச்சயமாக நாங்கள் ஒரு வேதத்தைச் செவியுற்றோம்; (அது) தனக்கு முன்னுள்ளதை(வேதங்களை) உண்மைப்படுத்துகின்ற நிலையில், மூஸாவுக்குப் பின்(அது) இறக்கப்பட்டுள்ளது; அது சத்தியத்தின்(_உண்மை மார்க்கத்தின்) பாலும்,நேரான வழியின் பாலும் வழி காட்டுகிறது" என்று கூறினார்கள்.

31." எங்களுடைய சமூகத்தாரே! அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு நீங்கள் பதில் கூறுங்கள்; மேலும், அவரை விசுவாசியுங்கள்; (அதன்பொருட்டு) உங்களுடைய பாவங்களை உங்களுக்கு அவன்(அல்லாஹ்) மன்னித்து விடுவான்; துன்புறுத்தும் வேதனையிலிருந்தும் உங்களை அவன் காத்துக்கொள்வான்"(என்றும்),

32. "எவர் அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு பதில் கூறவில்லையோ அவர் பூமியில் (அல்லாஹ்வை) இயலாமல் ஆக்கி விடுபவரல்லர்; (அல்லாஹ்வாகிய) அவனையன்றி, அவருக்கு உதவியாளர்களுமில்லை; அ(த்தகைய)வர்கள் பகிரங்கமான வழிகேட்டில் இருக்கிறார்கள்" (என்றும் ஜின்கள் கூறினார்கள்).

33. நிச்சயமாக, வானங்களையும், பூமியையும் படைத்து, இன்னும், அவைகளைப் படைத்ததால் சோர்வடையவில்லையே அத்தகைய அல்லாஹ் மரணித்தோரை உயிர்ப்பிக்க ஆற்றலுடையவன் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? ஆம்! நிச்சயமாக, அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

34. மேலும், நிராகரிப்போரை நரகத்தின் முன் கொண்டு வரப்படும் நாளில்(அவர்களிடம்,) "இது உண்மையானதாக இல்லையா?" (என்று கேட்கப்படும்) அ(தற்க)வர்கள் "எங்களிரட்சகன் மீது சத்தியமாக! ஆம், (உண்மைதான்)" என்று கூறுவார்கள். (அதற்கவர்களிடம்,) "நீங்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததன் காரணமாக (இதன்) வேதனையை நீங்கள் சுவைத்துக் கொண்டிருங்கள்" என்று (அல்லாஹ்) கூறுவான்.

35. (நபியே! நம்முடைய) தூதர்களிலுள்ள உறுதிமிக்கவர்கள், (கஷ்டங்களை) பொறுத்துக்கொண்டிருந்த பிரகாரமே, நீரும் பொறுமையாக இருப்பீராக! (நிராகரித்த) அவர்களுக்காக (வேதனையை) நீர் அவசரப்பட வேண்டாம்; அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டதை அவர்கள் காணும் நாளில், (இப்புவியில்) ஒரு பகலில் ஒரு நாழிகையேயன்றி (அதிகமாகத்) தாம் தங்காதவர்களைப் போன்றிருப்பார்கள்(இது உம்மால் அவர்களுக்கு) எத்திவைக்கப்பட வேண்டியதாகும்; ஆகவே, பாவம் செய்த கூட்டத்தினரைத் தவிர (மற்றெவரும்) அழிக்கப்படுவார்களா?

---

அத்தியாயம் : 47

## முஹம்மது

வசனங்கள் : 38 மதனீ ருகூஃகள் : 4

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. (அல்லாஹ்வின் அத்தாட்சிகளை) நிராகரித்துவிட்டு, அல்லாஹ்வின் பாதையை(அதில் மனிதர்கள் செல்வதை)விட்டும் தடுத்துக்கொண்டிருந்தார்களே அத்தகையோர்_அவர்களின் செயல்களை (பயனற்றதாக்கி)அவன் வீணாக்கி விட்டான்.

وَالَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَاٰمَنُوْا بِمَا نُزِّلَ عَلٰى مُحَمَّدٍ
وَّهُوَ الْحَقُّ مِنْ رَّبِّهِمْ ۙ كَفَّرَ عَنْهُمْ سَيِّاٰتِهِمْ وَاَصْلَحَ بَالَهُمْ ﴿۲﴾
ذٰلِكَ بِاَنَّ الَّذِيْنَ كَفَرُوا اتَّبَعُوا الْبَاطِلَ وَاَنَّ الَّذِيْنَ اٰمَنُوا
اتَّبَعُوا الْحَقَّ مِنْ رَّبِّهِمْ ؕ كَذٰلِكَ يَضْرِبُ اللّٰهُ لِلنَّاسِ اَمْثَالَهُمْ ﴿۳﴾
فَاِذَا لَقِيْتُمُ الَّذِيْنَ كَفَرُوْا فَضَرْبَ الرِّقَابِ ؕ حَتّٰۤى اِذَاۤ اَثْخَنْتُمُوْهُمْ
فَشُدُّوا الْوَثَاقَ ۙ فَاِمَّا مَنًّۢا بَعْدُ وَاِمَّا فِدَآءً حَتّٰى تَضَعَ الْحَرْبُ
اَوْزَارَهَا ۛ ذٰلِكَ ؕ وَلَوْ يَشَآءُ اللّٰهُ لَانْتَصَرَ مِنْهُمْ وَلٰكِنْ لِّيَبْلُوَا۟
بَعْضَكُمْ بِبَعْضٍ ؕ وَالَّذِيْنَ قُتِلُوْا فِىْ سَبِيْلِ اللّٰهِ فَلَنْ يُّضِلَّ اَعْمَالَهُمْ ﴿۴﴾
سَيَهْدِيْهِمْ وَيُصْلِحُ بَالَهُمْ ﴿۵﴾ وَيُدْخِلُهُمُ الْجَنَّةَ عَرَّفَهَا لَهُمْ ﴿۶﴾
يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِنْ تَنْصُرُوا اللّٰهَ يَنْصُرْكُمْ وَيُثَبِّتْ
اَقْدَامَكُمْ ﴿۷﴾ وَالَّذِيْنَ كَفَرُوْا فَتَعْسًا لَّهُمْ وَاَضَلَّ اَعْمَالَهُمْ ﴿۸﴾
ذٰلِكَ بِاَنَّهُمْ كَرِهُوْا مَاۤ اَنْزَلَ اللّٰهُ فَاَحْبَطَ اَعْمَالَهُمْ ﴿۹﴾
اَفَلَمْ يَسِيْرُوْا فِى الْاَرْضِ فَيَنْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الَّذِيْنَ
مِنْ قَبْلِهِمْ ؕ دَمَّرَ اللّٰهُ عَلَيْهِمْ ۫ وَلِلْكٰفِرِيْنَ اَمْثَالُهَا ﴿۱۰﴾ ذٰلِكَ
بِاَنَّ اللّٰهَ مَوْلَى الَّذِيْنَ اٰمَنُوْا وَاَنَّ الْكٰفِرِيْنَ لَا مَوْلٰى لَهُمْ ﴿۱۱﴾ ع

معٓ ۱۳ وقد يبتدأ بقوله ذٰلك ولكن حسن اتصاله بما قبله ويوقف على ذٰلك ۱۲ عند المتقدمين ۱۲

ع ۱ ۵

2. இன்னும், (அல்லாஹ்வை) விசுவாசித்து, நற்கருமங்களையும் செய்து, முஹம்மது மீது இறக்கிவைக்கப்பட்டதையும்—அது தங்கள் இரட்சகனிடமிருந்து வந்த உண்மை(யான வேதம்) ஆக இருக்கும் நிலையில்— விசுவாசித்திருந்தார்களே அத்தகையவர்களின் தீயவைகளை அவர்களை விட்டுப் போக்கி, அவர்களுடைய நிலைமையையும் (அல்லாஹ்வாகிய) அவன் சீர் படுத்திவிட்டான்.

3. அது (ஏனென்றால்,) நிச்சயமாக நிராகரிப்போர் பொய்யைப் பின்பற்றினார்கள்; விசுவாசங்கொண்டவர்களோ, நிச்சயமாக தங்கள் இரட்சகனிடமிருந்து வந்த உண்மையைப் பின்பற்றினார்கள் என்பதாலுமாகும்; இவ்வாறே (மற்ற) மனிதர்களுக்கு, அல்லாஹ் அவர்களின் நிலைமைகளை உதாரணங்களா(கக்கூறி தெளிவா)க்குகின்றான்.

4. ஆகவே, (விசுவாசிகளே ! உங்களிடம் போர் புரியும்) நிராகரிப்போரை நீங்கள் சந்திப்பீர்களாயின், (தயக்கமின்றி அவர்களுடைய) பிடரிகளை வெட்டுங்கள்; முடிவாக நீங்கள் அவர்களுடன் கடும் போரிட்டு (கைதிகளாகப் பிடித்துக்கொண்டு) விட்டால் அப்போது (கைதிகளின்)கட்டை பலப்படுத்தி விடுங்கள்; அதன் பின்னர் (அவர்களை) உபகாரமாக (விட்டு விடுங்கள்) அல்லது ஈடுபெற்று (விட்டு விடுங்கள்; இவ்வாறு) போர் (புரியும் எதிரிகள்) தம் ஆயுதங்களைக் கீழே வைக்கும் வரையில் (போர்புரியுங்கள்); இது (அல்லாஹ்வின் கட்டளையாகும்) அல்லாஹ் நாடியிருந்தாலோ (முன்னதாகவே பதிலடிகொடுத்து) அவர்களை தண்டித்திருப்பான்; எனினும், (போர் புரிய கட்டளையிட்டது) உங்களில் சிலரை, சிலரைக்கொண்டு சோதிப்பதற்கேயாகும்; மேலும், அல்லாஹ்வுடைய பாதையில் கொல்லப்பட்டார்களே அத்தகையோர்— அவர்களுடைய (நன்மையான) செயல்களை அவன் வீணாக்கிவிடவே மாட்டான்.

5. அவர்களை அவன் நேர் வழியில் செலுத்துவான்; அவர்களுடைய நிலைமையையும் அவன் சீர்படுத்திவிடுவான்.

6. மேலும், அவன் எ(ந்தச் சுவனபதியான)தை அவர்களுக்கு அறிவித்திருந்தானோ, அச்சுவனபதியில் அவர்களைப் பிரவேசிக்கச்செய்வான்.

7. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி செய்தால், அவன் உங்களுக்கு உதவிசெய்வான்; மேலும், உங்களுடைய பாதங்களை நிலைபெறச்செய்வான்.

8. இன்னும், (இவ்வேதத்தை) நிராகரிக்கின்றார்களே அத்தகையோர்— அவர்களுக்குக் கேடுதான்; அவர்களுடைய செயல்களை (அல்லாஹ்வாகிய) அவன் அழித்தும்விட்டான்.

9. இது (ஏனெனில்), அல்லாஹ் இறக்கிவைத்ததை நிச்சயமாக அவர்கள் வெறுத்துவிட்டார்கள் என்ற காரணத்தினாலாகும்; ஆதலால், அவர்களுடைய செயல்களையெல்லாம் (அல்லாஹ்வாகிய) அவன் அழித்துவிட்டான்.

10. அவர்கள் பூமியில் சுற்றித் திரியவில்லையா? (அவ்வாறாயின்,) அவர்களுக்கு முன்னர் (அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்துகொண்டு) இருந்தவர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதைக் கண்டுகொள்வார்கள்; அவர்கள் மீது அல்லாஹ் அடியோடு அழிவை ஏற்படுத்திவிட்டான்; நிராகரிப்போருக்கும் இவை போன்றவை உண்டு.

11. இது (ஏனெனில்), நிச்சயமாக அல்லாஹ் விசுவாசங்கொண்டோரின் பாதுகாவலன் என்பதினாலும், நிச்சயமாக நிராகரிப்போர், அவர்களுக்குப் பாதுகாவலர் எவருமில்லை என்ற காரணத்தினாலுமாகும்.

إِنَّ اللّٰهَ يُدْخِلُ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ جَنّٰتٍ تَجْرِيْ
مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ؕ وَالَّذِيْنَ كَفَرُوْا يَتَمَتَّعُوْنَ وَيَاْكُلُوْنَ كَمَا
تَاْكُلُ الْاَنْعَامُ وَالنَّارُ مَثْوًى لَّهُمْ ﴿۱۲﴾ وَكَاَيِّنْ مِّنْ قَرْيَةٍ هِيَ اَشَدُّ
قُوَّةً مِّنْ قَرْيَتِكَ الَّتِيْٓ اَخْرَجَتْكَ ۚ اَهْلَكْنٰهُمْ فَلَا نَاصِرَ لَهُمْ ﴿۱۳﴾
اَفَمَنْ كَانَ عَلٰى بَيِّنَةٍ مِّنْ رَّبِّهٖ كَمَنْ زُيِّنَ لَهٗ سُوْٓءُ عَمَلِهٖ وَ
اتَّبَعُوْٓا اَهْوَآءَهُمْ ﴿۱۴﴾ مَثَلُ الْجَنَّةِ الَّتِيْ وُعِدَ الْمُتَّقُوْنَ ؕ فِيْهَآ
اَنْهٰرٌ مِّنْ مَّآءٍ غَيْرِ اٰسِنٍ ۚ وَاَنْهٰرٌ مِّنْ لَّبَنٍ لَّمْ يَتَغَيَّرْ طَعْمُهٗ ۚ وَاَنْهٰرٌ
مِّنْ خَمْرٍ لَّذَّةٍ لِّلشّٰرِبِيْنَ ۚ وَاَنْهٰرٌ مِّنْ عَسَلٍ مُّصَفًّى ؕ وَلَهُمْ
فِيْهَا مِنْ كُلِّ الثَّمَرٰتِ وَمَغْفِرَةٌ مِّنْ رَّبِّهِمْ ؕ كَمَنْ هُوَ خَالِدٌ فِي
النَّارِ وَسُقُوْا مَآءً حَمِيْمًا فَقَطَّعَ اَمْعَآءَهُمْ ﴿۱۵﴾ وَمِنْهُمْ مَّنْ يَّسْتَمِعُ
اِلَيْكَ ۚ حَتّٰٓى اِذَا خَرَجُوْا مِنْ عِنْدِكَ قَالُوْا لِلَّذِيْنَ اُوْتُوا الْعِلْمَ
مَاذَا قَالَ اٰنِفًا ۫ اُولٰٓئِكَ الَّذِيْنَ طَبَعَ اللّٰهُ عَلٰى قُلُوْبِهِمْ وَ
اتَّبَعُوْٓا اَهْوَآءَهُمْ ﴿۱۶﴾ وَالَّذِيْنَ اهْتَدَوْا زَادَهُمْ هُدًى وَّاٰتٰىهُمْ
تَقْوٰىهُمْ ﴿۱۷﴾ فَهَلْ يَنْظُرُوْنَ اِلَّا السَّاعَةَ اَنْ تَاْتِيَهُمْ بَغْتَةً ۚ
فَقَدْ جَآءَ اَشْرَاطُهَا ۚ فَاَنّٰى لَهُمْ اِذَا جَآءَتْهُمْ ذِكْرٰىهُمْ ﴿۱۸﴾

12. நிச்சயமாக அல்லாஹ் விசுவாசங்கொண்டு நற்கருமங்களும் செய்தார்களே அத்தகையோரை சுவனபதிகளில் புகுத்துகின்றான்; அவற்றின் கீழ் நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும்;இன்னும், நிராகரிக்கின்றார்களே அத்தகையவர்கள் (உலக) சுகத்தை அனுபவித்துக் கொண்டும், கால்நடைகள் தின்பதைப் போல் தின்று கொண்டும் இருக்கிறார்கள்;(நரக) நெருப்பே அவர்களின் ஒதுங்குமிடமாகும்.

13. இன்னும், உம்மை வெளியேற்றிய அத்தகைய உம்முடைய ஊ(ரா)ரை விட எத்தனையோ ஊ(ரா)ர்கள் _அவை(களில் வசித்தவர்கள்)பலத்தால் மிகக் கடினமாக இருந்தன(ர்); அவர்களை(அவர்கள் செய்த அக்கிரமத்தின் காரணமாக) நாம் அழித்துவிட்டோம்; (அச்சமயம்) அவர்களுக்கு உதவிபுரிவோர் (எவரும்) இல்லை.

14. எனவே, தன் இரட்சகனிடமிருந்துள்ள தெளிவான ஆதாரத்தின் மீதிருக் கிறாரே அவர், எவனுடைய செயலின் தீமை அவனுக்கு அழகாகக் காண்பிக் கப்பட்டு, தங்கள் மனோ இச்சைகளையும் பின்பற்றினார்களே அவர்களைப் போன்று ஆவாரா?

15. பயபக்தியுடையவர்கள் வாக்களிக்கப்பட்டார்களே அத்தகைய சுவனத்தின் தன்மையாகிறது: அதில் தண்ணீரிலிருந்து மாற்றமடையாத (தெளிவான) ஆறுகளும், பாலிருந்து தன் சுவைமாறாத (பால்) ஆறுகளும், மதுவிலிருந்து குடிப்போருக்குப் பேரின்பமளிக்கக்கூடிய ஆறுகளும், தெளிவான தேனிலிருந்து (தேன்) ஆறுகளும் உண்டு; அதில் அவர்களுக்கு ஒவ்வொரு விதமான கனிவகைகளும், தங்கள் இரட்சகனிடமிருந்து மன்னிப்பும் உண்டு; (இத்தகைய நற்பாக்கியங்களை நல்கப்பெற்ற இத்தகையோர்) நரகத்தில் எவர் நிரந்தரமாக(த் தங்கி)யிருந்து, கொதிக்கும் நீரும் புகட்டப்பட்டு (அதனால்) அவர்களின் குடல்களை அது துண்டு துண்டாக்கிவிடுமே அவர்களைப்போன்று ஆவாரா?

16. (நபியே!) அவர்களில் உமக்குச் செவி சாய்ப்பவர்களும் இருக்கின்றனர்; எதுவரையெனில், அவர்கள் உம்மிடமிருந்து வெளியேறிய சமயத்தில், (விசுவாசிகளாகிய, இவ்வேத) அறிவு கொடுக்கப்பட்டவர்களிடம்("உங்களுடைய நபியாகிய) அவர் சிறிது முன் என்ன கூறினார்?" என்று கேட்கின்றனர்; அவர்கள் எத்தகையோரென்றால், அவர்களுடைய இதயங்களின் மீது அல்லாஹ் முத்திரையிட்டுவிட்டான்; மேலும், இவர்கள் தங்கள் மனோ இச்சைகளையே பின்பற்றிவிட்டனர்.

17. மேலும், நேர்வழி பெற்றுவிட்டோர் _அவர்களுடைய நேர் வழியை (மேலும்)அவன் அதிகப்படுத்தி, அவர்களின் பயபக்தியையும் அவர்களுக்கு அவன் கொடுத்தான்.

18. எனவே, (நபியே ! நிராகரிப்பவர்களான)அவர்கள், மறுமையை _அது தங்களிடம் திடீரென வருவதைத் தவிர (வேறெதனையும்) அவர்கள் எதிர்பார்க் கின்றனரா? (ஏனென்றால்,) அதன் அடையாளங்கள் திட்டமாக வந்துவிட்டன; அவர்களுக்கு (மறுமை நாளான ) அது வந்து விட்டால் அவர்கள் (அல்லாஹ்வின் வழிபாட்டை உலகில் மறந்துவிட்டதை)நினைவு கூர்தல் எங்ஙனம்?(பயனளிக்கும்.)

فَاعْلَمْ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاسْتَغْفِرْ لِذَنْۢبِكَ وَلِلْمُؤْمِنِيْنَ وَ
الْمُؤْمِنٰتِ ؕ وَاللّٰهُ يَعْلَمُ مُتَقَلَّبَكُمْ وَمَثْوٰىكُمْ ﴿١٩﴾ ع وَيَقُوْلُ الَّذِيْنَ ٢ ع ٨ ٦
اٰمَنُوْا لَوْلَا نُزِّلَتْ سُوْرَةٌ ۚ فَاِذَآ اُنْزِلَتْ سُوْرَةٌ مُّحْكَمَةٌ وَّذُكِرَ فِيْهَا
الْقِتَالُ ۙ رَاَيْتَ الَّذِيْنَ فِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ يَّنْظُرُوْنَ اِلَيْكَ نَظَرَ
الْمَغْشِيِّ عَلَيْهِ مِنَ الْمَوْتِ ؕ فَاَوْلٰى لَهُمْ ﴿٢٠﴾ ۚ طَاعَةٌ وَّقَوْلٌ مَّعْرُوْفٌ ۫
فَاِذَا عَزَمَ الْاَمْرُ ۫ فَلَوْ صَدَقُوا اللّٰهَ لَكَانَ خَيْرًا لَّهُمْ ﴿٢١﴾ ۚ فَهَلْ
عَسَيْتُمْ اِنْ تَوَلَّيْتُمْ اَنْ تُفْسِدُوْا فِي الْاَرْضِ وَتُقَطِّعُوْٓا اَرْحَامَكُمْ ﴿٢٢﴾
اُولٰٓئِكَ الَّذِيْنَ لَعَنَهُمُ اللّٰهُ فَاَصَمَّهُمْ وَاَعْمٰٓى اَبْصَارَهُمْ ﴿٢٣﴾ اَفَلَا
يَتَدَبَّرُوْنَ الْقُرْاٰنَ اَمْ عَلٰى قُلُوْبٍ اَقْفَالُهَا ﴿٢٤﴾ اِنَّ الَّذِيْنَ ارْتَدُّوْا
عَلٰٓى اَدْبَارِهِمْ مِّنْۢ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُمُ الْهُدَى ۙ الشَّيْطٰنُ سَوَّلَ لَهُمْ ؕ
وَاَمْلٰى لَهُمْ ﴿٢٥﴾ ذٰلِكَ بِاَنَّهُمْ قَالُوْا لِلَّذِيْنَ كَرِهُوْا مَا نَزَّلَ اللّٰهُ سَنُطِيْعُكُمْ
فِيْ بَعْضِ الْاَمْرِ ۚ وَاللّٰهُ يَعْلَمُ اِسْرَارَهُمْ ﴿٢٦﴾ فَكَيْفَ اِذَا تَوَفَّتْهُمُ
الْمَلٰٓئِكَةُ يَضْرِبُوْنَ وُجُوْهَهُمْ وَاَدْبَارَهُمْ ﴿٢٧﴾ ذٰلِكَ بِاَنَّهُمُ اتَّبَعُوْا
مَآ اَسْخَطَ اللّٰهَ وَكَرِهُوْا رِضْوَانَهٗ فَاَحْبَطَ اَعْمَالَهُمْ ﴿٢٨﴾ ع اَمْ حَسِبَ ٣ ع ٩ ٧
الَّذِيْنَ فِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ اَنْ لَّنْ يُّخْرِجَ اللّٰهُ اَضْغَانَهُمْ ﴿٢٩﴾

19. ஆகவே (நபியே!)நிச்சயமாக, அல்லாஹ்வைத் தவிர(வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை என்பதை நீர் அறிந்துகொள்வீராக ! உம்முடைய பாவத்திற்காகவும், விசுவாசங்கொண்ட ஆண்களுக்காகவும், விசுவாசங்கொண்ட பெண்களுக்காகவும் பாவ மன்னிப்புக் கோருவீராக! இன்னும், (விசுவாசிகளே! பகலில்) உங்களுடைய செயல்பாட்டுக்குரிய இடத்தையும், (இரவில்) உங்கள் தங்குமிடத்தையும் அல்லாஹ் நன்கறிவான்.

20. மேலும், விசுவாசங்கொண்டவர்கள் (போர்செய்வது பற்றி) யாதொரு (தனி) அத்தியாயம் இறக்கிவைக்கப்படவேண்டாமா?என்று கூறுகிறார்கள்;(அவ்வாறே) ஒரு தீர்க்கமான அத்தியாயம் இறக்கிவைக்கப்பட்டு,அதில் போர்(செய்வது)பற்றிக் கூறப்பட்டிருந்தால், தங்களுடைய இதயங்களில் நோய் இருக்கின்றதே அத்தகையோரை மரணஅவஸ்தையில் சிக்கி மயங்கிக் கிடப்போர் பார்ப்பதைப்போல்,(நபியே!) உம்மை அவர்கள் பார்ப்பதை நீர் காண்பீர்! ஆகவே, (அவர்களை அழிக்கக்கூடியது) அவர்களுக்கு நெருங்கிவிட்டது.

21. (நபியே! உமக்குக்) கீழ்ப்பட்டு நடப்பதும்,(உம்மிடம் எதைக் கூறிய போதிலும்) கண்ணியமாகப் பேசுவதும் தாம்(அவர்களுக்கு நன்று); ஆகவே, (போர் செய்வது பற்றிய) காரியம் உறுதியாகிவிட்டால், அப்போது அல்லாஹ்வுக்கு அவர்கள் உண்மையாக நடந்துகொண்டால், அது அவர்களுக்கு நன்மையாக இருக்கும்.

22. நீங்கள் (அல்லாஹ்வின் வேதத்திற்கு கீழ்ப்படிவதை விட்டும்) புறக்கணித்து விடுவீர்களாயின், பூமியில் (இரத்தத்தை ஓட்டி) விஷமம் செய்யவும், இரத்த பந்தத்தில் உள்ள உங்களது சுற்றத்தாரைத் துண்டித்துவிடவும் முனைவீர்களா?

23. அவர்கள்_எத்தகையோரென்றால் அவர்களை அல்லாஹ் சபித்து, அவர்களை செவிடர்களாக்கி, அவர்களுடைய பார்வைகளையும் (போக்கிக்) குருடாக்கி விட்டான்.

24. அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க மாட்டார்களா? அல்லது (அவர்களுடைய) இதயங்கள் மீது அவற்றிற்குரிய பூட்டுகள்(போடப்பட்டு) இருக்கின்றனவா?

25. நிச்சயமாக, நேர்வழி இன்னதென்று அவர்களுக்குத் தெளிவானபின்னர் (அதை விட்டும் புறக்கணித்துத்) தங்கள் பின் புறங்களின் மீது திரும்பிச் சென்றுவிட்டார்களே அத்தகையோர்_ (அவர்களது செயல்களை) ஷைத்தான் அவர்களுக்கு அழகாக்கிக்காட்டி, அவர்களுக்கு (வீணான ஆசைகளை)நீட்டியும் விட்டான்.

26. இது, (ஏனென்றால்) நிச்சயமாக அவர்கள் அல்லாஹ் இறக்கிவைத்த (இவ்வேதத்)தை வெறுத்துக் கொண்டிருந்தோர்(களாகிய யூதர்) களிடம்," நாங்கள் சில காரியங்களில் உங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்போம்" என்று(இரகசியமாகக்) கூறியதனாலாகும்; மேலும், அல்லாஹ் அவர்கள் மறைத்திருப்பவற்றை நன்கறிவான்.

27. எனவே, அவர்களுடைய முகங்கள் மீதும், அவர்களின் முதுகுகளின் மீதும் அடித்து (உயிரைக்கைப்பற்றும்) மலக்குகள், அவர்களை மரணமடையச் செய்யும் போது (அவர்களின் நிலை) எவ்வாறிருக்கும் ?

28. இது, (ஏனெனில்) அல்லாஹ்விற்குக் கோபமூட்டக்கூடியதை இவர்கள் பின்பற்றி, அவனுடைய திருப்தியை வெறுத்தும் வந்தனர் என்ற காரணத்தினாலாகும்; ஆதலால், அவர்களுடைய செயல்களை (அல்லாஹ்வாகிய) அவன் அழித்துவிட்டான்.

29. தம் இதயங்களில் (வஞ்சக) நோய் இருக்கின்றதே அத்தகையவர்கள்_ அவர்களுடைய கடும் பொறாமைகளை அல்லாஹ் வெளிப்படுத்திவிடவே மாட்டான் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றனரா?

وَلَوْ نَشَآءُ لَاَرَيْنٰكَهُمْ فَلَعَرَفْتَهُمْ بِسِيْمٰهُمْ ؕ وَلَتَعْرِفَنَّهُمْ فِيْ لَحْنِ
الْقَوْلِ ؕ وَاللّٰهُ يَعْلَمُ اَعْمَالَكُمْ ﴿۳۰﴾ وَلَنَبْلُوَنَّكُمْ حَتّٰى نَعْلَمَ الْمُجٰهِدِيْنَ
مِنْكُمْ وَالصّٰبِرِيْنَ ۙ وَنَبْلُوَا۠ اَخْبَارَكُمْ ﴿۳۱﴾ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا
وَصَدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ وَشَآقُّوا الرَّسُوْلَ مِنْۢ بَعْدِ مَا
تَبَيَّنَ لَهُمُ الْهُدٰى ۙ لَنْ يَّضُرُّوا اللّٰهَ شَيْـًٔا ؕ وَسَيُحْبِطُ اَعْمَالَهُمْ ﴿۳۲﴾
يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ وَلَا تُبْطِلُوْۤا
اَعْمَالَكُمْ ﴿۳۳﴾ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا وَصَدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ ثُمَّ
مَاتُوْا وَهُمْ كُفَّارٌ فَلَنْ يَّغْفِرَ اللّٰهُ لَهُمْ ﴿۳۴﴾ فَلَا تَهِنُوْا وَتَدْعُوْۤا اِلَى
السَّلْمِ ۖۗ وَاَنْتُمُ الْاَعْلَوْنَ ۖۗ وَاللّٰهُ مَعَكُمْ وَلَنْ يَّتِرَكُمْ اَعْمَالَكُمْ ﴿۳۵﴾
اِنَّمَا الْحَيٰوةُ الدُّنْيَا لَعِبٌ وَّلَهْوٌ ؕ وَاِنْ تُؤْمِنُوْا وَتَتَّقُوْا يُؤْتِكُمْ
اُجُوْرَكُمْ وَلَا يَسْـَٔلْكُمْ اَمْوَالَكُمْ ﴿۳۶﴾ اِنْ يَّسْـَٔلْكُمُوْهَا فَيُحْفِكُمْ تَبْخَلُوْا
وَيُخْرِجْ اَضْغَانَكُمْ ﴿۳۷﴾ هٰۤاَنْتُمْ هٰۤؤُلَآءِ تُدْعَوْنَ لِتُنْفِقُوْا فِيْ سَبِيْلِ
اللّٰهِ ۚ فَمِنْكُمْ مَّنْ يَّبْخَلُ ۚ وَمَنْ يَّبْخَلْ فَاِنَّمَا يَبْخَلُ عَنْ نَّفْسِهٖ ؕ
وَاللّٰهُ الْغَنِيُّ وَاَنْتُمُ الْفُقَرَآءُ ۚ وَاِنْ تَتَوَلَّوْا يَسْتَبْدِلْ قَوْمًا
غَيْرَكُمْ ۙ ثُمَّ لَا يَكُوْنُوْۤا اَمْثَالَكُمْ ﴿۳۸﴾ ع ۴ ۸

30. மேலும் (நபியே !) நாம் நாடினால், அவர்களை உமக்குக் காண்பித்து விடுவோம்; அப்பொழுது அவர்களுடைய (முக) அடையாளத்தைக்கொண்டே நீர் அவர்களை திட்டமாக அறிந்துகொள்வீர்; மேலும், (சூழ்ச்சியான) பேச்சின் தொனியில் திட்டமாக அவர்களை நீர் அறிந்து கொள்வீர்; அல்லாஹ் உங்களுடைய செயல்களையும் நன்கறிவான்.

31. அன்றியும் (விசுவாசிகளே!) உங்களில் அறப்போர் புரிவோரையும், பொறுமையாளர்களையும் நாம் அறிந்து (அறிவித்து) விடும் வரை, உங்களை நிச்சயமாக நாம் சோதிப்போம்; இன்னும், உங்களுடைய செய்திகளையும் நிச்சயமாக நாம் வெளிப்படுத்துவோம்.

32. நிச்சயமாக நேர்வழி இன்னதென்று தங்களுக்குத் தெளிவான பின்னர், (அதனை) நிராகரித்துவிட்டு, அல்லாஹ்வின் பாதையைவிட்டும் (மற்றவர்களைத்) தடுத்துக் கொண்டு (அல்லாஹ்வுடைய) தூதருக்கு விரோதமாகவும் நடக்கின்றார்களே அத்தகையோர்_ (அதனால்) நிச்சயமாக அல்லாஹ்வுக்கு யாதொரு தீங்கும் செய்துவிடவேமாட்டார்கள்; அவர்களுடைய (சூழ்ச்சியான) செயல்களை (எல்லாம்) அல்லாஹ் அழித்தும்விடுவான்.

33. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிப்படுங்கள்; இன்னும், (அவனுடைய) தூதருக்குக் கீழ்ப்படியுங்கள்; (மாறுசெய்து) உங்களுடைய செயல்களை நீங்கள் வீணாக்கியும் விடாதீர்கள்.

34. நிச்சயமாக நிராகரித்து விட்டு, அல்லாஹ்வுடைய பாதையைவிட்டும் (பிறர் செல்வதைத்) தடுத்து, பின்னர் அவர்கள் நிராகரித்தவர்களாக இருக்க மரணித்து விடுகின்றார்களே அத்தகையோர்_ அவர்(களுடைய குற்றங்)களை அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான்.

35. (விசுவாசிகளே!) நீங்கள் தைரியமிழந்து விடாதீர்கள் ; இன்னும் (முன்கூட்டி) சமாதானத்தை கோராதீர்கள் ; இன்னும் நீங்கள்தாம் மிக உயர்ந்தவர்கள் ; அல்லாஹ்வோ உங்களுடன் இருக்கின்றான் ; மேலும், உங்களுடைய செயல்களை (அவற்றின் நற்கூலியை) அவன் குறைத்துவிடவேமாட்டான்.

36. நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கையெல்லாம் விளையாட்டும், வீணுமேயாகும்! மேலும், நீங்கள் விசுவாசங்கொண்டு, (அல்லாஹ்வுக்குப்) பயந்தும் (நடந்து) கொண்டால் உங்களுடைய கூலிகளை அவன் உங்களுக்குக் கொடுப்பான்; உங்களுடைய செல்வங்களை அவன் (தனக்காக) உங்களிடம் கேட்கவும் மாட்டான்.

37 அவ்வாறு, அவன் உங்களிடம் அதனைக் கேட்டுப்பின்னர் உங்களை அவன் வற்புறுத்தினாலும், (அதனைக் கொடுக்காது) நீங்கள் உலோபத்தனம் செய்வீர்கள்; (அந்நேரத்தில்) அவன், உங்களுடைய கபடங்களை வெளியாக்கியும்விடுவான்.

38. (மனிதர்களே!) அறிந்து கொள்ளுங்கள்! நீங்கள்தான் அவர்கள்; அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதற்காக நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள்; அப்பொழுது உலோபத்தனம் செய்வோரும் உங்களில் இருக்கின்றனர்; மேலும், எவர் உலோபத்தனம் செய்கிறாரோ, அவர் உலோபத்தனம் செய்வதெல்லாம் அவர் தனக்கே (கேடாகத்)தான்; இன்னும், அல்லாஹ் (தேவையற்ற) சீமான்; நீங்களோ தேவையுடையவர்கள்; மேலும், (அவனுடைய கட்டளைகளை) நீங்கள் புறக்கணிப்பீர்களானால், (உங்களை அழித்து) உங்களையல்லாத (வேறு) சமூகத்தாரை (உங்கள் இடத்தில்) அவன் மாற்றி விடுவான்; பின்னர், அவர்கள் உங்களைப்போன்றோராக இருக்கமாட்டார்கள்.

## سُوْرَةُ الْفَتْحِ مَدَنِيَّةٌ وَّهِيَ تِسْعٌ وَّعِشْرُوْنَ اٰيَةً وَّاَرْبَعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِيْنًا ۙ﴿۱﴾ لِّيَغْفِرَ لَكَ اللّٰهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْۢبِكَ وَ
مَا تَاَخَّرَ وَيُتِمَّ نِعْمَتَهٗ عَلَيْكَ وَيَهْدِيَكَ صِرَاطًا مُّسْتَقِيْمًا ۙ﴿۲﴾ وَّ
يَنْصُرَكَ اللّٰهُ نَصْرًا عَزِيْزًا ﴿۳﴾ هُوَ الَّذِيْۤ اَنْزَلَ السَّكِيْنَةَ فِيْ
قُلُوْبِ الْمُؤْمِنِيْنَ لِيَزْدَادُوْۤا اِيْمَانًا مَّعَ اِيْمَانِهِمْ ؕ وَلِلّٰهِ جُنُوْدُ
السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا ۙ﴿۴﴾ لِّيُدْخِلَ
الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ
فِيْهَا وَيُكَفِّرَ عَنْهُمْ سَيِّاٰتِهِمْ ؕ وَكَانَ ذٰلِكَ عِنْدَ اللّٰهِ فَوْزًا
عَظِيْمًا ۙ﴿۵﴾ وَّيُعَذِّبَ الْمُنٰفِقِيْنَ وَالْمُنٰفِقٰتِ وَالْمُشْرِكِيْنَ وَ
الْمُشْرِكٰتِ الظَّآنِّيْنَ بِاللّٰهِ ظَنَّ السَّوْءِ ؕ عَلَيْهِمْ دَآئِرَةُ السَّوْءِ ۚ وَ
غَضِبَ اللّٰهُ عَلَيْهِمْ وَلَعَنَهُمْ وَاَعَدَّ لَهُمْ جَهَنَّمَ ؕ وَسَآءَتْ مَصِيْرًا ﴿۶﴾
وَلِلّٰهِ جُنُوْدُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَكَانَ اللّٰهُ عَزِيْزًا حَكِيْمًا ﴿۷﴾
اِنَّاۤ اَرْسَلْنٰكَ شَاهِدًا وَّمُبَشِّرًا وَّنَذِيْرًا ۙ﴿۸﴾ لِّتُؤْمِنُوْا بِاللّٰهِ وَ
رَسُوْلِهٖ وَتُعَزِّرُوْهُ وَتُوَقِّرُوْهُ ؕ وَتُسَبِّحُوْهُ بُكْرَةً وَّاَصِيْلًا ﴿۹﴾

அத்தியாயம் : 48

## அல்ஃபத்ஹ் _ வெற்றி

வசனங்கள் : 29 மதனீ ருகூஃகள் : 4

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (நபியே!) நிச்சயமாக நாம் ஒரு தெளிவான வெற்றியாக, உமக்கு வெற்றியை அளித்தோம்.

2. அல்லாஹ் உமக்கு, உமது தவறில் முந்தியதையும், பிந்தியதையும் மன்னித்து, தனது அருட் கொடையையும் உம்மீது பூர்த்தியாக்கி வைத்து, உம்மை அவன் நேரான வழியில் நடத்துவதற்காகவும்_

3. மேலும் (நபியே!) அல்லாஹ், உமக்கு வல்லமை மிக்க உதவியாக உதவி செய்வதற்காகவும் (தெளிவான இவ்வெற்றியை அவன் அளித்தான்).

4. அவன் எத்தகையவனென்றால், விசுவாசங் கொண்டவர்களுடைய இதயங்களில் அவர்களுடைய விசுவாசத்துடன் (பின்னும்) விசுவாசத்தை அவர்கள் அதிகமாக்கிக் கொள்வதற்காக அமைதியை அவன் இறக்கிவைத்தான்; மேலும், வானங்கள் மற்றும் பூமியிலுள்ள படைகள் (அனைத்தும்) அல்லாஹ்வுக்கே உரியனவாகும்; மேலும், அல்லாஹ் (யாவையும்) நன்கறிகிறவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கிறான்.

5. அவன், விசுவாசங்கொண்ட ஆண்களையும், விசுவாசங்கொண்ட பெண்களையும் சுவனபதிகளில் பிரவேசிக்கச் செய்வதற்காகவும் (இவ்வாறு செய்தான்) அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; நிரந்தரமாக அவற்றில் அவர்கள் (தங்கி)இருப்பவர்கள்; அவர்களின் தீயவைகளையும், அவர்களைவிட்டு நீக்கிவிடுவதற்காகவும் (இவ்வாறு அமைதியை இறக்கினான்). இதுவே அல்லாஹ்விடத்தில் மகத்தான ஒரு வெற்றியாக இருந்தது.

6. அன்றியும், அல்லாஹ்வைப்பற்றி கெட்டஎண்ணம் எண்ணுகின்றவர்களான (வேஷதாரிகளாகிய) முனாஃபிக்கான ஆண்களையும், முனாஃபிக்கான பெண்களையும், இணைவைக்கின்ற ஆண்களையும், இணைவைக்கின்ற பெண்களையும் (அல்லாஹ்வாகிய) அவன் வேதனை செய்வான்; வேதனையின் சுழற்சி அவர்களின் மீதிருக்கின்றது; அல்லாஹ் அவர்கள் மீது கோபமும் கொண்டான்; அவர்களைச் சபித்தும் விட்டான்; அவர்களுக்காக நரகத்தை தயார்படுத்தியும் வைத்திருக்கின்றான்; அது செல்லுமிடத்தால் மிகக் கெட்டதாகியும்விட்டது.

7. வானங்கள் மற்றும் பூமியின் படைகள் (அனைத்தும்) அல்லாஹ்விற்கே உரியன; இன்னும், அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவனாக, தீர்க்கமான அறிவுடை யவனாக இருக்கின்றான்.

8. (நபியே!) நிச்சயமாக, நாம் உம்மை(உம்சமூகத்தார்க்கு)சாட்சி கூறுபவராகவும், (அவர்களில் விசுவாசிகளுக்கு) நன்மாராயம் கூறுபவராகவும், (விசுவாசம் கொள்ளாதவர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பி வைத்தோம்.

9. காரணம்_(விசுவாசிகளே!) நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விசுவாசித்து, (தூதராகிய) அவருக்கு (சன்மார்க்கத்தில்) உதவி புரிந்தும், அவரை கண்ணியப்படுத்தியும், (அல்லாஹ்வாகிய) அவனை, நீங்கள் காலையிலும், மாலையிலும் துதிசெய்வதற்காகவே (நபியே! நாம் உம்மை அனுப்பி வைத்தோம்).

إِنَّ الَّذِيْنَ يُبَايِعُوْنَكَ اِنَّمَا يُبَايِعُوْنَ اللّٰهَ ؕ يَدُ اللّٰهِ فَوْقَ اَيْدِيْهِمْ ۚ
فَمَنْ نَّكَثَ فَاِنَّمَا يَنْكُثُ عَلٰى نَفْسِهٖ ۚ وَمَنْ اَوْفٰى بِمَا عٰهَدَ عَلَيْهُ
اللّٰهَ فَسَيُؤْتِيْهِ اَجْرًا عَظِيْمًا ﴿١٠﴾ سَيَقُوْلُ لَكَ الْمُخَلَّفُوْنَ مِنَ ع ١ ٩
الْاَعْرَابِ شَغَلَتْنَآ اَمْوَالُنَا وَاَهْلُوْنَا فَاسْتَغْفِرْ لَنَا ۚ يَقُوْلُوْنَ
بِاَلْسِنَتِهِمْ مَّا لَيْسَ فِيْ قُلُوْبِهِمْ ؕ قُلْ فَمَنْ يَّمْلِكُ لَكُمْ مِّنَ
اللّٰهِ شَيْـًٔا اِنْ اَرَادَ بِكُمْ ضَرًّا اَوْ اَرَادَ بِكُمْ نَفْعًا ؕ بَلْ كَانَ اللّٰهُ بِمَا
تَعْمَلُوْنَ خَبِيْرًا ﴿١١﴾ بَلْ ظَنَنْتُمْ اَنْ لَّنْ يَّنْقَلِبَ الرَّسُوْلُ وَالْمُؤْمِنُوْنَ
اِلٰٓى اَهْلِيْهِمْ اَبَدًا وَّزُيِّنَ ذٰلِكَ فِيْ قُلُوْبِكُمْ وَظَنَنْتُمْ ظَنَّ السَّوْءِ ۚۖ
وَكُنْتُمْ قَوْمًا بُوْرًا ﴿١٢﴾ وَمَنْ لَّمْ يُؤْمِنْ بِاللّٰهِ وَرَسُوْلِهٖ فَاِنَّآ
اَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ سَعِيْرًا ﴿١٣﴾ وَلِلّٰهِ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ
يَغْفِرُ لِمَنْ يَّشَآءُ وَيُعَذِّبُ مَنْ يَّشَآءُ ؕ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا ﴿١٤﴾
سَيَقُوْلُ الْمُخَلَّفُوْنَ اِذَا انْطَلَقْتُمْ اِلٰى مَغَانِمَ لِتَاْخُذُوْهَا
ذَرُوْنَا نَتَّبِعْكُمْ ۚ يُرِيْدُوْنَ اَنْ يُّبَدِّلُوْا كَلٰمَ اللّٰهِ ؕ قُلْ لَّنْ
تَتَّبِعُوْنَا كَذٰلِكُمْ قَالَ اللّٰهُ مِنْ قَبْلُ ۚ فَسَيَقُوْلُوْنَ
بَلْ تَحْسُدُوْنَنَا ؕ بَلْ كَانُوْا لَا يَفْقَهُوْنَ اِلَّا قَلِيْلًا ﴿١٥﴾

10. (நபியே! ) நிச்சயமாக, (ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது குரைஷியரின் தாக்குதலை எதிர்த்து போர் செய்வதற்காக) உம்மிடம் (பைஅத்) வாக்குறுதி செய்கின்றார்களே அத்தகையோர்_ அவர்கள் (பைஅத்)வாக்குறுதி செய்வதெல்லாம் அல்லாஹ்விடம்தான்; அல்லாஹ்வின் கரம் அவர்களின் கரங்களுக்கு மேல் இருக்கின்றது; ஆகவே, எவர் (அவ்வாக்குறுதியை) முறித்துவிடுகின்றாரோ, அவர் தனக்குக் கேடாகவே (அதனை) முறித்து விடுகின்றார்; இன்னும், எவர் அல்லாஹ்விடம் செய்த அவ்வாக்குறுதியைப் பூர்த்தியாக்கி வைக்கின்றாரோ அப்பொழுது அவருக்கு அல்லாஹ் மகத்தான (நற்) கூலியை (நிச்சயமாகக்) கொடுப்பான்.

11. (அரபிகளிலுள்ள) நாட்டுப்புறத்து வாசிகளில் (நபியே! உம்முடன் போர் செய்ய வராது) பின் தங்கிவிட்டவர்கள் உம்மிடம் (வந்து "நாங்கள் உங்களுடன் போருக்குவராமல்) எங்களுடைய செல்வங்களும், எங்களுடைய குடும்பமும் எங்களைப் பராக்காக்கிவிட்டன; எனவே (அல்லாஹ்விடம்) நீர் எங்களுக்காக பாவமன்னிப்புக் கோருவீராக!" என்று கூறுவார்கள்; தங்கள் இதயங்களில் இல்லாதவைகளைத் தங்கள் நாவுகளினால் அவர்கள் கூறுகின்றனர்; (ஆகவே, நபியே! அவர்களிடம்,) நீர் கூறுவீராக: "அல்லாஹ் உங்களுக்கு ஒரு இடரை நாடினால் அல்லது அவன் உங்களுக்கு ஒரு பலனை நாடினால் (அதில்) எதையும் அல்லாஹ்விலிருந்து உங்களுக்குத் தடுத்துவிடக்கூடிய) அதிகாரம் பெற்றிருப்பவர் யார் ? (ஒருவரும்) இல்லை! நீங்கள் செய்பவற்றை, அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

12. (உங்கள் கூற்றைப்போல்) அல்ல! (அல்லாஹ்வுடைய) தூதரும், (அவரை) விசுவாசங் கொண்டவர்களும் (யுத்தத்திலிருந்து) தங்கள் குடும்பத்தினரிடம் ஒரு போதும் திரும்பி வரவே மாட்டார்களென்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்கள்; (ஆதலால்தான் யுத்தத்திற்கு நீங்கள் வரவில்லை) அ(வ்வாறு எண்ணிய)து உங்களுடைய இதயங்களில் அலங்காரமாக்கப்பட்டுமிருந்தது; நீங்கள் கெட்ட எண்ணத்தையே எண்ணிக் கொண்டுமிருந்தீர்கள்; (அதனால்,) நீங்கள் தாம் அழிந்து விடும் சமூகத்தவராகவும் ஆகிவிட்டீர்கள் (என்று நபியே! நீர் கூறுவீராக!).

13. அல்லாஹ்வை மற்றும் அவன் தூதரை விசுவாசங் கொள்ள வில்லையே அவர், ( நிராகரிப்பவர்தான்; ஆகவே,) அத்தகைய நிராகரிப்போருக்கு நரகத்தையே நிச்சயமாக நாம் தயார்படுத்தி வைத்திருக்கின்றோம்.

14. மேலும்,வானங்கள், மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது! அவன் நாடியவர்களை மன்னித்து விடுகிறான்; அவன் நாடியவர்களை வேதனையும் செய்கிறான்;மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையவனாக இருக்கிறான்.

15. (நபியே! ) பின்தங்கிவிட்டவர்கள், போரில் கிடைத்த வெற்றிப் பொருட்களின் பால்_அவற்றை நீங்கள் எடுத்துக்கொள்வதற்காக நீங்கள் செல்லும்போது, "எங்களை விடுங்கள்;நாங்களும் உங்களைப் பின்பற்றி வருகிறோம்" என்று கூறுவார்கள்; இவர்கள், அல்லாஹ்வுடைய வாக்குறுதியை மாற்றி விடவே நாடுகின்றார்கள்; (ஆகவே, அவர்களிடம், )" நீங்கள் எங்களைப் பின்பற்றி வர வேண்டாம்; ( இதற்கு) முன்னர் இவ்வாறே அல்லாஹ் கூறிவிட்டான்" என்று (நபியே!) நீர் கூறுவீராக! (அதற்கு) அவர்கள், "இல்லை; நீங்கள் தான் நம்மீது பொறாமை கொண்டுள்ளீர்கள்" என்று கூறுவார்கள்; அன்று! அவர்கள் சொற்பமாகவே அன்றி விளங்கிக்கொள்ளாதவர்களாக இருக்கின்றனர் .

قُلْ لِّلْمُخَلَّفِيْنَ مِنَ الْاَعْرَابِ سَتُدْعَوْنَ اِلٰى قَوْمٍ اُولِیْ بَاْسٍ
شَدِيْدٍ تُقَاتِلُوْنَهُمْ اَوْ يُسْلِمُوْنَ ۚ فَاِنْ تُطِيْعُوْا يُؤْتِكُمُ اللّٰهُ اَجْرًا
حَسَنًا ۚ وَاِنْ تَتَوَلَّوْا كَمَا تَوَلَّيْتُمْ مِّنْ قَبْلُ يُعَذِّبْكُمْ عَذَابًا اَلِيْمًا ﴿۱۶﴾
لَيْسَ عَلَى الْاَعْمٰى حَرَجٌ وَّلَا عَلَى الْاَعْرَجِ حَرَجٌ وَّلَا عَلَى الْمَرِيْضِ
حَرَجٌ ؕ وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَرَسُوْلَهٗ يُدْخِلْهُ جَنّٰتٍ تَجْرِیْ مِنْ تَحْتِهَا
الْاَنْهٰرُ ۚ وَمَنْ يَّتَوَلَّ يُعَذِّبْهُ عَذَابًا اَلِيْمًا ﴿۱۷﴾ لَقَدْ رَضِیَ اللّٰهُ عَنِ النصف ع ۲ ۱۰/۷
الْمُؤْمِنِيْنَ اِذْ يُبَايِعُوْنَكَ تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِیْ قُلُوْبِهِمْ
فَاَنْزَلَ السَّكِيْنَةَ عَلَيْهِمْ وَاَثَابَهُمْ فَتْحًا قَرِيْبًا ﴿۱۸﴾ وَّمَغَانِمَ كَثِيْرَةً
يَّاْخُذُوْنَهَا ؕ وَكَانَ اللّٰهُ عَزِيْزًا حَكِيْمًا ﴿۱۹﴾ وَعَدَكُمُ اللّٰهُ مَغَانِمَ
كَثِيْرَةً تَاْخُذُوْنَهَا فَعَجَّلَ لَكُمْ هٰذِهٖ وَكَفَّ اَيْدِیَ النَّاسِ
عَنْكُمْ ۚ وَلِتَكُوْنَ اٰيَةً لِّلْمُؤْمِنِيْنَ وَيَهْدِيَكُمْ صِرَاطًا مُّسْتَقِيْمًا ﴿۲۰﴾ لا
وَّاُخْرٰى لَمْ تَقْدِرُوْا عَلَيْهَا قَدْ اَحَاطَ اللّٰهُ بِهَا ؕ وَكَانَ اللّٰهُ
عَلٰى كُلِّ شَیْءٍ قَدِيْرًا ﴿۲۱﴾ وَلَوْ قٰتَلَكُمُ الَّذِيْنَ كَفَرُوْا لَوَلَّوُا
الْاَدْبَارَ ثُمَّ لَا يَجِدُوْنَ وَلِيًّا وَّلَا نَصِيْرًا ﴿۲۲﴾ سُنَّةَ اللّٰهِ الَّتِیْ
قَدْ خَلَتْ مِنْ قَبْلُ ۖۚ وَلَنْ تَجِدَ لِسُنَّةِ اللّٰهِ تَبْدِيْلًا ﴿۲۳﴾

16. (அரபிகளிலுள்ள) நாட்டுப்புறத்து வாசிகளில் பின் தங்கிவிட்டவர்களிடம்: "யுத்தம் புரிவதில் மிக்க பலசாலிகளான ஒரு சமூகத்தார் பால் (யுத்தம் புரிய) நீங்கள் அடுத்து அழைக்கப்படுவீர்கள்; அவர்களுடன் நீங்கள் போர் செய்வீர்கள்; அல்லது அவர்கள் (யுத்தம் செய்யாது) இஸ்லாத்திற்கு வந்து விடுவார்கள்; ஆகவே, (இதில்) நீங்கள் (எனக்குக்) கீழ்ப்பட்டு நடப்பீர்களாயின் அல்லாஹ் உங்களுக்கு அழகான கூலியை வழங்குவான்; இதற்கு முன்னர் நீங்கள் (யுத்தம் செய்யாது)புறக்கணித்தது போன்று புறக்கணித்தும் விடுவீர்களாயின், அவன் உங்களைத் துன்புறுத்தும் வேதனையாக வேதனை செய்வான்"என்று (நபியே! நீர்) கூறுவீராக!

17. (போர் செய்யாது தங்களிடங்களில் தங்கிவிடுவது) குருடர் மீது குற்றமில்லை; முடவரின் மீதும் குற்றமில்லை; நோயாளியின் மீதும் குற்றமில்லை; எவர் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்கிறாரோ அவரை (அல்லாஹ்வாகிய)அவன் சுவனங்களில் பிரவேசிக்கச் செய்வான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; இன்னும், எவர் புறக்கணிக்கின்றாரோ அவரை, (அல்லாஹ்வாகிய) அவன் துன்புறுத்தும் வேதனையாக வேதனை செய்வான்.

18. (நபியே!)திட்டமாக அல்லாஹ் விசுவாசிகளை_அவர்கள் மரத்தடியில் உம்மிடம் வாக்குறுதி செய்தபோது பொருந்திக்கொண்டான்; பின்னர், அவர்களின் இதயங்களிலிருந்ததை நன்கறிந்து, அவர்கள் மீது அமைதியை இறக்கிவைத்தான்; அன்றியும், சமீபமான வெற்றியையும் அவர்களுக்கு (அருட்கொடையாக)க் கொடுத்தான்.

19. இன்னும், (எதிரிகளிடமிருந்து வெற்றியின் மூலம்கிடைக்கும்) ஏராளமான வெற்றிப் பொருட்களை (அவர்களுக்குஅவன் அளித்தான்); அவற்றை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள்; மேலும், அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான்.

20. "யுத்தத்தில் (எதிரிகளிடமிருந்து வெற்றியின் மூலம்கிடைக்கும்) ஏராளமான வெற்றிப் பொருட்களை அல்லாஹ் உங்களுக்கு வாக்களித்திருந்தான்; நீங்கள் அதைக் கைப்பற்றுவீர்கள்; ஆகவே, இதனை உங்களுக்குத் துரிதமாக்கி விட்டான்; மேலும், (உங்களுக்கு விரோதிகளான) மனிதர்களின் கைகளை உங்களை விட்டும் தடுத்தும்விட்டான்; இது விசுவாசிகளுக்கு ஓர் அத்தாட்சியாக ஆவதற்காகவும், உங்களை நேரான பாதையில் செலுத்துவதற்காகவும் (இவ்வாறு அருள் புரிந்தான்.)

21. (பாரசீகம், ரோமாபுரி முதலிய நாடுகளில் வெற்றியாக) மற்றொன்றும் (உங்களுக்கு இருக்கிறது.) அதற்கு நீங்கள் சக்தி பெறவில்லை; திட்டமாக, அல்லாஹ் அதனைச் சூழ்ந்து (அறிந்து) கொண்டிருக்கின்றான்; மேலும், அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவனாக இருக்கின்றான்.

22. மேலும், நிராகரிப்போர் உங்களுடன் போரிடுவார்களாயின், அவர்கள் புறங்காட்டிப் பின்வாங்கியிருப்பார்கள்; பின்னர், அவர்கள், தங்களுக்குப் பாதுகாவலரையோ, உதவி செய்பவரையோ காணமாட்டார்கள்.

23. (இதற்கு) முன்னர் சென்றுவிட்டதாகிய அல்லாஹ்வுடைய வழிமுறை (நிராகரிப்போர் விஷயத்தில் இதுதான்) அல்லாஹ்வுடைய வழி முறையில் நீர் எவ்வித மாறுதலையும் காணவேமாட்டீர்.

وَهُوَ الَّذِيْ كَفَّ اَيْدِيَهُمْ عَنْكُمْ وَاَيْدِيَكُمْ عَنْهُمْ بِبَطْنِ مَكَّةَ
مِنْۢ بَعْدِ اَنْ اَظْفَرَكُمْ عَلَيْهِمْ ؕ وَكَانَ اللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرًا ﴿۲۴﴾
هُمُ الَّذِيْنَ كَفَرُوْا وَصَدُّوْكُمْ عَنِ الْمَسْجِدِ الْحَرَامِ وَالْهَدْيَ
مَعْكُوْفًا اَنْ يَّبْلُغَ مَحِلَّهٗ ؕ وَلَوْلَا رِجَالٌ مُّؤْمِنُوْنَ وَنِسَآءٌ مُّؤْمِنٰتٌ
لَّمْ تَعْلَمُوْهُمْ اَنْ تَطَـُٔوْهُمْ فَتُصِيْبَكُمْ مِّنْهُمْ مَّعَرَّةٌۢ بِغَيْرِ عِلْمٍ ۚ
لِيُدْخِلَ اللّٰهُ فِيْ رَحْمَتِهٖ مَنْ يَّشَآءُ ۚ لَوْ تَزَيَّلُوْا لَعَذَّبْنَا الَّذِيْنَ
كَفَرُوْا مِنْهُمْ عَذَابًا اَلِيْمًا ﴿۲۵﴾ اِذْ جَعَلَ الَّذِيْنَ كَفَرُوْا فِيْ
قُلُوْبِهِمُ الْحَمِيَّةَ حَمِيَّةَ الْجَاهِلِيَّةِ فَاَنْزَلَ اللّٰهُ سَكِيْنَتَهٗ
عَلٰى رَسُوْلِهٖ وَعَلَى الْمُؤْمِنِيْنَ وَاَلْزَمَهُمْ كَلِمَةَ التَّقْوٰى وَ
۳ ع ۹ ۱۱ كَانُوْۤا اَحَقَّ بِهَا وَاَهْلَهَا ؕ وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَيْءٍ عَلِيْمًا ﴿۲٦﴾ ع
لَقَدْ صَدَقَ اللّٰهُ رَسُوْلَهُ الرُّءْيَا بِالْحَقِّ ۚ لَتَدْخُلُنَّ الْمَسْجِدَ
الْحَرَامَ اِنْ شَآءَ اللّٰهُ اٰمِنِيْنَ ۙ مُحَلِّقِيْنَ رُءُوْسَكُمْ وَمُقَصِّرِيْنَ ۙ
لَا تَخَافُوْنَ ؕ فَعَلِمَ مَا لَمْ تَعْلَمُوْا فَجَعَلَ مِنْ دُوْنِ ذٰلِكَ فَتْحًا
قَرِيْبًا ﴿۲۷﴾ هُوَ الَّذِيْۤ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى وَدِيْنِ الْحَقِّ
لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ ؕ وَكَفٰى بِاللّٰهِ شَهِيْدًا ﴿۲۸﴾ ؕ

24. அவன் எத்தகையவனென்றால், "மக்காவின் பள்ளத்தாக்கில் அவர்கள்மீது உங்களுக்கு வெற்றியைக் கொடுத்ததன் பின்னர், அவர்களுடைய கைகளை உங்களை விட்டும், (அவ்வாறே) உங்களுடைய கைகளை அவர்களை விட்டும் அவனே தடுத்துவிட்டான்; மேலும், அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை பார்க்கிறவனாக இருக்கிறான்.

25. அவர்கள் எத்தகையோரென்றால், (அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும்) நிராகரித்து, சிறப்புற்ற(கஅபா என்னும்) மஸ்ஜிதைவிட்டு உங்களையும், குர்பானியையும்_அது செல்லவேண்டிய இடத்திற்குச் செல்லாது நிறுத்திவைக்கப்பட்டதாகயிருக்கும் நிலையில்_தடுத்தார்கள்; இன்னும், அவர்களை நீங்கள் அறிந்து கொள்ளாத விசுவாசங்கொண்ட ஆண்களும் விசுவாசங்கொண்ட பெண்களும்(எதிரியின் மத்தியில்) இருக்க அறியாதவர்களாக இருக்கும் நிலையில் நீங்கள் அவர்களை மிதித்து, அதனால் அவர்களின் மூலம் ஏதேனும் சிரமம் உங்களுக்கு ஏற்பட்டுவிடும் என்பது இல்லையானால், (போர்செய்ய உங்களுக்கு அனுமதி வழங்கியிருப்பான்; அவ்வாறு போர்செய்ய அனுமதிக்காதது ஏனெனில்) அல்லாஹ் தான் நாடியவர்களை தன் அருளில் புகச்செய்வதற்காகவேயாகும்; அவர்கள் (நிராகரிப்போரிலிருந்து) பிரிந்திருப்பார்களேயானால் (அவர்கள் மீது யுத்தம் புரிய உங்களுக்கு அனுமதி கொடுத்து) அவர்களிலுள்ள நிராகரிப்போரை மிகத் துன்புறுத்தும் வேதனையாக நாம் வேதனை செய்திருப்போம்.

26. நிராகரித்தோர் தங்களுடைய இதயங்களில் (உங்களை வேருடன் அழித்துவிட வேண்டுமென்ற)வைராக்கியத்தை _ அறியாமைக் காலத்து மூடத்தனமான வைராக்கியத்தை _ ஆக்கிக் கொண்ட சமயத்தில் அல்லாஹ் தன்னுடைய தூதர்மீதும், விசுவாசங்கொண்டவர்கள்மீதும், தன்னுடைய அமைதியை இறக்கி வைத்தான்; பயபக்தியுடைய வார்த்தையை (லா இலாஹ இல்லல்லாஹ்வை) அவர்களுக்கு நிலையாக்கியும் வைத்தான்; அவர்கள் அதற்கு மிக உரியவர்களாகவும், அதை உடையவர்களாகவும் இருந்தார்கள்; அல்லாஹ் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

27. திட்டமாக அல்லாஹ் உண்மையைக் கொண்டு தன்னுடைய தூதருக்கு(அவர் கண்ட) கனவை உண்மைப்படுத்தி விட்டான்; அல்லாஹ் நாடினால், நிச்சயமாக நீங்கள் (மஸ்ஜிதுல் ஹராமாகிய) சிறப்புற்ற மஸ்ஜிதில் அச்சமற்றவர்களாகவும், உங்களுடைய தலை(முடி)களைச் சிரைத்துக்கொண்டவர்களாகவும், (முடியை) குறைத்துக்கொண்டவர்களாகவும் நுழைவீர்கள்;(அச்சமயம்) நீங்கள் (எவருக்கும்) பயப்படமாட்டீர்கள்; ஆகவே, நீங்கள் அறியாதிருந்ததை (முன்னதாகவே அல்லாஹ்) அறிந்திருந்தான்;பின்னர், இதனையன்றி சமீபத்தில் ஒரு வெற்றியையும் (உங்களுக்கு) ஆக்கினான்.

28. அவன் எத்தகையவனென்றால் தன்னுடைய தூதரை நேர் வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பி வைத்தான்; சகல மார்க்கங்களையும் விட அதை மேலோங்கச்செய்வதற்காக(தன் தூதரை அனுப்பி வைத்தான்); இன்னும்,(இதற்கு) சாட்சியாக இருக்க அல்லாஹ் போதுமானவன்.

مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ ؕ وَالَّذِيْنَ مَعَهٗۤ اَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ رُحَمَآءُ بَيْنَهُمْ
تَرٰىهُمْ رُكَّعًا سُجَّدًا يَّبْتَغُوْنَ فَضْلًا مِّنَ اللّٰهِ وَرِضْوَانًا ؗ سِيْمَاهُمْ فِىْ
وُجُوْهِهِمْ مِّنْ اَثَرِ السُّجُوْدِ ؕ ذٰلِكَ مَثَلُهُمْ فِى التَّوْرٰىةِ ۛۖۚ وَمَثَلُهُمْ فِى
الْاِنْجِيْلِ ۛ ۚ كَزَرْعٍ اَخْرَجَ شَطْـَٔهٗ فَاٰزَرَهٗ فَاسْتَغْلَظَ فَاسْتَوٰى
عَلٰى سُوْقِهٖ يُعْجِبُ الزُّرَّاعَ لِيَغِيْظَ بِهِمُ الْكُفَّارَ ؕ وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ
اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ مِنْهُمْ مَّغْفِرَةً وَّاَجْرًا عَظِيْمًا ﴿۲۹﴾ ع ۴ / ۱۲

معانقة ۱۵ عند المتاخرين ۱۲

## سُوْرَةُ الْحُجُرٰتِ مَدَنِيَّةٌ وَّهِيَ ثَمَانِيَ عَشْرَةَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تُقَدِّمُوْا بَيْنَ يَدَىِ اللّٰهِ وَرَسُوْلِهٖ وَ
اتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ سَمِيْعٌ عَلِيْمٌ ﴿۱﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَرْفَعُوْۤا
اَصْوَاتَكُمْ فَوْقَ صَوْتِ النَّبِىِّ وَلَا تَجْهَرُوْا لَهٗ بِالْقَوْلِ كَجَهْرِ
بَعْضِكُمْ لِبَعْضٍ اَنْ تَحْبَطَ اَعْمَالُكُمْ وَاَنْتُمْ لَا تَشْعُرُوْنَ ﴿۲﴾ اِنَّ
الَّذِيْنَ يَغُضُّوْنَ اَصْوَاتَهُمْ عِنْدَ رَسُوْلِ اللّٰهِ اُولٰٓئِكَ الَّذِيْنَ
امْتَحَنَ اللّٰهُ قُلُوْبَهُمْ لِلتَّقْوٰى ؕ لَهُمْ مَّغْفِرَةٌ وَّاَجْرٌ عَظِيْمٌ ﴿۳﴾ اِنَّ
الَّذِيْنَ يُنَادُوْنَكَ مِنْ وَّرَآءِ الْحُجُرٰتِ اَكْثَرُهُمْ لَا يَعْقِلُوْنَ ﴿۴﴾

29. முஹம்மது, அல்லாஹ்வின் தூதராவார்; அவருடன் இருப்பவர்களோ, நிராகரிப்போர் மீது மிகக் கண்டிப்பானவர்கள். தங்களுக்கிடையே மிக்க அன்புடையவர்கள்; (குனிந்து) ருகூஉ செய்பவர்களாகவும், (சிரம் பணிந்து) ஸுஜூது செய்கிறவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர்; அல்லாஹ்விடமிருந்து பேரருளையும்,(அவனுடைய)பொருத்தத்தையும் தேடுவார்கள்; அவர்களுடைய அடையாளம், சிரம்பணிவதன் அடையாளத்தினால் அவர்களுடைய முகங்களில் இருக்கும்; இதுவே தவ்றாத் (என்னும் வேதத்)தில் உள்ள அவர்களின் உதாரணமாகும்; இன்னும், இன்ஜீலில் அவர்களுக்குள்ள உதாரணமாவது, ஒரு பயிரைப் போன்றதாகும்; அது தன் முளையை வெளிப்படுத்தி, பின்னர் அதை பலப்படுத்துகின்றது; பின்னர், அது (தடித்து) கனமாகின்றது. பின்னர்,அது தன் தண்டின் மீது நிமிர்ந்து நிற்கின்றது; விவசாயிகளை ஆச்சரியமடையச்செய்கிறது; இவர்களைக் கொண்டு நிராகரிப்போருக்கு அவன் கோபமூட்டுவதற்காக (இவ்வாறு உதாரணங்கள் கூறுகிறான்); அவர்களில் விசுவாசங்கொண்டு, நற்கருமங்களும் செய்கின்றார்களே அத்தகையவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் வாக்களித்திருக்கின்றான்.

---

அத்தியாயம் : 49

## அல் ஹுஜுராத் _ அறைகள்

வசனங்கள் : 18 மதனீ ருகூஃகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் முன்னிலையில் நீங்கள் முந்தாதீர்கள்; மேலும், அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் (யாவையும்) செவியேற்கிறவன், நன்கறிகிறவன்.

2. விசுவாசிகளே! நபியினுடைய சப்தத்திற்கு மேல் உங்களுடைய சப்தத்தை உயர்த்தாதீர்கள்; மேலும், உங்களில் சிலர் மற்றசிலருடன் உரக்கப் பேசுவதைப் போல், அவரிடம் பேசுவதில் (சப்தத்தை உயர்த்தி) நீங்கள் உரக்கப் பேசாதீர்கள்; (ஏனெனில், இதனை) நீங்கள் உணர்ந்துகொள்ள முடியாத நிலையில் உங்களுடைய (நன்மையான) செயல்கள் அழிந்துவிடும்.

3. நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடத்தில் (பேசும் பொழுது) தங்களுடைய சப்தங்களைத் தாழ்த்திக் கொள்கிறார்களே அத்தகையோர் _ அவர்களுடைய இதயங்களை பயபக்திக்காக அல்லாஹ் பரிசுத்தமாக்கி வைத்தானே அத்தகையோராவர்; அவர்களுக்கு மன்னிப்பும், மகத்தான கூலியும் உண்டு.

4. (நபியே!) நிச்சயமாக (உம்முடைய) அறைகளுக்குப் பின்னாலிருந்து சப்தமிட்டு உம்மை அழைக்கின்றார்களே அத்தகையோர் _ அவர்களில் பெரும்பாலோர் (உம்மை அழைத்துப் பேசும் முறையை) விளங்கமாட்டார்கள்.

وَلَوْ اَنَّهُمْ صَبَرُوْا حَتّٰى تَخْرُجَ اِلَيْهِمْ لَكَانَ خَيْرًا لَّهُمْ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ
رَّحِيْمٌ ﴿٥﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِنْ جَآءَكُمْ فَاسِقٌۢ بِنَبَاٍ فَتَبَيَّنُوْۤا اَنْ
تُصِيْبُوْا قَوْمًۢا بِجَهَالَةٍ فَتُصْبِحُوْا عَلٰى مَا فَعَلْتُمْ نٰدِمِيْنَ ﴿٦﴾ وَاعْلَمُوْۤا
اَنَّ فِيْكُمْ رَسُوْلَ اللّٰهِ ؕ لَوْ يُطِيْعُكُمْ فِيْ كَثِيْرٍ مِّنَ الْاَمْرِ لَعَنِتُّمْ وَ
لٰكِنَّ اللّٰهَ حَبَّبَ اِلَيْكُمُ الْاِيْمَانَ وَزَيَّنَهٗ فِيْ قُلُوْبِكُمْ وَكَرَّهَ اِلَيْكُمُ
الْكُفْرَ وَالْفُسُوْقَ وَالْعِصْيَانَ ؕ اُولٰٓئِكَ هُمُ الرّٰشِدُوْنَ ﴿٧﴾ فَضْلًا
مِّنَ اللّٰهِ وَنِعْمَةً ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ﴿٨﴾ وَاِنْ طَآئِفَتٰنِ مِنَ
الْمُؤْمِنِيْنَ اقْتَتَلُوْا فَاَصْلِحُوْا بَيْنَهُمَا ۚ فَاِنْۢ بَغَتْ اِحْدٰىهُمَا عَلَى
الْاُخْرٰى فَقَاتِلُوا الَّتِيْ تَبْغِيْ حَتّٰى تَفِيْٓءَ اِلٰۤى اَمْرِ اللّٰهِ ۚ فَاِنْ فَآءَتْ
فَاَصْلِحُوْا بَيْنَهُمَا بِالْعَدْلِ وَاَقْسِطُوْا ؕ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُقْسِطِيْنَ ﴿٩﴾
اِنَّمَا الْمُؤْمِنُوْنَ اِخْوَةٌ فَاَصْلِحُوْا بَيْنَ اَخَوَيْكُمْ وَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ
تُرْحَمُوْنَ ﴿١٠﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا يَسْخَرْ قَوْمٌ مِّنْ قَوْمٍ عَسٰٓى اَنْ ع
يَّكُوْنُوْا خَيْرًا مِّنْهُمْ وَلَا نِسَآءٌ مِّنْ نِّسَآءٍ عَسٰٓى اَنْ يَّكُنَّ خَيْرًا
مِّنْهُنَّ ۚ وَلَا تَلْمِزُوْۤا اَنْفُسَكُمْ وَلَا تَنَابَزُوْا بِالْاَلْقَابِ ؕ بِئْسَ الِاسْمُ
الْفُسُوْقُ بَعْدَ الْاِيْمَانِ ۚ وَمَنْ لَّمْ يَتُبْ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ ﴿١١﴾

5. நிச்சயமாக அவர்கள் அவர்களிடம் நீர் வெளியேறி வரும் வரையில் பொறுமையோடு இருந்திருப்பார்களானால், அது அவர்களுக்கு மிகச் சிறந்ததாக இருந்திருக்கும்; இன்னும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மிகக் கிருபையுடையவன்.

6. விசுவாசிகளே! (ஃபாஸிக் எனும்) தீயவன் உங்களிடம் ஏதேனும் செய்தியைக் கொண்டுவந்தால் (அதை உடனே அங்கீகரித்து) அறியாமையால் (குற்றமற்ற) ஒரு சமூகத்தார்க்கு நீங்கள் தீங்கிழைத்துவிடாதிருப்பதற்காக (அதன் உண்மையை அறிவதற்காக அதனைத் தீர்க்க விசாரணை செய்து) தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்; (அவ்வாறு நீங்கள் செய்யவில்லையென்றால்,) பின்னர் நீங்கள் செய்தவைகளைப் பற்றி நீங்களே கைசேதப்படக்கூடியவர்களாக ஆகிவிடுவீர்கள்.

7. (விசுவாசிகளே !) நிச்சயமாக உங்களிடையே அல்லாஹ்வுடைய தூதர் இருக்கின்றார் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்; (நீங்கள் விரும்பும்) காரியத்தில் அநேகவற்றில் அவர் உங்களுக்குக் கீழ்ப்படிந்தால், நிச்சயமாக நீங்கள் சிரமத்திற்குள்ளாகிவிடுவீர்கள்; எனினும், அல்லாஹ் விசுவாசத்தை உங்கள் பால் விருப்பமானதாக ஆக்கினான்; உங்கள் இதயங்களில் அதனையே அலங்காரமாக்கியும் வைத்தான்; மேலும் நிராகரிப்பையும், பாவத்தையும், மாறுசெய்வதையும் உங்களுக்கு அவன் வெறுப்பாக்கியும் வைத்தான். இத்தகையோர் தாம் நேர்வழிபெற்றவர்கள்.

8. (இது) அல்லாஹ்விடமிருந்துள்ள பேரருளாக, (அவனுடைய) அருட்கொடையாக இருக்கும்; மேலும், அல்லாஹ் (யாவையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

9. விசுவாசிகளிலுள்ள இரு கூட்டத்தார் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டால், அவ்விருவருக்கிடையே சமாதானம் செய்து வையுங்கள்; பின்னர், அவர்களில் ஒருகூட்டத்தார், மற்றொரு கூட்டத்தாரின் மீது (அக்கிரமம் செய்து) வரம்புமீறினால், (வரம்புமீறிய) அக்கூட்டத்தவர் அல்லாஹ்வுடைய கட்டளையின்பால் திரும்பி வரும் வரை நீங்கள் போர்செய்யுங்கள்; அக்கூட்டத்தார் (அல்லாஹ்வின் கட்டளையின்பால்) திரும்பிவிட்டால், அவ்விருவருக்கிடையே நீதியைக் கொண்டு சமாதானம் செய்துவையுங்கள்; (இதில்) நீங்கள் நீதியாகவும் நடந்துகொள்ளுங்கள்; நிச்சயமாக, அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கின்றான்.

10. நிச்சயமாக விசுவாசிகள் (ஒருவர் மற்றவருக்கு) சகோதரர்களே! ஆகவே, (சண்டையிட்டுக் கொள்ளும்) உங்களுடைய இரு சகோதரர்களுக் கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள்; நீங்கள் அருள் செய்யப்படுவதற்காக அல்லாஹ்வுக்குப் பயந்தும் கொள்ளுங்கள்.

11. விசுவாசிகளே! ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம்; (பரிகாசம் செய்யப்பட்ட) அவர்கள் (பரிகாசம் செய்யும்) இவர்களை விட மிகச் சிறந்தவர்களாக இருக்கலாம்; (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்ற எந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்; பரிகாசம் செய்யப்பட்ட) அவர்கள் (பரிகாசம் செய்யும்) இவர்களை விட மிகச்சிறந்தவர்களாக இருக்கலாம். உங்களில் சிலர் சிலரை குறை கூறவும் வேண்டாம்; உங்களில் சிலர் சிலரை (அவருக்கு வைக்கப்படாத) பெயர்களால் அழைக்கவும்வேண்டாம்; விசுவாசங் கொண்ட பின்னர், (தீயவற்றைக் குறித்துக் காட்டும்) தீய பெயர் (கூறுவது) மிகக் கெட்டதாகி விட்டது; எவர்கள் (இவைகளிலிருந்து) தவ்பாச் செய்து மீளவில்லையோ அவர்களே அநியாயக்காரர்கள்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اجْتَنِبُوْا كَثِيْرًا مِّنَ الظَّنِّ اِنَّ بَعْضَ الظَّنِّ
اِثْمٌ وَّلَا تَجَسَّسُوْا وَلَا يَغْتَبْ بَّعْضُكُمْ بَعْضًا اَيُحِبُّ اَحَدُكُمْ اَنْ يَّاْكُلَ
لَحْمَ اَخِيْهِ مَيْتًا فَكَرِهْتُمُوْهُ وَاتَّقُوا اللّٰهَ اِنَّ اللّٰهَ تَوَّابٌ رَّحِيْمٌ ﴿١٢﴾
يٰٓاَيُّهَا النَّاسُ اِنَّا خَلَقْنٰكُمْ مِّنْ ذَكَرٍ وَّاُنْثٰى وَجَعَلْنٰكُمْ شُعُوْبًا وَّقَبَآئِلَ
لِتَعَارَفُوْا اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللّٰهِ اَتْقٰكُمْ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ ﴿١٣﴾
قَالَتِ الْاَعْرَابُ اٰمَنَّا قُلْ لَّمْ تُؤْمِنُوْا وَلٰكِنْ قُوْلُوْٓا اَسْلَمْنَا وَلَمَّا
يَدْخُلِ الْاِيْمَانُ فِيْ قُلُوْبِكُمْ وَاِنْ تُطِيْعُوا اللّٰهَ وَرَسُوْلَهٗ لَا يَلِتْكُمْ
مِّنْ اَعْمَالِكُمْ شَيْـًٔا اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿١٤﴾ اِنَّمَا الْمُؤْمِنُوْنَ الَّذِيْنَ
اٰمَنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ ثُمَّ لَمْ يَرْتَابُوْا وَجٰهَدُوْا بِاَمْوَالِهِمْ وَ
اَنْفُسِهِمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ اُولٰٓئِكَ هُمُ الصّٰدِقُوْنَ ﴿١٥﴾ قُلْ
اَتُعَلِّمُوْنَ اللّٰهَ بِدِيْنِكُمْ وَاللّٰهُ يَعْلَمُ مَا فِي السَّمٰوٰتِ وَمَا
فِي الْاَرْضِ وَاللّٰهُ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ﴿١٦﴾ يَمُنُّوْنَ عَلَيْكَ اَنْ اَسْلَمُوْا
قُلْ لَّا تَمُنُّوْا عَلَيَّ اِسْلَامَكُمْ بَلِ اللّٰهُ يَمُنُّ عَلَيْكُمْ اَنْ
هَدٰىكُمْ لِلْاِيْمَانِ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿١٧﴾ اِنَّ اللّٰهَ يَعْلَمُ
غَيْبَ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَاللّٰهُ بَصِيْرٌ بِمَا تَعْمَلُوْنَ ﴿١٨﴾ ع ٢ ٨ ١٤

12. விசுவாசிகளே! (தவறான) எண்ணத்தில் பெரும்பாலானவற்றை நீங்கள் தவிர்த்துக் கொள்ளுங்கள் ; (ஏனெனில் ,) நிச்சயமாக எண்ணத்தில் சில பாவமாகும் ; (எவருடைய குறைகளையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்கவும் வேண்டாம் ; உங்களில் சிலர் சிலரைப் புறம் பேசவும் வேண்டாம் ;உங்களில் யாதொருவர் , தன்னுடைய சகோதரரின் மாமிசத்தை(அவர் இறந்து) சவமாகயிருக்கும் நிலையில் புசிக்க விரும்புவாரா? அப்போது , அதனை நீங்கள் வெறுத்து விடுவீர்கள். இன்னும் , நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள் ; நிச்சயமாக அல்லாஹ் , (பாவத்திலிருந்து தவ்பாச் செய்து மீள்வோரின்) பாவமீட்சியை மிகுதியாக ஏற்பவன் ;மிகக் கிருபையுடையவன்.

13. *மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் மற்றும் ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம்; இன்னும், ஒருவருக்கொருவர் நீங்கள் அறிமுகமாகிக் கொள்வதற்காக உங்களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; நிச்சயமாகஅல்லாஹ்விடத்தில் உங்களில்மிக்க கண்ணியமிக்கவர் உங்களில் மிகவும் பயபக்தியுடையவர்தான்; நிச்சயமாக அல்லாஹ், (யாவையும்) நன்கறிந்தவன்; நன்குணர்பவன்.*

14. (நபியே! அரபிகளிலுள்ள) நாட்டுப்புறத்து வாசிகள் " நாங்கள் விசுவாசித்திருக்கிறோம் " எனக் கூறுகின்றனர்;(அவர்களிடம்) நீர் கூறுவீராக : " நீங்கள் விசுவாசிக்கவில்லை,எனினும், நாங்கள் இஸ்லாத்தை ஏற்றவர்களாக இருக்கிறோம் "என்று நீங்கள் கூறுங்கள்; (ஏனெனில்) விசுவாசம் உங்களுடைய இதயங்களில் இன்னும் நுழையவேயில்லை; நீங்கள் அல்லாஹ் வுக்கும் , அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடப்பீர்களாயின் , உங்களுடைய (நன்மையான)செயல்களிலிருந்து எதையும் அவன் உங்களுக்குக் குறைத்துவிடமாட்டான் ; நிச்சயமாக அல்லாஹ் , மிக்க மன்னிப்பவன் , மிகக் கிருபையுடையவன்.

15. *(உண்மையான) விசுவாசிகள் எத்தகையோரென்றால், அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விசுவாசங்கொண்டு, பின்னர் எவ்வித சந்தேகமும் கொள்ளாது, அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய செல்வங்களாலும், தம் உயிர்களாலும் (ஜிஹாத் எனும்)அறப்போர் செய்தார்களே அத்தகையோர்தாம்; அவர்களே (தங்கள் விசுவாசத்தில்) உண்மையாளர்கள்.*

16. *(நபியே!) நீர் கூறுவீராக: ("விசுவாசம் கொண்டிருக்கிறோம் என்ற உங்கள் கூற்றின் மூலம்) உங்கள் மார்க்கத்தை நீங்கள் அல்லாஹ்வுக்கு அறிவிக்கின்றீர்களா? அல்லாஹ்வோ வானங்களில் உள்ளவற்றையும், பூமியில் உள்ளவற்றையும் நன்கு அறிவான்; அன்றியும் அல்லாஹ் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் நன்கறிகிறவன்."*

17. (நபியே!) அவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்ததன் காரணமாக, உமக்கு உபகாரம் செய்துவிட்டதாக அவர்கள் கருதுகின்றனர் ; (நபியே!) நீர் கூறும்: " நீங்கள் இஸ்லாத்தில் சேர்ந்ததனால் என் மீது உபகாரம் செய்து விட்டதாகக் கருதாதீர்கள் ; எனினும், விசுவாசம் கொள்ள வாய்ப்பளித்து உங்களை நேர் வழியில் செலுத்தியதனால் அல்லாஹ்தான் உங்கள் மீது உபகாரம் செய்திருக்கின்றான்; நீங்கள் (உங்கள் விசுவாசத்தில்) உண்மையாளர்களாக இருந்தால் (இதனை நன்கறிந்து கொள்வீர்கள். ")

18. *நிச்சயமாக அல்லாஹ், வானங்களிலும், பூமியிலும் உள்ள மறைவானவற்றை நன்கறிவான். அல்லாஹ்வோ நீங்கள் செய்பவைகளைப் பார்க்கிறவன்.*

## سُوْرَةُ قٓ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسٌ وَّاَرْبَعُوْنَ اٰيَةً وَّثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قٓ ۚ وَالْقُرْاٰنِ الْمَجِيْدِ ﴿١﴾ بَلْ عَجِبُوْٓا اَنْ جَآءَهُمْ مُّنْذِرٌ مِّنْهُمْ
فَقَالَ الْكٰفِرُوْنَ هٰذَا شَيْءٌ عَجِيْبٌ ﴿٢﴾ ءَاِذَا مِتْنَا وَكُنَّا تُرَابًا ۚ
ذٰلِكَ رَجْعٌۢ بَعِيْدٌ ﴿٣﴾ قَدْ عَلِمْنَا مَا تَنْقُصُ الْاَرْضُ مِنْهُمْ ۚ وَعِنْدَنَا
كِتٰبٌ حَفِيْظٌ ﴿٤﴾ بَلْ كَذَّبُوْا بِالْحَقِّ لَمَّا جَآءَهُمْ فَهُمْ فِيْٓ اَمْرٍ مَّرِيْجٍ ﴿٥﴾
اَفَلَمْ يَنْظُرُوْٓا اِلَى السَّمَآءِ فَوْقَهُمْ كَيْفَ بَنَيْنٰهَا وَزَيَّنّٰهَا وَمَا لَهَا
مِنْ فُرُوْجٍ ﴿٦﴾ وَالْاَرْضَ مَدَدْنٰهَا وَاَلْقَيْنَا فِيْهَا رَوَاسِيَ وَاَنْۢبَتْنَا
فِيْهَا مِنْ كُلِّ زَوْجٍۢ بَهِيْجٍ ﴿٧﴾ تَبْصِرَةً وَّذِكْرٰى لِكُلِّ عَبْدٍ مُّنِيْبٍ ﴿٨﴾
وَنَزَّلْنَا مِنَ السَّمَآءِ مَآءً مُّبٰرَكًا فَاَنْۢبَتْنَا بِهٖ جَنّٰتٍ وَّحَبَّ الْحَصِيْدِ ﴿٩﴾
وَالنَّخْلَ بٰسِقٰتٍ لَّهَا طَلْعٌ نَّضِيْدٌ ﴿١٠﴾ رِّزْقًا لِّلْعِبَادِ ۙ وَاَحْيَيْنَا بِهٖ
بَلْدَةً مَّيْتًا ۭ كَذٰلِكَ الْخُرُوْجُ ﴿١١﴾ كَذَّبَتْ قَبْلَهُمْ قَوْمُ نُوْحٍ وَّاَصْحٰبُ
الرَّسِّ وَثَمُوْدُ ﴿١٢﴾ وَعَادٌ وَّفِرْعَوْنُ وَاِخْوَانُ لُوْطٍ ﴿١٣﴾ وَّاَصْحٰبُ
الْاَيْكَةِ وَقَوْمُ تُبَّعٍ ۭ كُلٌّ كَذَّبَ الرُّسُلَ فَحَقَّ وَعِيْدِ ﴿١٤﴾
اَفَعَيِيْنَا بِالْخَلْقِ الْاَوَّلِ ۭ بَلْ هُمْ فِيْ لَبْسٍ مِّنْ خَلْقٍ جَدِيْدٍ ﴿١٥﴾ ع ١ ١٥ ١٥

## அத்தியாயம் : 50
## காஃப்

வசனங்கள் : 45 மக்கீ ருகூஃகள் : 3

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. காஃப். கண்ணியமிக்க இக் குர்ஆன்மீது சத்தியமாக! (மரணத்திற்குப்பின் நிச்சயமாக நீங்கள் உயிர்கொடுத்து எழுப்பப்படுவீர்கள்).

2. என்றாலும் அவர்களிலிருந்தே அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் அவர்களுக்கு வந்ததைப்பற்றி அவர்கள் ஆச்சரியப்படுகின்றனர்; ஆகவே, இது ஆச்சரியமான விஷயம் என்று நிராகரிப்பவர்கள் கூறுகின்றனர்.

3. "நாம் இறந்து (உக்கி) மண்ணாகிவிட்டாலு(ம் உயிர் கொடுத்து எழுப்பப்படுவோ)மா? (அது இயற்கைக்கு மாற்றமானதாகும். ஆகவே,) அது தூரமான மீட்சியாகும்" (என்றும் கூறுகின்றனர்).

4. (இறந்தபின்) அவர்களிலிருந்து (அவர்களின் உடலை எந்த அளவு) பூமி (தின்று) குறைத்திருக்கிறது என்பதைத்திட்டமாக நாம் அறிந்திருக்கிறோம்; மேலும், (அவர்களின் செயல்கள் பதியப்பட்டு) பாதுகாக்கப்பட்ட புத்தகம் நம்மிடத்தில் இருக்கின்றது.

5. மாறாக, உண்மையை _ அது அவர்களிடம் வந்தபோது அவர்கள் பொய்யாக்கினார்கள்; ஆகவே, அவர்கள் குழப்பமான காரியத்தில் இருக்கிறார்கள்.

6. தங்களுக்கு மேல் (இருக்கும்) வானத்தின் பால், அதனை நாம் எவ்வாறு (ஒரு கட்டுக்கோப்பாக) அமைத்து, அதனை (நட்சத்திரங்களால்) அலங்காரமாக்கி வைத்துள்ளோம் என்பதை அவர்கள் (கவனித்துப்) பார்க்கவில்லையா? அதில் எத்தகைய வெடிப்புகளும் இல்லை.

7. மேலும் பூமியை _ நாமே அதை (விரிவாக்கி) விரித்திருக்கிறோம்; அதில் உறுதியான மலைகளையும் நாமே அமைத்தோம்; அழகான (புற்பூண்டுகளை) ஒவ்வொரு வகையிலிருந்தும் நாம் அதில் முளைப்பித்தோம்.

8. இது (அல்லாஹ்வுக்குப் பணிந்து அவன்பக்கம் அதிகமாக) மீளக்கூடிய ஒவ்வொரு அடியாருக்கும் பார்(த்துப்படிப்பினை பெறுப)வையாகவும், நினைவூட்டக்கூடியதாகவும் இருக்கின்றது.

9. வானத்திலிருந்து, மிக்க பாக்கியமுள்ள (மழை) நீரையும் நாம் இறக்கிவைத்தோம்; பின்னர், அதனைக்கொண்டு (பல) சோலைகளையும், அறுவடை செய்யப்படும் தானிய மணிகளையும் முளைக்கச் செய்தோம்.

10. அன்றியும், (அந்நீரைக்கொண்டு) நீண்டு வளர்ந்த பேரீச்சமரங்களையும் (நாம் முளைப்பிக்கச்செய்தோம்) அவைகளுக்கு அடுக்கடுக்கான பாளைகளிருக்கின்றன.

11. (அதனை நம்) அடியார்களுக்கு ஆகாரமாக (ஆக்கினோம்); இன்னும், அதைக் கொண்டு இறந்துகிடந்த ஊரை (வறண்டபூமியை) நாம் உயிர்ப்பிக்கின்றோம்; இவ்வாறே, (மரணித்தோர் உயிர்பெற்று) வெளியேறுதலும் (நடந்தேறும்).

12. இவர்களுக்கு முன்னர் (இருந்த) நூஹ்வுடைய சமூகத்தாரும், ரஸ்ஸு (கிணற்று) வாசிகளும், ஸமூது (சமூகத்தாரு)ம் பொய்யாக்கினர்.

13. ஆது (சமூகத்தாரு)ம், ஃபிர்அவ்னும், லூத்துடைய சகோதரர்களும் _

14. இன்னும் (மத்யன்) தோப்பு வாசிகளும், துப்பஉ வின் சமூகத்தினரும் _ ஒவ்வொருவரும் நம்முடைய தூதர்களைப் பொய்யாக்கினர்; ஆகவே, (வேதனையைப்பற்றிய) எனது அச்சுறுத்தல் உண்மையாயிற்று.

15. (படைப்புகள் யாவற்றையும்) முதலாவதாகப் படைத்ததில் நாம் இயலாமலாகி விட்டோமா? அவ்வாறன்று! (இறந்தபின் உயிர் கொடுத்து நாம்) புதிதாகப்படைப்பது பற்றி இவர்கள் சந்தேகத்திலிருக்கின்றனர்.

وَلَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ وَنَعْلَمُ مَا تُوَسْوِسُ بِهٖ نَفْسُهٗ ۖۚ وَنَحْنُ اَقْرَبُ
اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ ﴿۱۶﴾ اِذْ يَتَلَقَّى الْمُتَلَقِّيٰنِ عَنِ الْيَمِيْنِ وَعَنِ
الشِّمَالِ قَعِيْدٌ ﴿۱۷﴾ مَا يَلْفِظُ مِنْ قَوْلٍ اِلَّا لَدَيْهِ رَقِيْبٌ عَتِيْدٌ ﴿۱۸﴾ وَ
جَآءَتْ سَكْرَةُ الْمَوْتِ بِالْحَقِّ ؕ ذٰلِكَ مَا كُنْتَ مِنْهُ تَحِيْدُ ﴿۱۹﴾ وَنُفِخَ
فِى الصُّوْرِ ؕ ذٰلِكَ يَوْمُ الْوَعِيْدِ ﴿۲۰﴾ وَجَآءَتْ كُلُّ نَفْسٍ مَّعَهَا سَآئِقٌ
وَّشَهِيْدٌ ﴿۲۱﴾ لَقَدْ كُنْتَ فِىْ غَفْلَةٍ مِّنْ هٰذَا فَكَشَفْنَا عَنْكَ غِطَآءَكَ
فَبَصَرُكَ الْيَوْمَ حَدِيْدٌ ﴿۲۲﴾ وَقَالَ قَرِيْنُهٗ هٰذَا مَا لَدَىَّ عَتِيْدٌ ؕ ﴿۲۳﴾
اَلْقِيَا فِىْ جَهَنَّمَ كُلَّ كَفَّارٍ عَنِيْدٍ ۙ ﴿۲۴﴾ مَّنَّاعٍ لِّلْخَيْرِ مُعْتَدٍ مُّرِيْبِ ۙ ﴿۲۵﴾
اِۨلَّذِىْ جَعَلَ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ فَاَلْقِيٰهُ فِى الْعَذَابِ الشَّدِيْدِ ﴿۲۶﴾
قَالَ قَرِيْنُهٗ رَبَّنَا مَاۤ اَطْغَيْتُهٗ وَلٰكِنْ كَانَ فِىْ ضَلٰلٍ ۢ بَعِيْدٍ ﴿۲۷﴾ قَالَ
لَا تَخْتَصِمُوْا لَدَىَّ وَقَدْ قَدَّمْتُ اِلَيْكُمْ بِالْوَعِيْدِ ﴿۲۸﴾ مَا يُبَدَّلُ الْقَوْلُ
لَدَىَّ وَمَاۤ اَنَا بِظَلَّامٍ لِّلْعَبِيْدِ ﴿۲۹﴾ يَوْمَ نَقُوْلُ لِجَهَنَّمَ هَلِ امْتَلَاْتِ ع ۲
وَتَقُوْلُ هَلْ مِنْ مَّزِيْدٍ ﴿۳۰﴾ وَاُزْلِفَتِ الْجَنَّةُ لِلْمُتَّقِيْنَ غَيْرَ بَعِيْدٍ ﴿۳۱﴾
هٰذَا مَا تُوْعَدُوْنَ لِكُلِّ اَوَّابٍ حَفِيْظٍ ﴿۳۲﴾ مَنْ خَشِىَ الرَّحْمٰنَ بِالْغَيْبِ
وَجَآءَ بِقَلْبٍ مُّنِيْبِ ۙ ﴿۳۳﴾ اِۨدْخُلُوْهَا بِسَلٰمٍ ؕ ذٰلِكَ يَوْمُ الْخُلُوْدِ ﴿۳۴﴾

16. மேலும், நிச்சயமாக, நாம்தான் மனிதனைப் படைத்தோம்; (நன்மை, தீமை ஆகியவற்றிலிருந்து) அவன் மனம் எதை ஊசலாடச்செய்கிறது (பேசுகிறது)என்பதையும் நாம் நன்கறிவோம்; இன்னும், நாம் பிடரி(யிலுள்ள உயிர்) நரம்பைவிட அவனுக்கு மிகச்சமீபமாகவே இருக்கின்றோம்.

17. வலது புறத்திலும், இடது புறத்திலும் அமர்ந்து (செயல்களை) எடுத்தெழுதும் இரு(வான)வர் எடுத்தெழுதும் சமயத்தில்_

18. அவனிடம்(அதை)எழுத எதிர்பார்த்து தயாராக இருக்கின்ற கண்காணிப்பாளர் இருந்தே தவிர சொல்லால் எதையும் அவன் மொழிவதில்லை;(அவன் கூறுபவை அனைத்தும் பதியப்படுகின்றது.)

19. மரண மயக்கம் உண்மையாகவே வந்துவிட்டது; (அவனிடம் ) அது, நீ எதை விட்டும் வெருண்டோடிக் கொண்டிருந்தாயோ அதுவாகும் (என்று கூறப்படும்).

20. மேலும், குழல் ஊதப்படும்; (அப்போதும் அவனிடம், உனக்கு) இது அச்சுறுத்தப்பட்ட (விசாரணை) நாளாகும் (என்று கூறப்படும்).

21. (அந்நாளில்) ஒவ்வோர் ஆத்மாவும் _(அதை) அழைத்துச் செல்பவரும், சாட்சி கூறுபவரும் அதனுடன் இருக்கும் நிலையில்_ வரும்.

22. (அதனிடம்) திட்டமாக நீ இதனைப்பற்றி மறதியில் இருந்தாய்; ஆகவே, (மறுமையில் நடந்தேறும் காரியங்கள் பற்றி மறைத்துக்கொண்டிருந்த) உன்திரையை உம்மை விட்டும் நாம் நீக்கிவிட்டோம்; எனவே, உன்னுடைய பார்வை இன்று கூர்மையாயிருக்கின்றது (ஆகவே, நீ இதனைப் பார் என்று கூறப்படும்).

23. (சாட்சி கூற) அவனுடன் இருப்பவர் "இதோ (அவனுடைய பதிவேடு) என்னிடமிருப்பது தயாராக இருக்கின்றது" என்று கூறுவார்.

24. (உடனே இரு காவலர்களிடம்) "மனமுரண்டாக நிராகரித்துக் கொண்டிருந்த ஒவ்வொருவரையும் நீங்கள் இருவரும் நரகத்தில் போட்டுவிடுங்கள்" (என்று கூறப்படும்).

25. (அவன்) நன்மையை அதிகமாகத் தடுத்துக் கொண்டிருந்தவன், (அட்டூழியம் செய்வதில்) வரம்புமீறிக் கொண்டிருந்தவன்,(இந்நாளை) சந்தேகித்துக் கொண்டிருந்தவன்.

26. அவன் எத்தகையவனென்றால், அல்லாஹ்வுடன் வேறொரு (வணக்கத்திற்குரிய) நாயனை (இணையாக) ஆக்கினான். ஆகவே, நீங்களிருவரும் இவனை மிகக் கொடிய வேதனையில் போட்டுவிடுங்கள் (என்றும் கூறப்படும்).

27. (அச்சமயம்) இவனுடைய (இணை பிரியாத) சிநேகிதன் (ஆக இருந்த ஷைத்தான் அல்லாஹ்விடம்), "எங்கள் இரட்சகனே! நான் இவனை வழிகெடுக்க வில்லை; ஆனால், (தானாக) அவனே வெகுதூரமான வழிகேட்டில் இருந்து விட்டான்!" என்று கூறுவான்.

28. (ஆகவே அல்லாஹ் அவர்களிடம், கணக்கு நாளாகிய இன்று) "என்னிடம் நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருக்க வேண்டாம்;(இது பற்றிய) அச்சுறுத்தலை நிச்சயமாக உங்களின்பால் (நீங்கள் உலகிலிருந்தபோதே என் தூதர்கள் மூலமாக) நான் முற்படுத்தியும் விட்டேன்" என்று கூறுவான்.

29. "(என்னுடைய) அச்சொல் என்னிடம் மாற்றப்படமாட்டாது; மேலும், என்னுடைய அடியார்களுக்கு நான் சிறிதும் அநியாயம் செய்பவனில்லை" (என்றும் கூறுவான்).

30. நரகத்திடம், "நீ நிரம்பிவிட்டாயா?" என்று நாம் கேட்கும் நாளில், அ(ந்நரகமான)து, "இன்னும் அதிகமாக ஏதும் இருக்கின்றதா?" என்று கேட்கும்.

31. மேலும், (அந் நாளில்) பயபக்தியுடையோருக்கு சுவனத்தைத் தொலைவின்றி நெருக்கமாகக் கொண்டுவரப்படும்.

32. இது தான் நீங்கள் வாக்களிக்கப்பட்டீர்களே அதுவாகும்; ( இரட்சகனின்பால் தவ்பாச் செய்து) அதிகமாக மீளக்கூடிய, (அல்லாஹ்வுடைய கட்டளைகளைப்) பேணி நடந்து கொண்ட ஒவ்வொருவருக்கு(மாகு)ம்.

33. எவர்கள் மறைவில் அர்ரஹ்மானுக்கு பயந்து நடந்து, (அவன்பால்) மீளக்கூடிய(பரிசுத்த) மனத்துடன் வருகின்றார்களோ (அவர்களுக்குச் சுவனம் நெருக்கமாக்கப்பட்டு அவர்களிடம்),

34. சாந்தியுடன் நீங்கள் இதில் நுழையுங்கள் ; இது நிரந்தர நாளாகும் ( என்றும் அவர்களுக்கு கூறப்படும்).

لَهُمْ مَّا يَشَآءُوْنَ فِيْهَا وَلَدَيْنَا مَزِيْدٌ ﴿٣٥﴾ وَكَمْ اَهْلَكْنَا قَبْلَهُمْ
مِّنْ قَرْنٍ هُمْ اَشَدُّ مِنْهُمْ بَطْشًا فَنَقَّبُوْا فِى الْبِلَادِ ؕ هَلْ مِنْ مَّحِيْصٍ ﴿٣٦﴾
اِنَّ فِىْ ذٰلِكَ لَذِكْرٰى لِمَنْ كَانَ لَهٗ قَلْبٌ اَوْ اَلْقَى السَّمْعَ وَهُوَ
شَهِيْدٌ ﴿٣٧﴾ وَلَقَدْ خَلَقْنَا السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَا فِىْ سِتَّةِ
اَيَّامٍ ۖ وَّمَا مَسَّنَا مِنْ لُّغُوْبٍ ﴿٣٨﴾ فَاصْبِرْ عَلٰى مَا يَقُوْلُوْنَ وَسَبِّحْ
بِحَمْدِ رَبِّكَ قَبْلَ طُلُوْعِ الشَّمْسِ وَقَبْلَ الْغُرُوْبِ ﴿٣٩﴾ وَمِنَ الَّيْلِ
فَسَبِّحْهُ وَاَدْبَارَ السُّجُوْدِ ﴿٤٠﴾ وَاسْتَمِعْ يَوْمَ يُنَادِ الْمُنَادِ مِنْ مَّكَانٍ
قَرِيْبٍ ۙ﴿٤١﴾ يَّوْمَ يَسْمَعُوْنَ الصَّيْحَةَ بِالْحَقِّ ؕ ذٰلِكَ يَوْمُ الْخُرُوْجِ ﴿٤٢﴾
اِنَّا نَحْنُ نُحْىٖ وَنُمِيْتُ وَاِلَيْنَا الْمَصِيْرُ ۙ﴿٤٣﴾ يَوْمَ تَشَقَّقُ الْاَرْضُ عَنْهُمْ
سِرَاعًا ؕ ذٰلِكَ حَشْرٌ عَلَيْنَا يَسِيْرٌ ﴿٤٤﴾ نَحْنُ اَعْلَمُ بِمَا يَقُوْلُوْنَ وَمَآ
اَنْتَ عَلَيْهِمْ بِجَبَّارٍ ۫ فَذَكِّرْ بِالْقُرْاٰنِ مَنْ يَّخَافُ وَعِيْدِ ﴿٤٥﴾ ع ٣ ١٦ ١٧

## سُوْرَةُ الذّٰرِيٰتِ مَكِّيَّةٌ وَّهِيَ سِتُّوْنَ اٰيَةً وَّثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَالذّٰرِيٰتِ ذَرْوًا ۙ﴿١﴾ فَالْحٰمِلٰتِ وِقْرًا ۙ﴿٢﴾ فَالْجٰرِيٰتِ يُسْرًا ۙ﴿٣﴾ فَالْمُقَسِّمٰتِ
اَمْرًا ۙ﴿٤﴾ اِنَّمَا تُوْعَدُوْنَ لَصَادِقٌ ۙ﴿٥﴾ وَّاِنَّ الدِّيْنَ لَوَاقِعٌ ؕ﴿٦﴾

35. அவர்கள் நாடியதெல்லாம் அதில் அவர்களுக்குண்டு; இன்னும், நம்மிடத்தில் (அவர்கள் கேட்டதைவிட) அதிகம் உண்டு.

36. இவர்களைவிட மிக்க பலசாலிகளாக இருந்த எத்தனையோ தலைமுறையினரை இவர்களுக்கு முன்னர் நாம் அழித்திருக்கின்றோம்; அவர்கள் (தப்பித்துக்கொள்ளும் இடத்தைத் தேடி) பல ஊர்களிலும் சுற்றித்திரிந்தனர்; (ஆயினும்) அவர்களுக்குத் தப்பி ஓடுமிடம் இருந்ததா?

37. எவருக்கு (அவர்களை அழித்தது பற்றி சிந்தித்துணரும்) உள்ளமிருக்கிறதோ அவருக்கு, அல்லது மனமுவந்தவராக செவிசாய்க்கின்றாரோ அவருக்கு நிச்சயமாக இதில் (நல்ல) படிப்பினை இருக்கின்றது.

38. இன்னும், திட்டமாக வானங்களையும், பூமியையும், அவை இரண்டிற்கு மத்தியிலுள்ளவைகளையும் ஆறு நாட்களில் நாம் படைத்தோம்; (அதனால்) எவ்வித களைப்பும் நம்மைத்தீண்டவில்லை.

39. எனவே (நபியே!) அவர்கள் (உம்மைக் குறை) கூறுவதைப் பற்றி(பொருட்படுத்தாது) நீர் பொறுமையுடனிருப்பீராக! இன்னும் சூரியஉதயத்திற்கு முன்னரும், (அதன்) அஸ்தமனத்திற்கு முன்னரும் உமதிரட்சகனின் புகழைக்கொண்டு துதி செய்து கொண்டுமிருப்பீராக!

40. இன்னும், இரவில் ஒருபாகத்திலும், (ஒவ்வொரு முறையும்) சிரம்பணி ந்(து தொழு)ததற்குப் பின்னரும் அவனைத் துதி செய்து கொண்டிருப்பீராக!

41. மேலும், சமீபமான இடத்திலிருந்து அழைப்பவர், அழைக்கும் நாளை(ப்பற்றி) செவிமடுப்பீராக!

42. பெரும் சப்தத்தை உண்மையாகவே, அவர்கள் கேட்கும் நாள்; அதுதான் (மரணித்தோர் சமாதியிலிருந்து) வெளிப்படும் நாள் ஆகும்.

43. நிச்சயமாக நாமே, உயிர்ப்பிக்கின்றோம்; மரணிக்குமாறும் நாம் செய்கின்றோம்; நம்மிடமே (யாவரும்) திரும்பி வரவேண்டியதிருக்கின்றது.

44. பூமி, அவர்களை விட்டும் பிளந்து விடும்நாளில், (அவர்களின் கப்ருகளிலிருந்து வெளியேறி அழைப்பாளரின்பால்) விரைந்தவர்களாக (வருவார்கள்); அது (படைப்பினங்களை) ஒன்றுதிரட்டுவதாகும்; (அது) நமக்கு எளிதானதாகும்.

45. (நபியே! உம்மைப்பற்றி) அவர்கள் கூறுவதை நாம் மிக அறிவோம்; மேலும், நீர் அவர்களை அடக்கியாள்பவரல்லர்; ஆகவே, (நம்முடைய) அச்சுறுத்தலைப்பயப்படுவோரை இந்தக் குர்ஆனைக்கொண்டு நீர் நல்லுபதேசம் செய்வீராக!

---

அத்தியாயம் : 51

## அத்தாரியாத் – புழுதியைக் கிளறும் காற்றுகள்

வசனங்கள் : 60 மக்கீ ருகூஉகள் : 3

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. புழுதியை பறக்கவிடும் காற்றுகளின் மீது சத்தியமாக!

2. (மழையின் கனத்தை) சுமந்து வரும் மேகங்களின் மீதும் சத்தியமாக!

3. (கடல்களில்) இலகுவாகச் செல்கின்றவைகளின் மீதும் சத்தியமாக!

4. கட்டளையைப் பங்கிடுவோர் (களான வானவர்)கள் மீதும் சத்தியமாக!

5. (நற்செயலுக்கு நற்கூலியும், தீயசெயலுக்கு தண்டனையும் உண்டென்று) நிச்சயமாக, நீங்கள் வாக்களிக்கப் படுவதெல்லாம் உண்மையானதாகும்.

6. நிச்சயமாக, (செயலுக்குத் தக்க) கூலி கொடுக்கப்படுவது நடந்தே தீரும்.

وَالسَّمَآءِ ذَاتِ الْحُبُكِ ۝۷ اِنَّكُمْ لَفِیْ قَوْلٍ مُّخْتَلِفٍ ۝۸ یُّؤْفَكُ عَنْهُ
مَنْ اُفِكَ ۝۹ قُتِلَ الْخَرّٰصُوْنَ ۝۱۰ الَّذِیْنَ هُمْ فِیْ غَمْرَةٍ سَاهُوْنَ ۝۱۱
یَسْـَٔلُوْنَ اَیَّانَ یَوْمُ الدِّیْنِ ۝۱۲ یَوْمَ هُمْ عَلَى النَّارِ یُفْتَنُوْنَ ۝۱۳ ذُوْقُوْا
فِتْنَتَكُمْ ؕ هٰذَا الَّذِیْ كُنْتُمْ بِهٖ تَسْتَعْجِلُوْنَ ۝۱۴ اِنَّ الْمُتَّقِیْنَ فِیْ جَنّٰتٍ
وَّعُیُوْنٍ ۝۱۵ اٰخِذِیْنَ مَاۤ اٰتٰهُمْ رَبُّهُمْ ؕ اِنَّهُمْ كَانُوْا قَبْلَ ذٰلِكَ
مُحْسِنِیْنَ ۝۱۶ كَانُوْا قَلِیْلًا مِّنَ الَّیْلِ مَا یَهْجَعُوْنَ ۝۱۷ وَبِالْاَسْحَارِ هُمْ
یَسْتَغْفِرُوْنَ ۝۱۸ وَفِیْۤ اَمْوَالِهِمْ حَقٌّ لِّلسَّآئِلِ وَالْمَحْرُوْمِ ۝۱۹ وَفِی
الْاَرْضِ اٰیٰتٌ لِّلْمُوْقِنِیْنَ ۝۲۰ وَفِیْۤ اَنْفُسِكُمْ ؕ اَفَلَا تُبْصِرُوْنَ ۝۲۱ وَفِی
السَّمَآءِ رِزْقُكُمْ وَمَا تُوْعَدُوْنَ ۝۲۲ فَوَرَبِّ السَّمَآءِ وَالْاَرْضِ اِنَّهٗ لَحَقٌّ
مِّثْلَ مَاۤ اَنَّكُمْ تَنْطِقُوْنَ ۝۲۳ هَلْ اَتٰىكَ حَدِیْثُ ضَیْفِ اِبْرٰهِیْمَ ع ۱۸/۳ وقف لازم
الْمُكْرَمِیْنَ ۝۲۴ اِذْ دَخَلُوْا عَلَیْهِ فَقَالُوْا سَلٰمًا ؕ قَالَ سَلٰمٌ ۚ قَوْمٌ مُّنْكَرُوْنَ ۝۲۵
فَرَاغَ اِلٰۤى اَهْلِهٖ فَجَآءَ بِعِجْلٍ سَمِیْنٍ ۝۲۶ فَقَرَّبَهٗۤ اِلَیْهِمْ قَالَ اَلَا
تَاْكُلُوْنَ ۝۲۷ فَاَوْجَسَ مِنْهُمْ خِیْفَةً ؕ قَالُوْا لَا تَخَفْ ؕ وَبَشَّرُوْهُ بِغُلٰمٍ
عَلِیْمٍ ۝۲۸ فَاَقْبَلَتِ امْرَاَتُهٗ فِیْ صَرَّةٍ فَصَكَّتْ وَجْهَهَا وَقَالَتْ عَجُوْزٌ
عَقِیْمٌ ۝۲۹ قَالُوْا كَذٰلِكِ ۙ قَالَ رَبُّكِ ؕ اِنَّهٗ هُوَ الْحَكِیْمُ الْعَلِیْمُ ۝۳۰

7. பாதைகளையுடைய வானத்தின்மீது சத்தியமாக,
8. நிச்சயமாக நீங்கள்,(நபியைப்பற்றி) மாறுபட்ட கூற்றில் இருக்கின்றீர்கள்.
9. (அல்லாஹ்வுடைய தூதர் கொண்டுவந்த உண்மையானவிஷயங்களை ஏற்பதைவிட்டும்) திருப்பப்பட்டவர் (வேதமாகிய) அதை விட்டும் திருப்பப் படுகிறார்.
10. பொய்யர்கள் அழிந்தேபோவர்.
11. அவர்கள் எத்தகையோரென்றால்(தங்கள்)மடமையால், (மறுமையையே) மறந்தோராய் இருப்போர்(ஆவர்).
12. "கூலி கொடுக்கும் நாள் எப்பொழுது(வரும்)?" என்று அவர்கள் (பரிகாசமாகக்)கேட்கின்றனர்.
13. (அந்நாள்)அவர்கள் நெருப்பில்(பொசுக்கப்பட்டு) தண்டிக்கப் படும் நாள் .
14. (அவர்களிடம்)"உங்கள் தண்டனையைச் சுவைத்துப் பாருங்கள்.(எப்பொழுது வருமென்று) நீங்கள் எதனை அவசரப்பட்டுக் கொண்டிருந்தீர்களோ அது இது தான்"(என்றும் கூறப்படும்).
15. நிச்சயமாக, பயபக்தியுடையவர்கள் (சுவனபதிகளின்) சோலைகளிலும், நீரூற்றுகளிலும் இருப்பார்கள்.
16. அவர்கள், தங்களிரட்சகன் அவர்களுக்குக் கொடுத்ததை (திருப்தியுடன்) எடுத்துக் கொண்டோராக (இருப்பர்); நிச்சயமாக, அவர்கள் அதற்கு முன்னர் நன்மை செய்வோராகவே இருந்தார்கள்.
17. இரவில் வெகு சொற்ப(நேர)மே தூங்கக் கூடியவர்களாக அவர்கள் இருந்தார்கள்.
18. மேலும், அவர்கள் விடியற்காலை(ஸஹர் நேரங்)களில் (எழுந்து அல்லாஹ்வை வணங்கி, தங்களிரட்சகனிடம்)மன்னிப்புக் கோரிக் கொண்டிருப்பார்கள்.
19. இன்னும், அவர்களுடைய செல்வங்களில் கேட்போருக்கும், கேட்காதோருக்கும் உரிமையுண்டு.
20. மேலும்,உறுதி(யாக விசுவாசங்) கொண்டவர்களுக்குப் பூமியில் அத்தாட்சிகளிருக்கின்றன .
21. உங்களுக்குள்ளேயும் _(பல அத்தாட்சிகள் இருக்கின்றன; அவைகளை) நீங்கள் (கவனித்துப்) பார்க்க மாட்டீர்களா?
22. மேலும், உங்களுடைய உணவும், (மற்றும்) நீங்கள் வாக்களிக்கப்பட்டீர்களே அவையும் வானத்திலிருக்கின்றன.
23. ஆகவே, வானம், மற்றும் பூமியுடைய இரட்சகன் மீது சத்தியமாக,(உங்கள் வார்த்தைகளை) நிச்சயமாக நீங்கள் தாம் கூறுகின்றீர்கள் என்ப(தில் சந்தேகமில்லாதிருப்ப)தைப்போல, நிச்சயமாக இது (_இந்தக் குர்ஆனில் உள்ள யாவும்) உண்மையானதாகும்.
24. (நபியே!) கௌரவத்திற்குரியவர்களான இப்றாஹீமுடைய விருந்தினர்களின் செய்தி உமக்கு வந்ததா?
25. அவர்கள்,அவரிடம் நுழைந்தபொழுது"சாந்தி உண்டாவதாக!" என்று கூறினார்கள்.(அதற்கு இப்றாஹீம் உங்களுக்கும்)"சாந்தி உண்டாவதாக!" என்று கூறி (இவர்கள் நமக்கு) அறிமுகமில்லாத சமூகத்தார்! (என்று தன் மனதில் எண்ணிக்கொண்டு,)
26. பின்னர் தன் இல்லத்தாரிடம் விரைவாகச் சென்று(நெருப்பில்சுடப்பட்ட)கொழுத்தகாளைக் கன்றைக் கொண்டு வந்தார்.
27. பின்னர், அதனை அவர்கள் அருகில் வைத்தார்.(அவர்கள் உண்ணாததால்) அவர்களிடம், "நீங்கள் உண்ண மாட்டீர்களா" என்று கேட்டார்.
28. (பின்னும் புசிக்காமல் இருந்ததால் தன் மனதில்) அவர்கள் பற்றிய பயத்தை உணர்ந்தார். அப்போது"( இப்றாஹீமே!) நீர் பயப்படாதீர்," என்று அவர்கள் கூறினர்; மேலும், (இஸ்ஹாக் என்னும்) அறிவார்ந்த ஆண் குழந்தை(அவருக்குப் பிறக்குமென்ற செய்தி)யைக்கொண்டு அவருக்கு நன்மாராயம் கூறினார்கள்.
29. பின்னர்,(இதனைச் செவியுற்ற) அவருடைய மனைவி (ஸாரா) உரத்த சப்தத்தில் அவர்கள் எதிரில் வந்து, தன் முகத்தில் அடித்துக் கொண்டு, "(நானோ) மலட்டுக்கிழவி (எவ்விதம் எனக்குக் குழந்தை பிறக்கும்?)" என்று கூறினார்.(அதற்கவர்கள்),
30. " இவ்வாறே உமதிரட்சகன் கூறுகின்றான்; நிச்சயமாக, அவனே தீர்க்கமான அறிவுடையோன்;(யாவையும்) நன்கறிந்தோன் என்று கூறினார்கள்.

الجزء ۲۷

قَالَ فَمَا خَطْبُكُمْ اَيُّهَا الْمُرْسَلُوْنَ ﴿۳۱﴾ قَالُوْٓا اِنَّآ
اُرْسِلْنَآ اِلٰى قَوْمٍ مُّجْرِمِيْنَ ﴿۳۲﴾ لِنُرْسِلَ عَلَيْهِمْ حِجَارَةً مِّنْ طِيْنٍ ﴿۳۳﴾ مُّسَوَّمَةً
عِنْدَ رَبِّكَ لِلْمُسْرِفِيْنَ ﴿۳۴﴾ فَاَخْرَجْنَا مَنْ كَانَ فِيْهَا مِنَ الْمُؤْمِنِيْنَ ﴿۳۵﴾
فَمَا وَجَدْنَا فِيْهَا غَيْرَ بَيْتٍ مِّنَ الْمُسْلِمِيْنَ ﴿۳۶﴾ وَتَرَكْنَا فِيْهَآ اٰيَةً
لِّلَّذِيْنَ يَخَافُوْنَ الْعَذَابَ الْاَلِيْمَ ﴿۳۷﴾ وَفِيْ مُوْسٰٓى اِذْ اَرْسَلْنٰهُ اِلٰى
فِرْعَوْنَ بِسُلْطٰنٍ مُّبِيْنٍ ﴿۳۸﴾ فَتَوَلّٰى بِرُكْنِهٖ وَقَالَ سٰحِرٌ اَوْ مَجْنُوْنٌ ﴿۳۹﴾
فَاَخَذْنٰهُ وَجُنُوْدَهٗ فَنَبَذْنٰهُمْ فِى الْيَمِّ وَهُوَ مُلِيْمٌ ﴿۴۰﴾ وَفِيْ عَادٍ
اِذْ اَرْسَلْنَا عَلَيْهِمُ الرِّيْحَ الْعَقِيْمَ ﴿۴۱﴾ مَا تَذَرُ مِنْ شَيْءٍ اَتَتْ
عَلَيْهِ اِلَّا جَعَلَتْهُ كَالرَّمِيْمِ ﴿۴۲﴾ وَفِيْ ثَمُوْدَ اِذْ قِيْلَ لَهُمْ تَمَتَّعُوْا
حَتّٰى حِيْنٍ ﴿۴۳﴾ فَعَتَوْا عَنْ اَمْرِ رَبِّهِمْ فَاَخَذَتْهُمُ الصّٰعِقَةُ وَ
هُمْ يَنْظُرُوْنَ ﴿۴۴﴾ فَمَا اسْتَطَاعُوْا مِنْ قِيَامٍ وَّمَا كَانُوْا مُنْتَصِرِيْنَ ﴿۴۵﴾
وَقَوْمَ نُوْحٍ مِّنْ قَبْلُ اِنَّهُمْ كَانُوْا قَوْمًا فٰسِقِيْنَ ﴿۴۶﴾ وَ ع ۲ ۲۳ ۱
السَّمَآءَ بَنَيْنٰهَا بِاَيْىدٍ وَّاِنَّا لَمُوْسِعُوْنَ ﴿۴۷﴾ وَالْاَرْضَ فَرَشْنٰهَا
فَنِعْمَ الْمٰهِدُوْنَ ﴿۴۸﴾ وَمِنْ كُلِّ شَيْءٍ خَلَقْنَا زَوْجَيْنِ لَعَلَّكُمْ
تَذَكَّرُوْنَ ﴿۴۹﴾ فَفِرُّوْٓا اِلَى اللّٰهِ ۭ اِنِّيْ لَكُمْ مِّنْهُ نَذِيْرٌ مُّبِيْنٌ ﴿۵۰﴾

31. (பின்னர் இப்றாஹீம் மலக்குகளிடம்) "தூதர்களே! உங்கள் காரியமென்ன? (எதற்கு நீங்கள் இங்கு வந்தீர்கள்?)" என்று கேட்டார்.
32. அ(தற்க)வர்கள் "நிச்சயமாக, நாங்கள் குற்றவாளிகளான ஒரு சமூகத்தார்பால் அனுப்பப்பட்டுள்ளோம்" என்று கூறினார்கள்.
33. "நாங்கள், அவர்களின் மீது களிமண்ணால் செய்த (சுட்ட) கற்களை எறிவதற்காக (அனுப்பப்பட்டுள்ளோம்).
34. வரம்பு மீறியவர்களுக்காக, உமது இரட்சகனிடத்தில் (பெயர்கள் எழுதப்பட்டு) அடையாளமிடப் பட்டவைகளாக (அவை இருக்கின்றன.)"
35. ஆகவே (அவர்கள் அழிக்கப்படுவதற்கு முன்,) விசுவாசங்கொண்டவர்களி லிருந்து அ(ந்நகரத்)திலிருந்தவர்களை நாம் வெளியேற்றிவிட்டோம்.
36. பின்னர், அதில் முஸ்லிம்களிலிருந்து ஒரு வீட்டைத்தவிர (மற்றெதையும்) நாம் காணவில்லை.
37. மேலும், துன்புறுத்தும் வேதனையை பயப்படுகிறார்களே அவர்களுக்கு அதில் ஓர் அத்தாட்சியை நாம் விட்டு வைத்தோம்.
38. மேலும், மூஸாவி(ன் சரித்திரத்தி)லும் _(ஒரு படிப்பினை இருக்கின்றது), தெளிவான சான்றுடன் ஃபிர்அவ்னின்பால் அவரை நாம் அனுப்பிய போது,
39. அவன் தன்னுடைய (பக்கபலமென்று நினைத்தபடைகள், அதிகாரம் ஆகியவற்றின்) பலத்தால் (அவரைப்) புறக்கணித்தான்; இன்னும் (இவர்) சூனியக்காரர்; அல்லது பைத்தியக்காரர் என்று அவன் கூறினான்.
40. ஆதலால், அவனையும், அவனுடைய படைகளையும் நாம் பிடித்தோம்; பின்னர் அவர்களைக் கடலில் எறிந்துவிட்டோம்; அவனோ (என்றென்றுமே) நிந்தனைக்குள்ளாக்கப்பட்டுவிட்டான்.
41. 'ஆது' வி(ன்சமூகத்தார்களி)லும் _(ஓர் அத்தாட்சி உண்டு) அவர்கள் மீது, நாம் (நாசகரமான) மலட்டுக் காற்றை அனுப்பிய சமயத்தில்,
42. எப்பொருளிலிருந்தும் அதன்மீது அ(க்காற்றான)து (கடந்து) வந்து, அதை மக்கிப் போனதைப் போன்று ஆக்கியே தவிர அதுவிட்டு வைக்கவில்லை.
43. 'ஸமூது' வி(ன்கூட்டத்தாரி)லும் (ஓர் அத்தாட்சியுண்டு) "நீங்கள் ஒரு காலம் வரையில் சுகம் அனுபவியுங்கள்" என்று அவர்களுக்குக் கூறப்பட்டபோது,
44. தங்கள் இரட்சகனின் கட்டளையை அவர்கள் மீறினார்கள்; ஆகவே, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, பயங்கரமான பெரும் சப்தம் அவர்களைப் பிடித்துக்கொண்டது.
45. ஆகவே, அவர்கள் நிற்கவும் சக்திபெறவில்லை; (நம்முடைய வேதனையிலிருந்து தப்பிக்க எவரிடமிருந்தும்) உதவி பெறுபவர்களாகவும் அவர்கள் இருக்கவில்லை.
46. (இவர்கள் அனைவருக்கும்) முன்னர் நூஹுடைய சமூகத்தாரையும் (நாம் அழித்துவிட்டோம்). நிச்சயமாக அவர்கள், பாவம் செய்யும் சமூகத்தாராகவே இருந்தனர்.
47. மேலும், வானத்தை (எவருடைய உதவியுமின்றி) நம்முடைய சக்தியைக் கொண்டே அதை நாம் அமைத்தோம்; நிச்சயமாக நாம் (படைக்கின்ற காரியத்தில்) மிக்க விசாலத்தை உடையோராக இருக்கிறோம் (யாவும் நம்சக்திக்குட்பட்டதே).
48. அன்றியும், பூமியை _ அதனை நாம் (விசாலமாக )விரித்தோம்; (அதனைச் சீர்படுத்தி செவ்வையாக்கி)விரிப்போரில் (நாம்) நல்லோராவோம்.
49. நீங்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்காக ஒவ்வொருபொருளிலிருந்தும் (ஆண், பெண் கொண்ட) இருவகையை நாம் படைத்திருக்கின்றோம்.
50. ஆகவே, "(நிராகரிப்பு, பாவம் ஆகியவற்றிலிருந்து விலகி), அல்லாஹ்வின் பக்கம் நீங்கள் விரைந்து செல்லுங்கள்; நிச்சயமாக நான், அவனிடமிருந்து உங்களுக்குத் தெளிவாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவ(னாக இருக்கிறே)ன்;

وَلَا تَجْعَلُوا مَعَ اللّٰهِ اِلٰـهًا اٰخَرَ ؕ اِنِّیْ لَكُمْ مِّنْهُ نَذِیْرٌ مُّبِیْنٌ ۟ۚ﴿۵۱﴾ كَذٰلِكَ
مَاۤ اَتَی الَّذِیْنَ مِنْ قَبْلِهِمْ مِّنْ رَّسُوْلٍ اِلَّا قَالُوْا سَاحِرٌ اَوْ مَجْنُوْنٌ ﴿۵۲﴾ قف
اَتَوَاصَوْا بِهٖ ۚ بَلْ هُمْ قَوْمٌ طَاغُوْنَ ﴿۵۳﴾ فَتَوَلَّ عَنْهُمْ فَمَاۤ اَنْتَ بِمَلُوْمٍ ﴿۵۴﴾ ز
وَّذَكِّرْ فَاِنَّ الذِّكْرٰی تَنْفَعُ الْمُؤْمِنِیْنَ ﴿۵۵﴾ وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ
اِلَّا لِیَعْبُدُوْنِ ﴿۵۶﴾ مَاۤ اُرِیْدُ مِنْهُمْ مِّنْ رِّزْقٍ وَّمَاۤ اُرِیْدُ اَنْ
یُّطْعِمُوْنِ ﴿۵۷﴾ اِنَّ اللّٰهَ هُوَ الرَّزَّاقُ ذُو الْقُوَّةِ الْمَتِیْنُ ﴿۵۸﴾ فَاِنَّ
لِلَّذِیْنَ ظَلَمُوْا ذَنُوْبًا مِّثْلَ ذَنُوْبِ اَصْحٰبِهِمْ فَلَا یَسْتَعْجِلُوْنِ ﴿۵۹﴾
فَوَیْلٌ لِّلَّذِیْنَ كَفَرُوْا مِنْ یَّوْمِهِمُ الَّذِیْ یُوْعَدُوْنَ ﴿۶۰﴾ ع ۳ ۴ ۲

سُوْرَةُ الطُّوْرِ مَكِّيَّةٌ وَّهِيَ تِسْعٌ وَّاَرْبَعُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ○

وَالطُّوْرِ ۙ﴿۱﴾ وَكِتٰبٍ مَّسْطُوْرٍ ۙ﴿۲﴾ فِیْ رَقٍّ مَّنْشُوْرٍ ۙ﴿۳﴾ وَّالْبَیْتِ الْمَعْمُوْرِ ۙ﴿۴﴾
وَالسَّقْفِ الْمَرْفُوْعِ ۙ﴿۵﴾ وَالْبَحْرِ الْمَسْجُوْرِ ۙ﴿۶﴾ اِنَّ عَذَابَ رَبِّكَ لَوَاقِعٌ ۙ﴿۷﴾
مَّا لَهٗ مِنْ دَافِعٍ ۙ﴿۸﴾ یَّوْمَ تَمُوْرُ السَّمَآءُ مَوْرًا ۙ﴿۹﴾ وَّتَسِیْرُ الْجِبَالُ سَیْرًا ؕ﴿۱۰﴾
فَوَیْلٌ یَّوْمَىِٕذٍ لِّلْمُكَذِّبِیْنَ ۙ﴿۱۱﴾ الَّذِیْنَ هُمْ فِیْ خَوْضٍ یَّلْعَبُوْنَ ۘ﴿۱۲﴾ یَوْمَ
یُدَعُّوْنَ اِلٰی نَارِ جَهَنَّمَ دَعًّا ؕ﴿۱۳﴾ هٰذِهِ النَّارُ الَّتِیْ كُنْتُمْ بِهَا تُكَذِّبُوْنَ ﴿۱۴﴾ وقف لازم

51 மேலும், அல்லாஹ்வுடன் வேறொரு (வணக்கத்திற்குரிய) நாயனை ஆக்காதீர்கள்; நிச்சயமாக நான், அவனிடமிருந்து உங்களுக்கு தெளிவாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவன்(என்று நபியே! நீர் கூறுவீராக!).
52 இவ்வாறே அவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்களுக்கு எந்தத்தூதரும் வந்ததில்லை; (அவர்களிடம் வந்த அத்தூதரை) சூனியக்காரர் அல்லது பைத்தியக்காரர் என்று அவர்கள் கூறியே தவிர.
53 இவ்வாறு (கூறுமாறே) அவர்கள் (தங்களுக்குள் பரம்பரையாக) ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து வந்தனரா? இல்லை! அவர்கள் (இயற்கையிலேயே) அட்டூழியம் செய்யும் கூட்டத்தாராவர்.
54. ஆகவே, (நபியே!) நீர் அவர்களைப் புறக்கணித்து விடுவீராக! (அதற்காக) நீர் நிந்திக்கப்படுபவரல்லர்.
55. மேலும் (நபியே!) நீர் நல்லுபதேசம் செய்வீராக! ஏனென்றால், நிச்சயமாக நல்லுபதேசம் விசுவாசிகளுக்குப் பயனளிக்கும்.
56. மேலும், ஜின்களையும், மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை.
57. அவர்களிடத்தில் (என் படைப்புகளுக்காக) நான் யாதொரு உணவையும் நாடவில்லை; அன்றியும், எனக்கு அவர்கள் உணவளிப்பதையும் நான் நாடவில்லை.
58. (நபியே! நீர் கூறுவீராக:) "நிச்சயமாக அல்லாஹ்_அவன்தான் (யாவருக்கும்) மிக்க உணவளிப்பவன்; பலமுடையவன்; உறுதியானவன்."
59. எனவே, நிச்சயமாக அநியாயம் செய்து விட்டார்களே, அவர்களுக்கு( முன் வாழ்ந்த) அவர்களுடைய சிநேகிதர்களுக்கிருந்த பங்கைப்போன்று (வேதனையில்)பங்குண்டு. ஆகவே, அவர்கள் (தண்டனைக்காக என்னிடம்) அவசரப்படவேண்டாம்.
60. ஆகையால், நிராகரித்தோருக்கு_ அவர்கள் வாக்களிக்கப்பட்டுள்ளார்களே அத்தகைய அவர்களுடைய நாளில்,கேடுதான்.

---

அத்தியாயம் : 52

## அத்தூர் _ மலை

வசனங்கள் : 49 மக்கீ ருகூஃகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1 தூர் (மலை) மீது சத்தியமாக!
2 எழுதப்பட்ட நூலின் மீது சத்தியமாக!
3 விரித்துவைக்கப்பட்ட ஏட்டில்_
4. பைத்துல் மஃமூர்மீது சத்தியமாக!
5. உயர்த்தப்பட்ட முகட்டின் மீது சத்தியமாக!
6. (நெருப்பினால்)மூட்டப்பட்டகடலின் மீது சத்தியமாக!
7. (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகனின் வேதனை (அவர்களுக்கு)நிகழும்_
8. அதனைத்தடுப்பவர் எவருமில்லை.
9. வானம் கடுமையாக அசைந்து (திருகையைப் போன்று) சுற்றும்நாளில்;
10. இன்னும், மலைகள் (இடம் பெயர்ந்து) ஒரே நடையாக நடக்கும்.
11 (நபியே! உம்மைப்) பொய்ப்பித்துக் கொண்டிருந்தோருக்கு அந்நாளில் கேடுதான்.
12. அவர்கள் எத்தகையோரென்றால், வீண் விதண்டாவாதத்தில் (மூழ்கி) விளையாடுகின்றனர்.
13 அவர்கள் நரகத்தின்பால் ஒரே தள்ளாகத் தள்ளப்படும் நாளில்.
14. (அவர்களிடம்)"நீங்கள் எதனைப் பொய்யாக்கிக் கொண்டிருந்தீர்களோ, அந் (நரக) நெருப்பு இதுதான்"(என்று கூறப்படும்).

اَفَسِحْرٌ هٰذَآ اَمْ اَنْتُمْ لَا تُبْصِرُوْنَ ﴿١٥﴾ اِصْلَوْهَا فَاصْبِرُوْٓا اَوْ لَا تَصْبِرُوْا ۚ
سَوَآءٌ عَلَيْكُمْ ؕ اِنَّمَا تُجْزَوْنَ مَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿١٦﴾ اِنَّ
الْمُتَّقِيْنَ فِيْ جَنّٰتٍ وَّنَعِيْمٍ ﴿١٧﴾ فٰكِهِيْنَ بِمَآ اٰتٰىهُمْ رَبُّهُمْ ۚ وَوَقٰىهُمْ
رَبُّهُمْ عَذَابَ الْجَحِيْمِ ﴿١٨﴾ كُلُوْا وَاشْرَبُوْا هَنِيْٓـًٔا بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿١٩﴾
مُتَّكِـِٕيْنَ عَلٰى سُرُرٍ مَّصْفُوْفَةٍ ۚ وَزَوَّجْنٰهُمْ بِحُوْرٍ عِيْنٍ ﴿٢٠﴾ وَالَّذِيْنَ
اٰمَنُوْا وَاتَّبَعَتْهُمْ ذُرِّيَّتُهُمْ بِاِيْمَانٍ اَلْحَقْنَا بِهِمْ ذُرِّيَّتَهُمْ وَمَآ
اَلَتْنٰهُمْ مِّنْ عَمَلِهِمْ مِّنْ شَيْءٍ ؕ كُلُّ امْرِئٍۭ بِمَا كَسَبَ رَهِيْنٌ ﴿٢١﴾
وَاَمْدَدْنٰهُمْ بِفَاكِهَةٍ وَّلَحْمٍ مِّمَّا يَشْتَهُوْنَ ﴿٢٢﴾ يَتَنَازَعُوْنَ فِيْهَا
كَاْسًا لَّا لَغْوٌ فِيْهَا وَلَا تَاْثِيْمٌ ﴿٢٣﴾ وَيَطُوْفُ عَلَيْهِمْ غِلْمَانٌ لَّهُمْ
كَاَنَّهُمْ لُؤْلُؤٌ مَّكْنُوْنٌ ﴿٢٤﴾ وَاَقْبَلَ بَعْضُهُمْ عَلٰى بَعْضٍ
يَّتَسَآءَلُوْنَ ﴿٢٥﴾ قَالُوْٓا اِنَّا كُنَّا قَبْلُ فِيْٓ اَهْلِنَا مُشْفِقِيْنَ ﴿٢٦﴾ فَمَنَّ
اللّٰهُ عَلَيْنَا وَوَقٰىنَا عَذَابَ السَّمُوْمِ ﴿٢٧﴾ اِنَّا كُنَّا مِنْ قَبْلُ
نَدْعُوْهُ ؕ اِنَّهٗ هُوَ الْبَرُّ الرَّحِيْمُ ﴿٢٨﴾ فَذَكِّرْ فَمَآ اَنْتَ بِنِعْمَتِ رَبِّكَ ع
بِكَاهِنٍ وَّلَا مَجْنُوْنٍ ﴿٢٩﴾ اَمْ يَقُوْلُوْنَ شَاعِرٌ نَّتَرَبَّصُ بِهٖ
رَيْبَ الْمَنُوْنِ ﴿٣٠﴾ قُلْ تَرَبَّصُوْا فَاِنِّيْ مَعَكُمْ مِّنَ الْمُتَرَبِّصِيْنَ ﴿٣١﴾

15. "எனவே,இது (வெறும்) சூனியம்தானா? அல்லது (இதனை) நீங்கள் (உங்கள் கண்ணால்) காண முடியாதவர்களாகி விட்டீர்களா?"

16. "இதில் நீங்கள் நுழைந்து விடுங்கள்; (இதன் வேதனையைச் சகித்துப்) பொறுமையாயிருங்கள்; அல்லது பொறுமையாய் இல்லாதிருங்கள்; (இரண்டும்) உங்களுக்குச் சமமே; (வேதனையில் ஓர் அணுவளவும் குறைக்கப் படமாட்டீர்கள்). நீங்கள் கூலி கொடுக்கப்படுவதெல்லாம் நீங்கள்செய்து கொண்டிருந்தவற்றிற்குத் தான்" (என்று கூறப்படும்).

17. நிச்சயமாக, பயபக்தியுடையவர்கள் சுவனபதிகளிலும், (அல்லாஹ்வின்) அருட்கொடையிலும்(திளைத்து)இருப்பார்கள்.

18. தங்கள் இரட்சகன் தங்களுக்கு அளித்திருப்பவைகளை அனுபவித்தவர்களாக இருப்பர்; மேலும், அவர்களின் இரட்சகன் அவர்களை நரக வேதனையிலிருந்து காத்துக்கொண்டான்.

19. (அவர்களிடம், உலகில் நன்மைகளிலிருந்து) "நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றுக்காக மகிழ்ச்சியுடன் உண்ணுங்கள் இன்னும் பருகுங்கள்" (என்றும் கூறப்படும்).

20. அணியணியாகப் போடப்பட்ட கட்டில்களி(ல் உள்ள மஞ்சங்களி)ன் மீது சாய்ந்தவர்களாக அவர்கள் இருப்பார்கள்; நாம் அவர்களுக்கு (ஹூருல் ஈன் என்னும்) கண்ணழகி(களாகிய கன்னிகை)களை மண முடித்து வைப்போம்.

21. இன்னும் விசுவாசங்கொண்டார்களே அத்தகையோர், அவர்களுடைய சந்ததிகளும் விசுவாசத்தின் மூலம் அவர்களை பின்பற்றினார்கள்; ( அத்தகைய அந்தச் சந்ததியினரின் படித்தரங்கள் குறைவாக இருப்பினும் அவர்களின் பெற்றோர்கள்இருக்கும் உயர் பதவிக்கு) அவர்களுடன் (சுவனபதியில்)அவர்களின் சந்ததியினரை சேர்த்து விடுவோம்; (இதனால்) அவர்களுடைய (பெற்றோர்களின் நன்மையான) செயல்களில் எதனையும் அவர்களுக்கு நாம் குறைத்து விடமாட்டோம்; ஒவ்வொரு மனிதனும் தான் சம்பாதித்ததைக் கொண்டு பிணையாக்கப்பட்டிருக்கின்றான்.

22. (பல வகையான) பழத்தையும், அவர்கள் விரும்பக்கூடியதிலிருந்து (பலவகையான) இறைச்சியையும் கொண்டு அவர்களுக்கு நாம் (ஏராளமாகக் கொடுத்து) அதிகப்படுத்துவோம்.

23. அ(ச்சுவனத்)தில் ஒருவருக்கொருவர் (மதுக்)கோப்பையை பரிமாறிக் கொள்வர்; (அதில்) வீணானது இருக்காது; (அதை அருந்துவதால்) குற்றமிழைப்பதோ ஏற்படுவதில்லை.

24. மேலும், அவர்களுக்குரிய (பணிபுரியும்) சிறுவர்கள் அவர்களைச் சுற்றிக்கொண்டே இருப்பார்கள்; அவர்கள் (சிப்பிகளில்) மறைத்து வைக்கப்பட்ட (கைபடாத) முத்துக்களைப் போல்(பிரகாசமான தோற்றமளிப்பவர்களாக) இருப்பர்.

25. மேலும், அவர்கள் ஒருவருக்கொருவர் விசாரித்துக் கொள்பவர்களாக அவர்களில் சிலர்(மற்ற)சிலரின்பால் முன்னோக்கியிருப்பார்கள்.

26. " நாங்கள் முன்பு, எங்கள் குடும்பத்தாரிடையே (அவர்களுடைய நிலை என்னவாகுமோ என்று) நிச்சயமாக பயந்தவர்களாக இருந்தோம்" என்று கூறுவார்கள்.

27. "ஆயினும், அல்லாஹ் எங்கள்மீது பேருபகாரம் செய்து நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக்காத்துவிட்டான்.

28. நிச்சயமாக (இதற்கு) முன்னர்(வேதனையிலிருந்து எங்களைக் காக்குமாறு)நாங்கள் அவனை (பிரார்த்தனை செய்து)அழைத்துக் கொண்டிருந்தோம்; நிச்சயமாக, அவனே மிகக் கூடுதலாக உபகாரம் செய்பவன்;மிகக்கிருபையுடையவன்" (என்றும்கூறுவார்கள்).

29. ஆகவே, (நபியே! அல்லாஹ்வின் தூதை எத்திவைத்து, அவன் இறக்கிவைத்த குர்ஆனின் மூலம்) அவர்களுக்கு நினைவுபடுத்துவீராக! உமது இரட்சகனின் அருளால் நீர் குறிகாரரல்லர்; பைத்தியக்காரருமல்லர்.

30. அல்லது_(உம்மைப்பற்றி,"அவர்)ஒரு கவிஞர்தாம், அவருக்கு(இறப்பெனும்) காலச்சூழலை நாம் எதிர்பார்த்திருப்போம்" என்று அவர்கள் கூறுகின்றனரா?

31 (ஆகவே, அவர்களிடம்"அதனை) நீங்கள் எதிர்பார்த்திருங்கள்; (என்ன நடக்கிறதென்பதை) நிச்சயமாக நான் உங்களுடன் எதிர்பார்ப்பவர்களிலுள்ளவன்"என்று கூறுவீராக!

اَمْ تَاْمُرُهُمْ اَحْلَامُهُمْ بِهٰذَآ اَمْ هُمْ قَوْمٌ طَاغُوْنَ ۚ﴿۳۲﴾ اَمْ يَقُوْلُوْنَ
تَقَوَّلَهٗ ۚ بَلْ لَّا يُؤْمِنُوْنَ ۚ﴿۳۳﴾ فَلْيَاْتُوْا بِحَدِيْثٍ مِّثْلِهٖٓ اِنْ كَانُوْا
صٰدِقِيْنَ ﴿۳۴﴾ۭ اَمْ خُلِقُوْا مِنْ غَيْرِ شَيْءٍ اَمْ هُمُ الْخٰلِقُوْنَ ﴿۳۵﴾ۭ اَمْ خَلَقُوا
السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ بَلْ لَّا يُوْقِنُوْنَ ﴿۳۶﴾ۭ اَمْ عِنْدَهُمْ خَزَآئِنُ رَبِّكَ
اَمْ هُمُ الْمُصَيْطِرُوْنَ ﴿۳۷﴾ۭ اَمْ لَهُمْ سُلَّمٌ يَّسْتَمِعُوْنَ فِيْهِ ۚ فَلْيَاْتِ
مُسْتَمِعُهُمْ بِسُلْطٰنٍ مُّبِيْنٍ ﴿۳۸﴾ۭ اَمْ لَهُ الْبَنٰتُ وَلَكُمُ الْبَنُوْنَ ﴿۳۹﴾ۭ اَمْ
تَسْــَٔـلُهُمْ اَجْرًا فَهُمْ مِّنْ مَّغْرَمٍ مُّثْقَلُوْنَ ﴿۴۰﴾ۭ اَمْ عِنْدَهُمُ الْغَيْبُ
فَهُمْ يَكْتُبُوْنَ ﴿۴۱﴾ۭ اَمْ يُرِيْدُوْنَ كَيْدًا ۭ فَالَّذِيْنَ كَفَرُوْا هُمُ
الْمَكِيْدُوْنَ ﴿۴۲﴾ۭ اَمْ لَهُمْ اِلٰهٌ غَيْرُ اللّٰهِ ۭ سُبْحٰنَ اللّٰهِ عَمَّا يُشْرِكُوْنَ ﴿۴۳﴾
وَاِنْ يَّرَوْا كِسْفًا مِّنَ السَّمَآءِ سَاقِطًا يَّقُوْلُوْا سَحَابٌ مَّرْكُوْمٌ ﴿۴۴﴾
فَذَرْهُمْ حَتّٰى يُلٰقُوْا يَوْمَهُمُ الَّذِيْ فِيْهِ يُصْعَقُوْنَ ﴿۴۵﴾ۙ يَوْمَ
لَا يُغْنِيْ عَنْهُمْ كَيْدُهُمْ شَيْـًٔا وَّلَا هُمْ يُنْصَرُوْنَ ﴿۴۶﴾ۭ وَاِنَّ
لِلَّذِيْنَ ظَلَمُوْا عَذَابًا دُوْنَ ذٰلِكَ وَلٰكِنَّ اَكْثَرَهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿۴۷﴾
وَاصْبِرْ لِحُكْمِ رَبِّكَ فَاِنَّكَ بِاَعْيُنِنَا وَسَبِّحْ بِحَمْدِ
رَبِّكَ حِيْنَ تَقُوْمُ ﴿۴۸﴾ۙ وَمِنَ الَّيْلِ فَسَبِّحْهُ وَاِدْبَارَ النُّجُوْمِ ﴿۴۹﴾ع ۲ ۱۸ ۴

32. "அல்லது (நபியே! உம்மை பற்றி கவிஞர், பைத்தியக்காரர், குறிகாரர் என்றெல்லாம் கூறுமாறு) அவர்களுடைய அறிவுகள்தான் இவ்வாறுஅவர்களை ஏவுகின்றனவா? அல்லது அவர்கள் வரம்புமீறிய கூட்டத்தினரா?"

33. அல்லது, "அவர் அதனைக் கற்பனை செய்து கொண்டார்" என்று அவர்கள் கூறுகின்றனரா? இல்லை! அவர்கள் விசுவாசங் கொள்ள மாட்டார்கள்.

34. எனவே, (நபியே! இவ்வாறு கூறுவதில்)அவர்கள் உண்மையாளர்களாக இருந்தால், இதைப் போன்ற செய்தியை அவர்கள் கொண்டு வரட்டும்.

35. அல்லது, அவர்கள் எப்பொருளுமின்றி(தாமாகவே)படைக்கப்பட்டுவிட்டனரா? அல்லது அவர்கள்தான் படைக்கின்றவர்களா?

36 அல்லது, வானங்களையும், பூமியையும் அவர்கள் படைத்தார்களா? அல்ல! (இவைகளையெல்லாம் படைத்தவன் அல்லாஹ்தான்! அவனை) இவர்கள் உறுதி கொள்ள மாட்டார்கள்.

37. அல்லது, அவர்களிடம் உமதிரட்சகனின் களஞ்சியங்கள் இருக்கின்றனவா? அல்லது இவர்களே (அவற்றை) ஆதிக்கம் செலுத்துபவர்களா?

38. அல்லது, இவர்களுக்கு (வானத்தில் ஏறிச்செல்ல)ஏணிஇருந்து, அதில் (ஏறி அங்கு பேசப்படுபவற்றைச்) செவிமடுக்கிறார்களா? அவ்வாறாயின், அவர்களில் கேட்டு வந்தவர் தெளிவான ஒரு சான்றைக் கொண்டு வரட்டும்.

39. அல்லது, (உங்கள் கற்பனைகளில் உள்ளவாறு அல்லாஹ்வாகிய) அவனுக்குப் பெண் மக்களும், உங்களுக்கு (மட்டும்) ஆண் மக்களுமா?

40. அல்லது, அவர்களிடம் நீர் ஏதேனும்கூலி கேட்கிறீரா? எனவே அவர்கள் கடனால் பளுவாக்கப்பட்டவர்களா?

41. அல்லது, அவர்களிடம் (அல்லாஹ்வைப் போல்) மறைவானது(அதுபற்றிய அறிவு) இருக்கிறதா?எனவே அவர்கள் (அதனை) எழுதுகிறார்களா?

42. அல்லது ஏதேனுமொரு சூழ்ச்சி செய்ய அவர்கள் நாடுகிறார்களா? அவ்வாறாயின், நிராகரித்தார்களே அவர்கள்தாம் சூழ்ச்சிக்குள்ளாக்கப்படுபவர்கள்.

43. அல்லது, அவர்களுக்கு அல்லாஹ் அல்லாத (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இருக்கின்றானா? அவர்கள் இணைவைப்பதை விட்டும் அல்லாஹ் மிகத் தூயவன்.

44. மேலும், வானத்திலிருந்து (இடிந்து) துண்டுகள் விழுவதை அவர்கள் (கண்ணால்) காண்பார்களானால், (அது வானமல்ல;)"அது அடர்த்தியான மேகம்தான்" என்று கூறுவார்கள்.

45. ஆகவே, (நபியே!)எதில் அவர்கள் அழிக்கப் படுவார்களோ, அத்தகைய அவர்களுடைய நாளை அவர்கள் சந்திக்கும் வரையில் நீர் அவர்களை விட்டுவிடுவீராக!

46. அந்நாளில், அவர்களுடைய சூழ்ச்சிகள் எதுவும் அவர்களுக்குப் பயனளிக்காது; (எவராலும்) அவர்கள் உதவியும் செய்யப்படமாட்டார்கள்.

47. அன்றியும், நிச்சயமாக அநியாயம் செய்துகொண்டிருந்தோர்க்கு (மறுமையின் வேதனையாகிய) அதுமட்டுமன்றி (இம்மையில்) மற்றொரு வேதனையுமிருக்கின்றது; எனினும், அவர்களில் பெரும்பாலோர்(இதனை) அறிந்துகொள்ளமாட்டார்கள்.

48. மேலும், ( நபியே!) உமதிரட்சகனின் தீர்ப்பை (எதிர்பார்த்துப்) பொறுத்திருப்பீராக! நிச்சயமாக நீர் நம் கண்களுக்கு முன்பாகவே இருக்கின்றீர்; (ஆகவே, அவர்கள் உமக்கு எவ்வித இடையூறும் செய்து விட முடியாது.) மேலும் (நீர் நித்திரையிலிருந்து) எழுந்தநேரத்தில் உமதிரட்சகனின் புகழைக்கொண்டு துதி செய்து கொண்டிருப்பீராக!

49. இரவின் ஒரு பாகத்திலும், நட்சத்திரங்கள் மறையும் (காலை)நேரத்திலும் அவனைத் துதி செய்து கொண்டிருப்பீராக!

سُوْرَۃُ النَّجْمِ مَکِّیَّۃٌ وَّهِیَ اِثْنَتَانِ وَسِتُّوْنَ اٰیَۃً وَّثَلٰثُ رُکُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ○

وَالنَّجْمِ اِذَا هَوٰی ۱ مَا ضَلَّ صَاحِبُکُمْ وَمَا غَوٰی ۲ وَمَا یَنْطِقُ عَنِ
الْهَوٰی ۳ اِنْ هُوَ اِلَّا وَحْیٌ یُّوْحٰی ۴ عَلَّمَهٗ شَدِیْدُ الْقُوٰی ۵ ذُوْ
مِرَّۃٍ فَاسْتَوٰی ۶ وَهُوَ بِالْاُفُقِ الْاَعْلٰی ۷ ثُمَّ دَنَا فَتَدَلّٰی ۸
فَکَانَ قَابَ قَوْسَیْنِ اَوْ اَدْنٰی ۹ فَاَوْحٰی اِلٰی عَبْدِهٖ مَا اَوْحٰی ۱۰ مَا
کَذَبَ الْفُؤَادُ مَا رَاٰی ۱۱ اَفَتُمٰرُوْنَهٗ عَلٰی مَا یَرٰی ۱۲ وَلَقَدْ رَاٰهُ
نَزْلَۃً اُخْرٰی ۱۳ عِنْدَ سِدْرَۃِ الْمُنْتَهٰی ۱۴ عِنْدَهَا جَنَّۃُ الْمَاْوٰی ۱۵
اِذْ یَغْشَی السِّدْرَۃَ مَا یَغْشٰی ۱۶ مَا زَاغَ الْبَصَرُ وَمَا طَغٰی ۱۷
لَقَدْ رَاٰی مِنْ اٰیٰتِ رَبِّهِ الْکُبْرٰی ۱۸ اَفَرَءَیْتُمُ اللّٰتَ وَالْعُزّٰی ۱۹
وَمَنٰوۃَ الثَّالِثَۃَ الْاُخْرٰی ۲۰ اَلَکُمُ الذَّکَرُ وَلَهُ الْاُنْثٰی ۲۱
تِلْکَ اِذًا قِسْمَۃٌ ضِیْزٰی ۲۲ اِنْ هِیَ اِلَّا اَسْمَآءٌ سَمَّیْتُمُوْهَآ اَنْتُمْ
وَاٰبَآؤُکُمْ مَّآ اَنْزَلَ اللّٰهُ بِهَا مِنْ سُلْطٰنٍ اِنْ یَّتَّبِعُوْنَ
اِلَّا الظَّنَّ وَمَا تَهْوَی الْاَنْفُسُ وَلَقَدْ جَآءَهُمْ مِّنْ رَّبِّهِمُ
الْهُدٰی ۲۳ اَمْ لِلْاِنْسَانِ مَا تَمَنّٰی ۲۴ فَلِلّٰهِ الْاٰخِرَۃُ وَالْاُوْلٰی ۲۵ ع ۵ ۵

அத்தியாயம் : 53

## அந்நஜ்மு _ நட்சத்திரம்

வசனங்கள் : 62 மக்கீ ருகூஃகள் : 3

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. நட்சத்திரத்தின் மீது சத்தியமாக; அது விழுந்து (மறைந்து) விடும் சமயத்தில்_

2. (நம்முடைய தூதராகிய) உங்களின் தோழர் வழி தவறிவிடவுமில்லை; அவர் தவறான வழியில் செல்லவுமில்லை.

3. அவர் தன் மனஇச்சையின்படி (எதையும்)பேசுவதுமில்லை.

4. இது அறிவிக்கப்படும் (வஹீயாகிய)அறிவிப்பே தவிர (வேறு)இல்லை.

5. (ஜிப்ரீல் என்னும்) மிகக்கடின பலமுடையவர் இதனை அவருக்குக் கற்றுக் கொடுத்தார்.

6. அவர் அழகான தோற்றமுடையவர்;பின்னர் (தன் இயற்கை உருவத்தில் நமது நபியின் முன் மிஃராஜ் பயணத்தின்போது) உயர்ந்து சரியாக நின்றார்.

7. அப்போது (ஜிப்ரீலாகிய)அவர் மிக உயர்ந்த(கீழ் வானத்தின்) கடைக் கோடியிலிருக்க,

8. அதன் பின்னர் அவர் (நம் தூதர்பால்) நெருங்கி, அப்பால் அருகே வந்தார்.

9. அ(ந்நெருக்கத்தின் அளவான)து (வளைந்த) வில்லின் இரு முனைகளைப்போல் அல்லது அதைவிடச் சமீபமாக இருந்தது.

10. பிறகு (அல்லாஹ்வாகிய) அவன், அவருக்கு அறிவித்ததை யெல்லாம் அவர், அவனுடைய அடியாருக்கு அறிவித்தார்.

11. (நபியுடைய)இதயம், தான் கண்டதை பற்றிப் பொய்யுரைக்கவில்லை.

12. ( அல்லாஹ் அந்த இரவில் தன் அடியாருக்குக் காண்பித்து) அவர் கண்டது பற்றி, நீங்கள் (சந்தேகித்து) அவருடன் தர்க்கம் செய்கின்றீர்களா?

13. அன்றியும், நிச்சயமாக அவர் மற்றொரு முறை (ஜிப்ரீலை அவரது சுயஉருவில் ) இறங்கக் கண்டிருக்கிறார்.

14. ஸித்ரத்துல் முன்தஹா என்னும் (இலந்தை மரத்தின் )இடத்தில் (இக்காட்சி நிகழ்ந்தது).

15. அவ்விடத்தில் தான் (நல்லடியார்கள்)தங்கும் சொர்க்கம் இருக்கின்றது.

16. இலந்தைமரத்தை மூடிக்கொள்ளும் ஒன்று மூடிக் கொண்ட போது _

17. (அதிலிருந்து அவருடைய) பார்வை சறுகிவிடவில்லை; (எல்லையைக்) கடந்துவிடவுமில்லை.

18. நிச்சயமாக, அவர்தன் இரட்சகனின் அத்தாட்சிகளில்மிகப் பெரியதைக் கண்டார்.

19. நீங்கள்(வணங்கும்)லாத்தையும், உஜ்ஜாவையும் கண்டீர்களா?

20. மற்றொன்றாகிய_ மூன்றாவதான மனாத் (என்னும் பெண் விக்ரகத்)தையும் (நீங்கள் கண்டீர்களா?)

21. உங்களுக்கு ஆண்(மக்)கள், இன்னும், அவனுக்குப் பெண்(மக்)களா?

22. அவ்வாறாயின்,அது மிக்க அநியாயமான பங்கீடாகும்.

23. இவையெல்லாம் நீங்களும்,உங்கள் மூதாதையரும் வைத்துக்கொண்ட (வெறும்) பெயர்களே தவிர இல்லை; அ(வை தெய்வங்களென்ப)தற்காக அல்லாஹ் (உங்களுக்கு) யாதொரு சான்றையும்(முந்திய எந்த வேதத்திலும்) இறக்கி வைக்கவில்லை; அவர்கள் வீண் எண்ணத்தையும், மனங்கள் விரும்புவனவற்றையும் தவிர (வேறு எதையும்) பின்பற்றவில்லை; நிச்சயமாக அவர்கள் இரட்சகனிடமிருந்து அவர்களுக்கு நேர் வழி வந்து விட்டது; (ஆனால், அதனை அவர்கள் பின்பற்றுவதில்லை.)

24. அல்லது, மனிதனுக்கு அவன் விரும்பியது உண்டா? (அவனுக்குக் கிடைத்து விடுமா? இல்லை!)

25. ஆகவே, மறுமையும், இம்மையும் அல்லாஹ்விற்கே உரியதாகும்.

وَكَمْ مِّنْ مَّلَكٍ فِي السَّمٰوٰتِ لَا تُغْنِيْ شَفَاعَتُهُمْ شَيْـًٔا اِلَّا مِنْۢ
بَعْدِ اَنْ يَّاْذَنَ اللّٰهُ لِمَنْ يَّشَآءُ وَيَرْضٰى ﴿۲۶﴾ اِنَّ الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ
بِالْاٰخِرَةِ لَيُسَمُّوْنَ الْمَلٰٓئِكَةَ تَسْمِيَةَ الْاُنْثٰى ﴿۲۷﴾ وَمَا لَهُمْ بِهٖ مِنْ
عِلْمٍ ؕ اِنْ يَّتَّبِعُوْنَ اِلَّا الظَّنَّ ۚ وَاِنَّ الظَّنَّ لَا يُغْنِيْ مِنَ الْحَقِّ
شَيْـًٔا ۚ ﴿۲۸﴾ فَاَعْرِضْ عَنْ مَّنْ تَوَلّٰى ۙ عَنْ ذِكْرِنَا وَلَمْ يُرِدْ اِلَّا الْحَيٰوةَ
الدُّنْيَا ﴿۲۹﴾ ؕ ذٰلِكَ مَبْلَغُهُمْ مِّنَ الْعِلْمِ ؕ اِنَّ رَبَّكَ هُوَ اَعْلَمُ بِمَنْ
ضَلَّ عَنْ سَبِيْلِهٖ وَهُوَ اَعْلَمُ بِمَنِ اهْتَدٰى ﴿۳۰﴾ وَلِلّٰهِ مَا فِي
السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ۙ لِيَجْزِيَ الَّذِيْنَ اَسَآءُوْا بِمَا عَمِلُوْا
وَيَجْزِيَ الَّذِيْنَ اَحْسَنُوْا بِالْحُسْنٰى ﴿۳۱﴾ ۚ اَلَّذِيْنَ يَجْتَنِبُوْنَ كَبٰٓئِرَ الْاِثْمِ
وَالْفَوَاحِشَ اِلَّا اللَّمَمَ ؕ اِنَّ رَبَّكَ وَاسِعُ الْمَغْفِرَةِ ؕ هُوَ اَعْلَمُ بِكُمْ اِذْ
اَنْشَاَكُمْ مِّنَ الْاَرْضِ وَاِذْ اَنْتُمْ اَجِنَّةٌ فِيْ بُطُوْنِ اُمَّهٰتِكُمْ ۚ فَلَا تُزَكُّوْٓا
اَنْفُسَكُمْ ؕ هُوَ اَعْلَمُ بِمَنِ اتَّقٰى ﴿۳۲﴾ ع اَفَرَءَيْتَ الَّذِيْ تَوَلّٰى ﴿۳۳﴾ ۙ وَاَعْطٰى
قَلِيْلًا وَّاَكْدٰى ﴿۳۴﴾ اَعِنْدَهٗ عِلْمُ الْغَيْبِ فَهُوَ يَرٰى ﴿۳۵﴾ اَمْ لَمْ يُنَبَّاْ
بِمَا فِيْ صُحُفِ مُوْسٰى ﴿۳۶﴾ ۙ وَاِبْرٰهِيْمَ الَّذِيْ وَفّٰٓى ﴿۳۷﴾ ۙ اَلَّا تَزِرُ
وَازِرَةٌ وِّزْرَ اُخْرٰى ﴿۳۸﴾ ۙ وَاَنْ لَّيْسَ لِلْاِنْسَانِ اِلَّا مَا سَعٰى ﴿۳۹﴾ ۙ

26. அன்றியும், வானங்களில் எத்தனையோ மலக்குகள் இருக்கின்றனர்; அல்லாஹ், தான் நாடியோருக்கு அனுமதியளித்து, அவன் திருப்தியும் கொண்ட பின்னரே தவிர அவர்களின் பரிந்துரை (எவருக்காகவும்) யாதொரு பயனுமளிக்காது.

27. நிச்சயமாக மறுமையைப்பற்றி நம்பவில்லையே அத்தகையோர்_ அவர்கள் மலக்குகளுக்குப் பெண்களின் பெயர்களைச் சூட்டுகின்றனர்.

28. இதைப்பற்றி அவர்களுக்கு எவ்வித அறிவுமில்லை; (வீண்) எண்ணத்தைத் தவிர,(வேறு எதையும்) அவர்கள்பின்பற்றுவதில்லை; நிச்சயமாக வீண் எண்ணம் உண்மையிலிருந்து(அதற்கு எதிராக) யாதொரு பலனையும் அளிக்காது.

29. (நபியே!) எவன் நம்மை நினைவு கூர்வதைவிட்டும் முகம்திருப்பிக் கொண்டானோ, அவனை நீர் புறக்கணித்துவிடும்; இவ்வுலக வாழ்க்கையைத் தவிர வேறு எதையும் அவன் நாடவில்லை.

30. அதுதான் கல்வியறிவில் அவர்களின் எல்லையாகும். (இதற்கப்பால்) நிச்சயமாக உமதிரட்சகன், தன்னுடைய வழியிலிருந்து தவறியவர் யாரென்பதையும் மிகஅறிந்தவன்; அவனே நேர்வழி செல்பவனையும் மிகஅறிந்தவன்.

31. மேலும், வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்விற்கே உரியன; ஆகவே, தீமை செய்தோருக்கு அவர்களுடைய (தீ) வினைக்குத்தக்கவாறு (தீமையைக்) கூலியாகக் கொடுப்பதற்காகவும், நன்மை செய்தோருக்கு நன்மையைக் கூலியாகக் கொடுப்பதற்காகவும் (மறுமையை பிற்படுத்தி வைத்திருக்கின்றான்).

32. அவர்கள் எத்தகையோரென்றால், (தவிர்க்கமுடியாத) சிறு பாவங்கள் தவிர, மற்ற பெரும் பாவங்களையும், மானக்கேடான விஷயங்களையும் தவிர்த்துக் கொள்கிறார்கள்; நிச்சயமாக உமதிரட்சகன் மன்னிப்பதில் மிக்க தாராளமானவன்; உங்களை பூமியிலிருந்து உற்பத்திச் செய்த சமயத்திலும், இன்னும் நீங்கள் உங்கள் தாய்மார்களின் வயிறுகளில் சிசுக்களாக இருந்த சமயத்திலும், உங்களைப்பற்றி அவன் மிக அறிந்தவன்; ஆகவே நீங்களே உங்களை (தூய்மையானவர்களென எண்ணிக்கொண்டு) பரிசுத்தப்படுத்திக் கொள்ளவேண்டாம்; (உங்களில்) பயபக்தியுடையவர் யார் என்பதை அவனே நன்கறிவான்.

33. (நபியே! சத்தியத்தைப் பின்பற்றுவதை விட்டும்) புறக்கணித்தானே அத்தகையவனை நீர் பார்த்தீரா?

34. அவன்(வாக்களித்ததில்) குறைவாகக்கொடுத்தான்; பிறகு (பெரும் பகுதியை) தடுத்துக் கொண்டான்.

35. (வாக்குறுதிக்கு மாறாக நடக்கும்) அவனிடம் மறைவானது பற்றிய அறிவு இருந்து அப்பால்(அதன் மூலம் மறைவானதை)அவன் பார்க்கிறானா?

36. அல்லது மூஸாவின் ஆகமங்களில் இருப்பதைக்கொண்டு அவன் அறிவிக்கப் படவில்லையா?

37. (அல்லது அல்லாஹ்வுடைய கட்டளைகளைப்) பூரணமாக நிறைவேற்றிய இப்றாஹீமை (அவருடைய ஆகமங்களில் இருப்பதை)க்கொண்டும் (அவனுக்கு அறிவிக்கப் படவில்லையா?).

38. (அதாவது, குற்றம் செய்ததற்காக பாவச்சுமையை) சுமக்கக்கூடியது எதுவும் மற்றொரு(ஆத்மாவின் பாவச்)சுமையைச் சுமக்காது.

39. இன்னும், மனிதனுக்கு அவன் முயற்சித்தது (சம்பாதித்தது) தவிர வேறில்லை.

وَاَنَّ سَعْيَهٗ سَوْفَ يُرٰى ﴿۴۰﴾ ثُمَّ يُجْزٰىهُ الْجَزَآءَ الْاَوْفٰى ﴿۴۱﴾ وَاَنَّ اِلٰى
رَبِّكَ الْمُنْتَهٰى ﴿۴۲﴾ وَاَنَّهٗ هُوَ اَضْحَكَ وَاَبْكٰى ﴿۴۳﴾ وَاَنَّهٗ هُوَ اَمَاتَ وَ
اَحْيَا ﴿۴۴﴾ وَاَنَّهٗ خَلَقَ الزَّوْجَيْنِ الذَّكَرَ وَالْاُنْثٰى ﴿۴۵﴾ مِنْ نُّطْفَةٍ
اِذَا تُمْنٰى ﴿۴۶﴾ وَاَنَّ عَلَيْهِ النَّشْاَةَ الْاُخْرٰى ﴿۴۷﴾ وَاَنَّهٗ هُوَ اَغْنٰى وَ
اَقْنٰى ﴿۴۸﴾ وَاَنَّهٗ هُوَ رَبُّ الشِّعْرٰى ﴿۴۹﴾ وَاَنَّهٗۤ اَهْلَكَ عَادَا ۨ الْاُوْلٰى ﴿۵۰﴾
وَثَمُوْدَاۡ فَمَاۤ اَبْقٰى ﴿۵۱﴾ وَقَوْمَ نُوْحٍ مِّنْ قَبْلُ ؕ اِنَّهُمْ كَانُوْا هُمْ اَظْلَمَ
وَاَطْغٰى ﴿۵۲﴾ وَالْمُؤْتَفِكَةَ اَهْوٰى ﴿۵۳﴾ فَغَشّٰىهَا مَا غَشّٰى ﴿۵۴﴾ فَبِاَيِّ اٰلَآءِ
رَبِّكَ تَتَمَارٰى ﴿۵۵﴾ هٰذَا نَذِيْرٌ مِّنَ النُّذُرِ الْاُوْلٰى ﴿۵۶﴾ اَزِفَتِ
الْاٰزِفَةُ ﴿۵۷﴾ لَيْسَ لَهَا مِنْ دُوْنِ اللّٰهِ كَاشِفَةٌ ﴿۵۸﴾ اَفَمِنْ هٰذَا
الْحَدِيْثِ تَعْجَبُوْنَ ﴿۵۹﴾ وَتَضْحَكُوْنَ وَلَا تَبْكُوْنَ ﴿۶۰﴾ وَاَنْتُمْ
سٰمِدُوْنَ ﴿۶۱﴾ فَاسْجُدُوْا لِلّٰهِ وَاعْبُدُوْا ﴿۶۲﴾ السجدة
۳ ع ۳ ۷ السجدة ۱۴

سُوْرَةُ الْقَمَرِ مَكِّيَّةٌ وَهِيَ خَمْسٌ وَّخَمْسُوْنَ اٰيَةً وَّثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اِقْتَرَبَتِ السَّاعَةُ وَانْشَقَّ الْقَمَرُ ﴿۱﴾ وَاِنْ يَّرَوْا اٰيَةً يُّعْرِضُوْا وَيَقُوْلُوْا
سِحْرٌ مُّسْتَمِرٌّ ﴿۲﴾ وَكَذَّبُوْا وَاتَّبَعُوْۤا اَهْوَآءَهُمْ وَكُلُّ اَمْرٍ مُّسْتَقِرٌّ ﴿۳﴾

40. இன்னும், நிச்சயமாக அவனுடைய முயற்சி(யின் பலன் அவனுக்கு மறுமையில்) காண்பிக்கப்படும்.

41. பின்னர், மிக நிறைவான கூலியாக அவன் கூலி கொடுக்கப்படுவான்.

42. (நபியே!) இறுதியாக மீள்வதும் நிச்சயமாக உமதிரட்சகனின்பக்கம்தான்.

43. நிச்சயமாக அவனே சிரிக்கவைக்கிறான்; அழவும் வைக்கிறான்.

44. நிச்சயமாக அவன் தான் (உங்களை) மரணிக்கச் செய்கிறான். இன்னும், அவன் உயிர்ப்பிக்கின்றான்.

45. நிச்சயமாக அவன் தான் (உங்களை) ஆண், பெண் ஜோடிகளாக படைக்கின்றான்.

46. (ஒரு துளி) இந்திரியத்திலிருந்து அது (கர்ப்பத்தில்) ஊற்றப்படும்போது (உங்களை படைக்கின்றான்).

47. நிச்சயமாக (மரணித்தபின்னர்) மறுமுறை உயிர் கொடுத்து எழுப்புவதும், அவன் மீதே (பொறுப்பாக)இருக்கிறது.

48. நிச்சயமாக அவன்தான் சீமானாக்குகிறான்; இன்னும் (அவன் கொடுத்ததைக் கொண்டு) பொருந்திக்கொள்ளச்செய்கிறான்.

49. அன்றியும், நிச்சயமாக(மகத்தான நட்சத்திரமான)ஷிஃரா உடைய இரட்சகனும் அவன் தான்.

50. நிச்சயமாக முந்தைய ஆ(து கூட்டத்)தை அழித்தவனும்அவன்தான்.

51. இன்னும், ஸமூதையும் (அழித்தான்; அவர்களில் ஒருவரையும்) அவன் விட்டு வைக்கவில்லை.

52. (இவர்களுக்கு) முன்னர் நூஹ்வுடைய சமூகத்தாரையும், (அழித்தவன் அவன்தான்.) நிச்சயமாக, அவர்கள் தாம் பெரும் அநியாயக்காரர்களாக, மற்றும் மிகுந்த வரம்பு மீறியவர்களாக இருந்தார்கள்.

53. தலைகீழாக புரட்டப்பட்ட (லூத்தின் சமூகத்தார் வாழ்ந்த இடத்)தையும் அவன்(மேலாகத் தூக்கிக்)கீழே வீழ்த்தினான்.

54. (அவர்கள் அழிவுற்ற நேரத்தில்) அதனைச் சூழ்ந்துகொள்ள வேண்டிய (வேதனையான)து (முற்றிலும்) சூழ்ந்துகொண்டது.

55. (ஆகவே, மறுமையை நிராகரிக்கும் மனிதனே!) நீ உன் இரட்சகனின் அருட்கொடைகளில் எதனைத்தான் ஐயம் கொள்வாய்?

56. இவர் முந்தைய எச்சரிக்கையாளர்களி(ன் இனத்தி)லுள்ள ஓர் எச்சரிக்கையாளரே.

57. நெருங்கக்கூடியது (யுக முடிவு காலம்) நெருங்கிவிட்டது.

58. அல்லாஹ்வைத் தவிர அதனை வெளிப்படுத்தக்கூடியது எதுவும் இல்லை.

59. இச்செய்தியிலிருந்துநீங்கள் ஆச்சரியப்படுகின்றீர்களா?

60. (இதனைப் பொருட்படுத்தாது) நீங்கள் சிரிக்கவும் செய்கின்றீர்கள்! நீங்கள் அழாமலுமிருக்கின்றீர்கள்!

61. (இதனைப்பற்றி) நீங்கள் அலட்சியமுடையோராகவும் இருக்கின்றீர்கள்.

62. ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குச் சிரம்பணியுங்கள்; மேலும் (அவனையே) வணங்குங்கள்.

---

அத்தியாயம் : 54

## அல் கமர் _ சந்திரன்

வசனங்கள் : 55 மக்கீ ருகூஉகள் : 3

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. மறுமைநாள் நெருங்கிவிட்டது; (அதுபற்றித் தெரிவிக்க) சந்திரனும் பிளந்து விட்டது.

2. அவர்கள் எந்த அத்தாட்சியைக் கண்டபோதிலும், (அதனை) அவர்கள் புறக்கணித்துவிட்டு, இது (நாள்தோறும்) தொடர்ந்துவரும் சூனியம் என்றும் கூறுகின்றனர்.

3. அன்றியும், அதனை அவர்கள் பொய்யாக்கிவிட்டனர்; தங்களின் மனோ ஆசைகளையே பின்பற்றுகின்றனர்; (அவர்கள் எவ்வாறு நடந்துகொண்ட போதிலும், வரவேண்டிய) ஒவ்வொரு காரியமும் (அதனதன் நேரத்தில்) நிலைபெறக் கூடியதாகும்.

وَلَقَدْ جَآءَهُم مِّنَ الْأَنۢبَآءِ مَا فِيهِ مُزْدَجَرٌ ﴿۴﴾ حِكْمَةٌۢ بَالِغَةٌ فَمَا
تُغْنِ النُّذُرُ ﴿۵﴾ فَتَوَلَّ عَنْهُمْ يَوْمَ يَدْعُ الدَّاعِ إِلَىٰ شَيْءٍ نُّكُرٍ ﴿۶﴾ وقف لازم
خُشَّعًا أَبْصَارُهُمْ يَخْرُجُونَ مِنَ الْأَجْدَاثِ كَأَنَّهُمْ جَرَادٌ مُّنتَشِرٌ ﴿۷﴾
مُّهْطِعِينَ إِلَى الدَّاعِ يَقُولُ الْكَافِرُونَ هَٰذَا يَوْمٌ عَسِرٌ ﴿۸﴾ كَذَّبَتْ
قَبْلَهُمْ قَوْمُ نُوحٍ فَكَذَّبُوا عَبْدَنَا وَقَالُوا مَجْنُونٌ وَازْدُجِرَ ﴿۹﴾
فَدَعَا رَبَّهُ أَنِّي مَغْلُوبٌ فَانتَصِرْ ﴿۱۰﴾ فَفَتَحْنَا أَبْوَابَ السَّمَآءِ بِمَآءٍ
مُّنْهَمِرٍ ﴿۱۱﴾ وَفَجَّرْنَا الْأَرْضَ عُيُونًا فَالْتَقَى الْمَآءُ عَلَىٰ أَمْرٍ قَدْ قُدِرَ ﴿۱۲﴾
وَحَمَلْنَاهُ عَلَىٰ ذَاتِ أَلْوَاحٍ وَدُسُرٍ ﴿۱۳﴾ تَجْرِي بِأَعْيُنِنَا جَزَآءً لِّمَن كَانَ
كُفِرَ ﴿۱۴﴾ وَلَقَد تَّرَكْنَاهَا آيَةً فَهَلْ مِن مُّدَّكِرٍ ﴿۱۵﴾ فَكَيْفَ كَانَ عَذَابِي
وَنُذُرِ ﴿۱۶﴾ وَلَقَدْ يَسَّرْنَا الْقُرْآنَ لِلذِّكْرِ فَهَلْ مِن مُّدَّكِرٍ ﴿۱۷﴾ كَذَّبَتْ
عَادٌ فَكَيْفَ كَانَ عَذَابِي وَنُذُرِ ﴿۱۸﴾ إِنَّا أَرْسَلْنَا عَلَيْهِمْ رِيحًا صَرْصَرًا
فِي يَوْمِ نَحْسٍ مُّسْتَمِرٍّ ﴿۱۹﴾ تَنزِعُ النَّاسَ كَأَنَّهُمْ أَعْجَازُ نَخْلٍ
مُّنقَعِرٍ ﴿۲۰﴾ فَكَيْفَ كَانَ عَذَابِي وَنُذُرِ ﴿۲۱﴾ وَلَقَدْ يَسَّرْنَا
الْقُرْآنَ لِلذِّكْرِ فَهَلْ مِن مُّدَّكِرٍ ﴿۲۲﴾ كَذَّبَتْ ثَمُودُ بِالنُّذُرِ ﴿۲۳﴾ ع ۱ ۲۲ ۸
فَقَالُوا أَبَشَرًا مِّنَّا وَاحِدًا نَّتَّبِعُهُ إِنَّا إِذًا لَّفِي ضَلَالٍ وَسُعُرٍ ﴿۲۴﴾

4. இன்னும், எதில்(அவர்களுக்கு)அச்சுறுத்தல் உண்டோ அத்தகைய செய்திகள், (இதற்கு முன்னரும்) திட்டமாக அவர்களுக்கு வந்திருக்கின்றன.

5. (இவ்வேதமானது பூரணமான) உச்சத்தை அடைந்துவிட்ட அறிவுகளுடையவை; ஆனால், எச்சரிக்கைகள் (இவர்களுக்கு) யாதொரு பயனுமளிக்கவில்லை.

6. ஆகவே, (நபியே!)நீர் அவர்களைப் புறக்கணித்துவிடுவீராக! (இன்னும் இவர்கள்) வெறுக்கும் (அந்தக்கேள்விகணக்கு)விஷயத்திற்காக(இஸ்ராஃபீல் என்னும்) அழைப்பவர் அழைக்கும் நாளில்_

7. அவர்களின் பார்வைகள் கீழ் நோக்கிய நிலையில், பரவிக்கிடக்கும் வெட்டுக் கிளிகளைப் போல் அவர்கள் புதைகுழிகளிலிருந்து வெளியேறுவர்.

8. அழைப்பவர் பால் விரைந்தவர்களாக; (வெளியேறுவர்) "இது மிகக் கஷ்டமான நாள்" என்று நிராகரித்துக்கொண்டிருப்போர் (அச்சமயம்) கூறுவார்கள்.

9. (இவ்வாறே) இவர்களுக்கு முன்னர் நூஹ்வுடையசமூகத்தார் (அந்நாளைப்) பொய்யாக்கிக் கொண்டிருந்தார்கள். ஆகவே, அவர்கள் நம்முடைய அடியாரைப் பொய்யாக்கிப் பைத்தியக்காரரென்றும் அவர்கள் கூறினர். இன்னும், (அவர்களால் தன் தூதை எத்தி வைக்கமுடியாதவாறு) அவர் விரட்டப்பட்டார்.

10. ஆகவே, அவர் நிச்சயமாக நான் (இவர்களால்) மிகைக்கப்பட்டு விட்டவன். ஆகவே,நீ எனக்கு உதவி செய்(து அவர்களுக்கு தண்டனை வழங்கு)வாயாக! என தம் இரட்சகனிடம் அவர் பிரார்த்தனை செய்தார்.

11. ஆதலால், கடுமையாகக் கொட்டும் நீரைக் கொண்டு, வானத்தின் வாயில்களை நாம் திறந்து விட்டோம்.

12. அன்றியும், பூமியை ஊற்றுக் கண்களாக(ப் பீறிட்டு)ப் பாய்ந்தோடச் செய்தோம். ஆகவே,(ஆதியில்) நிர்ணயிக்கப்பட்ட காரியத்தின் மீது (வானம், பூமி ஆகிய வற்றின்)நீரும் இணைந்தது.

13. நாம் அவரை(யும், அவருடனிருந்தவர்களையும்) பலகைகளும், ஆணிகளும் உடைய(மரக்கலத்)தின்மீது ஏற்றி(க்காப்பாற்றி)னோம்.

14. அது நம் கண்களுக்கு முன்பாகவே(பெரு வெள்ளத்தில் மிதந்து)சென்றது; (இவர்களால்) நிராகரிக்கப்பட்டுக்கொண்டிருந்தவருக்கு(நூஹ்நபிக்குக்கொடுக்கப்படும் நற்)கூலியாக(இவ்வாறு அவர்களை நாம் தண்டித்தோம்).

15. மேலும், நிச்சயமாக நாம் இதனை(பின்னுள்ளவர்களுக்கு)ஓர் அத்தாட்சியாக விட்டுவைத்தோம்; (இதனைக் கொண்டு) படிப்பினை பெறக்கூடியவர் உண்டா?

16. என்னுடைய வேதனையும், (என்னுடைய) எச்சரிக்கையும் எவ்வாறிருந்தன? (என்பதை கவனிப்பார்களா?)

17. திட்டமாக நாம் குர்ஆனை உப்தேசம் பெறுவதற்காக எளிதாக்கி இருக்கின்றோம்; ஆகவே, (இதனைக் கொண்டு) படிப்பினை பெறக்கூடியவர் உண்டா?

18. ஆது (சமூகத்தாரும் நம் தூதரைப்)பொய்யாக்கிக் கொண்டிருந்தனர். பின்னர் (அவர்களுக்கு என் கட்டளையின்படி ஏற்பட்ட) என்னுடைய வேதனையும், (என்னுடைய) எச்சரிக்கையும் எவ்வாறிருந்தன (என்பதைக் கவனிப்பார்களா)?

19. நிச்சயமாக நாம் அவர்கள் மீது, (என்றும்) நிலையான துர்ப்பாக்கியமுடைய ஒரு நாளில், மிகக்கடும் சப்தமு(ம் குளிரும் உ)டைய காற்றை அனுப்பி வைத்தோம்.

20. அது மனிதர்களை_ நிச்சயமாக அவர்கள் (பூமிக்குள்ளிருந்து வேரோடு) பிடுங்கப்பட்ட பேரீச்ச மரங்களின் அடிவேர்களைப் போல (ஆகும் நிலையில்) பிடுங்கி (எறிந்து) விட்டது.

21. என்னுடைய வேதனையும், எச்சரிக்கையும் எவ்வாறிருந்தன (என்பதை கவனிப்பார்களா)?

22. திட்டமாக, நாம் குர்ஆனை உபதேசம்பெறுவதற்காக எளிதாக்கி இருக்கின்றோம்; ஆகவே, (இதனைக் கொண்டு) படிப்பினை பெறக்கூடியவர் உண்டா?

23. (இவ்வாறே)ஸமூது (கூட்டத்தாரு)ம் எச்சரிக்கையாளர்களைப் பொய்யாக்கினர்.

24. பின்னர், "நம்மிலுள்ள ஒரு மனிதரை_ அவரையா நாம் பின் பற்றுவோம்? (அவ்வாறு பின்பற்றினால்) நிச்சயமாக, நாம் அப்பொழுது வழிகேட்டிலும், சிரமத்திலும் ஆகிவிடுவோம்" என்று கூறினார்கள்.

ءَاُلْقِيَ الذِّكْرُ عَلَيْهِ مِنْۢ بَيْنِنَا بَلْ هُوَ كَذَّابٌ اَشِرٌ ﴿۲۵﴾ سَيَعْلَمُوْنَ
غَدًا مَّنِ الْكَذَّابُ الْاَشِرُ ﴿۲۶﴾ اِنَّا مُرْسِلُوا النَّاقَةِ فِتْنَةً لَّهُمْ
فَارْتَقِبْهُمْ وَاصْطَبِرْ ﴿۲۷﴾ وَنَبِّئْهُمْ اَنَّ الْمَآءَ قِسْمَةٌۢ بَيْنَهُمْ ۚ
كُلُّ شِرْبٍ مُّحْتَضَرٌ ﴿۲۸﴾ فَنَادَوْا صَاحِبَهُمْ فَتَعَاطٰى فَعَقَرَ ﴿۲۹﴾
فَكَيْفَ كَانَ عَذَابِيْ وَنُذُرِ ﴿۳۰﴾ اِنَّآ اَرْسَلْنَا عَلَيْهِمْ صَيْحَةً
وَّاحِدَةً فَكَانُوْا كَهَشِيْمِ الْمُحْتَظِرِ ﴿۳۱﴾ وَلَقَدْ يَسَّرْنَا الْقُرْاٰنَ لِلذِّكْرِ
فَهَلْ مِنْ مُّدَّكِرٍ ﴿۳۲﴾ كَذَّبَتْ قَوْمُ لُوْطٍۢ بِالنُّذُرِ ﴿۳۳﴾ اِنَّآ اَرْسَلْنَا
عَلَيْهِمْ حَاصِبًا اِلَّآ اٰلَ لُوْطٍ ؕ نَجَّيْنٰهُمْ بِسَحَرٍ ﴿۳۴﴾ لا نِّعْمَةً مِّنْ عِنْدِنَا ؕ
كَذٰلِكَ نَجْزِيْ مَنْ شَكَرَ ﴿۳۵﴾ وَلَقَدْ اَنْذَرَهُمْ بَطْشَتَنَا فَتَمَارَوْا
بِالنُّذُرِ ﴿۳۶﴾ وَلَقَدْ رَاوَدُوْهُ عَنْ ضَيْفِهٖ فَطَمَسْنَآ اَعْيُنَهُمْ فَذُوْقُوْا
عَذَابِيْ وَنُذُرِ ﴿۳۷﴾ وَلَقَدْ صَبَّحَهُمْ بُكْرَةً عَذَابٌ مُّسْتَقِرٌّ ﴿۳۸﴾ ۚ فَذُوْقُوْا
عَذَابِيْ وَنُذُرِ ﴿۳۹﴾ وَلَقَدْ يَسَّرْنَا الْقُرْاٰنَ لِلذِّكْرِ فَهَلْ مِنْ
مُّدَّكِرٍ ﴿۴۰﴾ ع وَلَقَدْ جَآءَ اٰلَ فِرْعَوْنَ النُّذُرُ ﴿۴۱﴾ ۚ كَذَّبُوْا بِاٰيٰتِنَا كُلِّهَا ۲ ع ۱۸ ۹
فَاَخَذْنٰهُمْ اَخْذَ عَزِيْزٍ مُّقْتَدِرٍ ﴿۴۲﴾ اَكُفَّارُكُمْ خَيْرٌ مِّنْ اُولٰٓئِكُمْ
اَمْ لَكُمْ بَرَآءَةٌ فِي الزُّبُرِ ﴿۴۳﴾ ۚ اَمْ يَقُوْلُوْنَ نَحْنُ جَمِيْعٌ مُّنْتَصِرٌ ﴿۴۴﴾

25. "நமக்கிடையே இவர் மீதுதானா(திக்ரு எனும்) வேதம் இறக்கப்பட்டது? அன்று! அவர் இறுமாப்புக் கொண்ட பெரும் பொய்யர்" (என்று கூறினார்கள்).

26. "இறுமாப்புக் கொண்டவரான பெரும் பொய்யர் யார்" என்பதை, நிச்சயமாக நாளைய தினம் அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

27. (ஆகவே,)அவர்களைச் சோதிப்பதற்காக "ஒரு பெண் ஒட்டகத்தை நிச்சயமாக நாம் அனுப்பிவைப்போராக உள்ளோம்; ஆகவே (ஸாலிஹ் நபியே!) நீர் அவர்களைக் கண்காணித்துக்கொண்டு, பொறுமையுடனும் இருப்பீராக!

28. நிச்சயமாக, (கிணற்றின்)"தண்ணீர் அவர்களுக்கும் அந்த ஒட்டகத்திற்கும்) இடையில் பங்கிடப்பட்டுள்ளது; ஒவ்வொரு தண்ணீர் முறை பாகமும் (முறைப்படி அவரவர் நாளில் குடிப்பதற்கு)வரலாம் என்றும், அவர்களுக்கு அறிவித்து விடுவீராக!"(என்றும் நாம் கூறினோம்).

29. எனினும், அவர்கள் (ஒட்டகத்தை அறுத்து விட)தங்களுடைய தோழனை அழைத்தனர்; அவன் (வாளை எடுத்து, தன்கையால் ஒட்டகத்தைப்) பிடித்தான்; (அதன் கால் நரம்புகளைத் தறித்து) பின்னர் அறுத்துவிட்டான்.

30. ஆகவே, என்னுடைய வேதனையும், (என்னுடைய) எச்சரிக்கையும் எவ்வாறிருந்தன?

31. நிச்சயமாக நாம் அவர்கள் மீது, ஒரே ஒரு (பேரிடிச்) சப்தத்தை அனுப்பி வைத்தோம்; அதனால் வேலி கட்டுபவரின் பிடுங்கி எறியப்பட்ட குப்பை கூளங்களைப் போல் அவர்கள் ஆகிவிட்டார்கள்

32. திட்டமாக நாம் குர்ஆனை உபதேசம் பெறுவதற்காக எளிதாக்கியும் இருக்கின்றோம்; ஆகவே,(இதனைக் கொண்டு)படிப்பினைபெறக்கூடியவர் எவரும் உண்டா?

33. (நம்முடைய) எச்சரிக்கையாளர்களை லூத்துடைய சமூகத்தார் பொய்யாக்கினார்கள்.

34. அவர்கள் மீது, நாம் கல்மாரியை அனுப்பிவைத்தோம். (அல்லாஹ்வின் தூதராகிய) லூத்துடைய குடும்பத்தாரைத் தவிர; அதிகாலை நேரத்தில் நாம் அவர்களைக் காப்பாற்றினோம்.

35. நம்மிடமிருந்துள்ள அருட் கொடையாக (இவ்வாறு செய்தோம்); இவ்வாறே நன்றி செலுத்துவோருக்கு நாம் கூலி கொடுப்போம்.

36. நம் (வேதனையின்) பிடியைப்பற்றி நிச்சயமாக (லூத் நபியாகிய)அவர், அவர்களுக்கு எச்சரிக்கை செய்தார்; எனினும், அவ்வெச்சரிக்கையைப் பற்றி அவர்கள் சந்தேகித்தார்கள்.

37. அன்றியும், திட்டமாக அவருடைய விருந்தினரை (க் கெட்ட காரியத்திற்காகத் தங்களிடம் ஒப்படைக்குமாறு) அவரிடம் தேடினார்கள். ஆகவே அவர்களுடைய கண்களை நாம் துடைத்து(க் குருடாக்கி) விட்டோம்; ஆகவே, என்னுடைய வேதனையையும், (என்னுடைய) எச்சரிக்கையையும் சுவைத்துப் பாருங்கள் (என்று கூறினோம்).

38. ஆகவே, அதி காலையில் நிலையான வேதனை அவர்களுக்கு நிச்சயமாக ஏற்பட்டுவிட்டது.

39. எனவே," என்னுடைய வேதனையையும், (என்னுடைய) எச்சரிக்கையையும் நீங்கள் சுவைத்துப் பாருங்கள்" (என்று கூறினோம்).

40. திட்டமாக நாம், குர்ஆனை உபதேசம் பெறுவதற்காக எளிதாக்கி இருக்கின்றோம்; ( ஆகவே, இதனைக் கொண்டு) படிப்பினை பெறக்கூடியவர் உண்டா?

41. மேலும், நிச்சயமாக ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரிடம் (பல) எச்சரிக்கையாளர்கள் வந்தனர்.

42. ஆனால், நம்முடைய அத்தாட்சிகளை_ அவை அனைத்தையும் அவர்கள் பொய்யாக்கினார்கள்; ஆகவே, சக்தி வாய்ந்த மிகைப்பவனின் பிடியாக நாம் அவர்களைப் பிடித்துக்கொண்டோம் (அவர்களில் யாரும் எஞ்சியிருக்கவில்லை).

43. (மக்காவாசிகளே! ) உங்களிலுள்ள நிராகரித்துக்கொண்டிருப்போர் (முன்சென்றுபோன) அவர்களைவிட மிகச் சிறந்தவர்களா? அல்லது, (வேதனையிலிருந்து) உங்களுக்கு விலக்கு (பற்றி ஏதும்) வேதங்களில் இருக்கிறதா?

44. அல்லது (நபியே!) "நாங்கள் வெற்றி பெறும் (பெருங்) கூட்டத்தினர் என்று இவர்கள் கூறுகின்றனரா?

سَيُهْزَمُ الْجَمْعُ وَيُوَلُّوْنَ الدُّبُرَ ﴿٤٥﴾ بَلِ السَّاعَةُ مَوْعِدُهُمْ وَالسَّاعَةُ
اَدْهٰى وَاَمَرُّ ﴿٤٦﴾ اِنَّ الْمُجْرِمِيْنَ فِیْ ضَلٰلٍ وَّسُعُرٍ ﴿٤٧﴾ يَوْمَ يُسْحَبُوْنَ وقف لازم
فِی النَّارِ عَلٰى وُجُوْهِهِمْ ؕ ذُوْقُوْا مَسَّ سَقَرَ ﴿٤٨﴾ اِنَّا كُلَّ شَیْءٍ خَلَقْنٰهُ
بِقَدَرٍ ﴿٤٩﴾ وَمَاۤ اَمْرُنَاۤ اِلَّا وَاحِدَةٌ كَلَمْحٍۭ بِالْبَصَرِ ﴿٥٠﴾ وَلَقَدْ اَهْلَكْنَاۤ
اَشْيَاعَكُمْ فَهَلْ مِنْ مُّدَّكِرٍ ﴿٥١﴾ وَكُلُّ شَیْءٍ فَعَلُوْهُ فِی الزُّبُرِ ﴿٥٢﴾ وَ
كُلُّ صَغِيْرٍ وَّكَبِيْرٍ مُّسْتَطَرٌ ﴿٥٣﴾ اِنَّ الْمُتَّقِيْنَ فِیْ جَنّٰتٍ وَّنَهَرٍ ۙ﴿٥٤﴾
فِیْ مَقْعَدِ صِدْقٍ عِنْدَ مَلِيْكٍ مُّقْتَدِرٍ ﴿٥٥﴾ ع ٣ ١٥ ١٠

## سُوْرَةُ الرَّحْمٰنِ مَدَنِيَّةٌ وَهِيَ ثَمَانٌ وَّسَبْعُوْنَ اٰيَةً وَّثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلرَّحْمٰنُ ۙ﴿١﴾ عَلَّمَ الْقُرْاٰنَ ؕ﴿٢﴾ خَلَقَ الْاِنْسَانَ ۙ﴿٣﴾ عَلَّمَهُ الْبَيَانَ ﴿٤﴾
اَلشَّمْسُ وَالْقَمَرُ بِحُسْبَانٍ ۙ﴿٥﴾ وَّالنَّجْمُ وَالشَّجَرُ يَسْجُدٰنِ ﴿٦﴾ وَالسَّمَآءَ
رَفَعَهَا وَوَضَعَ الْمِيْزَانَ ۙ﴿٧﴾ اَلَّا تَطْغَوْا فِی الْمِيْزَانِ ﴿٨﴾ وَاَقِيْمُوا
الْوَزْنَ بِالْقِسْطِ وَلَا تُخْسِرُوا الْمِيْزَانَ ﴿٩﴾ وَالْاَرْضَ وَضَعَهَا
لِلْاَنَامِ ۙ﴿١٠﴾ فِيْهَا فَاكِهَةٌ ۙ وَّالنَّخْلُ ذَاتُ الْاَكْمَامِ ۖ﴿١١﴾ وَالْحَبُّ
ذُو الْعَصْفِ وَالرَّيْحَانُ ﴿١٢﴾ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿١٣﴾

45. (இக்) கூட்டத்தினர் தோற்கடிக்கப்படுவார்கள்; புறமுதுகிட்டும் ஓடுவார்கள்.
46. அதுவுமின்றி, மறுமைநாள் இவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட காலமாகும்; மறுமை நாள் இவர்களுக்கு மிகப் பயங்கரமானது, மிக்க கசப்பானதுமாகும்.
47. நிச்சயமாகக் குற்றவாளிகள் வழிகேட்டிலும், பைத்தியத்திலும் இருக்கின்றனர்.
48. இவர்கள் நரகத்திற்கு முகங்களின்மீது இழுத்து செல்லப்படும் நாளில், இவர்களிடம், (நீங்கள்) "நரக நெருப்பின் தீண்டுதலைச் சுவைத்துப்பாருங்கள்" (என்று கூறப்படும்).
49. நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும், (நிர்ணயிக்கப்பட்ட) அளவின்படியே படைத்திருக்கின்றோம்.
50. நம் கட்டளை (நிறைவேறுவது) கண்சிமிட்டுவதுபோன்ற ஒரு கணமே தவிர இல்லை.
51. (மக்காவாசிகளே !) உங்களைப்போன்ற (எத்தனையோ) வகுப்பார்களை நாம் நிச்சயமாக அழித்திருக்கின்றோம். ஆகவே, (உங்களில்) படிப்பினை பெறக்கூடியவர் உண்டா?
52. அவர்கள் செய்துவிட்ட ஒவ்வொரு விஷயமும் (பதிவு செய்யப்பட்டு அவர்களுடைய) குறிப்பேடுகளில் இருக்கின்றது.
53. ஒவ்வொரு சிறிதும், பெரிதும் (அதில்) வரையப்பட்டிருக்கும்.
54. நிச்சயமாக, பயபக்தியுடையோர் சுவனபதிகளிலும், (அவற்றிலுள்ள) ஆறுகளிலும் இருப்பார்கள்.
55. (மெய்யாகவே) மிக்க உண்மையான இருக்கையில், மிக்க சக்தி வாய்ந்த அரசனிடத்தில்இருப்பார்கள்.

---

அத்தியாயம் : 55

## அர்ரஹ்மான் – அளவற்ற அருளாளன்

வசனங்கள் : 78 மதனீ ருகூஉகள் : 3

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. அளவற்ற அருளாளன்,
2. குர்ஆனை அவன் கற்றுக் கொடுத்தான்.
3. அவனே மனிதனைப் படைத்தான்.
4. அவனே அவனுக்கு (அவன் பேசும் மொழியின்) விளக்கத்தைக் கற்றுக்கொடுத்தான்.
5. சூரியனும், சந்திரனும்கணக்கின் படி (செல்கின்றன).
6. செடி (கொடி) யும், மரமும் – அவ்விரண்டும் (அல்லாஹ்வுக்கு வழிபட்டுச்)சிரம் பணிகின்றன.
7. இன்னும், வானத்தை – அதனை அவன் உயர்த்தி, தராசை (நீதியை)யும் வைத்தான்.
8. நீங்கள் தராசில் (நிறுப்பதில்) வரம்பு மீறாதிருப்பதற்காக;
9. அன்றியும், நீங்கள் எடையை நீதியுடன் நிறுங்கள்; தராசில் (அளவையில்) குறைத்தும் விடாதீர்கள்.
10. மேலும், பூமியை படைப்புகளுக்காக (வசித்திருக்க வசதியாக) அவனே அதனை (விரித்து) வைத்தான்.
11. அதில் (பலவகை)கனியும், (குலைகள் நிறைந்த) பாளைகளையுடைய பேரீச்சை மரங்களும் இருக்கின்றன.
12. தொலியால் மூடப்பட்ட தானியங்களும், நறுமணமுள்ள செடியும் (இருக்கின்றன).
13. ஆகவே, (மனு, ஜின் வர்க்கத்தினராகிய) நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

خَلَقَ الْاِنْسَانَ مِنْ صَلْصَالٍ كَالْفَخَّارِ ۱۴ وَخَلَقَ الْجَآنَّ مِنْ
مَّارِجٍ مِّنْ نَّارٍ ۱۵ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۱۶ رَبُّ الْمَشْرِقَيْنِ وَ
رَبُّ الْمَغْرِبَيْنِ ۱۷ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۱۸ مَرَجَ الْبَحْرَيْنِ
يَلْتَقِيٰنِ ۱۹ بَيْنَهُمَا بَرْزَخٌ لَّا يَبْغِيٰنِ ۲۰ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۲۱
يَخْرُجُ مِنْهُمَا اللُّؤْلُؤُ وَالْمَرْجَانُ ۲۲ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۲۳
وَلَهُ الْجَوَارِ الْمُنْشَاٰتُ فِي الْبَحْرِ كَالْاَعْلَامِ ۲۴ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا
تُكَذِّبٰنِ ۲۵ كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ ۲۶ وَّيَبْقٰى وَجْهُ رَبِّكَ ذُو الْجَلٰلِ
وَالْاِكْرَامِ ۲۷ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۲۸ يَسْئَلُهُ مَنْ فِي السَّمٰوٰتِ
وَالْاَرْضِ كُلَّ يَوْمٍ هُوَ فِي شَاْنٍ ۲۹ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۳۰
سَنَفْرُغُ لَكُمْ اَيُّهَ الثَّقَلٰنِ ۳۱ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۳۲ يٰمَعْشَرَ
الْجِنِّ وَالْاِنْسِ اِنِ اسْتَطَعْتُمْ اَنْ تَنْفُذُوْا مِنْ اَقْطَارِ السَّمٰوٰتِ
وَالْاَرْضِ فَانْفُذُوْا لَا تَنْفُذُوْنَ اِلَّا بِسُلْطٰنٍ ۳۳ فَبِاَیِّ اٰلَآءِ
رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۳۴ يُرْسَلُ عَلَيْكُمَا شُوَاظٌ مِّنْ نَّارٍ وَّنُحَاسٌ فَلَا
تَنْتَصِرٰنِ ۳۵ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۳۶ فَاِذَا انْشَقَّتِ السَّمَآءُ
فَكَانَتْ وَرْدَةً كَالدِّهَانِ ۳۷ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۳۸

النصف — ع ۲

14. சுட்டெடுத்த மண் பாண்டத்தைப்போல் (தட்டினால்) சப்தமிடும் களிமண்ணால், அவன் (முதல்) மனிதரைப்படைத்தான்.

15. இன்னும், நெருப்பின் ஜுவாலையினால் அவன் ஜின்னைப் படைத்தான்.

16. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

17. இரு கீழ்த்திசைகளுக்கும் (அவனே)இரட்சகன்; இரு மேல்திசைகளுக்கும் (அவனே) இரட்சகன்.

18. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

19. இரு கடல்களை_அவை இரண்டும் ஒன்றோடொன்று சந்திக்க அவனே விட்டு விட்டான்.

20. (ஆயினும்,) அவை இரண்டுக்கிடையில் ஒரு தடுப்புண்டு; (அத்தடுப்பானதை) அவ்விரண்டும் மீறிவிடாது.

21. ஆகவே, (மனு, ஜின்களே!) நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

22. அவ்விரண்டிலிருந்தே முத்தும், பவளமும் வெளிப்படுகின்றன.

23. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

24. மலைகளைப் போல் (அதன் சில பகுதிகள்) உயர்த்தப்பட்டதாக கடலில் செல்லும் கப்பல்கள் அவனுக்கே உரியன.

25. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

26. பூமியின் மேலுள்ள அனைவரும் அழிந்து போகக்கூடியவர்களே !

27. கண்ணியமும், பெருமையும் உடைய உமது இரட்சகனின் முகம் (அழியாது) நிலைத்திருக்கும்.

28. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

29. வானங்கள் மற்றும் பூமியிலுள்ளோர் (தங்கள் தேவைகளை) அவனிடமே கேட்கின்றனர்; ஒவ்வொரு நாளிலும் அவன் ஒவ்வொரு காரியத்திலும் இருப்பான்.

30. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

31. (மனு, ஜின்களாகிய) இரு வகுப்பார்களே! நிச்சயமாக நாம் உங்க(ளின்கேள்வி கணக்கு)களை கவனிக்க நாடுவோம்.

32. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

33. ஜின், மனு கூட்டத்தார்களே! நீங்கள் வானங்கள் மற்றும் பூமியின் ஓரங்களைக் கடந்து சென்றுவிட நீங்கள் ஆற்றல் பெற்றால் (அவ்வாறு) கடந்து சென்று விடுங்கள்; ஆயினும், (மிகப்பெரும் வல்லமையாளனின்) வல்லமையுடனன்றி, நீங்கள் கடந்து செல்லமுடியாது.

34. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

35. (மறுமையில்,) உங்கள் இருவர்மீது நெருப்பின் ஜுவாலையும், புகையும் அனுப்பப்படும். அப்போது(அதனை நீங்கள் தடுத்துக் கொள்ள எவரிலிருந்தும்) நீங்கள் உதவி பெற்றுக் கொள்ளமாட்டீர்கள்.

36. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

37. ஆகவே, (இறுதிநாள் ஏற்படுவதற்காக)வானம்பிளந்துவிடும்போது, அது (உருகிஓடுவதில்) எண்ணெயைப்போல் (சிவப்பில்)ரோஜா நிறமாகிவிடும்.

38. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

فَيَوْمَئِذٍ لَّا يُسْـَٔلُ عَنْ ذَنْۢبِهٖٓ اِنْسٌ وَّلَا جَآنٌّ ۝٣٩ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا
تُكَذِّبٰنِ ۝٤٠ يُعْرَفُ الْمُجْرِمُوْنَ بِسِيْمٰهُمْ فَيُؤْخَذُ بِالنَّوَاصِيْ وَ
الْاَقْدَامِ ۝٤١ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٤٢ هٰذِهٖ جَهَنَّمُ الَّتِيْ يُكَذِّبُ
بِهَا الْمُجْرِمُوْنَ ۝٤٣ يَطُوْفُوْنَ بَيْنَهَا وَبَيْنَ حَمِيْمٍ اٰنٍ ۝٤٤ فَبِاَيِّ اٰلَآءِ
رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٤٥ وَلِمَنْ خَافَ مَقَامَ رَبِّهٖ جَنَّتٰنِ ۝٤٦ فَبِاَيِّ اٰلَآءِ

وقف لازم ٢ ع ١٢

رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٤٧ ذَوَاتَآ اَفْنَانٍ ۝٤٨ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٤٩ فِيْهِمَا
عَيْنٰنِ تَجْرِيٰنِ ۝٥٠ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٥١ فِيْهِمَا مِنْ كُلِّ
فَاكِهَةٍ زَوْجٰنِ ۝٥٢ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٥٣ مُتَّكِـِٕيْنَ عَلٰى فُرُشٍۢ
بَطَآئِنُهَا مِنْ اِسْتَبْرَقٍ ؕ وَجَنَا الْجَنَّتَيْنِ دَانٍ ۝٥٤ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا
تُكَذِّبٰنِ ۝٥٥ فِيْهِنَّ قٰصِرٰتُ الطَّرْفِ ۙ لَمْ يَطْمِثْهُنَّ اِنْسٌ قَبْلَهُمْ وَلَا
جَآنٌّ ۝٥٦ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٥٧ كَاَنَّهُنَّ الْيَاقُوْتُ وَالْمَرْجَانُ ۝٥٨
فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٥٩ هَلْ جَزَآءُ الْاِحْسَانِ اِلَّا
الْاِحْسَانُ ۝٦٠ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٦١ وَمِنْ دُوْنِهِمَا
جَنَّتٰنِ ۝٦٢ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٦٣ مُدْهَآمَّتٰنِ ۝٦٤
فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٦٥ فِيْهِمَا عَيْنٰنِ نَضَّاخَتٰنِ ۝٦٦

39. அந்நாளில், மனிதனோ, ஜின்னோ தம் பாவத்தைப்பற்றி(வாய் மொழியாக)க் கேட்கப்படமாட்டார்கள்.

40. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

41. குற்றவாளிகள் அவர்களின் (முக) அடையாளங்களைக்கொண்டு அறிந்துகொள்ளப்படுவார்கள்; பின்னர், முன்நெற்றி முடிகளையும், கால்களையும் கொண்டு பிடி(த்திழு)க்கப்(பட்டு நரகத்தில் எறியப்)படும்.

42. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

43. "குற்றவாளிகள் எதனைப்பொய்யாக்கிக் கொண்டிருந்தார்களோ அத்தகைய நரகம் இதுதான்" (என்று அவர்களுக்குக் கூறப்படும்).

44. அதற்கிடையிலும் கடினமாகக் கொதித்துக் கொண்டிருக்கும் நீருக்குமிடையிலும் அவர்கள் சுற்றிக் கொண்டிருப்பார்கள்.

45. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

46. தன் இரட்சகனின் சன்னிதானத்தை பயந்தவருக்கு(ச்சுவனபதியில்) இரு சோலைகளுண்டு.

47. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

48. (இவ்விரண்டுசோலைகளும்) அடர்ந்த கிளைகளுடையவையாகும்.

49. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

50. அவ்விரண்டிலும் இரு (நீர்) ஊற்றுகள் (உதித்து) ஓடிக் கொண்டிருக்கும்.

51. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

52. அவ்விரண்டிலும் ஒவ்வொரு கனி வர்க்கத்திலும் இரு வகைகள் உண்டு.

53. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

54. அவர்கள் (பட்டு) விரிப்புகளின்மீது (உள்ள பஞ்சணைகளில்) சாய்ந்தவர்களாக (இருப்பார்கள்); அவற்றின் உட்பகுதிகள் 'இஸ்தப்ரக்' (எனும் கனத்த) பட்டினாலுள்ளவையாக இருக்கும்; அவ்விரு சோலைகளில் பழங்கள் (பறிக்க) நெருங்கியிருக்கும்.

55. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்கள் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

56. அவற்றில் கீழ் நோக்கிய பார்வைகளையுடைய (அழகிய) கன்னிகைகளும் இருப்பார்கள்; இவர்களுக்கு முன்னர் அவர்களை எந்த மனிதனும், எந்த ஜின்னும் தீண்டியதில்லை.

57. ஆகவே நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்.

58. (அழகிகளான) அவர்கள் (ஒளியில்) வெண்முத்தையும், (பளபளப்பில்) பவளத்தையும் போன்று இருப்பார்கள்.

59. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்கள் இரட்சகனுடைய அருட் கொடை களில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

60. (உலகத்தில் செய்த) நன்மைக்கு (மறுமையில்) நன்மையைத்தவிர (வேறு கூலி) உண்டா?

61. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

62. அவ்விரண்டுமின்றி (சுவனபதியில் அவர்களுக்கு வேறு) இரு சோலைகளுமுண்டு.

63. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

64. அவ்விரண்டும் கரும்பச்சையான நிறமுடையனவாகும்.

65. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

66. அவ்விரண்டிலும், பொங்கிக்கொண்டிருக்கும் இரு ஊற்றுகள் இருக்கும்.

فَبِاَيِّ اٰلَاۤءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿٦٧﴾ فِيْهِمَا فَاكِهَةٌ وَّنَخْلٌ وَّرُمَّانٌ ﴿٦٨﴾
فَبِاَيِّ اٰلَاۤءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿٦٩﴾ فِيْهِنَّ خَيْرٰتٌ حِسَانٌ ﴿٧٠﴾ فَبِاَيِّ اٰلَاۤءِ
رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿٧١﴾ حُوْرٌ مَّقْصُوْرٰتٌ فِى الْخِيَامِ ﴿٧٢﴾ فَبِاَيِّ اٰلَاۤءِ رَبِّكُمَا
تُكَذِّبٰنِ ﴿٧٣﴾ لَمْ يَطْمِثْهُنَّ اِنْسٌ قَبْلَهُمْ وَلَا جَاۤنٌّ ﴿٧٤﴾ فَبِاَيِّ اٰلَاۤءِ رَبِّكُمَا
تُكَذِّبٰنِ ﴿٧٥﴾ مُتَّكِـِٕيْنَ عَلٰى رَفْرَفٍ خُضْرٍ وَّعَبْقَرِيٍّ حِسَانٍ ﴿٧٦﴾ فَبِاَيِّ
اٰلَاۤءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿٧٧﴾ تَبٰرَكَ اسْمُ رَبِّكَ ذِى الْجَلٰلِ وَالْاِكْرَامِ ﴿٧٨﴾ ع ٣ ١٣

سُوْرَةُ الْوَاقِعَةِ مَكِّيَّةٌ وَهِيَ تِسْعٌ وَّتِسْعُوْنَ اٰيَةً وَّثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اِذَا وَقَعَتِ الْوَاقِعَةُ ﴿١﴾ لَيْسَ لِوَقْعَتِهَا كَاذِبَةٌ ﴿٢﴾ خَافِضَةٌ وقف لازم
رَّافِعَةٌ ﴿٣﴾ اِذَا رُجَّتِ الْاَرْضُ رَجًّا ﴿٤﴾ وَّبُسَّتِ الْجِبَالُ بَسًّا ﴿٥﴾
فَكَانَتْ هَبَاۤءً مُّنْۢبَثًّا ﴿٦﴾ وَّكُنْتُمْ اَزْوَاجًا ثَلٰثَةً ﴿٧﴾ فَاَصْحٰبُ الْمَيْمَنَةِ ۙ
مَاۤ اَصْحٰبُ الْمَيْمَنَةِ ﴿٨﴾ وَاَصْحٰبُ الْمَشْـَٔمَةِ ۙ مَاۤ اَصْحٰبُ الْمَشْـَٔمَةِ ﴿٩﴾
وَالسّٰبِقُوْنَ السّٰبِقُوْنَ ﴿١٠﴾ اُولٰۤىِٕكَ الْمُقَرَّبُوْنَ ﴿١١﴾ فِىْ جَنّٰتِ
النَّعِيْمِ ﴿١٢﴾ ثُلَّةٌ مِّنَ الْاَوَّلِيْنَ ﴿١٣﴾ وَقَلِيْلٌ مِّنَ الْاٰخِرِيْنَ ﴿١٤﴾
عَلٰى سُرُرٍ مَّوْضُوْنَةٍ ﴿١٥﴾ مُّتَّكِـِٕيْنَ عَلَيْهَا مُتَقٰبِلِيْنَ ﴿١٦﴾

67. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?
68. அவ்விரண்டிலும், (பற்பல) கனியும், பேரீச்சைகளும், மாதுளையும் உண்டு.
69. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?
70. அவைகளில், அழகான முகங்களுடைய, நற்குணமுள்ள கன்னிகைகள் இருப்பர்.
71. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?
72. (அவர்கள்தாம் முத்துக்களினாலான) கூடாரங்களில் மறைக்கப் பட்டிருக்கக் கூடிய "ஹூர்" (என்னும் கன்னிகை)கள்.
73. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?
74. இவர்களுக்கு முன்னர் அவர்களை எந்த மனிதனும், எந்த ஜின்னும் தீண்டியதில்லை.
75. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்கள் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?
76. (சுவன வாசிகள்) பசுமையான இரத்தினக் கம்பளங்கள், இன்னும் அழகிய விரிப்புகள் மீது சாய்ந்தவர்களாக இருப்பார்கள்.
77. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்கள் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?
78. (நபியே!) மிக்க கீர்த்தியும், கண்ணியமும் உடைய உமது இரட்சகனின் பெயர் மிக்க பாக்கியமுடையது.

அத்தியாயம் : 56

## அல்வாகிஆ — மாபெரும் நிகழ்ச்சி

வசனங்கள் : 96 மக்கீ ருகூஉகள் : 3

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. நிகழக்கூடிய (இறுதிநாளான)து நிகழ்ந்துவிடுமானால்—
2. அது நிகழ்வதைப் பொய்யாக்கக்கூடியது(எதுவும்) இல்லை.
3. அது (தீயோரைத்) தாழ்த்தி, (நல்லோரை) உயர்த்திவிடக்கூடியது.
4. பூமி, மிக பலமான அசைவாக அசைக்கப்பட்டால்;
5. இன்னும், மலைகள் தூள் தூளாக ஆக்கப்பட்டுவிட்டால்;
6. அப்போது அவைகள் பரத்தப்பட்ட புழுதிகளாக ஆகிவிடும் (அந்நாளில்);
7. நீங்களும் மூன்று வகையினர்களாக ஆகி விடுவீர்கள்.
8. (முதலாம் வகையினர்) வலப்பக்கத்தார்— வலப்பக்கத்தாரின் தன்மை என்ன?
9. (இரண்டாம் வகையினர்) இடப்பக்கத்தார்— இடப்பக்கத்தாரின் தன்மை என்ன?
10. (மூன்றாம் வகையினர் நம்பிக்கைக் கொள்வதில்) முந்திக் கொண்டவர்கள்; (இவர்கள் சுவனத்தின் பால்) முந்திக் கொண்டவர்களாவர்.
11. இவர்கள் தாம் (தங்கள் இரட்சகன் பக்கம் மிக்க) நெருக்கமாக்கப்பட்டவர்கள்.
12. அருட்கொடைகளுள்ள சுவனபதிகளில் (இக்கூட்டத்தினர் இருப்பர்.)
13. (இவற்றில்) முன்னவர்களில் ஒரு பெருங்கூட்டத்தினரும்,
14. பின்னுள்ளோரில் ஒரு சொற்பத் தொகையினரும் —
15. பொன்னிழைகளால் ஆக்கப்பட்ட உன்னதக் கட்டில்கள் மீது இருப்பார்கள்.
16. ஒருவரையொருவர் முன்னோக்கியவர்களாக, அவற்றின் மீது சாய்ந்தவர்களாக இருப்பார்கள்.

يَطُوْفُ عَلَيْهِمْ وِلْدَانٌ مُّخَلَّدُوْنَ ﴿١٧﴾ بِاَكْوَابٍ وَّاَبَارِيْقَ ۙ وَكَاْسٍ
مِّنْ مَّعِيْنٍ ﴿١٨﴾ لَّا يُصَدَّعُوْنَ عَنْهَا وَلَا يُنْزِفُوْنَ ﴿١٩﴾ وَفَاكِهَةٍ مِّمَّا
يَتَخَيَّرُوْنَ ﴿٢٠﴾ وَلَحْمِ طَيْرٍ مِّمَّا يَشْتَهُوْنَ ﴿٢١﴾ وَحُوْرٌ عِيْنٌ ﴿٢٢﴾ كَاَمْثَالِ
اللُّؤْلُؤِ الْمَكْنُوْنِ ﴿٢٣﴾ جَزَآءًۢ بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿٢٤﴾ لَا يَسْمَعُوْنَ فِيْهَا
لَغْوًا وَّلَا تَاْثِيْمًا ﴿٢٥﴾ اِلَّا قِيْلًا سَلٰمًا سَلٰمًا ﴿٢٦﴾ وَاَصْحٰبُ الْيَمِيْنِ ۙ مَاۤ اَصْحٰبُ
الْيَمِيْنِ ﴿٢٧﴾ فِيْ سِدْرٍ مَّخْضُوْدٍ ﴿٢٨﴾ وَّطَلْحٍ مَّنْضُوْدٍ ﴿٢٩﴾ وَّظِلٍّ مَّمْدُوْدٍ ﴿٣٠﴾ وَّ
مَآءٍ مَّسْكُوْبٍ ﴿٣١﴾ وَّفَاكِهَةٍ كَثِيْرَةٍ ﴿٣٢﴾ لَّا مَقْطُوْعَةٍ وَّلَا مَمْنُوْعَةٍ ﴿٣٣﴾ وَّ
فُرُشٍ مَّرْفُوْعَةٍ ﴿٣٤﴾ اِنَّاۤ اَنْشَاْنٰهُنَّ اِنْشَآءً ﴿٣٥﴾ فَجَعَلْنٰهُنَّ اَبْكَارًا ﴿٣٦﴾
عُرُبًا اَتْرَابًا ﴿٣٧﴾ لِّاَصْحٰبِ الْيَمِيْنِ ﴿٣٨﴾ ثُلَّةٌ مِّنَ الْاَوَّلِيْنَ ﴿٣٩﴾ وَثُلَّةٌ ع ١ ٣٨ ١٤
مِّنَ الْاٰخِرِيْنَ ﴿٤٠﴾ وَاَصْحٰبُ الشِّمَالِ ۙ مَاۤ اَصْحٰبُ الشِّمَالِ ﴿٤١﴾ فِيْ سَمُوْمٍ
وَّحَمِيْمٍ ﴿٤٢﴾ وَّظِلٍّ مِّنْ يَّحْمُوْمٍ ﴿٤٣﴾ لَّا بَارِدٍ وَّلَا كَرِيْمٍ ﴿٤٤﴾ اِنَّهُمْ كَانُوْا قَبْلَ
ذٰلِكَ مُتْرَفِيْنَ ﴿٤٥﴾ وَكَانُوْا يُصِرُّوْنَ عَلَى الْحِنْثِ الْعَظِيْمِ ﴿٤٦﴾ وَكَانُوْا
يَقُوْلُوْنَ ۙ اَئِذَا مِتْنَا وَكُنَّا تُرَابًا وَّعِظَامًا ءَاِنَّا لَمَبْعُوْثُوْنَ ﴿٤٧﴾ اَوَاٰبَآؤُنَا
الْاَوَّلُوْنَ ﴿٤٨﴾ قُلْ اِنَّ الْاَوَّلِيْنَ وَالْاٰخِرِيْنَ ﴿٤٩﴾ لَمَجْمُوْعُوْنَ ۙ اِلٰى
مِيْقَاتِ يَوْمٍ مَّعْلُوْمٍ ﴿٥٠﴾ ثُمَّ اِنَّكُمْ اَيُّهَا الضَّاۤلُّوْنَ الْمُكَذِّبُوْنَ ﴿٥١﴾

17. என்றும் நிலையான (இளமையுடையோராக இருக்கும்) சிறுவர்கள், (பணிபுரிய) இவர்களைச் சுற்றிக் கொண்டிருப்பார்கள்.

18. தெளிவான (உயர்மது) பானத்திலிருந்து(நிரப்பப்பட்டு)ள்ள கிண்ணங்களையும், கெண்டிகளையும், குவளைகளையும் (தூக்கிக்)கொண்டு(அவர்களைச் சுற்றிகொண்டே இருப்பார்கள்)

19. அ(ம் மதுவை அருந்துவ)தனால் தலைவலிக்குள்ளாகமாட்டார்கள்; மதி மயக்கத்திற்கும் உள்ளாக மாட்டார்கள்;

20. இவர்கள் (பிரியப்பட்டு) தேர்ந்தெடுக்கின்றவற்றிலிருந்து கனி (வர்க்கங்)களோடும்,

21. அவர்கள் விரும்பக் கூடியவற்றிலிருந்து பட்சிகளின் மாமிசத்தோடும் (அச்சிறுவர்கள் சுற்றி வருவர்).

22. (அங்கு இவர்களுக்கு) 'ஹூருல் ஈன்' (என்னும் கண்ணழகிகளான மனைவி)களும் இருப்பார்கள்.

23. (வெண்மையில் சிப்பிக்குள்)மறைக்கப்பட்ட முத்துக்களைப் போல் (அவர்கள்) இருப்பார்கள்.

24. (இவைகள் யாவும்) இவர்கள் செய்து கொண்டிருந்த (நன்மையான) செயல்களுக்குக்கூலியாக(க் கிடைக்கும்).

25. அதில் அவர்கள் வீணானதையும், அவர்களைப் பாவத்தில் ஆக்கக்கூடியதையும் செவியுற மாட்டார்கள்.

26. ஆயினும், "ஸலாமன், ஸலாமன்" (சாந்தி, சாந்தி) என்ற சொல்லையன்றி (மற்றெதையும் செவியுறமாட்டார்கள்).

27. மேலும், வலப்பக்கத்தார் _வலப் பக்கத்தாரின் நிலை என்ன? (அல்லாஹ் எதை அவர்களுக்குத் தயாராக்கிவைத்திருக்கிறான்?)

28. அவர்கள் முள்ளற்ற இலந்தை மரத்தி(ன் அடியி)லும்;

29. (மேலிருந்து கீழ்வரையில்) குலைகள் தொங்கும் வாழை மரத்தி(ன் அடியி)லும்;

30. நீண்ட நிழலிலும் இருப்பார்கள்.

31. (அல்லாஹ்வினால்) ஓடவிடப்பட்ட நீரி(ன் அருகாமையி)லும் (இருப்பர்).

32. ஏராளமான கனிவர்க்கங்களுக்கு மத்தியிலும்_

33. (அதன், கனிகள் கால வித்தியாசமின்றி எச்சமயத்திலும் கிடைத்துக் கொண்டிருக்குமே தவிர, அவை) அற்றுப்போகாதவை; அன்றியும், (புசிப்பதற்குத்) தடுக்கப்படாதவை.

34. (ஒன்றின் மேல் ஒன்றாக) உயரமாக்கப்பட்ட விரிப்புகளிலும் (அமர்ந்திருப் பார்கள்).

35. நிச்சயமாக நாம் (ஹூருல் ஈன்களான) அவர்களைப் பிரத்தியேகமாக (இவர்களுக்கெனப் புதிதாகவே) படைத்திருக்கின்றோம்.

36. அப்பால் கன்னியர்களாக அவர்களை ஆக்கியிருக்கிறோம்.

37. (தம் கணவர்களையே) நேசிக்கக் கூடியவர்களாக, சமவயதுடையவர்களாக (அவர்களை ஆக்கியுள்ளோம்).

38. (முன்னர் கூறப்பட்டது) வலப்பக்கத்தார்க்குரியதாகும்.

39. (இவர்களுடன்) முன்னோர்களில் ஒரு கூட்டத்தினரும்,

40. பின்னோர்களில் ஒரு கூட்டத்தினரும் (வலப்பக்கத்தைச் சார்ந்தோரில்) இருப்பார்கள்.

41. மேலும், இடப்புறத்தார்; இடப் புறத்தார்க்குரிய தன்மை என்ன?

42. (அவர்கள்) கொடிய அனல் காற்றிலும், முடிவுறக்காய்ச்சப்பட்ட கொதிக்கும் நீரிலும்_

43. அடர்ந்த இருண்ட புகையின் நிழலிலும் இருப்பார்கள்.

44. (அங்கு) குளிர்ச்சியுமில்லை; எவ்வித சுகமுமில்லை.

45. நிச்சயமாக இவர்கள் இதற்கு முன்னர் பெரும் சுகபோக வாழ்வுடையவர்களாக இருந்தனர்.

46. (ஆனால்) அவர்கள் பெரும் பாவத்தின் மீது(பிடிவாதம் கொண்டோராக) நிலைத்தும் இருந்தனர்.

47. "நாம் இறந்து (உக்கி) மண்ணாகவும், எலும்புகளாகவும் ஆகிவிட்டாலுமா நிச்சயமாக நாம் (உயிர்கொடுத்து) எழுப்பப்படுபவர்கள்?" என்று கூறக்கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

48. "(அவ்வாறே) முன்னோர்களான நம்முடைய மூதாதையருமா? (எழுப்பப் படுவார்கள்" என்று பரிகாசமாகக் கூறிக் கொண்டிருந்தனர்.)

49. (நபியே!) நீர் கூறுவீராக: "நிச்சயமாக (உங்களில்) முன்னோர்களும், பின்னோர்களும்_

50. (நீங்கள் அனைவரும்)குறிப்பிட்ட நாளின் ஒரு நேரத்தில் திட்டமாக (உயிர்கொடுத்து எழுப்பப்பட்டு)ஒன்றுசேர்க்கப்படுபவர்கள்."

51. "பின்னர், (இந்நாளைப்) பொய்யாக்கியோரான வழிகெட்டவர்களே! நிச்சயமாக நீங்கள்_

لَاٰكِلُوْنَ مِنْ شَجَرٍ مِّنْ زَقُّوْمٍ ﴿۵۲﴾ فَمَالِـُٔوْنَ مِنْهَا الْبُطُوْنَ ﴿۵۳﴾

فَشٰرِبُوْنَ عَلَيْهِ مِنَ الْحَمِيْمِ ﴿۵۴﴾ فَشٰرِبُوْنَ شُرْبَ الْهِيْمِ ﴿۵۵﴾

هٰذَا نُزُلُهُمْ يَوْمَ الدِّيْنِ ﴿۵۶﴾ نَحْنُ خَلَقْنٰكُمْ فَلَوْلَا تُصَدِّقُوْنَ ﴿۵۷﴾

اَفَرَءَيْتُمْ مَّا تُمْنُوْنَ ﴿۵۸﴾ ءَاَنْتُمْ تَخْلُقُوْنَهٗۤ اَمْ نَحْنُ الْخٰلِقُوْنَ ﴿۵۹﴾

نَحْنُ قَدَّرْنَا بَيْنَكُمُ الْمَوْتَ وَمَا نَحْنُ بِمَسْبُوْقِيْنَ ﴿۶۰﴾ عَلٰۤى اَنْ

نُّبَدِّلَ اَمْثَالَكُمْ وَنُنْشِئَكُمْ فِيْ مَا لَا تَعْلَمُوْنَ ﴿۶۱﴾ وَلَقَدْ عَلِمْتُمُ

النَّشْاَةَ الْاُوْلٰى فَلَوْلَا تَذَكَّرُوْنَ ﴿۶۲﴾ اَفَرَءَيْتُمْ مَّا تَحْرُثُوْنَ ﴿۶۳﴾ ءَاَنْتُمْ

تَزْرَعُوْنَهٗۤ اَمْ نَحْنُ الزّٰرِعُوْنَ ﴿۶۴﴾ لَوْ نَشَآءُ لَجَعَلْنٰهُ حُطَامًا

فَظَلْتُمْ تَفَكَّهُوْنَ ﴿۶۵﴾ اِنَّا لَمُغْرَمُوْنَ ﴿۶۶﴾ بَلْ نَحْنُ مَحْرُوْمُوْنَ ﴿۶۷﴾

اَفَرَءَيْتُمُ الْمَآءَ الَّذِيْ تَشْرَبُوْنَ ﴿۶۸﴾ ءَاَنْتُمْ اَنْزَلْتُمُوْهُ مِنَ

الْمُزْنِ اَمْ نَحْنُ الْمُنْزِلُوْنَ ﴿۶۹﴾ لَوْ نَشَآءُ جَعَلْنٰهُ اُجَاجًا فَلَوْلَا

تَشْكُرُوْنَ ﴿۷۰﴾ اَفَرَءَيْتُمُ النَّارَ الَّتِيْ تُوْرُوْنَ ﴿۷۱﴾ ءَاَنْتُمْ

اَنْشَاْتُمْ شَجَرَتَهَآ اَمْ نَحْنُ الْمُنْشِـُٔوْنَ ﴿۷۲﴾ نَحْنُ جَعَلْنٰهَا تَذْكِرَةً

وَّمَتَاعًا لِّلْمُقْوِيْنَ ﴿۷۳﴾ فَسَبِّحْ بِاسْمِ رَبِّكَ الْعَظِيْمِ ﴿۷۴﴾ فَلَآ ع ۲ ۳۶ ۱۵

اُقْسِمُ بِمَوٰقِعِ النُّجُوْمِ ﴿۷۵﴾ وَاِنَّهٗ لَقَسَمٌ لَّوْ تَعْلَمُوْنَ عَظِيْمٌ ﴿۷۶﴾

52. (ஜக்கூம் எனும்) கள்ளிமரத்திலிருந்து உண்ணக்கூடியவர்கள்.
53. "அதைக் கொண்டே (உங்களுடைய) வயிறுகளை நிரப்பக்கூடியவர்கள்.
54. அப்பால், அதற்குமேல் கடுமையாகக் கொதிக்கும் நீரிலிருந்து குடிக்கக் கூடியவர்கள்.
55. (நோயினால் பாதிக்கப்பட்டு) கடும் தாகத்திற்குள்ளான ஒட்டகம் குடிப்பதைப் போல் குடிக்கக்கூடியவர்கள்.
56. இது கூலி கொடுக்கும் நாளில் அவர்களுக்குரிய விருந்தாகும்.
57. நாமே உங்களை (முதன் முறையாக)ப் படைத்திருக்கின்றோம்; (ஆகவே, மீண்டும் உங்களை உயிர்ப்பிப்பதை) நீங்கள் உண்மையென நம்ப வேண்டாமா?
58. ஆகவே, (பெண்ணின் கர்ப்பத்தில்) நீங்கள் செலுத்திவிடுகின்ற (விந்தான)தைப் பார்த்தீர்களா?
59. அதனை(க்குழந்தையாக) நீங்கள் படைக்கின்றீர்களா? அல்லது நாம்தாம் படைப்பவர்களா?
60. நாமே உங்களுக்கிடையில் மரணத்தை ஏற்படுத்தியுள்ளோம். நாம் தோற்கடிக்கப்படுவோரும் அல்லர்.
61. (அன்றி,) நாம் (உங்களை அழித்து விட்டு உங்களுடைய இடத்தில்) உங்களைப் போன்றோரை மாற்றிவிடவும், இன்னும் நீங்கள் அறியாதவற்றில், உங்களை நாம் அமைத்துவிடுவதற்கும் (நாம் இயலாதவர்களன்று).
62. மேலும், (உங்களுடைய) முதலாவதான உற்பத்தியை நிச்சயமாக நீங்கள் நன்கறிந்திருக்கின்றீர்கள்! (இதனைக் கொண்டு) நீங்கள் நல்லுணர்வு பெற வேண்டாமா?
63. நீங்கள் (பூமியைக்கிளறி அதில் வித்துக்களை) விதைப்பதைப் பார்த்தீர்களா?
64. அதனை நீங்கள் முளைக்கச் செய்கின்றீர்களா? அல்லது நாம்தாம் முளைப்பிக்கச் செய்பவர்களா?
65. நாம் நாடினால், திட்டமாக அதனைக்கூளமாக ஆக்கியிருப்போம்; பின்னர் (அதன் தீய நிலை கண்டு) நீங்கள் ஆச்சரியப்படுவோராய் ஆகி விடுவீர்கள்.
66. "நிச்சயமாக நாங்கள் கடன்பட்டவர்களாகி (தண்டிக்கப்பட்டு) விட்டோம்.
67. இல்லை, நாங்கள் (பயிரை அடைவதிலிருந்து) தடுக்கப்பட்டு விட்டோம்" (என்றும் கூறிக்கொண்டிருப்பீர்கள்).
68. நீங்கள் குடிக்கின்றீர்களே அந்நீரைப் பார்த்தீர்களா?
69. அதை மேகத்திலிருந்து நீங்கள் இறக்குகின்றீர்களா? அல்லது நாம்தாம் இறக்கிவைப்பவர்களா?
70. நாம் நாடினால் அதனை (நீங்கள் குடிக்க முடியாத) உப்பு நீராக்கி இருப்போம்; (இதற்கு) நீங்கள் நன்றிசெலுத்த வேண்டாமா?
71. நீங்கள் மூட்டுகின்ற நெருப்பைப் பார்த்தீர்களா?
72. அதனுடைய மரத்தை நீங்கள் உற்பத்திசெய்தீர்களா? அல்லது நாம் தாம் உற்பத்தி செய்பவர்களா?
73. (நரகத்தின் நெருப்பை உங்களுக்கு) நினைவூட்டும் பொருட்டும், பிரயாணிகளுக்குப் பயனளிக்கும் பொருட்டும் அதனை நாமே ஆக்கினோம்.
74. ஆகவே, (நபியே! இவைகளுக்கு நன்றி செலுத்தும் வகையில்) மகத்தான உமதிரட்சகனின் பெயரைக்கொண்டு நீர் துதி செய்துகொண்டிருப்பீராக!
75. நட்சத்திரங்கள் (விழுந்து) மறையுமிடங்கள் மீது நான் சத்தியம் செய்கின்றேன்.
76. நீங்கள் அறிந்திருந்தால், நிச்சயமாக இது மகத்தானதொரு சத்தியமென்பதைத் தெரிந்துகொள்வீர்கள்.

اِنَّهٗ لَقُرْاٰنٌ كَرِيْمٌ ﴿۷۷﴾ فِيْ كِتٰبٍ مَّكْنُوْنٍ ﴿۷۸﴾ لَّا يَمَسُّهٗۤ اِلَّا الْمُطَهَّرُوْنَ ﴿۷۹﴾
تَنْزِيْلٌ مِّنْ رَّبِّ الْعٰلَمِيْنَ ﴿۸۰﴾ اَفَبِهٰذَا الْحَدِيْثِ اَنْتُمْ مُّدْهِنُوْنَ ﴿۸۱﴾
وَتَجْعَلُوْنَ رِزْقَكُمْ اَنَّكُمْ تُكَذِّبُوْنَ ﴿۸۲﴾ فَلَوْلَاۤ اِذَا بَلَغَتِ الْحُلْقُوْمَ ﴿۸۳﴾
وَاَنْتُمْ حِيْنَئِذٍ تَنْظُرُوْنَ ﴿۸۴﴾ وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْكُمْ وَلٰكِنْ لَّا
تُبْصِرُوْنَ ﴿۸۵﴾ فَلَوْلَاۤ اِنْ كُنْتُمْ غَيْرَ مَدِيْنِيْنَ ﴿۸۶﴾ تَرْجِعُوْنَهَاۤ اِنْ
كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۸۷﴾ فَاَمَّاۤ اِنْ كَانَ مِنَ الْمُقَرَّبِيْنَ ﴿۸۸﴾ فَرَوْحٌ وَّ
رَيْحَانٌ ۙ وَّجَنَّتُ نَعِيْمٍ ﴿۸۹﴾ وَاَمَّاۤ اِنْ كَانَ مِنْ اَصْحٰبِ الْيَمِيْنِ ﴿۹۰﴾
فَسَلٰمٌ لَّكَ مِنْ اَصْحٰبِ الْيَمِيْنِ ﴿۹۱﴾ وَاَمَّاۤ اِنْ كَانَ مِنَ الْمُكَذِّبِيْنَ
الضَّآلِّيْنَ ﴿۹۲﴾ فَنُزُلٌ مِّنْ حَمِيْمٍ ﴿۹۳﴾ وَّتَصْلِيَةُ جَحِيْمٍ ﴿۹۴﴾ اِنَّ
هٰذَا لَهُوَ حَقُّ الْيَقِيْنِ ﴿۹۵﴾ فَسَبِّحْ بِاسْمِ رَبِّكَ الْعَظِيْمِ ﴿۹۶﴾ ع ۳ ۲۲ ۱۶

سُوْرَةُ الْحَدِيْدِ مَدَنِيَّةٌ وَهِيَ تِسْعٌ وَّعِشْرُوْنَ اٰيَةً وَّاَرْبَعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
سَبَّحَ لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۱﴾ لَهٗ مُلْكُ
السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ يُحْيٖ وَيُمِيْتُ ۚ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿۲﴾
هُوَ الْاَوَّلُ وَالْاٰخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ ۚ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ﴿۳﴾

77. நிச்சயமாக இது மிக கண்ணியமிக்க குர்ஆனாகும்.
78. இது (லவ் ஹுல் மஹ்ஃபூள் என்னும்) பாதுகாக்கப்பட்ட புத்தகத்தில் (எழுதப்பட்டுள்ளது)_
79. பரிசுத்தமானவர்களைத் தவிர,(மற்றெவரும்)இதனைத் தொடமாட்டார்கள்.
80. அகிலத்தாரின் இரட்சகனால்(இது) இறக்கப்பட்டது.
81. ஆகவே, இச்செய்தியை நீங்கள் அலட்சியம் செய்பவர்களாக இருக்கின்றீர்களா?
82.(அல்லாஹ் அளித்துள்ளவற்றுக்கு) உங்கள் நன்றியை நிச்சயமாக நீங்கள் பொய்ப் படுத்துவதையே (பிரதியாக) ஆக்குகின்றீர்களா.
83. (உங்களில் மரணிக்கும் ஒருவரின் உயிர்_)அது தொண்டைக் குழியை அடைந்து விடுமானால்_
84. அந்நேரத்தில் நீங்கள் (சகராத்_ மரணவேதனையில் சிக்கித்தவிப்பதை) பார்க்கிறீர்கள்.
85. நாமோ உங்களைவிட அவருக்கு மிகச் சமீபமாக இருக்கின்றோம்; எனினும் நீங்கள் பார்ப்பதில்லை.
86. ஆகவே நீங்கள் (யாருடைய) அதிகாரத்திற்கு(ம்) கட்டுப்படாதவர்களாக இருந்தால்_
87. நீங்கள் உண்மையானவர்களாக இருந்தால், அ(வருடைய உயிரான)தை நீங்கள் அவரின் பால் மீளவைத்திருக்கலாமே?
88. ஆகவே, ( அல்லாஹ்வுக்கு) நெருக்கமாக்கப் பட்டவர்களில் உள்ளவராக அவர் இருந்தால்_,
89. அப்போது அவருக்கு சுகமும், நல்லுணவும், அருட்கொடையுடைய சுவனமும் உண்டு.
90. அன்றியும் அவர் வலப்புறத்தாரில் உள்ளவராக இருந்தால்_
91. (அவரிடம்,) "வலப்புறத்தாரிலிருந்து உமக்குச்சாந்தி உண்டாவதாக!" (என்று கூறப்படும்).
92. அன்றியும் அவர் வழி கெட்டோரரான (இவ்வேதத்தைப்) பொய்யாக்குகின்ற வர்களில் உள்ளவராக இருந்தால்_
93. கொதித்து அதன் உச்சத்தை அடைந்துவிட்ட நீரிலிருந்தே (அவருக்கு) விருந்துண்டு_
94. இன்னும், நரகத்தில் நுழைவித்தலும் உண்டு.
95. நிச்சயமாக இது(மிக்க) உறுதியான உண்மையாகும்.
96. ஆகவே (நபியே!) மகத்தான உமதிரட்சகனின் பெயரை (க்கூறி) துதி செய்வீராக.

---

அத்தியாயம் : 57

## அல் ஹதீத் _ இரும்பு

வசனங்கள் : 29 மதனீ ருகூஃகள் : 4

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. வானங்கள் மற்றும் பூமியில் உள்ளவை அல்லாஹ்வை(ப் புகழ்ந்து) துதி செய்கின்றன. அவனே (யாவற்றையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்.
2. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அவனுக்கே உரியது; அவன் உயிர்ப்பிக்கின்றான்; அவனே மரணிக்குமாறும் செய்கின்றான்; மேலும் அவன், ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.
3. அவனே முதலாமவனும், கடைசியானவனும், (அவனுக்கு முன்னும், பின்னும் ஒன்றுமில்லை!) அவனே (சகலவற்றிற்கும்) மேலானவனும், அந்தரங்கமானவனும் (ஆவான்); மேலும், அவன் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் நன்கறிகிறவன்.

هُوَ الَّذِیْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ فِیْ سِتَّةِ اَیَّامٍ ثُمَّ اسْتَوٰى
عَلَى الْعَرْشِ ؕ یَعْلَمُ مَا یَلِجُ فِی الْاَرْضِ وَمَا یَخْرُجُ مِنْهَا وَمَا یَنْزِلُ
مِنَ السَّمَآءِ وَمَا یَعْرُجُ فِیْهَا ؕ وَهُوَ مَعَكُمْ اَیْنَ مَا كُنْتُمْ ؕ وَاللّٰهُ بِمَا
تَعْمَلُوْنَ بَصِیْرٌ ﴿۴﴾ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَاِلَى اللّٰهِ تُرْجَعُ
الْاُمُوْرُ ﴿۵﴾ یُوْلِجُ الَّیْلَ فِی النَّهَارِ وَیُوْلِجُ النَّهَارَ فِی الَّیْلِ ؕ وَهُوَ
عَلِیْمٌۢ بِذَاتِ الصُّدُوْرِ ﴿۶﴾ اٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَاَنْفِقُوْا مِمَّا
جَعَلَكُمْ مُّسْتَخْلَفِیْنَ فِیْهِ ؕ فَالَّذِیْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَاَنْفَقُوْا
لَهُمْ اَجْرٌ كَبِیْرٌ ﴿۷﴾ وَمَا لَكُمْ لَا تُؤْمِنُوْنَ بِاللّٰهِ ۚ وَالرَّسُوْلُ یَدْعُوْكُمْ
لِتُؤْمِنُوْا بِرَبِّكُمْ وَقَدْ اَخَذَ مِیْثَاقَكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِیْنَ ﴿۸﴾
هُوَ الَّذِیْ یُنَزِّلُ عَلٰى عَبْدِهٖۤ اٰیٰتٍۭ بَیِّنٰتٍ لِّیُخْرِجَكُمْ مِّنَ
الظُّلُمٰتِ اِلَى النُّوْرِ ؕ وَاِنَّ اللّٰهَ بِكُمْ لَرَءُوْفٌ رَّحِیْمٌ ﴿۹﴾ وَ
مَا لَكُمْ اَلَّا تُنْفِقُوْا فِیْ سَبِیْلِ اللّٰهِ وَلِلّٰهِ مِیْرَاثُ السَّمٰوٰتِ وَ
الْاَرْضِ ؕ لَا یَسْتَوِیْ مِنْكُمْ مَّنْ اَنْفَقَ مِنْ قَبْلِ الْفَتْحِ وَقٰتَلَ ؕ
اُولٰٓئِكَ اَعْظَمُ دَرَجَةً مِّنَ الَّذِیْنَ اَنْفَقُوْا مِنْۢ بَعْدُ وَقٰتَلُوْا ؕ
وَكُلًّا وَّعَدَ اللّٰهُ الْحُسْنٰى ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِیْرٌ ﴿۱۰﴾ ع ۱ ع ۱۷

4. அவன் எத்தகையவனென்றால், வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான்; பின்னர், (தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீதிருப்பது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அர்ஷின் மீது உயர்ந்து(நிலைபெற்று)விட்டான்; பூமியில் நுழைவதையும், அதிலிருந்து வெளிப்படுவதையும், வானத்திலிருந்து இறங்குவதையும், அதில் ஏறுவதையும் அவன் நன்கறிவான்; நீங்கள் எங்கிருந்த போதிலும், அவன் (அறிவாலும், ஆற்றலாலும்) உங்களுடன் இருக்கிறான்; மேலும், அல்லாஹ் நீங்கள் செய்பவைகளை நன்கு பார்க்கிறவன்.

5. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அவனுக்கே உரியது; அன்றியும் அல்லாஹ்வின் பக்கமே காரியங்கள் (யாவும்) திருப்பப்படும்.

6. இரவைப் பகலில் அவன் நுழைவிக்கிறான்; மேலும் பகலை இரவில் நுழைவிக்கின்றான். (தனது அடியார்களின்) இதயங்களில் உள்ளவற்றையும் அவன் நன்கறிகிறவன்.

7. (ஆகவே மனிதர்களே! நீங்கள்) அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விசுவாசியுங்கள்; அன்றியும், எதில் உங்களை அவன் பின்தோன்றல்களாக ஆக்கிஇருக்கிறானோ, அதிலிருந்து (தர்மமாகச்) செலவு செய்யுங்கள்; ஆகவே, உங்களில் விசுவாசங்கொண்டு, (தர்மமாகச்) செலவுசெய்கின்றார்களே அத்தகையோர்_ அவர்களுக்குப் பெரியதொரு கூலியுண்டு.

8. (நம்முடைய) தூதர், உங்களுடைய இரட்சகனை நீங்கள் விசுவாசிக்குமாறு உங்களை அழைப்பவராக இருக்க, மேலும், (இதைப்பற்றி முன்னதாக அல்லாஹ்) நிச்சயமாக உங்களுடைய வாக்குறுதியை அவன் வாங்கியிமிருக்க_ (மனிதர்களே!) நீங்கள் அல்லாஹ்வைக் கொண்டு விசுவாசம் கொள்ளாதிருக்க உங்களுக்கென்ன நேர்ந்தது? நீங்கள் (உண்மையாகவே) விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால் (அல்லாஹ்வையே நம்புங்கள்).

9. அவன் எத்தகையவனென்றால், உங்களை (ப் பாவத்தின்) இருள்களிலிருந்து (நேர் வழியின்) பிரகாசத்தின்பால் வெளிப்படுத்துவதற்காக, அவன் தனது அடியார் மீது தெளிவான வசனங்களை இறக்கிவைக்கின்றான்; மேலும், நிச்சயமாக அல்லாஹ் உங்கள்மீது மிக இரக்கமுடையவன்; மிக்க கிருபையுடையவன்.

10. மேலும் வானங்கள் மற்றும் பூமியிலுள்ளவைகளின் வாரிசுரிமை அல்லாஹ்வுக்கே உரியதாயிருக்க _ அல்லாஹ்வுடைய பாதையில் நீங்கள் செலவு செய்யாமலிருக்க உங்களுக்கென்ன நேர்ந்தது? உங்களில் (மக்கா)வெற்றிக்கு முன்னர் யார்(தன் பொருளைச்) செலவும் செய்து , யுத்தமும் புரிந்தாரோ அவருக்கு உங்களில் (யாரும்) நிகராகமாட்டார். (முந்திய) அவர்கள் , (மக்கா வெற்றிக்குப்) பிறகு செலவும் செய்து போரிட்டார்களே அத்தகையோரைவிட பதவியால் மிக மகத்தானவர்கள் ; (எனினும்,) ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் நன்மையையே வாக்களித்திருக்கிறான்.மேலும், அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்குணர்பவன்.

مَنْ ذَا الَّذِيْ يُقْرِضُ اللّٰهَ قَرْضًا حَسَنًا فَيُضٰعِفَهٗ لَهٗ وَلَهٗۤ
اَجْرٌ كَرِيْمٌ ﴿١١﴾ يَوْمَ تَرَى الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ يَسْعٰى نُوْرُهُمْ
بَيْنَ اَيْدِيْهِمْ وَبِاَيْمَانِهِمْ بُشْرٰىكُمُ الْيَوْمَ جَنّٰتٌ تَجْرِيْ مِنْ تَحْتِهَا
الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا ؕ ذٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيْمُ ۚ﴿١٢﴾ يَوْمَ يَقُوْلُ
الْمُنٰفِقُوْنَ وَالْمُنٰفِقٰتُ لِلَّذِيْنَ اٰمَنُوا انْظُرُوْنَا نَقْتَبِسْ مِنْ
نُّوْرِكُمْ ۚ قِيْلَ ارْجِعُوْا وَرَآءَكُمْ فَالْتَمِسُوْا نُوْرًا ؕ فَضُرِبَ بَيْنَهُمْ
بِسُوْرٍ لَّهٗ بَابٌ ؕ بَاطِنُهٗ فِيْهِ الرَّحْمَةُ وَظَاهِرُهٗ مِنْ قِبَلِهِ الْعَذَابُ ؕ﴿١٣﴾
يُنَادُوْنَهُمْ اَلَمْ نَكُنْ مَّعَكُمْ ؕ قَالُوْا بَلٰى وَلٰكِنَّكُمْ فَتَنْتُمْ اَنْفُسَكُمْ وَ
تَرَبَّصْتُمْ وَارْتَبْتُمْ وَغَرَّتْكُمُ الْاَمَانِيُّ حَتّٰى جَآءَ اَمْرُ اللّٰهِ وَ
غَرَّكُمْ بِاللّٰهِ الْغَرُوْرُ ﴿١٤﴾ فَالْيَوْمَ لَا يُؤْخَذُ مِنْكُمْ فِدْيَةٌ وَّلَا مِنَ
الَّذِيْنَ كَفَرُوْا ؕ مَاْوٰىكُمُ النَّارُ ؕ هِيَ مَوْلٰىكُمْ ؕ وَبِئْسَ الْمَصِيْرُ ﴿١٥﴾
اَلَمْ يَاْنِ لِلَّذِيْنَ اٰمَنُوْۤا اَنْ تَخْشَعَ قُلُوْبُهُمْ لِذِكْرِ اللّٰهِ وَمَا نَزَلَ
مِنَ الْحَقِّ ۙ وَلَا يَكُوْنُوْا كَالَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ مِنْ قَبْلُ فَطَالَ
عَلَيْهِمُ الْاَمَدُ فَقَسَتْ قُلُوْبُهُمْ ؕ وَكَثِيْرٌ مِّنْهُمْ فٰسِقُوْنَ ﴿١٦﴾ اِعْلَمُوْۤا اَنَّ
اللّٰهَ يُحْيِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا ؕ قَدْ بَيَّنَّا لَكُمُ الْاٰيٰتِ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ ﴿١٧﴾

11. அல்லாஹ்வுக்கு அழகிய கடனாகக் கடன் கொடுப்பவர் யார்? அவருக்கு அதனை அவன் இரட்டிப்பாக்கி வைக்கிறான்; (அன்றியும்,) அவருக்கு மிக்க கண்ணியமான நற்கூலியும் உண்டு.

12. (நபியே!) விசுவாசங்கொண்ட ஆண்களையும், விசுவாசங்கொண்ட பெண்களையும் நீர் காணும் (அந்) நாளில், அவர்களுடைய பிரகாசம் அவர்களுக்கு முன்னும், அவர்களுடைய வலப்புறங்களிலும் விரைந்து(சென்று) கொண்டிருக்கும்; "இன்றைய தினம் உங்களுக்கு நன்மாராயம் சுவனங்களாகும்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அவற்றில் நீங்கள் நிரந்தரமாக(த் தங்கி) இருப்பவர்கள்; அதுவே மகத்தான வெற்றியாகும்" (என்று மலக்குகள் கூறுவார்கள்).

13. (வேஷதாரிகளான_) முனாஃபிக்கான ஆண்களும், முனாஃபிக்கான பெண்களும் விசுவாசங்கொண்டவர்களிடம்," நீங்கள் (முன் செல்லாது எங்களுக்காகச் சிறிது தாமதித்து)எங்களைப்பாருங்கள், உங்களுடைய பிரகாசத்திலிருந்து நாங்கள் (கொஞ்சம் ஒளியை) எடுத்துக் கொள்கிறோம்" என்று கூறும் நாளில், (அவர்களிடம்,) "நீங்கள் உங்கள் பின்புறம் (திரும்பிச்) சென்று பிரகாசத்தைத் தேடிக்கொள்ளுங்கள்" என்று கூறப்படும்; அப்பொழுது, அவர்களுக்கிடையில் ஒரு தடுப்பு எழுப்பப்படும். அதற்கு வாசலும் இருக்கும்; (விசுவாசிகள் இருக்கக்கூடிய) அதன் உட்புறம் _அதில் (அல்லாஹ்வின்) அருளும், அதன் வெளிப்புறம் _ அதன் பக்கமிருந்து வேதனையும் இருக்கும்.

14. இவர்கள் (உலகத்தில்) "நாங்கள் உங்களுடன் இருக்கவில்லையா?" என்று (விசுவாசிகளாகிய) அவர்களை அழைப்பார்கள்; (அதற்கு) அவர்கள், (இவர்களிடம்) "மெய்தான்! ஆயினும், நீங்களே உங்களை (நயவஞ்சகத்தால்) துன்பத்திற்குள்ளாக்கிக் கொண்டீர்கள்; அன்றியும், (நாங்கள் அழிக்கப்படுவதை) நீங்கள் எதிர்பார்த்தீர்கள்; (அல்லாஹ்வின் ஏகத்துவத்திலும், நபியின் தூதிலும்) நீங்கள் சந்தேகித்துக் கொண்டுமிருந்தீர்கள்; அல்லாஹ்வுடைய கட்டளை(யாகிய மரணம்) வரும்வரையில், (உங்களுடைய) பேராசைகள் உங்களைச் சதிசெய்தும் விட்டன; மேலும், ஏமாற்றுகிறவ(னாகிய ஷைத்தா)ன், அல்லாஹ்வைப்பற்றி உங்களை ஏமாற்றியும் விட்டான்.

15. ஆகவே, இன்றையத் தினம் உங்களிடமிருந்தோ, அல்லது நிராகரித்தவர்களிடமிருந்தோ (நீங்கள் அடையவேண்டிய தண்டனைக்குப் பதிலாக) யாதொரு நஷ்ட ஈடும் எடுக்கப்படமாட்டாது; நீங்கள் தங்குமிடம் நரகந்தான்; அதுதான் உங்களுக்குத் துணை; சென்றடையும் இடமான அது மிகக்கெட்டது( என்று கூறப்படும்).

16. விசுவாசங் கொண்டிருந்தோருக்கு, அவர்களது இதயங்கள், அல்லாஹ்வையும், உண்மையிலிருந்து இறங்கிய (வேதத்)தையும் நினைவு கூர்வதற்காக, பயந்து நடுங்கக்கூடிய நேரம் (இன்னும்) வரவில்லையா? மேலும், இவர்களுக்கு முன்னர் வேதங்கொடுக்கப்பட்டோரைப் போன்று இவர்களும் ஆகிவிட வேண்டாம்; பின்னர், அவர்கள் மீது (நபிமார்கள் வருகையின்) ஒரு காலம் நீண்டுவிட்டது; ஆகவே, அவர்களுடைய இதயங்கள் கடினமாகிவிட்டன; மேலும், அவர்களில் பெரும்பாலோர் பாவிகள்.

17. (மனிதர்களே!) நிச்சயமாக அல்லாஹ், பூமியை_ அது (வரண்டு)இறந்ததன் பின்னர் அவன் உயிர்ப்பிக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்; நீங்கள் விளங்கிக்கொள்வதற்காக நிச்சயமாக (நம்முடைய) வசனங்களை நாம் உங்களுக்குத் தெளிவாக்கியிருக்கின்றோம்.

اِنَّ الْمُصَّدِّقِيْنَ وَالْمُصَّدِّقٰتِ وَاَقْرَضُوا اللّٰهَ قَرْضًا حَسَنًا يُّضٰعَفُ
لَهُمْ وَلَهُمْ اَجْرٌ كَرِيْمٌ ﴿١٨﴾ وَالَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَرُسُلِهٖٓ اُولٰٓئِكَ هُمُ
الصِّدِّيْقُوْنَ ۖ وَالشُّهَدَآءُ عِنْدَ رَبِّهِمْ ۭ لَهُمْ اَجْرُهُمْ وَنُوْرُهُمْ ۭ وَ
الَّذِيْنَ كَفَرُوْا وَكَذَّبُوْا بِاٰيٰتِنَآ اُولٰٓئِكَ اَصْحٰبُ الْجَحِيْمِ ﴿١٩﴾ اِعْلَمُوْٓا اَنَّمَا ٢ ع ٩ ١٨
الْحَيٰوةُ الدُّنْيَا لَعِبٌ وَّلَهْوٌ وَّزِيْنَةٌ وَّتَفَاخُرٌۢ بَيْنَكُمْ وَتَكَاثُرٌ فِي
الْاَمْوَالِ وَالْاَوْلَادِ ۭ كَمَثَلِ غَيْثٍ اَعْجَبَ الْكُفَّارَ نَبَاتُهٗ ثُمَّ يَهِيْجُ
فَتَرٰىهُ مُصْفَرًّا ثُمَّ يَكُوْنُ حُطٰمًا ۭ وَفِي الْاٰخِرَةِ عَذَابٌ شَدِيْدٌ ۙ وَّمَغْفِرَةٌ
مِّنَ اللّٰهِ وَرِضْوَانٌ ۭ وَمَا الْحَيٰوةُ الدُّنْيَآ اِلَّا مَتَاعُ الْغُرُوْرِ ﴿٢٠﴾
سَابِقُوْٓا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا كَعَرْضِ السَّمَآءِ وَ
الْاَرْضِ ۙ اُعِدَّتْ لِلَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَرُسُلِهٖ ۭ ذٰلِكَ فَضْلُ اللّٰهِ
يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ ۭ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ﴿٢١﴾ مَآ اَصَابَ مِنْ مُّصِيْبَةٍ
فِي الْاَرْضِ وَلَا فِيْٓ اَنْفُسِكُمْ اِلَّا فِيْ كِتٰبٍ مِّنْ قَبْلِ اَنْ نَّبْرَاَهَا ۭ اِنَّ
ذٰلِكَ عَلَى اللّٰهِ يَسِيْرٌ ﴿٢٢﴾ لِّكَيْلَا تَاْسَوْا عَلٰى مَا فَاتَكُمْ وَلَا تَفْرَحُوْا بِمَآ
اٰتٰىكُمْ ۭ وَاللّٰهُ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُوْرِ ﴿٢٣﴾ الَّذِيْنَ يَبْخَلُوْنَ وَيَاْمُرُوْنَ
النَّاسَ بِالْبُخْلِ ۭ وَمَنْ يَّتَوَلَّ فَاِنَّ اللّٰهَ هُوَ الْغَنِيُّ الْحَمِيْدُ ﴿٢٤﴾

18. நிச்சயமாக தர்மம் செய்யும் ஆண்களும், தர்மம் செய்யும் பெண்களும், அல்லாஹ்வுக்காக(ப் பிறருக்குப் பொருளை) அழகான கடனாகக் கடன் கொடுத்தார்களே அவர்களும்_அவர்களுக்கு அது இரு மடங்காக (அதன் பலன்) ஆக்கப்படுகின்றது; இன்னும் அவர்களுக்கு மிக்க கண்ணியமான (நற்)கூலியும் உண்டு.

19. மேலும், அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் விசுவாசிக்கின்றார்களே அத்தகையோர்_ அவர்கள்தாம் தங்கள் இரட்சகனிடத்தில் உண்மைப்படுத்தியவர்களும், (தியாகிகளான) ஷுஹதாக் களும் ஆவர். (மேற்கூறப்பட்ட இருசாரார்களாகிய) அவர்களுக்கு அவர்களுடைய கூலியும், (அவர்களுக்கு வழியை அறிவிக்கக் கூடிய) அவர்களுடைய பிரகாசமும் உண்டு; இன்னும், நிராகரித்து, நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குகின்றார்களே அத்தகையோர்_ அவர்கள் நரகவாசிகள்.

20. (மனிதர்களே!) நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கையெல்லாம் விளையாட்டும், வீணும், அலங்காரமும், (அது) உங்களுக்கிடையில் பெருமையடித்துக் கொள்வதும், செல்வங்களிலும், பிள்ளைகளிலும் (ஒருவருக்கொருவர்) அதிகப்படுத்திக் கொள்வதும்தான்; (இந்நிலை) ஒரு மழையைப் போன்றாகும்; (அதன் மூலம் முளைத்த) பயிர்கள் நன்கு வளர்ந்து விவசாயிகளை அதிசயத்தில் ஆழ்த்தியது; பின்னர், அது காய்ந்து விடுகிறது; (அப்போது) அதை மஞ்சளாகிவிடுவதை நீர் காண்கின்றீர்; பின்னர், அது சருகுகளாகிவிடுகின்றது (இவ்வுலக வாழ்க்கையும் அவ்வாறே இருக்கிறது); மறுமையிலோ, (அவர்களில் பலருக்குக்) கொடிய வேதனையும்,(சிலருக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும், பொருத்தமும் கிடைக்கின்றன. ஆகவே, இவ்வுலக வாழ்க்கை(மனிதனை) மயக்கும் (சொற்ப) இன்பமேயன்றி வேறில்லை.

21. (ஆகவே மனிதர்களே!) உங்கள் இரட்சகனின் மன்னிப்பின் பக்கமும், சுவனபதியின் பக்கமும் நீங்கள் முந்துங்கள்;அதன் அகலம்,வானம் மற்றும் பூமியின் அகலத்தைப் போன்றதாகும்; அது அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் விசுவாசங் கொண்டோருக்காக தயாராக்கப்பட்டிருக்கின்றது. அது அல்லாஹ்வுடைய பேரருளாகும்_ அதனை அவன், தான் நாடியவருக்குக் கொடுக்கின்றான்; மேலும், அல்லாஹ் மகத்தான பேரருளுடையவன்.

22. எந்தத் துன்பமும் _அதனை நாம் சிருஷ்டிப்பதற்கு முன்னதாக, (லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்)புத்தகத்தில்(பதியப்பட்டு) இருந்தே தவிர_ பூமியிலோ, அல்லது உங்களிலோ ஏற்படுவதில்லை ; நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக்க எளிதானதாகும்.

23. உங்களுக்கு தவறிவிட்டதின் மீது நீங்கள் கவலைப்படாமலிருப்பதற்காகவும், (அல்லாஹ்வாகிய) அவன் உங்களுக்குக் கொடுத்ததைப் பற்றி நீங்கள் (வரம்புமீறி) மகிழ்ச்சி கொள்ளாதிருப்பதற்காகவும் (இதனை உங்களுக்கு அறிவிக்கின்றான்) ; கர்வங்கொண்டு, தற்பெருமையடிப்போர் ஒவ்வொருவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.

24. அவர்கள் எத்தகையோரென்றால், உலோபத்தனம் செய்வார்கள்; (மற்ற) மனிதர்களையும் உலோபத்தனத்தைக் கொண்டு ஏவுவார்கள்; இன்னும், எவர் (தன் பொருளைச் செலவு செய்வதிலிருந்து) புறக்கணித்துவிடுகிறாரோ, அப்பொழுது நிச்சயமாக அல்லாஹ்_ அவனே தேவையற்றவன், பெரும் புகழுடையவன்.

لَقَدْ أَرْسَلْنَا رُسُلَنَا بِالْبَيِّنَٰتِ وَأَنزَلْنَا مَعَهُمُ الْكِتَٰبَ
وَالْمِيزَانَ لِيَقُومَ النَّاسُ بِالْقِسْطِ ۚ وَأَنزَلْنَا الْحَدِيدَ فِيهِ
بَأْسٌ شَدِيدٌ وَمَنَٰفِعُ لِلنَّاسِ وَلِيَعْلَمَ اللَّهُ مَن يَنصُرُهُ وَ
رُسُلَهُ بِالْغَيْبِ ۚ إِنَّ اللَّهَ قَوِيٌّ عَزِيزٌ ﴿٢٥﴾ وَلَقَدْ أَرْسَلْنَا نُوحًا وَ ع ۳ ۱۹
إِبْرَٰهِيمَ وَجَعَلْنَا فِي ذُرِّيَّتِهِمَا النُّبُوَّةَ وَالْكِتَٰبَ فَمِنْهُم مُّهْتَدٍ ۚ
وَكَثِيرٌ مِّنْهُمْ فَٰسِقُونَ ﴿٢٦﴾ ثُمَّ قَفَّيْنَا عَلَىٰ ءَاثَٰرِهِم بِرُسُلِنَا وَقَفَّيْنَا
بِعِيسَى ابْنِ مَرْيَمَ وَءَاتَيْنَٰهُ الْإِنجِيلَ ۙ وَجَعَلْنَا فِي قُلُوبِ الَّذِينَ
اتَّبَعُوهُ رَأْفَةً وَرَحْمَةً ۚ وَرَهْبَانِيَّةً ابْتَدَعُوهَا مَا كَتَبْنَٰهَا
عَلَيْهِمْ إِلَّا ابْتِغَاءَ رِضْوَٰنِ اللَّهِ فَمَا رَعَوْهَا حَقَّ رِعَايَتِهَا ۚ
فَـَٔاتَيْنَا الَّذِينَ ءَامَنُوا مِنْهُمْ أَجْرَهُمْ ۖ وَكَثِيرٌ مِّنْهُمْ فَٰسِقُونَ ﴿٢٧﴾
يَٰٓأَيُّهَا الَّذِينَ ءَامَنُوا اتَّقُوا اللَّهَ وَءَامِنُوا بِرَسُولِهِ يُؤْتِكُمْ
كِفْلَيْنِ مِن رَّحْمَتِهِ وَيَجْعَل لَّكُمْ نُورًا تَمْشُونَ بِهِ وَيَغْفِرْ لَكُمْ ۚ
وَاللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٢٨﴾ لِّئَلَّا يَعْلَمَ أَهْلُ الْكِتَٰبِ أَلَّا يَقْدِرُونَ
عَلَىٰ شَيْءٍ مِّن فَضْلِ اللَّهِ وَأَنَّ الْفَضْلَ بِيَدِ اللَّهِ يُؤْتِيهِ مَن
يَشَاءُ ۚ وَاللَّهُ ذُو الْفَضْلِ الْعَظِيمِ ﴿٢٩﴾ ع ۴ ۲۰

25. நிச்சயமாக நாம், நம்முடைய தூதர்களை (அத்தாட்சிகளில்) தெளிவானவற்றுடன் அனுப்பிவைத்தோம்; அவர்களுடன் வேதத்தையும், மனிதர்கள் நீதியைக் கொண்டு நிலைத்திருப்பதற்காக தராசையும் இறக்கினோம்; இன்னும், இரும்பையும் நாமே இறக்கினோம் ; அதில் (போருக்கு வேண்டிய) கடுமையான சக்தியும், மனிதர்களுக்குப் பயன்களும் இருக்கின்றன. இதன்மூலம் அவனுக்கும், அவனுடைய தூதர்களுக்கும் மறைவாக உதவி செய்வோர் யார் என்பதை அல்லாஹ் (சோதித்து) அறிந்து கொள்வதற்காகவும் (இவ்வாறு செய்துள்ளான்); நிச்சயமாக அல்லாஹ் வலிமை மிக்கவன்,(யாவரையும்) மிகைத்தவன்.

26. மேலும், நூஹையும், இப்றாஹீமையும் திட்டமாக நாம் (நம்முடைய தூதர்களாக) அனுப்பிவைத்தோம்; அவ்விருவருடைய சந்ததியில் நபித்துவத்தையும், வேதத்தையும் ஆக்கியிருந்தோம்; அவர்களில் நேர்வழி பெற்றோரும் இருந்தனர்; இன்னும் அவர்களில் பெரும்பாலோர் பாவிகளாக இருந்தனர்.

27. (ஆகவே, அவர்களுக்குப்) பின்னர், அவர்களுடைய (அடிச்)சுவடுகளின் மீது (ஏனைய) தூதர்களை ஒருவர் பின் ஒருவராக நாம் தொடரச்செய்தோம்; அவ்வாறே மர்யமுடைய மகன் ஈஸாவையும் நாம் தொடரச்செய்தோம்; அவருக்கு இன்ஜீலையும் (வேதமாக) நாம் கொடுத்தோம்; இவரைப் பின்பற்றி இருந்தவர்களுடைய இதயங்களில், இரக்கத்தையும், கிருபையையும் நாம் ஆக்கினோம்; இன்னும் துறவறத்தை—அதை அவர்கள் புதிதாக உண்டாக்கிக் கொண்டார்கள்; அதை அவர்கள்மீது (கடமையாக) நாம் விதிக்கவில்லை; எனினும், அல்லாஹ்வின் பொருத்தத்தைத் தேடியே (அவர்கள் அதனை உண்டாக்கிக் கொண்டார்கள்); பின்னர், அதனைப் பேணுகின்ற முறைப்படி அவர்கள் அதைப்பேணவில்லை; (அதன்) பின், (நபியே!) அவர்களில் விசுவாசம் கொண்டிருந்தார்களே அத்தகையோருக்கு — அவர்களுடைய கூலியை நாம் கொடுத்தோம், (எனினும்,) அவர்களில் பெரும்பாலோர் (நீர் கொண்டுவந்ததை நிராகரிக்கும்) பாவிகளாகவே இருக்கின்றனர்.

28. ஆகவே, (ஈஸாவை) விசுவாசம் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து, அவனுடைய (இத்)தூதரையும் விசுவாசியுங்கள்; உங்களுக்கு அவனுடைய அருளிலிருந்து இரண்டு பங்கு (கூலி) கொடுப்பான்; உங்களுக்கு ஒளியையும் அவன் ஆக்குவான், நீங்கள் அதனைக் கொண்டு (நேர் வழியில்) நடப்பீர்கள்; (உங்களுடைய பாவங்களையும்) உங்களுக்காக அவன் மன்னிப்பான்; மேலும், அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன்.

29. (விசுவாசம் கொண்டோர்க்கு) அல்லாஹ்வுடைய பேரருளிலிருந்து (கிடைத்த) எப்பொருளின் மீதும் (அதைப்பெற வேதக்காரர்களாகிய) அவர்கள் சக்தி பெறமாட்டார்கள் என வேதத்தையுடையவர்கள் அறிந்து கொள்வதற்காக (இதனை அவன் உங்களுக்கு அறிவித்தான்); மேலும், பேரருள் நிச்சயமாக அல்லாஹ்வின் கையில் இருக்கிறது; அவன் நாடியவர்களுக்கு அதனை அளிக்கின்றான்; மேலும், அல்லாஹ் மகத்தான பேரருளுடையவன்.

سُورَةُ الْمُجَادَلَةِ مَدَنِيَّةٌ وَهِيَ اثْنَتَانِ وَعِشْرُونَ اٰيَةً وَثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ○

قَدْ سَمِعَ اللّٰهُ قَوْلَ الَّتِیْ تُجَادِلُكَ فِیْ زَوْجِهَا وَ
تَشْتَكِیْۤ اِلَى اللّٰهِ ۖۗ وَاللّٰهُ یَسْمَعُ تَحَاوُرَكُمَا ؕ اِنَّ اللّٰهَ سَمِیْعٌۢ بَصِیْرٌ ﴿١﴾
اَلَّذِیْنَ یُظٰهِرُوْنَ مِنْكُمْ مِّنْ نِّسَآىِٕهِمْ مَّا هُنَّ اُمَّهٰتِهِمْ ؕ اِنْ اُمَّهٰتُهُمْ
اِلَّا الّٰٓـِٔیْ وَلَدْنَهُمْ ؕ وَاِنَّهُمْ لَیَقُوْلُوْنَ مُنْكَرًا مِّنَ الْقَوْلِ وَزُوْرًا ؕ وَ
اِنَّ اللّٰهَ لَعَفُوٌّ غَفُوْرٌ ﴿٢﴾ وَالَّذِیْنَ یُظٰهِرُوْنَ مِنْ نِّسَآىِٕهِمْ ثُمَّ
یَعُوْدُوْنَ لِمَا قَالُوْا فَتَحْرِیْرُ رَقَبَةٍ مِّنْ قَبْلِ اَنْ یَّتَمَآسَّا ؕ ذٰلِكُمْ
تُوْعَظُوْنَ بِهٖ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِیْرٌ ﴿٣﴾ فَمَنْ لَّمْ یَجِدْ فَصِیَامُ
شَهْرَیْنِ مُتَتَابِعَیْنِ مِنْ قَبْلِ اَنْ یَّتَمَآسَّا ۚ فَمَنْ لَّمْ یَسْتَطِعْ فَاِطْعَامُ
سِتِّیْنَ مِسْكِیْنًا ؕ ذٰلِكَ لِتُؤْمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ ؕ وَتِلْكَ حُدُوْدُ اللّٰهِ ؕ
وَلِلْكٰفِرِیْنَ عَذَابٌ اَلِیْمٌ ﴿٤﴾ اِنَّ الَّذِیْنَ یُحَآدُّوْنَ اللّٰهَ وَرَسُوْلَهٗ
كُبِتُوْا كَمَا كُبِتَ الَّذِیْنَ مِنْ قَبْلِهِمْ وَقَدْ اَنْزَلْنَاۤ اٰیٰتٍۭ بَیِّنٰتٍ ؕ وَ
لِلْكٰفِرِیْنَ عَذَابٌ مُّهِیْنٌ ﴿٥﴾ یَوْمَ یَبْعَثُهُمُ اللّٰهُ جَمِیْعًا فَیُنَبِّئُهُمْ
بِمَا عَمِلُوْا ؕ اَحْصٰىهُ اللّٰهُ وَنَسُوْهُ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَیْءٍ شَهِیْدٌ ﴿٦﴾ ع ١

அத்தியாயம் : 58

# அல் முஜாதிலா _ தர்க்கிப்பவள்

வசனங்கள் : 22 மதனீ ருகூஉகள் : 3

## அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (நபியே!) தன் கணவனைப் பற்றி உம்மிடம் தர்க்கித்து, (அதைப் பற்றி) அல்லாஹ்விடமும் முறையிட்டாளே அத்தகையவளுடைய கூற்றை (முறை யீட்டை) த்திட்டமாக அல்லாஹ் செவியேற்றுக்கொண்டான்; அல்லாஹ் உங்களிருவரின் (வாக்கு) வாதத்தையும் செவியேற்றான்; நிச்சயமாக அல்லாஹ் மிகசெவியேற்கிறவன்;(அனைத்தையும்) பார்க்கிறவன்.

2. உங்களில் தம் மனைவியரைத்தாய்க்கு ஒப்பிட்டு (நீ என்மீது என் தாயைப் போன்றவள் எனக்) கூறிவிடுகிறார்களே அத்தகையோர்_(ஒப்பிட்டுக்கூறப்பட்ட மனைவியரான) அவர்கள் (ஒப்பிட்டுக் கூறிய) அவர்களுடைய தாய்மார்களல்லர்; அவர்களைப் பெற்றெடுத்தார்களே அத்தகை யோரைத்தவிர,(வேறு எவரும்) அவர்களுடைய தாய்மார்களல்லர்; மேலும், நிச்சயமாக (தம் மனைவியரைத் தாயென்று கூறினால்,கூறுகின்ற) அவர்கள் சொல்லால் வெறுக்கத்தக்கதையும், பொய்யையும் கூறுகின்றனர்; மேலும், நிச்சயமாக அல்லாஹ் (குற்றங்களை) மிகவும் பொறுப்பவன்; மிக்க மன்னிப்பவன்.

3. மேலும், தங்கள் மனைவியரைத் (தம்) தாய்க்கு ஒப்பிட்டுக்கூறி, பின்னர் தாம் கூறியவற்றிலிருந்து (திரும்பி தாம்பத்திய வாழ்க்கையில்) மீண்டு கொள்வார்களே அத்தகையோர்_ அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன்னர்,(பரிகாரமாக) ஓர் அடிமையை விடுதலை செய்தலாகும்;இது (அல்லாஹ்வின் சட்டமாகும்)இதனைக் கொண்டு நீங்கள் உபதேசிக்கப்படுகிறீர்கள்; மேலும், அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகிறவன்.

4. பின்னர், (அடிமையை_) எவர் பெற்றிருக்கவில்லையோ அவர், அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன்னர் (அதற்குள்ள பரிகாரம்)இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்பதாகும் ; (இவ்வாறு நோன்பு நோற்க) எவர் சக்தி பெறவில்லையோ, அப்பொழுதுஅவர் அறுபது ஏழைகளுக்கு (மத்திய தரமான) ஆகாரமளித்தலாகும்; இதுஅல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் நீங்கள் விசுவாசங் கொள்வதற்காக( இவ்வாறு இலேசாக்கிவைத்தான்) ; இன்னும், இவைகள் அல்லாஹ்வுடைய வரம்புகளாகும்;நிராகரிப்போருக்குத் துன்புறுத்தும் வேதனையுமுண்டு.

5. நிச்சயமாக அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் மாறு செய்கின்றார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு முன்னுள்ளோர் இழிவாக்கப் பட்டது போன்றே அவர்கள் இழிவாக்கப்படுவார்கள்; மேலும், திட்டமாக (இதைப்பற்றித்) தெளிவான வசனங்களை நாம் இறக்கியிருக்கின்றோம்; நிராகரிப்போருக்கு இழிவு தரும் வேதனையுமுண்டு.

6. அவர்கள் அனைவரையும் அல்லாஹ் (உயிர் கொடுத்து) எழுப்பும் நாளில், அவர்கள் செய்தவற்றை அவர்களுக்கு அவன் அறிவிப்பான்; அல்லாஹ் (அவர்கள் செய்த) அவற்றைக் கணக்கிட்டுவைத்துள்ளான்; (ஆனால்,) அவர்களோ அவற்றை மறந்து விட்டார்கள்; மேலும், அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் சாட்சியாக இருக்கின்றான்.

أَلَمْ تَرَ أَنَّ اللّٰهَ يَعْلَمُ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْأَرْضِ ۖ مَا يَكُونُ مِنْ
نَّجْوٰى ثَلٰثَةٍ إِلَّا هُوَ رَابِعُهُمْ وَلَا خَمْسَةٍ إِلَّا هُوَ سَادِسُهُمْ وَلَآ أَدْنٰى
مِنْ ذٰلِكَ وَلَآ أَكْثَرَ إِلَّا هُوَ مَعَهُمْ أَيْنَ مَا كَانُوا ۚ ثُمَّ يُنَبِّئُهُمْ بِمَا عَمِلُوا
يَوْمَ الْقِيٰمَةِ ۚ إِنَّ اللّٰهَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ ۝٧ أَلَمْ تَرَ إِلَى الَّذِينَ نُهُوا عَنِ
النَّجْوٰى ثُمَّ يَعُودُونَ لِمَا نُهُوا عَنْهُ وَيَتَنٰجَوْنَ بِالْإِثْمِ وَالْعُدْوٰنِ
وَمَعْصِيَتِ الرَّسُولِ ۫ وَإِذَا جَآءُوكَ حَيَّوْكَ بِمَا لَمْ يُحَيِّكَ بِهِ اللّٰهُ ۙ
وَيَقُولُونَ فِيٓ أَنْفُسِهِمْ لَوْلَا يُعَذِّبُنَا اللّٰهُ بِمَا نَقُولُ ۚ حَسْبُهُمْ جَهَنَّمُ ۚ
يَصْلَوْنَهَا ۚ فَبِئْسَ الْمَصِيرُ ۝٨ يٰٓأَيُّهَا الَّذِينَ آمَنُوٓا إِذَا تَنٰجَيْتُمْ
فَلَا تَتَنٰجَوْا بِالْإِثْمِ وَالْعُدْوٰنِ وَمَعْصِيَتِ الرَّسُولِ وَتَنٰجَوْا
بِالْبِرِّ وَالتَّقْوٰى ۖ وَاتَّقُوا اللّٰهَ الَّذِيٓ إِلَيْهِ تُحْشَرُونَ ۝٩ إِنَّمَا النَّجْوٰى
مِنَ الشَّيْطٰنِ لِيَحْزُنَ الَّذِينَ آمَنُوا وَلَيْسَ بِضَآرِّهِمْ شَيْئًا إِلَّا
بِإِذْنِ اللّٰهِ ۚ وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُونَ ۝١٠ يٰٓأَيُّهَا الَّذِينَ
آمَنُوٓا إِذَا قِيلَ لَكُمْ تَفَسَّحُوا فِي الْمَجٰلِسِ فَافْسَحُوا يَفْسَحِ اللّٰهُ
لَكُمْ ۚ وَإِذَا قِيلَ انْشُزُوا فَانْشُزُوا يَرْفَعِ اللّٰهُ الَّذِينَ آمَنُوا
مِنْكُمْ ۙ وَالَّذِينَ أُوتُوا الْعِلْمَ دَرَجٰتٍ ۚ وَاللّٰهُ بِمَا تَعْمَلُونَ خَبِيرٌ ۝١١

7. (நபியே!) நிச்சயமாக அல்லாஹ் வானங்களிலுள்ளவற்றையும், பூமியிலுள்ளவற்றையும் நன்கறிகின்றான் என்பதை நீர் பார்க்கவில்லையா? மூவரின் இரகசியத்தில் அவன் அவர்களில் நான்காவதாக இல்லாமலில்லை; ஐவருடைய(இரகசியத்)தில் அவன் அவர்களில் ஆறாவதாக இல்லாமலில்லை; அதைவிடக் குறைவாகவோ, அல்லது அதிகமாகவோ அவர்கள் எங்கிருந்தபோதிலும் அவன் அவர்களுடன் இல்லாமலில்லை; (எந்நிலையிலும் அவன் அவர்களுடைய இரகசியங்களை அறிந்து கொள்கிறான்.) பின்னர், அவர்கள் செய்தவற்றை அவர்களுக்கு மறுமை நாளில் அவன் அறிவிப்பான்; நிச்சயமாக அல்லாஹ், ஒவ்வொரு பொருளைப்பற்றியும் நன்கறிந்தவன்.

8. (நபியே!) இரகசியம் பேசுவதை விட்டும் தடுக்கப்பட்டார்களே அத்தகையோரை நீர் பார்க்கவில்லையா? பின்னர் எதை விட்டும் தடுக்கப்பட்டார்களோ, அதன்பாலே அவர்கள் திரும்புகிறார்கள்;இன்னும் அவர்கள் (தங்களுக்குமத்தியில்) பாவ(மானவிஷய)த்தையும், (மற்றவர்கள் விஷயத்தில்) வரம்பு மீறுதலையும், (நம்முடைய) தூதருக்கு மாறு செய்வதையும் கொண்டு அவர்கள் இரகசியமாகப் பேசுகின்றனர்; மேலும், அவர்கள் உம்மிடம் வந்தால், அல்லாஹ் எவ்வார்த்தையைக் கொண்டு, முகமன் கூறவில்லையோ அதைக்கொண்டு உமக்கு முகமன் கூறுகிறார்கள்; நாம் கூறியதைப் பற்றி (அவர் தன் தூதில் உண்மையாளராக இருந்தால்) அல்லாஹ் நம்மை வேதனை செய்யக்கூடாதா?"என்றும் தங்கள் மனங்களில் கூறுகின்றனர்; நரகம் அவர்களுக்குப் போதுமானதாகும்; அதில் அவர்கள் நுழைவார்கள்; அது திரும்பிச் செல்லுமிடத்தால் மிகக் கெட்டது.

9. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் ஒருவர் மற்றவருடன் இரகசியம் பேசினால், பாவத்தையும், வரம்பு மீறுதலையும், (நம்) தூதருக்கு மாறு செய்வதையும் கொண்டு இரகசியம் பேசாதீர்கள்; நன்மையையும், பயபக்தியையும்கொண்டு நீங்கள் இரகசியம் பேசுங்கள். மேலும், எவன்பக்கம் ஒன்று திரட்டப் படுவீர்களோ அத்தகைய அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்.

10. (பாவமானதையும், வரம்பு மீறுதலையும் கொண்டு) இரகசியம் பேசுவதெல்லாம், விசுவாசங் கொண்டவர்களை கவலையடையச் செய்வதற்காக ஷைத்தானிடமிருந்துள்ளதாகும்;அல்லாஹ்வுடைய அனுமதியின்றி அவர்களுக்கு அவன் யாதொன்றையும் தீங்கிழைத்துவிடக்கூடிய (சக்தி பெற்ற)வன் அல்லன்; ஆகவே, விசுவாசங் கொண்டவர்கள் அல்லாஹ்வின் மீதே (தங்களின் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை கொள்ளவும்.

11. (விசுவாசங்கொண்டோரே!) "சபைகளில் விசாலமாக இடமளியுங்கள்" என்று உங்களுக்குக் கூறப்பட்டால், (அவ்வாறே) நீங்கள் விசாலமாக இடமளியுங்கள்; அல்லாஹ் உங்களுக்கு விசாலமாக்கி வைப்பான்; தவிர, (சபையிலிருந்து) "எழுந்து விடுங்கள்" எனக் கூறப்பட்டால், அப்போது எழுந்து விடுங்கள்; உங்களிலுள்ள விசுவாசிகளுக்கும்,கல்வி அறிவு கொடுக்கப்பட்டோருக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான்;மேலும், அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகிறவன்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا نَاجَيْتُمُ الرَّسُوْلَ فَقَدِّمُوْا بَيْنَ يَدَيْ
نَجْوٰىكُمْ صَدَقَةً ؕ ذٰلِكَ خَيْرٌ لَّكُمْ وَ اَطْهَرُ ؕ فَاِنْ لَّمْ تَجِدُوْا فَاِنَّ اللّٰهَ
غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۲﴾ ءَاَشْفَقْتُمْ اَنْ تُقَدِّمُوْا بَيْنَ يَدَيْ نَجْوٰىكُمْ
صَدَقٰتٍ ؕ فَاِذْ لَمْ تَفْعَلُوْا وَ تَابَ اللّٰهُ عَلَيْكُمْ فَاَقِيْمُوا الصَّلٰوةَ وَ
اٰتُوا الزَّكٰوةَ وَ اَطِيْعُوا اللّٰهَ وَ رَسُوْلَهٗ ؕ وَ اللّٰهُ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ ﴿۱۳﴾ ع ٢
اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ تَوَلَّوْا قَوْمًا غَضِبَ اللّٰهُ عَلَيْهِمْ ؕ مَا هُمْ مِّنْكُمْ وَ لَا
مِنْهُمْ ۙ وَ يَحْلِفُوْنَ عَلَى الْكَذِبِ وَ هُمْ يَعْلَمُوْنَ ﴿۱۴﴾ اَعَدَّ اللّٰهُ لَهُمْ عَذَابًا
شَدِيْدًا ؕ اِنَّهُمْ سَآءَ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۵﴾ اِتَّخَذُوْۤا اَيْمَانَهُمْ جُنَّةً
فَصَدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ فَلَهُمْ عَذَابٌ مُّهِيْنٌ ﴿۱۶﴾ لَنْ تُغْنِيَ عَنْهُمْ
اَمْوَالُهُمْ وَ لَاۤ اَوْلَادُهُمْ مِّنَ اللّٰهِ شَيْـًٔا ؕ اُولٰٓىِٕكَ اَصْحٰبُ النَّارِ ؕ
هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿۱۷﴾ يَوْمَ يَبْعَثُهُمُ اللّٰهُ جَمِيْعًا فَيَحْلِفُوْنَ لَهٗ
كَمَا يَحْلِفُوْنَ لَكُمْ وَ يَحْسَبُوْنَ اَنَّهُمْ عَلٰى شَيْءٍ ؕ اَلَاۤ اِنَّهُمْ هُمُ
الْكٰذِبُوْنَ ﴿۱۸﴾ اِسْتَحْوَذَ عَلَيْهِمُ الشَّيْطٰنُ فَاَنْسٰىهُمْ ذِكْرَ اللّٰهِ ؕ
اُولٰٓىِٕكَ حِزْبُ الشَّيْطٰنِ ؕ اَلَاۤ اِنَّ حِزْبَ الشَّيْطٰنِ هُمُ الْخٰسِرُوْنَ ﴿۱۹﴾
اِنَّ الَّذِيْنَ يُحَآدُّوْنَ اللّٰهَ وَ رَسُوْلَهٗۤ اُولٰٓىِٕكَ فِي الْاَذَلِّيْنَ ﴿۲۰﴾

12. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் (நம்முடைய) தூதருடன் இரகசியம் பேசினால், உங்கள் இரகசியப்பேச்சிற்கு முன்னர் தர்மத்தை முற்படுத்துங்கள்; இது உங்களுக்கு மிகச்சிறந்ததும், மிகப்பரிசுத்தமானதுமாகும்; (தர்மம் கொடுப்பதற்கு எதனையும்) நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லையானால், (அது குற்றமல்ல;) நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மிகக்கிருபையுடையவன்.

13. நீங்கள் உங்களுடைய இரகசியப்பேச்சிற்கு முன்னர், தர்மங்களை முற்படுத்த வேண்டுமென்று நீங்கள் பயந்துவிட்டீர்களா? எனவே, அச்சமயம் நீங்கள் செய்யாதபோது, அல்லாஹ் உங்களை மன்னித்தும் விட்டான்; ஆகவே, தொழுகையை முறையாக நிறைவேற்றுங்கள்; ஜகாத்தையும் கொடுங்கள்; அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங்கள்; அன்றியும் நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்குணர்பவன்.

14. (நபியே!) அல்லாஹ் எவர்கள் மீது கோபம்கொண்டுவிட்டானோ, அக்கூட்டத்தினரை சிநேகிதர்களாக ஆக்கிக்கொண்டார்களே அத்தகையோர் பக்கம் நீர் பார்க்கவில்லையா? அவர்கள் உங்களில் உள்ளவர்களல்லர்; (நீங்கள்) அவர்களிலும் உள்ளவர்களல்லர்; அவர்கள் அறிந்தவர்களாக இருக்கும் நிலையில் (உங்களைச்சேர்ந்தவர்களென) பொய்யின் மீது சத்தியம் செய்கின்றனர்.

15. அவர்களுக்காக அல்லாஹ் கடினமான வேதனையை தயாராக்கி வைத்திருக்கின்றான். நிச்சயமாக அவர்கள்_ அவர்கள் செய்து கொண்டிருந்தது மிகக் கெட்டது.

16. அவர்கள் தங்களுடைய (பொய்யான) சத்தியங்களைக் கேடயமாக எடுத்துக் கொண்டுவிட்டனர்; ஆகவே (மனிதர்களை) அல்லாஹ்வுடைய பாதையை விட்டும் தடுத்து விட்டனர். எனவே, அவர்களுக்கு இழிவுடைய வேதனையுண்டு.

17. அவர்களுடைய செல்வங்களும், அவர்களுடைய மக்களும், அல்லாஹ்வி(ன் வேதனையி)லிருந்து யாதொன்றையும், அவர்களை விட்டுத் தடுத்துவிடவே மாட்டாது; அத்தகையவர்கள் நரகவாசிகள்; அவர்கள் அதில் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்.

18. அல்லாஹ் அவர்கள் அனைவரையும் (உயிர் கொடுத்து) எழுப்புகின்ற (மறுமை) நாளில், அவர்கள் உங்களிடம் சத்தியம் செய்ததைப்போன்று, அவனிடத்திலும் (பொய்ச்) சத்தியம் செய்வார்கள்; நிச்சயமாக தாங்கள் (உண்மையான) ஏதோ ஒன்றின்மீது இருப்பதாகவும் எண்ணிக்கொள்வார்கள்; அறிந்து கொள்வீராக! நிச்சயமாக அவர்கள்_ அவர்கள்தாம் பொய்யர்கள்.

19. ஷைத்தான் அவர்களை மிகைத்துவிட்டான்; ஆகவே, அல்லாஹ்வைப்பற்றிய நினைவை அவர்களுக்கு மறக்கச் செய்துவிட்டான்; இவர்கள் ஷைத்தானுடைய கூட்டத்தினர்; அறிந்து கொள்வீராக! நிச்சயமாக ஷைத்தானுடைய கூட்டத்தினர்_ அவர்கள்தான் நஷ்டமடைந்தோர்.

20. நிச்சயமாக அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் (அவர்களின் கட்டளைகளுக்கு மாறுசெய்வதன் மூலம்) விரோதிக்கின்றார்களே அத்தகையோர்_ அவர்களே இழிவுக்குள்ளானவர்களில் இருப்பர்.

كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِیْ ؕ اِنَّ اللّٰهَ قَوِیٌّ عَزِیْزٌ ﴿۲۱﴾ لَا تَجِدُ قَوْمًا
یُّؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْیَوْمِ الْاٰخِرِ یُوَآدُّوْنَ مَنْ حَآدَّ اللّٰهَ وَرَسُوْلَهٗ
وَلَوْ كَانُوْۤا اٰبَآءَهُمْ اَوْ اَبْنَآءَهُمْ اَوْ اِخْوَانَهُمْ اَوْ عَشِیْرَتَهُمْ ؕ اُولٰٓىِٕكَ
كَتَبَ فِیْ قُلُوْبِهِمُ الْاِیْمَانَ وَاَیَّدَهُمْ بِرُوْحٍ مِّنْهُ ؕ وَیُدْخِلُهُمْ جَنّٰتٍ
تَجْرِیْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِیْنَ فِیْهَا ؕ رَضِیَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا
عَنْهُ ؕ اُولٰٓىِٕكَ حِزْبُ اللّٰهِ ؕ اَلَاۤ اِنَّ حِزْبَ اللّٰهِ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿۲۲﴾ ع ۳ ۳

سُوْرَةُ الْحَشْرِ مَدَنِیَّةٌ وَّهِیَ اَرْبَعٌ وَّعِشْرُوْنَ اٰیَةً وَّثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ○

سَبَّحَ لِلّٰهِ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ۚ وَهُوَ الْعَزِیْزُ الْحَكِیْمُ ﴿۱﴾
هُوَ الَّذِیْۤ اَخْرَجَ الَّذِیْنَ كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ مِنْ دِیَارِهِمْ
لِاَوَّلِ الْحَشْرِ ؕ مَا ظَنَنْتُمْ اَنْ یَّخْرُجُوْا وَظَنُّوْۤا اَنَّهُمْ مَّانِعَتُهُمْ حُصُوْنُهُمْ
مِّنَ اللّٰهِ فَاَتٰىهُمُ اللّٰهُ مِنْ حَیْثُ لَمْ یَحْتَسِبُوْا ۗ وَقَذَفَ فِیْ
قُلُوْبِهِمُ الرُّعْبَ یُخْرِبُوْنَ بُیُوْتَهُمْ بِاَیْدِیْهِمْ وَاَیْدِی الْمُؤْمِنِیْنَ ۗ
فَاعْتَبِرُوْا یٰۤاُولِی الْاَبْصَارِ ﴿۲﴾ وَلَوْ لَاۤ اَنْ كَتَبَ اللّٰهُ عَلَیْهِمُ
الْجَلَآءَ لَعَذَّبَهُمْ فِی الدُّنْیَا ؕ وَلَهُمْ فِی الْاٰخِرَةِ عَذَابُ النَّارِ ﴿۳﴾

وقف النبی صلی اللہ علیہ وسلم

21. "நிச்சயமாக நானும், என் தூதர்களும் மிகைத்து(வெற்றி பெற்று) விடுவோம்" என அல்லாஹ் எழுதிவிட்டான்; நிச்சயமாக அல்லாஹ் பல மிக்கவன்;(யாவரையும்) மிகைத்தவன்.

22. அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விசுவாசங் கொண்ட சமூகத்தினரை, அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பகைத்துக் கொண்டிருக்கிறார்களே அவர்களை நேசிப்பவர்களாக (நபியே!) நீர் காணமாட்டீர், அவர்கள் தங்களின் பெற்றோர்களாயினும், அல்லது தங்களின் ஆண்மக்களாயினும், அல்லது தங்களின் சகோதரர்களாயினும் அல்லது தங்கள் குடும்பத்தவராயினும் சரியே; (காரணம்) அத்தகையோர்_ அவர்களின் இதயங்களில் ஈமானை (விசுவாசத்தை அல்லாஹ்வாகிய) அவன் எழுதிவிட்டான்;மேலும் தன்னிடமிருந்து(வெற்றி எனும்) ரூஹைக் கொண்டு அவர்களைப் பலப்படுத்தியிருக்கிறான்; இன்னும் அவர்களைச் சுவனங்களில் நுழையச் செய்வான்; அவற்றின்கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அவற்றில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; அல்லாஹ் அவர்களை பொருந்திக் கொண்டான்; அவனை அவர்களும் பொருந்திக் கொண்டார்கள்; அவர்கள் தான் அல்லாஹ்வின் கூட்டத்தினர்; அறிந்து கொள்வீராக! நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினர்_அவர்கள் தாம் வெற்றியாளர்கள்.

அத்தியாயம் : 59

## அல் ஹஷ்ர் _ ஒன்று திரட்டுதல்

வசனங்கள் : 24 மதனீ ருகூஉகள் : 3

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வைத் துதி செய்கின்றன; அவன்தான் (யாவரையும்) மிகைத்தவன்;தீர்க்கமான அறிவுடையவன்.

2. அவன் எத்தகையவனென்றால்,வேதத்தையுடையோரில் நிராகரித்தார்களே அவர்களை அவர்களுடைய வீடுகளிலிருந்து (மதீனாவிலிருந்து ஷாம் தேசத்தின் பால்) முதல் வெளியேற்றத்திற்காகவேண்டி வெளியேற்றினான்; அவர்கள் (தங்கள் வீடுகளிலிருந்து) வெளியேறிவிடுவார்களென்று நீங்கள் எண்ணவில்லை; மேலும் அவர்கள் தங்களுடைய கோட்டைகள், அல்லாஹ்வை விட்டுத் தங்களைத் தடுத்துக்கொள்ளுபவை என்று நிச்சயமாக எண்ணிக் கொண்டிருந்தார்கள்; ஆகவே, அவர்கள் எண்ணிப்பார்த்திராதவிதத்தில் அல்லாஹ் அவர்களிடம் (தனதுவேதனையைக்கொண்டு) வந்துவிட்டான்; மேலும், அவர்களுடைய உள்ளங்களில் திகிலைப்போட்டான்; (அதனால்) அவர்கள் தம் கரங்களாலும், விசுவாசிகளின் கரங்களாலும் தம் வீடுகளைப் பாழ்படுத்திக் கொண்டனர்; பார்வை (விளக்கங்)கள் உடையோரே, (இதன்மூலம் உபதேசம்பெற்று) நீங்கள் படிப்பினை பெறுவீர்களாக!

3. மேலும், அல்லாஹ் அவர்களின்மீது (அவர்கள் குடும்ப சகிதம் அவர்களுடைய ஊரிலிருந்து) வெளியேறுவதை விதித்திருக்காவிடில், இவ்வுலகத்திலேயே அவன் அவர்களை வேதனை செய்திருப்பான்; அன்றியும், மறுமையில் அவர்களுக்கு (நரக) நெருப்பின் வேதனை உண்டு.

ذٰلِكَ بِاَنَّهُمْ شَآقُّوا اللّٰهَ وَرَسُوْلَهٗ ۚ وَمَنْ يُّشَآقِّ اللّٰهَ فَاِنَّ اللّٰهَ
شَدِيْدُ الْعِقَابِ ۝٤ مَا قَطَعْتُمْ مِّنْ لِّيْنَةٍ اَوْ تَرَكْتُمُوْهَا قَآئِمَةً عَلٰٓى
اُصُوْلِهَا فَبِاِذْنِ اللّٰهِ وَلِيُخْزِيَ الْفٰسِقِيْنَ ۝٥ وَمَآ اَفَآءَ اللّٰهُ عَلٰى
رَسُوْلِهٖ مِنْهُمْ فَمَآ اَوْجَفْتُمْ عَلَيْهِ مِنْ خَيْلٍ وَّلَا رِكَابٍ وَّلٰكِنَّ
اللّٰهَ يُسَلِّطُ رُسُلَهٗ عَلٰى مَنْ يَّشَآءُ ۭ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۝٦
مَآ اَفَآءَ اللّٰهُ عَلٰى رَسُوْلِهٖ مِنْ اَهْلِ الْقُرٰى فَلِلّٰهِ وَلِلرَّسُوْلِ
وَلِذِي الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنِ وَابْنِ السَّبِيْلِ ۙ كَيْ لَا
يَكُوْنَ دُوْلَةًۢ بَيْنَ الْاَغْنِيَآءِ مِنْكُمْ ۭ وَمَآ اٰتٰىكُمُ الرَّسُوْلُ فَخُذُوْهُ ۚ وَ
مَا نَهٰىكُمْ عَنْهُ فَانْتَهُوْا ۚ وَاتَّقُوا اللّٰهَ ۭ اِنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ ۝٧ وقف لازم
لِلْفُقَرَآءِ الْمُهٰجِرِيْنَ الَّذِيْنَ اُخْرِجُوْا مِنْ دِيَارِهِمْ وَاَمْوَالِهِمْ
يَبْتَغُوْنَ فَضْلًا مِّنَ اللّٰهِ وَرِضْوَانًا وَّيَنْصُرُوْنَ اللّٰهَ وَرَسُوْلَهٗ ۭ
اُولٰٓئِكَ هُمُ الصّٰدِقُوْنَ ۝٨ وَالَّذِيْنَ تَبَوَّءُو الدَّارَ وَالْاِيْمَانَ مِنْ
قَبْلِهِمْ يُحِبُّوْنَ مَنْ هَاجَرَ اِلَيْهِمْ وَلَا يَجِدُوْنَ فِيْ صُدُوْرِهِمْ
حَاجَةً مِّمَّآ اُوْتُوْا وَيُؤْثِرُوْنَ عَلٰٓى اَنْفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ
خَصَاصَةٌ ۭۛ وَمَنْ يُّوْقَ شُحَّ نَفْسِهٖ فَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ۝٩

4. இது,(ஏனென்றால்) நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் மாறு செய்து (கொண்டு அவர்களை விரோதித்து)விட்டார்கள் என்பதினாலாகும்; இன்னும் எவர் அல்லாஹ்விற்கு மாறுசெய்கின்றாரோ நிச்சயமாக அல்லாஹ்(அவரைத்) தண்டிப்பதில் மிகக்கடினமானவன்.

5. (விசுவாசிகளே!) நீங்கள் (அவர்களுடைய) பேரீத்த மரங்களை வெட்டியதும், அல்லது (வெட்டாது) அவைகளின் வேர்களின்மீது நிற்கக்கூடியதாக நீங்கள் அவைகளை விட்டு வைத்ததும் அல்லாஹ்வின் அனுமதி கொண்டும், அந்தப் பாவிகளை அவன் இழிவுபடுத்துவதற்காகவுமாகும்.

6. மேலும், அவர்களிடமிருந்து அல்லாஹ் தன்னுடைய தூதருக்கு எதை மீட்டுக் கொடுத்தானோ அ(தைப்பெறுவ)தற்காக(விசுவாசிகளே!) நீங்கள் குதிரையையோ, ஒட்டகத்தையோ ஓட்டவில்லை. எனினும்,அல்லாஹ் தான் நாடியவர்களின்மீது தன்னுடைய தூதர்களை ஆதிக்கம் செலுத்தச் செய்கிறான்; மேலும் அல்லாஹ் ஒவ்வொருபொருளின் மீதும் ஆற்றலுடையவன்.

7. (வெற்றிகொள்ளப்படும் அனைத்து)ஊரார்களிடமிருந்து தன் தூதருக்கு அல்லாஹ் மீட்டுக் கொடுத்தானே அவை, (அவற்றில்) அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும், (அவருடைய) பந்துக்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்கும் உரியதாகும்; செல்வம் உங்களிலுள்ள பணக்காரர்களுக்கிடையில் மட்டுமே சுற்றிக்கொண்டிருக்காமல் இருப்பதற்காக, (இவ்வாறு பங்கீடு செய்யுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்) அன்றியும், (நம்முடைய) தூதர் உங்களுக்கு எதைக் கொடுத்தாரோ அதை நீங்கள் (மனமொப்பி) எடுத்துக்கொள்ளுங்கள். அவர் எதனை விட்டும் உங்களைத் தடுத்தாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்; மேலும், அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்துகொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் மிக்க கடினமானவன்.

8. தங்கள் வீடுகளையும், தங்கள் பொருட்களையும் விட்டு (அக்கிரமமாக மக்காவிலிருந்து) வெளியேற்றப்பட்டார்களே அத்தகைய ஹிஜ்ரத்துச் செய்தவர்களான ஏழைகளுக்கும் (அப்பொருளில் பங்குண்டு). அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பேரருளையும், (அவனுடைய) பொருத்தத்தையும் தேடுகின்றனர்; இன்னும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் உதவி செய்கின்றனர்; இவர்கள் தாம் ("ஸாதிகூன்" என்னும்) உண்மையாளர்கள்.

9. இன்னும் (முஹாஜிரீன்களாகிய) அவர்களுக்கு முன்பே (மதீனாவில்) வீட்டையும், (அல்லாஹ்வின் மீது) விசுவாசம் கொள்வதையும் (கலப்பற்றதாக்கிக்) கொண்டிருந்தார்களே அத்தகைய (அன்ஸாரிகளான)வர்கள், தம்பால் "ஹிஜ்ரத்து"ச்செய்து வந்தோரை நேசிப்பார்கள்; மேலும், (ஹிஜ்ரத்துச் செய்து வந்த) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதைப் பற்றி தங்கள் நெஞ்சங்களில் காழ்ப்புணர்ச்சியைப்பெறமாட்டார்கள்; மேலும் தங்களுக்கு(க்கடும்) தேவையிருந்த போதிலும், தங்களைவிட (முஹாஜிரீன்களான அவர்களை)த் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இன்னும் எவர் தன் உலோபத்தனத்திலிருந்து காக்கப் பட்டாரோ, அத்தகையோர் தாம் வெற்றி பெற்றவர்கள்.

وَالَّذِيْنَ جَآءُوْ مِنْۢ بَعْدِهِمْ يَقُوْلُوْنَ رَبَّنَا اغْفِرْلَنَا وَلِاِخْوَانِنَا
الَّذِيْنَ سَبَقُوْنَا بِالْاِيْمَانِ وَلَا تَجْعَلْ فِيْ قُلُوْبِنَا غِلًّا لِّلَّذِيْنَ
اٰمَنُوْا رَبَّنَآ اِنَّكَ رَءُوْفٌ رَّحِيْمٌ ﴿١٠﴾ اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ نَافَقُوْا ع ١٠ ١ ٢
يَقُوْلُوْنَ لِاِخْوَانِهِمُ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ لَئِنْ
اُخْرِجْتُمْ لَنَخْرُجَنَّ مَعَكُمْ وَلَا نُطِيْعُ فِيْكُمْ اَحَدًا اَبَدًا ۙ وَّاِنْ
قُوْتِلْتُمْ لَنَنْصُرَنَّكُمْ ؕ وَاللّٰهُ يَشْهَدُ اِنَّهُمْ لَكٰذِبُوْنَ ﴿١١﴾ لَئِنْ اُخْرِجُوْا
لَا يَخْرُجُوْنَ مَعَهُمْ ۚ وَلَئِنْ قُوْتِلُوْا لَا يَنْصُرُوْنَهُمْ ۚ وَلَئِنْ نَّصَرُوْهُمْ
لَيُوَلُّنَّ الْاَدْبَارَ ۫ ثُمَّ لَا يُنْصَرُوْنَ ﴿١٢﴾ لَاَ نْتُمْ اَشَدُّ رَهْبَةً
فِيْ صُدُوْرِهِمْ مِّنَ اللّٰهِ ؕ ذٰلِكَ بِاَنَّهُمْ قَوْمٌ لَّا يَفْقَهُوْنَ ﴿١٣﴾
لَا يُقَاتِلُوْنَكُمْ جَمِيْعًا اِلَّا فِيْ قُرًى مُّحَصَّنَةٍ اَوْ مِنْ وَّرَآءِ
جُدُرٍ ؕ بَاْسُهُمْ بَيْنَهُمْ شَدِيْدٌ ؕ تَحْسَبُهُمْ جَمِيْعًا وَّقُلُوْبُهُمْ
شَتّٰى ؕ ذٰلِكَ بِاَنَّهُمْ قَوْمٌ لَّا يَعْقِلُوْنَ ﴿١٤﴾ ۚ كَمَثَلِ الَّذِيْنَ
مِنْ قَبْلِهِمْ قَرِيْبًا ذَاقُوْا وَبَالَ اَمْرِهِمْ ۚ وَلَهُمْ عَذَابٌ
اَلِيْمٌ ﴿١٥﴾ ۚ كَمَثَلِ الشَّيْطٰنِ اِذْ قَالَ لِلْاِنْسَانِ اكْفُرْ ۚ فَلَمَّا كَفَرَ
قَالَ اِنِّيْ بَرِيْٓءٌ مِّنْكَ اِنِّيْٓ اَخَافُ اللّٰهَ رَبَّ الْعٰلَمِيْنَ ﴿١٦﴾

10. மேலும், அவர்களுக்குப் பின் வந்தார்களே அத்தகையவர்கள் "எங்கள் இரட்சகனே! எங்களையும், விசுவாசம் கொள்வதில் எங்களை முந்தி விட்டார்களே அத்தகைய எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னித்தருள்வாயாக! விசுவாசங்கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஏற்படுத்தாதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன்; மிகக் கருணையுடையவன்" என்று (பிரார்த்தனை செய்தும்) கூறுவார்கள்.

11. (நபியே!) நயவஞ்சகர்களாக ஆகிவிட்டார்களே அவர்களை நீர் பார்க்கவில்லையா? அவர்கள், வேதத்தையுடையோர்களில் உள்ள நிராகரித்து விட்டோரான தங்கள் சகோதரர்களிடம், "நீங்கள் (உங்கள் இல்லத்தை விட்டு) வெளியேற்றப்பட்டால், உங்களுடன் நாங்களும் நிச்சயமாக வெளியேறி விடுவோம்; மேலும், உங்கள் விஷயத்தில், (உங்களுக்கு விரோதமாக) நாங்கள் எவருக்கும் ஒரு காலத்திலும் கீழ்ப்படிய மாட்டோம்; உங்கள் மீது போர் தொடுக்கப்பட்டால், நிச்சயமாக நாம் உங்களுக்கு உதவியும்புரிவோம்" என்று கூறுகின்றனர்; அல்லாஹ்வோ நிச்சயமாக அவர்கள் பொய்யர்கள் என்று சாட்சியங் கூறுகின்றான்.

12. (ஏனென்றால்), அவர்கள் வெளியேற்றப்பட்டால், இவர்கள் அவர்களுடன் வெளியேறிச் செல்லமாட்டார்கள்; அவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டாலோ அவர்களுக்கு உதவிபுரியமாட்டார்கள்; அவர்களுக்கு இவர்கள் உதவி செய்(ய முன்வந்)த போதிலும், நிச்சயமாகப் புறங்காட்டியே அவர்கள் ஓடிவிடுவார்கள். பின்னர், (எவராலுமே) அவர்கள் (எத்தகைய) உதவியும் செய்யப்படமாட்டார்கள்.

13. திட்டமாக நீங்கள் அவர்களுடைய நெஞ்சங்களில், பயத்தால் அல்லாஹ்வை(ப் பற்றிய பயத்தை) விட மிக்க அதிகமானவர்களாக இருக்கிறீர்கள்; அது நிச்சயமாக அவர்கள் விளங்கிக் கொள்ளமுடியாத சமூகத்தினராக இருப்பதினாலேயாகும்.

14. (கோட்டைகளால்) அரண் அமைக்கப்பட்ட ஊர்களிலோ, அல்லது சுவர்களுக்கப்பாலோ அல்லாமல் அவர்கள் அனைவரும் (ஒருங்கிணைந்தவர்களாக) உங்களுடன் யுத்தம் புரியமாட்டார்கள்; அவர்களுக்கு மத்தியிலே அவர்களின் சண்டை கடினமாகயிருக்கும். அவர்களை ஒன்றுபட்டிருப்பதாக நீர் எண்ணுகின்றீர்; (ஆனால்) அவர்களுடைய இதயங்களோ சிதறிக்கிடக்கின்றன; அ(தன்காரணமாவ)து நிச்சயமாக அவர்கள் அறியாதவர்களான சமூகத்தார் என்பதினாலாகும்.

15. (அவர்களுக்கு உதாரணமாவது:) அவர்களுக்கு முன்னர் (காலத்தால்) சமீபத்தில் உள்ளோரின் உதாரணத்தைப் போன்றாகும்; அவர்கள் தங்களுடைய செயல்களுக்குரிய தீய பலனை( பத்ரு யுத்தத்தில்) சுவைத்தார்கள்; இன்னும் (மறுமையில்) அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு.

16. (இவர்களுக்கு உதாரணம்:) ஷைத்தானுடைய உதாரணத்தைப் போன்றாகும். அவன் மனிதனிடம், "நீ (அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும்) நிராகரித்து விடு" என்று கூறிய சமயத்தில் (அதைக்கேட்டுப்) பின்னர், அவன் நிராகரித்து விட்டபொழுது (ஷைத்தான் அவனிடம்,) "நிச்சயமாக நான் உன்னை விட்டு நீங்கிக்கொண்டேன்; அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கு நிச்சயமாக நான் பயப்படுகிறேன்" என்று கூறினான்.

فَكَانَ عَاقِبَتَهُمَآ اَنَّهُمَا فِی النَّارِ خَالِدَيْنِ فِيْهَا ؕ وَ ذٰلِكَ

جَزٰٓؤُا الظّٰلِمِيْنَ ﴿۱۷﴾ع يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَلْتَنْظُرْ ۲ ع ۵

نَفْسٌ مَّا قَدَّمَتْ لِغَدٍ ۚ وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ

بِمَا تَعْمَلُوْنَ ﴿۱۸﴾ وَلَا تَكُوْنُوْا كَالَّذِيْنَ نَسُوا اللّٰهَ فَاَنْسٰىهُمْ

اَنْفُسَهُمْ ؕ اُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ﴿۱۹﴾ لَا يَسْتَوِیْۤ اَصْحٰبُ

النَّارِ وَ اَصْحٰبُ الْجَنَّةِ ؕ اَصْحٰبُ الْجَنَّةِ هُمُ الْفَآئِزُوْنَ ﴿۲۰﴾

لَوْ اَنْزَلْنَا هٰذَا الْقُرْاٰنَ عَلٰی جَبَلٍ لَّرَاَيْتَهٗ خَاشِعًا

مُّتَصَدِّعًا مِّنْ خَشْيَةِ اللّٰهِ ؕ وَتِلْكَ الْاَمْثَالُ نَضْرِبُهَا

لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَفَكَّرُوْنَ ﴿۲۱﴾ هُوَ اللّٰهُ الَّذِیْ لَاۤ اِلٰهَ

اِلَّا هُوَ ۚ عٰلِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ ۚ هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ ﴿۲۲﴾

هُوَ اللّٰهُ الَّذِیْ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْمَلِكُ الْقُدُّوْسُ السَّلٰمُ

الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ الْعَزِيْزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ ؕ سُبْحٰنَ اللّٰهِ

عَمَّا يُشْرِكُوْنَ ﴿۲۳﴾ هُوَ اللّٰهُ الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ لَهُ

الْاَسْمَآءُ الْحُسْنٰی ؕ يُسَبِّحُ لَهٗ مَا فِی السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ

وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۲۴﴾ع ۳ ع ۶

17. ஆகவே, நிச்சயமாக(ஷைத்தானும், நிராகரித்த மனிதனுமாகிய) அவ்விருவரும் நரகத்தில் அதில் அவ்விருவரும் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள் என்பதே அவ்விருவருடைய முடிவாக ஆகிவிட்டது; மேலும், அது அநியாயக்காரர்களின் கூலியாகும்.

18. விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ்வை நீங்கள் பயந்துகொள்ளுங்கள்; ஒவ்வோர் ஆத்மாவும்(மறுமை)நாளைக்காக எதனை முற்படுத்தியிருக்கிறது என்பதைப் பார்க்கட்டும்; இன்னும், அல்லாஹ்வை நீங்கள் பயந்து (நடந்து) கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்குணர்பவன்.

19. (விசுவாசிகளே!) அல்லாஹ்வை (நிராகரித்து அவனை முற்றிலும்) மறந்து விட்டார்களே அத்தகையவர்களைப் போன்று நீங்களும் ஆகிவிட வேண்டாம்; ஏனென்றால், (அல்லாஹ்வாகிய) அவன் (அவர்களுக்கு கிடைக்கவேண்டிய நற்பாக்கியங்களிலிருந்து) அவர்கள் தங்களையே மறக்குமாறு செய்துவிட்டான்; அத்தகையோர்தாம் (அல்லாஹ்வின் வழிபாட்டிலிருந்து) வெளியேறியவர் (களானபாவி)களாவர்.

20. நரகவாசிகளும், சொர்க்கவாசிகளும் சமமாகமாட்டார்கள்; சொர்க்கவாசிகள்_ அவர்கள் தாம் வெற்றியடைந்தவர்கள்.

21. (நபியே!) இந்தக்குர்ஆனை ஒரு மலையின் மீது நாம் இறக்கிவைத்திருந்தால், அல்லாஹ்வின் பயத்தால் பணிந்ததாக, பிளந்து விடக் கூடியதாக அதை நிச்சயமாக நீர் கண்டிருப்பீர்; மேலும், அந்த உதாரணங்கள்_அவற்றை மனிதர்களுக்கு அவர்கள் சிந்திப்பதற்காகவே _ நாம் கூறுகிறோம்.

22. "அவன் (தான்) அல்லாஹ் ; அவன் எத்தகையவனென்றால் அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய வேறு ) நாயன் இல்லை; (அவன்) மறைவானதையும், வெளிப்படையானதையும் நன்கறிகிறவன்; அவனே அளவற்ற அருளாளன்; மிகக் கிருபையுடையவன்.

23. அவன்(தான்) அல்லாஹ்; அவன் எத்தகையவனென்றால் அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை;(அவன் தான் உண்மையான)பேரரசன்; பரிசுத்தமானவன்; சாந்தி அளிப்பவன்; அபயமளிப்பவன்; கண்காணிப்பவன்; (யாவரையும்) மிகைத்தவன்; அடக்கி ஆளுபவன்; பெருமைக்குரியவன்_ அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன்.

24. அவன்(தான்) அல்லாஹ்; படைப்பவன்; (அவனே படைப்புகளை ஒழுங்குபடுத்தி) உண்டாக்குபவன் ; (அவனே படைப்பினங்களின்) உருவத்தை அமைப்பவன்; அவனுக்கு அழகான பெயர்களிருக்கின்றன; வானங்களிலும், பூமியிலும் உள்ளவை (அனைத்தும்) அவனையே துதிசெய்கின்றன; அவனே (யாவரையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்.

سُوْرَةُ الْمُمْتَحِنَةِ مَدَنِيَّةٌ وَهِيَ ثَلٰثَ عَشْرَةَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوْا عَدُوِّيْ وَعَدُوَّكُمْ اَوْلِيَآءَ تُلْقُوْنَ
اِلَيْهِمْ بِالْمَوَدَّةِ وَقَدْ كَفَرُوْا بِمَا جَآءَكُمْ مِّنَ الْحَقِّ ۚ يُخْرِجُوْنَ الرَّسُوْلَ
وَاِيَّاكُمْ اَنْ تُؤْمِنُوْا بِاللّٰهِ رَبِّكُمْ ؕ اِنْ كُنْتُمْ خَرَجْتُمْ جِهَادًا فِيْ سَبِيْلِيْ وَ
ابْتِغَآءَ مَرْضَاتِيْ ۖ تُسِرُّوْنَ اِلَيْهِمْ بِالْمَوَدَّةِ ۖ وَاَنَا اَعْلَمُ بِمَاۤ اَخْفَيْتُمْ وَمَاۤ
اَعْلَنْتُمْ ؕ وَمَنْ يَّفْعَلْهُ مِنْكُمْ فَقَدْ ضَلَّ سَوَآءَ السَّبِيْلِ ① اِنْ
يَّثْقَفُوْكُمْ يَكُوْنُوْا لَكُمْ اَعْدَآءً وَّيَبْسُطُوْۤا اِلَيْكُمْ اَيْدِيَهُمْ وَاَلْسِنَتَهُمْ
بِالسُّوْٓءِ وَوَدُّوْا لَوْ تَكْفُرُوْنَ ؕ ② لَنْ تَنْفَعَكُمْ اَرْحَامُكُمْ وَلَاۤ اَوْلَادُكُمْ ۚ
يَوْمَ الْقِيٰمَةِ ۚ يَفْصِلُ بَيْنَكُمْ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ③ قَدْ كَانَتْ لَكُمْ
اُسْوَةٌ حَسَنَةٌ فِيْۤ اِبْرٰهِيْمَ وَالَّذِيْنَ مَعَهٗ ۚ اِذْ قَالُوْا لِقَوْمِهِمْ اِنَّا
بُرَءٰٓؤُا مِنْكُمْ وَمِمَّا تَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ ؗ كَفَرْنَا بِكُمْ وَبَدَا بَيْنَنَا
وَبَيْنَكُمُ الْعَدَاوَةُ وَالْبَغْضَآءُ اَبَدًا حَتّٰى تُؤْمِنُوْا بِاللّٰهِ وَحْدَهٗۤ اِلَّا
قَوْلَ اِبْرٰهِيْمَ لِاَبِيْهِ لَاَسْتَغْفِرَنَّ لَكَ وَمَاۤ اَمْلِكُ لَكَ مِنَ اللّٰهِ
مِنْ شَيْءٍ ؕ رَبَّنَا عَلَيْكَ تَوَكَّلْنَا وَاِلَيْكَ اَنَبْنَا وَاِلَيْكَ الْمَصِيْرُ ④

معانقة ۱۲ المعانقة الوقف على القيمة ۱۲ عند المتاخرين ۱۲

அத்தியாயம் : 60

## அல் மும்தஹினா — சோதிப்பவள்

வசனங்கள் : 13 மதனீ ருகூஃகள் : 2

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. *விசுவாசங்கொண்டோரே! என்னுடைய விரோதியையும், உங்களுடைய விரோதியையும் _அவர்கள்பால்(உங்கள்)நேசத்தைச் சேர்த்து வைக்கின்ற நண்பர்களாக எடுத்துக்கொள்ள வேண்டாம்; (ஏனென்றால்) சத்தியத்திலிருந்து உங்களிடம் வந்த(வேதத்)தை திட்டமாக அவர்கள் நிராகரித்தும் விட்டனர்; உங்கள் இரட்சகனாகிய அல்லாஹ்வை நீங்கள் விசுவாசித்ததற்காக (நம்முடைய) தூதரையும், உங்களையும் உங்கள் இல்லங்களிலிருந்து வெளியேற்றுகிறார்கள்; (விசுவாசிகளே!) என் பாதையில் ஜிஹாது செய்வதற்காகவும், என் பொருத்தத்தைத் தேடியும் நீங்கள் வெளியேறி விடுவீர்களாயின்_(அவர்களை நண்பர்களாக எடுத்துக் கொள்ளவேண்டாம்; ஆனால் நீங்களோ) அவர்கள் பால் நேசத்தின் காரணமாக (செய்திகளை) மறைமுகமாகச் சேர்த்து வைக்கிறீர்கள்; நீங்கள் (உங்கள் மனதில்) மறைத்துவிட்டதையும், (அதற்கு மாறாக) நீங்கள் வெளிப்படுத்திவிட்டதையும் நானே நன்கறிவேன். இன்னும் உங்களில் யார் இதைச் செய்கின்றாரோ அவர் நேரானபாதையைத் திட்டமாக தவறவிட்டுவிட்டார்.*

2 .அவர்கள் உங்களை கண்டால்(பகிரங்கமாகவே) அவர்கள் உங்களுக்கு விரோதிகளாகி விடுவார்கள் ; மேலும் , (போர் செய்ய) உங்கள்பால் தங்கள் கைகளையும் , தங்கள் நாவுகளையும் தீமையைக் கொண்டு நீட்டுவார்கள் ; அன்றியும் , நீங்கள் (அவர்களைப் போன்று) நிராகரிப்போராகிவிட வேண்டுமென அவர்கள் ஆசைப்படுவார்கள்.

3. *உங்களுடைய உறவினர்களும், உங்களுடைய பிள்ளைகளும் மறுமை நாளில் உங்களுக்கு பலனளிக்கவேமாட்டார்கள்; (அந்நாளில் அல்லாஹ்) உங்களுக்கிடையில் தீர்ப்பளிப்பான்; மேலும், நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் பார்க்கிறவன்.*

4. *இப்றாஹீமிலும், அவருடன் இருந்தவர்களிலும் உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி திட்டமாக இருக்கின்றது; அவர்கள் தம் சமூகத்தாரிடம், " நிச்சயமாக நாங்கள் உங்களிலிருந்தும், அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்கிக்கொண்டிருப்பவற்றிலிருந்தும் நீங்கி,உங்களை நாங்கள் நிராகரித்து விட்டோம். இன்னும் அல்லாஹ் ஒருவனையே நீங்கள் விசுவாசங்கொள்ளும் வரை எங்களுக்கும், உங்களுக்குமிடையில் விரோதமும், வெறுப்பும் என்றென்றும் வெளிப்பட்டுவிட்டது" என்று கூறியபொழுது_ இப்றாஹீம் தன் தந்தையிடம் "உமக்காக நிச்சயமாக நான் மன்னிப்புத்தேடுவேன்; மேலும் அல்லாஹ்விடமிருந்து எதையும் நான் உமக்கு உடமையாக்கிக் கொள்ளமாட்டேன்" என்ற கூற்றைத்தவிர;(மற்றதில் உங்களுக்கு முன்மாதிரி உண்டு. மேலும் இப்றாஹீம், ) "எங்கள் இரட்சகனே! (எங்கள் காரியங்களை உன்னிடம் ஒப்படைத்து முழுமையாக) உன் மீது நம்பிக்கை வைத்தோம்; இன்னும் உன்பக்கமே நாங்கள் மீண்டோம் ; அன்றியும் உன் பக்கமே திரும்புதல் இருக்கிறது(என்றும்),*

رَبَّنَا لَا تَجْعَلْنَا فِتْنَةً لِّلَّذِيْنَ كَفَرُوْا وَاغْفِرْ لَنَا رَبَّنَا ۚ اِنَّكَ اَنْتَ
الْعَزِيْزُ الْحَكِيْمُ ۝٥ لَقَدْ كَانَ لَكُمْ فِيْهِمْ اُسْوَةٌ حَسَنَةٌ لِّمَنْ كَانَ
يَرْجُوا اللّٰهَ وَالْيَوْمَ الْاٰخِرَ ۭ وَمَنْ يَّتَوَلَّ فَاِنَّ اللّٰهَ هُوَ الْغَنِيُّ الْحَمِيْدُ ۝٦ ع
عَسَى اللّٰهُ اَنْ يَّجْعَلَ بَيْنَكُمْ وَبَيْنَ الَّذِيْنَ عَادَيْتُمْ مِّنْهُمْ مَّوَدَّةً ۭ
وَاللّٰهُ قَدِيْرٌ ۭ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ۝٧ لَا يَنْهٰىكُمُ اللّٰهُ عَنِ الَّذِيْنَ لَمْ
يُقَاتِلُوْكُمْ فِي الدِّيْنِ وَلَمْ يُخْرِجُوْكُمْ مِّنْ دِيَارِكُمْ اَنْ تَبَرُّوْهُمْ وَ
تُقْسِطُوْٓا اِلَيْهِمْ ۭ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُقْسِطِيْنَ ۝٨ اِنَّمَا يَنْهٰىكُمُ اللّٰهُ عَنِ
الَّذِيْنَ قٰتَلُوْكُمْ فِي الدِّيْنِ وَاَخْرَجُوْكُمْ مِّنْ دِيَارِكُمْ وَظٰهَرُوْا عَلٰٓي
اِخْرَاجِكُمْ اَنْ تَوَلَّوْهُمْ ۚ وَمَنْ يَّتَوَلَّهُمْ فَاُولٰۗىِٕكَ هُمُ الظّٰلِمُوْنَ ۝٩
يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا جَاۗءَكُمُ الْمُؤْمِنٰتُ مُهٰجِرٰتٍ فَامْتَحِنُوْهُنَّ ۭ
اَللّٰهُ اَعْلَمُ بِاِيْمَانِهِنَّ ۚ فَاِنْ عَلِمْتُمُوْهُنَّ مُؤْمِنٰتٍ فَلَا تَرْجِعُوْهُنَّ
اِلَى الْكُفَّارِ ۭ لَا هُنَّ حِلٌّ لَّهُمْ وَلَا هُمْ يَحِلُّوْنَ لَهُنَّ ۭ وَاٰتُوْهُمْ مَّآ
اَنْفَقُوْا ۭ وَلَا جُنَاحَ عَلَيْكُمْ اَنْ تَنْكِحُوْهُنَّ اِذَآ اٰتَيْتُمُوْهُنَّ اُجُوْرَهُنَّ ۭ
وَلَا تُمْسِكُوْا بِعِصَمِ الْكَوَافِرِ وَسْــَٔـلُوْا مَآ اَنْفَقْتُمْ وَلْيَسْــَٔـلُوْا مَآ
اَنْفَقُوْا ۭ ذٰلِكُمْ حُكْمُ اللّٰهِ ۭ يَحْكُمُ بَيْنَكُمْ ۭ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ ۝١٠

5. "எங்கள் இரட்சகனே! நீ எங்களை நிராகரிப்போருக்குச்சோதனையாக ஆக்கிவிடாதே! எங்கள் இரட்சகனே! எங்களை நீ மன்னித்தருள்வாயாக! நிச்சயமாக நீதான் (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்" (என்றும் பிரார்த்தித்தார்).

6. உங்களில் எவர் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் ஆதரவுவைக்கின்றாரோ அவருக்கு, திட்டமாக அவர்களில் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கின்றது; இன்னும், எவர் (ஏற்காது)புறக்கணித்து விடுகிறாரோ, அப்பொழுது (அவரே இழப்பிற்குரியவர்; ஏனெனில் அகிலத்தாரை விட்டும்) நிச்சயமாக அல்லாஹ் — அவனே தேவையற்றவன், புகழ்மிக்கவன்.

7. உங்களுக்கும், அவர்களிலிருந்து நீங்கள் விரோதித்திருக்கின்றீர்களே அத்தகையோருக்குமிடையில், அல்லாஹ் நேசத்தை ஏற்படுத்திவிடக்கூடும்; (இதற்கு) அல்லாஹ்வோ ஆற்றலுடையோன்! மேலும், அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன், மிகக்கிருபையுடையவன்.

8. (விசுவாசிகளே!) மார்க்க(விஷய)த்தில் உங்களுடன் எதிர்த்துப் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அத்தகையோருக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்கள்பால் நீங்கள் நீதமாக நடந்துகொள்வதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடுக்கவில்லை; நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்வோரை நேசிக்கிறான்.

9. அல்லாஹ் உங்களைத் தடுப்பதெல்லாம், மார்க்க (விஷய)த்தில் உங்களுடன் போர் புரிந்து, உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றி, உங்களை வெளியேற்றுவதில் (விரோதிகளுக்கு) உதவியும் செய்தார்களே அத்தகையோரை நீங்கள் சிநேகிதர்களாக ஆக்கிக்கொள்வதைத்தான்; ஆகவே, எவர்கள் அவர்களை நேசர்களாக ஆக்கிக் கொள்கிறார்களோ அவர்கள்தான் அநியாயக்காரர்களாவர்.

10. விசுவாசங்கொண்டோரே! விசுவாசிகளான பெண்கள் ஹிஜ்ரத்துச் செய்தவர்களாக உங்களிடம் வந்தால் அவர்களைச் சோதித்துப்பாருங்கள்; அவர்களுடைய விசுவாசத்தை அல்லாஹ் மிக அறிந்தவன்; ஆகவே, (நீங்கள் சோதித்ததில்) அவர்களை விசுவாசிகளான பெண்கள்தாம் என்று நீங்கள் அறிந்தால், அவர்களை நிராகரிப்போரிடம் திருப்பி அனுப்பி விடாதீர்கள்; (ஏனென்றால் இஸ்லாத்திற்கு வந்த பெண்களாகிய)அவர்கள், அவர்களுக்கு (மனைவியராக இருக்க) ஆகுமானவர்களல்லர்; அவர்களும் இவர்களுக்கு(க் கணவர்களாக இருக்கவும்) ஆகுமானவர்களல்லர்; (எனினும், இப்பெண்களுக் காக) அவர்கள் செலவு செய்திருந்ததையும் அவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள்; நீங்கள் அவர்களுக்கு அவர்களுடைய மஹர்களைக் கொடுத்துவிடுவீர்களானால் அவர்களை நீங்கள் திருமணம் செய்துகொள்வதும் உங்கள் மீது குற்றமில்லை; மேலும், விசுவாசங் கொள்ளாத அவர்களின் விவாக பந்தங்களை நீங்கள் பற்றிப்பிடிக்கவேண்டாம்; (அவர்களின் பந்தங்களை நீக்கி விவாகரத்துச் செய்து விடுங்கள்; அவர்களுக்காக) நீங்கள் செலவு செய்ததையும் (அப்பெண்கள் சென்றிருக்கும் நிராகரிப்போரிடம்) கேளுங்கள்; ( உங்களிடம் வந்துவிட்ட அவர்களுடைய மனைவியருக்குத்) தாங்கள் செலவு செய்ததையும் அவர்கள் (உங்களிடம்) கேட்கட்டும்; இது அல்லாஹ்வுடைய தீர்ப்பாகும்; அவன் உங்களுக்கிடையில் (நீதமாகவே) தீர்ப்பளிக்கிறான்; மேலும், அல்லாஹ் (யாவையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

وَاِنْ فَاتَكُمْ شَیْءٌ مِّنْ اَزْوَاجِكُمْ اِلَى الْكُفَّارِ فَعَاقَبْتُمْ فَاٰتُوا
الَّذِیْنَ ذَهَبَتْ اَزْوَاجُهُمْ مِّثْلَ مَاۤ اَنْفَقُوْا ؕ وَاتَّقُوا اللّٰهَ الَّذِیْۤ
اَنْتُمْ بِهٖ مُؤْمِنُوْنَ ﴿۱۱﴾ یٰۤاَیُّهَا النَّبِیُّ اِذَا جَآءَكَ الْمُؤْمِنٰتُ یُبَایِعْنَكَ
عَلٰۤى اَنْ لَّا یُشْرِكْنَ بِاللّٰهِ شَیْـًٔا وَّلَا یَسْرِقْنَ وَلَا یَزْنِیْنَ وَلَا
یَقْتُلْنَ اَوْلَادَهُنَّ وَلَا یَاْتِیْنَ بِبُهْتَانٍ یَّفْتَرِیْنَهٗ بَیْنَ
اَیْدِیْهِنَّ وَاَرْجُلِهِنَّ وَلَا یَعْصِیْنَكَ فِیْ مَعْرُوْفٍ فَبَایِعْهُنَّ
وَاسْتَغْفِرْ لَهُنَّ اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِیْمٌ ﴿۱۲﴾ یٰۤاَیُّهَا الَّذِیْنَ
اٰمَنُوْا لَا تَتَوَلَّوْا قَوْمًا غَضِبَ اللّٰهُ عَلَیْهِمْ قَدْ یَئِسُوْا مِنَ
الْاٰخِرَةِ كَمَا یَئِسَ الْكُفَّارُ مِنْ اَصْحٰبِ الْقُبُوْرِ ﴿۱۳﴾ ع

النصف ۲ ع ۷ / ۸

## سُوْرَةُ الصَّفِّ مَدَنِیَّةٌ وَّهِیَ اَرْبَعَ عَشْرَةَ اٰیَةً وَّفِیْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ○
سَبَّحَ لِلّٰهِ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ۚ وَهُوَ الْعَزِیْزُ الْحَكِیْمُ ﴿۱﴾
یٰۤاَیُّهَا الَّذِیْنَ اٰمَنُوْا لِمَ تَقُوْلُوْنَ مَا لَا تَفْعَلُوْنَ ﴿۲﴾ كَبُرَ مَقْتًا
عِنْدَ اللّٰهِ اَنْ تَقُوْلُوْا مَا لَا تَفْعَلُوْنَ ﴿۳﴾ اِنَّ اللّٰهَ یُحِبُّ الَّذِیْنَ
یُقَاتِلُوْنَ فِیْ سَبِیْلِهٖ صَفًّا كَاَنَّهُمْ بُنْیَانٌ مَّرْصُوْصٌ ﴿۴﴾

11. உங்கள் மனைவியரிலிருந்து (மதம்மாறி) எவரேனும் உங்களைவிட்டும் நிராகரிப்பவர்கள்பால் தப்பிச்சென்றுவிட்டால், பின்னர் நீங்கள் (அவர்களுடன் போர்செய்து அவர்களிடமிருந்து) போர்ப் பொருள்களை அடைந்தால், எவர்களின் மனைவியர்கள் சென்றுவிட்டனரோ அவர்களுக்கு அவர்கள் செலவு செய்தது போன்றதைக் கொடுத்துவிடுங்கள்; மேலும், எவனை நீங்கள் விசுவாசம் கொண்டுள்ளீர்களோ அத்தகைய அல்லாஹ்வை நீங்கள் பயந்துகொள்ளுங்கள்.

12. நபியே! "அல்லாஹ்விற்கு எப்பொருளையும் அவர்கள் இணை வைப்பதில்லை என்றும், திருடுவதில்லை என்றும், விபச்சாரம் செய்வதில்லை என்றும், தங்கள் (பெண்) பிள்ளைகளைக் கொலை செய்வதில்லை என்றும், தங்களுடைய கைகளுக்கும் தங்கள் கால்களுக்குமிடையில் எதனை அவர்கள் கற்பனை செய்கிறார்களோ அவ்வாறான அவதூறை இட்டுக்கட்டுவதில்லை என்றும், நன்மையானவற்றில் உமக்கு மாறு செய்வதுமில்லை என்றும் உம்மிடம் வாக்குறுதி (பைஅத்து) செய்ய விசுவாசிகளான பெண்கள் உம்மிடம் வந்தால், அவர்களுடன் நீர் வாக்குறுதி செய்து கொள்வீராக! இன்னும், நீர் அவர்களுக்காக அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புத் தேடுவீராக! நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மிகக்கிருபையுடையவன்.

13. விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ் எவர்கள் மீது கோபம் கொண்டுவிட்டானோ அந்த சமூகத்தாரை நீங்கள் நண்பர்களாக எடுத்துக் கொள்ளாதீர்கள். (ஏனெனில்) மண்ணறைவாசிகளைப் பற்றி (அவர்கள் திரும்பி வர மாட்டார்களென) நிராகரிப்போர் நம்பிக்கையிழந்தவாறே, மறுமையைப்பற்றி நிச்சயமாக இவர்கள் நம்பிக்கையிழந்துவிட்டனர்.

அத்தியாயம் : 61

## அஸ்ஸஃப் – அணிவகுப்பு

வசனங்கள் : 14 மதனீ ருகூஉகள் : 2

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வைத் துதி செய்கின்றன. அவனே (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

2. விசுவாசங் கொண்டோரே! நீங்கள் செய்யாததை ஏன் கூறுகின்றீர்கள்.

3. நீங்கள் செய்யாததை(ப்பிறருக்குச்செய்ய)க் கூறுவது அல்லாஹ்விடத்தில் வெறுப்பால் மிகப்பெரிதாகிவிட்டது.

4. (விசுவாசிகளே!) நிச்சயமாக அல்லாஹ்: ஒன்றோடொன்று இணைந்(து அசையா)திருக்கும் கட்டிடத்தைப் போன்று அணியில் (இருந்து புறமுதுகிடாது) நின்றவர்களாக அவனுடைய பாதையில் யுத்தம் புரிகிறார்களே அத்தகையோரை நேசிக்கின்றான்.

وَاِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهٖ يٰقَوْمِ لِمَ تُؤْذُوْنَنِيْ وَقَدْ تَّعْلَمُوْنَ اَنِّيْ
رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ ؕ فَلَمَّا زَاغُوْۤا اَزَاغَ اللّٰهُ قُلُوْبَهُمْ ؕ وَاللّٰهُ لَا يَهْدِي
الْقَوْمَ الْفٰسِقِيْنَ ۝۵ وَاِذْ قَالَ عِيْسَى ابْنُ مَرْيَمَ يٰبَنِيْۤ اِسْرَآءِيْلَ اِنِّيْ
رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ مُّصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيَّ مِنَ التَّوْرٰىةِ وَمُبَشِّرًۢا
بِرَسُوْلٍ يَّاْتِيْ مِنْۢ بَعْدِي اسْمُهٗۤ اَحْمَدُ ؕ فَلَمَّا جَآءَهُمْ بِالْبَيِّنٰتِ قَالُوْا
هٰذَا سِحْرٌ مُّبِيْنٌ ۝۶ وَمَنْ اَظْلَمُ مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ الْكَذِبَ وَهُوَ
يُدْعٰۤى اِلَى الْاِسْلَامِ ؕ وَاللّٰهُ لَا يَهْدِي الْقَوْمَ الظّٰلِمِيْنَ ۝۷ يُرِيْدُوْنَ
لِيُطْفِـُٔوْا نُوْرَ اللّٰهِ بِاَفْوَاهِهِمْ ؕ وَاللّٰهُ مُتِمُّ نُوْرِهٖ وَلَوْ كَرِهَ الْكٰفِرُوْنَ ۝۸
هُوَ الَّذِيْۤ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى وَدِيْنِ الْحَقِّ لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ
كُلِّهٖ وَلَوْ كَرِهَ الْمُشْرِكُوْنَ ۝۹ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا هَلْ اَدُلُّكُمْ عَلٰى تِجَارَةٍ ع ۹ ۹
تُنْجِيْكُمْ مِّنْ عَذَابٍ اَلِيْمٍ ۝۱۰ تُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَتُجَاهِدُوْنَ
فِيْ سَبِيْلِ اللّٰهِ بِاَمْوَالِكُمْ وَاَنْفُسِكُمْ ؕ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ
تَعْلَمُوْنَ ۝۱۱ يَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ وَيُدْخِلْكُمْ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا
الْاَنْهٰرُ وَمَسٰكِنَ طَيِّبَةً فِيْ جَنّٰتِ عَدْنٍ ؕ ذٰلِكَ الْفَوْزُ الْعَظِيْمُ ۝۱۲
وَاُخْرٰى تُحِبُّوْنَهَا ؕ نَصْرٌ مِّنَ اللّٰهِ وَفَتْحٌ قَرِيْبٌ ؕ وَبَشِّرِ الْمُؤْمِنِيْنَ ۝۱۳

5. மேலும், மூஸா தன் சமூகத்தாரிடம், " என்னுடைய சமூகத்தாரே! நிச்சயமாக நான், உங்கள்பால் அனுப்பப்பட்ட அல்லாஹ்வுடைய தூதனாக இருக்கிறேன் என்பதை நிச்சயமாக நீங்கள் நன்கறிந்தவர்களாக இருக்க, என்னை ஏன் நீங்கள் துன்புறுத்துகிறீர்கள்?" என்று கூறியதை (நபியே! நீர் நினைவு கூர்வீராக!) பின்னர், (நேர்வழியிலிருந்து) அவர்கள் சறுகிய பொழுது, அல்லாஹ்வும் அவர்களுடைய இதயங்களை (நேர்வழியிலிருந்து) சறுகச்செய்துவிட்டான்; அன்றியும் பாவிகளான சமூகத்தாரை அல்லாஹ் நேர் வழியில் செலுத்த மாட்டான்.

6. மேலும், மர்யமின் புதல்வர் ஈஸா, "இஸ்ராயீலின் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை உண்மைப்படுத்தியவனாகவும், எனக்குப் பின்னர் அஹ்மது எனும் பெயருள்ள ஒரு தூதர் வருவார் என நன்மாராயம் கூறுபவனாகவும் நிச்சயமாக உங்கள்பால் (அனுப்பப்பட்ட) அல்லாஹ்வின் தூதராக நான் இருக்கிறேன்" என்று கூறியதை (நபியே! நீர் நினைவு கூர்வீராக) பின்னர், (அவர் கூறியவாறு) தெளிவான அத்தாட்சிகளுடன் அவர்களிடம் (அத்தூதராகிய) அவர் வந்தபொழுது, "இது தெளிவான சூனியம்" என்று அவர்கள் கூறினர்.

7. மேலும் அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டுபவனைவிட மிக அநியாயக்காரன் யார்? அவனோ இஸ்லாத்தின்பால் (அதில் இணைந்துகொள்ள) அழைக்கப்படுகிறான்; மேலும், (அதனை நிராகரித்த) அநியாயக்கார சமூகத்தாரை அல்லாஹ் நேர் வழியில் செலுத்தமாட்டான்.

8. அல்லாஹ்வின் பிரகாசத்தைத் தம் வாய்களினால் (ஊதி) அணைத்துவிட அவர்கள் நாடுகின்றனர்; நிராகரிப்போர் வெறுத்தபோதிலும், அல்லாஹ்வோ தன்னுடைய பிரகாசத்தைப் பூர்த்தியாக ஆக்கிவைக்கக்கூடியவன்.

9. அவன் எத்தகையோனென்றால், அவன் தன்னுடைய தூதரை நேர் வழியைக் கொண்டும், உண்மையான மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பிவைத்தான்; இணை வைத்துக்கொண்டிருப்போர் வெறுத்த போதிலும், மற்ற ஏனைய எல்லா மார்க்கங்களைவிட அதை மேலோங்கச் செய்யவே (தன் தூதரை அனுப்பி வைத்தான்.)

10. விசுவாசங்கொண்டோரே! ஒரு வியாபாரத்தை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? துன்புறுத்தும் வேதனையிலிருந்து அது உங்களை ஈடேற்றும்.

11. (அத்தகைய வியாபாரமாவது:) நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய (இத்) தூதரையும் ஈமான் கொண்டு, உங்களுடைய பொருட்களையும், உங்களுடைய உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வுடைய பாதையில் அறப்போர் (ஜிஹாது) செய்வீர்கள்; நீங்கள் அறியக்கூடியவர்களாக இருப்பின் இதுவே உங்களுக்கு மிகச் சிறந்ததாக இருக்கும்.

12. (அவ்வாறு நீங்கள் செய்தால்) அவன் உங்களுடைய பாவங்களை உங்களுக்கு மன்னித்துவிடுவான்; மேலும் சுவனங்களில் உங்களைப் பிரவேசிக்கச் செய்வான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; மேலும், (அத்னு எனும்) நிலையான சுவனங்களில் (உள்ள) நல்ல இருப்பிடங்களிலும் (உங்களைப் பிரவேசிக்கச் செய்வான்). அதுவே மகத்தான வெற்றியாகும்.

13. வேறொன்று(மானவியாபாரமு)ம் உண்டு; அதை நீங்கள் விரும்புகிறீர்கள்; (அதுவே) அல்லாஹ்விடமிருந்து உதவியும், சமீபித்து வரும் வெற்றியுமாகும்; இன்னும், (நபியே! இதனைக் கொண்டு) நீர் விசுவாசிகளுக்கு நன்மாராயம் கூறுவீராக.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْۤا اَنْصَارَ اللّٰهِ كَمَا قَالَ عِيْسَى ابْنُ مَرْيَمَ
لِلْحَوَارِيّٖنَ مَنْ اَنْصَارِيْۤ اِلَى اللّٰهِ ؕ قَالَ الْحَوَارِيُّوْنَ نَحْنُ اَنْصَارُ
اللّٰهِ فَاٰمَنَتْ طَّآئِفَةٌ مِّنْۢ بَنِيْۤ اِسْرَآءِيْلَ وَ كَفَرَتْ طَّآئِفَةٌ ۚ
فَاَيَّدْنَا الَّذِيْنَ اٰمَنُوْا عَلٰى عَدُوِّهِمْ فَاَصْبَحُوْا ظٰهِرِيْنَ ﴿١٤﴾ ع ٢ ٥ ١٠

## سُوْرَةُ الْجُمُعَةِ مَدَنِيَّةٌ وَّهِيَ اِحْدٰى عَشْرَةَ اٰيَةً وَّ فِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يُسَبِّحُ لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَ مَا فِي الْاَرْضِ الْمَلِكِ الْقُدُّوْسِ الْعَزِيْزِ
الْحَكِيْمِ ﴿١﴾ هُوَ الَّذِيْ بَعَثَ فِي الْاُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ
وَ يُزَكِّيْهِمْ وَ يُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَ الْحِكْمَةَ ۗ وَ اِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِيْ ضَلٰلٍ
مُّبِيْنٍ ﴿٢﴾ ۙ وَّ اٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ؕ وَ هُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿٣﴾ ذٰلِكَ
فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ ؕ وَ اللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ﴿٤﴾ مَثَلُ
الَّذِيْنَ حُمِّلُوا التَّوْرٰىةَ ثُمَّ لَمْ يَحْمِلُوْهَا كَمَثَلِ الْحِمَارِ يَحْمِلُ اَسْفَارًا ؕ
بِئْسَ مَثَلُ الْقَوْمِ الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِ اللّٰهِ ؕ وَ اللّٰهُ لَا يَهْدِي الْقَوْمَ
الظّٰلِمِيْنَ ﴿٥﴾ قُلْ يٰۤاَيُّهَا الَّذِيْنَ هَادُوْۤا اِنْ زَعَمْتُمْ اَنَّكُمْ اَوْلِيَآءُ لِلّٰهِ
مِنْ دُوْنِ النَّاسِ فَتَمَنَّوُا الْمَوْتَ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿٦﴾

14. விசுவாசங்கொண்டோரே! மர்யமின் புதல்வர் ஈஸா தன் சீடர்களிடம்: "அல்லாஹ்வின்பால் (அவன் மார்க்கத்திற்காக) எனக்கு உதவி செய்வோர் யார்?" எனக்கேட்க, அச்சீடர்கள் "நாங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்கள்" எனக்கூறியது போன்று அல்லாஹ்வின் உதவியாளர்களாக நீங்கள் ஆகி விடுங்கள்;(பின்னர்) இஸ்ராயீலின் சந்ததிகளில் ஒரு கூட்டம் விசுவாசம் கொண்டது; மற்றொரு கூட்டமோ நிராகரித்தது; ஆகவே, விசுவாசம் கொண்டிருந்தோரை அவர்களின் விரோதிகளுக்கெதிராக நாம் பலப்படுத்தி (வெற்றியை நல்கி)னோம்; ஆகவே, அவர்கள் வெற்றியாளர்களாக ஆகிவிட்டனர்.

---

அத்தியாயம் : 62

## அல் ஜுமுஆ _ வெள்ளிக்கிழமை

வசனங்கள் : 11 மதனீ ருகூஃகள் : 2

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வைத் துதி செய்கின்றன. (அவன்தான்) பேரரசன்; பரிசுத்தமானவன்; (யாவரையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்.

2. அவன் எத்தகையவனென்றால், எழுத்தறிவில்லாத (அரபி) சமூகத்தார்களில், அவர்களிலிருந்தே ஒரு தூதரைத் தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்தான். அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக்காண்பித்து, அவர்களைப் பரிசுத்தமாக்கியும் வைத்து, அவர்களுக்கு வேதத்தையும், தீர்க்கமான அறிவை (சுன்னத்தை)யும் கற்றுக் கொடுக்கின்றார்; நிச்சயமாக, அவர்கள் இதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டில் இருந்தனர்.

3. இன்னும், அவர்களிலிருந்து (தோன்றக்கூடியவர்களும்) இதுவரை அவர்களுடன் சேராத(வர்களும் உலக முடிவுவரை தோன்றக் கூடியவர் களுமான) மற்றுமுள்ளோருக்கும் (தூதராக அவரை அல்லாஹ் அனுப்பி வைத்தான்.) அவனோ யாவரையும் மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்.

4. அது அல்லாஹ்வுடைய பேரருளாகும்; அவன் நாடியவர்களுக்கு அதனைக் கொடுக்கின்றான்; மேலும், அல்லாஹ் மகத்தான பேரருளுடையவன்.

5. "தவ்றாத்"தைச் சுமத்தப்பட்டுப் பின்னர், அதிலுள்ளவாறு செயல்படாதவர்களின் உதாரணம்: ஏடுகளைச் சுமக்கும் கழுதையின் உதாரணத்தைப் போன்றாகும்; அல்லாஹ்வுடைய வசனங்களைப் பொய்யாக்கியவர்களான சமூகத்தாரின் இவ்வுதாரணம் மிகக்கெட்டது; அல்லாஹ்வோ அநியாயக்கார சமூகத்தாரை நேர் வழியில் செலுத்தமாட்டான்.

6. "யூதர்களே! (மற்ற) மனிதர்களன்றி நீங்கள் தான் அல்லாஹ்வின் நண்பர்களென்று நிச்சயமாக நீங்கள் எண்ணிக்கொண்டிருந்தால், (அவ்வெண்ணத்தில்) நீங்கள் உண்மையானவர்களாக இருந்தால் நீங்கள் மரணத்தை விரும்புங்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

وَلَا يَتَمَنَّوْنَهٗٓ اَبَدًاۢ بِمَا قَدَّمَتْ اَيْدِيْهِمْ ؕ وَاللّٰهُ عَلِيْمٌۢ بِالظّٰلِمِيْنَ ۝٧
قُلْ اِنَّ الْمَوْتَ الَّذِيْ تَفِرُّوْنَ مِنْهُ فَاِنَّهٗ مُلٰقِيْكُمْ ثُمَّ تُرَدُّوْنَ
اِلٰى عٰلِمِ الْغَيْبِ وَالشَّهَادَةِ فَيُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ۝٨ يٰٓاَيُّهَا ع ١
الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا نُوْدِيَ لِلصَّلٰوةِ مِنْ يَّوْمِ الْجُمُعَةِ فَاسْعَوْا اِلٰى
ذِكْرِ اللّٰهِ وَذَرُوا الْبَيْعَ ؕ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ۝٩ فَاِذَا
قُضِيَتِ الصَّلٰوةُ فَانْتَشِرُوْا فِي الْاَرْضِ وَابْتَغُوْا مِنْ فَضْلِ اللّٰهِ
وَاذْكُرُوا اللّٰهَ كَثِيْرًا لَّعَلَّكُمْ تُفْلِحُوْنَ ۝١٠ وَاِذَا رَاَوْا تِجَارَةً اَوْ لَهْوَا
اِۨنْفَضُّوْٓا اِلَيْهَا وَتَرَكُوْكَ قَآئِمًا ؕ قُلْ مَا عِنْدَ اللّٰهِ خَيْرٌ مِّنَ اللَّهْوِ
وَمِنَ التِّجَارَةِ ؕ وَاللّٰهُ خَيْرُ الرّٰزِقِيْنَ ۝١١ ع ٢

سُوْرَةُ الْمُنٰفِقُوْنَ مَدَنِيَّةٌ وَّهِيَ اِحْدٰى عَشْرَةَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

اِذَا جَآءَكَ الْمُنٰفِقُوْنَ قَالُوْا نَشْهَدُ اِنَّكَ لَرَسُوْلُ اللّٰهِ ۘ وَاللّٰهُ يَعْلَمُ وقف لازم
اِنَّكَ لَرَسُوْلُهٗ ؕ وَاللّٰهُ يَشْهَدُ اِنَّ الْمُنٰفِقِيْنَ لَكٰذِبُوْنَ ۝١ ج اِتَّخَذُوْٓا
اَيْمَانَهُمْ جُنَّةً فَصَدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ ؕ اِنَّهُمْ سَآءَ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ۝٢
ذٰلِكَ بِاَنَّهُمْ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا فَطُبِعَ عَلٰى قُلُوْبِهِمْ فَهُمْ لَا يَفْقَهُوْنَ ۝٣

7. அன்றியும், அவர்களின் கரங்கள் முற்படுத்திவைத்ததின் காரணமாக (மரணமாகிய) அதை ஒரு போதும் அவர்கள் விரும்பமாட்டார்கள்; மேலும் அல்லாஹ் அநியாயக்காரர்களை நன்கறிந்தவன்.

8. (நபியே ! அவர்களிடம்,) நீர் கூறுவீராக: நிச்சயமாக நீங்கள் எதைவிட்டும் வெருண்டோடுகிறீர்களோ அத்தகைய மரணம் – நிச்சயமாக அது – உங்களைச் சந்திக்கும்; பின்னர், மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிகிறவன் பக்கம் நீங்கள் மீட்டப்படுவீர்கள்; அப்போது, நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றை உங்களுக்கு அவன் அறிவிப்பான்.

9. விசுவாசங்கொண்டோரே ! (வெள்ளிக்கிழமையாகிய) ஜுமுஆ தினத்தன்று தொழுகைக்காக (பாங்கு சொல்லி நீங்கள்) அழைக்கப்பட்டால், அப்போது அல்லாஹ்வை நினைவு கூர்வதன்பால் நீங்கள் சென்றுவிடுங்கள்; வர்த்தகத்தையும் விட்டுவிடுங்கள்; நீங்கள் அறிவுடையோர்களாக இருந்தால், இதுவே உங்களுக்கு மிகச் சிறந்ததாகும். (இதனை அறிந்துகொள்வீர்களாக!)

10. பின்னர், (ஜுமுஆத்) தொழுகை நிறைவேற்றப்பட்டுவிட்டால் (பள்ளியிலிருந்து வெளிப்பட்டுப்) பூமியில் பரவிச் சென்று, அல்லாஹ்வுடைய பேரருளைத் தேடிக்கொள்ளுங்கள்; மேலும், நீங்கள் வெற்றியடையும் பொருட்டு அதிகமதிகம் அல்லாஹ்வை நினைவு கூருங்கள்.

11. (நபியே!) ஒரு வியாபாரத்தையோ, அல்லது வேடிக்கையையோ அவர்கள் பார்த்துவிட்டால், அதனளவில் சென்றுவிடுகின்றனர்; (குத்பா ஓதும்) உம்மை நின்றவண்ணமாக விட்டும்விடுகின்றனர்; (ஆகவே , நபியே ! அவர்களிடம்,) நீர் கூறுவீராக: "அல்லாஹ்விடத்தில் உள்ளது வேடிக்கையையும், வர்த்தகத்தையும் விட மிகச்சிறந்ததாகும்; அன்றியும் உணவளிப்பவர்களில் அல்லாஹ் மிகச் சிறந்தவன்."

---

அத்தியாயம் : 63

## அல் முனாஃபிகூன் – நயவஞ்சகர்கள்

வசனங்கள் : 11 மதனீ ருகூஃகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (நபியே ! வேஷதாரிகளான) முனாஃபிக்குகள் உம்மிடம் வந்தால், "நிச்சயமாக நீர் அல்லாஹ்வுடைய தூதர்தான் என்று நாங்கள் சாட்சி கூறுகிறோம்" என்பதாகக் கூறுகின்றனர்; இன்னும், நிச்சயமாக நீர் அவனுடைய தூதர்தான் என்பதை அல்லாஹ் நன்கறிவான். இன்னும் நிச்சயமாக, இந்த முனாஃபிக்குகள் பொய்யர்களாவர் என்று அல்லாஹ் சாட்சி கூறுகின்றான்.

2. " இவர்கள் தங்களுடைய (பொய்ச்) சத்தியங்களை ஒரு கேடயமாக எடுத்துக்கொண்டு, அல்லாஹ்வுடைய பாதையிலிருந்து (அதில் செல்வோரைத்) தடுக்கின்றனர்; நிச்சயமாக அவர்கள் – அவர்கள் செய்து கொண்டிருந்தது மிகக் கெட்டது.

3. அது, நிச்சயமாக அவர்கள் விசுவாசங்கொண்டு, பின்னர் அவர்கள் (அதனை) நிராகரித்துவிட்டார்கள் என்பதினாலேயாகும்; எனவே, அவர்களுடைய இதயங்களின் மீது முத்திரையிடப்பட்டுவிட்டது; ஆகவே (ஈமானின் உண்மை நிலையை) அவர்கள் விளங்கிக்கொள்ள மாட்டார்கள்.

وَاِذَا رَاَيْتَهُمْ تُعْجِبُكَ اَجْسَامُهُمْ ؕ وَاِنْ يَّقُوْلُوْا تَسْمَعْ لِقَوْلِهِمْ ؕ كَاَنَّهُمْ
خُشُبٌ مُّسَنَّدَةٌ ؕ يَحْسَبُوْنَ كُلَّ صَيْحَةٍ عَلَيْهِمْ ؕ هُمُ الْعَدُوُّ فَاحْذَرْهُمْ ؕ
قٰتَلَهُمُ اللّٰهُ ۫ اَنّٰى يُؤْفَكُوْنَ ﴿۴﴾ وَاِذَا قِيْلَ لَهُمْ تَعَالَوْا يَسْتَغْفِرْ لَكُمْ رَسُوْلُ
اللّٰهِ لَوَّوْا رُءُوْسَهُمْ وَرَاَيْتَهُمْ يَصُدُّوْنَ وَهُمْ مُّسْتَكْبِرُوْنَ ﴿۵﴾ سَوَآءٌ
عَلَيْهِمْ اَسْتَغْفَرْتَ لَهُمْ اَمْ لَمْ تَسْتَغْفِرْ لَهُمْ ؕ لَنْ يَّغْفِرَ اللّٰهُ لَهُمْ ؕ اِنَّ
اللّٰهَ لَا يَهْدِى الْقَوْمَ الْفٰسِقِيْنَ ﴿۶﴾ هُمُ الَّذِيْنَ يَقُوْلُوْنَ لَا تُنْفِقُوْا
عَلٰى مَنْ عِنْدَ رَسُوْلِ اللّٰهِ حَتّٰى يَنْفَضُّوْا ؕ وَلِلّٰهِ خَزَآئِنُ السَّمٰوٰتِ
وَالْاَرْضِ وَلٰكِنَّ الْمُنٰفِقِيْنَ لَا يَفْقَهُوْنَ ﴿۷﴾ يَقُوْلُوْنَ لَئِنْ رَّجَعْنَآ
اِلَى الْمَدِيْنَةِ لَيُخْرِجَنَّ الْاَعَزُّ مِنْهَا الْاَذَلَّ ؕ وَلِلّٰهِ الْعِزَّةُ وَلِرَسُوْلِهٖ
وَلِلْمُؤْمِنِيْنَ وَلٰكِنَّ الْمُنٰفِقِيْنَ لَا يَعْلَمُوْنَ ﴿۸﴾ ع يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا ع ٨/١ ١٣
لَا تُلْهِكُمْ اَمْوَالُكُمْ وَلَآ اَوْلَادُكُمْ عَنْ ذِكْرِ اللّٰهِ ۚ وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ
فَاُولٰٓئِكَ هُمُ الْخٰسِرُوْنَ ﴿۹﴾ وَاَنْفِقُوْا مِنْ مَّا رَزَقْنٰكُمْ مِّنْ قَبْلِ اَنْ
يَّاْتِىَ اَحَدَكُمُ الْمَوْتُ فَيَقُوْلَ رَبِّ لَوْلَآ اَخَّرْتَنِىْۤ اِلٰٓى اَجَلٍ
قَرِيْبٍ ۙ فَاَصَّدَّقَ وَاَكُنْ مِّنَ الصّٰلِحِيْنَ ﴿۱۰﴾ وَلَنْ يُّؤَخِّرَ اللّٰهُ
نَفْسًا اِذَا جَآءَ اَجَلُهَا ؕ وَاللّٰهُ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ ﴿۱۱﴾ ع ع ٢/٣ ١٤

4. மேலும், (நபியே!) அவர்களை நீர் பார்த்தால், அவர்களுடைய உடல் (அமைப்பு)கள் உம்மை ஆச்சரியத்திலாழ்த்தும்; அவர்கள் பேசினால் அவர்களுடைய சொல்லையே நீர் கேட்டுக்கொண்டிருப்பீர்; (உமக்குச் செவியேற்காத) அவர்கள் (சுவரின் மீது) சாய்த்துவைக்கப்பட்ட மரக்கட்டைகளைப் போல் இருக்கின்றனர்; மேலும், (அவர்கள் செவியேற்கும்)ஒவ்வொரு சப்தத்தையும் தங்களுக்கு விரோதமானது என எண்ணிக் கொள்வார்கள்; (நபியே!) அவர்கள் தாம் (உம்முடைய கடுமையான) பகைவர்கள்; ஆகவே, அவர்களைப் பற்றி நீர் எச்சரிக்கையாக இருந்துகொள்வீராக! அல்லாஹ் அவர்களை அழித்துவிடுவானாக! (உண்மையை ஏற்பதிலிருந்து) அவர்கள் எங்கு திருப்பப் படுகின்றனர்?

5. மேலும், "வாருங்கள்; அல்லாஹ்வின் தூதர் உங்களுக்காக (உங்களுடைய இரட்சகனிடம் பாவ)மன்னிப்பைத் தேடுவார்" என்று அவர்களிடம் கூறப்பட்டால், தங்கள் தலைகளை அவர்கள்சாய்த்துக்கொள்கின்றனர்; இன்னும் அவர்கள் பெருமை கொண்டோராக(எதன்பால் அழைக்கப்பட்டார்களோ) அதைவிட்டும் புறக்கணித்து (த்திரும்பி)ச் செல்வதை(நபியே!) நீர் காண்பீர்.

6. (நபியே !) அவர்களுக்காக நீர் மன்னிப்புத் தேடுவதும் அல்லது அவர்களுக்காக நீர் மன்னிப்புத்தேடாமலிருப்பதும் அவர்களுக்குச் சமமேயாகும்; அல்லாஹ் அவர்களை மன்னிக்கவே மாட்டான்; நிச்சயமாக அல்லாஹ், பாவிகளான சமூகத்தாரை நேர் வழியில் செலுத்தமாட்டான்.

7. அவர்கள் எத்தகையோரென்றால், "அல்லாஹ்வுடைய தூதருடன் இருப்பவர்கள் (அவரைவிட்டுப்) பிரிந்து செல்லும் வரை அவர்களுக்கு நீங்கள் செலவு செய்யாதீர்கள்" என்று (மற்றவர்களிடம்) கூறுகிறார்கள்; (நபியே! நீர் கூறுவீராக:) "வானங்கள் மற்றும் பூமியிலுள்ள களஞ்சியங்கள் அல்லாஹ்வுக்கே சொந்தமானவையாகும்; எனினும், இந்த (வேஷதாரிகளான) முனாஃபிக்குகள் (இதனை) விளங்கிக் கொள்ளமாட்டார்கள்."

8. "நாங்கள் மதீனாவிற்குத் திரும்பி வந்தால், மிகக்கண்ணியமானவர் மிக இழிவானவரை அதிலிருந்து நிச்சயமாக வெளியேற்றிவிடுவார்" என்று அவர்கள் கூறுகின்றனர்; (நபியே! நீர் கூறுவீராக:) "கண்ணியம் அல்லாஹ் வுக்கும், அவனுடைய தூதருக்கும், விசுவாசிகளுக்கும் உரியதாகும்; எனினும், (வேஷதாரிகளான) முனாஃபிக்குகள் (இதனை) அறிய மாட்டார்கள்."

9. விசுவாசங்கொண்டோரே! உங்களுடைய செல்வங்களும், உங்களுடைய மக்களும் அல்லாஹ்வுடைய நினைவிலிருந்து உங்களை(த் திருப்பி)வீணாக்கி விட வேண்டாம்; இன்னும்,எவர் அதைச் செய்கிறாரோ அவர்கள் தாம் நஷ்டமடைந்தவர்களாவர்.

10. உங்களில் ஒருவருக்கு மரணம் வருவதற்கு முன்பாகவே நாம் உங்களுக்கு கொடுத்தவற்றிலிருந்து (தர்மமாக) செலவுசெய்யுங்கள்; (அவ்வாறு செய்யாதவர் தன் மரண தறுவாயில்) "என் இரட்சகனே! சமீப தவணையின்பால் என்னை நீ பிற்படுத்த வேண்டாமா? (அவ்வாறு பிற்படுத்தினால்) நான் தர்மம் செய்வேன்; (இன்னபிற நற்கருமங்களைச் செய்து) நல்லோர்களிலும் உள்ளவனாக நான் ஆகிவிடுவேன்" என்று கூறுவான்.

11. இன்னும் அல்லாஹ், எந்த ஆத்மாவையும்_அதன் தவணை வந்துவிட்டால்(அதனைப்) பிற்படுத்தவே மாட்டான்;மேலும், அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்குணர்பவன்.

سُوْرَةُ التَّغَابُنِ مَدَنِيَّةٌ وَهِيَ ثَمَانِيَ عَشْرَةَ اٰيَةً وَفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يُسَبِّحُ لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ۚ لَهُ الْمُلْكُ وَلَهُ
الْحَمْدُ ۡ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿١﴾ هُوَ الَّذِيْ خَلَقَكُمْ
فَمِنْكُمْ كَافِرٌ وَّمِنْكُمْ مُّؤْمِنٌ ۭ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ﴿٢﴾
خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِالْحَقِّ وَصَوَّرَكُمْ فَاَحْسَنَ صُوَرَكُمْ ۚ
وَاِلَيْهِ الْمَصِيْرُ ﴿٣﴾ يَعْلَمُ مَا فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَيَعْلَمُ
مَا تُسِرُّوْنَ وَمَا تُعْلِنُوْنَ ۭ وَاللّٰهُ عَلِيْمٌۢ بِذَاتِ الصُّدُوْرِ ﴿٤﴾
اَلَمْ يَاْتِكُمْ نَبَؤُا الَّذِيْنَ كَفَرُوْا مِنْ قَبْلُ ۡ فَذَاقُوْا وَبَالَ اَمْرِهِمْ
وَلَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿٥﴾ ذٰلِكَ بِاَنَّهٗ كَانَتْ تَّاْتِيْهِمْ رُسُلُهُمْ
بِالْبَيِّنٰتِ فَقَالُوْٓا اَبَشَرٌ يَّهْدُوْنَنَا ۡ فَكَفَرُوْا وَتَوَلَّوْا وَّاسْتَغْنَى
اللّٰهُ ۭ وَاللّٰهُ غَنِيٌّ حَمِيْدٌ ﴿٦﴾ زَعَمَ الَّذِيْنَ كَفَرُوْٓا اَنْ لَّنْ
يُّبْعَثُوْا ۭ قُلْ بَلٰى وَرَبِّيْ لَتُبْعَثُنَّ ثُمَّ لَتُنَبَّؤُنَّ بِمَا
عَمِلْتُمْ ۭ وَذٰلِكَ عَلَى اللّٰهِ يَسِيْرٌ ﴿٧﴾ فَاٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ
وَالنُّوْرِ الَّذِيْٓ اَنْزَلْنَا ۭ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ ﴿٨﴾

*அத்தியாயம் : 64*

## *அத்தகாபுன் _ நஷ்டம்*

*வசனங்கள் : 18 மதனீ ருகூஉகள் : 2*

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. *வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வைத் துதி செய்கின்றன; ஆட்சி அவனுக்கே உரியது; மேலும் புகழனைத்தும் அவனுக்கே உரியது; மேலும், அவன் ஒவ்வொருபொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.*

2. *அவன் எத்தகையவனென்றால், உங்களை அவன் படைத்தான்; பின்னர், நிராகரிப்பவரும் உங்களில் உண்டு; (அவனை) விசுவாசிப்பவரும் உங்களில் உண்டு; மேலும், நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் பார்க்கிறவன்.*

3. *(தீர்க்கமான அவனது முடிவால்) நீதியைக் கொண்டு, வானங்களையும் பூமியையும் அவன் படைத்திருக்கின்றான்; அவனே உங்களுக்கு உருவம் அமைத்தான், பின்னர் உங்களுடைய உருவங்களை மிக்க அழகாகவும் ஆக்கிவைத்தான்; அவனிடமேதான்(நீங்கள் அனைவரும்) திரும்பிச்செல்ல வேண்டியதிருக்கின்றது.*

4. *வானங்களிலும், பூமியிலும் உள்ளவற்றை அவன் நன்கறிகிறான்; நீங்கள் இரகசியமாக்குவதையும், நீங்கள் பகிரங்கமாக்குவதையும் அவன் நன்கறிகிறான்; மேலும் நெஞ்சங்களிலுள்ளவற்றை அல்லாஹ் நன்கறிகிறவன்.*

5. *(மனிதர்களே!) முன்னர் நிராகரித்துவிட்டோரின் செய்தி உங்களுக்கு வரவில்லையா? பின்னர் அவர்கள் தங்கள் செயலின் தீய பலனை (இவ்வுலகில்) சுவைத்தார்கள். அன்றியும் (மறுமையிலும்) அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை உண்டு.*

6. *அது,(ஏனெனில்) நிச்சயமாக தெளிவான அத்தாட்சிகளுடன் அவர்களுக்காக(அனுப்பப்பட்ட நம்முடைய) தூதர்கள் அவர்களிடம் வந்துகொண்டே இருந்தார்கள்; பின்னர், அவர்களோ "(நம்மைப் போன்ற) மனித (இனத்தவ)ர்களா நமக்கு நேர் வழிகாட்டுவார்கள்?" என்று கூறினர்; பின்னர் (அவர்களை) அவர்கள் நிராகரித்துவிட்டு, புறக்கணித்தும் சென்றுவிட்டனர்என்ற காரணத்தினாலாகும்; அல்லாஹ் அவர்களை விட்டும் தேவையற்றவனாகிவிட்டான்; மேலும் அல்லாஹ் தேவையற்றவன்; புகழுக்குரியவன்.*

7. *(மரணித்த பின்னர் நிச்சயமாக உயிர் கொடுத்து) அவர்கள் எழுப்பப்படவே மாட்டார்கள் என்று நிராகரிப்போர் எண்ணிக்கொண்டிருக்கின்றனர்; (நபியே !) நீர் கூறுவீராக: "அவ்வாறல்ல! என் இரட்சகன் மீது சத்தியமாக! நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள்; பின்னர் நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளைப் பற்றி நிச்சயமாக நீங்கள் அறிவிக்கப்படுவீர்கள்; மேலும், அ(வ்வாறு செய்வ)து அல்லாஹ்வுக்கு மிக்க எளிதானதாகும்".*

8. *ஆகவே நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், நாம் இறக்கி வைத்தோமே அத்தகைய (இவ் வேதமாகிய) பிரகாசத்தையும் விசுவாசியுங்கள்; மேலும், அல்லாஹ் நீங்கள் செய்கின்றவற்றை நன்குணர்பவன்.*

يَوْمَ يَجْمَعُكُمْ لِيَوْمِ الْجَمْعِ ذٰلِكَ يَوْمُ التَّغَابُنِ ؕ وَمَنْ يُّؤْمِنْ بِاللّٰهِ
وَيَعْمَلْ صَالِحًا يُّكَفِّرْ عَنْهُ سَيِّاٰتِهٖ وَيُدْخِلْهُ جَنّٰتٍ تَجْرِيْ
مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَآ اَبَدًا ؕ ذٰلِكَ الْفَوْزُ الْعَظِيْمُ ﴿٩﴾ وَ
الَّذِيْنَ كَفَرُوْا وَكَذَّبُوْا بِاٰيٰتِنَآ اُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ خٰلِدِيْنَ فِيْهَا ؕ
وَبِئْسَ الْمَصِيْرُ ﴿١٠﴾ مَآ اَصَابَ مِنْ مُّصِيْبَةٍ اِلَّا بِاِذْنِ اللّٰهِ ؕ وَمَنْ الربع ع ١٠ ١٥
يُّؤْمِنْ بِاللّٰهِ يَهْدِ قَلْبَهٗ ؕ وَاللّٰهُ بِكُلِّ شَيْءٍ عَلِيْمٌ ﴿١١﴾ وَاَطِيْعُوا اللّٰهَ وَ
اَطِيْعُوا الرَّسُوْلَ ۚ فَاِنْ تَوَلَّيْتُمْ فَاِنَّمَا عَلٰى رَسُوْلِنَا الْبَلٰغُ الْمُبِيْنُ ﴿١٢﴾
اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ؕ وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُوْنَ ﴿١٣﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ
اٰمَنُوْٓا اِنَّ مِنْ اَزْوَاجِكُمْ وَاَوْلَادِكُمْ عَدُوًّا لَّكُمْ فَاحْذَرُوْهُمْ ۚ
وَاِنْ تَعْفُوْا وَتَصْفَحُوْا وَتَغْفِرُوْا فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿١٤﴾ اِنَّمَآ
اَمْوَالُكُمْ وَاَوْلَادُكُمْ فِتْنَةٌ ؕ وَاللّٰهُ عِنْدَهٗٓ اَجْرٌ عَظِيْمٌ ﴿١٥﴾ فَاتَّقُوا
اللّٰهَ مَا اسْتَطَعْتُمْ وَاسْمَعُوْا وَاَطِيْعُوْا وَاَنْفِقُوْا خَيْرًا لِّاَنْفُسِكُمْ ؕ
وَمَنْ يُّوْقَ شُحَّ نَفْسِهٖ فَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿١٦﴾ اِنْ
تُقْرِضُوا اللّٰهَ قَرْضًا حَسَنًا يُّضٰعِفْهُ لَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ؕ وَاللّٰهُ
شَكُوْرٌ حَلِيْمٌ ﴿١٧﴾ عٰلِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿١٨﴾ ع ٢ ٨ ١٦

9. ஒன்று கூட்டப்படும் (மறுமை) நாளைக்காக உங்களை அவன் ஒன்று கூட்டும் நாளில், (சகலவற்றைப்பற்றியும் அறிவிக்கப்படும்.) அதுதான் (விசுவாசிகளுக்கு இலாபம் தரும் நாளும், காபிர்களுக்கு)நஷ்டமளிக்கும் நாளாகும்; மேலும், எவர் அல்லாஹ்வை விசுவாசித்து, நற்கருமங்களையும் செய்கிறாரோ அவருடைய தீயவைகளை அவரை விட்டு நீக்குவான்; அவரைசுவனபதிகளிலும் (அல்லாஹ் வாகிய) அவன் புகச்செய்வான்;அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்; நிரந்தரமாக அவற்றில் அவர்கள் (தங்கி) இருப்பவர்கள்; அது மிக்க மகத்தான வெற்றியாகும்.

10. அன்றியும்,நிராகரித்து நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குகின்றார்களே அத்தகையோர் _ அவர்கள் நரகவாசிகளே; அதில் நிரந்தரமாக அவர்கள் (தங்கி) இருப்பவர்கள்.மேலும், அது மிகக்கெட்ட சேருமிடமாகும்.

11. எத்துன்பமும் அல்லாஹ்வுடைய அனுமதிகொண்டே தவிர (எவரையும்) பீடிப்பதில்லை; ஆகவே, எவர் அல்லாஹ்வை விசுவாசிக்கிறாரோ அவருடைய இதயத்திற்கு (அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்டதை பொருந்திக் கொண்டு, பொறுமையுடனிருக்க) அவன் வழிகாட்டுகிறான்; அன்றியும், அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிகிறவன்.

12. மேலும், அல்லாஹ்வுக்குவழிபடுங்கள்; இன்னும், (அவனுடைய) தூதருக்குக் கீழ்ப்படியுங்கள்; ஆகவே, நீங்கள் புறக்கணித்து விட்டால்நம் தூதர் மீதுள்ள கடமையெல்லாம் அவர் (தம் தூதை) தெளிவாக எத்தி வைப்பது தான்.

13. அல்லாஹ்_அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை; ஆகவே, விசுவாசிகள் (தங்கள் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்கவும்.

14. விசுவாசங்கொண்டோரே! நிச்சயமாக உங்கள் மனைவியரிலும், உங்கள் பிள்ளை களிலும் உங்களுக்கு விரோதிகள் இருக்கின்றனர்; ஆகவே, அவர்களைப் பற்றி நீங்கள் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்; மேலும் (அவர்களில் ஏற்பட்டவற்றை) நீங்கள் மன்னித்து,(அதைப்) பொருட்படுத்தாதும் விட்டு விட்டு, இன்னும், (அவர்களின் குற்றங்களை) பொறுத்தருள்வீர்களாயின், நிச்சயமாக அல்லாஹ்(வும்) உங்களுடைய பாவங்களை மிக்கமன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன்.

15. நிச்சயமாக உங்களுடைய செல்வங்களும், உங்களுடைய பிள்ளைகளும் (உங்களுக்குச்) ஒரு சோதனையேயாகும்; அல்லாஹ்_அவனிடமே மகத்தான கூலி இருக்கின்றது.

16. ஆகவே, இயன்ற அளவிற்கு அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்; (அவனின் கட்டளைகளுக்குச்) செவியும் சாயுங்கள்; மேலும்,(அவனுக்குக்) கீழ்ப்படியுங்கள்;உங்களின் நலனுக்காக(அல்லாஹ்வின் வழியில் செல்வங்களைச்) செலவும் செய்யுங்கள். தன் மனதின் உலோபத்தனத்திலிருந்து எவர் காக்கப்படுகிறாரோ, அவர்கள் தாம் வெற்றி பெற்றவர்கள்.

17. அல்லாஹ்வுக்கு அழகான கடனாக நீங்கள் கடன் கொடுப்பீர்களாயின், அதனை அவன் உங்களுக்கு இரட்டிப்பாக்கிவைப்பான்;இன்னும்உங்(கள் குற்றங்) களை மன்னித்துவிடுவான். அல்லாஹ் (சொற்ப) நன்றியையும் மிக அங்கீகரிப்பவன்,மிக்க சகிப்பவன்.

18. (அவன்) மறைவானவற்றையும், வெளிப்படையானவற்றையும் அறிகிறவன்; (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

## سُوْرَةُ الطَّلَاقِ مَدَنِيَّةٌ وَّهِيَ اثْنَتَا عَشْرَةَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يٰۤاَيُّهَا النَّبِيُّ اِذَا طَلَّقْتُمُ النِّسَآءَ فَطَلِّقُوْهُنَّ لِعِدَّتِهِنَّ وَاَحْصُوا
الْعِدَّةَ ۚ وَاتَّقُوا اللّٰهَ رَبَّكُمْ ۚ لَا تُخْرِجُوْهُنَّ مِنْۢ بُيُوْتِهِنَّ وَلَا يَخْرُجْنَ
اِلَّاۤ اَنْ يَّاْتِيْنَ بِفَاحِشَةٍ مُّبَيِّنَةٍ ؕ وَتِلْكَ حُدُوْدُ اللّٰهِ ؕ وَمَنْ يَّتَعَدَّ
حُدُوْدَ اللّٰهِ فَقَدْ ظَلَمَ نَفْسَهٗ ؕ لَا تَدْرِيْ لَعَلَّ اللّٰهَ يُحْدِثُ بَعْدَ ذٰلِكَ
اَمْرًا (١) فَاِذَا بَلَغْنَ اَجَلَهُنَّ فَاَمْسِكُوْهُنَّ بِمَعْرُوْفٍ اَوْ فَارِقُوْهُنَّ
بِمَعْرُوْفٍ وَّاَشْهِدُوْا ذَوَيْ عَدْلٍ مِّنْكُمْ وَاَقِيْمُوا الشَّهَادَةَ لِلّٰهِ ؕ ذٰلِكُمْ
يُوْعَظُ بِهٖ مَنْ كَانَ يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ؕ وَمَنْ يَّتَّقِ اللّٰهَ
يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا (٢) وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ ؕ وَمَنْ يَّتَوَكَّلْ عَلَى
اللّٰهِ فَهُوَ حَسْبُهٗ ؕ اِنَّ اللّٰهَ بَالِغُ اَمْرِهٖ ؕ قَدْ جَعَلَ اللّٰهُ لِكُلِّ شَيْءٍ قَدْرًا (٣)
وَالّٰٓـِٔيْ يَئِسْنَ مِنَ الْمَحِيْضِ مِنْ نِّسَآئِكُمْ اِنِ ارْتَبْتُمْ فَعِدَّتُهُنَّ
ثَلٰثَةُ اَشْهُرٍ وَّالّٰٓـِٔيْ لَمْ يَحِضْنَ ؕ وَاُولَاتُ الْاَحْمَالِ اَجَلُهُنَّ اَنْ يَّضَعْنَ
حَمْلَهُنَّ ؕ وَمَنْ يَّتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مِنْ اَمْرِهٖ يُسْرًا (٤) ذٰلِكَ اَمْرُ اللّٰهِ
اَنْزَلَهٗۤ اِلَيْكُمْ ؕ وَمَنْ يَّتَّقِ اللّٰهَ يُكَفِّرْ عَنْهُ سَيِّاٰتِهٖ وَيُعْظِمْ لَهٗۤ اَجْرًا (٥)

அத்தியாயம் : 65

# அத்தலாக் _ விவாகரத்து

வசனங்கள் : 12 மதனீ ருகூஃகள் : 2

## அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. நபியே! (விசுவாசிகளுக்கு நீர் கூறுவீராக!) நீங்கள் பெண்களை விவாகரத்து செய்(ய முற்படு)வீர்களானால், அவர்கள் இத்தா இருப்பதற்குரிய (மாத விலக்கு நீங்கி அப்பெண்கள் சுத்தமாகி தாம்பத்திய உறவின்றி இருக்கும்) சந்தர்ப்பத்தில் விவாகரத்துச் செய்யுங்கள்; இத்தாவையும் கணக்கிட்டுக்கொள்ளுங்கள்; (இவ்விஷயத்தில்) உங்கள் இரட்சகனாகிய அல்லாஹ்வையும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள்.(நீங்கள் விவாகரத்துச் செய்த) பெண்களை அவர்கள் (இருக்கும் உங்களுடைய) வீடுகளிலிருந்து (இத்தாவுடைய காலம் முடிவு பெறுவதற்கு முன்னர்) நீங்கள் வெளியேற்றிவிடவும்வேண்டாம்; அவர்களும் வெளியேறவேண்டாம்_ பகிரங்கமான மானக்கேடான காரியத்தை அவர்கள் கொண்டு வந்தாலன்றி; இன்னும், இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும்; எவர் அல்லாஹ்வுடைய வரம்புகளை மீறுகின்றாரோ, அவர் நிச்சயமாகத் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொண்டவராவார்; அதன் பின்னர் (நீங்கள் சேர்ந்து வாழ) புதிய ஒரு காரியத்தை அல்லாஹ் ஏற்படுத்திவிடலாம் என்பதை நீர் அறியமாட்டீர்.

2. ஆகவே, அவர்கள் தங்கள் (இத்தாவின்) தவணையை அடைந்து(விட நெருங்கி) விட்டால் (மார்க்கத்தில்) அறியப்பட்டவாறு அவர்களை (மனைவியாகவே) நிறுத்திக்கொள்ளுங்கள்; அல்லது (மார்க்கத்தில்) அறியப்பட்டவாறு அவர்களைப் பிரித்து(விட்டு) விடுங்கள். (அதற்கு) உங்களில், நீதமான இருவரை சாட்சிகளாகவும் ஏற்படுத்திக்கொள்ளுங்கள்; மேலும், (சாட்சி கூறுபவர்களாகிய) நீங்கள் அல்லாஹ்வுக்காக சரியான முறையில் சாட்சியத்தை நிலை நிறுத்துங்கள்; (உங்களில்) யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசிக்கின்றாரோ அவர் இதைக்கொண்டு நல்லுபதேசம் செய்யப்படுகிறார்; அன்றியும் , எவர் அல்லாஹ்வுக்குப் பயந்து நடக்கிறாரோ அவருக்கு (ஒவ்வொரு சங்கடத்திலிருந்தும்) வெளியேறும் வழியை அவன் ஆக்குவான்.

3. மேலும் அவர் எண்ணியிராத விதத்தில் அவருக்கு வாழ்வாதாரங்களை அவன் வழங்குவான்; எவர், அல்லாஹ்வின் மீது (தன் காரியத்தை ஒப்படைத்து முழுமையாக)நம்பிக்கை வைக்கிறாரோ அவருக்கு அவனே (முற்றிலும்) போதுமானவன்; நிச்சயமாக அல்லாஹ் தன் காரியத்தை அடைந்தே தீருவான்; (ஆயினும்) அல்லாஹ் ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் அளவை திட்டமாக நிர்ணயம் செய்திருக்கிறான்.

4. (தலாக் சொல்லப்பட்ட மனைவியராகிய) உங்கள் பெண்களில் மாதவிடாயை விட்டு நம்பிக்கையிழந்துவிடுகிறார்களே அத்தகையவர்கள் (அவர்களின் இத்தாவை கணக்கிடுவது பற்றி) நீங்கள் சந்தேகப்பட்டால் அப்போது அவர்களின் இத்தா(வின் தவணை) மூன்று மாதங்களாகும்; (அவர்களில் சிறார்களுக்கும், பருவமடையும் வயதை அடைந்தும் இதுவரையில்) மாதவிடாயே ஏற்படாதவர்களுக்கும் (இவ்வாறே இத்தாவின் தவணை மூன்று மாதங்களாகும்). இன்னும் கர்ப்பமுடையவர்கள்_ அவர்களின் (இத்தாகால) தவணையானது, அவர்களின் கர்ப்பத்தை வைத்தல்(பிரசவித்தல்வரை) ஆகும்; மேலும் எவர், அல்லாஹ்வைப் பயந்து நடக்கிறாரோ அவருக்கு அவரின் காரியத்தில் அவன் எளியதை ஆக்குவான்.

5. அது(வே) அல்லாஹ்வின் கட்டளையாகும்; அதனை உங்களின்பால் அவன் இறக்கிவைத்தான்; எவர் அல்லாஹ்விற்குப் பயந்து நடந்துகொள்கிறாரோ, அவரை அவருடைய தீயவைகளை விட்டும் நீக்கி, அவருக்குக் கூலியை மகத்தானதாகவும் (அல்லாஹ்வாகிய) அவன் ஆக்குகிறான்.

اَسْكِنُوْهُنَّ مِنْ حَيْثُ سَكَنْتُمْ مِّنْ وُّجْدِكُمْ وَلَا تُضَآرُّوْهُنَّ لِتُضَيِّقُوْا
عَلَيْهِنَّ ؕ وَاِنْ كُنَّ اُولٰتِ حَمْلٍ فَاَنْفِقُوْا عَلَيْهِنَّ حَتّٰى يَضَعْنَ حَمْلَهُنَّ ۚ
فَاِنْ اَرْضَعْنَ لَكُمْ فَاٰتُوْهُنَّ اُجُوْرَهُنَّ ۚ وَاْتَمِرُوْا بَيْنَكُمْ بِمَعْرُوْفٍ ۚ وَاِنْ
تَعَاسَرْتُمْ فَسَتُرْضِعُ لَهٗۤ اُخْرٰى ﴿۶﴾ لِيُنْفِقْ ذُوْ سَعَةٍ مِّنْ سَعَتِهٖ ؕ وَمَنْ
قُدِرَ عَلَيْهِ رِزْقُهٗ فَلْيُنْفِقْ مِمَّاۤ اٰتٰىهُ اللّٰهُ ؕ لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا اِلَّا مَاۤ اٰتٰىهَا ؕ
سَيَجْعَلُ اللّٰهُ بَعْدَ عُسْرٍ يُّسْرًا ﴿۷﴾ وَكَاَيِّنْ مِّنْ قَرْيَةٍ عَتَتْ عَنْ اَمْرِ ع ۱ ۱۷
رَبِّهَا وَرُسُلِهٖ فَحَاسَبْنٰهَا حِسَابًا شَدِيْدًا ۙ وَّعَذَّبْنٰهَا عَذَابًا نُّكْرًا ﴿۸﴾
فَذَاقَتْ وَبَالَ اَمْرِهَا وَكَانَ عَاقِبَةُ اَمْرِهَا خُسْرًا ﴿۹﴾ اَعَدَّ اللّٰهُ لَهُمْ
عَذَابًا شَدِيْدًا ۙ فَاتَّقُوا اللّٰهَ يٰۤاُولِى الْاَلْبَابِ ۛۚ الَّذِيْنَ اٰمَنُوْا ۛۚ قَدْ مع ۱۴
اَنْزَلَ اللّٰهُ اِلَيْكُمْ ذِكْرًا ﴿۱۰﴾ رَّسُوْلًا يَّتْلُوْا عَلَيْكُمْ اٰيٰتِ اللّٰهِ مُبَيِّنٰتٍ عند المتقدمین ۱۲
لِّيُخْرِجَ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ مِنَ الظُّلُمٰتِ اِلَى النُّوْرِ ؕ وَمَنْ
يُّؤْمِنْ بِاللّٰهِ وَيَعْمَلْ صَالِحًا يُّدْخِلْهُ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ
خٰلِدِيْنَ فِيْهَاۤ اَبَدًا ؕ قَدْ اَحْسَنَ اللّٰهُ لَهٗ رِزْقًا ﴿۱۱﴾ اَللّٰهُ الَّذِيْ خَلَقَ سَبْعَ
سَمٰوٰتٍ وَّمِنَ الْاَرْضِ مِثْلَهُنَّ ؕ يَتَنَزَّلُ الْاَمْرُ بَيْنَهُنَّ لِتَعْلَمُوْۤا اَنَّ
اللّٰهَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۙ وَّاَنَّ اللّٰهَ قَدْ اَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا ﴿۱۲﴾ ع ع ۲ ۵ ۱۸

6. உங்களுடைய வசதிக்குத்தக்கவாறு நீங்கள் குடியிருந்து வரும் இடத்தில் (இத்தாவிலிருக்கும் பெண்களாகிய)அவர்களைக் குடியிருக்கச்செய்யுங்கள்; (அப்பெண்களிடமிருந்து ஈடாக எதையும் பெறவோ, அல்லது நிர்ப்பந்தமாக அவர்கள் வெளியேறிவிடவோ உள்ள சூழ்நிலைகளை உருவாக்கி) அவர்களுக்கு நீங்கள் நெருக்கடியை உண்டாக்குவதற்காக அவர்களுக்குத் தொல்லை கொடுக்காதீர்கள்; அவர்கள் கர்ப்பமுடையவர்களாகயிருந்தால், அவர்கள் பிரசவிக்கும் வரையில் அவர்களுக்குச் செலவுக்குக் கொடுத்து வாருங்கள்;(பிரசவத்தின்) பின்னர், உங்களுக்காக (குழந்தைக்கு) அவர்கள் பாலூட்டினால், அப்போது (அதற்காக)அவர்களுக்குரிய கூலியையும் அவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள்; (இதைப்பற்றி முன்னதாகவே) உங்களுக்குள் அறியப்பட்ட முறையைக்கொண்டு பேசி முடிவும் செய்து கொள்ளுங்கள்; (இதுவிஷயத்தில் தகராறுகள் உண்டாகி) நீங்கள் ஒருவருக்கொருவர் சிரமம் அடைந்தால் (அப்பொழுது குழந்தையாகிய) அதற்கு மற்றொருத்தி பால் கொடுப்பாள்.

7. (பால் குடிச் செலவு விஷயத்தில்) வசதியுடையவர், தன்னுடைய வசதிக்கேற்ப (தாராளமாகச்) செலவு செய்யவும்; எவருக்கு அவருடைய வாழ்வாதாரங்கள் நெருக்கடியாக்கப்பட்டுள்ளதோ அவர் தமக்குஅல்லாஹ் கொடுத்ததிலிருந்து செலவு செய்யவும்; அல்லாஹ் எந்த ஆத்மாவையும் அதற்கு அவன் கொடுத்ததைத் தவிர(அதற்குமேல்) சிரமப்படுத்தமாட்டான்; கஷ்டத்திற்குப்பின்னர் அல்லாஹ் அடுத்து இலகுவை ஆக்குவான்.

8. எத்தனையோ ஊர்(வாசி)கள் தங்களிரட்சகனின் கட்டளைக்கும், அவனுடைய தூதர்களுக்கும் மாறு செய்தன(ர்); ஆதலால், அவர்களை நாம் வெகு கடினமாகவே கேள்வி கணக்கு கேட்டு, அவர்களைக் கொடூரமான வேதனையாக வேதனையும் செய்தோம்.

9. ஆகவே, அவை தன்(வரம்புமீறிய) காரியத்தின் தண்டனையைச் சுவைத்துவிட்டன; அதன் (தீய) காரியத்தின் முடிவும் (இம்மையில்) நஷ்டமாகவே இருந்தது.

10. (அன்றியும் மறுமையில்) அல்லாஹ் அவர்களுக்குக் கடினமான வேதனையை தயாராக்கி வைத்திருக்கின்றான்; ஆகவே, விசுவாசங்கொண்டோராகிய அறிவாளிகளே! அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்; திட்டமாக அல்லாஹ் உங்களுக்கு (குர்ஆன் என்னும்) நல்லுபதேசத்தை இறக்கி வைத்திருக்கிறான்_

11. ஒரு தூதரை_(யும் உங்களுக்கு அனுப்பி வைத்தான். உங்களில் எவர்) விசுவாசங் கொண்டு, நல்லசெயல்களும் செய்கிறாரோ அத்தகையோரை இருள்களிலிருந்து ஒளியின் பால் அவர் வெளியேற்றிக் கொண்டுவருவதற்காக_தெளிவு படுத்தக்கூடிய அல்லாஹ்வின் வசனங்களை,உங்கள் மீது அவர் ஓதிக்காண்பிக்கிறார்; மேலும் (உங்களில்) எவர் அல்லாஹ்வை விசுவாசித்து நற்செயலும் புரிகிறாரோ அவரைச் சுவனபதிகளில் அவன் பிரவேசிக்கச் செய்வான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்; என்றென்றும் அவர்கள் நிரந்தரமாக அவற்றில் (தங்கி)இருப்பவர்கள்; திட்டமாக அல்லாஹ் அவருக்குரிய உணவை அழகானதாக ஆக்கிவிட்டான்.

12. அல்லாஹ்_அவன் எத்தகையவனென்றால் ஏழு வானங்களையும், அவைகளைப் போல் (எண்ணிக்கையில்) பூமியையும் படைத்தான்; அவைகளுக்கிடையில் (அன்றாடம் நடந்தேறும் காரியங்கள் பற்றி) கட்டளைகள் இறங்கிக் கொண்டே இருக்கின்றன; நிச்சயமாக அல்லாஹ், ஒவ்வொருபொருளின் மீதும் மிகஆற்றலுடையவன் என்பதையும், நிச்சயமாக அல்லாஹ்(தன்) அறிவால் ஒவ்வொருபொருளையும் திட்டமாகச் சூழ்ந்தறிந்து கொண்டிருக்கின்றான் என்பதையும் (விசுவாசிகளே!) நீங்கள் அறிந்து கொள்வதற்காக (இவ்வாறு விளக்குகிறான்).

## سُوْرَةُ التَّحْرِيْمِ مَدَنِيَّةٌ وَّهِيَ اثْنَتَا عَشْرَةَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

يٰۤاَيُّهَا النَّبِيُّ لِمَ تُحَرِّمُ مَاۤ اَحَلَّ اللّٰهُ لَكَ ۚ تَبْتَغِيْ مَرْضَاتَ
اَزْوَاجِكَ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿١﴾ قَدْ فَرَضَ اللّٰهُ لَكُمْ تَحِلَّةَ
اَيْمَانِكُمْ ۚ وَاللّٰهُ مَوْلٰىكُمْ ۚ وَهُوَ الْعَلِيْمُ الْحَكِيْمُ ﴿٢﴾ وَاِذْ اَسَرَّ
النَّبِيُّ اِلٰى بَعْضِ اَزْوَاجِهٖ حَدِيْثًا ۚ فَلَمَّا نَبَّاَتْ بِهٖ وَاَظْهَرَهُ
اللّٰهُ عَلَيْهِ عَرَّفَ بَعْضَهٗ وَاَعْرَضَ عَنْ بَعْضٍ ۚ فَلَمَّا نَبَّاَهَا بِهٖ
قَالَتْ مَنْ اَنْۢبَاَكَ هٰذَا ؕ قَالَ نَبَّاَنِيَ الْعَلِيْمُ الْخَبِيْرُ ﴿٣﴾ اِنْ تَتُوْبَاۤ
اِلَى اللّٰهِ فَقَدْ صَغَتْ قُلُوْبُكُمَا ۚ وَاِنْ تَظٰهَرَا عَلَيْهِ فَاِنَّ اللّٰهَ
هُوَ مَوْلٰىهُ وَجِبْرِيْلُ وَصَالِحُ الْمُؤْمِنِيْنَ ۚ وَالْمَلٰٓئِكَةُ بَعْدَ ذٰلِكَ
ظَهِيْرٌ ﴿٤﴾ عَسٰى رَبُّهٗۤ اِنْ طَلَّقَكُنَّ اَنْ يُّبْدِلَهٗۤ اَزْوَاجًا خَيْرًا
مِّنْكُنَّ مُسْلِمٰتٍ مُّؤْمِنٰتٍ قٰنِتٰتٍ تٰٓئِبٰتٍ عٰبِدٰتٍ سٰٓئِحٰتٍ
ثَيِّبٰتٍ وَّاَبْكَارًا ﴿٥﴾ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا قُوْۤا اَنْفُسَكُمْ وَاَهْلِيْكُمْ
نَارًا وَّقُوْدُهَا النَّاسُ وَالْحِجَارَةُ عَلَيْهَا مَلٰٓئِكَةٌ غِلَاظٌ شِدَادٌ
لَّا يَعْصُوْنَ اللّٰهَ مَاۤ اَمَرَهُمْ وَيَفْعَلُوْنَ مَا يُؤْمَرُوْنَ ﴿٦﴾

அத்தியாயம் : 66

# அத்தஹ்ரீம் _ விலக்கிக் கொள்ளுதல்

வசனங்கள் : 12 மதனீ ருகூஉகள் : 2

## அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. நபியே! உம்முடைய மனைவியரின் திருப்தியை நீர் தேடியவராக அல்லாஹ் உமக்கு ஆகுமாக்கிவைத்ததை நீர் ஏன் (சத்தியம் செய்து ஹராம் என்று) விலக்கிக் கொண்டீர்? மேலும், அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக்கிருபையுடையவன்.

2. உங்களுடைய சத்தியங்களை (அதனால் தடுக்கப்பட்டவற்றை மீண்டும் ஆகுமாக்கிக் கொள்ள) முறித்துவிடுவதை நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறான். மேலும், அல்லாஹ்தான் உங்களுடைய பாதுகாவலன்; இன்னும், அவன்தான் (யாவற்றையும்) நன்கறிகிறவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

3. மேலும் நபி, தன்னுடைய மனைவியரில் சிலர்பால் ஒரு விஷயத்தை ரகசியமாகக் கூறியதை_ (நினைவு கூர்க!) பின்னர், அ(ம்மனைவியான)வர் அதனை(நபியின் மற்றொரு மனைவிக்கு) அறிவித்து, அதனை அல்லாஹ்(நபியாகிய) அவருக்கு வெளியாக்கி வைத்தபோது அவர் அதில் சிலவற்றை (அம்மனைவிக்கு) அறிவித்து, சிலவற்றை (அறிவிக்காது) புறக்கணித்தும்விட்டார்; பின்னர், அவர் அவரு(டைய மனைவி)க்குஅதை அறிவித்தபோது, "இதனை உங்களுக்கு அறிவித்தவர் யார்?" எனஅவர் (அந்த மனைவி) கேட்டார். அதற்கு அவர், "(யாவற்றையும்) நன்கறிந்தோன், நன்குணர்ந்தோன் (ஆகிய அல்லாஹ் அதனை) எனக்கறிவித்தான்" என்று கூறினார்.

4. (நபியுடைய மனைவியராகிய!) நீங்கள் இருவரும்(உங்கள் குற்றங்களுக்காக) பச்சாதாபப்பட்டு (தவ்பாச் செய்து) அல்லாஹ்வின்பால் மீண்டால், (அது உங்களுக்கு நன்மையாகும்; இது ஏனென்றால்,) உங்கள் இருவரின் இதயங்கள் (உண்மையிலிருந்து) சாய்ந்துவிட்டன; ஆகவே, நீங்களிருவரும் (நபியாகிய) அவருக்கு விரோதமாக (ஒருவருக்கொருவர் உதவிசெய்ய) ஒன்று சேர்ந்தால், நிச்சயமாக அல்லாஹ் (நபியாகிய) அவருக்கு காப்பாளன்; ஜிப்ரீலும், விசுவாசிகளிலுள்ள நல்லடியார்களும், (அவருக்கு உதவியாளர்களாக இருப்பார்கள்). அன்றியும், அதன் பின்னர் (அவருக்கு மற்ற) மலக்குகளும் உதவியாளர்களாவர்.

5. (நம் நபியாகிய)அவர், உங்களை "தலாக்" கூறி(விலக்கி)விட்டால், உங்களைவிடச் சிறந்த முஸ்லிம்களான, விசுவாசிகளான (அல்லாஹ்வுக்குப் பயந்து) கீழ்ப்படிந்து நடப்பவர்களான, (பாவத்தைவிட்டு விலகி) தவ்பாச் செய்பவர்களான, வணங்கக் கூடியவர்களான, நோன்பு நோற்கக் கூடியவர்களான, கன்னிமை கழிந்தவர்களான, கன்னியர்களான இத்தகையோரை (உங்களுக்குப் பகரமாக) அவருடைய இரட்சகன் அவருக்கு மனைவியராக மாற்றித்தரப்போதுமானவன்.

6. விசுவாசிகளே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் (நரக) நெருப்பைவிட்டும் காப்பாற்றிக்கொள்ளுங்கள்; அதன் எரிபொருள் மனிதர்களும், கல்லுமாகும்; அதில் (குணத்தால்) கடின சித்தமுடைய (தோற்றத்தாலும், அமைப்பாலும்) பலசாலிகளான மலக்குகள் உள்ளனர்; அல்லாஹ்விற்கு _ அவன் அவர்களை ஏவிய வற்றில் அவர்கள் மாறுசெய்யமாட்டார்கள். (இரட்சகனிடமிருந்து) அவர்களுக்குக் கட்டளையிடப்படுவதைச் செய்வார்கள்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ كَفَرُوْا لَا تَعْتَذِرُوا الْيَوْمَ ؕ اِنَّمَا تُجْزَوْنَ مَا كُنْتُمْ
تَعْمَلُوْنَ ؑ ﴿۷﴾ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا تُوْبُوْٓا اِلَى اللّٰهِ تَوْبَةً نَّصُوْحًا ؕ ع ١ ١٩
عَسٰى رَبُّكُمْ اَنْ يُّكَفِّرَ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ وَيُدْخِلَكُمْ جَنّٰتٍ تَجْرِيْ
مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۙ يَوْمَ لَا يُخْزِي اللّٰهُ النَّبِيَّ وَالَّذِيْنَ اٰمَنُوْا مَعَهٗ ۚ
نُوْرُهُمْ يَسْعٰى بَيْنَ اَيْدِيْهِمْ وَبِاَيْمَانِهِمْ يَقُوْلُوْنَ رَبَّنَآ اَتْمِمْ لَنَا
نُوْرَنَا وَاغْفِرْ لَنَا ۚ اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿۸﴾ يٰٓاَيُّهَا النَّبِيُّ جَاهِدِ
الْكُفَّارَ وَالْمُنٰفِقِيْنَ وَاغْلُظْ عَلَيْهِمْ ؕ وَمَاْوٰىهُمْ جَهَنَّمُ ؕ وَبِئْسَ
الْمَصِيْرُ ﴿۹﴾ ضَرَبَ اللّٰهُ مَثَلًا لِّلَّذِيْنَ كَفَرُوا امْرَاَتَ نُوْحٍ وَّ
امْرَاَتَ لُوْطٍ ؕ كَانَتَا تَحْتَ عَبْدَيْنِ مِنْ عِبَادِنَا صَالِحَيْنِ
فَخَانَتٰهُمَا فَلَمْ يُغْنِيَا عَنْهُمَا مِنَ اللّٰهِ شَيْئًا وَّقِيْلَ ادْخُلَا النَّارَ
مَعَ الدّٰخِلِيْنَ ﴿۱۰﴾ وَضَرَبَ اللّٰهُ مَثَلًا لِّلَّذِيْنَ اٰمَنُوا امْرَاَتَ
فِرْعَوْنَ ۘ اِذْ قَالَتْ رَبِّ ابْنِ لِيْ عِنْدَكَ بَيْتًا فِي الْجَنَّةِ وَنَجِّنِيْ مِنْ وقف لازم
فِرْعَوْنَ وَعَمَلِهٖ وَنَجِّنِيْ مِنَ الْقَوْمِ الظّٰلِمِيْنَ ۙ ﴿۱۱﴾ وَمَرْيَمَ
ابْنَتَ عِمْرٰنَ الَّتِيْٓ اَحْصَنَتْ فَرْجَهَا فَنَفَخْنَا فِيْهِ مِنْ رُّوْحِنَا
وَصَدَّقَتْ بِكَلِمٰتِ رَبِّهَا وَكُتُبِهٖ وَكَانَتْ مِنَ الْقٰنِتِيْنَ ؑ ﴿۱۲﴾ ع ٢ ٥ ٢٠

7. "நிராகரித்துவிட்டோரே! (நீங்கள் மறுத்துக்கொண்டிருந்த மறுமை நாளான) இன்றையத்தினம் நீங்கள் (வீண்) புகல் கூறாதீர்கள்; நீங்கள் கூலி கொடுக்கப் படுவதெல்லாம், நீங்கள் செய்துகொண்டிருந்தவைகளுக்குத்தான்" (என்று கூறப்படும்).

8. விசுவாசிகளே! கலப்பற்ற தவ்பாவாக (தூய மனத்துடன் பாவத்திலிருந்து விலகி,) அல்லாஹ்வின்பால் நீங்கள் தவ்பாச் செய்யுங்கள்; (அவ்வாறு நீங்கள் செய்தால் தன்னுடைய) நபியையும், அவருடன் விசுவாசங்கொண்டவர்களையும் அல்லாஹ் இழிவு படுத்தாத நாளில், உங்கள் இரட்சகன் உங்கள் பாவங்களை உங்களைவிட்டுப் போக்கி (மன்னித்து)ச் சுவனபதிகளிலும் உங்களை பிரவேசிக்கச் செய்யப் போதுமானவன்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். (அந்நாளில்) அவர்களுடைய பிரகாசம் அவர்களுக்கு முன்னும், அவர்களுடைய வலப்புறங்களிலும் விரைந்து (சென்று) கொண்டிருக்கும்; அவர்கள், "எங்கள் இரட்சகனே! எங்களுக்கு எங்களுடைய பிரகாசத்தை (அணையாது) நீ பரிபூரணமாக்கி வைப்பாயாக! எங்களுக்கு மன்னிப்பையும் அருள்வாயாக! நிச்சயமாக நீ, ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்" என்று (பிரார்த்தனை செய்து) கூறுவார்கள்.

9. நபியே! நிராகரிப்போருடனும், (வேஷதாரிகளான) முனாஃபிக்குகளுடனும் யுத்தம் புரிவீராக! அவர்கள் விஷயத்தில் நீர் கடுமையாகவே இருப்பீராக! அவர்கள் தங்குமிடம் நரகந்தான்; சேருமிடத்திலும் அது மிகக் கெட்டது.

10. நிராகரிப்போருக்கு, (நபி) நூஹுடைய மனைவியையும், (நபி) லூத்துடைய மனைவியையும் அல்லாஹ் உதாரணமாகக் கூறுகிறான்; அவ்விருவரும் நமது நல்லடியார்களில் உள்ள இரு நல்லடியாருக்குக்கீழ் (மனைவியராக) இருந்தனர்; பின்னர் அவ்விருவரும் (தங்கள் கணவர்களான) அவ்விருவருக்கும் துரோகம் செய்தனர்; ஆகவே (தம் மனைவியரான), அவர்களிருவரை விட்டும் அல்லாஹ்வுடைய வேதனையிலிருந்து எதையும் (நபிகளாகிய) அவ்விருவராலும் தடுக்க முடியவில்லை; (இவர்கள் துரோகம் செய்ததன் காரணமாக, இவர்களிடம்,) "நரக நெருப்பில் நுழைவோர்களுடன் நீங்களிருவரும் நுழைந்துகொள்ளுங்கள்" என்று கூறப்பட்டது.

11. விசுவாசங் கொண்டோருக்கு, ஃபிர்அவ்னுடைய மனைவியை உதாரணமாக அல்லாஹ் கூறுகிறான்; (ஃபிர்அவ்னுடைய அக்கிரமங்களைச் சகிக்காமல் தன் இரட்சகனிடம்,) "என் இரட்சகனே! சொர்க்கத்தில் உன்னிடத்தில் எனக்கு ஒரு வீட்டைக் கட்டுவாயாக! ஃபிர்அவ்னை விட்டும், அவனுடைய செயலை விட்டும் என்னைக் காப்பாற்றுவாயாக! அன்றியும் அநியாயக்காரர்களான கூட்டத்தாரை விட்டும் நீ என்னைக் காப்பாற்றுவாயாக!" என்று (பிரார்த்தனை செய்து) அவர் கூறியதை (நினைவு கூர்வீராக!).

12. இன்னும் இம்ரானுடைய மகள் மர்யமையும் (விசுவாசிகளுக்கு உதாரணமாக அல்லாஹ் கூறுகிறான்.) அவர் தன்னுடைய மர்மஸ்தானத்தை(க் கற்பை)க் காத்துக்கொண்டார்; ஆகவே, நம்முடைய ரூஹிலிருந்து அதில் ஊதினோம்; அவர் தன் இரட்சகனின் வார்த்தைகளையும், அவனின் வேதங்களையும் உண்மையாக்கி வைத்தார்; முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களில் உள்ளவராகவும் அவர் இருந்தார்.

## سُوْرَةُ الْمُلْكِ مَكِّيَّةٌ وَهِيَ ثَلٰثُوْنَ اٰيَةً وَفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

تَبٰرَكَ الَّذِيْ بِيَدِهِ الْمُلْكُ ۫ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ
قَدِيْرُ ۙ ﴿۱﴾ الَّذِيْ خَلَقَ الْمَوْتَ وَالْحَيٰوةَ لِيَبْلُوَكُمْ اَيُّكُمْ اَحْسَنُ
عَمَلًا ؕ وَهُوَ الْعَزِيْزُ الْغَفُوْرُ ۙ ﴿۲﴾ الَّذِيْ خَلَقَ سَبْعَ سَمٰوٰتٍ طِبَاقًا ؕ
مَا تَرٰى فِيْ خَلْقِ الرَّحْمٰنِ مِنْ تَفٰوُتٍ ؕ فَارْجِعِ الْبَصَرَ ۙ هَلْ
تَرٰى مِنْ فُطُوْرٍ ﴿۳﴾ ثُمَّ ارْجِعِ الْبَصَرَ كَرَّتَيْنِ يَنْقَلِبْ اِلَيْكَ
الْبَصَرُ خَاسِئًا وَّهُوَ حَسِيْرٌ ﴿۴﴾ وَلَقَدْ زَيَّنَّا السَّمَآءَ الدُّنْيَا
بِمَصَابِيْحَ وَجَعَلْنٰهَا رُجُوْمًا لِّلشَّيٰطِيْنِ وَاَعْتَدْنَا لَهُمْ
عَذَابَ السَّعِيْرِ ﴿۵﴾ وَلِلَّذِيْنَ كَفَرُوْا بِرَبِّهِمْ عَذَابُ جَهَنَّمَ ؕ
وَبِئْسَ الْمَصِيْرُ ﴿۶﴾ اِذَآ اُلْقُوْا فِيْهَا سَمِعُوْا لَهَا شَهِيْقًا وَّهِيَ
تَفُوْرُ ۙ ﴿۷﴾ تَكَادُ تَمَيَّزُ مِنَ الْغَيْظِ ؕ كُلَّمَآ اُلْقِيَ فِيْهَا فَوْجٌ سَاَلَهُمْ
خَزَنَتُهَآ اَلَمْ يَاْتِكُمْ نَذِيْرٌ ﴿۸﴾ قَالُوْا بَلٰى قَدْ جَآءَنَا نَذِيْرٌ ۙ فَكَذَّبْنَا
وَقُلْنَا مَا نَزَّلَ اللّٰهُ مِنْ شَيْءٍ ۚ ۖ اِنْ اَنْتُمْ اِلَّا فِيْ ضَلٰلٍ كَبِيْرٍ ﴿۹﴾
وَقَالُوْا لَوْ كُنَّا نَسْمَعُ اَوْ نَعْقِلُ مَا كُنَّا فِيْٓ اَصْحٰبِ السَّعِيْرِ ﴿۱۰﴾

அத்தியாயம் : 67

# அல் முல்க் _ ஆட்சி

வசனங்கள் : 30 மக்கீ ருகூஃகள் : 2

## அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. எவனது கரத்தில் (இம்மை,மறுமையில் வானம் மற்றும் பூமியின்)ஆட்சி இருக்கின்றதோ, அவன் மிக்க பாக்கிய முடையவன்; இன்னும் அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்கஆற்றலுடையவன்.

2 . அவன் எத்தகையவனென்றால், உங்களில் எவர் செயலால் மிக்க அழகானவர் என்று உங்களை அவன் சோதிப்பதற்காக மரணத்தையும், ஜீவியத்தையும் அவன் படைத்திருக்கின்றான்; அவனே (யாவற்றையும்) மிகைத்தவன்; மிக்க மன்னிக்கிறவன்.

3. அவன் எத்தகையவனென்றால், ஏழு வானங்களை அடுக்கடுக்காகப் படைத்தான்; (மனிதனே!) அர்ரஹ்மானுடைய படைப்பில் நீ யாதொரு முரண்பாட்டையும் காணமாட்டாய்; ஆகவே, பார்வையை மீட்டிப்பார்!(அதில்) பிளவுகளை நீ காண்கிறாயா?

4 . பின்னும் இருமுறை உன் பார்வையை மீட்டிப்பார்;(எக்குறையையும் காணாது) அப்பார்வை இழிவடைந்ததாக அது களைப்புற்று உன்னிடம் திரும்பிவரும்.

5. மேலும், நிச்சயமாக நாம்( பூமிக்குச்)சமீபமான வானத்தை (நட்சத்திரங்களால் ஆன)விளக்குகளைக் கொண்டு அலங்கரித்திருக்கின்றோம்; இன்னும், அவைகளை ஷைத்தான்களுக்கு எறியப்படுபவைகளாகவும் நாம் அமைத்தோம்; அவர்களுக்கு நரக நெருப்பின் வேதனையையும் நாம் தயார் செய்து வைத்திருக்கின்றோம்.

6. இன்னும், தங்கள் இரட்சகனை நிராகரிக்கின்றார்களே அத்தகையோருக்கு நரக வேதனையுண்டு; அது திரும்பிச்சேருமிடத்தில் மிகவும் கெட்டது.

7. அதில் அவர்கள் தூக்கிப் போடப்பட்டால், அதுவோ கொதித்துக் கொண்டிருக்கும் நிலையில் (கழுதையின் சப்தத்தைப் போல்) அருவருப்பான சப்தம் அதற்கிருப்பதை அவர்கள் கேட்பார்கள்.

8.(நிராகரிப்போரின் மீதுள்ள) கடுங்கோபத்தால் வெடித்துவிட அது சமீபித்துவிடும்; அதில் ஒரு கூட்டத்தினரைப்போடப்படும் பொழுதெல்லாம், அதன் காவலர்கள் அவர்களிடம், "(இது பற்றி) அச்சமூட்டி எச்சரிக்கின்றவர் உங்களிடம் வரவில்லையா?" என்று கேட்பார்கள்.

9. அ(தற்க)வர்கள், "மெய்தான்! அச்சமூட்டி எச்சரிக்கின்றவர் நிச்சயமாக எங்களிடம் வந்தார்; பின்னர் நாங்கள் (அவரைப்) பொய்யாக்கி, அல்லாஹ் எதையும்(உம்மீது) இறக்கி வைக்கவில்லை; நீங்கள் பெரும் வழிகேட்டிலல்லாமல் (வேறு)இல்லை என்று நாங்கள் கூறினோம்" என்று அவர்கள் கூறுவார்கள்.

10 . (அவர் உபதேசத்தை) "நாங்கள் செவியுற்றோ, அல்லது (அவைகளை) நாங்கள் விளங்கியோ இருந்திருந்தால், நாங்கள் நரகவாசிகளில் ஆகியிருக்கமாட்டோம்" என்றும் அவர்கள் கூறுவார்கள்.

فَاعْتَرَفُوْا بِذَنْۢبِهِمْ ۚ فَسُحْقًا لِّاَصْحٰبِ السَّعِيْرِ ﴿۱۱﴾ اِنَّ الَّذِيْنَ
يَخْشَوْنَ رَبَّهُمْ بِالْغَيْبِ لَهُمْ مَّغْفِرَةٌ وَّاَجْرٌ كَبِيْرٌ ﴿۱۲﴾ وَاَسِرُّوْا
قَوْلَكُمْ اَوِ اجْهَرُوْا بِهٖ ؕ اِنَّهٗ عَلِيْمٌۢ بِذَاتِ الصُّدُوْرِ ﴿۱۳﴾ اَلَا يَعْلَمُ
مَنْ خَلَقَ ؕ وَهُوَ اللَّطِيْفُ الْخَبِيْرُ ﴿۱۴﴾ هُوَ الَّذِيْ جَعَلَ لَكُمُ ع
الْاَرْضَ ذَلُوْلًا فَامْشُوْا فِيْ مَنَاكِبِهَا وَكُلُوْا مِنْ رِّزْقِهٖ ؕ وَاِلَيْهِ
النُّشُوْرُ ﴿۱۵﴾ ءَاَمِنْتُمْ مَّنْ فِي السَّمَآءِ اَنْ يَّخْسِفَ بِكُمُ
الْاَرْضَ فَاِذَا هِيَ تَمُوْرُ ﴿۱۶﴾ اَمْ اَمِنْتُمْ مَّنْ فِي السَّمَآءِ اَنْ
يُّرْسِلَ عَلَيْكُمْ حَاصِبًا ؕ فَسَتَعْلَمُوْنَ كَيْفَ نَذِيْرِ ﴿۱۷﴾ وَلَقَدْ
كَذَّبَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ فَكَيْفَ كَانَ نَكِيْرِ ﴿۱۸﴾ اَوَلَمْ يَرَوْا
اِلَى الطَّيْرِ فَوْقَهُمْ صٰٓفّٰتٍ وَّيَقْبِضْنَ ۘؔ مَا يُمْسِكُهُنَّ اِلَّا الرَّحْمٰنُ ؕ وقف لازم وقف غفران وقف منزل
اِنَّهٗ بِكُلِّ شَيْءٍۢ بَصِيْرٌ ﴿۱۹﴾ اَمَّنْ هٰذَا الَّذِيْ هُوَ جُنْدٌ لَّكُمْ
يَنْصُرُكُمْ مِّنْ دُوْنِ الرَّحْمٰنِ ؕ اِنِ الْكٰفِرُوْنَ اِلَّا فِيْ غُرُوْرٍ ﴿۲۰﴾ ۚ
اَمَّنْ هٰذَا الَّذِيْ يَرْزُقُكُمْ اِنْ اَمْسَكَ رِزْقَهٗ ۚ بَلْ لَّجُّوْا
فِيْ عُتُوٍّ وَّنُفُوْرٍ ﴿۲۱﴾ اَفَمَنْ يَّمْشِيْ مُكِبًّا عَلٰى وَجْهِهٖٓ
اَهْدٰٓى اَمَّنْ يَّمْشِيْ سَوِيًّا عَلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿۲۲﴾

11. எனவே, (இவ்வாறு கூறுவதன் மூலம்) அவர்கள் தங்கள் பாவத்தை ஒப்புக் கொண்டு விடுகின்றனர்; ஆகவே, நரகவாசிகளுக்கு (அல்லாஹ்வின் அருள்) தூரமே.

12. நிச்சயமாக (தங்கள் இரட்சகனைப் பார்க்காதிருந்தும்) மறைவில் தங்கள் இரட்சகனைப் பயப்படுகிறார்களே அத்தகையோர்_ அவர்களுக்கு மன்னிப்பும், பெருங் கூலியுமுண்டு.

13. மேலும், (மனிதர்களே!) நீங்கள் உங்கள் கூற்றை இரகசியமாக ஆக்குங்கள் ; அல்லது அதை (சப்தமிட்டு) பகிரங்கமாக ஆக்குங்கள்; (யாவற்றையும் அல்லாஹ் நன்கறிந்து கொள்வான்; ஏனென்றால்,) நிச்சயமாக அவன் நெஞ்சங்களிலுள்ளவற்றை நன்கறியக்கூடியவன்.

14. (யாவையும்) படைத்தவன், அவனோ நுட்பமான (அறிவுடைய) வனாக, யாவையும் நன்குணர்பவனாக இருக்க (நெஞ்சங்களில் உள்ளவற்றை) அவன் அறியமாட்டானா?

15. அவன் எத்தகையவனென்றால், உங்களுக்கு பூமியை (வாழ்வதற்கு) எளிதானதாக அவன் ஆக்கிவைத்தான். ஆகவே, அதன் பல பாகங்களில் சென்று, அவன் (உங்களுக்கு அளித்திருக்கும்) உணவிலிருந்து உண்ணுங்கள்; (உங்களுடைய மண்ணறைகளிலிருந்து ) உயிர்பெற்றெழுதல் அவன்பாலே இருக்கிறது.

16. வானத்திலிருப்பவன், உங்களை பூமியில் அழுந்தச்செய்துவிடுவான் என்பதிலிருந்து நீங்கள் அச்சமற்றிருக்கின்றீர்களா? (பூமியாகிய) அது அந்நேரத்தில் நடுங்கும்.

17. அல்லது வானத்திலிருப்பவன், உங்கள்மீது கல்மாரியை அவன் அனுப்பிவைப்பான் என்பதிலிருந்து நீங்கள் அச்சமற்றிருக்கின்றீர்களா? அவ்வாறாயின், எச்சரிக்கை (செய்யப்பட்ட வேதனை) எவ்வாறிருக்கும் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

18. மேலும், அவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்கள் (இவர்களைப் போலவே நம் வசனங்களைப்) பொய்யாக்கி (நிராகரித்து)க் கொண்டிருந்தனர். ஆனால் (அவர்களை அழிப்பது கொண்டு) என்னுடைய மறுப்பு எவ்வாறிருந்தது?

19. இறக்கைகளை விரித்துக்கொண்டும், மடித்துக் கொண்டும் அவர்களுக்கு மேல் (ஆகாயத்தில் அணியணியாகப் பறக்கும்) பட்சிகளை இவர்கள் பார்க்கவில்லையா? அர்ரஹ்மானைத்தவிர, (மற்றெவரும்) அவைகளை (ஆகாயத்தில்) தடுத்துக் கொண்டிருக்க வில்லை! நிச்சயமாக அவன், ஒவ்வொரு பொருளையும் பார்க்கக்கூடியவன்.

20. அர்_ரஹ்மானையன்றி உங்களுக்குப் படையாக உள்ள இத்தகையவனா? _ அவன் உங்களுக்கு உதவி செய்வான். நிராகரிப்போர் ஏமாற்றத்திலன்றி (வேறு) இல்லை.

21. (ரஹ்மானாகிய அவன் அளித்துவரும்) அவனுடைய ரிஜ்கை (அருள் விஸ்தீரணத்தை) அவன் தடுத்துக் கொண்டால், (உங்களுக்கு எதிராக உள்ள இவனா? அவனுக்கு எதிராக) உங்களுக்கு ரிஜ்கை அளிப்பான்? அன்று; இவர்கள் பெருமையடிப்பதிலும், (சத்தியத்தை) வெறுப்பதிலேயுமே மூழ்கிக்கிடக்கின்றனர்.

22. தன் முகத்தின் மீது முகங்குப்புற விழுந்து செல்பவன் மிக்க நேரான வழியில் இருக்கின்றானா? அல்லது நேரான பாதையில் சீராக நடப்பவனா?

قُلْ هُوَ الَّذِیْۤ اَنْشَاَكُمْ وَ جَعَلَ لَكُمُ السَّمْعَ وَ الْاَبْصَارَ وَ
الْاَفْـِٕدَةَ١ؕ قَلِیْلًا مَّا تَشْكُرُوْنَ ۝۲۳ قُلْ هُوَ الَّذِیْ ذَرَاَكُمْ فِی
الْاَرْضِ وَ اِلَیْهِ تُحْشَرُوْنَ ۝۲۴ وَ یَقُوْلُوْنَ مَتٰی هٰذَا الْوَعْدُ
اِنْ كُنْتُمْ صٰدِقِیْنَ ۝۲۵ قُلْ اِنَّمَا الْعِلْمُ عِنْدَ اللّٰهِ١۪ وَ اِنَّمَاۤ اَنَا
نَذِیْرٌ مُّبِیْنٌ ۝۲۶ فَلَمَّا رَاَوْهُ زُلْفَةً سِیْٓـَٔتْ وُجُوْهُ الَّذِیْنَ
كَفَرُوْا وَ قِیْلَ هٰذَا الَّذِیْ كُنْتُمْ بِهٖ تَدَّعُوْنَ ۝۲۷ قُلْ اَرَءَیْتُمْ
اِنْ اَهْلَكَنِیَ اللّٰهُ وَ مَنْ مَّعِیَ اَوْ رَحِمَنَا١ۙ فَمَنْ یُّجِیْرُ الْكٰفِرِیْنَ
مِنْ عَذَابٍ اَلِیْمٍ ۝۲۸ قُلْ هُوَ الرَّحْمٰنُ اٰمَنَّا بِهٖ وَ عَلَیْهِ
تَوَكَّلْنَا١ۚ فَسَتَعْلَمُوْنَ مَنْ هُوَ فِیْ ضَلٰلٍ مُّبِیْنٍ ۝۲۹ قُلْ
اَرَءَیْتُمْ اِنْ اَصْبَحَ مَآؤُكُمْ غَوْرًا فَمَنْ یَّاْتِیْكُمْ بِمَآءٍ مَّعِیْنٍ ۝۳۰ع ۲

سُوْرَةُ الْقَلَمِ مَكِّيَّةٌ وَهِيَ ثِنْتَانِ وَخَمْسُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ

نٓ وَ الْقَلَمِ وَ مَا یَسْطُرُوْنَ ۝۱ۙ مَاۤ اَنْتَ بِنِعْمَةِ رَبِّكَ
بِمَجْنُوْنٍ ۝۲ۚ وَ اِنَّ لَكَ لَاَجْرًا غَیْرَ مَمْنُوْنٍ ۝۳ۚ وَ اِنَّكَ
لَعَلٰی خُلُقٍ عَظِیْمٍ ۝۴ فَسَتُبْصِرُ وَ یُبْصِرُوْنَ ۝۵ۙ بِاَیِّىكُمُ الْمَفْتُوْنُ ۝۶

23. (நபியே!) நீர் கூறுவீராக: (ரஹ்மானாகிய) அவன் எத்தகையவனென்றால், உங்களை அவன் (ஆரம்பமாக) உற்பத்தி செய்து உங்களுக்குச் செவிப்புலனையும், பார்வைகளையும், இதயங்களையும் அவன் ஆக்கினான்; (இத்தகு பேரருட்களைச் செய்த அவனுக்கு) நீங்கள் வெகு சொற்பமாகவே நன்றி செலுத்துகிறீர்கள்.

24.(நபியே!) நீர் கூறுவீராக: அவன் எத்தகையவனென்றால், பூமியில்(பல பாகங்களிலும்) உங்களை அவன் பரவச் செய்திருக்கின்றான்.(மறுமையில்) அவன் பக்கமே நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள்.

25. மேலும், (மறுமை நாளைப்பற்றி) "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இந்த வாக்கு எப்பொழுது (வரும்)?" என்று கேட்கின்றார்கள்.

26.(அதற்கு நபியே!) நீர் கூறுவீராக: "நிச்சயமாக (அது பற்றிய) அறிவெல்லாம் அல்லாஹ்விடத்தில் உள்ளது ; அன்றியும், நிச்சயமாக நானோ (அதைப்பற்றி) தெளிவாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவன்தான்."

27.(வாக்களிக்கப்பட்டதான)அதனை (அவர்களுக்குச்) சமீபமாக அவர்கள் பார்த்துவிடும்போது அந்நிராகரித்தோருடைய முகங்கள் வேதனையால் (பேதலித்துக்) கெட்டுவிடும்; அன்றியும், (அவர்களிடம்) "நீங்கள் (எப்பொழுது வருமென்று அவசரமாகத்) தேடிக் கொண்டிருந்தீர்களே அத்தகையது இதுதான்" என்று கூறப்படும்.

28. "என்னையும், என்னுடன் இருப்பவர்களையும் அல்லாஹ் அழித்து விட்டாலும் , அல்லது அவன் எங்களுக்கு அருள் செய்துவிட்டாலும், துன்புறுத்தும் வேதனையிலிருந்து நிராகரிப்போரைக் காப்பாற்றுபவர் யார்?" என்பதை எனக்குத்தெரிவியுங்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

29. "அவன் தான் ரஹ்மான்; அவனையே நாங்கள் விசுவாசித்திருக்கின்றோம்; (எங்கள் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) அவன் மீதே நம்பிக்கையும் வைத்திருக்கிறோம்; ஆகவே, தெளிவான வழிகேட்டிலிருப்பவர் யாரென்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்" என்று ( நபியே!) நீர் கூறுவீராக!

30. "உங்களுடைய தண்ணீர் (நீங்கள் பெறமுடியாதவாறு) பூமியினுள்(இழுக்கப்பட்டு வெகு ஆழத்தில்) சென்றுவிட்டால், பொங்கிஓடும் நீரை உங்களுக்குக் கொண்டுவருபவன் யார்? என எனக்குத் தெரிவியுங்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

அத்தியாயம் : 68

## அல் கலம் _ எழுதுகோல்

வசனங்கள் : 52 மக்கீ ருகூஉகள் : 2

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. நூன்; எழுதுகோலின்மீதும், (அதன்மூலம்) அவர்கள் எழுதுகிறவற்றின்மீதும் சத்தியமாக,
2. (நபியே!) உமதிரட்சகனின்அருளால் நீர் பைத்தியக்காரர் அல்லர்.
3. மேலும், நிச்சயமாக உமக்கு முடிவுறாத கூலி இருக்கின்றது.
4. (நபியே!) நிச்சயமாக மகத்தான நற்குணத்தின் மீதும் நீர் இருக்கின்றீர்.
5. நீரும் பார்ப்பீர் ; அவர்களும் பார்ப்பார்கள் :
6. (இருசாராராகிய) உங்களில் எவர்(பைத்தியமென்னும் நோயால்) சோதனைக் குள்ளாக்கப்பட்டவர் என்பதை—

اِنَّ رَبَّكَ هُوَ اَعْلَمُ بِمَنْ ضَلَّ عَنْ سَبِيْلِهٖ ۪ وَهُوَ اَعْلَمُ
بِالْمُهْتَدِيْنَ ۝۷ فَلَا تُطِعِ الْمُكَذِّبِيْنَ ۝۸ وَدُّوْا لَوْ تُدْهِنُ
فَيُدْهِنُوْنَ ۝۹ وَلَا تُطِعْ كُلَّ حَلَّافٍ مَّهِيْنٍ ۝۱۰ هَمَّازٍ مَّشَّآءٍۢ
بِنَمِيْمٍ ۝۱۱ مَّنَّاعٍ لِّلْخَيْرِ مُعْتَدٍ اَثِيْمٍ ۝۱۲ عُتُلٍّۢ بَعْدَ ذٰلِكَ زَنِيْمٍ ۝۱۳
اَنْ كَانَ ذَا مَالٍ وَّبَنِيْنَ ۝۱۴ اِذَا تُتْلٰى عَلَيْهِ اٰيٰتُنَا قَالَ
اَسَاطِيْرُ الْاَوَّلِيْنَ ۝۱۵ سَنَسِمُهٗ عَلَى الْخُرْطُوْمِ ۝۱۶ اِنَّا بَلَوْنٰهُمْ كَمَا
بَلَوْنَآ اَصْحٰبَ الْجَنَّةِ ۚ اِذْ اَقْسَمُوْا لَيَصْرِمُنَّهَا مُصْبِحِيْنَ ۝۱۷ وَلَا
يَسْتَثْنُوْنَ ۝۱۸ فَطَافَ عَلَيْهَا طَآئِفٌ مِّنْ رَّبِّكَ وَهُمْ نَآئِمُوْنَ ۝۱۹
فَاَصْبَحَتْ كَالصَّرِيْمِ ۝۲۰ فَتَنَادَوْا مُصْبِحِيْنَ ۝۲۱ اَنِ اغْدُوْا عَلٰى
حَرْثِكُمْ اِنْ كُنْتُمْ صٰرِمِيْنَ ۝۲۲ فَانْطَلَقُوْا وَهُمْ يَتَخَافَتُوْنَ ۝۲۳
اَنْ لَّا يَدْخُلَنَّهَا الْيَوْمَ عَلَيْكُمْ مِّسْكِيْنٌ ۝۲۴ وَّغَدَوْا عَلٰى حَرْدٍ
قٰدِرِيْنَ ۝۲۵ فَلَمَّا رَاَوْهَا قَالُوْٓا اِنَّا لَضَآلُّوْنَ ۝۲۶ بَلْ نَحْنُ
مَحْرُوْمُوْنَ ۝۲۷ قَالَ اَوْسَطُهُمْ اَلَمْ اَقُلْ لَّكُمْ لَوْلَا تُسَبِّحُوْنَ ۝۲۸
قَالُوْا سُبْحٰنَ رَبِّنَآ اِنَّا كُنَّا ظٰلِمِيْنَ ۝۲۹ فَاَقْبَلَ بَعْضُهُمْ عَلٰى
بَعْضٍ يَّتَلَاوَمُوْنَ ۝۳۰ قَالُوْا يٰوَيْلَنَآ اِنَّا كُنَّا طٰغِيْنَ ۝۳۱

7. நிச்சயமாக உமதிரட்சகன், அவன் வழியைவிட்டுத் தவறியவர் யார் என்பதை அவனே மிக அறிந்தவன். (அதுபோலவே) நேர் வழி அடைந்தோரையும் அவனே மிக அறிந்தவன்.

8. ஆகவே, (நபியே! உம்மைப்) பொய்யாக்கக்கூடியவர்களுக்கு நீர் கீழ்ப்படியாதீர்.

9. (அவர்களின் வணக்க வழிபாடுகளில் சலுகை அளித்து) நீர் தளர்த்தினால் (உமக்கு) அவர்களும் தளர்ந்து செல்வதை விரும்புகின்றனர்.

10. இழிந்தவனாக, அதிகமாக சத்தியம்செய்யக் கூடிய ஒவ்வொருவனுக்கும் நீர் கீழ்ப்படியாதீர்.

11. (அவன் மனிதர்களின் தன்மானங்களில்) குறைபேசித்திரிபவன், கோள் சொல்லிக் கொண்டு நடப்பவன்.

12. நன்மையானவற்றை அதிகமாகத் தடுத்துக்கொண்டிருப்பவன் ; வரம்பு மீறியவன்; பாவம்செய்பவன்.

13. முரட்டுச் சுபாவமுடையவன்; அதற்குப் பிறகு (தந்தை பெயர் தெரியா) இழி பிறப்புடையவன்.

14. (இத்தன்மையுடையவன்) செல்வமும் , ஆண்மக்களும் உடையவனாக அவனிருக்கிறான் என்பதால், (அவனுக்கு நீர் கீழ்ப்படியாதீர்)

15. நம் வசனங்கள் அவன் மீது ஓதிக்காண்பிக்கப்பட்டால், "(இது) முன்னோர்களின் கட்டுக் கதைகள்" என்று அவன் கூறுகின்றான்.

16. அவனுடைய மூக்கின் மீது நாம் ஓர் அடையாளமிடுவோம்.

17. நிச்சயமாக, நாம் (யமன் நாட்டிலுள்ள "ஸன்ஆ"வை அடுத்துள்ள ஊர்வாசிகளில்) அத்தோட்டத்திற்குரியவர்களைச் சோதித்தவாறே (மக்கத்து காஃபிர்களான) அவர்களை நாம் சோதித்தோம்; (அத்தோட்டத்திற்குரிய வர்களான) அவர்கள் அதனை அதிகாலையில் சென்று அறுத்துவிடுவோமென்று சத்தியம் செய்த சமயத்தில்,

18. ("இன்ஷா அல்லாஹ்") அல்லாஹ் நாடினால் என்று அவர்கள் கூறவில்லை.

19. ஆகவே, அவர்கள் தூங்கிக்கொண்டிருக்க, உம் இரட்சகனிடமிருந்து சுற்றக் கூடிய(நெருப்பான)து அதன் மீது சுற்றி (அழித்து) விட்டது.

20. அ(த்தோட்டமான)து, கறுத்த சாம்பல் போலாகிவிட்டது.

21. எனவே, (அதனை அறியாது) காலைப்பொழுதை அவர்கள் அடைந்த சமயம் ஒருவரையொருவர் அழைத்தனர்:

22. "(உங்கள் விளைச்சலை) நீங்கள் அறுப்பவர்களாக இருந்தால், (அதனை அறுவடை செய்ய) உங்கள் தோட்டத்திற்கு அதிகாலையில் வாருங்கள்" (என்றும் கூறிக்கொண்டார்கள்).

23. ஆகவே, அவர்கள் ஒருவரோடொருவர் மெதுவாகப் பேசிக் கொண்டு சென்றனர்.

24. இன்றையத்தினம் (யாசகம் கேட்டு வரக்கூடிய ) எந்த ஒரு ஏழையும் அ(த்தோட்டத்)தில் நிச்சயமாக நுழையக்கூடாது என (மெதுவாக பேசிக்கொண்டனர்).

25. அதிகாலையில் (ஏழைகள் எதையும் பெறாதவாறு) தடுத்துவிடுவதன்மீது ஆற்றலுடையவர்களாக (தங்களை எண்ணிக்கொண்டு) சென்றார்கள்.

26. (அங்குசென்று, அழிந்து விட்ட நிலையில்) அதனை அவர்கள் பார்த்தபோது (இது நம்முடையதல்ல;) "நிச்சயமாக நாம் வழி தவறி விட்டவர்கள்" என்று கூறினார்கள்.

27. (பின்னர் அதனைத் தங்களுடையது தான் என அறிந்து ,) இல்லை !நாம் தடுக்கப்பட்டு (பாக்கியமற்றவர்களாகி) விட்டவர்கள் (என்று கூறினார்கள் ).

28. அவர்களிலுள்ள மிகுந்த நடுநிலையாளர் ஒருவர் அவர்களிடம், "நீங்கள் (அல்லாஹ்வைத்) துதி செய்திருக்கவேண்டாமா? என்று நான் உங்களுக்குக் கூறவில்லையா?" என்று கூறினார் .

29 அ(தற்க)வர்கள் "எங்கள் இரட்சகன் மிகப் பரிசுத்தமானவன் ; நிச்சயமாக நாங்கள் தாம் அநியாயக்காரர்களாகிவிட்டோம்" என்று கூறினர்.

30. பின்னர், அவர்களில் சிலர் சிலரின் மீது நிந்தனை கூறியவர்களாக முன்னோக்கினர்.

31. "எங்களுடைய கேடே! நிச்சயமாக நாங்கள் வரம்பை மீறியவர்களாகிவிட்டோம்" என்று கூறினர்.

عَسٰى رَبُّنَآ اَنْ يُّبْدِلَنَا خَيْرًا مِّنْهَآ اِنَّآ اِلٰى رَبِّنَا رٰغِبُوْنَ ﴿٣٢﴾
كَذٰلِكَ الْعَذَابُ ؕ وَلَعَذَابُ الْاٰخِرَةِ اَكْبَرُ ۘ لَوْ كَانُوْا
يَعْلَمُوْنَ ﴿٣٣﴾ ع اِنَّ لِلْمُتَّقِيْنَ عِنْدَ رَبِّهِمْ جَنّٰتِ النَّعِيْمِ ﴿٣٤﴾
اَفَنَجْعَلُ الْمُسْلِمِيْنَ كَالْمُجْرِمِيْنَ ﴿٣٥﴾ ؕ مَا لَكُمْ ٚ كَيْفَ تَحْكُمُوْنَ ﴿٣٦﴾ ج
اَمْ لَكُمْ كِتٰبٌ فِيْهِ تَدْرُسُوْنَ ﴿٣٧﴾ لا اِنَّ لَكُمْ فِيْهِ لَمَا تَخَيَّرُوْنَ ﴿٣٨﴾ ج
اَمْ لَكُمْ اَيْمَانٌ عَلَيْنَا بَالِغَةٌ اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ ۙ اِنَّ لَكُمْ
لَمَا تَحْكُمُوْنَ ﴿٣٩﴾ ج سَلْهُمْ اَيُّهُمْ بِذٰلِكَ زَعِيْمٌ ﴿٤٠﴾ ج اَمْ لَهُمْ شُرَكَآءُ ۚ ج
فَلْيَاْتُوْا بِشُرَكَآئِهِمْ اِنْ كَانُوْا صٰدِقِيْنَ ﴿٤١﴾ يَوْمَ يُكْشَفُ
عَنْ سَاقٍ وَّيُدْعَوْنَ اِلَى السُّجُوْدِ فَلَا يَسْتَطِيْعُوْنَ ﴿٤٢﴾ لا
خَاشِعَةً اَبْصَارُهُمْ تَرْهَقُهُمْ ذِلَّةٌ ؕ وَقَدْ كَانُوْا يُدْعَوْنَ
اِلَى السُّجُوْدِ وَهُمْ سٰلِمُوْنَ ﴿٤٣﴾ فَذَرْنِيْ وَمَنْ يُّكَذِّبُ بِهٰذَا
الْحَدِيْثِ ؕ سَنَسْتَدْرِجُهُمْ مِّنْ حَيْثُ لَا يَعْلَمُوْنَ ﴿٤٤﴾ لا وَاُمْلِيْ
لَهُمْ ؕ اِنَّ كَيْدِيْ مَتِيْنٌ ﴿٤٥﴾ اَمْ تَسْـَٔلُهُمْ اَجْرًا فَهُمْ مِّنْ مَّغْرَمٍ
مُّثْقَلُوْنَ ﴿٤٦﴾ ج اَمْ عِنْدَهُمُ الْغَيْبُ فَهُمْ يَكْتُبُوْنَ ﴿٤٧﴾ فَاصْبِرْ لِحُكْمِ
رَبِّكَ وَلَا تَكُنْ كَصَاحِبِ الْحُوْتِ ۘ اِذْ نَادٰى وَهُوَ مَكْظُوْمٌ ﴿٤٨﴾ ط

وقف لازم - ع
ع ٥ عند المتقدمين ١٢
وقف لازم

32. எங்கள் இரட்சகன் இதைவிட மேலானதை எங்களுக்கு மாற்றித் தரக்கூடும்; நிச்சயமாக நாங்கள் இரட்சகனின் பக்கமே(அவனது அருளை)ஆசிக்கிறவர்களாக இருக்கிறோம்(என்றும் கூறினார்கள்).

33. (நபியே!) இவ்வாறே வேதனை(அல்லாஹ் நாடியவர்களை வந்தடையும்); மேலும்,அவர்கள் அறிந்தவர்களாக இருப்பார்களானால்திட்டமாக மறுமையின் வேதனை மிகப் பெரிதாகும்.

34. நிச்சயமாக, பயபக்தியுடையோருக்குத் தங்கள் இரட்சகனிடத்தில் அருட்கொடை களுடைய சுவனங்களுண்டு.

35. முஸ்லிம்களை, குற்றவாளிகளைப் போல் நாம் ஆக்கிவிடுவோமா?

36. உங்களுக்கு என்ன நேர்ந்தது? எவ்வாறு நீங்கள் தீர்ப்பளிக்கின்றீர்கள்?

37. அல்லது , உங்களிடம் (ஏதும் வேத) நூல் இருந்து அதில்(முஸ்லிம்கள் பாவிகளைப் போன்று ஆக்கப்படுவார்களென) நீங்கள் படிக்கின்றீர்களா?

38. நீங்கள் தேர்ந்தெடுப்பவை நிச்சயமாக உங்களுக்கு அதில் உள்ளன (என அவ்வேதத்தில் நீங்கள் படித்திருக்கின்றீர்களா?)

39. அல்லது நீங்கள் தீர்ப்புச் செய்பவை நிச்சயமாக உங்களுக்கு உண்டு என நம்மீது மறுமை நாள் வரை உங்களுக்கு உறுதி செய்யப்பட்ட சத்திய (ப்பிரமாண)ங்கள் உண்டா? (அவ்வாறு எதுவும் நம்முடன் உங்களுக்கில்லை)

40. (நபியே!) "(அவ்வாறெல்லாம் கூறுகின்ற) அவர்களில் அதற்குப் பொறுப் பேற்பவர் யார்?" என்று அவர்களிடம் கேட்பீராக.

41. அல்லது (இவ்வாறு அவர்கள் கூறிக் கொண்டிருப்பவற்றில்) அவர்களுக்கு இணையாளர்கள் இருக்கிறார்களா? (அக்கூற்றில்) அவர்கள் உண்மையாளர் களாக இருந்தால் (அவர்களுக்குப் பொறுப்பாளர்களாக) அவர்களின் இணையாளர்களைக் கொண்டுவரட்டும்.

42. கெண்டைக்காலைவிட்டு(திரை)அகற்றப்பட்டுவிடும் நாளில்,அவர்களோ (அந்நாளின் போது) சிரம்பணிவதின் பால் அழைக்கப்படுவர்;ஆனால் அவர்கள்(சிரம்பணிய) சக்தி பெறமாட்டார்கள்.

43. அவர்களுடைய பார்வைகளெல்லாம் கீழ் நோக்கியவையாக இருக்கும் நிலையில் இழிவு அவர்களைச் சூழ்ந்துகொள்ளும்; (இம்மையில்) சுகமான வர்களாக இருந்த சமயத்தில் சிரம் பணிந்து வணங்க நிச்சயமாக அவர்கள் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

44. ஆகவே, என்னையும்,இச்செய்தியைப் பொய்யாக்குபவரையும் விட்டு விடுவீராக! அவர்கள் அறியாத விதத்தில் படிப்படியாக அவர்களை நாம் பிடிப்போம்.

45. இன்னும், அவர்களுக்குச் சிறிது தாமதம் கொடுப்பேன்; நிச்சயமாக என்னுடைய சூழ்ச்சி மிக்க பலமானது.

46. அல்லது (நபியே!) அவர்களிடம் ஏதாவது கூலியை நீர் கேட்கின்றீரா? அதனால், அவர்கள் கடனால் பளுவாக்கப்பட்டவர்களா?

47. அல்லது மறைவானது அவர்களிடம் இருந்து, (அதிலிருந்து தங்களுக்கு வேண்டிய ஆதாரங்களை )அவர்கள் எழுதுகின்றார்களா?

48. ஆகவே, (நபியே!) நீர் உமதிரட்சகனின் கட்டளைக்காகப் பொறுமை யுடனிருப்பீராக! மேலும், மீனுடையவரைப் போன்று நீர் ஆகிவிடவேண்டாம்; அவர் துக்கம் நிரம்பப்பெற்றவராக (பிரார்த்தனை செய்து) அழைத்தபொழுது,

لَوْلَآ اَنْ تَدٰرَكَهٗ نِعْمَةٌ مِّنْ رَّبِّهٖ لَنُبِذَ بِالْعَرَآءِ وَهُوَ مَذْمُوْمٌ ﴿۴۹﴾
فَاجْتَبٰهُ رَبُّهٗ فَجَعَلَهٗ مِنَ الصّٰلِحِيْنَ ﴿۵۰﴾ وَاِنْ يَّكَادُ الَّذِيْنَ
كَفَرُوْا لَيُزْلِقُوْنَكَ بِاَبْصَارِهِمْ لَمَّا سَمِعُوا الذِّكْرَ وَيَقُوْلُوْنَ اِنَّهٗ
لَمَجْنُوْنٌ ﴿۵۱﴾ وَمَا هُوَ اِلَّا ذِكْرٌ لِّلْعٰلَمِيْنَ ﴿۵۲﴾

وقف لازم ۲ ع ۱۹

سُوْرَةُ الْحَآقَّةِ مَكِّيَّةٌ وَّهِيَ اِثْنَانِ وَخَمْسُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَآقَّةُ ﴿۱﴾ مَا الْحَآقَّةُ ﴿۲﴾ وَمَآ اَدْرٰىكَ مَا الْحَآقَّةُ ﴿۳﴾
كَذَّبَتْ ثَمُوْدُ وَعَادٌۢ بِالْقَارِعَةِ ﴿۴﴾ فَاَمَّا ثَمُوْدُ فَاُهْلِكُوْا
بِالطَّاغِيَةِ ﴿۵﴾ وَاَمَّا عَادٌ فَاُهْلِكُوْا بِرِيْحٍ صَرْصَرٍ عَاتِيَةٍ ﴿۶﴾
سَخَّرَهَا عَلَيْهِمْ سَبْعَ لَيَالٍ وَّثَمٰنِيَةَ اَيَّامٍ حُسُوْمًا
فَتَرَى الْقَوْمَ فِيْهَا صَرْعٰى كَاَنَّهُمْ اَعْجَازُ نَخْلٍ خَاوِيَةٍ ﴿۷﴾
فَهَلْ تَرٰى لَهُمْ مِّنْۢ بَاقِيَةٍ ﴿۸﴾ وَجَآءَ فِرْعَوْنُ وَمَنْ قَبْلَهٗ
وَالْمُؤْتَفِكٰتُ بِالْخَاطِئَةِ ﴿۹﴾ فَعَصَوْا رَسُوْلَ رَبِّهِمْ
فَاَخَذَهُمْ اَخْذَةً رَّابِيَةً ﴿۱۰﴾ اِنَّا لَمَّا طَغَا الْمَآءُ حَمَلْنٰكُمْ
فِي الْجَارِيَةِ ﴿۱۱﴾ لِنَجْعَلَهَا لَكُمْ تَذْكِرَةً وَّتَعِيَهَآ اُذُنٌ وَّاعِيَةٌ ﴿۱۲﴾

49. அவருடைய இரட்சகனிடமிருந்து அருட்கொடை அவரை அடையாதிருந்தால், வெட்ட வெளியில் பழிக்கப்பட்டவராக அவர் எறியப்பட்டு இரு(ந்திரு)ப்பார்.

50. பின்னர், அவருடைய இரட்சகன் அவரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டான்; பின்னர் அவரை நல்லோர்களில் உள்ளவராக ஆக்கி வைத்தான்.

51. மேலும், (நபியே!) நிராகரிப்போர் (குர்ஆனுடைய) உபதேசத்தைக் கேட்கும் பொழுது, அவர்கள் தங்களுடைய பார்வைகளைக் கொண்டே உம்மை வீழ்த்தி விட நெருங்குகின்றனர்; (உம்மைப் பற்றி) நிச்சயமாக, அவர் பைத்தியக்காரர் (தாம்) என்றும் கூறுகின்றனர்.

52. (நாம் உம்மீது இறக்கிவைத்திருக்கும் திக்ரு எனும்) இது, அகிலத்தார்க்கு உபதேசமே தவிர (வேறு) இல்லை.

---

அத்தியாயம் : 69

## அல் ஹாக்கா _ நிச்சயமானது

வசனங்கள் : 52 மக்கீ ருகூஉகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. உறுதியாக நடந்தேறக்கூடியதா(ன மறுமை நாளா)னது_

2. உறுதியாக நடந்தேறக்கூடியது என்ன?

3. உறுதியாக நடந்தேறக்கூடியது என்னவென்று உமக்கு எது அறிவித்தது?

4. ஸமூது(கூட்டத்தினரு)ம், ஆது(கூட்டத்தினரு)ம் (இதயங்களைத்) திடுக்கிடச்செய்யக் கூடியதை (மறுமைநாளை)ப் பொய்யாக்கினர்.

5. ஆகவே, (ஸாலிஹ் நபியின் கூட்டத்தாராகிய) ஸமூது, ஒரு பெரிய சப்தத்தைக்கொண்டு அழிக்கப்பட்டனர்.

6. இன்னும், (ஹூது நபியின் கூட்டத்தாராகிய) ஆது, பெரும் சப்தத்தோடு கடுங்குளிர் கலந்த கொடுங்காற்றைக் கொண்டு அழிக்கப்பட்டனர்.

7. ஏழு இரவுகளும், எட்டு பகல்களும் தொடர்ச்சியாக அவர்கள் மீது அதை அவன் வசப்படுத்தி (வீசச்செய்து) இருந்தான்; ஆகவே, (நபியே! அப்பொழுது நீர் அங்கிருந்திருப்பின்) அவற்றில் அக்கூட்டத்தினரை_ நிச்சயமாக அவர்கள், அடிப்பாகங்களோடு சாய்ந்து கிடக்கும் ஈச்ச மரங்களைப் போன்று பிணங்களாக(க் கிடப்பதை) நீர் காண்பீர்.

8. ஆகவே, (இன்றைக்கும்) அவர்களில் எஞ்சியிருப்போரை நீர் காண்கின்றீரா?

9. மேலும், ஃபிர்அவ்னும், அவனுக்கு முன்னிருந்தவர்களும், தலை கீழாய்ப் புரட்டப்பட்ட ஊரிலிருந்தவர்களும் (இணைவைத்து அல்லாஹ்வின் அருட்கொடைகளை நிராகரித்துப்) பாவச்செயலைச் செய்து வந்தார்கள்.

10. ஆகவே, அவர்கள் தங்கள் இரட்சகனின் தூதருக்கு மாறு செய்தனர்; ஆகையால், அவன் அவர்களை மிகக் கடுமையான பிடியாகப் பிடித்துக் கொண்டான்.

11. தண்ணீர் எல்லை மீறிய(தால்பெருக்கெடுத்து ஓடிய) பொழுது, நிச்சயமாக நாம் உங்(கள் முன்னோர்)களைக் கப்பலில் ஏற்றி(க்காப்பாற்றி)னோம்.

12. அதனை உங்களுக்கு ஒரு படிப்பினையாக நாம் ஆக்குவதற்காகவும், பேணிப்பாதுகாக்கும் செவி, அதனை (க்கேட்ட பின் நினைவில் வைத்து)பேணிப் பாதுகாப்பதற்காகவும் (அவ்வாறு செய்தோம்).

فَاِذَا نُفِخَ فِی الصُّوْرِ نَفْخَةٌ وَّاحِدَةٌ ﴿۱۳﴾ وَّحُمِلَتِ الْاَرْضُ وَ
الْجِبَالُ فَدُكَّتَا دَكَّةً وَّاحِدَةً ﴿۱۴﴾ فَیَوْمَىٕذٍ وَّقَعَتِ الْوَاقِعَةُ ﴿۱۵﴾
وَانْشَقَّتِ السَّمَآءُ فَهِیَ یَوْمَىٕذٍ وَّاهِیَةٌ ﴿۱۶﴾ وَّالْمَلَكُ عَلٰۤى اَرْجَآىٕهَا
وَیَحْمِلُ عَرْشَ رَبِّكَ فَوْقَهُمْ یَوْمَىٕذٍ ثَمٰنِیَةٌ ﴿۱۷﴾ یَوْمَىٕذٍ
تُعْرَضُوْنَ لَا تَخْفٰى مِنْكُمْ خَافِیَةٌ ﴿۱۸﴾ فَاَمَّا مَنْ اُوْتِیَ
كِتٰبَهٗ بِیَمِیْنِهٖ فَیَقُوْلُ هَآؤُمُ اقْرَءُوْا كِتٰبِیَهْ ﴿۱۹﴾ اِنِّیْ
ظَنَنْتُ اَنِّیْ مُلٰقٍ حِسَابِیَهْ ﴿۲۰﴾ فَهُوَ فِیْ عِیْشَةٍ رَّاضِیَةٍ ﴿۲۱﴾
فِیْ جَنَّةٍ عَالِیَةٍ ﴿۲۲﴾ قُطُوْفُهَا دَانِیَةٌ ﴿۲۳﴾ كُلُوْا وَاشْرَبُوْا
هَنِیْٓــًٔا بِمَاۤ اَسْلَفْتُمْ فِی الْاَیَّامِ الْخَالِیَةِ ﴿۲۴﴾ وَاَمَّا مَنْ
اُوْتِیَ كِتٰبَهٗ بِشِمَالِهٖ فَیَقُوْلُ یٰلَیْتَنِیْ لَمْ اُوْتَ كِتٰبِیَهْ ﴿۲۵﴾
وَلَمْ اَدْرِ مَا حِسَابِیَهْ ﴿۲۶﴾ یٰلَیْتَهَا كَانَتِ الْقَاضِیَةَ ﴿۲۷﴾ مَاۤ
اَغْنٰى عَنِّیْ مَالِیَهْ ﴿۲۸﴾ هَلَكَ عَنِّیْ سُلْطٰنِیَهْ ﴿۲۹﴾ خُذُوْهُ
فَغُلُّوْهُ ﴿۳۰﴾ ثُمَّ الْجَحِیْمَ صَلُّوْهُ ﴿۳۱﴾ ثُمَّ فِیْ سِلْسِلَةٍ ذَرْعُهَا
سَبْعُوْنَ ذِرَاعًا فَاسْلُكُوْهُ ﴿۳۲﴾ اِنَّهٗ كَانَ لَا یُؤْمِنُ
بِاللّٰهِ الْعَظِیْمِ ﴿۳۳﴾ وَلَا یَحُضُّ عَلٰى طَعَامِ الْمِسْكِیْنِ ﴿۳۴﴾

13. ஆகவே, குழல்(ஸூர்) ஒரு முறை ஊதப்பட்டால்_

14. பூமியும், மலைகளும் உயர்த்தப்பட்டு, அவ்விரண்டும் ஒரே தூளாக தூளாக்கப்பட்டுவிட்டால்;

15. அந்நாளில் நிகழவேண்டியது நிகழ்ந்து விடும்.

16. வானமும் பிளந்து, அது அந்நாளில் பலமற்றதாகிவிடும்.

17. இன்னும், (நபியே!) மலக்குகள் அதன் கடைக்கோடிகளில் இருப்பார்கள்; அன்றியும், அந்நாளில் உமதிரட்சகனின் அர்ஷை, (மலக்குகளில்) எட்டுப்பேர் தங்களுக்கு மேலாகச் சுமந்து கொண்டிருப்பார்கள்.

18. (மனிதர்களே!) அந்நாளில் நீங்கள் (உங்கள் இரட்சகன் முன்) எடுத்துக் காட்டப்படுவீர்கள்; உங்களிலிருந்து மறையக்கூடியது எதுவும் (அவனுக்கு) மறைந்துவிடாது.

19. ஆகவே, எவர், தன்னுடைய பதிவுப்புத்தகத்தை வலக்கையில் கொடுக்கப்பட்டாரோ அவர், (மற்றவர்களிடம்) "வாருங்கள்; என்னுடைய பதிவுப் புத்தகத்தை நீங்கள் படித்துப்பாருங்கள்" என்று (மகிழ்ச்சியுடன்) கூறுவார்.

20. "நிச்சயமாக நான் என்னுடைய கேள்வி கணக்கை நிச்சயமாக சந்திப்பேன் என்று உறுதியாக எண்ணியிருந்தேன்" (என்றும் கூறுவார்).

21. ஆகவே, அவர் திருப்தியான வாழ்வில் இருப்பார்.

22. உயர்வான சுவனத்தில் இருப்பார்.

23. அதன் கனிகள் (அவர்களின் கைக்கெட்டும் விதமாக பறிப்பதற்கு மிக) நெருங்கியவையாக இருக்கும்.

24. (இவர்களிடம்,) "சென்று போன நாட்களில் (உலகில் மறுமைக்காக நன்மையானவற்றை) நீங்கள் முற்படுத்தி வைத்திருந்த காரண த்திற்காக, மகிழ்-வோடு (இவைகளை) உண்ணுங்கள்; இன்னும், அருந்துங்கள்" (என்று கூறப்படும்).

25. இன்னும், எவன் தன்னுடைய (பதிவுப்) புத்தகத்தை இடக்கையில் கொடுக்கப்பட்டானோ அவன், "என்னுடைய (செயல்கள் பதியப்பட்ட) புத்தகத்தை நான் கொடுக்கப்படாமலிருந்திருக்க வேண்டுமே!" என்று கூறுவான்.

26. மேலும், "என்னுடைய கணக்கு என்னவென்பதை நான் அறியவில்லையே!"

27. (நான் இறந்தபின் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படாது) "அதுவே முடிவாக இருந்திருக்க வேண்டுமே!"

28. "என்னுடைய செல்வம் எனக்கு ஒன்றும் பயனளிக்கவில்லையே!"

29. "என்னுடைய அதிகாரமும் என்னை விட்டு அழிந்துவிட்டதே!" (என்று புலம்புவான்.)

30. பின்னர், (வல்ல அல்லாஹ் தன் மலக்குகளுக்கு) "அவனைப் பிடியுங்கள்; அப்பால் அவனுக்கு விலங்கிடுங்கள்;"

31. "பின்னர் நரகத்தில் அவனைத் தள்ளுங்கள்."

32. "பின்னர், அதன் நீளமானது எழுபது முழமுள்ள(தாக இருக்கும்) சங்கிலியால் அவனைக் கட்டுங்கள்" (என்றும் கூறுவான்)

33. "நிச்சயமாக அவன், மகத்துவமிக்க அல்லாஹ்வை விசுவாசம் கொள்ளாதவனாக அவன் இருந்தான்."

34. "ஏழைக்கு (தான் ஆகாரமளிக்காததுடன் பிறரையும்) ஆகாரமளிக்கும்படி அவன் தூண்டவுமில்லை."

فَلَيْسَ لَهُ الْيَوْمَ هٰهُنَا حَمِيْمٌ ﴿٣٥﴾ وَّلَا طَعَامٌ اِلَّا مِنْ
غِسْلِيْنٍ ﴿٣٦﴾ لَّا يَاْكُلُهٗٓ اِلَّا الْخٰطِـُٔوْنَ ﴿٣٧﴾ فَلَآ اُقْسِمُ بِمَا ١ ع ٣٧ ٥
تُبْصِرُوْنَ ﴿٣٨﴾ وَمَا لَا تُبْصِرُوْنَ ﴿٣٩﴾ اِنَّهٗ لَقَوْلُ رَسُوْلٍ
كَرِيْمٍ ﴿٤٠﴾ وَّمَا هُوَ بِقَوْلِ شَاعِرٍ ۭ قَلِيْلًا مَّا تُؤْمِنُوْنَ ﴿٤١﴾
وَلَا بِقَوْلِ كَاهِنٍ ۭ قَلِيْلًا مَّا تَذَكَّرُوْنَ ﴿٤٢﴾ تَنْزِيْلٌ مِّنْ
رَّبِّ الْعٰلَمِيْنَ ﴿٤٣﴾ وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْاَقَاوِيْلِ ﴿٤٤﴾
لَاَخَذْنَا مِنْهُ بِالْيَمِيْنِ ﴿٤٥﴾ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِيْنَ ﴿٤٦﴾ فَمَا
مِنْكُمْ مِّنْ اَحَدٍ عَنْهُ حٰجِزِيْنَ ﴿٤٧﴾ وَاِنَّهٗ لَتَذْكِرَةٌ لِّلْمُتَّقِيْنَ ﴿٤٨﴾
وَاِنَّا لَنَعْلَمُ اَنَّ مِنْكُمْ مُّكَذِّبِيْنَ ﴿٤٩﴾ وَاِنَّهٗ لَحَسْرَةٌ عَلَى الْكٰفِرِيْنَ ﴿٥٠﴾
وَاِنَّهٗ لَحَقُّ الْيَقِيْنِ ﴿٥١﴾ فَسَبِّحْ بِاسْمِ رَبِّكَ الْعَظِيْمِ ﴿٥٢﴾ ٢ ع ١٥ ٦

## سُوْرَةُ الْمَعَارِجِ مَكِّيَّةٌ وَهِيَ اَرْبَعٌ وَّاَرْبَعُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

سَاَلَ سَاۗىِٕلٌۢ بِعَذَابٍ وَّاقِعٍ ﴿١﴾ لِّلْكٰفِرِيْنَ لَيْسَ
لَهٗ دَافِعٌ ﴿٢﴾ مِّنَ اللّٰهِ ذِي الْمَعَارِجِ ﴿٣﴾ تَعْرُجُ الْمَلٰۗىِٕكَةُ وَ
الرُّوْحُ اِلَيْهِ فِيْ يَوْمٍ كَانَ مِقْدَارُهٗ خَمْسِيْنَ اَلْفَ سَنَةٍ ﴿٤﴾

35. "ஆகவே இன்றையத் தினம் அவனுக்கு இங்கு (உதவ) நண்பன் (எவனும்) இல்லை.
36. (நரகவாசிகளின் உடலிலிருந்து வடியும்) "சீழ் ஜலங்களைத் தவிர, (அவனுக்கு வேறு) உணவுமில்லை" (என்றும் கூறப்படும்.)
37. அதனைப்பாவிகளைத் தவிர (மற்றெவரும்) புசிக்கமாட்டார்கள்.
38. ஆகவே, நீங்கள் பார்ப்பவற்றைக் கொண்டு நான் சத்தியம் செய்கிறேன்.
39. நீங்கள் பார்க்காதவற்றைக்கொண்டும்; (நான் சத்தியம் செய்கிறேன்.)
40. நிச்சயமாக, இது மிக்க சங்கை மிக்கஒரு தூதரின் கூற்றாகும்.
41. இது எந்தக் கவிஞரின் கூற்றுமல்ல; (எனினும், இதனை) நீங்கள் வெகு சொற்பமாகவே விசுவாசிக்கின்றீர்கள்_
42. (இது) ஒரு குறிகாரரின் கூற்றுமல்ல; (எனினும்,) வெகு சொற்பமாகவே நீங்கள் நல்லறிவு பெறுகின்றீர்கள்.
43. அகிலத்தாரின் இரட்சகனிடமிருந்து (இது) இறக்கப்பட்டுள்ளதாகும்.
44. இன்னும், அவர் நம்மீது சொற்களில் (நாம் சொல்லாத) சிலவற்றை இட்டுக்கட்டி (க்கூறி) யிருப்பாரானால்_
45. திட்டமாக அவருடைய வலக்கரத்தை நாம் பலமாகப் பிடித்துக் கொண்டிருப்போம்.
46. பின்னர், அவருடைய (இதயத்தோடுசம்பந்தப்பட்ட) உயிர் நரம்பை நாம் தறித்துவிடுவோம்.
47. அப்போது, உங்களில் அவரை விட்டும் (நாம் செய்யும் வேதனையை) தடுத்து விடக்கூடியவர்கள் எவருமிலர்.
48. மேலும், நிச்சயமாக (குர்ஆனாகிய) இது பயபக்தியுடையோர்களுக்கு நல்லுபதேசமாகும்.
49. நிச்சயமாக (அதனைப்) பொய்யாக்குகிறவர்களும் உங்களில் இருக்கின்றனர் என்பதை நிச்சயமாக நாம் நன்கறிவோம்.
50. மேலும், நிச்சயமாக இது நிராகரிப்போருக்குக் கைசேதமாகும்.
51. இன்னும் நிச்சயமாக இது, உறுதியான உண்மையாகும்.
52. ஆகவே, (நபியே!) நீர் மகத்தான உமதிரட்சகனின் பெயரைக்கொண்டு துதிசெய்து கொண்டிருப்பீராக!

---

அத்தியாயம் : 70

## அல் மஆரிஜ் _ உயர் வழிகள்

வசனங்கள் : 44 மக்கீ ருகூஃகள் : 2

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. (நபியே!) நிகழக் கூடிய வேதனைபற்றிக் கேட்கக் கூடியவன் (எப்பொழுது வருமென பரிகசிக்கும் நோக்குடன்) கேட்கின்றான்.
2. நிராகரிப்போருக்கு_(அது நிகழும் சமயத்தில்) அதனைத் தடுத்து விடக்கூடியவர் எவருமில்லை.
3. உயர் வழிகளுடைய அல்லாஹ்விடமிருந்து (அது சம்பவிக்கும்).
4. மலக்குகளும், ஜிப்ரீலும் (அல்லாஹ்வாகிய) அவன் பக்கம் ஒரு நாளில் உயர்ந்து செல்வார்கள்; அதன் அளவு ஐம்பதினாயிரம் வருடங்களாகும்.

فَاصْبِرْ صَبْرًا جَمِيْلًا ﴿٥﴾ اِنَّهُمْ يَرَوْنَهٗ بَعِيْدًا ﴿٦﴾ وَّنَرٰىهُ
قَرِيْبًا ﴿٧﴾ يَوْمَ تَكُوْنُ السَّمَآءُ كَالْمُهْلِ ﴿٨﴾ وَتَكُوْنُ الْجِبَالُ
كَالْعِهْنِ ﴿٩﴾ وَلَا يَسْـَٔلُ حَمِيْمٌ حَمِيْمًا ﴿١٠﴾ يُّبَصَّرُوْنَهُمْ يَوَدُّ
الْمُجْرِمُ لَوْ يَفْتَدِيْ مِنْ عَذَابِ يَوْمِىِٕذٍۭ بِبَنِيْهِ ﴿١١﴾ وَ
صَاحِبَتِهٖ وَاَخِيْهِ ﴿١٢﴾ وَفَصِيْلَتِهِ الَّتِيْ تُـْٔوِيْهِ ﴿١٣﴾ وَمَنْ فِي
الْاَرْضِ جَمِيْعًا ثُمَّ يُنْجِيْهِ ﴿١٤﴾ كَلَّا اِنَّهَا لَظٰى ﴿١٥﴾ نَزَّاعَةً
لِّلشَّوٰى ﴿١٦﴾ تَدْعُوْا مَنْ اَدْبَرَ وَتَوَلّٰى ﴿١٧﴾ وَجَمَعَ فَاَوْعٰى ﴿١٨﴾ اِنَّ
الْاِنْسَانَ خُلِقَ هَلُوْعًا ﴿١٩﴾ اِذَا مَسَّهُ الشَّرُّ جَزُوْعًا ﴿٢٠﴾ وَّاِذَا مَسَّهُ
الْخَيْرُ مَنُوْعًا ﴿٢١﴾ اِلَّا الْمُصَلِّيْنَ ﴿٢٢﴾ الَّذِيْنَ هُمْ عَلٰى صَلَاتِهِمْ
دَآىِٕمُوْنَ ﴿٢٣﴾ وَالَّذِيْنَ فِيْۤ اَمْوَالِهِمْ حَقٌّ مَّعْلُوْمٌ ﴿٢٤﴾
لِّلسَّآىِٕلِ وَالْمَحْرُوْمِ ﴿٢٥﴾ وَالَّذِيْنَ يُصَدِّقُوْنَ بِيَوْمِ الدِّيْنِ ﴿٢٦﴾
وَالَّذِيْنَ هُمْ مِّنْ عَذَابِ رَبِّهِمْ مُّشْفِقُوْنَ ﴿٢٧﴾ اِنَّ عَذَابَ
رَبِّهِمْ غَيْرُ مَاْمُوْنٍ ﴿٢٨﴾ وَالَّذِيْنَ هُمْ لِفُرُوْجِهِمْ حٰفِظُوْنَ ﴿٢٩﴾
اِلَّا عَلٰۤى اَزْوَاجِهِمْ اَوْ مَا مَلَكَتْ اَيْمَانُهُمْ فَاِنَّهُمْ غَيْرُ
مَلُوْمِيْنَ ﴿٣٠﴾ فَمَنِ ابْتَغٰى وَرَآءَ ذٰلِكَ فَاُولٰٓىِٕكَ هُمُ الْعٰدُوْنَ ﴿٣١﴾

5. (நபியே!) நீர் அழகான பொறுமையாகப் பொறுத்திருப்பீராக.
6. நிச்சயமாக அவர்கள் (நிகழக்கூடிய) அதனை வெகுதூரமாகக் காண்கின்றனர்.
7. நாமோ, அதனை மிகச் சமீபமானதாகக் காண்கின்றோம்.
8. வானம், பழுக்கக் காய்ந்த செம்பைப் போல் ஆகும் நாளில்_
9. இன்னும், மலைகள் சாயம் ஏற்றப்பட்டபஞ்சைப் போன்று ஆகும்(நாளில் அது நிகழும்).
10. அன்றியும், ஒரு நண்பன் மற்றொரு நண்பனை(ப்பற்றி விசாரித்து)க்கேட்கமாட்டான்.
11. அவர்கள் (தங்களின் நண்பர்களுக்குக்) காண்பிக்கப்படுவர்; (எனினும் ஒருவர் மற்றவரைப்பற்றி கேட்டுக் கொள்ளமாட்டார்; ஒருவரை ஒருவர் அறியாதவர் போன்று வெருண்டோடுவர்.) அந்நாளுடையவேதனையிலிருந்து (தன்னைக்காப்பாற்றிக் கொள்ள,) குற்றவாளி தன்னுடைய மக்களை ஈடாகக்கொடுக்க விரும்புவான்.
12. தன் மனைவியையும், தன் சகோதரனையும்_
13. தன்னை அரவணைத்துவந்த தன்உறவினர்களையும்_
14. இன்னும், பூமியிலுள்ள அனைவரையும் (ஈடாகக் கொடுத்துப்) பின்னர் அது அவனைக் காப்பாற்றிக் கொள்ளும்(என்று விரும்புவான்).
15. (ஆனால் அது நடைபெறுவது) அல்ல; (ஏனெனில்) நிச்சயமாக அது கொழுந்து விட்டெரியும்(நரகத்தின்) நெருப்பாகும்.
16. அதுதலையின் தோலை (எரித்து) கழற்றி விடக்கூடியதாகும்.
17. புறமுதுகிட்டுச் சென்று, புறக்கணித்தோரையும் அது அழைக்கும்.
18. (பொருளைச்) சேமித்து (அதனைச் செலவு செய்யாது) பாதுகாத்து வந்தோரையும் (தன்னிடம் அழைக்கும்)
19. நிச்சயமாக மனிதன், (பேராசை கொண்ட) மிக்க பதட்டக்காரனாக படைக்கப் பட்டுள்ளான்.
20. (ஏனென்றால்) அவனை ஒரு தீமை தொட்டுவிட்டால் ( திடுக்கிட்டுப்) பதறுகிறவனாக_
21. இன்னும், அவனை யாதொரு நன்மை தொட்டுவிட்டால் அதனை (பிறருக்கு வழங்காது) தடுத்துக்கொள்கிறவனாக (இருக்கிறான்).
22. தொழுகையாளிகளைத் தவிர,
23. அவர்கள் எத்தகையோரென்றால், அவர்கள் தங்கள் (ஐவேளைத்) தொழுகையின் மீது நிரந்தரமானவர்கள்( தவறாது தொழுபவர்கள்).
24. இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், அவர்களுடைய செல்வங்களில் நிர்ணயிக்கப்பட்ட பங்குண்டு_
25. (யாசித்துக்)கேட்பவருக்கும், ( வெட்கித்துக்) கேட்காதவருக்கும் (உண்டு).
26. இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், கூலி கொடுக்கும் (மறுமை) நாளை உண்மைப் படுத்துகின்றனர்.
27. இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் இரட்சகனின் வேதனையை அவர்கள் பயந்தோராவர்.
28. (ஏனென்றால்,) நிச்சயமாக தங்களிரட்சகனின் வேதனை அச்சப்படாது இருக்கக்கூடியதன்று (என்பதை அவர்கள் நன்கறிவார்கள் ).
29. இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால், அவர்கள் தங்கள் வெட்கத்தலங்களைப் பாதுகாக்கக்கூடியவர்கள்.
30. தங்கள் மனைவியரிடத்திலும், தங்கள் வலக்கரம்சொந்தமாக்கிக் கொண்டவர்களிடத்திலும் தவிர, அப்போது நிச்சயமாக அவர்கள் நிந்திக்கப்பட்டவர்களல்லர்.
31. ஆகவே, எவராவது இதற்கப்பால் ( தவறான வழியில் அனுபவிக்கத்) தேடினால் அத்தகையோர் _அவர்கள் தாம்வரம்பு மீறியவர்களாவர்.

وَالَّذِيۡنَ هُمۡ لِاَمٰنٰتِهِمۡ وَعَهۡدِهِمۡ رٰعُوۡنَ ۳۲ وَالَّذِيۡنَ هُمۡ
بِشَهٰدٰتِهِمۡ قَآٮِٕمُوۡنَ ۳۳ وَالَّذِيۡنَ هُمۡ عَلٰى صَلَاتِهِمۡ
يُحَافِظُوۡنَ ۳۴ اُولٰٓٮِٕكَ فِىۡ جَنّٰتٍ مُّكۡرَمُوۡنَ ۳۵ فَمَالِ الَّذِيۡنَ ع ۱ ۳۵ ۷
كَفَرُوۡا قِبَلَكَ مُهۡطِعِيۡنَ ۳۶ عَنِ الۡيَمِيۡنِ وَعَنِ الشِّمَالِ
عِزِيۡنَ ۳۷ اَيَطۡمَعُ كُلُّ امۡرِیءٍ مِّنۡهُمۡ اَنۡ يُّدۡخَلَ جَنَّةَ
نَعِيۡمٍ ۳۸ كَلَّا ؕ اِنَّا خَلَقۡنٰهُمۡ مِّمَّا يَعۡلَمُوۡنَ ۳۹ فَلَاۤ اُقۡسِمُ
بِرَبِّ الۡمَشٰرِقِ وَالۡمَغٰرِبِ اِنَّا لَقٰدِرُوۡنَ ۴۰ عَلٰٓى اَنۡ نُّبَدِّلَ
خَيۡرًا مِّنۡهُمۡ ۙ وَمَا نَحۡنُ بِمَسۡبُوۡقِيۡنَ ۴۱ فَذَرۡهُمۡ يَخُوۡضُوۡا
وَيَلۡعَبُوۡا حَتّٰى يُلٰقُوۡا يَوۡمَهُمُ الَّذِىۡ يُوۡعَدُوۡنَ ۴۲ يَوۡمَ يَخۡرُجُوۡنَ
مِنَ الۡاَجۡدَاثِ سِرَاعًا كَاَنَّهُمۡ اِلٰى نُصُبٍ يُّوۡفِضُوۡنَ ۴۳ خَاشِعَةً
اَبۡصَارُهُمۡ تَرۡهَقُهُمۡ ذِلَّةٌ ؕ ذٰلِكَ الۡيَوۡمُ الَّذِىۡ كَانُوۡا يُوۡعَدُوۡنَ ۴۴ ع ۲ ۹ ۸

## سُوۡرَةُ نُوۡحٍ مَّكِّيَّةٌ وَهِيَ ثَمَانٌ وَّعِشۡرُوۡنَ اٰيَةً وَّفِيۡهَا رُكُوۡعَانِ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

اِنَّاۤ اَرۡسَلۡنَا نُوۡحًا اِلٰى قَوۡمِهٖۤ اَنۡ اَنۡذِرۡ قَوۡمَكَ مِنۡ قَبۡلِ اَنۡ
يَّاۡتِيَهُمۡ عَذَابٌ اَلِيۡمٌ ۱ قَالَ يٰقَوۡمِ اِنِّىۡ لَكُمۡ نَذِيۡرٌ مُّبِيۡنٌ ۙ ۲

32. இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், தங்களின் அமானிதங்களையும், (தாங்கள் செய்த) வாக்குறுதியையும் பேணிக் கொள்கின்றவர்கள்.
33. இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், தங்களுடைய சாட்சியங்களை நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கின்றவர்கள்.
34. இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகையின் மீது (அதை முழுமையாக நிறைவேற்றுவதற்குரிய முறைகளைப் பேணிப்) பாதுகாத்துக் கொள்வார்கள்.
35. (மேற்கூறப்பட்ட தகுதிகளுடைய) அவர்கள் சுவனங்களில் மிக்க கண்ணியப் படுத்தப்படுபவர்கள்.
36. (நபியே!) நிராகரிப்போருக்கு என்ன நேர்ந்தது? (அவர்கள்) உம்மைச்சுற்றி ஓடி வருகின்றனர்!
37. வலப்புறமிருந்தும், இடப்புறமிருந்தும் கூட்டங் கூட்டமாக (ஓடி வருகின்றனர்).
38. அவர்களில் ஒவ்வொருமனிதனும் அருட்கொடையுடைய சுவனத்தில் பிரவேசிக்கப்படுவதை ஆசிக்கின்றானா?
39. அது ஒருபோதுமில்லை! நிச்சயமாக நாம், அவர்கள் அறிந்திருப்பதிலிருந்தே அவர்களைப் படைத்திருக்கின்றோம்.
40. கிழக்குத் திசைகள், இன்னும், மேற்குத் திசைகளின் இரட்சகன்மீது நான் சத்தியம் செய்கிறேன்; நிச்சயமாக நாம் (நம் இஷ்டப்படிச் செய்ய) ஆற்றலுடையோர். (அதாவது:)
41. அவர்களைவிட மிகச் சிறந்தவர்களை (அவர்களுக்குப் பகரமாக) மாற்றி விடுவதின் மீது (ஆற்றலுடையோராவோம்! இதில்) நாம் தோற்கடிக்கப்படுவோர் அல்லர்.
42. (ஆகவே, நபியே!) அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாளை அவர்கள் சந்திக்கும் வரை வீண் காரியங்களில் மூழ்கியும், விளையாடிக் கொண்டுமிருக்கவும் அவர்களை நீர் விட்டு விடுவிடுவீராக!
43. (இணைவைப்போர்) நடப்பட்டவைக(ளான சிலைக)ளின் பால் விரைந்து செல்பவர்களைப்போன்று மண்ணறைகளிலிருந்து விரைந்தவர்களாக அவர்கள் வெளியேறிவரும் நாள்.
44. அவர்களுடைய பார்வை கீழ் நோக்கியவையாக (இருக்கும் நிலையில்) இழிவு அவர்களைச் சூழ்ந்துகொள்ளும்; (நபியே!) அது, அவர்கள் வாக்களிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்களே அத்தகைய நாளாகும்.

---

அத்தியாயம் : 71

## நூஹ்

வசனங்கள் : 28 மக்கீ ருகூஃகள் : 2

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. நிச்சயமாக, நாம் நூஹை அவருடைய சமூகத்தவரின்பால், "துன்புறுத்தும் வேதனை அவர்களுக்கு வரும் முன், உம்முடைய சமூகத்தினருக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக!" என்று (தூதராக) நாம் அனுப்பிவைத்தோம்.
2. "என்னுடைய சமூகத்தினரே! நிச்சயமாக நான் உங்களுக்குப் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவன்" என்று (அவர்களிடம்) கூறினார்.

اَنِ اعْبُدُوا اللّٰهَ وَاتَّقُوْهُ وَاَطِيْعُوْنِ ﴿٣﴾ يَغْفِرْ لَكُمْ مِّنْ
ذُنُوْبِكُمْ وَيُؤَخِّرْكُمْ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى ؕ اِنَّ اَجَلَ اللّٰهِ
اِذَا جَآءَ لَا يُؤَخَّرُ ۘ لَوْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿٤﴾ قَالَ رَبِّ اِنِّىْ وقف لازم
دَعَوْتُ قَوْمِىْ لَيْلًا وَّنَهَارًا ﴿٥﴾ فَلَمْ يَزِدْهُمْ دُعَآءِىْٓ اِلَّا
فِرَارًا ﴿٦﴾ وَاِنِّىْ كُلَّمَا دَعَوْتُهُمْ لِتَغْفِرَ لَهُمْ جَعَلُوْٓا اَصَابِعَهُمْ
فِىْٓ اٰذَانِهِمْ وَاسْتَغْشَوْا ثِيَابَهُمْ وَاَصَرُّوْا وَاسْتَكْبَرُوا
اسْتِكْبَارًا ﴿٧﴾ ثُمَّ اِنِّىْ دَعَوْتُهُمْ جِهَارًا ﴿٨﴾ ثُمَّ اِنِّىْٓ اَعْلَنْتُ
لَهُمْ وَاَسْرَرْتُ لَهُمْ اِسْرَارًا ﴿٩﴾ فَقُلْتُ اسْتَغْفِرُوْا رَبَّكُمْ
اِنَّهٗ كَانَ غَفَّارًا ﴿١٠﴾ يُّرْسِلِ السَّمَآءَ عَلَيْكُمْ مِّدْرَارًا ﴿١١﴾
وَّيُمْدِدْكُمْ بِاَمْوَالٍ وَّبَنِيْنَ وَيَجْعَلْ لَّكُمْ جَنّٰتٍ
وَّيَجْعَلْ لَّكُمْ اَنْهٰرًا ﴿١٢﴾ مَا لَكُمْ لَا تَرْجُوْنَ لِلّٰهِ وَقَارًا ﴿١٣﴾
وَقَدْ خَلَقَكُمْ اَطْوَارًا ﴿١٤﴾ اَلَمْ تَرَوْا كَيْفَ خَلَقَ اللّٰهُ
سَبْعَ سَمٰوٰتٍ طِبَاقًا ﴿١٥﴾ وَّجَعَلَ الْقَمَرَ فِيْهِنَّ نُوْرًا
وَّجَعَلَ الشَّمْسَ سِرَاجًا ﴿١٦﴾ وَاللّٰهُ اَنْۢبَتَكُمْ مِّنَ
الْاَرْضِ نَبَاتًا ﴿١٧﴾ ثُمَّ يُعِيْدُكُمْ فِيْهَا وَيُخْرِجُكُمْ اِخْرَاجًا ﴿١٨﴾

3. "அல்லாஹ்வை(அவன் ஒருவனையே) நீங்கள் வணங்குங்கள்; இன்னும், அவனை நீங்கள் பயந்துகொள்ளுங்கள்; எனக்கும் நீங்கள் கீழ்ப்படிந்து நடங்கள்."

4. "(அவ்வாறு நீங்கள் நடந்தால்) உங்களுடைய குற்றங்களை உங்களுக்கு அவன் மன்னிப்பான்; இன்னும், குறிப்பிடப்பட்ட காலம் வரையில் உங்களை (அமைதியாக வாழவிட்டு)ப் பிற்படுத்திவைப்பான்; நிச்சயமாக அல்லாஹ்வுடைய தவணை_ அது வந்துவிடுமானால் அது பிற்படுத்தப்படமாட்டாது; (இதனை) நீங்கள் அறிந்துகொண்டவர்களாக இருந்தால்;" (என்றும் கூறினார்.)

5. (அவர் நீண்ட காலம் ஏகத்துவப் பிரச்சாரம் செய்தும் அவரைப் புறக்கணித்துவிடவே,) " என் இரட்சகனே! நிச்சயமாக நான் என்னுடைய சமூகத்தாரை (உன் வழியில்) இரவிலும், பகலிலும் அழைத்தேன்" என்று கூறினார்.

6. "அப்போது என்னுடைய அழைப்பு, அவர்களுக்கு வெருண்டோடுவதையே அன்றி,(வேறொன்றையும்) அதிகப்படுத்தவில்லை."

7. மேலும், நிச்சயமாக நான்_" அவர்களுக்கு நீ மன்னிப்பளிப்பதற்காக(உன்பால்) நான் அவர்களை அழைத்த பொழுதெல்லாம் (அதைக் கேட்காதிருக்க) தங்களுடைய காதுகளில் தங்களுடைய விரல்களை விட்டுக்கொண்டார்கள்; (என்னைப் பார்க்காதிருக்க) தங்கள் ஆடைகளைக் கொண்டு தங்(களின் முகங்க)ளை மூடிக்கொண்டுமிருந்தனர்; மேலும், (தங்கள் தவறின் மீதே பிடிவாதமாக) நிலைத்திருந்தனர்; பெரும் அகந்தையாகவும் அகந்தை கொண்டனர்.

8. "பின்னும் நிச்சயமாக நான் அவர்களைச் சப்தமாக அழைத்தேன்."

9. "பின்னும் நிச்சயமாக நான் அவர்களுக்கு(அழைப்பை) பகிரங்கப்படுத்தினேன்; அவர்களுக்கு(எனது பிரச்சாரத்தை) மறைமுகமாக மறைத்தும் செய்தேன்.

10. ஆகவே, (முந்திய உங்கள் பாவங்களுக்காக) "உங்கள் இரட்சகனிடம் மன்னிப்புத்தேடுங்கள்; நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனாக இருக்கிறான்" என்றும் கூறினேன்.

11. "(அவ்வாறு செய்வீர்களாயின், தடைப்பட்டிருக்கும்) மழையை உங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்புவான்."

12. "செல்வங்களையும், ஆண்மக்களையும் (கொடுப்பது) கொண்டு, உங்களுக்கு உதவிபுரிவான்; உங்களுக்காகத் தோட்டங்களையும் ஆக்குவான்; உங்களுக்காக ஆறுகளையும்(அவற்றில்) ஆக்குவான்."

13. " அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் அறிந்து(அவனைப் பயந்து) கொள்ளாமலிருக்க உங்களுக்கென்ன நேர்ந்தது?"

14. பல நிலைகளிலும் உங்களை அவன் நிச்சயமாகப் படைத்தான்.

15. " ஏழு வானங்களை, அடுக்கடுக்காக அல்லாஹ் எவ்வாறு படைத்திருக்கிறான் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா?"

16. "இன்னும், அவற்றில் சந்திரனைப் பிரகாசமாகவும், சூரியனை ஒளி விளக்காகவும் அவனே ஆக்கியிருக்கிறான்."

17. மேலும், " அல்லாஹ் உங்களை(ப்புற் பூண்டுகளைப் போல்) பூமியி(ன் மண்ணி)லிருந்து உற்பத்தி செய்வதாக உற்பத்தி செய்தான்."

18. " பின்னர் அதில் உங்களை (மரணிக்கச்செய்து,) அவன் மீளவைப்பான்; மேலும், (அதிலிருந்தே) உங்களை வெளிப்படுத்துவதாக அவன் வெளிப் படுத்துவான்."

وَاللّٰهُ جَعَلَ لَكُمُ الْاَرْضَ بِسَاطًا ﴿١٩﴾ لِّتَسْلُكُوْا مِنْهَا سُبُلًا
فِجَاجًا ﴿٢٠﴾ قَالَ نُوْحٌ رَّبِّ اِنَّهُمْ عَصَوْنِيْ وَاتَّبَعُوْا مَنْ لَّمْ ع ١ ٩
يَزِدْهُ مَالُهٗ وَوَلَدُهٗٓ اِلَّا خَسَارًا ﴿٢١﴾ وَمَكَرُوْا مَكْرًا كُبَّارًا ﴿٢٢﴾ وَ
قَالُوْا لَا تَذَرُنَّ اٰلِهَتَكُمْ وَلَا تَذَرُنَّ وَدًّا وَّلَا سُوَاعًا ۙ وَّ
لَا يَغُوْثَ وَيَعُوْقَ وَنَسْرًا ﴿٢٣﴾ وَقَدْ اَضَلُّوْا كَثِيْرًا ۚ وَلَا
تَزِدِ الظّٰلِمِيْنَ اِلَّا ضَلٰلًا ﴿٢٤﴾ مِمَّا خَطِيْٓـٰٔتِهِمْ اُغْرِقُوْا فَاُدْخِلُوْا
نَارًا ۙ فَلَمْ يَجِدُوْا لَهُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ اَنْصَارًا ﴿٢٥﴾ وَ
قَالَ نُوْحٌ رَّبِّ لَا تَذَرْ عَلَى الْاَرْضِ مِنَ الْكٰفِرِيْنَ دَيَّارًا ﴿٢٦﴾
اِنَّكَ اِنْ تَذَرْهُمْ يُضِلُّوْا عِبَادَكَ وَلَا يَلِدُوْٓا اِلَّا فَاجِرًا
كَفَّارًا ﴿٢٧﴾ رَبِّ اغْفِرْ لِيْ وَلِوَالِدَيَّ وَلِمَنْ دَخَلَ بَيْتِيَ
مُؤْمِنًا وَّلِلْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ ؕ وَلَا تَزِدِ الظّٰلِمِيْنَ
اِلَّا تَبَارًا ﴿٢٨﴾ ع النصف ٢ ٨ ١٠

## سُوْرَةُ الْجِنِّ مَكِّيَّةٌ وَّهِيَ ثَمَانٌ وَّعِشْرُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قُلْ اُوْحِيَ اِلَيَّ اَنَّهُ اسْتَمَعَ نَفَرٌ مِّنَ الْجِنِّ فَقَالُوْٓا اِنَّا سَمِعْنَا قُرْاٰنًا عَجَبًا ۙ ﴿١﴾

19. "அன்றியும் அல்லாஹ் உங்களுக்குப் பூமியை விரிப்பாக ஆக்கினான்."

20. "அதில் உள்ளவிரிவான பாதைகளில் நீங்கள் செல்லும் பொருட்டு" (என்றெல்லாம் தன் சமூகத்தாரிடம் கூறினார்.)

21.(பின்னும்) நூஹ் கூறினார்:" என் இரட்சகனே! நிச்சயமாக அவர்கள் என(து கட்டளை)க்கு மாறு செய்து விட்டனர்; அன்றியும், எவருக்கு அவருடைய செல்வமும், அவருடைய மக்களும் நஷ்டத்தைத்தவிர வேறு எதையும் அதிகப் படுத்தவில்லையோ, அவரையே அவர்கள் பின்பற்றினர்."

22. "மேலும், மிகப்பெரிய சூழ்ச்சியாக அவர்கள் சூழ்ச்சி செய்தனர்."

23. "மேலும், அவர்கள் (தம் சமூகத்தாரிடம்) உங்களுடைய (வணக்கத்திற்குரிய) தெய்வங்களை நிச்சயமாக நீங்கள் விட்டுவிடாதீர்கள்; வத்து, ஸுவாஉ, எகூஸ், யஊக், நஸ்ர் (ஆகிய விக்கிரகங்)களையும் நிச்சயமாக நீங்கள் விட்டுவிடாதீர்கள்" என்றும் கூறினார்கள்.

24. "நிச்சயமாக அவர்கள் அநேகரை வழி கெடுத்தும் விட்டனர்; (ஆகவே, என் இரட்சகனே!) அநியாயக்காரர்களுக்கு வழிக்கேட்டைத்தவிர வேறு எதையும் நீ அதிகப்படுத்தி விடாதே!" (என்றும் பிரார்த்தித்தார்.)

25. ஆகவே அவர்களுடைய பாவங்களின் காரணமாக (பெரு வெள்ளத்தில்) அவர்கள் மூழ்கடிக்கப்பட்டு, (பின்னர்) நரகத்திலும் புகுத்தப்பட்டனர்; அல்லாஹ்வைத்தவிர அவர்களுக்கு உதவி செய்வோரை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை.

26. இன்னும், நூஹ் கூறினார்:"என் இரட்சகனே! நிராகரிப்போரிலிருந்து பூமியில் வசிக்க ஒருவரையும் நீ விட்டு வைக்காதே!"

27. "நிச்சயமாக நீ அவர்களை விட்டுவைத்தால், உன்னுடைய(மற்ற) அடியார்களை அவர்கள் வழி கெடுத்துவிடுவார்கள்; நிராகரிக்கின்ற பாவியைத்தவிர (வேறு நல்லவர் எவரையும்) அவர்கள் பெற்றெடுக்கவு மாட்டார்கள்" (என்றும்),

28. "என் இரட்சகனே! எனக்கும், என்னுடைய பெற்றோருக்கும், விசுவாசம் கொண்டவராக என்னுடைய வீட்டில் நுழைந்தவருக்கும், விசுவாசங்கொண்ட ஆண்களுக்கும், விசுவாசங்கொண்ட பெண்களுக்கும் நீ மன்னிப்பளிப்பாயாக! இந்த அநியாயக்காரர்களுக்கு அழிவையே தவிர (வேறு எதையும்) நீ அதிகப் படுத்தாதிருப்பாயாக!" (என்றும் பிரார்த்தித்தார்).

---

அத்தியாயம் : 72

## அல் ஜின் — ஜின்கள்

வசனங்கள் : 28 மக்கீ ருகூஃகள் : 2

---

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே!) நீர் கூறுவீராக: "நிச்சயமாக ஜின்களில் சில நபர்கள், (இவ்வேதத்தைச்) செவியுற்றனர்; பிறகு (தங்கள் இனத்தாரிடம் சென்று,) "நிச்சயமாக நாங்கள் மிக்க ஆச்சரியமான குர்ஆனை செவியுற்றோம் என்று கூறினார்கள்" என வஹீ மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது".

يَّهْدِيْٓ اِلَى الرُّشْدِ فَاٰمَنَّا بِهٖ ؕ وَلَنْ نُّشْرِكَ بِرَبِّنَآ اَحَدًا ۙ ۲
وَّاَنَّهٗ تَعٰلٰى جَدُّ رَبِّنَا مَا اتَّخَذَ صَاحِبَةً وَّلَا وَلَدًا ۙ ۳ وَّ
اَنَّهٗ كَانَ يَقُوْلُ سَفِيْهُنَا عَلَى اللّٰهِ شَطَطًا ۙ ۴ وَّاَنَّا ظَنَنَّآ
اَنْ لَّنْ تَقُوْلَ الْاِنْسُ وَالْجِنُّ عَلَى اللّٰهِ كَذِبًا ۙ ۵ وَّاَنَّهٗ كَانَ
رِجَالٌ مِّنَ الْاِنْسِ يَعُوْذُوْنَ بِرِجَالٍ مِّنَ الْجِنِّ فَزَادُوْهُمْ
رَهَقًا ۙ ۶ وَّاَنَّهُمْ ظَنُّوْا كَمَا ظَنَنْتُمْ اَنْ لَّنْ يَّبْعَثَ اللّٰهُ اَحَدًا ۙ ۷
وَّاَنَّا لَمَسْنَا السَّمَآءَ فَوَجَدْنٰهَا مُلِئَتْ حَرَسًا شَدِيْدًا
وَّشُهُبًا ۙ ۸ وَّاَنَّا كُنَّا نَقْعُدُ مِنْهَا مَقَاعِدَ لِلسَّمْعِ ؕ فَمَنْ
يَّسْتَمِعِ الْاٰنَ يَجِدْ لَهٗ شِهَابًا رَّصَدًا ۙ ۹ وَّاَنَّا لَا نَدْرِيْٓ
اَشَرٌّ اُرِيْدَ بِمَنْ فِي الْاَرْضِ اَمْ اَرَادَ بِهِمْ رَبُّهُمْ
رَشَدًا ۙ ۱۰ وَّاَنَّا مِنَّا الصّٰلِحُوْنَ وَمِنَّا دُوْنَ ذٰلِكَ ؕ كُنَّا
طَرَآئِقَ قِدَدًا ۙ ۱۱ وَّاَنَّا ظَنَنَّآ اَنْ لَّنْ نُّعْجِزَ اللّٰهَ فِي الْاَرْضِ
وَلَنْ نُّعْجِزَهٗ هَرَبًا ۙ ۱۲ وَّاَنَّا لَمَّا سَمِعْنَا الْهُدٰٓى اٰمَنَّا بِهٖ ؕ
فَمَنْ يُّؤْمِنْ بِرَبِّهٖ فَلَا يَخَافُ بَخْسًا وَّلَا رَهَقًا ۙ ۱۳ وَّاَنَّا مِنَّا
الْمُسْلِمُوْنَ وَمِنَّا الْقٰسِطُوْنَ ؕ فَمَنْ اَسْلَمَ فَاُولٰٓئِكَ تَحَرَّوْا رَشَدًا ۱۴

2. "அ(ந்தக் குர்ஆனாகிற)து நேர் வழியின்பால் வழிகாட்டுகிறது; ஆகவே, அதனை நாங்கள் விசுவாசித்தோம்; (இனி) நாங்கள் எங்களுடைய இரட்சகனுக்கு ஒருவரையும் இணையாக்கவே மாட்டோம்"—

3. இன்னும், "நிச்சயமாகக் காரியம்: எங்கள் இரட்சகனுடைய மகத்துவம் உயர்ந்துவிட்டது; அவன் மனைவியையோ, புதல்வரையோ எடுத்துக் கொள்ள வில்லை" (என்றும் கூறினார்கள்).

4. "மேலும், நிச்சயமாகக் காரியம்: நம்மிலுள்ள மடையன் அல்லாஹ்வின் மீது (அவனுக்கு மனைவி, மக்கள் உண்டென்றுகூறி நிராகரிப்பில் அளவுகடந்து) பொய்யைக் கூறுபவனாக இருந்தான்."

5. இன்னும், " மனிதர்களும், ஜின்களும் நிச்சயமாக அல்லாஹ்வின் மீது பொய் கூறவேமாட்டார்களென்று நிச்சயமாக (இதுவரை) நாங்கள் எண்ணிக் கொண்டிருந்தோம்."

6. "இன்னும், நிச்சயமாக மனிதர்களிலுள்ள ஆண்கள் பலர், ஜின்களிலுள்ள ஆண்கள் பலரிடம் (தங்களைக்) காக்கத் தேடிக்கொண்டிருந்தனர்; இதனால் அவர்கள் அவர்களுக்கு கர்வத்தை அதிகமாக்கிவிட்டார்கள்.

7. "மேலும், (இறந்த பின்னர்,) அல்லாஹ் ஒருவரையும் (உயிர் கொடுத்து) எழுப்பவேமாட்டான் என்று நீங்கள் எண்ணிக்கொண்டிருந்ததுபோன்றே அவர்களும் நிச்சயமாக எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

8. இன்னும், "நிச்சயமாக நாங்கள் வானத்தைத் தொட்டுப் பார்த்தோம். அப்போது வலிமைமிக்க பாதுகாவலர்களாலும், தீப்பந்தங்களாலும் நிரப்பப்பட்டதாக அதை நாங்கள் கண்டோம்."

9. "(முன்னர்) அங்கு (பேசப்படுபவற்றைச்) செவியேற்பதற்காக, பல இடங்களில் நாங்கள் அமர்பவர்களாகவும் இருந்தோம்; எனவே, இப்பொழுது (அவைகளை) எவர் செவியேற்கிறாரோ அவர், குறிவைத்துக்காத்திருக்கும் நெருப்பு-ப்பந்தத்தை தமக்காக அவர் காண்பார்."

10. "மேலும், பூமியில் இருப்பவர்களுக்கு(இதைக்கொண்டு) தீங்கு நாடப் பட்டிருக்கிறதா? அல்லது அவர்களின் இரட்சகன் அவர்களுக்கு நன்மையை நாடியிருக்கின்றானா என்பதை நிச்சயமாக நாங்கள் அறியமாட்டோம்."

11. " நிச்சயமாக நாம்— நம்மில் நல்லோரும் இருக்கின்றனர். அதல்லாதோரும் நம்மில் (சிலர்) இருக்கின்றனர்; நாம் பல்வேறு வழிகளையுடையோராகவும் இருந்தோம்.

12. "இன்னும், நிச்சயமாக பூமியில் அல்லாஹ்வை நாம் இயலாமையிலாக்கவே முடியாதென்பதையும், (பூமியிலிருந்து) அவனைவிட்டும் ஓடியவர்களாக அவனை இயலாமையிலாக்கவே முடியாதென்பதையும் உறுதியாக அறிந்து கொண்டோம்.

13. "இன்னும், நிச்சயமாக நாங்கள்(இந்தக்குர்ஆனாகிய) நேர் வழியைச் செவியுற்ற போது, அதனை விசுவாசங்கொண்டோம். ஆகவே, எவர் தன் இரட்சகனை விசுவாசிக்கின்றாரோ அவர், (தன் நன்மையில்) குறைவையும் அநீதத்தையும் பயப்படமாட்டார்.

14. "(முற்றிலும் அவனுக்குக்கீழ்ப்படிந்த) முஸ்லிம்களும் நிச்சயமாக நம்மில் இருக்கின்றனர்; (உண்மையை விட்டுத்திரும்பிய) அநியாயக்காரர்களும் நம்மில் இருக்கின்றனர்; எவர்கள் (முற்றிலும் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களாகி விடுகின்றார்களோ, அவர்கள் தாம் நேர் வழியைத் தேடிக்கொண்டார்கள்.

وَّاَمَّا الْقٰسِطُوْنَ فَكَانُوْا لِجَهَنَّمَ حَطَبًا ﴿۱۵﴾ وَّاَنْ لَّوِ اسْتَقَامُوْا
عَلَى الطَّرِيْقَةِ لَاَسْقَيْنٰهُمْ مَّآءً غَدَقًا ﴿۱۶﴾ لِّنَفْتِنَهُمْ فِيْهِ ؕ
وَمَنْ يُّعْرِضْ عَنْ ذِكْرِ رَبِّهٖ يَسْلُكْهُ عَذَابًا صَعَدًا ﴿۱۷﴾
وَّاَنَّ الْمَسٰجِدَ لِلّٰهِ فَلَا تَدْعُوْا مَعَ اللّٰهِ اَحَدًا ﴿۱۸﴾ وَّاَنَّهٗ
لَمَّا قَامَ عَبْدُ اللّٰهِ يَدْعُوْهُ كَادُوْا يَكُوْنُوْنَ عَلَيْهِ لِبَدًا ﴿۱۹﴾ ع ۱۹/۱۱
قُلْ اِنَّمَاۤ اَدْعُوْا رَبِّيْ وَلَاۤ اُشْرِكُ بِهٖۤ اَحَدًا ﴿۲۰﴾ قُلْ اِنِّيْ لَاۤ
اَمْلِكُ لَكُمْ ضَرًّا وَّلَا رَشَدًا ﴿۲۱﴾ قُلْ اِنِّيْ لَنْ يُّجِيْرَنِيْ مِنَ
اللّٰهِ اَحَدٌ ۙ وَّلَنْ اَجِدَ مِنْ دُوْنِهٖ مُلْتَحَدًا ﴿۲۲﴾ اِلَّا بَلٰغًا
مِّنَ اللّٰهِ وَرِسٰلٰتِهٖ ؕ وَمَنْ يَّعْصِ اللّٰهَ وَرَسُوْلَهٗ فَاِنَّ
لَهٗ نَارَ جَهَنَّمَ خٰلِدِيْنَ فِيْهَاۤ اَبَدًا ﴿۲۳﴾ حَتّٰۤى اِذَا رَاَوْا مَا
يُوْعَدُوْنَ فَسَيَعْلَمُوْنَ مَنْ اَضْعَفُ نَاصِرًا وَّاَقَلُّ عَدَدًا ﴿۲۴﴾
قُلْ اِنْ اَدْرِيْۤ اَقَرِيْبٌ مَّا تُوْعَدُوْنَ اَمْ يَجْعَلُ
لَهٗ رَبِّيْۤ اَمَدًا ﴿۲۵﴾ عٰلِمُ الْغَيْبِ فَلَا يُظْهِرُ عَلٰى غَيْبِهٖۤ
اَحَدًا ﴿۲۶﴾ اِلَّا مَنِ ارْتَضٰى مِنْ رَّسُوْلٍ فَاِنَّهٗ
يَسْلُكُ مِنْۢ بَيْنِ يَدَيْهِ وَمِنْ خَلْفِهٖ رَصَدًا ﴿۲۷﴾

15. "அநியாயக்காரர்களோ நரகத்திற்கு (எரிக்கப்படும்) விறகுகளாகிவிட்டனர்" (என்றும் அந்த ஜின்கள் கூறின).

16. (நபியே! மனித, ஜின் இனத்தவர்களாகிய) அவர்கள் (இஸ்லாமிய மார்க்க) வழியின்மீது உறுதியாகவும் (நிலைத்து)இருந்தால்,(தடையின்றியே) அவர்களுக்கு அதிகமான தண்ணீரை நாம் புகட்டியிருப்போம் (என எனக்கு அறிவிக்கப் பட்டுள்ளது என்று கூறுவீராக!).

17. (எவ்வாறு நன்றி செய்கிறார்கள் என) அதில் அவர்களை நாம் சோதிப்ப தற்காக; மேலும், எவர் தன் இரட்சகனின் நினைப்பைவிட்டும் புறக்கணிக் கின்றாரோ, அவரைக் கடினமான வேதனையில் அவன் புகுத்திவிடுவான்.

18. மேலும், நிச்சயமாக மஸ்ஜிதுகள் அல்லாஹ்வி(ன் வணக்கத்தி)ற்கே உரியன; ஆகவே, (அவைகளில்) அல்லாஹ்வுடன் மற்றெவரையும் நீங்கள் (பிரார்த்தித்து) அழைக்கவேண்டாம்.

19. மேலும், நிச்சயமாகக் காரியம்: அல்லாஹ்வுடைய அடியா(ராகிய தூத)ர், அவனை அழைப்பவராக (தொழுபவராக) நிற்கும்பொழுது, (இதைக் காணும் ஜனங்கள் ஆச்சரியப்பட்டு) கூட்டங் கூட்டமாக (வந்து) அவரை நெருங்கிவிடுகின்றனர்.

20. "நான் பிரார்த்தனை செய்து அழைப்பதெல்லாம் என் இரட்சகனையே! அவனுக்கு ஒருவரையும் நான் இணையாக்கமாட்டேன்" என்று(நபியே!)நீர் கூறுவீராக!

21. " நிச்சயமாக நான் உங்களுக்குத் தீங்கையோ, நன்மையையோ (செய்ய) சக்திபெற மாட்டேன்" என்று(நபியே!) நீர் கூறுவீராக!

22. "நிச்சயமாக நான் _ என்னைஅல்லாஹ்விடமிருந்து ஒருவரும் காப்பாற்றவே மாட்டார்; அவனையன்றி ஒதுங்குமிடத்தையும் நான் பெற்றுக்கொள்ளவே மாட்டேன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

23. "(ஆயினும்,) அல்லாஹ்விடமிருந்து (எனக்குக் கிடைத்ததை) எத்தி வைப்பதையும், அவனின் தூதுச்செய்திகளை (அறிவிப்பதை)யும் தவிர (வேறெதற்கும் நான் சக்தி பெறமாட்டேன்). எவர் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் மாறு செய்கின்றாரோ, நிச்சயமாக அவருக்கு(க்கூலி) நரக நெருப்புதான். அவர்கள் அதில் என்றென்றும் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்" (என்று நபியே! நீர் கூறுவீராக!)

24. முடிவாக அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட (வேதனையான)தை அவர்கள் காணும் சமயத்தில், உதவி பெறுவதால் மிகப் பலவீனமானவரும், எண்ணிக்கையால் மிக்க குறைந்தவரும் யார் என்பதை (உறுதியாக) அறிந்து கொள்வார்கள்.

25. "நீங்கள் வாக்களிக்கப்படுகின்ற(அவ்வேதனையான)து மிகச் சமீபத்திலிருக் கின்றதா? அல்லது என் இரட்சகன், அதற்குத் தவணையை ஆக்குவானா? என்பதை நான் அறியமாட்டேன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

26. "(என் இரட்சகனாகிய அவன்) மறைவானவற்றை அறிகிறவன்; எனவே, தான் மறைத்திருப்பவற்றை ஒருவருக்கும் அவன் வெளிப்படுத்தமாட்டான்_

27. "தூதரில், தான் (தேர்வு செய்து) பொருந்திக்கொண்டவருக்கே தவிர_ ஆகவே, நிச்சயமாக அவன் (தூதராகிய) அவருக்கு முன்னும், அவருக்குப் பின்னும் பாதுகாப்பவரை (மலக்குகளிலிருந்து) ஆக்குகிறான்.

لِّيَعْلَمَ اَنْ قَدْ اَبْلَغُوْا رِسٰلٰتِ رَبِّهِمْ وَ اَحَاطَ بِمَا لَدَيْهِمْ

وَ اَحْصٰى كُلَّ شَیْءٍ عَدَدًا ﴿٢٨﴾ ع ٢ ٩ ١٢

سُوْرَةُ الْمُزَّمِّلِ مَكِّيَّةٌ وَّ هِيَ عِشْرُوْنَ اٰيَةً وَّ فِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يٰۤاَيُّهَا الْمُزَّمِّلُ ﴿١﴾ قُمِ الَّيْلَ اِلَّا قَلِيْلًا ﴿٢﴾ نِّصْفَهٗۤ اَوِ انْقُصْ

مِنْهُ قَلِيْلًا ﴿٣﴾ اَوْ زِدْ عَلَيْهِ وَ رَتِّلِ الْقُرْاٰنَ تَرْتِيْلًا ﴿٤﴾ اِنَّا

سَنُلْقِیْ عَلَيْكَ قَوْلًا ثَقِيْلًا ﴿٥﴾ اِنَّ نَاشِئَةَ الَّيْلِ هِیَ

اَشَدُّ وَطْاً وَّ اَقْوَمُ قِيْلًا ﴿٦﴾ اِنَّ لَكَ فِی النَّهَارِ سَبْحًا

طَوِيْلًا ﴿٧﴾ وَ اذْكُرِ اسْمَ رَبِّكَ وَ تَبَتَّلْ اِلَيْهِ تَبْتِيْلًا ﴿٨﴾

رَبُّ الْمَشْرِقِ وَ الْمَغْرِبِ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ فَاتَّخِذْهُ وَكِيْلًا ﴿٩﴾

وَ اصْبِرْ عَلٰى مَا يَقُوْلُوْنَ وَ اهْجُرْهُمْ هَجْرًا جَمِيْلًا ﴿١٠﴾ وَ

ذَرْنِیْ وَ الْمُكَذِّبِيْنَ اُولِی النَّعْمَةِ وَ مَهِّلْهُمْ قَلِيْلًا ﴿١١﴾ اِنَّ

لَدَيْنَاۤ اَنْكَالًا وَّ جَحِيْمًا ﴿١٢﴾ وَّ طَعَامًا ذَا غُصَّةٍ وَّ عَذَابًا اَلِيْمًا ﴿١٣﴾ يَوْمَ

تَرْجُفُ الْاَرْضُ وَ الْجِبَالُ وَ كَانَتِ الْجِبَالُ كَثِيْبًا مَّهِيْلًا ﴿١٤﴾ اِنَّاۤ اَرْسَلْنَاۤ

اِلَيْكُمْ رَسُوْلًا ۙ۬ شَاهِدًا عَلَيْكُمْ كَمَاۤ اَرْسَلْنَاۤ اِلٰى فِرْعَوْنَ رَسُوْلًا ﴿١٥﴾

28. (அத்தூதர்கள்) தங்கள் இரட்சகனின் தூதுச் செய்திகளை, திட்டமாகவே எடுத்துரைத்தார்கள் என்பதை, தான் அறிந்துகொள்வதற்காக. அவர்களிடமுள்ளவற்றை அவன் (தன் அறிவால்) சூழ்ந்தறிந்து கொண்டவனாக இருக்க, ஒவ்வொரு பொருளையும் எண்ணிக்கையால் பூரணமாகக் கணக்கிட்டும் வைத்துள்ளான்."

---

அத்தியாயம் : 73

## அல் முஜ்ஜம்மில் _ போர்வை போர்த்தியவர்

வசனங்கள் : 20 மக்கீ ருகூஉகள் : 2

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**

**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. போர்வை போர்த்திக்கொண்டிருப்பவரே!
2. இரவில் (தொழுவதற்காக) எழுவீராக! சொற்ப (நேர)ம் தவிர_
3. அதில் பாதி, (நேரத்தில் தொழுவீராக!) அல்லது அதிலிருந்து சொற்ப (நேர)த்தைக் குறைத்துக் கொள்வீராக!
4. அல்லது அதை விட(ச்சற்று நேரத்தை) அதிகப்படுத்திக்கொள்வீராக! (இரவுத்தொழுகையான) அதில் குர்ஆனை (நன்கு திருத்தமாக) நிறுத்தி, நிறுத்தியும் ஓதுவீராக!
5. நிச்சயமாக நாம் அடுத்து பளுவான வாக்கை உம்மீது போடுவோம் (வஹீயின் மூலம் அறிவிப்போம்).
6. நிச்சயமாக இரவில் (வணக்கத்தை நிறைவேற்ற) எழுவதானது_அதுவே (மனமும், நாவும்) ஒன்றிணைந்திருக்க மிக்க உறுதியானதும், மேலும் கூற்றால் மிக்க உறுதியானதுமாகும்.
7. நிச்சயமாக உமக்குப் பகலில் நீண்ட வேலை இருக்கின்றது.
8. மேலும், உமதிரட்சகனின் பெயரை நினைவு கூர்வீராக! (அவனுக்கே வணக்கத்தையும், பிரார்த்தனையையும் ஆக்கி) அவன்பால் முற்றிலும் ஆகிவிடுவீராக.
9. (அவனே) கிழக்கிற்கும், மேற்கிற்கும் இரட்சகன்; அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை. ஆகவே, அவனையே நீர் (உமது) பொறுப்பாளனாக எடுத்துக்கொள்வீராக.
10. அன்றியும், (நபியே!) அவர்கள் (உமக்கெதிராகச்) சொல்வதின்மீது நீர் பொறுமையுடன் இருப்பீராக! இன்னும், அழகான வெறுப்பாக அவர்களை (அல்லாஹ்வுக்காக) நீர் வெறுத்துவிடுவீராக!
11. என்னையும், சுகத்தையுடையவர்களான பொய்ப்பிக்கக்கூடியவர்களையும் நீர் விட்டுவிடுவீராக! (நான் ஏற்படுத்திய தவணையை அவர்கள் அடையும் வரை) அவர்களுக்குச் சிறிது அவகாசமும் கொடுப்பீராக!
12. நிச்சயமாக நம்மிடத்தில் (அவர்களுக்காக) விலங்குகளும், நரகமும் இருக்கின்றன.
13. இன்னும், (அவர்களுக்குத் தொண்டையில்) விக்கிக்கொள்ளக்கூடிய உணவும், துன்புறுத்தும் வேதனையும் (இருக்கின்றன).
14. பூமியும், மலைகளும் ஆட்டம்கண்டு (அதிலிருப்போரை உலுக்கி), இன்னும், மலைகள் சிதறுண்ட மண் குவியல்களாகிவிடும் நாளில்_(அவர்களுக்கு நடந்தேறும் வேதனை உண்டு)
15. ஃபிர்அவ்னின்பால் நாம் ஒருதூதரை அனுப்பிவைத்தது போன்று, உங்கள் மீது சாட்சியாளராக ஒரு தூதரை உங்களிடம் நிச்சயமாக நாம் அனுப்பி வைத்தோம்.

فَعَصٰى فِرْعَوْنُ الرَّسُوْلَ فَاَخَذْنٰهُ اَخْذًا وَّبِيْلًا ﴿١٦﴾
فَكَيْفَ تَتَّقُوْنَ اِنْ كَفَرْتُمْ يَوْمًا يَّجْعَلُ الْوِلْدَانَ
شِيْبًا ۖ ﴿١٧﴾ اِۨلسَّمَآءُ مُنْفَطِرٌۢ بِهٖ ؕ كَانَ وَعْدُهٗ مَفْعُوْلًا ﴿١٨﴾ اِنَّ
هٰذِهٖ تَذْكِرَةٌ ۚ فَمَنْ شَآءَ اتَّخَذَ اِلٰى رَبِّهٖ سَبِيْلًا ﴿١٩﴾ ع ١ ١٩ ١٣
اِنَّ رَبَّكَ يَعْلَمُ اَنَّكَ تَقُوْمُ اَدْنٰى مِنْ ثُلُثَيِ الَّيْلِ وَ
نِصْفَهٗ وَثُلُثَهٗ وَطَآئِفَةٌ مِّنَ الَّذِيْنَ مَعَكَ ؕ وَاللّٰهُ
يُقَدِّرُ الَّيْلَ وَالنَّهَارَ ؕ عَلِمَ اَنْ لَّنْ تُحْصُوْهُ فَتَابَ
عَلَيْكُمْ فَاقْرَءُوْا مَا تَيَسَّرَ مِنَ الْقُرْاٰنِ ؕ عَلِمَ اَنْ
سَيَكُوْنُ مِنْكُمْ مَّرْضٰى ۙ وَاٰخَرُوْنَ يَضْرِبُوْنَ فِى الْاَرْضِ
يَبْتَغُوْنَ مِنْ فَضْلِ اللّٰهِ ۙ وَاٰخَرُوْنَ يُقَاتِلُوْنَ فِىْ
سَبِيْلِ اللّٰهِ ۖ فَاقْرَءُوْا مَا تَيَسَّرَ مِنْهُ ۙ وَاَقِيْمُوا الصَّلٰوةَ
وَاٰتُوا الزَّكٰوةَ وَاَقْرِضُوا اللّٰهَ قَرْضًا حَسَنًا ؕ وَمَا تُقَدِّمُوْا
لِاَنْفُسِكُمْ مِّنْ خَيْرٍ تَجِدُوْهُ عِنْدَ اللّٰهِ هُوَ خَيْرًا
وَّاَعْظَمَ اَجْرًا ؕ وَاسْتَغْفِرُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ
رَّحِيْمٌ ﴿٢٠﴾ ع ٢ ١٤

16. பின்னர், ஃபிர்அவ்ன் அத்தூதருக்கு மாறு செய்தான்; ஆகவே, கடினமான பிடியாக அவனை நாம் பிடித்துக்கொண்டோம்.

17. நீங்கள் நிராகரித்துவிட்டீர்களானால், குழந்தைகளை நரைத்த(கிழ)வர்களாக ஆக்கிவிடும் நாளில், (நம்முடைய பிடியிலிருந்துத் தப்பித்து உங்களை) நீங்கள் எவ்வாறு காத்துக்கொள்வீர்கள்?

18. அ(ந்நாளில் நிகழும் பெரும் அமளியான)தன் காரணமாக வானம்வெடித்துப் போய்விடும்; அவனுடைய வாக்கு(சந்தேகமின்றி) செயல்படுத்தப்பட்டதாகிவிடும்.

19. நிச்சயமாக இது, ஒரு உபதேசமாகும்; ஆகவே, எவர் நாடுகிறாரோ அவர் தன் இரட்சகனின் பால்(செல்லக்கூடிய) வழியை எடுத்துக்கொள்வார்.

20. (நபியே!) நிச்சயமாக நீரும், உம்மோடு இருப்போரில் ஒரு கூட்டத்தினரும், இரவில் மூன்றில் இரு பாகங்களைவிட மிகக் குறைவாக, இன்னும் அதில் பாதியில், இன்னும் அதில் மூன்றில் ஒருபாக(நேர)த்தில் (இரவுத் தொழுகைக்காக) நிற்கிறீர்கள் என்பதை நிச்சயமாக உமதிரட்சகன் அறிவான்; இன்னும் இரவையும், பகலையும் அல்லாஹ்தான் நிர்ணயம் செய்து (அதன்நேரங்களை அளவாக அமைத்து)ள்ளான்; நீங்கள் அதனை சரிவரக் கணக்கிடவே முடியாதென்பதை அவன் அறிந்துள்ளான்; ஆகவே, உங்களை அவன் மன்னித்துவிட்டான்; எனவே, குர்ஆனிலிருந்து(உங்களுக்கு) இயன்றதை ஓதுங்கள்; (ஏனெனில்,) உங்களில் (இரவு வணக்கத்தை விட்டும் அனுமதி பெறும்) நோயாளிகளும், அல்லாஹ்வின் பேரருளைத்தேடியவர்களாக பூமியில் பிரயாணம் செய்யும் வேறு சிலரும், அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யும்வேறு சிலரும் இருப்பார்கள் என்பதை அவன் அறிந்துள்ளான்; ஆகவே, அதிலிருந்து இயன்றதை ஓதுங்கள்; மேலும், தொழுகையை முறையாக நிறைவேற்றுங்கள்; ஜகாத்தையும் கொடுங்கள்; அல்லாஹ்விற்கு அழகான கடனாக கடனும்கொடுங்கள்; மேலும், நன்மையிலிருந்து உங்களுக்காக எதை நீங்கள் முற்படுத்துகிறீர்களோ, அது அல்லாஹ்விடத்தில் மிகச்சிறந்ததாகவும், (நற்) கூலியில் மிக மகத்தானதாகவும் அதனை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்; அல்லாஹ்விடம் மன்னிப்பும் தேடுங்கள்; நிச்சயமாக, அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக்கிருபையுடையவன்.

سُوْرَةُ الْمُدَّثِّرِ مَكِّيَّةٌ وَهِيَ سِتٌّ وَّخَمْسُوْنَ اٰيَةً وَفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يٰۤاَيُّهَا الْمُدَّثِّرُ ۙ﴿١﴾ قُمْ فَاَنْذِرْ ۙ﴿٢﴾ وَرَبَّكَ فَكَبِّرْ ۙ﴿٣﴾ وَثِيَابَكَ
فَطَهِّرْ ۙ﴿۴﴾ وَالرُّجْزَ فَاهْجُرْ ۙ﴿۵﴾ وَلَا تَمْنُنْ تَسْتَكْثِرُ ۙ﴿٦﴾ وَ
لِرَبِّكَ فَاصْبِرْ ؕ﴿٧﴾ فَاِذَا نُقِرَ فِى النَّاقُوْرِ ۙ﴿٨﴾ فَذٰلِكَ يَوْمَئِذٍ
يَّوْمٌ عَسِيْرٌ ۙ﴿٩﴾ عَلَى الْكٰفِرِيْنَ غَيْرُ يَسِيْرٍ ﴿١٠﴾ ذَرْنِىْ وَمَنْ
خَلَقْتُ وَحِيْدًا ۙ﴿١١﴾ وَّجَعَلْتُ لَهٗ مَالًا مَّمْدُوْدًا ۙ﴿١٢﴾ وَّبَنِيْنَ
شُهُوْدًا ۙ﴿١٣﴾ وَّمَهَّدْتُّ لَهٗ تَمْهِيْدًا ۙ﴿١۴﴾ ثُمَّ يَطْمَعُ اَنْ
اَزِيْدَ ۙ﴿١۵﴾ كَلَّا ؕ اِنَّهٗ كَانَ لِاٰيٰتِنَا عَنِيْدًا ؕ﴿١٦﴾ سَاُرْهِقُهٗ
صَعُوْدًا ؕ﴿١٧﴾ اِنَّهٗ فَكَّرَ وَقَدَّرَ ۙ﴿١٨﴾ فَقُتِلَ كَيْفَ قَدَّرَ ۙ﴿١٩﴾ ثُمَّ
قُتِلَ كَيْفَ قَدَّرَ ۙ﴿٢٠﴾ ثُمَّ نَظَرَ ۙ﴿٢١﴾ ثُمَّ عَبَسَ وَبَسَرَ ۙ﴿٢٢﴾
ثُمَّ اَدْبَرَ وَاسْتَكْبَرَ ۙ﴿٢٣﴾ فَقَالَ اِنْ هٰذَاۤ اِلَّا سِحْرٌ
يُّؤْثَرُ ۙ﴿٢۴﴾ اِنْ هٰذَاۤ اِلَّا قَوْلُ الْبَشَرِ ؕ﴿٢۵﴾ سَاُصْلِيْهِ
سَقَرَ ﴿٢٦﴾ وَمَاۤ اَدْرٰىكَ مَا سَقَرُ ؕ﴿٢٧﴾ لَا تُبْقِىْ وَ
لَا تَذَرُ ۚ﴿٢٨﴾ لَوَّاحَةٌ لِّلْبَشَرِ ۚ﴿٢٩﴾ عَلَيْهَا تِسْعَةَ عَشَرَ ؕ﴿٣٠﴾

அத்தியாயம் : 74

## அல் முத்தஸ்ஸிர் _ போர்த்திக் கொண்டிருப்பவர்

வசனங்கள் : 56 மக்கீ ருகூஃகள் : 2

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (போர்வை) போர்த்திக்கொண்டிருப்பவரே!

2. நீர் எழுந்திருப்பீராக! பிறகு ( அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக!

3. மேலும், உமதிரட்சகனைப் பெருமைப்படுத்துவீராக.

4. மேலும், உமது ஆடைகளைத் தூய்மையாக வைத்துக்கொள்வீராக.

5. இன்னும், அசுத்தத்தை வெறுத்து விடுவீராக.

6. (நீர் கொடுத்ததைவிட) அதிகமானதைப் பெறக்கருதி (மற்றவருக்கு) உபகாரம் செய்யாதீர்.

7. இன்னும், உமதிரட்சகனுக்காக (க் கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு) நீர் பொறுமையுடன் இருப்பீராக.

8. குழல் (ஸூர்) ஊதப்பட்டு விட்டால்_

9. அந்நாளில் அ(வ்வாறு ஊதப்படுவதான)து_ கடினமான நாளாகஇருக்கும்.

10. (அந்நாள்) நிராகரிப்போருக்கு எளிதானதன்று.

11. என்னையும், தனித்த நிலையில் நான் படைத்தவனையும் விட்டுவிடுவீராக.

12. நான் அவனுக்கு ஏராளமான செல்வத்தையும் ஆக்கியிருந்தேன்.

13. அவனுடன் இருக்கக்கூடிய ஆண்மக்களையும் (நான் அவனுக்குக் கொடுத்தேன்).

14. அவனுக்கு (வாழ்வதற்கு வேண்டிய) தயாரிப்புகளை (ஏற்கனவே) அவனுக்காக நான் தயார்செய்து வைத்தேன்.

15. பின்னும், நான் (அவனுக்கு) அதிகமாக்கவேண்டுமென்று அவன் ஆசைப்படுகின்றான்.

16. (ஒருபோதும் அது நடந்தேறக்கூடியது) அல்ல! நிச்சயமாக அவன் நம்முடைய வசனங்களுக்கு முரண்பட்டவனாக இருக்கின்றான்.

17. (அதி சீக்கிரத்தில்) அவனை (வேதனையின்) ஒருகடினமான சிகரத்தில் நான் ஏற்றிவிடுவேன்.

18. நிச்சயமாக அவன் (இந்தக் குர்ஆனுக்கு எதிராக) சிந்தித்தான்; இன்னும், (குர்ஆனைப்பற்றித் தன் மனதில் கற்பனையாக ஒரு கூற்றை) ஏற்படுத்திக் கொண்டான்.

19. ஆகவே, அவன் சபிக்கப்பட்டான்; எவ்வாறு அவன் (ஒரு கூற்றைத்தன் மனதில்) ஏற்படுத்திக்கொண்டான்?

20. பின்னரும் அவன் சபிக்கப்பட்டான்! எவ்வாறு அவன் (ஒரு கூற்றைத் தன் மனதில்) ஏற்படுத்திக்கொண்டான்?

21. பின்னர் அவன் ( நம் வசனங்களை சிந்தித்து) நோக்கினான்.

22. பின்னர் கடு கடுத்தான்; முகமும் சுளித்தான்.

23. பின்னர் திரும்பிச்சென்றான்; இன்னும், அகந்தை கொண்டான்.

24. அப்பால் (முன்னுள்ளோரிடமிருந்து கற்பிக்கப்பட்டு) "வழிவழியாக வந்த சூனியமேயன்றி இது (வேறு) இல்லை" எனக் கூறினான்.

25. "இது மனிதரின் கூற்றே தவிர வேறில்லை" (என்றும் கூறினான்).

26. நான் அவனை "ஸகர்" எனும் நரகத்தில் புகச்செய்வேன்.

27. இன்னும் "ஸகர்" என்னவென்று உமக்கு அறிவித்தது எது?

28. அது (நரகவாசிகளில்எவரையும்) மிச்சம் வைக்காது; (எவரையும்) விட்டும் விடாது.

29. மனிதர்களை (சுட்டுக் கரித்து அவர்களின் மேனியை) மாற்றிவிடக்கூடியது.

30. (காவலர்களாக மலக்குகளில்) அதன்மீது பத்தொன்பது பேர்கள் இருக்கின்றனர்.

وَمَا جَعَلْنَآ اَصْحٰبَ النَّارِ اِلَّا مَلٰٓئِكَةً ۙ وَّمَا جَعَلْنَا عِدَّتَهُمْ
اِلَّا فِتْنَةً لِّلَّذِيْنَ كَفَرُوْا ۙ لِيَسْتَيْقِنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ
وَيَزْدَادَ الَّذِيْنَ اٰمَنُوْٓا اِيْمَانًا وَّلَا يَرْتَابَ الَّذِيْنَ اُوْتُوا
الْكِتٰبَ وَالْمُؤْمِنُوْنَ ۙ وَلِيَقُوْلَ الَّذِيْنَ فِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ
وَّالْكٰفِرُوْنَ مَاذَآ اَرَادَ اللّٰهُ بِهٰذَا مَثَلًا ؕ كَذٰلِكَ يُضِلُّ
اللّٰهُ مَنْ يَّشَآءُ وَيَهْدِيْ مَنْ يَّشَآءُ ؕ وَمَا يَعْلَمُ جُنُوْدَ
رَبِّكَ اِلَّا هُوَ ؕ وَمَا هِيَ اِلَّا ذِكْرٰى لِلْبَشَرِ ۝۳۱ ع كَلَّا وَالْقَمَرِ ۙ ۝۳۲ ع ۱ ۱۵
وَالَّيْلِ اِذْ اَدْبَرَ ۙ ۝۳۳ وَالصُّبْحِ اِذَآ اَسْفَرَ ۙ ۝۳۴ اِنَّهَا لَاِحْدَى
الْكُبَرِ ۙ ۝۳۵ نَذِيْرًا لِّلْبَشَرِ ۙ ۝۳۶ لِمَنْ شَآءَ مِنْكُمْ اَنْ يَّتَقَدَّمَ
اَوْ يَتَاَخَّرَ ؕ ۝۳۷ كُلُّ نَفْسٍ بِمَا كَسَبَتْ رَهِيْنَةٌ ۙ ۝۳۸ اِلَّآ اَصْحٰبَ
الْيَمِيْنِ ؕ ۝۳۹ فِيْ جَنّٰتٍ ۛ قف يَتَسَآءَلُوْنَ ۙ ۝۴۰ عَنِ الْمُجْرِمِيْنَ ۙ ۝۴۱ مَا مع ۱۶ عند المتقدمین ۱۲
سَلَكَكُمْ فِيْ سَقَرَ ۝۴۲ قَالُوْا لَمْ نَكُ مِنَ الْمُصَلِّيْنَ ۙ ۝۴۳ وَلَمْ
نَكُ نُطْعِمُ الْمِسْكِيْنَ ۙ ۝۴۴ وَكُنَّا نَخُوْضُ مَعَ الْخَآئِضِيْنَ ۙ ۝۴۵ وَ
كُنَّا نُكَذِّبُ بِيَوْمِ الدِّيْنِ ۙ ۝۴۶ حَتّٰٓى اَتٰىنَا الْيَقِيْنُ ؕ ۝۴۷ فَمَا تَنْفَعُهُمْ
شَفَاعَةُ الشّٰفِعِيْنَ ؕ ۝۴۸ فَمَا لَهُمْ عَنِ التَّذْكِرَةِ مُعْرِضِيْنَ ۙ ۝۴۹

31. மேலும், நரகத்தின் காவலர்களை மலக்குகளாகவேதவிர நாம் ஆக்கவில்லை; இன்னும், அவர்களுடைய எண்ணிக்கையை நிராகரிப்போருக்குச் சோதனையாகவே தவிர நாம் ஆக்கவில்லை; வேதம் கொடுக்கப்பட்டோர் (இதனை) உறுதி கொள்வதற்காகவும், விசுவாசங்கொண்டோர் (தம்) விசுவாசத்தை அதிகமாக்கிக் கொள்வதற்காகவும், இன்னும், வேதம் கொடுக்கப் பட்டோரும், விசுவாசிகளும் (இதைப்பற்றிச்) சந்தேகிக்காமலிருப்பதற்காகவும், (நாம் அவ்வாறு ஆக்கினோம்.) இன்னும், எவர்களுடைய இதயங்களில் நோய் இருக்கின்றதோ அவர்களும், நிராகரித்துக்கொண்டிருப்போரும் "இதனைக் கொண்டு உதாரணமாக அல்லாஹ் எதை (அறிவிக்க) நாடினான்?" என்று கூறுவதற்காகவும் (இவ்வாறு ஆக்கினோம். நபியே!) இவ்வாறே அல்லாஹ், தான் நாடியவர்களை வழிகெடச்செய்கிறான்; தான் நாடியவர்களை நேர் வழியிலும் செலுத்துகின்றான்; இன்னும், உமதிரட்சகனின் படைகளை அவனைத் தவிர (மற்றெவரும்) அறியமாட்டார்; அது மனிதர்களுக்கு உபதேசமேயன்றி வேறில்லை.

32. (நரகக்காவலர்கள் விஷயமாக நிராகரிப்போர் கூறுவதுபோன்று) அல்ல! சந்திரனின் மீதும் சத்தியமாக!

33. இரவின் மீதும் சத்தியமாக _ அது பின் செல்லும்போது!

34. அதிகாலையின் மீதும் சத்தியமாக_அது வெளிச்சமாகும்போது!

35. நிச்சயமாக (நரகமாகிய) அது மிகப்பெரியவற்றுள் ஒன்றாகும்.

36. அது, மனிதர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றநிலையில் (மிகப் பெரியதாகும்).

37. உங்களில் எவர் (நன்மைக்காக) முந்திச் செல்வதற்கோ_ அல்லது (நன்மையை விட்டும்) பின் தங்கிவிடுவதற்கோ விரும்புகின்றாரோ அவருக்கு (அது அச்சமூட்டி எச்சரிக்கைச் செய்கிறது).

38. ஒவ்வோர் ஆத்மாவும், தான் சம்பாதித்தவற்றுக்குப் பிணையாக்கப் பட்டதாகும்.

39. ஆயினும், (வலக்கையில் பதிவுப்புத்தகம் கொடுக்கப்பட்ட) வலது சாரியினர் தவிர_

40. (அவர்கள்) சுவனங்களில் (இருப்பர்) அப்போது தங்களுக்குள் (விசாரித்துக்) கேட்பார்கள்:

41. குற்றவாளிகளைப்பற்றி_

42. "உங்களை ஸகர் எனும் நரகத்தில் புகுத்தியது எது?"

43. அ(தற்க)வர்கள், "தொழக்கூடியவர்களில் (உள்ளவர்களாக) நாங்கள் இருக்கவில்லை" என்று கூறுவார்கள்.

44. "இன்னும் நாங்கள் ஏழைக்கு உணவளிப்பவர்களாகவும் இருக்கவில்லை."

45. "(வீணானவற்றில்) மூழ்கி இருந்தோருடன் நாங்களும் மூழ்கி இருந்தோம்."

46. மேலும் "கூலி கொடுக்கும் இந்நாளையும் நாங்கள் பொய்யாக்குபவர்களாக இருந்தோம்."

47. "எங்களுக்கு (மரணம் எனும்) உறுதி வரும்வரை (இவ்வாறு இருந்தோம்" என்றும் கூறுவார்கள்).

48. ஆகவே, (அவர்களுக்காகப்) பரிந்துரைசெய்வோரின் பரிந்துரை அவர்களுக்குப் பயனளிக்காது.

49. எனவே, நல்லுபதேசத்தை விட்டும் புறக்கணிக்கக் கூடியவர்களாக இருக்க அவர்களுக்கு என்ன நேர்ந்தது?

كَاَنَّهُمْ حُمُرٌ مُّسْتَنْفِرَةٌ ۙ﴿۵۰﴾ فَرَّتْ مِنْ قَسْوَرَةٍ ؕ﴿۵۱﴾ بَلْ يُرِيْدُ
كُلُّ امْرِئٍ مِّنْهُمْ اَنْ يُّؤْتٰى صُحُفًا مُّنَشَّرَةً ۙ﴿۵۲﴾ كَلَّا ؕ بَلْ لَّا
يَخَافُوْنَ الْاٰخِرَةَ ؕ﴿۵۳﴾ كَلَّاۤ اِنَّهٗ تَذْكِرَةٌ ۚ﴿۵۴﴾ فَمَنْ شَآءَ
ذَكَرَهٗ ؕ﴿۵۵﴾ وَمَا يَذْكُرُوْنَ اِلَّاۤ اَنْ يَّشَآءَ اللّٰهُ ؕ هُوَ اَهْلُ
التَّقْوٰى وَاَهْلُ الْمَغْفِرَةِ ﴿۵۶﴾ ع ٢ ٢٥ ١٦

سُوْرَةُ الْقِيٰمَةِ مَكِّيَّةٌ وَّهِيَ اَرْبَعُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

لَاۤ اُقْسِمُ بِيَوْمِ الْقِيٰمَةِ ۙ﴿۱﴾ وَلَاۤ اُقْسِمُ بِالنَّفْسِ اللَّوَّامَةِ ﴿۲﴾
اَيَحْسَبُ الْاِنْسَانُ اَلَّنْ نَّجْمَعَ عِظَامَهٗ ؕ﴿۳﴾ بَلٰى قٰدِرِيْنَ
عَلٰۤى اَنْ نُّسَوِّيَ بَنَانَهٗ ﴿۴﴾ بَلْ يُرِيْدُ الْاِنْسَانُ لِيَفْجُرَ
اَمَامَهٗ ۚ﴿۵﴾ يَسْـَٔلُ اَيَّانَ يَوْمُ الْقِيٰمَةِ ؕ﴿۶﴾ فَاِذَا بَرِقَ
الْبَصَرُ ۙ﴿۷﴾ وَخَسَفَ الْقَمَرُ ۙ﴿۸﴾ وَجُمِعَ الشَّمْسُ وَالْقَمَرُ ۙ﴿۹﴾
يَقُوْلُ الْاِنْسَانُ يَوْمَئِذٍ اَيْنَ الْمَفَرُّ ۚ﴿۱۰﴾ كَلَّا لَا وَزَرَ ؕ﴿۱۱﴾ اِلٰى
رَبِّكَ يَوْمَئِذِ اِۨلْمُسْتَقَرُّ ؕ﴿۱۲﴾ يُنَبَّؤُا الْاِنْسَانُ يَوْمَئِذٍۭ
بِمَا قَدَّمَ وَاَخَّرَ ؕ﴿۱۳﴾ بَلِ الْاِنْسَانُ عَلٰى نَفْسِهٖ بَصِيْرَةٌ ۙ﴿۱۴﴾

50. அவர்கள் வெருண்டோடுகின்ற (காட்டுக்) கழுதைகளைப் போல் (இருக்கின்றனர்!)

51. (காட்டுக்கழுதைகளான) அவை சிங்கத்தை விட்டும் வெருண்டோடின.

52. மாறாக, அவர்களில் ஒவ்வொரு மனிதனும், விரிக்கப்பட்ட ஆகமங்கள் (தனக்கும்) கொடுக்கப்படவேண்டும் என நாடுகிறான்.

53. (அது நடக்கப்போவது) இல்லை! மாறாக, மறுமையைப்பற்றி அவர்கள் பயப்படுவதில்லை.
54. நிச்சயமாக இது நல்லுபதேசமாகும்.

55. (உபதேசம் பெற) யார் நாடுகிறாரோ அவர் இதனை நினைவில் வைத்து(உபதேசம் பெற்று)க் கொள்ளவும்.

56. இன்னும், அல்லாஹ் நாடினாலன்றி அவர்கள் நல்லுபதேசம் பெற மாட்டார்கள்; அவனே பயப்படுவதற்குரியவனும்,(விசுவாசிகளை) மன்னிப்பதற்குரியவனும் ஆவான்.

---

அத்தியாயம் : 75

## அல்கியாமா – மறுமை நாள்

வசனங்கள் : 40 மக்கீ ருகூஉகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. மறுமை நாளைக்கொண்டு நான் சத்தியம் செய்கிறேன்.
2. (வழிபாட்டில் மனிதன் குறைவு செய்துவிட்டதைப்பற்றி) மிக நிந்தித்துக் கொண்டிருக்கும் ஆன்மாவைக் கொண்டும் நான் சத்தியம் செய்கிறேன்.
3. மனிதன் (இறப்பெய்தி, மண்ணோடு மண்ணாக மக்கிப்போன பின்னர்) அவனுடைய எலும்புகளை நாம் ஒன்று சேர்க்கவேமாட்டோம் என்று எண்ணுகின்றானா?
4. ஆம்! அவனுடைய விரல்களின் நுனிகளை (முன்பிருந்தது போல் இணைத்துச் சரிப்படுத்தி)ச் செவ்வையாக்க நாம் ஆற்றலுடையோராக இருக்கிறோம்.
5. மாறாக, மனிதன் தன் எதிர்காலத்திலும் (பாவத்திலிருந்து விலகிவிடாது) பாவம் செய்யவே நாடுகிறான்.
6. "மறுமைநாள் எப்பொழுது (வரும்)?" என (அதிசயமாக) அவன் கேட்கிறான்.
7. (அந்நாளின் அமளிகளைக்கண்டு திடுக்கிட்டு) பார்வை நிலைகுத்திவிட்டால்;
8. சந்திரனும் ஒளி இழந்து (விடுமானால்);
9. சூரியனும், சந்திரனும் ஒன்றாக்கப்பட்டு விடும் (ஆனால்);
10. அந்நாளில் "எங்கு விரண்டோடுவது" என மனிதன் கூறுவான்.
11. இல்லை! தப்ப இடமில்லை.
12. அந்நாளில் (அனைவரின்) தங்குமிடம் உம் இரட்சகனிடத்திலாகும்.
13. மனிதன் – அவன் முற்படுத்திவைத்ததையும், அவன் பிற்படுத்திவைத்ததையும் (பற்றி) அந்நாளில் அறிவிக்கப்படுவான்.
14. ஏன், மனிதன் தன் மீது பார்வையுடையவனாக (தன் செயல்களுக்குச் சாட்சியாக) இருப்பான்.

وَّلَوْ اَلْقٰى مَعَاذِيْرَهٗ ﴿۱۵﴾ لَا تُحَرِّكْ بِهٖ لِسَانَكَ لِتَعْجَلَ
بِهٖ ﴿۱۶﴾ اِنَّ عَلَيْنَا جَمْعَهٗ وَقُرْاٰنَهٗ ﴿۱۷﴾ فَاِذَا قَرَاْنٰهُ فَاتَّبِعْ
قُرْاٰنَهٗ ﴿۱۸﴾ ثُمَّ اِنَّ عَلَيْنَا بَيَانَهٗ ﴿۱۹﴾ كَلَّا بَلْ تُحِبُّوْنَ
الْعَاجِلَةَ ﴿۲۰﴾ وَتَذَرُوْنَ الْاٰخِرَةَ ﴿۲۱﴾ وُجُوْهٌ يَّوْمَئِذٍ نَّاضِرَةٌ ﴿۲۲﴾
اِلٰى رَبِّهَا نَاظِرَةٌ ﴿۲۳﴾ وَوُجُوْهٌ يَّوْمَئِذٍ بَاسِرَةٌ ﴿۲۴﴾ تَظُنُّ
اَنْ يُّفْعَلَ بِهَا فَاقِرَةٌ ﴿۲۵﴾ كَلَّآ اِذَا بَلَغَتِ التَّرَاقِيَ ﴿۲۶﴾
وَقِيْلَ مَنْ ۜ رَاقٍ ﴿۲۷﴾ وَّظَنَّ اَنَّهُ الْفِرَاقُ ﴿۲۸﴾ وَالْتَفَّتِ
السَّاقُ بِالسَّاقِ ﴿۲۹﴾ اِلٰى رَبِّكَ يَوْمَئِذِ اِۨلْمَسَاقُ ﴿۳۰﴾ ع ۱ ۱۷
فَلَا صَدَّقَ وَلَا صَلّٰى ﴿۳۱﴾ وَلٰكِنْ كَذَّبَ وَتَوَلّٰى ﴿۳۲﴾
ثُمَّ ذَهَبَ اِلٰٓى اَهْلِهٖ يَتَمَطّٰى ﴿۳۳﴾ اَوْلٰى لَكَ فَاَوْلٰى ﴿۳۴﴾
ثُمَّ اَوْلٰى لَكَ فَاَوْلٰى ﴿۳۵﴾ اَيَحْسَبُ الْاِنْسَانُ اَنْ
يُّتْرَكَ سُدًى ﴿۳۶﴾ اَلَمْ يَكُ نُطْفَةً مِّنْ مَّنِيٍّ يُّمْنٰى ﴿۳۷﴾
ثُمَّ كَانَ عَلَقَةً فَخَلَقَ فَسَوّٰى ﴿۳۸﴾ فَجَعَلَ مِنْهُ الزَّوْجَيْنِ
الذَّكَرَ وَالْاُنْثٰى ﴿۳۹﴾ اَلَيْسَ ذٰلِكَ بِقٰدِرٍ عَلٰٓى اَنْ
يُّحْیِۦَ الْمَوْتٰى ﴿۴۰﴾ ع ۲ ۱۸

15. (ஆகவே, தன் குற்றங்களை மறைக்க) அவன் தன் புகல்களைப் போட்ட போதிலும் சரியே (அவை அங்கீகரிக்கப்படமாட்டா).
16. (நபியே! வஹீ மூலம் அறிவிக்கப்படுபவை தவறிவிடுமோ என பயந்து) அதற்காக நீர் அவசரப்பட்டு உம் நாவை அசைக்காதீர்.
17. (உம் உள்ளத்தில்) அதனை ஒன்று சேர்ப்பதும், (உமது நாவால்) அதனை ஓதச்செய்வதும் நிச்சயமாக நம்மீதா(ன கடமையா)கும்.
18. ஆகவே, (ஜிப்ரீல் மூலம்) அதனைநாம் (உமக்கு) ஓதுவோமாயின், (ஓதப்படும்) அதன் ஓதுதலை நீர் பின் தொடர்(ந்து ஓது)வீராக.
19. பின்னர், நிச்சயமாக அதனைத் தெளிவு செய்வதும் நம்மீதா(னகடமையா)கும்.
20. ஏன் இல்லை! பின்னர் (மனிதர்களே!) நீங்கள் அவசரமானதை (இம்மையை) விரும்புகின்றீர்கள்.
21. அன்றியும், மறுமையை நீங்கள் விட்டுவிடுகின்றீர்கள்.
22. அந்நாளில் சில(ருடைய) முகங்கள் (சந்தோஷத்தால்) மலர்ச்சியானவையாக இருக்கும்.
23. (அவை) தங்கள் இரட்சகனை நோக்கிக்கொண்டிருக்கும்.
24. இன்னும், அந்நாளில் சில(ருடைய) முகங்கள், (துக்கத்தால் கறுத்து) சோகமானவையாக இருக்கும்.
25. முதுகுகளை முறித்துவிடும் பேராபத்து தங்களுக்கு உண்டாக்கப்படும் என்று அவை உறுதிகொண்டிருக்கும்.
26. (மறுமைநாள் வெகுதூரமென நீங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறீர்களே) அவ்வாறல்ல! (இதோ அதன் தொடக்கமாக மரணவேளையில் அவனது உயிர்) தொண்டைக்குழியை அடைந்துவிட்டால்,
27. "மந்திரிப்பவன் எவன்?" என்றும் கேட்கப்படுகிறது.
28. (ஆனால்) அவனோ நிச்சயமாக இது(தான் தன்னுடைய) பிரிவு(க்குரிய காலம்) என்பதை (உறுதியாக) அறிந்து கொள்கின்றான்.
29. இன்னும் (அவனுடைய) கெண்டைக்கால், கெண்டைக் காலோடு பின்னிக்கொள்ளும்.
30. அந்நாளில் இழுத்துச் செல்லப்படுதல் உமதிரட்சகன்பால் இருக்கிறது.
31. (அல்லாஹ்வுடைய வேதத்தையும், அவனின் தூதரையும்) அவன் உண்மையாக்கவில்லை; அவன் (இரட்சகனைத்) தொழுவுமில்லை.
32. எனினும் அவன் பொய்யாக்கி புறக்கணித்தும் விட்டான்.
33. பின்னர், தன் குடும்பத்தாரிடம் அகம்பாவம் கொண்டவனாகச் சென்று விட்டான்.
34. (மனிதனே!) உன்னை அழிக்கக்கூடியது நெருங்கிவிட்டது! பின்னரும் அழிக்கக்கூடியது நெருங்கி விட்டது.
35. பின்னும் உன்னை அழிக்கக்கூடியது நெருங்கி விட்டது! அப்பாலும் உன்னை அழிக்கக்கூடியது நெருங்கி விட்டது.
36. (எத்தகைய கேள்விகணக்கும் கேட்கப்படாமல்) வீணாக விடப்பட்டு விடுவான் என்று மனிதன் எண்ணிக்கொண்டானா?
37. (கர்ப்பத்தில்) செலுத்தப்படும் ஓர் இந்திரியத் துளியாக அவன் இருக்கவில்லையா?
38. பின்னர் அவன் (அட்டைப் பூச்சி போன்று ஒட்டிக்கொண்டிருக்கும்) இரத்தக் கட்டியாக இருந்தான்; பின்னர் (அவனை) அவன் படைத்து (ப்பின்னர்) செவ்வையாக்கி வைத்தான்.
39. பின்னர் (மனிதனாகிய) அவனிலிருந்து ஆண், பெண் என்ற இரு வகையை அவன் ஆக்கினான்.
40. (இவ்வாறு செய்த) அவன் மரணித்தோரை உயிர்ப்பிக்க ஆற்றல் உடையவனாக இல்லையா?

## سُوْرَةُ الدَّهْرِ مَكِّيَّةٌ وَهِيَ اِحْدٰى وَثَلٰثُوْنَ اٰيَةً وَفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

هَلْ اَتٰى عَلَى الْاِنْسَانِ حِيْنٌ مِّنَ الدَّهْرِ لَمْ يَكُنْ شَيْـًٔا مَّذْكُوْرًا ﴿١﴾
اِنَّا خَلَقْنَا الْاِنْسَانَ مِنْ نُّطْفَةٍ اَمْشَاجٍ ۖۗ نَّبْتَلِيْهِ فَجَعَلْنٰهُ
سَمِيْعًۢا بَصِيْرًا ﴿٢﴾ اِنَّا هَدَيْنٰهُ السَّبِيْلَ اِمَّا شَاكِرًا وَّ اِمَّا
كَفُوْرًا ﴿٣﴾ اِنَّآ اَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ سَلٰسِلَاۡ وَاَغْلٰلًا وَّسَعِيْرًا ﴿٤﴾
اِنَّ الْاَبْرَارَ يَشْرَبُوْنَ مِنْ كَاْسٍ كَانَ مِزَاجُهَا كَافُوْرًا ۚ ﴿٥﴾
عَيْنًا يَّشْرَبُ بِهَا عِبَادُ اللّٰهِ يُفَجِّرُوْنَهَا تَفْجِيْرًا ﴿٦﴾ يُوْفُوْنَ
بِالنَّذْرِ وَيَخَافُوْنَ يَوْمًا كَانَ شَرُّهٗ مُسْتَطِيْرًا ﴿٧﴾ وَيُطْعِمُوْنَ
الطَّعَامَ عَلٰى حُبِّهٖ مِسْكِيْنًا وَّيَتِيْمًا وَّ اَسِيْرًا ﴿٨﴾ اِنَّمَا نُطْعِمُكُمْ
لِوَجْهِ اللّٰهِ لَا نُرِيْدُ مِنْكُمْ جَزَآءً وَّلَا شُكُوْرًا ﴿٩﴾ اِنَّا نَخَافُ مِنْ
رَّبِّنَا يَوْمًا عَبُوْسًا قَمْطَرِيْرًا ﴿١٠﴾ فَوَقٰىهُمُ اللّٰهُ شَرَّ ذٰلِكَ الْيَوْمِ وَ
لَقّٰىهُمْ نَضْرَةً وَّسُرُوْرًا ۚ ﴿١١﴾ وَجَزٰىهُمْ بِمَا صَبَرُوْا جَنَّةً وَّحَرِيْرًا ۙ ﴿١٢﴾
مُّتَّكِـِٕيْنَ فِيْهَا عَلَى الْاَرَآئِكِ ۚ لَا يَرَوْنَ فِيْهَا شَمْسًا وَّلَا
زَمْهَرِيْرًا ۚ ﴿١٣﴾ وَدَانِيَةً عَلَيْهِمْ ظِلٰلُهَا وَذُلِّلَتْ قُطُوْفُهَا تَذْلِيْلًا ﴿١٤﴾

அத்தியாயம் : 76

## அத்தஹ்ரு – காலம்

வசனங்கள் : 31 மக்கீ ருகூஃகள் : 2

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. மனிதன் மீது காலத்திலிருந்து ஒருநேரம் திட்டமாக வந்துவிட்டது; (அதில் இன்னதென்று) கூறப்படும் ஒருபொருளாக அவன் இருக்கவில்லை.

2. நிச்சயமாக நாம் மனிதனை (ஆண், பெண் இருவரின்) கலப்பான ஓர் இந்திரியத் துளியிலிருந்து நாம் சோதிப்ப(தற்கு நாடிய)வர்களாக அவனை படைத்தோம்; எனவே செவியுறுபவனாக, பார்ப்பவனாக அவனை நாம் ஆக்கினோம்.

3. நிச்சயமாக, நாம் அவனுக்கு (நல்லது, தீயது பற்றிய) வழியைத்தெளிவு செய்தோம்; (அதைப்பின்பற்றி) அவன் ஒன்று நன்றியுள்ளவனாக இருக்கலாம்; அல்லது (அதைப்பின்பற்றாது) நன்றியற்ற(நிராகரிப்ப)வனாக இருக்கலாம்.

4. நிராகரிப்போர்க்கு சங்கிலிகளையும், விலங்குகளையும், (ஜுவாலை விட்டு எரியும்) நரகத்தையும் நிச்சயமாக நாம் தயார்செய்து வைத்திருக்கின்றோம்.

5. நிச்சயமாக நல்லோர்கள், குவளையில் (பானத்தை) அருந்துவார்கள்; அதன் கலப்பு கற்பூரமாக இருக்கும்.

6. (இவ்வாறு கலக்கப்பட்ட அது) ஒரு ஊற்றாகும்; அதிலிருந்து அல்லாஹ்வின் நல்லடியார்கள் அருந்துவார்கள்; அதனை அவர்கள் (தாங்கள் விரும்பிய இடங்களுக்கெல்லாம்) ஓடையாக ஓடச் செய்வார்கள்.

7. இவர்கள் (தங்கள்) நேர்ச்சையை நிறைவேற்றுவார்கள்; இன்னும் ஒருநாளையும் பயப்படுவார்கள்; அதன் தீமை எங்கும் பரவியதாக இருக்கும்.

8. மேலும், அ(ல்லாஹ்வாகிய அ)வன் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழைக்கும், அனாதைக்கும், சிறைப்பட்டவருக்கும் அவர்கள் உணவளிப்பார்கள்.

9. (உணவை உண்போரிடம்,) "உங்களுக்கு நாம் உணவளிப்பதெல்லாம், அல்லாஹ்வின் முகத்தை நாடியே தான்; உங்களிடமிருந்து நாம் யாதொரு பிரதிபலனையோ அல்லது (நீங்கள் நமக்கு)நன்றி செலுத்துவதையோ நாங்கள் நாடவில்லை" (என்றும்),

10. "(அந்நாளின் அமளியினால் முகங்கள்) மிக்க கடுகடுக்கக்கூடிய, நெருக்கடியான ஒரு நாளை நிச்சயமாக நாங்கள் எங்கள் இரட்சகனிடமிருந்து பயப்படுகின்றோம்" (என்றும் கூறிக்கொண்டிருந்தனர்).

11. ஆகவே, அல்லாஹ் அந்நாளின் தீங்கிலிருந்து அவர்களைப் பாதுகாத்து, அவர்களுக்கு (முக) மலர்ச்சியையும்,(அவர்களின் இதயங்களில்) மகிழ்வையும் கொடுத்தான்.

12. அன்றியும், அவர்கள் (இம்மையில் கஷ்டங்களைச் சகித்து) பொறுமையுடனிருந்ததன் காரணமாக சுவனத்தையும், (அணிவதற்குப்) பட்டாடையையும் அவர்களுக்கு அவன் (நற்)கூலியாக வழங்குகிறான்.

13. (அவர்கள்) அ(ச்சுவனத்)தில் ஆசனங்களின்மீது சாய்ந்தவர்களாக இருப்பார்கள்; அதில் சூரிய(வெப்பத்தி)னையும், கடுங்குளிரையும் அவர்கள் காணமாட்டார்கள்.

14. அதன்(மரங்களின்)நிழல்கள் அவர்கள் மீது நெருங்கியவையாக இருக்கும்; அதன் கனிகள் (அவர்கள் பறிப்பதற்கேற்றவாறு) தாழ்வாகத் தாழ்த்தப்பட்டுள்ளது.

وَيُطَافُ عَلَيْهِمْ بِاٰنِيَةٍ مِّنْ فِضَّةٍ وَّاَكْوَابٍ كَانَتْ قَوَارِيْرَا۠ ۙ ﴿۱۵﴾
قَوَارِيْرَا۠ مِنْ فِضَّةٍ قَدَّرُوْهَا تَقْدِيْرًا ﴿۱۶﴾ وَيُسْقَوْنَ فِيْهَا كَاْسًا
كَانَ مِزَاجُهَا زَنْجَبِيْلًا ۚ ﴿۱۷﴾ عَيْنًا فِيْهَا تُسَمّٰى سَلْسَبِيْلًا ﴿۱۸﴾ وَيَطُوْفُ
عَلَيْهِمْ وِلْدَانٌ مُّخَلَّدُوْنَ ۚ اِذَا رَاَيْتَهُمْ حَسِبْتَهُمْ لُؤْلُؤًا
مَّنْثُوْرًا ﴿۱۹﴾ وَاِذَا رَاَيْتَ ثَمَّ رَاَيْتَ نَعِيْمًا وَّمُلْكًا كَبِيْرًا ﴿۲۰﴾
عٰلِيَهُمْ ثِيَابُ سُنْدُسٍ خُضْرٌ وَّاِسْتَبْرَقٌ ۫ وَّحُلُّوْٓا اَسَاوِرَ
مِنْ فِضَّةٍ ۚ وَسَقٰىهُمْ رَبُّهُمْ شَرَابًا طَهُوْرًا ﴿۲۱﴾ اِنَّ هٰذَا كَانَ
لَكُمْ جَزَآءً وَّكَانَ سَعْيُكُمْ مَّشْكُوْرًا ﴿۲۲﴾ اِنَّا نَحْنُ نَزَّلْنَا عَلَيْكَ
الْقُرْاٰنَ تَنْزِيْلًا ۚ ﴿۲۳﴾ فَاصْبِرْ لِحُكْمِ رَبِّكَ وَلَا تُطِعْ مِنْهُمْ اٰثِمًا
اَوْ كَفُوْرًا ۚ ﴿۲۴﴾ وَاذْكُرِ اسْمَ رَبِّكَ بُكْرَةً وَّاَصِيْلًا ﴿۲۵﴾ وَمِنَ الَّيْلِ
فَاسْجُدْ لَهٗ وَسَبِّحْهُ لَيْلًا طَوِيْلًا ﴿۲۶﴾ اِنَّ هٰۤؤُلَآءِ يُحِبُّوْنَ
الْعَاجِلَةَ وَيَذَرُوْنَ وَرَآءَهُمْ يَوْمًا ثَقِيْلًا ﴿۲۷﴾ نَحْنُ خَلَقْنٰهُمْ
وَشَدَدْنَآ اَسْرَهُمْ ۚ وَاِذَا شِئْنَا بَدَّلْنَآ اَمْثَالَهُمْ تَبْدِيْلًا ﴿۲۸﴾
اِنَّ هٰذِهٖ تَذْكِرَةٌ ۚ فَمَنْ شَآءَ اتَّخَذَ اِلٰى رَبِّهٖ سَبِيْلًا ﴿۲۹﴾ وَمَا
تَشَآءُوْنَ اِلَّآ اَنْ يَّشَآءَ اللّٰهُ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا حَكِيْمًا ﴿۳۰﴾

قرأ حفص بغير الألف في الوصل فيهما. ووقف على الأول بالألف وعلى الثاني بغير الألف ۱۲ — ع ۲ ۱۹

15. மேலும், வெள்ளியினாலான பாத்திரங்களையும், பளிங்கினாலானக் கிண்ணங்களையும் கொண்டு (சிறார்களால்) அவர்களைச்சுற்றிக் கொண்டு வரப்படும்.

16. வெள்ளியினாலான கிண்ணங்கள், அவற்றை (தாகம் தீர்க்கும் அளவிற்குத் தக்கவாறு) அளவாக (வழங்கக் கூடிய)அவர்கள் நிர்ணயிப்பர்.

17. இன்னும், அதில் அவர்கள் குவளையில் (மதுபானத்தைப்) புகட்டப் படுவார்கள்; அதன் கலவை இஞ்சியாக இருக்கும்.

18. அங்குள்ள ஓர் ஊற்றிலிருந்து (அதனைப் புகட்டப்படுவார்கள்)_அதற்கு ஸல்ஸபீல் (மிக மதுரமானநீர்) என்று பெயர் கூறப்படும்.

19. மேலும், என்றுமே(இளமை மாறாமல்) இருக்கும் சிறுவர்கள் அவர்களைச் சுற்றிக் கொண்டே இருப்பார்கள்; (நபியே!) அவர்களை நீர் காணுவீரானால் பரத்தப்பட்ட முத்துக்களென அவர்களை எண்ணுவீர்.

20. இன்னும் அங்கு நீர் பார்த்தால், (அவற்றின்) அருட்கொடைகளையும், பெரிய அரசாட்சியையும் நீர் காண்பீர்.

21. அவர்கள் (தேகத்தின்) மேல் மென்மையான மற்றும் கனமான பச்சைப் பட்டாடைகள் இருக்கும்; இன்னும், அவர்கள் வெள்ளியினால் (ஆகிய) கடகங்கள் அணிவிக்கப்பட்டிருப்பார்கள்; அவர்களின் இரட்சகன் பரிசுத்தமான ஒரு பானத்தையும் அவர்களுக்குப் புகட்டுவான்;(மேலும் அவர்களிடம்,)

22. "நிச்சயமாக இது உங்களுக்குக் கூலியாக இருக்கும்; உங்களுடைய முயற்சியும் நன்றிக்குரியதாகி (அங்கீகரிக்கப்பட்டு) விட்டது" (என்றும்கூறுவான்).

23. (நபியே!) நிச்சயமாக நாம்தாம் இந்தக் குர்ஆனைச் சிறிது சிறிதாகவே உம்மீது இறக்கி வைத்தோம்.

24. ஆகவே, நீர் உமதிரட்சகனின் கட்டளைக்காகப் பொறுமையுடனிருப்பீராக! அவர்களிலுள்ள (யாதொரு) பாவிக்கோ, அல்லது நன்றிகெட்டவனுக்கோ நீர் கீழ்ப்படியாதீர்.

25.மேலும் காலையிலும்,மாலையிலும் உமதிரட்சகனின் (சங்கையான) பெயரை நினைவு கூர்வீராக!

26. இன்னும், இரவில் அவனுக்கு (ஸுஜூது செய்து) சிரம்பணிவீராக! இரவில் நெடுநேரம் அவனைத்துதி செய்து கொண்டுமிருப்பீராக.

27. நிச்சயமாக இவர்கள் விரைவாகச் செல்லக்கூடிய(இம்மையான)தை விரும்புகின்றனர்; மேலும் கடினமான (மறுமை) நாளை அவர்களுக்குப் பின்னால் (புறக்கணித்து,) விட்டு விடுகின்றனர்.

28. நாம்தாம் அவர்களைப் படைத்தோம்; நாமே அவர்களுடைய படை(ப்பின் அமை)ப்பையும் உறுதிப்படுத்தினோம்; மேலும், நாம் நாடினால் அவர்களைப் போன்ற(மற்ற)வர்களை (அவர்களுக்கு)ப்பகரமாக மாற்றிவிடுவோம்.

29. நிச்சயமாக இது ஒரு நல்லுபதேசமாகும்; ஆகவே, யார் நாடுகிறாரோ அவர், தம் இரட்சகன்பக்கம் (செல்லும்) வழியை எடுத்துக்கொள்வாராக!

30. இன்னும், அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள் (எதையும்) நாடமாட்டீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் (உங்களனைவரையும்பற்றி) நன்கறிகிறவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கிறான்.

يُّدْخِلُ مَنْ يَّشَآءُ فِيْ رَحْمَتِهٖ ؕ وَالظّٰلِمِيْنَ اَعَدَّ لَهُمْ
عَذَابًا اَلِيْمًا ؏ ۳۱ ٢/٢٠

سُوْرَةُ الْمُرْسَلٰتِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَالْمُرْسَلٰتِ عُرْفًا ۙ ۱ فَالْعٰصِفٰتِ عَصْفًا ۙ ۲ وَّالنّٰشِرٰتِ
نَشْرًا ۙ ۳ فَالْفٰرِقٰتِ فَرْقًا ۙ ۴ فَالْمُلْقِيٰتِ ذِكْرًا ۙ ۵ عُذْرًا اَوْ
نُذْرًا ۙ ۶ اِنَّمَا تُوْعَدُوْنَ لَوَاقِعٌ ؕ ۷ فَاِذَا النُّجُوْمُ طُمِسَتْ ۙ ۸ وَ
اِذَا السَّمَآءُ فُرِجَتْ ۙ ۹ وَاِذَا الْجِبَالُ نُسِفَتْ ۙ ۱۰ وَاِذَا الرُّسُلُ
اُقِّتَتْ ؕ ۱۱ لِاَيِّ يَوْمٍ اُجِّلَتْ ؕ ۱۲ لِيَوْمِ الْفَصْلِ ۚ ۱۳ وَمَآ اَدْرٰىكَ
مَا يَوْمُ الْفَصْلِ ؕ ۱۴ وَيْلٌ يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ۱۵ اَلَمْ
نُهْلِكِ الْاَوَّلِيْنَ ؕ ۱۶ ثُمَّ نُتْبِعُهُمُ الْاٰخِرِيْنَ ۱۷ كَذٰلِكَ
نَفْعَلُ بِالْمُجْرِمِيْنَ ۱۸ وَيْلٌ يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ۱۹ اَلَمْ
نَخْلُقْكُّمْ مِّنْ مَّآءٍ مَّهِيْنٍ ۙ ۲۰ فَجَعَلْنٰهُ فِيْ قَرَارٍ مَّكِيْنٍ ۙ ۲۱
اِلٰى قَدَرٍ مَّعْلُوْمٍ ۙ ۲۲ فَقَدَرْنَا ۖۗ فَنِعْمَ الْقٰدِرُوْنَ ۲۳ وَيْلٌ
يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ۲۴ اَلَمْ نَجْعَلِ الْاَرْضَ كِفَاتًا ۙ ۲۵

31. (ஆகவே, உங்களில்) அவன் நாடியவரை தன் அருளில் நுழைவிக்கிறான்; இன்னும், அநியாயக்காரர்கள்_அவர்களுக்காகத் துன்புறுத்தும் வேதனையை அவன் தயார்படுத்தி வைத்திருக்கிறான்.

---

அத்தியாயம் : 77

## அல்முர்ஸலாத் _ அனுப்பப்படுபவை

வசனங்கள் : 50 மக்கீ ருகூஉகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. தொடர்ச்சியாக (ஒன்றன் பின் ஒன்றாக) அனுப்பப்படுபவைகளின் மீது சத்தியமாக_
2. வீசும் கடும் புயல் காற்றுகளின் மீது சத்தியமாக!
3. (மேகங்களைக்) கிளப்பி பரப்பிவிடுபவைகளின் மீது சத்தியமாக!
4. (சத்தியத்தையும் அசத்தியத்தையும்) வேறு படுத்திக் காட்டு(ம் வஹீ எனும் கட்டளையைக் கொண்டு இறங்கு)பவர்கள் மீது சத்தியமாக!
5. (தூதர்கள்பால்) வஹீயைக்கொண்டு வந்து கொடுப்பவர்கள் மீது சத்தியமாக!
6. (அந்த வஹீயின் மூலம் அறிவிக்கப்பட்டவை) மன்னிப்பாக, அல்லது எச்சரிக்கையாக இருக்கும்.
7. நிச்சயமாக நீங்கள் வாக்களிக்கப்படுவதெல்லாம் நிகழக்கூடியதேயாகும்.
8. ஆகவே, நட்சத்திரங்கள் _(அவற்றின் ஒளி) அழிக்கப்பட்டு விடும்போது_
9. மேலும், வானம் _ அது பிளக்கப்பட்டு விடும்போது_
10. இன்னும், மலைகள் (தூசிகளைப்போன்று) பறக்கடிக்கப்பட்டு விடும்போது_
11. மேலும், தூதர்களுக்கு நேரம் குறிக்கப்பட்டு விடும்போது_
12. எந்த நாளுக்காக (இவை யாவும்) பிற்படுத்தப்பட்டிருக்கின்றன?
13. தீர்ப்பு நாளுக்காக (பிற்படுத்தப்பட்டன என்று கூறப்படும்).
14. மேலும் (நபியே!), தீர்ப்பு (க்கூறப்படும்) நாள் என்ன வென்று உமக்கு அறிவித்தது எது?
15. (நம்முடைய வசனங்களைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.
16. (அதனைப் பொய்யாக்கிக் கொண்டிருந்த) முன்னிருந்தோரை நாம் அழிக்கவில்லையா?
17. பின்னர், பின்னுள்ளோரை (அழிக்கப்பட்ட) அவர்களைப் பின் தொடரு மாறு நாம் செய்தோம்.
18. குற்றவாளிகளை அவ்வாறுதான் நாம் (அழித்து நாசம்) செய்வோம்.
19. (நம்முடைய வசனங்களைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.
20. இழிவான நீரிலிருந்து உங்களை நாம் படைக்கவில்லையா?
21. பின்னர், அதனைப் பாதுகாப்பான இடத்தில் (கர்ப்பப் பையில்) ஆக்கினோம்.
22. குறிப்பிட்ட (கால) அளவு வரை;
23. பின்னர், நாமே அதனை (சிசுவாக) ஏற்படுத்தினோம்; ஏற்படுத்துவோரில் (நாம்) நல்லோராவோம்.
24. (ஆகவே இவைகளைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்!
25. அணைத்துக் கொள்ளக்கூடியதாக பூமியை நாம் ஆக்கவில்லையா?

اَحۡيَآءً وَّاَمۡوَاتًا ۙ﴿۲۶﴾ وَّجَعَلۡنَا فِيۡهَا رَوَاسِىَ شٰمِخٰتٍ وَّ
اَسۡقَيۡنٰكُمۡ مَّآءً فُرَاتًا ؕ﴿۲۷﴾ وَيۡلٌ يَّوۡمَئِذٍ لِّلۡمُكَذِّبِيۡنَ ﴿۲۸﴾
اِنۡطَلِقُوۡۤا اِلٰى مَا كُنۡتُمۡ بِهٖ تُكَذِّبُوۡنَ ۚ﴿۲۹﴾ اِنۡطَلِقُوۡۤا اِلٰى ظِلٍّ
ذِىۡ ثَلٰثِ شُعَبٍ ۙ﴿۳۰﴾ لَّا ظَلِيۡلٍ وَّلَا يُغۡنِىۡ مِنَ اللَّهَبِ ؕ﴿۳۱﴾
اِنَّهَا تَرۡمِىۡ بِشَرَرٍ كَالۡقَصۡرِ ۚ﴿۳۲﴾ كَاَنَّهٗ جِمٰلَتٌ صُفۡرٌ ؕ﴿۳۳﴾ وَيۡلٌ
يَّوۡمَئِذٍ لِّلۡمُكَذِّبِيۡنَ ﴿۳۴﴾ هٰذَا يَوۡمُ لَا يَنۡطِقُوۡنَ ۙ﴿۳۵﴾ وَلَا
يُؤۡذَنُ لَهُمۡ فَيَعۡتَذِرُوۡنَ ﴿۳۶﴾ وَيۡلٌ يَّوۡمَئِذٍ لِّلۡمُكَذِّبِيۡنَ ﴿۳۷﴾
هٰذَا يَوۡمُ الۡفَصۡلِ ۚ جَمَعۡنٰكُمۡ وَالۡاَوَّلِيۡنَ ﴿۳۸﴾ فَاِنۡ كَانَ لَكُمۡ
كَيۡدٌ فَكِيۡدُوۡنِ ﴿۳۹﴾ وَيۡلٌ يَّوۡمَئِذٍ لِّلۡمُكَذِّبِيۡنَ ؑ﴿۴۰﴾ اِنَّ ع ۱ ۲۱
الۡمُتَّقِيۡنَ فِىۡ ظِلٰلٍ وَّعُيُوۡنٍ ۙ﴿۴۱﴾ وَّفَوَاكِهَ مِمَّا يَشۡتَهُوۡنَ ؕ﴿۴۲﴾
كُلُوۡا وَاشۡرَبُوۡا هَنِيۡٓـئًا ۢ بِمَا كُنۡتُمۡ تَعۡمَلُوۡنَ ﴿۴۳﴾ اِنَّا كَذٰلِكَ
نَجۡزِى الۡمُحۡسِنِيۡنَ ﴿۴۴﴾ وَيۡلٌ يَّوۡمَئِذٍ لِّلۡمُكَذِّبِيۡنَ ﴿۴۵﴾ كُلُوۡا
وَتَمَتَّعُوۡا قَلِيۡلًا اِنَّكُمۡ مُّجۡرِمُوۡنَ ﴿۴۶﴾ وَيۡلٌ يَّوۡمَئِذٍ
لِّلۡمُكَذِّبِيۡنَ ﴿۴۷﴾ وَاِذَا قِيۡلَ لَهُمُ ارۡكَعُوۡا لَا يَرۡكَعُوۡنَ ﴿۴۸﴾ وَيۡلٌ
يَّوۡمَئِذٍ لِّلۡمُكَذِّبِيۡنَ ﴿۴۹﴾ فَبِاَىِّ حَدِيۡثٍۢ بَعۡدَهٗ يُؤۡمِنُوۡنَ ؑ﴿۵۰﴾ ع ۲ ۲۲

26. உயிரோடிருப்போரையும், மரணித்தோரையும் (அணைத்துக் கொள்ளக் கூடியதாக அதை நாம் ஆக்கினோம்.)
27. மேலும், அதில் உயர்ந்த மலைகளையும் நாம் அமைத்து, இனிமையான நீரையும் (அவற்றிலிருந்து) உங்களுக்குப் புகட்டுகின்றோம்.
28. (நம்முடைய இவ்வருட்கொடையைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்!
29. (மறுமையில் இவர்களிடம்,) எ(ந்த நரகத்)தை நீங்கள் பொய்ப்படுத்திக் கொண்டிருந்தீர்களோ, அதன்பாலே நீங்கள் நடந்துசெல்லுங்கள் (என்றும்),
30. மூன்று கிளைகளையுடைய (நரகப் புகையின்) நிழலின்பால் நீங்கள் நடந்துசெல்லுங்கள் (என்றும் அவர்களுக்குக் கூறப்படும்).
31. (அது குளிர்ச்சி தரும்) நிழல் தரக்கூடியதல்ல; தீச்சுவாலையிலிருந்து அது காக்கக் கூடியதுமல்ல.
32. (எனினும்) நிச்சயமாக அது—(பெரிய)மாளிகையைப் போன்ற நெருப்புப் பொறிகளை அது வீசி எறியும்.
33. நிச்சயமாக அது மஞ்சள் நிறமான (பெரிய) ஒட்டகங்களைப் போல் இருக்கும்.
34. (இவைகளைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.
35. இது அவர்கள் பேசமுடியாத நாளாகும்.
36. அன்றியும், அவர்களுக்கு (எதுவும் கூற) அனுமதிக்கப்படமாட்டாது; (அவ்வாறிருந்தும் வேதனை தாங்காது) அவர்கள் புகல் கூறுவர்.
37. (இவைகளைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.
38. இது தீர்ப்பு நாள்; உங்களையும், (உங்களுக்கு) முன்னுள்ளோரையும் (அந்நாளைக்காக) நாம் ஒன்று சேர்த்து விட்டோம்.
39. ஆகவே, ("தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள) உங்களிடம் ஏதும் சூழ்ச்சி இருந்தால் என்னிடம் சூழ்ச்சி செய்து பாருங்கள்" (என்றும் கூறப்படும்.)
40. பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.
41. நிச்சயமாக பயபக்தியுடையோர்கள், (அந்நாளில் சுவனபதியிலுள்ள மாளிகைகள், மரங்களின்) நிழல்களிலும், ஊற்றுகளி(ன் அருகி)லும் இருப்பார்கள்—
42. அவர்கள் விரும்பியவற்றிலுள்ள கனிகளி(லிருந்து புசித்து இன்புறுவதி)லும் இருப்பார்கள்.
43. ("உலகில் நற்செயல்களை) நீங்கள் செய்து கொண்டிருந்ததன் காரணமாக இன்பமாக உண்ணுங்கள்; இன்னும் பருகுங்கள்" (என்று அவர்களிடம் கூறப்படும்).
44. இவ்வாறே நன்மை செய்பவர்களுக்கு நிச்சயமாக நாம் கூலி வழங்குவோம்.
45. (இதனைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.
46. (நம் அத்தாட்சிகளைப் பொய்யாக்குபவர்களே ! உலகில்) நீங்கள் புசியுங்கள், கொஞ்சம் சுகமும் அனுபவியுங்கள்; நிச்சயமாக நீங்கள் குற்றவாளிகளே—
47. (அல்லாஹ்வின் வசனங்களைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.
48. மேலும், அவர்களிடம், " நீங்கள் குனிந்து (தொழுது) கொள்ளுங்கள்" என்று கூறப்பட்டால், அவர்கள் (தொழுது) குனிய மாட்டார்கள்.
49. (அவனது இக்கட்டளையைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.
50. எனவே (குர்ஆனாகிய) இதற்குப் பின்னர், எவ்விஷயத்தைத்தான் அவர்கள் விசுவாசிப்பார்கள்?

الجزء ٣٠

## سُوْرَةُ النَّبَاِ مَكِّيَّةٌ وَّهِيَ اَرْبَعُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

عَمَّ يَتَسَآءَلُوْنَ ۱ عَنِ النَّبَاِ الْعَظِيْمِ ۲ الَّذِيْ هُمْ
فِيْهِ مُخْتَلِفُوْنَ ۳ كَلَّا سَيَعْلَمُوْنَ ۴ ثُمَّ كَلَّا سَيَعْلَمُوْنَ ۵ اَلَمْ
نَجْعَلِ الْاَرْضَ مِهٰدًا ۶ وَّالْجِبَالَ اَوْتَادًا ۷ وَّخَلَقْنٰكُمْ
اَزْوَاجًا ۸ وَّجَعَلْنَا نَوْمَكُمْ سُبَاتًا ۹ وَّجَعَلْنَا الَّيْلَ لِبَاسًا ۱۰
وَّجَعَلْنَا النَّهَارَ مَعَاشًا ۱۱ وَبَنَيْنَا فَوْقَكُمْ سَبْعًا شِدَادًا ۱۲ وَّ
جَعَلْنَا سِرَاجًا وَّهَّاجًا ۱۳ وَّاَنْزَلْنَا مِنَ الْمُعْصِرٰتِ مَآءً
ثَجَّاجًا ۱۴ لِنُخْرِجَ بِهٖ حَبًّا وَّنَبَاتًا ۱۵ وَّجَنّٰتٍ اَلْفَافًا ۱۶ اِنَّ
يَوْمَ الْفَصْلِ كَانَ مِيْقَاتًا ۱۷ يَّوْمَ يُنْفَخُ فِي الصُّوْرِ
فَتَاْتُوْنَ اَفْوَاجًا ۱۸ وَّفُتِحَتِ السَّمَآءُ فَكَانَتْ اَبْوَابًا ۱۹ وَّ
سُيِّرَتِ الْجِبَالُ فَكَانَتْ سَرَابًا ۲۰ اِنَّ جَهَنَّمَ كَانَتْ
مِرْصَادًا ۲۱ لِّلطّٰغِيْنَ مَاٰبًا ۲۲ لّٰبِثِيْنَ فِيْهَآ اَحْقَابًا ۲۳
لَا يَذُوْقُوْنَ فِيْهَا بَرْدًا وَّلَا شَرَابًا ۲۴ اِلَّا حَمِيْمًا وَّغَسَّاقًا ۲۵
جَزَآءً وِّفَاقًا ۲۶ اِنَّهُمْ كَانُوْا لَا يَرْجُوْنَ حِسَابًا ۲۷

அத்தியாயம் : 78

## அந்நபஉ _ செய்தி

வசனங்கள் : 40 மக்கீ ருகூஃகள் : 2

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. (நபியே!) எதைப்பற்றி அவர்கள் ஒருவொருக்கொருவர் கேட்டுக் கொள்கின்றனர்?
2. மகத்தான அச்செய்தியைப்பற்றி,
3. அ(ம்மகத்தான செய்தியான)து எத்தகையதென்றால், அவர்கள் அதில் (தான்) கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர்.
4. அவ்வாறல்ல! (அல்லாஹ், காஃபிர்களை என்ன செய்வான் என்பதை) அவர்கள் நன்கறிந்து கொள்வார்கள்.
5. பின்னர், அவ்வாறல்ல! ( விசுவாசிகள் அல்லாஹ்வை ஏற்றுக்கொண்டதன் பலனை ) அறிந்து கொள்வார்கள்.
6. பூமியை,நாம் (உங்களுக்கு) விரிப்பாக ஆக்கவில்லையா?
7. மலைகளையும் முளைகளாக (நாம் அமைக்கவில்லையா?)
8. இன்னும் உங்களை (ஆண், பெண் கொண்ட) ஜோடிகளாக நாம் படைத்தோம்.
9. நாம் உங்களுடைய தூக்கத்தை (உங்களுக்கு) இளைப்பாறுதலாகவும் ஆக்கினோம்.
10. நாம் இரவை (உங்களுக்கு) ஆடையாகவும் ஆக்கினோம்.
11. நாம் பகலை வாழ்க்கைக்குரிய(வற்றைத் தேடிக்கொள்ளும்) நேரமாக ஆக்கினோம்.
12. உங்களுக்கு மேல் உறுதியான (வானங்கள்) ஏழினை நாமே உண்டாக்கினோம்.
13. (வெப்பமும் ஒளியும் கலந்த) பிரகாசிக்கும் ஒரு விளக்கையும் (சூரியனை) ஆக்கினோம்.
14. கார் மேகங்களிலிருந்து அதிகமாகப் பொழியும் (மழை) நீரையும் இறக்கிவைத்தோம்.
15. அதனைக் கொண்டு தானியத்தையும், தாவரத்தையும் நாம் வெளிப் படுத்துவதற்காக_
16. அடர்ந்த மரங்களுல்ல சோலைகளையும்(வெளிப்படுத்துவதற்காக)_
17. நிச்சயமாக, தீர்ப்புநாள் நேரம் குறிக்கப்பட்டதாக இருக்கிறது.
18. ஸூர் (குழல்) ஊதப்படும் நாளன்று நீங்கள் கூட்டம்கூட்டமாக (கேள்வி கணக்கு நடக்கும் திறந்த வெளிக்கு) வருவீர்கள்.
19. வானமும் திறக்கப்பட்டு, பின்னர் பல வாசல்களாக அது ஆகிவிடும்.
20. மலைகளும் (இடம்) பெயர்க்கப்பட்டு கானல் நீராகிவிடும்.
21. நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இடமாக உள்ளது_
22. வரம்பு மீறியவர்களுக்குத் தங்குமிடமாக(ஆவதற்காக)_
23. அதில் அவர்கள் பல யுகங்கள் தங்குபவர்களாக இருக்கும் நிலையில்,
24. அதில் அவர்கள் குளிர்ச்சியையோ, குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள்.
25. முடிவுறக்காய்ச்சப்பட்ட (கொதி) நீரையும், (நரகவாசிகளின் உடலிலிருந்து வடிந்து கொண்டிருக்கும்) சீழையும் தவிர ,
26. (இது அவர்கள் செயலுக்கு) ஒத்த கூலியாக.
27. நிச்சயமாக அவர்கள் (மறுமையின் கேள்வி) கணக்கை நம்பாதவர்களாக இருந்தனர்.

وَكَذَّبُوْا بِاٰيٰتِنَا كِذَّابًا ؕ﴿۲۸﴾ وَكُلَّ شَیْءٍ اَحْصَیْنٰهُ كِتٰبًا ۙ﴿۲۹﴾
فَذُوْقُوْا فَلَنْ نَّزِیْدَكُمْ اِلَّا عَذَابًا ﴿۳۰﴾ اِنَّ لِلْمُتَّقِیْنَ مَفَازًا ۙ﴿۳۱﴾ ع ۱
حَدَآئِقَ وَاَعْنَابًا ۙ﴿۳۲﴾ وَّكَوَاعِبَ اَتْرَابًا ۙ﴿۳۳﴾ وَّكَاْسًا دِهَاقًا ؕ﴿۳۴﴾
لَا یَسْمَعُوْنَ فِیْهَا لَغْوًا وَّلَا كِذّٰبًا ۚ﴿۳۵﴾ جَزَآءً مِّنْ رَّبِّكَ عَطَآءً
حِسَابًا ۙ﴿۳۶﴾ رَّبِّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَیْنَهُمَا الرَّحْمٰنِ
لَا یَمْلِكُوْنَ مِنْهُ خِطَابًا ۚ﴿۳۷﴾ یَوْمَ یَقُوْمُ الرُّوْحُ وَالْمَلٰٓئِكَةُ
صَفًّا ۛؕ لَّا یَتَكَلَّمُوْنَ اِلَّا مَنْ اَذِنَ لَهُ الرَّحْمٰنُ وَقَالَ صَوَابًا ﴿۳۸﴾
ذٰلِكَ الْیَوْمُ الْحَقُّ ۚ فَمَنْ شَآءَ اتَّخَذَ اِلٰى رَبِّهٖ مَاٰبًا ﴿۳۹﴾ اِنَّآ
اَنْذَرْنٰكُمْ عَذَابًا قَرِیْبًا ۖۚ یَّوْمَ یَنْظُرُ الْمَرْءُ مَا قَدَّمَتْ یَدٰهُ
وَیَقُوْلُ الْكٰفِرُ یٰلَیْتَنِیْ كُنْتُ تُرٰبًا ﴿۴۰﴾ ع ۲

## سُوْرَةُ النّٰزِعٰتِ مَكِّیَّةٌ وَّهِیَ سِتٌّ وَّاَرْبَعُوْنَ اٰیَةً وَّفِیْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ○

وَالنّٰزِعٰتِ غَرْقًا ۙ﴿۱﴾ وَّالنّٰشِطٰتِ نَشْطًا ۙ﴿۲﴾ وَّالسّٰبِحٰتِ سَبْحًا ۙ﴿۳﴾
فَالسّٰبِقٰتِ سَبْقًا ۙ﴿۴﴾ فَالْمُدَبِّرٰتِ اَمْرًا ۘ﴿۵﴾ یَوْمَ تَرْجُفُ وقف لازم
الرَّاجِفَةُ ۙ﴿۶﴾ تَتْبَعُهَا الرَّادِفَةُ ؕ﴿۷﴾ قُلُوْبٌ یَّوْمَئِذٍ وَّاجِفَةٌ ۙ﴿۸﴾

28. மேலும், நம்முடைய வசனங்களை மிக்க அதிகமாக (முற்றாக) பொய்யாக்கிக் கொண்டிருந்தனர்.
29. ஒவ்வொரு பொருளையும், (அது பற்றி நன்கறிந்து) அதை நாம் பதிவுப் புத்தகத்தில் கணக்கிட்டு(எழுதி) வைத்திருக்கிறோம்.
30. "ஆகவே சுவையுங்கள்; வேதனையைத் தவிர (வேறெதனையும்) உங்களுக்கு நாம் அதிகப்படுத்தவே மாட்டோம்"(என்று கூறப்படும்).
31. நிச்சயமாக பயபக்தியுடையோருக்கு (நரகிலிருந்து விடுபட்டு சுவனம் செல்லும்) வெற்றி உண்டு.
32 தோட்டங்களும், திராட்சைகளும் (உண்டு).
33. (மனைவிகளாக) மார்பகங்கள் உயர்ந்த சமவயதுடைய கன்னிகைகளும் (இருப்பர்).
34. (மது) பானங்கள் நிறைந்த கிண்ணங்களும் (உண்டு).
35. அங்கு அவர்கள் யாதொரு வீண்வார்த்தையையும், (ஒருவரையொருவர்) பொய்யாக்குவதையும் செவியுற மாட்டார்கள்.
36. (இவை) உமது இரட்சகனிடமிருந்து நற்கூலியாக, கணக்கான அன்பளிப்பாக (கொடுக்கப் பட்டுள்ளது).
37. (அவனே) வானங்கள் மற்றும் பூமி இன்னும் இவை இரண்டிற்கு மத்தியிலுள்ளவற்றிற்கும் இரட்சகன்; (அவனே) அளவற்ற அருளாளன்; அவன்முன் அவர்கள் பேச சக்தி பெறமாட்டார்கள்.
38. (ஜிப்ரீலாகிய) ரூஹூம், மலக்குகளும் அணிவகுத்து நிற்கும் நாளில் (மிகக் கிருபையுடையவனாகிய) அர்ரஹ்மான் எவருக்கு அனுமதியளித்து_ இன்னும் சரியானதைக் கூறியிருந்தாரோ அவரைத்தவிர (மற்றெவரும் அவன் முன்) பேசமாட்டார்கள்.
39. (அந்நிகழ்ச்சிகள் நடந்தேறும்) அது சத்தியமான நாளாகும்; எனவே, எவர் நாடுகிறாரோ அவர் தம் இரட்சகனிடம் மீளும்பாதையை எடுத்துக் கொள்வாராக.
40. நிச்சயமாக, சமீபித்துவரும் வேதனையைப் பற்றி நாம் உங்களுக்கு எச்சரிக்கிறோம்; (விசுவாசியான) மனிதர் தன் இருகரங்கள் முற்படுத்தியதைக் (கண்கூடாகக்) காணும் நாள்; இன்னும் நிராகரித்தவனோ (அந்நாளில்) "நான் மண்ணாக ஆகியிருக்கவேண்டுமே!" என்று கூறுவான்.

---

அத்தியாயம் : 79

## அந்நாஜிஆத் _ பறிப்பவர்கள்

வசனங்கள் : 46 மக்கீ ருகூஉகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1 (பாவிகளின் உயிர்களை) பலமாகப் பறிப்பவர்(களான மலக்கு)கள் மீது சத்தியமாக_
2. (நல்லோரின் ஆத்மாவை எளிதாகக்) கைப்பற்றுபவர்(களான மலக்கு)கள் மீது சத்தியமாக_
3. அதிவேகமாக நீந்திச் செல்பவர்(களான மலக்கு)களின் மீது சத்தியமாக_
4. (கைப்பற்றிய நல்லோர்களின் உயிர்களை அல்லாஹ்வின் சன்னிதிக்கு எடுத்துச் செல்லப்) போட்டி போட்டுக் கொண்டு முந்திச் செல்வோர்(களான மலக்கு)கள் மீதும் சத்தியமாக_
5. சகல காரியங்களையும் (அல்லாஹ்வின் கட்டளைப்படி) நிர்வகிப்பவர் (களான மலக்கு)கள் மீதும் சத்தியமாக_
6. (முதல் முறை குழல் ஊதப்பட்டபின் பூமியை) கடுமையாக நடுக்கக் கூடியது நடுக்கும் நாளில்_
7. அதனை அடுத்துவரக்கூடியது (இரண்டாவது முறை குழல் ஊதுவது) தொடரும்.
8. அந்நாளில் இதயங்கள் (திடுக்கிட்டு) கலக்கமுடையவையாக இருக்கும்.

اَبْصَارُهَا خَاشِعَةٌ ۹ يَقُوْلُوْنَ ءَاِنَّا لَمَرْدُوْدُوْنَ فِي الْحَافِرَةِ ۱۰ ط وقف لازم
ءَاِذَا كُنَّا عِظَامًا نَّخِرَةً ۱۱ ط قَالُوْا تِلْكَ اِذًا كَرَّةٌ خَاسِرَةٌ ۱۲ م وقف لازم
فَاِنَّمَا هِيَ زَجْرَةٌ وَّاحِدَةٌ ۱۳ لا فَاِذَا هُمْ بِالسَّاهِرَةِ ۱۴ ط هَلْ اَتٰكَ
حَدِيْثُ مُوْسٰى ۱۵ م اِذْ نَادٰىهُ رَبُّهٗ بِالْوَادِ الْمُقَدَّسِ طُوًى ۱۶ ج وقف لازم
اِذْهَبْ اِلٰى فِرْعَوْنَ اِنَّهٗ طَغٰى ۱۷ ز صلے فَقُلْ هَلْ لَّكَ اِلٰٓى اَنْ
تَزَكّٰى ۱۸ لا وَاَهْدِيَكَ اِلٰى رَبِّكَ فَتَخْشٰى ۱۹ ج فَاَرٰىهُ الْاٰيَةَ
الْكُبْرٰى ۲۰ ز صلے فَكَذَّبَ وَعَصٰى ۲۱ ز صلے ثُمَّ اَدْبَرَ يَسْعٰى ۲۲ ز صلے فَحَشَرَ ق
فَنَادٰى ۲۳ ز صلے فَقَالَ اَنَا رَبُّكُمُ الْاَعْلٰى ۲۴ ز صلے فَاَخَذَهُ اللّٰهُ نَكَالَ
الْاٰخِرَةِ وَالْاُوْلٰى ۲۵ ط اِنَّ فِيْ ذٰلِكَ لَعِبْرَةً لِّمَنْ يَّخْشٰى ۲۶ ع ط ءَاَنْتُمْ ع ۱ ۲۶ ۳
اَشَدُّ خَلْقًا اَمِ السَّمَآءُ بَنٰىهَا ۲۷ قف رَفَعَ سَمْكَهَا فَسَوّٰىهَا ۲۸ لا وَ
اَغْطَشَ لَيْلَهَا وَاَخْرَجَ ضُحٰىهَا ۲۹ ص وَالْاَرْضَ بَعْدَ ذٰلِكَ
دَحٰىهَا ۳۰ ط اَخْرَجَ مِنْهَا مَآءَهَا وَمَرْعٰىهَا ۳۱ ص وَالْجِبَالَ اَرْسٰىهَا ۳۲ لا
مَتَاعًا لَّكُمْ وَلِاَنْعَامِكُمْ ۳۳ ط فَاِذَا جَآءَتِ الطَّآمَّةُ الْكُبْرٰى ۳۴ ز صلے
يَوْمَ يَتَذَكَّرُ الْاِنْسَانُ مَا سَعٰى ۳۵ لا وَبُرِّزَتِ الْجَحِيْمُ
لِمَنْ يَّرٰى ۳۶ فَاَمَّا مَنْ طَغٰى ۳۷ لا وَاٰثَرَ الْحَيٰوةَ الدُّنْيَا ۳۸ لا

9. அவைகளின் (அவ்விதயங்களை உடையோரின்) பார்வைகள்(பயத்தால்) கீழ்நோக்கி(தாழ்ந்தவையாக)யிருக்கும்.

10. "நிச்சயமாக நாம் (இறந்த பின்னர் உயிர்ப்பிக்கப்பட்டு) முந்திய நிலைமைக்குத் திருப்பப்படுவோரா?" என்று அவர்கள் கேட்கின்றனர்.

11. "நாம் உக்கிய எலும்புகளாக ஆகிவிட்ட போதிலுமா? (உயிர் கொடுத்து எழுப்பப்படுவோம்?" என்று கேட்கின்றனர்).

12. "அது அப்போது (பெரும்) நஷ்டமான திரும்புதலாகும்" என்றும் அவர்கள் (பரிகாசமாகக்) கூறுகின்றார்கள்.

13. ஆகவே, அது ஒரே ஒரு (பெரும்) சப்தம்தான்_

14. அப்போது அவர்கள் (உயிர் பெற்றெழுந்து) பூமியின் மேல் பரப்பில் இருப்பர்.

15. (நபியே!) மூஸாவுடைய செய்தி உமக்கு வந்ததா?

16. 'துவா' என்னும் பரிசுத்தமான பள்ளத்தாக்கில் அவருடைய இரட்சகன் அவரை அழைத்தபோது_

17. நீர் ஃபிர் அவ்னின் பால் செல்வீராக! நிச்சயமாக அவன் வரம்பு மீறிவிட்டான்.

18. ஆகவே, நீ பரிசுத்தமடைய (ஈமான்கொள்ள) உனக்கு (விருப்பம்) உண்டா? என்று நீர் கேட்பீராக!

19. இன்னும், உன் இரட்சகன் பக்கம் (செல்லும்) வழியினை நான் உனக்கு காட்டுகிறேன்;(அதன்) பின்னர் அவனுக்கு நீ பயந்து கொள்வாய் (என்று கூறுவீராக!)

20. பின்னர், மிகப்பெரும் அத்தாட்சியை அவனுக்கு அவர் காண்பித்தார்.

21. அப்போது அவன், (மூஸாவையும், அவர் கொண்டு வந்ததையும்) பொய்யாக்கினான்;மேலும்,(அவரின் இரட்சகனுக்கு) மாறு செய்தான்.

22. பின்னர் அவன் பின்வாங்கி(அவருக்கு எதிராகக் குழப்பம் செய்ய) முயற்சித்தான்.

23. ஆகவே, அவன் (தன்கூட்டத்தாரை) ஒன்று திரட்டினான், பின்னர் அழைத்தான்.

24. அப்போது, "நான் தான் உங்களுடைய மிக மேலான இரட்சகன்" என்று (அவர்களிடம்) கூறினான்.

25. ஆதலால், அவனை மறுமை மற்றும் இம்மையின் தண்டனையைக்கொண்டு அல்லாஹ் பிடித்துக் கொண்டான்.

26. நிச்சயமாக இதில் (அல்லாஹ்வைப்) பயந்து கொள்கிறவருக்கு ஒரு படிப்பினை இருக்கிறது.

27. படைப்பால் நீங்கள் மிகக்கடினமா(னவர்களா)? அல்லது வானமா? அதனை அவன் படைத்தான்.

28. அதன் முகட்டை அவன் உயர்த்தினான்; பின்னர் அதைச் சமப்படுத்தினான்.

29. அவனே அதன் இரவை இருளாக்கி,(சூரியனைக் கொண்டு பிரகாசிக்கும்) அதன் பகலையும் வெளியாக்கினான்.

30. மேலும், பூமியை_அதன்பின் அவன்_அதை (ஒழுங்குபடுத்தி) விரித்தான்.

31. அதிலிருந்து அதன் தண்ணீரையும், அதன் (மீதுள்ள பிராணிகளுக்கு) மேய்ச்சல் பொருளையும் அவன் வெளியாக்கினான்.

32. மலைகளையும்_அவற்றை அவன் (பூமிக்கு முளைகளாக) உறுதிப் படுத்தினான்_

33. உங்களுக்கும், உங்கள் கால் நடைகளுக்கும் பயனளிப்பதற்காக (அவற்றை இவ்வாறு செய்தான்).

34. எனவே, (இரண்டாவது முறையாக குழல் ஊதப்படுவதான) மாபெரும் அமளிவந்துவிட்டால்_

35. அந்நாளில் மனிதன் (உலகில்) தான் முயன்றவற்றை நினைவுபடுத்திக் கொள்வான்_

36. இன்னும், காண்போருக்கு நரகம் (கண் எதிரில்) வெளிப்படுத்தப்படும்.

37. எனவே, எவர் வரம்பு மீறிவிட்டாரோ_

38. மேலும், இவ்வுலக வாழ்க்கையை தேர்ந்தெடுத்துக் கொண்டாரோ _

فَإِنَّ الْجَحِيمَ هِيَ الْمَأْوَىٰ ۳۹ وَأَمَّا مَنْ خَافَ مَقَامَ رَبِّهِ وَ
نَهَى النَّفْسَ عَنِ الْهَوَىٰ ۴۰ فَإِنَّ الْجَنَّةَ هِيَ الْمَأْوَىٰ ۴۱
يَسْأَلُونَكَ عَنِ السَّاعَةِ أَيَّانَ مُرْسَاهَا ۴۲ فِيمَ أَنْتَ مِنْ ذِكْرَاهَا ۴۳
إِلَىٰ رَبِّكَ مُنْتَهَاهَا ۴۴ إِنَّمَا أَنْتَ مُنْذِرُ مَنْ يَخْشَاهَا ۴۵ كَأَنَّهُمْ
يَوْمَ يَرَوْنَهَا لَمْ يَلْبَثُوا إِلَّا عَشِيَّةً أَوْ ضُحَاهَا ۴۶ ع ٢ ع

سورة عبس مكية وهي اثنتان واربعون آية وفيها ركوع واحد وكذا الخ

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

عَبَسَ وَتَوَلَّىٰ ۱ أَنْ جَاءَهُ الْأَعْمَىٰ ۲ وَمَا يُدْرِيكَ لَعَلَّهُ
يَزَّكَّىٰ ۳ أَوْ يَذَّكَّرُ فَتَنْفَعَهُ الذِّكْرَىٰ ۴ أَمَّا مَنِ اسْتَغْنَىٰ ۵
فَأَنْتَ لَهُ تَصَدَّىٰ ۶ وَمَا عَلَيْكَ أَلَّا يَزَّكَّىٰ ۷ وَأَمَّا مَنْ
جَاءَكَ يَسْعَىٰ ۸ وَهُوَ يَخْشَىٰ ۹ فَأَنْتَ عَنْهُ تَلَهَّىٰ ۱۰ كَلَّا
إِنَّهَا تَذْكِرَةٌ ۱۱ فَمَنْ شَاءَ ذَكَرَهُ ۱۲ فِي صُحُفٍ مُكَرَّمَةٍ ۱۳ وقف لازم
مَرْفُوعَةٍ مُطَهَّرَةٍ ۱۴ بِأَيْدِي سَفَرَةٍ ۱۵ كِرَامٍ بَرَرَةٍ ۱۶
قُتِلَ الْإِنْسَانُ مَا أَكْفَرَهُ ۱۷ مِنْ أَيِّ شَيْءٍ خَلَقَهُ ۱۸
مِنْ نُطْفَةٍ خَلَقَهُ فَقَدَّرَهُ ۱۹ ثُمَّ السَّبِيلَ يَسَّرَهُ ۲۰

39. நிச்சயமாக நரகம், அதுவே(அவர்) ஒதுங்குமிடமாகும்.
40. மேலும், எவர் தன் இரட்சகனின் (சன்னிதியை அவன்) முன் நிற்பதைப் பயந்து, மனோ இச்சையைவிட்டு (தன்) ஆத்மாவைத் தடுத்துக்கொண்டாரோ அவர்_
41 அப்போது நிச்சயமாக சுவனம்_ அதுவே (அவர்) ஒதுங்குமிடமாகும்.
42 (நபியே!) மறுமையைப்பற்றி _ அது எப்பொழுது (வெளிப்பட்டு) நிலைபெறும் என உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர்.
43. அதைப்பற்றிக்கூறுவதற்கு நீர் எதில் இருக்கிறீர்? (அது பற்றிய பதில் உமக்குத் தெரியாது, அல்லாஹ் மட்டுமே அறிவான்).
44. அதன் முடி(வு பற்றிய அறி)வு, உமதிரட்சகனிடமே இருக்கின்றது.
45. நிச்சயமாக நீர் அதைப்பயப்படக்கூடியவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியவர்தான்.
46. அதனை அவர்கள் (கண்ணால்) காணும் நாளில் மாலையிலோ அல்லது அதன் முற்பகலிலோ (ஒரு சொற்ப நேரமே) தவிர தங்கியிருக்காதது போன்று (அவர்களுக்குத் தோன்றும்).

---

அத்தியாயம் : 80

## அபஸ _ அவர் கடுகடுத்தார்

**வசனங்கள் : 42 மக்கீ ருகூஃ : 1**

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1 (நமது நபியாகிய) அவர் கடுகடுத்தார்; மேலும், புறக்கணித்தார்_
2 தன்னிடம் பார்வையிழந்தவர் வந்ததற்காக_
3.(நபியே! உம்மிடம் வந்த) அவர் பரிசுத்தவானாக ஆகிவிடக்கூடும் என்பதைஉமக்கு எது அறிவித்தது?
4.அல்லது அவர் (உம்முடைய உபதேசத்தை) நினைவுபடுத்திக் கொள்பவராகலாம்; அப்போது அவ்வுபதேசம் அவருக்குப்பயனளிக்கும்.
5. ஆகவே, எவன் பொருளாதார மேம்பாடு உடையவனோ_
6. அவனுக்காக நீர் செவிமடுக்கிறீர்.
7. மேலும், அவன் (இஸ்லாத்தை ஏற்காது) பரிசுத்தம் அடையாவிட்டால் உம்மீது குற்றமில்லை.
8. இன்னும், எவர் உம்மிடம் விரைந்தவராக வந்தாரோ அவர்_
9. அவரோ (அல்லாஹ்வைப்) பயந்த நிலையில் (உம்மிடம் வர),
10. அப்போது அவரைவிட்டும் நீர் அசட்டை செய்கிறீர்.
11 அவ்வாறன்று! நிச்சயமாக (குர் ஆனாகிய) இது உபதேசமாகும்.
12 எனவே, எவர் (இதனைக் கொண்டுநேரான வழியில் செல்ல) நாடுகின்றாரோ அவர் இதனை நினைவு கொள்வார்.
13 (இவ்வேதமானது) சங்கையாக்கப்பட்ட ஏடுகளில் (இருக்கிறது).
14. உயர்வாக்கப்பட்ட, பரிசுத்தமாக்கப்பட்ட (ஏடுகளில் இருக்கிறது).
15. (வானவர்களான) எழுதுவோரின் கரங்கள் கொண்டு (எழுதப் படுகின்றது).
16. (அவர்கள்) நல்லோர்களான, சங்கைமிக்கவர்கள் .
17. (காஃபிரான) மனிதன் சபிக்கப்பட்டுவிட்டான்; (நன்றி கெட்டு) அவனை நிராகரிக்கிறவனாக இருக்கச் செய்தது எது?
18. எப்பொருளிலிருந்து (நிராகரிக்கும்) அவனை (அல்லாஹ்வாகிய) அவன் படைத்தான்( என்று சிந்தித்தானா )?
19. ஒரு துளி இந்திரியத்திலிருந்து; அவனை (அல்லாஹ்வாகிய) அவன் படைத்தான்; பின்னர் அவனுக்கு(உரிய அனைத்தையும்) அவன் நிர்ணயித்தான்.
20. அப்பால் அவனுக்கு (விசுவாசம், விசுவாசமின்மை, நல்லவை, கெட்டவை, தாய்வயிற்றிலிருந்து வெளியேறுதல் ஆகியவற்றின்) வழியை அவன் எளிதாக்கினான்.

ثُمَّ اَمَاتَهٗ فَاَقْبَرَهٗ ﴿۲۱﴾ ثُمَّ اِذَا شَآءَ اَنْشَرَهٗ ﴿۲۲﴾ كَلَّا لَمَّا يَقْضِ مَآ
اَمَرَهٗ ﴿۲۳﴾ فَلْيَنْظُرِ الْاِنْسَانُ اِلٰى طَعَامِهٖٓ ﴿۲۴﴾ اَنَّا صَبَبْنَا الْمَآءَ
صَبًّا ﴿۲۵﴾ ثُمَّ شَقَقْنَا الْاَرْضَ شَقًّا ﴿۲۶﴾ فَاَنْۢبَتْنَا فِيْهَا حَبًّا ﴿۲۷﴾ وَّ
عِنَبًا وَّقَضْبًا ﴿۲۸﴾ وَّزَيْتُوْنًا وَّنَخْلًا ﴿۲۹﴾ وَّحَدَآئِقَ غُلْبًا ﴿۳۰﴾ وَّفَاكِهَةً
وَّاَبًّا ﴿۳۱﴾ مَّتَاعًا لَّكُمْ وَلِاَنْعَامِكُمْ ﴿۳۲﴾ فَاِذَا جَآءَتِ الصَّآخَّةُ ﴿۳۳﴾
يَوْمَ يَفِرُّ الْمَرْءُ مِنْ اَخِيْهِ ﴿۳۴﴾ وَاُمِّهٖ وَاَبِيْهِ ﴿۳۵﴾ وَصَاحِبَتِهٖ
وَبَنِيْهِ ﴿۳۶﴾ لِكُلِّ امْرِئٍ مِّنْهُمْ يَوْمَئِذٍ شَاْنٌ يُّغْنِيْهِ ﴿۳۷﴾
وُجُوْهٌ يَّوْمَئِذٍ مُّسْفِرَةٌ ﴿۳۸﴾ ضَاحِكَةٌ مُّسْتَبْشِرَةٌ ﴿۳۹﴾ وَوُجُوْهٌ
يَّوْمَئِذٍ عَلَيْهَا غَبَرَةٌ ﴿۴۰﴾ تَرْهَقُهَا قَتَرَةٌ ﴿۴۱﴾ اُولٰٓئِكَ هُمُ
الْكَفَرَةُ الْفَجَرَةُ ﴿۴۲﴾ ع

## سُوْرَةُ التَّكْوِيْرِ مَكِّيَّةٌ وَّهِيَ تِسْعٌ وَّعِشْرُوْنَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اِذَا الشَّمْسُ كُوِّرَتْ ﴿۱﴾ وَاِذَا النُّجُوْمُ انْكَدَرَتْ ﴿۲﴾ وَاِذَا الْجِبَالُ
سُيِّرَتْ ﴿۳﴾ وَاِذَا الْعِشَارُ عُطِّلَتْ ﴿۴﴾ وَاِذَا الْوُحُوْشُ
حُشِرَتْ ﴿۵﴾ وَاِذَا الْبِحَارُ سُجِّرَتْ ﴿۶﴾ وَاِذَا النُّفُوْسُ زُوِّجَتْ ﴿۷﴾

21. பிறகு, அவனை அவன் மரணிக்கச்செய்தான்; அப்பால் மண்ணறையில் அவனை அவன் ஆக்குகின்றான்.

22. பின்னர் தான் நாடும்போது அவனுக்கு (உயிர் கொடுத்து) அவன் எழுப்புவான்.

23. (கடமையை நிறைவேற்றி விட்டதாக காஃபிரானவன் கூறுவதுபோன்று) அல்ல! (அல்லாஹ்வாகிய) அவன் இவனுக்கு ஏவியதை இவன் நிறைவேற்றவில்லை.

24. ஆகவே, மனிதன் தன்னுடைய உணவின்பால் பார்க்கவும்.

25. (அதை உண்டாக்குவதற்கு) நிச்சயமாக நாமே (வானத்திலிருந்து ஏராளமான) நீரைத் தாராளமாகப் பொழியச் செய்தோம்.

26. பின்னர் பூமியை நன்கு பிளக்கச் செய்தோம்.

27. பின்னர் அதிலிருந்து தானியங்களை முளைக்கச் செய்கின்றோம்.

28. (இவ்வாறே) திராட்சை(க் கனி) களையும், (மற்ற) காய்கறிகளையும்_

29. ஜைத்தூனையும், பேரீச்சையையும்_

30. மரங்கள் அடர்ந்த தோப்புக்களையும் _

31. கனியையும், புல்லை (_தீவனங்களை)யும்_

32. உங்களுக்கும், உங்கள் கால்நடைகளுக்கும் பயனளிப்பதற்காக (முளைக்கச் செய்தோம்).

33. எனவே, (காதைச் செவிடாக்கும்) பயங்கர சப்தம் வந்து விடும்போது_

34. அந்நாளில் மனிதன் தன் சகோதரனை விட்டும் வெருண்டோடுவான்_

35. தன் தாயையும், தன் தந்தையையும் (விட்டு)_

36. தன் மனைவியையும், தன் மக்களையும் (விட்டு வெருண்டோடுவான்_)

37. அந்நாளில், அவர்களில் ஒவ்வொரு மனிதருக்கும் (தன் சுற்றத்தாரை விட்டும்) அவரைத்திருப்பிவிடும் ஒரு காரியம் உண்டு.

38. (எனினும்,) அந்நாளில் சில முகங்கள் பிரகாசமுள்ளவையாக (இருக்கும்.)

39. சிரித்தவையாக, மகிழ்வுடையவையாக (இருக்கும்)_

40. இன்னும், சில முகங்கள்_அவற்றின் மீது அந்நாளில் புழுதி படிந்திருக்கும்.

41. (துக்கத்தால்) கருமை இருள் அவற்றை மூடியிருக்கும்_

42. அவர்கள் தாம் (இதயத்தால்) நிராகரித்தவர்கள்; (அவர்களின் செயல்களால்) பாவிகள்.

அத்தியாயம் : 81

## அத்தக்வீர் _ சுருட்டுதல்

வசனங்கள் : 29 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. சூரியன் (ஒளி நீக்கப்பட்டுச்) சுருட்டப்பட்டுவிடும் போது_

2. நட்சத்திரங்களும் (ஒளியிழந்து) உதிர்ந்துவிடும்போது_

3. மலைகளும் (பூமியிலிருந்து) பெயர்க்கப்பட்டு விடும்போது_

4. பத்துமாத நிறைகர்ப்பமுடைய ஒட்டகங்களும் கவனிப்பாரற்று (அலைய) விடப்படும்போது_

5. வனவிலங்குகளும் (ஊர்களுக்குள் வந்து) ஒன்று திரட்டப்படும்போது_

6. கடல்களும் தீ மூட்டப்படும் போது_

7. உயிர்களும் ஒன்று சேர்க்கப்படும்போது_

وَاِذَا الْمَوْءٗدَةُ سُئِلَتْ ﴿۸﴾ بِاَیِّ ذَنْۢبٍ قُتِلَتْ ﴿۹﴾ وَاِذَا الصُّحُفُ
نُشِرَتْ ﴿۱۰﴾ وَاِذَا السَّمَآءُ كُشِطَتْ ﴿۱۱﴾ وَاِذَا الْجَحِیْمُ سُعِّرَتْ ﴿۱۲﴾
وَاِذَا الْجَنَّةُ اُزْلِفَتْ ﴿۱۳﴾ عَلِمَتْ نَفْسٌ مَّاۤ اَحْضَرَتْ ﴿۱۴﴾ فَلَاۤ
اُقْسِمُ بِالْخُنَّسِ ﴿۱۵﴾ الْجَوَارِ الْكُنَّسِ ﴿۱۶﴾ وَالَّیْلِ اِذَا عَسْعَسَ ﴿۱۷﴾
وَالصُّبْحِ اِذَا تَنَفَّسَ ﴿۱۸﴾ اِنَّهٗ لَقَوْلُ رَسُوْلٍ كَرِیْمٍ ﴿۱۹﴾ ذِیْ
قُوَّةٍ عِنْدَ ذِی الْعَرْشِ مَكِیْنٍ ﴿۲۰﴾ مُّطَاعٍ ثَمَّ اَمِیْنٍ ﴿۲۱﴾ وَ
مَا صَاحِبُكُمْ بِمَجْنُوْنٍ ﴿۲۲﴾ وَلَقَدْ رَاٰهُ بِالْاُفُقِ الْمُبِیْنِ ﴿۲۳﴾
وَمَا هُوَ عَلَى الْغَیْبِ بِضَنِیْنٍ ﴿۲۴﴾ وَمَا هُوَ بِقَوْلِ شَیْطٰنٍ
رَّجِیْمٍ ﴿۲۵﴾ فَاَیْنَ تَذْهَبُوْنَ ﴿۲۶﴾ اِنْ هُوَ اِلَّا ذِكْرٌ لِّلْعٰلَمِیْنَ ﴿۲۷﴾
لِمَنْ شَآءَ مِنْكُمْ اَنْ یَّسْتَقِیْمَ ﴿۲۸﴾ وَمَا تَشَآءُوْنَ اِلَّاۤ اَنْ
یَّشَآءَ اللّٰهُ رَبُّ الْعٰلَمِیْنَ ﴿۲۹﴾ ع ۱ ۹ ۶

## سُوْرَةُ الْاِنْفِطَارِ مَكِّيَّةٌ وَّهِيَ تِسْعَ عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ○

اِذَا السَّمَآءُ انْفَطَرَتْ ﴿۱﴾ وَاِذَا الْكَوَاكِبُ انْتَثَرَتْ ﴿۲﴾ وَاِذَا الْبِحَارُ
فُجِّرَتْ ﴿۳﴾ وَاِذَا الْقُبُوْرُ بُعْثِرَتْ ﴿۴﴾ عَلِمَتْ نَفْسٌ مَّا قَدَّمَتْ وَاَخَّرَتْ ﴿۵﴾

8. உயிருடன் புதைக்கப்பட்ட (பெண் குழந்தையான) வளும் வினவப்படும்போது_
9. எக்குற்றத்திற்காக அவள் கொல்லப்பட்டாள் (என்று வினவப்படும் போது)_
10. (விசாரணைக்காக மனிதர்களுடைய ) பதிவுப் புத்தகங்களும் விரிக்கப்படும்போது_
11. வானமும் (பிளந்து) அகற்றப்படும்போது_
12. நரகமும் கடுமையாக எரிக்கப்படும்போது_
13. சுவனமும் (பயபக்தியுடையோருக்காக அலங்கரிக்கப்பட்டு ) சமீபமாகக் கொண்டுவரப்படும்போது_
14. ஒவ்வோர் ஆத்மாவும் தான் (உலகில் செய்து) கொண்டுவந்ததை நன்கறிந்து கொள்ளும்.
15. (மனிதர்களே! நட்சத்திரங்களில்) பின் சென்று விலகக் கூடியவற்றைக் கொண்டு நான் சத்தியம் செய்கிறேன்.
16. (அவை) செல்கின்றவை; மறையக்கூடியவை.
17. இரவின் மீதும் சத்தியமாக! அது பின்னோக்கிச் சென்றுவிடும்போது_
18. காலையின் மீதும் சத்தியமாக! அது (வெளிப்பட்டு, அதன் ஒளி) தெளிவாகிவிடும்போது_
19. நிச்சயமாக (குர்ஆன் என்னும்) இது, மிக்க கண்ணியமுள்ள ( ஜிப்ரீல் என்னும் ) ஒரு தூதரின் (மூலம் அனுப்பப்பட்ட ) கூற்றாகும்.
20. அவர் மிக்க சக்தியுடையவர்; அர்ஷுக்குரியவனிடம் பெரும் பதவியுடையவர்.
21. (வானுலகமான) அங்கு (மலக்குகளால்) கீழ்ப்படியப்படுபவர்; மிக்க நம்பிக்கைக்குரியவர்.
22. (மக்கா வாசிகளே! நம்முடைய தூதராகிய) உங்களுடைய தோழர் பைத்தியக்காரருமல்லர்.
23. மேலும், திட்டமாக (ஜிப்ரீலாகிய) அவரைத் தெளிவான அடிவானத்தில் அவர் கண்டார்.
24. அவர், (அவருக்கு வானிலிருந்து அறிவிக்கப்படும்) மறைவானவற்றின்மீது உலோபத்தனம் செய்பவருமல்லர்.
25. இது விரட்டப்பட்ட ஷைத்தானின் சொல்லும் அல்ல.
26. ஆகவே, ( இதனை ஒதுக்கிவிட்டு) நீங்கள் எங்கு செல்கிறீர்கள்?
27. இது அகிலத்தார்க்கெல்லாம் உபதேசமேயன்றி வேறில்லை.
28. உங்களில் (நேர் வழியில்) நிலைத்திருக்க நாடுகிறவருக்கு (இது ஒரு அறிவுரையாகும்).
29. இன்னும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் நாடினாலன்றி, நீங்கள் (நல்லறிவுபெற) நாடமாட்டீர்கள்.

---

அத்தியாயம் : 82

## அல் இன்ஃபிதார் _ வெடித்துப்போகுதல்

**வசனங்கள் : 19 மக்கீ ருகூஃ : 1**

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. வானம் வெடித்து விடும்போது_
2. நட்சத்திரங்களும் உதிர்ந்து (சிதறி) விடும்போது_
3. கடல்களும் பொங்கவைக்கப்பட்டு ( அவைகளுக்கு மத்தியிலுள்ள திரைகள் அகற்றப்பட்டு ஒன்றாகி)விடும்போது_
4. மண்ணறைகளும் மேலும் கீழுமாக புரட்டப்பட்டு (அவற்றிலுள்ள இறப்பெய்தியோரை வெளியேற்றப்பட்டு)விடும்போது_
5. ஒவ்வோர் ஆத்மாவும், ( மறுமைக்காக ) தான் முற்படுத்தியதையும் பிற்படுத்தியதையும் நன்கறிந்து கொள்ளும்.

يٰۤاَيُّهَا الْاِنْسَانُ مَا غَرَّكَ بِرَبِّكَ الْكَرِيْمِ ﴿٦﴾ الَّذِيْ خَلَقَكَ
فَسَوّٰىكَ فَعَدَلَكَ ﴿٧﴾ فِيْۤ اَيِّ صُوْرَةٍ مَّا شَآءَ رَكَّبَكَ ﴿٨﴾ كَلَّا بَلْ
تُكَذِّبُوْنَ بِالدِّيْنِ ﴿٩﴾ وَاِنَّ عَلَيْكُمْ لَحٰفِظِيْنَ ﴿١٠﴾ كِرَامًا كَاتِبِيْنَ ﴿١١﴾
يَعْلَمُوْنَ مَا تَفْعَلُوْنَ ﴿١٢﴾ اِنَّ الْاَبْرَارَ لَفِيْ نَعِيْمٍ ﴿١٣﴾ وَّاِنَّ
الْفُجَّارَ لَفِيْ جَحِيْمٍ ﴿١٤﴾ يَّصْلَوْنَهَا يَوْمَ الدِّيْنِ ﴿١٥﴾ وَمَا هُمْ
عَنْهَا بِغَآئِبِيْنَ ﴿١٦﴾ وَمَاۤ اَدْرٰىكَ مَا يَوْمُ الدِّيْنِ ﴿١٧﴾ ثُمَّ مَاۤ
اَدْرٰىكَ مَا يَوْمُ الدِّيْنِ ﴿١٨﴾ يَوْمَ لَا تَمْلِكُ نَفْسٌ لِّنَفْسٍ
شَيْـًٔا ؕ وَالْاَمْرُ يَوْمَئِذٍ لِّلّٰهِ ﴿١٩﴾ ع ١٩

## سُوْرَةُ الْمُطَفِّفِيْنَ مَكِّيَّةٌ وَّهِيَ سِتٌّ وَّثَلٰثُوْنَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

وَيْلٌ لِّلْمُطَفِّفِيْنَ ﴿١﴾ الَّذِيْنَ اِذَا اكْتَالُوْا عَلَى النَّاسِ يَسْتَوْفُوْنَ ﴿٢﴾
وَاِذَا كَالُوْهُمْ اَوْ وَّزَنُوْهُمْ يُخْسِرُوْنَ ﴿٣﴾ اَلَا يَظُنُّ اُولٰٓئِكَ اَنَّهُمْ
مَّبْعُوْثُوْنَ ﴿٤﴾ لِيَوْمٍ عَظِيْمٍ ﴿٥﴾ يَّوْمَ يَقُوْمُ النَّاسُ لِرَبِّ
الْعٰلَمِيْنَ ﴿٦﴾ كَلَّاۤ اِنَّ كِتٰبَ الْفُجَّارِ لَفِيْ سِجِّيْنٍ ﴿٧﴾ وَمَاۤ اَدْرٰىكَ
مَا سِجِّيْنٌ ﴿٨﴾ كِتٰبٌ مَّرْقُوْمٌ ﴿٩﴾ وَيْلٌ يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ﴿١٠﴾

6. மனிதனே! கொடையாளனாகிய உமதிரட்சகனுக்கு மாறு செய்ய உன்னை ஏமாற்றியது எது?
7. (உமதிரட்சகனாகிய)அவன் எத்தகையவனென்றால், உன்னை (ஒரு துளி விந்திலிருந்து)ப் படைத்து, பின்னர் உன்னை ஒழுங்காக அமைத்து, (உன் தோற்றத்தை) சரியாக ஆக்கினான்.
8. எந்த வடிவத்தில் அவன் நாடினானோ (அதில்) உன்னைப் பொருத்தினான்.
9. அன்று! எனினும் கூலி கொடுக்கப்படும் (மறுமை) நாளை நீங்கள் பொய்யாக்குகின்றீர்கள்.
10. நிச்சயமாக உங்கள் மீது பாதுகாவலர்களும் (நியமிக்கப்பட்டு) இருக்கின்றனர்.
11. அவர்கள் (மலக்குகளிலுள்ள) கண்ணியமான எழுத்தாளர்கள்.
12. நீங்கள் செய்பவற்றை அவர்கள் அறிந்து (எழுதிக்)கொள்வார்கள்.
13. நிச்சயமாக நல்லோர் சுகபோகத்தில் இருப்பார்கள்.
14. இன்னும், நிச்சயமாக தீயோர் நரகத்தில் இருப்பார்கள்.
15. கூலி கொடுக்கப்படும் நாளில் அதில் அவர்கள் நுழைவார்கள்.
16. அவர்கள் அதிலிருந்து மறைந்து (தப்பி) விடக்கூடியவர்களுமல்லர்.
17. (நபியே!) கூலி கொடுக்கப்படும் நாள் என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
18. பின்னும் கூலி கொடுக்கப்படும் நாள் என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
19. (அந்நாள் தான்) எந்த ஆத்மாவும் (பிறிதோர்) ஆத்மாவுக்கு எதையும் செய்ய சக்தி பெறாதநாள்; இன்னும் அதிகாரம் (முழுவதும்) அன்றையத் தினத்தில் அல்லாஹ்வுக்கே உரியது.

---

அத்தியாயம் : 83

## அல் முதஃப்ஃபிஃபீன் _ அளவு, எடைகளில் குறைப்பவர்கள்

வசனங்கள் : 36 மக்கீ ருகூஃ : 1

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. (அளவையிலும், எடையிலும் மோசம் செய்து) குறைக்கக்கூடியவர்களுக்குக் கேடு உண்டாவதாக!
2. அவர்கள் எத்தகையோரென்றால், (தங்களுக்காக) மனிதர்களிடமிருந்து அளந்து வாங்கினால், நிறைவாக (அளந்து) வாங்கிக் கொள்கின்றனர்.
3. (ஆனால்) தாங்கள் அவர்களுக்கு (_மற்ற மனிதர்களுக்கு)அளந்து கொடுத்தாலும், அல்லது அவர்களுக்கு நிறுத்துக் கொடுத்தாலும் (குறைத்து மோசடி செய்து அவர்களை) நஷ்டப்படுத்தி விடுகின்றனர்.
4. அத்தகையோர் _ நிச்சயமாக, தாம் (மறுமையில் உயிர் கொடுத்து) எழுப்பப்படுபவர்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லையா?
5. மகத்தான ஒரு நாளைக்காக_
6. (அந்நாளோ) அகிலத்தாரின் இரட்சகன் முன்னிலையில் மனிதர்கள் நிற்கும் நாள்.
7. (தீயோர்கள் எண்ணுவது போல்) அல்ல! நிச்சயமாக (தீயோர்களான) பாவிகளின் (பதிவுப்) புத்தகம் ஸிஜ்ஜீனில் இருக்கிறது.
8. (நபியே!) ஸிஜ்ஜீன் என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
9. (பாவிகளின் செயல்கள்) எழுதப்பட்ட புத்தகமாகும்.
10. பொய்யாக்குபவருக்கு அந்நாளில் கேடுதான்!

الَّذِيْنَ يُكَذِّبُوْنَ بِيَوْمِ الدِّيْنِ ﴿۱۱﴾ وَمَا يُكَذِّبُ بِهٖٓ اِلَّا كُلُّ
مُعْتَدٍ اَثِيْمٍ ﴿۱۲﴾ اِذَا تُتْلٰى عَلَيْهِ اٰيٰتُنَا قَالَ اَسَاطِيْرُ
الْاَوَّلِيْنَ ﴿۱۳﴾ كَلَّا بَلْ ۜ رَانَ عَلٰى قُلُوْبِهِمْ مَّا كَانُوْا يَكْسِبُوْنَ ﴿۱۴﴾
كَلَّآ اِنَّهُمْ عَنْ رَّبِّهِمْ يَوْمَىِٕذٍ لَّمَحْجُوْبُوْنَ ﴿۱۵﴾ ثُمَّ اِنَّهُمْ
لَصَالُوا الْجَحِيْمِ ﴿۱۶﴾ ثُمَّ يُقَالُ هٰذَا الَّذِيْ كُنْتُمْ بِهٖ تُكَذِّبُوْنَ ﴿۱۷﴾
كَلَّآ اِنَّ كِتٰبَ الْاَبْرَارِ لَفِيْ عِلِّيِّيْنَ ﴿۱۸﴾ وَمَآ اَدْرٰىكَ مَا عِلِّيُّوْنَ ﴿۱۹﴾
كِتٰبٌ مَّرْقُوْمٌ ﴿۲۰﴾ يَّشْهَدُهُ الْمُقَرَّبُوْنَ ﴿۲۱﴾ اِنَّ الْاَبْرَارَ لَفِيْ
نَعِيْمٍ ﴿۲۲﴾ عَلَى الْاَرَآئِكِ يَنْظُرُوْنَ ﴿۲۳﴾ تَعْرِفُ فِيْ وُجُوْهِهِمْ
نَضْرَةَ النَّعِيْمِ ﴿۲۴﴾ يُسْقَوْنَ مِنْ رَّحِيْقٍ مَّخْتُوْمٍ ﴿۲۵﴾ خِتٰمُهٗ
مِسْكٌ ۭ وَفِيْ ذٰلِكَ فَلْيَتَنَافَسِ الْمُتَنٰفِسُوْنَ ﴿۲۶﴾ وَ
مِزَاجُهٗ مِنْ تَسْنِيْمٍ ﴿۲۷﴾ عَيْنًا يَّشْرَبُ بِهَا الْمُقَرَّبُوْنَ ﴿۲۸﴾
اِنَّ الَّذِيْنَ اَجْرَمُوْا كَانُوْا مِنَ الَّذِيْنَ اٰمَنُوْا يَضْحَكُوْنَ ﴿۲۹﴾
وَاِذَا مَرُّوْا بِهِمْ يَتَغَامَزُوْنَ ﴿۳۰﴾ وَاِذَا انْقَلَبُوْٓا اِلٰٓى
اَهْلِهِمُ انْقَلَبُوْا فَكِهِيْنَ ﴿۳۱﴾ وَاِذَا رَاَوْهُمْ قَالُوْٓا اِنَّ
هٰٓؤُلَاۗءِ لَضَاۗلُّوْنَ ﴿۳۲﴾ وَمَآ اُرْسِلُوْا عَلَيْهِمْ حٰفِظِيْنَ ﴿۳۳﴾

11. அவர்கள் எத்தகையோரென்றால், கூலிகொடுக்கப்படும் நாளைப் பொய்யாக்குகின்றனர்.

12. வரம்பு மீறிய பாவியான ஒவ்வொருவனையும் தவிர (மற்றெவனும்) அதனைப் பொய்யாக்கமாட்டான்.

13. அவனுக்கு நம்முடைய வசனங்கள் ஓதிக்காண்பிக்கப்பட்டால், (இது) முன்னோர்களின் கட்டுக் கதைகள் என அவன் கூறுகின்றான்.

14. அவ்வாறன்று! பின்னர் அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தவை அவர்களின் இதயங்களின் மீது துருவாகப்படிந்துவிட்டன (ஆதலால் தான், இவ்வாறு கூறுகின்றனர்).

15. (காஃபிர்கள் தங்களுக்கு இரட்சகனிடம் நெருக்கமிருப்பதாகக் கூறிக் கொண்டிருந்தார்களே அது) அவ்வாறல்ல! (விசாரணைக்காகக் கொண்டு வரப்படும்) அந்நாளில் நிச்சயமாக அவர்கள் தங்களுடைய இரட்சகனை (ப்பார்ப்பதை) விட்டும் மறைக்கப்பட்டவர்களாவர்.

16. பின்னர், நிச்சயமாக அவர்கள் நரகத்தில் நுழையக்கூடியவர்கள் (ஆவர்).

17. பின்னர், (அவர்களிடம்) "எதை நீங்கள் பொய்யாக்கிக் கொண்டிருந்தீர்களோ, அது இது தான்" என்று கூறப்படும்.

18. (நல்லோர், தீயோர் ஆகியோரின் முடிவு ஒன்று போல்) அல்ல! நிச்சயமாக நன்மை செய்தோரின் பதிவேடு 'இல்லிய்யூன்' என்ற இடத்தில் இருக்கும்.

19. (நபியே!) 'இல்லிய்யூன்' என்றால் என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது?

20. (அது நல்லோர்களின் செயல்கள்) பதியப்பட்ட புத்தகம்.

21. (அல்லாஹ்விடம்) நெருக்கமான(வான)வர்கள் அதனைப்பார்ப்பார்கள்.

22. நிச்சயமாக நல்லோர்கள் நயீமில் (சுவனபதிகளின் மகிழ்ச்சியான வாழ்க்கையில்) இருப்பர்.

23. (உயர்ந்த) சாய்வு இருக்கைகளின் மீது (இருந்தவாறு சுவனத்தின் காட்சி களைப்) பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

24. அவர்கள் முகங்களில் சுகபோகத்தின் செழிப்பை (நபியே!) நீர் அறிந்துகொள்வீர்.

25. முத்திரையிடப்பட்ட கலப்பற்ற மதுவிலிருந்து அவர்கள் புகட்டப் படுவார்கள்.

26. அதன் முத்திரை கஸ்தூரியினால் ஆனதாகும்; (ஆகவே) இன்னும் (நல்லறங்கள் செய்து) அதற்கு முந்திக் கொள்பவர்கள் முந்திக் கொள்ளட்டும்.

27. இன்னும், அதன் கலவை (உயரத்திலிருந்து ஊற்றப்படும் சிறந்த நீரான) தஸ்னீம் (எனும் சுனை நீர்) ஆகும்.

28. (தஸ்னீம் எனும்) நீர் ஊற்றை_(அல்லாஹ்வுக்கு) நெருக்கமானவர்கள் அதனைப் பருகுவார்கள்.

29. நிச்சயமாக குற்றமிழைத்தவர்கள், (உலகில்) விசுவாசங்கொண்டவர்களைக் கண்டு (ஏளனமாகச்) சிரிப்பவர்களாக இருந்தனர்.

30. அவர்கள் பக்கமாகச் சென்றால், (பரிகாசமாகத் தங்களுக்குள்) ஒருவருக் கொருவர் கண்சாடை காட்டிக்கொள்ளவும் செய்வார்கள்.

31. மேலும், தங்கள் குடும்பத்தார்பால் திரும்பிச் செல்வார்களாயின் (தாங்கள் செய்ததைப்பற்றி) மகிழ்ச்சியடைந்தவர்களாகத் திரும்புகின்றனர்.

32. (விசுவாசிகளாகிய) அவர்களை இவர்கள் பார்த்தால் "நிச்சயமாக இவர்கள் வழி தவறியவர்கள்" என்றும் கூறுகின்றனர்.

33. மேலும், (விசுவாசிகளான) அவர்கள் மீது (காஃபிர்களான) இவர்கள் பாதுகாப்பாளர்களாக அனுப்பப் படவில்லை.

فَالْيَوْمَ الَّذِيْنَ اٰمَنُوْا مِنَ الْكُفَّارِ يَضْحَكُوْنَ ﴿۳۴﴾ عَلَى
الْاَرَآئِكِ يَنْظُرُوْنَ ﴿۳۵﴾ هَلْ ثُوِّبَ الْكُفَّارُ مَا كَانُوْا يَفْعَلُوْنَ ﴿۳۶﴾ ع ۸

سُوْرَةُ الْاِنْشِقَاقِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسٌ وَّعِشْرُوْنَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اِذَا السَّمَآءُ انْشَقَّتْ ﴿۱﴾ وَاَذِنَتْ لِرَبِّهَا وَحُقَّتْ ﴿۲﴾ وَاِذَا
الْاَرْضُ مُدَّتْ ﴿۳﴾ وَاَلْقَتْ مَا فِيْهَا وَتَخَلَّتْ ﴿۴﴾ وَاَذِنَتْ
لِرَبِّهَا وَحُقَّتْ ﴿۵﴾ يٰۤاَيُّهَا الْاِنْسَانُ اِنَّكَ كَادِحٌ اِلٰى رَبِّكَ
كَدْحًا فَمُلٰقِيْهِ ﴿۶﴾ فَاَمَّا مَنْ اُوْتِيَ كِتٰبَهٗ بِيَمِيْنِهٖ ﴿۷﴾
فَسَوْفَ يُحَاسَبُ حِسَابًا يَّسِيْرًا ﴿۸﴾ وَّيَنْقَلِبُ اِلٰۤى اَهْلِهٖ
مَسْرُوْرًا ﴿۹﴾ وَاَمَّا مَنْ اُوْتِيَ كِتٰبَهٗ وَرَآءَ ظَهْرِهٖ ﴿۱۰﴾ فَسَوْفَ
يَدْعُوْا ثُبُوْرًا ﴿۱۱﴾ وَّيَصْلٰى سَعِيْرًا ﴿۱۲﴾ اِنَّهٗ كَانَ فِيْۤ اَهْلِهٖ
مَسْرُوْرًا ﴿۱۳﴾ اِنَّهٗ ظَنَّ اَنْ لَّنْ يَّحُوْرَ ﴿۱۴﴾ بَلٰۤى ۚ اِنَّ رَبَّهٗ
كَانَ بِهٖ بَصِيْرًا ﴿۱۵﴾ فَلَاۤ اُقْسِمُ بِالشَّفَقِ ﴿۱۶﴾ وَالَّيْلِ وَمَا
وَسَقَ ﴿۱۷﴾ وَالْقَمَرِ اِذَا اتَّسَقَ ﴿۱۸﴾ لَتَرْكَبُنَّ طَبَقًا عَنْ طَبَقٍ ﴿۱۹﴾ فَمَا
لَهُمْ لَا يُؤْمِنُوْنَ ﴿۲۰﴾ وَاِذَا قُرِئَ عَلَيْهِمُ الْقُرْاٰنُ لَا يَسْجُدُوْنَ ﴿۲۱﴾ السجدة

معانقة ۱۰ عند المتاخرین ۱۱

السجدة ۱۳

34. ஆனால் (மறுமை நாளாகிய) இன்றையத்தினம் விசுவாசங் கொண்டவர்கள் அந்நிராகரிப்போரைக்கண்டு சிரிப்பார்கள்.

35. (சுவனபதியிலுள்ள உயர்தரமான) சாய்வு இருக்கைகள்மீது இருந்து (கொண்டு, தீயவர்கள் படும் வேதனையைப்) பார்ப்பார்கள்.

36. (மறுமையை) நிராகரித்தோர், அவர்கள் செய்துகொண்டிருந்தவைக்கு(த்தக்க) கூலி கொடுக்கப்பட்டார்களா? (என்றும் பார்ப்பார்கள்.)

---

அத்தியாயம் : 84

## அல்இன்ஷிகாக் _ பிளந்து விடுதல்

வசனங்கள் : 25 மக்கீ ருகூஉ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. வானம் பிளந்து விடும்போது_

2. அது (பிளந்து விடவேண்டுமெனும்)தன் இரட்சகனின் கட்டளைக்குச் செவிசாய்த்தும் விட்டது;(அவ்வாறு செவிசாய்ப்பது) அதற்குக் கடமையாகவும் ஆக்கப்பட்டுவிட்டது.

3. பூமியும் (நீண்டதாக) விரிக்கப்பட்டுவிடும்போது_

4. அது தன்னுள்ளிருப்பதையும் வெளிப்படுத்தி அது வெறுமையாகியும் விடும்போது_

5. அது(தன்னுள்ளிருப்பதைவெளிப்படுத்திவிடவேண்டுமெனும்) தன் இரட்சகனின் கட்டளைக்குச் செவிசாய்த்தும்விட்டது; (அவ்வாறு செய்வது)அதற்குக் கடமையாகவும் ஆக்கப்பட்டுவிட்டபோது_

6. மனிதனே! நீ உன் இரட்சகனிடம் செல்லும் வரையில் (நன்மையோ, தீமையோ பல வேலைகளில் ஈடுபட்டு) கஷ்டத்துடன் முயற்சிசெய்துகொண்டே இருக்கின்றாய்; பின்னர் (மறுமையில்)அவனை நீ சந்திக்கிறவனாக இருக்கிறாய்.

7. எனவே, (அந்நாளில்)எவர் அவருடைய பதிவுப்புத்தகத்தை அவருடைய வலக்கையில் கொடுக்கப்பட்டாரோ_

8. அவர் மிக்க இலகுவான (கேள்வி )கணக்காக கணக்குக் கேட்கப்படுவார்.

9. இன்னும், அவர் மகிழ்ச்சியுடன் (சுவனத்திலுள்ள) தன்னுடைய குடும்பத்தாரிடம் திரும்புவார்.

10. மேலும், எவர்_அவருடைய பதிவுப்புத்தகத்தை அவருடைய முதுகுக்குப்பின்னால் கொடுக்கப்பட்டாரோ_

11. அவர் (தனக்குக்கேடுதான் என்று கூறி) அழிவை(யே)அழைப்பார்.

12. நரகத்திலும் அவர் நுழைவார்.

13. (ஏனென்றால்,) நிச்சயமாக அவர் (இம்மையில்) தன் குடும்பத்தாருடன் மிக்க ஆனந்தமாக இருந்தார்.

14. நிச்சயமாக அவர், (தன் இரட்சகனின்பால்) மீளவேமாட்டார் என்று எண்ணிக் கொண்டிருந்தார்.

15. ஆம்! (அவர் மீளத்தான் போகிறார்) நிச்சயமாக அவருடைய இரட்சகன் அவரைப் பார்க்கக்கூடியவனாக இருந்தான்.

16. அந்திநேரத்துச் செவ்வானத்தின் மீது நான் சத்தியம் செய்கிறேன்_

17. இரவின் மீதும், அது அணைத்துக்கொண்டிருப்பவற்றின் மீதும் (சத்தியம் செய்கிறேன்).

18. சந்திரன் மீதும்_அது பூரணமாகிவிட்டபோது (ம் சத்தியம் செய்கிறேன் )

19. (ஒரு நிலைமையிலிருந்து மற்றொரு நிலைமைக்கு) நிச்சயமாக நீங்கள் படிப்படியாக ஏறிச் செல்வீர்கள்.

20. ஆகவே, (இதனை மறுத்துக்கொண்டிருக்கும்) அவர்களுக்கு என்ன (நேர்ந்தது)? அவர்கள் நம்புவதில்லை.

21. மேலும், அவர்களுக்கு (இந்தக்) குர்ஆன் ஓதிக் காண்பிக்கப்பட்டால் (அல்லாஹ்விற்கு) அவர்கள் சிரம் பணி(ந்து ஸுஜூது செய்)வதில்லை.

بَلِ الَّذِيْنَ كَفَرُوْا يُكَذِّبُوْنَ ﴿٢٢﴾ وَاللّٰهُ اَعْلَمُ بِمَا يُوْعُوْنَ ﴿٢٣﴾
فَبَشِّرْهُمْ بِعَذَابٍ اَلِيْمٍ ﴿٢٤﴾ اِلَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا
الصّٰلِحٰتِ لَهُمْ اَجْرٌ غَيْرُ مَمْنُوْنٍ ﴿٢٥﴾ ع

ع ١ ٩ ٥

## سُوْرَةُ الْبُرُوْجِ مَكِّيَّةٌ وَّهِيَ اثْنَتَانِ وَعِشْرُوْنَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

وَالسَّمَآءِ ذَاتِ الْبُرُوْجِ ﴿١﴾ وَالْيَوْمِ الْمَوْعُوْدِ ﴿٢﴾ وَشَاهِدٍ
وَّمَشْهُوْدٍ ﴿٣﴾ قُتِلَ اَصْحٰبُ الْاُخْدُوْدِ ﴿٤﴾ النَّارِ ذَاتِ
الْوَقُوْدِ ﴿٥﴾ اِذْ هُمْ عَلَيْهَا قُعُوْدٌ ﴿٦﴾ وَّهُمْ عَلٰى مَا يَفْعَلُوْنَ
بِالْمُؤْمِنِيْنَ شُهُوْدٌ ﴿٧﴾ وَمَا نَقَمُوْا مِنْهُمْ اِلَّآ اَنْ يُّؤْمِنُوْا بِاللّٰهِ
الْعَزِيْزِ الْحَمِيْدِ ﴿٨﴾ الَّذِيْ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ وَ
اللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ شَهِيْدٌ ﴿٩﴾ اِنَّ الَّذِيْنَ فَتَنُوا الْمُؤْمِنِيْنَ وَ
الْمُؤْمِنٰتِ ثُمَّ لَمْ يَتُوْبُوْا فَلَهُمْ عَذَابُ جَهَنَّمَ وَلَهُمْ عَذَابُ
الْحَرِيْقِ ﴿١٠﴾ اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَهُمْ جَنّٰتٌ
تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۚ ذٰلِكَ الْفَوْزُ الْكَبِيْرُ ﴿١١﴾ اِنَّ
بَطْشَ رَبِّكَ لَشَدِيْدٌ ﴿١٢﴾ اِنَّهٗ هُوَ يُبْدِئُ وَيُعِيْدُ ﴿١٣﴾

22. அன்றியும், நிராகரிப்போர் (இந்தக் குர்ஆனையே) பொய்யாக்குகின்றனர்.

23. இன்னும், அவர்கள் (தங்கள் மனங்களில் சேகரித்து) மறைத்து வைத்திருப்பவைகளை அல்லாஹ் நன்கறிந்தேயிருக்கின்றான்.

24. ஆகவே, (நபியே!) துன்புறுத்தும் வேதனையைக்கொண்டு அவர்களுக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக!

25. விசுவாசங் கொண்டு நற் கருமங்களும் செய்தார்களே அத்தகையவர்களைத் தவிர; அவர்களுக்கு முடிவுறாத (நற்) கூலியுண்டு.

---

அத்தியாயம் : 85

## அல் புரூஜ் — கிரகங்கள்

வசனங்கள் : 22 மக்கீ ருகூஉ : 1

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. கிரகங்களுடைய வானின்மீது சத்தியமாக!

2. வாக்களிக்கப்பட்ட (மறுமை) நாளின் மீதும் சத்தியமாக!

3. சாட்சியாளர் மீதும், சாட்சி சொல்லப்படுகின்றவற்றின் மீதும் சத்தியமாக!

4. (நெருப்புக்) குண்டங்களையுடையோர் சபிக்கப்பட்டுவிட்டனர்.

5. எரிபொருளுடைய (பெரும்) நெருப்பு(க் குண்டம்).

6. அதன்மேல் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்த போது (சபிக்கப்பட்டு விட்டனர்),

7. விசுவாசிகளை அவர்கள் (நெருப்புக்குண்டத்தில் போட்டு வேதனை) செய்ததற்கு (அவர்களே) சாட்சியாளர்கள்.

8. (யாவரையும்) மிகைத்தோன், மிக்க புகழுக்குரியோனாகிய அல்லாஹ்வை அவர்கள் விசுவாசித்ததற்காகவே தவிர (வேறு எதற்கும் விசுவாசிகளான) அவர்களை அவர்கள் பழிவாங்கவில்லை.

9. அவன் எத்தகையவனென்றால் வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அவனுக்கே உரியது; அல்லாஹ்வோ ஒவ்வொரு பொருளின்மீதும் சாட்சியாளன்.

10. (ஆகவே,) நிச்சயமாக விசுவாசங்கொண்ட ஆண்களையும், விசுவாசங் கொண்ட பெண்களையும் (இவ்வாறு) துன்புறுத்திப் பின்னர், அவர்கள் (தவ்பாச்செய்து) மன்னிப்புக் கோரவுமில்லையே அத்தகையோர்—அவர்களுக்கு நரக வேதனையுண்டு; அவர்களுக்கு (விசுவாசிகளை அவர்கள் கரித்தவாறு நெருப்பால்) கரிக்கும் வேதனையுமுண்டு.

11. நிச்சயமாக, விசுவாசங்கொண்டு நற்கருமங்களையும் செய்கின்றார்களே அத்தகையோர்—அவர்களுக்குச் சுவனங்கள் உண்டு; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அது மாபெரும் வெற்றியாகும்.

12. (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகனின் பிடி மிக்க கடுமையானது.

13. நிச்சயமாக அவன்தான் (அவர்களை) ஆரம்பமாக படைக்கிறான்; (அவர்கள் மரணித்த பின்னரும் அவர்களை) அவனே மீளவைப்பான்.

وَهُوَ الْغَفُوْرُ الْوَدُوْدُ ﴿۱۴﴾ ذُو الْعَرْشِ الْمَجِيْدُ ﴿۱۵﴾ فَعَّالٌ لِّمَا
يُرِيْدُ ﴿۱۶﴾ هَلْ اَتٰىكَ حَدِيْثُ الْجُنُوْدِ ﴿۱۷﴾ فِرْعَوْنَ وَثَمُوْدَ ﴿۱۸﴾
بَلِ الَّذِيْنَ كَفَرُوْا فِيْ تَكْذِيْبٍ ﴿۱۹﴾ وَّاللّٰهُ مِنْ وَّرَآئِهِمْ مُّحِيْطٌ ﴿۲۰﴾
بَلْ هُوَ قُرْاٰنٌ مَّجِيْدٌ ﴿۲۱﴾ فِيْ لَوْحٍ مَّحْفُوْظٍ ﴿۲۲﴾ ع ۱ ۲۲ ۱۰

## سُوْرَةُ الطَّارِقِ مَكِّيَّةٌ وَّهِيَ سَبْعَ عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
وَالسَّمَآءِ وَالطَّارِقِ ﴿۱﴾ وَمَآ اَدْرٰىكَ مَا الطَّارِقُ ﴿۲﴾
النَّجْمُ الثَّاقِبُ ﴿۳﴾ اِنْ كُلُّ نَفْسٍ لَّمَّا عَلَيْهَا حَافِظٌ ﴿۴﴾
فَلْيَنْظُرِ الْاِنْسَانُ مِمَّ خُلِقَ ﴿۵﴾ خُلِقَ مِنْ مَّآءٍ دَافِقٍ ﴿۶﴾
يَّخْرُجُ مِنْ بَيْنِ الصُّلْبِ وَالتَّرَآئِبِ ﴿۷﴾ اِنَّهٗ عَلٰى رَجْعِهٖ
لَقَادِرٌ ﴿۸﴾ يَوْمَ تُبْلَى السَّرَآئِرُ ﴿۹﴾ فَمَا لَهٗ مِنْ قُوَّةٍ وَّلَا
نَاصِرٍ ﴿۱۰﴾ وَالسَّمَآءِ ذَاتِ الرَّجْعِ ﴿۱۱﴾ وَالْاَرْضِ ذَاتِ
الصَّدْعِ ﴿۱۲﴾ اِنَّهٗ لَقَوْلٌ فَصْلٌ ﴿۱۳﴾ وَّمَا هُوَ بِالْهَزْلِ ﴿۱۴﴾ اِنَّهُمْ
يَكِيْدُوْنَ كَيْدًا ﴿۱۵﴾ وَّاَكِيْدُ كَيْدًا ﴿۱۶﴾ فَمَهِّلِ الْكٰفِرِيْنَ
اَمْهِلْهُمْ رُوَيْدًا ﴿۱۷﴾ ع ۱ ۱۷ ۱۱

14. இன்னும் அவனே (விசுவாசங் கொண்டோரான தன் அடியார்களை) மிக்க மன்னிப்பவன்; மிக்க நேசிப்பவன்_
15. (அவன்தான்) அர்ஷுடையவன்; பெரும் கீர்த்தியுடையவன்_
16. தான் நாடியதையெல்லாம் மிகுதியாகச் செய்யக்கூடியவன்.
17. அந்தப் படைகளின் செய்தி (நபியே!) உமக்கு வந்ததா?
18. ஃபிர் அவ்னுடையவும், ஸமூதுடையவும்;
19. எனினும், நிராகரிப்போர் (குர் ஆனைப்) பொய்யாக்குவதிலேயே (மூழ்கி) இருக்கின்றனர்.
20. (ஆனால்) அல்லாஹ்வோ, அவர்களுக்கு அப்பாலிருந்து (அவர்களை எல்லாப்பகுதிகளிலிருந்தும்) சூழ்ந்து கொண்டிருக்கின்றான்.
21. எனினும், அது கீர்த்திமிக்க குர்ஆனாகும்.
22. பாதுகாக்கப்பட்ட (லவ்ஹுல் மஹ்ஃபூள் எனும்) பலகையில் (உள்ளது).

---

அத்தியாயம் : 86

## அத்தாரிக் _ உதயதாரகை

வசனங்கள் : 17 மக்கீ ருகூஃ : 1

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. வானத்தின் மீதும், "தாரிக்"கின் மீதும் சத்தியமாக,
2. "தாரிக்" என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
3. (அது தான்) பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரம்.
4. ஒவ்வொரு ஆத்மாவுக்கும் (நம்மால் ஏற்படுத்தப்பட்ட) பாதுகாப்பாளர் ஒருவர் அதன் மீதில்லாமலில்லை.
5. ஆகவே, மனிதன், (தான்) எதிலிருந்து படைக்கப்பட்டிருக்கின்றானென்பதை அவன் (கவனித்துப்) பார்க்கவும்.
6. குதித்து வெளியாகும் (ஒரு துளி) நீரிலிருந்து அவன் படைக்கப்பட்டான்.
7. அது (ஆணின்) முதுகந் தண்டிற்கும் (பெண்ணின் மார்பகங்களுக்கு மேல்) நெஞ்செலும்புகளுக்கும் மத்தியிலிருந்து வெளிப்படுகின்றது.
8. நிச்சயமாக அவன், அவனை மீளவைப்பதின் மீது ஆற்றலுடையோன்.
9. சகல மர்மங்களும் வெளிப்பட்டுவிடும் நாளில்_
10. அவனுக்கு யாதொரு சக்தியுமிராது; (அவனுக்கு) உதவி செய்பவரும் இருக்கமாட்டார்.
11. (திரும்பத் திரும்ப) மழை பொழிதலையுடைய வானத்தின் மீது சத்தியமாக,
12. (தாவரவர்க்கங்கள் முளைக்க) வெடிப்பையுடைய பூமியின்மீதும் சத்தியமாக,
13. நிச்சயமாக இது (சத்திய அசத்தியத்தைப்) பிரித்தறிவிக்கக்கூடிய சொல்லாகும்.
14. இன்னும், இது (வீண்) பரிகாசமன்று.
15. (நபியே!) நிச்சயமாக அவர்கள் (உமக்கெதிராகச்) சூழ்ச்சி செய்கின்றார்கள்.
16. நானும் (அவர்களுக்கெதிராக அதைமுறியடிக்க) ஒரு சூழ்ச்சி செய்வேன்.
17. ஆகவே, நிராகரிப்போருக்கு நீர் அவகாசமளிப்பீராக! சொற்பமாக அவர்களுக்கு அவகாசமளிப்பீராக!

## سُوْرَةُ الْاَعْلٰى مَكِّيَّةٌ وَّهِيَ تِسْعَ عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

سَبِّحِ اسْمَ رَبِّكَ الْاَعْلَى ۙ﴿۱﴾ الَّذِىْ خَلَقَ فَسَوّٰى ۪ۙ﴿۲﴾ وَالَّذِىْ قَدَّرَ
فَهَدٰى ۪ۙ﴿۳﴾ وَالَّذِىْۤ اَخْرَجَ الْمَرْعٰى ۪ۙ﴿۴﴾ فَجَعَلَهٗ غُثَآءً اَحْوٰى ؕ﴿۵﴾
سَنُقْرِئُكَ فَلَا تَنْسٰٓى ۙ﴿۶﴾ اِلَّا مَا شَآءَ اللّٰهُ ؕ اِنَّهٗ يَعْلَمُ الْجَهْرَ وَمَا
يَخْفٰى ؕ﴿۷﴾ وَنُيَسِّرُكَ لِلْيُسْرٰى ۚۖ﴿۸﴾ فَذَكِّرْ اِنْ نَّفَعَتِ الذِّكْرٰى ؕ﴿۹﴾ سَيَذَّكَّرُ
مَنْ يَّخْشٰى ۙ﴿۱۰﴾ وَيَتَجَنَّبُهَا الْاَشْقَى ۙ﴿۱۱﴾ الَّذِىْ يَصْلَى النَّارَ الْكُبْرٰى ۚ﴿۱۲﴾
ثُمَّ لَا يَمُوْتُ فِيْهَا وَلَا يَحْيٰى ؕ﴿۱۳﴾ قَدْ اَفْلَحَ مَنْ تَزَكّٰى ۙ﴿۱۴﴾ وَذَكَرَ اسْمَ
رَبِّهٖ فَصَلّٰى ؕ﴿۱۵﴾ بَلْ تُؤْثِرُوْنَ الْحَيٰوةَ الدُّنْيَا ۙ﴿۱۶﴾ وَالْاٰخِرَةُ خَيْرٌ وَّ
اَبْقٰى ؕ﴿۱۷﴾ اِنَّ هٰذَا لَفِى الصُّحُفِ الْاُوْلٰى ۙ﴿۱۸﴾ صُحُفِ اِبْرٰهِيْمَ وَمُوْسٰى ؑ﴿۱۹﴾ ع ۱ ۱۹ ۱۲

## سُوْرَةُ الْغَاشِيَةِ مَكِّيَّةٌ وَّهِيَ سِتٌّ وَّعِشْرُوْنَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

هَلْ اَتٰىكَ حَدِيْثُ الْغَاشِيَةِ ؕ﴿۱﴾ وُجُوْهٌ يَّوْمَئِذٍ خَاشِعَةٌ ۙ﴿۲﴾ عَامِلَةٌ
نَّاصِبَةٌ ۙ﴿۳﴾ تَصْلٰى نَارًا حَامِيَةً ۙ﴿۴﴾ تُسْقٰى مِنْ عَيْنٍ اٰنِيَةٍ ؕ﴿۵﴾ لَيْسَ
لَهُمْ طَعَامٌ اِلَّا مِنْ ضَرِيْعٍ ۙ﴿۶﴾ لَّا يُسْمِنُ وَلَا يُغْنِىْ مِنْ جُوْعٍ ؕ﴿۷﴾

அத்தியாயம் : 87

## அல் அஃலா – மிக்க மேலானவன்

வசனங்கள் : 19 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1 (நபியே!) மிக உயர்வானவனாகிய உமதிரட்சகனின் பெயரை நீர் (புகழ்ந்து) துதிசெய்வீராக!
2. அவன் எத்தகையவனென்றால், அவனே (படைப்பினங்களனைத்தையும்) படைத்து, பிறகு (அவற்றைச்) செவ்வையாக்கினான்.
3. இன்னும் அவன் எத்தகையவனென்றால், அவனே (அவற்றுக்கு வேண்டிய அனைத்தையும்) நிர்ணயம் செய்து, பிறகு (அவற்றை அடைய) நேர்வழி காட்டினான்.
4. இன்னும் அவன் எத்தகையவனென்றால், அவனே (கால்நடைகளுக்கு) மேய்ச்சலுக்குரியவற்றை வெளியாக்கினான்.
5. பின்னர், அவைகளை உலர்ந்த கருத்த கூளங்களாக ஆக்கினான்.
6. (நபியே! நம் வசனங்களை) நாம் உம்மை ஓதிடச்செய்வோம்; பிறகு நீர் மறக்கமாட்டீர் –
7. அல்லாஹ் நாடியதைத் தவிர; நிச்சயமாக அவன் வெளிப்படையானதையும், மறைந்திருப்பதையும் நன்கறிவான்.
8. மேலும், (ஈருலக நன்மைகளைச் செய்ய) இலகுவானதன் பால் உமக்கு நாம் எளிதாக்குவோம்.
9. ஆகவே, நல்லுபதேசம் (ஜனங்களுக்குப்) பயனளிக்குமாயின் நீர் (உபதேசித்து) நினைவுபடுத்துவீராக!
10. (அல்லாஹ்வுக்குப்) பயப்படுகின்றவர் (இதனைக் கொண்டு) உபதேசத்தைப் பெறுவார் –
11. மிகுந்த துர்பாக்கியமுடையவனோ, இதிலிருந்து விலகிக் கொள்வான்.
12. அவன் எத்தகையவனென்றால், (நரகத்தின்) பெரும் நெருப்பில் அவன் நுழைவான்.
13. பின்னர், அதில் அவன் மரணிக்கவுமாட்டான்; வாழவுமாட்டான்.
14. பரிசுத்தமடைந்தவர் நிச்சயமாக வெற்றிபெற்றுவிட்டார்.
15. மேலும், அவர் தன் இரட்சகனின் பெயரைக் கூறி, பிறகு தொழுதார்.
16. எனினும், நீங்களோ இவ்வுலக வாழ்க்கையைத் தெரிவுசெய்து கொள்கின்றீர்கள்.
17. மறுமை(யின் வாழ்க்கை)தான் மிகச்சிறந்ததும், மிக்க நிலையானதுமாகும்.
18. நிச்சயமாக இது முன்னுள்ள ஆகமங்களில் இருக்கிறது. (அதுவே)
19. இப்றாஹீம், மூஸாவுடைய ஆகமங்களிலும் (இருக்கிறது).

அத்தியாயம் : 88

## அல் காஷியா – சூழ்ந்து கொள்ளக்கூடியது

வசனங்கள் : 26 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1 (நபியே!) சூழ்ந்து கொள்ளக்கூடியதின் (மறுமை நாளின்) செய்தி உமக்கு வந்ததா?
2. அந்நாளில் (பல) முகங்கள் (இழிவினால் வாடி) பணிவுடையனவாயிருக்கும்.
3. அவை (தவறானவற்றை நல்லவை என நினைத்து) செயல்பட்டவையும், (அதற்காக) உறுதியாக நின்றவையுமாகும்.
4. கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் அவை பிரவேசிக்கும்.
5. கொதிக்கும் ஊற்றிலிருந்து (அவர்களுக்கு நீர்) புகட்டப்படும்.
6. (அதில்) அவர்களுக்கு (கசப்பான) முட்செடியிலிருந்தே தவிர, (வேறொன்றும்) உணவுமில்லை.
7. அது கொழுக்கவும் வைக்காது; அவர்களுடைய பசியையும் தீர்க்காது.

وُجُوۡهٌ يَّوۡمَئِذٍ نَّاعِمَةٌ ۙ﴿۸﴾ لِّسَعۡيِهَا رَاضِيَةٌ ۙ﴿۹﴾ فِىۡ جَنَّةٍ
عَالِيَةٍ ۙ﴿۱۰﴾ لَّا تَسۡمَعُ فِيۡهَا لَاغِيَةً ؕ﴿۱۱﴾ فِيۡهَا عَيۡنٌ جَارِيَةٌ ۘ﴿۱۲﴾ فِيۡهَا وقف لازم
سُرُرٌ مَّرۡفُوۡعَةٌ ۙ﴿۱۳﴾ وَّاَكۡوَابٌ مَّوۡضُوۡعَةٌ ۙ﴿۱۴﴾ وَّنَمَارِقُ
مَصۡفُوۡفَةٌ ۙ﴿۱۵﴾ وَّزَرَابِىُّ مَبۡثُوۡثَةٌ ؕ﴿۱۶﴾ اَفَلَا يَنۡظُرُوۡنَ اِلَى الۡاِبِلِ
كَيۡفَ خُلِقَتۡ ﴿۱۷﴾ وقفة وَاِلَى السَّمَآءِ كَيۡفَ رُفِعَتۡ ﴿۱۸﴾ وقفة وَاِلَى الۡجِبَالِ
كَيۡفَ نُصِبَتۡ ﴿۱۹﴾ وقفة وَاِلَى الۡاَرۡضِ كَيۡفَ سُطِحَتۡ ﴿۲۰﴾ فَذَكِّرۡ قف
اِنَّمَاۤ اَنۡتَ مُذَكِّرٌ ؕ﴿۲۱﴾ لَسۡتَ عَلَيۡهِمۡ بِمُصَيۡطِرٍ ۙ﴿۲۲﴾ اِلَّا مَنۡ
تَوَلّٰى وَكَفَرَ ۙ﴿۲۳﴾ فَيُعَذِّبُهُ اللّٰهُ الۡعَذَابَ الۡاَكۡبَرَ ؕ﴿۲۴﴾ اِنَّ اِلَيۡنَاۤ
اِيَابَهُمۡ ۙ﴿۲۵﴾ ثُمَّ اِنَّ عَلَيۡنَا حِسَابَهُمۡ ﴿۲۶﴾ ع ۱ / ۱۴ النصف

سُوۡرَةُ الۡفَجۡرِ مَكِّيَّةٌ وَّهِىَ ثَلٰثُوۡنَ اٰيَةً

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ○

وَالۡفَجۡرِ ۙ﴿۱﴾ وَلَيَالٍ عَشۡرٍ ۙ﴿۲﴾ وَّالشَّفۡعِ وَالۡوَتۡرِ ۙ﴿۳﴾ وَالَّيۡلِ اِذَا
يَسۡرِ ۚ﴿۴﴾ هَلۡ فِىۡ ذٰلِكَ قَسَمٌ لِّذِىۡ حِجۡرٍ ؕ﴿۵﴾ اَلَمۡ تَرَ كَيۡفَ فَعَلَ
رَبُّكَ بِعَادٍ ۙ﴿۶﴾ لا ص اِرَمَ ذَاتِ الۡعِمَادِ ۙ﴿۷﴾ لا ص الَّتِىۡ لَمۡ يُخۡلَقۡ مِثۡلُهَا
فِى الۡبِلَادِ ۙ﴿۸﴾ لا ص وَثَمُوۡدَ الَّذِيۡنَ جَابُوا الصَّخۡرَ بِالۡوَادِ ۙ﴿۹﴾ لا ص

8. (எனினும்,) அந்நாளில் (வேறு) சில முகங்கள் மிக்க மலர்ச்சியுடையனவாக இருக்கும்.
9. (இம்மையில்) தாங்கள் செய்த முயற்சி (நற்பயனைத் தந்தது) பற்றி திருப்தியுடையனவாக இருக்கும்.
10. மேலான சுவனபதியில் (அவை) இருக்கும்_
11. அதில் யாதொரு வீண் வார்த்தையையும் (அவை) செவியுறாது_
12. அதில் (இவர்கள் பருகுவதற்கு) ஓடிக் கொண்டிருக்கும் ஒரு சுனையுண்டு.
13. அதில் உயர்ந்த ஆசனங்களுண்டு_
14. (அதன் பானங்களையருந்த) வைக்கப் பட்ட குவளைகளும் (உண்டு)_
15. வரிசையாகவைக்கப்பட்ட தலையணைகளும்_
16. விரிக்கப்பட்ட உயர்ந்த கம்பளங்களும் (உண்டு)
17. ஒட்டகத்தை _ அது எவ்வாறு படைக்கப் பட்டிருக்கிறது? என்பதை, அவர்கள் (கவனித்துப்) பார்க்க மாட்டார்களா?
18. மேலும் வானத்தின் பால்_ அது எவ்வாறு உயர்த்தப் பட்டிருக்கிறது? (என்பதையும்)_
19 (அசையாது ஸ்திரப்படுத்தப்பட்ட) மலைகள் பால் _ அவை எவ்வாறு நடப் பட்டுள்ளன? (என்பதையும்)_
20. இன்னும், (அவர்கள் வசிக்கும்) பூமியின் பால்_அது எவ்வாறு விரிக்கப் பட்டுள்ளது? (என்பதையும் அவர்கள் கவனிக்கமாட்டார்களா?)
21. ஆகவே, நபியே! நல்லுபதேசம் செய்வீராக! நிச்சயமாக நீர் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்பவர்தாம்.
22. (அவ்வாறே நடக்கும்படி) அவர்கள் மீது நீர் பொறுப்புச்சாட்டப் பட்டவரல்லர்.
23. ஆயினும், எவர் புறக்கணித்து நிராகரிக்கின்றாரோ_
24. அவரை, அல்லாஹ் மிகப்பெரும் வேதனையாக வேதனை செய்வான்.
25. நிச்சயமாக அவர்களின் மீட்சி நம்பக்கமேயாகும்.
26. பின்னர், நிச்சயமாக அவர்களைக் கேள்வி கணக்கு கேட்பது நம்மீதேயாகும்.

---

### அத்தியாயம் : 89

## அல்ஃபஜ்ர் _ விடியற்காலை

**வசனங்கள் : 30 மக்கீ ருகூஃ : 1**

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்· அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. விடியற்காலையின் மீது சத்தியமாக!
2. பத்து இரவுகளின்மீதும் சத்தியமாக!
3. இரட்டையின் மீதும், ஒற்றையின் மீதும் சத்தியமாக!
4. இரவின்மீதும் _அது சென்றுவிடும்போது _சத்தியமாக!
5. இதில் அறிவுடையோருக்கு (உறுதியளிக்கக்கூடிய) சத்தியம் இருக்கின்றதல்லவா?
6. உமதிரட்சகன் ஆ(து கூட்டத்)தை எவ்வாறு செய்தான் என்பதை நீர் காணவில்லையா?
7. பெரும் பலசாலிகளான (தூண்களையுடைய) இரமை (அவரின் பிள்ளைகளை)_
8. அக்கூட்டத்தினர் எத்தகையோரென்றால்_ (உலகத்திலுள்ள) நகரங்களில் அக்கூட்டத்தினரைப் போன்று (பலசாலிகள் எவரும்) படைக்கப்படவில்லை.
9. இன்னும், பள்ளத்தாக்கில் பாறையைக்குடைந்(து அதில் வசித்து வந்)தவர்களான ஸமூ(து கூட்டத்)தையும் _

وَفِرْعَوْنَ ذِی الْاَوْتَادِ ۪ۙ﴿۱۰﴾ الَّذِیْنَ طَغَوْا فِی الْبِلَادِ ۪ۙ﴿۱۱﴾
فَاَكْثَرُوْا فِیْهَا الْفَسَادَ ۪ۙ﴿۱۲﴾ فَصَبَّ عَلَیْهِمْ رَبُّكَ سَوْطَ
عَذَابٍ ۚۙ﴿۱۳﴾ اِنَّ رَبَّكَ لَبِالْمِرْصَادِ ؕ﴿۱۴﴾ فَاَمَّا الْاِنْسَانُ اِذَا مَا
ابْتَلٰىهُ رَبُّهٗ فَاَكْرَمَهٗ وَنَعَّمَهٗ ۙ۬ فَیَقُوْلُ رَبِّیْۤ اَكْرَمَنِ ؕ﴿۱۵﴾
وَاَمَّاۤ اِذَا مَا ابْتَلٰىهُ فَقَدَرَ عَلَیْهِ رِزْقَهٗ ۙ۬ فَیَقُوْلُ رَبِّیْۤ
اَهَانَنِ ۚ﴿۱۶﴾ كَلَّا بَلْ لَّا تُكْرِمُوْنَ الْیَتِیْمَ ۙ﴿۱۷﴾ وَلَا تَحٰٓضُّوْنَ
عَلٰى طَعَامِ الْمِسْكِیْنِ ۙ﴿۱۸﴾ وَتَاْكُلُوْنَ التُّرَاثَ اَكْلًا لَّمًّا ۙ﴿۱۹﴾
وَّتُحِبُّوْنَ الْمَالَ حُبًّا جَمًّا ؕ﴿۲۰﴾ كَلَّاۤ اِذَا دُكَّتِ الْاَرْضُ دَكًّا
دَكًّا ۙ﴿۲۱﴾ وَّجَآءَ رَبُّكَ وَالْمَلَكُ صَفًّا صَفًّا ۚ﴿۲۲﴾ وَجِایْٓءَ
یَوْمَىٕذٍۭ بِجَهَنَّمَ ۙ۬ یَوْمَىٕذٍ یَّتَذَكَّرُ الْاِنْسَانُ وَاَنّٰى لَهُ
الذِّكْرٰى ؕ﴿۲۳﴾ یَقُوْلُ یٰلَیْتَنِیْ قَدَّمْتُ لِحَیَاتِیْ ۚ﴿۲۴﴾ فَیَوْمَىٕذٍ
لَّا یُعَذِّبُ عَذَابَهٗۤ اَحَدٌ ۙ﴿۲۵﴾ وَّلَا یُوْثِقُ وَثَاقَهٗۤ
اَحَدٌ ؕ﴿۲۶﴾ یٰۤاَیَّتُهَا النَّفْسُ الْمُطْمَىٕنَّةُ ۗۙ﴿۲۷﴾ ارْجِعِیْۤ اِلٰى
رَبِّكِ رَاضِیَةً مَّرْضِیَّةً ۚ﴿۲۸﴾ فَادْخُلِیْ فِیْ عِبٰدِیْ ۙ﴿۲۹﴾
وَادْخُلِیْ جَنَّتِیْ ۧ﴿۳۰﴾ ع ۱ ۱۴

10. இன்னும், முளைகளுடைய_(பெரும் படைகளையுடைய) ஃபிர் அவ்னையும் (உமதிரட்சகன் எவ்வாறு செய்தான் என்பதை நீர் காணவில்லையா?)

11. அவர்கள் எத்தகையோரென்றால், நகரங்களில் அவர்கள் வரம்பு மீறி நடந்தார்கள்.

12. பின்னர், அவைகளில் அவர்கள் குழப்பத்தை அதிகப்படுத்தினார்கள்.

13. எனவே, உமதிரட்சகன் அவர்கள் மீது வேதனையின் சாட்டையைப் போட்டான்.

14. நிச்சயமாக, உமதிரட்சகன் (அடியார்களின் ஒவ்வொருசெயலையும்) கண்காணித்துக் கொண்டிருக்கின்றான்.

15. ஆகவே, மனிதன்: அவனுடைய இரட்சகன் அவனை சோதித்து, பின்னர் அவனைக் கண்ணியப்படுத்தி, அவனுக்கு அருட்கொடைகளையும் அளித்தால், "என்னை என்னுடைய இரட்சகன் கண்ணியப்படுத்தினான்" என்று கூறுகிறான்.

16. இன்னும், (அல்லாஹ்) அவனைச் சோதித்து, அவனுடைய வாழ்வாதாரங்களை நெருக்கடியாக்கிவிட்டால், அப்போது "எனதிரட்சகன் என்னை இழிவுபடுத்திவிட்டான்" என்று அவன் (குறை) கூறுகிறான்.

17. (காரியம்) அவ்வாறன்று! எனினும், நீங்கள் அநாதையை கண்ணியப் படுத்துவதில்லை.

18. ஏழைக்கு(நீங்கள் உணவளிக்காததுடன்,மற்றெவரையும்)உணவளிக்கும்படித் தூண்டுவதுமில்லை.

19. (பிறருடைய) அனந்தரச் சொத்துக்களையும் சேர்த்து உண்டு வருகிறீர்கள்.

20. மேலும்,நீங்கள் மிக்க அளவு கடந்து செல்வத்தை நேசிக்கிறீர்கள்.

21. (உங்கள் செயல்கள் இவ்வாறிருப்பது சிறந்தது) அல்ல! பூமி தூள் தூளாகத் தகர்க்கப்பட்டுவிடும்போது_

22. உமது இரட்சகன் , மேலும் , மலக்குகள் அணி அணியாக வரும்போது_

23. அந்நாளில் (பாவிகளுக்காக) நரகமும் கொண்டுவரப்பட்டுவிட்டால், அந்நாளில் மனிதன் (உலகில் அவன் அல்லாஹ்விற்கு மாற்றமாக நடந்ததை) நினைவு கூர்வான்; இன்னும்,(அச்சமயம்) அவனுக்கு நினைவு கூர்வது எவ்வாறு (பயனுள்ளதாக)ஆகும்?

24. "என்னுடைய(இந்த)வாழ்க்கைக்காக(நன்மையைச் செய்து)நான் முற்படுத்தி (அனுப்பி) இருக்க வேண்டுமே!" என்று (அப்போது மனிதன்) கூறுவான்.

25. எனவே, அந்நாளில் (அல்லாஹ்வாகிய) அவன் செய்யும் வேதனையைப் போல், மற்றெவனும் வேதனை செய்யமாட்டான்.

26. இன்னும்,அவன் கட்டுவது போல் வேறுஎவனும் கட்டமாட்டான்.

27. (அல்லாஹ்வின் கட்டளைகளை உண்மைப்படுத்துவதுகொண்டு) அமைதிபெற்ற ஆத்மாவே!

28. நீ உன் இரட்சகன் பக்கம் (அவனைத்) திருப்தியடைந்தநிலையிலும், (அவனிடம்)பொருந்திக்கொள்ளப்பட்டநிலையிலும் மீள்வாயாக!

29. நீ எனது அடியார்(களான நல்லோர்களின் கூட்டங்)களில் பிரவேசிப்பாயாக!

30. மேலும், என்னுடைய சுவனத்தில் நீ நுழைந்துவிடுவாயாக! (என்றும் அல்லாஹ் கூறுவான்.)

سُوْرَةُ الْبَلَدِ مَكِّيَّةٌ وَّهِيَ عِشْرُوْنَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

لَآ اُقْسِمُ بِهٰذَا الْبَلَدِ ۙ ① وَاَنْتَ حِلٌّۢ بِهٰذَا الْبَلَدِ ۙ ② وَوَالِدٍ وَّمَا
وَلَدَ ③ لَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ فِيْ كَبَدٍ ؕ ④ اَيَحْسَبُ اَنْ لَّنْ يَّقْدِرَ
عَلَيْهِ اَحَدٌ ۘ ⑤ يَقُوْلُ اَهْلَكْتُ مَالًا لُّبَدًا ؕ ⑥ اَيَحْسَبُ اَنْ لَّمْ يَرَهٗۤ
اَحَدٌ ؕ ⑦ اَلَمْ نَجْعَلْ لَّهٗ عَيْنَيْنِ ۙ ⑧ وَلِسَانًا وَّشَفَتَيْنِ ۙ ⑨ وَهَدَيْنٰهُ
النَّجْدَيْنِ ۚ ⑩ فَلَا اقْتَحَمَ الْعَقَبَةَ ۖ ⑪ وَمَآ اَدْرٰىكَ مَا الْعَقَبَةُ ؕ ⑫ فَكُّ
رَقَبَةٍ ۙ ⑬ اَوْ اِطْعٰمٌ فِيْ يَوْمٍ ذِيْ مَسْغَبَةٍ ۙ ⑭ يَّتِيْمًا ذَا مَقْرَبَةٍ ۙ ⑮
اَوْ مِسْكِيْنًا ذَا مَتْرَبَةٍ ؕ ⑯ ثُمَّ كَانَ مِنَ الَّذِيْنَ اٰمَنُوْا وَتَوَاصَوْا
بِالصَّبْرِ وَتَوَاصَوْا بِالْمَرْحَمَةِ ؕ ⑰ اُولٰٓئِكَ اَصْحٰبُ الْمَيْمَنَةِ ؕ ⑱
وَالَّذِيْنَ كَفَرُوْا بِاٰيٰتِنَا هُمْ اَصْحٰبُ الْمَشْئَمَةِ ؕ ⑲ عَلَيْهِمْ نَارٌ مُّؤْصَدَةٌ ⑳ ع

وقف لازم

ع ٢٠ ١٥

سُوْرَةُ الشَّمْسِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسَ عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَالشَّمْسِ وَضُحٰهَا ۙ ① وَالْقَمَرِ اِذَا تَلٰىهَا ۙ ② وَالنَّهَارِ اِذَا
جَلّٰىهَا ۙ ③ وَالَّيْلِ اِذَا يَغْشٰىهَا ۙ ④ وَالسَّمَآءِ وَمَا بَنٰىهَا ۙ ⑤

அத்தியாயம் : 90

## அல் பலத் _ நகரம்

வசனங்கள் : 20 மக்கீ ருகூஃ : 1

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. (நபியே!) இந்த (மக்கா) நகரத்தின் மீது நான் சத்தியம் செய்கிறேன்,
2. இந்நகரத்தில் (போர்செய்வது சற்றுநேரம் உமக்கு ஆகுமாக்கப் பட்டதாக இருக்க) நீர் தங்கியிருக்கும் நிலையில்.
3. தந்தையின் மீதும், பிறந்தோ(ராகிய சந்ததியின)ரின் மீதும் சத்தியமாக,
4. திடமாக நாம் மனிதனைக் கஷ்டத்தில் (உள்ளவனாகப்) படைத்திருக்கின்றோம்.
5. "நிச்சயமாக ஒருவரும் (தன்னை தண்டிக்க) தன்மீது சக்தி பெறவே மாட்டார்" என அவன் எண்ணிக்கொள்கிறானா?
6. "ஏராளமான பொருளை நான் (முஹம்மதின் விரோதத்திற்காக) அழித்திருக்கிறேன்" என்று (ஹாரிஸாகிய) அவன் (ஆணவமாகக்) கூறுகின்றான்.
7. நிச்சயமாக ஒருவருமே தன்னை பார்க்கவில்லையென்று அவன் எண்ணிக் கொள்கின்றானா?
8. இரு கண்களை அவனுக்கு நாம் அமைக்கவில்லையா?
9. ஒரு நாவையும், இரு உதடுகளையும் (நாம் அவனுக்கு அமைக்கவில்லையா?)
10. மேலும், (நன்மை, தீமையாகிய) இரு வழிகளை நாம் அவனுக்குக் காண்பித்து விட்டோம்.
11. எனினும் (இது வரையில்) அவன் "அகபா"வைக் கடக்கவில்லை.
12. (நபியே!) "அகபா" என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
13. (அது தான்) ஓர் அடிமையை விடுதலை செய்தலாகும்.
14. அல்லது பசியுடைய நாளில் உணவளித்தலாகும்_
15. (யாருக்கெனில்) நெருங்கிய உறவுடைய ஓர் அநாதைக்கு;
16. அல்லது (வறுமையால்) மண்ணில் உழலும் ஏழைக்கு (உணவளிப்பதாகும்).
17. பின்னர் விசுவாசங் கொண்டு, பொறுமையைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், (அல்லாஹ்வின் அடியார்களுக்கு) அன்புசெலுத்துமாறு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்துகொண்டும் இருந்தோரில் உள்ளவராக அவர் இருப்பதாகும்.
18. இத்தகையோர் தாம் வலப்புறத்தை உடையோர்.
19. இன்னும், நம்முடைய வசனங்களை நிராகரிக்கின்றார்களே, அத்தகையோர்_ அவர்கள் இடப்புறத்தையுடையோர்.
20. அவர்கள் மீது (எல்லாப்பக்கமும்) மூடப்பட்ட நெருப்பு இருக்கும்.

அத்தியாயம் : 91

## அஷ்ஷம்ஸ் _ சூரியன்

வசனங்கள் : 15 மக்கீ ருகூஃ : 1

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. சூரியன் மீதும், அதன் பிரகாசத்தின் மீதும் சத்தியமாக_
2. சந்திரன் மீதும்சத்தியமாக_அது அ(ச்சூரியனாகிய)தைஅடுத்து தொடர்ந்துவிடும்போது_
3. பகலின் மீதும் சத்தியமாக_அது அ(ச்சூரியனாகிய)தை வெளிப்படுத்தி விடும்போது_
4. இரவின் மீதும் சத்தியமாக_அது அ(ச்சூரியனாகிய)தை மூடிக்கொண்டு விடும்போது_
5. வானத்தின் மீதும், அதை (ஒழுங்குற) அமைத்தவன் மீதும் சத்தியமாக_

وَالْاَرْضِ وَمَا طَحٰىهَا ۝۶ وَنَفْسٍ وَّمَا سَوّٰىهَا ۝۷ فَاَلْهَمَهَا فُجُوْرَهَا
وَتَقْوٰىهَا ۝۸ قَدْ اَفْلَحَ مَنْ زَكّٰىهَا ۝۹ وَقَدْ خَابَ مَنْ دَسّٰىهَا ۝۱۰
كَذَّبَتْ ثَمُوْدُ بِطَغْوٰىهَآ ۝۱۱ اِذِ انْۢبَعَثَ اَشْقٰىهَا ۝۱۲ فَقَالَ لَهُمْ
رَسُوْلُ اللّٰهِ نَاقَةَ اللّٰهِ وَسُقْيٰهَا ۝۱۳ فَكَذَّبُوْهُ فَعَقَرُوْهَا فَدَمْدَمَ
عَلَيْهِمْ رَبُّهُمْ بِذَنْۢبِهِمْ فَسَوّٰىهَا ۝۱۴ وَلَا يَخَافُ عُقْبٰهَا ۝۱۵ ع ۱۵ / ۱۶

## سُوْرَةُ الَّيْلِ مَكِّيَّةٌ وَّهِيَ اِحْدٰى وَعِشْرُوْنَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

وَالَّيْلِ اِذَا يَغْشٰى ۝۱ وَالنَّهَارِ اِذَا تَجَلّٰى ۝۲ وَمَا خَلَقَ الذَّكَرَ
وَالْاُنْثٰٓى ۝۳ اِنَّ سَعْيَكُمْ لَشَتّٰى ۝۴ فَاَمَّا مَنْ اَعْطٰى وَاتَّقٰى ۝۵
وَصَدَّقَ بِالْحُسْنٰى ۝۶ فَسَنُيَسِّرُهٗ لِلْيُسْرٰى ۝۷ وَاَمَّا مَنْۢ
بَخِلَ وَاسْتَغْنٰى ۝۸ وَكَذَّبَ بِالْحُسْنٰى ۝۹ فَسَنُيَسِّرُهٗ
لِلْعُسْرٰى ۝۱۰ وَمَا يُغْنِيْ عَنْهُ مَالُهٗٓ اِذَا تَرَدّٰى ۝۱۱ اِنَّ عَلَيْنَا
لَلْهُدٰى ۝۱۲ وَاِنَّ لَنَا لَلْاٰخِرَةَ وَالْاُوْلٰى ۝۱۳ فَاَنْذَرْتُكُمْ نَارًا
تَلَظّٰى ۝۱۴ لَا يَصْلٰىهَآ اِلَّا الْاَشْقَى ۝۱۵ الَّذِيْ كَذَّبَ وَتَوَلّٰى ۝۱۶
وَسَيُجَنَّبُهَا الْاَتْقَى ۝۱۷ الَّذِيْ يُؤْتِيْ مَالَهٗ يَتَزَكّٰى ۝۱۸

6. பூமியின்மீதும் _அதை விரித்தவன்மீதும் சத்தியமாக_
7. ஆத்மாவின்மீதும்_ அதனைச் செவ்வையாக்கியவனின் மீதும் சத்தியமாக_
8. பின்னர், அதற்கு அதன் தீமையையும், அதற்குரிய நன்மையையும் உணர்த்தினான்.
9. எவர் (ஆத்மாவாகிய) அதை பரிசுத்தமாக்கிக் கொண்டாரோ அவர், திட்டமாக வெற்றியடைந்துவிட்டார்.
10. இன்னும், எவர் அதனை(ப்பாவத்தைக்கொண்டு) களங்கப்படுத்திவிட்டாரோ, அவர் திட்டமாக நஷ்டமடைந்துவிட்டார்.
11. ஸமூது (கூட்டத்தினர் ஸாலிஹ் நபியை) தங்கள் அக்கிரமத்தால் பொய்யாக்கினார்கள்.
12. அக்கூட்டத்திலுள்ள மிக துர்பாக்கியமுடையவன் விரைந்துமுன்வந்த பொழுது_
13. அல்லாஹ்வின் தூதர் (ஸாலிஹ் நபி,) அ(ந்த ஸமூதுகூட்டத்த)வர்களிடம்: "அல்லாஹ்வுடைய பெண்ஒட்டகத்தை(இம்சிப்பதை)யும் அது தண்ணீர் அருந்துவதையும் (விட்டுவிடுங்கள்)" என்று கூறினார்.
14. பின்னர், அவர்கள் அவரைப் பொய்யாக்கி, (அதன் கால் நரம்பைத்தறித்து) அதை அறுத்து விட்டனர்; ஆகவே, அவர்களின் இரட்சகன் அவர்களுடைய (இந்தப்) பாவத்தின் காரணமாக, அவர்களின் மீது (மண்ணோடுமண்ணாகிவிடும்) கடும் வேதனையை இறக்கிவைத்து, பிறகு அதனை (ச்சகலருக்கும்) சமமாக்கினான்.
15. அதனுடைய முடிவைப்பற்றியும் அவன் பயப்படவில்லை.

---

அத்தியாயம் : 92

## அல்லைல் _ இரவு

**வசனங்கள் : 21 மக்கீ ருகூஉ : 1**

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. இரவின்மீது சத்தியமாக_ அது (தன் இருளால்) மூடிக்கொள்ளும்போது_
2. பகலின் மீது சத்தியமாக_அது(தன் பிரகாசத்துடன்) வெளிப்படும்போது_
3. ஆணையும், பெண்ணையும் படைத்தவ(னாகிய அல்லாஹ்வி)ன் மீது சத்தியமாக_
4. (மனிதர்களே!) நிச்சயமாக உங்களுடைய முயற்சி பலதரப்பட்டதாகும்.
5. ஆகவே, எவர் (தன் செல்வத்தை நன்மையானவற்றுக்கு) வழங்கி இன்னும், (அல்லாஹ்வுக்குப்)பயந்து_
6. இன்னும், (இம்மார்க்கத்திலுள்ள) நல்ல காரியங்களை (நல்ல காரியங்களென) உண்மையாக்கிவைக்கின்றாரோ அவர்;
7. அவருக்கு இலேசானதற்கு (சுவர்க்கத்தின் வழியை) நாம் எளிதாக்கி வைப்போம்.
8. ஆகவே, எவர் உலோபத்தனமும் செய்து (அல்லாஹ்விடமிருக்கும் நற்பேறுகளை விட்டும் தன்னை) தேவையற்றவரா(கக் கருது)கிறாரோ_
9. (இம்மார்க்கத்திலுள்ள) நல்லவற்றை பொய்ப்படுத்தியும் வைத்தாரோ அவர்;
10. அப்போது அவருக்கு கஷ்டத்திற்கு(நரகவழிக்கு) நாம் எளிதாக்கி வைப்போம்.
11. மேலும், அவர் (நரகத்தில்) வீழ்ந்து விட்டால், அவருடைய செல்வம் அவருக்கு பயனளிக்காது.
12. நிச்சயமாக நேர்வழி காட்டுதல் நம்மீது (பொறுப்பாக) இருக்கிறது.
13. நிச்சயமாக பிந்தியதும், (மறுமையும்) முந்தியதும் (இம்மையும்) நமக்கே உரியவையாகும்.
14. ஆகவே, (மனிதர்களே!) கொழுந்துவிட்டெரியும் (நரக) நெருப்பைப்பற்றி நான் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரித்துவிட்டேன்.
15. மிக்க துர்பாக்கியமுடையவரைத்தவிர (மற்றெவரும்) அதில் புகமாட்டார்.
16. அவர் எத்தகையவரென்றால் (நம் தூதர்கள் கொண்டுவந்த சத்தியத்தைப்) பொய்யாக்கி, புறக்கணித்தும் விட்டார்.
17. மேலும், மிகுந்த பயபக்தியுடையவர் அதிலிருந்து வெகு தூரத்தில் ஆக்கப்படுவார்.
18. அவர் எத்தகையவரென்றால், (பாவத்திலிருந்து தன்னைப்) பரிசுத்தமாக்கிக் கொண்டவராக, தன்னுடைய செல்வத்தை தர்மமாகக் கொடுப்பார்.

وَمَا لِاَحَدٍ عِنْدَهٗ مِنْ نِّعْمَةٍ تُجْزٰٓى ﴿١٩﴾ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ
رَبِّهِ الْاَعْلٰى ﴿٢٠﴾ وَلَسَوْفَ يَرْضٰى ﴿٢١﴾ ع ١ ٢١ ١٧

## سُوْرَةُ الضُّحٰى مَكِّيَّةٌ وَّهِيَ اِحْدٰى عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
وَالضُّحٰى ﴿١﴾ وَالَّيْلِ اِذَا سَجٰى ﴿٢﴾ مَا وَدَّعَكَ رَبُّكَ وَمَا قَلٰى ﴿٣﴾
وَلَلْاٰخِرَةُ خَيْرٌ لَّكَ مِنَ الْاُوْلٰى ﴿٤﴾ وَلَسَوْفَ يُعْطِيْكَ رَبُّكَ
فَتَرْضٰى ﴿٥﴾ اَلَمْ يَجِدْكَ يَتِيْمًا فَاٰوٰى ﴿٦﴾ وَوَجَدَكَ ضَآلًّا
فَهَدٰى ﴿٧﴾ وَوَجَدَكَ عَآئِلًا فَاَغْنٰى ﴿٨﴾ فَاَمَّا الْيَتِيْمَ فَلَا تَقْهَرْ ﴿٩﴾
وَاَمَّا السَّآئِلَ فَلَا تَنْهَرْ ﴿١٠﴾ وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ ﴿١١﴾ ع ١ ١١ ١٨

## سُوْرَةُ الشَّرْحِ مَكِّيَّةٌ وَّهِيَ ثَمَانِيْ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
اَلَمْ نَشْرَحْ لَكَ صَدْرَكَ ﴿١﴾ وَوَضَعْنَا عَنْكَ وِزْرَكَ ﴿٢﴾
الَّذِيْٓ اَنْقَضَ ظَهْرَكَ ﴿٣﴾ وَرَفَعْنَا لَكَ ذِكْرَكَ ﴿٤﴾ فَاِنَّ مَعَ
الْعُسْرِ يُسْرًا ﴿٥﴾ اِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا ﴿٦﴾ فَاِذَا فَرَغْتَ فَانْصَبْ ﴿٧﴾
وَاِلٰى رَبِّكَ فَارْغَبْ ﴿٨﴾ ع ١ ٨ ١٩

19. (மனிதர்களில்) எவருக்கும் (தன் தர்மத்தின் மூலம் பிரதிபலனைக் கருதிக்) கொடுக்கப்படும் எந்த உபகாரமும் தம்மிடம் இல்லை;
20. மிக்க மேலான தம் இரட்சகனின் முகத்தைத் தேடியே தவிர (வேறு எந்த நோக்கத்துடனும் அவர் செலவுசெய்யவில்லை).
21. மேலும், (தம் இரட்சகனின் நற்கூலியைக்கொண்டு வெகுவிரைவில்) அவரும் திருப்தியடைவார்.

அத்தியாயம் : 93

## அள்ளுஹா — முற்பகல்

வசனங்கள் : 11 மக்கீ ருகூஃ : 1

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. முற்பகல் மீது சத்தியமாக!
2. (இருண்ட) இரவின் மீதும் சத்தியமாக—அது ஒடுங்கிவிட்டால்—
3. (நபியே!) உமதிரட்சகன் உம்மைக் கைவிடவில்லை; (உம்மை) அவன் வெறுக்கவுமில்லை.
4. மேலும், (மறுமையெனும்) பிந்தியதானது (இம்மையெனும்) முந்தியதைவிட உமக்கு மிகச்சிறந்ததாகும்.
5. இன்னும், உமதிரட்சகன் அடுத்து (ப்பல உயர்பதவிகளை) உமக்கு அளிப்பான்; அப்போது நீர் திருப்தியடைவீர்.
6. உம்மை அவன் அநாதையாகக் கண்டுகொள்ளவில்லையா? ஆகவே, (அரவணைப்புப் பெற்று நீர் ஆறுதல் பெற) அவன் இடம் அளித்தான்.
7. மேலும், (வேதம் என்ன மார்க்கம் என்னவென்பதைப்பற்றி) தெரியாதவராக உம்மை அவன் கண்டான்; ஆகவே (அதற்கு) அவன் (உமக்கு) வழி காட்டினான்.
8. மேலும், தேவையுடையவராக அவன் உம்மைக் கண்டான்; ஆகவே, (உமது தேவையை நிறைவேற்றி உம்மை) தேவையற்றவராக ஆக்கிவிட்டான்.
9. ஆகவே, நீர் அநாதையைக் கடிந்து கொள்ளாதீர்!
10. இன்னும், (தர்மம்) கேட்பவரை விரட்டாதீர்!
11. மேலும், (உம்மீது புரிந்துள்ள) உமதிரட்சகனின் அருட்கொடையைப்பற்றி (அவனுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு) அறிவித்துக்கொண்டிருப்பீராக!

அத்தியாயம் : 94

## அஷ்ஷரஹ் — விரிவாக்குதல்

வசனங்கள் : 8 மக்கீ ருகூஃ : 1

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. (நபியே!) உமது நெஞ்சை உமக்காக நாம் விரிவாக்கவில்லையா?
2. மேலும், உமது சுமையை உம்மை விட்டும் நாம் இறக்கிவிட்டோம்;
3. அ(ச்சுமையான)து எத்தகையதென்றால், உமது முதுகை முறித்து (உமக்குப்பளுவாகி) விட்டது.
4. உமது நினைவை (கீர்த்தியை) உமக்காக நாமே உயர்த்தினோம்.
5. ஆகவே, நிச்சயமாகக் கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது.
6. நிச்சயமாகக் கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது.
7. ஆகவே, நீர் (உலகக் காரியங்களிலிருந்து)விடுபட்டால் (தொழுவதற்கு) நீர் சிரத்தை எடுத்துக் கொள்வீராக!
8. மேலும், உமதிரட்சகன்பக்கம் நீர் விருப்பம் கொள்வீராக!

## سُورَةُ التِّينِ مَكِّيَّةٌ وَهِيَ ثَمَانِي آيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَالتِّيْنِ وَالزَّيْتُوْنِ ﴿۱﴾ وَطُوْرِ سِيْنِيْنَ ﴿۲﴾ وَهٰذَا الْبَلَدِ الْاَمِيْنِ ﴿۳﴾
لَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ فِيْۤ اَحْسَنِ تَقْوِيْمٍ ﴿۴﴾ ثُمَّ رَدَدْنٰهُ اَسْفَلَ
سٰفِلِيْنَ ﴿۵﴾ اِلَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ فَلَهُمْ اَجْرٌ غَيْرُ مَمْنُوْنٍ ﴿۶﴾
فَمَا يُكَذِّبُكَ بَعْدُ بِالدِّيْنِ ﴿۷﴾ اَلَيْسَ اللّٰهُ بِاَحْكَمِ الْحٰكِمِيْنَ ﴿۸﴾ ع ۱ ۸ ۲۰

## سُورَةُ الْعَلَقِ مَكِّيَّةٌ وَهِيَ تِسْعَ عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اِقْرَاْ بِاسْمِ رَبِّكَ الَّذِيْ خَلَقَ ﴿۱﴾ خَلَقَ الْاِنْسَانَ مِنْ عَلَقٍ ﴿۲﴾
اِقْرَاْ وَرَبُّكَ الْاَكْرَمُ ﴿۳﴾ الَّذِيْ عَلَّمَ بِالْقَلَمِ ﴿۴﴾ عَلَّمَ الْاِنْسَانَ مَا
لَمْ يَعْلَمْ ﴿۵﴾ كَلَّاۤ اِنَّ الْاِنْسَانَ لَيَطْغٰۤى ﴿۶﴾ اَنْ رَّاٰهُ اسْتَغْنٰى ﴿۷﴾ اِنَّ
اِلٰى رَبِّكَ الرُّجْعٰى ﴿۸﴾ اَرَءَيْتَ الَّذِيْ يَنْهٰى ﴿۹﴾ عَبْدًا اِذَا صَلّٰى ﴿۱۰﴾
اَرَءَيْتَ اِنْ كَانَ عَلَى الْهُدٰۤى ﴿۱۱﴾ اَوْ اَمَرَ بِالتَّقْوٰى ﴿۱۲﴾ اَرَءَيْتَ اِنْ
كَذَّبَ وَتَوَلّٰى ﴿۱۳﴾ اَلَمْ يَعْلَمْ بِاَنَّ اللّٰهَ يَرٰى ﴿۱۴﴾ كَلَّا لَئِنْ لَّمْ يَنْتَهِ ۙ
لَنَسْفَعًا بِالنَّاصِيَةِ ﴿۱۵﴾ نَاصِيَةٍ كَاذِبَةٍ خَاطِئَةٍ ﴿۱۶﴾ فَلْيَدْعُ نَادِيَهٗ ﴿۱۷﴾

அத்தியாயம் : 95

## அத்தீன் _ அத்தி

வசனங்கள் : 8 மக்கீ ருகூஉ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. அத்தியின்மீதும், ஜைதூனின் (ஒலிவத்தின்) மீதும் சத்தியமாக_
2. ஸினாய் மலையின்மீதும் சத்தியமாக_
3. (மக்காவாகிய) அபயமளிக்கும் இந்நகரத்தின்மீதும் சத்தியமாக_
4. நிச்சயமாக நாம் மனிதனை மிக அழகான அமைப்பில் படைத்திருக்கின்றோம்.
5. பின்னர், அவனைத் தாழ்ந்தோரிலும்மிகத் தாழ்ந்தோனாக திருப்பினோம்.
6. விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்கின்றார்களே அத்தகையோரைத் தவிர_ அவர்களுக்கு முடிவடையாத (நற்) கூலியுண்டு.
7. (இச்சான்றுகளுக்குப்)பின் (மனிதா!) நியாயத் தீர்ப்பு நாள் விஷயம் பற்றி எது உன்னை பொய்யில் ஆழ்த்தியது ?
8. தீர்ப்பளிப்போர்களிலெல்லாம் அல்லாஹ் மிக்க மேலாகத் தீர்ப்பளிப் போனாக இல்லையா?

அத்தியாயம் : 96

## அல் அலக் _ இரத்தக்கட்டி

வசனங்கள் : 19 மக்கீ ருகூஉ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. உம்முடைய இரட்சகனின் (சங்கையான) பெயரைக்கொண்டு நீர் ஓதுவீராக! அவன் எத்தகையவனென்றால்(படைப்பினங்கள் அனைத்தையும்) படைத்தான்.
2. மனிதனை (அட்டைப்பூச்சிபோன்று ஒட்டிக்கொண்டிருக்கும்) இரத்தக் கட்டியிலிருந்து அவன் படைத்தான்.
3. நீர் ஓதுவீராக! மேலும், உமதிரட்சகன் மிக்க சங்கையானவன்_
4. அவன் எத்தகையவனென்றால், எழுதுகோலைக் கொண்டு(எழுதக்) கற்றுக் கொடுத்தான்.
5. மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் (அல்லாஹ்வாகிய ) அவன் கற்றுக்கொடுத்தான்.
6. (இவ்வாறு படைக்கப்பட்ட மனிதன் அவனைப்படைத்த அல்லாஹ்வின் அருட் கொடைகளுக்கு நன்றி செய்கிறானா?) இல்லை; நிச்சயமாக மனிதன் வரம்பு மீறுகிறான்_
7. அவன் தன்னை (இரட்சகனிடமிருந்து) தேவையற்றவன் எனக்காணும் பொழுது.
8. நிச்சயமாக உமதிரட்சகனின் பக்கமே (அவன்) மீளவேண்டியதிருக்கின்றது.
9. தடுக்கின்றானே அவனை (நபியே!) நீர் பார்த்தீரா ?
10. ஓர் அடியாரை அவர் தொழுது கொண்டிருக்கும்பொழுது,
11. அவர் நேர்வழியின் மீதிருந்து (ம்அவரைத்தொழவிடாமல் தடுத்தவனை) நீர் பார்த்தீரா?
12. அல்லது பயபக்தியைக் கொண்டு ஏவுகிறவராக அவர் இருந்தும்;
13. அவன் (அவரைப்) பொய்யாக்கி, முகத்தையும் திருப்பிக் கொண்டான் என்பதை நீர் பார்த்தீரா ?
14. நிச்சயமாக அல்லாஹ் (அவனைப்)பார்க்கின்றான் என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லையா ?
15. (முஹம்மது தொழுதால் நான் அவர் கழுத்தின் மீது மிதிப்பேன் என அபூஜஹல் கூறியவாறு) அல்ல! (இத்தீய செயலிலிருந்து) அவன் விலகிக் கொள்ளாவிடில், நிச்சயமாக ( அவனது ) முன்னெற்றி உரோமத்தைப்பிடித்து நாம் இழுப்போம்.
16. தவறிழைத்து பொய்யுரைக்கும் முன்னெற்றி ரோமத்தை.
17. ஆகவே, (தன் உதவிக்காக) தனது சபையோரை அவன் அழைக்கட்டும்.

سَنَدْعُ الزَّبَانِيَةَ ﴿١٨﴾ كَلَّا ۗ لَا تُطِعْهُ وَاسْجُدْ وَاقْتَرِبْ ۩ ﴿١٩﴾ ع ١٩ / ٢١ — السجدة ١٤

## سُوْرَةُ الْقَدْرِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اِنَّآ اَنْزَلْنٰهُ فِيْ لَيْلَةِ الْقَدْرِ ﴿١﴾ وَمَآ اَدْرٰىكَ مَا لَيْلَةُ الْقَدْرِ ﴿٢﴾ لَيْلَةُ

الْقَدْرِ ۙ خَيْرٌ مِّنْ اَلْفِ شَهْرٍ ﴿٣﴾ تَنَزَّلُ الْمَلٰٓئِكَةُ وَالرُّوْحُ فِيْهَا

بِاِذْنِ رَبِّهِمْ ۚ مِنْ كُلِّ اَمْرٍ ﴿٤﴾ سَلٰمٌ ۛ هِيَ حَتّٰى مَطْلَعِ الْفَجْرِ ﴿٥﴾ ع ٥ / ٢٢ — وقف النبي عليه السلام / الثالثة / معانقة ١٨ عند المتأخرين ١٢

## سُوْرَةُ الْبَيِّنَةِ مَدَنِيَّةٌ وَّهِيَ ثَمَانِيْ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

لَمْ يَكُنِ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ وَالْمُشْرِكِيْنَ مُنْفَكِّيْنَ

حَتّٰى تَاْتِيَهُمُ الْبَيِّنَةُ ﴿١﴾ رَسُوْلٌ مِّنَ اللّٰهِ يَتْلُوْا صُحُفًا مُّطَهَّرَةً ﴿٢﴾

فِيْهَا كُتُبٌ قَيِّمَةٌ ﴿٣﴾ وَمَا تَفَرَّقَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ اِلَّا مِنْۢ

بَعْدِ مَا جَآءَتْهُمُ الْبَيِّنَةُ ﴿٤﴾ وَمَآ اُمِرُوْٓا اِلَّا لِيَعْبُدُوا اللّٰهَ

مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ۙ حُنَفَآءَ وَيُقِيْمُوا الصَّلٰوةَ وَيُؤْتُوا الزَّكٰوةَ

وَذٰلِكَ دِيْنُ الْقَيِّمَةِ ﴿٥﴾ اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ وَ

الْمُشْرِكِيْنَ فِيْ نَارِ جَهَنَّمَ خٰلِدِيْنَ فِيْهَا ۗ اُولٰٓئِكَ هُمْ شَرُّ الْبَرِيَّةِ ﴿٦﴾

18. நாமும் (அவனுக்கு தண்டனைதரும்) காவலர்களை அழைப்போம்.
19. (நீர் தொழுவதை விட்டும் தடுத்துவிட முயன்றானே அவ்வாறு) அல்ல! (நபியே!) நிச்சயமாக நீர் அவனுக்குக் கீழ்ப்படியாதீர். (உமதிரட்சகனுக்குச்) சிரம் பணிவீராக, இன்னும், (அவனை வணக்கத்தின் மூலம்) நெருங்குவீராக.

அத்தியாயம் : 97

## அல் கத்ர் _ கண்ணியமிக்கது

வசனங்கள் : 5 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. நிச்சயமாக நாம் (நம் வேதமாகிய) இதனை கண்ணியமிக்க (லைலத்துல் கத்ர் எனும்) இரவில் இறக்கிவைத்தோம்.
2. (நபியே! அந்த) கண்ணியமிக்க இரவு என்னவென்பதுபற்றி உமக்கு அறிவித்தது எது?
3. கண்ணியமிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களைவிட மிகச் சிறந்ததாகும் .
4. அதில் மலக்குகளும், (ஜிப்ரீலாகிய பரிசுத்த) ஆவியும் தங்கள் இரட்சகனின் கட்டளையின் படி (நடைபெற வேண்டிய) ஒவ்வொரு காரியத்தின் நிமித்தம் இறங்குகின்றனர்.
5. (அது) சாந்தியா(ன இரவா)கும்; அ(வ்விரவான)து, அதிகாலை உதயமாகும் வரையிலாகும்.

அத்தியாயம் : 98

## அல் பய்யினா _ தெளிவான சான்று

வசனங்கள் : 8 மதனீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. வேதக்காரர்களிலிருந்தும், இணைவைப்பவர்களிலிருந்தும் நிராகரித்து விட்டார்களே அத்தகையோர், தெளிவான ஆதாரம் அவர்களுக்கு வரும்வரை (நிராகரிப்பதை விட்டும்) விலகுபவர்களாக இருக்கவில்லை.
2. (அத்தெளிவான ஆதாரம்) அல்லாஹ்விடமிருந்து (வந்து)ள்ள தூதர்; (ஆவார். அல்லாஹ்விடமிருந்து இறக்கப்பட்ட) பரிசுத்த ஆகமங்களை அவர் ஓதிக் காண்பிக்கிறார்.
3. அவற்றில் தீர்க்கமான சட்டதிட்டங்கள் உள்ளன.
4. இன்னும், வேதம்கொடுக்கப்பட்டோர்_தெளிவான ஆதாரம்(நபியும் அவர் மூலமாக வேதமும்) தங்களுக்கு வந்தபின்னரே தவிர அவர்கள் பிளவுபடவில்லை.
5. இன்னும், அல்லாஹ்வை_அவனுக்காகவே வணக்கத்தைக் கலப்பற்றதாக ஆக்கியவர்களாக, (அனைத்து தீயவழிகளை விட்டும் நீங்கி இஸ்லாத்தின் பால்) சாய்ந்தவர்களாக அவர்கள் அல்லாஹ்வை வணங்குவதற்காகவும், தொழுகையை அவர்கள் நிறைவேற்றுவதற்காகவும், ஜகாத்தை அவர்கள் கொடுப்பதற்காகவுமே தவிர (வேறெதையும்) அவர்கள் (அதில்) கட்டளையிடப்படவில்லை; இன்னும், இதுதான் நேரான மார்க்கமாகும்.
6. (இந்த நபியின் வரவை எதிர்பார்த்தவர்களில்) வேதத்தையுடையோர்களிலும், இணைவைத்துக்கொண்டிருப்போரிலும் நிச்சயமாக (இவரை) நிராகரிக்கின்றார்களே அத்தகையோர், நரக நெருப்பில்தான் இருப்பார்கள்; அதில் (அவர்கள்) நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; அத்தகையோர்தாம் படைப்புகளில் மிகக் கெட்டவர்கள்.

إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصّٰلِحٰتِ ۙ أُولٰٓئِكَ هُمْ خَيْرُ الْبَرِيَّةِ ۷ ط
جَزَآؤُهُمْ عِنْدَ رَبِّهِمْ جَنّٰتُ عَدْنٍ تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهٰرُ خٰلِدِينَ
فِيهَآ أَبَدًا ۖ رَضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوا عَنْهُ ۚ ذٰلِكَ لِمَنْ خَشِيَ رَبَّهُ ۸ ع ۱ ۸ ۲۳

## سُورَةُ الزِّلْزَالِ مَدَنِيَّةٌ وَهِيَ ثَمَانِ آيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

إِذَا زُلْزِلَتِ الْأَرْضُ زِلْزَالَهَا ۱ وَأَخْرَجَتِ الْأَرْضُ أَثْقَالَهَا ۲
وَقَالَ الْإِنْسَانُ مَا لَهَا ۳ يَوْمَئِذٍ تُحَدِّثُ أَخْبَارَهَا ۴ بِأَنَّ
رَبَّكَ أَوْحٰى لَهَا ۵ يَوْمَئِذٍ يَصْدُرُ النَّاسُ أَشْتَاتًا ۙ لِيُرَوْا
أَعْمَالَهُمْ ۶ فَمَنْ يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَرَهُ ۷ وَمَنْ
يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ شَرًّا يَرَهُ ۸ ع ۱ ۸ ۲۴

## سُورَةُ الْعٰدِيٰتِ مَكِّيَّةٌ وَهِيَ إِحْدٰى عَشْرَةَ آيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

وَالْعٰدِيٰتِ ضَبْحًا ۱ فَالْمُورِيٰتِ قَدْحًا ۲ فَالْمُغِيرٰتِ صُبْحًا ۳
فَأَثَرْنَ بِهٖ نَقْعًا ۴ فَوَسَطْنَ بِهٖ جَمْعًا ۵ إِنَّ الْإِنْسَانَ لِرَبِّهٖ
لَكَنُودٌ ۶ وَإِنَّهٗ عَلٰى ذٰلِكَ لَشَهِيدٌ ۷ وَإِنَّهٗ لِحُبِّ الْخَيْرِ لَشَدِيدٌ ۸

7. நிச்சயமாக விசுவாசங்கொண்டு, நற்செயல்களையும் செய்கின்றார்களே அத்தகையோர்தாம் படைப்புகளில் மிகச்சிறந்தவர்கள்.

8. அவர்களுடைய (நற்) கூலி அவர்களின் இரட்சகனிடம் (அத்னு எனும்) நிலையான சுவனங்களாகும்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; என்றென்றும் (அவர்கள்) அவற்றில் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; அல்லாஹ்வும் அவர்களைப் பொருந்திக் கொண்டான்; அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக்கொண்டார்கள். அது, எவர் தன் இரட்சகனுக்குப் பயப்படுகிறாரோ, அவருக்குரியதாகும்.

---

அத்தியாயம் : 99

## அல்ஜில்ஜால் _ அதிர்ச்சி

வசனங்கள் : 8 மதனீ ருகூஉ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. பூமியானது (அதன் அடிப்பாகத்திலிருந்து)கடுமையான அசைவாக அசைக்கப்பட்டு விடும்போது _

2. இன்னும் பூமி, தனது சுமைகளை (எல்லாம்) வெளிப்படுத்திவிடும்போது _

3. இன்னும் மனிதன், (திடுக்கிட்டு) "இதற்கென்ன நேர்ந்தது?" என்று கூறிவிடும்போது _

4. அந்நாளில் (பூமியான) அது, தனது செய்திகளை (மனிதர்களுக்கு) அறிவிக்கும் _

5. நிச்சயமாக உமதிரட்சகன் (இவ்வாறு அறிவிக்குமாறு) அதற்கு (க்கட்டளையிட்டு) வஹீமூலம் அறிவித்ததன் காரணமாக!

6. (அவ்வாறு பூமி அசைக்கப்பட்டு அதன் வயிற்றினுள் உள்ளதை வெளியாக்கிவிடும்) அந்நாளில் மனிதர்கள் தங்கள் செயல்கள் அவர்களுக்கு காட்டப்படுவதற்காக பல பிரிவினர்களாகப் புறப்பட்டு வருவார்கள்.

7. எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மையைச் செய்தாரோ அவர் (மறுமையில்) அத(ன் பய)னைக்கண்டுகொள்வார்.

8. இன்னும், எவர் ஓர் அணுவளவு தீமையைச் செய்தாரோ அவர் (மறுமையில்) அத(ன் கேடி)னைக் கண்டு கொள்வார்.

---

அத்தியாயம் : 100

## அல் ஆதியாத் _ வேகமாக ஓடக்கூடியவை

வசனங்கள் : 11 மக்கீ ருகூஉ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. மூச்சிரைக்கும் சப்தத்தோடு (போர்க்களத்தில் எதிரிகளைத்தாக்க) அதிவேகமாக ஓடுகின்றவற்றின் (_குதிரைகளின்) மீது சத்தியமாக!

2. பின்னர், (செல்லும் வேகத்தில் அவற்றின் குளம்புகள் கற்களில் மோத) தீப்பொறியை பறக்கச் செய்பவற்றின் மீதும் சத்தியமாக!

3. பிறகு, அதிகாலையில் வேகமாக (எதிரிகள் மீது) பாய்ந்து செல்பவற்றின் மீதும் சத்தியமாக!

4. (அதிகாலையில் அவ்வாறு அதி வேகமாகச் செல்லும்போது) அதனால் புழுதியை கிளப்புகின்றவற்றின் மீதும் சத்தியமாக!

5. பின்னர், (எதிரிகளின்) படைகளுக்கு மத்தியில் செல்கின்றவற்றின் மீதும் சத்தியமாக!

6. நிச்சயமாக மனிதன் தன் இரட்சகனுக்கு நன்றிகெட்டவனாகவே இருக்கின்றான்;

7. மேலும், நிச்சயமாக அவனே இதற்கு சாட்சியாகவும் இருக்கின்றான்;

8. இன்னும், நிச்சயமாக (மனிதனாகிய) அவன், செல்வத்தை விரும்புவதில் மிகக்கடுமையானவனாக இருக்கின்றான்.

أَفَلَا يَعْلَمُ إِذَا بُعْثِرَ مَا فِي الْقُبُورِ ۙ ﴿٩﴾ وَحُصِّلَ مَا فِي الصُّدُورِ ۙ ﴿١٠﴾

إِنَّ رَبَّهُمْ بِهِمْ يَوْمَئِذٍ لَّخَبِيرٌ ﴿١١﴾ ع ١١ ٢٥

## سُورَةُ الْقَارِعَةِ مَكِّيَّةٌ وَهِيَ إِحْدَى عَشْرَةَ آيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْقَارِعَةُ ۙ ﴿١﴾ مَا الْقَارِعَةُ ۚ ﴿٢﴾ وَمَا أَدْرٰىكَ مَا الْقَارِعَةُ ۗ ﴿٣﴾

يَوْمَ يَكُونُ النَّاسُ كَالْفَرَاشِ الْمَبْثُوثِ ۙ ﴿٤﴾ وَتَكُونُ الْجِبَالُ

كَالْعِهْنِ الْمَنْفُوشِ ۗ ﴿٥﴾ فَأَمَّا مَنْ ثَقُلَتْ مَوَازِينُهُ ۙ ﴿٦﴾ فَهُوَ

فِي عِيشَةٍ رَّاضِيَةٍ ۗ ﴿٧﴾ وَأَمَّا مَنْ خَفَّتْ مَوَازِينُهُ ۙ ﴿٨﴾ فَأُمُّهُ

هَاوِيَةٌ ۗ ﴿٩﴾ وَمَا أَدْرٰىكَ مَا هِيَهْ ۗ ﴿١٠﴾ نَارٌ حَامِيَةٌ ﴿١١﴾ ع ١١ ٢٦

## سُورَةُ التَّكَاثُرِ مَكِّيَّةٌ وَهِيَ ثَمَانِي آيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

أَلْهٰكُمُ التَّكَاثُرُ ۙ ﴿١﴾ حَتّٰى زُرْتُمُ الْمَقَابِرَ ۗ ﴿٢﴾ كَلَّا سَوْفَ

تَعْلَمُونَ ۙ ﴿٣﴾ ثُمَّ كَلَّا سَوْفَ تَعْلَمُونَ ۗ ﴿٤﴾ كَلَّا لَوْ تَعْلَمُونَ عِلْمَ

الْيَقِينِ ۗ ﴿٥﴾ لَتَرَوُنَّ الْجَحِيمَ ۙ ﴿٦﴾ ثُمَّ لَتَرَوُنَّهَا عَيْنَ الْيَقِينِ ۙ ﴿٧﴾

ثُمَّ لَتُسْأَلُنَّ يَوْمَئِذٍ عَنِ النَّعِيمِ ﴿٨﴾ ع ٨ ٢٧

9. அவன் அறிந்து கொள்ளவேண்டாமா? மண்ணறைகளிலுள்ளவை (எழுப்பப் பட்டு) வெளியேற்றப்பட்டுவிடும்போது—
10. இதயங்களிலுள்ளவையும் வெளியாக்கப்பட்டுவிடும்போது—
11. நிச்சயமாக அவர்களின் இரட்சகன், அவர்களைப்பற்றிஅந்நாளில் நன்கு உணர்பவன் (ஆகவே நன்மைக்கு நற்கூலியும், தீமைக்கு தண்டனையும் வழங்குவான்).

அத்தியாயம் : 101

## அல்காரிஆ — திடுக்கிடச்செய்யும் நிகழ்ச்சி

வசனங்கள் : 11 மக்கீ ருகூஉ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (தன் அமளியினால் இதயங்களைத்) தட்டக்கூடியது—
2. தட்டக்கூடியது என்றால் என்ன?
3. (நபியே!) தட்டக்கூடியது என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
4. அந்நாளில் மனிதர்கள் சிதறடிக்கப்பட்ட ஈசல்களைப்போல் ஆகிவிடுவார்கள்.
5. இன்னும் மலைகள் கொட்டப்(பட்டு சாயம் ஏற்றப்)பட்ட பஞ்சைப்போன்று ஆகிவிடும்.
6. ஆகவே, எவருடைய (நன்மையின்) எடை கனத்ததோ,
7. அவர் திருப்தியுள்ள வாழ்க்கையில் (சுகமாக வாழ்ந்துகொண்டு) இருப்பார்.
8. மேலும், எவருடைய (நன்மையின்) எடை இலேசாகி(ப்பாவ எடை கனத்து)விட்டதோ,
9. அவர் தங்குமிடம் "ஹாவியா" தான்.
10. அ(ந்த ஹாவியாவான)து என்னவென்று உமக்கு அறிவித்ததுஎது?
11. (அதுதான்) கடுமையாக சூடேற்றப்பட்ட (நரக) நெருப்பாகும்.

அத்தியாயம் : 102

## அத்தகாஸுர் — அதிகமாகத் தேடுவது

வசனங்கள் : 8 மக்கீ ருகூஉ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (செல்வத்தையும், மக்களையும்) ஒருவருக்கொருவர் அதிகமாகத் தேடிக் கொள்வது உங்களைப் பராக்காக்கிவிட்டது.
2. மண்ணறைகளை நீங்கள் சந்திக்கும் வரை.
3. (உண்மைநிலை) அவ்வாறல்ல! (அதன் விளைவை) அடுத்து நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.
4. பின்னர், அவ்வாறல்ல! (அதன் விளைவை) அடுத்து நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.
5. (உண்மை நிலை) அவ்வாறல்ல!(எதன்பால் உங்கள் முடிவிருக்குமோ அது பற்றி) நீங்கள் உறுதியான அறிவாக அறிவீர்களாயின், (நீங்கள் ஈடுபட்டிருக்கும் பயனற்ற செயல் உங்களைப் பராக்காக்கியிருக்காது)
6. (அல்லாஹ்வின் மீது சத்தியமாக மறுமையில்) நிச்சயமாக நீங்கள் நரகத்தை (வெகுதூரத்திலிருந்து) பார்ப்பீர்கள்.
7. பின்னர், நீங்கள் அதை கண்ணுக்கெதிரில் (வெகு அருகில்) பார்ப்பீர்கள்.
8.. பின்னர், அந்நாளில் (உலகில் நீங்கள் அனுபவித்து வந்த அனைத்து) அருட்கொடையைப் பற்றி நிச்சயமாக நீங்கள் கேட்கப்படுவீர்கள்.

سُوْرَةُ الْعَصْرِ مَكِّيَّةٌ وَّهِيَ ثَلٰثُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَالْعَصْرِ ﴿١﴾ اِنَّ الْاِنْسَانَ لَفِيْ خُسْرٍ ﴿٢﴾ اِلَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَ

عَمِلُوا الصّٰلِحٰتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ ۙ وَتَوَاصَوْا بِالصَّبْرِ ﴿٣﴾ ع ١ ٣ ٢٨

سُوْرَةُ الْهُمَزَةِ مَكِّيَّةٌ وَّهِيَ تِسْعُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَيْلٌ لِّكُلِّ هُمَزَةٍ لُّمَزَةِ ﴿١﴾ الَّذِيْ جَمَعَ مَالًا وَّعَدَّدَهٗ ﴿٢﴾

يَحْسَبُ اَنَّ مَالَهٗۤ اَخْلَدَهٗ ﴿٣﴾ كَلَّا لَيُنْۢبَذَنَّ فِي الْحُطَمَةِ ﴿٤﴾ وَمَاۤ

اَدْرٰىكَ مَا الْحُطَمَةُ ﴿٥﴾ نَارُ اللّٰهِ الْمُوْقَدَةُ ﴿٦﴾ الَّتِيْ تَطَّلِعُ عَلَى

الْاَفْـِٕدَةِ ﴿٧﴾ اِنَّهَا عَلَيْهِمْ مُّؤْصَدَةٌ ﴿٨﴾ فِيْ عَمَدٍ مُّمَدَّدَةٍ ﴿٩﴾ ع ١ ٩ ٢٩

سُوْرَةُ الْفِيْلِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِاَصْحٰبِ الْفِيْلِ ﴿١﴾ اَلَمْ يَجْعَلْ

كَيْدَهُمْ فِيْ تَضْلِيْلٍ ﴿٢﴾ وَّاَرْسَلَ عَلَيْهِمْ طَيْرًا اَبَابِيْلَ ﴿٣﴾

تَرْمِيْهِمْ بِحِجَارَةٍ مِّنْ سِجِّيْلٍ ﴿٤﴾ فَجَعَلَهُمْ كَعَصْفٍ مَّاْكُوْلٍ ﴿٥﴾ ع ١ ٥ ٣٠

அத்தியாயம் : 103

## அல் அஸ்ர் _ காலம்

வசனங்கள் : 3 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. காலத்தின் மீது சத்தியமாக!
2. நிச்சயமாக, மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான்_
3. விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்து, சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், (பாவங்களை விடுவதிலும், நன்மைகளைச் செய்வதிலும் ஏற்படும் கஷ்டங்களைச் சகித்து) பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறார்களே அத்தகையோரைத்தவிர.

அத்தியாயம் : 104

## அல் ஹுமஜா _ புறம்பேசித்திரிதல்

வசனங்கள் : 9 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (பிறரைக்) குறைகூறி புறம்பேசித்திரியும் ஒவ்வொருவருக்கும் கேடுதான்.
2. இத்தகையவன் பொருளைச் சேகரித்து அதனை எண்ணிவைத்துக்கொண்டும் இருந்தான்.
3. நிச்சயமாக, தன் பொருள் தன்னை (என்றென்றும் உலகில்) நிலைத்திருக்கச் செய்யுமென்று எண்ணுகிறான்.
4. (பொருளைச் சேகரித்து வைத்துக்கொண்டு உலகில் அவனை நிலைத்திருக்கச் செய்யுமென்று எண்ணியிருந்தானே) அவ்வாறன்று! (அல்லாஹ்வின் மீது சத்தியமாக!) ஹுதமாவில் அவன் எறியப்படுவான்.
5. (நபியே!) "ஹுதமா" என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
6. எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லாஹ்வின் (நரக) நெருப்பு.
7. அது எத்தகையதென்றால், (தேகத்தில் பட்டவுடன்) இதயங்கள் மீது சென்றடையும் (காரணம் இதயங்கள் தான் தீய கொள்கைகளுக்கு இருப்பிடமாக இருந்தது).
8. நிச்சயமாக அது, அவர்களின் மீது (சூழ்ந்து) மூடப்பட்டதாய் இருக்கும்.
9. நீண்ட கம்பங்களில் (அவர்கள் கட்டப்பட்டிருப்பார்கள்).

அத்தியாயம் : 105

## அல்ஃபீல் _ யானை

வசனங்கள் : 5 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே! அப்ரஹாவின்) யானைக்காரர்களை உமதிரட்சகன் எவ்வாறு செய்தான் என்பதை நீர் தெரிந்திருக்கவில்லையா?
2. அவர்களுடைய சூழ்ச்சியை அவன் வீணாக்கிடவில்லையா?
3. மேலும், அவர்கள் மீது பறவைகளைக் கூட்டங் கூட்டமாக தொடர்ந்தவையாக அவன் அனுப்பிவைத்தான்.
4. (கெட்டியான) சுடப்பட்ட சிறிய கற்களை அவர்கள்மீது அவை எறிந்தன.
5. பிறகு, (கால்நடைகளால்) தின்னப்பட்ட வைக்கோல்களைப் போல் அவர்களை அவன் ஆக்கி (அழித்து) விட்டான்.

## سُوْرَةُ قُرَيْشٍ مَكِّيَّةٌ وَّهِيَ اَرْبَعُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

لِاِيْلٰفِ قُرَيْشٍ ﴿١﴾ اٖلٰفِهِمْ رِحْلَةَ الشِّتَآءِ وَالصَّيْفِ ﴿٢﴾ فَلْيَعْبُدُوْا

ع ١ ٤ ٢١ رَبَّ هٰذَا الْبَيْتِ ﴿٣﴾ الَّذِیْۤ اَطْعَمَهُمْ مِّنْ جُوْعٍ ۙ وَّاٰمَنَهُمْ مِّنْ خَوْفٍ ﴿٤﴾

## سُوْرَةُ الْمَاعُوْنِ مَكِّيَّةٌ وَّهِيَ سَبْعُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَرَءَيْتَ الَّذِيْ يُكَذِّبُ بِالدِّيْنِ ﴿١﴾ فَذٰلِكَ الَّذِيْ يَدُعُّ الْيَتِيْمَ ﴿٢﴾ وَ

لَا يَحُضُّ عَلٰى طَعَامِ الْمِسْكِيْنِ ﴿٣﴾ فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ ﴿٤﴾ الَّذِيْنَ هُمْ عَنْ

ع ١ ٧ ٣٢ صَلَاتِهِمْ سَاهُوْنَ ﴿٥﴾ الَّذِيْنَ هُمْ يُرَآءُوْنَ ﴿٦﴾ وَيَمْنَعُوْنَ الْمَاعُوْنَ ﴿٧﴾

## سُوْرَةُ الْكَوْثَرِ مَكِّيَّةٌ وَّهِيَ ثَلٰثُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

ع ١ ٣ ٣٣ اِنَّاۤ اَعْطَيْنٰكَ الْكَوْثَرَ ﴿١﴾ فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ ﴿٢﴾ اِنَّ شَانِئَكَ هُوَ الْاَبْتَرُ ﴿٣﴾

## سُوْرَةُ الْكٰفِرُوْنَ مَكِّيَّةٌ وَّهِيَ سِتُّ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قُلْ يٰۤاَيُّهَا الْكٰفِرُوْنَ ﴿١﴾ لَاۤ اَعْبُدُ مَا تَعْبُدُوْنَ ﴿٢﴾

அத்தியாயம் : 106

## குரைஷ் _ குரைஷியர்

வசனங்கள் : 4 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. குரைஷியர்களுக்கு (பிரயாணத்தில்) விருப்பமுண்டாக்குவதற்காக,
2. மாரிகால, கோடைகால பிரயாணத்தில் அவர்களுக்கு விருப்பமுண்டாக்குவதற்காக (யானைப்படையினரை அழித்து கஃபாவை அல்லாஹ் காப்பாற்றினான்).
3. எனவே (கஅபாவாகிய) இவ்வீட்டின் இரட்சகனையே அவர்கள் வணங்குவார்களாக!
4. அவன் எத்தகையவனென்றால், (இந்த வர்த்தக பிரயாணத்தின் மூலம்) பசிக்கு அவர்களுக்கு உணவளித்தான்; மேலும் அவர்களுக்கு (பிறரால் ஏற்பட்டுக் கொண்டிருந்த) பயத்திலிருந்து அவன் அபயமளித்தான்.

அத்தியாயம் : 107

## அல் மாஊன் _ அற்பப்பொருள்

வசனங்கள் : 7 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (நபியே! மறுமையில் நல்லவற்றுக்கு நற்கூலியும், தீயவைக்கு தண்டனையும் வழங்கப்படும்) நியாயத்தீர்ப்பை பொய்யாக்குவோனை நீர் (கவனித்துப்) பார்த்தீரா ?
2. ஆகவே, அத்தகையோனே அனாதைகளை (ஈவிரக்கமின்றி) விரட்டுகிறான்.
3. அவன் ஏழைக்கு உணவளிக்கத் தூண்டுவதுமில்லை,
4. எனவே, தொழுகையாளிகளுக்குக் கேடுதான்;
5. அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகையை நிறைவேற்றுவதை விட்டு பராமுகமாக இருப்பார்கள்.
6. அத்தகையோர்தான் (மற்றவர்களுக்குக்) காண்பிக்(கவே தொழு)கிறார்கள்.
7. மேலும், (அன்றாடம் உபயோகமாகும்) அற்பமான பொருட்களை (மற்றவர்களுக்குக் கொடுப்பதை விட்டும்) தடுக்கிறார்கள்.

அத்தியாயம் : 108

## அல்கவ்ஸர் _ எண்ணற்ற நன்மைகள்

வசனங்கள் : 3 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (நபியே!) நிச்சயமாக நாம் கவ்ஸரை (எண்ணற்ற நன்மைகளை) உமக்குக் கொடுத்திருக்கின்றோம்.
2. ஆகவே, நீர் உமதிரட்சகனைத் தொழுது, இன்னும் (குர்பானியும் கொடுத்து அதை) அறுப்பீராக.
3. நிச்சயமாக உம்பகைவன் (எவனோ) அவன்தான் சந்ததியற்றவன்.

அத்தியாயம் : 109

## அல் காஃபிரூன் _ நிராகரிப்போர்

வசனங்கள் : 6 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (நபியே!) நீர் கூறுவீராக: நிராகரிப்போரே!
2. நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்கமாட்டேன்.

وَلَآ اَنۡتُمۡ عٰبِدُوۡنَ مَآ اَعۡبُدُ ۞ وَلَآ اَنَا عَابِدٌ مَّا عَبَدۡتُّمۡ ۞ وَ
لَآ اَنۡتُمۡ عٰبِدُوۡنَ مَآ اَعۡبُدُ ۞ لَكُمۡ دِيۡنُكُمۡ وَلِىَ دِيۡنِ ۞ ع ۱ ۲۴

سُوۡرَةُ النَّصۡرِ مَدَنِيَّةٌ وَهِيَ ثَلٰثُ اٰيٰتٍ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

اِذَا جَآءَ نَصۡرُ اللّٰهِ وَالۡفَتۡحُ ۞ وَرَاَيۡتَ النَّاسَ يَدۡخُلُوۡنَ فِىۡ دِيۡنِ
اللّٰهِ اَفۡوَاجًا ۞ فَسَبِّحۡ بِحَمۡدِ رَبِّكَ وَاسۡتَغۡفِرۡهُ ؕ اِنَّهٗ كَانَ تَوَّابًا ۞ ع ۱ ۲۵

وقف النبی صلی اللہ علیہ وسلم

سُوۡرَةُ تَبَّتۡ مَكِّيَّةٌ وَهِيَ خَمۡسُ اٰيٰتٍ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

تَبَّتۡ يَدَاۤ اَبِىۡ لَهَبٍ وَّتَبَّ ۞ مَاۤ اَغۡنٰى عَنۡهُ مَالُهٗ وَمَا
كَسَبَ ۞ سَيَصۡلٰى نَارًا ذَاتَ لَهَبٍ ۞ وَّامۡرَاَتُهٗ ؕ حَمَّالَةَ
الۡحَطَبِ ۞ فِىۡ جِيۡدِهَا حَبۡلٌ مِّنۡ مَّسَدٍ ۞ ع ۱ ۲۶

سُوۡرَةُ الۡاِخۡلَاصِ مَكِّيَّةٌ وَهِيَ اَرۡبَعُ اٰيٰتٍ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

قُلۡ هُوَ اللّٰهُ اَحَدٌ ۞ اَللّٰهُ الصَّمَدُ ۞ لَمۡ يَلِدۡ ۙ وَلَمۡ
يُوۡلَدۡ ۞ وَلَمۡ يَكُنۡ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۞ ع ۱ ۲۷

3. மேலும், நான் வணங்குகிற(ஒரு)வனை நீங்கள் வணங்குகிறவர்களல்லர்.
4. நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குபவனுமல்லன்.
5. மேலும் நான் வணங்குபவனை நீங்களும் வணங்குபவர்களல்லர்.
6. உங்களுக்கு உங்களது மார்க்கம்; எனக்கு என்னுடைய மார்க்கம்.

அத்தியாயம் : 110

## அந்நஸ்ர் _ உதவி

வசனங்கள் : 3 மதனீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (நபியே! உமக்கு) அல்லாஹ்வுடைய உதவி மற்றும் (மக்காவின்) வெற்றி வரும்போது_
2. இன்னும், மனிதர்களை _அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் கூட்டங் கூட்டமாக பிரவேசிப்பவர்களாக(நபியே) நீர் காணும்போது_
3. அப்போது,(அதற்கு நன்றி செலுத்தும் பொருட்டு) உமதிரட்சகனின் புகழைக் கொண்டு துதி செய்வீராக! மேலும், அவனிடம் பிழை பொறுக்கத் தேடுவீராக! நிச்சயமாக அவன் தவ்பாவை (பாவமன்னிப்புக்கோருதலை) மிகவும் ஏற்றுக்கொள்பவனாக இருக்கிறான்.

அத்தியாயம் : 111

## தப்பத் _ நாசமடைந்துவிட்டது

வசனங்கள் : 5 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. அபூலஹபின் இரு கைகள் நாசமடைக ! அவனும் நாசமாவானாக!
2. அவனுடைய செல்வமும், அவன் சம்பாதித்தவையும் அவனுக்குப் பயனளிக்கவில்லை.
3. மறுமையில் கொழுந்து விட்டெரியும் நெருப்பில் அவன் பிரவேசிப்பான்.
4. விறகு சுமப்பவளான அவனுடைய மனைவியும்(_அந்நரகில் நுழைவாள்).
5. அவளுடைய கழுத்தில் முறுக்கேறிய ஈச்சங்கயிறு ஒன்று இருக்கும் ; (அதனால் அவளும் அழிவாள்).

அத்தியாயம் : 112

## அல் இக்லாஸ் _ ஏகத்துவம்

வசனங்கள் : 4 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (நபியே!) நீர் கூறுவீராக: அவன்_"அல்லாஹ்" ஒருவனே!
2. அல்லாஹ் (யாவற்றைவிட்டும்) தேவையற்றவன் (யாவும் அவன் அருளையே எதிர்பார்த்திருக்கின்றன).
3. அவன் (எவரையும்) பெறவில்லை ; (எவராலும்) அவன் பெறப்படவுமில்லை.
4. மேலும், அவனுக்கு நிகராக எவருமில்லை.

سُوْرَةُ الْفَلَقِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ﴿١﴾ مِنْ شَرِّ مَا خَلَقَ ﴿٢﴾ وَمِنْ شَرِّ غَاسِقٍ اِذَا
وَقَبَ ﴿٣﴾ وَمِنْ شَرِّ النَّفّٰثٰتِ فِی الْعُقَدِ ﴿٤﴾ وَمِنْ شَرِّ حَاسِدٍ اِذَا حَسَدَ ﴿٥﴾ ع ١ ٥ ٣٨

سُوْرَةُ النَّاسِ مَكِّيَّةٌ وَّهِيَ سِتُّ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ ﴿١﴾ مَلِكِ النَّاسِ ﴿٢﴾ اِلٰهِ النَّاسِ ﴿٣﴾
مِنْ شَرِّ الْوَسْوَاسِ ﴿٥﴾ الْخَنَّاسِ ﴿٤﴾ الَّذِیْ یُوَسْوِسُ فِیْ
صُدُوْرِ النَّاسِ ﴿٥﴾ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ﴿٦﴾ ع ١ ٦ ٣٩

அத்தியாயம் : 113

## அல்ஃபலக் _ வைகறை

வசனங்கள் : 5 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே!) நீர் கூறுவீராக: வைகறையின் இரட்சகனிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.
2. அவன் படைத்தவற்றின் தீங்கைவிட்டும்;
3. (இரவினுடைய) இருளின் தீங்கைவிட்டும்_அதுபரவிவிடும்போது_
4. மேலும், முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கைவிட்டும்_
5. பொறாமைக்காரனின் தீங்கைவிட்டும்_அவன் பொறாமைகொள்ளும்போது (நான் காவல் தேடுகிறேன்).

அத்தியாயம் : 114

## அந்நாஸ் _ மனிதர்கள்

வசனங்கள் : 6 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களின் இரட்சகனிடம் நான் (பாது)காவல் தேடுகிறேன்.
2. (அவன்தான்) மனிதர்களின் அரசன்.
3. (அவனே) மனிதர்களின் (வணக்கத்திற்குரிய) நாயன்.
4. பின்னால் பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களைக் கிளப்பக்கூடியவ(னான ஷைத்தா)னின் தீங்கைவிட்டும் (நான் பாதுகாவல் தேடுகிறேன்).
5. அவன் எத்தகையவனென்றால், மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களைக் கிளப்பிவிடுகிறான்.
6. (இத்தகையோர்) ஜின்களில் மற்றும் மனிதர்களில் இருக்கின்றனர்.

## சங்கைமிக்கக் குர் ஆனை ஓதும் முறையை விளக்கும் குறியீடுகள்:

○ இந்தக்குறி ஒரு வசனம் முடிந்ததற்குரிய அடையாளமாகும். இந்த வட்டத்தின் மேற்புறமோ அல்லது உட்புறமோ எந்த அடையாளமும் குறிப்பிடப் படாதிருப்பின், நிறுத்தி, நிதானப் படுத்திக்கொண்டு ஓதவேண்டும். ஏதாவதோர் அடையாளம் குறிக்கப்பட்டிருந்தால், அதனை அனுசரித்து ஓதிக்கொள்ளவேண்டும்.

م இந்தக் குறியுள்ள இடத்தில் கட்டாயமாக நிறுத்தி ஓத வேண்டும். மாறாக, சேர்த்து ஓதினால் அர்த்தமாற்றம் ஏற்படும்.

ط இந்தக் குறியுள்ள இடத்தில் நிறுத்தி ஓதவேண்டும். சேர்த்து ஓதுவது சிறந்ததல்ல.

ج இந்தக் குறியுள்ள இடத்தில் நிறுத்தி ஓதுவது சிறந்ததாகும். நிறுத்தாமல் ஓதுவதும் அனுமதிக்கப் பட்டுள்ளது.

ز இந்தக்குறியுள்ள இடத்தில் நிறுத்தி ஓதுவதும், நிறுத்தாது ஓதுவதும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆயினும், நிறுத்தாமல் சேர்த்து ஓதுவது சிறந்தது.

ص இந்தக்குறியுள்ள இடத்தில் நிறுத்தி ஓதுவதற்கு அனுமதி உண்டு. ஆயினும், இணைத்தே ஓதவேண்டும் யாரேனும் சிரமத்தினால் நிறுத்திவிட்டால் அதற்கும் அனுமதி உண்டு.

ۖ இந்தக்குறியுள்ள இடத்தில் நிறுத்தாமல் ஓதுவதே சிறந்தது.

لا இந்தக்குறி சில வசனத்தின் இறுதியிலும், சிலவசனத்தின் இடையிலும் காணப்படும். வசனத்தின் இறுதியில் காணப்பட்டால் நிறுத்தியும், நிறுத்தாமலும் ஓதலாம். ஆனால், வசனத்தின் இடையில் காணப்பட்டால் நிறுத்தாமலேயே ஓதவேண்டும்.

قف இந்தக் குறியுள்ள இடத்தில் மூச்சுவிடாதும், நிறுத்திவிடாதும் சற்றுத் தாமதித்து நீட்டி ஓதவேண்டும்.

سكتة س இந்தக் குறியுள்ள இடத்தில் சுவாசத்தை விட்டுவிடாமல் சற்று நிறுத்தி ஓதவேண்டும்.

وقفة இந்தக் குறியுள்ள இடத்தில் சுவாசத்தை விட்டுவிடாமல் முந்தையதைவிடச் சற்று அதிகம் நிறுத்தி ஓதவேண்டும்.

صل இந்தக் குறியுள்ள இடத்தில் நிறுத்தியும் ஓதலாம், நிறுத்தாமலும் ஓதலாம். எனினும், நிறுத்தி ஓதுவது சிறந்தது.

صلے இந்தக் குறியுள்ள இடத்தில் சேர்த்தே ஓதுவது சிறந்தது.

ك இந்தக் குறியுள்ள வசனத்திற்கு முன்னுள்ள வசனத்தில் என்ன குறியீடு இருக்கிறதோ அதுவே இக்குறியுள்ள இடத்திற்கும் உரியதாகும்.

**மொழி பெயர்ப்பின் சில வசனங்களுக்கு முக்கியக் குறிப்புகள் எழுதவேண்டிய அவசியமேற்பட்டதால் அவ்வசனங்களின் இறுதியில் இலக்கமிட்டுள்ளோம்.**

1. (அ) - 'மன்னு என்பது இஸ்ராயீலின் மக்கள் இருந்த பகுதியில் பனிக்கட்டி விழுவது போன்று, ஃபஜ்ரு (அதிகாலை) நேரத்திலிருந்து சூரியன் உதயமாகும் வரை விழுந்து கொண்டிருக்கும் ஒரு பொருள்' என கதாதா அவர்களும், 'அஃது இரவில் அவர்களுக்காக மரங்களில் இறங்கிவிடும், அதிகாலையில் அவர்கள் சென்று அதை எடுத்து உண்பார்கள்' என இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்களும் கூறுகிறார்கள்.

அது நிறத்தில் பாலைவிட வெண்மையானதாகவும், சுவையில் தேனைவிட இனிமையானதாகவும் இருக்கும். அன்றைய தினத்திற்குத் தேவையானதை மட்டும் ஒவ்வொரு மனிதனும் எடுத்துக் கொள்ளவேண்டும். அந்நாளைக் கடந்துவிட்டால் அது கெட்டுவிடும். அவர்களின் ஆறாவது நாளான சனிக் கிழமைக்காகவும் ஏழாவது நாளான ஞாயிற்றுக் கிழமைக்காகவும் தேவையானதை வெள்ளிக்கிழமையே அவர்கள் எடுத்து வைத்துக் கொள்வார்கள். எனினும், அது கெட்டு விடுவதில்லை. காரணம்: அந்நாட்கள் அவர்களுக்குப் பெருநாட்களாகும். அவ்விரு நாட்களில் வாழ்க்கைத் தேவைக்காக எதையும் தேடிக்கொள்ள அனுமதி மறுக்கப் பட்டவர்களாக அவர்கள் இருந்தனர்.

(ஆ). 'ஸல்வா என்பது சுமானா-கவ்தாரிப் பறவை போன்ற ஒரு பறவையாகும். அதை அவர்கள் உணவாக உண்டு வந்தார்கள்' என இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறியதாக இப்னுல் முன்திர் மற்றும் இப்னு அபீஹாதம் ஆகியோர் பதிவு செய்துள்ளனர்.

2. இவ்வசனத்தில் இடம்பெற்றுள்ள "ஸிப்ஃகத்தல்லாஹ்" என்பதன் பொருள் அல்லாஹ்வின் மார்க்கமாகிய இஸ்லாம்தான்' என கதாதா கூறுகிறார்கள். இஃதல்லாமல் புனித ஸ்நானம், ஞானஸ்நானம் எனச்சிலர் மொழியாக்கம் செய்துள்ளனர். இவ்வகைக் குளிப்பு இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். காரணம்: குளிப்பதால் ஞானம் ஏற்பட்டு விடுமென்றோ அல்லது இவ்வகைக் குளிப்பினால் மட்டும் பாவங்களிலிருந்து பரிசுத்தமடைந்து விடமுடியும்

என்றோ, இஸ்லாத்தில் அறுதி செய்யப் படவில்லை என்பது மிகத்தெளிவு. ஆனால் கிறிஸ்தவர்கள் தங்கள் குழந்தைகளை நீரில் சாயங்காட்டி, அதில் குளிக்க வைத்து, அவ்வகைக் குளிப்பிற்கு 'ம∴முதியா' எனப் பெயரிட்டுமிருந்தனர். அவ்வாறு குளிக்க வைப்பதால் அக்குழந்தை பரிசுத்தம் பெற்று உண்மைக் கிறிஸ்தவனாக ஆகிவிடுகிறது என்று அவர்கள் நம்பிக் கொண்டிருந்ததை, வல்ல அல்லாஹ் மறுத்து, 'மனிதர்களின் அகம்-புறம் ஆகியவற்றைச் சுத்தப் படுத்துவது இஸ்லாம் மார்க்கத்தை நடைமுறைப் படுத்துவதால்தான் சாத்தியம்' என்பதைத் தெளிவு செய்து "இஸ்லாம் மார்க்கத்தைக் கடைப்பிடியுங்கள்" என இவ்வசனத்தின் மூலம் கட்டளை பிறப்பித்திருக்கிறான். மேலும், இவ்வசனத்தில் வந்துள்ள 'அல்லாஹ்வின் வர்ணம்' என்பதன் பொருள் 'அல்லாஹ்வின் மார்க்கம்தான்' என இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்களும் கூறுகிறார்கள்.

3. இவ்வசனத்தில் இடம் பெற்றுள்ள 'ய∴ரி∴பூனஹு' என்ற வார்த்தையில் இடம்பெற்றுள்ள "ஹு" எனும் படர்க்கை சுட்டுச்சொல், நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறிக்கும் உயர்திணைச் சொல் என்று சிலரும், "அ(ந்த உண்மையான)தை" எனச் சிலரும் மொழியாக்கம் செய்துள்ளனர். ஆயினும், வசனத்தொடர்களை கவனித்தால் பைத்துல் முகத்தஸின்பால் முகம் திருப்பித் தொழுது கொண்டிருந்த நிலையை மாற்றி, மஸ்ஜிதுல் ஹராமின் பக்கம் முகம் திருப்பித் தொழவேண்டுமென்று அல்லாஹ் பிறப்பித்த கட்டளையின்படி கிப்லா திருப்பப்பட்டு விட்ட உண்மையான "அதை", 'அவர்கள் அறிவார்கள்' என்பதையே அவ்வசனங்கள் தெளிவு செய்து கொண்டிருக்கின்றன. அதையடுத்த வசனமும் இதையே உறுதிப்படுத்துகிறது. ஆகவேதான், இரண்டாவது கருத்தை மொழிபெயர்ப்பில் இடம்பெறச் செய்துள்ளோம்.

4. இவ்வசனத்தில் உண்ணுவது தடை செய்யப்பட்டவை பற்றி, கண்ணியத்திற்குரிய அல்லாஹ் தெளிவு செய்கிறான். இதே கருத்தை உறுதிப்படுத்தும் வசனங்கள் அல்-அன்ஆம் 154லிலும், அந்-நஹ்ல் 115லும் இடம் பெற்றுள்ளன. உண்ணுவது தடை செய்யப்பட்டவற்றில், "அல்லாஹ் அல்லாதவருக்காகப் பெயர் கூறப்பட்டவையும்" அடங்கும். அதைப் பற்றிய விளக்கம் வருமாறு: அறியாமைக் காலத்தில் அறுப்புப் பிராணிகளை, அல்லாஹ் அல்லாத தங்களின் இஷ்ட தெய்வங்களான தங்களது வணக்கத்திற்கு உரியவைகளுக்காக அவர்கள்பால்

நெருக்கத்தைப்பெற எண்ணி, சிலை வணக்கத்தையுடையோர் 'லாத், உஸ்ஸா' போன்ற பெயர்களைக் குறிப்பிட்டும் நெருப்பை வணங்குவோர் நெருப்பிற்காக எனவும் பலி கொடுத்துவந்தனர். இவையும், அல்லாஹ் அல்லாத எவருக்காகவும், எதற்காகவும் பெயர்கூறி விடப்பட்டு அறுக்கப் படுபவையும் இவ்வகையைச் சேரும். இவற்றை அறுக்கும் போது அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்டு அறுக்கப்பட்டாலும் இவ்வகை உணவுகள் யாவும் தடுக்கப் பட்டவை என்பதை இரண்டு கருத்திற்கிடமின்றி இவ்வசனம் தெளிவு செய்து கொண்டிருக்கிறது.

5. இவ்வசனத்தில் இடம் பெற்றுள்ள "வ அலல்லதீன யுதீகூனஹு" "இன்னும் அதற்குச் சக்தி பெற்றிருப்போர் மீது ஓர் ஏழைக்கு ஆகாரமளிப்பது பரிகாரமாகும்" என்ற அல்லாஹ்வின் வாக்கு பற்றிய விளக்கம் வருமாறு: 2:183வது வசனத்தில் "விசுவாசம் கொண்டோரே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப் பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிக்கிறது. அதனால் நீங்கள் பயபக்தியுடையவர்கள் ஆகலாம்" என்று வல்ல அல்லாஹ் தெளிவு செய்தபின் 184ம் வசனத்தில், விதிக்கப்பட்ட கடமையிலிருந்து சலுகை பெறுவோரான நோயாளியையும் பிரயாணியையும் பற்றிக் கூறிய பின்னர், "இன்னும் (நோன்பு நோற்கச்) சக்தி பெற்றிருப்போர் மீது ஓர் ஏழைக்கு ஆகாரமளிப்பது பரிகாரமாகும்" என்றும் கூறினான். இவ்வசனத்தில் உள்ள தெளிவின் பிரகாரம் இஷ்டப்பட்டவர் நோன்பு நோற்றார். இஷ்டப்படாதவர் நோன்பு நோற்பதை விட்டுவிட்டு அதற்குப் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளித்தும் வந்தார் என்பது ஒரு நிலை. பின்னர், 185ம் வசனத்தில் இடம்பெற்றுள்ள "ஃபமன் ஷஹித மின்குமுஷ் ஷஹ்ர ஃபல்யஸும்ஹு" "ஆகவே உங்களில் அம்மாதத்தை அடைகிறவர் நோன்பு நோற்கவும்" என்ற வசனம் இறங்கிய பொழுது '...மேலும், அதற்குச் சக்தி பெற்றிருப்போர் மீது ஓர் ஏழைக்கு ஆகாரமளிப்பது பரிகாரமாகும்' என்ற வசனத்தில் உள்ள சட்டத்தை இது மாற்றிவிட்டது என்பது மற்றொரு நிலை. ஆகவே நோன்பை விடுவதற்குச் சலுகை பெற்றோர் நீங்கலாக மற்றவர்கள் மீது கடமை என்பது நிலைபெற்றுவிட்டது. இதனடிப்படையில் "...மேலும், அதற்கு சக்தி பெற்றிருப்போர் மீது ஓர் ஏழைக்கு ஆகாரமளிப்பது பரிகாரமாகும்" என மொழிபெயர்ப்புச் செய்தது மிகச் சரியானதாகும். விரிவுரையாளர்களில் பெரும்பாலானவர்களின் கூற்று இதுவேயாகும்.

இன்னும் ஒரு சாரார் "வ அல்லதீன யுதீகூனஹூ" என்ற சொற்றொடரை "யுதவ்விகூனஹூ" என்றும் "யத்தய்யகூனஹூ" என்றும் ஓதியுள்ளனர். இவ்வாறு ஓதியவர்களில் குறிப்பிடத் தகுந்தவர், இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்களாவர். இவ்வாறே ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா பற்றியும் அம்ரிபுனு தீனார், தாவூஸ் ஆகியோர் பற்றியும் அறிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிடப்பட்டக் கிராஅத்தின் அடிப்படையில், "நோன்பு நோற்பதை சிரமமாக்கப் பட்டவர்கள் - அதற்கு இயலாதவர்கள்" என்ற பொருள் உள்ளது. அதன்படி "வயது முதிர்ச்சியினால் நோன்பு நோற்க இயலாதவர்களுக்கு இச்சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது" என விளங்கமுடிகிறது. இக்கருத்தை முஆத்பின் ஜபல் அவர்களும் அலீரளியல்லாஹு அன்ஹு அவர்களும் கூறியதாக இமாம்களான இப்னு ஜரீருத்தபரீயும், அஹ்மது, அபூதாவூது, இப்னு முன்திர், இப்னு ஹிப்பான் ஆகியோரும் பதிவு செய்துள்ளனர். முஆது பின் ஜபல் ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பை இமாம் ஹாக்கிம் தனது ஸுனனில் பதிவு செய்து, அதைச் 'சரியான அறிவிப்பு' என சான்றும் அளித்திருக்கின்றார்கள்.

இந்தக் கிராஅத்துடைய விளக்க அடிப்படையில், இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்களின் பிள்ளைக்குத் தாயாராய் அல்லது பால் கொடுத்துக் கொண்டு இருந்த பெண்ணிடம், 'நீ நோன்பு நோற்கச் சக்தி இல்லாதவர்களின் தரத்தில் உள்ளவளே. (ஓர் ஏழைக்கு) உணவளிப்பது உன்மீது கடமையாகும். மீண்டும் நோன்பை நோற்பது உன்மீது கடமையில்லை' எனக் கூறினார்கள். இதை அப்து பின் ஹுமைத், இப்னு ஜரீருத்தபரீ, தாரகுத்னீ ஆகியோர் பதிவு செய்துள்ளனர். தாரகுத்னீ இதை சரிகண்டுமுள்ளார்.

மேலும் இப்னு உமர் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்களின் பெண்மக்களில் ஒருவர் கர்ப்பிணியாக இருந்தபோது ரமளான் நோன்பு பற்றித் தன் தந்தையிடம் கேட்டு அனுப்பியிருந்தார். 'நோன்பை விட்டுவிட்டு ஒவ்வோரு நாளுக்கும் ஓர் ஏழைக்கு உணவளிக்கவும்' என்று கூறினார்கள். இதை அப்து பின் ஹுமைத், இப்னு அபீ ஹாத்தம், தாரகுத்னீ ஆகியோர் பதிவு செய்துள்ளனர், ஆகவே, இரண்டாவது பொருளும் சரியானதே.

6. ஹஜ்ஜுப் பருவமான ஷவ்வால், துல்கஅதா, துல்ஹஜ் மாதத்தின் பத்து நாட்கள் ஆகிய மாதங்களில் ஹஜ்ஜை நிறைவேற்றும் முன்பு உம்ராவை நிறைவேற்றியவரின் மீது 'ஹத்யு' கொடுப்பது கடமையாகும். அதாவது: ஓர் ஆடு பலி கொடுக்க வேண்டும். அல்லது ஒட்டகம், மாடு ஆகியவற்றில் ஏழில் ஒரு பங்கு கொடுக்க வேண்டும். இதுபோன்றே ஹஜ்ஜையும், உம்ராவையும் ஒரே இஹ்ராமில் நிறைவேற்றுபவரான "காரின்" மீதும் இவ்வகை "ஹத்யு" (அறுப்புப்பிராணி) பலி கொடுப்பது கடமையாகும். இதுவே இவ்வசனத்தின் கருத்தாகும்.

7. இவ்வசனத்தில் கூறப்பட்ட "அல்லாஹ்வை உங்கள் சத்தியங்களுக்குத் தடையாக ஆக்காதீர்கள்" என்பது பற்றிய விளக்கம்: உதாரணமாக ஒருமனிதர், 'நான் ஒருவரோடு பேசமாட்டேன், அல்லது ஒருவருக்கு நான் எதையும் கொடுக்க மாட்டேன், அல்லது இருவருக்கு மத்தியில் சமரசம் செய்து வைக்க மாட்டேன்' என்றெல்லாம் கூறிவிட்டு இவ்வகை நல்லவற்றைச் செய்வதிலிருந்து தன்னைத் தடுத்துக் கொள்கிறார். 'இவற்றையெல்லாம் ஏன் தடுத்துக்கொண்டீர்?' என அவரிடம் கேட்டால், 'நான் அல்லாஹ்வின் பெயரால் இவற்றைச் செய்யமாட்டேன் என்று சத்தியம் செய்து விட்டேன்' எனக் கூறிவிடுகிறார். இவ்வாறு நல்லவற்றைச் செய்வதற்குத் தன் சத்தியத்தைத் தடையாக ஆக்கிக் கொண்டதை இவ்வசனம் கண்டித்து "அல்லாஹ்வை உங்களது சத்தியங்களுக்கு தடையாக ஆக்காதீர்கள்" எனத் தடுக்கிறது.

8. இவ்வசனத்தில் இடம்பெற்றுள்ள 'குர்ஸிய்யுஹு' என்ற வார்த்தைக்கு "அவனின் அரியாஸனம்" என்று சிலரும், "அரசாட்சி எனும் ஆசனம்" எனச் சிலரும் மொழிபெயர்ப்புச் செய்துள்ளனர். ஆனால், இதுபோன்ற வார்த்தைகளுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய விளக்கத்தைக் கூடுதல் குறைவின்றி, மாற்றுப்பொருள் கூறாது, அவர்கள் கூறியவாறே கூறிவிடுவதும் அதை ஏற்று நம்பிக்கை கொள்வதும் "மனிதர்களுக்கு அவர்கள்பால் இறக்கி வைக்கப்பட்ட(வாழ்க்கை நெறியான வேதத்தின் சட்ட திட்டங்கள் ஆகிய)வைகளை நீர் விளக்கிக் கூறுவதற்காக திக்ரை (குர்ஆனை) உம்பால் நாம் இறக்கி வைத்தோம்" என்ற அல்லாஹ்வின் (16:44) கூற்றுக்கொப்ப நம்மீது கடமையாகும். அதனடிப்படையில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் "வஸியகுர்ஸிய்யுஹு" என்பதன் பொருள் பற்றிக் கேட்கப்பட்டதற்கு "அவனுடைய குர்ஸீ என்பது அவனின் பாதத்தின் தலமாகும். 'அர்ஷ்'

என்பதன் பெறுமதி பற்றி அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் அறியமாட்டார்" எனக் கூறினார்கள்.
பதிவான நூல்கள்:- தாரகுத்னீ, தாரீகில் கத்தீப், இதை ஹாக்கிம் தனது ஸஹீஹில் பதிவு செய்து இதன் அறிவிப்புத் தொடர் சரியானதெனவும் கூறியுள்ளார்கள்.

ஆகவே அல்லாஹ்வைப் பற்றிய விஷயங்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விளக்கங்களைக் கொண்டே நாம் விளங்கிக் கொள்கிறோம். காரணம், அல்லாஹ்வின் படைப்பினங்களில் அல்லாஹ்வைப் பற்றி மிக நன்கு தெரிந்திருந்தவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே. அவர்களுக்குத்தான் அல்லாஹ்விடமிருந்து வஹீயின் மூலம் அறிவிப்புகள் வந்து கொண்டிருந்தன என்பதை நம்மில் எவரும் மறுக்கமாட்டார், மறுக்கவும் முடியாது. அஃதல்லாது அறிவார்த்தமான பொருளைக் கூறுவதாக எண்ணிக் கொண்டு, திருமறை வசனங்களுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறாத, நமது ஆராய்ச்சியின் முதிர்ச்சியினால் ஏற்பட்ட, கற்பனையிலான எவ்விளக்கத்தையும், எப்பொருளையும் கூற அல்லாஹ் நமக்கு அனுமதி தரவில்லை.

அல்லாஹ்வின் பண்புகள் பற்றி சங்கை மிகுந்த குர்ஆனில் அல்லாஹ் தன்னைப்பற்றி என்னென்ன பண்புகள்-எவ்வாறு தனக்குண்டு எனக் கூறியுள்ளானோ அவற்றை அவ்வாறும் அவற்றுக்கு விளக்கமாக, அவனின் பண்புகளாக எவற்றையெல்லாம் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்களோ அவ்வாறும், மாற்றுப் பொருள் கூறாமலும், உவமைகள் இல்லாமலும் மக்கள்முன் எடுத்து வைப்பதுதான் நமது கடமை. மட்டுமின்றி, அவனுக்குரிய பண்புகள்-பெயரளவில் உள்ளவையே, அவற்றுக்குப் பொருளே இல்லையென வீணடித்து விடக் கூடாது. மேலும், அவ்வாறு-இவ்வாறு என தனியொரு முறையை நாமாகக் கற்பிக்கவுங் கூடாது. அல்லாஹ், தனக்கு உண்டு எனக்கூறிய பண்புகளை உண்டு என்றும், அவன் தனக்கு இல்லை எனக் கூறியதை இல்லை என்றும் அவற்றைக் கொள்கையாக ஏற்று ஈமான் கொள்வது கட்டாயக் கடமையாகும்.

எனவே, சகல நிறைவான பண்புகளும், குறைவில்லாத் தகுதிகளும், ஒப்புவமையற்றவனுமான அல்லாஹ் தன்னைப்பற்றிக் கூறிய இருவசனங்களின் கருத்தையும் இங்கு நினைவிற்காகத் தந்துள்ளோம்.

அவ்விரண்டின் தெளிவில் அவனின் பண்புகளை விளங்க முற்பட்டால் எவ்வித மோதலும் அறிவார்த்தத்தின் குறிக்கீடுகளும் செல்லத் தகாததாக ஆகிவிடும்.

"அவனைப் போன்று எதுவுமில்லை, அவனே செவியேற்கிறவன், பார்க்கிறவன்" வசனம்-11:42.

மேலும், "அவனுக்கு நிகராக எவரும் இல்லை" வசனம்-112:4.

மேலும், குர்ஆனில் அல்லாஹ் தன்னைப் பற்றிக் கூறும் ஸமீஉன்-செவியேற்கிறவன், பஸீருன்-பார்க்கிறவன், அலீமுன்-நன்கறிகிறவன் போன்ற அனைத்துப் பண்புகளும் அவனுக்குரிய தகுதிகளுக்கேற்ப அவனுக்கே நிலையானதும், நிறைவானதும், அழிவில்லாததுமாகும். மாறாக, அவனின் படைப்புகளுக்குரிய இப்பண்புகள் படைப்பினங்களின் தன்மைகளுக்குத் தக்கவாறு பலவீனமானதும், நிலையில்லாததும், நிறைவில்லாததும் அழிந்துவிடக் கூடியதுமாகும் என்பதை "அவனைப் போன்று எதுவுமில்லை, அவனே செவியேற்கிறவன், பார்க்கிறவன்" என்ற அல்லாஹ்வின் வசனம் 11:42 மிகத் தெளிவு செய்து கொண்டிருக்கிறது.

9. 'தாகூத்' என்ற வார்த்தை 2:256, 2:257, 4:51, 4:60, 4:76, 5:60, 16:36, 39:17 ஆகிய எட்டு வசனங்களில் இடம் பெற்றுள்ளது. வரம்பு மீறுதல் எனும் பொருளைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்றும், ஒருவர்-பலர் ஆகியோருக்கு இவ்வார்த்தை உபயோகமாகிறது என்றும் ஸீபவைஹி என்பவரும் மற்றும் பலரும் கூறுகின்றனர். குறிகாரன், ஷைத்தான் இன்னும் வழிக்கேட்டிற்குத் தலைமையாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் இவ்வார்த்தையை உபயோகிக்கலாம் என ஜவ்ஹரீ என்வர் கூறுகிறார். அல்லாஹ்வையன்றி வணங்கப்படும் அனைத்திற்கும் தாகூத் எனக் கூறப்படும் என இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, மேற்கூறப்பட்ட அனைத்துப் பொருள்களையும் தன்னகத்தே கொண்ட வார்த்தைதான் 'ஷைத்தான்' என்பதால் தாகூத்திற்கு ஷைத்தான் எனும் பொருளை மொழிபெயர்ப்பில் இடம் பெறச்செய்துள்ளோம்.

10. (நிராகரிப்போர்) தம்மைவிட அவர்களை (முஸ்லிம்களை) இருமடங்காக தங்கள் கண்களால் (நேரடியாகக்) கண்டனர் என்ற இந்நிலை

இருபடையினரும் மோதலைத் தொடங்கிய பின்னராகும் என்பதை அல்-அன்ஃபால் அத்தியாயம் 44வது வசனம் தெளிவு செய்கிறது. "நீங்கள்(இரு படையினரும்) சந்தித்த சமயத்தில் அவர்க(ளுடைய எண்ணிக்கைக)ளை உங்கள் கண்களுக்குக் குறைவாக அவன் காட்டியதையும், உங்(களுடைய எண்ணிக்கை)களை அவர்களுடைய கண்களுக்குக் குறைவாக்கிக் காட்டியதையும் (நினைவு கூறுங்கள்) நடந்தேறப்படவேண்டிய காரியத்தை நிறைவேற்றுவதற்காக (அல்லாஹ் அவ்வாறு செய்தான் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்) மேலும், அல்லாஹ்விடமே எல்லாக் காரியங்களும் திரும்பக் கொண்டுவரப்படும்". போர் முனையில் சந்திப்பதற்கு முன்பும், போரின் தொடக்க நிலையிலும் இரு சாராரும் ஒருவரை மற்றவர் குறைவாகக் காண்பிக்கப்பட்டனர். தொடக்கத்தில் காஃபிர்களை முஸ்லிம்களுக்கு அதிகமாக அல்லாஹ் காண்பித்திருந்தால் தைரியமிழந்து யுத்தம் புரியும் விஷயத்தில் பிணங்கிக் கொண்டிருப்பர். ஆகவே, அவ்வாறு குறைத்துக் காட்டினான் என்ற தெளிவை 43வது வசனத்தில் காண்கிறோம். மேலும், ஆலுஇம்ரானில் உள்ள இவ்வசனத்தில் "நிராகரிப்போர் முஸ்லிம்களை இருமடங்காகத் தங்கள் கண்களால் நேரடியாக் கண்டனர்" என்ற இறைவசனத்தின் கருத்து, போர் முனையில் மோதல் ஏற்பட்ட பிறகே என்பதை விளக்குகிறது.

11. இவ்வசனத்தில் 'லா' என்ற எழுத்திற்குப் பொருள் இல்லை. இதுபோன்ற வசனங்களில் சிலவற்றை உதாரணத்திற்காகக் கீழே தந்துள்ளோம்:

"மா மனஅக அன்லா தஸ்ஜுத" 'ஸாஷ்டாங்கம் செய்வதிலிருந்து உன்னைத் தடுத்தது எது?' இங்கே "லா" விற்குப் பொருள் இல்லை.

"நாம் அழித்துவிட்ட ஓர் ஊருக்கு அ(வ்வூரார்களாகிய அ)வர்கள் திரும்புவார்கள் என்பதை நாம் (ஹராமாக்கித்) தடுத்துவிட்டோம்." இவ்வசனத்திலும் "லா" விற்குப் பொருள் இல்லை.

12. மகத்தான அல்லாஹ்வின் பெயர்கள் பற்றி: எல்லா நிறைவுகளுக்குரிய தகுதியுடையவனான உயர்வான அல்லாஹ்வின் அழகிய பெயர்களைக் கூறி அவனை அழைத்துப் பிரார்த்திப்பதும், அவனுடைய பெயர்களில் அவனுக்குத் தகுதியற்றவற்றைக் கூறித் தவறான பொருள்களைக் கற்பிக்காமலிருப்பதும் விசுவாசிகளின் மீது கட்டாயக் கடமையாகும் என்பதை இவ்வசனம் தெளிவு செய்து கொண்டிருக்கிறது.

மேலும், உயர்வான அல்லாஹ்வின் பெயர்களின் எண்ணிக்கையை 99 தான் என வரையறுத்து வந்துள்ள அறிவிப்புத் தொடர்களில் குறைகள் உள்ளன என இப்னு ஹஸ்ம் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மேலும், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்: எவருக்காவது கவலை மற்றும் துக்கம் ஏற்பட்டு, அவர் பின்வருமாறு கூறினால் அவருடைய கவலையையும் துக்கத்தையும் அல்லாஹ் போக்கி வைத்து மகிழ்ச்சியை அவருக்குப் பகரமாக்குகிறான் எனக்கூறிக் கற்றுத்தந்த 'துஆ' வின் ஒரு பகுதியில் "யா அல்லாஹ் உனக்குரிய ஒவ்வொரு பெயரைக் கொண்டும் உன்னிடம் நான் கேட்கிறேன். அதை உனக்குப் பெயராக வைத்திருக்கிறாய், அல்லது உன்னுடைய படைப்புகளில் யாருக்காவது அதை கற்றுக் கொடுத்திருக்கிறாய், அல்லது அதை உன்னிடமுள்ள மறைவான அறிவில் உனக்கு மட்டுமே பிரத்தியேகப்படுத்திக் கொண்டிருக்கிறாய்" என்ற ஒரு சொற்றொடரைத் 'துஆ'வாகக் கற்றுக் கொடுத்துள்ளார்கள். அதன் தெளிவில் அல்லாஹ்விற்கு எத்தனை பெயர்கள் உள்ளன என்பதை அவன் மட்டுமே முழுமையாக அறிவான் என்பதும், அவனின் பெயர்களை 99தான் என மட்டுப்படுத்த முடியாது என்பதை நாம் விளங்குவதும், மிக உயர்வான அல்லாஹ்விற்குரிய அனைத்துப் பெயர்களையும் அவனே அறிந்தவனாதலால், அவை அனைத்தையும் நாம் கொள்கையாக ஏற்று விசுவாசங்கொள்வதும் கட்டாயக் கடமையாகும்.

13. இவ்வசனத்தின் கருத்து பற்றிய தெளிவுகள்:

(அ) மனிதனின் இதயத்தில் உதிக்கின்ற அனைத்தையும் சர்வசக்தனாகிய அல்லாஹ் நன்கறிந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு எப்பொருளும் எந்நிலைமையிலும் மறைந்ததன்று.

(ஆ) மனிதர்களின் இதயங்களை வல்ல அல்லாஹ்வாகிய அவன் ஆட்கொண்டிருக்கிறான். அவன் விரும்பியவாறு அவற்றைத் திருப்புகிறான். "பிடரி நரம்பை விட (மனிதனாகிய) அவனுக்கு நாமே மிகச் சமீபமாக இருக்கிறோம்" என்ற வசனத்தில் கூறப்பட்டது போன்று அல்லாஹ்வின் நாட்டமின்றி மனிதன் எதையும் அவன் மனதில் பெறமுடியாது. ஆகவே, இவை அனைத்துக் கருத்துகளையும் இவ்வசனம் தன்னகத்தே கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது.

14. இவ்வசனத்தின் பொருள்பற்றி:
"நபியே! அல்லாஹ்வும் விசுவாசிகளில் உம்மைப் பின்பற்றியவர்களும் உமக்குப் போதும்" என்று சிலரும்,
"நபியே! உமக்கும், விசுவாசிகளில் உம்மைப் பின்பற்றியவர்களுக்கும் அல்லாஹ் போதுமானவன்" எனச் சிலரும் மொழி பெயர்த்துள்ளனர்.
முந்திய கருத்தின்படி பொருள் கூற சாத்தியமிருப்பினும், இரண்டாவது பொருளே மிகப் பொருத்தமானதாகவும் விசுவாசிகளின் இதயங்களில் ஈமானை உறுதிப் படுத்துவதற்குரியதாகவும் இருப்பதால் இரண்டாவது பொருளை மொழிபெயர்ப்பில் இடம்பெறச் செய்துள்ளோம்.

15. இவ்வசனத்தில் இடம் பெற்றுள்ள 'அஸ்ஸாயிஹூன்' என்ற வார்த்தைக்கு அறப்போர் செய்பவர்கள், கல்வி தேடுவதற்காகப் பயணிப்பவர்கள், ஃபர்ளான நோன்பு நோற்பவர்கள் ஆகிய பல பொருள்களும் கூறப்பட்டுள்ளன. ஆயினும், இங்கு 'நோன்பு நோற்பவர்கள்' என்ற பொருளே பொருத்தமாக உள்ளதால் அப்பொருளை இடம்பெறச் செய்துள்ளோம்.

16. 52, 53வது வசனங்களில் கூறப்பட்டுள்ளது நபி யூஸுஃப் அவர்களின் கூற்றா? அல்லது அஜீஸுடைய மனைவியின் கூற்றா? என்பதில் விரிவுரையாளர்களுக்கிடையே இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. விரிவுரையாளர்களில் தபரீ, தாபிஈன்களில் முஜாஹித், ஸயீத் பின்ஜுபைர், ஹஸனுல் பஸரீ ஆகியோரும் இவர்களல்லாதோரும் வசனம் 52, 53ல் கூறப்பட்ட கூற்று யூஸுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கூற்றில் உள்ளதெனக் கருத்துத் தெரிவித்து, அதனடிப்படையில் அவற்றை யூஸுஃப் அலைஹிஸ்ஸலாம் கூறியதாக மொழிபெயர்ப்புச் செய்துள்ளனர்.

மற்றொரு சாரார் 51, 52, 53 ஆகிய வசனங்களின் தொடர்களை கருத்தில் கொண்டு இவ்வசனங்களில் கூறப்பட்டவை அஜீஸுடைய மனைவியின் கூற்றாக இருப்பதற்தே மிகப்பொருத்தமும், மிகத் தெளிவாகவும் உள்ளதென ஷைகுல் இஸ்லாம் இப்னுதைமிய்யா, இப்னுல் கைய்யிம், இப்னுகஸீர், அல்லாமா ஷவ்கானீ ஆகியோர் தெளிவு செய்கின்றனர். இத்தெளிவு சரியானதென மக்கா முகர்ரமாவில் உள்ள தாருல் ஹதீஸில் பேராசிரியராகப் பணியாற்றும் முஹம்மது ஜமீல் ஜைனூ என்பவர் தப்ஸீர் ஜலாலைன், குர்ரத்துல் இனைன் போன்ற நூலில் இதுபற்றியும் அலசி இக்கருத்தைச் சரிகண்டுள்ளார். அதன் சாரமாவது:

51, 52, 53 ஆகிய வசனங்களில் கூறப்படும் கூற்று அஜீஸின் மனைவிக்குரியதாகும் என்பதைக் கீழ்வரும் சில அடிப்படைகள் தெளிவு செய்கின்றன:-

(அ) 51, 52, 53 ஆகிய வசனங்கள் அப்பெண்ணின் கூற்றோடு இணைந்தவை.

(ஆ) இவ்வசனங்களில் இடம் பெறும் விஷயத்தை அப்பெண் கூறும்போது யூஸுஃப் அலைஹிஸ்ஸலாம் அங்கிருக்கவில்லை. மாறாக, அவர்கள் சிறைச்சாலையில் இருந்தனர்.

(இ) "மறைவில் அவருக்கு நான் மோசம் செய்யவில்லை" என்பதன் பொருள் வருமாறு:- 'அவர் குற்றமற்றவர் என நான் கூறி ஒப்புக்கொண்டது, முன்னொரு சமயம் அவருக்கெதிரில் நான் அவரைப் பொய்யராக்கி மோசம் செய்திருப்பினும், அவர் என்னைவிட்டும், நான் அவரைவிட்டும் மறைந்திருந்த நிலையில் பொய் கூறி அவருக்கு நான் மோசம் செய்யவில்லை' என்பதாகும். தப்ஸீர் அல்-கய்யிம்-பக்கம் 316.

17. இவ்வசனத்தில் குகையுடையோராகிய அவர்களின் மேலான நிலை பற்றியும், அந்நிலையை உருவாக்கிக் கொடுத்த அல்லாஹ்வின் பிரம்மாண்டமான சக்தி பற்றியும் தெளிவு செய்யப்படுகிறது. அக்குகையின் விசாலமான ஓரிடத்தில் அல்லாஹ் அவர்களை உறங்க வைத்தான். அவர்களின் உடல்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட்டுவிடாதவாறு காலையில் சூரியன் உதயமாகும்போது குகையின் வலப் பக்கத்தைக் கடந்து செல்லக் கூடியதாகவும், மாலையில் மறைகின்றபோது அதன் இடப்பக்கத்தைக் கடந்து செல்லக்கூடியதாகவும், இருநேரங்களிலும் அவர்களின் உடல்களுக்குத் தேவையான அளவைவிட மேலதிகமாக சூரிய வெப்பத்தின் தாக்கம் அவர்களைச் சென்றடையாத அமைப்பில் அக்குகையை அமைத்திருந்தான். ஆகவே, இஃது அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளதாகும் என்பது மிகத் தெளிவானதாகும்.

18. இவ்வசனத்தில் இடம் பெற்றுள்ள "மலட்டுநாள்" என்பதன் பொருள்பற்றி:
(அ) நாட்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்ததைப் பிறப்பிற்கு ஒப்பிட்டுக் கூறப்படுவதுபோன்று, இந்நாளுக்குப் பிறகு வேறொரு நாள் இல்லையென்பதாலும், இத்தோடு முடிவு பெற்றுவிடுவதாலும் இதற்கு "மலட்டுநாள்" என்று கூறப்பட்டுள்ளது.

(ஆ) அல்லாஹ்வை நிராகரித்துக் கொண்டிருந்தோர்க்கு எவ்வித நன்மையும் பெற்றுத்தராத நிலையை ஒப்பிட்டு, "நன்மைகளற்ற நாள்" என்ற கருத்தும் உள்ளது.

19. இவ்வசனத்தில் இடம்பெற்றுள்ள 'யமீன்' என்பதற்கு:
(அ) சத்திய மார்க்கத்தின்பால் எங்களைச் செல்லவிடாது தடுக்க எங்களிடம் வந்து கொண்டிருந்தீர்கள்.

(ஆ) நீங்கள் எங்களை அழைத்தது சத்தியமான மார்க்கமென்று நீங்கள் பொய்யான வார்த்தைகளை எங்களிடம் கூறி வந்தீர்கள்.

## கீர்த்திமிக்க குர்ஆனுடைய அத்தியாயங்களின் அட்டவணை


| எண் | ஸூராக்களின் பெயர்கள் | பக்கம் | இடம்பெறும் பாகம் | شمار پاره | نمبر صفحہ | نام سورة | شمار سورة |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அல்ஃபாத்திஹா | 2 | 1 | ١ | ٢ | سُورَةُ الفَاتِحَة | ١ |
| 2 | அல்பகறா | 3 | 1-2-3 | ١ - ٢ - ٣ | ٣ | سُورَةُ البَقَرَة | ٢ |
| 3 | ஆலு இம்ரான் | 51 | 3-4 | ٣ - ٤ | ٥١ | سُورَةُ آل عِمْرَان | ٣ |
| 4 | அன்னிஸா | 78 | 4-5-6 | ٤ - ٥ - ٦ | ٧٨ | سُورَةُ النِّسَاء | ٤ |
| 5 | அல்மாயிதா | 107 | 6-7 | ٦ - ٧ | ١٠٧ | سُورَةُ المَائِدَة | ٥ |
| 6 | அல் அன்ஆம் | 129 | 7-8 | ٧ - ٨ | ١٢٩ | سُورَةُ الأَنْعَام | ٦ |
| 7 | அல் அஃராஃப் | 152 | 8-9 | ٨ - ٩ | ١٥٢ | سُورَةُ الأَعْرَاف | ٧ |
| 8 | அல் அன்ஃபால் | 178 | 9-10 | ٩ - ١٠ | ١٧٨ | سُورَةُ الأَنْفَال | ٨ |
| 9 | அத்தவ்பா | 188 | 10-11 | ١٠ - ١١ | ١٨٨ | سُورَةُ التَّوْبَة | ٩ |
| 10 | யூனுஸ் | 209 | 11 | ١١ | ٢٠٩ | سُورَةُ يُونُس | ١٠ |
| 11 | ஹூது | 222 | 11-12 | ١١ - ١٢ | ٢٢٢ | سُورَةُ هُود | ١١ |
| 12 | யூஸுஃப் | 236 | 12-13 | ١٢ - ١٣ | ٢٣٦ | سُورَةُ يُوسُف | ١٢ |
| 13 | அர்ரஃது | 250 | 13 | ١٣ | ٢٥٠ | سُورَةُ الرَّعْد | ١٣ |
| 14 | இப்றாஹீம் | 256 | 13 | ١٣ | ٢٥٦ | سُورَةُ إِبْرَاهِيم | ١٤ |
| 15 | அல் ஹிஜ்ர் | 262 | 13-14 | ١٣ - ١٤ | ٢٦٢ | سُورَةُ الحِجْر | ١٥ |
| 16 | அந்நஹ்ல் | 268 | 14 | ١٤ | ٢٦٨ | سُورَةُ النَّحْل | ١٦ |
| 17 | பனீ இஸ்ராயீல் | 283 | 15 | ١٥ | ٢٨٣ | سُورَةُ بَنِي إِسْرَائِيل | ١٧ |
| 18 | அல் கஹ்ஃப் | 294 | 15-16 | ١٥ - ١٦ | ٢٩٤ | سُورَةُ الكَهْف | ١٨ |
| 19 | மர்யம் | 306 | 16 | ١٦ | ٣٠٦ | سُورَةُ مَرْيَم | ١٩ |
| 20 | தாஹா | 313 | 16 | ١٦ | ٣١٣ | سُورَةُ طٰه | ٢٠ |
| 21 | அல் அன்பியா | 323 | 17 | ١٧ | ٣٢٣ | سُورَةُ الأَنْبِيَاء | ٢١ |
| 22 | அல் ஹஜ் | 332 | 17 | ١٧ | ٣٣٢ | سُورَةُ الحَجّ | ٢٢ |
| 23 | அல் முஃமினூன் | 343 | 18 | ١٨ | ٣٤٣ | سُورَةُ المُؤْمِنُون | ٢٣ |
| 24 | அந் நூர் | 351 | 18 | ١٨ | ٣٥١ | سُورَةُ النُّور | ٢٤ |
| 25 | அல்ஃபுர்கான் | 360 | 18-19 | ١٨ - ١٩ | ٣٦٠ | سُورَةُ الفُرْقَان | ٢٥ |
| 26 | அஷ்ஷுஅரா | 367 | 19 | ١٩ | ٣٦٧ | سُورَةُ الشُّعَرَاء | ٢٦ |
| 27 | அந்நம்லு | 377 | 19-20 | ١٩ - ٢٠ | ٣٧٧ | سُورَةُ النَّمْل | ٢٧ |
| 28 | அல் கஸஸ் | 386 | 20 | ٢٠ | ٣٨٦ | سُورَةُ القَصَص | ٢٨ |

## கீர்த்திமிக்க குர்ஆனுடைய அத்தியாயங்களின் அட்டவணை


| எண் | ஸூராக்களின் பெயர்கள் | பக்கம் | இடம்பெறும் பாகம் | شمار پارہ | نمبر صفحہ | نام سورۃ | شمار سورۃ |
|---|---|---|---|---|---|---|---|
| 29 | அல் அன்கபூத் | 397 | 20-21 | ۲۰ - ۲۱ | ۳۹۷ | سُورَةُ العَنكَبُوت | ۲۹ |
| 30 | அர்ரூம் | 405 | 21 | ۲۱ | ۴۰۵ | سُورَةُ الرُّوم | ۳۰ |
| 31 | லுக்மான் | 412 | 21 | ۲۱ | ۴۱۲ | سُورَةُ لُقمَان | ۳۱ |
| 32 | அஸ்ஸஜ்தா | 416 | 21 | ۲۱ | ۴۱۶ | سُورَةُ السَّجدَة | ۳۲ |
| 33 | அல் அஹ்ஜாப் | 419 | 21-22 | ۲۱ - ۲۲ | ۴۱۹ | سُورَةُ الأَحزَاب | ۳۳ |
| 34 | ஸபஉ | 429 | 22 | ۲۲ | ۴۲۹ | سُورَةُ سَبَإ | ۳۴ |
| 35 | ஃபாதிர் | 435 | 22 | ۲۲ | ۴۳۵ | سُورَةُ فَاطِر | ۳۵ |
| 36 | யாஸீன் | 441 | 22-23 | ۲۲ - ۲۳ | ۴۴۱ | سُورَةُ يٰسٓ | ۳۶ |
| 37 | அஸ்ஸாஃப்பாத் | 446 | 23 | ۲۳ | ۴۴۶ | سُورَةُ الصَّافَّات | ۳۷ |
| 38 | ஸாத் | 453 | 23 | ۲۳ | ۴۵۳ | سُورَةُ صٓ | ۳۸ |
| 39 | அல் ஜுமர் | 459 | 23-24 | ۲۳ - ۲۴ | ۴۵۹ | سُورَةُ الزُّمَر | ۳۹ |
| 40 | அல் முஃமின் | 468 | 24 | ۲۴ | ۴۶۸ | سُورَةُ المُؤمِن | ۴۰ |
| 41 | ஹாமீம் ஸஜ்தா | 478 | 24-25 | ۲۴ - ۲۵ | ۴۷۸ | سُورَةُ حٰمٓ السَّجدَة | ۴۱ |
| 42 | அஷ்ஷுரா | 484 | 25 | ۲۵ | ۴۸۴ | سُورَةُ الشُّورٰى | ۴۲ |
| 43 | அல் ஜுக்ருஃப் | 490 | 25 | ۲۵ | ۴۹۰ | سُورَةُ الزُّخرُف | ۴۳ |
| 44 | அத்துகான் | 496 | 25 | ۲۵ | ۴۹۶ | سُورَةُ الدُّخَان | ۴۴ |
| 45 | அல் ஜாஸியா | 499 | 25 | ۲۵ | ۴۹۹ | سُورَةُ الجَاثِيَة | ۴۵ |
| 46 | அல் அஹ்காஃப் | 503 | 26 | ۲۶ | ۵۰۳ | سُورَةُ الأَحقَاف | ۴۶ |
| 47 | முஹம்மது | 507 | 26 | ۲۶ | ۵۰۷ | سُورَةُ مُحَمَّد | ۴۷ |
| 48 | அல்ஃபத்ஹு | 512 | 26 | ۲۶ | ۵۱۲ | سُورَةُ الفَتح | ۴۸ |
| 49 | அல் ஹுஜுராத் | 516 | 26 | ۲۶ | ۵۱۶ | سُورَةُ الحُجُرَات | ۴۹ |
| 50 | காஃப் | 519 | 26 | ۲۶ | ۵۱۹ | سُورَةُ قٓ | ۵۰ |
| 51 | அத்தாரியாத் | 521 | 26-27 | ۲۶ - ۲۷ | ۵۲۱ | سُورَةُ الذَّارِيَات | ۵۱ |
| 52 | அத்தூர் | 524 | 27 | ۲۷ | ۵۲۴ | سُورَةُ الطُّور | ۵۲ |
| 53 | அந்நஜ்மு | 527 | 27 | ۲۷ | ۵۲۷ | سُورَةُ النَّجم | ۵۳ |
| 54 | அல் கமர் | 529 | 27 | ۲۷ | ۵۲۹ | سُورَةُ القَمَر | ۵۴ |
| 55 | அர்ரஹ்மான் | 532 | 27 | ۲۷ | ۵۳۲ | سُورَةُ الرَّحمٰن | ۵۵ |
| 56 | அல்வாகிஆ | 535 | 27 | ۲۷ | ۵۳۵ | سُورَةُ الوَاقِعَة | ۵۶ |

## கீர்த்திமிக்க குர்ஆனுடைய அத்தியாயங்களின் அட்டவணை



| எண் | ஸூராக்களின் பெயர்கள் | பக்கம் | இடம்பெறும் பாகம் | شمار پاره | نمبر صفحه | نام سورة | شمار سورة |
|---|---|---|---|---|---|---|---|
| 57 | அல் ஹதீத் | 538 | 27 | ۲۷ | ۵۳۸ | سورة الحديد | ۵۷ |
| 58 | அல் முஜாதிலா | 543 | 28 | ۲۸ | ۵۴۳ | سورة المجادلة | ۵۸ |
| 59 | அல் ஹஷ்ர் | 546 | 28 | ۲۸ | ۵۴۶ | سورة الحشر | ۵۹ |
| 60 | அல் மும்தஹினா | 550 | 28 | ۲۸ | ۵۵۰ | سورة الممتحنة | ۶۰ |
| 61 | அஸ்ஸஃப் | 552 | 28 | ۲۸ | ۵۵۲ | سورة الصف | ۶۱ |
| 62 | அல் ஜுமுஆ | 554 | 28 | ۲۸ | ۵۵۴ | سورة الجمعة | ۶۲ |
| 63 | அல் முனாஃபிகூன் | 555 | 28 | ۲۸ | ۵۵۵ | سورة المنافقون | ۶۳ |
| 64 | அத்தகாபுன் | 557 | 28 | ۲۸ | ۵۵۷ | سورة التغابن | ۶۴ |
| 65 | அத்தலாக் | 559 | 28 | ۲۸ | ۵۵۹ | سورة الطلاق | ۶۵ |
| 66 | அத்தஹ்ரீம் | 561 | 28 | ۲۸ | ۵۶۱ | سورة التحريم | ۶۶ |
| 67 | அல் முல்க் | 563 | 29 | ۲۹ | ۵۶۳ | سورة الملك | ۶۷ |
| 68 | அல் கலம் | 565 | 29 | ۲۹ | ۵۶۵ | سورة القلم | ۶۸ |
| 69 | அல் ஹாக்கா | 568 | 29 | ۲۹ | ۵۶۸ | سورة الحاقة | ۶۹ |
| 70 | அல் மஆரிஜ் | 570 | 29 | ۲۹ | ۵۷۰ | سورة المعارج | ۷۰ |
| 71 | நூஹ் | 572 | 29 | ۲۹ | ۵۷۲ | سورة نوح | ۷۱ |
| 72 | அல் ஜின் | 574 | 29 | ۲۹ | ۵۷۴ | سورة الجن | ۷۲ |
| 73 | அல் முஜ்ஜம்மில் | 577 | 29 | ۲۹ | ۵۷۷ | سورة المزمل | ۷۳ |
| 74 | அல் முத்தஸ்ஸிர் | 579 | 29 | ۲۹ | ۵۷۹ | سورة المدثر | ۷۴ |
| 75 | அல்கியாமா | 581 | 29 | ۲۹ | ۵۸۱ | سورة القيامة | ۷۵ |
| 76 | அத்தஹ்ரு | 583 | 29 | ۲۹ | ۵۸۳ | سورة الدهر | ۷۶ |
| 77 | அல்முர்ஸலாத் | 585 | 29 | ۲۹ | ۵۸۵ | سورة المرسلات | ۷۷ |
| 78 | அந்நபஉ | 587 | 30 | ۳۰ | ۵۸۷ | سورة النبا | ۷۸ |
| 79 | அந்நாஜிஆத் | 588 | 30 | ۳۰ | ۵۸۸ | سورة النازعات | ۷۹ |
| 80 | அபஸ | 590 | 30 | ۳۰ | ۵۹۰ | سورة عبس | ۸۰ |
| 81 | அத்தக்வீர் | 591 | 30 | ۳۰ | ۵۹۱ | سورة التكوير | ۸۱ |
| 82 | அல் இன்ஃபிதார் | 592 | 30 | ۳۰ | ۵۹۲ | سورة الانفطار | ۸۲ |
| 83 | அல் முதஃப்ஃபிஃபீன் | 593 | 30 | ۳۰ | ۵۹۳ | سورة المطففين | ۸۳ |
| 84 | அல்இன்ஷிகாக் | 595 | 30 | ۳۰ | ۵۹۵ | سورة الانشقاق | ۸۴ |
| 85 | அல் புரூஜ் | 596 | 30 | ۳۰ | ۵۹۶ | سورة البروج | ۸۵ |

## கீர்த்திமிக்க குர்ஆனுடைய அத்தியாயங்களின் அட்டவணை



| எண் | ஸூராக்களின் பெயர்கள் | பக்கம் | இடம்பெறும் பாகம் | شمار پاره | نمبر صفحه | نام سورة | شمار سورة |
|---|---|---|---|---|---|---|---|
| 86 | அத்தாரிக் | 597 | 30 | ۳۰ | ۵۹۷ | سورة الطارق | ۸۶ |
| 87 | அல் அஃலா | 598 | 30 | ۳۰ | ۵۹۸ | سورة الأعلى | ۸۷ |
| 88 | அல் காஷியா | 598 | 30 | ۳۰ | ۵۹۸ | سورة الغاشية | ۸۸ |
| 89 | அல்ஃபஜ்ர் | 599 | 30 | ۳۰ | ۵۹۹ | سورة الفجر | ۸۹ |
| 90 | அல் பலத் | 601 | 30 | ۳۰ | ۶۰۱ | سورة البلد | ۹۰ |
| 91 | அஷ்ஷம்ஸ் | 601 | 30 | ۳۰ | ۶۰۱ | سورة الشمس | ۹۱ |
| 92 | அல்லைல் | 602 | 30 | ۳۰ | ۶۰۲ | سورة الليل | ۹۲ |
| 93 | அள்ளுஹா | 603 | 30 | ۳۰ | ۶۰۳ | سورة الضحى | ۹۳ |
| 94 | அஷ்ஷரஹ் | 603 | 30 | ۳۰ | ۶۰۳ | سورة الشرح | ۹۴ |
| 95 | அத்தீன் | 604 | 30 | ۳۰ | ۶۰۴ | سورة التين | ۹۵ |
| 96 | அல் அலக் | 604 | 30 | ۳۰ | ۶۰۴ | سورة العلق | ۹۶ |
| 97 | அல் கத்ர் | 605 | 30 | ۳۰ | ۶۰۵ | سورة القدر | ۹۷ |
| 98 | அல் பய்யினா | 605 | 30 | ۳۰ | ۶۰۵ | سورة البينة | ۹۸ |
| 99 | அல்ஜில்ஜால் | 606 | 30 | ۳۰ | ۶۰۶ | سورة الزلزال | ۹۹ |
| 100 | அல் ஆதியாத் | 606 | 30 | ۳۰ | ۶۰۶ | سورة العاديات | ۱۰۰ |
| 101 | அல்காரிஆ | 607 | 30 | ۳۰ | ۶۰۷ | سورة القارعة | ۱۰۱ |
| 102 | அத்தகாஸுர் | 607 | 30 | ۳۰ | ۶۰۷ | سورة التكاثر | ۱۰۲ |
| 103 | அல் அஸ்ர் | 608 | 30 | ۳۰ | ۶۰۸ | سورة العصر | ۱۰۳ |
| 104 | அல் ஹுமஜா | 608 | 30 | ۳۰ | ۶۰۸ | سورة الهمزة | ۱۰۴ |
| 105 | அல்ஃபீல் | 608 | 30 | ۳۰ | ۶۰۸ | سورة الفيل | ۱۰۵ |
| 106 | குரைஷ் | 609 | 30 | ۳۰ | ۶۰۹ | سورة قريش | ۱۰۶ |
| 107 | அல் மாஊன் | 609 | 30 | ۳۰ | ۶۰۹ | سورة الماعون | ۱۰۷ |
| 108 | அல்கவ்ஸர் | 609 | 30 | ۳۰ | ۶۰۹ | سورة الكوثر | ۱۰۸ |
| 109 | அல் காஃபிரூன் | 609 | 30 | ۳۰ | ۶۰۹ | سورة الكافرون | ۱۰۹ |
| 110 | அந்நஸ்ர் | 610 | 30 | ۳۰ | ۶۱۰ | سورة النصر | ۱۱۰ |
| 111 | தப்பத் | 610 | 30 | ۳۰ | ۶۱۰ | سورة تبت | ۱۱۱ |
| 112 | அல் இக்லாஸ் | 610 | 30 | ۳۰ | ۶۱۰ | سورة الإخلاص | ۱۱۲ |
| 113 | அல்ஃபலக் | 611 | 30 | ۳۰ | ۶۱۱ | سورة الفلق | ۱۱۳ |
| 114 | அந்நாஸ் | 611 | 30 | ۳۰ | ۶۱۱ | سورة الناس | ۱۱۴ |

إن وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد

في المملكة العربية السعودية

المشرفة على مجمع الملك فهد

لطباعة المصحف الشريف في المدينة المنورة

إذ يسرها أن يصدر المجمع هذه الطبعة من القرآن الكريم

وترجمة معانيه إلى اللغة التاميلية

نسأل الله أن ينفع بها الناس

وأن يجزي

خادم الحرمين الشريفين الملك فهد بن عبد العزيز آل سعود

أحسن الجزاء على جهوده العظيمة في نشر كتاب الله الكريم

والله ولي التوفيق

---

சவூதி அரேபியாவின் அல்-மதீனா அல்-முனவ்வராவிலுள்ள

மன்னர் ஃபஹ்து குர்ஆனிய அச்சக வளாகத்தை

அவ்கா:ஃப் , த:ஃவா, இர்ஷாத் மற்றும் இஸ்லாமியத்துறைகள்

அமைச்சகம் கண்காணிக்கிறது. திருக்குர்ஆனுடைய இப்பதிப்பை இதன் கருத்து மொழிபெயர்ப்புடன் தமிழ் மொழியில் அச்சிட்டு வெளியிடுவதில் அது பெருமிதம் அடைகிறது. இம்மொழி பேசுகிறவர்கள் இதனால் பயனடையவும் மகத்துவமிக்க அல்லாஹ்வின் வேதத்தைப் பிரச்சாரம் செய்வதில் சவூது குடும்பத்து அப்துல் அஸீஸின் மகனார் , புனித ஹரமைனின் பணியாளர் மன்னர் ஃபஹ்து அவர்களுடைய நன்முயற்சிகளுக்கு அல்லாஹ் நல்ல பல கூலிகளை வழங்கவும் அவனிடம் வேண்டுகிறோம்.

பேருதவிகள் செய்யப் பொறுப்பேற்பவன் அல்லாஹ் ஆவான்.

அல்லாஹ்வின்
பேருதவியால் இந்த
புனிதமான முஸ்ஹஃபையும்,
தமிழில் இதன் கருத்து மொழி
பெயர்ப்பையும், மதீனாவிலுள்ள மன்னர்
ஃபஹ்து புனித முஸ்ஹஃப் அச்சக
வளாகத்தில் ஹிஜ்ரீ 1425 ம் ஆண்டு
அச்சிடப்பட்டது. சவூதி அரேபியாவின்
அவ்காஃப், தஃவா, இர்ஷாத்
மற்றும் இஸ்லாமியத் துறைகள்
அமைச்சகம் இதனை
மேற்பார்வையிட்டது.

பதிப்புரிமை
மன்னர் ஃபஹ்து புனித முஸ்ஹஃப் அச்சக வளாகத்துக்கே உரியது.
தபால் பெட்டி எண் 6262, அல்-மதீனா அல்-முனவ்வரா

ⓒ مجمع الملك فهد لطباعة المصحف الشريف، ١٤٢٤هـ
فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر
مجمع الملك فهد لطباعة المصحف الشريف
القرآن الكريم وترجمة معانيه إلى اللغة التاميلية / مجمع الملك فهد لطباعة المصحف الشريف - المدينة المنورة، ١٤٢٤هـ .
١٢٤٨ ص ؛ ٢١ × ١٤ سم
ردمك : ٤ - ٧٦ - ٨٤٧ - ٩٩٦٠

١- القرآن - ترجمة - اللغة التاميلية أ- العنوان
ديوي ٢٢١,٤٩٤٨ ١٤٢٤/٣٣٧٩

رقم الإيداع : ١٤٢٤/٣٣٧٩
ردمك : ٤ - ٧٦ - ٨٤٧ - ٩٩٦٠

مجمع الملك فهد لطباعة المصحف الشريف
المراقبة النهائية
٥٦

خ ٧١